Koviloor Digital Library

கம்பராமாயணம்

இராமாவதாரம்

மூலமும் உரையும்



ACC NO
14565

யுத்தகாண்டம்

பகுதி – 3

உரை நூல் ஆசிரியர்

பள்ளத்தூர் பழ. பழனியப்பன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

கம்ப இராமாயணம்

[இராமாவதாரம்]

யுத்த காண்டம்

மூன்றாம் பகுதி

மூலமும் உரையும்

உரை ஆசிரியர்

பள்ளத்தூர் **பழ. பழனியப்பன்**

(முன்னாள் முதுநிலை மேலாளர், பரோடா வங்கி)

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 14565

AccNo: 14565
R65-9

சாந்த மங்கை பதிப்பகம்

23/10, பழைய பேங்க் ஆப் பரோடா தெரு,
அம்பத்தூர்,சென்னை-600053
Cell: 9840868543

Koviloor Digital Library

முதற் பதிப்பு: மார்ச், 2010

உரிமை: ஆசிரியருக்கு ©

KAMBA RAMAYANAM - YUTHA KANDAM PART III

PL.Palaniappan

First Edition: March, 2010

No. of Pages: xxxv + 912 = 947

Size: Demy

Paper used: N.S. 70 G.S.M. Maplitho

விலை ரூ. **415/-**

வெளியீடு:
சாந்த மங்கை பதிப்பகம்
23/10, பழைய பாங்க் ஆப் பரோடா தெரு,
அம்பத்தூர்,சென்னை-600053
Cell: 9840868543

நூல்கள் கிடைக்குமிடம்:
THIRUMAGAL NILAYAM
11/5, Sri Sai Homes,
Soundarajan Street,
T.Nagar, Chennai - 600 017.
Phone: 24342899, 24327696
Thirumagalnilayam@yahoo.com

Laser Typeset By: Sivaa Graphics,
Chennai-94. Ph: 044-43805201

Printed at: *Udayam Offsets: 2845 4808, 2845 1906.*

14565

Koviloor Digital Library

13-2



காணிக்கை

என்னை ஈன்றெடுத்து,
எனக்கும் ஓர் வாழ்வளித்து
தன்னைப் பேணிடாமல்,
தளிர்களையே காத்து நின்ற
அன்னை **மீனாட்சித் தாய்க்கு**
ஆயிரம் வணக்கம் கூறி,
இன்னமும் அருள் கூர்ந்து என்னை
இயக்கிட இறைஞ்சுவனே!

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

அணிந்துரை

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

உலகுள்ளவரை கம்பகாவியம் நிலைக்கும். கம்பனும் நிலைப்பான். உலக இலக்கிய அரங்கில் கம்பன் ஒருவனைக் காட்டியே தமிழர்கள் தலைநிமிரலாம். அத்துணை பெரியசொத்து அவன் நமக்கு ஈந்தது. அள்ள அள்ள வளம்குன்றாத அமுதக்கடல் அது. எத்துணை நுண்மையாய் நாம் சிந்திக்கினும், அத்துணை நுண்மையையும் தாண்டி ஆழம் காட்டுவான் கம்பன். புத்துலகப் புதுமைகள் அனைத்துக்கும், பழமையில் பதியம் போட்டவன் அவன். நாளைக்கும், இன்றைக்கும் சேர்த்து நேற்றே சிந்தித்த நெடியோன். தெய்வத்தை மண்ணில் நடக்கவைத்து, மானுடத்தை விண்ணிற்கு ஏற்றியவன். அழியாது மானுடம் அமரத்துவம் எய்த, கம்பகாவியம் எனும் ஒப்பற்ற அமுதம் ஈந்த, உயர்ந்த பாற்கடல் அவன்.

கம்பன், ஆயிரம் கோடியாண்டு வாழ்வனுபவத்தை, ஒரே காவியத்துள் உள்ளடக்கிய உயர்மேதை. தமிழை உலகிற்கும், உலகைத் தமிழுக்கும் தன் ஒரே நூலால் அறிமுகம் செய்த உன்னதன். வழிநூலால் முதல் நூலையே விஞ்சிய வன்மையன். பாத்திறத்தால் பாத்திரத்தையும், பாத்திரத்தால் பாத்திறத்தையும், வளர்த்தெடுத்த பாவலன். அமரரும் அறியஒண்ணா அறத்தினை, இவ் அவனி அறிய ஆக்கித்தந்த அமரன். மதம் கடந்த பரம்பொருளை, இம்மண்ணுக்கு அறிமுகம் செய்த மாமேதை, கரைகடந்து கற்றாரும், கால் மட்டுமே நனைக்கமுடிந்த, கரைகடந்த கடல் அவன். காலம் கடந்த கவி அவன். காலம் கடந்ததால் அவன் கடவுளுமாம். மொத்தத்தில், கம்பன் பெரும் ''கொம்பனே''.

கம்பகாவியம், தமிழின் தனிச்சிகரம். மூழ்க மூழ்க முடிவின்றி நீண்டு, வற்றாத அறிவுச்செல்வத்தை வாரி வழங்கும் கம்பசாகரம், கற்றோரை உவப்பிக்கும் கற்கண்டுக் கடலாம். தன் கவித்திறத்தால், தேவர் உலகின் தெவிட்டா அமுதத்தை, மானுடர்க்கு அள்ளித்தந்த மாண்பாளன் கம்பன். கருத்தால் மண்தொட்டு, கற்பனையால் விண்தொட்டு, மண்சார்ந்த

Koviloor Digital Library

மனிதரை விண்சார வைத்து வெற்றிகொண்டவன் அவன். தமிழர்தம் ஊன் கடந்து, உளம் கடந்து, உயிர் தொட்டவன். அதனால் புகழ் பெற்றவன். ஆயிரம் ஆண்டுகளின் மேலாய், தமிழ்ப்புலமைத் தலைமை, கம்பநாடன் கால்களிலேயே வீழ்ந்து கிடக்கிறது. இராமனையும் சீதையையும் தம் உறவாய் நினைக்கவைத்து, தெய்வ உறவை, மானுடர்க்கு ஆக்கித்தந்த மகான் அவன். அவன் கவி, பாமரனையும், பண்டிதனையும் ஒருமித்து ஈர்த்து நிற்பது ஓர் அற்புதம். கற்றார் நெஞ்சைக் களிக்கச்செய்யும் அதேவேளை, மற்றோர் இதயத்தையும் மயக்கி நிற்கிறது கம்பகாவியம்.

காலங்கடந்து நிலைத்த தமிழ்ப்புலவர்களுள், கம்பனுக்கு ஒரு தனித்துவம் உண்டு. புலவர் பலர் பூத்துப்பொலிந்த தமிழ்ப்பூங்காவுள், கம்பன் தனித்து இனங்காணப்படுகிறான். ஆளுமை, புலமை, அறிவாற்றல், கல்வி என்பனவற்றோடு, இயற்கை அறிவும் வாய்க்கப் பெற்றதால், கம்பன், ''கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமை'' கொண்டவன். அவனால் படைக்கப்பட்ட இராமகாவியம் தமிழிலக்கியங்களுள் தலையாததாய்த் தகைமை கொண்டது.

விரிந்த அறிவுக்கூறுகளின் ஒவ்வோர் கருத்தினை மட்டும் வலியுறுத்தி, தாம்கொண்ட அக்கருத்தினையும், தமிழிலக்கியத்தினையும், புலவர் சிலர் நிலைபெறச் செய்தனர். இயற்கையின் ஒவ்வோர் கூறுகளை மட்டும் தொட்ட, இத்தனை புலவர்களையும் முழுமையாய் உள்வாங்கி, இயற்கையின் முழுவடிவமாய், கம்பன், தன் காவியத்தைச் சமைத்து வியப்பேற்படுத்துகிறான். கம்பனின் நுண்மாண்நுழைபுலத்தால், கம்பகாவியத்துள், இயற்கையின் முழுக்கூறுகளும் ஏதோ ஒரு வகையில் பதிவாக, இயற்கையை முழுமையாய் உள்வாங்கி, கம்பகாவியம் கடவுள்த் தன்மை கொண்டது. ''உலகம் யாவையும்'' தன் காவியத்துள் உளவாக்கிய, கம்பனின் ''அலகிலா விளையாட்டு'' கற்றோரை ஆச்சரியப்படுத்திற்று. இயற்கையோடு முற்றுமுழுதாய் ஒன்றும் வல்லமை பெற்றதால், கம்பன் கடவுளைக் காவியமாக்கினான் காவியத்தைக் கடவுளாக்கினான்.

உலகளாவித் தமிழை விரிவித்தவர்களுள், கவிச்சக்கரவர்த்தி கம்பனும் ஒருவன். தெய்வத் திருமகளைத் தன் கவிதைத் தேரேற்றி, உலாவரச் செய்து உவப்பூட்டி, உலகனைத்தையும் அத்தேரின்பின் ஓடச்செய்தான் அவன். கம்பன் கைபட, தமிழ்த்தாய் உயிர்த்தாள். தமிழ் அட்சரங்கள் பொற்சரங்களாய் மின்னின. தமிழ்ச்சொற்கள் வைரக்கற்களாய் ஜொலித்தன. அவன் கையாண்ட பொருள், உலகின் இருள் நீக்கிற்று. இராமன் கால்பட்ட கல்போல், கம்பன் கைபட்ட தமிழும் உயிர்த்து

Koviloor Digital Library

உயர்ந்தது. இராமனின் விற்சரங்கள்போல், கம்பனின் சொற்சரங்கள், எதிர்ஒருவர் நில்லாவண்ணம் ஏற்றம் பெற்றன. அறத்தை வளர்க்கவும், மறத்தை மாய்க்கவும் செய்தன. கம்பன், தன் தவத்தகுதியால், தமிழ்த்தாய்க்குப் பூட்டிய ஆபரணங்கள்பலப்பல. கண்டோரைவியக்கவும் மயக்கவும் வைத்த, அவ் ஆபரணங்களின் அழகு, காணக்காண எல்லையின்றி விரிவன. இங்ஙனமாய், கம்பனின் கவிதைத்திறன், உரைக்க உரைக்க விரியும். அதனால் விரிவஞ்சி இவ்வளவில் அதனை விடுத்து, நம் உரைமரபு சில காணத் தலைப்படுவோம்.

காலத்தால் அழியாத உயர்நூல்களை, கற்று அறிந்து உணர்ந்த பெரியோர் பலர், அந்நூல்களை அனுபவித்தலையே, நம் வாழ்நாள் பணியாய் இயற்றினர். அந்நூல்களுள் நுழைந்து தாம்கண்ட நுண் பொருள்களை, உரையாய் விரித்தனர். காலாகாலமாய் அவ்வுரை மரபுள் ஒன்றிய, கற்றோர்தம் வரிசை மிக நீண்டது. முதல்நூல் ஒன்றினை இயற்றும் அறிவுத்திறன் இருந்தும் அத்தொழில் இயற்றாது, ''வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்ட'' ''முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி'' பெரும்புலவர் செய்த சூத்திரங்களான ''பா''திறத்துள், தம் நுண்ணறிவைச் செலுத்திச் செலுத்தி, காணாப்பொருள் கண்டு கற்றோரை உவப்பித்த, உரையாசிரியர்களது பெரும்பணி ஒப்பற்றது.

நாம் நம்மறிவு கொண்டு ஒரு நூலினுள் நுழைதற்கும், உரையாசிரியர் துணைகொண்டு ஒரு நூலினுள் நுழைதற்கும், உள்ளதான வேற்றுமை மிக விரிந்தது. தன்னறிவு கொண்டு ஒரு நூலினுள்நுழைவது கல்வி. உயர்ந்தோர் அறிவினூடு ஒரு நூலினுள் நுழைவது கேள்வி. அதனாற்றான் வள்ளுவக் கடவுளார், செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் என்றும், கற்றலின் கேட்டல் நன்றே என்றும், கேள்வியின் பெருமையை வகுத்தனர்.

உரையாசிரியர்களின் திறம் வியப்பானது. பொருட்திறத்தால், நூலாசிரியரின் நிலை நிற்போரே, உண்மை உரையாசிரியராம். பரிமேலழகர் போன்றோர்தம் உரை கற்கின், இவ்வுண்மை உணரலாம். நம்போன்றோர் நூலிற்காணும் சொற்களினூடு பொருளை அணுக முயல்கிறோம். உரையாசிரியர்கள் பொருட்திறத்தால் நூலாசிரியரை ஒத்திருப்பதால், பொருளினுள் நின்றும் சொற்களுள் நுழைவர். அதனால் ஒரு பாடலில் இடப்பட்ட வரிகளுக்கும் சொற்களுக்கும் அட்சரங்களுக்குங்கூட, முதல்நூல் ஆசிரியரின் நோக்கமுணர்ந்து, தம் பொருட்திற அறிவால், பாயிரம் மாறாமல் ஆயிரம் கருத்துரைப்பர். இந்நுட்பம் வாய்க்கப்பெற்றோரே நல் உரையாசிரியராம்.

Koviloor Digital Library

மனிதரை விண்சார வைத்து வெற்றிகொண்டவன் அவன். தமிழர்தம் ஊன் கடந்து, உளம் கடந்து, உயிர் தொட்டவன். அதனால் புகழ் பெற்றவன். ஆயிரம் ஆண்டுகளின் மேலாய், தமிழ்ப்புலமைத் தலைமை, கம்பநாடன் கால்களிலேயே வீழ்ந்து கிடக்கிறது. இராமனையும் சீதையையும் தம் உறவாய் நினைக்கவைத்து, தெய்வ உறவை, மானுடர்க்கு ஆக்கித்தந்த மகான் அவன். அவன் கவி, பாமரனையும், பண்டிதனையும் ஒருமித்து ஈர்த்து நிற்பது ஓர் அற்புதம். கற்றார் நெஞ்சைக் களிக்கச்செய்யும் அதேவேளை, மற்றோர் இதயத்தையும் மயக்கி நிற்கிறது கம்பகாவியம்.

காலங்கடந்து நிலைத்த தமிழ்ப்புலவர்களுள், கம்பனுக்கு ஒரு தனித்துவம் உண்டு. புலவர் பலர் பூத்துப்பொலிந்த தமிழ்ப்பூங்காவுள், கம்பன் தனித்து இனங்காணப்படுகிறான். ஆளுமை, புலமை, அறிவாற்றல், கல்வி என்பனவற்றோடு, இயற்கை அறிவும் வாய்க்கப் பெற்றதால், கம்பன், ''கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமை'' கொண்டவன். அவனால் படைக்கப்பட்ட இராமகாவியம் தமிழிலக்கியங்களுள் தலையாததாய்த் தகைமை கொண்டது.

விரிந்த அறிவுக்கூறுகளின் ஒவ்வோர் கருத்தினை மட்டும் வலியுறுத்தி, தாம்கொண்ட அக்கருத்தினையும், தமிழிலக்கியத்தினையும், புலவர்சிலர் நிலைபெறச் செய்தனர். இயற்கையின் ஒவ்வோர் கூறுகளை மட்டும் தொட்ட, இத்தனை புலவர்களையும் முழுமையாய் உள்வாங்கி, இயற்கையின் முழுவடிவமாய், கம்பன், தன் காவியத்தைச் சமைத்து வியப்பேற்படுத்துகிறான். கம்பனின் நுண்மாண்நுழைபுலத்தால், கம்பகாவியத்துள், இயற்கையின் முழுக்கூறுகளும் ஏதோ ஒரு வகையில் பதிவாக, இயற்கையை முழுமையாய் உள்வாங்கி, கம்பகாவியம்கடவுள்த் தன்மை கொண்டது. ''உலகம் யாவையும்'' தன்காவியத்துள் உளவாக்கிய, கம்பனின் ''அலகிலா விளையாட்டு'' கற்றோரை ஆச்சரியப்படுத்திற்று. இயற்கையோடு முற்றுமுழுதாய் ஒன்றும் வல்லமை பெற்றதால், கம்பன் கடவுளைக் காவியமாக்கினான் காவியத்தைக் கடவுளாக்கினான்.

உலகளாவித் தமிழை விரிவித்தவர்களுள், கவிச்சக்கரவர்த்தி கம்பனும் ஒருவன். தெய்வத் திருமகளைத் தன் கவிதைத் தேரேற்றி, உலாவரச் செய்து உவப்பூட்டி, உலகனைத்தையும் அத்தேரின்பின் ஓடச்செய்தான் அவன். கம்பன் கைபட, தமிழ்த்தாய் உயிர்த்தாள். தமிழ் அட்சரங்கள் பொற்சரங்களாய் மின்னின. தமிழ்ச்சொற்கள் வைரக்கற்களாய் ஜொலித்தன. அவன் கையாண்ட பொருள், உலகின் இருள் நீக்கிற்று. இராமன் கால்பட்ட கல்போல், கம்பன் கைபட்ட தமிழும் உயிர்த்து

Koviloor Digital Library

உயர்ந்தது. இராமனின் விற்சரங்கள்போல், கம்பனின் சொற்சரங்கள், எதிர்ஒருவர் நில்லாவண்ணம் ஏற்றம் பெற்றன. அறத்தை வளர்க்கவும், மறத்தை மாய்க்கவும் செய்தன. கம்பன், தன் தவத்தகுதியால், தமிழ்த்தாய்க்குப் பூட்டிய ஆபரணங்கள் பலப்பல. கண்டோரைவியக்கவும் மயக்கவும் வைத்த, அவ் ஆபரணங்களின் அழகு, காணக்காண எல்லையின்றி விரிவன. இங்ஙனமாய், கம்பனின் கவிதைத்திறன், உரைக்க உரைக்க விரியும். அதனால் விரிவஞ்சி இவ்வளவில் அதனை விடுத்து, நம் உரைமரபு சில காணத் தலைப்படுவோம்.

காலத்தால் அழியாத உயர்நூல்களை, கற்று அறிந்து உணர்ந்த பெரியோர் பலர், அந்நூல்களை அனுபவித்தலையே, நம் வாழ்நாள் பணியாய் இயற்றினர். அந்நூல்களுள் நுழைந்து தாம்கண்ட நுண் பொருள்களை, உரையாய் விரித்தனர். காலாகாலமாய் அவ்வுரை மரபுள் ஒன்றிய, கற்றோர்தம் வரிசை மிக நீண்டது. முதல்நூல் ஒன்றினை இயற்றும் அறிவுத்திறன் இருந்தும் அத்தொழில் இயற்றாது, ''வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்ட'' ''முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி'' பெரும்புலவர் செய்த சூத்திரங்களான ''பா''திறத்துள், தம் நுண்ணறிவைச் செலுத்திச் செலுத்தி, காணாப்பொருள் கண்டு கற்றோரை உவப்பித்த, உரையாசிரியர்களது பெரும்பணி ஒப்பற்றது.

நாம் நம்மறிவு கொண்டு ஒரு நூலினுள் நுழைதற்கும், உரையாசிரியர் துணைகொண்டு ஒரு நூலினுள் நுழைதற்கும், உள்ளதான வேற்றுமை மிக விரிந்தது. தன்னறிவு கொண்டு ஒரு நூலினுள் நுழைவது கல்வி. உயர்ந்தோர் அறிவினூடு ஒரு நூலினுள் நுழைவது கேள்வி. அதனாற்றான் வள்ளுவக் கடவுளார், செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் என்றும், கற்றலின் கேட்டல் நன்றே என்றும், கேள்வியின் பெருமையை வகுத்தனர்.

உரையாசிரியர்களின் திறம் வியப்பானது. பொருட்திறத்தால், நூலாசிரியரின் நிலை நிற்போரே, உண்மை உரையாசிரியராம். பரிமேலழகர் போன்றோர்தம் உரை கற்கின், இவ்வுண்மை உணரலாம். நம்போன்றோர் நூலிற்காணும் சொற்களினூடு பொருளை அணுக முயல்கிறோம். உரையாசிரியர்கள் பொருட்திறத்தால் நூலாசிரியரை ஒத்திருப்பதால், பொருளினுள் நின்றும் சொற்களுள் நுழைவர். அதனால் ஒரு பாடலில் இடப்பட்ட வரிகளுக்கும் சொற்களுக்கும் அட்சரங்களுக்குங்கூட, முதல்நூல் ஆசிரியரின் நோக்கமுணர்ந்து, தம் பொருட்திற அறிவால், பாயிரம் மாறாமல் ஆயிரம் கருத்துரைப்பர். இந்நுட்பம் வாய்க்கப்பெற்றோரே நல் உரையாசிரியராம்.

Koviloor Digital Library

பொருட்திறத்தால் நூலாசிரியரை ஒவ்வாதோர், அந்நூலினுள் நுழைந்து உரைசெய்ய முனைவது தவறாம். நூலாசிரியரின் நோக்கம் மாறாது, உரைசெய்யும் நுட்பம் அரிதானது. நுனிப்புல் அறிவால், நூலினுள் நுழைய முயல்வோர் செய்யும் உரைவிளக்கம், அவர்தம் சிறியதான அறிவு எல்லையுள், விரிந்த நூலாசிரியனைச் சிறைப்படுத்தி, கடலினைக் கையளவாக்கிக் கவலச்செய்யும், **அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும், ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்** தம், உரைமுயற்சி உரை மரபுள் நாமும் ஒருவர் என்றுரைத்து, புகழ்பெற முனைவார் பலர். இவ்வீண் முயற்சியால், தமிழை வீழச்செய்கின்றனர்.

உயர் கவிஞர்களின் கவிதைகள் சித்திரங்களாய் அமைந்தன. கம்பன் கவிதை அச்சித்திரத் தன்மைக்காம் தக்க சான்று. கம்பன் கவிதைகள், கம்பசித்திரங்கள் என்றே கற்றோரால் குறிக்கப்படுவன. விரிந்த விடயமொன்றை எவ்விதத்திலும் அதன் தரம்குன்றாது, சுருக்கி உரைப்பதைச் சித்திரம் எனலாம். இதனை, ''சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித் திட்ப நுட்பஞ்சிறந்தனசித்திரம்'' என உரைப்பார் நன்னூலார். விரிந்த பொருளை சுருங்கிய சொற்களுள் அடக்குவது எங்ஙனம்? அதற்காம் கருவிகளாய் இலக்கண, தர்க்க அறிவைக் கையாண்டனர் நம் தமிழ்ச் சான்றோர். இலக்கண, தர்க்கக் கருவிகளால், விரிந்த பொருளைச் சுருக்கியுரைத்த கவிதைச்சித்திரங்களுள்நுழைந்து, அப்பொருளைமீண்டும் விரித்துரைக்க, இலக்கண தர்க்க அறிவுகள் இன்றியமையாதன. அதன் மேலாய்த் தம் நுண்ணறிவு கொண்டும் நூலை விளக்கம் செய்தாலே, உரைநூல் கற்றோரை உவப்பிக்கும்.

தமிழின் உயர் தரமிக்க நூல்வரிசையொன்றினை, சித்தாந்த அட்டகம்செய்த உமாபதிசிவாச்சாரியார் ஓதினார். ''வள்ளுவர், சீர் அன்பர் மொழிவாசகம், தொல்காப்பியமே, தெள்ளு பரிமேலழகன் செய்த உரை - ஒள்ளிய சீர்த் தொண்டர் புராணம் தொகு சித்தி ஓர் ஆறும் தண்டமிழின் மேலாம்தரம்'' என்பது அப்பாடல். இப்பாடலில் திருக்குறள், திருவாசகம், தொல்காப்பியம், பெரியபுராணம், சிவஞானசித்தி எனும் முதன் நூல்களான ஐந்து நூல்களை, தமிழின் உயர்தர நூல்களாக வகுத்த சிவாச்சாரியார், அந்த ஐந்து நூல்களோடு ஓர் உரைநூலையும் ஒன்றாக்கி உரைத்தமை, அவ்வுரை நூலாசிரியர் பரிமேலழகர் உரையின் திண்மையையும், உரைநூல்களின் வன்மையையும் உரைக்கும் தக்க சான்றாம்.

Koviloor Digital Library

கம்பனுக்கு உரைகண்ட பெரியாருள் தலையாயவர், வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்கள். விரிந்த தமிழ் இலக்கண, இலக்கிய அறிவுடன் தமிழ்மொழி வடமொழிகளின் புலமையும், வைணவ மரபுணர்ந்த நுண்மையும், புராணநூற்பயிற்சியுமாய் அவர் பெற்றிருந்த விரிந்த அறிவானது, கம்பகாவிய உரைகளுக்கு பாதை வகுத்துத்தந்த பயன் கொண்டது.

பின்நாளில் வடமொழியின்பால் எழுந்த துவேசத்தினால், அம்மொழிப் பயிற்சியின்றிப் போனதினாலும், பக்திநெறியின் மேல் எழுந்த வெறுப்பினாலும், உயர் தமிழின் உள்நுழையமுடியாச் சோர்வினாலும், நம் இளைய தலைமுறை இழந்துபோனது. அஃது நமதும் தமிழினதும் தவக்குறைவாம்.

ஆங்கிலத்தின் வருகையும், அம்மொழியின் உலகியல் வெற்றியும், நம் இளையோரைப் பெரிதும் ஈர்க்க, தம் தாய்மொழியின் தகுதியுணராது, பிறமொழி கற்பதில் பெரும்பித்தாகி, தம் தாய்மொழியில் தரமிழந்து போயிற்று நம் தலைமுறை. அதனால் வை.மு.கோ. போன்றோரது உரைகளை உள்வாங்கி, எளிமையும் புதுமையும் செய்து, இளையோரை ஈர்க்கும் வண்ணம், பின்நாளில் தக்கோர் பலரும் செய்த உரைகள், தமிழுலகில் நிலைத்துப் பதிவாகின. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட, ஆசிரியர் குழுவினது உரை டாக்டர்.உ.வே.சா. வினது உரை, கோவைக் கம்பன்கழக அறிஞர் குழுவினது உரை, என ஒருசில இன்றைய இளைய தலைமுறையினர் அணுகத்தக்க வகையிலும், ஓரளவு பழமையின் தரம் குன்றாமலும் வெளியாகி, உரைநூல் வரிசையில் ஒன்றின. அவ்வுரைநூல் வரிசையில் இந்நூலாசிரியர்தம் உரையும் சேர்வது, உவப்புறச் செய்யும் செய்தி.

ஒரு நூலினிற்கு உரை செய்தற்கு, ஆழ்ந்த புலமை, விரிந்த இலக்கண, இலக்கிய, தர்க்க, புராண அறிவுகள், நிறைந்த நூற்பயிற்சி, உரைநூல்களிள் நுழைந்தெழுந்த வன்மை, சுயதேடல் என பல ஆற்றல்களும் அவசியமாம்.

கம்பகாவியத்திற்கு, காலத்திற்கேற்ப புதிய உரை தந்திருக்கும் பள்ளத்தூர்.பழ.பழனியப்பன் அவர்கள், வங்கி மேலாளராய்ப் பணியாற்றியவர் எனும் செய்தி வியப்புத்தருகிறது. நூலுள் நுழைந்து சொற்பொருள் நாடிக் கற்கும் முறைமையை, தமிழ்த்துறை சார்ந்த அறிஞர் பலரே கைவிட்ட இன்றைய நிலையில், நூல்முழுவதும் கற்று, அயராது அத்தனை பாடல்களுக்கும் உரையெழுதி, தன் ஆழ்ந்த புலமையை

Koviloor Digital Library

வெளிப்படுத்தியிருக்கும் பழனியப்பன் அவர்கள், வங்கித்துறையிலிருந்து இக்காரியத்தை இயக்கியிருக்கிறார் என்பது, நிச்சயம் வியக்கத்தக்க விடயமே. அவர்தம் இருப்பெண்ணி ''பரோடா'' வங்கி நிச்சயம் பெருமை கொள்ளலாம். அதேவேளை விரிந்து கிடக்கும் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகள், தக்கவோர் அறிஞனைத் தவறவிட்டதெண்ணி, கவல்வதும், கழிவிரக்கம் கொள்வதும் தவிர்க்க முடியாததாம்.

பழனியப்பன் அவர்கள் இன்றைய இளைய தலைமுறையின் தமிழ்த்தகுதியை எண்ணி, மிக எளிய தமிழ்நடையில் முன்னை உரையாசிரியர்களின் உயர் பொருளை உள்வாங்கி, தந்திருக்கும் புதிய உரை கம்பனை ஆழங்காற்படக் கற்க நினைக்கும் இன்றைய இளையோர்க்கு, ஓர் அற்புத அமுதசுரபியாய் அருள் செய்யும்.

முதலில் பாடலில் காணப்படும் அரிய சொற்களுக்கான சொற்பொருள்; பின்னர் பாடலின் முழுமைப்பொருள்; அதன் பின்னர் அப்பாடலில் பொதிந்துள்ள நயங்கள்; தக்க மேற்கோள்கள்; ஆசிரிய விளக்கம்; என பழனியப்பன் அவர்கள் செய்திருக்கும் உரைமுறை எளிமையும், வலிமையும் வாய்ந்தது.

சொற்பொருள் தரும் பழனியப்பன் அவர்கள் பாடலின் முழுமைக் கருத்தினை மனங்கொண்டு சொற்குப் பொருத்தமான பொருளுரைத்துப் பயன்செய்கிறார். நிகும்பலை யாகப் படலத்தின் 126வது பாடலில் **''மருமத்தினை மதியாக் குறித்து''** எனும் தொடர் வருகிறது. மருமம் என்ற சொல்லுக்கு இன்றைய பெரும்பான்மை இளையோர் தெரிந்திருக்கும் பொருள், இரகசியம் என்பதே. மருமம் என்பதற்கு மார்பு, உயிர்நிலை என்பனவும் பொருள்களாம். இன்றைய மாணவர் தம் நிலையுணர்ந்து, இப்பாடலின் கருத்திற்குப் பொருந்த, மருமம் என்பதற்கு மார்பு என சொற்பொருள் விளக்கம் தந்ததும், அதே படலத்தின் எட்டாம் பாடலில் வரும், **''தன்பெருந் தன்மை தானும் அறிகிலா ஒருவன் தாங்கும் வன்பெரும் சிலை''** எனும் தொடரில் வரும், ஒருவன் எனும் சொல்லுக்கு, பாடற்பொருளுக்கேற்ப மரபறிந்து, ஒப்பற்றவன் (திருமால்) என, சொற்பொருள் தந்திருக்கும் பாங்கும், மேற்கருத்திற்காம் உதாரணங்கள்.

பொருள் விளக்கத்தில் உரையாசிரியர் தரும், விரிந்த மேற்கோள் விளக்கங்கள், இவ்வுரையின் குறிப்பிடத்தக்க சிறப்பாம். மற்றைய இலக்கியங்களுடனான ஒப்பீட்டு அறிவையும், பல இலக்கியப் பயிற்சியினையும் கற்போர்க்குத் தருவதோடு, நூலாசிரியரின் விரிந்த

Koviloor Digital Library

நூற்புலமையையும், இம்மேற்கோள்கள் உறுதி செய்கின்றன. ஒரு வங்கி மேலாளரின் தேடலின் விரிவு கண்டு, நாம் வியந்து போகிறோம்!

உரைவிளக்கம் செய்கையில், நூலாசிரியர் தன் கருத்தாய் உரைக்கும் பல செய்திகளும், பொருத்தமாய் அமைந்து மகிழ்வு தருகின்றன. **''தவனோ என்னின் செய்து முடிக்கும் தரனல்லன்''** எனும், இராவணன் வதைப்படலப் பாடலுக்கு, உரைவிளக்கம் செய்யும் நூலாசிரியர்

''இராமபிரான் அவனைவிட வயதிற் சிறிவனாகத் தோன்றுகிறான். எனவே இவனுக்குப் பெருந்தவம் செய்யும் ஆற்றலும், தகுதியும் இருக்கமுடியாது என்று கருதுகிறான் என்பதாம். மேலும் இராவணன், தான் ஒருவன்தான் உலகத்திலேயே பெருந்தவம் செய்து, மும்மூர்த்திகளிடமிருந்து உண்மையான வரங்களைப் பெற்றிருப்பதாகக் கருதும் செருக்குடையவன். எனவே இவ்வாறு கூறினான் என்க''

எனத் தரும் விளக்கம் பாடற்பொருளுக்கப்பால் இராவணனின் பாத்திர இயல்பைத் தெளிவுபடுத்தி மகிழ்வு தருகிறது. நூலாசிரியர் பாடல்களுக்கிட்ட தலைப்புக்கள், விரிந்த படலத்துள் தயக்கமின்றி மாணவர் நுழைய, தக்க தளங்களாய் அமைகின்றன. பாடற்குப் பொருத்தமான பிறநூல் மேற்கோள்களன்றி, கம்பகாவியத்துக்குள்ளேயே ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட பாடல்களை, உரைவிளக்கத்துட் பதிவாக்கும் நூலாசிரியரின் திறம் பாராட்டுக்குரியது. மேல் உரைவிளக்கங்களுள், நூலாசிரியரின் இலக்கிய அறிவு மட்டுமின்றி இலக்கண, புராண, இதிகாச, தத்துவ அறிவுகளும், பதிவாகியிருத்தல் கண்கூடு.

நம் உரைச்சான்றோர்தம் மரபு பற்றி நின்று, புதியன புகுத்தி, பழ.பழனியப்பன் செய்திருக்கும் உரையானது, கம்பகாவியத்திற்குக் காலத்தால் செய்யும் உதவி என்பதில் எந்தவித ஐயமுமில்லை. நூலாசிரியரின் உரைவிளக்கத்தில் வரும் மேற்கோள்களாலும், நயப்புமிக்க விளக்கங்களாலும், அவர்தம் தமிழ்த்தகுதி தெற்றெனத் தெளிவாகின்றது. எனினும் இன்றைய இளையோரை மனங்கொண்டு, செய்திருக்கும் உரையானது, அவர் இளையோர்மேல் கொண்ட அருளால் விளைந்த அம்முயற்சியை, கற்றோர் உவக்கவும் உயர்த்தவும் செய்வர் என்பது திண்ணம். அந்நூலினூடு வெளிப்படும், ஆசிரியர்தம் உயர் அறிவை உய்த்துணர்ந்து, கற்றோர், அவர் காலத்தால் செய்த நற்பணியைப் போற்றி

Koviloor Digital Library

நிற்பர். இவ்வரிய, பெரிய முயற்சியில், எளியோனாகிய என்னையும் உள்வாங்கிய அப்பெரியாரை, என் மனம், மொழி, மெய்களால் போற்றுகின்றேன். அறிவுலகில் அவர் நலன் சிறக்க, என்னையும் வாழ்விக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன், பாடிப்பரவும் பரம்பொருளையும், கம்பனோடு என்னை கைகோர்க்கச் செய்த என் குருநாதர், திருச்சி பேராசிரியர் அமரர் இரா.இராதாகிருஷ்ணன் திருவடிகளையும் வேண்டிப்பணிகின்றேன்.

"இன்பமே எந்நாளுந் துன்பமில்லை"

Koviloor Digital Library

அணிந்துரை

முனைவர் சரசுவதி இராமநாதன் M.A.PhD
(பணி நிறைவு) தமிழ்த்துறைத் தலைவர்சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி,
பள்ளத்தூர்

உலகில் எந்தமொழிக்கும் இல்லாத சிறப்பு நம் தமிழ்மொழிக்கு உண்டு என மார்தட்டிய மாக்கவிஞன் பாரதி. இந்தத் தமிழ்நாடு ''கல்வி சிறந்த தமிழ்நாடு'' எனப் பாடினான் எப்படி? புகழ்க்கம்பன் பிறந்திருக்கிறானே அது போதுமே! என்று பதில் வருகிறது.

> ''காலம் எனும் ஆழியினும், காற்றுமழை ஊழியிலும் சாகாது
> கம்பனவன் பாட்டு - அது

தலைமுறைக்கும் எழுதிவைத்த சீட்டு என்ற கவியரசரின் உரை புகழுரையன்று பொருளுரையே''

எத்தனையோ காப்பியங்களில் யுத்தவர்ணனை வெறும் சத்தமாக மட்டுமே இருக்கும். கம்பனின் ஆறாவது காண்டமான யுத்தகாண்டம் பல்சுவை அரங்கமாகத் திகழ்கிறது. இராமாவதாரத்தில் மூன்றில் இரண்டு பங்கு யுத்தகாண்டமே! ஆம் 10,580 பாடல்களில் சுமார் 4600 யுத்த காண்டக்கவிகளே. 39 படலங்களில் காணப்படும் பலப்பல ஆழ்ந்த கருத்துக்களைபழ.பழனியப்பனார்உரையில்கண்டு மகிழலாம். ''உள்ளூர் மேளம்'' தானே என்றில்லாமல் என்னையும் மதித்து அணிந்துரை கேட்ட அன்பைப் போற்றுகிறேன்.

<u>ஞானப்பழம் நீ!</u> ''பழம் நீ அப்பா - ஞானப்பழம் நீ அப்பா'' என்றார் கவியரசர். அது பள்ளத்தூர் பழநியப்பருக்கும் பொருந்தும். ஒரு வங்கி அதிகாரிக்குத் தமிழ் ஆர்வம் எத்தனை! முயற்சி எவ்வளவு பெரிது! பயன் எவ்வளவு? சிறப்பு எவ்வளவு? என்று வியந்துநிற்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழம் 13 ஆண்டுகளில் செய்த சாதனையை உ.வே.சா நூல்நிலையம் 15 ஆண்டுகளில் நிறைவேற்றிய பணியை, கோவை கம்பன் கழகம் 7 ஆண்டுகளில் செய்த ஆக்கத்தை 3ஆண்டுகளில் தனி மனிதர் பழநியப்பன் செய்துள்ளார்! விந்தை!

<u>பதிப்புச் சிறப்பு:</u> ஆர்வம் காரணமாக ஈடுபட்டு, கம்பனிலே ஆழங்கால்பட்டு, காஞ்சிப்பட்டுப்போல் தரமாக நெய்த இந்தஆடையைத் தமிழன்னை விரும்பி ஏற்பாள். நிறுத்தப் புள்ளிகளை உரிய இடத்தில் கையாண்டுள்ளார். படலத்தின் கதைச்சுருக்கம் தெளிவாகத் தந்துள்ளார்;

Koviloor Digital Library

அருஞ்சொற் பொருள், ஒவ்வொரு படலத்திலும் உள்ள பாடல்எண்கள், மொத்தப் பாடல்வரிசைஎண், பின்னர் உரை விளக்கம், வேறுபாடு என்று சீர்மையான உரைப்பதிப்பாகத் தந்துள்ளார். ஒவ்வொரு பதிப்பிலும் பாடல், படலம், மிகைப்பாடல் வேறுபடுவதையும் அட்டவணையிட்டுத் தந்துள்ளார்.

<u>உள்ளே செல்வோமா:</u> இந்திரசித்தனின் பிரம்மாத்திரத்தால் அனைவரும் களத்தில் வீழ்ந்துகிடப்பதைச் சீதைக்குக்காட்ட அவள் பட்ட துயரத்தைப் பலபட விளக்கும் முதல் படலம் ''சீதை களம்காண் படலம்'' இதில் நான்காவது பாடல்

கண்டாள் கண்ணால் கணவன் உரு;
அன்றி, ஒன்றும் காணாதாள்;
உண்டாள் விடத்தை என, உடலும்
உணர்வும் உயிர்ப்பும் உடன் ஓய்ந்தாள்;
தண் தாமரைப்பூ நெருப்புற்ற
தன்மை உற்றாள்; தரியாதாள்;
பெண்தான் உற்ற பெரும் பீழை
உலகுக்கெல்லாம் பெரிதன்றோ? (8757)

சீதை என்ற தையலாளின் தரிக்க ஒண்ணாத் துயரம் உலகத்தைவிடப் பெரிதன்றோ? ''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்'' என்ற சிலப்பதிகாரத் தொடரை நினைவுபடுத்துகிறார் உரையாசிரியர். கணவைன இழந்த மனைவியின் துயரத்துக்கு உலகில் வேறு எது ஆறுதல்? சிலம்பில் ஆசிரியருக்குள்ள பயிற்சி இங்கு துணை நிற்கிறது.

''மங்கை அழலும் வான்நாட்டு மயில்கள் அழுதார்கள்'' இப்பாடலின் பொருளை விளக்கமாகத் தருகிறார் உரையாசிரியர். மயிலன்ன விண்ணுலகத்துத் தேவமகளிர். குயில்போன்ற உமையம்மை, திருமகள், சலமகள்கங்கை என்று பலரும் அழுததைக் குறிப்பிடும் கம்பன், ''இரங்காத அரக்கிமாரும் தளர்ந்து'' அழுததாகக் கூறுகிறான். யாருக்கும், எதற்கும், இரக்கப்படாத, இரக்கம் என்ற பண்பேயில்லாத அரக்கியர் என்று விரித்துப் பொருள் தருவது நயம். இலக்குவன் இறந்துகிடந்ததைக் கண்ட இராமபிரான் அழுது புலம்பும்போது சிவபெருமான் முதலியோரும் அழுது புலம்பினர் என்று கம்பன் கூறியதைப் பொருத்திக்காட்டுவது உரைத்திறம்.

ஒரு பாடலில் வினைமுற்றுக்களை அள்ளித் தெளித்துள்ளான் கம்பன்

விழுந்தாள்; புரண்டாள்; உடல் முழுதும்
வியர்த்தாள்; அயர்த்தாள்; வெதும்பினாள்;
எழுந்தாள்; இருந்தாள்; தளிர்க் கரத்தை
நெரித்தாள்; சிரித்தாள்; ஏங்கினாள்;

Koviloor Digital Library

''கொழுந்தா!'' என்றாள்; ''அயோத்தியர் தம்
கோவே!'' என்றாள்; எவ்வுலகும்
தொழும்தாள் அரசேயோ!'' என்றாள்,
சோர்ந்தாள்; அரற்றத் தொடங்கினாள். (8762)

என்று வரும் இப்பாடலில் அவலச்சுவையை அள்ளித் தெளித்திருக்கிறான் கவிச்சக்கரவர்த்தி. சிரித்தாள், ஏங்கினாள், ஒரு நிலையில் இரண்டு முரண்பட்ட செய்கைகள்! எப்படி? தன்னைத்தானே நொந்து கொள்வதால் இகழ்ச்சியாகச் சிரித்துக்கொள்வதும், அழுவதும் இயல்பு- இது துயரத்தின் உச்சநிலை என்று உளவியல் ரீதியாகவும் விளக்குகிறார் பழநியப்பன்.

பலவாறு புலம்பும் சீதை ''என்னை மணந்ததால் உன்விதி இதுவோ? உன் தந்தை உனக்கு முடிசூட்டியிருப்பார். அதை நீ ஏற்றுக்கொள்ள முடியாத ஊழ்வினை என்னால்தானே வந்தது'' என்கிறாள். இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு தனிப்பாடல்வரியைக் கூறுகிறார். ''உமையாளைப் பாகம் தோய்ந்து ஆண்டான் பழிக்கு உழன்றான்'' என்பது ஆசிரியரின் பன்னூற்பயிற்சிக்குச் சான்று.

''எதிர்மறை இலக்கணை'' ''ஆகுபெயர்'' இந்த இலக்கணச் சொற்கள் தமிழாசிரியர்களான எங்களுக்கே தெரியும் என்பதைப் பொய்யாக்கி விட்டார் பழநியப்பன். ''பூவும் தளிரும் தொகு பொங்கணை'' மேல் துயின்ற நீ ஏவின் (அம்பு) வந்த மெல்லணையில் துயில்கிறாயா என்றது எதிர்மறை இலக்கணை (பாடல் 20) என்று இலக்கண குறிப்புக்களையும் ஆங்காங்கே காட்டிச் செல்கிறார் உரையாசிரியர்.

<u>திரிசடையின் அறிவாற்றல்:</u> ஒருவர் துயரத்தில் அறிவழிந்து புலம்பும்போது அறிவுநலம் சான்றவர் பக்கத்திருந்து ஆறுதல் கூறுவது அழகு. எல்லையிலாப் பொறுமை காத்த சீதாதேவி எல்லைகடந்து துயரத்தில் புலம்பும்போது திரிசடை அறிவே உருவாய் ஆறுதல் தருகிறாள். ''உன் வரத்தால் அனுமன் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றான்'' என்று கூறுகிறான்.

<u>உரைவளம்:</u> மங்கையரின் வரம் என்பது சுந்தரகாண்டத்தில் சீதாதேவி அனுமனுக்கருளிய சிரஞ்சீவித்தன்மையைக் குறிக்கும் எனக் குறிப்பிடுவது முன்பின்னுள்ள இயைபை உரையாசிரியர் கவனமாகக் கையாளுவதைக் காட்டும். உத்தரகாண்டம், அனுமப்படலத்தையும் குறிப்பிட்டு இவ்வரம் இந்திரன், சூரியன், வருணன், இயமன், குபேரன், சிவபெருமான், பிரமன், விசுவகருமன் முதலிய எல்லோராலும் தரப் பட்டுள்ளதை உத்தரகாண்டம் கூறும் என்று உத்தரகாண்ட செய்யுள்களையும் ஒருசேரத் தருகிறார் உரையாசிரியர்.

கம்பன் ஒரு பொருட்பன்மொழியைக் கையாளுவதில் சமர்த்தன். அதை உரையாசிரியர் எடுத்துக்கூறும் ஒரு பாடல் 79 இழத்தல், இறுதல், முடிதல், விளிதல், மடிதல் என்ற எல்லாச் சொல்லும் இறத்தல் என்ற ஒரு பொருள் குறிப்பனவே.

Koviloor Digital Library

பாடல் 99க்கான உரையில் அனுமன் மருத்துமலையை விண்ணிலேயே நிற்கவைத்தான். இலங்கை மண்ணில் ஊன்றி வைக்கவில்லை. ''தீயவர் வாழ்கின்ற ஊரில் நின்றால் அதன் புனிதத்தன்மைக்கு ஊறுவரும்'' என்பதால் என்று சொன்னதுடன் இதேபோல் முன்பும் அனுமன் கொண்டு வந்த கணையாழி தீயவர் வாழ்கின்ற ஊருக்குள் வந்தால் அதன் புனிதத் தன்மைக்கு ஊறுவரும் என்று ''ஆங்குயர் மழைக்கண் நீரால் ஆயிரம் கலசம் ஆட்டினாள்'' என்ற சுந்தரகாண்டச் செய்தியையும் இணைக்கிறார். உயர்ந்து நிற்பதால் மலைக்கு ''ஓங்கல்'' என்று காரணப்பெயராயிற்று என்றதும் சரியே.

<u>முன்னோர் மொழி பொருள்:</u> முன்னோர் மொழி பொருளையும், மொழியையும், பொன்னே போல் போற்றுவது அழகு. களியாட்டுப் படலம் பாடல் 9 கள்ளுக்கு தள்ளாடிய அரக்க மகளிரின் அல்குலை ஆடையும், மேகலையும் அவிழ்ந்து வெளிக்காட்டிவிட்டன. ஆனால் கூந்தலோ அவிழ்ந்து கீழே தாங்கி மறைவிடத்தை மறைத்தது. ''கீழ் உளோர்கள் கீழ்மையே விளைத்தார், மேலோர் சீர்த்தவர் செய்யத்தக்க கருமமே செய்தார் (8910) கீழ்மக்கள் கீழ்த்தரமான, சிறுமையான காரியங்களேசெய்வர். மேகலையும், இடையில் அணியப்படும் ஆடையும் உடம்பின்கீழ்ப்பகுதியில் இருப்பன. அவற்றிக்குக் கீழோர் செயல் உவமை யாக்கப்பட்டது. அவை நெகிழ்ந்து அம்மகளிருக்கு மானக்குறைவை ஏற்படுத்த முயன்றன. ''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'' என்ற குறட்பாவுக்கு ஏற்ப உடம்பின் மேல்பாகத்தில் இருக்கும் நீண்டு, தாழ்ந்த கூந்தலானது தானே அவிழ்ந்து, அந்த மானக்குறைவு ஏற்படவிடாது மறைவிடத்தை மறைத்தது. ''அற்றம் மறைக்கும் பெருமை'' என்ற குறளுக்குச் சரியான விளக்கம் இப்பாடல் என்கிறார் உரையாசிரியர்.

நாலடியார் பாடல் 177 ஐயும் எடுத்துக்காட்டுவது அருமை. இதற்கு முந்திய பாடல் (8909) விளக்கத்தில் அல்குல் என்ற சொல்லுக்கு நாம் ஒரே பொருளையே கூறிவருகிறோம். ஆனால் அல்குல் என்ற சொல் ஆடவரின் அபரபாகத்தையும், பெண்களின் கரு இந்திரியத்தையும் சுட்டும். பிற்காலப் புலவர் இச்சொல்லை மகளிரின் கனனேந்திரியத்துக்கே வழங்கினர் என்று உ.வே.சா பதிப்புக் கூறுகிறது. என்று முன்னோர் மொழியைப் போற்றுகிறார்.

பாடல் 8941க்கு விரிவான விளக்கஉரை கண்டுள்ளார். இராமனிடம், சுக்கிரீவன் இலங்கையை எரியூட்டுவோம் என்று அனுமதி கேட்டதும் ''அண்ணன் அமைய எண்ணினான்,'' இராமன் பரம்பொருள் அம்சம். எவர்க்கும் தானே துன்பம் தரவும் மாட்டான். தன்னால் யாரும் துன்பப்பட விடவும் மாட்டான். சுக்கிரீவன் கேட்டதும் நிதானித்து சிந்தித்து அதன்பின் இசைவு தந்தான் என்று விளக்கம்தருவது ஒரு நயம். ''தத்தினான் - தாவினான் - இது குரக்கினத்திற்கே உரிய குணம்.

Koviloor Digital Library

பத்துடை ஏழு என்பது எழுபது வெள்ளம். முன்பு இறந்துபட்ட வானரப்படை முழுதும் மருத்துமலையால் உயிர்பெற்று விட்டன. வான்மீது 67 கோடி என்கிறார். வானரப்பரவை என்பது உருவகம். சேனையை சமுத்திரம் என்பது வழக்கம். ''குரங்குகையில் பூமாலையும், குரங்கு கையில் கொள்ளிக்கட்டையும்'' என்பது உலகவழக்கு. பகைவரின் தலைநகரை எரியூட்டுதல் - உழுபுலவஞ்சி என்கிறது புறத்திணை. இவ்வாறு விரிவாகவும் தக்க எடுத்துக்காட்டுக்களுடனும் உரைதருவது ஆழ்ந்த அறிவுள்ள பழநியப்பருக்கே முடியும்!

மாயா சீதைப்படலம் - பாடல் 59 (8981) இலக்குவன் வாய், மனம், கண், உடம்பு எல்லாம் உணர்விழந்து வாடித் தாய்ப்பசுவை இழந்த கன்றுபோல தரையில் வீழ்ந்தான். இதற்கு விளக்கம்தரும் உரையாசிரியர், தம்மிடம் மிகுந்த அன்பு பாராட்டியவர்கள் பிரியநேரும்போது அல்லது அவர்களை இழக்க நேரும்போது கவிஞர்கள் தாயினைப் பிரிந்த கன்றையே உவமையாகக் கூறுவது வழக்கம் என்கிறார். தாய்ப்பசு-சீதாதேவி கன்று-இலக்குவன். முன்பு நகர்நீங்கு படலத்தில் தாய் சுமத்திரை, ''மாகாதல் இராமன் நம் மன்னவன் - வையம் ஈந்தும் போகா உயிர்த்தாயர் நம் பூங்குழல் சீதை என்றே ஏகாய்!'' என்றதை எண்ணியும் தாய்சீதை-கன்று இலக்குவன் என்பதும் பொருத்தம். முதலில் வாயால் பேசும் பேச்சு, பின்பு மனத்தால் நினைக்கும் நினைவு, தொடர்ந்து கண்பார்வை, அதன்பின் உடம்பும் தன்வசம் இழந்து தரையில் சாய்ந்து வீழ்ந்தது என நயம்படக் கூறுகிறார்.

8986-பாடல் 64 இல் இந்திரசித்து ஒரு பாவமா செய்தான். ஸ்தையலைக் கொன்ற பாவம், துணையில்லாத அபலையைக் கொன்ற பாவம், தவக்கோலத்திலிருந்த தவத்தியைக் கொன்ற பாவம், கற்பின் கனலியைக் கொன்ற பாவம், தெய்வத்தன்மையை வாய்ந்தவளைக் கொன்ற பாவம், திருமகளாகிய இலக்குமியையே கொன்ற பாவம் என்று எல்லாப் பாவத்தையும் ஒருசேரச் செய்தவன் - என அடுக்கும் அழகே அழகு.

பாடல் 9092-நிகும்பலை பாடல்-76 ''துடிக்கின்ற'' என்ற சொல்லை யமகமாக, மடக்காகக் கொள்ள இடமில்லை. சொற்பொருட் பின்வரு நிலையணியே என்று இலக்கண விளக்கம் தருகிறார். உயர்வு சிறப்பு உம்மை <u>''மூவரும்''</u> என்பது என்கிறார். இடதுதுடிப்பது ஆண்கட்குத்தீங்கு வருவதன் அறிகுறி என்ற உலகியல் நம்பிக்கையை எடுத்துக்காட்ட மறக்கவில்லை.

பாடல் 665 (9181) ''நீர் உளதனையும் உள்ள மீன்'' இதை ''நீர்உளஎனின் உளமீனும் நீலமும்'' என்ற பாலகாண்ட இலக்குவன் கூற்றுடன் இணைத்து மகிழ்வது கற்போர் மனத்திலும் மகிழ்ச்சி தரும்.

167- (பாடல்9183) ''பார்ப்பனக் குலத்துக்கெல்லாம்'' இது இன்று வழங்கப்படும் சாதிப்பெயரில் வரவில்லை. வேதம் முற்றும் கற்றுணர்ந்த வேதவிற்பன்னர்களையே குறிக்கும் என்கிறார். மானம் என்பதற்குத் தன்

Koviloor Digital Library

நிலையில் தாழாமை, தெய்வத்தால் தாழ்வு வந்துழி, உயிர்வாழாமை என்று பரிமேலழகர் உரைக்குறிப்பைக் காட்டுகிறார். ''ஒட்டார்பின் சென்றொருவன்'' குறள்-967 சரியான எடுத்துக்காட்டு

173 பாடல் 9189 யாரும் என்ற ஒரு சொல்லில் நண்பனோ, பகைவரோ, நடுநிலையாளரோ யாரும் என்னைக் குற்றம் சொல்லவில்லை என்பது பொருள் என்கிறார்.

இராவணன் சோகப்படலத்தில் பாடல் 41 9309 ீல்தல் என்பது நமக்குப் புதியசொல் புதிய பொருள் தோண்டுதல் என்பது பொருள் என்கிறார்.

35வது படலம்: இராவணனுடன் போர்செய்யும் பொருட்டு, சிவபெருமானால் கட்டளையிடப்பட்டு, இந்திரனால் மாதலிமூலம் அனுப்பப்பட்ட இந்திரனது தேரில் இராமபிரான் ஏறுகின்ற நிகழ்ச்சியைக் கூறுகிறபகுதி. சிலசுவடிகளில் தேர்ஏறு படலம் எனவும் ''இராகவன் திருத்தேர் ஏறு படலம்'' எனவும் சிலசுவடிகளில் ''இராகவன் தேரேற்று படலம்'' எனவும் குறிக்கப்பெறுவதை முதலிலேயே உரையாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். வான்மீகி 103வது சர்க்கமாக வகுத்துள்ளார் என்பதை எல்லாம் முன்னுரையில் விளக்குகிறார்.

முதல் பாடல் 9760 ''பால் அமளி ''அஞ்சல்'' என அந்நாள் எழுந்தபடியே கடிது எழுந்தனன் இராமன்'' என்பதற்கு இவர் தரும் விளக்கம் அழகு! முன்னொரு காலத்தில் திருமால் தான் பள்ளிகொண்ட திருப்பாற்கடலில் பள்ளியிலிருந்து தேவர்களுக்கு ''அஞ்சேல்'' என்று அபயம் அளித்து எழுந்ததுபோலவே இப்போதும் விரைவாக எழுந்து வந்தானாம். முன்பு நடந்த நிகழ்ச்சியை உவமானமாகக் கூறுவது கம்பனின் தனித்தன்மை என்கிறார்பழநியப்பன் அவர்கள். முன்பு கவிஞன் சொன்ன கூற்றை அரிமா நோக்காக எடுத்துரைப்பது இவரது தனித்தன்மை எனலாம்.

''வேதமுதல் காரணனோ!''பாடல் 9920 தசகண்டன், ஸ்ரீராமனைப் பார்த்து வியக்கிறான். இவன் சிவனா, நான்முகனா, திருமாலா தவனோ எனில் செய்துமுடிக்கும் தரன் அல்லன். அற்பமான மனிதனான இராம பிரான் வயதில் சிறியவனாகத் தெரிகிறான். இவனுக்குப் பெருந்தவம் செய்யும் ஆற்றலும் தகுதியும் இருக்கமுடியாது என்று கருதுகிறான். இராவணன் செருக்குடையவன் என்பதையும் மெய்வரம் என்றால் தவறாமல் பலிக்கும் உண்மையான வரம் என்பதையும் வேதமுதல் காரணன் இறைவன் திருமாலே என்ற விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தையும் காட்டுகிறார்.

இராவணவதம் என்பதை அழகிய தமிழில் இராவணன் உயிர் இழத்தல் என்கிறார். ''முக்கோடி வாழ்நாளும்'' பாடலினை 9982 மிக அழகான கருத்துக்களைக்கூறி விளக்குகிறார். முப்பத்து முக்கோடி தேவர்கள் யாவர் என்று கூறுகிறார். பெருந்தவம் எப்படி இயற்றியிருக்கிறான் என்பதை உத்தரகாண்டம் கொண்டு விவரிக்கிறார். மூன்றரைக்கோடி வாழ்நாள் பெற்றதையும் உத்தரகாண்டம் கொண்டு நிறுவுகிறார்.

Koviloor Digital Library

இராமபாணம் இராவணனுடைய எல்லா வரம், தவ ஆற்றல், புயவலி அனைத்தையும் ''தின்று'' என்பது மரபு வழுவமைதி என்றும் மறவாமல் கூறுகிறார். 9985 ஆவது பாடல் புகழ்பெற்ற ''வெம்மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க'' என்ற பாடல். இதனை விளக்கும் உரையாசிரியர், இராவணன் தன் வாழ்நாளில் எந்தெந்த வழிகளில் அடங்காது செயல்பட்டானோ அவை அனைத்தும் அடங்கிப்போனான் என்ற விளக்கும் அழகு! 9989 ஆம் பாடல் ''தோடுழுத தார் வண்டும்'' பாடலின் தெளிவுரையும் சிறப்பு!.

<u>இயல்பான புலம்பல்</u> பாடல் 10004 வீடணன் புலம்பல்

''உண்ணாதே உயிர் உண்ணாது ஒரு நஞ்சு
சனகி எனும் பெருநஞ்சு'' என்ற

பாடல் கண்ணாலே பார்த்ததற்கே இறந்தாயே உண்டால் கொல்லும் நஞ்சல்ல சீதை. ''கண்டாலே உயிர் உண்ணும் நஞ்சு'' ''திட்டிவிடம்'' எனும் ஒருவகைப் பாம்பு உண்டு. திட்டிவிடம் அன்ன கற்பின் செல்வி என முன்பும் வீடணன் கூறியுள்ளான். அவனைக் கண்ணாலே நோக்கியே உயிர் இழந்தாயே! நான் சொன்னதையெல்லாம் இனிமேல்தான் எண்ணப் போகிறாயோ? நீயும் களப்பட்டாயே'' என்பதை உயர்வு சிறப்பும்மை என்கிறார். முந்தி இறந்தவர்கள்போல் நீயும் என எண்ணும்மையாகவும் கொள்ளலாம்.

''அண்ணாவோ, அண்ணாவோ'' என்ற அடுக்கு அவலம்பற்றி வந்தது என்கிறார்.

''வீரநாடு உற்றாயோ'' பாடல் 10008 பாடலில் பேரன் - பிதாமகன் - பாட்டன் புலத்தியன் அவன் பிரம்மனின் மகன் ஆகவே பிரமனின் நாடான சத்யலோகத்திற்குச் சென்றாயோ - என்ற விளக்கம் சரியே! என்று வீடணன் புலம்பும் பாடல். இதனையும் உத்தரகாண்டம் கொண்டு முன்கதை கூறி விளக்குகிறார்.

பாடல்:10023 உலகில் தமிழறிந்த கம்பனை அறிந்த பலரும் விரும்பும் அற்புத அவலப்பாடல். ''வெள்ளெருக்கஞ் சடைமுடியான்'' இதனுடைய விளக்கம் தரப்போந்த உரை நூலாசிரியர் ''இராமபாணம் இராவணனின் உயிரைப் பருகுவதற்கு உள்ளே புகுந்து தடவியதா - இல்லை - சானகிமீது கொண்ட காதல் எங்கேனும் ஒளிந்து கொண்டிருக்கிறதா என்று தேடியதா - என்று அரற்றினான்'' என்பது நல்ல உரைதான். தடவியதோ - இதற்கு இப்படி விளக்கம் தரலாம். பாணம் தடவுமா? குத்தும்; துளைக்கும் - உடல்புகுந்து தடவியதோ, என்கிறாளே மண்டோதரி. ஆம் அவளுக்குக் கணவன் மார்பை அம்பு குத்தியது துளைத்தது என்று கூறக்கூட நடுக்கம். கணவன் மார்பைத் தழுவித்தானே பழக்கம். ஆகவே தடவியதோ என்று கூறியிருப்பாள். குறளில் காதலன் அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம் என்பான். நெருஞ்சியில் காய் உண்டு, காய்ந்தால் அது நெருஞ்சி முள். முள் என்று கூறாமல் காதலன் பழம் என்றது ஏன்? முள்

Koviloor Digital Library

என்ற சொல்கூட இவன் நெஞ்சில் காதலியின் காலில் குத்துவது போலிருக்குமாம். அதுபோலத்தான் மண்டோதரியும் தடவியதோ என்று சொல்லியிருப்பாள் எனக் கம்பன் அச்சொல்லைப் பயன்படுத்துகிறான். இந்தப்பாடல் மூவருக்கும் பெருமைசேர்த்த பாடல் என்கிறார் உரையாசிரியர்.

> இராவணன் உயிர்விடும்போது சீதையைப் பற்றிய
> காமநினைப்பு அவன் நெஞ்சில் இல்லை.
> சுத்தவீரனாக மடிகிறான்.
> இராமன் காமுகனை மாய்க்கவில்லை.
> தூய எதிரியை அழித்தான்.
> சீதை தசமுகன் நெஞ்சச்சிறையிலிருந்து விடுதலை பெற்று
> விட்டாள் (இதயமாம் சிறையில் முன்பு எயிலுடை
> இலங்கைநாதன் வைத்திருந்தான் அல்லவா?

10025 ''காந்தையருக்கு அணியை'' பாடல் உரை சிறப்பாக உள்ளது. சீதையின் பேரழகு தசமுகன் காதலுக்குக் காரணம். அவளது கற்போ அவனது சாதலுக்குக் காரணம் என்கிறார் உரையாசிரியர்.

''இடர்ப்பாரம் அகற்றினான்'' பாடல் எண்: 10034 என்ற நல்ல வார்த்தைகளுடன் மூன்றாவது பகுதியை நிறைவுசெய்திருக்கிறார் பழநியப்பன். செட்டிநாட்டார் மங்கல மரபு பார்ப்பவர்கள். நம் அனைவரின் இடர்ப்பாரம் நீக்க ஸ்ரீராமன் அருள்வார். கம்பனைப் படிப்பவரின் சில இடர்ப்பாடுகளை நீக்கிக் கம்பனை முழுமையாக அனுபவிக்க உரை தந்துள்ள பழ.பழநியப்பருக்குத் தமிழர்கள் பெரிதும் கடமைப் பட்டுள்ளனர்! நானும் சேர்த்துத்தான் நன்றி.

வணக்கம்

வாழ்க வளமுடன்

Koviloor Digital Library

பதிப்புரை

திரு. பழ. பழனியப்பன் அவர்களை நீண்ட பல ஆண்டுகளாக நாங்கள் அறிவோம். அவர் இங்நகரில் வங்கியில் பணியாற்றிய போதே தமிழ் ஆர்வலர் என்பதைப் புரிந்து கொண்டோம். இந்தப்பகுதியில் எங்கே இலக்கிய, ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தாலும் அங்கே சென்று குறிப்பு எடுத்து வந்து சேமித்து வைத்துக் கொள்வது அவர் பழக்கம். பின்நாளில் அவர் அலுவலகத் தொடர்பாக வெளிமாநிலங் களிலும் வெளியூர்களிலும் பணியாற்றியதால் அவருடன் எங்கள் தொடர்பு சற்று விலகியிருந்தது.

மீண்டும் இதே நகரின் வங்கிக் கிளைக்கு மேலாளராக மாற்றலாகி வந்ததிலிருந்து அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பும், உரையாடும் நேரமும் கிடைத்தது. அப்பொழுது அவர் கம்பராமாயணத்திற்கு ஒரு உரை எழுதவேண்டும் என்பது தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை எங்களிடம் கூறினார். ஆனால் மறுபடியும் அவருக்கு வெளியூர்களுக்கு மாற்றல்கள் வந்தன.

இறுதியாக நாமக்கல்லில் இருந்து ஓய்வுபெற்று வந்த போது 1998-ம் ஆண்டு தன் இலக்கில் தான் உறுதியாக இருப்பதாகவும் உரை எழுதத்தொடங்கப்போவதாகவும் அறிவித்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடலானார். இச்சமயத்தில் அன்றாடம் தான் எழுதிய உரைகளையும் எங்களிடம் தந்துவந்தார். 2001-ம் ஆண்டு, தான் முதல் நான்கு காண்டங்களுக்கும் உரை எழுதி முடித்து விட்டதாகவும் அதை நாங்கள் பதிப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 2001-ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டுவரை தன் நண்பர் ஒருவரின் அலுவலில் அவர் வேண்டுகோளுக் கிணங்க ஆலோசராகப் பணியாற்றி வந்தார். மீண்டும் 2006ம் ஆண்டு முடிவில் மிகத் தீவிரமாக இதில் இறங்கி, எங்களுடன் கூடவே இருந்து, இப்பொழுது 2007ம் ஆண்டு அது சீரிய முறையில் வெளியிடுவதற்கு இறைவன் வாய்ப்பளித்திருக்கிறான்.

Koviloor Digital Library

திரு. பழனியப்பன் அவர்களின் அயராத உழைப்பாலும், விடாத முயற்சியாலும் தான் நாங்கள் இந்தப்பதிப்பை வெளிக்கொணர முடிந்தது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

முதல் நான்கு காண்டங்களும் காரைக்குடி கம்பன் கழகத்தில் 69வது கம்பன் விழாவில் மாண்பமை நீதியரசர் திரு. இராமசுப்பிரமணியன் அவர்களின் திருக்கரங்களால் 30.03.07 அன்று காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் வெளியிடப்பெற்றது. காரைக்குடி கம்பன் கழகச் செயலர் திரு. பழ. பழனியப்பன் அவர்கள் அன்புகூர்ந்து இவ்வுரை நூல் வெளிவர பெரிதும் உதவினார்கள். அவர்களுக்கும், நூலை வெளியிட்டு நூலின் சில சிறப்பான கருத்துக்களையும் எடுத்துக்கூறி பாராட்டிய நீதியரசர் திரு. இராமசுப்பிரமணியம் அவர்களுக்கும் நூலாசிரியர் சார்பிலும் எங்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐந்தாவது காண்டமான சுந்தர காண்டம் காரைக்குடி கம்பன் கழகத்தில் 70ஆவது கம்பன் விழாவில் திரு. தமிழருவி மணியன் அவர்களால் 19.3.2008 அன்று காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் வெளியிடப்பெற்றது.

ஆறாவது காண்டமாகிய யுத்த காண்டம் நான்கு பகுதிகளாக வெளிவரயிருக்கிறது. அந்த வரிசையில் இது மூன்றாவது பகுதியாகும். முந்தைய பகுதிகளைப் போலவே இந்தப் பகுதிக்கும் தமிழார்வலர்கள் பெரும் ஆதரவு தந்தருளுமாறு வேண்டுகிறோம். அதற்கு இறைவன் திருவருளும், குருவருளும் அவர்க்கும் எங்களுக்கும் துணை புரிய வேண்டிக்கொண்டு தமிழ்மக்களுக்கு இந்த எளிய, சிறந்த உரையை வெளியிடுகிறோம். மிக்க மகிழ்ச்சி. மிக்க நன்றி.

-சாந்தமங்கை பதிப்பகத்தார்

Koviloor Digital Library

முன்னுரை

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா,
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே.

வான்மீகி இராமாயணம் :

உலகம் யாவையும் பரந்து புகழ்ந்து பேசப்பட்டு வரும் ஒரு நூல் இராமாயணம்; இதனை 'ஆதிகாவியம்' எனவும், இந்நூலை ஆக்கிய வான்மீகி முனிவர் 'ஆதிகவி' என்றும் அழைக்கப்படுகிறார். இவர் இந்த உலகத்திலேயே நல்லொழுக்கத்தில் சிறந்த, 'நடையின் நின்று உயர் நாயகன்' யாரேனும் உளரா என்ற ஆசையில், நாரத முனிவனிடத்தில் இநதக் கேள்வியைக் கேட்டதாகவும், அதற்கு அவர், 'அயோத்தியில், இட்சுவாகு வம்சத்தில் பிறந்த ஸ்ரீராமன் ஒருவனே அப்படிப்பட்ட உயர்ந்த குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவனாகத் திகழ்கிறான்' என்று கூறியதாகவும் அறிகிறோம். வான்மீகி கூறுகின்ற கல்யாண விசேஷ குணங்களாவன : வீரம், அறஅறிவு, நன்றியுணர்ச்சி, உண்மை பேசுதல், விரதத்தில் உறுதி, நல்லொழுக்கம், எல்லா உயிர்களிடத்தும் அன்புள்ளம், பல்கலை அறிவு, அன்பொழுகும் இன்முகம், தைரியம், கோபத்தை தன்வசப் படுத்துதல், ஒளி உமிழும் உடல், அழுக்காறு அற்றல், போரில் உருத்தெழுந்தபோது, தேவர்களும் அஞ்சத்தக்க ஆற்றல் உடைமை என்பனவாம்.

இதனையே எண்ணிக் கொண்டிருந்த வான்மீகி இரு சிரௌஞ்சப் பட்சிகள் - அன்றில்கள் - காதல் வயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றுக் கொண்டிருந்தார். அப்பொழுது, ஒரு வேடன் தனது இரைக்காக - உணவுக்காக - ஒரு ஆண் பட்சியை சுட்டு வீழ்த்திவிட்டான். அந்தக் கொடுமையைத் தாங்க முடியாதவராக வான்மீகி முனிவர் அவனைச் சபித்துச் சில வார்த்தைகளைக் கோபத்துடன் கூறிவிடுகிறார். பின்னர் தனிமையில் அந்த நிகழ்ச்சியை எண்ணி வருந்திக் கொண்டிருந்த வான்மீகி, தான் கூறிய வார்த்தைகள் தற்செயலாகச், சந்தங்கள் அமைந்ததாக ஆகிவிட்டிருப்பதைக் கண்டு வியந்து போனார். அதே நேரத்தில் நான்முகன் அவர் முன் தோன்றி, 'இந்த சந்தத்தை வைத்தே

Koviloor Digital Library

எல்லாம்வல்ல ஸ்ரீஇராமபிரானின் கதையைக் காவியமாக எழுதுக'' என்று சொல்லி, ஆசிர்வதித்துச் சென்றார். இவ்வாறு உருவாக்கப்பட்டதுதான் வான்மீகியின் புகழ்பெற்ற இராமாயணம்'. இராமபிரானை ஒரு மானிடனாக - வீரபுருஷனாகக் கண்டு, அவனுடைய வாழ்க்கை நெறிமுறைகளைக் கூறுகின்ற ஒரு வரலாற்றுக் காவியமாகத் தான் இராமாயணத்தை அருளினார். இவர்தம் இராமாயணம் 'ஒரு அமிர்த சாகரம்' வான்மீகி கி.பி. 3-4ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் இராமபிரானும் வால்மீகியும் சமகாலத்தவர் என்றும், இவர்கள் திரேதா யுகத்தில் வாழ்ந்தவர்கள் என்றும் அறிகிறோம்.

இராமாயண நூல்களும், முறைகளும் :

இதன்பின்னர் இந்த வரலாறு உலகில் - இந்தியாவில் - எல்லா இடங்களிலும் பக்தியினை வெளிப்படுத்துகின்ற நூல்களாகப் பெரும் அளவில் கையாளப்பட்டிருக்கின்றன. இராமகாதை, இராமசரிதை என்ற வரலாறுகள் மகாபாரதத்திலும், விஷ்ணு புராணம், பாகவத புராணம், ஸ்கந்த புராணம், பத்ம புராணம் போன்ற புராண நூல்களிலும் இடம் பெற்றிருக்கின்றன. இந்தப் புராணங்கள் கி.பி.4-5ம் நூற்றாண்டுகளில் தோன்றியனவாகும். இந்து மதத்தினரைவிடவும் பௌத்த, ஜைன, சமண மதங்களிலும் இராமாயணத்தைப்பற்றிய குறிப்புகள் - கதைகள் பேசப்பட்டு இருக்கின்றன. மேலைநாடுகளிலும்-கீழ்த்திசைநாடுகளிலும் இராமாயண வரலாற்றை ஒட்டிய கவிதைகள் கிடைக்கின்றன என்றும் அறிகிறோம்.

வடமொழியைத்தவிர இருபதுக்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளிலும் இந்தி, அஸ்ஸாம், வங்காளம் ஒரிஸ்ஸா, மராட்டி முதலிய மொழிகளிலும் இராம காதை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பல மொழிகளிலும், பல நாடுகளிலும் இராமாயணம் தத்தம் மொழி வல்லுநர்களான பெருங் கவிஞர்களாலேயே மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது அல்லது இராமாயணத்தை மொழி பெயர்த்ததாலேயே அக்கவிஞர்கள் பெருங் கவிஞர்களாகப் போற்றப் பட்டிருக்கின்றனர்.

தெலுங்கில் பாஸ்கர ராமாயணம் 13-ம் நூற்றாண்டிலும், கன்னடத்தில் பம்ப ராமாயணம் 11-ம் நூற்றாண்டிலும், மலையாளத்தில் எழுத்தச்சனின் அத்யாத்ம ராமாயணம் 16-ம் நூற்றாண்டிலும் வெளியிடப்பட்டிருக் கின்றன. இந்தியில் துளசிதாஸ் ராமாயணமும், ஒரிஸ்ஸாவில் பலராம தாஸ் ராமாயணமும், மராத்தியில் ஏகநாத ராமாயணமும் ஏறக்குறைய 14-16ம் நூற்றாண்டுகளில் வெளிவந்திருக்கின்றன. வடமொழியில் அத்யாத்ம ராமாயணம், அற்புத ராமாயணம், அனந்த ராமாயணம் என்று பல பெயர்களில் ராமாயணம் ஆக்கப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

இவை நாட்டுப்புறக்கதைகள், கூத்து, கீர்த்தனை, தாலாட்டு, கும்மி, சிந்து, சதகம், நாடோடிப்பாடல்கள் பழமொழிகள், சொற்பொழிவு, விரிவுரை, பட்டிமன்றம், வழக்காடுமன்றம், கவியரங்கம், சொல்லரங்கம், ஏலப்பாட்டு, காவடிச்சிந்து, அம்மானை, கிளிப்பாட்டு, கதகளிப்பாட்டு, துள்ளல் பாட்டு, நாட்டிய நாடகம் ஆகிய வடிவங்களிலும் எடுத்தாளப் பட்டிருக்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே உள்ள சங்ககாலப் பாடல்களான அகநானூறு, புறநானூறு போன்ற இலக்கியங்களில் ராமாயண நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். இதற்குரிய ஆதாரங்கள் அந்தந்தப் பாடல்கள் வரும் இடங்களில் - உரையில் விரிவாகப் பேசப்பட்டிருப்பதால், இங்கு விரித்துக் கூறப்படவில்லை. இதனைத் தொடர்ந்து வந்த சிலப்பதிகாரம், சீவகசிந்தா மணி, மணிமேகலை போன்ற ஐம்பெருங்காவியங்களிலும், 6-7ம் நூற்றாண்டில் இயங்கி வந்த பக்தி இலக்கியங்களான நாயன்மார்களின் திருமுறைகளிலும், ஆழ்வார்களின் திவ்யபிரபந்தங்களிலும், ஏனைய இறைவழிபாட்டு நூல்களிலும் இராமகாதை, பெருமளவில் பேசப் பட்டிருப்பதைக் காண்கிறோம். வைணவ சமயத்தைச் சார்ந்த சான்றோர்கள் ஸ்ரீராமபிரானைத் திருமாலின் அவதாரமாகவே கருதி மிகப் பலப்பட தமது நாலாயிரத்திவ்ய பிரபந்தங்களில் கையாண்டிருக் கின்றார்கள்.

கம்பனின் இராமாவதாரம் :

பின்னர் தோன்றிய கவிச்சக்ரவர்த்தி கம்பன் வான்மீகியின் ஆதிகாவியமாகிய இராமாயணத்தை தமிழில் வழி நூலாக ஆக்கித் தந்திருக்கிறான். கம்பன் தன்னுடைய வழி நூலுக்கு 'இராமாவதாரம்' என்றே பெயர் சூட்டியிருக்கிறான். கம்பனது கவித்திறனையும், ஆழ்ந்த ராமபக்தியையும் உணர்ந்து, தமிழ் மக்கள் அதனை 'கம்ப இராமாயணம்' என்றே போற்றி புகழ்ந்து பாராட்டி வந்திருக்கின்றனர். இன்றும் 'இராமாவதாரம்' என்ற பெயரைக் காட்டிலும் 'கம்ப இராமாயணம்' வழக்கில் இருந்து வருகிறது. இவ்வாறு நூலாசிரியன் சூட்டிய பெயரை விடவும் மக்களால் சூட்டப்படுகின்ற பெயர் நிலைத்து நிற்பது தமிழ் இலக்கிய உலகிற்கு ஒன்றும் புதிதல்ல. சேக்கிழார் தான் இயற்றிய நூலுக்குத் 'திருத்தொண்டர் புராணம்' என்றே பெயர் சூட்டியிருந்தார். ஆனால்தமிழ் மக்கள்அதனைஇன்றும் 'பெரியபுராணம்' என்றேஅழைத்து வருகின்றனர். இதேபோலத்தான் மாணிக்கவாசகரின் 'சிவபுராணம்' இன்று 'திருவாசகம்' என்று அழைக்கப்படுகிறது. திருமூலரின் 'தமிழ் மூவாயிரம்', 'திருமந்திரம்' என்று அழைக்கப்படுகிறது. நூலின் அருமை, பெருமை, நுவல்பொருள் கருதி மக்கள் இவ்வாறு அழைக்கத் தொடங்கினர்.

Koviloor Digital Library

கம்பனின் இராமாயணம் - ஒரு தழுவல் நூலா? மொழிப்பெயர்ப்பு நூலா? : இரண்டும் அன்று. அது ஒரு பெருங்காப்பியம்; மிகச்சிறந்த காவியம்; கவிதைக் கருவூலம்; கற்பனைச்சுரங்கம்; அறிவு ஊற்று; அதி அற்புதமான கருத்துக் களஞ்சியம். வான்மீகி அமைத்துக் கொடுத்த மாளிகையின் அடித்தளத்தை மாற்றாமல் அந்தக் காவியத்தின் சுவை குன்றாமல், நீக்க வேண்டியவற்றை நீக்கி, விடுத்து, சேர்க்கப்பட வேண்டியவற்றைச் சேர்த்து, விரித்துச் சொல்லப்பட வேண்டியவற்றை விரித்து, சுருக்கி, திருத்தி, புதுக்கி, மாற்றி, செப்பனிட்டு, தொகுத்து ஒரு பெரிய மாளிகையை ஒரு பெருங்காப்பியமாக நமக்குத் தந்திருக்கிறான். இந்த மாளிகையைக் கட்டும்பொழுது தமிழ் மண்ணின் பண்பாடு, நாகரிகம், மனிதநேய மாண்புகள், அறநெறிகள் முதலியன மிளிரும் கலைச்செல்வமாகக் கட்டியிருக்கிறான். தன்காலத்திற்கு முந்திய திருக்குறள், ஐம்பெருங்காப்பியங்கள், திருமுறை, திவ்ய பிரபந்தங்கள் முதலிய நீதிநூல்கள், இலக்கியங்கள் இவைகளில் காணப்பெறும் நயங்களையும், கவிச்சுவையையும், கம்பன் தன் காப்பியத்தில் எடுத்தாளத் தயங்கவில்லை.

சரி. கம்பனின் இராமாயணம் ஒரு இதிகாசமா? புராணமா? காப்பியமா? காவியமா? வழிநூலா? இவை எல்லாவற்றிற்கும் ஒரே விடை 'ஆம்' தான். கம்ப இராமாயணம் ஒரு இதிகாசம். ஏன்? இதிகாசம் என்றால் என்ன? பழைய ஒரு வரலாற்றை விரித்துக் கூறும் ஒரு நூல். உபதேசப் பரம்பரையில் வந்த ஒருவருடைய பழைய சரித்திரத்தைப் பிரதானமாக எடுத்து பல கிளைக் கதைகளோடு விரித்துக் கூறுவதால் இதனை இதிகாசம் என் கிறோம். சரி. புராணம் என்றால் என்ன? உலகத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர்கள், அரசர்கள், மரபு, அவர்கள் சரித்திரங்கள், மனுவந்திரம் ஆகிய ஐம்பொருள்களை விரவக்காணும் நூல் புராணம் எனப்படும். இந்த ஐந்து பொருட்களையும் பலபடப் பேசுவதால் கம்பனின் இராமாயணம் ஒரு புராணம் என்றும் அழைக்கப்படுகிறது. சரி. காப்பியம் என்றால் என்ன?

முன்னம் வணக்கம்: அறம் முதல் நான்கின் திறம் உரைத்தல்;
தன்னிகரில்லாத் தலைவனைக் கூறல்:
தசாங்கங்களைவன்னித்தல்: வாய்ந்த பருவம், இருசுடர்த்
தோற்றங்கள் தாம்இன்னன கூறல், பெருங்காப்பியத்திற்கு இலக்கணமே;

பொன்முடிசூடல்; பொழில்விளையாடல், புனலாடுதல்,
நன்மணம் செய்தல், நறவு, ஊண், களிப்பு, கலவி, துனி
மன்னும் புதல்வர் பெறுதல்; நன்மந்திரம் தூதுசெல்லல்;
இன்இகல் வென்றி வாகை சந்தி கூறல், காப்பியமே:

- கலித்துறைப்பாட்டியல்

Koviloor Digital Library

இதில் அறம் முதல் நான்காவன : அறம், பொருள், இன்பம், வீடு என்ற பேறுகள்

தசாங்கங்கள் என்பவை : மலை, ஆறு, காடு, ஊர், தார், பரி, களிறு, கொடி, முரசு, ஆணை முதலியன.

இருசுடர் என்பன - சந்திர, சூரியர்

இதிகாசம், புராணம் என்ற இலக்கணங்களைவிட, காப்பியம் என்ற இலக்கணத்திற்கே கம்பனின் இராமாயணம் பெரிதும் பொருந்துவதை இதனால் உணரமுடியும். சரி. காவியம் என்றால் என்ன?

விருப்பம் தரும் சுவை; பாவ விகற்பம்
இரு பாக்களால் உரைத்த இனத்தால், உரையோடு உடன்பட மெல்ல வந்து
சருக்கம், இலம்பகம், மாம்பரிச்சேதம் என்னும் பெயரே தெரிந்து வருவது,
செப்பிய காவியம் தேமொழியே!

-கலித்துறைப்பாட்டியல்

மக்கள் விரும்பும்வகையில் சுவைமிகுந்த கதைப்பாங்கில் வேறுபட்ட பாத்திரப்படைப்புகளையும், பாடல்களையும், இலக்கிய நயத்தோடு, விரிவாக அலங்காரம் உடையதாய் பாக்களால் பாடப்பெறுவது காவியம் எனப்படும். எனவே, கம்பனின் இராமாயணத்தைக் காவியம் என்றும் அழைக்கின்றோம். சரி. கம்பனின் இராமாயணம் ஒரு வழி நூலா? ஆம். வழிநூல் என்பது என்ன?

முன்னோர் நூலின் முடிவு ஒருங்கு ஒத்துப்
பின்னோர் வேண்டும் விகற்பம் கூறி
அழியா மரபினது வழி நூலாகும்.

எனவே, மேலே கூறுயவற்றுள் கம்பனின் இராமாயணம் ஒரு பெருங்காப்பியம், ஒரு நல்ல காவியம், ஒரு இதிகாசம், ஒரு புராணம், ஒரு வழி நூல் என்பது தெள்ளத் தெளியத் தெரிவதோடு, அது ஒரு தழுவல் நூல் அல்ல. அது ஒரு மொழிப்பெயர்ப்பு நூல் அல்ல என்பதும் உறுதியாகத் தெரியவருகிறது. அது ஒரு வரலாற்று இலக்கியம்.

கம்பன் தனது பெருநூலுக்கு வான்மீகியைக் கருவாகக் கொண்டு பாடினானேஅன்றி வேறன்று. கம்பன்கூறும் கதையும், கதை நிகழ்ச்சியும், கதாபாத்திரங்களும், பிறவும் எல்லாம் அவனது உள்ளத்தின் அடித்தளத்தி னின்றும் உதயமானவையே. கங்கையும், காவிரியும் தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்கும் குடிதண்ணீர்ச்சாதனங்கள் மட்டும் அல்ல. அவை ஜீவ நதிகள். வணங்க வேண்டிய தெய்வங்கள். அவ்வாறே கம்பனின் பாத்திரப் படைப்புகளும் வணங்க வேண்டியவர்களாக ஆகிறார்கள். தான் வாழ்ந்த காலத்திற்கேற்ப ஒரு புது சிருஷ்டியாகவே தனது பெருங்காப்பியத்தை கம்பன் ஆக்கித் தமிழ் உலகிற்குத் தந்துள்ளான். கம்ப இராமாயணம் வெறும் நீதி நூலன்று. ஏனெனில், அறம் சொல்லும் நூல்கள் தலைவன் தன்

Koviloor Digital Library

ஏலவாளர்க்குக் கூறும் சொற்கள் போன்றவை; புராணங்கள் நண்பர் ஒருவருக்கு ஒருவர் கூறிக்கொள்வது போன்றது. ஆனால், காவியங்கள், காதலர் இருவரின் கருத்தொருமித்த பேச்சுப் போன்றது; அன்பு தோய்ந்தது; அறவழி நிற்பது; இன்பம் துய்க்கத் துடிப்பது; துன்பம் துடைப்பது, வீடுபேறு அடையச் செய்வது.

கம்பராமாயண மூலமும் உரையும் :

கி.பி. 1840ல் திரு. வெங்கடாசல முதலியார் அவர்களாலும், 100 ஆண்டுகளுக்குப் பின்னர் 1924ல் மதுரை கோபால கிருஷ்ணக் கோன் கம்பெனியாராலும், மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 1957-58ல் சென்னை மர்ரே அண்ட் கம்பெனி, ராஜம் அவர்களாலும், 1976ல் சென்னை கம்பன் கழகத்தாராலும் மூலம் மட்டும் வெளிவந்திருக்கின்றன. கற்றறிந்த சான்றோர்களுக்கு மட்டுமே மூலப் பாடல்கள் பயனளிக்கும். இந்த இரண்டு பதிப்புக்களிலும் இடைச் செருகல் என்று கருதப்பட்ட - வெள்ளியம்பலத்தம்பிரான் - வாணிதாதன் முதலானோர் இயற்றி அமைக்கப்பட்டன என்று கருதப்பட்ட, ஆயிரத் திற்கும் மேற்பட்ட பாடல்கள் மிகைப்பாடல்கள் என்று தலைப்பிட்டு அந்தந்தப் படலங்களின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரு பதிப்புகளையும் முறையே கம்பனடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள் தலைமையிலும், நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையிலும் அமைந்த இரு பதிப்பாசிரியர்கள் குழுக்கள் செப்பனிட்டுத் திருத்தி வெளியிட்டிருக்கின்றன. விபரங்கள் அருகில் உள்ள அட்டவணையில் தரப்பட்டிருக்கின்றன.

பொதுவாகத் தமிழ் இலக்கியத்தில், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், திருக்குறள், திருமுருகாற்றுப்படை போன்ற பெரும் நூல்களுக்கு உரைகள் வரையப்பட்டுள்ளன. அதுபோன்றே தமிழில் மற்றொரு இலக்கியமான கம்பராமாயணத்திற்கும் பல உரைகள் இதுவரை வெளிவந்திருக்கின்றன. பாலகாண்டத்திற்கு மட்டும் 1861-ல் முதன் முதலாக ஜி.வெங்கடசாமி முதலியாரும், காஞ்சிபுரம் சபாபதி முதலி யாரும் எழுதியிருக்கின்றனர். அதன் பின்னர் நமக்குத் தெரிந்திருக்கும் கம்பராமாயண முழு உரை அதாவது 6 காண்டங்களுக்கு மான முழு உரை திரு. வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் அவர்களால் 1929-ம் ஆண்டு முதல் பதிப்பிக்கப்பட்டு 7-8 பதிப்புக்கள் 1967 வரை வெளிவந்திருக் கின்றன. ஆயினும் இவற்றில் எவையும் இன்று கல்லூரிகளிலோ, பள்ளி களிலோ, அரசு நூலகங்களிலோ கிடைக்கப் பெறுவதில்லை. இதனைத் தொடர்ந்து 1956-57ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், சென்னை திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகமும் தனித்தனியே உரைஎழுதி வெளியிட்டிருக்கின்றனர். இவர்கள் ஆண்டுக்கு ஒரு காண்டம் என்ற கணக்குப்படி 1972 வரை முறையே 16 தொகுதிகளாகவும், 8 தொகுதிகளாகவும் வெளியிட்டு இருக்கின்றனர். இரண்டு பதிப்புக்

Koviloor Digital Library

களுக்கும் அரசு மானியமும், சில அறக்கட்டளைகளும் உதவி செய்து இருக்கின்றன. என்றாலும் இவற்றில் எதுவும் இரண்டாவது பதிப்பாக வெளிவர வில்லை. முதற்பதிப்பு இப்பொழுது கிடைப்பது மிக அரிதாக இருக்கின்றது.

இதனை நன்கு உணர்ந்த கோவை கம்பன் அறநிலை, சுமார் 30 ஆண்டுகளுக்குப்பின் 1992 முதல் 1998 வரை 6 ஆண்டுகளில், எட்டுத் தொகுதிகளாக பேராசிரியர் திரு. அ.ச. ஞானசம்பந்தம் அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டும், 15 உரை ஆசிரியர்களைக் கொண்டும் ஒரு உரை வெளியிட்டிருக்கிறது. இது மிகக் குறைந்த அளவில் பிரதிகள் வெளியிட்டதனாலும், அன்பளிப்புப் பிரதிகளாக அதிகம் கொடுபட்டு விட்டதாலும் இந்தப் பிரதிகளும் இப்பொழுது எங்கும் கிடைப்பதில்லை. இவற்றைத்தவிரவர்த்தமானன்பதிப்பகமும், திருமகள் நிலையமும், ஏறத்தாழ ஒரே நேரத்தில் 1997-1999ல் உரைகள் வெளியிட்டிருக்கின்றனர். வர்த்தமானன் உரை திரு. பூவண்ணன் அவர்களால் எழுதப் பட்டுள்ளது. இதில் வார்த்தைக்கு வார்த்தை பொருள் கொண்ட பொருளுரை கிடைக்கிறதே தவிர விளக்கவுரை கிடைப்பதில்லை. திருமகள்நிலையத்தார்திரு. நாராயணவேலுப்பிள்ளைமுதலிய 3ஆசிரியர் களைக் கொண்டு வெளியிட்டுள்ள விளக்கவுரை பெரும்பாலோருக்குப் பயன்படும் முறையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

காப்பியப் பகுப்பு :

கம்பன் தனது காப்பியத்தைப் பழைய மரபுகளுக்கேற்ப எப்படிப் பகுத்துப் பாடினான் என்பது அறியக்கூட வில்லை. பின் நாளில் எழுந்த ஒரு தனிப்பாடலைக் கொண்டு அவனது பிரிப்பு முறைகளையும், பாடல்களின் எண்ணிக்கையையும், அதில் நடக்கின்ற போர்களையும், கிளைக்கதைகளின் எண்ணிக்கையையும், அவன் எந்த வகைப் பாவில் எத்துணை வகையில் பாடியிருக்கிறான் என்பதையும் அறிகிறோம்.

வான்மீகி சர்க்கம் என்று குறித்ததைக் கம்பன் படலம் என்று குறிக்கிறான். வான்மீகி 24000 ஸ்லோகங்களில் பாடியதைக் கம்பன் 12000 பாடல்களில் சுருக்கித் தந்திருக்கிறான். அந்த 12000 பாடல்களிலும் இடைச்செருகல் என்று 1500 பாடல்கள் சான்றோர்களால் மிகைப்பாடல்கள் எனத் தவிர்க்கப்பட்டுவிட்டது. எனவே கம்பன் சுமார் 10500 பாடல்களில் தனது காப்பியத்தை ஆக்கியிருக்கிறான். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் எந்த ஒரு பதிப்பும், படலப் பாகுபாட்டிலும், பாடல்கள் எண்ணிக்கையிலும் ஒத்துப் போகவில்லை. உரையாசிரியர்கள் தத்தமக்கு விருப்பமானவற்றைச் சேர்த்திருக்கிறார்கள் அல்லது மிகைப்பாடல்களாக ஒதுக்கியிருக்கிறார்கள். பழைய ஏட்டுச் சுவடிகளில் இருந்து எடுக்கும் போது ஒரு காப்பியத்திற்கு ஏற்படும் இயல்பான நிலை இது. அருகில் கொடுக்கப்பட்டிருக்கிற அட்டவணை இதனைத் தெளிவாகக் காட்டும்.

Koviloor Digital Library

ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காப்பியத்தைப் பற்றி இன்று நாம் நாட்டின் மூலை, முடுக்கு, பட்டி, தொட்டிகள் எல்லாவற்றிலும் ஏதோ ஒரு வகையில் கேட்டுக் கொண்டுதானே இருக்கிறோம்? ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கம்பனது கவிதையைச் சாதாரணமான தமிழன் இன்று பெரும்பாலும் புரிந்து கொள்ள முடியும். ஆனால் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஷேக்ஸ்பியரது கவிதைகளை இன்றைய நம்மால் புரிந்து கொள்ள இயலுமா? அதுதான் தமிழ் மொழியின் சிறப்பு, கம்பனின் தனிச்சிறப்பு. அவன் காப்பியத்தில் இந்த உலகியலிலுள்ள அனைத்துத் துறையிலும் தோய்ந்த அறிவும், நுண் மாண் நுழைபுலமும் பரவி நிற்கக் காண்கிறோம். அவன் தோயாத துறைகளே இல்லை. எனவேதான் அறிஞர் பெருமக்கள் அவனைத் 'தோயாத துறையிலாத் தோன்றல்' என்று சிறப்பித்தனர்.

காண்டங்கள்	Murray & Co., (1957/58)			கம்பன் கழகம், சென்னை (1976)		
	படலங்கள்	பாடல்கள்	மிகைப் பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	மிகைப் பாடல்கள்
பாலகாண்டம்	24	1225	213	23	1301	187
அயோத்தியா காண்டம்	14	1185	76	13	1202	58
ஆரண்ய காண்டம்	16	1187	66	13	1181	66
கிஷ்கிந்தா காண்டம்	17	1025	52	16	1031	71
சுந்தர காண்டம்	14	1257	208	14	1318	147
யுத்த காண்டம் (4 தொகுதிகள்)	42	4063	851	39	4309	764
மொத்தம்	**127**	**9942**	**1466**	**118**	**10342**	**1293**

எனக்குள் எழுந்த ஆர்வம்:

இந்த நிலையில்தான் எனக்குள் ஒரு அடங்காத ஆசை - கம்பனை முழுதும் படிக்கவேண்டும் என்ற ஆசை - எழுந்தது. இது தெய்வ சங்கல்பம் என்றே எண்ணுகிறேன். நான் பணியாற்றும் வங்கியின் நாமக்கல் கிளைக்கு 1995ல் மாற்றப்பட்டேன். நாமக்கல் என்ற உடனேயே எல்லோருக்கும் 18 அடி ஆஞ்சநேயர் திருவுருவ ஆலயம் தான் நினைவுக்கு வரும். நாள்தோறும் ஆலயத்திற்குச் சென்றுவரும் போது என்னுள் இந்த மிகப்பெரிய ஆசை வித்தூன்றிச் செழித்து வளர்ந்தது. நண்பர் வ.சுப.மா. தொல்காப்பியன் அவர்கள் சென்னை கம்பன் கழகம் (1976) பதிப்பு - கம்பராமாயணம் மூலம் மட்டும் தந்து உதவி, ஊக்கம் அளித்தார்கள். நான் நாமக்கல்லில் இருந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு மூன்றுமுறை திருப்பித் திருப்பி மூலத்தை மட்டுமே, நேரம் கிடைக்கும்போதெல்லாம் படித்து வரலானேன். சில பாடல்கள் புதியதாகவே இருந்துவந்தன. அதற்கு ஒரு

Koviloor Digital Library

குரு - ஆசிரியன் தேவைப்பட்டான். அது அங்கே கிடைப்பது அரிதாக இருந்தது. எனவே இதற்குரிய உரைகளைத் தேடும் பணியில் ஈடுபட்டேன். கம்பன், கம்பராமாயணம் தொடர்புள்ள நூல்கள் எங்கெங்கே கிடைக்கின்றனவோ அவற்றையெல்லாம் வாங்க ஆரம்பித்தேன். முதலில் வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரி அவர்கள் உரையைப் பார்க்கலானேன். அவர்களது தமிழ் மிக உயரிய, வடமொழி கலந்த தமிழாக இருந்தது. அது எனக்குச் சரியாக அமையவில்லை. அடுத்து என்ன செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது எனக்குக் கோவைக்கு மாற்றலாகியது. கோவை அரசு நூலகம் மிக அருமையாகப் பணியாற்றுகிறது. பணியாளர்கள் மிக அன்புடன் வருபவர்களுக்கு உதவி செய்கிறார்கள். அங்கே எனக்கு, சென்னை பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட திரு. கோ. வில்வபதி அவர்களின் பாலகாண்ட உரை மட்டிலும் கிடைத்தது. இப்போதைக்கு இதுவே போதும் என்று அதைப் படித்துக் குறிப்பு எடுக்கலானேன். இரண்டு முறை படித்திருப்பேன் - ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. அதற்குள் எனக்கு மீண்டும் சென்னைக்கு மாற்றலாகிவிட்டது. சென்னையில் ஒரு நூல் நிலையத்திலும் கம்பனது உரையே கிடைக்கவில்லை. ஒரு இரண்டு மாதம் இந்தத் துறையில் கருத்தைச் செலுத்தாது இருக்க நேரிட்டது.

1998ம் ஆண்டு ஜூன் 24ம் நாள் சென்னையை அடுத்த திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவியின் ஆலயத்தைக் கண்ணுற்றேன். நான் முன்பு ஒரு 30 ஆண்டுகளுக்கு முன் இங்கு பணியாற்றும்போது இந்த ஆலயத்தைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தேன். ஆதலின் இப்போது மீண்டும் சென்று அங்குள்ள நூல்நிலையத்தைப் பார்த்தேன். என்ன ஆச்சர்யம்! அங்கு இதுவரை வெளிவந்துள்ள கம்பராமாயண உரைகள் அனைத்தும் - வை.மு.கோ. உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக உரை, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலைய உரை - எல்லாம் இருக்கக் கண்டேன். மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு எப்படிச் செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். வங்கித் தலைமை அலுவலகத்தை அணுகி எனக்கு 6 மாத விடுமுறை வேண்டும் என்று கேட்டேன். சிறிது தயக்கத்திற்கு பிறகு அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். பிறகு வைஷ்ணவி ஆலய நிர்வாகத்தாரை அணுகினேன். எனக்கு 6 மாதத்திற்கு நூல் நிலையப் புத்தகங்களை எடுத்துப் படிப்பதற்கு அனுமதிப்பதோடு அங்கேயே தங்கும் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அங்கே அந்த வசதி இருப்பதால் உடனேயே எனக்கு அனுமதி அளித்தது மட்டுமின்றி உணவுக்கும் ஏற்பாடு செய்து தந்தார்கள். அவர்களுடைய அன்பும், கருணையும், தாராள மனப்பான்மையும் என்றும் என்னால் மறக்க ஒண்ணாதது. பிறகு விரைவாகப் படிக்க ஆரம்பித்தேன். குறிப்புக்கள் எடுக்க முனைந்தேன்.

கம்பனைப் படிக்க படிக்க - உரைகளுடன் பொருள் உணர்ந்து; படிக்க - சான்றோர்களின் பலவகையான கருத்துக்களையும் படிக்கப்படிக்க

Koviloor Digital Library

எனக்குள் ஒரு தன்னம்பிக்கையும், மன தைரியமும் வளர்ந்து விட்டன. ஒவ்வொரு உரையையும் பலமுறை படித்தேன். தொட்டுவிடத் தொட்டு விடத் தொடருகின்ற காதல் எனக்குக் கம்பனிடம் உண்டாகியது. தொட்டனைத்தூறும் மணற்கேணி போலப் படிக்கப் படிக்கப் பொருள்கள் தெரிய வரலாயின. புணரும் தோறும் போகம், பின்னும் புதிதாய் வளர்கின்றது என்று திருக்கோவையார் சொல்லியது போல, மனம் கம்பனில் முழுக்கத் தோய்ந்தது.

இது கம்பன் பாடல்களுக்கு விளக்கவுரை. முதலில் பாடல்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் சந்தி பிரித்துத் தரப்பட்டிருக்கிறது, பின்னர் பாடலில் பயின்று வந்திருக்கின்ற அருஞ்சொற்களுக்கு எல்லோருக்கும் புரிவதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன, பின்னர் பாடலுக்குரிய பொழிப்புரை தரப்பட் டிருக்கிறது, அதன் பின்னர் அப்பாடலில் உள்ள சொற்களின் சிறப்பு நயம் விளக்கப்பட்டிருக்கிறது, ஆங்காங்கே தொடர்புடைய மேற்கோள்களும் தரப் பெற்றிருக்கின்றன, என்னுடைய நோக்கமே. இது மிக எளிதாக எல்லோருக்கும் புரியவேண்டும் என்பதே, கம்பன் தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் சொந்தமானவனல்லன், அவனை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில். வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் புரியவைத்திருக்கிறேன், இன்றைய இளம் தலைமுறை யினருக்கும். மாணவ. மாணவியர்க்கும் இது பெரிதும் உதவும் என நம்புகிறேன்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு 13 ஆண்டுகளில் 14 உரையாசிரியர்களைக் கொண்டு 16 தொகுதிகளாக வெளியிடப்பெற்றது. அதுபோலவே உ.வே.சா. நூல் நிலையப் பதிப்பும் 15 ஆண்டுகளில் 10 தொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கிறது. கோவை கம்பன் அறநிலை 7 ஆண்டுகளில் 8 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது என்பது அறிந்து கொள்ள வேண்டிய செய்தி.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பின் முன்னுரையில் மாபெரும் தமிழறிஞரான திரு. வ.சுப.மாணிக்கம் அவர்கள் பின் வருமாறு குறிப்பிட்டிருப்பதும் மனங்கொள்ளத்தக்கது.

''வழக்கம் போல கதைச்சுருக்கம், மூலம், உரை இவையடங்கிய பகுதியாக ஒவ்வொரு காண்டத்தையும் வெளியிடலாம். இவ்வெளியீடு பொதுமக்களுக்கும் மாணவர்க்கும் நன்கு பயன்படும்'' என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். இதனை அடிப்படையாகக் கொண்டே நாம் இவ்விளக்கவுரையை எழுதத்துணிந்தோம் என்பதை இங்கே குறிப்பிடுதல் பொருத்தமாகும் எனக் கருதுகிறேன்.

Koviloor Digital Library

உற்றுழி உதவியோர்:

இக்காப்பியத்தைக் கம்பன் எழுதுவதற்குக் காரணமாயிருந்த சடையப்ப வள்ளலைப் போல, இந்த உரையை நான் எழுதுவதற்கு முழுமுதற் காரணமாக இருந்து, உள்ளத்தாலும், பொருளாலும் பேருதவி புரிந்தவரும் ஒரு இராமர்தான். வெற்றி பொருந்திய இராமர் - ஜெயராமர் (Jai Expo) இவர் எடுத்த காரியங்கள் அனைத்தும் தடையின்றி நிறைவேறும். தொடுத்த செயல்கள் அனைத்தும் துலங்கும். இராமாயணம் படிப்போரையும், கேட்போரையும் அவர்களது இருபத்து ஒரு தலைமுறையினர் வாழ்த்துவர் என்று சான்றோர் கூறுவர். அத்தகைய பெரும் பயனை எனக்கு அளித்த அரிமா. **திரு.B.ஜெயராமன்** அவர்களுக்கும், அவர் தம் குடும்பத்தாருக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன். அவர்கள் அலுவலகத்தில் உள்ள நண்பர்களுக்கும் நன்றி. பாலகாண்டத்தின் அச்சுப் படிகளைக் கூர்ந்து நோக்கித் திருத்தி உதவிய பேராசிரியர் **திரு.ந.சுப்புரெட்டியார்** அவர்களுக்கு எவ்வளவு முறை நன்றி சொல்வது என்று புலப்படாமல் தவிக்கிறேன்.

இத்தகைய ஒரு பெருங்காப்பியத்திற்குத், தனிஒருவனாகவே, ஏனைய உரை நூல்களில் ஆழங்கால்பட்டு, இவ்வுரையினை எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் திருவருளால் எழுத முயன்றிருக்கிறேன். இதில் குற்றம், குறைகள் இருக்கக் கூடும். இது என் முதல் முயற்சி. குற்றங்களை அன்பு கூர்ந்து சுட்டிக்காட்டி ஊக்குவித்தால், மிக்க நன்றி உடையவனாய் இருப்பேன்.

முதல் நான்கு காண்டங்களும் காரைக்குடி கம்பன் கழகத்தில் 69வது கம்பன் விழாவில் மாண்பமை நீதியரசர் திரு. இராமசுப்பிரமணியன் அவர்களின் திருக்கரங்களால் 30.03.07 அன்று காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் வெளியிடப்பெற்றது. காரைக்குடி கம்பன் கழகச் செயலர் **கம்பன் அடிசூடி திரு. பழ. பழனியப்பன்** அவர்கள் அன்புகூர்ந்து இவ்வுரை நூல் வெளிவர பெரிதும் உதவினார்கள். அவர்களுக்கும், நூலை வெளியிட்டு நூலின் சில சிறப்பான கருத்துக்களையும் எடுத்துக்கூறி பாராட்டிய **நீதியரசர் திரு. இராமசுப்பிரமணியம்** அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்தாவது காண்டமான சுந்தர காண்டமும் காரைக்குடி கம்பன் கழகத்தில் 70வது கம்பன் விழாவில் **திரு. தமிழருவி மணியன்** அவர்களின் பொற்கரங்களால் 19.03.08 அன்று காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் வெளியிடப்பெற்றது. காரைக்குடி கம்பன் கழகச் செயலர் கம்பன் அடி சூடி திரு. பழ.பழனியப்பன் அவர்களுக்கும், நூலை வெளியிட்டு நூலின் சிறப்பான சில கருத்துக்களை மாணிக்கவாசகரின் திருவாசகத்திற்கு ஒப்பிட்டுப் பாராட்டிய திரு. தமிழருவி மணியன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Koviloor Digital Library

ஆறாவது காண்டமான யுத்த காண்டத்தில் மட்டும் ஏறக்குறைய 4600 பாடல்கள் உள்ளன. இதை நான்கு பகுதிகளாகப் பிரித்து வெளியிட முயற்சித்திருக்கிறேன்.

முதல் பகுதிக்கு முனைவர் திரு. தெ.ஞானசுந்தரம் அவர்கள் அணிந்துரை அளித்துப் பேருதவி புரிந்திருக்கிறார்கள். இரண்டாம் பகுதிக்கு முனைவர் திருமதி இளம்பிறை மணிமாறன் அவர்கள் அருள்கூர்ந்து ஆய்வுரை வழங்கியிருக்கிறார்கள். மூன்றாம் பகுதிக்கு முத்தமிழரசி திருமதி சரசுவதி இராமநாதன் அவர்கள் அணிந்துரை அளித்து என்னை ஊக்குவித்திருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் என் தலைதாழ்ந்த வணக்கத்தைத் தெரிவிப்பதல்லால் வேறு எவ்வாறு என் நன்றியைச் செலுத்துவது என்பது புரியாமல் தவிக்கிறேன்.

முதல் ஐந்து காண்டங்களும் வெளிவரப் பேராதரவு நல்கிய தமிழ்ப் பெருமக்கள், இந்த ஆறாவது காண்டமாகிய யுத்த காண்டத்திற்கும் அதுபோலவே நல்லாதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்பதையும் தெரிவித்து எல்லோருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய இந்த முதல் முயற்சியில் பங்கெடுத்துக் கொண்டு எனக்கு எல்லா வகையானும் ஊக்கமும் ஆக்கமும் அளித்த அனைவரையும் நன்றியுடன் இந்நேரத்தில் நினைவுகூர்கிறேன்.

அன்பன்

பள்ளத்தூர் பழ.பழநியப்பன்

23/10, பழைய பாங்க் ஆப் பரோடா தெரு,
அம்பத்தூர், சென்னை-600 053.
செல்: 9840868543

Koviloor Digital Library

காண்டம் / தொகுதி		பதிப்பாளர்கள்												
		வை.மு.கோ. 1943		அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1955-70		டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம் 1957-72		கோவை கம்பன் அறநிலை 1992-98			திருமகள் நிலையம் 1998		பள்ளத்தூர் பழ. பழனியப்பன் பதிப்பு 2008	
		படலங்கள்	பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	மிகை பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்
பாலகாண்டம்	I	22	1397	10	720	22	1389	23	1312	187	10	719	22	1401
	II	-	-	12	677	-	-	-	-	-	12	678	-	-
அயோத்தியாகாண்டம்	I	12	1224	5	616	6	645	13	1202	58	6	651	13	1213
	II	-	-	7	588	7	563	-	-	-	7	573	-	-
ஆரண்ய காண்டம்	I	11	1204	6	558	12	1195	13	1192	66	11	1204	13	1197
	II	-	-	5	645	-	-	-	-	-	-	-	-	-
கிஷ்கிந்தா காண்டம்	I	17	1050	9	563	16	1004	16	1032	70	17	1051	16	1034
	II	-	-	7	472	-	-	-	-	-	-	-	-	-
சுந்தர காண்டம்	I	15	1343	5	690	14	1295	14	1318	147	6	693	14	1296
	II	-	-	9	648	-	-	-	-	-	9	649	-	-
யுத்த காண்டம்	I	18	2252	9	800	14	1210	15	1573	262	18	2252	14	1213
	II	21	2104	6	774	6	1166	12	1554	109	12	1240	7	1399
	III	-	-	3	670	13	1203	12	1183	392	9	870	15	1281
	IV	-	-	7	636	6	743	-	-	-	-	-		
	V	-	-	8	713	-	-	-	-	-	-	-		
	VI	-	-	6	750	-	-	-	-	-	-	-		
மொத்தம்		116	10574	114	10520	116	10413	118	10366	1291	117	10580		
உத்தரகாண்டம்	I	-	-	11	694	-	-	-	-	-	-	-		
	II	-	-	6	801	-	-	-	-	-	-	-		
		-	-	17	1495	-	-	-	-	-	-	-		

Koviloor Digital Library

Koviloor Digital Library

22. சீதை களம் காண் படலம் [32 பாடல்கள்]

இந்திரசித்து செலுத்திய பிரமாஸ்திரத்தால் மயக்கம் அடைந்து இறந்துபட்ட இலக்குவனையும், வானரச் சேனையினரையும், அதனைக் கேள்வியுற்று, வந்து கண்ட இராமபிரான் மிக்க வருந்தி மயக்கமடைந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்து கிடந்ததையும், சீதாதேவி, அரக்கியர் புடைசூழ புட்பக விமானத்தில் வந்து போர்க்களத்தைக் கண்ட காட்சியைப் பற்றியும் கூறும் படலம் என விரியும். இது 32பாடல்களைக் கொண்ட அவலச்சுவை நிறைந்த படலம். இது சிலசுவடிகளில் பிராட்டி களங்காண் படலம், ஜானகி களங்காண் படலம், நாச்சியாரைக் களங்காட்டு படலம், சனகி களங்காட்டு படலம், சனகி காட்சிப் படலம், நாச்சியார் சோகப் படலம், சீதை சோகப்படலம் எனவும் பலவாறு தலைப்பிடப்பட்டிருக்கிறது. வான்மீகத்திற்கும் கம்பனுக்கும் இடையே சிறு வேறுபாடுகள் இருக்கின்றன. அவை அந்தந்தப் பாடல்களில் எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன.

இப்படலத்துள் இலக்குவனும், இராமபிரானும் மூர்ச்சித்துக் கிடப்பதைக் கண்ட தூதுவர்கள், அவர்கள் இறந்துபோயினர் என்று தவறாகக் கருதிக்கொண்டு, அவ்வாறே இராவணனிடமும் கூற, அது கேட்ட இராவணன் மிக்க மகிழ்ச்சி கொண்டு எல்லோரையும் வெற்றிவிழாக் கொண்டாடும்படி கட்டளை இடுதல்; போரில் இறந்துபட்ட அரக்கர்களின் உடல்களையெல்லாம் உடனே கடலுக்குள் தள்ளிவிடுமாறு பணித்தல்; சீதாதேவியைப் புட்பக விமானத்தில் ஏற்றிப் போர்க்களத்திற்குக் கொண்டு சென்று, இராமபிரான், இலக்குவன் முதலியோரும் வானரச்சேனையும் இறந்து கிடப்பதைக் காணச் செய்யுமாறு பணித்தல்; இராமபிரானும் இலக்குவனும், மற்ற படைத்தலைவர்களும், வானரச்சேனையும் இறந்துகிடப்பதைச் சீதாதேவி கண்டு பெருந்துயர் கொள்ளுதல்; சீதாதேவி அரற்றி அழுவதைக் கண்ட அவள் தோழியும், அரக்கியும், வீடணனின் மகளுமான திரிசடை, இராமஇலக்குவர் இறந்துபடவில்லை, சற்று மயக்கமுற்றிருக்கின்றனர் என்று காரணங்களோடு நிறுவுதல்; சீதாதேவி சற்று மயக்கம் தெளிதல்; மீண்டும் சீதாதேவியை அசோகவனத்திற்கு அழைத்துச் செல்லுதல் ஆகிய நிகழ்ச்சிகள் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன.

Koviloor Digital Library

1. இராவணன் வெற்றிவிழாக் கொண்டாடப் பணித்தல்

பொய்யார் தூதர் என்பதனால், பொங்கி எழுந்த உவகையனாய்,
மெய் ஆர் நிதியின் பெரு வெறுக்கை வெறுக்க வீசி, "விளைந்தபடி
கய் ஆர் வரைமேல் முரசேற்றி, சாற்றி, "நகரம் களி சிறப்ப
நெய் ஆர் ஆடல் கொள்க!" என்று நிகழ்த்துக" என்றான், நெறி
இல்லான். (8754)

(மெய்-உடம்பு; ஆர்தல்-நிறைதல்; வெறுக்கை-செல்வம்; வீசுதல்-மிகுதியாகக் கொடுத்தல்/வாரியிறைத்தல்; படி-தன்மை; கை-தும்பிக்கை/யானை; வரை-மலை/யானை; சிறத்தல்-மிகுதல்; சாற்றுதல்-கூறுதல்/அடித்தல்; நிகழ்த்துதல்-பறைசாற்றுதல்/சொல்லுதல்; வெறுத்தல்-சலித்துக்கொள்ளுதல்)

பிறன்மனை நயந்து ஒழுக்கநெறி தவறியவனான இராவணன், தனது தூதுவர்கள்மேல் மிகுந்த நம்பிக்கை கொண்டதனால், அவர்கள் பொய் சொல்லமாட்டார்கள் என்று கருதி, இராமஇலக்குவர் மடிந்தொழிந்தனர் என்பது கேட்டு, பகை ஒழிந்தது என்று மிக்க மகிழ்ச்சி அடைந்து, தான் தன் உடம்பின்மீது அணிந்திருந்த நிறைந்த அணிகலன்களை அந்தத் தூதுவர்கள் போதும் போதும் என்று உவந்து கூறும் வண்ணம் வாரியிறைத்து, மேலும் அவர்களை நோக்கி, ''இப்பொழுது போர்க்களத்தில் நமக்கு விளைந்த வெற்றியின்தன்மையை மலைபோலும் உயர்ந்த துதிக்கைகளையுடைய யானையின்மேல் வெற்றி முரசத்தை ஏற்றி, நமது இலங்கை மாநகர மக்கள் அனைவரும் மிக்க மகிழும் வண்ணம், எல்லோரும் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும் என்று வள்ளுவரைப் பறைசாற்றி அறிவிக்கச் சொல்லுவீர்களாக'' என்று கட்டளையிட்டான்.

'பொய்யார் தூதர்' என்பது கண்டதை, கேட்டதை, உள்ளதை உள்ளபடி உரைத்தலே தூதுவர் இலக்கணம். எனவே இராவணன் அவர்கள் வார்த்தையில் பெருத்த நம்பிக்கை வைத்தான் என்பது கருத்து. தன்னாலேயே வெற்றி கொள்ளப்பட முடியாத இராமஇலக்குவரைத் தன் மைந்தன் இந்திரசித்து வெற்றிகொண்டு அழித்ததனால் 'பொங்கி எழுந்த உவகையன்' ஆனான் என்பதாம். 'மெய்யார் நிதியின் பெரு வெறுக்கை' என்பது, தனது உடம்பில் அணிந்திருந்த நிறைந்த ஆபரணங்கள் என்றும், சங்கநிதி, பதுமநிதி ஆகியவற்றினின்றும் கிடைக்கப்பெற்ற பெருஞ்செல்வம் என்றும் பொருள்படும். 'வெறுக்க வீசி' என்பது பெற்றுக் கொள்வோர் போதும் போதும் என்று கூறிச் சலிப்படைந்து கூறும் வரை, வாரி இறைத்து என்ற விரிந்த பொருளைத்தரும். 'கையார் வரை' என்பது மலைபோன்று உயர்ந்த துதிக்கைகளையுடைய யானை என்று

Koviloor Digital Library

இருமடியாகி ஆகுபெயராய் யானையைக் குறிக்கும். 'நகரம்' என்பது இலங்கை மாநகரத்து மக்களைக் குறிக்கும்.

'நெய் ஆர்கடல் கொள்க' என்பது ஒரு வெற்றிச் செய்தி கிடைத்தாலும், நமக்குத் தீங்கு விளைவித்த செயல் ஒன்று முடிவுக்கு வந்தாலும் பொதுவாகத் தலை முழுகுதல் என்று கூறுவது ஒரு வழக்கு. அது இங்கே எண்ணெய் தேய்த்துத்தலைமுழுகுதல் எனப்பட்டது. இதுதுன்பம்ஒழிந்து மகிழ்ச்சியைக் காட்டச் செய்யப்படும் ஒரு வழக்கு ஆகும். 'நெய்' என்பது எள்ளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைக் குறித்தது எனக்கொள்க. 'வெறுக்கை' என்பது என்னென்ன செய்யும் என்று குசேலோபாக்கியானம் கூறுகிறது கேளுங்கள். 'பொருவரு பந்தமெல்லாம் புணர்த்திடும்; தெய்வ சிந்தை ஒருவ மேலிட்டு நிற்கும்; உறக்கமும் சிறக்கச் செய்யும்; கருவினுள் புகுத்தும்; இன்ன பரிசு கண்டதனால் அன்றோ இரு நிலத்திடை 'வெறுக்கை' என்மனார்' என்பது குசேலோபாக்கியானம். 'நெறியில்லான்' என்பது இராவணனின் தீயகுணங்களையும் அறநெறி ஒழுகாத தன்மையையும், பிறன்மனை நயத்தலையும் குறிக்கும் ஒருசொல் எனக்கொள்க.

2. இறந்துபட்ட அரக்கர் உடல்களைக் கடலில் தள்ளுதல்

அந்த நெறியை அவர் செய்ய, அரக்கன் மருத்தன் தனைக் கூவி,
"முந்த நீ போய், அரக்கர் உடல் முழுதும் கடலில் முடுக்கிடு; நின்
சிந்தை ஒழியப் பிறர் அறியின், சிரமும் வரமும் சிந்துவென்" என்று,
உந்த, அவன் போய் அரக்கர் உடல் அடங்கக் கடலினுள் இட்டான்.
(8755)

(கூவுதல்-அழைத்தல்; முந்த-முன்னே; முடுக்குதல்-விரைந்து வீசுதல்; சிந்தை-மனம்; அடங்க-முழுவதையும்; இடுதல்-தள்ளுதல்; உந்துதல்-செலுத்துதல்; நெறி-கட்டளை; சிந்துதல்-சிதைதல்)

அவ்வாறு இராவணனால் இடப்பட்ட கட்டளையை ஏவலாளர்கள் செய்து கொண்டிருக்க, இராவணன் மருத்தன் என்பவனை அழைத்து "நீ விரைவாகச் சென்று போர்க்களத்தில் இறந்து கிடக்கும் அரக்கர்கள் உடல்கள் முழுவதையும் கடலில் வீசியெறிந்துவிடு; இந்தச் செயலை உன் மனம் மட்டும்தான் அறிந்திருக்க வேண்டும். உன்னைத் தவிரப் பிறர் யாரேனும் அறிய நேர்ந்தது என்றால் உன்னுடைய தலையைச் சிதைப்பதோடு, உனக்கு என்னால் தரப்படுகின்ற இந்தச் செல்வ நிலை முழுவதையும் அபகரித்துக் கொண்டுவிடுவேன்" என்று அவனை அச்சுறுத்த, அவன் விரைந்து சென்று, அந்த அரக்கர் உடல்கள் எல்லாவற்றையும் கடலில் வீசித்தள்ளினான்.

Koviloor Digital Library

இந்த மருத்தன்தான் முன்பு மாயாசனகனாக உருமாறி வந்தவன் என்பதை நினைவிற் கொண்டுவருக. அறிவு நிறைந்தவர்கள்கூட அவசரத்தாலும் மிகுந்த ஆர்வத்தாலும் சில அறிவற்ற செயல்களைச் செய்வதனால், பின்னால் விளையக்கூடிய நற்பயன்களை இழந்து விடுகின்றனர் என்பதற்கு இந்தக் காட்சி ஒரு எடுத்துக்காட்டு. பின்னால் அனுமன் மருத்து மலையை எடுத்துவந்து இறந்துபட்ட வானரவீரர்களையெல்லாம் உயிர் பெற்றெழச்செய்யும்போது, அந்த நல்ல வாய்ப்பு அரக்கர்களுக்கு இல்லாமற்போனது என்பதை இங்கு நினைவில் கொள்ளல்தகும். இராவணன் இவ்வாறு செய்ததற்கு மற்றொருகாரணமும் உண்டு. இது சீதை களம்காண் படலம், சீதாதேவியைப் போர்க்களத்திற்கு விமானத்தில் கொண்டுவந்து, இராமஇலக்குவர் இருவருடன் வானரசேனை முழுதும் அழிந்துபட்டது என்றும், அரக்கர்கள் ஒருவர்கூட இறந்துபட வில்லை என்றும் தனது வெற்றிச்சிறப்பை அவளுக்குக் காண்பிப்பதற்காகவே இராவணன் இவ்வாறு செய்தான் எனக் கொள்ள வேண்டும்.

இராவணன் ஆட்சி எவ்வளவு கொடுங்கோல் நிறைந்தது என்பதற்கு இந்தப்பாடல் ஒரு சான்று. இந்தச் செய்தியை அந்த மருத்தன் தவிரப் பிறர் அறிந்தால் அவனுக்குக் கிடைக்கும் தண்டனை என்ன என்பதைத்தான் ''நின் சிந்தை ஒழியப் பிறர் அறியின் நின் சிரமும், வரமும் சிந்துவென்'' என்று கூறுகிறான் இராவணன். இங்கே வரம் என்பது இராவணனால் மருத்தனுக்கு அளிக்கப்பட்ட பெருமையும் மேன்மையுமுடைய செல்வநிலை என்று கொள்க.

3. சீதாதேவியைப் போர்க்களத்திற்கு அழைத்து வருதல்

"தெய்வ மானத்திடை ஏற்றி, மனிசர்க்கு உற்ற செயல் எல்லாம்,
தய்யல் காணக் காட்டுமின்கள்; கண்டால் அன்றித் தனது உள்ளத்து,
அய்யம் நீங்காள்'' என்று உரைக்க, அரக்கர் மகளிர் இரைத்து ஈண்டி,
உய்யும் உணர்வு நீத்தாளை நெடும் போர்க்களத்தின் மிசை உய்த்தார்.
(8756)

(மானம்-விமானம்; மனிசர்-மானிடர்/இராமஇலக்குவர்; செயல்-கதி; காட்டுமின்-காட்டுங்கள்; தய்யல்-தையல்/சீதாதேவி; இரைத்தல்-ஆரவாரித்தல்; ஈண்டி-நெருங்கி; உய்தல்-பிழைத்திருத்தல்; மிசை-மேலே; உய்த்தல்-அழைத்துச்செல்லுதல்)

இராவணன், சீதாதேவியின் காவலுக்கு அமைந்த அரக்கியர்களை அழைத்து, ''அவளை நமது தெய்வத்தன்மை பொருந்திய புட்பக விமானத்தில் ஏற்றிப் போர்க்களத்திற்கு அழைத்துச் சென்று அங்கு மானிடர்களாகிய இராமஇலக்குவர்க்கு நேர்ந்த அழிவினைக் காட்டுவீர்களாக! அவள் நாம் எவ்வளவு சொன்னாலும் நம்பமாட்டாள்;

Koviloor Digital Library

தன் கண்களால் நேரில் கண்டால் அன்றி அவளது உள்ளத்தில் இருக்கும் சந்தேகம் தவிர மாட்டாள்'' என்று கூற, அரக்கியரும் ஆரவாரம் செய்துகொண்டு, சீதாதேவியை நெருங்கி, தான் உயிர்பிழைத்திருப்பதில் பயன் இல்லை என்று மனம் அழிந்தவளாகிய சீதாதேவியை அந்த விமானத்தில் ஏற்றிக்கொண்டு அந்தப் பெரிய போர்க்களத்தின்மீது வந்து சேர்ந்தார்கள்.

'தெய்வமானம்' என்பது தெய்வத்தன்மை பொருந்திய புட்பகவிமானத்தைக் குறித்தது. இந்தப் புட்பக விமானமும் சங்கநிதி, பதுமநிதி முதலானவையும் குபேரனிடமிருந்து இராவணனால் அபகரித்துக் கொள்ளப்பட்டன என்பதை நாம் முன்னரே கண்டு வந்திருக்கிறோம். 'மனிசர்' என்பது மனிதர்களாகிய இராமஇலக்குவரைக் குறிக்கும் இகழ்ச்சிக் குறிப்பு எனக்கொள்க. 'தையல்' என்பது 'தய்யல்' என்றும், ஐயம் என்பது 'அய்யம்' என்றும் எதுகை நோக்கித் திரிந்தது எனக்கொள்க. 'உய்யும் உணர்வு நீத்தாள்' என்பது சீதாதேவி இதற்கு முன்பே தான் இன்னும் உயிர் வாழ்வதால் எந்தப்பயனும் இல்லை என்று கருதி உயிர்விடத் துணிந்தவள் என்பதைக் குறிக்கும்.

4\. கண்டாள் கண்ணால் கணவன் உரு; அன்றி, ஒன்றும் காணாதாள்;
உண்டாள் விடத்தை என, உடலும் உணர்வும் உயிர்ப்பும் உடன் ஓய்ந்தாள்;
தண் தாமரைப்பூ நெருப்புற்ற தன்மை உற்றாள்; தரியாதாள்;
பெண்தான் உற்ற பெரும் பீழை உலகுக்கெல்லாம் பெரிதன்றோ? (8757)

(உயிர்ப்பு-மூச்சுக்காற்று; தண்-குளிர்ந்த; தரிதல்-தாங்குதல்; பீழை-துயரம்; உணர்வு-அறிவு; உடன்-ஒருசேர/ஒருங்கே)

அவ்வாறு விமானத்தில் போர்க்களத்திற்கு அழைத்து வரப்பட்ட சீதாதேவி, போர்க்களத்தில் தன் கணவனான இராமபிரான் வடிவத்தை மட்டுமே தன் கண்களால் கண்டாளேயன்றி, வேறு ஒன்றும், யாரும் அவள் கண்களுக்குப் புலப்படவில்லை; அதனைக் கண்டவுடன், நஞ்சினைப் பருகியவள்போல உடலும், அறிவும், மூச்சும் ஒருசேர ஒடுங்கப் பெற்றவள் ஆனாள்; ஒரு குளிர்ச்சி மிகுந்த தாமரைமலர் கொடிய நெருப்பில் விழுந்ததைப்போன்ற தன்மையை அடைந்தாள்; அதனைப் பொறுக்கமாட்டாதவளானாள்; கற்புக்கரசியான ஒரு பெண் அடைகின்ற இத்தகைய பெருந்துன்பம் இவ்வுலகத்தை எல்லாம் விடவும் பெரிதாகும் அல்லவா?'' எனக் கேட்கிறான் கவிஞன்.

''பெண்தான் உற்ற பெரும்பீழை, உலகுக்கெல்லாம் பெரிதன்றோ?'' என்பது ''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்'' என்ற சிலப்பதிகாரத் தொடரை நினைவுபடுத்துவதை உணர்க.

Koviloor Digital Library

5. சீதாதேவி அரற்றுதல்.

மங்கை அழலும், வான்நாட்டு மயில்கள் அழுதார்; மழவிடையோன்
பங்கின் உறையும் குயில் அழுதாள்; பதுமத்து இருந்த மாது அழுதாள்;
கங்கை அழுதாள்; நாமடந்தை அழுதாள்; கமலத் தடங் கண்ணன்
தங்கை அழுதாள்; இரங்காத அரக்கிமாரும் தளர்ந்து அழுதார். (8758)

(வான்நாடு-விண்ணுலகு; மழவிடை-இளமையான எருது; மழவிடையோன்-சிவபெருமான்; பங்கு-பாகம்; மயில்கள்-தேவமகளிர்; குயில்-உமையம்மை; பதுமம்-செந்தாமரைமலர்; மாது-திருமகள்; நாமடந்தை-கலைமகள்; தங்கை-கொற்றவை/துர்க்கை/காளி)

இவ்வாறு சீதாதேவி அழுது அரற்றுதலைக் கண்ட மயில் போன்ற சாயலையுடைய விண்ணுலகத்துத் தேவமகளிரும் அழலானார்கள்; மூப்பற்ற, என்றும் இளமையான இடபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமானின் இடப்பாகத்தில் தங்கியிருக்கும் குயில்போன்ற இனிய குரலையுடைய உமையம்மையும் அழுதாள். செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளும், சிவபெருமானின் சடாமுடியில் வீற்றிருக்கும் கங்காதேவியும், பிரமதேவனின் நாவில் உறையும் கலைமகளும், தாமரைமலர் போன்ற சிவந்த கண்களையுடைய திருமாலின் தங்கையாகிய கொற்றவை எனப்படும் துர்க்காதேவியும், இரக்கம் என்ற ஒரு பொருள் இலாத நெஞ்சினரான அரக்கியர்களும்கூட, சீதையின் நிலை கண்டு மனம் கலங்கிப் புலம்பலானார்கள்.

கிருஷ்ணாவதாரத்தில் கண்ணனின் தங்கை கொற்றவையாக பாகவதத்தில் பேசப்படுகிறாள். ''சூலி, நீலி, மாலவற்கு இளங்கிளை'' என்பது சிலப்பதிகாரம். அது இங்கே ''கமலத்தடங்கண்ணன் தங்கை'' எனக்குறிக்கப்படுகிறது எனக்கொள்க. மயில், குயில், மாது, மடந்தை, என ஒவ்வொருவரும் ஒவ்வொரு அடைமொழியால் குறிக்கப்பெற்ற நயம் நோக்குக. கணவனை இழந்ததற்காக வருந்தி அரற்றும் சீதாதேவியின்பால் இரக்கம் கொண்டு, கணவன்மாரோடு மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருக்கும் மகளிர்கள் அனைவரும் மனம் தளர்ந்து அழுதனர் என்று கூறியிருப்பதை எண்ணுக. 'இரங்காத அரக்கிமார்' என்பது எங்கும், யாரிடத்தும், சற்றும் இரக்கம் என்ற பண்பினையே காட்டாதவர்களான அரக்கியர்கள் என்ற விரிந்த பொருளைத்தரும். இதுபோல முன்பும் இலக்குவன் இறந்துகிடந்ததைக் கண்ட இராமபிரான் அழுது புலம்பும்போது, சிவபெருமான் முதலியோரும் அழுது புலம்பினர் என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க.

Koviloor Digital Library

6. பொன் தாழ் குழையாள்தனை ஈன்ற பூ மாமடந்தை புரிந்து அழுதாள்;
குன்றா மறையும் தருமமும், மெய் குழைந்து குழைந்து, விழுந்து அழுத;
பின்றாது உடற்றும் பெரும்பாவம் அழுத; பின் என் பிறர் செய்கை?
நின்றார் நின்றபடி அழுதார்; நினைப்பும் உயிர்ப்பும் நீத்திட்டாள். (8759)

(தாழ்தல்-தொங்குதல்; குழை-குண்டலம்/காதணி; புரிதல்-மனம் மாறுபடுதல்; குழைந்து-நெகிழ்ந்து; பின்றுதல்-பின்வாங்குதல்; உடற்றுதல்-வருத்துதல்/துன்புறுத்துதல்; உயிர்ப்பு-மூச்சுக்காற்று/சுவாசம்)

பொன்னால் இயன்றதும், தொங்குகின்றதுமான காதணிகளை அணிதற்குரியவளான சீதாதேவியைப் பெற்றெடுத்த, பொறுமையிற் சிறந்தவளான பூமித்தாய், தன் மகளுக்கு உற்ற துயரத்தை எண்ணி நொந்து அழுதாள்; எப்போதும் தன் இயல்பில் தாழாத, அனாதியான வேதங்களும், அறக்கடவுளும், அவளுக்கு உற்ற துயர்நிலை கண்டு தம் உடம்பு நெகிழ்ந்து நெகிழ்ந்து விழுந்து அழுதன; ஒருபோதும் யார்க்கும் பின்வாங்காது எல்லோரையும் துன்புறுத்தி வருத்தும் இயல்புடைய பாவம்கூட இதனைக்கண்டு அழுதது என்றால் மற்றவற்றைப் பற்றி எப்படிக் கூறுவது? என்ன கூறுவது? ஆங்காங்கே நின்றிருந்தவர்கள் எல்லாம் அப்படியே நின்றவண்ணமே அழுது கொண்டிருந்தார்கள்; இந்நிலையில் சீதாதேவி தன் நினைவு மயங்கி, மூச்சும் செயலும் அற்றுச் சாய்ந்தாள்.

'பூ மடந்தை' என்று வழக்கம்போல் கூறாது, 'பூ மாமடந்த' என்றது பூமிதேவி சீதாதேவியைப் பெற்றெடுத்தவள் என்ற காரணத்தால் என்க. 'புரிந்து அழுதாள்' என்பது, தன் மகளுக்கு உற்ற துன்பத்தை நன்கு உணர்ந்து, கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்பதைப் புரிந்துகொண்டு அழுது புலம்பினாள் என்பதைக் குறிக்கும். 'குன்றாமறை' என்பது, வேதங்கள் அனாதியானது, தன் இயல்பில் மாறாது குறையாது எப்பொழுதும் நிலைபெற்று ஒரு தன்மைத்தாய் அமையும் என்பதைக் குறித்தது. 'குழைந்து குழைந்து' என்ற அடுக்கு, அதன் ஆற்றாமையை வெளிப்படுத்தும் சொல் எனக்கொள்க. பாவம், இன்னார் இனியார் என்று பாராது எல்லோர்க்கும் துன்பத்தையே தருதலால், 'பின்றாது உடற்றும் பெரும்பாவம்' எனப்பட்டது என்க. இதேபோல முன்பு இலக்குவன் இறந்து கிடந்தபோது அதனைக்கண்டு இராமபிரான் அரற்றியபோதும் பாவமும் அழுதது என்பதை ''பார்க்கின்ற பாவமும் கலுழ்ந்தன பரிவால்'' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க.

7. நினைப்பும் உயிர்ப்பும் நீத்தாளை, நீரால் தெளித்து, நெடும் பொழுதின்
இனத்தின் அரக்கர் மடவார்கள் எடுத்தார்; உயிர் வந்து ஏங்கினாள்;
கனத்தின் நிறத்தான்தனைப் பெயர்த்தும் கண்டாள்; கயலைக் கமலத்தால்
சினத்தின் அலைப்பான் எனக் கண்ணைச் சிதையக் கையால் மோதினாள்;
(8760)

Koviloor Digital Library

(இனம்-கூட்டம்; மடவார்-பெண்டிர்; ஏங்குதல்-வருந்துதல்; கனம்-மேகம்; பெயர்த்தும்-மீண்டும்/மறுபடியும்; கமலம்-தாமரைமலர்; அலைத்தல்-அடித்தல்; மோதுதல்-அறைந்துகொள்ளுதல்)

அவ்வாறு தன் உணர்வும், மூச்சும் தடைப்பட்டு மூர்ச்சித்துக் கிடந்தவளான சீதாதேவியை அரக்கரினத்துப் பெண்டிர் கூட்டத்தினர், நீண்டநேரம் தண்ணீர் தெளித்து, அவள் மயக்கம் நீங்கச்செய்து எடுத்து அமர்த்தினார்கள். அப்போது சீதாதேவி உயிர்வரப்பெற்று வருந்தினாள்; இப்பொழுது தான் உயிர்பெற்று மீண்டும் எழுந்ததைப்போல், மேகம் போன்ற கரியநிறம் வாய்ந்த இராமபிரான் எழுந்திருப்பானோ என்று கருதி மீண்டும் அவனைப்பார்த்தாள். அவன் பழைய நிலையிலேயே கிடந்தமை கண்டு இந்தக் காட்சியைக் காணநேர்ந்ததே என்று கோபத்தால் தன் கயல்மீன் போன்ற நீண்ட கண்களை, தாமரைமலர் போன்ற தன் கைகளால் சிதையுமாறு அடித்துக்கொண்டு தேம்பி அழுதாள்.

மீண்டும் அதே காட்சியைக் காணவேண்டி நேர்ந்ததே என்று தன் கைகளால் தன் கண்களில் அடித்துக் கொண்டாள் என்பது கருத்து. இது மகளிரின் இயல்பு. 'கனம்' இராமபிரானின் கரிய மேனிக்கும், 'கயல்' சீதாதேவியின் கண்களுக்கும், 'கமலம்' அவள் கைகளுக்கும் உவமை. சீதாதேவிக்கு மீண்டும் நினைப்பும் உயிர்ப்பும் வர அரக்கமகளிர் நீண்டநேரம் நீர்தெளித்து உயிர்வரச் செய்தது ஏன் எனில், தம் வேந்தன் இராவணனுக்குத் தாம் ஆற்றவேண்டிய சுயநலம் நிறைந்த கடமை பற்றி என்க.

8. அடித்தாள் முலைமேல், வயிறு அலைத்தாள்;
அழுதாள்; தொழுதாள்; அனல் வீழ்ந்த
கொடித்தான் என்ன, மெய் சுருண்டாள்;
கொதித்தாள்; பதைத்தாள்; குலைவுற்றாள்;
துடித்தாள் மின்போல்; உயிர் கரப்பச்
சோர்ந்தாள்; சுழன்றாள்; துள்ளினாள்;
குடித்தாள் துயரை உயிரோடும்
குழைத்தாள்; உழைத்தாள்; குயில் அன்னாள். (8761)

(முலை-மார்பகம்; அலைத்தல்-அறைந்துகொள்ளுதல்; குலைதல்-நடுங்குதல்; கரத்தல்-மறைத்தல்; உழைத்தல்-வருந்துதல்)

குயில்போன்ற இனிமையான குரல்வளமுடைய சீதாதேவி, இராமபிரான் இன்னும் எழாததைக் கண்டு தன் மார்பின்மீது கைகளால் அடித்துக்கொண்டாள். வயிற்றின்மீது அறைந்து கொண்டாள்; ஆற்றாது அழுது புரண்டாள்; கணவனை எண்ணி இருகைகூப்பி வணங்கினாள்; நெருப்பில் விழுந்த பூங்கொடி போன்று உடம்பு சுருளப்பெற்றாள்; மனம் வெதும்பிக் கொதித்துப்போனாள்; நெஞ்சம் பதைபதைத்தாள்;

Koviloor Digital Library

நிலைதடுமாறினாள்; நடுக்கம் கொண்டாள்; துடிதுடித்தாள்; மின்னலைப்போல உயிர் ஒருகணம் வந்து மறைந்ததுபோல உடலும் உள்ளமும் சோர்வுறப் பெற்றாள்; விமானத்திற்குள்ளே சுற்றிச் சுழன்றாள்; மனம் சுழலப்பெற்றாள்; துள்ளிக்குதித்தாள்; இத்தகைய தாங்கொணாத் துயரத்தைத் தன் உயிரோடும் சேர்த்துக் குழைத்துப் பருகினாள்; இவ்வாறு மிக்க வருத்தமுற்றாள்.

ஒரேபாடலில் எத்தனை வகையான அவல மெய்ப்பாட்டினைச் சொல்லியிருக்கிறான் பாருங்கள். சிறுசிறு வார்த்தைகளால் ஒரு பெருந்துயரத்தை விளக்குவது ஒரு அரிய கலை; அதை நன்கு அறிந்தவன் கவிச்சக்கரவர்த்தி என்பது புலனாகிறது. 'துயரைக் குடித்தாள்' என்பது மரபு பற்றி வந்த வழுவமைதி எனக்கொள்க.

9. விழுந்தாள்; புரண்டாள்; உடல் முழுதும்
வியர்த்தாள்; அயர்த்தாள்; வெதும்பினாள்;
எழுந்தாள்; இருந்தாள்; தளிர்க் கரத்தை
நெரித்தாள்; சிரித்தாள்; ஏங்கினாள்;
"கொழுந்தா!" என்றாள்; "அயோத்தியர் தம்
கோவே!" என்றாள்; எவ்வுலகும்
தொழும்தாள் அரசேயோ!" என்றாள்,
சோர்ந்தாள்; அரற்றத் தொடங்கினாள். (8762)

(அயர்த்தல்-பெருமூச்சுவிடுதல்; கோ-அரசன்; கொழுந்தன்-கணவனின் தம்பி; அரற்றுதல்-வாய்விட்டுக் கதறிப் புலம்புதல்)

சீதாதேவி விமானத்தின் உள்ளே விழுந்து புரண்டு அழுதாள்; உடல் முழுவதும் வியர்க்கப்பெற்று, பெருமூச்சுவிட்டுக் கொண்டே பொருமினாள்; இருக்க முடியாது எழுந்தாள்; பின் அமர்ந்தாள்; மலர்போலும் அழகிய தன் கைகளை மடக்கி நெரித்துக் கொண்டாள்; என்ன செய்வது என்பது புரியாமல் ஏளனமாகத் தனக்குத்தானே சிரித்துக்கொண்டாள்; வருத்தமுற்றாள்; இறந்துபட்டுக் கிடந்த இலக்குவனைப் பார்த்து 'கொழுந்தா' என்றாள்; இராமபிரானை நோக்கி ''அயோத்தி மக்களுக்கெல்லாம் அரசனே!'' என்றாள்; எல்லா உலகும் வணங்கித் தொழும் திருவடிகளையுடையவனே!'' என்றாள்; பின்னர் தளர்ச்சியுற்றுச் சாய்ந்து, வாய்விட்டுக் கதறி அரற்றத் தொடங்கினாள்.

இந்தப்பாடலிலும் அவலச்சுவையை அள்ளித் தெளித்திருக்கிறான் கவிஞன்; இத்தகைய ஒரு நிலையில் இரண்டு முரண்பட்ட செய்கைகள் நிகழ்வது இயல்பு; தன்னைத்தானே நொந்து கொள்வதால் இகழ்ச்சியாகச் சிரித்துக்கொள்வதும், அழுவதும் இயல்பு என்பதை விரிவாகக் கூறுகிறான் கவிஞன். பெருந்துயர் அடையும்போது தனக்குத்தானே சிரித்துக் கொண்டால் அது துயரத்தின் உச்ச நிலை என்பதை நாம் அனைவரும்

Koviloor Digital Library

அனுபவத்தால் அறிந்திருக்கிறோம். அதையே கவிஞன் கூறுவதும் உணர்க. 'கொழுந்தன்' என்ற சொல் கணவனின் தம்பியைக் குறிக்கும். முன்பு குகனிடம் சீதாதேவியைப் பற்றிக் கூறும் பொழுது, இராமபிரான் ''நங்கை கொழுந்தி'' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க. நடைமுறையில் கொழுந்தன் என்பது கணவனின் அண்ணனையும் குறிக்கும், தம்பியையும் குறிக்கும். இங்கே இராமபிரானுக்கு மூத்தவன் இல்லாததால் தம்பி இலக்குவனையே குறிக்கும். 'எவ்வுலகும் தொழும் தாள் அரசே!' என்பது 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்ற மணிவாசகரின் திருவாசகத்தை நினைவுபடுத்துவதை உணர்க.

10. சீதாதேவி அரற்றுதல் [12 பாடல்கள்]

"உறமேவிய காதல் உனக்கு உடையார்,
புறமேதும் இலாரோடு பூணலையோ?
மறமே புரிவார் வசம் ஆயினையோ?
அறமே! கொடியாய்! இதுவோ அருள்தான்?" (8763)

(அறம்-அறக்கடவுள்/தருமதேவதை; காதல்-அன்பு; மேவுதல்-பொருந்துதல்; மறம்-பாவம்; புரிதல்-விரும்பிச்செய்தல்)

சீதாதேவி தருமதேவதையை நோக்கி, ''அறக்கடவுளே! உன்மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டு அறச்செயல்களையே செய்கின்றவரும் மறச்செயலைப் பற்றிச் சற்றும் சிந்திக்காதவருமான என்னுடைய கணவன் இராமபிரானோடு நீ நட்புப் பூணவில்லையோ? அவருக்கு உதவ வில்லையோ? மாறாக, பாவச்செயல்களையே விரும்பிச் செய்யும் அரக்கர்கள்வசம் சென்று சேர்ந்து கொண்டாயோ? கொடியவனே! இதுதான் நீ எங்கள்பால் காட்டும் அருள் செய்கையோ?'' என்று புலம்புகிறாள்.

அறத்தின்பால் அன்புகொண்டு ஒழுகும் தன் கணவருக்குத் துணை புரியாது, அதற்குப் புறம்பான பாவச்செயல்களையே செய்யும் இயல்புடைய அரக்கர்கள் வசம் அகப்பட்டு அவர்களுக்கே துணைபுரிந்ததால், அறக்கடவுளைக் ''கொடியாய்'' என்றும், ''இதுவோ அருள்தான்'' என்றும் வினவுகின்றாள் என்பதாம்.

11. "முதியோர் உணர் வேதம் மொழிந்த அலால்,
கதியேதும் இலார் துயர் காணுதியோ?
மதியேன் மதியேன் உனை; வாய்மை இலா
விதியே! கொடியாய்! விளையாடுதியோ?" (8764)

(முதியோர்-அறிவிற்சிறந்த பெரியவர்கள்; கதி-வழி/பற்றுக்கோடு)

Koviloor Digital Library

மெய்ப்பொருள் என்றால் என்ன என்பதே தெரியாத ஊழ்வினையே! நன்கு கற்றறிந்த ஞானியர்களால் உணர்ந்து போதிக்கப்பட்ட வேதங்கள் கூறுகின்ற நல் அறநெறியையே அல்லாது வேறுபிற வழிகளைப் பற்றுக்கோடாகக் கொள்ளாது ஒழுகுபவராகிய என் கணவர் இராமபிரான் இப்பொழுது படுகின்ற இந்தத் துயரத்தை நீ இன்னும் கண்டுகொண்டுதான் இருக்கிறாயோ? கொடியவனே! உன்னை நான் சிறிதும் மதிக்கமாட்டேன்; மதிக்கமாட்டேன்; இல்லை என்றால் நீ என்னுடன் சற்று விளையாடிப் பார்க்கிறாயோ? என்னுடைய பொறுமையையும், கற்பின் திண்மையையும் சோதித்துப் பார்க்கிறாயோ?'' என்று அழுது அரற்றுகின்றாள்.

'மதியேன் மதியேன்' என்ற அடுக்கு வற்புறுத்தல் குறித்தது.

12. "கொடியேன் இவை காண்கிலேன்; உயிர்கோள்
முடியாய், நமனே! முறையோ! முறையோ!
விடியா இருள்வாய் எனை வீசினையே?
அடியேன் உயிரே! அருள் நாயகனே!" (8765)

சீதாதேவி இயமனை நோக்கி, ''கூற்றுவனே! என்னுடைய உயிர் போன்றவனும் அருள் நிரம்பப்பெற்றவனுமாகிய இராமபிரானின் உயிரையும், இலக்குவன் மற்றும் துணைநின்ற வானரச்சேனையின் உயிரையும் கவர்ந்துகொண்டு விட்டாயே! இந்தக் கொடுமையான அவல நிலையை நான் என் கண்களால் காணும் ஆற்றல் பெற்றவல்லள்; எனவே எனது உயிரையும் எடுத்துக்கொள்வாயாக! அழிவென்பதேயில்லாத இயமனே, இவ்வாறு நீ செய்தது முறையான செயலாகுமோ! அவர்கள் உயிரைக்கவர்ந்துகொண்டு, என்னை முடிவில்லாத துயரத்தில் - விடிதலே இல்லாத இருட்டில் தூக்கி எறிந்துவிட்டாயே! இது முறையாகுமோ?'' என்று புலம்புகிறாள்.

முன்பாடல்களில் அறத்தையும், விதியையும் நொந்து புலம்பிய சீதாதேவி இப்பொழுது இயமனையும் சாடுகிறாள் என்பதாம். என்னைக் கொடிய துன்ப இருளில் ஆழ்த்திவிட்டு நீ மட்டும் பிரிந்துபோயினையே என்று அவளின் அருமையான உயிரானவனும் அருள் செறிந்த தலைவனுமான இராமபிரானை நோக்கிப் புலம்புவதாகக் கொள்வதும் பொருந்தும். 'முறையோ முறையோ' என்ற அடுக்கு சீதாதேவியின் மிகுந்த துயர நிலையைக் குறித்தது. 'வீசுதல்' என்பது அலட்சியமாகத் தூக்கி எறிதல் என்ற பொருள்தரும்.

13. "எண்ணா, மயலோடும் இருந்தது நின்
புண்ணாகிய மேனி பொருந்திடவோ?
மண்ணோர் உயிரே! இமையோர் வலியே!
கண்ணே! அமிழ்தே! கருணாகரனே!" (8766)

Koviloor Digital Library

(கருணாகரன்-கருணைக்கு இருப்பிடமானவன்; எண்ணா-அளவிட முடியாத; மயல்-மயக்கம்)

''மண்ணுலகத்து உயிரினங்களுக்கெல்லாம் உயிர் போன்றவனே! தேவர்களுக்கு அவர்கள் காரியங்களில் வலிமை சேர்ப்பவனே! கருணையின் இருப்பிடமே! நான் உன்மேல் அளவிடமுடியாத காதல் மயக்கம் கொண்டு, இவ்வுடலில் உயிரைத் தாங்கிக்கொண்டு இதுகாறும் அரக்கர் ஊரில் வாழ்ந்திருந்ததெல்லாம், உன்னுடைய இந்தப் புண்பட்ட மேனியைத் தழுவுவதற்காகத்தானா?'' என்று இராமபிரான் உடலைப்பார்த்துப் புலம்புகிறாள் சீதாதேவி.

இராமபிரான் மூர்ச்சையுற்றுத்தான் கிடக்கிறான் என்பதை அறியாதவளான சீதாதேவி அவன் இறந்துவிட்டதாகவே தவறாகக் கருதிக்கொண்டு இவ்வாறு புலம்புகிறாள் என்பதாம்.

14. "மேவிக் கனல்முன், மிதிலைத்தலை, என்
பாவிக் கை பிடித்தது, பண்ணவ! நின்
ஆவிக்கு ஒரு கோள் வரவோ? அலர்வாழ்
தேவிக்கு அமிழ்தே! மறையின் தெளிவே!" (8767)

(அலர்-மலர்/செந்தாமரைமலர்; பண்ணவன்-தேவன்/கடவுள்; கோள்-துன்பம்)

''செந்தாமரைமலரில் வாழும் திருமகளுக்குத் தேவ அமிழ்தம் போன்றவனே! நான்கு வேதங்களின் முற்ற முடிந்த தெளிவான பரம்பொருளே! கடவுளே! முன்பு மிதிலை நகருக்கு வந்து, வேள்வித்தீயின் முன்னால் பாவியாகிய என்னைத் திருமணம் செய்துகொண்டு என் கரம் பற்றியதெல்லாம், இப்போது உன் உயிருக்கு ஒரு துன்பம் வருவதற்காகத்தானோ?'' என்று இப்பொழுது இராமபிரானுக்கு உண்டான இந்தத் துன்பத்திற்குத் தானே காரணம் என்று தன்னைத்தானே நொந்து கொள்கிறாள் சீதாதேவி.

'கனல்' இங்கே திருமணத்தில் வளர்க்கப்படும் ஓமத்தீயைக் குறித்தது. தன்னைப் பாவியென்றும், தான் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் அல்ல என்று தன்னைத்தவிர்த்து வேறுபடுத்திக் கொண்டு கூறுவதும் நோக்கத்தக்கது. எனினும் அவன் பரம்பொருள் என்பதை 'பண்ணவ' என்றும் வேதங்களின் முடிந்த முடிபானவன் என்பதை 'மறையின் தெளிவே'' என்றும், ''அலர்வாழ் தேவிக்கு அமிழ்தே' என்று கூறுவதும் சிந்தித்துச் சுவைக்கத்தக்கனவாம்.

Koviloor Digital Library

15. "உய்யாள் உயர் கோசலை தன் உயிரோடு;
அய்யா! இளையோர் அவர் வாழ்கிலரால்;
மெய்யே, வினை எண்ணி, விடுத்த கொடுங்
கய்கேசி கருத்து! இதுவோ? களிறே!" (8768)

(களிறு-இருகைவேழம்; உய்தல்-பிழைத்திருத்தல்; இளையோர்-தம்பியர்; வினை-வஞ்சனை; விடுத்த-அனுப்பிய)

''இருகைகள் கொண்ட வேழம் போன்ற தலைவனே! நீ இவ்வாறு இறந்துபட்டுக் கிடக்கிறாய் என்ற செய்தியை உன்னுடைய தாயான உயர்ந்த குணநலன்களைக் கொண்ட கோசலை கேள்விப்பட்டால் சற்று நேரம்கூட உயிர் தரித்திருக்கமாட்டாள்; இதனைக் கேள்விப்பட்டால் உன்னுடைய இளைய தம்பியரான பரதனும் சத்துருக்கனும், கோசலைக்கு இளையவரான சுமித்திரை மற்றும் உரிமை மகளிரும் உயிர் தரித்திருக்கமாட்டார்கள். கொடுங்குணம் நிரம்பப்பெற்ற உன் அன்னை கைகேயி வஞ்சனை எண்ணம் கொண்டு உன்னைக் கானகத்திற்கு அனுப்பியது மெய்யாகவே இதற்குத்தானோ?'' என்று சந்தேகத்துடன் புலம்புகிறாள் சீதாதேவி.

கோசலையை 'உயர்கோசலை' என்றும், கைகேயியைக் 'கொடுங்கைகேயி' என்றும் கவிஞன் கூறியிருப்பதை நுனித்து உணர்க. சீதாதேவியின் உள்ளக்கருத்தோடு, கற்போர் கருத்தும் ஒன்றுபட்டு நிற்கிறது என்பதைக் கவிஞன் கூறும் திறம் உணர்க. 'இளையோர்' என்பது தம்பியரையே குறிக்கும் என்றாலும் பொதுச்சொல்லாகக் கொண்டு கோசலைக்கு வயதில் இளையவர் அனைவரும் உயிர்துறப்பர் என்று கொள்ளவும் இடம் இருப்பதை அறிக. 'களிறே' என்பது முன்பு, ''இருகை வேழத்து இராகவன்'' என்ற துதிப்பாடலை நினைவுபடுத்துவதையும் நினைக. 'கைகேசி' என்பது எதுகைநோக்கி 'கய்கேசி' என நின்றது. 'கைகேசி கருத்து' என்பது எல்லோரும் இறந்துபட, தானும் தன் மைந்தன் பரதனும் இனிது வாழ்ந்து அரசு புரிவதோ? என்ற விரிந்த பொருளையும் உள்ளடக்கியது எனக்கொள்க.

16. ''தகை வான்நகர் நீ தவிர்வாய்'' எனவும்,
வகையாது, தொடர்ந்து, ஒருமான் முதலா
புகை ஆடிய காடு புகுந்து, உடனே
பகை ஆடியவா! பரிவு ஏதும் இலேன்!" (8769)

(வான்-ஒளி; தவிர்வாய்-வாராதிருப்பாயாக; வகை-வழி/செய்கை; ஆடுதல்-உண்டாக்குதல்/மிகுந்திருத்தல்; முதல்-காரணம்; பரிவு-இரக்கம்; தகை-பெருமை; வகையாது-பிரியாது; தொடர்தல்-பின்பற்றிச் செல்லுதல்)

Koviloor Digital Library

''போர் என்ற பேச்சே இல்லாத பெருமையும், அழகு பொருந்தியதும், ஒளிமிக்கதுமாகிய அயோத்தி மாநகரிலிருந்து என்னுடன் பெருங்காடு வருவதைத் தவிர்ப்பாயாக! இங்கேயே தங்கியிருப்பாயாக! என்று நீ எவ்வளவோ எடுத்துக் கூறியும் அதனைச் சற்றும் மனத்திற் கொள்ளாது, செவியேற்காது ''நின்னினும் சுடுமோ பெருங்காடு'' என்றுகூறி, உன்னுடன் பிடிவாதமாகத் தொடர்ந்து, புகை மண்டிய கானகத்திற்குள் புகுந்ததும், அங்கே வந்த பொன்மான் ஒன்றின் காரணமாக அவ்வரக்கர்களாகிய பகைவர்கள் அனைவரையும் எதிர்த்துப் போரிட்டு அழிக்கும் வண்ணமும் செய்து, இறுதியில் நீயே இத்தகைய நிலை எய்துவதற்கு நான்தான்-நானேதான் சற்று இரக்கம் இல்லாதவளாகிப்போய், இதற்கு முழுமுதற் காரணமாகிப் போனேனே'' என்று தன்னைத்தானே நொந்து கொள்கிறாள் சீதாதேவி.

'தகை' என்ற சொல் பெருமை என்ற பொருளையும் அழகு என்ற பொருளையும் தரும். 'தாள்தோய் தடக்கை, தகைமான் வழுதி' என்பது புறநானூறு-59. அயோத்தி என்ற சொல்லுக்கு விளக்கம் தருவதுபோல் யுத்தம் என்பதே இல்லாத பூமியாகப் பெருமைபெற்று விளங்கும் அழகிய ஒளிமிக்க அயோத்திநகர் என்பது 'தகைவான் நகர்' எனப்பட்டது. 'தவிர்தல்' என்பது விலக்குதல் என நேர்பொருள் தரும் என்றாலும், தங்கியிருப்பாய் என்பதும் உட்பொருள். 'இடைச்சுரம் மருங்கில் தவிர்தல் இல்லை' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தில் 'தவிர்தல்' என்ற சொல் தங்குதல் என்ற பொருளில் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். 'புகை ஆடிய காடு' என்பது காட்டில் எழும் நெருப்பால் எப்போதும் புகை மண்டிக்கிடக்கும் காடு என்பதைக் குறிக்கும். இவற்றிற்கெல்லாம் தான் இரக்கம் கொள்ளாது நின் பேச்சைக் கேளாது உன்னுடன் தொடர்ந்து கானகம் வந்ததே காரணம் என்று தன்னைத் தானே நொந்து கொள்ளுகிறாள் சீதாதேவி என்பதாம். தன்னைப் பற்றித் தானே பெருமையாகக் கூறிக்கொள்ளுவதைத் 'தற்பெருமை' என்று கூறுவதுபோல், தன்னைப் பற்றித் தானே பழிதூற்றிக் கொள்வதைத் 'தற்பழி' என்கிறது ஒரு உரைநூல். புதிய சொல்லாட்சி கண்டு இன்புறத்தக்கது. இராமபிரான் இறந்துபட்டிருக்கும்போது தானும் இறந்துபட்டிருக்க வேண்டும், அவ்வாறு நிகழாததால் தன்னைத்தானே 'பரிவேதும் இலேன்' என்றாள் என்பதும் பொருந்தும்.

17. "இன்று ஈகிலையேல், இறவு இவ்விடை; மான்
அன்று ஈ" எனவும், பிரிவோடு அடியேன்
நின்று ஈவது, நின்னை நெடுஞ்செருவில்,
கொன்று ஈவது ஓர் தீமை குறித்தலினோ?" (8770)

(ஈகல்-கொடுத்தல்; இறவு-இறப்பு; இவ்விடை-இந்தஇடம்; பரிவு-இரக்கம்; குறிப்பு-நினைப்பு/எண்ணம்; அன்று-முன்பு)

Koviloor Digital Library

முன்பு மாரீசன் மாயமானாக உருமாறி வந்தபோது, அதனைப் புரிந்துகொள்ளும் அறிவு இல்லாமல், ''இப்பொழுதே இந்த மானை இவ்விடத்திலேயே, நீயே எனக்குப் பிடித்துத் தரவில்லையென்றால், என்னுயிர் இங்கேயே இறந்துபடும்'' என்று அன்று நான் வற்புறுத்திக் கூறியதால்தான், என்னைவிட்டு நீயும், அதன் பின்னர் என் காவலைத் தவிர்த்து இலக்குவனும் பிரிய நேர்ந்தது; அதுதான் இப்பெரும்போர் நிகழக் காரணமாயிற்று. எனவே நான்செய்த அந்தச்செய்கை உன்னைக் கொன்று போடுவது என்ற ஒரு பெருந்தீயசெயலுக்குக் காரணமாகிப் போனதே?'' என்று நொந்து கொள்ளுகிறாள் சீதாதேவி.

அவ்வாறு தான் வற்புறுத்தாது இருந்திருந்தால் இத்தகைய நிலை ஏற்பட்டிருக்காது என்பது கருத்து.

18. "நெய்ஆர் பெரு வேள்வி நிரப்பி, நெடும்
செய்ஆர் புனல் நாடு திருத்துதியால்;
மெய்யாகிய வாசகமும், விதியும்
பொய்ஆன, என் மேனி பொருந்துதலால்" (8771)

(ஆர்தல்-நிறைதல்; நிரப்புதல்-நிறைவுறச்செய்தல்; செய்-வயல்கள்; புனல்-நீர்வளம்; திருத்துதல்-அரசோச்சுதல்; பொருந்துதல்-தீண்டுதல்; பொய்-பாவம்; வாசகம்-சொல்/முடிவு)

''மிக்க நெய்யைப் பெய்து பெருமைமிகுந்த வேள்வியை நிறைவுறச் செய்து, நீண்ட வளப்பம் மிகுந்த வயல்களும், நீர்வளம் மிகுந்ததுமான கோசலநாட்டை, நீதிநெறி வழுவாமல் இனிதாக அரசாண்டு கொண்டிருப்பாய்; எனினும் பாவியாகிய என்னைத் திருமணம்செய்து கொண்டு, என் மேனியைத் தீண்டியதனால், உன் தந்தை உனக்கு முடிசூட்டுவேன் என்றுகூறிய முடிவான சொல்லும், நீ அதனை ஏற்றுக்கொள்ள முடியாத ஊழ்வினையும் என்னால்தானே பொய்யாகிப்போயின'' என்று மனம் நொந்து புலம்புகிறாள் சீதாதேவி.

தன்னை இராமபிரான் மணம் செய்து கொண்டிருக்காவிட்டால் கோசல நாட்டை ஆண்டுகொண்டு சுகமாக வாழ்ந்திருப்பான் என்று கருதிப் பார்க்கிறாள் சீதாதேவி. இதே நிலைமை சிவபெருமானுக்கும் வந்தது என்கிறது ஒரு தனிப்பாடல் கேளுங்கள். ''உமையாளைப் பாகம் தோய்ந்து ஆண்டான், பழிக்கு உழன்றான்'' என்கிறது அந்தத் தனிப்பாடல்.

19. "மேதா! இளையோய்! விதியார் விளைவால்,
போதா நெறி எம்மொடு போதுறுநாள்
"மூதானவன் முன்னம் முடிந்திடு" எனும்
மாதா உரையின் வழி நின்றனையோ?" (8772)

Koviloor Digital Library

(மேதை-அறிவு நிரம்பியவன்; இளையோய்-இளவரசே; போதா-காப்பதற்கு அரிதான; மூதானவன்-மூத்தவன்/முன்னவன்/இராமபிரான்; மாதா-தாய்/சுமித்திரை; விதியார்-விதி/ஊழ்வினை; விளைவு-பயன்)

சீதாதேவி இப்போது இலக்குவன் இறந்துகிடப்பதைப் பார்த்து அவனை நோக்கி, ஆற்றாமையால், ''அறிவில் மேம்பட்டவனே! அரசிளங்குமரனே! இலக்குவ! விதியின் பயனால், நாங்கள் இருவரும் வனவாசம் செய்யப் புறப்பட்ட அந்தநாளில், உன்தாய் சுமித்திரை, 'உன் மூத்தவனான இராமபிரான் எக்காரணத்தாலாவது இறக்க நேர்ந்தால் அவன்இறந்துபடுவதற்கு முன்னே, நீ முன்னம் முடிந்துபோய்விடு'' என்று ஆசிகூறி அனுப்பினாளே! அவள் கூறியதை இப்பொழுது செயலாகக் காட்டிவிட்டாயே! அவள் சொன்னபடி மூத்தவனின் முன்னம் முடிந்துபோனாயோ?'' என்று புலம்புகிறாள் சீதாதேவி.

'மேதா' என்பது இலக்குவன் ஒவ்வொரு இக்கட்டான சூழ்நிலையிலும் தன் அறிவைப் பயன்படுத்தித் தன் அண்ணன் இராமபிரானை நல்நெறிப் படுத்தியதைக் குறிக்கும். விதியின்பயனைக் காப்பியத்தில் பல இடங்களிலும் கவிஞன் சொல்லிப்போவதைக் காணலாம். அங்கெல்லாம் விதியார் என்று மரியாதைப் பன்மையிலேயே கூறியிருப்பதையும் காண்க. 'போதாநெறி' என்பது யாவராலும் கடத்தற்கரிய காட்டுவழி என்ற பொருளைத்தரும். 'எம்மொடு' என்று தன்னையும் இராமபிரானையும் உட்படுத்திக் கூறினாள் என்க. இலக்குவன் தன் தாய் சுமத்திரையிடம் வனம்புக விடைபெறச் சென்றபோது அருகிருந்து அதனைக் கண்டவள் சீதாதேவி. எனவே அதனை இப்பொழுது நினைவிற் கொண்டு, அதே சொற்களைப் பயன்படுத்திப் புலம்புவதை நுனித்து நோக்குக.

20. "பூவும் தளிரும் தொகு பொங்கு அணைமேல்
கோவும் துயில, தவிர்வாய்! கொடியார்
ஏவின் தலைவந்த இருங்கணையால்
மேவும் குளிர் மெல்லணை மேவினையோ?" (8773)

(தொகு-நிறைந்துள்ள; பொங்குஅணை-சிறந்த படுக்கை; கோ-அரசன்/இராமபிரான்; தவிர்தல்-விடுத்தல்; ஏ-அம்பு/வில்; இரும்-பெரிய; மேவும்-சேர்தல்/அமைதல்; பொங்குதல்-பூரிப்படைதல்)

சீதாதேவி இலக்குவனை நோக்கி, மேலும் பேசுகின்றாள்; ''மெல்லிய மலர்களாலும், காம்பறுபட்ட மெல்லிய குளிர்ந்த இதழ்களாலும் நிரப்பப்பட்ட சிறந்த படுக்கையில் இராமபிரானும் நானும் துயில் கொண்டிருக்க, பர்ணசாலையின் வெளியே நின்று கொண்டே, சற்றும் உறக்கம் கொள்ளாது எங்களைக் காத்து விழித்துக்கொண்டே நின்றவனே! இலக்குவ! இப்போது கொடியவர்களான இந்த அரக்கர்கள் தங்கள் விற்களினின்றும் செலுத்திய பெரிய அம்புகளாகிய மெல்லிய குளிர்ந்த

Koviloor Digital Library

அம்புப்படுக்கையில் படுத்து மனம் குளிர்ச்சிபெற விரும்பி அமைந்திருக்கிறாயோ?'' என்று புலம்புகிறாள்.

இலக்குவன்காம்பு அரியப்பட்ட இளமையும் தண்மையும் பொருந்திய அன்றலர்ந்த மலர்களால் பர்ணசாலையில் உருவாக்கித்தந்த மலர்ப்படுக்கையைக் கண்டு அனுபவித்தவள் சீதாதேவி. எனவே அதை இப்போது நினைவுபடுத்திக் கொண்டு இவ்வாறு கூறுகிறாள் என்பதாம். இதேபோல் தான் ''தன் வாழ்வில் முன்பு நடந்த நிகழ்ச்சிகளை சீதாதேவி இலங்கையில் அசோகவனத்தில் இருந்துகொண்டு அசைபோட்டுப் பார்த்தாள் என்பதையும் நாம் கண்டுவந்திருப்பதை நினைவுகூர்க. 'மேவும் குளிர் மெல்லணை' என்பது இகழ்ச்சிக்குறிப்பு. தன் ஆற்றாமையால் வெளிப்பட்டுவந்த உணர்ச்சிப் பெருக்கு எனக்கொள்க. 'எதிர்மறை இலக்கணை' என்பது இதன் இலக்கணப்பெயர். 'ஏ' என்ற சொல் அம்பினைக் குறிக்கும், இது இங்கு ஆகுபெயராக ''ஏவின் தலைவந்த இருங்கணைக்கு'' ஆகி வந்தது எனக்கொள்க. அம்புப்படுக்கையை 'சரதல்பம்' என்கிறது வான்மீகம். சரம்-அம்பு; தல்பம்-படுக்கை; ''பூவும் தளிரும் தொகுபொங்கு அணை'' என்பது முன்பு ''ஐந்து அடுக்கு அமளி'' எனக் கூறப்பட்டதையும் இங்கு நினைவுகூர்க. மெல்லிய குளிர்ந்த மலர்களாலான படுக்கைக்கும், வெவ்விய வலிய அம்புகளால் ஆன படுக்கைக்கும் வேறுபாடு உணர்க. அது பொங்குஅணை; இது குளிர் மெல்லணை என்ற முரண்பாடும் கருதுக.

21. திரிசடை தேற்றுதல்

''மழுவாள் வரினும் பிளவா மனன் உண்டு
அழுவேன்; இனி, இன்று இடர் ஆறிட, யான்
விழுவேன் அவன் மேனியின் மீதில்'' எனா,
எழுவாளை விலக்கி, இயம்பினளால். (8774)

(உறுதல்-தாக்குதல்; பிளவா-பிளந்து; மனன்-மனம்/உள்ளம்; இடர்-துயர்; ஆறுதல்-தணிதல்; மழு-எரியீட்டி; விலக்குதல்-தடுத்தல்)

''மழு என்னும் எரியீட்டியாகிய கோடாலியும், வாளாயுதமும் கூடச்சேர்ந்து என்னைத் தாக்கினாலும், அதனால் பிளவுபடாத திண்ணிய உள்ளத்தை உடையவள் நான். இதுவரை அழுது தீர்த்துவிட்டேன்; இனிமேல் இந்தப் பிரிவுத்துன்பம் தீர, நான் என் இராமபிரான் மேனியின்மீது விழுந்து உயிர்விடுவேன்'' என்றுகூறி, விமானத்திலிருந்து எழுந்த சீதாதேவியைத் தடுத்து, அவள் உடன் வந்த வீடணன் மகளாகிய திரிசடை கீழ்க்கண்டவாறு கூறத்தொடங்கினாள்.

கணவன் இறந்தபின்பும் உயிர்வாழும் கைம்பெண்களின் துன்பத்தைப் புறநானூறு கூறுகிறது கேளுங்கள். ''நறுநெய் தீண்டாது, அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம் வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய்தட்ட,

Koviloor Digital Library

வேளைவெந்தை வல்சியாகப், பரற்பெய்ப்பள்ளிப் பாயின்று வதியும் உயவற்பெண்டிர்'' என்பது புறநானூறு-246. ''நெய்இட்டுக் காய்ச்சாததாகிய பண்டங்களையும், பானையின் அடிப்பகுதியில் நீரில் கிடக்கும் சோற்றுப் பருக்கைகளையும், வெள்ளை எள்ளால் செய்யப்பட்ட துவையலையும், புளிகொண்டு காய்ச்சிய வேளைக்கீரையையும் மட்டுமே உணவாகவும், கல்பரப்பிய படுக்கையில் பாய் இல்லாமல் படுத்துத் துன்புறுபவர் கைம்பெண்கள்'' என்பது இப்பாடலின் திரண்ட கருத்து. பிண்டம்-பிடித்தசோறு; சாந்து-துவையல்; வெந்தை-கீரை; வல்சி-சோறு; பரல்-சிறுகல்; உயிர்நீத்த கணவன் உடலைத் தழுவித் தானும் உயிர்விடுதல் கற்புடைப் பெண்டிர்க்கு இயல்பு.

22. திரிசடை சீதாதேவியின் கலக்கம் தீர்த்தல்

''மாடுஉற வளைந்து நின்ற வளை எயிற்று அரக்கிமாரைப்
பாடுஉற நீக்கி, நின்ற பாவையைத் தழுவிக் கொண்டு
கூடினள் என்ன நின்று, செவியிடை, குறுகிச் சொன்னாள்,
தேடிய தவமே என்னத் திரிசடை, மறுக்கம் தீர்ப்பாள். (8775)

(மறுக்கம்-மனக்கலக்கம்; தீர்த்தல்-போக்குதல்; மாடு-பக்கம்; வளைந்து-சுற்றி; எயிறு-பற்கள்; பாடு-பக்கம்; கூடுதல்-ஒன்றாகுதல்/நெருங்கிநிற்றல்; குறுகி-அணைந்து/நெருங்கி)

சீதாதேவி முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயனால் தேடிப்பெற்ற செல்வம் போன்றவளான திரிசடை, தற்போது சீதாதேவி கொண்டிருக்கின்ற மனக்கலக்கத்தைத் தீர்க்கும் பொருட்டு, அவளின் பக்கங்களில் சுற்றிச்சூழ்ந்து நின்ற, வளைந்த கோரப்பற்களை உடைய அரக்கியர்களையெல்லாம் இருபக்கமும் அகன்றுபோகுமாறு செய்து, விமானத்திலிருந்து கீழே குதிப்பதற்குத் தயாராகி நின்ற ஓவியப்பதுமை போன்ற சீதாதேவியை இறுகத் தழுவிக்கொண்டு, அவள் உடலுடன் இரண்டறக் கலந்தவள்போல் நெருங்கி நின்றுகொண்டு சீதாதேவியின் காதுகளில் மட்டும் கேட்கும்வண்ணம், மிக இரகசியமாகக் கீழ்வருவனவற்றைக் கூறலானாள்.

ஒருவர் ஒரு பிறப்பில் செய்த நல்வினையின் பயனாகிய புண்ணியம், அவருடைய எல்லாப் பிறவிகளிலும் தொடர்ந்து வந்து, தக்க சமயத்தில் தலைநின்று காக்கும் என்பது ஒரு நூற்கொள்கை. அதுபோல இங்கே சீதாதேவி முற்பிறப்பில் செய்த தவத்தின் பயன் இப்போது திரிசடை என்னும் உருவில் வந்து காக்கிறது என்பது கருத்து. திரிசடை வீடணன் மகள். வீடணன் போலவே உத்தம குணங்கள் நிரம்பப்பெற்றவள். அசோகவனத்தில் சீதாதேவிக்கு உயிர்த் தோழியாக இருந்து அவ்வப்பொழுது அவளுக்கு ஆறுதல்கூறி ஆற்றுப்படுத்தியவள். இவளை 'முச்சடை' என்றும் கவிஞன் சில இடங்களில் கூறிப்போகிறான்.

Koviloor Digital Library

'அன்பினால் தாயினும் இனியவள்' என்று முன்பு கூறியதையும் நினைக. இவள் மணமாகாத கன்னிப்பெண் என்று தானே கூறிக்கொள்வதையும் நாம் சுந்தரகாண்டத்தில் கண்டு வந்திருக்கிறோம். 'மறுக்கம்' என்பது மூர்ச்சித்துக் கிடக்கும் இராமஇலக்குவரை உயிர்துறந்து இறந்துபட்டனர் என்று தவறாகக் கருதும் மனக்கலக்கம் என்று கொள்க. சீதாதேவி முன்பு அனுமனிடம் 'திருச்செவி சாற்றுவாய்' என்று கூறியதையும் இலங்கையில் தூதுவர்கள் இராவணனிடத்தில் ''செவி மருங்கு எய்திப் பையக்'' கூறியதையும் நினைவுகூர்க. சீதாதேவி முன்பு செய்த நல்வினை ''தேடிய தவமே அன்னத் திரிசடை'' உருவில் வந்தது. பட்டினத்தாருக்கு எதிர்மறையான விளைவைத் தந்ததைப் பாருங்கள். ''முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே'' என்பது பட்டினத்தார் தனிப்பாடல். இதுவே கண்ணப்பருக்கு நல்வினை பயந்தது. ''முன் செய்த தவத்தின் ஈட்ட முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்ட'' என்பது பெரியபுராணம்.

23. "மாயமான் விடுத்தவாறும், சனகனை வகுத்தவாறும்,
போயநாள் நாகபாசம் பிணித்தது போனவாறும்
நீ அமா! நினையாய்; மாள நினைதியோ, நெறி இலாரால்
ஆய மாமாயம்; ஒன்றும் அறிந்திலை; அன்னம் அன்னாய்!" (8776)

(ஆறு-தன்மை; வகுத்தல்-உண்டாக்குதல்; நினையாய்-நினைத்துப் பார்ப்பாயாக; ஆய-உண்டாகிய; ஆதல்-உண்டாகுதல்; மாள்தல்-இறந்துபடுதல்)

திரிசடை சீதாதேவியை நோக்கி, ''அன்னம் போன்ற மென்மைத் தன்மையுடைய தாயே! முன்பு மாரீசனை மாயச்செயலால் பொன்மானாக்கி அனுப்பிய தன்மையையும், பிறகு அரக்கன் மருத்தனை உன் தந்தை சனகன்போல உண்டாக்கி உருமாற்றி அனுப்பி உன்னைக் கலக்கிய தன்மையையும், நேற்று இந்திரசித்து தன் மாயச்செயலால் நாகபாசத்தைச் செலுத்தி இராமஇலக்குவரையும் வானரச்சேனையையும் கட்டுண்ணச் செய்த தன்மையையும், பின்னர் அது கருடனால் விலக்கப்பெற்ற தன்மையையும் சற்று நினைத்துப் பார்ப்பாயாக! அவற்றிலிருந்தெல்லாம் எப்படித் தப்பித்து வெற்றி கொண்டு வந்தார்களோ, அதுபோல, இப்போதும் பிரமாத்திரத்தினால் கட்டுண்டு மூர்ச்சையாகிக் கிடக்கின்ற இவர்கள் இறந்துபடவில்லை; சிறிது நேரத்தில் பிரமாத்திரம் தன் வலிமைகுன்றும்; அப்பொழுது இவர்கள் மீண்டும் எழுந்து வருவார்கள்; இரக்கம் என்று ஒரு பொருளிலா அரக்கர், அறநெறியிற் சற்றும் ஒழுகாத அரக்கர்கள் செய்கின்ற பெரிய வஞ்சனை நிறைந்த சூழ்ச்சிச் செயல்களில் இதுவும் ஒன்று. இதை நீ சற்றும் புரிந்துகொள்ள முயற்சிக்காமல் உயிரைவிடத் துணிகிறாயே? இது தக்கதன்று'' என்று அறிவுறுத்தித் தேற்றுகிறாள்.

Koviloor Digital Library

'அம்மா' என்பது எதுகைநோக்கி 'அமா' எனத்திரிந்தது. 'அம்ம' 'கேட்பிக்கும்' என்பது தொல்காப்பியம். திரிசடை சீதாதேவியை நோக்கி ''நான் கூறுவதைக் கேட்பாயாக!'' என்று கூறினாள் என்றும் பொருள்கொள்ளலாம். 'அம்மா' என்பதை எப்போதும்போல் அசைச்சொல்லாகவும் கொள்ளலாம்.

24. "கண்ட அக்கனவும், பெற்ற நிமித்தமும், நினது கற்பும்,
தண்ட வாள் அரக்கர் பாவச் செய்கையும், தருமம் தாங்கும்
அண்டர் நாயகர் தம் வீரத்தன்மையும், அயர்க்கலாமோ?
புண்டரீகற்கும் உண்டோ இறுதி, இப்புலையர்க்கு அல்லால்?" (8777)

(தண்டம்-தண்டாயுதம்; வாள்-வாட்படை; அண்டர்நாயகன்-தேவர் தேவன்/இராமபிரான்; அயர்த்தல்-மறத்தல்; இறுதி-அழிவு; புண்டரீகம்-செந்தாமரைமலர்; புலையர்-அற்பர்கள்)

''நீ முன்பு கண்டு எனக்குச் சொன்ன கனவின் தன்மையையும், உனது இடதுகண், இடதுதோள் துடித்தல் போன்று உனக்கு ஏற்பட்ட நல்ல சகுனங்களையும் உனது கற்பின் திண்மையையும், தண்டாயுதத்தையும், வாட்படையையும் உடைய இந்த அரக்கர்களின் மாயச்செயல்களின் தன்மையையும், அறம்தலை நிறுத்தவே அவதாரம் எடுத்து வந்திருக்கின்ற தேவர்களுக்கெல்லாம் தலைவனான திருமாலின் அம்சமான இராமபிரானின் வீரப்பான்மையையும் நீ மறந்துபோனாயோ? இறப்பு என்பது ஒன்று உண்டானால் அது இந்த அற்பமான இழிந்த வாழ்வியலையுடைய அரக்கர்களுக்குத்தான் விளையுமேயன்றி, செந்தாமரைமலர் போன்ற இராமஇலக்குவர்க்கு விளைவதாகுமோ?'' என்று மேலும் தேற்றுகிறாள்.

'கற்பு' என்ற சொல்லுக்குத் தொல்காப்பியம் கூறும் விளக்கம் கேளுங்கள். ''கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்று எனவும், அவனை இன்னவாறே வழிபடுக எனவும், இருமுதுகுரவர் கற்பித்தலானும், அந்தணர் திறத்தும் சான்றோர் தேயத்தும், ஐயர் பாங்கினும், அமரர்ச்சுட்டியும், ஒழுகும் ஒழுக்கம் தலைமகன் கற்பித்தலானும், கற்பாயிற்று'' என்பது தொல்காப்பியம் பொருளதிகாரம்-142. 'புலையர்' என்ற சொல் புலால் உணவை விரும்பி உண்ணுகின்ற அரக்கர் என்ற நேர்பொருளைத் தரும்.

25. "ஆழியான் ஆக்கைதன்னில் அம்பொன்றும் உறுகிலாமை,
ஏழை! நீ காண்டி அன்றே? இளையவன் வதனம் இன்னும்
ஊழிநாள் இரவி என்ன ஒளிர்கின்றது; உயிர்க்கு இன்னல்
வாழியார்க்கு இல்லை; வாளா மயங்கலை; மண்ணில் வந்தாய்!" (8778)

Koviloor Digital Library

(ஆழி-சக்கரப்படை; உறுகுதல்-அழுந்திப்பதிதல்; ஏழை-மெலியவள்; வதனம்-முகம்; இரவி-சூரியன்; வாழியார்-நெடிதுவாழும் இயல்புடைய வர்கள்; இன்னல்-அழிவு; வாளா-வீணாக; மயக்கம்-மனக்கலக்கம்; ஆக்கை-உடம்பு/திருமேனி)

''நிலத்தினின்றும் தோன்றியவளே! சீதாதேவி! சக்கரப்படையைக் கையில் ஏந்திய திருமாலின் அவதாரமான இராமபிரானின் திருமேனியில் அம்பு ஏதேனும் அழுந்திப் பாய்ந்திருக்கிறதா என்பதை உற்றுப்பார். பாய்ந்திருக்க வில்லையல்லவா? மெல்லியல்புடையவளே! நீயே நேராகக் காண்கிறாயல்லவா? அதுபோலவே இளையவனான இலக்குவனின் முகம் இப்போதும், ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் சூரியன்போல நன்கு ஒளிவிட்டுப் பிரகாசிப்பதையும் காண்பாயாக! எனவே நல்ல, நீண்ட பெருவாழ்வு பெற்றவர்களுக்கு எப்போதும் இறப்பு என்ற அழிவு இல்லை என்பதை நன்றாக உணர்ந்துகொள். அவர்கள் இறந்துபட்டார்கள் என்று வீணாக மனதைக் குழப்பிக் கொள்ளாதே'' என்று தேற்றுகிறாள் திரிசடை.

''ஆழியான் ஆக்கை தன்னில் அம்பொன்றும் உறுகிலாமை ஏழை! நீ காண்டி அன்றே'' என்பது காட்சியளவை. நேருக்குநேர் கண்ணால் காண்பது ''இளையவன் வதனம் இன்னும் ஊழிநாள் இரவி என்ன ஒளிர்கின்றது'' என்பது அனுமான அளவை (வழி அளவை) ஒன்றைச் சொல்லி மற்றொன்றைப் புரியவைப்பது. முகம் ஒளிபெற்று விளங்குவதால் அவன் இறக்கவில்லை என்பதை நிறுவுவது எனக்கொள்க. 'வாழியார்' என்பது சிரஞ்சீவித்தன்மை படைத்தவர்கள் நெடிதுநாள் வாழும் தன்மையுள்ளவர்கள் என்பதைக் குறிக்கும். 'ஏழை' என்ற சொல்லுக்கு அறிவிற் குறைந்தவர் என்பது நேர்பொருள். இங்கே அறிவில் மயங்கிய சீதாதேவிக்குக் கூறப்பட்டது. 'மண்ணில் வந்தாய்' என்பது சீதாதேவி தாய்வயிற்றில் தோன்றாது அயோநிஜையாய், நிலத்தினின்றும் கொழுமுனையில் தோன்றியவள், தெய்வப்பிறவி என்பதைக் குறித்தது. ''ஊழிநாள் இரவி'' இளையவன் வதனத்திற்கு உவமை.

26. "ஓய்ந்துளன் இராமன் என்னின், உலகம் ஓர் ஏழும்ஏழும்
தீய்ந்துறும்; இரவி பின்னும் திரியுமோ? தெய்வம் என்னாம்?
வீய்ந்துறும் விரிஞ்சன் முன்னா உயிரெலாம்; வெருவல், அன்னை!
ஆய்ந்தவை உள்ளபோதே, அவர்உளர்; அறமும் உண்டால்" (8779)

(இரவி-சூரியன்; தெய்வம்-ஊழ்/தருமதேவதை; விரிஞ்சன்-பிரமன்; வீய்தல்-அழிதல்/இறத்தல்; முன்னா-முதலாகவுள்ள; வெருவுதல்-அஞ்சு தல்; திரிதல்-சஞ்சரித்தல்; ஓய்தல்-செயல்பாடழிதல்/இறந்துபோதல்)

''தாயே! இராமபிரான் செயலற்று இறந்துவிட்டான் என்று சொன்னால், இந்தக் கீழ்ஏழு, மேல்ஏழு ஆகிய பதினான்கு உலகங்களும் இந்நேரம் தீய்ந்து கருகிப்போயிருக்க வேண்டும்; ஓய்வில்லாத சூரியன் இன்னும்

Koviloor Digital Library

வானில் சஞ்சரித்துக் கொண்டிருப்பானா? தெய்வம்தான் என்ன ஆகும்? தெய்வமே இல்லை என்று ஆகிவிடுமே? படைப்புக்கடவுளான பிரமன் முதலாக உள்ள எல்லா உயிர்களும் அழிந்துபோயிருக்க வேண்டும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது, உயிர்களும் பொருள்களும் உயிரோடு நிலைபெற்றிருத்தலால், இராமஇலக்குவர் களாகிய அவர்களும் உயிருடன்தான் இருக்கிறார்கள். தருமதேவதையும் அழியாது உயிருடன்தான் இருக்கிறாள் என்பது தெரியவில்லையா! எனவே நீ அஞ்சாதே'' என்று தேற்றுகிறாள் திரிசடை.

ஒன்றைக்கூறி அதன்மூலம் கூறப்படாத மற்றொன்றைப் புரியவைப்பது அருத்தாபத்தி எனப்படும். அவ்வாறு சூரியனும், பிரமன் முதலான உலக உயிரினங்களும், தெய்வங்களும், தருமதேவதையும் அழியாது உயிருடன் சஞ்சரிப்பதனால், நீ இறந்துபட்டதாகக் கருதுகிற இராமபிரானும் இலக்குவனும் உயிருடன்தான் இருக்கிறார்கள் என்பதைப் பெறவைக்கிறாள் திரிசடை என்பதாம். வீடணன் போலவே வீடணனின் மகள் திரிசடையும் இராமபிரானின் தெய்வத்தன்மையை அறிந்திருக்கிறாள் என்பது பெறப்படுகிறது.

27. "மாருதிக்கு இல்லை அன்றே; மங்கை நின் வரத்தினாலே
ஆருயிர் நீங்கல்; நின்பால் கற்புக்கும் அழிவுண்டாமோ?
சீரியது அன்று இது ஒன்றும்; திசைமுகன் படையின் செய்கை
பேரும் இப்பொழுதே; தேவர் எண்ணமும் பிழைப்பது உண்டோ?" (8780)

(சீரியது-சிறப்பானது; திசைமுகன்படை-பிரமாத்திரம்; பேரும்-நீங்கும்; பிழைத்தல்-தவறுதல்)

''மங்கை சீதாதேவி! நீ அளித்த வரத்தின்படி அனுமனுக்கு மரணம் என்பது ஒருபோதும் நிகழாது. அவன் சிரஞ்சீவித்தன்மை பெற்றவன்; அவன் உயிரிழந்தான் என்றால் உனது கற்புக்கும் களங்கம் ஏற்படுமே? எனவே அவ்வாறு கருதுவது சிறப்பான எண்ணம் அன்று. நான்முகன் படையாகிய பிரமாத்திரம் இப்பொழுதே நீங்கிவிடும்; தேவர்கள் எண்ணுவது ஒருபோதும் தவறாகப்போகாது'' என்று அறிவுறுத்துகிறாள் திரிசடை.

'மங்கை நின்வரம்' என்பது சுந்தரகாண்டத்தில் சீதாதேவி அனுமனுக்கு அருளிய சிரஞ்சீவித்தன்மையைக் குறிக்கும். ''யான் மருவிலா மனத்தேன் என்னின், ஊழியோர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்ஏழும் வீவுற்ற ஞான்றும், இன்றென இருத்தி'' என்றாள் என்பது சீதாதேவியின் கூற்று. ''நின்பால் கற்புக்கும் அழிவு உண்டாமே'' என்பதும் மேற்கோள் பாடலில் காட்டப்பெற்றிருக்கும் ''யான் மருவிலா மனத்தேன் என்னில்'' என்பதை ''யான் கற்பதனில் தூயேன் எனில் தொழுகின்றேன் எரியே! அவனைச் சுடல்'' என்பதையும் அடியொற்றியது என்க. முன்பாடலில்

Koviloor Digital Library

இராமஇலக்குவர்க்கு மரணம் இல்லை என்று தக்ககாரணம்காட்டி நிறுவிய திரிசடை, இப்பாடலில் அனுமனுக்கும் மரணம் இல்லை என்பதை சீதாதேவியின் கூற்றையே கூறி நிறுவுகிறாள் என்பதாம். சீதாதேவியைத் தவிர அனுமனுக்கு மரணம் இல்லாப் பெருவாழ்வு இந்திரன், சூரியன், வருணன், இயமன், குபேரன், சிவபெருமான், பிரமன், விசுவகருமன் முதலிய எல்லோராலும் வரமாகத் தரப்பட்டிருக்கிறது என்பதை உத்தரகாண்டம் அனுமப்படலத்தின் மூலம் அறியலாம். ''வேலைவிரிஞ்சன் வீயினும் வீயா மிகைநாளிர்'' என்பது சாம்பவன் கூற்று. ''ஒன்றும் இன்னல்நோய் உறுதியாது நீ என்றும் வாழ்தியாய் இனிது என் ஏவலால்'' என்பது இராமபிரான் அனுமனுக்குத் தந்த வரம் என்பதையும் இங்கு நினைவுகூர்க. எனவே அனுமனுக்கு மரணம் இல்லை; அவன் இறக்கவில்லை என்பதையும் மூர்ச்சையுற்றிருக்கிறான் என்பதையும் உறுதிபட நிறுவுகிறாள் திரிசடை என்பதாம்.

28. "தேவரைக் கண்டேன்; பைம்பொன் செங்கரம் சிரத்தில் சேர்த்தி,
மூவரைக் கண்டாலென்ன, இருவரை முறையின் நோக்கி,
ஆவலிப்பு எய்துகின்றார்; அயர்த்திலர்; அஞ்சல், அன்னை!
"கூவலில் புக்கு வேலை கோட்படும்" என்று கொள்ளேல்" (8781)

(மூவர்-மும்மூர்த்திகள்; ஆவலிப்பு-பெருமிதம்/செருக்கு; அயர்தல்-துன்புறுதல்/வருந்துதல்; வேலை-கடல்; கூவம்-கிணறு; கோட்படுதல்-கொள்ளப்படுதல்)

''அன்னையே! நான் இப்போது தேவர்கள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைக் கண்டேன்; அவர்கள் மும்மூர்த்திகளக் கண்டதுபோல, இருவரான இராமஇலக்குவரை பணிவுடன் நோக்கி பசுமையான பொன்னினால் செய்யப்பட்ட அணிகலன்கள் அணியப்பெற்ற தம் சிவந்த கைகளைத் தலைமேல் கூப்பிக்கொண்டு நியதிப்படி அவர்களை வணங்கிக்கொண்டு பெருமிதத்துடன் விண்ணுலகில் மகிழ்வுடன் இருக்கிறார்கள். சிறிதும் கவலைப்படவில்லை; எனவே தாயே! நீ அஞ்சுவதற்குத் தேவையில்லை; கடல் கிணற்றுக்குள் புகுந்து, சிறு கிணறு பெருங்கடலை அடக்கிவிடும் என்று தவறான எண்ணம் கொள்ளாதே'' என்கிறாள் திரிசடை.

விசாலமுடைய கடலுக்கு இராமஇலக்குவரும், குறுகிய கிணற்றுக்கு அரக்கர்களும் உவமை. முன்பும் இந்த உவமை ''கூவத்தின் சிறு புனலைக் கடல் அயிர்த்தது ஒவ்வாதோ?'' என்று இராமபிரான் கூற்றாகக் கூறியதை நினைவுகூர்க. ''கிணற்றுநீர் வெள்ளத்தைக் கொள்ளாது'' என்பது ஒரு பழமொழி.

Koviloor Digital Library

29. "மங்கலம் நீங்கினாரை, ஆர்உயிர் வாங்கினாரை,
நங்கை! இக்கடவுள்மானம் தாங்குறும் நவையிற்று அன்றால்;
இங்கு, இவை அளவையாக, இடர்க்கடல் கடத்தி" என்றாள்;
சங்கையள் ஆய தையல், சிறிது உயிர் தரிப்பதானாள். (8782)

(கடவுள்-தெய்வத்தன்மை; மானம்-விமானம்; மங்கலம்-மங்கல நாண்; நவை-குற்றம்; சங்கை-ஐயம்/சந்தேகம்; தரித்தல்-தாங்கியிருத்தல்; தையல்-பெண்/சீதாதேவி; கடத்தல்-கரையேறுதல்)

''நங்கையரில் சிறந்தவளே! சீதாதேவி! இந்தத் தெய்வத்தன்மை பொருந்திய புட்பகவிமானம், மங்கலநாண் நீங்கப்பெற்ற கைம்பெண்டிரையும், அருமையான உயிர்நீங்கப் பெற்று பிணமானவரையும் தாங்கிக்கொள்ளும் குற்றம் உடையதன்று, அவர்களை இவ்விமானம் தாங்காது. எனவே நான் முன்னர்க் கூறியவற்றையே ஒரு அளவுகோலாகக் கொண்டு இராமன் இறக்கவில்லை என்பதைத் தெளிந்து உன்னுடைய துன்பக்கடலில் இருந்து கடந்து கரை ஏறுவாயாக!'' என்று கூறி முடித்தாள் திரிசடை; தன் கணவனும், கொழுந்தனும், அனுமனும் மற்ற வானரச்சேனைகளும் உயிரிழந்துவிட்டனரோ என்று சந்தேகம் கொண்டிருந்த சீதாதேவி, இப்பொழுது திரிசடை காட்சிஅளவையாலும், வழிஅளவையாலும், அருத்தாபத்தியாலும் நிறுவினவற்றால் தன் சந்தேகம் தெளியப்பெற்று தன் உயிர் உடலில் தங்குபவளானாள்.

மங்கலநாண் நீங்கினாரைத் தாங்காது தள்ளிவிடும் இயல்புடையது இத்தெய்வத்தன்மை பொருந்திய விமானம் என்பதால், இராமபிரான் இறக்கவில்லை என்பதைத் தெளியலாம் என்று நிறுவுகிறாள் திரிசடை என்பதாம்.

30. சீதாதேவியின் மறுமொழி

"அன்னை! நீ உரைத்தது ஒன்றும் அழிந்திலது; ஆதலானே
உன்னையே தெய்வமாக் கொண்டு, இத்தனை காலம் உய்ந்தேன்;
இன்னம், இவ்விரவு முற்றும் இருக்கின்றேன்; இறத்தல் என்பால்
முன்னமே முடிந்ததன்றே?" என்றனள், முளரி நீத்தாள். (8783)

(முளரி-தாமரைமலர்; அழிதல்-பழுதுபடுதல்/தவறுதல்; உய்தல்-பிழைத்திருத்தல்)

தன்இருப்பிடமாகியதாமரைமலரைவிட்டுநீங்கி, மிதிலையில்சனகன் மகளாக அவதாரம் எடுத்துவந்த திருமகளாகிய சீதாதேவி திரிசடையை நோக்கி, ''என்அன்னைபோன்றவளே! இதுவரையிலும்நீகூறியது எதுவும் தவறாகப் போனதில்லை; பழுதுபட்டதில்லை; எனவே உன்னையே என் வழிபடு தெய்வமாகக் கொண்டுதான் இந்த இலங்கையில் இவ்வளவு நாளும் உயிரைப்போக்கிக் கொள்ளாமல் உயிர்தாங்கிக் கொண்டிருந்தேன்;

Koviloor Digital Library

இன்னும் உன் சொல்லையே நம்பி இன்று இரவு முழுவதும் நான் இங்குதான் உயிருடன்தான் இருக்கப்போகிறேன்'' இறந்துபோவது என்பது நான் முன்னரே முடிவு செய்யப்பட்ட ஒன்றுதானே!'' என்று கூறுகிறாள்.

எப்போது அவள் தற்கொலை செய்துகொள்ள மாதவிப் பொதும்பர் வந்தடைந்தாளோ, அப்போதே அவள் தன் உயிரைத் தானே போக்கிக்கொள்ளுதல் என்ற முடிவிற்கு வந்துவிட்டவள்தான். அதைத்தான் இங்கே ''இறத்தல் என்பால் முன்னரே முடிந்தது அன்றே'' என்று குறிப்பிடுகின்றாள் என்பதாம். முன்பு திரிசடை ஒரு தூதுவன் வருவான் என்றும் ஒரு வண்டுவந்து காதோரம் ஊதிப்போனது என்று கூறினாள். அவ்வாறே அனுமன் தூதுவனாக வந்து சீதாதேவியத் தற்கொலையினின்றும் காப்பாற்றினான். எனவே ''நீ உரைத்தது ஒன்றும் அழிந்திலது'' என்றாள் என்க. அவ்வப்பொழுது இலங்கையில் சீதாதேவிக்குத் தோன்றாத் துணையாக அமைந்து ஆறுதல் கூறியும் தெளிவுறுத்தியும் அவள் உயிர் நீக்கிக்கொள்ளாவண்ணம் உறுதுணையாய் இருந்து வந்தவள் திரிசடை. எனவே அவளை ''உன்னையே தெய்வமாகக் கொண்டு இத்தனை காலம் உய்ந்தேன்'' என்றாள் என்க. எப்பொழுது இராவணன் என் கணவரிடமிருந்து என்னைப் பிரித்து அபகரித்துக் கொண்டு வந்து அசோகவனத்தில் சிறை வைத்தானோ அப்பொழுதே நான் உயிர் துறந்திருக்கவேண்டும். அப்பொழுதிருந்தே இந்த வாய்ப்பை எதிர்நோக்கியிருந்தேன். முன்பு அனுமன் இராமநாமம் சொல்லி என்னைத் தடுத்துவிட்டான்; இப்பொழுது நீ தடுத்துவிட்டாய் என்று தன்நிலை விளக்கம் தருகிறாள் சீதாதேவி. எனவே இப்பொழுது நான் நடைப்பிணமாகத்தான் உலாவருகிறேன் என்கிறாள் என்பது கருத்து. 'முளரி நீத்தாள்' என்பது சீதாதேவி திருமகளின் அவதாரம் என்பதைக் குறித்தது.

31. "நாணெலாம் துறந்தேன் இல்லின் நன்மையின் நல்லார்க்கு ஏய்ந்த;
பூணெலாம் ஆகிநின்ற என்தன் பொருசிலை மேகம் தன்னைக்
காணலாம் என்னும் ஆசை தடுக்க, என் ஆவி காத்தேன்;
ஏணிலா உடலம் நீக்கல் எளிது எனக்கு" எனவும் சொன்னாள். (8784)

(இல்-இல்லறம்; நல்லார்-கற்புடைப்பெண்டிர்; ஏய்ந்த-பொருந்து கின்ற; பூண்-அணிகலன்கள்; பொருதல்-போர்செய்தல்; சிலை-வில்; ஆவி-உயிர்; ஏண்-வலிமை/பெருமை)

சீதாதேவி திரிசடையை நோக்கி ''இல்லறத்தில் ஈடுபட்டிருக்கின்ற கற்புடைப் பெண்டிர்க்கு உரியதான இன்றியமையாத நாணம், மடம், பயிர்ப்பு, அச்சம் முதலான அணிகலன்கள் அனைத்தையும் துறந்து உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். ஏன் என்றால் போர் செய்தற்குரிய வில்லைக் கையிலேந்திய, மேகம் போன்று கரிய உடலை உடைய என்

Koviloor Digital Library

கணவன் இராமபிரான் இராவணனைக் கொன்று, வெற்றி மாலைசூடி வருவான், அவனைக் காணலாம் என்னும் பேராசை தடைசெய்ததால், நான் இதுகாறும் இவ்வுயிரைக் காப்பாற்றிக் கொண்டுவந்தேன், இல்லையென்றால் வலிமை குன்றியதும், பெருமை போனதுமான இந்த அற்பமானஉடலைநீக்கிக்கொள்வதுஎன்பதுஎனக்குமிகஎளிதானகாரியம் ஆகும்'' என்று கூறுகிறாள்.

இதே கருத்துப்பட முன்பும் சீதாதேவி இராவணனிடம் பேசியதையும் இங்கு நினைவுகூர்க. இதே கருத்தை நெய்தற்கலி பேசுவதைக் கேளுங்கள். ''கனவில் வந்த கானலம் சேர்ப்பன் நனவில் வருதலும் உண்டென, அனைவரை நின்றது என் அரும் பெறல் உயிரே'' என்பது நெய்தற்கலி-11. ''அச்சமும் நாணும், மடனும் முந்துறுத்த, நிச்சமும் பெண்பாற்குரிய வென்ப'' என்பது தொல்காப்பியம். ''நாணெலாம்'' என்பது நாணம் முதலிய நாற்குணங்களையும் உள்ளடக்கிக் கூறியது எனக்கொள்க.

32. புட்பகவிமானம் மீண்டும் அசோகவனம் செல்லுதல்

தய்யலை, இராமன் மேனி தைத்த வேல் தடங்கணாளை,
கய்களின் பற்றிக்கொண்டார், விமானத்தைக் கடாவுகின்றார்;
மெய்உயிர் உலகத்தாக, விதியையும் வலித்து, விண்மேல்
பொய்உடல் கொண்டு செல்லும் நமனுடைத் தூதர் போன்றார். (8785)

(தையல்-கட்டழகு; தைத்தல்-பாய்தல்; தடம்-பெரிய; கடாவுதல்-செலுத்துதல்; வலித்து-வற்புறுத்தி)

''போர்க்களத்தில் இறந்துகிடந்த இராமபிரான் மேனியின்மேல் வைத்தகண் வாங்காமல் வேல்படை போன்று பதித்திருந்த கூரிய பெரிய கண்களையுடைய, கட்டழகு மிகுந்த சீதாதேவியை, எங்கே மீண்டும் விமானத்திலிருந்து பாய்ந்து விடுவாளோ என்ற அச்சத்தால் அரக்கிமார்கள், சீதாதேவியின் கைகளை நன்கு பற்றிக்கொண்டு விமானத்தை அசோகவனத்தை நோக்கிச் செலுத்திக்கொண்டு போகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், இயமதூதர்கள் உடலை மண்ணுலகத்தில் விடுத்துவிட்டு உயிரைத் தம்மோடு எடுத்துச் செல்லுவதுதான் உலகவழக்கு. அதை மாற்றி அரக்கியர்கள் சீதாதேவியின் மெய் உயிராகிய இராமபிரானை மண்ணுலகத்தில் விட்டுவிட்டுப் பொய்யான உடலாகிய சீதாதேவியை இயமனுடைய தூதர்கள் விண்ணுலகத்திற்கு எடுத்துச் செல்வதுபோல இருக்கிறது'' என்கிறான் கவிஞன்.

''தையல்'' என்ற சொல் தய்யல் என்றும், கைகள் என்றசொல் கய்கள் என்றும் எதுகைநோக்கித் திரிந்தன. 'தய்யல்' என்ற சொல்லுக்குக் கட்டழகு என்பது நேர்பொருள். இங்கே கட்டழகுடைய சீதாதேவியைக் குறித்தது. இது கவிக்கூற்று.

சீதை களம் காண் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

23. மருத்துமலைப் படலம் [116 பாடல்கள்]

இந்திரசித்து செலுத்திய பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்டு கிடந்த இலக்குவன், அனுமன், வானரசேனை முதலியோரை வீடணனும் சாம்பவனும் கண்டு, அனுமன் உடலிலிருந்த அம்புகளை அகற்றி அவனை உணர்வு தெளியவைத்து மருத்துமலைக்குச் சென்று சஞ்சீவிகரணி போன்ற மருத்துவ மூலிகைகளைக் கொண்டுவரக் கேட்டுக் கொண்டதும், அனுமன் விரைந்து சென்று மருத்து மலையையே கொணர்ந்து அனைவரையும் மீண்டும் உயிர்பெற்று எழச்செய்ததும், பின்னர் அம்மருத்து மலையை அது இருந்த இடத்திலேயே கொண்டுபோய் வைத்துவிடுவதும் ஆகிய நிகழ்ச்சிகளைக் கூறுவதால் இது மருத்துமலைப் படலம் எனக் குறிக்கப்படலாயிற்று. இது 116 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''மருத்துமாமலைப் படலம்'' எனவும், ''மருத்துப் படலம்'' எனவும், ''மருத்துவப் படலம்'' எனவும், ''மருந்துப் படலம்'' எனவும் தலைப்பிடப்பட்டிருக்கிறது.

இப்படலத்துள், உணவு கொண்டு வரச்சென்ற வீடணன் போர்க்களம் வந்து சேர்ந்து மயங்குதல்; இராமபிரானுக்கு எந்த ஊறும் விளையவில்லை என மனம் தேறுதல்; இந்தத் துயரைத் தீர்க்கும்வழி பற்றிச் சிந்தித்தல்; போர்க்களத்தில் யாரும் இறந்துபடாமல் உயிருடன் இருக்கின்றனரா என்பதைத் துருவித் தேடுதல்; அனுமன் சற்று உணர்வுடன் இருப்பது கண்டு, அவன் மேனியில் தைத்திருந்த அம்புகளை அகற்றுதல்; அனுமன் இராமபிரான் நிலை பற்றி வினவுதல்; இருவரும் சாம்பவனைத் தேடிச் சென்று கண்டுபிடித்தல்; சாம்பவனும் சற்றுதேறி, நிலைமையை உணர்ந்து, அனுமனை நோக்கி, இமயமலைக்கு அப்பாலுள்ள மலைகளில் கிடைக்கும் அபூர்வ சஞ்சீவகரணி முதலிய மருத்துவ மூலிகைகளைக் கொண்டுவந்தால் எல்லோரையும் உயிர்ப்பித்துவிடலாம் என்று உறுதியாகக் கூறுதல்; அனுமனை அவ்வாறே செய்யும்படி ஏவுதல்; அவனும் பேருருவம் கொண்டு எழுந்து புறப்படுதல்;

அப்பொழுது ஏற்பட்ட நிகழ்வுகள்; அவன் விரைவைக் கண்டு தேவர்கள் திகைத்து நிற்றல்; அனுமன் கயிலாயமலையை அடைந்து சிவபெருமானையும் உமையம்மையையும் கண்டு வணங்குதல்; ஏமகூடத்தையும் தாண்டி மேருமலையை அடைதல்; பிரமன் முதலியவர்களைப் பிரமலோகத்தில் கண்டு வணங்குதல்; உத்தரகுரு

Koviloor Digital Library

நாட்டையும் தாண்டி நீலமலையை அடைதல்; அங்கேயிருந்த சஞ்சீவிமலையைப் பெயர்த்து எடுத்து விரைந்து வருதல்; இதற்கு இடையில் வீடணனும் சாம்பவனும் இராமபிரானைக் காணுதல்; இராமபிரான் என்ன நடந்தது என்று வினவுதல்; இச்சமயத்தில் அனுமன் சஞ்சீவிமலையைக் கொண்டுவருதல்; அந்த மலையின் மூலிகைக் காற்றுப் பட்டவுடனே பிரம்மாத்திரத்தால் கட்டுண்ட அனைவரும் உயிர்பெற்றுப் புத்துணர்ச்சியுடன் எழுந்துவருதல்; இலக்குவனை இராமபிரான் நெஞ்சாரத் தழுவிக்கொள்ளுதல்; பிரமாத்திரம் அகன்றுபோதல்; இராமபிரான் அனுமனை உளமாரப் புகழ்ந்து பாராட்டுதல்; அனுமன் சஞ்சீவிமலையை எடுத்துக்கொண்டு, அது இருந்த இடத்திலேயே வைப்பதற்குச் செல்லுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. வீடணன் போர்க்களம் வந்து சேர்தல்

போயினள் தையல் இப்பால்; 'புரிக' எனப் புலவர் கோமான்
ஏயின கருமம் நோக்கி, எய்திய இலங்கை வேந்தன்
மேயின உணவு கொண்டு, மீண்டு, அவை உறையுள் விட்ட
ஆயின ஆக்கி, தான்வந்து, அமர்ப்பெரும் களத்தன் ஆனான். (8786)

(தையல்-பெண்/சீதாதேவி; புலவர்-தேவர்கள்; கோமான்-தலைவன்/ இராமபிரான்; கருமம்-பணி; உறையுள்-பாசறை/பாடிவீடு; புரிக-செய்க; ஏவுதல்-கட்டளையிடுதல்)

அவ்வாறு புட்பகவிமானத்தில் ஏறிச் சீதாதேவி இப்போது அசோகவனத்திற்குச் செல்லலுற்றாள். இந்தப்பக்கம், முன்பு தேவர் தலைவனாகிய இராமபிரானால் வானரச்சேனைக்கு விரைந்து உணவு கொண்டுவருமாறு கட்டளையிடப்பட்ட, இலங்கை அரசனான வீடணன், உண்பதற்குப் பொருந்திய நல்ல உணவுகளைக் கொண்டுவந்து அவற்றை நல்லமுறையில் பாசறையில் சேர்த்துவிட்டுத் தான் மட்டும் பெரிய போர்க்களத்திற்கு வந்துசேர்ந்தான்.

வீடணன் தன்னைச் சரணாகதி அடைந்தபோதே இலங்கையின் அரசச்செல்வத்தையும் அரசபதவியையும் அவனுக்கு அருளினான் இராமபிரான் என்பது முன்பே நாம் கண்டு வந்தது. அந்த நிகழ்ச்சியிலிருந்து கவிஞன் வீடணனைக் குறிப்பிடும்பொழுதெல்லாம் 'இலங்கைவேந்தன்' என்றே குறிப்பிட்டு வருவதையும் நுனித்து உணர்க. ''உறையுள் விட்ட ஆயின ஆக்கி'' என்பது பாசறையுள் நன்கு வைக்கப்பட்டனவாகச் செய்து என்ற பொருளைத்தரும்.

Koviloor Digital Library

2. நோக்கினான், கண்டான், பண்டு, இவ்வுலகினைப் படைக்க நோற்றான்
வாக்கினால் மாண்டார் என்ன, வானரவீரர் முற்றும்,
தாக்கினார் எல்லாம் பட்ட தன்மையை; விடத்தைத் தானே
தேக்கினான் என்ன நின்று, தியங்கினான், உணர்வு தீர்ந்தான். (8787)

(பண்டு-முன்பு/ஆதியில்; நோற்றல்-பேறுபெறுதல்/தவஞ்செய்தல்; வாக்கு-சாபச்சொல்; தேக்குதல்-நிரம்ப அருந்துதல்; தியங்குதல்-மயங்குதல்)

போர்க்களம் வந்துசேர்ந்த வீடணன், அங்கே முன்பு இவ்வுலகினைப் படைப்பதற்காகத் தவம்செய்து பேறு பெற்றவனான பிரமதேவனின் சாபச்சொல்லால் வீழ்ந்து கிடப்பதுபோல், இந்திரசித்தின் பிரமாத்திரத்தின் தாக்குதலால் வானரவீரர்கள் அனைவரும் இறந்து வீழ்ந்துகிடக்கும் தன்மையைத் தனது கண்களால் உற்றுநோக்கினான். ஏதோ தானே கொடிய நஞ்சை நிரம்பப்பருகியதுபோலத் திகைத்துநின்று, அறிவுநீங்கி, மயக்கமுற்றான்.

''நோக்கினான், கண்டான்'' என்பது ஒரே பொருளைத்தரும் இரு சொற்கள்போலத் தோன்றும். எனினும் காணுதலுக்கும், நோக்குதலுக்கும் பொருள் வேற்றுமை உண்டு. தன் கண்களால் பார்த்தான் என்பதைக் கண்டான் என்ற சொல்லாலும், அதன் உள் நோக்கத்தைக் கூர்ந்துபார்த்தான் என்பதை 'நோக்கினான்' என்ற சொல்லாலும் வேறுபடுத்திக் கூறினார் என்க. 'இவ்வுலகினைப் படைக்க நோற்றான்' என்பது இந்த உலகத்தை சிருஷ்டிக்க பிரமதேவன் எவ்வளவு தவம்செய்து இருப்பான் என்றும் இதைப் படைப்பதற்கு எவ்வளவு பாக்கியம் பண்ணியிருப்பான் என்றும் இரு பொருள்களையும் தரும். 'வாக்கு' என்பது இங்கே வசைச்சொல்லையும் சாபச்சொல்லையும் குறிக்கும். 'தாக்கினார்' என்ற தன்வினைக்குத் தாக்கப்பட்டார் என்ற பிறவினைப் பொருள்கொள்ள வேண்டும். 'தேக்குதல்' என்றசொல் நிரம்பப் பருகுதலைக் குறிக்கும். நஞ்சு உட்கொண்டவர்களுக்கு முதலில் அறிவுகலங்கும்; பின்னர் உணர்வு நீங்கும் என்பது பெறப்படுகிறது.

3. விளைந்தவாறு உணர்கிலாதான், ஏங்கினான், வெதும்பினான்; மெய்
உளைந்து உளைந்து உயிர்த்தான், 'ஆவிஉண்டு; இலை; என்ன ஓய்ந்தான்;
வளைந்த பேய்க்கணமும் நாயும் நரிகளும் இரிய, வந்தான்;
இளங்கிளையோடும் சாய்ந்த இராமனை இடையில் கண்டான். (8788)

(விளைந்தது-நிகழ்ந்தது; ஆறு-தன்மை/வகை; உளைதல்-வருந்துதல்; உயிர்த்தல்-பெருமூச்சுவிடுதல்; ஆவி-உயிர்; வளைதல்-சூழ்ந்துகொள்ளுதல்; கணம்-கூட்டம்; இரிதல்-அஞ்சிஓடுதல்; இளங்கிளை-இளையதம்பி/இலக்குவன்; ஓய்தல்-மூர்ச்சையாதல்; சாய்தல்-தரையில் கிடத்தல்)

Koviloor Digital Library

அங்கே போர்க்களத்தில் என்ன நிகழ்ந்தது என்பதை அறியாதவனான வீடணன், அங்கிருந்த சூழ்நிலையைக் கண்டு ஏக்கமுற்று, மனம்வெதும்பி, உடம்பு வருந்தித் துன்புற்றுப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான்; அவனுக்கு உயிர் இருக்கிறதோ இல்லையோ என்று கண்டோர் கருதுமாறு ஒருவித மயக்கநிலையை அடைந்தான்; பின்னர் சற்றுதேறி, விரைவாக நடந்து வந்தான்; அவன் உயிரோடு நடந்துவரும் வேகத்தைப் பார்த்துப் போர்க்களத்தில் பிணத்தைச் சுற்றிச்சூழ்ந்திருந்த பேய்களின் கூட்டமும், நாய், நரி முதலியவற்றின் கூட்டமும் அஞ்சி ஓடலாயின. அப்போது அவன், இராமபிரான் தன் தம்பி இலக்குவனோடும் தரையில் சாய்ந்து கிடந்ததைக் கண்ணுற்றான்.

'ஆவி உண்டு, இலை என்ன ஓய்ந்தான்' என்ற சொற்றொடர், ''நிலையிற் கலங்கியது; யாக்கை அகத்ததோ, புறத்ததோ அறியேன்' என்ற வில்லிபாரதச் சொற்றொடரை நினைவுபடுத்துவதை நினைக.

4. "என்பு என்பது, யாக்கை என்பது, உயிர் என்பது, இவைகள் எல்லாம்,
பின்பு என்ப அல்ல; என்றும் தம்முடை நிலையின் பேரா;
முன்பு என்றும் உளது என்றாலும், முழுவதும் தெரிந்தவாற்றால்,
அன்பு என்பது ஒன்றின் தன்மை, அமரரும் அறிந்தது அன்றே! (8789)

(என்பு-எலும்பு/உடம்பு; யாக்கை-உடம்பு; பின்பு-தொடர்ச்சி; ஆறு-தன்மை)

''என்பு எனப்படும் ஏழு தாதுக்களில் ஒன்றாகிய எலும்பினால் ஆக்கப்பட்ட இந்த உடல் என்பதும், அவ்வுடலைத் தாங்கியிருக்கின்ற உயிர் என்பதும் இவைகள் எல்லாம் பின்பு தோன்றின என்பது பொருந்தாது. இவை என்றும் தான் உள்ள நிலையினின்றும் மாறுபடாது. இத்தகைய குணங்கள் உடம்பு தோன்றுவதற்கு முன்பே இருந்திருக்கிறது என்று கற்றறிந்த அறிஞர்கள் கூறினாலும், இப்போது இராமஇலக்குவர் நிலைகண்டு தேம்பி அழும் வீடணனின் நிலையை முற்றமுழுக்க அறிந்த பிறகுதான், அன்பு என்ற ஒருபொருளின் தன்மையையே, தேவர்களும் அறிந்திருப்பார்கள்'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. எளிதில் பொருள் புரிந்துகொள்ள முடியாத கம்பசூத்திரப் பாடல். வள்ளுவரின் குறள்கொண்டு நோக்கினால் ஓரளவு புரிந்துகொள்ள முடியும். ''அன்போடு இயைந்த வழக்கு என்ப, ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு'' என்பது குறள்-73. உலகில் மனிதன் எலும்போடும் உயிரோடும் உடலோடும் தோன்றுவதற்கு முன்பே, ''நட்பும், தயையும், கொடையும் பிறவிக்குணமாய்'' அமைந்துபோகின்றன. இங்கே இறந்தும் மூர்ச்சித்தும் கிடக்கின்ற இலக்குவன், இராமபிரான் முதலியவர்களைக் கண்ட வீடணன் அழுது அரற்றுகின்ற தன்மையில் அவனுக்கு இராமஇலக்குவர்பால் இருந்த

Koviloor Digital Library

அன்பின் தன்மை வெளிப்படுகிறது. அதனை இப்போதுதான் தேவர்கள் உணரத் தொடங்குவார்கள் என்கிறான் கவிஞன். காரணம் தேவலோகத்தில் தேவர்கள் இல்லறத்தில் உண்டாகும் இன்பதுன்பங்களைச் சேர்த்து அனுபவிக்காமல் இன்பத்தை மட்டுமே நுகர்பவர்கள் ஆவார்கள். எனவே துன்பத்தின் தன்மை எப்படிப்பட்டது என்பது அவர்கள் அறியாத ஒன்று. இப்போது இராமஇலக்குவர் வீழ்ச்சியில் வீடணன் அழுதுபுலம்பும் தன்மையைக் கண்டுதான் தேவர்களுக்கும் அன்பின்தன்மையும், துன்பத்தின் தன்மையும் புரிந்திருக்கும் என்பது கவிஞனின் கருத்து.

5. இராமபிரானின் மேனியில் வடுக்கள் இல்லை என்பதைக் கண்டு துயர்தணிதல்

''ஆயினும் இவருக்கு இல்லை அழிவு'' எனும் அதனால், ஆவி
போயினது இல்லை; வாயால் புலம்பலன் பொருமி; பொங்கித்
தீயினும் எரியும் நெஞ்சன் வெருவலால், தெரிய நோக்கி,
''நாயகன் மேனிக்கு இல்லை வடு'' என, நடுக்கம் தீர்ந்தான். (8790)

(ஆவி-உயிர்; வெருவல்-அஞ்சுதல்; தெரிய-கூர்ந்து/தெளிவாக; தீர்தல்-நீங்குதல்)

இவ்வாறு வீடணன் துன்பப்பட்டாலும், ''இராம இலக்குவர்களாகிய இவர்களுக்கு ஒருபோதும் இறப்பு என்பதே இல்லை'' என்பதை நன்கு உணர்ந்து நம்பிக்கை கொண்டவனான வீடணன், சாவிற்சாதல் என்ற கொள்கைப்படி, தன் உயிர்நீங்கினானில்லை; எனவே வாய்விட்டு அரற்றிப் புலம்பவும் இல்லை; என்றும் நெருப்பைவிடக் கொழுந்துவிட்டு எரியும் நெஞ்சத்தை உடையவனாய்ச் சிறிது சந்தேகமும் அச்சமும் கொண்டு, இராமபிரானது மேனியைச் சற்று உற்று நோக்கினான். பின்னர் ''தலைவனான இராமபிரான் உடலுக்கு அம்பினால் எந்தவிதமான தீங்கும் உண்டாகவில்லை'' என்பதை நன்கு தெளிந்துகொண்டு, தன் உடலிலும் உள்ளத்திலும் முன்பு கொண்டிருந்த நடுக்கம் நீங்கப்பெற்றான்.

''தீயினும் எரியும் நெஞ்சன்'' என்பது அருமையான் ஒரு சொற்றொடர். புறத்தீயைக் காட்டிலும், அகத்தில் உண்டான தீயின்தன்மை மிகுந்திருந்தது என்பது புலப்படுத்தப்பட்டது எனக்கொள்க. பொருமுதல் என்பது உள்ளத்திற்குள்ளேயே படும் துயரத்தைக் குறிக்கும். இராமபிரான் உயிர் நீங்கியிருந்தால், இவன் உயிரும் நீங்கியிருக்கும் என்பது அருத்தாபத்தி. இவ்வாறே இராமபிரான் மேனியில் அம்பு தைக்கவில்லை என்பதை, முன்பே திரிசடை சீதாதேவிக்குக் காட்டியமையையும் இங்கு நினைவு கூர்க. ''ஆழியான் ஆக்கை தன்னில், அம்பொன்றும் அறுக்கிலாமை, ஏழை நீ காண்டியன்றே'' என்பது திரிசடை கூற்று.

Koviloor Digital Library

6. வீடணன் இத்துயர் தீரும்வழி பற்றி எண்ணுதல்

அந்தணன் படையால் வந்தது என்பதும், ஆற்றல் சான்ற
இந்திரசித்தே எய்தான் என்பதும், இளவற்கு ஆக,
நொந்தனன் இராமன் என்னும் நுண்மையை, நொய்தின் நோக்கி,
சிந்தையின் எண்ணி எண்ணி, தீர்வது ஓர் உபாயம் தேர்வான். (8791)

(அந்தணன்-பிரமதேவன்; அந்தணன்படை-பிரமாஸ்திரம்; இளவல்-இலக்குவன்; நுண்மை-நுட்பம்; நொய்தின்-விரைவில்; நோக்குதல்-இங்கே அறிந்துகொள்ளுதல்; உபாயம்-வழி; தேர்தல்-ஆராய்தல்/சிந்தித்தல்)

இவ்வாறு துன்புற்று நின்ற வீடணன், இராமஇலக்குவர்க்கு இத்தகைய துன்பம் நேர்வதற்குக் காரணம் பிரமாத்திரமே என்பதையும், அதனைச் செலுத்தியவன் ஆற்றல்மிக்க இந்திரசித்தே என்பதையும், இராமபிரான் மயங்கிக் கிடப்பது, தன்தம்பி இலக்குவன் மாண்டுவிட்டானோ என்ற அச்சத்தினால்தான் என்ற நுட்பத்தையும் ஊகித்து, அனுமான அளவையால் விரைந்து தெரிந்துகொண்டான். இப்போது இத்துயரத்தைப் போக்குவது எவ்வாறு என்பதை ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினான்.

'அந்தணன்' என்ற பொதுப்பெயர் இங்கு பிரமதேவனைக் குறித்து நின்றது. இங்கு இந்திரசித்தனைத் தவிர வேறுயாராலும் பிரமாத்திரத்தைப் பயன்படுத்த முடியாது என்பதை நன்குணர்ந்த வீடணன், அதை ஊகித்தறிந்ததோடு மட்டுமல்லாமல் இந்திரசித்தனை ''ஆற்றல்சான்ற இந்திரசித்து'' எனப் புகழ்வதையும் நோக்குக. இராமபிரான் மேனியில் எந்த அம்பும் தாக்காமல் இருக்கும்போது, அவன் ஏன் இறந்தவன்போல் வீழ்ந்து கிடக்கிறான் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்த வீடணன், தன்தம்பிக்கு உண்டான துயரத்தைக் கருதித்தான் இவனும் துயருற்றுச் சாய்ந்திருக்கவேண்டும் என்பதை நுண்மான் நுழைபுலத்தால் ஊகித்து அறிந்து கொள்ளுகிறான் என்பதாம். ''எண்ணி எண்ணி'' என்ற அடுக்கு, பலமுறை ஆராய்ந்து சிந்திக்கலானான் என்பதை உணர்த்தும்.

7. "உள்ளுறு துன்பம் ஊன்ற, உற்றனன் உறக்கம் அன்றோ?
தெள்ளிதின் உணர்ந்த பின்னை, சிந்தனை தெரிவென் அன்றே?
வள்ளலோ தம்பி மாள வாழ்கிலன்; மாய வாழ்க்கைக்
கள்ளனோ வென்றான்?" என்றான் மழை எனக் கலுழும் கண்ணான்.
(8792)

(ஊன்றுதல்-பதிந்திருத்தல்/நிலைத்திருத்தல்; உறக்கம்-மூர்ச்சை; மாள்தல்-இறந்துபடுதல்; கள்ளன்-வஞ்சகன்/இராவணன்; கலுழ்தல்-உகுத்தல்/சொரிதல்; சிந்தனை-எண்ணம்)

Koviloor Digital Library

''இலக்குவன் இறந்துபட்ட துன்பம் தன் உள்ளத்தில் ஊன்றிப் பதிந்திருப்பதால், இப்போது சற்று மூர்ச்சையாகித்தான் இருக்கிறான்; அம்மயக்கத்தினின்றும் தேறி, தெளிவுபெற்று எழுந்ததன்பின் அவன் உள்ளக்கருத்து என்ன என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம். ஆனால் ஒன்று மட்டும் உறுதி; தன் தம்பி இலக்குவன் மாண்டுவிட்டான் என்றால், இராமபிரான் சற்றும் உயிர் தரித்திருக்கமாட்டான்; அவ்வாறு உயிர் தரித்திருந்தால் வஞ்சக எண்ணமுடைய இராக்கதர்களான இராவணனும் இந்திரசித்தும் அல்லவோ வெற்றி பெற்றவர்கள் ஆகிவிடுவர்?'' என்று தன் மனத்துள் கருதிக்கொண்டு, மழைபோலத் தாரைதாரையாகக் கண்ணீர் சொரிந்துகொண்டு நின்றிருந்தான் வீடணன்.

''வள்ளலோ தம்பி மாள, வாழ்கிலன்; மாய வாழ்க்கைக் கள்வரோ வென்றான்'' என்பதில் ஒரு அரியபொருள் அடங்கியுள்ளது. கள்ள நெஞ்சனாகிய இர்ாவணன் தன் மூத்த தம்பியாகிய வீடணன் தன்னைவிட்டுப் பிரிந்துசென்ற போதும் சற்றும் வருந்தாதவனாகி அவனைத் துரத்தியடித்தான். தனது இளையதம்பியான கும்பகருணன் போரில் மடிந்துபோனபின்பும் தான் உயிர்துறவாது மீண்டும் போர்செய்து, சீதாதேவியை அடைவதிலேயே குறியாய் இருந்தான். தன் இரு தம்பியரும் தன்னை விட்டுப் பிரிந்து போனபோதும் உயிர் துறவாதவன் இராவணன். ஆனால் வள்ளல் இராமபிரானோ அதற்கு மாறாக, 'தம்பி மாள வாழ்கிலன்' என்ற முடிவுக்கு வருகிறான் வீடணன் என்பது இங்கு உள்ள சிறப்புப்பொருள்.

8. "பாசம்போய் இற்றாற்போலப் பதுமத்தோன் படையும் இன்னே
நாசம்போய் எய்தும்; நம்பி தம்பிக்கு நடுக்கம் இல்லை;
வீசும் போர்க்களத்து வீழ்ந்த சேனையும் மீளும்; வெய்ய
நீசன்போர் வெல்வதுண்டோ?" என்று உளம் நிலையில் நின்றான். (8793)

(பாசம்-நாகபாசம்/அரவக்கணை; இறுதல்-அழிதல்; பதுமத்தோன்-பிரமதேவன்; பதுமம்-தாமரைமலர்; நம்பி-ஆடவருள் சிறந்தவன்/ இராமபிரான்; வெய்ய-கொடிய; நீசன்-அற்பமானவன்/அரக்கன்; நிலை-உறுதி; நடுக்கம்-இங்கே அழிவு)

முன்பு இந்திரசித்தனால் செலுத்தப்பட்ட நாகபாசம் அழிந்து போனது போல, இப்போதும் அவனால் செலுத்தப்பட்ட, தாமரைமலரை இருப் பிடமாகக் கொண்ட பிரமதேவனின் படைக்கலமாகிய பிரமாஸ்திரமும், இப்பொழுதே அழிவு ஏற்பட்டு முடியும். ஆடவரிற் சிறந்தவனான இராமபிரான் தம்பியாகிய இலக்குவனுக்கு எந்த இடரும், இழப்பும் இல்லை; படைக்கலன்களை வீசியெறிந்து போர்செய்யும் போர்க்களத்தில் இறந்துபட்டுக் கிடக்கின்ற வானரச்சேனை முழுவதும் மீண்டும் உயிர்பெற்றுப் புத்துணர்ச்சி கொண்டு எழும்; கொடியவனும், அற்பனானவனுமான அரக்கன் போரில் வெற்றிபெறுவது என்பது

Koviloor Digital Library

உண்டாமோ?'' என்று மனத்தில் மிக்க உறுதியுடன் சிறிதும் தடுமாற்றமில்லாமல் நின்றான் வீடணன்.

''வெல்வதுண்டோ!'' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. வெல்லாது என்ற பொருளைத்தரும். முன்பு நாகபாசம் அற்றுப் போவதற்குக் காரணமான அதே தெய்வம், இப்பொழுதும் இப்பிரமாஸ்திரம் அற்றுப்போவதற்கும் உதவிசெய்யும் என்னும் நம்பிக்கையில் சற்றும் தளராது, மனத்தடுமாற்றம் கொள்ளாமல், ஒரே உறுதியில் நின்றான் வீடணன் என்பதாம். இந்த உறுதிக்குக் காரணம் 'வெய்ய நீசன் போர் வெல்வதில்லை' என்னும் ஆழ்ந்த நம்பிக்கையே என்க. 'வெய்ய நீசன்' என்பது இந்திரசித்தனைக் குறித்தாலும், இராவணனையும், பொதுவாக அரக்கர்களையும் குறித்தது எனக்கொள்ளலாம்.

9. இறவாது இருப்பவர்கள் உளரோ? என்று வீடணன் தேடுதல்

''உணர்வதன் முன்னம், இன்னே உற்றுழி உதவற்கு ஒத்த
துணைவர்கள், துஞ்சல் இல்லார், உளர் எனின் துருவித்தேடிக்
கொணர்குவென் விரைவின்'' என்னா, கொள்ளி ஒன்று அம்கை கொண்டான்,
புணரியின் உதிர வெள்ளத்து, ஒரு தனி விரைவின் போனான். (8794)

(உணர்தல்-உணர்வு திரும்பப்பெறுதல்; துருவி-ஆராய்ந்து; புணரி-கடல்; துஞ்சுதல்-இறந்துபடுதல்; இன்னே-இப்பொழுதே; கொள்ளி-தீப்பந்தம்)

''இராமபிரான் மூர்ச்சை தெளிந்து தன்னுணர்வுபெற்று, எழுவதன் முன், இங்கு இப்பொழுது உரியநேரத்தில் நமக்குத் துணைசெய்யும் வகையில், போர்க்களத்தில் மாளாது, உயிருடன் போராடிக் கொண்டிருப்பவர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்பதனை நன்கு ஆராய்ந்து தேடிப்பார்த்து, அவ்வாறு யாரும் இருந்தால் அவர்களை இங்கு விரைவில் கொண்டுவருவேன்'' என்று கூறிக்கொண்டே, இருள் சூழ்ந்திருப்பதால் ஒரு தீப்பந்தத்தைக் கையில் ஏந்திக்கொண்டு, அந்த இரத்த வெள்ளமாகிய கடலில் புகுந்து, தன்னந்தனியனாய் விரைந்து சென்றான் வீடணன்.

'இன்னே' என்பது, ''நன்றே செய்க, நன்றும் இன்றே செய்க, இன்றும் இன்னே செய்க'' என்ற ஔவையாரின் தனிப்பாடலை நினைவுபடுத்தவேண்டும். 'இன்னே' என்பது இப்பொழுதே, உடனே என்ற பொருளைத்தரும். 'உற்றுழிஉதவியும், உறுபொருள் கொடுத்தும்' என்பது புறநானூறு-43. 'துஞ்சல்' என்பது இறப்பு என்பதன் மங்கலச்சொல்;

Koviloor Digital Library

இந்நிகழ்ச்சி நடந்தது இரவுநேரம் என்பதால்தான் முன்பு இராமபிரான் போர்க்களம் வந்தபோதும் அக்னி அஸ்திரத்தை ஏந்திக்கொண்டு வந்தான். எனவேதான் வீடணனும் ஒரு தீப்பந்தத்தை ஏந்திக்கொண்டு சென்றான் என்பதையும் உணர்க. உதிரப்பெருக்கைப் 'புணரிவெள்ளம்' என்று உவமித்தார் என்க. 'ஒருதனி' என்பது வீடணன் தன்னந்தனியனாய் அந்த இரவுப்பொழுதில் இரத்தவெள்ளத்தின் நடுவில் சென்றான் என்பதைக் குறித்தது என்க. 'உற்றுழி உதவுதற்கொத்த துணைவர்கள்' என்பது 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற குறள்- 788ஐ அடியொற்றியது எனக்கொள்க. 'உற்றுழித் தீர்வார் உறவல்லர்' என்பது மூதுரை-17. அகம்கை என்பது அங்கை என இடைகெட்டு வந்தது. 'அகம் முன்னர்ச் செவி, கை, வரின் இடையனகெடும்' என்பது நன்னூல்-221. அகம்கை என்பது அங்கை என்றும், அகம்செவி என்பது அஞ்செவி என்றும் வரும்.

10. வீடணன் அனுமனைக் காணுதல்

வாய்மடித்து, இரண்டு கையும் முறுக்கி, தன் வயிரச் செங்கண்
தீஉக, கனகக் குன்றின் திரண்ட தோள் மழையைத் தீண்ட,
ஆயிரகோடி யானைப் பெரும்பிணத்து அமளி மேலான்,
காய் சினத்து அனுமன் என்னும் கடல் கடந்தானைக் கண்டான்.
(8795)

(வயிரம்-கோபம்/பகைமை; கனகம்-பொன்; கனகக்குன்று-மேரு மலை; மழை-மேகம்; தீண்டுதல்-தொடுதல்; அமளி-படுக்கை; காய்தல்-கொல்லுதல்)

தான் இந்திரசித்தன்மேல் கொண்ட பகைமையின் காரணமாக எழுந்த கோபத்தால் தன் வாயினை மடித்துக் கொண்டும், பிரமாஸ்திரத்தால் கட்டுண்டதால் தன் இரு கைகளும் முறுக்கிக் கட்டப்பட்ட நிலையிலும், அதனால் உண்டான பகைமிகுந்த சிவந்த கண்களினின்றும் தீப்பொறி சிதறுமாறும், பொன்மயமான மேருமலைபோன்ற தனது குவிந்த தோள்கள் மேகமண்டலத்தைத் தொடுமாறு உயர்ந்து தோன்றுபவனும், ஆயிரம்கோடி என்னும் அளவினதான பெரிய யானைப்படையின் பிணத்தையே படுக்கையாகக் கொண்டு அவற்றின்மேலே கிடப்பவனும், முற்றிய சினம்கொண்டவனும், இராமபிரானுக்காகக் கடலைக் கடந்துசென்று வந்தவனுமாகிய வீரன் அனுமனை இப்பொழுது வீடணன் அங்கு கண்டான்.

நீர்க்கடலைக்கடந்தவன் இத்துன்பக்கடலைக்கடக்க இயலாவண்ணம் கிடக்கிறானே என்று வீடணன் கருதினான் என்பதாம். வாய்மடித்தலும், கை முறுக்குதலும், வயிரச்செங்கண் தீ உகுத்தலும், சினத்தின் மெய்வெளிப்பாடு. 'காய்சினத்து அனுமன்' என்பது முற்றிய சினத்தைக்

Koviloor Digital Library

குறிக்கும். 'காய்சின வழுதி' என்பதே பண்டைக்காலப் பாண்டிய மன்னனின் ஒருபெயர் என்பதையும் அறிக. கடுமையான வேனிற்காலத்து வெய்யிலுக்குக் காய்சினம் உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. 'காய்சினம் திருகிய கடுந்திறல்வேனில்' என்பது பெரும்பாணாற்றுப் படை-3. நீர்க்கடல்கடந்தவன் என்றதனால் இத்துன்பக்கடலையும் கடக்க வல்லவன் என்ற குறிப்பும் தோன்றுவதை உணர்க.

11. அனுமனுக்கு உதவுதல்

கண்டு, தன் கண்களூடு, மழையெனக் கலுழி வார,
'உண்டு உயிர்' என்பது உன்னி, உடற்கணை ஒன்றொன்றாக,
விண்டு, உதிர் புண்ணின் நின்று மெல்லென விரைவின் வாங்கி,
கொண்டல் நீர் கொணர்ந்து, கோல முகத்தினைக் குளிரச் செய்தான்.
(8796)

(கலுழி-கண்ணீர்; வாரி-பெருக்கு; உன்னி-எண்ணி; கொண்டல்-மேகம்; விண்டு-பிளவுபட்டு; கோலம்-அழகு)

அவ்வாறு பிணங்களையே படுக்கையாகக் கொண்டு அதன்மேல் கிடந்த அனுமனை நோக்கி, வீடணன் தன் கண்களினின்றும் கண்ணீர் வெள்ளமாய்ப் பெருக்கெடுக்க, அனுமனுக்கு உயிர் இருக்கிறது என்பதை அனுமானித்து, அவன் உடலிற் பொருந்தியிருந்த பிளவுபட்ட புண்களிலிருந்து வெளியேறும் இரத்தத்தினின்றும் அம்புகளை ஒவ்வொன்றாக அனுமன் வருந்தாதபடி, மெதுவாகவும், விரைவாகவும் கைகளால் எடுத்து, மேகத்தினின்றும், தூய நீரைக்கொண்டு வந்து அனுமனின் அழகிய முகத்தில் தெளித்து அவனைக் குளிர்வித்துப் புத்துணர்ச்சி ஊட்டினான்.

அனுமனின் இந்நிலையைக் கண்ட வீடணன் தன் கண்களில் கண்ணீர் பெருகுவதே இயல்பு. எனினும் ஓர்உரை, அனுமன் கண்களில் நீர் பெருகியதாகவும், அதைவைத்து அவன் உயிருடன் இருக்கிறான் என்பதை அனுமானித்ததாகவும் கூறுகிறது. இதுவும் ஏற்புடைத்தே என்றாலும் முன் பொருளே சிறக்கும் என்பதறிக. 'கொண்டல்நீர் கொணர்தல்' என்பது மேகத்தினின்றும் தூய நீரைக் கொண்டுவந்தான் என்று பொருள்படும். பொதுவாக அரக்கர்க்கு இம்மாய ஆற்றல் உண்டு என்பது நாம் அறிந்ததே. முன்பு வீடணன் இராமபிரானிடம் சரணாகதி செல்லத்துணியும் போதும் இலங்கையினின்றும் வான்வழியாகச் சென்றான் என்பதையும், சீதாதேவியின் நிலைபற்றி அறிந்துவர அசோகவனத்திற்கு வண்டுருக்கொண்டு சென்றான் என்பதையும், நாம் முன்பே கன்டுவந்திருக்கிறோம். எனவே இங்கேயும் மேகம் சென்று நீர் கொணர்ந்து வந்தான் என்று கூறுதலும் பொருந்தும். முகத்தில் தண்ணீர்

Koviloor Digital Library

தெளிவித்துக் குளிர்வித்துப் புத்துணர்ச்சியூட்டுதல் என்பது சைத்தியோபசாரங்களில் ஒன்று என்பதறிக.

12. அனுமன் உணர்வுபெற்று எழுந்து இராமபிரான் பற்றி வினவுதல்

உயிர்ப்புமுன் உதித்த பின்னர், உரோமங்கள் சிலிர்ப்ப ஊறி
வியர்ப்பு உளதாக, கண்கள் விழித்தன, மேனி மெல்லப்
பெயர்த்து, வாய்புனல் வந்து ஊற, விக்கலும் பிறந்ததாக,
அயர்த்திலன் இராமநாமம், வாழ்த்தினன், அமரர் ஆர்த்தார். (8797)

(உயிர்ப்பு-மூச்சுக்காற்று; சிலிர்த்தல்-மயிர்க்கூச்செறிதல்; ஊறுதல்-சுரத்தல்; வியர்ப்பு-வியர்வை; பெயர்த்தல்-அசைத்தல்; வாய்புனல்-எச்சில்; அயர்த்தல்-மறத்தல்)

அவ்வாறு வீடணன் அனுமனின் அழகிய முகத்தில் நீர் தெளித்தவுடன், அனுமனுக்கு மூச்சுக்காற்று வந்தது. அவன் உரோமங்கள் மயிர்க் கூச்செறிந்தன, வியர்வைநீர் சுரந்தது; கண்கள் விழிப்புற்றன; உடம்பை மெதுவாக அசைத்தான்; வாயில் எச்சில்நீர் வந்து ஊறியது; விக்கல் தோன்றியது; அந்நிலையிலும் இராமநாமத்தைச் சற்றும் மறவாதவனான அனுமன், இராமநாமம் கூறி வாழ்த்தினான். அதுகண்ட தேவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர்.

உயிர் ஒடுங்கி அல்லது மூர்ச்சையுற்றுப் பின் தன்னுணர்வு வரும்போது எத்தகைய மெய்ப்பாடுகள் தோன்றும் என்பதை முதன் முறையாகக் கூறுகிறான் கவிஞன்; உயிர்ப்பு வரும்; உரோமங்கள் சிலிர்க்கும்; வியர்வைஊறும்; கண்கள் விழிக்கும்; மேனி அசையும்; எச்சில்ஊறும்; விக்கல்வரும் என்பது ஒரு அருமையான தொடர் தொலைக்காட்சிப் பிடிப்பு. இரவில் படுக்கப்போகும்போது எதை நினைத்துப் படுக்கிறோமோ அது ஆழ்மனத்தில் பதிந்து அதுவே கனவாக வருதலும் உண்டு; அதுவே மறுநாள் காலை எழுந்தவுடன் நினைவுக்கு வருதலும் உண்டு என்பது ஒரு உளவியல் கருத்து. அது இங்கே அனுமன்மூலம் விளக்கப்பட்டிருப்பதைக் காண்க. அனுமன் மூர்ச்சையுறும்போதும் இராமநாமம் கூறியே மூர்ச்சையடைந்தான். இப்பொழுது உயிர்ப்பு வந்து எழும்போதும் மறவாமல் இராமநாமம் வாழ்த்தியே எழுகின்றான் என்பது நுனித்து உணரத்தக்கது'' ''நான்மறக்கினும் சொல்லும் நா, நமச்சிவாயவே'' என்பது சுந்தரர் தேவாரம். எச்சில் என்ற வழக்குச் சொல்லுக்கு ''வாய்புனல்'' என்ற ஒரு அழகிய அருமையான தமிழ்ச் சொல்லைத் தந்திருக்கிறான் கவிஞன் என்பது கருதத்தக்கது. ''வால் எயிறு ஊறியநீர்'' என்கிறான் வள்ளுவன். ''அதரபானம்'' என்கிறது வடமொழி.

Koviloor Digital Library

13. அழுகையோடு உவகையுற்ற வீடணன், ஆர்வம்கூர,
தழுவினன் அவனை, தானும் அன்பொடு தழுவி, "தக்கோய்!
வழுஇலன் அன்றே வள்ளல்?" என்றனன்; 'வலியன்' என்றான்;
தொழுதனன் உலகம் மூன்றும் தலையின்மேல் கொள்ளும் தூயான்.
(8798)

(கூர்தல்-மிகுதல்; தக்கோன்-தகுதியுடையவன்; வழு-தீங்கு)

இராமன், இலக்குவன், வானரச்சேனை முதலான எல்லோரும் போர்க்களத்தில் மூச்சற்றுக் கிடப்பதால் அழுகையும்; அனுமன் மட்டுமாவது உயிர்பிழைத்து எழுந்தானே என்றதனால் மகிழ்ச்சியும் ஒருங்கே கொண்ட வீடணன், அன்பும் ஆர்வமும் மிகக்கொண்டு அவனைக் கட்டித்தழுவிக் கொண்டான்; அனுமனும் அவ்வாறே வீடணனைத் தழுவிக்கொண்டு, ''தகுதி சான்றவனே! நடுவுநிலைமை தவறாதவனே! கருணை வள்ளலாகிய இராமபிரான் எந்தத்தீங்கும் இல்லாமல் இருக்கிறான் அல்லவா?'' என்று கேட்டான். வீடணனும் ''எந்தத்தீங்கும் இல்லாமல் இருக்கிறான்'' என்று ஒரே சொல்லில் விடைகூறினான். அதுகேட்டு இம்மூவுலகங்களும் புகழ்ந்து போற்றத்தகும் தூய்மையுடையவனான அனுமன், இராமபிரான் இருக்கும் திசைநோக்கித் தன் மனதால் நினைத்து இரு கைகளையும் கூப்பித் தொழுதான்.

'அழுகையோடு உவகை' என இருவேறுபட்ட மெய்ப்பாடுகளை உணர்க. ஒருபெரிய துயரடைந்தபொழுது, ஒருசிறு நன்மை விளைந்தாலும் நாம் அவ்வழுகையினூடும் சிறிது நிம்மதிப் பெருமூச்சு விட்டு மகிழ்கிறோம் அல்லவா? அதுதான் இங்கே பேசப்படுகிறது. வானரச்சேனை, இலக்குவன், இராமபிரான் ஆகிய எல்லோரும் மூர்ச்சையுற்றுக் கிடப்பது பெருந்துன்பம். அதனால் அழுகை, அனுமன் மட்டுமாவது உயிர்பிழைத்து எழுந்தானே அது சிறு இன்பம். அதனால் மகிழ்ச்சி எனக்கொள்க.

14. இருவரும் சாம்பவனைத் தேடிச் செல்லுதல்

"அன்பு தன் தம்பிமேல் ஆத்து, அறிவினை மயக்க, ஐயன்
துன்பொடும் துயிலன் ஆனான்; உணர்வு இனித் தொடர்ந்த பின்னே,
என் புகுந்து எய்தும் என்பது அறிகிலென்" என்றலோடும்,
"தன்பெரும் தகைமைக்கு ஒத்த சாம்பன் எத்தலையன்?" என்றான்.
(8799)

(புகுதல்-நிகழ்தல்; தகைமை-பெருந்தன்மை; தலை-இடம்; துயிலல்-மூர்ச்சையுறுதல்; ஆத்தல்-யாத்தல்/பிணைத்தல்/கட்டுதல்)

Koviloor Digital Library

வீடணன் அனுமனை நோக்கி, ''தன் தம்பியின்மேல் கொண்டுள்ள பேரன்பின் காரணமாகத் தலைவன் இராமபிரான் அறிவும், உணர்வும் சற்று தளர்ந்து துயரத்துடன் மூர்ச்சையுற்றிருக்கின்றான்; அவன் மூர்ச்சை தெளிந்து தன்னுணர்வு வரப்பெற்ற பின்னர் என்ன நிகழும் என்பதை என்னால் இப்போது கூறமுடியவில்லை'' என்றான்; உடனே அனுமன், ''தனது பெருந்தன்மைக்கு நிகராக வேறொருவரும் இல்லாதவனும், வயதில் மூத்தவனுமான சாம்பவன் எவ்விடத்தில் இருக்கிறார்?'' என்று வினவினான்.

அன்பெனும் ஓர் உணர்வு, அறிவு எனும் மற்றொரு உணர்வை மயக்கித் துன்பம் என்ற இன்னுமொரு உணர்வுக்குத் தள்ளியது என்று கூறும் கவிஞனின் கவித்திறம் காண்க. சாம்பவன் மூப்பினாலும், பெருந்தன்மையினாலும் தனக்கு நிகர் தானேயாவான். பிறிது ஒருவரும் இல்லை என்பது அனுமன் கருத்து என்பது புலப்படுத்தப்பட்டது. 'ஆத்து' என்பது யாத்து என்றதன் திரிபு. பிணைத்தல் என்பது பொருள்.

15. "அறிந்திலென் அவனை; யாண்டும் கண்டிலென்; "ஆவி யாக்கை
பிறிந்திலன், உளன்" என்று ஒன்றும் தெரிந்திலென்; பெயர்ந்தேன்"; என்று
செறிந்ததார் நிருதர் வேந்தன் உரைசெய, காலின் செம்மல்,
'இறும் திறம் அவனுக்கு இல்லை; நாடுதும் ஏகி" என்றான். (8800)

(யாண்டும்-எவ்விடத்தும்; பெயர்தல்-திரும்பி வருதல்; செறிந்த-நெருங்கிய; தார்-மலர்மாலை; நிருதர்வேந்தன்-அரக்கர்க்கரசன்/ வீடணன்; கால்-காற்று; செம்மல்-புதல்வன்/அனுமன்; திறம்-தன்மை; இறுதல்-இறத்தல்)

வீடணன் அனுமனை நோக்கி, ''அவனைப் பற்றி நான் ஒன்றும் தெரிந்து வைத்துக்கொள்ளவில்லை; அவனை எவ்விடத்திலும் நான் காணவில்லை; அவன் உயிர் உடலில் இருக்கிறதா? இல்லையா? என்பதைக்கூட நான் அறியவில்லை; அப்படியேவந்துவிட்டேன்'' என்று, நெருங்கியமலர்மாலையணிந்த அரக்கர்க்கரசனான வீடணன் கூறவும், வாயுதேவனின் புதல்வனான அனுமன் ''சாம்பவனுக்கு இறப்பு என்பதே கிடையாது. அவன் சிரஞ்சீவித்தன்மை பெற்றவன். எனவே நாம் சென்று அவனைத் தேடுவோம்; வாருங்கள்'' என்று அழைத்தான்.

16. "அன்னவன் தன்னைக் கண்டால், ஆணையே, அரக்கர்க்கெல்லாம்
மன்னவ! நம்மை ஈண்டு வாழ்விக்கும் உபாயம் வல்லன்"
என்னலும் 'உய்ந்தோம் ஐய! ஏகுதும் விரைவின்' என்றான்;
சில்நெறி இருளில் சென்றார்; சாம்பனை விதியில் சேர்ந்தார். (8801)

(ஆணை-சத்தியம்/உறுதி; உய்தல்-வாழ்தல்; சில்நெறி-சிறிது தொலைவு; ஈண்டு-இப்பொழுது; உபாயம்-வழிவகை; விதி-ஆகூழ்/ ஊழ்வினை)

Koviloor Digital Library

அனுமன் வீடணனை நோக்கி ''அரக்கர்க்கெல்லாம் அரசனே! நாம் இப்பொழுது அச்சாம்பவனைக் கண்டுபிடித்து விட்டோம் என்றால் அவன் நாம் எல்லோரும் பிழைத்திருப்பதற்கான வழிவகைகளைக் கூறும் ஆற்றல் படைத்தவன்; இது உறுதி'' என்றான்; அவன் அவ்வாறு கூறியதும் வீடணன் ''அனும! அவ்வாறானால் நாம் இப்போதே பிழைத்தவர்கள் ஆவோம்; நாம் விரைவில் செல்வோம்'' என்றான். இருவரும் இருளில் சிறிது தொலைவு சென்று, ஊழ்வினைப்பயனால் விரைவாகவே சாம்பவனைச் சென்று அடைந்தார்கள்.

அனுமன் இங்கே வீடணனை ''அரக்கர்க்கெல்லாம் மன்னவ!'' என்று அழைப்பதை நோக்குக. கவிஞன் தன் கூற்றாகவும், இராமபிரான் கூற்றாகவும் முன்பு பல இடங்களில் வீடணனை நிருதர்வேந்தன் என்றே கூறிவந்திருக்கிறான். இப்பொழுதும் அனுமன் கூற்றாகவும் கூறவைத்ததை உணர்க. 'உய்ந்தோம்' என்பது உறுதி பற்றிவந்த காலவழுவமைதி. 'சில்நெறி' என்பது அவர்கள் இருவரும் நீண்டதூரம் செல்லவில்லை, சிறிதுதூரம் சென்றவுடனேயே சாம்பவனைக் கண்டு விட்டனர் என்பதாம். 'விதியில் சேர்ந்தார்' என்பது ஊழ்வினைப்பயனால் உடனே கண்டுவிட்டனர் என்பதைக் குறிக்கும்.

17. எரிகின்ற மூப்பினாலும் ஏவுண்ட நோவினாலும்,
அரிகின்ற துன்பத்தாலும், ஆர்உயிர்ப்பு அடங்கி, ஒன்றும்
தெரிகின்றது இல்லா மம்மர்ச் சிந்தையன் எனினும், வீரர்,
வருகின்ற சுவட்டை ஓர்ந்தான், செவிகளால், வயிரத்தோளான். (8802)

(எரிதல்-மனம்கொதித்தல்; ஏ-அம்பு; உண்ட-தைத்த; நோவு-துன்பம்; அரிதல்-பிளத்தல்; உயிர்ப்பு-மூச்சுக்காற்று; மம்மர்-மயக்கம்; வயிரம்-உறுதி; சுவடு-அடையாளம்; ஓர்தல்-நுனித்து அறிதல்; மூப்பு-கிழத்தன்மை /முதுமை)

முதுமைப்பருவத்தில் வெறுப்பினால் துன்புற்று உழல்பவனும், இந்திரசித்து எய்த அம்பினால் தன்புற்றுத் துடிப்பவனும், தமது மற்ற நண்பர்கள் அனைவரும் இறந்துபட்டனரே என்று மனம் பிளவுபட்டு மறுகுபவனும், தனது அருமையான உயிர்-மூச்சுக்காற்று அடங்கிப்போய், தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதையே அறிந்துகொள்ள முடியாத மயக்கமுடைய மனத்தை உடையவனுமாகிய சாம்பவன், இம்மூவகைத் துன்பங்களும் கொண்டு கண்களை மூடிக்கொண்டு இருந்தபோதும், வயிரம்போன்ற தோள்களை உடைய சாம்பவன், வீரர்கள் வருகின்ற ஓசையின் அடையாளத்தைத் தன் காதுகளாலேயே நுட்பமாக அறிந்துகொண்டான்.

'எரிகின்ற மூப்பு' என்பது ஒரு அருமையான சொற்றொடர். மூப்பின் முழுத்தன்மையையும் வெளிக்கொணர்கின்ற ஒரு சொல்லாட்சி. மூப்புப்

Koviloor Digital Library

பற்றிப் பொதுவாக எல்லா இலக்கியங்களும் பேசுகின்றன; தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை கேளுங்கள் ''வேதநூறு, பிராயம் நூறு, மனிசர் தாம் புகுவரேனும், பாதியும் உறங்கிப்போகும்; நின்றதில் பதினையாண்டு பேதை பாலகனதாகும்; பிணி, பசி, மூப்புத்துன்பம்; ஆதலால் பிறவி வேண்டேன், அரங்கமாநகருளானே'' என்கிறது திருமாலை. ''வாழும் நாளோடு யாண்டுபல உண்மையின், தீர்தல் செல்லாது என்உயிர் எனப் பலபுலந்து, கோல்காலாகக் குறும்பல ஒதுங்கி, நூல்விரிந்தனன், கதுப்பினன் கண்துயின்று முன்றில் போகா முதிர்வினள் யாயும்'' என்பது புறநானூறு-159. 'மம்மர்' என்பது மயக்க நிலையைக் குறிக்கும். 'கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்து' என்பது நாலடியார்-132.

18. “அரக்கனோ? என்னை ஆளும் அண்ணலோ? அனுமன்தானோ?
இரக்கமுற்று அருளவந்த தேவரோ? முனிவரேயோ?
வரக் கடவார்கள் அல்லர்; மாற்றலர் மலைந்து போனார்;
புரக்க உள்ளாரே!” என்னாக் கருதினான், பொருமல் தீர்ந்தான். (8803)

(அண்ணல்-பெருமைமிக்கவன்; மலைதல்-போர்செய்தல்; மாற்றலர்-பகைவர்கள்; வரக்கடவர்-வரத்தக்கவர்; புரத்தல்-காப்பாற்றுதல்/ஆதரித்தல்; பொருமல்-மனத்துன்பம்)

சாம்பவன் அந்நிலையிலும் ''வருபவர்கள் அரக்கனாகிய வீடணனா? அல்லது என்னை ஆட்கொண்டருளும் பெருமைக்குரிய இராமபிரானா? அல்லது அனுமன்தானா? அல்லது என்மேல் இரக்கம்கொண்டு அருள் செய்யவந்த தேவர்களா? அல்லது முனிவர்களா?'' என்று தனக்குள் ஐயம்கொண்டு சற்று நிதானித்தான். பின்னர் பகைவர்கள் எல்லோரும் போர்செய்து வெற்றிக்களிப்பில் மிதப்பர். எனவே அவர்கள் இங்கு இப்போது வருவதற்கு வாய்ப்பில்லை. எனவே வருபவர்கள் என்மீது இரக்கம் கொண்டு என்னை ஆதரித்துக் காப்பாற்ற வருபவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று தன் மனத்துள் கருதி, மனத்துயரம் நீங்கப்பெற்றான்.

'அரக்கனோ, என்னையாளும் அண்ணலோ, அனுமன்தானோ' என்று சாம்பவன் கூறுவது, இம்மூவரும்தான் இந்திரசித்து செலுத்திய பிரமாத்திரத்திற்குத் தப்பி உயிர்பிழைத்திருக்க முடியும் என்று கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையினால் எழுந்த கூற்று என்க. 'பொருமல்' என்பது மனத்திற்குள் தேம்பிப் புலம்புவதைக் குறிக்கும்.

Koviloor Digital Library

19. சாம்பவன் அனுமனைக் கண்டு மகிழ்தல்

வந்து அயல்நின்று, குன்றின் வார்ந்து வீழ்அருவி மானச்
சிந்திய கண்ணின் நீரர் ஏங்குவார் தம்மைத் தேற்றி,
''அந்தம்இல் குணத்திர்! யாவிர் அணுகினிர்!'' என்றான்; ''ஐய!
உய்ந்தனம்; உய்ந்தோம்!; என்ற வீடணன் உரையைக் கேட்டான்.
(8804)

(அயல்-பக்கம்; வார்தல்-பெருகுதல்; மான-போன்ற; அந்தம்-முடிவு; உய்தல்-உயிர்வாழ்தல்)

தன் அருகில் வந்து, மலைமேலிருந்து பெருகி வீழும் அருவிபோலக் கண்ணீரைச் சிந்திக்கொண்டு நின்று தம்மேல் இரக்கம் கொள்ளுபவர்களைத் தான் தேற்றி ''எல்லையில்லாத நற்பண்புகளையுடையவர்களே! நீங்கள் யார்? என்னை நெருங்கிவந்து நிற்கிறீர்களே?'' என்று கேட்டான்; அதற்கு வீடணன் ''தலைவனே! நாங்கள் எல்லோரும் இப்பொழுதுதான் உயிர்பெற்றவர்களானோம்'' என்று திரும்பத்திரும்பக் கூறினான். அதனைச் சாம்பவன் கேட்டு, அது வீடணன் குரல் என்பதை உணர்ந்து கொண்டான்.

தான் துன்புற்றிருக்கும் நிலையில் தனக்கு அருள வந்தவர்கள் என்று சாம்பவன் கருதிய நிலையில் அவர்கள் துன்புற்று அருவிபோல் சிந்திய கண்ணீரை நோக்கி, இவன் அவர்களைத் தேற்றும்நிலை உண்டானது என்பதை உணர்க. இந்நிலையில் தன்னருகில் வந்து யாரேனும் நின்றால் அவர்கள் தன்னைக் காப்பாற்றத்தான் வந்திருப்பார்கள் என்று கருதி, சாம்பவன் அவர்களை 'அந்தம்இல் குணத்திர்' என்று பொதுவாக அழைத்தான் எனக்கொள்க. வந்திருப்பவர்கள் யார் என்பது இன்னும் சாம்பவனுக்குத் தெரியாது. வீடணன் பதில் சொன்ன பிறகுதான், வந்திருப்பது வீடணன் என்பதை அறிந்து கொள்ளுகிறான் சாம்பவன். எனினும் அனுமன் வந்திருப்பது அடுத்த பாடலில் தெரிவிக்கப்படுகிறது. 'உய்ந்தனம் உய்ந்தோம்' என்பது துணிவு பற்றிவந்த காலவழுவமைதி. முன்பாடல்களில் அனுமன் 'இறும் திறம் அவனுக்கு இன்றால்' என்று கூறியதனாலும் 'நம்மை மீட்டு வாழ்விக்கும் உபாயம் வல்லான்' என்று கூறியதாலும், வீடணன் சாம்பவன் உயிருடன் இருப்பதைக் கண்டவுடன் ''உய்ந்தனம் உய்ந்தோம்'' என்றான் என்க.

20. ''மற்று அயல் நின்றான் யாவன்?' என்ன, மாருதியும், 'வாழி!
கொற்றவ! அனுமன் நின்றேன்; தொழுதனென் என்றுகூற,
''இற்றிலம் ஐய! எல்லோம் எழுந்தனம் எழுந்தோம்!'' என்னா
உற்ற பேர் உவகையாலே, ஓங்கினான் ஊற்றம் மிக்கான். (8805)

Koviloor Digital Library

(அயல்-அருகில்; கொற்றம்-வெற்றி; வாழி-வாழ்க; ஊற்றம்-வலிமை; ஓங்குதல்-பூரித்தல்; இறுதல்-அழிதல்)

அவ்வாறு வீடணன் சொல்லக்கேட்ட சாம்பவன் அவனை நோக்கி, ''உன் அருகில் நிற்பவன் யார்?'' என்று கேட்கவும் அனுமனும் ''வெற்றி வீரனே! வாழ்க! நான்தான் அனுமன். உன் அருகில் நிற்கின்றேன். தங்களை வணங்குகின்றேன்'' என்று கூறவும், உடனே சாம்பவன் மிக்க வலிமை கொண்டு உடலும் உள்ளமும் பூரித்து எழுந்து ''நாம் யாரும் இறந்துபட்டவில்லை; எல்லோரும் உயிர்பெற்று எழுந்துவிட்டோம்! உயிர்பெற்று விட்டோம்'' என்று பெருமகிழ்ச்சி கொண்டு உரக்கக் கூவினான்.

ஏவுண்ட துன்பினாலும், மூப்பினாலும், அரிக்கின்ற துன்பினாலும் கண்களைத் திறக்கமுடியாது மூடிக்கொண்டிருந்தான் சாம்பவன். எனவே அருகில் நின்றவன் யார் என வீடணனைக் கேட்க நேர்ந்தது. அனுமன் உயிருடன் தன்னருகில் நின்றான் என்பதைக் கேட்டவுடனேயே அவனுக்கு ஆயிரம் யானைவலிமை வந்துசேர்ந்தது போல உடலும் உள்ளமும் பூரித்தான். அனுமனைக் கொண்டு, மருத்துமலையைக் கொணர்ந்து, எல்லோரையும் உயிர்பிழைக்கச் செய்துவிடலாம் என்ற துணிவால் 'இற்றிலம் ஐய! எல்லோம் எழுந்தனம்! எழுந்தோம் என்று பேருவகை உற்று ''ஊற்றம் மிக்கு ஓங்கினான்'' என்பதாம். 'எழுந்தனம் எழுந்தோம்' என்ற அடுக்கு தேற்றப்பொருளில் வந்தது. துணிவும், தெளிவும் பற்றிவந்த காலவழுவமைதி. முன்பாடலிலும் 'உய்ந்தனம் உய்ந்தோம்' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க.

21. சாம்பவன் இராமபிரான் பற்றி வினவுதல்

விரிஞ்சன் தன் படையென்றாலும், வேதத்தின் வேதம் அன்ன
அரிந்தமன் தன்னை ஒன்றும் ஆற்றிலது என்னும் ஆற்றல்
தெரிந்தனென்; முன்னே, அன்னான் செய்தது என்? தெரித்தி!" என்றான்;
"பெருந்தகை துன்பவெள்ளத் துயில் உளான் பெரும!" என்றான்.
(8806)

(விரிஞ்சன்-பிரமதேவன்; அரிந்தமன்-பகைவரை அழிக்கவல்லவன்/ இராமபிரான்; ஆற்றுதல்-செய்தல்)

''பிரமதேவனுடைய கொடிய படைக்கலமான பிரமாத்திரமே என்றாலும், அது வேதங்களுக்கு எல்லாம் மேம்பட்ட வேதம் என்று கூறும்படியானவனும், பகைவரை அழித்தொழிக்கும் வல்லமை பெற்றவனுமான இராமபிரானை ஒன்றும் செய்ய இயலாது என்பதையும், இராமபிரானின் ஆற்றலையும் நன்கு அறிந்திருக்கிறேன்; எனினும் இராமபிரான் இப்பொழுது எங்கிருக்கிறான்? என்ன செய்து கொண்டிருக்கிறான்? எப்படியிருக்கிறான்? என்பதை எனக்குக் கூறுவாயாக!'' என்று சாம்பவன் கேட்கவும், அதற்கு அனுமன் ''பெருமானே!

Koviloor Digital Library

பெருந்தகைமையுடைய இராமபிரான் இப்பொழுது துன்பக்கடலில் ஆழ்ந்து, மூர்ச்சையாகி, உணர்விழந்து இருக்கிறான்'' என்று பதில் கூறினான்.

'அரிந்தமன்' என்பது தன் போர்ப்படையால் பகைவர்களை அழிக்கும் அரசன் என்ற பொருளில் இராமபிரானைக் குறித்து நின்றது. பாற்கடல் வெள்ளத்தில் துயில் கொள்ளும் இயல்புடைய இராமபிரான், இப்போது துன்பவெள்ளத்தில் துயில் கொண்டிருக்கிறான் என்று கூறிய நயம் நோக்குக. முன்பும் ''தொல் ஆழி தனை நீத்துத் துயர்ஆழிக் கண்துயில்கின்றான்'' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க.

22. சாம்பவன் அனுமனை மருத்துமலை கொணர ஏவுதல்

"அன்னவன் தன்மை கண்டால் ஆற்றுமோ? ஆக்கை வேறே;
இன்னுயிர் ஒன்றே; மூலத்து இருவரும் ஒருவரேயால்;
இன்னது கிடைப்பத் தாழாது, இங்கு இனி இமைப்பின் முன்னம்
கொன் இயல் வயிரத்தோளாய்! மருந்துபோய்க் கொணர்தி!'' என்றான்.
(8807)

(மூலம்-அடிப்படை/தெய்வநிலை; அன்னவன்-இலக்குவன்; தன்மை-நிலைமை; கொன்-கொல்லும்தன்மை/அச்சம்/வலிமை; ஆற்றுதல்-தாங்கிக்கொள்ளுதல்; தாழ்த்தல்-தாமதித்தல்; மருந்து-அமிழ்தம்)

சாம்பவன் அனுமனை நோக்கி அடிப்படையில் தெய்வநிலையில் இராமஇலக்குவர் இருவரும் ஒருவரேயாவர். இப்போதும் உடல்கள்தான் இரண்டே தவிர அவர்களுடைய இனிய உயிர் ஒன்றேயாகும். எனவே தன் உயிர்க்குயிரானதம்பி இறந்து கிடக்கும் நிலையைக் கண்டு அதைத்தாங்கிக் கொள்ளும் ஆற்றல் உடையவனோ இராமபிரான்? எனவே அவன் மூர்ச்சித்துக் கிடப்பது இயல்பே! எனவே பகைவர்க்கு அச்சம் தருகின்ற இயல்புடைய வயிரம்போன்ற திண்ணிய தோள்களை உடைய அனுமனே! நீ சற்றும் தாமதம் செய்யாது, ஒரு நொடிப்பொழுதிற்குள் சென்று, இறந்தவர்களைப் பிழைக்க வைக்கும் மருந்தினை விரைவில் கொண்டுவருவாயாக!'' என்று கூறினான்.

'இமைப்பின் முன்னம்' என்பது நொடிப்பொழுது என்று விரைவைக்குறிக்கும். மருந்து என்பது பொதுவாக சாவா மருந்தாகிய அமிழ்தத்தையே குறிக்கும் என்றாலும், இங்கே உயிர்பிழைக்கச் செய்யும் மூலிகை மருந்தைக் குறித்தது எனக்கொள்க. இலக்குவன் இறந்துபட்டான் என்ற செய்தியை அனுமன் சாம்பவனுக்குக் கூறவேஇல்லை. எனினும்

Koviloor Digital Library

சாம்பவன் தன் ஊகித்து அறியும் பண்பினால் உணர்ந்து கொண்டான் என்பதாம்.

23. "எழுபது வெள்ளத்தோரும், இராமனும், இளைய கோவும்,
முழுதும் இவ்வுலகம் மூன்றும், நல்அற மூர்த்தி தானும்,
வழுஇலா மறையும், உன்னால் வாழ்ந்தன ஆகும்; மைந்த!
பொழுது இறைதாழாது, என்சொல் நெறிதரக் கடிது போதி. (8808)

(இளையகோ-இலக்குவன்; அறமூர்த்தி-தருமதேவதை; வழு-குற்றம்; இறை-சிறிது; தாழ்த்தல்-தாமதித்தல்; நெறி-வழி; கடிது-விரைந்து; போதி-செல்வாயாக; மைந்து-வலிமை; மறை-வேதங்கள்)

''அன்புடை மைந்தனே! வலிமையுடைய அனும! நான் கூறியபடி நீ மருந்து கொண்டுவந்தால் எழுபதுவெள்ளம் வானரச்சேனையும், இளவரசனாகிய இலக்குவனும் மீண்டும் உயிர்பெற்று எழுவர்; அதனால் இராமபிரான் மூர்ச்சை நீங்குவான்; அவன் எழுச்சியுற்றால் இம்மூவுலகங்கள் முழுதும், சிறந்த தருமதேவதையும், குற்றமேயில்லாத நான்கு வேதங்களும் உன்னால் வாழ்வுபெற்று உய்யும்; எனவே சற்றும் தாமதிக்காமல் நான் கூறுகின்ற வழிப்படி விரைவில் செல்வாயாக!'' என்றான் சாம்பவன்.

அறக்கடவுள் நிலைபெற்றால் வேதநெறி விளங்கித்திகழும் என்பது கருத்து. அனுமன் மருந்து கொணர்ந்தால் எழுபது வெள்ளம் வானரச்சேனை, இலக்குவன், இராமபிரான் மட்டுமல்ல, மூன்று உலகங்களும், அறக்கடவுளும், நான்மறையும் வாழ்வு பெறும் என்கிறான் சாம்பவன் என்பதாம்.

24. அனுமன் செல்லவேண்டிய வழி பற்றிச் சாம்பவன் கூறுதல்

"பின்பு உளது இக்கடல் என்னப் பெயர்ந்ததற்பின்,
யோசனைகள் பேச நின்ற
ஒன்பதினாயிரம் கடந்தால், இமயம் எனும்
குலவரையை உறுதி; உற்றால்,
தன் பெருமை ஓர் இரண்டாயிரம் உளது
யோசனை; பின் தவிரப்போனால்,
முன்பு உள யோசனை எல்லாம் முற்றினை,
பொற்கூடம் சென்று உறுதி மொய்ம்ப!" (8809)

(மொய்ம்பு-வலிமை; பெயர்தல்-கடந்துசெல்லுதல்; குலவரை-சிறந்தமலை; உறுதல்-அடைதல்; பெருமை-பரப்பு; முற்றுதல்-கடந்து போதல்; பொற்கூடம்-ஏமகூடமலை; ஏமம்-பொன்; யோசனை-ஒன்பது கல்தொலைவு)

Koviloor Digital Library

''வலிமையுடைய அனுமனே! நீ இந்தத் தென்கடல் பிற்பட்டுப் போகும்படி இதனைக் கடந்து சென்று, மேலும் ஒன்பதாயிரம் யோசனை என்று சொல்லப்படும் நீளத்தைக் கடந்தால் இமயமலை என்னும் சிறந்த மலைக்கூட்டத்தை அடைவாய்; அடைந்தால் அதன் பரப்பு இரண்டாயிரம் யோசனை ஆகும். அதையும் பின் நிறுத்தி முற்பட்டு, முன்புகூறிய ஒன்பதாயிரம் யோசனை தூரம் இன்னும் சென்றால் ஏமகூட மலையைச் சென்றடைவாய்!'' என்று வழி கூறுகிறான் சாம்பவன்.

கடலிலிருந்து ஏமகூடமலை இருபதினாயிரம் யோசனை என்பது பெறப்படுகிறது. தென்கடல் கரையிலிருந்து இமயமலை ஒன்பதினாயிரம் யோசனையில் இருக்கிறது. அதன் அகலம் இரண்டாயிரம் யோசனை; அதன்பின் ஒன்பதினாயிரம் யோசனை கடந்து சென்றால் ஏமகூடமலையை அடையலாம் என்பதாம். ஒருயோசனை தூரம் என்பது 3கல் தொலைவு என்றும், 10மைல் என்றும், 16கிலோமீட்டர் என்றும் பல அளவைகளால் குறிக்கப்படுகிறது. ஏமகூடம் என்பது எட்டுக்குலவரைகளுள் ஒன்று. மற்றவை கயிலை, இமயம், மந்தரம், நிடதம், விந்தம், நீலகிரி, கந்தமாதனம் என்பனவாம். ஏமகூடமலை, மேருமலைக்குத் தெற்கே, இமயமலைக்கு அப்பால் ஒன்பதினாயிரம் யோசனையில் உள்ளது என்றும், இது விஞ்சையர் வாழும் இடம் என்றும் அபிதான சிந்தாமணி பேசுகிறது. நீலமலை நீலநிறமாகவும், இமயமலையும், சுவேதமலையும் பால்நிறமாகவும், நிடதமலை படிகநிறமாகவும், ஏமகூடமலை பொன்நிறமாகவும் இருக்கும் என்பது அண்டகோளவிலாசக் குறிப்பு.

25. "அம்மலைக்கும் ஒன்பதினாயிரம் உளதால்,
யோசனையின் நிடதம் என்னும்
செம்மலையம்; உளவாய அத்தனை யோசனை
கடந்தால் சென்று காண்டி,
எம்மலைக்கும் பெரிதாய வடமலையை;
அம்மலையின் அகலம் எண்ணின்,
மொய்ம் மலைந்த திண்தோளாய்! முப்பத்து ஈர்
ஆயிரம் யோசனையின் முற்றும். (8810)

(மொய்-வலிமை; வடமலை-மேருமலை; காண்டி-காண்பாய்; முற்றும்-முடிவடையும்; மலைதல்-மேற்கொள்ளுதல்)

''மிக்க வலிமைபெற்ற திண்ணிய தோள்களை உடையவனே! அனும! நீ இப்போது நிற்கும் ஏமகூட மலையினின்றும் ஒன்பதினாயிர யோசனைதூரம் கடந்து சென்றால் நிடதமலை என்னும் செம்பாறைகளால் ஆன மலையைக் காணலாம்; அதேபோல இன்னும் ஒரு ஒன்பதினாயிரம் யோசனை தூரம் அங்கிருந்து கடந்துசென்றால் உலகில் உள்ள எல்லா மலைகளுக்கும் பெரியதான மேருமலையைக் காண்பாய்; அம்மலையின்

Koviloor Digital Library

அகலம் மட்டும் முப்பத்திரண்டாயிரம் யோசனை அளவில் சென்று முடியும்'' என்கிறான் சாம்பவன்.

தென்கடலிலிருந்து ஏமகூடமலை இருபதினாயிரம் யோசனை என்று முன்பாடலில் அறிந்தோம். இப்பாடல்மூலம் ஏமகூட மலையிலிருந்து மேருமலை ஐம்பதினாயிரம் யோசனைதூரம் என்பது பெறப்படுகிறது. ஏமகூடமலையிலிருந்து ஒன்பதினாயிரம் யோசனை தூரத்தில் நிடதமலையும், அங்கிருந்து ஒன்பதினாயிரம் யோசனை தூரத்தில் மேருமலையும் அம்மலையின் அகலம் முப்பத்திரண்டாயிரம் யோசனையாம் என்பதால் மொத்தம் ஐம்பதினாயிரம் யோசனைத்தூரம் என்பது இப்பாடலில் கூறப்பட்டுள்ள அளவாகும். இம்மேருமலைதான் முன்பு சிவபெருமானால் திரிபுரம் எரிக்க வில்லாகக் கொள்ளப்பட்டது; இம்மேருமலையைத்தான் ஒன்பது கிரகங்களும் வலமாகச் சுற்றி வருகின்றன; இந்த மேருமலையின் மூன்று சிகரங்களைத்தான் வாயுதேவன் பெயர்த்து எறிந்தான்; அதுதான் இப்போது இலங்கை நகர் அமைந்திருக்கும் திரிகூடமலை; விநாயகப்பெருமான் இந்த மேருமலையைத்தான் ஏடாகக்கொண்டு தன் ஒரு தந்தத்தால் வியாசர்சொல்ல மகாபாரதத்தை எழுதினார் என்பதும் நினைவு கூரத்தக்க புராணக் குறிப்புக்கள்.

26. மேருவினைக் கடந்து, அப்பால் ஒன்பதினாயிரம்
உள யோசனையை விட்டால்,
நேர் அணுகும் நீலகிரிதான் இரண்டாயிரம்
உள யோசனையின் நிற்கும்;
மாருதி! மற்று அதற்கு யோசனை
நாலாயிரத்தின் மருந்து வைகும்,
கார்வரையைக் காணுதி! மற்று அதுகாண,
இத்துயர்க்குக் கரையும் காண்டி. (8811)

(விடுதல்-கடத்தல்; அணுகும்-நெருங்கும்; வைகுதல்-தங்கியிருத்தல்; கார்-கரிய; வரை-மலை/மருத்துமலை; காண்டி-காண்பாயாக; நேர்-எதிரே)

''அனுமனே! நீ இப்போது நிற்கும் மேருமலையைக் கடந்து ஒன்பதினாயிரம் யோசனைதூரம் கடந்து சென்றால் உன் எதிரே நீலமலை வந்து நெருங்கி நிற்கும்; அதன் பரப்பு மட்டும் இரண்டாயிரம் யோசனை அளவு விரிந்திருக்கும்; பின்னர் அதற்கும் அப்பால் நாலாயிரம் யோசனை தூரத்தில் நான்கூறுகிற மருந்துகள் விளைந்திருக்கும் கரிய நிறமுடைய மலையைக்காண்பாய்; அதனைக்கண்டுவிட்டால், இங்கு நாம் இவர்களை எல்லாம் துயரக்கடலினின்றும் கரையேற்றிவிடலாம்; அதனையும் நீ காண்பாயாக!'' என்கிறான் சாம்பவன்.

Koviloor Digital Library

இந்தப் பாடலில் மேருமலையினின்றும் பதினைந்தாயிரம் யோசனை தூரத்தில் மருத்துமலை இருக்கிறது என்பது பெறப்படுகிறது; எனவே தென்கடலின் அகலமாகிய நூறுயோசனையையும் சேர்த்தால் இப்போது அனுமன் மருத்துமலைக்குச் செல்லவேண்டிய தொலைவு 85100 யோசனைதூரம் என்பது பெறப்படுகிறது (20+50+15) மேருமலையிலிருந்து நீலகிரி ஒன்பதினாயிரம் யோசனை தொலைவு, அதன் அகலம் இரண்டாயிரம் யோசனை, அங்கிருந்து மருத்துமலை நாலாயிரம் யோசனைதொலைவு என்பதாம். இப்பொழுது அனுமன் கடலைக்கடந்து, இமயமலை, ஏமகூடமலை, நிடதமலை, மேருமலை, நீலகிரிமலை முதலியவற்றைக் கடந்து மருத்துமலையை அடையவேண்டும் என்பது பெறப்படுகிறது. இங்கே குறிக்கப்பெற்றிருக்கின்ற கார்வரையை மந்தரமலை என்றும் கூறுவதுண்டு. கார்வரை என்ற சொல்லுக்கு நேர்பொருளாக மேகம் தங்கப்பெற்ற உயர்ந்தமலை என்றும் பொருள் கூறுவதுண்டு.

27. நால்வகை மருந்துகளின் குணங்கள்.

''மாண்டாரை உய்விக்கும் மருந்து ஒன்றும்,
உடல் வேறு வகிர்களாகக்
கீண்டாலும் பொருந்துவிக்கும் ஒரு மருந்தும்,
படைக்கலங்கள் கிளைப்பது ஒன்றும்,
மீண்டேயும் தம் உருவை அருளுவது ஓர்
மெய்ம்மருந்தும், உள; நீ வீர!
ஆண்டு ஏகி, கொணர்தி'' என, அடையாளத்தொடும்
உரைத்தான் அறிவின் மிக்கான். (8812)

(மாண்டார்-இறந்தவர்; உய்வித்தல்-உயிர்பிழைக்கச்செய்தல்; வகிர்-துண்டுகள்/பிளவுகள்; கீண்டல்-கிழிதல்; கிளைப்பது-வெளிப் படுத்துதல்; மிக்கான்-சிறந்தவன்; பொருந்துவிப்பது-ஒட்டுவது)

அறிவில் மேம்பட்டவனான சாம்பவன் அனுமனை நோக்கி, ''வீரனே! இறந்துபட்டவர்களை உயிர்பிழைத்தெழச் செய்யும் மருந்து ஒன்றும், போரில் உடல் உறுப்புக்கள் பல கூறுகளாகப் பிளக்கப்பட்டிருந்தாலும் அவற்றை ஒன்றோடொன்று சரியாகப் பொருத்தி உயிர் அளிக்கும் மருந்து ஒன்றும், படைக்கலங்கள் உடம்பில் ஆழத் தைத்திருந்தாலும் அவற்றை வருத்தமில்லாதபடி வெளிக்கொண்டு வந்து உடலை நலமாக்கும் ஒரு மருந்தும், உருக்குலைந்த உடலின் பகுதிகளைச் சீராக்கி, முன்போல் நல்லுருவத்தை நிலையாகத் தந்தருளும் உண்மையான ஒரு மருந்தும் அங்கே இருக்கின்றன. நீ விரைவிற் சென்று அவற்றைக் கொண்டுவந்து உதவுவாயாக!'' என்றுகூறி, அவை ஒவ்வொன்றின் அடையாளத்தையும் தனித்தனியாகத் தெரிவித்தான் சாம்பவன்.

Koviloor Digital Library

மாண்டாரை உய்விக்கும் மருந்து மிருத சஞ்சீவினி; உடல்வேறு வகிர்களாகக் கீண்டாலும் பொருத்துவிக்கும் ஒரு மருந்து சந்தானகரணீ; படைக்கலங்கள் கிளைப்பது ஒன்று விசல்யகரணி; மீண்டேயும் தம் உருவை அருளுவது ஓர் மெய்ம்மருந்து சாவரண்ய கரணி; என்கிறது வான்மீகம். இம்மருந்துகளையெல்லாம் இந்த மூத்த வயதிலும் நினைவில் கொண்டு, அவற்றின் இயல்பையும் இடத்தையும் அடையாளங்களையும் தெளிவாக அனுமனுக்கு எடுத்துக் கூறியதால் சாம்பவனைக் கவிஞன் 'அறிவின் மிக்கான்' என்றான் என்க.

28. "இன்னமருந்து ஒரு நான்கும், பயோததியைக்
கலக்கிய ஞான்று எழுந்த; தேவர்
உன்னி அமைத்தனர்; மறைக்கும் எட்டாத
பரஞ்சுடர், இவ்வுலகம் மூன்றும்
தன் இருதாள் உள்ளடக்கிப் பொலி போழ்தின்,
யான் முரசம் சாற்றும் வேலை,
அன்னவை கண்டு உயாவுதலும், தொல்முனிவர்
அவற்று இயல் எற்கு அறிவித்தாரால்!" (8813)

(இன்ன-இத்தகைய; பயோததி-பாற்கடல்; கலக்குதல்-கடைதல்; ஞான்று-போழ்து/சமயம்; உன்னி-நினைத்து; மறை-வேதங்கள்; தாள்-திருவடிகள்; பொலிதல்-விளங்கித்தோன்றுதல்; வேலை-வேளை/சமயம்; உயாவுதல்-உசாவுதல்/கேட்டல்/விசாரித்தல்; தொல்-பழமையான; எற்கு-எனக்கு; இயல்-பண்பு/குணம்; அறிவித்தல்-தெரிவித்தல்)

இத்தகைய நான்கு மருந்துகளும், தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது அமுதம் வெளிப்பட்டபோது, அதனின்றும் எழுந்தன; தேவர்கள் அதன் பயன்கருதி அதனைப் பாதுகாப்பாக இம்மலையில் வேறுபடுத்தி அமைத்தனர்; வேதங்களாலும் எல்லை காணப்படாத சோதி வடிவினனான திருமால் இம்மூவுலகையும் தன் இரு திருவடிகள் கொண்டு உள்ளடக்கிக் கொண்டபோது, உலகம் பொலிவுற்றுத் திகழ்ந்தபோது அந்நிகழ்வை நான் உலகத்தார்க்குப் பறையறிவிக்கச் சென்றபோது, இம்மருந்துகளைக் கண்டு அவற்றின் இயல்புபற்றி அங்கிருந்த பழமையான முனிவர்களிடம் விசாரித்தேன். அவர்கள் எனக்கு இவற்றின் பண்புகள் பற்றித் தெரிவித்தார்கள்'' என்று இந்நான்கு மருந்துகளின் வரலாற்றைக் கூறி முடித்தான் சாம்பவன்.

ஓங்கி உலகளந்த உத்தமன்பேர் பாடப்படுகிறது. திரிவிக்கிரம அவதாரம் பற்றிப்பேசப்படுகிறது.

Koviloor Digital Library

29. "இம்மருந்து காத்து உறையும் தெய்வங்கள்
எண் இலவால்; இரங்கா யார்க்கும்;
நெய்ம்மருங்கு படரகில்லா நெடு நேமிப்
படையும் அவற்றுடனே நிற்கும்;
பொய்ம் மருங்கின் நில்லாதாய்! புரிகின்ற
காரியத்தின் பொதுமை நோக்கி,
கைம்மருங்கு உண்டாம்; நின்னைக் காவாய் என்று;
அப்புறம் போய்க் கரக்கும்" என்றான். (8814)

(எண்இல-கணக்கிலாதன; மருங்கு-பக்கம்; படர்தல்-நெருங்குதல்; நேமி-சக்கரம்; பொதுமை-பொதுப்பயன்; கைகரத்தல்-மறைத்துக் கொள்ளுதல்)

மேலும் சாம்பவன், ''இந்த மருந்துகளைப் பாதுகாத்துக் கொண்டு அங்கேயே தங்கியிருக்கும் தெய்வங்கள் கணக்கில் அடங்காதன; அவை யாரிடமும் இரக்கம் காட்டாதன; நெய்பூசப்பெற்றதும், யாரும் அங்கே நெருங்கிச்செல்ல முடியாததுமான நீண்ட சக்கரப்படையும் அவற்றுடனேயே இருக்கும்; பொய்யின் பக்கமே சேராத மெய்ம்மை யனே! அனும! நீ செய்யப்போகின்ற காரியத்தின் பொதுத்தன்மையை நோக்கியும், அதன் பயனை ஆராய்ந்து பார்த்தும் அத்தெய்வங்கள் அம்மருந்துகளை உன் கைகளிலேயே கொண்டுவந்து சேர்க்கும். பின்னரும் அவற்றை மறவாமல் பாதுகாத்து அப்படியே மீண்டும் கொண்டுவந்து இங்கேயே பாதுகாவலாய் வைத்துவிடு'' என்றுகூறி அப்புறம் சென்று மறைந்து கொள்ளும்'' என்று அறிவுறுத்தினான்.

''பொய்ம்மருங்கின் நில்லாதாய்'' என்று சாம்பவன் அனுமனை அழைப்பது, முன்பும் இதே சாம்பவன் அனுமனை மயேந்திரமலையில் ''நீதியின்நின்றீர்; வாய்மைஅமைந்தீர்'' என்றுகூறியதைநினைவுபடுத்தும். ''பொதுமை'' என்பது அனுமன் செய்யப்போகும் செயலால் இவ்வுலகம் முழுவதற்கும் ஒரு பொதுவான நன்மை ஏற்படப்போகிறது என்பதைக் குறித்தது எனக்கொள்க.

30. அனுமன் பேருருக்கொண்டு செல்லுதல்

"ஈங்கு இதுவே பணியாகில், இறந்தோரும்
பிறந்தோரே; எம்கோற்கு யாதும்
தீங்கு இடையூறு எய்தாமல், தெருட்டுதிர் போய்"
எனச்சொல்லி அவரைத் தீர்ந்தான்;

Koviloor Digital Library

ஓங்கினன் வான் நெடு முகட்டை உற்றனன்;
பொன்தோள் இரண்டும் திசையோடு ஒக்க,
வீங்கின; ஆகாயத்தை விழுங்கினனே என
வளர்ந்தான்; வேதம் போல்வான். (8815)

(ஈங்கு-இவ்விடத்தில்; கோ-தலைவன்/இராமபிரான்; தெருட்டுதல்-தெளிவுபடுத்துதல்; வீங்குதல்-பருத்தல்; பிறந்தோர்-உயிர்பெற்றவர்; தீர்தல்-நீங்குதல்)

''இப்பொழுது நான் செய்யத்தக்க கடமை இதுதான் என்றால், இறந்துகிடப்பவர் அனைவரும் இப்போதே மீண்டும் உயிர்பெற்று எழுந்துவிட்டார்கள் என்றே கொள்க; என்னுடைய தலைவனான இராம பிரானுக்கு எந்தவிதமான தீமையும், இடையூறும் ஏற்பட்டுவிடாமல், அவன்பாற் சென்று அவனைத் தெளிவடையச் செய்யுங்கள்'' என்று சாம்பவனிடமும் வீடணனிடமும் கூறிவிட்டு, அவர்களைவிட்டு நீங்கிப் பேருரு எடுத்துக்கொண்டு வானத்தின் பெரிய எல்லையை அடைந்தான், வேதத்திற்கு ஒப்பான அனுமன். அவனுடைய அழகிய இரண்டு தோள்களும் திசைகளின் எல்லைவரை ஓங்கிப்பருத்தன; அவன் செல்லுவதைப் பார்த்தால் சிறிதும் இடைவெளியின்றி ஆகாயத்தையே விழுங்கி விட்டான்போலத் தோற்றமளித்தான். மேலும்மேலும் வளர்ந்துகொண்டே சென்றான்.

'தீங்கு இடையூறு' என்பது ஒரு பொருட்பன்மொழிபோலத் தோன்றும். எனினும் உடலுக்கு விளையும் துன்பம் தீங்கு என்றும், உள்ளத்திற்கு விளையும் துயரம் இடையூறு என்றும் பொருள் கொள்ளவேண்டும். அனுமனைக் கவிஞன் பல இடங்களில் வேதத்திற்கு ஒப்பானவன் என்று கூறிவருவதைக் காணலாம். 'இறந்தோரும் பிறந்தோரே' என்பது துணிவும், தெளிவும் பற்றிவந்த காலவழுவமைதி.

31. அனுமனின் பேருருவம்

கோளோடு தாரகைகள், கோத்து அமைந்த
மணி ஆரக் கோவை போன்ற;
தோளோடு தோள் அகலம் ஆயிரம் யோசனை
அளவு சொல்ல ஒண்ணா;
தாளோடு தாள் பெயர்க்க இடம் இலது
ஆயின இலங்கை; தடக்கை வீச
நீளோடு திசை போதா; விசைத்து எழுவான்
உருவத்தின் நிலை ஈது அம்மா! (8816)

Koviloor Digital Library

(கோள்கள்-கிரகங்கள்; தாரகை-நட்சத்திரம்; ஆரம்-முத்துமாலை; தட-பெரிய; விசைத்து-வேகம்கொண்டு; கோத்து-இணைத்து; ஒண்ணா-இயலாது; நீள்-நீளம்; தாள்-பாதம்; அம்மா-வியப்புக்குறித்த இடைச் சொல்)

''விண்ணில் விளங்கித் திகழ்கின்ற கிரகங்களோடு, நட்சத்திரங்களும் இணைந்து அமைந்திருந்த தோற்றம், அனுமன் மாணிக்கமும் முத்தும் கலந்து கோத்த மாலை அணிந்திருந்தது போன்றிருந்தது. அனுமனது ஒரு தோளிலிருந்து மறுதோளின் அகலம் ஆயிரம்யோசனை தூரம் என்று சொல்லக்கூட முடியாத அளவுக்கு மேலும் அகன்று விரிந்திருந்தது; அவன் ஊன்றிய ஒரு காலை எடுத்து மறுகாலைப் பெயர்த்து வைக்க இலங்கையில் இடமில்லாது போயிற்று. அவனது பெரிய கைகளை வீசிச்செல்லுவதற்கு திக்குகளின் நீளம் போதாததாயிற்று. மருத்துமலை கொணர்வதற்காக வேகத்துடன் எழுந்த அனுமனது பேருருவின் தன்மை இதுதான்'' என்கிறான் கவிஞன்.

இப்பாடல் கவிக்கூற்று. விண்ணில் விளங்குகின்ற நட்சத்திர மண்டலத் திற்கும் மேலே உயர்ந்து விளங்குகின்ற அனுமனின் தோற்றம், அந்த கிரகங்களும், நட்சத்திரங்களும் முத்தும் மணியும் சேர்த்துக் கட்டப்பட்ட மாலையை அவன் கழுத்தில் அணிந்திருப்பது போன்றிருக்கிறது என்றும், அவனுடைய தோளின் அகலம் ஆயிரம் யோசனைக்கு மேற்பட்டது என்றும், அவனுடைய கைகளை வீசி நடக்க திசைகளின் நீளம்போதாது என்றும்; அனுமனுடைய உயரம், அகலம், நீளம் முதலியவற்றை விளக்குகிறான் கவிஞன். ஓரடி வைத்து மற்றடிவைக்க இலங்கையில் இடமில்லாதுபோயிற்று என்பது, திருமாலின் ஓங்கி உலகளந்த வரலாற்றை நினைவுபடுத்துவதை உணர்க. கிரகங்களை முத்துக்கும், விண்மீன்களை மாணிக்கக் கற்களுக்கும் உவமை கூறினார் என்க. ''மணி ஆரக்கோவை'' என்பது முத்தும் மாணிக்கமும் கலந்து கோத்தமாலை என்ற அழகிய பொருளைத் தரும். பொதுவாக கிரகங்கள் என்று கூறும்பொழுது நாம் ஒன்பது கிரகங்கள் என்றுதான் எண்ணுகிறோம். ஆனால் இராகுவும், கேதுவும் ஒளிக்கிரகங்கள் அல்ல என்றும் கிரகங்கள் என்பது மற்ற ஏழு கிரகங்களையே குறிக்கும் என்பது ஒரு சாரார் கொள்கை.

32. அனுமன் விரைந்து எழுந்த தன்மை

வால் விசைத்து, கைந்நிமிர்த்து, வாயினையும்
சிறிது அகல வகுத்து, மானக்
கால் நிலத்தினிடை ஊன்றி, உரம் நெருக்கி,
கழுத்தினையும் சுருக்கிக் காட்டி,

Koviloor Digital Library

தோல் மயிர்க் குந்தளம் சிலிர்ப்ப, விசைத்து எழுந்தான்,
அவ்விலங்கை துளங்கிச் சூழ்ந்த
வேலையில் புக்கு அழுந்தியது ஓர் மரக்கலம்போல்
சுரித்து உலைய, விசையத் தோளான். (8817)

(விசயம்-விஜயம்/வெற்றி; நிமிர்தல்-நீட்டுதல்/உயர்தல்; அகல்தல்-விரிதல்; வகுத்தல்-செய்துகொள்ளுதல்; மானம்-பெருமை; உரம்-மார்பு; குந்தளம்-மயிர்க்கூச்சு; துளங்குதல்-அசைவுறுதல்; வேலை-கடல்; மரக்கலம்-கப்பல்; சுரித்து-சுழன்று; உலைதல்-வருந்துதல்; விசை-வேகம்/விரைவு; சிலிர்த்தல்-மலர்தல்)

வெற்றிபொருந்திய தோள்களையுடைய அனுமன், இப்போது தனது வாலைச் சற்று வேகமாக வளைத்துக்கொண்டு, கைகளை உயரே நீட்டிக்கொண்டு, வாயினையும் சற்று அகலமாகத் திறந்துகொண்டு, தனது பெருமைபொருந்திய திருவடிகளைத் தரையில் ஊன்றிக்கொண்டு, மார்பை அகல விரித்துக்கொண்டு, கழுத்தைச் சற்று சுருக்கிக் காண்பித்துக் கொண்டு, உடம்பிலுள்ள தோல்களில் உள்ள உரோமகுஞ்சங்கள் மயிர்க்கூச்செறியும்படி விரைவாகவும் வேகமாகவும் எழுந்தான். அப்போது அவ்விலங்கை மாநகரம் சற்று அசைந்து, தன்னைச் சுற்றிச் சூழ்ந்துள்ள கடலின் கண் ஒரு மரக்கலம் அழுந்தியதுபோல சுழன்று வருத்தமுறலானது.

அனுமனது வால், கைகள், வாய், கால்கள், மார்பு, கழுத்து, உரோமங்கள்முதலியவற்றின்செயல்பாடுகளைக்கவிஞன்படம்பிடித்துக் காட்டுகிறான். முன்பு சீதாதேவியைத் தேடுவதற்காக மயேந்திரமலையி னின்றும் பேருருவம் கொண்டு கிளம்பும்போது கூறியவற்றையும் இங்கு ஒப்பிட்டு நோக்குக. அனுமன் விசைத்து எழுந்ததால் துளங்கிய இலங்கைக்குக் கடலில் ஓர் மரக்கலம் புகுந்து அழுந்தியது உவமை.

33. கிழிந்தன மாமழைக் குலங்கள்; கீண்டது நீண்டு
அகல்வேலை; கிழக்கும் மேற்கும்
பொழிந்தன மீன்; தொடர்ந்து எழுந்த பொருப்பு இனமும்,
தருக்குலமும், பிறவும், பொங்கி;
அழிந்தன வானவர் மானம், ஆகாயத்து
இடையன பேர் அசனி என்ன,
விழுந்தன, நீர்க்கடல் அழுந்த; ஏறின மேல்
கீறின போய்த் திசைகள் எல்லாம். (8818)

(மழை-மேகம்; வேலை-கடல்; கீண்டது-கிழிந்தது/பிரிந்துபோனது/பிளவுபட்டது; மீன்-நட்சத்திரங்கள்; பொழிதல்-உதிர்தல்; பொருப்பு-மலைகள்; தரு-மரம்; பொங்குதல்-கிளர்தல்; மானம்-விமானம்; அசனி-பேரிடி; கீறுதல்-கிழித்தல்)

Koviloor Digital Library

அனுமன் பேருருக்கொண்டு எழுந்த வேகத்தால், மேகக்கூட்டங்கள் எல்லாம் பிரிந்து ஒவ்வொரு திசைக்கும் சென்றன; நீண்டு அகன்று பரந்த கடல், கிழக்கும் மேற்குமாய்ப் பிளவுபட்டுப்போனது; விண்ணிலிருந்து நட்சத்திரங்கள் உதிர்ந்து கொட்டின; மலைக்கூட்டங்களும், மரத்தொகுதிகளும் இன்னும் பிறவும், கிளர்ச்சியுற்று அனுமனைத் தொடர்ந்து செல்வனவாயின; தேவர்களின் விமானம் ஆகாயத்தின் நடுவில் பேரிடிபோல் இடித்துக்கொண்டு கடலில் விழுந்து அழிந்துபோனது; அது கடலில் விழுந்த வேகத்தில் மேலெழுந்த கடல்நீர், நாலாத்திசைகளிலும் போய்த் திசைகளையெல்லாம் கிழிக்கலானது.

கிழிந்தன, கீண்டது, பொழிந்தன, எழுந்தன, அழிந்தன; விழுந்தன, அழுந்தின, ஏறின, கீறின என்ற சொல்லாட்சியை நோக்குக. முன்பு மயேந்திரமலையினின்றும் அனுமன் விசைத்து எழுந்தபோதும் இவ்வாறே கூறப்பட்டிருப்பதையும் இங்கு நினைவுகூர்க.

34. பாய்ந்தனன் அங்கு அப்பொழுதத்தே; பருவரைகள்
எனைப் பலவும் வடபாகத்துச்
சாய்ந்தன; பேருடல் பிறந்த சண்ட
மாருதம் வீச, தாதை சால
ஓய்ந்தனன் என்று உரைசெய்ய, வீசும்பூடு
படர்கின்றான், உரு வேகத்தால்,
காய்ந்தன வேலைகள்; மேகம் கரிந்தன; வெந்து
எரிந்த பெரும்கானம் எல்லாம். (8819)

(சண்டமாருதம்-பெருங்காற்று; பிறத்தல்-தோன்றுதல்; பாகம்-பக்கம்; தாதை-தந்தை/வாயுதேவன்; சால-மிகவும்; விசும்பு-ஆகாயம்; காய்தல்-வறண்டுபோதல்; கானம்-காடுகள்; படர்தல்-செல்லுதல்; ஓய்தல்-சுருங்குதல்/ஒடுங்குதல்/தளர்தல்)

அப்பொழுதே அனுமன் பாய்ந்தான். அவன் பாய்ந்த வேகத்தில் சுற்றியிருந்த பருத்த மலைகள் என்று கூறப்படும் எல்லாமும் வடக்குப் பக்கமாகச் சாயலாயின; அவனுடைய பேருடலில் இருந்து தோன்றிய பெருங்காற்றால், அவனது தந்தையான வாயுதேவன் மிகவும் தளர்ந்து போனான்போலும் என்று கண்டவர்கள் கூறுமாறு அவன் ஆகாயத்தினிடையே பறந்து செல்லுகின்றான். அந்த வேகத்தால் எழுந்த வெப்பத்தால் கடல்கள் எல்லாம் நீர்வறண்டு காய்ந்துபோயின; மேகங்கள் கரிந்து தீய்ந்துபோயின; பெரிய காடுகள் எல்லாம் வெப்பத்தால் வெந்து எரிந்து போயின.

அவன் கிளம்பியபோது எழுந்தது பெருங்காற்று மட்டுமல்ல வெப்பமும்கூட என்பது புலப்படுத்தப்படுகிறது. வேகத்தில் தந்தையைத் தனயன் மிஞ்சினான் என்பது பெறப்படுகிறது. கடல்கள் காய்ந்தன;

Koviloor Digital Library

மேகங்கள் கரிந்தன; கானங்கள் வெந்து எரிந்தன; என்ற இடத்துச் சொல்நயம் உணர்க.

35. தேவர்கள் மகிழ்தல்

கடல் முன்னே நிமிர்ந்துஓட, கால் பின்னே
தொடர்ந்து ஓட, கடிதின் செல்வான்,
உடல் முன்னே செல, உள்ளம் கடைக்குழையாய்ச்
செல, செல்வான் உருவை நோக்கி,
அடல் முன்னே தொடங்கிய நாள், ஆழ்கடல் சூழ்
இலங்கையெனும் அரக்கர் வாழும்
திடல் முந்நீர்க்கிடை அறிந்தான்; 'முரிந்தது நம்
துயர்' என்றார், தேவரெல்லாம். (8820)

(கடிதின்-விரைந்து; செல்வான்-செல்லும்பொருட்டு; கடைக்குழை-கடைசி; அடல்-போர்த்தொழில்; திடல்-தீவு; முந்நீர்-கடல்)

அனுமன் செல்லும் வேகத்தால் கடல் அவனை முந்திச் செல்லுவது போலவும், அவனது கால்கள் அந்தக் கடலைத் தொடர்ந்து காற்றுப்போல வேகமாக ஓடுவதுபோலவும், விரைவாகச் செல்லுகின்ற அனுமனின் உடல் முன்னே செல்லுகிறது. ஆனால் அவன் உள்ளம் மட்டும் சற்று வேகம் குறைந்து பின்னணிப் படைபோலச் செல்லுகிறது; அந்த உருவத்தைப் பார்த்த தேவர்கள் எல்லாம், இவ்வனுமன் முன்பு இலங்கை வந்து அரக்கர்களைக் கொல்லும் போர்த்தொழிலைத் தொடங்கியபோதே இவர்கள் வாழ்கின்ற ஆழ்ந்த கடலால் சூழப்பெற்ற இலங்கை மாநகரத்தை இந்தக்கடலினுல் வீழ்த்தியிருக்கவேண்டும். எனினும் இப்போது நம்துயர் தீர்ந்தது'' என்று மகிழ்ந்தார்கள்.

இறுதி இரண்டு அடிகளிலும் பாடவேறுபாடு காணப்படுகிறது. எனினும் கம்பன் கழகச் செம்பதிப்பில் காணப்படும் அடிகளுக்குப் பொருள் பொருந்திவாராதது காண்க. எனவே எல்லா உரைநூல்களும் பாடவேறுபாட்டுக்குரிய பொருளையே தந்திருக்கின்றன. எனினும் இங்கே கம்பன்கழகச் செம்பதிப்புக்குரிய மூலபாடத்திற்கே பொருள் தரப்பட்டிருக்கிறது. அறிஞர்கள் ஆய்ந்து தேவைப்பட்ட திருத்தங்களைக் கொணர்தல் நலம்பயக்கும்.

'கடைக்குழை' என்பது கடைக்கூழை' என்பதன் திரிபு எனக்கொள்க. பின்னணிப்படை, இறுதிவரிசை எனப் பொருள்படும். முன்பாடலில் 'தாதை சால ஓய்ந்தனன்' என்று வாயுவேகத்தைக் குறித்த கவிஞன், இங்கே 'உடல் முன்னே செல, உள்ளம் கடைக்குழையாய்ச்செல' என மனோவேகத்தைக் குறித்தது காண்க. முதலடியில் முதற்சொல் 'கடல்' என்றே எல்லாப் பிரதிகளிலும் காணப்படுகிறது. எனினும் அண்ணா

Koviloor Digital Library

மலைப்பல்கலைக்கழகப்பதிப்பு 'கடன்' என்று கொண்டிருக்கிறது. எனின், மருத்துமலையை விரைவில் கொணரவேண்டும் என்ற தன் கடமையைக் கருதி விரைந்து சென்றான் என்று உரை வகுக்கப்பெற்றிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழப் பதிப்பு பல வேறுபாடுகளை ஆழ்ந்து நோக்கிய பின்னர் 'கடல்' என்ற சொல்லை 'கடன்' என்று பதிப்பித்திருக்கிறது என்பது நினைவிற்கொள்ளத்தகும்.

36. மேகத்தின் பதம் கடந்து, வெங்கதிரும்
தண் கதிரும் விரைவிற் செல்லும்
மாகத்தின் நெறிக்கு அப்பால், வானமீன்
குலம் விளங்கும் வரம்பு நீங்கி,
போகத்தின் நெறி கடந்தார் புகலிடங்கள்
பிற்பட்டப்போய், "பூவின் வந்த
ஏகத்து அந்தணன் இருக்கை இனிச் சேய்த்து
அன்றாம்" என்ன, எழுந்து சென்றான். (8821)

(பதம்-இடம்/மண்டலம்; கதிர்-கிரணங்கள்; தண்-குளிர்ந்த; மாகம்-ஆகாயம்; மாகநெறி-வான்வழி; வானமீன்-நட்சத்திரங்கள்/ விண்மீன்; குலம்-கூட்டம்; வரம்பு-எல்லை; போகம்-புணர்ச்சி; புகலிடம்-இருப்பிடம்/தேவலோகம்; பூ-மலர்/தாமரைமலர்; ஏகம்-ஒன்று/ ஒருவன்/ஒப்பற்றவன்; இருக்கை-இருப்பிடம்/சத்தியலோகம்; சேய்த்து-சேய்மையது/தொலைவானது)

அனுமன், மேகத்தின் இருக்கையாகிய மேகமண்டலத்தைக் கடந்து, வெள்ளிய வெப்பம் மிகுந்த கிரணங்ளை வீசும் சூரிய மண்டலத்தையும், குளிர்ச்சி பொருந்திய கிரணங்களைப் பரப்பும் சந்திரமண்டலத்தையும் விரைவிற் சென்று கடந்து, ஆகாயத்தின் வழிக்கு அப்பால் இருக்கின்ற நட்சத்திர மண்டலத்தின் எல்லையையும் கடந்து, பின்னர், உலகியல் இன்பதுன்பங்களாகிய போகநெறி தவிர்த்து யோகநெறியில் வாழ்கின்ற தேவர்களின் இருப்பிடமாகிய தவலோகமும் பிறபட்டுப்போகும்படி முற்சென்று, திருமாலின் நாபிக்கமலத்தினின்றும் தோன்றியவனான ஒப்பற்ற பிரமதேவனின் இருப்பிடமாகிய சத்தியலோகம் வெகு தொலைவில் இல்லை, அண்மையில்தான் இருக்கிறது என்று கருதி, இன்னும் வேகமாகச் செல்லலானான்.

வானுலகத்து வரைபடம் தருகிறான் கவிஞன். அனுமன் மேகமண்டலம், சூரியமண்டலம், சந்திரமண்டலம், நட்சத்திரமண்டலம், தவலோகம் இவற்றையெல்லாம் கடந்துபோய் இப்பொழுது சத்தியலோகம் நெருங்கியிருக்கிறான் என்பதறிக. 'போகம்' என்பது மகளிரோடு கலந்து துய்க்கும் போகம் என்கிறது ஒரு உரைநூல். போகம் என்பது பொதுவாக உலகியல் இன்பங்களைக் குறிக்கும் என்க. அது

Koviloor Digital Library

மகளிராலும் கிடைக்கலாம், செல்வம், புகழ், கல்வி, வீரம் முதலியவற்றாலும் கிடைக்கலாம் என்பதும் கருதப்படவேண்டும். இதே சொல்லுக்கு மற்றொரு உரைநூல் ''இந்திராதி போகங்களை விழைந்து அதற்கு வேண்டிய வேள்விகளைப் புரிவது'' என்று கூறுகிறது. சத்தியலோகம் என்பது பூலோக வரிசையில் மேலே ஏழாவதாக வைத்துக் கூறப்படுவதாகும்.

37. வான நாட்டு உறைகின்றார் "வயக்கலுழன்
வல்விசையால், மாயன் வைகும்
தான நாட்டு எழுகின்றான்" என்று உரைத்தார்
சிலர்; சிலர்கள், "விரிஞ்சன்தான் தன்
ஏனை நாட்டு எழுகின்றான் என்று உரைத்தார்;
சிலர் சிலர்கள், "ஈசன் அல்லால்,
போன நாட்டிடைப் போக வல்லரோ?
இவன் முக்கண் புனிதன்" என்றார். (8822)

(வானநாடு-விண்ணுலகு; வய-வலிமை; கலுழன்-கருடன்; மாயன்-திருமால்; வைகுதல்-தங்கியிருத்தல்; தானநாடு-வைகுண்டம்; விரிஞ்சன்-பிரமதேவன்; ஏனைநாடு-மாறான வேறுநாடு/பிறநாடுகள்; ஈசன்-சிவபெருமான்; புனிதன்-தூயவன்)

விண்ணுலகில் உறைபவர்களிற் சிலர் இவன் எழுந்து வருகின்ற மிகுந்த வேகத்தைப் பார்த்து ''மிக்க வலிமையுடைய கருடன்தான் தன்னுடைய வேகத்தால், திருமால் தங்கியிருக்கும் இடமான வைகுந்த நாட்டுக்குச் செல்லுகிறான் போலும்'' என்றார்கள்; வேறு சிலர் ''பிரமதேவன்தான் தன்னுடைய நாடான சத்தியலோகத்தை விட்டு வேறுஒரு நாடான பிரம்மலோகத்திற்குச் செல்லுகின்றான்போலும்'' என்றார்கள்; இன்னும்சிலர் ''சிவபெருமானைத் தவிர வேறுயாரால் இத்தகைய வேகத்துடன் மிக உயர்ந்த நாட்டிற்குச் செல்லமுடியும்? எனவே இவன் மூன்று கண்களையுடைய தூயவனான சிவபெருமான் தான்'' என்று கூறினார்கள்.

இங்கே அனுமன் திருமாலின் வாகனமாகிய பெரியதிருவடி கலுழனுக்கும், பிரமதேவனுக்கும், சிவபெருமானுக்கும் ஒப்பாகப் பேசப்படுகிறான் என்பது கருதுக. 'தானம்' என்பது ஸ்தானம் என்ற வடசொல்லின்திரிபாகக்கொண்டு இடம் என்றபொருளில் மாயன்வைகும் இடம்வைகுந்தம் எனப் பொருள் கொள்ளப்பட்டது. 'போனநாடு' என்பது போனகநாடு என்பதன் இடைக்குறை என்றும், போனகம் என்பது வளத்தையும் மகிழ்ச்சியையும், போகத்தையும் குறிக்கும். எனவே இது மேலுலகத்தைக் குறிக்கும் என்றும் பொருள் கூறுவதுண்டு. போனநாடு என்பது மிகச் சேய்மையில் இருக்கின்ற அகன்ற, உயர்ந்த, பரந்த மேல்உலகத்தைக் குறிக்கும் எனக்கொள்க.

Koviloor Digital Library

38. "வேண்டு உருவம் கொண்டு எழுந்து
விளையாடுகின்றான்; மெய்வேதம் நான்கும்,
தீண்டு உருவன் அல்லாத திருமாலே
இவன்" என்றார், "தெரிய நோக்கிக்
காண்டும்" என இமைப்பதன்முன், கட்புலம்
கடந்து அகலும்; இன்னும் காண்மின்;
"மீண்டு வரும் தரம் அல்லான் வீட்டுலகம்
புகும்" என்றார், மேன்மேல் உள்ளார். (8823)

(தீண்டுதல்-எட்டுதல்; தெரிய-தெளிவாக; காண்மின்-பார்ப்பீர்களாக; புகுதல்-போதல்; தரம்-தன்மை; வீட்டுலகம்-மோட்சம்/பரமபதம்)

ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கப்பெற்றிருக்கும் உலகத்தில் உள்ளவர்கள், ''இவன், தான் வேண்டிய விரும்பிய உருவத்தை ஏற்றுக் கொள்ளும் தன்மைகொண்டு விளையாடுகின்றவனான, உண்மையான வேதங்கள் நான்கும்கூட எட்டுதற்கரியதான உருவம் இல்லாதவனான திருமாலே ஆவான் என்று உறுதியாகக் கூறினார்கள்; ''சரி இவனை நன்கு கூர்ந்து பார்த்துத் தெளிவடைவோம்'' என்றுகருதி, அவனைப் பார்ப்பதற்கு முன்பே ஒருநொடிப் பொழுதிற்குள், கண்திறந்து மூடுவதற்குள் கட்புலனுக்குத் தெரியாமல் அகன்று போய்விடுகிறான். இன்னும் பாருங்கள், இவன் போனால் திரும்பிவரும் தன்மையன் அல்லன். மோட்சலோகத்திற்கே சென்றுவிடுவான்'' என்று கூறினார்கள்.

'வேண்டு உருவம் கொண்டு எழுந்து விளையாடுதல்' என்பது இறைத்தன்மை; ''அலகிலா விளையாட்டுடையார்'' என்பது பாயிரம். வேதங்களுக்கும் எட்டுதற்கரியவன் திருமால் என்பதைக் குறிக்க ''மெய்வேதம் நான்கும் தீண்டு உருவன் அல்லாத திருமாலே இவன் என்றார்'' என்க. 'மேன்மேல் உள்ளார்' என்பது மேல் ஏழு உலகங்களில் சஞ்சரிப்பவர்களைக் குறிக்கும் எனக்கொள்க. வேதப்பொருள்கள் எப்போதும் உண்மையானவை; வேதநெறி என்றும் மாறுபடாதது என்பதைக் குறிக்க, 'மெய்வேதம்' என்றார் என்க. 'மீண்டு வரும் தரம் அல்லா வீட்டுலகம்' என்பது 'மற்றீண்டு வாரா நெறி' என்ற குறள்-356ஐ அடியொற்றியது என்க. முன்பாடலில் வான நாட்டவர் கருத்துக்களைக் கூறிய கவிஞன், இந்தச் செய்யுளில் வானோர்க்கும் மேல் உள்ள நாட்டினரின் கருத்துக்களைக் கூறினான் என்க. அதுதான் 'மேன்மேல் உள்ளார்' எனப்பட்டது என்க. எல்லா உலகங்களுக்கும் மேலான உயர்ந்த நிலையில் இருப்பது வீட்டுலகம்-மோட்சம் என்பதாம்.

Koviloor Digital Library

39. "உரு" என்றார் சிலர் சிலர்கள்; 'ஒளி' என்றார்
சிலர் சிலர்கள்; "ஒளிரும் மேனி
அரு" என்றார் சிலர் சிலர்கள், "அண்டத்துக்கு
அப்புறம் நின்று, உலகம் ஆக்கும்
கரு" என்றார் சிலர் சிலர்கள், "மற்று" என்றார்
சிலர் சிலர்கள்; கடலைத் தாவிச்
செரு வென்றான் நிலையொன்றும் தெரியகிலார்,
உலகனைத்தும் தெரியும் செல்வர். (8824)

(செல்வர்-பெரியோர்; செரு-போர்; ஒளிர்தல்-விளக்கமுற்றுத் திகழ்தல்; உரு-உருவப்பொருள்; ஆக்குதல்-படைத்தல்; கரு-நிமித்த காரணம்/காரணப்பொருள்/மூலப்பொருள்; நிலை-தன்மை; மற்று-வேறுஒன்று).

அனுமன் விரைந்து செல்லுவதைக் கண்ட, இவ்வுலகனைத்தையும் நன்கு புரிந்து வைத்துக் கொண்டிருப்பவர்களாகிய ஞானமுடைய பெரியோர்கள், அனுமன் இலங்கை சென்று போரிட்டு, அதில் வெற்றிகண்டவன் என்பதையும், அவன் கடலைத் தாவிச்செல்லும் ஆற்றல் உடையவன் என்பதையும் உணராதவர்களாக, ஒளிவீசிக்கொண்டு செல்லும் அவன் உடலைப்பார்த்து இது ஏதோ ஒரு 'உருவப்பொருள்' என்று கூறினார்கள்; வேறுசிலர் அதை மறுத்து இது உருவமன்று "இது ஏதோ ஒரு ஒளிமயமானபொருள் என்றார்கள்; இன்னும் சிலர் இவ்விரண்டையும் மறுத்து, இது உருவமில்லாத அருவப்பொருள் போலத் தோன்றுகிறது என்றார்கள்; வேறுசிலர் இவன் அண்ட கோளத்திற்கு அப்பால் இருந்துகொண்டு இவ்வுலகத்தைப் படைப்பதற்கு மூலகாரணனாய் விளங்குபவன்போலும்! என்றார்கள்; இன்னும் சிலர் இவன் வேறு ஏதோ ஒருபொருள் போலவும் தோன்றுகிறான்" என்றும் கூறினார்கள்.

பொதுவாக இறைவனைப் பற்றிக் கூறும்பொழுதுதான் அவன் உருவமானவன், ஒளிமயமானவன், அருவமானவன், அருவஉருவமானவன் என்று கூறுவர் சான்றோர். இங்கே அனுமன் மனோவேகத்தைக் காட்டிலும் விரைந்து செல்லும் தன்மையை நோக்கி அனுமனை இவ்வாறு தமக்குத் தெரிந்த வகைகளிலெல்லாம் கண்டு கூறினார்கள் என்பதாம். கண்ணுக்குப் புலப்படுவதால் 'உருவம்' என்றும், சூட்சும் நிலையில் ஒளிமயமானவன் என்றும், கண்ணில்படாமல், ஆனால் காற்றுப்படும்போது உருவமற்ற அருவம் என்றும் கூறினர் என்க. ஒவ்வொரு சாரார்க்கும் ஒவ்வொரு வகையாகத் தோன்றினான் என்பதாம்.

Koviloor Digital Library

40. வாச நாள் மலரோன் தன் உலகு அளவும் நிமிர்ந்தன, மேல் வானம் ஆன
காசம் ஆயின எல்லாம் கரந்த தனது உருவிடையே கனகத் தோள்கள்
வீச, வான்முகடு உரிஞ்ச, விசைத்து எழுவான் உடல் பிறந்த முழக்கம் விம்ம,
ஆசை காவலர் தலைகள் பொதிர் எறிந்தார்; விதிர் எறிந்தது அண்டகோளம். (8825)

(வாசம்-நறுமணம்; நாள்-அன்றலர்ந்த; காசம்-ஆகாசம்; கரத்தல்-மறைத்தல்; கனகம்-பொன்; முகடு-உச்சி; உரிஞ்சுதல்-தேய்த்தல்/தீண்டுதல்; விசைத்து-வேகமாக; விம்முதல்-மிகுதல்; ஆசை-திசைகள்; பொதிர்எறிதல்-நடுக்கம்கொள்ளுதல்; நிமிர்தல்-உயர்தல்; முழக்கம்-பேரொலி)

நறுமணம்மிக்க, அன்றலர்ந்த தாமரைமலரில் தோன்றியவனான பிரமதேவனின் உலகமாகிய சத்தியலோகம் வரையிலும் உயர்ந்ததும் அதற்கும்மேலே வானமாகிய ஆகாயத்தையெல்லாம் முழுவதும் மறைக்கக்கூடியதுமானதனது உருவத்தில் பொருந்தியுள்ள பொன்போன்ற ஒளிவீசும் தோள்கள், வானத்தின் உச்சியைச் சென்று தீண்டும்படி வீசி, வேகம்கொண்டு எழுகின்றவனாகிய அனுமன் உடலினின்றும் தோன்றிய பேரொலியானது மிகுதியாகக் கேட்டதனால், எட்டுத்திசைகளிலும் காவல்காத்துக் கொண்டிருக்கும் திக்கு பாலகர்கள், தம் தலைகள் நடுக்கமுறப் பெற்றனர்; அண்டகோளமாகிய உருண்டையும் விதிர்விதிர்ப்பு எய்தியது.

'காசம்' என்பது 'ஆகாசம்' என்பதன் முதற்குறை. ஆகாயம் என்று பொருள்படும்.

41. தொடுத்த நாள்மாலை வானோர், முனிவரே முதல தொல்லோர்,
அடுத்த நான்மறைகள் ஓதி வாழ்த்தலால், அவுணர் வேந்தன்
கொடுத்த நாள், அளந்துகொண்ட குறளனார் குறிய பாதம்
எடுத்த நாள் ஒத்தது, அண்ணல் எழுந்தநாள் உலகுக்கு எல்லாம். (8826)

(அண்ணல்-பெருமைமிக்கவன்/அனுமன்; நாள்-அன்றலர்ந்த/புதிய; வானோர்-தேவர்கள்; தொல்லோர்-பழமையானவர்கள்/பெரியோர்கள்; அவுணர்வேந்தன்-மாபலிச் சக்கரவர்த்தி; குறளனார்-வாமனமூர்த்தி/திருமால்; அடுத்தல்-பொருந்துதல்)

பெருமைக்குரியவனான அனுமன் இவ்வாறு வேகம்கொண்டு எழுந்த நாள், இந்த உலகத்தார்க்கெல்லாம் எப்படியிருந்தது? முன்பு அன்றலர்ந்த மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலைகளை அணிந்திருக்கும் தேவர்களும் மற்றும் முனிவர்களும் ஆகிய பெரியோர்கள் எல்லாம் தமக்கே உரித்தான நான்கு வேதங்களையும் கூறி வாழ்த்துரைக்க, அவுணர்களின் சக்கரவர்த்தி

Koviloor Digital Library

யாகிய மாபலி, மூன்றடி மண்ணைநீரில் வார்த்துக்கொடுத்தபோது, குறுகிய பாதம் உடைய வாமனனாகிய திருமால், பேருருவம் கொண்டு தனது ஈரடியால் இம்மூவுலகையும் அளந்து எடுத்துக்கொண்ட நாளை ஒத்திருந்தது.

திருமாலின் வாமன அவதாரம் பேசப்படுகிறது. அன்று குறள் வடிவினனான வாமனன் எப்படிப் பேருருக்கொண்டு இவ்வுலகளந் தானோ, அதுபோல இன்று இவ்வனுமன் முன்பு குறுகிய வடிவம் கொண்டிருந்து, இப்போது பேருருக்கொண்டு விரைந்துசெல்லுகிறான் என்பதாம். 'தொல்லோர்' என்பது பழமையானவர்கள் என்ற பொருளில் பெரியோர்களைக் குறிக்கும். இங்கு அனுமன் திருமாலுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறான்.

42. தேவரும் முனிவர் தாமும், சித்தரும் தெரிவைமாரும்,
மூவகை உலகினுள்ளார், உவகையால் தொடர்ந்து மொய்த்தார்;
தூவின மணியும் சாந்தும், சுண்ணமும் மலரும் தொத்த,
பூவுடை அமரர் தெய்வத் தரு என, விசும்பில் போனான். (8827)

(தெரிவையர்-பெண்டிர்; மொய்த்தல்-நெருங்குதல்; சாந்து-சந்தனம்; தெய்வத்தரு-கற்பகமரம்; விசும்பு-ஆகாயம்; தொத்துதல்-ஒட்டிக் கொள்ளுதல்; சுண்ணம்-நறுமணப்பொடி)

அனுமன் அவ்வாறு எழுந்தபோது ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற தேவர்களும், முனிவர்களும், சித்தர்களும், அவரவர்களுடைய தேவி மார்களும், மேலும் மூன்றுவகைப்பட்ட உலகத்தில் உள்ள எல்லோரும் மிக்க மகிழ்ச்சியால் அவனைத் தொடர்ந்துசென்று நெருங்கினார்கள்; அவர்கள் இரத்தினக் கற்களையும், சந்தனம், நறுமணம்மிக்க வாசனைப்பொடிகளையும், மலர்களையும் அவன்மீது தூவி ஆசிகூறினர்; அந்த மலர்களும் மற்றவைகளும் அனுமன் மேனியில்உள்ள உரோமங் களில் ஒட்டிக்கொண்டன. இப்போது அவன் பார்ப்பவர்கள் கண்களுக்கு தேவலோகத்தில் உள்ள தெய்வத்தன்மை வாய்ந்த மலர்களையுடைய கற்பகத்தருப் போலத் தோற்றமளித்தான். அத்தோற்றத்துடனேயே ஆகாயத்தில் பறந்துசென்றான்.

'தெரிவைமார்' என்றசொல் வயது குறித்து வந்ததல்ல; மகளிர் என்ற பொதுப்பொருளில் அவரவர்களின் மனைவியரைக் குறித்தது எனக்கொள்க. தேவர்கள் முப்பத்து முக்கோடியினர் என்பது நாம் அறிந்ததே; மனத்தை ஒருநிலைப்படுத்தும் இயல்புடைய மனசீலரே முனிவர் எனப்படுவர்; சித்தர் என்பவர் பதினெட்டுவகை தேவ கணங்களுள் ஒரு பிரிவினர்.

Koviloor Digital Library

43. கயிலைமலை அடைந்து சிவபெருமானை வணங்குதல்

இமயமால் வரையை உற்றான்; அங்குஉள இமைப்பிலோரும்,
கமையுடை முனிவர், மற்றும் அறன் நெறி கலந்தோர், எல்லாம்
"அமைக, நின் கருமம்!" என்று வாழ்த்தினர்; அதனுக்கு அப்பால்,
உமையொருபாகன் வைகும் கயிலை கண்டு உவகை உற்றான்.(8828)

(வரை-மலை; கமை-பொறுமை; கலத்தல்-வாழ்தல்; கருமம்-காரியம்; அமைதல்-நிறைவேற்றுதல்)

அனுமன் இப்போது இமயமலையாகிய பெரியமலையை அடைந்தான்; அங்கு இருக்கின்ற இமைப்பிலா நாட்டம் கொண்ட தேவர்களும், பொறுமைசான்ற முனிவர்களும், மற்றும் அறநெறியில் வழுவாது ஒழுகும் இயல்புடையோர் எல்லோரும், ''நீ மேற்கொண்ட காரியம் இனிது நிறைவேறுவதாக!'' என்று வாழ்த்தினார்கள்; அதன்பின் அனுமன் உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையைக் கண்டு மிக்க மகிழ்வெய்தினான்.

சிவபெருமான் இடப்பாகத்தில் உமையம்மை வீற்றிருக்கிறாள் என்பது நமக்குத்தெரியும். வலப்பாகம் எப்படி என்பதை வில்லிபாரதம் கூறுகிறது கேளுங்கள். ''வலப்பாகம் செழும்வளச் சோதிஎன்ன, வான்நீலச் சோதியென்ன, மற்றைப்பாகம் கலப்பான திருமேனி'' என்பது வில்லிபாரதம். கயிலைமலை என்பது இமயமலையின் தொடர்ச்சியாகும்.

44. வடகுண திசையில் தோன்றும் மழுவலான் ஆண்டு வைகும்
தடவரை அதனை நோக்கித் தாமரைக் கைகள் கூப்பி,
படர்குவான் தன்னை, அன்பால் பரமனும் விசும்பில் பார்த்தான்;
தடமுலை உமைக்குக் காட்டி, "வாயுவின் தனயன்" என்றான். (8829)

(மழுவலான்-மழுவாயுதத்தை உடைய சிவபெருமான்; குணதிசை-கிழக்குத்திசை; வரை-மலை/சிகரம்; படர்தல்-செல்லுதல்; அண்ணல்-பெருமையிற்சிறந்தவன்/சிவபெருமான்; தட-பருத்த; தனயன்-மகன்/புதல்வன்; பரமன்-சிவபெருமான்)

கயிலைமலையின் வடகிழக்குத்திசையில் அமர்ந்திருப்பவனும், மழுப்படையைக் கையிலேந்தியவனுமான சிவபெருமான் வீற்றிருந்து ஆட்சி செய்துவரும் பெரிய மலையான கயிலாயமலையை நோக்கி, தனது செந்தாமரை மலர்போலும் கைகளைக் கூப்பி வணங்கிக்கொண்டு செல்லுகிறான் அனுமன். அவனை, மிகவும் கனிவுடன் ஆகாயத்தில் பார்த்த சிவபெருமான், பெரிய தனங்களை உடைய தனது துணைவியாகிய உமையம்மைக்கு அவனைச் சுட்டிக்காட்டி ''இவன் வாயுதேவனின் புதல்வன் அனுமன் ஆவான்'' என்று கூறினான்.

Koviloor Digital Library

இமயமலையின் வடகிழக்குத் திசையில் சிவபெருமான் வீற்றிருப்ப தாகக் கூறுவது ஒரு புராணக்குறிப்பு. அங்கே ஈசன் அமர்ந்து ஆட்சி புரிவதால் வடகிழக்குத் திசை ஈசானதிசை என்றே வழங்கப்படுகிறது. அதைக் காவல்புரியும் திக்கு பாலகரும் ஈசானன் என்றே அழைக்கப் படுகிறார். இப்பொழுது வழக்கில் 'ஈசானிய மூலை' என்று கூறுவதும் இந்தச் சிவபெருமான் வீற்றிருக்கும் வடகிழக்குத் திசையையே குறிக்கும் என்பதறிக. 'மழுவலான்' என்பது சிவபெருமானுக்குக் காரணப்பெயர். முன்பு தாருகாவனத்து முனிவர்கள் செய்த அபிச்சார ஓமத்தில் செலுத்தப் பட்டது இந்த மழுவாயுதம். அதைச் சிவபெருமான் தன் வலக்கரத்தில் தாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார் என்பதும் ஒரு புராணக்குறிப்பு. தடவரை, தடமுலை என்பதில் உள்ள 'தட' என்றசொல் 'பெரிய' என்ற பொருளைத்தரும். 'தடவும், கயவும் நளியும் பெருமை' என்பது தொல்காப்பியம்.

45. "என் இவன் எழுந்த தன்மை?" என்று உலகு ஈன்றாள் கேட்ப,
"மன்னவன் இராமன் தூதன் மருந்தின்மேல் வந்தான்; வஞ்சர்
தென்நகர் இலங்கைத் தீமை தீர்வது திண்ணம்; சேர்ந்து
நன்னுதல்! நாமும் வெம்போர் காணுதும் நாளை" என்றான். (8830)

(தன்மை-காரணம்; நுதல்-நெற்றி)

இவ்வுலக உயிரினங்களையெல்லாம் ஈன்றெடுக்கக் காரணமான உமையம்மை, சிவபெருமானை நோக்கி, ''இவன் இவ்வாறு பேருருக்கொண்டு வான்வழியே செல்லக் காரணம் என்ன?'' என்று கேட்க, அதற்குச் சிவபெருமான், ''நல்ல சிறிய அழகிய நெற்றியையுடையவளே! இவன் அரசனான இராமபிரானின் தூதுவன்; மேருமலையில் இருக்கும் மூலிகைச் செடிகளைக் கொண்டு போவதற்காகச் சென்றுகொண்டிருக் கிறான்; வஞ்சகர்களாகிய அரக்கர்களின் தென்திசைக்கண் உள்ள இலங்கை மாநகரத்தினால் உண்டான பெரும் தீங்கு, இப்பொழுது நீங்குவது நிச்சயமாகிறது; நாளை நடக்கப்போகும் கொடிய போரைத் தேவர்களுடன் சேர்ந்து, நாமும் காணுவோம்'' என்றான்.

உமையம்மையே உலகப் படைப்புக்குக் காரணம் என்பதை எல்லாப் புராணங்களும் இதிகாசங்களும், காப்பியங்களும் பேசுகின்றன. ''எம்பிராட்டி இவ்வேழுலகு ஈன்றவள்'' என்பது சேக்கிழாரின் திருத் தொண்டத்தொகை. 'உலகேழும் பெற்ற தாய்க்கு' என்பது முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ்.முன்பு சுந்தரகாண்டத்தில் எழுப்பப்பட்ட கேள்வியான ''அனுமன் இராமபிரான் தூதுவனாகவா இலங்கைக்கு அனுப்பப்பட்டான்?'' என்ற கேள்விக்கு இங்கே கவிஞன் சிவபெருமான் கூற்றாக விடைதருகிறான். 'மன்னவன் இராமன் தூதன்' என்று கூறுவதை நுனித்து உணர்ந்து தெளிவுபெறலாம். இலங்கை வேந்தனால் உண்டாக்கப் பெற்ற தீமையை 'இலங்கைத்தீமை' என்று கூறும் கவிஞனின்

Koviloor Digital Library

சொல்லாட்சித்திறம் நோக்குக. சிவபெருமான் கூற்றாகவே இராமஇராவண யுத்தத்தை 'வெம்போர்' எனக்கூற வைத்த கவிஞனின் சொல்நயம் நோக்குக. பெண்களுக்குச் சிறிய நெற்றி வனப்பைத்தரும். எனவே உமாதேவி 'நன்னுதல்' எனப்பட்டாள். 'நுதல், அடி, நுசுப்பு என மூவழிச்சிறுகி' என்பது கலித்தொகை.

46. ஏமகூடத்தைக் கடந்து நிடதத்தை அடைதல்

நாம யோசனைகள் கொண்டது ஆயிரம் நடுவு நீங்கி,
ஏமகூடத்தின் உம்பர் எய்தினன்; இறுதி இல்லாக்
காமமே நுகரும் செல்வக் கடவுளர் ஈட்டம் கண்டான்;
நேமியின் விசையின் செல்வான், நிடதத்தின் நெற்றி உற்றான். (8831)

(நேமி-சக்கரப்படை; விசை-விரைவு/வேகம்; நாமம்-பெயர்; உம்பர்-மேலே; கடவுளர்-தேவர்கள்; ஈட்டம்-கூட்டம்; நெற்றி-உச்சி/சிகரம்; நடுவு-இடைவெளி)

திருமாலின் சக்கரப்படைபோல விரைவாகவும், வேகமாகவும் செல்லுகின்ற அனுமன், ஆயிரம் யோசனைதூரம் இடைவெளியிற் சென்று, பேர்பெற்றதும், அச்சம் தரக்கூடியதுமான ஏமகூடத்தின் சிகரத்தை அடைந்தான். அங்கே எல்லையில்லாத காம போகங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கும் செல்வச்சிறப்புகளையுடைய முப்பத்து முக்கோடித் தேவர்களையும் கண்டான். பின்னர் நிடதமலையின் உச்சியைச் சென்றடைந்தான்.

'நாமம்' என்ற சொல்லுக்குப் பெயர், அச்சம் என்று இன்னும் பலபொருள்கள் உண்டு. 'இறுதியில்லாக் காமமே நுகரும் செல்வக் கடவுளர்' என்பது தேவர்கள் தாம்செய்த புண்ணியத்தின் பயனாக அங்கே எந்தக் கவலையுமின்றி வாழ்கிறார்கள், என்பதால் இவ்வாறு கூறப்பட்டது ௭ன்க. இங்கே காமம் என்பது விருப்பம் என்ற பொருளைத்தரும்.

47. மேருமலையை அடைதல்

எண்ணுக்கும், அளவிலாத அறிவினோர் இருந்து நோக்கும்
கண்ணுக்கும், கருதும் தெய்வ மனத்திற்கும், கடியன் ஆனான்;
மண்ணுக்கும் திசைகள் வைத்த வரம்பிற்கும், மலரோன் வைகும்
விண்ணுக்கும், அளவையான மேருவின்மீது சென்றான். (8832)

(எண்-எண்ணம்; கண்-ஞானக்கண்; கடியன்-வேகமுடையவன் / அனுமன்; வரம்பு-எல்லை; மலரோன்-பிரமதேவன்; அளவை-அளவு கருவி)

Koviloor Digital Library

மனிதர்களின் எண்ணங்களுக்கும், அளவற்ற அறிவுபடைத்த ஞானியர்கள் தாம் இருந்த இடத்திலிருந்தே உலக நடப்பினை நோக்குகின்ற இயல்புபடைத்த ஞானக்கண்ணுக்கும், புகழத்தக்க தெய்வத்தன்மை படைத்தவர்கள் மனத்திற்கும், எட்டாதவாறு விரைந்து செல்பவனான அனுமன், விண்ணுலகத்திற்கும், திசைகள் நியமிக்கப் பட்டுள்ள எல்லைக்கும், தாமரைமலரில் தோன்றியவனான பிரமதேவன் தங்கியிருக்கும் விண்ணுலகமாகிய சத்தியலோகத்திற்கும் அளவு கோலாகக் கருதப்படும் மேருமலையின்மீது சென்றடைந்தான்.

'எண்' என்பது மானிடர்களின் எண்ணத்தின் வேகம்; 'அளவிலாத அறிவினோர் இருந்து நோக்கும் கண்' என்பது ஞானியர்களின் ஞானக்கண்; 'கருதும் தெய்வமனம்' என்பது புகழ்ந்து பேசப்படும் தெய்வத்தன்மை வாய்ந்த தெய்வங்களின் மனம்; இவைகளெல்லாம் கணித்தறியமுடியாத வேகத்துடன் அனுமன் சென்றான் என்பதாம். வாயுவேகம், மனோவேகம் என்பதையெல்லாம் தாண்டிய வேகம் என்க. மேருமலை உலகம் எங்கும் வியாபித்திருக்கிறது என்பது கருத்து. மேருமலை மேலே எவ்வளவுதூரம் உயர்ந்திருக்கிறதோ அவ்வளவுதூரம் பூமியின் அடியில் ஆழ்ந்திருக்கிறது என்றும், திசைகள் எவ்வளவுதூரம் பரந்திருக்கிறதோ அவற்றின் எல்லைவரை பரந்து விரிந்து அகன்றிருக்கிறது என்றும், பிரமதேவன் வாழும் பிரமலோகம் எவ்வளவு உயரத்தில் இருக்கிறதோ, அவ்வளவுதூரம் உயர்ந்திருக்கிறது என்றும் அதன் அளவுகளைக்கூறி, அந்த அளவு கருவியான மேருமலைமீது அனுமன் வந்தடைந்தான் என்று முடிக்கிறான் கவிஞன். மேருமலையின் ஆழம், பரப்பு, உயரம் முதலியவற்றை மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். மிகத்தெளிவாக மேருமலைபற்றி விளக்கம் தந்த கவிஞனின் கவித்திறம் நோக்குக.

48. நாவலந்தீவை அடைதல்

''யாவதும் நிலைமைத் தன்மை இன்னது'' என்று, இமையாநாட்டத்
தேவரும் தெரிந்திலாத வடமலைக்கு உம்பர்ச் சென்றான்;
நாவலம் பெருந்தீவு என்னா நளிர்கடல் வளாக வைப்பில்
காவல் மூன்று உலகும் ஓதும் கடவுள் மாமரத்தைக் கண்டான். (8833)

(வடமலை-மேருமலை; உம்பர்-மேல்; நளிர்-குளிர்ந்த; வளாகம்-சூழப்படுதல்/வட்டம்; ஓதுதல்-சிறப்பித்துக்கூறுதல்; கடவுள்-தெய்வத் தன்மை; மரம்-நாவல்மரம்; யாவதும்-ஒருசிறிதும்)

இமையாநாட்டமுடைய தேவர்களும் மேருமலையின் நிலையும் தன்மையும் இதுதான் என்று சிறிதுகூட உறுதியாகக் கூறமுடியாத ''நாவலந்தீவு'' என்று சொல்லப்படுகின்ற பெரிய, குளிர்ச்சிபொருந்திய கடலால் சூழப்பட்ட இடத்தில், மூன்று உலகத்தவரும் போற்றுகின்ற

Koviloor Digital Library

தெய்வத்தன்மை வாய்ந்த காவல் நிறைந்த பெரிய நாவல்மரத்தைக் கண்டான் அனுமன்.

'யாவதும் நிலைமைத் தன்மை இன்னது' என்று இமையா நாட்டத்தேவரும் தெரிந்திலாத வடமலை' என்று மேருமலையின் பெருமை சிறப்பிக்கப்படுகிறது. அந்த நாவல்மரம் தெய்வத்தன்மை பொருந்தியதால் 'கடவுள் மாமரம்' எனப்பட்டது. எனவே அதைக் காவல் மூன்று உலகும் சிறப்பித்துப் புகழ்கின்றன என்பதாம். எனவே அது நாவலந்தீவு எனப்படுகிறது என்க. மேருமலையை எல்லா இலக்கியங்களுமே 'வடமலை' என்றே பேசுகின்றன. 'வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்' என்பது பட்டினப்பாலை. 'வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டம்' என்பதும், 'வடவரையை மத்தாக்கி' என்பதும் சிலப்பதிகாரம்; நாவலந்தீவு சம்புத்தீவு என்றும் வழங்கப்படும்.

49. பிரமதேவனை வணங்கிப்போதல்

அன்னமா மலையின் உம்பர், உலகெலாம் அமைத்த அண்ணல்,
நல்நெடு நகரம் நோக்கி, அதன் நடு நாப்பண் நாம
பொன்மலர்ப் பீடம் தன்மேல் நான்முகன் பொலியத் தோன்றும்
தன்மையும் கண்டு, கையால் வணங்கினான், தருமம் போல்வான்.
(8834)

(உம்பர்-உச்சி; அமைத்தல்-படைத்தல்; நாப்பண்-நடுவில்; நாமம்-அச்சம்/பெருமை)

தருமமே உருக்கொண்டவனான அனுமன், அத்தகைய பெரிய மேருமலையின் உச்சியில் அமைந்துள்ள சத்தியலோகத்தில், இவ்வுலகத்தையெல்லாம் படைத்தருளிய பெருமைக்குரியவனான பிரமதேவனின் நல்ல பெரிய நகரமாகிய மனோவதியை நோக்கி, அந்நகரத்தின் நட்டநடுவில் பெருமையோடு பொற்றாமரை மலரால் அமைந்த பீடத்தில் பொலிவுடன் வீற்றிருக்கும் பிரமதேவனையும் கண்குளிரக் கண்டு, தன் கைகளைக் கூப்பித் தொழுதான்.

'நடு நாப்பண்' என்பது ஒருபொருட்பன்மொழி. மீமிசைச்சொல்; எனவே நட்டநடுவில் என்ற வழக்குச் சொல்லே பொருளாகத் தரப்பட்டிருக்கிறது. அனுமனை 'தருமம் போல்வான்' என்று கவிஞர் காப்பியத்தில் பலவிடங்களிலும் கூறிவந்துள்ளமையை நோக்குக. பிரமதேவன் இருப்பது சத்தியலோகம் அல்லது பிரமலோகம். அவன் இருக்கும் நகரம் மனோவதி என்பது; அவன் வீற்றிருக்கும் ஆசனம் பொன்மலர்ப்பீடம் என்பதாம்.

Koviloor Digital Library

50. தருவனம் ஒன்றில், வானோர் தலைத்தலை மயங்கித் தாழ,
பொருஅரு முனிவர் வேதம் புகழ்ந்து உரை ஓதை பொங்க,
மரு விரி துளவ மோலி, மாநிலக் கிழத்தியோடும்
திருவொடும் இருந்த, மூலத்தேவையும் வணக்கம் செய்தான். (8835)

(தரு-மரங்கள்; தலை-இடம்; மயங்குதல்-கலத்தல்; பொருஅரு-ஒப்பற்ற; பொங்குதல்-மிக்குத்தோன்றுதல்/நிறைதல்; மரு-நறுமணம்; விரித்தல்-வீசுதல்; மோலி-மௌலி/முடி; மாநிலக்கிழத்தி-பூமிக்குரியவள்/பூதேவி; திரு-சீதேவி; மூலத்தேவு-முழுமுதற்கடவுள்/நாராயணன்/திருமால்/பரம்பொருள்; தாழ்தல்-வணங்குதல்; ஓதை-ஓசை/பேரொலி)

அங்கே மரங்கள் அடர்ந்த கானகத்தில், தேவர்கள் எல்லோரும் தம்முள் கலந்து, எல்லா இடங்களிலும் நின்று திருமாலை வணங்கிக் கொண்டிருக்கவும், ஒப்பற்ற முனிவர்கள் வேதம் மூலம் திருமாலைப் புகழ்ந்து உரைக்கும் பேரொலி நிறைந்து மிக்குத் தோன்றவும், மிக்க நறுமணம் கமழும் துளசி மாலையணிந்த முடி தரித்திருப்பவனும், பெரிய பூமிக்கு உரியவளான பூதேவியோடும், திருமகளோடும் வீற்றிருந்த, எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாய் விளங்கும் மூலப் பரம்பொருளான திருமாலையும் வணங்கினான் அனுமன்.

திருமால் முல்லை நிலத்தெய்வம். எனவே இங்கே மேருமலையிலும் தருவனத்துள்ளும் வீற்றிருக்கிறான் என்றார் என்க. 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்பது தொல்காப்பியம்.

51. ஆயதன் வட கீழ்ப்பாகத்து, ஆயிரம் அருக்கர் ஆன்ற
காய்கதிர் பரப்பி, ஐந்து கதிர்முகக் கமலம் காட்டி,
தூய பேர்உலகம் மூன்றும் தூவிய மலரின் சூழ்ந்த
சேயிழை பாகத்து, எண்தோள் ஒருவனை வணக்கம் செய்தான். (8836)

(அருக்கர்-சூரியர்; ஆன்ற-நிறைந்த; காய்தல்-ஒளிவீசுதல்; கதிர்-ஒளி; கமலம்-தாமரைமலர்; சேயிழை-செம்மையான அணிகலன்கள் அணிந்தவள்; தூவுதல்-அருச்சனை செய்தல்)

அந்த மேருமலையின் வடகிழக்குத் திசையில், ஆயிரம் சூரியர்கள் ஒருசேர இருளைப்போக்குவனவான சிறந்த கிரணங்களைப் பரப்பி ஒளிவீசுவதும், ஐந்து ஒளிமிக்க முகங்களாகிய தாமரைகளைக் காட்டி நிற்பதும், பவித்திரமான இம்மூன்றுலகத்துள்ளாரும் பக்தி சிரத்தையுடன் அருச்சித்த மலர்களால் சூழப்பெற்றிருப்பவனும், செம்மையான அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட மனோன்மணியைத் தன் இடப் பாகத்தில் கொண்டவனும், எட்டுத்தோள்களை உடையவனும் ஒப்பற்றவனுமான சதாசிவ மூர்த்தியைக் கண்டு வணங்கித் தொழுதான் அனுமன்.

Koviloor Digital Library

முன்னர் உமையொருபாகமுடைய சிவபெருமானை வணங்கினான் என்று கண்டோம். இங்கு மனோன்மணியம்மையை இடது பாகத்தில் கொண்ட சதாசிவமூர்த்தியைக் கண்டு தொழுதான் என்கிறான் கவிஞன். சிவபெருமானின் மற்றொரு பெயர்கொண்ட தோற்றம் இங்கு பேசப்படுகிறது. வடகீழ்ப்பாகம் என்பது வடகிழக்குத் திசையாகிய ஈசானம் எனக்கொள்க. 'கதிர்முகக் கமலம்' என்பது உருவகம். ஒளிவீசுகின்ற தாமரை மலர்போன்ற ஐந்து முகங்கள் என்பது பொருள். இந்தச் சதாசிவ மூர்த்தியை மேல், நடு, கீழ் என்று கூறப்படுகின்ற மூவுலகத்தில் உள்ளவர்களும் மலர்கொண்டு அருச்சிக்கின்றனர் என்பதும், அதனால் அவன் வடிவம் எப்பொழுதும் மலர்களால் சூழப்பெற்றிருக்கும் என்பதும் பெறப்படுகிறது. 'சேயிழைபாகம்' என்பது செம்மையான அணிகலன்களை அணிந்த மனோன்மணியைக் குறிக்கும் என்க. சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களாவன. அகோரம், சத்தியோசாதம், வாமதேவம், ஈசானம், தத்புருஷம் என்பனவாம். இவற்றில் தத்புருஷம் என்பது நேர்நோக்கிய முகம், ஈசானியம் என்பது கிழக்கு நோக்கியதும், சத்தியோசாதம் என்பது மேற்கு நோக்கியதும், அகோரம் என்பது தெற்கு நோக்கியதும், வாமதேவம் என்பது வடக்கு நோக்கியதுமாகும். சதாசிவன் எட்டுத்தோள்களையுடையவன் என்பது 'எண்தோள் வீசி நின்றாடும் எம்பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ!' என்ற திருநாவுக்கரசர் தேவாரம் கொண்டு அறியலாம்.

கயிலையில் முன்பு கண்டு வணங்கிவந்த சிவபெருமான் மழுவலாளன், உமையம்மையை ஒருபாகத்தில் கொண்டவன். இங்கு அதே சிவபெருமான் மனோன்மணியை இடப்பாகத்தில் கொண்டு ஐந்து ஒளிமிக்க முகங்களோடும், எட்டுத் தோள்களுடனும், சதாசிவமூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறான் எனக்கொள்க. இந்த வேறுபாடுபற்றிக் கந்தபுராணம் கூறுகிறது கேளுங்கள். 'மேருவரையதற்கு நடு, பிரமன் மூதூர் மிக்க மனோவதி; அதற்கு மேலைத்திக்கில் நாரணன் வாழ் வைகுண்டம்; வடகீழ் பாலின் நாதன்அமர் சோதிட்கம்; திசைகள் எட்டும் சீரிய இந்திரன் முதலாம் எண்மர் தேயம்' என்பது கந்தபுராணம். எனவே இங்கே சதாசிவன் எழுந்தருளியிருக்கும் இடம் 'சோதிட்கம்' எனத் தெரியவருகிறது.

52. சந்திரன் அனைய கொற்றத் தனிக்குடை தலையிற்று ஆக,
சுந்தர மகளிர் அங்கைச் சாமரைத் தென்றல் தூற்ற,
அந்தர வானநாடர் அடிதொழ, முரசம் ஆர்ப்ப,
இந்திரன் இருந்த தன்மைகண்டு, உவந்து இறைஞ்சிப் போனான். (8837)

(கொற்றம்-வெற்றி; தனி-ஒற்றை/ஒப்பற்ற; சுந்தரம்-அழகு; தூவ-வீச; அந்தரம்-ஆகாயம்/விண்ணுலகம்; சாமரை-வெண்சாமரங்கள்)

Koviloor Digital Library

பூரண சந்திரனைப்போன்ற வெற்றிமிக்க ஒப்பற்ற ஒற்றை வெண் கொற்றக்குடை தலைமீது உயர்ந்து தோன்றி நிழல் பரப்பவும், அழகிய தேவமகளிர் தம் அழகிய கைகளால் வெண்சாமரை கொண்டு தென்றல் போன்ற மெல்லிய இனிய காற்றை உண்டாக்கவும், அந்தரம் எனப்படு கின்ற வானநாட்டிலுள்ள தேவர்கள் திருவடிகளைத் தொழுது கொண்டு இருக்கவும், வெற்றிமுரசங்கள் ஆரவாரம் செய்யவும், தேவேந்திரன் அரியணையில் வீற்றிருந்த செம்மாந்த நிலை கண்டு, மனம் மகிழ்ந்து அவனையும் வணங்கிச் சென்றான் அனுமன்.

வெண்கொற்றக்குடையும், வெண்சாமரமும், வெற்றிமுரசும் அரசச் சின்னங்கள் என்பது நாம் அறிந்ததே. 'சுந்தரமகளிர்' என்பது அழகிய தேவமகளிர் என்ற பொதுப்பொருள் தந்தாலும், அது ஊர்வசி, அரம்பை, மேனகை, திலோத்தமை முதலியோரைக் குறிக்கும் எனக்கொள்க. தேவேந்திரன் இருக்கை அமராவதி என்பதும் நாம் முன்பு அறிந்ததே. வெண்கொற்றக்குடைக்குச் சந்திரன் உவமை.

53. திசைக் காவலர்களையும் காணுதல்

பூ அலர் மரத்தைப் போர்ப்ப அந்தரம் விரிந்து பொங்கும்
தேவர்தம் இருக்கையான மேருவின் சிகர வைப்பில்,
மூவகை உலகும் சூழ்ந்த முரண்திசை முறையின் காக்கும்
காவலர் எண்மர் நின்ற தன்மையும் தெரியக் கண்டான். (8838)

(அலர்தல்-மலர்தல்; அந்தரம்-ஆகாயம்; பொங்குதல்-உயர்ந்திருத்தல்; இருக்கை-இருப்பிடம்; வைப்பு-இடம்; எண்மர்-எட்டுப்பேர்; தெரிய-தெளிவாக; போர்த்தல்-மறைத்தல்/மூடுதல்; முரண்-மாறுபட்ட)

மலர்கள் மலர்ந்து விரிந்து மரங்களையே மூடியிருக்கின்ற ஆகாயத்தில் உயர்ந்தோங்கி நிற்பதும், தேவர்களின் இருப்பிடமுமான மேருமலையின் உச்சியிடத்தில், இந்த மேல், நடு, கீழ் என்கின்ற மூன்று உலகங்களையும் முறையாகக் காத்து நிற்கின்ற அஷ்டதிக்கு பாலகர்கள் நிற்கின்ற தன்மையையும், அனுமன் மிகத் தெளிவாகக் கண்ணுற்றான்.

மேருமலை பூமியின் நடுப்பகுதியில் உள்ளது. அதன் சிகரத்தில் கற்பகமலர்கள் பூத்து அம்மலையையே மறைத்துக்கொண்டு விண்ணில் உயர்ந்து நிற்கிறது. இதுதான் தேவர்களின் வாழ்விடம்; இப்பூவுலகத்தைச் சுற்றியுள்ள எட்டுத்திசைகளையும், எட்டுத்திசைக்காவலர்கள் காத்து நிற்கின்றனர்; அவர்களையும் அனுமன் கண்டு சென்றான் என்பதாம். எட்டுத்திசைகளும் ஒன்றற்கொன்று மாறுபட்ட திசைகளில் இருப்பதால் 'முரண்திசை' என்றார் என்க. காவலர் எண்மர் - இந்திரன், குபேரன், இயமன், நிருதி, ஈசானன், வாயு, அக்னி, வருணன் என்பவராவர். மேருமலையை மரமெனக் கொண்டால், அம்மரத்தில் மலர்ந்திருக்கின்ற பூக்களைப் போன்றவை அதன் சிகரங்கள் எனக்கொள்க.

Koviloor Digital Library

54. உத்தர குருவை அடைதல்

அத் தடங்கிரியை நீங்கி, அத்தலை அடைந்த வள்ளல்
உத்தரகுருவை உற்றான்; ஒளியவன் கதிர்கள் ஊன்றி,
செத்திய இருள் இன்றாக, விளங்கிய செயலை நோக்கி,
வித்தகன் 'விடிந்தது' என்ன, 'முடிந்தது என்வேகம்' என்றான். (8839)

(தட-பெரிய; அத்தலை-அப்பக்கம்; ஒளியவன்-சூரியன்; ஊன்றுதல்-பரப்புதல்; செத்திய-செற்றிய/அடர்ந்த/நெருங்கிய; வித்தகன்-திறமை மிக்கவன்/சமர்த்தன்; வேகம்-முயற்சி/மனக்கிளர்ச்சி)

வள்ளன்மை மிக்கவனான அனுமன், அந்த மேருமலையை விட்டு அகன்று, அப்பால் சென்று உத்தரகுரு என்னும் போகபூமியை அடைந்தான். ஒளியையுடைய சூரியன் தன் கிரணங்களைப் பரப்பி வெளிச்சம் உண்டாக்கி, அங்கு அடர்ந்து பரவியிருந்த இருளை இல்லையாம்படி செய்து, பொலிவுபெற்றுத் திகழ்ந்த செயலைக் கண்ணுற்று, திறமைமிக்கவனான அனுமன், 'பொழுது விடிந்து விட்டதே' என்னுடைய முயற்சிகள் பயனற்றுப் போய்விடுமோ?'' என்று மனக்கிளர்ச்சி குன்றி உளம் வருந்தினான்.

மருத்துமலை கொணர்ந்து, இறந்த எல்லோரையும் எழுப்பப் போகின்ற உதாரகுணம் படைத்தவன் அனுமன். எனவே கவிஞன் அவனை 'வள்ளல்' என்று இங்கே குறிப்பிடுகின்றான். ஒளி தருவதற்கு உரியவன் என்பதால் சூரியனை 'ஒளியவன்' என்றே குறிக்கிறான் கவிஞன். 'செற்றிய' என்பது 'செத்திய' என்று எதுகைநோக்கித் திரிந்தது. அடர்ந்த என்பது பொருள். 'வித்தகன்' என்பது திறமைமிகுந்த சாமர்த்தியசாலியைக் குறிக்கும். உத்தரகுருவில் சூரியன் ஒளிபரவியதால் விடிந்துவிட்டதே, விடிவதற்கு முன்னர் வரவேண்டும் என்று சாம்பவன் வேண்டிக் கொண்டாரே என்ற பதற்றத்தால், 'முடிந்தது என் வேகம்' என்று தனக்குத்தானே வருந்திக் கூறிக்கொண்டான் என்பதாம். மேருமலைக்குத் தெற்கே இருளாய் உள்ளபோது, அம்மலைக்கு வடக்கே சூரியன் பகல் செய்வான் என்பது நூற்கொள்கை. உண்மையில் இன்னும் பொழுது புலரவில்லை என்பதை உணராதவனான அனுமன், அவ்வாறு வருந்த நேரிட்டது என்பதாம்.

55. "ஆதியான் உணரா முன்னம், அருமருந்து உதவி, அல்லின்
பாதியால் அனைய துன்பம் அகற்றுவான் பாவித்தேற்குச்
சோதியான் உதயம் செய்தான்; உற்றது ஓர் துணிதல் ஆற்றேன்;
ஏது யான் செய்வது?" என்னா, இடருற்றான், இணை இலாதான். (8840)

(இணை-ஒப்பு/நிகர்; ஆதியான்-பரம்பொருள்/இராமபிரான்; உணர்தல்-மூர்ச்சை தெளிதல்; அல்-இரவு; அகற்றுவான்-நீக்கும் பொருட்டு; பாவித்தேன்-எண்ணியிருந்தவன்/அனுமன்; சோதியான்-சூரியன்; இடர்-துன்பம்; பாவித்தல்-நினைத்தல்)

Koviloor Digital Library

தனக்கு நிகர் வேறொருவர் இல்லாதவனான ஒப்பற்ற அனுமன், ''ஆதிமூர்த்தியாகிய இராமபிரான் மூர்ச்சை தெளிந்து எழுவதற்கு முன்பே, இந்த அரிய மூலிகை மருந்தினைக் கொண்டு கொடுத்து உதவிசெய்து, பாதி இரவிலேயே அவனுடைய துன்பத்தைத் தீர்க்க வேண்டும் என்று நினைத்திருந்த எனக்கு அவ்எண்ணம் ஈடேறாதபடி இப்பொழுது ஒளிமிக்கவனான சூரியன் உதயம் செய்துவிட்டானே! இப்போது என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்க இயலாதவனாக நிற்கிறேனே'' என்று மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல், துன்பமுற்று வருந்தினான் அனுமன்.

'ஆதியான்' என்பது மூலப்பரம்பொருள் என்று இராமபிரானைக் குறிக்கும். 'உணர்தல்' என்பது மூர்ச்சை தெளிதலைக் குறிக்கும். 'அல்லின்பாதி' என்பது, பாதி இரவிற்குள் என்ற பொருளில் விடிவதற்கு முன்னால் என்ற விளக்கத்தைத் தரும். 'பாவித்தல்' என்பது நினைத்தல், சங்கல்பம் செய்து கொள்ளுதல் என்று பொருள்படும். 'இணையிலாதான்' என்று அனுமனைக் கம்பன் காப்பியத்தில் பல இடங்களிலும் கூறிப் போதலைக் காணலாம். 'தன்னைத் தானலாது ஒப்பிலாதான்' என்றும், 'தன்னில் நேர்பிறர் தானலாது இல்லவன்' என்றும் முன்பு கவிஞன் அனுமன் பற்றிக் கூறியிருப்பதையும் இங்கு நினைவுகூர்க. 'சோதியான்' என்பது பேரொளி படைத்த சூரியனைக் குறிக்கும்.

56. கால் திசை சுருங்கச் செல்லும் கடுமையான், ''கதிரின் செல்வன்
மேல்திசை எழுவான் அல்லன்; விடிந்ததும் அன்று; மேரு
மாற்றினன், வடபால் தோன்றும் என்பது மறைகள் வல்லோர்
சாற்றினர்'' என்ன, துன்பம் தவிர்ந்தனன், தவத்து மிக்கான். (8841)

(கால்-காற்று; சுருங்குதல்-குறைதல்; கடுமை-விரைவு; வடபால்-வடக்குப்பக்கம்; கதிர்-ஒளிக்கற்றை; எழுதல்-உதித்தல்)

தவத்தில் சிறந்து விளங்குபவனும், காற்றையும் தொலைவையும் குறையச் செய்யும் வேகத்தோடும், விரைந்து செல்லும் அனுமன், சற்று நிதானித்து, ''ஒளிக்கற்றைகளையே தன்னுடைய செல்வமாகக் கொண்ட சூரியன் மேற்குத்திசையில் உதிக்கும் இயல்புடையவன் அல்லவே! இப்போது விடிந்ததும் இல்லை; சூரியன் மேருமலையைச் சுற்றி வரும்பொழுது தனது கதியை-செல்லும் போக்கை மாற்றிக் கொண்டிருக்கிறான். எனவே அது வடக்குப்பக்கம் தோன்றுவதுபோலத் தெரியும் என்றும் வேதம்வல்ல சான்றோர்கள் கூறிப்போயிருக் கிறார்களே!'' என்று கருதி, தான் முன்பு கொண்ட துன்பம் தவிர்ந்து, தணியப்பெற்றான்.

காற்றை எதிர்த்து வேகமாகச் செல்வதால் தான் செல்லவிருக்கின்ற தூரம் குறைந்துகொண்டே வருமல்லவா? அதுதான் இங்கே ''கால்திசை

Koviloor Digital Library

சுருங்கச் செல்லும் கடுமையான்'' எனப் பேசப்படுகிறது. முன்பு அனுமனைச் 'சொல்லின் செல்வன்' என்றதுபோலவும், பின்பு இலக்குவனையும், இந்திரசித்தனையும் 'வில்லின்செல்வன்' என்றது போலவும் கவிஞன் இங்கே சூரியனைக் 'கதிரின்செல்வன்' எனக் குறிப்பிடுவதை நோக்குக. சூரியன் மேருமலையைச் சுற்றிவருவதால்தான் இரவும், பகலும் நிகழ்கின்றன என்பது நாம் அறிந்ததே. இப்போது சூரியன் மேருமலைக்கு வந்து தனது போக்கை மாற்றிக் கொண்டிருக்கிறான். எனவே அனுமன் இந்தப்பக்கம் சூரியன் உதித்ததுபோலத் தோற்ற மளித்ததே தவிர, உண்மையில் அது பகல்போது அல்ல என்றும்; மேற்குத்திசையில் சூரியன் உதிக்க மாட்டான் என்னும் வேதம்வல்லோர் கூற்றையும் உணர்ந்து, துயரம் தவிர்ந்தான் அனுமன் என்பதாம். இதைத் திசைமயக்கம் என்பர் சான்றோர்; வடக்குநோக்கிச் செல்லுகின்றான் அனுமன். இப்போது சூரியன் தனது இடது புறத்தில் தெரிகிறது; இது நடக்கமுடியாத செயல்; சூரியன் வடக்குப்பக்கத்தில் உள்ளவர்க்கு மேற்குத்திசையில் தோன்றும் என்பது சான்றோர் கூற்று. மேருமலையின் வடக்கே உள்ளவர்களுக்கு சூரியன் மேற்கே மறையும்போது காலையும், கிழக்கே உதிக்கும்போது மாலையும் நிகழும் என்பது புராணக்கொள்கை.

57. இருவரே தோன்றி, என்றும் ஈறிலா ஆயுள் எய்தி,
ஒருவரோடு ஒருவர், உள்ளம் உயிரொடும் ஒன்றே ஆகி,
பொருஅரும் இன்பம் துய்த்து, புண்ணியம் புரிந்தோர் வைகும்,
திருஉறை கமலம் அன்ன, நாட்டையும் தெரியக் கண்டான். (8842)

(ஈறு-முடிவு; பொருஅரும்-ஒப்பற்ற; வைகுதல்-தங்கியிருத்தல்; திரு-திருமகள்; கமலம்-தாமரைமலர்; நாடு-உத்தரகுருநாடு; தெரிய-நன்கு)

ஆண், பெண் என்று இருவராகப் பிறந்து, எப்பொழுதும் முடிவே யில்லாத வாழ்நாளைப் பெற்று, ஒருவரோடு ஒருவர் உயிருடன் மனமும் ஒன்றுபட்டவராய் ஈருடல் ஓர்உயிர் எனப் பொருந்தி வாழ்ந்து, ஒப்பற்ற இன்பம் துய்த்து, முன்பிறவிகளில் புண்ணியம் செய்தவர்கள் தங்கியிருக்கும், செந்தாமரை மலர்போன்ற திருமகள் உறைகின்ற செல்வச்செழிப்பு மிக்க, போகபூமியாகிய உத்தரகுரு நாட்டையும் அனுமன் தன் கண்களால் நன்கு பார்த்து, அப்பால் சென்றான்.

பூர்வ புண்ணிய பலனால் இல்லற இன்பம் துய்த்து வாழ்பவரே அந்த உத்தரகுரு நாட்டில் வாழ்பவர்கள் ஆவார்கள்; 'அந்நாடு காமபூமி' என்றும் 'போகபூமி' என்றும் வழங்கப்பெறும். அது செந்தாமரைமலர் போலும் திருமகள் உறைகின்ற சிறந்த செல்வச்செழிப்பு மிக்க நாடு என்பதாம். 'புண்ணியம் புரிந்தோர் வைகும், திருவுறை கமலம் அன்ன நாடு' உத்தரகுருநாடு என்பதாம். ஒரு பிறப்பில் கணவன் மனைவியராய் அமைந்தவர் உயிரும் உள்ளமும் ஒத்துப்போய் ஒற்றுமையுடன் இல்வாழ்க்கை நடத்தினர் என்றால், அவர்கள் தொடர்பு பல

Koviloor Digital Library

பிறப்புக்களிலும் தொடரும் என்பது ஒரு நூற்கொள்கை. 'இம்மைமாறி, மறுமையாயினும் நீயாகியரெம் கணவனே; யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே' என்பது குறுந்தொகை-49. 'ஈண்டு நான் இருந்து இன்னுயிர் மாயினும் மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத் தீண்டலாவதோர் தீவினை தீர்வரம் வேண்டினாள்' என்பது சீதாதேவியின் கூற்று. 'ஈண்டு நீ இருக்க ஆண்டு எவ்வுயிர் விடும் இராமன்?' என்பது அனுமன் கூற்று.

58. வன்னி நாட்டிய பொன்மௌலி வானவன், மலரின் மேலான்,
கன்னி நாள் திருவைச் சேரும் கண்ணனும், ஆளும் காணி,
சென்னி நாள் தெரியல் வீரன், தியாக மாவிநோதன் தெய்வப்
பொன்னி நாட்டு உவமை வைப்பை, புலன்கொள நோக்கிப் போனான்.
(8843)

(வன்னி-வன்னிப்பத்திரம்; நாட்டுதல்-சூடிக்கொள்ளுதல்; மௌலி-சடைமுடி; வானவன்-சிவபெருமான்; மலர்-தாமரைமலர்; கன்னி-குமரி; திரு-திருமகள்/இலக்குமி; கண்ணன்-திருமால்; நாள்-புதிய/அன்றலர்ந்த; தெரியல்-மாலை; சென்னி-தலை; பொன்னி-காவிரி; வைப்பு-பூமி/நாடு/உத்தரகுருநாடு; புலன்-கட்புலன்; காணி-தலம்/இடம்)

வன்னி என்ற மரத்தின் இலைகளையே சூடிக்கொண்டிருக்கும் அழகிய சடாமுடியை உடையவனான சிவபெருமானும், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், என்றும் இளமை மாறாத திருமகளைத் தன் மார்பில் கொண்டிருக்கும் திருமாலும், ஆட்சிபுரிகின்ற இடமாகியதும், அன்றலர்ந்த புதிய மலர்களையே தொடுத்துத் தலையில் மாலையாக அணிந்திருப்பவனும், வீரனுமாகிய தியாகமாவிநோதன் என்னும் மூன்றாம் குலோத்துங்கசோழன் ஆட்சி செய்யும் தெய்வத்தன்மை பொருந்திய சோழவள நாட்டுக்கு உவமை கூறத்தக்க போகபூமி யாகியதுமான உத்தரகுரு நாட்டை, அனுமன் தன் கண் என்னும் புலனால் நன்கு பார்த்துக் கொண்டு சென்றான்.

'வன்னி' என்பது ஓர் மரம். அதன் இலை சிவபெருமான் தலையில் சூடிக்கொள்ளும் சடாமுடியில் தரித்தற்குரியது. எனவே "வன்னி நாட்டிய பொன் மௌலி வானவன்" என்றார். 'வன்னி' என்ற சொல்லுக்கு நெருப்பு என்ற ஒரு பொருளும் உண்டு. எனவே நெருப்புப்போன்று சிவந்து அழகாக விளங்கும் சடாமுடியை உடையவன் என்றும் பொருள் கூறுவதுண்டு. 'கன்னி நாள்திரு' என்றது என்றும் மாறாத இளமையுடைய இலக்குமியைக் குறிக்கும். 'தியாகமாவிநோதன்' என்ற சொல்லுக்குத் தியாகத்தையே-கொடையையே பெரிய விளையாட்டாக - விநோதப்பொழுதுப் போக்காகக் கொண்ட அபூர்வப் பிறவி என்று சோழனைச் சிறப்பிக்கும் சிறப்புப்பெயர் எனக்கொள்க.

Koviloor Digital Library

கம்பனின் நாட்டுப்பற்றைக் கூறும் பாடல்களில் இதுவும் ஒன்று. 'சென்னி' என்ற சொல் தலையைக் குறிக்கும். சோழ மன்னர்களைச் 'சென்னி' என்ற புனைப்பெயராலும் அழைத்து வந்திருப்பதை வரலாற்றுக் குறிப்புக்களிலிருந்து அறியமுடிகிறது. முன்பு கோசலநாட்டை 'காவிரிநாடன்ன கழனிநாடு ஒரீஇ' என்று குகப்படலத்தில் கவிஞன் கூறியதையும் இங்கு நினைவுகூர்க. இங்கு உத்தரகுருநாட்டைக் காவிரிபாயும் சோழவள நாட்டுக்கு உவமிக்கிறான் என்க. 'தியாகமாவி நோதன்' என்ற பெயர் முதல் குலோத்துங்கன் முதல் பல சோழ மன்னர்களுக்கச் சிறப்புப் பெயராக அமைந்திருத்தலையும் வரலாற்றால் அறிகிறோம். பாற்கடலில் தோன்றிய நாளில் எவ்வாறு இருந்தாளோ அவ்வாறே என்றும் இருப்பவள் என்பதால் இலக்குமியைக் 'கன்னிநாள் திரு' என்றார் என்க. மும்மூர்த்திகளும் விரும்பி வாழ எண்ணும் நாடு சோழநாடு எனச் சோழநாட்டைச் சிறப்பித்தார் என்க.

59. நீலமலையை அடைதல்

விரிய வன் மேரு என்னும் வெற்பினின் மீது செல்லும்
பெரியவன், அயனார் செல்வம் பெற்றவன், பிறப்பும் பேர்ந்தான்,
அரியவன், உலகம் எல்லாம் அளந்த நாள் வளர்ந்து தோன்றும்
கரியவன் என்ன நின்ற, நீல மால்வரையைக் கண்டான். (8844)

(வன்-வலிய; வெற்பு-மலை; விரிய-பிளவுபட; பெரியவன்-பெரிய தோற்றம் உடையவன்/அனுமன்; அயனார்-பிரமன்; செல்வம்-பட்டம்; பேர்தல்-நீங்குதல்; அரி-குரங்கு; கரியவன்-திருமால்/திருவிக்கிரமன்; மால்வரை-பெரியமலை; அயன்-பிரமன்)

அகன்ற, விரிந்த, வலிய மேரு என்னும் மலையின்மீது, அது பிளவு படும்படி செல்லும் பேருருக்கொண்டவனும், பிரமபட்டத்தைப் பெறப் போகிறவனும், சிரஞ்சீவித் தன்மையால் பிறப்பு என்னும் தளையிலிருந்து நீங்கியவனும், குரங்கினத்தைச் சேர்ந்தவனுமாகிய அனுமன், முன்பு உலகங்கள் மூன்றையும் தன் ஈரடியால் அளப்பதற்காக விசுவரூபம் கொண்டு வளர்ந்த திரிவிக்கிரமனாகிய கரிய நிறமுடைய திருமாலைப் போல உயர்ந்து நின்ற பெரிய நீல மலையையும் கண்டான்.

'விரிதல்' என்பது அகன்ற என்ற பொருளையும், பிளவுபட என்ற பொருளையும் தரும். முன்பு சாம்பவன் கூறும்பொழுது மேருமலை முப்பத்திரண்டாயிரம் யோசனை அகலமுடையது என்றார். எனவே அகன்ற என்று பொருள்கொள்ளப்பட்டது. பேருருக்கொண்ட அனுமன் அவ்வெற்பின்மீது செல்லும்போது அது பிளவுபடும் நிலையை அடைந்தது என்பதால் விரிய என்ற அதே சொல்லுக்குப் பிளவுபடும்படி என்னும் பொருளும் கொள்ளப்பட்டது. 'பெரியவன்' என்பது

Koviloor Digital Library

பெருமைபெற்றவன் என்றும் பேருருக்கொண்டவன் என்றும் இரண்டு பொருளையும் தருவதையும் நோக்குக.

'அயனார் செல்வம்' என்பது பிரமதேவனுக்கு உரிய பிரமபட்டத்தைக் குறிக்கும். அதைப் பெறப்போகிறவன் அனுமன் என்பதைப் 'பெற்றவன்' என்று இறந்தகாலத்தில் கூறினார் என்க. இது தெளிவும் துணிவும்பற்றி வந்த காலவழுவமைதி. 'முன்னதாக்கிய மூவுலகாக்கிய பதம், நின்னதாக்கினன் பெற்றாய்' என்பது இராமபிரான் பேரருள் கூற்று; 'பிறப்பில் பேர்ந்தான்' என்பதும் மீண்டும் பிறப்பில்லாப் பெருவாழ்வைக் குறிக்கும். மரணமில்லாப் பெருவாழ்வைப் பலரிடமிருந்தும் வரமாகப் பெற்றவன் அனுமன் என்பதை நாம் முன்பும் பல இடங்களில் கண்டு வந்திருக்கிறோம். அனுமனுக்கு மரணமில்லாப் பெருவாழ்வும், மறு பிறப்பின்மையும் அளித்தவர் பலர். வருணன், இயமன், சிவபெருமான், பிரமதேவன், திருமால், இராமபிரான், சீதாதேவி, வானோர்தச்சன் விசுவகர்மா; என்பதும் நாம் முன்னர் கண்டுவந்ததே. எனவே அவனுக்கு மறுபிறப்பில்லை என்பது போதரும். 'அரியவன்' என்ற சொல் பெறுதற்கரிய நற்குணங்கள் வாய்க்கப்பெற்றவன் என்றும், குரக்கினத்தைச் சேர்ந்தவன் என்றும் இருபொருள் தருவதையும் உணர்க. நீலமலைக்கு ஓங்கி உலகளந்த உத்தமன் பேருரு உவமை. 'வன்மேரு' என்பது திரிபுரத்தை எரிப்பதற்குச் சிவபெருமான் இம்மேருமலையையே வில்லாகக் கொண்டான் என்பதைக் குறித்தது.

60. அல் குன்ற அலங்கு சோதி அம்மலை அகலப் போனான்;
பொன்குன்றம் அனைய தோளான் நோக்கினான், புலவன் சொன்ன,
நல்குன்றம் அதனைக் கண்டான்; உணர்ந்தனன், நாகம் முற்ற
எல்குன்ற எறியும் தெய்வமருந்து அடையாளம் என்ன. (8845)

(அல்-இருள்/இருள்நிறம்/கரியநிறம்; குன்றல்-தாழ்தல்/குறைதல்; அலங்குதல்-விளங்குதல்; அகல்தல்-நீங்குதல்; புலவன்-பேரறிஞன்/சாம்பவன்; நாகம்-விண்ணுலகு; எல்-ஒளி; எறிதல்-ஒளிவீசுதல்)

கரிய இருள்கூடக் குறைந்து ஒடுங்கிப்போகுமாறு மிகக் கருநிறத்துடன் விளங்குகின்ற ஒளி வடிவான அந்த மேருமலை பின்னிட்டு நிற்குமாறு முன்னேறி, அதனை அகன்று போனான் அனுமன்; பொன்போன்று ஒளிவீசும் அழகிய தோள்களையுடைய அனுமன், முன்பு பேரறிஞனான சாம்பவன் சொன்ன அந்த நல்ல அழகிய மருத்துமலையை இப்போது கண்டான்; அந்த மலை முழுவதும் ஒளிவீசித் திகழ்ந்ததால் நல்ல தெய்வத்தன்மை பொருந்திய மூலிகை மருந்துகள் இருப்பதற்கு இதுதான் அடையாளமாகும் என்று ஊகித்து உணர்ந்து கொண்டான் அனுமன்.

'அல்' என்பது இருளையும், 'எல்' என்பது ஒளியையும் குறிக்கும். பேரறிஞன் என்ற பொருளில் சாம்பவனைப் புலவன் எனப் போற்றுகிறான்

Koviloor Digital Library

கவிஞன். ''முக்காலமும் மொய்ம்மதியான், முறையின் உணர்வான்'' என்பது சாம்பவன் குறித்த கூற்று. எனவே அவனைப் புலவன் என்றான் என்க. தெய்வத்தன்மை வாய்ந்த மருந்து இருப்பதற்கு அடையாளம் அம்மலை முழுவதும் சூரியனுடைய ஒளியே குறையுமாறு அது ஒளிவீசுவது என்று ஊகித்துத் தெரிந்து கொண்டான் என்பதாம்.

61. மருந்துமலைக் காவல்தெய்வங்கள் தடுத்தல்

பாய்ந்தனன்; பாய்தலோடும்; அம்மலை பாதலத்துச்
சாய்ந்தது; காக்கும் தெய்வம் சலித்தன; கடுத்து வந்து
காய்ந்தது; ''நீதான் யாவன்? கருத்து என்கொல்? கழறுக!'' என்ன,
ஆய்ந்தவன் உற்ற தன்மை, அவற்றினுக்கு அறியச் சொன்னான்.
(8846)

(சலித்தல்-நடுங்குதல்; கடுத்து-விரைந்து; காய்தல்-கோபித்தல்; கழறுதல்-சொல்லுதல்; அறிய-தெளிவாக; கருத்து-எண்ணம்)

மருந்துமலையைக் கண்டதும் அனுமன் ஆர்வம் மிகுதியால் பாய்ந்தான். உடனே அவன் வேகம் தாங்கமாட்டாது அந்தமலை பாதாளத்திற்குள் சாய்ந்தது; அம்லையைக் காவல்காத்து வருகின்ற தேவதைகள் எல்லோரும் இதனைக்கண்டு நடுக்கமுற்றனர்; விரைவில் அவன் எதிரில்வந்து சினம்கொண்டு கோபித்தனர்; பின் ''நீ யார்? நீ இங்கு வந்ததன் நோக்கம் என்ன? சொல்லுவாயாக!'' என்றனர்; நல்ல கல்விகேள்விகளில் சிறந்தவனான அனுமனும் அங்கு நிகழ்ந்தனவற்றை யெல்லாம் அவர்கள் விளங்கிக்கொள்ளுமாறு நன்கு எடுத்துரைத்தான்.

62. அனுமன் மருந்துமலையைப் பெயர்த்தெடுத்தல்

கேட்டு அவை, ''ஐய! வேண்டிற்று இயற்றி, பின் கெடாமல் எம்பால்
காட்டு'' என உரைத்து, வாழ்த்திக் கரந்தன; கமலக்கண்ணன்
வாள் தலை நேமிதோன்றி, மறைந்தது; மண்ணின் நின்றும்
தோட்டனன் அனுமன், மற்று அக்குன்றினை வயிரத் தோளால். (8847)

(வேண்டிற்று-விரும்பியன; இயற்றுதல்-செய்துமுடித்தல்; எம்பால்-எம்மிடம்; கரத்தல்-மறைதல்; வாள்தலை-கூரியமுனை; நேமி-சக்கரப் படை; வயிரம்-உறுதி; தோட்டல்-தோண்டுதல்/பெயர்த்தெடுத்தல்; காட்டுதல்-திருப்பிக்கொண்டுவருதல்; மற்று-பின்பு)

அனுமன் கூறியவற்றைச் செவியேற்ற அக் காவல் தெய்வங்கள் அனுமனை நோக்கி, ''ஐயனே! உனக்கு வேண்டியவற்றை நீ விரும்பிய வண்ணம் செய்து முடித்துக்கொண்டு, பின்னர் அவற்றிற்கு எந்த இடையூறும் தீங்கும் நேர்ந்துவிடாமல் பாதுகாப்பாக எங்களிடம் கொண்டுவந்து காட்டிவிட்டு அது இருந்த இடத்திலேயே வைத்து

Koviloor Digital Library

விடுவாயாக!'' என்றுகூறி, வாழ்த்துக்களும்கூறி, மறைந்துபோயின; அதே சமயம் செந்தாமரைமலர் போலும் கண்களையுடைய திருமாலின் ஒளிமிகுந்ததும், கூரிய நுனியையுடையதுமான சக்கராயுதம் காட்சி தந்து அதுவும் மறைந்தது; பின்னர் அனுமன் தன்னுடைய வயிரம் போன்ற உறுதியான தோள்களால் அந்த மலையைப் பூமியிலிருந்தும் பெயர்த்தெடுத்தான்.

'காட்டு' என்பது கொண்டுவருதல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தோட்டல்-தொடுதல் தோண்டுதலாகும். வேருடன் அகழ்ந்தெடுத்தலைக் குறிக்கும்.

63. "இங்கு நின்று இன்னன மருந்து என்று எண்ணினால்,
சிங்குமால் காலம்" என்று உணரும் சிந்தையான்,
அங்கு அது வேரோடும் அங்கை தாங்கினான்;
பொங்கிய விசும்பிடைக் கடிது போகுவான். (8848)

(இன்ன-இத்தன்மையன; எண்ணுதல்-ஆராய்தல்; சிங்குதல்-கழிதல்/ குறைதல்/சுருங்குதல்; பொங்கிய-விரிந்த/அகன்ற/பரந்த; கடிது-விரைந்து; போகுவான்-போகும்பொருட்டு; அங்கை-அழகிய கைகள்)

அனுமன், ''இங்கு நின்றுகொண்டு எந்த மருந்து என்னன்ன நன்மை பயக்கும் என்று ஆராய்ந்து கொண்டிருந்தால் காலம் வீணே கழிந்து விடும்'' என்று மனத்தில் கருதியவனாய், அப்பொழுது அந்த மலையையே வேரோடும் பறித்துத் தன் அழகிய கைகளில் தாங்கிக்கொண்டு, விரிந்து பரந்த ஆகாயத்தின் வழியாக விரைந்து செல்லத்தொடங்கினான்.

சாம்பவன் கூறியனுப்பிய நால்வகை மூலிகைச் செடிகளையும் ஒவ்வொன்றாகப் பார்த்துப்பார்த்துத் தேடிக் கொண்டிருந்தால் காலம் வீணேகழிந்துவிடும் என்ற கருத்தை மனத்தில்கொண்டு அம்மலையையே வேரோடும் பிடுங்கித் தன் அழகிய கைகளில் தாங்கிக்கொண்டு விண்வழியே விரைந்து சென்றான் என்பதாம்.

64. ஆயிரம் யோசனை அகன்று, மீ உயர்ந்து,
ஆயிரம் யோசனை ஆழ்ந்தது அம்மலை;
'ஏ' எனும் மாத்திரத்து ஒருகை ஏந்தினான்,
தாயினன் உலகெலாம் தவழ்ந்த சீர்த்தியான். (8849)

(தவழ்தல்-பரவுதல்; சீர்த்தி-கீர்த்தி/புகழ்; தாயினன்-தாவிச் சென்றான்)

எல்லா உலகங்களிலும் பரவிய புகழையுடையவனான அனுமன், ஆயிரம் யோசனை அகலமுள்ளதும், ஆயிரம் யோசனை உயரம் உள்ளதும், ஆயிரம் யோசனை ஆழம் உள்ளதுமான அந்த சஞ்சீவிமலையை 'ஏ' என்று

Koviloor Digital Library

சொல்லுகின்ற ஒரு நொடிப்பொழுதிற்குள் பெயர்த்துத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு தாவிப்போனான்.

அம்மலையின் அகலம், உயரம், ஆழம் முதலியன கூறப்பட்டன. அவ்வளவு பெரியமலையை ஒரு நொடிப்பொழுதிற்குள் பெயர்த்தான் என்பது ஒரு சிறப்பு; ஒரே கையில் ஏந்தினரின் என்பது மற்றொரு சிறப்பு; அவ்வாறு ஏந்திக்கொண்டு வானில் தாவிப் பறக்கத்தொடங்கினான் என்பது இன்னுமொரு சிறப்பு. எனவே அனுமன் 'உலகெலாம் தவழ்ந்த சீர்த்தியான்' எனப்பட்டான் என்க. 'தவழ்ந்த' என்ற சொல்லுக்குப் பரவிய என்ற பொருள் நமக்குப் புதிது. 'ஏ' எனும் நெடில் சொல்லுக்கு இரண்டு மாத்திரை காலஅளவு என்க. 'கீர்த்தி மிகுபுகழ்' என்பது தொல்காப்பியம்.

65. வீடணனும் சாம்பவனும் இராமபிரானைக் காணுதல்

அத்தலை அன்னவன் அனையன் ஆயினான்;
இத்தலை இருவரும் விரைவின் எய்தினார்,
கைத்தலத்தால் அடிவருடும் காலையில்,
உத்தமற்கு உற்றதை உணர்த்துவாம் அரோ! (8850)

(அத்தலை-அவ்விடத்தில்; இருவர்-வீடணனும் சாம்பவனும்; கைத்தலம்-கைகள்; உணர்த்துதல்-கூறுதல்; வருடுதல்-தடவிக் கொடுத்தல்; இத்தலை-இவ்விடம்/போர்க்களத்தில்; உற்றது-நிகழ்ந்தது)

''அங்கே மேருமலையில் அத்தகையவனான அனுமன் அவ்வாறு கிளம்பினான். இங்கே போர்க்களத்தில் வீடணன், சாம்பவன் ஆகிய இருவரும் விரைவில் சென்று இராமபிரானை அடைந்து அவன் திருவடிகளை மெல்லத் தடவிக்கொண்டுத்தனர்; அப்பொழுது உத்த மனான இராமபிரானுக்கு நிகழ்ந்ததை இப்போது கூறத்தொடங்குவோம்'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. ஒரு காரியம் ஒரு முடிவிற்கு வந்தபின், அதனோடு தொடர்புடைய வேறொரு காரியம் வேறொரு இடத்தில் நடந்து கொண்டிருப்பதைக் கற்போர்க்குக் கண்முன் கொண்டு வருதல் ஒரு நாடகயுக்தி. அதைக் கவிஞன் மிகச் சாதுர்யமாக ஒவ்வொரு இடத்திலும் செய்துகொண்டு வருவதைக் காப்பியத்தில் பல இடங்களில் கண்டு வந்திருக்கிறோம். இங்கேயும் காட்சி மாற்றத்தைக் காண்பிக்கிறான் கவிஞன்.

66. வண்டு அன மடந்தையர் மனத்தை வேரொடும்
கண்டன, கொளவரும் கருணைதாம் எனக்
கொண்டன, கொடுப்பன வரங்கள், கோள்இலாப்
புண்டரீகத்துணை தருமம் பூத்தென. (8851)

Koviloor Digital Library

(கோள்-குற்றம்/மாறுபாடு; புண்டரீகம்-தாமரைமலர்; துணை-இரண்டு; பூத்தல்-மலர்தல்)

தாமரைமலர் போன்ற இராமபிரானது இரு கண்களையும் பெண்களின் மனம் வண்டுகள்போலச் சுற்றி வந்தாலும், அதனை வேரோடும் அழித்து, அம்மனத்தில் கருணையே பொங்கிவழிகின்றது என்று கூறும்படியான, கண்களைக் கொண்டவனும், வரங்களை வாரிவழங்கும் இயல்பினனான வனும், குற்றமில்லாத தாமரைமலர் போன்ற இராமபிரானது இரண்டு கண்களும், தருமமே மலர்ந்தது போன்று திகழ்ந்தன.

வீடணன், சாம்பவன் ஆகிய இருவரும் கைத்தலத்தால் அடிவருடும் போது இராமபிரான் தன் இரு கண்களையும் மலர்த்தினான். அது தருமமே மலர்ந்து திகழ்வதுபோல விளங்கிற்று என்பதோடு, அக்கண்கள் என்னும் தாமரைமலரைச் சுற்றிவரும் வண்டுகளாகப் பெண்களின் மனத்தைக் கூறியிருப்பதும் கண்டு சுவைக்க. இனையே முன்பு அனுமன் கூற்றாகக் கூறியதையும் நினைவுக்குக் கொண்டுவருக. இராமபிரானது இரு கண்களும் புண்டரீகத்துணைக்கு உவமை; பெண்களின் மனம் வண்டுக்கு உவமை; இர்ாமபிரான் மயக்கம் நீங்கிக் கண்விழித்துப் பார்த்தான் என்பதாம். அவ்விரண்டு கண்களும் கருணைபொழிவனவும், தருமம் தழைப்பதுவும், வரங்கள் அளிப்பனவுமாகும் என்பது கருத்து. 'மகளிர்க்கெல்லாம் நஞ்செனத் தகையவாகி நளிர் இரும் பனிக்குத் தேம்பாக் கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண!'' என்பது அனுமன் கூற்று. 'கோள்' என்பது குற்றத்தைக் குறிக்கும். 'கோள்இலாப் புண்டரீகம்' என்பது குற்றமற்ற தாமரையைக் குறிக்கும். தாமரைமலருக்குக் குற்றம் எது? பனிக்குத் தேம்புதல்; பனிக்குத் தேம்பாத தாமரை உண்டோ? இல்லை; எனவே இதனை இல்பொருள் உவமை எனக்கொள்க.

67. நோக்கினன், கரடிகட்கு அரசும், நோன் புகழ்
ஆக்கிய நிருதனும், அழுத கண்ணினா,
தூக்கிய தலையினா, தொழுத கையினா,
ஏக்கமுற்று, அருகிருந்து, இரங்குவார்களை. (8852)

(நோன்-மிக்க; ஆக்குதல்-பெறுதல்; நிருதன்-அரக்கன்/வீடணன்; ஏக்கம்-துன்பம்)

கரடிகளுக்கு அரசனான சாம்பவனும், தன் நற்குண நற்செயல்களால் தனக்கு மிக்க புகழை உண்டாக்கிக்கொண்ட அரக்கனாகிய வீடணனும், இராமபிரான் திருவடியில் அமர்ந்து கொண்டு, அழுகின்ற கண்களை யுடையவராகவும், தொங்கிய தலையை உடையவராகவும், தொழுகின்ற கைகளை உடையவராகவும், துன்பம் கொண்டு கண்களில் நீர்பெருக அமர்ந்திருக்கின்றவர்களை, இராமபிரான் கண்விழித்துப் பார்த்தான்.

Koviloor Digital Library

இரக்கமும் துன்பமும் கொண்டு அழுத கண்களும், தொங்கிய தலைகளும், தொழுத கையினையும் கொண்டு அருகிருந்த சாம்ப வனையும் வீடணனையும் இராமபிரான் கண்மலர்ந்து பார்த்தருளினான் என்பதாம்.

68. இராமபிரான் அவர்கள் இருவர் நிலைபற்றி வினவுதல்

"ஏவிய காரியம் இயற்றி எய்தினை?
நோவிலை? வீடணா" என்று நோக்கி, பின்,
தா அரும் புகழ்ச் சாம்பன் தன்னை", 'நீ
ஆவி வந்தனை கொல்?' என்று அருளினான் அரோ! (8853)

(நோவு-துன்பம்; தாஅரும்-குற்றமற்ற; ஆவி-உயிர்)

கண்விழித்துப் பார்த்த இராமபிரான் முதலில் வீடணனை நோக்கி, ''வீடணா! நான் கட்டளையிட்டபடி வானரர்க்கு உணவு கொணர்தலாகிய காரியத்தைச் செய்து முடித்து விட்டாயல்லவா? உனக்கு ஏதும் துன்பம் இல்லையே!'' என்றும், பின்னர் குற்றமற்ற பெரிய புகழையுடைய சாம்பவனை நோக்கி, ''நீ உயிர் பிழைத்து வந்தனையோ?'' என்றும் அருள் பொங்கக் கேட்டான்.

69. "ஐயன்மீர்! நம் குலத்து அழிவு இது ஆதலின்,
செய்வகை பிறிதுஇலை; உயிரின் தீர்ந்தவர்
உய்கிலர்; இனிச் செயற்குரியது உண்டெனின்,
பொய்இலீர்! புகலுதிர்! புலமை உள்ளத்தீர்! (8854)

(பிறிது-வேறு; தீர்தல்-நீங்குதல்; உய்குதல்-பிழைத்தல்; புலமை-அறிவு; புகல்தல்-சொல்லுதல்)

இராமபிரான் அவர்கள் இருவரையும் நோக்கி, ''பெரியவர்களே! நமது இனத்திற்கு உற்ற பேரழிவு இதுவாகும்; இதனை மாற்றுவதற்கு வேறுவழி ஏதும் இல்லைபோல் தோன்றுகிறது. உயிரிழந்தவர்கள் இனிப் பிழைத்து வரப்போவதில்லை; எனினும் பொய்மையற்ற மெய்யறிவு படைத்த உள்ளம் கொண்டவர்களே! இனிமேல் நாம் செய்யக்கூடிய செயல் ஏதேனும் இருப்பின் சொல்லுங்கள்!'' என்று வேண்டுகிறான்.

இங்கே 'நம்குலத்து அழிவு' என்று சென்னைக் கம்பன் கழகச் செம்பதிப்பு மட்டுமே பேசுகிறது. மற்ற நூல்கள் எல்லாம் 'நமக்கு உற்ற அழிவு' என்றே பேசுகிறது. இராமபிரான் தெய்வ அவதாரம்; மானிட குலம்; வீடணன் அரக்கர்குலம்; சாம்பவன் கரடிக்குலம் (மிருக இனம்) இப்போது இராமபிரான். 'நம்குலத்து அழிவு' என்கிறான் என்றால் அவனுடைய மனிதநேயத்தையும், தன்னைவிடத் தாழ்ந்தவர்களையும் தன் இனத்தவரே. தன் குலத்தவரே என்று கொள்ளும் பெருங்

Koviloor Digital Library

கருணையையும் நினைத்துப் போற்றவேண்டும். 'நம்குலம்' என்பதை மாற்றி 'நமக்கு உற்ற' என்று ஏன் பொருள் கொண்டார்கள் என்பதைப் பேரறிஞர்கள்சற்று சிந்தித்து விளக்கம்தருதல் நன்மைபயக்கும். சாம்பவன் என்ன செய்திருக்கிறான் என்பதை அறியாத மயக்க நிலையில் இருந்ததால் இராமபிரான் இவ்வாறு கேட்க நேரிட்டது எனக்கொள்க.

70. இராமபிரான் புலம்புதல்

"சீதை என்று ஒருத்தியால் உள்ளம் தேம்பிய,
பேதையேன், சிறுமையால் உற்ற பெற்றியை
யாதென உணர்த்துகேன்! உலகொடு ஈர்வுறாக்
காதை, வன்பழியொடும் நிறுத்திக் காட்டினேன். (8855)

(தேம்புதல்-வருந்துதல்; பேதை-அறிவிலி; சிறுமை-கீழ்மை; பெற்றி-தன்மை; உணர்த்துதல்-சொல்லுதல்; காதை-கதை; வன்-வலிய; ஈர்வுறுதல்-பொருந்துதல்)

இராமபிரான் "சீதை என்ற ஒரு பெண்ணின் காரணமாக உள்ளம் மிக வருந்தி, அறிவிலியாகிய நான், என் கீழ்மைத் தன்மையால் அடைந்த நிலையை என்னவென்று சொல்லி உங்களுக்குப் புரியவைப்பேன்? உலக இயல்புக்குச்சற்றும் பொருந்திவாராத என்னுடைய வாழ்க்கைக்கதையை, வலிய பழிச்சொற்கள் நிறைந்ததாக நிலைபெறச் செய்து காட்டி விட்டேனே!" என்று தன்னைத் தானே நொந்துகொண்டு புலம்புகிறான்.

'காதை' என்பது கதைபொழிந்தபாட்டாகும் என்பதறிக. 'தையல் சொல் கேளேல்' என்பது ஔவையார் வாக்கு. 'ஸ்திரீ புத்தி பிரளயாந்தகா' என்பது ஒரு வடமொழிப் பழமொழி. "மங்கையர் திறத்தால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல் சங்கையில் உணர்தி! வாலி செய்கையால்சாலும்; இன்னும் அங்கு அவர் திறத்தினாலே அல்லலும் பழியும் ஆதல் எங்களின் காண்டி" என்பதும் கிட்கிந்தா காண்டத்தில் இராமபிரான் கூற்றே; "செறிதரு தன் மனப்படியே செய்தல்ஒருவர்க்கு இனிதாம்; அறிவுறுக்கும் குருமொழி கேட்டக்கால் அஃதினும் சிறப்பாம்; முறிதரும் ஏதிலர் சொற்கேட்டு உஞற்றல் முனிதுயர்; மனையாள் வறிய உரை கேட்டு உஞற்றல் மண்ணிற நேர் கெடுதியுறும்" என்பது குசேலோபாக்கியானம். தம்பி இலக்குவனும் எழுபது வெள்ளம் வானரச்சேனையும் மடிந்ததற்குக் காரணம், சீதாதேவி என்ற ஒரு பெண்ணும், தன்னுடைய அறியாமையுமே காரணமாகும் என்று நினைந்துப் புலம்புகிறான் என்பதாம். புகழோடு அமைய வேண்டிய தன் வாழ்க்கைக் கதையைப் பழியோடு பொருந்துமாறு ஆக்கிவிட்டேனே என்று புலம்புகிறான் என்பதாம்.

Koviloor Digital Library

71. "மாயை இம்மான்" என, எம்பி, வாய்மையான்,
தூயன உறுதிகள் சொன்ன சொல் கொளேன்,
போயினென்; பெண்உரை மறாது போகலால்,
ஆயது இப்பழியுடை மரணம்-அன்பினீர்!" (8856)

(வாய்மை-உண்மை; மறாது-மறுக்காது; போகலால்-போனதால்; எம்பி-என்தம்பி/இலக்குவன்)

இராமபிரான் வீடணனையும் சாம்பவனையும் நோக்கி, ''அன்புடையவர்களே! இந்த மான் உண்மையான மான் அல்ல; அரக்கர்களின் மாயத்தால் வந்த மான்'' என்று தூயவனான என் தம்பி இலக்குவன் உண்மையாகவும், உறுதிபடவும் கூறிய சொற்களை என் மனத்துக்கொள்ளாது, என் மனைவி சீதாதேவியின் சொற்களை மறுக்காது, அந்த மாயமான் பின்னாலேயே தொடர்ந்து சென்றேன்; அவ்வாறு நான் போனதால்தான் இத்தகைய பழியையுடைய மரணம் நமக்கு ஏற்பட்டுவிட்டது'' என்று தன்னைத் தானே நொந்துகொண்டு புலம்புகிறான் இராமபிரான்.

தன் தம்பி இலக்குவனை வாய்மையான், தூய்மையான், உறுதியான் என்று புகழ்வதை நோக்குக. அதேசமயம் தன்னை இகழ்ந்து கொள்வதையும் நோக்குக. இலக்குவன் இது மாயமான் என்று எச்சரித்ததையும் இங்கு நினைவுகூர்க. இலக்குவன் கூறியபடி கேட்டு இம்மாய மானின் பின்னால் செல்லாதிருந்தால், இந்தப் பழியுடைய மரணம் ஏற்பட்டிருக்காது என்பது அருத்தாபத்தி.

72. "கண்டனென் இராவணன் தன்னைக் கண்களால்;
மண்டு அமர் புரிந்தனென் வலியின்; ஆர்உயிர்
கொண்டிலென், உறவெலாம் கொடுத்து, மாள, நான்
பண்டுடைத் தீவினை பயந்த பண்பினால். (8857)

(வலியின்-வலிமையால்; மண்டுதல்-நெருங்குதல்; அமர்-போர்; பண்டு-பழமையான; கொடுத்தல்-இழத்தல்)

''நான் முதல்நாள் போரில் இராவணனை நேருக்குநேர் என் கண்களால் கண்டேன்; என்னுடைய வலிமையால் நெருங்கிப் போர்புரிந்தேன்; எனினும் நான் முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனால், என்னுடன் எனக்கு உதவிக்கு வந்த என்னுடைய உறவினர்கள் அனைவரையும் இப்பொழுது பறிகொடுத்துவிட்டு, நானும் இறக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டேன், எனினும் அறத்தின் வழி நின்று அந்த அரக்கனாகிய இராவணனுடைய உயிரைக் கவர்ந்து கொள்ளாமல் விட்டுவிட்டேனே?'' என்று இப்போது தன் மேலேயே கழிவிரக்கம் கொண்டு புலம்புகிறான் இராமபிரான்.

Koviloor Digital Library

''கண்டனென் இராவணன் தன்னைக் கண்களால்'' என்பது, முன்பு 'கண்டனென் கற்பினுக்கணியைக் கண்களால்' என்ற அனுமன் கூற்றை ஒத்திருத்தல் காண்க. 'உறவெலாம்' என்பது சுக்கிரீவன், வானரச்சேனை முதலிய எல்லோரையும் உட்படுத்திக் கூறியது எனக்கொள்க. முதல்நாள் போரில் ஆயுதங்களை எல்லாம் இழந்து தன்னந்தனியனாய் நின்ற இராவணனை, அறத்தின் தன்மைகருதி, ''இன்று போய்ப் போர்க்கு நாளைவா'' என்று கூறி, அவனை அப்போது கொல்லாது விட்டதை இப்போது நினைத்து வருந்துகின்றான் என்பதாம். இதற்குக் காரணம் நான் முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனே' என்று தன்னைத் தானே நொந்து கொள்ளுகிறான் என்பதாம்.

73. "தேவர்தம் படைக்கலம் தொடுத்து, தீயவன்
சாவது காண்டும்" என்று, இளவல் சாற்றவும்,
ஆவதை இசைந்திலென்; அழிவது என்வயின்
மேவுதல் உறுவது ஓர் விதியின் வெம்மையால்" (8858)

(இளவல்-இலக்குவன்; தேவர்-பிரமதேவன்; தீயவன்-இந்திரசித்து; என்வயின்-என்னிடத்து; வெம்மை-கொடுமை; ஆவது-பொருத்தமானது /நன்மைதருவது; இசைதல்-உடன்படுதல்)

முன்பு என் தம்பி இலக்குவன், ''பிரமதேவனின் பிரமாஸ்திரத்தைத் தொடுத்து அரக்கனான தீயவன் இந்திரசித்து மடிவதைக் காண்போம்'' என்று கூறியபோது, அது உலகத்திற்கு நன்மைபயக்காது என்றுகூறித் தடுத்தேன். அவன் கருத்துக்கு அன்று நான் உடன்படாதது, உறவெலாம் அழிவதற்காக என்னிடத்துப் பொருந்தியுள்ள விதியின் கொடுமையால் தான் போலும்!'' என்று இப்போது வருந்துகிறான் இராமபிரான்.

முன்பு இலக்குவன் பிரமாஸ்திரம் தொடுத்து அரக்கனை அழிப்போம் என்று கூறியபோது, அது ''ஈன்ற அந்தணன் படைக்கலம் தொடுக்க, இவ்வுலகம் மூன்றையும் சுடும் ஒருவனால் முடிகலது'' என்று கூறித் தடுத்தான்இராமபிரான்என்பதை இங்குநினைவுகூர்க. விதியின்கொடுமை பற்றி இராமபிரான் தொடர்ந்து பேசும் இடங்களில் இது மிகவும் முக்கியமானதாகும்.

74. நின்றிலென் உடன்; நெறி படைக்கு நீதியால்
ஒன்றிய பூசனை இயற்ற உன்னினேன்;
பொன்றினர் நமரெலாம்; இளவல் போயினான்;
வென்றிலென் அரக்கனை, விதியின் மேன்மையால். (8859)

(ஒன்றிய-மனம் ஈடுபட்ட; உன்னுதல்-நினைத்தல்; நமர்-நம்மவர்; மேன்மை-மிகுதி; நீதி-முறை/நியதி)

Koviloor Digital Library

''என் தம்பி இலக்குவன் உடன் போர்க்களத்திலேயே நில்லாது போய் விட்டேன்; போர்க்களத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய போர்க் கருவிகளுக்கு நியதிப்படி மனம் ஒருமித்த பூசனை செய்யவேண்டும் என்ற பெரு நோக்கம் கருதிச் சற்று அகன்று போய்விட்டேன்; அந்த நேரத்தில் இந்திரசித்தின் பிரமாத்திரத்தால் உறவினர்களும், நம்மவர்களும், வானரச்சேனையும் எல்லாம் இறந்து மடிந்துபோயின; தம்பி இலக்குவனும் மாண்டுபோனான்; பகைவனாகிய அரக்கனை வெல்லாது போய்விட்டோம்; இவை எல்லாவற்றிற்கும் காரணமாய் அமைந்தது விதியின் கொடுமையே'' என்று எண்ணிப் புலம்புகிறான் இராமபிரான்.

விதியின் கொடுமையை 'விதியின் மேன்மை' என்று கூறியதன் நுட்பம் உணர்க.

75. "ஈண்டு, இவண் இருந்து, இவை இயம்பும் ஏழைமை
வேண்டுவது அன்று; இனி அமரின் வீடிய
ஆண்தகை அன்பரை, அமரர் நாட்டிடைக்
காண்டலே நலம்; பிற கண்டது இல்லையால். (8860)

(ஏழைமை-அறியாமை/பேதைமை; வீடிய-இறந்துபட்ட; அமரர்நாடு -வீரசுவர்க்கம்; கண்டது-தோன்றியது; ஈண்டு-இப்போது; இவண்-இங்கு)

''இப்போது இங்கு இருந்துகொண்டு, சென்றதைப் பற்றி அறிவிலி போலப் பிதற்றிக் கொண்டிருப்பது நலம் பயப்பதல்ல; விரும்பத்தக்கது மல்ல; எனவே போரில் ஈடுபட்டு உயிர்நீத்த ஆண்களிற் சிறந்தவனாகிய இலக்குவனையும், நம் நண்பர்களையும், நாமும் இறந்துபோய் வீரசுவர்க்கத்தில் காண்பதே சரியானதாகும். இதைத்தவிர வேறு ஒரு உபாயமும் எனக்குத் தோன்றவில்லை'' என்று தன்னிலை மறந்து புலம்புகிறான் இராமபிரான்.

'அமரர் நாட்டிடைக் காண்டல்' என்பது தாமும் இறந்துபோய் வீர சுவர்க்கம் அடைதல் என்ற சொற்றொடரின் மங்கல வழக்கு எனக்கொள்க. போரில் இறந்துபடுபவர்கள் வீரசுவர்க்கமே எய்துவர் என்பது மீண்டும் கூறப்படுகிறது. 'அன்பர்' என்பது தன்பால் அன்பு கொண்ட சுக்கிரீவன், அங்கதன், மற்றும் வானரவீரர்கள் அனைவரையும் குறிக்கும்.

76. "எம்பியைத், துணைவரை, இழந்த யான், இனி
வெம்பு போர் அரக்கரை முருக்கி, வேரறுத்து,
அம்பினின் இராவணன் ஆவி பாழ்படுத்து,
உம்பருக்கு உதவி, மேல் உறுவது என் அரோ?" (8861)

(வெம்புதல்-மனம் வெதும்புதல்; முருக்குதல்-கொல்லுதல்; வேர்-அடி; ஆவி-உயிர்; பாழ்படுத்தல்-அழித்தல்; உம்பர்-தேவர்கள்; உறுவது-அடையப்போவது)

Koviloor Digital Library

''என் தம்பி இலக்குவனையும், எனக்குத் துணையாக வந்த எழுபது வெள்ளம் வானரச்சேனையையும் இழந்தபிறகு, நான் இனிமேல் மனம் கொதித்துப் போர்செய்து இந்த அரக்கர்களை வேரோடு அழித்து, என் அம்பினால் இராவணனின் அரிய உயிரைப் பறித்துக்கொண்டு, அதனால் தேவர்களுக்கு உதவி செய்வதனால், நான் அடையப்போகும் நன்மை என்ன இருக்கிறது? இவ்வளவுக்கும் பின்னால் நான் என்ன பெரிதாக அடைந்துவிடப் போகிறேன்?'' என்று மனங்கலங்குகிறான் இராமபிரான்.

சாதாரணமான நம்மைப்போன்ற மானிடர்கள்போல் இறைவனின் அவதாரமான இராமபிரான் பேசுவதைக் கூர்ந்து நோக்குக. 'துணைவர்' என்றது சுக்கிரீவன் உள்ளிட்ட வானரச்சேனையை என்க. இதற்கு மேலும் நான் அரக்கரை அழித்து, இராவணன் உயிரைப் பறிப்பது என்பது எந்தப் பயனையும் விளைவிக்காது; அது பயனற்றது என்கிறான் இராமபிரான். விரக்தியின் உச்சக்கட்டம்; இராமபிரான் தானும் இறந்துபட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வருகிறான் என்பதாம்.

77. "இளையவன் இறந்தபின், எவரும் என் எனக்கு?
அளவு அறு சீர்த்தி என்? அறன் என்? ஆண்மை என்?
கிளை உறு சுற்றம் என்? அரசு என்? கேண்மை என்?
விளைவுதான் என்? மறைவிதி என்? மெய்ம்மை என்?" (8862)

(சீர்த்தி-கீர்த்தி/புகழ்; கேண்மை-நட்பு; மெய்ம்மை-சத்தியம்; என்-ஏன்/எதற்கு)

''என்தம்பி இலக்குவன் இறந்துவிட்ட பின்னர், எனக்கு யார் இருந்து என்ன? இல்லாமல் போனால் என்ன? எனக்கு ஏன் அளவற்ற புகழ்? எனக்கு எதற்கு அறன், ஆண்மையெல்லாம்? எனக்கு ஏன் என்னைத்தாங்கும் உறவு? எனக்கு எதற்கு அரசாட்சி, நட்பு, இவையெல்லாம்? பின்னால் விளையப்போவது நன்மையோ தீமையோ? அவையெல்லாம் எனக்கு எதற்கு? வேதவிதிப்படி ஒழுகி என்ன பயன்? வாய்மையும் மரபும் காத்து என்ன பயன்?'' என்று துயரத்தின் எல்லைக்கோட்டிலிருந்து புலம்புகிறான் இராமபிரான்.

இலக்குவன் இறந்தபின்னால் தனக்குப் புகழ், அறம், ஆண்மை, சுற்றம், அரசு, நட்பு, நன்மை, தீமைகள், வேதம், சத்தியம் இவையெல்லாம் இருந்தாலும் தனக்கு அவற்றால் எந்தப் பயனும் இல்லை; எனவே அவை தனக்குத் தேவையில்லை என்கிறான் என்பதாம். இராமபிரான் இலக்குவன்மீது கொண்ட அன்பும் பாசமும் புலப்படுத்தப்படுகிறது.

78. "இரக்கமும் பாழ்பட, எம்பி ஈறுகண்டு,
அரக்கரை வென்று நின்று, ஆண்மை ஆள்வெனேல்,
மரக்கண் வன்கள்வனே, வஞ்சனேன்; இனி
கரக்குமது அல்லது ஓர் கடன் உண்டாகுமோ?" (8863)

Koviloor Digital Library

(ஆள்வது-பிறர் அறியக்காட்டுவது/மேற்கொள்ளுதல்; வன்-வலிய; கரத்தல்-கவர்தல்; ஆண்மை-வீரம்; ஈறு-முடிவு/அழிவு/இறப்பு)

''இரக்கம் என்ற ஒரு குணமே அழியும்படி, என் தம்பியின் முடிவைக் கண்டபின்பும் நான் பகைவர்களாகிய அரக்கரோடு போர்புரிந்து அவர்களை வென்று, எல்லோருக்கும் என் வெற்றியைப் பெரிதுபடுத்திப் பறைசாற்றிக் கொண்டிருப்பேன் என்றால், நான் உணர்ச்சியற்ற மரத்தாலானபதுமைக்குரிய கண்களைப் பெற்றவன்போல் வலிய நெஞ்சமுடைய கள்வன் ஆவேன்; வஞ்சகன் ஆவேன்; இனிமேல் நான் என் உயிரைப் போக்கிக் கொள்வது அன்றி வேறு ஏதேனும் கடமை உள்ளதோ?'' என்று புலம்புகிறான் இராமபிரான்.

இலக்குவன் முடிந்ததும், எல்லாம் முடிந்தது என்றும், இனிச் செய்வதற்கு ஒன்றும் இல்லை என்றும், தான் உயிர்துறப்பதே சாலச்சிறந்தது என்றும் புலம்புகிறான் என்பதாம். 'மரக்கண்' என்பதை உருவகமாகக் கொள்ளவேண்டும். அல்லது இல்பொருள் உவமையாகக் கொள்ளவேண்டும். மரத்தினாலாகிய கண் எங்கேனும் உண்டோ? கிடையாது எனவே இது இல்பொருள் உவமை. அன்பும் இரக்கமும் கண்ணோட்டமும் இல்லாத கண் உண்டோ? உண்டு. மரம் போன்ற ஜடமான-உணர்ச்சியற்ற கண் உடையவர்கள் உண்டு; அவர்களை வள்ளுவன் எப்படி அழைக்கிறான் பாருங்கள். 'மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர்' என்கிறான் (குறள்-576) மணிவாசகர் தம் கண்ணை 'மரக்கண்' என்றே கூறுகிறார் கேளுங்கள். 'வன்பராய் முருகு ஒக்கும் என் சிந்தை, மரக்கண்; என் செவி இரும்பினும் வலியதாகும்' என்று பேசுகிறது திருவாசகம். 'மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்' என்பது முத்தொள்ளாயிரம்.

79. "தாதையை இழந்தபின், சடாயு இற்றபின்,
காதலின் துணைவரும் மடிய, காத்து உழல்
கோது அறு தம்பியும் விளிய, கோள்இலன்,
சீதையை உவந்துளான்" என்பர் சீரியோர்" (8864)

(காதல்-அன்பு; உழல்தல்-திரிதல்; கோது-குற்றம்; விளிதல்-இறத்தல்; கோள்-கொள்கை; தாதை-தந்தை/தசரதன்; சீரியோர்-மேன்மக்கள்)

''தந்தையானதசரதனை இழந்த பின்பும், தந்தை முறையினனானசடாயு இறந்தபின்பும், தன்பால் அன்பு கொண்டு வந்த சுக்கிரீவன், அங்கதன் முதலான துணைவர்கள் இறந்த பின்பும், தன்னை இரவு பகலாகக் காத்து வருந்தி நின்றவனும், குற்றமற்றவனுமான தம்பி இலக்குவன் இறந்த பின்பும், இன்னும் இவன் உயிரோடு இருக்கிறான் என்றால் அது அவன் சீதாதேவியின்பால் கொண்ட அன்பினாலேயாகும். இவன் ஒரு நல்ல

Koviloor Digital Library

கொள்கையில்லாதவன் என்று சான்றோர்கள் பழிப்பர்'' என்று புலம்புகிறான் இராமபிரான்.

இழத்தல், இறுதல், முடிதல், விளிதல், மடிதல் என்பனவெல்லாம் இறத்தல் என்ற ஒரு பொருள் குறித்த பலசொற்கள் எனக்கொள்க. உலகத்தார் பழிச்சொல்லுக்கு அஞ்சித்தானே இறுதியில் அன்பிற்கினிய சீதாதேவியைக் காட்டிற்கு அனுப்புகிறான் இராமபிரான். எனவே சான்றோர் பழிச்சொல்லுக்கு இலக்காகக்கூடாது என்பது அவன் கருத்து. ''ஈன்றாள் பசி காண்பாள் ஆயினும், செய்யற்க, சான்றோர் பழிக்கும் வினை'' என்பது குறள்-656.

80. "வென்றனென், அரக்கரை வேரும் வீய்ந்து அறக்
கொன்றனென், அயோத்தியைக் குறுகினேன், குணத்து
இன்துணை எம்பியை இன்றி, யான் உளேன்
நன்று அரசு ஆளுமா, சால நன்று அரோ!" (8865)

(சால-மிகவும்; ஆளுமா-ஆளும்ஆறு/ஆளும்தன்மை; குறுகுதல்-அடைதல்)

''நான் அரக்கர்களுடன் போரிட்டு வென்று, அவர்கள் குலத்தையே அடியோடு நிர்மூலமாக்கிக் கொன்றுவிட்டு, அயோத்தி நகருக்கு, என்னுடைய இனிய துணைவனும், தம்பியுமாகிய நற்பண்புகள் நிரம்பப் பெற்ற இலக்குவன் இல்லாது, நான்மட்டும் உயிரோடு சென்று அரசாட்சி செய்யும் தன்மை நன்றாக இருக்கும்; மிகவும் நன்றாக இருக்கும்'' என்று தன்னைத் தானே இகழ்ந்து கொள்ளுகிறான் இராமபிரான்.

இலக்குவன் இல்லாது பகைவரை வெல்வதோ, கொல்வதோ, அயோத்தி சென்று அரசாள்வதோ, பழிப்புக்குரியதாகும் என்று தன் கருத்தைப் புலப்படுத்துகிறான் இராமபிரான். 'நன்று சால நன்று' என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

81. சாம்பவன் பேசத் தொடங்குதல்

''படி இனது ஆதலின், யாதும் பார்க்கிலென்,
முடிகுவென் உடன்" என முடியக் கூறலும்,
அடிஇணை வணங்கிய சாம்பன்,''ஆழியாய்!
நொடிகுவது உளது" என நுவல்வதாயினான். (8866)

(முடிகுதல்-முடிந்துபோதல்/இறத்தல்; முடிய-முடிவாக/தீர்மானமாக; இணை-இரண்டு; ஆழி-சக்கரப்படை; நொடிகுவது-கூற வேண்டுவது; நுவல்தல்-சொல்லுதல்; நொடி-சொல்; படி-நிலைமை/தன்மை; இனது-இத்தன்மையது)

Koviloor Digital Library

''என்னுடைய இப்போதைய நிலைமை இவ்வாறு இருப்பதனால் நான் பின்விளைவுகளைப் பற்றி எதுவும் சிந்தித்துப் பார்க்க விரும்பவில்லை; இலக்குவனுடன் உடன் இறந்துபடுவேன்'' என்று இராமபிரான் தீர்மானமாகக் கூறியவுடன், சாம்பவன் இராமபிரானுடைய இரு திருவடிகளையும் வணங்கி, ''சக்கரவர்த்தியே! சக்கரப்படையைக் கையிலேந்தியவனே! நான் கூறவேண்டுவது ஒன்று உளது'' என்று கூறித் தான் கூறவிரும்பியதைக் கூறத்தொடங்கினான்.

''யாதும் பார்க்கிலென்'' என்ற சொற்றொடர் பொருள் ஆழம் மிக்கது. இப்போது இராமபிரான் உயிர்விடத் துணிந்துவிட்டால், சீதாதேவியின் நிலை என்னவாகும்? பரதன் என்னஆவான்? தாயர், அயோத்திமக்கள் நிலை என்னவாகும்? என்பனவற்றை எல்லாம் சற்றும் சிந்திக்காதவனாய் இந்த முடிவை எடுத்திருக்கிறான் என்ற இவ்வளவு பொருள்களையும் இந்த ஒரு சொற்றொடருக்குள் அடக்கிக்கூறிய கவிஞனின் கவித்திறம் நோக்குக.

82. "உன்னைநீ உணர்கிலை; அடியனேன் உனை
முன்னமே அறிகுவென்; மொழிதல் தீது அது;
என்எனில், இமையவர் எண்ணுக்கு ஈனம் ஆம்;
பின்னரே தெரிகுதி! தெரிவுஇல் பெற்றியோய்!" (8867)

(தெரிவு-அளவு; பெற்றி-பெருந்தன்மை; தீது-நல்லதன்று; எண்-எண்ணம்; ஈனம்-குறைவு; தெரிகுதி-தெரிந்துகொள்வாய்; உணர்தல்-அறிதல்)

சாம்பவன் இராமபிரானை நோக்கி, ''எவராலும் புரிந்து கொள்ள முடியாத அளத்தற்கரிய பெருந்தன்மையுடையவனே! உன்னை நீ யாரென்று நன்கு புரிந்துகொள்ளாதவன் போல் பேசுகின்றாய்; எனினும் நான் உன்னை முன்னரே அறிவேன்; அதனை இப்பொழுது உனக்குக் கூறுவது நன்றாக இருக்காது; ஏனென்றால் அது இமையாநாட்டமுடைய தேவர்களின் எண்ணத்திற்குக் குறைவாகும். எனினும் இதுபற்றி நீ உரிய காலத்தில் பின்னர் புரிந்துகொள்வாய்!'' என்கிறான்.

''உன்னை நீ உணர்கிலை'' என்பது, பரம்பொருள் திருமாலாகிய நீ இப்போது இராமபிரானாக மானிட அவதாரத்தில் இருப்பதாகவே எண்ணிக் கொண்டிருக்கின்றாய்; உன்னுடைய உண்மையான சொரூபத்தை உணராமல் இருக்கிறாய் என்ற விரிந்த பொருளைத்தரும். 'அடியனேன் உனை முன்னமே அறிகுவென்' என்பது, சாம்பவன் தேவரகசியம் முழுவதும் அறிந்தவன் என்பதையும் அதனை இப்போது அவனுக்கு உணர்த்துதல் நன்மைபயக்காது என்பதையும், அது தேவர்கள் எண்ணத்திற்கு இழுக்காக அமையும் என்பதையும் அறிந்தவன் என்ற பொருள்களை உள்ளடக்கிய சொற்றொடராகும். சாம்பவன் மிகப்

Koviloor Digital Library

பழமையானவன் என்பதும் இதனால் தெரியவரும். ''தன் பெருமை தான் உணராத்தன்மையன்'' என்பது திருவாசகம்; ''பின்னரேதெரிகுதி'' என்பது, முன்னர் கருடனும் இவ்வாறே கூறிப்போந்தமையை நினைவுபடுத்த வேண்டும். நீ திருமாலின் அவதாரம் என்பதை அறிந்திருந்தால் இவ்வாறு கூறியிருக்கமாட்டாய் என்பது அருத்தாபத்தி.

83. "அம்புயத்து அயன்படை ஆதல் தேறினேன்,
உம்பியை, உலப்புஅரும் உருவை ஊன்றிட,
வெம்பு போர்க் களத்திடை வீழ்த்த வென்றியால்;
எம்பெரும் தலைவ! ஈது எண்ணம் உண்மையால்" (8868)

(வெம்புதல்-மனம்கொதித்தல்; உலப்புஅரும்-அழிவற்ற; அம்புயம்-அம்புஜம்/தாமரைமலர்; அயன்படை-பிரமாஸ்திரம்; தேறுதல்-தெளிதல்; பெரும்-பெருமைமிக்க; ஊன்றுதல்-நன்கு பதிதல்; வீழ்த்த-உயிரைப் போக்கிய; உண்மை-சத்தியம்; உரு-உடல்; அம்புயம்-அழகிய புயங்கள்)

''எங்கள் பெருமைக்குரிய தலைவனே! மிக்க சினம்கொண்ட கொடிய போர்க்களத்தில், உன்னுடைய தம்பியாகிப் இலக்குவனது அழித்தற்கரிய உடலில் ஆழப்பதிந்த அம்புகளால் உயிரைப் போக்கிய வெற்றியை உடையவனான இந்திரசித்து செலுத்தியது தாமரைமலரில் வீற்றிருப்பவனும், அழகிய புயங்களை உடையவனுமான பிரமதேவனின் பிரமாஸ்திரம்தான் என்பதை நான் நன்கு தெரிந்து தெளிந்து கொண்டேன். இந்த என்னுடைய கருத்து மிக்க உண்மையானதாகும்'' என்கிறான் சாம்பவன்.

84. "அன்னவன் படைக்கலம், அமரர் தானவர்
தன்னையும், விடின் உயிர் குடிக்கும்; தற்பர!
உன்னை ஒன்று இழைத்திலது, ஒழிந்து நீங்கியது;
இன்னமும் உவமை ஒன்று எண்ண வேண்டுமோ?" (8869)

(தற்பரன்-மேலானவன்; இழைத்தல்-செய்தல்; எண்ணுதல்-நிறுவுதல்; விடுதல்-ஏவுதல்; குடித்தல்-போக்குதல்)

''எல்லோர்க்கும், எல்லாப் பொருட்கும் மேலானவனே! அந்தப் பிரமதேவனது படைக்கலமான பிரமாஸ்திரம் ஏவப்பட்டால் அது தேவர்கள், அசுரர்கள் என்று எந்த வேறுபாடும் பாராது எல்லோரையும் கொன்று உயிரைப்போக்கும் தன்மையது; அதுவே உன்னை ஒன்றும் செய்ய இயலாது, உனக்கு ஒருதீங்கும் இழைக்காது, உன்னைவிட்டு அப்பால் நீங்கிச் சென்றது என்றால், நீ தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய திருமாலின் அம்சம்தான் - பரம்பொருள்தான் என்பதை நிறுவுவதற்கு இதைக்காட்டிலும் வேறு ஒரு உவமையைக்கூற வேண்டுமோ?'' என்கிறான் சாம்பவன்.

Koviloor Digital Library

''இந்தச் செயலைக்காட்டிலும் இந்தப் பிரமாஸ்திரத்திற்கு வேறுஒரு உவமை இருக்கிறது என்று கருதமுடியுமோ? எனவே இது பிரமாஸ்திரம்தான்என்பதும் நீபரம்பொருள்தான்என்பதும் நன்கு புரிகிறது என்கிறான் சாம்பவன் என்பதாம். அமரர் தானவர் என்று பன்மையில் கூறி, தன்னையும் என்று ஒருமையில் கூறுவது கருதுக. அமரர் தானவர் தம்மையும் என்றுதானே இருக்கவேண்டும்? ''ஒருமையில் பன்மையும், பன்மையில் ஒருமையும் ஓரிடம், பிறவிடம் தழுவலும் உளவே'' என்பது நன்னூல் என்பதறிக. வேறு அளவை கொண்டு இதனை நிறுவுதல் தேவையோ? என்கிறான். அமரர் தானவர் எல்லோரையும் அழிக்கும் இப்படை, உனக்கு ஒரு தீங்கும் செய்ய இயலாது அகன்று சென்றதால் நீ பரம்பொருளே என்பது தெளிவாகிறதல்லவா? இதை நிறுவுவதற்கு வேறு ஒரு அளவை எதற்கு? என்று கேட்கிறான் சாம்பவன் என்பதாம்.

85. "பெருந்திறல் அனுமன், ஈண்டு உணர்வு பெற்றுளான்,
அருந்துயர் முடிக்குறும் அளவுஇல் ஆற்றலான்,
மருந்து இறைப் பொழுதினில் கொணரும் வாய்மொழி
பொருந்தினன், வடதிசைக் கடிது போயினான். (8870)

(ஈண்டு-இங்கு; இறை-சிறிது/இமைப்பொழுது; பொருந்துதல்-உடன்படுதல்; கடிது-விரைந்து; முடிக்குறுதல்-இல்லையாகும்படி செய்தல்; உணர்வு-தன்நினைவு)

''பெரும் ஆற்றல் பெற்றவனான அனுமன் இப்போது தன் நினைவு வரப்பெற்றான்; அவன் நமக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த நீக்குதற்கரிய துயரத்தைத் தீர்த்து வைக்கும் அளவற்ற ஆற்றல் பெற்றவனாவான்; ''இப்போது இறந்தவர்களின் உயிரை மீட்டுத் தரும் வல்லமை வாய்ந்த மூலிகைகளை ஒருநொடிப் பொழுதில் கொண்டு வருவாயாக'' என்று நான் கேட்டுக் கொண்டதற்கு உடன்பட்டு, அவன் இப்போது வடதிசை நோக்கி விரைந்து போயிருக்கிறான்'' என்கிறான் சாம்பவன்.

அனுமன் ''பெருந்திறலான், அருந்துயர் முடிக்கும் அளவுஇல் ஆற்றலான் மருந்து இறைப்பொழுதில் கொணர்குவான்'' என்று அனுமனின் பேராற்றல் பேசப்படுகிறது. இராமபிரானது அருந் துயரையும், சீதாதேவியின் அருந்துயரையும், சுக்கிரீவனின் அருந்துயரையும் நீக்கியவன் இந்த அனுமன்தான் என்பதை நினைவிற்குக் கொண்டுவாருங்கள்.

86. "பனி வரை கடந்தனன்; பருப்பதங்களின்
தனி அரசு அதன்புறம் தவிர்ந்து சார்ந்துளான்;
இனி ஒரு கணத்தில் வந்து எய்தும்; ஈண்டுறும்
துனி வரு துன்பம் நீ துறத்தி, தொல்லையோய்!" (8871)

Koviloor Digital Library

(பனிவரை-இமயமலை; தனிஅரசு-ஒப்பற்ற வேந்தன்; பருப்பதம்-பர்வதம்/மலை; தொல்லையோன்-மிகப்பழமையானவன்; துனி-மனக் கலக்கம்; துறத்தல்-விட்டுவிடுதல்; தவிர்தல்-நீங்குதல்; இமம்-பனி; உறு-மிக்க)

''மிகப்பழமையான மூலகாரணனே! ஆதிமூர்த்தியே! அனுமன் இமயமலையைக் கடந்து, மலைகளுக்கெல்லாம் ஒப்பற்ற அரசனாக விளங்கும் மேருமலையின் புறத்தையும் நீங்கி, மூலிகைகள் இருக்கின்ற இடத்தை அடைந்துள்ளான்; இன்னும் ஒரு நொடிப்பொழுதில் இங்கு வந்து சேர்ந்துவிடுவான்; எனவே நீ கொண்டிருக்கின்ற மிக்க மனக்கலக்கத்தால் உண்டாகும் துன்பத்தைத் தவிர்ப்பாயாக!'' என்கிறான் சாம்பவன்.

'இமம்' என்ற சொல் பனியைக் குறிக்கும். எனவே இமயமலை என்பது பனிவரை எனப்பட்டது. 'பருப்பதம்' என்பது பர்வதம் என்ற வட சொல்லின் தமிழாக்கம்; 'பருப்பதங்களின் தனி அரசு' என்பது மேரு மலையைக் குறிக்கும். 'தொல்லையோய்' என்பது ஆதிமூர்த்தி, எல்லாப் பொருட்கும் மூலகாரணன் என்பதைக் குறிக்கும். 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே' என்பது திருவாசகம். 'கணம்' என்பது ஒரு நுட்பமான கால அளவு, இமைப்பொழுது எனக்கொள்க.

87. ''யான் அலால், எந்தையாய் உலகை ஈன்றுளான்
தான் அலால், சிவன் அலால், நேமிதாங்கிய
கோன் அலால், எனைவரும் உணரும் கோள்இலர்;
வேனிலான் மேனியாய்! மருந்தை மெய்உற'' (8872)

(வேனிலான்-மன்மதன்; ஈன்றுளான்-படைத்தவன்/தோற்று வித்தவன்/பிரமன்; நேமி-சக்கரப்படை; எனைவரும்-மற்றவர்களும்; கோன்-இறைவன்/திருமால்; கோள்-தன்மை)

வசந்தகாலமாகிய இளவேனிற் காலத்திற்குத் தலைவனான மன்மதன் போன்ற மேனியழகு படைத்தவனே! இந்த மூலிகையின் பெருமை யையும், சிறப்பையும் உண்மையாகவே நானும், என் தந்தையானவனும், இவ்வுலகம் முழுவதையும் படைத்தவனான பிரமதேவனும், சிவ பெருமானும், சக்கரப்படையைக்கையில் கொண்டுள்ளவனானதலைவன் திருமாலும் மட்டும்தான் அறிவோம். மற்று ஒருவரும் இதன் உண்மைத் தன்மையை உள்ளது உள்ளவாறு அறியாதவர்கள் ஆவார்கள்''.

சாம்பவன் பிரமனின் புதல்வன் என்பது முன்பும் பேசப்பட்டது. அதனையே இங்கே சாம்பவன் தன் கூற்றாகவே 'எந்தை' என்று கூறுகிறான். 'மெய்' என்பது இறந்தாரையும் உயிர்பெற்றெழச் செய்யும் சிறப்புத்தன்மை வாய்ந்த உண்மை என்ற விரிந்த பொருளைத்தரும்.

Koviloor Digital Library

88. "ஆர்கலி கடைந்த நாள், அமிழ்தின் வந்னை;
கார் நிறத்து அண்ணல்தன் நேமி காப்பன;
மேருவின் உத்தரகுருவின் மேல்உள;
யாரும் மற்று உணர்கிலா அரணம் எய்தின" (8873)

(ஆர்கலி-கடல்/திருப்பாற்கடல்; கார்நிறம்-மேகவண்ணம்; நேமி-சக்கரப்படை; உத்தரம்-வடக்கு; மேல்-அப்பால்; அரணம்-பாதுகாவல்)

''முன்பு தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய தேவ அமிழ்தத்துடன் தோன்றியது இந்த மூலிகைச் செடிகள்; இவை மேகவண்ணனாகிய திருமாலின் சக்கரப்படையால் பாதுகாக்கப் பட்டு வருவனவாகும்; மேருமலைக்கு அப்பால் வடக்குப் பகுதியில் உள்ள உத்தரகுரு என்னும் மலையில் இருக்கின்றன; இது இருப்பதுபற்றி யாரும் அறிந்துகொள்ள முடியாதவாறு மிகுதியான பாதுகாவலுடன் இருக்கின்றன'' என்கிறான் சாம்பவன்.

89. "தோன்றிய நாள்முதல் யாரும் தொட்டில;
ஆன்ற பேர் அண்ணலே! அவற்றின் ஆற்றல் கேள்;
மூன்றென ஒன்றிய உலகம், முன்னை நாள்,
ஈன்றவன் இறப்பினும், ஆவி ஈயுமால். (8874)

(ஆன்ற-விரிந்த/ஆழ்ந்த; பேர்-புகழ்; அண்ணல்-பெருமைமிக்கவன்; ஒன்றிய-அடுக்கியுள்ள/பொருந்தியுள்ள; முன்னைநாள்-முற்காலம்; ஈன்றவன்-படைத்தவன்/தோற்றுவித்தவன்; ஆவி-உயிர்; ஈதல்-கொடுத்தல்/தருதல்)

''அகன்று, விரிந்து, பரந்து, ஆழ்ந்த பெருமையும் புகழும்பெற்ற பெருமைமிக்கவனே! அந்த மூலிகைகளின் சிறப்பைச் சொல்லுகிறேன் கேட்பாயாக! அவை பாற்கடலில் தோன்றிய நாள் முதற்கொண்டு இன்றுவரை அம்மூலிகைகளை யாரும் தீண்டியதும் இல்லை, பயன்படுத்தியதும் இல்லை; மேல், நடு, கீழ் என்று மூன்றாகப் பொருந்தி ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருக்கும் இம்மூன்று உலகங்களையும் பண்டைக்காலத்தில் படைத்தவனான பிரமதேவனே இறந்து போனாலும்கூட, அவனுக்கும் இந்த மூலிகைகள் உயிர்கொடுத்துப் பிழைக்கச் செய்யும் ஆற்றல் உடையனவாகும்'' என்கிறான் சாம்பவன்.

அம்மூலிகைகளின் சிறப்புப் பேசப்படுகிறது. மூன்று உலகங்களையும் மேல், நடு, கீழ் என்றும் விண், மண், பாதாளம் என்றும்தான் கூறி வருகிறோம். பாதலம், பூதலம், மீதலம் என்ற சொல்லாட்சியும் உண்டு என்பதறிக. பொதுவாக ''மூன்றென ஒன்றிய உலகம் முன்னைநாள் ஈன்றவன்'' இறப்பதில்லை - அழிவற்றவன் என்றுதான் அறிந்திருக் கிறோம். எனினும் தேவாரம், ''நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்'' என்று

Koviloor Digital Library

பேசுகிறது. எனவே பிரமதேவனுக்கும் அழிவுண்டு என்பது சைவ சித்தாந்தக்கொள்கை என்ற ஒரு புதிய செய்தி இங்கே கிடைக்கிறது.

௯0. மூலிகைகளின் குணநலன்கள்

''சல்லியம் அகற்றுவது ஒன்று; சந்துகள்
புல்லுறப் பொருத்துவது ஒன்று; போயின
நல்லுயிர் நல்குவது ஒன்று; நல்நிறம்
தொல்லையது ஆக்குவது ஒன்று; தொல்லையோய்!'' (8875)

(தொல்லை-பழைமை; சல்லியம்-அம்புகள்; சந்து-மூட்டுகள்; புல்லுற-இறுக்கமாக; பொருத்துவது-இணைப்பது; நல்குதல்-மீட்டுக் கொடுத்தல்; நிறம்-உடல்)

''ஆதி மூர்த்தியே! இந்த மூலிகைகளுள் ஒன்று பகைவர்களால் ஏவப்பட்டு உடலில் பதிந்திருக்கின்ற அம்புகளை அகற்றும் ஆற்றல் பெற்றது; மற்றொன்று படைக்கலன்களால் இற்றுப்போன மூட்டுக்களை இறுகஇணைக்கும் ஆற்றல் பெற்றது; வேறொன்று மாண்ட நல்ல உயிரை மீட்டுத்தரும் ஆற்றலுடையது; இன்னும் ஒன்று அவர்களுடைய நல்ல உடலைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்துவிடும் ஆற்றல் வாய்ந்தது'' என்று அம்மூலிகைகளின் ஆற்றல்பற்றி விளக்கமாய்க் கூறுகிறான் சாம்பவன்.

முன்பு அனுமனுக்குக் கூறிய சாம்பவன், இப்பொழுது இராம பிரானுக்குக் கூறுகிறான். சல்லியம் அகற்றும் மூலிகை விசல்யகரணி என்றும், சந்துகள் புல்லுறப் பொருத்துவது சந்தானகரணி என்றும், போயின நல்லுயிர் நல்குவது சஞ்சீவகரணி என்றும், நல்நிறம் தொல்லையது ஆக்குவது ஸாவர்ணியகரணி என்றும் கூறப்படுகிறது. சாவர்ணியகரணி என்பது அம்புகள்பட்ட வடுக்களை நீக்கிப் பழைய நிறத்தையும் உடலையும் உண்டாக்குவது என்ற விரிந்த பொருளைத்தரும். அம்புகளை அகற்றுவதையும், சந்துகள் புல்லுறப் பொருந்துவதையும் விட்டுவிட்டு, நல்லுயிர் நல்குவதாகிய சஞ்சீவகரணியைத்தான் நாம் பேச்சுவழக்கில்அனுமன்சஞ்சீவிமலையைப்பெயர்த்தெடுத்துக்கொண்டு வந்தான் என்று கூறுகிறோம் என்பதையும் நினைக. 'நல்நிறம் தொல்லையது ஆக்குவது' என்ற சொற்றொடர், முன்பு இராமபிரான் பாததூளி பட்டதும் அகலிகை 'பண்டை வண்ணமாய் நின்றனள்' என்ற சொற்றொடரை நினைவுபடுத்துவதை நோக்குக. 'நிறம்' என்ற சொல் உடல் என்ற பொருளைத்தரும். ''உமையொரு பாகத்தானை, 'மெல்லியலை மல்லல் தன் நிறம் ஒன்றில் இருத்தி நின்றோன்'' என்பது திருக்கோவையார்.

Koviloor Digital Library

91. "வருவது திண்ணம்; நீ வருந்தல்; மாருதி
தருநெறி தருமமே காட்ட, தாழ்க்கிலன்,
அருமையது அன்று" எனா, அடிவணங்கினான்;
இருமையும் துடைப்பவன் ஏம்பல் எய்தினான். (8876)

(திண்ணம்-உறுதி; தாழ்த்தல்-காலதாமதம் செய்தல்; அருமை-அரியது; இருமை-இருவினைகள்; துடைத்தல்-நீக்குதல்; ஏம்பல்-மகிழ்ச்சி)

சாம்பவன் இராமபிரானை நோக்கி, ''அனுமன் அம்மூலிகைகளைக் கொண்டு வருவது உறுதி; நீ கவலைப்படாதே; அவனுக்கு தரும தேவதையே வழிகாட்டுவாள்; எனவே அவன் காலந்தாழ்த்தாது உடனே வந்துசேர்வான். இது ஒன்றும் அவனுக்குச் செயற்கரிய செயலன்று'' என்றுகூறி இராமபிரானது திருவடிகளை வணங்கினான். தன்னைச் சரணடைந்தவர்களின் தீவினை, நல்வினை என்ற இரு வினைகளையும் போக்கி, இம்மை, மறுமைப் பயனாகிய வீடுபேற்றினை அருளுப வனாகிய திருமாலின் அம்சமான இராமபிரான் மிக்க மகிழ்வெய்தினான்.

இறைவன்மானிட வடிவிலிருந்தும் அருள்புரிவான் என்பது ''தெய்வம் மனுஷ்யரூபேணா'' என்ற வடசொற்றொடராலும் அறியலாம். ''யாதொரு தெய்வம் காண்டீர் அந்த தெய்வமாகி அங்கே, மாதொரு பாகனார் தாம் வருவார்'' என்பது சிவஞானசித்தி; ''இருமையும் துடைப்பவன்'' என்பது ''திண்மையும் பாவமும் சிதைந்து தேயுமே; சன்மமும் மரணமும் இன்றித்தீருமே'' என்ற பாயிரத்தின் சுருக்கம் எனக்கொள்க.

92. அனுமன் மருந்துமலை கொண்டு வருதல்

"பொன்மலை மீது போய், போக பூமியின்
நல் மருந்து உதவும்" என்று உரைத்த நல் உரைக்கு,
அன்வயம் இல்லை என்று, அயிர்க்கின்றேன் அலேன்"
என்னலும், விசும்பிடை எழுந்தது அங்கு ஒலி. (8877)

(பொன்மலை-மேருமலை; உரை-செய்தி/சொல்; அன்வயம்-பொருத்தம்; அயிர்த்தல்-ஐயுறுதல்/சந்தேகித்தல்; விசும்பு-ஆகாயம்; போகபூமி-உத்தரகுருநாடு)

இராமபிரான் சாம்பவனை நோக்கி, ''அனுமன் பொன்மலையாகிய மேருமலையைத் தாண்டிச்சென்று, அதற்கும் அப்பால் உள்ள போக லோகமாகிய உத்தரகுருநாட்டை அடைந்து, அங்கிருக்கும் நல்ல மூலிகைகளைக் கொணர்ந்து தருவான் என்று நீ கூறிய மகிழ்ச்சி மிக்க செய்தியை நான் பொருத்தமில்லை என்று சந்தேகப்படவில்லை'' என்று கூறிக்கொண்டிருக்கும்போதே அங்கே ஆகாயத்தின் வடக்குத் திசையில் ஒரு பேரொலி கேட்டது.

Koviloor Digital Library

பொன்மலை-மேருமலை; போகபூமி-உத்தரகுருநாடு; நல்மருந்து-நான்கு மூலிகைகள்; நல் உரை-மகிழ்ச்சிச்செய்தி; அன்வயம் இல்லை என்று அயிர்க்கின்றேன் அலேன்'' என்று இரு எதிர்மறைச் சொற்களைக் கூறி ஒரு உடன்பாட்டுப் பொருளை ஊகிக்க வைத்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. ''நல்லுரைக்குப் பொருத்தம் உண்டு என்று உணர்கிறேன்'' என்றான் என்பது கருத்து. பொதுவாக வடதிசை, புண்ணியதிசை எனக் கருதப்படும் என்பதறிக.

93. கடல் கிளர்ந்து எழுந்து மேல்படர, கார்வரை
இடைஇடை பறிந்து விண்ஏற, இற்றுஇடை
தடையிலது உடற்றுறு சண்டமாருதம்
வடதிசை தோன்றிய மறுக்கம் வந்ததால். (8878)

(கிளர்தல்-கொந்தளித்தல்/பொங்கியெழுதல்; மேல்படர்தல்-கரை கடத்தல்; கார்வரை-கரியமலைகள்; இடை-நடுவே; இறுதல்-முறிந்து போதல்; உடற்றுதல்-வீசுதல்; மறுக்கம்-கலக்கம்; சண்டமாருதம்-பெருங்காற்று)

கடல் கொந்தளித்துக் கரைகடந்து போகவும், கரிய மேகங்கள் தங்கியுள்ள மலைகள் நடுவே பறியுண்டு இற்று முறிந்துபோய் ஆகாயத்தில் ஏறவும், தங்குதடையில்லாது கடுமையாக வீசும் பெருங் காற்று வடதிசையினின்றும் உண்டாகிய கலக்கம் அங்கே வந்துற்றது.

அனுமன் வடதிசையினின்றும் வரும் பெரும் காற்றின் வேகம் புலப்படுத்தப்பட்டது. கடல் கொந்தளித்தது; மலைகள் விண்நோக்கிப் பறந்தன; பெருங்காற்று தங்குதடையில்லாது வீசியது; எனவே அங்கே ஒரு கலவரம் நிகழ்ந்தது என்பதாம்.

94. மீன்குலம் குலைந்து உக, வெயிலின் மண்டிலம்
தான் குலைந்து உயர்மதி தழுவ, தன்னுழை
மான்குலம் வெருக்கொள, மயங்கி, மண்டி, வான்
தேன்குலம் கலங்கிய நறவின், சென்றவால். (8879)

(மீன்குலம்-நட்சத்திரக்கூட்டம்; உகுதல்-சிந்துதல்; மதி-சந்திரன்; உழை-இடம்; மான்-களங்கம்; வெருக்கொள்ளுதல்-அச்சப்படுதல்; வான்-மேகத்தின் கூட்டம்; நறவு-தேன்/தேன்கூடு; குலம்-சிறந்த; மண்டுதல்-நெருங்குதல்; மயங்குதல்-கலத்தல்)

விண்ணிலுள்ள நட்சத்திரக் கூட்டங்கள் நிலைகலங்கிச் சிதறி விழவும், வெயிலைக் கொண்ட சூரியமண்டலம் தானும் நிலை திரிந்தது; உயர்ந்த சந்திரனைத் தழுவிக்கொள்ளவும், அந்தச் சந்திரன் தன்னிடமுள்ள சிறந்த மான் என்னும் களங்கத்தைக் கண்டு மான் கூட்டங்கள் அச்சம் கொண்டு

Koviloor Digital Library

ஓடவும், விண்ணிலுள்ள மேகங்கள் தேன்கூடு கலைந்து தேனீக்கள் பறந்து செல்லுவதுபோல், கலைந்து பின்னர் ஒன்றோடொன்று கலந்து சென்றன.

இவையெல்லாம் அனுமன் விரைந்து வந்த பெருங்காற்றினால் விண்ணில் ஏற்பட்ட மாற்றங்களாகும். நட்சத்திரங்கள் சிதைந்தன; சூரிய மண்டலம் சந்திரனைத் தழுவிக்கொண்டது; அங்கிருந்த களங்கமாகிய மானைக் கண்டு மான் கூட்டம் அஞ்சி ஓடியது; மேகங்கள் தேனீக்கள் போலக் கலைந்து பின்னர் கலந்து சென்றன என்க. சந்திரனிலுள்ள களங்கத்தை மறு என்றும், மான் என்றும், முயல் என்றும் கூறுவது கவிமரபு.

95. வேர்த்துள தூறொடு விசும்பை மீச்செலப்
போர்த்தன, மலையொடு மரனும் முன்பு போல்,
தூர்த்தன, வேலையை; காலின் தோன்றலும்,
ஆர்த்தனன், அனையவர் அரந்தை ஆற்றுவான். (8880)

(தூர்-புதர்; விசும்பு-ஆகாயம்; போர்த்தல்-மூடிக்கொள்ளுதல்; முன்பு-அணைகட்டியகாலம்; தூர்த்தல்-நிரப்புதல்; வேலை-கடல்; கால்-காற்று; தோன்றல்-புதல்வன்; அரந்தை-துன்பம்; ஆற்றுதல்-போக்குதல்; ஆர்த்தல்-ஆரவாரித்தல்; தூர்த்தல்-வற்றச் செய்தலுமாம்; மரன்-மரம்)

அனுமன் வருகின்ற விரைவின் வேகத்தால் வேரோடுகூடிய புதர்களும், ஆகாயத்தின் மீது சென்று ஆகாயத்தையே மூடி மறைத்துக் கொண்டன; மலைகளும், மரங்களும், முன்பு நளன் சேதுஅணை கட்டிய காலத்தைப் போல இப்பொழுதும் கடலை நிரம்பச்செய்தன; வாயுதேவனின் புதல்வனான அனுமனும், அங்கே கூடியிருக்கிற இராமபிரான், வீடணன், சாம்பவன் ஆகியோரின் துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டு, சேய்மையிலிருந்தே முன்கூட்டியே பெருமுழக்கம் செய்து, தான் வந்துவிட்டதைத் தெரியப்படுத்தினான்.

'அரந்தை' என்ற சொல் துன்பத்தைக் குறிக்கும். 'அரந்தை வெம் பிறவி என் நோய்க்கு அருமருந்து அனைய ஐயா!' என்று முன்பு கிஷ்கிந்தா காண்டத்தில் வாலிகூற்றாகக் கூறியதையும் நினைவிற் கொணர்க.

96. மழைகளும் கடல்களும், மற்றும் முற்றும், மண்
உழையவும் விசும்பவும் ஒலித்தற்கு ஒத்துள,
குழீஇயன, குமுறின கொள்கை கொண்டதால்
உழுவையின் சினத்தவன் ஆர்த்த ஓசையே. (8881)

(உழுவை-புலி; மழைகள்-மேகங்கள்; முற்றும்-எல்லாமும்/அனைத்தும்; குழீஇயன-குழுமின/ஒன்றுசேர்ந்தன; கொள்கை-தன்மை; குமுறுதல்-ஆர்ப்பரித்தல்; ஒத்தல்-பொருந்தியிருத்தல்; உழை-இடம்)

Koviloor Digital Library

புலியைப்போன்று அடங்காத சினம்கொண்டவனான அனுமன் எழுப்பிய பெருமுழக்கத்தின் ஓசை, ஒலி செய்வதற்குரியனவான தரையிடத்தனவாகிய கடல்களும், விண்ணிடத்தனவாகிய மேகங்களும், இன்னும் இதுபோல் பேரொலி செய்தற்கு இயல்புடையதான அனைத்தும் ஒன்றுசேர்ந்து ஒலிக்கும் தன்மையைக் கொண்டனவாயின.

அனுமனது பெருமுழக்கம் கடல் ஓசையினும், இடியோசையினும் மிக்கிருந்தது என்பதாம்.

97. எறிதிரைப் பெருங்கடல் கடைய ஏற்றநாள்,
"செறிசுடர் மந்தரம் தருதி சென்று" என,
"வெறிது கொல்!" எனக்கொடு, விசும்பின் மீச்செலும்
உறுவலிக் கலுழனே ஒத்துத் தோன்றினான். (8882)

(எறிதல்-வீசுதல்; திரை-அலைகள்; செறி-நெருங்கிய; சுடர்-ஒளி; வெறிது-வெற்றிடம்/உள்ளீடு இல்லாதது; கொடு-கொண்டு/கருதும் வண்ணம்; உறுவலி-மிக்கவலிமை; கலுழன்-கருடன்)

வீசுகின்ற அலைகளையுடைய பெரிய பாற்கடலைக் கடைவதற்கெனத் தேவர்களும் அசுரர்களும் ஏற்றுக்கொண்ட அன்று திருமால் கருடனை நோக்கி, ''நெருங்கிய ஒலியையுடைய மந்தரமலையைச்சென்று கொண்டு வருவாயாக!'' என்று கட்டளையிட்ட போது, அதனை வேரோடும் பறித்துக்கொண்டு, அதன் உள்ளே ஒன்றும் இல்லை போலிருக்கிறதே என்று கண்டோர் கருதுமாறு, முயற்சி ஏதுமின்றி மிக விளையாட்டாக அதனைத் தூக்கிக் கொண்டு, ஆகாயத்தில் பறந்துவரும் மிக்க வலிமையுடைய கருடனைப் போன்று தோன்றினான் அனுமன்.

'வெறிது' என்பது கனமில்லாத இலேசான பொருள் என்ற பொருளைத் தரும். தேவர்களை உய்விக்க மந்தரமலையைக் கொண்டுவந்த கருடனுக்கு, வானரர்களை உய்விக்க சஞ்சீவி மலையைக் கொண்டு வருகின்ற அனுமன் உவமை. பாற்கடலைக் கடையத் தேவர்களும் அசுரர்களும் முற்பட்டபோது, மந்தரமலையை மத்தாக நடுதற் பொருட்டுத் திருமால் கலுழனை அம்மலையைக் கொண்டு வருமாறு பணித்ததாக இங்கே கூறப்படுகிறது. ஆனால் பாற்கடலைக் கடையும் நிகழ்ச்சியைப் பல இடங்களில் கூறிப்போகும் கவிஞன் இந்த நிகழ்ச்சியை எங்கும் கூறியதாகத் தோன்றவில்லை. எனினும் கும்பகருணன் வதைப் படலத்தில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. ''அயில்வாளி உவண அண்ணலை ஒத்தது, மந்தரம் ஒத்தது அவ்வுயர் பொன்தோள்'' என்கிறது அப்பாடல். எனினும் கம்பன் கழகச் செம்பதிப்பும்கூடத் தனது அடிக்குறிப்பில் ''திருமால் பாற்கடலைக் கடைதற்பொருட்டுக் கருடனை அனுப்பி மந்தரமலையைக் கொணரச்செய்தான் என்னும் வரலாறு உண்டு என்பது இச்செய்யுளால் புலனாகிறது'' என்றுதான் குறிப்பிடுகிறது.

Koviloor Digital Library

கலுழன் மந்தரமலையைக் கொண்டுவந்தான் என்பது எங்கும் பேசப்பட வில்லை என்றே தோன்றுகிறது. அவ்வாறு அவன் மந்தரமலையைக் கொண்டு வந்திருந்தால், அனுமன் சஞ்சீவி மலையைக்கொண்டு வந்ததைப் பற்றிப் பரவலாகப் பேசப்படுவது போல் இதுபற்றியும் பரவலாகப் பேசப்பட்டிருக்கும் அல்லவா? இந்தச் செய்தி இப்போதுதான் முதன்முதலாகக் கவிஞனால் பேசப்படுகிறது என்றே தோன்றுகிறது. அறிஞர்கள் மேலும் விளக்கம் தந்தால் நலம் பயக்கும்.

98. பூதலத்து அரவோடு மலைந்து போனநாள்,
ஓதிய வெண்றியன், உடற்றும் ஊற்றத்தன்,
ஏதம்இல் இலங்கை அம் கிரிகொடு எய்திய
தாதையும் ஒத்தனன், உவமை தற்கு இலான். (8883)

(அரவு-பாம்பு/ஆதிசேஷன்; மலைதல்-போர்புரிதல்; ஓதுதல்-சிறப்பித்துக் கூறப்படுதல்; உடற்றுதல்-போர்செய்தல்; ஊற்றம்-வலிமை; ஏதம்-குற்றம்; கிரி-மலை/திரிகூடமலை; தாதை-தந்தை/வாயுதேவன்; தற்கு-தனக்கு; பூதலம்-பூவுலகு/நிலவுலகு; அம்-அழகிய)

பூவுலகத்தைத் தன் ஆயிரம் தலைகளால் தாங்கிப் பாதுகாக்கின்ற பாம்பாகிய ஆதிசேஷனுடன் மாறுபட்டுப் போட்டியிட்ட, அப்பொழுது, எல்லோராலும் புகழ்ந்து பேசப்படும் வெற்றியை உடையவனும், போர்புரியும் வல்லமையுடையவனும், எந்தக் குற்றமும் இல்லாத இலங்கை மாநகரம் அமைந்துள்ள அழகிய திரிகூடமலையைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு தென்திசை நோக்கி வந்தவனுமாகிய தன் தந்தை வாயுதேவனையும் ஒத்துத் தோன்றினான், தனக்குவமை இல்லாதவனான அனுமன்.

முன்பாடலில் மந்தரமலையை எடுத்துவந்த கருடனுக்கு அனுமனை உவமைகூறிய கவிஞன், இந்தப்பாடலில் திரிகூட மலையை எடுத்துவந்த வாயுதேவனுக்கு அனுமனை உவமிக்கிறான் என்பதாம். இந்த நிகழ்ச்சி காப்பியத்தில் பல இடங்களிலும் பேசப்பட்டுவருவதைக் கற்போர் நன்கு உணரலாம். 'எற்கு' என்பது எனக்கு என்பதுபோல, 'தற்கு' என்பது தனக்கு என்ற பொருளைத்தரும். 'பூதலம்' என்பது நிலவுலகைக்குறிக்கும். 'பூதலம் இருக்கும் காறும் புகழுடம்பு இருக்கும்' என்பது விநாயக புராணம்.

99. "தோன்றினன்" என்னும் அச்சொல்லின் முன்னம் வந்து
ஊன்றினன், நிலத்து அடி; கடவுள் ஓங்கல்தான்
வான்தனில் நின்றது, வஞ்சர் ஊர்வர
ஏன்றிலது ஆதலின்; அனுமன் எய்தினான். (8884)

(கடவுள்-தெய்வத்தன்மை; ஓங்கல்-மலை/மருத்துமலை/சஞ்சீவ மலை; ஏன்றல்-இசைதல்/ஏற்றுக்கொள்ளுதல்; ஏன்றிலது-இசைந்திலது)

Koviloor Digital Library

அனுமனின் பெருமுழக்கம் கேட்ட சாம்பவன், ''அனுமன் இதோ வந்துவிட்டான்'' என்று கூறிமுடிக்கும் முன்பே அனுமன் வந்து நிலத்தில் தன் பாதங்களை அழுந்த ஊன்றிநின்றான்; தெய்வத்தன்மை வாய்ந்த மருத்துமலை மட்டும், கொடிய வஞ்சகர்களாகிய அரக்கர்கள் வாழுகின்ற ஊராகிய இலங்கை மாநகருக்குள் வருவதற்கு உடன்படாது, விண்ணிலேயே தனியாக நின்றது. அனுமன் மட்டும் வந்து சேர்ந்தான்.

இதேபோல முன்பும் அனுமன் கொண்டுவந்த கணையாழி, தீயவர் வாழ்கின்ற ஊருக்குள் வந்தால் அதன் புனிதத்தன்மைக்கு ஊறுவரும் என்று கருதி, ''வாங்கிய ஆழி தன்னை, வஞ்சர் ஊர் வந்ததாம் என்று, ஆங்கு உயர் மழைக்கண் நீரால் ஆயிரம் கலசம் ஆட்டி'' என்ற சுந்தரகாண்ட வரிகளையும் இங்கு நினைவுகூர்க. எல்லாப் பொருள்களிலும் உயர்ந்தது என்பதால் 'ஓங்கல்' என்பது மலைக்குக் காரணப்பெயர்.

100. மருத்து மலையின் காற்றினாலேயே அனைவரும் உயிர்பெற்று எழுதல்

காற்று வந்து அசைத்தலும், கடவுள் நாட்டவர்
போற்றினர் விருந்து உவந்திருந்த புண்ணியர்
ஏற்றமும், பெருவலி, அழகொடு எய்தினார்,
கூற்றினை வென்று, தம் உருவும் கூடினார். (8885)

(அசைதல்-வீசுதல்; கடவுள்நாட்டவர்-தேவர்கள்; ஏற்றம்-மேன்மை/ உயர்வு; கூற்று-இயமன்)

இந்திரசித்தனது பிரமாஸ்திரத்தால் கட்டுண்ட வானரவீரர்கள் போர் செய்து மடிந்ததால் வீரசுவர்க்கம் எய்தி, அங்கு போற்றப்பட்டு தேவர்களுக்கு விருந்தினராய் மகிழ்ச்சியோடு இருந்தார்கள்; எனவே அவர்கள் புண்ணியர்கள் எனப்பட்டனர்; இப்போது வானில் நின்றிருந்த இம்மருத்துமலையினின்றும் வீசிய காற்று அவர்கள் உடம்பில் பட்டதும், அவர்கள் முன்னைவிட அதிக மேன்மையும், அதிக வலிமையும், அதிக அழகும் பெற்று இயமனையே வெற்றிகண்டு தத்தம் பழைய உருவமான வானரஉருவமுடைய உடம்பில் புகுந்து கொண்டனர்.

'கடவுள் நாட்டவர்' என்பது தேவலோகத்தில் வாழும் தேவர்களைக் குறித்தது என்க. போரிட்டு மடிந்ததால் வானரங்கள் எல்லாம் வீரசுவர்க்கம் எய்தி அங்கே தேவர்களுக்கு விருந்தினராய் மகிழ்ந்திருந்ததால் அவர்கள் புண்ணியம் செய்தவர்கள் எனப்பட்டனர். இந்த மருத்துமலையின் காற்றுப்பட்டதால் அவர்கள் பண்டைய வண்ணமும், வலிமையும், அழகும், மேன்மையும், உருவமும் பெற்றனர் என்பதாம்.

Koviloor Digital Library

101. **அரக்கர்கள் உயிர்பெற்று எழாதது**

அரக்கர்தம் ஆக்கைகள் அழிவுஇல் ஆழியில்
கரக்கலுற்று ஒழிந்தன ஒழிய, கண்டன,
மரக்குலம் முதலவும் உய்ந்து வாழ்ந்தன;
குரக்கினம் உய்ந்தது கூற வேண்டுமோ? (8886)

(யாக்கை-உடம்பு; ஆழி-கடல்; கரக்கல்உறுதல்-மறைந்துபோதல்; மரக்குலம்-மரக்கூட்டம்; உய்தல்-உயிர்பெற்று வாழ்தல்/பிழைத்துப் போதல்)

போர்க்களத்தில் மாண்டுபோன அரக்கர்களின் உடல்களை எல்லாம், இராவணன் மருத்துவனை அழைத்து அழிவில்லாத கடலில் மூழ்கும்படி போட்டுவரச் செய்ததால் அவை மறைந்து ஒழிந்துபோயின. எனவே இப்போது போர்க்களத்தில் இறந்துபட்ட அரக்கர்களின் உடல்கள் ஒன்றுகூட இல்லை. எனவே இந்த மருத்துமலைக் காற்று வீசியதால் உயிர் பெற்றெழுந்த வானரர்கள்போல் அரக்கர்கள் உயிர்பெற்று எழவில்லை என்றாலும் வானரர்கள் வீசியெறிந்த, அங்கே காணப்பட்ட ஓரறிவு உயிரினங்களாகிய பட்டுப்போன மரங்கள்கூட இம்மருத்துமலைக் காற்றுப்பட்டவுடன் தளிர்விட ஆரம்பித்தன என்றால் ஐயறிவுடைய மாக்களாகிய குரங்குக்கூட்டங்கள் பிழைத்துக்கொண்டது பற்றிக் கூறவும் வேண்டுமோ?'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. முன்பு இராவணன் மருத்தனை அழைத்து, போரில் இறந்துபட்ட அரக்கர்களின் உடல்களையெல்லாம் கடலில் மூழ்கும்படி போட்டுவரச் சொன்னான் என்பது நாம் அறிந்ததே. ''அரக்கன் மருத்தன் தனைக்கூவி, முந்த நீ போய், அரக்கர் உடல் முழுதும் கடலில் முடுக்கிடு'' என்பது இராவணன் கட்டளை என்பதை நினைவுகூர்க.

102. கழன்றன நெடுங்கணை; கரந்தபுண்; கடுத்து
அழன்றில குளிர்ந்தன அங்கம்; செங்கண்கள்
சுழன்றன; உலகெலாம் தொழுவ; தொங்கலின்
குழன்ற பூங்குஞ்சியான் உணர்வு கூடினான். (8887)

(கரத்தல்-மறைந்துபோதல்; அழல்தல்-கொதித்தல்; குழல்தல்-சுருண் டிருத்தல்; பூ-அழகு; குஞ்சி-ஆண்களது தலைமுடி; கழலுதல்-நெகிழ்ந்து வெளிவருதல்; தொங்கல்-மாலை; கூடுதல்-வரப்பெறுதல்; கடுத்தல்-வலிமிகுத்திருத்தல்)

இந்திரசித்தனது கோடிக்கணக்கான நீண்ட அம்புகள் இலக்குவன்மீது ஊன்றிப் பதிந்திருந்தவை இப்பொழுது மெதுவாக நெகிழ்ந்து வெளி வரலாயின; அதனால் ஏற்பட்ட புண்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறைய லாயின; வலி மிகுந்து கொதித்துப்போயிருந்த அவன் உடல் உறுப்புக்கள்

Koviloor Digital Library

இப்போது குளிர்ச்சி பெறலாயின; சிவந்து போயிருந்த அவனது கண்கள் சற்று சுழலாயின; இது உயிர் வரப்பெற்றமைக்கு அடையாளம்; மருத்து மலையின் ஆற்றலையும், இலக்குவன் விழித்தெழுந்ததையும் கண்ட உலக உயிரினங்களெல்லாம் அனுமனைத் தொழுது வாழ்த்தின. தொங்குகின்ற மாலைபோன்று குழைந்திருந்த கரிய அடர்ந்த அழகிய தலைமுடியைக் கொண்ட இலக்குவன், இப்போது போதிய உணர்வு வரப்பெற்றான்.

முன்கூறிய நால்வகை மூலிகைகளும் தத்தம் காரியங்களைச் செவ்வனே ஆற்றின. ''உலகெலாம் தொழுத'' என்ற சொல் ''அரியணை அனுமன் தாங்க'' என்ற கடைசிப் பாடலில், வசிட்டன் யாருக்கு மௌலி சூட்டினான்என்றுகூறாது விடுத்ததைப்போல, இங்கே உலகெலாம் எதைத் தொழுதன; யாரைத் தொழுதன என்று கூறாமலேயே விட்டுவிட்டான் கவிஞன். கற்போரையே ஊகித்து உணர வைத்திருக்கிறான். இத்தகைய அருஞ்செயலைச் செய்த அனுமனை உலகெலாம் தொழுதன என்று நாம் பொருள் கொண்டிருக்கிறோம். அது பொருத்தமாகவே அமைவதையும் கற்போர் உணரலாம். எல்லா உரை நூல்களும் மருத்துமலையைத் தொழுததாகவே பேசுகின்றன. நாம் அதனின்றும் மாறுபட்டு அனுமனைத் தொழுததாகப் பொருள் கொண்டிருக்கிறோம். 'குஞ்சி' என்பது ஆண்களின் தலைமுடியைக் குறிக்கும். 'குஞ்சியழகும், கொடுந்தானைக் கோட்டழகும்' என்பது நாலடியார். 'கூடினான்' என்ற சொல் உணர்வு வரப்பெற்றான், உணர்வு எய்தினான் என்ற பொருளையே தரும். நிலைத்து நின்ற கண்கள் சுழலத்தொடங்குதல் உயிர்வரப் பெற்றமைக்குரிய அறிகுறி என்பது நாம் அறிந்ததே. பின்னால் உணர்வு கூடினான் என்றதனால் உயிர்வரப்பெற்றதனால் உணர்வும் வரப்பெற்றான் என்பது பொருள்.

103. இலக்குவன் உயிர்பெற்று எழுதல்

யாவரும் எழுந்தனர்; ஆர்த்த ஏழ்கடல்
தாவரும் பேரொலி செவியில் சார்தலும்,
தேவர்கள் வாழ்த்தொலி கேட்ட செங்கணான்
யோகம் நீங்கினன் என, இளவல் ஓங்கினான். (8888)

(தாஅரும்-கெடுதல்இல்லாத; யோகம்-அறிதுயில்; இளவல்-இலக்குவன்; ஓங்குதல்-எழுந்துநிற்றல்; செங்கணான்-திருமால்)

முன்பு உயிர்நீங்கப் பெற்ற வானரர் அனைவரும் மருத்து மலையின் ஆற்றலால் உயிர்பெற்று எழுந்தனர்; கெடுதல் இல்லாத ஏழு கடல்களும் முழக்கிய பேரோசை தன் செவியில் பட்டதும், தேவர்களின் வாழ்த் தொலியைக் கேட்டு யோக நித்திரையாகிய அறிதுயில் நீங்கி எழுகின்ற சிவந்த கண்களையுடைய திருமாலைப்போல, இளவலாகிய இலக்குவன் உயிரும் உணர்வும் பெற்று எழுந்து நின்றான்.

Koviloor Digital Library

'ஏழ்கடல் ஆர்த்த தாவரும் பேரொலி, 'தேவர்கள் வாழ்த்தொலிக்கு' உவமை. அறிதுயில் நீங்கிய திருமாலுக்கு இலக்குவன் ஒப்பு. 'யோகம்' என்பது அறிதுயிலைக் குறிக்கும்.

104. இராமபிரான் இலக்குவனைத் தழுவிக் கொள்ளுதல்

ஓங்கிய தம்பியை, உயிர் வந்து உள்உற
வீங்கிய தோள்களால் தழுவி, வெந்துயர்
நீங்கினன், இராமனும்; உலகில் நின்றில,
தீங்கு உள; தேவரும் மறுக்கம் தீர்ந்தனர். (8889)

(உள்-உடம்பு; உறுதல்-பொருந்துதல்; ஓங்குதல்-உணர்வு பெற்று எழுதல்; வீங்கிய-பூரித்த/பருத்த; மறுக்கம்-கலக்கம்)

உயிர் திரும்பப்பெற்று, உணர்வும் கூடிவந்து, எழுந்து நின்ற தன் தம்பி இலக்குவனை, இராமபிரான் மகிழ்ச்சியால் பூரித்துப்போன தனது தோள்களால் அணைத்துக் கொண்டு, தான் கொண்ட துயரம் நீங்கப்பெற்றான்; உலகத்தில் தீமை என்று கூறப்படுவனவெல்லாம் நில்லாது அகன்றுபோயின; எனவே தேவர்களும் தங்களது மனக்கலக்கம் நீங்கப்பெற்றனர்.

105. அனைவரும் மகிழ்தல்

அரம்பையர் ஆடினர்; அமிழ்த ஏழ்இசை,
நரம்பு இயல் கின்னரம் முதல நன்மையே
நிரம்பின; உலகெலாம் உவகை நெய்விழா
பரம்பின; முனிவரும் வேதம் பாடினர். (8890)

(நன்மை-நன்றாக; பரம்புதல்-பரவுதல்)

எல்லோரும் உயிர்பெற்று எழுந்தமை கண்டு தேவமகளிர் நடனமாடித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்; தேவாமிர்தம் போன்ற ஏழுவகைப்பட்ட இசையினை நரம்புக் கருவியாகிய யாழ் போன்ற கின்னரம் என்ற இசைக்கருவிகள் நன்மை பயக்கும் நல்ல இசையால் நிரம்பியது; உலக மக்களெல்லாம் மகிழ்ச்சியுற்று நெய்யாடல்விழா உலகமெங்கும் பரவின; முனிவர்களும் வேதங்கள் பாடினார்கள்.

ஏழ்இசை என்பது சப்தஸ்வரங்கள். அவை சட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பனவாம். இவை உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை எனத் தமிழில் பேசப்படுகிறது. கின்னரம் என்பது ஒருவகை யாழ்-நரம்புக்கருவி. 'நெய்விழா' என்பது மக்கள் மகிழ்ச்சியால் எண்ணெய் தேய்த்து முழுகிக் கொண்டாடும் விழாவைக் குறிக்கும். 'நெய்' இங்கே எண்ணெயைக்

Koviloor Digital Library

குறித்தது எனக்கொள்க. திருநாளில் மங்களமாக ஆடும் முழக்கு என்கிறது ஒரு உரைநூல். 'பரம்புதல்' என்ற சொல் நமக்குப் புதிது. பரவுதல் என்பது பொருள்.

106. வேதம் நின்று ஆர்த்தன; வேதவேதியர்
போதம் நின்று ஆர்த்தன; புகழும் ஆர்த்தன;
ஓதம் நின்று ஆர்த்தன; ஓத வேலையின்
சீதம் நின்று ஆர்த்தன, தேவர் சிந்தனை. (8891)

(வேதியர்-வேதம் பயின்றோர்; போதம்-அறிவு/ஞானம்; ஓதம்-கடல்கள்; ஓதம்-அலைகளுமாம்; வேலை-கடல்; சீதம்-குளிர்ச்சி; வேதம்-நான்மறைகள்)

நான்கு மறைகளும் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தன; வேதம் பயின்ற வேதவிற்பன்னர்களின் ஞானம்கூட நிலைபெற்று நின்று ஆரவாரித்தன; புகழும் ஆரவாரித்தது; கடல்கள் பொங்கியெழுந்து பெருமுழக்கம் செய்தன; அலைகளோடு கூடிய கடலைப்போல தேவர்களின் உள்ளங்களும், குளிர்ச்சிபொருந்தி நின்று ஆரவாரம் செய்தன.

இலக்குவனும் வானரச்சேனையும் அனுமன் கொண்டுவந்த மருத்து மலையின் காற்றினால் உயிர்பெற்று எழுந்தமைகண்டு, இராமபிரான் மட்டுமல்ல; அருவப்பொருளான வேதமும், புகழும், வேதவேதியர் ஞானமும், தேவர்களின் உள்ளங்களும் உருவப்பொருள்களான கடலும், ஒருங்கே மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தன என்பதாம். 'நின்று ஆர்த்தன' என்ற சொற்றொடர் எல்லா அடிகளிலும் ஒரேபொருள் குறித்து வந்தமையால் இப்பாடல் சொற்பொருட் பின்வரு நிலையணியின் பாற்படும். சிந்தனை என்ற சொல்லுக்கு உள்ளம் என்ற பொருளும் உண்டு. ''சிந்தனை நின் தனக்கு ஆக்கி'' என்பது தேவாரம்.

107. பிரமாஸ்திரம் இராமபிரானை வணங்கி அகன்று போதல்

"உந்தின பின் கொலை ஒழிவுஇல் உண்மையும்
தந்தனை நீ; அது நினக்குச் சான்று" எனா,
சுந்தரவில்லியைத் தொழுது, சூழ வந்து,
அந்தணன் படையும் நின்று, அகன்று போயதால். (8892)

(அந்தணன்படை-பிரமாஸ்திரம்; உந்துதல்-செலுத்துதல்; கொலை-கொல்லும்தொழில்; சுந்தரம்-அழகு; போயது-சென்றது)

பிரமாஸ்திரம், அழகிய கோதண்டம் என்னும் வில்லைக் கையில் கொண்டுள்ளஅழகனான இராமபிரானைவணங்கி, சுற்றிவந்து ''என்னைச் செலுத்திய பின்னால், நான் அந்த இலக்கைத் தப்பாது அடைந்து அந்தக் கொலைத்தொழிலைச் செய்வதே எனக்கு உரிய கடமையாகும்.

Koviloor Digital Library

அதனின்றும் நீங்கக்கூடாது என்று எனக்கு அறிவுறுத்தியவனே நீதான். அதுவே உனது தெய்வத்தன்மைக்குப் போதுமான சான்றாகும்'' என்று கூறி அவன் எதிரில் வந்து நின்று, பின்பு அகன்று சென்றது.

இலக்குவன் பிரமாஸ்திரத்தால் கட்டுண்டு இறந்ததைக் கண்ட எல்லாம்வல்ல திருமாலின் அம்சமான இராமபிரான் வேறு ஏதேனும் முயற்சிசெய்து அந்தப் பிரமாஸ்திரத்தை அகற்றியிருக்கக் கூடாதா? என்று கேட்பவர்களுக்கு இந்தப்பாடல் விடையாக அமைவதை எண்ணுக. பிரமாத்திரமும் தெய்வப்படையே. எனவேதான் வேறொரு படைகொண்டு அதை நிர்மூலமாக்குதல் அதன் கடமையைச் செய்யவிடாது தடுத்தது போலாகும் என்பதை நன்குணர்ந்த இராமபிரான், அவ்வாறு செய்யாதிருந்தான் என்பது இப்பாடலின்மூலம் கற்போர் அறிந்து கொள்ளவேண்டிய கருத்து.

108. ஆய காலையின், அமரர் ஆர்த்து எழ,
தாயின் அன்பனைத் தழுவினான், தனி
நாயகன், பெருந்துயரம் நாம் அற,
தூய காதல்நீர் துளங்கு கண்ணினான். (8893)

(ஆயகாலை-அப்போது; தனிநாயகன்-ஒப்பற்றதலைவன்/இராமபிரான்; நாம்-நாமம்/அச்சம்; அறுதல்-ஒழிந்துபோதல்; காதல்-அன்பு; நீர்-கண்ணீர்; துளங்குதல்-ததும்புதல்; தாயின்-தாய்போன்ற/தாயைக் காட்டிலும்; அன்பன்-அனுமன்)

அப்போது நிகரற்ற தலைவனாகிய இராமபிரான், இதுவரை தான் கொண்டிருந்த மனத்துயரமும், அச்சமும் நீங்கப்பெற்றதால், தாயினும் சாலப்பரிந்து உதவியவனான அன்பன் அனுமனைத் தேவர்கள் எல்லாம் பேரொலிசெய்து ஆரவாரிக்க, தனது தூய்மையான அன்பு பொருந்திய கண்ணீர்ததும்பும் கண்களுடன் நெஞ்சாரத் தழுவிக்கொண்டான்.

இங்கே ஒன்று நோக்கவேண்டும். இறுதியில் மீட்சிப்படலத்தில் இராமபிரான், அனுமனுக்கு என்ன கைம்மாறு செய்வது என்று புரியாது, ''என்னை இறுகத் தழுவிக்கொள்வாயாக'' போர் உதவிய பொலந்திண் தோளால் என்னைப் பொருந்துறப் புல்லுக'' என்று கூறுகிறான். அப்போது அனுமனைத் தன்னைத் தழுவிக் கொள்ளச் சொல்லுகிறான் இராமபிரான். இங்கே இராமபிரானே, யாரும், எதுவும் சொல்லாமல், தானே சென்று அன்பின் மிகுதியால் அனுமனைத் தழுவிக்கொண்டான் என்பதை உணர்தல் வேண்டும். ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாள்?''

109. எழுது குங்குமத் திருவின் ஏந்து கோடு
உழுத மார்பினான் உருகி, உள்உறத்
தழுவி நிற்றலும், தாழ்ந்து, தாள் உறத்
தொழுத மாருதிக்கு, இனைய சொல்லினான். (8894)

Koviloor Digital Library

(எழுதுதல்-தொய்யிற்கோலம்; கோடு-யானைக்கொம்பு/தந்தம்; ஏந்து-உயர்ந்த; மார்பு-கொங்கைகள்; உள்உறுதல்-மனம் பொருந்துதல்; தாள்-திருவடிகள்; இனைய-இத்தகைய; திரு-திருமகள்/சீதாதேவி; உழுதல்-தழுவுதல்)

குங்குமக் குழம்பால் தொய்யில் கோலம் எழுதப்பட்டதும், யானையின் தந்தம்போன்று உயர்ந்து விளங்கும் மார்பகங்களையுடைய திருமகளாகிய சீதாதேவியின் மார்பகங்களைத் தழுவும் இயல்புடைய மார்பினையுடைய இராமபிரான் இப்போது, தன் மனம் உருகி அனுமனைத் தழுவுகின்ற போது, அவ்வனுமன் இராமபிரானின் திருவடிகளைச் சிரம் தாழ்ந்து பணிந்தான். அப்போது இராமபிரான் அவனிடம் கீழ்க்கண்ட இத்தகைய சொற்களைக் கூறத்தொடங்கினான்.

குங்குமக்குழம்பு கொண்டு தங்கள் மார்பகங்களில் தொய்யில் எழுதிக் கொள்வது பண்டைக்கால மகளிர் வழக்கம் ''திருமுலைத் தடத்திடைத் தொய்யில் அன்றியும்'' என்று கண்ணகியின் பிரிவுநிலையைச் சிலப்பதிகாரம் பேசும். தொய்யில் என்பது கோலம் எனக்கொள்க. இப்போது கைகளில் மருதாணியாலேயே கோலம்போல் அழகு செய்வது போல் முன்பு கொங்கைகளிலும் அழகுசெய்து கொண்டார்கள் என்பதாம். திருமகளான சீதாதேவியின் மார்பகங்கள் யானையின் தந்தங்களுக்கு உயர்ச்சியால் உவமை. திருமகளால் தழுவப்பட்ட மார்பகங்கள் இப்போது அனுமனைத் தழுவிக்கொண்டன என்பதில் உள்ள சிறப்பு நோக்குக. திருமகளான சீதாதேவிக்கே உரிமையுடைய தனது மார்பினால் இராமபிரான் அனுமனைத் தழுவிக்கொண்டது, இராமபிரானுக்கு அனுமனிடம் இருந்த பேரன்பினைக் குறிக்கும் என்க.

110. இராமபிரான் அனுமனை வாழ்த்துதல்

''முன்னின் தோன்றினோர் முறையின் நீங்கலாது,
என்னின் தோன்றிய துயரின், ஈறுசேர்
மன்னின் தோன்றினோம் முன்னம்; மாண்டுளோம்;
நின்னின் தோன்றினோம், நெறியின் தோன்றினாய்!'' (8895)

(ஈறுசேர்தல்-இறந்துபோதல்; தோன்றுதல்-விளங்குதல்; நீங்குதல்-வழுவுதல்/பிறழ்தல்; முறை-சத்தியநெறி/வாய்மை; தோன்றுதல்-பிறத்தல்; மன்-மன்னன்/தசரதன்)

''எங்கள் சூரியகுலத்தில் தோன்றியோர் அனைவரும் வாய்மையையும் மரபையும் காத்து வந்தவர்கள்; அவர்கள் ஒருபோதும் வாய்மை தவறியதில்லை; ஆனால் நான் கானகம் புகுந்த துயரத்தினால் மாண்டுபோன தசரதனிடம் நாங்கள் முன்பு மக்களாகப் பிறந்தோம்; எனினும் இப்போது இந்திரசித்தன் செலுத்திய பிரமாத்திரத்தினால்

Koviloor Digital Library

உயிர்பிரிந்து மாண்டவர்களானோம்; நீதி நெறிமுறை வழுவாது விளங்குபவனே! நீ எளிதில் மருத்துமலையைக் கொண்டு வந்து எங்கள் எல்லோருக்கும் மீண்டும் உயிர் தந்தருளினாய். எனவே இப்போது நாங்கள் மறுபிறவி எடுத்து மீண்டும் உன்னிடத்தில் பிறந்தவர்களானோம்'' என்று பாராட்டுகிறான் இராமபிரான்.

இப்போது அனுமன், இராமபிரானின் தந்தையின் இடத்தில் வைத்துப் பாராட்டப்படுகிறான். முன்பு தசரத மன்னனிடத்தில் பிறந்த நாங்கள் பிரமாத்திரத்தினால் மாண்டுவிட்டோம். இப்போது உன்னால் மீண்டும் பிறந்துள்ளோம். எனவே நீ எங்களைப் பிறப்பித்த தந்தையாவாய் என்கிறான் என்பதாம்; முன்பு சுந்தரகாண்டத்தில் கணையாழியைப் பெற்றுக்கொண்ட சீதாதேவி அனுமனை ''மும்மையால் உலகம் தந்த முதல்வற்கு முதல்வன் தூதாய்ச் செம்மையால் உயிர்தந்தாய்க்குச் செயல் என்னால்எளியது உண்டோ? அம்மையாய், அத்தனாய அப்பனே! அருளின் வாழ்வே! இம்மையே மறுமைதானும் நல்கினை இசையோடு'' என்று பாராட்டியதோடு ஒப்பிட்டு நோக்குக. அனுமன் ''நெறியின் தோன்றியவன்'' என்பதை ''நீதியின் நின்றீர்; வாய்மை அமைந்தீர்; என்ற சாம்பவன் கூற்றால் அறியலாம். அனுமன் மருத்து மலையைக் கொண்டு வாராதிருந்தால் இலக்குவனோடு இராமபிரானும் சேர்ந்து உயிர்துறக்க நேர்ந்திருக்கும் என்பது அருத்தாபத்தி.

111\. ''அழியுங்கால் தரும் உதவி, ஐயனே!
மொழியுங்கால், தரும் உயிரும் முற்றுமே?
பழியும் காத்து, அரும்பகையும் காத்து, எமை
வழியும் காத்தனை; நம் மறையும் காத்தனை. (8896)

(மொழிதல்-சொல்லுதல்; வழி-மரபு/குலம்; மறை-வேதநெறி; முற்றுதல்-ஈடுசெய்தல்/முற்றுப்பெறுதல்; காத்தல்-தடுத்தல்; தரும்-தந்த/செய்த)

அன்பனே! எங்கள் உயிர்போகும் காலத்தில் நீ செய்த இந்த உதவியைப் பற்றிக் கூறும்பொழுது, இப்பொழுது எங்கள் உயிரைக் காப்பாற்றியதோடு மட்டும் நின்றுபோய் முற்றுப் பெற்றதாகிவிடுமா? ஆகாது. நீ எங்கள் உயிரை மட்டும் காப்பாற்றவில்லை; எங்களுக்கு ஏற்பட இருந்த பழியையும், அரிய பகையையும், எங்கள் குலத்தையும், நமது நான்மறை களையும் காப்பாற்றியிருக்கிறாய்'' என்று பாராட்டுகிறான் இராமபிரான்.

''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது'' என்பது குறள்-101. இங்கே இராமபிரான் அனுமன் தங்கள் உயிரைமட்டும் காப்பாற்றவில்லை; தன்னால் சீதாதேவியைக் காப்பாற்ற முடிய வில்லையே என்ற பழியையும், தான் தண்டக வனத்து முனிவர்க்குத் தந்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற பழியையும் தடுத்து

Koviloor Digital Library

நிறுத்தியிருக்கிறான்; நம்முடைய சிறந்த பகைவர்களாகிய அரக்கர்களைப் பூண்டோடு அழித்து, அவர்கள் மீண்டும் தலையெடுக்காத வண்ணம் தடுத்து உலகையே காப்பாற்றியிருக்கிறான்; நாங்கள் இருவரும் இறந்து விட்டோம் என்றால், பரதன், சத்துருக்கன், அயோத்தி மக்கள் எல்லோரும் இறந்துபடுவர்; அதனின்றும் எங்கள் குலத்தையே காப்பாற்றி யிருக்கிறான்; அரக்கர்கள் அழிந்ததால், முனிவர்கள், இனி வேதங்கள் ஓதத்தொடங்குவர். எனவே நான்மறையையும் காப்பாற்றியிருக்கிறான் என்று பாராட்டுகிறான் இராமபிரான் என்பதாம்.

112. "தாழ்வில் இங்கு இறைப்பொழுது தக்கதே;
வாழி எம்பிமேல் அன்பு மாட்ட, வான்
ஏழும் வீயும்; என்பகர்வது? எல்லைநாள்,
ஊழி காணும் நீ, உதவினாய் அரோ!" (8897)

(இறை-சிறிது; வாழ்தல்-நீண்டநாள் வாழ்தல்; மாட்டுதல்-மாள்வித்தல்/அழித்தல்; வான்ஏழு-மேல்ஏழுஉலகங்கள்; தாழ்வு-தளர்ச்சி/துன்பம்; எல்லை-தக்ககாலம்; மாட்டுதல்-நிலைபெறுதலுமாம்)

''நீண்டநாள் வாழ்ந்திருக்க வேண்டியவனான என்தம்பி இலக்கு வன்பால் நான் கொண்டிருக்கும் அன்பின் பெருக்கால், இப்பொழுது எங்களுக்கு ஏற்பட்ட இந்தத் தளர்ச்சிகூட ஒரு விதத்தில் தகுதியானதே; காரணம் நீ இந்த மருத்துமலையைக் கொண்டு வாராதிருந்தால் சிறிது நேரத்தில் இந்த மேல் ஏழு உலகங்களும் என் சீற்றத்தால் அழிந்து போயிருக்கும். என்ன சொல்வது? ஊழியிறுதிக்காலத்திலும் இறவா வரம்பெற்று நிலைத்திருக்கக்கூடிய நீ, தக்கசமயத்தில் மருத்துமலையைக் கொண்டுவந்து எல்லோருக்கும் உதவிசெய்தவன் ஆனாய்'' என்று அனுமனைப் புகழ்கிறான் இராமபிரான்.

இலக்குவன் இறந்துபட்டமை கண்டு, தான் உடனே சீற்றம் கொள்ளாது சற்று தாமதித்ததும் நன்மைக்காகவே, அந்தக் கால தாமதத்தால்தான் இந்த ஏழு உலகங்களும் தன் சீற்றத்தால் அழியாது காப்பற்றப்பட்டது என்கிறான் இராமபிரான் என்பதாம். ஏன் மேல் ஏழ் உலகங்களையும் அழிக்கத் துணிந்தான் இராமபிரான் எனில், விண்ணுலகில் உள்ள தேவர்கள் இந்திரசித்தன் பிரமாஸ்திரம் செலுத்துவதையும், இலக்குவன் உயிர்துறந்து போர்க்களத்தில் வீழ்ந்தமையையும் கண்டுகொண்டு ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தார்கள் அல்லவா? எனவே தேவர்கள் வாழ்கின்ற மேல் ஏழ் உலகங்களை மட்டும் அழிக்கத்துணிந்தான். கீழ் ஏழுஉலகங்கள் பற்றிப் பேசவில்லை இராமபிரான் என்பதையும் நுனித்து உணர்க. இதனால் அனுமன் விண்ணுலகத்தையும் இராமபிரான் சீற்றத்தினின்றும் தடுத்துக் காப்பாற்றினான் என்பது கூடுதல் சிறப்பு என்க.

Koviloor Digital Library

113. "இன்று வீகிலாது, எவரும் எம்மொடு,
நின்று வாழுமா, நெடிது நல்கினாய்;
ஒன்றும் இன்னல் நோய் உறுகிலாது, நீ,
என்றும் வாழ்தியால் இனிது என் ஏவலால்!" (8898)

(வீகுதல்-வீழ்தல்/இறந்துபோதல்; நல்குதல்-அருள்தல்; ஏவல்-கட்டளை; ஒன்றும்-சிறிதும்)

இராமபிரான் அனுமனை நோக்கி, ''இப்பொழுது இந்திரசித்து செலுத்திய பிரமாஸ்திரத்தால் யாரும் இறந்துபடாது, எம்மொடு நிலை பெற்று வாழ்த்திருக்குமாறு நீண்ட வாழ்நாளை அருளினாய்; எனவே நீயும் சிறிதும் துன்பமோ, நோய், பிணியோ அடையாது இன்றுபோல் என்றும் இனிது சிரஞ்சீவியாய் வாழ்வாயாக! இது என் ஆணை'' என்று வாழ்த்துகிறான்.

இராமபிரான் மானிட வடிவம் தாங்கியிருந்தாலும் என் 'ஏவல்' என்று அவனைப் பேச வைத்திருக்கும் கவிஞனின் கவித்திறம் நுனித்து உணரற்பாலது. 'வாழுமாறு' என்பது வாழுமா எனக் கடைக்குறையாக வந்தது. இதனுடன் முன்பு சுந்தரகாண்டத்தில் சீதாதேவி ''இன்றுபோல் என்றும் இருத்தி'' என்று வாழ்த்தியதை ஒப்பிட்டு நோக்குக. ''முன்னான பூதங்கள் யாவும் முடிவுற்றிடினும், உன் நாள் உலவாய்; நீ என்போல் உளை'' என்பது பேரீசனாகிய சிவபெருமான் அனுமனுக்குத் தந்தவரம். ''ஊழியோர் பகலாய் ஓதும் ஆண்டெலாம், உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும், இன்றென இருத்தி'' என்பது சீதாதேவி தந்த வரம் என்பதை நினைவிற் கொண்டுவருக.

114. எல்லோரும் அனுமனைத் தொழுது வாழ்த்துதல்

மற்றையோர்களும், அனுமன் வண்மையால்,
பெற்ற ஆயுளார், பிறந்த காதலார்,
சுற்றும் மேவினார்; தொழுது வாழ்த்தினார்;
உற்றவாறெலாம் உணரக் கூறினான். (8899)

(வண்மை-வள்ளல்தன்மை; காதல்-அன்பு; உற்றது-நிகழ்ந்தது; உணர்தல்-விளங்கிக்கொள்ளுதல்)

அனுமனது இந்த வள்ளல்தன்மையால் வாழ்நாளை மீண்டும் பெற்ற மற்றவர்கள் எல்லோரும், அவன்மீது மிக்க அன்பு கொண்டவர்களாகி அவனைச் சுற்றிச்சூழ்ந்து கொண்டு, அவனை வணங்கி வாழ்த்தினார்கள்; அனுமனும் தான் மருத்துமலையைக் கொண்டு வரும்பொழுது நிகழ்ந்த நிகழ்வுகள் எல்லாவற்றையும் அவர்கள் விளங்கிக் கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்தான்.

Koviloor Digital Library

115. மருத்துமலையை மீண்டும் கொண்டுபோய் வைத்தல்

"உய்த்த மாமருந்து உதவ, ஒன்னலார்
பொய்த்த சிந்தையார், இறுதி பொய்க்குமால்;
மொய்த்த குன்றை, அம் மூல ஊழிவாய்
வைத்து, மீடியால், வரம்புஇல் ஆற்றலாய்!" (8900)

(வரம்பு-அளவு; உய்த்த-கொணர்ந்த; மா-சிறந்த; ஒன்னலார்-பகைவர்கள்; இறுதி-இறத்தல்/முடிவு; மொய்த்த-நெருங்கியுள்ள/அடர்ந்துள்ள; மூலம்-பழமை; மீடியால்-மீள்வாயாக; ஊழிவாய்-இடம்) (குளகப்பாடல்)

''அளவற்ற ஆற்றல் பெற்றவனே! அனுமா! நீ கொண்டுவந்த இந்தச் சிறந்த மூலிகைகளினால் உதவிபெற்று, நமது பகைவர்களும், மாயை நிறைந்த எண்ணங்கள் கொண்டவர்களுமாகிய அரக்கர்கள் இறப்பது பொய்யாகப் போய்விடும். அவர்கள் எல்லோரும் உயிர்பெற்று நிலைத்து வாழத் தொடங்கிவிடுவர். எனவே மூலிகைகள் நிறைந்த இந்த மலையை, அது முன்பு இருந்த பழைய இடத்திலேயே கொண்டுபோய் வைத்துவிட்டுத் திரும்பி வருவாயாக!'' - பாடல் தொடர்கிறது.

'மீள்தி' என்பது 'மீடி' எனக் குறுகி நின்றது. மீண்டு வருவாயாக என்பது பொருள். 'ஊழி' என்பது இங்கே இடத்தைக் குறித்து நின்றது. 'மூலஊழி' என்பது பழைய இடம் என்ற பொருளைத்தரும்.

116. என்று சாம்பன் ஆண்டு இயம்ப, "ஈது அரோ
நன்று சால!" என்று, உவந்து, 'ஓர் நாழிகை
சென்று மீள்வென்' என்று எழுந்து, தெய்வமாக்
குன்று தாங்கி, அக்குரிசில் போயினான். (8901)

(ஆண்டு-அங்கு/அப்பொழுது; சால-மிகவும்; தெய்வம்-தெய்வத் தன்மை; மா-பெரிய/சிறந்த; குரிசில்-ஆண்களிற் சிறந்தவன்/அனுமன்/பெருந்தகையன்)

என்று சாம்பவன் அனுமனிடம் அப்போதுகூற, அனுமனும் ''இது மிகவும் நல்லது'' என்று மகிழ்ச்சியுடன்கூறி, ''ஒரு நாழிகைப் பொழுதிற்குள் அது இருந்த இடத்தில் வைத்துவிட்டு திரும்பி விடுகிறேன்'' என்று எழுந்து, அந்த தெய்வத்தன்மை வாய்ந்த பெரிய சிறந்த மூலிகை மலையைத் தாங்கிக்கொண்டு, அந்தப் பெருந்தகையாளனான அனுமன் சென்றான்.

அனுமன் இங்கிருந்து அந்த மலையைக் கொண்டுபோய் வைத்து விட்டுத் திரும்பி ஒரு நாழிகைப் பொழுதிற்குள் வந்துவிடுவேன் என்று கூறுவதை வைத்துக் கணக்கிட்டுப் பாருங்கள். ஒருநாழிகை என்பது 24

Koviloor Digital Library

மணித்துளிகள். போவதற்கு 12மணித்துளிகள்; வருவதற்கு 12 மணித் துளிகள். இங்கிருந்து அம்மலையிருந்த இடம் 85100 யோசனைதூரம் என்று முன்பே கண்டோம். 1யோசனை என்பது சுமார் 10மைல் எனக்கொள்க. மலைப்பாய் இருக்கிறதல்லவா? அதுதான் அனுமன் ஆற்றல்.

மருத்துமலைப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

24. களியாட்டுப் படலம் [21 பாடல்கள்]

இந்திரசித்தன் செலுத்திய பிரமாஸ்திரத்தால் இலக்குவனோடு, வானரச்சேனையும் மடிந்துபோயின என்றும், இதனைக் கேள்வியுற்ற இராமபிரானும் மயங்கி உயிர்நீத்தான் என்றும் அறிந்து மிக்கமகிழ்ந்து இராவணன், அரக்கமகளிர், தேவமகளிர் அனைவரையும் கூட்டிக் கள் பருகவைத்து அவர்கள் ஆடல் பாடலைக் கேட்டும், கண்டும் கழிமகிழ்வெய்திய செய்திகள் பற்றிக்கூறும் பகுதி என விரியும். இது 21பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் 'களியாட்டப்படலம்' எனக் குறிக்கப் பெற்றிருக்கிறது. இப்பகுதி வான்மீகத்தில் காணப்படவில்லை. இது கம்பனே அமைத்துக்கொண்ட பகுதியாகும்.

இப்படலத்துள், இராவணன் கட்டளைப்படி, மகளிர் கள் உண்டு ஆடுதல்; அதனை ஒரு வெற்றிவிழாவாகக் கொண்டாடுதல்; அரம்பையர், வித்யாதரப் பெண்கள், அரக்கியர், அவுணமாதர், நாககன்னியர், இயக்கமாதர், சித்தர்கன்னியர் என எல்லோரும் பங்கு கொள்ளுதல்; தேவமகளிரான அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை முதலியோரும் கள்ளுண்டு அபிநயித்தல்; இவையனைத்தையும் இராவணன் முதலிய எல்லோரும் கண்டு மகிழ்தல்; கள்ளுண்டவர்களின் இழிந்தநிலை; இப்போது வானரவீரர்களின் ஆர்ப்பொலியை இராவணன் கேட்டல்; உடனே அவன் மயங்கிச் சோர்தல்; ஒற்றர்கள் வந்து, பகைவர் அனைவரும் அனுமன் கொண்டுவந்த மருத்துமலையால் உயிர் பெற்றெழுந்தனர் என்று அறிவித்தல்; இராவணன் சீற்றம்கொண்டு மந்திராலோசனை மண்டபத்தை அடைதல் ஆகிய நிகழ்ச்சிகள் சற்று விரிவாகவே பேசப்பட்டிருக்கின்றன; கதைக்குத் தொடர்பில்லாத பகுதிதான் என்றாலும், இப்படலத்தில் ஒரு இழிந்த காட்சியைக்காட்டி அதன்மூலம் ஒரு உயர்ந்த கருத்து தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அவ்வப்பாடல்களின்போது அது குறிக்கப்பெற்றிருக்கிறது.

1. இராவணன் மகளிரின் களியாட்டம் காணுதல்

இன்னது இத்தலையதாக, இராவணன் எழுந்து பொங்கி,
தன்னையும் கடந்து நீண்ட உவகையன், சமைந்த கீதம்
கின்னரர் முதலோர் பாட, முகத்திடைக் கிடந்த கெண்டைக்
கன்னி நன் மயில் அன்னாரை, நெடுங் களியாட்டம் கண்டான். (8902)

Koviloor Digital Library

(இத்தலை-இவ்விடம்; இன்னது-இவ்வாறு; பொங்குதல்-கிளர்ந் தெழுதல்; நீண்ட-பெருகிய; சமைந்த-அமைந்த; கன்னி-இளமை; காணுதல்-செய்தல்; களியாட்டம்-கள் பருகி ஆடும் ஆட்டம்)

இவ்வாறு இராமபிரான் பக்கம் இருந்த எல்லோரும் உயிர்பெற்று எழுந்த சமயம், அதனை அறியாத இராவணன் அவர்கள் அனைவரும் இறந்துபட்டனர் என்று தவறாகக் கருதி, மிகவும் ஊக்கத்துடன் அளவுகடந்த மகிழ்ச்சி கிளர்ந்தெழ, இலக்கண முறைப்படி தான் அமைத்த சாமகீதத்தைக் கின்னரர் முதலானவர்கள் பாடவும், தங்கள் முகத்தில் கெண்டைமீனைப் போன்ற அழகிய கண்களை உடையவரும், இளமை யானவரும், நல்ல மயில்போன்ற சாயலை உடையவருமான மகளிரை அழைத்து, கள் பருகச் செய்து நீண்ட நேரம் நடனமாடச் செய்தான்.

இராமபிரான் பக்கம் அவனது சேனைக்கு என்ன நிகழ்ந்தது என்பதைக் கூறி முடித்த கவிஞன், இப்பொழுது இராவணன் பக்கம் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் கூற முற்படுகிறான். எனவே ''இன்னது இத்தலையதாக'' என்றுகூறித்தொடங்குகிறான்என்க. இராமபிரான்பக்கம் அனைவரும் மடிந்து போயினர் என்பதையறிந்த இராவணனின் மகிழ்ச்சியைக் கவிஞன் எப்படிக் கூறுகிறான் பாருங்கள். ''இராவணன் எழுந்து, பொங்கி, தன்னையும் கடந்து நீண்ட உவகையன்'' என்கிறான்; 'சமைத்தகீதம்' என்பது இலக்கணமுறைப்படி அமைந்த சங்கீதம் என்றும், இராவணன் சாமகீதத்தில் வல்லவன் எனவே, அவனே இயற்றியமைத்த சங்கீதம் என்றும் இருபொருளும் பொருந்தி வருதல் காண்க. மகளிரை வருணிக்கும் பாங்கு நோக்குக.

'முகத்திடைக் கிடந்த கெண்டை' என்பது கெண்டைமீன்கள் போன்று நீண்ட கண்களைக் கொண்ட முகத்தை யுடையவர் என்பது பொருள்; 'கன்னி' என்பது இளமைப்பருவம் உடைய அழகிய மகளிர் என்று பொருள் தரும். 'மயில் அன்னார்' என்பது மயில்போலும் அழகிய சாயலையுடையவர்கள் என்று பொருள்படும். அவர்களை ஒன்றாகக்கூட்டி, கள் பருக வைத்து, நடனமாடச் சொல்லித் தான் கண்டு மகிழ்ந்தான் என்பதாம். அந்த சங்கீதத்தைக் கின்னரர்கள் தங்கள் இசைக்கருவியில் இசைத்தார்கள்; அதற்கு ஏற்றாற்போல் அல்லாது, கள்ளுண்ட மயக்கத்தில் மகளிர் தடுமாறி நடனமாடினர் என்பது 'களியாட்டம்' என்ற சொல்லால் புலப்படுத்தப்பட்டது. காப்பியத்தில் இதுவரை 'தன்னையும் கடந்து நீண்ட உவகையன்' என்று எந்தப் பாத்திரம் பற்றியும் பேசவில்லை கவிஞன். இங்குமட்டும், இராவணனை மட்டும் இவ்வாறு குறிப்பிடுகிறான் என்பதை நுனித்து உணரவேண்டும். காரணம் அளவுகடந்த இன்பத்தின் இறுதியில் ஆற்றொணாத் துன்பம் நிகழ இருக்கிறது என்பதைக் கற்போருக்கு முன்னோட்டமாகத் தெரிவிப்பதற் காகவே கம்பன் இங்கே இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தி இருக்கிறான் எனக்கொள்க.

Koviloor Digital Library

2. அரம்பையர், விஞ்சைமாதர், அரக்கியர், அவுணர்மாதர்
குரும்பை அம் கொங்கை நாகர் கோதையர், இயக்கர், கோதுஇல்
கரும்பினும் இனிய சொல்லார், சித்தர்தம் கன்னிமார்கள்,
வரம்பறு சும்மையோர்கள், மயில்குலம் மருள வந்தார். (8903)

(அரம்பையர்-தேவமகளிர்; அவுணர்-அசுரர்; குரும்பை-இளந்தெங்கு; அம்-அழகிய; கோதையர்-கூந்தலையுடைய பெண்டிர்; கோது-குற்றம்/சக்கை; வரம்பு-எல்லை; சும்மை-கூட்டம்/திரட்சி; மருள்தல்-மருட்சியடைதல்)

தேவமகளிரும், வித்யாதரப் பெண்டிரும், அரக்கியர்களும், அவுணமாதரும், தென்னையின் குரும்பை போன்ற அழகிய சிறிய கொங்கைகளையுடைய நாககன்னியர்களும், சக்கை நீக்கப்பெற்ற நல்ல கருப்பஞ்சாற்றைக் காட்டிலும் இனிமையான சொற்களை உடைய இயக்கர் பெண்டிரும், சித்தகன்னிகைகளும் மற்றும் உள்ள எல்லையற்ற பெண்டிரும் தொகுதியாக ஒன்றுகூடி, மயிற்கூட்டங்கள் இவர்களின் சாயல்கண்டு மருட்சியடையுமாறு வந்து குழுமினர்.

அரம்பையர், விஞ்சைமாதர், அரக்கியர், அவுணமாதர், நாகர் கோதையர், இயக்கர், சித்த கன்னிகைகள் இவர்கள் எல்லோரும் பதினெட்டு வகையானதேவசாதியினைச்சேர்ந்தவர்கள்என்பதறிக. மாதர், கோதையர், கன்னிமார்என்பதெல்லாம்பெண்கள், மகளிர், பெண்டிர்என்ற பொருளைத்தரும் ஒரு பொருள் குறித்த பலசொற்கள் எனக்கொள்க. அவுணர் வேறு, அசுரர் வேறு என்பதும் அறியவேண்டுவது. தென்னங்குரும்பையைப்பெண்டிரின்கொங்கைகளுக்கு உவமைகூறுவது கவிமரபு. ''குரும்பை முலை மலர்க்குழலி கொண்ட தவம் கண்டு'' என்பது தேவாரம். குரும்பை, கோங்கின் முகையெனவும் கூறப்படுவதுண்டு. ''கரும்பு ஊர்ந்த சாறுபோல் சாலவும் பின் உதவி மற்றதன் கோது போல் போகும் உடம்பு'' என்பது நாலடியார்-*34*; ''கன்னி நடக்கும் நடை கற்றாள், கரும்பு கசக்கும் மொழி பெற்றாள்'' என்பது பிரபுலிங்கலீலை.

3. மேனகை, விசய வாட்கண் திலோத்தமை, அரம்பை, மெல்லென
தேன் நகு மழலை இன்சொல் உருப்பசி, முதலாம் தெய்வ
வானக மகளிர் வந்தார், சில் அரிச் சதங்கை பம்ப,
ஆனகம், முரசம், சங்கம், முருட்டொடும் இரட்ட, ஆடி. (8904)

(விசயம்-விஜயம்/வெற்றி; நகுதல்-ஒத்திருத்தல்; ஆனகம்-பாடகம்; சில்அரி-சிலபரற்கற்கள்; பம்புதல்-ஒலித்தல்; இரட்டல்-முழங்குதல்; முருடு-மத்தளம்)

தேவலோகத்து ஆடல் மகளிரான மேனகை, வெற்றி பொருந்தியதும், வாள்போன்று ஒளிவீசுவதுமாகிய கண்களையுடைய திலோத்தமை,

Koviloor Digital Library

ரம்பை, மிருதுவாகவும், தேன் போன்று இனிமையாகவும், மழலைச் சொற்கள்போல் குழைவாகவும், இனிய சொற்களைப் பேசும் ஊர்வசி ஆகிய வானுலகத்துத் தேவமகளிர், தம் கால்களில் சில பரற்கற்கள் கொண்ட சதங்கை ஒலி செய்யவும், பாடகம், முரசம், சங்கு, மத்தளம் போன்ற இசைக்கருவிகள் முழக்கம் செய்யவும், நடனம் ஆடிக்கொண்டே வந்து குழமினர்.

முன்பாடலில் 'அரம்பையர்' என்று தேவமகளிரைக் குறித்த பின்னும், மேனகை, திலோத்தமை, ரம்பை, ஊர்வசி ஆகிய நால்வரை மட்டும் தனித்துக் கூறியது ஏனோவெனில் இவர்கள் நால்வரும் தேவலோகத்து ஆடல் மகளிர் ஆவர் என்பதால் என்க. 'ஆனகம்' என்பது ஒருவகை இசைக்கருவி எனக்கொள்க. இவ்வாறு நடனம் ஆடிக்கொண்டு வருவதை 'நடை கேளிக்கை' எனக்கூறுவதுண்டு; 'மழலை' என்பது எழுத்து வடிவம் பெறமுடியாத குழைவு மிகுந்த சொற்களைக் குறிக்கும்; 'மெய்பெறா எழுத்து உயிர்க்கும் மழலை' என்பது சீவகசிந்தாமணி. 'சில்அரிச் சதங்கை' என்பது சில பரல்கற்களை உள்ளேயுடைய சதங்கையைக் குறிக்கும். 'என்கால் பொறச்சிலம்பு மணியுடை அரியே' என்பது கண்ணகிகூற்று. 'யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே' என்பது பாண்டியன் நெடுஞ்செழியன் கூற்று சிலப்பதிகாரம் வழக்குரைகாதை. 'இரட்டுதல்' என்றசொல் ஒலித்தல் என்ற பொருளைத் தந்தாலும், மாறி மாறி ஒலிக்கும் ஒலியே இரட்டுதல் என்று வழங்கப்படும்.

4. தோடு உண்ட சுருளும், தூங்கும் குழைகளும், சுருளின் தோய்ந்த
ஏடு உண்ட பசும்பொன் பூவும், திலதமும், இலவச் செவ்வாய்
மூடுண்ட முறுவல் முத்தும், முள்ளுண்ட முளரிச் செங்கண்,
காடு உண்டு புகுந்தது என்ன, முனிந்தது கறைவெண் திங்கள். (8905)

(தோடு-பனந்தோடு; உண்ணுதல்-பொருந்தியிருத்தல்; தோடு-காதணி; தூங்குதல்-தொங்குதல்; குழை-குண்டலங்கள்; சுருள்-கூந்தலின் ஒரு பகுதி; ஏடு-இதழ்கள்; இலவம்-இலவம்பூ; முறுவல்-பற்கள்; முளரி-செந்தாமரை மலர்; கறை-களங்கம்; காடு-பல; திலதம்-திலகம்/நெற்றிப்பொட்டு; முனிதல்-சினத்தல்; தோய்தல்-அமைதல்)

பனந்தோட்டின் தன்மைபொருந்திய சுருண்ட காதணிகளும், தொங்குகின்ற குழையெனும் காதணிகளும், பெண்களின் கூந்தலில் ஒரு பகுதியான சுருள் என்பதில் அமைந்த இதழ்களோடுகூடிய பசிய பொன்னாலான பூக்களும், நெற்றிப் பொட்டும், இலவம்பூப் போன்ற சிவந்த வாயினால் மூடப் பெற்றிருக்கின்ற முத்துப்போன்ற பற்களும், முள்ளைத் தன்னகத்தேயுடைய தண்டினையுடைய செந்தாமரைமலர் போன்ற சிவந்த கண்களும் உடைய பெண்டிர் எல்லோரும், கூட்டமாக ஒன்றாகக்கூடி வந்ததைக் கண்ட, களங்கமுடைய சந்திரன் இவர்களெல்

Koviloor Digital Library

லோரும் தனக்குப் பகையாக வந்துள்ளார்களே என்று கருதிச் சினம் கொண்டான்.

அதீதக் கற்பனை நிறைந்த பாடல். சந்திரனுக்குப் பகையான செந்தாமரை போலும் சிவந்த பெண்கள் கூட்டமாகத் தென்பட்டதால் சந்திரன் முனிந்தான் என்பதாம். சந்திரனுக்குத் தாமரை பகை; சூரியன் நண்பன், சூரியனைக் கண்டால் தாமரை மலரும், சந்திரனைக் கண்டால் கூம்பிப்போகும் என்பது நாம் அறிந்ததே. இங்கே காதில் அணியும் அணிகலனைத் 'தோடு' என்றும், 'குழை' என்றும் வேறுபடுத்திக் கூறியதை நினைக. 'தோடுடைய செவியன்' என்பது தேவாரம்; 'காதார் குழையாட' என்பது திருவெம்பாவை. சிவபெருமான் அர்த்தநாரீஸ்வரர் கோலத்தில் வலப்பக்கம் இருப்பது சிவபெருமானின் தோடு என்றும், இடப்பாகத்தில் இருப்பது உமையம்மையின் குழை என்றும் கூறப்படுவதையும் அறிக. தேவமகளிர் இயற்கையிலேயே வனப்பு மிகுந்தவர்கள். இப்போது கள்ளுண்டிருப்பதால் அவர்கள் முகம் முன்னையினும் சிவப்பாகத் தோன்றியது என்பதாம்; 'ஏடு' என்பது மலர்களின் இதழ்களைக் குறிக்கும்; 'ஏடே இதழே' என்பது தொல்காப்பியம்; முள்ளாலாகிய தண்டினை யுடையதால் முளரி என்பது தாமரைக்குக் காரணப்பெயர்/இடுகுறிப் பெயர்.

5. முளைக்கொழுங் கதிரின் கற்றை முறுவல் வெண்நிலவும், மூரி
ஒளிப்பிழம்பு ஒழுகும் பூணின் உமிழ் இளவெயிலும், ஒண்பொன்
விளக்கையும் விளக்கும் மேனி மிளிர்க் கதிர்ப்பரப்பும், வீச
வளைத்த பேர் இருளும், கண்டோர் அறிவுஎன, மருளும் மாதோ! (8906)

(முளைத்தல்-தோன்றுதல்; கொழும்-செழுமையான; கற்றை-திரள்/தொகுதி; முறுவல்-புன்சிரிப்பு; மூரி-பெரிய/வலிய; ஒழுகுதல்-வெளிப் படுத்துதல்; பூண்-அணிகலன்கள்; உமிழ்தல்-வீசுதல்; வெயில்-ஒளி; ஒண்-ஒள்ளிய/ஒளிவாய்ந்த; மிளிர்தல்-ஒளிவிட்டுப் பிரகாசித்தல்; மருளுதல்-நிலைகெடுதல்; வளைத்தல்-சூழ்ந்திருத்தல்)

அங்குவந்த மகளிரின் புன்முறுவல், செழுமையான, வெண்ணிறமான சந்திரனிடம் தோன்றுகின்ற திரண்ட ஒளி போன்றிருந்தது; மிக்க ஒளியை வீசுகின்ற அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்கள், இளமையான வெயிலை வீசுகின்ற சூரியன் போன்று ஒளிவிட்டுப் பிரகாசித்தது; ஒள்ளிய ஒளிவாய்ந்த பொன்னைப் போலவும், விளக்கையும் விளக்குகின்ற பேரெழிலும் வாய்ந்த அவர்கள் மேனியிலிருந்து தோன்றுகின்ற கதிர்க் கிரணங்களும் ஒன்றுசேர்ந்து வீச, அங்கே சூழ்ந்திருந்த பேரிருள் மருட்சி அடைந்து நிலைகுலைந்தது; இது எப்படி இருந்தது என்றால், அந்தப் பெண்களின் புன்முறுவலிலும், அவர்கள் அணிந்திருந்த ஆபரணங் களிலும், அவர்கள் அழகிய மேனியிலும், அங்கிருந்த ஆடவர்கள் எப்படி

Koviloor Digital Library

மனமகிழ்ந்து நிலைகெட்டுப் போயினரோ அதுபோலப் பேரிருளும் நிலைகெட்டுப் போயிற்று என்கிறான் கவிஞன்.

மகளிரின் புன்முறுவலுக்குச் சந்திரன் ஒளியும், அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களின் ஒளிக்கு இளஞ்சூரியன் ஒளியும், அவர்கள் மேனியின் ஒளிக்கு விளக்குகள் வெளியிடுகின்ற கதிர்ப்பரப்பும் உவமை; அதனால் அறிவு மயங்கி நிலைகெட்ட ஆடவர்க்கு, ஒளியினால் நிலைகுலைந்த பேர் இருட்பிழம்பு உவமை. ஒழுகுதல், உமிழ்தல், விளக்குதல், பரப்புதல் எல்லாம் வீசுதல் என்ற ஒரு பொருள் குறித்த பலசொற்கள் எனக்கொள்க. ஞாயிறு, திங்கள், விளக்கு இவை மூன்றும் தனித்தனியேயும் இருளை விரட்டும் தன்மையுடையன. இங்கே மூன்றும் ஒன்று சேர்ந்து விரட்டியதால் இருட்டு, ''பேரிருள் பிழம்பு'' எனப்பட்டது என்க.

6. கள்ளுண்டவர்களின் நிலை

நல்பெருங் கல்விச் செல்வம் நவையறு நெறியை நண்ணி,
முன்பயன் உணர்ந்த தூயோர் மொழியொடும் பழகி, முற்றி,
பின்பயன் உணர்தல் தேற்றாப் பேதைபால், வஞ்சன் செய்த
கற்பனை என்ன ஓடிக் கலந்தது கள்ளின் வேகம். (8907)

(நவை-குற்றம்; நண்ணுதல்-பொருந்துதல்/பின்பற்றுதல்; முற்றுதல்-முதிர்ச்சியுறுதல்; தேற்றா-தெளிவற்ற; தூயோர்-ஞானியர்; பேதை-அறிவிலி; கற்பனை-சூழ்ச்சி)

நல்ல சிறந்த பெரிய கல்விச் செல்வத்தைப் பெற்று, குற்றமில்லாத நல்ல சன்மார்க்க நெறியைப் பின்பற்றி, முற்காலத்தில் இதனால் உண்டான நற்பயன்பற்றி உணர்ந்து தெளிந்தவரான தூய்மையுடைய ஞானியர் களோடு பேசிப்பழகி, அவர்கள் உபதேச மொழிகளைக் கைக்கொண்டு அறிவு முதிர்ச்சியுற்று இருந்தால் அதனால் பின்னால் விளையப்போகும் பயன்கள் தெளிவாகும். அவ்வாறு தெளிந்த அறிவுடையவன் மேதையாகிறான்; இதற்குமாறாகப் பின்னால் விளையப்போவன பற்றித் தெளிவாகத் தெரிந்து வைத்துக்கொள்ளாத ஒரு அறிவிலியினிடத்தில், ஒரு கயவன் தனது வஞ்சகத் திறமையால் செய்த சூழ்ச்சி எப்படி விரைவில் சென்று அவனுள்ளத்தைக் கலக்குமோ அதுபோல், கள்ளுண்ட பெண்களும் கள்ளின் வேகம் விரைந்து செயலாற்றவே நிலைகலங்கிச் செய்வது என்னவென்று அறியாதாராயினர்.

கள் ஏற்படுத்தும் மதிமயக்கத்திற்கு, வஞ்சகனால் ஏமாற்றப்பட்டு விரைவில் அழிந்துபோகும் அறிவிலியின் பேதைமை உவமை. ஞானியர்க்குரிய தகுதிகள் பற்றிக் கூறுகிறான் பாருங்கள். நற்பெருங் கல்விச் செல்வம் பெறுதல்; நவையறு நெறியில் நண்ணுதல்; முற்பயன் உணர்தல்; அகந்தூய்மையுடையோராயிருத்தல்; முதிர்ந்த அறிவு

Koviloor Digital Library

பெறுதல்; பிற்பயன் உணர்தல் இவையெல்லாமும் ஒருங்கே கொண்டவன் ஞானி என்றும் இவையற்றவன் பேதை என்றும் கூறுகிறான் கவிஞன். பேதையின் குணநலன்களைக்கூறிப் பேதைமையை உணரவைக்கிறான் என்பதாம். ''ஓதியுணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும், தான் அடங்காப் பேதையிற் பேதையார்இல்'' என்பது குறள்-834. வஞ்சகனின் சூழ்ச்சி, கல்லாதவன் உள்ளத்தில் விரைந்து நம்பப்பட்டுப் பரவுவதுபோலக் கள்ளின் வேகம், மகளிர் கூட்டத்தில் விரைந்து பரவியது என்பதாம்.

7. பலபட முறுவல் வந்து பரந்தன; பனித்த மெய்வோர்;
இலவு இதழ் துடித்த; முல்லை எயிறு வெண்நிலவை ஈன்ற;
கொலை பயில் நயன வேல்கள் கொழுங்கடை சிவந்த; கொற்றச்
சிலை நிகர் புருவம் நெற்றிக் குனித்தன; விளர்த்த செவ்வாய். (8908)

(முறுவல்-சிரிப்பு; வேர்-வியர்வைத்துளிகள்; பனித்தல்-தோன்றுதல்/ அரும்புதல்; இதழ்-உதடுகள்; எயிறு-பற்கள்; ஈன்றல்-சொரிதல்; கொலை-வகுத்தல்; பயில்-பழகிய; கொற்றம்-வெற்றி; சிலை-வில்; குனித்தல்-வளைத்தல்; விளர்த்தல்-வெளுத்துப் போதல்)

கள்ளுண்ட மகளிர் சாதாரணமாகச் சிரிப்பதுபோல் சிரிக்காது, பலவகையாக அதிகமாகக் காரணமில்லாமலேயே சிரித்தார்கள்; அவர்கள் உடம்பில் வியர்வைத்துளிகள் அரும்பின; இலவம்பூப் போன்ற உதடுகள் துடித்தன; முல்லை அரும்பு போன்ற பற்கள் வெள்ளிய நிலவின் ஒளியைச் சிந்தின; ஆடவரை வருத்தும், கொலைத்தொழிலில் பயிற்சிபெற்ற கண்களாகிய வேற்படைகளின் செழுமையான ஓரங்கள் சிவக்கப் பெற்றன; வெற்றியையுடைய வில்லைப் போன்ற புருவங்கள் தாம் வளைந்ததோடன்றி நெற்றியின் மீதேறி நெற்றியையும் வளைத்தன; சிவந்த வாய் வெளிர்த்துப்போயிற்று.

கள்ளுண்டலால் விளையும் நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். காரணமில்லாமலேயே சிரிப்பார்கள்; உடம்பு வியர்க்கும்; இதழ்கள் துடிக்கும்; பற்கள் ஒளிவீசம்; கண்கள் சிவக்கும்; புருவமும் நெற்றியும் வளையும்; வாய் வெளுத்துப்போகும் என்பனவெல்லாம் கள் உண்பதால் விளையும் மெய்ப்பாடுகள் என்க. 'நயனவேல்' என்பது உருவகம்.

8. கூந்தல் அம்பாரக் கற்றைக் கொந்தளக் கோலக் கொண்டல்
ஏந்து அகல் அல்குல் தேரை இகந்துபோய் இறங்க, யாணப்
பூந்துகிலோடும் பூசல் மேகலை, சிலம்பு பூண்ட
மாந்தளிர் எய்த, நொய்தின் மயங்கினர், மழலைச் சொல்லார். (8909)

Koviloor Digital Library

(அம்-அழகிய; பாரம்-சுமை; கற்றை-திரள்; கொந்தளம்-சுருள்; கோலம்-அழகு; கொண்டல்-மேகம்; அகல்-விரிந்த; இகந்து-கடந்து; யாணர்-புதுமை/புதிய; பூசல்-ஆரவாரித்தல்; மாந்தளிர்-பாதம்; நொய்தின்-விரைவில்)

கள்ளுண்ட அந்த மகளிரின் அழகு செய்யப்பட்ட கூந்தலாகிய பெரிய சுமைத்தொகுதி, சுருண்ட அழகிய மேகம்போல விளங்கியது; அது அவர்களின் உயர்ந்த தேர்த்தட்டுப் போன்ற அகன்ற அல்குலைவிடக் கீழே இறங்கித் தொங்கிற்று; புதுமையான, புதிய மலர்போலும் மெல்லிய ஆடைகளோடு, ஆரவாரம் செய்யும் மேகலையும், கால்களில் அணிந்திருந்த சிலம்பு என்ற அணிகலனும், மாந்தளிர்போன்ற மெல்லிய பாதங்களைச் சென்றடைந்தது. மழலைபோன்ற இனிய சொற்களை யுடைய அம்மகளிர் விரைவில் மயக்கமுற்றனர்.

அவர்கள் மது உண்ட மயக்கத்தால் கூந்தல் அவிழ்ந்து தொங்கியது; அவர்கள் ஆடை அவிழ்ந்துபோய்ப் பாதங்களில் பட்டது; இடையில் அணிந்திருந்த மேகலை கழன்றுபோய்க் காலடியில் விழுந்தது; இவை ஏதொன்றும் அறியாதவராய் அவர்கள் மயக்கமுற்றிருந்தனர் என்பதாம். மேகம் மகளிர் கூந்தலுக்கு உவமை; தேர் மகளிர் அல்குலுக்கு உவமை; மாந்தளிர் பாதங்களுக்கு உவமை; மாந்தளிர் என்று மட்டும் சொல்லிப் பாதத்தைப் பற்றியே கூறாது, கற்போரின் ஊகத்திற்கே விட்டிருப்பதால் இதை ஏகதேச உருவகம் எனலும் பொருந்தும். 'கொந்தளம்' என்பது சுருண்ட கூந்தலைக் குறிக்கும். ''அல்குல் என்றசொல்லுக்கு நாம் ஒரே பொருளையேகூறிவருகிறோம். ஆனால் ''அல்குல் என்றசொல் ஆடவரின் அபரபாகத்தையும், பெண்களின்கரு இந்திரியத்தையும் சுட்டும்; பிற்காலப் புலவர் இச்சொல்லை மகளிரின் ஜனனேந்திரியத்துக்கே வழங்கினார்'' என்று உ.வே.சா.பதிப்பு கூறுகிறது.

9. கோத்த மேகலையினோடும் துகில்மணிக் குறங்கைக் கூட,
காத்தன கூந்தற்கற்றை, அற்றம், அத்தன்மை கண்டு,
வேத்தவை 'கீழ் உளோர்கள் கீழ்மையே விளைத்தார்; மேலோர்
சீர்த்தவர் செய்யத்தக்க கருமமே செய்தார்'' என்ன. (8910)

(வேத்தவை-வேந்து+அவை/இராவணன் சபை; விளைத்தல்-செய்தல்; சீர்த்தவர்-சிறந்தவர்கள்; கருமம்-நற்செயல்; குறங்கு-தொடை; அற்றம்-மர்மஸ்தானம்/மறைவிடம்/அல்குல்; கூடுதல்-சேர்தல்/அடைதல்; அற்றம்-மானக்குறைவு)

''இராவணனின் சபையில் உள்ளோர் கீழ்மட்டத்தில் இருப்பவர்கள், சிறுமையான காரியங்களைச் செய்வர் என்றும் சிறந்த மேன்மக்கள் மேன்மையானகாரியங்களையே செய்வார்கள்'' என்றும் புகழ்ந்துரைக்கும் வண்ணம், மணிகள் கோக்கப்பட்டு இடையில் அணிந்திருந்த

Koviloor Digital Library

மேகலையும், இடையில் உடுத்தியிருந்த ஆடையும் அவிழ்ந்து, தொடையைச் சேர்ந்து மறைவிடத்தை வெளிப்படுத்தி, மானக்குறைவு செய்ய, அந்த நிலையைக் கண்ட உடம்பின் மேற்பாகத்தில் அமைந் திருக்கும் நெருங்கிய கூந்தல்கற்றை உடனே அவிழ்ந்து கீழே தொங்கி, அம்மறைவிடத்தைப் பிறர் காணாதவாறு மறைத்துக் காப்பாற்றியது.

மணிகள் கோத்த மேகலையும், இடையில் அணிந்திருக்கும் ஆடையும் உடம்பின் கீழ்ப்பகுதியில் இருப்பன; அவற்றிற்குக் கீழோர் செயல் உவமையாக்கப்பட்டது; காரணம் அவை நெகிழ்ந்து அம்மகளிருக்கு மானக்குறைவை ஏற்படுத்த முயன்றன, ஆனால் உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு என்ற குறட்பாவுக்கு-788 ஏற்ப, உடம்பின் மேல்பாகத்தில் இருக்கும் நீண்டு தாழ்ந்த கூந்தல்கற்றை, தானே அவிழ்ந்து அந்த மானக்குறைவு ஏற்படாதவாறு, மறைவிடத்தை மறைத்து யாரும் காணாதவாறு செய்து, அம்மகளிரின் மானத்தைக் காத்தது என்பதாம். ''அற்றம் மறைக்கும் பெருமை, சிறுமைதான் குற்றமே கூறிவிடும்'' என்ற குறள்-980க்குச் சரியான விளக்கம் இந்தப்பாடல் ஆகும். ''சிறியார் சிறுமையும் தோன்றாதாம், நல்ல பெரியார் பெருமையைச் சார்ந்து'' என்பது நாலடியார்-177.

10. பாணியின் தள்ளி, கால மாத்திரைப் படாது, பட்ட
நாணியின் முறையின் கூடாது, ஒருவழி நடையின் செல்லும்
ஆணியின் அழிந்த பாடல், நவின்றனர்; அனங்கவேள்தன்
தூணியின் அடைத்த அம்பின் கொடுந்தொழில் துறந்த கண்ணார்.
(8911)

(அனங்கவேள்-உருவமற்ற மன்மதன்; பாணி-தாளஒத்து; தள்ளுதல்-வேறுபடுதல்; நாணி-யாழ் நரம்பு; ஒரு-தனிப்பட்ட; ஆணிஅழித்தல்-வரம்பு தவறுதல்; நவில்தல்-பாடுதல்; காலமாத்திரை-காலஅளவு)

உருவமற்ற உருவிலியான மன்மதன் ஆடவர், மகளிர்பால் ஐந்து விதமான மலரம்புகளைச் செலுத்தாதவாறு அவனுடைய அம்புப் புட்டிலிலேயே அவற்றை அடைத்து வைத்துக்கொண்டு இருப்பதுபோல, கள்ளுண்ட மயக்கத்திலிருந்த பெண்களும், எப்பொழுதும், ஆடவரை வருத்துகின்ற வேல்போன்று கொடிய தொழிலைச் செய்கின்ற மையல் நோக்கை ஆடவர்பால் செலுத்தாது, இப்போது அவர்கள் கண்கள் செருகிக்கொண்டு விட்டன; மேலும் அவர்கள் பாடுகின்ற பாடல்களும் தாள ஒத்திற்கு ஒத்துவராமலும், இன்ன காலத்தில் இன்ன பாடல்தான் பாடவேண்டும் என்ற கால அளவுக்கு உட்படாமலும், அவர்கள் பாடுவதே முறையற்றதாக இருந்தது. அத்தகைய பாடல்களைப் பாடிக்கொண்டும் இருந்தனர்.

Koviloor Digital Library

தாளம் தவறிய, கால அளவுக்கு உட்படாத, சுருதிக்கு ஒத்துவராத, ஏதோ தங்களுக்குத் தெரிந்த வகையில் எல்லாம் பாடிக் கொண்டிருந்தனர் என்பதாம். அவர்கள் காமம் மிகுந்த பார்வையை ஆடவர்பால் செலுத்தாது அவர்கள் கண்கள் கள்ளுண்ட மயக்கத்தால் செருகிக் கொண்டதற்கு அனங்கவேள் தூணியின் அடைத்த அம்புகள் உவமை. 'இருநோக்கு இவள் உண்கண் உள்ளது; ஒருநோக்கு நோய்நோக்கு; ஒன்று அந்நோய் மருந்து'' குறள்-1091 என்பதும், ''கூற்றமோ, கண்ணோ, பிணையோ மடவரால் நோக்கம் இம்மூன்றும் உடைத்து குறள்-1085 என்பதும் ''நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு தானைக் கொண்டது அன்னது உடைத்து'' என்பதும் குறள்-1082.

காலைநேரத்தில் மருதப்பண்ணும், மாலைநேரத்தில் செவ்வழிப் பண்ணும் பாடவேண்டும் என்பது ஒருமுறை. அது தவறிப் பாடினர் என்பதாம். ''மாலை மருதம் பண்ணிக் காலைக் கைவழி மருங்கில் செவ்வழி பண்ணி, வரவு எமர் மறந்தனர்'' என்பது புறநானூறு. அங்கேயும் வரம்புமீறிய பாடல்பற்றிப் பேசப்படுவது காண்க.

11. வங்கியம் வகுத்த கானம் வயங்கிய மழலை வாயர்,
சங்கைஇல் பெரும்பண் உற்ற நிறத்துறை நிரம்பித் தள்ள,
சிங்கல்இல் அமுதினோடும், புளி அளாம் தேறல் என்ன,
வெங்குரல் எடுத்த பாடல் விளித்தனர் மயக்கம் வீங்க. (8912)

(வங்கியம்-துளைக்கருவி/புல்லாங்குழல்/நாதஸ்வரமுமாம்; வகுத்தல்-வழங்குதல்; கானம்-இன்னிசை; வயங்குதல்-விளங்குதல்; சங்கை-சந்தேகம்/ஐயம்; திறத்துறை-அமைப்புமுறை; பெரும்பண்-குறிஞ்சி, பாலை, மருதம், செவ்வழி என்ற நான்குவகைப் பண்கள்; தள்ளுதல்-புறக்கணித்தல்; சிங்கல்-சுருங்குதல்/குறைதல்; அளாம்-அளாவும்/விரவிய; தேறல்-கள்/மது; வெங்குரல்-கடுங்குரல்; விளித்தல்-பாடுதல்/கூவுதலுமாம்; வீங்குதல்-பெருகுதல்)

துளைக்கருவியாகிய புல்லாங்குழல் போன்று இனிய இசையை வழங்குகின்ற இயல்புடையவரும், மழலைச் சொல்போல் இனிமையான சொற்களைப் பேசுகின்ற வாயினை உடையவருமாகிய தேவமகளிர் இப்போது, கள்ளுண்டிருப்பதால் அம்மயக்கம் மிகுதியாக, ஐயமற்ற பெரும்பண் என்று கூறப்படுகின்ற நால்வகைப் பண்களையும், அவற்றிற்குரிய துறைகளையும் புறக்கணித்து, கர்ண கடூரமாகக் கடுங்குரல் எடுத்து, எடுத்தலோசையோடு கூவுதல்போலப் பாடினார்கள். இது எப்படி இருந்தது என்றால் குறைதல் இல்லாத நல்ல இனிப்புச்சுவையுடைய அமிழ்தத்தோடு, நிறைந்த புளிப்புச் சுவையுடைய கள்ளையும் கலந்து கொடுத்தாற் போன்றிருந்தது என்கிறான் கவிஞன்.

Koviloor Digital Library

வங்கியம் என்பது பொதுவாகத் துளைக்கருவிகளைக் குறிக்கும். இங்கே மகளிர், மழலைவாயர் என்றதனால் புல்லாங்குழல் என்று பொருள் கொள்ளப்பட்டது. துளையுடைய நாதஸ்வரமும் வங்கியம் என்றே வழங்கப்பெறும். ''பெரும்பண்'' என்பது நால்வகை நிலத்திற்கும், காலத்திற்கும் உரிய இசைப்பாடல் என்று பொருள்படும். அவை குறிஞ்சிப்பண், பாலைப்பண், மருதப்பண், செவ்வழிப்பண் என்பதாம். இவை ஒவ்வொன்றும் எப்பொழுது பாடவேண்டும் என்ற ஒரு காலக் குறிப்பும் உண்டு. குறிஞ்சி நடு யாமத்திலும், பாலை நண்பகலிலும், மருதம் காலையிலும், செவ்வழி மாலையிலும் பாடுதற்குரியன. பண் நால்வகைப்படும் என்பதும் சுரங்கள் ஏழுவகைப்படும் என்பதும் நாம் அறிந்ததே. இன்னும் சில செய்திகள் ''ஏழு சுரங்களால் ஆகிய இராகம் திறம்; நான்கு சுரங்களால் ஆகிய இராகம் திறத்திறம்'' என்றும் கூறுவர். ''ஈரிருபண்ணும், எழுமூன்று திறனும்'' என்று பிங்கலந்தை கூறுகிறது'' என்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்புக் கூறுகிறது. பாடல்பாடினர் என்று கூறாமல் 'விளித்தனர்' என்று கூறிய நகைச்சுவையை உணர்க. 'விளித்தல்' என்பது கூவுதலைக் குறிக்கும். கர்ணடூரமாகக் கடுங்குரலெடுத்துப் பாடினர் என்பது பொருள்.

12. ஏனைய பிறவும் கண்டார்க்கு இந்திரசாலம் என்ன,
தான் அவை உருவில் தோன்றும் பாவனைத் தகைமை சான்றோர்,
மான் அமர் நோக்கினாரை, மைந்தரைக் காட்டி, வாயால்
ஆனையை விளம்பி, தேரை அபிநயித்து இயற்றி உற்றார். (8913)

(இந்திரசாலம்-மாயாஜாலம்/மாயவித்தை; தகைமை-தன்மை/ ஆற்றல்; அமர்-போன்ற; நோக்கினார்-கண்களை உடையவர்/பெண்கள்)

அந்த தேவமகளிர் தாம் இயல்புநிலையில் இருக்கும்போது, அவர்கள் தாமல்லாது பிற உயிர்களையும், உருவங்களையும் அபிநயித்துக் காட்டும் போது, அது பார்ப்போர் கண்களுக்கு அவர்கள் ஏதோ இந்திரசாலம்-மாயவித்தை-செய்கிறார்களோ என்று கருதத்தோன்றும். அத்தகைய தகுதியும் ஆற்றலும் படைத்த அத்தேவமகளிர் இப்போது கள்ளுண் டிருப்பதால், மான்போன்ற விழிகள் கொண்டவர் என்று பெண்களை மனத்தில் நினைத்துக் கொண்டு அஃதல்லாத ஆடவர்களை அபிநயித்துக் காட்டினார்கள்; அதுபோலக்கள்ளுண்ட மயக்கத்தால் பெரிய ஆனை என்று வாயால் பாடிக்கொண்டு, அதற்கு நேர்மாறாக சிறியதேரையை அபிநயித்துக் காட்டினார்கள்.

'இந்திரசாலம்' என்பது இப்போது மாயாஜாலம், கண்கட்டு வித்தை என்று கூறுகிறோம் அல்லவா? அந்தப் பொருளைக் குறித்தது எனக் கொள்க. 'தேரை' என்ற சொல்லுக்குத் தேர்ப்படையை என்ற பொருள் பொருந்துவந்தக் காட்டிலும், பெரிய ஆனைக்கு மாறுபட்ட சிறிய தேரையைப் பொருளாகக் கொள்ளுவதே பொருந்தும் என்று கருதியதால்

Koviloor Digital Library

அப்பொருளே கொள்ளப்பட்டது. அவர்கள் வாயால் பாடுவது ஒன்றும், அவர்கள் அபிநயித்துக் காட்டுவது அதற்கு மாறுபட்ட ஒன்றாகவும் இருந்தது. என்பதாம். மகளிர் என்று ஆடவரையும், ஆனை என்று தேரையையும் அபிநயித்துக் காட்டினர் என்பதறிக. தேரை என்பது கல்லினுள் வாழும் ஒரு சிறு பிராணி, தவளையின் சிறுவடிவம் எனக்கொள்க.

13. அழுகுவர்; நகுவர், பாடி ஆடுவர்; அயல் நின்றாரைத்
தொழுகுவர்; துயில்வர்; துள்ளித் தூங்குவர்; துவர்வாய் இன்தேன்
ஒழுகுவர்; ஒல்கிஒல்கி, ஒருவர்மேல் ஒருவர் புக்கு,
முழுகுவர்; குருதி வாட் கண் முகிழ்த்து இடை மூரி போவர். (8914)

(நகுதல்-சிரித்தல்; தூங்குதல்-சோர்தல்; துவர்-சிவந்த/பவளம்; ஒல்குதல்-தளர்தல்; முழுகுதல்-படிதல்; வான்-சிறந்த ஒளி; முகிழ்தல்-மூடிக்கொள்ளுதல்; மூரிபோதல்-நெட்டை முரித்தல்/நெட்டி ஒடித்தல்/ சோம்பல் முறித்தல்)

கள்ளுண்ட மயக்கத்தால் சில தேவமகளிர் அழுவார்கள்; சிலர் சிரிப்பார்கள்; சிலர் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் அங்கும் இங்கும் திரிவார்கள்; சிலர் தன் பக்கத்தில் இருப்பவர்களைக் காரணமில்லாமலேயே வணங்குவார்கள்; சிலர் உறங்கப் போய்விடுவார்கள்; சிலர் துள்ளிக் குதித்துப் பின் சோர்வடைவார்கள்; சிலர் பவளம்போன்ற சிவந்த வாயின்கடையிலிருந்து கள்ளை ஒழுக விட்டுக்கொண்டு நிற்பார்கள்; சிலர் ஒசிந்து, தளர்ந்து, ஒருவர்மேல் ஒருவர் நெருங்கித் தழுவிக் கொள்வதுபோல முட்டி மோதிக்கொண்டு படிவார்கள்; கள்ளுண்டதால் கண்கள் இரத்தம்போன்று சிவப்பேறி ஒளிவிட்டுக் கொண்டிருக்கும். அந்தக் கண்களை மூடிக்கொண்டு கையை உயர்த்திச் சோம்பல் முறிப்பார்கள், நெட்டி ஒடித்துக் கொள்வார்கள்.

''வாய்இன்தேன் ஒழுகுவர்'' என்பது ''வால்எயிறு ஊறிய நீர்'' என்று மகளிரின் இதழ்களில் இருந்து ஒழுகும் தேன்போன்ற அதரபானத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். எனினும் கள் உண்ட மயக்கத்தில் இருப்பதால் கடைவாயினின்றும் கள்ளை ஒழுகவிட்டுக் கொண்டு நின்றார்கள் என்ற பொருளே பொருந்திவருதல் காணலாம். 'புக்கு முழுகுவர்' என்பது ஒருவரை ஒருவர்கட்டி அணைத்துக்கொள்வர் என்றும் பொருள்படும். கைகளால் கட்டி அணைப்பதை உடலோடு உடல் கட்டியணைப்பதாக அகநானூறு கூறுகிறது கேளுங்கள். ''மெய்புகுவ என்ன,கைகவர் முயக்கம்'' என்பதுஅகநானூறு-11.

Koviloor Digital Library

14. முனிவர்களும் காமவசப்படுதல்

உயிர்ப்புறத்து உற்ற தன்மை உணர்த்தினார், 'உள்ளத்து உள்ளது
அயிர்ப்பினில் அறிதிர்' என்றே; அது களியாட்டம் ஆகச்
செயிர்ப்பறு தெய்வச் சிந்தைத் திருமறை முனிவர்க்கேயும்,
மயிர்ப்புறம் தோறும் வந்து, பொடித்தது காமவாரி. (8915)

(அயிர்ப்பு-ஐயம்/சந்தேகம்; அறிதிர்-அறிந்து கொள்வீர்களாக; உயிர்ப் புறம்-உடம்பு; தன்மை-செய்கை; செயிர்ப்பு-குற்றம்; வாரி-வெள்ளம்; பொடித்தல்-தோன்றுதல்)

''எங்கள் உள்ளத்தில் உள்ள கருத்து, புணர்ச்சி பழகுதலே என்பதைச் சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்'' என்று அத்தேவமகளிர், தங்கள் உயிர்ப்புறமாகிய உடம்பின் செய்கையால் அவர்களுக்கு உணர்த்தினர். அது காமக் களியாட்டமாகத் தோன்றியதால், மும்மலங்களாகிய குற்றங்களை நீங்கியவரும், தெய்வச் சிந்தனை யிலேயே தோய்ந்திருப்பவரும், அழகிய வேதங்களைக் கற்றுணர்ந்தவர் களுமாகிய முனிவர்களுக்குக்கூட அவர்கள் மயிர்க்கால்களிலெல்லாம், காம இச்சை வெள்ளம்போல் வந்து தோன்றியது.

'உயிர்ப்புறம்' என்பது, உயிருக்குப் புறத்தேயுள்ளதாகிய உடம்பினைக் குறித்தது; 'முனிவர்க்கேயும்' என்றவிடத்து உம்மை உயர்வு சிறப்பு உம்மை; எல்லாக் குற்றங்களையும் நீங்கியவர்களான முனிவர்களுக்கே 'மயிர்ப்புறம் தோறும் வந்து பொடித்தது காம வாரி' என்றால் சாதாரண அரக்கர்கள் என்ன நிலை அடைந்திருப்பார்கள் என்பதைக் கற்போரையே ஊகிக்க வைக்கிறான் கவிஞன். 'வீடுபெற்றவரும் வீழும் வெம்முலை' என்பது சீவகசிந்தாமணி. அதற்குமாறாக 'காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர்' என்பது திருமுருகாற்றுப்படை. 'செயிர்ப்பு' என்பது குற்றம் என்ற பொருளில் மும்மலங்களாகிய காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று குற்றங்களையும் குறிக்கும். மயிர்க்கால்களில் பொதுவாகத் துளிகள்தான் தோன்றும், இங்கே முனிவர்க்கு வெள்ளம் தோன்றியது என்பது நுனித்து உணரத்தக்கது. கள்ளுக்கே ''சொல் விளம்பி'' என்று ஒரு பொருளும் உண்டு, உள்ளத்தில் உள்ளதை மறைக்காமல் சொல்லும் தன்மை கள்ளுக்கு உண்டு என்பதாம். 'களியாட்டம்' என்பது சங்ககாலத்திற்கு முன்பு கள்ளுண்டு களித்தலையே குறித்திருந்தது. பின்னர் காலப்போக்கில் எல்லாவகையான மகிழ்ச்சிக்கும் களியாட்டம் என்றே கூறத்தொடங்கினர் என்பதாம்.

15. மாப் பிறழ் நோக்கினார் தம் மணி நெடுங்குவளை வாட்கண்
சேப்புற, அரத்தச் செவ்வாய்ச் செங்கிடை வெண்மை சேர,
காப்புறு படை கைக்கள்வ நிருதர்க்கு ஓர் இறுதி காட்டி,
பூப்பிறழ்ந்து உருவம் வேறாய்ப் பொலிந்தது ஓர் தன்மை போன்ற. (8916)

Koviloor Digital Library

(மா-மான்; பூ-வண்டு; மணி-அழகிய/கரிய; வாள்-ஒளி; சேப்புறுதல்-சிவக்கப்பெறுதல்; அரத்தம்-செங்கழுநீர் மலர்; கள்வர்-வஞ்சகர்; இறுதி-அழிவு; காட்டுதல்-புலப்படுத்துதல்; பிறழ்தல்-வேறுபடுதல்; உருவம்-வண்ணம்; பொலிதல்-விளங்குதல்; செங்கிடை-நெட்டி)

தேவமகளிரின் மான்போன்ற மருட்சி தருகின்ற கரிய கண்களும், அழகிய நீண்ட நீலமலராகிய குவளைமலர் போன்று ஒளிபொருந்திய கண்களும் சிவப்பாக நிறம் மாறிப்போகவும், செங்கழுநீர் மலர்போன்ற சிவந்தவாய், நெட்டி போன்று வெண்மைநிறம் அடையவும், அறநெறியின்றி, படைக்கலன்களையே தம்முடைய பாதுகாப்பாகக் கொண்டிருக்கிற வஞ்சகர்களாகிய அரக்கர்களின் அழிவுக்கு ஒரு முன்னறிவிப்பாக அமைந்தது.

மலர்கள் தம் இயற்கையான நிறத்தைத் தவிர்த்து வேறொரு நிறம் கொள்ளுதல் என்பது தீய நிமித்தமாகும். எனவே இப்பொழுது தேவ மகளிரின் கரிய கண்கள் சிவப்பாகத் தோன்றுதலும், சிவந்த செங்கழுநீர் மலர் போன்ற வாய், நெட்டி போன்று வெளுத்துக் காணப்படுவதும், அரக்கர்களுக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டது என்பதைச் சுட்டிக் காட்டுவதுபோல் தோன்றுகிறது என்கிறான் கவிஞன். நிறம்மாறும் பூக்கள் நன்மை தருவதற்கல்ல என்ற கருத்து புலப்படுத்தப்படுகிறது. பூக்கள் தம் இயற்கை நிறத்திலேயே பொலிந்து விளங்கவேண்டும். நிறம் மாறக் கூடாது என்பது கருத்து. அவ்வாறு நிறம் மாறினால் அது அழிவுக்கு அறிகுறி என்பதாம். 'மா' என்ற சொல்லுக்கு வண்டு என்று பொருள் கொண்டு வண்டுகளின் கண்கள்போல் பிறழும் தன்மையுள்ள கண்களையுடைய தேவமகளிர் என்பதும் பொருந்தும். செங்கிடை என்பது சிவந்த நிறமுடைய ஒருவகைச்செடி; இது பெண்களின் வாய்க்கு நிறத்தால் உவமையாகக் கூறப்படும்.

16. கயல், வரு காலன் வை வேல், காமவேள் கணை, என்றாலும்,
இயல் வருகிற்கிலாத நெடுங்கணார், இணைமென் கொங்கைத்
துயல்வரு கனக நாணும், காஞ்சியும், துகிலும் வாங்கிப்
புயல் வரு கூந்தல் பாரக் கற்றையின் புனையலுற்றார். (8917)

(கயல்-கெண்டைமீன்; வருதல்-உயிர்கொள்ள வருதல்; காமவேள்-மன்மதன்; கணை-மலரம்புகள்; இயல்வருகிற்கிலாத-முடியாத; இணை-இரண்டு; கொங்கை-மார்பகம்; துயல்வருதல்- அசைதல்; கனகநாண்-தங்கத்தாலி; காஞ்சி-இடையணி; துகில்-ஆடை/புடவை; புயல்-மேகம்; புனைதல்-அணிந்து கொள்ளுதல்; வை-கூர்மையான)

கெண்டைமீன், உயிரைக் கவர்வதற்கு வருகின்ற இயமன் கையிலிருக்கும் கூர்மையான வேற்படை, மன்மதனின் மலரம்புகள் இவற்றையெல்லாம் உவமை கூறினாலும் அவற்றிற்கு ஒப்பாகாத சிறப்பு

Koviloor Digital Library

இயல்புடைய நீண்ட கண்களையுடைய அரக்க மகளிர், கள்ளுண்ட மயக்கத்தால், தங்களது இரண்டு மெல்லிய மார்பகங்களில் அசைந்தாடுகின்ற பொன்னாலான, மங்கலநாண், இடையில் அணிகின்ற காஞ்சி என்னும் இடையணி, இடையில் உடுத்திக்கொள்ளுகிற ஆடையாகிய புடவை, ஆகியவற்றைக் கையில் ஏந்திக்கொண்டு, அவற்றை, மேகம்போன்று கரிய கனமான கூந்தல் தொகுதியில் சூடிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

கள்ளுண்ட மயக்கத்தால் எந்த அணிகலனை எங்கே அணியவேண்டும் என்பதை மறந்து, தடுமாறி, மங்கலநாணையும், மேகலையையும், பட்டாடையையும் தங்கள் கூந்தலில் சூடிக்கொள்ளத் தலைப்பட்டார்கள் என்பதாம். இதேபோலக் குரங்குகள் செய்தன என்பது புறநானூற்றில் நாம் அறிந்த பாடல் ஒன்று கேளுங்கள். ''விரல்செறி மரபின செவித் தொடக்குநரும், மிடற்றமை மரபின அரைக்கு ஆக்குநரும், அரைக்கு அமை மரபின மிடற்று ஆக்குநரும் என்பது புறநானூறு-*378*. 'இயல் வருதல்' என்பது உவமையாதல் என்ற பொருளைத்தரும். முன்பு பாலகாண்டத்திலும், 'வன்ன மேகலையை நீக்கி மலர்த்தொடை அல்குல் சூழ்ந்த பொன்னரிமாலை கொண்டு புரிகழல் புனையலுற்றான்'' என்று உண்டாட்டுப்படலத்தில் கூறியதும் நினைவுகூரத்தகும். 'காஞ்சி' என்பது ஏழுகோவைகளால் ஆக்கப்பெற்ற இடையணியாகும்.

17. வானரச்சேனையின் ஆரவாரம்

முத்து அன்மை மொழியலாகா முகிழ்இள முறுவல் நல்லார்,
இத்தன்மை எய்த நோக்கி, அரசு வீற்றிருந்த எல்லை,
அத்தன்மை அரியின் சேனை ஆர்கலி ஆர்த்த ஓசை
மத்தன் மெய் மயங்க வந்து, செவிதொறும் மடுத்தது அன்றே. (8918)

(அன்மை-அல்லாமை; முகிழ்தல்-அரும்புதல்; முறுவல்-பற்கள்; நல்லார்-பெண்டிர்; எய்த-உற்று/விருப்பத்தோடு; எல்லை-சமயம்; அரி-குரங்கு; ஆர்கலி-கடல்; மத்தன்-மயங்கியவன்; மடுத்தல்-நுழைதல்/ புகுதல்)

முத்து அல்ல என்று சொல்வதற்கு இயலாதனவும், முத்துக்களே என்று கூறத்தக்கனவுமாக அமைந்த அரும்பு போன்ற பற்களையும், இளமையான புன்முறுவலையுமுடைய அழகிய அரக்கமகளிர், இவ்வாறு கள் மயக்கத்தாலும் காம மயக்கத்தாலும் ஆடிக்கொண்டிருந்ததை அரசனாகிய இராவணன் ஆர்வத்துடன் உற்று நோக்கி இருந்த சமயம், மருத்து மலையினால் உயிர்பெற்றெழுந்த தன்மையையுடைய குரக்குச் சேனை எழுப்பிய பேர் ஆரவாரத்தின் ஓசை, கள்ளுண்டு மயங்கிக்கிடந்த இராவணனின் பத்துத்தலைகளில் உள்ள இருபது செவிகளிலும் நுழைந்தது.

Koviloor Digital Library

'முத்து அன்மை' என்பது முத்து அல்ல என்ற பொருளைத்தரும். 'முத்துக்களே பற்கள்' என்பது நாம் அறிந்த திரைப்படப்பாடல். 'மத்தன்' என்றது இராவணனை. 'செவிதொறும்' என்பது இராவணனுக்கு உள்ள இருபது செவிகளிலும் என்ற பொருளைத் தரும். 'சேனை ஆர்கலி' என்பது உருவகம். வானரச்சேனையின் மிகுதியைக் குறித்தது. 'முத்துத்தன்மை' என்பது 'முத்தன்மை' என்று விகாரப்பட்டது என்றும் கொள்ளலாம். கண்களால் இன்பம் நுகர்ந்த இராவணன், செவிகளால் துன்பம் நுகரலானான் என்ற நயம் உணர்க.

18. ஆடலும், களியின் வந்த அமலையும், அமிழ்தின் ஆன்ற
பாடலும், முழவின் தெய்வப் பாணியும், பவள வாயார்
ஊடலும், கடைக்கண் நோக்கும், மழலை வெவ்வுரையும், எல்லாம்
வாடல் மென் மலரே ஒத்த; ஆர்ப்பொலி வருதலோடும். (8919)

(ஆன்ற-சிறந்த/இனிய; முழவு-மத்தளம்; பாணி-தாளஓசை; வெம்-விருப்பம்; அமலை-ஆரவாரம்/ஓசை; களிப்பு-இங்கே கள்வெறி; ஊடல்-புலவி/பிணக்கு)

பவளம் போன்ற சிவந்த வாயினையுடைய அரக்கியர்கள் கள்ளுண்டமையால் மிக்க மகிழ்ச்சியுற்று ஆடிய ஆட்டமும், அந்த மகிழ்ச்சியால் எழுந்த பேரொலியும், அவர்கள் அமிழ்தைக் காட்டிலும் இனிமையாகப் பாடிய சிறந்த பாடல்களும், அதற்கு ஏற்றாற்போல் இசைத்த மத்தளத்தின் ஓசையும், தாள ஒலியும், அம்மகளிர் அரக்கர்பால் கொண்ட ஊடலும், அதைத்தீர்க்கும் பொருட்டு அவர்கள் செலுத்திய கடைக்கண் பார்வையும், அதை வெளிப்படுத்தி அவர்கள் விருப்பம்கொண்டு பேசிய பேச்சுக்களும் இவையெல்லாமும், வானரச்சேனையின் பேராரவாரத்தைக் கேட்டதும், மெல்லிய மலர் வாடிப்போனதைப் போலப் பொலிவிழந்து போயின.

அன்றலர்ந்த மலர்போல் மிக்க மகிழ்ச்சியுடன் சிறப்பாகத் தொடங்கிய களியாட்டம், இறுதியில் வாடிப்போன மலர்போல் பொலிவிழந்தது என்று கூறிய நயம் உணர்க. 'வெவ்வுரை' என்பது விரும்பத் தகுந்த சொல் என்று பொருள்படும். இங்கே 'வெவ்' என்ற சொல் கொடிய என்ற பொருளைத் தராது. 'வெம்மை வேண்டல்' என்பது தொல்காப்பியம். 'வெவ்வுரை' என்ற சொல்லுக்கு வெப்பம் என்றே பொருள் கொண்டு, காமவெப்பத்தை மிகுவிக்கும் சொற்கள் என்று கூறுகிறது ஒரு உரைநூல். அதுவும் இவ்விடத்தில் பொருந்திவருதல் காண்க. 'கடைக்கண் நோக்கு' என்பது, மகளிர் ஆடவரோடு ஊடல்கொண்டு, பின்னர் ஊடல் தணிந்து, அவர்பால் இரக்கம்கொண்டு இசைவைத் தெரிவிக்கும் ஓரப் பார்வை என்ற விரிந்த பொருளைத்தரும். 'கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்' என்பது பாரதிதாசனின் வைரவரிகள்.

Koviloor Digital Library

இதேகடைக்கண்பார்வையைப்பொன்மழைவேண்டிஇலக்குமியைத் துதிக்கின்ற கவியரசு கண்ணதாசன் அருமையாகப் பாடுகிறார் கேளுங்கள். 'நற்குடிப் பிறந்த பெண்கள் நாயகன் தனைப் பார்த்தாலும், நாணத்தில் முகம் புதைத்து நாலில்ஓர் பாகம் பார்ப்பர்; பற்பல நினைந்த போதும் பாதிக்கண் திறந்து மூடிப் பரம்பரைப் பெருமை காப்பர்; பாற்கடல் அமுதே! நீயும் அற்புத விழிகளாலே அச்சுதமுகுந்தன் மேனி அப்படிக் காண்பதுண்டு; ஆனந்தம் கொள்வதுண்டு; இப்பொழுது அந்தக் கண்ணை என்னிடம் திருப்பு தாயே! இருமையும் செழித்து வாழ இகத்தினில் அருள்வாய் நீயே!'' என்பதும் ''சந்திரவதனி கண்கள் சாடையில் பார்த்தால் போதும், தாய்விழி பட்ட கல்லும் தரணியில் தங்கமாகும்; எந்த ஓர் பதவி வேண்டேன்; எளியனுக்கு அருள் செய்வாயே! இகத்தினில் செல்வம் தந்து இயக்குவாய் கமலத் தாயே!'' என்பதும் ''கைநிறை செல்வம் யாவும் கடைக்கண்ணால் அருள்வாய் போற்றி'' என்பதும் ''சந்திரப் பிறைப் பூங்கண்ணி, சற்று நீ திரும்பிப்பார்த்தால் மேவிய வறுமை தீர்வேன்'' என்பதும் கவியரசு கண்ணதாசனின் பொன்மழை. ''கடைக்கண் நோக்கு'' என்ற சொற்றொடர்க்காக இப்பாடல்பகுதிகள் தரப்பட்டன.

19. தறிபொரு களிநல்யானை சேவகம் தள்ளி ஏங்க,
துறு சுவல் புரவி தூங்கித் துணுக்குற, அரக்கர் உட்க,
செறி கழல் இருவர் தெய்வச் சிலை ஒலி பிறந்தது அன்றே,
எறிகடல் கடைந்த மேல்நாள், எழுந்த பேரோசை என்ன. (8920)

(செறி-நெருங்கிய; தறி-கட்டுத்தறி/யானைகட்டும் கொம்பு; சேவகம்-யானையின் இருப்பிடம்; ஏங்குதல்-வருந்துதல்; துறு-அடர்ந்த; சுவல்-பிடரிமயிர்; புரவி-குதிரைகள்; உட்குதல்-அஞ்சுதல்; எறிதல்-வீசுதல்; மேல்நாள்-முற்காலம்; தூங்குதல்-அசைதல்; துணுக்குறுதல்-நடுங்குதல்; பொருதல்-முறித்தல்)

நெருங்கிய வீரக்கழல் அணிந்த வீரர்களான இராமஇலக்குவர் இருவரும், தமது, தெய்வத்தன்மை வாய்ந்த வில்லினின்றும் எழுப்பிய நாண்ஒலியின் பேரோசை, முற்காலத்தில் அலைகள் வீசுகின்ற பாற்கடலைக் கடைந்தபொழுது எழுந்த பெருமுழக்கத்தைப் போல் ஒலித்தது. இப்பேரோசைகேட்டதும், கட்டுத்தறியில் கட்டப்பட்டிருக்கும் மதக்களிப்பு மிகுந்ததும், நல்லதுவுமான யானைகள் கட்டுத்தறியை முறித்துவிட்டுத் தம் இருப்பிடத்தை விட்டுத் திடுக்கிட்டு துன்புற்றன; நெருங்கிய அடர்ந்த பிடரி மயிரையுடைய குதிரைகள் அசைந்து நடுங்கின; காலாட்படை வீரர்களான அரக்கர்கள் அச்சம் கொண்டனர்.

இராமஇலக்குவர் எழுப்பிய நாண்ஒலியால் யானைகள், குதிரைகள், காலாட்படை வீரர்கள் பட்டபாடு கூறப்படுகிறது. தேர்ப்படையைப் பற்றிக் கூறவில்லையே ஏன்? யானையும், குதிரையும், அரக்கரும் உயிருள்ளவை. எனவே நடுங்கின, அசைந்தன, அஞ்சின. ஆனால் தேர்

Koviloor Digital Library

தானே நகராத ஜடப்பொருள்; அசரப்பொருள்; குதிரையால் அன்றித் தானே ஓடாது. எனவே அது அச்சமோ, அசைவோ கொள்ளாது எனக் கொள்ள வேண்டும். 'தானை, யானை, குதிரை என்ற நோனார் உட்கு மூவகை நிலையும்' என்பது தொல்காப்பியம். ''குதிரையாலன்றித் தானே செல்லாமையின், தேர்க்கு மறம் இன்று என்று அது கூறாதுவிட்டார்'' என்பது நச்சினார்க்கினியர் உரைக்குறிப்பு. 'தறி' என்ற சொல்லுக்கு யானை கட்டப்படும் கட்டுத்தறி என்பது பொருள். இது கந்து எனவும் முன்பு கூறப்பட்டதையும் நினைக.

20. முத்து வாள் முறுவல் மூரல் முகத்தியர், முழுக்கண் வேலால்
குத்துவார், கூட்டம் எல்லாம் வானரக் குழுவின் தோன்ற,
மத்துவார் கடலின் உள்ளம் மறுகுற, வதனம் என்னும்
பத்து வாள் மதிக்கும், அந்நாள், பகல் ஒத்தது இரவும் பைய. (8921)

(முழு-நிரம்பிய; வாள்-ஒளி; மறுகுறுதல்-கலங்குதல்; மத்து-மந்தர மலை; பைய-மெதுவாக)

முத்துக்கள் போன்று ஒளிவீசும் பற்களால் புன்சிரிப்புக் காட்டும் முகத்தையுடைய பெண்கள், இலக்கணத்தோடு இயைந்த வேற்படை போன்ற கண்களால் அங்கிருக்கும் ஆடவரையெல்லாம் குத்தித் துன்புறுத்தினர். ஆனால் இப்போது அந் நாண்ஒலி கேட்டதும், அதே அழகிய பெண்கள் எல்லாம் இராவணனால் வெறுக்கத்தக்க குரங்குக் கூட்டம் போலத் தோன்றலாயினர்; நீண்ட, பெரிய கடலை மந்தர மலையைக் கொண்டு கலக்கியதுபோல, இப்போது இராவணன் பெரிதும் மனக்கலக்கமுற்றான். சந்திரன் போல ஒளி பொருந்திய அவனுடைய பத்து முகங்களும் இந்த இரவுநேரத்திலும் பகல்பொழுதைப் போல மங்கித் தோன்றிற்று.

அச்சத்தால் ஏற்படுகின்ற மனமாற்றத்தைக் குறித்தது இப்பாடல். முன்பு முத்து, வாள், முறுவல், மூரல் முகத்தியர் இப்போது வானரக்குழுவாய்த் தோன்றினர். முன்பு முழுக்கண் வேலாய் குத்தியவர்கள் இப்பொழுது குரங்குக் கூட்டமாய்த் தோன்றுகின்றனர். தெளிந்து மகிழ்ந்திருந்த அவன் உள்ளம் இப்போது பாற்கடலைக் கடைந்ததுபோலக் கலக்கமுற்றது. ஒளிபொருந்திய பத்து சந்திரனின் ஒளிவாய்ந்த முகங்கள் இருந்தும், பகலில் தோன்றிய சந்திரன்போல ஒளிமங்கிப் போனான் என்பது கவிஞனின் அருமையான கற்பனை.

'முழுக்கண்' என்றால் என்ன என்பது நமக்கு புரியவில்லை இல்லையா? எல்லா இலக்கணமும் நன்கு அமையப்பெற்றிருந்தால் அதை முழுக்கண் என்கின்றனர் புலவர்கள். கண்ணுக்குரிய இலக்கணம் என்ன? ''கண்ணிற்கு இயல்பு கசடறக்கிளப்பின், வெண்மை, கருமை, செம்மை, அகலம், நீலம், ஒளி, என நிகழ்த்துவர் புலவர்'' என்கிறது ஒரு பாடல். வெண்மையாகவும்

Koviloor Digital Library

இருக்கவேண்டும், கருமையாகவும் இருக்கவேண்டும், அகலமாகவும் இருக்கவேண்டும், நீளமாகவும் இருக்கவேண்டும்; ஒளிபொருந்திய தாகவும் இருக்கவேண்டும்; அப்படியிருந்தால் அதை முழுக்கண் என்கிறார்கள் புலவர்கள் என்பதறிக.

அவனுடைய பத்து முகங்களும் பகலில் ஒளியிழந்து பொலிவிழந்து காணப்படும் சந்திரன் போன்று காணப்பட்டன என்பதாம். சூரியன் முன் சந்திரன் ஒளி பற்றி முன்பும் நாம் கண்டு வந்ததை நினைவுகூர்க. பெண்களின்அழகும்,அழகின்மையும்ஆண்களின்மனநிலைக்குஏற்பவே அமையும் என்ற உளநூல் தத்துவத்தை இப்பாடல் பேசுவதை உணர்க. காமமயக்கம் கொள்ளும்படி தோன்றிய அதே மகளிர் இப்போது இராவணன் கண்களுக்குக் குரங்குக்கூட்டம்போல் தோன்றினர் என்பதை உணர்க. பொதுவாக அழகில்லாத முகத்தைக் 'குரங்கு மூஞ்சி' என்று வழக்கில் சொல்லுகிறோம் அல்லவா? இதைச் சிலப்பதிகாரம் பேசுகிறது கேளுங்கள். அழகும் கற்பும் உடைய ஒரு பெண், தன் கணவன் பொருள்வயின் பிரிந்து சென்றபோது, அவன் திரும்பி வரும்வரை தனக்கு அழகில்லாத குரங்கின்முகம் வேண்டும் என்று கேட்பதாகக்கூறும் பாடல் வரிகள் கேளுங்கள். ''வேற்றொருவன் நின் நோக்கம் கண்டு, நிறைமதி வாள் முகத்தைத் தானோர் குரங்குமுகமாகவென்று, போன கொழுநன் வரவே, குரங்குமுகம் நீத்த, பல்மணி அல்குல் பூம்பாவை'' என்பது சிலப்பதிகாரம். தன் கணவன் தனக்கு அஞ்சித் தன்னை விட்டுப் பிரிந்து போனதால்தானே காரைக்கால் அம்மையார் தனக்குப் பேய்முகம் வேண்டித் துதித்துப் பெற்றார்? அதுவும் இங்கு நினைவுகூரத் தகும்.

21. ஈது இடையாக வந்தார், அலங்கல் மீது ஏறினார் போய்
ஊதினார், வேய்கள் வண்டின் உருவினார், உற்ற எல்லாம்;
"தீதிலர், பகைஞர்" என்ன, திட்கென்ற மனத்தன், தெய்வப்
போது உகு பந்தர் நின்று, மந்திரத்து இருக்கை புக்கான். (8922)

(வேய்கள்-ஒற்றர்கள்; ஊதுதல்-செவியிற் சொல்லுதல்; தீது-தீங்கு/மரணம்; போது-மலர்கள்; உகுதல்-சிந்துதல்; மந்திரம்-ஆலோசனை; இருக்கை-இருப்பிடம்/மண்டபம்; அலங்கல்-மாலை; திட்கெனல்-திடுக்கிடுதல்/துணுக்குறுதல்/நடுங்குதல்)

இவ்வாறு இராவணன் மனக்கலக்கமுற்றிருக்கும் சமயம், ஒற்றர்கள் தாம் முன்பு ஒற்றறியச் சென்ற அந்த உருவத்தோடேயே வண்டுருக் கொண்டு மீண்டுவந்து, அவன் அணிந்திருக்கின்ற மாலையின்மீது ஏறிப் போய், ஒருவரும் அறிந்துகொள்ளாதவாறு, அவன் செவிகளில் சென்று ''போர்க்களத்தில் நமது பகைவர்களான வானரச்சேனைகளும், இராம இலக்குவரும் எந்தத்தீங்கும் இல்லாது இருக்கின்றனர், அவர்கள் இறந்துபடவில்லை; எல்லோரும் உயிர்பெற்று எழுந்துவிட்டனர்'' என்று அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளான அனுமன் மருத்துமலை கொண்டுவந்தது

Koviloor Digital Library

முதல் எல்லாவற்றையும் கூறவும், இராவணன் திடுக்கிட்டவனாய், தெய்வத்தன்மை வாய்ந்த கற்பகமலர்கள் சிந்தும் அந்தப் பந்தலிலிருந்து நீங்கி, மந்திராலோசனை மண்டபத்தை விரைவில் சென்றடைந்தான்.

'அலங்கல்மீது ஏறினார்போய் ஊதினார்' என்ற சொற்றொடர் முதல் முறை பாடலைப் படிக்கும்போது வியப்பைத்தரும். பொருள் புரியாது. அந்த ஒற்றர்கள் வண்டுருக்கொண்டு வந்ததாலும், வேறு ஒருவருக்கும் இச்செய்தி தெரியக்கூடாது என்பதாலும், அவர்கள் அவன் அணிந்திருக்கின்ற மலர்மாலையின்மீது ரீங்காரம் செய்வதுபோல ஏறிப்போய் அவன் காதில் மெதுவாகச் செய்தியைச் சொன்னார்கள் என்று விளக்கினால் அச்சொற்றொடரின் முழுப்பொருளும் புரிந்து மகிழலாம். அரக்கர்கள் நினைத்தபோது நினைத்த வடிவம் கொள்ளும் ஆற்றல் படைத்த காமரூபிகள். எனவே வண்டுருக்கொண்டு வந்தனர் என்பதாம். பின்னால் வீடணனும் வண்டுருக்கொண்டு செல்லப்போகிறான் என்பதையும் இங்கே மனங்கொள்ளுதல் தகும்.

களியாட்டுப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

25. மாயா சீதைப் படலம் [94 பாடல்கள்]

மருத்துமலையைத் திரும்பவும் கொண்டுவந்து வைத்துவிட்டு வந்த அனுமன் முன்னால், இந்திரசித்து, மாயையால் சீதாதேவி போன்ற உருவம் ஒன்றைச் செய்து அதனை வெட்டி வீழ்த்துவதையும், அதற்குப் பின் நிகழ்கின்ற விளைவுகளையும் பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 94பாடல்களைக் கொண்டது. எல்லாச்சுவடிகளும், அச்சுப்பிரதிகளும் இந்தப் படலத்தை ''மாயா சீதைப் படலம்'' எனவே கூறுவது வியப்புக்குரிய செய்தியாகும். வான்மீகத்தினின்றும் கம்பன் வேறுபடும் இடங்கள் அவ்வப் பாடல்களின்போது குறிக்கப் பெற்றிருக்கிறது. இப்படலத்தில் அவலச்சுவையும், வீரச்சுவையும் கலந்து வந்திருக்கின்றன. ஒரு நாடகத்தைப் பார்ப்பதைப்போல் கம்பன் காட்சிகளைக் காட்டும் அழகு சுவைக்கத்தக்கது.

இப்படலத்துள் மந்திராலோசனைமண்டபத்தை அடைந்த இராவணன் தனக்கு ஒற்றர்கள் கூறிய செய்தியை, இந்திரசித்து, மாலியவான் முதலியோரிடம் கூறுதல்; மாலியவான் சீதாதேவியை இராமபிரானிடத்து ஒப்படைத்து விட்டு அவனை அடைக்கலம் புகுதல் வேண்டும் என்று அறிவுரை கூறுதல்; இராவணன் அதற்கு உடன்படாது மாலியவானை இகழ்ந்து, தன் வீரம்பற்றிப் பெருமிதம் கொள்ளுதல்; இந்திரசித்து பிரமாஸ்திரம் இராமபிரானைத் தீண்டாது வந்ததிலிருந்தே இராமபிரான் பரம்பொருள் தன்மையை புரிந்துகொண்டு, தந்தை இராவணனுக்கு அறிவுரை கூறினாலும் பயன் விளையாது என்று கருதி, தானே ஒரு கருத்தைக் கூறுதல்; தான் நிகும்பலை சென்று வேள்வி இயற்றிப் பகைவரை முறியடிப்பதாகவும், அதற்கு இடையூறு வராது வேள்வி முற்றுப்பெறுதற்குத் தான் ஒரு திட்டம் வைத்திருப்பதாகவும் கூறுதல்; இராவணன் அந்தத் திட்டம் பற்றி வினவுதல்; இப்பொழுது அனுமன் இலங்கையின் மேற்கு வாயிலை அடைதல்; தனது மாயச்செய்கையினால் சீதாதேவி போன்ற ஒரு உருவத்தைச் செய்து, அதை அனுமன் கண் எதிரே வெட்டி வீழ்த்தினால், அனுமன் அஞ்சி, இராமபிரானுக்குத் தெரிவிப்பான் என இந்திரசித்து கூறுதல்; மேலும் சீதாதேவியின் உருவத்தை வெட்டி வீழ்த்திய பின் அயோத்திக்குச் சென்று பரதனையும், தாயரையும், மக்களையும் கொன்று குவிப்பேன் என்றும் கூறுதல்; இதற்கிடையில் வானரர்கள் கொள்ளிக்கட்டை கொண்டு இலங்கைக்கு எரியூட்டக் கருதி இலங்கை சென்று கொளுவ, இலங்கை மாநகரம் தீப்பற்றி எரிதல்;

Koviloor Digital Library

இந்திரசித்தன் மாயாசீதையை வெட்டி வீழ்த்திவிட்டு நிகும்பலைக்கு வேள்வி இயற்றச் செல்லுதல்; இதனைக் கண்ட அனுமன் இந்திரசித்தன் பின்னால் தான் போவது சரியல்ல என்றும், முதலில் இந்தச் செய்தியை இராமபிரானுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணியும் இராமபிரானை விரைந்து அடைந்து நிகழ்வுகளைக் கூறுதல்; இராமபிரான் துணுக்குற்றுத் துயருறுதல்; வானரர்கள் செய்வதறியாது திகைத்து நிற்றல்; வீடணனுக்கு இந்திரசித்தன் செய்கைமேல் சந்தேகம் வருதல்; சுக்கிரீவன் சீற்றம் கொண்டு அரக்கர்களைத் தாக்குவோம் என்று வஞ்சினம் கூறுதல்; அனுமன் ''இப்போது இந்திரசித்து அயோத்திக்குச் செல்லப்போகிறான்'' என்று கூறுதல்; இராமபிரான் ''நாம் அயோத்தி செல்லுவதற்கு ஏதாவது உபாயம் உண்டா?'' என்று வினவுதல்; அனுமன் தன் தோளின்மீது ஏறிக்கொண்டால் இந்திரசித்தனுக்கு முன்னால் நாம் அயோத்தி சென்று அடையலாம் என்று கூறுதல்; இந்திரசித்தன் சீதையை வெட்டிவீழ்த்தியது மாயச் செயலாகத்தான் இருக்கும் என்று இந்த நேரத்தில் திடுக்கென்று வீடணனுக்கு தோன்றுதல்; வீடணன் நான் அசோகவனம் சென்று பார்த்துவந்த பிறகு, மேற்கொண்டு என்ன செய்யலாம் எனத் தீர்மானிப்போம் என்று கூறித் தான் ஒரு வண்டு உருவம் கொண்டு அசோகவனம் சென்று பார்த்தல்; சீதாதேவி எந்தத் தீங்கும் நேராமல் இனிதே அசோகவனத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்து, இராமபிரானிடம் வந்து சீதாதேவி அசோகவனத்திலேயே நலமுடன் இருப்பதாகத் தெரிவித்தல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராவணன் தானே எல்லோர்க்கும் நிகழ்ந்ததைக் கூறுதல்

மைந்தனும், மற்றுளோரும், மகோதரன் முதலோர் ஆய
தந்திரத் தலைமையோரும், முதியரும், தழுவத்தக்க
மந்திரர் எவரும் வந்து, மருங்குறப் படர்ந்தார்; பட்ட
அந்தரம் முழுதும் தானே, அனையவர்க்கு அறியச் சொன்னான். (8923)

(தழுவுதல்-ஏற்றுக்கொள்ளுதல்; மந்திரர்-ஆலோசனை கூறுபவர்; மருங்கு-பக்கம்; படர்தல்-சேர்தல்; அந்தரம்-துன்பநிலை; பட்ட-நேர்ந்துள்ள; தந்திரம்-சேனை/படை; மற்றுளோர்-பிற உறவினர்)

இராவணன் ஆலோசனைச் சபைக்குச் சென்றிருக்கிறான் என்பதையறிந்த அவன் மைந்தன் இந்திரசித்து, மற்றும் அவன் உறவினர்கள், மகோதரன் முதலிய சேனைத்தலைவர்கள், அனுபவத்திலும், வயதிலும் முதிர்ச்சியுற்றவர்கள், மேலும் தகுதி வாய்ந்த ஆலோசனை கூறத் தக்கவர்கள் எல்லோரும் வந்து அவன் அருகில் அவனைச் சூழ்ந்திருக்கலானார்கள்; அப்போது இராவணன், ஒற்றர்கள் தம்மிடம் வந்துகூறிய

Koviloor Digital Library

செய்தியினால் தான் பட்ட துன்பத்தையெல்லாம் அவர்கள் அனைவரும் புரிந்து கொள்ளும்படி விளக்கமாகத் தானே எடுத்துரைத்தான்.

மகோதரன் சேனைத் தலைவனாகவும் செயல்பட்டிருக்கிறான் என்பது தெரிகிறது. 'தானே' கூறினான் என்றும், முழுதும் கூறினான் என்றும், அனைவர்க்கும் கூறினான் என்றும், அறியக்கூறினான் என்றும் தனித்தனியாகப் பிரித்துப் பொருள் கூறினால் இராவணன் பட்ட துன்பத்தின் ஆழம் நன்கு விளங்கும். எனவேதான் கவிஞன் இத்தனை சொற்களைப் பெய்திருக்கிறான் என்பதறிக.

2. மாலியவான் கூறிய அறிவுரை. [8 பாடல்கள்]

"நம்கிளை உலந்தது எல்லாம் உய்ந்திட நணுகும் அன்றே,
வெங்கொடுந் தீமைதன்னால் வேலையில் இட்டிலேமேல்?
இங்குள எல்லாம் மாள்தற்கு இனிவரும் இடையூறு இல்லை;
பங்கயத்து அண்ணல் மீளாப் படை பழுதுற்ற பண்பால்" (8924)

(தீமை-தீயஎண்ணம்; இடுதல்-போடுதல்; உலந்தது-அழிந்து போனது; உய்த்தல்-உயிர்பெற்று எழுதல்; நணுகுதல்-வாய்த்தல்; இடையூறு-தடை; கிளை-சுற்றத்தார்/சேனைவீரர்கள்; பங்கயம்-தாமரைமலர்; அண்ணல்-பெரியோன்/இராமபிரான்)

அப்பொழுது மாலியவான் இராவணனை நோக்கி, "முன்பு மிகக்கொடிய, தீய எண்ணத்தால் மருத்தனை அழைத்து இறந்துபோன நம் சுற்றத்தாரான அரக்கர்கள் உடல்களை எல்லாம் சீதாதேவி கண்டுவிடக் கூடாது என்பதால், கடலில் போட்டுவிடச் சொல்லாதிருந்திருந்தால், இன்று சஞ்சீவி மலையின் உதவியால் வானரர்கள் உயிர்பெற்று எழுந்ததைப்போல் நம் படை வீரர்களும் உயிர்பெற்று எழுந்து இப்போது போர்புரிய உதவுவார்கள் அல்லவா? இப்போது தாமரைமலரில் வீற்றிருக்கும் பெரியோனாகிய பிரமதேவனின் இலக்குத் தப்பாது மீண்டு வராத பிரமாஸ்திரமும் கூடப் பயனற்றுப் பழுதாகிவிட்ட தன்மையால் இனி நம்படை இறந்துபடுவதைத் தடுக்கக்கூடிய உபாயம் வேறு ஒன்றும் இல்லை. எல்லோரும் அழிந்துபடுவர்" என்று தன் வருத்தத்தைக் கூறி அங்கலாய்க்கிறான்.

'கிளை' என்பது சுற்றத்தார் என்ற பொருளில் அரக்க வீரர்களைக் குறிக்கும். 'இட்டிலேமேல்' என்று மாலியவான் தன்னையும் உளப் படுத்திக் கொண்டு கூறுவதை நோக்குக. அந்தத் தவறுக்கு இராவணனை மட்டும் சுட்டிக்காட்ட விரும்பவில்லை என்பது தெரியவருகிறது. இறந்து போன அரக்கர் உடல்களைக் கடலில் இட்டது 'வெங்கொடுந்தீமை' என்று மாலியவான் கருதுகிறான்.

Koviloor Digital Library

3. "இலங்கையின் நின்று, மேரு பிற்பட, இமைப்பில் பாய்ந்து,
வலம் கிளர் மருந்து, நின்ற மலையொடும், கொணர வல்லான்,
அலங்கல் அம் தடந்தோள் அண்ணல் அனுமனே ஆதல் வேண்டும்;
கலங்கல்இல் உலகுக்கு எல்லாம் காரணம் கண்ட ஆற்றால். (8925)

(வலம்-வலிமை; கிளர்தல்-விளங்குதல்; அலங்கல்-மாலை; அம்-அழகிய; அண்ணல்-பெருமைமிக்கவன்; காரணம்-மூலம்/பரம்பொருள்/கடவுள்; கலங்கல்-ஐயம்)

நமது இலங்கை மாநகரிலிருந்து, மேருமலையும் பிற்பட்டுப் போகும் வண்ணம், ஒரு நொடிப்பொழுதில் வான்வழியே பாய்ந்து வலிமை விளங்குவதும், இறந்தாரை எழுப்பிக்க வல்லதுமாகிய மூலிகைச் செடிகளை, அவை வளர்ந்திருந்த சஞ்சீவமலையோடும் பெயர்த்தெடுத்துக் கொண்டு வரும் ஆற்றல் பெற்றவன், மாலையணிந்த அழகிய, அகன்ற தோள்களையுடையவனான பெருமைக்குரிய அனுமனாகவே இருக்கவேண்டும். நூல்களில் கூறப்பட்டிருக்கின்றபடி ஆராய்ந்து பார்த்தால், ஐயம் இல்லாத உறுதியான இந்த உலகுக்கெல்லாம் மூல காரணனான பரம்பொருளின் திருவருளினால்தான் அவனால் இதனைச் செய்ய முடிந்தது'' என்கிறான் மாலியவான்.

முன்னர் கிஷ்கிந்தையிலிருந்து இலங்கைக்கு வந்து இலங்கைக்கு எரியூட்டி, அரக்கர்களை அழித்தவன் அனுமன்தான் என்பது மாலிய வானுக்கு நன்கு தெரியும். எனவே இப்பொழுது இவ்வளவு தொலை வுள்ள மலைகளையெல்லாம் தாண்டிச்சென்று சஞ்சீவ மலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு வரும் ஆற்றல் அனுமன் ஒருவனுக்குத்தான் உண்டு என்பதை ஆகம அளவையால் அளவிட்டுக் கூறுகிறான் மாலியவான் என்பதாம். 'வலம்கிளர் மருந்து' என்பது வலிமை மிக்க மருந்து என்ற பொருளையும், இறந்துபட்டவர்களை உயிர்ப்பித்து அவர்களை மேலும் வலிமையுடையவர்களாகச் செய்யும் மருந்து என்ற பொருளையும் தருமாறு சொற்களைப் பெய்திருக்கும் கவிஞனின் கவித்திறம் காண்க. இங்கே மாலியவான் அனுமனையே 'உலகுக் கெல்லாம் கலங்கல்இல் காரணன்' என்று சிறப்பிக்கிறான். முன்பு இராமபிரானும் அனுமனைக் கண்டபோதே 'மாணியாம் படிவம் அன்று மற்றிவன் வடிவமைந்த ஆணி இவ்வுலகுக்கெல்லாம் என்னலாம்' என்று கூறியதையும் ஒப்பிட்டு நோக்கலாம்.

4. "நீரினைக் கடக்க வாங்கி, இலங்கையாய் நின்ற குன்றைப்
பாரினில் கிழிய வீசின், ஆர்உளர் பிழைக்கற் பாலார்?
போர் இனிப்பொருவது எங்கே? போயின அனுமன், பொன் மா
மேருவைக் கொணர்ந்து, இவ்வூர்மேல் விடுமெனின், விலக்கல்
ஆமோ?" (8926)

Koviloor Digital Library

(வாங்குதல்-பெயர்த்தெடுத்தல்; பொருவது-போர்செய்வது; மா-சிறந்த/பெரிய; விடுதல்-இடுதல்/போடுதல்; ஆமோ-ஆகுமோ)

''திரிகூட மலையில் அமைந்திருக்கின்ற இந்த இலங்கை மாநகரத்தை அதைச் சூழ்ந்துள்ள கடலினை விட்டுப்பிரித்து பெயர்த்தெடுத்து, இப்பூமியே பிளவுபட்டுப்போகும்படி வீசி எறிந்தால், அதனின்றும் தப்பிப் பிழைக்கக் கூடியவர்கள் யாரும் இருக்கிறார்களா? அவர்களுடன் இனிமேல் போர்செய்வது என்பது எங்கே? மருத்துமலையைத் திரும்பவும் அதற்குரிய இடத்தில் வைத்து விட்டுவரச் சென்றிருக்கின்ற அனுமன் பொன்மயமான சிறந்த மேருமலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்து இந்த இலங்கை மாநகரத்தின்மேல் போடுவானானால், அதை யாராலாவது தடுக்கமுடியுமா?'' என்று கேட்கிறான் மாலியவான்.

மருத்துமலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டுவந்த அனுமனுக்கு இந்தத் திரிகூட மலையைப் பெயர்த்தெடுப்பதோ, மேருமலையைப் பெயர்த்தெடுப்பதோ ஒரு பெரிய காரியமல்ல. அவன் அத்தகைய ஆற்றல் பெற்றவன். அவன் அவ்வாறு செய்தால் யாரும் உயிர்பிழைக்க முடியாது; அதனைத் தடுக்கவும் முடியாது; அவர்கள்மேல் போர்புரியவும் முடியாது என்கிறான் மாலியவான். முன்பு அனுமன் சுயம்பிரபை இருந்த ருக்ஷபிலத்தைப் பெயர்த்து அவளையும் விடுவித்து, அதன்பின் வானரத் தலைவர்களும் தப்பித்து வந்ததையும் இங்கு நினைவுகூர்க. இலங்கை மாநகரமே திரிகூட மலையின்மேல் அமைந்திருப்பதால் 'இலங்கையாய் நின்ற குன்று' என்றார் என்க. 'இலங்கை வெற்பு' என்று முன்பும் கூறியதையும் நினைக.

5. "முறைகெட வென்று, வேண்டின், நினைந்ததே முடிப்பன்; முன்னின்
குறையிலை குணங்கட்கு; என்னோ, கோள்இலா வேதம் கூறும்
இறைவர்கள் மூவர் என்பது? எண்இலார் எண்ணமேதான்;
அறைகழல் அனுமனோடும், நால்வரே முதல்வர் அம்மா!" (8927)

(வேண்டுதல்-விரும்புதல்; கோள்-குற்றம்; இறைவர்கள்-கடவுளர்கள்; எண்-சிந்தனை; அறைதல்-ஒலித்தல்; முன்பு-வலிமை; முன்னின்-வலிமையினால்)

மாலியவான் இராவணனிடம், ''நாம் முன்பு நினைத்ததுபோல, அனுமன் உலக இயல்பினின்றும் மாறிப் போரிட்டு வெற்றி கொள்ள வேண்டும் என்று விரும்பியிருந்தாலும், அவ்வாறே அவன் நினைத்ததைச் செய்து முடிக்கும் வலிமையும் ஆற்றலும் பெற்றவன். அவனிடம் உள்ள நற்குணங்களில் எந்தக் குற்றமும் கிடையாது; குறைவிலா நற்குணங்கள் மிகுதியாகப் பெற்றவன்; எனவே அவன் முறைதவறிய செயல்களைச் செய்யமாட்டான். எனினும் குற்றம் கூறமுடியாத வேதங்கள்கூட, கடவுளர் என்று கூறும்பொழுது மூவர் என்றுதானே கூறுகின்றன; அது

Koviloor Digital Library

தவறு. அது சரியான சிந்தனை அற்றவர்களின் கருத்தாகும்; ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த அனுமனோடு சேர்த்து மூலமுதல்வர்கள் எனப்படுபவர் நால்வர் ஆவார்கள்'' என்கிறான்.

மூலமுதற்கடவுள் மூவரோடு இணையாக அனுமனையும் சேர்த்துச் சொல்லுவது கவிஞன் அனுமனிடம் கொண்டிருக்கும் பெருமதிப்பையும், மரியாதையையும் உணர்த்தும். அவ்வளவே. வேதங்கள் கூறுவது சரியான சிந்தனையற்றவர்களின் கருத்து என்று அப்படியே சொல்லுக்குச் சொல் பொருள் கொள்ளக்கூடாது. முன்பும் கவிஞன் சிவபெருமானின் கூறாகிய அனுமனைப் பிரமதேவனுக்கு இணையாகவும் உவமைப்படுத்திக் கூறியிருப்பதையும் நினைவிற்கொள்க. முன்பு வசிஷ்டரைக்கூடக் கவிஞன் நான்காவது கடவுள் என்று கூறியிருப்பதையும் நினைக. ''தேவரும், முனிவரும், தேடும் தேவர்கள் மூவரின், நால்வராம் முனி வந்து எய்தினான்'' என்பது மந்திரப்படலம்.

6. ''இறந்தவர் இறந்து தீர; இனி ஒரு பிறவி வந்து,
பிறந்தனம் ஆகின் உள்ளேம்; உய்ந்தனம், பிழைக்கும் பெற்றி
மறந்தனம்; எனினும் இன்னம் சனகியை மரபின் ஈந்து, அவ்
அறம் தரு சிந்தையோரை அடைக்கலம் புகுதும் ஐய!'' (8928)

(பெற்றி-தன்மை; சனகி-சானகி/சீதாதேவி; மரபு-முறை; அடைக்கலம் -சரண்புகுதல்)

மாலியவான் இராவணனை நோக்கி, ''தலைவனே! இந்தப் போரில் இறந்துபட்டவர்கள் இறந்தவர்களாகவே இருக்கட்டும். இப்போது பிழைத்திருக்கின்ற நாம், ஏதோ ஒரு புதுப்பிறவி - புனர்ஜன்மம் - கொண்டவராக இருக்கின்றோம். இதுவரை உயிரோடு வாழமுடியும் என்பதையே மறந்திருந்தோம்; இப்போதும் ஒன்றும் முடிந்து போய்விட வில்லை. இப்பொழுதாவது சீதாதேவியை முறைப்படி இராமபிரான் கையில் ஒப்படைத்துவிட்டு அறம்தலை நிறுத்த வந்த தூய எண்ணம் கொண்டவர்களான இராம இலக்குவரைச் சரணடைந்து, பிழைத்து வாழ்வோம்'' என்கிறான்.

சனகன் மகள் சனகி எனப்பட்டாள் என்க. அவ்வாறு நாம் அடைக்கலம் புகுந்தால் அவர்கள் மறந்து, மன்னித்து நமக்குச் சரணாகதி அளிப்பார்கள் என்பது மாலியவான் எண்ணம். அத்தகைய அருளாளர்கள் அவர்கள் என்பது குறிப்பு.

7. ''வாலியை வாளி ஒன்றால் வானிடை வைத்து, வாரி
வேலையை வென்று, கும்பகருணனை வீட்டினானை,
ஆலியின் மொக்குள் அன்ன அரக்கரோ, அமரின் வெல்வார்?
சூலியைப் பொருப்பினோடும் தூக்கிய விசயத்தோளாய்!'' (8929)

Koviloor Digital Library

(சூலி-சூலப்படையையுடையவன்/சிவபெருமான்; பொருப்பு-மலை /கயிலைமலை; விசயம்-விஜயம்/வெற்றி; வாளி-அம்பு; வாரி-நீர்/ வெள்ளம்; வேலை-கடல்; வீட்டுதல்-கொல்லுதல்; ஆலி-மழைத்துளி/ நீர்த்துளி)

''சூலப்படையையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலை மலையையே பெயர்த்தெடுத்த வெற்றிபொருந்திய தோள்களையுடைய வனே! இராவணா! அந்த இராமபிரான் இருக்கிறானே, அவன் உன்னைத் தன் வாலில் கட்டி எட்டுத்திக்கும் எடுத்துச்சென்றானே வாலி, அவனையே தனது ஒரே அம்பினால் கொன்று, விண்ணுலகுக்கு அனுப்பிவைத்தவன், வெள்ளம் நிறைந்த கடலில் சேது அணையைக் குறுக்கே கட்டிக் கடலையே கடந்தவன்; உன்னினும் வலிமைவாய்ந்த உன் தம்பி கும்ப கருணனையே கைவேறு, கால்வேறாக ஆக்கி வீழ்த்தியவன்; அத்தகைய பேராற்றல் படைத்த இராமபிரானை, மழைத்துளியின் போது தோன்றி மறையும் நீர்க்குமிழிபோல் விரைவில் அழிந்துபோகும் தன்மையுடைய அரக்கர்களால் போரில் வென்று, வெற்றிகாண முடியுமா?'' என்று கேட்கிறான் மாலியவான்.

இராவணனைத் தன் வாலில்கட்டி உலகம் சுற்றியவன் வாலி என்பதை நாம் முன்பே கண்டிருக்கிறோம். அத்தகைய வாலியையே தனது ஒற்றை அம்பினால் கொன்று விண்ணுலகுக்கு அனுப்பிவைத்தவன் என்றும், சேது அணை கட்டிக் கடலைக் கடந்தவன்என்றும், இராவணனது தம்பியாகிய கும்பகருணனையும் கொன்று வீழ்த்தியவன் என்றும் இராமபிரான் புகழ் பாடுகிறான் மாலியவான் என்றாலும் அவன் இராவணனின் ஒரு வெற்றிச்செயலையும், குறிப்பிடத் தவறவில்லை என்பதும் நோக்கத் தக்கது. பொதுவாக வாழ்க்கை நிலையாமைக்கு நீர்க்குமிழியை உவமையாகக் கூறுவது கவிமரபு. ''கொப்புளே போலத்தோன்றி அதனுளே அழியக்கண்டும்'' என்பது தேவாரம். இந்த வரிகள் அங்கதச் சுவைக்கு ஒரு எடுத்துக்காட்டு. காப்பியத்தைக் கூர்ந்து பயின்றால் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயற்சித்தான். சிவபெருமான் தன் கால் கட்டைவிரலால் நெருக்கினான். இராவணன் அலறினான்; சிவபெருமானுக்கு உகந்த சாமகீதம் பாடி மகிழ்வித்தான். எனவே மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்கு வரங்கள் கொடுத்தான் என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் உணரலாம்.

அரக்கர்களில் யாராலும் வெல்ல முடியாத வலிமைமிக்கவன் கும்பகருணன். உன்னுடைய வலிமையைக் காட்டிலும் மிக்கவலிமை படைத்தவன் இராமபிரான் என்பதை மூன்று எடுத்துக்காட்டுக்கள் கூறி விளக்குகிறான் மாலியவான். 'வானிடை வைத்தல்' என்பது கொல்லுதல் என்பதன் மங்கலவழக்கு எனக்கொள்க. கும்பகருணனையே வென்றவன் என்று இங்கு இராமபிரானை மாலியவான் கூறுவதும் நோக்கத்தக்கது. முன்பு கும்பகருணன் தன் கூற்றாகவே ''என்னை வென்றுளர் எனின்,

Koviloor Digital Library

இலங்கை காவல! உன்னை வென்று உயர்தல் உண்மை'' என்று கூறியதையும் ஒப்பிட்டு நோக்குக.

8. ''மறிகடல் குடித்து, வானை மண்ணொடும் பறிக்கவல்ல
எறிபடை அரக்கரெல்லாம் இறந்தனர்; இலங்கை ஊரும்,
சிறுவனும் நீயும் அல்லால், ஆர்உளர், ஒருவர் தீர்ந்தார்?
வெறிது, நம் வென்றி'' என்றான், மாலி மேல் விளைவது ஓர்வான்.
(8930)

(மறிதல்-வீசுதல்; சிறுவன்-மகன்/இந்திரசித்து; வெறிது-பயனற்றது/வீண்; ஓர்தல்-உய்த்துணர்தல்; தீர்தல்-நீங்குதல்; படை-படைக்கலன்கள்/ஆயுதங்கள்)

பின்னால் என்ன நிகழப்போகிறது என்பதை நன்கு உணர்ந்த மாலியவான் மேலும் இராவணனைப் பார்த்து, ''மடங்கிவிழும் அலைகளையுடைய கடல்நீரை முற்ற முழுக்கக் குடிக்க வல்லவரும், விண்ணுலகத்தையும், மண்ணுலகத்தையும் ஒருசேரப் பெயர்த்தெடுக்க வல்லவரும், போர்க்களத்தில் பகைவர்கள் எறிகின்ற படைக்கலன்களைக் கையாள்வதில் வல்லவருமான அரக்கர் தலைவர் அனைவரும் இறந்து பட்டனர்; இந்த இலங்கை என்ற ஊரும், உன் மகனாகிய இந்திரசித்தும், நீயும் மட்டும்தான் உயிருடன் இருக்கிறீர்கள்; உங்களையல்லால் வேறுயார் இருக்கிறார்கள்? இதுவரை நாம் பெற்ற வெற்றிகள் அனைத்தும் வீணாய்ப் பயனற்றதாய்ப் போயிற்றே!'' என்று கூறுகிறான்.

'சிறுவன்' என்பது மகன் என்ற பொருளில் இந்திரசித்தனைக் குறித்தது. மாலியவான் வரிசைப்படுத்திய விதம் நோக்குக. இந்த வரிசைப்படிதான் அழிவு நேரப்போகிறது என்பதைக் குறிப்பால் காட்டுகிறான் மாலியவான். முதலில் இலங்கை ஊர், பின்னர் சிறுவன் இந்திரசித்து, பின்னர் இராவணன் என்பது குறிப்பு. இராவணனின் பண்புகளை நன்கு உணர்ந்தவன் மாலியவான். தன் சொல்லை இராவணன் ஏற்றுக்கொள்ளமாட்டான் என்பதும், வீடணனுக்கு நேர்ந்தது தனக்கும் நேரலாம் என்பதையும் நன்கு மனத்துட்கொண்டே இவ்வாறு இடித்தும், எடுத்தும் உரைத்தான் என்பதைக் குறிக்கவே, கவிஞன் இறுதியில் ''மேல் விளைவது ஓர்வான்'' என்றான் என்க. 'அரக்கரெல்லாம்' என்பது இங்கே அரக்கர்படைத் தலைவர்களைக் குறித்து நின்றது. 'தீர்தல்' என்பது நீங்குதல் என்ற பொருளைத்தரும். இறப்பிலிருந்தும் அழிவிலிருந்தும் உங்களைத்தவிர வேறுயார் நீங்கினார்கள் என்பது பொருள். 'வென்றி' என்ற சொல்லுக்கு வீரம் என்று பொருள்கொண்டால், நம் வீரம் எல்லாம் பயனற்றதாகிப் போனதே என்ற பொருளையும் கொள்ளலாம்.

Koviloor Digital Library

9. இராவணன் சீற்றம்

கட்டுரை அதனைக் கேளா, கண்எரி கதுவ நோக்கி,
''பட்டனர் அரக்கர் என்னின், படைக்கலம் படைத்த எல்லாம்
கெட்டன எனினும், வாழ்க்கை கெடாது; இனி, கிளி அனாளை
விட்டிட எண்ணியோ நான் பிடித்தது, வேட்கை வீய'' (8931)

(கட்டுரை-அறிவுரை/உறுதிமொழி; எரி-நெருப்பு; கதுவுதல்-பற்றுதல்; வீதல்-அழிதல்; படுதல்-இறத்தல்; கெடுதல்-அழிதல்; பிடித்தது -கவர்ந்து வந்தது/பற்றிவந்தது; வேட்கை-ஆசை/காமவிருப்பம்)

அவ்வாறு மாலியவான் கூறிய அறிவுரைகளைக் கேட்ட அரக்க வேந்தனான இராவணன், தன் இருபது கண்களிலும் நெருப்புப்பொறி பறக்கவும், அவை சென்று மாலியவானைப் பற்றும்படியும் சினந்து நோக்கி, ''அரக்கர்கள் எல்லோரும் இறந்துபட்டனர் என்றாலும், நாம் பயன்படுத்தும் போர்க்கருவிகள் எல்லாம் அழிந்து போய்விட்டது என்றாலும், என்னுடைய வாழ்க்கை அழிந்துபோகாது. நான் முக்கோடி வாழ்நாள் முயன்று பெற்றவன். கிளிபோன்ற இனிய சொற்களையுடைய சீதாதேவியை நான் கவர்ந்து வந்தது என்னுடைய ஆசை அழிந்து போகவா? அவளை நீ கூறுமாறு இராமபிரானிடம் சென்று ஒப்படைப்ப தற்காகவா நான் இவ்வளவு அரிதின் முயன்று அவளைக் கவர்ந்து வந்தேன்?'' எனக் கேட்கிறான் இராவணன்.

முன்பு எல்லா இடங்களிலும் 'எரி எழ நோக்கி' என்றே கூறிவந்த கவிஞன், இங்கே 'எரி கதுவ நோக்கி' என்று குறிப்பிட்டிருப்பதை நோக்குங்கள். இதுவரை அவன் தன் கண்களால் தீப்பொறி பறக்கும் படிதான் மற்றவர்களைப் பார்த்தான். சீதாதேவியை விட்டுவிடவேண்டும் என்று மாலியவான் கூறியதும், அந்த நெருப்புப்பொறி மாலியவானைப் பற்றும்படி சினந்து பார்த்தான் என்று கூறிய கவிஞனின் கவித்திறம் நோக்குக.

'வாழ்க்கை கெடாது' என்ற சொற்றொடரும் நோக்கத்தக்கது. நாம் சாதாரணப் பேச்சு வழக்கில் 'என் உயிரே போனாலும் நான் அதைச் செய்து முடிப்பேன்' என்று கூறுகிறோம் அல்லவா? அதையேதான் இராவணன், 'வாழ்க்கை கெடாது' எனக் கூறுகிறான் எனக்கொள்க. வாழ்க்கை இங்கே 'உயிர்'; கெடுதல் இங்கே 'போதல்'; உயிர்போதல் என்பதை வாழ்க்கை கெடாது என்றான் என்க. 'கிளி'போன்றவளை என்றதனால் பிடித்தது என்று அஃறிணையில் கூற நேர்ந்ததை உணர்க. 'பிடித்தது' என்ற சொல் சற்றே மாறுபட்ட பொருளைத்தரும். எனினும் இங்கே கவர்ந்து வந்தது என்ற பொருளிலேயே கொள்ளவேண்டும். இங்கே மாலியவானுக்குக் கூறிய இதே பதிலை, பின்னால் இந்திரசித்தனுக்கும் கூறப்போகிறான் இராவணன். 'மொக்குள் அன்ன யாக்கையை விடுவதல்லால், சீதையை

Koviloor Digital Library

விடுவதுண்டோ? இருபது திண்தோள் உண்டால்'' என்பது அந்தப் பாடல்பகுதி.

10. "மைந்தன் என்? மற்றையோர் என்? அஞ்சினிர்; வாழ்வு வேட்டிர்!
உய்ந்து நீர் போமின்; நாளை, ஊழி வெந்தீயின் ஓங்கி,
சிந்திய மனித்தரோடு, அக்குரங்கினைத் தீர்ப்பென்' என்றான்,
வெந்திறல் அரக்கர் வேந்தன்; மகன் இவை விளம்பலுற்றான். (8932)

(வாழ்வு-வாழ்க்கை/உயிர்; வேட்டல்-விரும்புதல்; உய்தல்-பிழைத்துப்போதல்; ஓங்குதல்-பொங்குதல்; தீர்த்தல்-அழித்தல்; சிந்துதல் -சிதறிப்போதல்)

கொடிய வலிமை படைத்தவனான அரக்கர் தலைவன் இராவணன், அவர்களைப் பார்த்து, ''என் மகன் என்றால் என்ன? மற்றவர்கள்தான் என்றால் என்ன? நீங்களெல்லாம் பகைவர்களுடன் போர்செய்ய அஞ்சுகிறீர்கள்; உயிரின்மேல் ஆசை கொண்டுள்ளீர்கள்; போருக்குப் பயந்தவர்களும், இன்னும் உயிர்வாழ ஆசைப்படுபவர்களும் இங்கிருந்து பிழைத்துப் போய்விடுங்கள்; நாளைக்கே பிரளயகாலத்து வடஅனல் போலப் பொங்கி எழுந்து, அவர்களது படைகளைச் சிதறடித்து அந்த மனிதர்களாகிய இராமஇலக்குவரோடு, அந்தக் குரங்காகிய அனுமனையும் நானே அழித்தொழிப்பேன்'' என்று வீரவுரை பகன்றான்; அதனைக் கேட்டுக் கொண்டிருந்த அவன் மகன் இந்திரசித்து, பின்வருவனவற்றைக் கூறத்தொடங்கினான்.

'அஞ்சுதல்' என்பது போருக்கு அச்சப்படுதல் என்றும், 'வாழ்வு வேட்டல்' என்பது உயிர்மேல் ஆசைகொள்ளுதல் என்றும், 'உய்தல்' என்பது பிழைத்துப்போதல் என்றும் ஒன்றோடொன்று தொடர்பு பெற்று வருவதை நோக்குக. நீங்கள் எல்லாம் போய்விடுங்கள். நான் ஒருவனே அவர்களை அழித்துவிடுவேன் என்கிறான். ''என்னையே நோக்கி யான் இந்நெடும் பகை தேடிக்கொண்டேன்'' என்று பின்னாலும் இந்திரசித்தனிடம் கூறப்போகிறான் இராவணன் என்பதையும் இங்கே நினைவுகூர்க.

11. இந்திரசித்தன் நிகும்பலை வேள்வி குறித்துக் கூறுதல்.

"உளது நான் உணர்த்தற்பாலது; உணர்ந்தனை கோடல் உண்டேல்;
தளமலர்க் கிழவன் தந்த படைக்கலம் தழலின் சார்த்தி,
அளவு இலது அமைய விட்டது, இராமனை நீக்கி அன்றால்;
விளைவு இலது, அனையன் மேனி தீண்டில; மீண்டது அம்மா!"
(8933)

Koviloor Digital Library

(கோடல்-கொள்ளுதல்; உணர்த்துதல்-விளங்கும்படி எடுத்துரைத்தல்; தளம்-இதழ்கள்; மலர்-தாமரைமலர்; கிழவன்-உரிமையுடையவன்/ பிரமதேவன்; படைக்கலம்-பிரமாஸ்திரம்; தழல்-நெருப்பு/தீபஒளி; சார்த்துதல்-அர்ச்சித்தல்/ஆராதனை செய்தல்; விளைவு-பயன்; அனையன்-அத்தகையவன்/இராமபிரான்)

இந்திரசித்தன் தன் தந்தை இராவணனை நோக்கி, ''தந்தையே, தாங்கள் என்னைச் சிறுவன் என்று கருதாது, நான் கூறுவதை மனங்கொள்ளுவீர்கள் என்றால் நான் உங்களுக்கு எடுத்துரைக்க வேண்டுவது ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால், இதழ்களையுடைய தாமரைமலரைத் தனக்கே உரியதாகக் கொண்டு விளங்கும் பிரமதேவன் நமக்குத் தந்தருளிய பிரமாத்திரத்தை நான் தீப, தூப வழிபாடுகளைச் செய்து, அதன் அளவற்ற ஆற்றலோடு செலுத்தியது, அது இராமபிரானையும் கொன்று வர வேண்டும் என்ற நோக்கத்தினாலேயாம். அவனைத் தவிர்த்து ஏனை யோரை மட்டும் அழித்துத் திரும்பவேண்டும் என்பது என் நோக்கமல்ல; இருப்பினும் அந்தப் பிரமாத்திரம் அவனது மேனியைக்கூடத் தீண்ட முடியாது, பயனின்றி வெறுமனே திரும்பி வந்துவிட்டது தந்தையே! இது எனக்குப் பெருவியப்பைத் தருகிறது'' என்கிறான் இந்திரசித்தன்.

முன்பு இந்திரசித்தன், இராவணனது மந்திராலோசனை மண்டபத்தில் தன் கருத்தைக் கூறியபோது, அவன் சிறிய தந்தை வீடணன், ''விருத்த மேதகையவர், வினைஞர் மந்திரத்து இருத்தியோ? இளமையால் முறைமை எண்ணலாய்!'' என்றும் ''பிள்ளைமை விளம்பினை, பேதை நீ'' என்றும் கூறினான் அல்லவா? அதனால் இப்போது தானே முந்திக் கொண்டு, ''உணர்ந்தனை கோடல் உண்டேல், உளது நான் உணர்த்தற் பாலது'' என்று முன்னெச்சரிக்கையாகக் கூறிவிடுகிறான் என்க. இதே போல் முன்பு வீடணனும், இராவணனிடம் பேசத்தொடங்கும் முன்பு ''எள்ளலையாம் எனின் இயம்பல் ஆற்றுவென் தெள்ளிய பொருள்'' என்று முகமன் கூறியே தொடங்குகிறான் என்பதும் இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. அந்த பிரமாத்திரம் ''அனையன்மேனி தீண்டில; மீண்டது மட்டுமல்ல; அவனை வலம் வந்து வணங்கியும் சென்றது என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். எனவே இப்போது இந்திரசித்தன் தன் தந்தைக்குக் கூறவருகின்ற கருத்து, இராமன் சாதாரண மானிடன் அல்லன்; அவன் தெய்வத்தன்மை பொருந்தியவன் என்பதேயாம். இங்கு குறிப்பாகக்கூறி, அடுத்த பாடலில் தெளிவாகக் கூறுவதையும் காணலாம். இங்கே 'அம்மா!' என்பது அசைச்சொல்லும் அல்ல; இசைச்சொல்லும் அல்ல; அது பெரு வியப்பு என்ற பொருள் குறித்த சொல் என்பதை உணர்க. இலக்குத் தப்பாது சென்று மீளும் தன்மையுடைய பிரமாத்திரம் இராம பிரானைத் தீண்டக்கூடவில்லை என்றால் அது பெரு வியப்புக்குரியது தானே! ஆகவே அவ்வாறு பேசப்பட்டது என்க.

Koviloor Digital Library

12. "மானிடன் அல்லன்; தொல்லை வானவன் அல்லன்; மற்றும்,
மேல்நிமிர் முனிவன் அல்லன்; வீடணன் மெய்யின் சொன்ன,
யான், எனது எண்ணல் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன் என்றே,
தேன்உகு தெரியல் மன்னா! சேகு அறத் தெரிந்தது அன்றே!" (8934)

(உகுதல்-சிந்துதல்; தெரியல்-மாலை; எண்ணல்-செருக்கு; தீர்தல்-நீங்கியிருத்தல்; ஒருவன்-ஒப்பற்றவன்; சேகு-ஐயம்/கேடு/குற்றம்; தெரிதல்-தெளிதல்; தொல்லை-பழமையான; வானவர்-தேவர்கள்; நிமிர்-உயர்ந்த)

''தேன்சிந்தும் மலர்மாலையணிந்தவனே! மன்னவனே! இந்த இராமபிரான் நீ நினைத்துக் கொண்டிருப்பதுபோல அற்பமான மானிட குலத்தைச் சார்ந்தவன் அல்லன்; மிகப்பழமையான தேவசாதியினைச் சேர்ந்தவனும் அல்லன்; மேலும், மிக உயர்ந்த முனிவனும் அல்லன்; முன்பு என் சிறிய தந்தை வீடணன் நன்கு தெளிந்து, ஆராய்ந்து கூறினானே அதுபோல, யான், எனது என்னும் அக, புறப்பற்றுக்களை நீங்கிய ஞானியர்கள் எப்போதும் தொழுது ஏத்தும் ஒப்பற்றவனாகிய பரம் பொருளே என்பதை, நான் இப்போது குற்றமின்றி, சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாகப் புரிந்துகொண்டேன்'' என்கிறான் இந்திரசித்து.

'யான்' 'எனது' என்பன அகங்கார, மமகாரங்களைக் குறித்த செருக்கு எனக்கொள்க. நீண்ட நாட்களுக்கு முன்பே வீடணனுக்கு வந்த தெளிவு, இப்போது இந்திரசித்தனுக்கும் வந்திருக்கிறது என்பதை உன்னுக. கும்பகருணனும் உணர்ந்தான்; கூறினான். எனினும் இராவணன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் இங்கு நினைத்தல் தகும். பிரமாத்திரம் இராமபிரானை மூன்றுமுறை வலம்வந்து சென்றது என்பதைத் தன் கண்களால் கண்ட பின்புதான் சிறுவன் இந்திரசித்தன், இராமபிரான் பரம்பொருளே என்பதை உணர்ந்திருக்கிறான் என்பதாம். ''இவனுடைய வடிவத்தைப் பார்த்து இவன் மானிடன் என்று எண்ணிவிடாதே; இவனுடைய வேடத்தைப் பார்த்து இவன் முனிவன் என்று எண்ணி விடாதே; இவனுடைய ஆற்றலைப் பார்த்து இவன் தேவர்களுள் ஒருவன் என்று எண்ணிவிடாதே'' என்று தன் தந்தைக்கு மறைமுகமாக எச்சரிக்கிறான் இந்திரசித்து என்க. ''வீடணன் மெய்யிற் சொன்ன ஒருவன்'' என்பது முன்பு வீடணன் கூறிய ''தன்னின் முன்னிய பொருள்இலா ஒரு தனித்தலைவன், அன்ன மானுடன் ஆகிவந்து அவதரித்து அமைந்தான்'' என்பதன் சுருக்கம் எனக்கொள்க.

13. "அனையது வேறு நிற்க; அன்னது பகர்தல் ஆண்மை
வினையன அன்று; நின்று வீழ்ந்தது வீழ்க! வீர!
இனையல் நீ; மூண்டு யான் போய், நிகும்பலை விரைவின் எய்தி,
துனிஅறு வேள்வி வல்லை இயற்றினால், முடியும் துன்பம். (8935)

Koviloor Digital Library

(அனையது-அந்தநிலைமை; இனையல்-வருந்துதல்; மூண்டு-முனைந்து; துனி-துன்பம்; வல்லை-விரைவில்; இயற்றுதல்-செய்தல்; ஆண்மைவினை-வீரச்செயல்)

''அத்தகைய உண்மைகள் அப்படியே இருக்கட்டும்; அதைப்பற்றி இப்போது பேசுவது நம் வீரப்பாங்கிற்குப் பொருந்தாது; பகைவர்களை எதிர்த்து நின்று மாண்டு போனவர்கள் மாண்டவர்களாகவே இருக்கட்டும்; வீரர்க்கெல்லாம் வீரனே! நீ சற்றும் வருந்தாதே; நான் முனைந்து சென்று நிகும்பலை என்னும் கோவிலை அடைந்து, துன்பம் தீர்ப்பதற்குக் காரண மாகும் வேள்வி ஒன்றை விரைவில் செய்யத்தொடங்கினால், உனக்கு வந்த துன்பங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டாகும்'' என்கிறான் இந்திரசித்து.

'ஆண்மைவினை' என்பது வீரச்செயலுக்கு உரிய செயல் என்று பொருள்படும். 'வீழ்ந்தது வீழ்க!' என்பது போர்க்களத்தில் மாண்டு போனவர்களான பகைவர்களாகிய வானரச்சேனையை மருத்துமலை கொண்டுவந்து புத்துயிர் கொடுத்து எழுப்பியதுபோல நம்மால் நம் படைவீரர்களை உயிர்ப்பித்து எழுப்ப முடியவில்லை; காரணம் உன் கட்டளைப்படி அவ்வுடல்களை மருத்தன் கடலில் தள்ளி விட்டு விட்டான்; எனவே அரிய வாய்ப்பை நாம் இழந்துவிட்டோம்; அப்போது வீழ்ந்தவர்கள் வீழ்ந்தவர்களாகவே இருக்கட்டும் என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறான் இந்திரசித்து. 'நிகும்பலை' என்பது இலங்கை நகர்ப்புறத்தே அமைந்துள்ள ஒரு கோயில். அங்கிருந்து துன்பம் தீர்க்கும் வேள்வி தொடங்கினால், இராவணனுக்கு ஏற்பட்ட துன்பங்களெல்லாம் முடிந்துபோகும் என்று கருதுகிறான் இந்திரசித்து என்பதாம். 'அனையது வேறு' என்பது, அந்த உண்மைகளையெல்லாம் நினைப்பதற்குரிய காலம் இது அல்ல என்கிறான் என்பதைக் குறிக்கும். ஒரு கோயில் இருக்கும் இடத்திலிருந்து வேள்வி செய்தால் அது எதிர்பார்த்த பலனைத் தரும் என்பது அரக்கர்களின் நம்பிக்கை எனத் தெரியவருகிறது.

14. இராவணன் உடன்படுதல்

''அன்னது நல்லதேயால்; அமைதி'' என்று அரக்கன் சொன்னான்;
நல்மகன் 'உம்பிகூற, நண்ணலார் ஆண்டு நண்ணி,
முன்னிய வேள்வி முற்றாவகை செரு முயல்வர்' என்னா
''என், அவர் எய்தாவண்ணம் இயற்றலாம் உறுதி?'' என்றான். (8936)

(அமைதி-அமைத்தி/அமைத்துச் செய்க; உம்பி-உன்தம்பி/வீடணன்; நண்ணுதல்-நெருங்குதல்; முன்னிய-கருதிய; செரு-போர்; உறுதி-உபாயம்/மாற்றுச்செயல்; என்-என்ன; நண்ணலார்-பகைவர்/இராம இலக்குவர்; நன்மகன்-இனியமகன்/இந்திரசித்து)

Koviloor Digital Library

இராவணன் இந்திரசித்தை நோக்கி, ''ஆம்; அவ்வாறு செய்வதே சரியானது; அவ்வாறே வேள்வி செய்க'' என்று உடன்பட்டான்; இதனைக் கேட்ட அவனுடைய இனிய மகனாகிய இந்திரசித்து ''உன் தம்பியாகிய வீடணன், நமது இந்த இரகசியத் திட்டத்தை அறிந்தான் என்றால் பகைவர்களிடம் சொல்லிக் கொடுத்துவிடுவான்; அவர்கள் நாம் கருதியிருக்கிற இந்த வேள்வி முற்றுப்பெறாதபடி அங்கு நெருங்கி வந்து போர்செய்யத் தொடங்கிவிடுவார்களே!'' என்று தன் கருத்தைத் தெரிவிக்க, இராவணன், ''அவர்கள் அங்கு வராதபடி செய்ய என்ன உபாயத்தைக் கையாளலாம்!'' என்று அவனையே கேட்டான்.

'அமைதி' என்பது 'அமைத்தி' என்பதன் இடைக்குறையாகக் கொண்டால், அமைத்துச்செய்க என்ற பொருளைத்தரும். இங்கே இராவணன் கருத்துக்கேற்பவே இந்திரசித்து பேசிவருவதால், கவிஞன் அவனை 'நன்மகன்' என்கிறான் என்பதை நினைக.

15. இந்திரசித்து தன் திட்டத்தைக் கூறுதல்

''சானகி உருவமாகச் சமைத்து, அவள் தன்மை கண்ட
வான்உயர் அனுமன் முன்னே, வாளினால் கொன்று மாற்றி,
யான் நெடுஞ்சேனையோடும் அயோத்திமேல் எழுந்தேன் என்னப்
போனபின், புரிவது ஒன்றும் இலாது, அவர் துயரம் பூண்பார்'' (8937)

(சமைத்தல்-மாயத்தால் ஆக்குதல்/உண்டு பண்ணுதல்; வான்-சிறந்த; மாற்றுதல்-போக்குதல்; பூணுதல்-மேற்கொள்ளுதல்)

இந்திரசித்து இராவணனிடம், ''சீதாதேவியைப் போன்று மாயத்தால் ஓர் உருவத்தை உண்டாக்கி, முன்பு அவளை அசோகவனத்தில் கண்டு சென்ற மிக்கசிறந்த புகழையுடைய அனுமன் முன்னே கொண்டு சென்று, அவ்வுருவத்தை என்னுடைய வாட்படையால் கொன்று, அவள் உயிரைப் போக்கிவிட்டு, என்னுடைய பெரிய சேனையுடன் நான் அயோத்தி மாநகரின்மீது போர்செய்யப் புறப்பட்டுப்போகிறேன் என்று போக்குக் காட்டி அந்தத் திசையில் செல்லுவதுபோல் சென்றால், அவர்கள் என்ன செய்வது என்று புரியாது மிக்க துன்பம் கொண்டு கலங்குவார்கள்'' என்கிறான்.

இங்கே ஒன்று கருதவேண்டும். சீதாதேவியை உயிர் போக்குவது என்றால், அதை இராமபிரான் முன்னால் செய்தால்தானே பொருத்தமாக இருக்கும்? இந்திரசித்து ஏன் அனுமன் முன்னால் அவள் உயிரைப் போக்க வேண்டும் என்று கூறுகிறான்? அனுமன்தான் இலங்கைக்கு அண்மையில் வந்து அவள் அங்கு இருந்த தன்மைகளை அறிந்து சென்றவன். எனவே அவன் முன்னால் அவள் உயிரைப் போக்கினால்தான் அவன்போய் இராம பிரானிடம் சொன்னால்தான் அவன் நம்புவான் என்பது இந்திரசித்தின்

Koviloor Digital Library

கருத்து எனக்கொள்க. 'வான்உயர் அனுமன்' என்பது வானளாவிய புகழ் படைத்த அனுமன் என்றும், வானளாவிய வடிவம் கொள்ளும் பேராற்றல் படைத்த அனுமன் என்றும் இரு பொருளையும் தரும்.

'மாற்றுதல்' என்பது உயிரைப் போக்குதல் என்ற பொருளைத்தரும். 'அயோத்தி மேல் எழுந்தேன்' என்று இறந்த காலமாகக் கூறியிருப்பது விரைவு கருதி வந்த காலவழுஅமைதி எனக்கொள்க. சீதாதேவியின் உருவத்தைச் சிதைத்தால், அவள் இறந்துவிட்டாள் என்று கருதி, அவர்கள் மேலும் போர் தொடுக்கமாட்டார்கள் என்பதும், அயோத்திக்குத் தன் படையுடன் செல்லுகிறேன் என்று சொன்னால், தம் தாயர் முதலியவர் களைக் காப்பாற்றும் பொருட்டு அவர்களும் இலங்கையை விட்டுச் சென்று விடுவர் என்றும் கருதுகிறான் இந்திரசித்து என்பதாம்.

16. "இத்தலை சீதை மாண்டாள்; பயன் இவண் இல்லை" என்பார்;
அத்தலை, தம்பிமாரும், தாயரும், அடுத்துளோரும்,
உத்தம நகரும், மாளும் என்பது ஓர் வருத்தம் ஊன்ற,
பொத்திய துன்பம் மூள, சேனையும் தாமும் போவார். (8938)

(இத்தலை-இவ்விடம்/இலங்கை; இவண்-இங்கு; அடுத்துளோர்-சுற்றத்தார்; ஊன்றுதல்-அழுந்திப்பதிதல்; பொத்துதல்-கலத்தல்/நிறைதல்; மூளுதல்-பெருகுதல்; உத்தமம்-உயர்வு)

இந்திரசித்து இராவணனிடம், "அந்த இராமஇலக்குவர்கள் இப்போது இங்கே சீதாதேவியோ இறந்து போய்விட்டாள்; அவளை மீட்கும் பொருட்டுத்தானே நாம் இங்கே வந்தோம். இப்போது அவளே இல்லையென்றாகிப் போனபின்பு இங்கிருப்பதோ, இங்கிருந்து போர்புரிந்து இராவணனைக் கொன்றழிக்க வேண்டும் என்று கருதுவதோ பயனற்றதாகும் என்று கருதுவர். மேலும் அங்கே அயோத்தியில், தனது தம்பியர்களானபரதன், சத்துருக்கன், தாயர்கோசலை, சுமித்திரை, கைகேயி, மற்றும் இவர்களை நம்பியுள்ள சுற்றத்தார்கள், அந்த உயர்வுமிக்க அயோத்தி மாநகரம் எல்லாமும் அழிந்துபோகுமே என்று ஒரு அச்சம் அவர்கள் மனத்தில் நன்றாகப் பதிந்துபோகும்; அதனால் நிறைந்த துன்பம் மேன்மேலும் பெருகும். எனவே தம் சேனையுடன் அயோத்தி நகரத்திற்குச் சென்றுவிடுவார்கள்" என்று தான் கருதுவதைக் கூறுகிறான்.

இது இந்திரசித்தன் தானே கருதிக்கொண்டது. அவனுக்குத் தோன்றிய கற்பனைக் கருத்துக்கள்.

17. "போகலர் என்ற போதும், அனுமனை ஆண்டுப் போக்கி,
ஆகியது அறிந்தால் அன்றி, அருந்துயர் ஆற்றல் ஆற்றார்;
ஏகிய கருமம் முற்றி, யான் இவண் விரைவின் எய்தி,
வேக வெம்படையின் கொன்று, தருகுவென் வெற்றி" என்றான். (8939)

Koviloor Digital Library

(அருந்துயர்-தாங்குதற்கரிய துன்பம்; ஆற்றுதல்-தாங்கிக்கொள்ளுதல்; ஆகியது-நிகழ்ந்தது)

இந்திரசித்து மேலும் இராவணனை நோக்கி, ''அவ்வாறு அந்த இராமஇலக்குவர் அயோத்திக்குத் தாமே செல்லா விட்டாலும், அனுமனையாவது அங்கு அனுப்பி, அங்கு என்ன நிகழ்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால் அன்றி அவர்கள் தமக்கு ஏற்பட்ட தாங்குதற்கரிய இந்தத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளமாட்டார்கள்; அந்த நேரத்திற்குள், யான் என்னுடைய நிகும்பலை யாகத்தை நிறைவேற்றி விட்டு இங்கு விரைவில் வந்து, வேகமும் கொடுமையும் கொண்ட என் படைக்கலன்களைப் பகைவர்மேற் செலுத்தி, அவர்களைக் கொன்று உனக்கு வெற்றியை ஏற்படுத்தித் தருவேன்'' என்று உறுதிகூறுகிறான்.

18. இராவணன் உடன்படுதலும், சுக்கிரீவன் இலங்கைக்கு எரியூட்டச் சொல்லுதலும்

''அன்னது புரிதல் நன்று'' என்று அரக்கனும் அமைய, அம்சொல்
பொன்உரு அமைக்கும் மாயம் இயற்றுவான் மைந்தன் போனான்;
இன்னது இத்தலையது ஆக, இராமனுக்கு, இரவி செம்மல்,
'தொல்நகர் அதனை வல்லைக் கடிகெடச் சுடுதும்' என்றான். (8940)

(அம்-அழகிய; பொன்-சீதாதேவி/திருமகள்; இத்தலை-இவ்விடம்; தொல்-பழமையான; வல்லை-விரைவாக; கடி-சிறப்பு/காவல்; இரவி செம்மல்-சூரியன் புதல்வன்/சுக்கிரீவன்; அமைதல்-உடன்படுதல்/இசைதல்; கெடுதல்-அழிதல்)

இராவணன், இந்திரசித்தனிடம், ''ஆம், நீ சொல்வதுபோல் செய்வதே சரியானது; என்று உடன்பட்டான்; பிறகு அழகிய இனிய சொற்களையுடைய திருமகளின் அம்சமான சீதாதேவியைப் போன்ற உருவம் உண்டாக்கும் சூழ்ச்சியைச் செய்யும் பொருட்டு, இராவணன் புதல்வனாகிய இந்திரசித்து அவ்விடம் விட்டு அகன்று போனான். இங்கே இவ்வாறு நிகழவும், அங்கே சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவன், இராமபிரானிடம் 'பழமையான இந்த இலங்கை மாநகரை அதன் சிறப்பு அழியுமாறு விரைவில் எரியூட்டுவோமே' என்று அனுமதி கேட்டான்.

19. வானரச்சேனை இலங்கையை எரியூட்டுதல்

''அத்தொழில் புரிதல் நன்று' என்று அண்ணலும் அமைய, எண்ணி,
தத்தினன், இலங்கை மூதூர்க் கோபுரத்து உம்பர்ச் சார்ந்தான்;
பத்துடை ஏழு சான்ற வானரப் பரவை பற்றிக்
கைத்தலத்து ஓர்ஓர் கொள்ளி எடுத்தது, எவ்வுலகும் காண'' (8941)

Koviloor Digital Library

(தொழில்-செயல்; அண்ணல்-பெருமைமிக்கவன்/இராமபிரான்; அமைதல்-உடன்படுதல்/இசைதல்; எண்ணுதல்-சிந்தித்தல்; தத்துதல்-தாவுதல்; உம்பர்-உச்சி; பத்துடைஏழு-எழுபது; சான்ற-அமைந்த; பரவை-கடல்; கைத்தலம்-கைகள்; சார்தல்-அடைதல்; பற்றி-பின்தொடர்ந்து)

அவ்வாறு கேட்ட சுக்கிரீவன் கருத்துக்கு உடன்பட்ட பெருமை மிக்கவனான இராமபிரான், சற்று சிந்தித்து ''ஆம், அந்தச் செயலைச் செய்தலே நன்மைபயக்கும்'' என்றுகூற, உடனே சுக்கிரீவன் ஒரே தாவாகத் தாவி பழமையான இலங்கை மாநகரக் கோபுரத்தின் உச்சியைச் சென்றடைந்தான்; அவனைப் பின்தொடர்ந்து, எழுபது வெள்ளம் என்று கூறப்படுகின்ற வானரச் சேனைக்கடல் ஒவ்வொன்றும், இவ்வுலக மக்கள் எல்லோரும் காணும் வண்ணம் தத்தம் கைகளில் ஒவ்வொரு கொள்ளிக் கட்டையைப் பிடித்துக்கொண்டு சென்றன.

''அண்ணல் அமைய எண்ணினன்'' என்பது சிந்திக்கத்தக்க ஒரு சொற்றொடர். இராமபிரான் பரம்பொருளின் அம்சம். எனவே எவர்க்கும் தானே துன்பம் தரவும்மாட்டான், தன்னால் யாரும் துன்பப்படக் காரணம் ஆகவும் மாட்டான். எனவே சுக்கிரீவனின் இந்தக் கருத்துக்குச் சற்று நிதானித்து, சிந்தித்து, பின்னர்தான் இசைவு தெரிவித்தான் என்க. முன்பு இலக்குவன் பிரமாத்திரத்தைப் பயன்படுத்த முயன்றபோது இதே இராமபிரான்தான் அதனைத் தடுத்து நிறுத்தியவன் என்பதையும் இங்கு நினைவுகூர்தல் தகும். 'தத்தினன்' என்பது தாவினான் என்ற பொருளையும் தரும். இது குரக்கினத்திற்கே உரிய குணம். முன்பும் இராவணனைக் கோபுரத்தின் உச்சியில் கண்டபோதும் இவ்வாறுதான் யாரும் எதிர்பாராத வண்ணம் தாவி அவனை மகுடபங்கப்படுத்தினான். முன்பு இராம பிரானிடம் அனுமதி வாங்காமல் தாவினான்; இப்பொழுது இராம பிரானின் இசைவுடன் தாவினான் என்பது கருதத்தக்கது. 'பத்துடைஏழு' என்பது எழுபது வெள்ளத்தைக் குறிக்கும். முன்பு இறந்துபோன வானரச்சேனை முழுவதும், அனுமன் எடுத்துவந்த மருத்து மலையின் உதவியால் உயிர் பெற்றெழுந்து விட்டனர். எனவே முன்பு வந்த எழுபது வெள்ளம் சேனை முழுவதும் குறையாமல் அப்படியே இருந்தது என்பது பொருள். கம்பன் எழுபது வெள்ளம் என்று பேச, வான்மீகி அறுபத்து ஏழுகோடி என்கிறார் என்பது ஒரு சிறு வேறுபாடு. 'வானரப்பரவை' என்பது உருவகம். சேனையைக் கடலாகப் பெருக்கம் பற்றி உருவகித்தார் என்க. 'சேனா சமுத்திரம்' என்பது வடமொழி. 'குரங்கு கையில் பூமாலையும், குரங்கு கையில் கொள்ளிக்கட்டையும்' என்பது ஓர் உலக வழக்குச்சொல். அதுதான் இங்கே 'கைத்தலத்து ஒரோர் கொள்ளி எடுத்தது' எனப்பட்டது எனக்கொள்க. இவ்வாறு பகைவர்களின் தலைநகரை எரியூட்டுதலை 'உழபுல வஞ்சி' என்கிறது புறத்திணை.

Koviloor Digital Library

20. எண்ணின கோடிப் பல்படை யாவும்,
மண்ணுறு காவல் திண்மதில் வாயில்,
வெண்நிற மேகம் மின்இனம் வீசி
நண்ணின போல்வ, தொல்நகர் நாண. (8942)

(எண்ணின-கணக்கிட்டுக் கூறப்பட்ட; மண்ணுறுதல்-அழகு செய்தல்/ அலங்கரித்தல்; நண்ணின-நெருங்கிய; தொல்-பழமையான) (குளகப் பாடல்)

எழுபது வெள்ளம் என்று கணக்கிடப்பட்டுக் கூறப்பட்டிருக்கின்ற கோடிக்கணக்கான வானரப்படைகள் எல்லாம், அழகு செய்து அலங் கரிக்கப்பட்ட காவலுடையதும், திண்மையானதும், பழமையானதுமான இலங்கை மாநகரத்தின் நுழைவாயில் வழியாக, வெண்மை நிறமுடைய மேகங்கள், மின்னல்களைவீசிக்கொண்டு நெருங்கிச்செல்வதைப்போலக் கொள்ளிக் கட்டைகளைக் கையில் ஏந்திக்கொண்டு அந்தப் பழமையான இலங்கை மாநகரமே வெட்கமடையும் வண்ணம் செல்வது போன்றிருந்தது. - பாடல் தொடர்கிறது.

வெண்ணிற மேகம் வெள்ளை நிறமுடைய குரங்குகளுக்கும், மின்இனம், அவர்கள் கைகளில் கொண்டிருக்கும் கொள்ளிக் கட்டை களுக்கும் உவமை.

21. ஆசைகள் தோறும் அள்ளின கொள்ளி,
மாசறு தானை மர்க்கட வெள்ளம்,
நாசம் இவ்வூருக்கு உண்டு' என, நள்ளின்
வீசின, வானின் மீன்விழும் என்ன. (8943)

(மாசு-குற்றம்; தானை-சேனை; மர்க்கடம்-வானரம்/குரங்கு; ஆசை-திசைகள்; நள்-நள்ளிரவு; வானின்மீன்-நட்சத்திரங்கள்)

குற்றமற்ற கோடிக்கணக்கான வானரச்சேனை தம் கைகளில் இருந்த கொள்ளிக்கட்டைகளை, ''இந்த இலங்கை மாநகருக்கு ஒரு நாசம் விளைய இருக்கிறது'' என்று கூறிக்கொண்டே திசைகள் எல்லாம் சென்று விழும்படியாக வீசியெறிந்தன. இது, நட்டநடு இரவில் வானிலிருந்து நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுவதைப்போலத் தோற்றமளித்தது.

நள்ளிரவில் வானிலிருந்து நட்சத்திரங்கள் விழுவதைத் தீயநிமித்தம் எனக் கூறுவர். இதை எரி நட்சத்திரம் என்றும், வால்நட்சத்திரம் என்றும் இப்போது கூறுகிறோம். குரங்குகள் நள்ளிரவில் கொள்ளிக் கட்டைகளை இலங்கை மாநகரின் உயர்ந்த மதில்களினின்றும் வீசியெறிந்த தோற்றம், வானிலிருந்து விண்மீன்கள் உதிர்ந்துவிழும் தோற்றத்திற்கு உவமை.

Koviloor Digital Library

22. வஞ்சனை மன்னன் வாழும் இலங்கை,
குஞ்சரம் அன்னார் வீசிய கொள்ளி,
அஞ்சன வண்ணன் ஆழியில் ஏவும்
செஞ்சரம் என்னச் சென்றன மென்மேல். (8944)

(குஞ்சரம்-யானை; அஞ்சனம்-மை; ஆழி-கடல்; ஏவுதல்-செலுத்துதல்; செஞ்சரம்-சிவப்பு அம்பு/அக்னியாஸ்திரம்/அங்கியங்கணை; மென்மேல் -மேலும்மேலும்)

சீதாதேவியை சூழ்ச்சியால் கவர்ந்து கொண்டுவந்த அரசனான இராவணன் வாழ்கின்ற நகரமாகிய இலங்கையில், யானைபோன்ற ஆற்றல் வாய்ந்த வானரச்சேனைகள் வீசியெறிந்த கொள்ளிக்கட்டைகள், முன்பு மைபோன்ற கரியநிறம் படைத்த இராமபிரான், வருணன் வருதற்குக் காலந்தாழ்த்தியமையால் சினந்து செலுத்திய சிவந்த அக்னி அஸ்திரத்தைப்போல மேலும் மேலும் தொடர்ந்து சென்றன.

வஞ்சனை மன்னன் இராவணன்; குஞ்சரம் அன்னார்-வானரச்சேனை; அஞ்சனவண்ணன்-இராமபிரான்; இலங்கை-கடல்; கொள்ளிகள்-அஸ்திரங்கள்; செஞ்சரம்-அக்னிஅஸ்திரம் இராமபிரான் ஏழுநாட்கள் தர்ப்பாசனத்தில் அமர்ந்திருந்து தவம் செய்து வருணனை வழி வேண்டியும், அவன் வாராது காலம் தாழ்த்தியமையால், இராமபிரான் அக்னி அஸ்திரத்தை எய்தான் என்பது நாம் முன்பே கண்டு வந்தது. அதுவே இங்கே உவமையாகக் கையாளப்பட்டிருப்பதை எண்ணுக.

23. இலங்கையில் எரி பரவுதல்

கை அகல் இஞ்சிக் காவல் கலங்க,
செய்ய கொழுந்தீ சென்று நெருங்க,
ஐயன் நெடுங் கார் ஆழியை அம்பால்
எய்ய எரிந்தால் ஒத்தது இலங்கை. (8945)

(கை-இடம்; இஞ்சி-மதில்; செய்ய-சிவந்த; ஐயன்-இராமபிரான்; ஆழி-கடல்)

இடம் அகன்ற மதிலையுடையதும், சிறந்த காவல் மிக்கதுமான இலங்கை மாநரக் காவலர்களே நிலைகலங்குமாறு, சிவந்த கொழுமை யான நெருப்புச் சென்று எல்லாப்பக்கங்களிலும் நெருங்க, இராமபிரான் முன்பு நீண்ட கரிய கடலில் தன் அம்பினைச் செலுத்தியபோது அந்தக்கடல் எரிந்ததைப் போன்று இப்போது இலங்கை மாநகரம் எரியலாயிற்று.

அனுமன் தனித்து இலங்கையை எரியூட்டியதுபோல, இப்போது வானரச்சேனை அனைத்தும் சேர்ந்து இலங்கைக்கு எரியூட்டியது என்க.

Koviloor Digital Library

இரண்டாவது முறையாக இலங்கை மாநகரம் எரியூட்டப்பட்டிருக்கிறது என்பதை நினைவிற்கொள்க.

24. பரல்துறு தொல் பழுவத்து எரி பற்ற,
நிரல்துறு பல் பறவைக் குலம், நீளம்
உற்றின; விண்ணின் ஒலித்து எழும் வண்ணம்
அரற்றி எழுந்தது, அடங்க இலங்கை. (8946)

(பரல்-பருக்கைக்கற்கள்; துறுதல்-நெருங்கியிருத்தல்; தொல்-பழமையான; பழுவம்-காடு; நிரல்-வரிசை; குலம்-கூட்டம்; நீளம்-கூடு; உரற்றுதல்-முழங்குதல்; அடங்க-முழுவதும்; அரற்றுதல்-புலம்புதல்)

இலங்கை மாநகரமே பற்றி எரிவதால் அங்குள்ள பருக்கைக் கற்கள் நிறைந்துள்ள பழமையான காடுகளிலும் அவ்வெரி பற்றியது. அங்கே வரிசையாக நிறைந்து கூடுகளில் வசிக்கும் பறவைக் கூட்டங்கள் தங்கள் கூடுகளிலிருந்து வெளியேறி ஒலி எழுப்பிக் கொண்டே விண்ணில் பறந்துசென்றன. அதுபோல இலங்கை நகர மக்கள் எல்லோரும் தத்தம் வீடுகளிலிருந்து புலம்பிக்கொண்டே வெளியேறிச் சென்றனர்.

காடுகளுக்கு இலங்கையும், பறவைக் கூட்டங்களுக்கு அரக்கர் கூட்டமும், அவற்றின் கூடுகளுக்கு அரக்கர்களின் வீடுகளும் உவமை. இலங்கை மாநகரம் திரிகூடமலையின்மேல் இருப்பதால் அங்குள்ள காடுகளும் சோலைகளும் பரற்கற்கள் நிறைந்திருந்தன என்ற கவிஞனின் ஆழ்ந்த நினைவாற்றலை உணர்க.

25. மூவுலகத்தவரும், முதலோரும்
மேவின வில்தொழில் வீரன் இராமன்,
தீவம் எனச் சிலவாளி செலுத்த
கோவுரம் இற்று விழுந்தது, குன்றின். (8947)

(முதலோர்-முதற்கடவுள்/மும்மூர்த்தியர்; மேவுதல்-விரும்புதல்; தீவம்-தீபம்/விளக்கு; கோவுரம்-கோபுரம்; குன்றின்-குன்றுபோல)

மேல், நடு, கீழ் என்ற மூன்று உலகத்திலுள்ளவர்களும், மும்மூர்த்திகளாகிய பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய முத்தேவர்களும் விரும்புகின்ற வில்தொழில்களில் வல்லவனான வீரன் இராமபிரான், விளக்குப்போல ஒளி வீசக்கூடிய சில அம்புகளைச் செலுத்த, அதனால் இலங்கை மாநகரத்துக் கோபுரங்களெல்லாம், மலையைப்போல இடிந்து விழுந்தன.

'முதலோர்' என்பது முதற்கடவுளரைக் குறிக்கும். தீபம் என்பதும் கோபுரம் என்பதும், தீவம் என்றும், கோவுரம் என்றும் எதுகைநோக்கித் திரிந்தன. தீபம் என்பது விளக்கைக் குறித்தாலும் நெருப்பைக் குறித்ததாகக்

Koviloor Digital Library

கொண்டால் பொருள் சிறக்கும். நெருப்புப்போன்ற சில அம்புகளைச் செலுத்தினான் என்ற பொருளைத்தரும்.

26. அனுமன் ஆரவாரித்தல்

இத்தலை இன்ன நிகழ்ந்திடும் எல்லை,
கைத்தலையின் கொடு காலின் எழுந்தான்,
உய்த்த பெருங்கிரி மேருவின் உப் பால்
வைத்த நெடுந்தகை மாருதி வந்தான். (8948)

(இத்தலை-இங்கு/இலங்கையில்; எல்லை-பொழுது/சமயம்; கைத்தலை-கைகள்; கால்-காற்று; உப்பால்-அப்பக்கம்; தகை-தகைமை/தன்மை; உய்த்த-கொணர்ந்த/கொண்டுவந்த)

இங்கே இலங்கையில் இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுது அங்கே பெருந்தன்மையை உடையவனான அனுமன், முன்பு தான் கொண்டுவந்த மருத்துமலையைத்தன்கைகளினிடத்தில் ஏந்திக்கொண்டு, காற்றைப்போல் வேகமாக விரைந்து எழுந்து, மேருமலைக்கும் அப்பால் அது முன்பு இருந்த இடத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டுத் திரும்பி வந்து சேர்ந்தான்.

'உப்பால்' என்பது அப்பால், மேலே என்ற பொருள்களையும் தரும். 'உய்த்த பெருங்கிரி' என்ற சொற்றொடர்க்கு, இலக்குவனையும், வானரச்சேனையையும் பிழைப்பித்த பெரிய மருத்துமலை என்ற பொருளும் சிறப்பைத்தரும்.

27. அறை அரவக் கழல் மாருதி ஆர்த்தான்;
உறை அரவம் செவியுற்றுளது அவ்வூர்;
சிறை அரவக் கலுழன் கொடு சீறும்
இறை அரவக்குலம் ஒத்தது, இலங்கை. (8949)

(அறைதல்-ஒலித்தல்; அரவம்-ஓசை; உறைதல்-செறிதல்/நிறைதல்/அழுத்தமாதல்; அவ்வூர்-இலங்கை; கலுழன்-கருடன்; இறை-தலைமைப் பண்பு; அரவு-பாம்பு; குலம்-கூட்டம்)

ஒலிக்கின்ற ஓசையையுடைய வீரக்கழல் அணிந்த அனுமன் அப்போது பெருமுழக்கம் செய்தான்; அவனுடைய செறிந்த ஓசை, அவ்விலங்கை மாநகரின் செவிகளில் புகுந்தது; சிறைகளையுடைய கலுழன், தன் சிறகுகளால் எழுப்பும் ஒலியைக்கேட்ட, தலைமைத் தன்மை பொருந்திய பாம்புக்கூட்டங்கள் நடுங்குவதை ஒத்திருந்தது அவ்விலங்கை மாநகரம்.

'அவ்வூர்' என்பதும் 'இலங்கை' என்பதும் ஆகுபெயராய் அங்குள்ள அரக்கர்களையும், ஏனைய உயிரினங்களையும் குறித்து நின்றன. கருடன் அனுமனுக்கும், அரவக்குலம் அரக்கர்கூட்டத்திற்கும் உவமை. நான்கு

Koviloor Digital Library

அடிகளிலும் அரவம் என்ற சொல் பயின்று வந்திருப்பதால் இப்பாடல் சொற்பொருட் பின்வருநிலையணியின் பாற்படும். அரவம் என்ற ஒரே சொல் அனுமனின் வீரக்கழலின் ஓசையையும், அவன் ஆரவாரித்த ஓசையையும், கருடனின் சிறகுகள் சீறும் ஓசையையும், பாம்புக் கூட்டத்தையும் குறித்தன. அனுமனது ஆரவாரத்தைக் கேட்டு நடுங்கும் இலங்கை அரக்கர்களுக்கு, கருடனின் சீற்றத்தைக் கேட்டு நடுங்கும் பாம்புக்கூட்டங்கள் உவமை. நஞ்சையுடைய பாம்புகளுக்கு வஞ்சனை யுடைய அரக்கர்களை உவமைப் படுத்தியது காண்க. அதுபோல சிறிய திருவடி என்று கருதப்படும் அனுமனுக்குப் பெரிய திருவடியாகிய கருடனை உவமை கூறியதும் எண்ணிப்பார்க்கத்தக்கது.

28. அனுமனும் இந்திரசித்தும் சந்தித்தல்

மேல்திசை வாயிலை மேவிய வெங்கண்
காற்றின் மகன் தனை வந்து கலந்தான்,
மாற்றல்இல் மாயை வகுக்கும் வலத்தான்,
கூற்றையும் வென்று உயர் வட்டணை கொண்டான். (8950)

(வகுத்தல்-உண்டாக்குதல்/செய்தல்; வலத்தான்-வலிமைபெற்றவன் /இந்திரசித்து; கூற்று-இயமன்; வட்டணை-வெற்றி உலா; கலத்தல்-நெருங்குதல்; காற்றின்மகன்-மாருதி/அனுமன்; மேவுதல்-வந்து அடைதல்)

யாராலும் மாற்றியமைக்க முடியாத மாயச்செயல்களை உண்டாக்கு வதில் வல்லவனானவனும், இயமனையும் வெற்றி கண்டு உயர்ந்த வெற்றிஉலா மேற்கொண்டவனுமான இந்திரசித்து, மேற்குப்புறத்தில் அமைந்த கோட்டைவாயிலை வந்தடைந்த சிவந்த கண்களையுடைய வனும், வாயுதேவனின் புதல்வனுமாகிய அனுமனை, வந்து நெருங்கிச் சேர்ந்தான்.

காற்றின்மகன் அனுமன்; மாற்றல்இல் மாயைவகுக்கும் வலத்தான் இந்திரசித்து; கூற்றையும் வென்று உயர் வட்டணை கொண்டவனும் இந்திரசித்தே. வட்டணை என்றசொல் வெற்றி ஊர்வலம் என்ற பொருளைத்தரும். 'பெருந்தாளம் இடுதல்' என்கிறது சென்னைக் கம்பன் கழகச் செம்பதிப்பின் அடிக்குறிப்பு.

29. மாயா சீதையைக் கொண்டு வருதல்

சானகி ஆம்வகை கொண்டு சமைத்த
மான் அனையாளை வடிக்குழல் பற்றா,
ஊன் நகு வாள் ஒரு கைக்கொடு உருத்தான்,
ஆனவன் இன்னன சொற்கள் அறைந்தான். (8951)

Koviloor Digital Library

(ஆனவன்-அத்தகையவன்/இந்திரசித்து; வடி-திருந்திய; குழல்-கூந்தல்; பற்றுதல்-பற்றிக்கொள்ளுதல்; ஊன்-தசை; நகுதல்-விளங்குதல்; உருத்தல்-சினத்தல்; இன்னன-இத்தகைய; அறைதல்-சொல்லுதல்; சானகி-சீதாதேவி)

மான்போன்ற மருண்ட விழிகளைக் கொண்ட ஒரு பெண்ணை, காண்போர் எல்லோரும் சீதாதேவி என்று கருதுமாறு அந்த உருவத்தை மாயையால் உண்டாக்கி, அவளுடைய அழகிய, திருத்தப்பட்ட கூந்தலை இடக்கையில் பற்றிக்கொண்டு, வலக்கையில் பகைவர்களது தசை விளங்கும் வாட்படையை ஏந்திக்கொண்டு மிக்க சினம்கொண்ட இந்திரசித்து, கீழ்வருமாறு கூறத்தொடங்கினான்.

மாயாசனகப் படலத்தில் மாயாசனகனாக மருத்தன் என்ற அரக்கனைக் கொண்டு வந்தவன் மகோதரன். இங்கே மாயா சீதையாக யார் கொண்டு வரப்பட்டது என்பது கூறப்படவில்லை என்பதை நோக்குக. வேறு யாரோ ஓர் அரக்கர்குலப் பெண்ணைச் சீதையாக உருமாற்றிக் கொண்டு வந்திருக்கிறான் என்பதாம்.

30. இந்திரசித்து சீதாதேவியைக் கொன்றுவிடுவதாக அச்சுறுத்துதல்

''வந்து இவள் காரணமாக. மலைந்தீர்;
எந்தை இகழ்ந்தனன்; யான் இவள் ஆவி
சிந்துவென்'' என்று செறுத்து, உரை செய்தான்;
அந்தம்இல் மாருதி அஞ்சி அயர்ந்தான். (8952)

(மலைதல்-போர்செய்தல்; இகழ்தல்-ஒதுக்குதல்/அலட்சியம் செய்தல்; ஆவி-உயிர்; சிந்துதல்-போக்குதல்; செறுத்தல்-சினத்தல்; அந்தம்-முடிவு/மரணம்; அயர்தல்-சோர்தல்)

இந்திரசித்து அனுமனுக்கு அந்த மாயா சீதையைச் சுட்டிக்காட்டி, ''இவள் காரணமாகத்தானே நீங்கள் எங்கள் இலங்கைக்கு வந்து எங்களுடன் போர் செய்தீர்கள்; இப்பொழுது என் தந்தையாகிய இராவணன் இவளை ஒரு பொருட்டாக மதிக்காமல், வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டான்; எனவே நான் இப்பொழுது இவள் உயிரைப் போக்கப்போகிறேன்'' என்று வெகுண்டு கூறினான். அதனைக்கேட்ட மரணமில்லாப் பெருவாழ்வாகிய சிரஞ்சீவித்தன்மை கொண்ட அனுமன், சற்று அச்சம்கொண்டு மனம் தளர்ந்தான்.

'இகழ்ந்தனன்' என்பது அலட்சியம் செய்தல் என்ற பொருளில் வந்தது; இந்தக் காரியத்தில் என் தந்தை அலட்சியமாக இருந்துவிட்டான் என்ற ஒரு உட்பொருளைத் தருவதையும் நோக்குக. அதுதான் இந்திரசித்தின் உள்மனக் கருத்து.

Koviloor Digital Library

31. அனுமன் அடைந்த துயரம்

"கண்டவளே இவள்" என்பது கண்டான்,
"விண்டது போலும் நம் வாழ்வு" என வெந்தான்;
கொண்டு இடைதீர்வது ஓர் கோள் அறிகில்லான்,
"உண்டு உயிரோ?" என வாயும் உலர்ந்தான். (8953)

(காணுதல்-தெளிவாக அறிதல்; விண்டது-அழிந்தது; கோள்-நெறி/வழி; வேதல்-வெதும்புதல்; உலர்தல்-வறண்டுபோதல்)

அதைக்கண்ட அனுமன், "ஆம்! நாம் முன்பு அசோகவனத்தில் பார்த்து வந்த சீதாதேவிதான் இவள் என்பதை நன்கு சிந்தித்துத் தெளிந்தான்; சரி, நம் வாழ்வும் இத்தோடு அழிந்ததாகும் என்று மனம் வெதும்பலானான்; இவனிடமிருந்து இவளை எப்படிப் பிரித்துக் கூட்டிக்கொண்டு போகமுடியும் என்பதற்கு ஒரு உபாயம் தோன்றாதவனாய் வாய்வறண்டு, உயிர் இருக்கிறதோ இல்லையோ என்று காண்பவர் எண்ணும்படியான நிலையில் இருந்தான் அனுமன்.

• *இது அரக்கர்களின் மாயச்செயலாக இருக்கலாமோ என்று ஒருகணம் சிந்தித்துப் பின் தெளிவுபெற்றான் என்பதைக் குறிக்கவே 'கண்டவளே' என்ற பிரிநிலை ஏகாரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதாம். இவள்தான் அந்தச் சீதாதேவி என்பதை ஆகம அளவையால்-பிரத்யட்சப் பிரமாணத்தால் முடிவு செய்கிறான் அனுமன் என்பதாம். இங்கே 'கண்டான்' என்ற சொல் சிந்தித்துத் தெளிந்தான் என்ற பொருளைத்தரும். சீதாதேவி உயிர்நீங்கப் பெற்றால் மற்றவர்களுக்கு ஏது வாழ்க்கை? என்ற தீர்மானத்தால் 'விண்டது போலும் நம் வாழ்வு' என்றான் என்க. 'இடைதீர்வது' என்பது அவனிடமிருந்து அவளை விடுவித்துக் கொண்டு செல்லுதல் என்ற பொருளைத்தரும். 'வாய் உலர்தல்' என்பது மரணத்தின்-வாழ்க்கை முடிவின் ஒரு அறிகுறி என்க. அவளை விடுவிக்க வழிதெரியாததால், தான்உயிர்போகும்நிலையைஅடைந்தான்என்பதாம்.*

32. இந்திரசித்தனுக்கு அனுமன் அறிவுரை கூறுதல்

"யாதும் இனிச்செயல் இல்' என எண்ணா,
'நீதி உரைப்பது நேர்' என ஓரா,
'கோதுஇல் குலத்து ஒரு நீ குணம் மிக்காய்!
மாதை ஒறுத்தல் வசைத்திறம் அன்றோ?" (8954)

(ஓரா-ஓர்ந்து/ஆராய்ந்து தெளிந்து; கோது-குற்றம்; ஒருநீ-ஒப்பற்றவன்; ஒறுத்தல்-கொல்லுதல்/தண்டித்தல்; வசைத்திறம்-பழிச்செயல்; வசை-பழி) (குளகப்பாடல்)

Koviloor Digital Library

அதனைக் கண்ட அனுமன், ''இனிமேல் நம்மால் செய்யத்தக்க செயல் வேறு ஒன்றுமில்லை'' என்று தன் மனத்துள் கருதிக்கொண்டு இவனுக்கு நீதிமொழிகளைக்கூறி ஆற்றுப்படுத்துவதே சரியான செயலாகும் என்று நன்கு ஆராய்ந்து தெளிந்து அவனை நோக்கி 'இந்திரசித்து! நீ குற்றமற்ற புலத்தியன் மரபில் வந்த நற்குணங்கள் வாய்க்கப்பெற்றவன்; ஒரு பெண்ணைத் தண்டித்துக் கொல்லுதல் என்பது உனக்குப் பழியைத் தேடித்தரும் செயல் அல்லவா?'' என்று கூறத்தொடங்குகிறான்.

'கோதுஇல் குலம்' என்பது இராவணன் பிரமன் வழி வந்தவன் என்பதைக் குறிக்கும். நீதி உரைப்பது என்பது அவனைக் கெஞ்சிக் கேட்டதையும், உள்ளடக்கியது என்க. சாம, பேத, தான, தண்டம் எனப்படும் உபாயங்களில் முதலில் சொல்லப்பட்ட சாம உபாயமே இரந்து கேட்பதைக் குறிக்கும். அரக்கர் குலத்தில் இராவணனைத் தவிர, கும்பகருணன், வீடணன், இந்திரசித்து முதலிய அனைவரையும் கவிஞன் குணம் மிக்கவர்களாகவே காப்பியத்தில் காட்டி வந்திருப்பதை நுனித்து உணர்க.

33. ''நான்முகனுக்கு ஒரு நால்வரில் வந்தாய்;
நூல்முகம் முற்றும் நுணங்க உணர்ந்தாய்;
பால்முகம் உற்ற பெரும்பழி அன்றோ
மால்முகம் உற்று, ஒரு மாதை வதைத்தல்? (8955)

(நான்முகன்-பிரமதேவன்; நால்வர்-நாலாவது தலைமுறை; முகம்-சிறந்த கருத்துக்கள்/பகுதிகள்; நுணங்க-நுட்பமாக; மால்முகம்-அறிவு மயங்குதல்; மால்-மயக்கம்; பால்-பகுதி)

''பிரமதேவனின் ஒப்பற்ற நான்காவது தலைமுறையினனாய் வந்து தோன்றியவன் நீ; வேத சாத்திர நூல்களில் கூறப்பட்டுள்ள சிறந்த கருத்துக்களை நுட்பமாக உணர்ந்தவன் நீ; அவ்வாறிருப்பவன் மயக்கம் கொண்டு, அறிவு திரிந்து, ஒரு பெண்ணைக் கொல்லுதல் என்பது, பலவகைப்பட்ட பழிகளுள் முதன்மையான பழியாக ஆகிவிடும் அல்லவா?'' என்று கேட்கிறான் அனுமன்.

பிரமன்-புலத்தியன்-விச்சிரவசு-இராவணன்-இந்திரசித்து என்பது வம்சாவளி. எனவே ''நான்முகனுக்கு ஒரு நால்வரின் வந்தாய்'' என்றார். முகம் என்ற சொல் எல்லா அடிகளிலும் வந்திருப்பதால் இப்பாடல் சொற்பொருட் பின்வரு நிலையணியின் பாற்படும். இராவணன் ''நான்முகன் மைந்தன், மகன் மைந்தன்'' என்பது சுந்தரகாண்டம். முன்பாடலில் 'கோதுஇல் குலத்து ஒரு நீ குணம் மிக்காய்' என்றும் இங்கு 'நூல்முகம் முற்றும் நுணங்க உணர்ந்தாய்' என்றும் அனுமன் இந்திர சித்தனைப் புகழ்வதை நோக்குக. பழி என்பது பலவழிகளில் வந்து சேரும். இங்கே தன்னினும் எளிமையானவரைக் கொல்லுதல் ஒரு பழி; ஒரு

Koviloor Digital Library

பெண்ணைக் கொல்லுதல் மற்றொரு பழி; கற்பின் கனலியைக் கொல்லுதல் என்பது மிகப்பெரிய பழி என்கிறான் என்பதாம்.

34. "மண் குலைகின்றது; வானும் நடுங்கிக்
கண் குலைகின்றது; காணுதி கண்ணால்;
எண் குலைகின்றது இரங்கல் துறந்தாய்;
பெண் கொலை செய்கை பெரும்பழி அன்றோ?" (8956)

(இரங்கல்-இரக்கம்; துறத்தல்-கைவிடுதல்; குலைதல்-நடுங்குதல்/கலங்குதல்; காணுதி-காண்பாயாக; எண்-எண்ணம்/கருத்து/மனம்)

அனுமன் இந்திரசித்தனை நோக்கி, ''இந்திரசித்து! நீ செய்கின்ற இச்செயலைக் கண்டு மண் உலகத்தவர்களும், இமையாநாட்டமுடைய விண்ணுலகத்துத் தேவர்களும் அஞ்சி நடுங்குகிறார்கள்; நீயே உன் கண்களால் காண்பாயாக; எனக்கே மனம் நடுக்கமுறுகிறது; நீ மட்டும் இரக்கம் என்னும் குணத்தையே நீக்கிவிட்டு இவ்வாறு செய்கிறாயே! பெண்ணைக் கொல்லுதல் என்பது ஒரு தீர்க்கமுடியாத பெரும்பழியைத் தரும் செயல் அல்லவா?'' என்கிறான் அனுமன்.

35. "என்வயின் நல்கினை ஏகுதி என்றால்,
நின்வயம் ஆம், உலகு யாவையும்; நீ நின்
அன்வயம் ஏதும் அறிந்திலை ஐயா!
புன்மை தொடங்கல்; புகழ்க்கு அழிவு' என்றான். (8957)

(என்வயின்-என்னிடத்தில்; ஏகுதல்-செல்லுதல்; அன்வயம்-குலப் பெருமை; ஏதும்-சிறிதும்; புன்மை-அற்பம்; நல்குதல்-கொடுத்தல்)

அனுமன் இந்திரசித்தனிடம் ''ஐயா! இந்தச் சீதாதேவியை உன் தந்தை வேண்டாம் என்று இகழ்ந்து விட்டதனால், இவளைக் கொல்லாது என்னிடம் கொடுத்துவிட்டு நீ செல்வாய் என்றால், உலக மக்கள் எல்லோரும் உன்னை வாழ்த்தி உன்வசமாவார்; நீ உன் குலப் பெருமையைச் சிறிதும் உணராதவனாய் இருக்கிறாய்; இத்தகைய இழிவான அற்பச்செயலை செய்யத் தொடங்காதே; அவ்வாறு தொடங்கினால் அது உன் புகழுக்கு இழுக்கையும் அழிவையும் உண்டாக்கும்'' என்று எச்சரிக்கிறான் அனுமன்.

36. இந்திரசித்தன் மேலும் அச்சுறுத்துதல்

"எந்தையும், இந்த இலங்கை உளோரும்,
உய்ந்திட, வானவர் யாவரும் ஓடச்
சிந்துவென் வாளினில்' என்று செறுத்தான்;
இந்திரசித்தவன் இன்ன இசைத்தான். (8958)

Koviloor Digital Library

(உய்தல்-நல்வாழ்வு பெறுதல்/பிழைத்திருத்தல்; சிந்துதல்-வெட்டுதல்; செறுத்தல்-வெகுள்தல்; இன்ன-இத்தகைய; இசைத்தல்-கூறுதல்)

இந்திரசித்து அனுமனை நோக்கி, ''என் தந்தை இராவணனும், இந்த இலங்கை மாநகரில் உள்ளோர் எல்லோரும் நல்வாழ்வு பெறவேண்டும்; தேவர்கள் எல்லோரும் அச்சம் கொண்டு ஓடவேண்டும்; எனவே நான் இந்தச் சீதாதேவியை இப்பொழுதே என்னுடைய வாட்படையினால் வெட்டி வீழ்த்துவேன்'' என்று வெகுண்டு எழுந்து கீழ்க்கண்டவாறு மேலும் கூறலானான்.

இந்தச் சீதாதேவி இங்கே உயிருடன் இருப்பதால் என் தந்தையோ, இலங்கை மக்களோ நிம்மதியுடன் இல்லை; எனவே இவளை வாளால் வெட்டிவீழ்த்தக் கருதுகிறேன் என்கிறான் இந்திரசித்து. இவள் அழிந்தால் எல்லோரும் வாழ்வுபெறுவர் என்பது அவன் கருத்து.

37. 'அயோத்தி செல்வேன்' என்றும் அச்சுறுத்துதல்

''போமின் அடா! வினை போயது போலாம்;
ஆம் எனில், இன்னும் அயோத்தியை அண்மி
கா மின்; அது இன்று கனல் கரி ஆக,
வேம்; அது செய்து, இனி மீள்குவென்'' என்றான். (8959)

(போயது-முடிந்துவிட்டது; போமின்-செல்வீர்களாக; ஆம்-ஆகும்/முடியும்; அண்மி-நெருங்கிச்சென்று; காமின்-காவல் செய்யுங்கள்; கனல்-நெருப்பு; வேம்-வேகும்/வெந்துபோகும்; மீள்குதல்-திரும்பி வருதல்; வினை-செயல்)

இந்திரசித்து அனுமனை நோக்கி ''அட குரங்கே! நான் இவளைக் கொல்லுவதுடன் முடிந்துபோய் விட்டது என்று நினைக்கிறாயா? அதுதான் இல்லை; நான் இப்போதே அயோத்தி சென்று அந்நகரை நெருப்புக்கு இரையாக்கிய பின்தான் இங்கு திரும்பிவருவேன். அது நெருப்பில் வெந்து கரியாகப்போகிறது. உங்களால் முடியும் என்றால் அயோத்திக்குச் செல்லுங்கள்; சென்று அந்நகரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்'' என்று சவால் விடுகிறான் இந்திரசித்து.

'ஆம்' என்பது ஆகும் என்பதன் இடைக்குறை. 'வேம்' என்பது வேகும் என்பதன் இடைக்குறை; போமின், காமின் என்பது ஏவல் பன்மைவினைமுற்று. 'அடா' என்பது இகழ்ச்சிக்குறிப்பு

38. ''தம்பியர் தம்மொடு தாயரும் ஆயோர்,
உம்பர் விலக்கிடினும் இனி உய்யார்;
வெம்பு கடுங்கனல் வீசிடும் என் கை
அம்புகளோடும் அவிந்தனர் அம்மா!'' (8960)

Koviloor Digital Library

(உம்பர்-தேவர்கள்; விலக்குதல்-தடுத்தல்; உய்தல்-பிழைத்திருத்தல்; அவிதல்-இறத்தல்)

''உன்னுடைய தலைவனான இராமபிரானின் தம்பியர் இருவருடன் அவன் தாயர் மூவரும், மற்றும் அனைவரும் என் கையிலுள்ள உக்கிரமான கொடிய வில்லினால் நிச்சயம் இறந்துபடுவர்; தேவர்களே வந்து தடுத்தாலும் அவர்கள் உயிர்பிழைத்து இனி வாழ முடியாது'' என்கிறான் இந்திரசித்து.

'அவிந்தனர்' என்பது உறுதி பற்றிவந்த காலவழுவமைதி. 'அவிவர்' என்றே வரவேண்டும். அம்பின் வலிமை புலப்படுத்த 'வெம்பு கடுங்கனல் அம்பு' என்றார் என்க.

39. "இப்பொழுதே கடிது ஏகுவென் யான்; இப்
புட்பக விமானம் அதில்புக நின்றேன்;
தப்புவரே அவர், சங்கைஇலா என்
வெப்புறு வாளிகள் ஓடி விரைந்தால்?" (8961)

(மானம்-விமானம்; கடிது-விரைந்து; சங்கை-கணக்கு/எண்ணிக்கை; வெப்பு-வெம்மை)

''நான் இப்பொழுதே விரைந்து செல்வேன்; இந்தப் புட்பக விமானத்தில் செல்லுவதற்காகத்தான் நிற்கிறேன். இலக்குத் தப்பாததும், சந்தேகத்திற்கு இடமில்லாததும் அளவற்றதும், கொடியதுமான என்னுடைய அம்புகள் விரைந்தோடிச் சென்று அவர்களைத் தாக்கினால், அதனின்றும் அவர்கள் தப்பிப் பிழைத்துப்போய் விடுவார்களோ?'' என்று கேட்கிறான் இந்திரசித்து.

புட்பகவிமானம் குபேரனிடமிருந்து இராவணனால் கவர்ந்து கொள்ளப்பட்டது என்றும், அது தெய்வீகத்தன்மை பொருந்தியது என்றும் முன்பே கண்டு வந்திருக்கிறோம். 'சங்கை' என்ற சொல் சந்தேகம், ஐயம் என்ற பொருள்களுடன் எண்ணிக்கை, கணக்கு என்ற பொருள்களையும் தரும். 'வெப்புறு' என்பது அவன் அம்புகளின் கொடுமையைப் புலப்படுத்தியது.

40. இந்திரசித்தன் மாயாசீதையை வெட்டுதல்

"ஆளுடையாய்! அருளாய், அருளாய்!" என்று
ஏழை வழங்குறு சொல்லின் இரங்கான்,
வாளின் எறிந்தனன்; மாகடல் போலும்
நீள்உறு சேனையினோடு நிமிர்ந்தான். (8962)

(ஏழை-எளியவள்/சீதாதேவி; வழங்குதல்-சொல்லுதல்/முறையிடுதல்; எறிதல்-வெட்டுதல்; நீள்-நெடிய; நிமிர்தல்-உயர்ந்து பறத்தல்)

Koviloor Digital Library

''என்னை அடிமையாக உடைய வேந்தனே! எனக்கு அருள் புரிவாயாக! அருள்புரிவாயாக! என்று அந்த எளியவளான மாயா சீதை கெஞ்சிக் கேட்டுக்கொண்டும், அதற்குச் சற்றும் இரங்காதவனாய் அவளைத் தன் வாட்படையினால் வெட்டி வீழ்த்தினான்; பின்னர் தன்னுடைய பெரிய கடல்போன்ற நெடிய படைகளோடும் புட்பகவிமானத்தில் ஏறிப் பறந்து சென்றான்.

'ஆளுடையாய்' என்று உண்மையான சீதாதேவி ஒருக்காலும் சொல்லமாட்டாள். இது மாயாசீதையின் கெஞ்சல் என்பதையும் நாம் இப்பொழுது மாயாசீதையைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். 'நிமிர்தல்' என்ற சொல் உயர்தல் என்ற பொருளைத்தரும். இங்கே நிமிர்ந்தான் உயரே பறந்து சென்றான் என்று பொருள் கொள்ளப்பட்டது.

41. அனுமன் மூர்ச்சித்து விழுதல்

தென்திசை நின்று வடாது திசைக்கண்
பொன்திகழ் புட்பகம் மேல்கொடு போனான்;
ஒன்றும் உணர்ந்திலன்; மாருதி உக்கான்;
வென்றி நெடுங்கிரி போல விழுந்தான். (8963)

(வடாது-வடக்கே உள்ளது/வடதிசை; திகழ்தல்-விளங்குதல்; உக்கான் -உயிர்ப்பு இழந்தான்)

தான் இருக்கும் தென்திசையினின்றும் இந்திரசித்து அயோத்தி நகர் இருக்கும் வடதிசையின் பக்கம் நோக்கித் தனது பொன்மயமான, அழகிய புட்பக விமானத்தின்மேல் ஏறிச் சென்றான். அதுகண்ட அனுமன் என்ன நடக்கிறது என்பது ஒன்றும் அறிந்துகொள்ள முடியாதவனாய் உயிர்ப் பிழந்தான். வெற்றி பொருந்திய ஒரு பெரிய மலை தரையில் சாய்வது போலத் தரையில் மூர்ச்சித்து விழுந்தான்.

'வடாது' என்பது வடக்கே உள்ளது என்ற பொருளைத்தரும். 'வடாது பனிபடு நெடுவரை' என்பது புறநானூறு-6. 'உக்கான்' என்ற சொல் உயிர்ப்பிழந்தான், மூர்ச்சித்து விழுந்தான் என்ற பொருளைத்தரும். 'வென்றி நெடுங்கிரி' அனுமனுக்கு ஒப்பு.

42. இந்திரசித்து நிகும்பலைக் கோயிலை அடைதல்

போய், அவன் மாறி நிகும்பலை புக்கான்;
தூயவன் நெஞ்சு துயர்ந்து சுருண்டான்;
ஓய்வொடு நெஞ்சம் ஒடுங்க உலர்ந்தான்;
ஏயன பன்னினன், இன்னன சொன்னான். (8964)

Koviloor Digital Library

(துயர்ந்து-துயரம் அடைந்து; ஏயன-தோன்றின/பொருந்தின; பன்னுதல்-திரும்பத்திரும்பச் சொல்லுதல்; மாறி-வேறாக; ஓய்வு-தளர்ச்சி)

அயோத்தி நோக்கிப் போவதாகச் சொல்லிவிட்டு வடக்குத் திசைப் பக்கம் சென்றவனான இந்திரசித்து, சற்றுதூரம் சென்றபின் தன் பாதையை மாற்றிக்கொண்டு இலங்கைக்கு வெளிப்புறத்தே உள்ள நிகும்பலை என்னும் இடத்திலுள்ள கோயிலை அடைந்தான். இங்கே இந்த வஞ்சகச் செயல்பற்றி ஒன்றும் அறியாதவனான தூயவனான அனுமன், தன் நெஞ்சு துயரமடைந்து உடல் நடுங்கி சுருண்டு விழுந்தான். தளர்ச்சியுற்று, மனம் ஒடுங்கிப்போக, வற்றி வறண்டு போனான்; அவன் தன் மனத்தில் தோன்றிய சொற்களைப் பின்வருமாறு கூறிப் பலமுறை புலம்பலானான்.

'துயர்ந்து' என்ற சொல் கம்பனால் உருவாக்கப்பட்ட புதுச்சொல். துயரடைந்து என்று பொருள்படும். முன்பு 'ஓட்டம் தந்து' என்ற சொல்லை 'ஓட்டந்து' என்று கூறினாற்போல எனக்கொள்க.

43. அனுமனின் ஆறாத்துயர்

''அன்னமே!' என்னும் 'பெண்ணின் அருங்குலக்கலமே!' என்னும்;
'என் அமே!' என்னும்; 'தெய்வம் இல்லையோ யாதும்?' என்னும்;
'சின்னமே செய்யக் கண்டும், தீவினை நெஞ்சம் ஆவி
பின்னமே ஆயது இல்லை என்னும்; பேராற்றல் பேர்ந்தான். (8965)

(பேர்தல்-விட்டு நீங்குதல்/குறையப்பெறுதல்; கலம்-அணிகலன்; அமே-அம்மையே; சின்னம் செய்தல்-சின்னபின்ன மாக்குதல்; பின்னமாதல்-பிளந்துபோதல்; பின்னம்-பிளவு)

தனது பெரிய வலிமையெல்லாம் தன்னிடமிருந்து நீங்கப் பெற்றவனான அனுமன், அவ்வாறு இந்திரசித்தனால் வாளால் வெட்டி வீழ்த்தப்பட்ட மாயாசீதையை உண்மையான சீதாதேவி என்று கருதிக் கொண்டு, ''அன்னம் போன்று மென்மையானவளே! அருமையான பெண்குலத்திற்கே ஒரு சிறந்த அணிகலன் போன்றவளே! என் தாயே!'' என்று அரற்றுவான்; மேலும் ''உன்னை இந்த நிலையில் கண்டும் அதைத் தடுப்பதற்கு இங்கு எந்தத் தெய்வமும் இல்லையோ?'' என்பான்; உன்னை இவ்வாறு என் கண்முன்னே சின்னபின்னமாக்கியதைக் கண்டபின்பும், பாவியாகிய என்னுடைய மனமோ, உயிரோ இருகூறாகப் பிளவுபடாமல் போயிற்றே'' என்றும் அரற்றலானான்.

'அமே' என்பது 'அம்மே' என்பதன் இடைக்குறை. தாயே என்று பொருள்படும். 'என் அமே' என்றது தனக்குத் தாயுமானவள் என்றதைக் குறித்தது எனக்கொள்க. ''தெய்வம் இல்லையோ யாதும்?'' என்பது, ''தெய்வமும் உண்டு கொல்? தெய்வமும் உண்டுகொல்'' என்னும்

Koviloor Digital Library

சிலப்பதிகாரத்தில் ஊர்சூழ் வரியில் கண்ணகியின் அரற்றலை நினைவுபடுத்துவதை உணர்க. 'அன்னமே' என்றது அவளின் மென்மைக் குணத்தையும், நடையையும் குறித்தது. பெண்ணின் அருங்குலக்கலமே என்றது அவள் கற்பின் பெருமையைக் குறித்தது.

44. எழுந்து, அவன் மேலே பாய எண்ணும்; பேர் இடரில் தள்ளி
விழுந்து, வெய்து உயிர்த்து, விம்மி, வீங்கும்; போய்மெலியும்; வெந்தீக்
கொழுந்துகள் உயிர்க்கும்; யாக்கை குலைவுறும்; தலையே கொண்டுற்று
உழும் தரைதன்னை; பின்னும் இனையன உரைப்பதானான். (8966)

(இடர்-துன்பம்; தள்ளி-நீக்கி; வெய்து-வெப்பமாக; உயிர்ப்பு-மூச்சுக் காற்று; விம்முதல்-திணறுதல்/தேம்புதல்; யாக்கை-உடல்; குலைவுறுதல் -நடுங்குதல்)

அவ்வாறு நின்றிருந்த அனுமன் மேலே பாய்ந்துவிடலாம் என்று கருதுவான்; பெரிய துயரத்திற்கு ஆட்பட்டு கீழே விழுந்து, வெப்பப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, திணறித் தேம்புவான்; உடல் பருக்கப் பெறுவான்; பின்னர் சற்று மெலிவடைவான்; கொடிய நெருப்புக் கொழுந்து சிந்தும்படி பெருமூச்சு விடுவான்; உடல் நடுங்குவான்; தன் தலையையே கலப்பையாகக் கொண்டு நிலத்தை உழுவதுபோலச் சாய்வான்; பின்னர் கீழ்வருமாறு கூறலானான்.

அனுமன் அடைந்த மெய்வெளிப்பாடு விளக்கப்படுகிறது. 'தலையே கொண்டுற்று உழும் தரைதன்னை' என்பது தரையில் தன்தலையால் முட்டி மோதிக்கொண்டு துன்புறுவான் என்று பொருள்படும்.

45. "முடிந்தது நம்தம் எண்ணம்; மூ உலகிற்கும் கங்குல்
விடிந்தது' என்று இருந்தேன்; மீள வெந்துயர் இருளின் வெள்ளம்
படிந்தது; வினையச் செய்கை பயந்தது; பாவி! வாளால்
தடிந்தனன் திருவை; அந்தோ! தவிர்ந்தது தருமம் அம்மா!" (8967)

(கங்குல்-இருள்; வெள்ளம்-பெருக்கு/பிழம்பு; வினையம்-வஞ்சகம்/ சூழ்ச்சி; பயத்தல்-பயனளித்தல்; தவிர்தல்-நீங்குதல்; திரு-திருமகள்/சீதா தேவி; தடிதல்-வெட்டிவீழ்த்துதல்; விடிதல்-இருள் நீங்குதல்; அந்தோ- ஐயோ)

''சீதாதேவியை மீட்கவேண்டும் என்று நாம் கருதியிருந்த எண்ணம் இவ்வாறு பயனற்றுப் போய்விட்டதே! அதனால் மூன்று வகைப்பட்ட உலகங்களிலும் படிந்திருந்த இருள்போர்வை நீங்கி விடியலாகும் என்று கருதியிருந்தேனே! மீண்டும் கொடிய துயரமாகிய இருட்பிழம்பு வந்து மூடிக்கொண்டு விட்டதே; அரக்கர்களின் வஞ்சகச் செயலே அவர் களுக்குப் பயனளித்து விட்டதே; பாவியான இந்திரசித்து, தன் வாளால் இலக்குமியாகிய சீதாதேவியை வெட்டி வீழ்த்திவிட்டானே! ஐயோ!

Koviloor Digital Library

தருமம் நீங்கிப்போய்விட்டதே!'' என்று அழுது அரற்றுகின்றான் அனுமன்.

'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்று கருதியிருந்தேனே! இப்பொழுது அறம் தோற்றுப் பாவம் வென்றுவிட்டதே! என்று அரற்றுகிறான் அனுமன் என்பதாம். 'அந்தோ' என்பது இரக்கக்குறிப்பு; 'அம்மா' என்பது வியப்புக் குறிப்பு; நிகழக்கூடாதது நிகழ்ந்ததால் வியப்பு எனக்கொள்க. 'கங்குல்' என்பது இரவு என்ற பொருளில் துன்ப இருளையும் 'விடிதல்' என்பது துன்ப இருள் நீங்குதலையும் உணர்த்தியது.

46. "பெருஞ் சிறைக் கற்பினாளை, பெண்ணினைக் கண்ணின் கொல்ல,
இருஞ் சிறகு அற்ற புள்போல், யாதும் ஒன்று இயற்றல் ஆற்றேன்;
இருஞ் சிறை அழுந்துகின்றேன்; எம்பிரான் தேவி பட்ட
அருஞ் சிறை மீட்ட வண்ணம், அழகிது பெரிதும் அம்மா!" (8968)

(சிறை-காவல்/தற்காப்பு/சிறகுகள்; புள்-பறவை; அழுங்குதல்-வருந்துதல்; எம்பிரான்-என்தலைவன்; தேவி-மனைவி; இறை-சிறிது; இருஞ்சு-இருந்து; யாதும்-எதுவும்)

பெரிய கற்பு என்னும் காவலைக் கொண்டிருப்பவளை, எளிமையான பெண்ணாகிய சீதாதேவியை அந்தப் பாவி அரக்கன் இந்திரசித்து என் கண் எதிரிலேயே வெட்டி வீழ்த்தவும், அதைக் கண்டும், பெரிய சிறகுகள் இல்லாத பறவையைப்போல ஏதொன்றும் செய்ய இயலாது வாளா இருந்துவிட்டேனே! இப்பொழுது இங்கிருந்து சிறிது வருத்தத்தில் ஆழ்ந்து போகின்றேனே! என்னுடைய தலைவனான இராமபிரானின் மனைவியாகிய சீதாதேவியை தங்குதற்கரிய அசோகவனச் சிறையிலிருந்து மீட்க நான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாம் மிக அழகாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன'' என்று தன்னைத்தானே நொந்து கொள்ளுகிறான் அனுமன்.

சிறைக்காவலைக் காட்டிலும் நிறைக்காவலே சிறந்த காவல் என்பதைப் 'பெருஞ்சிறைக் கற்பினாளை' என்றார். 'சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை' என்பது குறள்-57. 'பெண்' என்பது எளிமையான வலிவற்ற பெண்ணாகிய சீதாதேவியைக் குறிக்கும். 'புள்' என்று பொதுவாகக் கூறினாலும், சீதாதேவியை இராவணனிடமிருந்து காப்பாற்றுவதற்காகப் போராடியபோது இரு சிறகுகளும் வெட்டப்பட்டு வீழ்ந்த சடாயுவையே குறிக்கும் எனக்கொள்க. சடாயுவின் பெருந்தன்மையும், வீரப்பாடும் தனக்கு இல்லாது போயிற்று என்று துன்புற்று வருந்துகிறான் அனுமன் என்பதாம்.

மூன்றாமடியில் உள்ள இருஞ்சிறை என்ற சொல் 'இருஞ்சு இறை' என்று பிரிக்கப்பட வேண்டிய சொல் கம்பன் பொதுவாக எந்தச் செய்யுளிலும் ஒரே எதுகையை இரண்டு அடியிலும் வைத்துப் பாடுவது இல்லை. இங்கே

Koviloor Digital Library

உ.வே.சா பதிப்பு 'பருஞ்சிறை' என்று கொண்டு பரு-பருத்த/பெரிய; சிறை-பெருந் துக்கமாகிய சிறை. என்று பொருள் தருகிறது. அதுவே பொருந்திவருதலும் காண்க. இருஞ்சு இறை என்று பிரிப்பது ஏதோ வலிந்து பொருள் கொள்வதற்காகப் பிரிப்பதுபோல் தோன்றுகிறது. 'அம்மா' என்பது இங்கே அசைச்சொல். 'அழகிது' என்பது இகழ்ச்சிக்குறிப்பு. 'நிறை' என்பதற்கு ''நெஞ்சைக் கற்புநெறி நிறுத்துதல்'' என்கிறார் பரிமேலழகர். கற்பாகிய காவலும் அவளைக் காக்கவில்லை; அவள் தன்னைத்தானே காத்துக் கொள்ள முடியாதவளாகவும் வலிவற்று இருந்துவிட்டாள்; என்னாலும் காப்பாற்ற முடியாமல் போயிற்றே என்று உளம் வருந்திக் கூறுகிறான் அனுமன்.

47. "பாதக அரக்கன், தெய்வப் பத்தினி, தவத்துளாளை,
பேதையை, குலத்தின் வந்த பிழைப்பு இலாதாளை, பெண்ணை
சீதையை, திருவை, தீண்டிச் சிறைவைத்த தீயோன் சேயே
காதவும், கண்டு நின்ற கருமமே கருணைத்து அம்மா!" (8969)

(பிழைப்பு-குற்றம்/பிழை; திரு-திருமகள்/சீதாதேவி; தீண்டுதல்-கவர்தல்/நெருங்குதல்; தீயோன்-பாவி; காதுதல்-கொல்லுதல்; கருமம்-செயல்)

''தெய்வத்தன்மை பொருந்திய கற்பின் கனலியை, தன் கணவன் இராமபிரானையே தியானித்துக் கொண்டு தவத்தில் பொருந்தியிருப்ப வளை, ஏதொன்றும் தீங்கறியாதப் பேதைக் குணமுடையவளை, நல்ல சிறந்த சனகன் குலத்தில் தோன்றியவளை, குற்றமற்றவளை, ஒரு பெண்ணை, சீதாதேவியை, இலக்குமியின் அம்சமானவளை, பாவியான தீய குணங்கள் நிரம்பப்பெற்ற அரக்கன் இராவணன் கவர்ந்து கொண்டு வந்து அசோகவனத்தில் சிறை வைத்திருக்கவும், அவனுடைய மகன் இந்திரசித்து அந்தச் சீதாதேவியை தன் வாட்படை கொண்டு வெட்டிக் கொல்லவும், அதனைப் பார்த்துக் கொண்டு ஏதொன்றும் செய்யஇயலாத நிலையில்-கையறு நிலையில் நிற்கின்ற நான்தான் எத்தனை கருணை மிக்கவன்!'' என்று தன்னைத்தானே நொந்துகொள்ளுகிறான் அனுமன்.

பாதகன் என்பதும் தீயோன் என்பதும் தீய குணங்களையுடைய பாவியான அரக்கன் இராவணனைக் குறிக்கும். 'தெய்வப்பத்தினி' என்பது முன்பு அயோத்தியா காண்டத்தில் கவிஞன் கைகேயியை அறிமுகப் படுத்தும்பொழுது கூறிய 'தெய்வக் கற்பினாள்' என்ற சொற்றொடரை நினைவுபடுத்த வேண்டும். இந்த அரக்கன் செய்தது ஒரு பாவம் இல்லை. பல பாவங்கள் என்று அடுக்கிக் கூறுவதை நோக்குங்கள். சீதாதேவியைக் கவர்ந்த பாவம், தெய்வப்பத்தினியைக் கொன்ற பாவம், தவத்தில் இருப்பவளைக் கொன்ற பாவம்; பேதையைக் கவர்ந்த பாவம்; குலத்தின் வந்தவளைக் கவர்ந்த பாவம்; குற்றமற்றவளைக் கொன்ற பாவம்; ஒரு பெண்ணைக் கொன்ற பாவம், இராமன் மனைவி சீதாதேவியைக் கொன்ற

Koviloor Digital Library

பாவம். என்று கவிஞன் இராவணனையும் இந்திரசித்தனையும் பாவத்தின் மொத்த உருவமாகச் சமைத்துக் காட்டியிருப்பதை நோக்குக. இங்கே 'தீண்டுதல்' என்பது கவர்தல் என்ற பொருளையே தரும். முன்பு இராவணன் சீதாதேவியைப் பன்னசாலையுடன் பெயர்த்தெடுத்து வந்தான் என்று கூறப்பட்டிருப்பதைக் கருதி இங்கே கவர்தல் என்ற பொருளையே கொள்ளவேண்டும். 'சேய்' என்பது இராவணன் புதல்வன் இந்திர சித்தனைக் குறிக்கும். 'கண்டு நின்ற கருமம்' என்பது இத்தகைய கொடுமையான செயலைத் தன் கண்களால் கண்டும் ஒன்றும் செய்ய இயலாது நின்ற கையறு நிலையைக் குறிக்கும். முன்பு குகன் இராம பிரானைத் தவக்கோலத்தில் கண்டதும் கூறிய, 'பார்குலாம் செல்வ! நின்னை இங்ஙனம் பார்த்தகண்ணை ஈர்கிலாக் கள்வனேன் யான்' என்று கூறியதையும் நினைவிற் கொண்டுவருக. 'கருணைத்து' என்பது இகழ்ச்சிக் குறிப்பு. கருணையற்றது என்ற எதிர்மறைப் பொருளைதரும். கருணையின் பாற்பட்டதன்று என்பது பொருள். 'அம்மா' என்பது வியப்புக்குறித்த இடைச்சொல்.

48. "கல்விக்கும் நிமிர்ந்த கீர்த்திக் காகுத்தன் தூதனாகி,
சொல்விக்க வந்து போனேன்; ஆய இத்துயர் செய்தாரை
வெல்விக்க வந்து, நின்னை மீட்பிக்க அன்று; வெய்தின்
கொல்விக்க வந்தேன் உன்னை; கொடும்பழி கூட்டிக் கொண்டேன்"
(8970)

(நிமிர்ந்த-உயர்ந்த; கீர்த்தி-புகழ்; காகுத்தன்-இராமபிரான்; சொல்விக்க -தெரிவிக்க; ஆயம்-கூட்டம்; வெய்தின்-கொடுமையாக; கூட்டுதல்-தேடுதல்)

"உயர்ந்த கல்வியறிவுக்கும் எட்டாத உயர்ந்த புகழையுடைய காகுத்தன் மரபில் வந்த இராமபிரானின் தூதுவனாக அவன் கூறியனுப்பிய சொற்களை உன்னிடம் சொல்லுவதற்காக, 'இராமதூதன்' என்ற முறையில் முன்பு வந்து போனேன்; இப்போது இந்தத் துயரத்தை உனக்குச் செய்த அரக்கர்கூட்டத்தை வெற்றி பெறுமாறு செய்யவே வந்திருக்கிறேன் போலும்! உன்னை இந்தச் சிறையினின்றும் மீட்பிக்கவும் வரவில்லை; கொடுமையான செயலாகிய உன்னைக் கொல்லுமாறு செய்யத்தான் வந்தேனோ! இந்தக் கொடுமையான பழிச்சொற்களை எனக்கு நானே தேடிக்கொண்டு விட்டேனே!" என்று அரற்றுகிறான் அனுமன்.

கல்வி என்பது அதனாலான அறிவையும், அறிவினாலான புலமையையும் குறிக்கும். எத்தகைய கல்விக்கும், அறிவுக்கும் புலமைக்கும் எட்டாத உயர்ந்த புகழுடைய குலம் காகுத்தன் குலம் எனப்பட்டது என்க. "புலவரையிறந்த புகழ் சால்தோன்றல்" என்பது புறநானூறு-21. பல துயரங்களைச் செய்த அரக்கர்களைக் கொல்விக்க வந்த நான் அவர்களை வெல்வித்தேன், வெற்றிபெறச் செய்துவிட்டேன்; உன்னை மீட்கவந்த

Koviloor Digital Library

நான் உன்னைக் கொல்வித்தேன் என்று தன்னைத்தானே நொந்து கூறிக்கொள்ளுகிறான் அனுமன். 'சொல்விக்க, வெல்விக்க, கொல்விக்க என்பன சொல்லுதல், வெல்லுதல், கொல்லுதல் என்றவற்றின் பிறவினைச் சொற்கள் எனக்கொள்க.

49. "வஞ்சியை எங்கும் காணாது, உயிரினை மறந்தான் என்ன,
செஞ்சிலை உரவோன், தேடித் திரிகின்றான் உள்ளம் தேற,
"அஞ்சொலான் இருந்தாள் கண்டேன்" என்ற யான், அரக்கன் கொல்லத்
துஞ்சினாள்" என்றும் சொல்லத் தோன்றினேன், தோற்றம் ஈதால்!" (8971)

(வஞ்சி-சீதாதேவி; செம்-செம்மையான; உரவு-வலிமை; தேறுதல்-தெளிதல்; அம்-அழகிய; துஞ்சுதல்-இறத்தல்; தோற்றம்-பிறப்பு; ஈது-இத்தகையது)

''வஞ்சிக்கொடி போன்ற நுண்ணிய இடையையுடைய தனது மனைவியான சீதாதேவியை, எங்கும் காணமுடியாது, தன் உயிரையே மறந்ததுபோல் நடைப்பிணம்போல் தேடித் திரிகின்றவனாகிய, செம்மையான வில்லாற்றல் படைத்த வீரன் இராமபிரானின் உள்ளம் தெளிவடையுமாறு, முன்பு அசோகவனத்திற்கு வந்து உன்னைக் கண்டு திரும்பிச்சென்று ''அழகிய சொற்களையுடைய சீதாதேவி உயிருடனும், கற்புடனும் இருக்கிறாள் என்பதைக் 'கண்டனென் கற்பினுக்கணியைக் கண்களால்'' என்று கூறி அவனை மகிழ்வித்த நானே, இப்பொழுது ''அரக்கனாகிய இந்திரசித்து அவளைக் கொன்றுபோட்டுவிட்டான், அவள் இறந்துபட்டாள்'' என்று அவனிடம் சென்று கூறும்படியான முரண்பட்ட ஒரு நிலைமை வந்துற்றதே; இதற்குத்தான் நான் இப்பிறப்பை எடுத்தேனோ! பிறப்பின் பயன் இவ்வாறு ஆயிற்றே!'' என்று நொந்து அரற்றுகிறான் அனுமன்.

'வஞ்சி' என்பது வஞ்சிக்கொடி போன்ற நுண்ணிய இடையையுடைய சீதாதேவியைக் குறித்தது. 'உயிரினை மறத்தல்' என்பது 'நடைப்பிணம்' என்ற பொருளைக்கொண்டது. 'துஞ்சினாள்' என்பது இறந்துபட்டான் என்பதன் மங்கல வழக்குச்சொல்.

50. "அருங்கடல் கடந்து, இவ்வூரை அள்ளி மடுத்து வெள்ளக்
கருங்கடல் கட்டி, மேரு கடந்து ஒரு மருந்து காட்டி,
'குரங்கு இனி உன்னோடு ஒப்பது இல்' எனக் களிப்புக் கொண்டேன்"
பெருங்கடல் கோட்டம் தேய்த்தது ஆயது என் அடிமைப் பெற்றி! (8972)

(அள்-அடர்ந்த/செறிந்த; எரி-நெருப்பு; வெள்ளம்-நீர்; ஒரு-ஒப்பற்ற; பெற்றி-தன்மை; கோட்டம்-வாசனைப்பொருள்/பெருங்காயம்; அடிமை -தொண்டு)

Koviloor Digital Library

''கடத்தற்கரிய கடலைக்கடந்து இலங்கை வந்து, இந்தப் பெரு நகரத்தைச் செறிந்த நெருப்புக்கு இரையாக்கி, நீர் நிறைந்த கருங்கடலின் குறுக்கே சேது அணைகட்ட உதவிசெய்து, மேரு மலையையும் கடந்து சென்று ஒப்பற்றதான சஞ்சீவி மூலிகையைக் கொண்டுவந்து காட்டி, உயிரிழந்தவரையெல்லாம் பிழைக்கச்செய்து, அதனால் மற்ற எல்லோரும் ''குரங்குகளிலேயே தொண்டு செய்வதில் அனுமனைப்போலச் சிறந்த ஆற்றலுடைய வேறு ஒருவரும் இல்லை'' என்று புகழ்ந்ததால் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இப்போது அந்த அரிய செயல்கள் எல்லாம் பெரிய கடலில் ஒரு சிறிய வாசனைப் பொருளைக் கரைத்ததுபோலப் பயனற்றதாகப் போய்விட்டதே! என் அடிமைத்தொண்டு இப்படி வீணாய்ப் போயிற்றே!'' என்று நொந்து கொள்ளுகிறான் அனுமன்.

அருங்கடல் கடந்தது கடல்தாவு படலத்திலும், இவ்வூரை அள்ளரி மடுத்தது, இலங்கை எரியூட்டு படலத்திலும், வெள்ளக் கருங்கடல் கட்டியது சேதுபந்தனப் படலத்திலும், மேருகடந்து ஒரு மருந்து காட்டியது மருத்துமலைப் படலத்திலும் நாம் கண்டு வந்தவற்றை நினைவிற்கொள்க. ''மருந்து காட்டி'' என்ற சொற்றொடர் நுனித்து உணரற்பாலது. மருத்துமலையை எடுத்துக்கொண்டு நேரே போர்க்களத்திற்குள் வாராது, போர்க்களத்தின் மேலேயே நின்று, அதனாலேயே இறந்தவர்களை உயிர் பெற்று எழச்செய்த தன்மையைக் குறிக்கும். 'பெருங்கடல் கோட்டம் தேய்த்தது ஆயது' என்பது இப்பொழுது வழக்குச்சொல்லில் 'கடலில் பெருங்காயம் கரைத்ததுபோல' என்பதை ஒத்தது எனக்கொள்க. 'கோட்டம்' என்பது 'கோஷ்டம்' என்ற வடசொல்லின் தமிழாக்கம். வாசனைப்பொருள் என்ற பொருளைத்தரும். 'கடலிடைக் கோட்டம் தேய்த்துக் கழிவது கருமமென்றால்' என்ற கும்பகருணன் கூற்றும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

51. விண்டு நின்று, ஆக்கை சிந்தப் புல்உயிர் விட்டிலாதேன்,
கொண்டு நின்றானைக் கொல்லக் கூசினேன்! எதிரே கொல்லக்
கண்டு நின்றேனே நன்று; என்கையினின், கலத்தின் வெண்சோறு
உண்டு நின்று, உய்யவல்லேன்; எளியனோ? ஒருவன் உள்ளேன்!''(8973)

(கூசுதல்-தயங்குதல்/அஞ்சுதல்; ஆக்கை-உடம்பு; விண்டு-பிளந்து; புல்-அற்பமான; உய்தல்-உயிர்வாழ்தல்; ஒருவன்-ஒப்பற்றவன்)

''உன்னைத் தன் கைகளில் பற்றிக்கொண்டு நின்றவனாகிய இந்திர சித்தனைக் கொல்லுவதற்குத் தயங்கி அஞ்சி நின்றேனே! என் கண் எதிரிலேயே உன்னுடைய உடம்பை இரு கூறுகளாக்கிப் பிளந்து நின்றவனைக் கண்டபின்னும் இந்த அற்பமான உயிரைக் கையில் தாங்கிப் பிடித்துக்கொண்டு கனி, கிழங்குகளை உண்டு வாழ்வதற்காகவே உயிர் பிழைத்து நிற்கிறேனே! நான் சாதாரணமானவனா? ஒப்பற்றவனாகவே

Koviloor Digital Library

இருக்கிறேனே!'' என்று அனுமன் தன்னைத்தானே நொந்து கொள்ளுகிறான்.

இந்திரசித்து சீதாதேவியைக் கொல்லும் பொருட்டுத் தன் கைகளில் அவளைப் பிடித்திருந்த சமயத்தில் அவனைக் கொன்று சீதாதேவியின் உயிரைக் காப்பாற்றியிருக்க வேண்டும். அதனைச் செய்யத் தயங்கி நின்றது ஒரு குற்றம்; சீதாதேவி கொல்லப்பட்ட பின்னாவது, தன்னுடைய அற்பமான உயிரைப் போக்கிக் கொண்டிருக்கவேண்டும்; அவ்வாறு போக்கிக்கொள்ளாது இன்னும் உயிருடன் இருந்து உணவு உண்டு வாழ்ந்து கொண்டிருப்பது இரண்டாவது குற்றம் என்று தன்னையே பழித்துக் கொள்ளுகிறான் அனுமன் என்பதாம். 'வெண்சோறு' என்பது நேர் பொருளைத் தாராது. உண்ணும் பொருட்களாகிய காய், கனி, கிழங்குகளையே குறிக்கும். 'கூசினேன்' என்ற சொல் அஞ்சுதல் என்ற பொருளையும் தரும். சீதாதேவியைக் கையில் பற்றிக் கொண்டிருக்கும் இந்திரசித்தனைத் தான் கொல்ல முயன்றால், சீதாதேவிக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிடுமோ? என்று அஞ்சி, தயங்கி, வாளா இருந்து விட்டான் என்ற விரிந்த பொருளைத் தருதலும் உணர்க. அவளை மீட்க முடியாது போனால் ஒன்று அவனைக் கொன்றிருக்க வேண்டும், அல்லது சீதாதேவி கொல்லப்பட்ட பிறகாவது, தான் உயிர்வாழாது, இறந்து பட்டிருக்க வேண்டும் என்பது அனுமன் கருத்து.

52. என்ன நின்று இரங்கி, 'கள்வன், அயோத்திமேல் எழுவென்' என்று,
சொன்னதும் உண்டு; போன சுவடு உண்டு; தொடர்ந்து செல்லின்,
மன்னன் இங்கு உற்ற தன்மை உணர்கிலன், வருவது ஓரேன்;
பின் இனி முடிப்பது யாது?'' என்று இரங்கினான், உணர்வு பெற்றான்.
(8974)

(சுவடு-அடையாளம்; உற்றது-நிகழ்ந்தது; ஓர்தல்-அறிதல்; எழுதல்-படையெடுத்துச் செல்லுதல்; கள்வன்-இந்திரசித்து; மன்னன்-இராம பிரான்; இரங்குதல்-மனம் வருந்துதல்)

என்று எண்ணிக்கொண்டே மனம் வருந்தி நின்றவனான அனுமன், ''இந்தக் கள்வனான இந்திரசித்து, அயோத்தியின்மேல் படையெடுத்துச் சென்று, அங்கிருப்பவர்களைக் கொன்று விடுவேன் என்று சொல்லிச் சென்றானே! அவன் அவ்வாறு சொன்னவாறே சென்றதற்கான அடை யாளங்களையும் விட்டுச் சென்றிருக்கிறானே! நாம் இப்போது இவனைப் பின்தொடர்ந்து செல்வதா? அல்லது இங்கு நிகழ்ந்தவற்றை இராம பிரானிடம் தெரிவிக்க விரைந்து செல்வதா? ஒன்றும் புரியவில்லையே! இவனை நாம் தொடர்ந்து சென்றால் இங்கு இந்திரசித்தனால் சீதாதேவி கொல்லப்பட்டாள் என்ற செய்தியே மன்னனாகிய இராமபிரானுக்குத் தெரியாமல் போய்விடுமே!'' என்று சற்று அறிவு மயங்கிப் பின் ஒருவாறு திட உணர்ச்சிபெற்றான் அனுமன்.

Koviloor Digital Library

'சுவடு' என்ற சொல் அடையாளம் என்ற பொருளைத்தரும். முன்பு அயோத்திநகர் நீங்கிய இராமபிரான் சுமந்திரனை அழைத்துத் தேர்ச்சுவடு தெரியும்படி தேரைச் செலுத்திச்செல்க என்று கூறியதையும் இங்கு நினைவு கூர்க. மழைவந்ததற்கும், புயல் வந்ததற்கும் நிலத்தில் சுவடுகள் தெரியும். ''தென்றல் வந்து போனதற்குச் சுவடா உண்டு?'' என்பார் கண்ணதாசன்.

53. அனுமன் இராமபிரானுக்கு இங்கு நிகழ்ந்தது கூறுதல்

உற்றதை உணர்த்தி, பின்னை உலகுடை ஒருவனோடும்,
இற்று உறின், இற்று மாள்வென்; அன்று எனின், எண்ணம் எண்ணி,
சொற்றது செய்வென்; வேறுஓர் பிறிது இலன் துணிவிற்று' என்னா,
பொன் தடந்தோளன், வீரன் பொன்அடி மருங்கில் போனான். (8975)

(உற்றது-நிகழ்ந்தது; இறுதல்-உயிர்விடுதல்/அழிதல்; ஒருவன்-ஒப்பற்றவன்/இராமபிரான்; மாள்தல்-இறந்துபோதல்; எண்ணம்-கருத்து; சொற்றது-சொன்னது; தட-பெரிய; பொன்-அழகிய; மருங்கு-பக்கம்; துணிவு-தீர்மானம்/முடிவு)

அவ்வாறு ஒரு திடஉணர்ச்சி பெற்ற, பொன்நிறம் வாய்ந்த அகன்ற தோள்களையுடையவனானஅனுமன், ''நாம் இப்போது இராமபிரானிடம் சென்று, இங்கு நிகழ்ந்தது அனைத்தையும் அவனுக்கு எடுத்துக் கூறவேண்டும் அதனைக்கேட்ட பின்னர், அவன் உயிர்விடுதலும் கூடும்; அவ்வாறு அவன் உயிர் நீங்கப்பெற்றால் இவ்வுலகங்களையெல்லாம் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருப்பவனான ஒப்பற்ற இராமபிரானோடு நானும் சேர்ந்து என்னுயிரையும் விட்டுவிடுவேன். அவ்வாறு அவன் செய்யவில்லை என்றால் அவன் நன்றாக ஆராய்ந்து பார்த்துச் சொல்லுகின்ற அவன் கருத்துக்கிணங்க அவன் எனக்குக் கட்டளையிட்டுச் சொல்லுவனவற்றைச் செய்து முடிப்பேன்; இதனைத்தவிர வேறு ஓர் எண்ணம் எனக்கு இல்லை; இதுதான் என்னுடைய தீர்க்கமான முடிவு'' என்று கூறிக்கொண்டே வீரனான இராமபிரானின் அழகிய திருவடிகளின் அருகில் சென்று சேர்ந்தான்.

'உலகுடை ஒருவன்' என்பது ஓங்கி உலகளந்த உத்தமன் அம்சமான இராமபிரானைக் குறிக்கும். இராமபிரான் செய்வதைத் தானும் செய்வது; இல்லையென்றால் அவன் சொல்வதைச் செய்வது என்று தீர்மானிக்கிறான் அனுமன் என்பதாம்.

54. சிங்கஏறு அனைய வீரன் செறிகழல் பாதம் சேர்ந்தான்;
அங்கமும், மனமும், கண்ணும், ஆவியும் அலக்கண் உற்றான்;
பொங்கிய பொருமல் வீங்கி, உயிர்ப்பொடு புரத்தைப் போர்ப்ப,
வெங்கண் நீர் அருவிசோர, மால்வரை என்ன வீழ்ந்தான். (8976)

Koviloor Digital Library

(சிங்கஏறு-ஆண்சிங்கம்; செறி-நெருங்கிய; அங்கம்-உடம்பு; ஆவி-உயிர்; அலக்கண்-பெருந்துன்பம்; பொருமுதல்-தேம்புதல்; வீங்குதல்-பெருகுதல்; உயிர்ப்பு-பெருமூச்சு; சோர்தல்-பொழிதல்; மால்வரை-பெரியமலை; போர்த்தல்-மூடுதல்; வெம்-வெப்பம்மிக்க; புரம்-உடல்)

அவ்வாறு இராமபிரான் பக்கம் சென்றடைந்த அனுமன், ஆண்சிங்கம் போன்றவனாகிய வீரனான இராமபிரானின் வீரக்கழல் அணியப்பெற்ற திருவடிகளைப் பற்றிக்கொண்டான்; தன் உடம்பும், உள்ளமும், கண்களும், உயிரும் ஒருசேரப் பதைக்கப் பெருந்துன்பம் அடைந்தான்; அதனால் பொங்கி எழுந்த அழுகையினால் தேம்பி அழுது, பெருமூச்சு விட்டுக்கொண்டு, அவன் உடல் முழுவதையும் அத்துக்கம் மூடிக்கொள்ள, வெப்பம் மிகுந்த கண்ணீர் அருவிபோலப் பொழிய, ஒரு பெரிய மலை தரையில் வீழ்ந்ததுபோல இராமபிரானின் திருவடிகளில் வீழ்ந்தான்.

அவன் அங்கமும், மனமும், கண்ணும், ஆவியும் அலக்கண் உற்றிருந்ததனால் ஏதும் பேசமுடியாது, பொங்கி பொருமல் வீங்கி, பெருமூச்சு விட்டுக்கொண்டு கண்களில் நீர்மல்கத் தரையில் விழுந்தான் என்பதாம். புரம்-என்பது உடலைக் குறிக்கும். அனுமன் தோற்றத்திற்கு மால்வரையும், அவன் கண்ணீருக்கு அம்மலையிலிருந்து விழும் அருவியும் உவமைகள். பொருமுதல் என்பது அழுகையை வெளிக் காட்டாது உள்ளேயே அடக்கிக்கொண்டு தேம்பி அழுவதைக் குறிக்கும். விம்முதல் என்று கொள்க. உள்ளப்பொருமல் உடலையும் நடுங்கும்படி செய்யும். எனவே 'உயிர்ப்பொடு புரத்தைப் போர்ப்ப' என்றார் என்க. துன்பத்தில் பெருகும் கண்ணீரை 'வெம்கண் நீர்' என்று கூறியதை நுனித்து உணர்க.

55. வீழ்ந்தவன் தன்னை, வீரன், 'விளைந்தது விளம்புக!' என்னா,
தாழ்ந்து, இரு தடக்கை பற்றி எடுக்கவும், தரிக்கிலாதான்,
'ஆழ்ந்து எழு துன்பத்தாளை, அரக்கன், இன்று அயில்கொள் வாளால்
போழ்ந்தனன்' என்னக்கூறிப் புரண்டனன் பொருமுகின்றான். (8977)

(தாழ்ந்து-குனிந்து; அயில்கொள்-கூர்மைகொண்ட; போழ்தல்-பிளத்தல்/வெட்டுதல்; தரித்தல்-தாங்குதல்; எடுத்தல்-தூக்குதல்)

அவ்வாறு தன் திருவடிகளில் வீழ்ந்தவனான அனுமனை வீரனான இராமபிரான், 'அங்கே என்ன நடந்தது? கூறுவாயாக!' என்று குனிந்து, தனது இரு பெரிய கைகளாலும் அவனைத் தூக்கவும், துன்பம் பொறுக்க முடியாதவனான அனுமன், ''மிக்க பெருந்துன்பத்தை உடையவளான சீதாதேவியை, அந்த அரக்கனான இந்திரசித்து இப்பொழுது கூர்மைமிக்க தன் வாட்படையால் வெட்டி வீழ்த்திவிட்டான்'' என்று சொல்லிக் கொண்டே மனம் வெதும்பித் தரையில் வீழ்ந்து புரளத்தொடங்கினான்.

Koviloor Digital Library

56. இராமபிரான் உற்ற துயரம்

துடித்திலன்; உயிர்ப்பும் இல்லன்; இமைத்திலன்; துள்ளிக் கண்ணீர்
பொடித்திலன்; யாதும் ஒன்றும் புகன்றிலன்; பொருமி, உள்ளம்
வெடித்திலன்; விம்மிப்பாரின் வீழ்ந்திலன்; வியர்த்தான் அல்லன்;
அடுத்துள துன்பம் யாவும் அறிந்திலர், அமரரேயும். (8978)

(உயிர்ப்பு-பெருமூச்சு; பொடித்தல்-தோன்றுதல்; பொருமுதல்-தேம்புதல்; வெடித்தல்-பிளத்தல்; பார்-பூமி/தரை/நிலம்; அமரர்-தேவர்கள்; துள்ளி-துளி; அடுத்துள-நெருங்கி உள்ள)

இந்திரசித்தனால் சீதாதேவி வெட்டப்பட்டாள் என்ற செய்தியை அனுமன்கூறக் கேட்ட இராமபிரான், உயிரும், உடலும் உள்ளமும் துடிக்கப்பெற்றானில்லை; பெருமூச்சுக்கூட விடவில்லை; கண்கள் இமைக்கவில்லை; கண்ணீர்த்துளிகள் கண்களினின்றும் தோன்றவில்லை; எதுவும் ஒன்றும் பேசவும் இல்லை; உள்ளம் தேம்பிப் பிளவுபடவில்லை; பொருமித் தரையில் விழுந்து அரற்றவில்லை; உடம்புகூட வியர்க்க வில்லை; இதனைக் கண்ட தேவர்கள்கூட, பின்னால் என்ன துன்பங்கள் விளையப் போகின்றன என்பதை ஊகித்து உணரமுடியாதவராய்த் திகைத்துச் செயலற்று நின்றனர்.

ஒரு மிக்க துயரமான செய்தியைக் கேட்ட ஒரு மானிடன் என்னென்ன மெய்ப்பாடுகளை வெளிப்படுத்துவானோ அத்தகைய மெய்ப்பாடுகள் ஏதும் தோற்றுவிக்காதவனாய் அடித்து வைத்த கற்சிலை போல அசை வற்று திக் பிரமைபிடித்து எத்தகைய உணர்ச்சியையும் வெளிக்காட்டாது நின்றிருந்தான் என்பதாம். ஒரு துயரச்செய்தியைக் கேட்டால் உடம்பு துடிக்கும்; பெருமூச்சு வெளிப்படும்; கண்கள் படபடவென அடித்துக் கொள்ளும்; கண்ணீர்த்துளிகள் பெருகும்; ஏதாவது பேசவேண்டும்போல் தோன்றும்; உள்ளம் பொருமிப் பிளவுபடும்; தரையில் விழுந்து அரற்றத் தோன்றும்; உடலெங்கும் வியர்வை வழிந்தோடும்; இவை ஏதொன்றும் இல்லாது திகைத்து நின்றான் என்று எதிர்மறையாகக் கூறியுள்ள நயம் நோக்குக. முன்பு நாகபாசப் படலத்திலும், இலக்குவன் நாகபாசத்தால் கட்டுண்டு மாண்டுபோனான் என்ற செய்தியை அனலன் வந்து தெரிவித்த போதும், கவிஞன் இதே போன்று எதிர்மறையாகக் கூறியதையும் ஒப்புநோக்குக. ''உரைத்திலன் ஒன்றும்; தன்னை உணர்ந்திலன்; உயிரும் ஓடக் கரைத்திலன் கண்ணின்நீரை; கண்டிலன் யாதும் கண்ணால்; அரைத்திலன் உலகம் எல்லாம் அம்கையால்; பொங்கிப்பொங்கி இரைத்திலன்; 'உளன்' என்று எண்ண இருந்தனன் விம்மி ஏங்கி'' என்பது அங்கே கவிஞன் கூற்று. 'துளி' என்பது துள்ளி என்று ஆயிற்று. 'யாதும்' என்பது எதையும் என்ற பொருளையும், 'ஒன்றும்' என்பது ஒன்றுகூடப் பேசவில்லை என்ற இருவேறு பொருள்களைத் தந்தாலும் யாதும், ஏதும், ஒன்றும், சிறிதும் என்பனவெல்லாம் ஒரேபொருள் குறித்த பலசொற்கள்

Koviloor Digital Library

எனக் கொள்ளவேண்டும். 'அமரரேயும்' என்ற இடத்தில் உம்மை உயர்வு சிறப்பு. காரணம் தேவர்கள் எங்கு, எது, எப்படி நடந்தாலும் அதை உணரவல்லவர்கள். இப்பொழுது என்ன விளையப்போகிறது என்பதை அவர்களாலும்கூட ஊகித்து உணரமுடியவில்லை என்பது பொருள். பொருமுதல், விம்முதல், தேம்புதல் என்பனவெல்லாம் சற்று வேறுபட்ட பொருளைத்தரும் பல சொற்கள் எனக்கொள்க.

57. வானரவீரர்கள் உற்ற துயரம்

சொற்றது கேட்டலோடும், துணுக்குற, உணர்வு சோர,
நற்பெரும் வாடை உற்ற மரங்களின் நடுக்கம் எய்தா,
கற்பகம் அனைய வள்ளல் கருங்கழல் கமலக் கால்மேல்,
வெற்பினம் என்ன வீழ்ந்தார், வானரவீரர் எல்லாம். (8979)

(துணுக்குறுதல்-திடுக்கிடுதல்; சோர்தல்-தளர்தல்/அழிதல்; மரங்களின்-மரங்களைப்போல; கருமை-பெருமை/வலிமை; கமலமலர்-தாமரைமலர்; கால்-திருவடிகள்; வெற்பினம்-மலைக்கூட்டம்; எய்தா-எய்தி/அடைந்து; சொற்றது-கூறியது)

அவ்வாறு அனுமன் கூறியதைக் கேட்டவுடன், வானரவீரர்கள் எல்லோரும் திடுக்கிட்டு, தங்கள் உணர்ச்சிகள் அடங்கிப்போக, நல்ல பெரிய வாடைக்காற்று தாக்கினால் மரங்கள் எல்லாம் எப்படி நிலை குலைந்து போகுமோ, அவ்வாறு நடுக்கமுற்று, வேண்டியதை வேண்டு வோர்க்கு வேண்டும்போது தரும் கற்பகமரம் போன்ற வள்ளல்தன்மை வாய்ந்த இராமபிரானது கரிய, பெரிய, வலிய வீரக்கழல் அணிந்த தாமரைமலர் போன்ற திருவடிகளின்மீது மலைக்கூட்டம் சாய்ந்து வீழ்வதைப்போல விழுந்தார்கள்.

வடக்கிலிருந்து வரும் காற்று வாடைக்காற்று எனப்படும். அது சற்று வேகமாக வீசினால் அதையே புயல்காற்று என்கிறோம்; அத்தகைய காற்று வீசினால் மரங்கள் எவ்வாறு நடுக்கம் அடையுமோ, அவ்வாறு வானர வீரர்கள் நடுக்கமடைந்தனர் என்பதாம். அனுமன் கூறிய சொற்கள் வாடைக்காற்றாகவும், வானரவீரர்கள் நடுங்கியது மரங்கள் நடுங்கிய தாகவும் உவமையை விரித்துக்கொண்டு பொருள் கொள்ளவேண்டும். கற்பகமரத்திற்கு இராமபிரான் வள்ளல்தன்மை உவமை. 'கால்' என்பது பாதம் என்ற சாதாரணப்பொருளைத் தந்து, இராமபிரானது திருவடிகளைக் குறித்து நின்றது. இராமபிரான் திருவடிகளில் வீழ்ந்த வானரக்கூட்டங் களுக்கு மலைக்கூட்டங்கள் உவமை. முன்பாடலில் இதே செய்தியைக் கேட்ட இராமபிரானது உணர்ச்சியற்ற நிலையைக் கூறிய கவிஞன் இப்பாடலில் வானர வீரர்களின் உணர்ச்சி நிறைந்த செயலைக் கூறிய திறம் நோக்குக.

Koviloor Digital Library

58. இராமபிரான் தரையில் சாய்தல்

சித்திரத் தன்மையுற்ற சேவகன், உணர்வு தீர்ந்தான்;
மித்திரர் வதனம் நோக்கான்; இளையவன் வினவப் பேசான்;
பித்தரும் இறைபொறாத பேர் அபிமானம் என்னும்,
சத்திரம் மார்பில் தைக்க, உயிரிலன் என்னச் சாய்ந்தான். (8980)

(சேவகன்-வீரன்/இராமபிரான்; தீர்தல்-நீங்குதல்; மித்திரர்-நண்பர்கள்/ வானரத்தலைவர்கள்; வதனம்-முகம்; இளையவன்-இலக்குவன்; இறை-சிறிதும்; சத்திரம்-வேற்படை/கைப்படை; தைத்தல்-பாய்தல்; பேரபிமானம்-பெரிய மான உணர்ச்சி/பற்று)

அவ்வாறு வானரவீரர்கள் இராமபிரான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கியபோதும், வீரனான இராமபிரான் எழுதிய சித்திரம்போல அசையாது உணர்வுகள்நீங்கப்பெற்றவனாய் நின்று கொண்டேயிருந்தான். தனது நண்பர்களான வானரத் தலைவர்களின் முகங்களைக்கூட ஏறெடுத்தும் பார்க்கவில்லை; இளையவனான இலக்குவன் கேட்கின்ற கேள்விகளுக்கும் எந்த பதிலும் கூறாமல் நின்றான்; அறிவு மயங்கிய பித்தர்கள்கூட ஒரு சிறிதும் பொறுத்துக் கொள்ளமுடியாத பெரிய மான உணர்ச்சி என்னும் ஒரு வேற்படை தன் மார்பில் ஊன்றிப் பதிந்தது போலவும் உயிரற்றவன் போலவும் தரையில் மயங்கிச் சாய்ந்து விழுந்தான்.

'சித்திரத்தன்மை' என்பது ஓவியம்போல் அசையாத தன்மையைக் குறிக்கும். முன்பும் ''சித்திரத்து அலர்ந்த செந்தாமரை முகம்'' என்று கூறியதையும் இங்கு ஒப்புநோக்குக. 'மித்திரர்' என்பது அவனடி பணிந்த நண்பர்களாகிய வானரத்தலைவர்களைக் குறிக்கும். பொதுவாக அறிவு மயங்கி உணர்வு இழந்தவர்கள், பித்துப்பிடித்தவர்கள் எத்தகைய மானக் கேட்டையும் பொறுத்துக் கொள்வார்கள். அது அவர்களின் உடலையோ, உள்ளத்தையோ பாதிக்காது; அப்படிப்பட்டவர்களால் கூடச் சிறிதும் பொறுத்துக் கொள்ளமுடியாத உணர்வு என்பதனால் 'பேர் அபிமானம்' என்றார் என்க. அபிமானம் என்பது இராமபிரான் சீதாதேவியின்பால் கொண்ட பற்றைக் குறிக்கும். பேர் அபிமானம் என்பது அளவற்ற அன்பைக் குறிக்கும். 'மானம்' என்பது பொதுவாகத் தன் நிலையினின்றும் ஒருபோதும் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துறின் உயிர் வாழாமையையும் குறிக்கும். இது ''மயிர்நீர்ப்பின் வாழாக் கவரிமான் அன்னார் உயிர் நீப்பர் மானம்வரின்'' என்ற குறள்-969ன் விரிவு எனக் கொள்க. 'சத்திரம்' என்பது சஸ்திரம் என்ற வடசொல்லின் திரிபு; கையில் கொண்டுள்ள படைகளைப் பொதுவாக குறித்தாலும், வேற்படையைக் குறிக்கும் எனக்கொள்க. முன்பு தன் மனைவியை இராவணன் கவர்ந்து சென்றான் என்பது ஒரு மானக்கேடு; இப்போது அவளை இந்திரசித்து வெட்டி வீழ்த்திவிட்டான் என்பது பெரிய மானக்கேடு என்பதைப் பேர்

Koviloor Digital Library

அபிமானம் என்றார் எனக்கொள்க. எனவே உயிரிழந்தான்போலத் தரையில் வீழ்ந்தான் என்பதாம்.

59. இலக்குவனும் நிலத்தில் சாய்தல்

நாயகன் தன்மை கண்டும், தமக்குற்ற நாணம் பார்த்தும்,
ஆயின கருமம் மீள, அழிவுற்ற அதனைப் பார்த்தும்,
வாயொடு, மனமும், கண்ணும், யாக்கையும் மயர்ந்து சாம்பி,
தாயினை இழந்த கன்றின், தம்பியும் தலத்தன் ஆனான். (8981)

(நாயகன்-தலைவன்; தன்மை-நிலைமை; ஆயின-ஆகிவந்த/ கைகூடிவந்த; கருமம்-செயல்; யாக்கை-உடம்பு; மயர்தல்-உணர்வழிதல்; சாம்புதல்-வாடுதல்/சோர்வுறுதல்/தளர்ந்துபோதல்; நாணம்-இகழ்வு; மீள-மறுபடியும்; தலம்-தரை/நிலம்/பூமி)

தன் தலைவனான இராமபிரானுக்கு ஏற்பட்ட இந்த நிலையைக் கண்டும், தங்களுக்கு நேர்ந்த இகழ்ச்சியைக் கருதியும், இதுவரை நன்கு கைகூடிவந்த செயலானது இப்போது மீண்டும் தடைப்பட்டு நின்றுபோன நிலையை நோக்கியும், இலக்குவன் தன் வாய், மனம், கண், உடம்பு இவையெல்லாம் உணர்விழந்து வாடிப்போய், தாய்ப்பசுவை இழந்த கன்றுபோல வருந்தித் தரையில் வீழ்ந்தான்.

தன் தலைவனுக்கு ஏற்பட்ட நிலை, தங்களுக்கு ஏற்பட்ட இழிநிலை, கைகூடிவந்த காரியம் இடையே தடைப்பட்டுப் போன நிலை ஆகிய மூன்று நிலைகளையும் நோக்கி, இலக்குவன் மனமும், உடலும் சோர்ந்து, உணர்வழிந்து தரையில் வீழ்ந்தான். பொதுவாகத் தம்மிடம் மிகுந்த அன்பு பாராட்டியவர்கள் பிரிய நேரும்பொழுது அல்லது அவர்களை இழக்க நேரும்போது கவிஞர்கள் தாயினைப் பிரிந்த கன்றையே உவமையாகக் கூறுவது வழக்கம். தாய்ப்பசு-சீதாதேவி; கன்று-இலக்குவன்; உலக வழக்கிலும் அண்ணன் மனைவியைத் தாயாக மதித்துப் போற்றுதலே மரபு என்பதையும் கருதுக. மேலும் முன்பு நகர்நீங்கு படலத்தில் இலக்குவன் வனம்புக நேர்ந்த சமயத்தில், தாய் சுமித்திரை அவனுக்கு சீதாதேவியைத் தாயாகவே கருதுமாறு பணித்து அனுப்பியிருப்பதையும் இங்கு நினைவு கூரவேண்டும். ''மாகாதல் இராமன் நம் மன்னவன்; வையம் ஈந்தும் போகா உயிர்த்தாயர் நம் பூங்குழல் சீதை என்றே ஏகாய்'' என்பது சுமித்திரை கூற்று. 'நாயகன் தன்மை' என்பது சீதாதேவியை இழந்ததால் இப்போது இராமபிரான் மயங்கித் தரையில் விழுந்த நிலை; 'தமக் குற்ற நாணம்' என்பது இந்திரசித்தனின் நாகபாசத்தால் தானும், வானரவீரர்களும் மடிந்துபோன இழிநிலை; 'ஆயின கருமம்' என்பது தாம் மருத்துமலையின் உதவியினால் மீண்டும் உயிர்பெற்று எழுந்தது; 'மீள அழிவுற்றது' என்பது இப்போது இந்திரசித்தனால் சீதாதேவி வெட்டப்பட்டது என்பதாம். முதலில் வாயால் பேசும் பேச்சு அடங்கிற்று, பின்பு மனத்தால் நினைக்கும்

Koviloor Digital Library

நினைவும் அடங்கிற்று; தொடர்ந்து கண்களாலும் பார்க்கமுடியாது போயிற்று; அதன் பின்பு உடம்பே தன்வசம் இழந்து தரையில் சாய்ந்து வீழ்ந்தது என்று வரிசைப்படுத்தித் தொடர்புபடுத்தி ''வாயொடு, மனமும், கண்ணும், யாக்கையும் மயர்ந்து சாம்பின' என்கிறான் கவிஞன்.

60. வீடணன் கொண்ட ஐயம்

தொல்லையது உணரத்தக்க வீடணன், துளக்கமுற்றான்;
எல்லையில் துன்பம் ஊன்ற, இடை ஒன்றும் தெரிக்கிலாதான்,
''வெல்லவும் அரிது; நாசம் இவள்தனால் விளைந்தது'' என்னா
'கொல்வது அடுக்கும்' என்று மனத்தின் ஓர் ஐயம் கொண்டான்.

(8982)

(தொல்லை-மாயச்செயல்கள்/இயல்பு; எல்லை-அளவு; ஊன்றுதல்-அழுத்துதல்/பதிதல்; இடை-காரணம்/நடுவே; நாசம்-அழிவு; அடுக்கும்-இயலும்; துளக்கம்-நடுக்கம்)

அரக்கர்களின் இயல்பான மாயச்செயல்கள் பற்றி நன்கு உணரத்தக்க அறிவாற்றல் பெற்றவனான வீடணன், இங்கு நிகழ்வனவற்றைக் கண்டு சற்று நடுக்கமுற்றான்; இராமபிரானின் நிலை கண்டும், சீதாதேவி வெட்டப்பட்டது கேட்டும் அளவற்ற துன்பம் தன் மனத்தில் அழுந்திப் பதிந்ததனால் தனக்கு இயல்பாய் அமைந்துள்ள ஞான உணர்வினைக் கொண்டு இவ்வாறு நிகழ்தற்கு என்ன காரணம் என்றுகூடத் தெளிய முடியாதவனானான். எனினும் இந்திரசித்து இராம இலக்குவர்களைப் போரிட்டு வெல்வது என்பது இயலாத காரியம் என்று எண்ணி, சீதாதேவி யால்தான் அரக்கரினத்திற்கே அழிவு உண்டானது எனவே, சீதாதேவியை கொன்று அழித்துவிட்டால் அவர்கள் போர்செய்ய மாட்டார்கள் என்று கருதி, இந்திரசித்து சீதாதேவியைக் கொன்று போட்டிருக்கவும் கூடுமே'' என்று தன் மனத்திற்குள்ளே சிறிது சந்தேகம் கொண்டான்.

'தொல்லையது' என்பதற்கு இயல்பான என்ற பொருள்கொண்டு அரக்கர்களுக்கு இயல்பான மாயச்செயல்கள் என்று பொருள் கொண்டோம். 'உம்பர் மந்திரிக்கும் மேலா ஒரு முழம் உயர்ந்த ஞானத் தம்பி' என்று மாலியவானால் முன்பு புகழ்ந்துரைக்கப்பட்ட வீடணன், தொல்லையது உணரத்தக்க வீடணன், இப்போது துளக்கம் உற்றான்; எல்லையில் துன்பம் ஊன்ற இடை ஒன்றும் தெரிக்கிலாதான்' என்று கவிஞன் கூறுவதனால் வீடணன் இராமபிரான்மேலும், சீதாதேவியின் மேலும் கொண்டிருந்த அன்பு புலப்படுத்தப்பட்டது என்பதாம். வெட்டப்பட்டது மாயாசீதையாகத்தான் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்துகொள்ள முடியாத அளவுக்கு அவன் துளக்கமுற்றான் என்பதாம். அவனது அறிவையும் விஞ்சி நின்றது அவனது துயரம் என்க. தொல்லையது உணரத்தக்க வீடணன், ஒன்றும் தெரிக்கிலானாய்த்

Koviloor Digital Library

துளக்கமுற்று ''வெல்லவும் அரிது நாசம் இவள்தனால் விளைந்தது என்னாக் கொல்லவும் கூடும்'' என்று மனத்தில் ஓர் ஐயம் கொண்டான் என்பது திரண்ட கருத்து.

61. இராமபிரான் கண்விழித்து எழுதல்

சீதநீர் முகத்தின் அப்பி, சேவகன் மேனி தீண்டி,
போதம் வந்து எய்தற்பால யாவையும் புரிந்து, பொன்பூம்
பாதமும், கையும், மெய்யும் பற்றினன் வருடலோடும்,
வேதமும் காணா வள்ளல், விழித்தனன் கண்ணை மெல்ல. (8983)

(சீதம்-குளிர்ச்சி; அப்புதல்-தெளித்தல்; சேவகன்-வீரன்/இராமபிரான்; போதம்-உணர்வு; செய்தற்பால-செய்யத்தக்கன; பொன்-அழகிய; வருடுதல்-தடவிக்கொடுத்தல்; பூ-மெல்லிய/மிருதுவான)

அப்பொழுது வீடணன், வீரனாகிய இராமபிரானின் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்து அவனுடைய உடலைத் தொட்டு, உணர்வு பெறுவதற்கு உண்டான வழிமுறைகளையெல்லாம் செய்து, அவனுடைய அழகிய மலர்போன்ற மிருதுவான மெல்லிய திருவடிகளையும், கைகளையும், உடலையும் பற்றித் தடவிக்கொடுக்கவும், வேதங்களும் கண்டு உணர முடியாதவனானவள்ளல்தன்மை பொருந்திய இராமபிரான்தன்கண்களை மெல்லத் திறந்து பார்த்தான்.

'சீதநீர்' என்பது குளிர்ந்த நீரையும், 'அப்புதல்' என்பது தெளித்தலையும் குறிக்கும். உணர்வற்று மயங்கிக் கிடந்த இராமபிரானுக்கு உணர்வு வருமாறு அதற்குரிய வழிமுறைகளைச் செய்தான் வீடணன் என்பதாம். இதனைச் சைத்திய உபச்சாரம் என்கிறது வடமொழி. இந்த வழிமுறை களைத் தேவர்களே செய்தார்கள் என்கிறது வான்மீகம்.

62. இலக்குவன் பேசுதல்

ஊற்று வார் கண்ணீரோடும், உள் அழிந்து, உற்றது எண்ணி,
ஆற்றுவான் அல்லனாகி, அயர்கின்றான் எனினும், ''ஐயன்
மாற்றுவான் அல்லன்; மானம் உயிர்உக வருந்தும்'' என்னா,
தேற்றுவான் நினைந்து, தம்பி இவையிவை செப்பலுற்றான். (8984)

(வார்-நீண்ட/நெடிய; உள்-மனம்/உள்ளம்; அயர்தல்-வருந்துதல்/சோர்வடைதல்; மாற்றுதல்-அழித்தல்; தேற்றுவான்-தேற்றும்பொருட்டு; செப்புதல்-கூறுதல்)

இலக்குவன் கண்களினின்றும் இடைவிடாது தொடர்ந்து நீரூற்றுப் போல் பெருகுகின்ற கண்ணீரோடும், மனம் நிலைகுலைந்து இங்கு நிகழ்ந்தவை அனைத்தையும் ஒருசேர எண்ணிப்பார்த்து, அவற்றை

Koviloor Digital Library

யெல்லாம் பொறுத்துக்கொள்ளும் வல்லமை இல்லாதவனாய் வருந்திச் சோர்வடைகிறான் என்றாலும், ''இராமபிரான் ஒருபோதும் பகைவரைத் திருப்பிக் கொல்லவேண்டும் என்று கருதமாட்டான், மாறாக, தன்னுடைய மானம் இகழ்ச்சிக்குள்ளாகியதே என்று வருந்தித் தன் உயிரை விட்டொழிக்கத்தான் கருதுவான் என்று தீர்மானித்து, அவனைத் தேற்றும் பொருட்டு, அவனை நோக்கிக் கீழ்வருமாறு கூறத்தொடங்கினான்.

'வார்' என்பது நீண்ட, இடைவிடாத என்ற பொருளைத்தரும். 'மானம்' என்ற சொல் அபிமானம் என்ற சிறந்த பொருளையும், அவமானம் என்ற இழிந்த பொருளையும் தரும்.

63. "முடியும் நாள் தானே வந்து முற்றினால், துன்ப முந்நீர்
படியுமாம், சிறியோர் தன்மை; நினக்கு இது பழியிற்றாமால்;
குடியும் மாசு உண்டது என்னின், அறத்தொடும் உலகைக் கொன்று,
கடியுமாறு அன்றி, சோர்ந்து கழிதியோ கருத்து இலார்போல்?" (8985)

(முடியும்நாள்-இறப்பு; முற்றுதல்-நேர்தல்; முந்நீர்-கடல்; படிதல்-அழுந்துதல்; பழியிற்று-பழியினைத் தருவதாகும்; கடிதல்-தண்டித்தல்/ஒழித்தல்; கழிதல்-நீக்குதல்/போக்குதல்; குடி-குலம்; மாசு-குற்றம்)

''ஊழ்வினையால் ஒருவருக்கு அவரது முடிவுகாலம் தானாகவே வந்துற்றதென்றால், அதனால் துன்பம் என்னும் கடலில் அழுந்திப் போவது என்பது அற்பமானவர்களின் செயலாகும். அது பிறந்தவர் எல்லோர்க்கும் இயல்பாக வருவதுதானே? அதற்காகப் பெருந்தன்மை யுடைய நீ அவர்களைப் போலத் துக்கத்தில் அழுந்திப்போதல் என்பது உனக்குப் பழியையே தரும் செயலாகும்; நம்முடைய குலமும் குற்றம் கொண்டது என்று நீ கருதினால், அந்தத் தரும தேவதையையும், இக்குற்றத்தினைக் கண்டுகொண்டிருந்தவர்களான உலகத்தவரையும் கொன்று அழித்து அவர்களுக்குத் தண்டனை தருவதை விட்டுவிட்டு, இவ்வாறு ஒரு நோக்கமும் முயற்சியும் இல்லாதவர்கள்போல் சோர்ந்துபோய் இருந்து உன் காலத்தைக் கழித்துக் கொண்டிருப்பாயோ?'' என்று இடித்துக் கூறுகிறான் இலக்குவன்.

'முந்நீர்' என்பது கடலைக் குறிக்கும். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தன்மைகளையும் கொண்டதால் கடலுக்கு முந்நீர் என்பது காரணப்பெயர். 'முடிவுநாள்' என்பது வாழ்நாள் இறுதியைக் குறிக்கும். அது ஊழ்வினையின் காரணமாகத் தானாகவே வந்து நேர்ந்ததென்றால் அதற்காக வருந்தித் துன்பக்கடலில் ஆழ்ந்துபோவது என்பது சாதாரண மனிதர்கள் செய்கின்ற அற்பச் செயலாகும் என்கிறான் இலக்குவன். அவ்வாறு அற்பகுணமுடைய மானிடர்கள் படும் துன்பத்தைப்போல, நீயும் துன்பக்கடலுள் ஆழ்ந்து போவாயென்றால் அது உனக்குப் பழியையே தருவதாகும் என்று தேற்றுகிறான் இலக்குவன். அறவழி

Koviloor Digital Library

ஒழுகும் நமது குலத்திற்கு ஒரு குற்றம் வந்து சேர்ந்தது என்றால் அந்தக் குற்றத்தைச் செய்ய இடம் கொடுத்த பயனற்ற தருமதேவதையையும், அதனை அழிக்காமல், தகாத செயலைக் கண்டு கொண்டிருந்த இவ்வுலகத்தவரையும் அழித்தொழித்து நம் கடமையை ஆற்றுவதை விட்டுவிட்டு இவ்வாறு ஒரு கொள்கை இல்லாதவர்போல அழுது புலம்பிக்கொண்டே காலத்தைக் கழிப்பது சரியல்ல என்று இடித்துக் கூறுகிறான் இலக்குவன் என்பதாம். 'கருத்து' என்றசொல் மன உறுதியையும் குறிக்கும். 'வாழ்க்கையில் எவ்வளவு துன்பங்கள் வந்து சேர்ந்தாலும், மனம் சோர்ந்துவிடாமல், அவற்றை எதிர்த்து நின்று, முன்னேறிச் செல்லுதலே ஆண்மைக்கு அழகு என்ற ஒரு அரிய தத்துவத்தை விளக்கும் பாடல் இது. இதனை வான்மீகம் மிக விரிவாகப் பேசுகிறது.

64. "தையலை, துணை இலாளை, தவத்தியை, தருமக் கற்பின்
தெய்வதம் தன்னை, மற்று உன் தேவியை, திருவை, தீண்டி
வெய்யவன் கொன்றான் என்றால், வேதனை உழப்பது, இன்னம்
உய்யவோ? கருணையாலோ? தருமத்தோடு உறவும் உண்டோ?" (8986)

(தையல்-பெண்/சீதாதேவி/மெல்லியல்; தவத்தி-தவநிலையில் இருப்பவள்; தெய்வதம்-தெய்வம்; திரு-திருமகள்/இலக்குமி; வெய்யவன்-கொடியவன்/இந்திரசித்து; உழப்பது-அனுபவிப்பது; உய்தல்-பிழைத்து வாழ்தல்; தேவி-மனைவி)

''வலிமையற்ற மெல்லிய இயல்புடைய ஒரு பெண்ணை, தான் இருக்கும் இடத்தில் ஒரு துணையும் இன்றித் தனியாக இருப்பவளை, தவக்கோலத்தில் தவம்செய்து கொண்டிருப்பவளை, அறத்தின் தன்மையான கற்பின் கனலியை, தெய்வத்திற்கு ஒப்பானவளை, மேலும் உன் அருமை மனைவியை, திருமகளாம் இலக்குமி போன்ற சீதா தேவியைத் தொட்டுக் கொடியவனான அரக்கன் இந்திரசித்து வெட்டி வீழ்த்திவிட்டான் என்றால், அதைக் கேட்டபிறகும் வேதனைப்பட்டு உழன்று கொண்டிருப்பது எதற்காக? இன்னும் நாம் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது எதற்காக? இன்னும் இவனை உயிருடன் விட்டு வைத்து இருப்பது எதற்காக? இது உன்னுடைய மிக்க கருணைத் தன்மையின் பாற்பட்டதோ? இனிமேல் அறத்திற்கும் நேர்மைக்கும் நம்முடன் ஏதேனும் தொடர்பு உண்டு என்று கருதுகிறாயோ?'' எனச் சாடுகிறான் இலக்குவன்.

இந்திரசித்துக்குச் சீதாதேவியை வெட்டி வீழ்த்தியது என்பது ஒரு பாவத்தோடு முடிந்துபோய் விடுவதல்ல. அவன் தையலைக் கொன்ற பாவம், துணையிலாளைக் கொன்ற பாவம், தவக்கோலத்தில் இருந்த தவத்தியைக் கொன்ற பாவம், தருமக் கற்பின் கனலியைக் கொன்ற பாவம், தெய்வத்தன்மை வாய்ந்தவளையே கொன்ற பாவம், திருமகளாகிய

Koviloor Digital Library

இலக்குமியையே கொன்ற பாவம், என்று எல்லாப் பாவங்களையும் ஒருசேரச் செய்தவனாகிறான் என்றும், அத்தகைய கொடியவனான இந்திரசித்தைக் கொல்லாது, வேதனையுடன் வாடிக் கொண்டிருப்பது சரியல்ல; அது கருணையின் பாற்பட்டதும் ஆகாது; அது அறத்தின் பாற்பட்டதும் ஆகாது என்று கடுமையாகக் கூறுகிறான் இலக்குவன் என்பதாம். தரும தேவதையையும் அழித்து விட்டு நாமும் அழிந்து போதலே இந்நிலையில் நாம் செய்ய வேண்டியதாகும் என்பது இலக்குவன் கருத்து. 'கருணை' என்பது தாம் வருந்தினாலும், பிறிதொரு வருக்குத் துன்பம் செய்யலாகாது என்ற விரிந்த பொருளைத்தரும் அருமையான தமிழ்ச்சொல். இம்மூன்று வழிகளையும் தவிர்த்து அவனை இன்னும் உயிரோடு விட்டிருத்தல் தகாது என்கிறான் இலக்குவன் என்பதாம்.

65. "அரக்கர் என்? அமரர்தாம் என்? அந்தணர்தாம் என்? அந்தக்
குருக்கள் என்? முனிவர்தாம் என்? வேதத்தின் கொள்கைதான் என்?
செருக்கினர் வலியராகி, நெறிநின்றார் சிதைவர் என்றால்
இருக்கும்இது என்ஆம் இம்மூன்று உலகையும் எரி மடாதே?" (8987)

(மடுத்தல்-இரையாக்குதல்; குருக்கள்-ஆசார்யார்கள்; செருக்கு-ஆணவம்; செருக்கினர்-அரக்கர்கள்; சிதைதல்-அழிதல்; எரி-நெருப்பு)

''மிக்க ஆணவம் கொண்டு அதனால் வலிமை பெற்றவர்களாகிய அரக்கர்களால், நல்ல அறநெறியினின்றும் ஒழுகும் நல்லவர்கள் எல்லாம் அழிந்துபடுவார்கள் என்றால் நமக்கு அரக்கர் என்றும், தேவர்கள் என்றும், சான்றோர் என்றும், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஆசார்யர்கள் என்றும், முனிவர்கள் என்றும் வேறுபடுத்திக் காண்பதற்கு என்ன காரணம் இருக்கிறது? என்றால் வேதங்களின் நோக்கங்கள்தான் என்ன? எனவே நாம் இன்னும் வாளாவிருத்தல் பயனற்றது. உடனே நல்லவர் தீயவர் என்றும், இன்னார் இனியர் என்றும் பாராது இந்த மேல், நடு, கீழ் என்னும் மூன்று உலகங்களையும் நெருப்புக்கு இரையாக்குவதே இப்போது நாம் செய்யக்கூடிய காரியம் என்று அறிவுறுத்துகிறான் இலக்குவன்.

இம்மூவுலகத்தையும் நெருப்புக்கு இரையாக்காமல் வருந்திக் கொண்டிருப்பதில் ஒரு பயனும் இல்லை என்கிறான் இலக்குவன். இலக்குவன் இவ்வாறு சீற்றம் கொள்ளுவதை நாம் காப்பியத்தில் பல இடங்களில் கண்டு வந்திருக்கிறோம். இராமபிரான் ஒரேஒரு இடத்தில் சடாயுவிடம் இவ்வாறு மூவுலகையும் அழித்துவிடுவேன் என்று சீற்றம் கொண்டதையும் கண்டு வந்திருக்கிறோம். அதே இராமபிரான் இலக்குவன் இந்திரசித்தனை அழிப்பதற்குப் பிரமாத்திரத்தைப் பயன் படுத்தப் போகிறேன் என்று கேட்டபொழுது, அது அவனை மட்டுமல்லாது மூன்று உலகங்களையும் அழித்துவிடும். எனவே அதைப் பயன்படுத்தாதே என்று அறிவுறுத்தியவனும் இதே இராமபிரான் தான்

Koviloor Digital Library

என்பதையும் இங்கு நினைவுகூர்தல் தகும். அறம் தோற்றுப் பாவம் வெல்லும்போது ஒன்றையும் ஆராய்ந்து கொண்டிருக்காமல் உலகத்தையே அழித்துவிடுவதுதான் சரி என்று நிறுவுகிறான் இலக்குவன் என்பதாம். எனினும் 'ஆவும், ஆன்இயல் பார்ப்பனமக்களும், பெண்டிரும், பிணியுடையோரும் பேணித் தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வர்ப் பெறாதீரும் எம் அம்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின் என அறத்தாறு நுவலும் பூட்கை'' என்ற புறநானூற்றுப் பாடலும், ''பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர், மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டுத் தீத்திறத்தோர் பக்கமே சேர்க'' என்று கண்ணகி மதுரையை எரியூட்டிய சிலப்பதிகாரப் பாடலும் இங்கு கருதத்தக்கன.

66. "முழுவது ஏழ் உலகம் இன்ன முறைமுறை செய்கைமேல் மூண்டு,
எழுவதே! அமரர் இன்னம் இருப்பதே! அறம் உண்டு என்று
தொழுவதே! மேகம் மாரி சொரிவதே! சோர்ந்து நாம் வீழ்ந்து
அழுவதே! நன்று நம்தம் வில்தொழில் ஆற்றல் அம்மா!" (8988)

(ஆற்றல்-வலிமை; நன்று-பெரிது; முறைமுறை-ஒழுங்காக; மூள்தல்-திரும்பவும் செய்தல்)

''இந்த ஏழு உலகங்கள் எல்லாமும் இன்னும் தத்தம் செயல்பாடுகளை ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கின்றனவே? தேவர்கள் இன்னும் உயிருடன் தேவலோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களே! அறம் என்ற ஒன்று இன்னும் நிலைத்திருக்கிறது என்று கருதி அதை நாம் வணங்கிக் கொண்டிருக்கின்றோமே! இன்னும் மேகம் மழையைப் பொழிந்து கொண்டிருக்கின்றதே! இவையெல்லாம் இவ்வளவு தீங்கு நிகழ்ந்த பிறகும் நடக்கலாமா? நம்முடைய வில்தொழிலின் வலிமை மிக நன்றாக இருக்கிறது'' என்று வியப்புக்கலந்த இகழ்ச்சியோடு பேசுகிறான் இலக்குவன்.

நம்முடைய வில்லாற்றலால் இவ்வேழு உலகங்களும், தேவர்களும், அறமும், மழையும் அழிந்துபோயிருக்க வேண்டாமா? நாம் இவ்வாறு சோர்ந்துபோய் இருப்பது சரியன்று என்று இகழ்ந்து அறிவுறுத்துகிறான் இலக்குவன். எழுவதே, இருப்பதே, தொழுவதே, சொரிவதே, அழுவதே என்பவற்றில் உள்ள ஏகாரம் எதிர்மறைப் பொருளது. அவ்வாறெல்லாம் இருக்கக்கூடாது என்ற பொருளைத்தரும். 'அம்மா' என்பது வியப்புக் குறித்த இடைச்சொல். நன்று என்பது இகழ்ச்சிக் குறிப்பு நன்றன்று என்பது பொருள். முறையற்ற ஒரு செயல் நிகழ்ந்த பின்பு, முறையான செயல்கள் நிகழ்வது நன்றன்று என்கிறான் இலக்குவன் என்பதாம்.

Koviloor Digital Library

67. "புக்கு, இவ்வூர், இமைப்பின் முன்னம், பொடிபடுத்து, அரக்கன் போன
திக்கெலாம் சுட்டு, வானோர் உலகெலாம் தீத்து, தீரத்
தக்க நாம், கண்ணீர் ஆற்றி, தலை சுமந்து இரு கை நாற்றித்
துக்கமே உழப்பம் என்றால், சிறுமையாய்த் தோன்றும் அன்றே!" (8989)

(புக்கு-புகுந்து; படுத்தல்-அழித்தல்; தீத்து-தீய்த்து/பொசுக்கி/நெருப்பிலிட்டு; தீர்தல்-அழிதல்; ஆற்றுதல்-பெருக்குதல்; நாற்றுதல்-தொங்கவிடுதல்/நாணுதல்; உழத்தல்-உழலுதல்/அமிழ்ந்து போதல்; சிறுமை-இழிவு)

''இந்த இலங்கை மாநகருக்குள் புகுந்து, கண் இமைக்கும் நொடிப் பொழுதிற்குள் அதனை எரித்துச் சாம்பலாய்ப் பொடியாகுமாறு செய்து விட்டு, அந்த அரக்கன் இந்திரசித்து சென்ற திசைகளையெல்லாம் சுட்டெரித்து, இதற்கு உடந்தையாய் இருந்த தேவர்கள் உலகமாகிய தேவலோகத்தையும் பொசுக்கிப் பின்னர் உயிர்விடத் தக்க தகுதியுடைய நாம், அவ்வாறு செய்யாது, கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு, தலையைத் தூக்கி வைத்துக்கொண்டு, இரண்டு கைகளையும் தொங்கப் போட்டுக் கொண்டு, வருத்தப்பட்டுக் கொண்டு அதிலேயே அமிழ்ந்துபோய் விடுவோம் என்றால், நம்மைப் பார்ப்பவர்களுக்கு நாம் இழிந்தவர்களாகக் கையாலாகதவர்களாகத் தோன்றுவோம் அல்லவா?'' என்று நன்கு கேட்கிறான் இலக்குவன்.

'இமைப்பின் முன்னம்' என்பது ஒரு நொடிப்பொழுதைக் குறிக்கும். 'பொடிபடுத்தல், சுடுதல், தீத்தல், தீர்தல் என்பனவெல்லாம் எவ்வாறானும் ஒருவகையால் அழித்தல் என்ற ஒரே பொருளைத்தரும் பலசொற்கள். ''கண்ணீர்பெருக்கி, தலை சுமந்து, இரு கை நாற்றித் துக்கமே உழப்பம்'' என்பது சிறுமையைக் குறிக்கும். இலங்கையை, இந்திரசித்தை, தேவர்களையெல்லாம் அழித்துவிட்டு நாமும் உயிர்விட வேண்டும் என்பது இலக்குவன் கருத்து.

68. "அங்கும் இவ்அறமே நோக்கி, அரசு இழந்து, அடவிஎய்தி,
மங்கையை வஞ்சன் பற்ற, வரம்பு அழியாது வாழ்ந்தோம்;
இங்கும் இத்துன்பம் எய்தி, இருத்துமேல், எளிமை நோக்கி,
பொங்கு வன் தளையில் பூட்டி, ஆட்செயப் புகல்வர் அன்றே?" (8990)

(அங்கு-அயோத்தியில்; அடவி-காடு; பற்றுதல்-கவர்ந்து போதல்; ஆட்செய்தல்-அடிமைத்தொழில் செய்தல்; இங்கு-இலங்கையில்; வரம்பு-எல்லை; அழிதல்-கடத்தல்; தளை-விலங்கு/கட்டு)

முன்பு அயோத்தி மாநகரத்திலும் இதே தர்மத்தை மனத்துட்கொண்டு நமக்கு உரிமையுடைய அரசச்செல்வத்தை இழந்து, சிற்றன்னையின் வேண்டுகோளின்படி காடு வந்து சேர்ந்தோம். அங்கே பஞ்சவடியில் நமது

Koviloor Digital Library

சீதாதேவியை கொடியவனான அரக்கன் இராவணன் கவர்ந்து சென்ற போதும், சிறிதும் அறத்தின் எல்லையைக் கடவாமல் காட்டிலேயே வாழ்ந்து வந்தோம். இப்போது இங்கே இலங்கையிலும், இந்திரசித்து நம் சீதாதேவியை வாளால் வெட்டி வீழ்த்தியபோதும், வெறுமனே துன்பம் கொண்டு பகைவர்களை ஏதும் செய்யாது, வாளா இருப்போம் என்று சொன்னால், நாம் கையாலாகாதவர்கள் என்று கருதி அரக்கர்கள் நம்மை மிக்க மகிழ்வுடன் வலிமையான விலங்கினால் பூட்டிச் சிறை எடுத்து அவர்களுக்கு அடிமைத் தொழில் புரியச் சொல்லுவார்கள் அல்லவா?'' என்றும் கேட்கிறான் இலக்குவன்.

இங்கே அயோத்தியில் 'அறமே நோக்கியது' சூரிய குலத்தின் மரபும், தசரதச்சக்கரவர்த்தியின் வாய்மையும் காப்பதற்காக என்க. ஒன்று அரசிழந்தது, மற்றொன்று தன் மனைவியைப் பிரிந்தது; மூன்றாவது மனைவி பகைவரால் வெட்டி வீழ்த்தப்பட்டது. இந்த மூன்று பெரிய கொடுமைகள் நிகழ்ந்த பின்னும் பகைவர்களை ஒன்றும் செய்யாது வாளா இருத்தல் நன்றன்று என்றும், அவ்வாறு இருந்தால் அவர்கள் நம்மை அவர்களின் அடிமையாக்கிக் கொண்டு குற்றேவல் ஏவிப் பணி செய்யச் சொல்லுவர் என்பதும் இலக்குவன் கருத்து என்பதாம். அறத்தையே நம்பிக்கொண்டிருந்து, விடாது கடைப்பிடித்து வந்தால் தாழ்வே வரும் என்பதும், அறம் தவறிய இடத்து மறம் தலை தூக்கவேண்டும் என்பதும் இலக்குவன் கொள்கை என்பது புலப்படுத்தப்படுகிறது.

69. ''மன்றல் அம் கோதையாளைத் தம் எதிர் கொணர்ந்து, வாளின்
கொன்றவர் தம்மைக் கொல்லும் கோள்இலர், நாணம் கூரப்
பொன்றினா' என்பர், ஆவி போக்கினால்; பொதுமை பார்க்கின்
அன்று இது கருமம்; என் நீ அயர்கின்றது அறிவிலார் போல்?'' (8991)

(ஆவி-உயிர்; மன்றல்-மணம்; அம்-அழகிய; கோதை-கூந்தல்; கோள்-வலிமை; கூர்தல்-மிகுதல்; பொன்றுதல்-இறந்துபடுதல்; பொதுமை-நடுவுநிலைமை; கருமம்-செய்கை; அயர்தல்-வருந்துதல்)

இப்பொழுது இந்தத்துன்பம் தாங்கமாட்டாமல் நாம் உயிரைப் போக்கிக்கொண்டால், பகைவர்களும், உலகத்தவரும், ''மணம்மிக்க அழகிய கூந்தலையுடைய சீதாதேவியைத் தங்களுக்கு எதிரிலேயே பற்றி வந்து தன் வாளினாலேயே கொன்று போட்டவர்களாகிய இந்திரசித்து முதலிய அரக்கர்களைத் திருப்பிக் கொல்லும் வலிமையற்றவர்களாய், வெட்கம் மிகுந்து இறந்துபட்டனர்'' என்று பழிக்க நேரிடும்; எனவே நடுவு நிலைமையிலிருந்து ஆராய்ந்து பார்த்தால் அறிவுடைய எல்லாம் உணர்ந்த நீ, இத்தகைய துன்பத்தை அடைந்து வருந்தியிருத்தல் நமக்கு ஒவ்வாத செயலாகும். நீ ஏன் இதற்காக அறிவில்லாதவர்கள்போல வருத்தப்பட்டுக் கொண்டு வாளாஇருக்கிறாய்?'' என்று கேட்கிறான் இலக்குவன்.

Koviloor Digital Library

70. சுக்கிரீவன் பேசுதல்

அனையன இளவல் கூற, அருக்கன்சேய், அயர்கின்றான், ஓர்
கனவு கண்டனனே என்னக் கதும்என எழுந்து ''காணும்
வினை இனி உண்டே? வல்லை, விளக்கின் வீழ் விட்டில் என்ன,
மனைஉறை அரக்கன் மார்பில் குதித்தும் நாம், வம்மின்'' என்றான்.
(8992)

(இளவல்-இலக்குவன்; அயர்தல்-சோர்ந்துபோதல்; கதும்என-விரைந்து; காணுதல்-ஆராய்ந்து பார்த்தல்; வினை-செயல்; வம்மின்-வாருங்கள்; அரக்கன்-இராவணன்; அருக்கன்-சூரியன்; அருக்கன்சேய்-சுக்கிரீவன்; வல்லை-விரைவாக)

அவ்வாறு இலக்குவன் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவன், துன்பத்தால் சோர்வுற்றுத் தரையில் கிடந்த ஒருவன் கனவுகண்டு திடுக்கிட்டு எழுவதைப் போல, விரைவாக எழுந்து, ''இனி ஆலோசிக்கக்கூடிய செயல் என்ன இருக்கிறது? விரைவாகச் சென்று விளக்கில் வீழ்ந்து இறந்துபடுகின்ற விட்டில் பூச்சியைப்போலத் தன் அரண்மனையில் வாழ்ந்திருக்கும் அரக்கன் இராவணன் அழிந்துபோகும் படி அவன் மார்பில் நாம் எல்லோரும் போய்க் குதிப்போம்· வாருங்கள்'' என்று வானரர்களைக் கூவியழைத்தான்.

'கதும்என' என்பது விரைவுகுறித்த இடைச்சொல். 'விளக்கின் வீழ் விட்டில்' என்பது ஒரு அருமையான உவமை; இங்கே விளக்கு குரங்குகள்; விட்டில்பூச்சி இராவணன்; விளக்கில் விட்டில்பூச்சி விழுவதால் விளக்கும் அணைந்துபோகலாம்; விட்டில் பூச்சியும் இறந்துபோகலாம்; ஏதோவதொன்று நடக்கலாம்; இரண்டும் நடப்பதற்கும் வாய்ப்பு உண்டு. எனவே இங்கே இராவணன் அழிந்துபடலாம்; அல்லது வானரச்சேனைகள் அழிந்துபடலாம்; அல்லது இரண்டுபேருமே இறந்து அழிந்து போகலாம் என்பது குறிப்பு. வெற்றிதோல்வியைப் பற்றி, இப்போது ஆராய்வதால் பயனில்லை என்பதாம்.

71. ''இலங்கையை இடந்து, வெங்கண் இராக்கதர் என்கின்றாரைப்
பொலங்குழை மகளிரோடும், பால்நுகர் புதல்வரோடும்,
குலங்களோடு அடங்கக்கொன்று, கொடுந்தொழில் குறித்து, நம்மேல்
விலங்குவார் என்னின், தேவர் விண்ணையும் மண்ணில் வீழ்த்தும்''
(8993)

(இடத்தல்-பெயர்த்தல்; பொலன்-பொன்; குழை-காதணி; நுகர்தல்-உண்ணுதல்; குலம்-இனம்; அடங்க-முழுவதும்; விலங்குதல்-தடுத்தல்)

Koviloor Digital Library

சுக்கிரீவன் வானரவீரர்களை நோக்கி, ''நாம் இப்போது இந்த இலங்கை மாநகரையே பெயர்த்தெடுத்து, கொடிய கண்களையுடைய இராக்கதர் என்று சொல்லப்படுபவர்களையும் பொன்னாலான அழகிய காதணிகளை அணிந்த அவர்களுடைய பெண்டிர்களையும், அவர்களின் பாலைச் சுவைத்துக் கொண்டிருக்கும் சிறுகுழந்தைகளையும், அவர்கள் இனம் முழுவதும் கொன்று, அறத்திற்கு மாறான செய்கையைச் செய்வோம். இது குறித்துத் தேவர்கள் வெகுண்டு வந்து நம்மைத் தடுக்க முற்பட்டார்கள் என்றால் அவர்களது விண்ணுலகத்தையும் இத்தரையில் வீழ்த்துவோம் வாருங்கள்'' என்று கூவியழைக்கிறான்.

''பால்நுகர் புதல்வர்கள்'' என்பது இங்கு பச்சைக் குழந்தைகளைக் குறிக்கும். அரக்கர்களைக் கொல்வது என்பது சரி, பொலங்குழை மகளிரோடு பால்நுகர் புதல்வர்களையும் கொல்லுதல் என்பது மிக்க கொடுமையான செயல் என்பதை ''கொடுந்தொழில்'' என்று கவிஞனே கூறுகின்ற உளப்பாங்கு நோக்குக. அறத்திற்கு மாறான செயல் ''கொடுந் தொழில்'' எனப்பட்டது என்க. இந்திரசித்து நமது பெண்குலத்தலைவியை அழித்தான் அல்லவா? எனவே நாம் அவர் குலத்துப் பெண்களையும், பச்சைக் குழந்தைகளையும், அவர்கள் இனத்தையும் வேரோடு அழித்தொழிப்பது தவறல்ல என்பது சுக்கிரீவன் கருத்து.

72. சுக்கிரீவன் இலங்கைமீது தாவுதல்

''அறம்கெடச் செய்தும் அன்றே அமைந்தனம் ஆகின், ஐய!
புறம் கிடந்து உழைப்பது என்னே? பொழுது இறை புவனம் மூன்றும்,
கறங்கெனத் திரிந்து, தேவர் குலங்களை கட்டும்'' என்னா,
மறம்கிளர் வயிரத் தோளான், இலங்கைமேல் வாவலுற்றான். (8994)

(அமைதல்-துணிதல்; உழைப்பது-உழப்பது/வருந்துவது; கறங்கு-காற்றாடி; புவனம்-உலகம்; கட்டுதல்-அறுத்தழித்தல்; மறம்-வீரம்; கிளர்தல்-விளங்குதல்; வயிரம்-உறுதி; வாவுதல்-பாய்தல்/தாவுதல்; புறம்-வேறு)

வீரம் விளங்குகின்ற உறுதியான தோள்களை உடையவனான சுக்கிரீவன் இராமபிரானை நோக்கி, ''தலைவனே! அறத்தை அழிக்கச் செய்வோம் என்று துணிந்து தீர்மானம் செய்த பின்னர், தனியாக வேறு இருந்து வருந்திக் கொண்டிருப்பதால் பயன் என்ன? ஒரு சிறிது நேரத் திற்குள் இந்த மூன்று உலகங்களையும், காற்றாடிபோலச் சுற்றித் திரிந்து தேவர் குலத்தையும் வேரோடு அழித்துவிடுவோம்'' என்று கூறிக் கொண்டே இலங்கை மாநகரத்தின்மீது தாவத் தொடங்கினான் சுக்கிரீவன்.

'அறம் கெடச்செய்தும் என்றே அமைந்தனம்' என்ற தொடர் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இராமாவதாரத்தின் நோக்கமே அறம் தலை நிறுத்தல்

Koviloor Digital Library

தான். எனினும் இங்கே அரக்கர்கள் அறநெறிக்கு மாறாக, பெண்ணென்று கூட நோக்காமல் சீதாதேவியை வாளால் வெட்டி வீழ்த்தியமையால், நாமும் அதே செயலைச் செய்வதில் தவறொன்றும் இல்லை என்று சுக்கிரீவன் தானே தீர்மானம் செய்துகொண்டு இராமபிரானிடம் பேசுகிறான் என்பதை நினைவிற் கொண்டால்தான் இப்பாடலுக்குச் சரியான பொருள் கிடைக்கும். சுக்கிரீவன் இப்போது அறத்திற்கு மாறான செயலைச் செய்வதிலும், மூன்று உலகங்களையும் அழியச் செய்வதிலும், தேவர்குலத்தை அழித்தொழிப்பதிலுமே குறியாக இருக்கிறான் என்பதாம்.

73. இந்திரசித்து அயோத்தி சென்றது பற்றி அனுமன் கூறுதல்

மற்றைய வீரரெல்லாம் மன்னனின் முன்னம் தாவி,
''எற்றுதும் அரக்கர் தம்மை இல்லொடும் எடுத்து'' என்று, ஏகல்
உற்றனர்; உறுதலோடும், 'உணர்த்துவது உளது' என்று உன்னா,
சொற்றனன் அனுமன், வஞ்சன் அயோத்திமேல் போன சூழ்ச்சி. (8995)

(எற்றுதல்-தாக்குதல்; இல்-வீடு/அரண்மனை; ஏகல்-செல்லுதல்; உணர்த்துவது-தெளிவுபடுத்த வேண்டியது; உன்னா-உன்னி/எண்ணி; சூழ்ச்சி-தந்திரம்; மன்னன்-சுக்கிரீவன்)

குரக்கினத்தின் மன்னனாகிய சுக்கிரீவனுக்கு முன்னர், மற்ற எல்லா வானரவீரர்களும் இலங்கையை நோக்கித் தாவிக்கொண்டு, ''இப்பொழுதே இந்த அரக்கர்களையெல்லாம் அவர்கள், மனைவி, மக்கள், அரண்மனை முதலான எல்லாவற்றோடும் பெயர்த்தெடுத்துத் தாக்குவோம்'' என்று கூறிக்கொண்டு செல்லத் தொடங்கினார்கள். அவ்வாறு அவர்கள் செல்லும்பொழுது இவர்களுக்கெல்லாம் தெளிவு படுத்த வேண்டிய செய்தி ஒன்று உள்ளது என்று அனுமன் தன் மனத்தில் எண்ணி, வஞ்சகனான இந்திரசித்து அயோத்தியை நோக்கிப் படை யெடுத்துச் சென்ற செய்தியைத் தெரிவித்தான்.

வானரக்கூட்டம் இலங்கையை இப்போது அழிப்பதைக் காட்டிலும், அயோத்தியையும் அங்கே இருப்பவர்களையும் காப்பாற்ற வேண்டுவது இன்றியமையாதது எனக் கருதிய அனுமன் அவர்களிடம் இதுவரை சொல்லாதிருந்த இந்தச் செய்தியைத் தெளிவாகவும், விரைவாகவும் தெரிவித்தான் என்பதாம். 'இல்' என்ற சொல்லுக்குப் பொதுவாக வீடு என்றே பொருள் என்றாலும் இங்கே மனைவி, மக்களையும், அவர்கள் வசிக்கும் அரண்மனையையும் குறிக்கும் என்க. 'சூழ்ச்சி' என்பது பொதுவாக வஞ்சகச்செயல், தந்திரம் என்ற பொருளைத்தந்தாலும் இங்கே செய்தி என்ற பொருளே கொள்ளப்பட்டிருக்கிறது. காரணம் இந்திரசித்து செய்தது சூழ்ச்சி, தந்திரம் என்பது அனுமனுக்கே தெரியாதல்லவா? எனவே சாதாரணப் பொருளே தரப் பெற்றிருக்கிறது.

Koviloor Digital Library

74. இராமபிரான் கலங்குதல்

தாயரும், தம்பிமாரும், தவம்புரி நகரம் சாரப்
போயினன் என்ற மாற்றம், செவித்துளை புகுதலோடும்,
மேயின அடியின் நின்ற வேதனை கனைய, வெந்த
தீயிடைத் தணிந்ததென்ன, சீதைபால் துயரம் தீர்ந்தான். (8996)

(*மாற்றம்-சொல்; மேயின-பொருத்தமான; கனைதல்-மிகுதியாதல்; வடிவு-உருவம்/உடம்பு*)

''தன்னுடைய மூன்று தாய்மார்களும் கைம்மை நோன்பு நோற்றுக் கொண்டிருப்பதும், தன் தம்பிமாராகிய பரதனும், சத்துருக்கனும் தன்னை எதிர்பார்த்துத் தவம் மேற்கொண்டிருப்பதுமாகிய தனது அயோத்தி நகரத்திற்கு அரக்கன் இந்திரசித்து படையுடன் சென்றிருக்கிறான் என்று அனுமன் கூறக்கேட்ட இராமபிரான், முன்பு சீதாதேவி வெட்டப்பட்டாள் என்றபோது அடைந்த மனத்துயரம் சிறிதாகிப்போக இப்போது தாயருக்கும், தம்பிமாருக்கும் என்ன ஆகப்போகிறதோ என்ற துயரம் பெரிதாகிப்போக, முன்பு பட்ட சிறு புண்ணானது, இப்போது அனுப விப்பதான இந்தத் தீயிடத்தில் சிறியதாகிப் போனது போலவும் ஆயிற்று.

சீதாதேவி இந்திரசித்தனால் வெட்டப்பட்டு உயிர்துறந்தாள் என்பது வேதனைமிக்க புண். ஆனால் இப்போது, தன் தாயரும், தம்பிமாரும் துன்பப்படப் போகிறார்கள் என்று அனுமன் சொல்லக் கேட்டது அந்தப் புண்ணின் ஊடே வைக்கப்பட்ட நெருப்பு. எனவே இந்தப் பெரும் துன்பமாகிய நெருப்பினால் அடைந்த வேதனை, முன்பு சீதாதேவி வெட்டப்பட்டதைக் கேட்டதனால் அடைந்த வேதனையைக் காட்டிலும் மிகுதியானது என்பதாம். இருகோடுகள் தத்துவம். ஒரு சிறுதுன்பம் அடைந்து கொண்டிருக்கும்போது, மற்றொரு பெருந்துன்பம் வந்து சேர்ந்தால், முன்பு அனுபவித்த சிறு துன்பத்தை ஒரு பொருட்டாக மதிக்கத் தோன்றாது. இது மனித இயல்பு. தேள் கொட்டியது ஒரு துன்பம், ஆனால் அதே இடத்தில் வேற்படை தாக்கியது என்றால் தேள்கடித்ததால் ஏற்பட்ட துன்பம் பெரிதாகத் தோன்றாது, இப்போது வேற்படை பட்ட துயரம்தான் பெரிதாகத் தோன்றும். முந்தையத் துன்பம் மறைந்து, மறந்துபோகும் என்பது உலகியல் வழக்கு. ''வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல'' என்பது இறையனார் களவியல் உரை. இதையே முன்பும் ''மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தால் எனச் செவியில் புகுதலோடும்'' என்று பாலகாண்டத்தில் கூறியிருப்பதையும் இங்கு நினைவுகூர்க.

தாயர் மூவரும் கைம்மை நோன்பு நோற்பதும், தம்பியர் பரதனும், சத்துருக்கனும் சடைமுடியும், மரஉரியும் அணிந்து தவம் மேற்கொண்டு நந்தியம்பதியில் இருப்பதும் நாம் அறிந்ததே. எனவே அயோத்தி நகரமே

Koviloor Digital Library

தவம்மேற்கொண்டிருந்தது என்பதுபோல ''தாயரும், தம்பிமாரும் தவம்புரி நகரம்'' என அயோத்தி மாநகரம் சிறப்பிக்கப்பெற்றது. ''உயிருடன் பொருந்திய உடம்பில் இருந்த வேதனை'' என்பது இராமபிரான் உடலும் உள்ளமும் வேதனையால் துவண்டது என்பதைக் குறிக்கும். சீதாதேவி வெட்டப்பட்டாள் என்ற செய்தி புண்பட்டநிலை; அயோத்தி மாநகரத்திற்கு இந்திரசித்து படையுடன் சென்றிருக்கிறான் என்ற செய்தி தீப்பட்ட வெம்மை என உவமை விரிவு கொள்ளும். புண்பட்ட காயத்தில் நெருப்புப்பட்டால், புண்காயத்தைக் காட்டிலும், நெருப்புக்காயம் பெரிதாகத் தோன்றுவதுபோல சீதாதேவி வெட்டப் பட்டாள் என்ற புண்பட்ட காயத்தைக் காட்டிலும், இந்திரசித்து படையுடன்அயோத்தி நகரத்திற்குச் சென்று குதித்தான் என்பது பெரிதாகத் தோன்றியது என்பதாம். ''ஆணிக்கு ஆணி எதிர்செலக் கடாயது'' என்று முன்பு கூறியதுபோல, ஒரு மெய்ப்பாடு மற்றொன்றினால் நீங்கியது எனக்கொள்க. 'கனைதல்' என்ற சொல் மிகுதியாதலைக் குறிக்கும். 'காமம் கனைந்து எழ'' என்பது பரிபாடல்.

75. அழுந்திய பாலின் வெள்ளத்து ஆழிநின்று, அனந்தர் நீங்கி,
எழுந்தனன் என்ன, துன்பக்கடலின் நின்று ஏறி, ஆறாக்
கொழுந்து உறு கோபத்தீயும், நடுக்கமும் மனத்தைக்கூட
உழுந்து உருள் பொழுதும் தாழா விரைவினான், மறுக்கம் உற்றான்.
(8997)

(ஆழி-கடல்; அனந்தர்-உறக்கம்/யோகநித்திரை/அறிதுயில்; கூடுதல்-சேர்தல்; மறுக்கம்-மனக்கலக்கம்; ஆறா-தணிக்க இயலாத)

மிக ஆழமான, பால் நிறைந்துள்ள பாற்கடலினின்றும் தனது யோகநித்திரையினின்றும் நீங்கி உலக மக்களைக் காப்பாற்றும் பொருட்டு எழுந்து வருகின்ற திருமாலைப்போல இராமபிரான், இப்போது சீதாதேவி வெட்டிச் சாய்க்கப்பட்டாள் என்ற துன்பக்கடலில் ஆழ்ந்து போயிருந்தவன், அத்துன்பக் கடலினின்றும் கரையேறி வெளிவந்து, தணிக்க இயலாத கொழுந்து விட்டெரியும் கோபக்கனலுடன் சற்று உடல் நடுக்கமும் அவன் மனத்திற்குள் வந்துசேர, உழுந்து உருள்கின்ற சிறுபொழுதாகிய ஒரு நொடிப்பொழுதுகூட காலந்தாழ்த்தாமல் விரைந்து எழுந்து மனக்கலக்கம் உற்று நிமிர்ந்து நின்றான்.

''அழுந்திய பாலின் வெள்ளத்து ஆழி'' என்பது திருப்பாற்கடலைக் குறிக்கும். அனந்தர் என்ற வடசொல்லுக்கு அறிதுயில் என்பது நேர் தமிழ்ச்சொல். துன்பத்தைக் கடலாக உருவகித்ததால் அதனின்றும் நீங்கியதை 'ஏறி' என்ற சொல்லால் குறித்தார் என்க. 'கோபத்தீ' என்பது உருவகம். எதற்கும் அஞ்சாத, எதையும் தாங்கும் இதயம் கொண்ட இராமபிரானே சீதாதேவி வெட்டப்பட்டாள் என்று கேட்டதும் நடுக்கமும் மறுக்கமும் உற்றான்'' என்று கூறுவதைக் கருதுக. கஜேந்திரன் ஆதிமூலமே

Koviloor Digital Library

என்று கூவியழைத்தபோதும், திரௌபதி 'கண்ணா' என்று கூவியழைத்த போதும் ஒருநொடிப் பொழுதுகூடத் தாமதிக்காமல் வந்து உதவிநல்கிய திருமாலின் அம்சமான இராமபிரான் இப்போது தனக்கே ஒரு பெருந்துன்பம் வந்து சேர்ந்தபோது, 'உழுந்து உருள் பொழுதும் தாழா விரைவினான்'' என்றாலும் செயல்படாமல் மறுக்கமும், நடுக்கமும் உற்றான் என்று கூறும் கவிஞனின் புலமை நோக்குக. 'உழுந்து உருள் பொழுதின் மீள்வேன், ஒரு கணமேனும் தாழேன்' என்பது சீகாளத்திப் புராணம். துன்பக்கடலினின்றும் கரையேறி வந்த இராமபிரானுக்குப் பாற்கடலினின்றும் யோகநித்திரை நீங்கிவந்த திருமாலே உவமையாகக் கூறப்பட்டிருப்பதையும் நோக்குக. இந்திரசித்து அயோத்திக்குச் சென்றுவிட்டான் என்பது ஆறாக் கொழுந்துறு கோபத்தீ; அங்கிருக்கும் தாயரும், தம்பிமாரும் என்ன ஆவரோ என்பதால் 'நடுக்கமும் மறுக்கமும்' எனக்கொள்க.

76. "தீரும் இச்சீதையோடும் என்கிலது அன்று என்தீமை;
வேரொடு முடிப்பதாக விளைந்தது; வேறும் இன்னும்
யாரொடும் தொடரும் என்பது அறிகிலேன்; இதனை ஐய!
பேரிட அவதி உண்டோ? எம்பியர் பிழைக்கின்றாரோ?" (8998)

(என்கிலது-என்று சொல்லக்கூடியது; பிழைத்தல்-உயிரோடு இருத்தல்; பேரிடுதல்-பெயர்த்து விடுதல்/நீங்கிவிடுதல்; அவதி- கால எல்லை; வேர்-குலம்/மரபு)

இராமபிரான் அங்கு நின்றிருந்த அனுமன், வீடணன், இலக்குவன் முதலியோரை நோக்கி, ''என்னுடைய தீவினையின் பயன் இந்தச் சீதாதேவி வெட்டிவீழ்த்தப்பட்டதோடு முடிந்துபோனது என்று சொல்வதற்கு இல்லை; என்னுடைய சூரியகுலத்தையே அடியோடு அழித்துவிடும் தன்மையை விளைவித்துக் கொண்டிருக்கிறது. இது இன்னும் யார்யாரைத் தொடர்ந்து செயல்படும் என்பதையும் என்னால் ஊகித்து உணரமுடியவில்லை; இதனை விலக்கி, இதனின்றும் பெயர்ந்து வருவதற்கு ஏதேனும் உபாயம் உண்டோ? என் தம்பியர் அயோத்தியில் உயிருடன் பிழைத்து இருக்கிறார்களோ?'' என்று மனம் நொந்து கேட்கிறான்.

77. "நினைவதன் முன்னம் செல்லும் மானத்தில் நெடிது போனான்;
வினை ஒரு கணத்தின் முற்றி மீள்கின்றான்; வினையேன் வந்த
மனை பொடிபட்டது அங்கு; மாண்டது தாரம் ஈண்டும்;
எனையன தொடரும் என்பது உணர்கிலேன்! இறப்பும் காணேன்" (8999)

(மானம்-விமானம்; நெடிது-நெடுந்தொலைவு; வந்த-பிறந்த; மனை-வீடு; ஈண்டு-இங்கு; தாரம்-மனைவி; எனையன-எத்தகைய/எவ்வளவு)

Koviloor Digital Library

''மனோவேகத்திற்கும் விஞ்சிய வேகத்தில் செல்லும் இயல்புடைய தான புட்பகவிமானத்தில் இந்திரசித்து நெடுந்தொலைவிலுள்ள அயோத்திக்குப் போயிருக்கிறான்; அவன் நினைத்த காரியமாகிய என் தாயரையும், தம்பிமாரையும் அழித்துவிட்டு, ஒருநொடிப் பொழுதிற்குள் திரும்பி வந்துவிடுவான்; என்னுடைய தீவினைப்பயனால் நான் பிறந்த வீடாகிய அயோத்தி அரண்மனையும் அங்கே சாம்பலாய்ப் போயிருக்கும்; இங்கும் மனைவி வெட்டிக்கொல்லப்பட்டாள். இன்னும் என்னென்ன துன்பங்கள் தொடர்ந்து வரும் என்பதையும் உணர்ந்தறியும் வல்லமை இல்லாதவனாய் நின்றுகொண்டிருக்கிறேன். இவற்றையெல்லாம் கண்டபிறகும் இறந்துபோய்விடலாம் என்றால், இறப்பும்கூட உடனே வரமாட்டேன் என்கிறதே!'' என்று தன்னைத்தானே நொந்துகொண்டு புலம்புகிறான் இராமபிரான்.

'நினைவதன் முன்னம் செல்லும் மானம்' என்று புட்பகவிமானம் சிறப்பிக்கப்படுகிறது. போனான், மீள்கின்றான், பட்டது, என்பன வெல்லாம் உறுதிபற்ற வந்த காலவழுவமைதிகள். பிறப்பும் இறப்பும் அற்ற, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியான். ''இறப்பும் காணேன்'' என்று கூறுவதை நுனித்து உணர்க.

78. ''தாதைக்கும், சடாயுவான தந்தைக்கும், தமியள் ஆய,
சீதைக்கும், கூற்றம் காட்டித் தீர்ந்திலது, ஒருவன் தீமை;
பேதைப் பெண்பிறந்து, பெற்ற தாயர்க்கும், பிழைப்பிலாத
காதல் தம்பியர்க்கும், ஊர்க்கும், நாட்டிற்கும் காட்டிற்று அன்றே!'' (9000)

(தமியள்-தனித்திருந்தவள்; கூற்றம்-இயமன்; தீர்தல்-நீங்குதல்; பிழைப்பு-தவறு/குற்றம்; காதல்-அன்பு; தாதை-தந்தை/தசரதன்)

''என் ஒருவனுடைய தீவினைப்பயன், என்னைப் பெற்றெடுத்த தந்தையாகிய தசரதச் சக்கரவர்த்திக்கும், நான் தந்தையாக ஏற்றுக்கொண்ட சடாயுவுக்கும், வேறுஓர் துணையுமின்றித் தனிமைப்படுத்தப் பட்டவ ளான சீதாதேவிக்கும் இறப்பு என்னும் கொடுமையைத் தோற்றுவித்து விட்டது. அதோடு மட்டும்நின்றுவிடவில்லை; பேதைமைத்தன்மையால் பெண்களாகப் பிறந்த காரணத்தால் என்னைப் பெற்ற தாய்மார்களுக்கும், ஒரு குற்றமும் இழைக்காத என் அன்புத் தம்பிமார்களுக்கும், நான் நேசிக்கும் என் ஊராகிய அயோத்திவாழ் மக்களுக்கும், என்னுடைய கோசல நாட்டிற்கும் அல்லவா இறப்பைத் தோற்றுவித்து விட்டது'' என்று அங்கலாய்க்கிறான் இராமபிரான்.

''கூற்றம் காட்டுதல்'' என்பது மரணத்தை, இறப்பைக் குறித்தது. 'ஊர்' என்பது ஊர்மக்களையும், 'நாடு' என்பது நாட்டு மக்களையும் குறிக்கும். முன்பு குறித்த தந்தை தசரதன், சடாயு, சீதாதேவி ஆகிய மூவரும் முன்னரே இறந்துபட்டனர். எனவே 'கூற்றம் காட்டித் தீர்ந்திலது' என்றார். பின்னால்

Koviloor Digital Library

கூறப்பட்டிருக்கும் பெற்ற தாயர், காதல் தம்பியர், ஊர், நாடு என்பனவெல்லாம் இப்போது இந்திரசித்தனால் அழிக்கப் பட்டிருக்கும் என்ற ஊகத்தால் கூறியது. எனினும் 'காட்டிற்று' என்று இறந்தகாலத்தில் கூறியது துணிவு பற்றிவந்த காலவழுவமைதி எனக்கொள்க.

79. "உற்றது ஒன்று உணரகில்லார்; உணர்ந்து வந்து உருத்தாரேனும்,
வெற்றி வெம்பாசம் வீசி விசித்து, அவன் கொன்று வீழ்த்தால்
மற்றை வெம்புள்ளின் வேந்தன் வருகிலன்; மருந்து நல்கக்
கொற்ற மாருதி அங்கு இல்லை; யார் உயிர் கொடுக்கற்பாலார்?" (9001)

(உற்றது-இங்கு நிகழ்ந்தது; உருத்தல்-வெகுண்டு போர் செய்தல்; பாசம்-நாகபாசம்; விசித்தல்-கட்டுதல்; புள்ளின்வேந்தன்-கருடன்; நல்குதல்-கொணர்ந்து கொடுத்தல்; கொற்றம்-வெற்றி; மருந்து-சஞ்சீவி மூலிகைகள்)

''இங்கு நிகழ்ந்தது ஒன்றையும் என் தம்பியரான பரத, சத்துருக்கனர் அறிந்தனர் இல்லை; இந்திரசித்து திடீரெனச் சென்று போர்செய்தான் என்றால் என் தம்பியர் என்ன ஆவார்கள்? ஒருவேளை அவர்கள் அதனை ஊகித்து உணர்ந்து கொண்டு சினந்து அவனை எதிர்த்துப் போர் செய்தாலும், இந்திரசித்து அவனுக்கு எப்பொழுதும் வெற்றியையே தருகின்ற நாகபாசத்தை அவர்கள் மீது ஏவி அவர்களைக் கட்டி வீழ்த்திக் கொன்றுவிடுவான். அவ்வாறு அவர்கள் உயிரிழந்தால், அவர்களின் உயிரை மீட்டுக் கொடுப்பதற்கு, முன்பு நமக்கு உதவி செய்தவனான கொடிய பறவைகளின் அரசனான கருடன் அங்கு வரமாட்டானே! அவன் வராவிட்டாலும் எப்போதும் வெற்றியையே பொருந்திய அனுமன் மருத்துமலையைக் கொண்டுவந்து சஞ்சீவி மூலிகையினால் அவர்களை உயிர்பிழைக்கச் செய்ய, அவன் இப்போது அங்கு இல்லையே! இந்நிலையில் அவர்களுக்கு உயிர் கொடுக்கும் தகுதி வாய்ந்தவர்கள் யார் இருக்கிறார்கள்?'' என்று புலம்புகிறான் இராமபிரான்.

'உணரகில்லார்' என்பதில் 'கில்' என்பது ஆற்றல் உணர்த்தும் இடைச்சொல். இந்திரசித்து நம்மீது நாகபாசம் வீசியபோது, நாகத்திற்குப் பகைவனான கருடன் வந்து நமக்கு உதவி நல்கி நம்மை உயிர்ப்பித்தான். இலக்குவனும், வானர வீரர்களும் பிரமாத்திரத்தால் கட்டுண்டபோது அனுமன் மருத்துமலையைக் கொணர்ந்து எல்லோரையும் மீண்டும் உயிர்ப்பித்தான். அதுபோல அவர்களை உயிர்ப்பிக்க கருடனும் வரமாட்டான், அனுமனும் அங்கில்லை என்றால் அவர்களை யார்தான் காப்பாற்றுவார்கள்? என்கிறான் இராமபிரான்.

Koviloor Digital Library

80. இராமபிரான் வஞ்சினம் கூறுதல்

"மாக ஆகாயம் செல்ல, வல்லையின், வயிரத் தோளாய்!
ஏகுவான் உபாயம் உண்டேல் இயம்புதி; நின்ற எல்லாம்
சாக; மற்று, இலங்கைப் போரும் தவிர்க; அச் சழக்கன் கண்கள்
காகம் உண்டதற்பின், மீண்டும் முடிப்பென் என் கருத்தை" என்றான்.
(9002)

(வயிரம்-திண்மை; மாகம்-ஆகாயம்; வல்லை-விரைவாக; உபாயம்-மாற்றுவழி; தவிர்தல்-நீக்குதல்; சழக்கன்-கொடியவன்/இந்திரசித்து; ஏகுவான்-செல்வதற்கு; சாதல்-அழிதல்)

"வயிரம் போன்ற திண்ணிய தோள்களை உடையவனே! மாகம் என்று சொல்லப்படுகின்ற ஆகாயத்தின் வழியே அயோத்தி நகரை, இந்திரசித்தன் அடைவதற்கு முன்பு நாம் விரைவில் சென்று அடைவதற்கு ஏதேனும் மாற்று வழி இருக்கிறதா? இருந்தால் சொல்வாயாக! இப்போது இங்கே இலங்கையில் எஞ்சி நிற்கின்ற நிகழ்வுகள் எல்லாம் அப்படியே நிற்கட்டும்; மேலும் எதுவும் தொடரவேண்டாம்; இலங்கையில் நாம் போர் செய்வதையும் தவிர்த்துவிடுவோம். இப்போது நாம் அயோத்தி சென்று, அந்தக் கொடியவனான அரக்கன் இந்திரசித்தனைக் கொன்று, அவன் கண்களைக் காகங்கள் கொத்தித் தின்பதைப் பார்த்தபிறகு, மீண்டும் இலங்கை வந்து நம்முடைய நோக்கமாகிய இராவணனைக் கொல்லுதல் என்பதை முடித்துக் கொள்ளலாம்" என்று கூறுகிறான் இராமபிரான்.

இங்கே பொதுவாக 'வயிரத் தோளாய்' என்று அழைத்ததனால் அனுமனைக் குறித்ததாகவும் கொள்ளலாம். வீடணனைக் குறித்ததாகவும் கொள்ளலாம். காரணம் அனுமன் முன்பே வான்வழியே இலங்கை வந்து இராமபிரானின் கட்டளையை நிறைவேற்றியிருக்கிறான். வீடணனுக்கு புட்பகவிமானத்தைவிட விரைந்து செல்லும் வேறு ஏதேனும் வாகனம் பற்றித் தெரிந்திருக்கலாம். எனவே இருவரிடமும் வினவியதாகக் கொள்ள இடம் இருப்பதை உணர்க. 'மாக ஆகாயம்' என்பது மீமிசைச்சொல். தன் சிற்றன்னையின் கட்டளைப்படி அரசச்செல்வத்தைத் தன் தம்பி பரதனிடம் கொடுத்துவிட்டுப் பதினான்கு ஆண்டு வனவாசம் செய்வதற்காக வந்தவன் இராமபிரான். முன்பு பல சமயங்களில் அயோத்திக்குத் திரும்பிச் செல்லவேண்டிய வாய்ப்புக்கள் வந்த பொழுதெல்லாம், அவற்றைத் தவிர்த்து, பதினான்கு ஆண்டுகள் தவம் மேற்கொண்டு கானகத்திலேயே வசிப்பேன் என்று உறுதி கொண்டிருந்த இராமபிரான் இப்போது தன் தாயர்க்கும், தம்பியர்க்கும், ஊருக்கும், நாட்டிற்கும் தீங்கு நேர்ந்தது என்பதைக் கேட்டவுடனேயே அங்கு விரைந்து செல்லும் வழியைக் கேட்கிறான் என்றால் அவனது மனநிலையைக் கற்போரையே உய்த்துணரவைத்த கவிஞனின் மேதாவிலாசத்தை நுனித்து உணர்க. முன்பு

Koviloor Digital Library

குகன், பரதன், வசிட்டர் முதலியோர் நாடு திரும்ப வேண்டினர்; கிட்கிந்தையில் அரசபோகம் மறுத்தான்; 'என்கருத்து' என்பது இராவணவதத்தைக் குறிக்கும். 'சழக்கன்' என்ற சொல் காப்பியத்தில் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தீயவன் என்பது பொருள். 'சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்' என்பது திருவாசகம்.

81. இலக்குவன் பரதனின் போராற்றல் பற்றிக் கூறுதல்

அவ்விடத்து இளவல், "ஐய! பரதனை அமரின் ஆர்க்க,
எவ்விடற்கு உரியான் போன இந்திரசித்தே அன்று;
தெவ்இடத்து அமையின் மும்மை உலகமும் தீர்ந்து அறாவோ?
வெவ்இடர்க் கடலின் வைகல்; கேள்," என விளம்பலுற்றான். (9003)

(அவ்விடத்து-அப்போது; இளவல்-இலக்குவன்; ஆர்த்தல்-கட்டுதல்; எவ்வுதல்-தூண்டுதல்/செலுத்துதல்/ஏவுதல்; தெவ்இடம்-பகைப்புலம்; தெவ்-பகைவர்; அறுதல்-அழிந்து ஒழிதல்; அறாவோ-அழிந்து ஒழியாதோ; வைகல்-வைகுதல்/தங்குதல்; விளம்புதல்-விரித்துரைத்தல்; மும்மை-மூன்று)

அப்போது இராமபிரானின் தம்பி இலக்குவன், இராமபிரானை நோக்கி, ''தலைவனே! இப்போது அயோத்திக்குச் சென்றிருக்கும் இந்திரசித்தனால் நம் பரதனை நாகபாசத்தால் கட்டுதற்கும், அவன்மீது நாகபாசத்தைச் செலுத்துவதற்கும் முடியாது. காரணம், மூன்று என்று கூறப்படுகின்ற மூவுலகங்களிலும் உள்ள உயிரினங்கள் அனைத்தும் போர் செய்ய எண்ணிப் பகைப்புலத்தில் அமைந்து வந்தாலும், அவையெல்லாம் பரதனின் போராற்றலால் தீய்ந்து அழிந்து போகாதா? நீ அதைப்பற்றி எண்ணி இப்போது கொடிய துயரக்கடலில் அமிழ்ந்துபோய் விடாதே! நான் சொல்லுவதைக் கேட்பாயாக!'' என்று கூறிக் கீழ்வருமாறு பேசத் தொடங்குகிறான்.

பரதனின் போராற்றலைப் பற்றிய இலக்குவன் கணிப்பு இந்தப்பாடல். பரதன் ஒரே நேரத்தில் மூன்று உலகங்களையும் அழிக்கவல்லவன். எனவே இப்போது அயோத்திக்குப் போயிருக்கும் இந்திரசித்தனால், நாகபாசத்தைச் செலுத்திப் பரதனை ஒன்றும் செய்யமுடியாது என்றுகூறி இராமபிரானைத் தேற்ற முயற்சிக்கிறான் இலக்குவன் என்பதாம். ஏவுதற்கு என்பது எதுகைநோக்கி 'எவ்விடற்கு' என்று திரிந்தது. 'மும்மை' என்பது இங்கு மூன்று என்ற எண்ணுப்பொருளில் வந்தது. 'இடர்க்கடல்' என்பது உருவகம். துன்பத்தைக் கடலாக உருவகித்தார் என்க.

Koviloor Digital Library

82. "தீக்கொண்ட வஞ்சன்வீச, திசைமுகன் பாசம் தீண்ட,
வீக்கொண்டு வீழ, யானோ பரதனும்? வெய்ய கூற்றைக்
கூய்க்கொண்டு, குத்துண்டு, அன்னான் குலத்தொடு நிலத்தன் ஆதல்,
போய்க் கண்டுகோடி அன்றே?" என்றனன், புழுங்குகின்றான். (9004)

(தீ-தீமை; திசைமுகன்-பிரமதேவன்; பாசம்-நாகாஸ்திரம்; கூற்று-இயமன்; வெய்ய-கொடிய; கூய்க்கொண்டு-கூவி அழைத்துக் கொண்டு; குலம்-இனம்/பரிவாரங்கள்; கோடி-கொள்வாயாக; வீ-இறப்பு; அன்னான்-இந்திரசித்தன்; புழுங்குதல்-மனம் நொந்துபோதல்)

''தீய குணங்களையே இயல்பாகக் கொண்ட அந்தக் கொடியவனான இந்திரசித்து செலுத்தும், பிரமதேவனால் தரப்பட்ட நாகாஸ்திரமும், அவனுடைய பிரமாஸ்திரமும் ஒருவனைத் தீண்ட, அதனால் கட்டுண்டு இறந்து வீழ்வதற்கு, பரதனையும், என்னைப்போல் நினைத்துக் கொண்டாயோ? பரதன் இலக்குவன் அல்லன், வள்ளலைப் போல்வான் பரதன்; பரதன் விடுகின்ற ஒரு குத்துக்கே, அந்த இந்திரசித்து இயமனை வரவேற்றுக் கூவிக்கொண்டு அவன்மட்டுமல்ல, அவனுடன் வந்த பரிவாரங்களும், அவன் கூட்டமும் தரையில் வீழ்ந்து மண்ணோடு மண்ணாகிப் போகப்போகிறான் பார். அதனை நீயே நேரில் சென்று கண்டு கொள்வாயாக!'' என்கிறான் மனம் நொந்து போகின்ற இலக்குவன்.

இங்கே 'திசைமுகன் பாசம்' என்பது நேர்பொருளாக பிரமாஸ்திரத்தையும், நான்முகனால் தரப்பட்ட நாகாஸ்திரத்தையும், இரண்டையும் குறிக்கும் எனக்கொள்க. இலக்குவன் பிரமாஸ்திரத்தால் கட்டுண்டதும், நாகாஸ்திரத்தால் இறந்து வீழ்ந்ததும் நாம் பிரமாஸ்திரப் படலத்திலும், நாகபாசப் படலத்திலும் கண்டு வந்ததை இங்கு நினைவிற் கொண்டுவருக. எனவே தன்னைக் காட்டிலும் பெரு வீரனான பரதன் இவற்றுக்கெல்லாம் கட்டுப்படமாட்டான் என்று பரதனின் பேராற்றலைப் புகழ்கிறான் இலக்குவன். மேலும் பரதனின் ஒரு குத்துக்குக்கூட இந்திரசித்தன் தாங்காது, அவனும் அவன் படையும் மாண்டு வீழப்போவதை நீயே நேரில் சென்று காண்பாயாக என்றும் கூறுகிறான் என்பதாம்.

இங்கே ஒரு புதிய செய்தியும் கிடைக்கிறது. இராமபிரானும் இலக்குவனும் வனவாசத்தில் இருந்தபோது, இராவணன் என்னும் அரக்கன் அயோத்தியின்மீது படையெடுத்து வந்ததாகவும் அப்போது சத்துருக்கன் மட்டுமே தனித்து நின்று அவ்வரக்கனைக் கொன்று வெற்றி கொண்டான் என்றும் சத்துருக்கன் பற்றிய செய்தி ஒன்று குலசேகர ஆழ்வாரால் பேசப்படுகிறது. பெருமாள் திருமொழி-10. எனினும் இச்செய்தி வேறெங்கும் பேசப்படவில்லை என்பதும் கருதத்தக்கது. இங்கே இலக்குவன் தன்னைக் காட்டிலும் பரதனே மிக்க பேராற்றல் உடையவன் என்பதை நிறுவுதலை உணரவேண்டும். ''கூய்க்கொண்டு'' என்பது கூவிக்கொண்டு என்ற பொருளைத் தரும்.

Koviloor Digital Library

83. அனுமன் தன் தோள்களில் ஏறிக்கொள்ளச் சொல்லுதல்

அக்கணத்து அனுமன் நின்றான், "ஐய! என்தோளின் ஆதல்,
கைத்துணைத் தலத்தே ஆதல் ஏறுதிர்! காற்றும் தாழ,
இக்கணத்து அயோத்தி மூதூர் எய்துவென்; இடம் உண்டு என்னின்,
திக்கு அனைத்தினிலும் செல்வென்; யானே போய்ப்பகையும்
தீர்வென்" (9005)

(அக்கணம்-அப்போது; துணை-இரண்டு; கைத்தலம்-கைகள்; தாழ்தல்-பின்னிடுதல்; மூதூர்-பழையஊர்; இடம்-காலம்/சந்தர்ப்பம்; தீர்தல்-ஒழித்தல்)

இவ்வாறு இராமபிரான் வேறு உபாயம் கேட்டதும், அப்போது அங்கு நின்றிருந்தவனான அனுமன், "தலைவனே! என்னுடைய தோளிலாவது, இரண்டு கைகளிலாவது தாங்கள் ஏறிக்கொள்ளுங்கள்; காற்றைக் காட்டிலும் வேகமாகக் காற்றும் பின்தங்கும்படி வேகமாக, இந்தக் கணத்திலேயே பழைய பெருமைவாய்ந்த ஊராகிய அயோத்தி நகருக்கு எல்லாத் திசைகளிலும் செல்வேன்; தாங்கள் அனுமதித்தால், நானே தனித்துச் சென்று அந்தப் பகைவனாகிய இந்திரசித்தனை அழித் தொழிப்பேன்" என்று தானே முற்பட்டு வருகிறான் அனுமன்.

'வாயு வேகத்தினும் விரைவாகச்செல்வேன்' என்பதைக் 'காற்றும் தாழ' என்றார் என்க. காற்று-வாயுதேவன்; அனுமனின் தந்தை என்பதை இங்கே நினைவிற் கொண்டுவருக.

84. "கொல்ல வந்தானை நீதி கூறினென்; விலக்கிக் கொள்வான்,
சொல்லவும் சொல்லி நின்றேன்; கொன்றபின், துன்பம் என்னை
வெல்லவும், தரையின் வீழ்வுற்று உணர்ந்திலென், விரைந்து போனான்;
இல்லை என்று உளனேல், தீயோன் பிழைக்குமோ? இழுக்கம் உற்றான்.
(9006)

(நீதி-நன்னெறி; இழுக்கம்-இழிவு)

நான் மேற்குத்திசை வாயிலில் திரும்பி வந்து நின்றபோது இந்திரசித்து சீதாதேவியைக் கொல்லுவதற்கு முற்பட்டான்; அப்போது சில நன்னெறிகளைப் பலமுறை கூறினேன்; அவனிடமிருந்து சீதாதேவியைக் காப்பாற்றும் பொருட்டு, அவனை விலக்குவதற்காக மேலும் சில இதமான வார்த்தைகளை வீணாகக் கூறிக்கொண்டு நின்றிருந்தேன். அவற்றைக் கேளாமல் அச்சமயத்தில் அவன் சீதாதேவியைத் தன் வாட்படையால் வெட்டிவிட்டான். அதன்பின் நடந்தது எதையும் அறியாதவாறு துன்பம் என்னை ஆட்கொண்டதால் உணர்வற்றுத் தரையில் விழுந்துவிட்டேன்; அந்தச்சமயம் பார்த்து அவன் விரைந்து அயோத்தி நோக்கிப் போய் விட்டான்; நான் உணர்விழக்காமல் இருந்திருந்தாலோ, அல்லது அவன்

Koviloor Digital Library

விரைந்து அகன்று செல்லாமல் இருந்திருந்தாலோ, அந்த இழிகுணம் படைத்த கயவனான இந்திரசித்து என்னிடமிருந்து தப்பித்துப் போயிருப்பானோ?'' என்று இராமபிரானிடம் தன்நிலை விளக்கம் தருகிறான் அனுமன்.

சீதாதேவி கொல்லப்படும் முன்பும் அவளைக் காப்பாற்ற முடியவில்லை; அவள் கொல்லப்பட்ட பின்பும் இந்திரசித்தனைக் கொல்லமுடியவில்லை என்று, தான் இருந்த அப்போதைய நிலையைத் தெளிவுபடுத்துகிறான் அனுமன். இந்திரசித்து சீதாதேவியைக் கொல்லுவதற்கு முன்பு அவனுடன் போரிட்டிருந்தால் அது சீதாதேவிக்கு ஆபத்தாய் முடிந்திருக்கும். அவள் கொலையுண்டபின் நான் உணர்விழந்ததால் அந்தக் கொடியவனைக் கொல்லும் வாய்ப்பையும் இழந்து தவறுசெய்து விட்டேன் என்கிறான் அனுமன் என்பதாம். 'துன்பம் என்னை வெல்லவும்' என்பது துன்ப உணர்ச்சி தன்னை ஆட்கொண்டது, தன்வயப்படுத்தியது, வெற்றிகொண்டது என்ற பொருளில் நின்றது.

85. "மனத்தின் முன் செல்லும் மானம் போனது வழியதாக,
நினைப்பின் முன் அயோத்தி எய்தி, வருநெறி பார்த்து நிற்பென்;
இனி, சில தாழ்ப்பது என்னே? ஏறுதிர், இரண்டு தோளும்
புனத்துழாய் மாலை மார்பீர்! புட்பகம் போதல் முன்னம்'' (9007)

(மானம்-விமானம்; புனம்-காடு; துழாய்-துளவம்; தாழ்ப்பது-காலம் கடத்துவது)

''கானகத்தில் விளையும் துளசியை மாலையாக அணிந்திருக்கும் மார்பினை உடையவர்களே! மனோவேகத்தை விட வேகமாக, முன்னே இந்திரசித்தன் செல்லும் புட்பகவிமானம் போகின்ற வழியாகவே அவ்விமானம் பின்னிடும்படி எண்ணுவதற்கு முன்பே அயோத்தி சென்று, அவர்கள் வரவை எதிர்பார்த்து, அவர்கள் வரும் வழியைப் பார்த்து நிற்கலாம் வாருங்கள்; இன்னும் ஏன் காலம் தாழ்த்துகிறீர்கள்? அந்தப் புட்பக விமானம் அயோத்தி சென்றடைவதற்கு முன்னால் நாம் போய்ச் சேர்ந்துவிடலாம். விரைந்து என்னுடைய இரண்டு தோள்களிலும் இரண்டு பேரும் ஏறிக்கொள்ளுங்கள்'' என்று விரைவுபடுத்துகிறான் அனுமன்.

ஏதோ ஒரு நாடகக் காட்சியைக் காண்பதுபோல் தோன்றுகிறது அல்லவா? இந்திரசித்து இவர்களுக்கு முன்னால் புறப்பட்டுச் சென்றிருந் தாலும், அவனுக்கு முன்னே நாம்போய் அவன் வரும் வழியைப் பார்த்து நிற்போம், வாருங்கள் என்று அவன் தன் ஆற்றலை வெளிப்படுத்தும் பாங்கு நோக்குக. மிக்க விரைவானவேகத்திற்கு மனத்தையும், காற்றையும் உவமையாகக் கூறுவது கவிமரபு. முன்பாடலில் வாயுவேகமும், இந்தப் பாடலில் மனோவேகமும் குறிக்கப்பெற்றன.

Koviloor Digital Library

86. வீடணன் குறுக்கிட்டு ''இது மாயச்செயலே'' எனக் கூறுதல்

'ஏறுதும் என்னா, வீரர் எழுதலும், இறைஞ்சி, "ஈண்டுக்
கூறுவது உளது; துன்பம் கோளுறக் குலுங்கி, உள்ளம்
தேறுவது அரிது; செய்கை மயங்கினென்; திகைத்து நின்றேன்;
ஆறினென்; அதனை ஐய! மாயம் என்று அயிர்க்கின்றேனால்" (9008)

(ஈண்டு-இப்போது; கோள்உறுதல்-கவர்தல்; தேறுவது-தெளிவு பெறுவது; ஆறுதல்-தெளிவடைதல்; அயிர்த்தல்-ஐயுறுதல்/சந்தேகித்தல்; குலுங்குதல்-நடுங்குதல்; கோளுதல்-ஆட்கொள்ளுதல்) (குளகப் பாடல்)

அவ்வாறு அனுமன் என் 'தோள்மீது ஏறிக்கொள்ளுங்கள்' என்று கூறியதும், வீரர்களான இராம இலக்குவர் இருவரும் அவன் தோள்மீது ஏறுவதற்காக எழுந்தபோது, வீடணன் குறுக்கிட்டு அவர்களை வணங்கி ''ஐயனே! இங்கு, இப்பொழுது நான் கூறவேண்டிய செய்தி ஒன்று இருக்கிறது; இதுவரை நான் சீதாதேவி வெட்டப்பட்டதால் உண்டான துயரம் என்னை ஆட்கொண்டதால், உடலும் உள்ளமும் நடுங்கி தெளிவற்ற ஒரு மயக்கநிலையில், என்னசெய்வது என்று புரியாது மயங்கித் திகைத்து நின்றேன். இப்போதுதான் சற்று தெளிவுற்றேன். ''சீதாதேவி வெட்டிக்கொல்லப்பட்டது ஒரு மாயச்செயலாக இருக்குமோ? என்று சந்தேகப்படுகிறேன்'' என்று ஆரம்பித்துப் பின்வருமாறு கூறத் தொடங்குகிறான்.

ஒருவன் துன்பம் உறும்போது அவன் நிலையைக் கவிஞன் கூறும் அழகைப் பாருங்கள். துன்பம் கோளுற, ''உள்ளம் குலுங்கும்; தேறுவது அரிது; செய்கை மயங்கும், திகைத்து நிற்கும், பின்ஆறும்; உண்மை புலப்படும் என்ற நயத்தை உணர்க. இதேபோல முன்பு மாயமானைப் பார்த்த இலக்குவன் ஐயுற்றதையும் ஒப்புநோக்குக.

87. "பத்தினி தன்னைத் தீண்டிப் பாதகன் படுத்தபோது,
முத்திறத்து உலகும் வெந்து சாம்பராய் முடியும் அன்றே?
அத்திறம் ஆனதேனும், அயோத்திமேல் போன வார்த்தை
சித்திரம்; இதனை எல்லாம் தெரியலாம் சிறிது போழ்தின்" (9009)

(படுத்தல்-கொல்லுதல்/அழித்தல்; முத்திறம்-மூன்றுவகை; சித்திரம்-விசித்திரம்/அதிசயம்/பொய்/ஆச்சரியம்/தந்திரம்)

வீடணன் இராமபிரானை நோக்கி, ''கற்புக்கரசியாகிய சீதாதேவியைக் கொடிய பாவியாகிய இந்திரசித்து கையினால் தீண்டி அவளை அழித்திருப்பான் என்றால், இந்த மூன்று வகையான உலகங்களும் இந்நேரம் வெந்து சாம்பலாய்ப் போயிருக்கவேண்டுமல்லவா? அவ்வாறு

Koviloor Digital Library

நடவாததால் அது பொய் என்றே எனக்குத் தோன்றுகிறது. அது அப்படியே நிகழ்ந்தது என்றாலும் அவன் அயோத்தி மாநகரத்திற்குச் சென்றுவிட்டான் என்று கூறும் வார்த்தை நிச்சயம் பொய்தான். மிக்க அதிசயமாக இருக்கிறது. எனினும் சற்று பொறுத்தால் சிறிது நேரத்தில் நீங்கள் இதில் உள்ள உண்மையெல்லாம் தெரிந்துகொள்ளலாம்'' என்கிறான்.

'பத்தினி' என்ற சொல் கற்புடைய பெண்டிரைக் குறிக்கும். இங்கு சீதாதேவியைக் குறித்து நின்றது. அவளைத் தொட்டாலே மேல், நடு, கீழ் என்று மூன்று உலகங்களும் அழிந்து சாம்பலாய்ப் போயிருக்கும் அல்லவா? பின் அவன் எப்படி அழித்து ஒழித்திருக்க முடியும்? இது நடக்க முடியாதசெயல். மேலும் நீங்களெல்லாம் இங்கே இலங்கையில் இருக்க அவன் மட்டும் தன் படையுடன் அயோத்தி மாநகரம் சென்றிருக்கிறான் என்பது மிக்க அதிசயம் நிறைந்த மாயச்செயல். இவற்றிலுள்ள உண்மையையெல்லாம் இன்னும் சிறிதுநேரத்தில் நான் உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறேன் என்றான் வீடணன் என்பதாம்.

ஒருவன் பத்தினியைத் தீண்டினால் என்னென்ன நிகழும் என்பதை முன்பு சுந்தரகாண்டத்தில் கண்டதை நினைவிற்குக் கொண்டுவாருங்கள். ''தீண்டிலன் என்னும் வாய்மை, திசைமுகன் செய்த முட்டை கீண்டிலது; அனந்தன் உச்சி கிழிந்திலது; எழுந்த வேலை மீண்டில; சுடர்கள் யாவும் விழுந்திலது; வேதம் செய்கை மாண்டிலது'' என்னும் தன்மை, வாய்மையால் உணர்தி மன்னோ'' என்பது சுந்தரகாண்டத்தில் அனுமன் கூற்று. 'சித்திரம்' என்பது விசித்திரம் என்பதன் முதற்குறை. அதிசயம், ஆச்சர்யம், மாயம், தந்திரம், நம்பத்தகாத பொய் என்ற எல்லாப் பொருள்களையும் தரும். 'ஆனதேனும்' என்பதில் உள்ள உம்மை எதிர்மறைப் பொருளைத்தரும்.

88. "இமை இடையாக யான் சென்று, ஏந்திழை இருக்கை எய்தி,
அமைவுற நோக்கி, உற்றது அறிந்து வந்து அறைந்த பின்னைச்
சமைவது செய்வது" என்ன வீடணன் விளம்ப, "தக்கது;
அமைவது" என்று இராமன் சொன்னான்; அந்தரத்து அவனும் சென்றான்.
(9010)

(இடை-சமயம்/பொழுது; ஏந்திழை-சீதாதேவி; இருக்கை-இருப்பிடம்/அசோகவனம்; அமைவுறுதல்-பொருத்தமாதல்; உற்றது-நிகழ்ந்தது; சமைவது-பொருத்தமானது; அந்தரம்-ஆகாயம்; அறைதல்-சொல்லுதல்)

''ஒரு நொடிப்பொழுதிற்குள் நான்போய் அழகிய! ஆபரணங்களணிந்த சீதாதேவி இருக்கும் இடமாகிய அசோகவனத்தை அடைந்து, நிதானமாகப் பார்த்து, அங்கு என்ன நிகழ்ந்தது? என்பதை நான் கண்டு வந்து சொன்ன பின்னர், எது செய்யத்தகுந்தது என்பதை ஆலோசித்து அதன்படி

Koviloor Digital Library

செய்வோம்'' என்று வீடணன் கூறவும், இராமபிரான் ''ஆம் அதுவே இப்போது செய்யத்தக்கது; பொருத்தமானது'' என்று உடன்பட்டுக் கூறியதும், வீடணன் விண்வழியே அசோகவனம் செல்லலுற்றான்.

''இமைஇடை'' என்பது கண்இமைதானே ஒருமுறை மூடித்திறக்கும் நொடிப்பொழுது என்றுபொருள்படும். ''ஏந்திழை'' என்பது உபச்சார வழக்காகக் கூறப்பட்டிருக்கிறது. அசோகவனத்தில் சீதாதேவி மரஉரி தரித்துத் தவக்கோலத்தில் இருக்கிறாள். எனவே ''ஏந்திழை'' என்ற சொல்லுக்கு நேர்பொருள் கொள்ளக்கூடாது. இராமபிரான் தனது உடன்பாட்டை 'தக்கது' என்றும் 'அமைவது' என்றும் கூறுவதை நுனித்து உணர்க. 'அமைவுற நோக்குதல்' என்பது நிதானமாகப் பார்த்தல் என்ற செறிந்த பொருளைத்தரும்.

89. வீடணன் வண்டு உருக்கொண்டு சென்று சீதாதேவியைக் காணுதல்

வண்டினது உருவம் கொண்டான், மானவன் மனத்தின் போனான்;
தண்டலை இருக்கை தன்னைப் பொருக்கெனச் சார்ந்து, தானே
கண்டனன் என்ப மன்னோ, கண்களால், கருத்தில், ஆவி
உண்டு இலை' என்ன நின்ற, ஓவியம் ஒக்கின்றாளை. (9011)

(மானவன்-மனுகுலத்தில் வந்தவன்/பெருமைக்குரியவன்/இராம பிரான்; மனத்தில்-மனத்தைப்போல; தண்டலை-குளிர்ந்த சோலை/ அசோகவனம்; இருக்கை-இருப்பிடம்; பொருக்கென-விரைந்து; சார்தல்-அடைதல்; ஆவி-உயிர்; ஓவியம்-சித்திரப்பதுமை; கருத்தில்-கருத் தினோடு)

வீடணன் தான் ஒரு வண்டின் உருவம்கொண்டு, மனுகுலத்தில் வந்தவனும், பெருமைக்குரியவனுமாகிய இராமபிரான் மனத்தைப் போல், மனோவேகத்தில் சென்று, குளிர்ச்சி பொருந்திய சோலையாகிய அசோகவனத்தில் சீதாதேவி இருக்குமிடத்தை விரைவாகச் சென்றடைந் தான். அங்கே சீதாதேவி உயிர் இருக்கிறதோ இல்லையோ என்று கூறும்படி, மெல்லியலாய், சிந்திரப்பதுமைபோல இருந்தவளை, தனது கண்களால் உருவத்தையும், கருத்தால் அவள் மனநிலையையும் கண்டான்.

பிறர் அறியாமல் இருப்பதற்காகவும், விரைவாகச் செல்ல வேண்டிய தாலும் வீடணன் வண்டினது உருவம் கொண்டு போனான். இதேபோல முன்பு அனுமனும் இரவு வேளையில் அசோகவனத்துள் புகுந்தபோதும் ''பொறிவரி வண்டின் போனான்'' என்று முன்பு கூறியதையும் நினைவு கூர்க. 'மானவன்' என்ற சொல் மனுகுலத்தில் வந்தவன் என்றும், பெருமைக்கு உரியவன் என்றும் இருபொருளையும் தரும். 'பொருக்கென' என்பது விரைவு குறித்த இடைச்சொல். தானே கண்டனன், கண்களால்

Koviloor Digital Library

கண்டனன், கருத்தால் கண்டனன் என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும். பிறர் சொல்லக் கேட்கவில்லை தானே தனது கண்களால் கண்டான் என்பதும், கண்களால் அவள் உருவத்தை மட்டும் பார்க்க வில்லை, தனது கருத்தால் அவள் மனநிலையையும் உணர்ந்து பார்த்தான் என்பதும் விரிந்த பொருள். இதேபோல முன்பு அனுமன் சீதாதேவியைக் கண்டு வந்தபோது 'கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்' என்று கூறியதையும் ஒப்பிட்டு நோக்குக. என்ப, மன், ஓ என்பன அசைச்சொற்கள்.

90. "தீர்ப்பது துன்பம் யான், என் உயிரொடு" என்று உணர்ந்த சிந்தை
பேர்ப்பன செஞ்சொலாள், அத்திரிசடை பேசப் பேர்ந்தாள்,
கார்ப் பெரு மேகம் வந்து கடையுகம் கலந்தது என்ன,
ஆர்ப்பொலி அமுதமாக, ஆருயிர் ஆற்றினாளை. (9012)

(பேர்ப்பன-மாற்றுவன; பேர்தல்-நீங்குதல்; கடையுகம்-ஊழியிறுதி; ஆற்றுதல்-தாங்குதல்; சிந்தை-மனம்/எண்ணம்) (குளகப்பாடல்)

''என்னுடைய துன்பம் தீர்வது என்பது, என் உயிர் போகும்போதுதான்'' என்று மனத்தில் நினைத்திருந்த சீதாதேவியின் எண்ணத்தை அந்தத் திரிசடை தனது செம்மையான இனிய சொற்களால் மாற்றியதால் அத்துன்பத்தினின்றும் சற்று நீங்கியிருந்த வேளையில், கரிய பெரிய மேகம் வந்து, ஊழியிறுதிக்காலத்தில் ஒன்றுகூடி முழக்கம் செய்வதுபோல வானரவீரர்கள் செய்த ஆரவாரத்தின் பேரொலி தன் காதுகளில் அமிழ்தம் போலப் பாயத் தனது அரிய உயிரைத் தாங்கிக் கொண்டிருந்த சீதாதேவியை வீடணன் தன் கண்களால் கண்டான்.

இங்கே 'யான்' என்பது என்னுடைய என்ற பொருளைத்தரும். சீதாதேவி தன்னுடைய உயிர் போனால்தான் தான் அனுபவிக்கும் இந்தத் துன்பங் களெல்லாம் அழியும் என்று ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தாள். அத்தீர்மானத்திலிருந்து சீதாதேவி சற்றுப் பின்வாங்கும்படி செய்தது அந்தத் திரிசடையின் இனிய செம்மையான சொற்கள்தான் என்று திரிசடையின் நற்பண்பு பேசப்படுகிறது. இந்த வேளையில், மருத்துமலை கொண்டு வந்து, அனுமன் இறந்துகிடந்த இலக்குவனையும், வானரச்சேனையை யும் உயிர்ப்பித்ததால் வானரச்சேனை எழுப்பிய பேரொலி ஊழியிறுதிக் காலத்தில் கரிய பெரிய மேகம் ஒன்று கலந்து எழுப்பும் பேரொலி போலவும், அதுவே சீதாதேவிக்கு உயிர் நல்கும் அமிழ்தம் போன்றும் இருந்தது. எனவே இறந்துபோவது என்ற தன் முடிவை மாற்றிக்கொண்டு உயிர் தரித்திருக்கிறாள் என்பதாம். வானரங்களின் மகிழ்ச்சிப் பெரு முழக்கத்திற்கு, ''கார்ப்பெரும் மேகம் வந்து கடையுகம் கலந்ததன்ன ஆர்ப்பொலி'' உவமை.

Koviloor Digital Library

91. வீடணன் இந்திரசித்தின் சூழ்ச்சியை உணர்ந்து கொள்ளுதல்

வஞ்சனை என்பது உன்னி, வான் உயர் உவகை வைகும்
நெஞ்சினன் ஆகி, உள்ளம் தள்ளுறல் ஒழிந்து நின்றான்,
"வெஞ்சிலை மைந்தன் போனான், நிகும்பலை வேள்வியான்" என்று,
எஞ்சல்இல் அரக்கர்சேனை எழுந்து எழுந்து ஏகக் கண்டான். (9013)

(வஞ்சனை-மாயம்; உன்னுதல்-நினைத்தல்; வைகுதல்-தங்குதல்; நெஞ்சு-மனம்; தள்ளுறல்-தடுமாறுதல்; எஞ்சல்இல்-குறைவிலாத)

சீதாதேவியைத் தன் கண்களால் கண்ட வீடணன், இந்திரசித்து சீதாதேவியைத் தன் வாளால் வெட்டினான் என்று கூறியதெல்லாம் வஞ்சனைமிக்க சூழ்ச்சி என்று உணர்ந்து, ஆகாயமளாவிய அளவு பேருவகை கொண்டு, தன் மனத்தில் தங்கியிருந்த தடுமாற்றத்தினின்றும் நீங்கினவனாகி நின்றான். அப்போது குறைதல் இல்லாத அரக்கர் சேனைகள் எல்லாம் கூட்டம்கூட்டமாக நிகும்பலைக் கோவில் பக்கம் செல்வதைக் கண்ட வீடணன், கொடிய விற்படையேந்திய இராவணனின் புதல்வனாகிய இந்திரசித்து அயோத்திக்குப் போகிறேன் என்று கூறிப்போனவன், இங்கு நிகும்பலைக் கோயிலுக்குச் சென்று வேள்வி நிகழ்த்தப் போகிறான் என்பதை உய்த்து உணர்ந்து கொண்டான்.

'வான் உயர் உவகை' என்பது ஒரு அருமையான சொற்றொடர். எல்லையற்ற பெரு மகிழ்ச்சி என்பது பொருள். நிகும்பலைக் கோயில் பக்கம் அரக்கவீரர்கள் கூட்டம்கூட்டமாகப் போவதைக் காட்சியளவை யால் உணர்ந்துகொண்ட வீடணன், இந்திரசித்து நிகும்பலை கோவிலில் வேள்வி செய்யப் போயிருக்கிறான் என்பதை அனுமான அளவையால் உய்த்துணர்ந்து கொண்டான் என்பதாம்.

92. வீடணன் இராமபிரானைச் சென்றடைதல்

வேழ்விக்கு வேண்டற்பால கலப்பையும், விறகும், நெய்யும்
வாழ்விக்கும் தாழ்வில்' என்றும் வானவர் மறுக்கம் கண்டான்,
சூழ்வித்த வண்ணம் ஈதோ நன்று!" எனத் துணிவு கொண்டான்,
தாழ்வித்த முடியன், வீரன் தாமரைச் சரணம் தாழ்ந்தான். (9014)

(கலப்பை-கலவைப்பொருள்கள்; மறுக்கம்-கலக்கம்; தாழ்வித்த-வணங்கிய; முடி-தலை; சரணம்-திருவடிகள்; ஈதோ-இதற்காகத்தானோ; வண்ணம்-தன்மை/முறை; தாழ்தல்-வணங்குதல்; வீரன்-இராமபிரான்)

வேள்வியில் பயன்படுத்தப்பட வேண்டிய கலவைப் பொருள்கள் கலப்பை, விறகு, நெய் முதலானவற்றையெல்லாம் எடுத்துச்செல்லும் அரக்கர்களைக் கண்ணுற்ற தேவர்கள் இராவணன் மீண்டும் நம்மைத்

Koviloor Digital Library

தாழ்விக்கும் வாழ்க்கையையே தரப்போகின்றான் என்று மனக்கலக்கம் கொண்டு ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருந்ததையும் வீடணன் உணர்ந்து கொண்டான். இந்திரசித்து சீதாதேவியைக் கொன்றதுபோல் காட்டியதும், தான் அயோத்திக்குப் போகப்போகிறேன் என்று போக்குக் காட்டி விட்டுப் போனதும் இந்த வேள்வியைச் செய்வதற்குத்தானோ? என்றும் அவன் செய்த சூழ்ச்சியின் தன்மை மிக அழகாக இருக்கிறது என்றும் இகழ்வாய்த் தன் மனத்துள் துணிவுடன் எண்ணிக்கொண்டு, வணங்கிய தலையினனாய், வீரனாகிய இராமபிரானின் தாமரைமலர் போன்ற திருவடிகளைச் சென்று வணங்கினான்.

'வேள்வி' என்பது 'வேழ்வி' என்று எதுகைநோக்கித் திரிந்தது; கலப்பை என்பது வேள்வி செய்வதற்கு வேண்டிய தருப்பை, சமித்து, தேங்காய், வெல்லம், தானிய வகைகள் ஆகிய கலவைப் பொருள்களைக் குறிக்கும். வேள்விசெய்வதன் முன் நிலத்தை உழுதலும் ஒருவகை மரபு. எனவே இங்கே நிலத்தைப் பண்படுத்தப் பயன்படும் கலப்பையையும் கூறியதாகக் கொள்ளலாம். இராமபிரான் வருகையால் தாங்கள் 'வாழ்வு பெற்றோம்' என்று கருதியிருந்த தேவர்கள் இப்போது இந்திரசித்து செய்யப்போகின்ற வேள்வியால் அரக்கர்களுக்கு ஏவலாளர்களாக மீண்டும் அந்தத் தாழ்வுற்ற வாழ்க்கையிலேயே அமிழப் போகிறோம் என்று உணர்ந்து மனக்கலக்கம் அடைந்தார்கள் என்பதை வீடணன் உய்த்து உணர்ந்து கொண்டான் என்பதாம். இந்திரசித்து போக்குக் காட்டியது இதற்காகத்தானோ? என்று வீடணன் கருதி, நல்லது என்று கூறி அங்கிருந்து புறப்பட்டு இராமபிரான் திருவடிகளைச் சேர்ந்து வணங்கினான் என்பதாம்.

பொதுவாக வேள்வி என்பது அது செய்தாரையும், அவிசுபாகம் பெறும் வானவரையும் வாழ்விக்கும் செயல். ஆனால் இப்போது இந்திரசித்தன் செய்யப்போகின்ற வேள்வியோ அவர்கள் வாழ்வைத் தாழ்விக்கும் அல்லது அவர்களைத் தாழ்விலேயே வாழ்விக்கப்போகிறது என்று அவர்கள் மனக்கலக்கம் அடைந்தனர் என்பதாம். 'நன்று' என்பது இகழ்ச்சிக் குறிப்பு. 'துணிவு கொண்டான்' என்பது இந்த வேள்வியைத் தடுப்பது தனக்கு எளிமையான செயல் என்பதால் மனத்துணிச்சல் கொண்டான் என்பதாம்.

93. வீடணன், இந்திரசித்தின் சூழ்ச்சி பற்றித் தெரிவித்தல்

"இருந்தனள் தேவி; யானே எதிர்ந்தனன் என் கண் ஆர;
அருந்ததிக் கற்பினாளுக்கு அழிவு உண்டோ? அரக்கன் நம்மை
வருந்திட மாயம் செய்து, நிகும்பலை மருங்கு புக்கான்;
முருங்கு அழல் வேள்வி முற்றி, முதல்அற, முடிக்க மூண்டான். (9015)

(தேவி-சீதாதேவி; எதிர்தல்-காணுதல்/நேருக்குநேர் காணல்; மாயம்-சூழ்ச்சி/வஞ்சனை/தந்திரம்; முருங்குதல்-அழித்தல்; அழல்-நெருப்பு;

Koviloor Digital Library

முற்றுதல்-நிறைவேற்றுதல்; முதல்-வேர்/அடி; முடித்தல்-அழித்தொழித்தல்; மூள்தல்-மேற்கொள்ளுதல்/முற்படுதல்/முனைதல்/தலைப்படுதல்; மருங்கு-அருகில்; ஆர-நிரம்ப) (குளகப்பாடல்)

வீடணன் இராமபிரானிடம் ''நம் சீதாதேவி எந்தத் துன்பமும் இன்றி இனிதே இருக்கின்றாள், நானே என் கண்களால் நிரம்ப நேரில் கண்டு வந்தேன். அருந்ததி போன்ற கற்புக்கரசியான சீதாதேவிக்கு அழிவு என்பது ஒன்று உண்டோ? அரக்கனான இந்திரசித்து, நாமெல்லாம் வருத்தமுற்றுச் செயலற்றுப் போகவேண்டும் என்ற எண்ணத்தால் வஞ்சனையால் ஒரு சூழ்ச்சி செய்து, அயோத்தி மாநகருக்குச் செல்வதாகப் போக்குக்காட்டி விட்டு, நிகும்பலை என்னும் கோயிலைச் சென்று அடைந்திருக்கிறான். அங்கே சென்று எல்லாவற்றையும் அழிக்கும் இயல்புடைய நெருப்பைக் கொண்டு ஒரு வேள்வி செய்து முடித்து நம்மையெல்லாம் அடியோடு அழிப்பதற்கு முற்பட்டிருக்கிறான்'' என்று கூறுகிறான்.

இங்கே முன்பு அனுமன் சீதாதேவியை இலங்கையில் அசோகவனத்தில் கண்டுவந்ததை இராமபிரானிடம் எப்படித் தெரிவித்தானோ, அதேபோல இங்கும் வீடணன் கூற்றாகக் கவிஞன் கூறுவதை நோக்குக. அங்கே ''கண்டனென், கற்பினுக்கணியைக் கண்களால்'' என்றான். இங்கும் அதேபோல் ''இருந்தனள் தேவி, யானே எதிர்ந்தனென் என் கண் ஆர'' என்று முதல் சொல்லையே மங்கலச்சொல்லாக வைத்துப் பேசும் பாங்கு உணர்க. அவள் இறந்துபோனாளே என்று வருந்தித் துயருற்றிருந்த இராமபிரானுக்கு, அவள் உயிருடன்தான் இருக்கிறாள் என்பதைக் குறிக்கவே முதல் சொல்லாக ''இருந்தனள் தேவி'' என்ற நயம் உணர்க.

94. குரங்குச்சேனை மகிழ்தல்

என்றலும், உலகம் ஏழும், ஏழுமாத் தீவும், எல்லை
ஒன்றிய கடல்கள் ஏழும், ஒருங்கு எழுந்து ஆர்க்கும் ஓதை,
அன்று என, ஆகும் என்ன, அமரரும் அயிர்க்க ஆர்த்து
குன்றினம் இடியத் துள்ளி, ஆடின குரக்கின் கூட்டம். (9016)

(மா-பெரிய; ஒன்றிய-பொருந்திய; ஒருங்கு-ஒருசேர; ஓதை-ஓசை/ஒலி; அயிர்த்தல்-ஐயுறுதல்; குன்றினம்-மலைக்கூட்டங்கள்)

என்று வீடணன் கூறியவுடன், இவ்வுலகங்கள் ஏழும், பெரிய தீவுகள் ஏழும், எல்லை நிர்ணயிக்கப்பட்ட கடல்கள் ஏழும், எல்லாம் ஒரே நேரத்தில் ஒருசேரப் பொங்கியெழுந்து ஆரவாரிக்கும் ஓசைதானோ என்றும், அது அல்ல, இது வேறு ஏதோ ஓர் ஓசைபோலும் என்றும், இல்லை அதுவேயாகும் என்றும் தேவர்கள் ஐயுறுமாறு, வானரவீரர்கள் கூட்டம் ஆரவாரம் செய்து, அருகிலுள்ள மலைக்கூட்டங்களும் இடிந்துபோகும் படி மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்துக் கூத்தாடத் தொடங்கின.

Koviloor Digital Library

சீதாதேவி உயிருடன் இருக்கிறாள் என்பதைக் கேட்டறிந்த வானர வீரர்கள் துள்ளிக் குதித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர் என்பதாம். 'ஒன்றிய கடல்கள்' என்பது அவற்றின் எல்லைப்புறங்கள் ஒன்றோடொன்று ஒட்டியிருப்பன என்றும் அவை இடைவெளி எதுவும் இன்றித் தொடர்ந்து இருக்கும் என்பதுவுமாம். ஏழ் உலகம் என்பது கீழ்ஏழு, மேல்ஏழு, உலகங்களைக் குறிக்கும். ஏழு தீவுகள்: நாவல், இறலி, குசை, சிரௌஞ்சம், புட்கரம், இலாங்கலி, பூகம் என்பன. ஏழு கடல்கள்: நன்னீர், உவர்நீர், தேன், பால், நெய், தயிர், கருப்பஞ்சாறு என்பன. வானரவீரர்கள் எழுப்பிய முழக்கம், இது ஏழுலகமும், ஏழுதீவுகளும், ஏழு கடல்களும் ஒன்றாகச் சேர்ந்து யுகாந்த காலத்தில் எழுப்பும் பேரோசையா அல்லது குரங்குக் கூட்டத்தின் ஆரவாரமா என்று பிரித்துணரமுடியாத வண்ணம் அவ்வாரவாரம் இருந்தது என்பதாம்.

மாயா சீதைப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

26. நிகும்பலை யாகப் படலம் [182 பாடல்கள்]

இந்திரசித்து அயோத்தி செல்வதாகப் போக்குக்காட்டி நிகும்பலை என்னும் கோயில் சென்று, இராமஇலக்குவரை வெல்வதற்கேற்ற ஆற்றலைப் பெறுவதற்காக யாகம் செய்ததையும், அதைஇலக்குவன், வீடணன்மற்றும்வானரவீரர்கள்தடுத்தசெய்தியையும்கூறும்படலம்எனப் பொருள் விரிவு கொள்ளும். சில சுவடிகளில் 'நிகும்பலைப் படலம்' எனவும் 'நிகும்பிலை யாகப் படலம்' எனவும், 'நிகும்பலை யாக சங்காரப் படலம்' எனவும் குறிக்கப்பெற்றிருக்கின்றன. எனினும் வான்மீகம் இக்கோயிலை 'நிகும்பிலை' என்றே குறிக்கிறது. சிலசுவடிகளில் நிகும்பலை என்ற ஆலமரத்தின் அடியில் உள்ள ஆலயம் என்று குறிக்கப்பெற்றிருக்கிறது. நிகும்பலை என்ற சொல் இலங்கையின் மேற்குத்திசையில்உள்ளஒருகுகையையும்அங்குள்ளபத்திரகாளியையும் குறிக்கும் என வாசஸ்பதிய நிகண்டு கூறுகிறது. இது 182 பாடல்களைக் கொண்ட படலம்.

இப்படலத்துள், வண்டுருக்கொண்டு சென்று, சீதாதேவியை நேரில் கண்டுவந்த வீடணனை இராமபிரான் புகழ்ந்துரைத்தல்; வீடணன் நிகும்பலை யாகத்தின் சிறப்புப்பற்றி இராமஇலக்குவர்க்கு எடுத்துரைத்தல்; இராமபிரான் இலக்குவனைப் போய் யாகத்தை அழித்துவருமாறு கட்டளையிடுதல்; போர் செய்யவேண்டிய முறை பற்றியும், அறிவுறுத்துதல்; தானே எந்தத் தெய்வப் படைக்கலங்களையும் செலுத்தக்கூடாது என்றும், பகைவன் படைக்கலன்களை அழிக்கவே செலுத்தப்படவேண்டும் என்றும், அறநெறி தவறாது போர் செய்யவேண்டும் என்றும் எச்சரிக்கை செய்து அனுப்புதல்; இலக்குவனுக்குத் திருமாலின் வில் முதலியவற்றைக் கொடுத்தல்; வீடணன், அனுமன் முதலியோருடன் இலக்குவன் நிகும்பலைக்குச் செல்லுதல்; நிகும்பலையில் வானரச்சேனையும் அரக்கர் சேனையும் எதிர்த்துப் போரிடுதல்; காலந்தாழ்த்தாது வேள்வியைச் சிதைக்குமாறு வீடணன்இலக்குவனிடம்கூறுதல்; இலக்குவன்அரக்கரைஅழித்த வேகம் கண்டு தேவர்கள் வியப்படைதல்; வானரச்சேனை இந்திரசித்தனின் வேள்வியைச் சிதைத்தல்; இந்திரசித்து மனம்வருந்தி வெதும்புதல்; அனுமன் இந்திரசித்தனைப் பழித்துரைத்தல்; இந்திரசித்தனும் அனுமன் முதலியோரை இகழ்ந்து பேசுதல்; இந்திரசித்தன் தன் சங்கை முழக்கிப் போர்செய்ய வரும்போது அவனை அனுமன் எதிர்த்தல்; இந்திரசித்தன்

Koviloor Digital Library

இலக்குவனைத் தேடிவந்து அவனுடன் போர்புரிதல்; இந்திரசித்தன் மெலிவுறுதல்; அதனை வீடணன் இலக்குவனுக்குச் சுட்டிக்காட்டுதல்; இந்திரசித்தன் படைகளையெல்லாம் இலக்குவன் அழித்தல்; இந்திரசித்து நாராயண அத்திரத்தைச் செலுத்துதல்; அது இலக்குவனை விலகிப்போதல்; பின்னர் சிவன்படையாகிய பாசுபாதத்திரத்தை இந்திரசித்து செலுத்த, இலக்குவன் அதை முறியடிக்க அதே பாசுபதாத்திரத்தைச் செலுத்துதல்; இந்திரசித்தன் தன் சிறியதந்தை வீடணனை இகழ்ந்து பேசுதல்; வீடணனும் மறுமொழி கூறுதல்; இந்திரசித்து விண்ணில் மறைந்து இராவணன் இருப்பிடம் செல்லுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராமபிரான் வீடணனைப் புகழ்தல்

வீரனும் ஐயம் தீர்ந்தான்; வீடணன் தன்னை மெய்யோடு
ஆர்வமும் உயிரும் ஒன்ற அழுந்துறத் தழுவி, "ஐய!
தீர்வது பொருளோ துன்பம்? நீ உளை; தெய்வம் உண்டு;
மாருதி உளன்; நாம் செய்த தவம் உண்டு; மறையும் உண்டால்.
(9017)

(தீர்தல்-நீங்குதல்; மெய்-உடம்பு; ஒன்ற-பொருந்த; பொருள்-செயல்/காரியம்/பொருட்டோ; உளை-உள்ளாய்/இருக்கின்றாய்; மறை-வேதம்; வீரன்-இராமபிரான்; தீர்தல்-தெளிதல்)

வீடணன் அவ்வாறு சொல்லக்கேட்ட வீரனான இராமபிரான் மிக்க மகிழ்ந்து, தன் மனைவி சீதாதேவி உண்மையிலேயே இந்திரசித்தனால் வெட்டப்பட்டாளா என்ற சந்தேகம் நீங்கி, வீடணனைத் தன் உடம்போடு மிக்க அன்பு கொண்டு உயிரும் பொருந்துமாறு இறுகத் தழுவிக்கொண்டு, ''வீடண! இதுபோன்ற துன்பங்களினின்றும் நீங்குவது என்பது நமக்கு ஒரு அரிய செயலோ? என் அன்புக்குரியவனாகிய நீ என் அருகிலேயே இருக்கிறாய்; நமக்கெல்லாம் துணையாகத் தெய்வம் இருக்கிறது. எந்தக் காரியத்தையும் இமைப்பொழுதில் நிறைவேற்றவல்ல அனுமன் நம்முடன் இருக்கிறான்; அதற்கும் மேலாக நாம் முன்பு செய்த நல்லதவத்தின் பயன் வந்து சேர்ந்திருக்கிறது; எல்லாவற்றுக்கும் மேலாக நான்கு வேதங்களும் நமக்குத் துணைசெய்கின்றன. அவ்வாறிருக்கும் போது நமக்கு வந்த துன்பங்கள் நீங்கிப்போவது என்பது ஒரு பெரிய செயலாகுமோ?'' என்று இராமபிரான் வீடணன் செய்த உதவியைக் கண்டு அவனைப் புகழ்கிறான்.

''ஐயம்'' என்பது இந்திரசித்தனால் உண்மையிலேயே சீதாதேவி வெட்டப்பட்டாளா என்பது. அது ''தீர்தல்'' என்பது வீடணன் நேரிற் சென்று கண்டுவந்து கூறியதால் ஏற்பட்ட தெளிவு என்க. இங்கே ''ஆர்வம்'' என்ற சொல்லுக்கு ''தொடர்புடைமை நோக்காது, அன்புடையார்

Koviloor Digital Library

யாவரிடத்தும் செல்லும் விருப்பம்'' என்ற பரிமேலழகர் விளக்கம் நினைவுகூரத்தகும்.

2. வீடணன் உடனே வேள்வியைச் சிதைக்க வேண்டும் எனல்

என்றலும், இறைஞ்சி, ''யாகம் முற்றுமேல், யாரும் வெல்லார்;
வென்றியும் அரக்கர் மேற்றே; விடை அருள்; இளவலோடும்
சென்று, அவன் ஆவி உண்டு, வேள்வியும் சிதைப்பென்'' என்றான்;
''நன்று அது புரிதிர்!'' என்னா, நாயகன் நவில்வதானான். (9018)

(முற்றுதல்-நிறைவேறுதல்; மேற்றே-பக்கம்; இளவல்-இலக்குவன்; ஆவி-உயிர்; உண்ணுதல்-பருகுதல்; சிதைத்தல்-அழித்தல்; புரிதிர்-செய்யுங்கள்; நாயகன்-தலைவன்/இராமபிரான்; நவில்தல்-கூறுதல்; விடை-அனுமதி)

என்று இராமபிரான் கூறியதும், வீடணன் அவன் திருவடிகளில் விழுந்து வணங்கி, ''இந்திரசித்தன் தொடங்கியிருக்கும் வேள்வியைச் செய்து முடித்துவிட்டான் என்றால், அவனை வெற்றிபெறுவது என்பது யாராலும் முடியாது. வெற்றியும் அரக்கர்பக்கமே உண்டாகிவிடும். எனவே எனக்கு உடனே விடை கொடுத்தருள்வாயாக! நான் தம்பி இலக்குவனோடும் சென்று இந்திரசித்தனுடைய உயிரைப் பறித்து வேள்வியையும் சிதைத்துவிட்டு வருகிறேன் என்றான்; தலைவனான இராமபிரான் அதற்கு உடன்பட்டு, ''நல்லது, அவ்வாறே செய்வீர்களாக'' என்றுகூறி, மேலும் பின்வருவனவற்றையும் கூறத்தொடங்கினான்.

''யாரும் வெல்லார்'' என்பது இராமபிரானையும் உட்படுத்தியே கூறியது எனக்கொள்க. ''இளவலோடும் சென்று'' என்று தானும் இலக்குவனும் இருவரும் போகிறோம் என்றவன் ''அவன் ஆவி உண்டு வேள்வியும் சிதைப்பென்'' என்று தான்ஒருவன் மட்டும் அந்தக் காரியத்தைச் செய்துமுடித்து விடுகிறேன் என்று கூறுவதை உணர்க. என்றாலும் எல்லாம்வல்ல எம்பெருமான் அவதாரமான இராமபிரான் இதனை நுனித்து உணர்ந்து ''நன்று புரிதிர்'' என்று இருவரையும் மற்றும் உள்ளவரையும் சேர்த்துப் பன்மையில் கூறியிருக்கும் திறம் நோக்குக. இவ்வளவு நுட்பமாகக் கம்பனைத் தவிர வேறுயாராலும் சொற்களைப் பதிக்கமுடியாது என்பதும் உணர்க.

Koviloor Digital Library

3. இராமபிரான் இலக்குவனுக்கு அம்பைப் பயன்படுத்துதல் பற்றி அறிவுறுத்துதல்

தம்பியைத் தழுவி, ''ஐய! தாமரைத் தவிசின் மேலான்
வெம்படை தொடுக்குமாயின், விலக்குமது அன்றி, வீர!
அம்பு நீ துரப்பாய் அல்லை; அனையது துரந்த காலை,
உம்பரும், உலகும் எல்லாம், விளியும், அஃது ஒழிதி'' என்றான்.
(9019)

(தவிசு-ஆசனம்; துரத்தல்-செலுத்துதல்; விளிதல்-இறந்து படுதல்; ஒழிதி-தவிர்ப்பாயாக; விலக்குதல்-தடுத்து நிறுத்துதல்; உம்பர்-தேவர்கள்; தொடுத்தல்-செலுத்துதல்/ஏவுதல்; ஐயன்-தலைவன்/இராமபிரான்)

தலைவனாகிய இராமபிரான் தன் தம்பி இலக்குவனைத் தன்னோடு தழுவிக்கொண்டு, ''தம்பி! இலக்குவ! வீரனே! தாமரைமலரைத் தன் இருக்கையாகக் கொண்டுள்ளவனான பிரமதேவனின் கொடிய படைக் கலமாகிய பிரமாஸ்திரத்தை இந்திரசித்து தொடுக்க முற்படுவானானால், நீ அதைத் தடுத்து நிறுத்திக் கொள்வதற்காகவே, உன்னுடைய பிரமாஸ்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்; அதை விட்டுவிட்டு, நீயே முற்பட்டு பிரமாஸ்திரத்தை எந்தக் காரணம் கொண்டும் செலுத்தக்கூடாது; நீ அவ்வாறு செலுத்துவாயானால் அதனால் இந்திரசித்து மட்டுமல்ல, தேவர்களும், இம்மூவுலகில் உள்ளோர் அனைவரும் இறந்துபடுவர்; எனவே அவ்வஸ்திரத்தைத் தொடுப்பதைத் தவிர்ப்பாயாக!'' என்று அறிவுறுத்தினான்.

''தாமரைத் தவிசின் மேலான்'' என்பது தாமரைமலரைத் தன் ஆசனமாகக் கொண்டு அமர்ந்திருக்கின்ற பிரமதேவனைக் குறிக்கும். முன்பு பிரமாத்திரப் படலத்திலும் இலக்குவன் இந்திரசித்தன்மீது பிரமாஸ்திரத்தைச் செலுத்த எண்ணியபோது, இராமபிரான் அங்கேயும் இவ்வாறே அறிவுறுத்தியதையும், நினைவிற் கொண்டுவருக. இராம பிரான் அறநெறி அன்றி ஏனைய வழிகளில் போர்புரிய உடன்பட மாட்டாதவன். இவ்வாறு இராமபிரான் இலக்குவனுக்கு அறிவுறுத்தி யதாக வான்மீகத்தில் காணப்படவில்லை.

4. ''முக்கணான் படையும், ஆழிமுதலவன் படையும், முன்நின்று,
ஒக்கவே விடுமே; விட்டால், அவற்றையும், அவற்றால் ஓயத்
தக்கவாறு இயற்றி, மற்று, உன் சிலைவலித் தருக்கினாலே,
புக்கவன் ஆவிகொண்டு, போதுதி! புகழின் மிக்கோய்!'' (9020)

(மிக்கோன்-மேம்பட்டவன்/சிறந்தவன்; முக்கணான்-சிவபெருமான்; முக்கணான்படை-பாசுபதாஸ்திரம்; ஆழி-சக்கரப்படை; முதலவன்-திருமால்; முதலவன்படை-நாராயண அஸ்திரம்; ஒக்க-ஒருசேர; விடுதல்-

Koviloor Digital Library

ஏவுதல்; ஓய்தல்-ஆற்றல் குன்றுதல்/அழிதல்; தருக்கு-இங்கே பெருமை/வலிமை/திறமை; புக்கவன்-தொடங்கியவன்; ஆவி-உயிர்; போதுதி-மீள்வாயாக/திரும்புவாயாக; சிலைவலி-வில்லாற்றல்)

இராமபிரான் மேலும் இலக்குவனை நோக்கி, ''புகழிற் சிறந்து மேம்பட்டு விளங்குபவனே! இலக்குவ! பகைவனான இந்திரசித்து போர் மேற்கொண்டு, உன் எதிரே நின்று, மூன்று கண்களையுடைய சிவ பெருமானின் பாசுபதாஸ்திரத்தையும், சக்கரப்படையைக் கைக் கொண்டுள்ள ஆதிமூர்த்தியாகிய திருமாலின் நாராயணாஸ்திரத்தையும் உன்மீது ஒருசேர ஏவக்கூடும். அவ்வாறு ஏவினால் அந்தப் படைகளை உன்னிடமும் இருக்கும் அந்தப் படைகளாலேயே தடுத்து நிறுத்தி அவை பயனற்றதாய்ப் போகும்படி உன்னைத் தற்காத்து கொள்ள வேண்டும். உன்னை எதிர்த்துப் போர்செய்யத் தொடங்கியவனான இந்திரசித்தனின் உயிரை உன்னுடைய வில்லாற்றலால் மட்டுமே, கவர்ந்துகொண்டு என்னிடம் மீண்டு வருவாயாக!'' என்று அறிவுறுத்துகிறான்.

தெய்வப் படைக்கலன்களைக் கொண்டு பகைவனைக் கொல்லக் கூடாது. இலக்குவன் தன் வில் வலிமையினால் மட்டுமே பகைவனை அழிக்கவேண்டும் என்பது இராமபிரான் கருத்து.

5. "வல்லன, மாய விஞ்சை வகுத்தன அறிந்து, மாள,
கல்லுதி, தருமம் என்னும் கண் அகன் கருத்தைக் கண்டு;
பல்பெரும் போரும் செய்து வருந்தலை; அற்றம் பார்த்து
கொல்லுதி, அமரர் தங்கள் கூற்றினை; கூற்றம் ஒப்பாய்!" (9021)

(கூற்றம்-இயமன்; வல்லன-கைவந்த/பழகிய; விஞ்சை-வித்தை/மாயச்செயல்கள்; வகுத்தல்-சரியாகப் பிரயோகித்தல்; மாள்தல்-அழிதல்; கல்லுதல்-பறித்தல்/பெயர்த்தல்/ அகழ்ந் தெடுத்தல்; கண்அகன்-அகன்ற இடம்; அற்றம்-தளர்ச்சியுறும் சமயம்; காணுதல்-மனத்தால் ஊகித்து அறிதல்)

''பகைவர்க்கு இயமன்போன்றவனே! இலக்குவ! பகைவனான இந்திர சித்து தான் நன்கு பயின்று பழகிய, கைவந்த மாயச்செயல்களையெல்லாம் பிரயோகிப்பான்; அதனை நீ உன் நுட்பமான அறிவினால் நன்கு ஊகித்து அறிந்து, யுத்த தருமம் என்னும் விரிந்து பரந்த கருத்தை மனத்துட்கொண்டு, அவற்றையெல்லாம் வேரோடு அழியும்படி பறித்து எறிவாயாக! நீ பலவகைப்பட்ட போர்களைச் செய்து, உன்னை வருத்திக் கொள்ளாதே! அவன் தளர்ச்சி உற்றிருக்கின்ற சமயம் பார்த்து, தேவர்களுக்கெல்லாம் இயமன் போன்றவனான அவனைக் கொன்றுவிடு'' என்றும் அறிவுறுத்து கிறான் இராமபிரான்.

''கூற்றம் ஒப்பாய்! அமரர் தங்கள் கூற்றினைக் கொல்லுதி'' என்னு மிடத்தில் சொல்நயம் நோக்குக. கூற்றினுக்கும் கூற்றாவான் இலக்குவன்

Koviloor Digital Library

என்பது பொருள். காலனுக்கும் காலனைக் காலகாலன்'' என்பதுபோல எனக்கொள்க. பகைவன் அழிக்கப்பட வேண்டியவன் என்றாலும் யுத்ததருமம் மீறாதவன் இராமபிரான். எனவே தன் இளவலுக்கும் அவ்வாறே அறிவுறுத்துவதை உணர்க. ஒன்றைக் கருதி உரைக்கப்படும் பொருள் கருத்து எனப்படும்.

6. "பதைத்து, அவன் வெம்மை ஆடி, பல்பெரும் பகழிமாரி,
விதைத்தவன் விதையா நின்று விலக்கினை, மெலிவு மிக்கால்,
உதைத்தவன் சிலையின் வாளி மருமத்தைக் கழிய ஓட்டி,
வதைத்தொழில் புரிதி; சாப நூல்நெறி மறப்பிலாதாய்!" (9022)

(சாபம்-வில்; சாபநூல்-தனுர்வேதம்/வில்வேதம்; வெம்மையாடுதல் -வெகுள்தல்; விதைத்தல்-பதித்தல்/ஊன்றுதல்/பொழிதல்/சொரிதல்; உதைத்தல்-நாண்ஏற்றுதல்; மருமம்-மார்பு/உயிர்நிலை; கழிதல்-ஊடுருவிச்செல்லுதல்; ஓட்டுதல்-செலுத்துதல்; வதைத்தொழில்-கொல்லும்தொழில்; பதைத்தல்-துணுக்குறுதல்/பதற்றமடைதல்; விதையா நின்று-விதைத்து/பாய்ந்து; மெலிவு-தளர்ச்சி; பகழிமாரி-அம்புமழை)

''வில்வேதத்தில் கூறியுள்ள வழிமுறைகளை மறக்காது கடைப் பிடிப்பவனே! இலக்குவ! பகைவன் இந்திரசித்து மனம் துணுக்குற்று, வெகுண்டு, பலவகைப்பட்ட அம்புகளை மழைபோலப் பொழிந்தாலும், அவை உன்மேல் ஊன்றித் தைக்காதவாறு அவற்றை அவற்றாலேயே தடுத்துத் தற்காத்துக் கொண்டுவிடு. அவன் சோர்ந்து இருக்கும் சமயம் பார்த்து, உன்னுடைய வலிமைபொருந்திய வில்லில் நாண்ஏற்றி, அம்பினைஅவனது உயிர்நிலையையும், மார்பையும்துளைத்துக்கொண்டு ஊடுருவிச்செல்லும்படி செலுத்தி, அவனைக் கொல்லுதலாகிய தொழிலைச் செய்வாயாக!'' என்று மீண்டும் யுத்த தருமத்தைப் போதிக்கிறான் இராமபிரான்.

மேற்கூறிய எல்லாப் பாடல்களிலுமே இராமபிரான் போர்நெறியை-யுத்த தருமத்தைக் கடைப்பிடிக்க வேண்டியே வற்புறுத்திக் கூறிவருவதை நுனித்து உணர்க. எனவேதான் இலக்குவனை ''சாப நூல்நெறி மறப்பிலா தாய்!'' என்று அழைத்து அறிவுறுத்துகிறான் என்க. ''வெம்மையாடுதல்'' என்பது ஒரு புதுப்பிரயோகம். வெகுண்டு, சினந்து என்பது பொருள். இங்கு அருமையான உளநூல் கருத்து ஒன்று கருதப்படவேண்டும். ஒருவன் போரில் தான் உணர்ச்சிவசப்படாமல் நின்று, பகைவனை உணர்ச்சி வசப்படச்செய்து, அவனை மேலும் தூண்டிவிடுதல் என்பது போரில் தான் வெல்லுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு அருமையான யுத்தி; உணர்ச்சி வசப்படுபவன், நிதானத்தையும், தீர்மானித்து முடிவெடுக்கும் வலிமையையும் இழந்தவனாகிப் பலவீனனாகித் தளர்ந்துபோவான். அந்தச்சமயம் பார்த்து நாம் வெற்றிகொள்வதற்குரிய வழியைக் கடைப்

Koviloor Digital Library

பிடிக்க வேண்டும். இதனைத்தான் ''பதைத்தவன் வெம்மையாடுவான்; மெலிவு மிகுவான்'' என்ற சொற்களால் இராமபிரான் இலக்குவனுக்குப் போதிக்கிறான் என்க.

7. ''தொடுப்பதன் முன்னம், வாளி தொடுத்து, அவை துறைகள் தோறும்,
தடுப்பன தடுத்தி; எண்ணம் குறிப்பினால் உணர்ந்து, தக்க
கடுப்பினும், அளவிலாத கதியினும், கணைகள் காற்றின்
விடுப்பன அவற்றை நோக்கி, விடுதியால்; விரைவு இலாதாய்!'' (9028)

(விரைவு-மனம்கலங்குதல்; தடுத்தல்-விலக்குதல்; எண்ணம்-மனக்கருத்து; கடுப்பு-விரைவு; கதி-வேகம்; காற்றின்-காற்றைப்போல; விடுதி-செலுத்துவாயாக; துறை-வழி)

மேலும் இராமபிரான், இலக்குவனை நோக்கி, ''எந்த இடரும் கண்டு மனங்கலங்காதவனே! இலக்குவ! பகைவனான இந்திரசித்து தன் வில்லில் நாண் பூட்டி அம்பினைச் செலுத்துவதன் முன்னமே, நீ அம்பினைச் செலுத்தி, அவை எந்த வழிகளில் வருகின்றன என்பதையும் அவன் மனத்தில் எண்ணுவதையும், அவன் முகக்குறிப்பைக் கொண்டு உணர்ந்து, அதற்குத் தக்கவாறு நீயும் உன் அம்புகளால் தடுத்துக் கொள்வாயாக! மேலும் அளவற்றனவும், விரைந்து செயல்படும் காற்றைப்போல் ஏவப்படுபனவுமான அம்புகளைக் கூர்ந்து நோக்கி, அவற்றைச் சரியான முறையில் ஏவுவாயாக!'' என்றும் அறிவுறுத்துகிறான்.

பகைவன் அம்பினைத் தொடுப்பதற்கு முன்பே நாம் தொடுத்து விட வேண்டும் என்பதும், பகைவன் எந்த வழியில் அம்பினைச் செலுத்து கிறான் என்பதைக் கூர்ந்து நோக்கி அவற்றைத் தடுத்துத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதும், பகைவனின் உள்ளக்கருத்தை அவன் முகக்குறிப்புக்கொண்டே உணர்ந்து அதற்குத் தக்கவாறு வேகமாகவும், விரைவாகவும் நாம் அம்பு செலுத்தவேண்டும் என்பதும் இராமபிரானின் பொதுவான அறிவுரை எனக்கொள்க. இங்கே 'விரைவு' என்ற சொல்லுக்கு நாம் இதுவரை அறிந்திராத ஒரு புதுப்பொருள் கூறப்பட்டிருக்கிறது. 'விரைவு' என்பது இடர்வந்துழி நிதானமிழந்து சிறிதும் மனங்கலங்குதல் இல்லாத தன்மை எனப்படுகிறது. இதே சொல் இதே பொருளில் 'விரையாது நின்றான்' என்று சீவகசிந்தாமணியில் பேசப்பட்டிருக்கிறது என்ற மேற்கோளையும் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்புத் தந்திருக்கிறது.

Koviloor Digital Library

8. இராமபிரான் இலக்குவனுக்குத் திருமாலின் வில் முதலியன கொடுத்தல்

என்பன முதல் உபாயம் யாவையும் இயம்பி, ஏற்ற
முன்பனை நோக்கி, "ஐய! மூவகை உலகும் தானாய்,
தன் பெருந்தன்மை தானும் அறிகிலா ஒருவன் தாங்கும்
வன்பெரும் சிலை ஈது ஆகும்; வாங்குதி; வலமும் கொள்வாய்!"
(9024)

(உபாயம்-செயல்படும் முறை/சூழ்ச்சித்திறம்; முன்பன்-வலிமை மிக்கவன்/வல்லவன்; ஒருவன்-ஒப்பற்றவன்/திருமால்; தாங்குதல்-ஏந்துதல்/கைக்கொள்ளுதல்; வாங்குதி-வாங்கிக் கொள்வாயாக; வலம்-வெற்றி; ஏற்றல்-ஏற்றுக்கொள்ளுதல்)

என்று இராமபிரான் எல்லாப் போர் முறைகளையும் எடுத்துக்கூற, அதனை விருப்பமுடன் ஏற்றுக்கொண்ட இலக்குவனை நோக்கி, இராமபிரான் "இலக்குவ! மேல், நடு, கீழ் என்று கூறப்படுகின்ற மூவகை உலகங்களிலும் எங்கும் நீக்கமறத் தானேயாய் நிறைந்து இருப்பவனும், தனது பெருந்தன்மை பற்றித் தான் அறிந்துகொள்ளாத ஒப்பற்றவனுமாகிய திருமால் தன் கைகளில் தாங்கிக் கொண்டிருக்கும் வலிமை பொருந்திய பெரிய வில் இதுவாகும். இதனை இப்பொழுது என்னிடம் இருந்து நீ பெற்றுக்கொள். இதனால் நீ மேலும் வலிமையும் வெற்றியும் பெறுவாய்!" என்று வாழ்த்தி அகத்தியன் தனக்குத் தந்த அவ்வில்லினை இலக்கு வனிடம் அளித்தான் இராமபிரான்.

'என்பன' என்பது முன்னர்க் கூறப்பட்ட என்ற பொருளைத்தரும். 'உபாயம்' என்பது போர்செய்யும்போது தந்திரமாகச் செயல்படும் முறைகளைக் குறித்தது. முன்பு என்ற சொல்லுக்கு வலிமை என்பது பொருள். அதனை உடையவன் முன்பன்; வலிமையுடையவன் எனப் படுகிறான் எனக்கொள்க. "மூவகை உலகும் தானாய்" என்பது பரம் பொருளின் பரத்துவநிலையை உணர்த்துவதாகும். "தன் பெருந்தன்மை தானும் அறிகிலா ஒருவன்" என்பது மாணிக்கவாசகரின் திருவாசகத்தின் சாழல்பகுதியைநினைவுபடுத்துவது காண்க. "தன்பெருமைதான்அறியாத் தன்மையன் காண் சாழலோ" என்பது திருச்சாழல்-19. "தனக்கும் தான் தன்மை அறிவு அறியானை" என்பது நம்மாழ்வார் பாசுரம்.

9. "இச்சிலை இயற்கை மேல்நாள், தமிழ் முனி இயம்பிற்று எல்லாம்
அச்செனக் கேட்டாய் அன்றே? ஆயிரம் மௌலி அண்ணல்
மெய்ச்சிலை; விரிஞ்சன் தானே வேள்வியின் வேட்டுப்பெற்ற
கைச்சிலை கோடி" என்று கொடுத்தனன், கவசத்தோடும். (9025)

Koviloor Digital Library

(இயற்கை-தன்மை/இயல்பு; மேல்நாள்-முன்பு; அச்சு-உறுதி/பதிதல்; மௌலி-முடி; மெய்-உடம்பு/திருமேனி; விரிஞ்சன்-பிரமதேவன்; வேட்டல்-விருப்பம்; கோடி-கொள்வாயாக)

''இந்த வில்லின் தன்மைபற்றி முன்பு ஒருநாள் தமிழ் முனிவனாகிய அகத்தியன் சொல்லியவற்றையெல்லாம் நீயும் என்னுடன் அருகில் நின்று கேட்டு மனத்தில் உறுதியாகப் பதியவைத்துக் கொண்டாய் அல்லவா? இந்த வில் ஆயிரம் முடிகளையுடைய பெருமைமிக்கவனான திருமால் தன் திருமேனியில் கொண்டிருந்ததாகும். பிரமதேவன் தான் செய்த வேள்வியில் விரும்பிப் பெற்றுக்கொண்ட கை வில்லாகும்'' என்று அதன் பெருமையை இலக்குவனுக்கு எடுத்துக்கூறி, இராமபிரான் தான் வைத்துக் கொண்டிருந்த கவசத்தையும் சேர்த்து, இவற்றைப் பெற்றுக் கொள்வாயாக!'' என்றுகூறித் தன் கைகளாலேயே இலக்குவனிடம் கொடுத்தான்.

'அகத்தியன்' சிவபெருமானிடமிருந்து தமிழ்மொழியை நன்கு பயின்று அம்மொழியில் இலக்கணங்கள் ஆக்கியவன். ''என்றுமுள தென் தமிழ் இயம்பி இசைகொண்டான்'' எனவும், ''தழல்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ்தந்தான்'' எனவும், ''நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்'' எனவும், கம்பனாலேயே போற்றித் துதிக்கப்பட்ட பெரு முனிவன் என்பதை நினைவுகூர்க. ''அச்சு'' என்ற சொல், உறுதி, திண்மை, அதிசயம், ஊன்றிப்பதிதல் என்ற பல பொருள்தரும். இந்த வில் முதலில் திருமாலிடம் இருந்தது. பின்னர் பிரமதேவன் வேள்விசெய்து விரும்பிக் கேட்டுப் பெற்றுக்கொண்டது. அவனிடமிருந்து அகத்திய முனிவரிடம் வந்து அகத்தியன் இராமபிரானுக்கு அருளிக்கொடுத்தது என இவ்வில்லின் வரலாறு முன்பு ஆரண்யகாண்டத்தில் பேசப்பட்டதையும் நினைவிற் கொண்டுவருக. திருமால் ஆயிரம் முடிகள் கொண்டவன் என்பதை ''ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிரம் நீள் முடியானும்'' என்னும் தேவாரத்தினாலும் ''சகஸ்ரசீர்ஷபுருஷ'' என்னும் புருஷ சூக்த வாக்கியத்தினாலும் அறியலாம்.

10. **"ஆணி இவ்வுலகுக்கு ஆன ஆழியான் புறத்தின் ஆர்த்த**
தூணியும் கொடுத்து, மற்றும் உறுதிகள் பலவும் சொல்லி,
தாணுவின் தோற்றத்தானைத் தழுவினன்; தழுவலோடும்,
சேண்உயர் விசும்பில் தேவர், "தீர்ந்தது எம் சிறுமை" என்றார்" (9026)

(ஆணி-அச்சாணி/ஆதாரம்; ஆழியான்-சக்கரப்படையை உடையவன் /திருமால்; புறம்-முதுகு; தூணி-அம்புப்புட்டில்; தாணு-மலை/சிவ பெருமான்; சேண்-நெடுந்தூரம்/மிகஉயர்ந்த; சிறுமை-துன்பம்; ஆர்த்த-கட்டியிருந்த)

Koviloor Digital Library

இவ்வுலகுக்கே ஆதாரமாகவும், உலகம் என்ற தேர் இயங்குவதற்கு அச்சாணியாகவும் திகழும், சக்கரப்படையை உடைய திருமாலின் அம்சமான இராமபிரான், தன் முதுகில் கட்டியிருந்த அம்பறாத் தூணியையும் இலக்குவனுக்குக் கொடுத்து, மேலும் பல உறுதி மொழி களையும் எடுத்துரைத்து, சிவபெருமானைப்போலச் சிவந்த தோற்றப் பொலிவும், மலையினைப்போல உறுதியான தேகவலிமையும் கொண்ட இலக்குவனை இறுகத் தழுவிக்கொண்டான். அவ்வாறு தழுவிக் கொண்டதும் மிக உயர்ந்த தேவலோகத்தில் உள்ள தேவர்கள் ''நம்முடைய துன்பமெல்லாம் இன்றோடு தீர்ந்தது'' என்றுகூறி மகிழ்ச்சி அடைந் தார்கள்.

'ஆணி' என்பது தேருக்கு உள்ள அச்சாணியைக் குறிக்கும். இவ் வுலகத்தைத் தேர் என்று கொண்டால், அது இயங்குவதற்கு ஆதாரமாக விளங்கும் அச்சாணி போன்றவன் பரம்பொருளான திருமால். அவனுடைய அம்சமான இராமபிரான் ''ஆணி இவ்வுலகுக்கு ஆன ஆழியான்'' எனப்பட்டான் என்க. 'தாணு' என்ற சொல் பொதுவாக சிவபெருமானைக் குறிக்கும். 'தாணு ஆலயம்' என்பது 'தாணுமாலயன்' என்று மருவி வழங்குவதையும் இங்கு நினைவுகூரலாம். தாணு என்ற சொல்லுக்கே மலை என்ற ஒரு பொருளும் உண்டு. இலக்குவனுக்குஅவன் நிறத்தாலும் வலிமையாலும் தாணு உவமை எனக்கொள்க. 'சேண் உயர்' என்பது ஒரு பொருட்பன்மொழி. இலக்குவனிடம் எல்லாத் தெய்வப் படைக்கலங்களும் வந்து சேர்ந்ததனால் அரக்கர்கள் இலக்குவனால் விரைவில் அழிக்கப்படுவர் என்பதனால் தேவர்கள் தம் சிறுமை தீர்ந்தது என்று மகிழ்ந்தார்கள் என்பதாம்.

11. இலக்குவன் நிகும்பலை நோக்கிச் செல்லுதல்

மங்கலம் தேவர்கூற, வானவ மகளிர் வாழ்த்தி,
பங்கம்இல் ஆசிகூறி, பலாண்டு இசைபரவ, பாகத்
திங்களின் மோலி அண்ணல், திரிபுரம் தீக்கச் சீறிப்
பொங்கினன் என்னத் தோன்றிப் பொலிந்தனன், போர்மேல் போவான்.
(9027)

(மங்கலம்-ஆசிமொழிகள்; பங்கம்-குற்றம்; பாகத்திங்கள்-பாதிச் சந்திரன்/பாதிமதி/பிறைச்சந்திரன்; மோலி-முடி; அண்ணல்-பெருமைக் குரியோன்/சிவபெருமான்; திரிபுரம்-முப்புரம்; தீக்க-சுட்டெரிக்க; சீறுதல்-சினத்தல்; பொலிதல்-விளங்குதல்; பரவுதல்-பாடிப்புகழ்தல்)

இந்திரசித்தனோடு போர் மேற்கொள்வதற்காகச் செல்லும் இலக்கு வனை, தேவர்கள் மங்கல வாழ்த்துக்கூறி ஆசீர்வதித்தனர்; அவர்தம் பெண்பாலாரான தேவமகளிர் இலக்குவனைக் குற்றமில்லாத முறையில் வாழ்த்துக்களால் ஆசி கூறினார்கள். பல்லாண்டு வாழ இசைப்பாடலைப்

Koviloor Digital Library

பாடிப்புகழ்ந்தார்கள்; இப்பொழுது இலக்குவனுடைய தோற்றம், பிறைச்சந்திரனைத் தன் முடியில் சூடியிருக்கும் பெருமைக்குரியோனான சிவபெருமான் திரிபுரங்களையும சுட்டு எரிக்கச் சினம்கொண்டு பொங்கி எழுந்து நிற்கும் பொலிவான தோற்றத்தை ஒத்திருந்தது.

இலக்குவன் போர் மேற்சென்றபோது தேவர்களும், தேவமகளிரும் ஆசியும் வாழ்த்தும்கூறிப் பல்லாண்டு இசைபாடிப் பரவினர் என்பதாம். இலக்குவனைக் கவிஞன் எல்லா இடங்களிலும் சிவபெருமானோடு ஒப்பிடுவதையும் காணலாம். சிவபெருமான் திரிபுரம் எரித்த நிகழ்ச்சி, காப்பியத்தில் பல இடங்களிலும் பயின்றுவந்திருப்பதையும் நினைவு கூர்க. 'பாகத்திங்கள்' என்பது பாதிமதியாகிய பிறைச்சந்திரனைக் குறிக்கும்.

12. "மாருதி முதல்வராய, வானரர் தலைவரோடும்,
வீர! நீ சேறி", என்று விடை கொடுத்தருளும் வேலை,
ஆரியன் கமலபாதம், அகத்தினும் புறத்தும் ஆக,
சீரிய சென்னி சேர்த்துச் சென்றனன் தருமச் செல்வன். (9028)

(சேறி-சேர்ந்து செல்வாயாக; வேலை-வேளை/சமயம்/பொழுது; தருமச்செல்வன்-அறத்தின் தலைவன்; ஆரியன்-பெரியோன்; கமலம்-செந்தாமரைமலர்; சீரிய-சிறந்த; சென்னி-தலை)

''வீரனே! அனுமன் முதலான வானரத் தலைவர்களையும், வீரர்களையும் அழைத்துக்கொண்டு நிகும்பலை செல்வாயாக!'' என்று அனுமதி தந்தருளும் சமயம், அறச்செயல்களையே தனது இயல்பான செல்வமாகக் கொண்டவனான இலக்குவன், மேலோனான இராம பிரானின் தாமரைமலர் போன்ற திருவடிகளைத் தன் உள்ளத்திலும், புறத்திலும் தன் சிறந்த தலையில் பொருந்துமாறு பணிந்து இறைஞ்சி, நிகும்பலை நோக்கிச் செல்லலானான்.

'அகம்' என்பது சிந்தையையும், 'புறம்' என்பது சென்னியையும் குறிக்கும் எனக்கொள்க. 'பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும், புந்தியிலும் உற வணங்கிப் போற்றல் செய்வாம்' என்பதும் சான்றோர் வாக்கு.

13. பொலங்கொண்டல் அனைய மேனிப் புரவலன், பொருமி, கண்ணீர்
நிலங்கொண்டு படரநின்று, நெஞ்சு அழிவானை, தம்பி
வலங்கொண்டு, வயிர வல்வில் இடங்கொண்டு, வஞ்சன் மேலே,
சலங்கொண்டு, கடிது சென்றான், "தலைகொண்டு வருவென்" என்றே.
(9029)

(பொலன்-பொன்/அழகு; கொண்டல்-மேகம்; புரவலன்-மன்னன்; பொருமுதல்-விம்முதல்; நெஞ்சழிதல்-மனம் கவலைகொள்ளுதல்;

Koviloor Digital Library

வலம்-சுற்று/பிரதட்சிணம்; வயிரம்-திண்மை; இடம்-இடக்கை; சலம்-சீற்றம்/சினம்; கடிது-விரைந்து)

அழகிய மேகம்போன்ற கருநீல நிறம் கொண்ட மேனியையுடையவனான அரசன் இராமபிரான், தம்பிக்கு நேர்ந்த நிலைகண்டு உள்ளம் பொறாது கண்ணீர் நிலத்தளவில் வீழ்ந்து பெருகி ஓட, அவனைத் தம்பியான இலக்குவன், வலப்பக்கமாக பிரதட்சணமாகச் சுற்றிவந்து வணங்கி, அவன் தனக்கு அளித்த திண்ணிய வலிமைபடைத்த விஷ்ணு தனுசை இடக்கையில் பற்றிக்கொண்டு, சூழ்ச்சி மிக்கவனாகிய இந்திரசித்தன்மேல் மிக்க சீற்றம்கொண்டு, ''அவனுடைய தலையை வெட்டிக்கொண்டு வருகிறேன்'' என்று சூளுரைத்துவிட்டு நிகும்பலை நோக்கி விரைந்து அவ்விடம் விட்டு அகன்றான்.

''பொலம்'' என்ற சொல் பொதுவாகப் பொன்னைக் குறித்தாலும், இங்கே அழகிய என்ற பொருள் தந்து நின்றது. கொண்டல்-மேகம். சியாமள வண்ணனாகிய இராமபிரான் மேனிக்கு உவமை. 'புரவலன்' என்றசொல் பாதுகாப்பவன் என்ற பொருளில் அரசனான இராமபிரானைக் குறித்து நின்றது. இராமபிரானின் துக்க நிலையைக் கவிஞன் ''பொருமி, கண்ணீர் நிலங்கொண்டு படர நின்று, நெஞ்சு அழிவான்'' என்ற சொற்களால் படம்பிடித்துக் காட்டுவதை நோக்குக. 'வயிர வல்வில்' என்பது விஷ்ணு தனுசுவின் பெருமையைக் குறித்தது. 'வலங்கொண்டு' என்பது வலப்பக்கமாகச் சுற்றிவந்து என்றும், 'இடங்கொண்டு', என்பது இடக்கையில் பற்றிக்கொண்டு என்றும் முரண்பட்ட பொருள்களைத் தருதல் காண்க. 'வஞ்சன்' என்றது சூழ்ச்சித்திறம் மிக்க இந்திரசித்தனை; 'தலைகொண்டு வருதல்' என்பது புறத்திணையில் காணப்படும் ஒருதுறை என்பதறிக. இன்றும் மிகுந்த சீற்றம் கொள்ளும்போது இதே பொருள்தரும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டு வருவதையும் நினைக. 'கொண்டு' என்னும் சொல் எல்லா அடிகளிலும் பயின்று வந்திருப்பதால் இச்செய்யுள் சொற்பொருட் பின்வருநிலையணியின் பாற்படும்.

14. தான் பிரிகின்றிலாத தம்பி வெங்கடுப்பின் செல்வான்,
ஊன் பிரிகின்றிலாத உயிர்என மறைதலோடும்,
வான் பெரு வேள்வி காக்க, வளர்கின்ற பருவ நாளில்,
தான் பிரிந்து ஏகக் கண்ட தயரதன் தன்னை ஒத்தான். (9030)

(பிரிகின்றிலாத-பிரிதல்இல்லாத; வெங்கடுப்பு-மிக்கவிரைவு; ஊன்-உடம்பு; வான்-சிறந்த/பெரிய)

உடலை விட்டுப் பிரிதல் அறியாத உயிரைப்போன்று, தன்னைவிட்டு ஒருபோதும் பிரிதல் இல்லாதவனாகிய இலக்குவன் இப்போது இந்திரசித்தனை அழிக்கும்பொருட்டு மிக்க விரைவாகச் சென்று மறைவது, முன்பு தான் வளர்ந்து வருகின்ற தன் இளம்பருவத்தில் விசுவாமித்திரர்

Koviloor Digital Library

இயற்றிய சிறந்த, உயர்ந்த, பெரிய வேள்வியைக் காக்கும்பொருட்டுப் பிரிந்து சென்ற நாளில் அதனைக் கண்டு கலக்கமுற்ற தன் தந்தை தசரதனைப் போன்று தோன்றினான்.

முன்பு விசுவாமித்திரரின் யாகத்தைக் காப்பதற்காக இராமபிரான் தன் இளம்பருவத்தில் தன் தந்தை தசரதனைப் பிரிந்தபோது, தசரதன் தன் உயிரே தன்னைவிட்டுப் பிரிந்து போவதுபோல வருந்தினான் அல்லவா? அதே நிலையை இப்போது தனது உயிருக்கு ஒப்பான தன் தம்பி இலக்குவன் இந்திரசித்தனை அழிக்கும்பொருட்டு நிகும்பலையை நோக்கிச் செல்லும் போது, தமையனான இராமபிரான் அடைந்தான் என்பதாம். இங்கு உடம்பு இராமபிரானுக்கும் உயிர் இலக்குவனுக்கும் உவமை. முன்பு ஓர் இடத்தில் வந்த நிகழ்ச்சியையே உவமையாகக் கையாள்வது கம்பனுக்குக் கைவந்த கலை. அதை இங்கேயும் நிரூபித்திருப்பதை உணர்க. 'வான்பெரு' என்பது ஒரு பொருட்பன்மொழி எனக்கொள்க, மீமிசைச்சொல். காப்பியப் போக்கில் தசரதனுக்கு உயிர் இராமபிரானாகவும், இராமபிரானுக்கு உயிர் இலக்குவனாகவும் காட்டப்பட்டிருப்பதையும் நினைக. இங்கே இராமபிரானுக்குத் தன் தந்தை தசரதனே உவமை என்பதையும் உணர்க. முன்பு தான் சென்றது நல்வேள்வியைக் காப்பதற்காக; இப்போது இலக்குவன் செல்வது ஒரு அபிச்சார ஹோமத்தை-தீய வேள்வியை-அழிப்பதற்காக என்பதில் உள்ள நயம் ஓர்க; என்றாலும் இரண்டு நிகழ்வுகளிலும் பிரிவுத்துயரம் ஒன்றேஆதல் காண்க.

15. வானரச்சேனை நிகும்பலையுள் அரக்கர்சேனையைக் காணுதல்

சேனாதிபதியே முதல் சேவகர் தாம்
ஆனார், நிமிர் கொள்ளி கொள் அங்கையினார்,
கான் ஆர் நெறியும், மலையும் கழியப்
போனார்கள், நிகும்பலை புக்கனரால். (9031)

(சேனாதிபதி-படைத்தலைவர்கள்; சேவகர்-வீரர்கள்; நிமிர்-ஓங்கி/நீண்டு; கான்-காடு; ஆர்-செறிந்த/நெருங்கிய/பொருந்திய/அடர்ந்த; கழிய-பிற்பட/நீங்க)

படைத்தலைவனாகிய நீலன்முதலான வானரவீரர்கள் எல்லோரும், ஓங்கி எரிகின்ற கொள்ளிக்கட்டைகளைத் தம் கைகளில் ஏந்திக்கொண்டு, காடுகள் அடர்ந்த வழியும் மலைகளும் பிற்பட்டுப்போக, அவற்றைக் கடந்து விரைந்து சென்று நிகும்பலை என்னும் வேள்வி செய்யும் கோயிலுள் புகுந்தார்கள்.

'சேனாதிபதி' என்பது சேனைக்கு அதிபதி என்று தளபதியைக் குறிக்கும். 'சேவகர்' என்பது படைவீரர்களைக் குறிக்கும். 'நிமிர் கொள்ளி' என்பது

Koviloor Digital Library

ஓங்கி கொழுந்துவிட்டு எரிகின்ற கொள்ளிக் கட்டையைக் குறிக்கும். நிகும்பலையில் ஒரு கோயிலும், ஆலமரமும் இருந்தன என்று வான்மீகம் பேசுகிறது. கம்பன் நிகும்பலை என்பது ஒரு கோயில் உள்ள இடம், வேள்வி செய்வதற்கு உகந்த இடம் என்னும் பொருள்படப் பேசுகிறான்.

16. உண்டாயது ஓர் ஆல், உலகுஉள் ஒருவன்
கொண்டான் உறைகின்றது போல் குலவி,
விண்தானும் விழுங்க விரிந்ததனைக்
கண்டார் அவ்வரக்கர் கருங்கடலை. (9032)

(உள்-வயிறு; ஒருவன்-ஒப்பற்றவன்/திருமால்; கொண்டான்-பள்ளி கொண்டவன்; ஆல்-ஆலமரம்/ஆல்இலை; விழுங்குதல்-அடங்குதல்; குலவுதல்-விளங்குதல்; விரிந்தது-பரந்து நின்றது)

ஊழியிறுதிக்காலத்தில் உலகத்து உயிரினங்கள் எல்லாவற்றையும் தன் வயிற்றினுள் அடக்கி ஆலிலையில் அறிதுயில் கொள்ளும் ஒப்பற்ற வனான திருமால் உறைகின்ற ஆலஇலையைக் கொண்டு விளங்குகின்ற ஓர் ஆலமரம் அங்கு இருக்கிறது. விண்ணுலகமே தன்னுள் அடங்கிப் போகுமாறு விரிந்து பரந்து நிற்கின்ற அந்த ஆலமரத்தின் அடியில் தங்கி யிருந்த அரக்கர் சேனையாகிய கரிய கடலை வானரவீரர்கள் கண்டனர்.

நிகும்பலையில் உள்ள இந்த ஆலமரத்திற்குத் திருமால் அரிதுயில் கொள்ளும் ஆலிலையைக் கொண்ட ஆலமரம் ஒப்பு.

17. நேமிப் பெயர் யூகம் நிரைத்து நெடுஞ்
சேமத்தது நின்றது, தீவினையோன்,
ஓமத்து அனல், வெவ் வடவைக்கு உடனே
பாமக்கடல் நின்றது ஓர் பான்மையதை. (9033)

(தீவினையோன்-பாவி/இந்திரசித்து; நேமி-சக்கரம்; யூகம்-வியூகம்/ அணிவகுப்பு; நிரைத்தல்-வரிசைப்படுத்துதல்/வகுத்து நிறுத்துதல்; சேமம்-பாதுகாப்பு; பாம்-பரவும்; பான்மை-தன்மை; ஓமம்-வேள்வி/ யாகம்/ஹோமம்)

அந்தப் பரந்து விரிந்த அரக்கர்சேனையானது, சக்கர வியூகம் என்னும் பெயர்கொண்ட அணிவகுப்பை வரிசையாக நிறக்ச்செய்து, பெரிய பாது காவலோடு நின்றது. பாவச்செயல்களையே புரிகின்ற கொடியவனாகிய இந்திரசித்து இயற்றும் வேள்வியில் எழும் பெருந்தீ, கொடிய வடவா முகாக்னி என்று கூறப்படுகின்ற அனலைத் தன்னகத்தே கொண்டுள்ள, விரிந்து பரந்து கிடக்கும் அந்தக் கருங்கடல் விளங்கியதுபோல், விளங்கிய தன்மையை அவ்வானர வீரர்கள் கண்டனர்.

Koviloor Digital Library

'யூகம்' என்பது வியூகம் என்பதன் முதற்குறை; ''நேமிப் பெயர் யூகம்'' என்பது சக்கராயுதத்தைப்போல அணிவகுத்து இந்திரசித்தைச் சுற்றிச் சூழ்ந்து நிற்கும் அரக்கர் படையைக் குறித்தது. அவன் இயற்றுகின்ற பெரிய யாகத்தில் எழும் நெருப்புக்குக் கருங்கடலின் அடியில் நீர் கரைகடவாது பாதுகாப்பாக இருக்கும் வடவைப் பெருங்கனல் ஒப்பு. அரக்கர்சேனை கருங்கடலுக்கு ஒப்பு. 'பாமக்கடல்' என்பது பரவிய, அழகுள்ள கடல் என்ற பொருளைத்தரும். வாம் என்பது வாவும், தாவும் என்று பொருள்தருவதுபோல, பாம் என்பது பாவும், பரவும் என்ற பொருளைத்தரும் எனக்கொள்ள வேண்டும்.

18. கார் ஆயின காய்கரி, தேர், பரிமா,
தார் ஆயிரகோடி தழீஇயது தான்,
நீர் ஆழியோடு ஆழி நிறீஇயதுபோல்,
ஓர் ஆயிரம் யோசனை உள்ளதனை. (9034)

(கார்-கரியமேகம்; காய்தல்-சினத்தல்; பரிமா-குதிரை; கரி-யானை; தார்-காலாட்படை/சேனை; தழீஇயது-தழுவியது/தன்பால் கொண்டது; ஆழி-கடல்; நிறீஇயது-நிறுத்தியது/நிறுவியது)

கரிய மேகம்போன்ற நிறம் கொண்டதும், அளவற்ற கோபம் கொண்டவையுமான யானைப்படைகள், தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய எல்லாம் சேர்த்து ஓராயிரம்கோடி என்னும் அளவைத் தழுவியதாகவும், நீர்நிறைந்த ஒரு கடல் வேறு தன்மையையுடைய மற்றொரு கடலோடு கூடி நின்றதுபோலவும், ஓர் ஆயிரம் யோசனைதூரம் பரந்து விரிந்து நின்ற அவ்வரக்கர் சேனைகளையும், அதனைத் தன் நிழலுக்குள் அடக்கி வைத்திருக்கும் ஆலமரத்தினையும், அவ்வானர வீரர்கள் கண்டனர்.

'தார்' என்ற சொல் பொதுவாக முன்னணிப்படை கொடிப்படையைக் குறிக்கும் என்றாலும் இங்கே காலாட்படையைக் குறித்து நின்றது. 'நிறீஇயது' என்பது நிறுவியது என்ற சொல்லின் சொல்லிசை அளபெடை என்க. 'நீர் ஆழியோடு ஆழி' என்றதனால் நீர்க்கடலுடன் மற்ற தேன், பால், கருப்பஞ்சாறு, நெய், தயிர் ஆகியவை நிறைந்த கடல் எனக்கொள்ளலாம்.

19. பொன்தேர், பரிமா, கரிமா, பொரு தார்
எற்றே? படைவீரரை எண்ணிலமால்!
உற்று ஏவிய யூகம் உலோகமுடைச்
சுற்று ஆயிரம் ஊடு சுலாயதனை. (9035)

(பரி-குதிரை; மா-விலங்குகள்; தார்-தூசிப்படை/முன்னணிப்படை; எற்றே-எவ்வளவினது; உலோகம்-லோகம்/உலகம்; யூகம்-சேனை/வியூகம்; சுலாவுதல்-சுற்றிக்கொள்ளுதல்; சுற்று-வரிசை; படை-காலாட் படை; ஊடு-இடையே)

Koviloor Digital Library

போரிடுவதற்குத் தயார்நிலையில் உள்ள அழகிய பொன்னாலான தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, எவ்வளவினது என்பதையும், முன்னனியில் சென்ற காலாட்படை வீரர்களையும் கணக்கிட்டு இவ்வளவினர் என்று கூற இயலாதவரானோம்; இந்திரசித்து நன்கு வியூகம் அமைத்துச் செலுத்திய படையின் பெருக்கம், இவ்வுலகத்தைச் சுற்றி ஆயிரம் வரிசைகளாக அமைந்ததைப் போன்றிருந்ததையும் வானர வீரர்கள் கண்டுகொண்டு சென்றனர்.

20. வண்ணக் கருமேனியின் மேல், மழை வாழ்
விண்ணைத் தொடு செம்மயிர் வீசுதலால்,
அண்ணல் கரியான் அனல் அம்பு அட, வெம்
பண்ணைக் கடல் போல்வது ஓர் பான்மையதை. (9036)

(வண்ணம்-நிறம்; மேனி-உடம்பு; செம்மயிர்-செம்பட்டைமுடி; அண்ணல்-பெரியோன்/இராமபிரான்; அனல்அம்பு-அக்னி அஸ்திரம்; அடுதல்-சுடுதல்; பண்ணை-நீர்த்திரள்; பான்மை-தன்மை; மழை-மேகங்கள்; கரியான்-கரிய நிறமுடைய இராமபிரான்)

அரக்கர்களின் கரியநிறம் கொண்ட உடம்பின்மேல், மேகங்கள் சஞ்சரிக்கின்ற ஆகாயத்தைத் தொடுகின்ற சிவந்த செம்பட்டை மயிரின் ஒளி வீசுவதால், கரிய நிறமுடைய பெரியோன் இராமபிரான் செலுத்திய அக்னி அஸ்திரம் சுட்டு வெதுப்ப, கொடிய நீர்த்திரள் நிறைந்த கருங்கடலைப் போல் தோன்றுகின்றதான நிகும்பலையையும் வானரவீரர்கள் கண்டு கொண்டு சென்றார்கள்.

அரக்கர் உடம்பு 'வண்ணக்கருமேனி'; இராமபிரான் 'கரியான்'; அரக்கர்முடி-செம்மயிர்; அனல்அம்பு-சிவப்பு; அரக்கர்களின் மேனிக்குக் கருங்கடலும், இராமபிரான் செலுத்திய அக்னி அஸ்திரத்திற்கு அரக்கர் களின் செம்பட்டை முடியும் உவமைகள். நிகும்பலையின் தன்மையை மேற்சொன்ன நான்கு செய்யுட்களிலும் விளக்கியதை எண்ணுக.

21. வழங்கா சிலை நாண்ஒலி, வானில்வரும்
பழங் கார்முகம் ஒத்த; பணைக் குலமும்
தழங்கா, கடல் வாழ்வன போல்; தகைசால்
முழங்கா முகில் ஒத்தன மா முரசே. (9037)

(வழங்குதல்-வெளிப்படுத்துதல்; வான்-மேகம்; கார்முகம்-வில்/இந்திரவில்; பணைக்குலம்-வாத்தியத்தொகுதிகள்; தழங்குதல்-முழங்குதல்; முகில்-மேகம்; சிலை-வில்)

அரக்கர்களின் கைகளில் இருந்த விற்கள், மேகத்தில் தோன்றும் பழமையான இந்திரவில்லைப் போன்று நாண்ஒலி எழுப்பாது அமைதியாய் இருந்தன; போர்ப்பறைகளும், வாத்தியக் கருவிகளும், கடலில்

Koviloor Digital Library

வாழ்கின்ற உயிரினங்கள்போல, பேரொலி செய்யாமல் அடங்கியிருந்தன; தகுதி வாய்ந்த பெரிய முரசங்களும் இடி ஒலி எழுப்பாத மேகத்தைப்போல சத்தம் இல்லாமல் இருந்தன.

வில்லின் நாண்ஒலி கேட்கவில்லை; போர்ப்பறைகள் முழங்கவில்லை; வாத்தியக் கருவிகள் இசைக்கவில்லை; முரசங்கள் அடிக்கப்படவில்லை; இவையனைத்தும் போர்க்களத்தில் பேரொலி எழுப்பவேண்டுமே? இவை ஏன் இயங்காமல் இருக்கின்றன? காரணம் இந்திரசித்து பகைவர் ஒருவருக்கும் தெரியாமல் தானே நிகும்பலையாகம் செய்யத் தனியே போயிருக்கிறான். எனவே இவை ஒன்றும் ஒலிக்கவில்லை என்பது நுனித்து உணரப்படவேண்டும்; ''வழங்காசிலை; தழங்காகடல்; முழங்கா முகில்'' என்ற இடங்களில் சொல்நயம் உணர்க. ஒவ்வொன்றுக்கும் ஏற்ற உவமை கூறியிருப்பதையும் எண்ணி மகிழ்க. பணைக்குலம் என்ற சொல் போர்ப்பறையையே குறிக்கும் என்றாலும் இங்கே போர் இசைக்கருவிகள் எனப் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. காரணம் பின்னால் முரசத்தைப் பற்றியும் கூறுகிறான் கவிஞன். எனவே இங்கே இசைக்கருவிகள் என்ற பொருள் கொள்ளப்பட்டது. போர்ப்பறை வேறு; போர்முரசம் வேறு என்பது உ.வே.சா அவர்கள் குறிப்பு. 'வானில் வரும் பழங்கார் முகம்' என்பது இந்திரவில், வானவில்லைக் குறித்தது. 'கடல் வாழ்வன' என்பது கடலில் அமைதியாய் இருக்கும் சங்குகளைக் குறித்தது எனக்கொள்ளலாம்.

22. வலியான இராகவன் வாய்மொழியால்
சலியாத நெடுங் கடல்தான் எனலாய்,
ஒலியாது உறு சேனையை உற்று, ஒருநாள்
மெலியாதவர் ஆர்த்தனர், விண் கிழிய. (9038)

(ஒருநாள்-ஒருகாலத்தும்; மெலிதல்-தளர்தல்; வலியான்-ஆற்றல் மிக்கவன்; வாய்மொழி-ஆணை; சலித்தல்-அசைதல்; எனலாய்-என்னும் படி; உறுதல்-அடைதல்/நெருங்குதல்)

ஒருநாள்கூடத் தளர்ச்சியுறாது எப்போதும் தயார்நிலையில் நிற்கின்ற வானரச்சேனை, முன்பு வலிமைமிக்க இராமபிரானது கட்டளையினால் சற்றும் அசையாது அடங்கி நின்ற பெரிய கடலைப்போல, ஒலி யெழுப்பாது அமைதியாய் நின்றிருந்த அரக்கர்படைகளை நெருங்கிச் சென்று, வானமுகடே கிழிந்து போகும்படி, பேராரவாரம் செய்தது.

'இராகவன் வாய்மொழியால் சலியாத நெடுங்கடல்தான் எனலாய்' என்பதில் ஒரு அகநானூற்றுக் குறிப்பு உள்ளது. அகநானூறு சங்ககால இலக்கியம். இராமாயணம் அதற்குப் பிந்தியது. எனினும் இராமபிரான் கடல் ஒலியை அடக்கிய சம்பவம் அங்கே உவமையாகத் தரப்பெற்றிருக் கிறது.

Koviloor Digital Library

சேதுவை அடைந்த இராமபிரானும் வானரச்சேனையும், சுக்கிரீவன் மற்றும் எல்லோரும் ஒரு ஆலமரத்தடியில் அமர்ந்து இலங்கை சென்று இராவணனை வெற்றி கொண்டு சீதாதேவியை மீட்பதற்குரிய ஆலோசனை நடத்தியபோது, அந்த ஆலமரத்தின் மீதமர்ந்திருந்த பறவைகளின் சத்தமும் கடலின் அலையின் பேரொலியும் அவர்கள் பேசுவதைப் புரிந்து கொள்ள விடாமல் செய்ததனால், இராமபிரான் சற்று சினந்து வாய்மொழி கூறி கைகவித்ததும் அக்கடல் ஓசையின்றி அடங்கிப் போயிற்று என்பது அகநானூற்றுப் பாடலின் திரண்ட கருத்து. இந்நிகழ்ச்சி தமிழகத்தில் நெடுங்காலமாகக் கூறப்பட்டுவரும் ஒரு பழைய செய்தியாகும். இச்செய்தியைச் சேதுபுராணமும் விரிவாகப் பேசுகிறது. எனினும் இந்தச்செய்தி வான்மீகத்தில் கூறப்படவில்லை என்பது கருதத்தக்கது. அந்த நிகழ்ச்சி, இங்கே கம்பனால் ''வலியான இராகவன் வாய்மொழியால் சலியாத நெடுங்கடல்தான் எனலாய் ஒலியாது'' எனப்படுகிறது.

இந்திரசித்து போர்முழக்கம் செய்யலாகாது என்று இட்ட கட்டளைக்கு, இராமபிரான் முன்பு கடலுக்கு இட்ட கட்டளை ஒப்பு. அமைதியாய் நின்றிருந்த அரக்கர் சேனையை நெருங்கி வானரச்சேனை விண்கிழிய ஆர்த்தன என்ற இடத்து முரண்தொடை நோக்குக. 'ஒலியாது உறுசேனை' என்பது இந்திரசித்தின் கட்டளையால் ஒலியெழுப்பாது அடங்கி இருந்த அரக்கர்சேனையைக் குறிக்கும். இப்பொழுதும் இராமேஸ்வரத்திற்கு அருகில் உள்ள ஓரிடம் ''ஏகாந்தராமம்'' என்றும், அங்கு எழுந்து அருளி யிருக்கும் இறைவன் 'ஏகாந்தராமன்' என்றும் அழைக்கப்பட்டுவருவதை நினைக.

23. அரக்கர்–வானரர் போர்

ஆர்த்தார் எதிர், ஆர்த்த, அரக்கர்குலம்;
போர்த்தார் முரசங்கள் புடைத்த; புகத்
தூர்த்தார் இவர் கற்படை; சூல் முகிலின்
நீர்த்தாரையின், அம்பு அவர் நீட்டினரால். (9039)

(தார்-மாலை; புடைத்தல்-அடித்தல்/முழக்குதல்; தூர்த்தல்-நிரப்புதல்; சூல்-கரு; நீட்டுதல்-செலுத்துதல்; கல்-மலை)

அவ்வாறு போர் முழக்கமிட்டுக் கொண்டு நெருங்கிவந்த வானரச் சேனையை எதிர்த்து அரக்கர் கூட்டமும் எதிர் ஆரவாரம் செய்தது; மாலை சூட்டப்பெற்ற தங்கள் போர் முரசங்களைக் குணில்கொண்டு முழக் கினார்கள். வானர வீரர்கள் அவர்கள் படைக்குள் கற்களை வீசி நிரப்பினார்கள்; அவ்வரக்கவீரர்கள் கருக்கொண்ட மேகத்தினின்றும் பொழியும் மழைத் தாரைபோல சரமாரியாக அம்புகளைச் செலுத் தினார்கள்.

Koviloor Digital Library

24. மின்னும் படை வீசலின், வெம்படைமேல்
பன்னும் கவிசேனை படிந்துளதால்,
துன்னும் துறைநீர் நிறை வாவி தொடர்ந்து
அன்னங்கள் படிந்தனவாம் எனலாய். (9040)

(துன்னுதல்-நெருங்கிச்செல்லுதல்; வாவி-தடாகம்; படை-சேனை; பன்னுதல்-பாராட்டி உரைத்தல்; கவி-வானரம்/குரங்கு; படிதல்-மேற் செல்லுதல்/தங்குதல்; தொடர்ந்து-வரிசையாக)

எல்லோரும் எளிதில் நெருங்கிச்சென்று அடையும் நீர்நிறைந்த துறைகளையுடைய தடாகத்தில், அன்னப்பறவைகள் வரிசையாக அமர்ந்து தங்கியிருப்பதைப்போல, கொடிய அரக்கசேனை வீரர்கள் செலுத்திய ஒளி பொருந்திய படைக்கலன்கள், புகழ்ந்து பேசப்படுகின்ற வானரச் சேனையின் மேல் போய்ப் படிந்தன.

அரக்கர்கள் தம் கொடிய ஒளிமிகுந்த படைக்கலன்களை குரங்குகளின் மேல் செலுத்தினர். அவை சென்று வெண்ணிறமுடைய குரங்குகளின் மேல் பட்டுத் தங்கின. இந்தத் தோற்றம் எப்படியிருந்ததென்றால், நீர்நிறைந்த ஒரு தடாகத்தில் வெண்மைநிறமுடைய அன்னப்பறவைகள் வரிசையாகத் தங்கியிருந்ததைப் போன்றிருந்தது என்கிறான் கவிஞன். வானரச்சேனையை நீர்நிறைந்த தடாகத்திற்கும், அவற்றின்மேல் படிந்த அரக்கர்களின் படைக்கலன்களை அன்னங்களுக்கும் உவமித்தார் என்க.

25. வில்லும், மழுவும், எழுவும், மிடலோர்
பல்லும், தலையும், உடலும், படியில்
செல்லும்படி சிந்தின, சென்றனவால்;
கல்லும், மரமும், கரமும், கதுவ. (9041)

(கதுவுதல்-பற்றுதல்; மிடல்-வலிமை; படி-பூமி/தரை; மழு-கோடாலி; எழு-வளைதடி)

வானரவீரர்கள் வீசியெறிந்த பெரிய கற்களாலும், மரங்களாலும், அவர்கள் கைகளால் பற்றித் தாக்கியதாலும், இயல்பிலேயே உடல் வலிமையுடைய அரக்கர்களின் ஆயுதங்களான விற்களும், கோடாலி களும், வளைதடிகளும், அவர்களுடைய பற்களும், தலையும், உடலும் நிலத்தில் விழுந்து சிதறிப்போயின.

வானரவீரர்கள் தங்கள் ஆயுதங்களாகிய கல், மரம், கைகள் போன்ற வற்றைப் பயன்படுத்தியே அரக்கர்களது படைக்கலன்களாகிய வில், மழு, எழு முதலியவற்றையும் அவர்கள் பல், தலை, உடல் முதலியவற்றையும் சிதைத்தனர் என்பதாம்.

Koviloor Digital Library

26. வாலும், தலையும், உடலும், வயிறும்,
காலும், கரமும், தரை கண்டனவால்;
கோலும், எழுவும், மழுவும், கொழுவும்,
வேலும், கணையும், வளையும், விசிற. (9042)

(கோல்-தண்டாயுதம்; விசிறுதல்-வீசியெறிதல்/சுழற்றி எறிதல்; கொழு-உலோகக்கோல்/கலப்பை; வளை-சக்கராயுதம்; எழு-உலக்கை)

அரக்கர்கள் தண்டாயுதம், கோடாலி, உலக்கை, வளைதடி, கலப்பை, வேற்படை, அம்பு, வளை என்ற சக்கராயுதம் முதலியவற்றை விரைந்து, சுழற்றி வீசியெறிந்ததால், வானரச்சேனையின் வால், தலை, உடல், வயிறு, கால், கைகள் முதலியன அறுபட்டுத் தரையில் விழுந்து சிதறிப் போயின.

முன்பாடலில் அரக்கர்கள் அழிவு குறித்த கவிஞன் இப்பாடலில் வானரச்சேனையின் அழிவு குறித்தார் என்க.

27. வீடணன், இலக்குவனிடம் வேள்வியை உடனே சிதைக்குமாறு வேண்டுதல்

வென்றிச் சிலை வீரனை, வீடணன், "நீ,
நின்று இக்கடை தாழுதல் நீதியதோ?
சென்று, இக்கடி வேள்வி சிதைத்திலையேல்,
என்று இக்கடல் வெல்குதும் யாம்?" எனலும்; (9043)

(இக்கடை-இவ்விடம்; தாழுதல்-காலம் தாழ்த்துதல்; நீதி-முறை; கடி-காவல்) (குளகப்பாடல்)

இவ்வாறு போர் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, வீடணன், வெற்றி பொருந்திய வில்லைக் கைக்கொண்டுள்ள வீரனான இலக்குவனை நோக்கி, "நீ இவ்விடத்து அரக்கர்களுடன் போர் செய்துகொண்டு காலந் தாழ்த்துதல் முறையாகுமா? நீ விரைந்து சென்று, காவல் மிகுந்த இந்த வேள்வியை உடனே சிதைத்து அழிக்காவிட்டால், நாம் எந்தக் காலத்தில் இந்த அரக்கர் சேனையாகிய கடலை வெற்றிகொள்ள முடியும்?" என்று ஊக்கப்படுத்தும் அளவில் - பாடல் தொடர்கிறது.

'நீதியதோ' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. நீதியாகாது என்ற பொருளைத்தரும். 'கடல்' என்பது கடல் போன்று விரிந்து, பரந்த அரக்கர் சேனையைக் குறித்தது. அரக்கர்களோடு போர்செய்து காலங் கடத்துவதைத் தவிர்த்து, இந்திரசித்தோடு போர்செய்து அவன் வேள்வி செய்யாது தடுத்து விடவேண்டும். இல்லையென்றால் நமக்குப் பெருந் தீங்கு விளையும் என்று அறிவுறுத்துகிறான் வீடணன் என்பதாம்.

Koviloor Digital Library

28. இலக்குவன் அரக்கர்சேனையை அழித்தல்

தேவாசுரரும், திசை நான்முகனும்,
மூவாமுதல் ஈசனும், மூவுலகின்
கோ ஆகிய கொற்றவனும், முதலோர்
மேவாதவர் இல்லை விசும்பு உறைவோர். (9044)

(மூவா-இறப்பில்லாத/மூப்பில்லாத; ஈசன்-சிவபெருமான்; கோ-தலைவன்; கொற்றவன்-அரசன்/இந்திரன்; விசும்பு-வான்/விண்ணுலகு; மேவுதல்-விரும்பி வந்து சேருதல்/பொருந்துதல்)

விண்ணுலகில் வசிக்கின்ற தேவர்கள் முதலிய பதினெண் கணத்தவரும், அசுரர்களும் நான்கு திசைகளுக்கும் ஒவ்வொரு முகம் கொண்டு விளங்கும் நான்முகனான பிரமதேவனும், இறப்பு என்பதே இல்லாத ஈசன் சிவபெருமானும், மூவுலகங்களுக்கும் அரசனாகிய இந்திரனும், திருமாலும், ஆகியோரில் இலக்குவன் அரக்கர்களோடு செய்யப்போகும் போரை ஆவலுடன் காண வானத்தில் விரும்பி வந்து சேராதவர்கள் ஒருவரும் இல்லை.

'மூவுலகின் கோவாகிய கொற்றவன்' என்பது திருமாலையும் குறிக்கும். 'மேவாதவர் இல்லை' என்று எதிர்மறையில்கூறி, 'எல்லோரும் மேவினர்' என்ற உடன்பாட்டுப் பொருளைப் பெறவைத்தார் என்க. தேவர்கள், அசுரர்கள், சிவன், பிரமன், திருமால், இந்திரன் முதலிய வானுலகத்தில் வசிப்பவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி வந்தனர் என்பதாம்.

29. பல்லார் படை நின்றது; பல்அணியால்,
பல்ஆர் படை நின்றது; பல் பிறைவெண்
பல்லார் படை நின்றது; பல்லியம் உம்
பல்ஆர் படை நின்றது பல் படையே. (9045)

(பல்லார்-பலவகைப்பட்ட; பல்லியம்-வாத்தியம்/இசைக் கருவிகள்; அணி-வரிசை; உம்பல்-யானை; ஆர்தல்-நிறைதல்)

இந்திரசித்தன் இயற்றும் வேள்வியைக் காவல் செய்துகொண்டு பலவகைப்பட்ட படைகளுடன் யானைப்படையும் நின்றது; பலவகை வாத்தியங்களை முழக்கிக்கொண்டு காலாட்படை நின்றது; பல பிறைகள் ஒன்று சேர்ந்தாற்போன்ற வெண்மையான கோரப்பற்களையுடைய அரக்கர் படையும் நின்றது; பலவகையாக அணிவகுத்து நிறுத்தப்பட்ட குதிரைப்படைகளும் நின்றன. பலவகைப்பட்ட தேர்ப்படையும் நின்றது.

இச்செய்யுள் யமக அணியின் பாற்பட்டது. இதுபோன்று கம்பன் தன் காப்பியத்தில் இருபதுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியிருக்கிறான். இலக்கணம் கற்ற புலவர்களுக்கு மட்டுமே புரியும்பாடல். சாதாரண

Koviloor Digital Library

எளிமையான பொருள்கொள்ள முடியாத கம்பனின் விசித்திரப்பாடல், 'பல் அணியால் பல்லார்படை நின்றது' என்றதனால் குதிரைப்படை என்று கொண்டோம்; 'பல்பிறைவெண் பல்லார்படை நின்றது' என்றதனால் பல பிறைச்சந்திரனைப் போன்று வெண்மையான கோரப்பற்களைக் கொண்ட அரக்கர்கள் நிரம்பிய காலாட்படை என்று பொருள் கொண்டோம்; 'பல்லியம்' என்றதனால் அவ்வரக்கர்கள் இசைக்கருவிகளை முழக்கிக் கொண்டு நின்றனர் என்று கொண்டோம். 'உம்பல்' என்ற சொல்லுக்கு யானை என்று பொருள். எனவே 'உம்பல் ஆர்படை நின்றது' என்றதனால் யானைகள் நிறைந்த படை நின்றது என்று பொருள்கொண்டோம்; மூவகைப்படைக்கும் ஒவ்வொரு குறிப்புத் தந்ததனால் பொருள்கொள்ள முடிந்தது. நால்வகைப் படைகளுள் எஞ்சியது தேர்ப்படை மட்டுமே. எனவே முதலடியில் உள்ள 'பல்லார் படை நின்றது' என்பதற்குப் பலவகைப்பட்ட தேர்ப்படை நின்றது என்று பொருள்கொண்டோம்.

30. அக்காலை இலக்குவன், அப்படையுள்
புக்கான், அயில் அம்பு பொழிந்தனனால்;
உக்கார் அவ்வரக்கர் தம் ஊர் ஒழிய,
புக்கார், நமனார் உறை தென்புலமே. (9046)

(அயில்-கூரிய; பொழிதல்-சொரிதல்; உகுதல்-சிதைதல்; ஒழிய-தவிர்த்து; நமனார்-இயமன்; தென்புலம்-தென்திசை; அக்காலை-அப்பொழுது)

அப்பொழுது இலக்குவன் அந்த அரக்கர்சேனைக்குள் புகுந்து, கூரிய முனையையுடைய அம்புகளை மழைபோலப் பொழிந்தான்; அதனால் அவ்வரக்கர்கள் உயிர் சிந்தப்பெற்றுத் தமது ஊராகிய இலங்கை நகரை விட்டு அகன்று, இயமன் வாழும் தென்திசையில் உள்ள எமலோகத்துள் புகுந்தனர்-அரக்கர்கள் இறந்தொழிந்தனர்.

'தம்ஊர்' என்பது இலங்கை மாநகரத்தைக் குறிக்கும். நிகும்பலைக் கோயிலிலிருந்து இலங்கைக்குத் திரும்பிச் செல்லாது எமலோகம் சென்றனர் என்பதாம். 'தென்புலம்' என்பது தெற்குத்திசைக் காவலனான இயமன் வாழும் எமலோகம் என்ற விரிந்த பொருளைத்தரும். 'உகுதல்' என்பது உடம்பு சிதைந்து உயிர் சிந்துதலைக் குறிக்கும். தென்புலத்தை 'வைவஸ்தவ நகரம்' என்கிறது வான்மீகம்.

31. தேறா மத மால்கரி, தேர், பரிமா,
நூறாயிர கோடியின் நூழில்பட,
சேறுஆர் குருதிக் கடலில், திடராய்க்
கூறுஆய் உக, ஆவி குறைத்தனனால். (9047)

Koviloor Digital Library

(தேறா-தெளியாத; நூழில்படுதல்-கொன்றுகுவிக்கப்படுதல்; ஆர்தல்-நிறைதல்/பொருந்துதல்; திடர்-திடல்/மேடு/தீவு; ஆவி-உயிர்; குறைத்தல்-போக்குதல்/அழித்தல்; மால்-பெரிய/மயக்கம்)

தெளிவற்ற, மதச்செருக்கு மிகுந்த, பெரிய யானைப்படை, தேர்ப் படை, குதிரைப்படை இவைகளை நூறாயிரக்கணக்கான அளவினலான வற்றை இலக்குவன் கொன்று குவிக்க, அதனால் இரத்தக்கடல் பெருக்கெடுத்தோட, அப்போர்க்களம் மிகுந்த சேறாகிப்போனது. அரக்கர்கள் உடல் கூறுகூறாய் விழுந்து கிடந்த இடமெல்லாம் மேடாகிப் போனது. இவ்வாறு அவன் அரக்கர்சேனையை அழித்தொழித்தான்.

'நூறாயிரகோடி' என்பது அளவற்ற என்ற பொருளைத்தரும். 'திடர்' என்பது 'திடல்' என்பதன் கடைப்போலி. தீவு என்பது பொருள். இராமேஸ்வரம் பல தீவுகளாலானது என்பதை நாம் அறிவோம். இதனைத் தேவாரம் கூறுகிறது கேளுங்கள். ''திடலிடைச் செய்த கோயில் திரு இராமேச்சுரம்' என்பது அப்பர்தேவாரம். அரக்கர்களின் இரத்தம் கடலாகவும், அவர்களின் உடற்கூறுகள் மேடாகவும் உருவகப் படுத்தப்பட்டன என்க.

32. வாமக் கரிதான் அழி வார்குழி, வன்
தீ மொய்த்த அரக்கர்கள் செம்மயிரின்
தாமத் தலை உக்க, தழங்கு எரியின்
ஓமத்தை நிகர்த்த; உலப்பு இலவால். (9048)

(வாமம்-அழகு; அழித்தல்-மிதித்தல்/தோண்டுதல்; வார்-நீண்ட; தாமம்-மாலை; உகுதல்-சிதறிவிழுதல்; தழங்குதல்-ஒளிவிட்டு எரிதல்/முழங்குதல்; ஓமம்-ஹோமம்/யாகம்/வேள்வி; உலப்பில-எண்ணில்லாதன; மொய்த்தல்-நெருங்குதல்/சூழ்தல்)

அழகிய யானைகள் தம் கால்களால் தரையில் சிதைத்து உண்டாக்கிய நீண்ட குழிகளில், நெருப்பு ஓங்கி எரிவதைப் போன்று, வலிய அரக்கர்களின் செம்பட்டைத் தலைமயிருடன் கூடிய மாலையணிந்த தலைகள் ஒளிவிட்டு எரியும் ஓமகுண்டத்தை ஒத்திருந்தது. அவ்வாறு தரையில் உண்டாக்கப்பட்ட குழிகள் அளவற்றனவாய் இருந்தன.

யானைகள் தன் கால்களால் நிலத்தில் குழியை உண்டாக்கின. இலக்குவன் போர் செய்யும்போது அழித்துக் கொன்ற அரக்கர்களின் செம்பட்டைமுடி நிறைந்த தலைகள் அந்தக் குழிகளுக்குள் விழுந்து அவற்றை நிரப்பின. இது எப்படி இருந்தது என்றால் ஓமகுண்டத்தில் ஒளிவிட்டு எரியும் நெருப்பைப் போன்றிருந்தது என்கிறான் கவிஞன்.

Koviloor Digital Library

33. சிலையின் கணையூடு திறந்தன, திண்
கொலை வெங்களி மால்கரி செம்புனல் கொண்டு,
உலைவு இன்று கிடந்தன, ஒத்தனவால்,
மலையும் சுனையும், வயிறும், உடலும். (9049)

(களி-மதம்; மால்-பெரிய; செம்புனல்-இரத்தம்/குருதி; உலைதல்-அசைதல்/இறத்தல்; திறத்தல்-செலுத்துதல்/வெளிப்படுத்துதல்/பிளத்தல்)

இலக்குவன் செலுத்திய வில்லினின்றும் வெளிப்பட்ட அம்புகள், கொலைசெய்யும் இயல்புடையதும் வலிமை மிக்கதும், கொடுமையானதும், மதச்செருக்கு மிக்கதுமான பெரிய யானைகளின் உடலைப் பிளந்தன. அதனால் அவற்றின் வயிற்றிலும் உடலிலும் துளைகள் ஏற்பட்டு இரத்தம் அருவிபோல் கொட்டியது. எனினும் அவை அசையாமல் தரையில் கிடந்தன. அவ்வாறு அசைவற்றுத் தரையில் கிடக்கும் யானையின் உடல் பெரிய மலையைப்போலவும், அதனின்றும் ஒழுகுகின்ற இரத்தப்பெருக்கு அம்மலையில் சுரக்கும் சுனைபோலவும் தோன்றின.

34. வில் தொத்திய வெங்கணை, எண்கின் வியன்
பல் தொத்தியபோல் படியப் பலவும்,
முற்றச் சுடர் மின்மினி மொய்த்துள வன்
புற்று ஒத்த, முடித்தலை, பூழியன. (9050)

(தொத்துதல்-தொடர்தல்/பற்றுதல்; எண்கு-கரடி; வியன்-வியப்புக்குரிய/பெரிய; படிய-அழுந்திப்பதிய; பூழி-புழுதி; சுடர்-ஒளி; முற்ற-முழுவதும்; முடி-மோலி/கிரீடம்; புற்று-பாம்புப்புற்று)

இலக்குவனது வில்லிலிருந்த வெளிப்பட்டுத் தொடர்ந்து சென்ற கொடிய அம்புகள் எல்லாம், கரடிகளின் வியப்பிற்குரிய பெரிய பற்கள் பற்றிக் கவ்விக்கொண்டனபோல் அரக்கர்கள் தலையின்மீது அழுந்திப் படியவும், அவர்கள் தலையில் அணிந்திருந்த மாணிக்கக் கற்கள் பதித்திருந்த கிரீடங்களுடன் தரையில் புழுதியில் விழுந்த தோற்றம் மிக்க ஒளியுடைய மின்மினிப் பூச்சிகள் முழுவதும் வலிய பாம்புப்புற்றை மொய்த்துக் கொண்டிருப்பதுபோல் தோற்றமளித்தது.

'தொத்துதல்' என்ற சொல், வெளிப்பட்டுத் தொடர்தல், பற்றிக் கொள்ளுதல், ஒட்டிக்கொள்ளுதல் என்ற பொருளைத்தரும். பாம்புப் புற்றைச் சுற்றி மின்மினிப் பூச்சிகள் அச்சமில்லாமல் மொய்த்துக் கொண்டிருக்குமா? என்ற கேள்வி எல்லோருக்கும் எழும். இதற்கு அகநானூற்றில் ஒரு சான்று கிடைக்கிறது கேளுங்கள். ''மின்மினி மொய்த்த அரவு வாய்ப்புற்றம்'' என்பது அகநானூறு. கரடிகளின் பெரிய

Koviloor Digital Library

பற்களுக்கு இலக்குவனின் தொடர்ந்துவந்த அம்புகள் உவமை. அரக்கர்களின் தலைகள் பாம்புப் புற்றுக்கு உவமை.

35. படு மாரி நெடுங்கணை பாய்தலினால்,
விடும் ஆறு உதிரப்புனல் வீழ்வனவால்;
தடுமாறு நெடுங்கொடி, தாழ் கடல்வாய்
நெடு மாமுகில் வீழ்வ நிகர்த்தனவால். (9051)

(படுதல்-பெய்தல்/தோன்றுதல்/விழுதல்; மாரி-மழை; விடுதல்-வெளிப்படுதல்; தடுமாறுதல்-தளர்ந்து வீழ்தல்; தாழ்ச்சி-ஆழம்; நிகர்த்தல்-ஒத்திருத்தல்)

இலக்குவனது விற்களிலிருந்து வெளிப்பட்டுவரும் அம்புகள் பெருமழை பொழிவதைப்போல் அரக்கர்படை மீது பாய்வதனால், அவர்கள் உடலினின்றும் வழியும் இரத்தப்பெருக்கு ஆறுபோல் சென்று கடலில் வீழ்ந்தது. அதனால் அவர்கள் கைக்கொண்டிருந்த நீண்டபெரிய கொடிகள் தளர்ந்து இரத்தக்கடலில் வீழ்ந்தன. நீண்ட, பெரிய மேகங்கள், ஆழ்ந்த கடலில் படிந்து தோன்றுவது போல் தோற்றமளித்தது.

நீண்ட பெரிய கொடிகளுக்கு நீண்ட பெரிய மேகங்கள் உவமை. நெடுங்கொடிக்கு நெடுமாமுகில் உவமை. மழைபெய்தது; அது ஆறாய்ப் பெருகியது; அது கடலில் சென்று கலந்தது என்று தொடர்ச்சியான உவமை கூறிய நயம் நோக்குக. மழை-அம்புகள்; குருதிப்புனல்-ஆறு; அரக்கர்படை-கடல்.

36. மின் ஆர்கணை தாள்அற வீச, விழுந்து,
அன்னார் உதிரத்துள் அழுந்துதலால்,
ஒன்னார் முழு வெண்குடை ஒத்தனவால்,
செந்நாகம் விழுங்கிய திங்களினை. (9052)

(ஒன்னார்-பகைவர்கள்/அரக்கர்கள்; மின்-ஒளி; ஆர்-மிக்க; தாள்-காம்பு; திங்கள்-சந்திரன்; செந்நாகம்-கேது; வீசுதல்-பாய்தல்)

இலக்குவன் செலுத்துகின்ற ஒளிமிக்க அம்புகள் பகைவர்களது முழுமையானவெண்கொற்றக்குடையின்காம்புகள்அறுபடுமாறு செய்ய, அதனால் அந்த வெண்மையான குடைகள் ஒடிந்து அரக்கர்களின் இரத்த வெள்ளத்தில் அழுந்தப் படிந்ததனால் செந்நிறம் ஆகிப்போனது. இது செந்நிறமுடைய பாம்பாகிய கேது, வெண்மைநிறம்`வாய்ந்த சந்திரனை விழுங்கியதுபோலத் தோற்றமளித்தது.

'தாள்' என்பது காம்பு என்ற பொருளில் வெண் கொற்றக்குடையின் பிடியைக் குறிக்கும். இராகு என்னும் பாம்பு கருநிறமானது என்றும், கேது என்னும் பாம்பு செந்நிறமானது என்றும் கந்தபுராணம் கூறுகிறது.

Koviloor Digital Library

வெண்மை நிறமுடைய வெண்கொற்றக்குடை, வெள்ளிய நிறமுடைய சந்திரனுக்கும், அரக்கர்களின் இரத்த வெள்ளம், செந்நிறமுடைய கேது என்ற பாம்பிற்கும் உவமை. கேது-செந்நிறம்-சந்திரன்-சந்திரகிரகணம்-பௌர்ணமி; இராகு-கருநிறம்-சூரியன்-சூரியகிரகணம்-அமாவாசை. முன்பாடலில் வெண்கொற்றக்கொடி தடுமாறி வீழ்ந்தது பற்றிக்கூறிய கவிஞன், இந்தப்பாடலில் வெண்கொற்றக்குடை காம்பறுபட்டு வீழ்ந்தது பற்றிக் கூறுவதை நோக்குக.

37. கொடு நீள்கரி, கையொடு தாள் குறைய,
படு நீள் குருதிப் படர்கின்றனவால்;
அடு நீள்உயிர் இன்மையின் ஆழ்கிலவால்,
நெடு நீரின் இடங்கர் நிகர்த்தனவால். (9053)

(குறைதல்-அற்றுப்போதல்; படுதல்-உண்டாகுதல்; படர்தல்-செல்லுதல்; அடுதல்-கொல்லுதல்; நெடுநீர்-கடல்; இடங்கர்-முதலை)

இலக்குவன் செலுத்திய அம்புகளால், கொடிய, நீண்ட கைகளை யுடைய உயர்ந்த யானைகள், தம் துதிக்கையொடு கால்களும், அறுபட்டுப் போயின. எனவே அவற்றால் இரத்தப் பெருக்கு உண்டாகி ஆறென ஓடிற்று; இப்பொழுது அவைகளுக்குப் பகைவரைக் கொல்ல வேண்டுவ தாகிய உயிர் இல்லாமையால், அந்த இரத்த வெள்ளத்தில் முழுகிப் போகாமல் மிதந்து சென்றன. இது நீண்ட நீர்ப்பரப்பையுடைய கடலில் முதலை நீந்திச் செல்வதைப் போலத் தோற்றமளித்தது.

உயிரற்ற பொருள்கள், நீரில் மிதக்கும் என்பது நாம் அறிந்ததே. அதுபோல யானையும் இலக்குவன் செலுத்திய அம்புகளால் கையும், கால்களும், உயிரும் இழந்தன; எனவே இரத்தக்கடல் நீரில் முழுகாமல் மிதந்து சென்றன என்பதாம். இரத்தக்கடலில் மிதந்து செல்லும் யானைகளுக்கு நீர்க்கடலில் மிதந்து செல்லும் முதலைகள் உவமை. 'இடங்கர்' என்ற இடத்தில் 'வங்கம்' என்று கொண்டு, மரக்கலம்/கப்பல் என்று பொருள்கொள்ளுவதுண்டு. இங்கே ஒரு அருமையான செய்திக்குறிப்பு. இடங்கர் என்பது நீரில் வாழும் அறுவகைச் சாதியுள் ஒருவகை. அவை முதலை, இடங்கர், கராம், வரால், வாளை, சுறா எனப்படும். ''நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய'' என்பது தொல்காப்பியம். இவற்றுள் முதல் மூன்றும் முதலையின் வகையாகவும், கடைசி மூன்றும் மீனின் வகையாகவும் கூறுவதுண்டு.

38. கரியுண்ட களத்திடை உற்றன, கார்
நரிஉண்டி உகப்பன நட்டனவால்;
இரியுண்டவர் இன்னியம் இட்டிடலால்,
மரியுண்ட உடற் பொறை மானினவால். (9054)

Koviloor Digital Library

(உண்ணுதல்-தன்னகப்படுத்துதல்; உறுதல்-புகுதல்; கார்-கரிய; உண்டி-உணவு; நட்டன-தங்கின; நட்டல்-நிலையாய்த் தங்குதல்; இரியுண்டது-நிலைகெட்டு ஓடியது; இயம்-வாத்தியம்/இசைக்கருவி/பறை; மரிதல்-இறத்தல்; மானுதல்-ஒத்தல்; உடற்பொறை-உடம்பு; இடுதல்-விட்டுச்செல்லுதல்)

யானைகள் நிறைந்திருந்த போர்க்களத்தின் நடுவில், காட்டில் வாழும் கரிய, நரிகள் உணவை விரும்பி உண்ணுவதற்காக அங்கேயே நிலைத்துத் தங்கலாயின; புறமுதுகு காட்டி நிலைகெட்டு ஓடும் அரக்கவீரர்கள் போட்டுவிட்டுச் சென்ற போர்க்கருவியான இனிமை மிகுந்த பறைகள், மடிந்து கிடக்கின்ற அரக்கர்களின் பாரமாகிய உடம்பினை ஒத்துத் தோன்றின.

தோல்வியுற்று, நிலைகெட்டு ஓடிய அரக்கர்கள் விட்டுச்சென்ற போர்ப்பறைகளும் அரக்கர்களின் உடம்புபோல் தோற்றமளித்ததால், காட்டில்வாழும் நரிக்கூட்டங்கள் அவற்றையும் உண்பதற்காக அந்தப் போர்க்களத்திலேயே நிலையாகத் தங்கலாயின என்பதாம்.

39. வாயில் கனல் வெங்கடு வாளி இனம்
பாய, பருமக் குலம் வேவனவால்;
வேயுற்ற நெடுங்கிரி மீ வெயிலாம்
தீ உற்றன ஒத்த, சினக் கரியே. (9055)

(வாய்-முனை; கடு-நஞ்சு/விஷம்; இனம்-தொகுதி; பருமம்-கழுத்துமெத்தை/அம்பாரி; வேதல்-வெந்துபோதல்/எரிந்துபோதல்; வேய்- மூங்கில்; மீ-மேலே; வெயில்-வெப்பம்)

இலக்குவன் செலுத்திய அம்புகளின் தொகுதிகளின் நுனியில் நெருப்பும், கொடிய நஞ்சும் கொண்டிருந்ததால் அவை சினம் மிகுந்த யானைகளின்மேல் தைக்கும்போது அவற்றின் மேலிருக்கும் அம்பாரி என்ற கழுத்து மெத்தைகளின் தொகுதிகள் முழுதும் வெந்து கரிந்து போயின; இது மூங்கில் மரங்கள் நிறைந்த பெரிய மலையின்மீது வெப்பம் மிகுந்த நெருப்புப் பற்றி எரிவதுபோலத் தோற்றம் அளித்தது.

'வாயில் கனல் வெங்கடுவாளி' என்பதை அக்னி அஸ்திரம் என்று கூறுதலும் பொருந்தும். இலக்குவன் செலுத்திய அம்பினால் எரிந்துபோன அம்பாரி முதலியவற்றுக்கு, வெப்பம் மிகுந்த நெருப்பால் மூங்கில்காடு பற்றி எரிவது உவமை எனக்கொள்க. பருமம் என்பது யானையின் கழுத்தின்மேல் முதுகின்மேல் இடப்பெற்றிருக்கும் மெத்தை, அல்லது அலங்கார விரிப்பு அல்லது போர்வை என்றும் பொருள்தரும்.

Koviloor Digital Library

40. அலை வேலை அரக்கரை, எண்கின் உகிர்,
தலைமேல் முடியைத் தரை தள்ளுதலால்,
மலை மேல் உயர்புற்றினை, வள் உகிரால்.
நிலை பேர, மறிப்ப நிகர்த்தனவால். (9056)

(வேலை-கடல்; எண்கு-கரடிகள்; உகிர்-நகம்; மறித்தல்-பெயர்த்துத் தள்ளுதல்)

அலைகளையுடைய கடலைப்போல விரிந்து பரந்த அரக்கசேனையின் வீரர்களைச் சாம்பவன் தலைமையில் வந்த கரடிப்படைகள், தம் கை நகங்களால் அரக்கர்களின் மணிமுடி தரித்த தலைகளைத் தரையின்மீது தள்ளினார்கள்; இது உயர்ந்த மலைமேல் இருக்கும் கரையான் புற்றுக்களை கரடிகள் தம் வலிய நகங்களால், நிலை குலையும்படி பெயர்த்துத் தள்ளுதலை ஒத்திருந்தது.

'அலைவேலை அரக்கர்' என்பது அரக்கர் சேனையின் பெருக்கத்தைக் குறித்தது. கரடிப்படையும் போர்செய்தது என்பது குறிக்கப்படுகிறது. அரக்கரின் மணிமுடி நிறத்தால் கரையான்புற்றுக்குஉவமை.

41. மா வாளிகள் மா மழைபோல் வரலால்,
மா ஆளிகள் போர்தெறு மா மறவோர்,
மா ஆளிகள் வன் தலையின் தலை வாம்
மா ஆளிகளோடு மறிந்தனரால். (9057)

(மா-பெரிய/பெருமை; ஆளிகள்-சிங்கங்கள்; தெறுதல்-கொல்லுதல்; மறவோர்-அரக்கவீரர்கள்; மா-விலங்கு; ஆளிகள்-ஆளுபவர்கள்; தலை-இடம்; ஆளிகள்-வண்டுகள்; மா-கருணையுமாம்; மறிதல்-இறந்து படுதல்)

இலக்குவன் செலுத்திய பெருமைமிக்க பெரிய அம்புகள் பெருமழை போல் மிகுதியாகப் போர்க்களத்தில் வந்து பாய்வதால், பெரிய சிங்கங் களையே கொல்லும் ஆற்றலும் வலிமையும் பெற்ற பெருமைசான்ற அரக்கவீரர்களும், சிறந்த விலங்குகளாகிய யானை, குதிரை, முதலிய வற்றை நடத்திச்செல்லும் போர்வீரர்களும் தமது வலியதலையினிடத்தில் சூட்டப்பெற்றிருக்கும் மலர்மாலையில் ரீங்காரம் இடும் கரிய வண்டின் கூட்டங்களோடு இறந்துபட்டனர்.

'மா வாளி' என்ற சொல் நான்கு அடிகளிலும் வந்து வேறுவேறு பொருள்களைத் தருவதால் இப்பாடல் யமக அல்லது மடக்கு என்ற சொல்லணியின் பாற்படும். முதலடியில் 'மாவாளி' என்றது பெருமைமிக்க இலக்குவனது அம்பு என்ற பொருளையும், இரண்டாவது அடியில் 'மாஆளி' என்பது பெரிய சிங்கங்கள்-ஆளிகள் என்ற பொருளையும், மூன்றாம் அடியில் 'மா ஆளிகள்' என்பது சிறந்த பெரிய

Koviloor Digital Library

விலங்குகளான யானை, குதிரை என்பனவற்றை ஆளும் வல்லமை படைத்த அரக்கவீரர்கள் என்ற பொருளையும், நான்காம் அடியில் 'மா ஆளிகள்' என்பது கரிய வண்டுகள் என்ற பொருளையும் தரும். நான்காம் அடியில் அளிகள் என்பது நீண்டு ஆளிகள் என வந்தது. நீட்டல் விகாரம். அளிகள் என்பது வண்டுகளைக் குறிக்கும். 'மா' என்ற சொல்லும், 'ஆளிகள்' என்ற சொல்லும் பல பொருள்களில் வந்துள்ளமை காண்க. 'ஆளி' என்பது யாளி என்று சிங்கம் போன்ற ஒரு விலங்கைக் குறிக்கும். இதனை அத்தியானை என்றும் கூறுவர்.

42. அங்கம் கிழியத் துணி பட்டதனால்,
அங்கு அங்கு இழிகுற்ற அமர்த்தலைவர்,
அம் கங்குஇழி செம்புனல் பம்ப, அலைந்து,
அம் கங்கள் நிரம்பி அலம்பியதால். (9058)

(இழிகுறுதல்-தோல்வியடைதல்; துணிபடுதல்-அறுத்தெறிதல்; அங்கம்-உடம்பின் பாகங்கள்; செம்புனல்-இரத்தம்/குருதி; பம்புதல்-மேலெழுதல்; அம்-அழகிய; கங்கு-பருந்து; அங்கங்கள்-உடலுறுப் புக்கள்; அலம்புதல்-கழுவுதல்; இழிதல்-வீழ்தல்/ஒழுகுதல்)

இலக்குவன் செலுத்திய அம்பினால் ஆங்காங்கே படைத்தலைவர்கள் தோல்வியுற்றுத் தம் உடலுறுப்புக்கள் பிளக்கப்பட்டு, அறுக்கப்பட்டுத் தரையில் விழுந்ததனால் அவர்கள் உடலினின்றும் இரத்தம் வெளிப்பட்டு வெள்ளமெனப் பெருக்கெடுத்து ஓடியது. அழகிய பருந்துகள் அந்த இரத்தவெள்ளத்தில் அலைந்து திரிந்து, தம் உடல் உறுப்புக்கள் முழுவதையும், அதிலேயே நன்கு கழுவிக்கொண்டன.

இந்தப் பாடலிலும் யமகம் என்னும் சொல்லணி அமைந்திருத்தலைக் காண்க. 'அங்கங்கிழி' என்ற சொல் நான்கு அடிகளிலும் வந்து, நான்கு வெவ்வேறு பொருள்களைத் தருவதால் இப்பாடல் யமகம் அல்லது மடக்கு என்னும் சொல்லணியின் பாற்படும். முதல் அடியில் 'அங்கம்கிழி' என்பது உடலுறுப்புக்கள்கிழிக்கப்பட்டு என்ற பொருளையும், இரண்டாம் அடியில் 'அங்குஅங்கு இழி' என்பது ஆங்காங்கே தோல்வியுற்று நிற்கின்ற அரக்கர்கள் என்ற பொருளையும், மூன்றாவது அடியில் 'அம்கங்கு' என்பது அழகிய பருந்து என்ற பொருளையும், நான்காம் அடியில் 'அங்கங்கள்' என்பது உடலுறுப்புக்கள் அவயவங்கள் என்ற பொருளையும் தரும் என்க. போர்வீரர்களின் குருதிப்பெருக்கில் பருந்துகள் தலை முழுகின என்பதாம்.

43. வன் தானையை, வார்கணை மாரியினால்,
முன், தாதை ஒரு தேர்கொடு, மொய் பல தேர்ப்,
பின்றா எதிர் தானவர் பேரணியைக்
கொன்றான் என, எய்து குறைத்தனனால். (9059)

Koviloor Digital Library

(தாதை-தந்தை/தயரதன்; கொடு-கொண்டு; மொய்-நெருங்கிய; பின்றா-பின்வாங்காது; தானவர்-அசுரர்; அணி-சேனை/படை; தானை-சேனை; வார்-நீண்ட; மாரி-மழை; குறைத்தல்-அழித்தல்)

முன்னொரு காலத்தில் தன் தந்தை தசரதன் தனது ஒரே ஒப்பற்ற தேரைக்கொண்டு செலுத்தித் தன்னைச் சூழ்ந்து நெருங்கியிருந்த பல தேர்களையும், போருக்குப் பின்வாங்காது எதிர்த்து நின்று போரிட்ட அசுரர்களின் பெரும் சேனையையும் கொன்றொழித்ததைப்போல, இப்போது இலக்குவனும் தான் ஒருவனாகவே தன்னை எதிர்த்துப் போர்புரிய வந்திருக்கும் வலிய இந்திரசித்தின் அரக்கர் சேனையைத் தன்னுடைய நீண்ட அம்புமழையினைச் செலுத்தி அழித்தொழித்தான்.

முன்பு சம்பராசுரப்போரில் தசரதன் பத்துத் திசைகளிலிருந்தும் வந்த அசுரர் சேனையைத் தன் ஒரு தேரைக் கொண்டே அழித்தொழித்ததை நாம் கண்டு வந்திருக்கிறோம். அதுவே இங்கு பேசப்படுகிறது. காப்பியத்தில் முன்னர் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியையே பின்னர் நிகழும் ஒரு நிகழ்ச்சிக்கு உவமை கூறுவது கம்பனின் காப்பியப்போக்கு. 'வெஞ்சினத்து அவுணர் தேர்பத்தும் வென்றுளேன்' என்பது அயோத்தியா காண்டத்தில் தசரதன் கூற்று. ''பொருதேர்கள் ஈர்ஐந்தின் ஈர் ஐவர் போர், பண்டு, ஒரு தேரால் வென்ற உரவோன்'' என்பது குலோத்துங்கன் உலா. ''ஒரு தேரால் ஐயிரண்டு தேரோட்டி, உம்பர் வருதேரால் வான் பகையை மாய்த்தோன்'' என்பது இராசராசன் உலா. மைந்தனது போர்த்திறமைக்குத் தந்தையின் போர்த்திறமையையே உவமித்த நயம் நோக்குக. 'தந்தையர் ஒப்பர் மக்கள்' என்பது தொல்காப்பியம்.

44. இந்திரசித்தின் நிகும்பலை வேள்வி சிதைதல்

மலைகளும், மழைகளும், வான மீன்களும்,
அலைய வெங்கால் பொர, அழிந்தவாம் என,
உலை கொள் வெங்கனல் பொதி ஓமம் உற்றவால்,
தலைகளும், உடல்களும் சரமும் தாவுவ. (9060)

(பொருதல்-தாக்குதல்; மழை-மேகம்; சரம்-அம்பு; உலை-உலைக் களம்; ஓமம்-ஓமகுண்டம்; உற்றது-வீழ்ந்தது; கால்-காற்று; அலைதல்-நிலைபெயர்தல்; தாவுவ-பாய்கின்ற/தாக்குகின்ற)

ஊழிக்காலத்தில் வீசுகின்ற கடுங்காற்றுத் தாக்குவதால் நிலைபெற்ற மலைகளும், மேகங்களும், வானில் உள்ள, நட்சத்திரங்களும் தத்தம் நிலையினின்றும் பெயர்ந்து போகும் அல்லவா? அதுபோல, இலக்குவன் செலுத்திய பாயும் இயல்புடைய அம்புகள் தாக்கப்பட்டதால், அரக்கர்களுடைய தலைகளும், உடல்களும் அம்புகளுடன் நிகும்பலையில் உள்ள உலைக்களத்தின் இயல்புடைய கொடிய நெருப்பு நிறைந்த யாக குண்டங்களில் விழுந்து அழிந்தன.

Koviloor Digital Library

'கனல்பொதி' என்பது நெருப்பின் மிகுதியைக் குறித்தது. இலக்குவன் அம்புகளால் அறுபட்ட அரக்கர்களின் தலைகளுக்கும், உடல்களுக்கும் ஊழிக்காலப் பெருங்காற்றால் நிலைபெயரும் மலைகளும், மேகங்களும், நட்சத்திரங்களும் உவமை.

45. வாரணம் அனையவன் துணிப்ப, வான்படர்,
தார் அணி முடிப்பெருந் தலைகள் தாக்கலால்,
ஆரண மந்திரம் அமைய ஓதிய,
பூரண மணிக்குடம் உடைந்து போயதால். (9061)

(வாரணம்-யானை; வான்-ஆகாயம்; தார்-மாலை; ஆரணம்-வேதம்; அமைய-பொருந்த; துணித்தல்-துண்டித்தல்)

யானையைப் போன்ற ஆற்றல்மிக்கவனான இலக்குவன் செலுத்திய அம்புகள் சென்று தாக்கியதால், வானத்தில் சஞ்சரிக்கின்ற, மலர்மாலையணிந்த, கிரீடங்கள் பொருந்திய அரக்கர்களின் தலைகள் சென்று தாக்குவதால், வேதமந்திரங்கள் ஓதி நிகும்பலையில் உள்ள வேதிகையில் அமைக்கப்பெற்ற புனித நீர்நிறைந்த, மணிகள் பதிக்கப்பெற்ற பூரணகும்பங்கள் உடைந்துபோயின.

46. தாறு கொள் மதகரி சுமந்து, தாமரை
சீறிய முகத்தலை உருட்டி, செந்நிறத்து
ஊறுகள் சொரிந்த பேர் உதிரத்து ஓங்கு அலை
யாறுகள் எழுங்கனல் அவியச் சென்றவால். (9062)

(ஊறு-புண்கள்; தாறு-தாற்றுக்கோல்/அங்குசம்; கொள்ளுதல்-செலுத்தப்படுதல்; சீறுதல்-சினத்தல்)

தாற்றுக்கோல் என்னும் அங்குசத்தால் செலுத்தப்பட்ட மதச்செருக்குக் கொண்ட யானைகள் அரக்கர் தலைகளை சுமந்துகொண்டு செல்லும், செந்தாமரை மலரே சிவக்கும் அளவுக்குச் சிவந்த கண்களையுடைய முகம் கொண்ட அரக்கர் தலைகளை உருட்டிக்கொண்டு, அவர்கள் உடலின் புண்களினின்றும் பெருகிய உயர்ந்த அலைகளையுடைய ஆறு போன்ற இரத்தப்பெருக்கு, இந்திரசித்து இயற்றுகின்ற நிகும்பலையில் ஓமகுண்டத்தில் ஓங்கி எழுகின்ற நெருப்பினை அவியச்செய்தது.

இலக்குவன் செலுத்திய அம்புகளால் தாக்கப்பட்ட யானைகளின்மீது அமர்ந்திருந்த அரக்க வீரர்கள் தங்கள் உடல்களில் புண்கள் ஏற்பட, அவற்றினின்றும் பெருகிய இரத்த ஆறு பாய்ந்து சென்று இந்திரசித்தன் இயற்றுகின்ற ஓமத்தீயை அவித்துச்சென்றது என்பதாம். ''தாமரை சீறிய முகம்'' என்ற சொல்லாட்சி நோக்குக. அழகற்ற அரக்கர் முகம் என்ற எதிர்மறைப் பொருளைத்தரும்.

Koviloor Digital Library

47. தெரிகணை விசும்பிடைச் சுமந்து, செம்மயிர்
வரிகழல் அரக்கர்தம் தடக்கை வாளொடும்
உரும் என வீழ்தலின் அனலுக்கு ஒக்கிய
எருமைகள் மறிந்தன; மறியும் ஈர்ந்தவால். (9063)

(தெரிதல்-ஆராய்ந்து தெரிந்தெடுத்தல்; உரும்-இடி; அனலி-அக்னி தேவன்; மறிதல்-இறந்துபோதல்; மறி-ஆடு/ஆட்டுக்குட்டி; ஈர்தல்-பிளத்தல்; ஒக்குதல்-உரிமைசெய்து வைத்தல்/தனியாக ஒதுக்கி வைத்தல்; வரி-கோடு/இழுத்துக் கட்டப்பட்ட)

இலக்குவனால் ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வானில் செலுத்திய அம்புகள், அங்கே ஆகாயத்தில் நின்றிருந்த செம்பட்டை முடியினை உடையவர்களும், இழுத்துக் கட்டப்பட்ட, கோடுகள் நிறைந்த வீரக்கழல் களைக் கட்டிக்கொண்டிருப்ப வருமான அரக்கர்களின் நீண்ட, பெரிய கைகளில் கொண்டிருந்த வாட்படையையும் தாக்கியதால், அவ்வரக் கர்கள் தம் கையில் பிடித்த வாட்படையுடன் இடிபோலத் தரையில் விழும்வழியில், இந்திரசித்து வேள்விக்குப் பலி கொடுப்பதற்கென்று உரிமை செய்து தனியாக நிறுத்தி வைத்திருந்த எருமைகளை வெட்டிப் போட்டன. அங்கே பலி கொடுக்க நின்றிருந்த ஆட்டுக் குட்டிகளும் இரண்டாகப் பிளவுபட்டு இறந்தொழிந்தன.

இலக்குவன் செலுத்திய அம்புகள் வானிலிருந்த அரக்கர்களைத் தாக்கியது. அரக்கர்கள் தம் கைகளில் வாட்படையைக் கொண்டிருந்தனர்; அவர்கள் அங்கிருந்து கீழே விழுந்ததனால் எருமைகளும், ஆட்டுக் குட்டிகளும் அவர்களுடைய வாட்படையினாலேயே வெட்டுப்பட்டு இறந்துபோயின என்பதாம்.

''ஒக்கிய'' என்ற சொல் நமக்குப் புதிது. உரிமை செய்து வைக்கப்பட்டது என்ற பொருளும் நமக்குப் புதிது. மறி என்பது பொதுவாக இளமையான விலங்குகளைக் குறிக்கும். இங்கே ஆட்டுக்குட்டியைக் குறித்து நின்றது. கம்பன் காலத்திலேயே ஆட்டுக்குட்டிகளைக் கடவுளுக்குப் பலியாகக் கொடுக்கும் சடங்கு இருந்திருக்கிறது என்பது தெரியவருகிறது.

48. அம் கடம் கழிந்த பேர்அருவிக் குன்றின் நின்று
அம் கடம் கிழிந்திலர், அழிந்த ஆடவர்,
அங்கு அடங்கலும், படர் குருதி ஆழியின்
அங்கு அடங்கினர், தொடர்பகழி அஞ்சினார். (9064)

(அம்-அழகிய; கடம்-கன்னம்; கழிதல்-வெளிப்படுதல்; குன்று-மலை/யானை; கடம்-கடன்/கடமை; கழிதல்-நிறைவேற்றுதல்; அழிதல்-தோல்வியுறுதல்; அடங்கலும்-முழுவதும்; படர்தல்-பரவி யிருத்தல்; ஆழி-கடல்; ஆடவர்-அரக்கவீரர்கள்)

Koviloor Digital Library

அரக்க வீரர்கள் தமக்கு இடப்பட்ட அழகிய கடமையாகிய பகைவர்களாகிய இராமஇலக்குவரை கொன்று அழிப்பது என்ற செயலை செய்துமுடிக்க முடியாதபடி, இலக்குவன் செலுத்துகின்ற தொடர்ச்சியான அம்புகளுக்கு ஆட்பட்டு அந்தப் போர்க்களத்தில் முழுவதும் பெருகிப் பரவியிருக்கின்ற இரத்தக் கடலுள் அழுந்தி அடங்கிப் போனார்கள்.

அரக்கர்களுக்கு நியமிக்கப்பட்ட கடமை, பகைவர்களாகிய இராம இலக்குவரைக் கொன்றழிப்பதாகும். அதை நிறைவேற்ற முடியாமல் அவர்கள் இரத்தக் கடலுள் அமிழ்ந்து அடங்கிப் போயினர் என்பதாம். 'அம் கடம்' என்ற சொல் நான்கு அடிகளிலும் வந்து வெவ்வேறு பொருள்களைத் தருவதனால் இச்செய்யுள் யமகம் மடக்கு என்னும் சொல்லணியின் பாற்படும். முதல் அடியில் 'அம்கடம்' என்பது அழகிய கன்னம் என்ற பொருளையும், இரண்டாம் அடியில் 'அம்கடம்' என்பது அரக்கர்களுக்கு உள்ள அழகிய கடமை என்ற பொருளையும், மூன்றாம் அடியில் 'அங்கு அடங்கலும்' என்பது போர்க்களம் முழுவதும் என்ற பொருளையும், நான்காம் அடியில் 'அங்கு அடங்கினர்' என்பது போர்க்களத்தில் நிறைந்திருந்த இரத்தக்கடலில் அழுந்திப் போயினர் என்ற பொருளையும் தரும். கம்பனின் யமகப் பாடல்கள் எல்லாம் விசித்திரப் பாடல்கள். எளிதில் பொருள் புரிந்துகொள்ள முடியாத பாடல்களாகும்.

49. கால் தலத்தொடு துணிந்து அழிய, காய்கதிர்க்
கோல் தலைத்தலை உற, மறுக்கம் கூடினர்,
வேல் தலத்து ஊன்றினர், துளங்கு மெய்யினர்,
நாறு அலைக் குடலினர், பலரும் நண்ணினர். (9065)

(தலம்-தரை/நிலம்; காய்தல்-வெதுப்புதல்; கதிர்-சுடர்/ஒளி; கோல்-அம்புகள்; தலைத்தலை-மேன்மேலும்; மறுக்கம்-கலக்கம்; துளங்குதல்-நடுங்குதல்; நாறுதல்-தொங்குதல்/வெளிப்பட்டு நிற்றல்; மெய்-உடம்பு; குடர்-குடல்)

இலக்குவன் மேன்மேலும் தொடர்ந்து செலுத்திய வெப்பம் மிகுந்ததும், ஒளி வீசுவதுமான அம்புகள், அரக்க வீரர்களின் எல்லா இடங்களிலும் சென்று தைத்ததால், அவர்கள் கால்கள் நிலத்தில் அறுபட்டு விழுந்தன. எனவே அவர்கள் மனக்கலக்கம் அடைந்தவராய், தங்கள் கையில் கொண்டிருக்கும் வேற்படையைத் தரையில் ஊன்றுகோலாக ஊன்றிக் கொண்டிருப்பவராய், உடல் சற்று நடுக்கமுற்றவராய், தங்கள் உடம்பிலிருந்த குடல் உடலினின்றும் வெளிப்பட்டுத் தொங்கு தலையுடையவராய் எண்ணற்ற வீரர்கள் போர்க்களத்தை வந்தடைந்தார்கள்.

இலக்குவன் ஏவிய அம்புகளால் அரக்கவீரர்களின் கால்கள் துண்டிக்கப் பட்டன. அவர்கள் குடல் உடம்பினின்றும் பிதுங்கி வெளியே தொங்கியது. அவர்கள் அஞ்சியதால் உடம்பு நடுக்கமுற்றது. எனவே தங்களது வேற்

Koviloor Digital Library

படையை ஊன்று கோலாகக் கொண்டு போர்க்களத்திலேயே நின்றிருந் தார்கள் என்பதாம்.

50. பொங்கு உடல் துணிந்த தம் புதல்வர்ப் போக்கிலார்,
தொங்கு உடல் தோள்மிசை இருந்து சோர்வுற,
அங்கு உடல் தம்பியைத் தழுவி அண்மினார்,
தம் குடர் முதுகிடைச் சொரியத் தள்ளுவார். (9066)

(இடை-வழி; பொங்குதல்-வெகுண்டெழுதல்; போக்கிலார்-இயலா தவர்/ஆற்றாதவர்; உடல்-உடற்றுதல்/போர்செய்தல்; அண்முதல்-நெருங்குதல்)

மிக்கு வெகுண்டெழுந்து போர் செய்ததால் இலக்குவனால் செலுத்தப் பட்ட அம்புகளால் உடல் துண்டிக்கப்பட்ட தம் புதல்வர்களை அங்கேயே போட்டுவிட்டுப் போக மனம் இல்லாதவர்களான தந்தைமார்கள், தம் புதல்வர்களின் உடல்களைத் தங்கள் தோள்களின்மீது சுமந்துகொண்டு செல்ல, அதனால் அவர்களும் மிக்கக் களைப்பெய்த, அந்தப் போர்க் களத்தில் தம்முடைய குடலையும் முதுகுப்பக்கமாக ஒரு கையினால் தள்ளிக்கொண்டு, மீண்டும் போர் செய்வதற்காக, போர்புரியும் இயல் புடைய இராமபிரானுக்குத் தம்பியாகிய இலக்குவனை நெருங்கிச் சென்றார்கள்.

போர்க்களத்திற்குத் தந்தையும் மகனுமாய் வந்தவர்களின் போர்த் திறமும், பிள்ளைப் பாசமும் பேசப்படுகிறது.

51. மூடிய நெய்யொடு நறவம் முற்றிய
சாடிகள், பொரியொடு தகர்ந்து தள்ளுற,
கோடிகள் பலபடும் குழாம் குழாங்களாய்
ஆடின, அறுகுறை அறுக்கும் ஆக்கைகள். (9067)

(முற்றுதல்-நிறைதல்; நறவம்-கள்/தேன்; தகர்தல்-சிதைவுறுதல்; அறுகுறை-தலையறுக்கப்பட்ட உடல்; குழாம்-கூட்டம்; சாடிகள்-கலன்கள்/பாத்திரங்கள்/குடங்கள்; தள்ளுறுதல்-விழுதல்; குறைஆக்கை-கவந்தங்கள்)

நிகும்பலை வேள்வியின் வேதிகையில் வைக்கப்பட்டிருந்த நெய்யும், தேனும், கள்ளும் நிறைத்து மூடப்பட்டிருந்த சாடிகள்-குடங்கள், பொரி வைத்திருந்த பாத்திரங்கள் முதலானவற்றை, இலக்குவன் செலுத்திய அம்பினால் அறுபட்ட அரக்கர்கள் கைகளிலிருந்த வாட்படைகள் சிதைத்து அழித்தன. அரக்கர்களது தலையற்ற முண்டங்களாகிய கவந்தங்கள் கோடிக்கணக்கானவை, பலப்பல கூட்டங்களாக நின்று போர்க்களத்தில் ஆடின.

Koviloor Digital Library

முன்பாடலில் அந்த வாட்படைகள் எருமைகளையும், ஆட்டுக் குட்டிகளையும், சிதைத்தன என்று கூறப்பட்டது. இப்பாடலில் நெய்க் குடம், தேன்குடம், கள் நிறைந்த குடம், பொரிவைத்திருந்த பாத்திரங்கள் முதலானவற்றையும் சிதைத்து அழித்தன என்று பேசப்படுகிறது.

52. கால் என, கடு என, கலிங்கக் கம்மியர்
நூல் என, உடற்பொறை தொடர்ந்த நோய் என,
பால் உறு பிரை என, கலந்து, பல்முறை
வேல் உறு சேனையைத் துணித்து வீழ்த்தினான். (9068)

(கால்-காற்று; கடு-நஞ்சு/விஷம்; கலிங்கம்-ஆடை/புடவை; கம்மியர்-நெசவுத்தொழில் செய்வோர்/காருகர்/கைக்கோளர்; உடல் பொறை-உடற்சுமை/பாரம்; தொடர்தல்-பிணித்தல்; கலத்தல்-உட் புகுதல்; துணித்தல்-வெட்டுதல்; பிரை-மோர்த்துளி)

இலக்குவன் அரக்கர்சேனையுள் புகுந்து, புயற்காற்றுப் போலவும், கொடிய நஞ்சினைப் போலவும், ஆடைநெய்யும் நெசவுத்தொழில் செய்வோர் கையில் உள்ள பாவிடை ஊடிச்செல்லும் நூல்போலவும், பாரமாகிய உடலை விடாது பற்றித்தொடரும் நோய் போலவும், பாலில் ஊற்றப்பட்ட மோர்த்துளி போலவும், உள் சென்று கூடி, வேலேந்திப் போர்புரிகின்ற அரக்கர் சேனையை வெட்டி வீழ்த்தினான்.

இலக்குவன் விரைந்து சென்று அரக்கர் படையை அழித்த விதம் பேசப்படுகிறது. உயிர்களைப் பறிக்கின்ற புயற்காற்றும், உயிரினைக் கொல்லுகின்ற கொடிய நஞ்சும், இலக்குவன் அரக்கர் உயிரைப் பறித்தமைக்கு உவமைகள்; அவன் சேனைக்குள் புகுந்து, தான் ஒரே இடத்தில்இருந்துகொண்டு சேனைமுழுவதையும்அழித்ததற்கு ''கலங்கக் கம்மியர் நூலும் உடற்பொறை தொடர்ந்த நோயும், பாலுறு பிரையும்'' உவமைகள். எவ்வாறு நெசவாளர்கள் ஒரே இடத்தில் இருந்துகொண்டு ஒரே நூலைக் கொடுத்துப் பின்னிப்பின்னி ஆடை நெய்கிறார்களோ, எவ்வாறு உடலில் ஓரிடத்தில் தோன்றிய நோய் உடம்பு பூராவும் சென்று நோயைப்பரப்புகிறதோ, எவ்வாறு ஒருசிறுதுளிமோர், பாத்திரத்தில்உள்ள பால் முழுவதையும் அதன் நிலையினின்றும் திரியச்செய்து மற்றொரு பொருளாக மாற்றுகிறதோ, அவ்வாறு இலக்குவன் படையினுட் புகுந்து அரக்கர்சேனையைத் துணித்து வீழ்த்தினான் என்பதாம்.

பொதுவாகக் கம்மியர் என்ற சொல்லுக்கு இதுவரை கருமான், தட்டான், இரும்புவேலை செய்பவர் என்றுதான் பொருள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இங்கே 'கலிங்கக் கம்மியர்' என்ற சொல்லுக்கு ஆடைநெய்யும் நெசவுத் தொழிலாளர்களைக் குறிப்பதை நோக்குக. இவர்களைக் 'காருகர்' என்றும் 'கைக்கோளர்' என்றும் கூறுவதுண்டு. காலும், கடுவும், நூலும் நோயும், பிரையும், சிறுஇடத்தில்

Koviloor Digital Library

சிறிய அளவில் புகுந்து, பேரிடத்தில் பெரிய அளவில் தாக்குதலை உண்டாக்கும் என்று உவமைமூலம் கூறிய கவிஞனின் கவித்திறம் நோக்குக.

53. இந்திரசித்து சேனையழிவை நோக்குதல்

கண்டனன், திசைதொறும் நோக்கி, கண்அகல்
மண்தலம், மறிகடல், அன்ன மாப்படை,
விண்டு எறி கால்பொர, மறிந்து வீற்றுறும்
தண்டலையாம் எனக் கிடந்த தன்மையே. (9069)

(கண்அகல்-இடம்அகன்ற; மண்தலம்-மண்ணுலகு; மறிதல்-அசைதல்/மடங்குதல்; மா-பெரிய; விண்டு-மாறுபட்டு/பகைத்து; எறிதல்-வீசுதல்; பொருதல்-மோதுதல்; மறிதல்-ஒடிதல்; வீற்றுறுதல்-பாளம் பாளமாக வெடித்துப்போதல்/சிதைதல்; தண்டலை-சோலை)

இடம் அகன்ற இந்த மண்ணுலகில் மடங்கிவிழும் அலைவீசும் கடல் போன்று விரிந்து பரந்த தன் பெருஞ்சேனை, கொடிய புயற்காற்று வீசித் தாக்கும் போது ஒடிந்து, பெயர்ந்து விழும் மரங்கள் நிறைந்த சோலையைப் போல், தரையெங்கும் மடிந்து வீழ்ந்துகிடந்த தன்மையை, இந்திரசித்து தன் கண்களால் எல்லாத் திசைகளிலும் உற்று நோக்கினான்.

போர்க்களத்தில் தான் கண்ட திசைகள்தோறும் தன் படைகள் அழிந்து வீழ்ந்து கிடப்பதை இந்திரசித்து தன் கண்களாற் கண்டான் என்பதாம். அதற்குப் பருத்தபுயல் காற்றால் ஒடிந்து விழுந்த மரங்கள் நிறைந்த சோலை உவமை.

54. மிடலின் வெங்கட கரிப் பிணத்தின் விண்தொடும்
திடலும், வெம்புரவியும், தேரும் சிந்திய
உடலும், வன் தலைகளும், உதிரத்து ஓங்கு அலைக்
கடலும் அல்லாது, இடை ஒன்றும் கண்டிலன். (9070)

(மிடல்-வலிமை; கடம்-மதச்செருக்கு; திடல்-மேடு/குவியல்)

மிக்க வலிமையுடையனவும், கொடிய மதச்செருக்குக் கொண்டனவுமான யானைகளின் பிணங்கள் விண்ணைத் தொடும் அளவு உயர்ந்து மேடாகிப் போயிருந்ததையும், வெவ்விய குதிரைகளும், தேர்ப்படைகளும், அரக்கவீரர்கள் சிதைக்கப் பெற்றதால் போர்க்களத்தில் கிடந்த அவர்களின் உடல்களையும், வலிய தலைகளையும் அங்கே பெருகி ஓடுகின்ற அலையெழுந்து ஆர்ப்பரிக்கின்ற இரத்தக் கடலையும் அன்றிப் போர்க்களத்தின் நடுவில் வெற்றிடமாக எதனையும் இந்திரசித்து பார்க்க முடியவில்லை.

Koviloor Digital Library

தன் சேனை முழுவதும் அழிந்து போனதைத்தான் அவன் கண்டானே யன்றி, உயிருள்ளனவும், இயக்கமுள்ளனவுமான எதையும் காணவில்லை என்பதாம்.

55. நூறுநூறு ஆயிர கோடி நோன்கழல்
மாறு இல்போர் அரக்கரை, ஒருவன் வாட்கணை
கூறுகூறு ஆக்கிய குவையும், சோரியின்
ஆறுமே அன்றி, ஓர் ஆக்கை கண்டிலன். (9071)

(நோன்-வலிய; வாள்-கூரிய; கூறு-துண்டம்; சோரி-இரத்தம்; மாறு-பகைமை; குவை-குவியல்; ஆக்கை-யாக்கை/உடல்)

அளவற்றவரும், வலிய வீரக்கழல் அணிந்தவரும், பகைமை கொண்டு போர்செய்பவருமான அரக்கவீரர்கள் அனைவரும், ஒப்பற்றவனான இலக்குவனது ஒளிபொருந்தியதும், கூர்மையானதுமான அம்புகளால் துண்டம் துண்டமாகச் சிதைக்கப்பட்டதனால் உண்டான பெரும் பிணக் குவியலையும், அவற்றால் விளைந்த இரத்த ஆற்றினையும்தான் இந்திர சித்து கண்டானேயன்றி, உயிருள்ள ஒரு உடம்பைக்கூட அவன் பார்க்கவில்லை.

''நூறு நூறாயிரகோடி'' என்பது அளவற்ற என்ற பொருளையே தரும். மிக எளியபாடல்.

56. நஞ்சினும் வெய்யவர் நடுங்கி, நா உலர்ந்து,
அஞ்சினர், சிலர்சிலர் அடைகின்றார்; சிலர்
வெஞ்சின வீரர்கள், மீண்டிலாதவர்,
துஞ்சினர், துணை இலர் எனத் துளங்கினார். (9072)

(வெய்யவர்-கொடியவர்; உலர்தல்-வறண்டுபோதல்; துளங்குதல்-நடுங்குதல்; துஞ்சுதல்-இறந்துபோதல்)

கொடிய நஞ்சைக் காட்டிலும் கொடியவர்களான சில அரக்கர்கள், இலக்குவனுடன் எதிர்த்துப் போர்செய்ய இயலாது, உடல் நடுக்கமுற்று, நாக்கு ஈரப்பசை வறண்டுபோய் அச்சம் கொண்டு இந்திரசித்து நின்றிருந்த இடம் சென்று அவனை அடைந்தார்கள். வேறுசில கொடிய சினம் கொண்ட வீரர்கள், போர்க்களத்திினின்றும் திரும்பி வர விரும்பாதவர் களாய்த் தமக்கு உடன் இருந்து உதவுபவர் ஒருவரும் இல்லையே என்று நடுக்கமுற்று அங்கேயே இறந்துபோனார்கள்.

முன்பாடலில் இறந்துபட்டவர்கள் போக இலக்குவன் அம்புக்கு உட்படாத எஞ்சியிருந்த மற்ற வீரர்களின் நிலை பேசப்படுகிறது.

Koviloor Digital Library

57. இந்திரசித்தன் துயருறுதல்

ஓம வெங்கனல் அவிந்து, உழைக் கலப்பையும்,
காமர் வண் தருப்பையும், பிறவும் கட்டுஅற,
வாம மந்திரத் தொழில் மறந்து, நந்துறு
தூம வெங்கனல் எனப் பொலிந்து தோன்றினான். (9073)

(காமர்-அழகிய; வண்-வளமைநிறைந்த; கட்டறுதல்-அழிந்து போதல் /நிலைகுலைதல்; நந்துதல்-வளர்தல்/அவிதல்; தூமம்-புகை; பொலிந்து-பொலிவிழந்து; உழை-பக்கம்/அருகில்; கலப்பை-உபகரணங்கள்)

வேள்விக்குண்டத்தில் எரிந்துகொண்டிருந்த வெம்மை மிகுந்த நெருப்பு அணைந்து போனது; அங்கிருந்த வேள்வி செய்தற்குரிய உபகரணங்களும், அவற்றை வைத்திருந்த பையும், அழகிய வளப்பம் பொருந்திய தருப்பையும், இன்னும் மற்ற பொருள்களும் நிலைகுலைந்து அழிந்துபோக, அதனைக் கண்ட இந்திரசித்தனும், அந்தணர்களும், பெருமைக்குரிய மந்திரங்கள் உச்சரிப்பதை மறந்துபோய், வளர்தல் உடைய புகையையுடைய கொடிய நெருப்புப்போல சினந்து, பொலி விழந்து காணப்பட்டனர்.

வேள்வி தடைப்பட்டுப் போனது கண்ட இந்திரசித்து மிக்க சினம் கொண்டவனாய்க் காணப்பட்டான் என்பதாம். இங்கே 'நந்துதல்' என்ற சொல் வளர்தல், தேய்தல் என்ற இரு பொருளையும் தரும். 'பெரியவர் கேண்மை பிறைபோல நந்தும்' என்பது நாலடியார். பொலிந்து என்ற உடன்பாட்டுச்சொல் பொலிவிழந்து என்னும் எதிர்மறைப்பொருளைத் தரும். 'தோன்றினான்' என்னும் தன்வினைச்சொல் காணப்பட்டான் என்ற பிறவினைப் பொருளைத்தரும். புகைபடிந்த வெம்மையுடைய வேள்வித்தீக்கு, பொலிவிழந்து காணப்பட்ட இந்திரசித்தன் உவமை.

58. வானரப்படை போர்க்களத்துள் புகுதல்

அக்கணத்து, அடுகளத்து, அப்பு மாரியால்,
உக்கவர் ஒழிதர, உயிர் உளோர் எலாம்,
தொக்கனர், அரக்கனைச் சூழ்ந்து சுற்றுற,
புக்கது கவிப்பெருஞ் சேனைப் போர்க்கடல். (9074)

(அடுகளம்-கொலைக்களம்; அப்புமாரி-அம்புமழை; உக்கவர்-இறந்தவர்; ஒழிதருதல்-தவிர்தல்; தொக்கல்-கூடுதல்; புக்கது-புகுந்தது)

அப்பொழுது அந்தப் போர்க்களத்தில் இலக்குவனால் செலுத்தப்பட்ட அம்புமழையால் உயிரிழந்தவர்கள் தவிர, உயிருடன் எஞ்சியிருந்தவர்கள் எல்லோரும் அரக்கனாகிய இந்திரசித்தனைச் சுற்றிச்சூழ்ந்து ஒன்றுகூடி

Koviloor Digital Library

நின்றனர். இச்சமயம் போர்செய்யும் இயல்புடைய கடல்போன்ற பெருஞ் சேனையாகிய வானரச்சேனை போர்க்களத்துள் புகுந்தது.

'அடுகளம்' என்பது பகைவரைக் கொன்றழிக்கின்ற போர்க்களத்தைக் குறிக்கும். அடுதல்-கொல்லுதல்; அம்பு அப்பாக வலித்தது; போர்க்கடல் என்பது உருவகம். கடல்போன்று விரிந்த பெருஞ்சேனை எனப் பொருள்படும்.

59. ஆயிரம் மலருடை ஆழி மாப்படை
'ஏ' எனும் மாத்திரத்து இற்ற கொற்றமும்,
தூயவன் சிலைவலித் தொழிலும், துன்பமும்,
மேயின வெகுளியும், கிளர வெம்பினான். (9075)

(மலர்-தாமரைமலர்/பதுமம்; ஆழி-கடல்; இறுதல்-அழித்தல்; கொற்றம்-வெற்றித்திறம்; மேயினவெகுளி-பொருந்திய கோபம்; கிளர்தல்-பொங்கியெழுதல்)

ஆயிரக்கணக்கான பதுமம் என்று அளவிட்டுக் கூறப்படுவனவான கடல்போன்ற பெரிய அரக்கர்களது பெருஞ்சேனையை 'ஏ' என்று கூறும் இமைப்பொழுதிற்குள் அழித்து ஒழித்த தூயவனான இலக்குவனது வெற்றித் திறத்தையும், அவன் விற்றொழில் ஆற்றலையும், கண்டதோடு தனது வேள்வி முற்றுப் பெறாமையாலும், சேனைகளெல்லாம் அழிந்து போனதாலும் உண்டான துன்பமும், அதன் விளைவாகப் பொங்கி யெழுந்த கோபமும், மேன்மேலும் வளர, உள்ளம் வெதும்பினான் இந்திரசித்து.

மலர் என்பது பூவினுக்கு அருங்கலமாகிய தாமரைமலரைக் குறிக்கும். 'பூவென்பது பொறிவாழ் பூவே' என்பது தொல்காப்பியம். பொறி-இலக்குமி; பதுமம் என்ற சொல் இங்கே மலரெனக் குறிக்கப் பெற்றிருக் கிறது. பதுமம் என்பது ஒரு பேரெண் என்பதை நாம் முன்பே கண்டு வந்திருக்கிறோம். வெள்ளம், பதுமம், ஆம்பல் என்பனவெல்லாம் ஒரு வகைப் பேரெண். பொதுவாகப் படையளவைக் குறிக்கப் பயன்படுத்தப் படுவன. 'ஏ' எனும் மாத்திரை என்பது நொடிப்பொழுது என்று விரைவைக் குறிக்கும் ஒரு நுட்பமான சிறு காலப்பொழுது எனக்கொள்க.

60. மெய் குலைந்து, இருநில மடந்தை விம்முற,
செய் கொலைத் தொழிலையும், சென்ற தீயவர்,
மொய் குலத்து இறுதியும், முனிவர் கண்டவர்
கை குலைக்கின்றதும் கண்ணின் நோக்கினான். (9076)

(இரும்-பெரிய; விம்முதல்-உடல்நெளிதல்; தீயவர்-கொடியவர்/ அரக்கர்; மொய்-நெருங்கிய; இறுதி-அழிவு; குலைத்தல்-விதிர்த்தல்/ நடுங்குதல்)

Koviloor Digital Library

பொறுமையிற் சிறந்த பெரிய பூமாதேவியே, இலக்குவன் செலுத்திய அம்புகளால் மடிந்து தரையில் வீழும் அரக்கர்களின் உடற்சுமையைத் தாங்க மாட்டாமல், தன் முதுகை நெளித்துத் துயருறுவதையும், நெருங்கிப் போர்செய்யச் சென்ற கொடியவர்களான அரக்கர்கள் தம் குலத்தோடு இறந்து வீழ்வதையும், நிகும்பலை யாகம் செய்ய வந்த முனிவர்கள் கண்டு, தமக்கு என்ன நேருமோ என்று தம் கைகள் விதிர்ப்புற்று நடுங்குவதையும், இந்திரசித்து தன் கண்களால் நன்கு கண்டான்.

61. இந்திரசித்து புலம்புதல்

மானமும் பாழ்பட, வகுத்த வேள்வியின்
மோனமும் பாழ்பட, முடிவிலா முரண்
சேனையும் பாழ்பட, சிறந்த மந்திரத்து
ஏனையும் பாழ்பட, இனைய செப்பினான். (9077)

(மானம்-பெருமை; மோனம்-மௌனம்/அமைதி/தவம்; முடிவு-எல்லை; முரண்-வலிமை/மாறுபட்ட; இனைய-இத்தகைய; பாழ்படுதல்-வெறுமையடைதல்; வகுத்தல்-மேற்கொள்ளுதல்)

இந்திரசித்து, தனது பெருமை சிதைந்து போனதாலும், தான் மேற் கொண்ட யாகம் தடைப்பட்டுப் போகவும், அதனால் தனது விரதமான மௌனநிலை தளர்ந்து கலைந்து போகவும், எல்லையற்ற வலிமையுடைய தனது பெருஞ்சேனைகளெல்லாம் அழிந்துபோகவும், உயர்ந்த வேள்விக் குரிய மந்திரங்களும், மற்றும் யாகத்திற்கான செயல்கள் எல்லாமும் பாழ்பட்டுப் போகவும், அதனைக் கண்ணுற்று மிக வருந்தி, கீழ்க்கண்ட வாறு கூறலானான்.

'மானம்' என்பது தன்நிலையில் தாழாமையும், ஊழ்வினைப் பயனால் தாழ்வு வந்தபோது உயிர் வாழாமையும் ஆகும்.

62. வெள்ளம் ஐ-ஐந்துடன் விரிந்த சேனையின்
உள்ளது அக்குரோணி ஈர்-ஐந்தொடு ஒயுமால்;
எள்ளஅரு வேள்வி நின்று இனிது இயற்றுதல்
பிள்ளைமை; அனையது சிதைந்து பேர்ந்ததால். (9078)

(ஐஐந்து-இருபத்தைந்து; ஈர்ஐந்து-பத்து; உள்ளது-எஞ்சியுள்ளது; ஓய்தல்-தளர்ந்துபோதல்; எள்ளல்-இகழ்தல்; இயற்றுதல்-நிறைவேற்றுதல்; பிள்ளைமை-சிறுபிள்ளைத்தனம்; பேர்தல்-சிதைந்து போதல்)

இருபத்து ஐந்து வெள்ளம் என்று கணக்கிடப்பட்டு வந்த விரிந்து பரந்த சேனையில் இப்போது எஞ்சியிருப்பது பத்து அக்குரோணி என்னும் அளவினதேயாகும். அவையும் இப்போது தளர்ந்து ஓய்ந்துபோய்

Koviloor Digital Library

நிற்கின்றன. இந்தச் சேனை முழுவதும் யாகத்துடன் சிதைந்து அழிந்து போய்விட்டது. இகழ்தற்கரிய இந்த யாகத்தை இனிமேல் இடம்பெயராது இங்கேயே நிறைவுறச்செய்து முடித்தல் என்பது அறியாமையின் பாற்பட்டதாகும், பயனற்றதாகும்; சிறுபிள்ளைத்தனமாகும் என்று இந்திரசித்து தனக்குள்ளேயே கருதிக் கொள்ளுகிறான்.

வெள்ளம், மலர், அக்குரோணி என்பனவெல்லாம் பேரெண்ணைக் குறிக்கின்ற அளவீடுகள். இலக்குவன் தன் படைகளையும், யாகத்தையும் முழுவதும் சிதைத்து அழித்து விட்டதால் இந்திரசித்து இவ்வாறு கருதநேர்ந்தது. இந்தப் 'பிள்ளைமை' என்ற பொருள்தரும் சொல்லாகிய 'பாலமை' என்ற சொல்லை, இராவணன் மந்திராலோசனையில் பேச முற்பட்ட இந்திரசித்தை நோக்கி வீடணன் 'பாலமை தவிர் நீ' என்று கூறியதையும்இங்குநினைவுகூர்க. இந்தப்படையின்அளவு குறித்து முன்பு கிட்கிந்தா காண்டத்தில் நாம் கண்டு வந்திருக்கிறோம். இலக்குவனால் வேள்விக்கு ஏற்பட்ட தடங்கலையும், தன் சேனைகளுக்கு ஏற்பட்ட அழிவினையும் கருதி இந்திரசித்து தனக்குள்ளே கூறிக்கொண்டது எனக்கொள்க.

63. "தொடங்கிய வேள்வியின் தூம வெங்கனல்
அடங்கியது அவிந்துளது, அமையுமாம் அன்றே?
இடம்கொடு வெஞ்செரு வென்றி இன்று எனக்கு
அடங்கியது என்பதற்கு ஏது ஆகுமால்" (9079)

(தூமம்-புகை; அமைதல்-போதுமானதாதல்; ஏது-தீயநிமித்தம்/ குறிப்பு/உற்பாதம்)

''இப்போது நான் தொடங்கிய இந்த யாகத்தில் புகையோடு கூடிய வெப்பம் மிகுந்த நெருப்பு ஓங்கி எரியாமல் அடங்கி குறைந்து அவிந்து போய் விட்டதல்லவா? இதுவே நான் இடம் அகன்ற போர்க்களத்தில் இனிமேல் நான் செய்யப்போகும் கொடிய போர்களில் எனக்கு வெற்றி கிடைக்காது அடங்கிப்போகும் என்பதற்கு ஒருதீய அறிகுறியாகும்'' என்று இந்திரசித்து தனக்குள் கருதிக் கொள்ளுகிறான்.

''இப்போது இந்த யாகத்தீ அவிந்து போனதால், இனிமேல் நான் பெறப்போவது அனைத்தும் தோல்வியாகவே முடியும் என்பதற்கு இதுவே போதுமான காரணமாகும் என்று இந்திரசித்து நினைக்கிறான் என்பதாம். வேள்வி தடைப்பட்டு நின்று விட்டதால், போரில் வெற்றி வாய்ப்பு அரிது என்று குறிப்பால் கருதுகிறான் என்பது கருத்து. பொதுவாக வேள்வி நெருப்பு என்பது ஓங்கி கொழுந்துவிட்டு எரிய வேண்டும். அவ்வாறில்லாது அடங்கி அவிந்துபோவது ஒரு தீய உற்பாதம் எனக் கருதப்படும். இந்திரசித்தின் வெற்றிக்காலம் முடிந்து, தோல்விக்காலம் தொடங்கிவிட்டது என்பது மறைபொருள். 'ஏது' என்ற சொல்லுக்கு

Koviloor Digital Library

நிமித்தம் என்பது பொருள். நிமித்தம் என்பது பின்னே நிகழ இருப்பதை முன்னரே புலப்படுத்தும் ஒரு அறிகுறி/எச்சரிக்கை எனக்கொள்க.

64. 'அங்கு அது கிடக்க; நான் மனிதர்க்கு ஆற்றலென்
சிங்கினென் என்பது ஓர் எளிமை; தேய்வுற,
இங்கு நின்று இவையிவை நினைக்கிலேன்; இனி,
பொங்குபோர் ஆற்றல் என் தோளும் போனதோ?" (9080)

(சிங்குதல்-குறைதல்; பொங்குதல்-வெகுள்தல்)

''இந்த வேள்வி சிதைக்கப்பட்டது ஒருபுறம் இருக்கட்டும், நான் இந்த அற்பமான மனிதர்களுடன் போர்புரிவதற்கு உரிய ஆற்றல் இல்லாது, வலிமையில் குறைந்து போனேன் என்று எண்ணுவதே எளிமையின் பாற்பட்டதாகும். எனது வலிமை குறைந்து தேய்ந்து போகுமாறு இங்கு நின்றுகொண்டு இவ்வாறு புலம்பிக் கொண்டிருக்க மாட்டேன்; போர் என்ன வீங்கும் என் பொலன் திண்தோள்கள் அத்தகைய ஆற்றல் நீங்கிப் போனதுவோ?'' என்று தன் வீரத்தின் மேலேயே ஐயம் கொண்டு புலம்புகிறான் இந்திரசித்து.

65. "'மந்திர வேள்விபோய் மடிந்ததாம்' எனச்
சிந்தையின் நினைந்து நான் வருந்தும் சிற்றியல்,
அந்தரத்து அமரரும், "மனிதர்க்கு ஆற்றலன்
இந்திரர்க்கே இவன்வலி" என்று ஏசவோ?" (9081)

(மடிந்தது-அழிந்தது; சிற்றியல்-சிறுமைத்தன்மை; அந்தரம்-விண்ணுலகு; ஏசுதல்-பழித்துரைத்தல்)

''மந்திரங்கள் கூறி முறைப்படி தொடங்கிய யாகம் முற்றுப்பெறாது பாதியிலேயே நின்று போய்விட்டது என்று நான் மனதிற்குள் வருந்திக் கொண்டிருக்கும் இந்தச் சிறுமைத் தன்மையைக் கண்டு, விண்ணுலகத்துத் தேவர்கள் ''இவன் ஒரு மனிதனுடன் ஈடு கொடுத்துப் போரிடும் ஆற்றல், அற்றவனாய்த் தோற்றுப் போய் நிற்கிறான். இவனது வீரமெல்லாம் நமது தேவேந்திரனை வெற்றிகொள்ள மட்டும்தான் செல்லும் போலும்!'' என்று என்னை இகழ்வதற்காகவோ?'' என்று புலம்புகிறான் இந்திரசித்து.

'மந்திர வேள்வி' என்பது அரக்கர்களும் வேத நெறிப்படியே வேள்வி இயற்றுபவர்கள் என்று, இந்திரசித்து தொடங்கிய நிகும்பலை யாகத்தைக் குறித்து நின்றது. தொடங்கிய வேள்வி நிறைவுறாமல் அழிந்துபோவது என்பது ஒரு தீய உற்பாதம். எனவே அவன் அதை நினைந்து வருந்தினான். எனினும் தன்னை இந்நிலையில் கண்டால் தேவர்களும் இகழ்ந்து பேசுவார்களே என்று இப்போது கருதுகிறான் என்பதாம். ''இந்திரர்க்கு'' என்றது இந்திரனை மட்டும் குறிக்காது, பொதுவாகத் தேவர்களைக் குறிக்கும். ''இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும்'' என்ற புறநானூற்றுப்

Koviloor Digital Library

பாடலிலும் இந்திரர் என்ற பன்மைச்சொல் தேவர்களைக் குறித்தே நின்றது என்பதும் கருதத்தக்கது.

66. என்று அவன் பகர்கின்ற எல்லை, வல்விசை,
குன்றொடு மரங்களும், பிணத்தின் கூட்டமும்,
பொன்றின கரிகளும், கவிகள் போக்கின;
சென்றன பெரும்படை இரிந்து சிந்தின. (9082)

(எல்லை-அளவு/பொழுது/சமயம்; இரும்-பெரிய; கூட்டம்-தொகுதி; பொன்றின-இறந்துபோன; போக்குதல்-வீசுதல்; இரிதல்-நிலைகெடுதல்; கவிகள்-குரங்குகள்; பகர்தல்-செல்லுதல்)

இவ்வாறு இந்திரசித்தன் தனக்குள் புலம்பிக் கொண்டிருக்கும் பொழுது, குரங்குகள் மிக்க வேகத்துடன் பெரிய மலைகளையும், மரங் களையும், அரக்க வீரர்களின் பிணங்களின் தொகுதியையும், இறந்துபோன யானைகளையும் தூக்கி அரக்கர் படைமேல் வீசி எறிந்தன. எனவே இந்திரசித்துடன் சென்றனவாகிய பெரிய அரக்கர்சேனை, நிலைகுலைந்து சிதறி ஓடியது.

67. ஒதுங்கினர், ஒருவர் கீழ் ஒருவர் புக்குறப்
பதுங்கினர், நடுங்கினர்; பகழி பாய்தலின்,
பிதுங்கினர் குடர் உடல் பிளவு பட்டனர்;
மதம் புலர் களிறெனச் சீற்றம் மாறினர். (9083)

(புக்கு-புகுந்து; புலர்தல்-வற்றிப்போதல்; சீற்றம்-சினம்; மாறுதல்-ஒழிதல்/நீங்குதல்)

அவ்வாறு வானரவீரர்கள் வீசியெறிந்த மலை, மரம், பிணக்கூட்டம், இறந்த யானைகள் முதலியன தம்மேல் படாதவாறு சில அரக்கவீரர்கள் தம்மை மறைத்துக்கொண்டு ஒதுங்கிக் கொண்டனர்; வேறுசில அரக்க வீரர்கள் ஒருவர்கீழ் ஒருவராகப் புகுந்து பதுங்கிக்கொண்டு, அச்சத்தால் உடல் நடுக்கமுற்றனர்; இலக்குவனது அம்பு தைப்பதால், சில அரக்கர்கள் குடல் பிதுங்கி இறந்து போனார்கள்; சில அரக்கர்கள் உடல் இரண்டாகத் துண்டிக்கப்பட்டு இறந்து போனார்கள்; மதநீர் வற்றிப்போன, செருக்கு அடங்கிய யானையைப் போலத் தம் சினத்தை மாற்றித் தணிந்து போனார்கள்.

68. வீரன் வெங்கணையொடும் கவிகள் வீசிய
கார்வரை அரக்கர்தம் கடலின் வீழ்ந்தன;
போர் நெடுங்கால் பொர, பொழியும் மாமழைத்
தாரையும் மேகமும் படிந்த தன்மைய. (9084)

Koviloor Digital Library

(கார்வரை-கரிய மலைகள்; பொருதல்-மோதுதல்; கால்-பெரும் காற்று; தாரை-மழைத்துளி)

வீரனாகிய இலக்குவன் ஏவிய கொடிய அம்புகளோடு, வானரச் சேனைகள் வீசியெறிந்த கரிய மலைகளும் அரக்கர் சேனையாகிய கடலில் போய் விழுந்தவை, போர்புரிவது போல மோதித்தாக்கும் இயல்புடைய பெரிய புயற்காற்றும், பொழிகின்ற பெரிய மழைத்துளிகளும், மேகங் களும், ஒருசேரக் கருங்கடலில் படிந்திருந்த தன்மையை ஒத்திருந்தது.

இலக்குவன் அம்புகளுக்கு மழைத்தாரையும், குரங்குகள் வீசியெறிந்த மலைக் கூட்டங்களுக்கு மேகங்களும், அரக்கர் சேனைக்குக் கருங்கடலும் உவமைகள்.

69. அனுமன் இந்திரசித்தனை அணுகுதல்

திரைக் கடற் பெரும்படை இரிந்து சிந்திட,
மரத்தினின் புடைத்து அடர்த்து உருத்த மாருதி,
அரக்கனுக்கு அணித்து என அணுகி, அன்னவன்
வரக் கதம் சிறப்பன மாற்றம் கூறுவான். (9085)

(திரை-அலைகள்; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; புடைத்து-தாக்கி; உருத்தல்-வெகுள்தல்; அணித்து-அருகில்; அணுகுதல்-நெருங்குதல்; கதம்-சினம்/கோபம்; மாற்றம்-மொழிகள்/சொற்கள்; சிறத்தல்-மிகுதல்; அடர்த்தல்-நெருக்குதல்/போரிடுதல்)

அலைகளையுடைய கடல்போன்ற பெரிய அரக்கர்சேனை முழுவதும் நிலைகெட்டுப் போர்க்களத்தை விட்டுச் சிதறி ஓடவும், மிக்க சினம் கொண்டு மரங்களைக் கொண்டு தாக்கிய அனுமன், அவ்வரக்கனாகிய இந்திரசித்தனுக்கு அருகில் சென்று அவனை நெருங்கி, அவன் இயல்பிலேயே கொண்ட சினம், மேலும் மிகுதியாகும்படி சில சொற்களைச் சொல்லத் தொடங்கினான்.

70. அனுமன் இந்திரசித்தனை இகழ்ந்து பேசுதல் [10 பாடல்கள்]

"தடந்திரைப் பரவையன்ன, சக்கர யூகம் புக்குக்
கிடந்தது கண்டது உண்டோ? நாண் ஒலி கேட்டிலோமே?
தொடர்ந்து போய் அயோத்தி தன்னைக் கிளையொடும் துணிய நூறி,
நடந்தது எப்பொழுது? வேள்வி முடிந்ததே? கருமம் நன்றே!" (9086)

(தட-பெரிய; பரவை-கடல்; யூகம்-வியூகம்/அணிவகுப்பு; கிளை-சுற்றம்; துணிதல்-துண்டித்தல்; நூறுதல்-கொல்லுதல்; நடந்தது-மீண்டு வந்தது/திரும்பி வந்தது; கருமம்-செயல்; நன்று-நன்மை விளைவிப்பது)

Koviloor Digital Library

அனுமன் இந்திரசித்தை நோக்கி, ''பெரிய அலைகளையுடைய கடல் போன்று அணிவகுத்து நின்ற உன்னுடைய பெருஞ்சேனை இங்கே நிகும்பலை யாகம் செய்யும் இடத்தில் நின்று கொண்டிருந்தனவே? அவற்றை நீ பார்த்தாயா? எல்லாப் படைகளும் எங்கே போயிற்று? அப் படைகள் எழுப்பிய வில்லின் நாண்ஒலியை நாங்கள்கேட்கவில்லையே? நீ தொடர்ந்து அயோத்தி சென்று அங்குள்ள பரதன் உட்பட எங்கள் சுற்றத்தார்களையெல்லாம் துண்டதுண்டமாக்கிக் கொன்று போட்டு விட்டு எப்பொழுது திரும்பி வந்தாய்? நீ தொடங்கிய நிகும்பலை யாகம் முழுவதும் முற்றுப்பெற்று விட்டதல்லவா? நீ செய்த காரியங்கள் எல்லாம் உனக்கு நன்மையே விளைவித்தது அல்லவா?'' என்ற இகழ்ந்து கேட்கலானான்.

நகைச்சுவை நிறைந்த ஒரு அருமையான பாடல். முன்பு இந்திரசித்து கூறிய செயல்கள் எல்லாம் செய்து முடிக்கப்படாமல் இலக்குவன் அம்பு தடுத்ததனால் அவன் செய்து முடிக்காததை இடித்துக்கூறி, இந்திரசித்தனை வெறுப்புக்கொள்ள வைக்கிறான் அனுமன். 'யூகம்' என்பது வியூகம் என்பதன் முதற்குறை. அணிவகுப்பு என்பது பொருள். ''கண்டதுண்டோ? கேட்டிலேமே?'' நடந்தது எப்பொழுது? என்ற வினாக்கள் இகழ்ச்சி குறித்தன.

71. "ஏந்து அகல் ஞாலம் எல்லாம் இனிது உறைந்து, இயற்கை தாங்கும்
பந்தளின் பெரிய திண்தோள் பரதனை, பழியின் தீர்ந்த
வேந்தனை, கண்டு, நீ நின் வில்வலி காட்டி, மீண்டு,
போந்ததோ, உயிரும் கொண்டே ஆயினும், புதுமை அன்றே!" (9087)

(ஏந்துதல்-தாங்குதல்; அகல்-விரிந்த; ஞாலம்-நிலவுலகம்; தாங்குதல்-சுமத்தல்; பாந்தள்-பாம்பு/ஆதிசேஷன்; காட்டுதல்-புலப்படுத்துதல்; இயற்கை-இயல்பாக; போந்தது-திரும்பிவந்தது; புதுமை-ஆச்சர்யம்)

அகன்று விரிந்து, பரந்த இந்த நிலவுலகு முழுவதையும் தன் ஆயிரம் தலைகளால் இனிதே தாங்கிச்சுமந்து நிற்கும் ஆதிசேஷன் என்ற பாம்பினை விடத் திண்ணிய, பெரிய தோள்களை உடையவனும், இவ்வுலக அரசாட்சியை இயல்பாகவே தாங்கும் வல்லமையும், எந்தப் பழிச் சொல்லுக்கும் ஆளாகாதவனுமான பரதனாகிய அரசனை, நீ அயோத்தி சென்று பார்த்து, உன் வில்லாற்றலை அவனுக்குப் புலப்படுத்தி, அவனுடன் போரிட்டு, மீண்டும் திரும்பி வந்துவிட்டாயா? அதுவும் உயிருடன் மீண்டு வந்து இருக்கிறாயா? இது மிகவும் வியப்புக்குரியது'' என்று இந்திரசித்தனைப் புகழ்வதுபோல இகழ்கிறான் அனுமன்.

''ஏந்து அகல் ஞாலம் எல்லாம் இனிது உறைந்து இயற்கை தாங்கும் பாந்தள்'' என்பது ஆதிசேஷனைக் குறிக்கும். ''பெரிய திண்தோள் பரதன், பழியின் தீர்ந்த வேந்தன்'' என்பது பரதனைக் குறிக்கும். ''கண்டு நீ நின்

Koviloor Digital Library

வில்வலி காட்டி, மீண்டு உயிரும் கொண்டே போந்ததோ! புதுமை யன்றே!'' என்பது இந்திரசித்தை இகழும் அனுமனின் கூற்று என்க.

72. "அம்பரத்து அமைந்த வல்வில் சம்பரன் ஆவிவாங்கி
உம்பருக்கு உதவிசெய்த ஒருவனுக்கு உதயம் செய்த
நம்பியை, முதல்வரான மூவர்க்கும் நால்வரான
தம்பியை, கண்டு, நின்தன் தனுவலம் காட்டிற்று உண்டோ?" (9088)

(அம்பரம்-வானுலகு; ஆவி-உயிர்; வாங்குதல்-கவர்தல்/போக்குதல்/ கொல்லுதல்; உம்பர்-தேவர்கள்; ஒருவன்-ஒப்பற்றவன்/தசரதன்; உதித்தல்-தோன்றுதல்; நம்பி-ஆடவருள் சிறந்தவன்; தம்பி-சத்துருக் கனன்; தனுவலம்-வில்லாற்றல்; முதல்வர்-மூத்தவர்)

''விண்ணுலகத்தில் தங்கியிருந்த தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி வலிய வில்லாற்றல் படைத்த சம்பரன் என்னும் அசுரனின் உயிரைப் போக்கித் தேவர்களுக்கு மீண்டும் அரசுதந்து உதவிசெய்த ஒப்பற்றவனான தசரதச் சக்கரவர்த்திக்குப் பிறந்த, ஆடவருள் சிறந்தவனான, மூத்தவனான இராமபிரானுடன் பிறந்தவர்களான பரதன், இலக்குவன் ஆகியோருக்கும் நாலாவதாகப் பிறந்த தம்பியான சத்துருக்கனனையும் பார்த்து, உன்னுடைய வில்லாற்றலைப் புலப்படுத்தி வந்திருப்பாயே?'' என்று இகழ்ந்து பேசுகிறான் அனுமன்.

''அம்பரத்து அமைந்த வல்வில் சம்பரன் ஆவி வாங்கி, உம்பருக்கு உதவி செய்த ஒருவனாகிய'' தசரதனின் இந்த நிகழ்வு பாலகாண்டத் திலும், இன்னும் பல இடங்களிலும் காப்பியத்தில் பேசப்பட்டு வந்தது நாம் அறிந்ததே. ''முதல்வரான மூவர்க்கும் நால்வரானதம்பி'' என்பது சத்துருக்கனனைக் குறித்தது. ''நின் தனுவலம் காட்டிற்று உண்டோ?'' என்பது இகழ்ச்சிக்குறிப்பு. இராமபிரானை முதலாகக் கொண்டு, பரதன், இலக்குவன் என மூவர்க்கும் பின்னால் நாலாவது தம்பியாகப் பிறந்த சத்துருக்கன் என்பது ''முதல்வரான மூவர்க்கும் நால்வரான தம்பி'' எனப்பட்டது எனக்கொள்க. 'வல்வில்' என்பது ஒரே காலத்தில் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும்படி அம்பை எய்யும் வில்தொழிலைக் குறிக்கும். சங்ககாலத்தில் ஒரு மன்னனுக்கு ''வல்வில் ஓரி'' என்றே பெயர் அமைந்திருப்பதையும் இங்கே நினைவுகூரலாம். இங்கே ஒரு செய்தி, சத்துருக்கனன், இலவணன் என்ற அரக்கனைக் கொன்றழித்ததாகப் பெருமாள் திருமொழியில் (10-பாசுரம்-9) ஒரு குறிப்புக் கிடைக்கிறது. ''இலவணன் தன்னைத் தம்பியால் வானேற்றி'' என்பது பாடல்பகுதி. எனினும் கம்பன் இதுபற்றி எந்த இடத்திலும் குறிப்பிடாததும் கருதத் தக்கது.

Koviloor Digital Library

73. "தீ ஒத்த வயிரவாளி உடல்உற, சிவந்த சோரி,
காயத்தின் செவியினூடும், வாயினும், கண்களூடும்,
பாய, போய், இலங்கை புக்கு, வஞ்சனை பரப்பச் செய்யும்
மாயப்போர் ஆற்றல் எல்லாம் இன்றொடு மடியும் அன்றே!" (9089)

(வயிரம்-திண்மை; உறுதல்-பொருந்துதல்; சோரி-இரத்தம்; காயம்-உடம்பு; மடிதல்-முடிந்துபோதல்; வாளி-அம்பு)

அனுமன் இந்திரசித்தை நோக்கி, ''நெருப்பைப் போன்ற வெப்பமுடையதும், சுட்டழிப்பதும் திண்ணியதுமான இலக்குவனின் அம்புகள் உன்னுடைய உடலிலும், அரக்கர் சேனைகளின் உடலிலும் ஊன்றித் தைக்கப்போகிறது. அதனால் உன் உடம்பிலிருந்தும், அரக்கர்களின் புண்களிலிருந்தும், காதுகளிலிருந்தும், வாயிலிருந்தும், சிவந்த இரத்தம் பாய்ந்து பீறிட்டு வெளிப்படப் போகிறது. அப்போது நீ மறைந்து இலங்கை மாநகரத்துள் விரைந்து புகுந்துகொண்டு, உன்னுடைய சூழ்ச்சித் திறன்களையெல்லாம் காட்டி மாயப்போர் செய்கின்ற வலிமையெல்லாம் இன்றோடு முடிந்து போகப்போகிறது, பார்!'' என்கிறான் அனுமன்.

''காயம்'' என்ற சொல் இங்கே உடம்பு என்ற பொருளையும், புண் என்ற பொருளையும் தரும். இந்திரசித்தன் மாயப்போர் புரிவதில் வல்லவன் என்பதும் நாம் அறிந்ததே. இலக்குவன் செலுத்தப்போகும் அம்புகளால் இந்திரசித்தன் இன்று மடியப்போகிறான் என்பதை அனுமன் கூற்றாகக் கவிஞன் கற்போர்க்கு உணர்த்துவதைக் கருதுக. இந்திரசித்து இனிமேல் மாயப்போர் செய்யமுடியாது என்பது கருத்து.

74. "பாசமோ, மலரின் மேலான் பெரும் படைக்கலமோ, பண்டை
ஈசனார் படையோ, மாயோன் நேமியோ, யாதோ, இன்னம்
வீச, நீர் விரும்புகின்றீர்? அதற்கு நாம் வெருவி, சாலக்
கூசினோம்; போதும், போதும்; கூற்றினார் குறுக வந்தார். (9090)

(பாசம்-நாகபாசம்/நாகாஸ்திரம்; மலர்-தாமரை; பண்டை-பழமையான; ஈசன்-சிவபெருமான்; மாயோன்-திருமால்; நேமி-சக்கரப்படை; வீசுதல்-ஏவுதல்; வெருவுதல்-அஞ்சுதல்; சால-மிகவும்; கூசுதல்-ஒடுங்குதல்; குறுக-நெருங்க; மலரின்மேலான்-பிரமதேவன்; கூற்றினார்-இயமன்)

அனுமன் இந்திரசித்தை நோக்கி, ''நீ இப்பொழுது நாகபாசத்தை எங்கள்மீது செலுத்தப்போகிறாயா? அல்லது தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனின் பெருமைவாய்ந்த பிரமாஸ்திரத்தை ஏவப்போகிறாயா? முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளான சிவபெருமானின் பாசுபதாஸ்திரத்தை எய்யப்போகிறாயா? அல்லது திருமாலின் சக்கரப்படையை வீசப்போகிறாயா? இன்னும் வேறு எந்த அஸ்திரத்தை எங்கள்மேல் வீசுவதற்கு விரும்புகின்றாய்? அவற்றுக்கெல்லாம் நாங்கள்

Koviloor Digital Library

மிக்க அச்சப்பட்டு மிகவும் நடுங்கி ஒடுங்கிப்போய் இருக்கிறோம். நீ வீசிய கணைகள் எல்லாம் போதும். உன் மாயச்செயல்களை நிறுத்திக்கொள். இப்பொழுது இயமன் உன்னை நெருங்கி வந்து விட்டான்'' என்று ஏளனம் செய்கிறான் அனுமன்.

'பாசம்' என்பது நாகபாசத்தையும், 'மலரின் மேலான் பெரும் படைக் கலன்' என்பது பிரமாஸ்திரத்தையும் குறிக்கும். இவையிரண்டையும் இந்திரசித்து முன்பே பயன்படுத்திவிட்டான். பின்னால் சிவபெருமானின் பாசுபதாஸ்திரத்தையும், திருமாலின் நாராயணாஸ்திரத்தையும் பயன் படுத்தப் போகிறான் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். இந்தப் படைகளுக்கெல்லாம் நாங்கள் எதிர்கொள்ள முடியாமல் மிகவும் பயந்து போய் உனக்கு ஒடுங்கிப்போய் இருக்கிறோம். எனவே நீ இன்னும் அஸ்திரங்கள் ஏவுவதை நிறுத்திக்கொள் என்றும், உன்னை அழிப்பதற்கு இலக்குவன் என்னும் இயமன் நெருங்கி வந்துவிட்டார் என்றும் அவனை எச்சரிக்கிறான் என்றும் கொள்ளலாம். எங்கெங்கே ஏளனமாகப் பேசவேண்டுமோ அங்கெல்லாம் கவிஞன் இயமனைக் 'கூற்றுவனார்', 'நமனார்' என்று மரியாதைப் பன்மையிலேயே கூறி வந்திருப்பதையும் காணலாம். 'கூசினோம்' என்ற சொல் கூசவில்லை-அஞ்சவில்லை என்ற பொருளைத்தரும். இவ்வாறு உடன்பாட்டுச் சொல் எதிர்மறைப் பொருளைத் தருவதை இலக்கணை என்கிறோம். அனுமன் அப்படை களுக்கு அஞ்சியவன் போல இந்திரசித்தனை இகழ்கிறான் என்பதாம்.

75. "வரங்கள் நீர் உடையவாறும், மாயங்கள் வல்லவாறும்,
பரம்கொள் வானவரின் தெய்வப் படைக்கலம் படைத்தவாறும்,
உரங்களோடு உன்னி அன்றோ, உம்மை நாம் "உயிரினோடும்
"சிரங்கொளத் துணித்தும் என்னக் கண்டது? திறம்பினோமோ?" (9091)

(பரம்-மேன்மை/பெருமை; படைத்தல்-பெறுதல்; உரம்-வலிமை; உன்னுதல்-எண்ணுதல்/கருதுதல்; திறம்புதல்-தவறுதல்/விலகுதல்/ பின்வாங்குதல்/மாறுதல்/மாறுபடுதல்)

''நீங்கள்தேவர்களிடம் இருந்து பெற்ற வரங்களையும், உங்களின் மாயச் செயல்களின் வலிமையையும், மேன்மை பொருந்திய தேவர்களிட மிருந்து நீங்கள் பெற்ற தெய்வத்தன்மை வாய்ந்த படைக்கலன்களையும், உங்களுடைய இயல்பான அரக்கர் வலிமையையும் நன்கு சீர்தூக்கிப் பார்த்த பின்னர்தானே நாங்கள் உங்களை உயிரோடு விட்டுவிட்டுத் தலையை மட்டும் துண்டிக்கவேண்டும் என்று கருதினோம்! அதனின்றும் மாறுபடுவோமா? மாட்டோம்'' என்கிறான் அனுமன்.

முன்பாடல்களில் கூறியவையனைத்தும் இகழ்ச்சிக் குறிப்பு. இப்போது அனுமன் பேசுவது இந்திரசித்தனுக்கு விடுக்கும் எச்சரிக்கை எனக்கொள்ள வேண்டும். வரம் என்பது தேவர்கள் அருளிக் கூறும்

Koviloor Digital Library

அருள்மொழி. சாபம் என்பது தேவர்களும் முனிவர்களும் வெகுண்டு கூறும் வன்மொழி என்க. 'பரம்' என்ற சொல் அறிவு, ஆண்மை, பொருள், படை முதலியவற்றின் பெருமையையும், மேன்மையையும் குறிக்கும். 'உரம்' எனக் கூறாது, 'உரங்கள்' எனப் பன்மையில் கூறியதை நோக்குக. உடல் வலிமையுடன் உள்ளத் திண்மையையும் இச்சொல் குறிக்கும். 'திறம்பினோமோ'' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளது. திறம்பவில்லை என்ற பொருளைத்தரும்.

76. "விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணலும், விரிஞ்சன்தானும்,
படம் துடிக்கின்ற நாகப் பாற்கடல் பள்ளியானும்,
சடம் துடிக்கிலராய் வந்து தாங்கினும், சாதல் திண்ணம்;
இடம் துடிக்கின்றது உண்டே? இருத்திரோ? இயம்புவீரே!" (9092)

(விடம்-நஞ்சு/ஆலகாலம்; துடித்தல்-நிறைந்து ததும்புதல்; கண்டம்-கழுத்து; அண்ணல்-இறைவன்/சிவபெருமான்; விரிஞ்சன்-பிரமதேவன்; துடித்தல்-விரித்து எழுதல்; சடம்-உடல்; துடித்தல்-நடுங்குதல்; தாங்குதல்-பாதுகாத்தல்; திண்ணம்-உறுதி; இயம்புதல்-சொல்லுதல்; துடித்தல்-அசைதல்; இடம்-இடப்பக்கம்)

''ஆலகால நஞ்சு நிரம்பித் ததும்பும் கழுத்தினை உடையவனான பெருமைக்குரியவனான சிவபெருமானும், பிரமதேவனும், சீறிப் பாய்கின்ற படத்தைக் கொண்ட ஆதிசேஷன் என்னும் நாகத்தைப் படுக்கை யாகக் கொண்டு பாற்கடலில் அறிதுயிலில் ஆழ்ந்திருக்கும் திருமாலும், தங்கள் உடம்பு நடுக்கமுறாமல் வந்து, உன்னைக் காப்பாற்ற முயன்றாலும், நீ இறந்துபடப்போவது உறுதி. உனக்கு இப்போதே உன்னுடைய இடது கண்ணும், தோளும் துடித்திருக்க வேண்டுமே? நீ உயிருடன்தான் இன்னும் இருக்கிறாயா? சொல்லுவாயாக!'' என்கிறான் அனுமன்.

'துடிக்கின்ற' என்ற சொல் ஒவ்வொரு அடியிலும் வெவ்வேறு பொருளில் கையாளப் பட்டிருப்பதாலும் இந்தப்பாடல் சொற்பொருட் பின்வருநிலையணியிலேயே கொள்ளப்பட வேண்டும். 'துடிக்கின்ற' என்ற சொல்லைப் பிரித்துப் பொருள் கொள்ளாததால் இது யமக அணியோ மடக்கு அணியோ அல்ல. மும்மூர்த்திகளும் இந்திரசித்தனுக்குத் துணையாக வந்து அவனைக் காப்பாற்ற முயற்சிக்க மாட்டார்கள் என்பது அனுமனுக்கு நன்கு தெரியும். எனவேதான் ''மூவரும் சடம் துடிக்கிலராய் வந்து தாங்கினும்'' என்று உயர்வு சிறப்பு உம்மையைக் கவிஞன் கையாண்டிருக்கிறான். 'இடம் துடிப்பது' என்பது ஆண்களுக்கு இடது கண், தோள் முதலியன துடித்தல். நிகழவிருக்கும் தீங்கிற்கான முன்னெச் சரிக்கை இது என்பது ஒரு நூற்கொள்கை. துடிக்கின்ற என்ற சொல் முதலடியில் நிறைந்து ததும்புகின்ற என்ற பொருளிலும், இரண்டாம் அடியில் சீறிப்படம் விரித்து எழுகின்ற என்ற பொருளிலும், மூன்றாம் அடியில் நடுங்குதல் என்ற பொருளிலும், நான்காம் அடியில் அசைதல்

Koviloor Digital Library

என்ற பொருளிலும் கையாளப்பட்டிருப்பதை நோக்குக. 'சடம்' என்பது 'ஜடம்' என்ற வடசொல்லின் திரிபு. தேகம், உடம்பு என்பது பொருள்.

77. "கொள்வென் என்று உன்னைத்தானே குறித்து, ஒரு சூளும் கொண்ட
வில்லி வந்து அருகு சார்ந்து, உன் சேனையை முழுதும் வீட்டி,
'வல்லை நீ பொருவாய்' என்று, விளிக்கின்றான்; வரிவில் நாணின்
ஒல்லொலி, ஐய! செய்யும் ஓமத்துக்கு உறுப்பு ஒன்று ஆமோ?" (9093)

(கொள்ளுதல்-உயிரைக் கொள்ளுதல்/கொல்லுதல்; சூள்-வஞ்சினம்/சபதம்; வில்லி-வில்வீரன்; வீட்டுதல்-கொன்று அழித்தல்; வல்லை-விரைந்து; விளித்தல்-அழைத்தல்/கூவுதல்; ஒல்-ஒரு ஒலிக்குறிப்பு; ஓமம்-ஹோமம்/யாகம்/வேள்வி; உறுப்பு-அங்கம்)

அனுமன் இந்திரசித்தை நோக்கி, ''ஐயனே! உன்னைத் தானே தனித்து நின்று உன் உயிரைக் கொள்ளவேண்டும் என்று, வில்வீரனாகிய இலக்குவன், முன்பு குறித்த ஒரு சபதத்தை மேற்கொண்டு, இப்போது உன் அருகில் வந்து உன்னைச் சார்ந்திருக்கிறான். உன்னையும் உன்னுடைய சேனை முழுவதையும் கொன்று அழிக்க எண்ணி, ''நீ வலிமைமிக்கவனாய் இருந்தால் என்னுடன் போர்செய்து பார்'' என்று கூவி அழைக்கின்றான்; நீயோ ஏதும் செய்யாது வாளா நின்றிருக்கின்றாய்; அவனுடைய வரிந்து கட்டப்பட்ட வில்லினின்றும் எழும் ஒல்லென்ற நாண்ஒலி ஓசை, நீ செய்யும் யாகத்திற்குச் சங்கு ஊதுவதுபோலத் தோன்றுகிறதோ? அந்த நாண் ஒலியும் நீ செய்யும் யாகத்திற்கு ஒரு அங்கமாக அமைந்து விட்டது என்று கருதிக் கொண்டிருக்கிறாயோ?'' என்று ஏளனமாகக் கேட்கிறான் அனுமன்.

இலக்குவன் வஞ்சினம் முன்பே பேசப்பட்டிருப்பதை நினைவு கூர்க. வில்லாற்றலில் பெரும் வலிமையுடைய இலக்குவன் இங்கு 'வில்லி' என்று அழைக்கப்படுகிறான். 'வில்லின் செல்வன்' என்பது முன்பு இலக்குவனுக்கு இராமபிரான் அளித்த சிறப்பு. 'ஒல்' என்பது ஒலிக்குறிப்பு.

78. "மூவகை உலகும் காக்கும் முதலவன் தம்பி பூசல்,
தேவர்கள், முனிவர், மற்றும் திறத்திறத்து உலகம் சேர்ந்தார்,
யாவரும் காண நின்றார்; இனி இறை தாழ்ப்பது என்னோ?
சாவது சரதம் அன்றோ?" என்றனன் தருமம் காப்பான். (9094)

(பூசல்-போர்த்திறம்; தாழ்ப்பது-காலம் தாழ்த்துவது; சரதம்-நிச்சயம்/மெய்/உறுதி; இறை-சிறிதுநேரம்)

அறம்தலை நிறுத்த அவதாரம் செய்த இராமபிரான்போல, தருமத்தைக் காத்து நிற்கும் அனுமன், இந்திரசித்தை நோக்கி, ''மேல், நடு, கீழ் என்று மூன்று உலகங்களையும் எவ்வித இடரும் இன்றிக் காத்தல் தொழிலைச் செய்தருளும் மூலமுதல்வனான திருமாலின் அம்சமான இராமபிரானின்

Koviloor Digital Library

தம்பியாகிய இலக்குவன் செய்யப்போகும் போர்த்திறத்தைக் காண்பதற் காகத் தேவர்களும், முனிவர்களும், மற்றும் மேல், நடு, கீழ் என்று கூறப்படுகின்ற பலவகைப்பட்ட உலகத்து உள்ளவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி விண்ணில் நிற்கின்றனர்; நீ இன்னும் காலம் தாழ்ப்பது ஏன்? நீ இறந்துபடப் போவதுதான் உறுதியாயிற்றே?'' என்று இந்திரசித்தைத் தட்டி எழுப்புகிறான் அனுமன்.

79. இந்திரசித்தன் மறுமொழி [6 பாடல்கள்]

அன்ன வாசகங்கள் கேளா, அனல் உயிர்த்து, அலங்கல்
பொன்தோள் மின்நகு பகுவாயூடு வெயில்உக, நகைபோய் வீங்க,
"முன்னரே வந்து, இம்மாற்றம் ஆற்றலின் மொழிந்தவாறே?
என்னதோ நீயிர் என்னை இகழ்ந்தது?'' என்று இனைய சொன்னான்.
(9095)

(கேளா-கேட்டு; உயிர்த்தல்-பெருமூச்சு விடுதல்; அலங்கல்-மாலை; உகுதல்-சிதறுதல்/வெளிப்பட்டு வீசுதல்; பொன்-அழகிய; நகு-போன்ற; மாற்றம்-சொற்கள்; பகு-பிளந்த; வீங்குதல்-மிக்குத் தோன்றுதல்; என்னதோ-என்ன பொருளுடையதோ; இனையன-இத்தகைய; வெயில்-வெப்பக்காற்று; முன்னர்-எதிரில்; ஆறு-தன்மை)

அவ்வாறு அனுமன்கூறிய ஏளன மொழிகளைக் கேட்டு, அசைந்தாடும் மலர் மாலையணிந்தவனும், அழகிய தோள்களையுடையவனும், மின்னல் போன்று இரண்டாகப் பிளந்த வாயில் வெப்பக்காற்று வெளிப் பட்டுத் தோன்றும், இந்திரசித்து நெருப்புப்போன்று பெருமூச்சு விட்டுக் கொண்டு, எள்ளல் சிரிப்புமிக, ''என் எதிரில் வந்து நின்று இத்தகைய சொற்களைச் சொல்லுகின்றீர்களே? இப்பொழுது நீங்கள் கூறிய சொற்கள் என்ன பொருளுடையன? என்னை இகழ்ந்து பேசியது ஏன்?'' என்று கேட்டுவிட்டுக் கீழ்வருமாறு கூறத்தொடங்கினான்.

80. "மூண்ட போர்தோறும் பட்டு, முடிந்த நீர் முறையின் தீர்ந்து
மீண்டபோது அதனையெல்லாம் மறத்திரோ? விளிதல் வேண்டி,
"ஈண்டவா!" என்னா நின்றீர்; இத்தனை பேரும் இன்னம்,
மாண்டபோது, உயிர் தந்தீயும் மருந்து வைத்தனையோ மான?" (9096)

(மூள்தல்-மிக்குஎழுதல்; முடிதல்-இறந்துபோதல்; விளிதல்-இறத்தல்; வேண்டி-விரும்பி; ஈண்ட-நெருங்கி/அணுகி; என்னா-என்று; மான-நிறைய; முறை-நியதி)

''நமக்குள் முன்பு மிகுதியாக எழுந்த போரில் எல்லாம், உங்களுடைய வானரச் சேனையெல்லாம் என்னால் தாக்கப்பட்டு அழிந்துபோனது. எனினும் இறந்தவர் பிழைப்பதில்லை என்ற நியதியை மாற்றி, கருடனின்

Koviloor Digital Library

உதவியாலும், மருத்துமலையின் உதவியாலும், நீங்கள் மீண்டும் உயிர் பெற்று எழுந்தபின்னர், முன்பு போரில் இறந்துபட்டதையெல்லாம் மறந்து விட்டீர்கள் போல் இருக்கிறது. இப்போது மீண்டும் என் கையாலேயே இறந்துபட வேண்டும் என்று வேண்டி விரும்பி, என்னை உங்கள் அருகில் வரும்படி போருக்கு அழைத்துக்கொண்டு நிற்கிறீர்கள்போலும்! இப்பொழுது எஞ்சி உயிரோடு நிற்கின்ற உங்கள் வானரவீரர்கள், என்னால் தாக்கப்பட்டு உயிரழிந்தால் அவர்களை மீண்டும் உயிர் பிழைக்கச் செய்யக்கூடிய மருந்துகளை நிறைய வைத்திருக்கிறாய் போலும்'' என்று இந்திரசித்தும் இப்போது ஏளனமாக அனுமனிடம் பேசுகிறான்.

''முறை'' என்பது ஒரு அருமையான சொல்லாட்சி. நியதி என்ற பொருளைத்தரும். இறந்தவர் பிழைப்பதில்லை என்பதுதான் உலக நியதி; அதற்கு மாறுபட்டு, அனுமன் கொண்டுவந்த மருத்து மலையால் பிரமாஸ் திரத்தால் கட்டுண்ட இலக்குவனும் வானரச்சேனையும் உயிர்பெற் றெழுந்தனர். அதற்கு முன்பு நாகபாசத்தால் கட்டுண்ட இலக்குவனையும், வானரச் சேனையையும், கருடன் வந்து உயிர்பிழைக்கச் செய்தான் என்பன வற்றையெல்லாம் இப்பொழுது எடுத்துக்கூறி, அதுபோல் இப்போது இறந்தழியப்போகும் வானரச்சேனைகளுக்கெல்லாம் மீண்டும் உயிர் தரக்கூடிய மருந்துகளை நிறையக் கைவசம் வைத்திருக்கிறாயோ என்று கேட்கிறான் இந்திரசித்து. ''உயிர் தந்து ஈயும் மருந்து'' சஞ்சீவி என்க.

81. "இலக்குவன் ஆக, மற்றை இராமனே ஆக, ஈண்டு,
விலக்குவர் எல்லாம் வந்து விலக்குக; குரக்கின் வெள்ளம்
குலக்குலமாக மாளும், கொற்றமும், மனிதர் கொள்ளும்
அலக்கணும், முனிவர் தாமும், அமரரும், காண்பர் அன்றே!" (9097)

(விலக்குதல்-தடுத்தல்; ஈண்டு-இங்கு; குலக்குலமாக-கூட்டம் கூட்டமாக; கொற்றம்-வெற்றித்திறம்; அலக்கண்-துயரம்/துன்பம்)

இந்திரசித்து அனுமனை நோக்கி, ''என்னை எதிர்த்துப் போர்புரிய வருபவர்கள் இலக்குவனாக இருந்தாலும்சரி, அல்லது இராம பிரானாகவே இருந்தாலும், இங்கு இப்பொழுது இந்தப் போரைத் தடுத்து நிறுத்துவது என்று கருதி யார் வேண்டுமானாலும் வந்து நிறுத்திப் பார்க்கட்டும். ஆனால் குரங்குச் சேனைகள் கூட்டம் கூட்டமாக இறந்து படும்; என் வெற்றித்திறத்தையும், அற்பமான மானிடர்களாகிய இராம இலக்குவர்அடையப்போகும்துன்பத்தையும், நீ கூறிய அதே தேவர்களும், முனிவர்களும் விண்ணுலகிலிருந்து காணத்தான் போகிறார்கள்'' என்று மறுமொழி கூறுகிறான் இந்திரசித்து.

அனுமன் முன்பு கூறிய அதே சொற்றொடரை, இங்கே இந்திரசித்தனும் பயன்படுத்துவதை நோக்குக.

Koviloor Digital Library

82. "யானுடை வில்லும், என் பொன் தோள்களும் இருக்க, இன்னும்
ஊனுடை உயிர்கள் யாவும் உய்யுமோ, ஒளிப்பு இலாமல்?
கூனுடைக் குரங்கினோடு மனிதரைக் கொன்று, சென்று, அவ்
வானினும் தொடர்ந்து கொல்வென்; மருந்தினும் உய்ய மாட்டீர்!" (9098)

(பொன்-திண்ணிய; ஊன்-உடம்பு; உய்தல்-பிழைத்தல்; தொடர்தல்-பின்பற்றிச் செல்லுதல்)

''நான் என் கையில் கொண்டிருக்கின்ற இந்த விற்படையும், என்னுடைய அழகிய திண்மையான தோள்வலியும் இன்னும் ஊறுபடாமல் இருக்கும்பொழுது, என்னுடன் போர் செய்யும்போது உடம்பு உடைய உயிரினங்கள் ஏதேனும் ஓடி ஒளிந்து கொள்ளாமல் உயிரோடு பிழைத்திருக்கமுடியுமோ? வளைந்த உடம்பினையுடைய குரங்குகளோடு, மனிதர்களாகிய இராமஇலக்குவரையும் கொன்று, அவர்கள் வீரசுவர்க்கம் எய்தி விண்ணுலகு சென்றாலும், அங்கேயும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று, கொன்றுவிடுவேன். முன்புபோல சஞ்சீவி மருந்தினால்கூட உங்களால் உயிர்பிழைத்திருக்க முடியாது'' என்று உறுதிபடக் கூறுகிறான் இலக்குவன்.

''யானுடை'' என்பது என்னுடைய என்ற பொருளைத்தரும். ''உய்யுமோ'' என்பதில் உள்ள ஓகாரம் உய்யாது, பிழைத்திருக்க முடியாது என்ற எதிர்மறைப் பொருளைத்தரும். ''மருந்தினும்'' என்பதில் உள்ள உம்மை உயர்வு சிறப்பு உம்மை.

83. "வேட்கின்ற வேள்வி இன்று பிழைத்தது; வென்றோம்" என்று,
கேட்கின்ற வீரம் எல்லாம் கிளத்துவீர்! கிளத்தல் வேண்டா;
தாழ்க்கின்றது இல்லை; உம்மைத் தனித்தனித் தலைகள் பாறச்
சூழ்க்கின்ற வீரம் என்கைச் சரங்களாய்த் தோன்றும் அன்றே!" (9099)

(வேட்டல்-விரும்பிச்செய்தல்; பிழைத்தல்-தவறுதல்/அழிதல்; கிளத்தல்-எடுத்துரைத்தல்; தாழ்க்கின்றது-காலதாமதம் செய்தல்; பாறுதல்-சிதறுதல்/கொய்தல்; சூழ்க்கின்றது-ஆராய்ந்து செய்தல்; சரம்-அம்பு; தோன்றும்-காட்டும்)

இந்திரசித்து அனுமனை நோக்கி, ''நான் விரும்பிச் செய்கின்ற இந்த வேள்வி நிறைவேறாது அழிந்துவிட்டது; அதனால் நாங்களே வெற்றி பெற்றோம்'' என்று மகிழ்ந்து வீரவாதம் செய்பவர்களே! நீங்கள் அவ்வாறு எடுத்துரைத்துப் புகழ்ந்து கொள்ள வேண்டாம். நான் இனிச் சற்றும் தாமதிக்கமாட்டேன்; உங்களது தலைகளைத் தனித்தனியாகச் சிதறச் செய்வதற்கு நான் ஆராய்ந்து எண்ணியுள்ள வீரத்தன்மை, என்னுடைய வாய்வார்த்தைகளால் சொல்ல இயலாது. என்னுடைய அம்புகளே உங்கள்

Koviloor Digital Library

தலையைத் துணித்துக்காட்டும்'' என்று அனுமன் கேள்விக்கு மறுமொழி கூறுகிறான் இந்திரசித்து.

''அவர்கள் வாய்ச்சொல்லால் கிளத்துவர், நான் என் கைச்சரங்களால் காட்டுவேன்'' என்று வாய்வீரம் பற்றியும், செயல் வீரம் பற்றியும் கூறும் நயம் நோக்குக. ''சூழ்கின்ற'' என்பது ''சூழ்க்கின்ற'' என்று எதுகை நோக்கித் திரிந்தது. ''சூழ்தல்'' என்ற தன்வினைச் சொல் ''சூழ்த்தல்'' என்ற பிறவினைச் சொல்லாகக் கையாளப்பட்டிருப்பதையும் நோக்குக.

84. "மற்றெலாம் நும்மைப்போல, வாயினால் சொல்லமாட்டேன்;
வெற்றிதான் இரண்டும் தந்தீர்; விரைவது வெல்லற்கு ஒல்லாம்;
உற்று நான் உருத்த காலத்து ஒருமுறை எதிரே நிற்கக்
கற்றிரோ? இன்னம் மாண்டு கிடத்திரோ? நடத்திரோதான்?" (9100)

(உற்று-அடைந்து; உருத்தல்-வெகுள்தல்; நடத்தல்-அகன்று செல்லுதல்; ஒல்லுதல்-முடிதல்; ஒல்லா-இயலாது/முடியாது)

''என்னுடைய பிற வெற்றிகளை எல்லாம், உங்களைப்போல் நான் வாயினாற் சொல்லிக் கொண்டிருக்கமாட்டேன். எனக்குமுன்பும் இரண்டு வெற்றிகளைத் தந்தீர்கள்; இப்பொழுது நீங்கள் அவசரப்படுவது என்னை வெல்லுவதற்காகவா? அது நடவாது; நான் முன்பு உங்களை அடைந்து மிக்க சீற்றம்கொண்டு எதிர்ந்து வந்த பொழுது, என்முன்னே ஒரு முறை யாவது நிற்கக் கற்றுக் கொண்டீர்களா? இப்பொழுதும் போர்க்களத்தில் இறந்து கிடக்கத்தான் போகிறீர்களா? அல்லது பயந்து போர்க்களத்தை விட்டே ஓடிப்போகப் போகிறீர்களா?'' என்று ஏளனமாகக் கேட்கிறான் இந்திரசித்து.

''வெற்றிதான் இரண்டும் தந்தீர்'' என்பது முன்பு நாகபாசத்தால் இலக்குவனைக் கட்டுண்ணச் செய்ததும், பின்னர் அவனையும் வானரச்சேனையையும் பிரமாஸ்திரத்தால் மடிந்து போகச் செய்ததையும், அவன் தன்னுடைய வெற்றி என்று கூறிக்கொள்ளுகிறான்.

85. இந்திரசித்து போர்க்கோலம் பூணுதல்

"நின்மின்கள்; நின்மின்!'' என்னா, நெருப்புஎழ விழித்து, நீண்ட
மின்மின்கொள் கவசம் இட்டான்; வீக்கினான் தூணி; வீரப்
பொன்மின் கொள்கோதை கையில் பூட்டினான்; பொறுத்தான், போர்வில்;
எல்மின்கொள் வயிரத் திண்தேர் ஏறினான்; எறிந்தான் நாணி. (9101)

(நின்மின்-நில்லுங்கள்; வீக்குதல்-கட்டுதல்; மின்-ஒளி; கோதை-விரல் உறை; பூட்டுதல்-அணிந்துகொள்ளுதல்; பொறுத்தல்-தாங்குதல்/ஏந்துதல்; எல்-சூரியன்; எறிதல்-தெறித்தல்)

Koviloor Digital Library

இந்திரசித்து அனுமனை நோக்கி, ''அவ்வாறு நீங்கள் போர்க்களத்தை விட்டு அகன்று செல்ல விரும்பவில்லை என்றால் இங்கேயே நில்லுங்கள், நில்லுங்கள் என்று கண்களில் நெருப்புப்பொறி பரக்க விழித்து நோக்கி, நீண்ட மின்னல்போல் மிக்க ஒளிவீசுகின்ற கவசத்தைப் பூட்டிக் கொண்டான். அம்பறாத்தூணியைத் தோளில் கட்டிக்கொண்டான்; பொன் போல் மின்னுகின்ற வீரம் மிக்க விரலுறையைக் கையில் அணிந்து கொண்டான்; போர்செய்தற்குரிய விற்படையைக் கைகளில் தாங்கிக் கொண்டான்; சூரியன்போல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் திண்ணிய தேரில் ஏறிக்கொண்டான்; வில்லின் நாண் ஒலி எழுப்பினான்.

நிகும்பலையில் வேள்வி செய்தற்குரிய ஆடைகளை அணிந்திருந்த இந்திரசித்து இப்போது வேள்வி தடைப்பட்டதால் போருக்கு ஆயத்த மாகிப் போர்செய்தற்குரிய கவசம், அம்பறாத்தூணி, கையுறை, வில் போன்றவற்றைத் தாங்கிக் கொண்டு தேரில் ஏறி நாண்ஒலி எழுப்பினான் என்பதாம். மூன்று அடிகளிலும் 'கொள்' என்றசொல் கொண்ட, போன்ற, பொருந்திய என்ற பொருள்களைத்தரும்.

86. ஊதினான் சங்கம், வானத்து ஒண்தொடி மகளிர் ஒண்கண்
மோதினார்; கணத்தின் முன்னே முழுவதும் முருக்கி முற்றக்
காதினான் என்ன, வானோர் கலங்கினார்; கயிலையானும்
போதினான்தானும், 'இன்று புகுந்தது பெரும்போர்' என்றார். (9102)

(ஒண்-ஒளி; தொடி-வளையல்; கணம்-நொடிப்பொழுது; முருங்க-அழிக்கும்படி; காதுதல்-கொல்லுதல்; வானோர்-தேவர்கள்; போது-மலர்/தாமரை; புகுதல்-உண்டாகுதல்/தொடங்குதல்)

அவ்வாறு நாணொலி எழுப்பிய இந்திரசித்து போர் தொடங்குதலைக் குறித்து போர்ச்சங்கு எடுத்து ஊதினான். அதனைக் கேட்ட வானுலகத்தில் உறையும் ஒளிமிகுந்த வளையலணிந்த தேவமகளிர் அனைவரும் தங்களது ஒளிபொருந்திய கண்களை அச்சம்கொண்டு தங்கள் கைகளினால் அடித்துக்கொண்டார்கள்; இவன் ஒரு நொடிப்பொழுதில் பகைவர்கள் அனைவரையும் முற்றமுழுக்க வளைத்து அழித்துவிடுவானே'' என்று தேவர்கள் எல்லாம் மனக்கலக்க முற்றனர். கயிலை மலையில் வீற்றிருக்கும் சிவபெருமானும் தாமரைமலரில் உறையும் பிரமதேவனும் ''இன்று ஒரு பெரும்போர் நடக்க இருக்கிறது'' என்று கூறினார்கள்.

'ஒண்கண் மோதினார்' என்பது தேவர்களைப்போல் தேவமகளிரும் இமைப்பிலா நாட்டம் கொண்டவர்கள். எனவே அவர்கள் கண்களுக்கு இமைக்கும் தன்மை இல்லாததால் மூடிக்கொள்ள முடியாது. எனவே தங்கள் கைகளால் கண்களை மூடிக்கொண்டார்கள் என்ற அழகிய, விரிந்த பொருளைத்தரும் ஒரு சொற்றொடர்.

Koviloor Digital Library

87. "இழைத்தபேர் யாகம்தானே, யாம்செய்த தவத்தினாலே,
பிழைத்தது; பிழைத்ததேனும், வானரம் பிழைக்கல் ஆற்றா;
அழைத்தது விதியே கொல்?" என்று அஞ்சினார் "அம்பினோடும்
உழைத்தது காண்கின்றோம்' என்று உணங்கினார், உம்பர் உள்ளார்.
(9103)

(இழைத்தல்-செய்தல்/இயற்றுதல்; பிழைத்தல்-தவறுதல்; உழைத்தல்-வருந்துதல்; உணங்குதல்-வாட்டமடைதல்; உம்பர்-தேவலோகம்)

''இந்திரசித்து தொடங்கிய யாகம் தடைப்பட்டு நின்று போனதற்கு நாங்கள் இயற்றிய தவம்தான் காரணம்; வேள்வி முற்றுப் பெறவில்லையென்றாலும், வானரச்சேனைகள் உயிருடன் பிழைத்திருக்கமாட்டாதன. இலக்குவனையும், வானரச் சேனையையும் இங்கு அழைத்து வந்தது அவர்களின் விதிப் பயன்போலும்'' என்று வானுலகத்தில் உள்ள தேவர்கள் அச்சம்கொண்டு, இப்போது இந்திரசித்தன் அம்பினால் வானரச்சேனைகள் தாக்கப்பெற்றுத் துன்புறுத்தப்படுவதை நாம் காணப்போகிறோமே'' என்று வாட்டமுற்று மனம் வருந்தினார்கள்.

இந்திரசித்து இயற்றத்தொடங்கிய யாகம் பாதியிலேயே தடைப்பட்டு நின்று போனது தேவர்கள் தாங்கள் செய்த தவத்தினால்தான் என்று கருதுகிறார்கள். அதே சமயம் இலக்குவனும் வானரச்சேனையும் இந்திரசித்தன் அம்புகளால் தாக்கப்படுவார்களே என்று வாட்டமும் வருத்தமும் கொள்ளுகிறார்கள் என்பதாம்.

88. நாண்தொழில் ஓசை வீசிச் செவிதொறும் நடத்தலோடும்,
ஆண்தொழில் மறந்து, கையின் அடுக்கிய மரனும் கல்லும்,
மீண்டன மறிந்து சோரவிழுந்தன; விழுந்த, "மெய்யே
மாண்டனம்" என்றே உன்னி, இரிந்தன குரங்கின் மாலை. (9104)

(வீசுதல்-பரவுதல்; நடத்தல்-சென்றுசேர்தல்; மாலை-வரிசைகள்/அணி; மரன்-மாம்; மறிதல்-மடங்குதல்; மெய்-உண்மை/நிச்சயம்; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; நாண்தொழில்-நாண்ஒலி எழுப்புதல்; ஆண்தொழில்-ஆண்மை/வீரத்திறம்; சோர்தல்-நழுவுதல்; உன்னுதல்-எண்ணுதல்)

அவ்வாறு இந்திரசித்து எழுப்பிய நாண்ஒலி வானரப் படையினரின் செவிகள் எல்லாம் சென்றுசேர்ந்த அளவில், வானரவீரர்கள் தங்கள் ஆண்மைத் தொழிலாகிய வீரத்திறத்தை பகைவர்மேல் செலுத்தாது சற்று மறந்து போனதால், தங்கள் கைகளில் அடுக்கடுக்காகக் கொண்டிருந்த மரங்களும், மலர்களும் திரும்பத் தரையில் நழுவி விழுந்தன; அவை விழுந்ததும் தாமும் சோர்ந்து தரையில் விழுந்தன. ''இப்போது நாம்

Koviloor Digital Library

நிச்சயம் இறந்துபடுவோம்'' என்று கருதி, வானரச்சேனையின் வரிசைகள் எல்லாம் நிலைகுலைந்து ஓடலாயின.

'நாண்தொழில்' என்பது வில்லினின்றும் எழுப்பப்பெறும் நாணின் ஓசையைக் குறித்தது. 'ஆண்தொழில்' என்பது ஆண்மைக்குரிய வீரத்தைக் குறித்தது. 'மரன்' என்பது 'மரம்' என்பதன் ஈற்றுப்போலி. முன்பும் இது போல இராவணன் எழுப்பிய நாண்ஒலி கேட்டு வானரச்சேனை நிலை குலைந்து ஓடியதையும் இங்கு நினைவுகூர்க. ''மாண்டனம்'' என்று இறந்தகாலத்தில் கூறப்பட்டது துணிவு பற்றி வந்த காலவழுவமைதி எனக்கொள்க.

89. படைப்பெரும் தலைவர் நின்றார்; அல்லவர், இறுதி பற்றும்
அடைப்ப அரும் காலக் காற்றால் ஆற்றலது ஆகிக் கீறிப்
புடைத்து இரிந்து ஓடும் வேலைப்புனல் என, இரியலுற்றார்;
கிடைத்த பேர் அனுமன், ஆண்டு ஓர் நெடுங்கிரி கிழித்துக் கொண்டான்.
(9105)

(பற்றுதல்-தருதல்; காலம்-ஊழிக்காலம்; கீறுதல்-பிளத்தல்; புடைத்தல்-தாக்கப்படுதல்; வேலை-கடல்; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; கிடைத்தல்-எதிர்த்து நிற்றல்; ஆண்டு-அவ்விடம்; கிழித்தல்-பெயர்த்தெடுத்தல்; அடைதல்-தடுத்தல்; ஆற்றுதல்-பொறுத்தல்/தாங்குதல்; இறுதி-முடிவு/அழிவு)

அவ்வாறு இந்திரசித்து எழுப்பிய நாண்ஒலியைக் கேட்டும், வானரப் பெரும் படையின் தலைவர்கள் மட்டும் அஞ்சாது போர்க்களத்தைவிட்டு அகலாது நின்றார்கள்; தலைவர்களல்லாத மற்ற வானரவீரர்கள் அழிவைத் தருவதும், தடுத்தற்கரியதுமான ஊழிக்காலப் பெருங்காற்றின் வேகத்தைத் தாங்கமாட்டாது, பிளவுபட்டு, பக்கங்களிலெல்லாம் முட்டி மோதி நிலைகெட்டு ஓடும் கடல்வெள்ளம் போல, நிலைகெட்டுச் சிதறி ஓடலானார்கள்; ஆனால் அங்கே இந்திரசித்தை எதிர்த்துத் தனியே நின்ற போர்த்தொழிலில் வல்லவனும் பெருமைக்குரியவனுமான அனுமன் மட்டும் ஒரு பெரிய மலையைப் பூமியினின்றும் பெயர்த்தெடுத்து, இந்திரசித்தை நோக்கி வீசுவதற்காகக் கையில் ஏந்திக்கொண்டான்.

''படைப்பெரும் தலைவர்'' என்பது சேனாபதிகளைக் குறித்தது.

90. இந்திரசித்தும் அனுமனும் போர்புரிதல்

''நில் அடா! நில்லு நில்லு! நீ அடா! வாசி பேசிக்
கல் எடா நின்றது என்னைப் போர்க்களத்து, அமரர் காண,
கொல்லலாம் என்றோ? நன்று; குரங்கு என்றால் கூடும் அன்றே?
நல்லை; போர், வா, வா!'' என்றான், நமனுக்கும் நமனாய் நின்றான்.
(9106)

Koviloor Digital Library

(நமன்-இயமன்/கூற்றுவன்; வாசி-வேறுபாடு; எடாநின்றது-எடுப்பது; கூடுதல்-பொருந்துதல்/சரியாதல்; நல்லை-நல்ல ஆண்மை யுடையவன்; கூடும்-தகும்)

பகைவர்களுடைய உயிரைப் போக்குவதில் இயமனுக்கும் மேம்பட்ட இயமனானவனான இந்திரசித்து, பெரிய மலையைத் தன் கையில் கொண்டுள்ள அனுமனை நோக்கி ''நில்லடா நில், என்னை வேறுபட்ட மொழிகளில் இகழ்வாகப் பேசிக்கொண்டே, பெரிய மலையைக் கையில் எடுத்துக் கொண்டுள்ளாயே இது எதற்கு? தேவர்கள் எல்லாம் காணும்படி போர்க்களத்தில் என்னைக் கொன்றுவிடலாம் என்று பார்க்கின்றாயா? நல்லது; குரங்கான உனக்கு இது தகுதியான செயல்தான். நீ ஆண்மை மிக்க நல்லவன்தானே! வா என்னுடன் போர்செய்ய வருவாயாக'' என்று கூவி அழைக்கிறான் இந்திரசித்து.

'வாசி பேசுதல்' என்பது வேறுபட்ட இழிந்த மொழிகளில் பேசுதல் என்றும், நன்றாகப் பேசுதல் என்றும் இரு பொருளையும்தரும். பொது வாகக் குரங்குகளுடன் போர்செய்தல் தன் தகுதிக்கு இழுக்காகும் என்று கருதுகிற இந்திரசித்து, அனுமன் போர்புரிதற்குரிய ஆற்றல்பெற்ற நல்லவன் என்பதனால், அவனுடன் போர்செய்வது தன் தகுதிக்குக் குறைவானதாகாது என்று எண்ணி அவனைப் போருக்கு வரும்படி அழைக்கிறான் என்க. 'ஏடா, அடா' என்பனவெல்லாம் தன்னினும் இழிந்தாரைக் கூவியழைக்கும் விரைவு பற்றிவந்த விளிச்சொற்கள். இவ்வாறு கூவியழைப்பதையும் மூன்று முறைக்குமேல் கூவக்கூடாது என்கிறது தொல்காப்பியம் கேளுங்கள். 'விரைச்சொல் அடுக்கே மூன்று வரம்பாகும்' என்பது தொல்காப்பியம்.

91. வில்லெடுத்து உருத்து நின்ற வீரருள் வீரன் நேரே,
கல்லெடுத்து எறிய வந்த அனுமனைக் கண்ணின் நோக்கி,
"மல் எடுத்து உயர்ந்த தோளாற்கு, என்கொலோ வலியது?" என்னா,
சொல் எடுத்து அமரர் சொன்னார்; தாதையும் துணுக்கம் உற்றான். (9107)

(எடுத்து-கைக்கொண்டு/ஏந்தி; உருத்தல்-வெகுள்தல்; நேரே-எதிரே/முன்னே; கல்-மலை; மல்-மற்போர்; சொல்-புகழ்; தாதை-தந்தை/வாயுதேவன்; துணுக்கம்-நடுக்கம்)

தன் கைகளில் உள்ள வில்லில் நாணேற்றி, சீற்றமுற்று நின்ற வீரர்களுக் கெல்லாம் வீரனாகிய இந்திரசித்தன் எதிரே, தன் கையில் ஒரு பெரிய மலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு, அவன் மீது எறிதற்காக நின்ற அனுமனைத் தம் கண்களால் உற்று நோக்கித் தேவர்கள், மற்போரில் வல்லவனான அனுமனது தோள் வலிமையைப் புகழ்ந்துபேசி, ''இத்தகை யவனால் செய்யமுடியாதது என்று ஒன்று உளதோ?'' என்று வியந்து புகழ்ந்து நின்றனர். இந்நிலையைக் கண்ட அனுமனின் தந்தையாகிய

Koviloor Digital Library

வாயுதேவனும், தன் மைந்தன் அனுமனுக்கு என்ன நேருமோ? என்று சற்று நடுக்கம் கொண்டான்.

இங்கும் இந்திரசித்தனைக் கவிஞன், ''வீரருள் வீரன்'' என்று புகழ்வதை நோக்குக. ''சொல் எடுத்துச் சொல்லுதல்'' என்பது, அவனது புகழை உயர்த்திக்கூறிப் புகழ்தல் என்று பொருள்படும்.

92. வீசினன் வயிரக் குன்றம்; வெம்பொறிக் குலங்கள் விண்ணின்
ஆசையின் நிமிர்ந்து செல்ல; ஆயிரம் உரும் என்று ஆகப்
பூசின பிழம்பு இது" என்ன வரும் அதன் புரிவை நோக்கிக்
கூசின உலகம் எல்லாம்; குலைந்தது அவ்வரக்கர் கூட்டம். (9108)

(ஆசை-திசைகள்; குலம்-கூட்டம்/திரள்; நிமிர்ந்து உயர்ந்து; வயிரம்-திண்மை; உரும்-இடி; பூசுதல்-சேருதல்; பிழம்பு-வடிவம்/திரட்சி; புரிவு-செயல்; கூசுதல்-அஞ்சுதல்; குலைதல்-நிலைகெடுதல்)

ஆகாயத்திலும், எல்லாத் திசைகளிலும் வெப்பம்மிக்க தீப்பொறிகளின் திரள் உயர்ந்து பரவிச்செல்லுமாறு, அனுமன் தான் கைக்கொண்டிருந்த திண்ணிய மலையை அரக்கர்கள்மேல் வீசியெறிந்தான்; ஆயிரம் இடிகள் ஒன்றுசேர்ந்து இயைந்துவந்த ஒரு பெரிய பிழம்புபோலத் தோற்றம் கொண்டு வருகின்ற அம்மலையின் செயலைக் கண்டு, இவ்வுலக மக்கள் எல்லாம் அஞ்சினர்; அதனால் அவ்வரக்கர் கூட்டம் முழுவதும் நிலைகெட்டுச் சிதறி ஓடலாயின.

'புரிவு' என்ற சொல் செயல் என்ற பொருள்தரும். நமக்குப் புதியசொல் புதியபொருள்.

93. குண்டலம் நெடுவில்வீச, மேருவின் குவிந்த தோளான்,
அண்டமும் குலுங்க ஆர்த்து, மாருதி, அசனி அஞ்ச,
விண்தலத்து எறிந்த குன்றம், வெறுந்துகள்ஆகி வீழக்
கண்டனன்; எய்த தன்மை கண்டிலர், இமைப்புஇல் கண்ணார். (9109)

(குண்டலம்-காதணி; நெடுவில்-பேரொளி; வீசுதல்-பரப்புதல்; குவிந்த-திரண்ட; அசனி-இடி; காணுதல்-செய்தல்)

காதில் அணிந்திருக்கும் குண்டலங்கள் பேரொளியைப் பரப்ப, மேரு மலையைப் போன்று திரண்டு உயர்ந்த தோளினை உடையவனான இந்திரசித்து, இவ்வண்டகோளமே குலுங்கும் படிப் பேராரவாரம் செய்து, இடியே அச்சம் கொள்ளும்படி அனுமன் வானத்தில் வீசியெறிந்த அந்த மலையைத் தன் அம்பினால் வெறும் தூள்தூளாகிப் போகும்படிச் செய்து, அதைத் தரையில் வீழ்த்தச் செய்தான்; இவ்வாறு அவன் விரைந்து செய்த செயலை, இமையா நாட்டமுடைய தேவர்களால்கூடக் காணமுடிய வில்லை.

Koviloor Digital Library

இந்திரசித்தன் பேராற்றல் புலப்படுத்தப்பட்டது. முன்பு 'எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்' என்று கூறியதுபோல இப்பொழுது 'வீழக்கண்டனன், எய்ததன்மை கண்டனர் கண்டிலர்' என்று கூறுவதையும் ஒப்பிட்டு நோக்குக. இமையா நாட்டமுடைய தேவர்கள்கூட அம்மலை துகளாகிப்போனதைக் கண்டார்களே அன்றி, இந்திரசித்து அம்பு செலுத்தி அதை வீழ்த்தித் தூளாக்கிய தன்மையைக் காணவில்லை-காணமுடிய வில்லை என்பதாம். 'கண்டனன்' என்ற சொல், செய்தான் என்ற பொருளைத் தரும். காணுதல்-செய்தல்.

94. மாறுஒரு குன்றம் வாங்கி மறுகுவான் மார்பில்,தோளில்,
கால்தரு காலில், கையில், கழுத்தினில், நுதலில், கண்ணில்,
ஏறின என்ப மன்னோ; எரிமுகக் கடவுள் வெம்மை
சீறின பகழிமாரி, தீக்கடு விடத்தின் தோய்ந்த. (9110)

(மாறு-மாற்று/வேறு; வாங்குதல்-பெயர்த்தெடுத்தல்; மறுகுதல்-சுழன்றுதிரிதல்; கால்-காற்று; தரு-போன்ற/ஒத்த; நுதல்-நெற்றி; கடு-நஞ்சு; எரிமுகக்கடவுள்-அக்னிதேவன்; சீறுதல்-சினத்தல்; தோய்தல்-ஊன்றித்தைத்தல்/பதிதல்; ஏறுதல்-பாய்தல்; என்ப-என்றுகூறுவர்)

தான் முன்பு செலுத்திய மலை, இந்திரசித்தனால் துகளாக்கப்பட்டதால் வேறுஒரு மலையைப் பெயர்த்தெடுத்து அதனை வீசியெறிவதற்காகச் சுழன்று திரிந்து கொண்டிருந்த அனுமனின் மார்பிலும், தோள்களிலும், காற்றைப்போன்று விரைவும், வலியும் படைத்த அவனது கால்களிலும், கைகள், கழுத்து, நெற்றி, கண்கள் என்ற எல்லா உறுப்புக்களிலும், இந்திர சித்து தீயை ஒத்த கடுமையான நஞ்சு பூசப்பட்டதும், அக்னிதேவனின் வெம்மையையே சினந்து, கீழ்ப்படுத்தி யனவுமாகிய அம்பு மழையைப் பாயச் செய்தான் என்று கூறுவார்கள்.

95. வெதிர் ஒத்த சிகரக்குன்றின், மருங்குஉற விளங்கலாலும்,
எதிர்ஒத்த இருளைச்சீறி எழுகின்ற இயற்கையாலும்,
கதிர்ஒத்த பகழிக்கற்றை கதிர்ஒளி காட்டலாலும்,
உதிரத்தின் செம்மையாலும், உதிக்கின்ற கதிரோன் ஒத்தான். (9111)

(வெதிர்-மூங்கில்; மருங்கு-அருகே; கீறுதல்-கிழித்தல்; கதிர்-சூரியன்; கற்றை-தொகுதி; காட்டுதல்-தோற்றுவித்தல்; உதிரம்-இரத்தம்; கதிரோன்-சூரியன்; சிகரம்-உச்சி; இயற்கை-தன்மை/இயல்பு)

மூங்கில் மரங்கள் நிறைந்த உச்சியையுடைய மலையின் அருகே விளங்கித் திகழ்வதாலும், எதிரே தோன்றுகின்ற இருட்பிழம்பைத் துரத்துகின்ற தன் உடம்பின் இயற்கையான ஒளியினாலும், சூரியனின் கிரணங்கள்போலத் தன் உடம்பில் தைத்திருக்கும் அம்புகள் ஒளிவிட்டுத் தோன்றுவதாலும், அவன் உடலினின்றும் இந்திரசித்தன் எய்த அம்பு

Koviloor Digital Library

களில் உண்டான புண்களில் தோன்றும் சிவந்த இரத்தத்தினாலும், அனுமன் உதயகிரியில் உதிக்கின்ற சிவந்த சூரியனைப் போன்று தோன்றினான்.

மலைக்கு அருகில் நின்றிருந்ததால் இருளைவிட்டு ஒளி பாய்ச்சுதல்; உடம்பில் பதிந்திருக்கும் அம்புகள் கிரணங்கள் போல் தோன்றுதல்; உடம்பினின்றும் வழியும் இரத்தத்தின் சிவந்த நிறம், ஆகியவற்றால் அனுமன் உதயசூரியனுக்கு உவமை. இப்பாடல் ஏதுத் தற்குறிப்பேற்ற அணியின் பாற்படும்.

96. இந்திரசித்து இலக்குவன் பற்றி வினவுதல்

ஆயவன் அயர்தலோடும், அங்கதன் முதல்வர் ஆனோர்,
காய்சினம் திருகி, வந்து கலந்துளார் தம்மைக் காணா,
'நீயிர்கள் நின்மின், நின்மின்; இருமுறை நெடிய வானில்
போயவன் எங்கே நின்றான்?'' என்றனன் பொருள் செயாதான். (9112)

(அயர்தல்-சோர்வுறுதல்/தளர்ந்துபோதல்; காய்சினம்-மிக்க சீற்றம்; திருகுதல்-மாறுபடுதல்; கலந்தவர்-கூடியவர்கள்; காணா-கண்டு; நீயிர்கள்-நீங்கள்; நின்மின்-நில்லுங்கள்; வான்-துறக்கம்; போயவன்-இலக்குவன்; ஆயவன்-அனுமன்; பொருஃசெய்தல்-மதித்தல்; வானில்போதல்-இறந்து படுதல்)

அத்தகையவனான அனுமன் சற்றுத் தளர்ந்து சோர்வுற்றிருந்த போது, அங்கே அங்கதன் முதலான படைத்தலைவர்கள் எல்லோரும் மிக்க சீற்றம் கொண்டு, ஒன்றுபட்டுக் கலந்து வந்தார்கள். அவர்களைக் கண்ட இந்திர சித்து, அவர்களை ஒரு பொருட்டாக மதிக்காமல், ''நீங்கள் எல்லோரும் சற்று நில்லுங்கள்! நில்லுங்கள்! முன்பு என்னுடன் போரிட்டு நாக பாசத்தால் ஒரு முறையும், மறுபடி என்னுடைய பிரமாஸ்திரத்தால் ஒரு முறையும் இறந்துபோய் வீரசுவர்க்கம் அடைந்த அந்த இலக்குவன் எங்கே நிற்கின்றான்?'' என்று வினவினான்.

''நீயிர்கள்'' என்பது புதிய சொல்லாட்சி. எதுகை நோக்கி வந்தது எனவும் கொள்ளலாம். நீங்கள் என்பது பொருள். 'இருமுறை' என்பது ஒருமுறை நாகபாசத்தாலும், இன்னொருமுறை பிரமாஸ்திரத்தாலும் கட்டுண்டு இறந்து கிடப்பதைக் குறிக்கும். 'வானில் போயவன்' என்பது இறந்துபட்டவன் என்பதன் மங்கலச்சொல் எனக்கொள்க. 'பொருள் செயாதான்' என்பது ஒரு பொருட்டாக மதிக்காதவன் என்ற பொருளில் இந்திரசித்தனைக் குறித்தது. 'நின்மின், நின்மின்' என்ற அடுக்கு விரைவு பற்றி வந்தது. அவர்களுடன் அவன் போர்செய்ய விரும்பவில்லை. எனவே அவர்களைப் போர்செய்ய முற்படாதவாறு தடுக்கிறான் என்பதாம்.

Koviloor Digital Library

97. வெம்பினர் பின்னும் மேன்மேல் சேறலும், வெகுண்டு,
"சீயம் தும்பியைத் தொடர்வதல்லால், குரங்கினைச் சுளிவதுண்டோ?
அம்பினை மாட்டி, என்னே சிறிது போர் ஆற்ற வல்லான்,
தம்பியைக் காட்டித் தாரீர்; சாதிரோ, சலத்தின்?" என்றான். (9113)

(வெம்புதல்-வெகுள்தல்; சீயம்-சிங்கம்; தும்பி-யானை; மாட்டுதல்-செலுத்துதல்; என்னே-என்னபயன்; சலம்-சினம்/கோபம்; சாதல்-இறத்தல்)

இந்திரசித்து அவ்வாறு கூறியதனால் மனம் நொந்துபோன அங்கதன் முதலானோர் மேலும்மேலும் சினம் பெருகப்பெற்று அவனை நெருங்குதலும், அவன் ''சிங்கம் போன்று வீரத்தில் சிறந்த நான், யானைபோன்று பேராற்றல் படைத்த இலக்குவனோடு தொடர்ந்து சென்று போர் செய்வேனேயன்றி, அற்பமான குரக்கினத்தவராகிய உங்களுடன் முரண் பட்டுப் போர்செய்வது தகுதியாகுமோ? என்னுடைய அம்பு உங்கள்மீது செலுத்தப் படுவதால் என்னபயன்? போர் செய்யும் ஆற்றல் பெற்றவனான இராமபிரானின் தம்பியாகிய இலக்குவன் இருக்கும் இடத்தை எனக்குச் சொல்லுங்கள்; சொல்லப் போகிறீர்களா? அல்லது என்னுடைய கோபத்திற்கும், என்னுடைய அம்பிற்கும் ஆளாகிச்சாகப்போகிறீர்களா?'' என்று மிரட்டுகிறான் இந்திரசித்து.

சீயம் இந்திரசித்துக்கும், தும்பி இலக்குவனுக்கும் உவமை. 'சீயம் தும்பியைத் தொடர்வதல்லால் குரங்கினைச் சுளிவதுண்டோ?' என்பது அருமையான ஒரு உவமை.

98. "அனுமனைக் கண்டிலீரோ? அவனினும் வலியிரோ? என்
தனு உளதன்றோ? தோளின் அவ்வலி தவிர்ந்ததுண்டோ?
இனும் முனை நீர் அலீரோ? எவ்வலி ஈட்டி வந்தீர்?
மனிசனைக் காட்டி, நும்தம் மலைதொறும் வழிக் கொளீரே?" (9114)

(தனு-வில்; தவிர்தல்-குறைந்துபோதல்; முனை-போர்க்களம்; தீர்தல்-நீங்குதல்; ஈட்டுதல்-பெறுதல்; வழிக்கொள்ளுதல்-திரும்பிச்செல்லுதல்)

இந்திரசித்து அங்கதன் முதலியோரை நோக்கி, ''நான் செலுத்திய அம்பினால் தாக்கப்பட்டுச் சோர்ந்து கிடக்கின்ற அனுமனை நீங்கள் பார்க்கவில்லையா? அவனைக் காட்டிலும் நீங்கள் எல்லோரும் மிக்க வலிமை படைத்தவர்களா? என்னுடைய வில் இன்னும் சற்றும் குறைவுபடாது என்னிடம்தான் இருக்கிறது. என்னுடைய தோளாற்றலும் முன்னைப்போலவே நன்கு வலிமை மிக்கதாய் உள்ளது. அது சற்றும் தளர்வடையவில்லை; இன்னும் நீங்கள் போர்க்களத்தை விட்டு நீங்கிச் செல்லவில்லையா? முன்பிருந்ததைவிட இப்பொழுது அப்படியென்ன புதிய வலிமையைப் பெற்றுக்கொண்டு வந்து விட்டீர்கள்? பேசாமல் அந்த

Koviloor Digital Library

மனிதனாகிய இலக்குவனை எனக்குக் காட்டிவிட்டு, நீங்கள் முன்பு வந்த மலைகள் வழியாகத் திரும்பிச் சென்றுவிடுங்கள்'' என்று எச்சரிக்கிறான் இந்திரசித்து.

'வழிக்கொள்ளுதல்' என்பது திரும்பிச் செல்லுதலைக் குறித்தது.

99. என்று உரைத்து இளவல் தன்மேல் எழுகின்ற இயற்கை நோக்கி,
குன்றமும் மரமும் வீசிக் குறுகினார்; குழாங்கள் தோறும்
சென்றன பகழிமாரி, மேருவை உருவித் தீர்வ,
ஒன்றுஅல, கோடிகோடி நுழைந்தன; வலியும் ஓய்ந்தார். (9115)

(இயற்கை-தன்மை; குன்றம்-மலைகள்; குறுகுதல்-நெருங்குதல்; குழாங்கள்-கூட்டம்; ஓய்தல்-இழத்தல்/தளர்தல்)

அவ்வாறு இந்திரசித்து கூறிக்கொண்டே, இலக்குவன்மீது போர் தொடுத்து அம்புகளைப் பொழிய நின்ற தன்மையை நோக்கி, வானரவீரர்கள் அவனை நெருங்கிச்சென்று தாம் கைகளில் கொண்டிருந்த மலைகளையும், மரங்களையும் வீசியெறிந்தார்கள்; எனினும் இந்திரசித்து அந்த வானரக்கூட்டங்கள் எல்லாவற்றின் மீதும் அந்த மேருமலையையே ஊடுருவிப் பிளக்கும் ஆற்றல் படைத்த அம்புமழையை ஒன்றல்ல இரண்டல்ல, கோடிகோடி என்னும் அளவினதாகப் பொழிந்தான்; அதனால் வானரச்சேனை சற்றுத் தளர்வுற்று வலிமையிழந்தது.

100. வீடணன் அறிவுறுத்துதல்

''படுகின்றது அன்றோ, மற்று உன் பெரும்படை? பகழிமாரி
விடுகின்றது அன்றோ, வென்றி அரக்கனாம் காளமேகம்?
இடுகின்ற வேள்வி மாண்டது; இனி அவன் பிழைப்புறாமே,
முடுகு' என்றான் அரக்கன்தம்பி; நம்பியும் சென்று மூண்டான். (9116)

(அரக்கன்தம்பி-வீடணன்; வென்றி-வெற்றித்திறன்; காளமேகம்-கரிய மேகம்போன்ற இந்திரசித்து; படுதல்-இறந்து அழிதல்; மாள்தல்-அழிதல்; பிழைப்புறுதல்-உயிர்பிழைத்துப் போதல்; முடுகுதல்-விரைதல்; நம்பி-ஆடவரிற் சிறந்தவன்/இலக்குவன்; மூள்தல்-முறப்படுதல்)

அவ்வாறு சோர்ந்துபோன வானரச்சேனையைக் கண்ட, அரக்கனாகிய இராவணனின் தம்பி வீடணன், இலக்குவனை நோக்கி, ''வெற்றி பொருந்திய கரிய மேகம்போன்ற இந்திரசித்து அம்புகளை மழையெனப் பொழிகின்றானே? உன்னுடைய பெரிய வானரச்சேனையெல்லாம் அழிந்துபடுகிறதே? அவன் செய்யத் தொடங்கிய யாகம் நிறைவுறாமல் நின்றுபோனது; எனவே அவன் உயிர் பிழைத்துப் போகாவண்ணம் விரைந்து சென்று அவனைக் கொல்வதற்கு முயற்சிசெய்'' என்றான்.

Koviloor Digital Library

ஆடவரிற் சிறந்தோனாகிய இலக்குவனும் இந்திரசித்தனைக் கொன்று விடும் எண்ணத்துடன் போர்செய்ய முனைந்தான்.

'காளமேகம்' என்பது உருவகம். இந்திரசித்தனைக் கரிய மேகமாக உருவகித்தார் என்க. இதுவரையிலும் வீடணனை 'நிருதர்வேந்தன்', 'அரக்கர் வேந்தன்' என்றே கூறிவந்த கவிஞன், இங்கே மட்டும் 'அரக்கன் தம்பி' என்கிறானே! ஏன்? இவன் செய்யச் சொல்லுவது ஒரு கொலைத் தொழில், ஒரு வேந்தனாக இருந்து ஒரு இளவரசனையே கொல்லச் சொல்லுவதைக் காட்டிலும், ஒரு அரக்கனின் தம்பியாக இருந்து இந்தச் செயலைச் செய்யச் சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று கவிஞன் கருதினான்போலும்! வேள்வி அழிந்தால் மட்டும் போதாது, இந்திரசித்தும் அழியவேண்டும் என்பது வீடணன் எண்ணம். விசுவாமித்திரன் முனிவனாக இருந்து தாடகையைக் 'கோறி' என்றதையும் இங்கே நினைவு கூர்தல் தகும். 'அரக்கியைக்கோறி என்று எதிர் அந்தணன் கூறினான்' என்பது பாடல்பகுதி.

101. வந்தான் நெடுந்தகை மாருதி, மயங்கா முகம் மலர்ந்தான்;
"எந்தாய்! கடிது ஏறாய், எனது இருதோள் மிசை" என்றான்;
'அந்தாக' என்று உவந்து, ஐயனும் அமைவு ஆயினான்; இமையோர்
சிந்தாகுலம் துறந்தார்; அவன் நெடுஞ்சாரிகை திரிந்தான். (9117)

(நெடுந்தகை-பெருந்தன்மை; மிசை-மீது; கடிது-விரைந்து; ஐயன்-தலைவன்/இலக்குவன்; அந்து-அப்படி; அந்தாக-அப்படியே ஆகுக; அமைவுஆதல்-இசைதல்; அமைவு-இசைவு; இமையோர்-தேவர்கள்; சிந்தை+ஆகுலம்-சிந்தாகுலம்-மனமயக்கம்; சாரிகை-வட்டம்)

பெருந்தன்மையனான அனுமன், அப்போது மயக்கம் தெளிந்து மலர்ந்த முகத்துடன் வந்து, இலக்குவனை அணுகி, ''என் தலைவனே! எனது இரண்டு தோள்களின்மீதும் விரைந்து ஏறிக்கொள்வாயாக!'' என்றான். ''ஆம் அப்படியே ஆகட்டும்'' என்று மனம் மகிழ்ந்துகூறி இலக்குவன் அதற்கு இணங்கி, அவ்வாறே அவன் தோள்களில் ஏறிக்கொண்டான். அதனைக் கண்ணுற்ற, இமையாநாட்டமுடைய தேவர்கள் தம் மனத்தில் கொண்டிருந்த மயக்கத்தை விட்டொழித்தனர்; அனுமன் இலக்குவனைச் சுமந்தபடி போர்க்களத்துள் புகுந்து இடசாரி வலசாரியாக வட்டமடித்துத் திரிந்தான்.

'மயங்காது' என்பது 'மயங்கா' எனக் கடைக்குறையாய் நின்றது. 'அந்தாக' என்பது அந்து+ஆக எனப்பிரியும். 'அந்து' என்ற சொல்லுக்கு அப்படி என்பது பொருள். நமக்குப் புதுச்சொல், எனினும் தெலுங்கிலும் கன்னடத்திலும் இந்தச்சொல் இதே பொருளில் வழங்கப்படுவதாகத் தெரிகிறது.

Koviloor Digital Library

102. இந்திரசித்தன்-இலக்குவன் போர்

"கார் ஆயிரம் உடன் ஆகியது" எனல் ஆகிய கரியோன்,
ஓர் ஆயிரம் பரிபூண்டது ஓர் உயர் தேர்மிசை உயர்ந்தான்;
நேர் ஆயினர் இருவோர்களும்; நெடுமாருதி, நிமிரும்
பேர் ஆயிரம் உடையான் என, திசை எங்கணும் பெயர்ந்தான். (9118)

(கார்-மேகம்; உடனாகுதல்-ஒன்றுகூடுதல்; பரி-குதிரை; பூண்ட-பூட்டிய; நிமிரும்-ஓங்கிய/வளர்ந்த; பெயர்தல்-திரிந்து செல்லுதல்; உயர்தல்-ஏறிக்கொள்ளுதல்; நேர்-எதிர்)

ஆயிரம் கரிய மேகங்கள் ஒன்று கூடினாற்போல என்று சொல்லும் படியான மிகக் கரிய நிறமுடையவனாகிய இந்திரசித்து, ஆயிரம் குதிரைகள் பூட்டப்பெற்ற ஓர் உயர்ந்த தேரின்மீது ஏறிக்கொண்டு உயர்ந்து தோன்றினான்; இப்பொழுது இந்திரசித்தும் இலக்குவனும் ஒருவருக் கொருவர்நேர்எதிரேதோன்றினார்கள்; நெடியஉருவம்கொண்டஅனுமன் இப்பொழுது, முன்பு ஓங்கி உலகளந்த உத்தமனானவனும், ஆயிரம் பெயர்களைக் கொண்டவனுமான திரிவிக்கிரமனாகிய திருமாலைப் போல எல்லாத் திசைகளிலும் திரிந்து செல்லலானான்.

103. தீ ஒப்பன, உரும் ஒப்பன, உயிர் வேட்டன, திரியும்
பேய் ஒப்பன, பசி ஒப்பன, பிணி ஒப்பன, பிழையா
மாயக் கொடுவினை ஒப்பன, மனம் ஒப்பன, கழுகின்
தாய் ஒப்பன, சில வாளிகள் துரந்தான், துயில் துறந்தான். (9119)

(துயில்-உறக்கம்; உரும்-இடி; வேட்டல்-விரும்புதல்; பிழையா-தவறாத/தப்பாத; மாயம்-சூழ்ச்சி; துரத்தல்-செலுத்துதல்)

உறக்கத்தையே பதினான்கு ஆண்டுகளாக விட்டொழித்தவனான இலக்குவன், நெருப்பை நிகர்த்தனவும், இடியை ஒத்தனவும், உயிரை விரும்பி உண்ண அலைந்து திரியும் பேய்களைப் போன்றனவும், பசி, பிணி ஆகியவற்றைப் போன்றனவும், தனது வினைப்பயனைத் தவறாது தந்தே தீரும் கொடிய ஊழ்வினையைப் போன்றனவும், வேகத்தில் மனத்தைப் போன்றனவும், உணவு தந்து காப்பாற்றும் கழுகின் தாயைப் போன்றனவு மான, சில வெம்மை மிக்க அம்புகளை இலக்குவன் இந்திரசித்தன்மேல் செலுத்தினான்.

அவன் செலுத்திய அம்பு நெருப்பைப்போல் சுட்டெரிக்க வல்லது; இடியைப்போல் தாக்கி அழிக்கவல்லது; உயிரை விரும்பிப் பற்றுவதில் பேய்போன்றது; ஊழ்வினைப் பயனைப்போன்று தப்பாது சென்று பற்றும் இயல்பினது; பசியைப் போலவும், பிணியைப் போலவும் வருத்தம் விளைவிப்பது. மனத்தைப் போன்று விரைவு மிக்கது என்பதாம்.

Koviloor Digital Library

104\. அவ் அம்பினை, அவ் அம்பினின் அறுத்தான், இகல் அரக்கன்,
எவ் அம்பு இனி உலகத்து உளது என்னும்படி எய்தான்;
எவ் அம்பரம், எவ் எண்திசை, எவ் வேலைகள், பிறவும்,
வவ்வும் கடையுக மாமழை பொழிகின்றது மான. (9120)

(இகல்-வலிமை; அம்பரம்-ஆகாயம்; வவ்வுதல்-அழித்தல்; கடையுகம்-ஊழிக்காலம்; மான-போல; வேலை-கடல்)

இலக்குவன் எந்த அஸ்திரத்தைச் செலுத்தினானோ, அதே அஸ்திரத்தைக் கொண்டே அதனை அறுத்தெறிந்தான் வலிமைமிக்க அரக்கன் இந்திரசித்து. இதனைத்தவிர வேறு எந்த அம்பு இவ்வளவு வலிமைமிக்கது என்று கண்டோர் வியந்துகூறும் வண்ணம் உள்ள அம்புகளையே இந்திரசித்து செலுத்தலானான். அன்றியும் ஆகாயம் முழுவதும், எட்டுத் திசைகளையும் எல்லாக் கடல்களையும், இன்னும் மற்றுமுள்ள அத்தனையையும் பற்றி அழிக்கும் இயல்புடைய யுகாந்தகாலத்துப் பெரு மழைபோல் அம்பு மழையைச் செலுத்தினான் இந்திரசித்து.

105\. ஆயோன், நெடுங்குருவிக் குலம் எனலாம் சில அம்பால்,
போய் ஓடிடத் துரந்தான்; அவை 'பொறியோ' என, மறிய,
தூயோனும் அத்துணை வாளிகள் தொடுத்தான்; அவை தடுத்தான்;
தீயோனும், அக்கணத்து, ஆயிரம் நெடுஞ்சாரிகை திரிந்தான். (9121)

(ஆயோன்-அத்தன்மையன்; குலம்-கூட்டம்; ஓடுதல்-ஒழிதல்; துரத்தல்-செலுத்துதல்; பொறி-நெருப்புப்பொறி; தடுத்தல்-விலக்குதல்; தீயோன்-கொடியவன்/இந்திரசித்து; சாரிகை-வட்டம்; மறிதல்-அறுத்தல்)

அத்தகையவனான இந்திரசித்து நீண்ட பெரிய குருவிக் கூட்டங்கள் என்று கூறும்படியான பல அம்புகளை, இலக்குவன் விடுத்த அம்புகள் அறுந்து போகும்படிச் செலுத்தி விலக்கினான்; அவை நெருப்புப் பொறிகள் போலச் சென்று தடுத்து உடனே மறைந்துபோயின; போர்த் திறத்தில் தூய்மையுடையவனான இலக்குவனும் அதே அளவுள்ள அம்பு களைத் தொடுத்து அவற்றைத் தடுத்துக்கொண்டான்; கொடியவனாகிய இந்திரசித்து, அப்பொழுது, ஆயிரக்கணக்கானமுறை போர்க்களத்தில் நீண்ட வலசாரி இடசாரியாகச் சுற்றிச் சுழன்றான்.

முன்பு அனுமன் சாரிகை திரிந்ததுபோல, இப்பொழுது இந்திரசித்தும் சாரிகை திரிந்தான் என்பதாம். கூட்டம் கூட்டமாக அம்புகளைச் செலுத்தியதை ''குருவிக்குலம் எனலாம் சில அம்புகள்'' எனக்கூறிய நயம் உணர்க. நெருப்புப்பொறி சிதறி விழும்படி குருவிக்கூட்டமாகிய அம்புகள் சிதறி விழுந்தன என்று கூறியதும் ஒரு நயம். 'கடுங்கணை எண்ணரும் குன்றில் குரீஇயினம் போன்றவே' என்பது களவழி நாற்பது.

Koviloor Digital Library

நெருப்புப்பொறி தோன்றினவுடனே மறையும் தன்மையது என்பதையும் நினைக.

106. கல்லும், நெடுமலையும், பலமரமும், கடைகாணும்
புல்லும், சிறுகொடியும், இடை தெரியாவகை, புரியச்
செல்லும் நெறிதொறும், சென்றன, தெறு கால்புரை மறவோன்
சில்லின் முதிர் தேரும், சினவய மாருதி தாளும். (9122)

(தெறுதல்-அழித்தல்; கால்-ஊழிக்காற்று; புரை-ஒத்த; மறவோன்-வீரன்/இந்திரசித்து; சில்லி-சக்கரம்; முதிர்-வலிய; சினம்-சீற்றம்; தாள்-கால்கள்; கடை-சிறுமை; பொடி-புழுதி; இடை-வேற்றுமை; புரிய-அமைய)

எல்லாவற்றையும் அழிக்கின்ற ஊழிக்காலக் காற்றைப் போன்றவனான வீரன் இந்திரசித்தின் சக்கரத்தோடு கூடிய வலிமைமிக்க தேரும், சீற்றம் கொண்டிருக்கின்ற, வெற்றி பொருந்திய அனுமனுடைய கால்களும், போர்க்களத்தில் எதிர்பட்ட சிறு குன்றுகள், பெரிய மலைகள், பலவகைப்பட்ட பெரிய மரங்கள், தாவரஇனத்திலேயே மிகச் சிறியதாகக் கருதப்படும் புல், கொடிகள், இவற்றிற்கிடையே எந்த வேறுபாடும் தெரியாவண்ணம், அவை செல்லும் வழியெல்லாம் தடையின்றித் துகளாக்கிக்கொண்டு சென்றன.

இந்திரசித்தனது தேர்ச்சக்கரம் எங்கெங்கெல்லாம் சென்றனவோ, அங்கெல்லாம் அனுமனது கால்களும் எந்த வேறுபாடும் கருதாது சென்றன என்பதாம். இந்திரசித்தனது தேர்ச்சக்கரத்திற்கு அனுமனது கால்கள் உவமை; தேர் இந்திரசித்தனது வாகனம், அனுமன் இலக்குவனது வாகனம் என்க. தேர்க்காலுக்கு மாருதியின் கால்கள் உவமை. புல்லும் கொடியும்'' ஓர்உயிர்ப்பொருள்கள். எனவே ''கடைகாணும் புல்லும் கொடியும் என்றார் என்க.

107. இரு வீரரும் இவன் இன்னவன் இவன் இன்னவன் என்னச்
செருவீரரும் அறியாவகை திரிந்தார்; கணை சொரிந்தார்;
'ஒரு வீரரும் இவர் ஒக்கிலர்' என வானவர் உவந்தார்;
பொரு வீரையும் பொரு வீரையும் பொருதால் எனப் பொருதார். (9123)

(செரு-போர்; பொருதல்-மோதுதல்; வீரை-கடல்; ஒக்கிலர்-சமமானவர்கள் அல்லர்; இன்னவன்-யாவன்)

இந்திரசித்தும் இலக்குவனும் இவன் யாவன் இவன் யாவன் என்று போர்செய்யும் மற்ற வீரர்கள்கூட பிரித்தறிய முடியாதபடி, மிக வேகமாகச் சுழன்று சாரிகை திரிந்து அம்புமழையைப் பொழிந்து கொண்டிருந்தனர்; அலைமோதும் ஒரு கடல், மற்றொரு அலைமோதும் கடலோடு போர் செய்வதைப் போல இருவரும் மிக வேகமாகப், போர் செய்துகொண்டு

Koviloor Digital Library

இருந்தனர்; அதனைக்கண்ட தேவர்களும், ''உலகில் வேறு எந்த வீரர்களும் இவர்களுக்குச் சமமானவர்கள் இல்லை'' என்று பாராட்டி மகிழ்ந்தார்கள்.

'வீரை' என்ற சொல்லுக்குக் கடல் என்பது பொருள். ஒரு கடலோடு மற்றொரு கடல் மோதுவதைப் போன்று இருவரும் போரிட்டனர் என்பதாம். கடல்நீர் ஒன்றோடு மற்றொன்று மோதிக் கலக்கும்போது இது இந்தக்கடல் அது அந்தக்கடல் என்று வேறுபடுத்தி அறியமுடியா தல்லவா? அதுபோல இருவரும் போரிட்டனர் என்பதாம்.

108. "விண் செல்கில, செல்கின்றன விசிகம்" என, இமையோர்
கண் செல்கில; மனம் செல்கில; கணிதம் உறும் எனின், ஓர்
எண் செல்கில; நெடுங் காலவன் இடை செல்கிலன்; உடல்மேல்
புண் செல்வன அல்லால்; ஒருபொருள் செல்வன் தெரியா; (9124)

(விசிகம்-அம்பு; கணிதம்-கணக்கிட்டுக் கூறுதல்; உறுதல்-பொருந்து தல்; காலவன்-காற்று/வாயுதேவன்)

இந்திரசித்தனும் இலக்குவனும் செலுத்துகின்ற அம்புகள், வானில் செல்லுகின்றனவா இல்லையா என்பதை இமையா நாட்டமுடைய தேவர்களாலும்கூட அறிய முடியவில்லை; கண்களைக் காட்டிலும் வேகமாகச் செல்லும் மனத்தாலும் நினைத்துப் பார்க்கமுடியவில்லை; ஒரு எண்ணிக்கை கொண்டு கணக்கிட்டுப் பார்த்து அது பொருந்துகிறதா என்று பார்ப்போம் என்றாலும் அது கணக்கில் அடங்காதவையாயிருக்கின்றன. எதற்குள்ளும் புகுந்து செல்லும் இயல்புடைய காற்றுக்கு அதிபதியான வாயுதேவன்கூட அவர்கள் செலுத்தும் அம்புகளுக்கு இடையே ஊடுருவிச் செல்லும் தன்மையற்றவனானான்; அவர்கள் இருவரும் செலுத்தும் அம்புகளால் அவர்கள் இருவரின் உடல்கள்மீதும் புண்கள்தான் ஏற்பட்டனவேதவிர, ஒரு பொருள் அவர்கள்மீது படுகின்றது என்பதை உணர்ந்து தெரிந்துகொள்ள முடியவில்லை.

இமையா நாட்டமுடைய தேவர்களாலும்கூட, அவர்கள் இருவரும் செலுத்தும் அம்பினைக் கண்களால் காணமுடியவில்லை. நீர்த்தாரைகளுக் குள்ளும் புகுந்து வெளிவரும் ஆற்றல்கொண்ட காற்றின் வேந்தன் வாயுதேவனாலும் அவர்கள் இருவரும் எய்யும் அம்புகளுக்கு நடுவே ஊடுருவிச் சென்று வரமுடியவில்லை என்று இருவரின் வில்லாற்றலும் சிறப்பிக்கப்பட்டதென்க.

109. எரிந்து ஏறின திசையாவையும்; இடியாம் எனப் பொடியாய்
நெரிந்து ஏறின நெடுநாண்ஒலி; படர்வான் நிறை உருமின்
சொரிந்து ஏறின சுடு வெங்கணை; தொடும் தாரகை முழுதும்
கரிந்து ஏறின உலகு யாவையும் கனல் வெம்புகை கதுவ. (9125)

Koviloor Digital Library

(பொடி-துகள்; நெரிதல்-சிதைதல்; உரும்-இடி; ஏறுதல்-மேற் செல்லுதல்; கதுவுதல்-மூடுதல்; தாரகை-நட்சத்திரங்கள்/விண்மீன்கள்; தொடுதல்-நெருங்கியிருத்தல்)

அவர்கள் இருவரும் எழுப்பும் வில்லின் நாண் ஓசை பேரிடியைப் போலப் பொடிப்பொடியாய்ச் சிதறி திசைகள் எல்லாவற்றையும் எரித்துச் சாம்பலாக்கின. அவர்கள் செலுத்திய கொடிய, சுட்டெரிக்கின்ற இயல்புடைய அம்புகள், அகன்ற வானம் முழுவதும் நிறைந்திருக்கின்ற இடியைப்போலச் சிதர்ந்து விழுந்தன. உலகமெல்லாம் நெருப்பினால் எழுகின்ற புகைப்படலம் மூடிக்கொள்ளும்படி வானத்தைத் தொட்டுக் கொண்டிருக்கிற நட்சத்திரங்கள் எல்லாம் கரிந்து எரிந்துபோய் விழுந்தன.

110. வெடிக்கின்றன திசை யாவையும், விழுகின்றன இடிவந்து
இடிக்கின்றன சிலை நாண்ஒலி; இருவாய்களும் எதிராக்
கடிக்கின்றன, கனல் வெங்கணை; கலிவான் உற விசை மேல்
பொடிக்கின்றன பொறி வெங்கனல்; இவை கண்டனர் புலவோர். (9126)

(இடித்தல்-பெருமுழக்கம் செய்தல்; வாய்-முனை; கடித்தல்-மோதுதல்/உராய்தல்; கலித்தல்-ஒலித்தல்; விசை-வேகம்; பொடித்தல்-தோற்றுவித்தல்; புலவோர்-தேவர்கள்)

இவர்கள் இருவரும் எழுப்பும் வில்லின் நாண் ஒலியினால் எல்லாத் திசைகளும் வெடித்துச் சிதறிப்போயின; வானத்திலிருந்து இடி விழுந்தாற் போன்று பெருமுழக்கம் செய்தன; இருவரும் செலுத்திய அம்பின் முனைகள் ஒன்றோடொன்று மோதித் தாக்கி உராய்ந்து கொண்டதால் எழுந்த கொடிய நெருப்பு, ஒலிக்கின்ற வானத்தின்மேல் செல்லுகின்ற வேகத்தால், அங்கே கொடிய நெருப்புப்பொறிகள் தோன்றலாயின; இவையெல்லாவற்றையும் கண்டுகொண்டு தேவர்கள் நின்றிருந்தார்கள்.

வில்லின் நாண்ஒலி செய்த செயல்களை இவ்விரு பாடல்களாலும் விளக்குகிறான் கவிஞன். அம்பின் முனையை வாய் என்றதனால், அவை மோதிக்கொள்வதைக் ''கடிக்கின்றன'' என்று கூறிய நயம் உணர்க.

111. கடல் வற்றின; மலை உக்கன; பருதிக்கனல் கதுவுற்று
உடல் பற்றின; மரம் உற்றன கனல் பட்டன; உதிரம்
சுடர் வற்றின; சுறு மிக்கது; துணிபட்டு உதிர் கணையின்
திடர் பட்டது, பரவைக்குழி; திரிவுற்றது புவனம். (9127)

(உகுதல்-பிளத்தல்/சிந்துதல்; பருதி-பரிதி/சூரியன்; கதுவுதல்-பற்றுதல்; சுடர்-தீப்பொறி; சுறு-பொசுங்கிய/கருகிய நாற்றம்; பரவை-கடல்; திடர்-மேடு; திரிவுறுதல்-மாறுபடுதல்/சுழல்தல்; புவனம்-உலகம்; துணிதல்-பிளத்தல்; குழி-பள்ளம்)

Koviloor Digital Library

இந்திரசித்தும் இலக்குவனும் செய்கின்ற போரில் செலுத்தப்பட்ட அம்புகளின் வெப்பத்தால் கடல்களெல்லாம் வற்றிப்போயின; மலைகளெல்லாம் பிளந்து சிதறிப்போயின; சூரியனது உடலில் வெப்பம் தாக்கப்பட்டு அதுவும் பற்றி எரிந்தது; மரத்தின்மேல் பட்ட நெருப்பால் அவைகளும் பட்டுப்போயின; வீரர்களின் உடலிலிருந்த இரத்தம் நெருப்பின் வெம்மையால் ஒளி மங்கிப்போயிற்று; அதனால் எழுந்த கருகிய நாற்றம் மிகுதியாகப் பரவியது; ஒடிந்துபோய்க் கீழே விழுந்த அம்புகளின் பெருக்கத்தால் பள்ளமாய் இருக்கும் கடல்கூட மேடாகிப் போனது. உலகம் நிலைகுலைந்து சுழன்றது.

இருவரும் செலுத்திய அம்புமழையினால் உலகில் நிகழ்ந்த மாற்றங்கள் பேசப்படுகின்றன; கடல், மலை, சூரியன், மரம், வீரர்கள் உடல், உலகம் எல்லாம் மாறுபட்டுப்போயின என்பது உயர்வு நவிற்சி எனக்கொள்க.

112. எரிகின்றன அயில் வெங்கணை, இருசேனையும்
இரியத் திரிகின்றன புடை நின்றில, திசை சென்றன; சிதறிக்
கரி பொன்றின; பரி மங்கின; கவி சிந்தின; கடல்போல்
சொரிகின்றன பொரு செம்புனல்; தொலைகின்றன கொலையால். (9128)

(அயில்-கூரிய; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; புடை-பக்கம்; பொன்றுதல்-இறந்துபடுதல்; மங்குதல்-பொலிவிழத்தல்; செம்புனல்-இரத்தம்/குருதி; தொலைதல்-உயிர்விடுதல்; பொருதல்-போர்செய்தல்)

இருவரும் செலுத்துகின்ற சுட்டெரிக்கும் தன்மையுள்ள கூரிய கொடிய அம்புகளால் இருபக்கத்துச் சேனையும் ஒரு நிலையில் நில்லாது நிலை கெட்டுச் சிதறி ஓடின. ஒன்றுக்கொன்று பக்கத்தில்கூட நிற்கவில்லை; திசைக்கொன்றாகச் சிதறி ஓடின; அதனால் யானைகள் இறந்துபட்டன; குதிரைகள் பொலிவிழந்து அழிந்தன; குரங்குகள் சிதறி ஓடிப்போயின; போர்புரிந்ததால் ஒழுகிய சிவந்த இரத்தம் கடல்போலப் பெருகி ஓடியது; கொலைத் தொழிலால் எல்லா அரக்க, வானர வீரர்களும் உயிரிழந்தனர்.

இரண்டு சேனைகளுக்கும் ஏற்பட்ட இழப்பு பேசப்படுகிறது.

113. புரிந்து ஓடின; பொரிந்து ஓடின; புகைந்து ஓடின; புகைபோய்
எரிந்து ஓடின; கரிந்து ஓடின; இடம் ஓடின; வலமே
திரிந்து ஓடின; பிரிந்து ஓடின; செறிந்து ஓடின; திசைமேல்
சரிந்து ஓடின; கருங்கோள் அரிக்கு இளையான் விடுசரமே. (9129)

(கோள்-வலிமை; இளையான்-தம்பி; புரிதல்-வளைதல்/முறுக்குதல்; திரிதல்-சுற்றுதல்; செறிதல்-நெருங்குதல்; பொரிதல்-தீப்பொறி பரவுதல்; சரிதல்-சாய்தல்)

Koviloor Digital Library

கரிய, வலிய, சிங்கம் போன்றவனான இராமபிரான் தம்பியாகிய இலக்குவன் செலுத்திய அம்புகளிற் சில, வளைந்து, முறுக்கிக்கொண்டு ஓடின; சில தீப்பொறிகளைச் சிதறிக்கொண்டு ஓடின; சில புகையைக் கக்கிக்கொண்டு சென்றன; சில புகையை நீக்கிவிட்டு எரிந்துகொண்டு சென்றன; சில கரிக்கட்டைகளாக ஓடின; சில இடப்பக்கமாகச் சென்றன; சில வலப்பக்கமாகத் திரும்பிக்கொண்டு சென்றன; சில தனித்தனியாகப் பிரிந்து சென்றன; சில ஒன்றாகச் சேர்ந்து நெருக்கிக்கொண்டு சென்றன; சில எல்லாத் திசைகளிலும் சாய்ந்து ஓடின.

114. நீர் ஒத்தன; நெருப்பு ஒத்தன; பொருப்பு ஒத்தன; நிமிரும்
கார் ஒத்தன; உரும் ஒத்தன; கடல் ஒத்தன; கதிரோன்
தேர் ஒத்தன; விடை மேலவன் சிரிப்பு ஒத்தன; உலகின்
வேர் ஒத்தன; செரு ஒத்து இகல் அரக்கன் விடு விசிகம். (9130)

(செரு-போர்; இகல்-வலிமை; விடுதல்-செலுத்துதல்; விசிகம்-அம்பு; பொருப்பு-மலை; நிமிர்தல்-உயர்ந்து செல்லுதல்; கார்-மேகம்; உரும்-இடி; விடை-இடபம்/ரிஷபம்/காளை)

இலக்குவனோடு ஒத்து நின்று எதிர்த்துப் போர்புரியும் பகைவனான வலிமைமிக்க இந்திரசித்து செலுத்திய அம்புகளில் சில, நீர்ப் பெருக்கினைப் போல இடைவிடாமலும், நெருப்பைப்போல் வெப்பம் மிகுந்தும், மலையினைப்போன்று அளவில் மிக்கதாகவும், உயர்ந்தோங்கும் மேகங்களைப்போல் பரவலாகவும், இடியைப்போலப் பேரொலியுடனும், கடலைப்போல நிறைந்தும், சூரியனின் ஒற்றைச் சக்கரத் தேரைப்போலவும், ரிஷப வாகனம்மேல் வீற்றிருக்கும் சிவபெருமான் திரிபுரத்தை எரித்தபோது எழுந்த சிரிப்பைப்போலவும், உலகத்தின் அச்சாணி வேர்போலவும் அமைந்திருந்தன.

நீர், நெருப்பு, பொருப்பு, கார், உரும், இடி, கதிரோன் தேர், விடை மேலவன் சிரிப்பு, உலகின் வேர், இவற்றை முறையே ஜலமுக அஸ்திரம், அக்னி அஸ்திரம், பர்வத அஸ்திரம், மேக அஸ்திரம், இடி அஸ்திரம், சமுத்திர அஸ்திரம், சூரிய அஸ்திரம், பஞ்சமுக அஸ்திரம், மேருமுக அஸ்திரம் என்று வான்மீகம் கூறுகிறது. நீர் என்பது தொடர்ந்த நீர்ப் பெருக்காகிய பிரளய காலத்து வெள்ளத்தையும், நெருப்பு என்பது வெம்மை மிக்க ஊழிக்காலத் தீயையும், வேர் என்பது உலகத்தின் அச்சாணியாகிய மேருமலையையும் குறிக்கும் எனக்கொள்க. இவை முறையே அவ்வம்புகளின் உருவம், வண்ணம், செயல், பயன் ஆகிய வற்றைக் குறித்தது எனக்கொள்ளலாம். கார் என்பது மேகத்தினின்றும் வெளிப்படும் மழைத்தாரையினையும், கடல் என்பது பரப்பையும், அலைஅலையாய் மேல் எழுந்து வீசுவதையும், கதிரோன்தேர் என்பது இருளைக் கிழித்துச்செல்லும் ஒளியையும், விடை மேலவன் சிரிப்பு

Koviloor Digital Library

என்பது அவன் திரிபுரத்தை நீறாக்கியது போலப் பகைவனை நீறாக்குவதையும் குறிக்கும் எனக்கொள்க.

115. ஏமத்தடங் கவசத்து இகல் அகலத்தன; இருவோர்
வாமப் பெருந்தோள் மேலன; வதனத்தன; வயிரத்
தாமத்தன; குறங்கொடு இரு சரணத்தன; தம்தம்
காமக்குல மடமங்கையர் கடைக்கண் எனக் கணைகள். (9131)

(காமம்-காதல்; மடம்-இளமை; ஏமம்-பாதுகாப்பு/காவல்; தடம்-பெரிய/விரிந்த; இகல்-வலிமை; அகலம்-மார்பு; வாமம்-அழகு; வதனம்-முகம்; வயிரம்-திண்மை; தாமம்-மாலை; குறங்கு-தொடை; சரணம்-கால்கள்)

இலக்குவனும் இந்திரசித்தும் செலுத்திய கணைகள், தம்மேல் பேரன்பு கொண்ட, தம்மால் விரும்பப்படுகின்ற சிறந்த மங்கையரின் இளமையான கடைக்கண் பார்வை போன்று ஊடுருவிச்சென்று, இருவருக்கும் பாதுகாப்பாக அமைந்து உள்ள பெரிய, உடற்கவசத்தையும், வலிய மார்பினையும், அழகிய பெரிய தோள்களையும், முகங்களையும், திண்மைவாய்ந்த மாலைகளையும், துடைகளையும், இரு கால்களையும் தாக்கின.

இலக்குவன் இந்திரசித்து ஆகிய இருவரின் கவசம், மார்பு, தோள்கள், முகங்கள், மாலைகள், கால்கள் முதலிய எல்லா உறுப்புக்களிலும் அவர்களின் அம்புகள் தைத்தன என்பதற்குக் கவிஞன், ''காமக்குல மடமங்கையரின் கடைக்கண் பார்வையை'' உவமிக்கும் நயம் உணர்க. குறிதவறாது தைக்கும் என்பது கருத்து.

116. "எந்நாளினில், எத்தேவர்கள், எத்தானவர், எவரே,
அன்னார் செரு விளைத்தார்?" என, இமையோர் எடுத்து அழைத்தார்;
பொன் ஆர் சிலை இரு கால்களும், ஒரு கால் பொறை உயிரா.
முன்நாளினில் இரண்டாம்பிறை முளைத்தாலென வளைத்தார். (9132)

(இரண்டுஆம்-இரண்டாகிய; ஆர்-அமைந்த; கால்-முனை; தானவர்-அசுரர்கள்; எடுத்து அழைத்தல்-உயர்த்துக் கூவுதல்; பொறை உயிர்த்தல்-உடலை உயிர்ப்பிக்கச்செய்தல்/கருவுயிர்த்தல் /வெளிப்படுத்துதல்; ஒருகால்-ஒரேசமயம்; செரு-போர்)

''இந்திரசித்தும் இலக்குவனும் பொன்மயமான விற்களின் இரண்டு முனைகளையும் ஒரே சமயத்தில் வெளிப்படுத்திச் செலுத்தியது, முன்பு இரண்டு பிறைச்சந்திரன்கள் ஒரே சமயத்தில் தோன்றியதைப் போன்றிருந்தது. அதனைக்கண்ட தேவர்கள், எந்தநாளில், எந்தத் தேவர்கள், அல்லது எந்த அசுரர்கள், அல்லது வேறு யார்தான், இந்த

Koviloor Digital Library

இந்திரசித்து, இலக்குவன்போலப் போர் செய்தார்கள்?'' என்று தம் உரத்த குரலில் எடுத்தலோசையோடு ஆரவாரித்தார்கள்.

வில்லின் முனைகளில் பொன் பூசப்பட்டிருக்கும் என்பது, நாம் அறிந்ததே. அது இருவரின் விற்களிலும் பூசப்பட்டிருந்தது என்பது ''பொன்ஆர்சிலை இருகால்களும்'' எனப்பட்டது. 'ஒருகால்' என்பது ஒரே சமயத்தில் இருவரும் அம்பைச் செலுத்தினார்கள் என்று பொருள்படும். 'பொறை உயிரா' என்பது சற்று ஆழ்ந்து சிந்திக்கத்தக்க சொற்றொடர். பொறை என்பது சுமை என்பது நமக்குத் தெரியும். அந்தச்சுமையை உயிராக வெளிப்படுத்துதல் என்ற பொருளில் கருஉயிர்த்தல்-பிரசவித்தல் என்ற வழக்குச் சொல்லைக் குறிக்கும். இங்கே வெளிப்படுத்துதல் என்ற சாதாரணப் பொருளைத்தந்து நின்றது. 'முன்நாள்' என்பது வளர்பிறைக் காலத்தைக் குறிக்கும். 'இரண்டாம்பிறை' என்பது மூன்றாம்பிறை, மூன்றாம்நாள் பிறை என்ற வழக்கில் இருக்கும் பொருளைத் தாராது. இரண்டு ஆகும் பிறை, இரண்டு சந்திரன்கள் ஒரே காலத்தில் தோன்றியது போல என வேறுபட்ட பொருளைத் தரும். 'ஆம்' என்பது ஆகும் என்பதன் இடைக்குறை எனக் கொள்ளவேண்டும். இரு சந்திரன்கள் ஒரே சமயத்தில் தோன்றாது என்பதால் இப்பாடல் இல்பொருள் உவமையணியின் பாற்படும்.

117. வேகின்ற உலகு, இங்கு இவர் விடுகின்றன விசிகம்;
போகின்றன சுடர் வெந்தன; இமையோர்களும் புலர்ந்தார்;
'ஆகின்றது ஓர் அழிகாலம் இதுவாம், அன்று' என, அயிர்த்தார்;
நோகின்றன திசை யானைகள், செவி நாண்ஒலி நுழைய. (9133)

(விசிகம்-அம்புகள்; சுடர்-சூரியன்/சந்திரன்; இமையோர்-தேவர்கள்; புலர்தல்-நா உலர்தல்; அழிகாலம்-ஊழிக்காலம்; அயிர்த்தல்-ஐயம் கொள்ளுதல்; நோதல்-வருந்துதல்)

இங்கு போர்க்களத்தில் இந்திரசித்தனும், இலக்குவனும் விரைவாகச் செலுத்துகின்ற, அம்புகள் பாய்வதனால் இவ்வுலகமே வெந்து போகின்றது; ஞாயிறு, திங்கள் என்னும் இரு சுடர்களும் வேகின்றன; தேவர்களும் நாவற்றி வாட்டமுற்றனர்; இப்பொழுது இவ்வுலகிற்குஒரு அழிவுகாலம் வந்துவிட்டதோ, இல்லையோ என்று சந்தேகம் கொள்வராயினர்; இவர்கள் எழுப்பிய வில் நாண்ஒலியால், திக்குகளைக் காத்துவருகின்ற யானைகளும் தம் செவிப்பறை அதிர்ந்து மிகவும் வருத்தமுற்றன.

இவர்களிருவரும் செலுத்திய அம்புகளினால் இவ்வுலகு, சூரியன், சந்திரன், தேவர்கள், திசையானைகள் எல்லாம் நடுங்கித் துன்புற்றன என்பதாம்.

Koviloor Digital Library

118. மீன் உக்கது நெடுவானகம்; வெயில் உக்கது சுடரும்;
மான் உக்கது முழுவெண்மதி; மழை உக்கது வானம்;
தான் உக்கது குலமால்வரை; தலை உக்கது, தகைசால்
ஊன் உக்க, எவ்வுலகத்தினும் உளவாயின உயிரும். (9134)

(மீன்-நட்சத்திரங்கள்; சுடர்-சூரியன்; மதி-சந்திரன்; மான்-கறை; உகுத்தல்-உமிழ்தல்/சொரிதல்/சிந்துதல்; மழை-மேகம்; குலம்-சிறந்த; மால்வரை-பெரியமலைகள்; ஊன்-உடம்பு; தகை-சிறப்பு/அழகு; சால-மிக்க)

இவ்விருவரும் எய்கின்ற அம்புகளின் தாக்கத்தால், நீண்ட ஆகாயம் தன்னிடத்துள்ள நட்சத்திரங்களைச் சிந்தின; சூரியன் தனது வெயிலைச் சிதறியது; எல்லாக் கலைகளும் நிறைந்த பூரணசந்திரன் தன்னிடத்துள்ள மான் என்னும் கறையைச் சிந்தியது; வானம் மேகத்தை உதிர்த்தது; அஷ்டகுல மலைகளும் பொடிப்பொடியாகி விழுந்தன; உலகத்தில் உள்ள எல்லா உயிரினங்களும் தங்களது மிக்க அழகிய உடம்பைச் சிந்தின.

119. அக்காலையின், அயில் வெங்கணை ஐ-ஐந்து புக்கு அழுந்த,
திக்கு ஆசுஅற வென்றான் மகன், இளங்கோ உடல் செறித்தான்;
கைக்கார்முகம் வளையச் சில கனல் வெங்கணை, கவசம்
புக்கு, ஆகமும் கழன்று ஓடிட, இளங் கோளரி பொழிந்தான். (9135)

(ஆசு-குற்றம்; அக்காலை-அப்பொழுது; அயில்-கூரிய; ஐ-ஐந்து-இருபத்தைந்து; இளங்கோ-இளவரசன்/இலக்குவன்; செறித்தல்-நெருக்குதல்; கோளரி-வலியசிங்கம்; கார்முகம்-வில்; ஆகம்-மார்பு; கழலுதல்-துளைத்து நீங்குதல்)

எட்டுத்திசைகளையும் குற்றமில்லாது வெற்றி கொண்டவனான இராவணனின் மகன் இந்திரசித்து, அப்போது கூர்மையான கொடிய, இருபத்தைந்து அம்புகளை அரசிளங் குமரனான இலக்குவன்மீது நெருங்கிப் பதித்தான். இளைய, வலிய சிங்கம் போன்றவனான இலக்குவன், தான் கையில் கொண்டிருந்த வில்லை வளைத்து, சில நெருப்புப் பொறி மிகுந்த கொடிய அம்புகளை, இந்திரசித்தின் கவசத்தையும் மார்பையும் ஊடுருவிச் செல்லும்படி செலுத்தினான்.

'திக்கு ஆசற வென்றான்' என்பது இராவணனைக் குறிக்கும். ஆசற வெல்வதாவது, வீரப்பாட்டிற்கு எந்த இழுக்கும் வாராது தன் போர்த் திறமையால் வெல்லுவதைக் குறிக்கும். இளங்கோ என்பது அரசிளங் குமாரன் என்ற பொருளிலும், இளங்கோளரி என்பது இளமையான வலிய சிங்கம் போன்றவன் என்ற பொருளிலும் இலக்குவனைக் குறிக்கும்.

Koviloor Digital Library

120. தெரிந்தான் சில சுடர் வெங்கணை, தேவேந்திரன் சினமா
இரிந்து ஓடிடத் துரந்து ஓடின, இமையோரையும் முன்நாள்
அரிந்து ஓடின, எரிந்து ஓடின, அவை கோத்து, அடல் அரக்கன்
சொரிந்தான், உயர்நெடு மாருதி தோள் மேலினில் தோன்ற. (9136)

(அடல்-வலிமை; மா-யானை; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; துரந்து-துரத்தி; தெரிதல்-தேர்ந்தெடுத்தல்; அரிதல்-வெட்டுதல்)

மிக்க வலிமையுடைய அரக்கனான இந்திரசித்து, முற்காலத்தில் தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரனின் வெகுளிமிக்க ஐராவதம் என்னும் வெள்ளை யானை நிலைகெட்டு ஓடும்படித் துரத்திச் சென்றனவும், தேவர்களை வெட்டிச் சாய்த்தனவும், நெருப்புப்பொறி கொண்டு எரித்துக்கொண்டு சென்றனவுமான சில ஒளிமிக்க கொடிய அம்புகளை நன்கு தேர்ந்தெடுத்து, அவைகளை வில்லில் கோத்து, உயர்ந்த பேருருக் கொண்ட அனுமனின் தோளின்மீது அழுந்திப் பதியும்படி பொழிந்தான்.

அனுமன் இப்போது பேருருக்கொண்டிருப்பதுடன் இலக்குவனையும் தன் தோளின் மீது தாங்கியிருக்கிறான் என்பதையும் இங்கே நினைவுகூர்க. இந்திரசித்து தேவேந்திரனை வென்றது நாம் அறிந்ததே. அவன் தேவர்களையும் போரிட்டு வென்று அழித்திருக்கிறான் என்பது உத்தர காண்டத்தில் பேசப்படுகிறது.

121. குருதிப்புனல் சொரிய, குணம் குணிப்பு இல்லவன், குணபால்
பருதிப்படி பொலிவுற்றதை இளங்கோளரி பார்த்தான்;
ஒரு திக்கிலும் பெயராவகை, அவன் தேரினை உதிர்த்தான்;
'பொருது இக்கணம் வென்றான்' என, சரமாரிகள் பொழிந்தான். (9137)

(குணித்தல்-அளவிடுதல்/கணக்கிடுதல்; குணபால்-கிழக்குப் பக்கம்/கிழக்குத்திசை; பருதி-பரிதி/சூரியன்; உதிர்த்தல்-வீழ்த்துதல்/பொடிப் பொடியாக்குதல்)

தன்னைத் தாங்கி நிற்கின்ற, அளவிட்டு உரைத்தற்கரிய நற்குணங்கள் பொருந்தப் பெற்றவனான அனுமன், இந்திரசித்தன் அம்புகளால் துளைக்கப்பட்டு இரத்தம் உடல் முழுவதும் பெருகிஓட, கிழக்குத் திசையில் தோன்றும் சிவந்த சூரியன்போல் தோற்றமளிப்பதை, இளமை யான வலிமைமிக்க சிங்கம் போன்றவனான இலக்குவன் நோக்கினான்; உடனே ''இப்பொழுதே இந்த இந்திரசித்தனைப் போரிட்டு வென்று காட்டுவான்போலும்'' என்று பார்ப்போர் கூறும் வண்ணம் அவனுடைய தேர் எந்தத்திசையிலும் இடம்பெயர்ந்து போக முடியாதவாறு அவன்மீது அம்புமழையைப் பொழிந்து, அந்தத் தேர் பொடிப்பொடியாய்ப் போகும் வண்ணம் தரையில் வீழ்த்தினான்.

Koviloor Digital Library

கிழக்குத்திசையில் தோன்றும் செஞ்சூரியனுக்குச் சிவந்த இரத்தம் பெருகிஓடும் உடலையுடைய அனுமன் உவமை. தனக்கு வாகனமாகத் திகழ்கின்ற அனுமனுக்கு ஏற்பட்ட நிலையை நோக்கிய இலக்குவன், இந்திரசித்தனின் வாகனமாகிய தேரைப் பொடிப்பொடி ஆக்கினான் என்பதாம். 'உதிர்த்தல்' என்ற சொல் வீழ்த்துதல் என்ற பொருளைத்தரும். ஒரு குயில் மலர்களை உதிர்த்ததைச் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது கேளுங்கள். ''குயில் குடைந்து உதிர்த்த புதுப்பூஞ்செம்மல்'' என்பது சிறுபாணாற்றுப்படை-4.

122. அத்தேர் அழிந்தது நோக்கிய இமையோர் எடுத்து ஆர்த்தார்;
முத்தேவரும் உவந்தார்; அவன் உரும் ஏறென முனிந்தான்;
தத்தா, ஒரு தடந்தேரினைத் தொடர்ந்தான், சரம் தலைமேல்
பத்து ஏவினன், அவை பாய்தலின், இளங்கோளரி பதைத்தான். (9138)

(இமையோர்-தேவர்கள்; எடுத்து-ஓங்கிய குரலோடு/வாய்விட்டு; உரும்ஏறு-பேரிடி; முனிதல்-சினத்தல்; தத்தா-தத்தி/தாவிப்பாய்ந்து; பதைத்தல்-துடித்தல்/கலங்குதல்)

அந்த இந்திரசித்தனது தேர் அழிந்துபோனதைக் கண்ணுற்ற இமையா நாட்டமுடைய தேவர்கள் பெருங்குரலெடுத்து, வாய்விட்டு ஆரவாரம் செய்தனர்; மும்மூர்த்திகளாகிய சிவன், பிரமன், திருமால் ஆகியோரும் மிக்க மகிழ்வெய்தினர்; இந்திரசித்து ஒரு பேரிடிபோன்று பேரொலி எழுப்பிக்கொண்டு, சீற்றம்கொண்டு, தாவிப்பாய்ந்து, வேறு ஒரு பெரிய அகன்ற தேரினைத் தொடர்ந்து சென்று, அதில் ஏறிக்கொண்டு இலக்குவன் தலையை நோக்கிப் பத்து அம்புகளைச் செலுத்தினான்; அவை பாய்ந்து தாக்கியதால், இளமையான வலிமையுள்ள சிங்கம் போன்றவனான இலக்குவன் துடித்துக் கலங்கினான்.

123. பதைத்தான்; உடல்நிலைத்தான்; சிலபகுவாய் அயில்பகழி
விதைத்தான்; அவன் விலக்காதமுன் விடைமேல் வரு விமலன்,
மதத்தால் எதிர்வரு காலனை, ஒருகால் உற, மருமத்து
உதைத்தால்எனத் தனித்து ஓர்கணை அவன் மார்பிடை உய்த்தான்.(9139)

(நிலைத்தல்-நிலைநிறுத்துதல்; பகுவாய்-பிளவுபட்டவாய்; அயில்-கூரிய; விதைத்தல்-பதியச்செய்தல்/ஊன்றச்செய்தல்; விடை-ரிஷபம்; விமலன்-தூயோன்/சிவபெருமான்; மதம்-செருக்கு; காலன்-கூற்றுவன்; மருமம்-மார்பு; கால்-திருவடி; உற-பொருந்த; ஓர்-ஒப்பற்ற; உய்த்தல்-செலுத்துதல்)

அவ்வாறு இலக்குவன் சற்று கலங்கினானேனும் சற்றுதேறி தன் உடலைத் தன் வீரத்தால் ஒருவாறு நிலைப்படுத்திக் கொண்டு, சில அகன்ற பிளவுபட்ட முனையையுடைய கூரிய அம்புகளை இந்திரசித்தன்மேல்

Koviloor Digital Library

பாய்ச்சினான்; அவன் அதனைத் தடுத்துக் கொள்ளுவதற்கு முன்பே, ரிஷபத்தை வாகனமாக உடையவனும், தூய்மையானவனுமான சிவபெருமான் தன் எதிரே ஆணவத்தோடு வருகின்ற கூற்றுவனைத் தன் ஒப்பற்ற ஒரு திருவடியினால் மார்பில் உதைத்து வீழ்த்தியதைப்போல, இலக்குவன் தனது ஒப்பற்ற ஒரு அம்பினை இந்திரசித்தனின் மார்பில் செலுத்தினான்.

'பகுவாய்ப்பகழி' என்பது அர்த்த சந்திரபாணம் எனக்கொள்க. 'விடை மேல் வரு விமலன், மதத்தால் எதிர்வரு காலனை, ஒரு கால்உற மருமத்து உதைத்தது' என்பது சிவபெருமான் மார்க்கண்டேயனுக்கு அருள்புரிந்த வரலாற்றைக் குறிக்கும். அது நாம் அனைவரும் அறிந்ததே. சிவபெருமான் கூற்றுவனை மார்பில் உதைத்ததற்கு, இலக்குவன் இந்திரசித்தன் மார்பின் மேல் கணை செலுத்தியது ஒப்பு. ''மதத்தால் எதிர்வரு காலன்'' என்பது தானே வலிமைமிக்கவன் என்னும் ஆணவத்தால் சிவபெருமான் எதிரில் வந்த கூற்றுவனைக் குறிக்கும் ''மதம்'' என்பது தன்னைக் காட்டிலும் வலிமைமிக்க சிவபெருமான் முன்னர் தான் நிற்கிறோம் என்பதை உணர்ந்தும், தான் பனிந்து வேண்டாது, ஆணவத்தால் தன் பாசக்கயிற்றை அவன்மேல் வீசிய செருக்கைக் குறிக்கும். ''உதைத்தல்'' என்பது காலால் எற்றுதல் என்று பொருள்படும். ''கூற்று ஒன்றை உதைத்தாய் போற்றி'' என்பது தேவாரம். ''விமலன்'' என்பது இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய இறைவனாகிய தூயோனாகிய சிவபெருமானைக் குறிக்கும்.

124. கவசத்தையும், நெடுமார்பையும், கழன்று அக்கணை கழிய,
அவசத்தொழில் அடைந்தான்; அதற்கு இமையோர் எடுத்து ஆர்த்தார்;
திவசத்து எழு கதிரோன் எனத் தெரிகின்றது ஓர் கணையால்
துவசத்தையும் துணித்தே, அவன் மணித்தோளையும் துளைத்தான். (9140)

(கழலுதல்-ஊடுருவி வெளிப்படுதல்; கழிதல்-நீங்குதல்/அப்பாற் செல்லுதல்; அவசம்-தன்நிலை மறத்தல்/செயலற்றுப் போதல்; தொழில்-தன்மை; திவசம்-பகல்/நாள்; துவசம்-கொடி; மணி-அழகிய/திண்ணிய; நெடு-அகன்ற; துணித்தல்-அறுத்தல்)

அவ்வாறு இலக்குவன் செலுத்திய அம்பு, இந்திரசித்தன் உடலில் அணிந்திருந்த கவசத்தையும், அவனது அகன்ற மார்பினையும் ஊடுருவிச் சென்று, வெளிப்பட்டு நீங்கியபோது, இந்திரசித்து தன்நிலை மறந்து, செயலற்றவனானான்; அதுகண்டு தேவர்கள் அரக்கன் அழிந்தான் என எண்ணிப் பெருங்குரலெடுத்து ஆரவாரம் செய்தார்கள்; இலக்குவன் பகல் பொழுதில் உச்சி நேரத்தில் சுட்டெரிக்கின்ற சூரியன்போலத் தோன்றுகின்ற ஒரு அம்பைத் தேர்ந்தெடுத்து அதைச் செலுத்தி, இந்திரசித்தனது தேரிற் கட்டப் பெற்றிருந்த கொடியையும் அறுத்தெறிந்து அவனுடைய அழகிய, உறுதி வாய்ந்த தோள்களையும் துளைத்து விட்டான்.

Koviloor Digital Library

125. உள் ஆடிய உதிரப்புனல் கொழுந் தீ என ஒழுக,
தள்ளாடிய வடமேருவின் சலித்தான்; உடல் தரித்தான்;
தொள்ளாயிரம் கடும் போர்க்கணை துரந்தான்; அவை துறைபோய்
விள்ளா நெடுங் கவசத்திடை நுழையாது உக, வெகுண்டான். (9141)

(உள்-உடம்பு; ஆடுதல்-ஓடிக்கொண்டிருத்தல்; தள்ளாடுதல்-அசைதல்/தடுமாறுதல்; சலித்தல்-நிலைகுலைதல்; தரித்தல்-பொறுத்துக் கொள்ளுதல்; துரத்தல்-செலுத்துதல்/ஏவுதல்; விள்ளா-பிளக்கமுடியாத; துறை-இலக்கு)

அவ்வாறு இலக்குவன் செலுத்திய அம்பினால், இந்திரசித்தின் உடலில் ஓடிக்கொண்டிருந்த இரத்தநீர், செழுமையான நெருப்புத் திரள் போன்று, உடலினின்றும் வழிய, தளர்வுற்றுத் தடுமாறுகின்ற வடமேரு மலைபோலச் சற்று நிலைகுலைந்தான். எனினும் தன் உடல் பாரத்தைப் பொறுத்துக் கொண்டு நிலைநிறுத்தித் தொள்ளாயிரம் என்று கணக்கிடப் படுவதான போர்புரியும் இயல்புடைய அம்புகளை இலக்குவன்மேல் செலுத்தினான். எனினும் அவை தம் இலக்கை நோக்கிச்சென்று, பிளக்க முடியாத இலக்குவனின் நீண்ட கவசத்தின் உள்ளே நுழைய முடியாதபடி சிதறிப்போனது. அதனைக் கண்ட இந்திரசித்து மிக்க சீற்றம் கொண்டான்.

'தள்ளாடிய வடமேருவின் சலித்தான்' என்பது இந்திரசித்தன் உடல் உறுதிக்கு வட மேருமலை ஒப்பு என்ற குறிப்பைத் தருவதை நோக்குக. இந்திரசித்தன் அம்புகளால் இலக்குவன் அணிந்திருந்த கவசத்தைப் பிளக்க முடியவில்லை என்பதாம். இங்கே ஒன்று நோக்க வேண்டும், இலக்குவன் உண்மையிலேயே கவசம் அணிந்திருக்கவில்லை; அவன் மரவுரி அணிந்து தவக்கோலத்தில்தான் இருக்கிறான். எனவே இதனை ஒரு உபசார மொழியாகக் கொள்ளவேண்டும்.

126. மறித்து ஆயிரம் வடி வெங்கணை, மருமத்தினை மதியாக்
குறித்து, ஆயிரம் பரித்தேரவன் விடுத்தான்; அவை குறி பார்த்து,
இறுத்தான் நெடுஞ் சரத்தால், ஒரு தனி நாயகற்கு இளையோன்;
செறித்தான் உடல்சில பொற்கணை, சிலை நாண்அறத் தெறித்தான்.
(9142)

(மருமம்-மார்பு; மதி-இலக்கு; மறித்து-மீண்டும்; இறுத்தல்-முறித்துத் தள்ளுதல்; நாயகன்-முதல்வன்; செறித்தல்-நெருங்கச் செலுத்துதல்; வடி-கூர்மை; மதித்தல்-எண்ணுதல்)

ஆயிரம் குதிரைகள் பூட்டப்பெற்ற தேரின் மேலோனான இந்திரசித்து, இலக்குவன் மார்பை இலக்காகக் குறிபார்த்து, மீண்டும் ஆயிரம் கூர்மை யான, கொடிய அம்புகளைச் செலுத்தினான்; ஒப்பற்ற தலைவனான இராமபிரானுக்குத் தம்பியான இலக்குவன், அந்த ஆயிரம் அம்புகளையே

Koviloor Digital Library

நன்கு குறிபார்த்து தனது ஒரே நீண்ட அம்பினால் அறுத்தெறிந்தான்; இந்திரசித்ததைது வில்லின் நாண் அறுந்து போகும்படியும், அவன் உடல் சிதைந்து போகும் வண்ணமும் சில பொன் பதிக்கப்பெற்ற அம்புகளை இலக்குவன் நெருங்கிச் செலுத்தினான்.

இந்திரசித்தனது ஆயிரம் வடி வெங்கணைகளை, இலக்குவன் ஒரு நெடுஞ்சரத்தாலும், சில பொற்கணைகளாலும் அறுத்தெறிந்தான் என்பதாம். 'மருமம்' என்பது உயிர் நிலையையும் குறிக்கும்.

127. இந்திரசித்து தடுமாறுதல்

"வில் இங்கு இது, நெடுமால், சிவன் எனும் மேலவர் தனுவே
கொல்?" என்று கொண்டு அயிர்த்தான்; நெடுங்கவசத்தையும் குலையாச்
செல்லும் கொடுங்கணை யாவையும் சிதையாமையும் தெரிந்தான்;
வெல்லும் தரம் இல்லாமையும் அறிந்தான்; அகம் மெலிந்தான். (9143)

(தனு-வில்; அயிர்த்தல்-ஐயுறுதல்; குலையா-குலைந்து; தரம்-நிறம்/ஆற்றல்; அகம்-உளம்; மெலிதல்-தளர்தல்; சிதையாமை-அழிவின்மை; மேலவர்-உயர்ந்தோர்)

"இப்பொழுது இலக்குவன் தன் கையில் கொண்டுள்ள வில், ஓங்கி உலகளந்த திருமால், சிவபெருமான் என்று போற்றப்படும் உயர்ந்தோர்களின் வில்தான் போலும்!" என்று இந்திரசித்து ஐயம் கொண்டான்; தான் அணிந்திருக்கின்ற நீண்ட கவசத்தையும் ஊடுருவிச் செல்லும் கொடிய அம்புகள் எல்லாமும் சற்றும் சிதையாமல் இருக்கும் தன்மையையும் புரிந்துகொண்டான்; இலக்குவனை வெற்றிகொள்ளும் ஆற்றல் தன்னிடம் இல்லை என்பதையும் நன்கு தெளிந்து கொண்டான்; மனம் சற்றுத் தளர்ச்சி உற்றான்.

"மேலவர்" என்பது மேன்மைமிக்க உயர்ந்தவர்கள் என்று பொருள் படும். திருமாலின் கையில் உள்ள வில் 'சார்ங்கம்' எனவும், சிவபெருமானின்கையில் உள்ளவில் 'பிநாகம்' எனவும் வழங்கப்பெறும். பிரமனின் கையில் வில் இருக்காது, இல்லை என்பந்தை நோக்கவேண்டும். இந்திரசித்து முதன்முறையாகத் தன் வில்லாற்றலின்மீது கொண்ட தன்னம்பிக்கை தளர்வதைக் கவிஞன் மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுவதை உணர்க.

Koviloor Digital Library

128. வீடணன் குறிப்பறிந்து இலக்குவனுக்குத் தெரிவித்தல்

அத்தன்மையை அறிந்தான் அவன் சிறு தாதையும், அணுகா,
முத்தன் முகம் நோக்கா, ''ஒரு மொழி கேள்'' என மொழிவான்;
''எத்தன்மையும் இமையோர்களை வென்றான் இகல் கண்டால்,
பித்தன்மனம் தளர்ந்தான்; இனிப் பிழையான்'' எனப் பகர்ந்தான்.
(9144)

(சிறுதாதை-சிறியதந்தை/வீடணன்; அணுகா-அணுகி/நெருங்கி வந்து; முத்தன்-தூயோன்/இலக்குவன்; நோக்கா-நோக்கி; மொழி-வார்த்தை; எத்தன்மையும்-எல்லாத்திறத்தாலும்; இகல்-போர்; பித்தன்-தூர்த்தன்/இராவணன்)

இந்திரசித்தனது சிறிய தந்தையாகிய வீடணன், அப்போது இந்திரசித்து மனம் தளர்ச்சியுற்ற தன்மையைக் கண்டு தூயோனாகிய இலக்குவனை நெருங்கி, அவன் முகத்தைப் பார்த்து, 'நான் ஒரு வார்த்தை கூறுகிறேன்; சற்று கேட்பாயாக!' என்று கீழ்க்கண்டவாறு கூறத்தொடங்கினான். ''எல்லாவிதத் திறமைகளையும் பயன்படுத்தி, தேவர்களையே வென்றவனான இந்திரசித்தனை இப்போது நீ வென்றிருக்கிறாய். பிறன்மனை நயக்கும் தூர்த்தனாகிய இராவணனின் மகனாகிய இந்திரசித்து இப்போது மனம் தளர்ந்து போயிருக்கிறான்; எனவே அவன் இனிமேல் உயிர்பிழைக்க மாட்டான்'' என்று கூறினான்.

''முத்தன்'' என்ற சொல் முக்தி தருபவன் என்றும் தூயோன் என்றும் பொருள்தந்து திருமாலைக் குறிக்கும் எனக்கொள்க. ''பித்தன்'' என்பது இங்கே போர்ப்பித்துக் கொண்ட இந்திரசித்தனைக் குறித்தது எனக்கொள்க.

129. கூற்றின்படி கொதிக்கின்ற அக்கொலை வாள் எயிற்று அரக்கன்
ஏற்றும் சிலை நெடுநாண்ஒலி உலகு ஏழினும் எய்த,
சீற்றம் தலைத்தலை சென்று உற, 'இது தீர்' எனத் தெரியா,
காற்றின்படை தொடுத்தான்; அவன் அதுவே கொடு காத்தான். (9145)

(படி-தன்மை; வாள்எயிறு-கோரப்பற்கள்; தலைத்தலை-மேன் மேலும்; தீர்தல்-விலக்கி அழித்தல்; காத்தல்-தடுத்தல்; தெரியா-தெரிந்து/ஆராய்ந்து)

இயமனின் தன்மைபோல் கொதித்தெழுந்து கொலைசெய்யும் இயல்புடைய வாட்படையைக் கொண்டவனும், ஒளிபொருந்திய கொடிய கோரப்பற்களைக் கொண்டவனுமான அரக்கன் இந்திரசித்து, தனது வில்லை எடுத்து, அம்பைப் பொருத்தி, எழுப்பிய நாணின்ஒலி இந்த ஏழு உலகங்களையும் சென்று அடைய, சீற்றம் மேன்மேலும் பெருக ''இதனை அழித்துவா'' என்று கட்டளையிட்டு, நன்கு ஆராய்ந்து, வாயுதேவனின் படைக்கலமாகிய வாயுவாஸ்திரத்தை இலக்குவன் மேல்

Koviloor Digital Library

செலுத்தினான். இலக்குவனும் அதே வாயுவாஸ்திரத்தைக் கொண்டே அது தன்னைத் தாக்காமல் தடுத்து விலக்கிக் கொண்டான்.

''காத்தல்'' என்பது விலக்கிக் கொண்டு தடுத்தல் என்பதைக் காட்டிலும், தன்னைத் தற்காத்துக்கொள்ளும் வகையில் பகைவரின் அஸ்திரத்தை அழித்தல் என்ற சிறப்புப்பொருளையும் தரும். அம்புகளில் மிக வலிமையுடையது வாயுவாஸ்திரம். எனவே அதனைத் தேர்ந்தெடுத்துச் செலுத்தினான் என்பதாம்.

130. அனலின் படை தொடுத்தான்; அவன் அதுவே கொடு தடுத்தான்;
புனலின் படை தொடுத்தான்; அவன் அதுவே கொடு பொறுத்தான்;
கன வெங்கதிரவன் வெம்படை துரந்தான், மனம் கரியான்;
சின வெந்திறல் இளங்கோளரி, அதுவே கொடு தீர்த்தான். (9146)

(அனலின்படை-அக்னியாஸ்திரம்; புனலின்படை-வருணாஸ்திரம்; பொறுத்தல்-தடுத்தல்; கதிரவன்படை-சூரியாஸ்திரம்; தீர்த்தல்-அழித்தல்; கனம்-மிகவும்)

இந்திரசித்து இப்பொழுது அக்னி அஸ்திரத்தைச் செலுத்தினான்; இலக்குவனும் அதே அக்னி அஸ்திரத்தைக் கொண்டு தன்னைக் காத்துக்கொண்டான்; இந்திரசித்து வருணாஸ்திரத்தைச் செலுத்தினான்; இலக்குவனும் அதே வருணாஸ்திரத்தைக் கொண்டு அதைத் தடுத்து நிறுத்தினான்; மிகவும் கொடிய சூரியனின் சூரியாஸ்திரத்தைச் செலுத்தினான் வஞ்சக எண்ணம் கொண்ட இந்திரசித்து; சீற்றமும், கொடிய ஆற்றலும் கொண்ட இளமையான வலிமைமிக்க சிங்கம் போன்றவனான இலக்குவனும் அதே சூரியாஸ்திரத்தைக் கொண்டு அதனை அழித்தொழித்தான்.

பொதுவாக ஒரு அஸ்திரம் அதே அஸ்திரத்தாலும் தடுக்கப்படும், அல்லது அழிக்கப்படும், அல்லது அதற்கு முரணான அஸ்திரத்தாலும் அழிக்கப்படும். எடுத்துக்காட்டாக அக்னி அஸ்திரத்தை அக்னி அஸ்திரத்தைக் கொண்டே அழிக்கலாம், அதே அக்னி அஸ்திரத்தை (நீர்) வருணாஸ்திரத்தாலும் அழிக்கலாம் என்பது கருதத்தக்கது.

131. "இது காத்திகொல்?" என்னா எடுத்து இசிகப்படை எய்தான்;
அது காப்பதற்கு அதுவே உளது என்னா, தொடுத்து அமைந்தான்;
செதுகாப் படை தொடுப்பேன் என நினைந்தான், திசைமுகத்தோன்
முது மாப்படை துரந்தான், 'இனி முடிந்தாய்' எனமொழிந்தான். (9147)

(காத்தல்-தடுத்தல்; செதுகுதல்-தவறுதல்; செதுகா-தப்பாத; திசைமுகத்தோன்-நான்முகன்/பிரமதேவன்; முதுமை-தொன்மை; மா-பெருமை; இசிகப்படை-ஒருவகை அம்பு; முடிதல்-இறந்துபடுதல்)

Koviloor Digital Library

இந்திரசித்து இலக்குவனை நோக்கி, ''இப்போது நான் எய்யப்போகும் இந்த அஸ்திரத்தையும் தடுத்துவிடுவாயோ?'' என்று கேட்டு இசிகம் என்னும் ஒரு அஸ்திரத்தை எடுத்து வில்லில் தொடுத்து எய்தான். அந்த அஸ்திரத்தைத் தடுப்பதற்கு அந்த அஸ்திரமே இருக்கிறது என்று அதனையே தொடுத்து அடங்கியிருந்தான் இலக்குவன்; ''இப்போது இலக்குத் தப்பாத அஸ்திரத்தைத் தொடுப்பேன், அப்பொழுது நீ அழிந்து ஒழிந்துபோவாய்'' என்றுகூறி, மிகப்பழமையானதும், சிறந்ததுவுமான பிரமதேவனின் பிரமாஸ்திரத்தை இலக்குவன்மீது செலுத்தினான் இந்திரசித்து.

'இசிகப்படை' என்பது ஒரு தெய்வத்தன்மை வாய்ந்த அஸ்திரம். ''இக்ஷுகாஸ்திரம்'' என்றும் நாகப்படை என்றும் சமுத்திரப்படை என்றும் கூறுவர். 'செதுகுதல்' என்ற சொல் நமக்குப்புதிது. தவறுதல் என்பது பொருள். 'கொல்' என்பதை ஐயம் குறித்த இடைச் சொல்லாகவும் வினாச் சொல்லாகவும் கொள்ளலாம்.

132. தேவர்கள் கலங்குதல்

வானின்தலை நிலை நின்றவர், மழுவாளியும், மலரோன்
தானும், முனிவரரும், பிற தவத்தோர்களும், அறத்தோர்
கோனும், பிறபிற தேவர்கள் குழுவும், மனம் குலைந்தார்;
''ஊனம் இனி இலதாகுக இளங்கோக்கு'' என, உரைத்தார். (9148)

(தலை-இடம்; அறத்தோர்கோன்-தேவேந்திரன்; குழு-கூட்டம்; ஊனம்-தீங்கு)

இந்திரசித்து பிரமாஸ்திரத்தைச்செலுத்தியது கண்டு, விண்ணுலகத்தில் நிலைபெற்று நிற்பவர்களும், மழுப்படையை ஏந்தியவனான சிவபெருமானும், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், முனிவர்களும், தவம் செய்கின்றவர்களும், அறம் இயற்றுதலையே இயல்பாகக் கொண்டவர்களின் தலைவனாகிய தேவேந்திரனும், மற்ற பதினெட்டுவகைத் தேவர்கள் கூட்டமும், மனம் கலங்கினார்கள்; ''இளவரசனாகிய இலக்குவனுக்கு எந்தத் தீங்கும் நேராது ஒழிக'' என்று வாழ்த்தி ஆசீர்வதித்தனர்.

''ஊனம் இனி இலதாகுக'' என்பதில் ஒரு நுட்பம். காரணம் முன்பு ஒருமுறை இதே இந்திரசித்து வானில் மறைந்திருந்து இலக்குவன்மேல் இதே பிரமாஸ்திரத்தை எய்ததனால்தான் அவன் அதற்குக் கட்டுண்டு, மயங்கி, மடியநேரிட்டது. இப்போதும் இந்திரசித்து அதே பிரமாஸ்திரத்தை எய்கிறான். எனவேதான் தேவர்களும், முனிவர்களும், மற்றவர்களும் இனிமேலாவது அந்தப் பிரமாஸ்திரத்தால் இலக்குவனுக்கு எந்தத்தீங்கும் நேரிடக்கூடாது என்று ஆசீர்வதித்தார்கள் என்பதாம்.

Koviloor Digital Library

''அறத்தோர்'' என்பது இம்மையில் அறநெறியில் ஒழுகி மறுமையில் வீடுபேறு பெற்று சுவர்க்கத்தில் இன்பம் அனுபவித்துக் கொண்டிருப் போரைக் குறிக்கும் எனக்கொள்க. முனிவர்களுள்ளும் தேவமுனிவர், பிரமமுனிவர் என்று பல பிரிவுகள் உண்டு என்றும் கூறுவர்.

133. ஊழிக்கடை இறும் அத்தலை, உலகு யாவையும் உண்ணும்
ஆழிப் பெருங்கனல் தன் ஒரு சுடர் என்னவும் ஆகாப்
பாழிச்சிகை பரப்பித் தனி படர்கின்றது பார்த்தான்,
ஆழித் தனி முதல் நாயகற்கு இளையான், அது மதித்தான். (9149)

(ஆழி-சக்கரப்படை; முதல்நாயகர்-இறைவன்/பரம்பொருள்; இளையான்-தம்பி; உண்ணுதல்-அழித்தல்; கனல்-வடவைப் பெருந்தீ; பாழி-வலிமை; சிகை-தீக்கொழுந்து; மதித்தல்-உள்ளவாறு அறிதல; படர்தல்-எதிர்வருவது; இறும்-அழிக்கும்)

சக்கரப்படையை உடைய ஒப்பற்ற பரம்பொருளாகிய திருமாலின் அவதாரமாகிய இராமபிரானின் தம்பியாகிய இலக்குவன், ஊழியிறுதிக் காலத்தில் இந்த உலகத்தையும் உயிரினங்களையும் அழிக்கவல்லதும், கடலின் நடுப்பகுதியில் அமைந்திருப்பதுமாகிய வடவைப் பெருங் கனலின் ஒரு சிறு பகுதி கூட இதற்கு இணையாகும் என்று கூறமுடியாத அளவுக்கு மிக வலிமைபொருந்திய, கொழுந்து விட்டெரிந்து கொண்டு, தன் எதிரே தனியே பரவி வருகின்ற பிரமாஸ்திரத்தைக் கண்டான். அதனைக் கண்டு அதன் ஆற்றலை உள்ளவாறு உணர்ந்து தெளிந்தான்.

உலகையே அழிக்கும் வல்லமையுடைய ஊழிப்பெருந்தீயான வடவைப்பெருங்கனல், இப்பிரமாஸ்திரத்தால் பரப்பப்படும் ஒரு சிறு சுடருக்குக்கூட ஒப்பாகாது என்னும்படி மிகப்பெரிய தீப்பிழம்புகளைப் பரப்பிக்கொண்டு வருகிறது பிரமாஸ்திரம் என்பதாம்.

134. “மாட்டான் இவன், மலரோன்படை முதல்போது தன் வலத்தால்,
மீட்டான் அலன்; தடுத்தான் அலன், முடிந்தான்” என, விட்டான்;
“காட்டாது இனிக் கரந்தால் அது கருமம் அலது” என்னா,
“தாள்தாமரை மலரோன்படை தொடுப்பேன்” எனச் சமைந்தான். (9150)

(முதற்போது-முதல்முறை; வலம்-வலிமை; மீட்டல்- வாங்கிக் கொள்ளுதல்/திருப்பிவிடுதல்/ஏற்றுக்கொள்ளுதல்; மலரோன்படை-பிரமாஸ்திரம்; கரத்தல்-மறைத்தல்; கருமம்-செயல்; தாள்-தண்டு; சமைதல்-உடன்படுதல்/துணிதல்/முடிவுசெய்தல்; மாட்டான்-வலிமையில்லாதவன்; முடிதல்-இறந்துபோதல்)

''முன்பு ஒருமுறை நாம் பிரமாஸ்திரத்தைச் செலுத்தியபோது இந்த இலக்குவன் அதைத் தனது வலிமையால் வாங்கிக் கொள்ளும் ஆற்றலோ, திருப்பித்தரும் ஆற்றலோ, அல்லது தடுத்துக்கொள்ளும் ஆற்றலோ

Koviloor Digital Library

இல்லாதிருந்தான். எனவே இப்போது இந்த பிரமாஸ்திரத்தை இலக்குவன் மீது செலுத்தினால் அவன் அதைத் தடுத்தோ, எதிர்த்தோ நிற்கமாட்டான், நிச்சயம் இறந்துபடுவான் என்று கருதி நம்மேல் இந்திரசித்து இந்தப் பிரமாஸ்திரத்தை இப்போது செலுத்தியிருக்கிறான்; இனியும் நம் ஆற்றலை வெளிக்காட்டாது மறைத்து வைத்திருந்தால் அது செய்யத்தக்க செயலாகாது என்று கருதி, நீண்ட தண்டினை உடைய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனது படைக்கலமாகிய பிரமாஸ்திரத்தைத் தொடுக்கப் போகிறேன்'' என்று துணிந்து முடிவுசெய்தான் இலக்குவன்.

செய்யத்தகுந்த செயலை உரிய நேரத்தில் செய்து விடவேண்டும். அவ்வாறு செய்யாது விட்டால் அது தீமைபயக்கும். அதுபோலச் செய்யக்கூடாத சில காரியங்களைச் செய்தாலும் தீமைபயக்கும். எனவே இலக்குவன் பிரமாத்திரத்தைச் செலுத்துவதே இப்போது தான் செய்யத்தகுந்த செயல் என்று கருதி அதைத் தொடுக்க முற்பட்டான் என்பதாம். ''செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும்'' என்பது குறள்-466.

135. இலக்குவன் பிரமாஸ்திரம் செலுத்துதல்

"நன்று ஆகுக, உலகுக்கு!'' என, முதலோன் மொழி நவின்றான்;
"பின்றாதவன் உயிர்மேல் செலவு ஒழிக'' என்பது பிடித்தான்;
"ஒன்றாக இம்முதலோன் படைதனை மாய்க்க'' என்று உரைத்தான்;
நின்றான், அது துரந்தான்; அவன் நலம் வானவர் நினைந்தார். (9151)

(நன்று-நன்மை; முதலோன்-பிரமதேவன்; மொழி-வேதமந்திரம்; பின்றுதல்-பின்னிடுதல்; செலவு-செல்லுவது/போக்கு; பிடித்தல்-பற்றுதல்; மாய்த்தல்-அழித்தொழித்தல்; துரத்தல்-செலுத்துதல்; நலம்-அருளுடைமை/நன்மை; வானவர்-தேவர்கள்; நினைத்தல்-வியத்தலுமாம்; ஒன்றுதல்-பொருந்துதல்)

இந்திரசித்தன்மேல் பிரமாத்திரத்தைத் தொடுப்பது என்று முடிவுசெய்த இலக்குவன்அதனை நோக்கி, ''இவ்வுலகுக்கு நன்மை தருவனவற்றையே செய்க; போரிடுவதில் என்றும் பின்வாங்காத இந்திரசித்தனின் உயிரைக் கவரும் போக்கைக் கொள்ளாதே'' என்று, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் முதல் தொழிலாகிய படைத்தல் தொழிலுக் குரிய முதல்வனான பிரமதேவனின் மந்திரத்தை அபிமந்திரித்து அவ்வத்திரத்தைக் கையில்கொண்டு ''என்னை எதிர்த்து இந்திரசித்தனால் செலுத்தப்பட்ட அந்த பிரமாஸ்திரத்தை மட்டும் அழித்தொழிப்பாயாக!'' என்று வேண்டிக்கொண்டு சற்று நின்று நிதானித்துப் பின் எய்தான். இவன் அருளுடமையைக்கண்ட தேவர்கள் வியந்து நின்றார்கள்.

Koviloor Digital Library

பிரமாத்திரத்தைச் செலுத்துவது என்று தீர்மானித்த இலக்குவன் அதற்குரிய மந்திரத்தை அபிமந்திரித்து ''உலகுக் நன்மை செய்ய வேண்டும்; எந்தத் தீங்கும் நேரக்கூடாது; இந்திரசித்தன் உயிருக்கு எந்தத் தீங்கும் விளைவிக்கக் கூடாது; அவன் என்னை எதிர்த்துச் செலுத்திய பிரமாத்திரம் மட்டும் அழிக்கப்பட வேண்டும்'' என்று மூன்று கட்டளைகளை இட்டு நின்று நிதானித்து அப்படையைச் செலுத்தினான். பகைவர்களைக் கொல்லுவதற்காக நடத்தப்பெற்ற போரிலும், பகைவனோ, உலகமோ, அழிந்து போய்விடக்கூடாது; அந்தப் படைக்கலம் மட்டும் துணிக்கப்பட வேண்டும் என்று கருதிய இலக்குவனின் சான்றாண்மையை எண்ணி வானத்துத் தேவர்கள் வியந்து நின்றனர் என்பதாம்.

இங்கே 'முதலோன் மொழி' என்பதற்குப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களிலும் முதல் தொழிலாகிய படைத்தற் கடவுளான பிரமதேவனை எண்ணி மந்திரத்தை உச்சரித்தான் எனப்பொருள் கொண்டுள்ளோம். முன்பு ஒருமுறை இலக்குவன் பிரமாத்திரத்தைப் பயன்படுத்தப் போவதாகச் சொன்னபொழுது இராமபிரான் அது பயன்படுத்தப் பட்டால் இம்மூவுலகும் அழிந்துபடும், எனவே அதனைப் பயன்படுத்தாதே என்று கூறித் தடுத்ததை இங்கு நினைவு கூர்ந்தால் இந்த ''முதலோன்மொழி'' என்பதற்கு உலகத்திற் கெல்லாம் முதல்வனாகிய திருமாலின் அவதாரமாகிய இராமபிரானின் கூற்றை எண்ணியே இலக்குவன் இவ்வாறு ''நன்றாகுக உலகுக்கு'' என்று கூறினான் என்றும் பொருள்கொள்ள இடம் இருப்பதை உணர்க. ''முதலோன் மொழி'' என்னும் போது இராமபிரானின் கூற்று என்றும், ''முதலோன்படை'' என்னும்போது பிரமனின் படையாகிய பிரமாஸ்திரம் என்றும் பொருள் கொள்ளவேண்டும். பகைவனுக்கும் அருளும் இலக்குவனின் நன்னெஞ்சு இங்கே ''நலம்'' எனப்பட்டது என்க.

136. தான் விட்டது மலரோன்படை எனின், மற்று இடைதருமே?
வான் விட்டதும், மண்விட்டதும், மறவோன் உடல் அறுமே?
''தேன் விட்டிடு மலரோன் படை தீர்ப்பாய்'' எனத் தெரிந்தான்;
''ஊன் விட்டவன் மறம் விட்டிலன்'' என வானவர் உவந்தார். (9152)

(மலரோன்படை-பிரமாத்திரம்; இடைதருதல்-பின்னிடுதல்; மறவோன்-வீரன்/இந்திரசித்து; விடுதல்-சொரிதல்; தெரிதல்-அறிந்து தெளிதல்; ஊன்-குற்றம்; மறம்-வீரத்திறன்; தீர்த்தல்-அழித்தல்)

இலக்குவன் செலுத்தியது, தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம தேவனின் படையாகிய பிரமாத்திரம் என்றால் அது பகைவனை அழிக்காது பின்னிடாதே? அது இலக்குவன் ஏவலுக்கு ஏற்ப விண்ணுலகை அழிக்காது விட்டது; மண்ணுலகை அழிக்காது விட்டது; என்றாலும் வீரனாகிய இந்திரசித்தனின் உடலை மட்டும் அழிக்காது விடுமோ?'' தேன் சொரியும் தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனின் படையை மட்டும்

Koviloor Digital Library

அழித்துவருவாயாக'' என்று நன்கு தெரிந்தே இலக்குவன் அப்படையைச் செலுத்தினான். குற்றங்கள் நீங்கிய இலக்குவன் தன் வீரத்திறனையும் விடவில்லை என்று எண்ணித் தேவர்கள் மகிழ்ந்தனர்.

இலக்குவனின் மறக்கருணையைத் தேவர்கள் மகிழ்ந்து பாராட்டினர் என்பதாம்; 'தீர்த்தல்' என்பது விடுதல் என்ற பொருளைத்தரும்; 'தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டாகும்' என்பது தொல்காப்பியம். 'தருமே' 'அறுமே' என்பவற்றில் உள்ள ஏகாரங்கள் எதிர்மறைப் பொருளைத்தரும். தராது, அறுக்காது என்ற பொருள்களைத்தரும்.

137. உரும் ஏறு வந்து எதிர்த்தால், அதன் எதிரே, நெருப்பு உய்த்தால்,
வரும் ஆங்கு அது தவிர்ந்தால் என, மறவோன்படை மாய,
திருமால் தனக்கு இளையான்படை, உலகு ஏழையும் தீய்க்கும்
அரு மா கனல்என நின்றது; விசும்பு எங்கணும் ஆகி. (9153)

(உரும்ஏறு-பேரிடி; நெருப்பு-தீப்பிழம்பு; உய்த்தல்-செலுத்துதல்; தவிர்தல்-சிதைந்து அழிதல்; மறவோன்-வீரன்/இந்திரசித்து; அரு-அணுகுதற்கு அரிய; மாகனல்-பெருந்தீ; விசும்பு-ஆகாயம்; மாய்தல்-அழிதல்)

பேரிடி ஒன்று எதிர்த்து வந்தபோது, அதன் எதிரே நெருப்புப் பிழம்பு செலுத்தப்பட்டால் அவ்வாறு வரும் பேரிடி நெருப்பால் அழிந்து நீங்கிப் போய்விடும் அல்லவா? அதுபோல, கொடியோனாகிய இந்திரசித்து செலுத்திய பிரமாத்திரம் அழிந்துபோகும்படி, திருமாலின் அம்சமான இராமபிரானின் தம்பியாகிய இலக்குவன் செலுத்திய பிரமாத்திரம் ஏழு உலகங்களையும் சுட்டெரிப்பதும், அணுகுவதற்கு அரியதுமான ஊழிக் காலப் பெருந்தீப் போன்று ஆகாயம் முழுவதும் நிறைந்து பரவி நின்றது.

இந்திரசித்து செலுத்திய பிரமாத்திரம் இடியேற்றுக்கும், இலக்குவன் செலுத்திய பிரமாத்திரம் ஊழிக்கால நெருப்புக்கும் உவமை.

138. படை அங்கு அது படராவகை, பகலோன் குல மருமான்,
இடையொன்று அது தடுக்கும்படி, செந்தீ உக எய்தான்,
தொடை ஒன்றினை; "கணை மீமிசைத் துறுவாய் இனி" என்றான்,
விடம் ஒன்று கொண்டு ஒன்று ஈர்ந்ததுபோல், தீர்ந்தது வேகம். (9154)

(பகலோன்-சூரியன்; படர்தல்-பரவுதல்; தொடை-தொடுக்கப்படும் அம்பு; துறுதல்-நெருங்கிச்செல்லுதல்; மீமிசை-மேலே/மீது; ஈர்தல்-கவர்தல்/இழுத்தல்; மருமான்-வழித்தோன்றல்)

சூரியகுலத்தின் வழித் தோன்றலாகிய இலக்குவன், முன்பு தான் செலுத்திய பிரமாத்திரம் இந்திரசித்தன் செலுத்திய பிரமாத்திரத்தை அழித்த பின்னரும், மேலும் ஆகாயத்தில் பரவிச் செல்லாதவாறு, அதைத் தடுக்கும்

Koviloor Digital Library

பொருட்டு, வேறுஒரு அம்பினைத் தொடுத்து அதனின்றும் தீப்பொறி பரக்கும் வண்ணம் செலுத்தினான். இனி ''அந்தப் பிரமாத்திரத்தின் மீது நெருங்கிச் செல்வாயாக!'' என்றும் அதற்குக் கட்டளையிட்டான். ஒரு நஞ்சினைக் கொண்டு மற்றொரு நஞ்சின் தன்மையைக் குறையச் செய்வதுபோல், முன்பு செலுத்திய பிரமாத்திரத்தின் வேகம், இப்பொழுது செலுத்திய அம்பினால் தணிக்கப்பட்டது.

'தொடை' என்பது பின்னால் செலுத்தப்பட்ட அம்பையும், 'கணை' என்பது முன்னால் செலுத்தப்பட்ட பிரமாத்திரத்தையும் குறிப்பதை நோக்குக. முள்ளை முள்ளால் எடுத்தல்போல, விஷத்தை விஷத்தால் முறிப்பதுபோல, ஒரு அம்பை மற்றொரு அம்பால் தடுத்தான் என்பதாம்.

139. விண்ணோர் அது கண்டார், "வய வீரர்க்கு இனி மேன்மேல்
ஒண்ணாதன உளவோ?" என மனம் தேறினர், உவந்தார்;
கண் ஆர் நுதல் பெருமான்' இவர்க்கு அரிதோ?" எனக் கடை பார்த்து,
'எண்ணாது இவை பகர்ந்தீர், பொருள் கேளீர்!" என இசைத்தான். (9155)

(விண்ணோர்-தேவர்கள்; வய-வன்மை/வெற்றி; தேறுதல்-தெளிதல்; ஆர்-பொருந்திய; நுதல்-நெற்றி; கடை-கடைக்கண் நோக்கம்; இசைத்தல்-கூறுதல்; பொருள்-உண்மைக் கருத்து)

இலக்குவன் தான் முன்பு செலுத்திய பிரமாத்திரத்தின் வேகத்தை இன்னொரு அம்பு கொண்டு தணித்ததைக் கண்ட தேவர்கள் ''வெற்றியும் வலிமையும் மிக்க வீரர்களாகிய இராமஇலக்குவர்க்கு இனி இதற்கு மேலும் செய்தற்கரியனவான செயல் ஏதேனும் இருக்கிறதோ?'' என்று கவலை நீங்கி மனம் தெளிந்து மகிழ்ந்தனர்; அதுகண்ட, நெற்றியில் கண் பொருந்திய சிவபெருமான் ''இச்செயல்கள் எல்லாம் இவ்விராம இலக்கு வர்க்குச் செய்ய அரியதானவையோ?'' என்று தேவர்களைக் கடைக் கண்ணால் நோக்கி, நன்கு ஆலோசனை செய்யாது இவற்றைக் கூறி விட்டீர்கள்; இவர்களது செயல்திறனையும், இதன் உண்மைக்கருத்தையும் இப்போது நான் கூறுகிறேன், கேளுங்கள்'' என்று கீழ்வருமாறு கூறத்தொடங்கினான்.

''கண்ஆர் நுதல் பெருமான்'' என்பது கண்பொருந்திய நெற்றியை யுடைய சிவபெருமான் என்று நெற்றிக் கண்ணையுடைய சிவபெரு மானைக் குறிக்கும். ''கடைபார்த்து'' என்பது கடைக்கண்ணால் அருள் பொங்க நோக்கி என்று பொருள்படும்.

140. "நாராயண நரர் என்று இவர் உளராய், நமக்கெல்லாம்
வேராய், முழுமுதல் காரணப்பொருளாய், வினை கடந்தோர்;
ஆராயினும் தெரியாதது ஓர் நெடுமாயையின் அகத்தார்;
பாராயண மறை நான்கையும் கடந்தார்; இவர் பழையோர். (9156)

Koviloor Digital Library

(வேர்-மூலகாரணம்; ஆர்-யார்; அகத்தார்-மறைந்திருப்பவர்கள்; பழையோர்-தொன்மையுடையோர்)

சிவபெருமான் தேவர்களை நோக்கி, ''இவர்கள்தான் முன்பு நாராயணனாகவும், நரனாகவும் தோன்றி, தேவர்களாகிய நமக்கெல்லாம் மூலமுதற் பரம்பொருளாய் விளங்குபவர்கள்; நல்வினை, தீவினை என்ற இரு வினையினின்றும் நீங்கியவர்கள் எத்திறத்தோர் ஆயினும், அவர்களாலும் தெளிந்து உணரமுடியாத நீண்ட பெரும் மாயையினுள்ளே மறைந்திருப்பவர்கள்; விற்பன்னர்களால் இடைவிடாது ஓதப்படும் நான்கு வேதங்களையும் கடந்தவர்கள்; இவர்கள் மிகமிகத் தொன்மை யானவர்கள்'' என்று சிவபெருமான் விளக்குகிறான்.

நாராயணன், நரன் என்று இராமபிரானும் இலக்குவனும் தோன்றினார்கள் என்பது வைணவக் கருத்து. முன்பு பத்ரிகா சிரமத்தில் திருமந்திரத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டி இராமபிரான் நாராயணனாகவும், இலக்குவன் நரனாகவும், (ஆசிரியர்-மாணவராகவும்) குருவாகவும் சிஷ்யனாகவும் அவதரித்துத் திருமந்திரத்தின் உட்பொருளை விளக்கினார்கள் என்பதும், அவர்களே இப்பொழுது இராம இலக்குவர் களாகவும், பின்னால் கண்ணன், அர்ஜுனனாகவும் அவதரித்தார்கள் என்பதும் ஒரு வைணவக்கொள்கை. அது இங்கே சிவபெருமானால் தேவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி வில்லிபாரதத்திலும் குறிக்கப்பெறுகிறது. பாடல் பகுதியைக் கேளுங்கள். ''என்னை நான் பிரிவதில்லை; ஒருமுறை பிரிந்து மேனாள், நன்னிலாவெறிக்கும் பூணாய்! நரனும் நாரணனும் ஆனோம்; பின்னொரு பிறப்பில் யாமே இராம இலக்குவர்ப் பேர் பெற்றோம்!'' என்பது வில்லிபாரதம். 'வேர்' என்பது மூலம், 'எல்லாவற்றிற்கும் மூலகாரணமாய் தமக்கொரு காரணமற்ற வராய், காரணகாரிய வினைகட்கு உட்படாதவராய், உயிர் அறிவுக்கு எட்டாதவராய் இருப்பவர்'' என்பது விரிந்த பொருள்.

141. அறத்தாறு அழிவுளதாம்" என, அறிவும் தொடர்ந்து அணுகாப்
புறத்தார் புகுந்து, அகத்தார் எனப்புகுந்து, அன்னது புரப்பார்;
மறத்தார் குலம் முதல் வேர்அற மாய்ப்பான், இவண் வந்தார்,
திறத்தால் அது தெரிந்து யாவரும் தெரியாவகை திரிவார். (9157)

(அணுகுதல்-நெருங்குதல்; அறத்துஆறு-அறநெறி; புரத்தல்-பாது காத்தல்; தெரிதல்-ஆராய்தல்; திரிதல்-சஞ்சரித்தல்; மறத்தார்-தீவினை யாளர்/பாவிகள்; வேர்-முதல்; மாய்த்தல்-அழித்தல்; இவண்-இங்கு/ இலங்கைக்கு; திறம்-ஆற்றல்/அருள்திறம்; மாய்ப்பான்-அழிக்கும் பொருட்டு)

நுண்ணிய அறிவு ஆர்ந்த ஞானியராலும் தொடர்ந்து சென்று நெருங்க முடியாதபடி எல்லாவற்றுக்கும் அப்பால் இருப்பவர்களான இந்த

Koviloor Digital Library

இராமஇலக்குவர்கள், ''உலகில் அறநெறி சிதைந்து போயுள்ளது என்பதை நன்கு உணர்ந்து, உலகத்தின் உள்ளேயே பிறந்து, அறம்தலை நிறுத்தி அதைப் பாதுகாப்பதற்காக அவதரித்துள்ளார்கள். அறத்திற்கு மாறுபட்ட பாவச்செயல்களையே செய்யும் இயல்புடைய தீவினையாளர்களான அரக்கர்குலத்தை அடியோடு வேரறுக்கும் பொருட்டு இவ்வுலகில் மானிடராக அவதரித்து, இப்பொழுது இலங்கைக்கு வந்துள்ளனர்; இவர்கள் தம் அருள் திறத்தால், தாம் இங்கு அவதரித்திருப்பதை ஒருவரும் தெரிந்துகொள்ளாத வண்ணம், தம் சுயரூபத்தை மறைத்து இங்கு சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று சிவபெருமான், இராம இலக்குவரின் அவதார ரகசியத்தைத் தேவர்களுக்குக் கூறுகிறான்.

அறநெறி அழிந்துபோகும் நேரத்தில் அது அழிந்துபோகா வண்ணம் பரம்பொருள் அவதாரங்கள் எடுத்து அறம்தலை நிறுத்தும் என்பது கருத்து. தாம் அவதார புருஷர்கள் - இறைவனின் வடிவம் என்பதை யாரும் அறியாவண்ணம் தம்மை மறைத்துக்கொண்டே அறம் நிலைக்கச் செய்வர் என்பதும் அறிக. தமது இயல்பு மற்றவர்க்குப் புலனாகாதவாறு சஞ்சரிப் பார்கள் என்க.

142. ''உயிர்தோறும் உற்றுளன், தோத்திரத்து ஒருவன்'' என உரைக்கும்
அயிரா நிலை உடையான் இவன், அவன், இவ்வுலகனைத்தும்
தயிர்தோய் பிரை எனலாம் வகை கலந்து, ஏறிய தலைவன்;
பயிராதது ஓர் பொருள் இன்னது என்று உணர்வீர்; இது பரமால். (9158)

(உறுதல்-பொருந்தியிருத்தல்; தோத்திரம்-ஸ்தோத்திரம்/போற்றுதல்; ஒருவன்-ஒப்பற்றவன்; உரை-புகழ்; அயிர்த்தல்-ஐயுறுதல்/சந்தேகம் கொள்ளுதல்; இவன்-இலக்குவன்; அவன்-இராமபிரான்; பிரை-மோர்த் துளி; இன்னது-இத்தன்மையது; பரம்-பரம்பொருள்/மேலான பொருள்/ கடவுள்; பயிர்தல்-அழைத்தல்/சொல்லுதல்; ஏறுதல்-பரவிநிற்றல்)

உலகில் தோன்றியுள்ள உயிரினங்கள் எல்லாவற்றிலும் பொருந்தி யிருப்பவன் என்றும், எல்லோருடைய போற்றுதலுக்கும் உரிய ஒப்பற்றவன் என்றும் புகழ்ந்து கூறப்படும் ஐயுறுதற்கு இயலாத இறை நிலையைக் கொண்டவன் இங்கே நிற்கின்ற இலக்குவன் ஆவான். அங்கே சேய்மையில் நிற்கின்ற இராமபிரான், இவ்வுலகனைத்திலும், பால் தயிராய்த் தோய்வதற்குக் காரணமாகின்ற மோர்த்துளி என்று சொல்லும் படி உலக உயிரினங்கள் அனைத்துள்ளும் கலந்து, நீக்கமற நிறைந் திருக்கும் தலைவன் ஆவான்; இப்பொருள் இத்தன்மைத் தானது என்று நீங்கள் நன்கு உணர்ந்து கொள்வீர்களாக; இதுதான் மேலான கடவுள் தத்துவம். இவர்கள்தான் பரம்பொருள் என்று சிவபெருமான் மேலும் தேவர்களுக்குக் கூறுகிறான்.

Koviloor Digital Library

'தோத்திரம்' என்பது 'ஸ்தோத்திரம்' என்ற வடசொல்லின் திரிபு. போற்றுதல் என்பது பொருள். 'இவன்' என்பது இலக்குவனைக் குறித்த அண்மைச்சுட்டு; அவன் என்பது இராமபிரானைக் குறித்த சேய்மைச் சுட்டு; தயிர்தோய்பிரை என்ற உவமையைக் கவிஞன் பல இடங்களிலும் கையாண்டிருப்பதை எண்ணுக. இதைப் பரத்துவம் என்கிறது வடமொழி.

143. "நெடும் பாற்கடல் கிடந்தாரும், பண்டு, இவர் நீர் குறை நேர
விடும் பாக்கியம் உடையார்களைக் குலத்தோடு அறவீட்டி,
இடும் பாக்கியத்து அறம் காப்பதற்கு இசைந்தார்" என, இதுவெலாம்
அடும்பு ஆக்கிய தொடைச் செஞ்சடை முதலோன் பணித்து
அமைந்தான். (9159)

(பண்டு-முன்பு; நேர்தல்-வேண்டுதல்; விடுதல்-இழத்தல்; பாக்கியம்-நற்பேறு; வீட்டுதல்-கொன்றழித்தல்; இசைதல்-உடன்படுதல்/உளம் பொருந்துதல்; இது-இச்செய்திகள்; அடும்பு-அடப்பமலர்கள்; தொடை-மாலை/தொடுக்கப்படுவது; பணித்தல்-அறிவுறுத்துதல்/அருளிச் செய்தல்)

நீண்ட பாற்கடலில் அறிதுயில் கொண்டிருப்பவர்களும் இவர்களே. முன்பு நீங்கள் அரக்கர்களால் விளைந்த தீமைகளைக் கூறிக் குறையிரந்து வேண்டியபோது நற்பேற்றினை இழக்கின்ற அரக்கர்களைக் குலத் தோடும் வேரறுத்து உங்களுக்கு நற்பேற்றினை அருளுதற்காகவும், அறம்தலை நிறுத்தற்காகவும் இசைந்து இவ்வவதாரம் எடுத்து வந்தவர்களும் இவர்களே'' என்று இராமஇலக்குவர் என்னும் இருவரும் திருமாலின் ஒரு கூறே எனவும், இச்செய்தியை எல்லாம், அடப்ப மலர்களால் தொடுக்கப்பெற்ற மலர்மாலையை அணிந்தவனும், சிவந்த சடையினை உடையவனுமாகிய எல்லாவற்றிற்கும் மூல முதல்வனாகிய சிவபெருமான் நன்றாகத் தெளிவித்து அமைந்தனன்.

'கிடத்தல்' என்பது அறிதுயில் கொண்டிருப்பதைக் குறிக்கும். 'விடும் பாக்கியம் உடையார்' என்பது பாக்கியத்தை இழக்கும் அரக்கர்கள் என்று பொருள்படும். 'அடும்பு' என்பது ஒருவகை மலர். இம்மலர் சிவபெருமான் சடையில் சூடிக்கொள்வது என்பர். 'பணித்தல்' என்பது அருளுதல் என்ற பொருளையும் தரும். 'வாய்திறந்து ஒன்று பணித்த துண்டு' என்பது பெரிய திருமொழி. தாம் முன்னால் கடும் தவம்செய்து பெற்ற வரங்களாகிய நற்பேறுகளையெல்லாம் தமது தீவினை காரணமாக இழக்கும் நிலையுடைய அரக்கர்கள் என்பது 'விடும் பாக்கியம் உடையார்களை' என்று கூறப்பட்டது. சிவபெருமான் இராமஇலக்குவரது பிறப்பின் நோக்கத்தை-அவதார ரகசியத்தைக் கூறி முடித்தான் என்பதாம்.

Koviloor Digital Library

144. "அறிந்தே இருந்து, அறியேம்; அவன் நெடு மாயையின் அயர்ப்போம்;
பிறிந்தோம் இனி முழுது ஐயமும்; பெருமான் உரை பிடித்தோம்;
எறிந்தோம் பகை முழுதும்; இனித் தீர்ந்தோம் இடர்; கடந்தோம்;
செறிந்தோர் வினைப் பகைவா!" எனத் தொழுதார் நெடுந்தேவர். (9160)

(செறிந்தோர்-அடைந்தவர்கள்/நெருங்கியவர்கள்; அயர்த்தல்-மறத்தல்; பிடித்தல்-பற்றிக்கொள்ளுதல்; தீர்தல்-தெளிதல்; கடத்தல்-நீங்குதல்; நெடுமை-பெருமை; வினைப்பகைவன்-பாபநாசன்; பிறிதல்-பிரிதல்/விடுபடுதல்)

பெருமைமிக்கத் தேவர்கள், சிவபெருமானை நோக்கி, ''தன்னை நெருங்கிச் சரண் அடைந்தவர்களின் தீவினைகளைப் போக்கி அருள் பவனே! நீ இப்போது இராமஇலக்குவர் பற்றிக்கூறிய சிறப்புக்கள் அனைத்தும் நாங்கள் அறிந்திருந்தோம். எனினும் அவர்கள் செய்த சில மாயச்செயல்களைக் கண்டு நாங்கள் எங்களை மறந்து நினைப்பின்றி இருந்துவிட்டோம்; இப்போது உன்னுடைய அருளுரைகளை உறுதி யாகப் பற்றிக்கொண்டோம். எனவே இனி அதனின்றும் விடுபட்டவ ராவோம்; எங்கள் ஐயங்கள் முழுதும் தீர்ந்துவிட்டன. பகை என்று கருதியவை அனைத்தையும் அகற்றிவிட்டோம்; எங்களுக்கு உண்டான தீங்குகளினின்றும் நீங்கினோம்'' என்று சிவபெருமானைத் தொழுதார்கள்.

பிரிந்தோம் என்பது 'பிறிந்தோம்' என எதுகைநோக்கித் திரிந்தது; நெடுமை பெருமையை உணர்த்திற்று; மாயையால் அறிவு மழுங்கிப் போனது என்கின்றனர்; வினைப்பகைவன் என்ற சொல்லுக்குப் பாபநாசன், பாவகேடன் என்று பொருள் கூறுகிறது திருவாசகம் கேளுங்கள். ''பாவநாசா, உன் பாதமே அல்லால், பற்று நான் மற்று இலேன் கண்டாய்!'' என்பதும், ''நான் வினைக்கேடன் என்பாய்போல'' என்பதும் திருவாசகம்.

145. நாராயணாஸ்திரம் இலக்குவனை விலகிப்போதல்

மாயோன் நெடும்படை வாங்கிய வளைவாள் எயிற்று அரக்கன்,
"நீயோ இது தடுத்தாய் எனின், நினக்கு ஆர் எதிர் நிற்பார்?
போயோ விசும்பு அடைவாய்; இது பிழையாது" எனப் புகலா,
தூயோன் மிசை, உலகுயாவையும் தடுமாறிட, துரந்தான். (9161)

(மாயோன்-திருமால்; வாங்குதல்-கையில்கொள்ளுதல்; வாள்-கூரிய; விசும்பு-விண்ணுலகு; பிழைத்தல்-தவறுதல்; மிசை-மேல்/மீது; தூயோன் -இலக்குவன்; துரத்தல்-செலுத்துதல்; புகலா-புகன்று/கூறி; விசும்பு அடைதல்-இறந்துபோதல்)

திருமாலின் நீண்ட பெரிய அத்திரமான நாராயணாத்திரத்தைக் கையில் கொண்டுள்ள, வளைந்த, கூரிய, கோரப்பற்களையுடையவனான அரக்கன்

Koviloor Digital Library

இந்திரசித்து, இலக்குவனை நோக்கி, ''இந்தப் படைக்கலத்தை நீயே தடுத்து நிறுத்திவிட்டாய் என்றால், உன்னை எதிர்ப்பவர்கள் இவ்வுலகில் யார் இருக்கிறார்கள்? எனினும் இவ்வத்திரம் தன் இலக்கில் தப்பாது; எனவே நீ இப்போது இறந்துபட்டு விண்ணுலகு சென்றடைவது நிச்சயம்'' என்றுகூறி, இவ்வுலகங்களெல்லாம் நிலைகுலைந்து தடுமாறும் வண்ணம், தூய்மையானவனான இலக்குவன்மீது அந்த நாராயணாத் திரத்தை ஏவினான் இந்திரசித்து.

'மாயோன் நெடும்படை' என்பது நாராயணாஸ்திரத்தைக் குறிக்கும். சக்கரப்படை எனினும் பொருந்தும். 'விசும்பு அடைதல்' என்பது இறந்துபோதல் என்பதன் மங்கல வழக்கு எனக்கொள்க.

146. சேமித்தனர் இமையோர் தமை, சிரத்து ஏந்திய கரத்தால்;
ஆம் இத்தொழில் பிறர்யாவரும் அடைந்தார்; பழுது அடையாக்
காமிப்பது முடிவிப்பது, படிகின்றது கண்டான்,
'நேமித் தனி அரிதான்' என நினைந்தான், எதிர் நடந்தான். (9162)

(இமையோர்-தேவர்கள்; சேமித்தல்-பாதுகாத்தல்; ஆம்-ஆகும்/ பொருத்தமானதாகும்; தொழில்-செயல்; அடைதல்-மேற்கொள்ளுதல்; காமிப்பது-விரும்புவது; முடிவிப்பது-நிறைவேற்றுவது; படர்தல்-நிலத்தில் படிதல்; தனி-ஒப்பற்ற; நேமி-சக்கரப்படை; அரி-திருமால்; நினைத்தல்-உணர்ந்து தெளிதல்)

இமையா நாட்டமுடைய தேவர்கள் எல்லோரும் தமக்கு அப்படை யினால் தீங்கு நேராதவாறு தம் கைகளைத் தலைமேல் கூப்பிக்கொண்டு அந்த நாராயணாஸ்திரத்திடமிருந்து தங்களைக் காத்துக்கொண்டார்கள்; ''ஆம்! அதுவே செய்யத்தக்கது என்று கருதிய முனிவர்களும், மற்றவர்களும் அவ்வாறே தலையில் கை கூப்பும் செயலையே செய்யத் தொடங்கினார்கள்; இலக்குத் தப்பாததும், வேண்டுவதை விரும்பிய வண்ணம் நிறைவேற்றி வைப்பதுவுமான அந்த நாராயணாஸ்திரம், தேவர்களைத் தவிர்த்து, தரையில் தன்னை நோக்கிப் படர்ந்து வருவதை இலக்குவன்நோக்கி, தன்னையேசக்கரப்படையேந்திய ஒப்பற்ற திருமால் என்று தெளிவாக உணர்ந்து கொண்டு அதன் எதிரில் நடந்து சென்றான்.

காமம் என்ற சொல்லுக்கு விருப்பம் என்பது பொருள். அச்சொல்லின் அடியாகப் பிறந்த வினைச்சொல். காமிப்பது என்பது புதிய சொல்லாட்சி.

147. தீக்கின்றது இவ்வுலகு ஏழையும் எனச் செல்வதும் தெரிந்தான்;
நீக்கும் தரம் அல்லா முழுமுதலோன் என நினைத்தான்;
மீச் சென்றிலது; அயல்சென்று அது விலங்கா, வலம்கொடு மேல்
போய்த்து; அங்கு அது கனல் மாண்டது; புகை வீய்ந்தது; பொதுவே.
(9163)

Koviloor Digital Library

(தீய்த்தல்-சுட்டெரித்தல்; தெரிதல்-உணர்ந்துகொள்ளுதல்; நீக்குதல்-அழித்துப்போக்குதல்; தரம்-தன்மை; மீ-மீது/மேலே; விலங்கா-விலங்கி/விலகி/அகன்று; கொடு-கொண்டு; அயல்-பக்கம்; மேல்-விண்ணில்/மேலே; போய்த்து-போயிற்று; மாள்தல்-அழிதல்; வீய்தல்-அற்று ஒழிதல்)

அவ்வாறு தன்னை நோக்கிவந்த நாராயணாஸ்திரம், இந்த ஏழு உலகங்களையும் சுட்டெரித்துப் பொசுக்கப் போகின்றது என்பதை நன்கு உணர்ந்த இலக்குவன், யாராலும் அழித்துப் போக்குவதற்கு அரிதான தன்மையுள்ள முழுமுதற்கடவுளாகிய திருமாலே தான் எனத் தனக்குள் எண்ணிக்கொண்டான்; இதனை உணர்ந்த அந்நாராயணாஸ்திரம் இலக்குவன்மீது செல்லாது, அவன் பக்கத்தில் விலகிச்சென்று, அவனை வலம்வந்து விண்ணுலகு நோக்கிப்போயிற்று; அங்குபோய்ப் பொதுவாக எங்கும் பரவிய நெருப்பு அவிந்து மறைந்துபோனது; அதனால் எழுந்த புகைப்படலம்கூட அற்றுப்போனது.

'போய்த்து' என்ற சொல்லாட்சி நோக்குக. போயிற்று என்பது பொருள். இந்தச்சொல் திருவாசகத்தில் கையாளப்பட்டிருக்கிறது கேளுங்கள். ''இன்றே இன்றிப் போய்த்தோ தான்'' என்பது திருவாசகம். இராம பிரானோ, இலக்குவனோ பொதுவாகத் தம்மைக் கடவுளின் அவதாரம் என்று கடவுள் தன்மையை எங்கேயும் காட்டிக்கொள்வதில்லை. அவ்வாறு காட்டிக்கொள்ளும் சில அரிய இடங்களில் இதுவும் ஒன்று என்பதை அறிக.

148. ஏத்து ஆடினர் இமையோர்களும்; கவியின் குலமெல்லாம்
கூத்து ஆடினர்; அரமங்கையர் குனித்து ஆடினர்; தவத்தோர்
'காத்தாய் உலகனைத்தும்' எனக் களித்து ஆடினர்; கமலம்
பூத்தானும், அம்மழுவாளியும், முழு வாய்கொடு புகழ்ந்தார். (9164)

(ஏத்து-துதி; ஏத்தி/துதித்து; அரமங்கையர்-தேவமகளிர்; குனித்தல்-உடல் வளைத்தல்; பூத்தல்-தோன்றுதல்; வாய்-சொற்கள்)

நாராயணாஸ்திரம் இலக்குவனை வலம் வந்து விலகிச் சென்று மறைந்ததைக் கண்ட, இமையாநாட்டமுடைய தேவர்கள், இலக்கு வனைத் துதித்துக் கொண்டாடினார்கள்; குரங்குக் கூட்டங்களெல்லாம் கூத்தாடின; தேவமகளிர் தம் உடலை வளைத்து, பரதக்கலையை மேற் கொண்டு நாட்டியமாக ஆடினர்; தவத்திற் சிறந்த முனிவர்களெல்லோரும், இலக்குவனை நோக்கி, ''எல்லா உலகங்களையும் காத்தவன் ஆனாய்'' என்று மகிழ்ச்சிப் பெருக்கால் ஆடினார்கள்; திருமாலின் உந்தித் தாமரை யினின்றும் தோன்றியவனாகிய பிரமதேவனும், ஒளிமிக்க மழுப் படையைக் கையில் ஏந்தியுள்ள சிவபெருமானும் வாயாரப் புகழ்ந்து இலக்குவனைப் பாராட்டினார்கள்.

Koviloor Digital Library

'முழுவாய்கொடு புகழ்ந்தார்'' என்பது பொருள் நிரம்பிய சொற்களைக் கொண்டு வாயாராப் புகழ்ந்து பாராட்டினார்கள் என்பதாம். 'நெஞ்சார்ந்த நன்றி' என்று இன்று கூறுகிறோம் அல்லவா? அதுபோல முழுவாய் கொடு புகழ்ந்தார் என்க.

149. இந்திரசித்து பாசுபதாஸ்திரத்தைச் செலுத்துதல்

அவன் அன்னது கண்டான், ''இவன் ஆரோ?'' என அயிர்த்தான்;
''இவன் அன்னது முதலே உடை இறையோன்'' என, வியவா,
''எவன் என்னினும் நன்று ஆகுக! இனி எண்ணலென்'' என்னா,
''சிவன் நன்படை தொடுத்து, ஆர்உயிர் முடிப்பென்'' எனத்
தெரிந்தான். (9165)

(அன்னது-அத்தன்மையான படைக்கலம்; முதலே-முன்னரே/தொன்மையிலேயே; முடித்தல்-போக்குதல்; தெரிதல்-தேர்தல்; வியவா-வியந்து; அயிர்த்தல்-ஐயுறுதல்/சந்தேகித்தல்)

அவ்வாறு தான் செலுத்திய நாராயணாஸ்திரம் பயனற்று இலக்குவனை வலம்வந்து விலகிச்சென்றதைக் கண்ட இந்திரசித்து, ''இவன் யாராய் இருக்கக்கூடும்'' என்று ஐயுற்று, இவன் இந்த நாராயணாஸ்திரத்தை முன்னரேயே, தொன்மைக் காலந்தொட்டே தனக்குரியதாகக் கொண்டுள்ள இறைவன் திருமாலாகத்தான் இருக்கவேண்டும் என்று தனக்குள் வியப்புற்று, 'சரி யாராய் இருந்தாலும், என்னுடைய இலக்கு சரியாக நிறைவேற வேண்டும், இனிமேல் எதைப்பற்றியும் நினைக்க மாட்டேன். சிவபெருமானது படைக்கலமாகிய நல்ல சிறந்த பாசுபதாஸ் திரத்தைக் கொண்டு இலக்குவனது அரிய உயிரைப் போக்குவேன்'' என்று நன்கு ஆராய்ந்து, துணிந்து அதனைத் தொடுத்துச் செலுத்தினான்.

இப்போது இந்திரசித்து, இலக்குவன் திருமாலின் அம்சமே என்பதை ஒருவாறு ஊகித்து அறிந்துகொண்டான். எனினும் தனது வீரத்தன்மைக்கு இழுக்கு வந்துவிடக்கூடாதே என்று கருதிப் பாசுபதாஸ்திரத்தை ஏவினான் என்பதாம்.

150. ''பார்ப்பான் தரும் உலகு யாவையும், ஒருகால், ஒருபகலே,
தீர்ப்பான் படைதொடுப்பேன்'' எனத் தெரிந்தான்; அது தெரியா,
மீப் பாவிய இமையோர்குலம் வெருவுற்றது; இப்பொழுதே
மாய்ப்பான்'' என, உலகு யாவையும் மறுகுற்றன, மயங்கா. (9166)

(பார்ப்பான்-வேதியன்/பிரமதேவன்; தருதல்-தோற்றுவித்தல்/படைத்தல்; பகல்-பொழுது; தீர்த்தல்-அழித்தல்; தெரியா-தெரிந்து; மீ-மேலே/மீது; பாவுதல்-பரவியிருத்தல்; வெருவுதல்-அஞ்சுதல்; மாய்த்தல்-அழித்தல்; மயங்கா-மயங்கி; மறுகுறுதல்-தடுமாறுதல்)

Koviloor Digital Library

''வேதங்களில் வல்லவனான பிரமதேவன் தோற்றுவித்த இந்த உலகங்கள் எல்லாவற்றையும், ஒரு நாளின் ஒரு பகுதியாகிய ஒரு பகல் பொழுதிற்குள் அழித்து ஒழித்துவிடும் ஆற்றலுள்ள சிவபெருமானின் பாசுபதாஸ்திரத்தை இப்பொழுது தொடுக்கப் போகிறேன்'' என்று துணிந்த இந்திரசித்தன் மன உறுதியைக் கண்டு,வானுலகத்தில் உள்ள இமையாநாட்டமுடைய தேவர்களின் கூட்டம் அஞ்சி நடுங்கியது; ''இப்பொழுதே இவன் எல்லோரையும் அழித்து ஒழித்துவிடுவான்'' என்று எல்லா உலகத்தவரும் மனக்கலக்கமுற்று நிலைகுலைந்தனர்.

'பார்ப்பான்' என்பது இப்பொழுது நாம் வழங்கும் பொருளைத் தாராது. வேத விற்பன்னன், வேதங்களில் வல்லவன் என்று பிரமதேவனைக் குறிக்கும். 'ஒருபகல்' என்பது ஒருநாளில் ஒரு சிறு காலப்பொழுதைக் குறிக்கும் சொல்.

151. "தானே சிவன் தரப்பெற்றது, தவம் நாள்பல உழந்தே;
தானே 'பிறர் அறியாதது தந்தேன்' எனச் சமைந்தான்;
ஆனால், இவன் உயிர்கோடலுக்கு ஐயம் இலை' என்னா,
மேல்நாள் இதனை ஏவிடின், எதிர் நிற்பவர் இல்லை. (9167)

(உழத்தல்-வருத்தமுறுதல்; சமைதல்-பொருந்தி அளித்தல்; மேல்நாள் -முற்காலத்தில்; உயிர்கோடல்-உயிர்கவர்ந்து கொள்ளுதல்) (குளகப் பாடல்)

இந்திரசித்து தன் உடலை வருத்திக்கொண்டு பலகாலம் செய்த அருந்தவத்தின் பயனால், சிவபெருமானே மகிழ்ந்து தானே நேரில் வந்து தரப்பெற்றது இந்த பாசுபதாஸ்திரம்; சிவபெருமான் ''பிறர் ஒருவரும் அறியாததும், இது வரையிலும் பிறர் யாருக்கும் தாராததுமான இந்த அஸ்திரத்தை நான் உனக்கு அளிக்கிறேன்'' என்று அருள் பாலித்து அளித்தது. எனவே இது இலக்குவன் உயிரைக் கவர்ந்து கொள்ளும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை'' என்று தன் மனத்துள் கருதிக்கொண்டு, முற்காலத்தில்கூட இந்த அஸ்திரத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றல் ஒருவருக்கும் இருந்ததில்லை'' என்றும் கூறிக்கொண்டான்.

முன்பு பிரமாஸ்திரம், நாராயணாஸ்திரம், இப்போது பாசுபதாஸ்திரம் என்று பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய முத்தேவர்களின் படைக்கலங்களும் பயன்படுத்தப்பட்டு விட்டன என்பதை நினைவில் கொள்க.

152. மனத்தால், மலர், புனல், சாந்தமொடு, அவிதூபமும் வகுத்தான்;
நினைத்தான்; 'இவன் உயிர் கொண்டு, இவண் நிமிர்வாய்' என
நிமிர்த்தான்,
சினத்தால் நெடுஞ்சிலை நாண் தடந்தோள் மேல் உறச் செலுத்தா,
எனைத்து ஆயது ஓர்பொருளால் இடைதடை இல்லதை விட்டான்.(9168)

Koviloor Digital Library

(சாந்தம்-சந்தனம்; அவி-திருஅமுது; தூபம்-நறும்புகை; நிமிர்தல்-நேராகப் பிடித்தல்; உற-பொருந்த; எனைத்து-எத்தகைய; செலுத்தா-செலுத்தி)

இந்திரசித்து மலர், நீர், சந்தனம் உணவுப்பொருள், நறும்புகை முதலியவற்றைக் கொண்டு, அப்பாசுபதாஸ்திரத்திற்கு மனத்தால் அருச்சனை செய்தான்; பின்னர் அப்படைக்கலத்தை நோக்கி, ''இவ்விலக்குவனது உயிரைக் கவர்ந்து கொண்டு இங்கு மீண்டு வருவாயாக'' என்று அவ்வஸ்திரத்தை நிமிர்த்தி, கோபம்கொண்டு, தன்னுடைய வில்லின் நாணைத் தன் அகன்ற தோள்வரை பொருந்தும்படி இழுத்து, இடையில் எத்தகைய ஒரு பொருளாலும் தடையே இல்லாததான அந்தப் பாசுபதாஸ்திரத்தை இலக்குவன்மேல் செலுத்தினான்.

வீரர்கள் தாம் செலுத்தப்போகும் தெய்வப் படைக்கலங்களுக்கு மனத்தால் பூசனை செய்வது ஒரு மரபு. முன்பும் இதுபோல நிகழ்ந்ததை நினைவு கூர்க. 'பூவும், பூநிற அயினியும், தீபமும், புகையும், தாவில் பாவனையால் கொடுத்து அருச்சனை சமைத்தான்' என்பது பாடல்பகுதி. 'அவி' என்பது திருவமுதைக் குறிக்கும். நைவேத்யம் என்பது வடசொல்; மலர், புனல், சாந்தம், அவி, தூபம் இவை அனைத்தும் வழிபாட்டிற்குரிய பொருள்கள் என்பதறிக. எத்தகைய ஆற்றல்மிக்க ஆயுதத்தாலும், இந்தப் பாசுபதாஸ்திரத்தை ஒன்றும் செய்யமுடியாது என்பது ''எனைத்தாயது ஓர் பொருளால் இடைதடை இல்லது'' எனப்பட்டது என்க.

153. அப்பொழுது நிகழ்ந்தவை

சூலங்களும், மழுவும், சுடுகணையும், கனல்சுடரும்,
ஆலங்களும், அரவங்களும், அசனிக்குலம் எவையும்,
காலன் தனது உருவங்களும், கரும் பூதமும், பெரும்பேய்ச்
சாலங்களும் நிமிர்கின்றன, உலகெங்கணும் தானாய். (9169)

(ஆலம்-நஞ்சு; அரவம்-பாம்பு; அசனி-இடி; சாலம்-கூட்டம்; நிமிர்தல்-எழுந்து தோன்றுதல்)

இந்திரசித்து பாசுபதாஸ்திரத்தைச் செலுத்தியதும் அதனின்றும், சூலப் படைகளும், மழுப்படைகளும் சுட்டெரிக்கின்ற அம்புகளும், நெருப்பில் கொழுந்து விட்டெரியும் ஒளியும், நஞ்சும், பாம்புகளும், இடியின் கூட்டமும் இயமனது பல வடிவங்களும், கரிய பூதங்களும், பெரிய பேய்க்கூட்டங்களும் எல்லாமும் எழுந்து இவ்வுலகம் முழுவதும் இவைகளே நிறைந்திருப்பதுபோல வெளிப்பட்டுத் தோன்றின.

''அசனிக்குலம்'' என்பது நீர்இடி, நெருப்புஇடி என்று பலவகையான இடிகளைக் குறிக்கும்.

Koviloor Digital Library

154. ஊழிக்கனல் ஒருபால் அதன் உடனே தொடர்ந்து உடற்றும்;
சூழிக் கொடுங்காற்று அதன் உடனே வரத் தூர்க்கும்,
ஏழிற்கும் அப்புறத்தாய் உள பெரும் போர்க்கடல் இழிந்தாங்கு,
ஆழித் தலைக்கிடந்தால் என, நெடுந் தூங்குஇருள் அடைய. (9170)

(ஒருபால்-ஒருபக்கம்; உடற்றுதல்-வருத்துதல்; சூழ்தல்-சுழலுதல்/சுழன்று வீசுதல்; போர்-பொருதுதல்/மோதுதல்; இழிதல்-இறங்கி வருதல்; ஆழி-கடல்/சேனைக்கடல்; தலை-இடம்; தூங்குதல்-தங்குதல்; தூர்த்தல்-செறிதல்/மூடுதல்; தொடர்ந்து-பின்பற்றிவந்து; அடைதல்-உண்டாகுதல்)

இந்திரசித்து செலுத்திய பாசுபதாஸ்திரத்தைப் பின்பற்றி, ஒரு பக்கம் ஊழிக்காலத்துப் பெருந்தீ துன்புறுத்தும்; மற்றொரு பக்கம் சுழன்று வீசுகின்ற கொடிய புயல் காற்றும் அப்பாசுபதாஸ்திரத்துடனே வந்து, உலகைச் சுற்றியுள்ள ஏழு கடல்களுக்கும் அப்புறத்தாய் இருக்கின்ற, அலைகள் மோதும் பெரும்புறக் கடலே இறங்கிவந்து அரக்கர்களின் சேனைக் கடலினிடத்தே படிந்து கிடந்தாற்போலவும் இருட்பிழம்பு தங்கியிருந்தது போலவும் எல்லா உலகங்களையும் மூடிக்கொண்டது.

இந்திரசித்து செலுத்திய பாசுபதாஸ்திரத்தினால் ஊழிப்பெருந்தீ, ஊழிப்பெருங்காற்று, ஊழிப்பேரிருள் இவையெல்லாம் உண்டானது என்பதாம். 'உடற்றுதல்' என்பது துன்புறுத்துதலைக் குறிக்கும். 'உள்நின்று உடற்றும் பசி' என்பது குறள்-13. பெரும்புறக் கடலுக்கும் அப்பால் பேரிருள் பிழம்பு உண்டு என்பது ஒரு புராணக்குறிப்பு.

155. இரிந்தார் குல நெடுந்தேவர்கள்; இருடிக் குலத்து எவரும்
பரிந்தார், 'இது பழுது ஆகிலது, இறுவான்' எனும் பயத்தால்;
நெரிந்து ஆங்கு அழிகுரங்கு உற்றது, பகரும் துணை நெடிதே?
திரிந்தார், இரு சுடரோடு உலகு ஒரு மூன்று உடன் திரிய. (9171)

(குலம்-சிறப்பு; நெடுமை-பெருமை; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; இருடிக்குலம்-முனிவர் கூட்டம்; இருடி-ரிஷி; பழுது-தவறு; இறுதல்-இறந்துபடுதல்; பயம்-அச்சம்; பரிதல்-வருந்துதல்; நெடிது-நீளும் தன்மையது/நீண்டது; நெரிதல்-நெருங்கி மோதிக் கொள்ளுதல்; திரிதல்-அலைதல்)

இந்திரசித்து செலுத்திய பாசுபதாஸ்திரத்தின் வெப்பம் தாங்க மாட்டாமல் சிறந்த பெருமையுடைய தேவர்கள் நிலைகெட்டு ஓடி ஒளிந்தார்கள்; முனிவர்கள் கூட்டத்தில் உள்ள எல்லோரும் ''இந்தப் பாசுபதாஸ்திரம் தன் இலக்கைத் தப்பாது; எனவே இலக்குவன் அழிந்துபடுவான்'' என்று அச்சம்கொண்டு, வருந்தி நின்றார்கள்; அங்கிருந்த குரங்குப் படைகள் ஒன்றோடொன்று நெருக்கி முட்டி

Koviloor Digital Library

மோதிக்கொண்டு அழிந்துபட்டதைக் கூறத்தொடங்கினால் அது நீண்டு கொண்டே போகும்; இரண்டு சுடர்களான சூரியசந்திரர்கள்கூட, ஒரு நிலையில் நில்லாது மூன்று உலகங்களுடன் ஒன்றுசேர்ந்து திரியலாயின.

'இருடி' என்பது 'ரிஷி' என்ற வடசொல்லின் திரிபு.

156. பார்த்தான் நெடுந்தகை வீடணன், உயிர் காலுற, பயத்தால்
வேர்த்தான், 'இது விலக்கும் தரம் உளதோ; முதல் வீரா!
தீர்த்தா!'' என அழைத்தான்; அதற்கு இளக்கோளரி சிரித்தான்;
போர்த்தார் அடர் கவிவீரரும், அவன் தாள் நிழல் புகுந்தார். (9172)

(நெடுந்தகை-பெருந்தன்மையுடையவன்; காலுதல்-வெளிப்படுதல்; தரம்-உபாயம்/வழி; தீர்த்தன்-தூயோன்; தார்-மாலை; அடல்-வலிமை; தாள்-திருவடி; நிழல்புகுதல்-தஞ்சமடைதல்/சரணடைதல்)

இந்திரசித்து செலுத்திய பாசுபதாஸ்திரம் இலக்குவனை நோக்கி வந்ததையும், அதனால் உலகத்தில் ஏற்பட்ட விளைவுகளையும் கண்ணுற்ற பெருந்தன்மையாளனான வீடணன், சற்று அச்சம்கொண்டு, பெருமூச்சு வெளிப்படுத்தி உடல் வியர்க்கப் பெற்றான்; பின்னர் இலக்குவனை நோக்கி, ''வீரர்க்கெல்லாம் வீரனே! தூயவனே! இந்தப் பாசுபதாஸ்திரத்தைத் தடுக்கும் வழி ஏதேனும் இருக்கிறதா?'' என்று கேட்டு முறையிட்டான்; அதனைக்கேட்டு இளமையும் வலிமையும் உடைய சிங்கம் போன்றவனாகிய இலக்குவன் ஏளனமாகச் சிரித்தான்; போர்மாலையை நெருக்கமாக அணிந்துள்ள வானரவீரர்களும், அச்சம் கொண்டு இலக்குவனின் திருவடி நிழலில் சரணடைந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர்.

'தாள் நிழல் புகுதல்' என்பது சரணடைதலைக் குறிக்கும். 'அதற்கு' என்ற சொல்லுக்கு அந்தப் பாசுபதாஸ்திரத்தின் செயலுக்கு, என்று பொருள்கொள்ளுதலும் பொருந்தும்.

157. இலக்குவன் பாசுபதாஸ்திரத்தைத் தொடுக்கத் தீர்மானித்தல்

''அவயம் உனக்கு அவயம்'' எனும் அனைவோரையும், ''அஞ்சேல்!
அவயம் உமக்கு அளித்தோம்'' எனத் தன் கைத்தலத்து அமைத்தான்;
''உவயம் உறும் உலகின் பயம் உணர்ந்தேன், இனி ஒழியேன்;
சிவன், ஐம்முகம் உடையான், படைதொடுப்பேன்'' எனத்
தெளிந்தான். (9173)

(கைத்தலம்-கைகள்; அமைத்தல்-ஆறுதல் கூறுதல்; உபயம்-இரண்டு/விண்ணுலகும் மண்ணுலகும்; ஒழிதல்-நீங்குதல்)

Koviloor Digital Library

அவ்வாறு தன்னை நோக்கி, ''நாங்கள் உனக்கு அடைக்கலம்; அடைக்கலம்'' என்று கூறிக்கொண்டு தன்னை வந்து சரணடைந்தவர்கள் அனைவரையும் இலக்குவன் அருள்கூர்ந்து நோக்கி, ''அஞ்சாதீர்கள் நான் உங்களுக்கு அடைக்கலம் தந்தேன்'' என்று தன் இரு கரங்களையும் கவித்து ஆறுதல் கூறினான். பின்னர், ''இரண்டு என்று அமைந்திருக்கின்ற விண்ணுலகத்திலுள்ளோரும், மண்ணுலகத்தில் உள்ளோரும் கொண்டிருக்கிற அச்சத்தை நான் உணர்ந்து கொண்டேன். இனியும் எதிர்த்துத் தாக்காமல் வாளா இருக்கமாட்டேன். இப்பொழுதே ஐந்து முகங்களையுடையவனான சிவபெருமானின் படைக்கலமாகிய பாசுபதாஸ்திரத்தைத் தொடுத்துச் செலுத்துவேன்'' என்று நன்கு ஆராய்ந்து தீர்மானித்தான்.

'அவயம்' என்பது அபயம் என்பதன் திரிபு. 'உவயம்' என்பது உபயம் என்பதன் திரிபு. பயம் என்பது அச்சத்தைக் குறிக்கும், அபயம் என்பது அச்சமின்மையைக் குறிக்கும். 'அ' என்ற சொல்லுக்கு இன்மைப்பொருள் உண்டு. பயமில்லாதது அபயம், நாகரீகம் இல்லாதது அநாகரீகம்; நியாயம் இல்லாதது அநியாயம். உபயம் என்ற சொல்லுக்கு இரண்டு என்பது பொருள். இங்கே மண்ணுலகு, விண்ணுலகு இரண்டையும் குறித்து நின்றது. சிவபெருமானின் ஐந்து முகங்களாவன சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்பனவாம்.

158. அப்பொன்படை மனத்தால் நினைந்து, அர்ச்சித்து, 'அதை அழிப்பாய்;
இப்பொன் படைதனை மற்றொரு தொழில் செய்கிலை'' என்னா,
துப்பு ஒப்பது ஓர்கணை கூட்டினன் துரந்தான்; இடைதொடரா,
எப்பொன்படை எவையும் விழுங்குற்றது, ஓர் இமைப்பின். (9174)

(பொன்-பொலிவு/திண்மையுமாம்; அர்ச்சித்தல்-வழிபடுதல்; துப்பு-வன்மை/வலிமை; தொடரா-தொடர்ந்து; இமைப்பு-இமைப்பொழுது/நொடிப்பொழுது)

அந்தப் பொலிவும், திண்மையும் வாய்ந்த பாசுபதாஸ்திரத்தை மனத்திற்குள் கருதி உரிய மந்திரங்களால் அர்ச்சித்து வழிபட்டு, ''இந்திரசித்து ஏவிய பாசுபதாஸ்திரத்தை மட்டும் அழித்து விட்டு வருவாயாக! வேறு எந்தத் தொழிலையும் செய்து யாருக்கும் எதற்கும் ஒரு தீங்குகூட நேராதவண்ணம் செயல்படுவாயாக!'' என்று அதற்குக் கட்டளையிட்டு விட்டு, பகைவனின் அம்பின் வன்மைக்கு ஏற்றதொரு அம்பினை அதனோடு சேர்த்துத் தொடுத்தான். அந்தப் பாசுபதாஸ்திரம் இந்திரசித்து நின்ற இடத்திற்குத் தொடர்ந்து சென்று, எந்த வலிமைமிக்க படைகள் இடையிலிருந்தனவோ, அவற்றையும் சேர்த்து, ஒரு நொடிப் பொழுதிற்குள் விழுங்கி நின்றது.

'பொன்' என்ற சொல் அழகு என்ற பொருளோடு திண்மை, பொலிவு என்ற பொருளையும் தரும். 'எப்பொன்படை' என்பது இந்திரசித்து

Koviloor Digital Library

செலுத்திய பாசுபதாஸ்திரத்தினின்றும் வெளிப்பட்ட சூலப்படை, மழுப்படை, கனல், காற்று முதலியவற்றைக் குறிக்கும்.

159. விண் ஆர்த்தது; மண் ஆர்த்தது; மேலோர் மணி முரசின்
கண் ஆர்த்தது; கடல் ஆர்த்தது; மழை ஆர்த்தது; கலையோர்
எண் ஆர்த்தது; மறை ஆர்த்தது; 'விசயம்' என இயம்பும்
பெண் ஆர்த்தனள்; அறம் ஆர்த்தது; புறம் ஆர்த்தது பெரிதால். (9175)

(ஆர்த்தல்-ஆரவாரித்தல்/முழங்குதல்; கலையோர்-அறிஞர்கள்; எண்-உள்ளம்)

இலக்குவன்செலுத்திய பாசுபதாஸ்திரம், இந்திரசித்து ஏவிய பாசுபதாத்திரத்தை விழுங்கியது கண்ட வானுலகத்தவர்களும், மண்ணுலகத்தவர்களும் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தார்கள்; மேலோராகிய தேவர்களின் அழகிய மணிகள் பதிக்கப்பெற்ற முரசத்தின் கண்கள், யாரும் முழக்காமல் தாமே முழங்கின; கடலும் மேகங்களும் ஆரவாரம் செய்தன; கலைகளில் வல்ல அறிஞர்களின் உள்ளங்கள் மகிழ்ச்சியால் ஆரவாரித்தன; வேதங்களும் தருமதேவதையும் முழங்கின. விசயம் என்று கூறப்படுகின்ற வெற்றித் திருமகள் மகிழ்ந்து ஆரவாரித்தாள். வேறு மற்றவர்களும், மற்றவையும் ஆரவாரித்தன பெரிதாகும்.

இந்திரசித்தன் செலுத்திய பாசுபதாஸ்திரம் அழிந்ததால், விண், மண், முரசம், கடல், மேகம், அறிஞர்கள், வேதம், வெற்றித்திருமகள், தருமதேவதை, ஏனைய பிற எல்லாரும் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர் என்பதாம். 'மேலோர் முரசின்கண்' என்பது மேலோராகிய தேவர்கள் உறைகின்ற விண்ணுலகத்தில் உள்ள துந்துபி என்னும் முரசத்தில் குறுந்தடி கொண்டு அடிக்கப்படும் நடுஇடம். மேற்பகுதி கண் எனப்படும். அந்த முரசத்தை யாரும் குணில்கொண்டு அடிக்காமலேயே, தானே முழங்கிற்று என்பதாம்.

160. இறு காலையின் உலகு யாவையும் அவிப்பான் இகல்படையை,
மறுகா வகை வலித்தான்; அது வாங்கும்படி வல்லான்;
தெறு காலனின் கொடியோனும், மற்று அதுகண்டு, அகம் திகைத்தான்;
அறு கால் வயக் கவிவீரரும் அரி என்பதை அறிந்தார். (9176)

(இறுகாலை-ஊழியிறுதிக்காலம்; அவிப்பான்-அழிப்பவன்/சிவபெருமான்; இகல்-ஆற்றல்; மறுகுதல்-அலைந்துதிரிதல்; தெறுதல்-அழித்தல்; காலன்-இயமன்; அகம்-மனம்; அறுகால்-செயலற்ற கால்கள்; அரி-திருமால்; வய-வலிமைமிக்க; திகைத்தல்-மயங்குதல்; வாங்குதல்-அழித்தல்)

ஊழியிறுதிக்காலத்தில் எல்லா உலகங்களையும் ஒருசேர அழித்து ஒழிப்பவனான சம்ஹாரமூர்த்தியான சிவபெருமானின் ஆற்றல்மிக்க

Koviloor Digital Library

பாசுபதாஸ்திரம், இந்திரசித்தன் செலுத்திய பாசுபதாஸ்திரத்தை அழித்த பின்னர், வேறெங்கும் அலைந்து திரியாமல் அதை இழுத்து நிறுத்தக்கூடிய வல்லமைபெற்ற இலக்குவன் அதை வலித்து இழுத்தான்; அழித்தல் தொழிலையே இயல்பாகக் கொண்ட கூற்றுவனைவிடக் கொடியவனான இந்திரசித்து, இலக்குவனின் இச்செய்கையைக் கண்டு மனம் துணுக்குற்று வியந்தான். கால்கள் ஓய்ந்துபோய் நின்றிருந்த வலிமைமிக்க வானர வீரர்களும், இப்போதுதான் இலக்குவனும் திருமாலின் அம்சமே என்னும் உண்மையை உணர்ந்து தெளிவுற்றார்கள்.

முன்பாடலில் சிவபெருமான், தேவர்களுக்கு இலக்குவனும் திருமாலின் அம்சமே என்பதை அறிவுறுத்தினார். இங்கே வானரவீரர்கள் இலக்குவனின் வீரச்செயலைக் கண்டு தாமே உணர்ந்துகொண்டு தெளிந்தார்கள் என்ற இடத்தில் கம்பன் தேவர்களுக்கும், வானர வீரர்களுக்கும், உள்ள வேறுபாட்டை மிக நாகரீகமாகக் கூறியிருக்கும் நயம் நோக்குக.

161. "தெய்வப்படை பழுதுற்றது எனக் கூசுதல் சிதைவால்;
எய் வித்தகம் உளது; அன்னது பிழையாது;" என இசையா,
கை வித்தகம் அதனால் சிலகணை வித்தினன்; அவையும்
மொய் வித்தகன் தடந்தோளினும் நுதற்சூட்டினும் மூழ்க. (9177)

(சிதைவு குற்றம்/இழுக்கு; வித்தகம்-தொழில்திறமை/சதுரப்பாடு/ சாமர்த்தியம்; பிழைத்தல்-தவறுதல்; இசையா-இசைத்து; இசைதல்-கூறுதல்; வித்துதல்-தூவுதல்; மொய்-வலிமை; நுதல்சூடு-நெற்றியின் உச்சி; மூழ்குதல்-அழுந்திப்படிதல்; கூசுதல்-நாணுதல்)

''நான் செலுத்திய சிவபெருமானது தெய்வத்தன்மை வாய்ந்த பாசுபதாஸ்திரம், இலக்குவனால் தடுக்கப்பெற்று குற்றமுள்ளதாகி அழிந்துவிட்டது என்று கூறி நாணுற்றிருத்தல் என் வீரத்திற்கு இழுக் காகும்'' என்று இந்திரசித்து தனக்குள் கருதிக்கொண்டு, ''அம்பினைச் செலுத்தும் தனுர்வேதத்தில் வல்லவன் நான், அந்த ஆற்றல் குறைவின்றி நிரம்ப என்னிடம் உள்ளது; அது தவறாது'' என்றுகூறி, தனது கைத்திறத்தால், சில கணைகளை, வலிமைமிக்கவனும், பேரறிஞனு மாகிய இலக்குவனின் பெரிய அகன்ற தோள்களின்மீதும், நெற்றியின் உச்சியிலும் நன்கு அழுந்திப் பதியும்படியாகத் தூவினான்.

'எய் விந்தகம்' என்பது அம்புகளைச் செலுத்தும் சாஸ்திரமான தனுர்வேதத்தைக் குறிக்கும் எனக்கொள்க.

162. வெய்யோன் மகன்முதல் ஆகிய விறலோர், மிகுதிறலோர்,
கை ஓய்வு இலர், மலை மாரியின் நிருதக்கடல் கடப்பார்,
'உய்யார்' என, வடிவாளிகள் சதகோடிகள் உய்த்தான்;
செய்யோன் அயல் தனி நின்ற தன் சிறு தாதையைச் செறுத்தான். (9178)

Koviloor Digital Library

(வெய்யோன்-சூரியன்; விறலோர்-வெற்றித்திறம் வாய்ந்த வீரர்கள்; ஒய்தல்-தளர்தல்; மாரி-மழை; உய்தல்-பிழைத்தல்; வடி-கூர்மை; சதம்-நூறு; உய்த்தல்-செலுத்துதல்; செய்யோன்-சிவந்த மேனியன்/இலக்குவன்; அயல்-அருகே; சிறுதாதை-சிறியதந்தை/வீடணன்; செறுத்தல்-வெகுள்தல்; நிருதர்-அரக்கர்)

வெம்மைமிக்க கதிர்களைப் பரப்பும் சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவன் முதலான வெற்றிவீரர்களும், மிக்க ஆற்றல் படைத்தவர்களும், தளர்ச்சியுறாத கைகளைப் பெற்றவர்களும், மலைகளைப் பறித்து மழைபோல் வீசியெறிந்து, அரக்கர்களின் சேனைக்கடலை வெற்றி பெறுபவர்களுமான வானரவீரர்கள், இனி உயிர் பிழைக்க மாட்டார்கள் என்று காண்பவர் கூறும்வண்ணம், கூர்மையுடைய அம்புகளை, நூறுகோடி என்னும் அளவினதாக இந்திரசித்து செலுத்தினான். பின்னர் சிவந்த மேனியை உடைய இலக்குவனின் அருகில் தனியாக நின்றிருந்த தன் சிறிய தந்தையாகிய வீடணனை நோக்கி வெறுப்புடன் வெகுண்டான்.

163. இந்திரசித்து வீடணனைச் சினந்து இகழ்தல்

முரண் தடந்தண்டும் ஏந்தி, மனிதரை முறையைக் குன்றிப்
பிரட்டரின் புகழ்ந்து, பேதை அடியரின் தொழுது, பின்சென்று,
இரட்டுறும் முரசம் என்ன, இசைத்ததே இசைக்கின்றாயைப்
புரட்டுவென் தலையை இன்று; பழியொடும் ஒழிவென் போலாம்.
(9179)

(முரண்-வலிய; தண்டு-தண்டாயுதம்; முறை-உறவுமுறை; பிரட்டர்-நெறியின் நீங்கினோர்; இரட்டுதல்-ஒலித்தல்; புரட்டுதல்-உருளச் செய்தல்)

இந்திரசித்து தன் சிறிய தந்தையாகிய வீடணனை நோக்கி, ''பெரிய வீரன்போல வலிய அகன்ற தண்டாயுதத்தைக் கையில் ஏந்திக்கொண்டு போனாயே! நமக்கு உறவில்லாத-நம்மிலும் வேறுபட்ட-அற்பமான மானிடரை உறவுமுறைகூறி, நமது பெருமை குறையுமாறு நன்னெறியி னின்றும் நீங்கியவர்களைப்போல, இராமஇலக்குவரைப் புகழ்ந்துபேசி, அறிவற்றவன்போல அவர்கள் அடிகளை வணங்கி, அவர்கள் பின் தொடர்ந்து சென்று, ஒரேமுறையில் ஒலித்தபடி ஒலித்துக்கொண்டே இருக்கும் முரசத்தைப்போல, அவர்கள் கூறியதையே கூறிக் கொண்டிருக் கிறாயே! இன்று உன் தலையை வெட்டித் தரையில் உருளச் செய்கிறேன் பார்; இவன் தன் சிறிய தந்தையையே கொன்றுபோட்டவன் என்ற பழிச்சொல் எனக்கு வந்தாலும் பரவாயில்லை!'' என்று வெகுண்டு பேசுகிறான் இந்திரசித்து.

Koviloor Digital Library

'பிரட்டர்' என்பது 'பிரஷ்டர்' என்ற வடசொல்லின் திரிபு. முறையினின்றும் நீங்கியவர் என்பவர், 'ஜாதிப்பிரஷ்டம்' என்ற வழக்குச்சொல்லுக்கு சாதியைவிட்டு நீக்குதல் என்ற பொருள்போல, நல்ல நெறியினின்றும் நீங்கியவன் என்று வீடணனை இகழ்ந்து இந்திரசித்து பேசுகிறான். 'பிரட்டரின்' என்பது பிரட்டரைப்போல என்று பொருள் படும். கையில் தண்டாயுதம் தாங்கிச் சென்றவன், அவர்களைக் கொல்லாது, அவர்களுடன் உறவுமுறை ஏற்படுத்திக்கொண்டு, அவர் களைப் புகழ்ந்துபேசி, அவர்களுக்கு அடிமைபோலத் தொண்டாற்றிக் கொண்டு, அறிவிலிபோலவும், அவர்கள் சொன்னதையே இவனும் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டும் இருக்கிறான் என்றும் இந்திரசித்து வீடணனை இகழ்ந்து பேசுகிறான் என்பதாம்.

164. விழிபட, முதல்வரெல்லாம் வெதும்பினா்; ஒதுங்கி வீழ்ந்து
வழிபட, உலகம் மூன்றும் அடிப்பட வந்ததேனும்,
அழிபடை தாங்கல் ஆற்றும் ஆடவர், யாண்டும் வெஃகாப்
பழிபட வந்த வாழ்வை, யாவரே நயக்கற்பாலா்? (9180)

(முதல்வர்-மூலமுதற் கடவுளர்கள்/மும்மூர்த்திகள்; விழிபடுதல்-பார்வை/கண்நோக்கம்/பார்த்தல்; வழிபடுதல்-வணங்குதல்; அடிப் படுதல்-ஆட்சிக்குக் கீழ்வருதல்; அழிதல்-தோற்றுப்போதல்; யாண்டும்-எக்காலத்தும்; வெஃகா-விருப்பப்படாத; நயத்தல்-விரும்புதல்; ஒதுங்குதல்-வழிவிடுதல்)

உலக இயக்கத்திற்கு மூலகாரணராக உள்ள பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய மும்மூர்த்திகளின் கண்நோக்கம்-கடைக்கண் பார்வை தம்மீது படவும், எல்லோரும் தனக்கு வழிவிட்டு ஒதுங்கிப்போய், தரையில் விழுந்து வணங்கி எழவும், இம்மூன்று உலகங்களும் தன் அடிக்கீழ் வந்து சேரவும் நேர்ந்தாலும், தோற்றுப்பின்னடைகின்ற சேனையைப் பொறுத்துக்கொண்டு வீரத்தைக் காட்டும் ஆற்றலுடைய வீரர்களால் எக்காலத்திலும் விரும்பப்படாத, பழியோடு கூடிய வாழ்க்கையை யார்தான் விரும்பி ஏற்றுக்கொள்ளுவார்கள்? ஒருவரும் ஏற்கமாட்டார்கள்'' என்கிறான் இந்திரசித்து.

இந்திரசித்து வீடணனைச் சாடும் பாடல் இது. முத்தேவர்கள் தரையில் விழுந்து வணங்கினாலும், மூன்று உலகங்களும் தன் ஆட்சிக்கு உட்பட்டு வந்தாலும், வீரர் என்பவர் போர்க்களத்தில் தோற்றுப்போனான் என்ற பழிமிகுந்த வாழ்க்கையை விரும்பி ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; ஆனால் நீயோ போரிடுவதற்கும், அதனால் மாய்வதற்கும் அஞ்சி, அரக்கர்குலப் பெருமைக்குப் பழியைச் சேர்த்து மனிதர்களுடன் சேர்ந்துகொண்டு விட்டாய்'' என்று இந்திரசித்து வீடணனைச் சாடுகிறான் என்பதாம். வீடணன் சுத்தவீரன் அல்லன், கோழை என்கிறான் இந்திரசித்து. ''பழிபட வந்த வாழ்வு'' என்பது வீரத்திறத்தின் வழியில் இல்லாது கோழைத்

Koviloor Digital Library

தனத்தால் இரக்கத்தின்பால் வழங்கப்பட்ட வாழ்வு என்ற விரிந்த பொருளைத்தரும். 'பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' என்பது புறநானூறு-182.

165. "நீர் உளதனையும் உள்ள மீன்என, நிருதரெல்லாம்
வேர் உளதனையும் வீவர், இராவணனோடு; மீளார்;
ஊர்உளது; ஒருவன் நின்றாய்; நீஉளை; உறைய நின்னோடு
ஆர்உளர் அரக்கர் நிற்பார், அரசு வீற்றிருக்க? ஐயா!" (9181)

(வேர்-மூலகாரணம்; வீவர்-இறந்தொழிவர்; உறைய-தங்குதற்கு)

"தண்ணீர் இருக்கும் வரையிலும் மீன் உயிர் தாங்கி வாழ்ந்து கொண் டிருக்கும். அதுபோல, அரக்கர்கள் எல்லோரும், அரக்கர்குலத்திற்கே, மூலகாரண வேர்போன்று இருக்கக்கூடிய இராவணன் இருக்கின்ற வரையிலும் உயிருடன் இருப்பர். அவன் வீழ்கின்றபோது, அரக்கர்கள் எல்லோரும் வீழ்ந்து அழிவர்; ஒருவரும் உயிருடன் இருக்கமாட்டார்கள். இறுதியில் இலங்கை என்னும் ஊர்மட்டும் நிற்கும். நீ மட்டும் தனித்து நிற்பாய்; அங்கே தங்கியிருந்து, அரசாட்சி செய்ய, உன்னோடு, அரக்கர் இனத்தாருள் யார் நிற்பார்கள்?" என்று கேட்கிறான் இந்திரசித்து.

"நீர் உள எனின் உள மீனும் நீலமும்" என்பது பாலகாண்டத்தில் இலக்குவன்கூற்று. இதேபோன்றகாட்சி முன்புஅயோத்தியாகாண்டத்தில் வந்ததை நினைவுக்குக் கொண்டுவாருங்கள். இராமபிரான் பிரிந்துபோன பின்பு, தசரதன் கைகேயியிடம் பரதன் அரசாட்சியை ஏற்கமாட்டான் என்று கூறியபோது "வானோர் கொள்ளார்; மண்ணவர் உய்யார்; இனி மற்று என்? ஏனோர் செய்கை யாரொடு நீ இவ் அரசு ஆள்வாய்?" என்பது தசரதன் கூற்று. மீன் உயிரோடு வாழ்வதற்கு நீர் இன்றியமையாததுபோல, அரக்கர்கள் உயிரோடு வாழ்வதற்கு இராவணன் இன்றியமையாதவன் என்பதாம். நீர் வறண்டு போனால் மீன்கள் மடிந்து போவதைப்போல, இராவணன் இறந்து போனால் அரக்கர்களும் மடிந்துபோவர் என்கிறான் இந்திரசித்து. ஒரு அரக்கரும் இல்லாமல், நீ மட்டும் தனியாக உயிருடன் தங்கியிருந்து இலங்கையை அரசாட்சி செய்யப் போகிறாயா? என்று கேட்கிறான் இந்திரசித்து என்பதாம்.

166. "முந்தைநாள் உலகம் தந்த மூத்த வானோர்கட்கு எல்லாம்
தந்தையார் தந்தையாரைச் செருவிடைச் சாயத் தள்ளி,
கந்தனார் தந்தையாரைக் கயிலையோடு ஒரு கைக்கொண்ட
எந்தையார் அரசு செய்வது, இப்பெரும் பலம் கொண்டேயோ?" (9182)

(முந்தைநாள்-முற்காலத்தில்; தருதல்-படைத்தல்/தோற்றுவித்தல்; செரு-போர்; சாய்தல்-தோற்றுப்போதல்/தளர்ந்து விழுதல்; கைக் கொள்ளுதல்-பெயர்த்தெடுத்தல்; பலம்-வலிமை; மூத்த-முதிர்ந்த)

Koviloor Digital Library

''முற்காலத்தில் இவ்வுலகத்தைப் படைத்தருளிய முதிர்ந்தவரும் தேவர்கட்கெல்லாம் தந்தையான பிரமதேவனின் தந்தையாரான திருமாலைப் போரில் தோற்றோடும்படித் தளர்வடையச் செய்து புறந்தள்ளி, வெற்றிகொண்டவனும், முருகப்பெருமானின் தந்தையா ராகிய சிவபெருமானை அவர் வீற்றிருந்த கயிலாய மலையை வேரோடு தன் கைகளாலேயே பெயர்த்தெடுத்தவனுமான என் தந்தையார் இராவணன், இம்மூவுலகிலும் அரசோச்சுவது, இப்பொழுது நீ போய் சரணடைந்திருக்கிறாயே, இந்த மானிடர்களின் வலிமையை எண்ணித் தானோ?'' என்று இராமஇலக்குவரையும், வீடணனையும் இகழ்கிறான் இந்திரசித்து.

வானோர்கட்கு எல்லாம் தந்தையார் பிரமதேவன்; பிரமதேவனுக்குத் தந்தையார் திருமால்; முருகப்பெருமானுக்குத் தந்தையார் சிவபெருமான்.

167. "பனிமலர்த் தவிசின் மேலோன், பார்ப்பனக் குலத்துக்கெல்லாம்,
தனிமுதல் தலைவன் ஆன உன்னை வந்து, அமரர் தாழ்வார்;
மனிதருக்கு அடிமையாய் நீ இராவணன் செல்வம் ஆள்வாய்;
இனி உனக்கு என்னோ மானம்? எங்களோடு அடங்கிற்று அன்றே!"
(9183)

(பனி-குளிர்ச்சி; தவிசு-இருக்கை/இருப்பிடம்; பார்ப்பனர்-வேதியர்; தனி-ஒப்பற்ற; அமரர்-தேவர்கள்; தாழ்தல்-வணங்குதல்; மானம்-பெருமையுமாம்)

''குளிர்ச்சி பொருந்திய தாமரைமலரில் வீற்றிருப்பனாகிய பிரம தேவனை முதலாகக் கொண்ட வேதியர் குலத்துக்கெல்லாம் ஒப்பற்ற முதல் தலைவனாகிய உன்னை வந்து தேவர்கள்கூட வணங்குவார்கள்; ஆனால் இப்பொழுது நீ இந்த அற்பமான மனிதர்களுக்கு அடிமையாகிப் போய் அவர்கள் தயவில் இராவணனுக்குரிய அரசச்செல்வத்தை ஆளப் போகிறாயா? உனக்கு மானம் என்பது எதற்கு? பெருமை என்பது எதற்கு? அவையெல்லாம் எங்களோடேயே இருக்கிறது'' என்று மேலும் சாடுகிறான் இந்திரசித்து.

'பார்ப்பனர்', 'அந்தணர்' என்ற சொல்லெல்லாம் இன்று வழங்கும் பொருளில் கையாளப்பட்டவை அல்ல. வேதம் முற்றும் கற்றுணர்ந்த வேதவிற்பன்னர்களையே இந்தச்சொற்கள் குறிக்கும். முதல் மூன்று அடிகளிலும் தன் சிற்றப்பன் வீடணன் தங்களுடன் இருந்திருந்தால் என்னென்ன பெருமைகள் கிடைத்திருக்கும் என்பதைச் சொல்லி, பின்னர் அவனை மானம்கெட்டவன் என்று இடித்துரைக்கும் நயம் நோக்குக. மானம் என்பது பெருமையைக் குறிக்கும். 'மானம்' என்பது 'எஞ்ஞான்றும் தன்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி, உயிர் வாழாமையுமாம்' என்பது பரிமேலழகர் உரை. 'ஒட்டார்பின்

Koviloor Digital Library

சென்றொருவன் வாழ்தலின், அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று' என்பது குறள்-967.

168. "சொல்வித்தும், பழித்தும், நுங்கை மூக்கைத் துணிவித்தோர் ஆர்?
எல்வித்தும் படைக்கை உங்கள் தமையனை எங்களோடும்
கொல்வித்தும், தோற்று நின்ற கூற்றினார் குலத்தை எல்லாம்
வெல்வித்தும் வாழும் வாழ்வின் வெறுமையே விழுமிது அன்றோ?"
(9184)

(நுங்கை-உன்தங்கை/சூர்ப்பணகை; எல்-ஒளி; தமையன்-இராவணன்; குலம்-பரிவாரம்; வறுமை-ஒன்றுமில்லாத நிலை; விழுமிது-சிறப்புடையது; துணித்தல்-துண்டித்தல்)

''நம்மீது பிறரைக்கொண்டு பழிச்சொற்களையும், வசை மொழிகளையும் சொல்லவைத்தும், உன்னுடைய தங்கையாகிய சூர்ப்பணகையின் மூக்கினைத் துண்டித்தும் தீங்கு செய்தவர்கள் எல்லாம் யார்? இன்று நீ சரணடைந்திருக்கின்ற இந்த மனிதர்கள்தானே? ஒளிவிடுகின்ற படைக் கலங்களைக் கையில்கொண்டு, உன்னுடைய தமையன் கும்பகருணனையும், எங்களது அரக்கவீரர்களோடும், கொல்வித்தது யார்? இந்த மனிதர்கள் தானே? இதுவரை எங்களிடம் தோற்று நின்ற கூற்றுவனாரையும், அவனது பரிவாரங்களையும் வெற்றியடையச் செய்தது யார்? இந்த மனிதர்கள் தானே? அத்தகைய இந்த மனிதர்களுடன் சேர்ந்துகொண்டு நீ வாழும் வளமான வாழ்க்கையைவிட, ஒன்றும் இல்லாத வறுமையான-வெறுமையான வாழ்க்கையே சிறந்ததல்லவா?'' என்று கேட்கிறான் இந்திரசித்து.

'சொல்வித்தல், கொல்வித்தல், வெல்வித்தல், என்பன பிறவினைச் சொற்கள். 'பழித்தல்' என்பது தன்வினைச்சொல். பகைவர்களுடன் கூட்டுச்சேர்ந்துகொண்டு தனது அரக்கர் இனத்திற்கே கேடு சூழ்ந்து, மானங் கெட்டு, அரசனாக வாழ்வதைக் காட்டிலும், மானம் இழக்காது, வறுமையிலேயே வாழும் வாழ்க்கை மிகச் சிறந்தது என்று இந்திரசித்து வீடணனை இடித்துரைக்கிறான் என்பதாம்.

169. "எழுதி ஏர் அணிந்த திண்தோள் இராவணன், இராமன் அம்பால்,
புழுதியே பாயலாகப் புரண்ட நாள், புரண்டுமேல் வீழ்ந்து,
அழுதியோ? நீயும்கூட ஆர்த்தியோ? அவனை வாழ்த்தித்
தொழுதியோ? யாதோ, செய்யத் துணிந்தனை? விசயத் தோளாய்!" (9185)

(விசயம்-விஜயம்/வெற்றித்திறன்; ஏர்-வரிக்கோலம்/அழகு; பாயல்-படுக்கை; தொழுதல்-வணங்குதல்)

இந்திரசித்து வீடணனை நோக்கி, ''வெற்றிபொருந்திய தோள்களையுடையவனே! நன்கு சித்திரம்போல அழகாக வரிக்கோலம் தீட்டப்பெற்று அழகும், வலிமையும் பொருந்திய தோள்களை உடைய என் தந்தை

Koviloor Digital Library

இராவணன், இராமபிரானது அம்பினால் தாக்கப்பட்டுத் தரையில் விழுந்து, அந்தப் புழுதி நிறைந்த மண்ணையே தன் படுக்கையாகக் கொண்டு புரள்கின்ற காலத்தே, அவனது தம்பியாகிய நீ அவனோடு தரையிலும் அவன் மேனிமீதும் விழுந்து புரண்டு அழுகப்போகின்றாயா? அல்லது பகைவர்களுடன் சேர்ந்துகொண்டு மகிழ்ச்சி பொங்க நீயும் ஆரவாரம் செய்யப்போகின்றாயா? அல்லது அந்தச் செயலுக்காக அவனை வாழ்த்தி வணங்கப்போகிறாயா? இவற்றுள் எதனைச் செய்யத் துணிந்திருக்கிறாய்? சொல் பார்க்கலாம்!'' என்று இடித்துரைக்கிறான்.

இராமபிரான் அம்பால் இராவணன் தாக்கப்பட்டுத் தரையில் விழுந்து உயிர்விடப் போகிறான் என்று தன்னை அறியாமலேயே இந்திரசித்தனைக் கூறவைத்த கவிஞனின் கவிநயம் நோக்குக. மகளிர் தொய்யிற்கோலம் எழுதிக்கொள்வதைப்போல வீரர்கள் தம் வலிமைமிக்க தோள்களில் வரிக்கோலம் எழுதிக்கொள்வர் என்பது தெரிகிறது. 'அழுதியோ, ஆர்த்தியோ, தொழுதியோ' என்பன இறந்தகாலத்தைப் போல் தோற்றம் தந்தாலும் அவை எதிர்காலத்தையே குறிப்பன எனக்கொள்க. இவ்வளவு இடித்துக்கூறிய பின்பும் வீடணனை இந்திரசித்து 'விசயத்தோளாய்!'' என்று அவனது வீரத்திறனைப் புகழ்ந்து அழைப்பதை இகழ்ச்சிக் குறிப்பாகக் கொள்ளவேண்டும்.

170. "ஊனுடை உடம்பின் நீங்கி, மருந்தினால் உயிர்வந்து எய்தும்
மானிடர், இலங்கை வேந்தைக் கொல்வரே? நீயும் அன்னான்,
தானுடைச் செல்வம் துய்க்கத் தகுதியோ? சரத்தினோடு'ம்
வானிடைப் புகுதி அன்றே, யான் பழி மறுக்கில்!" என்றான். (9186)

(ஊன்-மாமிசம்/தசை; புகுதல்-அடைதல்; துய்த்தல்-நுகர்தல்/அனுப வித்தல்)

''மாமிசத்தாலும் தசையினாலும் ஆன இந்த உடம்பை விட்டு உயிர் நீங்கிப்போனாலும், பின் மருத்துமலையினின்றும் கொண்டுவந்த மூலிகை யினால் மீண்டும் உயிர்பிழைக்கச் செய்யும் வலிமையற்ற அற்பமான மானிடர்கள், இலங்கையின் வேந்தனான இராவணனைக் கொல்லும் ஆற்றல் பெற்றவர்களோ? நீயும்கூட உன் அண்ணன் இராவணன் பெற்றுள்ள அரசச்செல்வத்தை அனுபவிக்கும் தகுதி உடையவனோ? இப்போது தன் சிறிய தந்தையைக் கொல்லுவது பழியைச் சேர்க்கும் என்று பழிக்கு அஞ்சாது, உன்னை என்னுடைய அம்பினால் கொன்று போட்டால், அந்த அம்பினோடு நீயும் இறந்து வானுலகம் சென்று விடுவாய் அல்லவா?'' என்கிறான் இந்திரசித்து.

இராவணனை அற்பமானிடர்கள் கொல்லமுடியாது; ஆனால் இப்போது என்னால் உன்னைக் கொல்லமுடியும். தனது சிறிய தந்தையைத் தானே கொன்றான் என்ற பழிச்சொல் வந்தாலும் அதற்குக்கூட அஞ்சாது

Koviloor Digital Library

நான் உன்னைக் கொல்வேன் என்கிறான் இந்திரசித்து என்பதாம். ''வானிடைப் புகுதல்'' என்பது இறந்துபோதல் என்பதன் மங்கல வழக்கு. வீடணனைத் தான் கொல்லப்போவது உறுதி என்று கூறுகிறான் இந்திரசித்து. ''கொல்வரே'' என்ற இடத்தில் ஏகாரமும் 'தகுதியோ' என்ற இடத்தில் ஒகாரமும் இகழ்ச்சிக் குறிப்பில் எதிர்மறைப் பொருளைத் தரும்.

171. வீடணன் மறுமொழி கூறுதல் [6 பாடல்கள்]

அவ்வுரை அமையக் கேட்ட வீடணன், அலங்கல் மோலி
செவ்விதின் துளக்கி, மூரல் முறுவலும் தெரிவதாக்கி,
"வெவ்விது பாவம்; சாலத்தருமமே விழுமிது; ஐய!
இவ்வுரை கேட்டி!" என்னா, இனையன விளம்பலுற்றான். (9187)

(உரை-வார்த்தைகள்; அமைய-மனம்பொருந்த; அலங்கல்-மலர் மாலை; மோலி-கிரீடம்/முடி; துளக்குதல்-அசைத்தல்; முறுவல்-புன் சிரிப்பு; தெரிவதாக்குதல்-வெளிப்படக் காட்டுதல்; வெவ்விது-கொடுமை யானது; சால-மிகவும்; விழுமிது-சிறந்தது; இனையன-இத்தன்மையன வான; விளம்புதல்-கூறுதல்; செவ்விதின்-நன்றாக)

அவ்வாறு இந்திரசித்தன் கூறிய வார்த்தைகளை நன்கு உள்ளத்தில் பதியும்படி கேட்டுக்கொண்டிருந்த வீடணன், தனது மலர்மாலையணிந்த கிரீடத்தைச் சற்று அசைத்து, தன் முகத்தில் பற்கள் வெளிப்படுமாறு ஒரு புன்சிரிப்பை வெளிப்படுத்திக் கொண்டு, ''தலைவனே! இந்திரசித்து! பாவம் என்பது மிகவும் கொடுமையானது, தருமமே மிகவும் சிறந்தது; நான் கூறுவனவற்றைக் கேட்பாயாக!'' என்று கூறி, கீழ்வருமாறு கூறத் தொடங்கினான்.

''மூரல் முறுவலும் தெரிவதாக்கி'' என்றதனால் வீடணன் இந்திரசித்தன் மேல் கோபம் கொள்ளவில்லை, அமைதியாகவே பேசத்தொடங்குகிறான் என்பது புலனாகிறது. ''வெவ்விதுபாவம்; சாலத்தருமமே விழுமிது'' என்பது இந்தக் காப்பியத்தின் உயிரோட்டம்; அடிப்படை; ''அறம் வெல்லும்; பாவம் தோற்கும்'' என்பதன் மறுவடிவம்தான் இது என்பதை உணர்க.

172. "அறம் துணை ஆவதல்லால், அரு நரகு அமைய நல்கும்
மறம் துணையாக, மாயாப் பழியொடும் வாழமாட்டேன்;
துறந்திலேன் மெய்ம்மை, எய்தும் பொய்ம்மையே துறப்பதல்லால்;
பிறந்திலேன் இலங்கை வேந்தன் பின்னவன், பிழைத்தபோதே. (9188)

(அருநரகு-கடப்பதற்கரிய நரகம்; அமைய-பொருந்தும்படி; நல்குதல்-தருதல்; மறம்-பாவம்; மாயா-நீங்காத; துறப்பது-விடுவது/விட்டொழிப்பது/நீங்குதல்; பிழைத்தல்-பிழைசெய்தல்/குற்றம்புரிதல்)

Koviloor Digital Library

வீடணன் இந்திரசித்தனை நோக்கி, ''தருமத்தையே நான் செய்கின்ற ஒவ்வொரு செயலிலும் துணைாகக் கொள்வேனேயன்றி, கடத்தற்கரிய கொடிய நரகத்திற் கொண்டு சேர்க்கும் பாவத்தை ஒருபொழுதும் துணை யாகக் கொள்ளமாட்டேன்; அதனால் ஏற்படும் தீராப் பழிச்சொற்களோடு நான் உயிர் பிழைத்திருக்கமாட்டேன்; இடையில் வருகின்ற பொய்ம்மையை நீக்குவேனே தவிர, ஒருபொழுதும் மெய்ம்மையைத் துறக்கமாட்டேன். எப்பொழுது என் அண்ணன் இலங்கை அரசன் இராவணன் பிறன்மனை நயத்தல் என்ற குற்றத்தைச் செய்தானோ, அப்பொழுதே நான் அவன் தம்பியாகப் பிறக்கவில்லை என்பதை முடிவுசெய்து கொண்டு உறவுத் தொடரை விட்டொழித்தேன்'' என்கிறான் வீடணன்.

பாவச்செயல் நரகத்துள் புகுத்தும் என்பதும், என்றும் அழியாத நீங்காத பழியையும் தரும் என்பதும் வெளிப்படை. ''பிறந்திலேன் இலங்கை வேந்தன் பின்னவுன் பிழைத்தபோதே'' என்பது இப்போது வீடணன் கூற்று. இதே பொருள்பட முன்பு கும்பகருணன் கூறியதும் நினைவுக்கு வரவேண்டும். ''இன்றொடும் தவிர்ந்ததன்றே உடன்பிறப்பு என்று விட்டான்'' என்பது கும்பகருணன் வீடணனிடம் கூறியகூற்று. இங்கே பொய்ம்மை என்பது அரக்கருடன் இருந்த சமயத்தில் நிகழ்ந்தனவும், மெய்ம்மை என்பது, இராமபிரானைச் சரணடைந்தபின் நிகழ்ந்தனவும் எனக்கொள்க. இராவணன் பிழைசெய்யாத வரைக்கும் அவனுடன் அவன் தம்பியாகவே வாழ்ந்து வந்தேன்; அவன் தீராப் பிழை செய்தபின், அவன் தம்பியல்லன் என்பதைத் தீர்மானித்துக் கொண்டேன் என்கிறான் வீடணன். உடன்பிறப்பு என்பது உடலைப் பற்றியதாக ஆகாது என்பது புலப்படுகிறது. அதனால்தான் போலும் இன்று எல்லோரும் உடன் பிறப்புக்களாகவும், உடன்பிறவாச் சகோதரிகளாகவும் கருதப் படுகிறார்கள்.

173. "உண்டிலென் நறவம்; பொய்ம்மை உரைத்திலென்; வலியால் ஒன்றும்
கொண்டிலென்; மாய வஞ்சம் குறித்திலென்; யாரும் குற்றம்
கண்டிலர் என்பால்; உண்டே? நீயிரும் காண்டிர் அன்றே?
பெண்டிரின் திறம்பினாரைத் துறந்தது பிழையிற்று ஆமே?" (9189)

(நறவம்-மது/கள்; குறித்தல்-மனத்தால் நினைத்தல்; காணுதல்-அறிதல்; திறம்புதல்-மாறுபடுதல்/முறைதவறுதல்; துறத்தல்-நீங்குதல்; பிழையிற்று-தவறுடையது; நீயிரும்-நீங்களும்; ஆமோ-ஆகுமோ)

''நான் மது அருந்தியதில்லை; பொய் உரைத்ததில்லை; என்னுடைய வலிமையினால் பிறர் பொருள் எதனையும் கவர்ந்து கொண்டதில்லை; மாயச்செயல்களையும், வஞ்சனைச் செயல்களையும் என் மனத்தால்கூடக் கருதியதில்லை; என்னிடம் யாரும் குற்றம் கண்டதில்லை; என்னிடம் யாராவது குற்றம் கண்டிருக்கிறார்களா? நீங்களும்தான் என்னை நன்கு

Koviloor Digital Library

அறிவீர்கள் அல்லவா? எனினும் கற்புடைய பெண்டிர் பொருட்டு முறை தவறுதலைச் செய்த என் அண்ணன் இராவணனை விட்டு நான் நீங்கிவந்தது தவறான செயலாகக் கருதப்படுமா?'' என்று கேட்கிறான் வீடணன்.

'ஆமே' என்பதில் உள்ள ஏகாரம் எதிர்மறைப் பொருளது. ஆகாது என்ற பொருளைத்தரும். இந்தக் குற்றங்கள் ஏதொன்றையும் செய்யாத நான் குற்றம் செய்த ஒருவரோடு இல்லாது, அவரைவிட்டு நீங்கி வந்தது எவ்வாறு குற்றமாகும்? எனக் கேட்கிறான் வீடணன் என்பதாம். இதே கருத்துப்பட முன்பு அனுமன் வீடணனை முதன்முதலில் பார்த்தபோது பேசியதையும் நினைவிற் கொண்டுவருக. 'நிந்தனை நறவமும், நெறிஇல் ஊன்களும், தந்தன கண்டிலென்; தருமதானமும், வந்தனை நீதியும் பிறவும், மாண்பமைந்து, அந்தணர் இல்எனப் பொலிந்ததாம் அரோ!'' என்பது அனுமன்கூற்று. இங்கே ''யாரும்'' என்ற சொல்லுக்கு ஒரு சிறப்புப் பொருள் கூறலாம். நம் நண்பர்களும் என்னைக் குற்றம் கூறவில்லை; நீ பகைவர்கள் என்று கூறுகிறவர்களும் என்னைக் குற்றம் சொல்லவில்லை; நண்பர்களாகவும், பகைவர்களாகவும் இல்லாத நடுநிலையாளர்களும் என்னைக் குற்றம் சொல்லவில்லை என்ற இவ்வளவு பொருளையும் உள்ளடக்கியது இந்த ''யாரும்'' என்ற சொல் என்பதறிக.

174. மூவகை உலகும் ஏத்தும் முதலவன்; எவர்க்கும் மூத்த
தேவர்தம் தேவன், தேவி கற்பினில் சிறந்துளாளை
நோவன செய்தல் தீது" என உரைப்ப, நுன் தாதை சீறி,
"போ" எனப், போந்தேன்; இன்று நரகதில் பொருந்துவேனோ," (9190)

(ஏத்துதல்-துதித்துப்போற்றுதல்; நோவன-மனம் நொந்து வருந்தும்படி/துன்புறுத்துதல்; தீது-பாவம்/குற்றம்; நுன்-உன்; தாதை-தந்தை; சீறுதல்-வெகுள்தல்; இன்று-இப்பொழுது; பொருந்துதல்-புகுதல்; மூத்த-மேம்பட்ட; தேவி-மனைவி)

''மேல், நடு, கீழ் என்ற மூன்றுவகைப்பட்ட உலகத்தாரும் துதித்துப் போற்றும் முழுமுதற் கடவுளும், யாவர்க்கும் மேம்பட்ட தேவர்களுக் கெல்லாம் தேவனாக விளங்குபவனுமான திருமாலின் அம்சமான இராமபிரானின் மனைவியும், கற்பிற் சிறந்து விளங்குபவளுமான சீதாதேவியைச் சிறைப்பிடித்து, அவள் மனம் நொந்து வருந்தும்படி துன்புறுத்துதல் பாவம் என்றும், அது குற்றம் என்று நான் கூறவும், அதைக்கேட்ட உன்தந்தை இராவணன் என்மீது மிக்க சினம்கொண்டு, என் எதிரில் நிற்காதே; இவ்விடம் விட்டு ஓடிப்போ, இல்லையென்றால் இறந்துபடுவாய்'' என்று கூறி என்னைத் துரத்தியதால்தான் நான் வெளியேறி வந்தேன்; இப்போது மீண்டும் அந்த நரகத்திற்குள் வந்து சேருவேனோ!'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

என் அண்ணன் என்றோ, இலங்கைவேந்தன் என்றோ கூறாது ''நுன் தாதை'' என்று கூறிய நயம் நோக்குக. ''வழியெதிர் நிற்றியேல், விளிதி'' என்பது இராவணன் வீடணனை நோக்கி முன்பு கூறிய கூற்று.

175. "வெம்மையின், தருமம் நோக்கா, வேட்டதே வேட்டு, வீயும்
உம்மையே புகழும் பூண்க; துறக்கமும் உமக்கே ஆக!
செம்மையில் பொருந்தி மேலோர் ஒழுக்கினோடு அறத்தைத் தேறும்
எம்மையே பழியும் பூண்க; நரகமும் எமக்கே ஆக!" (9191)

(வெம்மை-கொடுமை; வேட்டல்-விரும்புதல்; வீதல்-கெட்டு அழிதல்; பூண்-அணி; பூண்க-அணியாகப் பொருந்துக; மேலோர்-மேன்மையுடையோர்; தேறுதல்-தெளிதல்; பூணுதல்-பொருந்துதல்; துறக்கம்-வீடுபேறு)

''கொடுமைமிக்க செயல்களால் அறநெறியைப் பற்றிச் சற்றும் எண்ணாது, தான் விரும்பியதையே விரும்பி, அந்தப் பிடிவாதத்தால் அழிந்தொழியும் உங்களையே பெரும்புகழும் வந்து சேரட்டும்; வீடுபேறும் உங்களுக்கே ஆகட்டும்; செம்மையான முறையில் அமைந்து, மேன்மையுடைய சான்றோர்கள் வழியிற் சென்று, தருமத்தையே தெளிந்து செய்யும் எங்களுக்கே பழியெல்லாம் வந்து சேரட்டும்; நரகலோகமும் எங்களுக்கே ஆகட்டும்'' என்று விரக்தியில் இகழ்ச்சியாக எதிர்மறையாகப் பேசுகிறான் வீடணன்.

துறக்கத்தால் இன்பமும், நரகத்தல் துன்பமும் வந்துசேரும். இம்மையில் புகழும், மறுமையில் துறக்கமும் வந்துசேரும். அதுபோல இம்மையில் பழியும், மறுமையில் நரகமும் வந்துசேரும் என்பதாம். முன்பாடலில் ''நரகத்தைப் பொருந்துவேனோ'' என்று கேட்ட அதே வீடணன் இந்தப் பாடலில் இப்பொழுது ''நரகமும் எமக்கே ஆக'' என்கிறான் என்பதை நுனித்து உணர்க. அவனுடைய மனப்போக்கைப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன்.

176. "அறத்தினைப் பாவம் வெல்லாது" என்னும் அது அறிந்து, "ஞானத்
திறத்தினும் உறும்" என்று எண்ணி, தேவர்க்கும் தேவைச் சேர்ந்தேன்;
புறத்தினில் புகழே ஆக, பழியொடும் புணர்க; போகச்
சிறப்பு இனிப்பெறுக; தீர்க;" என்றனன் சீற்றம் தீர்ந்தான். (9192)

(அது-அவ்வுண்மை; உறும்-பொருந்தும்; புணர்தல்-பொருந்துதல்; தீர்தல்-விட்டுவிடுதல்; ஞானத்திறம்-அறிவாற்றல்; புறத்தினில்-வெளி உலகில்)

வெகுளி என்னும் குற்றத்தினின்றும் நீங்கியவனான வீடணன், இந்திர சித்தை நோக்கி, ''அறத்தினை ஒருக்காலும் பாவம் வெல்லாது'' என்று சான்றோர்கள் கூறும் சொற்களின் மெய்ப்பொருள் தன்னை நன்றாக

Koviloor Digital Library

உணர்ந்து, அறிவாற்றலினாலும் வீடுபேறும் கிடைக்கும் என்று எண்ணித்தான், நானாகவே எல்லாத் தேவர்களுக்கும் தலைமைத் தேவனான இராமபிரானிடம் சென்று அவனைச் சரணடைந்தேன்; என்னுடைய இந்தச் செய்கையினால் வெளியுலகத்தில் எனக்குப் புகழும் பெருமையும் வந்தாலும்சரி; அல்லது அதற்கு மாறாக வசைச்சொல் வந்து சேர்ந்தாலும்சரி; அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இனிமேல் எனக்குச் சிறப்பு வந்தாலும், வராமல் போனாலும் பரவாயில்லை'' என்று கூறி முடிக்கிறான் வீடணன்.

177. "பெறும் சிறப்பு எல்லாம் என்கைப் பிறைமுகப் பகழி பெற்றால்,
இறும் சிறப்பு அல்லால், அப்பால் எங்கு இனிப்போவது?" என்னா,
தெறும் சிறைக் கலுழன் அன்ன ஒரு கணை தெரிந்து, செம்பொன்
உறும் சுடர்க்கழுத்தை நோக்கி, நூக்கினான் உருமின் வெய்யோன். (9193)

(உரும்-இடி; வெய்யோன்-வெம்மை உடையவன்/கொடியவன்/ இந்திரசித்து; இறும்-அழியும்; தெறுதல்-அழித்தல்; கலுழன்-கருடன்; தெரிதல்-தேர்தல்; உறும்-பொருந்திய; சுடர்-ஒளி; நூக்குதல்-செலுத்துதல்)

இடியைக்காட்டிலும் கொடுமையானவனான இந்திரசித்து, வீடணனை நோக்கி, ''நீ பெறவேண்டிய சிறப்புக்கள் எல்லாம், என்னுடைய கையில் இருக்கும் இந்தப் பிறைமுக அம்பினால் பெற்று, நீ அழிந்துபோகும் சிறப்பைவிட வேறு எந்தச் சிறப்பை நீ அடையப் போகிறாய்? என்னுடைய இந்த அம்புக்கு இலக்காகாமல் எங்கே நீ தப்பித்துப் போய்விடுவாய்? என்றுகூறி, பாம்பினைஅழிக்கும் சிறகுகளை யுடைய கருடனைப் போன்ற வலிமைமிக்க அம்பினைத் தேர்ந்தெடுத்து, சிவந்த பொன்னாலாகிய அணிகலன்கள் பொருந்திய, ஒளிவீசுகின்ற வீடணனின் கழுத்தை நோக்கி அந்தக் கணையைச் செலுத்தினான்.

முன்பாடலில் வீடணன் சிறப்பே ஆகட்டும்; அல்லது அது இல்லாது ஒழியட்டும் என்று கூறினான் அல்லவா? அதையே கொண்டு இந்திரசித்து, நீ பெறக்கூடிய சிறப்பு என்னுடைய அம்பினால் மடிந்துபோவதுதான் என்று கூறுகிறான் என்பதாம். 'பிறை முகப் பகழி' என்பது அர்த்த சந்திரபாணத்தைக் குறிக்கும். இது பிறைத்தலை அம்பு எனவும் கூறுவர். ''பிறைத்தலை அம்பில் சென்னி பெரு நிலத்து இடுவல்'' என்பது சீவகசிந்தாமணி.

178. அக்கணை, அசனி என்ன, அன்று என, ஆலம் உண்ட
முக்கணான் சூலம் என்ன, முடுகிய முடிவை நோக்கி,
"இக்கணத்து இற்றான், இற்றான்" என்கின்ற இமையோர் காண,
கைக்கணை ஒன்றால், வள்ளல், அக்கணை கண்டம் கண்டான். (9194)

Koviloor Digital Library

(அசனி-இடி; அன்று-தீ/நெருப்பு; ஆலம்-நஞ்சு; முக்கணான்-சிவ பெருமான்; முடுகுதல்-விரைந்து செல்லுதல்; இறுதல்-இறந்துபடுதல்; இமையோர்-தேவர்கள்; கண்டம்-துண்டு; காணுதல்-முறித்தெறிதல்)

இந்திரசித்து செலுத்திய அந்த அம்பு, இடிபோலவும், நெருப்புப் போலவும், நஞ்சினைப் பருகிய மூன்று கண்களையுடைய சிவபெருமானின் சூலப்படை போல, விரைந்து சென்றதையும், அது ஏற்படுத்தக் கூடிய முடிவையும் எண்ணிப் பார்த்து ''இப்பொழுதே வீடணன் இறந்துபடுவான், இறந்துபடுவான்'' என்று அலறிய தேவர்கள், தம் கண்களால் காணுமாறு, வள்ளன்மை பொருந்திய இலக்குவன், தான் கைக்கொண்டிருந்த அம்பு ஒன்றினால் இந்திரசித்து செலுத்திய அந்த அம்பினைக் கண்டதுண்டமாக முறித்துப்போட்டான்.

இந்திரசித்தன் அம்புக்கு, இடி, நெருப்பு, சிவபெருமானின் சூலப்படை ஆகியவை உவமை. 'இற்றான், இற்றான்' என்ற அடுக்குதுணிவு பற்றிவந்த காலவழுவமைதி. தன்னைச் சரணடைந்த வீடணனுக்கு எந்தத் தீங்கும் நேரக்கூடாதென்று கருதி இலக்குவன் தொடுத்த அம்பு, வீடணனைக் காத்ததால், கவிஞன் இலக்குவனை இங்கே 'வள்ளல்' எனக் குறிக்கிறான் எனக்கொள்க.

179. கோல் ஒன்று துணிதலோடும், கூற்றுக்கும் கூற்றம் அன்னான்,
வேல் ஒன்று வாங்கிவிட்டான்; வெயில் ஒன்று விழுவது என்ன,
நால் ஒன்றும் மூன்றுமான, புவனங்கள் நடுங்கலோடும்,
நூல் ஒன்று வரிவிலானும், அதனையும் நுறுக்கி வீழ்த்தான். (9195)

(கோல்-அம்பு; வாங்கி-எடுத்து; வெயில்-சூரியன்; புவனம்-உலகம்; நூல்-தனு/வேதம்/வேதநெறி; ஒன்றுதல்-பொருந்துதல்; வரி-கட்டமைந்த; நுறுக்கி-பொடியாக்கி; விலான்-வில்லான்/வில்லை உடையவன்/இலக்குவன்)

இயமனுக்கும் இயமனான இந்திரசித்து, தான் இலக்குவன் மீது ஏவிய அம்பு அவனால் துண்டிக்கப்பட்டு அறுந்து வீழ்வதைக் கண்டதும், ஒப்பற்ற வேற்படை ஒன்றை எடுத்து வீடணன் மீது வீசியெறிந்தான். அது மேலேயிருக்கும் சூரியனே அனல் பரப்பிக் கொண்டு வந்து விழுவதைப் போன்றிருந்தது. அதைக்கண்ட இந்த ஏழு உலகங்களில் உள்ளவர்களும் நடுநடுங்கினர்; தனுர்வேதத்தில் கூறியுள்ளபடி கட்டமைந்த வில்லினைக் கைக்கொண்டிருப்பவனாகிய இலக்குவனும், அந்த அம்பையும் பொடியாகும்படி நொறுக்கி வீழ்த்தினான்.

180. "வேல்கொடு கொல்லல் உற்றான்" என்று, ஒரு வெகுளி பொங்க,
கால்கொடு காலின்கூடிக் கைதொடர் கனகத் தண்டால்,
கோல்கொளும் ஒருவனோடும், கொடித்தடந் தேரில் பூண்ட
பால்கொளும் புரவி எல்லாம் படுத்தினான், துடிப்புமாற. (9196)

Koviloor Digital Library

(பொங்குதல்-கிளர்ந்து எழுதல்; கால்-காற்று; கூடுதல்-அடைதல்; கனகம்-பொன்; தண்டு-தண்டாயுதம்; கோல்-தாற்றுக்கோல்/சம்மட்டி/சவுக்கு/அங்குசம்; ஒருவன்-தேர்ப்பாகன்; புரவி-குதிரைகள்; பூண்ட-பூட்டப்பெற்ற; துடிப்பு-உயிர்த்துடிப்பு; மாறுதல்-நீங்குதல்; படுத்தல்-கொன்று வீழ்த்துதல்; பால்-தொகுதி/கூட்டம்)

இந்திரசித்து தன்னை வேற்படை கொண்டு தாக்க முற்படுகிறான் என்ற ஒரு சீற்றம் தன் மனத்துள்ளே பொங்கியெழ, வீடணன், தன் கால்களால் காற்றைப்போல் விரைந்து சென்று இந்திரசித்தை அடைந்து, தான் கையில் பற்றியிருந்த பொன்மயமான ஒரு தண்டாயுதத்தால் தாற்றுக்கோல் கொண்டு செலுத்தும் தேர்ப்பாகனையும், கொடிகட்டிய பெரிய தேரில் பூட்டப்பட்டிருக்கும், பால்போன்ற வெள்ளைநிறம் அமைந்த குதிரைகளின் தொகுதிகள் எல்லாவற்றையும், அவற்றின் உயிர்த்துடிப்பு நீங்கி மறையுமாறு கொன்று வீழ்த்தினான்.

இலக்குவன் அந்தப்பக்கம் அம்பினால் போரிடும்போது, வீடணன் இங்கே தண்டாயுதம் கொண்டு குதிரைப்படைகளைச் சிதைத்தான் என்பதாம். ''பால்கொளும் புரவி'' என்பது பால்போன்ற வெள்ளைநிறம் அமைந்தகுதிரைஎனப்பொருள்படும். ''பால்புரைபுரவி'' என்பது பொருநர் ஆற்றுப்படை.

181. அழிந்த தேர்மீது நின்றான், ஆயிரகோடி அம்பு
பொழிந்து,அவன் தோளின் மேலும் இலக்குவன் புயத்தின் மேலும்,
ஒழிந்தவர் உரத்தின்மேலும், உதிர்நீர் வாரி ஓதம்
அழிந்து இழிந்துஓட, நோக்கி, அண்டமும் இரிய ஆர்த்தான். (9197)

(ஒழிந்தவர்-எஞ்சியுள்ளவர்கள்; உரம்-மார்பு/உடம்பு; வாரி-வெள்ளம்; ஓதம்-வரம்பு/கரை; இரிதல்-நிலைகெடுதல்)

அவ்வாறு வீடணனால் அழிக்கப்பட்ட தேரின்மீது நின்று கொண்டிருப்பவனாகிய இந்திரசித்து, ஆயிரம்கோடி என்னும் அளவினதாகிய அம்புகளை மழைபோல, வீடணன் தோளின்மீதும், இலக்குவன் தோளின்மீதும், எஞ்சியிருந்தவர்களின் மார்பின்மீதும் மழைபோலப் பொழிந்தான்; அதனால் உண்டான இரத்தப்பெருக்கு வெள்ளம் போல் கரையாகிய வரம்பை உடைத்துக் கொண்டு ஓடுவதைக் கண்டு இந்த அண்டகோளமே நிலைதிரிந்து போகும் வண்ணம் பேராரவாரம் செய்தான் இந்திரசித்து.

Koviloor Digital Library

182. இந்திரசித்து இராவணனைச் சென்று அடைதல்

ஆர்த்தவன், அனைய போழ்தின், "அழிவிலாத தேர்கொண்டு அன்றிப்
போர்த்தொழில் புரியலாகாது" என்பது ஓர் பொருளை உன்னி,
பார்த்தவர் இமையா முன்னம்; 'விசும்பிடைப் படர்ந்தான்' என்னும்
வார்த்தையை நிறுத்திப் போனான், இராவணன் மருங்கு புக்கான்.
(9198)

(உன்னி-எண்ணி; விசும்பு-ஆகாயம்; படர்தல்-மறைந்து செல்லுதல்; நிறுத்துதல்-நிலைக்கச்செய்தல்; மருங்கு-பக்கம்)

அவ்வாறு பேராரவாரம் செய்தவனான இந்திரசித்து அப்பொழுது, ''யாராலும் அழிக்கவே முடியாத ஒரு தேர் கொண்டால் அல்லது இங்கு நின்று போர்செய்வது என்பது இனியும் முடியாது'' என்ற கருத்தை நன்கு கவனத்தில் கொண்டு, அங்கே நின்றிருந்தவர்கள் தங்கள் கண்களை மூடித் திறப்பதற்குள், ஒரு நொடிப்பொழுதில் ''அவன் ஆகாயத்தில் சென்று மறைந்து விட்டான்'' என்னும் சொல்லை மட்டும் போர்க்களத்தில் நிலைபெற்று நிற்குமாறு செய்துவிட்டான். விரைவாகப் பாய்ந்து வான்வழி சென்று அவன் தந்தை இராவணன் இருக்குமிடம் சென்று சேர்ந்தான்.

நிகும்பலை யாகப்படலம் நிறைவுற்றது

KOVILOOR LIBRARY. KOVILOOR
A. No.... 14565 ....

Koviloor Digital Library

27. இந்திரசித்து வதைப் படலம் [70 பாடல்கள்]

இலக்குவன் இந்திரசித்தனை வதைத்துக் கொல்லுகின்ற நிகழ்ச்சி களைக் கூறும் பகுதி ஆதலின் இந்திரசித்து வதைப்படலம் எனலாயிற்று. இது சில சுவடிகளில் நிகும்பலை யாகப்படலத்துடனேயே சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது 70 பாடல்களைக் கொண்டது.

இப்படலத்துள், விண்ணில் மறைந்த இந்திரசித்து தன் தந்தை இராவணன் இருப்பிடம் அடைதல்; தளர்ந்து வந்திருக்கின்ற தன் புதல்வனைப் பார்த்து இராவணன் அங்கே என்ன நிகழ்ந்தது எனக் கேட்டல்; இந்திரசித்து நிகழ்ந்தது கூற, இராவணன் அவனைச் சினந்து பேசுதல்; இராவணன் தானே போருக்குச் செல்ல முற்படுதல்; இந்திரசித்து அவனைத் தடுத்து, அவனை வணங்கித் தானே போர்க்களம் செல்லுதல்; இந்திரசித்தும், இலக்குவனும் கடும் போர்புரிதல்; இரவு நேரம் நெருங்கினமையால், வீடணன் இலக்குவனிடம், இந்திரசித்தை உடனே கொல்ல வேண்டும் என வற்புறுத்துதல்; சிவபெருமானிடமிருந்து பெறப்பட்ட தேரும், வில்லும் அவனிடம் இருக்கும்வரை அவனை யாராலும் வெல்லமுடியாது என்று வீடணன் இலக்குவனுக்குத் தெரிவித்தல்; எனவே இலக்குவன் முதன்முதலில் இந்திரசித்தின் தேரைத் தகர்த்தல்; இந்திரசித்து விண்ணில் மறைந்து பேராரவாரம் செய்தல்; மீண்டும் தரைக்கு வந்து, இருவரும் பெரும்போர் புரிதல்; இலக்குவன் பிறைமுகஅம்பைஅபிமந்திரித்துஎய்தல்;இந்திரசித்தன்தலைஅறுபட்டுத் தரையில் வீழ்தல்; சற்று நேரத்தில் உடம்பும் வீழ்தல்; இந்திரசித்தின் தலையைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு அங்கதன் இராமபிரான் முன்னிலையில் வந்து, அதை அவன் திருவடிகளில் சேர்ப்பித்தல்; இராமபிரான் மிக மகிழ்ந்து, வீடணனை மிகவும் புகழ்ந்து இனிதிருத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இந்திரசித்து–இராவணன் உரையாடல் [12 பாடல்கள்]

விண்ணிடைக் கரந்தான் என்பார், "வஞ்சனை விளைக்கும்" என்பார்,
கண்ணிடைக் கலக்க நோக்கி, ஐயுறவு உழக்கும் காலை,
புண்ணிடை யாக்கைச் செந்நீர் இழிதர புக்கு நின்ற,
எண்ணுடை மகனை நோக்கி, இராவணன் இனைய சொன்னான்.

(9199)

Koviloor Digital Library

(கரத்தல்-மறைதல்; விளைத்தல்-செய்தல்; உழத்தல்-வருந்துதல்; யாக்கை-உடம்பு; செந்நீர்-இரத்தம்; இழிதரல்-ஒழுகுதல்/வடிதல்; எண்-மதிப்பு; இனையன-இத்தகைய; ஐயுறவு-சந்தேகம்; புண்ணிடை-புண்ணின் இடத்தில்; புக்கு-புகுந்து)

அவ்வாறு போர்க்களத்தினின்றும் விண்ணில் சென்று மறைந்த இந்திரசித்து, முன்போலவே ஏதேனும் வஞ்சனை மிகுந்த மாயச்செயல்களைச் செய்வான் என்று வானரவீரர்கள் கண்களில் கலக்கத்துடன் விண்ணையே நோக்கிச் சந்தேகத்துடன் வருந்திக் கொண்டிருக்கும்பொழுது, அவன் அவ்வாறு செய்யாமல், இலக்குவன் அம்பால் புண்பட்ட தன் உடம்பிலிருந்து வழியும் இரத்தத்துடன் தன் தந்தை இராவணன் முன் சென்று நின்றான். அவ்வாறு நின்றவனாகிய மதிப்புமிக்க தன் புதல்வனைப் பார்த்து, இராவணன் கீழ்வருமாறு வினவினான்.

இந்திரசித்து இதுபோல் முன்பு வானிடத்துச் சென்றபோதெல்லாம் ஏதாவது வஞ்சனைச் செயல்களைப் புரிந்திருக்கிறான். எனவே வானர வீரர்கள் அவன் இப்போதும் அதுபோல ஏதாவது செய்வான் என்று எதிர்பார்த்து விண்ணையே நோக்கிக் கலக்கமுற்று நின்றார்கள் என்பதாம். தன் உடம்பில் தைக்கப்பட்டிருந்த அம்புகளுடனும், உடலினின்றும் வழியும் இரத்தப்பெருக்குடனும் இந்திரசித்து தன் தந்தை இராவணனிடம் சென்று நின்றது, தன்னுடைய போர்த்திறமை பற்றி அவனுக்குத் தெரிவிக்கவும், இலக்குவனின் தெய்வீகத்தன்மையைப் புலப்படுத்தவுமே என்க. தசரதன் தன் மக்களுக்குள் இராமபிரான்மேல் எப்படிப் பேரன்பு கொண்டிருந்தானோ, அதேபோல் இராவணனும் தன் மக்களுள் இந்திரசித்தனிடம் பேரன்பு பூண்டிருந்தான். எனவே ''எண்ணுடை மகன்'' என்றார் என்க. எண்-மதிப்பு.

2. "தொடங்கிய வேள்வி முற்றுப் பெற்றிலாத் தொழில், நின்தோள்மேல்
அடங்கிய அம்பே என்னை அறிவித்தது; அழிவுஇல் யாக்கை
நடுங்கினை போலச் சாலத் தளர்ந்தனை; கலுழன் நண்ணப்
படம்குறை அரவம் ஒத்தாய்; உற்றது பகர்தி!" என்றான். (9200)

(தொழில்-செயல்/தன்மை; அடங்கிய-தைத்துள்ள; என்னை-எனக்கு; யாக்கை-உடம்பு; சால-மிகவும்; கலுழன்-கருடன்; நண்ணுதல்-நெருங்குதல்; அரவம்-பாம்பு; உற்றது-நிகழ்ந்தது; குறைதல்-ஓய்ந்து போதல்/ஒடுங்கிப்போதல்)

இராவணன் தன் எதிரே இரத்தம் சொட்டச்சொட்ட வந்து நின்ற புதல்வன் இந்திரசித்தை நோக்கி, ''நீ நிகும்பலையில் தொடங்கிய யாகம் பகைவர்களால் தடைசெய்யப் பெற்றதையும், நீ அதை முற்றுவிக்காமல் இங்குவந்து நிற்பதையும், உன்னுடைய தோளின்மேல் தைத்திருக்கின்ற அம்புகளே எனக்குத் தெரிவிக்கின்றன. யாராலும் அழிக்கமுடியாத உன்

Koviloor Digital Library

உடம்பு, ஏதோ மிகவும் முதிர்ச்சியடைந்ததுபோல் நடுங்குகிறது; நீ உடலாலும் உள்ளத்தாலும் மிகவும் தளர்ந்தவன்போலக் காணப்படு கிறாய்; கருடன் வந்து நெருங்கினால் பாம்பு எப்படித் தன் படத்தை ஒடுக்கிக் கொள்ளுமோ, அதுபோல நீயும் ஒடுங்கிப்போய் இருக்கிறாய்; அங்கே உனக்கு என்ன நிகழ்ந்தது சொல்வாயாக!'' என்று கேட்கிறான் இராவணன்.

இதே போன்ற ஒரு காட்சி முன்பும் நாம் கண்டு வந்திருக்கிறோம். இலங்கைக்கு எரியூட்டி மயேந்திர மலையில் வந்து இறங்கிய அனுமனின் தோற்றத்தைக் கண்டு வானரவீரர்களும் இவ்வாறுதான் தாம் ஊகித்து உணர்ந்ததைத் தெரிவித்தார்கள் அல்லவா? பாடல் பகுதியை மீண்டும் ஒருமுறை பார்க்கலாம். ''பொருதமை புண்ணே சொல்ல, வென்றமை போந்த தன்மை உரைசெய, ஊர் தீயிட்டது ஓங்கு இரும் புகையே ஓதக், கருதலர் பெருமை, தேவி மீண்டிலாச் செயலே காட்டத் தெரிதர உணர்ந்தோம்'' என்பது சுந்தரகாண்டம் திருவடிதொழுத படலத்தில் வானரவீரர்கள் கூற்று. வெளியில் தோன்றுகின்ற சில குறிப்புகளை வைத்து, உள்ளுக்குள் என்ன நிகழ்ந்திருக்கும் என்று ஊகித்து அறிவது வேந்தர்களுக்குரிய குணங்களுள் ஒன்று. அதற்கு இந்த இடம் தக்க சான்று. இலக்குவனுக்குக் கலுழனும், இந்திரசித்துக்கு அரவமும் உவமைகள்.

3. இந்திரசித்து கூறத்தொடங்குதல்

''சூழ்வினை மாயம் எல்லாம் உம்பியே துடைக்க, சுற்றி,
வேள்வியைச் சிதைய நூறி, வெகுளியால் எழுந்து வீங்கி,
ஆள்வினை ஆற்றல் தன்னால், அமர்த்தொழில் தொடங்கி, யார்க்கும்
தாழ்விலாப் படைகள் மூன்றும் தொடுத்தனென்; தடுத்து விட்டான்''
(9201)

(சூழ்வினை-சூழ்ச்சிசெய்கை; மாயம்-வஞ்சனைச்செய்கை; உம்பி-உன்தம்பி/வீடணன்; துடைத்தல்-பயனற்றதாக்குதல்/அழித்தல்; சுற்றுதல்-முற்றுகை இடுதல்; நூறுதல்-அழித்தல்; வீங்குதல்-கிளர்ந் தெழுதல்; ஆள்வினை-முயற்சி)

''நான் செய்த சூழ்ச்சிகள், மாயச்செயல்கள் இவை எல்லாவற்றையும், உன்னுடைய தம்பியான வீடணனே, பகைவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, அவற்றைப் பயனற்றதாக்கி விட்டான். எனவே இலக்குவன் தன் சேனையோடு நிகும்பலையை முற்றுகையிட்டு நான் செய்த வேள்வி சிதைந்துபோகுமாறு அழித்துவிட்டான்; என்றாலும் நான் மிகச் சீற்றத்தோடு பொங்கியெழுந்து, என்னுடைய முயற்சி மிக்க வலிமை யினால், போர்த்தொழில் தொடங்கி, யாராலும் தோற்கடிக்க முடியாத தெய்வத்தன்மை வாய்ந்த முத்தேவர்களுக்கும் உரிய மூன்று படைக் கலன்களையும் அவன்மீது தொடுத்துச் செலுத்தினேன் என்றாலும் அவன்

Koviloor Digital Library

அவையெல்லாவற்றையும் தடுத்து நிறுத்திவிட்டான்'' என்றான் இந்திர சித்து.

இந்திரசித்து செய்த சூழ்வினை, அயோத்திக்குச் சென்று பரதன் முதலானவர்களை அழித்து வருவேன் என்று போக்குக் காட்டியது; அவன் செய்த மாயம், மாயா சீதையைக் கொண்டு வந்து அனுமன் கண் எதிரில் வீழ்த்தியது; இவையிரண்டையும் வீடணன் பயனற்றதாக்கி விட்டான் என்பதாம். ''யார்க்கும் தாழ்விலாப் படைகள் மூன்றும்'' என்பவை பிரமனுக்குரிய பிரமாஸ்திரம், திருமாலுக்குரிய நாராயணாஸ்திரம், சிவபெருமானுக்குரிய பாசுபதாஸ்திரம் என்க.

4. இலக்குவன் சிறப்பைக் கூறுதல்

''நிலம் செய்து, விசும்பும் செய்து, நெடிய மால்படை, நின்றானை
வலம் செய்து போயிற்று என்றால், மற்று இனி வலியது உண்டோ?
குலம் செய்த பாவத்தாலே கொடும்பகை தேடிக் கொண்டாய்;
சலம் செயின், உலகம் மூன்றும் இலக்குவன் முடிப்பன், தானே''
(9202)

(நெடியவன்-திருமால்; செய்தல்-பரவுதல்/படைத்தல்; சலம்-வெகுளி /சீற்றம்; தானே-அவன் ஒருவனே; முடித்தல்-அழித்தல்)

''இந்நிலவுலகத்தையும், விண்ணுலகத்தையும் படைத்தவனான உயர்ந்த திருமாலின் படையான நாராயண அத்திரம் விண், மண் முதலிய எல்லா இடங்களிலும் பரவி, இலக்குவன் எதிரே சென்றது; இலக்குவனும் அதனை எதிர்கொண்டு சென்றான். ஆனால் அந்த நாராயணாஸ்திரம் அவனை ஒன்றும் செய்யாது, அவனை வலமாகச் சுற்றிவந்து திரும்பிப் போயிற்று என்று சொன்னால், இந்தப்படையைக் காட்டிலும் வேறு ஒரு வலிமைமிக்க படை நம்மிடம் உள்ளதோ? நமது அரக்கர்குலம் தொன்றுதொட்டுச் செய்துவந்த பாவத்தின் பலனாக இப்போது இத்தகைய கொடிய பகையினை நீயே வரவழைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இலக்குவன் கோபம் கொண்டு எழுந்து நின்றால் அவன் ஒருவனே இந்த மூன்று உலகங்களையும் அழித்து ஒழித்துவிடுவான். அத்தகைய ஆற்றல் பெற்றவன்'' என்று இந்திரசித்து இலக்குவன் தோளாற்றலையும், வில்லாற்றலையும் புகழ்ந்து கூறினான்.

இங்கே ஒன்று நோக்க வேண்டும். முதலில் இந்திரசித்து பிரமாஸ் திரத்தைச் செலுத்தினான்; அதே பிரமாஸ்திரத்தைக் கொண்டு தடுத்தான் இலக்குவன். பின்னர் இந்திரசித்து பாசுபதாஸ்திரத்தைச் செலுத்தினான்; அதனையும் இலக்குவன் அதே பாசுபதாஸ்திரத்தைக் கொண்டு தடுத்து நிறுத்தினான்; ஆனால் இந்திரசித்து நாராயணாஸ்திரத்தைச் செலுத்திய போது இலக்குவன் நாராயணாஸ்திரத்தைத் தொடுக்கவில்லை, மாறாக

Koviloor Digital Library

அதனை எதிர்நோக்கிச் சென்றான் என்பதையும் இங்கு நினைவு கூர வேண்டும். எனவேதான் முன்பு இராமஇலக்குவர்களை அற்பமான மானிடர்கள் என்று இழித்துக்கூறிய இந்திரசித்து இப்போது தானே இலக்குவன் ஆற்றலை நேரில் கண்டபின்பு, ''சலம் செயின் உலகம் மூன்றும், இலக்குவன் முடிப்பன் தானே'' என்று கூற நேர்ந்தது. அனுபவப்பாடம். தன் தந்தை செய்த பாவம் என்று கூறுவதற்கு அஞ்சி, ''குலம் செய்த பாவம்'' என்று குலத்தின்மேல் பழியை ஏற்றிவிட்டான் என்பதாம். தனது வரபலம், தோள்பலம், வில்லாற்றல் முதலியவற்றோடு, தெய்வப் படைக்கலன்களின் பலம், இவையெல்லாமும் இலக்குவனிடம் ஒன்றும் செய்யமுடியாமற் போனதால், இப்போது உண்மைநிலை தெரியப் பெற்றுத் தெளிவடைந்து இவ்வாறு புகழ்கிறான் எனக்கொள்க.

திருமால் திரிவிக்கிரமனாகி வந்தபோது தனது இரண்டு திருவடிகளால் விண்ணையும் மண்ணையும் அளந்ததுபோல, அவனுடைய நாராயணாஸ்திரமும் விண்ணிலும், மண்ணிலும் பரவிச்சென்றது என்பதாம். ''கொடும்பகை தேடிக் கொண்டாய்'' என்பது பொருள் ஆழம் நிறைந்த சொற்றொடர். இராமஇலக்குவர் அவர்களாக வந்து போர் தொடுக்கவில்லை, நீ போய் இராமபிரானின் மனைவியைக் கவர்ந்து கொண்டதால் நீயே அவர்கள் பகைமையைத் தேடிக்கொண்டாய், நீயே வலியச் சென்று வரவழைத்துக் கொண்ட பகை இது என்பதைத் தீர்மான மாகச் சொல்லுகிறான் இந்திரசித்து. இவன் ஒருவன் தேடிய பகையால் அரக்கர்குலமே அழிந்துபோயிற்று என்பது கருத்து.

5. ''முட்டிய செருவில், முன்னம் முதலவன் படையை என்மேல்
விட்டிலன், உலகை அஞ்சி; ஆதலால் வென்று மீண்டேன்;
கிட்டிய போதும் காத்தான்; இன்னமும் கிளர வல்லான்;
சுட்டிய வலியினாலே கோறலைத் துணிந்து நின்றான். (9203)

(முட்டுதல்-நெருங்குதல்; செரு-போர்; முதலவன்-பிரமதேவன்; கிட்டுதல்-நெருங்குதல்; காத்தல்-தடுத்தல்; சுட்டிய-மதிப்பிற்குரிய; கோறல்-கொல்லுதல்; கிளர்தல்-அம்பு தொடுத்தல்)

முன்பு எனக்கும் அவனுக்கும் நிகழ்ந்த போரில், முதலில் நான்தான் உலகம் யாவற்றிற்கும் முதல்வனான பிரமதேவனின் பிரமாஸ்திரத்தைச் செலுத்தினேன்; ஆனால் அவன் இராமன் ஆணைப்படியும், பிரமாத்திரத்தால் இவ்வுலகமே அழிந்துபடுமே என்று அஞ்சியும், அவன் என்மேல் அந்தப் பிரமாத்திரத்தைத் தொடுக்கவில்லை; அதனால்தான் என்னால்உயிருடன்மீண்டு வரமுடிந்தது. பின்னர்நிகும்பலையில் நாங்கள் இருவரும் நெருங்கிப் போர் செய்தபோதும் அவன் தானே முன்வந்து பிரம்மாத்திரத்தைத் தொடுக்கவில்லை; நான் ஏவிய பிரமாத்திரத்தைத் தடுத்து நிறுத்திக் கொண்டான்; இன்னும் அவன் சீற்றம் கொண்டு அத்திரங்களைச் செலுத்த வல்லவன்-எனினும் வேறெந்தப் படையையும்

Koviloor Digital Library

பயன்படுத்தாமல், மதிப்பிற்குரிய தன் வலிமையினால் மட்டுமே என்னைக் கொன்றழிக்க வேண்டும் என்று துணிந்து நிற்கின்றான்'' என்கிறான் இந்திரசித்து.

இலக்குவன் பிரமாத்திரத்தைப் பயன்படுத்தியிருந்தால் தான் உயிருடன் மீண்டு வந்திருக்க முடியாது என்பதைத் தன் தந்தையின் எதிரிலேயே ஒப்புக் கொள்ளுகிறான் இந்திரசித்து. முன்பு பிரமாத்திரப் படலத்தில் இலக்குவன் இந்திரசித்தன்மீது பிரமாத்திரத்தைச் செலுத்தத் தீர்மானித்தபோது இராம பிரான் அதனைத் தடுத்தது நாம் அறிந்ததே. எனவே இலக்குவன் அதற்குப் பின்னரும் பிரமாத்திரத்தைப் பயன்படுத்தி இந்திரசித்தை அழிக்க நினைக்கவில்லை. தன்னுடைய வில்லாற்றலைக் கொண்டே அவனை அழிக்கவேண்டும் என்பது அவனது துணிந்த முடிபு என்பதாம்.

6. ''சீதைமேல் ஆசையை விடுக'' என வேண்டுதல்

''ஆதலால் அஞ்சினேன்'' என்று அருளலை; ஆசைதான் அச்
சீதைபால் விடுதி ஆயின், அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்; உன்மேல்
காதலால் உரைத்தேன்'' என்றான், உலகெலாம் கலக்கி வென்றான்.
(9204)

(தீர்தல்-தணிதல்; காதல்-அன்பு; அருளுதல்-கருதுதல்)

இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் தன் போர்த் திறமையினால் வெற்றி கொண்டவனான இந்திரசித்து தன் தந்தை இராவணனை நோக்கி ''இராமஇலக்குவர்கள் அத்தகைய ஆற்றல் பெற்றவர்கள்; எனவே நீ சீதாதேவியின் மீது கொண்டிருக்கும் ஆசையைத் துறந்துவிடு; அவ்வாறு நீ செய்வாயானால், அவர்கள் நம்மீது கொண்டிருக்கும் சீற்றம் தணியப் பெறுவர்; அதனால் நம்மோடு மேலும் போர்செய்யாது திரும்பிப் போகவும் கூடும்; நாம் அவர்களுக்கு இழைத்த தீங்குகளையும், துன்பங் களையும் பொறுத்துக் கொள்வார்கள்; இவற்றையெல்லாம் நான் உன்மீது கொண்ட பாசத்தால் கூறுகிறேனே அன்றி அவர்களுக்கு அஞ்சித்தான் நான் இதைக் கூறுகிறேன் என்றோ, அல்லது மேலும் போர் செய்வதற்கு அஞ்சித்தான் இதனைக் கூறுகிறேன் என்றோ தயவுசெய்து தவறாகக் கருதிவிடாதே'' என்று மன்றாடுகிறான் இந்திரசித்து.

இதே கருத்தைத்தான் முன்பு மாலியவான், மாரீசன், வீடணன், கும்பகருணன் ஆகிய எல்லோரும் கூறி வந்திருக்கிறார்கள் என்பதையும் இங்கே ஒருசேர நினைவுகூர்தல் தகும். ''அருளலை'' என்ற சொல் கருதாதே என்ற பொருளைத்தரும். பெரியவர்களிடம் பேசும்போது பயன் படுத்தப் படும் ஒரு வழக்குச்சொல். இராவணன் ஒரு தீமையை விலக்கிக் கொண்டால் அவர்கள் மூன்று நன்மைகளைச் செய்வார்கள் என்று

Koviloor Digital Library

இந்திரசித்தனைக் கொண்டு கூறவைத்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. இலக்குவன்மேல் அச்சம் கொண்டு இதனைக் கூறவில்லை என்பதைக் கவிஞன் எப்படிக் கூறுகிறான் பாருங்கள். இந்திரசித்தனை ''உலகெலாம் கலக்கி வென்றான்'' என்கிறான். எனவே உலகத்தை எல்லாம் கலக்கி வென்றவன் கூறுவது அஞ்சிக்கூறும் கூற்று அன்று; உண்மையே என்பதை நிறுவுகிறான் கவிஞன் என்க.

7. இராவணன் இந்திரசித்தைக் கடிந்து பேசுதல்

இயம்பலும், இலங்கைவேந்தன், எயிற்று இளநிலவு தோன்ற,
புயங்களும் குலுங்க நக்கு, ''போர்க்கு இனி ஒழிதி போலாம்;
மயங்கினை; மனிசன் தன்னை அஞ்சினை; வருந்தல்; ஐய!
சயம்கொடு தருவென், இன்றே, மனிசரைத் தனு ஒன்றாலே'' (9205)

(ஒழிதி-செல்லாமல் நீங்குதல்; தனு-வில்; சயம்-வெற்றி; கொடு-கொண்டு)

அவ்வாறு இந்திரசித்து கூறியதும், இலங்கை வேந்தனான இராவணன், தனது பிறைச்சந்திரனைப் போன்று வளைந்த கோரப்பற்கள் இளமையான நிலவுபோல ஒளிவீச, தனது இருபது தோள்களும் குலுங்கும்படி சிரித்து, ''இனிமேல் போர்க்குச் செல்வதிலிருந்து நீங்கினாய் போலும்; அறிவு சற்று திரிந்தது போலும்; அற்பமான மனிதர்களைக் கண்டு பயந்துவிட்டாய் போலும்; பரவாயில்லை வருந்தாதே! இப்பொழுதே என்னுடைய ஒரே வில்லினால், அந்த மனிதர்களை வென்று, உனக்கு வெற்றியைத் தருவேன்'' என்று கூறுகிறான் இராவணன்.

முன்பும் இதேபோலக் கும்பகருணன் இராவணனுக்கு அறிவுறுத்திய போதும் அவனையும் இவ்வாறே சினந்து ''அஞ்சினை வெறுவிது உன் வீரம்'' என்று கூறி அனுப்பியதையும் இங்கு நினைவுகூர்க. அவன் இராம இலக்குவரை எவ்வளவு அற்பமாக நினைத்தான் என்பதை ''தனு ஒன்றாலே'' என்றும், ''இன்றே'' என்றும் கூறுவதிலிருந்தே அறியலாம். இந்த அற்பமான மனிதர்களை வெற்றி கொள்வதற்கு எனக்கு உன்னைப் போல நீண்டகாலம் தேவையில்லை; ஒரேநாளில், இன்றே, இப்பொழுதே வென்று தருவேன் என்றும், எனக்கு எந்தத் தெய்வத்தன்மை வாய்ந்த படைக்கலங்களும், சேனைகளும் தேவையில்லை, என்னுடைய ஒரே வில்லினாலேயே அவர்களை வென்று விடுவேன் என்றும் கூறுவதிலிருந்து அறியலாம்.

இங்கே இவன் இவ்வளவு வீரம் பேசினாலும், இராமஇலக்குவரின் வில்லாற்றல் பற்றியும் தெய்வீகத்தன்மை பற்றியும் அவன் நன்கு அறிந்தவன்தான். இதே இராவணன்தான் முன்பு முதல்நாள் போரில் படைக்கலன்களை எல்லாம் கீழே போட்டு வெறுங்கையோடு இலங்கை

Koviloor Digital Library

புகுந்தவன் நாசம் வந்துற்றபோதை நன்கு அறிந்தவன்தான். இராம இலக்குவரை ''நல்லதோர் பகை'' என்றும் கூறியவனும் இதே இராவணன்தான் என்பதையும் நாம் நன்கு அறிவோம். எனினும் இவ்வாறு இப்போது பேசுகிறான் என்றால் இந்திரசித்து மனத்தளர்ச்சி அடைந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் என்பதை அறிதல் வேண்டும்.

8. முன்னையோர் இறந்தாரெல்லாம், இப்பகை முடிப்பர் என்றும்,
பின்னையோர் நின்றோரெல்லாம் வென்றனர் பெயர்வர் என்றும்,
உன்னை, "நீ அவரை வென்று தருதி" என்று உணர்ந்தும், அன்றால்;
என்னையே நோக்கி, யான் இந்நெடும்பகை தேடிக்கொண்டேன்" (9206)

(பெயர்தல்-மீண்டுவருதல்; உணர்தல்-எண்ணுதல்; முடித்தல்-ஒழித்தல்)

இராவணன் இந்திரசித்தை நோக்கி, ''நம் படையில் இதற்கு முன்னால் போர்செய்து இறந்து போனவர்களெல்லாம் இந்த மனிதர்களை அழித்து ஒழித்துவிடுவார்கள் என்றோ, இப்போது இன்னும் போர்செய்யத் தக்கவராய் உயிருடன் இருந்து போர்செய்யச் செல்ல இருப்பவர்கள் எல்லோரும் அவர்களுடன் போர்செய்து வெற்றி கொண்டு உயிருடன் திரும்பி வந்து விடுவார்கள் என்றோ, நீயே அவர்களை வென்று எனக்கு வெற்றியைத் தேடித் தந்துவிடுவாய் என்றோ எண்ணி நான் இத்தகைய பெரிய காரியத்தைச் செய்யவில்லை; என்னுடைய தோளாற்றலை மட்டும் நம்பியே, நானேதான் சீதையைக் கவர்ந்து வந்து, இராமஇலக்குவரின் நீண்ட பெரும் பகையை வரவழைத்துக் கொண்டேன்'' என்று கூறிக் கொள்ளுகிறான் இராவணன்.

தான் செய்த காரியமான சீதாதேவியைக் கவர்ந்து வந்தது தன்னுடைய நன்மைக்காகவே என்றும், இதில் இலங்கை சேனைகளும், அரக்கர்களும் இந்த மனிதர்களை வெற்றிபெற முடியாது என்பது தனக்குத் தெரியும் என்றும், இந்திரசித்தனால்கூட இந்த வெற்றியைத் தனக்குத் தர முடியா தென்றும் அறிந்திருந்ததால்தான் இவ்வாறு இராவணன் தன்னம்பிக்கை யுடன் பேசுகிறான் என்பதாம். முன்னர் இந்திரசித்து ''குலம் செய்த பாவத்தாலே கொடும்பகை தேடிக்கொண்டாய்'' என்று கூறியதற்கு மாறாக இராவணன், ''என்னையே நோக்கி யான் இந்நெடும்பகை தேடிக் கொண்டேன்'' என்று கூறுவதை நுனித்து உணர்க. ''நாசம் வந்துற்றது என்பதை நன்கு உணர்ந்து கொண்டான் இராவணன். ''நாசம் வந்துற்ற போதும், நல்லதோர் பகையைப் பெற்றேன்'' என்பதும், ''என்னையே நோக்கி இந்நெடும்பகை தேடிக்கொண்டேன்'' என்பதும் கம்பனின் வைரவரிகள். 'முன்னையோர் இறந்தோர்' என்பது நால்வகைப் படையையும், அரக்க வீரர்களை மட்டும் குறிப்பதல்ல; தன்னுடைய தம்பி கும்பகருணன், தன் மகன் அதிகாயன் ஆகியோரையும் குறித்தது என்க. ''பின்னையோர் நின்றார்'' என்பது மகோதரன் போன்ற படைத்

Koviloor Digital Library

தலைவர்களைக் குறிக்கும் எனக்கொள்க. இராவணன் தன் ஆணவப் போக்கால், இறந்தவர்களையும், இருப்பவர்களையும் இந்திரசித்தையும் ஏளனமாகப் பேசுவதை உணருங்கள்.

9. "பேதைமை உரைத்தாய் பிள்ளாய்! உலகெலாம் பெயர, பேராக்
காதை என் புகழினோடு நிலைபெற, அமரர் காண,
மீது எழும் மொக்குள் அன்ன யாக்கையை விடுவதல்லால்,
சீதையை விடுவது உண்டோ? இருபது திண்தோள் உண்டால். (9207)

(பேதைமை-அறிவில்லாத்தன்மை; பேரா-அழியாத; மொக்குள்-குமிழி; யாக்கை-உடம்பு; பேராக்காதை-அழிந்துபோக முடியாத வரலாறு)

இராவணன் இந்திரசித்தை நோக்கி, ''மைந்தனே! உன் அறியாத் தனத்தால் இவ்வாறு பேசுகிறாய்; இந்த உலகங்களெல்லாம் தம் நிலையினின்றும் மாறி நிலைபெயரக் கூடியவை; ஆனால் என்னுடைய இந்தச் செய்கை ஒரு அழியாத வரலாறாக நிலைத்து நிற்கும்; என் புகழும் அதனோடு சேர்த்துப் பேசப்படும்; அதை, இப்பொழுது என்னை இழித்துப் பேசுகின்ற தேவர்களும் காண்பார்கள். இந்த உடம்பு என்பது நீரில் எழுகின்ற நீர்க்குமிழி போன்றது; நிலையற்றது; எனவே அதைத் துறத்தல் என்பது பெரிய காரியமல்ல; நான் அந்த உடம்பை நீக்குவது பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் என்னிடம் என்னுடைய இருபது வலிய உறுதியான தோள்கள் இருக்கின்றனவே! அவை இருக்கும்வரை சீதாதேவியை விடுதல் என்பது நடவாத செயல். நான் விடமாட்டேன். உயிரை விட்டாலும் விடுவேனேயன்றிச் சீதாதேவியை விடமாட்டேன்'' என்று உறுதிபடக் கூறுகிறான் இராவணன்.

இப்பொழுது இராவணன் அழியக்கூடிய உடலைப் பாதுகாத்துக் கொள்வது இழிவான செயல் என்றும், புகழைக் காத்துக் கொள்வதே மேன்மையுடைய செயல் என்றும் கூறுவது, ஒருவகையில் சரிதானோ என்று கற்போர் எண்ணும் வண்ணம் சொற்களைக் கையாண்டிருக்கும் கவிஞனின் கவிவண்ணம் நோக்குக.

இராவணன் தன் தோள் வலியையே நம்பினானேயன்றித் தன் அறிவையோ, தன் உற்றார் நலனையோ சற்றும் சிந்திக்கவில்லை என்பது புலனாகும். ''மாரவேள் கொதிக்கும் அம்பால் பொன்றலின், இராமன் அம்பால் பொன்றலே புகழுண்டு'' என்று முன்பே கூறியவன்தான் இந்த இராவணன் என்பதையும் இங்கே நினைவுகூர்க. 'காதை' என்பது கதை பொதிந்த பாட்டைக் குறிக்கும். யாக்கை நிலையாமையை நீருள்மொக்குள் என்று உவமிப்பது கவிமரபு. 'கொப்புளே போலத் தோன்றி, அதனுளே அழியக்கண்டும், இக்களேபரத்தை ஓம்ப என் செய்வான் தோன்றினேனே'' என்பது அப்பர்தேவாரம்.

Koviloor Digital Library

10. "வென்றிலென் என்ற போதும், வேதம் உள்ளளவும், யானும்
நின்றுளென் அன்றோ, மற்று அவ்இராமன் பேர் நிற்கும் ஆயின்?
பொன்றுதல் ஒரு காலத்தும் தவிருமோ? பொதுமைத்து அன்றோ?
இன்று உளார் நாளை மாள்வர்; புகழுக்கும் இறுதி உண்டோ?" (9208)

(நிற்றல்-நிலைபெற்று நிற்றல்; பொன்றுதல்-இறத்தல்; பொதுமைத்து-பொதுவானது/உலகநியதி; மாள்தல்-இறத்தல்)

இராவணன் இந்திரசித்தனுக்கு மேலும் விளக்குகிறான். ''நான் இராமபிரானோடு போரிட்டு வெற்றியடைய முடியாது என்றபோதும், அவன் வெற்றிபெறுவான் அல்லவா? அப்போது அவன் பெயர் வேதத்தில் நிலைத்து நிற்கும் அல்லவா? வெற்றி பெற்றவன் பெயர் நிலைத்து நிற்குமாயின் அவனால் வெல்லப்பட்டவனாகிய என்னுடைய பெயரும் நிலைத்து நிற்கும் அல்லவா? எனவே நான் வெற்றிபெறா விட்டாலும், இறந்து மடிந்தாலும் இராமபிரான் பெயர் உள்ள அளவும் என்னுடைய பெயரும் நிலைத்து நிற்கும் என்று கூறியவன் ஒரு தத்துவம் நிறைந்த கருத்தையும் தெரிவிக்கிறான். இறப்பது என்பது உலக நியதிதானே? அது பொதுவானதுதானே, அது தவிர்க்ககூடிய ஒன்றா? இன்றைக்கு உயிருட னிருப்பவர் நாளைக்கு இறந்துபடுவர் என்பதும் உறுதிதானே? ஆனால் நாம் நம் வாழ்நாளில் பெறுகின்ற புகழுக்கு ஏதேனும் அழிவு உண்டோ? இல்லையல்லவா?'' என்று கேட்கிறான் இராவணன்.

இராமபிரான் தெய்வ அவதாரம் என்பதை இராவணன் இப்பொழுது உணர்ந்ததால்தான் ''வேதம் உள்ளளவும் யானும் நின்றுளென்'' என்று முதலில் கூறிப் பின்னர் ''மற்றுஇவ் இராமன் பேர் நிற்கும் ஆயின்'' என்று கூறுகிறான். ''பொன்றுதல் ஒரு காலத்தும் தவிராது, அது பொதுமை'' என்பது யாக்கை நிலையாமை என எல்லா இலக்கியங்களிலும், புராணங்களிலும், பொதுவாகப் பேசப்படும் ஒரு தத்துவம். அதனை ஆணவம் மிக்க இராவணன் உணர்ந்து கூறுவதுதான் வியப்பு. ''நெருநல் உளன் ஒருவன், இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு'' என்பது குறள்-336.

''இன்றுளேன், நாளையில்லேன்; என்செய்வான் தோன்றினனே'' என்பது அப்பர்தேவாரம். ''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பது ஒன்றுஇல்'' என்பது குறள்-233. ''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத்தாம் மாய்ந்தனரே'' என்பது புறநானூறு. (நிறீஇ-நிறுவி/நிலைபெறச் செய்து) ''இன்றைக்கு இருப்பாரைநாளைக்குஇருப்பர்என்றுஎண்ணவோதிடமில்லை''என்பது தாயுமானவர் பாடல். தான் இப்பொழுது நடைபெறப்போகிற போரில் இராமபிரானைஎதிர்த்துப்போரிட்டு வெற்றிபெற முடியாது என்பதையும், அதில் தான் மாண்டுபோகவும் கூடும் என்பதையும் அவன் உள்மனது தெரிவிப்பதையும் கவிஞன் அவன் கூற்றாகவே கற்போர்க்குக் கூற

Koviloor Digital Library

வைத்திருக்கும் கவித்திறம் நோக்குக. பூவோடு சேர்ந்த நார் சில காலம்தான் மணக்கும். ஆனால் இராமபிரானால் வெல்லப்பட்டுக் கொல்லப் பட்டாலும், இராவணன் புகழ், இராமபிரான் பேர் உள்ளளவும், வேதம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்ற ஒரு பெரிய எண்ணத்தைக் கொண்டுதான் இராவணன் இவ்வளவு நாளும் இருந்திருக்கிறானோ? என்று கற்போரை எண்ணத்தூண்டும் சில அரிய சொற்கள் இவை. யாக்கை நிலையாமையையும், புகழின் நிலைபேற்றினையும் நன்கு விளக்குவது இப்பாடல்.

11. "விட்டனென் சீதை தன்னை" என்றலும், விண்ணோர் நண்ணி,
கட்டுவது அல்லால், என்னை யான் எனக் கருதுவாரோ?
"பட்டனென்" என்றபோதும், எளிமையின் படுகிலேன் யான்,
எட்டினோடு இரண்டும் ஆன திசைகளை எறிந்து வென்றேன்" (9209)

(படுதல்-இறத்தல்; எறிதல்-அழித்தல்)

''நான் இப்போது இராமபிரானுக்கு அஞ்சி சீதையை விடுதலை செய்துவிட்டேன் என்றால், இதுவரை எனக்கு அஞ்சி அடங்கி ஒடுங்கி இருந்த தேவர்கள், என்னை நெருங்கி வந்து என்னைக் கயிற்றால் கட்டலாம், அல்லது சிறை வைக்கலாம். முன்புபோல் என்னை இலங்கை வேந்தன் இராவணன் எனக்கருதி ஒரு பொருட்டாக மதிப்பார்களோ! மாட்டார்கள். எனவே நான் சீதாதேவியை விடாது, இராமஇலக்குவருடன் போர்புரிந்து அப்போரில் இறந்துபடுவதையே விரும்புகிறேன். அவ்வாறு நான் இராமபிரானிடம் தோல்வியுற்று இறந்துபட்டாலும், சாதாரணமாக இறந்து போகமாட்டேன். எல்லா வானரவீரர்களையும் அழித்து ஒழித்த பிறகுதான் இறந்துபோவேன். நான் பத்துத் திசைகளில் உள்ளோர் எல்லோரையும், படைக்கலங்களை எறிந்து தோல்வியுறச் செய்து வெற்றிகொண்டவன். அவ்வளவு எளிதில் சீதாதேவியை விடவும் மாட்டேன்; அவ்வளவு எளிதில் இறந்து படவும் மாட்டேன்'' என்று உறுதியாகக் கூறுகிறான் இராவணன்.

முன்பு ''சீதையை விடுவதுண்டோ?'' என்று கேட்ட அதே இராவணன் சற்று நேரத்திற்குள் ''விட்டனென் சீதை தன்னை என்றலும்'' என்று பேசுவதிலிருந்து அவன் தன் குற்றத்தை உணர்ந்திருக்கிறான் என்பதும், ஆனாலும் தீர்க்கமான ஒரு முடிவு எடுக்கமுடியாமல் தடுமாறுகிறான் என்பதும், அவனது மனம் குழம்பிப் போயிருக்கிறது என்பதும் தெரியவருகிறது.

12. "சொல்லி என் பலவும்? நீ நின் இருக்கையைத் தொடர்ந்து, தோளில்
புல்லிய பகழி வாங்கி, போர்த்தொழில் சிரமம் போக்கி,
எல்லியும் கழித்தி" என்னா, எழுந்தனன்; எழுந்து, பேழ்வாய்
வல்லியம் முனிந்தாலன்னான், "வருக, தேர்தருக!" என்றான். (9210)

Koviloor Digital Library

(இருக்கை-இருப்பிடம்; புல்லிய-அழுந்திய/பொதிந்த; சிரமம்-துன்பம்; எல்லி-இரவு; பேழ்-பிளந்த; வல்லியம்-புலி; முனிதல்-சீறுதல்; தருதல்-கொணர்தல்; தொடர்தல்-நெருங்குதல்)

இராவணன் இந்திரசித்தை நோக்கி, ''சரி, இனிமேல் இதுபற்றிப் பேசி என்னபயன்? நீ உன்னுடைய அரண்மனைக்குச் சென்று, உன் தோளில் அழுந்தப் படிந்திருக்கின்ற அம்புகளை எல்லாம் பறித்தெடுத்து, போர்த் தொழிலில் உனக்கு ஏற்பட்ட களைப்பைப் போக்கிக்கொண்டு இன்று இரவு முழுவதும் ஓய்வெடுப்பாயாக!'' என்று கூறி எழுந்தான். எழுந்து பிளவுபட்ட வாய் கொண்டபுலி ஒன்று சீறுவதுபோல, அங்கு நின்ற தேர்ப்பாகனை நோக்கி, ''இங்கேவா, என்னுடைய தேரை விரைவில் இங்கு கொண்டுவருக'' என்று கட்டளையிட்டான்.

இதேபோலத்தான் கும்பகருணனிடம் முன்பு பேசினான் என்பதையும் நினைவுகூர்க. ''கண்முகிழ்த்து இரவும் எல்லியும் உறங்குதிபோய்; ''தருக என்தேர்'' ''படை சாற்று'' என்றது இதே இராவணன் கூற்று. 'சிரமம்' என்ற சொல்லுக்குத் துன்பம், வருத்தம், களைப்பு என்று பல பொருள்கள் உண்டு.

13. இந்திரசித்து, இராவணனைத் தடுத்துத் தானே மீண்டும் போருக்குச் செல்லுதல்

எழுந்தவன் தன்னை நோக்கி, இணைஅடி இறைஞ்சி ''எந்தாய்!
ஒழிந்தருள் சீற்றம்; சொன்ன உறுதியைப் பொறுத்தி; யான்போய்க்
கழிந்தனென் என்ற பின்னர், நல்லவா காண்டி!'' என்னா
மொழிந்து, தன் தெய்வத் தேர்மேல் ஏறினன்; முடியலுற்றான். (9211)

(இணை-இரண்டு; கழிதல்-இறந்துபோதல்; நல்லவா-நல்லவாறு/நல்லனவாக; காண்டி-காணுவாய்; முடிதல்-இறந்துபடுதல்)

அவ்வாறு சீற்றம் கொண்டு எழுந்தவனான தன் தந்தை இராவணனின் இரண்டு தாள்களையும் வணங்கி, அவனை நோக்கி ''என் தந்தையே! நீ இப்பொழுது கொண்டிருக்கும் சீற்றத்தைத் தவிர்ப்பாயாக! நானே மீண்டும் போருக்குச் செல்லுகிறேன். அங்கு சென்று நான் போரில் இறந்து பட்டதன்பின் நான் கூறிய சொற்களில் உள்ள நன்மைத்தன்மைகளை நீயே கண்டுகொள்வாயாக!'' என்று கூறிவிட்டு, அங்கிருந்த தனது தெய்வத் தன்மை வாய்ந்த தேரின்மேல், ''தான் இறப்பது உறுதி'' என்று முடிவு செய்துகொண்டவனான இந்திரசித்து ஏறினான்.

இந்த 'ஒழிந்தருள்' என்ற சொல்லைக் கம்பன் இப்போதுதான் முதன் முதலாகப் பயன்படுத்துகிறான். துன்பத்தின் எல்லையில் இருந்தவனும், இராம இலக்குவரின் தெய்வீகத்தன்மையை உணர்ந்தவனும், தன் சொல்லைக் கேட்காத தன் தந்தை இராவணன்மேல் சற்று சினமும் கொண்ட இந்திரசித்து, விரக்தியின் உச்சக்கட்டத்தில் ''நீ எப்படியாவது

Koviloor Digital Library

சென்று ஒழி'' என்று கூறியதுபோன்ற ஒரு தொனியும் ஒலிப்பதை உணர்க. தான் போரில் மடிதல் திண்ணம் என்று கூறித்தான் முன்பு கும்பகருணனும் போர்க்களத்திற்குச் சென்றான் என்பதை நினைவுகூர்க. அதேபோல இங்கு இந்திரசித்தும் கூறுவதை நோக்குக.

14. படைக்கல விஞ்சை மற்றும் படைத்தன பலவும், தன்பால்
அடைக்கலம் என்ன ஈசன் அளித்தன தேர்மேல் ஆக்கி,
கொடைத் தொழில் வேட்டோர்க்கெல்லாம் கொடுத்தனன் கொடியோன் தன்னைக்
கடைக்கணால் நோக்கி நோக்கி, இருகண் நீர் கலுழப் போனான். (9212)

(விஞ்சை-வித்தை/அறிவு; படைத்தன-உண்டாக்கின/தோற்றுவித்த; ஈசன்-சிவபெருமான்; வாங்குதல்-எடுத்துக் கொள்ளுதல்; வேட்டல்-விரும்புதல்; கலுழ்தல்-சொரிதல்/சிந்துதல்)

தான் தொன்றுதொட்டுக் கொண்டிருக்கின்ற படைக்கலங்கள், தான் தன் தனுவேதத்தால் அறிந்து கொண்டு புதிதாகத் தான் படைத்த படைக் கலங்கள், ஈசர்களாகிய முத்தேவர்களும் அவனிடம் பத்திரமாக வைத் திருக்கச் சொல்லிக் கொடுத்த மும்மூர்த்திகளின் அத்திரங்கள் முதலியன எல்லாவற்றையும் தன் தேரின்மீது ஏற்றிக்கொண்டு, போருக்குப் புறப்படு வதற்கு முன்பு செய்ய வேண்டிய யாத்ராதானங்களை, வேண்டியவர்க்கு வேண்டுமட்டும் கொடையளித்துவிட்டு, கொடியவனான தன் தந்தை இராவணனைத் தன் ஓரக்கண்களால் மீண்டும் மீண்டும், பார்த்துக் கொண்டே, தன் இரண்டு கண்களிலும் கண்ணீர்சிந்த, போர்க்களம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றான் இந்திரசித்து.

''தானம்'' என்ற வடசொல் கொடைத்தொழில் எனத் தமிழாக்கப் பட்டிருக்கிறது. யாத்திரை செல்லும்போதும், போருக்குச் செல்லும் போதும் மன்னர்கள் ''யாத்ராதானம்'' செய்வது என்பது ஒரு மரபு. அது இங்கே பேசப்படுகிறது என்றாலும் முன்பு இந்திரசித்து போருக்குப் புறப்பட்டுச் சென்றபோது இப்படிப்பட்ட யாத்ராதானம் செய்ததாகக் குறிக்கப்படவில்லை. இப்பொழுது அவன் செல்வதன் விளைவு நோக்கி இவ்வாறு கூறப்பட்டதோ எனத் தோன்றுகிறது. முன்பு இராமபிரான் வனவாசம் செல்லும்போது செய்தது உண்மையிலேயே ''யாத்ராதானம்'' கும்பகருணன் போருக்குச் செல்லும்போது யாத்ராதானம் செய்ததாகக் குறிப்பிடப்படவில்லை. இந்திரசித்து இப்போது மன்னன் அல்ல, இளவரசனாகக்கூடக் கருதமுடியாது. பட்டம் சூட்டப்படவில்லை. கம்பன் இங்கே ஏன் யாத்ராதானம் பற்றிக் குறிப்பிடுகிறான் என்பது அறிஞர்களின் ஆய்வுக்குட்பட்டது. ஆனால் மகாபாரதப் போரின்போது யாத்ராதானம் பேசப்படுகிறது என்பதும் கருதத்தக்கது.

Koviloor Digital Library

''கடைக்கணால் நோக்கி'' என்னும் சொற்றொடரும் பொருள் ஆழம் கொண்டது. போருக்கு எழுந்த இராவணன், தானே போருக்குச் செல்லவும், இந்திரசித்தை ஓய்வெடுத்துக் கொள்ளச் சொன்னவன் தன்னை நிறுத்தி தனக்குச் சற்று ஓய்வு தந்து தானே போருக்குச் செல்வதாக மீண்டும் கூறலாமோ என்று எதிர்பார்த்து இந்திரசித்து கடைக்கணால் நோக்கினானா? இல்லை. ''நான் சீதாதேவியை விட்டுவிடுகிறேன், நீ போருக்குச் செல்ல வேண்டாம்'' என்று தன்னை நிறுத்தவும் கூடும் என்று எதிர்பார்த்துக் கடைக்கணால் நோக்கினானா? இல்லை. இவ்வளவு சீற்றம் கொண்ட தந்தையை இதுவரை தன் கண்களால் பார்த்திராத இந்திரசித்து, தனது கண்களால் ஏறெடுத்துப் பார்க்க அஞ்சிக் கடைக்கணால் நோக்கினானா?'' இவ்வளவு கேள்விகளுக்கும் விடைதரும் நோக்கோடு தான் கம்பன் இந்தச் சொற்றொடரை இங்கே பயன்படுத்தியிருப்பானோ என்று எண்ணத் தோன்றுகிறது. ''நோக்கி நோக்கி'' என்ற அடுக்கு அவனுடைய எதிர்பார்ப்பைக் குறித்தது எனக்கொள்க.

ஒரு நகைச்சுவைக் காட்சியும் தோற்றுகிறது இந்திரசித்து முதல்முறை போருக்குச் சென்றபோது வீரத்தோடு சென்றானே? இராம இலக்கு வர்களை அழித்து ஒழிப்பேன் என்று உறுதிபடக் கூறிச்சென்றானே? இப்போது ஏன் ''இருகண் நீர் கலுழப் போகிறான்? அவனுக்குத் தன் விதி தெரிந்திருக்கிறது. கும்பகருணனும் போருக்குப் போகும்போது கூறினானே ''விதி பிடர் பிடித்து உந்துகிறது பொன்றுவென்'' என்றானே? அவற்றையே சொற்களாய்க் கூறாது, ''இருகண் நீர் கலுழப் போனான்'' இந்திரசித்து என்றுதானே கொள்ளவேண்டும்? தான் இனித் தந்தையைத் தன் இரு கண்களால் பார்க்க முடியாது என்று கருதித்தான் ''இருகணால் கடைக்கணால் நோக்கி நோக்கி, கண்நீர் கலுழப் போனானோ? கவிஞன் இவற்றையெல்லாம் கற்போர் ஊகத்திற்கே விட்டிருப்பதை உணர்ந்து மகிழ்க. முத்தேவர்கள் அளித்த படைக்கலம் என்பன, இந்திரசித்து இயற்றிய கடுந்தவத்தின் பலனால் முத்தேவரும் அவனுக்கு மகிழ்ந்தளித்ததும், அவை அவனுக்குப் பணி செய்யுமாறு உரிமையாக்கிக் கொடுத்ததுமான பிரமாஸ்திரம், நாராயணாஸ்திரம், பாசுபதாஸ்திரம் முதலியன எனக்கொள்க. ''எல்லாம் கொடுத்தனன்'' என்ற சொற்றொடரும், தான் திரும்பிவரப் போவதில்லை என்பதை நன்கு உணர்ந்து கொண்ட இந்திரசித்து, தன்னிடம் இருந்த பொருள்கள் அனைத்தையும் ஏதும் மீதம் வைக்காமல் எல்லாவற்றையும் கொடுத்து விட்டுப் போருக்குப் போனான் என்ற விரிந்த பொருளைத் தருதலையும் உணர்க.

15. **இலங்கையின் நிருதரெல்லாம் எழுந்தனர்; விரைவின் எய்தி,**
"விலங்கல் அம் தோளாய்! நின்னைப் பிரிகலம்; விளிதும்" என்று
வலங்கொடு தொடர்ந்தார்தம்மை "மன்னனைக் காமின், யாதும்
கலங்கலிர்! இன்றே சென்று மனிசரைக் கடப்பென்" என்றான். (9213)

Koviloor Digital Library

(நிருதர்-அரக்கர் அரக்கியர்; விலங்கல்-மலை; விளிதல்-இறத்தல்; காமின்-காப்பாற்றுவீர்களாக; இன்றே-இப்பொழுதே; கடத்தல்-வெல்லுதல்)

இந்திரசித்து இராமஇலக்குவருடன் போரிடும் பொருட்டுத் தன் தேரில் ஏறியபோது, இலங்கை மாநகர அரக்கர்கள் எல்லோரும் விரைந்து வந்து, அவனுடைய தேரை அடைந்து, ''மலைபோன்று உயர்ந்த அழகிய தோள்களை உடையவனே! உன்னை விட்டு நாங்கள் பிரியமாட்டோம். உன்னுடன் கூடவே வந்து நாங்களும் போரிட்டு இறந்துபடுவோம்'' என்று வற்புறுத்தினார்கள். அவ்வாறு தன்னைச் சுற்றி வலம்வந்து தொடர்ந்து வந்தவர்களை நோக்கி, இந்திரசித்து ''நீங்கள் யாரும் கலக்கமடையாதீர்கள்; மன்னனாகிய இராவணனைக் காப்பாற்றுங்கள். நான் இப்பொழுதே சென்று பகைவர்களாகிய அற்பமான மானிடர்களை வென்றுவருவேன்'' என்று கூறினான்.

இங்கே ''நிருதர்'' என்ற சொல் அரக்கியரைக் குறிக்கும். அவர்கள் தான் இப்பொழுது நாட்டிற்குள் இருக்கிறார்கள்; அரக்கர்கள் எல்லோரும் போர்க்களத்தில் இருக்கிறார்கள் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்; ''உன்னைப் பிரியமாட்டேன்'' என்று கூறி நிறுத்தியிருக்கலாமே? ''விளிதும்'' என்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன? அவர்களுக்கும் இந்திரசித்து மீண்டு வருவதற்கான வாய்ப்பு இல்லை என்பது புரிந்திருக்கிறது என்பதைக் கற்போரையும் உணரவைக்கிறான் கவிஞன். சரி அவன்தான் ''இன்றே சென்று மனிசரைக் கடப்பென்'' என்கிறானே? பின்னர் ஏன் அவர்களை நோக்கி ''யாதும் கலங்கலீர்; மன்னனைக் காமின்' என்று சொல்ல வேண்டும்? மன்னன் ஆபத்தில் இருக்கிறானா? அரக்கியர்களா மன்னனைக் காக்கும் வல்லமையும் தகுதியுமுடையவர்கள்? எனவே அவன் இறுதியாகப் பிரிகிறான் என்பதும் இவை ஒப்புக்காகக் கூறப்பட்ட சொற்கள் என்பதும் புலனாகின்றன. ''மனிதர்களை வெல்லுவேன் என்றுதான் கூறுகிறானே தவிர, கொன்று மீண்டு வருவேன் என்று கூறாததையும் நோக்குக.

16. வணங்குவார்; வாழ்த்துவார்; தன் வடிவினை நோக்கித் தம்வாய்
உணங்குவார்; உயிர்ப்பார்; உள்ளம் உருகுவார்; வெருவலுற்றுக்
கணங்குழை மகளிர் ஈண்டி இரைத்தவர், கடைக்கண் என்னும்
அணங்குடை நெடுவேல் பாயும் அமர் கடந்து, அரிதின் போனான்.

(9214)

(கணங்குழை-திரண்டகாதணி; ஈண்டி-நெருங்கிவந்து; இரைத்தல்-அரற்றுதல்; உணங்குதல்-உலர்ந்துபோதல்; உயிர்ப்பு-பெருமூச்சு; வெருவலுறுதல்-அச்சம் கொள்ளுதல்; அணங்குதல்-வருத்துதல்; அமர்-போர்)

Koviloor Digital Library

திரண்ட காதணிகளை அணிந்திருந்த சில அரக்க மகளிர் அவனை நெருங்கிச் சென்று வணங்குவார்கள்; சிலர் வாழ்த்துவார்கள்; சிலர் அவனுடைய மேனியழகைக் கண்டு தம் வாய் உலரப் பெறுவார்கள்; சிலர் பெருமூச்சு விடுவார்கள்; இத்தகைய அரக்கமகளிரின் கடைக்கண் நோக்கு என்னும் வருத்தம் செய்யும் நீண்ட வேல்படை பாய்ந்து வருகின்ற போர்க்களமாகிய அரக்கியர் கூட்டத்தைக் கடந்து, மிகச் சிரமப்பட்டு இந்திரசித்து இராமஇலக்குவருடன் போரிடச் சென்றான்.

''கடைக்கண் என்னும் அணங்குடை நெடுவேல்'' என்பது உருவகம். அரக்கியரின் வேல்போன்று வருத்தும் கண்களைப் ''பாயும் நெடுவேல்'' என உருவகித்தார் என்க. போர்க்களத்தில் அம்பு போன்ற படைக் கலங்களைக் கடப்பதற்கு முன்னே, அரக்கியரின் வேல்போன்ற கடைக்கண் பார்வை என்ற போர்க்களத்தைக் கடந்து சென்றான் என்றது ஒரு நயம். இதேபோல் முன்பு வனவாசம் புகுவதற்குமுன் இராமபிரான் அயோத்தி மக்களின் வேல் எனும் கானம் புகுந்தான் என்று கூறியதையும் நினைவுகூர்க. ''மண் எனும் திருவை நீங்கி, வழிக்கொளா முன்னம், பண்ணெனும் சொல்லினார் தம் தோள் எனும் பணைத்த வேயும், கண் எனும் காலவேலும் மிடை நெடுங்கானம் புக்கான்'' என்பது பாடல்பகுதி.

17. ஏயினன் இன்னன் ஆக, இலக்குவன், எடுத்த வில்லான்,
சேய் இரு விசும்பை நோக்கி, "வீடண! தீயோன் அப்பால்
போயினன் ஆதல் வேண்டும்; புரிந்திலன் ஒன்றும்" என்பான்,
ஆயிரம் புரவி பூண்ட தேரின் பேர் அரவம் கேட்டான். (9215)

(ஏயினன்-ஏகினன்; இன்னன்-இத்தன்மையன்; இரு-பெரிய/அகன்ற; விசும்பு-ஆகாயம்; புரவி-குதிரைகள்; அரவம்-ஆரவாரம்/முழக்கம்)

அவ்வாறு விண்ணில் சென்று மறைந்தவனாகிய இந்திரசித்து, முன்பு செய்ததுபோல பிரமாஸ்திரத்தினையும், நாகபாசத்தினையும் தொடுப் பானோ என்று கருதி, இலக்குவன் தன் கைகளில் விற்படையை எடுத்து வைத்துக்கொண்டு, வெகு தூரத்திலுள்ள ஆகாயத்தை நோக்கிய வண்ணம் வீடணனை நோக்கி ''வீடணா! கொடியவனாகிய இந்திரசித்து, நம்மை விட்டு அகன்று அப்பால் போயிருக்க வேண்டும்; வானில் மறைந்தும் மாயச்செயல் ஒன்றும் செய்யாதிருக்கிறானே?'' என்று கேட்டுக் கொண்டிருந்த சமயத்தில், ஆயிரம் குதிரைகள் பூட்டப்பெற்ற ஒரு பெருந்தேரின் பெருமுழக்கத்தைக் கேட்டான்.

'ஏயினன்' என்பது ஏகினன் என்பதன் இடைப்போலி. 'ஏகினன்' என்பது எதுகைநோக்கி ஏயினன் எனத் திரிந்தது எனக்கொள்க.

Koviloor Digital Library

18. இந்திரசித்தன் தேரின் சிறப்பு

குன்று இடை நெரிதர, வடவரையின்
குவடு உருள்குவது என முடுகுதொறும்,
பொன்திணி கொடியினது, இடி உருமின்
அதிர் குரல் முரல்வது, புனை மணியின்
மின்திரள் சுடரது, கடல் பருகும்
வடவனல் வெளிஉற வருவது எனச்
சென்றது, திசைதிசை உலகு இரிய,
திரிபுவனமும் உறு தனி இரதம். (9216)

(திரிபுவனம்-மூன்று உலகங்கள்; உறுதல்-திரிதல்/அடைதல்; தனி-ஒப்பற்ற; இரதம்-ரதம்/தேர்; திணித்தல்-நிரம்பப்பெறுதல்/பொருந்து தல்; வடவரை-மேருமலை; குவடு-சிகரம்; முடுகுதல்-விரைந்து செல்லுதல்; உரும்-இடி; முரல்தல்-முழங்குதல்; புனைதல்-அலங்கரிக்கப்படுதல்; மணி-அழகிய; வடவனல்-வடவைக்கனல்/வடமுகஅக்னி; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல் நெரிதருதல்-பொடிப்பொடியாய் ஆக்குதல்)

இந்திரசித்தன் செலுத்திவந்த ஒப்பற்ற தேர் மேல், நடு, கீழ் எனும் மூன்று உலகங்களையும் சென்றடையும் தன்மை வாய்ந்தது. இடையில் அகப்படுகின்ற மலைகளெல்லாம் பொடிப்பொடியாய் நொறுங்கிப் போகும்படியும், மேருமலையின் ஒரு சிகரமே இடம் பெயர்ந்து உருண்டு வருவது போலவும், அது விரைந்து செல்லும். பொன்னால் நிரப்பப்பட்ட கொடியினை உடையது; பேரிடி போன்று அதிர்ந்த ஒலியுடன் முழங்கிக் கொண்டுவரும் இயல்பினது; அலங்கரிக்கப்பட்ட அழகிய மணிகள் பதிக்கப்பெற்றது போன்ற மின்னலோடு கூடிய திரட்சியான ஒளிமிக்கது; கடலின் உள்ளிருந்தே கடல்நீரைப் பருகி, நீர் கரைகடவாமல் பாதுகாக்கும் வடவைக்கனல், கரையை விட்டு நீங்கி வெளிப்பட்டு வருவதுபோல வருவது; இந்த உலகத்திலுள்ள மக்களெல்லாம் நிலைகெட்டு ஓடும்படி எல்லாத் திசைகளிலும் செல்லவல்லது.

இரதத்தின் தோற்றம் மேருமலையைப் போன்று உயர்ந்து அகன்றது; தேரில் கட்டப்பட்ட கொடிகள் மலையிற் படிந்திருக்கும் மேகத்திற்கு உவமை. இடியின் ஒலி தேரின் முழக்கத்திற்கும் மின்னலின் ஒளி அலங்கரிக்கப்பட்ட இரத்தினங்களுக்கும், அதன் வெம்மை வடவனலுக்கும் உவமை; மலை, மேகம், இடி, மின்னல், வடவாமுகாக்னி என்று ஒன்றோடொன்று தொடர்புடையனவற்றையே உவமையாகக் கூறியிருப்பது கண்டு மகிழத்தக்கது.

Koviloor Digital Library

19. கடல் மறுகிட, உலகு உலைய, நெடுங்
கரி இரிதர, எதிர்கவி குலமும்
குடர் மறுகிட, மலை குலைய, நிலம்
குழியொடு கிழிபட, வழிபடரும்
இடம் மறுகிய பொடி முடுகிடவும்,
இருள் உளது என எழும் இகல் அரவின்
படம் மறுகிட, எதிர் விரவியது, அவ்
இருள் பகல் உறவரு பகை இரதம். (9217)

(கவிக்குலம்-குரக்கினம்; மறுகுதல்-கலங்குதல்/சுழலுதல்/சிதைதல்; உலைதல்-வருந்துதல்; இரிதருதல்-அஞ்சி ஓடுதல்; குலைதல்-குலுங்குதல்; படர்தல்-செல்லுதல்; பொடி-புழுதி/துகள்; முடுகுதல்-விரைந்து செல்லுதல்; இகல்-வலிமை; அரவு-பாம்பு/ஆதிசேஷன்; விரவுதல்-வந்துசேருதல்; குழி-பள்ளம்; படம்-ஆயிரம் தலைகள்)

இருண்ட இருளைப் பகல்போலாக்கும்படி வருகின்ற பகைவன் இந்திர சித்தனது ஒளிமிக்க தேர், கடல்களெல்லாம் கலங்கிடவும், இவ்வுலக மெல்லாம் வருந்தவும், நீண்ட எட்டுத் திக்குகளிலுமுள்ள திக்கு யானைகள் இடம்விட்டுப் பெயர்ந்து ஓடவும், எதிர்த்து எதிர் நிற்கின்ற குரங்குக் கூட்டங்களெல்லாம் குடல் நடுங்கிடவும், எட்டு என்று கூறப்படுகின்ற அஷ்டகுல மலைகளும் குலுங்கிப்போகவும், பூமி பள்ளங்களோடு இரண்டாகப் பிளவுபட்டுப் போகும்படியும், அந்தத்தேர் செல்லும் இடங்களிளெல்லாம் இருந்து விரைந்து எழுந்த புழுதிப்படலங்கள் விண்ணினை மறைக்கவும், இருளாகிப் போய்விட்டதோ என்று காண்போர் கூறும்படி, எழுகின்ற வலிமையுள்ள ஆதிசேஷன் என்னும் பாம்புதன் ஆயிரம் தலைகளையும் சுமைதாங்காமல் நெகிழ்ந்து நஞ்சினைக் கக்கிக் கலங்கவும், இலக்குவன் எதிரே வந்து சேர்ந்தது.

20. இருவரும் பொருதல்

ஆர்த்தது நிருதர் தம் அனிகம்; உடன்
அமரரும் வெருவினர்; கவிக்குலமும்
வேர்த்தது, வெருவலோடு அலம் வரலால்;
விடுகணை சிதறினன், அடு தொழிலோன்;
தீர்த்தனும் அவன் எதிர் முடுகி, நெடுந்
திசை செவிடு எறிதர, விசை கெழுதிண்
போர்த்தொழில் புரிதலும், உலகு கடும்
புகையொடு சிகை அனல் பொதுளியதால். (9218)

(நிருதர்-அரக்கர்; அனிகம்-சேனை; வெருவுதல்-அஞ்சுதல்; அலம்வரல்-துன்புறுதல்/மனம்சுழலுதல்; அடுதல்-கொல்லுதல்;

Koviloor Digital Library

சிதறுதல்-செலுத்துதல்; தீர்த்தன்-தூயவன்/இலக்குவன்; முடுகுதல்-விரைந்து செல்லுதல்; எறிதரல்-ஆரவாரித்தல்; விசை-விரைவு; கெழு-பொருந்திய; சிகை-கொழுந்து; பொதுளுதல்-நிரம்புதல்/மண்டுதல்; உடன்-ஒருசேர)

அரக்கர்களின் சேனை பேராரவாரம் செய்தது; அதனைக் கேட்ட தேவர்களும் இனி என்ன நிகழுமோ என அச்சம் கொண்டனர்; குரக்கினமும் அஞ்சுதலோடு மனம் சுழற்சியுற்றுத் துன்புறுதலால் உடல் வியர்க்கப் பெற்றது; கொல்லுதலையே தொழிலாக உடையவனான இந்திரசித்து, வில்லில் தொடுத்துவிடக் கூடிய அம்புகளைப் பொழிந்தான்; தூயவனான இலக்குவனும் அவன் எதிரே விரைந்து சென்று, பெரிய திசைகளெல்லாம் செவிடுபடும்படி ஆரவாரித்து மிக வேகத்துடன் பொருந்தி திண்மையான போர்த்தொழிலைச் செய்யத் தலைப்பட்டதும், இவ்வுலகம் முழுவதும் கொடிய புகையோடு கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு மண்டியது.

இந்திரசித்தும் இலக்குவனும் போர்செய்தனர் என்பதாம். 'தீர்த்தன்' என்பது தூயவனான இலக்குவனைக் குறித்தது. 'புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்' என்பது மணிமேகலை.

21. வீடணன் இந்திரசித்தை உடனே கொல்லவேண்டும் என இலக்குவனுக்கு உரைத்தல்

வீடணன் அமலனை, ''விறல் கெழுபோர்
　　விடலையை இனி இடைவிடல் உளதேல்,
சூடலை துறுமலர் வாகை'' எனத்
　　தொழுதனன்; அவ் அளவில் அழகனும் அக்
கோடு அணை வரிசிலை, உலகு உலைய
　　குலவரை பிதிர்பட, நிலவரையில்
சேடனும் வெருவுற, உரும் உறழ்திண்
　　தெறுகணை முறைமுறை சிதறினனால். (9219)

(அமலன்-தூயவன்/இலக்குவன்; விறல்-வெற்றி; கெழு-பொருந்திய; விடலை-வல்லவன்/வீரன்/இந்திரசித்தன்; துறு-நெருங்கிய; வாகை-வெற்றி; வரி-கட்டமைந்த; உலைதல்-வருந்துதல்; குலம்-சிறந்த; வரை-மலைகள்; பிதிர்தல்-உதிர்ந்துபோதல்; வெருவுதல்-அஞ்சுதல்; உரும்-இடி; உறழ்-ஒத்த; தெறுதல்-அழித்தல்; சிதறுதல்-சிந்துதல்/பொழிதல்; கோடணை-பெருமுழக்கம்; சேடன்-ஆதிசேஷன்; அழகன்-இலக்குவன்; முறைமுறை-வரிசைவரிசையாக)

அப்போது வீடணன் குற்றமற்றவனான இலக்குவனை நோக்கி, ''இலக்குவ! வெற்றித்திறம் பொருந்திய போர்செய்யும் இந்த வீரனான இந்திரசித்தைக் கொல்லாமல் நடுவில் தப்பிப்போகச் செய்வாயானால் நீ

Koviloor Digital Library

நெருங்கிய மலர்கள் நிறைந்த வெற்றிமாலையைச் சூட இயலாது'' என்று கூறித்தொழுதான்; அந்த அளவில் உடனே அழகனான இலக்குவனும், முழக்கம் பொருந்திய, கட்டமைந்த விற்படையை எடுத்து இவ்வுலக மெல்லாம் வருந்துமாறும், சிறந்த எட்டுக்குல மலைகளும் உதிர்ந்து கொட்டும்படியும், நிலத்திற்கு அடியில் பாதாளத்தில் உள்ள ஆதிசேஷனும் அஞ்சும்படியும், இடிபோன்ற திண்ணிய, அழிக்கும் தன்மையுடைய விற்களை வரிசைவரிசையாகச் செலுத்தலானான்.

''விடலை'' என்ற சொல் இன்று குறிக்கப்பெறும் பொருளைத் தாராது. வீரன், வல்லவன் என்ற பொருள்களைத்தரும்; 'இடைவிடுதல்' என்பது முன்புபோல் அவன் வானில் புகுந்து மறைந்து நிற்றலைக்குறிக்கும். வாகைப்பூவைச் சூடிக்கொள்வது வெற்றியடைந்ததைக் குறிக்கும். வாகை-வெற்றி. வாகை என்பதே ஒரு மலரினுடைய பெயர் என்பதும் அறியத்தக்கது. 'கோடுஅணை' என்பது கோஷணை என்ற வடசொல்லின் திரிபு. பெருமுழக்கம் என்பது பொருள். அவனுடைய வில் எய்யப்பட்டால் உலகு வருந்தும், மலைகள் உதிரும், ஆதிசேஷன் அஞ்சுவான் என்பதாம். 'முறைமுறை' என்ற அடுக்கு வரிசைவரிசையாக என்று மிகுதிப்பொருளை உணர்த்தும்.

22. ஆயிர அளவின அயில் முகவாய்
அடுகணை அவன்விட, இவன்விட, அத்
தீயினும் எரிவன உயிர் பருக,
சிதறின கவிகளோடு இன நிருதர்,
போயின போயின திசை நிறையப்
புரள்பவர் முடிவுஇலர்; பொரு திறலோர்
ஏயின, ஒருவரை ஒருவர் குறித்து,
எரிகணை, இருமழை பொழிவன போல். (9220)

(முகம்-வாய்/முனை; அடுதல்-கொல்லுதல்; மழை-மேகம்; குறித்து-குறிவைத்து; இரு-பெரிய)

ஆயிரக்கணக்கு என்று அளவிட்டுச் சொல்லுமாறு உள்ள கூரிய நுனிகளையுடைய, பகைவரைக் கொல்லும் தன்மையுள்ள அம்புகளை இந்திரசித்து செலுத்த, அதற்கு எதிராக அதே அளவினதான அம்புகளை இலக்குவனும் ஏவி, அந்தப் பிரளய காலத்தில் எழும் நெருப்பைக் காட்டிலும் உயர்ந்து எரிகின்ற நெருப்பினால் உயிர் மாய்ந்துபோய்ச் சிதறிப்போகின்ற வானரங்களோடு, அரக்கர் கூட்டமும் எல்லாத் திசைகளிலும் நிரம்பும்வண்ணம் தப்பித்துப்போய், மண்ணில் விழுந்து புரண்டு கொண்டு தம்மை ஆற்றிக்கொள்ளுபவர்கள் கணக்கற்றவர்கள் ஆவார்கள்; போர்த்திறமை வாய்ந்த இந்திரசித்தும், இலக்குவனும் ஒருவரையொருவர் குறிவைத்துத் தாக்கும்வண்ணம், நெருப்புக்

Koviloor Digital Library

கொழுந்து விட்டு எரிகின்ற அம்புகளைப் பெரிய மழைபொழிவது போல பொழிந்து கொண்டிருந்தனர்.

'அத்தீயினும்' என்பது ஊழிக்கால நெருப்பைக் குறித்தது. 'அ' என்பது இங்கே பண்டறிசுட்டு. நெருப்புப் பற்றிக்கொண்டால் ஓடாது, மண்ணில் விழுந்து புரண்டு அணைத்துக் கொள்ள முயல வேண்டும் என்பது ஒரு பாதுகாப்புமுறை. அது ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே பேசப் பட்டிருப்பதை எண்ணுக. குறிவைத்து என்பது 'குறித்து' எனக் கூறப் பட்டிருக்கிறது. இரண்டு பக்கங்களிலும் உள்ளவர்களின் உயிரை இரண்டு பக்கங்களிலிருந்தும் ஏவப்பட்ட அம்புகள் பருகின என்பதாம். இருவரும் இருபக்கத்துப் படைகளை அழித்ததோடு ஒருவரை ஒருவர் குறிவைத்துத் தமக்குள்ளும் தாக்கிக்கொண்டனர் என்பதும் பெறப்படுகிறது.

23. அற்றன அனல் விழி நிருதன் வழங்கு
அடுகணை இடைஇடை; அடல் அரியின்
கொற்றவன் விடுகணை முடுகி, அவன்
உடல் பொதி குருதிகள் பருகின கொண்டு,
உற்றன, ஒளிகிளர் கவசம் நுழைந்து
உறுகில; தெறுகில அனுமன் உடல்;
புற்றிடை அரவென நுழைய, நெடும்
பொருசரம் அவன் அவை உணர்கிலனால். (9221)

(அடல்அரி-வலியசிங்கம்; கொற்றம்-வெற்றி; முடுகுதல்-விரைந்து செல்லுதல்; பொதிதல்-நிறைந்திருத்தல்; உறுதல்-தங்குதல்/அடைதல்; உறுகில-பதியவில்லை; தெறுதல்-வருத்துதல்/கிழித்தல்; அரவு-பாம்பு; வழங்குதல்-ஏவுதல்/செலுத்துதல்; அடுதல்-கொல்லுதல்; கிளர்தல்-விளங்குதல்; பொருதல்-போரிடுதல்)

நெருப்புக் கொழுந்து விட்டெரிவதுபோல் சிவந்த கண்களையுடைய அரக்கனான இந்திரசித்து செலுத்திய பகைவரைக் கொல்லும் இயல்புடைய அம்புகள், இலக்குவன் செலுத்திய அம்புகளால் இடையிடையே அறுபட்டு விழுந்தன; வலிமைமிக்க சிங்கம் போன்றவனும், வெற்றியையே உடையவனுமான இலக்குவன் செலுத்திய அம்புகள் விரைந்து சென்று பகைவனான இந்திரசித்தன் உடலில் நிறைந்திருக்கின்ற இரத்தங்களையெல்லாம் பருகிக் கொண்டு அங்கே தங்கி நின்றது. இந்திரசித்து செலுத்திய அம்புகள் ஒளிவிளங்குகின்ற இலக்குவனின் கவசத்திற்குள் நுழையவும் முடியவில்லை; அவனால் அவனுக்கு எந்த ஊறும் விளையவில்லை, அவன் உடலைக் கிழிக்கவுமில்லை, அவன் துன்பப்படவுமில்லை. எனினும் அந்தப் போரிடும் இயல்புள்ள பெரிய அம்பு இலக்குவனின் வாகனமாகப் போர்க்களத்தில் நிற்கின்ற அனுமனின் உடலுக்குள், ஒரு புற்றுக்குள் பாம்பு எப்படி எளிதாக எந்த இடருமின்றி

Koviloor Digital Library

நுழையுமோ அதுபோல எளிதாக நுழைந்தது. எனினும் அனுமன் அதை உணர இயலாதவனானான். அதை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. இயல்பாகவே நின்றிருந்தான்.

இந்திரசித்தை ''அனல்விழி நிருதன்'' என்றும், இலக்குவனை ''அடல்அரி கொற்றவன்'' என்றும் கூறிய நயம் உணர்க. ''குருதிகள்'' எனப் பன்மையில் பயன்படுத்தி இருப்பது நோக்கத்தக்கது. உடலின் பல உறுப்புக்களினின்றும், பல வழியாகவும் குருதி ஒழுகிய உடல். எனவே அதைப் பன்மையில் குருதிகள் எனக் கூறினார் எனக்கொள்க. ''புற்றிடை அரவு என நுழைய'' என்பது அருமையான, சுவைக்கத்தகுந்த ஒரு உவமை. ''வாழைப்பழத்தில் ஊசி நுழைவதுபோல'' என்ற ஒரு வழக்குச் சொல்லுக்கு ஒப்பானது இந்த உவமை. எளிமையை உணர்த்திற்று.

24. ஆயிடை, இளையவன், விடம் அனையான்
அவன் இடு கவசமும் அழிவுபட,
தூயினன், அயில்முக விசிகம்; நெடுந்
துளைபட, விழி கனல் சொரிய, முனிந்து,
ஏயின நிருதனது எரிகணைதான்,
இடன் இலபடுவன, இடைஇடை வந்து,
ஒய்வுறுவன; அது தெரிவுறலால்,
உஈறினர் இமையவர், உவகையினால். (9222)

(ஆயிடை-அப்போது; இளையவன்-இலக்குவன்; விடம்-நஞ்சு; இடுதல்-அணிந்திருத்தல்; அயில்முகம்-கூரியமுனை; விசிகம்-அம்பு; முனிதல்-சினத்தல்; இல-இன்றி; தெரிவுறல்-தெரிந்து கொள்ளுதல்; இமையவர்-தேவர்கள்; உரறுதல்-முழங்குதல்/ஆரவாரித்தல்; ஓய்வுறுதல்-வலிமை குன்றுதல்)

அப்போது, இளையவனான இலக்குவன், நஞ்சு போன்று கொடிய வனான இந்திரசித்து அணிந்திருக்கின்ற அவனது கவசம் அழிந்து போகுமாறு, கூரிய முனைகளையுடைய அம்புகளை மிக்க அதிக அளவில் செலுத்தினான்; அவை சென்று இந்திரசித்தன் உடலில் பெரிய தொளைகளை ஏற்படுத்த, கண்களில் நெருப்புப் பொறி சிந்துமாறு வெகுண்டு, அவன் செலுத்திய அம்புகள், குறிப்பிட்ட இடத்தில் படாது, குறிதவறிப் போயின; அவை இடையிலேயே தளர்வுற்று வலிமை குறைந்தும் போயின. இதனைத் தெரிந்துகொண்ட தேவர்கள் மகிழ்ச்சி யால் ஆரவாரித்தனர்.

''இடன்இல படுவன'' என்பது குறிப்பிட்ட இலக்கைத் தாக்காது குறிதவறித் தரையில் விழுந்தன என்ற பொருளைத் தரும்.

Koviloor Digital Library

25. "வில்லினின் வலி தரல் அரிது" எனலால்,
வெயிலினும் அனல் உமிழ் அயில், "விரைவில்
செல்" என, மிடல்கொடு கடவினன்; மற்று
அது திசைமுகன் மகன் உதவியதால்;
எல்லினும் வெளிபட எதிர்வது கண்டு,
இளையவன் எழுவகை முனிவர்கள்தம்
சொல்லினும் வலியது ஓர் சுடுகணையால்,
நடு இரு துணிபட, உரறினனால். (9223)

(வெயில்-சூரியன்; அயில்-வேற்படை; மிடல்-வலிமை; கடவுதல்-செலுத்துதல்; திசைமுகன்-பிரமதேவன்; உதவுதல்-கொடுத்தல்/தருதல்; எல்-பகல்/இரவு; வெளிபடுதல்-விளக்கமாதல்; உரறுதல்-ஆரவாரித்தல்; திசைமுகன் மகன்-புலத்தியன்; எழுவகை முனிவர்கள்-சப்தரிஷிகள்; வலிதரல்-வெல்லுதல்; சொல்-சாபம்)

இந்திரசித்து, ''இலக்குவனை விற்படை கொண்டு வெல்லுதல் கடினமானது, இயலாது'' என்று எண்ணி, சூரியனைக் காட்டிலும் வெப்பத்தை மிகுதியாக வெளிப்படுத்துகின்ற ஒரு வேற்படையைக் கையில் எடுத்து ''விரைவாகச் செல்வாயாக!'' என்று கட்டளையிட்டு மிக்க வலிமையோடு அதனைச்செலுத்தினான். அந்த தெய்வீகத்தன்மை வாய்ந்த வேற்படை அவனுக்குப் பிரமதேவனின் மகனான புலத்தியனிடமிருந்து கிடைக்கப் பெற்றது. பகலைக் காட்டிலும் மிக்க ஒளியைப் பரப்பிக் கொண்டு தன் எதிரே வருகின்ற அந்த வேற்படையைக் கண்டு, இலக்குவன் ஏழுவகையான முனிவர்களும் ஒருங்கே தருகின்ற சாபச்சொல்லின் விளைவுகளைக் காட்டிலும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும், வலிமைமிக்க, சுட்டெரிக்கின்ற, ஒப்பற்ற அம்பொன்றினால், இந்திர சித்தனின் அம்பின் நடுவே, அது இரண்டு கூறாகப் பிளந்துபோகும்படி செலுத்தி, அதுகண்டு மிக்க மகிழ்வெய்தி ஆரவாரித்தான்.

'வலிதரல்' என்பது நேர் கொண்டு வெல்லுதல் என்ற பொருளைத் தரும். 'திசைமுகன் மகன்' என்பது பிரமதேவனின் மகனான புலத்தியனையே குறிக்கும்; சில உரைநூல்கள் சிவபெருமான் என்று குறிக்கின்றன. இதற்குச் சரியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ''எழுவகை முனிவர்கள்'' என்பது சப்தரிஷிகளைக் குறிக்கும். அவர்கள் அத்திரி, பிருகு, குத்ஸர், வசிட்டர், கௌதமர், காசிபன், ஆங்கீரசன் என்பவர்கள் ஆவார்கள். சொல் என்பது சாபச்சொல்லைக் குறிக்கும். 'சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்' என்று நாம் முன்பே கண்டு வந்திருக்கிறோம். ஒரு முனிவனின் சாபச்சொல்லே தப்பாது பயனை விளைவிக்கும். இங்கு ஏழுவகைப்பட்ட முனிவர்களின் சாபச் சொல்லிலும் வலியது ஓர் சுடுகணை என்று இலக்குவனின் அம்பின் இலக்குத் தப்பாத ஆற்றல் பேசப்படுகிறது. 'அயில்' என்பது வேற்

Koviloor Digital Library

படையைக் குறிக்கும். இந்திரசித்து வேற்படை கொண்டு போரிட்டதாக வான்மீகத்தில் கூறப்படவில்லை என்பது கருதத்தக்கது.

26. ஆணியின் நிலையன விசிகம் நுழைந்து,
ஆயிரம் உடல்புக, அழிபடு செஞ்
சோணிதம் நிலம்உற, உலறிடவும்,
தொடுகணை விடுவன, மிடல்கெழு திண்
பாணிகள் கடுகின முடுகிடலும்,
பகலவன் மருமகன், அடுகணை வன்
தூணியை உரும் உறழ் பகழிகளால்
துணிபட, முறைமுறை சிதறினனால். (9224)

(விசிகம்-அம்புகள்; அழிபடுதல்-பெருகுதல்; சோணிதம்-இரத்தம்/குருதி; உலறுதல்-வற்றிப்போதல்; மிடல்-வலிமை; கெழு-பொருந்திய; பாணி-கைகள்; கடுகுதல்-விரைதல்; முடுகுதல்-விரைந்து செல்லுதல்; மருமகன்-வழித்தோன்றல்/மரபில் தோன்றியவன்/இலக்குவன்; அடுதல் -கொல்லுதல்; உரும்-இடி; உறழ்-போன்ற/ஒத்த; சிதறுதல்-செலுத்துதல்; பகலவன்-சூரியன்; தூணி-அம்பறாப்புட்டில்; ஆணி-அச்சாணி)

உலகிற்கே அச்சாணி போன்றவனான இலக்குவன், செலுத்திய ஆயிரக்கணக்கான அம்புகள் ஆணி அறைந்ததுபோல இந்திரசித்தனின் உடலில் நுழையவும், அதனால் அறுக்கப்பட்ட உடலினின்றும் வழிந்த சிவந்த இரத்தம் நிலத்தில் படியவும், அவனது உடல் இரத்தமின்றி வற்றி வறண்டுபோகவும், அப்பொழுதும் சற்றும் தளர்ச்சியுறாது, சில அம்புகளைத் தன் மிக்க வலிமை நிறைந்த கைகளால் அம்பறாத் தூணியிலிருந்தும் எடுக்க முயற்சித்தான். எனினும் சூரியகுலத் தோன்றலான இலக்குவன் அதனைக்கண்டு பகைவரைக் கொல்லும் தன்மை படைத்த வலிய இடியைப்போன்ற அம்புகளை எடுத்து இந்திரசித்தனின் அம்பறாத் தூணி அறுந்து விழும்படி பலமுறை செலுத்திச் சிதறச்செய்தான்.

'ஆணி' என்ற சொல் 'அச்சாணி' என்ற பொருளில் இவ்வுலக இயக்கத்திற்கு இலக்குவன் அச்சாணி போன்றவன் என்ற ஒரு பொருளும், இலக்குவனின் அம்புகள் ஆணி அறைந்தாற்போன்று இந்திரசித்தனின் உடலில் படிந்தன என்று ஒரு பொருளும் தருதலை உணரலாம். கவிஞன் முன்பு அனுமனையும் இவ்வுலக இயக்கத்திற்கு அச்சாணி என்று கூறிப் போந்தமையையும் இங்கு நினைவுகூரலாம். 'முறைமுறை' என்ற அடுக்கு, பலமுறை என்ற பொருளைத்தரும்.

27. "தேர் உளது எனின், இவன் வலி தொலையான்"
எனும் அது தெரிவுற, உணர்வுறுவான்,
"போர் உறு புரவிகள் படுகிலவால்;
புனை பிணி துணிகில, பொருகணையால்;

Koviloor Digital Library

சீரிது, பெரிது இதன் நிலைமை" எனத்
தெரிபவன் ஒரு சுடு தெறுகணையால்,
சாரதி மலைபுரை தலையை, நெடுந்
தரையிடை இடுதலும், முறை திரிய. (9225)

(தொலைதல்-அழிதல்; தெரிவுறல்-தெளிவாக உணர்தல்; புரவி-குதிரை; படுதல்-வீழ்தல்; புனை-பொருந்திய; பிணி-கட்டப்பட்டிருத்தல் /மூட்டுவாய்; சீரிது-சிறப்புடையது; தெறுதல்-கொல்லுதல்; சாரதி-தேர்ப்பாகன்; இடுதல்-வீழ்த்துதல்; புரை-ஒத்த/போன்ற) (குளகப்பாடல்)

''இவனுடைய அழியாத தேர் இருக்கும்வரை, இவன் வலிமை குன்றமாட்டான் என்று நன்கு தெளிந்து உணர்ந்து கொண்ட இலக்குவன், ''நமது போர்செய்யும் அம்புகளால் இவனது தேரில் கட்டப்பட்ட குதிரைகள் அழியமாட்டேன் என்கின்றன; அலங்கரிக்கப்பட்ட மூட்டு வாய்கள் தேரினின்றும் அகலமாட்டேன் என்கின்றன; இந்தத்தேர் மிக்க சிறப்புடையதாய் இருக்கிறது'' என்று தன் மனத்துள் நன்கு தெரிந்து கொண்டு, கொல்லும் தன்மையுள்ள, சுட்டெரிக்கும் ஒரு அம்பினை, அந்தத் தேரைச் செலுத்திவந்த தேர்ப்பாகனின் மலைபோன்ற பெரிய தலையை நோக்கிச் செலுத்தி, அவனைத் தரையில் நிலைகுலைந்து விழும்படி செய்தான்; தேர்ச்சாரதி தலை துண்டிக்கப்பட்டதால் தேர் நிலைதடுமாறியது.

'பிணி' என்பது பிணிப்பு என்ற பொருளில் தேரின் உறுப்புக்களைக் கட்டியிருக்கும் மூட்டுவாய்களைக் குறிக்கும். இலக்குவனே, இந்திர சித்தனின் தேரை ''சீரிது, பெரிது'' என்று புகழ்வதை நோக்குங்கள். முன்பு இந்திரசித்து வானில் சென்று மறைந்து போனபோதும், ''அழிவிலாத் தேர் கொண்டன்றி, போர்த்தொழில் புரிதல் ஆகாது'' என்று கூறிப்போனதையும் இங்கு தொடர்புபடுத்திக் கொள்க. எனவே இப்போது அவன் கொண்டு வந்துள்ள தேர் அழிவிலாத்தேர் என்பது பெறப்படுகிறது. தன் அம்புகளால் தேரை ஒன்றும் செய்ய முடியாததால், இலக்குவன் முதலில் தேர்ச் சாரதியின் தலையைக் கொய்தான் என்க. அதனால் தேர் நிலைகுலைந்தது என்பதாம்.

28. உய்வினை ஒருவன் தூண்டாது உலத்தலின், தவத்தை நண்ணி,
அய்வினை நலிய, நைவான் அறிவிற்கும் உவமையாகி,
மெய்வினை அமைந்த காமம், விற்கின்ற விரகின் தோலாப்
பொய்வினை மகளிர் கற்பும் போன்றது, அப் பொலம் பொன் திண்தேர். (9226)

(ஒருவன்-ஒப்பற்றவன்/தேர்ப்பாகன்; உலத்தல்-இறந்துபடுதல்; பொலம்-பொன்; பொன்-அழகு; நண்ணுதல்-மேற்கொள்ளுதல்;

Koviloor Digital Library

நலிதல்-வருத்துதல்; நைதல்-வருந்துதல்; மெய்வினை-உடம்பின் செயல்; விரகு-தந்திரம்/உபாயம்; ஐவினை-ஐந்து புலன்களின் செயல்கள்; உவமை-உபமானம்)

தேரைத் தூண்டிச் செலுத்துகின்ற தேர்ப்பாகன் இறந்து பட்டமையால், பொன்னால் அமைந்த அந்த அழகிய திண்ணிய தேர் நிலைதடுமாறி, ஓரிடத்தில் நில்லாது எங்கும் திரியலாயிற்று. இதற்குக் கவிஞன் அருமை யான இரண்டு உவமைகளைக் கூறுகிறான், அது எப்படி நிலைதடுமாறித் திரிந்தது? தவ வாழ்க்கையை விரும்பித் தவமேற்கொண்ட ஒரு இளந் துறவி, எவ்வாறு தனது குரு மறைந்ததும் தனது மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களையும் அடக்கமுடியாது, தோற்றுப்போய், அறிவு மழுங்கி செய்யாதன செய்வானோ அதைப் போலவும், உடற் செய்கையால் பொருந்திய ஆசையென்னும் நுகர்ச்சி தூண்டப் பெறுதலால், தனது உடலை விலைக்கு விற்கின்ற உபாயத்தில் ஒருகாலும் ஓரிடத்திலேயே நின்று தோற்றுப்போகாத பொய்ம்மையான சிற்றின்பத்தைத் தருகின்ற விலை மகளிரின் கற்பு அழிபட்டுத் திரிந்தது போலவும், அந்தத் தேர் நிலைதடுமாறித் திரிந்தது என்கிறான் கவிஞன்.

தேர்ப்பாகனை இழந்த தேர் நிலை தடுமாறியதற்கு, குருவை இழந்தபோது தடுமாறும் மாணவனும், ஐம்புலன்களின் ஆற்றலை இழந்தபோது தடுமாறும் வேசியரின் கற்பும் உவமை. 'ஐவினை' என்பது ஐந்து பொறிகளும் செய்கின்ற செயல்கள் என்பது விரிந்த பொருள். தேர்ப்பாகனை இழந்ததால் தேர் நிலை திரிந்தது; குருவை இழந்ததால் மாணவன் அறிவு குன்றியது; கற்பினை இழந்ததால் பெண்டிரின் பெருமை திரிந்தது என்பதாம். 'காமம்' என்ற சொல்லை-மெய்வினை அமைந்த காமம்' என்று கூறுவதை நோக்குக. காமம் என்பது என்னவோ உண்மையான நல்ல சொல்தான். அதை இழப்பவர்களை ''பொன்வினை மகளிர்'' என்று கூறும் நயம் நோக்குக. 'மெய்வினைக் காமம்' என்றதனால் அதன் தூயதன்மையையும், 'பொய்வினை மகளிர் அக்காமத்தை விற்கின்றவர்' என்பதால் அவர்களின் தூய்மையற்ற தன்மையையும் உணரவைக்கிறான் கவிஞன். ''சென்ற இடத்துச் செலவிடாது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு'' என்பது குறள்-422.

29. துள்ளுபாய் புரவித் தேரும், முறைமுறை தானே தூண்டி,
அள்ளினன் பறிக்கும் தன் பேர் ஆகமே ஆவம் ஆக,
வள்ளல்மேல், அனுமன் தன்மேல், மற்றையோர் மல் திண் தோள்மேல்
உள்ளுறப் பகழி தூவி, ஆர்த்தனன், எவரும் உட்க. (9227)

(புரவி-குதிரைகள்; தூண்டுதல்-செலுத்துதல்; ஆகம்-மார்பு/உடம்பு; ஆவம்-அம்பறாத்தூணி; அள்ளுதல்-பறித்தல்; வள்ளல்-இலக்குவன்; உள்ளுற-அழுந்துமாறு; உட்க-அஞ்சுமாறு)

Koviloor Digital Library

இந்திரசித்து துள்ளுவனவும், பாய்ந்து செல்லுவனவுமான குதிரைகள் பூட்டப்பெற்ற தேரை, தேர்ப்பாகன் இறந்து வீழ்ந்தமையால் தானே முறைப்படிச் செலுத்திக்கொண்டு, தன் பெரிய உடம்பில் இலக்குவனால் செலுத்தப்பட்ட அம்புகள் அம்பறாத்தூணிபோல் நிறைந்திருக்க, அவற்றைத் தன் கைகளால் ஒருசேர வாரி எடுத்து, அவற்றைக் கொண்டே இலக்குவன் மீதும், அவனைத் தாங்கிக்கொண்டிருந்த அனுமன்மீதும், மற்ற மற்போர் பயின்ற திண்ணிய தோள்களையுடைய வானரவீரர்கள் மீதும் கண்டோர் அஞ்சும்படி அவர்கள் உடலில் அழுந்திப்படியும் வண்ணம், அம்புகளை மழைபோலப் பொழிந்து பெரு முழக்கம் செய்தான்.

''அள்ளினான்'' என்ற சொல் மிகுதியான அம்புகளைப் பெயர்த் தெடுத்தான் என்ற பொருளைத்தரும். தேர்ப்பாகனை இலக்குவன் அழித்துவிட்டதால் தானே தேரைச் செலுத்த வேண்டியதாயிற்று. இலக்குவன் இந்திரசித்தனது அம்பறாத்தூணியைத் துண்டித்து விட்டதால், தன் உடம்பில் பதிந்திருந்த அம்புகளே அம்பறாத்தூணி ஆயிற்று என்பதாம். ''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்'' என்ற குறள்-774 இங்கு ஒப்புநோக்கத் தகும். 'பேர் ஆகமே ஆவமாக' என்பது உருவகம். அவனது பெரிய மார்பையே அம்பறாத்தூணியாக உருவகித்தார் என்க. இதுபோல் நிகழும் போர்த்திறத்தை ''நூழிலாட்டு'' என்கிறது புறத்திணை.

30. இந்திரசித்தின் வீரத்திறத்தைத் தேவர்கள் புகழ்தல்

''வீரர் என்பார்கட்கு எல்லாம் முன் நிற்கும் வீரர் வீரன்;
பேரர் என்பார்கள் ஆகும் பெற்றியின் பெற்றித்து ஆமே?
சூரர் என்று உரைக்கற்பாலார், துஞ்சும்போது, உணர்வின் சோராத்
தீரர்'' என்று அமரர் செப்பி, சிந்தினார் தெய்வப் பொற்பூ!'' (9228)

(பேரர்-பேர்பெற்றவர்கள்; பெற்றி-தன்மை; உரைத்தல்-சிறப்பித்துக் கூறுதல்; துஞ்சுதல்-இறத்தல்; தீரர்-துணிவுடையவர்கள்; செப்புதல்-சொல்லுதல்; சிந்துதல்-தூவுதல்; சோர்தல்-தளர்தல்)

''வீரர்கள் என்று புகழ்ந்து உரைக்கப்படுகின்றவர்களுக்கு எல்லாம் முன்னணியில் நிற்பவனாகக் கருதப்படக்கூடிய மகாவீரன் இவன்தான்; வீரத்தன்மையில் மிக்க பெயர்பெற்றவர்கள் என்று சொன்னால் அது இவனுக்குத்தான் பொருந்தும்; சூரர் என்று யாரைக் கூறலாம் என்றால் ஒரு வீரன் இறக்கும் தறுவாயில்கூடச் சிறிதும் தளர்ச்சியடையாது துணிவுடன் தைரியமாக எதிர்த்து நிற்பவனே தீரன் என்றும், வீராதிவீரன் என்றும் வழங்கப்படுவர். அத்தகைய சிறந்த தன்மையைப் பெற்றிருப்பவன் இந்த இந்திரசித்து'' என்று அவன் வீரப்பான்மையைப் புகழ்ந்து கூறி, தேவர்கள்

Koviloor Digital Library

வானிலிருந்து தெய்வத்தன்மை வாய்ந்த பொன்னாலாகிய கற்பக மலர்களை இந்திரசித்தன் மீது தூவினார்கள்.

31. இலக்குவன் வியந்து போற்றுதல்

''எய்த வன் பகழியெல்லாம் பறித்து, இவன் என்மேல் எய்யும்;
கய் தடுமாறாது; உள்ளம், உயிர் இனம் கலங்கா; யாக்கை
மொய்கணை கோடிகோடி மொய்க்கவும், இளைப்பு ஒன்று இல்லான்;
அய்யனும், 'இவனோடு எஞ்சும் ஆண்தொழில் ஆற்றல்' என்றான்.
(9229)

(அய்யன்-ஐயன்/இலக்குவன்; வன்-வலிய; இனம்-இன்னம்/இன்னும்; யாக்கை-உடம்பு; மொய்ம்பு-வலிமை; இளைப்பு-தளர்ச்சி; எஞ்சுதல்-அழிதல்; ஆண்தொழில்-வீரத்தன்மை)

இலக்குவன் இந்திரசித்தை வியந்து நோக்கி, ''நான் செலுத்திய வலிய, கொடிய அம்புகளையெல்லாம் பறித்து, என்மீது திருப்பிச் செலுத்து கிறான். அவ்வாறு பறித்தெடுக்கும்போது சற்றும் கை தடுமாறிடவில்லை; உள்ளமும், உயிரும் கலங்காதிருக்கிறான்; உடம்பெங்கும் கோடிக் கணக்கான வலிமைமிக்க அம்புகள் நெருங்கித் தைத்திருக்கவும் சற்றும் களைப்போ தளர்ச்சியோ இன்றி தைரியத்துடனும், துணிவுடனும் நிலைத்து நிற்கின்றான். இவன் அழிவோடு வீரப்பாங்கு என்ற ஒன்றே அழிந்துபடும் போலும்!'' என்று வியந்து பாராட்டுகிறான்.

32. வீடணன் இலக்குவனுக்கு இந்திரசித்தன் ''இரவில் இறவான்'' என அறிவுறுத்துதல்

''தேரினைக் கடாவி, வானில் செல்லினும் செல்லும்; செய்யும்
போரினைக் கடந்து, மாயம் புணர்க்கினும் புணர்க்கும்; போய் அக்
காரினைக் கடந்தும், வஞ்சம் கருதினும் கருதும்; காண்டி!
வீர! மெய்; பகலின் அல்லால் விளிகிலன் இருளின், வெய்யோன்''
(9230)

(கடாவுதல்-செலுத்துதல்; மாயம்-தந்திரம்/வஞ்சனைச் செயல்கள்; கார்-மேகம்; கருதுதல்-நினைத்தல்; காண்டி-காண்பாயாக; வெய்யோன்-கொடியவன்; விளிதல்-இறந்துபடுதல்; மெய்-உண்மை; கடத்தல்-கைவிடுதல்; புணர்த்தல்-செய்தல்)

வீடணன் இலக்குவனை நோக்கி ''வீரனே! இந்தக் கொடியவனான இந்திரசித்து, தேரினைச் செலுத்திக்கொண்டு வானத்திற்குச் சென்றாலும் செல்வான்; போர்க்களத்திலேயே நேரே எதிர்நின்று போர்செய்வதைக் கைவிட்டு விட்டு, வஞ்சகச் செயல்களைச் செய்தாலும் செய்வான்; அந்த

Koviloor Digital Library

மேகக் கூட்டத்தில் கலந்து மறைந்து கொண்டு தந்திரமாகவும் போர் செய்தற்கு எண்ணவும் கூடும். இதனை நீ நன்கு கருத்தில் கொள்வாயாக! இவன் பகற்போதில் அல்லாமல் இரவுப்போதில் இறக்கவே மாட்டான் இதுதான் உண்மை'' என்று அறிவுறுத்துகிறான்.

அரக்கர்கள் இரவுப்போதில் மிக்க வலிமையுடையவர்கள். அது அவர்கள் இயல்பு; அவர்கள் இரவில் சஞ்சரிப்பவர்கள் என்பதனால் அவர்களுக்கு 'நிசிசரர்' என்றே ஒரு பெயரும் உண்டு. இந்தப்போர் பகல் நேரத்தில் நிகழ்கிறது என்பது பெறப்படுகிறது. இரவு வந்துவிட்டால் இந்திரசித்தனை வெல்வது கடினம் என்பதும் அதற்குள் இப்பொழுதே அவனை அழித்துவிட வேண்டும் என்பதும் வீடணன் இலக்குவனுக்குக் கூறும் அறிவுரைகளாகும். இந்திரசித்து முன்பு செய்த வஞ்சக, தந்திர, சூழ்ச்சிமிக்க செயல்களை மனத்தில் கொண்டு வீடணன் இவ்வாறு கூறினான் என்பதாம்.

33. என்று எடுத்து இலங்கை வேந்தற்கு இளையவன் இயம்ப, 'இன்னே
பொன்றுவது அல்லால், அப்பால் இனி ஒரு போக்கும் உண்டோ?
சென்றுழிச் செல்லும் அன்றே தெறுகணை; வலியின் தீர்ந்தான்;
வென்றி இப்போதே கோடும்; காண்!" என விளம்பும் எல்லை. (9231)

(இன்னே-இப்பொழுதே; பொன்றுவது-இறப்பது; போக்கு-வேறு வழி; தெறுதல்-அழித்தல்; உழி-இடம்; தீர்தல்-நீங்குதல்; கோடல்-கொல்லுதல்; எல்லை-அளவு) (குளகப்பாடல்)

இவ்வாறு இலங்கை வேந்தனுக்குத் தம்பியான வீடணன் இலக்குவனுக்கு இந்திரசித்தின் தன்மைகளை எடுத்துக் கூறிக்கொண்டிருக்கும் போது இலக்குவன், ''இப்பொழுதே இந்த இந்திரசித்து இறந்துபடுவதைத் தவிர அவனுக்கு இதற்குமேல் செல்ல ஒரு வழியும் கிடையாது; அவன் செல்லுகின்ற இடம் தோறும் கொல்லும் இயல்புடைய என்னுடைய அம்புகள் தொடர்ந்து செல்லும் அல்லவா? அவனும் தன் வலிமையில் குறைந்தவனாகக் காணப்படுகிறான்; எனவே நாம் இப்போதே வெற்றி அடைவோம் பார்த்துக் கொண்டே இரு'' என்று கூறும் சமயம் - பாடல் தொடர்கிறது.

34. செம்புனல் சோரிச் செக்கர் திசையுறச் செறிகையாலும்,
அம்பு என உற்ற கொற்றத்து, ஆயிரம் கதிர்களாலும்,
வெம்பு பொன் தேரில் தோன்றும் சிறப்பினும், அரக்கன் மெய்யோடு
உம்பரில் செல்கின்றான் ஒத்து, உதித்தனன் அருக்கன் உப்பால். (9232)

(செம்புனல்-செந்நீர்; சோரி-இரத்தம்; செக்கர்-சிவந்தவானம்; கொற்றம்-வெற்றி; உம்பர்-விண்/ஆகாயம்; அருக்கன்-சூரியன்; உப்பால்-கீழ்த்திசை; வெம்புதல்-வெப்பமடைதல்)

Koviloor Digital Library

இந்திரசித்து உடலினின்றும் வெளிப்படுகின்ற செந்நீராகிய இரத்தம், சிவந்த நிறமுடைய வானம் கீழ்த்திசையில் நெருங்கி செல்லுவதுபோன்று தோன்றுவதாலும், அம்பு என்று சொல்லப்படுகின்ற வெற்றியையுடைய ஆயிரக்கணக்கான கதிர்கள் பொருந்த அமைந்திருப்பதாலும், வெப்ப முடைய அழகிய தேரில் தோன்றும் சிறப்புடைமையாலும், அரக்கனாகிய இந்திரசித்தன் தன் உடம்போடு, ஆகாயத்தில் செல்லுவதுபோன்று சூரியன், கீழ்த்திசையில் உதிக்கலானான்.

கடலிலிருந்து விண்ணிற் சென்று கீழ்த்திசையில் உதிக்கும் சூரியனுக்கு, நிலத்தினின்றும் ஆகாயத்திற் செல்லும் இந்திரசித்தன் உவமை; சூரியன் உதிக்கும்போது தோன்றும் செக்கர் வானத்திற்கு இந்திரசித்தன் உடம்பின்மீது வழியும் சிவந்த இரத்தப்பெருக்கு உவமை; சூரியனுடைய ஆயிரக்கணக்கான கிரணங்களுக்கு, இந்திரசித்தின் உடம்பில் பதிந்திருக்கும் ஆயிரக்கணக்கான அம்புகள் உவமை; அழியாத் தேரில் நின்றிருக்கும் இந்திரசித்தனுக்கு ஒற்றைச் சக்கரத் தேரில் வலம்வரும் சூரியன் உவமை; இதுவரை நிகழ்ந்த போர் ஒரே இரவில் நிகழ்ந்திருக்கிறது என்பது பெறப்படுகிறது. சூரியன் கீழ்த்திசையில் உதயம் ஆகும்போது இந்திரசித்து வானத்தில் மறைந்து போய்விட்டான் என்பதும் புலனாகிறது. 'உப்பால்' என்பது கீழ்த்திசையைக் குறித்தது. அருக்கன் அரக்கனை ஒத்துத் தோன்றினான் என்று கூறிய நயம் உணர்க.

35. விடிந்தது பொழுதும்; வெய்யோன் விளங்கினன், உலகம் மீதாய்;
இடுஞ்சுடர் விளக்கம் என்ன, அரக்கரின் இருளும் வீய,
"கொடுஞ்சின மாயச்செய்கை வலியொடும் குறைந்து குன்ற
முடிந்தனன் அரக்கன்" என்னா, முழங்கினர் உம்பர் முற்றும். (9233)

(வீதல்-அழிதல்; வெய்யோன்-சூரியன்; விளக்கம்-விளக்கு; குன்றுதல்-அழிதல்/தேய்தல்; சுடர்-ஒளி; முடிதல்-அழிந்துபோதல்; உம்பர்-தேவர்கள்)

"இப்பொழுது பொழுது விடிந்து விட்டது; சூரியனும் உலகத்தின்மீது ஏற்றி வைக்கப்பட்ட பெரும் ஒளி மிகுந்த விளக்கினைப்போல விளங்கித் தோன்றிவிட்டான்; சூரியன் வெளிப்படவும் இருள் விலகியதுபோல அரக்கனைப்போன்ற இருட்பிழம்பும் அழிந்துபோனது; "எனவே கொடிய கோபமும், மாயச்செயல்களும், உடைய அரக்கனான இந்திரசித்து இப்போது பகல்காலமானதால் தன் வலிமை குறைந்து தேய்ந்துபோக, இறந்துபடுவான்" என்று தேவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியால் வானம் முழுதும், பெருமுழக்கம் செய்து ஆரவாரித்தனர்.

"முடிந்தனன்" என்று இறந்த காலத்தில் கூறியது துணிவு பற்றி வந்த காலவழுவமைதி எனக்கொள்க. இருள் விலகி அழிந்ததற்கு, அரக்கரின் வலிமை குறைந்து தேய்ந்து அழிதல் ஒப்பு.

Koviloor Digital Library

36. வீடணன் மீண்டும் அறிவுறுத்துதல்

"ஆர் அழியாத சூலத்து அந்தணன் அருளின் ஈந்த
தேர் அழியாத போதும், சிலை கரத்து இருந்த போதும்,
போர் அழியான் இவ்வெய்யோன்; புகழ் அழியாத பொன்தோள்
வீர! இது ஆணை" என்றான், வீடணன், விளைவது ஓர்வான். (9234)

(விளைவது-நிகழப்போவது; ஓர்தல்-தெரிந்து வைத்திருத்தல்; பொன்-அழகிய; ஆர்-கூர்மை; அழிதல்-கெட்டுப்போதல்; வெய்யோன்-கொடியவன்/அரக்கன்/இந்திரசித்து; ஆணை-விதி/கட்டளை)

பின்னால் என்ன நிகழப்போகிறது என்பதை நன்கு ஆராய்ந்து உணர்ந்தவனான வீடணன், இலக்குவனை நோக்கி, ''எப்பொழுதும் புகழ் நிலைபெற்றிருக்கும் அழகிய தோள்களை உடைய வீரனே! இலக்குவ! கூர்மை மழுங்காத சூலப்படையைக் கையில் கொண்டுள்ள பெருமைக் குரியவனான சிவபெருமான் தன் அருளால் இந்திரசித்தனுக்குத் தந்த தேர் இது. இந்தத்தேர் அழியாத வரையிலும், இவன் கையிலிருக்கும் இந்த விற்படை அழியாது. அது அவன் கையில் இருக்கும் வரையிலும் இந்தக் கொடிய அரக்கனான இந்திரசித்து போரில் பிறரால் வெல்லப்பட மாட்டான். இறந்துபடவும் மாட்டான். இது இறைவனின் கட்டளை'' என்று மீண்டும் வற்புறுத்தி அறிவுறுத்துகிறான் வீடணன்.

''ஆர்'' என்பது கூர்மை என்ற பொருளைத்தரும். கூர்மை மழுங்காத சூலப்படை என்றால் எப்படி? முருகப்பெருமானின் வேற்படையும், திருமாலின்சக்கரப்படையும்அடிக்கடி போரில்ஈடுபட்டதனால்மழுங்கிப் போயிருக்கும். சிவபெருமான் இதுவரையிலும் தனது சூலப்படை கொண்டு யாருடனும் போரிட்டதாக அறியமுடியவில்லை. எனவே கவிஞன் இதனை ''ஆர் அழியாத சூலம்'' என்று நயம்படப் பேசுகிறான். ''அழல்வாய் நரகத்து ஆர்எயிறு அழுந்தினர்'' என்பது சிலப்பதிகாரம். ''ஆணை'' என்பது ஆக்ஞை என்ற வடசொல்லின் திரிபு.

37. இலக்குவன் இந்திரசித்தின் தேரைச் சிதைத்தல்

"பச்சை வெம் புரவி வீயா; பல்லியச் சில்லி பாரில்
நிச்சயம் அற்று நீங்கா;" என்பது நினைந்து, வில்லின்
விச்சையின் கணவன் ஆனான், வின்மையால், வயிரம் இட்ட
அச்சினோடு ஆழி, வெவ்வேறு ஆக்கினான், ஆணி நீக்கி. (9235)

(விச்சை-வித்தை/வில்வித்தை; கணவன்-தலைவன்/நாயகன்; வெம்-கொடிய; வீதல்-இறந்துபடுதல்; பல்லியல்-பல இயல்புகள்/பல தன்மைகள்; சில்லி-சக்கரங்கள்; நிச்சயம்-உறுதி; பார்-பூமி; வின்மை-

Koviloor Digital Library

வில்+வன்மை/வில்லின் திறமை; ஆணி-கடையாணி/அச்சாணி; இட்ட-பொருந்திய; ஆழி-சக்கரம்)

வில்வித்தையில்-தனுர்வேதத்தில்-நன்கு பயிற்சி பெற்று அதில் நாயகனாகக் கருதப்படும் இலக்குவன் ''இந்திரசித்தின் தேரிற் பூட்டப் பட்டிருக்கும் பச்சைநிறக் கொடிய குதிரைகள் இப்பொழுது அழிந்து தரையில் வீழாது, பலவகைப்பட்டதும், பல தன்மைகளைக் கொண்டது மான தேர்ச்சக்கரங்களும் தரையில் உறுதியற்று வீழாது; என்று தன் மனத்துள்கருதி, தன்வில் வித்தையின்வன்மையால், முதலில் உறுதியாகப் பிணைக்கப்பட்டிருக்கும் அச்சுக்களையும், தேருக்கு அச்சாணி என்று கூறப்படும் கடையாணியையும் நீக்கி அப்புறப்படுத்தி விட்டு தேரின் சக்கரம்போன்ற மற்ற உறுப்புக்களையும், தனித்தனியாகக் கழன்று போகும்படி அம்புகளைச் செலுத்தினான்.

தேரை முழுமையாக அழிக்கமுடியாது என்று கருதிய இலக்குவன், சமயோசிதமாக முதலில்கடையாணியையும், பின்னர்சக்கரங்கள்போன்ற மற்ற உறுப்புக்களையும் வெவ்வேறாக ஆகும் வண்ணம் அம்புகளைச் செலுத்தித் தேரை நிலைகுலையச் செய்தான் என்பதாம். சூரியன் ஏழு பச்சைக் குதிரைகள் பூட்டப்பெற்ற ஒற்றைச் சக்கரத்தேரில் உலாவருவான் என்று முன்பு கண்டு வந்தோம். இப்பொழுது கவிஞன் இந்திரசித்தன் தேரும் பச்சைக் குதிரைகள் பூட்டியதுதான் என்று கூறுவது புதிய செய்தி. 'வின்மை' என்ற சொல்லாட்சி நோக்குக. வில்லின் தன்மை அல்லது வில்லின் வலிமை என்ற இரண்டு சொற்களையும் 'வின்மை' என்ற ஒரு புதுச்சொல்லாகக் கையாண்டிருக்கிறான்கம்பன். 'விச்சை' என்பது வித்தை என்ற வடசொல்லின் திரிபு.

38. மணி நெடுந்தேரின் கட்டுவிட்டு, அது மறிதலோடும்,
அணி பெரும் புரவியெல்லாம், ஆற்றல ஆய அன்றே;
திணி நெடு மரம் ஒன்று ஆழி வாள் மழுத் தாக்க, சிந்திப்
பணை நெடு முதலும் நீங்க, பாங்கு உறை பறவைபோல. (9236)

(மணி-இரத்தினம்; கட்டு-பிணிப்பு/கட்டுக்கோப்பு; விடுதல்-நீங்கிப் போதல்; மறிதல்-தலைகீழாதல்/கீழ் மேலாய்ப்போகுதல்; அணி-அழகிய; ஆழி-சக்கரப்படை; வாள்-கூர்மை; மழு-கோடாலி; பணை-பருத்த; முதல்-வேர்/அடிமரம்; பாங்கு-இடம்/பக்கம்; ஆற்றுதல்-வருந்துதல்/ பிரிவால் வருந்துதல்)

அழகிய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற நெடிய தேரின் கட்டுக் கோப்பெல்லாம் இலக்குவன் எய்த அம்பினால் அறுபட்டுப் போனதால், தேர்தலைகீழாய்ப்போய்த் தடுமாறிற்று. எனவே அதில் பூட்டப்பட்டிருந்த அழகிய நீண்ட குதிரைகளெல்லாம் திண்ணிய நீண்ட ஒரு மரம் சக்கரப்படை போன்ற கூர்மையான மழுவாயுதம் ஒன்றால் தாக்கப்படும்

Koviloor Digital Library

போது, அம்மரத்தின் கிளைகளும் பருத்த அடிமரமும் சிதறிப் போகும் போது, அம்மரத்தினிடத்தில் தங்கியிருந்த பறவைகள் அம்மரத்தை விட்டுப் பிரிந்து போவதற்கு ஆற்றாது வருந்துவதுபோல, அத்தேரில் கட்டப்பட்டிருந்த குதிரைகள் அந்தத் தேரைவிட்டு நீங்கிப்போகும்போது பிரிவு ஆற்றாமைக்காக வருந்தின.

பருத்த மரத்திற்குத் திண்ணிய தேரும், அம்மரத்தில் தங்கியிருந்த பறவைகளுக்கு அந்தத்தேரில் கட்டப்பட்டிருந்த குதிரைகளும் உவமை. இப்பொழுது வீடணன் அழிக்கச் சொன்ன இரண்டனுள் ஒன்று அழிந்தது பெறப்படுகிறது.

39. அழிந்த தேர்த் தட்டில்நின்றும் அங்குள்ள படைகள் அள்ளிப்
பொழிந்தனன்; இளைய வீரன் கணைகளால் துணித்துப் போக்க,
மொழிந்து இறாவகையில், விண்ணை முட்டினான், உலகம் மூன்றும்
கிழிந்தன என்ன ஆர்த்தான்; கண்டிலர் ஓசைகேட்டார். (9237)

(படை-படைக்கலன்கள்; போக்குதல்-அழித்தல்; முட்டுதல்-அடைதல்)

அவ்வாறு இலக்குவனால் அழிக்கப்பட்ட தேரின் அகன்ற தட்டாகிய நடுஇடத்தில் நின்று கொண்டு, இந்திரசித்து அதில் சேமித்து வைக்கப் பட்டிருந்த படைக்கலன்களையெல்லாம் வாரி எடுத்து, இலக்குவன்மீது மழைபோலப் பொழிந்தான்; இளைய வீரனான இலக்குவன் தனது அம்புகளால் அவை எல்லாவற்றையும் அறுத்துப்போட்டான்; முன்பு வீடணன் சொன்ன சொல்லைப்போல, இந்திரசித்து மாயச்செயல்கள் புரிவதற்காக விண்ணிடத்தை எட்டி மறைந்தான்; அங்கிருந்து, இந்த மூன்று உலகங்களுமே பிளந்து போய்விட்டதோ என்று காண்போர் வியக்குமாறு பேராரவாரம் செய்தான். எல்லோரும் அவன் செய்த பெருமுழக்கத்தைக் கேட்க முடிந்ததேயன்றி, அவனை, அவனது வடிவத்தை ஒருவராலும் பார்க்க இயலவில்லை.

'அள்ளிப்பொழிதல்' என்பது படைக்கலன்களின் மிகுதியைக் குறித்தது. 'விண்ணை முட்டினன்' என்பது விண்ணின் எல்லை வரை சென்றான் என்பதைக் குறிக்கும். 'கண்டிலர், ஓசைகேட்டார்' என்பது, முன்பு 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்' என்று கூறியதை நினைவுபடுத்துவதை உணர்க.

40. இலக்குவன்-இந்திரசித்தன் போர்

மல்லின் மாமாரி அன்ன தோளினான், மழையின் வாய்ந்த
கல்லின் மாமாரி பெற்ற வரத்தினால், சொரியும் காலை,
செல்லும் வான் திசைகள் ஓரார், சிரத்தினோடு உடல்கள் சிந்தப்
புல்லினார் நிலத்தை, நின்ற வானரவீரர், போகார். (9238)

Koviloor Digital Library

(மல்-மற்போர்ப் பயிற்சி; மழை-மேகம்; வாய்த்தல்-பொருந்தியிருத்தல்; மாரி-மழை; வான்-சிறந்த; ஓர்தல்-உணர்தல்/அறிதல்; புல்லுதல்-பொருந்துதல்/தழுவுதல்)

மற்போர் பயிற்சி பெற்றனவும், மேகம் போன்ற கரிய நிறமானதுமான வலிய தோள்களையுடைய இந்திரசித்தன் மேகத்தில் மறைந்திருந்து, தான் பெற்ற வரபலத்தால் மேகத்தினின்றும், நீர்மழை பெய்வதுபோலக் கல்மழையைப் பொழியச்செய்தான். அப்போது அதனின்றும் தப்பித்துப் போகக்கூடச் சிறந்த திசைகளை அறியாதவர்களான வானரவீரர்கள் அங்கேயே நின்றுகொண்டிருந்ததால், இந்திரசித்து எய்த அம்பினால் அவர்கள் தலைகளோடு உடம்பும் சேர்ந்து சிதைந்துபோகத் தரையில் மாண்டு விழுந்தார்கள்.

கரிய நிறமுடைய தோள்களையுடைய இந்திரசித்து, கரிய நிறமுடைய மேகத்தில் மறைந்திருந்தது ஒருவர் கண்ணுக்கும் புலப்படவில்லை. எனவே அவன் தான் முன்பு பெற்றிருந்த வரத்தின் பலனாகக் கல்மழையை வானர வீரர்கள்மீது பொழியச்செய்தான். அதனின்றும் தப்பித்துப் போக வழி தெரியாத வானரவீரர்கள் அங்கேயே இறந்து வீழ்ந்தார்கள் என்பதாம். 'புல்லினார் நிலத்தை' என்பது இறந்துபட்டனர் என்பதன் மங்கலச்சொல் எனக்கொள்க. மேகம் நீரை மழையாகப் பொழிவதுபோலக் கல்லையும் மழையாகப் பெய்யும் என்பதும் உண்டு. ஏழுவகைப்பட்ட மேகங்களுள் கல்மழையைப் பொழியும் மேகம் 'காளமுகி' என்று வழங்கப்படுகிறது என்பதும் கருதத்தக்கது.

41. க்ண்கிலன், கல்லின் மாரி அல்லது, காளைவீரன்,
சேண் கலந்து ஒளித்து நின்ற செய்கையால், திசைகள் எங்கும்
மாண் கலந்து அளந்த மாயன் வடிவு என, முழுதும் வௌவ
ஏண் கலந்து அமைந்த வாளி ஏவினான், இடைவிடாமல். (9239)

(சேண்-சேய்மை/ஆகாயம்; மாண்-மாண்பு/பெருமை; எங்கும்-முழுவதும்/அனைத்தும்; மாயன்-திருமால்/திரிவிக்கிரமன்; வௌவுதல்-வவ்வுதல்/கவர்ந்து கொள்ளுதல்; ஏண்-வலிமை)

காளைப்பருவம் கொண்டவனும், காளை போன்று வலிமையுடைய வீரனுமான இலக்குவன், இந்திரசித்து ஆகாயத்தில் சென்று கலந்து தன்னை மறைத்துக்கொண்ட செய்கையால் அவன் சொரிந்த கல்மழையைத்தான் கண்டானே அன்றி, இந்திரசித்தின் வடிவத்தைக் காணமுடியவில்லை. முன்பு திரிவிக்கிரம அவதாரத்தில் திருமால் எல்லாத் திசைகளையும் பெருமைபொருந்திய தன் திருவடிகளால் அளந்து கவர்ந்து கொண்டதைப் போல, இப்போது இலக்குவன் விண்ணுலகு முழுவதும் தன் வலிமை நிறைந்த அம்புகளை இடைவிடாமல் செலுத்தி வானத்தையே மறைத்து விட்டான்.

Koviloor Digital Library

மேகத்தோடு மேகமாய்க் கலந்ததுபோல் தன்னை ஒளித்துக்கொண்ட இந்திரசித்தின் வடிவத்தைக் காணமுடியாததால் இலக்குவன் இடைவிடாமல் அம்புகளைச் செலுத்தி மேகம் முழுவதையும் மறைத்து விட்டான் என்பதாம். இவன் அம்புகள் எல்லாத்திசைகளையும் அளந்ததற்கு, திருமால் திரிவிக்கிரம அவதாரத்தில் எல்லாத் திசைகளையும் தன் ஈரடியால் அளந்தது ஒப்பு. கல்மழை எல்லாத் திசைகளினின்றும் பொழிந்தமையால், இலக்குவனும் எல்லாத் திசைகளிலும் இடைவிடாமல் அம்பு மழையைப் பொழியவேண்டியதாயிற்று என்க.

42. மறைந்தன திசைகள் எங்கும்; மாறுபோய் மலையும் ஆற்றல்
குறைந்தனன்; இருண்ட மேகக் குழாத்திடைக் குருதிக் கொண்மூ
உறைந்துளது என்ன நின்றான் உருவினை, உலகம் எல்லாம்
நிறைந்தவன் கண்டான்; காணா இனையது ஓர் நினைவது ஆனான்.
(9240)

(மாறு-மாறாக/எதிர்த்து; மலைதல்-போர்செய்தல்; கொண்மூ-மேகம்; இனையன-இத்தகைய; காணா-கண்டு)

இலக்குவன் செலுத்திய அம்புமழையால் உலகின் திசைகள் அனைத்தும் மறைந்துபோயின; அதனை எதிர்த்துப் போர்செய்யும் ஆற்றல் குறைந்தவனானான் இந்திரசித்து; கரிய இருண்ட மேகக்கூட்டத்தின் நடுவில் சிவந்த இரத்தம் தோய்ந்த மேகம் ஒன்று தங்கியுள்ளது என்று கூறும் வண்ணம் மேகத்திடையே இரத்தம் சொரிய நின்ற இந்திரசித்தனின் உருவத்தை, உலகம் எல்லாம் நீக்கமற நிறைந்தவனான பரம்பொருள் இலக்குவன் கண்டுகொண்டான்; கண்டு, பின்வருமாறு எண்ணத் தொடங்கினான்.

'மாறு' என்பது எதிர்த்து என்னும் பொருளில் வந்தது; 'இருண்ட மேகக் குழாத்திடைக் குருதிக்கொண்மூ' என்பது அருமையான சொற்றொடர். கரிய மேகத்திடை இந்திரசித்து தன்னை மறைத்துக் கொண்டான். இலக்குவன் அதனைத் தனித்துக் கண்டறிய முடியாமல் ஆகாயமெங்கும் கணைகளைச் செலுத்தினான். அவற்றில் ஒன்றினால் இந்திரசித்து தாக்கப் பட்டு இரத்தம் கொட்டியது. அதைக் கொண்டு இலக்குவன் இந்திரசித்து இருக்கும் இடத்தை நுனித்து அறிந்தான் என்ற ஆழ்ந்த பொருள் கொண்ட சொற்றொடர் இது. ''உலகம் எல்லாம் நிறைந்தவன்'' என்பது இலக்குவனைக் குறித்தது. முன்பு சிவபெருமான்கூற்றாகவே 'இவ்வுலகனைத்தும் தயிர்தோய் பிரை எனலாம் வகை கலந்தேறிய தலைவன்' என்று முன்பு இலக்குவனைக் குறிப்பிட்டதையும் நினைவுகூர்க.

Koviloor Digital Library

43. "சிலை அறாது எனினும், மற்று அத்திண்ணியோன் திரண்ட தோளாம்,
மலை அறாது ஒழியாது" என்னா, வரிசிலை ஒன்று வாங்கி,
கலை அறாத் திங்கள் அன்ன வாளியால், கையைக் கொய்தான்;
விலைஅறா மணிப்பூணோடும், வில்லொடும் நிலத்து வீழ. (9241)

(வரி-கட்டமைந்த; திங்கள்-பிறைச்சந்திரன்; அறா-மதிப்புமிக்க; பூண்-அணிகலன்கள்; கொய்தல்-அறுத்துத் தள்ளுதல்; வாங்குதல்-வளைத்தல்)

இலக்குவன் தன்னுடைய வில்லினால் இந்திரசித்தனது தெய்வத் தன்மை பொருந்திய வில் அறுபடாது என்று நினைத்தான் என்றாலும், அந்த வில்லை ஏந்திய திண்ணிய தோள்களையுடைய இந்திரசித்தின் மலையெனக் கூறத்தகுந்த தோள்கள் இந்த வில்லால் அறுபடாமல் அடங்காது என்று எண்ணி கட்டமைந்த வில் ஒன்றினை வளைத்து, ஒரு கலை குறையாத பிறைச்சந்திரன் போன்ற அர்த்த சந்திரபாணத்தை - பிறைமுக அம்பினை இந்திரசித்தன் மேல் செலுத்தி, அவனுடைய விலை மதிக்கவியலாத மாணிக்கக் கற்கள் பதிக்கப்பெற்ற அணிகலன்களோடும், வில்லோடும் நிலத்தில் விழுமாறு அவனுடைய கைகளை அறுத்துத் தள்ளினான்.

இந்திரசித்தனுடைய வில் தெய்வத்தன்மை பொருந்தியது; அதனை அவ்வளவு எளிதாக அறுக்கமுடியாது என்று நன்கு உணர்ந்த இலக்குவன், தன்னுடைய அர்த்த சந்திரபாணத்தால் அவனுடைய மலையெனும் தோளாகிய கைகளை அறுத்துத் தள்ளித் தரையில் விழச்செய்தான் என்பதாம். 'தோளாம் மலை' என்பது உருவகம்-மலைபோன்று திண்ணிய தோள்கள் என்பது பொருள். 'அறாது ஒழியாது' என்று இரண்டு எதிர்மறைச் சொற்களைக்கூறி, அறுத்தேதீரும் என்று ஒரு உடன்பாட்டுப் பொருளை வரவழைத்த நயம் நோக்குக. 'கலை அறாத் திங்கள்' என்பது இங்கு சந்திரனிலுள்ள கலைமான் என்று கூறப்படும் களங்கத்தைக் குறிக்கும். அது பூரண சந்திரனில் காணப்பெறாது; அர்த்தசந்திரனில்- பிறைச்சந்திரனில் தான் காணப்பெறும். எனவே அதனைக் ''கலையறாத் திங்கள்'' என்றார் என்க. 'விலைஅறா' என்பது விலை மதிக்கமுடியாத என்று பெரிய பொருளைத்தரும். வில்லை அறுக்க முடியாததால் கையை அறுத்தான் என்பதாம். எனினும் கையொடு வில்லும் கீழே விழுந்தது என்ற நயம் நோக்குக. 'சிலை அறாது' என்று முன்பே வீடணன் இலக்குவனுக்கு அறிவுறுத்தியதையும் இதனோடு சேர்த்துக் கருதுக. முன்பு தேர் அழிந்தது கூறப்பட்டது. இப்போது வில்லற்ற கை அறுந்தது கூறப்படுகிறது.

44. பாக வான் பிறைபோல் வெவ்வாய்ச் சுடுகணை படுதலோடும்,
வேக வான் கொடுங்கால் எற்ற, முற்றும் போய் விளியும் நாளில்,
மாக வான் தடக்கை மண்மேல் விழுந்தது மணிப்பூண் மின்ன,
மேகம் ஆகாயத்து இட்ட வில்லொடும் வீழ்ந்தது என்ன. (9242)

Koviloor Digital Library

(பாகம்-பாதி/தேகம்/உடலின் உறுப்பு; வெவ்-கொடிய; வான்-மிக்க; எற்றுதல்-மோதுதல்/தாக்குதல்; விளிதல்-அழிதல்; மாகம்-ஆகாயம்; வான்-சிறந்த; பூண்-அணிகலன்கள்; படுதல்-தாக்குதல்)

ஊழியிறுதிக்காலத்தில் மிகவேகமாக வீசும் கொடிய காற்று தாக்குதலால், உலகம் எல்லாம் அழிந்துபோகும்போது, ஆகாயத்தில் மேகத்தில் இடம்பெற்றிருக்கும் வானவில் தரையில் விழுந்து அழிவது போல, இலக்குவன் திங்களின் பகுதியாகியதும், கொடிய முனையை உடையதும், சுட்டெரிக்கும் தன்மையுடையதுமான, அர்த்த சந்திர பாணத்தை வீசியபோது அது இந்திரசித்தனைத் தாக்கியபொழுது, அவனுடைய மணிகள் பதிக்கப்பெற்ற அணிகலன்கள் மின்னிக்கொண்டு அவனுடைய சிறந்த பெரிய கைகள் தரையில் விழுந்தன.

'பாகம்' என்பது பகுதி என்று பொருள் தந்து பிறைச்சந்திரன் என்று அர்த்த சந்திரனைக் குறிக்கும். ஆகாயத்திலிருந்து விழுகின்ற வான வில்லுக்கு, மேகத்திலிருந்து விழுகின்ற இந்திரசித்தன் கை ஒப்பு. இந்திர சித்தனின் கரிய பெரிய கை கரிய மேகம் போன்றது; அக்கையிலிருந்த வில் இந்திரவில்லைப் போன்றது என்பதாம். ஊழியிறுதிக்காலத்தில் இந்திர வில் தரையில் விழுவதைப்போல, அர்த்தசந்திரபாணத்தின் தாக்குதலால் இந்திரசித்தன் கை தரையில் விழுந்தது என்பதாம். இந்திரவில் கீழே விழுவதற்கு ஊழியிறுதிக்காற்று காரணமானதுபோல, இந்திரசித்தன் கையிலிருந்த வில் கீழே விழுவதற்கு இலக்குவன் செலுத்திய அர்த்த சந்திரபாணம் காரணமாயிற்று என்க.

45. படித்தலம் சுமந்த நாகம், பாகவான் பிறையைப் பற்றிக்
கடித்ததுபோல, கோல விரல்களால் இறுகக் கட்டிப்
பிடித்த வெஞ்சிலையினோடும், பேரெழில் வீரன் பொன்தோள்
துடித்தது; மரமும் கல்லும் துகள்பட, குரங்கும் துஞ்ச. (9243)

(படித்தலம்-பூமி; நாகம்-பாம்பு/ஆதிசேஷன்; கோலம்-அழகு; பொன்-அழகு; துஞ்சுதல்-இறந்துபடுதல்; பாகம்-பாதி)

இந்த பூமியைச் சுமந்துகொண்டிருக்கின்ற ஆதிசேஷன் என்னும் பாம்பு, வானிலுள்ள பூரணசந்திரனின் ஒரு பாகமாகிய பிறைச்சந்திரனைப் பற்றிக் கடித்துக் கொண்டிருப்பதைப்போல அழகிய விரல்களால் தனது கொடிய வில்லை இறுகக் கையினால் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கின்ற பேரழகு வாய்ந்த வீரன் இந்திரசித்தனின் தோள்கள், பூமியில் இருக்கின்ற மரங்களும், மலைகளும் தூளாகிப்போகும்படியும், குரங்குகள் இறந்து விழும்படியும், தரையில் விழுந்து துடித்தன.

'பாகம்' என்பது ஒரு பாதியை அல்லது ஒரு பகுதியைக் குறித்தது எனக்கொள்க. இந்திரசித்தனின் வில், ''பாக வான் பிறைக்கும்'' அவன் கைகள் ''படித்தலம் சுமந்த நாகத்திற்கும்'' அவன் கோல விரல்கள்'' அந்தப்

Koviloor Digital Library

பாம்பின் படத்திற்கும் உவமை. இதேபோலக் கும்பகருணனின் அறுபட்ட கைகளும் நிலத்தில் விழுந்து துடித்ததை நாம் முன்னரே கண்டு வந்திருக்கிறோம். இராகு என்னும் பாம்பு சந்திரனைப் பற்றுவதையே நாம் சந்திரகிரகணம் என்கிறோம். ஆனால் இராகு பாதிச்சந்திரனைப் பற்றுவ தில்லை, பூரணசந்திரனைப் பற்றும். இங்கு கவிஞன் பாதிச்சந்திரனைப் பற்றுவதுபோல என்று கூறுவது இல்பொருள் உவமை எனக்கொள்ள வேண்டும். அல்லது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிப் பேசுவதால் தற்குறிப் பேற்றம் எனவும் கொள்ளலாம். இந்திரசித்தன் கைகள் விண்ணிலிருந்து மண்ணிற்கு விரைந்துவந்த வேகத்தால் மரங்களும், மலைகளும் பொடியாகின; குரங்குகள் இறந்துபட்டன என்பதாம். பொதுவாகச் சந்திரனைப் பற்றுவது இராகு என்னும் பாம்புதான். இங்கே ''படித்தலம் சுமந்த நாகம்'' என்று ஆதிசேஷனைக் கூறுவது சிந்திக்கத்தக்கது

46. அந்தரம் அதனில் நின்ற வானவர், "அருக்கன்வீழா,
சந்திரன் வீழா, மேரு மால்வரை தகர்ந்து வீழா,
இந்திரசித்தின் பொன்தோள் இற்று இடை விழுந்தது என்றால்,
எந்திரம் அனைய வாழ்க்கை இனிச் சிலர் உகந்து என்?" என்றார். (9244)

(அந்தரம்-வானவெளி; அருக்கன்-சூரியன்; தகர்தல்-உடைந்து போதல்; பொன்-அழகிய; இறுதல்-அறுபடுதல்; இடை-நடுவே; எந்திரம்-தேர்ச்சக்கரம்/மரப்பாவை; உகத்தல்-உவத்தல்/மகிழ்தல்)

வானவெளியில் நின்று போர் நிகழ்ச்சியினைக் கண்டு கொண்டிருந்த தேவர்கள், இந்திரசித்தன் கை அறுந்து விழுந்தது கண்டு வியப்படைந்து, ''சூரியன் விழவில்லை; சந்திரன் விழவில்லை; பெரிய பெருமை பொருந்திய மேருமலைகூட அறுபட்டு விழவில்லை; எனினும் இந்த இந்திரசித்தன் அழகிய கைகள் மட்டும் அறுபட்டு நடுவே விழுந்து விட்டன என்றால் தேர்ச்சக்கரம் போன்று நிலையாமையுடைய இந்நில வுலக வாழ்க்கையை அதனை உணர்ந்த பின்னரும் இன்னும்கூடச் சிலர் வேண்டி விரும்பி நிலையெனக்கருதி உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது எதற்காக? எவ்வாறு?'' என்று வியந்தனர்.

''எந்திரம்'' என்ற சொல் வாழ்க்கை நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகியவற்றைக் குறித்தது. ''நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை கடை'' என்பது குறள்-331. நிலை பேறின்றித் தேர்ச்சக்கரம்போல மாறிமாறிச் செல்லுகின்ற உயிர்வாழ்க்கை என்பது விரிந்த பொருள். ''உருள் உறு சகட வாழ்க்கை'' என்று முன்பு கூறியதையும் நினைக. எந்திரம் என்பது தானே இயங்காமல், சில பொறிகளாலும், அதனை இயக்குபவனாலும் இயங்குவது; அதுபோன்ற வாழ்க்கை தன் இச்சையானதன்று; அதனை இயக்குபவன் இறைவனே என்பது பேசப் படுகிறது. தேர்ச்சக்கரம் மேல்கீழாகவும், கீழ்மேலாகவும் மாறிமாறி

Koviloor Digital Library

விழுவதுபோல மாறும் இயல்புடையது. இவ்வுலக வாழ்க்கை என்ற தத்துவம் உணரற்பாலது

47. மொய் அற மூர்த்தி அன்ன மொய்ம்பினான், அம்பினால், அப்
பொய் அறச் சிறிது என்று எண்ணும் பெருமையான் புதல்வன், பூத்த
மை அறக் கரிது என்று எண்ணும் மனத்தினான், வயிரம் அன்ன,
கை அற, தலையற்றார்போல் கலங்கினார், நிருதர் கண்டார். (9245)

(மொய்-வலிமை; அறமூர்த்தி-அறக்கடவுள்/தருமதேவதை/இலக்குவன்; சிறிது-எளிமையானது; நிருதர்-அரக்கர்கள்; மொய்ம்பினான்-வலியவன்; பெருமையான்-சிறியோன்/இராவணன்; பூத்தல்-விளங்குதல்; மை-கரிய)

வலிமைபொருந்திய அறக்கடவுள் போன்று வலிமையுடையவனான இலக்குவனின் அம்பினால், பொய் பேசுவதை ஒரு பஞ்சமாபாதகம் என்று கருதாமல் மிக எளிதானதாகக் கருதும் இயல்புடைய அரக்கன் சிறியோன் இராவணனின் புதல்வனும் கருமையாக விளக்கமுற்றுத் தோன்றும் உள்ளத்தைக் கொண்டவனானவனும், வயிரம் போன்று திண்ணிய கைகளையுடையவனுமான இந்திரசித்தனுடைய கை இற்று வீழ்ந்ததைக் கண்ட அரக்கர்கள், தங்கள் தலையே இற்று வீழ்ந்ததுபோல மனங்கலங்கி நின்றனர்.

இந்திரசித்தன் தேர் அழியாததுபோல அவனுடைய கைகளும் அழியாத தன்மை பெற்றது. அத்தகைய வரம் வாங்கி வந்தவன் அவன். அவன் கைகளே அறுந்து விழுந்தபோது, அதனைக் கண்ட தேவர்கள் வியந்து திகைத்து நின்றனர் என்பதாம். 'மொய் அற மூர்த்தி' என்பது இலக்குவனைக் குறித்தது. 'மெய் அற மூர்த்தி' என்று முன்பு இராமபிரானையும், அனுமனையும் குறித்ததை உணர்க. பொய்கூறுதல் என்பது பஞ்சமாபாதகங்களுள் ஒன்று. மற்றவை களவு, காமம், குரோதம், மாச்சர்யம் என்பனவாம். கொலை, களவு, பொய், கள், குருநிந்தனை எனவும் கூறுவதுண்டு. அதனைப் பெரிய குற்றமாகக் கருதாது, மிக எளிமையானதாகக் கருதும் இயல்புடைய இராவணனைச் சிறியோன் என்று கூறும் முகத்தான் 'பெருமையான்' என்று வஞ்சகப்புகழ்ச்சியாகக் கூறிய நயம் உணர்க. இந்திரசித்தன் கையறுந்து வீழ்ந்ததைக் கண்ட அரக்கர்கள் தங்கள் தலையே அறுந்து வீழ்ந்ததுபோல் கலங்கினார்கள் என்பது அரக்கர்கள் இந்திரசித்தின்மேல் கொண்டிருந்த விசுவாசத்தைக் காட்டுகிறது. 'அறச்சிறிது' என்பது மிகமிகச் சிறிது என்று அற்பமானது என்ற பொருளைத்தரும். பொய் மிகச் சிறியதானாலும், மிகப் பெருந்தீங்கு விளைவிக்கும் என்பது நாம் அறிந்ததே. இராவணனின் பொய் ஒழுக்கமும், இந்திரசித்தனது மை போன்று இருண்ட கரிய மனமுமே இப்பொழுது இவன் கையறுதற்குக் காரணம் என்கிறான் கவிஞன்.

Koviloor Digital Library

48. அன்னது நிகழும் வேலை, ஆர்த்து எழுந்து, அரியின் வெள்ளம்,
மின் எயிற்று அரக்கர்சேனை யாவரும் மீளா வண்ணம்,
கொல் நகக் கரத்தால், பல்லால், மரங்களால், மானக் குன்றால்
பொன் நெடு நாட்டையெல்லாம், புதுக்குடி ஏற்றிற்று அன்றே! (9246)

(அரி-குரங்கு; எயிறு-பற்கள்; யாவரும்-எவரும்/ஒருவரும்; மான-பெரிய; பொன்நாடு-சுவர்க்கலோகம்)

அவ்வாறு அரக்கர்கள் கலங்கி நின்றிருந்தபொழுது, குரங்குக் கூட்டம் ஆரவாரம் செய்துகொண்டு பொங்கி எழுந்து, மின்னல்போல் ஒளிவீசும் கோரப்பற்களையுடைய அரக்கர்கள் சேனையில் ஒருவர்கூட நகருக்குள் திரும்பி வராதவண்ணம் தங்களது கொல்லும் தன்மையுள்ள நகங்களைக் கொண்டும் கைகளாலும், பற்களாலும், மரங்களாலும், பெரிய மலை களாலும், அவர்களைக் கொன்று குவித்து அவர்கள் எல்லோரையும் அழகிய சுவர்க்கலோகத்தில் புதிதாகக் குடியேறும்படி செய்தன.

குரங்குச் சேனையால் கொல்லப்பட்ட அரக்கவீரர்கள் எல்லோரும் வீரமரணம் எய்தி சொர்க்கத்தை அடைந்து அங்கே குடியேறினார்கள் என்பதாம். போரில் மரணமானவர்கள் வீரமரணம் அடைந்தார்கள் எனக் கருதி, அவர்கள் சுவர்க்கம் செல்வர் என்பது ஒரு மரபு. 'பொன் நாட்டைப் புதுக்குடி ஏற்றுதல்' என்பது அரக்கர்களைப் போரில் கொன்று அவர்களைத் தேவர்களாக்கி, விண்ணுலகிற்கு அனுப்புதல் என்று பொருள்படும்.

49. காலம் கொண்டு எழுந்த மேகக் கருமையான், 'செம்மை காட்டும்
ஆலம் கொண்டு இருண்ட கண்டத்து அமரர்கோன் அருளின் பெற்ற
சூலம் கொண்டு எறிவல்'' என்று தோன்றினான், 'பகையின் தோற்ற
மூலம் கொண்டு உணரா நின்னை முடித்தன்றி முடியேன்'' என்றான். (9247)

(காலம்-கார்காலம்; ஆலம்-நஞ்சு/விஷம்; கண்டம்-கழுத்து; செம்மை-சிவந்த மேனி; அமரர்கோன்-இங்கே சிவபெருமான்; மூலம்-தொடக்கம்; முடிதல்-இறத்தல்; பகை-இங்கே போர்க்களம்)

''கார்காலத்தில் காணப்பெறும் சூல்கொண்ட கரிய மேகம்போன்று கரியவனான இந்திரசித்து, பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டதனால் ஏற்பட்ட நீலநிறமாகிய கழுத்தை உடையவனும், சிவந்த மேனியையுடையவனும், தேவாதி தேவனுமாகிய சிவபெருமான் அருளித்தந்த இந்தச் சூலாயுதத்தை உன்மீது இப்போது வீசுவேன்'' என்று இலக்குவனை நோக்கிக் கூறிக்கொண்டே தோன்றி, ''இதுவரையிலும் போர்க்களத்தில் பகைவரிடம் தோற்றது என்ற தொடக்கமே இல்லாத உன்னை இறக்கச்செய்யாது, நான் மடிந்து போகமாட்டேன்'' என்று வஞ்சினம் கூறினான்.

Koviloor Digital Library

இந்திரசித்தின் கரிய மேனிக்குக் ''காலம் கொண்டு எழுந்த மேகம்'' என்று உவமைகூறிய கவிஞன், சிவபெருமானின் சிவந்த மேனியையும், இருண்ட நீல கண்டத்தையும் தொடர்ந்து கூறியது நோக்குக. ''அமரர் கோன்'' என்பது தேவாதிதேவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும். இந்திரசித்து இலக்குவனைப் ''பகையின் தோற்ற மூலம் கொண்டு உணராதவன்'' என்று புகழ்வதை நோக்குக. இலக்குவன் இதுவரை பகைவரால் போர்க்களத்தில் வெல்லப்பட்டதே இல்லை என்று பகைவனான இந்திரசித்து இலக்குவனைப் புகழ்வது கருதத்தக்கது. ''நின்னை முடித்தன்றி முடியேன்'' என்று கூறும்பொழுது இந்திரசித்து, இலக்குவனை முடித்தபின் தானும் முடிவேன் என்று தன்னை மறந்து கூறுவதும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அவன் ஆற்றல்மீது அவன் கொண்ட நம்பிக்கையும், அதே சமயம் தான் செய்திருக்கின்ற பாவங்களால் தனக்கு அழிவு நேரும் என்பதையும் நன்கு உணர்ந்தே இவ்வாறு கூறினான் என்க. இப்பொழுது இந்திரசித்து ஒருகையுடன்தான் இருக்கிறான், அந்தக் கையில்தான் சிவபெருமான் தந்தருளிய சூலப்படையைக் கொண்டிருக் கிறான் என்பதையும் நினைவில் கொள்ளல் தகும். விண்ணில் மறைந்திருந்த இந்திரசித்து போர்க்களத்திற்கு வந்துவிட்டான் என்பதைக் குறிக்கவே ''தோன்றினான்'' என்றார் என்க.

50. காற்று என, உரும் ஏறு என்ன, கனல்என, கடைநாள் உற்ற
கூற்றம் ஓர் சூலம் கொண்டு குறுகியது என்ன, கொல்வான்
தோற்றினான்; அதனைக்காணா, 'இனி தலை துணிக்கும் காலம்
ஏற்றது' என்று, அயோத்தி வேந்தற்கு இளையவன், இதனைச் செய்தான்.
(9248)

(உரும்ஏறு-பேரிடி; கூற்றம்-இயமன்; குறுகுதல்-நெருங்குதல்; கொல்வான்-கொல்லும் பொருட்டு; காணா-கண்டு; ஏற்றது-சரியானது/ நெருங்கியது; கடைநாள்-ஊழியிறுதிக்காலம்; தோற்றுதல்-வெளிப் படுத்திக் காண்பித்தல்)

ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் சூறைக்காற்றுப்போலவும், பேரிடிபோலவும், வடவைக்கனல்போலவும், இயமன்ஒரு கையில்சூலப் படையை ஏந்திக்கொண்டு நெருங்கி வருவதுபோலவும், இலக்குவனைக் கொல்லும் எண்ணத்துடன் இந்திரசித்து தன்னை வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டான்; இதனைக்கண்ட அயோத்தி அரசனாகிய இராமபிரானுக்கு இளையவனான இலக்குவன் ''சரி, இப்பொழுது இவனுடைய தலையை அறுத்தெறியும் நேரம் வந்துவிட்டது'' என்று கருதிக்கொண்டு பின்வருமாறு செய்யலானான்.

இந்திரசித்தின் சீற்றத்திற்கு ''கடைநாள் உற்ற காற்று, உரும்ஏறு, கனல்'' இவையனைத்தும் ஒப்பு. தோன்றினான் என்று தன்வினையில் கூறப்பட வேண்டுவது தோற்றினான் எனப் பிறவினையில் கூறப்பட்டிருப்பதையும்

Koviloor Digital Library

எண்ணுக. எதுகை நோக்கித் திரிந்தது எனக் கூறலும் பொருந்தும். இந்திரசித்து ஒருகையில் சூலப்படையை ஏந்தி நின்ற தோற்றம், இயமனே அவ்வாறு நிற்பதுபோலத் தோன்றிற்று என்பதாம்.

51. இலக்குவன் இந்திரசித்தின் தலையைத் துணித்தல்

"மறைகளே தேறத்தக்க, வேதியர் வணங்கற்பால,
இறையவன் இராமன் என்னும், நல்அற மூர்த்தி என்னின்,
பிறை எயிற்று இவனைக்கோறி" என்று, ஒரு பிறைவாய் வாளி
நிறைஉற வாங்கிவிட்டான், உலகெலாம் நிறுத்தி நின்றான். (9249)

(மறை-வேதம்; தேறுதல்-தெளிதல்/ஆராய்ந்து அறிதல்; வேதியர்-வேதவிற்பன்னர்கள்; எயிறு-பற்கள்; கோறி-கொல்லுவாயாக; நிறைவுற-முழுவதும் பொருந்த)

"யாவராலும் போற்றத்தகும் வேதங்களால் மட்டுமே நன்கு ஆராய்ந்து தெளியத் தக்கவனும், வேதவிற்பன்னர்கள் வணங்குதற்குரியவனுமான இறையவன் இராமன் பரம்பொருள் என்பது உண்மையானால்-அவன் நல்ல தருமதேவதையின் வடிவம் என்பது சத்தியமானால், பிறைச் சந்திரனைப் போன்று வளைந்த கோரப்பற்களை உடைய இந்த இந்திர சித்தனைக் கொன்று வருவாயாக!" என்று கட்டளையிட்டு, ஒரு அர்த்த சந்திரபாணத்தை-பிறைவாய் வாளியைத்தனது வலிமை முழுவதும் பொருந்தவும், தனது தோள்வரை நாணை நன்கு இழுத்தும் தொடுத்து விட்டான் இலக்குவன். அதனால் அரக்கர்களால் இவ்வுலகுக்கு ஏற்பட்ட துன்பங்களையெல்லாம் களைந்து, உலகை ஒரு நிலையில் நிறுத்திய வனும், தனது ஆயிரம் தலைகளைக் கொண்டு இவ்வுலகைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேஷன் என்னும் பாம்பின் அம்சமாக அவதரித்த இலக்குவன் இதனால் தன் புகழையும் இவ்வுலகம் உள்ள அளவும் உலகில் நிலைநிறுத்திக் கொண்டவனானான்.

அனுமனது வாலில் கொளுத்தப்பட்ட நெருப்பு அனுமனைச் சுட்டெரிக்கக்கூடாது என்று முன்பு வேண்டிக்கொண்ட சீதாதேவியும் இதுபோலவே பிரமாணம் செய்து வேண்டிக்கொண்டதை நினைவிற் கொண்டுவருக. பிறை எயிற்று இவனைக் கோற, பிறைவாய் வாளியையே பயன்படுத்தினான் என்ற விடத்துச் சொல்நயம் உணர்க. 'உலகெலாம் நிறுத்தி நின்றான்' என்ற சொற்றொடர் பலவகையான பொருள்கள் தருதலையும் உணர்க. இராமபிரானின் பரம்பொருள் தன்மை இங்கு விளக்கப்படுவதை உணர்க. இராமபிரான் மறைகளே தேறத்தக்கவன்; வேதியர் வணங்கற்பாலன், இறையவன், நல்அறமூர்த்தி" என்று அவனது பரத்துவநிலை பேசப்படுதலையும் உணர்க. இந்தப் பிறைமுக வாளி பற்றி வான்மீகம் கூறுவதைக் கேளுங்கள். "இவ்வஸ்திரம் நல்ல இறகுகள் கட்டப்பெற்று, உருண்ட உருவமுடையதாகி, அழகிய துணுக்குகளும்

Koviloor Digital Library

அமைந்து, நல்ல திருத்தங்களும் பொருந்தி, சுவர்ணத்தினால் அழகு செய்யப்பெற்று, எத்தகைய உடலையும் பிளந்து உயிரைத் தொலைக்க வல்லதுமாய் இருந்தது. இது தடுக்கவும் பொறுக்கவும் முடியாதது. இது அரக்கர்களுக்கு அச்சத்தை விளைவிப்பதும், கொடிய சர்ப்பம் போன்றதும், தேவர்களால் பூஜிக்கப்பட்டதுமாயிருந்தது. அம்மேலான பாணத்தை இலக்குவன் ஐந்தாஸ்திரமந்திரத்தை அபிமந்திரித்து, தன் பெரிய வில்லில் தொடுத்து, நாணையேற்றி, வில்லை வளைத்துக் காதுவரையில் இழுத்துத் தன் காரியம் நிறைவேறும்படி ''பாணமே, தசரத குமாரனாகிய இராமன் தர்ம சுபாவனும், சத்திய சந்தனும் பௌருஷத்தில் எதிரில்லாதவனுமாயின், நீ இவ் இந்திரசித்தை வதிப்பாயாக! என்றான்'' என்று கூறுகிறது. அத்யாத்ம இராமாயணமும் இதுபோலவே கூறுகிறது என்பதும் கருதத்தக்கது.

இலக்குவன் இராமநாமம்கூறி இவ்வம்பினைத் தொடுத்தது, இராமபிரான் பரம்பொருளே என்பதை இவ்வுலககு உணரவேண்டும் என்பதனால்தான் என்பதும் கருதத்தக்கது. சீதாதேவி நெருப்புக்கடவுளை நினைந்து ''நீயே உலகுக்கு ஒரு சான்று; நிற்கே தெரியும் கற்பு; அதனில் தூயேன் என்னின், தொழுகின்றேன் எரியே! அவனைச் சுடல் என்றாள்'' என்பது சுந்தரகாண்டம் பிணிவீட்டு படலம்.

52. நேமியும், குலிசவேலும், நெற்றியின் நெருப்புக்கண்ணான்,
நாமவேல் தானும், மற்றை நான்முகன் படையும் நாண,
தீ முகம் கதுவ ஓடிச்சென்று, அவன் சிரத்தைத் தள்ளி,
பூமழை அமரர் சிந்த, பொலிந்தது அப்பகழிப் புத்தேள். (9250)

(புத்தேள்-தெய்வம்; நேமி-சக்கரப்படை; குலிசம்-வச்சிரப்படை; நாமம்-அச்சம்; வேல்-சூலப்படை; நான்முகன்படை-பிரமாஸ்திரம்; முகம்-முனை; பொலிதல்-விளங்கித் திகழ்தல்; தள்ளுதல்-அறுத்தல்; கதுவுதல்-பற்றுதல்)

அவ்வாறு இலக்குவன் செலுத்திய அந்தத் தெய்வத்தன்மை வாய்ந்த அம்பு திருமாலின் சக்கரப்படையும், இந்திரனின் வச்சிராயுதமும், நெற்றியில் நெருப்புக் கண்களையுடைய சிவபெருமானின் அச்சம் விளைவிக்கக்கூடியதுமான சூலப்படையும் இன்னும் பிரமதேவனின் பிரமாஸ்திரமும் வெட்கப்படும்படி, தனது முனையில் நெருப்புப்பொறி பறக்கப் பகைவனைப் பற்றி அழிப்பதற்காக விரைந்து ஓடிச்சென்று இந்திரசித்தனது தலையை அறுத்துத் தள்ளியது. அது கண்ட தேவர்கள் அவ்வம்புக்கு மலர்மழை சொரிந்தனர். அது முன்னைக்காட்டிலும் இப்போது பொலிவு பெற்றுத் திகழ்ந்தது.

மற்ற எந்தத் தெய்வப்படைக்கும் இல்லாத சிறப்பு இராமநாமம் சொல்லிச் செலுத்திய இந்தப்படைக்கு இருந்தது என்பதாம்.

Koviloor Digital Library

சிவபெருமானின் சூலாயுதத்தை 'மூவிலை வேல்' எனவும் கூறுவதுண்டு. இராமநாமத்தின் சிறப்பு பேசப்படுகிறது. எனவேதான் அது ''பகழிப்புத்தேள்'' எனப்பட்டது என்க.

53. இந்திரசித்து இறந்துபடுதல்

அற்ற வன்தலைமீது ஓங்கி, அண்டம் உற்று அணுகா முன்னம்,
பற்றிய சூலத்தோடும், உடல்நிறை பகழியோடும்,
எற்றிய காலக்காற்றால், மின்னொடும், இடியினோடும்,
சுற்றிய புயல் வீழ்ந்தென்ன, வீழ்ந்தது சோரன் யாக்கை. (9251)

(அற்ற-அறுபட்ட; வன்-வலிய; ஓங்கி-உயர்ந்து; அண்டம்-விண் முகடு; காலக்காற்று-ஊழிக்காலச் சூறாவளி/சண்டமாருதம்; எற்றுதல்-தாக்குதல்; புயல்-மேகம்; சோரன்-வஞ்சகன்/கள்ளன்/திருடன்; யாக்கை-உடம்பு)

இலக்குவனின் பிறைமுக அம்பினால் அறுக்கப்பட்ட இந்திரசித்தனது வலிய தலை, விண்முகடு மட்டும் ஓங்கி உயர்ந்து சென்றது; அந்தத்தலை திரும்பித் தரையில் விழுவதற்கு முன்னால், அவனுடைய உடம்பு, வலக்கையில் பற்றப்பட்டிருக்கும் சூலாயுதத்தோடும், உடம்பு முழுவதும் தைக்கப்பெற்றிருக்கும் அம்புகளோடும், பிரளயகாலப் பெருங்காற்றால் தாக்கப்பட்டு, மின்னலோடும், இடியினோடும், நிலைதடுமாறுகின்ற மேகத்தோடும் வீழ்ந்ததுபோல வஞ்சகனாகிய இந்திரசித்தனது உடல் தரையில் விழுந்தது.

இலக்குவனது அம்பால் இந்திரசித்தனது தலையும், உடலும் தனித்தனியாகத் துண்டிக்கப்பட்டன. தலை அண்ட முகட்டுக்குச் சென்று திரும்பிவந்து தரையில் விழுவதற்குச் சற்று காலதாமதமாகியது. அதற்குள் அவனது உடல் தன் கைகளால் பற்றியிருந்த சூலாயுதத்தோடும், உடம்பில் நிறைந்த அம்புகளோடும் தலைக்கு முன்னதாகவே தரையில் வந்து விழுந்தது என்பதாம். 'சோரன்' என்ற சொல் வஞ்சகன், கள்வன், திருடன் என்ற பொருள்களைத்தரும். பொதுவாக அரக்கர்கள் வஞ்சகச்செயல்களில் வல்லவர்கள் என்றாலும், இங்கே கள்வன் என்ற பொருளையே தரும். காரணம் இந்திரசித்து தானே கள்வன் அல்லன், அவன் தந்தை வஞ்சகமாக சீதாதேவியைக் கள்வனைப்போல் திருடனைப்போல் அபகரித்துக் கொண்டு வந்ததனால் அவன்மைந்தன் இந்திரசித்தனும் கள்வன், சோரன் எனப்பட்டான் என்க. தேவேந்திரனை வென்றது இந்திரசித்தனே என்றாலும், இந்தச் செயல் இராவணன்மேலும் ஏற்றிக் கூறப்படுவது போலவும், தேவர்களை வென்றது இராவணனே என்றாலும், அந்தச் செயல் இந்திரசித்தின்மேல் ஏற்றிச் சொல்லப்படுவது போலவும், கள்ளம் என்ற செயல் இராவணனே செய்திருந்தாலும் இங்கே அது அவன் மைந்தன் இந்திரசித்தன்மேல் ஏற்றிக் கூறப்பட்டிருப்பதாகக் கொள்ள

Koviloor Digital Library

வேண்டும். இந்திரசித்தின் உடம்புக்குக் கரியமேகமும், இலக்குவன் செலுத்திய அம்புக்கு சண்டமாருதக் காற்றும் உவமைகள். சூலாயுதத்திற்கு மின்னலும், அம்புக்கு இடியும், ஒளியாலும் முழக்கத்தாலும் உவமைகள். இந்திரசித்தின் உடம்புக்கு மேகம் உவமை.

54. விண்தலத்து இலங்கு திங்கள் இரண்டொடும், மின்னு வீசும்
குண்டலத் துணைகளோடும், கொந்தளக் குஞ்சிச் செங்கேழ்ச்
சண்ட வெங்கதிரின் கற்றைத் தழையொடும், இரவிதான் அம்
மண்டலம் வீழ்ந்ததென்ன, வீழ்ந்தது தலையும் மண்மேல். (9252)

(இலங்குதல்-விளங்குதல்; திங்கள் இரண்டு-இரண்டு பிறைச் சந்திரன்கள்; மின்-ஒளி; குஞ்சி-ஆண்களின் தலைமுடி; கொந்தளம்-கூந்தல்; செங்கேழ்-செந்நிறம்/சிவந்த நிறம்; இரவி-சூரியன்; சண்டம்-கொடுமை; துணை-இரண்டு; குண்டலம்-காதணி)

வானத்தில் விளங்குகின்ற இரண்டு பிறைச் சந்திரன்களோடும், ஒளி விட்டுப் பிரகாசிக்கின்ற இரண்டு காதணிகளோடும், சுருண்ட தலை முடியோடும், சிவந்த நிறமுடைய கொடிய வெப்பமுடைய ஒளிக் கற்றையோடும், சூரியன் இந்தத் தரையில் விழுந்ததுபோல, இந்திர சித்தனது தலையும் சந்திரன்போல் ஒளிவீசுகின்ற அவனது இரண்டு கோரப்பற்களோடும், ஒளிவீசுகின்ற காதணிகளோடும், சுருண்ட செம்பட்டை மயிர்க்கற்றையோடும் தரையில் விழுந்தது.

வானத்தில் இரண்டு பிறைச்சந்திரன்கள் இயங்காது. எனவே இதனை இல்பொருள் உவமையாகக் கொள்ள வேண்டும். அவனுடைய இரண்டு கோரப்பற்களுக்கு திங்கள் இரண்டும், அவனுடைய இரண்டு காதணியின் ஒளிக்கு மின்னலும், அவனுடைய சிவந்த செம்பட்டை முடிக்கற்றைக்குச் சூரியனுடைய சிவந்த ஒளிக்கற்றையும் உவமைகளாகும். முன்பாடலில் அவனுடைய உடல் தரையில் விழுந்தது பற்றிக்கூறிய கவிஞன், இந்தப் பாடலில் அவன் தலையும் தரையில் விழுந்தது என்பதைக் கூறுகிறான். சூரியன் இரண்டு பிறைச்சந்திரன்களோடு தரையில் விழுந்தது என்பது நிகழாநிகழ்வு. எனவே இதுவும் இல்பொருள் உவமை என்றும், கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுகிறான் என்பதால் தற்குறிப்பேற்றம் என்றும் கொள்ளலாம்.

55. அரக்கர்கள் நிலைகுலைந்து ஓடுதல்

உயிர் புறத்து உற்ற காலை, உள்நின்ற உணர்வினோடும்,
செயிர் அறு பொறியும், அந்தக்கரணமும் சிந்துமா போல்,
அயில் எயிற்று அரக்கர் உள்ளார், ஆற்றலர் ஆகி, ஆன்ற
எயிலுடை இலங்கை நோக்கி, இரிந்தனர், படையும் விட்டார். (9253)

Koviloor Digital Library

(செயிர்-குற்றம்; சிந்துதல்-அழிதல்; அயில்-கூர்மை; ஆற்றுதல்-செய்தல்; ஆன்ற-சிறந்த; எயில்-மதில்; இரிதல்-நிலைகுலைந்து ஓடுதல்; சிந்துதல்-நீங்குதல்)

ஒருவனுடைய உயிர், உடலினின்றும் வெளிச்சென்று விட்டபோது, அவன் உள்ளே நிலவிவருகின்ற உணர்வுகளும், குற்றமற்ற ஐம்புலன் களும், அந்தக்கரணம் எனக் கூறப்படுகின்ற மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்பனவற்றோடும் நீங்கிப்போவது போல, கூரிய பற்களை யுடைய அரக்கர்கள் எல்லோரும், இந்திரசித்து இறந்துபட்ட பின்னர் தம் ஆற்றல் இழந்தவராகித் திகைத்து, அகன்ற சிறந்த மதிலைப் பாதுகாப்பாகக் கொண்ட இலங்கை நகரை நோக்கித் தம் கைகளிலிருந்த படைக்கலன் களையெல்லாம் கீழே போட்டுவிட்டு, நிலைகுலைந்து ஓடலானார்கள்.

புலன்கள் இயற்கையிலேயே குற்றமற்றவை. ஆனால் அவை மனத்தின் வழிநின்று செயல்படும்போது குற்றப்பட்டுப் போகின்றன. எனவே ''செயிர் அறு பொறி'' என்றார் என்க. அந்தக் கரணம் என்பன உட்கருவிகள் அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவையாகும். உயிர் என்பது இந்திரசித்துக்கும், பொறிகள், அந்தக்கரணங்கள் முதலியவை அரக்கர்கட்கும் உவமையாகக் கூறப்படுகிறது.

56. வில்லாளர் ஆணர்க்கு எல்லாம் மேலவன் விளிதலோடும்,
'செல்லாது அவ்விலங்கை வேந்தற்கு அரசு' எனக் களித்த தேவர்
எல்லாரும், தூசு நீக்கி ஏறிட, ஆர்த்தபோது,
கொல்லாத விரதத்தார்தம் கடவுளர் கூட்டம் ஒத்தார். (9254)

(மேலவன்-மேம்பட்டவன்/சிறந்தவன்; விளிதல்-இறந்துபோதல்; செல்லுதல்-நடத்தல்/இயங்குதல்; தூசு-ஆடை; கொல்லாத விரதத்தார்-அருக சமயத்தார்/சமணமதத்தினர்)

வில் ஆற்றல் வல்லவர்களுக்குள் எல்லாம் மிக மேம்பட்டவனான இந்திரசித்து இறந்துபட்டதும், மனம் மிகக்களித்த தேவர்கள் எல்லோரும் ''இனிமேல் அந்த இலங்கை மன்னனான இராவணனின் ஆட்சி சரிவர இயங்கமுடியாது நிலைத்து நிற்காது'' என்று மகிழ்ந்து, தாம் மேலே உடுத்தியிருந்த ஆடையையும், அரையில் கட்டியிருந்த ஆடையையும் கூட, அவிழ்த்து ஆகாயத்தில் தூக்கி வீசி எறிந்து ஆரவாரம் செய்தபோது, அவர்களின் தோற்றம், பிற உயிர்களைக் கொல்லலாகாது என்ற விரதத்தைக் கடைப்பிடிக்கும் சமணசமயத்தார்க்குக் கடவுளான திகம்பரர் என்ற கடவுளர் கூட்டத்தை ஒத்துத் தோன்றியது.

தேவர்கள் இவ்வாறு தம் ஆடையை அவிழ்த்துத் தூக்கி எறிந்து ஆர்ப்பரித்தது முன்பும் ஒருமுறை பேசப்பட்டதையும் இங்கு நினைக. பெரியபுராணமும் இவ்வாறு தேவர்கள் மகிழ்ச்சியைத் தெரியப் படுத்துதுலைப் பேசுகிறது. ''மறையோரெல்லாம் உத்தரீயம் விண்ணில்

Koviloor Digital Library

ஏறவிட்டு ஆர்த்தார்'' என்பது பெரியபுராணம். ''கொல்லாத விரதத்தார்'' என்பது அருக சமயத்தார் என்று கூறப்படும் சமணர்களைக் குறிக்கும். அவர்களுடைய முக்கியக் கொள்கை பிற உயிர்களைக் கொல்லாமையே ஆகும். 'அவர்தம் கடவுளர்' என்பது சமணசமயத்திற்கு ஒரு கடவுள்தான். அவரைத் திகம்பரர் என்பர். அவர் ஆடையணியாது நிர்வாணமாக இருப்பார். இங்கே தேவர்கள் மிகுதியாய் இருத்தலினால் 'கடவுளர்' எனப் பன்மையில் கூறினார் என்க. 'திகம்பரர்' என்ற சொல்லுக்கு ஆடை அணியாதவர் என்பது பொருள்.

57. வரம்தரு முதல்வன், மற்றை மான் மறிக்கரத்து வள்ளல்,
புரந்தரன், முதல்வராய நான்மறைப் புலவர், பாரில்
நிரந்தரம் தோன்றி நின்றார்; அருளினால் நிறைந்த நெஞ்சர்
கரந்திலர்; அவரை யாக்கை கண்டன, குரங்கும் கண்ணால். (9255)

(முதல்வன்-ஆதிமூர்த்தி/மூலமுதற்காரணன்/திருமால்; மறி-குட்டி; புரந்தரன்-இந்திரன்; பார்-பூமி; கரத்தல்-மறைத்தல்; யாக்கை-உடம்பு; புலவர்-தேவர்கள்)

வேண்டியவர்க்கு வேண்டிய வரங்களைத் தரும் பரம்பொருளான திருமாலும், மற்றும் மான்குட்டியைத் தன் கைகளில் ஏந்திக் கொண் டிருக்கும் வள்ளலாகிய சிவபெருமானும், இந்திரனை முதல்வனாகக் கொண்டவர்களும், நான்கு வேதங்களையும் நன்கு கற்றறிந்த தேவர்களும், பிரமதேவனும், இந்தப் பூமியில் நிரந்தரமாகத் தோன்றி இருக்கின்றார்கள். அவர்கள் அருள் நிறைந்த நெஞ்சம் கொண்டவர்கள். எனவே அவர்கள் தம்மை ஒருபோதும் மறைத்துக் கொள்வதில்லை; எனவே குரங்குகளும் கூட அவர்களது உடம்பைத் தம் ஊனக்கண்களால் காணும் பேறு பெற்றன.

'மறி' என்பது எல்லா விலங்கினங்களின் இளமைப் பருவத்தைக் குறிக்கும். 'புலவர்' என்பது தேவரைக் குறிக்கும். நான்மறைப் புலவர் என்பதற்கு பிரமதேவன் என்ற பொருளும் பொருந்தும். 'குரங்கும்' என்றவிடத்து உம்மை இழிவு சிறப்பை உணர்த்தியது. 'நிரந்தரம்' என்ற சொல்லுக்கு நெருக்கம் என்பதும் ஒரு பொருள். கடவுளர்களைப் புலன் உணர்வால் காண்பது என்பது இயலாது. எனினும் வீரசுவர்க்கம் அடைந்த வானரவீரர்கள் கடவுளரைத் தம் புலனாகிய கண்களாலேயே கண்டார்கள் என்பது வானர வீரர்களுக்கு உரிய சிறப்பு.

58. "அறம்தலை நின்றார்க்கு இல்லை அழிவு" எனும் அறிஞர் வார்த்தை
சிறந்தது; சரங்கள் பாயச் சிந்திய சிரத்த ஆகி,
பறந்தலை அதனில் மற்று அப்பாதக அரக்கன் கொல்ல,
இறந்தன கவிகள் எல்லாம், எழுந்தன இமையோர் ஏத்த. (9256)

Koviloor Digital Library

(சிரம்-தலை; பறந்தலை-போர்க்களம்; இமையோர்-முத்தேவர்கள்; ஏத்துதல்-வாழ்த்துதல்; வார்த்தை-கூற்று)

போர்க்களத்தில் கொடிய அரக்கனான இந்திரசித்து ஏவிய அம்புகளினால் வானரவீரர்கள் தம் தலையறுபட்டு இறந்து வீழ்ந்தனர். அவர்கள் எல்லோரையும் பிரம்மா, திருமால், சிவன் என்னும் முத்தேவர்களும், ''மீண்டும் உயிர்பெற்று எழுக!'' என்று வாழ்த்தியதனால், அவை இப்போது மீண்டும் உயிர்பெற்று எழுந்துவிட்டன. எனவே ''அறத்தின் வழிநின்று ஒழுகுபவர்களுக்கு ஒரு காலத்திலும் அழிவே இல்லை'' என்ற சான்றோர் வாய்மொழி மிகச் சிறப்புடையது என்பது தெரிகிறது'' என்கிறான் கவிஞன்.

''அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை வளி வழங்கு மல்லல் மாஞாலம்கரி'' என்ற குறள் 245 இங்கு ஒப்புநோக்கத் தகும்.

59. இந்திரசித்தின் தலையை அங்கதன் எடுத்துச் செல்ல இலக்குவன் அவன் பின் செல்லுதல்

ஆக்கையின் நின்று வீழ்ந்த அரக்கன் தன் தலையை, அம்கை
தூக்கினன், உள்ளம் கூர்ந்த வாலிசேய்; தூசிசெல்ல
மேக்கு உயர்ந்து, அமரர் வெள்ளம் அள்ளியே தொடர்ந்து வீசும்
பூக் கிளர் பந்தர் நீழல், அனுமன்மேல் இளவல் போனான். (9257)

(ஆக்கை-யாக்கை/உடம்பு; கூர்தல்-மிகுதல்; தூசி-முன்னணி; மேக்கு-மேலே/விண்ணில்; வெள்ளம்-திரள்/கூட்டம்; வீசுதல்-சொரிதல்; பந்தர்-பந்தல்; இளவல்-இலக்குவன்; அள்ளுதல்-வாரியெடுத்தல்; அகம்+கை-அங்கை-உள்ளங்கை/அழகியகை)

அவ்வாறு அரக்கன் இந்திரசித்தின் உடம்பிலிருந்து அறுபட்டுத் தரையில் விழுந்த தலையைத் தனது அழகிய உள்ளங்கைகளால், வாலியின் புதல்வனான அங்கதன் தூக்கி எடுத்துக்கொண்டு, மிக்க மனமகிழ்ச்சி கொண்டு முன்னேறி இராமபிரான் இருக்குமிடத்திற்குச் சென்றான். அதுகண்ட வானுலகத்திலுள்ள தேவர்கள் கூட்டமும், தம் கைகள் நிறையக் கற்பகமலர்களை அள்ளிக்கொண்டு இடைவிடாது இலக்குவன் மேல் தூவிக்கொண்டேயிருந்தார்கள். அவ்வாறு அவர்கள் தூவியமலர்களால் ஆன நிழல்தரும் பந்தலின்கீழ், அனுமன் தோள்களில் இலக்குவன் வீற்றிருந்து சென்றான்.

'தூசி' என்பது முன்னணிப்படையைக் குறிக்கும். இங்கே அது முன்னே சென்றதைக் குறித்து நின்றது. 'பந்தர்' என்பது பந்தல் என்பதன் இறுதிப்போலி; 'நீழல்' என்பது நிழல் என்பதன் நீட்டல்விகாரம். தேவர்கள் இடைவிடாது சொரிந்த பூக்கள் மலர்ப்பந்தல்போல் விளங்கி

Koviloor Digital Library

இலக்குவனும், அனுமனும் செல்லும் பாதையில் நிழல் பரப்பிற்று என்பதாம். 'அள்ளுதல்' என்பது மலர்களின் மிகுதியைக் குறித்தது என்க.

60. வீங்கிய தோளன்; தேய்ந்து மெலிகின்ற பழியன்; மீதுற்று
ஓங்கிய முடியன்; திங்கள் ஒளிபெறு முகத்தன்; உள்ளால்
வாங்கிய துயரன்; மீப்போய் வளர்கின்ற புகழன்; வந்துற்று
ஓங்கிய உவகையாளன்; இந்திரன், உரைப்பதானான். (9258)

(வீங்குதல்-பூரித்தல்/பருத்தல்; மீது-மேலே; ஓங்குதல்-நிமிர்ந்து நிற்றல்; வாங்குதல்-நீக்குதல்; மீ-மேலே; உவகை-மகிழ்ச்சி)

அங்கதன் இந்திரசித்தின் தலையைத் தன் கைகளில் மகிழ்ச்சியுடன் எடுத்துக்கொண்டு இராமபிரானிடம் போவதைக் கண்ட இந்திரன், பருத்துப் பூரித்த தோள்களையுடையவனாய், தனக்கு முன் நேர்ந்த பழிச்சொற்கள் தேய்ந்து மெலிகின்றவனாய், தன் தலையின்மேலே நிமிர்ந்து நிற்கின்ற முடியை உடையவனாய், சந்திரன் ஒளிபோன்று மிக்க ஒளிபடைத்த முகத்தை உடையவனாய், தன் உள்ளத்துக்குள்ளே இருந்த துயரம் நீங்கப் பெற்றவனாய், மேன்மேலும் வளர்கின்ற புகழையுடைய வனாய், இப்போது புதிதாக வந்திருக்கும் உயர்ந்த அந்த மகிழ்ச்சியை உடையவனாய் கீழ்க்கண்டவாறு உரைக்கத் தொடங்கினான்.

மேகநாதன் என்ற இயற்பெயர் கொண்ட இந்திரசித்து, இந்திரனை வென்றதனால் இந்திரசித்து என வழங்கப்பட்டான். எனவே இந்திரன் பழிச்சொற்களுக்கு ஆளானான். தலைக்குனிவு ஏற்பட்டது; முகம் களை யிழந்திருந்தது; உள்ளத்தில் துயரம் குடி கொண்டிருந்தது; இப்பொழுது இந்திரசித்தன் இறந்துபட்டான் என்பதைக் கண்டவுடன் அவன் தோள்கள் பூரித்தன; பழிச்சொற்கள் தேய்ந்து மெலிந்து இல்லை ஆயின; தலை நிமிர்ந்து நடக்கலானான்; முகம் ஒளிபெறலாயிற்று, உள்ளத் துயரம் நீங்கியது, புகழ் வளரத் தொடங்கியது; புதிதாக ஒரு மகிழ்ச்சி வந்து சேர்ந்து கொண்டது என்கிறான் கவிஞன்.

61. "எல்லி வான் மதியின் உற்ற கறைஎன, என்மேல் வந்து
புல்லிய வடுவும் போகாது" என்று அகம் புலம்புகிற்றேன்;
வில்லியர் ஒருவர் நல்க, துடைத்துறும் வெறுமை தீர்ந்தேன்;
செல்வமும் பெறுதற்கு உண்டோ குறை? இனி, சிறுமை யாதோ?"
(9259)

(எல்லி-இரவு; வான்-சிறந்த; கறை-களங்கம்; புல்லுதல்-பொருந்துதல்; வடு-பழி; வில்லியர்-வில்வீரர்/இலக்குவன்; நல்குதல்-அருளுதல்; செல்வம்-அரசாட்சி; சிறுமை-துன்பம்)

Koviloor Digital Library

''இரவினில் தோன்றும் வெள்ளிய சிறந்த சந்திரனில் பொருந்தி யிருக்கின்ற களங்கம் என்று கூறும்வண்ணம் என்மீது பொருந்தியிருந்த பழிச்சொல்லும் ஒருபோதும் நீங்காது என்று கருதி இதுகாறும் மனம் வருந்திப் புலம்பிக்கொண்டிருந்தேன். இப்போது வில்வீரனாகிய இலக்குவன் வந்து எனக்கு அருள்செய்து, எனக்குண்டான அந்தப் பழிச் சொல்லைத் துடைத்ததனால் நான் என் வெறுமைத்தன்மை நீங்கப் பெற்றவன் ஆனேன். இனி இந்திரப்பதவியையும் தேவலோக அரசச் செல்வத்தையும் பெறுவதற்கு எனக்கு என்னகுறை இருக்கிறது? இனித்துன்பம் என்று ஒன்று என்பால் வருமோ?'' என்கிறான் இந்திரன்.

'வடு' என்ற சொல்லுக்குப் பழிச்சொல், மனப்புண் என்ற உயர்ந்த பொருள் கொண்டுள்ளோம். இதே 'வடு' என்ற சொல்லுக்குச் சாதாரணப் பொருளாகிய தழும்பு என்று உடலில் ஏற்பட்ட புண் என்று பொருள் கொள்ளலும் சரியேயாகும். எனினும் அது சான்றோர் கொள்ளும் சரியான பொருளாகாது என்பதையும் நினைவிற் கொள்ளல்தகும். 'வெறுமை' என்ற சொல் ஒன்றும் இல்லாததன்மை என்ற பொருளில் அவமானத் தையும் குறிக்கும். அவமானம் நீங்கப்பெற்றேன் என்பது பொருளாகும். 'வெறுமை' என்பது இன்னும் சிறந்த பொருளைத்தரும். இதுவரையிலும் தன்னால் இந்திரசித்தை ஒன்றும் செய்யமுடியாமல் இருந்த கையாலாகாத் தன்மையை - இயலாமையைக் குறித்தது எனக்கொள்ள வேண்டும். 'எல்லி வான்மதியினுற்ற கறை' என்பது பல சொற்களால், பல இடங்களில் கம்பன் கையாண்டிருக்கும் உவமைதான். சந்திரனில் களங்கம் உண்டு என்பதை எல்லா இலக்கியங்களும் பேசுகின்றன. ''குடிப்பிறந்தார்கண் விளங்கும் குற்றம், விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து'' என்பது குறள்-957. ''அங்கண் விசும்பின் அகல்நிலாப் பாரிக்கும் திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்; திங்கள் மறு ஆற்றும்; சான்றோர் அஃது ஆற்றார்; தெருமந்து தேய்வர் ஒரு மாசுஉறின்'' என்பது நாலடியார்-151. வில்வீரன் என்று ஒருமையில் இலக்குவனைக் குறித்திருக்கலாம்; 'வில்லியர்' என்று பன்மையில் கூறியது இலக்குவனது வில்லாற்றலைச் சிறப்பிக்க எனக்கொள்க. இந்திரசித்தன் இறந்துபட்டமையால், தனக்கு இனி எந்தத் துன்பமும் வராது என்பதை ''இனிச்சிறுமை யாதோ?'' எனக் குறிப்பிட்டார் என்க.

62. "தென்தலை ஆழி தொட்டோன் சேய்அருள் சிறுவன் செம்மல்
வென்று அலைத்து, என்னை ஆர்த்துப் போர்த்தொழில் கடந்த
வெய்யோன்,
தன்தலை எடுப்பக் கண்டு, தானவர் தலைகள் சாய,
என்தலை உடுக்கலானேன்; இனிக் குடை எடுப்பென்" என்றான். (9260)

(தென்-அழகிய; ஆழி-கடல்; தொடுதல்-தோண்டுதல்; சிறுவன்-வாலி/புதல்வன்; செம்மல்-புதல்வன்/அங்கதன்; அலைத்தல்-

Koviloor Digital Library

வருத்துதல்; ஆர்த்தல்-கட்டுதல்; கடத்தல்-வெற்றிபெறுதல்; வெய்யோன் -கொடியவன்/இந்திரசித்து; எடுத்தல்-கொய்தல்; தானவர்-அசுரர்கள்; தலையெடுத்தல்-உயர்ந்து நிற்றல்; குடை-வெண்கொற்றக்குடை; எடுத்தல்-உயர்த்திப்பிடித்தல்; சேய்-வழித்தோன்றல்)

''அழகிய இடமாகிய கடலைத் தோண்டிய சகரர்களின் வழித் தோன்றலாகிய என்னுடைய அருளைப் பெற்றவனும், என்னுடைய புதல்வனாகிய வாலியின் புதல்வனாகிய அங்கதன், என்னைப் பலவாறும் வருத்தி, கட்டிப்போட்டுப் போர்த்தொழில் புரிந்து, என்னை வெற்றி கொண்ட கொடியவனான இந்திரசித்தனின் தலையைக் கொய்து கையில் எடுத்துக்கொண்டு செல்லுவதைப் பார்த்து, அசுரர்களெல்லாம் அச்சத்தால் தலைசாய்ந்து நிற்க, நான் மட்டும் என் தலையைப் பெருமிதத்தால் நிமிர்த்திக்கொண்டு நிற்கலானேன்; இனி என்னுடைய வெண்கொற்றக் குடையையும் உயர்த்திப் பிடித்து அரசோச்சுவேன்'' என்கிறான் இந்திரன்.

'தென்' என்ற சொல் அழகிய என்ற பொருளைத்தரும் என்பது நமக்குப் புதிய செய்தி. 'சேய்' என்ற சொல் இங்கே மகன் என்ற நேர்பொருளைத் தராது. வழித்தோன்றல் என்ற பொருளைத்தரும். 'சிறுவன்' என்பது புதல்வன் என்ற பொருளில் இந்திரன் தன் புதல்வனாகிய வாலியைக் குறித்ததாகும். 'செம்மல்' என்ற சொல்லும் புதல்வன் என்ற அதே பொருளில் வாலியின் புதல்வன் அங்கதனைக் குறிக்கும். 'எடுப்ப' என்ற ஒரேசொல் கொய்தல், நிமிர்தல், உயர்த்தல் என்ற பல பொருள்களைத் தருவதை நோக்குக. ''வெய்யோன் தன் தலை எடுத்தல்'' என்பது இந்திர சித்தனது தலையைக் கொய்தலைக் குறித்தது; இவன்தலை எடுக்கப் பட்டதால் அசுரர்கள் தலைகள் சாய்ந்துவிழ என்தலை நிமிர்ந்தது என்ற இடத்துப் பொருள்நயம் காண்க. 'ஆர்த்தல்' என்ற சொல்லுக்குக் கட்டிப்போட்டு என்று உண்மையில் நிகழ்ந்த நிகழ்வையே பொருளாகக் கொண்டுள்ளோம். 'ஆர்த்து' என்ற சொல்லுக்கு வெற்றியினால் பெரு முழக்கம் செய்து என்ற பொருளும் பொருந்திவரும். இந்தப் பாடலிலும் பல பதிப்புகளில் பாடவேறுபாடு காணப்படுகின்றன. எனினும் சென்னைக் கம்பன் கழகச் செம்பதிப்பே இங்கே எடுத்துக் கொள்ளப் பட்டுப் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

63. இராமபிரான் இலக்குவனை நோக்குதல்

வரதன் போய் மறுகா நின்ற மனத்தினன்'' மாயத்தோனைச்
சரதம் போர்வென்று மீளும், தருமமே தாங்க'' என்பான்,
விரதம் பூண்டு, உயிரினோடும் தன்னுடை மீட்சி நோக்கும்
பரதன் போன்று இருந்தான், தம்பி வருகின்ற பரிசு பார்த்தான். (9261)

(வரதன்-வரம் தருபவன்/இராமபிரான்; மறுகா-மறுகி/கலங்கி; மாயத் தோன்-மாயச்செயல்களில் வல்லவன்/இந்திரசித்து; சரதம்-நிச்சயம்/

Koviloor Digital Library

உறுதி; மீள்தல்-திரும்பிவருதல்; பரிசு-தன்மை; பார்த்தல்-எதிர்பார்த் திருத்தல்)

வரங்கள் தரத்தக்க வல்லமைபொருந்திய திருமாலின் அம்சமான இராமபிரான், இலக்குவன்போருக்குச்சென்றது குறித்து இன்னும் கலக்கம் நீங்காது நிற்பவன், மனத்தைத் தேற்றிக்கொண்டு, ''கொடிய மாயச் செயல்களில் வல்லவனான அரக்கன் இந்திரசித்தனுடன் அறந் துணையோடு போர்செய்து, தம்பி இலக்குவன் மீண்டுவருவான் என்று உறுதியாகக் கருதிக்கொண்டு நின்றிருந்தான். தனது வனவாசம் முடிந்து எப்போது திரும்பித் தன் தமையன் இராமபிரான் திரும்பி வருவான் என்று உயிரோடு விரதம் பூண்டு கொண்டிருக்கும் தன் மற்றொரு தம்பி பரதனைப்போல், இலக்குவன் வருகின்ற தன்மையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான் இராமபிரான்.

போருக்குச் சென்ற இலக்குவனுக்கு என்ன நேருமோ என்ற கலக்கம் ஒருபக்கம்; தன் தம்பி அறம் துணைநிற்கச் சென்றிருக்கிறான்; எனவே வெற்றியுடன்தான் திரும்பி வருவான் என்ற உறுதி ஒருபக்கம். இவற்றுடன் நின்றிருந்த இராமபிரானுக்கு ஒரு உவமை கூறுகிறான் பாருங்கள் கவிஞன். தன்னுடைய வனவாசம் முடிந்து எப்போது திரும்பி வருவான் என்று எதிர்நோக்கி விரதம் பூண்டு உயிருடன் இருந்து வாழும் பரதனைப்போல் இராமன் காத்துக் கொண்டு இருந்தான் என்கிறான் கவிஞன். காப்பியத்தில் பேசப்படுகின்ற ஒரு நிகழ்ச்சிக்கு, அதே காப்பியத்தில் மற்றொரு இடத்தில் பேசப்படுகின்ற நிகழ்ச்சியையே உவமையாகக் கூறுவதில் கம்பன் கை தேர்ந்தவன் என்பது காண்க. நந்திக்கிராமத்தில் கலக்கமுற்று விரதம்பூண்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருக்கும் பரதனுக்கு, இலங்கையில் இலக்குவனுக்கு என்ன நேருமோ என்று கலக்கமுற்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நிற்கும் இராமபிரானே உவமை. இராமபிரான் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடிந்து திரும்பி அயோத்திக்கு வராதிருந்தால் தீயுள்புகுவான் என்பது முன்னர்த் தெரிவிக்கப்பட்ட கருத்து. அதைப்போலவே இலக்குவன் இங்கே இப்போது இந்திரசித்தனை வென்று வெற்றியுடன் வராதிருந்தால் தானும் உயிர்துறக்கத் தயாராய் இருந்தான் என்பது ''உயிரினோடும்'' என்ற சொல்லுக்குரிய மறைபொருள்.

64. வன்புலம் கடந்து மீளும் தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புல நயனம் என்னும் தாமரை சொரியும் தாரை,
அன்புகொல்? அழு கணீர்கொல்? அனந்த வாரியேகொல்?
என்புகள் உருகிச்சோரும் கருணைகொல்? யார்அது ஓர்வார்? (9262)

(வன்-வலிய; புலம்-பகைப்புலம்/போர்க்களம்; கடத்தல்-வெல்லுதல்; நயனம்-கண்கள்; தாரை-ஒழுக்கு; அனந்தவாரி-உவகைக்

Koviloor Digital Library

கண்ணீர்; ஓர்வார்-ஆராய்ந்து அறிபவர்; வாரி-கடல்; புலன்-அறிவு; புலம்-களம்; மாலை-வரிசை; சோர்தல்-பெருகுதல்)

''பகைவர்களது போர்க்களத்திற்குச் சென்று, அவர்களை வெற்றி பெற்று மீண்டுவரும் தன்தம்பி இலக்குவன்மேல் தான் வைத்த தனது கட்புலனாகிய தாமரைமாலை, மாலை மாலையாகக் கண்ணீரைப் பெருக்குகிறதே! இது இராமபிரான் இலக்குவன்மீது கொண்ட அன்பினால் விளைந்ததா? அவன் உடல்நிலை கண்டு வருந்தி அழுததால் உண்டானதா? அவன் வெற்றிபெற்று வருவதால் ஏற்பட்ட மகிழ்ச்சியால் விளைந்த நீர்ப்பெருக்கா? எலும்புகளும்கூட உருகிப்போகும் வண்ணம் உகுக்கின்ற கண்ணீர் அவன்மீது கொண்ட கருணையால் விளைந்ததா? யார்தான் இதனை அறுதியிட்டுக் கூறமுடியும்?'' என்கிறான் கவிஞன்.

ஒருவர்க்குக் கண்ணீர்வருவது என்பது நான்கு காரணங்களால் அமைய முடியும். அவை அன்பு, அழுகை, ஆனந்தம், கருணை என்பனவாம். அன்பு காரணமாகக் கண்ணீர்வரும். ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்? ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும்'' என்பது குறள். இது நாமும் வாழ்வில் அனுபவிப்பதே; அடக்கமுடியாத அழுகையின்போது கண்ணீர் வரத்தான் செய்யும். இது உடலியல் கூறு, அளவுகடந்த மகிழ்ச்சியின்போதும் அழுகை கரைகடந்து வரும். இதுவும் நாம் தினம்தினம் அனுபவிப்பதே. என்பு உருக இறைவனை எண்ணும்போதும், கருணையின் காரணத்தாலும் கண்ணீர் சொரிதல் உண்டு. எனவே இந்த நான்கனுள் இப்போது இராமபிரான் எந்தக் காரணத்திற்காகக் கண்ணீர் சொரிகிறான்? என்று கேட்கும் கவிஞன், இதை யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது என்றும் கூறி முடிக்கிறான்.

உவகையினால் கண்ணீர் பெருகும். கருணையென்பது தொடர்பு கருதாத மனநெகிழ்ச்சியைக் குறிக்கும். 'புலநயனம் என்னும் தாமரை' என்பது உருவகம். கட்புலனை-கண்ணைத் தாமரையாக உருவகித்தார் என்பதாம். இலக்குவனால் விளைந்த நன்மையால் எல்லா உலகங்களும் மகிழ்ச்சி பெறச்செய்வேன் என்ற கருணையாலும் இராமபிரான் அழுதிருக்கலாம் என்பது கவிஞனின் யூகம் என்பதும் தெரியவருகிறது.

65. இந்திரசித்தனின் தலையை இராமபிரான் திருவடிகளில் வைத்து வணங்குதல்

விழுந்து அழி கண்ணின் நீரும், உவகையும், களிப்பும், வீங்க
எழுந்து எதிர்வந்த வீரன், இணைஅடி முன்னர் இட்டான்;
கொழுந்து எழும் செக்கர்க்கற்றை வெயில்விட, எயிற்றின் கூட்டம்
அழுந்துற, மடித்த பேழ்வாய்த்தலை அடியுறை ஒன்று ஆக. (9263)

Koviloor Digital Library

(அழிதல்-இறங்கிவிழுதல்; வீங்குதல்-பெருகுதல்; வீரன்-இராம பிரான்; இணை-இரண்டு; செக்கர்-செவ்வானம்; கற்றை-முடி; வெயில்-ஒளி; பேழ்-பிளந்த; அடியுறை-பாதகாணிக்கை)

அவ்வாறு இலக்குவனையும் அங்கதனையும் அனுமனையும் கண்ட இராமபிரான் தன் கண்களினின்றும் பெருகி வழிகின்ற கண்ணீர், உவகையாலும், மிகுந்த பரவசத்தாலும் பெருக, தான் இருந்த இடத்தைவிட்டு எழுந்து அவர்களை நோக்கி வந்தபோது, கொழுந்துவிட்டெரியும் செவ்வானத்தின் தொகுதி ஒளிவீசும்படியான செம்பட்டை மயிர்க் கற்றையும், பற்களின் தொகுதி சினத்தால் அழுந்திப் பதியுமாறு மடித்த பிளந்த வாயையுடையவனுமான இந்திரசித்தனின் தலையை, ஒரு பாதகாணிக்கையாக இராமபிரான் இரு திருவடிகளின் முன்னர் வைத்தான்.

வைத்தது யார் என்பது பற்றிக் கவிஞன் கூறவில்லை. தலை எடுத்துக்கொண்டு வந்த அங்கதன் வைத்ததாகவும், அவனிடமிருந்து அதை வாங்கி இலக்குவன் வைத்ததாகவும் கொள்ள இடம் உண்டு. 'உவகை' என்ற சொல்லும் 'களிப்பு' என்ற சொல்லும் ஒரே பொருளையே தருவதேனும், இங்கே களிப்பு என்பது இராமபிரானின் பரவச நிலையை உணர்த்தியது எனக்கொள்க. இறந்துபட்ட பின்பும் அவன் தலை முடியையும், முகத்தையும் பற்களையும், வாயையும் படம்பிடித்துக் காட்டும் கவிஞனின் கற்பனைத்திறன் நோக்குக. 'அடியுறை' என்பது பாதகாணிக்கையைக் குறிக்கும். இறைவனையோ, சான்றோர்களையோ காணச் செல்லும்போது வெறும் கையுடன் செல்லக்கூடாது. ஒரு சிறந்த பொருளை வைத்து வணங்க வேண்டும் என்பதை உணர்த்துவதுபோல் பாடல் அமைந்திருக்கும் நயம் நோக்குக. அவன் தலைமுடி செம்பட்டை நிறமுடையது. எனவே ''கொழுந்து செக்கர்கற்றை'' என்றார் என்க. ''ஈட்டிய பல்பொருள்கள் எம்பிரானுக்கு அடியுறை என்று'' என்பது திவ்யப்பிரபந்தம்.

66. தலையினை நோக்கும்; தம்பி கொற்றவை தழீஇய பொன்தோள்
மலையினை நோக்கும்; நின்ற மாருதி வலியை நோக்கும்;
சிலையினை நோக்கும்; தேவர் செய்கையை நோக்கும்; செய்த
கொலையினை நோக்கும்; ஒன்றும் உரைத்திலன், களிப்புக் கொண்டான்.
(9264)

(கொற்றவை-வெற்றித்திருமகள்; மலை-தோள்; தழீஇய-தழுவிய/பொருந்திய;

அவ்வாறு தன் திருவடிகளில் வைக்கப்பெற்ற இந்திரசித்தனின் தலையைக் கண்டவனாகிய இராமபிரான் எதுவும் பேசாது மிக்க மகிழ்வு கொண்டான். பின்னர், எவராலும் அழிக்கமுடியாத இந்திரசித்தனின் தலை தன் காலடியில் கிடப்பதைப் பார்ப்பான்; அத்தகைய தலையை வீழ்த்திய

Koviloor Digital Library

தன்தம்பி இலக்குவனின் வெற்றித்திருமகள் வீற்றிருக்கும் அழகிய மலைபோன்ற பெரிய தோள்களைப் பார்ப்பான்; அங்கே இலக்குவனுக்கு ஊர்தியாக இருந்து செயல்பட்ட அனுமனின் வலிமையை எண்ணிப் பார்ப்பான்; இலக்குவனின் கையில் பிடித்திருந்த விற்படையையும் உற்றுப்பார்ப்பான்; இந்திரசித்து இறந்துபட்டதனால் தூசுவீசி ஆர்ப்பரித்த தேவர்களின் செய்கைகளையும் பார்ப்பான்; இலக்குவன் அறம்தலை நிறுத்துதற்காகச் செய்த செயற்கரிய இந்தக் கொலையின் தன்மையையும் ஆராய்ந்து பார்ப்பான்; எனினும் ஏதும் பேசாது மகிழ்ச்சியுடன் நின்றிருந்தான்.

மிக்க மகிழ்ச்சி வந்துற்றபோது பேசுவது முடியாது. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? என்பது நாம் முன்பு கண்டுவந்ததே. அதுபோல அசோகவனத்தில் அனுமனிடமிருந்து கணையாழியைப் பெற்ற சீதாதேவி மகிழ்ச்சியால் ''ஏங்கினள், இருந்ததல்லால் இயம்பலள் இருந்தாள்'' என்று கண்டுவந்ததையும் இங்கு ஒப்பிட்டு நோக்குக. யாராலும் அழிக்க முடியாத தேரினை அழித்ததாலும், ஈசனிடமிருந்து பெறப்பட்ட வில்லைக் கீழே தள்ளியதாலும் வெற்றித்திருமகள் இலக்குவன் தோள்களில் வீற்றிருந்தாள் என்பதாம். 'பொன்தோள்மலை' என்பது உருவகம். நோக்கம் என்பது கண்ணால் பார்த்தல், கருத்தால் நோக்குதல் என இருவகைப்படும். கண்எதிரே தெரிவதைப் பார்ப்பது ஒன்று, இந்திரசித்தனின் தலையும், இலக்குவன் வில்லும் கண்எதிரே தெரிவன. கட்புலனுக்கு அகப்படாதவற்றைக் கருத்தால் நோக்குதல் மற்றொன்று. கொற்றவை தழீஇய பொன்தோள் மலையும், மாருதி வலியும், செய்த கொலையும் கருத்தால் மட்டுமே எண்ணிப்பார்க்கத் தக்கன. அவன் கண்களால் பார்க்க முடியாதனவாகும்,

67. காளமேகத்தைச் செக்கர் கலந்தென, கரிய குன்றில்
நாள் வெயில் பரந்தது என்ன, நம்பி, தன் தம்பி மார்பில்
தோளின்மேல், உதிரச் செங்கேழ்ச் சுவடு தன் உருவில் தோன்ற,
தாளின்மேல் வணங்கினானைத் தழுவினன், தனித்து ஒன்று இல்லான்.
(9265)

(உதிரம்-இரத்தம்; செங்கேழ்-செந்நிறம்; காளமேகம்-கரியமேகம்; செக்கர்-செவ்வானம்; நாள்-காலைப்பொழுது; நம்பி-பெரியோன்/இராமபிரான்; சுவடு-காயங்கள்/திருவடிகள்; உரு-மேனி)

தன் தம்பியைத் தவிரத் தனக்குத் துணையென்று தனித்து வேறொன்றுமில்லாதவனான ஆடவருள் சிறந்தவனான இராமபிரான், இப்போது கரிய மேகத்தைச் சிவந்த செவ்வானம் கலந்ததுபோலவும், கரியமலை ஒன்றின் மேல்காலைச்சூரியன்தன் ஒளியைப் பரப்பியதுபோலவும், தன்தம்பியான இலக்குவனது மார்பிலும், தோளிலும் படிந்திருந்த இரத்தக் காயங்களின் சிவந்த குறிகள் தன்னுடைய திருமேனியிலும் பொருந்துமாறு தன்

Koviloor Digital Library

பாதங்களில் விழுந்து வணங்கியவனான இலக்குவனை நெஞ்சாரத் தழுவிக்கொண்டான்.

காளமேகமும், கரியகுன்றமும் இராமபிரானுக்கும், செக்கரும், நாள்வெயிலும் இலக்குவனுக்கும் நிறத்தால் உவமை. 'நாள்வெயில்' என்பது விடியற்காலைப்போதில் தோன்றும் செஞ்சூரியனின் வெயிலைக் குறிக்கும். இலக்குவன் மேனியில் உள்ள தழும்புகள் தன் மேனியிலும் அழுந்திப் பதியும் வண்ணம் இலக்குவனைத் ஆரத் தழுவிக்கொண்டான் என்பதாம். 'தனித்து ஒன்று இல்லான்' என்பது தனக்குத்தானே உவமையானவன், வேறு எதற்கும் உவமை கூறமுடியாதவன் என்ற பொருளையும் தரும். தன் இன்பத்திலும் துன்பத்திலும் தனக்குத் தற்போது துணையாக இருப்பவன் இலக்குவன் மட்டுமே என்ற பொருளும் பொருந்திவருதல் காண்க.

68. தம்பி உடையான் பகை அஞ்சான்

கம்ப மதத்துக் களியானைக் காவல் சனகன் பெற்றெடுத்த
கொம்பும் என்பால் இனிவந்து குறுகினள் என்று அகம் குளிர்ந்தேன்;
வம்பு செறிந்த மலர்க்கோயில் மறையோன் படைத்த மாநிலத்தில்,
'தம்பி உடையான் பகை அஞ்சான்' என்னும் மாற்றம் தந்தனையால்.
(9266)

(கம்பம்-அசைந்தாடுதல்/கட்டுத்தறி; குறுகுதல்-நெருங்குதல்; வம்பு-நறுமணம்; செறிதல்-நிறைந்திருத்தல்; மறையோன்-பிரமதேவன்; மாற்றம்-சொல்)

''இலக்குவ! நீ இந்திரசித்தனை வென்று கொன்ற உடன் கட்டுத்தறியில் கட்டப்பட்டிருப்பதும், அசைந்தாடும் இயல்புடையதும், மதக்களிப்புக் கொண்டதுமானயானையைப்போல்தன்இனத்து மக்களைக்காவல்புரிந்து வரும் சனக மன்னன் ஈன்றெடுத்தவளும், பூங்கொம்பு போன்ற மெல்லிய இடையை உடையவளுமான சீதாதேவி என்னை வந்து நெருங்கிவிட்டாள் என்று கருதி மனம் மகிழ்ந்தேன். நறுமணம் மிக்க தாமரைமலரையே கோயிலாகக் கொண்டு வீற்றிருக்கும் வேத முதல்வனான பிரமதேவன் படைத்த இப்பெரிய உலகத்தில் உன்னைப்போன்ற தம்பியை உடையவன் எத்தகைய பகைவனுக்கும் அஞ்சவேண்டியதில்லை'' என்று உன் பெருவீரத்தைக் காட்டி என் புகழை நிலைநிறுத்தினாய்'' என்று இராமபிரான் இலக்குவனைப் பாராட்டுகிறான்.

தன் இனத்தைக் காப்பாற்றுவதில் யானை சிறப்புப்பெற்றது. அதுபோலச் சனக மன்னனும் தன் குலத்துக் குடிமக்களுக்கு எந்தத் தீங்கும் நேராது காத்து வருவதால் சனகனைக் கம்பமதத்துக் களியானைக்கு உவமித்தார் என்க. ''தம்பி உடையான் பகை அஞ்சான்'' என்ற இந்தச்

Koviloor Digital Library

சொற்றொடர்தான் இன்று "தம்பி உடையான் படைக்கு அஞ்சான்" என்று மருவி வழங்குகிறது என்பதை நினைக. இந்திரசித்தனை இலக்குவன் வென்று கொன்றழித்ததனால், இனி இராவணனை வெல்லுவதும், கொல்லுவதும், சீதாதேவியைச் சிறைமீட்பதும் அரிதன்று. எளிதே என இராமபிரான்கருதி இலக்குவனைப் பாராட்டினான் என்பதாம். "எம்பியை இங்கு பெற்றேன், என்எனக்கு அரியது என்றான்" என்பது சீவகசிந்தாமணி. இந்தப்பாடல் பல ஏட்டுச் சுவடிகளில் காணப்படவில்லை. எல்லாப் பிரதிகளிலும் இப்பாடல் மிகைப் பாடலாகவே கொள்ளப் பட்டிருக்கிறது. எனினும் சென்னைக் கம்பன் கழகப் பதிப்பில் உள்ளதால் இதற்கும் பொருள் தரப்பட்டது.

69. தூக்கிய தூணி வாங்கி, தோளொடு மார்பைச் சுற்றி
வீக்கிய கவசபாசம் ஒழித்து, அது விரைவின் நீக்கி,
தாக்கிய பகழிக் கூர்வாய் தடிந்த புண் தழும்பும் இன்றிப்
போக்கினன், தழுவிப் பல்கால், பொன் தடந்தோளின் ஒற்றி. (9267)

(தூக்குதல்-தொங்கவிட்டிருத்தல்; தூணி-அம்பறாப்புட்டில்; வாங்குதல்-கழற்றுதல்; வீக்குதல்-கட்டியிருத்தல்; பாசம்-கயிறு; ஒழித்தல்-இங்கே கவிழ்த்தல்; தடிந்த-வெட்டப்பட்ட; தழும்பு-சுவடு; பல்கால்-பலமுறை; பொன்-அழகிய)

இலக்குவன் தன்தோளில் தொங்கவிட்டிருந்த அம்பறாத்தூணியைக் கழற்றிவிட்டு, தோள்களோடு மார்பைச் சுற்றிக் கட்டியிருந்த கவசத்தின் கயிற்றையும் அவிழ்த்துவிட்டு, அக்கவசத்தை விரைவாக நீக்கிவிட்டு, பகைவர்களால்தாக்கப்பட்ட அம்பின்கூரிய முனைகளால் வெட்டப்பட்ட புண்களினால் ஏற்பட்ட வடுக்கள்கூட இல்லாதவாறு அன்புபெருகத் தன் அழகிய பெரிய தோள்களால் பலமுறை ஒற்றித்தழுவி அவன்களைப்பைப் போக்கினான் இராமபிரான்.

'ஒற்றுதல்' என்பது இப்போது ஒத்தடம் கொடுத்தல் என்று வழங்குவதாகும். முன்பு கரதூஷணர்களைத் தனியாகச் சென்று அழித்துவந்த இராமபிரானுக்கு ஏற்பட்ட புண்களை, சீதாதேவி இராமனை ஆலிங்கனம் செய்து போக்கினாள் என்று வான்மீகம் கூறுவதை இங்கு நினைவுகூர்தல் தகும். கம்பன் "அண்ணல் வீரனைத் தம்பியும் அன்னமும் கண்ணின் நீரினில் பாதம் கழுவினார்" என்றே கூறுகிறான் என்பதும் கருதத்தக்கது. இப்போது இராமபிரான் அவ்வாறே இலக்குவனைப் பலமுறை தழுவிக் களைப்பைப் போக்கினான் என்க. புண் என்பது அப்போது ஏற்பட்ட ஆறாதகாயம். தழும்பு என்பது காய்ந்த வடு-சுவடு-அடையாளம். வள்ளுவன் இதை நன்கு வேறுபடுத்திக் காட்டுவதைக் கேளுங்கள். "தீயினாற் சுட்ட புண் உள் ஆறும், ஆறாதே நாவினால் சுட்டவடு" என்பது குறள்-129.

Koviloor Digital Library

70. இராமபிரான் ''வீடணன் தந்த வெற்றி இது'' என்று கூறுதல்

''ஆடவர் திலக! நின்னால் அன்று; இகல் அனுமன் என்னும்
சேடனால் அன்று; வேறு ஓர் தெய்வத்தின் சிறப்பும் அன்று;
வீடணன் தந்த வென்றி ஈது'' என விளம்பி, மெய்ம்மை
ஏடவிழ் அலங்கல் மார்பன், இருந்தனன் இனிதின்; இப்பால். (9268)

(ஏடு-இதழ்கள்; அவிழ்தல்-விரிதல்; அலங்கல்-மலர்மாலை; திலகன்-சிறந்தவன்; இகல்-வலிமை; சேடன்-உயர்ந்த பண்பினன்/சிரேஷ்டன்; விளம்புதல்-கூறுதல்)

இதழ்கள் விரியப்பெற்ற மலர்மாலையணிந்த மார்பினை உடையவனான இராமபிரான், இலக்குவனை நோக்கி, ''ஆடவருள் சிறந்தவனே! இலக்குவ! இப்பொழுது நீ பெற்றிருக்கும் வெற்றி உன்னால் உண்டானது அல்ல; வல்லமை பொருந்திய அனுமன் என்று வழங்கப்பெறும் மேன்மையானவனாலும் கிடைத்தது அல்ல; அல்லது வேறு ஓர் தெய்வத்தின் சிறப்பாலும் உதவியாலும்கூட இந்தவெற்றி பெறப்படவில்லை. இதற்கெல்லாம் உண்மையான காரணம் வீடணன்தான். எனவே இது வீடணன் நமக்குத் தந்த வெற்றி என்றே நான் கருதுகிறேன் என்று உண்மைக் காரணத்தைக்கூறி இனிது வீற்றிருந்தான் இராமபிரான்.

'சேடன்' என்பது சிரேஷ்டன் என்ற வடசொல்லின் திரிபு எனக்கொள்க. மேன்மையானவன், சிறந்த பண்பினன் என்ற பொருளைத்தரும். இந்திரசித்து இலக்குவனுடன் தொடர்ந்து மூன்று நாட்கள் போர்செய்து மடிந்தான் என்று வான்மீகம் பேசுகிறது. இதே இராமபிரான் முன்பு ''கெடுத்தனை வீடணா!'' என்று சீறிச்சொன்னவன் அந்தக் காயம் மறைவதன் பொருட்டு இப்போது அதே இராமபிரான் ''வீடணன் தந்த வென்றிஈது'' என்று பாராட்டுவதையும் உணர்க. வீடணன் இலக்குவன் உடன் இருந்து அவ்வப்போது அவனுக்கு இந்திரசித்தனை எப்படிக் கொல்வது என்று கூறியிருக்காவிட்டால் இலக்குவன் இந்திரசித்தனை வென்று, கொன்றிருக்க முடியாது என்பது புலப்பட, இராமபிரான் வீடணனைப் புகழ்ந்து பாராட்டினான் எனக் கொள்ளவேண்டும். மாயா சீதைதான் வெட்டப்பட்டாள் என்பதும், நிகும்பலையில் இந்திரசித்து யாகத்தைத் தொடங்கி விட்டான் என்பதும் வீடணன் தந்த குறிப்புக்கள். அதனால்தான் இலக்குவனால் அதற்கேற்றபடி போர்செய்து இந்திரசித்தைக் கொல்ல முடிந்தது என இராமபிரான் கருதி, அவனைப் பாராட்டினான் என்க. 'இப்பால்' என்பது அடுத்த படலத்திற்கான தோற்றுவாயாகக் கொள்க.

இந்திரசித்து வதைப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

28. இராவணன் சோகப் படலம் [61 பாடல்கள்]

இலக்குவனால் இறந்துபட்ட இந்திரசித்தன் நிலையை ஒற்றர்கள் மூலம் அறிந்த இராவணன் பெருங்கவலையுள் ஆழ்ந்தது பற்றி விரிவாகப் பேசும் பகுதி. ஆதலின் இராவணன் சோகப் படலம் எனப்படலாயிற்று. இது 61பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''இராவணன் பிரலாபப் படலம்'' எனக் குறிக்கப் பெற்றிருக்கிறது. இப்படலத்தின் நிகழ்வுகளில் வான்மீகிக்கும், கம்பனுக்கும் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை அவ்வப் பாடல்களின் கீழ் தரப்பெற்றிருக்கின்றன.

இப்படலத்துள், இந்திரசித்து இலக்குவனால் கொல்லப்பட்டதை ஒற்றர்கள் மிக அழகாக எடுத்து இராவணனுக்குத் தெரிவித்தல்; சீற்றம் கொண்ட இராவணன் நல்லதல்லாத செய்தியைக் கூறிய ஒற்றர்களை வாளால் வெட்டுதல்; இராவணன் பலவும்கூறிப் புலம்புதல்; தானே போர்க்களம் புகுந்து இந்திரசித்தனைத் தேடி, முதலில் அவன் கையையும், பின்னர் அவன் தலையற்ற உடலையும் பற்றிக் கதறுதல்; அவன் உடலை மட்டும் எடுத்துக்கொண்டு இலங்கை அரண்மனையுள் புகுதல்; மைந்தன் உடலை மட்டும் கண்டதால் மண்டோதரி அவன்மேல் வீழ்ந்து புலம்புதல்; இராவணன் இவையனைத்திற்கும் காரணம் சீதாதேவியே என்று கருதி அவளை வெட்டி வீழ்த்துவதற்காக வாளோடு புறப்படுதல்; பெண் கொலை பெரும் பாவம் என்றுகூறி அமைச்சன் மகோதரன் இராவணனைத் தடுத்தல்; இராவணன் தலையில்லா முண்டத்திற்கு இறுதிக்கடன்கள் நிறைவேற்ற இயலாது என்று கருதி, அதனைத் தைலத்தோணியில் இட்டுவைக்குமாறு ஏவலர்க்குக் கட்டளையிடுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. ஒற்றர்கள் இந்திரசித்து இறந்தமையை இராவணனுக்குத் தெரிவித்தல்

ஓத ரோதன வேலை கடந்துளார்,
பூதரோதரம் புக்கென, போர்த்து இழி,
சீதரோதக் குருதித்திரை ஒரீஇ,
தூதர் ஓடினர், தாதையின் சொல்லுவார். (9269)

Koviloor Digital Library

(ரோதனம்-அழுகை; ஓதம்-அலை; வேலை-கடல்; தாதை-தந்தை; சொல்லுவான்-சொல்லும் பொருட்டு; பூதரம்-பூமி; உதரம்-வயிறு; பூதரஉதரம்-பூமியின் வயிறு/மலை; இழிதல்-ஒழுகுதல்; சீதம்-குளிர்ச்சி; ரோதம்-துன்பம்; ஒரீஇ-கடந்து; திரை-அலை/கடல்)

போர்க்களத்தில் நின்றிருந்த ஒற்றர்கள், அலைகள் நிறைந்ததும், அரக்கர்களின் அழுகைக்குரல் போன்றதுமான கடல் ஓசையை அரிதின் கடந்து போர்க்களத்தையே மூடும் வண்ணம் பெருகி ஓடுகின்ற இரத்த வெள்ளத்தின், குளிர்ச்சி மிகுந்த கரையையும் கடந்து, பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற பெருவயிறு போன்ற மேருமலைக்குள் நுழைவது போல இலங்கையின் அரண்மனை வாயிலுக்குள் புகுந்து, இந்திரசித்தன் இறந்த செய்தியை அவன் தந்தை இராவணனுக்குத் தெரிவிக்கும் பொருட்டு, விரைந்து ஓடிச்சென்றனர்.

ஓதம், ரோதனம், பூதரம், உதரம், சீதம் என்பனவெல்லாம் வடமொழிச் சொற்கள். அவற்றை மொழிமாற்றம் செய்யாமல் அப்படியே கையாண்டிருக்கும் தன்மை நோக்குக. இந்திரசித்து இறந்த செய்தியை இராவணனுக்குத் தெரிவிப்பதற்காகப் போர்க்களத்தில் நின்றிருந்த ஒற்றர்கள், அரக்கர்களின் பேரொலி எழுப்புகின்ற கடலையும், போர்க்களத்தில் ஓடுகின்ற இரத்தம் நிறைந்த கரையை உடைய கடலையும் அரிதின் முயன்று கடந்து மேருமலைபோல் பருத்த வடிவமுடைய இலங்கை அரண்மனையுள் புகுந்தனர் என்பதாம். வான்மீகம் இந்தச் செய்தியை அமைச்சர்கள் இராவணனுக்குத் தெரிவித்ததாகக் கூறுகிறது. போர்க்களத்தில் அமைச்சர்கள் நின்றிருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதாலும், ஒற்றர்களுக்கே அந்த வாய்ப்பு உண்டு என்பதாலும், கம்பன் இங்கு வேறுபட்டிருக்கிறான் என்பதை உணர்க. 'ரோதம்' என்ற சொல் இன்றும் அதே துன்பம் என்ற பொருளில் 'ரோதனை பண்ணாதே' என்று வழங்கப்படுவதையும் இங்கு நினையலாம். 'சொல்லுவான்' என்ற சொல்லை வான்ஈற்று வினையெச்சமாகக் கொண்டு சொல்லும் பொருட்டு என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும் இங்கே சொல்லுவார் என்று கூறியிருப்பது கருதத்தக்கது. சென்னைக் கம்பன் கழகச் செம்பதிப்பு 'சொல்லுவார்' என்றே கூறுகிறது. மற்ற பதிப்புக்கள் எல்லாம் சொல்லுவான் என்றே குறிக்கின்றன.

2. அன்றில் அம் கரும் பேடைகளாம் என,
முன்றிலெங்கும் அரக்கியர் மொய்த்து அழ,
'இன்று இலங்கை அழிந்தது' என்று ஏங்குவார்,
சென்று, இலங்கு அயில் தாதையைச் சேர்ந்துளார். (9270)

(அம்-அழகிய; இலங்குதல்-விளங்குதல்; அயில்-கூர்மை/வேற்படை; தாதை-தந்தை; பேடை-பெண்அன்றில்)

Koviloor Digital Library

அழகிய கரிய பெண் அன்றிற் பறவைகளைப்போல, அரண்மனையின் முற்றங்கள்தோறும் அரக்கியர் நெருங்கி இருந்து அழவும், ''இன்று இலங்கை நகரமே அழிந்துபட்டது'' என்று ஏங்கிக் கூறிக்கொண்டு தூதுவர்கள் சென்று, இந்திரசித்தனின் தந்தையும், விளங்குகின்ற கூர்மையான வேற்படையைக் கொண்டுள்ளவனுமான இராவணனைச் சென்று சேர்ந்தார்கள்.

கரிய அரக்கமகளிர்க்கு ''அன்றில் அம்கரும் பேடைகள்'' ஒப்பு; இங்கே அரக்கியர் என்பது இந்திரசித்தின் அந்தப்புர மகளிரைக் குறிக்கும். முன்பு இந்திரசித்து போருக்குக் கிளம்பும்போதே, இவர்களும் அவனுடன் சென்று உயிர்துறக்கத் தயாராய் இருந்தவர்கள் என்பதையும் இங்கே நினைவுகூர்க. இலங்கையின் இளவரசனான இந்திரசித்து இறந்து பட்டதால் ''இன்று இலங்கை அழிந்தது'' எனத் தூதுவர்கள் கூற நேரிட்டது என்க. 'முன்றில்' என்பது 'இல்முன்' என்பதன் இலக்கணப்போலி. அன்றில் நெய்தல் நிலப்பறவை, ஆணும் பெண்ணும் எப்போதும் சேர்ந்தேவாழும் இயல்பினது.

3. பல்லும், வாயும், மனமும், தம் பாதமும்
நல் உயிர்ப் பொறையொடு நடுங்குவார்,
"இல்லை ஆயினன் உன்மகன் இன்று" எனச்
சொல்லினார், பயம் சுற்றத் துளங்குவார். (9271)

(உயிர்ப்பொறை-உடம்பு; துளங்குதல்-நிலைகலங்குதல்; பொறை-பாரம்/சுமை)

அவ்வாறு ஓடிவந்த தூதுவர்கள் இராவணன் என்ன சொல்வானோ என்ற அச்சம் சூழ்ந்து கொள்ள, கலக்கமுற்றவர்களாய், தங்கள் பல்லும், பல்லிருக்கும் வாயும், மனமும், கால்களும், சிறந்த உடம்பும் நடுங்கப் பெற்று, இராவணனிடம் ''உன் மகன் இன்று இல்லாமல் போய்விட்டான்'' என்று கூறினார்கள்.

மன்னனுக்குத் துன்பம் தரக்கூடிய அமங்கலச் செய்தியைச் சொல்லும் போது, தூதுவர்களும், ஒற்றர்களும் என்ன பாடுபடுவர் என்பதை இப்பாடல் தெளிவாகக் கூறுவதைப் பாருங்கள். உன் மகன் இறந்து பட்டான் என்று கூறுவதற்கு அஞ்சி, ''இல்லை ஆயினன் உன்மகன்'' என்று கூறிய நேர்த்தியை உணர்க. முன்பு இராமபிரான் வனவாசம் செய்யப் பதினான்கு ஆண்டுகள் போகவேண்டும் என்று கூறவிரும்பாத கைகேயி ''ஏழ் இரண்டு ஆண்டில் வா'' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க. அவர்கள் சொல்லவந்த செய்தி ஒன்று, ஆனால் நடுக்கமுற்ற அவர்கள் உறுப்புக்கள் பல என்பதைக் கவிஞன் எப்படிக் கூறுகிறான் பாருங்கள்.

Koviloor Digital Library

4. மாடு இருந்த வர மாதவர், வானவர்,
ஆடல் நுண் இடையார், மற்றும் யாவரும்
'வீடும் இன்று இவ்வுலகு' என விம்முவார்,
ஓடி, எங்கணும் சிந்தி ஒளித்தனர். (9272)

(மாடு-பக்கம்; வானவர்-தேவர்கள்; வீடும்-வீழும்/அழியும்; விம்முதல்-புலம்புதல்)

அவ்வாறு ஒற்றர்கள் வந்து கூறிய அளவில், அப்போது இராவணன் பக்கத்தில் இருந்த மிகுந்த தவம் உடையவர்களும், தேவர்களும், ஆடற் கலையில் வல்லவரும், நுண்ணிய இடையைக் கொண்டவருமான ஆடல் மகளிரும், மற்றும் அங்கிருந்த எல்லோரும், ''இராவணன் கொள்ளப் போகும் சீற்றத்தால் இந்த உலகமே இன்று அழியப்போகின்றது; நாமும் அழிந்துபடுவோம்'' என்று புலம்பிக்கொண்டே அங்கிருந்து அகன்று எல்லாப் பக்கங்களிலும் சிதறி ஓடித் தங்களை அவன் கண்களில் படாதவாறு ஒளித்துக் கொண்டனர்.

5. இராவணன் ஒற்றர்களை வாளால் வீசித் தானும் தரையில் வீழ்தல்

சுடர்க் கொழும் புகை தீவிழி தூண்டிட,
தடற்று வாள் உருவி, தரும் தூதரை,
மிடற்று வீசல் உறா, விழுந்தான் அரோ!
கடல் பெருந் திரைபோல் கரம் சோரவே. (9273)

(தூண்டுதல்-வெளியிடுதல்/கக்குதல்; தடறு-உறை; மிடறு-கழுத்து)

தனது கண்களில் நெருப்புப்பொறி ஒளிவிட்டுப் பறக்கவும், புகை மண்டிப் பரவவும், தனது உறையிலிருந்த வாட்படையை உருவி, அந்தத் துயரச் செய்தியைக்கொணர்ந்து தந்த ஒற்றர்களின் கழுத்தை நோக்கி வீசினான். அப்போது கடலைப்போன்ற தனது இருபது கரங்களும் சோர்வுற்றுத் தானும் தரையில் சாய்ந்து வீழ்ந்தான்.

'தடறு' என்பது ஆயுதம் வைக்கும் உறையைக் குறித்தது. இச்சொல் நமக்குப் புதிது. இராவணனின் அகன்ற விரிந்த நீண்ட பெரிய இருபது கைகளுக்கு ஓங்கி உயர்ந்து மடங்கி விழும் பெரிய கடலலைகள் உவமை; முன்பு அனுமன் தூது வந்தபோது அவனைக் கொல்லக் கட்டளையிட்ட இராவணனைத் தடுத்து நிறுத்த அப்போது வீடணன் அங்கே இருந்தான். இப்போது வீடணன் அங்கு இல்லாததாலும், இராவணனே தன் நிலையில் இல்லாததாலும் தூதரைக் கொல்ல நேர்ந்தது எனக்கொள்க. ''குடத்துள் விளக்கும், தடற்றுள் வாளும்போல என்பது இறையனார் களவியலுரை.

Koviloor Digital Library

6. இராவணன் புலம்புதல் [17 பாடல்கள்]

"வாய்ப் பிறந்தும், உயிர்ப்பின் வளர்ந்தும், வான்
காய்ப்பு உறும் தோறும் கண்ணிடைக் காந்தியும்
போய்ப் பிறந்து, இவ்வுலகைப் பொதியும் வெந்
தீப் பிறந்துளது, இன்று" எனச் செய்ததால். (9274)

(உயிர்ப்பு-மூச்சுக்காற்று; காய்ப்புறுதல்-வெதுப்புதல்; காந்துதல்-வெப்பம் கொள்ளுதல்; பிறத்தல்-தோன்றுதல்; பொதிதல்-மூடுதல்; வான்-பெரிய/விண்)

இராவணனது வாயினின்று தோன்றியும், அவன் மூச்சுக்காற்றில் வளர்ச்சி பெற்றும், பெரிய கொதிப்பு அவன் முகத்தில் தோன்றும் போதெல்லாம் அவன் கண்ணிடத்தில் வெப்பம் மிகத் தோன்றியது. அவன் வாயினின்றும், மூக்கினின்றும், கண்ணினின்றும் கொடிய தீ தோன்றிப் பரவிய தோற்றம், இவ்வுலகத்தை ஊழியிறுதிக்காலத்தில் மூடி மறைக் கின்ற கொடிய ஊழித்தீயே தோன்றிவிட்டதோ?'' என்று காண்பவர் எண்ணுமாறு இருந்தது.

இராவணனுக்கு ஏற்பட்ட சினத்தினால் தோன்றிய நெருப்புக்கு, ஊழிக் காலத்துத் தோன்றும் வடவைத் தீ உவமை; 'உலகைப் பொதியும் வெந்தீ' என்பது ஊழிக்காலத்துத் தோன்றும் வடவைத்தீயைக் குறித்தது. சினத்தீயின் வளர்ச்சி முறையைக் கூறுகிறான் பாருங்கள். முதலில் வாயில் தோன்றியது, பின்னர் மூக்கில் வளர்ந்தது, அதன் பின்னர் கண்ணில் பரவியது என்ற நயம் நோக்குக.

7. படம் பிறங்கிய பாந்தளும், பாரும் பேர்ந்து,
இடம் பிறங்கி, வலம் பெயர்ந்து ஈடுஉற,
உடம்பு இறங்கிக் கிடந்து உழைத்து, ஓங்கு தீ
விடம் பிறந்த கடலென வெம்பினான். (9275)

(பிறங்குதல்-விளங்குதல்; பாந்தள்-பாம்பு/ஆதிசேஷன்; பார்-பூமி; ஈடு-வலிமை; உழைத்தல்-வருந்துதல்; விடம்-விஷம்/நஞ்சு; வெம்புதல்-வெந்துபோதல்)

அவ்வாறு புலம்பிய இராவணன் தன் ஆசனத்திலிருந்து இறங்கித் தன் உடம்புதரையில் விழுமாறு புரண்டுதுன்புற்றான். அவன் இடப்பக்கமாகப் புரளும்போது, ஆயிரம் படங்கள் பொருந்தி விளங்குகின்ற ஆதிசேஷன் என்ற பாம்பும், அது தாங்கிக் கொண்டிருக்கின்ற இந்த பூமியும் இடப் பக்கமாக நிலைபெயர்ந்து புரண்டது. அதுபோல அவன் வலப்பக்கம் பூமியில் புரளும்போது, அந்தப் பரப்பும் பூமியும் நிலைதடுமாறி வலப் பக்கமாகப் பெயர்ந்து வலிமை இழந்துபோனது. பாற்கடலைக்

Koviloor Digital Library

கடையும்போது தோன்றிய நஞ்சினால் அந்தக் கடல் வெதும்பிப் போனதுபோல, இப்போது தன் வாயிலும் மூக்கிலும், கண்ணிலும் இருந்து பிறந்து பொங்கி எழுந்த சினத்தீயினால் வெதும்பினான் இராவணன்.

புத்திரசோகத்தினால் வருந்தித் தரையில் விழுந்து புரண்ட இராவணனுக்கு, நஞ்சு பிறந்தபோது வெதும்பித் தவித்த கடல் உவமை.

8. திருகு வெஞ்சினத் தீ நிகர் சீற்றமும்,
பெருகு காதலும், துன்பும், பிறழ்ந்திட,
இருபது என்னும் எரிபுரை கண்களும்,
உருகு செம்புஎன, ஓடியது ஊற்றுநீர். (9276)

(திருகு-மாறுபாடு; பிறழ்தல்-மாறிமாறித் தோன்றுதல்; எரி-நெருப்பு; புரை-ஒத்த; நீர்-கண்ணீர்; காதல்-அன்பு)

தன் பகைவரின்மேல் கொண்ட மாறுபட்ட கொடிய சினம் என்னும் நெருப்புப்போன்று தோன்றிய சீற்றமும், தன் புதல்வன் மேல் தான் கொண்ட மிகுதியான அன்பும், அவன் இறந்துபட்டானே என்றதனால் உண்டான துன்பமும் மாறிமாறித் தோன்றுதலால், இராவணனது இருபது என்னும் எண்ணிக்கையை உடைய நெருப்பைப் போன்று கொதிக்கும் கண்களினின்றும் பெருகுகின்ற கண்ணீர், செம்பை உருக்கி ஊற்றினாற் போல ஓடிப்பரவியது.

சிவந்த கண்களிலிருந்து வந்த இரத்தக் கண்ணீருக்கு உருக்கி ஊற்றப் பட்ட செம்பு, நிறத்தால் உவமை. பகைவர்மேல் சீற்றம்; புதல்வன்மேல் பாசம்; அவன் இறத்ததால் துயரம்; மூன்று புலன்களின் செயல்களும் மாறிமாறித் தோன்றின என்று, இராவணனின் சோகத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். சினத்தின் உச்சக்கட்டம் சீற்றம் எனக்கொள்க. இவனுக்கு வந்த சீற்றம் வெஞ்சினச் சீற்றம்; தீ நிகர் சீற்றம் என்க.

9. கடித்த பற்குலம், கற்குலம் கண்அற,
இடித்த காலத்து உரும்என எங்கணும்
அடித்த கைத்தலம் அம்மலை, ஆழிநீர்,
வெடித்த வாய்தொறும், பொங்கின, மீச்செல. (9277)

(கற்குலம்-மலைக்கூட்டங்கள்; உரும்-இடி; பற்குலம்-பல்வரிசைகள்; மலை-திரிகூடமலை; மீச்செலல்-மேல்பொங்கி வழிதல்; கைத்தலம்-கைகள்; அடித்தல்-மோதுதல்; கண்-கணுக்கள்; அறுதல்-தகர்தல்/பிளத்தல்)

இராவணன் மிக்க சீற்றம் கொண்டு தன் பத்து வாய்களில் இருக்கும் பல்வரிசைகளைக் கடித்தான்; அதனால்.மலைக் கூட்டங்களின் கணுக்கள் எல்லாம் தகர்ந்துபோயின; இடிஇடிக்கும் காலத்தில் எழும் பேரோசை

Koviloor Digital Library

போல எங்கணும் அவ்வொலி பரவியது; அவன் தன் கைகளால் தரையில் அடித்துத் தன் சினத்தை வெளிப்படுத்தினான்; அதனால் அந்தத் திரிகூடமலையைச்சுற்றியுள்ளகடலில்உள்ளநீரெல்லாம்பொங்கிஎழுந்து மேல் வந்தது போலவும் காணப்பட்டது.

'கண்' என்பது இங்கே மலைகளிலுள்ள கடினமான பகுதிகளாகிய கணுக்களைக் குறித்தது எனக்கொள்க. அவன் பற்களால் கடித்ததால் மலைக்கூட்டங்களெல்லாம் தகர்ந்து போயின; கைகளால் அடித்ததால் இலங்கையைச் சூழ்ந்துள்ள கடலின்நீர் பொங்கி எழுந்தது என்பதாம்.

10. "மைந்தவோ!" எனும்; "மாமகனே!" எனும்;
"எந்தையோ!" எனும்; "என் உயிரே!" எனும்;
"முந்தினேன் உனை; நான் உளனோ?" எனும்;
வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மையான். (9278)

(வெம்மை-கொடுந்துன்பம்; மா-சிறந்த/பெருமைமிக்க)

வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற்போன்று பெருந்துயர் கொண்ட இராவணன், இந்திரசித்தின் உடலைப் பார்த்து, ''ஐயோ! மகனே! சிறந்த பெருமைமிக்க மகனே! என்று புலம்புவான்; ''என் அப்பனே! என் உயிர் போன்றவனே!'' என்று அரற்றுவான்; ''உன்னை முன்னால் போகச்செய்து இன்னும் நான் உயிரோடு இருக்கிறேனே!'' என்று நொந்துகொள்வான்.

''வெந்த புண்ணில் வேல் நுழைவது'' என்பது பல காப்பியங்களில் பெருந்துயரத்திற்கு உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. இங்கே கும்பகருணன், அதிகாயன் முதலியோரை இழந்தது வெந்தபுண். இப்போது இந்திரசித்தாகிய தனது மூத்தமகன் இறந்து போனது, அந்த வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போன்றது என்க. இந்திரசித்து மூத்த மகன் என்பதால் ''மாமகனே'' என்றார் என்க. 'எந்தையே' என்று தன் மகனை அழைப்பது அன்பின் மிகுதியால் வந்த மரபு வழுவமைதி. 'ஓ' என்பனவெல்லாம் இரக்கக்குறிப்பு உணர்த்தும் இடைச்சொல்லாகும். வெந்த புண்ணில் நெருப்பு நுழைவது என்ற உவமையையும் நாம் முன்பு கண்டுவந்திருக்கிறோம். ''புண்ணிலாம் பெரும்புழையில் கனல் நுழைந்தால் என'' என்பது பாலகாண்டம் கையடைப்படலம். 'வெந்ததோர்புண்ணின்கண்வேல்கொண்டுநுழைப்பான்போல்''என்பது கலித்தொகை.

11. "புரந்தரன் பகை போயிற்று அன்றோ?" எனும்;
"அரந்தை வானவர் ஆர்த்தனரோ?" எனும்;
"கரந்தை சூடியும், பாற்கடல் கள்வனும்,
நிரந்தரம் பகை நீங்கினரோ?" எனும். (9279)

Koviloor Digital Library

(புரந்தரன்-இந்திரன்; அரந்தை-துன்பம்; கரந்தை-சிவகரந்தை/கொன்றை மாலை/திருநீற்றுப்பச்சை; சூடி-சூடியவன்/சிவபெருமான்)

இராவணன் மேலும், ''இந்திரசித்து இறந்துபட்டதனால் இப்பொழுது இந்திரன் தனது பகை நீங்கப்பெற்று விட்டானே'' என்பான்; ''இது வரையிலும் நம்மால் துன்பமே அனுபவித்துக் கொண்டிருந்த தேவர்கள் எல்லோரும் இப்போது மகிழ்ச்சியில் ஆரவாரித்திருப்பார்களே!'' என்பான்; கரந்தை என்னும் திருநீற்றுப்பச்சையைச் சூடிக்கொண்டுள்ள சிவபெருமானும், பாற்கடலில் தன்னை ஒளித்துக் கொண்டிருக்கும் கள்வனான திருமாலும், இனி எப்போதும் பகையே இல்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள் அல்லவா?'' என்று புலம்புவான்.

இந்திரசித்தனைக் கண்டால் இந்திரன், தேவர்கள், சிவபெருமான், திருமால் முதலியோர் அச்சம் கொள்வார்கள் என்றும், இப்போது அவன் இறந்துபட்டதால் இவர்கள் எல்லோரும் பகை ஒழிந்தது என்று மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்றும் புலம்புகிறான் இராவணன் என்பதாம். தனக்கும் இந்திரசித்துக்கும் அஞ்சித் தன்னைப் பாற்கடலில் ஒளித்துக் கொண்டிருத்தலால் திருமாலைக் 'கள்வன்' என்கிறான் இராவணன் என்க.

12. "நீறு பூசியும், நேமியும் நீங்கினார்,
மாறு குன்றொடு வேலை மறைந்துளார்,
ஊறு நீங்கினராய், உவணத்தினோடு
ஏறும் ஏறி உலாவுவார்" என்னுமால். (9280)

(நீறு-திருநீறு; நேமி-சக்கரப்படை; வேலை-பாற்கடல்; ஊறு-இடையூறு/துன்பம்; ஏறு-எருது/காளை/ரிஷபம்; உவணம்-கருடன்; குன்று-கயிலைமலை)

''தன் உடலெங்கும் திருநீறு பூசிக்கொண்டு காட்சியளிப்பவனாகிய சிவபெருமானும், சக்கராயுதத்தைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டிருக்கும் திருமாலும், முறையே மேடுபள்ளங்கள் நிறைந்த கயிலைமலையிலும், திருப்பாற் கடலிலும், உனக்கு அஞ்சித் தம்மை ஒளித்துக் கொண்டிருந் தார்கள். நீ இறந்துபட்டமையால் அந்தத்தடை நீங்கி இப்போது மகிழ்ச்சியால் சிவபெருமான் தனது வாகனமாகிய ரிஷபத்திலும், திருமால் தனது வாகனமாகிய கருடனின்மீதும் ஏறி அமர்ந்து கொண்டு, மகிழ்ச்சிபொங்க உலாவருவார்களே!'' என்று புலம்புகிறான் இராவணன்.

இந்திரசித்துக்கு அஞ்சித் தன்னைக் கயிலைமலையிலும், திருப்பாற் கடலிலும் ஒளித்துக்கொண்ட சிவபெருமானும், திருமாலும், இப்போது அச்சம்நீங்கி, தமது வாகனங்களாகிய ரிஷபத்தின்மீதும், கருடனின்மீதும் ஏறி மகிழ்ச்சியுடன் உலாவருவார்கள்! என்று ஆதங்கப்படுகிறான் இராவணன் என்பதாம்.

Koviloor Digital Library

13. "வான மானமும், வானவர் ஈட்டமும்,
போன போனதிசை இடம் புக்கன;
தானம் ஆனவை சார்கில; சார்குவது
ஊன மானிடர் வென்றி கொண்டோ?" எனும். (9281)

(ஈட்டம்-கூட்டம்; மானம்-விமானம்; தானம்-ஸ்தானம்/இருப்பிடம்; சார்தல்-சேர்தல்; ஊனம்-குறைபாடு/இழிவு)

''தேவர்களின் கூட்டமும், வானத்தில் அவர்கள் ஊர்ந்து செல்லுகின்ற தெய்வீகத்தன்மை பொருந்திய விமானமும், இந்திரசித்தின் எதிர் நிற்க அச்சம்கொண்டு எல்லாத் திசைகளிலும் போய் மறைந்து கொள்ளுமே யன்றி, தமக்கு உரிய இருப்பிடங்களைச் சென்று சேர்வனவல்ல. ஆனால் இப்பொழுது இந்த அற்பமான குறைபாடுள்ள மனிதர்கள் பெற்ற வெற்றியின் துணைகொண்டு தத்தம் இருப்பிடங்களைச் சென்று சேர்ந்து விடுவார்களே?'' என்று தன் ஆதங்கத்தைப் புலப்படுத்துகிறான் இராவணன்.

'மானம்' என்பது விமானம் என்பதன் முதற்குறை எனக்கொள்க. குறைபாடில்லாத உயர்ந்த தேவர்கள், குறைபாடுள்ள மனிதர்களின் உதவியுடன் தத்தம் இருப்பிடத்தைக் கைப்பற்றிக் கொள்வது பெருமைக்குரிய செயலாகுமா? என்கிறான் என்பதாம்.

14. "கெட்ட தூதர் கிளத்தினவாறு ஒரு
கட்ட மானிடன் கொல்ல, என் காதலன்
பட்டு ஒழிந்தனனே!" எனும்; பலமுறை
விட்டு அழைக்கும்; உழைக்கும்; வெதும்புமால். (9282)

(கெட்ட-கொடிய; கட்டம்-கஷ்டம்/வருத்தம்; காதலன்-புதல்வன்/இந்திரசித்து; தூதர்-ஒற்றர்கள்; விட்டு அழைத்தல்-குரலெடுத்துக் கூவி யழைத்தல்; உழைத்தல்-வருந்துதல்; கிளத்துதல்-கூறுதல்)

அறிவுகெட்ட, கொடிய ஒற்றர்கள் என்னிடம் வந்து, என் அன்புக்குரிய மகனை வருத்தும் இயல்புடைய ஒரு அற்பமானிடன் கொன்று போட்டான்'' என்று கூறினார்களே!'' என்று வருந்துவான். பின்னர் இவர்கள் கூறுவது பொய்யாக இருக்குமோ என்று கருதி அவன் பெயரைச் சொல்லி உரக்கக்கூவிப் பலமுறை அழைப்பான். அதற்கும் அவன் வாராதிருந்தமையால் மிக்க வருந்துவான்; உள்ளம் நொந்துபோவான்.

''கெட்டதூதர்'' என்றது இராவணனின் சினத்தினால் வெளிப்பட்ட கூற்று. அறிவுகெட்டவர், பண்புகெட்டவர், கெட்டசெய்தியைச் சொன்னவர் என்று பலபொருள்களைத் தரும் ஒருசொல். 'கட்டமானிடன்' என்பதும் சாதாரண உடலமைப்புக் கொண்ட ஒரு மனிதன் என்றும்,

Koviloor Digital Library

மனைவியைப் பிரிந்ததால் கஷ்ட நிலையில், வருத்தத்தில் இருக்கும் ஒரு மனிதன் என்றும் பொருள்படும்.

15. எழும்; இருக்கும்; இரைக்கும்; இரக்கம் உற்று
அழும்; அரற்றும்; அயர்க்கும்; வியர்க்கும்; போய்
விழும்; விழிக்கும்; முகிழ்க்கும்; தன்மேனியால்,
உழும் நிலத்தை; உருளும்; புரளுமால். (9283)

(இருத்தல்-அமர்தல்; இரைத்தல்-பெருமூச்சுவிடுதல்; அயர்தல்-சோர்வுறுதல்; முகிழ்த்தல்-மூடுதல்; அரற்றுதல்-புலம்புதல்)

இராவணன் தான் இருந்த இடத்தில் இருந்து எழுவான்; பின் அங்கேயே சற்றுநேரம் அமர்வான்; பெருமூச்சு விடுவான்; இரக்கம் மேற்பட அழுவான்; கதறுவான்; அதனால் சற்று சோர்வுறுவான்; உடல் வியர்ப்பான்; சற்று நடந்துபோய், முடியாமல் தரையில் விழுவான்; கண் திறந்து பார்ப்பான்; ஒன்றுமே தெரியாததால் கண்களை மூடிக்கொள்வான்; தன்னுடைய பேருடம்பால் நிலத்தைப் பிளப்பான்; நிலத்தில் விழுந்து உருளுவான்; பின் புரண்டு வருவான்.

ஒரே பாடலில் பதின்மூன்று வகையான அவல மெய்ப்பாடுகளைக் கூறியிருப்பதை நோக்குக.

16 பத்துத் தலைகளும் பேசுகின்றன

''அய்யனே!'' எனும் ஓர்தலை; ''யான் இனம்
செய்வெனே அரசு'' எனும் ஆங்கு ஓர்தலை;
''கய்யனேன், உனைக்காட்டிக் கொடுத்த நான்,
உய்வெனே!'' என்று உரைக்கும் ஆங்கு ஓர்தலை. (9284)

(கய்யன்-கயவன்/கீழ்மகன்/அற்பன்/கடையன்; உய்தல்-பிழைத்தல்)

இராவணனின் பத்துத் தலைகளுள் ஒருதலை ''அன்புடையவனே'' என்று அழைக்கும்; மற்றோர்தலை ''நீ இறந்துபட்ட பின்பும் நான் அரசு செய்வேனோ?'' என்று புலம்பும், மூன்றாவதுதலை உன்னைப் பகைவருடன் போர்செய்ய அனுப்பி, உன்னைக் காட்டிக்கொடுத்த இந்தக் கீழ்மையான நான், நீ இல்லாது இன்னும் உயிர் பிழைத்திருப்பேனோ?'' என்று அரற்றும்.

இராவணனின் பத்துத் தலைகளுள் மூன்று தலைகள் சொன்னவற்றைக் கூறினார். தலை பேசியது என்பது வாய் பேசியது என்பதைக் குறிக்கும். இதுபோல முருகப்பெருமானின் ஆறு முகங்களும் என்ன செயலைச் செய்யும் என்று அருணகிரிநாதர் திருப்புகழில் கூறுகிறார் கேளுங்கள். ''ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்று; ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்று; கூறும் அடியார்கள் வினைதீர்க்கும் முகம் ஒன்று;

Koviloor Digital Library

குன்றுருவவேல் வாங்கிநின்ற முகம் ஒன்று; மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று; வள்ளியை மணம் புணரவந்த முகம் ஒன்று; என்பது திருப்புகழ். இதையே நக்கீரரின் திருமுருகாற்றுப்படை எவ்வாறு கூறுகிறது கேளுங்கள். ''மா இருள் ஞாலம் மருவின்றி விளங்க பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம்; ஒருமுகம் ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக் காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே; ஒருமுகம் மந்திர விதியின் மரபுளிவழாஅ, அந்தணர் வேள்வியோர்க்கும்மே; ஒருமுகம் எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்திங்கள் போலத் திசை விளக்கும்மே; ஒருமுகம் செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக் கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே; ஒருமுகம் குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே;'' என்பது திருமுருகாற்றுப்படை. 'கய்யன்' என்ற சொல் கயவன் என்ற பொருளைத்தரும். இதற்குப் பெண்பாலாக ஒரு புதுச்சொல்லாகிய 'கயத்தி' என்ற சொல்லைக் கைகேயிக்குத் தந்தவன் கம்பன்தான் என்பதும் அறியவேண்டுவது.

17. "எழுவின் கோலம் எழுதிய தோள்களால்
தழுவிக் கொள்கலையோ?" எனும், ஓர்தலை;
"உழுவைப் போத்தை, உழை உயிர் உண்பதே!
செழு வில் சேவகனே!" எனும் ஓர்தலை. (9285)

(எழு-இருப்புத்தூண்; செழு-வலிமையுடைய; சேவகன்-வீரன்; உழுவைப்போத்து-ஆண்புலி; உழை-பெண்மான்; உண்பது-வெல்லுவது /கொல்லுவது/உயிர்பருகுவது; கோலம்-சித்திரம்/சந்தனக்கோலம்)

''இரும்புத்தூணைப்போன்று வலிமைமிக்கதும், சந்தனக் குழம்பால் சித்திரக்கோலம் எழுதப்பெற்றதுமான வலிய உன் தோள்களால் என்னைத் தழுவிக்கொள்ளமாட்டாயோ'' என்று நான்காவது தலை ஏங்கும்; ஐந்தாவதுதலை, ''வலிமையான வில்லேந்திய வீரனே! ஒரு ஆண்புலியை ஒரு பெண்மான் வென்று கொன்று போட்டுவிட்டதே!'' என்று வியந்து புலம்பும்.

பொதுவாக ஆடவர்கள் தோள்களில் கோலம் எழுதிக் கொள்வதில்லை. மகளிரிடம் கூடியபோது அவர்கள் மார்பில் எழுதிய தொய்யிற்கோலம் ஆடவரின் தோள்களில்-மார்பில்-அழுந்திப்படிந்திருக்கும் என்பதை இங்கே குறிக்கிறார் எனக்கொள்க. உழுவைப்போத்தையும் உழையையும்-ஆண்புலியையும் பெண்மானையும் இணைத்து எல்லாக் காப்பியங்களும் பேசியிருக்கின்றன. பேராற்றல் கொண்ட இந்திரசித்தனுக்கு உழுவைப் போத்து-ஆண்புலியும் சிறிய மனிதனாகிய இலக்குவனுக்கு உழை-பெண்மானும் உவமைகள்; 'போத்து' என்னும் சொல் இளமைக்கும், ஆண்பாற்கும் உரித்து என்பது தொல்காப்பியம். ஆண்புலிதான் பெண்மானை அடித்துத் தின்னுமேயன்றி, ஒரு பெண்மான் போன்ற

Koviloor Digital Library

இலக்குவன் ஒரு ஆண்புலி போன்ற இந்திரசித்தை அடித்துக் கொல்லுவது என்பது பெரும் வியப்பிற்குரியது என்கிறது ஒருதலை என்பதாம்.

18. "நீலம் காட்டிய கண்டனும், நேமியும்,
ஏலும் காட்டின் எறிந்த படையெலாம்
தோலும் காட்டித் துரந்தனை; மீண்டும் நின்
ஓலம் காட்டிலையோ?" எனும் ஓர்தலை. (9286)

(காட்டுதல்-பொருந்தியிருத்தல்/தோற்றுவித்தல்; கண்டம்-கழுத்து; கண்டன்-சிவபெருமான்; நேமி-சக்கரப்படை; படை-ஆயுதங்கள்; தோல்-கேடயம்; ஏலும்-பொருந்திய; ஓலம்-பேரொலி/கர்ச்சனை; காடு-போர்க் களம்/பறந்தலை)

இராவணனது ஆறாவதுதலை, ''நீலநிறம் பொருந்திய கழுத்தைக் கொண்ட நீலகண்டனாகிய சிவபெருமானும், சக்கரப்படையையுடைய திருமாலும், முன்பு பொருத போர்க்களங்களில் வீசிய ஆயுதங்களை யெல்லாம், நீ உன்னுடைய கேடயத்தைக் காட்டியும், அம்பினைச் செலுத்தியும் போக்கினாயே இப்பொழுது மீண்டும் உன்னுடைய வீர முழக்கத்தை அவர்களிடம் காட்டவில்லையோ?'' என்று அவனுடைய வீரத்தைப் புகழும் ஒரு தலை

''நீலம் காட்டிய கண்டன்'' என்பது நஞ்சுண்ட கண்டனாகிய சிவபெருமானைக் குறிக்கும். சிவபெருமானும், திருமாலும் முன்பு இந்திரசித்தனோடு போர் செய்தபோதெல்லாம் அவன் தன்னுடைய கேடயத்தினால் தடுத்தும் அம்பினைச் செலுத்தி அவர்களைத் துரத்தியும் அவர்களைத் தோல்வியுறச் செய்து வெற்றிபெற்றவனாவான். அத்தகைய இந்திரசித்து அந்த வீரமுழக்கத்தை இந்த இலக்குவனிடம் காட்டவில்லையோ? என்று கேட்கிறது இராவணனின் ஆறாவது தலை.

19. "துஞ்சினாய் கொல், துணை பிரிந்தேன்" எனும்;
"வஞ்சமோ" எனும்; 'வாரலையோ' எனும்;
'நெஞ்சு நோவ நெடுந்தனியே கிடந்து,
அஞ்சினேன்" என்று அரற்றும் அங்கு ஓர்தலை. (9287)

(துஞ்சுதல்-இறந்துபடுதல்)

இராவணனது ஏழாவதுதலை ''நீ உண்மையிலேயே இறந்து போனாயோ? அல்லது இதுவும் ஒரு மாயச்செயலோ? சற்று நேரம் மறைந்திருக்கிறாயோ? உன் துணையைப் பிரிந்து மாய்கிறேனே! என்று கூறும்; 'நீ என்முன் திரும்பி வரமாட்டாயோ? உன்னைப் பிரிந்த என்னுடைய உள்ளம் மிக்க வருத்தமடைய நீண்டநெடு நேரமாய்த் தன்னந் தனியாய்த் தரையில் விழுந்து கிடந்து அல்லற்பட்டு அஞ்சிச்சாகிறேனே!'' என்று வாய்விட்டுக் கதறும்.

Koviloor Digital Library

'துஞ்சுதல்' என்பது இறத்தல் என்பதன் மங்கலச்சொல்; 'வஞ்சம்' என்பது மாயச்செய்கையைக் குறிக்கும்.

20. "காகம் ஆடு களத்திடைக் காண்பெனோ?
யாகசாதனன் மௌலியோடும் பொறித்து
ஓகை மாதவர் உச்சியின் வைத்த நின்
வாகை நாள்மலர்?" என்னும், மற்று ஓர் தலை. (9288)

(யாகசாதனன்-இந்திரன்; மௌலி-முடி; ஓகை-உவகை/மகிழ்ச்சி; மாதவர்-தவமுனிவர்கள்; நாள்-அன்றலர்ந்த/புதிய; வாகை-வெற்றி)

''யாகங்கள் பல செய்து இந்திரப் பதவிபெற்றவனான இந்திரனை அவனுடைய முடியோடும் பறித்து வெற்றி கண்டபோது, மிக்க மகிழ்ச்சி யுற்று, சிறந்த தேவர்கள் உன் தலை உச்சியில் உன்னைப் பாராட்டிச் சூட்டிய வெற்றி மலர்மாலை, இன்று பிணங்களைத் தின்பதற்காகக் காகங்கள் அலைந்து திரிகின்ற போர்க்களத்திடையே விழுந்து கிடப்பதைக் காண்பேனோ?'' என்று இராவணனின் எட்டாவது தலை கூறும்.

''காகம் ஆடு களம்'' என்பது, இறந்துபட்ட இராக்கதர்களின் உடல் களைத் தின்பதற்காகக் கழுகு, காகங்கள் சுற்றித்திரியும் போர்க்களத்தைக் குறிக்கும். 'யாகசாதனன்' என்பது நூறு யாகங்களை இடைவிடாது செய்து இந்திரப் பதவியைப் பெற்ற தேவேந்திரனைக் குறிக்கும். 'பாகசாதனன்' என்றும் ஒரு பாடம் உண்டு. அதற்குப் பாகன் என்னும் ஒரு அசுரனைக் கொன்று வெற்றிகொண்ட இந்திரன் என்பது பொருள். 'பொறித்த' என்றும் 'பறித்த' என்றும் இருபாடங்கள் உண்டு. 'பொறித்த என்பது இலச்சினையை-வெற்றி மாலையைச் சூடிய என்று பொருள்தரும். 'பறித்த' என்பது இந்திரனை அவனுடைய முடியோடும் பறித்து வெற்றி கொண்ட என்ற பொருளைத்தரும்.

'வாகைமாலை' என்பது, வாகைமலர்களால் கோக்கப்பட்ட மாலை, இது வெற்றி அடையாளம் எனக்கொள்க. இங்கு ஒரு நுட்பமான கருத்து நோக்கவேண்டும். இந்திரசித்தனது தலையை இராவணன் இன்னும் பார்க்கவில்லை. என்றாலும் அவன் இந்திரசித்தின் தலையில் தேவர்கள் பாராட்டிச் சூட்டிய வாகைமாலையைப் போர்க்களத்தில் காணப் பெறுவேனோ? என்கிறான். எனவே இலக்குவனால் இந்திரசித்தனது தலை அறுக்கப்பட்ட சமயம், அவன் முடியிலிருந்த வாகைமாலை போர்க்களத்தில் சிதறிக்கிடந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது.

21. "சேல் இயல் கண், இயக்கர்தம் தேவிமார்,
மேல் இனித் தவிர்கிற்பர்கொல், வீர! நின்
கோல வில் குரல்கேட்டுக் குலுங்கித் தம்
தாலியைத் தொடல்" என்னும் மற்று ஓர் தலை. (9289)

Koviloor Digital Library

(இயல்-ஒத்த; தேவிமார்-மனைவியர்; கோலம்-அழகு; குரல்-நாண் ஒலி; குலுங்குதல்-நடுங்குதல்; தவிர்கிற்பர்-நீங்குவர்; தவிர்த்தல்-நீங்குதல்)

இராவணனது ஒன்பதாவது தலை, ''வீரனே! உன்னுடைய அழகிய வில்லின் நாண்ஒலி கேட்டு, சேல்மீன் போன்று பிறழும் இயல்புடைய கண்களையுடைய இயக்கர்களின் மனைவியர், நடுநடுங்கித் தம் கணவர்க்கு இந்திரசித்தனால் ஏதேனும் தீங்கு நேருமோ என்று அச்சம் கொண்டு, தத்தம் தாலியைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுவார்களே! இப்போது நீ இறந்துபட்டமையால் அந்த வழக்கத்தினின்றும் நீங்கிவிடுவார்களோ?'' என்று கேட்கும்.

இயக்கர்களும் தேவசாதியினருள் ஒருவகையினரே. எனவே அவர்களும் அரக்கர்களுக்குப் பகைவர்களே.

22. ''கூற்றம் உன் எதிர்வந்து, உயிர் கொள்வது ஓர்
ஊற்றம்தான் உடைத்தன்று; எனையும் ஒளித்து
ஏற்ற எவ்வுலகு உற்றனை? எல்லைஇல்
ஆற்றலாய்!'' என்று உரைக்கும், அங்கு ஓர்தலை. (9290)

(ஆற்றல்-வலிமை; கூற்றம்-இயமன்; ஊற்றம்-மிகுவலிமை/ பேராற்றல்; ஒளித்து-மறைந்து; உரைத்தல்-வினவுதல்)

இராவணனது பத்தாவதுதலை, ''எல்லையற்ற வல்லமையுடையவனே! இந்திரசித்து! உன் எதிரில் வந்து நின்று, உன் உயிரைக் கவர்ந்து செல்வது என்பதற்கு இயமன் ஒன்றும் உன்னைவிடப் பேராற்றல் படைத்தவன் அல்லனே! நீ இறந்திருக்க மாட்டாய்; எனக்கும் தெரிவிக்காமல், உனக்கு ஏற்ற எந்த உலகத்திற்குச் சென்றிருக்கிறாய்? சொல்லுவாயாக'' என்று கேட்கும்.

இங்கே பத்துத் தலைகளும் தம் கருத்தைத் தெரிவித்து இரங்கியது போல, முன்பும் சுந்தரகாண்டம் பிணிவீட்டுப் படலத்தில் இராவணன் அரசவையில் அமர்ந்திருக்கும் போது அவனது பத்துத் தலைகளும், பத்துச் செயல்களைச் செய்து கொண்டிருப்பதாகக் கூறியிருப்பவற்றையும் இங்கு நினைவுகூர்க. 'கூற்றம்' என்பது உயிரையும் உடலையும் கூறுபடுத்துவது என்பதால் இது காரணப்பெயராகும்.

23. இராவணன் போர்க்களம் புகுந்து இந்திரசித்தின் உடலைத் தேடுதல்

இன்னவாறு அழைத்து ஏங்குகின்றான் எழுந்து,
உன்னும் மாத்திரத்து ஓடினன், ஊழிநாள்
பொன்னின் வான் அன்ன போர்க்களம் புக்கனன்,
நன்மகன் தனது ஆக்கையை நாடுவான். (9291)

Koviloor Digital Library

(உன்னுதல்-நினைத்தல்; ஆக்கை-உடம்பு; நாடுவான்-தேடும் பொருட்டு)

இவ்வாறு ஓங்கிய குரலெடுத்து அழுது அரற்றிய இராவணன், தான் இருந்த இடத்தை விட்டு எழுந்து, நினைக்கும் பொழுதிற்குள் ஓடிச் சென்று, ஊழிப்பெருங்காலத்தில் தோன்றும் பொன்நிறமான வானத்தைப் போன்று, இரத்தக் கறையால் சிவந்து தோற்றமளிக்கும் போர்க் களத்திற்குள், தனது அருமையான மகன் இந்திரசித்தனின் உடலைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொருட்டு நுழைந்தான்.

'அழைத்தல்' என்பது ஓங்கிய குரலெடுத்துக் கூவியழைத்தல் என்ற விரிந்த பொருளைத்தரும். 'உன்னும் மாத்திரம்' என்பது காலச் சிறுமையைக் காட்டி ஒரு நொடிப்பொழுதிற்குள் மனோவேகத்துடன் என்ற பொருளைத்தரும். பொன்போன்று சிவந்து விளங்கும் போர்க்களம் என்று போர்க்களத்தை ஊழிக்காலச் சூரியன் தோற்றத்திற்கு உவமித்தார். செந்நிறம் மிக்க போர்க்களத்திற்கு ஊழிநாள் தோன்றும் செவ்வானம் உவமை. தசரதனுக்கு இராமபிரான் எவ்வாறு உயிர்போன்றவன், கண் போன்றவனோ, அதுபோல இராவணனுக்கு இந்திரசித்து உயிர் போன்றவன், கண்போன்றவன் என்பதைக் குறிக்க ''நன்மகன்'' என்றார். 'யாக்கை' என்பது ஆக்கை என மருவி நின்றது.

24. தேவரே முதலாகிய சேவகர்
யாவரும் உடனே தொடர்ந்து ஏகினார்;
"மூவகைப் பேருலகின் முறைமையும்
ஏவது ஆகும்!" என்று எண்ணி இரங்குவார். (9292)

(சேவ்கர்-பணியாளர்கள்/வீரர்கள்; ஏவது-என்ன; தொடர்ந்து-பின்பற்றி)

அதனைக் கண்ட தேவர்கள் முதலிய பணியாளர்கள் அனைவரும், ''இராவணன் பின்னே அச்சத்தால் தொடர்ந்து சென்றனர்; இராவணன் சீற்றத்தால் மேல், நடு, கீழ் என்னும் மூவகைப்பட்ட பெரிய உலகங்களின் முறைமைக்கு என்ன தீங்கு நேருமோ?'' என்று உள்ளம் நடுங்குவராயினர்.

தேவர்களெல்லாம் இராவணனுக்குப் பணிவிடை செய்து கொண் டிருக்கிறார்கள் என்பது முன்பே நாம் கண்டுவந்தது. அவர்களைப்போல இன்னும் பலவகைப் பணியாளர்கள் உண்டு. எனவே தேவர்களை முதன்மைப்படுத்திக் கூறினார் என்க. 'சேவகர்' என்ற சொல்லுக்கு வீரர் என்ற ஒரு பொருளும் உண்டு. தேவர்கள் வீரம் உடையவர்களாக எங்கும் பேசப்படவில்லை. எனவே ஏவலர் என்ற பொருளே கொள்ளப்பட்டது. மூவகை உலகமும் மேல்கீழாய், கீழ்மேலாய் மாறிவிடுமோ என்பதை ''முறைமை'' என்றார் என்க. முறைமை-வரிசை. இராவணன் சீற்றத்தின் கொடுமை புலப்படுத்தப்பட்டது.

Koviloor Digital Library

25. அழுதவால் சில; அன்பின போன்று, அடி
தொழுதவால் சில; தூங்கினவால் சில;
உழுத யானைப் பிணம் புக்கு ஒளித்தவால்
கழுதும், புள்ளும், அரக்கனைக் காண்டலும். (9293)

(கழுது-பேய்கள்; புள்-பறவைகள்; தூங்குதல்-சோர்வுறுதல்; உழுதல்-வழிசெய்து கொள்ளுதல்)

இராவணனைப் போர்க்களத்திற்குள் பார்த்ததும், அங்கே பிணங்களைத் தின்று கொண்டிருந்த பேய்களும், கழுகு, காகம் போன்ற பறவைகளும், அச்சத்தால் அழுது அரற்றின; வேறுசில அவனிடம் அன்பு கொண்டன போலப் பணிந்து அவனை வணங்கின; சில சோர்வுற்றுத் தூங்குவன போலக் கிடந்தன; சில அடிபட்டு இறந்துகிடக்கின்ற யானைகளின் பிணங்களின் ஊடே புகுந்து தலையால் உழுது வழி ஏற்படுத்திக்கொண்டு தம்மை ஒளித்துக்கொண்டன.

இராவணன் சீற்றத்திற்கு உள்ளாகாமல் இருப்பதற்காக ஐயறிவுடைய விலங்குகளும், பறவைகளும் பட்ட பாட்டை விவரிக்கும் அருமையான பாடல் இது.

26. கோடி கோடிக் குதிரையின் கூட்டமும்,
ஆடல் வென்றி அரக்கர்தம் ஆக்கையும்,
ஓடை யானையும், தேரும் உருட்டினான்,
நாடினான் தன் மகன் உடல், நாள்எலாம். (9294)

(நாடுதல்-தேடுதல்; ஆடல்-வலிமை/அடல்/வெற்றி; ஆக்கை-யாக்கை/உடம்பு; ஓடை-முகபடாம்/நெற்றிப்பட்டம்; எலாம்-முழுவதும்; உருட்டுதல்-புரட்டிப்புரட்டிப் பார்த்தல்)

இராவணன் போர்க்களத்திற்குள் புகுந்து தன்மகன் இந்திரசித்தின் உடலைத் தேடுவானாய் அங்கு இறந்துகிடந்த கோடிக்கணக்கான குதிரைகளின் கூட்டத்தையும், வலிமையும் வெற்றியும் பொருந்திய அரக்கர்களின் பிணக்குவியலையும், நெற்றிப்பட்டம் அணிந்த யானை களையும், தேர்களையும் ஒருநாள் முழுவதும் புரட்டிப்புரட்டிப் பார்த்துத் தன் மைந்தன் இந்திரசித்தின் உடம்பைத் தேடிக்கொண்டிருந்தான்.

அரக்கரின் நால்வகைப் படையும் அழிந்து கிடந்தன என்பதும் இதன்மூலம் பெறப்படுகின்ற செய்தி. அவன் அரிதின் முயன்று தன் மகன் உடலைத் தேடினான் என்பதைக் குறிக்க ''நாள் எலாம் நாடினான்'' என்றார் என்க. 'அடல்' என்பது 'ஆடல்' என எதுகை நோக்கித் திரிந்தது.

Koviloor Digital Library

27. இந்திரசித்தனின் கைகளை மட்டும் காணுதல்

மெய் கிடந்த விழிவழி நீர்விழ,
நெய் கிடந்த கனல் புரை நெஞ்சினான்,
மொய் கிடந்த சிலையொடு மூரிமாக்
கய் கிடந்தது கண்டனன், கண்களால். (9295)

(மெய்-உடம்பு; கிடத்தல்-பொருந்தியிருத்தல்; நீர்-கண்ணீர்; விழுதல்-சிந்துதல்; புரை-போல; மொய்-வலிமை; மூரி-வலிய; மா-பெரிய; கய்-கை)

தனது உடம்பில் பொருந்தியிருந்த பத்துத் தலைகளிலும் உள்ள இருபது கண்களின் வழியேயும் கண்ணீர் பெருகிச் சிந்த, நெய் பெய்யப்பட்டுக் கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போன்ற உள்ளத்தினனாய், வலிமை தாங்கப்பெற்ற வில்லோடு, இந்திரசித்தனது வலிமைமிக்க பெரிய கை, போர்க்களத்தில் துண்டிக்கப்பட்டுக் கிடந்ததைத் தன் கண்களால் இராவணன் பார்த்தான்.

'கை' என்பது 'கய்' என எதுகை நோக்கித் திரிந்தது. நெய் எத்தனை வகைப்படும் என்று பழைய உரை ஒன்று கூறுகிறது கேளுங்கள். நறுநெய், எருமைநெய், ஆட்டுநெய், தேங்காய்நெய், புண்ணாக்குநெய், வேப்ப நெய், புங்கநெய், தேன்நெய், எள்நெய் என்கிறது பழைய உரை ஒன்று. ''கண்டனன் கண்களால்'' என்ற சொல் பிரயோகம் முன்பும் பல இடங் களில் கவிஞனால் கையாளப்பட்டிருப்பதை இங்கு நினைக. கண்களில் கண்ணீரும், உள்ளத்தில் நெருப்பும் பொங்கக் களத்தினுள் புகுந்தான் இராவணன் என்க. நெருப்பு இங்கே அவன் இலக்குவன்பால் கொண்ட சீற்றத்தை உணர்த்தியது.

28. பொங்கு தோள்வளையும், கணைப் புட்டிலோடு
அங்கதங்களும் அம்பும் இலங்கிட,
வெங்கண் நாகம் எனப் பொலி வெய்ய கை
செங்கையால் எடுத்தான், சிரம் சேர்த்தினான். (9296)

(பொங்குதல்-ஒளிவிளங்குதல்/பூரித்தல்; அங்கதம்-வாகுவலயங்கள்; இலங்குதல்-விளங்குதல்; வெய்ய-விரும்பத்தக்க)

ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றதும், பூரித்ததுமான இந்திரசித்தன் தன் தோளில் அணிந்திருந்த தோள்வளைகளோடு அம்பறாத்தூணியும், வாகு வலயங்களும், அம்புகளும் ஒருங்கே விளங்கிட, கொடிய கண்களை யுடைய நாகம் போன்று பொலிந்து விளங்குகின்ற, விரும்புதற்குரிய இந்திரசித்தனது கைகளை இராவணன் தனது இரத்தம் தோய்ந்த சிவந்த கைகளால் எடுத்து, அதனைப் புனிதப் பொருளாகக் கருதித் தன்தலைமேல் வைத்துக்கொண்டான்.

Koviloor Digital Library

'அங்கதம்' என்பது தோள்வளை, வாகுவலயத்தைக் குறிக்கும் ஒரு தோள்அணி எனக்கொள்க. 'வெய்ய' என்ற சொல் இங்கு கொடிய என்ற பொருளைத் தராது. விரும்பத்தக்க என்ற பொருளைத்தரும். 'வெம்மை வேண்டல் விருப்பம்' என்பது தொல்காப்பியம். இந்திரசித்தன் கைகளுக்கு வெங்கண் நாகம் உவமை.

29. கல் திண் மாா்பில் தழுவும்; கழுத்தினில்
சுற்றும்; சென்னியில் சூட்டும்; சுழல்கணோடு
ஒற்றும்; மோந்திட்டு உருகும்; உளைக்குமால்,
முற்றும் நாளின் விடும் நெடு மூச்சினான். (9297)

(முற்றுதல்-இறத்தல்; கல்-மலை/பாறை; திண்மை-வலிய; சுழல்தல்-சுற்றுதல்; உளைத்தல்-வருந்துதல்; சென்னி-தலை)

இராவணன் தன் இறுதிக்காலம் வந்துற்றதுபோல் பெருமூச்சு விட்டுக் கொண்டு, அங்கு கிடந்த இந்திரசித்தின் வலிய கைகளைத் தன் சிவந்த கைகளால் எடுத்துத் தன் பாறைபோன்ற உறுதியான மார்பில் வைத்து அணைத்துக்கொள்வான்; தன் கழுத்தில் அதை மலர்மாலைபோலச் சுற்றிக்கொள்வான்; தன் தலையில் கண்ணிபோலச் சூட்டிக்கொள்வான்; சுற்றும் தன் கண்களோடு ஒற்றிக்கொள்வான்; தன் மூக்கினால் முகர்ந்து பார்த்துப் பழைய நினைவுகளால் உருகிப்போவான். அது இப்போது இருக்கின்ற நிலைகுறித்து மிக்க வருத்தமுறுவான்.

அந்தக் கைகளை எடுத்துத் தன் மார்பு, கழுத்து, தலை, கண்கள், மூக்கு போன்ற எல்லா உறுப்புகளிலும் அணைத்துப் பழைய நினைவுகளில் மூழ்குவான் என்பதாம். இதுபோல அசோகவனத்தில் சீதாதேவி, அனுமன் கொடுத்த இராமபிரானின் கணையாழியைத் தன் உடல் உறுப்புக்களி லெல்லாம் அணைத்து உருகியதையும் ஒப்பிட்டு நோக்குக. ''வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள்; சிரத்தால் தாங்கினள்; மலர்க்கண்மிசை ஒற்றினள்; தடந்தோள் வீங்கினள்; மெலிந்தனள்; குளிர்ந்தனள்; வெதுப்போடு ஏங்கினள்; உயிர்த்தனள். இது இன்னது என்ல் ஆமே?'' என்பது சுந்தரகாண்டம் உருக்காட்டுப்படலம். ''மோக்கும்; முலைவைத்து முயங்கும்'' என்பது மற்றொரு பாடல்.

30. கை கண்டான், பின் கருங்கடல் கண்டென
மெய் கண்டான்; அதன்மேல் விழுந்தான் அரோ!
பெய் கண் தாரை அருவிப் பெருந்திரை,
மொய் கண்டார் திரை வேலையை மூடவே. (9298)

(மெய்-உடம்பு; மொய்-வலிமை; வேலை-கடல்; பெய்தல்-பொழிதல்; ஆர்-ஆர்ப்பரிக்கின்ற)

Koviloor Digital Library

இராவணன் போர்க்களத்தில் முதலில் தேடிக் கண்டுபிடித்தது இந்திர சித்தனது கைகளைத்தான். பின்னர் கரிய கடலைக் கண்டதுபோன்று போர்க்களத்தில் விழுந்து கிடக்கும் அவன் உடலைப் பார்த்தான்; தன் கண்களினின்றும் கண்ணீர்த் தாரை அருவி போலப் பாய்ந்து, ஆரவாரிக்கின்ற அலைகளையுடைய வலிய அரக்கர்கள் உடல்களாகிய கடலையே மூடும்வண்ணம், அவன் உடலின்மேல் விழுந்து அரற்றினான்.

போர்க்களத்தில் விழுந்து கிடக்கும் அரக்கர்களின் உடல்கள் கடல் போன்று பெருகிக்கிடந்தன. இராவணனின் இருபது கண்களினின்றும் பொழிந்த கண்ணீர் அருவிபோலப் பாய்ந்து பெருகி ஓடியது என்பதாம். கருங்கடல் இந்திரசித்தனது கரிய மேனிக்கு உவமை.

31. "அப்பு மாரி அழுந்திய மார்பைத் தன்
அப்பு மாரி அழுது இழி யாக்கையின்
அப்பும்; மாா்பில் அணைக்கும்; அரற்றுமால்;
அப் புமான் உற்றது; யாவர் உற்றாா் அரோ!" (9299)

(அப்பு-அம்பு; மாரி-மழை; யாக்கை-உடம்பு; அப்புதல்-ஒற்றிக் கொள்ளுதல்; புமான்-ஆடவன்/ஆண்மையுள்ளவன்; அப்பு-நீர்/கண்ணீர்; இழிதல்-இறங்குதல்/வடிதல்)

''அம்புமழை அழுந்திப் படிந்திருந்த இந்திரசித்தனின் மார்பைத் தன்னுடைய கண்ணீர்மழையினால் அழுது அழுது வழிகின்ற உடம்பினில் ஒற்றிக்கொள்வான்; பின் தன் மார்பில் அணைத்துக் கொள்வான்; அழுது புலம்புவான்; அந்த ஆடவரிற் சிறந்தவனான இராவணன் பட்ட துயரத்தை இவ்வுலகில் வேறு யார் பட்டிருப்பார்கள்?'' என்கிறான் கவிஞன்.

அம்பு என்ற சொல் நான்கு அடிகளிலும் வெவ்வேறு விதமான பொருள்களைத் தந்து நின்றதால் இப்பாடலில் யமகம் என்ற சொல்லணி பயின்று வந்துள்ளது எனக்கொள்க. முதலடியில் அப்புமாரி அம்பு மழையைக் குறிக்கும்; இரண்டாவது அடியில் அப்புமாரி கண்ணீர் மழையைக் குறிக்கும்; மூன்றாவது அடியில் உள்ள அப்பும் என்ற சொல் ஒற்றிக்கொள்ளும் என்ற பொருளைத்தரும்; நான்காவது அடியில் உள்ள 'அப் புமான்' என்ற சொல் அந்தப்பூமான் என்ற பொருளில் அந்த ஆடவரிற் சிறந்தவனான இராவணனைக் குறிக்கும். 'பூமான்' என்பது புமான் என்று செய்யுளுக்காகக் குறுகியது. ''அப் புமான் உற்றது யாவர் உற்றார்'' என்பது கவிக்கூற்று. பூவுலகத்தில் சிறந்தவன் என்ற நேர்பொருளைத் தருவது ''பூமான்'' என்ற சொல் புமான் என்பது புருஷன் என்று பொருள்தரும் வடசொல் என்றும் கூறுவர்.

Koviloor Digital Library

32. பறிக்கும் மார்பின் பகழியை; பல்முறை
முறிக்கும்; மூர்ச்சிக்கும்; மோக்கும்; முயங்குமால்;
"எறிக்கும் வெங்கதிரோடு உலகு ஏழையும்
கறிக்கும், வாயில் இட்டு, இன்று" எனக் காந்துமால். (9300)

(முயங்குதல்-அணைத்தல்; எறித்தல்-வீசுதல்; காந்துதல்-வெகுள்தல்; கறித்தல்-கடித்தல்)

இந்திரசித்தனது மார்பில் படிந்திருக்கும் அம்புகளைப் பறித்தெடுப்பான்; அதைச் சீற்றத்தால் பலமுறை முறித்துப் போடுவான்; சற்று மூர்ச்சித்து விழுந்துவிடுவான்; பின்னர் அவ்வம்புகளை எடுத்து முகர்ந்து பார்ப்பான்; அவற்றைத் தன்னோடு அணைத்துக் கொள்வான்; ''சுட்டெரிக்கும் கொடிய வெய்யிலைப் பரப்புகின்ற சூரியனோடு இந்த ஏழு உலகங்களையும் வாயில் போட்டுக் கடித்துத் துப்புவேன்'' என்று மிகுந்த கோபம்கொண்டு அரற்றுவான்.

தன் மைந்தன் இந்திரசித்துக்கு இவ்வளவு கொடுமைகள் நிகழ்ந்த தனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த சூரியனையும், இந்த ஏழு உலகங்களில் உள்ளவர்களையும் கடித்துத் தின்பேன் என்கிறான் இராவணன். இதுபோல முன்பு, சீதாதேவியை அபகரித்துக் கொண்டு சென்ற இராவணனைத் தேவர்களும் மற்றும் உலகத்துள்ளோரும் வாளா பார்த்துக்கொண்டு இருந்ததை எதிர்த்து இராமபிரான் ஏழு உலகத்தையும் அழிப்பேன் என்று சீற்றம் கொண்டதையும் இங்கு ஒப்பு நோக்குதல் தகும். ''இக்கணம் ஒன்றில், நின்ற ஏழினோடு ஏழு சான்ற மிக்கன போன்று தோன்றும் உலகங்கள் வீயுமாறும், திக்குடை அண்டகோளப் புறத்தவும் தீந்து, நீரின் மொக்குளின் உடையுமாறும் காண் என முனியும் வேலை'' என்பது ஆரண்யகாண்டம், சடாயு உயிர் நீத்தபடலம்.

33. "தேவரோடு முனிவரும், சீரியோர்
ஏவரோடும் இடம் இன்றி நின்றவன்
"மூவரோடும், உலகு ஒரு மூன்றோடும்
போவதேகொல், முனிவு?" எனும் பொம்மலான். (9301)

(முனிவு-சீற்றம்; பொம்மல்-பொருமல்/மிகுதி/சீற்றமிகுதி; ஏவர்-எவர்; சீரியோர்-சிறப்புக்குரியவர்கள்; இடம்-சமமான தகுதி)

''இப்பொழுது இராவணன் கொண்டிருக்கின்ற சீற்றம், மும்மூர்த்திகளாகிய சிவபெருமான், பிரமதேவன், திருமால் ஆகிய மூவரோடும், மேல், நடு, கீழ் என்னும் இந்த மூன்று உலகங்களோடும் மட்டும் நின்றுவிடக்கூடியதோ?'' என்று தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், சீரிய தன்மை வாய்ந்த சிறப்பானவர்களுக்கும் சமானமில்லாதவனான இராவணன், மிகச் சீற்றம் கொண்டு நின்றான்.

Koviloor Digital Library

முனிவர்கள் என்றால் யார் என்பதற்குத் திருமுருகாற்றுப்படை அருமையானதொரு விளக்கம் தருகிறது கேளுங்கள். ''காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர்'' என்கிறது திருமுருகாற்றுப்படை. கொல் என்ற சொல் ஐயம் குறித்த இடைச்சொல். ''போவதே'' என்பதில் உள்ள ஏகாரம் எதிர்மறைப்பொருளது. போகாது என்ற பொருளைத்தரும்.

34. இந்திரசித்தன் தலையைக் காணாது இராவணன் அரற்றுதல்

கண்டிலன் தலை; காந்தி, அம்மானிடன்
கொண்டு இறந்தனன்" என்பது கொண்டவன்,
புண் திறந்தன நெஞ்சன், பொருமலன்,
விண் திறந்திட, விம்மி, அரற்றினான். (9302)

(இறத்தல்-கடத்தல்/செல்லுதலுமாம்; திறத்தல்-பிளத்தல்/கிழிதல்; பொருமல்-துன்பம்; காந்துதல்-மனம் எரியப்பெறுதல்/கொதித்தல்)

போர்க்களத்தில் இந்திரசித்தின் கையையும், உடலையும் கண்ட இராவணன், அவனுடைய தலையைக் காணாமையால், மிக்க மனம் கொதித்து அவனைக் கொன்றுபோட்ட மானிடனாகிய இலக்குவனே அவன் தலையையும் எடுத்துக் கொண்டு சென்றிருக்கவேண்டும் என்று ஊகித்து அறிந்துகொண்டு, புண்பட்ட நெஞ்சைஉடையவனாய், பொருமி, வானவெளியே இருகூறாகப் பிளவுபடும்படி விம்மி, வாய்திறந்து அரற்றலானான்.

35. "நிலையின், மாதிரத்து நின்ற யானையும், நெற்றிக்கண்ணன்
மலையுமே எளியவோ, நான் பறித்தற்கு? மறுஇல் மைந்தன்
தலையும் ஆர்உயிரும் கொண்டார் அவர் உடலோடும் தங்க,
புலையனேன் இன்னும் ஆவி சுமக்கின்றேன் போலும், போலும்!" (9303)

(நிலையின்-நிலைத்துள்ள; மாதிரம்-திசைகள்; மறு-குற்றம்; ஆர்-அரிய/அருமையான; புலையன்-இழிவுடையவன்/மிலேச்சன்/அற்பன்; ஆவி-உயிர்)

''ஒருபோதும் மாறுபடாமல் ஒரேநிலையில் நிலைத்து நிற்கும் எட்டுத் திசை யானைகளும், நெற்றியில் மூன்றாவது கண்களையுடையவனான சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலாய மலையும் மட்டும்தான் நான் பெயர்த்தெறிவதற்கு எளியனவோ? இம்மானிடன் தலையைப் பெயர்த்து எறிதல் எனக்கு செய்தற்கரிய ஒரு செயலோ? குற்றமற்ற என் புதல்வ்ன் இந்திரசித்தின் தலையையும், அருமையான உயிரையும் பற்றிக் கொண்டவர்களான அவ்விரு மானிடரும் உடலோடும் உயிர் தாங்கப்பெற்றிருக்க,

Koviloor Digital Library

இழிந்தவனான நான் மட்டும் இன்னும் உயிரைச் சுமந்துகொண்டே நிற்கிறேனே! என்ன கொடுமை இது?'' என்று அரற்றுகிறான் இராவணன்.

எட்டுத்திசை யானைகளின் மருப்பு ஒசித்தவன் இராவணன்; கயிலை மலையை எளிதாகப் பெயர்த்தெடுத்தவன் இராவணன். அத்தகைய ஆற்றல்பெற்ற தன்னால், இந்த இரு மானிடரின் உயிரைப் போக்க முடியவில்லையே என்று அங்கலாய்க்கிறான் என்பதாம். இறுதியடியில் உள்ள 'போலும் போலும்' என்ற சொற்களை உரை அசைச்சொல்லாகவும், ஒப்பில் போலியாகவும், இசை நிறையாகவும் கொள்ளலாம்.

36. எரி உண அளகை மூதூர், இந்திரன் இருக்கை எல்லாம்,
பொரி உண, உலகம் மூன்றும் பொதுஅறப் புரந்தேன் போலாம்!
அரி உணும் அலங்கல் மௌலி இழந்த என் மதலை யாக்கை
நரி உணக் கண்டேன்; ஊணின், நாய் உணும் உணவு நன்றால். (9304)

(அளகை-அளகாபுரி; மூதூர்-பழமையான ஊர்; எரி-நெருப்பு; இருக்கை-இருப்பிடம்/அமராவதி; புரத்தல்-காப்பாற்றுதல்; அரி-வண்டுகள்; அலங்கல்-மலர்மாலை; மௌலி-தலை; மதலை-புதல்வன்; யாக்கை-உடம்பு; ஊன்-உண்ணும் உணவு; நன்று-மேலானது/சிறந்தது)

''குபேரனின் தலைநகராகிய அளகாபுரி என்ற பழமையான நகரத்தையும், இந்திரனின் இருப்பிடமாகிய அமராவதி என்னும் நகரையும் நெருப்புப் பற்றி எரியும்படிச் செய்து, மேல், நடு, கீழ் என்ற மூன்று உலகங்களையும் எல்லோருக்கும் பொதுவாக அல்லாமல், எனக்கு மட்டுமே உரிமையுள்ளதாகத் தனித்துக் காப்பாற்றிவந்தேன். ஆனால் வண்டுகள்தேனைப் பருகும் மாலையணிந்தமுடியினையுடைய என் மகன் இந்திரசித்து இழந்த உடம்பைப் போர்க்களத்தில் நரிகளும், கழுகுகளும், காக்கைகளும் உண்பதை இப்போது பார்க்கிறேன். நான் உண்ணும் உணவைக்காட்டிலும், தான் கக்கிய எச்சில் உணவைத் தானே உண்ணும் நாயின் உணவே சிறந்ததாகும் போலிருக்கிறது'' என்று தன்னைத்தானே நொந்துகொள்ளுகிறான் இராவணன்.

''பொது அறப் புரத்தல்'' என்பது ஒரு அருமையான சொல்லாட்சி. எல்லோருக்கும் பொதுவான அரசாட்சியாக இல்லாமல் தனக்கே உரிமையுடையதான தனியரசைக் குறிக்கும். ''பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வர்'' என்பது கலித்தொகை. ''கொடியும் முரசும், வெண்கொடையும் பிறர்கொளப் பொறாஅ தானே கொண்டு'' என்பது சிதம்பர மும்மணிக்கோவை. 'மௌலி' என்பது இங்கே முடியைக் குறிக்காது, தலையையே குறிக்கும்.

Koviloor Digital Library

37. "பூண்டு ஒரு பகைமேல் புக்கு, என் புத்திரனோடும் போனார்,
மீண்டிலர், விளிந்து வீழ்ந்தார்; விரதியர் இருவரோடும்
ஆண்டு உள குரங்கும், ஒன்றும் அமர்க்களத்து ஆரும் இன்னும்
மாண்டிலர்; இனி மற்றுண்டோ இராவணன் வீரவாழ்க்கை?" (9305)

(பூண்டு-மேற்கொண்டு; விளிதல்-இறத்தல்; விரதியர்-விரதம் பூண்டவர்/இராமஇலக்குவர்; ஆண்டு-அங்கு; ஒன்றுதல்-பொருந்தி பிருத்தல்)

"போர்க்கோலம் மேற்கொண்டு, பகைவனான இலக்குவன்மேல், போர்செய்ய என்மகன் இந்திரசித்தோடு புறப்பட்டுச் சென்ற அரக்கர்கள் ஒருவரும் திரும்பி வரவில்லை. எல்லோரும் இறந்துபட்டார்கள். ஆனால் தவவிரதம் மேற்கொண்டுள்ளவரான இராமஇலக்குவர் என்ற இருவரோடும், அங்கு இருக்கின்ற ஒரு குரங்கும், போர்க்களத்தில் பொருந்தியிருக்கின்ற வானரவீரர் யாரும் இன்னும் இறவாமல் உயிருடனிருக்கின்றனர் என்றால் இராவணனின் வீரத்திறத்தைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?" என்று தன்னைத்தானே நொந்து கொள்ளுகிறான் இராவணன்.

38. "கந்தர்ப்பர், இயக்கர், சித்தர், அரக்கர்தம் கன்னிமார்கள்,
சிந்து ஒக்கும் சொல்லினார், உன்தேவியர், திருவின் நல்லார்,
வந்து உற்று "எம் கணவன் தன்னைக் காட்டு" என்று, மருங்கில் வீழ்ந்தால்,
அந்து ஒக்க அரற்றவோ, நான் கூற்றையும் ஆடல் கொண்டேன்?" (9306)

(கந்தர்ப்பர்-கந்தருவர்; கன்னிமார்கள்-புதல்வியர்; திரு-திருமகள்; நல்லார்-அழகு மிக்கவர்; மருங்கு-பக்கம்/அருகில்; கூற்று-இயமன்; ஆடல்-வெற்றி/பணி; அந்து-அப்படியே; தேவியர்-மனைவியர்; சிந்து-ஒருவகைப் பண்)

"கந்தருவர், இயக்கர், சித்தர்கள், அரக்கர்கள் இவர்களுடைய புதல்வியர்களும், சிந்து என்னும் ஒருவகைப் பண்ணைப்போல் இனிமையாகப் பேசும் சொற்களை உடையவர்களுமாகிய உன் மனைவியர்கள், இலக்குமியைக் காட்டிலும் மிக்க அழகுள்ளவர்கள் என் அருகில் வந்து விழுந்து, "எங்கள் கணவரைக் காட்டுவீராக!" என்று அரற்றிக்கொண்டு வந்து கேட்டால், நானும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு அழுது அரற்றவோ நான் இயமனையும் வெற்றிகொண்டேன்?" என்று தன் வீரத்திறம் பயன்படாதுபோனது பற்றி நொந்து கூறிக்கொள்கிறான் இராவணன்.

கந்தர்ப்பர், இயக்கர், சித்தர் என்பவரெல்லாம் பதினெட்டு வகையான தேவர்களுள் அடங்குவர் எனக்கொள்க. இந்தத் தேவமகளிர் எல்லோரை

Koviloor Digital Library

யுமே இந்திரசித்து மனைவியராகப் பெற்றிருக்கிறான் என்பதும் தெரிய வருகிறது. 'அந்து' என்ற சொல் அப்படியே என்ற பொருளைத்தரும். 'ததாஸ்து' என்று வடமொழியில் கூறுவதுபோல எனக்கொள்க. முன்பு கும்பகருணனும் 'கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையும் ஆடல் கொண்டேன்'' என்று கூறியதையும் நினைவுகூர்க.

39. ''சினத்தொடும் கொற்றம் முற்றி, இந்திரன் செல்வம் மேவி,
நினைத்தது முடித்து நின்றேன்; நேரிழை ஒருத்தி நீரால்,
எனக்கு நீ செய்யத்தக்க கடனெலாம் ஏங்கிஏங்கி
உனக்கு நான் செய்வதானேன்! என்னின் யார் உலகத்துள்ளார்?'' (9307)

(கொற்றம்-வெற்றி; முற்றுதல்-நிறைவேற்றுதல்; மேவுதல்-அடைதல்; நேரிழை-பொருந்திய அணிகலன்கள்; நீர்மை-நிமித்தம்/ காரணம்; ஏங்குதல்-வருந்துதல்)

''நான் கொண்ட சீற்றத்தினால், வெற்றிகளையெல்லாம் அடைந்து, இந்திரனுக்குரிய செல்வச் சிறப்பையெல்லாம்கூட அடைந்து, நான் நினைத்தது அனைத்தையும் நிறைவேற்றி மூவுலகங்களையும் ஆண்டு கொண்டு மகிழ்ச்சியோடு இருந்தேன். ஆனால் இப்போது நேரிய அணிகலன்களை அணிந்த ஒரு பெண்ணாகிய சீதாதேவியின் காரணமாக, அந்த நிலையினின்றும் மாறி, தந்தையாகிய மூத்தவன் எனக்கு, மகனாகிய இளையவன் நீ செய்யத்தக்க ஈமக்கடன்களையெல்லாம், மிக்க மன வருத்தத்துடன் இப்போது நான் உனக்குச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. என்னைவிட இந்த உலகத்தில் இழிந்தவர்கள் யார் இருக்கிறார்கள்?'' என்று இராவணன் இந்திரசித்தனின் உடலை நோக்கிப் புலம்பினான்.

இப்பொழுதுதான் முதன்முறையாக இராவணன், தான் சீதாதேவியைக் கவர்ந்து வந்தது தவறு என்று உணரத் தொடங்குகிறான். அதைத் தன் கூற்றாகவே வெளிப்படுத்திக் காட்டுகிறான் என்பதை உணரவேண்டும். இதுபோல நடக்கும் என்று ''நுந்தைக்கு நீ செயக்கடவன கடன்கள், இரக்கம் உற்று, உனக்கு அவன் செயும்'' என்று முன்பே இலக்குவன் இந்திரசித்திடம் பிரமாத்திரப் படலத்தில் கூறியதை இங்கே நினைவுக்குக் கொண்டு வாருங்கள். இந்திரசித்தின் இறப்புக்குக் காரணம், தான் சீதாதேவியின்மேல் கொண்ட பொருந்தாக் காதல்தான் என்பதை நன்கு உணர்ந்து பேசுகிறான் இராவணன் என்க.

Koviloor Digital Library

40. இந்திரசித்தன் உடலோடு இராவணன் இலங்கைக்குள் நுழைதல்

என்பன பலவும் பன்னி, எடுத்து அழைத்து, இரங்கி ஏங்கி,
அன்பினால் மகனைத் தாங்கி, அரக்கியர் அரற்றி வீழ,
பொன்புனை நகரம் புக்கான்; கண்டவர் புலம்பும் பூசல்,
ஒன்பது திக்கும் மற்றை ஒரு திக்கும் உற்றதன்றே! (9308)

(பன்னுதல்-சொல்லுதல்; எடுத்தல்-உரத்தகுரலில் கூவுதல்; ஏங்குதல்-வருந்துதல்; தாங்குதல்-சுமத்தல்/தூக்குதல்; புனைதல்-அலங்கரித்தல்; பூசல்-பேரொலி; உறுதல்-அடைதல்/பரவுதல்)

என்று இவ்வாறு பலவாறு சொல்லிப் புலம்பிய இராவணன், தன் மகன் இந்திரசித்தனின் பெயரைச் சொல்லி உரக்கக்கூவி அழைத்து, இரக்கமும் வருத்தமும்தரும் பேரன்பினால், அவனது உடலைச் சுமந்துகொண்டு, பொன்கொண்டு அலங்கரிக்கப்பட்ட இலங்கை மாநகருக்குள் நுழைந்தான். அதுகண்ட அரக்கியர் அரற்றிக்கொண்டு சோர்ந்து கீழே விழவும், அவர்கள் கதறி அழுத பேரொலி பத்துத் திக்குகளிலும் சென்று பரவியது.

'எடுத்து அழைத்தல்' என்பது உரத்த குரலில் எடுத்தலோசையுடன் கூவி அழைப்பதைக் குறிக்கும். பத்துத் திக்குகள் என்று நேராகக் கூறாமல் ஒன்பது திக்கும், மற்றொரு திக்கும் என்று கூறியதை, முன்பு கைகேயி இராமனிடம் ''ஏழிரண்டாண்டில் வா'' என்று கூறியதோடு ஒப்பிட்டு நோக்குக. பத்தாவது திக்கு என்பது விண்ணைக் குறித்ததாகக் கொள்ளலாம். அது சேய்மையில் உள்ளதால் அவ்வாறு கூறநேர்ந்தது போலும். ''ஒன்பதொடு ஒன்றொடு ஏழு'' என்பது திருஞானசம்பந்தர் பதிகம்.

41. கண்களைச் சூல்கின்றாரும், கழுத்தினைத் தடிகின்றாரும்,
புண்கொளத் திறந்து, மார்பின் ஈருளைப் போக்குவாரும்,
பண்கள் புக்கு அலம்பும் நாவை உயிரொடு பறிக்கின்றாரும்
எண்களில் பெரிய ஆற்றார்; இருந்துயர் பொறுக்கல் ஆற்றார். (9309)

(இரும்-பெரிய; சூலுதல்-தோண்டுதல்; தடிதல்-வெட்டுதல்; ஈருள்-ஈரல்; போக்குதல்-வெளிப்படுத்துதல்; அலம்புதல்-ஒலித்தல்; ஆற்றல்-அடங்குதல்; திறத்தல்-பிளத்தல்)

இராவணன் சுமந்துவந்த இந்திரசித்தின் உடலைப் பார்த்த இலங்கை மாநகர அரக்கியர்கள் இந்தப் பெரிய துயரத்தைப் பொறுத்துக்கொள்ள மாட்டாமல் தங்கள் கண்களைத் தாங்களே தோண்டிக்கொண்டார்கள்; கழுத்தினை வெட்டிக்கொண்டார்கள்; மார்பினைப் பிளந்து புண்படுமாறு ஈரலை வெளிப்படுத்தி எறிந்தார்கள்; நல்ல இசைப்பாடலை இசைக்கும் தூய்மையான நாக்குகளை அவர்கள் உயிரோடு பிடுங்கிக்கொண்டார்கள்; இவ்வாறு செய்தவர்கள் எண்ணிக்கையில் அடங்கமாட்டார்கள்.

Koviloor Digital Library

'சூல்தல்' என்பது நமக்குப் புதியசொல்; புதிய பொருள்; தோண்டுதல் என்பது பொருள். இந்திரசித்தனையும், இராவணனையும் இந்த நிலையில் கண்ட அரக்கியர்களின் செயல்கள் பேசப்படுகிறது. இதேபோல் முன்பு மூக்கறுபட்ட நிலையில் சூர்ப்பணகை இலங்கை நகருக்குள் ஓடிவந்த போது இலங்கை மக்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதை இத்துடன் ஒப்பிட்டு நோக்குதல் சுவை பயக்கும். எண்ணிறந்தவர், எண்ணிக்கையில் அடங்கார் என்பதை ''எண்களில் பெரிய ஆற்றார்'' என்றார் என்க. பிறரது துன்பம் கண்டு பொறுக்கமாட்டாதவர்கள் தங்களைத் தாங்களே துன்புறுத்திக் கொள்வதுண்டு. பெரியபுராணத்தில் சேரமான் பெருமாள் நாயனார் வரலாற்றில் இவ்வாறு ஒரு நிகழ்ச்சி இடம் பெறுகிறது.

42. மாதிரம் கடந்த திண்தோள் மைந்தன் மகுடச்சென்னி
போதலைப் புரிந்த யாக்கை பொறுத்தனன் புகுதக் கண்டார்;
ஓதநீர் வேலையன்ன கண்களால் உகுத்த வெள்ளக்
காதல் நீர் ஓடி, ஆடல் கருங்கடல் மடுத்தது அன்றே! (9310)

(மாதிரம்-திசைகள்; கடத்தல்-வெல்லுதல்; மகுடம்-முடி; சென்னி-தலை; போதல்-நீங்குதல்; பொறுத்தல்-சுமத்தல்/தாங்குதல்; ஓதம்-வெள்ளம்/ஒலி; வேலை-கடல்; காதல்-அன்பு; மடுத்தல்-கலத்தல்/நிறைத்தல்; ஆடல்-அசைதல்)

எட்டுத் திசைகளையும் வென்ற திண்ணிய தோள்களையுடைய தன் மைந்தனான இந்திரசித்தின் முடியணிந்த தலை நீங்கப்பெற்ற உடலைச் சுமந்துகொண்டு இராவணன் இலங்கை நகருக்குள் நுழைந்ததைக் கண்ட அரக்கியர், கடல்போன்ற பெரிய கண்களினின்றும் சொரிந்த வெள்ளம் போன்ற கண்ணீர் ஓடிச்சென்று அசைதலையுடைய கரிய கடலில் கலந்தது.

மகளிரின் கண்ணீர் வெள்ளம், கடல்நீர் வெள்ளத்தைச் சென்று கலந்தது என்ற இடத்துச் சொல்நயம் காண்க. பெண்கள் சொரிந்த கண்ணீரின் மிகுதி புலப்படுத்தப்பட்டது.

43. அரண்மனையுள் புகுதல்

ஆவியின் இனிய காதல் அரக்கியர் முதல்வராய,
தேவியர் குழாங்கள் சுற்றி, சிரத்தின்மேல் தளிர்க்கை சேர்த்தி,
ஓவியம் வீழ்ந்து வீழ்ந்து புரள்வன ஒப்ப, ஒல்லைக்
கோ இயல் கோயில்புக்கான், குருதிநீர்க் குமிழிக் கண்ணான். (9311)

(ஆவி-உயிர்; தேவியர்-மனைவியர்; குழாம்-கூட்டம்; சுற்றுதல்-சூழ்ந்துகொள்ளுதல்; ஓவியம்-சித்திரப்பதுமைகள்; ஒல்லை-விரைவாக; கோஇயல்-அரசியற்குரிய; கோயில்-அரண்மனை; குமிழி-கொப்பளம்)

Koviloor Digital Library

உயிரைக்காட்டிலும் இனிமையான அன்புமிகுந்த அரக்கியர் முதலாக, இந்திரசித்தன் மனைவியர் கூட்டங்கள் எல்லாம் அங்கு வந்த இராவணனைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு, தத்தம் தலைகளின்மேல் தளிர்போன்ற மென்மையானதம் கைகளைச்சேர்த்துக் குவித்துக்கொண்டு, சித்திரப்பதுமைகள் தரையில் விழுந்து புரள்வதுபோலப் பலமுறை தரையில் விழுந்து புரளவும், இரத்தக்கண்ணீர் கொப்பளிக்கும் கண்களை யுடைய இராவணன், விரைந்து சென்று அரசியர்க்குரிய அரண்மனையில் நுழைந்தான்.

இந்திரசித்தன் மனைவியரை ''ஆவியின் இனிய காதல் அரக்கியர்'' என்றது நோக்குக. 'கோஇயல் கோயில்' என்பது இந்திரசித்தனின் மனைவியர்களாகிய அந்த அரசியர்க்குரிய அரண்மனை என்ற பொருளைத் தரும். இராவணன் கண்களில் இரத்தக்கண்ணீர் கொப்பளித்தது என்பதை ''குருதிநீர்க் குமிழிக் கண்ணான்'' என்ற அழகிய சொற்றொடரால் குறித்த நயம் நோக்குக. ''அரக்கியர் முதல்வராய தேவியர் குழாங்கள்'' என்பது முன்பு கூறியதுபோல, அரக்கியர்களைத் தவிரவும் ஏனைய கந்தருவர், இயக்கர், சித்தர் ஆகிய குலங்களைச் சேர்ந்தவர்களும் இந்திரசித்தனின் ஆவியின் இனிய காதலர் என்பது பெறப்படுகிறது.

44. மண்டோதரி புலம்புதல்

கருங்குழல் கற்றைப் பாரம் கால்தொட, கமலப் பூவால்
குரும்பையைப் புடைக்கின்றாள்போல், கைகளால் முலைமேல் கொட்டி
அருங்கலச் சும்மை தாங்க, 'அகல் அல்குல் அன்றி, சற்றே
மருங்குலும் உண்டு உண்டு என்ன' மயன்மகள் மறுகி வந்தாள்.
(9312)

(கமலம்-தாமரை; புடைத்தல்-அடித்தல்; கலம்-அணிகலன்கள்; சும்மை-சுமை; அல்குல்-அரையிடை; மருங்குல்-இடை; மறுகுதல்-மனம் கலங்குதல்; கொட்டுதல்-அடித்தல்/புடைத்தல்)

மயன் என்னும் அசுர சிற்பியின் மகளானவளும், இராவணனின் மனைவியுமான மண்டோதரி தனது கரிய நீண்ட அடர்ந்த கூந்தல்தொகுதி அவிழ்ந்து தன் பாதங்களைத் தொடத் தலைவிரிகோலமாய், தாமரைமலர் போன்ற தன் கைகளால், தென்னங்குரும்பைப்போன்ற தன் முலைமேல் அடித்துக்கொண்டு, அருமையான அணிகலன்களின் சுமையைத் தாங்கிக் கொள்வதற்கு அவளது அல்குல்மட்டுமேயன்றி, சற்று மெல்லியதான இடையும் இருக்கிறதே என்று காண்பவர்கள் வியக்குமாறு பெருந் துயரத்தோடு மனக்கலக்கத்துடன் வந்து சேர்ந்தாள்.

அவலச்சுவையினைத் தெரிவிக்கும் பாடலில்கூடக் கவிஞன் மண்டோ தரியின் அழகை வருணிக்கும் நயம் காண்க; கருங்குழல், கற்றைப்பாரம்,

Koviloor Digital Library

கமலப்பூ, குரும்பைமுலை, அருங்கலம், அகல்அல்குல், சற்றே மருங்குல் என்று குறிக்கும் நயம் நோக்குக. இது கம்பனுக்கே கைவந்த கலை. இந்த அழகு வருணனைகள் எல்லாம் அவள் மறுகிவந்ததில் மறந்துபோகும் தன்மையையும் உணர்க. கமலப்பூ அவள்கைகளுக்கும், குரும்பை அவளது இளமையான முலைக்கும் உவமை. காலளவு நீண்ட குழல்கற்றை உத்தமப்பெண்களுக்கான ஓர் லட்சணம்.

45. தலையின்மேல் சுமந்த கையள்; தழலின்மேல் மிதிக்கின்றாள் போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளள்; நேசத்தால் நிறைந்த நெஞ்சன்;
கொலையின்மேல் குறித்த வேடன் கூர்ங்கணை உயிரைக் கொள்ள,
மலையின்மேல் மயில் வீழ்ந்தென்ன, மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்.
(9313)

(தழல்-நெருப்பு; நிலை-தரை/பூமி/நிலம்; தாள்-பாதம்; மறுகுதல்-சுழல்தல்/நிலைகலங்குதல்; நேசம்-பேரன்பு)

இந்திரசித்தின் உயிரற்ற, தலையற்ற, உடம்பைக்கண்ட மண்டோதரி, தன் தலையின்மீது கைகளைத் தாங்கிக் கூப்பிக்கொண்டு, நெருப்பின்மேல் நடப்பதைப்போல் நிலைபெற்ற பூமியின்மீது தன் பாதங்களைப் பதித்துக் கொண்டு, மைந்தன்மேல் கொண்ட பேரன்பினால் நிறைந்த மனத்தை உடையவளாய், ஒரு வேடன் உயிரை வாங்கியபோது, ஒருமயில் வானத்தி லிருந்து மலையில் விழுந்ததைப் போன்று, மண்டோதரி என்ற மயில், இந்திரசித்தன் என்ற தன் மைந்தனாகிய மலையின்மீது, மனங்கலங்கி விழுந்தது.

மயில் மண்டோதரிக்கும், மலை இந்திரசித்தனுக்கும் உவமை. பொதுவாக இறந்துபோன உடலைப்பார்த்துக் கையெடுத்துக் கும்பிடுவது மனித இயல்பு. இங்கே மண்டோதரி தன் மைந்தன்மீது கொண்ட பேரன்பினால் தலைக்குமேலே கையைக் கூப்பி தெய்வமாகக் கருதி வணங்கினாள் என்ற பொருள்படக் கவிஞன், ''தலையின்மேல் சுமந்த கையள்'' என்று கூறிய நுட்பம் நோக்குக. மகனை இழந்த மண்டோதரியின் நிலைக்கு, உயிரையிழந்த மயில் உவமை.

46. உயிர்த்திலள்; உணர்வும் இல்லள்; 'உயிர் இலள் கொல்லோ?" என்னப்
பெயர்த்திலள் யாக்கை; ஒன்றும் பேசலள்; விம்மி யாதும்
வியர்த்திலள்; நெடிது போது விம்மலள்; மெல்லமெல்ல,
அயர்த்தனள்; அரிதின் தேறி, வாய்திறந்து அரற்றலுற்றாள். (9314)

(உயிர்த்தல்-மூச்சுவிடுதல்; யாக்கை-உடம்பு; பெயர்த்தல்-அசைத்தல்; விம்முதல்-தேம்புதல்; தேறுதல்-தெளிதல்; அயர்த்தல்-சோர்ந்துபோதல்)

Koviloor Digital Library

அவ்வாறு வீழ்ந்த மண்டோதரி நீண்டநேரம் மூச்சுக்கூட விடவில்லை; உணர்ச்சிகளெல்லாம் நீங்கப்பெற்றவளானாள்; ''இவள் உயிர் நீங்கிப் போனாளோ?'' என்று காண்பவர் ஐயுறுமாறு தன் உடம்பைச் சற்றுகூட அசைக்கவில்லை; ஒருவார்த்தைகூடப் பேசவில்லை; உடல் வியர்க்கக் கூடவில்லை; நீண்டநேரம் தேம்பி அழாமலும் இருந்தாள்; பின்பு மெல்லமெல்லச் சோர்வு நீங்கப்பெற்றாள்; பின்னர் சற்று சிரமப்பட்டுத் தெளிவடைந்து, தன் வாயைத் திறந்து அரற்றத் தொடங்கினாள்.

பொதுவாக ஒரு துக்க நிகழ்வின்போது நம் எல்லோருக்கும் ஏற்படும் மெய்ப்பாடுகள்தான் இவை என்றாலும் கவிஞன் அன்பிற்குரிய மகனை இழந்த புத்திரசோகத்தில் ஒரு தாயின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறான். 'இதேபோலத் தன் தம்பி பிரமாத்திரத்தால் மூர்ச்சித்துக் கிடந்தபோது தமையன் இராமபிரான் புலம்பியது இங்கே நினைவுக்கு வரவேண்டும். பெரும்பாலும் இதேபோன்ற சூழ்நிலையில் இதே சொற்களைக் கையாண்டிருக்கிறான் கவிஞன். அந்தப் பாடலையும் இப்போது கேளுங்கள். ''உயிர்த்திலன், ஒரு நாழிகை உணர்ந்திலன் ஒன்றும்; வியர்த்திலன் உடல்; விழித்திலன் கண்ணிணை; விண்ணோர் ''அயர்ந்தனன் கொல்'' என்று அஞ்சினர்; அங்கையும், தாளும் பெயர்த்திலன்; உயிர் பிரிந்திலன்; கருணையால் பிறந்தாள்'' என்பது பிரமாத்திரப்படலம்.

47. ''கலையினால் திங்கள் என்ன வளர்கின்ற காலத்தே உன்
சிலையினால் அரியை வெல்லக் காண்பதோர் தவம் முன் செய்தேன்;
தலையிலா ஆக்கை காண, எத்தவம் செய்தேன் அந்தோ!
நிலையிலா வாழ்வை இன்னும் நினைவெனோ, நினைவு இலாதேன்?''
(9315)

(காலம்-இளம்பருவம்; சிலை-வில்; அரி-இந்திரன்; தவம்-இங்கே பாவம்; நினைத்தல்-மதித்தல்; கலை-சந்திரனின் பதினாறு கலைகள்)

நாளுக்குநாள் கலையினால் வளர்ந்துவரும் சந்திரனைப் போல நாளுக்குநாள் வளர்ந்துவந்த உன் இளமைப் பருவத்தில், உன்னுடைய வில்லாற்றலால் இந்திரனையே வெற்றிகொண்டாயே! அதை என் கண்களால் கண்டு மகிழ்வதற்காக முற்காலத்தில் நான் ஒப்பற்ற தவம் செய்திருந்தேன். ஆனால் இப்பொழுது, உன்னை இவ்வாறு தலையற்ற உடம்பாகக் காண்பதற்கு நான் எத்தகைய பாவத்தைச் செய்தேனோ? இவ்வாறு வாழ்வு நிலையற்றது என்பதை உணர்ந்தபின்னும் நல்ல நினைவில்லாத நான், இன்னும் உயிர்வாழ நினைத்திருப்பேனோ?'' என்று புலம்புகிறாள் மண்டோதரி.

'அரி' என்ற சொல்லுக்கு சிங்கம், குரங்கு, இந்திரன், இயமன், சிவன், திருமால், சூரியன், பகைவன் என்ற பல பொருள்கள் உண்டு. இங்கே

Koviloor Digital Library

இந்திரன் என்று பொருள் கொள்ளப்பட்டது. ''கலை'' என்பது சந்திரனின் வளர்ந்து தேய்ந்து போகும் பதினாறு கலைகளைக் குறித்தது. முதலில் கூறப்பட்ட 'தவம்' என்ற சொல்லுக்கு பேறு, பாக்கியம் என்று பொருள். பின்னர்கூறப்படும் 'தவம்' என்ற சொல் எதிர்மறைப்பொருளான ''பாவம்'' என்று பொருள்படும்.

48. "ஐயனே! அழகனே! என் அரும்பெறல் அமிழ்தே! ஆழிக்
கையனே! மழுவனே, என்று இவர் வலி கடந்த கால
மொய்யனே! முளரி அன்ன நின்முகம் கண்டிலாதேன்,
உய்வெனோ? உலகம் மூன்றுக்கு ஒருவனே! செரு வலோனே!" (9316)

(ஆழி-சக்கரப்படை; மழுவன்-மழுப்படையுடைய சிவபெருமான்; கடத்தல்-வெல்லுதல்/வெற்றி கொள்ளுதல்; காலன்-இயமன்; மொய்ம்பு-வலிமை; செரு-போர்; முளரி-தாமரைமலர்; உய்தல்-உயிர் வாழ்ந் திருத்தல்; ஒருவன்-ஒப்பற்றவன்)

''என் மைந்தனே! அழகிற் சிறந்தவனே! எனக்குப் பெறற்கரிய அமிழ்தமாய் வந்து பிறந்தவனே! சக்கராயுதத்தைக் கையிலேந்திய திருமால், மழுப்படையைக் கையிலேந்திய சிவபெருமான் என்று சொல்லப்படுகின்ற முதல் தேவர்களாகிய இவர்களையெல்லாம் போரில் வென்று வெற்றிகொண்டு, இயமனைப்போன்ற வல்லமை உடையவனே! இந்த மூன்று உலகத்திற்குள்ளும் ஒப்பற்றவன் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவனே! போரில் மிக வல்லமை படைத்தவனே! தாமரை மலர் போன்று விரிந்து மலர்ந்த உன் முகத்தைக் காண முடியாதவளாகிய நான் இன்னும் உயிர்பிழைத்திருப்பேனோ?'' என்று புலம்புகிறாள் மண்டோதரி.

மைந்தனை 'ஐயன்' என்று அன்புமிகுதியால் அழைத்தாள் எனக் கொள்க. ''வாழ்ந்திருப்பேனோ?'' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளது. வாழமாட்டேன் என்ற பொருளைத்தரும். மகிழ்ச்சி பொங்க மலர்ந்திருக்கும் முகத்திற்குத் தாமரைமலரை உவமைகூறுவது கவிமரபு.

49. "தாள் அரிச் சதங்கை ஆர்ப்பத் தவழ்கின்ற பருவம் தன்னில்,
கோள் அரி இரண்டு பற்றிக் கொணர்ந்தனை; கொணர்ந்து, கோபம்
மூளுறப் பொருத்தி, மாட முன்றிலில் முறையின் ஓடி,
மீள் அரு விளையாட்டு, இன்னம் காண்பெனோ? விதியிலாதேன்" (9317)

(அரி-பரல்; தாள்-கால்; கோள்-வலிமை; அரி-சிங்கம்; பற்றுதல்-பிடித்தல்; முன்றில்-இல்முன்/முற்றம்; விதி-ஊழ்; பொருத்துதல்-போர் மூள்வித்தல்)

மண்டோதரி இந்திரசித்தனின் உடம்பைப் பார்த்து, ''உன் பாதங்களில் பரல் நிறைந்த சதங்கைகள் கட்டப்பட்டு, அவை ஒலிக்கின்றவாறு நீ

Koviloor Digital Library

தவழ்ந்து வருகின்ற இளமைப்பருவத்தில், இரண்டு வலிய சிங்கங்களைப் பற்றிக்கொண்டு வந்தாய்; அவ்வாறு கொண்டுவந்து நம் அரண்மனையின் முற்றத்தில் அவ்விரண்டிற்கும் கோபத்தை உண்டு பண்ணி, அவை இரண்டும் ஒன்றோடொன்று போர்புரியுமாறு செய்வாய். பின்னர் நீ அதைப் பார்த்து மகிழ்ந்து என்னிடம் ஓடிவந்த, அத்தகைய அருமையான விளையாட்டையெல்லாம் மீண்டும் என்னால் காணமுடியுமோ? முடியாதே, என் விதி அதற்கு இடம் கொடுக்கவில்லையே?'' என்று புலம்புகிறாள்.

'தவழ்கின்ற பருவம்' என்பது தளர்நடை பயில்கின்ற பருவம் என இளமைப் பருவத்தைக் குறிக்கும். நேர்பொருள் கொள்ளக்கூடாது, இந்திர சித்து குழந்தைப்பருவத்திலேயே உண்மையான சிங்கங்களை வைத்து விளையாடும்வீரம்பெற்றிருந்தான்என்பதைஅவன்தாய்தெரியப்படுத்தித் தன் துயரத்தை வெளியிடுகிறாள் என்க. ''காண்பெனோ'' என்பதில் உள்ள ஒகாரமும் எதிர்மறைப் பொருளதே. காணமுடியாது என்ற பொருளைத் தரும். பொதுவாக அவலச்சுவையில் பயன்படுத்தப்படும் ஏகாரங்கள், ஓகாரங்கள், எதிர்மறைப் பொருளையே தரும். ''தாள்அரிச் சதங்கை'' என்பது காலில் அணியும் கிண்கிணி போன்ற ஒரு அணிகலன் என்க.

50. "அம்புலி, அம்ம! வா! என்றழைத்தலும், அமர்வெண் திங்கள்
இம்பர் வந்தானை, அஞ்சல் என இருகரத்தின் ஏந்தி,
வம்புறும் மறுவைப் பற்றி, "முயல்" என வாங்கும் வண்ணம்
எம்பெருங் களிறே! காண ஏசற்றேன், எழுந்திராயோ?" (9318)

(அவிர்தல்-விரிதல்/பரப்புதல்/விளக்கமடைதல்; இம்பர்-இவ்வுலகு; வாங்குதல்-பற்றிஎடுத்தல்; வண்ணம்-தன்மை; ஏசறல்-ஆசைப்படுதல்/விரும்புதல்; வம்பு-அஞ்சாமை/பயமின்மை/புதுமை; அம்புலி-சந்திரன்; மறு-களங்கம்; களிறு-ஆண்யானை)

''நீ சிறுகுழந்தையாய் அம்புலிப் பருவத்தில் இருந்தபோது வானில் இருக்கும் நிலவைப்பார்த்து, ''அம்மா! நிலவே, வா! என்று அழைத்தாய், நீ அவ்வாறு அழைத்தவுடன் உன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அச்சம் கொண்டு, விளக்கமுடைய வெள்ளிய கதிர்களைப் பரப்பும் அந்தச் சந்திரன் இவ்வுலகிற்கு வந்தான். அவ்வாறு அச்சம்கொண்டு வந்தவனை, 'அஞ்சாதே' என்று ஆறுதல்கூறி, உன் இரண்டு கைகளிலும் அவனை எடுத்துக்கொண்டு, உனக்குப் புதுமையாகத் தோன்றியதும், சந்திர னிடத்தே இயல்பாக உள்ளதுமான களங்கத்தை, அது முயல்வடிவத்தில் இருந்ததால் முயல்தான் என்று கருதி அதைப் பற்றிப் பிடிக்கப்போனாய்! என்னுடைய அருமையான பெருமைமிக்க ஆண்யானை போன்றவனே! இந்திரசித்து! அந்த விளையாட்டை மீண்டும் ஒருமுறை காண ஆசைப்படுகிறேன். அதற்காகவாவது நீ எழுந்து வரமாட்டாயா?'' என்று வாத்சல்யத்துடன் இரங்கி ஏங்குகிறாள் மண்டோதரி.

Koviloor Digital Library

இந்திரசித்து தான் இருந்த இடத்தில் இருந்தே சந்திரனை இவ்வுலகிற்கு வரவழைத்து சந்திரனில் உள்ள களங்கத்தை அது முயல் என்று கருதிப் பற்றி விளையாடினான். இதுபோல முன்பு அனுமன், தானே சூரியன் இருக்குமிடம் சென்று, அதை ஒரு சிவந்த மாம்பழம் என்று கருதி அதனைப் பறிக்க முற்பட்டான் என்பதையும் இங்கு ஒப்புநோக்கலாம். இவ்வாறு குழந்தைப் பருவத்தில் காப்பிய நாயகர்களோ, மற்ற பாத்திரங்களோ, விளையாடிய விளையாட்டை விவரிக்கும் ஒருவகைப் பாடல்வகைக்கு ''பிள்ளைத்தமிழ்'' என்பது பெயர். பல பிள்ளைத்தமிழ் நூல்கள் தமிழில் உண்டு. அவை எல்லாவற்றிலும் குழந்தை சந்திரனைஅழைப்பது மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. சந்திரன் இறங்கி நிலவுலகு வந்ததாகப் பேசப்படவில்லை. ஆனால் இங்கேமட்டும் இந்திரசித்து அழைத்ததும், சந்திரன் பூமிக்கு வந்தது என்று கூறுகிறானே கவிஞன் ஏன்? எனில் இந்திர சித்தனிடமும், அவன் தந்தை இராவணனிடமும் ஒன்பது கோள்களும் அடங்கிகிடந்தன என்பதைக் காட்டவே எனக்கொள்க.

51. இயக்கியர், அரக்கிமார்கள், விஞ்சையர், ஏழைமாதர்,
முயல் கறை பயிலாத் திங்கள் முகத்தியர், முழுதும் நின்னை,
மயக்கிய முயக்கம் தன்னால், மலர்அணை அமளி மீதே
அயர்த்தனை உறங்குவாயோ? அமர் பொருது அலசினாயோ?" (9319)

(கறை-களங்கம்; பயிலுதல்-பொருந்தியிருத்தல்; முயக்கம்-புணர்ச்சி/ ஆலிங்கனம்/மெலிவு; அமளி-படுக்கை; அயர்த்தல்-சோர்ந்துபோதல்; அலசுதல்-இணைத்துப்பேசுதல்/வருந்துதல்; விஞ்சையர்-வித்யாதரப் பெண்கள்; ஏழையர்-பெண்கள்/மனைவியர்)

''சந்திரனில் இயற்கையாக உள்ள முயல் என்று கூறப்படும் களங்கமே இல்லாத பூரண சந்திரனைப் போன்று பொலிவுற்றுத் திகழும் முகத்தையுடைய இயக்கர்குலப் பெண்டிர், அரக்கர்குலப் பெண்டிர், வித்யாதரகுலப் பெண்டிர், என்று கூறப்படுகின்ற உனது மனைவிமார்கள், உன்னைத் தன்வசப்படுத்தி ஆலிங்கனம் செய்து கொண்டதால் மெலிவுற்று அந்த மலர்கள் நிறைந்த படுக்கையிலேயே சோர்ந்துபோய் உறங்கிப் போய்விட்டாயோ? அல்லது, போரில் நேர்ந்த அயர்வினால் களைத்துப்போய்ப் படுத்துக்கிடக்கின்றாயோ?'' என்று புலம்புகிறாள் மண்டோதரி.

இந்திரசித்து எல்லா மரபைச்சார்ந்த பெண்டிரையும், உரிமை மகளிராய்ப் பெற்றிருந்தான்என்பது மறுபடியும்இப்பாடலில் மண்டோதரி மூலம் புலப்படுத்தப்படுகிறது. ''முயற்கறை பயிலாத்திங்கள்'' என்பது இல்பொருள் உவமை. ''முயக்கம்'' என்பது புணர்ச்சி என்ற பொருளில் ஆலிங்கனத்தைக் குறிக்கும். இளமைப்பருவத்தில் தாலாட்டிச் சீராட்டிய ஒரு தாயின் உள்ள நிலையை எடுத்துக்கூறும் அவலச்சுவை நிறைந்த ஒரு அருமையான பாடல்இது. தன் மடியில் படுத்து விளையாடிய குழந்தை,

Koviloor Digital Library

மனைவியின் புணர்ச்சியில் மகிழ்ந்து விளங்கிய இளைஞன், இப்போது பூமித்தாயின் மடியில் விழுந்துகிடப்பதைக் கண்டு அரற்றும் ஒரு பாசமிக்க தாயின் நேசத்துடிப்பு மிளிர்வதை உணர்க. இந்திரசித்து இன்னும் உறங்கிக் கொண்டிருப்பதாகவே கருதி அதற்கான காரணங்கள் என்னவாக இருக்கமுடியும் என்று பேசுகிறாள் அவன் தாய் மண்டோதரி என்க.

52. "முக்கணான் முதலினோரை, உலகு ஒரு மூன்றினோடும்,
புக்க போர்எல்லாம் வென்று நின்ற என் புதல்வன் போலாம்,
மக்களில் ஒருவன் கொல்ல, மாள்பவன்? மானமேரு
உக்கிட, அணுஒன்று ஓடி உதைத்தது போலும் அம்மா!" (9320)

(முக்கணான்-சிவபெருமான்; மக்கள்-மானிடர்; மானம்-பெருமை; உகுதல்-சிதறுதல்)

''தான் புகுந்துசெய்த போர்களெல்லாம் வெற்றியையேயன்றித் தோல்வி என்பதையே கண்டறியாத என்மகன் இந்திரசித்து, மூன்று கண்களையுடைய சிவபெருமான் முதலியவர்களையும், இம்மூன்று உலகங்களையும் வென்று வெற்றிகண்டவன். அத்தகைய பேராற்றல் வாய்ந்த ஒருவனை, சாதாரண அற்பமான மனிதகுலத்தைச் சார்ந்த இலக்குவன் கொன்றுபோட, அவன் இறந்துபடுவானோ? இது என்ன வியப்பாக இருக்கிறதே? இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு சிறு அணு ஒன்று ஓடிப்போய்ப் பெருமைமிக்க பெரிய மேருமலையை உதைத்து விட்டதுபோலவும் அதனால் அது சிதறிப் போய்விட்டதுபோலவும் அல்லவா இருக்கிறது?'' என்று அங்கலாய்க்கிறாள் மண்டோதரி.

இந்திரசித்து சிவபெருமான் முதலிய முத்தேவர்களையும், மூவுலகங் களையும் வெற்றிகொண்ட செய்தி முன்பும் பேசப்பட்டிருப்பதைக் காண்க. 'அம்மா!' என்பது வியப்புக்குறித்த இடைச்சொல். மேருமலைக்கு இந்திரசித்தும், அணுவுக்கு இலக்குவனும் உவமைகள்.

53. "பஞ்சுஎரி உற்றது என்ன, அரக்கர்தம் பரவையெல்லாம்,
வெஞ்சின மனிதர் கொல்ல, விளிந்ததே; மீண்டதில்லை;
அஞ்சினேன், அஞ்சினேன், அச்சீதை என்று அமுதால் செய்த
நஞ்சினால், இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?" (9321)

(எரி-நெருப்பு; உறுதல்-பொருந்துதல்; பரவை-கடல்; விளிதல்-இறத்தல்)

பஞ்சுப் பொதியினைச் சேர்ந்த நெருப்புப்போல அரக்கர்களுடைய கடல்போன்ற சேனைத் தொகுதிகள் எல்லாவற்றையும், மிக்க கொடிய கோபம்கொண்ட மனிதர்களாகிய இராமஇலக்குவர் போரில் அழித் தொழிக்க, அனைவரும் இறந்துபட்டனரே! ஒருவர்கூட மீண்டு திரும்பி வரவில்லையே! அமிழ்தத்தில் தோய்த்த நஞ்சு போன்றவளான இந்தச்சீதை

Koviloor Digital Library

என்ற பெயருடைய ஒருத்தியால் இந்த இலங்கை அரசனானவனும், என் கணவனுமான இராவணனுக்கு நாளை இதேநிலைதான் வந்துசேரும்; அதை நினைத்துத்தான் நான் இப்போது அஞ்சுகிறேன் அச்சம் கொள்கிறேன்'' என்று புலம்புகிறாள் மண்டோதரி.

'பஞ்சு எரி உற்றது' என்பது அழிவுக்கும், பேரழிவுக்கும் கூறப்படும் அருமையான, பொதுவான உவமை. இங்கே பெரும்படை அழிந்ததற்குக் கையாளப்பட்டுள்ளது. 'அரக்கர் தம் பரவை' என்பது உருவகம். சேனைப் படையைக் கடலாக உருவகித்தார் என்க. அனுமன் கொணர்ந்த மருத்து மலையால் வானரசேனை உயிர்பெற்றெழுந்து மீண்டும் போர்செய்யத் தொடங்கின. ஆனால் அரக்கர்சேனை மட்டும் அழிந்துபோனது அழிந்துபோனதாகவே ஆகிவிட்டது.. அவர்கள் மீண்டும் உயிர்பெற்று எழவில்லை என்ற தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறாள் இலங்கையின் பட்டத்தரசி மண்டோதரி. ''அமுதால் செய்த நஞ்சு'' என்பதும் மற்றொரு பொருள் பொதிந்த அருமையான சுவைக்கத்தக்க சொல்லாட்சி. முரண்பட்ட இரண்டு இயல்புகளைக் கொண்ட ஒரு பொருளை, ஒருவரையோ, ஒரு செயலையோ குறிப்பதற்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இத்தகைய சொல்லாட்சி வேறு எந்தக் காப்பியத்திலும் கூறப்படவில்லை. நஞ்சு அமுதாக முடியாது. அமுது நஞ்சாக முடியாது. ஆனால் இங்கே சீதாதேவி அமுதால் செய்த நஞ்சு, அமுதில் தோய்த்த நஞ்சு என்று பேசப்படுகிறாள். இராவணனுக்கு மட்டுமே அமுதாகத் தோன்றியவள், மற்றெல்லோருக்கும் அச்சம்தரும் நஞ்சாகவே தோன்றி யிருப்பதைக் காப்பியத்தில் பல இடங்களில் காணலாம்.

தன் கணவனும் நாளைக்கு இவ்வாறே இறந்துபடுவான் என்று சொல்வதற்கு மண்டோதரியால் முடியவில்லை; எனவே கவிஞன் அவளை ''இத்தகையன் அன்றோ?'' என்று சொல்ல வைக்கிறான். 'அஞ்சினேன், அஞ்சினேன்' என்ற அடுக்கு அவளுடைய ஆற்றாமையை உணர்த்தியது எனக்கொள்க. அமிழ்தம்போல் இனிமையாகத் தோன்றி, நஞ்சுபோல் உயிரைக் கொல்லும் இயல்புடையவள் சீதாதேவி என்பது இச்சொற்றொடரின் உட்கருத்து. நஞ்சு என்பது பிறன்மனை நயத்தல் என்னும் பாவச்செயலைக் குறிக்கும். இதே சொற்றொடரை முன்பு இராவணனே கூறியிருப்பதையும் நினைவிற்குக் கொண்டு வாருங்கள். 'வஞ்சனேன்! எனக்கு நானே, மாதரார்வடிவு கொண்ட, நஞ்சுதோய் அமுதம் உண்பான் நச்சினேன்'' என்பது இராவணன் மாயாசனகப் படலத்தில் சீதாதேவியை நோக்கிப் பேசும்பேச்சு. இங்கே உ.வே.சா அவர்கள் ஒரு மருத்துவக் குறிப்புத் தருகிறார். அமுதம் பொதிந்த நஞ்சு கடுக்காய் என்றும், நஞ்சு பொதிந்த அமிழ்தம் சுக்கு என்றும் குறிக்கிறார். சிறிய நெருப்புப்பொறியால் பெரிய பஞ்சுப் பொதி உருத்தெரியாமல் அழிந்து எரிந்துபோவதைப்போல, சிறிய இரு மானிடர்களால், பெரிய அரக்கர் படையே அழிந்து போய்விட்டதே என்று வருந்துகிறாள் மண்டோதரி.

Koviloor Digital Library

இராவணன் நாளை இறந்துபட்டால் அதற்கு இந்தச் சீதாதேவியிடம் அவன் கொண்ட பொருந்தாக் காமமே காரணம் என்று முடிவு செய்து பேசுகிறாள் மண்டோதரி என்பது கருதத்தக்கது.

54. இராவணன் சீதாதேவியைக் கொல்லுதற்காகச் செல்லுதல்

என்று அழைத்து இரங்கி ஏங்க, ''இத்துயர் நமர்கட்கு எல்லாம்
பொன் தழைத்தனைய அல்குல் சீதையால் புகுந்தது'' என்ன,
'வன் தழைக் கல்லின் நெஞ்சின் வஞ்சகத்தாளை, வாளால்,
கொன்று இழைத்திடுவேன்'' என்னா, ஓடினன், அரக்கர் கோமான்.
(9322)

(நமர்கட்கு-நம்மவர்களுக்கு; வன்-வன்மை; தழைத்தல்-நிறைந்திருத்தல்/மிகுதல்; இழைத்தல்-புரிதல்/செய்தல்; புகுந்தது-உண்டாயிற்று/விளைந்தது)

என்று இவ்வாறு மண்டோதரி இரக்கமும், வருத்தமும் கொண்டு தன் மகனை உரக்கக் கூவியழைத்துப் பேசிய அளவில் அரக்கர் வேந்தனாகிய இராவணன், ''நமக்கெல்லாம் இந்தத்துயரம் விளைவதற்குக் காரணமாக அமைந்தவள், அந்தப்பொன் போன்று தழைத்த அகன்ற அல்குலையுடைய சீதாதேவிதானே!'' என்று கூறிக்கொண்டே ''அந்த வன்மை நிறைந்த, கல்லைப்போன்று திண்மையான நெஞ்சத்தையுடைய, வஞ்சகியாகியசீதையை இப்பொழுதே என்வாளால் வெட்டிப்பகைவர்க்குத்தீங்கு புரிகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே சீதாதேவி இருக்கும் இடம் நோக்கி ஓடலானாள்.

தான் சீதாதேவியைக் கவர்ந்து கொண்டு வந்தது தன் தவறு இல்லை என்பதுபோலவும் தன் இச்சைக்கு இணங்காத சீதாதேவியே தவறிழைத்து விட்டது போலவும் எண்ணி, இராவணன் செயல்படுவதை நோக்குங்கள். சீதாதேவியின் திண்ணிய கற்பு, இராவணனுக்குக் கல்லின் நெஞ்சாகவும், அவள் தன் இச்சைக்கு உடன்படாத செயலால் அவள் வஞ்சகத்தாள் எனவும் இராவணன் இப்போது ஏசுவதை நோக்குங்கள். முன்பு அசோகவனத்தில் இரந்து, காலில் விழுந்து வேண்டும்பொழுது பேசிய சொற்களையும் இத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மிகச் சுவைபயக்கும். வன்நெஞ்சன் யார் என்பதும், வஞ்சகத்தாள் யார் என்பதும் ஊகித்து உணரற்பாலது. ''தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின் என் குற்றம் ஆகும் இறைக்கு'' என்பது குறள்-436. ''ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னும் உயிர்க்கு'' என்பதும் குறள்-190. தன் குற்றத்தை அவள்மேல் ஏற்றிக்கூறியதாகும். கொடியவர்களுக்கு நல்லவர்கள் செய்யும் செயல்கள் எல்லாம், கொடுமையாகவே தோன்றுவது இயல்பு என்ற உளவியல் தத்துவத்திற்கு எடுத்துக்காட்டு இராவணனின் இந்தக்கூற்று அமைந்த பாடல்.

Koviloor Digital Library

55. மகோதரன் இராவணனைத் தடுத்தல் [6 பாடல்கள்]

ஓடுகின்றானை நோக்கி, ''உயர்பெரும் பழியை உச்சிச்
சூடுகின்றான்'' என்று அஞ்சி, மகோதரன், துணிந்த நெஞ்சன்
மாடு சென்று, அடியின் வீழ்ந்து வணங்கி, ''நின் புகழ்க்கு மன்னா!
கேடு வந்து அடுத்தது'' என்னா, இனையன கிளத்தலுற்றான். (9323)

(உச்சி-தலை; மாடு-பக்கம்/அருகில்; அடுத்தது-விளைந்தது; சூடுதல்-சுமத்தல்/ஏற்றுக்கொள்ளுதல்; இனையன-இத்தகைய)

அவ்வாறு சீதாதேவியை வெட்டுவதற்காக ஓடுகின்றவனாகிய இராவணனை நோக்கி, அவன் அமைச்சன் மகோதரன் சற்றும் அஞ்சாது, துணிந்த நெஞ்சுடையவனாகி, மிகப்பெரிய பழிச்சொல்லுக்கு உள்ளாகப் போகிறானே நம் மன்னன் என்று உண்மையாகவே பயந்து, அவன் அருகில் ஓடிச்சென்று, அவன் பாதங்களில் விழுந்து வணங்கி, ''மன்னவனே! நீ இவ்வாறு செய்தால் உன்னுடைய புகழுக்குத் தீர்க்கமுடியாத களங்கம் வந்து சேருமே'' என்று முதலில் கூறிப் பிறகு கீழ்வருமாறு கூறத் தொடங்குகிறான்.

பெண்ணைக் கொல்லுதல் பெரும்பாவம். பாவங்களுள் எல்லாம் மிகக்கொடுமையானது பெண்கொலை. எனவேதான் தாடகையைக் கொல்ல இராமபிரான் முன்பு தயங்கினான்; பின் விசுவாமித்திரர் கட்டளையாலும், அவள் பெண் அல்லள் என்று தன் ஆசார்யன் கூறியதாலும் அவளை வதைக்க நேர்ந்தது; பின்னர் இலக்குவன் சூர்ப்பணகையையும் அயோமுகியையும் கொல்லாது, அங்கபங்கம் செய்ததும் இதனால்தான் என்பதை இங்கு நினைவுகூர்தல் தகும். எனவே அதனைக் கவிஞன் ''உயர்பெரும் பழி'' என்றான். 'உச்சி சூடுதல்' என்பது எல்லோரும் நன்கு காணும் வண்ணம் தலையில் மாலைசூட்டிக் கொள்வதுபோல் இந்தப்பழி எல்லோர்க்கும் தெரியும்படியான பழியாகும் என்பதாம்.

பொதுவாக இராவணன் அமைச்சரவையில் இருப்பவர்களுள் ஒருவரும் இராவணன் கருத்துக்கு மாற்றுக் கருத்துக்கூறி அவனை அல்வழியிலிருந்து நல்வழிக்குக் கொணர்பவர்கள் அல்லர். எனவேதான் கவிஞன் இங்கே மகோதரனைத் ''துணிந்த நெஞ்சன்'' என்றார். முன்பே இராவணன் அமைச்சர்களைப் பற்றிக் கூறும் பொழுது அசோகவனத்தில் இருந்த சீதாதேவியும் இதனையே ''கடிக்கும் வல்அரவும் கேட்கும் மந்திரம், களிக்கின்றோயை அடுக்கும், ஈது அடாது என்று ஆன்ற ஏதுவோடு அறிவுகாட்டி இடிக்குநர் இல்லை; உள்ளார் எண்ணியது எண்ணி, உன்னை முடிக்குநர், என்றபோது முடிவு அன்றி முடிவ துண்டோ?'' என்று பேசுகிறாள். ''இடிப்பாரை இல்லாத ஏமராமன்னன்'' இராவணன். ஒரு அமைச்சன் தன் மன்னனிடம் பேச முற்படும்பொழுது அவன் பாதங்களில் விழுந்து வணங்கித்தான் பேசவேண்டும் என்பது

Koviloor Digital Library

மரபல்ல; இயல்புமல்ல; எனினும் கவிஞன் அமைச்சன், ''துணிந்த நெஞ்சன், மாடு சென்று அடியின் வீழ்ந்து வணங்கி'' என்கிறான் என்றால், இப்பொழுது நிகழப்போகும் நிகழ்ச்சிக்கான பின் விளைவுகளை நன்கு உணர்ந்தவன் மகோதரன் என்பதனாலும், அதனின்றும் தன் மன்னனைத் தடுப்பது தன் கடமை என்று உணர்ந்ததாலும் அவ்வாறு அடிவீழ்ந்து வணங்க வேண்டியதாயிற்று என்பதாம். அதனால்தான் அதை ''உயர் பெரும் பழி'' என்றார் என்க. எனினும் வான்மீகம் இங்கே மாறுபடுகிறது. இவ்வாறு இராவணனைத் தடுத்தவன் ''சுபார்சுவன்'' என்று வான்மீகம் பேசுகிறது. சுபார்சுவன் அமைச்சனா, படைத்தலைவனா என்பதும் கூறப்படவில்லை. சுபார்சுவன் என்ற வடசொல்லைப் பெரும்பக்கன் என்று தமிழ்ப்படுத்தினான் கவிஞன். அவன் படைத்தலைவர்களுள் ஒருவன்.

56. நீர் உளதனையும், சூழ்ந்த நெருப்பு உளதனையும், நீண்ட
பார் உளதனையும், வானப்பரப்பு உளதனையும், காலின்
பேர் உளதனையும், பேராப் பெரும்பழி பிடித்தி போலாம்,
போர் உளதனையும் வென்று, புகழ் உளதனையும் உள்ளாய்'' (9324)

(அனையும்-அத்தனையும்; பேர்தல்-நீங்குதல்/மாறுபடுதல்; பிடித்தல்-பெறுதல்/அடைதல்; உளதனையும்-உள்ளவரையும்; சூழ்தல்-பரவுதல்/சுற்றிக்கொள்ளுதல்; கால்-காற்று; பார்-பூமி)

''போர்என்று சொல்லுகின்ற எல்லாப் போரிலும் வெற்றி பெற்றுப் புகழ் அனைத்தையும் உனக்குள் கொண்டவனே! இராவண! இந்த உலகில் நீர், பரவிச்சூழ்கின்ற நெருப்பு; நீண்டு விரிந்த பூமி; அகன்ற வானப்பரப்பு; காற்று என்று பேர்இருக்கும் வரையிலும், நீ ஒருக்காலும் நீங்காத தீராப் பழியை அடையப் போகிறாயோ?'' என்றுகூறித் தடுக்கிறான் மகோதரன்.

நீர், நெருப்பு, பூமி, ஆகாயம், காற்று என்ற பஞ்சபூதங்களின் சேர்க்கையால் ஆனது இவ்வுலகம். எனவே இவ்வுலகம் உள்ளவரையிலும் நீங்காத பெரும்பழிக்கு உள்ளாகப் போகிறாயோ? என்று கேட்கிறான் மகோதரன் என்பதாம். ''தனை'' என்ற சொல் ஒரு துணைச்சொல்; ஒரு அளவைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல். தனியாக எந்தப் பொருளையும் தராது. பிறசொல்லின் பின்வரும் சொல். எப்படி இறைவனைப் பாதாதி கேசமாகவும், மனிதனைக் கேசாதிபாதமாகவும் பாடவேண்டுமோ, அப்படி இந்த ஐம்பூதங்களையும் கூறுவதற்கு ஒரு முறையுண்டு. தோற்றம் என்ற முறையில் கூறவேண்டும் என்றால் முதலில் வான், காற்று, நெருப்பு, நீர், நிலம் எனக் கூறவேண்டும். ஒடுக்கமுறையில் கூறவேண்டும் என்றால் முதலில் நிலம், நீர், நெருப்பு காற்று, ஆகாயம் எனக் கூறவேண்டும். இது செய்யுள் ஆதலின் முறைமாறிப் பாடப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

57. "தெள்ள அரும் காலகேயர் சிரத்தொடும் திசைக்கை யானை
வெள்ளிய மருப்புச் சிந்த, வீசிய விசயத்து ஒள்வாள்
வள்ளி அம் மருங்குல், செவ்வாய், மாதர்மேல் வைத்தபோது,
கொள்ளுமே ஆவிதானே, நாணத்தால் குறைவது அல்லால்?" (9325)

(தெள்ளஅரும்-தெளிதற்கரிய; மருப்பு-கொம்பு; சிந்துதல்-சிதறிப் போதல்; விசயம்-விஜயம்/வெற்றி; ஒள்-ஒளிபொருந்திய; வள்ளி-வல்லி /கொடி; மருங்குல்-இடை; குறைவது-குன்றுவது; ஆவி-உயிர்; கொள்ளுதல்-கவர்தல்/கொல்லுதல்/பறித்தல்; வெள்ளிய-வெண்மை யான; அம்-அழகிய; வைத்தல்-செலுத்துதல்)

''இவர்களுடைய வலிமை இவ்வளவு என்று தெரிந்து அறிதற்கு இயலாத நம் பகைவர்களாகிய காலகேயரின் தலைகளையும், எட்டுத் திசைகளிலும் இருக்கும் திசை யானைகளின் வெண்மையான தந்தங் களையும்-கொம்புகளையும் சிதறடித்த உன்னுடைய வெற்றி பொருந்தியதும், ஒளிமிக்கதுமானவாட்படை, பூங்கொடிபோன்றஅழகிய இடையை உடையவரும், சிவந்த வாயை உடையவருமான பெண்களின் மேல் செலுத்தப்பட்டால், அந்த வாள் நாணத்தால் கூனிக்குறுகிப் போகுமே தவிர, அவர்களுடைய உயிரைப் பறிக்குமோ? பறிக்கா தல்லவா?'' என்று கேட்கிறான் மகோதரன்.

பெருவலி படைத்தவர்களுடன்தான் போரிடவேண்டும், தலையை வெட்டவேண்டுமேயன்றிப் பெண்களிடம் நம்வீரத்தைக் காட்டக்கூடாது. அது பொருந்தாது. அது நமக்குப் பழியையும், இழிவையுமே சேர்க்கும் என்று அறிவுறுத்தித் தடுக்கிறான் மகோதரன் என்பதாம். காலகேயர் என்பவர் அசுரர்குலத்தவர், இந்திரனை வென்றவர்கள் பொன்னிற முடையவர்கள், காசியபமுனிவர்க்குக் கலை என்பாளிடம் பிறந்தவர்கள். அவர்களை இராவணன் திக்குவிஜயம் சென்று வெற்றிகொண்டான் என்பது உத்தரகாண்டம் திக்கு விஜயப்படலம். இந்தப் பாட்லிலேயே இராவணன் தன் தங்கை சூர்ப்பணகையின் கணவன் வித்துருசிங்கனைக் கொன்ற செய்தியும் வருவதால் பாடலை ஒருமுறை பார்க்கலாம். ''அந்நகரி விட்டு அரக்கன் அடல் வருணன்தனை வெல்வான், அவன்தான் மேவும் கன்னகரி தனைமுட்டிக் காலகேயரை எல்லாம் கணத்தில் கொன்று, தன்னுடைய தங்கையாம் சலம் மிகுந்த சூர்ப்பணகை தன்னைக் கொண்ட, மின் அனைய சுடர்இலை வேல் வித்துரு சிங்கன்தனை வெங்களத்து வீழ்த்தான்'' என்பது பாடல்பகுதி.

58. "மங்கையை, குலத்துளாளை, தவத்தியை, முனிந்து, வாளால்
சங்கை ஒன்று இன்றிக் கொன்றால், "குலத்துக்கே தக்கான்" என்று
கங்கை அம் சென்னியானும், கண்ணனும், கமலத்தோனும்,
செங்கையும் கொட்டி, உன்னைச் சிரிப்பரால், "சிறியன்" என்னா. (9326)

Koviloor Digital Library

(மங்கை-பெண்; சங்கை-ஐயம்/அச்சம்; ஒன்று-சிறிதும்; சென்னி-தலை; கண்ணன்-திருமால்; கமலத்தோன்-பிரமதேவன்; அம்-அழகிய; சிரித்தல்-இகழ்தல்)

ஒரு நல்லபெண்ணை, நல்லகுலத்தில் பிறந்தவளை, தவ ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துக்கொண்டிருப்பவளை, நீ மிகச்சினந்து, உன்னுடைய வாட் படையால் அச்சமோ, ஐயமோ சிறிதும் இன்றி வெட்டிக் கொன்று போட்டாய் என்றால், ''இவன் அரக்கர் குலத்துக்கே முற்றிலும் தக்கவன்'' என்றும் ''அற்பன்'' என்றும், கங்கையைத் தன் அழகிய முடியில் சூடியிருக்கும் சிவபெருமானும், கண்ணனாகிய திருமாலும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும் தங்கள் சிவந்த கைகளைக் கொட்டி உன்னை எள்ளிநகையாடுவார்களே?'' என்று அறிவுறுத்துகிறான் மகோதரன்.

முதலில் ஒரு பெண்ணைக் கொல்லுதல் என்பதே பாவச்செயல், அதிலும் நல்லகுலத்தில் பிறந்து வந்தவளைக் கொல்லுதல் என்பது அதனினும் பாவம்; தற்போது தவஒழுக்கத்தை மேற்கொண்டிருப்ப வளைக் கொல்லுவது என்பது பாவத்தினும் பாவம், பெரும்பாவம் என்று அவன் தன் ஒரு செயலால் மூன்று பாவத்திற்கு உள்ளாகிறான் என்பதை எடுத்துக்கூறித் தடுக்கிறான் மகோதரன் என்பதாம். அத்துடன் இவ்வாறு நீ செய்தால் நமக்குப் பகைவர்களாகிய முத்தேவர்களும் உன் இழிந்த செய்கையைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கமாட்டார்களா? என்றும் கேட்கிறான் மகோதரன். 'மங்கை' என்பது இங்கே பருவத்தைக் குறிக்காது, பொதுவாகப் பெண் என்ற பொருளையே தரும். இதே சொற்களை இலக்கு வன் இராமபிரானிடம் முன்பு கூறியதைக் காணுங்கள். ''தையலைத் துணையிலாளைத் தவத்தியைத் தருமக்கற்பின் தெய்வதந்தன்னை மற்று உன் தேவியைத் திருவைத் தீண்டி வெய்யவன் கொன்றால் என்றால், வேதனை உழப்பது இன்னும் உள்ளவோ? கருணையாலோ? தருமத்தோடு உறவும் உண்டோ?'' என்று கேட்கிறான் இலக்குவன். இந்தப் பாடலையும் இங்கு நினைவுகூர்தல் தகும். திருமாலைக் கண்ணன் என்று கூறுவதும் உண்டு. ''கடல்வண்ணன், கண்ணன், விண்ணவர்கருமாணிக்கம்'' என்பது திருவாய்மொழி.

59. நிலத்து இயல்பு அன்று; வானின்நெறி அன்று; நீதி அன்று;
தலத்து இயல்பு அன்று; மேலோர் தருமமேல் அதுவும் அன்று;
புலத்தியன் மரபின் வந்து, புண்ணிய விரதம் பூண்டாய்!
வலத்து இயல்பு அன்று; மாயாப் பழிகொள மறுகுவாயோ?" (9327)

(பூணுதல்-மேற்கொள்ளுதல்; நிலம்-மண்ணுலகு; வான்-விண்ணுலகு; தலம்-பாதலம்; மேலோர்-மேலுலகம்/மேன்மக்கள்; வலம்-வலிமை; மாயா-அழியாத; மறுகுதல்-மனம் கலங்குதல்; புண்ணியம்-அறநெறிமுறைமை; மரபு-முறைமை/வம்சம்)

Koviloor Digital Library

மகோதரன் இராவணனை நோக்கி மேலும் கூறுகிறான். ''பிரம குலத்தில் புலத்தியன் மரபில் தோன்றி, பலப்பல அற நெறிமுறைகளைத் தொடர்ந்து செய்து புண்ணிய காரியங்களை மேற்கொண்டவனே! இராவண! இப்போது நீ செய்ய இருக்கின்ற இந்தப் பெண்கொலை என்பது, இவ்வுலகத்தில் உள்ளவர்களின் பண்பாடு அல்ல; விண்ணுலகத்துத் தேவர்களின் இயல்புக்கும் ஒவ்வாதது; இது பொதுவாகவே நீதி நெறி முறைகளுக்கு உட்பட்டதன்று; பாதலத்தில் உள்ளவர்களான நரகர்களின் இயல்போ, அல்லது நமது இலங்கை மாநகர அரக்கர்களின் இயல்போ அல்ல; சத்தியலோகத்தில் வாழும் பிரமனோ, அல்லது மேன்மக்கள் செய்யக்கூடிய தருமகாரியங்களுள் ஒன்றோ என்றால் அதுவும் அல்ல; உன்னுடைய வலிமையின் பெருமைக்கும் இது ஏற்றதல்ல; எனவே இத்தகைய பெண்கொலையைச் செய்து, என்றும் அழிக்கமுடியாத தீராப்பழியை ஏற்றுக்கொண்டு, பின்நாளில் அதற்காக மனம் கலங்கி வருத்தப்பட முயலுகிறாயோ?'' என்கிறான் மகோதரன்.

முன்பு மண், விண், என்று கூறியதால் பின்னால் வரும் தலம் என்ற சொல்லை முதற்குறையாகக் கொண்டு பாதலம் என்று பொருள் கொள்ளப் பட்டது. தலம் என்ற சொல்லுக்கு இடம் என்பது பொருள். எனவே இவ்விடமாகிய இலங்கை மாநகரம் என்று பொருள் கொள்ளப்பட்டது. இரண்டு பொருள்களும் பொருந்திவருதல் காண்க. முன்பு வானின் நெறி என்று விண்ணுலகத்தோர் இயல்பன்று என்று கூறியதால், பின்னர் வந்த ''மேலோர்'' என்ற சொல்லுக்கு, சத்தியலோகத்தில் உள்ளோர் என்றும் மேன்மக்கள் என்றும் பொருள்கொள்ளப்பட்டது. புலத்தியன் பிரம குலத்தில் வந்தவன் என்பது நாம் அறிந்ததே. பிரமன்-புலத்தியன்-விச்சிரவசு-இராவணன்-இந்திரசித்து என்பது குலமுறை. எனில் இந்திரசித்து பிரமனின் நான்காம் தலைமுறை என்பதை உணரலாம். இராவணன் தவம் செய்து புண்ணியம் தேடிக்கொண்டவன் என்பதை உத்தரகாண்டம் விரிவாகப் பேசுகிறது. எனினும் இங்கேயே மாரீசன் கூற்றாலும் இதனை உணரலாம். ''அற்ற கரத்தோடு உன்தலை நீயே அனல் முற்றிப் பற்றினைஉய்ந்தாய் பற்பலகாலம், பசிகூர, உற்று உயிருள்ளேதேய உலந்தாய், பினையன்றோ பெற்றனை செல்வம்'' என்பது மாரீசன் கூற்று.

60. ''இன்று நீ இவளை வாளால் எறிந்துபோய், இராமன் தன்னை
வென்று மீண்டு, இலங்கை மூதூர் எய்தினை வெதும்புவாயோ?
பொன்றினள் சீதை; இன்றே புரவல! புதல்வன் தன்னைக்
கொன்றவன் தம்மைக் கொல்லக் கூசினைபோலும்'' என்றான். (9328)

(எறிதல்-வெட்டுதல்; மூதூர்-பழமையான நகரம்/இலங்கை; பொன்றுதல்-இறந்துபடுதல்; புரவலன்-பாதுகாப்பவன்/அரசன்; கூசுதல்-மனம் பின்வாங்குதல்)

Koviloor Digital Library

''இப்பொழுது நீ இந்தச் சீதாதேவியை உன்னுடைய வாட்படையால் வெட்டி வீழ்த்திவிட்டு நேரே போர்க்களம் சென்று இராமனையும் வென்று விட்டுத்திரும்பவும் நமது பழமையான நகரமாகிய இலங்கைக்குத் திரும்பி வந்தபின் ''ஐயோ! சீதை இறந்துபோய்விட்டாளே! இனி என்ன செய்வேன்?'' என்று உட்கார்ந்து கொண்டு மனம் வெதும்புவாயோ? எனவே மன்னா! உன்னுடைய புதல்வர்களைக் கொன்றார்களே இந்த இருமானிடர்கள் இராமஇலக்குவர் அவர்களைக் கொல்லுவதற்கு ஏன் பின்வாங்குகிறாய்? ஏன் தயங்குகிறாய்?'' என்று அவனுக்கு நெறிமுறைப்பட்ட வீரவுணர்ச்சியை விளைவிக்கிறான் மகோதரன்.

உன்னுடைய மகனைக் கொன்றவர்களுடன் போரிட்டு அவர்களைக் கொன்று வெற்றிபெற வேண்டுமேயன்றி, ஒரு பெண்ணைக் கொல்லுதல் கூடாது என்று அறிவுறுத்தி அவனை மனமாற்றம் செய்கிறான் மகோதரன். இங்கே ஒரு நுட்பமான கருத்தை மறைமுகமாகத் தெரிவிக்கிறான் மகோதரன். நீ சீதாதேவியைக் கொல்லாதிருந்தால், எப்பாடுபட்டாவது இராமஇலக்குவர்களுடன் போரிட்டு வென்று அவர்களைக் கொன்று பின்னர் சீதாதேவியைப் பெறுவதற்கு வழி இருக்கிறது. அதை விட்டுவிட்டு, நீ இப்பொழுது ஒரு பெண்ணை அதுவும் நீ விரும்பிய ஒருத்தியைக் கொன்றுவிட்டால் உன் வீரத்திற்கும் மாசு உண்டாகும்; உனக்கும் பெரும்பழியும் உண்டாகும்; பின்னர் நீயே வருத்தமடையும் படியும் நேரும் என்று இத்தனை கருத்துக்களையும் உள்ளடக்கி மகோதரன் அறிவுறுத்துகிறான் என்பதாம்.

61. இராவணன் இந்திரசித்தின் உடலைத் தைலத்தோணியில் கிடத்தப் பணித்தல்

என்னலும், எடுத்து கூர்வாள் இருநிலத்து இட்டு, மீண்டு,
மன்னவன், ''மைந்தன் தன்னை மாற்றலார் வலியால் கொண்ட
சின்னமும், அவர்கள் தங்கள் சிரமும் கொண்டு அன்றிச் சேர்கேன்;
துன்னரும் தயிலத்தோணி வளர்த்துமின்'' என்னச் சொன்னான். (9329)

(இரும்-பெரிய; இடுதல்-கீழே போடுதல்; மீண்டு-நீங்கி; மாற்றலர்-பகைவர்கள்; சின்னம்-அடையாளம்/இங்கே இந்திரசித்தின் தலை; சேர்தல்-வருதல்; தைலத்தோணி-தைலக்கொப்பரை/எண்ணெய்த்தாழி; வளர்த்துதல்-பாதுகாப்பாக வைத்தல்/கிடத்துதல்/படுக்கவைத்தல்; துன்னரும்-நெருங்குதற்கரிய)

என்று மகோதரன் கூறிமுடித்ததும், தான் சீதாதேவியை வெட்டுவ தற்காகக் கையில் எடுத்த கூரிய வாட்படையை மன்னனாகிய இராவணன் பெரிய நிலத்தில் போட்டுவிட்டு, தன் இருப்பிடத்திற்குத் திரும்பிவந்து, தன்னுடைய பழைய கருத்தை மாற்றிக்கொண்டு, இப்பொழுது ''பகைவர் களாகிய இராமஇலக்குவர் தங்கள் வலிமையால் பற்றிக்கொண்டு

Koviloor Digital Library

அவர்கள் வெற்றிக்கு அடையாளமாக எடுத்துச்சென்ற என் மைந்தன் இந்திரசித்தின் தலையோடு பழிக்குப்பழியாக அவர்கள் இருவரின் தலையையும் சேர்த்துக் கொய்து கொண்டுதான் இந்நகருக்குத் திரும்பி வருவேன்; அஃதல்லாமல் மீளமாட்டேன்'' என்று வஞ்சினம் கூறிவிட்டு ''நான் அவற்றைக் கொண்டு மீண்டுவரும் வரையிலும் என்புதல்வன் இந்திரசித்தின் உடலை யாரும் நெருங்குதற்கரிய எண்ணெய்த்தாழியில் பழைய மரபுப்படி பத்திரமாக வைத்திருங்கள்'' என்று கட்டளையிட்டு விட்டுச் சென்றான்.

இதேபோல் முன்பு தசரதன் இறந்தபொழுது, பரதன் கேக யத்திலிருந்து வரும்வரையிலும் தைலத்தோணியில் இட்டுப் பாதுகாக்குமாறு வசிஷ்டர் கூறியதையும் இங்கு நினைவுகூர்க. இப்பொழுதும்கூட, இறந்தவர் உடலை, இறுதிச்சடங்கு செய்யக் காலதாமதமாகும் என்று கருதினால் குளிர்பதனபெட்டியில் வைத்துப் பாதுகாக்கும் முறை உள்ளது என்பதும் நாம் அறிந்ததே. 'வளர்த்துதல்' என்பது படுக்கவைத்தல் என்ற பொருளில் வந்தது. சிறு குழந்தைகளைப் படுக்கவைத்து உறங்கவைப்பதற்குத் தாய்மார்கள் பாடும் தாலாட்டில் ''கண் வளராய்'' என்றசொல் பயன் படுத்தப்படுவதை நினைக. இங்கே அது அமைதியாகத் தூங்குவாயாக என்ற பொருளையும் தரும். இங்கே இராவணன் ''வளர்த்துமின்'' என்று கூறுவது உயிரற்ற உடலைக் கிடத்திவையுங்கள் என்ற அமங்கலப் பொருளைத்தரும்.

இராவணன் சோகப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

29. படைக்காட்சிப் படலம் [52 பாடல்கள்]

இராவணன் கட்டளைக்கு ஏற்பத் தூதுவர்கள் சென்று உலகின் பலபாகங்களிலிருந்தும் அரக்கர்படையை வரவழைத்து அதனை இராவணனுக்குக் காட்ட, அதனை ஒரு கோபுரத்தின்மீது நின்று இராவணன் காணுகின்ற நிகழ்வைக்கூறும் படலம் என பொருள் விரிவுகொள்ளும். இது 52பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''படைக்காட்டுறு படலம்'' எனவும் ''படைக்காட்டுப் படலம்'' எனவும் ''படைவரவுப் படலம்'' எனவும் ''படை வரலாற்றுப் படலம்'' எனவும் குறிக்கப்பெற்றிருக்கின்றன. இன்னும் சில சுவடிகளில் அடுத்த படலத்தையும் சேர்த்து ''மூலபலவரவுகாண் படலம்'' எனவும், ''மூலபலத்தானைகாண் படலம்'' எனவும், ''மூலத்தானைகாண் படலம்'' எனவும் ''மூலபல வரத்துப்படலம்'' எனவும் பல பெயர்களால் குறிக்கப் பெற்றிருக்கின்றன. வான்மீகத்தில் இப்படலப்பெயர் காணப்படவே இல்லை. இந்தப் படலம் கம்பரின் படைப்பே ஆகும். எனினும் ஒன்று நோக்கவேண்டியுள்ளது. முந்தைய இராவணன் சோகப்படலத்தில், அவன் இந்திரசித்தன் உடலைத் தைலத்தோணியில் இடுமாறு கட்டளை யிட்டுவிட்டுச் சென்றான் என்று முடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படலத்தின் தொடக்கம் அவனுக்குப் படைகளைத் தூதுவர்கள் காட்டுவதாக அமைந்துள்ளது. நடுவில் ஏதோ சில பாடல்கள் விடப்பட்டிருப்பதுபோல் தோன்றுகிறது. இராவணன் படைகளைக் கொணரப் பணித்தது எங்கும் பேசப்படவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது. கவிஞன் வழக்கத்திற்கு மாறாக, முந்தையப் படலத்தின் கடைசிப்பாடலில் இந்தப்படலத்தின் தோற்றுவாயாக ஒரு குறிப்புக்கூடத் தரவில்லை என்றும் கருதத்தோன்றுகிறது. ஆனால் எந்தப்பதிப்பிலும் மிகைப்பாடலாகவும் ஒன்றும் காட்டப்பெறவில்லை. இச்செய்தி பேரறிஞர்களின் ஆய்வுக்குரியது.

இப்படலத்துள் இராவணன் கட்டளைக்கேற்பத் தூதுவர்கள் சென்று உலகெங்குமுள்ள அரக்கர்படையை இலங்கைக்குக் கொணர்தல்; இராவணன் ஒரு கோபுரத்தின்மீது ஏறிநின்று படைப்பெருக்கத்தைக் காணுதல்; அதனை முற்றும் காணமுடியாததால் படைத்தலைவர்களை ம்ட்டும் அழைத்து வருமாறு கூறுதல்; படைத்தலைவர்கள் வந்ததும் இந்தப்போர் ஏன் விளைந்தது என்பது பற்றிக்கூறுதல்; படைத்தலைவர்கள் ஒரு குரங்குப்படையுடனும், இரு மானிடர்களுடனும் போர் செய்யவா

Koviloor Digital Library

எங்களை அழைத்தீர்கள்? எனக்கேட்டல்; அப்பொழுது மாலியவான் குறுக்கிட்டு இராமஇலக்குவரின் தெய்வீகத்தன்மை பற்றியும், வானர வீரர்களின் வலிமை பற்றியும், இராவணன் இயற்றிய தீயசெயல் பற்றியும் விளக்கிக்கூறிச் சீதாதேவியை விடுதலை செய்துவிடுதலே உத்தமம் என்று கூறுதல்; அப்போது புட்கரத்தீவின் தலைவனான வன்னி என்பவன், சீதாதேவியை விடுதலை செய்வதென்றால் முன்னரேயே செய்திருக்க வேண்டும், இந்திரசித்து இறந்தபின் அவ்வாறு செய்தல் தக்கதன்று என்று மறுத்துக்கூறி, குரங்கு, மானிடரின் படைவலிமை பற்றி மீண்டும் கேட்டல்; அப்போது இராவணன் தம் படையின் அளவு என்ன? என்று கேட்டல்; அவர்கள் ஓராயிரம் வெள்ளம் என்று மற்றவர்கள் கூறுவார்கள் என்றுகூறித் தங்கள் மேன்மைத் தகுதிகளைத் தாங்களே உயர்வு நவிற்சியில் கூறிக்கொள்ளுதல்; ஆகியன மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. அரக்கர்சேனைக்கு இலங்கையில் இடமில்லாமை

அத்தொழில் அவரும் செய்தார்; ஆயிடை, அனைத்துத் திக்கும்
பொத்திய நிருதர் தானை, கொணரிய போய தூதர்,
ஒத்தனர் அணுகி வந்து வணங்கினர், "இலங்கை உன் ஊர்ப்
பத்தியின் அடைந்த தானைக்கு இடம்இலை; பணிஎன்?" என்றார்.
(9330)

(பொத்திய-நிரம்பியுள்ள; கொணரிய-கொண்டுவரும் பொருட்டு; ஒத்தனர்-ஒருசேர; பத்தி-வரிசை; நிருதர்-அரக்கர்; தானை-சேனை/படை; ஆயிடை-அப்பொழுது)

இராவணன் முன்பு கட்டளையிட்டபடி, இந்திரசித்தின் உடலை ஏவலாளர்கள் தைலத்தோணியில் இட்டுப் பத்திரமாகப் பாதுகாக்கும் பணியைச் செய்தார்கள். இதற்கிடையில் உலகில் உள்ள எல்லாத் திக்குகளிலும் நிரம்பியிருந்த அரக்கர்சேனை அனைத்தையும் கொண்டு வருவதற்காகச் சென்றிருந்த தூதுவர்கள் எல்லோரும் ஒருசேரத் திரும்பி வந்து, இராவணனை நெருங்கி, வணங்கி, ''அரசே! உன்னுடைய நகரமாகிய இலங்கை கொள்ளாத அளவுக்கு வரிசையாக வந்த படைகள் எல்லாம் வந்து சேர்ந்துவிட்டன; அவை நிற்பதற்கு இங்கு இடம் இல்லை. இப்போது அடுத்து நாங்கள் செய்யவேண்டிய பணி என்ன?'' என்று வினவினர்.

இங்கே 'அத்தொழில்' என்பது இந்திரசித்தனது உடலைத் தைலத் தோணியில் இட்டு வளர்த்தல் சரி. இராவணன் எப்போது தூதுவர்களை அழைத்தான்? உலகெங்கும் சென்று அரக்கர் படைகளைக் கொண்டு வருமாறு எப்போது பணித்தான்? என்பதே புரியவில்லை அல்லவா? கதைத் தொடர்பு சற்று விலகியிருப்பது போல் தோன்றுகிறது. நடுவில் ஏதேனும் பாடல்கள் இருந்திருக்கவேண்டும். 'இலங்கை உன் ஊர்ப்

Koviloor Digital Library

பத்தியின் அடைந்த தானைக்கு இடம் இலை'' என்பது படையின் பெருக்கத்தை உணர்த்துவதாகக் கொள்ளவேண்டும். 'தானை' என்பது 'தாண்' என்ற பாரசீகச் சொல்லின் விகாரம் என்கிறது உ.வே.சா பதிப்பு.

2. ஏம்பலுற்று எழுந்த மன்னன், "எவ்வழி எய்திற்று?" என்றான்;
கூம்பலுற்று உயர்ந்த கையர், ''ஒருவழி கூறலாமோ?
வாம்புனல் பரவை ஏழும் இறுதியின் வளர்ந்தது என்னாத்
தாம் பொடித்து எழுந்த தானைக்கு உலகு இடம் இல்லை" என்றார்.
(9331)

(ஏம்பல்-மகிழ்ச்சி; எவ்வழி-எவ்விடம்; கூம்புதல்-குவித்தல்; ஆமோ-ஆகுமோ/கூடுமோ; வாம்-வாவும்/தாவும்; பரவை-கடல்; இறுதி-ஊழி யிறுதிக்காலம்; வளர்தல்-பொங்கியெழுதல்; பொடித்து-கிளர்ந்து)

அவ்வாறு தூதுவர்கள் கூறக்கேட்ட மன்னன் இராவணன் மிக்க மகிழ்ச்சியுற்று, '' நம் படை எவ்விடத்தில் வந்து சேர்ந்திருக்கிறது?'' என்று கேட்டதும், தூதுவர்கள் கூப்பிய கரத்தினராய் அந்தப் பரந்தசேனை இன்ன இடத்தில் உள்ளது என்று ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டிக் கூறமுடியுமா? தாவும் இயல்புடைய அலைகளையுடைய நீர்ப்பரப்பையுடைய ஏழுகடல்களும், ஊழியிறுதிக்காலத்தில் பொங்கி எழுவதுபோல், இப்படைகள் கிளர்ந்து எழுந்து வந்திருக்கின்றன. அவை நிற்பதற்கு இவ்வுலகில் இடமே போதவில்லை'' என்றார்கள்.

பொங்கி எழுந்த சேனையின் பெருக்கத்திற்கு ஊழியிறுதிக் காலத்தில் பொங்கி எழும் கடல் உவமை.

3. மண் உற நடந்த தானை வளர்ந்த மாத் தூளி மண்ட,
விண் உற நடக்கின்றாரும் மிதித்தனர் ஏக, மேல்மேல்,
கண்ணுற அருமை காணாக் கற்பத்தின் முடிவில் கார்போல்,
எண்ணுற அரியசேனை எய்தியது இலங்கை நோக்கி. (9332)

(உற-பொருந்த; வளர்ந்த-பெருகிய; மண்ட-நெருங்க; அருமை-அரிது; கற்பம்-ஊழியிறுதிக்காலம்; கார்-கரியமேகம்; தூளி-புழுதி)

அந்த அரக்கர்சேனை தம் கால்கள் பூமியில் நன்கு அழுந்தும்படி நடந்துவந்ததால் பெருகிய பெரிய மண்துகள் விண்ணை நெருங்குதலால், விண்ணில் நடக்கின்ற இயல்புடைய தேவர்கள்கூட மண்ணில் நடப்பதுபோல அந்தப் புழுதியில் எழுந்த மண்செறிவினில் நடக்க நடக்க, அதனால் அந்தத்துகள் கண்களிலும் பரவியதால் இமையாநாட்டமுடைய தேவர்கள்கூட அந்தப்படை செல்வதைத் தம் கண்களால் நேர் எதிராகக் காணமுடியாதவராயினர். ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் கரிய ஏழு மேகங்கள்போல, எண்ணிக்கையில் அடங்காத அந்தச்சேனை, இலங்கை மாநகரை நோக்கி வந்து சேர்ந்தது.

Koviloor Digital Library

மண்ணில் கால்தோயாத இயல்பும், இமையாநாட்டமும் தேவர்க் குரியன. இங்கே அந்த அரக்கர்சேனை மண்ணில் கால்பதித்து நடக்கின்ற பொழுது எழுந்த பெரும்புழுதித் துகள் விண்ணுலகத்தில் மண்டியதால், அத்தேவர்கள் அம்மண்ணில் கால்தோய நடக்கவேண்டியதாயிற்று. அதுபோல அந்தத்துகள் எழுந்து பரவியதால், இமையாநாட்டம் உடைய தேவர்கள்கூட அந்தச்சேனையின் செலவைக் கண்எதிரே காணும் திறலற்ற வராயினர் என்பதாம். அரக்கர்களின் கரிய நிறத்திற்கு ஊழியிறுதிக் காலத்துத் திரண்டுவரும் கரிய மேகங்கள் உவமை.

4. வாள்தனின் வயங்க மின்னா; மழை அதின் இருளமாட்டா;
ஈட்டிய முரசின் ஆர்ப்பை, இடிப்பொடு முழக்க மாட்டா;
மீட்டு இனி உவமை இல்லை, வேலை மீச்சென்ற என்னின்
தீட்டிய படையும் மாவும், யானையும் தேரும் செல்ல. (9333)

(வேலை-கடல்; மீ-மீது/மேலே; வயங்க-விளக்கமாக; மழை-மேகம்; ஈட்டிய-ஈண்டிய/நெருங்கிய; அதின்-அரக்கர்சேனையின்; மா-குதிரை)

நிலத்தில் இடம் போதாததால் கடலின்மீதும் நடந்துசெல்லும் இவ்வரக்கர் சேனை என்றால் கூர்மையாகத் தீட்டப்பெற்ற ஆயுதங்களை யுடைய காலாட்படையும், குதிரைப்படையும், யானைப்படையும், தேர்ப்படையும் அவ்வாறு செல்லும்போது, அவர்களின் வாட்படை மின்னுவதுபோல ஆகாயத்திலுள்ள மின்னலால்கூட விளக்கமாக மின்ன முடியாது. அந்தசேனையில் வரும் அரக்கவீரர்களின் நிறத்தைப்போல கரிய மேகம்கூட கருக்கமாட்டாது; அவர்கள் நெருங்கி எழுப்புகின்ற முரசங்களின் ஒலியைப்போல வானத்தில் இடியின் ஒலிகூட முழங்க மாட்டாது என்றால் இதற்கு உவமைகூற வேறு என்ன இருக்கிறது?

ஆகாயத்தில் தோன்றும் மின்னல், இடி, கரியமேகம் ஆகியவற்றைக் காட்டிலும், இந்த அரக்கர்சேனையில் வரும் வீரர்களின் வாட்படையின் ஒளியும், முரசங்களின் முழக்கமும், அவர்களின் இருண்ட கரிய வண்ணமும் மிக்கு இருந்தன என்பதாம். அரக்கர்களும், அவர்களின் படைகளும் கடலிலும் நடக்கும் ஆற்றலும் பெற்றிருந்தனர் என்பது பெறப் படுகிறது. 'ஈண்டிய' என்பது ஈட்டிய என எதுகைநோக்கி வலித்தல் விகார மானது. நெருங்கிய என்பது பொருள். கடலே தரைமட்டத்திலிருந்து மேல் எழுந்து செல்லும்படி தோன்றியது அவர்கள் கடலின்மீது நடந்துசென்ற தோற்றம் என்க.

5. உலகினுக்கு உலகு, போய்ப்போய், ஒன்றின் ஒன்று ஒதுங்கலுற்ற;
தொலைவுஅருந்தானை, மேன்மேல் எழுந்து தொடர்ந்து சுற்ற;
நிலவினுக்கு இறையும் மீனும் நீங்கின நிமிர்ந்து; நின்றான்,
அலரியும், முந்து செல்லும் ஆறு நீத்து, அஞ்சி, அப்பால். (9334)

Koviloor Digital Library

(தொலைவு-அழிவு; சுற்றுதல்-சூழ்ந்துநிற்றல்; இறை-தலைவன்; அலரி-சூரியன்; முந்து-முன்பு; ஆறு-வழி; நிமிர்ந்து-உயர்ந்து)

எண்ணில் அடங்காத, அழிவேயில்லாத இவ்வரக்கர் சேனை மேன் மேலும் பெருகிக்கொண்டே தொடர்ந்து சூழ்ந்து சுற்றிவரத் தமக்கு ஏதும் ஆபத்து நேருமோ என்று கருதி, உலகங்கள் எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று போய்த் தங்களுக்குள் ஒன்றில் ஒன்றாக மறைத்துக் குறுகிக்கொண்டன. நிலவுக்குத் தலைவனான சந்திரனும், விண்மீன்களும் வழியைவிட்டு ஒதுங்கிக் கொண்டன; சூரியனும் தான் எப்போதும் செல்லும் வழியை விட்டு நீங்கி, அச்சத்தால் சற்று ஒதுங்கி அப்புறம்போய் உயர்ந்து நின்றான்.

அரக்கர்சேனையின் பெருக்கம் கண்டு ஒவ்வொரு அண்டகோளமும் தனக்குத் தீங்குவராமல் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு ஒன்றினுக்குள் ஒன்று சென்று ஒதுங்கிக்கொண்டன; சந்திரனும், நட்சத்திரங்களும் அவர் களுக்கு வழிகாட்டி ஒதுங்கிக் கொண்டன; சூரியன்கூட இவர்களுக்கு அஞ்சி, தான் எப்போதும் செல்லும் வழியைவிட்டு அகன்று அப்பால் சென்று உயர்ந்து நின்றான் என்பதாம். இச்சேனையைக் கண்டு உலகங்கள், சந்திரன், நட்சத்திரங்கள், சூரியன் ஆகிய எல்லோரும் அச்சம் கொண்டு தத்தம் வழியிலிருந்து ஒதுங்கி நின்றுகொண்டன என்பதாம். நிலவுக்குத் தலைவனாகிய சந்திரன் என்பது சற்று புரிந்துகொள்ள முடியாத சொற் பிரயோகம் போன்று தோன்றும். நிலவு என்றால் பதினாறு கலைகளும் வளராத சந்திரன் என்றும், 'சந்திரன்' என்றால் பூரணச்சந்திரன் என்றும் பொருள் கொண்டால் எளிதில் விளங்கும். தனித்தனியாக இருந்த உலகங்கள் எல்லாம், இப்போது ஒன்றின்மேல் ஒன்று உராய்ந்து கொண்டு, அளவிற் குறுகி நின்று தமக்குள் தாமே ஒளித்துக்கொண்டன என்க.

6. மேற்பட விசும்பை முட்டி, மேருவின் விளங்கி, விண்ட
நாற்பெரு வாயிலூடும், இலங்கை ஊர் நடக்கும் தானை,
காக் கருங்கடலை, மற்றோர் இடத்திடை, காலன் தானே
சேர்ப்பது போன்றது, யாண்டும் சுமை பொறாது உலகம் என்ன. (9335)

(விசும்பு-விண்முகடு; காலன்-இயமன்; யாண்டும்-எவ்விடத்தும்; விண்ட-திறந்த)

ஆகாயத்தின்மேற்பகுதியை முட்டும்படியும், மேருமலையைப்போல் பொன்மயமாய் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதும், உறுதியுடன் விளங்குவது மாகிய திறந்த நீண்ட இலங்கை மாநகரின் நான்குபக்கப் பெரிய தோரண வாயில்களின் வழியாகவும் இலங்கை நகருக்குள் நுழைகின்றது அவ்வரக்கர்சேனை. இச்சேனை இலங்கை நகருக்குள் புகுந்தால் இவ்வுலகம் சற்றும் அதன் சுமையைத் தாங்கிக்கொள்ளாது என்று கருதி, இயமன் கரிய பெருங்கடலை, அது இருந்த இடத்தைவிட்டுப் பெயர்த்

Koviloor Digital Library

தெடுத்து, வேறொரு இடத்தில் கொண்டுபோய் வைப்பது போன்று இருந்தது.

சேனையின் மிகுதி சிறப்பிக்கப்பட்டது. வருகின்ற சேனையை இலங்கை மாநகரமாகிய இவ்வுலகம் தாங்காது என்று கருதி, இயமன் தானே கரிய பெரிய கடலை வேறு இடத்தில் கொண்டுபோய் வைத்து விட்டால் அந்த இடம் சேனைகள் நிற்பதற்குக் கிடைக்குமல்லவா? அதனால் அவ்வாறு செய்தான் என்பது கருத்து.

7. "நெருக்குடை வாயிலூடு புகும் எனின், நெடிது காலம்
இருக்கும் அத்தனையே" என்னா, மதிலினுக்கு உம்பர் எய்தி,
அரக்கனது இலங்கை உற்ற, அண்டங்கள் அனைத்தின் உள்ள
கருக்கிளர் மேகம் எல்லாம், ஒருங்கு உடன் கலந்தது என்ன. (9336)

(நெருக்குடை-நெருக்கமான; உம்பர்-மேலே)

நெருக்கமாக உள்ள இலங்கை நகரின் நான்கு வாயில்களின் வழியாகச் செல்வோம் என்றால் அது நீண்டகாலம் காத்துக்கொண்டிருப்பது போலாகும் என்று கருதி, வாயிலின் வழியே போகாமல் மதிற் சுவற்றின் மேலே ஏறிக்குதித்து எல்லா உலகத்திலும்உள்ள கருக்கொண்டு எழுகின்ற மேகங்கள் எல்லாம் ஒருசேரக் கலந்தது போன்று, அச்சேனை, அரக்கனாகிய இராவணனது இலங்கை நகரை அடைந்தது.

அண்டங்கள் அனைத்திலும் உள்ள கருக்கிளர் மேகம் எல்லாம் ஒருங்கு உடன் கலந்ததற்கு அரக்கனது இலங்கை உற்ற சேனை உவமை. சேனையில் உள்ள ஒவ்வொரு அரக்கனுக்கும் கருக்கொண்ட மேகம் கருமையினால் உவமை. அந்தச் சேனையின் பெருக்கத்திற்கு அண்டங்கள் அனைத்திலும் உள்ள கருக்கிளர் மேகங்கள் உவமை.

8. இராவணன் சேனையை நோக்குதல்

அதுபொழுது அரக்கர்கோனும், அணிகொள் கோபுரத்தின் எய்தி,
பொதுவுற நோக்கலுற்றான்; ஒரு நெறி போகப்போக,
"விதிமுறை காண்பென்" என்னும் வேட்கையான், வேலை ஏழும்
கதுமென ஒருங்கு நோக்கும் பேதையின் காதல் கொண்டான். (9337)

(அணிகொள்-அழகுபொருந்திய; கதுமென-விரைவாக; பேதை-அறிவிலி; வேட்கை-விருப்பம்; காதல்-ஆசை)

அப்பொழுது அரக்கர் வேந்தனாகிய இராவணன் அழகு ததும்பும் ஒரு கோபுரத்தின் உச்சியை அடைந்து, அங்கிருந்து பொதுவாக அந்தப் படையின் அணிவகுப்பைப் பார்வையிட்டான்; அது நீண்டதூரம் அமைந்திருப்பதாலும், அதை நெறிமுறைப்படி பார்க்க இயலாததாலும்,

Koviloor Digital Library

ஒரு முறைப்படி தனித்தனியாகப் பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டவனாகி, ஏழு கடல்களும் ஒருங்கே ஒன்று கலந்து விரைந்து வருகின்ற ஒரு வெள்ளத்தை நோக்கும் அறிவிலி போல அதைக்காணும் ஆசை கொண்டான்.

'கதுமென்' என்பது விரைவுக்குறிப்பு. 'பேதை' என்பது அறிவிலியைக் குறிக்கும். இங்கே இராவணனுக்கு உவமை. இவ்வளவு பெரிய சேனையை ஒரே வீச்சில் முழுமையாக ஒரே நேரத்தில் பார்ப்பது இயலாது என்பதைக்கூட அறிந்துகொள்ள முடியாதவனாயிருக்கிறானே என்பதால் கவிஞன், இராவணனைப் பேதை, அறிவிலி என்று கூறுகிறான். அதற்கு ஒரு உவமையும் கூறுகிறான். ஏழுகடலையும் ஒன்றாகத்தான் பார்ப்பேன் என்று ஒருவன் கூறு;வது எவ்வளவு பேதைத்தனமோ அவ்வளவு பேதைத் தனம் இது என்கிறான் கவிஞன். இதேபோல முன்பு கிஷ்கிந்தையில் சுக்கிரீவன் கொண்டுவந்து நிறுத்திய எழுபது வெள்ளம் சேனையையும் சுவேலமலையில் ஏறிநின்று பார்த்த இராமபிரான் இருபது நாட்களாகியும் பாதிசேனையைக் கூடப் பார்க்க முடியவில்லை என்று கூறியதையும் ஒப்பிட்டு நோக்குக.

9. மாதிரம் ஒன்றின் நின்று, மாறுஒரு திசைமேல் மண்டி,
ஓதநீர் செல்வது அன்ன தானையை, உணர்வு கூட்டி,
வேத வேதாந்தம் கூறும் பொருளினை, விரிக்கின்றார் போல்,
தூதுவர் அணிகள்தோறும் வரன்முறை காட்டிச் சென்றார். (9338)

(மாதிரம்-திசை; மாறு-மற்று; ஓதம்-கடல்; கூடா-எட்டாத; பொருள்-பரம்பொருள்; விரித்தல்-விளக்குதல்; வரன்-ஒழுங்குமுறை; மண்டி-சென்று/அடைந்து)

ஒரு திசையிலிருந்து, அதற்கு மாறுபட்ட எதிர்த்திசை நோக்கிப் பாய்ந்து செல்லும் கடல்நீரைப் போல இலங்கை நோக்கிச் செல்லுகின்ற அந்த அரக்கர்சேனையைத் தூதுவர்கள், ஒவ்வொரு அணியாகப் பிரித்து இது இன்னது, இதன் இருப்பிடம் இன்னது என்று அவற்றின் சிறப்பினை விதிமுறைப்படி விளக்கிச் சொல்லிக் கொண்டே வந்தார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், அறிவுக்கு எட்டாத வேதநூல்களும், வேதாந்த நூல்களும் விளங்குகின்ற பரம்பொருளின் இயல்பினை விவரித்துச் சொல்லுகின்ற மேம்பட்ட ஞானியர்கள் தங்கள் சீடர்களுக்குச் சொல்வது போல இருந்தது என்கிறான் கவிஞன்.

பரம்பொருளின் தன்மையை யார் எவ்வளவு விவரித்துக் கூறினாலும் அவனுடைய மெய்யான நிலையைப் புரிந்துகொள்ள முடியாததுபோல இந்தப் படையின் பெருக்கத்தையும், சிறப்பையும், இயல்புகளையும் அவ்வளவு எளிதாகக் கண்டுவிட முடியாது என்பது கருத்து. வேத வேதாந்தங்களில் கூறப்பட்டிருக்கும் மிக நுட்பமான இறைவனின்

Koviloor Digital Library

வடிவத்தை ஓர்சிறந்த ஆசிரியன் மாணவனுக்கு மனத்தில் நன்கு பதியுமாறு விளக்கிக் கூறுவதுபோன்று, பரந்த அந்தச் சேனையைப் பகுதி பகுதியாகப் பிரித்து இராவணன் புரிந்துகொள்ளும் வண்ணம் தூதுவர்கள் எடுத்துக்கூறினார்கள் என்பதாம்.

10. "சாகத் தீவினின் உறைபவர்; தானவர் சமைத்த
யாகத்தில் பிறந்து இயைந்தவர்; தேவரையெல்லாம்
மோகத்தின் பட முடித்தவர்; மாயையின் முதல்வர்;
மேகத்தைத் தொடும் மெய்யினர்; இவர்" என விரித்தார். (9339)

(சமைத்த-செய்த; படுதல்-விழுதல்/விழச்செய்தல்; முதல்வர்-முதன்மையானவர்; மெய்-உடம்பு; சாகம்-தேக்கு; மோகம்-மயக்கம்/அறியாமை)

தூதுவர்கள் ஒரு அணியினரைச் சுட்டிக்காட்டி, ''இவர்கள் சாகத்தீவில் வாழ்பவர்கள்; அரக்கர்கள் முன்பு முயன்று செய்த வேள்வித்தீயின் வாயிலாகப் பிறந்து வந்தவர்கள்; தேவர்களை எல்லாம் மோகம் என்னும் மயக்கத்தில் சிக்கும்படி செய்து முடித்தவர்கள்; மாயச்செயல்களைச் செய்வதில் முதன்மையானவர்கள்; கைதேர்ந்தவர்கள்; மேகத்தையே தொடும் அளவு உயர்ந்த தேகத்தைக் கொண்டவர்கள்'' என்று விளக்கிக் கூறினர்.

'சாகம்' என்பது தேக்குமரத்தைக் குறிக்கும். இந்தத்தீவில் தேக்கு மரங்கள் மிக்கிருந்ததால் இது சாகத்தீவு எனப்படுகிறது. இதனைத் தேக்குத்தீவு என்றும் கூறுவதுண்டு. இது ஏழு தீவுகளுள் ஒன்று. மற்றவை நாவலந்தீவு, இறலித்தீவு, புட்கரத்தீவு, இலவந்தீவு, கிரௌஞ்சத்தீவு; குசைத்தீவு என்பனவாம்.

11. "குசையின் தீவினின் உறைபவர்; கூற்றுக்கும் விதிக்கும்
வசையும், வன்மையும் வளர்ப்பவர்; வானநாட்டு உறைவார்
இசையும், செல்வமும், இருக்கையும் இழந்தது, இங்கு, இவரால்;
விசையம்தாம் என நிற்பவர், இவர், நெடு விறலோய்!" (9340)

(விறல்-வெற்றி; விதி-பிரமன்; வசை-பழி; இசை-புகழ்; விசையம்-விசயம்/விஜயம்/வெற்றி; குசை-தருப்பைப்புல்)

''மிகுந்த வெற்றியையுடையவனே! இவர்கள் குசைத்தீவில் வாழ்பவர்கள்; இயமனுக்குப் பெரும் பழியையும், பிரமதேவனுக்குப் பெரும் வலிமையையும் பெருக்குபவர்கள்; விண் உலகத்தில் வாழும் தேவர்கள் தங்கள் புகழும், செல்வமும் இருப்பிடமும் இழந்தது இங்கிருக்கும் இவர்களால்தான்; இவர்கள் வெற்றி என்ற சொல்லுக்குத் தாமே விளக்கமாய் உருக்கொண்டு நிற்பவர்களாவார்கள்'' என்று விவரித்துக் கூறினர் தூதுவர்கள்.

Koviloor Digital Library

'குசை' என்ற சொல்லுக்குத் தருப்பைப்புல் என்று பொருள். தருப்பைப்புல் அதிகமாக இருந்த காரணத்தால் இந்தத்தீவு குசைத்தீவு எனப்பட்டது என்க; கூற்றுக்குப்பழி என்பது, இயமன் செய்யவேண்டிய கொலைத்தொழிலை-உயிரைப்பறிக்கும் தொழிலைத் தாம் செய்வதனாலும், விதிக்கு வன்மை என்பது எமனால் அழியாவண்ணம் இவர்கள் பிரமதேவனின் படைத்தல் தொழிலுக்கு வலிமைசேர்ப்பதாலும் என்க. 'விசயம்' என்பது 'விசையம்' என்று எதுகைநோக்கித் திரிந்தது எனக்கொள்க. வெற்றி வேறு, தாம் வேறு என்று வேறுபாடின்றி வெற்றியே உருவாக உள்ளவர் என்பதாம்.

12. இலவத் தீவினின் உறைபவர் இவர்கள்; பண்டு, இமையாப்
புலவர்க்கு இந்திரன் பொன்னகர் அழிதரப் பொருதார்;
நிலவைச் செஞ்சடை வைத்தவன் வரம்தர, நிமிர்ந்தார்;
உலவைக் காட்டு உறு தீ என, வெகுளி பெற்றுடையார். (9341)

(பண்டு-முன்பு; புலவர்-தேவர்கள்; அழிதர-அழியுமாறு; பொருதல்-போர்புரிதல்; நிமிர்தல்-மேன்மைபெறுதல்; உலவை-காய்ந்த/வறண்ட/உலர்ந்த மரங்கள்; இந்திரன்-தலைவன்)

''இலவத்தீவில் வசிப்பவர்கள் இவர்கள்; முன்பு இமையா நாட்டமுடைய தேவர்களின் தலைவனான தேவேந்திரனின் அழகிய பொன் மயமான அமராவதிநகர் அழிவதற்குக் காரணமாகிப் போர் செய்தார்கள்; பிறைச்சந்திரனைத் தன் சிவந்த தலையில் சூடியிருக்கும் சிவபெருமான் அருளிய பலவகைப்பட்ட வரத்தினால் மேன்மை பெற்றவர்கள்; உலர்ந்துபோன காட்டு மரங்களில் பற்றிக் கொள்ளும் நெருப்புப்போல விரைவாகவும், வேகமாகவும், கோபம் பெற்றுப் போரிடுபவர்களாவார்கள்'' என்று தூதுவர் அவர்களின் சிறப்பை விளக்கினர்.

இலவம் மரம் நிறைந்திருப்பதால் இத்தீவு இலவந்தீவு எனப்பட்டது. இதனைசான்மலித்தீவு எனவும் வழங்குவர். 'இந்திரன்' என்ற சொல்லுக்கே தலைவன் என்ற பொருளும் உண்டு. எனவே இங்கே தேவர்கள் தலைவனான இந்திரன் எனப் பொருள் கொள்ளப்பட்டது.

13. "அன்றில் தீவினின் உறைபவர் இவர்; பண்டை அமரர்க்கு
என்றைக்கும் இருந்து உறைவிடம் என்றிட, மேருக்
குன்றைக் கொண்டுபோய், குரைகடல் இட, அறக்குலைந்தோர்
சென்று, 'இத்தன்மையைத் தவிரும்' என்று இரந்திடத் தீர்ந்தோர்" (9342)

(பண்டை-முன்பு; குரைத்தல்-ஒலித்தல்; அற-முழுதும்; குலைதல்-நடுங்குதல்; தீர்தல்-விடுத்தல்; அன்றில்-கிரௌஞ்சப் பறவை; தவிர்தல்-நீங்குதல்/கைவிடுதல்)

Koviloor Digital Library

இவர்கள் அன்றில் தீவில் வாழ்பவர்கள்; முன்பு தேவர்கள் எப்பொழுதும் வசிக்கின்ற இடம் என்று மேருமலை இருந்ததனால் அது தம்பகை என்று கருதி, அதனைப் பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய், ஆரவாரிக்கின்ற கடலில் போட்டுவிட முயன்றபோது, முழுவதும் நிலைகுலைந்துபோன தேவர்கள், அவர்களிடம் சென்று, ''தயவுசெய்து இந்தச்செயலைத்தவிர்த்துவிடுங்கள்'' என்று வணங்கிக் கேட்டுக்கொள்ள, அதனால் அதனைப் பெயர்க்காது அதனின்றும் நீங்கியவர்கள்'' என்று விவரித்தனர் தூதுவர்கள்.

''அன்றில்'' என்பது கிரெளஞ்சப்பறவையைக் குறிக்கும். அன்றில் பறவைகள் மிகுதியாக வாழும் தீவு என்பதனால் இது அன்றில் தீவு, கிரெளஞ்சத்தீவு எனப்பட்டது என்க. இவர்கள் மேருமலையையே பெயர்த்தெடுக்கும் ஆற்றல்பெற்றவர் என்பது புலப்படுத்தப்பட்டது.

14. "பவளக் குன்றினின் உறைபவர்; வெள்ளி பண்பு அழிந்து, ஓர்
குவளைக் கண்ணி, அங்கு, இராக்கதக் கன்னியைக்கூட,
அவளின் தோன்றினர், ஐ இரு கோடியர்; நொய்தின்
திவளப் பாற்கடல் வறள்படத் தேக்கினர், சிலநாள்" (9343)

(வெள்ளி-சுக்ராச்சாரியர்/அசுரர்குரு; கூடுதல்-புணர்தல்; திவள்-வெண்மை நிறம்/அசைதல்; வறள்படுதல்-வறண்டுபோதல்; நொய்தின்-விரைவில்/எளிதில்; தேக்குதல்-நிரம்பப் பருகுதல்; குவளை-நீலமலர்/நீலோற்பலமலர்)

இவர்கள் பவளக்குன்றுகள் நிறைந்த பவளத்தீவில் வாழ்பவர்கள்; முன்பு ஒருகாலத்தில் அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியார் தன் பண்பு நலன்கள் அழியப்பெற்று, காமுகனாகி, ஒரு நீலோற்பல மலர்போன்ற அழகிய கண்களையுடைய அரக்கர்குலப் பெண்ணைப் புணர, அவளிடம் பிறந்தவர்கள் இந்தப் பத்துக்கோடிப் பேர்கள் ஆவார்கள்; இவர்கள் முன்பு மிக எளிதில் வெள்ளிய நிறத்த பாற்கடலைச் சில நாட்களில் நிரம்பக்குடித்து, அதனை வறண்டு போகும்படி செய்தவர்கள்.

பவளங்கள் நிறைந்த மலைகள் அதிகமாக இருந்ததால் இது பவளத்தீவு எனப்பட்டது என்க. 'வெள்ளி' சுக்கிராச்சாரியார் என்பதும், இவர் அசுரர்கள் குரு என்பதும், ''சுக்கிர நீதி'' எழுதியவர் என்பதும் முன்பே மாவலிச் சக்கரவர்த்தி வரலாற்றைப் படிக்கும்போது கண்டு வந்திருக்கிறோம். இவர் தேவகுலத்தைச் சார்ந்தவர் என்றாலும், அசுரர்களுக்கு இவர்தான் குரு என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். 'தேக்குதல்' என்பது நிரம்பப் பருகுதல் என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது என்க. 'தேக்கிய செங்கனி இதழ் ஆர் அமுது உண்டு உண்டு' என்பது வில்லிபாரதம்.

Koviloor Digital Library

15. "கந்தமாதனம் என்பது, இகூகருங்கடற்கு அப்பால்
மந்தமாருதம் ஊர்வது ஓர் கிரி; அதில் வாழ்வோர்;
அந்த காலத்து அவ் ஆலகாலத்துடன் பிறந்தோர்;
இந்த வாள் எயிற்று அரக்கர் எண் இறந்தவர்; இறைவ!" (9344)

(இறைவன்-அரசன்; மந்தமாருதம்-மெல்லிய தென்றற்காற்று; ஊர்வது-தவழ்வது/வீசுவது)

''அரசே! இங்கிருக்கின்ற இவர்கள் வாட்படை போன்று ஒளிவீசுவதும், கூரிய கோரப் பற்களையுடையவருமான இவர்கள், இந்தக் கருங்கடற்கு அப்பால் உள்ள கந்தமாதனம் என்னும் ஓர் ஒப்பற்ற அழகிய மலையில் வாழ்பவர்கள். அங்கே எப்போதும் மெல்லிய பூங்காற்றுத் தவழ்ந்து கொண்டிருக்கும். அந்தக் காலத்தில் பாற்கடல் கடையப்பெற்றபோது அதிலிருந்து தோன்றிய ஆலகால நஞ்சுடன் இவர்களும் தோன்றினர். இவர்கள் எவ்வளவு பேர் என்பதற்கு ஒரு கணக்கே கிடையாது'' என்கின்றனர் தூதுவர்கள்.

'அந்தக்காலம்' என்று ஒற்று மிகுந்துவரவேண்டியது, எதுகை நோக்கி ஒற்றுக்குறைந்து நின்றது. அந்தகாலம் என்றால் அந்திமகாலம், இறுதிக்காலம் என்ற பொருளைத் தந்துவிடும். மந்தமாருதம் என்பது இளந்தென்றற்காற்றை, மெல்லிய பூங்காற்றைக் குறிக்கும்

16. மலையம் என்பது பொதிய மாமலை; அதில் மறவோர்
நிலையம் அன்னது சாகரத் தீவிடை நிற்கும்;
"குலையும் இவ்வுலகு" எனக் கொண்டு, நான்முகன் கூறி,
"உலைவிலீர்!, இதில் உறையும்" என்று இரந்திட உறைந்தார். (9345)

(மறவோர்-வீரர்கள்; சாகரம்-கடல்; நிற்கும்-இருக்கிறது; குலையும்-அழிந்துவிடும்; நான்முகன்-பிரமதேவன்; உலைவு-அழிவு; மலயம்-பொதியமலை; நிலையம்-இருப்பிடம்)

''மலையம் என்பது பெரிய பொதியமலையாகும்; அதில் தோன்றிய வீரர்களின் இருப்பிடம், கடலின் நடுவில் உள்ள ஒரு தீவில் இருக்கிறது. இவர்கள் இங்கிருந்தால் இவ்வுலகம் அழிந்துபடும் என்று கருதிய பிரம தேவன் இவர்களை நோக்கி, ''அழிவில்லாதவர்களே! நீங்கள் இங்கேயே தங்கியிருங்கள்'' என்று வேண்டிக்கேட்க, அவர்கள் அதற்கு உடன்பட்டு இங்கேயே தங்கி வாழ்கின்றார்கள்'' என்று கூறினர் தூதுவர்கள்.

பொதியமலை பாண்டிநாட்டில் உள்ளது. அது அகத்தியரின் இருப் பிடம். சாகரத்தீவு என்பது ஏழு தீவுகளுள் ஒன்று. பிரமனும் அஞ்சி இரந்து வேண்டுகின்ற பேராற்றல் படைத்தவர்கள் இவர்கள் என்பது கருத்து.

Koviloor Digital Library

17. "முக்கரக் கையர்; மூவிலை வேலினர்; முசுண்டி
சக்கரத்தினர்; சாபத்தர்; இந்திரன் தலைவர்;
நக்கரக் கடல் நாலொரு மூன்றுக்கும் நாதர்;
புக்கரப் பெருந் தீவிடை உறைபவர்; புகழோய்!" (9346)

(நக்கரம்-முதலைகள்; சாபம்-வில்; நாதர்-தலைவர்)

''புகழ் மிக்கவனே! இவர்கள் மூன்று கைகளை உடையவர்கள்; அம் மூன்று கைகளிலும் மூன்று இலைகளையுடைய முத்தலைச் சூலம் ஏந்தியவர்கள்; முசுண்டி என்னும் ஆயுதமும், சக்கரப்படையும் கையில் கொண்டவர்கள்; வில்லேந்தியவர்கள்; இந்திரனைக் காட்டிலும் மேலான தலைமை சான்றவர்கள்; முதலைகள் வாழும் ஏழு கடல்களுக்கும் தலைமைப் பண்புடையவர்கள்; புட்கரம் என்னும் பெரியதீவில் வசிப்பவர்கள்'' என்று அவர்களைக் குறிப்பிடுகின்றனர் தூதுவர்கள்.

''கரக்கை'' என்பது மீமிசைசொல். கரம் என்பதும் கை என்பதும் ஒரே பொருளைத்தரும். ''முற்கரக்கையர்'' என்று கொண்டால் முள்போன்ற வடிவம் கொண்ட கை ஆயுதத்தைக் கொண்டவர்கள் என்ற பொருளைத் தரும். 'புட்கரம்' என்பது புக்கரம் என எதுகைநோக்கித் திரிந்து நின்றது. முக்கரம் என்பது மூன்று கோல்களாக விளங்கும் தண்டுபோன்ற ஓர்ஆயுதம் எனக்கொள்க. சாபம்-வில் ''சாபமே சபித்தல் வில்லாம்'' என்பது நிகண்டு.

18. மறலியைப் பண்டு தம்பெரும் தாய்சொல, வலியால்,
புறநிலைப் பெரும் சக்கர மால்வரைப் பொருப்பின்
விறல்கெடச் சிறையிட்டு, அயன் இரந்திட, விட்டோர்
இறலி அப்பெருந் தீவிடை உறைபவர் இவர்கள்" (9347)

(பண்டு-முன்பு; மறலி-இயமன்/கூற்றுவன்; விறல்-வீரம்/வலிமை; மால்-பெரிய: பொருப்பு-மலை; அயன்-பிரமன்; இரத்தல்-வேண்டிக் கேட்டல்; புறநிலை-அப்பால்)

''இவர்கள் இறலி என்னும் அந்தப் பெரிய தீவில் வசிப்பவர்கள்; தன் தாயின் ஆணைப்படி, தங்கள் வலிமையால் முன்பு இயமனையே அண்டப் புறத்திற்கு அப்பாலுள்ள சக்கரவாளகிரி என்னும் மலையில், அவன் ஆற்றல்கெடச்சிறையிலடைத்துப் பின்னர், பிரமதேவன் வந்து இவர்களை இறைஞ்சிக் கேட்க, அவனைச் சிறையினின்றும் விடுதலை செய்த பெருமை மிக்கவர்களாவார்கள்'' என்றனர் தூதுவர்கள்.

''இறலி'' என்பது இத்தி என்றும் மருதமரம் என்றும் கூறப்படுவதுண்டு. இந்த மரங்கள் நிறைந்திருந்ததனால் இந்தத்தீவு இறலித்தீவு எனப்பட்டது என்க. இவர்கள் தம் பெருமைமிக்க தாயினிடத்துக் கொண்ட பேரன்பும், பிரமதேவனிடம் வைத்திருந்த பெருமதிப்பும் தெரியவருகிறது.

Koviloor Digital Library

19. "வேதாளக் கரத்து இவர், பண்டு புவியிடம் விரிவு
போதாது உம்தமக்கு; ஏழுவகையாய் நின்ற புவனம்,
பாதாளத்து உறைவீர்" என, நான்முகன் பணிப்ப,
"நாதா! புக்கு இருந்து, உனக்கு அன்பினால், இவண் நடந்தார்" (9348)

(வேதாளம்-பேய்; புவி-நிலவுலகம்; புவனம்-உலகம்; நான்முகன்-பிரமன்; இவண்-இங்கு; நாதன்-தலைவன்; நடத்தல்-வருதல்; பணித்தல்-கட்டளையிடுதல்)

''தலைவனே! பேய்களின் கைகள்போல நீண்ட கைகளை உடைய இவர்கள், முன்பு பிரமதேவன் இவர்களை நோக்கி, ''நீங்கள் உலவுவதற்கு இந்த நிலவுலகப் பரப்புப் போதாது. எனவே ஏழுவகையாய் அமைந்துள்ள இந்த உலகங்களில் பாதாளத்தில் போய் வாழ்வீர்களாக!'' என்று கட்டளையிட, அதனால் இவர்கள் இதுவரை அங்கே தங்கியிருந்தார்கள். இப்பொழுது உன்மேல் கொண்ட பேரன்பின் காரணமாக உன்முன் இங்கே வந்திருக்கிறார்கள்'' என்று கூறினர் தூதுவர்கள்.

20. நிருதி தன்குலப் புதல்வர்; நின் குலத்துக்கு நேர்வர்;
'பருதி தேவர்கட்கு' எனத் தக்க பண்பினர்; பானக்
குருதி பெற்றிலரேல், கடல் ஏழையும் குடிப்பார்;
இருள் நிறத்தவர்; ஒருத்தர் ஏழ்மலையையும் எடுப்பார்" (9349)

(நிருதி-திசைக்காவலன்; நேர்வர்-ஒப்பானவர்கள்; பருதி-சூரியன்)

''இவர்கள் நிருதி என்னும் தென்மேற்குத் திசைக் காவலனின் குலத்தில் உதித்த மக்களாவர்; உன் குலத்துக்கு எல்லாவகையிலும் நிகரானவர்கள்; தேவர்கட்குச் சூரியன் சிறந்தவன் எனக் கூறப்படுவதுபோல இவனும் சிறந்த பண்புடையவன்; போரில் ஈடுபட்டுப் பருகுவதற்கு இரத்தம் கிடைக்கவில்லை என்றால், இந்த ஏழு கடல்களையும் ஒருசேரக் குடிக்கும் ஆற்றலுடையவர்கள்; இருண்ட கரிய நிறத்தினர்; இவர்கள் ஒவ்வொருவரும் ஏழுமலைகளையும் பெயர்த்தெடுக்க வல்லவராவார்'' என்றனர் தூதர்கள்.

'நிருதி' என்பவன் தென்மேற்குத் திக்கு பாலகன். இவன் மனைவி தீர்க்கதேவி என்பவள். இவன் வாகனம் நரன். இவன் நகரம் கிருஷ்ணாங்கனை, இவன் ஆயுதம் குந்தம் ஆகும். இவர்களுக்குப் பிறந்தவர்களே இப்போது இங்கே வந்திருப்பவர்கள் என்பதாம். ''நின் குலத்துக்கு நேர்'' என்பது வீரம், ஆற்றல், முதலியவற்றில் ஒப்பாவார் என்னும் கருத்தினது. நிருதி என்பவள் பெண் என்றும் கூறுவதுண்டு.

Koviloor Digital Library

21. "பார் அணைத்த வெம் பன்றியை, அன்பினால் பார்த்த
காரணத்தின், ஆதியின் பயந்த பைங்கழலோர்;
பூரணத் தடந்திசை தோறும் இந்திரன் புலரா
வாரணத்தினை நிறுத்தியே, சூடினர் வாகை" (9350)

(பன்றி-வராகம்; பயந்த-பெற்ற; பூரணம்-நிறைவு; வாரணம்-யானை; வெம்-விருப்பம்; ஆதி-ஆதிமூர்த்தி/பரம்பொருள்/திருமால்; புலரா-வற்றாத; வாகை-வெற்றிமாலை)

திருமால் எல்லோராலும் விரும்பப்படுகின்ற வராக அவதாரம் எடுத்து பூமிதேவியை அணைத்து, அவளை அன்பினால் பார்த்த காரணத்தினால், திருமாலும் பூமிதேவியும் பெற்றெடுத்த பசுமையான வீரக்கழல் அணிந்தவர்கள் இவர்கள்; எல்லாப் பெரிய திசைகளிலும் நின்றிருந்த, இந்திரனின் மதம் வற்றாத திக்கு யானைகளை விலக்கித் தமது யானைகளை அத்திக்குகள்தோறும் நிறுத்தி வெற்றிவாகை சூடியவர்கள் இவர்கள்'' என்று அறிமுகப்படுத்தினர் தூதுவர்கள்.

''பார் அணைத்த வெம்பன்றி'' என்பது திருமாலின் மூன்றாவது அவதாரத்தைக் குறித்தது. இதன் வரலாறு நாம் முன்பு அறிந்ததே. அத்தகைய திருமாலும் பூமிதேவியும் ஒருவரையொருவர் அன்பினால் பார்த்துக்கொண்டதன் பயனாகப் பிறந்தவர்கள் இப்போது இங்கு உன் எதிரில் நிற்கும் இவ்வீரர்கள் என்று தூதுவர்கள் அறிமுகப்படுத்துகிறார்கள். முற்காலத்தில் தம் வெற்றிக்கு அறிகுறியாகத் தமது யானைகளை எல்லாத் திசைகளிலும் நிறுத்துவது மரபு. அதுவே இங்கே பேசப்பட்டிருக்கிறது எனக்கொள்க. ''பைங்கழல்'' என்பது பசும்பொன்னால் செய்யப்பட்ட வீரக்கழல் என்ற விரிந்த பொருளைத்தரும். ''ஒன்றார் இகல் அற நூறித் தன்மத வாரணம் திசைதொறும் நிறுவிய சீயசங்கன்'' என்பது சீவக சிந்தாமணி. ''பாரை இடந்தவனும், பாரை அளந்தவனும், பாரை எடுத்தவனும், பண்பாகப் பாரை மனங்கொண்டவனும், உண்டவனும், கொண்டல்என நின்றருளும் வண்டு அமரும் தண்துளவமால்'' என்பது திருமாலின் அவதாரங்களைப் பேசும் ஒரு அருமையான பாசுரம்.

22. "மறக் கண் வெஞ்சின மலை என இந்நின்ற வயவர்,
இறக்கம் கீழ் இலாப் பாதலத்து, உறைகின்ற இகலோர்,
அறக் கண் துஞ்சிலன், ஆயிரம் பணந்தலை அனந்தன்
உறக்கம் தீர்ந்தனன், உறைகின்றது, இவர் தொடர்ந்து ஒறுக்க. (9351)

(மறம்-கொடுமை; வயவர்-வீரர்கள்; இகல்-வலிமை; பணம்-படம்; அனந்தன்-ஆதிசேஷன்; அற-முழுவதும்; ஒறுத்தல்-வருத்துதல்)

கொடுமைமிக்க கண்களையும், கடுஞ்சினத்தையும் உடைய மலை போன்ற உயர்ந்த தோற்றம் கொண்டு இங்கு நிற்கின்ற இந்த வீரர்கள்,

Koviloor Digital Library

தனக்கும் கீழே இன்னும் எந்த உலகமும் இல்லை என்று சொல்லும் படியான பாதாளத்தில் வசிக்கின்ற ஆற்றல் மிக்கவராவார்கள்; இவர்கள் தொடர்ந்து கொடுத்துவரும் துன்பத்தால்தான், ஆயிரம் படங்களைக் கொண்ட தலையினையுடைய ஆதிசேஷன் சற்றும் உறங்காது, உறக்கம் நீங்கி, எப்பொழுதும் விழித்துக் கொண்டிருக்க நேர்கிறது.

'மறக்கண், வெஞ்சினமலை' என்பது இல்பொருள் உவமை. 'இறக்கம் கீழ் இலாப் பாதலம்' என்பது பாதலம்தான் கீழே இருக்கின்ற ஏழு உலகங்களுக்கும் கடைசியில் இருப்பது. அதற்குக் கீழே எந்த உலகமும் இல்லை என்பதைக் குறிக்கும். 'அதளபாதாளம்' என்று வழக்கில் சொல்லுகிறோமல்லவா அதுபோன்றது எனக்கொள்க. 'அற' என்ற சொல் முழுவதும் என்ற பொருளைத்தரும். முதலில் அறக்கண் துஞ்சினன் என்பதால் சற்றும் உறக்கம் இல்லாதவன் என்றவர் அடுத்து, ''உறக்கம் தீர்ந்தனன்'' என்றது அவன் இமைகொட்டாமல் விழித்துக் கொண்டே இருக்கிறான் என்பதை வற்புறுத்தவே எனக்கொள்க. 'மறக்கண்' என்பது கொடுமையானகண்கள் என்று புறத்தோற்றத்திலும், 'கடுஞ்சினம்' என்பது கொடிய சினம் என்று அகத்தோற்றத்திலும் அவர்கள் சீற்றம் கொண்டு நின்றவர்கள் என்பது பெறப்படுகிறது. 'ஆயிரம் பணந்தலை அனந்தன்' என்பது தமிழ்ச்சொல். 'சகஸ்ர பணாபணி மண்டலம்' என்பது வட சொற்றொடர். 'ஆயிரம் விரித்த வணங்குடை அருந்தலை' என்பது பரிபாடல்.

23. "காளியைப் பண்டு கண்ணுதல் காட்டிய காலை,
மூள முற்றிய சினக் கடுந்தீயிடை முளைத்தோர்;
கூளிகட்கு நல் உடன் பிறந்தார்; பெருங்குழுவாய்
வாள் இமைக்கவும், வாள்எயிறு இமைக்கவும் வருவார். (9352)

(இமைத்தல்-ஒளிவீசுதல்; கண்ணுதல்-நெற்றிக்கண்ணன்/சிவ பெருமான்; முற்றுதல்-முதிர்தல்; முளைத்தல்-தோன்றுதல்; கூளி-பேய்கள்; குழு-திரள்/கூட்டம்)

''முன்னொரு காலத்தில்'' நெற்றிக்கண்ணனான சிவபெருமான் காளிதேவியுடன்சேர்ந்து ஊர்த்துவதாண்டவம் ஆடியபோது, சூழ்ச்சியால் சிவபெருமான் காளிதேவியை வென்றதனால், காளிதேவி முதிர்ந்த சீற்றம் கொண்டு, சிவபெருமானை எரிப்பதுபோல பார்த்ததனால் தோன்றியவர்கள் இவ்வீரர்கள். எனவே இவர்கள் சிறந்த பேய்களுக்கெல்லாம் உடன்பிறந்தவராய்க் கருதப்படுபவர்; இவர்கள் பெரும் கூட்டம் கூட்டமாக, இவர்கள் கையில் ஏந்தியிருக்கும் வாட்படைகள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கவும், இவர்களுடைய ஒளிவீசும் கோரப்பற்களும் ஒளிரவும் இப்போது இங்கே வருகிறார்கள்'' என்கின்றனர் தூதுவர்கள்.

முன்பாடலில், ''பார் அணைத்த வெம்பன்றியை அன்பினால் பார்த்த காரணத்தால் பிறந்தவரைக்கூறி, இந்தப்பாடலில், காளியைப் பண்டு

Koviloor Digital Library

கண்ணுதல் காட்டிய காலை, மூளமுற்றிய சினக் கடுந்தீயிடை முளைத்தோர் பற்றியும் கூறிய நயம் நோக்குக. சிவபெருமானுக்கும், காளிதேவிக்கும் நடனத்தில் போட்டி நிகழ்ந்தது. காளிதேவியைத் தோற்கச்செய்ய வேண்டும் என்ற கருத்தால் சிவபெருமான் சூழ்ச்சிசெய்து தன் கால் தன் தலையைத் தொடுமளவுக்கு உயர்த்தி ஊர்த்துவதாண்டவம் ஆடினார். காளி பெண் ஆகையால் தன் காலைத் தன் தலையளவு உயரம் தூக்குதற்கு நாணித் தோல்வியுற்றதனால் கடுமையான சீற்றம்கொண்டு நெருப்பெனச் சினந்து சிவபெருமானைப் பார்த்த பார்வையில் தோன்றிய வர்கள் இவர்கள் என்பது முதல் இரண்டடிக்குள் அடங்கிய புராண வரலாறு. இவர்கள்கூட்டம்கூட்டமாய் வருவர்என்பதும், இவர்களுடைய வாட்படை ஒளிவிடுவதைப் போலவே இவர்களுடைய கோரப்பற்களும் ஒளிவிடும் என்பதும். எனவே இவர்கள் பேய்களுக்கெல்லாம் நல்ல உடன்பிறந்தவர்கள் போல்வர் என்பதும் இறுதி இரண்டடிகளின் கருத்து. இன்னும் ஊர்த்துவ தாண்டவகோலத்தில் சிவபெருமானைத் தில்லையில் நிருத்தசபையில் காணலாம். 'கண்ணுதல்' என்பது நுதல்கண் என்பதன் இலக்கணப்போலி. அன்பினால் கடைக்கண் பார்வையில் பிறந்தவர்கள் ஒரு கூட்டம். கோபத்தினால் நெருப்புப் பார்வையில் பிறந்தவர்கள் ஒரு கூட்டம் என்க.

24. ''பாவம் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்,
தீவம் தோன்றிய முழைத்துணை எனத் தறுகண்ணார்;
கோவம் தோன்றிடின், தாயையும் உயிர் உணும் கொடியோர்,
சாவம் தோன்றிட, வடதிசைமேல் வந்து சார்வார். (9353)

(சாவம்-சாபம்/வில்; சார்தல்-சேர்தல்; தீவம்-தீபம்/விளக்குகள்; முழை-குகை; தெறுதல்-அச்சுறுத்துதல்; கோவம்-கோபம்; தோன்றுதல்-விளங்குதல்; துணை-இரண்டு)

''தம் கைகளில் விளக்கமுற்ற விற்படையை ஏந்திக்கொண்டு, வடக்குத் திசையிலிருந்து இங்கு வந்து நிற்பவர்களாகிய இவர்கள் இவ்வுலகில் பாவம் எப்பொழுது தோன்றியதோ, அப்பொழுதே தோன்றிய மிகத் தொன்மையானவர்கள்; இவர்கள் ஒரு பெரிய குகையில் ஏற்றிவைத்த ஒளிமிக்க விளக்குகளைப்போல் தீப்பிழம்புகளைப்போல-அச்சுறுத்தும் கண்கள் படைத்தவர்கள்; இவர்களுக்குக் கோபம் வந்தால், தன்னைப் பெற்ற தாய் என்றுகூடப் பாராது, அவளையும் கொன்று உயிர்பருகும் கொடுமைத்தன்மை வாய்ந்தவர்கள்'' என்று கூறுகின்றனர் தூதுவர்கள்.

பாவம், புண்ணியம், அறம், அதர்மம் எல்லாம் ஒரே பொழுதில் தோன்றிய அநாதியானவைதான் என்றாலும் இங்கே ''பாவம் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்'' எனக் கூறுவதை நோக்குக. அரக்கர்கள் அறம்பற்றி அறியார், அவர்கள் எப்போதும் பாவச்செயல்களையே செய்பவர்கள் என்பதைக் குறிக்கவே இவ்வாறு கூறினார் எனக்கொள்க.

Koviloor Digital Library

பாவம், தீவம், கோவம் சாவம் என்பன பாபம், தீபம், கோபம், சாபம் என்பனவற்றின் திரிபு எனக்கொள்க. எதுகை நோக்கி அவ்வாறு திரிந்தன. ''தாயை ஆயினும் தனிக்கொலை சூழினும் தவிரா மாயையன் என்று முன்பு மகோதரன் பற்றிக் கூறியதையும் இங்கு நினைவுகூர்க.

25. சீற்றம் ஆகிய ஐம்முகன், உலகெலாம் தீப்பான்,
ஏற்ற மா நுதல் விழியிடைத் தோன்றினர் இவரால்;
கூற்றமாகிய கொம்பின் ஐம்பாலுடை, கொடுமைக்கு
ஊற்றம் ஆகி, பண்டு உதித்தனர் என்பவர், உவரால். (9354)

(ஐம்முகன்-சிவபெருமான்; தீப்பான்-தீய்க்கும் பொருட்டு/எரிக்கும் பொருட்டு; நுதல்விழி-நெற்றிக்கண்; ஏற்ற-அமைந்துள்ள; தோன்றுதல்-பிறத்தல்; உவர்-அங்கிருப்பவர்; ஐம்பால்-கூந்தல்; கொம்பு-பெண்; ஊற்றம்-ஊன்றுகோல்)

''ஐந்து முகங்களையுடைய சிவபெருமான் இவ்வுலகத்தைச் சுட்டெரிக்கும் பொருட்டுக் கொண்ட சீற்றத்தின்போது அமைத்துக் கொண்ட நெருப்பைக் கக்கும் நெற்றிக்கண்ணின் வழியாகப் பிறந்தவர்கள் இவர்கள்; அதோ அங்கே நிற்பவர்கள் கூந்தலையுடைய ஒரு இயமன் என்று கூறத்தக்க இயல்புகள் படைத்த ஒரு பெண்ணின் கொடுமைக்கு ஊன்று கோலாக-ஆதரவாக, அவனுக்குத் துணையாக முற்காலத்தில் தோன்றியவர்கள் ஆவார்கள்'' என்கின்றனர் தூதுவர்கள்.

இங்கே இருப்பவர்கள் சிவபெருமானைப்போலச் சீற்றம் கொண்டு எதிரே இருப்பவர்களை எரிக்கும் வல்லமை படைத்தவர்கள்; அதோ அங்கே நிற்பவர்கள் கொடுமைகளுக்கு எல்லாம் தாயாக விளங்கும் இயமனைப் போன்ற ஒரு பெண்ணின் வயிற்றிற் பிறந்த கொடியவர்கள் என்கின்றனர் என்பதாம். 'ஐம்முகன்' என்பது சிவபெருமானைக் குறிக்கும். நான்முகன் பிரமதேவனையும், அறுமுகன் முருகப்பெருமானையும் குறிக்கும். சிவபெருமானின் ஐந்து முகங்களாவன. ஈசானம், தத்புருஷம், அகோரம், சத்தியோசாதம், வாமதேவம் என்பனவாம். 'நுதல்விழி' என்பது நெற்றிக்கண் என்பதற்குச் சரியான அருமையான சொல். கண்ணுதல் என்பது இலக்கணப் போலியாகும். 'கொம்பு' என்பது ஆகுபெயரால் பூங்கொம்பு போன்ற இடையையுடைய ஒரு பெண் என்று பொருள்தரும். ஐம்பால் என்பது பெண்களின் கூந்தலைக் குறிக்கும். கூந்தல் ஐந்தாகப் பிரித்துக் கூறப்படும்; குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பன கூந்தலின் பிரிவுகள். இவற்றில் குழலையும் அளகத்தையும் வகுத்தும், கொண்டையைத் தொகுத்தும், பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும் முடிக்கப்படவேண்டும் என்கிறது ஒரு பழம்பாடல், ஐந்து தன்மையையுடைய கூந்தல் என்றலும் பொருந்தும். அவையாவன. மணம், மது, மென்மை, நெய்ப்பு, கருமை என்பனவாம். அவர், இவர் என்பன

Koviloor Digital Library

அண்மைச்சுட்டுப்போல, 'உவர்' என்பது சேய்மைச்சுட்டு ஆகும். இயமனை ஒரு பெண்ணாக உருவகித்தார் என்க.

26. "காலன் மார்பிடைச் சிவன் கழல்பட, பண்டு கான்ற,
வேலை ஏழ் அன்ன குருதியில் தோன்றிய வீரர்,
சூலம் ஏந்தி முன் நின்றவர்; இந்நின்ற தொகையார்,
ஆலகாலத்தின், அமிழ்தின், முன் பிறந்த போர் அரக்கர்" (9355)

(காலன்-இயமன்; கழல்-திருவடி; காலுதல்-வெளிப்படுதல்; தொகையர்-குழுவினர்)

"இப்பொழுது நம்முன்னே சூலாயுதத்தை ஏந்திக்கொண்டு நிற்கின்ற இந்த அரக்கர் கூட்டத்தார், பாற்கடலைக் கடையும்போது தோன்றிய அமிழ்தத்திற்கும் முன்னால் தோன்றிய ஆலகால விஷம் தோன்றுவதற்கு முன்னரே தோன்றிய போர்த்திறம் மிக்க அரக்கர்களாவார்கள்; இவர்கள் முன்பு மார்க்கண்டேயனுக்காக இயமனின் மார்பில் தன் காலால் உதைத்த சிவபெருமான் திருவடிகள்பட அதனின்றும் வெளிப்பட்ட ஏழு கடலும் ஒருசேரக் கக்கிய இரத்த வெள்ளத்தினின்றும் தோன்றிய வீரர்களா வார்கள்" என்கிறார்கள் தூதுவர்கள்.

"காலன்" என்பது காலம் பார்த்து உயிரைக்கவர்பவன் என்ற பொருளில் இயமனைக் குறித்தது. மார்க்கண்டேயன் வரலாறு நாம் அனைவரும் அறிந்ததே. முன்பாடலில் "பாவம் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்" என்ற கவிஞன் இந்தப் பாடலில் "ஆலகாலத்தின், அமிழ்தின் முன் பிறந்த போர்அரக்கர்" என்று கூறியதையும் நுனித்து உணர்க. இயமனின் இரத்தத்தினின்றும் தோன்றியவர்கள் என்றதனால் இவர்களும் கொலைத்தொழிலில் வல்லவர்கள் என்பது புலப்படுத்தப்படுகிறது என்க. "மார்க்கண்டற்காக மறலிபட்ட பாட்டை உன்னிப் பார்க்கின் அன்பர்க்கு பயம் உண்டோ பராபரமே!" என்பது தாயுமானவர் பராபரக்கண்ணி.

27. "வடவைத் தீயினை, வாசுகி கான்ற மாக்கடுவை
இட, அத்தீயிடை எழுந்தவர் இவர்; இனமழையைத்
தடவ, தீ நிகர் குஞ்சியர் இவர்; உவர், தனித்தேர்
கடவ, தீந்த வெம்புரத்திடைத் தோன்றிய கழலோர்" (9356)

(வடவைத்தீ-வடவாமுகா அக்னி; கான்ற-கக்கிய; கடு-நஞ்சு/விஷம்; மழை-மேகம்; குஞ்சி-ஆண்களின் தலைமுடி/பங்கி; கடவுதல்-செலுத்துதல்; தீய்தல்-நெருப்பில் அழிதல்; வெம்புரம்-கொடுமையான முப்புரம்; இனம்-தொகுதி)

"இவர்கள் முன்பு பாற்கடலை அசுரர்களும் தேவர்களும் கடைந்த பொழுது அதில் கடைகயிறாகக் கட்டப்பெற்றிருந்த வாசுகி என்னும் பாம்பு மிக்க வருத்தப்பட்டு உமிழ்ந்த மிகப்பெரும் விஷத்தை,

Koviloor Digital Library

கடலிலேயே வடக்குப்பக்கத்தில் பெண் குதிரை வடிவாக இருந்து கடல் கரைகடவாமல் பாதுகாத்து நிற்பதும், ஊழியிறுதிக்காலத்தில் பெருந்தீப் பிழம்பாய்ப் புறப்பட்டு உலகேழையும் அழிக்கவல்லதுமான வடவாமுகா அக்கினியுடன் சேரும்பொழுது அந்தப் பெருந்தீயினின்றும் தோன்றிய வர்கள்.

மேகக்கூட்டங்களைத் தீண்டுவதுபோல் உயர்ந்து பருத்த உருவத்தை யுடையவர்களும், நெருப்பை ஒத்துச் சிவந்த செம்பட்டை முடியினைக் கொண்டவர்களுமான அதோ அங்கே நிற்பவர்கள், சிவபெருமான் தன்னுடைய ஒப்பற்ற தேரைச் செலுத்திக்கொண்டு சென்று முன்பு உலகத்த வரை நடுங்கச் செய்து கொண்டிருந்த கொடுமையான முப்புரங்களை உண்டாக்கி வைத்துக்கொண்டிருந்த அசுரர்களைத் தனது புன்னகையா லேயே சுட்டெரித்தபோது அதனின்றும் தோன்றிய வீரக்கழல் அணிந்தவர் ஆவார்கள்.

வடவைத்தீயின் தன்மையும், வாசுகியின் விஷமும் ஒருசேரக் கலந்த குணமுடையவர் ஒரு பகுதியினர் என்றும் மற்றொரு பகுதியினர் மேகத்தைத் தொடும் உயரமும், சிவபெருமான் முப்புரத்தை எரித்தபோது தோன்றிய கொடுமைக்குணம் மிக்க சுட்டெரிக்கும் வல்லமை பொருந்தி யவர் என்றும் தூதுவர்கள் விளக்குகின்றனர் என்பதாம். 'வடவைத்தீ' என்பது பெண்குதிரையின் முகத்துடன் கடலின்கண் மறைந்து நின்று ஊழிக்காலத்து வெளிப்பட்டு உலகினை அழிக்கும் மாபெரும் தீப்பிழம்பு என்க. சிவபெருமான் முப்புரத்தை எரித்த வரலாறும் நாம் முன்பு ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கண்டுவந்ததே. அவை பொன், இரும்பு, செம்பு ஆகியவற்றால் அமைந்தவை. இவற்றை முறையே விதியுந்மாலி, தாருகாட்சன், கமலாட்சன் என்ற மூன்று அசுரர்கள் கைக்கொண்டிருந்து உலகிற்குத் தொல்லைகொடுத்து வந்தனர். இவர்களை இவர்களது மூன்று கோட்டைகளோடும், தனது புன்சிரிப்பினாலேயே நெருப்பெழச் செய்து எரித்தழித்தார் சிவபெருமான் என்பது ஒரு புராண வரலாறு. அது இங்கே பேசப்பட்டிருக்கிறது. சிவன் பூமியைத் தேராகவும், வேதங்களைக் குதிரையாகவும், பிரமனைத் தேரோட்டியாகவும், சூரிய சந்திரரைத் தேர்ச்சக்கரங்களாகவும், மேருமலையை வில்லாகவும், ஆதிசேஷனை வில் நாணாகவும், திருமால், காற்று, நெருப்பு ஆகிய மூன்றையும் அம்பாகவும் கொண்டு சென்று தன் புன்னகையினாலேயே மூன்று புரங்களையும் நெருப்பு எழ எரியச்செய்தான் என்பது புராண வரலாறு. இவ்விரண்டு தொகுதியிலுள்ள - அசுரர்களும் வடவைத்தீயினின்றும் முப்புரத் தீயினின்றும் தோன்றியவர்கள் என்பதாம்.

28. "இனையர், இன்னவர் என்பது ஓர் அளவிலர், ஐய!
நினையவும், குறித்து உரைக்கவும், அரிது; இவர் நிறைந்த
வினையமும், பெருவரங்களும், தவங்களும் விளம்பின்,
அனைய பேர் உகம், ஆயிரத்து அளவினும் அடங்கா (9357)

Koviloor Digital Library

(இனையர்-இத்தன்மையர்; வினையம்-வஞ்சகம்; விளம்புதல்-சொல்லுதல்; உகம்-யுகம்/ஊழிக்காலம்/பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள்)

''ஐயனே! இவர்கள் இவ்வளவினர், இத்தகையவர் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லும் அளவினர் அலர். இவர்களுடைய அளவையும், தன்மையையும் தனித்தனியே நினைக்கவோ, குறிப்பிட்டு உரைக்கவோ இயலாது இவர்கள் நிறைந்த சூழ்ச்சித்திறமும், அரிய வரங்களும், அவ்வரங்களைப் பெற இவர்கள் ஆற்றிய தவங்களும் பற்றிப் பேசத் தொடங்கினால், அது பல்லாயிரக்கணக்கான யுகங்களாகும்; சொல்லிமுடியாது'' என்றனர் தூதுவர்கள்.

29. "ஒருவரே சென்று, அவ் உறுதிறல் குரங்கையும், உரவோர்
இருவர் என்றவர் தம்மையும், ஒரு கையோடு எற்றி,
வருவர்; மற்று இனிப் பகர்வது என்? வானவர்க்கு அரிய
திருவ!" என்றனர் தூதுவர்கள்; இராவணன் செப்பும். (9358)

(வானவர்-தேவர்கள்; திருவன்-பெருஞ்செல்வம் பெற்றவன்/ செல்வன்; உறவோர்-வலியவர்; எற்றுதல்-தாக்குதல்; செப்புதல்-சொல்லுதல்)

''தேவர்களாலும் பெறுதற்கரியதான மிகுந்த செல்வச் செழிப்புடையவனே! இப்படைவீரர்களுள் ஒரேஒருவர் சென்று, அந்தப் போர்த்திறமைமிக்க குரங்கையும், மிக்க வலிமையுடையவர்கள் என்று சொல்லப்படுபவராகிய இராமஇலக்குவர் என்ற இருவரையும், ஒரேஒரு கையால் தாக்கி அழித்துவிட்டு வந்துவிடுவார்கள் என்றால், இவர்களைப் பற்றிச் சொல்லுவதற்கு வேறு என்ன இருக்கிறது!'' என்று தூதுவர்கள் கூறி முடித்தனர். அதுகேட்ட இராவணன் பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

''குரங்கு'' என்பது அனுமனைக் குறிப்பதாகவும், வானரச்சேனையைப் பொதுவாகக் குறித்தது எனவும் கொள்க. ஒருவர்மட்டும் போதும் படை தேவையில்லை என்பதோடு, ஒரு கையாலே தாக்கி அழிப்பர். ஆயுதங்கள் ஏதும் தேவையில்லை என்பதையும் குறிப்பால் உணர்த்துவதையும் நோக்குக.

30. இராவணன் கேள்விகளும், தூதுவரது விடையும்

"எத்திறத்து இதற்கு எண் எனத் தொகை வகுத்து இயன்ற
அத்திறத்தினை அறைதிர்!" என்று உரைசெய, அவர்கள்,
'ஒத்த வெள்ளம் ஓராயிரம் உளது' என உரைத்தார்;
பித்தர்; இப்படைக்கு எண் சிறிது' என்றனர் பெயர்ந்தார். (9359)

Koviloor Digital Library

(திறம்-தன்மை/வகை; அறைதிர்-சொல்லுவீர்களாக; பெயர்தல்-செல்லுதல்/அகலுதல்; பித்தர்-பேதையர்)

இராவணன் அந்தத் தூதுவர்களை நோக்கி, ''இந்தப் படையின் அளவு எவ்வளவு எனத் தொகுத்து அவற்றின் தன்மையையும், வகையையும் தொடக்கம் எது, முடிவு எது என்று எனக்கு விளக்கமாகக் கூறுவீர்களாக!'' என்று கேட்டதும், அவர்கள் ''ஒருங்கே சேர்ந்து வந்திருக்கின்ற இந்தப்படையின் அளவு ஓராயிரம் வெள்ளம் என்று முன்பு பேதையர் கூறிச்சென்றிருக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கும் அளவிற்கு எண் கணிதத்தில் உள்ள உச்ச அளவே மிகச் சிறியதாகும்'' என்று படையின் பெருக்கத்தைக் கூறிவிட்டுச் சற்று விலகி அப்பால் நின்றனர்.

'பெயர்ந்தார்' என்ற சொல்லுக்கு அகன்று போயினர் என்ற பொருள் பொருந்தாது. அப்படையை இராவணன் ஒருமுறை காணும்பொருட்டுச் சற்று விலகி நின்றனர் என்ற பொருளையே கொள்ளவேண்டும். இந்தச் சேனைக்கு அளவிட்டுக் கூறுதற்கு இப்பொழுது கணிதநூலின்கண் உள்ள உச்ச எண்ணே மிகச் சிறியது என்று கூறினார்கள் என்பது கருத்து. பல்லாயிரம் வெள்ளம் அரக்கர்களுள்ள இப்பெரும்படையை ஓராயிரம் வெள்ளம் என்று முன்பு கணித்துச் சொன்னது பொருந்தாது. எனவே அவர் பித்தர் எனப்பட்டார் என்க. ''எண்சிறிது'' என்பது இந்தத் தூதுவர்களின் கருத்து எனக்கொள்க.

31. "படைப் பெருங்குலத் தலைவரைக் கொணருதிர் என்பால்;
கிடைத்து, நான் அவர்க்கு உற்று உள பொருள் எலாம் கிளத்தி,
அடைத்த நல் உரை விளம்பினென், அளவளாய், அமைவுற்று,
உடைத்த பூசனை வரன்முறை இயற்ற" என்று உரைத்தான். (9360)

(கிடைத்தல்-நெருங்கியிருத்தல்; கிளத்துதல்-விளக்கமாய்க் கூறுதல்; உரை-சொற்கள்; அளவளாவுதல்-மனம்விட்டு உரையாடுதல்; அமைவுறுதல்-நிறைவுறுதல்; உடைத்த-உடையதாகிய/முறையானதாகிய; குலம்-சிறப்பு; கொணர்தல்-அழைத்துவருதல்; பூசனை-உபசாரம்)

இராவணன் தூதுவர்களை நோக்கி, ''இந்தப் படையின் சிறப்புமிக்க பெருந்தலைவர்களான தளபதிகளை என்னிடம் அழைத்துவாருங்கள்; நான் அவர்களிடம் நெருங்கிப் பேசவேண்டும்; இப்போது போர்க் களத்தில் நிகழ்ந்துள்ள வற்றையும், எனக்கும் இராமனுக்கும் உள்ள போரின் முறை பற்றியும் அவர்களிடம் விளக்கமாகச் சொல்லவேண்டும்; என் மனத்திற்குள் அடைத்து வைத்திருக்கின்ற கருத்துக்களை அவர் களுக்குச் சொல்லவேண்டும். அவர்களுடன் மனம்திறந்து உரையாட வேண்டும்; என்மனம் அமைதிபெறும் வண்ணம் அவர்களுக்கு உரியதான உபசாரங்களையும், மரியாதைகளையும், தொன்றுதொட்டுவரும்

Koviloor Digital Library

முறைப்படி செய்யவேண்டும்; எனவே அவர்களை என்முன்னர் அழைத்து வாருங்கள்'' என்று கூறினான்.

இராவணனின் மனமாற்றம் இப்பாடலில் மிகத்தெளிவாகப் பேசப் படுகிறது. ஒரு அரசும், ஒரு அரசனும் இராணுவத்தினரிடம் எந்தெந்த வழிகளில் செயல்பட வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குவது இப்பாடல். இது இன்றைக்கும் பொருந்திவருதல் காண்க. முறைகள் மட்டும் மாறியிருக்கலாம், செய்தி ஒன்றுதான் என்பதும் கருதத்தக்கது. 'படைப்பெரும் குலத்தலைவர்' என்பது தளபதி, சேனாதிபதியைக் குறிக்கும் சொல். 'பூசனை' என்பது முற்காலத்தில் படைவீரர்களுக்கு அளிக்கும் ''பெருஞ்சோறு' முதலானவற்றை எனக்கொள்க.

32. தூதர் கூறிட, திசைதொறும் திசைதொறும் தொடர்ந்தார்,
ஓத வேலையின் நாயகர் எவரும் வந்து உற்றார்,
போது தூவினர், வணங்கினர்; இராவணன் பொலன்தாள்
மோதும் மோலியின் பேரொலி வானினை முட்ட. (9361)

(நாயகர்-படைத்தலைவர்; ஓதம்-அலைகள்; வேலை-கடல்; பொலன்-அழகிய; போது-மலர்கள்; மோலி-மகுடம்; மோதுதல்-முற்படுதல்)

அவ்வாறு இராவணன் இட்ட கட்டளையைத் தூதுவர்கள் சென்று கூறியவுடன், எல்லாத் திக்குகளிலிருந்தும், அலைகளையுடைய கடலின் பரப்பைப்போன்று மிகுதியான சேனைத்தலைவர்கள் எல்லோரும் தூதுவர்களைப் பின்பற்றி வந்து சேர்ந்தார்கள்; அவர்கள் இராவணனின் அழகிய திருவடிகளில் மலர்களை வாரி இறைத்து, தாள் பணிந்து வணங்கினர். அப்போது அவர்கள் முற்பட்டு வந்து தங்கள் மகுடங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்ட பேரொலி, விண்ணையும் எட்டியது.

'திசைதொறும் திசைதொறும்' என்ற அடுக்கு எல்லாத் திசைகளி லிருந்தும் என்ற பொருளைத்தரும். படைத்தலைவர் அணிவகுப்பே 'ஓதவேலை' போன்றிருந்தது என்பது படைத்தலைவர்களின் அளவை யும், படைப்பெருக்கத்தையும் குறித்தது. 'போது' என்ற சொல் மலரும் நிலையிலுள்ள அரும்பினைக் குறிக்கும். 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலைமலரும் இந்நோய்' என்பது குறள்-122. சிற்றரசர்கள் வந்து தசரதச்சக்கரவர்த்தியின் தாள்களில் பணிந்தபோதும் இந்த மோதும் மௌலியின் பேரொலி பற்றியும், அதனால் உண்டான வடு பற்றியும் நாம் முன்பே கண்டு வந்திருக்கிறோம். 'அடியிணை தொழும் இடம் அன்றி மன்னர்தம் முடியொடு முடிபொர வாயில் முன்னினர்' என்பது பால காண்டம். 'நின்றீமின் மன்னீர்! நெருநல் திறை கொணர்ந்து முன்தந்த மனனர் முடிதாக்க இன்றும் திருந்து அடி புண்ணாகிச் செவ்வியிலனே, பெருந்தண் உறந்தையார் கோ'' என்பது முத்தொள்ளாயிரம்.

Koviloor Digital Library

33. அனையர் யாவரும் அருகு சென்று, அடிமுறை வணங்கி,
வினையம் மேவினர், இனிதின் அங்கு இருந்ததோர் வேலை,
'நினையும் நல்வரவு ஆக, நும் வரவு" என நிரம்பி
'மனையும் மக்களும் வலியரே?" என்றனன், மறவோன். (9362)

(முறை-மரபு; வினையம்-பணிவு/வணக்கம்; மறவோன்-பெருவீரன்; நிரம்புதல்-முடித்தல்/மனநிறைவு; மனை-மனைவி; இனிது-மகிழ்வு; வேலை-கடல்/சமயம்)

படைத்தலைவர்கள் அனைவரும் அவன் அருகே சென்று வரன் முறைப்படி வணங்கிப் பணிவு பொருந்தியவராய் மகிழ்வுடன் அங்கு நின்றிருந்த சமயம், பெரு வீரனான இராவணன் அவர்களை நோக்கி, ''உங்களுடைய வரவு நான் நினைக்கின்றபடியும், எனக்கு நலன் தருவதாகவும் அமையட்டும்'' என்று மன நிறைவுடன்கூறி, ''உங்கள் வீட்டில் மனைவியரும் மக்களும், நலமாக உள்ளார்களா?'' என்றும் நலம் வினவினான்.

''நல்வரவு ஆக நும் வரவு'' என்ற சொற்றொடர் கவிஞனால் காப்பியப் போக்கில் பல இடங்களிலும் கையாளப்பட்டுள்ளதை இங்கு நினைவு கூர்க. முன்பு விசுவாமித்திரன் தசரதன் அரசவைக்கு வரும்போது தசரதன் கூற்றாகவும், பின்பு, சூர்ப்பணகை பஞ்சவடியில் தோன்றியபோது, இராமபிரான் கூற்றாகவும், இன்னும் பல இடங்களிலும் இவ்வாறு வரவு கூறப்பட்டிருப்பதையும் எண்ணுக. அதேபோல் ''மனையும் மக்களும் வலியரோ?'' என்று முன்பு, இராமபிரான் தன் குடிமக்களைப் பார்த்து வினவியபோதும், தசரதன் மாண்டது தெரியாத இராமபிரான் தண்டக வனத்தில் பரதனிடம் தந்தை வலியன்கொல்? என்று வினவியதையும் இராவணன் ''வன்திறலாய வாலி வலியன் கொல்?'' என்று வினவியதையும் இங்கே நினைவிற் கொண்டுவருக. 'நிரம்புதல்' என்பது மனநிறைவைக் குறிக்கும். மனப்பூர்வமாக வினவினான் என்பது பொருள்.

34. "பெரிய திண்புயன் நீஉளை; தவவரம் பெரிதால்;
உரிய, வேண்டிய பொருள் எலாம் முடிப்பதற்கு ஒன்றோ?
இரியல் தேவரைக் கண்டனம்; பகை பிறிது இல்லை;
அரியது என்எமக்கு?" என்றனர், அவன் கருத்து அறிவார். (9363)

(உளை-இருக்கிறாய்/உள்ளாய்; பொருள்-காரியம்/செயல்; ஒன்றோ-அரிதோ/ஒருபொருட்டோ; இரியல்-நிலைகெட்டு ஓடுதல்; காணுதல்-செய்தல்; பிறிது-வேறு; புயன்-புயம்/தோள்கள்)

இராவணனது மனக்கருத்தை அறிந்தவர்களான அரக்கர்படைத் தலைவர்கள்இராவணனைநோக்கி, ''பெரிய, வலியதிண்ணிய புயங்களை யுடைய நீ இருக்கின்றாய்! நீ அரிதிற் செய்த தவத்தினால் பெற்ற வரங்களோ

Koviloor Digital Library

மிகப்பெரியனவாகும்; எனவே உனக்கு உரிமையுடைய, நீ வேண்டுகின்ற செயல்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளுதல் என்பது அரிதானதோ? முன்பு செய்த போர்களிலெல்லாம் நாங்கள் தேவர்களை நிலைகெட்டுத் தோற்றோடச் செய்து இருக்கிறோம். எனவே எங்களுக்கு இப்போது வேறு எந்தப்பகையும் இல்லை. எனவே எங்களால் நிறைவேற்ற முடியாத காரியம் என்ன் இருக்கிறது?'' என்று தம் போர் ஆற்றலையும், பகையின்மையையும் அவனுக்கு எடுத்துக் கூறினார்கள்.

'புயன்' என்பது புயம் என்பதன் ஈற்றுப்போலி. முன்பாடலில் ''நினையும் நல் வரவாகுக நும்வரவு'' என்று வரவேற்றான் அல்லவா? எனவே இந்தப் பாடலில் அதைக் கவிஞன் குறிப்பிட்டு, ''அவன் கருத்து அறிவார்'' என்று கூறிய நயம் நோக்குக. 'உளை' என்பது உள்ளாய் என்ற பொருளது. 'ஒன்றோ' என்பது ஒரு பொருட்டோ என்னும் பொருளது. எங்களால் ஆற்றமுடியாத காரியம் எதுவும் இல்லை என்பது கருத்து.

35. "மாதராா்களும் மைந்தரும் நின் மருங்கு இருந்தார்;
பேது உறாதவர் இல்லை; நீ வருந்தினை பெரிதும்;
யாது காரணம்? அருள்!" என, அனையவர் இசைத்தார்;
சீதை காதலின் புகுந்துள பரிசு எலாம் தெரித்தான். (9364)

(மருங்கு-பக்கம்/அருகில்; பேது-கலக்கம்; அனையவர்-படைத் தலைவர்; புகுதல்-ஏற்படுதல்/உண்டாதல்; பரிசு-தன்மை; தெரித்தல்-தெரிவித்தல்; இசைத்தல்-வினவுதல்)

அப்படைத் தலைவர்கள் இராவணனை நோக்கி, ''வேந்தனே! உன் அருகில் இருக்கும் பட்டத்தரசியரும், உரிமைமகளிரும், மைந்தர்களும், இவர்களில் யாரும் மனம் கலங்காதவர்கள் இல்லை; எல்லோரும் சற்று கலங்கிப்போய் இருக்கிறார்கள்; நீகூடப் பெரிதும் வருத்தம் உற்றிருக் கிறாய்; இதற்கெல்லாம் என்ன காரணம்? தயவுசெய்து கூறுவாயாக!'' என்று வினவினர்; அதற்கு இராவணன், தான் சீதாதேவியின்மீது கொண்ட காதல் காரணமாக நிகழ்ந்த தன்மைகள் எல்லாவற்றையும் அவர்களுக்குத் தெரிவித்தான்.

இராவணன் திருமுன்னர் வந்ததும், பட்டத்தரசியரும் எஞ்சியிருந்த புதல்வர்களும் கலங்கி நின்றிருப்பதையும், தம் வேந்தன் இராவணனே பெரிதும் வருத்தமுற்றிருப்பதையும் கண்ட படைத்தலைவர்கள் இவ்வாறு கேட்க நேர்ந்தது எனக்கொள்க. இனியும் எதையும் மறைக்க விரும்பாத, இப்போது எதற்கும் துணிந்துவிட்ட இராவணன், தான் சீதாதேவியிடம் கொண்டிருந்த பொருந்தாக்காமம் பற்றியும் சொல்லித் தீர்த்தான் என்பதாம். இங்கே ''மைந்தரும் நின் மருங்கு இருந்தார்'' என்கின்றானே? எந்த மகன் இப்போது இராவணன் அருகில் இருக்கிறான் என்பது புரியவில்லை. அக்ககுமாரன், அதிகாயன், இந்திரசித்து எல்லோரும்

Koviloor Digital Library

மாண்டுபோயினரே? மேலும் கூறப்பட்ட மூன்று மைந்தர்களான நராந்தகன், தேவாந்தகன், திரிசிரன் ஆகியவரும் இறந்துபோயினரே? இப்பொழுது எஞ்சியிருப்பது எந்த மைந்தர் என்பது பேரறிஞர்களால் தெளிவாக்கப்படவேண்டிய ஒன்று. மைந்தர் என்பதற்குப் பொதுவாக ஆடவர்கள் என்ற பொருள் கொள்ளவும் இடம் உண்டு.

36. "கும்பகன்னனொடு இந்திரசித்தையும், குலத்தின்
வெம்பு வெஞ்சினத்து அரக்கர்தம் குழுவையும், வென்றார்,
அம்பினால் சிறு மனிதரே! நன்று நம் ஆற்றல்!
நம்ப! சேனையும் வானரமே!" என நக்கார். (9365)

(வெம்புதல்-வெதும்புதல்; குழு-கூட்டம்; நகுதல்-எள்ளிச்சிரித்தல்; நம்பன்-தலைவன்)

''தலைவனே! நின் தம்பி கும்பகருணனோடு, உன் மைந்தன் இந்திரசித்தையும், நமது குலத்திற்கே உரியதான கொடிய கோபத்தை யுடைய அரக்கர்பெருங் கூட்டத்தையும், தமது அம்பினால் சிறிய மனிதர்கள் வென்றார்களா? அவர்களுக்குத் துணைவந்தது ஒரு குரங்குக் கூட்டமா? நமது வலிமை மிக நன்றாக இருக்கிறது!'' என்று சிரித்து எள்ளி நகையாடினார்கள்.

''கூற்றையும் ஆடல் கொண்டவன் கும்பகருணன்; வில்லாளர் களுக்குள் எல்லாம் முன் நிற்பவன் இந்திரசித்தன், இவர்கள் இருவரையும் இரு சாதாரண மனிதர்கள் குரங்குப் படையின் துணையுடன் வென்றார்கள் என்கிறீர்களே! நமது பேராற்றல் என்ன ஆயிற்று? மிக நன்றாக இருக்கிறது நம் வலிமை!'' என்று எள்ளிச்சிரித்தார்கள் படைத்தலைவர்கள்; இராவணன் முன் நிற்பதற்கே அஞ்சுபவர்கள், நின்றாலும் பேசுவதற்கு அஞ்சுபவர்கள்; பேசினாலும் வாய்பொத்தி, உடல்மடித்து, கைகட்டி வணங்கிப் பேசுபவர்கள் இப்பொழுது அவனை எள்ளிநகையாடினார்கள் என்று கூறுவதை நுட்பமாக நோக்கவேண்டும். 'நன்று' என்பது எள்ளல் குறிப்பு. எதிர்மறைப்பொருளது. நன்றன்று என்பது பொருள்.

37. "உலகைச் சேடன்தன் உச்சிநின்று எடுக்க அன்று; ஓர்ஏழ்
மலையை வேரோடும் வாங்க அன்று; அங்கையால் வாரி
அலைகொள் வேலையைக் குடிக்க அன்று, அழைத்தது; மலரோடு
இலைகள் கோதும் அக்குரங்கின்மேல் ஏவக்கொல் எம்மை?" (9366)

(சேடன்-ஆதிசேஷன்; ஓர்-ஒப்பற்ற; வாங்குதல்-பறித்தல்; அங்கை-உள்ளங்கை; வாருதல்-அள்ளுதல்; கோதுதல்-கறித்தல்/உண்ணுதல்)

படைத்தலைவர்கள் இராவணனை நோக்கி, ''இப்போது நீ எங்களை இங்கே வரவழைத்தது இந்த உலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற அந்த ஆதிசேஷனது உச்சந்தலையிலிருந்து அந்த உலகத்தைப் பெயர்த்

Koviloor Digital Library

தெடுப்பதற்காக அல்ல; ஒப்பற்ற குலமலைகள் ஏழையும், வேரோடும் பிடுங்கிப் பெயர்த்தெடுப்பதற்காக அல்ல; அலைகள் நிறைந்த கடல்களை எங்கள் உள்ளங்கையால் அள்ளிப் பருகி அதனை வற்றச்செய்வதற்கும் அல்ல; மலர்களையும் இலைகளையும் கொறித்துத் தின்றுகின்ற ஒரு அற்பமான குரங்கின்மேல் சென்று போர்தொடுக்கவோ எங்களை அழைத்தாய்!'' என்று கேட்கிறார்கள்.

இவ்வுலகை ஆதிசேஷன் என்னும் ஆயிரம் தலைகளையுடைய பாம்பு தாங்கிக் கொண்டிருக்கிறது என்பது ஒரு புராணக்குறிப்பு. குலமலைகள் எட்டு இங்கே ஏழுமலைகள் என்று கூறப்பட்டிருக்கிறது. கந்தமாதனத்தைச்சேர்த்து எட்டு எனக்கொள்க. செயற்கரிய இந்த மூவகைச் செயல்களையும் செய்யும் பேராற்றல் படைத்த எங்களை ஒரு அற்பக் குரங்குடன் போரிடுவதற்காகவா நீ இங்கே வரவழைத்தாய்!'' இது எங்களைச் சிறுமைப்படுத்துவதாகும்'' என்று இராமஇலக்குவர் ஆற்றல்பற்றியும், வானரச்சேனையின் வலிமைபற்றியும் அறிந்திராத செருக்குமிக்க படைத்தலைவர்கள் ஏசுகிறார்கள் என்பதாம். எளிமையான உணவு உண்ணும் குரங்குகள் உடம்பில் வலிமை பெற்றிருக்காது என்ற தவறான கருத்துக் கொண்டிருக்கிறார்கள் படைத்தலைவர்கள் என்பதாம்.

38. படைத்தலைவன் வன்னி பேசுதல்

என்ன, கை எறிந்து, இடி உரும்ஏறு என நக்கு,
மின்னும் வாள்எயிற்று அரக்கரை அம்கையால் விலக்கி,
வன்னி என்பவன் புட்கரத்தீவுக்கு மன்னன்,
''அன்ன மானுடர் ஆர் வலி யாவது?'' என்று அறைந்தான். (9367)

(எறிதல்-தட்டுதல்; உரும்-இடி; நக்கு-சிரித்து; நகுதல்-சிரித்தல்; வாள்-ஒளி/வெள்ளிய; அறைதல்-வினவுதல்)

அவ்வாறு கைகொட்டி, இடிக்கின்ற பேரிடியின் பேரொலிபோல் எள்ளிச்சிரித்த மின்னல்போன்ற ஒளியையுடைய வெள்ளிய பற்களை யுடைய அரக்கர்படைத் தலைவர்களை எல்லாம் தன் அழகிய கைகளால் சாடைகாட்டி அமைதிப்படுத்திவிட்டு, புட்கரம் என்னும் தீவினுக்கு மன்னனாகிய வன்னி என்பவன், இராவணனை நோக்கி, ''அரசே! அத்தகைய மனிதர்கள் யார்? அவர்களுடைய ஆற்றல் எத்தகையது?'' என்று கேட்டான்.

''கையெறிதல்'' என்பது கைகொட்டுதல், கைகளால் தட்டுதல் என்ற பொருளைத்தரும். ''இடிஉரும்'' என்பது மீமிசைச்சொல். நாம் இடிக்கின்ற இடி என்று பொருள் கொண்டுள்ளோம். ''இடிஏறு'' என்பது பேரிடியைக் குறிக்கும். கூற்றையும் ஆடல்கொண்ட கும்பகருணனையும், வில்லாளர் களுக்கெல்லாம் முன் நிற்பவனாகிய இந்திரசித்தனையும் கொன்று

Koviloor Digital Library

குவித்தவர்கள் என்றால் அவர்கள் சாதாரணமானவர்களாக இருக்க முடியாது என்று தன் மதியால் ஊகித்தறிந்த வன்னி, அவர்கள் யார் என்பதையும் அவர்களுடைய வலிமை எத்தகையது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்தால் இவ்வாறு கேட்டான் எனக் கொள்க. மாற்றான் வலியறிதல், மதியூகம் மிக்க படைத்தலைவனுக்குரிய தகுதிகளுள் ஒன்று ஆகும்.

39. மாலியவான், இராமஇலக்குவர், வானரச்சேனை பற்றிக் கூறுதல்

மற்று அவ்வாசகம் கேட்டலும், மாலியவான் வந்து,
'உற்ற தன்மையும், மனிதரது ஊற்றமும், உடன்ஆம்
கொற்ற வானரத் தலைவர்தம் தகைமையும், கூறக்
கிற்றும், கேட்டிரால்'' என்றனன், கிளத்துவான் துணிந்தான். (9368)

(வாசகம்-சொற்கள்; உற்ற-நிகழ்ந்தன; ஊற்றம்-வலிமை; கொற்றம்-வெற்றி; தகைமை-பெருமை/சிறப்பு; கிற்றுதல்-வல்லமை உடையவராதல்; கிளத்துதல்-கூறுதல்; கிளத்துவான்-கூறும் பொருட்டு)

என்று அவ்வாறு வன்னி என்பவன் கூறிய சொற்களைக் கேட்டவுடன், அங்கிருந்த இராவணனின் பாட்டனும், வயதில் முதிர்ந்தவனுமாகிய மாலியவான் தானே முன்வந்து ''இங்கு நிகழ்ந்தன எல்லாவற்றையும், அம்மனிதர்களின் வலிமையையும், அவர்களுடன் வந்த வெற்றி பொருந்திய வானரத்தலைவர்களின் பெருமைகளையும் நான் கூறுகிறேன் கேளுங்கள்!'' என்று அதனைக் கூறும்பொருட்டுத் துணிவு மேற்கொண்டு எழுந்தான்.

மாலியவான் தானே முன்வந்து பேசுவதை உணர்க. அவன் இப்பொழுது பேசப்போவது இராவணனுக்குப் பிடிக்காத கருத்துக்கள். அவனைக் கோபம்கொள்ளச் செய்யும் கருத்துக்கள் அவனது தோல்வியையும், பிறன்மனை நயத்தலையும் இடித்துக் கூறும் கருத்துக்கள் என்பதனால்தான் கவிஞன்கூறத் தொடங்கினான் என்று கூறாது, ''கிளத்துவான் துணிந்தான்'' என்று நயம்பட உரைத்தார் என்க. பொதுவாகக் ''கில்'' என்பது ஆற்றல் உணர்த்தும் இடைச்சொல்லாகத்தான் பயன்படுத்தப் படும். எனினும் இங்கே ''கிற்றும்'' என்று ஆற்றல்உடையோம் என்ற பொருளில் பயன்படுத்தியிருக்கிறான் கவிஞன். இதுஒரு அரிய சொல்லாட்சி.

40. ''பரிய தோளுடை விராதன், மாரீசனும் பட்டார்,
கரிய மால்வரை நிகர் கரதூடணர், கதிர்வேல்
திரிசிரா, அவர் திரைக்கடல் அன பெருஞ்சேனை
ஒருவிலால், ஒரு நாழிகைப் பொழுதினின், உலந்தார்'' (9369)

Koviloor Digital Library

(ஒருவிலால்-ஒரேவில்லினால்; விலால்-வில்லால்; பரிய-பெருத்த; அன-அன்ன/போன்ற; உலத்தல்-அழிதல்; கதிர்-ஒளி)

''இராமபிரானுடைய ஒப்பற்ற ஒரேவில்லினால், பருத்த தோள்களையுடைய விராதன், மாரீசன் முதலியோர் அழிந்துபட்டனர்; கரிய, பெரிய மலைபோன்ற கரன், தூடணன், ஒளிபொருந்திய வேற் படையையுடைய திரிசிரா, அவர்களுடைய அலைபொருந்திய கடல் போன்ற பெரிய சேனை இவையெல்லாம் ஒரே நாழிகைப் பொழுதில் அழிந்து ஒழிந்துபோனார்கள்'' என்கிறான் மாலியவான்.

மாரீசன், கரதூடணன், திரிசிரா வதை முன்பும், விராதன்வதை பின்பும் நடைபெற்றன. எனினும் செய்யுள்நடை கருதி முன்பின்னாகக் கூறப்பட்டது எனக்கொள்க. திரிசிரா என்பவன் மூன்று தலைகளை யுடையவன். இவன் கரனின் படைத்தளபதி என்கிறது வான்மீகம். 'விலால்' என்பது வில்லால் என்பதன் இடைக்குறை. அதுபோல் 'அன' என்பது அன்ன என்பதன் இடைக்குறை எனக்கொள்க. 'ஒருவில்' என்பது இராமபாணத்தைக் குறிக்கும்.

41. "ஆழி அன்னநீர் அறிதிர்அன்றே; கடல் அனைத்தும்
ஊழிக்கால் எனக் கடப்பவன் வாலி என்போனை?
ஏழு குன்றமும் எடுக்குறு மிடுக்கனை, இந்நாள்,
பாழி மார்பகம் பிளந்து, உயிர் குடித்தது ஓர்பகழி. (9370)

(ஆழி-கடல்; கால்-காற்று; மிடுக்கு-வலிமை; பகழி-அம்பு; பாழி-வலிமை)

''பெரியகடல்போன்று திரண்டிருக்கும் நீங்கள், இவ்வுலகில் உள்ள ஏழு கடல்களையும் ஊழிக்காலக் காற்றைப்போலக் கடந்து போகக் கூடியவனான வாலி என்பவன் பற்றி அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? உலகிலுள்ள குலமலைகள் ஏழினையும், பெயர்த்தெடுக்கும் வலிமை பொருந்திய அவனை, இந்நாட்களில் அவனுடைய வலிமையான மார்பகத்தைப் பிளந்து, அவன் உயிரைப் போக்கியது இந்த இராமபிரானின் ஒப்பற்ற ஒரேஒரு வில்'' என்று கூறுகிறான் மாலியவான்.

அரக்கர்படையின் பெருக்கத்தை ஆழி எனக் கடலுக்கு உவமித்தார். வாலி தினந்தோறும் சிவபூசை செய்வதற்காக ஏழு கடல்களையும் தாண்டிச் சென்று பெரும்புறக் கடலிலும் பூசனை செய்து திரும்பும் சிவபக்தன் என்பது நாம் முன்பு கண்டுவந்ததேயாம். ஊழிக்காற்று வாலியின் வேகத்திற்கு உவமையாயிற்று. ''மேருவே முதல் கிரிகள் வேரோடும் பேருமே, அவன் பேருமேல்'' என்பதும் ''எட்டு மாதிரத்து இறுதி, நாளும் உற்று அட்ட மூர்த்தி தாள்பணியும் அன்பினான்'' என்பதும் கிட்கிந்தா காண்டம்.

Koviloor Digital Library

42\. "இங்கு வந்து நீர் வினாயது என்? எறிதிரைப் பரவை
அங்கு வெந்திலதோ? சிறிது அறிந்ததும் இலிரோ?
கங்கைசூடிதன் கடுஞ்சிலை ஒடித்த அக்காலம்
உங்கள் வான்செவி புகுந்திலதோ, முழங்கு ஓதை?" (9371)

(வினாயது-வினவியது; எறிதல்-வீசுதல்; திரை-அலை; பரவை-கடல்; இலிரோ-இல்லீரோ; ஓதை-பேரொலி/ஓசை; வான்-சிறந்த)

மாலியவான் அவ் வன்னியை நோக்கி, ''இராமஇலக்குவர் வீரத்திறன் பற்றி நீங்கள் இங்குவந்து கேட்கிறீர்களே! ஏன்? அன்று அவன் வருணனிடம் சீற்றம்கொண்டு, தனது அக்னி அஸ்திரத்தைச் செலுத்திய போது உலகெங்கிலுமுள்ள எல்லாக் கடல்களும் வற்றிப்போயினவே? நீங்கள் வசிக்கின்ற அலைகள் மோதுகின்ற கடல்மட்டும் வேகாமல், வற்றாமல் போய்விட்டதோ! அல்லது அது இராமபிரான் அக்னி அஸ்திரத்தால்தான் நிகழ்ந்தது என்பதை நீங்கள் அறியவில்லையோ? முன்பு கங்கையைத் தன் முடியில் சூடியிருக்கும் சிவபெருமானின் கடுமையான சிவதனுசுவை சீதாதேவியைத் திருமணம் செய்துகொள்ளும் பொருட்டு, மிதிலையில் இதே இராமபிரான் ஒடித்துப்போட்டானே, அந்தப் பெரும்பேரொலி உங்களுடைய பெரிய சிறந்த காதுகளில் கேட்கவில்லையோ?'' என்று இகழ்ச்சியாகவும், அதேசமயம் அரசனின் உறவினன் என்ற அதிகார தோரணையோடும் மாலியவான் வினவினான்.

இந்த அரக்கர்கள் பாதுகாப்புக் காரணம் கருதி, இலங்கையின் வெளிப் புறத்தில் கடலில் வசித்துவருபவர்கள். முன்பு இராமபிரான் வருணனை வழிவேண்டியபோது அவன் வரத் தாமதமானதால் தனது அக்னி அஸ்திரத்தைச் செலுத்தி வழி ஏற்படுத்திக்கொண்டான். அப்பொழுது உலகெங்குமுள்ள கடல்கள் எல்லாம் எரிந்து வற்றிப்போயின என்பதை நாம் முன்பே கண்டுவந்திருக்கிறோம். எனவே அவ்வாறு நீங்கள் வசிக்கும் கடலும் வற்றித்தானே போயிருக்கும்! இதைக்கூட நீங்கள் அறிந்திருக்க வில்லையா?'' என்று கேட்கிறான் மாலியவான் என்பதாம். அதற்கும் முன்பு, மிதிலையில் இராமபிரான் சீதாதேவியை மணம்செய்து கொள்ளும் பொருட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த சிவதனுசுவை ஒடித்தானே! அப்பொழுது அந்த முழக்கம் உலகெங்கும் கேட்டதே? அயோத்தியில் இருந்த தசரதனுக்குக் கேட்டது; இமயமலையில் இருந்த பரசுராமனுக்குக் கேட்டது; உங்களுக்கு மட்டும் - உங்களுடைய சிறந்த பெரிய காதுகளுக்கு மட்டும் கேட்கவில்லையோ? என்று கேட்கிறான் மாலியவான் என்பதாம். இங்கும் நிகழ்ச்சிகள் முன்பின்னாகக் கூறப்பட்டிருப்பதை நோக்குக.

''கங்கை சூடி தன் கடுஞ்சிலை ஒடித்த அக்காலம் முன்னது'' ''எரிதிரைப் பரவை அங்கு வெந்தது'' பின்னது என்பதை நாம் அறிவோம். எனினும் செய்யுள் கருதி இவ்வாறு அமைக்கப்பட்டது எனக்கொள்க. ''ஏழு வேலையும் எரியொடு புகைமடுத்தேகி, ஊழி வெங்கனல் கொழும்துகள்

Koviloor Digital Library

உருத்து எழுந்து ஓடி, ஆழி மால்வரைக்கு அப்புறத்து இருளையும் அவித்த'' என்பது வருணனை வழிவேண்டு படலம்.

43. "ஆயிரம் பெருவெள்ளம் உண்டு, இலங்கையின் அளவில்,
தீயின் வெய்ய போர் அரக்கர்தம் சேனை; அச்சேனை
போயது, அந்தகன் புரம் புக நிறைந்தது போலாம்!
ஏயும் மும்மை நூல் மார்பினர் எய்த வில் இரண்டால்" (9372)

(அளவு-எல்லை; அந்தகன்-இயமன்; மும்மைநூல்-முந்நூல்/முப்புரி நூல்; மும்மை-மூன்று; தீயின்-தீயைப்போன்று/தீயைக் காட்டிலும்; ஏயும்-பொருந்திய)

''இலங்கையின் எல்லையில் நெருப்பைக்காட்டிலும், கொடிய போர்செய்யும் தன்மையுடைய அரக்கர்களின் பெருஞ்சேனை ஆயிரம் வெள்ளம் உண்டு. அந்தச்சேனை முழுவதும் அழிந்து போய்விட்டது; அனைத்தும் சென்று எமலோகத்தில் புகுந்து அதனை நிறைத்துவிட்டது போலும்; இத்தனைக்கும் இந்தச் செயலைச் செய்தது முப்புரிநூல் அணிந்த மார்பினை உடைய இராமஇலக்குவர் என்ற இருவரும் கைக் கொண்டிருந்த இரண்டு விற்களினின்றும் வெளிப்பட்டு வந்த அம்புகள் தான்'' என்கிறான் மாலியவான்.

இராமஇலக்குவர், செலுத்திய அம்புகளால் இராவணனுடைய ஆயிரம் வெள்ளம் அரக்கர்சேனையும் அழிந்துபோய்விட்டது என்று மாலியவான் இராமஇலக்குவரின் வலிமையை அரக்கர் சேனைக்கு, வன்னி மூலமாகத் தெரியப்படுத்துகிறான் என்பதாம். இப்பொழுது அவன் திரட்டிக்கொண்டு வந்திருக்கின்ற சேனையின் அளவும் ஆயிரம் வெள்ளம் என்று முன்பாடலில் புலப்படுத்தப்பட்டதையும் நினைவிற்கொள்க. அந்த ஆயிரம்வெள்ளம் சேனைக்கு நேர்ந்த அழிவு, இந்த ஆயிரம் வெள்ள சேனைக்கும் ஏற்படும் என்பது மாலியவான் கருத்து. ''எய்தவில்'' என்பது வில்லினின்றும் செலுத்தப்பட்ட அம்புகள்'' என்று ஆகுபெயராய் அம்பினைக் குறிக்கும். ''அந்தகன்'' என்பது உயிர்களின் அந்தம் பார்த்து - அவற்றின் வாழ்நாள் முடிவில் வந்து கவர்ந்து செல்பவன் என்ற பொருளைத்தரும்.

44. "கொற்ற வெஞ்சிலைக் கும்பகன்னனும், நுங்கள் கோமான்
பெற்ற மைந்தரும், பிரகத்தன் முதலிய பிறரும்,
மற்றை வீரரும், இந்தரசித்தொடு மடிந்தார்;
இற்றை நாள் வரை, யானும் மற்று இவனுமே இருந்தேம்" (9373)

(கொற்றம்-வெற்றி; கோமான்-அரசன்; இற்றைநாள்-இன்று)

''வெற்றியே பொருந்திய கொடிய வில்லையேந்திய கும்பகருணனும், உங்கள் அரசனான இராவணன் பெற்றெடுத்த புதல்வர்களும், பிரகஸ்தன்

Koviloor Digital Library

முதலிய படைத்தலைவர்களும், மற்றும் இருந்த எல்லா வீரர்களும் இந்திரசித்தனோடு சேர்ந்து மாண்டுபோனார்கள்; இன்றுவரையிலும் நானும், இராவணனும் மட்டும் இறவாது, உயிர்தரித்திருக்கிறோம்'' என்கிறான் மாலியவான்.

'நுங்கள்' என்பது உங்கள் என்று பொருள்படும். ''பெற்ற மைந்தரும்'' என்பதிலேயே இந்திரசித்தனும் அடங்கிவிடுவான். எனினும் இந்திர சித்தனின் ஒப்பற்ற வீரத்திறத்தைச் சிறப்பிப்பதற்காக அவனைத் தனித்தும் கூறினார் என்க. ''நுங்கள் கோமான்'' என்பது எள்ளல்குறிப்பு. ''இந்திர சித்தொடு'' என்ற இடத்தில் ''ஒடு'' என்ற சொல் தமிழ் இலக்கணத்தில் உயர்வையோ, தாழ்வையோ, குறிப்பிட்டுக் கூறுவதற்காகப் பயன் படுத்தும் ஒரு சொல். ''முனிவர் வந்தார், அகத்தியரும் வந்தார்'' என்று கூறினால் அங்கே அகத்தியரும் என்பதில் உம்மையை எப்படி உயர்வுசிறப்பாகக் கொள்ளுகிறோமோ, அதுபோல இங்கே ''மற்றை வீரரும் இந்திரசித்தொடு மடிந்தார்'' என்பதில் உள்ள 'ஒடு' என்ற சொல் உயர்வின்வழி வரத்தக்க சொல்லாகும். முன்பு சொன்ன பெற்ற மைந்தரில் இராவணன் புதல்வன் இந்திரசித்தும் அடங்குவான்; இங்கு கூறப்பட்ட இந்திரசித்தொடு என்பது வில்லாளர்களுக்கு எல்லாம் முன் நிற்கும் வில்லாளன் இந்திரசித்தும் மடிந்தான் என்ற விரிந்த நலம்மிக்க பொருளைத்தரும்.

45. "மூலத்தானை என்று உண்டு; அது மும்மை நூறு அமைந்த
கூலச் சேனையின் வெள்ளம்; மற்று அதற்கு இன்று குறித்த
காலச் செய்கை நீர் வந்துளீர்; இனி தக்க கழலோர்
சீலச் செய்கையும், கவிப்பெரும் சேனையும் தெரிக்கில்" (9374)

(தானை-சேனை/படை; மும்மை-மூன்று; கூலம்-திரட்சி/தொகுதி; சீலம்-ஒழுக்கம்/வீரப்பாங்கு; தெரிக்கில்-தெரியப்படுத்தினால்) (குளகப் பாடல்)

''மூலபலப்படை என்ற ஒன்றும் இங்கு உள்ளது; அது முன்னூறு என்ற எண்ணிக்கையில் அமைந்த திரட்சிமிகுந்த வெள்ளம் போன்ற சேனை யாகும்; அவை போர்செய்ய வேண்டிய நாள் இன்று என்று குறிக்கப் பட்டது; அவற்றுக்கு உதவிசெய்யவே நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். இனிமேல் சிறந்த வீரக்கழல் அணிந்த இந்த இராமஇலக்குவரின் ஒழுக்கம் மிகுந்த செயல்களையும், அவர்களது வானரச்சேனையின் பெருமையை யும் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றால் - பாடல்தொடர்கிறது.

இப்பொழுது பல இடங்களிலிருந்தும் வந்த ஆயிரம் வெள்ளம் சேனையைத்தவிர முன்பு அழிந்துபட்ட ஆயிரம் வெள்ளம் சேனையையும் தவிர, இப்பொழுது இன்னும் முன்னூறு வெள்ளம் சேனை இங்கு இருக்கிறது என்கிறான் மாலியவான். வானரப்படையைச் ''சீலச்சேனை''

Koviloor Digital Library

என்றும், அரக்கர்படையை ''கூலச்சேனை'' என்றும் வேறுபடுத்திக் கூறிய நயம் நோக்குக. சீலச்சேனை என்பது போர்த்திறம் வாய்ந்த, ஒழுக்க நெறியில் போர்புரிகின்ற சேனையென்றும், ''கூலச்சேனை'' என்பது திரட்சியானஅரக்கர்களின் தொகுதி என்றும், மாயவித்தைகளால் மட்டுமே போர்புரியும் ஆற்றல்மிக்க அரக்கர்சேனை என்றும் பொருள்தருவதை நோக்குக.

46. "ஒரு குரங்கு வந்து, இலங்கையை மலங்கு எரியூட்டி,
திருகு வெஞ்சினத்து அக்கனை நிலத்தொடும் தேய்த்து,
பொருது, தூதுஉரைத்து, ஏகியது, அரக்கியர் புலம்ப,
கருது சேனையாம் கடலையும், கடலையும் கடந்து" (9375)

(மலங்குதல்-கலங்கிப்போதல்; திருகு-மாறுபட்ட; அக்கன்-அக்க குமாரன்/இராவணனின் புதல்வன்; பொருதல்-போர்செய்தல்; கருதுதல்-மதித்தல்)

''அனுமன் என்னும் ஒப்பற்ற ஒரேஒரு குரங்கு இங்குவந்து, இந்த இலங்கை மாநகரமே கலங்கிப்போகும் வண்ணம் அந்நகருக்கு எரியூட்டி, மாறுபட்ட கடுமையான சீற்றம் கொண்டவனான இராவணனது புதல்வனான அக்ககுமாரனைத் தரையோடும் வைத்துத் தேய்த்து அவனைக் கொன்று, பின்பு அரக்கவீரர்களோடு பெரும் போர்செய்து, இராவணன் சபைக்கு வந்து அவனிடம் தூதுவனாகவும், தூதுஉரைத்து, அரக்கியரெல்லாம் அழுது புலம்பும்வண்ணம், மிகுந்த மதிப்பிற்குரிய அரக்கர்சேனை என்னும் பெரிய கடலையும் வென்று, கருங்கடலையும் தாண்டிச்சென்றது'' என்று அனுமன் ஆற்றிய செயல்களை விவரிக்கிறான் மாலியவான்.

''ஒரு குரங்கு'' என்பது அனுமனைக் குறித்தது. முதலில் குறிக்கப்பட்ட கடல் அரக்கர்களின் சேனைக்கடல். அடுத்துவரும் கடல் கருங்கடல், முதல்கடலை வென்றான்; அடுத்த கடலைத் தாண்டினான் என்று இருபொருள்படக் கூறிய நயம் நோக்குக. 'கடந்தான்' என்ற சொல்லுக்கு வென்றான் என்று ஒரு பொருளும், தாண்டினான் என்று மற்றொரு பொருளும் உண்டு. ''சேனையாம்கடல்'' என்பது உருவகம். கடல்போன்ற சேனை என்ற பொருளைத்தரும்.

47. "கண்டிலீர் கொலாம், வடலினை மலைகொண்டு கட்டி,
மண்டு போர்செய, வானரர் இயற்றிய மார்க்கம்?
உண்டு வெள்ளம் ஓர் எழுபது, மருந்து ஒரு நொடியில்
கொண்டு வந்தது, மேருவுக்கு அப்புறம் குதித்து. (9376)

(மண்டுதல்-நெருங்குதல்; மார்க்கம்-வழி/சேதுஅணை/இராமர் பாலம்)

Koviloor Digital Library

''நீங்கள் இகழ்ந்துபேசிய அந்தக் குரங்குகள்தான் நம்மை நெருங்கி வந்து போர்செய்யும் பொருட்டு மலைகளைக் கொண்டு அணையைக் கட்டி வழிசெய்து கொண்டு கடலைத்தாண்டி வந்ததை நீங்கள் அறிந்ததில்லையா? பகைவர்களிடம் இத்தகைய வல்லமைகொண்ட வானரசேனையின் அளவு எழுபது வெள்ளம் உள்ளது. அதில் ஒரு குரங்கு மேருமலைக்கு அப்புறம் குதித்துச் சென்று, ஒரு நொடிப்பொழுதில், அங்கிருந்து மருத்துமலையைக் கொண்டுவந்து இறந்துபட்ட வானரச் சேனையை உயிர்ப்பித்தது. இதுவும் நீங்கள் அறிந்ததில்லையா?'' என்று வானரச்சேனையின் வலிமையைப் புலப்படுத்துகிறான் மாலியவான்.

ஒவ்வொரு குரங்கும் அனுமனைப்போல் செயற்கரிய செயல் செய்யும் ஆற்றல்பெற்றவை எனக் கூறுகிறான் என்பதாம். 'கொல்' என்பது ஐயம் குறித்த இடைச்சொல்.

48. "இது இயற்கை; ஓர் சீதை என்று இருந் தவத்து இயைந்தாள்,
பொது இயற்கைதீர் கற்புடைப் பத்தினி பொருட்டால்,
விதி விளைத்தது; அவ்வில்லியர் வெல்க! நீர்வெல்க!
முதுமொழிப் பதம் சொல்லினன்" என்று உரை முடித்தான். (9377)

(இயற்கை-இயல்பு; இரும்-பெரிய; இயைதல்-பொருந்துதல்; ஓர்-ஒப்பற்ற; தீர்தல்-நீங்குதல்; பதம்-சொல்; உரை-சொற்கள்)

''இதுதான் பகைவர்களுடையவும், பகைவர்களின் படையினுடைய வுமான இயல்புகள், சிறப்புக்கள். சீதை என்று ஒப்பற்ற பெயர்கொண்ட ஒரு பெரும் தவத்திற் பொருந்தியவளும், பொதுவாக எல்லோர்க்கும் இயலாத தனிச்சிறப்பு வாய்ந்த திண்ணிய கற்புடைய பத்தினியான வளுமாகிய அவளை முன்னிட்டுத்தான் இத்தகைய பெரும்பகையை விதியே முன்னின்று விளைவித்திருக்கிறது. வில்லாற்றலில் சிறந்தவர் களான அந்த இராமஇலக்குவர்களே வெல்லட்டும்; அல்லது நீங்களே வெல்லுமாறு ஆகட்டும்; நான் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவன். எனவே அதற்குரிய நற்சொற்களை உங்களுக்கு எடுத்துச் சொன்னேன்'' என்று தன் பேச்சினை முடித்துக்கொண்டான் மாலியவான்.

'பொது இயற்கைதீர்'' என்பது எல்லோர்க்கும் பொதுவல்லாத, தனக்கு உரிய தனிச்சிறப்புப் பெற்ற திண்கற்பு என்ற விரிந்த பொருளைத்தரும். இறுதியாக மாலியவான் இது விதியின் செயல் என்றும், அவர்களே வெல்லுவார்கள் என்று இராவணனுக்கு முன்னும், படைத்தலைவர்களின் முன்னும் நேராகச் சொல்லுவதைத் தவிர்த்து ''நீர்வெல்க'' என்று ஒப்புக்காகக்கூறியதையும் நுனித்து உணர்க. மேலும் இது முதியவன்கூறும் முதுமொழி, இது பொய்க்காது என்பதையும் மறைமுகமாக உறுதிப் படுத்துவதையும் நோக்குக.

Koviloor Digital Library

49. வன்னி–இராவணன் உரையாடல்

வன்னி, மன்னனை நோக்கி, "நீ இவரெலாம் மடிய,
என்ன காரணம் இகல்செயாது இருந்தது?" என்று இசைத்தான்;
"புன்மை நோக்கினென்; நாணினால் பொருதிலேன்" என்றான்
"அன்னதேல், இனி அமையும் எம்கடமை அஃது" என்றான். (9378)

(இகல்-போர்; புன்மை-அற்பம்/சிறுமை/இகழ்வு; பொருதல்-போர்செய்தல்; அன்னதேல்-அப்படியென்றால்)

அந்தப் படைத்தலைவன் வன்னி, அரசன் இராவணனை நோக்கி, ''கும்பகருணன், இந்திரசித்து ஆகிய பெரும் வீரர்களெல்லாம் இறந்து பட்டபின்பும் நீ போர்செய்யப் போகாதிருந்ததற்கு என்ன காரணம்?'' என்று வினவினான்; அதற்கு இராவணன் ''அற்பமான மானிடர் களுடனும், வானரங்களுடனும் போர்புரிதல் என் வீரத்திற்கு இழுக்காகும் என்று வெட்கப்பட்டுக் கொண்டு போர்புரியச் செல்லாதிருந்தேன்'' என்றான்; அதற்கு வன்னி ''அவ்வாறென்றால் இனிமேல் பகைவருடன் போர்செய்தல் எங்கள் கடமை ஆகும்'' என்று கூறினான்.

ஒரு படைத்தலைவன் ஒரு மாபெரும் வேந்தனை நோக்கி, நீ போர் புரியாததற்கு என்ன காரணம்?'' என்று சற்று உயர்ந்த குரலில் கேட்பதையும், அதற்குப் பேரரசன் இராவணன், ''அது என் புகழுக்கு இழுக்காகும் என்று வெட்கப்பட்டுக் கொண்டு போர்செய்யாதிருந்தேன்'' என்று பணிவாக விடை கூறுவதையும் நோக்குங்கள். இது உண்மையா? இராவணன் முதல்நாள் இம்மானிடருடனும் வானரத்துடனும் போர் செய்யச் சென்று, தோல்வியடைந்து, படைக்கலங்களையெல்லாம், தன் வீரத்துடனும் கீழே போட்டுவிட்டு வெட்கித் தலைகுனிந்து நிலத்தை மட்டும் பார்த்துக்கொண்டு இலங்கைக்குள் திரும்பிப் புகுந்தான் அல்லவா இந்த இராவணன்? இதை மறைத்துப் பொய்சொல்லுவது யாரிடம் என்பதையும் பாருங்கள். தனக்கு கீழே தன் கட்டளைக்குப் பணிந்து நடக்கவேண்டிய ஒரு படைத்தளபதியிடம் இவ்வாறு ஒரு பேரரசன் வெட்கமுற்றுப் பணிந்து பேசுகிறான் என்று கூறவைக்கும் கம்பனின் நுண்மாண் நுழைபுலத்தைக் கருதுக. அவன்கூறிய காரணம் பொருத்தமாக வன்னிக்குப் பட்டதால் சரி அவ்வாறானால் மீண்டும் போர்செய்வது எங்கள் கடமையாகும் என்று ஏற்றுக்கொண்டான் என்பதாம்.

50. "மூது உணர்ந்த இம் முதுமகன் கூறிய முயற்சி
சீதை என்பவள் தனைவிட்டு அம்மனிதரைச் சேர்தல்;
ஆதியின் தலை செயத்தக்கது; இனிச்செயல் அழிவால்;
காதல் இந்திரசித்தையும் மாய்வித்தல் கண்டும்?" (9379)

(மூது-பழமையான; முதுமகன்-முதியவன்/மாலியவான்; விடுதல்-விடுதலைசெய்தல்; ஆதி-தொடக்கம்/முதலில்; காதல்-அன்பு)

Koviloor Digital Library

''மிகத் தொன்மையான இயல்புகளையெல்லாம் அனுபவத்தால் நன்கு உணர்ந்திருக்கும் இந்த முதியவர் மாலியவான் சொன்ன செய்தி, ''சீதாதேவி என்பவளை அசோகவனத்தினின்றும் விடுதலைசெய்து, அந்த மானிடர்களாகிய இராமஇலக்குவரைஅடைக்கலம்அடைதல் என்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இது போர் தொடங்குவதற்கு முன்பே செய்திருக்க வேண்டிய செயல்ஆகும். நமது அன்புப்புதல்வன்-இந்திரசித்தன் இறந்ததைக் கண்ட பின்பு, அவ்வாறு செய்தல் நம் வீரத்திற்கும், புகழுக்கும் சிறுமையாகும். எனவே இப்போது போர்செய்யப் புறப்படுவதே தகுந்தது'' என்று கூறுகிறான் வன்னி.

மாலியவான் ''சீதாதேவியை விடுதலை செய்துவிட்டு இராம இலக்குவரை அடைக்கலம் புகுதலே தக்கது'' என்று இப்பொழுது வெளிப் படையாகக் கூறவில்லை என்றாலும் இச்செய்தியை புட்கரத்தீவு மன்னனான வன்னி ஊகித்து உணர்ந்துகொண்டு இவ்வாறு பேசினான் என்பதாம். எனினும் இதற்கு முன்பு இதே மாலியவான் இராவணனிடம் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறான் என்பதை இங்கு நினைவுகூர்தல் தகும். ''சனகியை மரபின் ஈந்து, அவ்அறம் தரு சிந்தையோரை அடைச்கலம் புகுதும் ஐய!'' என்பது மாயாசீதைப் படலத்தில் மாலியவான் கூற்று. ஒரு மன்னன் தோற்கும் நிலையில் இருக்கும்போது, பகைவரிடம் சென்று அடைக்கலம் புகுதல் என்பது வீரத்தின் பாற்படாது. அது மேலும் சிறுமையைச் சேர்க்கும் என்பதாம். இதே கருத்தை முன்பு கும்பகருணன் கூறியதையும் இங்கு ஒப்புநோக்கலாம். ''மட்டு அவிழ் மலர்க்குழலினாளை இனி மன்னா! விட்டிடுதியேல் எளியம் ஆதும்; அவர் வெல்லப்பட்டிடுதுமேல் அதுவும் நன்று; பழியன்றால்'' என்பது இராவணன் மந்திரப்படலத்தில் கும்பகருணன் கூற்று.

51. விட்டம் ஆயினும், மாதினை, வெஞ்சமம், விரும்பிப்
பட்ட வீரரைப் பெறுகிலெம்; பெறுவது பழியால்;
முட்டி மற்றவர் குலத்தொடு முடிக்குவது அல்லால்,
கட்டம், அத்தொழில்; செருத்தொழில் இனிச்செயும் கடமை'' (9380)

(மாது-பெண்/சீதாதேவி; சமம்-சமர்/அமர்/போர்; படுதல்-இறந்து ஒழிதல்; மற்றவர்-பகைவர்; முட்டி-முயன்று/தாக்கி; முடிக்குவது-முடிப்பது/அழிப்பது; கட்டம்-கஷ்டம்/வருத்தம்; செரு-போர்; விட்டம்-விட்டுவிடுவோம்)

''இப்பொழுது அந்தப்பெண்ணாகிய சீதாதேவியை விடுதலை செய்வோம் என்றாலும், முன்பு கொடிய போரை விரும்பிச்சென்று போரிட்டு அதில் இறந்துபட்ட வீரர்கள் ஒருவரையும் திரும்பி உயிருடன் பெறுதல் இயலாது; ஆனால் நமக்கு அதனால் பழிதான் வந்துசேரும். எனவே இப்பொழுது முற்றமுழுக்க முயன்று, அவர்களைத்தாக்கி, அவர்கள் குலத்தோடு அழிந்துபோகும் வண்ணம் போரிடுவதைத்தவிர

Koviloor Digital Library

வேறுஒரு செயலை நினைத்துப்பார்ப்பது என்பது மிகவும் கடினம். வருந்துதற்குரியதும் ஆகும். எனவே இப்பொழுது நாம் செய்யத்தக்க கடமை பகைவர்களுடன்போரிடுதல் ஒன்றுமட்டுமே'' என்று உறுதிபடப் பேசுகிறான் வன்னி.

'விட்டம்' என்பது நாம் வழக்கில் சொல்லுவதுபோல 'விட்டோம்' என்ற சாதாரணப்பொருளைத்தரும். முடிக்குவது என்பது பிறவினைச் சொல். வீரர்களைக்கொண்டு முடிப்பது என்ற பொருளைத்தரும். 'கட்டம்' என்பது கஷ்டம் என்ற வடசொல்லின் திரிபு. வருத்தத்திற்குரியது, கடினம் என்ற பொருள்களைத்தரும். 'அத்தொழில்' என்பது அவர்களிடம் சமாதானமாகப் போவதைக் குறிக்கும்.

52. என்று எழுந்தனர் இராக்கதர், இருக்க நீ; யாமே
சென்று மற்றவர் சில் உடல் குருதிநீர் தேக்கி,
வெள்று மீளுதும்; வெள்குதுமேல், மிடல் இல்லாப்
புன்தொழில் குலம் ஆதும்'' என்று உரைத்தனர் போனார். (9381)

(சில்-சிறிய; தேக்குதல்-குடித்தல்/பருகுதல்; வெள்குதல்-நாணுதல்/அஞ்சுதலுமாம்; மிடல்-வலிமை; புன்தொழில்-சிறுமை/அற்பம்; ஆதும்-ஆவோம்)

என்று வன்னிகூற, படைத்தலைவர்கள் அனைவரும் ஒருசேர எழுந்து, இராவணனை நோக்கி, ''நீங்கள் இங்கேயே இருங்கள்; நாங்களே சென்று பகைவர்களுடன் போரிட்டு வென்று அவர்களுடைய சிறிய உடலில் உள்ள இரத்தத்தைப் பருகி, வெற்றியுடன் மீண்டுவருகிறோம்; நாணத்தாலோ அச்சத்தாலோ பின்வாங்குவோமே ஆனால், வலிமையற்ற அற்பமான தொழில்செய்யும் குலத்தில் பிறந்தவர்கள் ஆவோம்'' என்று சூளுரைத்துச் செல்லலானார்கள்.

'சில்உடல்' என்பது சிறிய உடல் என்ற பொருளைத்தரும். அரக்கர்களுடைய உடலோடு ஒப்பிட்டால் மனிதர், வானரங்களின் உடல் சிறியதுதானே? அதைத்தான் இங்கே ''சிறுஉடல்'' என்றார் என்க. ''வென்று மீளுதும்'' என்றால் அது சூளுரை. ''வெள்குதுமேல்'' என்று மேலும் அவர்கள்கூறுவதால், மாலியவான்பகைவர்களது வீரப்பண்பைப் பற்றிச் சிறப்பித்துச் சொன்னது அவர்களைச் சற்று அச்சம்கொள்ளச் செய்திருக்குமோ? என்று கற்பவர்கள் எண்ணும்படி சொற்களைக் கையாண்டிருக்கிற கவிஞனின் கவித்திறம் நோக்குக. ''புன்தொழில் குலம்''என்பது அற்பமானமனிதர்குலம் எனவும் பொருள்தரும். இவ்வாறு பல்வேறு இடங்களிலிருந்து அரக்கவீரர்கள் வரவழைக்கப்பட்டனர் என்று வான்மீகம் பேசவில்லை. இந்தப் படைக்காட்சிப் படலமே கம்பனின் படைப்பு என்பதை நாம் முதலிலேயே கூறியிருப்பதையும் எண்ணுக.

படைக்காட்சிப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

30. மூலபல வதைப் படலம் [232 பாடல்கள்]

''மூலம்'' என்ற சொல்லுக்கு ஆதி, வேர், உற்பத்தி ஸ்தானம் என்று பலபொருள்கள் உண்டு. இராவணனுக்கும் அவன் குலத்தினருக்கும் மூலமுதற்படையாக விளங்கியது இப்படை. 'பலம்' என்ற சொல்லுக்குப் படை என்பது பொருள். எனவே ''மூலப்படை'' என்றும் ''மூலத்தானை'' என்றும் பாடல்களில் பயின்று வந்துள்ளமையைக் காணலாம். வான்மீகம் ''மூலபலயுத்தம்'' என்றே பெயர் கொண்டிருக்கிறது. இராவணனது வீரத்திற்கே மூலபலமாக அமைந்திருக்கும் படை எனவும், அதனை இராமபிரான் தனித்து நின்று வென்று கொன்றழித்த நிகழ்ச்சிகளை கூறும் பகுதி எனவும் பொருள் விரிவு கொள்ளும். இது 232 பாடல்களைக் கொண்ட பெரும்பகுதி. இது சில சுவடிகளில் ''மூலபெல வதைப்படலம்'' எனவும், ''மூலப்படை வதைப்படலம்'' எனவும் ''மூலபலவதப் படலம்'' எனவும் குறிக்கப்பெற்றிருக்கிறது.

ஒரு நாட்டிற்கு இன்றியமையாத படைகள் என ஆறுவகைப் படைகளைக் கூறுவர். அவை மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்பனவாம். இப் படைகளுள்மிகவும்சிறப்பும், வலிமையும் வாய்ந்தது மூலப்படையாகும். எனவே இப்படையினர்மேல் வேந்தன் தனிக்கவனம் செலுத்தி, அவற்றிற்கு ''வெல்பொரியும், நாடும், விழுப்பொருளும், தண்அடையும், கொல்களிறும், மாவும் கொடுத்து அளிப்பான்'' என்று மற்ற இலக்கியங்களும் பேசுகின்றன. இது மிகவும் தொன்மையானது என்பதால் இதனைத் திருவள்ளுவர் ''தொல்படை'' என்கிறார். ''உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண், தொலைவிடத்துத் தொல்படைக்கல்லால் அரிது'' என்ற குறள்-762ல் தொல்படை என்பது இம்மூலபலத்தையே குறிக்கும் என்கிறார் பரிமேலழகர். இவை எல்லாத் திசைகளிலும், ஏழு பெருந் தீவுகளிலும், கீழ்உள்ள உலகங்களிலும் இருந்து இலங்கைக்கு இப்போது இராவணன் கட்டளையால் தூதுவர்கள் மூலம் வரவழைக்கப் பட்டிருக்கின்றன.

வான்மீகத்திற்கும் கம்பனுக்கும் இப்படலத்தில் பெரும் மாற்றங்கள் காணப்படவில்லை. ஓரிரு இடங்களில் தென்படுகின்றன. அவை அவ்வவ்விடங்களில் குறிக்கப் பெற்றிருக்கின்றன.

Koviloor Digital Library

இப்படலத்துள், இராவணன் அப்படைத் தலைவர்களை இராம இலக்குவருடன் மட்டும் பொருதுமாறும், தான் வானரச்சேனையை எதிர்த்துப் போரிடுவதாகவும்கூறி அவற்றைப் போர்க்களம் செல்லப் பணித்தல்; மூலபலப் படையின் பெருமையும் சிறப்பும்; நால்வகைப் படையின் அணிவகுப்பு; இராவணன் தானும் தேரில் ஏறிச்செல்லுதல்; மூலபலப் படையைக் கண்ட வானரச்சேனை அச்சத்தால் நடுங்கி நிலை குலைதல்; வானரச்சேனை பின்வாங்குவதைக் கண்ட தேவர்கள் தாமும் அஞ்சி, சிவபெருமானிடம் முறையிடுதல்; சிவபெருமான் ''இராமபிரான் ஒருவனே இப்படையை வென்று அழிப்பான்'' என அவர்கள் அச்சத்தைப் போக்குதல்; சுக்கிரீவன், அனுமன், அங்கதன் ஆகியவர்கள் மட்டும் அஞ்சாது, பின்வாங்காது, போர்க்களத்திலேயே நிற்றல்; இராமபிரான் வீடணனிடம் ''இப்பெரும்படை எங்கிருந்து வந்தது?'' என வினவுதல்; வீடணன் மூலபலப் படையின் சிறப்பு இயல்புகளை எடுத்துரைத்தல்; பின்வாங்கிச் சென்ற வானரசேனையை மீண்டும் போர்க்களத்திற்கு அழைத்துவருமாறு இராமபிரான் அங்கதனுக்குக் கட்டளையிடுதல்; சாம்பவனும், படைத்தலைவர்களும் தாம் அஞ்சி ஓடியதற்குரிய காரணங்களை விவரித்தல்; அங்கதன், சாம்பவன் அவ்வாறு செய்தது தக்கதன்று என்று தேறுதல்கூறி அழைத்துவருதல்; மூலபலப் படைபற்றி இராமபிரான் இலக்குவனுக்குத் தெரிவித்தல்; இப்பொழுது அனுமன், சுக்கிரீவன், சாம்பவன் முதலியவரோடு வானரச்சேனையையும் பாதுகாத்து நிற்குமாறு இராமபிரான் இலக்குவனுக்குக் கட்டளையிடுதல்; அனுமன் தான் மட்டும் இராமபிரானுக்கு அருகே இருக்க அருளும்படி வேண்டுதல்; ''இலக்குவன் மற்றவரைக் காக்க, இலக்குவனைக் காக்க வேண்டுவது உன் கடமை'' என்று இராமபிரான்கூற, அனுமன் இலக்குவன் பின்னே செல்லுதல்; வீடணனும் இலக்குவனுடன் செல்லுதல்; இராமபிரான் தனித்துப் போர்க்களம் சென்று மூலபலச் சேனையுடன் பொருதல்; தாம் இவ்வளவு ஆயிரம் வெள்ளம் படையுடன் பொருதும்போது, இராமபிரான் மட்டும் தனித்து நின்று பொருதலைக் கண்டு அரக்கர்படை வியத்தல்; இராமபிரான் இப்பொழுது வில் நாண்ஒலி எழுப்புதல்; அரக்கர்சேனையில் தீய நிமித்தங்கள் தென்படுதல்; இராமபிரான் அம்புதொடுக்கப் பெரும்பாலான அரக்கர்சேனை மடிந்து போதல்; பின்னும் அரக்கர்கள் கடுமையான போரை மேற்கொள்ளுதல்; இராமபிரானும், அரக்கர்படைகளை அழித்துக்கொண்டே வருதல்; போர்க்களத்தில் கவந்தங்கள் எழுந்து ஆடத்தொடங்குதல்; இராமபிரான் மேனியில் பகைவரது இரத்தக்கறை படிதல்; அப்பொழுது அரக்கர்கள் அவனைச் சூழ்ந்துகொள்ளுதல்; அவர்களையும் தன் இராமபாணத்தால் தாக்கி சாரிகைதிரிந்து அழித்தல்; போர்க்களம் மயானம்போல் தோற்றம் அளித்தல்;

இதுகண்ட வன்னி வெகுண்டெழுந்து படையினரை மேலும் ஊக்குவித்தல்; கடும் போரினால் பெருகிய குருதிவெள்ளம் இலங்கை

Koviloor Digital Library

நகருக்குள்ளும் புக, அரக்கியர் அலறி ஓடுதல்; மீண்டும் தேவர்கள் அச்சம் கொண்டு சிவபெருமானிடம் முறையிடுதல்; சிவபெருமான் அவர்களது அச்சத்தைப் போக்கி, இறுதியில் இராமபிரானே வெற்றி பெறுவான் என்று உறுதிபடக் கூறுதல்; அருகில் இருந்த பிரமதேவனும் அவ்வாறே உறுதி கூறுதல்; மிகுதியான அரக்கர் அழிவுகண்ட தேவர்கள் மலர்மாரி பொழிதல்; இப்பொழுது இராமபிரான், எஞ்சி நிற்கும் அரக்கர்கள் தப்பித்துப் போகா வண்ணம் சரமதில் அமைத்தல்; அரக்கர்கள் இராமபிரானின் தெய்வீகத் தன்மையை உணர்ந்து கொள்ளுதல்; வன்னி, இனிமேல் அரக்கர்படை இராமபாணத்தால் தாக்கப்பட்டு உயிர் துறத்தலே தக்கதாகும் என எல்லோர்க்கும் கூறுதல்; இராமபிரான் கந்தருப்பம் என்னும் தெய்வப் படையை அரக்கர்மேல் செலுத்துதல்; மூலபலச்சேனை முற்றிலும் அழிந்துபோதல்; பின்னும் மற்றும் பல தீவுகளிலிருந்தும் திசைகளிலிருந்தும் பாதாளஉலகத்தினின்றும் அவற்றைக் காவல் புரிந்துவரும் வீரர்கள் ஒன்றுசேர்ந்து போர்க்களம் வந்து, இராமபிரானுடன் போர் புரிதல்; இராமபிரான் ஒருவனே பல்லாயிரக்கணக்கான இராமர்களாக அரக்கர்களுக்குத் தோன்றுதல். எனவே அரக்கர்கள் செலுத்திய படைக்கலன்களெல்லாம் அவர்களின்மீதே தாக்க, அவர்கள் தமக்குள் அடித்துக் கொண்டு மாண்டுபோதல்; தேவர்கள் மகிழ்ந்து இராமபிரானை வாழ்த்துதல்; இலக்குவன் முதலியோர் இருக்கும் இடத்திற்கு இராமபிரான் செல்லுதல்; முன்பு அச்சம்கொண்டு பின்வாங்கிச் சென்ற வானரச்சேனை இப்பொழுது திரும்பிவந்து இராமபிரானை அடைதல்; ஆகிய செய்திகள் மிகமிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. படைத்தலைவர்களுக்கு இராவணன் இட்ட கட்டளை

"வானரப் பெருஞ்சேனையை யான் ஒருவழி சென்று,
ஊன் அறக் குறைத்து, உயிர்உண்பன்; நீயிர்போய், ஒருங்கே,
ஆன மற்றவர் இருவரைக் கோறிர்" என்று அறைந்தான்,
தானவப் பெருங்கிரிகளை வாள்கொண்டு தடிந்தான். (9382)

(தானவர்-அசுரர்கள்; கிரி-மலை; தடிதல்-வெட்டிவீழ்த்துதல்; வழி-பக்கம்; ஊன்-உடல்; அற-துண்டாகும்படி; குறைத்தல்-சிதைத்தல்; ஒருங்கே-ஒருசேர/ஒருமித்து; கோறிர்-கொல்வீராக; நீயிர்-நீங்கள்; ஆன-அமைந்த; அறைதல்-கட்டளையிடுதல்)

தானவர் எனப்படும் அசுரர்களாகிய பெரிய மலைகளைத் தன் வாட்படை கொண்டு வெட்டி வீழ்த்தியவனான இராவணன், படைத் தலைவர்களை நோக்கி, "நான் ஒருபக்கமாகச் சென்று, பெரிய வானரச் சேனையை அவற்றின் உடல்கள் துண்டாகும்படி சிதைத்து அவர்கள் உயிரைக் குடித்துவிடுகிறேன்; நீங்களெல்லாம் ஒன்றுகூடிச் சென்று,

Koviloor Digital Library

நமக்குப் பகைவர்களான ஏனைய இருவர்களான இராமஇலக்குவரைக் கொன்று வாருங்கள்'' என்று கட்டளையிட்டு அனுப்பினான்.

முன்பு திக்குயானைகளை வென்றவன், இன்று அற்பமான குரங்குப் படைகளைக் கொல்லப்போகிறேன் என்று கூறுவதை நோக்குக. இராம இலக்குவரைத் தானே எதிர்த்துப் போரிட்டுக் கொல்ல முற்படாது, ஆயிரம் வெள்ளம் சேனையை அந்த இருவரைக் கொன்றுவருமாறு அனுப்பினான் என்பதே இராவணனது தற்போதைய நிலைமையைத் தெள்ளெனத் தெரிவிப்பதை நுனித்து உணர்க. இராவணன் அசுரர்களை வென்றது உத்தரகாண்டத்தில் பேசப்பட்டிருக்கிறது. ''தானவப் பெருங்கரிகள்'' என்பது உருவகம். அசுரர்களை வலிமைமிகுந்த யானைகளாக உருவகித்தார் என்பதாம்.

2. என உரைத்தலும் எழுந்து, தம் இரதமேல் ஏறி,
கனை திரைக்கடல் சேனையைக் கலந்தது காணா,
"வினையம் மற்று இலை; மூலமாத் தானையை விரைவொடு
இனையர் முன்செல, ஏவுக!" என்று இராவணன் இசைத்தான். (9383)

(இரதம்-தேர்/ஊர்தி/வாகனம்; கனைத்தல்-ஒலித்தல்; கலத்தல்-அடைதல்; காணா-கண்டு; வினையம்-வினை/செயல்; மா-பெரிய; இனையர்-இத்தன்மையர்; செல-செல்ல/செல்லுமாறு; இசைத்தல்-கட்டளையிடுதல்)

என்று இராவணன் கூறியவுடன், அரக்கர்படைத் தலைவர்களெல்லாம் எழுந்து, தத்தமக்குரிய தேர்கள் முதலிய ஊர்திகளில் ஏறிக்கொண்டு, ஒலிக்கின்ற அலைகளையுடைய கடல்போன்ற தம் சேனையை அடைந்ததைப் பார்த்தபின்னர், ''இனி வேறொரு செயல் இல்லை; நமது மூலபலச் சேனையை மிக விரைவாக, நம்மை எதிர்த்து நிற்கின்ற பகைவர்களாகிய இராமஇலக்குவர் முன்னே செல்லுமாறு செலுத்துக!'' என்று இராவணன் மீண்டும் ஒரு கட்டளை பிறப்பித்தான்.

இங்கே 'இரதம்' என்பது 'தேர்' என்ற பொருளை மட்டும் தாராது. தத்தமக்குரிய ஊர்திகள் என்ற விரிந்த பொருளைத்தரும். 'கடல்சேனை' என்பது உருவகம். 'கனைகடல் தண் சேர்ப்ப, கற்றறிந்தார் கேண்மை, நுனியிற் கரும்பு தின்றற்றே'' என்பது நாலடியார்-38.

3. ஏவி, அப்பெரும் தானையை, தானும் வேட்டு எழுந்தான்,
தேவர் மெய்ப்புகழ் தேய்த்தவன், சில்லிஅம் தேர்மேல்,
காவல் மூவகை உலகமும், முனிவரும் கலங்க,
பூவை வண்ணத்தன் சேனைமேல் ஒருபுறம் போனான். (9384)

(தேய்த்தல்-அழித்துப்போக்குதல்; ஏவுதல்-கட்டளையிடுதல்; வேட்டு-விரும்பி; வேட்கை-விருப்பம்; சில்லி-சக்கரம்/தேர்உருளை;

Koviloor Digital Library

அம்-அழகிய; பூவை-காயாம்பூ; வண்ணம்-வர்ணம்/நிறம்; காவல்-ஆட்சி/பாதுகாப்பு)

தேவர்களின் உண்மையான புகழையெல்லாம் அழித்தொழித்தவனான இராவணன் மூலபலப்படையை இராமஇலக்குவர்மீது போர்தொடுக்கச் செல்லும்படி கட்டளையிட்டு விட்டு, தானும் போர்செய்ய விரும்பியவனாய், சக்கரங்களையுடைய தன் அழகிய தேரின்மேல், தன் ஆட்சிக்கு உட்பட்ட பாதுகாவல் மிகுந்த மூவகை உலகத்தில் உள்ளவர்களும், முனிவர்களும் மனம்கலங்கும் வண்ணம், காயாம்பூ நிறத்தவனான இராமபிரானின் வானரச்சேனை நின்றிருந்த பக்கம் புறப்பட்டுச் சென்றான்.

மூலபலச்சேனை சென்றதற்கு எதிர்ப்புறம் இராவணன் சென்றான் என்பதாம். வானரச்சேனை எல்லாத் திக்குகளிலும் பரவி நின்றிருந்ததால் இவன் முதலில் ஒருபக்கம் போகவேண்டி நேர்ந்தது.

4. மூலபலப் படையின் சிறப்பு

''எழுக சேனை'' என்று யானைமேல் மணிமுரசு எற்றி,
வழுஇல் வள்ளுவர் துறைதொறும் விளித்தலும், வல்லைக்
குழுவி ஈண்டியது என்பரால், குவலயம் முழுதும்
தழுவி, விண்ணையும் திசையையும் தடவும் மாத் தானை. (9385)

(வழு-குற்றம்; வள்ளுவர்-முரசறைவோர்/பறையறைவோர்; மணி-அழகிய; எற்றுதல்-தாக்குதல்/அடித்தல்; துறை-இடம்; விளித்தல்-அழைத்தல்; குவலயம்-மண்ணுலகம்/பூமி; தழுவுதல்-வளைத்தல்; வல்லை-விரைந்து; தடவுதல்-கிட்டுதல்/நெருங்குதல்; மா-பெரிய; குழுவி-திரளாக; ஈண்டுதல்-கூடுதல்/சேர்தல்)

தனது தொழிலில் ஒரு குற்றமுமில்லாத வள்ளுவர் என்றழைக்கப்படும் பறையறிவிப்போர், ''சேனைகள் எல்லாம் போருக்கு எழட்டும்'' என்று யானைமேல் தமது முரசங்களை வைத்து, அதனை அடித்து, போர்நடக்கும் இடங்களில் எல்லோரையும் கூவியழைத்த அளவில், இம்மண்ணுலகம், விண்ணுலகம், எல்லாத் திசைகள் எல்லாவற்றையும் தழுவும் வண்ணம் சுற்றி, அந்தப் பெரிய மூலபலச்சேனை விரைந்துவந்து குழுக்களாக, திரளாக அணிஅணியாக நெருங்கிக் கூடியது'' என்று கூறுவார்கள்.

'முரசு' இங்கே போர்முரசைக் குறித்தது. ''அரசு கொற்றத்து, அருங்கடம் பூண்ட, முரசெறி வள்ளுவ முதியனை'' என்பதும், ''திருநாள், படைநாள், கடிநாள் என்று இப்பெருநாட்கு அல்லது பிறநாட்கு அறையாச் செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்'' என்பதும் பெருங்கதை.

Koviloor Digital Library

5. அடங்கும் வேலைகள், அண்டத்தின் அகத்து; அகல்மலையும்
அடங்கும் மன்உயிர் அனைத்தும்; அவ் வரைப்பிடை, அவைபோல்,
அடங்குமே, மற்று அப்பெரும்படை, அரக்கர் தம் யாக்கை,
அடங்கும் மாயவன் குறள் உருத் தன்மையின் அல்லால்? (9386)

(அகம்-உள்ளிடம்; வேலை-கடல்கள்; மன்-நிலைபெற்ற; வரைப்பு-எல்லை; மாயவன்-மாயோன்/திருமால்; உரு-வடிவம்)

பேர் அண்டத்துள், உலகிலுள்ள எல்லாக் கடல்களும் அடங்கும். அகன்று விரிந்த மலையும், நிலைபெற்ற உயிரினங்கள் யாவும் அப்பேரண்டத்துள்ளேயே அடங்கும். ஆனால் இந்தப் பெரிய உடம்பை உடைய அரக்கர்கள் நிறைந்தபடை, அந்த எல்லைக்குள், அந்தக்கடல், மலை, மன்உயிர்போலஅடங்கிவிடுமோ?அடங்காது. காரணம், திருமால் வாமன அவதாரத்தில் குறுகிய வடிவில் ஈரடியால் உலகம் முழுவதையும் அளந்ததுபோல் இப்பெரும்படை எல்லா உலகங்களிலும் பரவி நின்றது. அவை ஒரு எல்லைக்குள் அடங்காது.

எளிதில் பொருள் புரிந்துகொள்ள முடியாத விசித்திரப்பாடல். இடைச் செருகலாகக்கூட இருக்கலாம். கடல், மலை, உயிரினங்கள் எல்லாமும் அடங்குமாறு ஓங்கி உலகளந்த உத்தமனின் வாமன வடிவாகிய குறுகிய வடிவினுள் எல்லாமும் அடங்கிவிடும் தன்மை கொண்டதுபோல் அல்லாமல், அந்தப்பெரிய அரக்கர்களின் உருவம்கொண்ட படை, இவ்வுலகிற்குள் அடங்கிவிடுமோ? அடங்காது என்பது கருத்து. பேர்அண்டத்தில் உள்ள கடல், மலை, உயிர்கள் யாவும் வாமனவடிவு கொண்ட திருமாலின் ஈரடிக்குள் அடங்கியிருந்ததுபோல, மிகவும் பரந்த பெரும்சேனை இலங்கை நகருக்குள் அடங்கிவிடுமோ? அடங்காது என்பது இன்னும் தெளிவான திரண்ட கருத்து.

6. அறத்தைத் தின்று, அருங்கருணையைப் பருகி, வேறு அமைந்த
மறத்தைப் பூண்டு, வெம்பாவத்தை மணம் புணர் மணாளர்,
நிறத்துக் கார் அன்ன நெஞ்சினர்; நெருப்புக்கு நெருப்பாய்
புறத்தும் பொங்கிய பங்கியர், காலனும் புகழ்வார். (9387)

(வேறு-மாறாக; பூண்டு-மேற்கொண்டு; கார்-மேகம்; பொங்குதல்-வெளிப்படுதல்; பங்கி-ஆண்களின் தலைமுடி; காலன்-கூற்றுவன்/இயமன்; புகழ்வார்-புகழத்தக்கவர்கள்; மறம்-கொடுமை)

இந்த மூலபலப்படை வீரர்கள், தருமத்தையே தமது உணவாக உண்பவர்கள். அருமைமிகுந்த கருணையைச் சோற்றுக்கு நீராகப் பருகுபவர்கள்; அறத்திற்கு மாறான அதர்மத்தையே தமக்கு அணிகலனாகப் பூண்டுகொண்டு, கொடிய பாவத்தையே தனது துணையாகக் கொண்டு வாழவிரும்பும் மனத்தையுடையவர்கள்; மனம் முழுவதும் கரியமேகம்

Koviloor Digital Library

போன்ற கருநிறம்கொண்ட வஞ்சனை நிறைந்தவர்கள்; நெருப்பையே கொதிக்கச்செய்யும் நெருப்பால், தன் உள்ளத்தே உள்ள சினத்தீயை வெளிப்படுத்திக் காட்டுவதுபோலத் தங்கள் தலைமுடியும்கூட சிவந்த செம்பட்டை நிறம் கொண்டவர்கள். கொல்லும் திறமையில் வல்ல கூற்றுவனே இவர்களது திறமையைக் கண்டு புகழ்ந்து பாராட்டும் தன்மை உடையவர்கள்.

அருவப் பொருள்களாகிய அறத்தையும், கருணையையும், அதர்மத்தையும், தின்றதுபோலவும், பருகியதுபோலவும், அணிந்து கொண்டதுபோலவும், பாவத்தையே துணையாக ஏற்றுக்கொண்டது போலவும் கூறிய நயம் நோக்குக. உடலைப்போலவே உள்ளமும் கறுப்பு. ஆனால் உள்ளத்தில் பொங்கியெழுகின்ற சினத்தீ சிவப்பு வண்ணமாய்த் தலைமுடியில் செம்பட்டை நிறத்தை வெளிக்காட்டியது என்று கூறுவதும் நோக்கத்தக்கது. கூற்றுவன் வாழ்வின் முடிவு நேரம் வந்தால்தான் உயிர்களைப் பிரிப்பான். ஆனால் இவர்கள் காலம் பார்க்காது உயிர்கவர்வர். எனவே காலனும் புகழத்தக்கவர் என்றார் என்க.

''கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள'' என்பது தொல்காப்பியம். அரக்கர்படை வீரர்களை மணமக்களாக உருவகம் செய்து அவர்களுக்கு உண்ணும் உணவு அறம், குடிக்கும் நீர் கருணை, தின்னும் வெற்றிலை அதர்மம் என்று ஆழ்வார்கள் கூறியதுபோன்று கூறியநயம் நோக்குக.

7. நீண்ட தாள்களால் வேலையைப் புறம்செல நீக்கி,
வேண்டும் மீனொடு, மகரங்கள் வாயிட்டு விழுங்கி,
தூண்டு வான் உரும்ஏற்றினைச் செவிதொறும் தூக்கி,
மூண்ட வான்மழை உரித்து உடுத்து, உலாவரும் மூர்க்கர். (9388)

(நீக்குதல்-எற்றுதல்; வேண்டும்-விரும்பும்; மகரம்-பெரிய மீன்கள்/ சுறாமீன்/முதலை; தூண்டுதல்-தோற்றுவிக்கப்பெறுதல்; வான்-மேகம்; உரும்ஏறு-பேரிடி; தூக்குதல்-தொங்கவிடுதல்; மழை-மேகம்; மூர்க்கர்-கொடுமைக்குணமுள்ளவர்கள்; மூள்தல்-பொங்கிவருதல்/திரண்டு எழுதல்)

இவ்வரக்கர்கள் தம்முடைய பெரிய நீண்ட கால்களால் கடல்நீரையே உதைத்துத் தள்ளி அப்பால் போக்கும் ஆற்றலுடையவர்கள்; தமக்கு வேண்டுமளவினவும், தாம் விரும்பியவையுமான மீன்களோடு, முதலை போன்ற பெரிய மீன்களையும் வாயிலிட்டு, விழுங்கும் பெரிய வாயை உடையவர்கள்; மேகத்தால் தோற்றுவிக்கப்படுகின்ற சிறந்த பேரிடியையே தங்களது காதுகளில் குண்டலங்களாகத் தொங்கவிட்டுக் கொண்டிருப்பவர்கள்; திரண்டு வருகின்ற மேகத்தையே உரித்துத் தமக்கு ஆடையாக உடுத்திக்கொள்ளும் இயல்புடையவர்கள். பிடிவாதகுணம் கொண்டு இவ்வுலகில் வலம்வருகின்ற கொடியவர்கள் ஆவார்கள்.

Koviloor Digital Library

உருவம்கறுப்பு; உள்ளம்கறுப்பு; இங்கேஉடையும்கறுப்பு என்று கூறிய நயம் நோக்குக. ''பிறங்கு இரு முந்நீர் வெறுமணலாகப் புறங்காலில் போக இறைப்பேன்'' என்பது கலித்தொகை.

8. மால்வரைக் குலம் பரல்என, மழைக்குலம் சிலம்பா,
காலவரைப் பெரும்பாம்பு கொண்டு, அசைத்த பைங்கழலார்;
மேல் வரைப்பு அடர் கலுழன் வன்காற்று எனும் விசையோர்;
நால்வரைக் கொணர்ந்து உடன் பிணித்தால் அன்ன நடையார். (9389)

(வரை-மலை; குலம்-கூட்டம்/தொகுதி; மழை-மேகம்; அசைதல்-கட்டுதல்; மேல்வரைப்பு-மேல்எல்லை/ஆகாயம்; கலுழன்-கருடன்; விசை-வேகம்; நாலுதல்-தொங்குதல்; அன்ன-போல; பரல்-சிறுகற்கள்/ பருக்கைக்கற்கள்)

பெரிய மலைக்கூட்டத்தினையே பரல் கற்களாகக் கொண்டும், மேகக் கூட்டங்களையே சிலம்பாகக் கொண்டும், மலையடிவாரங்களிலுள்ள பெரிய மலைப்பாம்புகளையே பசிய பைம்பொன்னால் செய்த வீரக் கழலாகவும், கட்டிக்கொண்டுள்ளவர்கள்; ஆகாயத்தில் பறந்து செல்லும் கருடனின் வேகமும், வலிய காற்று எனும் வேகமும் ஒருங்கிணைந்த வேகத்தை உடையவர்கள்; தொங்குகின்ற துதிக்கையினையுடைய மலை போலும் யானையைக் கொண்டு வந்து அதனுடன் சேர்ந்து நடப்பது போன்ற பெருமிதமான கம்பீரமான நடையை உடையவர்கள்.

இவ்வரக்கர்களது வீரக்கழலும், வேகமும், நடையும் பேசப் படுகின்றன. 'பரல்' என்பது சிலம்பின் உள்ளேபோடப் பட்டிருக்கும் பரற்கற்களைக் குறிக்கும். இவர்களுக்கு அந்தச்சிறு பருக்கைக் கற்களாக மலைக்கூட்டங்கள் அமைந்தன; அவர்கள் காலில் கட்டப்பட்டிருக்கும் சிலம்பாக மேகக்கூட்டங்கள் அமைந்தன; அவர்கள் வீரக்கழல், மலைப் பாம்புகளால் கட்டப்பட்டன; அவர்களது வேகத்திற்குக் கருடனின் வேகமும், வலிய காற்றின் வேகமும் உவமையாகக் கூறப்பட்டன. ''நால்வாய்'' என்ற சொல்லே யானை என்ற பொருளைத்தரும். ''நால்வரை'' என்ற சொல் மலைபோலும் தொங்குகின்ற துதிக்கையை யுடைய ஆண்யானை என்ற விரிந்த பொருளைத்தரும். புல்லை எப்பொழுதும் வாயில் கொண்டிருக்கும் மானைப் ''புல்வாய்'' என்று கூறியதுபோல் இங்கே ''நால்வாய்'' என்று கூறியிருக்கவேண்டும். தொங்குகின்ற வாய் என்ற பொருளைத் தந்திருக்கும். இங்கே ''நால்வரை'' என்றது இருமடி ஆகுபெயராய் தொங்குகின்ற மலைபோலும் வாயை யுடைய யானை என்ற பொருளைத் தந்தது. குலமலைகளைப் பருக்கைக் கற்களாக உள்ளிட்டு அம்மலைகளில் தங்கிய மேகங்களைச் சிலம்பாக அணிந்து, மலையடிவாரத்தில் தங்குகின்ற பாம்புகளை வீரக்கழல்களாகக் கட்டிக்கொண்ட கால்களை உடையவர்கள் என்று அவர்கள் காலின் வலிமை பேசப்படுகிறது. ''கால்வரை'' என்பது மலையடிவாரத்தைக்

Koviloor Digital Library

குறிக்கும். பாதசயிலம் என்பது வடமொழி. ''ஒருகை, இருமருப்பு, மும்மதத்து, நால்வாய்'' என்பது ஔவையார் பாடல். ''ஒரு கோட்டன், இருசெவியன், மும்மதத்து நால்வாய்'' என்பது சிவஞானசித்தி.

9. உண்ணும் தன்மைய ஊன்முறை தப்பிடின், உடனே
மண்ணில் நின்ற மால்யானையை வாய்இடும் பசியார்;
தண்ணின் நீர்முறை தப்பிடின், தடக்கையால் தடவி,
விண்ணின் மேகத்தை வாரி, வாய்ப் பிழிந்திடும் விடாயர். (9390)

(முறை-காலமுறை; தண்-குளிர்ந்த; விடாய்-நீர்வேட்கை; ஊன்-உணவு)

தாங்கள் உண்ணுவதற்கு ஏற்றனவான புலால் முதலிய உணவு வகைகள் உரிய நேரத்தில் கிடைக்கவில்லையென்றால், அல்லது பெறுவது தடைப் படுமானால், பூமியைத் திக்குகளில் காத்துக்கொண்டு நிற்கும் திசை யானைகளையே தங்கள் வாயில் இட்டுக்கொண்டுவிடும் பெரும் பசிக்காரர்கள். குளிர்ச்சி பொருந்திய இனிய நீர் உரிய காலத்தில் தேவை யான அளவில் கிடைக்கவில்லையென்றாலோ, கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலோ, தங்களது பெரிய நீண்ட கைகளைக் கொண்டு தடவி ஆகாயத்தில் படர்ந்திருக்கின்ற மேகத்தையே அள்ளித் தங்கள் வாயில் பிழிந்துவிட்டுக் கொண்டுவிடும் பெரும் நீர் வேட்கையுடையவர்கள்.

பசி, தாகம் பொறுக்கமாட்டாதவர்கள், முன்பு இராமஇலக்குவரைத் தாடகையை அழிப்பதற்காக அழைத்துச் சென்ற, விசுவாமித்திரர், இந்தப் பசியும், தாகமும், சோர்வும் அவ்விளைஞர்களுக்கு வராமல் இருக்க வேண்டுமென்பதற்காகத் தான், பலை, அதிபலை என்ற மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்தார் என்று நாம் பாலகாண்டத்தில் பயின்றது இங்கு நினைவிற்கு வரவேண்டும். ''தண்ணின் நீர்'' என்பதை தண்+இன்+நீர் எனப்பிரித்தால் குளிர்ச்சி பொருந்தியதும் இனியதுமான நீர் என்ற அருமையான பொருள் கிடைக்கும்.

10. உறைந்த மந்தரம் முதலிய கிரிகளை உருவ
எறிந்து, வேல் நிலை காண்பவர்; இந்துவால் யாக்கை
சொறிந்து, தீர்வுஉறு தினவினர்; மலைகளைச் சுற்றி
அறைந்து, கற்ற மாத் தண்டினர்; அசனியின் ஆர்ப்பர். (9391)

(உறைதல்-நிலைபெற்றிருத்தல்/தங்கியிருத்தல்; உருவுதல்-பிளத்தல் /துளைத்தல்; நிலை-கூர்மைத்தன்மை; காண்பது-சோதித்துப் பார்ப்பது; இந்து-சந்திரன்; தண்டு-தண்டாயுதம்/கதை; மா-பெரிய; அசனி-இடி)

மண்ணில் நிலைபெற்றுள்ள மந்தரமலை முதலிய மலைகளின்மீது ஊடுருவிச் செல்லுமாறு தங்கள் வேற்படையை வீசி, அதன் கூர்மையான தன்மையைப் பரிசோதித்துத் தெரிந்து கொள்ளுபவர்கள்; இவ்வரக்கர்கள்,

Koviloor Digital Library

தங்களுக்கு உடம்பு தினவு எடுத்தபோது, விண்ணிலுள்ள சந்திரனையே கையாற் பற்றித் தம் உடம்பைச் சொறிந்து தினவு தீர்த்துக்கொள்ளுபவர்கள்; தங்கள் ஆயுதப் பயிற்சிக்காகப் பெரிய தண்டாயுதத்தை அங்கிருக்கும் மலைகளின்மேல் சுற்றி எறிந்து கற்றுக்கொள்ளும் இயல்பு படைத்தவர்கள்; பேரிடிபோல ஆரவாரம் செய்யும் இயல்பினர்.

இவ்வரக்கர்கள் வீரச்சிறப்பும், ஆய்தப்பயிற்சியும் பேசப்படுகிறது.

11. சூலம் வாங்கிடின், சுடர்மழு எறிந்திடின், சுடர்வாள்
கோல வெஞ்சிலை பிடித்திடின், கொற்றவேல் கொள்ளின்,
சால வன் தண்டு தரித்திடின், சக்கரம் தாங்கின்,
காலன், மால், சிவன், குமரன், என்று இவரையும் கடப்பார். (9392)

(சுடர்-ஒளி; கொற்றம்-வெற்றி; சால-மிக்க; தண்டு-தண்டாயுதம்; காலன்-கூற்றுவன்; குமரன்-முருகன்; கடத்தல்-வெற்றிகொள்ளுதல்; கோல-அழகிய)

இவர்கள் சூலப்படையைக் கையில் எடுத்தார்கள் என்றால் இயமனையும் வெற்றிகொள்வார்கள்; ஒளிபடைத்த மழுப்படையை எடுத்து வீசினால் சிவபெருமானையும்கூட வென்றுவிடுவார்கள்; ஒளிமிக்க வாட்படையையும், அழகிய கொடிய வில்லையும் வெற்றிபொருந்திய வேற்படையையும் கைக்கொண்டால் முருகப்பெருமானையும், மிக்க வலிய தண்டாயுதத்தையும் சக்கரப்படையையும் எடுத்தால் திருமாலையும் வெல்லும் ஆற்றல் பெற்றவர்களாவார்கள்.

சூலம் இயமனுக்கும், மழு சிவபெருமானுக்கும், தண்டு முருகப் பெருமானுக்கும் வில், வாள், வேல், சக்கரம் முதலியன திருமாலுக்கும் உரிய படைக்கலன்கள். இவற்றில் திருமாலுக்குரிய ஐந்து படைக் கலன்களில் சங்கு வரத ஹஸ்தத்தில் உள்ளதால் அது நன்மையே பயக்கும் என்பதால் இங்கு குறிக்கப்படவில்லை எனக்கொள்க. நிரல்நிரையாகப் பொருள் கொள்ள வேண்டிய பாடல்.

12. ஒருவரே வல்லர், ஓர் உலகத்தினை வெல்ல;
இருவர் வேண்டுவர், ஏழ் உலகத்தையும் இறுக்க;
திரிவரேல், உடன் திரிதரும், நெடுநிலம்; செவ்வே
வருவரேல், உடன், கடல்களும் தொடர்ந்து பின்வருமால். (9393)

(வல்லர்-வன்மைபடைத்தவர்; இறுத்தல்-அழித்து ஒழித்தல்; செவ்வே-நேரே; திரிதல்-உலவுதல்)

இவ்வரக்கர்களில் ஒருவரால் மட்டும் இவ்வுலகத்தை வென்றுவிட முடியும். ஒவ்வொருவரும் அத்தகைய வல்லமை பெற்றவர்கள், ஏழு உலகங்களையும் அழித்து ஒழிக்க வேண்டுமென்றால் இவர்களில்

Koviloor Digital Library

இருவரே போதுமானவர்; இவர்கள் பூமியில் ஓரிடத்தில் நிற்காமல் நடந்து உலாவினால், நீண்ட நிலம்கூட இவர்களுடன் சென்று திரியும்; நேரே திரும்பி வருவார்களானால் அவர்களது வேகத்தால் ஈர்க்கப்பட்டு அவர்களுடன் ஏழு கடல்களும் ஒன்றாக அவர்கள்பின் தொடர்ந்து வரும். நிலத்தையும், கடலையும், உலகையும் தன் பேராற்றலால் வெற்றி கொள்வார்கள்.

13. நால்வகைச் சேனைகளின் மிகுதியும் சிறப்பும்

மேகம் எத்தனை, அத்தனை மால்கரி; விரிந்த
நாகம் எத்தனை, அத்தனைதேர்; நனிநாளாப்
போகம் எத்தனை, அத்தனை புரவியின் ஈட்டம்;
ஆகம் உற்றன எத்தனை, அத்தனை அனிகம். (9394)

(மால்-பெரிய; நாகம்-மலை; நனி-மிகுந்த/நீண்ட; போகம்-விளைச்சல்; ஆகம்-உடம்பு; அனிகம்-சேனை/காலாட்படை)

பிரமதேவனால் படைக்கப்பட்ட இவ்வண்டகோளத்தில் எவ்வளவு மேகங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு பெரிய அளவு யானைகள் இம்மூலபலப் படையில் உள்ளன; விரிந்து பரந்த மலைகள் எவ்வளவு இருக்கின்றனவோ, அவ்வளவு தேர்கள் இருக்கின்றன. மிகுந்த நீண்ட நாட்களாக விளைந்து முற்றிய நெற்கதிர்களின் விளைச்சல் எவ்வளவோ, அவ்வளவு குதிரைகளின்கூட்டம்; இறைவனால் படைக்கப்பட்ட உலகில் எவ்வளவு உயிரினங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு காலாட்படை வீரர்கள் இம்மூலபலப் படையில் இருக்கின்றனர்.

'நாகம்' என்ற சொல்லுக்குப் பலபொருள்கள் உண்டு. இங்கே அது மலையைக் குறிக்கும். 'போகம்' என்ற சொல் விளைச்சலைக் குறிக்கும். அது ஆகுபெயராய் வளைந்து நிற்கும் முற்றிய நெற்கதிர்களைக் குறிக்கும். மூலபலச்சேனையுள் உள்ள நால்வகைப் படையின் மிகுதியைக் குறிக்கிறது இப்பாடல். எல்லாமே அளவிறந்தன-எண்ணிக்கையில் அடங்காதன என்பது கருத்து. கரிய மேகங்களுக்குக் கரிய யானைகளும், அகன்று பரந்து நிற்கின்ற மலைகளுக்குத் தேர்களும், விளைந்து முற்றிய நெற்கதிர்களுக்குக் குதிரைகளும் உவமைகள். ''மருங்குவிளை கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகம்காட்ட'' என்பது பெரியபுராணம். வளைந்து நிற்கின்ற முற்றிய நெற்கதிர்கள் குதிரைகளின் முகம்போன்று தோன்றும் என்பது இவ்வடியின் பொருள்.

14. இன்ன தன்மைய யானை, தேர், இவுளி என்று இவற்றின்
பன்னு பல்லணம், பருமம், மற்று உறுப்பொடு பலவும்,
பொன்னும் நல்நெடு மணியும் கொண்டு அல்லது புணைந்த
சின்னம் உள்ளன இல்லன, மெய்ம் முற்றும் தெரிந்தால். (9395)

Koviloor Digital Library

(தன்மை-இயல்பு; இவுளி-குதிரை; மெய்-உடல்; தெரிதல்-உற்று நோக்குதல்; பன்னுதல்-சிறப்பித்து உரைத்தல்/புகழ்தல்; பல்லணம்-குதிரைக்கலன்/மேல்தவிசு; பருமம்-யானை முதுகில் இடும் தவிசு/மெத்தை; உறுப்பு-அங்கங்கள்; நெடுமை-பெருமை; மணி-இரத்தினம்; புனைதல்-அலங்கரித்தல்; சின்னம்-சிறுமை)

இத்தகைய இயல்புடையனவான, யானை, தேர், குதிரைப்படைகள் என்ற இவற்றின் உடல்களை முழுவதும் உற்றுநோக்கினால் எல்லோராலும் புகழ்ந்து உரைக்கப்படுகின்ற குதிரையின்மேல் தவிசு-கலணை, யானையில் முதுகின்மேல் இடும் மெத்தை இருக்கை அல்லது தவிசு, மற்றும் பல அங்கங்களில் அமைந்தன எல்லாம் பொன்னும், நல்ல பெரிய இரத்தினங்களும் கொண்டுதான் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றனவே யன்றி, சாதாரண சிறுமையுடைய அணிகலன்கள் ஏதும் அணியப்பட்டு அலங்கரிக்கப்பட்டன அல்ல.

நால்வகைச் சேனைகளும் நன்கு அலங்கரிக்கப் பட்டிருக்கின்றன. அவை எல்லோராலும் சிறப்பாகப் பேசப்படுகின்றனஎன்பதாம். ''சிறியன சிந்தியாதான்'' என்று முன்பு கூறியதைப்போல இங்கு ''சின்னம் உள்ளன இல்லன'' என்று கூறிய நயம் நோக்குக.

15. இப் பெரும்படை எழுந்து இரைத்து ஏக, மேல் எழுந்த
துப்பு உதிர்ந்தன தூளியின் படலம் மீத் தூர்ப்ப,
தப்புஇல் கார்நிறம் தவிர்ந்தது; கரிமதம் தழுவ,
உப்பு நீங்கியது, ஓங்கு நீர் வீங்கு அலை உவரி. (9396)

(இரைத்தல்-ஆரவாரித்தல்; ஏகுதல்-செல்லுதல்; துப்பு-பவளம்; உதிர்தல்-பொடிசெய்தல்; தூளி-துகள்/மண்புழுதி; படலம்-தொகுதி; மீ-மேலே; தூர்த்தல்-மூடுதல்/மறைத்தல்/நிரப்புதல்; தப்பு-குற்றம்; கார்-மேகம்; தவிர்தல்-நீங்குதல்; மதம்-மதநீர்; தழுவுதல்-கலத்தல்/விரவுதல்; உவரி-உவர்க்கடல்; தப்புதல்-பிழைத்தலுமாம்)

இந்தப்பெரிய மூலபலப்படை பொங்கியெழுந்து, ஆரவாரித்துக் கொண்டு போர்க்களம் நோக்கிச் செல்லும்போது, அதனால் மேல் எழுந்த பவளம் போன்ற செந்நிற மண் புழுதித்துகளின் தொகுதி, ஆகாயத்தின்மீது பரந்து படிந்து, அதனை மூடுமாறு செய்ய, பெய்தலில் தவறுதல் இல்லாத கரியநிறம் கொண்ட மேகம், தனது இயல்பானகருமைநிறம் நீங்கிச்சிவந்த நிறம் பெற்றது; அங்கு சென்ற யானைகள் உகுத்த சுவைமிகுந்த மதநீர் கடலில் கலந்ததால், பொங்கியெழுகின்ற நீரையும், பருத்துத் தோன்று கின்றஅலைகளையும்உப்புச்சுவையையுமுடையகடல், தன்உப்புச்சுவை நீங்கி, யானையின் மதநீர்ச்சுவை பெற்றது.

இப்படைகள் செல்லும்பொழுது எழுந்த புழுதித் துகள்களினால் கரியமேகம் சிவந்துபோனது; யானைகள் சிந்திய மதநீர்ப்பெருக்கால்

Koviloor Digital Library

கடல்நீர் உவர்ப்புச்சுவை நீங்கியது என்பதாம். மண்துகள்கள் நிறத்தால் பவளத்துகள்களுக்கு ஒப்பு. ''தப்புஇல் கார்'' என்பது பொய்க்காத மேகம் என்ற பொருளைத்தரும்.

16. மலையும், வேலையும், மற்றுள பொருள்களும், வானோர்
நிலையும் அப்புறத்து உலகங்கள் யாவையும், நிரம்ப
உலைவுறா வகைஉண்டு, பண்டு உமிழ்ந்த பேர் ஒருமைத்
தலைவன் வாய் ஒத்த, இலங்கையின் வாயில்கள் தருவ. (9397)

(தருதல்-வெளிப்படுத்துதல்; வானோர்-தேவர்கள்; நிலை-இருப்பிடம்; உலைவுறுதல்-நிலைகுலைதல்/அழிந்துபோதல்; பண்டு-முற்காலத்தில்; ஒருமைத்தலைவன்-ஒப்பற்ற முதல்வன்/திருமால்; நிரம்ப-அடங்குமாறு)

இப்பெரும்படை இலங்கை நகரத்தின் கோபுர வாயில்களின் வழியே வெளிச்சென்றன. இது எப்படி இருக்கிறது என்றால், முன்பு பிரளய காலத்தில் உலகிலுள்ள மலைகள், கடல்கள் மற்றுமுள்ள அசையும், அசையாப் பொருள்கள், தேவர்களின் இருப்பிடமான வானுலகு, உலகின் அப்புறத்து அமைந்துள்ள அண்டகோளங்கள் எல்லாவற்றையும் தன் வாய்க்குள் அடங்கிப்போகுமாறு உண்டு, பின் அவற்றிக்கு எத்தகைய கெடுதலோ, அழிவோ நேராவண்ணம் அப்படியே உமிழ்ந்து அருளி நின்ற பெருமைக்குரிய, ஒப்பற்ற இறைவனான திருமாலின் வாயைப் போன்றிருந்தன இலங்கை நகரத்துக் கோட்டை வாயில்கள் என்கிறான் கவிஞன்.

மூலபலப்படையை வெளியேற்றுகின்ற இலங்கை நகரக் கோட்டை வாயில்களுக்கு, பிரளயகாலத்தில் இவ்வுலகை உண்டு பின் உமிழ்ந்தருளும் இறைவன் திருமாலின் வாய் ஒப்பு.

17. கடம் பொறா மதக்களிறு, தேர், பரி, மிடை கடல்கள்,
படம் பொறாமையின், நணந்தலை அனந்தனும் பதைத்தான்;
விடம் பொறாது இரி அமரர்போல், குரங்கு இனம் மிதிக்கும்
இடம் பொறாமையின், இரிந்து போய், வடதிசை இறுத்த. (9398)

(கடம்-கன்னம்; பரி-குதிரை; நனம்-பரந்த/அகன்ற; பதைத்தல்-நடுக்குறுதல்; அனந்தன்-ஆதிசேஷன்; விடம்-நஞ்சு/ஆலகாலம்; இரிதல்-அஞ்சி ஓடுதல்; இறுத்தல்-தங்குதல்; மிடைதல்-நெருங்கியிருத்தல்)

அந்த நால்வகைச் சேனையுள், கன்னத்திலிருந்து பெருகிவரும் மதநீரைத் தடுக்கவியலாத யானைகளும், தேர்களும், குதிரைகளும், நெருங்கியிருக்கின்ற கடல்போன்ற காலாட்படையினரும் தன்மீது கால்வைத்து வேகத்துடன் செல்வதால், பூமியைத் தாங்கிக்கொண்டு இருக்கும் ஆயிரம் படங்களை உடைய ஆதிசேஷன் என்னும் பாம்பு, அந்தச்

Koviloor Digital Library

சுமையைப் பொறுக்கமாட்டாமல் தன் உடல் நடுக்கமுற்றுத் துடித்தான்; பாற்கடலைக் கடைந்தபோது அதனின்றும் முதலில் வாசுகி என்னும் பாம்பினிடமிருந்து தோன்றிய ஆலகால விஷத்தைக் காணக்கூடப் பொறாமையால் தேவர்கள் ஓடி ஒளிந்ததுபோல, மூலபலச் சேனையைக் கண்ட வானரச்சேனை, நிற்பதற்குக்கூட இடம்இன்றி, நிலைகெட்டு ஓடிப்போய் கடலின் வடக்குத்திசையில் போய் தங்கலாயின.

'கடம்' என்பது யானையின் கன்னத்தைக் குறிக்கும். அங்கிருந்து பெருகி வழியும் மதநீர் பற்றிப் பேசப்படுகிறது. யானை கன்னம், கபோலம், பீஜம் ஆகிய மூன்று உறுப்புக்களிலிருந்து மதநீரைப்பெருக்கும் என்பது நாம் முன்பு கண்டுவந்ததே. 'நனந்தலை அனந்தன்' என்பது ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷனைக் குறிக்கும். 'மிதித்தல்' இங்கு நிற்பதைக் குறிக்கும்.

18. ஆழி மால்வரை வேலி சுற்றிட, வகுத்து அமைத்த,
ஏழு வேலையும், இடுவலை; அரக்கரே இனமா;
வாழி காலனும், விதியும், வெவ்வினையுமே, மள்ளர்;
தோழம் மாமதில் இலங்கை; மால்வேட்டம் மேல் தொடர்ந்தார். (9399)

(ஆழிமால்வரை-சக்கரவாளமலை; வகுத்தல்-வகைப் படுத்துதல்; இனம்-கூட்டம்; மா-விலங்குகள்; மள்ளர்-வீரர்கள்; தோழம்-தொழுவம்; வேட்டம்-வேட்டைத்தொழில்; மால்-திருமால்/இராமபிரான்; விதி-பிரமன்)

சக்கரவாள கிரியைச் சுற்றி வேலிபோல வகைப்படுத்தி அமைக்கப் பட்டிருக்கும் ஏழு கடல்களும்தான், வேட்டுவர்கள் விலங்குகளை விழச் செய்வதற்காக விரிக்கப்பட்டிருக்கும் வலை; அரக்கர்களின் கூட்டம்தான் வேட்டையாடப்பட வேண்டிய விலங்குகள்; இறப்பற்ற இயமனும் பிரமதேவனும், அரக்கர்கள் செய்த கொடிய செயல்களுமே வீரர்கள்; பெரிய மதிலால் சூழப்பட்ட இலங்கை நகரம்தான் விலங்குகளாகிய அரக்கர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கொட்டில்/தொழுவம்; திருமாலின் அம்சமாகிய இராமபிரான்தான் வேடுவனாகத் தன் அழித்தல் தொழிலைத் தொடர இருக்கிறான்.

இப்பாடல் முற்றுருவக அணியைச் சேர்ந்த பாடல். ஒருவன் விலங்கை வேட்டையாடும் முறை கூறப்பட்டிருக்கிறது. விலங்குகளை வேட்டை யாடுதற்கு, முதலில் வலைவிரிக்க வேண்டும் அதுதான் உலகின் அண்ட கோளத்திற்கு அப்பாலுள்ள சக்கரவாள கிரியைச் சுற்றி அமைந்திருக்கின்ற ஏழு கடல்களாகும். அந்த வலையில் விழுகின்ற விலங்குகள்தான் அரக்கர்கூட்டம். இயமனும், அரக்கர்கள் விதியும் அவர்கள் செய்த பெரும் பாவங்களுமே வேட்டையாடப்படப்போகும் வானரச்சேனை வீரர்கள். அவ்விலங்குகள் அடைக்கப்பட்டிருக்கும் தொழுவம்தான் இலங்கை

Koviloor Digital Library

மாநகர். தொடர்ந்து தலைமையேற்று வேட்டையாடப் போகும் வேடுவர் தான் திருமாலின் அம்சமாகிய இராமபிரான் என்று இந்த உருவகத்தை விரித்துக்கொள்ள வேண்டும். ''மா'' என்பது பொதுவாக விலங்குகளைக் குறிக்கும் சொல். ''மாவும் மாக்களும் ஐயறிவினவே'' என்பது தொல்காப்பியம். ''தோழம்'' என்ற சொல் நமக்குப்புதிது. தொழுவம், கொட்டில், விலங்குகளை அடைத்து வைக்கும் இடம் எனப் பொருள்படும். தொழுவம் என்பது எதுகைநோக்கித் ''தோழம்'' எனப்பட்டது என்று கொள்ளவேண்டும்.

19. ஆர்த்த ஓசையோ? அலங்குதேர் ஆழியின் அதிர்ப்போ?
காத் திண் மால்கரி முழக்கமோ? வாசியின் கலிப்போ?
போர்த்த பல் இயத்து அரவமோ? நெருக்கினால் புழுங்கி
வேர்த்த அண்டத்தை வெடித்திடப் பொடிந்தது மேன்மேல். (9400)

(பொடித்தல்-தோன்றுதல்; அலங்குதல்-அசைந்து செல்லுதல்; ஆழி-சக்கரம்; அதிர்ப்பு-அதிர்கின்ற ஒலி; கார்-கரிய; முழக்கம்-பிளிற்றல் ஒலி; கலிப்பு-கனைத்தல் ஒலி; போர்த்த-பரவியிருக்கின்ற; பல்லியம்-பல இசைக் கருவிகள்; அரவம்-ஒலி/ஓசை; வாசி-குதிரை)

அரக்கர்படை செல்வதால் ஏற்படுகின்ற நெருக்கத்தினால் அண்ட கோளமே புழுங்கி வேர்க்கலாயிற்று; அது வெடித்துவிடுமோ என்ற அளவுக்கு மேன்மேலும் பெருகித் தோன்றியது. இது எதனால் உண்டானது? காலாட்படைகள் முழங்கி நடந்து செல்லுவதால் ஏற்பட்ட ஓசையினாலா? அல்லது அசைந்து ஆடிச்செல்லும் தேர்களின் சக்கரங்கள் எழுப்பும் அதிர்வினாலா? அல்லது கரிய, வலிய, பெரிய ஆண் யானைகளின் பிளிற்றல் ஓசையினாலா? அல்லது குதிரைப்படைகள் கனைக்கின்ற ஒலியினாலா? அல்லது இவையெல்லாவற்றிலும் பரவி ஒலிக்கின்ற பலவகைப்பட்ட இசைக்கருவிகளின் ஓசையினாலா? எதனால் அண்டகோளம் நெருக்கிப் புழுங்கி வியர்த்தது?''

ஓசை, அதிர்ப்பு, முழக்கம், கலிப்பு, அரவம் இவையெல்லாம் ஒருபொருள் குறித்த பலசொற்கள். யானையின் நிறம், வலிமை, உருவம் மூன்றும் கார், திண், மால் என்ற அடைமொழியால் பேசப்பட்டிருப்பதை நோக்குக. இசைக்கருவிகள் தோற்கருவி, நரம்புக்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி என நால்வகைப்படும்.

20. வழங்கு பல்படை மீனது மதகரி மகரம்
முழங்குகின்றது; முரிதிரைப் பரியது; முரசம்
தழங்கு பேர்ஒலி கலிப்பது; தறுகண் மா நிருதப்
புழுங்கு வெஞ்சினச் சுறவது; நிறைபடைப் புணரி. (9401)

Koviloor Digital Library

(புணரி-கடல்; வழங்குதல்-செலுத்துதல்; முரிதல்-மடங்குதல்; தழங்குதல்-முழங்குதல்; கலிப்பு-ஓசை; தறுகண்-அஞ்சாமை; மா-பெருமை; சுறவு-சுறாமீன்கள்)

அரக்கர்களின் நிறைந்த படைகள்தான் பெருங்கடல்; அவர்கள் செலுத்தும் பலவகை ஆயுதங்கள்தான் கடலில் இருக்கும் மீன்கள்; மதம் கொண்ட யானைகள்தான் கடலில் வாழும் பெரிய மகரமீன்கள் அல்லது முதலைகள்; மிகுந்த ஓசையை எழுப்புகின்றதும், மடங்கி விழுகின்றது மான அலைகள்தான் குதிரைப்படைகள். கடலின் ஒலிதான் குதிரைகளின் கனைப்பொலி; போரொலிதான் முரசங்கள் முழக்குகின்ற பேரொலி யாகும். அஞ்சாமையும் பெருமையும் உடைய அரக்கர்கள் வெதும்பிக் கொடிய சினம் கொள்வதுதான் சுறாமீன் ஆகும்.

பொருள் எளிதில் புரிந்துகொள்ள முடியாத கம்பனின் விசித்திரப் பாடல்களுள் இதுவும் ஒன்று. இதுவும் முற்று உருவக அணியின் பாற்பட்டதாகும். அரக்கர்களின் படைக்கலன்கள்- மீன்கள்; யானைகள்-முதலைகள்; குதிரைகள் கடல் அலைகள்; முரசின் முழக்கம்-கடலோசை; காலாட்படை-சுறாமீன்கள்; என உவமையை விரித்துக்கொள்க. பல நதிகளும் தன்னிடம் வந்து புணருவதால் 'புணரி' என்பது கடலுக்குக் காரணப்பெயர்.

21. தசும்பின் பொங்கிய திரள் புயத்து அரக்கர்தம் தானை,
பசும்புல் தண்தலம் மிதித்தலின், கரிபடு மதத்தின்,
அசும்பின் சேறுபட்டு, அளறுபட்டு, அமிழுமால், அடங்க;
விசும்பின் சேறலின் கிடந்தது அவ்விலங்கல் மேல் இலங்கை. (9402)

(தசும்பு-குடம்; பொங்குதல்-பருத்திருத்தல்; தண்-குளிர்ந்த; தலம்-இடம்/நிலம்; படுதல்-உண்டாதல்; அசும்பு-நீர்க்கசிவு/வழுக்குநிலம்; அளறு-குழைந்த சேறு; விசும்பு-ஆகாயம்; விலங்கல்-மலை)

குடம் போன்று கிளர்ந்தெழும் திரட்சிமிக்க தோள்களையுடைய அரக்கர்களின் சேனை, பசிய புல் நிறைந்த குளிர்ச்சி பொருந்திய தரையில் மிதித்துச் சென்றிருந்தாலும்,, யானைகள் பெருக்குகின்ற மதநீர்ப் பெருக்கால், நிலத்தில் நீர்க்கசிவு ஏற்பட்டு, அது மிகக் குழைந்த சேறாகி வழுக்கும் நிலை உண்டாகியிருந்தாலும், அந்தத் திரிகோண மலையின் மேல் இருக்கும் இலங்கை நகரமானது, அந்த வழுக்குச் சேற்றில் அமிழ்ந்து புதைந்து போயிருக்கும். ஆனால் அரக்கர்சேனை விண்வழியே சென்றதனால், அவ்விலங்கை மாநகரம் அது இருந்த இடத்திலேயே எந்தவிதத் தீங்கும் நேராமல் அப்படியே நிலைபெற்றிருந்தது.

சேனையின் மிகுதி கூறப்பட்டது. குடம், அரக்கர்களின் பொங்கிய திரள்புயத்துக்கு உவமையாயிற்று; ''சேறு'' என்ற சொல்லும், ''அளறு'' என்ற சொல்லும் பொதுவாக ஒரே பொருளைத்தந்தாலும் அளறு என்பது

Koviloor Digital Library

குழைந்துபோன வழுக்குகின்ற சேற்றைக் குறித்தது எனக்கொள்க. ''விலங்கல்'' என்ற சொல்லுக்குத் திரிகோணமலை என்று பொருள் கொண்டிருக்கிறோம்.

22. தேவர்கள் நடுங்குதல்

படியைப் பார்த்தனர்; பரவையைப் பார்த்தனர்; படர்வான்
முடியைப் பார்த்தனர்; பார்த்தனர் நெடுந்திசை முழுதும்;
வெடியப் பார்ப்பது ஓர் வெள்ளிடை கண்டிலர்; மிடைந்த
கொடியைப் பார்த்தனர்; வேர்த்தனர்; வானவர் குலைந்தார். (9403)

(வானவர்-தேவர்கள்; படி-பூமி; பரவை-கடல்; படர்தல்-பரவி யிருத்தல்; முடி-உச்சி; மிடைந்த-நெருங்கியிருந்த; விடிதல்-புலர்தல்/ இருள்நீங்குதல்; வெள்ளிடை-இடைவெளி/வெற்றிடம்; குலைதல்-நடுங்குதல்)

தேவர்கள், சேனைகள் நடந்து செல்லுகின்ற பூமியைப் பார்த்தார்கள்; கடலைப் பார்த்தார்கள்; பரவியிருக்கும் ஆகாயத்தின் உச்சியை நோக்கினார்கள்; நீண்ட திசைகள் முழுதும் உற்று நோக்கினார்கள்; ஒரு வெற்றிடம்கூடக் காணப்பெற்றிலர்; எங்கும் நிறைந்திருந்த அரக்கர் படைகளின் கொடிகளைப் பார்த்தார்கள்; உடல் வியர்த்தார்கள்; அச்சத்தால் நிலைகுலைந்தார்கள்.

உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் தன்னிடத்தே படிந்திருப்பதால், தங்கியிருப்பதால், படி என்பது பூமிக்கு, நிலத்திற்குக் காரணப்பெயர்.

23. “உலகில் நாம் அலா உருஎலாம் இராக்கத உருவா,
அலகுஇல் பல்படை பிடித்து அமர்க்கு எழுந்தவோ? அன்றேல்,
விலகு நீர்த்திரை வேலை ஓர் ஏழும்போய் விதியால்
அலகுஇல் பல்உருப் படைத்தனவோ?” என அயிர்த்தார். (9404)

(அலா-அல்லாத; அலகு-அளவு; படை-ஆயுதங்கள்; அமர்-போர்; விலகுதல்-நீங்குதல்; விதி-ஊழ்வினை/முறை; அயிர்த்தல்-ஐயுறுதல்; படைத்தல்-உண்டாக்குதல்)

தேவர்கள் ''இவ்வுலகத்தில் நம்மைத்தவிர மற்ற உயிரினங்களெல்லாம் இராக்கத வடிவமாக மாறி, எண்ணற்ற படைக்கலன்களைக் கைகளில் பற்றிக்கொண்டு போர் செய்வதற்காகப் புறப்பட்டு விட்டனவோ? அல்லது, விலகுகின்ற தன்மையுடைய நீரையுடைய அலைகள் நிறைந்த ஏழுகடல்களும் ஒருசேரச் சென்று முறைப்படி அளவற்ற அரக்கர் உருவங்களை உண்டாக்கிக் கொண்டனவோ?'' என்று ஐயுற்றார்கள்.

Koviloor Digital Library

24. தேவர்கள் சிவபெருமானிடம் முறையிடுதல்

நடுங்கி, நஞ்சுஅடை கண்டனை, வானவர், "நம்ப!
ஒடுங்கி, யாம் கரந்து உறைவிடம் அறிகிலம்; உயிரைப்
பிடுங்கி உண்குவர்; யார்இவர் பெருமை பண்டு அறிந்தார்?
முடிந்தது எம்வலி" என்றனர், ஓடுவான் முயல்வார். (9405)

(ஓடுவான்-ஓடும்பொருட்டு; அடைதல்-சேர்தல்; கண்டம்-கழுத்து; நஞ்சுஅடை கண்டன்-நீலகண்டன்/சிவபெருமான்; கரத்தல்-மறைத்தல்; பிடுங்கி-பறித்து; பண்டு-முன்பு; நம்பன்-தலைவன்)

அந்தச்சேனையின் பெருக்கத்தைக் கண்ட தேவர்கள் அச்சமுற்று நடுங்கி, ஆலகால நஞ்சினைத் தன் கண்டத்தில் தேக்கி வைத்திருக்கும் சிவபெருமானை அடைந்து, "எம் தலைவனே! நாங்கள் அடங்கி, ஒடுங்கி அரக்கர்களிடமிருந்து தப்பித்து மறைந்து வாழ்வதற்குப் பாதுகாப்பான ஒரு இருப்பிடம் இல்லாமல் இருக்கிறோம். அவர்கள் எங்களைக் கண்டால் எங்கள் உடலோடு உயிரைப் பறித்து உண்டுவிடுவார்கள்; இவர்களுடைய சிறப்பை முன்பே யார் அறிந்திருக்கிறார்கள்? இன்றுடன் எங்கள் ஆற்றல் எல்லாம் அழிந்துபட்டது" என்று புலம்பலானார்கள்.

"நஞ்சுஅடை கண்டன்" என்பது பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய ஆலகால நஞ்சினைத் தன் கழுத்தில் தேக்கி வைத்திருக்கும் நீலகண்டனான சிவபெருமானைக் குறிக்கும். தேவர்கள் இப்போது சிவபெருமானைச் சரணடைந்தது, முன்புபோல் இப்போதும் தம்மைக் காத்தருள்வார் என்ற நம்பிக்கையினால் என்க.

25. "ஒருவரைக் கொல்ல, ஆயிரம் இராமர் வந்து, ஒருங்கே
இருபதிற்றிரண்டு ஆண்டு நின்று அமர்செய்தால், என் ஆம்?
நிருதரைக் கொல்வது, இடம் பெற்று ஓர் இடையில் நின்று அன்றோ?
பொருவது இப்படை கண்டு, தம்உயிர் பொறுத்து அன்றோ? (9406)

(இருபதிற்றிரண்டு-இருபத்துநான்கு; ஆம்-ஆகும்; நிருதர்-அரக்கர்; பொருவது-போர்செய்வது)

"இந்த அரக்கர்களுள் ஒருவனைக் கொல்ல வேண்டுமென்றால் ஆயிரம் இராமர்கள் ஒன்றுகூடி வந்து, இருபத்தி நான்கு ஆண்டுகள் தொடர்ந்து போர்செய்தாலும் என்ன ஆகிவிடப்போகிறது? ஒன்றும் ஆகாது. இவர்களை வெல்லமுடியாது; அதன்பிறகு அல்லவோ அவர்களைக் கொல்லுவது பற்றி எண்ணவேண்டும். அவ்வாறு இவ்வரக்கரைக் கொல்லுவது என்பதுகூடப் போர்க்களத்தில் நாம் நம்மை நிலைநிறுத்திக் கொண்டு போர்செய்ய ஒரு தகுந்த இடம் கிடைத்தலாலல்லவோ போர்செய்ய முடியும்? அவ்வாறு இடம் கிடைத்தாலும் போர்செய்வது என்பது இந்தப் பெரிய படையைக் கண்டபின்பும் தம்முடைய உயிர்

Koviloor Digital Library

உடலில் தங்கியிருந்தாலல்லவோ அதுவும் முடியும்?'' என்று தேவர்கள் தங்களுக்கு உண்டான அச்சத்தை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்.

தேவர்களும் இங்கே இராமபிரானின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுகிறார்களோ? என்று எண்ணத் தோன்றும். போர்க்களத்தில் நிற்பதற்கே இடம் கிடைக்காது; எனவே போர் செய்ய முடியாது; எனவே வெற்றிபெற முடியாது; எனவே பகைவர்களைக் கொல்ல முடியாது; என்று எதிர்மறையாகவே தேவர்கள் பேசுவதை நுனித்து உணர்.க.

26. என்று இறைஞ்சலும், மணிமிடற்று இறைவனும் "இனி நீர்
ஒன்றும் அஞ்சலிர்! வஞ்சனை அரக்கரை ஒருங்கே
கொன்று நீக்கும், அக்கொற்றவன்; இக்குலம் எல்லாம்
பொன்றுவிப்பது ஓர் விதி தந்ததாம்" எனப் புகன்றான். (9407)

(இறைஞ்சுதல்-வணங்குதல்/பணிதல்; மணி-நீலமணி/அழகிய; மிடறு-கழுத்து; கொற்றவன்-வெற்றிவீரன்; நீக்குதல்-அழித்தல்; பொன்றுவித்தல்-அழியச்செய்தல்; ஒன்றும்-சிறிதும்; தந்தது-வரவழைத்தது)

என்று தேவர்கள் சிவபெருமானைப் பணிந்து வேண்டிக்கொண்டதும், அழகிய நீலமணிபோலும் நிறத்தினையுடைய கழுத்தையுடைய சிவபெருமான், தேவர்களை நோக்கி, ''இனிமேல் நீங்கள் சிறிதும் அஞ்சாதீர்கள்; அந்த வஞ்சகம் மிக்க அரக்கரை அந்த வெற்றிபொருந்திய இராமபிரான் ஒருசேரக் கொன்றழிப்பான். இந்த அரக்கர் கூட்டமெல்லாம் அழிந்து படுவதற்காகவே, விதி அவர்களை இங்கே கொண்டுவந்து சேர்த்திருக்கிறது'' என்று கூறினான்.

''நீலமணி மிடற்று ஒருவன்போல மன்னுகபெரும!'' என்பது புறநானூறு.

27. வானரச்சேனை அஞ்சி ஓடுதல்

புற்றின் நின்று வல் அரவு இனம் புறப்பட, பொருமி,
"இற்றது எம்வலி" என, விரைந்து இரிதரும் எலிபோல்,
மற்ற வானரப் பெருங்கடல் பயம்கொண்டு மறுகி,
கொற்ற வீரரைப் பார்த்திலது; இரிந்தது குலைவால். (9408)

(வல்-வலிமைமிக்க; அரவு-பாம்பு; இனம்-கூட்டம்; பொருமுதல்-அச்சம் கொள்ளுதல்/மனம் உழல்தல்; இறுதல்-தீர்தல்; இரிதருதல்-நிலைகெட்டு ஓடுதல்; மறுகுதல்-மனக்கலக்கமுறுதல்; கொற்றம்-வெற்றி; குலைதல்-நடுங்குதல்)

Koviloor Digital Library

வலிய பாம்புக்கூட்டம் அவற்றின் புற்றினின்றும் புறப்பட்டு வெளி வருவதைக் கண்ட எலிக்கூட்டம், மனம் உழன்று ''நம் வலிமையெல்லாம் அற்றுப் போய்விட்டது'' என்று கூறிக்கொண்டே நிலைகுலைந்து விரைந்து தப்பித்துச் சிதறி ஓடுவதுபோல, இந்த வானரப் பெருஞ்சேனை அச்சம்கொண்டு, மனக்கலக்கமுற்று வெற்றி பொருந்திய வீரர்களான இராமஇலக்குவரைக்கூடக் கருத்தால் நினையாது, நடுங்கி நிலைகெட்டு ஓடிப்போயின.

அரக்கர்கூட்டத்தைப் பாம்புக்கும், வானரக்கூட்டத்தை எலிக்கும் உவமைகூறிய கவிஞன், இதே உவமையை மற்றொரு இடத்தில் எப்படிக் கையாண்டிருக்கிறான்பாருங்கள். ''எலியெலாம்இப்படை,அரவம்யான்'' என்பது, பரதனுடன் வந்த அயோத்தி மக்களைப் பார்த்துக் குகன் கூறியகூற்று. ''அரவின் நாமத்தை எலி இருந்து ஓதினால் அதற்கு விரவும் நன்மை என்?'' என்பது இரணியன் கூற்று. ''ஒலித்தக்கால் என் ஆம் உவரி, எலிப்பகை நாகம் உயிர்ப்பக்கெடும்'' என்பது குறள்-763. புற்றினின்று புறப்பட்ட வல் அரவு இனம் இராக்கதர் மூலபலப்படை; விரைந்து இரிதரும் எலி வானரப்படை; புற்று-ஏழு பெருந்தீவுகள்.

28. அணையின் மேல் சென்ற சிலசில; ஆழியை நீந்தப்
புணைகள் தேடின சில; சில நீந்தின போன;
துணைகளோடு புக்கு அழுந்தின சில; சில தோன்றாப்
பணைகள் ஏறின; மலை முழை புக்கன, பலவால். (9409)

(ஆழி-கடல்; புணை-தெப்பங்கள்; பணை-மரக்கிளை; முழை-குகை)

அவ்வாறு மூலபலப் படையைக் கண்டு அஞ்சி நிலைகுலைந்து ஓடிய குரங்குகளில் சில, தாம் முன்னர்க் கட்டிய சேது அணையின்மேல் தாவி ஏறிச்சென்று தப்பித்தன; இன்னும் சில அந்தக் கடலை நீந்தித் தாண்டு வதற்கு தெப்பங்களைத் தேடலாயின; வேறுசில, கடலில் நீந்தியே தப்பித்துப்போயின; இன்னும் சில வானரங்கள், துணைவந்த வானரங் களோடு கடலில் சென்று நீந்த முடியாமல் கடலிலேயே அழுந்திப் போயின; சில, யார் கண்ணுக்கும் படாதவாறு இலைகள் அடர்ந்த குகைகளில் போய்த் தம்மை ஒளித்துக்கொண்டன.

'முழை'' என்ற சொல் குகையைக் குறிக்கும்.

29. "அடைத்த பேர்அணை அளித்தது நமக்கு உயிர்; அடைய
உடைத்துப் போதுமால், அவர் தொடராமல்" என்று உரைத்த;
"புடைத்துச் செல்குவர் விசும்பினும்" என்றன; "போதோன்
படைத்த திக்கெலாம் பரந்தனர்" என்றன, பயத்தால். (9410)

Koviloor Digital Library

(பேர்-பெரிய; அடைய-முழுவதும்; போதும்-செல்வோம்; புடைத்தல்-தாக்குதல்; விசும்பு-ஆகாயம்; போது-மலர்; போதோன்-மலரில் வீற்றிருப்பவன்/பிரமன்; பரத்தல்-பரவியிருத்தல்)

''நாம் முன்பு இலங்கையுள் நுழைவதற்காகக் கட்டிய பெரிய அணை, இப்பொழுதும் நமக்குத் தப்பிஓட உயிர்கொடுத்துக் காப்பாற்றி யிருக்கிறது. இது முழுவதையும் உடைத்துவிட்டு நாம் அவர்கள் நம்மைத் தொடர்ந்து பின்பற்றிவராமல் தப்பித்து சென்று விடுவோம்'' என்று சில குரங்குகள் கூறின; ''அரக்கர்கள் தரை வழியின்றி ஆகாய வழியிலும் வந்து நம்மைத் தாக்கிவிட்டுச் சென்றுவிடுவார்கள்'' என்று சில குரங்குகள் கூறின; இன்னும் சில குரங்குகள் ''தாமரைமலரை இருக்கையாகக் கொண்டுள்ள பிரமன் படைத்தருளிய எல்லாத் திசைகளிலும் அவர்கள் பரந்து பரவியிருக்கின்றனர்'' என்று அச்சத்தால் நடுங்கிக்கொண்டே கூறின.

''போதோன்'' என்ற சொல் கவிஞனால் முதன்முதலாகக் கையாளப் பட்டிருக்கிறது. அருமையான சொல். போது-மலர்; மலர்-தாமரை; போதோன்-தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்டு வீற்றிருப்பவன் என்று பிரமனைக் குறிக்கும்.

30. அரியின் வேந்தனும், அனுமனும், அங்கதன் அவனும்,
பிறியகிற்றிலர் இறைவனை, நின்றனர், பின்றார்;
இரியலுற்றனர் மற்றையோர் யாவரும்; எறிநீர்
விரியும் வேலையும் கடந்தனர்; நோக்கினன், வீரன். (9411)

(அரி-குரங்கு; இறைவன்-இராமபிரான்; பின்றுதல்-பின்வாங்குதல்; எறிதல்-வீசுதல்)

குரங்குகளின் அரசனான சுக்கிரீவனும், அனுமனும், அங்கதனும், இறைவனாகிய இராமபிரானைப் பிரிய மனமில்லாமல், பின்னடையாது, போர்க்களத்திலேயே அவனுடனேயே நின்றிருந்தனர். மற்ற வானரங்கள் எல்லாம் நிலைகெட்டு ஓடிப்போய், அலைவீசுகின்ற நீர்ப்பரப்பு விரிந்து கிடக்கின்ற கடலைத் தாண்டிச்சென்றதையும் வீரனான இராமபிரான் நோக்கினான்.

''கில்'' என்பது ஆற்றல் உணர்த்தும் இடைச்சொல். ''அவனும்'' என்பது துணைச்சொல்.

Koviloor Digital Library

31. மூலபலப்படை பற்றி வீடணன் இராமபிரானுக்குக் கூறுதல்

"இக்கொடும்படை எங்குளது? இயம்புதி!" என்றான்;
மெய்க் கொடுந் திறல் வீடணன், விளம்புவான் "வீர!
திக்கு அனைத்தினும், ஏழு மாத் தீவினும், தீயோர்
புக்கு அழைத்திடப் புகுந்துளது, இராக்கதப் புணரி. (9412)

(கொடுமை-வலிமை/திண்மை; புணரி-கடல்; மா-பெரிய)

மூலபலப்படையின் தொகுதியைக் கண்ணுற்ற இராமபிரான், வீடணனை நோக்கி, ''இந்தக் கொடுமையான சேனை இவ்வளவு நாள் எங்கிருந்தது? இப்போது இங்கு எப்படி வந்தது? கூறுவாயாக!'' என்று வினவினான். அதற்கு உண்மையான, வலிமையான, திண்மையான திறமைபடைத்த வீடணன், ''வீரனே! இந்த இராக்கதச் சேனைக்கடல், உலகிலுள்ள எல்லாத் திசைகளிலும், ஏழு பெரிய தீவுகளிலும் இராவணனால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூலபலப்படையாகும். இதனைக் கொடியவனான இராவணனின் தூதுவர்கள் சென்று அழைத்திட, அதன் காரணமாக இப்பொழுது இங்கே வந்திருக்கிறது'' என்று விடையிறுத்தான்.

வீடணன் பிறப்பால்தான் அரக்கனேயன்றிக் குணங்களால் தூயவன் என்பதை முன்பே கண்டு வந்திருக்கிறோம். இங்கே ''மெய்க்கொடுந்திறல் வீடணன்'' என்பது அவனுடைய உண்மையான சூழ்ச்சித் திறனைக் குறிக்கும் எனக்கொள்க. ''வன்கண் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே'' என்பது குறுந்தொகை. ''இராக்கதப் புணரி'' என்பது உருவகம். படையின் பெருக்கத்தால் பரந்த கடலை உருவகித்தார். ''ஏழுமாத் தீவு'' என்பதை முன்பும் கண்டுவந்திருக்கிறோம். எனினும் சில பதிப்புகள் வேறு படுவதால் மீண்டும் ஒருமுறை பார்க்கலாம். அவை நாவலந்தீவு, இறலித்தீவு, குசைத்தீவு, கிரௌஞ்சத்தீவு, புட்கரத்தீவு இவை ஐந்தும் எல்லாச் சுவடிகளிலும் ஒன்றாகவே பேசப்படுகிறது. மற்ற இரண்டு தீவுகளில் வேறுபாடு காணப்படுகிறது. சில உரைநூல்கள் தெங்குத்தீவு, கமுகத்தீவு என்கின்றன. சில சுவடிகள் இலாங்கலித்தீவு, பூசத்தீவு என்கின்றன.

32. "ஏழ் எனப்படும் கீழ் உள தலத்தின் நின்று ஏறி,
ஊழி முற்றிய கடல்எனப் புகுந்ததும் உளதால்;
வாழி, மற்று அவன் மூலமாத் தானை முன் வருவ;
ஆழி வேறு இனி, அப்புறத்து இல்லை, வாள் அரக்கர்" (9413)

(தலம்-உலகம்; முற்றுதல்-சூழ்தல்/முடிதல்; முன்வருவ-முற்பட்டு வருவன; ஆழி-கடல்; வாள்-கொடிய; ஊழி-யுகமுடிவு)

Koviloor Digital Library

''ஏழு என்று கணக்கிட்டுச் சொல்லப்படுகின்ற நிலவுலகத்திற்குக் கீழே உள்ள பாதாளம் முதலிய உலகத்தினின்றும் பொங்கியெழுந்து, ஊழி முடிவுக்காலத்தில் உலகத்தையே சூழ்ந்து வளைக்கின்ற கடல்கள் எனக் கூறப்படும் படைகளும் இதனுள் உண்டு; இப்போது நம் எதிரே முன்னே வருவது அவனுடைய மூலபலப் பெருஞ்சேனையாகும்; இதைத்தவிர கடலுக்கு அப்புறத்தில் கொடிய அரக்கர்சேனை வேறு எதுவும் இல்லை'' என்கிறான் வீடணன்.

கீழ் ஏழு உலகங்கள், அதல, விதல, சுதல, தராதல, ரசாதல, மகாதல, பாதல என்பனவாம். முற்பட்டு வருவது மூலபலப்படை எனவும், அதனைத் தொடர்ந்து வ்ருவது வேறுபல இடங்களில் இருந்தும் வரவழைக்கப்பட்டவை எனவும் தெரிவிக்கிறான் வீடணன். 'வாழி' என்பது அசைச்சொல். ஏழு பெருந்தீவுகளினின்றும், பூமியின் கீழுள்ள ஏழுபெரும் உலகங்களிலிருந்தும் அனைவரும் வரவழைக்கப்பட்டு விட்டனர். இவர்களைத் தவிர இனி அரக்கர்படை ஏதும் இராவணனிடம் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறான் வீடணன் என்பதாம்.

33. "ஈண்டு, இவ் அண்டத்துள் இராக்கதர் எனும் பெயரெல்லாம்
மூண்டு வந்தது, தீவினை முன்நின்று முடுக்க;
மாண்டு வீழும் இன்று, என்கின்றது என்மதி; வலிஊழ்
தூண்டுகின்றது" என்று அடிமலர் தொழுது, அவன் சொன்னான். (9414)

(தீவினை-கொடியபாவம்; முடுக்க-உந்த/ஈர்த்துச்செல்ல; மூண்டு-முற்பட்டு/முனைந்து; மதி-அறிவு; ஊழ்-விதி; தூண்டுதல்-செலுத்துதல்; ஈண்டு-இங்கே)

''இந்த அண்டகோளத்தில் உள்ள இராக்கதர் என்ற பெயர்கொண்ட அனைவரும் இப்பொழுது இங்கே ஒன்று திரண்டு வந்து கூடிவிட்டார்கள். அவர்களது பாவச்செயல்கள் முன்னே நின்று விரைந்து செலுத்த, அவர்கள் முற்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்களது வலிமையான ஊழ்வினை, அவர்களைப் பின் நின்று பிடித்துத் தள்ளி இங்கே வரவழைத்திருக்கிறது. அவர்கள் அனைவரும் இன்று இறந்து அழிந்து ஒழிந்துபோவார்கள் என்று என் அறிவு கூறுகிறது'' என்று வீடணன், இராமபிரானின் திருவடித் தாமரையினைத் தொழுது கூறினான்.

''முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே'' என்பது பட்டினத்தார் பாடல். ''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்பது சிலப்பதிகாரம். அரக்கர்களது தீவினை முன்னேநின்று இழுக்க, அவர்களது ஊழ்வினை பின்னே நின்று செலுத்த இங்கு வந்து இறந்துபடப் போகிறார்கள் என்கிறான் வீடணன். ''இழைக்கின்ற விதி முன்செல்ல, தருமமும் பின் இரங்கி ஏக'' என்பது அயோத்தியா காண்டம் நகர்நீங்கு படலம்.

Koviloor Digital Library

34. வானரவீரரை அழைத்துவர அங்கதன் செல்லுதல்

கேட்ட அண்ணலும், முறுவலும் சீற்றமும் கிளர,
''காட்டுகின்றனென், காணுதி ஒரு கணத்து'' என்னா,
ஓட்டின் மேற்கொண்ட தானையைப் பயம் துடைத்து, உரவோய்!
மீட்டிகொல்?'' என அங்கதன் ஓடினன் விரைந்தான். (9415)

(அண்ணல்-பெருமையிற் சிறந்தவன்/இராமபிரான்; காணுதி-காண்பாயாக; உரவு-வலிமை; ஓட்டு-ஓட்டம்/ஓடுதல்; முறுவல்-புன் சிரிப்பு; துடைத்தல்-நீக்குதல்; கிளர்தல்-பொங்குதல்)

அவ்வாறு வீடணன் சொல்லக்கேட்ட பெருமையிற் சிறந்தவனான இராமபிரான், உள்ளே சீற்றமும், புறத்தே முறுவலும் பொங்கிவர, ''ஒரு நொடிப்பொழுதில் என் வில்லாற்றலைக் காட்டுகிறேன் காண்பாயாக!'' என்று வீடணனிடம் கூறி, அங்கதனை நோக்கி, ''வலிமையுடையவனே! புறமுதுகு காட்டி பயந்து ஓட்டத்தை மேற்கொண்ட வானரவீரர்களை, அவர்களின் பயத்தைப் போக்கித் திரும்ப இங்கே அழைத்துக்கொண்டு வருவாயாக!'' என்று கட்டளைஇட, அங்கதன் உடனே விரைந்து ஓடினான்.

முறுவல் புறத்தது, சீற்றம் அகத்தது. இரு மெய்ப்பாடுகளும் ஏக காலத்தில் தோன்றுகின்றது என்று கூறியதை நோக்குக. 'ஓட்டின்' என்ற சொல் ஓடும் செயல் என்று பொருள்படும். 'கொல்' என்பது ஐயப்பொருளில் வந்தாலும் அது கட்டளை எனவே கொள்ளப்பட்டது.

35. படைத்தலைவர்கள் திரும்பி வருதல்

சென்று சேனையை உற்றனன், ''சிறைசிறை கெடுவீர்!
நின்று கேட்டபின், நீங்குமின்'' எனச்சொல்லி நேர்வான்;
''ஒன்றும் கேட்கிலம்'' என்றது அக்குரக்கு இனம்; உரையால்
வென்றி வெந்திறல் படைப்பெருந் தலைவர்கள் மீண்டார். (9416)

(உறுதல்-அடைதல்; சிறை-பக்கம்; நேர்தல்-நெருங்குதல்; கெடுதல்-தோற்று ஓடுதல்; உரை-சொல்வன்மை)

அவ்வாறு விரைந்து ஓடிச்சென்றவனான அங்கதன் வானரச் சேனையை அடைந்தான். அவர்களை நோக்கி, ''எல்லாப் பக்கங்களிலும் நிலைகுலைந்து ஓடுபவர்களே! சற்று நில்லுங்கள்; நான் சொல்வதைக் கேளுங்கள்; கேட்டபின் உங்களுக்கு ஓடவேண்டும் என்று தோன்றினால் அவ்வாறே செய்யுங்கள்'' என்று அவர்களை நெருங்கினான். அங்கிருந்த சில வானரக்கூட்டம் ''நீ சொல்லுவது ஒன்றையும் நாங்கள் கேட்க மாட்டோம்'' என்றன. பின்னும் அங்கதனது சொல்வன்மையால்

Koviloor Digital Library

வெற்றிபொருந்திய கடுமையான ஆற்றல்கொண்ட பெரிய படைத் தலைவர்கள் மட்டும் அவனுடன் திரும்பி வந்தனர்.

''சிறைசிறை'' என்ற அடுக்கு எல்லாப் பக்கங்களிலும் என்ற பொருளில் வந்தது. அங்கதனின் சொல்வன்மை சிறப்பிக்கப்பட்டது என்க. பொறுப்பு உணர்வு மிக்க தலைவர்கள் திரும்பிவந்தனர் என்பதாம். பொறுப்புணர்வு தலைமைப்பண்பு எனக் குறித்தல் காண்க.

36. படைத்தலைவர்கள் விளக்கம் அளித்தல்

மீண்டு, வேலையின் வடகரை, ஆண்டு ஒரு வெற்பின்
ஈண்டினார்களை "என் குறித்து இரிவுற்றது?" என்றான்;
"ஆண்ட நாயக! கண்டிலை போலும் நீ அவரை?
மாண்டு செய்வது என்?" என்று உரை கூறினர், மறுப்பார். (9417)

(ஆண்டு-அங்கு; வெற்பு-மலை; ஈண்டுதல்-கூடுதல்/ஒருங்கு; ஆண்டு -ஆளாகஉடைய/ஆட்கொண்ட; மறுத்தல்-உடன்படாமை/இசையாமை)

அவ்வாறு அங்கதன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு மீண்டு வந்தவர் களான படைத்தலைவர்கள், கடலின் வடகரையில் அமைந்துள்ள ஒரு மலையடிவாரத்தில் ஒருசேரக் கூடினார்கள். அவர்களை நோக்கி அங்கதன் ''என்ன காரணத்தால் நீங்கள் எல்லோரும் நிலைகுலைந்து போர்க்களத்தை விட்டு ஓடி வந்தீர்கள்?'' என்று கேட்டான்; அதற்கு அத்தலைவர்கள் ''எங்களை ஆட்கொண்ட தலைவனே! நீ அங்கு திரண்டுவந்த அவர்களின் தோற்றத்தைச் சரியாகப் பார்க்கவில்லையோ? போர்செய்து இறந்து படுவதால் என்னபயன்?'' என்று விடையிறுத்து, மேலும் போர்செய்யப் போவதற்கு உடன்படாதவர்களாய், மறுத்துப் பின்வருமாறு கூறத் தொடங்கினார்கள்.

போரில் ஈடுபட்டால் தாங்கள் நிச்சயம் மாண்டுபோவோம் என்று உறுதியாகத் தெரிந்ததால் அவர்கள் சிதறி ஓடிப்போனார்கள் என்று படைத்தலைவர்கள் விடை கூறுகிறார்கள் என்பதாம். இப்பொழுது உயிரை விட்டுவிட்டால் மேற்கொண்டு இராமஇலக்குவர்க்குப் பணி செய்ய முடியாதே என்பது அவர்கள் கருத்து. எனவே இவ்வாறு கூறநேர்ந்தது எனக்கொள்க.

37. ஒருவன் இந்திரசித்து என உள்ளவன் உளநாள்,
செருவின் உற்றவை, கொற்றவ! மறத்தியோ?, தெரியின்,
பொருஇல் மற்றவர் இற்றிலர், யாரொடும் பொருவார்;
இருவர் வில் பிடித்து, யாவரைத் தடுத்து நின்று எய்வார்!" (9418)

Koviloor Digital Library

(உளநாள்-உயிருடன் இருந்தநாள்; செரு-போர்; கொற்றவன்-அரசன்; தெரியின்-ஆராய்ந்து பார்த்தால்; பொரு-ஒப்பு; இற்றிலர்-இளைத்தவரல்லர்; பொருதல்-போர்செய்தல்; இறுதல்-ஆற்றலில் குறைதல்)

''மன்னவனே! இந்திரசித்து என்ற ஒப்பற்றவன் ஒருவன் உயிருடன் இருந்த காலத்தில் நடந்த போரில் நாம் அனுபவித்த துயரங்களையும் வேதனைகளையும் மறந்துபோய் விட்டாயோ? இப்போது அதை ஆராய்ந்து பார்த்தால், இங்கே இருக்கின்ற ஒப்புமையில்லாத அரக்கர்கள் ஒவ்வொருவரும் அவனைப்போன்ற ஆற்றல்பெற்றவர்கள் ஆவர்; யாரும் அவனுக்கு ஆற்றலில் குறைந்தவர்கள் அல்லர்; இவர்கள் யாருடன் வேண்டுமானாலும் போர்புரியும் வல்லமை உடையவர்கள். நம் பக்கத்தில் இராமஇலக்குவர் என்ற இருவர் மட்டும் வில்லைச் செலுத்தி யாரைத் தடுத்து நிறுத்துவார்கள்? எப்படி வில்லைச் செலுத்துவார்கள்?'' என்று கேட்டனர் படைத்தலைவர்கள்.

38. "புரம் கடந்த அப்புனிதனே முதலிய புலவோர்
வரங்கள் தந்து, உலகு அளிப்பவர் யாவரும், மாட்டார்,
கரந்து அடங்கினர்; இனி, மற்று, அவ்வரக்கரைக் கடப்பார்
குரங்கு கொண்டு வந்து, அமர்செய்யும் மானுடர் கொல்லாம்?" (9419)

(புரம்-முப்புரம்; கடத்தல்-வெல்லுதல்; புனிதன்-தூயோன்; புலவோர்-தேவர்கள்; அளித்தல்-காத்தல்; கரத்தல்-மறைத்தல்; அமர்-போர்)

''முப்புரங்களையும் வென்று அழித்த, தூயோனான சிவபெருமான் முதலிய தேவர்கள், வேண்டுவோர்க்கு வேண்டிய வரங்களைத் தந்து, இவ்வுலகத்தினைக் காக்கின்ற கடமை ஆற்றுபவர்கள் எல்லோரும், இவ்வரக்கர்கள் முன் நிற்கமாட்டாதவராய், தம்மை மறைத்து ஒளித்துக் கொண்டு அடங்கிப்போனார்கள்; அவ்வாறிருக்க, அவ்வரக்கர்களை வெல்லுவதற்காகக் குரங்குக்கூட்டத்தைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வந்து போர்செய்ய விழைபவர்கள் இந்த மானிடர் என்று கூறப் படுகின்ற இராமஇலக்குவர்தாமோ?'' என்று கேட்கிறார்கள் பெரும் படைத் தலைவர்கள்.

முப்புரம் எரித்த சிவபெருமான் முதலிய தேவர்களாலேயே வெல்லப் பட முடியாத இவ்வரக்கர்களை, இரண்டு மானிடர்கள் குரங்கின் துணை கொண்டு வென்று அழிக்கமுடியுமோ? என்று கேட்கிறார்கள் என்பதாம். முப்புரம் எரித்த வரலாறு காப்பியத்தில் பல இடங்களில் பேசப் பட்டிருப்பது நாம் அறிந்ததே.

39. "ஊழி ஆயிரகோடி நின்று, உருத்திரனோடும்
ஆழியானும், மற்று அயனொடு புரந்தரன் அவனும்,
சூழ ஓடினர்; ஒருவரைக்கொன்று தம் தோளால்
வீழுமா செய்ய வல்லரேல், வெற்றியின் நன்றே!" (9420)

Koviloor Digital Library

(உருத்திரன்-சிவபெருமான்; ஆழி-சக்கரப்படை; அயன்-பிரமன்; புரந்தரன்-இந்திரன்; நன்று-பெரிது)

''அழித்தற்கடவுளான சிவபெருமானும், சக்கரப்படையை உடைய திருமாலும், மற்றும் பிரமதேவனும், இந்திரனும், ஆகிய இவர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு ஆயிரம்கோடி ஊழிக்காலம் வரையிலும் இவ்வரக்கர்களை எதிர்த்து நின்று அவர்களைப் பின்பற்றிச் சென்று போர்செய்து, அவர்களுள் ஒரே ஒருவனை மட்டும் தம் தோளாற்றலால் கொன்றுவிழுமாறு செய்யும் வல்லமையுடையர் என்றால், அவர்கள் இதுவரையிலும் பெற்ற வெற்றிகளுள் இதுவே பெரிய வெற்றியாகக் கருதப்படும்'' என்கின்றனர் அப்படைத் தலைவர்கள்.

40. "என் அப்பா! மற்று இவ்எழுபது வெள்ளமும், ஒருவன்
தின்னப் போதுமோ? தேவரின் வலியமோ, சிறியேம்?
முன், இப் பார் எலாம் படைத்தவன், நாள்எலாம் முறைநின்று
உன்னிப் பார்த்து நின்று, உறையிடப் போதுமோ யூகம்?" (9421)

(சிறியேம்-சிறுமையுடையவர்கள்; நாள்-வாழ்நாள்/ஆயுள்; உன்னுதல்-கருதுதல்; யூகம்-சேனை/வியூகம்)

''என் தந்தைபோன்றவனே! நமது எழுபது வெள்ளம் வானரச் சேனையும், அந்த அரக்கர்களுள் ஒருவனுடைய உணவுக்குப் போது மானதாக இருக்குமோ? நாம் வலிமையில் தேவர்களைக் காட்டிலும் சிறியவர்கள் அல்லவா? முன்பு, இந்தப் பூமியைப் படைத்தருளியவனான பிரமன், தன் வாழ்நாள் முழுவதும் முறையாகச் செலவிட்டு, நன்கு கருதிப்பார்த்து இவ்வரக்கர் சேனையை எண்ணிக்கொண்டிருந்தாலும், நமது சேனை அதற்கு உறைபோடக்கூடக் காணாது அல்லவா?'' என்று கேட்கின்றனர் பெரும்படைத் தலைவர்கள்.

அரக்கர்படையின் பெருக்கத்திற்கும், வலிமைக்கும், நம் வானரச் சேனையின் அளவும், ஆற்றலும் உறைபோடக்கூடக் காணாது என்கிறார்கள் என்பதாம். மிகப்பெரிய அளவாக உள்ளவற்றைக் கணக்கிடும்போது, நூற்றுக்கு ஒன்றாக அடையாளம் வைத்துக்கொண்டு கணக்கிடுவது உறையிடுதல் எனப்படும். 'யூகம்' என்பது 'வியூகம்' என்ற வடசொல்லின் திரிபு. சேனை என்பது பொருள். இங்கு 'அப்பா' என்பது அருமை பற்றியும், அன்பு பற்றியும் வந்தது எனக்கொள்க.

41. "நாயகன் தலை பத்து உள; கையும் நால் ஐந்து; என்று
ஒயும் உள்ளத்தேம்; ஒருவன் மற்று அவன் வந்து, இங்கு உற்றார்
ஆயிரம் தலை; அதற்கு இரட்டிக் கையர்; ஐய!
பாயும் வேலையின் கூலத்து மணலினும் பலரால். (9422)

Koviloor Digital Library

(நாயகன்-தலைவன்; ஒய்தல்-தளர்தல்; உற்றார்-அடைந்துள்ளவர்கள்; கூலம்-கரை; பாய்தல்-தவழ்தல்)

''ஐயா! நம் பகைவர்களின் தலைவனான ஒப்பற்ற இராவணனுக்குப் பத்துத் தலைகளும், இருபது கைகளும் உள்ளனவே என்று அஞ்சி மனம் தளர்ந்துபோய் இருக்கிறோம். மேலும் இங்கு வந்து குவிந்திருக்கும் இந்த அரக்கர்கள் ஒவ்வொருவரும் ஆயிரம் தலைகளும், அதற்கு இரண்டு மடங்கான இரண்டாயிரம் கைகளும் உடையவர்களாக இருக்கிறார்கள்; இவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் அலைகள் பாயும் கடலின் கரையில் உள்ள மணலைக்காட்டிலும் அதிகமாக இருக்கிறார்களே!'' என்று தம் அச்சத்தையும், அவர்களுக்கு எதிர்நின்று போரிடும் வன்மை இன்மையையும் குறிப்பால் புலப்படுத்துகின்றனர் படைப்பெரும் தலைவர்கள்.

''ஒய்தல்'' என்பது ஊக்கம் குன்றித் தளர்வடைவதைக் குறிக்கும். ஏதாவது ஒருபொருள் எண்ணமுடியாமல் போனால், இவ்வளவு என்று அளந்து அறுதியிட்டுக் கூறமுடியாமற் போனால், அதற்குக் கடற்கரை மணலை உவமை கூறுவது கவிமரபு. ''தொல்லை நம் பிறவி எண்ணில், தொடுகடல் மணலும் ஆற்றா எல்லைய'' என்பது சீவகசிந்தாமணி. ''கருங்கடலைக் கைநீத்துக் கொளல் எளிது; முந்நீர்க் கடற்கரையின் நொய்மணலையெண்ணி அளவிடலல் ஆமோ?'' என்பது சேக்கிழார் புராணம். ''பத்துத் தலைகளும் இருபது கைகளும் உடைய அரக்கர் தலைவன் ஒருவனுக்கே அஞ்சி மனந்தளர்ந்துபோயிருக்கிற நாங்கள், கடல் மணலினும் அதிகமான எண்ணிக்கையுள்ளவர்களும், ஒவ்வொருவரும் ஆயிரம் தலைகளும், ஈராயிரம் கைகளும் உடைய இவ்வரக்கர்களுடன் எப்படிப் போர்செய்து வெல்லமுடியும்?'' என்று கேட்கிறார்கள் என்பது குறிப்பு.

42. கும்பகன்னன் என்று உளன், மற்று இங்கு ஒருவன், கைக்கொண்ட,
அம்பு தாங்கவும், மிடுக்கு இலம்; அவன் செய்தது அறிதி;
உம்பர் அன்றியே, உணர்வு உடையார் பிறர் உளரோ?
நம்பி! நீயும் உன் தனிமையை அறிந்திலை; நடந்தாய்'' (9423)

(மிடுக்கு-வலிமை; உம்பர்-தேவர்கள்; நம்பி-இளையவன்; கடத்தல்-திரும்பி அழைக்கவருதல்; அறிதி-அறிவாய்; உணர்வு-தெளிவு)

''கும்பகன்னன் என்று ஒரு அரக்கன் இங்கு இருந்தான்; அவன் ஒருவன் கையிற்கொண்டுள்ள அம்பையே எதிர்நோக்கும் சக்தியற்றவர்களாய் நாங்கள் இருந்தோம். அவன் எவ்வாறு போர்செய்தான் என்பதை நீயும்தான் அறிந்திருக்கிறாயே! தேவர்களைத்தவிர வேறு யார் அவனைப்பற்றி மிகத்தெளிவாக அறிந்திருக்கிறார்கள்? அவர்களே அவனை எதிர்க்கத் துணியவில்லை; நீ உன்னுடைய தனிமையான நிலையை எண்ணிப்

Koviloor Digital Library

பார்க்காமல் எங்களைத் திரும்பவும் போர்க்களத்திற்கு அழைத்துப்போகும் பொருட்டு இங்கு வந்திருக்கிறாயோ!'' என்று பேசுகின்றனர் பெரும் படைத் தலைவர்கள்.

கும்பகன்னன் என்ற ஒருவன் செலுத்திய அம்பையே தாங்கும் ஆற்றல் அற்றவர்களான நாம், கோடிக்கணக்கான இந்த வீரர்கள் செலுத்தப் போகும் அம்புமழையை எவ்வாறு தாங்கி உயிர் வாழ முடியும் என்பது அவர்கள் ஐயப்பாடு என்பதை அவர்கள் அங்கதனுக்குத் தெரிவிக்கிறார்கள் என்பதாம். 'உணர்வு' என்பது இங்கு சற்று விரிந்த பொருளைத்தரும். பின்னால் என்ன நடக்கும், அதன் விளைவு யாதாய் இருக்கும் என்பதை நன்கு உணர்ந்து அதற்கேற்றபடி தம்மை முன் எச்சரிக்கையாகப் பாதுகாத்துக் கொள்ளும் நல்லுணுர்வு'' என்ற விரிந்த பொருளைத்தரும். எல்லா இடங்களிலும் அரக்கர்களைக் கண்டவுடனே, தம் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற தன்முனைப்பினால் தம்மை ஓடி ஒளித்துக்கொண்டவர்கள் தேவர்கள் என்பதைக் காப்பியப் போக்கில் பல இடங்களிலும் காணலாம். அந்த முன் எச்சரிக்கை ஆயத்தமே இங்கு 'உணர்வு' எனப்பட்டது எனக்கொள்க. 'நம்பி' என்ற சொல் இங்கே ஆடவரிற் சிறந்தோன் என்ற பொருளைத் தருவதைக் காட்டிலும் பின்விளைவறியாத இளையோன், அறியாப்பிள்ளை, என்ற பொருளைத் தருவதாகக் கொள்ளுதல் சாலப்பொருந்தும்.

43. "அனுமன் ஆற்றலும், அரசனது ஆற்றலும், இருவர்
தனுவின் ஆற்றலும், தம் உயிர் தாங்கவும் சாலா;
கனியும் காய்களும் உணவுஉள; முழைஉள, கரக்க;
மனிதர் ஆளின் என், இராக்கதன் ஆளின்என், வையம்? (9424)

(அரசன்-சுக்கிரீவன்; தனு-வில்; சாலா-போதியன அல்ல; முழை-குகை; வையம்-மாநிலம்/உலகம்; இருவர்-இராமஇலக்குவர்; கரத்தல்-மறைந்து கொாள்ளுதல்)

''அனுமனது பேராற்றலும், நம்குலத்து அரசனாகிய சுக்கிரீவனின் பெருவன்மையும் மானிடர்களாகிய இருவரான இராமஇலக்குவர்களின் வில்லின் ஆற்றலும், அவர்களுடைய உயிரையே காப்பாற்றிக் கொள்ளவே போதாததாகும். இந்நிலையில் நாங்கள் உயிர்வாழ்வதற்குரிய உணவு வகைகளாகக் கனியும், காய்களும் கானகத்தே ஏராளமாய்க் கிடைக்கின்றன. நாங்கள் எங்களை மறைத்துக்கொண்டு பாதுகாப்பாக வாழ, அங்கங்கே உள்ள மலைகளில் குகைகள் உள்ளன. இந்நிலையில் இந்த உலகத்தை மானிடனாகிய இராமன் ஆண்டால் என்ன? அரக்கனாகிய இராவணன் ஆண்டால் என்ன? எங்களுக்கு ஒரு தீங்கும் நேராது, பயனும் ஒன்றும் விளையப்போவதில்லை. எனவே அதைப்பற்றி நாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? நாங்கள் மகிழ்ச்சியாய் உண்டு, மறைந்து வாழ்வோம்'' என்கின்றனர் பெரும்படைத் தலைவர்கள்.

Koviloor Digital Library

''இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கிற ''மனிதர் ஆளின் என்? இராக்கதர் ஆளின் என்?'' என்ற சொற்றொடர்தான் பின்னாளில் ''இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?'' என்ற பழமொழியாக உருமாறி வந்தது எனலாம்.

44. ''தாம் உளார் அன்றே புகழினைத் திருவொடும் தரிப்பார்?
யாம் உளோம் எனின், எம்கிளை உள்ளது; எம்பெரும!
''போமின் நீர்'' என்று விடைதரத் தக்கனை, புரப்போய்!
''சாமின் நீர்'' என்றல் தருமம் அன்று'' என்றனர், தளர்ந்தார். (9425)

(திரு-செல்வம்; தரித்தல்-தாங்கியிருத்தல்; உளார்-உயிருடன் உள்ளவர்; பெரும-பெருமானே/பெருமைக்குரியவனே; கிளை-சுற்றம்; புரப்போய்-பாதுகாப்பவனே; புரத்தல்-பாதுகாத்தல்)

''ஒருவர் உயிருடன் இருந்தால் அல்லவோ அவர் தமக்கும் பிறர்க்கும் புகழினைத் தருவதோடு, பெரும் செல்வமும் பெற்று வாழ்ந்திருப்பார்? எனவே நாங்கள் உங்களுக்கு இப்பொழுது உதவவேண்டுமென்றால் முதலில் நாங்கள் உயிருடன் இருக்க வேண்டும். அவ்வாறு நாங்கள் உயிருடன் இருந்தால், எங்கள் சுற்றத்தாரும் உயிருடன் நிலைத்திருப் பார்கள்; எங்கள் மதிப்பிற்குரிய இளவரசே! வானர வீரர்களையெல்லாம் நன்கு பாதுகாப்பவனே! ''நீங்கள் எல்லோரும் முதலில் உயிருடன் செல்லுங்கள்'' என்றுகூறி எங்களுக்கு இங்கிருந்து விடைதர வேண்டிய கடப்பாடு உடைய நீ, எங்களைப் ''போரிட்டு உயிர் துறவுங்கள்'' என்று கூறுதல் தருமத்தின்பாற்பட்டதன்று'' என்று மனம் தளர்ந்து கூறினர் பெரும்படைத் தலைவர்கள்.

''புகழ்'' என்பது, ஒருவர் இவ்வுலகில் உயிரோடு இருக்கும் பொழுதே நல்ல செயல்களைச் செய்து, அவர் உயிர் நீங்கிய பின்னும், அதனால் அவர் பெயர் நிலைத்து நிற்கும் கீர்த்தியாகும்.

45. சாம்பனை, வதனம் நோக்கி, வாலிசேய், ''அறிவு சான்றோய்!
''பாம்பு அணை அமலனே மற்று இராமன்'' என்று எமக்குப் பண்டே
ஏம்பல் வந்து எய்தச் சொல்லித் தேற்றினாய் அல்லையோ நீ?
ஆம்பல் அம் பகைஞன் தன்னோடு, அயிந்திரம் அமைந்தோன்
அன்னாய்!'' (9426)

(ஆம்பல்-அல்லிமலர்; அம்-அழகிய; பகைஞன்-சூரியன்; அயிந்திரம்-இலக்கணம்; பாம்பு-ஆதிசேஷன்; அணை-பாயல்/படுக்கை; அமலன்-குற்றமற்றவன்/தூயோன்; ஏம்பல்-மகிழ்ச்சி; தேற்றுதல்-தெளிவுறுத்துதல்; பண்டு-முன்பு)

வாலியின் புதல்வனான அங்கதன், சாம்பவனை முகம் பார்த்து, ''அறிவிலும் சான்றாண்மையிலும் மிக்கவனே! அழகிய அல்லிமலருக்குப்

Koviloor Digital Library

பகைவனான சூரியனிடம் அயிந்திரம் என்ற இலக்கணத்தைக் கற்றறிந்த அனுமனோடு நிகர்த்தவனே! முன்பு, ''ஆதிசேஷன் என்னும் பாம்புப் படுக்கையில் அறிதுயில் கொள்ளுகின்ற தூயவன் திருமால்தான் இந்த இராமபிரான்'' என்று எங்களுக்கு மகிழ்ச்சி பொருந்தும்படி கூறித் தெளிவுறுத்தியவன் அல்லவா நீ! நீயே இவ்வாறு செய்யலாமா?'' என்கிறான் அங்கதன்.

சாம்பவன் கரடிகளுக்குத் தலைவன். வயது முதிர்ந்தவன் என்பதை இப்பொழுது நினைவிற்குக் கொண்டுவருக. ''ஆம்பல் அம்பகைஞன்'' என்பது சூரியனைக் குறிக்கும். இரவில் மலரும் ஆம்பல் சூரியன் வந்ததும் கூம்பிப் போய்விடுவதால் அல்லிமலரைச் சூரியனுக்குப் பகைஞன் என்று கவிநயம் புலப்படக் கூறினார் என்க. 'அயிந்திரம்' என்பது ஐந்திரம் என ஆகும். இது இந்திரனால் வடமொழியில் இயற்றப்பட்ட இலக்கணநூல். ''வேதம் ஒரு நாலுடன், விளங்கிய சடங்கமும், விரிந்த கலையும், ஓத நிலவீதிமிசை ஏழுபரிபூண் அருணன் ஊர, விரைதேர்மீது செலும் வெங்கதிரவன் தன்னோடு, அயிந்திர வியாகரணமும் ஓதி, ஒருநாளினில் உணர்ந்தனன் இம்மாருதி, உயர்ந்த புகழோய்!'' என்பது உத்தரகாண்டம் அனுமப்படலம். அங்கதன் இளையவன்; சாம்பவன் வயது முதிர்ந்தவன். அவன் இப்போது சாம்பவனை முகம் நோக்கி ''போரில் தோற்றோடுதல் முறையன்று'' என்று காரணங்காட்டி அறிவுறுத்தத் தொடங்குகிறான் என்பது நினைக்கற்பாலது.

46. ''தேற்றுவாய் தெரிந்து சொல்லால் தெருட்டுவாய், தெளிவிலோரை
ஆற்றுவாய் அல்லை; நீயும் அஞ்சினைபோலும்! ஆவி
போற்றுவாய் என்றபோது புகழ்என் ஆம்? புலமை என் ஆம்?
கூற்றின் வாய் உற்றால், வீரம் குறைவரே இறைமை கொண்டார்?''(9427)

(தெரிந்து-ஆராய்ந்து; தெருட்டுதல்-தெரிவித்தல்; தேற்றுதல்-ஆறுதல் கூறுதல்; ஆவி-உயிர்; போற்றுதல்-பாதுகாத்தல்; இறைமை-தலைமைப் பண்பு; புலமை-கல்விநயம்; ஆற்றுதல்-தாங்கிக்கொள்ளுதல்)

அங்கதன் சாம்பவனை நோக்கி, ''பயம்கொண்டு பின்வாங்கிச் சென்றவர்களை ஆராய்ந்து தெரிந்து எடுத்த சொற்களால் ஆற்றுப்படுத்தி அவர்களுக்குத் தெளிவினை உண்டாக்கி, அவர்களைப் போர்க்களத்திற்கு வரும்படி அழைப்பதைத் தவிர்த்து, நீயும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு, அச்சம் கொண்டு எதிரிகளின் ஆற்றலைத் தாங்கமுடியாதவனாகிப் போர்க்களத்தை விட்டு நீங்கிப் போயினையே? வீரத்தையும், கொள்கையையும் விட்டுவிட்டு, உயிர் ஒன்றே பெரிதென்று அதையே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்ற போது, ஒருவருடைய புகழால்தான் என்ன பயன்? அவர்களுடைய அறிவாற்றலால்தான் என்ன பயன்? தலைமைப் பண்புடைய ஒருவர் இயமன் வாயில் அகப்பட்டுக் கொண்டபோது தனது இயல்பான

Koviloor Digital Library

வீரத்தன்மையில் குறைந்துபோய் விடுவார்களோ!'' என்று கேட்கிறான் அங்கதன்.

''போலும்'' என்பது ஒப்பில் போலி; ''நீயும்'' என்பதில் உம்மை உயர்வு சிறப்பு. ''ஆம்'' என்பது ஆகும் என்பதன் இடைக்குறை; ''குறைவரே'' என்பதில் உள்ள ஏகாரம் எதிர்மறைப்பொருளது. குறையமாட்டார்கள் என்ற பொருளைத்தரும். ''இறைமை'' என்பது தலைமைப் பண்பைக் குறிக்கும். ஆவி போனபோதும் புகழும் அறிவும் அழியாது என்பது மூன்றாம் அடியின் கருத்து. ''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பது ஒன்று இல்'' என்பது குறள்-232. ''கூற்று உடன்று மேல்வரினும், கூடி எதிர்நிற்கும் ஆற்றல் அதுவே படை'' என்பது குறள்-765. ''உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண், தொலைவிடத்துத் தொல்படைக்கு அல்லால் அரிது'' என்பது குறள்-762.

47. ''அஞ்சினாம்; பழியும் பூண்டாம்; அம் புவியாண்டும், ஆவி
துஞ்சுமாறு அன்றி, வாழ ஒண்ணுமோ நாள்மேல் தோன்றின்?
நஞ்சு வாய் இட்டாலன்னது அமுது அன்றோ? நம்மை, அம்மா,
தஞ்சம் என்று அணைந்த வீரர் தனிமையில், சாதல் நன்றே!'' (9428)

(பூணுதல்-மேற்கொள்ளுதல்; அம்புவி-அழகிய பூமி; ஆவிதுஞ்சுதல்-இறந்துபடுதல்; ஒண்ணுமோ-முடியுமோ; நாள்-வாழ்நாள்/ஆயுள்; அம்மா-அந்தோ; தஞ்சம்-அடைக்கலம்/பற்றுக்கோடு; அணைதல்-அடைதல்/சார்தல்; வீரர்-இராமஇலக்குவர்; சாதல்-இறந்துபடுதல்)

''பகைவர்களுடன் எதிர்த்துப் போரிடாமல் அச்சம்கொண்டு தோற்றுப் பின்வாங்கி வந்துவிட்டோம் என்ற பழியையும் உண்டாக்கிக் கொண்டு விட்டோம்; இனிமேல் இந்த அழகிய பூமியில் போர்க்களத்தை விட்டு வேறு எங்கு சென்றாலும், நம் வாழ்நாள் முடியவேண்டும் என்று கணக்கிடப்பட்டு விட்டால் காலனிடமிருந்து நம் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு உயிர் இழக்காமல் ஆண்மையுடன் உலகில் வாழ்ந்துவிட முடியுமோ? இவ்வாறு நாம் ஓடிவருவது அமுதம் என்று நினைத்து நஞ்சை வாயில் போட்டுக்கொண்டதுபோல் ஆகாதா? நம்மை நாடிவந்து நம்மையே பற்றுக்கோடாகக் கொண்டு, நமது உதவியை வேண்டிப் பெற்ற அந்த வீரர்களாகிய இராமஇலக்குவரைத் தனிமையில் விட்டுவிட்டு வருவதைக் காட்டிலும் நாமே இறந்துபடுதல் மிகவும் நல்லதாகும்'' என்கிறான் அங்கதன்.

''துஞ்சுதல்'' என்பது இறத்தல் என்பதன் மங்கல வழக்கு. இப்போது நாம் இறந்துபடாமல் இன்னும் உயிர்வாழ்ந்து கொண்டிருந்தால் அப்போது நாம் இனிய சுவையுடைய அமுதம் என்று நினைத்து வாயில் போட்டுக்கொள்ளும் உணவுகூட இனிய சுவையற்ற நஞ்சினை வாயில் இட்டுக்கொண்டது போன்ற ஒரு வெறுப்புணர்ச்சியை-கசப்புணர்ச்சியை

Koviloor Digital Library

தருமல்லவா? என்பது மூன்றாம் அடியின் கருத்து. ''அச்சம் உடையார்க்கு அரண் இல்லை'' என்பது குறள்-534. ''கெடுங்காலைக் கை விடுவார் கேண்மை, சுடுங்காலை உள்ளினும், உள்ளம் சுடும்'' என்பது குறள்-799.

48. "தானவரோடும், மற்றைச் சக்கரத் தலைவனோடும்,
வானவர் கடையமாட்டா மறிகடல் கடைந்த வாலி,
ஆனவன் அம்பு ஒன்றாலே உலந்தமை, அயர்த்தது என் நீ?
மீன் அலர் வேலைபட்டது உணர்ந்திலை போலும், மேலோய்!" (9429)

(தானவர்-அசுரர்கள்; சக்கரத்தலைவன்-திருமால்; மறிதல்-மடங்குதல்; உலந்தமை-உயிர் இழந்தமை; அயிர்த்தது-மறந்தது; என்-எவ்வாறு/ எப்படி; அலர்தல்-விளங்குதல்; மேலோன்-மேன்மையானவன்/ உத்தமன்)

''மேலானவனே! அசுரர்களோடும், மற்றும் சக்கரப்படையைக் கைக்கொண்டவனான இறைவன் திருமாலோடும் சேர்ந்து, தேவர்கள் பாற்கடலைக் கடைய முற்பட்டபோது, அதனைக் கடையமாட்டாமல் தளர்ந்து நின்றபோது, மடங்குகின்ற அலைகளையுடைய அந்தக் கடலைத் தன் தோள்வலியால் தான் ஒருவனே தனித்து நின்று கடைந்து நிறைவேற்றிய வாலி என்பவனை, தனது ஒரே அம்பினால் இந்த இராமபிரான் அவன் உயிரிழக்கும்படி செய்த செயலை நீ மறந்து போனாயோ? எவ்வாறு மறந்தாய்? பின்னர் வருணனை வழிவேண்டிய போது, அவன் வரக் காலம் தாழ்த்தியதால் அந்த மீன்கள் நிறைந்து விளங்குகின்ற கடல் பட்ட பாட்டினை நீ நேரே கண்டிருந்தும் இன்னும் நன்கு உணர்ந்து கொள்ளவில்லையோ?'' அல்லது அதனை மறந்து போய்விட்டாயோ? என்று பழைய இரு நிகழ்ச்சிகளையும் சாம்பவனுக்கு நினைவூட்டுகிறான் அங்கதன்.

''வாலி ஆனவன்'' என்ற சொற்றொடரை நோக்குங்கள். அங்கதனின் தந்தைதான் வாலி என்பதை நாம் அறிவோம். அவன் தன் தந்தை என்று கூறாது, வானரர்களின்தலைவன்என்று கூறும் பாங்கு நோக்குக. தன்தந்தை இறந்துபட்டான் என்று கூறுவதற்கு அஞ்சி, ''உலந்தமை'' என்று கூறியதையும் நுனித்து உணர்க. வாலிவதையும், வருணனை வழி வேண்டுதலும் பேசப்படுகின்றன.

49. "எத்தனை அரக்கரேனும், தருமம் ஆண்டு இல்லை அன்றே?
அத்தனை அறத்தை வெல்லும் பாவம் என்று அறிந்தது உண்டோ?
பித்தரைப்போல நீயும் இவருடன் பெயர்ந்த தன்மை
ஒத்திலது" என்னச் சொன்னான், அவன் இவை உரைப்பதானான். (9430)

(ஆண்டு-அங்கு; அறிதல்-கேள்வியுறுதல்; பித்தர்-அறிவு திரிந்தோர்/ உன்மத்தர்; பெயர்தல்-ஓடுதல்/நீங்குதல்; ஒத்திலது-ஒத்ததன்று)

Koviloor Digital Library

''அரக்கர்படையில் எத்தனைக் கோடிப்பேர் திரண்டு வந்தாலும் அவர்களிடத்தில் அறம், தருமம் என்ற பெருங்குணம் ஒன்று அங்கே இல்லையல்லவா? அவ்வாறு இருக்கும்போது அறம் வெல்லும்தானே! பாவம் தோற்கும்தானே! அதனை விட்டு பாவம் வென்றது அறம் தோற்றது என்று எங்காவது, எப்போதாவது நாம் கேள்விப்பட்டிருக்கிறோமா? அறிவு திரிந்த பித்தர்களைப்போல நீயும்கூட இந்த வானரத் தலைவர்களோடு சேர்ந்து, போர்க்களத்தினின்றும் இராமபிரானிடமிருந்தும் நீங்கி ஓடிவந்தது, உன் தகுதிக்கு ஏற்ற செயலன்று'' என்று அங்கதன் கூறினான். அதனை முழுவதும் கேட்ட சாம்பவன் பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

போரில் வெற்றிபெறுவது என்பது நால்வகைச் சேனை பலத்தால் மட்டுமல்ல, அறம் துணை நிற்கவேண்டும். இதனை வலியுறுத்தும் புறநானூற்றுப்பாடல் ஒன்று கேளுங்கள். ''கடுஞ்சினத்த கொல்களிறும், கதழ்பரிய கலிமாவும், நெடுங்கொடிய நிமிர்தேரும், நெஞ்சுடைய புகன்மறவரும் என, நான்குடன் மாண்டதாயினும், மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'' என்பது புறநானூறு-55. ''உண்டோ'' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. இல்லை என்ற பொருளைத்தரும்.

50. சாம்பவன் மறுமொழி கூறுதல்

நாணத்தால் சிறிது போது நலங்கினன் இருந்து, பின்னர்,
''தூண் ஒத்த திரள்தோள்வீர! தோன்றிய அரக்கர் தோற்றம்
காணத்தான், நிற்கத்தான், அக் கறைமிடற்றவற்கும் ஆமே?
கோணற்பூ உண்ணும் வாழ்க்கைக் குரங்கின்மேல் குற்றம் உண்டோ?''
(9431)

(போது-நேரம்; கறை மிடற்றவன்-சிவபெருமான்; மிடறு-கழுத்து; ஆமோ-ஆகுமோ/முடியுமோ; கோணல்-கூன்/வளைவு; நலங்குதல்-மனத்தளர்வு கொள்ளுதல்; கறை-நஞ்சு; தோற்றம்-காட்சி)

தன்னை அங்கதன் அவ்வாறு கேட்டதும், சற்று நாணம் கொண்டு மனத்தளர்ச்சியுற்று அமைதியாய் நின்றவனான சாம்பவன், பின்னர், துணிந்து, அங்கதனை நோக்கி, ''தூண்போன்று திரண்ட, பருத்த, உயர்ந்த, உறுதியான தோள்களை உடையவனே! அங்கு வந்து சேர்ந்த அந்த அரக்கர்களின் மிகப்பெரிய கூட்டத்தின் காட்சியும், அவர்கள் உருவமும் காண்பதற்கும், கண்டபின் அவர்களை எதிர்த்து நிற்பதற்கும், அந்த ஆலகால விஷம் அருந்திய கழுத்தினைக் கொண்ட நீலகண்டனான சிவபெருமானாலாவது முடியுமா? முடியாதல்லவா? அவ்வாறு இருக்கும் போது இந்தக் கூனல் முதுகையுடையனவும், பூ, காய், கனி முதலிய வற்றையே தம் உணவாக உட்கொள்ளும் இயல்பு உடையனவுமான எளிய

Koviloor Digital Library

குரங்குகளின்மேல் குற்றம் கூறமுடியுமா? முடியாது அல்லவா?'' என்று கேட்கிறான் சாம்பவன்.

தன்னைவிட வயதில் இளையவனானவனும், இளவரசனுமான அங்கதன் தன் வலிமையைக் குறைத்துக் கூறியதால் சாம்பவன் சற்று வெட்கப்பட நேர்ந்தது. ''நலங்கினன்'' என்ற சொல் நமக்குப் புதிது. தளர்வடைதல் என்று பொருள்படும். ''ஆமே'' என்பது ஆகுமே என்பதன் இடைக்குறை. இங்கே ஏகாரம் எதிர்மறைப்பொருளது; ஆகாது என்ற பொருளைத்தரும். ''ஆலகால விஷத்தையே உட்கொண்டு உடல் வலி பெற்றவன் சிவபெருமான். அவனாலேயே இந்த அரக்கர்கூட்டத்தைக் காணவும் எதிர்த்து நிற்கவும் முடியவில்லை என்றால், இந்தக் கூனல் முதுகை உடைய, எளிய, பூ, காய், கனி முதலியவற்றையே உண்ணும் இயல்புடைய குரங்குகளால் அவர்களை நேருக்குநேர் காணத்தான் முடியுமா? அவர்களை எதிர்த்துப் போரிட்டு நிற்கத்தான் முடியுமா? எனவே அவர்களைக் குறை கூறுவது தகாது'' என்கிறான் சாம்பவன் என்பதாம். ''கறை மிடற்றவர்க்கும்'' என்னும் இடத்து உம்மை உயர்வு சிறப்பைக் குறித்தது. அவர்கள் அஞ்சி ஓடியது அவர்களின் ஆற்றலின்மையை உணர்த்தியதே அன்றி, அதைக் குற்றமுடைய செயலாகக் கருதக்கூடாது என்பது சாம்பவன் கருத்து.

51. "தேவரும், அவுணர் தாமும், செருப் பண்டு செய்த காலம்,
ஏவரே என்னால் காணப்பட்டிலர்? இருக்கை ஆன்ற
மூவகை உலகின் உள்ளார்; இவர் துணை ஆற்றல் முற்றும்
பாவகர் உளரே? கூற்றை அஞ்சினால், பழியும் உண்டோ?" (9432)

(அவுணர்-அசுரர்; செரு-போர்; ஆன்ற-நிறைந்த; துணை-அளவு; முற்றும்-நிரம்பிய; பாவகர்-கொடியோர்; பாவகம்-தன்மை; இருக்கை-இருப்பிடம்)

''முற்காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த தேவாசுரப் போரில் என்னால் காணப்படாதவர்கள் யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை; இம்மூவுலகிலும் பெருமைமிக்க நிலைபெற்ற இடத்தை உடையவர்களில், இந்த மூலபலப்படை சார்ந்த அரக்கர்கள்போல அளவுக்கு நிரம்பிய முதிர்ந்த ஆற்றல் பெற்ற கொடியவர்கள் யாரும் இருக்கிறார்களா? ஒருவரும் இல்லை; அப்படியிருக்க இந்தக் குரங்குகள் இயமனைப்போன்ற அவ்வரக்கர்களைக் கண்டு அஞ்சி ஓடிவந்ததை ஒரு பெரும்பழியைத்தரும்செயலாகக்கருதலாமா? கூடாது அல்லவா?'' என்று கேட்கிறான் சாம்பவன்.

எவரே என்பது எதுகைநோக்கி ஏவரே என நீண்டது. ''உளரே'' என்ற இடத்தில் ஏகாரமும், ''உண்டோ'' என்ற இடத்தில் ஓகாரமும் இல்லை என்ற எதிர்மறைப் பொருளைத் தரும். ''பாவகம்'' என்ற சொல்லுக்குத்

Koviloor Digital Library

தன்மை என்பது நேர்பொருள். இங்கே கொடுமைத் தன்மை என்ற பொருளைத்தந்து நின்றது எனக்கொள்க; தான் இதுவரை பல தேவாசுர யுத்தங்களைக் கண்டிருப்பதாகவும், அங்கெல்லாம் இவர்களைப்போன்ற பெருவலி படைத்த அரக்கர்களைக் கண்டதேயில்லை என்றும் அதனால் இவர்களைக் கண்டு அஞ்சி ஓடிவந்த குரங்குகளின்மேல் பழி சுமத்தக்கூடாது என்றும் கூறுகிறான் சாம்பவன் என்பதாம்.

52. "மாலியைக் கண்டேன், பின்னை மாலியவானைக் கண்டேன்,
காலநேமியையும் கண்டேன்; இரணியன் தனையும் கண்டேன்;
ஆலமா விடமும் கண்டேன்; மதுவினை அனுசனோடும்
வேலையைக் கலக்கக் கண்டேன்; இவர்க்கு உள மிடுக்கும் உண்டோ?"
(9433)

(அனுசன்-தம்பி/கைடபன்; மிடுக்கு-வலிமை; மா-கரிய)

"நான்மிகப் பழங்காலத்திலேயே இராவணனது பாட்டன்களானமாலி, மாலியவான் முதலியவர்களைப் பார்த்திருக்கிறேன். திருமாலால் கொல்லப்பட்ட காலநேமி என்னும் அரக்கனையும், நரசிங்க மூர்த்தியால் கொல்லப்பட்ட இரணியனையும் பார்த்து இருக்கிறேன். பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய கரிய ஆலகால விஷத்தையும், மது அவன் தம்பி கைடபனோடு கடலைக் கலக்கியபோது அவர்களிருவரையும்கூடக் கண்டிருக்கிறேன் என்றாலும் இந்த மூலபலப்படையில் உள்ள அரக்கர்களுக்கு உள்ள வலிமையை அவர்களிடம் நான் பார்த்ததில்லை; அவ்வளவு வலிமை மிக்கவர்களாக இவ்வரக்கர்கள் விளங்குகிறார்கள்" என்கிறான் சாம்பவன்.

மாலியும் மாலியவானும் இராவணனின் பாட்டன்மார்கள். காலநேமி என்பவன் நூறு தலைகளையும், நூறு கைகளையும் கொண்ட ஒரு அரக்கன். திருமாலுடன் போர்புரிந்து அவன் சக்கரப்படையால் தலைகளையும், கருடனால் கைகளையும் இழந்து வீழ்ந்தவன். இரணியன் வரலாறு நாம் அறிந்ததே. மது, கைடபர் வரலாறும் நாம் முன்பு கண்டுவந்ததே. இதனால் சாம்பவன் மிகப்பழங்காலந்தொட்டே வாழ்ந்து வருபவன் என்பதும் அவன் வயதை அறுதியிட்டுக் கூறமுடியாதென்பதும் விளங்கும். அவன் தான் திருமால் வாமன அவதாரத்தில் ஓங்கி உலகளந்த செய்தியை உலகிற்குப் பறையறிவித்தான் என்பதும் நாம் முன்பு கண்டுவந்ததே. எனவே அவன் அவர்கள் ஆற்றலையெல்லாம் இம்மூலபலப் படையினரின் ஆற்றலோடு ஒப்பிட்டு, இவர்களைப்போல ஆற்றலுடைய அரக்கர்களைத் தான் இதுவரை கண்டதில்லை என்று அங்கதனுக்குத் தெரிவிக்கிறான் - காலநேமி பின்னர்க்கம்சனாகவும், மது, கைடபர்பின்னர் கும்பகருணன், அதிகாயனாகவும் பிறப்பெடுத்தனர் என்பதும் ஒரு புராணக்குறிப்பு.

Koviloor Digital Library

53. "வலி இதன் மேலே, பெற்ற வரத்தினர்; மாயம் வல்லார்;
ஒலி கடல் மணலின் மிக்க கணக்கினர்; உள்ளம் நோக்கின்,
கலியினும் கொடியர்; கற்ற படைக்கலக் கரத்தர்; என்றால்
மெலிகுவது அன்றி உண்டோ, விண்ணவர் வெருவல் கண்டால்?"
(9434)

(வலி-வன்மை; மாயம்-வஞ்சனை/சூழ்ச்சி; கணக்கு-பேரெண்; உள்ளம்-மனத்தின் இயல்பு; கலி-கலிபுருடன்; வெருவல்-அஞ்சுதல்; மெலிகுவது-மனம் தளர்ந்து வருந்துவது)

''இவ்வரக்கர்கள் இயல்பாக இவ்வளவு வலிமைபெற்றவர் என்பதோடு மட்டுமல்ல; இவர்கள் தெய்வங்களிடமிருந்து மிகப்பல வரங்களும் பெற்றவர்கள்; அத்துடன் வஞ்சனை சூழ்ச்சி செய்வதில் வல்லவர்கள்; ஒலிக்கின்ற கடலின் கரையிலுள்ள நுண் மணலைக் காட்டிலும் மிக்க எண்ணிக்கையுள்ளவர்கள்; இவர்களுடைய மனத்தின் இயல்பு என்னவென்று பார்த்தால் கலிபுருடனைக் காட்டிலும் துன்பம் தருவதில் கொடியவர்கள்; இவர்கள் படைக்கலன்களைத் திறமையாகக் கையாளுவதில் தேர்ச்சி பெற்ற கைகளை உடையவர்கள்; இவர்களைக் கண்டு தேவர்கள் அஞ்சி ஓடி மறைகின்றனர் என்றால், எளியதான இந்தக் குரக்குச் சேனை மனம் தளர்ந்து வருந்தி, நடுங்கி அஞ்சிப் பின்வாங்கிச் செல்லுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?'' என்று கேட்கிறான் சாம்பவன்.

அவர்கள் வலிமை, வரபலம், வஞ்சனை, சூழ்ச்சி மிக்கவர்கள் என்றும், அளவிறந்தவர். என்றும் நளனைப்பற்றி வதைத்த கலிபுருடனைக் காட்டிலும் கொடியவர், படைக்கலப் பயிற்சி பெற்றவர் என்றும், தேவர்களே இவர்களைக் கண்டு அஞ்சி ஓடும்போது வானரர்கள் என்ன செய்யமுடியும் என்றும் பேசுகிறான் சாம்பவன் என்பதாம். ''உண்டோ'' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. இல்லை என்ற பொருளைத்தரும்.

54. "ஆகினும் ஐய! உண்டால், ஆர்க்கேனும் அமரின் அஞ்சிச்
சாகினும், பெயர்ந்த தன்மை பழிதரும்; நரகில் தள்ளும்;
ஏகுதும், மீள; இன்னும் இயம்புவது உளதால்; எய்தி
மேகமே அனையான் கண்முன், எங்ஙனம் விழித்து நிற்றும்?" (9435)

(ஆகினும்-ஆனாலும்/என்றாலும்; பெயர்தல்-மீள்தல்; ஏகுதும்-செல்வோம்; நிற்றும்-நிற்போம்)

சாம்பவன்அங்கதனைநோக்கி, ''ஐயனே! நாங்கள் இப்படிச்செய்தோம் என்றாலும், நமது உதவியை நாடி வந்தவர்க்கு நம் உயிரையும் கொடுத்து அவர்களைக் காப்பாற்றாது போருக்கு அஞ்சி ஓடிவந்த செயல்,

Koviloor Digital Library

இம்மையில் வசைச்சொல்லையும், மறுமையில் நரகத்தையும் எங்களுக்கு அளிக்கும். எனவே பழியினின்றும், நரகத்தினின்றும் தப்புவதற்காக இப்பொழுது நாம் திரும்பிச் செல்வோம் என்றாலும் உன்னிடம் கூறுவதற்கு இன்னும் ஒன்று இருக்கிறது. இவ்வாறு பழியேற்றபின் அந்த நீலநிற மேகம் போன்ற மேனியையுடைய இராமபிரான் கண்முன்னால் எவ்வாறு போய் நிற்கமுடியும்? வெட்கமாகவும் அச்சமாகவும் இருக்கிறதே!'' என்கிறான் சாம்பவன்.

இந்த நிலையில் இராமபிரானைச் சென்று காணுதற்குக் கூசினார்கள் என்பதாம். மேகம் இராமபிரான் நிறத்திற்கும், தன்மைக்கும் உவமை. இன்றுகூட நாம் பெரியவர்களிடம் பிழைகள் செய்துவிட்டால் அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது என்று வெட்கப்படுகிறோம் அல்லவா? அதுதான் இங்கே பேசப்படுகிறது. மணிவாசகரும் இவ்வாறு வெட்கப் பட்டார் கேளுங்கள். ''தாணுவே அழிந்தேன்; நின் நினைந்து உருகும் தன்மை, என் புன்மைகளால் காணும் அது ஒழிந்தேன், நீ இனி வரினும் காணவும் நாணுவனே'' என்பது திருவாசகம் எண்ணப்பத்து.

55. அங்கதன் சமாதானம் கூறுதல்

''எடுத்தலும், சாய்தல் தானும், எதிர்த்தலும், எதிர்ந்தோர் தம்மைப்
படுத்தலும், வீரவாழ்க்கை பற்றினர்க்கு உற்ற, மேல்நாள்;
அடுத்ததே அஃது நிற்க, அன்றியும் ஒன்றுகூறக்
கடுத்தது; கேட்டீர் நீரும் கருத்துளீர், கருதி நோக்கின்'' (9436)

(எடுத்தல்-போர்மேற்கொள்ளுதல்; சாய்தல்-பின்வாங்குதல்; படுத்தல் -கொன்று வீழ்த்துதல்; பற்றுதல்-கடைப்பிடித்தல்; மேல்நாள்-தொன்று தொட்டு; கடுத்தல்-விரைதல்; அடுத்தது-பொருத்தமானது)

''போர்செய்வதற்காகப் பகைவர் படையின்மேற் செல்லுதலும், சில சமயங்களில் தாழ்ந்து பின்வாங்குதலும், பெரும்பாலான சமயங்களில் அவர்களை எதிர்த்துப் போர்செய்தலும், அவ்வாறு நம்மோடு போரிட்டு எதிர்த்த பகைவர்களைக் கொன்று வீழ்த்துதலும் தொன்றுதொட்டு, வீரவாழ்க்கையை மேற்கொண்டு வாழ்கின்றவர்கள் கடைப்பிடித்து வருகின்ற பொருத்தமான செயலேயாகும். அது ஒருபுறம் இருக்கட்டும். அதைத்தவிர, இப்போது நான் விரைந்து கூறவேண்டுவது ஒன்று உளது. அதனை நீங்களும் கேளுங்கள். இப்பொழுது நுனித்துக் கூர்ந்து பார்த்தால் நீங்களும் இதே கருத்துடையவர்கள் போலவே தோன்றுகிறது'' என்கிறான் அங்கதன்.

எடுத்தல், சாய்தல், எதிர்த்தல், படுத்தல் என்று போர்புரியும் வீரர்க்குரிய நிலைகளைப் படிப்படியாய்க் கூறும் திறன் நோக்குக. முன்பு ஓடிப்போன சாம்பவன் மற்றும் வானரசேனை அனைத்தும், தான் கூறுவனவற்றைக்

Koviloor Digital Library

கேட்டுக்கொண்டு அங்கேயே நின்றிருப்பதால் அவர்கள் தம் கருத்துக்கு ஒத்துப்போய் விட்டார்கள் என்று அங்கதன் கருதுகிறான் என்பதாம். ''அஞ்சுதற்கு உரிய இடத்து அஞ்சி விலகுதலும், அச்சத்திற்கு இடமின்மை அறிந்தபின், ஆண்மையுடன் முன்னேறிச் செல்லுதலும் ஆகிய இவை, போர்த்துறையில் ஈடுபட்ட தறுகண் மறவரது இயல்பு''

56. "ஒன்றும் நீர் அஞ்சல் ஐய! யாம் எலாம் ஒருங்கு சென்று,
நின்றும் ஒன்று இயற்றல் ஆற்றேம்; நேமியான் தானே நேர்ந்து,
கொன்று போர் கடக்கும் ஆயின், கொள்ளுதும் வென்றி; அன்றேல்,
பொன்றுதும் அவனோடு" என்றான்; "போதலோ புகழ் அன்று" என்றான்.
(9437)

(இயற்றல்-போர்செய்தல்; நேமியான்-திருமால்/இராமபிரான்; நேர்தல்-எதிர்த்தல்; வென்றி-வெற்றி; பொன்றுதல்-இறந்துபடுதல்; கடத்தல்-வெல்லுதல்; ஒன்றும்-சிறிதும்)

அங்கதன் சாம்பவனை நோக்கி, ''ஐயனே! நீங்கள் சற்றும் அச்சம் கொள்ளாதீர்கள்; நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து போர்க்களம் சென்று நின்றாலும் அங்கே நாமாகவே பகைவரை எதிர்த்துப் போர்செய்யும் ஆற்றல் உடையவர் அல்லோம்; சக்கரப்படையைக் கையில் ஏந்திய திருமாலின் அம்சமான இராமபிரான் தானே தனித்து நின்று எதிர்த்துப் போரிட்டுப் பகைவர்களைக் கொன்று, அவர்களை வெல்லுவான் என்றால் நாமும் வெற்றிகொண்டவர்கள் ஆவோம்; இல்லையென்றால், நாமும் அவனோடு சேர்ந்து இறந்துபடுவோம்; எனினும் இப்போது போர்க் களத்தை விட்டு நீங்கிச் செல்லுதல் என்பது நமக்குப் புகழைத்தாராது'' என்று கூறினான் அங்கதன்.

57. வானரப்படைத் தலைவர்கள் மீண்டு வருதல்

"ஈண்டிய தானை நீங்க, நிற்பது என்? யாமே சென்று,
பூண்ட வெம்பழியினோடும், போந்தனம்; போதும் "என்னா,
மீண்டனர் தலைவரெல்லாம் அங்கதனோடும்; வீரன்
மூண்ட வெம்படையை நோக்கித் தம்பிக்கு மொழிவதானான். (9438)

(ஈண்டிய-நெருங்கிய; பூண்ட-மேற்கொண்ட; போதும்-போவோம்; மூண்ட-மிக்கெழுந்த)

''போர்க்களத்திலிருந்து ஓடிவந்த நாம், இங்கே நெருங்கி நின்று என் செய்வது? இப்பொழுதே நாம் சென்று, நமக்கு உண்டான பெரும் பழியைத் துடைக்கும் பொருட்டு, இராமபிரானிடம் சென்று சேருவோம்; வாருங்கள்'' என்று படைத்தலைவர்களை அழைத்துக்கொண்டு சாம்பவன், அங்கதனோடும் இராமபிரானை அடைந்தான்; வீரனான

Koviloor Digital Library

இராமபிரான் பெரும்பகை பொங்கி எழ வேறு புறத்திநின்றும் அரக்கர் படை வருவதைப் பார்த்து, தன் தம்பி இலக்குவனிடம் கீழ்வருவன வற்றைக் கூறத்தொடங்கினான்.

சாம்பவன் அறிவுறுத்தலின் பேரில், படைத்தலைவர்கள் அங்கதனுடன் வந்து இராமபிரானைச் சேர்ந்தார்கள் என்பதாம்.

58. "அத்த! நீ உணர்தி அன்றே அரக்கர்தான் அவுணரேதான்,
எத்தனை உளர் என்றாலும், யான் சிலை எடுத்தபோது
தொத்துறு கனலின் வீழ்ந்த பஞ்சு எனத் தொலையும் தன்மை
ஒத்தது; ஓர் இடையூறு உண்டு என்று உணர்விடை உதிப்பது அன்றால்"
(9439)

(அத்தன்-அப்பன்; அவுணர்-அசுரர்; சிலை-வில்; தொத்து-திரள்; தொலைதல்-அழிந்தொழிதல்; உணர்வு-அறிவு; உதிப்பது-தோன்றுவது; ஒத்தது-ஈடானது)

இராமபிரான் இலக்குவனை நோக்கி, ''என் தந்தை போன்றவனே! அரக்கர்களே ஆகட்டும், அல்லது அசுரர்களே ஆகட்டும், எத்தனைபேர் என்னை எதிர்த்து வருவதற்கு உள்ளனர் என்றாலும், நான் என் வில்லை எடுத்து அம்பைத் தொடுத்துச் செலுத்தினால் அத்தனைபேரும், பெருந் திரளாக உள்ள நெருப்பினில் விழுந்த பஞ்சுப்பொதிபோல உருக்குலைந்து அழிந்துபோகும் தன்மையை அடைவார்கள் என்பதை நீ நேரில் கண்டு உணர்ந்திருக்கிறாய் அல்லவா? என் வல்லமைக்கு ஈடான ஒரு இடையூறு இப்பொழுது நிகழும் என்று என் உள் உணர்வில் தோன்றவில்லை'' என்று கூறுகிறான் இராமபிரான்.

'அத்த' என்பது இராமபிரான் இலக்குவன்மீது கொண்ட அன்பின் மிகுதியால் அழைக்கப்பட்ட விளி எனக்கொள்க. ''தொத்துறு கனலின் வீழ்ந்த பஞ்சு'' என்பது அருமையானதோர் உவமை. கொஞ்சம்கூட மிச்சமில்லாமல் எல்லோரும் உருக்குலைந்து அழிந்து போவார்கள் என்பது கருத்து. ''பஞ்செறியுற்றதென்ன அரக்கர்தம் பரவையெல்லாம், வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே; மீண்டதில்லை'' என்பது இராவணன் சோகப்படலத்தில் மண்டோதரி கூற்று

59. வானரச்சேனையைக் காக்கும்படி வேண்டுதல்

"காக்குநர் இன்மை கண்ட கலக்கத்தால் கவியின் சேனை
போக்கு அறப் போகித் தத்தம் உறைவிடம் புகுதல் உண்டால்;
தாக்கி, இப்படையை முற்றும் தலை துமிப்பளவும் தாங்கி,
நீக்குதி, நிருதர் ஆங்கு நெருக்குவார் நெருங்கா வண்ணம்" (9440)

Koviloor Digital Library

(காக்குநர்-காப்பாற்றுபவர்கள்; போக்கு-முன்னேபோதல்/புகலிடம்; துமித்தல்-வெட்டி வீழ்த்துதல்; தாங்குதல்-காப்பாற்றுதல்/பாதுகாத்தல்; நீக்குதல்-அழித்தல்; அற-கெட; கலக்கம்-மனக்குழப்பம்; நிருதர்-அரக்கர்)

''இந்த வானரச்சேனை, தம்மைப் பாதுகாக்கும் கடமையுடைய தலைவர்கள் இல்லாதது கண்டு மிகவும் மனக்குழப்பம் அடைந்திருக்கின்றது; எனவே இவை போர்க்களத்திற்கு முந்திச்சென்று போகாததாலும் தமக்கு வேறு புகலிடம் இல்லாததாலும் தத்தமது வாழ்விடங்களுக்குப் பாசறைகளுக்குப்போகும் வாய்ப்பு உண்டு; எனவே நான் இந்த அரக்கர் படையை முற்றிலுமாக அழித்து, அவர்கள் தலை எல்லாவற்றையும் கொய்து முடிக்கும்வரை, நீ இந்த வானரப்படையைப் பாதுகாத்து, அரக்கர்கள் இவர்களை நெருங்காதபடி அங்கேயே இருந்து, அவ்வாறு அவர்கள்தாக்க வந்தால், அவர்களைஅழித்து ஒழித்துவிடுவாயாக!'' என்று இராமபிரான் இலக்குவனிடம் வேண்டுகிறான்.

தனக்குத் துணையாக வந்து தம்முடன் நட்புக் கொண்டவரைக் காப்பது தனது முதல்கடமை எனக் கருதிய இராமபிரான், தான் போர்க்களத்துள் புகும்முன்பே தன்தம்பி இலக்குவனைஅழைத்து இவ்வானரச்சேனையை நான் வருமளவும் பாதுகாத்து வருவாயாக என்று கூறிப் புறப்பட்டான் என்பதாம். எவ்வளவு பெரிய சேனையாய் இருந்தாலும் தலைமை தாங்கிச்செல்லும் தலைமைப் பண்புள்ள தலைவர் இல்லையென்றால், அப்படை போர்க்களத்தில் எதிர்த்து நிற்கும் வல்லமையை உடையதாகாது என்கிறான் இராமபிரான். ''நிலை மக்கள் சால உடைத்தெனினும், தானை தலைமக்கள் இல்வழி இல்'' என்பது குறள்-770.

60. "இப்புறத்து இனைய சேனை ஏவி, ஆண்டு இருந்த தீயோன்,
அப்புறத்து அமைந்த சூழ்ச்சி அறிந்தவன், அயலே வந்து,
தப்பு அறீக்கொன்று நீக்கில், அவனை யார் தடுக்கத் தக்கார்,
வெப்பு உறுகின்றது உள்ளம், வீர! நீ அன்றி வில்லோர்?" (9441)

(இனைய-இத்தகைய; ஆண்டு-அவ்விடத்தில்/இலங்கையில்; தீயோன்-கொடியவன்/இராவணன்; அயல்-அருகில்; வெப்புறுதல்-கொதித்தல்/வெதும்புதல்; வில்லோர்-வில்லாற்றல் மிக்கவர்; ஏவுதல்-செலுத்துதல்/கட்டளையிடுதல்; தக்கார்-தகுதி உடையவர்கள்)

இராமபிரான் இலக்குவனை நோக்கி, ''வீரனே, பொருத்தமான தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் நன்கு உணர்ந்தவனான கொடிய அரக்கன் இராவணன், அங்கேயே இருந்துகொண்டு இந்தப் பக்கம் மூலபலச்சேனையை ஏவிவிட்டு விட்டு, அந்தப்பக்கம் குரங்குப்படைகள் இருக்கும் இடம் வந்து, அங்கிருந்து ஒருவரும் தப்பிச்செல்லாதபடி அழித்து ஒழிக்கவும் எண்ணம் கொண்டிருக்கலாம்! அவ்வாறு அவன் வந்தால் அவனைத் தடுத்து நிறுத்துவதற்கு உன்னையன்றி வில்லாற்றல்

Koviloor Digital Library

உடையவர் யார் இருக்கிறார்கள்? எனவே நீ அங்கேயே இருந்து வானரப் படைகளைக் காத்துவருவாயாக! அந்த நிலையை எண்ணிப்பார்த்தால் என் உள்ளம் கொதிக்கின்றது'' என்கிறான் இராமபிரான்.

''வானரப்பெருஞ்சேனையை யான் ஒருவழி சென்று அறக்குறைத்து, உயிர் உண்பென்; நீயிர் போய் ஒருங்கே ஆன மற்றவர் இருவரைக்கோறிர்'' என்பது இதே மூலபலவதைப் படலத்தில் இராவணன் கூற்று. அவனையும் அவனது சூழ்ச்சித் திறனையும் நன்கு உணர்ந்தவன் இராமபிரான். எனவே தான் இலக்குவனை இவ்வாறு வேண்டிக்கொள்ள நேர்ந்தது என்க. இங்கே இராமபிரான் இராவணனைத் ''தீயோன்'' என்று குறிப்பதை நோக்குக. இராவணன் மனம், மொழி, மெய்களால் தீமையே விளைவித்தவன், பிறன்மனை நயத்தலால் மனத்தாலும், அசோகவனத்தில் சீதாதேவியிடம் தகாத வார்த்தைகளைப்பேசி அவள் மனத்தைப் புண்படுத்தியதால் மொழியாலும், யாருக்கும் தெரியாமல் சீதாதேவியைக் கவர்ந்து சென்றதால் மெய்யாலும் கொடியவன் என்பதை உணர்த்த இராமபிரான் கூற்றாக கவிஞன் இந்தச் சொல்லைப் பயன்படுத்தியிருப்பது எண்ணி மகிழத்தக்கது.

61. "மாருதியோடு நீயும், வானரக்கோனும், வல்லே
பேருதிர் சேனை காக்க; என்னுடைத் தனிமை பேணிச்
சோருதிர் என்னின், வெம்போர் தோற்றும் நாம்" என்னச் சொன்னான்,
வீரன்; மற்று அதனைக்கேட்ட இளையவன், விளம்பலுற்றான். (9442)

(மாருதி-அனுமன்; வானரக்கோன்-சுக்கிரீவன்; வல்லே-விரைந்து; பேருதல்-பெயர்தல்/நீங்கிச்செல்லுதல்; சோர்தல்-மனம் தளர்தல்; இளையவன்-இலக்குவன்; தோற்றும்-தோற்றுப்போவோம்; விளம்புதல் -கூறுதல்; பேணுதல்-மனத்துள் கொள்ளுதல்/போற்றுதல்)

இராமபிரான் இலக்குவனை நோக்கி, ''அனுமனுடன், நீயும், வானரக் குலத்தின் அரசனாகிய சுக்கிரீவனும் விரைந்து இங்கிருந்து நீங்கிப்போய் குரக்குப்படையைப் பாதுகாவல் செய்யுங்கள்; என்னுடைய தனிமையை எண்ணி, நீங்கள் மனந்தளர்ந்து சோர்ந்து போனீர்கள் என்றால் நாம் இக்கொடிய போரில் தோற்றுப்போனாலும் போவோம்'' என்றான் ஆண்மையிற் சிறந்த வீரனான இராமபிரான். அதனைக் கேட்ட அவன் தம்பியாகிய இலக்குவன் பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

இராமபிரான் போரில் தோற்கமாட்டான் என்றாலும் இதை ஒரு எச்சரிக்கையாகக் கூறி அவர்கள் குரங்குப்படையைக் காக்க வேகமாகச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தால் கூறினான் எனக்கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

62. "அன்னதே கருமம் ஐய! அன்றியும், அருகே நின்றால்,
என் உனக்கு உதவி செய்வது? இது படை என்றபோது,
சென்னியில் சுமந்த கையர், தேவரே போல, யாமும்
பொன்னுடை வரிவில் ஆற்றல் புறன் நின்று காண்டல் போக்கி?" (9443)

(கருமம்-செயல்; சென்னி-தலை; சுமத்தல்-கூப்புதல்; வரி-கட்டமைந்த)

அவ்வாறு இராமபிரான் கூறக்கேட்ட இளவல் இலக்குவன் ''தலைவனே! அதுவே இப்பொழுது செய்யத்தக்க செயலாகும். தவிரவும் அரக்கர்படையின் பெருக்கமும் வலிமையும் இத்தகையது என்பதைத் தெரிந்த பின்னாலும் நாங்கள் வந்து உன் அருகே நின்று கொண்டு உனக்கு என்ன உதவியைச் செய்துவிட முடியும்? தூரத்தே நின்று தேவர்கள் தங்கள் கைகளைச் சிரம்மேல் குவித்துக்கொண்டு, நீ போர்செய்யும் முறையைப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்களே, அதுபோல நாங்களும், வெளியில் நின்றுகொண்டு, உன்னுடைய பொன்னாலான, கட்டமைந்த வில்லின் ஆற்றலைக் கண்டு கொண்டிருப்பதைத் தவிர்த்து உனக்கு வேறு என்ன உதவி செய்துவிட முடியும்?'' என்கிறான் இலக்குவன்.

இராமபிரான் தனித்து நின்று போரிட்டாலும் அவனுக்கு எந்த உதவியும் தேவைப்படாது என்பது இலக்குவன் கருத்து.

63. அனுமன் இராமபிரானுடனேயே இருக்க விழைதல்

என்று, அவன் ஏகலுற்ற காலையின், அனுமன், ''எந்தாய்!
'புன்தொழில் குரங்கு' எனாது, என்தோளின் மேல் ஏறிப்புக்கால்,
நன்றெனக் கருதா நின்றேன்; அல்லது நாயினேன் உன்
பின்தனி நின்றபோதும், அடித்தொழில் பிரியேன்'' என்றான். (9444)

(புன்-அற்பமான; புகுதல்-செல்லுதல்; கருதா-கருதி)

என்று இவ்வாறு கூறிவிட்டு இலக்குவன் வானரசேனையைப் பாது காப்பதற்காகச் செல்ல முற்பட்டபோது, அனுமன் இராமபிரானை நோக்கி ''என் தந்தை போன்றவனே! இது ஒரு அற்பமான செயலைச் செய்யும் குரங்கு என்று இகழ்ந்து புறக்கணிக்காமல், என் தோளின்மீது ஏறிக் கொண்டு நீ போர்க்களம் புகுவது நல்லது என்று நான் கருதுகின்றேன். அப்படி இல்லாவிட்டாலும், நாயினும் கடைப்பட்டவனான நான், உனக்குப் பின்புறம் தனியாக நின்றுகொண்டு உனக்கு அடிமைத்தொழில் செய்வதையே விரும்புகிறேன். அதனின்றும் சற்றும் பிரியேன்'' என்கிறான் அனுமன்.

முன்பும் இராமபிரான் அனுமன்தோளின்மீது ஏறிப் போரிட்டதை நாம் பிரமாத்திரப் படலத்தில் கண்டுவந்ததை இங்கு நினைவுகூர்க. ''மாருதி

Koviloor Digital Library

அலங்கல்மாலை மணி அணி வயிரத்தோள் மேல் வீரனும், வாலிசேய் தன் விறல்கெழு சிகரத் தோள்மேல் ஆரியர்க்கு இளையகோவும் ஏறினர்'' என்பது பிரமாத்திரப்படலம். அனுமன் ''சொல்லின் செல்வன்'' என்பதை எடுத்துக்காட்டும் இடங்களுள் இதுவும் ஒன்று. அவன் சொற்களில் பணிவும், வினயமும் பொதிந்து கிடப்பதை நோக்குக. 'நாயினேன்' என்பது பெரியவர்களிடமும், இறைவனிடமும் அடியார்கள் பணிவு கருதிக்கூறும் சொல். திருவாசகத்தில் மாணிக்கவாசகர் ''நாயினேன்'' என்றும் ''நாயினும் கடைப்பட்டேன்'' என்றும் மற்றும் இப்பொருள் குறித்த சொற்களை மிகப் பல இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார் என்பதும் இங்கு கருதத்தக்கது. இராமபிரான் தன்னை அவனது வாகனமாகவோ, அல்லது உடன் நின்று பணிபுரியும் ஏவலானகவோ கொள்ளவேண்டும் என்பதை எவ்வளவு நாகரிகமாக அழகாகக் கூறுகிறான் அனுமன் பாருங்கள்.

64. அனுமனையும் இராமபிரான் போகச்சொல்லுதல்

''ஐய! நிற்கு இயலாது உண்டோ? இராவணன் அயலே வந்துற்று,
எய்யும் வில் கரத்து வீரன் இலக்குவன் தன்னோடு ஏற்றால்,
மொய் அமர்க்களத்தின், உன்னைத் துணைபெறான் என்னின், முன்ப!
செய்யும் மா வெற்றி உண்டோ? சேனையும் சிதையும் அன்றே?''
(9445)

(நிற்கு-நினக்கு/உனக்கு; இயலாது-முடியாதது; ஏற்றல்-எதிர்த்தல்; மொய்-நெருங்கிய; முன்பு-வலிமை; முன்ப-வலிமை மிக்கவனே; செய்தல்-பெறுதல்; மா-பெரிய)

இராமபிரான் அனுமனை நோக்கி, ''ஐயனே! உன்னால் செய்யமுடியாத செயல் என ஒன்று உண்டோ? இராவணன் வேறு வழியாக வந்து, வானரசேனை இருக்கும் இடத்தை அடைந்து விட்டால், அங்கே தனியாக வீரன் இலக்குவன் விற்படையைக் கையில் ஏந்திக்கொண்டு நிற்பானே, அவனோடு போர்புரிய இராவணன் எதிர்த்து வந்தானானால் அவனுக்கு உதவிசெய்ய அந்த வானரவீரர்கள் நிரம்பியிருக்கிற போர்க்களத்தில் உன்னைத்தவிர அவனுக்குத் துணை வேறு யார் இருக்கிறார்கள்? எனவே மிக்க வலிமை உடையவனே! உன்னை அவன் துணையாகப் பெறா விட்டால் பெரிய வெற்றி என்பது எவ்வாறு கிடைக்கும்? அதையும்விட இராவணனால் நம் வானரச்சேனையும் சிதைந்து சின்னாபின்னமாகிப் போய்விடும் அல்லவா? எனவே நீயும் இலக்குவனுடன் செல்லுவதுதான் தக்கது'' என்கிறான் இராமபிரான்.

இங்கே இராமபிரான் அனுமனுடைய ஆற்றலைப் புகழ்வதோடு, நம் படை வெற்றிபெற அவன் மிகவும் இன்றியமையாதவன் என்ற முக்கியத்

Koviloor Digital Library

துவத்தையும் அவனுக்குத் தந்து அவனைச் சமாதானப்படுத்தும் நுட்பத்தை உணருங்கள்.

65. "ஏரைக்கொண்டு அமைந்த குஞ்சி இந்திரசித்து என்பான் தன்
போரைக்கொண்டு இருந்த முன்நாள், இளையவன் தன்னைப் போக்கிற்று
ஆரைக்கொண்டு? உன்னால் அன்றே, வென்றது அங்கு அவனை? இன்னம்
வீரர்க்கும் வீர! நின்னைப் பிரிகலன், வெல்லும் என்பேன்" (9446)

(ஏர்-அழகு; குஞ்சி-ஆண்களின் தலைமுடி; போக்குதல்-அனுப்புதல்)

''வீரர்களுக்கெல்லாம் வீரனே! அனும! முன்பு அழகிய தலைமுடியைக் கொண்ட இந்திரசித்து என்பவன் போர் மேற்கொண்டு வந்தபொழுது இலக்குவனை அவனுடன் போர்செய்யும்படி அனுப்பினேன் அல்லவா? அது யார் துணைகொண்டு அனுப்பினேன்? உன்னைத்தானே நம்பி அனுப்பினேன்! அங்கு அவன் வெற்றிபெற்றதும் உன்னாலல்லவா? அதேபோல் இப்பொழுதும் தம்பி இலக்குவன் உன்னைப்பிரியாது, நீ அவனுடன் இருந்தாய் என்றால் இப்பொழுதும் அவன் இராவணனுடன் போரிட்டு வெற்றிபெறுவான் என்று உறுதியாகக் கருதுகிறேன்'' என்கிறான் இராமபிரான்.

66. சேனையைக் காத்து, என்பின்னே திருநகர் தீர்ந்து போந்த
யானையைக் காத்து, மற்றை இறைவனைக் காத்து, எண் தீர்ந்த
வானை இத்தலத்தினோடும் மறையொடும் வளர்த்தி" என்றான்;
ஏனை மற்று உரைக்கலாதான், இளவல்பின் எழுந்து சென்றான். (9447)

(திருநகர்-அழகிய அயோத்தி நகரம்; தீர்ந்து-நீங்கி/துறந்து; யானை-இலக்குவன்; இறைவன்-அரசன்/சுக்கிரீவன்; எண்-மனம்; இத்தலம்-நிலவுலகம்; மறை-வேதங்கள்; இளவல்-இளையவன்/இலக்குவன்)

இராமபிரான் அனுமனை நோக்கி, ''கிஷ்கிந்தையிலிருந்து எனக்கு உதவியாக வந்த வானரச்சேனையை எந்த இடையூறும் இன்றிப் பாது காத்து, நான் வனவாசம் புக வேண்டிய நேரத்தில், என்பின்னே என்னைத் தொடர்ந்து, அழகிய அயோத்தி நகரத்தை விட்டு நீங்கிவந்த ஆண்யானை போன்ற வலிமையுடைய என் தம்பி இலக்குவனையும் பாதுகாத்து, உன்னுடைய குலத்தின் அரசனான சுக்கிரீவனையும் பாதுகாத்து, நினைக்கும் எல்லைக்கு அப்பாற்பட்ட வானுலகத்தையும், அத்துடன் இந்நிலவுலகத்தையும், நான்கு வேதங்களையும் பாதுகாத்து வளர்ப்பா யாக!'' என்றான்; இதற்கு வேறு ஒன்றும் மறுமொழி கூற இயலாதவனான அனுமன், இலக்குவனுடன் எழுந்து செல்லத் தலைப்பட்டான்.

Koviloor Digital Library

அனுமன் தன்னுடன் இருப்பதைக் காட்டிலும் அவனுக்கு வேறு முக்கிய பணிகள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறான் இராமபிரான். அவன் வானரச்சேனையை, இலக்குவனை, சுக்கிரீவனை, அதன்மூலம் வானுலகத்துத் தேவர்களை, மண்ணுலகத்து மக்களை, வேதங்களை இவை எல்லாவற்றையும் காக்கும் பொறுப்பும், வளர்க்கும் பொறுப்பும் அவனுக்கு இருக்கிறது என்பதை எடுத்து உரைக்கிறான் இராமபிரான் என்க. இங்கே ''யானை'' என்பது ஆகுபெயராய் இலக்குவனைக் குறித்தது. உருவத்தாலும், வலிமையாலும், கம்பீர நடையாலும் இலக்குவனை யானைக்கு உவமித்தார் என்று கொண்டால் இது உவம ஆகுபெயராகும்.

67. ''வீடண! நீயும் மற்று உன் தம்பியோடு ஏகி, வெம்மை
கூடினர் செய்யும் மாயம் தெரிந்தனை கூறி, கொற்றம்
நீடுறு தானை தன்னைத் தாங்கினை நில்லாய் என்னின்,
கேடு உளதாகும்'' என்றான்; அவன் அது கேட்பதானான். (9448)

(வெம்மை-கொடுமை; தெரிந்து-ஆராய்ந்து; கூறுதல்-எடுத்துரைத்தல்; கொற்றம்-வெற்றி; நீடுறுதல்-நிலைபெறுதல்; கேடு-தீமை; தாங்குதல்-பாதுகாத்தல்; கேட்டல்-கேட்டபடி நடப்பதுமாம்)

இராமபிரான் வீடணனை நோக்கி, ''வீடண! நீயும் உன் தம்பியாகிய இலக்குவனோடு சென்று, கொடுமைத்தன்மை உடையவர்களான அரக்கர்கள் செய்கின்ற வஞ்சகச் செயல்களை எல்லாம் நன்கு ஆராய்ந்து அதனை முன்னரே இலக்குவனுக்கு எடுத்துச்சொல்லி, நிலைபெற்ற வெற்றியையே கொள்ளுகின்ற நமது வானரசேனைக்கு எந்த இடரும் நேராது நீ பாதுகாக்கவில்லை என்றால் நமக்குப் பெருந்தீங்கு உண்டாகும்'' என்றான். வீடணனும் அவன் சொல்லியவாறே இலக்குவனுடன் செல்லத் தலைப்பட்டான்.

''உன்தம்பி'' என்பது நுனித்து உணரத்தக்கது. இராமபிரான் எப்பொழுதும் ''உந்தை'' ''உம்பி'' என்றே கூறிவருவதையும் காப்பியத்தில் பரக்கக் காணலாம். குகனை மட்டும் எல்லோர்க்கும் அண்ணனாகக் கூறியமையையும் இங்கு நினைவுகூரலாம். மற்ற இருவரான சுக்கிரீவன், வீடணன் முதலியோரைத் தனக்குத் தம்பியாகவே கூறிவருவதையும் நோக்கலாம். ''கேட்டல்'' என்பது கேட்டு அதன்படி நடத்தல் என்ற விரிந்த பொருளைத்தரும்.

68. சூரியன் சேயும், செல்வன் சொற்றதே, எண்ணும் சொல்லன்,
ஆரியன் பின்பு போனான்; அனைவரும் 'அதுவே நல்ல
காரியம்' என்னக் கொண்டார்; கடற்படை காத்து நின்றார்;
வீரியன் பின்னர்ச் செய்த செயல் எலாம் விரிக்கல் உற்றாம். (9449)

Koviloor Digital Library

(சூரியன்சேய்-சுக்கிரீவன்; செல்வன்-திருமகள் நாயகன்/இராம பிரான்; சொற்றது-சொன்னது/பணித்தது; ஆரியன்-மேலோன்/இலக்கு வன்; காரியம்-செயல்; வீரியன்-வீரத்தில் சிறந்தவன்/இராமபிரான்)

சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவனும், திருமகள் கேள்வனாகிய இராம பிரான் கூறுவதையே தானும் எண்ணியவனாய், இராமபிரான் சொல்லு வதற்கு முன்பு, தானாகவே, மேலோனான இலக்குவன் பின்னால் செல்லலானான்; அனைவரும் ''அதுதான் செய்யத்தக்க செயலாகும்'' என்று மனத்துட்கொண்டு, கடல்போன்ற வானரசேனையைப் பாதுகாத்து நின்றார்கள். இப்போது வீரப்பண்பில் சிறந்தவனான இராமபிரான் இதன் பின்னால் செய்த செயல்களையெல்லாம் விரிவாக எடுத்துரைக்கத் தொடங்குவோம்'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. ''செல்வன்'' என்றது எல்லாச் செல்வங்கட்கும் அதிபதியாக விளங்கும் திருமகளின் கேள்வனாகிய திருமாலின் அம்சமான இராமபிரான் என்ற பொருள் பொதிந்த சொல்லாகும். ''கடற்படை'' என்பது உருவகம். கடல் போன்று பரந்த சேனையைக் கடலாகவே உருவகித்தார் என்க. இப்போது மூலபலச் சேனையை எதிர்த்து இராம பிரான் ஒருவனே போர்க்களத்தில் நிற்கிறான் என்பதை நினைவிற்கொள்க. அனுமனுக்கும், வீடணனுக்கும் இட்ட கட்டளை தனக்கும் பொருந்தும் என்று கருதிய சுக்கிரீவன், இராமபிரான் அவனைப் போகச் சொல்லு வதற்கு முன்பாகத் தானே இலக்குவன் பின்னால் செல்லத் தொடங்கினான் என்ற இடத்து உள்ள நகைச்சுவையையும் சுவைத்து மகிழலாம்.

69. இராமபிரான் போர்க்கோலம் பூணுதல்

வில்லினைத் தொழுது வாங்கி, ஏற்றினான் வில் நாண்; மேருக்
கல்எனச் சிறந்ததேனும், கருணை அம்கடலே அன்ன
எல்ஒளி மார்பில் தீராக்கவசம் இட்டு, இழையா வேதச்
சொல் எனத் தொலையா வாளித்தூணியும் புறத்துத் தூக்கி. (9450)

(மேருக்கல்-மேருமலை; அன்ன-ஒத்த/போன்ற; எல்-ஒளி; எல்ஒளி-மிக்க ஒளி; தீரா-அழியாத; இழைத்தல்-செய்தல்/இயற்றுதல்; இழையா-செய்யப்படாத; தொலைதல்-குறைந்துபோதல்; தொலையா-குறைவு படாத; தூணி-அம்புப்புட்டில்; புறம்-முதுகு; தூக்குதல்-கட்டுதல்; வாங்குதல்-எடுத்தல்; அம்-அழகிய)

மேருமலையைப் போன்று திண்ணிய பெருமை பெற்றதாயினும், இராமபிரானது உள்ளம், அழகிய கருணைக்கடல் போன்றதாகும். அத்தகைய மிக்க ஒளிவீசும் மார்பில் யாராலும் அழிக்கமுடியாத கவசத் தினைப் பொருத்திக்கொண்டு, யாராலும் இயற்றப்படாத வேதத்தின் சொற்கள்போல என்றும் குறையாத அம்புகளையுடைய அம்புப்

Koviloor Digital Library

புட்டிலையும் முதுகில் தொங்கும்படி கட்டிக்கொண்டு, வில்லை வணங்கிக் கைகளில் எடுத்துக்கொண்டு, நாண் ஏற்றினான்.

விற்படை தெய்வத்தன்மை வாய்ந்தது. வெற்றியைப் பெற்றுத் தருவது. எனவே அதை வணங்கிக் கையில் எடுத்துக்கொண்டான் என்பதாம்; ''மேருக்கல்'' என்ற சொல்லாட்சி நோக்குக. மேருமலை என்று பொருள்படும்; எல்ஒளி என்பது மீமிசைச்சொல். இரண்டுக்கும் ஒரே பொருள்தான். எனவே மிக்க ஒளி என்று பொருள்கொண்டிருக்கிறோம். ''இழையா வேதச்சொல்'' என்பது கருத்தாழம்மிக்க அருமையான சொற்றொடர். நான்மறை யாராலும் எழுதப்படாதது. வாய்வழியே பயிலப்பட்டது. எழுதாக்கிளவி என்பது வேதத்தின் மற்றொரு பெயர். வேதத்தில் உள்ள சொற்களுக்கு எடுக்க எடுக்கக் குறையாத பொருள்கள் தோன்றுவதுபோல, இராமபிரான் கட்டிய புட்டிலில் அம்புகள் எடுக்க எடுக்கக் குறையாது நிறைந்து நிற்கும் என்பது ''தொலையா வாளித்தூணி'' எனப்பட்டது.

70. ஓசனை நூற்றின் வட்டம் இடைவிடாது உறைந்த சேனைத்
தூசி வந்து அண்ணல் தன்னைப் போக்குஅற வளைந்து சுற்றி,
வீசின படையும் அம்பும் மிடைதலும், விண்ணோர் ஆக்கை
கூசின பொடியால்; எங்கும் குமிழ்த்தன, வியோம கூடம். (9451)

(உறைதல்-பொருந்துதல்; தூசி-முன்னணிப்படை/கொடிப்படை; அண்ணல்-தலைமையிற் சிறந்தோன்/இராமபிரான்; போக்கு-போதல்; மிடைதல்-நெருங்கிச்செறிதல்; கூசுதல்-நடுங்குதல்; பொடி-மண்துகள்; வியோமகூடம்-ஆகாயப்பரப்பு; குமிழ்தல்-சிலிர்த்தல்/பொடித்தல்; ஆக்கை-யாக்கை/உடம்பு; வியோமம்-ஆகாயம்)

நூறுயோசனை தூரம் வட்டமாகவும், சற்றும் இடையீடு இன்றியும் தங்கிய அரக்கர்சேனையின் முன்னணிப்படை வந்து, பெரியோனாகிய இராமபிரான் எங்கும் தப்பித்துப் போகமுடியாதபடி சுற்றி வளைத்துச் சூழ்ந்துகொண்டன. அவைகள் வீசிய படைக்கலன்களும், அம்புகளும் நெருங்கிச் செறிதலால், விண்ணுலகில் தேவர்களின் உடல்களெல்லாம் அச்சம்கொண்டு நடுக்கமுற்றன; அதனால் எழுந்த புழுதித்துகளால் ஆகாயப் பரப்பெல்லாம் குமிழ்கள்போலச் சிலிர்த்துப் போனது.

71. தேவர்கள் போற்றி ஆசி கூறுதல்

“கண்ணனே! எளியேம் இட்ட கவசமே! கடலே அன்ன
வண்ணனே! அறத்தின் வாழ்வே! மறையவர் வலியே! மாறாது
ஒண்ணுமே, நீ அலாது, ஓர் ஒருவர்க்கு இப்படை மேல் ஊன்ற?
எண்ணமே முடித்தி!” என்னா, ஏத்தினர், இமையோர் எல்லாம். (9452)

Koviloor Digital Library

(இமையோர்-தேவர்கள்; வண்ணம்-நிறம்; வாழ்வு-வாழ்வளிப்பவன்/உறைவிடம்; மறையவர்-வேதியர்; ஊன்றுதல்-எதிர்த்து நிற்றல்; ஒண்ணுமோ-இயலுமோ; எண்ணம்-மனக்கருத்து; ஏத்துதல்-துதித்தல்/போற்றுதல்; கண்ணன்-திருமால்/இராமபிரான்; இடுதல்-அணிதல்; அலாது-அல்லாது/தவிர; மாறுதல்-பின்வாங்குதல்)

அப்பொழுது தேவர்கள் எல்லோரும் இராமபிரானை நோக்கி, ''கண்ணோட்டம் உள்ளவனே! எங்களுக்குக் கண்போன்றவனே! எளிய சிறியோர்களாகிய எங்களுக்குக் கவசம்போன்று பாதுகாப்பாக விளங்குபவனே! கடல்போன்ற நீலநிறம் உடையவனே! தருமத்தின் உறைவிடமே! வேதவிற்பன்னர்களுக்கு வலிமை நல்குபவனே! உன்னைத்தவிர, வேறு ஒருவரால் இப்படை பின்வாங்காமல், எதிர்த்து நின்று போர்செய்தல் என்பது இயலுமோ? எனவே எங்கள் மனக்கருத்தினை முடித்துத் தந்தருள்வாயாக!'' என்று ஏற்றிப் போற்றினர்.

''கண்ணனே'' என்பது இங்கு அவதாரத் தோற்றத்தைக் குறித்ததல்ல; ''ஒண்ணுமே'' என்பதில் உள்ள ஏகாரம் எதிர்மறைப்பொருளது. ஒண்ணாது, இயலாது என்ற பொருளைத்தரும். ''எண்ணமே'' என்பது தேவர்களின் மனக்கருத்தாகிய அரக்கர்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதைக் குறிக்கும். உடலுறுப்புக்களில் கண்ணே சிறப்பாகப் போற்றப்படுவது. எனவே எமக்குக்கண் போன்றவனே என்றனர். ''சர்வ இந்திரியானாம் நயனம் பிரதானம்'' என்பது வடமொழி.

72. முனிவரே முதல்வராய அறத்துறை முற்றினோர்கள்,
தனிமையும், அரக்கர்தானைப் பெருமையும், தரிக்கிலாதார்,
பனிவரு கண்ணர், விம்மிப் பதைக்கின்ற நெஞ்சர், 'பாவத்து
அனைவரும் தோற்க! அண்ணல் வெல்க!'' என்று ஆசி சொன்னார்.
(9453)

(முற்றுதல்-நிரம்புதல்; பெருமை-மிகுதி/பெருக்கம்; தரித்தல்-ஆற்றிக் கொள்ளுதல்/மனஅமைதி கொள்ளுதல்/பொறுத்தல்/தாங்கிக் கொள்ளுதல்; பனி-நீர்/கண்ணீர்த்துளி; பதைத்தல்-நடுங்குதல்/துடித்தல்; பாவம்-தீவினை; ஆசி-வாழ்த்து; வெல்க-வெற்றிபெறுக)

முனிவர்கள் முதல் அறத்தின்பால் நிரம்பிய பற்றுடையவர்கள் எல்லோரும், இராமபிரானது இப்போதைய தனிமையான நிலையையும், அரக்கர்களின் படைப் பெருக்கத்தையும் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாமல், கண்ணினின்றும் கண்ணீர்த்துளி பெருகவும், நெஞ்சம்துடித்து நடுங்கவும், ''பாவச்செயல்களிலேயே ஈடுபட்டுள்ளவர்களான அரக்கர்கள் எல்லோரும் தோற்று அழிவதாக! பெருமைக்குரியோனான தலைவன் இராமபிரான் வெற்றிபெறுவானாக! என்று வாழ்த்துரைத்தார்கள்.

Koviloor Digital Library

''அறத்துறை முற்றினோர்'' என்பது தவத்தின் மிக்கோரைக் குறித்ததாகக் கொள்க.

73. இராமபிரான் தனித்து நின்று பேரிடுதல்–அரக்கர்கள் கருத்து.

''இரிந்து சேனை சிந்தி, யாரும் இன்றி ஏக, நின்று நம்
விரிந்த சேனை கண்டு, யாதும் அஞ்சல் இன்றி, வெஞ்சரம்
தெரிந்த சேவகம் திறம்பல் இன்றி, நின்ற செய்கையான்,
புரிந்த தன்மை வென்றி மேலும் நன்று! மாலி பொய்க்குமோ?''(9454)

(இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; சிந்துதல்-சிதறிப்போதல்; ஏகுதல்-போதல்; தெரிதல்-ஆராய்ந்து தேர்ந்தெடுத்தல்; சேவகம்-வீரப்பாங்கு; திறம்பல்-பிறழ்தல்; நன்று-சிறப்புடையது; மாலி-மாலியவான்; பொய்த்தல்-பொய்சொல்லுதல்; விரிந்த-பரந்த; நின்று-தனித்து நிலை பெற்று நின்று)

அரக்கவீரர்கள் ''நம்முடைய விரிந்து பரந்த சேனையைக் கண்டு நிலை கெட்டுப் புறம்கொடுத்துச் சிதறி ஓடிய வானர சேனையில் ஒருவர்கூடப் போர்க்களத்தில் நில்லாது, எல்லோரும் ஓடிப்போக, இவன்மட்டும் தன்னந்தனியனாய், உறுதியாய் நிலைத்து நிற்பதையும், எந்தவித அச்சமும் இன்றி, நல்ல தேர்ந்தெடுக்கப்பட்ட, கொடுமைவாய்ந்த அம்புகளை இவன் செலுத்துகின்ற தன்மையையும், போர்அறத்தினின்றும் சற்றும் பிறழாமல் நின்று போர்செய்கின்ற வீரப்பாங்கையும் எண்ணிப்பார்த்தால், இவன் உண்மையிலேயே போர்செய்து பெறும் வெற்றியை விடவும் இவன் தனித்து நிற்கும் உறுதிப்பாடு மிக மேம்பட்டதாகும்; இவன் வீரத்தன்மை பற்றி, முன்பு மாலியவான்சொன்னகருத்துக்கள்பொய்யாய்ப் போய்விடுமோ? மாலியவான் பொய் சொல்லுவானோ?'' என்று இராமபிரான் வீரத்தினை வியந்து போற்றினார்கள்.

வானரசேனையெல்லாம் நாலாப்பக்கங்களிலும் சிதறி ஓடிய போதும் கூடத்தான் மட்டும் தன்னந்தனியனாய் நின்று, அந்தக் கடல்போலும் பரந்த அரக்கர்சேனையை எதிர்கொண்டு, சிறிதும் அச்சம் என்பதே இல்லாமல், தேர்ந்தெடுத்த அம்புகளைக் கொண்டு இவன் போர்செய்யும் திறமை, இவன் போர்செய்து வெற்றிபெறும் தன்மையைவிடச் சிறப்பானது என்று அரக்கர் வியந்து கூறினர் என்பதாம். 'பொய்க்குமோ?' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. பொய்க்காது என்ற பொருளைத்தரும்.

74. ''புரங்கள் எய்த புங்கவற்கும் உண்டு தேர்; பொருந்தினார்,
பரந்த தேவர்; மாயன் நம்மை வேர்அறுத்த பண்டைநாள்
விரைந்து புள்ளின்மீது விண்ணுளோர்களோடு மேவினான்;
கரந்திலன், தனித்து ஒருத்தன் நேரும் வந்து காலினான். (9455)

Koviloor Digital Library

(புங்கவன்-சிறந்தோன்/மேலோன்/சிவபெருமான்; மாயன்- திருமால்; பண்டை-முற்காலம்; புள்-பறவை/கருடன்; கரத்தல்-மறைந்து ஒளிதல்; நேர்தல்-எதிர்த்தல்/தாக்குதல்)

''முன்பு முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கிய மேலோனான சிவபெருமானும் பூமியைத் தேராகக்கொண்டே போர்புரிந்தான்; அவனுடன்கூட எல்லாத் தேவர்களும் சேர்ந்து வந்தனர்; அவர்களும் தேர்ப்படையைப் பெற்றிருந்தனர்; முன்பு நம் அரக்கர்குலத்தை வேரோடு அழிப்பதற்கென்றே நம்மோடு போரிட்டவனான திருமாலும்கூட, அவ்னது வாகனமாகிய கருடப்பறவைமீது ஊர்ந்து வந்து தேவர்களும் உடன்வர, போர்புரிந்தான். எனவே அவனுக்கும் வாகனம் இருந்தது. ஆனால் இப்போது தம்மை மறைத்துக்கொள்ளாது இங்கே நம்மை நேருக்குநேர் தனி ஒருவனாக நின்று எதிர்த்துப் போரிடுபவனான இராமபிரான், எந்த வாகனமும் இல்லாமல் வெறும் கால்களாலேயே நடந்து வந்து போரிடுகிறான் பாருங்கள்'' என்று வியந்து பாராட்டினார்கள் அரக்கர்கள்.

புங்கவன்-மேலோன்; சிறந்தவன் என்ற பொருளில் சிவபெருமானைக் குறிக்கும். சிவபெருமான், திருமால் ஆகிய எல்லோரும் தமது வாகனங்களுடனும், தேவர்களின் உதவியோடும்தான் போர்புரிந்திருக்கிறார்கள்; ஆனால் இவன் மட்டும் தனித்துநின்று, எந்த வாகனமோ, பிறருடைய எந்த உதவியோ இன்றிப் போரிடுவதைப் பார்த்து அரக்கர்கள் வியந்து பாராட்டினர் என்பதாம். சிவபெருமான் முப்புரம் எரித்த வரலாறும், திருமால் அரக்கர்களை வேரறுத்த வரலாறும் காப்பியத்தில் பல இடங்களில் பேசப்பட்டு வந்திருப்பதையும் நினைவிற்கொள்க.

75. "தேரும், மாவும், யானையோடு சீயம், யாளி, ஆதியா
மேரு மானும் மெய்யர் நின்ற வேலை ஏழின் மேலவா;
"வாரும் வாரும்" என்று அழைக்கும் மானுடற்கு, இம்மண்ணிடைப்
பேருமாறும் நம்முழைப் பிழைக்குமாறும் எங்ஙனே?" (9456)

(மா-குதிரை; ஆதியா-முதலாக; மானும்-ஒத்த; மெய்-உடம்பு; நின்ற-நிலைபெற்றுள்ள; மேலவாம்-மிக்கனவாகும்; பேர்தல்-அடிபெயர்த்தல்; பிழைத்தல்-தப்பித்துப்போதல்; ஆறு-வழி; எங்ஙனே-எவ்வாறு; உழை-இடம்; சீயம்-சிங்கம்)

''தேர்கள், குதிரைகள், யானைகள், முதலியவற்றோடும் சிங்கம், யாளி முதலான விலங்குகளோடும், மேருமலை போன்ற திண்ணிய உடம்பினை உடையவர்களுமான நம் அரக்கர்கள் படை, ஏழு பெரிய கடல்களையும் விட மிக்கனவாகும். அவ்வாறிருக்க, இங்கே தனியாக நிற்கும் இந்த மானுடன் இராமன் ''வாருங்கள் வாருங்கள்'' என்று திருப்பித்திருப்பிப் பலமுறை அறைகூவி அழைக்கிறானே? இப்பூவுலகில் இவன் கால்

Koviloor Digital Library

வைத்துப் போவதற்கும், இவன் நம்மிடம் இருந்து தப்பித்துப் போவதற்கும் ஏதாவது வழி இருக்கிறதா?'' என்று அரக்கர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

76. என்றுசென்று, அடர்த்து இடைத்து, ஓர் சீயஏறு அடர்ந்ததைக்
குன்று வந்து சூழ் வளைந்தபோல், தொடர்ந்து கூடலும்,
'நன்று இது' என்று, ஞாலம் ஏழும், நாகம் ஏழும், மானும் தன்
வெண்றி வில்லை, வேதநாதன் நாண் எறிந்த வேலைவாய். (9457)

(இரைத்தல்-ஆரவாரித்தல்; சீயஏறு-ஆண்சிங்கம்; அடர்த்தல்-நெருக்குதல்/தாக்குதல்; ஞாலம்-உலகங்கள்; நாகம்-கீழ்ஏழு உலகங்கள்; மானும்-ஒக்கும்/போன்ற; வேதநாதன்-வேதமுதல்வன்; வேலை-சமயம்; கூடல்-சுற்றிக்கொள்ளுதல்) (குளகப்பாடல்)

என்றுகூறி ஆரவாரம் செய்துகொண்டே தாக்குதற்குக் கிளம்பிச் சென்ற அரக்கர்சேனை, ஒரு ஆண்சிங்கம் தாக்க வரும்போது, அதை எதிர்த்துப் பெரிய மலைகள் போன்ற யானைகள் ஒன்றுசேர்ந்து தொடர்ந்து வந்து சூழ்ந்து சுற்றிக்கொண்டதைக் கண்ட வேதத்திற்குத் தலைவனான இராமபிரான், ''சரி இதுவும் நன்றே'' என்று கூறிக்கொண்டு, மேல் ஏழு உலகங்களும், கீழ் ஏழு உலகங்களும், ஒன்று சேர்ந்தாற்போன்ற வலிமையும் பரப்பும் கொண்டதான தனது வெற்றி விளைவிக்கும் கோதண்டம் என்னும் வில்லை அம்பினில் நாண் எறிந்து குணத்வனி செய்தபொழுது - பாடல்தொடர்கிறது.

''நாகம்'' என்ற சொல்லைக் கீழ் ஏழு உலகங்களைச் குறிக்கக் கவிஞன் இப்பொழுதுதான் முதன் முதலாகப் பயன்படுத்துகிறான் என்பதை உணர்க. நாகலோகம் என்றால் நாகர்கள் வசிக்கின்ற பாதாளலோகம் என்பது நமக்குத் தெரியும். கீழ் ஏழு உலகங்களையும் ஒரே 'நாகம்' என்ற சொல்லால் இங்கே கவிஞன் குறித்திருப்பது நினைவிற்கொள்ளத் தக்கது. 'நாகம்' என்ற சொல் சுவர்க்கம், பாதாளம் என்று இரண்டு பொருளையும் தரும். 'வேதநாயகன்' என்பது வேதங்களுக்குத் தலைவன் என்றும், வேதங்களைப் படைத்தவன் என்றும் பொருள்படும். இராமபிரான்-சிங்கஏறு; குன்றுகள்-அரக்கர்கள்.

77. "கதம் புலர்ந்த; சிந்தை வந்த, காவல்யானை; மாலொடு,
மதம் புலர்ந்த; நின்ற வீரர்வாய் புலர்ந்த; மாஎலாம்
பதம் புலர்ந்த; வேகமாக வாள் அரக்கர் பண்புசால்
விதம் புலர்ந்தது; என்னின், வென்ற வெண்றி சொல்ல வேணுமோ?"
(9458)

Koviloor Digital Library

(கதம்-கோபம்; புலர்தல்-நீங்குதல்; மால்-மதமயக்கம்; புலர்தல்-வற்றுதல்; புலர்தல்-உலர்தல்; மா-குதிரை; பதம்-கால்கள்; புலர்தல்-குறைதல்; வாள்-கொடிய; விதம்-நிலை; வென்றி-வெற்றித்திறம்)

''இராமபிரான் எழுப்பிய நாண்ஒலி கேட்டு, அரக்கர்படையில் காவலுக்கு வந்த போர்யானைகளும், திசைகளில் காவல்காத்துக் கொண்டிருக்கும் திசையானைகளும் தங்கள் உள்ளத்தில் எழுந்த சினம் தணியப் பெற்றன; மேலும் மதமயக்கத்தோடு, மதநீர் சொரிவதும் குறைந்து போயிற்று. போர்க்களத்தில் போர் செய்வதற்கென்று நிலைத்துநின்ற அரக்கவீரர்களின் வாய்கூட உலர்ந்து வறண்டுபோயின; குதிரைகள் எல்லாம் தங்கள் கால்களின் பலம் குறைந்து வேகம் தளர்ந்தன; கொடிய அரக்கர்களின் வீரப்பண்புமிக்க போர்புரியும் செயல்களும், போர்க்களத்தில் செயல்படாது வாளா நின்றன என்றால், இராமபிரான் பெற்ற வெற்றியின் சிறப்பை இன்னும் விளக்கமாக எடுத்துரைக்க வேண்டுமோ?'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. 'புலர்ந்த' என்ற சொல் எல்லா அடிகளிலும் பயின்று வந்திருப்பதால் இப்பாடல் சொற்பொருட் பின்வரு நிலையணியின் பாற்படும். புலர்தல் என்ற ஒரேசொல் நீங்குதல், வற்றுதல், உலர்தல், குறைதல் என்ற பொருள்களையும் தந்து நின்றதை உணர்க. 'வென்றி சொல்லவேணுமோ' என்று கூறினாலே போதுமானது. வென்ற வென்றி என்று அதற்கு ஒரு அடைமொழி கொடுத்து இராமபிரான் வெற்றியைச் சிறப்பித்தார் என்க. 'வேணுமோ' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளது. வேண்டாம், வேண்டியதில்லை என்ற பொருளைத்தரும். இராமபிரான் எழுப்பிய வில்லின் நாண் ஒலியினால் நால்வகைப் படைகளும் நடுக்கம் எய்தின என்பது கருத்து.

78. வெறித்து இரிந்த வாசியோடு, சீயமாவும், மீளியும்
செறித்து அமைந்த சில்லி என்னும் ஆழிகூடு தேர்எலாம்,
முறித்து எழுந்த முற்கை யானை வீசும் மூசு பாகரைப்
பிறித்து இரிந்து சிந்த, வந்து ஓர் ஆகுலம் பிறந்ததால். (9459)

(வெறித்து-வெருவி/மருண்டு/அஞ்சி; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; வாசி-குதிரை; சீயமா-சிங்கம்; மீளி-பேய்; செறித்து-நெருக்கி; சில்லி-உருளை; ஆழி-சக்கரம்; மூசு-நெருங்கிய; பிறித்து-பிரித்து/நீக்கி/தள்ளி; ஆகுலம்-அவலநிலை/கலக்கநிலை/துயரநிலை; பிறந்தது-தோன்றியது; மா-விலங்கு)

அரக்கர்படையிலிருந்த குதிரைப்படைகளெல்லாம் அந்நாண் ஒலி கேட்டு மருண்டு, நிலைகெட்டு ஓடின; சிங்கம்போன்ற விலங்கும், பேய்களும், நன்கு நெருக்கிக் கட்டப்பட்ட சில்லி என்னும் சக்கரத்தோடு கூடிய தேர்களை எல்லாம், முன்னால் தொங்கும் துதிக்கைகளையுடைய

Koviloor Digital Library

யானைகள் முறித்துப்போட்டன; அவை அங்குசத்தை வீசி அவற்றை அடங்கச் செய்கின்ற நெருங்கிய பாகர்களையெல்லாம் கீழே தள்ளி சிதறும்படி செய்தன. எனவே அரக்கர்படையில் ஓர் துயரநிலை, அவலநிலை உண்டாயிற்று.

இராமபிரான் வில்லின் நாண்ஒலி கேட்டு, குதிரை, சிங்கம், பேய் முதலானவைகள் நிலைகெட்டு ஓடிச்சிதறின. தேர்கள் எல்லாம் சக்கரம் முறிந்து கீழே விழுவனஆயின. யானைகள் எல்லாம் தங்கள் யானைப் பாகரைக் கீழே தள்ளி சிதறடித்தன. எனவே அரக்கர்படையில் தீய நிமித்தங்கள் தோன்றின என்பதாம். 'பிரித்து' என்பது பிறித்து என எதுகைநோக்கித் திரிந்தது. 'மா' என்பது பொதுவாக விலங்கினத்தைக் குறிக்கும். இங்கு சிங்கத்தைக் குறித்தது; இங்கேகாலாட்படை விடுபட்டுப் போனதே என்று கருதினால், 'மீளி' என்ற சொல்லுக்குப் பேய்போன்ற அரக்கர்கள் என்றாவது, 'ஆழி' என்ற சொல்லுக்கு கடல்போலப் பரந்துபட்ட காலாட்படை என்றாவது பொருள் கொள்ளலாம்.

79. இந்நிமித்தம் இப்படைக்கு இடம் துடித்து அடுத்தது ஓர்
துன்னிமித்தம் என்று கொண்டு, வானுளோர்கள் துள்ளினார்;
அந்நிமித்தம் உற்றபோது, அரக்கர் கண் அரங்க, மேல்
மின் நிமிர்த்தது அன்ன வாளி, வேதநாதன் வீசினான். (9460)

(நிமித்தம்-உற்பாதம்/அறிகுறி/சகுனம்; அடுத்தது-உண்டானது/ஏற்பட்டது; அரங்குதல்-கலங்குதல்/வருந்துதல்; வேதநாதன்-வேத முதல்வன்/இராமபிரான்; வீசுதல்-வாரியிறைத்தல்; கொண்டு-கருதி)

இந்த அறிகுறிகள் இந்தச் சேனைக்கு இடப்புறம் துடித்தது போன்று உண்டான ஒரு தீய சகுனம் என்றும், தமக்கு நல்ல சகுனம் என்றும் கருதி விண்ணுலகில் உள்ள தேவர்கள் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார்கள்; அத்தகைய தீய உற்பாதங்கள் அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தபோது, அரக்கர்கள் கண்கலங்கி, வருந்த, வேதநாகயனாகிய இராமபிரான் மேலே வானத்திலுள்ள மின்னல்கள்போல ஒளிமிக்க அம்புகளைப் பகைவரை நோக்கி வாரி இறைத்தான்.

'நிமித்தம்' என்பது அறிகுறி அல்லது சகுனம் எனப்படும். தீ நிமித்தம் என்பது அபசகுனம், உற்பாதம் என்றும், நன்நிமித்தம் நல்ல அறிகுறி யென்றும் பொருள்படும். இடம்துடிப்பது என்பது ஒரு அறிகுறி. மனிதரில் ஆண்களுக்கு இடப்பக்கமாகத் தோள், கண், முதலியன துடித்தல் நல்ல அறிகுறி என்றும், பெண்களுக்கு வலப்பக்கம் துடித்தல் நல்ல சகுனம் என்றும் கருதப்படும். இங்கே அதையே சேனைக்குப் பொருத்திச் சொல்லி யிருக்கிறான் கவிஞன் எனக்கொள்க. 'அரங்குதல்' என்ற சொல்லுக்கு அழுந்துதல் என்பது பொருள். இங்கே கலங்குதல் அல்லது வருந்துதல் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. 'வேதநாதன்' என்பது வேத

Koviloor Digital Library

முதல்வன், வேதநாயகன் என்ற பொருளில் இராமபிரானைக் குறித்தது. 'இந்நிமித்தம்' என்பது முன்பாடலில்கூறப்பட்ட யானை, குதிரை, சிங்கம், பேய் முதலானவைகள் செய்த செயல்களைக் குறித்தது.

80. ஆளிமேலும், ஆளின்மேலும், ஆணைமேலும், ஆடல் மா
மீளிமேலும், வீரர்மேலும், வீரர் தேரின்மேலும், வெவ்
வாளிமேலும், வில்லின்மேலும், மண்ணின்மேல் வளர்ந்த மாத்
தூளிமேலும் ஏறஏற, வீரன் வாளி தூவினான். (9461)

(ஆளி-சிங்கம்; ஆள்-காலாட்படை வீரர்கள்; மா-குதிரை; மீளி-பேய்; வெவ்-கொடிய; வளர்தல்-பெருகுதல்; மா-மிகுந்த; தூளி-புழுதி/மண் துகள்; ஏறுதல்-சென்று பொருந்துதல்; தூவுதல்-மிகுதியாகச் செலுத்துதல்; ஆடல்-வலிமை)

ஆண்மையிற் சிறந்த வீரனான இராமபிரான், போர்க்களத்தில் நின்றிருந்த சிங்கங்கள், காலாட்படை வீரர்கள், யானைகள், நடனம்புரியும் இயல்புடைய வலிமைமிக்க குதிரைகள், பேய்கள், தேர்கள், தேரைச் செலுத்திவந்த தேர்ப்பாகர்களாகிய வீரர்கள், கொடிய அம்புகள், விற்கள், முதலியவற்றின்மீதும் மண்ணில்மேல் மிகுதியாகச் சேர்ந்த மிக்க புழுதியினை ஊடுருவிச் செல்லும்படியும், அம்புகளை வாரி இறைக்க லானான்.

''ஆடல்'' என்பது ''அடல்'' என்ற சொல்லின் நீட்டல் விகாரமாகக் கொண்டு வலிமைபொருந்திய என்ற பொருளையும் கொள்ளலாம். ''ஆடல்'' என்பதற்குச் சாதாரணமான பொருளாகிய நாட்டியம் ஆடும் இயல்புடைய என்ற பொருளையும் கொள்ளலாம். குதிரைக்கு இரண்டு பொருள்களும் பொருந்திவரும். ''ஏறஏற'' என்ற அடுக்கு நிலத்தில் மேலும்மேலும் பெருகிப் படரும்படி என்ற விரிந்த பொருளைத்தரும். மிகுதி பற்றி வந்தது.

81. மலை விழுந்தவா விழுந்த மான யானை; மள்ளர் செந்
தலை விழுந்தவா விழுந்த தாயவாசி; தாள்அறும்
சிலை விழுந்தவா விழுந்த திண் பதாகை; திங்களின்
கலை விழுந்தவா விழுந்த வெள் எயிற்ற காடு எலாம். (9462)

(மானம்-பெருமை; மள்ளர்-அரக்கர்/வீரர்கள்; தாய-தாவிய; வாசி-குதிரைகள்; தாள்-அடி/தண்டு; சிலை-வில்; திண்-உறுதியான; பதாகை-கொடிகள்; வெள்-வெள்ளிய/வெண்மையான; எயிறு-பற்கள்; காடு-தொகுதி)

அப்படையில் உள்ள பெருமைமிக்க யானைகள் எல்லாம் இராம பிரானுடைய அம்பின் தாக்கத்தால், மலைகள் சரிந்து விழுந்தனபோலத் தரையில் விழுந்து மாண்டன; தாவிச்செல்லும் இயல்புடைய குதிரைகள்,

Koviloor Digital Library

அரக்கவீரர்களின் செம்பட்டை முடியையுடைய தலைகள் அறுந்து விழுவதுபோல நிலத்தில் விழுந்து இறந்துபோயின; அரக்கர்கள் ஏந்திவந்த உறுதியான கொடிகள் எல்லாம், விற்களின் அடித்தண்டு அறுந்து விழுவனபோல அற்று பூமியில் விழுந்தன; அரக்கர்களின் வெண்மையான கோரப்பற்களின் தொகுதிகள் எல்லாம் பூரண சந்திரனின் கலைகளின் தொகுதிகள் நிலத்தில் விழுவதுபோல விழுந்தன.

'விழுந்தவா' என்பது விழுந்தவாறு என்பதன் கடைக்குறை எனக் கொள்க. யானை, குதிரை, கொடிகள், அரக்கர்களின் பற்கள் எல்லாம் சிதைந்து விழுந்தன என்பது கருத்து. யானைகளுக்கு மலைகளும், அரக்கர்களின் பல்கூட்டத்திற்கு பூரணசந்திரனின் கலைத்தொகுதிகளும் உவமை.

82. வாடை நாலுபாலும் வீச, மாக மேக மாலை வெங்
கோடை மாரிபோல வாளிகூட, ஓடை யானையும்,
ஆடல்மாவும், வீரர்தேரும், ஆளும் மாள்வது ஆனவால்;
பாடு பேருமாறு கண்டு, கண்செல் பண்பும் இல்லையால். (9463)

(வாடை-கடுங்காற்று; நாலுபால்-நாற்புறம்/நான்கு நேர்த்திசைகள்; மாகம்-ஆகாயம்; மாலை-வரிசை; மாரி-பெருமழை; கூடுதல்-பாய்தல்; ஓடை-முகபடாம்/நெற்றிப்பட்டம்; ஆடல்-அடல்/வலிமை; பாடு-பக்கம்; பேருதல்-ஓடுதல்; பண்பு-தன்மை; வெங்கோடை-முதுவேனிற் காலம்)

கடும் வாடைக்காற்று நான்கு பக்கங்களிலிருந்தும் சுழன்று வீசவும், ஆகாயத்தில் உள்ள மேகவரிசைகள் கொடிய முதுவேனிற் காலத்துப் பெய்யும் பெருமழைபோல இராமபிரானின் அம்புகள் மிகுந்த எண்ணிக்கையில் ஊடுருவவும், நெற்றிப்பட்டம் அணிந்த யானைகளும், போர்புரியும் வலிமை மிகுந்த குதிரைகளும், காலாட்படை வீரர்களும், தேர்களும், தேரைச் செலுத்திவந்த தேர்ச்சாரதிகளும் மாண்டுபோயினர்; அவ்வுடல்களினின்றும் பெருகிப் பக்கங்களில் ஓடிய இரத்த ஆற்றைக் காண்பதற்குக்கூட, பார்க்கும் இயல்புடைய கண்கள், தாமே அச்சம் கொள்வதாயின; பார்க்கக் கூசின.

வடக்கிலிருந்து வரும் காற்று வாடைக்காற்று; தெற்கிலிருந்து வரும் காற்று தென்றற்காற்று; கிழக்கிலிருந்து வரும் காற்று கோடைக்காற்று; இங்கே நாலுபக்கங்களிலிருந்தும் கடும் வாடைக்காற்றே வீசியதுபோல இராமபிரான் அம்புகளை நாலாப்பக்கங்களிலிருந்தும் நாலாப் பக்கங்களிலும் செலுத்தினான் என்பதைக் குறித்து நின்றது. ''நாலுபால்'' என்பது நான்கு நேர்த்திசைகளைக் குறித்தது என்க. ''கண்செல் பண்பு'' என்பது காண்பது, பார்ப்பது என்ற சாதாரணப் பொருளையும் தரும். அந்த இரத்த ஆற்றின் பெருக்கைப் பார்க்கக் கண்களாலும் இயலவில்லை என்பது

Koviloor Digital Library

கருத்து. ''அடல்'' என்பது ஆடலாக நீண்டது. வல்லமை, வலிமை என்பது பொருள்.

83. விழித்த கண்கள், கைகள், விற்கள், வேல்கள், வாள்கள், விண்ணினுள்
தெழித்த வாய்கள், செல்லலுற்ற தாள்கள், தோள்கள், செல்லினைப்
பழித்த வாளி சிந்த, நின்றுபட்ட அன்றி, விட்ட கோல்
கழித்த ஆயுதங்கள், ஒன்று செய்தது இல்லை கண்டதே. (9464)

(தெழித்தல்-உரப்புதல்/அதட்டுதல்; செல்-மேகம்; கோல்-அம்புகள்; கழித்த-நீங்கிய/செலுத்திய)

இராமபிரான் மேகத்தைக் காட்டிலும் மிகுதியான அம்பு மழைகளைப் பெய்தான். அதனால் அரக்கர்கள் நடுக்கமுற்று விழித்த கண்களோடும், ஓங்கிய கைகளோடும், செலுத்திய விற்களோடும், வாள்களோடும், வேல்களோடும், ஆகாயம்வரை எட்டுமாறு உரத்த சத்தத்தோடு எழுப்பிய அதட்டல்களோடும், ஓடுகின்ற கால்களும், பருத்து வீங்கிய தோள்களும் அவையவை நின்ற இடத்திலேயே நின்று அழிந்துபட்டனவேயன்றி, அவர்கள் செலுத்திய அம்புகளோ, உறையினின்றும் நீக்கிச் செலுத்திய வாட்படை போன்ற போர்க்கருவிகளோ, இராமபிரானுக்கு எந்த ஊறும் செய்யவில்லை. இதை யாரும் தங்கள் கண்களால் பார்க்கவில்லை.

கடல்போல் பரந்த பெருஞ்சேனை செலுத்திய எந்த ஆயுதமும் இராமபிரானுக்கு எந்தத்தீங்கும் செய்யவில்லை. ஆனால் தனித்து நின்ற இராமபிரான் செலுத்திய அம்புகளால் அவர்கள் கண்கள், கைகள், விற்கள், வேல்கள், வாள்கள், வாய்கள், கால்கள், தோள்கள் எல்லாம் அங்கங்கே அழிந்துபட்டன என்பது கருத்து.

84. தொடுத்த வாளியோடு, வில் துணிந்து வீழும் முன்; துணிந்து
எடுத்த வாள்களோடு தோள்கள் இற்று வீழும்; மற்று உடன்
கடுத்த தாள்கள் கண்டம் ஆகும்; எங்ஙனே கலந்து நேர்
தடுத்து வீர்தாமும் ஒன்று செய்யுமா, சலத்தினால்? (9465)

(கடுத்தல்-விரைந்துசெல்லுதல்; கண்டம்-துண்டம்; சலம்-கோபம்/சினம்/வெகுளி; செய்யுமா-செய்யுமாறு/செய்தல்; எங்ஙனே-எவ்வாறு; தடுத்தல்-விலக்குதல்; கலந்து-எதிர்நின்று)

''அரக்கர்வில்லில்அம்பைப்பொருத்திச்செலுத்தும்முன்பே, அவர்கள் விற்கள் இராமபிரான் செலுத்திய அம்புகளால் அறுபட்டுக் கீழே விழுந்து விடும்; அவர்கள் மீண்டும் துணிந்து கைகளில் எடுக்கின்ற வாட்படை களோடு, அரக்கர்கள் தோள்களும், இராமபாணத்தால் அறுந்து விழுந்து விடும்; மேலும் அவர்கள் போர்க்களத்தினின்றும் விரைந்து ஓட முற்படும் போது, அவர்கள் கால்களும் துண்டிக்கப்பட்டுவிடும்; இவ்வாறு நிகழ்ந்தால், அந்த அரக்கவீரர்கள் எவ்வாறு இராமபாணத்தைத் தடுக்க

Koviloor Digital Library

முடியும்? கோபத்தால் தடுத்து, நேருக்குநேர் நின்று போர்செய்து ஏதோ ஒரு தீங்கினை இராமனுக்கு எவ்வாறு செய்ய முடியும்?'' என்கிறான் கவிஞன்.

காலாட்படை வீரர்கள் அழிந்தவிதம் பேசப்பட்டது.

85. குரம் துணிந்து, கண் சிதைந்து, பல்லணம் குலைந்து, போர்
உரம் துணிந்து, வீழ்வது அன்றி, ஆவிஓட ஒண்ணுமே?
சரம் துணிந்த ஒன்றை, நூறு சென்று சென்று தள்ளலால்,
வரம் துணிந்த வீரர் போரின்முந்த உந்து வாசியே?'' (9466)

(தள்ளல்-வீழ்த்துதல்; முந்த-முற்பட; உந்துதல்-செலுத்துதல்; வாசி-குதிரை; குரம்-குளம்புகள்; பல்லணம்-மேலிடு தவிசு/மெத்தை; உரம்-மார்பு; ஆவி-உயிர்; ஒண்ணுமோ-இயலுமோ; சரம்-அம்பு; துணிந்தது-இலக்காகக் கொண்டது)

இராமபிரான் தனது இலக்காகத் துணிந்த ஒரு பொருளை, அவனது கோதண்டம் என்னும் இராமபாணம் நூறுநூறாகப் பெருகிச்சென்று வீழ்த்துவதால், வரம்மிகப் பெற்ற அரக்க வீரர்கள் அந்த வன்மையினால் துணிந்து போர்க்களத்தில் முற்பட்டுச்செலுத்துகின்ற குதிரைகள் எல்லாம், தம் குளம்புகள் அறுபட்டும், கண்கள் சிதைவுறப்பெற்றும், மேலிடு தவிசாகிய பல்லணம் நிலைகுலைந்தும், பெரிய அவற்றின் மார்பு சிதைக்கப்பட்டும், மடிந்து தரையில் சாய்வதைத் தவிர உயிர்கொண்டு, போர்க்களத்தினின்றும் தப்பி ஓட முடியுமோ?''

''சென்று சென்று'' என்ற அடுக்கு இடைவிடாமல் தொடர்ந்து சென்று என்ற பொருளைத்தரும். 'பல்லணம்' என்ற சொல் குதிரை மேலிடும் தவிசைக் குறிக்கும். 'ஒண்ணுமே' என்பதில் ஏகாரம் எதிர்மறைப் பொருளது. ஒண்ணாது, இயலாது என்ற பொருளைத்தரும். குதிரைப் படையின் அழிவு கூறப்பட்டது.

86. ஊர உன்னின், முன்பு பட்டு உயர்ந்த வெம் பிணங்களால்,
பேர ஒல்வது அன்று; பேரின் ஆயிரம் பெருஞ்சரம்
தூர, ஒன்று நூறு கூறுபட்டு உகும்; துயக்கு அலால்,
தேர்கள் என்று வந்த பாவி என்ன செய்கை செய்யுமே? (9467)

(ஊர-ஊர்ந்து செலுத்த; உன்னுதல்-கருதுதல்/நினைத்தல்; படுதல்-இறந்துபோதல்; உயர்ந்த-மேடாகக்குவிந்த; பேர்தல்-இடம்பெயர்ந்து போதல்; ஒல்வது-இயல்வது/முடிவது; தூர-நெருங்க/நிரம்ப; உகும்-சிதறி அழியும்; துயக்கு-சோர்வு/தளர்ச்சி; கூறு-பகுதி/துண்டு)

அரக்கவீரர்கள் தம் தேர்களைச் செலுத்திக்கொண்டு முன்னேபோக விழைந்தாலும், அவர்களுக்கு எதிரே போர்க்களத்தில் முன்பு இறந்துபட்ட

Koviloor Digital Library

கொடிய பிணங்கள் மலைபோலக் குவிந்து கிடக்கின்றன. எனவே மேலே இடம் பெயர்ந்து செல்வது என்பது முடியாதகாரியமாகும்; அந்தத் தடையையும்மீறிப் போகநேர்ந்தால், இராமபிரானுடைய ஆயிரக் கணக்கான பெரிய கொடிய அம்புகள், வந்து நிரம்பி, தேர் ஒன்றை நூறு துண்டங்களாக்கிச் சிதைத்துவிடும். எனவே இதனால் அரக்கர்படைக்குச் சோர்வுதான் உண்டாகுமே தவிர, தம்முடன் வந்த பாவிகளாகிய, தேர்கள் சென்று வேறு என்ன செயலைச்செய்து இவர்களுக்கு உதவிசெய்ய முடியும்?

ஊர்தல் என்பது மெல்லமெல்ல நகர்ந்து செல்வதைக் குறிக்கும்; ''தேர்கள் என்று வந்த பாவி'' என்பது ஒரு அரிய சொல்லாட்சி. உயிரினங் களுக்குத்தான் பாவம், புண்ணியம் எல்லாம் உண்டு. இங்கே தேர்ப் படையைப் பாவி என்கிறான் கவிஞன்; வள்ளுவனும், உயிரல்லாத வற்றைப் பாவி என்று பேசியிருக்கிறான். ''அழுக்காறு என ஒரு பாவி'' என்பது குறள்-168. ''இன்மை என ஒரு பாவி'' என்பது குறள்-1042. இதை அடியொற்றியே கம்பனும் ''தேர்கள் என்று வந்த பாவி'' என்று பேசியிருக் கிறான் எனக் கொள்ளலாம். பொதுவாகக் கொடுமை செய்தவர்களைப் பாவிகள் என்று அழைப்போம். தக்க காலத்தில் உதவிசெய்யாதவனையும் பாவி என்றழைத்தல் உலக வழக்கு. இங்கே தேர்கள் அரக்கர்களுக்கு தக்க காலத்தில் உதவிசெய்யவில்லை என்பது மட்டுமல்ல, தடையாகவும் விளங்கிற்று என்பதாம். எனவே அவற்றைப்பாவி என்றான் என்க. தேர்ப்படையின் அழிவு பேசப்படுகிறது.

87. எட்டு வன் திசைக்கண் நின்ற யாவும், வல்ல யாவரும்,
கிட்டின், உய்ந்து போகிலார்கள் என்ன நின்ற, கேள்வியால்;
முட்டும் வெங்கண் மான யானை, அம்பு உராய, முன்னமே
பட்டு வந்த போல் விழுந்த; என்ன தன்மை பண்ணுமே? (9468)

(வன்-வலிய; கிட்டுதல்-பொருதல்/அணுகுதல்; உய்தல்-தப்பிப் பிழைத்தல்; நின்ற-நிலைபெற்ற; கேள்வி-புகழ்த்திறம்; முட்டுதல்-மோதித் தாக்குதல்; மான-பெருமைமிக்க; படுதல்-இறந்துமடிதல்; தன்மை-செயல்; கேள்வி-இசை/கேட்கப்படுவது/புகழ்; மானம்-வீர வுணர்ச்சியுமாம்)

எட்டுத்திசைகளிலும் காவல்புரிந்து நிற்கின்ற வலிய எட்டு யானைகளும், அவைபோல வல்லமைபடைத்த எல்லோரும், இப்பொழுது போர்புரியும் பொருட்டு போர்க்களத்தை நெருங்கிச் சென்றால், உயிர்பிழைத்துத் தப்பிப்போதல் என்பது இயலாதது என்று மனத்துட்கொண்டு, நின்றபொழுது, மோதித்தாக்கும் இயல்புடையதும், கொடிய கண்களையுடையவையுமான, பெருமையும், வீரவுணர்வும் மிக்க போர்க்களத்தில் நிற்கும் யானைகள், இராமபிரானின் அம்புகள் தம் உடலில் சிறிதளவு உராய்ந்து செல்லும்பொழுதே, ஏதோ அந்த அம்பு தம்

Koviloor Digital Library

உடம்பில் முன்னமே பட்டுவிட்டதைப்போல உடனே இறந்துபட்டுத் தரையில் விழுந்தன. பாவம்! அந்த யானைகளால் இராமபிரானுக்கு எதிராக வேறு என்னதான் செய்யமுடியும்?

அரக்கர்களின் யானைப்படை அழிந்தது பேசப்படுகிறது. எட்டுத்திசை என்பது நான்கு நேர்த்திசைகளையும், நான்கு கோணத்திசைகளையும் குறிக்கும். இராமன் அம்பு அந்த யானைகளின் உடலில் உராய்ந்ததுமே, அவை முன்னரே உயிர் நீங்கிய உடல்கள்போலத் தரையில் விழுந்தன என்பது, இராமபாணத்தின் விரைவையும், கொல்லும் தன்மையையும் சிறப்பித்தது என்க.

88. வாவி கொண்ட புண்டரீகம் அன்ன கண்ணன் வாளி, ஒன்று
ஏவின், உண்டை நூறுகோடி கொல்லும் என்ன, எண்ணுவான்,
பூவின் அண்டர்கோனும், எண்மயங்கும்; அன்னபோரின் வந்து,
ஆவி கொண்ட காலனார் கடுப்பும் அன்னது ஆகுமே! (9469)

(வாவி-தடாகம்/பொய்கை/நீர்நிலை; புண்டரீகம்-செந்தாமரை மலர்; கண்ணன்-கண்களையுடையவன்/இராமபிரான்; ஏவுதல்-செலுத்துதல்; பூ-தாமரைமலர்; அண்டர்கோன்-தேவர்தலைவன்/பிரமன்; எண்-எண்ணுதல்; மயங்குதல்-திகைத்து நிற்றல்; அன்ன-அத்தகைய; ஆவி-உயிர்; காலனார்-இயமன்; கடுப்பு-விரைவு/வேகம்)

தடாகத்தில் மலர்ந்து தோன்றும் செந்தாமரை மலர்போலும் கண்களையுடைய இராமபிரான் ஏவுகின்ற ஒவ்வொரு அம்பும், அதனின்று செலுத்தப்படும் ஒவ்வொரு படையும் நூறு கோடிப்பேரைக் கொன்று சாய்க்கும் என்று, அவ்வுயிர்களை எண்ணும் பணியில் ஈடுபட்டவனாகிய தாமரைமலரில் வாழும் தேவர்தலைவனாகிய பிரமதேவனும் எண்ணிக்கையில் திகைப்புறுவான்; அத்தகைய போர்க்களத்தில் உயிர்களைக் கவர்ந்துகொள்ள வந்த இயமனும்கூட அந்த பிரமன்போன்ற விரைவும் திகைப்பும் கொண்டவனானான்.

இராமபிரான் அம்பால் எத்தனை நூறுகோடிப்பேர் இறந்தனர் என்பதை எண்ணமுடியாமல் பிரமதேவன் திகைத்து நிற்பான். அதுபோலவே போர்க்களத்தில் இறந்துபட்ட உயிர்களைக் கவரவந்த இயமனும் அதே விரைவுடன் செயல்படத் தொடங்கி, பிரமனைப்போலவே அவனும் திகைத்து நின்றான் என்பதாம். காலனார் என்பது இயமனைக்குறிக்கும் மரியாதைப் பன்மை எனக்கொள்க. இராமபிரான் செலுத்திய அம்பினால் இறந்த உயிர்களைக் கணக்கிட்டு அறியமுடியாதவாறு பிரமதேவனும் போர்க்களத்தில் கிடந்த உயிர்களை விரைந்து பற்றுதற்கு இயலாத நிலையில் இயமனும் திகைத்துச் செயலற்ற நிலையில் நின்றனர் என்பதாம்.

Koviloor Digital Library

89. கொடிக் குலங்கள், தேரின்மேல, யானைமேல, கோடைநாள்,
இடிக் குலங்கள் வீழ, வெந்த காடுபோல் எரிந்தவால்;
முடிக் குலங்கள் கோடிகோடி சிந்த, வேகம் முற்றுறா,
வடிக் குலங்கள் வாளிஓட, வாயினூடு தீயினால். (9470)

(வடி-கூர்மையான; வாளிக்குலங்கள்-அம்புகளின் தொகுதிகள்; எரிதல்-வெந்து அழிதல்; முற்றுறா-முற்றி/நிரம்பி; ஓடுதல்-பாய்ந்து செல்லுதல்)

இராமபிரான் செலுத்திய கூர்மையான அம்புக்கூட்டங்கள் தம் நுனியில் பொருந்திய நெருப்பைக்கொண்டு பாய்ந்து விரைந்து சென்று, கோடிக் கணக்கான அரக்கர் தலைகளை அறுத்து அவற்றில் உள்ள முடித் தொகுதிகளை எரித்துச் சிதறச்செய்தன. அதன்பின்னும் அதன் வேகம் குறையாது சென்று, தேரின்மேல் உள்ளனவும், யானையின்மேல் உள்ளனவுமான கொடிக் கூட்டங்களைக் கோடைக்காலத்து இடித் தொகுதிகள் போலத் தாக்கி அவற்றை விழச்செய்தன, அவை காட்டில் பற்றிஎரியும் நெருப்புப்போல எரிந்து வெந்து சாம்பலாய்ப்போயின.

குலங்கள் என்றசொல் நான்கு அடிகளிலும் பயின்று வந்திருப்பதால் இப்பாடல் சொற்பொருட் பின்வருநிலையணியின் பாற்பட்டதாகும். இராமபிரான் செலுத்திய அம்பின் நுனியில் உள்ள தீப்பொறி, யானை மேலும், தேரின்மேலும் இருந்த கொடிகளையும், அரக்கர்கள், குதிரைப் படையின் மீது ஏந்தியிருந்த கோடிக்கணக்கான கொடிகளையும், கோடைக் கால இடி, காடுகளைச் சுட்டு எரிப்பதுபோல எரித்து நாசப்படுத்தின என்பதாம். இராமபிரானது அம்புக்குக் கோடைக்கால இடி உவமை. கோடைநாள் என்பது முதுவேனிற்காலத்தைக் குறித்தது.

90. அற்ற வேலும், வாளும் ஆதி ஆயுதங்கள் மீது எழுந்து,
உற்ற வேகம் உந்த ஓடி, ஓதவேலை ஊடுற,
துற்ற வெம்மை கைம்மிக, சுறுக்கொளச் சுவைத்ததால்,
வற்றி நீர் வறந்து, மீன்மறிந்து, மண் செறிந்தவால். (9471)

(அறுதல்-துணிக்கப்படுதல்; ஓதம்-அலைகள்; துறுதல்-செறிதல்/நெருங்குதல்; கைம்மிகுதல்-மிக்குஎழுதல்; சுவைத்தல்-பருகுதல்; வறள்தல்-வற்றுதல்; மறித்தல்-மடிதல்/மடங்குதல்; செறிதல்-நெருங்கிக் காணப்படுதல்; ஆதி-முதலாய)

இராமபிரானது அம்புகளால் துணிக்கப்பெற்ற அரக்கர்களது வேற் படைகளும், விற்படைகளும், எல்லாப் போர்க்கருவிகளும், ஆகாயத்தின் மேலே எழுந்து, மிக்க வேகம்கொண்டு ஓடிச்சென்று, அலைகளையுடைய கடலின்மீது ஊடுருவி விழுந்தன. அதனால் அவற்றினின்றும் எழுந்த வெப்பம் மிக்குத் தோன்ற, கடல் நீரின் மீது சுறு என்னும் ஓசை எழுந்தது.

Koviloor Digital Library

அந்தநீரைப் பருகியதால், கடல் வற்றி வறண்டுபோனது. அதனால் அதில்வாழும் மீன்கூட்டங்கள் மடிந்து விழுந்து தரையில் புதையுண்டன.

''சுறுக்கொள'' என்பது சுறு என்ற ஒலியெழ என்ற பொருளைத்தரும். அரக்கர்களது வேற்படையின் நுனியில் நெருப்புப் பொருத்தப் பட்டிருப்பதனால் அவை கடலில் விழுந்த பொழுது சுறு என்னும் ஓசை உண்டானது. அதுவே இங்கு ''சுறுக்கொள'' என அனுகரணக் குறிப்பால் உணர்த்தப்பட்டது எனக்கொள்க.

91. போர் அரிந்தமன் துரந்த புங்கவாளி, பொங்கினார்
ஊர் எரிந்த நாள் துரந்தது என்ன மின்னி ஓடலால்,
நீர் எரிந்த வண்ணமே, நெருப்பு எரிந்த, நீள்நெடுந்
தேர் எரிந்த, வீரர்தம் சிரம்பொடிந்து சிந்தவே. (9472)

(அரிந்தமன்-பகைவரை அடக்குபவன்/இராமபிரான்; துரத்தல்-ஏவுதல்/செலுத்துதல்; புங்கம்-காம்பு/அடிப்பகுதி; ஊர்-முப்புரம்)

போர்க்களத்தில் பகைவர்களை அடக்கி வெற்றிகொள்ளும் இயல் பினனான இராமபிரான் செலுத்திய கூரிய, மேலான அடிக்காம்புடைய அம்புகள், முன்பு முப்புரங்களைக் கொண்டிருந்த அசுரர்கள் பொங்கி யெழுந்தபோது சிவபெருமான் முப்புரத்தையும் எரிப்பதற்காகச் செலுத்திய அம்புகளைப்போல மின்னல்போல ஒளிவீசிக்கொண்டு பாய்ந்தன. இராமபிரானின் அம்புகள் முன்பு கடலை வற்றச்செய்து எரித்ததுபோல இப்பொழுதும், அரக்கவீரர்களது தலைகள் சிந்திச் சிதறிப்போகுமாறு நீண்டபெரிய தேர்கள் எரிந்து சாம்பலாகிப்போயின.

முன்பு சிவபெருமான் முப்புரத்தை எரிக்கச் செலுத்திய அம்புகளின் தன்மைக்கு இப்பொழுது இராமபிரான் செலுத்திய அம்புகளின் தன்மை உவமை. முன்பு இராமபிரான் வருணனை வழிவேண்டித் தவம்செய்ய, அவன் வரக் காலந்தாழ்ந்தமையால் சீற்றம்கொண்டு அக்னி அஸ்திரத்தை ஏவியபோது எரிந்து வறண்டுபோன கடலுக்கு, இப்பொழுது இராம பிரானால் செலுத்தப்பட்ட அம்புகள் கடலில்போய் விழுந்து கடலை வற்றச்செய்ததற்கு ஒப்பு. ''நீர் எரிதல்'' என்பது கடல் வற்றி வறண்டு போவதைக் குறித்தது. சிவபெருமான் திரிபுரம் எரித்த வரலாறும், இராமபிரான் அக்னி அஸ்திரத்தைச் செலுத்திக் கடலை வற்றச்செய்த நிகழ்ச்சியும் காப்பியத்தில் பல இடங்களில் பேசப்படுவதையும் உணர்க. காப்பியத்தில் முன்பு நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியையே உவமையாகப் பின்னால் கூறுவது கம்பனது தனித்தன்மை என்பதைக் கற்போர் இதன்மூலம் நன்கு உணரலாம்.

Koviloor Digital Library

92. பிடித்த வாள்கள், வேல்களோடு, தோள்கள் பேர்அரா எனத்
துடித்த; யானைமீது இருந்து போர் தொடங்கு சூர்தம்
மடித்த வாய்ச் செழுந்தலை குலம் புரண்ட, வானின் மின்
இடித்த வாயின் இற்ற மாமலைக் குலங்கள் என்னவே. (9473)

(சூரர்-வீரர்கள்; பேர்அரா-பெரியபாம்பு; குலம்-தொகுதி; இடித்தல்-தாக்குதல்; இறுதல்-பிளத்தல்; வாய்-இடம்)

யானைகள் மீது அமர்ந்து போர்செய்யத் தொடங்குகின்ற அரக்க வீரர்களின் தோள்கள், தம் கைகளில் பிடித்திருந்த வாட்படைகளோடு, விற்படைகளும், பெரிய பாம்புபோலத் தரையில் விழுந்து துடித்துக் கொண்டிருந்தன; சினத்தினால் மடிக்கப்பட்டிருந்த வாயை உடைய அரக்கர்களின் செம்பட்டைமுடி அடர்ந்த வளமையான தலைகளின் தொகுதிகள், ஆகாயத்தில் மின்னலுடன்கூடிய இடியால் தாக்கப்பட்ட இடத்தில் பிளந்து விழுந்த பெரிய மலைக்கூட்டங்கள் போன்று தரையில் விழுந்து புரண்டு கொண்டிருந்தன.

இராமபிரான் செலுத்திய அம்பினால், அரக்கவீரர்களின் தோள்களும், அவர்களின் தலைகளும் அறுபட்டுத் தரையில் விழுந்து துடித்துப் புரண்டனஎன்பதாம். ''போர்தொடங்கு சூரர்'' என்ற சொற்றொடர்நுனித்து உணரற்பாலது. போர் தொடங்கியிருப்பவர்கள் அதை முற்றவும் செய்துமுடிக்க இயலாது தவித்தனர் என்ற குறிப்பு இங்கே தோன்றுவதை உணர்க.

93. கோர ஆளி, சீயம், மீளி கூளியோடு, ஞாளியும்,
போர வாளினோடு தேர்கள் நூறுகோடி பொன்றுமால்;
நார ஆளி, ஞாலஆளி, ஞானஆளி, நாந்தகப்
பார ஆளி, வீரஆளி, ஏகவாளி பாயவே. (9474)

(ஆளி-ஆள்பவன்; நாந்தகம்-ஒருவகை வாட்படை; ஏகவாளி-ஓர்அம்பு; கோரம்-கொடுமை; ஆளி-யாளி; சீயம்-சிங்கம்; மீளி-வன்மை; ஞாளி-செந்நாய்; போர-பொருத/போரிட; பொன்றுதல்-அழிதல்; கூளி-பேய்; ஞாலம்-உலகம்; நாரம்-நீர்/அன்பு)

நீர்சூழ்ந்த இவ்வுலகை அன்புடன் ஆள்பவனும், ஞானமே வடிவானவனும், நாந்தகம் என்னுப் பெருமைவாய்ந்த வாட்படையைச் சுமையாகத் தன் கைகளில் ஏந்திக் கொண்டிருப்பவனும், ஆண்மையிற் சிறந்தவனுமான இராமபிரானின் ஓர் அம்பு வேகத்துடன் பாய்ந்து வருவதனால், அரக்கர்படையில் தேர்களில் பூட்டப்பட்டிருந்த கொடுமை யான யாளிகளும், சிங்கங்களும், வன்மையுடைய பேய்களும் தேர்ச்சாரதி களுடன் நூறுகோடி அளவினதான தேர்களும் அழிந்து ஒழிந்தன.

Koviloor Digital Library

''நாரம்'' என்ற சொல் நீர், அன்பு, ஆன்மா, உயிர் என்று பல பொருள்களைத்தரும். நாந்தகம் என்பது திருமாலுடைய ஐம்படைகளுள் வாட்படையைக் குறிக்கும். அரக்கர்களின் தேர்களில் யாளி, சீயம், கூளி, ஞாளி இவையெல்லாம் பூட்டப்பட்டிருக்கின்றன என்பது தெரிய வருகிறது. ''ஏகவாளி பாய நூறுகோடித் தேர்கள் பொன்றும்'' என்ற விடத்துச் சொல்நயம் காண்க.

94. ஆழி பெற்ற தேர் அழுந்தும்; ஆள் அழுந்தும்; ஆளொடும்
சூழி பெற்ற மா அழுந்தும்; வாசியும் சுரிக்குமால்;
பூழி பெற்ற வெங்களம் குளம்பட, பொழிந்த பேர்
ஊழி பெற்ற ஆழி என்ன, சோரி நீரினுள் அரோ. (9475)

(பூழி-புழுதி; களம்-போர்க்களம்; ஆழி-கடல்; சோரிநீர்-இரத்த வெள்ளம்; ஆழி-சக்கரம்; ஆள்-காலாட்படை; சூழி-முகபடாம்/நெற்றிப் பட்டம்; மா-யானை; வாசி-குதிரைகள்; சுரித்தல்-சுழிபட்டு அழுந்துதல்; ஆள்-யானைப்பாகன்)

புழுதிகள் நிரம்பப்பெற்றுப் பரவிய அந்தக்கொடிய போர்க்களம் ஊழி இறுதிக்காலத்தில் தோன்றும் கடல்போன்ற, இரத்த ஆறு நிறைந்ததால் போர்க்களமே இரத்தக்குளம்போல அமைந்துபோக, அதனுள், சக்கரங் களையுடைய தேர்கள் அழுந்திப்போயின; காலாட்படைவீரர்கள் முழுகிப் போயினர்; தாம் செலுத்திவந்த, நெற்றிப்பட்டம் அணிந்த யானைகளுடன் யானைப்பாகர்களும், அழுந்தி முழுகிப்போயினர்; குதிரைகளும் குலைந்து அழுந்திப்போயின.

முதலில் கூறப்பட்ட ''ஆள்'' காலாட்படையைக் குறிக்கும்; இரண் டாவது கூறப்பட்டிருக்கும் ''ஆள்'' என்ற சொல்லுக்கு யானைப்பாகர்கள் என்பது பொருள். ''மா'' என்ற சொல் பொதுவாக விலங்கினங்களைக் குறிப்பதென்றாலும், இங்கே யானைஎன இடம்நோக்கிப் பொருள் கொள்ளப்பட்டது.

95. அற்று, மேல் எழுந்த வன்சிரங்கள் தம்மை அண்மி, மேல்
ஒற்றும் என்ன, அங்கும் இங்கும் விண்ணுளோர் ஒதுங்குவார்;
"சுற்றும்வீழ் தலைக்குலங்கள், சொல்லு கல்லின் மாரிபோல்,
எற்றும்" என்று, பாரின் எங்கும் வாழுவார் இரங்குவார். (9476)

(அற்று-அறுபட்டு; வன்-வலிய; அண்முதல்-நெருங்குதல்; ஒற்றுதல்-தீண்டுதல்; குலம்-தொகுதி; எற்றுதல்-தாக்குதல்; இரங்குதல்-வருந்துதல்)

இராமபிரான் செலுத்திய அம்பினால் அறுபட்டு, மேலே ஆகாயத்தில் கிளம்பிய அரக்கர்களின் வலிய தலைகள், தம்மை நெருங்கிவந்து, தம் உடம்பின்மேல் தீண்டி, ஒட்டிக்கொள்ளும் என்று கருதிய வானுலகத்துத் தேவர்களும், மற்றவர்களும், என்ன செய்வதென்பதறியாது அங்கு

Koviloor Digital Library

மிங்குமாக ஓடித் தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். அவ்வாறே நிலவுலகம் எங்கும் வாழும் மக்களும், தம்மைச் சுற்றி விழுகின்ற அரக்கர்களின் தலைத்தொகுதிகள், மிக்க சிறப்பாகப் பேசப்படுகின்ற கல்மழை போல, வந்து தம்மைத்தாக்கும் என்று கருதி, வேதனைப் படுவார்கள்.

இராமபிரான் செலுத்திய அம்பினால் அறுபட்ட தலைகள் தம்மீது வந்து ஒட்டிக்கொள்ளும் என்ற அச்சத்தினால் தேவர்களும், விண்ணிலுள்ள மற்றவர்களும் ஒதுங்கித் தம்மைப் பாதுகாத்துக் கொண்டார்கள். நிலவுலகத்து மக்கள் அவை வந்து தம்மைக் கல்மழை போல் தாக்கும் என்று அஞ்சி வேதனைப் படலானார்கள் என்பதாம்.

96. மழைத்த மேகம் வீழ்வஎன்ன, வானமானம் வாடையின்,
சுழித்த வந்து வீழ்வ என்ன, மண்ணின்மீது துன்னுமால்,
அழித்து ஒடுங்கு காலமாரி அன்னவாளி ஓளியால்,
விழித்து எழுந்து, வானினூடு மொய்த்த பொய்யர் மெய் எலாம். (9477)

(காலம்-ஊழியிறுதிக்காலம்; ஒளி-வரிசை; மொய்த்தல்-நிறைதல்/ நெருங்குதல்; பொய்யர்-பொய்மையாளர்/அரக்கர்கள்; மெய்-உடல்; மழைத்த-மழைபொழியும் தன்மையுடைய; மானம்-விமானம்; வாடை-கடுங்காற்று/சுழற்காற்று; துன்னுதல்-நெருங்குதல்)

இவ்வுலகிலுள்ள உயிரினங்களையெல்லாம் அழித்து, உலகத்தை ஒடுங்கச்செய்கின்ற ஊழியிறுதிக் காலத்துப் பெருமழை போல, இராம பிரான் செலுத்தும் அம்பின் வரிசைத் தொகுதிகள் எல்லாம் பொய்மை யாளர்களாகிய அரக்கர்களின் மெய்யான உடம்புகளைத் தாக்கவும், அவை எல்லாம் என்னசெய்வது என்று அறியாது கண்கள் திறந்தபடியே மருண்டுபோய் ஆகாயத்தில் சென்று நிறைந்துபோயின; மழை பொழி வதற்கு ஏற்ற தன்மையைக் கொண்ட கரிய மேகங்களே கீழே விழுந்தது போலவும், வானத்தில் செல்லுகின்ற விமானங்கள் பலத்த புயற் காற்றினால் தாக்கப்பட்டுச் சுழன்றுவந்து தரையில் வீழ்வதுபோலவும், அரக்கர்களின் உடல்கள் முதலில் வானத்தில் சென்று பின்னர் தரையில் வந்து நெருங்கிப்படிந்தன.

''மழைத்தமேகம்'' என்பது நன்கு சூல்கொண்டு மழைபொழிவதற்குத் தயாராக இருக்கும் கரியமேகத்தைக் குறிக்கும். ''மானம்'' என்பது விமானம் என்பதன் முதற்குறை; ''வாடை'' என்பது பலத்த புயற்காற்றை, சூறைக்காற்றை, சுழல்காற்றைக் குறிக்கும்; ''பொய்யர்'' என்பது பொய்மையையே வாழ்வியலாகக் கொண்ட அரக்கர்களைக் குறிக்கும். ''பொய்யர் மெய்'' என்ற இடத்துச் சொல்நயம் காண்க. அரக்கர்கள் பொய்யர்கள், அவர்கள் உடல்கள் மட்டும் மெய் என்னும் நயம் உணர்க. முன்பாடலில் தலைகள் விண்சென்று மண்ணில் விழுந்ததைக் கூறிய

Koviloor Digital Library

கவிஞன், இந்தப் பாடலில் அந்தத் தலையற்ற முண்டங்கள் விண்சென்று தரையில் விழுவது பற்றிக் கூறியிருக்கும் தன்மை நோக்குக. ''மொய்த்தல்'' என்ற சொல்லுக்கு நிறைதல் என்பது பொருள். ''மொய்த்து வளர் பேரழகு மூத்த வடிவேயோ?'' என்பது பெரியபுராணம்.

97. தெய்வ நெடும் படைக்கலங்கள் விடுவர் சிலர்;
சுடுகணைகள் சிலையில் கோலி,
எய்வர் சிலர்; எறிவர் சிலர்; எற்றுவர்,
சுற்றுவர் மலைகள் பலவும் ஏந்தி;
பெய்வர் சிலர்; 'பிடித்தும்' எனக் கடுத்து உறுவர்;
படைக்கலங்கள் பெறாது வாயால்,
வைவர் சிலர்; தெழிப்பர் சிலர்; வருவர் சிலர்;
திரிவர் சிலர்; வயவர் மன்னோ! (9478)

(விடுதல்-செலுத்துதல்; சிலை-வில்; கோலுதல்-தொடுத்தல்/வளைத்தல்; எற்றுதல்-தாக்குதல்; பெய்தல்-பொழிதல்; பிடித்தும்-பிடிப்போம்; கடுத்தல்-விரைதல்; உறுதல்-அணுகுதல்/நெருங்குதல்; வைதல்-திட்டுதல்; தெழித்தல்-அதட்டுதல்/மிரட்டுதல்; வயவர்-அரக்கர்/வீரர்கள்)

அரக்க வீரர்களில் சிலர், தெய்வத்தன்மை பொருந்திய நீண்ட போர்க் கருவிகளை இராமபிரான்மீது செலுத்துவார்கள்; இன்னும் சிலர் நெருப்பை உமிழ்கின்ற அம்புகளை வில்லில் தொடுத்து வளைத்து எய்வார்கள்; சிலர் கையில் கிடைத்த ஆயுதங்களை வீசி எறிவார்கள்; சிலர் தம் கைகளில் மலைகளைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு, இடசாரி, வலசாரி திரிந்து சுழன்று தாக்குவார்கள்; சிலர் இராமபிரானைப் பற்றிக் கொள்வோம் என்று கருதி, விரைந்து சென்று அவனை நெருங்குவார்கள்; சிலர் எதிர்த்துப் புதிதுபுதிதாகப் போர்க்களத்துள் வருவர்; படைக்கலங்கள் கிடைக்கப்பெறாத சிலர் வாயால் வசைபாடியும், திட்டியும், அதட்டியும், மிரட்டியும், இங்கும் அங்கும் மனம்போனபடி திரிந்துகொண்டும் இருப்பார்கள்.

''தெய்வ நெடும்படைக்கலங்கள்'' என்பது, அரக்கர்கள் நீண்ட தவம் செய்து, வரத்தால் பெற்ற, தெய்வீகத்தன்மை பொருந்திய அஸ்திரங்களைக் குறிக்கும்.

98. ஆர்ப்பர் பலர்; அடர்ப்பர் பலர்; அடுத்து அடுத்தே
படைக்கலங்கள் அள்ளி அள்ளித்
தூர்ப்பர் பலர்; மூவிலைவேல் துரப்பர் பலர்;
கரப்பர் பலர்; சுடு தீத் தோன்றப்

Koviloor Digital Library

பார்ப்பர் பலர்; நெடுவரையைப் பறிப்பர் பலர்;
பகலோனைப் பற்றிச் சுற்றும்
கார்ப் பருவமேகம் என, வேக நெடும்படை
அரக்கர் கணிப்பு இலாதார். (9479)

(பகலோன்-சூரியன்; சுற்றுதல்-சூழ்தல்; பருவம்-காலம்; கணிப்பு-எண்ணிக்கை; ஆர்த்தல்-ஆரவாரித்தல்; அடர்த்தல்-நெருக்குதல்; தூர்த்தல்-நிரப்புதல்; துரத்தல்-செலுத்துதல்; கரத்தல்-மறைத்துக் கொள்ளுதல்; அடுத்து அடுத்து-தொடர்ந்து/இடைவிடாமல்)

சூரியனைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டிருக்கும் கார்காலத்துப் பருவ மேகம் போல, மிக்க வேகமுடைய பெரிய படையிலுள்ள அரக்கர்கள் எண்ணிக்கையில் அடங்காதவர்கள். அவர்களில் பலர் போர்முழக்கம் செய்துகொண்டு போவார்கள்; பலர் பகைவனான இராமபிரானை நெருங்கிச் சூழ்ந்துகொள்வார்கள்; இடைவிடாமல் தொடர்ந்து பலர் போர்க்கருவிகளை வாரிவாரியிறைத்துப் பூமியை நிரப்புவார்கள்; பலர் முத்தலைச்சூலப்படையை வீசி எறிவார்கள்; பலர் இராமபிரான்அம்புக்கு அஞ்சித் தம்மை மறைத்துக் கொள்வார்கள்; நெருப்புப்பொறி தோன்றும்படி தம் கண்களைக் கடுமையாக விழித்து இராமபிரானைச் சுட்டுவிடும்படி பலர் பார்ப்பார்கள்; பலர் நீண்ட பெரிய மலைகளைப் பெயர்த்தெடுப்பார்கள்.

ஆர்த்தல், அடர்த்தல், தூர்த்தல், துரத்தல், கரத்தல், பார்த்தல், பறித்தல் என்பனவெல்லாம் அரக்கர்படை வீரர்கள் செய்த போர்முறை எனக்கொள்க. முன்பாடலில் சில அரக்கர்கள் என்ன செய்தார்கள் என்று கூறிய கவிஞன், இந்தப் பாடலில் பல அரக்கர்கள் எவ்வாறு போர் செய்தார்கள் என்று கூறுகிறான். பகலோன்-இராமபிரான்; கார்ப்பருவ மேகம்-அரக்கர்படை; பகற்பொழுதினைச் செய்பவன் ''பகலோன்'' எனப்பட்டான் என்க.

99. எறிந்தனவும், எய்தனவும், எடுத்தனவும்,
பிடித்தனவும், படைகள் எல்லாம்,
முறிந்தன வெங்கணைகள் பட; முற்றின,
சுற்றின தேரும், மூரி மாவும்;
நெறிந்தன குஞ்சிகளோடும் நெடுந்தலைகள்
உருண்டன; பேர் இருளின் நீங்கி
பிறிந்தனன் வெய்யவன் என்னப் பெயர்ந்தனன், மீது
உயர்ந்த தடம் பெரிய தோளான். (9480)

(முற்றுதல்-அழிதல்; சுற்றுதல்-சூழ்ந்து வளைத்துக் கொள்ளுதல்; மூரிமா-வலிய யானைகள்; நெறிதல்-நெறிப்புறுதல்/சுருளுதல்; குஞ்சி-

Koviloor Digital Library

மயிர்முடி; தடம்-பெரிய; வெய்யவன்-கதிரவன்; பிறிதல்-பிரிதல்/ நீங்குதல்; பெயர்தல்-வெளிப்பட்டுத் தோன்றுதல்; பிடித்தல்-கைகளில் பற்றியிருத்தல்)

அரக்கர்கள் வீசியெறிந்த போர்க்கருவிகளும், இராமபிரானுடன் போர் செய்வதற்காகத் தம் கைகளில் எடுத்த அம்புபோன்ற சில ஆயுதங்களும், பற்றிக்கொண்டிருந்த போர்க்கருவிகளும், இவையெல்லாம் இராம பிரானின் கொடிய அம்புகள் தாக்கியதால் முறிந்துபோய்த் தரையில் வீழ்ந்தன; இராமபிரானைச் சுற்றிச் சூழ்ந்திருந்த தேர்ப்படைகளும், வலிய யானைப்படைகளும் தம் வாழ்நாள் இறுதியைக் கண்டு இறந்துபட்டன; நெறிப்புற்ற முடிமயிரைக் கொண்ட அரக்கர்களின் பெரிய தலைகள் எல்லாம் தரையில் விழுந்து உருண்டன; உயர்ந்த, பெரிய அகன்ற தோள்களை உடையவனான இராமபிரான், இப்போது பெரிய இருட்பிழம்பை நீக்கிவிட்டு, வெளித்தோன்றும், வெப்பக்கதிர்களை உடைய சூரியன்போல, அரக்கர்கூட்டத்தையும், நால்வகைப் படை களையும் அழித்து ஒழித்துவிட்டு வெளிப்பட்டுத் தோன்றினான்.

எறிந்தன கவண், கல், வேல், சூலம், முதலியன; எய்தன அம்பு முதலியன; எடுத்தனவும், பிடித்தனவும், வாள், வேல் முதலியன என்க. 'பிரிந்தனன்' என்பது எதுகைநோக்கிப் 'பிறிந்தனன்' எனத் திரிந்தது. கரிய அரக்கர்கள் இருள்; அதனின்றும் நீங்கிவந்த சூரியன் இராமபிரான்; கரிய அரக்கர்களிடமிருந்து விடுபட்டு வந்த இராமபிரானுக்கு, இருட் பிழம்பி லிருந்து விடுபட்டு வெளித்தோன்றிய சூரியன் உவமை. ''இருளிடை வைகலேம் இரவி தோன்றினாய்'' என்பது தண்டக முனிவர்கள் கூற்று. ''தடம் பெரிய'' என்பது மீமிசைச்சொல். ஒரு பொருட்பன்மொழி எனக் கொள்க.

100. சொல் அறுக்கும், வலி அரக்கர் தொடு கவசம்
துகள் படுக்கும்; துணிக்கும் யாக்கை;
வில் அறுக்கும்; தலை அறுக்கும்; மிடல் அறுக்கும்;
அடல் அறுக்கும்; மேல்மேல் வீசும்
கல் அறுக்கும்; மரம் அறுக்கும்; கை அறுக்கும்;
செய்ய மள்ளர் கமலத்தோடு,
நெல் அறுக்கும் திருநாடன் நெடுஞ்சரம்
என்றால், எவர்க்கும் நிற்கல் ஆமோ?'' (9481)

(மள்ளர்-உழவர்கள்; கமலம்-தாமரைமலர்; அறுத்தல்-அரிதல்/ அறுவடைசெய்தல்; திரு-செல்வவளம்; நாடன்-கோசல நாட்டையுடைய இராமபிரான்; துகள்-பொடி; அறுத்தல்-துண்டித்தல்/பிளத்தல்; மிடல்-வலிமை; அடல்-போர்த்திறமை; கல்-மலை; ஆமோ-ஆகுமோ/ முடியுமோ; சொல்-மந்திரச்சொல்/புகழ்; செய்-வயல்)

Koviloor Digital Library

''வயலில் வேலைசெய்கின்ற உழவர்கள், அங்கே விளைந்திருக்கின்ற தாமரை மலர்களோடு நெற்கதிர்களையும் அறுத்து அறுவடை செய்கின்ற செல்வவளம் மிக்க கோசலநாட்டின் தலைவனான இராமபிரானின் நீண்ட அம்புகள், மிகுதியாகப் புகழ்ந்து பேசப்படுகின்ற எல்லையற்ற, வலிமையையுடைய அரக்கர்கள் அணிந்திருக்கின்ற கவசத்தைப் பொடிப் பொடியாக்கும். அவர்கள் உடம்புகளைத் துண்டாக்கிப் பிளந்துவிடும்; அவர்கள் வில்லினை முறித்துப் போட்டுவிடும்; அவர்கள் தலையைத் துண்டாக்கிவிடும்; அவர்கள் வலிமையை அழித்து, போர்த்திறமை என்பதே இல்லாமல் செய்துவிடும்; அவர்கள் தன்மேல் மேலும்மேலும் வீசி எறிகின்ற மலைக் கூட்டங்களைப் பிளந்துபோகச் செய்யும்; மரங்களையும், அவற்றை ஏந்தியிருக்கின்ற அரக்கர்களின் கைகளையும் துண்டு துண்டாக்கிவிடும். இந்த இராமபாணத்தின் ஆற்றல் இத்தகைய தென்றால், அவனை எதிர்த்துப் போரிடுவது என்பது யாரால் முடியும்?'' என்கிறான் கவிஞன்.

''ஆமோ'' என்பது ஆகுமோ என்பதன் இடைக்குறை. ஓகாரம் எதிர்மறைப்பொருளது. ஆகாது, முடியாது என்ற பொருளைத்தரும்; ''கல்'' என்பது மலையைக் குறிக்கும்; ''தென்குமரி வடபெருங்கல்'' என்பது புறநானூறு-17. ''மள்ளர் செய்ய கமலத்தோடு நெல்லறுக்கும் திருநாடன்'' என்பது மருத வளமும், செல்வவளமும் ஒருங்கே பொருந்திய கோசலநாட்டுத் தலைவன் இராமபிரானைக் குறிக்கும். ''அறுக்கும்'' என்ற சொல் எல்லா அடிகளிலும் பயின்று வந்திருப்பதால் இப்பாடல் சொற்பொருட் பின்வருநிலையணியின் பாற்படும்.

101. "கால் இழந்தும், வால் இழந்தும், கை இழந்தும்,
கழுத்து இழந்தும், பருமக் கட்டின்
மேல் இழந்தும், மருப்பு இழந்தும், விழுந்தன"
என்குநர் அல்லால், வேலை அன்ன,
மால் இழந்து, மழை அனைய மதம் இழந்து,
வலி இழந்து, மலைபோல் வந்த
தோல் இழந்த தொழில் ஒன்றும் சொல்லினார்கள்
இல்லை, நெடுஞ் சுரர்கள் எல்லாம். (9482)

(நெடுமை-பெருமை; சுரர்கள்-தேவர்கள்; தோல்-யானைகள்; பருமம்-தவிசு/மெத்தை/அம்பாரி; மருப்பு-கொம்பு/தந்தங்கள்; என்குநர்-என்று கூறுகின்றார்கள்; மால்-மதக்களிப்பு; மதம்-மதநீர்; வலி-வலிமை; தொழில்-செயல்; வேலை-கடல்)

யானைப்படைகள் இராமபிரானோடு போரிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தவர்களான, பெருமைசான்ற தேவர்களெல்லாம், யானைகள் எல்லாம் தங்களது புற உறுப்புக்களான கால், வால், தும்பிக்கை, கழுத்து,

Koviloor Digital Library

முதுகின்மேல் அமைக்கப்பட்டிருக்கும் தவிசாகிய அம்பாரி, தந்தங்கள் முதலியவைகள் துணிக்கப்பெற்றுத் தரையில் மாண்டு விழுந்தன என்று கூறுகிறார்களேயன்றி, ஒருவராவது கடல்போன்று பெருக்கமுள்ள அவ்யானைகளின் உள்ளத்தில் உள்ள வலிமை குன்றிப்போனதையோ, மலைபோன்று வடிவுகொண்டு வந்து மதக்களிப்பு இழந்து, மழைபோலச் சொரியும் மதநீரையும் இழந்து வலிகுன்றி, செயலிழந்த தன்மையையோ கூறவில்லை'' என்கிறான் கவிஞன்.

கட்புலனுக்குத் தெரிந்த புற உறுப்புக்கள் இழந்தமை பற்றியே கூறினார்களேயன்றி, அகக்குணங்களாகிய வீரம், மதமயக்கம், வலிமை, ஆற்றல் முதலியன இழந்தது பற்றிக் கூறவே இல்லை என்பதாம்.

102. வேல் செல்வன சதகோடிகள்; விண்மேல் நிமிர் விசிகக்
கோல் செல்வன, சதகோடிகள்; கொலை செய்வன மலையை;
தோல் செல்வன, சதகோடிகள்; துரகம் தொடர் இரதக்
கால் செல்வன, சதகோடிகள்; ஒருவன் அவை கடிவான். (9483)

(சதம்-நூறு; விசிகம்-அம்பு; கோல்-அம்பு; தோல்-யானைகள்; துரகம்-குதிரைகள்; கடிதல்-விலக்கி நீக்குதல்/அழித்தல்; செல்வன-செலுத்தப் படுவன; தொடர்தல்-பூட்டப்பெறுதல்; கால்-சக்கரங்கள்)

போர்க்களத்தில் இராமபிரான்மீது அரக்கர்படையினர் ஏவிய வேற் படைகள் நூறுகோடி அளவினதாகும். ஆகாயத்தின் உயரே பாய்ந்து செல்லுகின்ற விசிகம் என்னும் அம்புகள் நூறுகோடி அளவினதாகும்; கொல்லும் இயல்புடைய மலைபோன்ற யானைகள் நூறுகோடி அளவின தாகும்; குதிரைகள் பூட்டப்பட்ட சக்கரங்களை உடைய தேர்ப்படைகள் நூறுகோடி அளவினதாகும்; இவற்றையெல்லாம் ஒப்பற்ற இராமபிரான் ஒருவனே எதிர்த்து நின்று, விலக்கி, நீக்கித் தாக்கி அழிப்பான்.

வேற்படைகள், அம்புக்கூட்டங்கள், யானைகள், குதிரைகள் பூட்டப் பட்ட தேர்கள் எல்லாம் ஒவ்வொன்றும் நூறுகொண்ட அளவினதாய்ப் பொருத, இராமபிரான் ஒருவன் மட்டுமே போர்செய்து இவை எல்லாவற்றையும் அழித்து ஒழித்தான் என்பதாம். ''விசிகம்'' என்ற சொல்லுக்கும்அம்புஎன்பதேபொருள். இங்கேவிசிகம்என்னும்அம்புகள் என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. ''சதகோடிகள்'' என்ற சொல் நான்கு அடிகளிலும் பயின்று வந்திருப்பதால் இப்பாடல் சொற்பொருட் பின்வருநிலையணியாகும்.

103. ஒரு வில்லியை, ஒரு காலையின், உலகு ஏழையும் உடற்றும்
பெரு வில்லிகள், முடிவு இல்லவர், சர மாமழை பெய்வார்;
பொரு வில்லவர் கணை மாரிகள் பொடியாம் வகை பொழிய,
திரு வில்லிகள் தலைபோய் நெடுமலை போல் உடல் சிதைவார். (9484)

Koviloor Digital Library

(உடற்றுதல்-வருத்துதல்; வில்லிகள்-வில்வீரர்கள்; காலை-சமயம்/ பொழுது; திருஇல்லிகள்-நற்பேறில்லாதவர்கள்/திருவிலிகள்; பொடி-துகள்)

ஏழு உலகங்களையும் ஒருசேர வருத்துகின்ற பெரும் வில்லாற்றல் படைத்த அரக்கர்கள் எண்ணிக்கையில் அடங்காதவர்கள், ஒரே வில்லினைக் கைக்கொண்டு நிற்கும் வில் வீரனான இராமபிரானின்மீது ஒரே சமயத்தில் அம்புமழையைப் பொழிவார்கள்; போர்செய்யும் இயல்பில் நிகரற்றவர்களான வில்லாளர்களின் அம்புமழை எல்லாம் தூளாகிப் பொடிப்பொடியாய் உதிர்ந்துபோகும் வண்ணம், இராமபிரான் அம்புமழை பொழிய, அந்த நற்பேறில்லாத அரக்கர்களின் தலைகள் எல்லாம் பெரிய மலைபோல் தரையில் விழுந்தன. அவர்கள் உடல்கள் சிதைந்து உருத்தெரியாமல் நிலத்தில் விழுந்தன.

அரக்கர்களுள் ஒரே அரக்கன் தன் வில்லாற்றலால் ஏழு உலகங்களையும் வருத்தமுறும்படி செய்வான் என்று அரக்கர்களின் பேராற்றல் சிறப்பிக்கப் பட்டது. ''திருஇலி'' என்பது திருவிலி என்றாகிச் செய்யுள் சந்தத்திற்காகத் திருவில்லிகள் என்று ஆயிற்று. நற்பேறில்லாதவர்கள் - பாக்கியம் இல்லாத வர்கள் என்பது பொருள். வீரச்செல்வம் அற்றுப்போவார்கள் என்பதும் பொருந்தும். ''உலகேழையும் உடற்றும் பெருவில்லிகள், முடி வில்லவர், பொருவில்லவர்'' என்று இத்தனை பெருமைமிக்க அடைமொழிகளை அரக்கர்களுக்குக் கொடுத்த கவிஞன், இறுதியில் அவர்களை ''திருவில்லிகள்'' என்று குறித்த நயம் நோக்குக.

104. "நூறாயிர மதயானையின் வலியோர்" என நுவல்வோர்,
மாறு ஆயினர், ஒரு கோல்பட, மலைபோல் உடல் மறிவார்;
ஆறு ஆயிரம் உளவாகுதல் அழி செம்புனல் அவைபுக்கு
ஏறாது, எறிகடல் பாய்வன, சின மால்கரி இனமால். (9485)

(நுவல்வோர்-கூறத்தக்கவர்கள்; கோல்-அம்பு; செம்புனல்-சிவந்த இரத்தம்; சினம்-கோபம்; மால்-மதக்களிப்பு; இனம்-கூட்டம்; எறிதல்-வீசுதல்; நூறுஆயிரம்-ஒருலட்சம்; மறிதல்-மடிதல்)

ஒருலட்சம் மதமயக்கம் கொண்ட யானைகளின் வலிமைபெற்றவர்கள் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் மூலபலச் சேனையில் இருந்த அரக்கர்கள், இராமபிரானின் ஒரேஒரு அம்புதம்மை வந்துதாக்கியவுடனே, தம் வீரம் நிறைந்த நிலைமாறி வலிமை குறைந்து, மலைபோன்ற தம் உடம்புகள் மடங்கி அழியப்பெற்றனர்; அதனால் பெருகிய சிவந்த இரத்தப்பெருக்கு ஆயிரக்கணக்கான ஆறுகள் செல்வதுபோல இருந்தன. இவ்வாற்றில் விழுந்த கொடிய கோபமும், மதமயக்கமும் கொண்ட யானைக்கூட்டங்கள் அவற்றினின்றும் கரையேற முடியாது,

Koviloor Digital Library

அவற்றுடனே நீந்திச்சென்று, அலைகள் மடங்கி வீழும் கடலில்போய்ப் பாய்ந்து கலந்தன.

ஆறாயிரம் என்பது ஆயிரம் ஆறு என மாறும்.

105. மழு அற்று உகும்; மலை அற்று உகும்; வளை அற்று உகும்; வயிரத்து
எழு அற்று உகும்; அயில் அற்று உகும்; இலை அற்று உகும்; எழுவேல்;
பழு அற்று உகும், மதவெங்கரி; பரி அற்று உகும்; இரதக்
குழு அற்று உகும்; ஒரு வெங்கணை தொடை பெற்றது ஓர் குறியால்.
(9486)

(ஒரு-ஒப்பற்ற; தொடை-தொடுக்கப்பெற்றது; உகுதல்-சிதறுதல்; வயிரம்-திண்மை/உறுதி; எழு-ஒருவகை ஆயுதம்; பழு-விலா எலும்பு; குழு-தொகுதி; குறி-இலக்கு; எழுதல்-மேலோங்குதல்)

இராமபிரான் வில்லில் தொடுக்கப்பெற்ற ஓர் அம்பு தன் இலக்குத் தப்பாது சென்று தாக்கியதனால், அரக்கர்களின் மழுப்படைகள், வீசுவதற்கு வைத்திருந்த மலைகள், வளை என்னும் ஆயுதங்கள், திண்ணிய, உறுதிவாய்ந்த எழு என்னும் தூண்போன்ற படைக்கலன்கள், வேற்படைகள், முத்தலைச் சூலங்கள், மேல் நிமிர்ந்தோங்கிய வேல்கள்; மதமயக்கம் மிக்க கொடிய யானைகளின் விலா எலும்புகள்; குதிரைகள், தேர்த்தொகுதிகள் ஆகிய அனைத்தும் அறுபட்டும், துணிக்கப்பட்டும் சிதறிச் சின்னாபின்னமாயின.

இராமபிரானின் அம்பின் ஆற்றல் புலப்படுத்தப்பட்டது. மழு, மலை, வளை, எழு, அயில், இலை, வேல், யானைகள், குதிரைகள், தேர்கள் என எல்லாமும் அழிந்தொழிந்தன என்பதாம். 'பழு' என்ற சொல் நமக்குப் புதிது. யானையின் விலா எலும்பைக் குறித்தது.

106. ஒரு காலையின், உலகத்து உறும் உயிர் யாவையும், உண்ன
வரு காலனும், அவன் தூதரும், நமன்தானும், அவ் வரைப்பின்
இரு கால் உடையவர் யாவரும் திரிந்தார் இளைத்திருந்தார்;
அருகு ஆயிரம் உயிர் கொண்டு, தம் ஆறு ஏகலர், அயர்த்தார். (9487)

(உறுதல்-பொருந்தியிருத்தல்; காலன்-கூற்றுவன்; நமன்-இயமன்/தருமராசன்; வரைப்பு-எல்லை/போர்க்களம்; கொண்டு-கவர்ந்து கொண்டு; ஆறு-வழி; ஏகுதல்-திரும்பிச்செல்லுதல்; அயர்தல்-தளர்தல்/மறத்தலுமாம்)

உலகத்திலுள்ள உயிரினங்கள் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் கொன்று உண்ணும் வன்மையுடன் வருகின்ற காலன் என்னும் கூற்றுவனும், அவனுடைய படர்களாகிய தூதுவர்களும், நமன் என்னும் இயமனும், அந்தப் போர்க்களத்தில் தமது இரண்டு கால்களுடனே

Koviloor Digital Library

அங்குமிங்கும் சுற்றித்திரிந்து, சற்று களைப்புற்று இருந்தனர். எனினும் தமக்கு அங்கிருந்த ஆயிரக்கணக்கான உயிரினங்களைக் கவர்ந்துகொண்டு, தாம் திரும்பிச் செல்லவேண்டிய வழி சரியாகப் புலப்படாததால், தளர்ச்சியடைந்து, தடுமாறி மேலே போக இயலாதவர்களானார்கள்.

''ஒருகாலை'' என்பது பிரளயகாலம்-ஊழியிறுதிக் காலத்தைக் குறிக்கும். பிரளயகாலத்தில் இயமனுக்குக் கிடைக்கும் உணவைவிட, இந்தப் போர்க்களத்தில் மிகுதியான உணவு கிடைத்தது என்பது குறிப்பு. ''உண்ணுதல்'' என்பது உயிரைக் கவர்ந்துகொள்ளுதல் என்ற பொருள் தரும். மரபு வழுவமைதி ''உண்டற்கு அல்லாப் பொருளை உண்டது போலக் கூறுலும் மரபு'' என்பது தொல்காப்பியம். காலன் என்பவனும் இயமன் என்பவனும் வெவ்வேறானவர் என்பதை இப்பாடல்மூலம் தெரிந்து தெளியலாம். ''வரைப்பு'' என்பது பொதுவாக எல்லை என்ற பொருளைத் தந்தாலும், இங்கே போர்க்களம் என்ற பொருளைத் தந்து நின்றது. ''அயிர்த்தல்'' என்ற சொல்லுக்குத் தளர்வுறுதல் என்றும் மறந்து போதல் என்றும் இருபொருளும் பொருந்திவருதல் காண்க. ''காலன்'' என்பவன், காலம்பார்த்து உயிரைஉடலினின்றும் கூறுபடுத்தும்கூற்றுவன் என்பதால் காரணப்பெயர். ''காலனும் காலம் பார்க்கும்'' என்பது புறநானூறு-41. ''நமன்'' என்பவன் இயமனுடைய பிரதானி அல்லது மந்திரி, ''நமன்'' என்பவன், காலனின் தூதுவர்களை ஏவல்கொள்ளும் தருமராசன் ஆவான் என்கிறது அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு.

''காலன்- உயிர்களது விதியின் வழிநின்று, காலம் பார்த்து வந்து உடம்பினின்றும் உயிரைப் பறிக்கும் கூற்றுவன். தூதுவர் - கூற்றுவனுடைய பணியாளர்கள், எமபடர்கள்; நமன்-கூற்றுவனை ஏவி உயிர்கவரும் கடமை மேற்கொண்ட இயமன்'' என்று தெளிவான விளக்கம் தருகிறது அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பதிப்பு. ''சாற்று நாளற்றதென்று தருமராசர்க்காய் வந்த கூற்றினைக் குமைப்பர் போலும்'' என்பது அப்பர்தேவாரம்.

107. அடுக்குற்றன மதயானையும் அழிதேர்களும், பரியும்
தொடுக்குற்றன விசும்பூடு உறச் சுமந்து ஓங்கின எனினும்
மிடுக்குற்றன கவந்தக்குலம் எழுந்து ஆடலின், எல்லாம்
நடுக்குற்றன, பிணக்குன்றுகள், உயிர் நண்ணின என்ன. (9488)

(அடுக்கு-வரிசை/ஒன்றன்மேல் ஒன்று; அழிதல்-சிதைந்துபோதல்; தொடுக்கு-தொடர்ச்சி; விசும்பு-வானம்; மிடுக்கு-வன்மை; குலம்-தொகுதி; கவந்தம்-தலையற்ற உடல்கள்; குன்றுகள்-குவியல்கள்; நண்ணுதல்-திரும்பிப்பெறுதல்)

வரிசைவரிசையாகச் செத்துமடியும் மதங்கொண்ட யானைகளும், அழிந்துபட்ட தேர்களும், குதிரைகளும், இடைவெளியின்றி, தொடர்ந்து

Koviloor Digital Library

ஒன்றன்மேல் ஒன்றாகச் சென்று, ஆகாயத்தின் நடுவில் உயர்ந்து ஓங்கி நின்றன என்றாலும், இங்கே போர்க்களத்தில் வலிமைமிக்க, இறந்து பட்டவர்களின் உயிரற்ற உடற்குறையான கவந்தங்களின் தொகுதிகள் எழுந்து கூத்தாடத் தொடங்கியதால், உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் முன்பு இறந்துபட்ட மதயானை, அரக்கர், பரி, ஆகிய பிணக் குவியல் களெல்லாம் மீண்டும் உயிர்பெற்று எழுந்து வந்து விட்டனவோ என்று திகைப்படைந்து நடுக்கமுற்றன.

அடுக்கு என்பதும் தொடுக்கு என்பதும் வரிசை என்றும், ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டது என்றும் இடைவிடாது தொடர்ந்து என்றும் பலபொருள்களைத் தரும்.

108. பட்டார் உடல்படு செம்புனல் திருமேனியில் படலால்,
கட்டு ஆர்சிலைக் கரு ஞாயிறு புரைவான், கடையுகநாள்,
சுட்டு, ஆசு அறுத்து, உலகு உண்ணும் அச்சுடரோன் எனப் பொலிந்தான்;
ஒட்டார் உடல் குருதிக் குளித்து எழுந்தானையும் ஒத்தான். (9489)

(ஆர்தல்-பொருந்துதல்/அமைதல்; ஞாயிறு-சூரியன்; புரைதல்-ஒத்திருத்தல்; பட்டார்-இறந்துபோனவர்; சுடரோன்-சூரியன்; ஒட்டார்-பகைவர்; உண்ணுதல்-உட்கொள்ளுதல்/உள்ளே அடக்கிக்கொள்ளுதல்; ஆசுஅறுத்தல்-அறவே அழித்தல்; ஆசு-பற்றுக்கோடு; செம்புனல்-இரத்தம்/குருதி)

போரில் இறந்துபட்ட அரக்கர்களின் உடலினின்றும் வெளிப்பட்டு வந்த சிவந்த இரத்தநீர், இராமபிரானுடைய தெய்வீகத்தன்மை வாய்ந்த மேனியிலும் பட்டதால், கட்டமைந்த வில்லைக் கையிலேந்தியவனும், கரிய ஒளிமிக்க சூரியனைப் போன்றவனுமான இராமபிரான், ஊழியிறுதிக் காலத்தில், இவ்வுலகை அறவே சுட்டெரித்துத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் அந்த ஒளிமிகுந்த சூரியன்போலப் பொலிவுற்றுத் திகழ்ந்தான். மேலும் பகைவர்களின் உடலினின்றும் ஒழுகிய இரத்தத்திலேயே குளித்து எழுந்தவனான பரசுராமனையும் ஒத்திருந்தான்.

கருப்புநிறத்தில் ஒரு சூரியன் இருப்பதில்லை. எனவே ''கரு ஞாயிறு புரைவான்'' என்பது இல்பொருள் உவமை எனக்கொள்க. பரசுராமன் இருபத்தொரு தலைமுறை க்ஷத்திரியர்களைக் கொன்று அந்த இரத்தத்தால் சியமந்த பஞ்சகம் என்ற ஒரு இரத்தக் குளத்தை உண்டாக்கி அதில் மூழ்கித் தன் தந்தை ஜமதக்னி முனிவர்க்கு இறுதி நீர்க்கடனைச் செய்துமுடித்தான் என்பது நாம் முன்பே கண்டு வந்தது. அதுவே இங்கே ''ஒட்டார்உடற் குருதி குளித்து எழுந்தானையும்'' எனப் பேசப்படுகிறது என்க. ஒட்டார் என்பது பகைவரைக் குறிக்கும். ''ஒட்டார்பின் சென்று ஒருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று'' என்பது குறள்-967.

Koviloor Digital Library

109. தீ ஒத்தன, உரும் ஒத்தன சரம் சிந்திட, சிரம்போய்
மாய, தமர் மடிகின்றனர் எனவும், மறம் குறையா,
காயத்திடை உயிர் உண்டிட, உடன் மொய்த்து எழு களியால்,
ஈ ஒத்தன நிருதக்குலம்; நறவு ஒத்தனன் இறைவன். (9490)

(உரும்-இடி; சரம்-அம்புகள்; மாயம்-வஞ்சனைச்செயல்; தமர்-தம் இனத்தவர்; மறம்-வீரம்; காயம்-உடம்பு/சரீரம்; நிருதக்குலம்-அரக்கர் கூட்டம்; ஈ-தேனீக்கள்; நறவு-தேன்; இறைவன்-தலைவன்/இராமபிரான்; ஒத்தன-போன்றன; மாய்தல்-வீழ்தல்; சிந்துதல்-செலுத்துதல்)

நெருப்பைப் போன்றனவும், இடியைப்போன்றனவுமான அம்புகளை இராமபிரான் செலுத்தவும், அதனால் மாயச்செயல்களில் வல்லவரான அரக்கர்களது தலைகள் துண்டிக்கப் பெற்றுக் கீழே விழவும், அதனையும் பொருட் படுத்தாது, தங்கள் சுற்றத்தார் மடிகின்றனரே என்றும் பாராது, தம் வீரத்தில் சற்றும் குறையாது, அரக்கர்கூட்டம், தேன்கூட்டைத் தேனீக்கள் மொய்ப்பதுபோல, இராமபிரான் அம்புகளால் மடியப்போகிறோம் என்ற உள்ளக் களிப்பால், அவனைச் சென்று சூழ்ந்து கொண்டன.

''நறவு'' என்பது பொதுவாகத் தேன் என்ற பொருளைத் தந்தாலும் இங்கே தேன்அடையைக் குறித்தது எனக்கொள்க. ஈ-ஆன்மாக்கள்; நறவு என்ற தேன்கூடு/தேனடை-இறைவன் இராமபிரான். தீயும், உருமும், எரிக்கும் தன்மையால் இராமபாணத்திற்கு உவமை. ''காயம்'' என்பது உடம்பைக் குறிக்கும், புண்ணையும் குறிக்கும். தேன்கூட்டைத் தேனீக்கள் மொய்த்துக்கொண்டிருப்பதைப்போல, இராமபிரானை அரக்கர் கூட்டம் சுற்றிச்சூழ்ந்து மொய்த்துக் கொண்டிருந்தது என்பதாம்.

110. மொய்த்தாரை ஓர் இமைப்பின்தலை, முடுகத் தொடு சிலையால்
தைத்தான்; அவர் கழல்-திண் பசுங்காய் ஒத்தனர், சரத்தால்;
கைத்தார், நெடுந்தேரும், கடுங்களிறும், களத்து அழுந்தக்
குத்தான், அழி குழம்பு ஆம்வகை, வழுவாச் சரக்குழுவால். (9491)

(மொய்த்தல்-நெருங்கிச் சூழ்ந்துகொள்ளுதல்/அடர்தல்; முடுகுதல்-விரைதல்; தைத்தல்-அழுந்தும்படி ஊன்றச்செய்தல்; காய்-கழற்சிக்காய்; வழுவுதல்-தவறுதல்; குழு-தொகுதி; குழம்பு-சேறு; குத்துதல்-அழுத்துதல்; கைத்தல்-செலுத்துதல்; கைத்தார்-பகைவர்கள்; அழிதல்-பெருகுதல்)

அவ்வாறு தன்னைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டவர்களாகிய அரக்கர்களை, இராமபிரான் ஒருநொடிப் பொழுதிற்குள், தன் வில்லில் மிக விரைவாகச் செல்லும் அம்பினைத் தொடுத்துத் தாக்கினான். அவ்வாறு அம்பினால் தாக்கப்பட்ட அவ்வரக்கர்கள் உறுதியான முட்களையுடைய, பசுமையான கழற்சிக்காய்போல் ஆனார்கள்; படைக்கலங்கள் செலுத்து

Koviloor Digital Library

வதில் வல்லவர்களும், பகைவர்களுமான அரக்கர்களின் நீண்ட பெரிய தேர்ப்படைகளும், கொடிய யானைப்படைகளும், போர்க்களத்திலேயே அழுந்திப் பெருகி ஓடும் குழைந்த சேறுபோல, தனது குறிதவறாத அம்புத் தொகுதியால் அவர்களைப் புதையும்படி குத்திச் சிதைத்தான்.

''ஓர் இமைப்பு'' என்பது கண்ணிமைக்கும் அளவைக் குறித்தது. கழற்சிக்காய் என்பது வெளியே முட்களோடும் உள்ளே கசப்பான சுவையோடும்கூடிய யாராலும் விரும்பப்படாத ஒரு காய் எனக்கொள்க. அரக்கர்மேல் தைத்திருந்த அம்புகள், கழற்சிக்காய்போல் தோற்ற மளித்தது என்பதாம். ''கைத்தார்'' என்ற சொல் பொதுவாக வெறுப்புக்கு ஆளானவர் என்ற பொருளில் பகைவரையே குறிக்கும். ''வழுவா'' என்பது இலக்குத் தப்பாத, குறிதவறாத என்ற பொருளைத்தரும். ''குத்தான்'' என்ற சொல்லை ''உகுத்தான்'' என்பதன் முதற்குறையாகக் கொண்டு சிந்திச் சிதறச்செய்தான் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். ''மொய்த்தல்'' என்பது அடர்ந்து நெருங்குதல் என்று பொருள்படும். ''மொய்த்து வளர் பேரழகு மூத்த வடிவேயோ?'' என்பது பெரியபுராணம். கழற்சிக்காய் அம்புகளால் தைக்கப்பட்ட வீரர்களின் உடலுக்கு உவமை.

111. பிரிந்தார் பலர்; இரிந்தார் பலர்; பிழைத்தார் பலர்; உழைத்தார்;
புரிந்தார் பலர்; நெரிந்தார் பலர்; புரண்டார் பலர்; உருண்டார்;
எரிந்தார் பலர்; கரிந்தார் பலர்; எழுந்தார் பலர்; விழுந்தார்;
சொரிந்தார் குடல்; துமிந்தார் தலை; கிடந்தார், எதிர்தொடர்ந்தார். (9492)

(பிரிதல்-உயிர்நீங்குதல்; இரிதல்-நிலைதடுமாறி ஓடுதல்; உழைத்தல்-வருந்துதல்; புரிதல்-போரிடுதல்; கரிதல்-கருகிப்போதல்; துமிதல்-துண்டிக்கப்படுதல்)

இராமபிரான் செலுத்திய அம்புகளால் அரக்கவீரர்கள் பலர் உயிர் நீங்கினார்கள் பலர்; தங்கள் குழுவைவிட்டுப் பிரிந்து சென்றார்கள்; போர்க்களத்தினின்றும் நீங்கி அஞ்சி நிலைகெட்டு ஓடினார்கள் பலர்; பலர் அம்புக்கு இலக்காகாமல் தப்பிப் பிழைத்து ஓடிப்போய்விட்டார்கள்; பலர் வருத்தம்கொண்டு துன்புற்றார்கள்; பலர் விரும்பிப் போர்செய்தார்கள்; பலர் உடல் நெரிக்கப்பட்டார்கள்; பலர் நிலத்தில் விழுந்து உருண்டு புரண்டார்கள்; பலர் நெருப்பால் எரியுண்டனர்;பலர் கருகிச் சாம்பலாய்ப் போயினர்; போர்க்களத்தில் விழுந்தவர்கள் பலர், விழுந்தவர்களில் மீண்டும் எழுந்தவர்கள் பலர்; பலர் அஞ்சாது இராமபிரானைத் தொடர்ந்து எதிர்த்து முன்னே வந்து குடல் வெளியே தள்ளப்பட்டுக் கிடந்தனர்; சிலர் தலைமட்டும் துண்டிக்கப்பட்டுக் கிடந்தனர்.

Koviloor Digital Library

112. மணிகுண்டலம், வலயம், குழை, மகரம், சுடர் மகுடம்,
அணி கண்டிகை, கவசம், கழல், திலகம், முதல் அகலம்
துணியுண்டவர் உடல் சிந்தின; சுடர்கின்றன தொடரும்
திணி கொண்டலினிடை மின்குலம் மிளிர்கின்றன சிவண. (9493)

(மணி-மாணிக்கம்/இரத்தினம்; குண்டலம்-காதணி; மகுடம்-மணிமுடி; அணி-அழகிய; திலகம்-நெற்றிப்பொட்டு; கலம்-அணிகலன்கள்; கொண்டல்-மேகம்; சிவணுதல்-ஒத்திருத்தல்; திணி-அடர்ந்த/செறிந்த)

இராமபிரான் செலுத்திய அம்புகளின் வேகத்தால் இறந்துபட்ட அரக்கர்களின் உடல்களினின்றும் அழகிய இரத்தினங்களாலான காதணிகளும், தோள் வலயங்களும், மகரக் குழைகளும், ஒளிவீசுகின்ற மணிமுடிகளும், அழகிய கண்டிகைகளும், மெய்க் கவசங்களும், வீரக்கழல்களும், நெற்றிப்பொட்டுக்களும் ஆகிய பலவகை அணிகலன்களும் போர்க்களத்தில் சிந்தின. இவை அடர்ந்த நீரைக்கொண்ட கரிய மேகத்தின் நடுவில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் மின்னல் கூட்டங்களைப்போலத் தொடர்ந்து ஒளிவீசிக்கொண்டிருந்தன.

கரிய நிறமுடைய அரக்கர்கள் உடல்களுக்கு நீரைக்கொண்டுள்ள கரியமேகம் உவமை; அவர்கள் உடலினின்றும் சிதறிய அணிகலன்களுக்கு மேகத்தினின்று எழும் மின்னல் கீற்றுக்கள் உவமை. நீரை அடர்த்தியாகக் கொண்டிருப்பதால் ''கொண்டல்'' என்பது மேகத்திற்குக் காரணப்பெயர். மகரமீன் வடிவில் செய்யப்பட்ட காதணி ''மகரக்குழை'' எனப்பட்டது என்க.

113. முன்னே உளன்; பின்னே உளன்; முகத்தே உளன்; அகத்தின்
தன்னே உளன்; மருங்கே உளன்; தலைமேல் உளன்; மலைமேல்
கொன்னே உளன்; நிலத்தே உளன்; விசும்பே உளன்; கோடியோர்,
"என்னே ஒரு கடுப்பு!" என்றிட, இருஞ்சாரிகை திரிந்தான். (9494)

(முகம்-முகப்பகுதி/சேனாமுகம்/முற்பகுதி/தலைப்புறம்; அகம்-உள்ளிடம்/உட்பகுதி; மருங்கு-பக்கம்; கடுப்பு-விரைவு/வேகம்; இரும்-பெரும்; கொன்-அச்சம்)

தீயவர்களான அரக்கர்கள் ''இவனுடைய வேகம் எப்படிப்பட்டது?'' என்று வியந்து, புரிந்துகொள்ள இயலாதவர் ஆயினர். ''போர்க்களத்தின் உள்ளே இருக்கிறானா?; பிற்பகுதியில் இருக்கிறானா?, தலைப்புறத்தில் இருக்கிறானா?; உட்பகுதியில் இருக்கிறானா?; பக்கத்தில் இருக்கிறானா?; நம் தலைமீதுகூட இருக்கிறானா?; அச்சம்தரும் மலைமேல் இருக்கிறானா?; தரையில் இருக்கிறானா?; ஆகாயத்தில்

Koviloor Digital Library

இருக்கிறானா?'' என்று அவன் இருக்குமிடம் அரக்கர்களுக்குத் தெரியாத வாறு சாரிகை செய்தான் இராமபிரான்.

முன்னும், பின்னும் அணிவகுப்பின் முற்பகுதியிலும், உட்பகுதி யிலும், பக்கத்திலும், தலையிலும், மலையிலும், நிலத்திலும், விசும்பிலும் திரிந்தான் இராமபிரான் என்பதால் அவன் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் என்ற குறிப்பை நுனித்து உணரவைக்கிறான் கவிஞன். ''மனத்தகத்தான்; தலைமேலான்; வாக்கினுள்ளான்; வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்; இமையவர்தம் சிரத்தின்மேலான்; ஏழ் அண்டத்து அப்பாலான்; இப்பால் செம்பொற்புனத்தகத்தான்; நறுங் கொன்றைப் போதின் உள்ளான்; பொருப்பிடையான்; நெருப்பிடையான்; காற்றினுள்ளான்; கனத்தகத்தான்; கயிலாயத்து உச்சி உள்ளான்; காளத்தியான், அவன் என் கண்ணுளானே'' என்பது மிக அருமையான திருத்தாண்டகம்.

114. ''என் நேரினன், என் நேரினன்'' என்று, யாவரும் எண்ண,
பொன் நேர்வரு வரிவில் கரத்து ஒரு கோளரி பொருவான்,
ஒன்னார் பெரும்படைப் போர்க்கடல் உறை அன்று உளது எனினும்,
அல் நேரலர் உடனே திரி நிழலே எனல் ஆனான். (9495)

(நேர்-ஒப்பு; கோளரி-வலிய சிங்கம்; நேரினன்-எதிரில் உள்ளான்; ஒன்னார்-பகைவர்; அல்-இருள்/இருட்டு; நேரலர்-ஒத்தவர்/நிகர்த்தவர்/பகைவருமாம்)

பொன்னை ஒத்த, வரிந்து கட்டப்பட்ட விற்படையைக் கையில் ஏந்தியுள்ள ஒப்பற்ற வலிய சிங்கம் போன்றவனாகிய இராமபிரான், பகைவர்களாகிய அரக்கர்களின் கடல்போன்ற பெரிய படைகளின் உள்ளேயே நின்றுகொண்டிருந்தான் என்றாலும், அப்படையில் உள்ள ஒவ்வொருவரும் ''எனக்கு எதிரில் நின்று போரிடுகிறான்'' என்று வியந்து கருதுமாறு அவர்கள் எல்லோருடைய கரிய நிழல்போலவே அவர்களைத் தொடர்ந்து, வருவது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உண்டு பண்ணினான்.

தன் நிழலைத் தானே கைப்பற்றி அழித்தல் இயலாதது போலவும், தன் நிழல் எப்போதும் தன்னையே தொடர்ந்து வருதல்போலவும், இராம பிரான் அரக்கர்களின் நிழல்போல அகலாமல் அவர்களைத் தொடர்ந்து சென்று போரிட்டான். அவன் அவ்வளவு அருகு இருந்தும், அரக்கர்களால் அவனைப் பிடித்துத் தாக்கமுடியவில்லை என்பது கருத்து. ஒரு இராம பிரானே ஒவ்வொருவருக்கும் பல இராமபிரான்களாகத் தோற்றமளித்தான் என்பதாம்.

Koviloor Digital Library

115. பள்ளம் படு கடல் ஏழினும், படி ஏழினும், பகையின்
வெள்ளம் பலஉள என்னினும், வினையம் பல தெரியா,
கள்ளம் படர்பெரு மாயையின் கரந்தார், உருப்பிறந்தார்,
உள் அன்றியும், புறத்தேயும் உற்று, உளனாம் என உற்றான். (9496)

(பள்ளம்-ஆழம்; படி-உலகம்; வினையம்-சூழ்ச்சித்திறன்; தெரியா-தெரிந்து; படர்தல்-நிறைந்திருத்தல்; கரத்தல்-மறைதல்; வெள்ளம்-படையின் அளவு/பெருக்கம்)

மிக்க ஆழமான ஏழு கடல்கள், ஏழு உலகங்களைக் காட்டிலும், பகைவர்கள் படைப்பெருக்கம் பல வெள்ளங்களை உடையதாய் இருப்பினும், சூழ்ச்சித்திறனையும், மாயச் செயல்களையும் நன்கு கற்றறிந்த அவ்வரக்கர்கள், தம் உருவத்தை மாயத்தால் மறைத்துக்கொண்டனர். அவர்களின் உள்ளத்தில் மட்டுமின்றி, புறத்தே உடலிலும் அச்சம் தோற்றுவிப்பவனாகப் போர்க்களத்தில், இராமபிரான் சாரிகை திரிந்து போரிட்டான்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள்போல, இராமபிரானும் வஞ்சகர்களாகிய அரக்கர்களின் உள்ளத்தில் அச்சத்தினாலும், வெளிப் புறத்தில் சாரிகை திரிவதனாலும் பொருந்தி உள்ளான் என்பதாம். ''அந்தர்யாமித்வம்'' என்பது எங்கும் உள்ள நிலை, ''சர்வ அந்தர்யா மித்வம்'' என்பது எங்கும் நீக்கமற நிறைந்துள்ள நிலை என்க. ''வானின்று இழிந்து, வரம்பு இகந்து மா பூதத்தின் வைப்பு எங்கும் ஊனும், உடலும், உயிரும்போல், உள்ளும், புறத்தும் உளன் என்ப'' என்ற அயோத்தியா காண்ட கடவுள் வாழ்த்துப்பாடல் இங்கு நினைவுகூரத் தகும். ''படி'' என்பது உலகத்தைக் குறிக்கும். ''படி ஏழினும் தேடியும் காணாமுழு முதல்'' என்பது திருக்கருவைப் பதிகம்.

116. தேவர்கள் அஞ்சுதல்

நானாவிதப் பெருஞ் சாரிகை திரிகின்றது நவிலார்,
போனான் இடை புகுந்தான் எனப் புலன் கொள்கிலர், மறந்தார்,
"தானாவதும் உணர்ந்தான், உணர்ந்து, உலகு எங்கணும் தானே,
ஆனான்; வினைதுறந்தான்" என, இமையோர்களும் அயிர்த்தார்.
(9497)

(நானாவிதம்-பல்வேறு வகையான; நவில்தல்-சொல்லுதல்/அறிந்து கொள்ளுதலுமாம்; புலன்-உணர்வு/அறிவு; அயிர்த்தல்-ஐயுறுதல்; இமையோர்-தேவர்கள்; வினை-தொழில்)

இடசாரி, வலசாரி எனப் பலவகைப்பட்ட பெருஞ்சாரிகை செய்து போர்க்களத்துள் சுற்றித் திரிந்த இராமபிரான் போர்க்களத்துள் போனவன்,

Koviloor Digital Library

அரக்கர்படையின் உள்ளே புகுந்து கொண்டான் என்பதை அறியாதவர் களாய், அதை வெளிப்படுத்திச் சொல்லாதவர்களாய், அதை முற்றிலும் மறந்துபோனவர்களாய்த் தேவர்கள் ''இவன் அவனே பரம்பொருள் என்பதை உணர்ந்துகொண்டு விட்டான்போலும்; அவ்வாறு உணர்ந்து கொண்டு, எல்லா உலகங்களிலும் தானே நீக்கமற நிறைந்து இருப்பதைப் போல் எண்ணிக்கொண்டு, தான் அவதரித்து வந்த காரியமாகிய அரக்கர்களை அழித்து ஒழிப்பது என்னும் தொழிலைச் செய்யாது அதனைத் தவிர்த்து நிற்கிறானே'' என்று தேவர்கள் எல்லோரும் ஐயுற்றனர்.

தான் பரம்பொருள் நிலையில் நின்று உலகெங்கும் பரவியிருக்கும் செயலைத்தான் செய்கின்றானே அல்லாமல், தான் எடுத்துவந்த மானிட அவதாரத்திற்கு உரிய செயலான ''துஷ்ட நிக்ரகத்தை-அரக்கர்களை அழித்தொழிப்பதைச் செய்யாது இருக்கிறானே என்று தேவர்கள் கருதினர் என்பதாம். பரம்பொருள் நிலையில் தன் எதிரே நிற்கும் பகைவர்களாகிய அரக்கர்களும் கூடத் தானேயாதலை உணர்ந்து, அவரோடு கொண்ட பகைமை நீங்கியதுபோலவும், அவர்கள் அழிக்கப்படவேண்டியவர்கள் அல்லர் என்பதுபோலவும் கருதித் தன்னுடைய அழித்தல் தொழிலைச் செய்யாது விட்டுவிட்டான் என்று தேவர்கள் சந்தேகம் கொண்டனர் என்பதாம்.

117. சண்டக் கடு நெடுங் காற்றிடை துணிந்து எற்றிட, தரைமேல்
கண்டப் படு மலைபோல், நெடுமரம்போல், கடுந்தொழிலோர்
துண்டப் பட, கடுஞ்சாரிகை திரிந்தான், சரம் சொரிந்தான்
அண்டத்தினை அளந்தான் எனக் கிளர்ந்தான், நிமிர்ந்து அகன்றான்.
(9498)

(அண்டம்-உலகம்; அகல்தல்-செல்லுதல்; சண்டம்-சண்டமாருதம்/ வேகம்; எற்றுதல்-தாக்குதல்; கண்டம்-துண்டம்; கிளர்தல்-எழுச்சி பெறுதல்)

மூவுலகங்களையும் தன் ஈரடியால் ஓங்கி அளந்த உத்தமனான திருமால் தன் விக்கிரம அவதாரத்தில் உயர்ந்து எழுந்ததுபோல, நிமிர்ந்து போர்க் களம் சென்றவனாகிய இராமபிரான், மிக்க வேகமுடைய, கடுமையான, நீண்டநேரம் வீசும் புயல்காற்று இடையில் மோதித்தாக்குதலால், பூமியின் மேல் துண்டமாகிச் சாயும் பெரிய மலைகள்போலவும், பெரிய மரங்கள் போலவும், கடுமையான போர்த்தொழிலைச் செய்கின்ற அரக்கர்கள் பூமியில் துண்டிக்கப்பட்டு விழும் வண்ணம் கடுமையான சாரிகை திரிந்து, அம்புகளைச் செலுத்தினான்.

''சண்டக்கடு நெடுங்காற்று'' என்பது காற்றின் மிக்க வேகத்தைக் குறித்தது.

Koviloor Digital Library

118. களி யானையும், நெடுந்தேர்களும், கடும்பாய் பரிக்கணனும்,
தெளி யாளியும், முரட்சீயமும், சினவீரர்தம் திறமும்,
வெளி வானகம் இலதாம்வகை விழுந்து ஓங்கிய பிணப்பேர்
நளிர் மாமலை பல தாவினன், நடந்தான், கடல்கிடந்தான். (9499)

(கிடத்தல்-பள்ளிகொண்டிருத்தல்; களி-மதக்களிப்பு; கணன்-கணம்/ கூட்டம்; முரண்-மாறுபட்ட வலிமை; சீயம்-சிங்கம்; வானகம்-ஆகாயம்; வெளி-வெற்றிடம்; பேர்-பெயர்; நளிர்-குளிர்ந்த; கடுமை-விரைவு/ வேகம்) ·

பாற்கடலில் பள்ளிகொண்டிருந்தருளும் திருமாலின் அம்சமான இராமபிரான், மதக்களிப்பு மிக்க யானைகளும், உயர்ந்த தேர்களும், மிக வேகமாகப் பாய்ந்து செல்லும் குதிரைகளின் கூட்டங்களும், தெளிவான ஆற்றல்பெற்ற யாளிகளும், முரண்பட்ட வலிமையுடைய சிங்கங்களும், மிக்க கோபம்கொண்ட காலாட்படை வீரர்களின் தொகுதியும், ஆகாயத்தில் வெற்றிடமே இல்லையாம் என்று கூறும்படி வீழ்ந்து கிடந்த, பிணம் என்னும் பெயர் கொண்ட பெரிய குளிர்ச்சிபொருந்திய மலைக் குவியல்கள் பலவற்றையும் தாண்டிக்கொண்டே நடந்து சென்றான்.

போர்க்களத்தில் வீழ்ந்து கிடந்த யானை, தேர், குதிரை, யாளி, சிங்கம், அரக்கவீரர்கள் இவர்களின் பிணங்களின் குவியல் மலைபோல உயர்ந்து ஆகாயத்திலேயே வெற்றிடம் இல்லை என்னுமாறு ஓங்கியிருந்தன. எனவே இராமபிரான் ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்கு தாவிக்குதித்துச் செல்லுவதுபோல் செல்லவேண்டியதாயிற்று என்பதாம்.

119. அம்பரங்கள் தொடும் கொடி ஆடையும்,
அம்பரங்களொடும் களி யானையும்,
அம்பு அரங்க, அழுந்தின சோரியின்,
அம்பரம் கம் அருங்கலம் ஆழ்ந்தென. (9500)

(அம்பரம்-அம்பாரி/தவிசு/மெத்தை; அம்பரம்-ஆகாயம்; அரங்குதல்-தைத்தல்/அழுந்துதல்; அம்பரம்-கடல்; கலம்-மரக்கலம்/கப்பல்/ நாவாய்; கம்-நீர்; சோரி-இரத்தம்)

ஆகாயத்தைத் தொடுமளவு உயர்ந்து விளங்குகின்ற கொடிச் சீலைகளும், அம்பாரிகளோடு விளங்கும் களிப்புமிக்க யானைகளும், இராமபிரானின் அம்புகள் ஊன்றித் தைத்ததால், கடல்நீரில் அழுந்திப் போன அரிய, மரக்கலங்களைப்போல, இரத்த வெள்ளத்தில் மூழ்கிப் போயின.

நான்கு அடிகளிலும் அம்பரங்க என்ற சொல் வந்திருப்பதனாலும், இது ஒவ்வொரு அடியிலும் வெவ்வேறு பொருள்களைத் தந்திருப்பதனாலும், இது யமகம் என்னும் சொல்லணியின் பாற்படும். அம்பரம் என்ற சொல்

Koviloor Digital Library

ஆகாயம், கடல், அம்பாரி என்று பல பொருளையும் தருவதை உணர்க. ''கம்'' என்ற சொல்லுக்கு நீர் என்பது பொருள். கூம்புகளோடு மரக்கலங்கள் கடலில் அமிழ்வது போன்று கொடியுடன் யானைப் படைகள் இரத்த வெள்ளத்தில் அமிழ்ந்து போயின என்பதாம்.

120. கேட கங்கண அம் கையொடும் கிளர்
கேடகங்கள் துணிந்து கிடந்தன;
கேடு அகம் கிளர்கின்ற களத்த நன்கு
ஏட கங்கள் மறிந்து கிடந்தவே. (9501)

(கேடு-தீங்கு; கிளர்தல்-விளங்குதல்; கேடகங்கள்-கிடுகுப்படைகள்/பரிசைகள்/கேடயங்கள்; கேடு-துயரம்; அகம்-உள்ளம்; களத்த-போர்க்களத்தில்; மறிந்து-உருண்டு; கம்-தலை; கங்கள்-தலைகள்; ஏடு-இதழ்கள்; கேட-கெடுத்தலையுடைய; கங்கணம்-கையணி; துணிந்து-அறுபட்டு)

தீங்கு விளைவிக்கும் கொலைத்தொழிலை முனைந்து செய்யும் பொருட்டு அழகிய கங்கணம் என்னும் அணியை அணிந்து கொண்ட கையொடும், விளங்குகின்ற கேடயங்கள் துண்டு துண்டாக அறுபட்டுப் போர்க்களத்தில் கிடந்தன; தீமைகளையே தன் உள்ளிடத்தில் கொண்டதுவான போர்க்களத்தில், நல்ல இதழ்கள் நெருங்கிய தும்பைப்பூ மாலையைச் சூடிய அரக்கர்களின் தலைகள் உருண்டு கிடந்தன.

இராமபிரான் செலுத்திய அம்பால் அரக்கவீரர்களது கேடயங்களும், அவர்களது தலைகளும் போர்க்களத்தில் அறுபட்டுக்கிடந்தன என்பதாம். இப்பாடலிலும் கேடகங்கள் என்ற சொல் மூன்று அடிகளிலும் வெவ்வேறு பொருளைத் தந்து நின்றதால் இப்பாடல் யமகம் என்னும் சொல்லணியின் பாற்பட்டதாகும். முதல்அடி கேடகங்கணம் என்று பிரிந்து கெடுதியைச் செய்யும் கங்கணம் என்றும்; இரண்டாம் அடியில் கேடகங்கள் என்று கேடயங்கள் என்ற தடுப்பு ஆயுதத்தையும், மூன்றாவது அடியில் கேடுஅகம் என்று பிரிந்து தனக்குள்ளே தீமைகளைக் கொண்டது என்றும், நான்காவது அடியில் ஏட கங்கள் என்று பிரிந்து இதழ்கள் நெருங்கிய மலர்மாலையணிந்த தலைகள் என்ற பொருளையும் தந்து நின்றன. முன் பாடலில் ''கம்'' என்ற சொல்லுக்கு ''நீர்'' என்ற பொருள் கண்டுவந்தோம். இந்தப்பாடலில் அதே சொல்லுக்குத் தலை என்பது பொருள். கங்கணம் என்பது வீரர்கள் கையில் அணிந்துகொள்ளும் ஒருவகைக் கையணி என்க. கேடயம் என்பது வாட்போரின்போது தம்மைத் தடுத்துக்கொள்ளப் பயன்படுத்தப்படும் அதே ஆயுதம் என்க. ''கேடு அகம் கிளர்கின்ற களம்'' என்பது, துயரங்களைத் தன்னகத்தே மிக்குக் கொண்டுள்ளதாகிய போர்க்களம் எனப் பொருள்படும்.

Koviloor Digital Library

121. அங்கதம் களத்து அற்று அது தாரோடும்
அம் கதம் களத்து அற்று அழிவுற்றவால்;
புங்கவன் கணைப் புட்டில் பொருந்திய
புங்க வன் கணைப் புற்று அரவம் பொர. (9502)

(புங்கவன்-ஆடவரிற் சிறந்தோன்/தூயோன்; புங்கம்-கூர்மை; அரவம்-பாம்பு; பொருதல்-போரிடுதல்/தாக்குதல்; அங்கதம்-தோள்வளை/வாகு வலயம்; அம்-அழகு; கதம்-கேடயம்; களம்-கழுத்து; தார்-மலர்மாலை; அழிதல்-ஒழுகுதல்)

ஆடவரில் உயர்ந்தோனாகிய இராமபிரானின் அம்பறாத் தூணியில் இருக்கின்ற கூர்மையான, வலிய, அம்புகள் புற்றிலிருக்கும் பாம்புபோலத் தாக்கியதால், அரக்கர்களது தோள்வளை போர்க்களத்தில் அவர்களுடைய கழுத்தோடு அறுபட்டு விழுந்தது. அவர்கள் அணிந்திருந்த தேன் ஒழுகும் மலர்மாலையோடு, அவர்களுடைய அழகிய கோபம் என்னும் உணர்வும் போர்க்களத்தில் அழிந்துபோனது.

அங்கதம் என்ற சொல் தோள்வளையையும், அம்கதம் எனப் பிரிந்து, அழகிய கோபஉணர்ச்சி என்ற பொருளையும் குறிக்கும். புங்கவன் என்ற சொல் உயர்ந்தோனாகிய இராமபிரானையும், புங்க வன் என்று பிரிந்து கூரிய நுனியையும், வலிமையையும் உடைய என்ற பொருளைத்தரும். இப்பாடலிலும் யமகம் என்னும் சொல்லணி பயின்று வந்திருப்பதைக் காண்க. வீரர்க்குப் போர்க்களத்தில் அழகு தருவது கோபம், சினம் என்னும் உணர்வு என்றும், அதுவும் இராமன் ஏவிய கணைகளால் அறுபட்டுப் போனது என்றும் விளக்கியவாறு. வீரர்கள் அழிந்ததோடு அவர்கள் கோப உணர்வும் அழிந்தது என்பதாம். இராமபிரானின் அம்பறாத்தூணிக்குப் புற்றிலிருக்கும் அரவம் உவமை.

122. தம் மனத்தில் சலத்தர் மலைத்தலை
வெம்மையுற்று எழுந்து ஏறுவ மீளுவ,
தெம்முனைச் செருமங்கை தன் செங்கையால்,
அம்மனைக் குலம் ஆடுவ போன்றவே; (9503)

(சலம்-வஞ்சனை; ஏறுதல்-மேலேசெல்லுதல்; தெவ்-பகைவர்; முனை-போர்க்களம்; செருமங்கை-போர்மகள்/வீரத்திரு)

தங்கள் உள்ளத்தில் வஞ்சனை மிகுந்தவரும், மலைபோன்ற பெரிய உறுதியான தலைகளையுடையவருமான அரக்கர்களின் தலைகள், இராம பிரானது அம்புபட்டுக் கோபம்கொண்டு உடலினின்றும் மேலே எழுந்து ஏறியும், பின்னர் கீழே விழுவதுமாயும் இருந்தன. இது எப்படி இருந்தது என்றால், பகைவர்களின் போர்க்களத்தில் வீரத்திருமகள் தன் சிவந்த

Koviloor Digital Library

கைகளால் அம்மானைக் காய்களை வீசி எறிந்து விளையாடுவது போன்றிருந்தது என்கிறான் கவிஞன்.

இராமபிரான் அம்புபட்டுச் சிதறிய தலைகள் ஆகாயத்தின் மேலே போய்ப் பின்னர்க் கீழே வருவது, பெண்கள் அம்மானைக்காயை வீசியெறிந்து விளையாடுவது போல் இருந்தது என்று தனது குறிப்பை ஏற்றிப் பாடுகிறான் கவிஞன். எனவே இப்பாடல் தற்குறிப்பேற்ற அணியின்பாற் படும். சலம்-வஞ்சனை; மலைத்தலை-மலைபோன்ற உறுதியான பெரிய அரக்கர்கள் தலை; ''தெவ்'' என்பது பகைமையைக் குறிக்கும். ''தெவ்வுப் பகைமை'' என்பது தொல்காப்பியம்; தெவ், தெம் என ஆயிற்று; ''தெம்முனை'' என்பது பகைவர்கள் நிறைந்த போர்க்களத்தைக் குறிக்கும். ''செருமங்கை'' என்பது போர்மகளை, வீரத்திருமகளைக் குறிக்கும்; அம்மனை என்பது பண்டைக்காலத்தில் பெண்கள் விளையாடும் அம்மானை விளையாட்டைக் குறிக்கும். பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களில் அம்மனைப் பருவமும் ஒன்று. அப்பருவத்தில் விளையாடும் இவ்விளையாட்டு அம்மானை என்று வழங்கப்பெறும்.

123. கயிறுசேர் கழல்கார் நிறக் கண்டகர்
எயிறு வாளிபடத் துணிந்து, யானையின்
வயிறு தொறும் மறைவன. வானிடைப்
புயல் தொறும் புகு வெண்பிறை போன்றவே. (9504)

(கண்டகர்-கொடியோர்; கண்டகம்-முள்; புயல்-மேகம்)

யானைகளின் கழுத்திலிடப்படும் புரசை என்னும் கயிற்றால் இணைத்துக் கட்டப்பெற்றிருக்கும் வீரக்கழலை அணிந்த கரிய நிறம் கொண்டவரும், முள்போன்று தீமைகளைச் செய்யும் கொடியவர்களு மாகிய அரக்கர்களின் கோரைப்பற்கள் இராமபிரானது அம்புகளால் தாக்கப்பட்டதால் துண்டிக்கப்பட்டு, அவர்கள் அமர்ந்துள்ள யானைகளின் வயிற்றுக்குள் எல்லாம் குத்திக்கொண்டு புகுந்து மறைந்துகொண்டன. இது எப்படி இருந்தது என்றால், ஆகாயத்தினிடையே செல்லும் மேகங்களுக்குள், நுழைந்து செல்லும் வெள்ளிய நிறம் கொண்ட பிறைச்சந்திரனைப் போன்றிருந்தது.

''கயிறு'' என்பது யானையின் கழுத்திலிடப்படும் புரசை என்னும் கயிற்றைக் குறிக்கும். ''கண்டகம்'' என்ற சொல்லுக்கு முள் என்பது பொருள். முள்போன்ற தீமை விளைவிக்கும் கொடிய செயல்களைச் செய்பவர் கண்டகர் எனப்பட்டனர். கரிய நிறமுடைய அரக்கர்களுக்குக் கார்மேகமும், அவர்களின் வெண்மை நிறமான, வளைந்த கோரப்பற் களுக்கு வளைந்த பிறைச்சந்திரனும் உவமைகள்.

Koviloor Digital Library

124. வென்றி வீரர் எயிறும், விடா மதக்
குன்றின் வெள்ளை மருப்பும், குவிந்தன
என்றும் என்றும் அமைந்த இளம்பிறை
ஒன்றி மாநிலத்து உக்கவும் ஒத்தவால். (9505)

(வென்றி-வெற்றித்திறம்; குன்று-மலை/யானை; மருப்பு-தந்தம்/கொம்பு; என்றும்-எப்போதும்/ஒவ்வொரு நாளும்; ஒன்றி-ஒன்றுசேர்ந்து; உகுதல்-சிதறிக்கிடத்தல்)

வெற்றித்திறம் வாய்ந்த அரக்கவீரர்களின் கோரப்பற்களும், மதநீர் சொரிதலை ஒருபோதும் விடாத குன்றுபோன்ற யானைகளின் வெள்ளை நிறத் தந்தங்களும் போர்க்களத்தில் இராமபிரானது அம்புகள் தாக்கியதால் துண்டிக்கப்பட்டுத் தரையில் குவிந்து கிடந்தன; இவை எப்படி இருந்தன என்றால், ஒவ்வொரு நாளும் தோன்றுகின்ற கலைகள் முற்றும் நிரம்பாத இளமையான பிறைச்சந்திரன்கள் எல்லாம் ஒன்றுகூடி விண்ணிலிருந்து வந்து மிகப்பெரிய நிலத்தில் சிதறிக் கிடந்ததைப் போன்று இருந்தது என்கிறான் கவிஞன்.

இப்பாடல் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவதால் தன்மைத் தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும். இல்பொருள் உவமை என்பதும் பொருந்தும். அரக்க வீரர்களின் வெள்ளைநிறம் கொண்ட வளைந்த பற்களுக்கும், வெள்ளைநிறம் கொண்ட யானைகளின் வளைந்த தந்தங்களுக்கும், வெள்ளைநிறம் கொண்ட வளைந்த இளம் பிறைச்சந்திரன் உவமை; ''என்றும் என்றும்'' என்ற அடுக்கு என்றென்றும், ஒவ்வொரு நாளும் என்ற பொருளைத்தரும். ''மதக்குன்று'' என்பது உருவகம். மதம்கொண்ட, மலைபோன்ற யானையைக் குறிக்கும். கலைகள்நிரம்பாத இளம் பிறைச்சந்திரனை ''கீற்றுப்பிறை'' என்கிறது ஒரு உரைநூல்.

125. ஓவிலார் உடல் உந்து உதிரப் புனல்
பாவி வேலை உலகு பரத்தலால்,
தீவுதொறும் இனிது உறை செய்கையார்,
ஈவு இலாத நெடுமலை ஏறினார். (9506)

(ஓவுதல்-ஒழிதல்/நீங்குதல்; உந்துதல்-வெளிப்படுதல்; பாவி-பரவி; பரத்தல்-பாய்தல்; ஈவு-ஈறு/அழிதல்)

போர்செய்தலை விட்டு நீங்காதவர்களும், அளவற்ற எண்ணிக்கை உடையவர்களுமான அரக்கர்களின் உடலினின்றும் வெளிப்பட்டுப் பெருகுகின்ற இரத்தவெள்ளம், கடல் சூழ்ந்த இவ்வுலகம் எங்கும் பரவிப் பாய்தலால், தீவுகளில் இனிதாகத் தங்கி வாழும் அரக்கர்கள் எல்லாம், வெள்ளநீரால் அழிவே இல்லாத உயர்ந்த மலைகளின்மீது ஏறித் தம்மைத் தற்காத்துக் கொண்டார்கள் என்கிறான் கவிஞன்.

Koviloor Digital Library

இது கவிக்கூற்று. ஓவுதல்-என்பது நீங்குதல் என்ற பொருளையும் அளவற்ற என்ற பொருளையும் தரும். ஈவு என்பது ஈறு, அழிவைக்குறிக்கும். ''ஓவுநாள் உயிர் போகுநாள்'' என்பது தேவாரம். ''ஈவுஇலாத தீவினைகள்'' என்பது திருவாய்மொழி.

126. விண் நிறைந்தன மெய்உயிர்; வேலையும்
புண் நிறைந்த புனலின் நிறைந்தன;
மண் நிறைந்தன, பேர் உடல்; வானவர்
கண் நிறைந்தன, வில்தொழில் கல்வியே. (9507)

(மெய்-உடம்பு; புனல்-இரத்தநீர்; வேலை-கடல்; மண்-பூமி; வானவர்-தேவர்கள்)

அரக்கர்களின் உடம்பிலிருந்த உயிர்களால், விண்ணுலகம் முழுவதும் நிறைந்துபோனது; அவர்களின் புண்ணினின்றும் வெளிப்பட்ட இரத்த நீரால் கடல்களெல்லாம் நிறைந்துபோயின; அவர்களின் பிளக்கப்பட்ட, பெரிய உடல்களால் நிலவுலகம் முழுவதும் நிறைந்துபோனது; இராம பிரான் செய்த போர்முறையின் நுட்பத்தைக் கண்டு தேவர்கள் கண்க ளெல்லாம் நிறைந்து போயின.

இறந்துபட்ட அரக்கர்களின் உயிரால் விண்ணுலகும், இரத்தத்தால் கடல்களும், பெரிய உடல்களால் நிலவுலகமும் நிறைந்துபோயின. இமையாநாட்டமுடைய தேவர்களின் கண்கள், இராமபிரானின் தனுர் வேதக் கல்வியையும், தனுசாஸ்திர முறைப்படி செய்த போரினையும் கண்டு நிறைந்துபோயின. கண்ணாரக்கண்டு களித்தார்கள் என்பதாம். போரில் உயிரிழந்தவர்கள் வீரசுவர்க்கம் அடைவர் என்பது மரபு. எனவே விண்நிறைந்தன என்றார் என்க. ''மெய்உயிர்'' என்பது சாதாரணப் பொருளில் உடம்பினின்றும் நீங்கிய உயிர்என்று பொருள்படும். எனினும் அழியாது உண்மையாக விளங்கக்கூடியது உயிர் மட்டுமே என்னும் பொருள் இன்னும் சிறக்கும். உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என்று கூறுவதுபோல் இங்கே அரக்கர்களின் உடல் மண்ணுக்கும், உயிர் விண்ணுக்கும் போனது என்று கொள்க.

127. செறுத்த வீரர் பெரும்படை சிந்தின;
பொறுத்த சோரி புகக்கடல் புக்கன;
இறுத்த நீரின் செறிந்தன, எங்கணும்
அறுத்து, மீனம் உலந்த அனந்தமே. (9508)

(செறுத்தல்-சினந்து போர்செய்தல்; பொறுத்தல்-தாங்குதல்; இறுத்தல்-தங்குதல்; உலத்தல்-இறந்துபோதல்; செறிதல்-நெருங்குதல்; ந+அந்தம்-அனந்தம்/அளவற்றது; எங்கணும்-எல்லாப்பக்கங்களிலும்)

Koviloor Digital Library

சீற்றம்கொண்டு போர்செய்த வீரர்களின் பெரிய படைக்கலன்களான வேல், வாள் ஆகிய கூர்மையான ஆயுதங்கள் சிந்திச் சிதறிப்போனதால், அவை அங்கு நிரம்பியிருந்த இரத்த வெள்ளத்தில் புகுந்து கடலிலும் சென்று சேர்ந்தன; எனவே கடலில் தங்கியிருந்து நெருங்கி வாழும் மீன் இனங்கள் அந்தக் கூரிய ஆயுதங்களால் எல்லாப் பக்கங்களிலும் அறுக்கப்பட்டு இறந்துபோயின. அவை கணக்கற்றவையாகும்.

''அனந்தம்'' என்ற சொல் அளவற்றது என்ற பொருளைத்தரும். ''ஊர் அனந்தம்; பெற்ற பேர் அனந்தம்; உற்ற உறவு அனந்தம்'' என்பது தாயுமானவர் பாடல்.

128. வன்னியின் சீற்றம்

''ஒல்வதே இவ்ஒருவன்; இவ் ஊகத்தைக்
கொல்வதே நின்று! குன்று என யாம் எலாம்,
வெல்வது ஏதும் இலாமையின், வெண்
பலை மெல்வதே!'' என வன்னி விளம்பினான். (9509)

(யுகம்-வியூகம்/அணிவகுப்பு/பெருஞ்சேனை; ஒல்வது-இயல்வது/முடிவது; ஏதும்-சிறிதும்; பலை-பல்லை/வாயை)

வன்னி என்னும் படைத்தலைவன் அரக்கர்களை நோக்கி, ''தனியனாக நிற்கும் இந்த ஒரு மனிதனால் இத்தகைய பெரும் அணிவகுப்புக் கொண்ட சேனையுடன் போர்செய்து அதை வெல்ல இயலுமோ? அவனால் அவற்றைக் கொல்லமுடியுமோ? மலைபோன்ற உருவத்தோடு நிற்கும் நாம் எல்லோரும் அவனை வெல்லவேண்டும் என்ற ஒரு குறிக்கோள் சிறிதும் இல்லாது, நமது வெள்ளிய பற்களைக் கடித்துக்கொண்டு வாளா நிற்பதோ?'' என்று ஆவேசமாகக் கூறுகிறான்.

''ஒல்வதே'' என்ற சொல் முடியுமோ என்ற பொருளைத்தரும். ஒல்வதே, கொல்வதே, மெல்வதே என்ற இடங்களில் வரும் ஏகாரம் வினாப்பொருளது. ஊகம் என்பது யூகம் என்ற வடசொல்லின் திரிபு. அணிவகுப்பு என்பது பொருள். வியூகம் என்பதன் முதற்குறை, ''பலை'' என்பது இடைக்குறை-பல்லை என்ற பொருளைத்தரும். பல்லை மெல்வதில்லை; பல்லைக் கடிப்பது, வாயை மெல்வது. எனவே இங்கே பல் என்ற சொல் ஆகுபெயராய் வாயைக் குறிக்கும். வாயை மென்று கொண்டு வாளாயிருப்பதோ என்று கேட்கிறான் வன்னி என்பதாம். வன்னி என்பவன் புட்கரத்தீவின் மன்னன், இப்போது மூலபலச்சேனைக்குத் தலைமை தாங்கி நடத்திச்செல்லும் தளபதி. ''யூகம்'' பற்றி ஒருசிறு இலக்கணக் குறிப்பு. யகரம் சொல்லின் முதல் எழுத்தாக வராது, ''ஆவோடல்லது யகரம் முதலாது'' என்பது தொல்காப்பியம். இதற்கு

Koviloor Digital Library

நச்சினார்க்கினியர் தரும் விளக்கம், ''யவனர், யுத்தி, யூகம், யோகம், யௌவனம், வடசொல் என மறுக்க'' என்கிறார்.

129. "கோல் விழுந்து அழுந்தாமுனம், கூடி யாம்
மேல் விழுந்திடினும், இவன் வீயுமால்;
கால் விழுந்த மழை அன்ன காட்சியீர்!
மால் விழும் துளிர்போலும், மயங்கி, நீர்!" (9510)

(கோல்-அம்பு; வீயுதல்-வீதல்/இறந்துபடுதல்; விழுதல்-இறங்குதல்; மால்-திகைப்பு/மயக்கம்; காட்சி-தோற்றம்; விழுதல்-அகப்படுதல்/அழுந்தியிருத்தல்)

வன்னி, அரக்கவீரர்களை நோக்கி, ''இராமபிரான் நம்மேல் எய்யும் அம்பு நம்மீது பட்டுத் தாக்குவதற்கு முன்பே, நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவன்மேல் விழுந்து அழுத்தினாலே அவன் இறந்துபடுவான். மேகம் கால் இறங்கி இருப்பதுபோன்ற கரிய, பெரிய தோற்றத்தையுடைய நீங்கள் இதற்கு ஏன் அறிவு கலங்கித் திகைப்பில் ஆழ்ந்துபோய்க் கிடக்கிறீர்கள்?'' என்று மேலும் இடித்துக் கூறுகிறான்.

''போலும்'' என்பது ஒப்பில் போலி, போலியாக நிற்கும். பொருள் தராது, ஒப்புக்காகக் கூறப்படும் சொல் எனக்கொள்க. நாம் இவனை நம் படைக்கலன்கள் கொண்டு தாக்கவேண்டும் என்பதில்லை; நாம் எல்லோரும் ஒன்றுகூடி அவன்மேல் விழுந்து அழுத்தினாலே அவன் இறந்துபடுவான். இதற்கு ஏன் கவலைப்படுகிறீர்கள் என்பது வன்னியின் கருத்து என்பதாம். ''மழைகால் விழுதல்'' என்பது ஒரே சொல். எளிதாகப் பொருள்புரிந்து கொள்ளமுடியாத சொல். மழைபெய்தற்குக் கருமுகில் கால்கொண்டு இறங்குதல் என்பது பொருள். மழை வருவதற்கு முன்பே மேகம் கறுத்துக்கொண்டு மழை பொழிவதற்குத் தயாராக இருக்கிறது அல்லவா? அத்தகைய நிலை அல்லது தன்மை எனக்கொள்க. அரக்கர்களின் கரிய நிறத்திற்குக் கால் விழுந்த மழை உவமை.

130. "ஆயிரம் பெரு வெள்ளம் அரைபடத்
தேய நிற்பது; பின்பு, இனி என் செய?
பாயும் உற்று உடனே" எனப் பன்னினான்;
நாயகற்கு ஓர் உதவியை நல்குவான். (9511)

(அரைபடுதல்-கொல்லப்படுதல்/துகைக்கப்படுதல்; தேய்தல்-அழிந்து ஒழிதல்; நிற்பது-நிலையில் இருப்பது; உற்று-பொருந்தி; நாயகன்-தலைவன்/இராவணன்; நல்குதல்-செய்தல்; பன்னுதல்-பலமுறை விளக்கமாக எடுத்து உரைத்தல்/வற்புறுத்துதல்)

''இவ்வாறு நாம் ஒன்றும் செய்யாமல் வாளா இருந்தால் நமது ஆயிரம் வெள்ளம் பெருஞ்சேனையும் துகைக்கப்பட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகக்

Koviloor Digital Library

குறைந்து, இறுதியில் முற்ற முழுக்க அழிந்துபோகும் நிலைவரும். அதற்குப்பின் என்ன செய்யமுடியும்? எனவே இப்பொழுதே எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து அவன்மீது பாயுங்கள்'' என்று வற்புறுத்தினான், தனது தலைவனுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கருதிய வன்னி.

131. அரக்கர் படைகள் இராமபிரானால் அழிக்கப் படுதல்

உற்று, உருத்து எழுவெள்ளம் உடன்று எழா,
சுற்றும் முற்றும் வளைந்தன; தூவின,
ஒற்றை மால்வரை மேல் உயர் தாரைகள்
பற்றி மேகம் பொழிந்தென, பல்படை. (9512)

(உருத்தல்-கோபித்தல்/வெகுள்தல்; உடன்று-மாறுபட்டு; எழா-எழுந்து; ஒற்றை-தனித்த; படை-படைக்கலன்கள்; தூவுதல்-மிகுதியாகச் சொரிதல்/வாரியிறைத்தல்; உயர்-மிக்க; உறுதல்-பொருந்தியிருத்தல்; பற்றுதல்-சூழ்ந்துகொள்ளுதல்)

மிக்க சினம்கொண்டு கிளர்ந்தெழுந்த ஆயிரம் வெள்ளம் கொண்ட அரக்கர்படைகள் மேலும் மாறுபாடுகொண்டு வெகுண்டு, இராம பிரானைச் சுற்றிலும் முழுவதுமாக வளைத்துக்கொண்டு, தனித்து நிற்கும் ஒரு பெரிய மலையின்மேல் கரிய மேகங்கள் ஒன்றுகூடிப் பெருமழைத் தாரைகளைப் பொழிவதுபோல, பலவகையான படைக்கலங்களை வாரி இறைத்தன.

''எழா'' என்பது எழுந்து என்ற பொருளைத்தரும். செய்யாஎன்னும்வாய் பாட்டு வினை எச்சம். ''தூவுதல்'' என்பது மிகுதியாக வாரியிறைத்தலைக் குறிக்கும். ''ஒற்றைமால்வரை'' இராமபிரானுக்கும், ''உயர்தாரைகள்'' படைக்கலன்களுக்கும், சூழ்ந்திருந்த மேகம் அரக்கர்களுக்கும் உவமை. ''வர்ஷித்தல்'' என்பது பொழிதல் என்பதற்கான வடமொழிச்சொல்.

132. குறித்து எறிந்தன, எய்தன, கூறுஉறத்
தறித்த தேரும், களிறும், தரைப்பட,
மறித்த வாசி துணித்து, அவர் மாப்படை,
தெறித்துச் சிந்த, சரமழை சிந்தினான். (9513)

(குறித்து-குறிபார்த்து; தறித்தல்-வெட்டுதல்; மறித்தல்-அழித்தல்; மா-பெரிய; தெறித்தல்-தாக்குதல்; வாசி-குதிரை)

பகைவர்களாகிய அரக்கர்கள் இலக்குத்தப்பாது குறிபார்த்து வீசிஎறிந்த வேற்படை போன்ற ஆயுதங்களும், வில்லிலிருந்து எய்த அம்புகள் போன்ற படைக்கலன்களும், இரு கூறாகத் துண்டித்துப் போகும்படியும், அவர்களுடைய தேர்ப்படைகளும், யானைப்படைகளும் தரையில் சாயும்படியும் வெட்டி, எதிர்த்து வருகின்ற குதிரைப்படைகளைத்

Koviloor Digital Library

துண்டங்களாக்கி அவர்களது காலாட்படையாகிய பெரிய படையைத் தாக்கி, அவையனைத்தும் சிந்திச் சிதறி உருக்குலைந்து போகும்படி, இராமபிரான் அம்புகளை மழைபோலப் பெய்தான்.

''குறித்து'' என்பது குறிபார்த்து, இலக்கை நோக்கி என்று பொருள்படும். நால்வகைப் படைகளும் அழிந்த தன்மை பேசப்படுகிறது, ''தறித்தல்'' என்பது வெட்டுதல் என்ற பொருளைத்தரும்.

133. வாய் விளித்து எழு பல் தலை வாளியில்
போய் விளித்த குருதிகள் பொங்கு உடல்,
பேய் விளிப்ப நடிப்பன, பெட்புறும்
தீ விளிப்புறு தீபம் நிகர்த்தவால். (9514)

(விளித்தல்-அழைத்தல்; உடல்-தலைகுறைந்த கவந்தங்கள்; விளிதல்-இறந்துபடுதல்; தீபம்-விளக்கு/கலங்கரை விளக்கு; பெட்பு-விருப்பம்; வாய்-நுனிப்பகுதி)

இராமபிரான் செலுத்துகின்ற கூரிய நுனியையுடைய பலவகையான விரைந்து பாய்ந்து செல்லும் அம்புகளின் முனைப்பகுதியில் போய் அரக்கர் களின் உடல்கள் மோதிக்கொண்டு இறந்துபடுகின்றன. அதனின்றும் பெருகுகின்ற இரத்தப்பெருக்கைக் கண்டு பேய்கள் மகிழ்ச்சியால் கூவி ஆரவாரித்துக் கூத்தாடுகின்றன. இது எப்படி இருக்கிறது என்றால், பல நாட்களாக திசை தெரியாது திகைத்துக் கடலிலே திரியும் மரக்கலங்கள், தீச்சுடர் தெரிய, தம்மைச் சரியான திசை நோக்கி அழைக்கின்ற விருப்பம் மிக்க கலங்கரை விளக்கம்போலத் தோற்றமளித்தன என்கிறான் கவிஞன்.

எளிதில் பொருள் புரிந்துகொள்ள முடியாத பாடல்களுள் இதுவும் ஒன்று. பொதுவாக அம்புகள் சென்று பகைவர்களைத் தாக்கும். இங்கே கம்பன் அம்பின் நுனியில்போய் அரக்கர்கள் மோதிக்கொண்டு, அதனால் தாக்கப்பட்டு மடிந்துபோயினர் என்கிறான். ''வாளியில் போய் விளித்த குருதிகள் பொங்கு உடல்'' என்பது மிக அருமையான சொற்றொடர்.

134. நெய் கொள் சோரி நிறைந்த நெடுங்கடல்,
செய்ய ஆடையள், அன்ன செஞ்சாந்தினள்,
வைய மங்கை பொலிந்தனள்; மங்கலச்
செய்ய கோலம் புனைந்தன்ன செய்கையாள். (9515)

(நெய்-நெய்யின் தன்மை/நெய்ப்பு/நிணம்/கொழுப்பு; செய்ய-சிவந்த/செந்நிறமான; சாந்து-சந்தனக்குழம்பு; வையமங்கை-நிலமடந்தை/நிலமகள்/பூதேவி; சோரி-இரத்தம்/உதிரம்)

நெய்ப்புத் தன்மையுடைய அரக்கர்களின் நிணம் கலந்த இரத்தம் நிறையப்பெற்ற நீண்ட பெரிய கடலையே தன் சிவந்த ஆடையாக உடுத்திக்

Koviloor Digital Library

கொண்டிருப்பவளும், அதே சிவந்த நிறமுடைய சந்தனத்தை திலகமாகப் பூசியிருப்பவளுமாகிய நிலமடந்தை, மங்கல நாளின்போது அழகாக அலங்கரித்துக் கொள்ளும் செய்கையைப் போன்று, இப்பொழுது பொலிவுற்றுத் திகழ்ந்தாள்.

''நெய்'' என்பது பொதுவாக நெய்ப்புத் தன்மையைக் குறிக்கும் என்றாலும் இங்கே அரக்கர்களின் உடலினின்றும் பெருகிய நிணம், கொழுப்பு முதலானவற்றோடு கலந்துபோன அவர்களின் இரத்தப் பெருக்கைக் குறித்தது என்க. சிவந்த ஆடை கடல்; செஞ்சாந்து இரத்தப் பெருக்கு; இவைகளைக் கொண்டு நிலமகள் பொலிவுற்றுத் திகழ்ந்தாள் என்பதாம். ''வைய மங்கை'' என்பது நிலமடந்தை, நிலமகள், பூமாதேவி, பூதேவி என எல்லாப் பொருளையும் தரும் ஒருசொல். ''நிலமென்னும் நல்லாள் நகும்'' என்பது குறள்-640. பூமியைப் பெண்ணாகக் கூறுவது கவிமரபு.

135. உப்பு, தேன், மது ஒண்தயிர், பால், கரும்பு
அப்புத்தான் என்று உரைத்தன ஆழிகள்
துப்புப்போல் குருதிப் புனல் சுற்றலால்,
தப்பிற்று அவ்வுரை, இன்று ஓர் தனுவினால். (9516)

(ஒண்-ஒள்ளிய/ஒளிமிக்க; அப்பு-தண்ணீர்/நன்னீர்; துப்பு-பவளம்; தனு-வில்; தப்புதல்-தவறாகிப்போதல்)

உப்பு, தேன், கள், ஒள்ளிய தயிர், பால், கருப்பஞ்சாறு, நல்ல தூயநீர் என்று முன்பு புராணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற வெவ்வேறு தன்மையுடைய ஏழுவகையான கடல்கள், இப்பொழுது இராமபிரானது ஒப்பற்ற வில்லினால், பவளம் போன்ற சிவந்த நிறமுடைய இரத்தப் பெருக்கு இவ்வேழு கடல்களிலும் கலந்து சுற்றிக் கொண்டிருப்பதால், அந்தப் பழைய உரை தவறாகப் போய்விட்டது என்கிறான் கவிஞன்.

புராண மரபுப்படி உலகைச் சுற்றி இவ்விதமான ஏழு கடல்கள் இருக்கின்றன என்பர். ஆனால் இன்று இராமபிரான் செலுத்திய ஒரு அம்பினால், உயிரிழந்த அரக்கர்களின் உடலினின்றும் வெளிப்பட்டுப் பெருகிய சிவந்தநிற இரத்தக்கடல் அந்த ஏழு கடல்களிலும் சென்று கலந்து ஒரே இரத்தக்கடலாக மாறிப்போனது. எனவே இப்பொழுது ஏழு வகையான கடல்கள் இல்லை, ஒரே இரத்தக்கடல்தான் இருக்கிறது என்கிறான் கவிஞன். ஆழ்ந்து இருப்பதுபற்றி, ஆழி என்பது கடலுக்குக் காரணப்பெயர். இப்பாடல் உயர்வு நவிற்சி அணியின் பாற்படும்.

136. "ஒன்றுமே தொடை; கோல் ஒரு கோடிகள்
சென்று பாய்வன; திங்கள் இளம்பிறை
அன்றுபோல் எனல் ஆகியது அச்சிலை;
என்று மாள்வர், எதிர்த்த இராக்கதர்?" (9517)

Koviloor Digital Library

(தொடை-தொடுப்பு; சிலை-வில்; கோல்-அம்புகள்; என்று-எப்போது)

''இராமபிரான் தொடுத்துச் செலுத்துவது ஒரே வில்தான்; ஆனால் அதனின்றும் ஒரே தடவையில் கோடிக்கணக்கான அம்புகள் வெளிப்பட்டு அரக்கர்படைக்குள் புகுந்து பாய்வதாயின; அன்று உதித்த இளம்பிறைச் சந்திரனைப்போல வளைந்த தோற்றத்துடன் நின்றுகொண்டேயிருந்தது அந்த வில்; எனினும் எதிர்த்து வருகின்ற இந்த இராக்கதர் கூட்டம் என்றைக்குத்தான் முழுவதும் செத்து மடியுமோ?'' என்று அங்கலாய்க்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. புராணச்சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருந்த குலசேகர மன்னன். இராமபிரானை மீட்டுவரத் தன் படையைத் துரிதப் படுத்திப் போருக்குச் செல்லக் கட்டளையிட்டதுபோல, கவிஞனும் காப்பியத்தில் ஒன்றிப்போய், எப்பொழுதுதான் இந்த அரக்கர் சேனைக் கடல் முழுதுமாய் செத்துமடியப்போகிறதோ என்று தன் உணர்வுகளை வெளிப் படுத்துகிறான் என்பதாம். ஒரே தொடுப்பில் கோடிக்கணக்கான அம்புகள் வெளிப்பட்டுப்போயின என்பது முன்பும், ''உற்பத்தி அயனே ஒக்கும்; ஓடும்போது அரியே ஒக்கும்'' என்று கூறியுள்ளதையும் இங்கு நினைவுகூர்க. இங்கே இராமபிரானது வில்லாற்றலோடு, அரக்கர்களின் சேனைப்பெருக்கமும் சிறப்பிக்கப்படுகிறது என்பது கருதத்தக்கது.

137. எடுத்தவர், இரைத்தவர், எறிந்தவர், செறிந்தவர், மறங்கொடு எதிரே
தடுத்தவர், சலித்தவர், சரிந்தவர், பிரிந்தவர், தனிக்களிறு போல்
கடுத்தவர், கலித்தவர், கறுத்தவர், செறுத்தவர், கலந்து, சரம்மேல்
தொடுத்தவர், துணிந்தவர், தொடர்ந்தனர், கிடந்தனர், துரந்த கணையால்.
(9518)

(இரைத்தல்-ஆரவாரித்தல்; செறிதல்-நெருங்குதல்; மறம்-வீரம்; சரிதல்-ஒதுங்குதல்; தனி-ஒப்பற்ற; கடுத்தல்-விரைந்து செல்லுதல்; கலித்தல்-செருக்குக்கொள்ளுதல்; கறுத்தல்-சினத்தல்; செறுத்தல்-சீறுதல்/எதிர்த்தல்; துரத்தல்-எய்தல்/செலுத்துதல்; சலித்தல்-தளர்தல்)

போர்க்களத்தில் இராமபிரான்மேல் செலுத்துவதற்காகப் படைக் கலன்களைக் கையில் எடுத்துக்கொண்டு நிற்பவர்களும், எடுத்து ஆரவாரம் செய்து கொண்டிருப்பவர்களும், எடுத்த படைக்கலன்களை இராமபிரான் மீது வீசியெறிந்தவர்களும், இராமபிரானைச் சுற்றி நெருங்கி வந்தவர் களும், வீர உணர்வோடு, அவன் எதிரே வந்து, அவன் ஏவிய படைக் கலன்களைத் தடுத்து விலக்கியவர்களும், தடுக்கமுடியாமல் மனம் தளர்ந்துபோனவர்களும், போர்க்களத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டவர் களும், அங்கேயே சாய்ந்துபோனவர்களும், தனியாகப் பிரிந்து போய் விட்டவர்களும், ஒப்பற்ற மதம்கொண்ட யானையைப்போல் விரைந்து

Koviloor Digital Library

அவனெதிரே சென்றவர்களும், செருக்குக் கொண்டவர்களும், சினம் கொண்டவர்களும், சீறிப் பாய்ந்தவர்களும், ஒன்றாகச் சேர்ந்து இராமபிரான் மேல் அம்புகளைத் தொடுத்தவர்களும், இப்போது அணி அணியாகப் போர்க்களத்தில் மாண்டு கிடந்தனர்.

ஒரு போர்க்களக் காட்சியை நம் கண்முன்னால் கொண்டுவந்து படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். ஒரே செய்யுளில் போர் வீரர்களின் பதின்மூன்று வகையான செயல்முறைகளையும் கொண்டுவந்து கூறிய நயம் நோக்குக. ''சலித்தல்'' என்பது மனம் தளர்தலைக் குறிக்கும். ''மாதா உடல் சலித்தாள், வல்வினையேன் கால் சலித்தேன்'' என்பது பட்டினத்தார்பாடல். ''கறுத்தல்'' என்பது சினத்தைக் குறிக்கும். ''கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள'' என்பது தொல்காப்பியம்.

138. தொடுப்பது சுடர்ப் பகழி ஆயிரம், நிரைத்தவை துரந்த துறைபோய்ப்
படுப்பது, வயப்பகைஞர் ஆயிரரை அன்று, பதினாயிரவரை;
கடுப்புஅது; கருத்தும்அது; கட்புலன் மனம் கருதல் கல்விஇல; வேல்
எடுப்பது படப்பொருவது அன்றி, இவர் செய்வது ஒரு நன்றி உளதோ?
(9519)

(வயம்-வலிமை; கடுப்பு-விரைவு; கல்வி-பயிற்சி; படுதல்-இறத்தல்; தொடுத்தல்-விடுத்தல்; சுடர்-ஒளி; நிரை-வரிசை; துறை-இலக்கு/வழி)

இராமபிரான் தன் வில்லில் ஒருமுறை தொடுத்து எய்யும் ஒளிமிக்க அம்புகள் ஆயிரமாகும், என்றாலும் அவை வரிசையாகச் சென்று அவன் கருதிய இலக்கைத் தப்பாது அடைந்து, அந்த வலிமைமிக்க வீரர்களாகிய பகைவர்களை இறக்கச்செய்வது ஆயிரம்பேரை மட்டுமன்று; பதினாயிரக்கணக்கான பேரை இறக்கச்செய்யும். அவ்வளவு வேகம் மிக்கது அந்த அம்புகள். அந்த அம்புகளைச் செலுத்திய இராமபிரானின் மனக்கருத்தும் அத்தன்மையானதே; அந்த அம்பு செல்லுகின்ற வேகத்தைக் கண் என்னும் புலனால் காண்பதற்கோ, மனம் என்னும் ஆறாவது புலனால் நினைப்பதற்கோ யாருக்கும் போதுமான பயிற்சி இல்லை; இவ்வரக்கர்கள் இப்போது போர்செய்யும்போது தம் கைகளில் வேற்படை போன்ற படைகளை எடுப்பது, தாம் இறந்துபடவேயன்றி, இவர்களால் செய்யத்தக்க வேறு ஒரு நல்ல செயல் ஏதேனும் உண்டா?'' என்று கேட்கிறான் கவிஞன்.

ஆயிரம் ஒளிமிக்க அம்புகளைச் செலுத்தினாலும், அழிந்து படுபவர் ஆயிரம்பேர் மட்டுமல்ல, அவர்கள் பதினாயிர மாவார்கள் என்பது இராமபிரானது வில்லாற்றலைச் சிறப்பித்ததாகும். ''உளதோ'' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளது. இல்லை என்ற பொருளைத்தரும்.

Koviloor Digital Library

139. தூசியொடு நெற்றி இரு கையினொடு பேர்அணி கடைக்குழை தொகுத்து,
ஊசி நுழையா வகை சரத்து அணி வகுக்கும்; அவை உண்ணும் உயிரை;
ஆசைகளை உற்று உருவும்; அப்புறமும் ஓடும்; அதன் இப்புறம் உளார்,
ஈசன் எதிர் உற்று, உகுவது அல்லது, இகல் முற்றுவது ஓர் கொற்றம்
எவனோ? (9520)

(தூசி-முன்னணிப்படை/தார்ப்படை; கை-பக்கம்; கடைக்குழை-பின்னணிப்படை; அணி-வரிசை; ஆசை-திசைகள்; ஈசன்-இறைவன்/இராமபிரான்; உகுவது-சிந்துவது; இகல்-மாறுபாடு; முற்றுவது-முடிப்பது; கொற்றம்-வெற்றி; எவனோ-ஏது; நெற்றி-தலைமைச்சேனை; தொகுத்தல்-ஒன்றுகூட்டுதல்)

அரக்கர்கள் தங்களின் முன்னணிப்படையோடு, முந்துற்றுச் செல்லும் நெற்றிப்படையையும், இருபக்கங்களிலும் வரும் கைகோட் படையையும், நடுவில் வரும் பேரணிப்படையையும் கடைசியில் வரும் கூழைப்படையையும், ஒருவகையாக ஒன்றுகூட்டி அந்தப் படைகளின் இடையே ஒரு சிறு ஊசிகூட நடுவில் புகுந்துபோகாத வண்ணம் செல்லும் இப்படைகளின் மீது இராமபிரான் அம்புகளை அணிவகுத்துச் செலுத்து வான். அவை அரக்கர்களின் உயிரைப்பருகும்; திசைகளின் எல்லைவரை போய் ஊடுருவிப்பாயும்; அதற்கு அப்பாலும் விரைந்து ஓடும்; அந்த அம்பினுக்கு இந்தப்பக்கம் உள்ளவர்கள் எல்லோரும் இறைவனாகிய இராமபிரானின் எதிரே வந்து தங்களின் உயிரைப் போக்கிக்கொள்வது அல்லாமல், மிக்க வலிமைகொண்டு, போர் செய்து வெற்றிபெறுவது என்பதும் முடியுமோ?'' என்கிறான் கவிஞன்.

''கூழை'' என்பது சந்தம் நோக்கிக் ''குழை'' எனக் குறுகி நின்றது. மாணிக்கவாசகரும் இறையடியார்களைத் திரட்டிக் கொண்டு ஒரு அணிவகுப்பு நடத்துகிறார் கேளுங்கள். ''தொண்டர்காள்! தூசி செல்வீர்; பத்தர்காள்! சூழப்போகீர்; ஒண்திறல் யோகிகளே! பேரணி உந்தீர்கள்; திண்திறல் சித்தர்களே! கடைக்கூழை செல்மின்கள்; அண்டர் நாடாள்வோம் நாம், அல்லற்படைவாராமே'' என்பது திருவாசகம். தொண்டர்கள் தூசிப்படை; பக்தர்கள் கைகோட்படை; யோகிகள் பேரணி; சித்தர்கள் கடைக்கூழைப்படை.

140. ஊன் நகு வடிக்கணைகள் ஊழி அனல் ஒத்தன; உலர்ந்த உலவைக்
கானகம் நிகர்த்தனர் அரக்கர்; மலை ஒத்தன, களித்த மத மா;
மானவன் வயப்பகழி வீசுவலை ஒத்தன; வளைப் புனலுள் வாழ்
மீனகுலம் ஒத்தன, கடற்படை, இனத்தொடும் விளிந்துறுதலால். (9521)

(ஊன்-மாமிசம்; நகுதல்-விளங்குதல்; வடி-கூர்மையான; அனல்-தீ/நெருப்பு; உலவை-வற்றியமரம்; நிகர்த்தல்-ஒத்திருத்தல்; களி-மதச்

Koviloor Digital Library

செருக்கு; மானவன்-மனுகுலத் தோன்றல்/இராமபிரான்; வய-வலிய; விளிதல்-இறந்துபோதல்; மீன்குலம்-மீன்கூட்டம்; புனல்-கடல்நீர்)

இராமபிரான் செலுத்திய மாமிசத் துண்டங்கள் நுனியில் விளங்குகின்ற கூரிய அம்புகள், ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் வடவைத்தீயைப் போன்றிருந்தன; அதனால் அழிந்துபட்ட அரக்கர்கள், வற்றிப்போய் எரிந்து தீய்ந்துபோன உலர்ந்த மரங்கள் நிறைந்த காடுபோலக் காட்சியளித்தனர்; மதச்செருக்குக் கொண்ட யானைகள் அசைவில்லாத மலைபோலக் கிடந்தன; மனுக்குலத்தில் தோன்றியவனும், பெருமை மிக்கவனுமான இராமபிரான் செலுத்திய வலிமைமிக்க அம்புகள், கடலில் வீசப்படுகின்ற வலைகள்போல நெருங்கியிருந்தன; அரக்கர்களின் கடல்போன்று பரந்த சேனைகள், கூட்டத்தோடு மடிந்து வீழ்வதால், அவ்வலைக்குள் அகப்பட்டுக் கொண்டதும், கடல்நீரில் வாழும் இயல்புடையதுமான மீன் கூட்டங்கள்போல் இருந்தன.

141. ஊழி இறுதிக் கடுகு மாருதமும் ஒத்தனன் இராமன்; உடனே
பூழி என உக்கு உதிரும் மால்வரைகள், ஒத்தனர் அரக்கர் பொருவார்;
ஏழ் உலகும் உற்று, உயிர்கள் யாவையும் முருக்கி, இறுதிக்கணின் எழும்
ஆழியையும் ஒத்தனன்; அம் மன்னுயிரும் ஒத்தனர், அலைக்கும் நிருதர்.
(9522)

(கடுகுதல்-விரைந்து வீசுதல்; மாருதம்-கடுங்காற்று; பூழி-புழுதி/மண்துகள்; உகுதல்-சிதறுதல்; மால்வரை-பெரியமலை; பொருவார்-போரிடுபவர்கள்; முருக்குதல்-அழித்தல்; இறுதி-ஊழி முடிவுக்காலம்; ஆழி-கடல்; அலைக்கும்-அழிக்கப்படும்; மன்-நிலைபெற்ற)

ஊழியிறுதிக்காலத்தில் விரைந்து வீசும் சண்டமாருதக் காற்றுப் போன்றவனானான் இராமபிரான். அவனுடன் எதிர்த்துப் போர்செய்யும் அவ்வரக்கர்கள், அப்புயற்காற்றால் தாக்கப்பட்டுப் பொடிப்பொடியாய்ச் சிதறி உதிர்ந்துபோகும் பெரிய மலைகளைப் போல ஆனார்கள்; இராம பிரான் ஏழுவகைப்பட்ட உலகங்கள் எல்லாவற்றிலும் பொருந்தி உயிரினங்கள் யாவற்றையும் அழித்து ஊழியிறுதிக்காலத்தில் பொங்கி எழும் கடல்களைப் போன்றவனானான்; அந்த உயிரினங்களைத் துன் புறுத்தும் அரக்கர்கள் அனைவரும் அதனில் அழிந்துபோகும் நிலைபெற்ற உயிர்களைப்போலாயினர்.

''மன்னுயிர்'' என்ற சொல் நிலைபெற்ற உயிர் என்ற பொருளைத்தரும். உடல்தான் அழியுமே தவிர, உயிர் அழியாது, அது நிலைபெற்றது என்பதைக்குறிக்கிறார் எனக்கொள்க. மன்னுயிர் என்பது உயிரின் அழியாத நிலையைக் குறித்தது. ''மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிர் என்பதும்'' என்பது மணிமேகலை. ஊழியிறுதிக்காற்றும், கடலும் இராமபிரானின் அம்புகளுக்கு உவமை; அதனால் அழிந்துபடுகின்ற

Koviloor Digital Library

உயிரினங்களுக்கு இராக்கதப்படைகள் உவமை; ''முருக்குதல்'' என்ற சொல் அழித்தல் என்ற பொருளைத்தரும். ''ஞாலங்காவலர் தோள்வலி முருக்கி'' என்பதும், ''மைந்துடை மல்லன் மதவலி முருக்கி'' என்பதும் புறநானூறு-*1880*.

142. மூல முதலாய், இடையுமாய், இறுதியாய், எவையும் முற்றும் முயலும்,
காலம் எனல் ஆயினன் இராமன்; அவ்வரக்கர், கடைநாளில் விளியும்
கூலம்இல் சராசரம் அனைத்தினையும் ஒத்தனர்; குரைகடல் எழும்
ஆலம் எனல் ஆயினன் இராமன்; அவர் மீனம் எனல் ஆயினர்களால்.
(9523)

(மூலம்-முதல்காரணம்; இடை-நடு; இறுதி-முடிவு; காலம்-ஊழி யிறுதிக்காலம்; எனல்-என்று சொல்லும்படி; கடைநாள்-யுகமுடிவுக் காலம்; விளிதல்-இறந்துபடுதல்; கூலம்-அளவு; சரம்-இயங்குவன; அசரம்-நிற்பன; குரைத்தல்-ஒலித்தல்; ஆலம்-ஆலகால விஷம்/நஞ்சு; மீனம்-மீன்கள்; எழுதல்-தோன்றுதல்)

உலகம் எல்லாவற்றுக்கும் மூலமுதல் காரணனாயும், இடைப் பட்டவனுமாய், இறுதியுமாகி எல்லாவற்றையும் முற்ற முழுக்க அழித்து ஒழிக்கும் ஊழியிறுதிக்காலம் என்று சொல்லும்படி விளங்கினான் இராமபிரான். அந்த ஊழியிறுதிக்காலத்தில் அழிந்துபடும், எல்லையற்ற இயங்குதிணைப் பொருள்களைப் போலவும், நிலைத்திணைப் பொருள் களைப் போலவும், விளங்கினர் அவனை எதிர்த்து வந்த அரக்கர்கள். ஒலிக்கின்ற பாற்கடலிலிருந்து முதலில் தோன்றிய ஆலகால விஷத்தைப் போன்றவன் ஆனான் இராமபிரான். அந்த அரக்கர்கள், அந்த ஆலகால நஞ்சைப் பருகி மாண்டுபோகின்ற மீன்கூட்டத்தைப் போன்றவர் களானார்கள்.

ஊழியிறுதிக்காலத்திற்கும், பாற்கடலில் தோன்றிய ஆலகால நஞ்சிற்கும் இராமபிரான் உவமை; அவற்றில் மடிந்துபோகும் சர அசரப் பொருள்களுக்கும், மீன் இனத்திற்கும் அரக்கர்படைகள் உவமை; சரம், அசரம் என்பது சராசரம் என நின்றது. சரம் இயங்குதிணைப் பொருள்கள்; அசரம் நிலைத்திணைப் பொருள்கள். ''மூலமும், நடுவும், ஈறும் இல்லதோர் மும்மைத்தாய காலமும், கணக்கும் நீத்த காரணன்'' என்பது சுந்தரகாண்டம்.

143. வஞ்சவினை செய்து, நெடு மன்றில் வளம்
உண்டு, கரிபொய்க்கும் மறம் ஆர்
நெஞ்சும் உடையோர்கள் குலம் ஒத்தனர்
அரக்கர்; அறம் ஒக்கும் நெடியோன்;

Koviloor Digital Library

நஞ்சநெடு நீரினையும் ஒத்தனன்;
அடுத்து அதனை நக்குநரையும்
பஞ்சம் உறு நாளில் வறியோர்களையும்
ஒத்தனர், அரக்கர் படுவார். (9524)

(வினை-தொழில்/செயல்; நெடுமை-பெருமை; மன்று-நீதிமன்றம்; வளம்-பொருள்/கைக்கூலி; கரி-சாட்சி; பொய்க்கும்கரி-பொய்சாட்சி; மறம்-தீவினை; ஆர்-பொருந்திய; நெடியோன்-இராமபிரான்; அறம்-அறக்கடவுள்/தருமதேவதை; நக்குநர்-நக்கிப் பருகுபவர்கள்; நாள்-காலம்; படுதல்-அழிந்துபோதல்; நெடுநீர்-கடல்; அடுத்து-அடைந்து/நெருங்கி)

வஞ்சகச் செயல்களையும் மாயச்செயல்களையுமே செய்து, பெருமை சான்ற நீதிமன்றத்தில்கூடக் கையூட்டுப் பெற்றுக்கொண்டு உண்மைக்கு மாறாகப் பொய்ச்சாட்சி சொல்லுகின்ற தீவினை நிறைந்த வலிய நெஞ்சம் கொண்டவர்களைப்போல் ஆனார்கள், இராமபிரானை எதிர்த்து வந்த அரக்கர்கள். ஆனால் நெடிதுயர்ந்த திருமாலின் அம்சமான இராம பிரானோ, அத்தகைய தீயவர்களை அழித்தொழிக்கும் தருமதேவதை போல் காட்சியளித்தான். அத்துடன் நஞ்சு கலந்த கொடிய கடல்நீரினையும் ஒத்துத் திகழ்ந்தான்; அதனை நெருங்கி அடைந்து அந்த நச்சுநீரை நக்கிப் பருகுகின்றவர்களையும், பஞ்சம் வந்தடைந்த காலத்தில் உணவின்றிப் பசியால் வருந்திக் கூட்டம் கூட்டமாகச் செத்துமடியும் வறியவர்களைப் போலும் அரக்கர்கள் ஆனார்கள்.

வஞ்சனைச் செயல் புரிபவர்களும், கையூட்டுப் பெறுபவர்களும், பொய்சாட்சி சொல்லுபவர்களும், குலத்தோடு அழிந்துபடுவார்கள் என்பது இப்பாடலில் கூறப்படும் கருத்து. இராமபிரானுக்கு அறக் கடவுளும், அதேசமயம் நச்சுநீரும் உவமை. சீதாதேவியை நஞ்சுதோய்ந்த அமுது என்று கூறுவதையும் இங்கு நினைவுகூர்க. பஞ்சம் பீடித்தகாலத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாகத்தான் இறந்துபடுவார்கள் என்பது குறிப்பு. ''வளம் உண்டு'' என்ற சொல் பல மறைபொருள்களைத் தரும் நாகரீகமான சொல்லாட்சி. வழியல்லாத வழியில் பொருளைப் பெறுதல் என்பது பொருள். ''மைக்கரு மனத்து ஒருவஞ்சன் மாண்பிலன், பொய்க்கரி கூறிய கொடுஞ்சொற் போலவே'' என்பது ஆரண்யகாண்டத்தில் பரதன் வஞ்சினம். ''பொய்க்கரி புகலும் புன்கணார் குலங்களின் அவிந்தார்'' என்பது சுந்தரகாண்டம். ''வேதாளம் சேருமே; வெள்ளெருக்குப் பூக்குமே; பாதாள மூளிபடருமே; மூதேவி சென்று இருந்து வாழ்வளே, சேடன் குடிபுகுமே, மன்று ஓரம் சொன்னார் மனை'' என்பது நல்வழி. ஓரம்-பொய்சாட்சி.

Koviloor Digital Library

144. அரக்கியர் பட்டபாடு

வெள்ளம் ஒரு நூறுபடும் வேலையின், அவ் வேலையும், இலங்கை நகரும்
பள்ளமொடு மேடு தெரியாதவகை, சோர் குருதி பம்பி எழலும்,
உள்ளும் மதிலும் புறமும் ஒன்றும் அறியாது, அலறி ஓடினர்களால்,
கள்ள நெடுமான் விழி அரக்கியர் கலக்கமொடு கால்கள் குலைவார். (9525)

(வெள்ளம்-சேனை; படுதல்-இறந்துபோதல்; வேலை-சமயம்/ தருணம்/பொழுது; வேலை-கடல்; சோர்தல்-பெருகிவருதல்; பம்புதல்-நிரம்புதல்; உள்-உட்பகுதி; குலைதல்-தடுமாறுதல்/தளர்வுறுதல்; கள்ளம்-வஞ்சகம்)

அவ்வாறு ஒரு நூறு வெள்ளம் அரக்கர்சேனை அழிந்து கொண்டிருக்கும் சமயத்தில், இலங்கையைச் சூழ்ந்துள்ள கடலும், இலங்கை மாநகரும், பள்ளம்எது, மேடுஎது என்று பிரித்து உணர்ந்து கொள்ளும்தன்மை இல்லாத வகையில் அவர்கள் உடம்பினின்றும் பெருகிவரும் இரத்தவெள்ளம் நிரம்பிப் பொங்கியெழவும், வஞ்சகமும், மான்போன்ற மருட்சி நிறைந்த பார்வையும் உடைய அரக்கியர்கள், இந்த இரத்தவெள்ளம் எங்கிருந்து வருகிறது என்பதை ஊகித்து உணர்ந்துகொள்ள முடியாதவர்களாய் இலங்கை மாநகரத்தின் உட்புறம் எது, மதில்சுவர் எது, வெளிப்புறம் எது என்று ஒன்றுமே தீர்மானிக்க முடியாதவர்களாய்க் கலக்கமுற்றுக் கால்கள் தடுமாற, அலறிக்கொண்டு வெளியே ஓடிச் செல்லலானார்கள்.

145. நீங்கினர், நெருங்கினர், முருங்கினர்,
உலைந்து, உலகில் நீளும் மலைபோல்,
வீங்கின, பெரும்பிணம் விசும்புஉற;
அசும்பு படு சோரி விரிவுற்று,
ஓங்கின நெடும் பரவை ஒத்து உயர,
எத்திசையும் உற்று, எதிர்உற;
தாங்கினர் படைத்தலைவர், நூறு சத
கோடியர், தடுத்தல் அரியார். (9526)

(முருங்குதல்-சிதைந்து அழிதல்; வீங்குதல்-மிக்குத்தோன்றுதல்; விசும்பு-ஆகாயம்; அசும்பு-கசிவு/ஊற்று; அரியார்-அரிதானது; தாங்குதல்-தடுத்துப்போரிடுதல்/எதிர்த்தல்; நூறுசதகோடி-நூறுநூறு கோடி/பதினாயிரம் கோடி; உலைதல்-சிதைந்துபோதல்)

முன்பு போர்க்களத்தைவிட்டு நீங்கிச்சென்றவர்கள் இப்போது போர்க் களத்திற்கு வந்து, இராமபிரானை நெருங்கிப் போரிட்டு இறந்து

Koviloor Digital Library

ஒழிந்தனர்; உலகில் நீண்டு கிடக்கும் மலைகளைப்போல, இறந்துபட்ட அரக்கர்களின் பெரிய பிணங்கள் ஆகாயத்தைத் தொடும் அளவு உயர்ந்து நின்றன; ஊற்றுப்போல் பெருக்கெடுத்து வரும் இரத்தநீர் எல்லாத் திசைகளின் எல்லையிலும் பரவி, பெரிய கடல்போல விரிந்து சென்றன. எனினும் எஞ்சியிருந்த பதினாயிரம் கோடி அரக்கர்படைத் தலைவர்கள் இராமபிரானிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள முடியாதவர்களாய், அவனுடன் எதிர்த்தும், தடுத்தும் போர் புரியலானார்கள்.

146. தேரும், மதமாவும், வரை ஆளியொடு, வாசி, மிகுசீயம், முதலா
ஊரும் அவை யாவையும் நடாயினா், கடாயினா்கள் உந்தினா்களால்;
காரும், உரும்ஏறும், எரிஏறும் நிகா் வெம் படையொடு, அம்பு கடிதின்
தூரும்வகை தூவினா்; துரந்தனா்கள், எய்தனா், தொடா்ந்தனா்களால்;
(9527)

(மா-யானை; வரை-மலை; வாசி-குதிரை; சீயம்-சிங்கம்; ஊர்தல்-நடத்தல்; நடாயினர்-நடத்தினார்கள்; கடாவுதல்-செலுத்துதல்; உந்துதல்-முற்பட்டுப்போதல்; உரும்ஏறு-பேரிடி; எரிஏறு-பெருந்தீ; கடிதின்-விரைவில்; தூர்த்தல்-நிரப்புதல்)

அரக்கர்படைத் தலைவர்கள், தேர்கள், மதம்கொண்ட யானைகள், மலையில் வாழும் யாளிகள், குதிரைகள், வலிமைமிக்க சிங்கங்கள் முதலாகவுள்ள ஊர்ந்து செல்லத்தக்கன எல்லாவற்றையும் வழிநடத்திச் செலுத்திக்கொண்டு இராமபிரானை நோக்கி முற்பட்டுச் சென்றார்கள். கரியமேகம், பேரிடி, பெருநெருப்பு இவற்றை ஒத்த கொடிய படைக் கலங்களோடு, அம்புகளையும் விரைவாகப் போர்க்களம் முழுவதும் நிரம்புமாறு வாரியிறைத்துச் செலுத்தினார்கள். அம்பு எய்வதை இடை விடாது தொடர்ந்து மேற்கொண்டனர்.

147. "வம்மின், அட; வம்மின்! எதிா் வந்து நுமது ஆா் உயிா் வரங்கள் பிறவும்,
தம்மின்" என இன்னன மொழிந்து, எதிா் பொழிந்தன, தடுப்ப அரியவாம்,
வெம் மின் என, வெம்பகழி, வேலை என, ஏயினன்; அவ்வெய்ய
வினையோா்,
தம்மினம் அனைத்தையும் முனைந்து எதிா் தடுத்தனன், தனித்தனி அரோ!
(9528)

(வம்மின்-வாருங்கள்; தம்மின்-தாருங்கள்; இன்னன-இத்தகைய; அரியன-இயலாதன; வேலை-கடல்; வினை-தொழில்; இனம்-கூட்டம்; அடுதல்-கொல்லுதல்; அட-கொல்லுதற்கு; முனைந்து-மும்முரமாக)

தன் எதிரில் நிற்கின்ற அரக்கர்படைத் தலைவர்களை நோக்கி, இராம பிரான் ''வாருங்கள், நான் சொல்லும்படி என் எதிரே வாருங்கள்; வந்து உங்களது அருமையான உயிரையும், நீங்கள் அரிதின் பெற்ற

Koviloor Digital Library

வரங்களையும், இன்னும் உங்களிடமுள்ள எல்லாவற்றையும் என்னிடம் தந்துவிடுங்கள்'' என்று இத்தகைய சொற்களைக் கூறிக்கொண்டே, எதிராகச் சொரியப்படுவனவும், தடுத்தற்கு இயலாதனவுமாகியதும், கொடிய மின்னல்போன்று ஒளிவீசுவதுமான, கொடிய அம்புகளைக் கடல்போலப் பரந்த அளவில் பெருகுமாறு வாரியிறைத்தான். அந்தக் கொடுந்தொழிலுடைய அரக்கர்படைத் தலைவர்களது கூட்டங்கள் அனைத்தையும் மிக மும்முரமாகவும், தனித்தனியாகவும் தடுத்து நிறுத்தினான் இராமபிரான்.

''வம்மின்'' என்பது ஏவல்பன்மை வினைமுற்று. வாருங்கள் எனப் பொருள்படும். அதுபோலவே ''தம்மின்'' என்பதும் ஏவல்பன்மை வினைமுற்றாகத் தாருங்கள் என்ற பொருளைத்தரும்.

148. அக்கணையை அக்கணம் அறுத்தனர்
செறுத்து, இகல் அரக்கர் அடைய,
புக்கு அணையலுற்றனர், மறைத்தனர்
புயற்கு அதிகம் வாளி பொழிவார்,
திக்கு அணை வகுத்தனர் எனச் செல
நெருக்கினர், செருக்கின் மிகையால்;
முக்கணனை உற்று அடி வணங்கி,
இமையோர் இவை மொழிந்தனர்களால். (9529)

(இகல்-வலிமை; செறுத்தல்-வெகுள்தல்; அடைய-ஒருசேர/ முழுவதும்; அணையல்-நெருங்குதல்; புயல்-மழை; முக்கணான்-சிவ பெருமான்; செருக்கு-தருக்கு)

அவ்வாறு இராமபிரானால் செலுத்தப்பட்ட அம்புக்கடலை அந்தக் கணத்திலேயே மிக்க சினம்கொண்டு பகைவர்களாகிய வலிய அரக்கர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து துண்டித்து விட்டார்கள்; பின்னர் இன்னும் முன்னேறிச்சென்று இராமபிரானை நெருங்கி, அவன் இருப்பதே தெரியாதபடி அவனைச் சுற்றிச் சூழ்ந்து நின்றுகொண்டு மறைத்துக் கொண்டார்கள். மேகம் பொழியும் மழையைவிட அதிகமான அம்புகளை மழையென இராமபிரான்மேல் பொழிந்தார்கள். எல்லாத் திசைகளிலும் அணைகட்டினாற்போல இன்னும் நெருக்கினார்கள்; இராமபிரானின் அம்புகளையே தாம் அறுத்து எறிந்துவிட்டோம் என்ற செருக்குக் காரணமாக இவ்வாறு செய்து மேலும் நெருங்கினார்கள். இதனைக்கண்ட தேவர்கள், மூன்று கண்களையுடைய சிவபெருமானை அடைந்து, அவன் திருவடிகளில் விழுந்து வணங்கி, கீழ்க்கண்டவாறு முறையிடத் தொடங் கினார்கள்.

இராமபிரானுடைய அம்புகளை அரக்கர்கள் அறுத்து எறிவது இதுவே முதல்முறை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். எனவே

Koviloor Digital Library

அவர்களுக்கு ஆணவம் தலைக்கேறியது; எனவே அவனை இன்னும் நெருங்கிச் சென்று நெருக்கினார்கள் என்பதாம். ''செருக்கின் மிகையால் நெருக்கினர்'' எனக் கவிஞன் எவ்வளவு அழகாக இதனைத் தெரிவிக்கிறான் பாருங்கள், ''அடைய'' என்ற சொல் அடங்கும்படி, முழுவதுமான என்ற பொருளைத்தரும். திருவரங்கத்தில் கோயிலைச் சுற்றிப் பல மதில் சுவர்கள் உண்டு. அவை எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டு வெளியில் வெளிப்புறத்தில் உள்ள மதிலை உடைய தெருவுக்கு இன்று ''அடைய வளைந்தான் தெரு'' என்பதே பெயர். அது இன்று மருவி அடைய வளஞ்சான்தெரு என வழங்கப்படுவதையும் நினைக.

149. தேவர்கள் சிவபெருமானிடம் வேண்டுதல்

''படைத்தலைவர் உற்று ஒருவர் மும்மடி
இராவணன் எனும் படிமையோர்;
கிடைத்தனர் அவர்க்கு ஒரு கணக்கு இலை;
வளைத்தனர் கிளைத்து, உலகெலாம்
அடைத்தனர்; தெழித்தனர்; அழித்தனர்;
தனித்து உளன் இராமன்; அவரோ
''துடைத்தனர் எம் வெற்றி'' என உற்றனர்;
இனிச் செயல் பணித்தி, சுடரோய்!'' (9530)

(மும்மடி-மூன்று மடங்கு; படிமை-தன்மை/வீரப்பாங்கு; கணக்கு-அளவு; தெழித்தல்-அதட்டுதல்/உரப்புதல்; துடைத்தல்-போக்குதல்; கிடைத்தல்-நேர்படுதல்; பணித்தி-அருள்வாயாக) (குளகப்பாடல்)

தேவர்கள் சிவபெருமானை நோக்கி ''நெருப்புப்போலும் ஒளிமிக்க மேனியை உடையவனே! அரக்கர்படைத் தலைவர்கள் ஒவ்வொருவரும் இராவணனைப்போல மூன்று மடங்கு வீரப்பாங்கும் பருத்த உருவமும் கொண்டுள்ளனர்; அவர்கள் இராமபிரான் எதிரே வந்து போரிடுகின்றனர்; அவர்களின் எண்ணிக்கைக்கு ஒரு அளவே இல்லை; அளவற்றவர்கள் பொருதுகின்றனர்; அவர்கள் இராமபிரானைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு, கிளர்ந்தெழுந்து, இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் அடைப்பதுபோல் அடைத்துக்கொண்டு, அதட்டுகிறார்கள்; அவன் செலுத்திய வில்லை முறித்து விட்டார்கள்; இராமபிரானே தன்னந்தனியனாய்த் தனித்துப் போர்க்களத்தில் நிற்கின்றான்; எமக்குக் கிடைக்கவேண்டிய வெற்றியை அவர்கள் துடைத்துப் போக்கிவிடுவார்கள்போல் தோன்றுகிறது; எனவே இறைவனே! இப்பொழுது மேலே என்ன செய்யவேண்டும்? என்ன நிகழ இருக்கிறது என்பதைக் கூறியருள்வாயாக!'' என்று வேண்டிக் கொள்கின்றனர் - பாடல் தொடர்கிறது.

Koviloor Digital Library

சிவபெருமான் ''எரிபோல் மேனிப்பிரான்'' என்பது இங்கு ''சுடரோய்'' எனப்பட்டது என்க.

150. ''எய்த கணை எய்துவதன் முன்பு, இடை அறுத்து, இவர்கள் ஏழ் உலகமும்,
பெய்த கணை மாமுகில் எனப் புடை வளைத்தனர் பிடித்தனர்கள் போய்;
வைது அகலின் அல்லது மறப்படை, கொடிப்படை, கடக்கும் வலிதான்
செய்ய திருமாலோடும், உனக்கும் அரிது'' என்றனர், திகைத்து விழுவார்.
(9531)

(புடை-பக்கம்; வளைத்தல்-சூழ்ந்துகொள்ளுதல்; வைதல்-சபித்தல்/ சாபம் கொடுத்தல்; மறம்-வீரம்; கடத்தல்-வெற்றிகொள்ளுதல்/ வெல்லுதல்; செய்ய-சிவந்த)

தேவர்கள் சிவபெருமானை நோக்கி, ''மேலும், இராமபிரான் எய்த அம்புகள் இவர்களை வந்து தாக்குவதற்கு முன்பே, நடுவிலேயே அவற்றை அறுத்துத் துண்டாக்கிவிடுகிறார்கள்; இவர்கள் ஏழு உலகங்களிலும் செலுத்திய அம்புகளைப் பெரிய மேகம் என்று சொல்லும்படி பக்கங்களில் எல்லாம் சுற்றி வளைத்துக்கொண்டார்கள்; இவர்களை உங்கள் சாபமொழிகளினால் அல்லாமல் வீரம்பொருந்திய படைக் கலன்களாலோ, காலாட்படையினராலோ விலக்கி வெல்லுவது என்பது, சிவந்த நிறமுடைய செம்மையான இலக்குமியைத் தன்னகத்தே கொண்டுள்ள அவள் நாயகனாகிய காக்கும் இறைவனான திருமாலுக்கும், அழிக்கும் தொழிலையுடைய உனக்கும்கூட மிக அரியதாகும்'' என்று கூறி அவன் திருவடிகளில் மனம் கலங்கி விழுந்து வணங்கினார்கள்.

''உனக்கும்'' என்ற இடத்து, உம்மை உயர்வு சிறப்பு. காரணம் ஊழியிறுதிக்காலத்தில் உலக உயிரினங்களை எல்லாம் அழித்துக் காக்கும் வல்லமையுடையவன் சிவபெருமான் ஒருவனே. எனவே அவனுக்கும் இது அரிது என்பதால் உம்மை உயர்வு சிறப்பு எனக்கொள்க.

151. சிவபெருமான் மறுமொழி

''அஞ்சி அயரன்மின்! அவர் எத்தனையர் ஆயிடினும், அத்தனைவரும்,
பஞ்ச எரி உற்றதென, வெந்து அழிவர்; இந்த உரை பண்டும் உளதால்;
நஞ்சம் அமுதத்தை நனி வென்றிடினும், நல்லறம் நடக்கும் அதனை
வஞ்சவினை பொய்க்கருமம் வெல்லினும், இராமனை இவ்வஞ்சர் கடவார்'' (9532)

(அயர்தல்-வாடிப்போதல்/தளர்தல்; பஞ்சி-பஞ்சு; எரி-நெருப்பு; உறுதல்-பற்றுதல்; நனி-மிகவும்; பொய்க்கருமம்-பொய்ம்மை; வஞ்சர்-மாயச்செயலையுடைய அரக்கர்; கடத்தல்-வெல்லுதல்)

Koviloor Digital Library

சிவபெருமான் தேவர்களை நோக்கி, ''நீங்கள் இனிமேல் அச்சம்கொண்டு தளர்ந்து போகாதீர்கள்; அவ்வரக்கர்கள் எத்தனை பேராக இருந்தாலும், அத்தனைபேரும் நெருப்பின்முன் பஞ்சு பற்றிக்கொண்டது போல வெந்து சாம்பலாய்ப் போவார்கள்; இந்தப் பேச்சு முன்பும் என்னால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. நஞ்சு அமிழ்தத்தை மிகவே வெற்றிகொண்டது என்றாலும், உலகில் நடைபெறும் நல்ல செயல்கள் எல்லாவற்றையும் வஞ்சகம் மிக்க தீய செயல்களும், பொய்ம்மையான காரியங்களும் பாவச்செயல்களும் வெற்றி கொண்டாலும், இராமபிரானை இந்த வஞ்சகர்களால் வெற்றிகொள்ள முடியாது, வெற்றிகொள்ள மாட்டார்கள்'' என்று ஆறுதல் கூறுகிறான்.

சில சமயங்களில் தீமை வெல்வதுபோலத் தோற்றம் தந்தாலும் இறுதியில் நன்மையே வெல்லும்; ''அறம் வெல்லும், பாவம் தோற்கும்'' என்று உறுதிப்படுத்துகிறான் சிவபெருமான் என்பதாம். ''பஞ்சுஎரி உறுதல்'' என்பது முற்றமுழுக்க அழிந்து சாம்பலாய்ப் போவதற்கு உவமை. வென்றிடினும், வெல்லினும் என்பதில் உள்ள உம்மைகள் வெல்லாது என்ற எதிர்மறைப்பொருளைத்தரும். வெல்லுதல் என்பது, பகையானவற்றைக் கீழ்ப்படுத்தித் தான் மேம்பட்டு விளங்குதல் என்ற பொருளைத்தரும்.

152. "அரக்கர் உள் ஆர் சிலர், அவ்வீடணன் அலாது, உலகின் ஆவி
உடையார்?
இரக்கம் உளதாகின், அது நல்லறம் எழுந்து வளர்கின்றது; இனி நீர்,
கரக்க முழைதேடி உழல்கின்றிலீர்கள்; இன்று ஒரு கடும் பகலிலே,
குரக்கின் முதல் நாயகனை ஆளுடைய கோள் உழுவை, கொல்லும்
இவரை" (9533)

(எழுந்து-மேம்பட்டு; கரத்தல்-மறைந்துகொள்ளுதல்; முழை-குகை/ மறைவிடம்; உழல்தல்-அலைந்துதிரிதல்; முதல்நாயகன்-மன்னன்/ சுக்கிரீவன்; கோள்-வலிமை; உழுவை-புலி/இராமபிரான்; கடும்பகல்- நண்பகல்; ஆளுடை-அடிமையாக உடைய)

சிவபெருமான் தேவர்களை நோக்கி, ''இப்பொழுது அரக்கர்களுள் வீடணனைத்தவிர யார் இந்த உலகத்தில் உயிருடன் இருக்கப் போகிறார்கள்? இரக்கம் என்ற ஒரு நற்பண்பு இருக்குமாயின், அங்கே நல்ல அறம் என்பது தழைத்து மேம்பட்டு ஓங்கும் அல்லவா? எனவே நீங்கள் இனிமேல் அரக்கர்களுக்கு அஞ்சி ஒளிந்துகொள்ள குகைபோன்ற மறைவிடங்களை நாடிச் சென்று அலைந்து திரியாதீர்கள்; இன்று ஒரு பகற்பொழுதிற்குள்ளாக, குரக்கினத்தின் முதல் தலைவனான சுக்கிரீவனை அடிமையாக உடைய வலிமைபெற்ற புலிபோன்றவனான இராமபிரான், இவர்களைக் கொன்று தீர்ப்பான்'' என்று உறுதி கூறுகிறான்.

Koviloor Digital Library

சிவபெருமான் வீடணனின் நற்குணங்களைப் புகழ்ந்து பாராட்டுவதை நோக்குக. இப்போர் பகல் பொழுதில் நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. ''இரக்கம்'' என்ற சொல்லைக் கண்ணோட்டம் என்ற பொருளில் குறள் பேசுகிறது கேளுங்கள். ''கண்ணோட்டம் என்னும் கழி பெருங் காரிகை உண்மையான் உண்டு இவ்வுலகு'' என்பது குறள்-571. இந்தக் குறளின் சுருக்கமே, ''இரக்கம் உளதாகின், அது நல்லறம் எழுந்து வளர்கின்றது'' என்ற இந்தக் கம்பனின் பாடல் என்பது உணர்க. ''இரக்கம்'' என்பது பிற உயிர்கள் படும் துயர்கண்டு ஆற்றாது, அத்துயரினைத் துடைக்க முந்துறும் பண்பாகும். ''கோள் உழுவை'' என்பது உவம ஆகுபெயராகி இராமபிரானைக் குறிக்கும்.

153. தேவர்கள் மகிழ்தல்

என்று பரமன் பகர, நான்முகனும் அன்ன பொருளே இசைதலும்,
நின்று நிலை ஆறினர்கள் வானவரும்; மானவனும் நேமி எனல் ஆம்
வென்றி நெடுவாளி மழை, மாரியினும் மேலன துரந்து, விரைவின்
கொன்று, குல மால்வரைகள் மானு தலை, மாமலை குவித்தனன் அரோ! (9534)

(பரமன்-பரம்பொருள்/சிவபெருமான்; நான்முகன்-பிரமன்; இசைதல்-உடன்படுதல்; ஆறுதல்-தணிதல்; மானவன்-மனுகுலத்தில் தோன்றியவன்/பெருமைக்குரியவன்; நேமி-சக்கரப்படை; மாரி-மேகம்; மானும்-போலும்/ஒத்திருக்கும்; துரத்தல்-செலுத்துதல்; வரைகள்-மலை)

அவ்வாறு பரம்பொருளான சிவபெருமான் கூறியருளவும், நான் முகனாகிய பிரமதேவனும் அந்தக் கருத்தினையே ஏற்று உடன்படவும், தேவர்கள் நிதானமாக நின்று மனத்தடுமாற்றம் நீங்கித் தங்கள் துயரம் தணியப்பெற்றார்கள். மன அமைதி பெற்றார்கள்; மனுகுலத்தில் தோன்றியவனும், பெருமை மிக்கவனுமான இராமபிரான், சக்கரப்படை என்று சொல்லப்படும் வெற்றி தருகின்ற நீண்ட அம்புகளை மேகத்தினும் மிகுதியாக மழைபோலப் பெய்து விரைவாக அவ்வரக்கர் அனைவரையும் கொன்று, சிறந்த மலைகள் போன்ற பெரிய அரக்கர்களது தலைகளை, பெரிய மலைபோலக் குவித்தான்.

''பரமன்'' என்பது பரம்பொருளாகிய சிவபெருமானைக் குறிக்கும்.

154. மகர மறிகடலின் வளையும், வய நிருதர்
சிகரம் அனைய உடல் சிதறி, இருவர் உயிர்;
பகர அரிய பதம் விரவ, அமரர் பழ
நகரம் இடம் அருக, நவையர் நலிவுபட. (3535)

Koviloor Digital Library

(மறிதல்-உலவுதல்; வளைதல்-சூழ்ந்துகொள்ளுதல்; வயம்-வலிமை/ வெற்றி; நிருதர்-அரக்கர்; பதம்-பரமபதம்/துறக்கம்; விரவுதல்-அடைதல்/ கலத்தல்; பழம்-தொன்மைவாய்ந்த; அருகுதல்-சுருங்குதல்; இறுதல்-முடிந்துபோதல்; நவை-குற்றம்; நவையர்-தீவினையாளர்கள்/பாவிகள்; நலிவு-வருத்தம்)

மகரமீன்கள் வாழ்வதும், அலைகள் மடங்கி வீழ்வதுமான கடலைப் போல இராமபிரானைச் சுற்றி வளைத்துக்கொண்ட, வெற்றியும், வலிமையும்பொருந்திய அரக்கர்களாகிய குற்றமுள்ள தீவினையாளர்கள் வருந்தும்படி இராமபிரான் செலுத்திய அம்பினால் மலைச்சிகரம் போன்ற உயர்ந்த அசைக்கமுடியாத உடல்கள் அறுபட்டுச் சிதைந்து இறந்து மடிவர்; அவர்கள் உயிர்கள் செல்லுதற்கரிய பரமபதம் சென்றடைய, தேவர்களின் தொன்மையான நகரமாகிய விண்ணுலகம் சிறிதும் இடமில்லாமல் சுருங்கிப்போனது.

போரில் இறந்துபட்ட அரக்கர்களும் துறக்கம் சென்றடைந்ததனால் அந்த நகரம் அளவில் சுருங்கிப்போனது என்பதாம். மகரமீன்கள் நிறைந்திருப்பதால் ''மகராலயம்'' என்பது கடலுக்குக் காரணப்பெயர். இந்தச் செய்யுளில் ஒரு நுட்பம் நோக்குங்கள். செய்யுள் முழுமையும் குற்றெழுத்துக்களே பயின்று வந்திருக்கிறது பாருங்கள். இதைக் ''குறுஞ்சீர் வண்ணம்'' என்கிறது இலக்கணம். ''பகர அரிய பதம்'' என்பது இன்னதன்மைத்து என்று உணர்ந்து உரைத்தற்கரிய பெருஞ்சிறப்பினைக் கொண்ட பரமபதம், துறக்கம் என்று விரிந்த பொருளைத்தரும்.

155. உகளும் இவுளி தலை துமிய, உறு கழல்கள்,
தகளி அற, வலிய தலைகள் அறுதலைவர்
துகளின் உடல்கள் விழ, உயிர்கள் சுரர் உலகின்
மகளிர் வன முலைகள் தழுவி அகம் மகிழ. (9536)

(தகளி-அகல்விளக்கு; துகள்-புழுதி; சுரர்-தேவர்கள்; வனமுலை-அழகிய தனங்கள்; அகம்-மனம்; இவுளி-குதிரைகள்; துமிதல்-துண்டிக்கப் படுதல்; உகளுதல்-புரள்தல்/தாவுதல்; உறு-வலிய)

படைத்தலைவர்களான அரக்கவீரர்களின் வீரக்கழலணிந்த வலிய பாதங்கள், அகல்விளக்குப்போல அறுபட்டு விழவும், அவர்களுடைய வன்மைமிக்க தலைகள் அறுபட்டுப்போகவும், அவர்கள் ஏறிவந்த குதிரைகளின் தலை துண்டிக்கப்பட்டுத் தரையில் விழுந்து புரண்டன. அவர்கள் உடல்கள் சிதறி மண்துகள்கள்போலப் பொடியாகித் தரையில் சிதறவும், அவர்கள் உயிர்கள் மட்டும் விண்ணுலகு சென்று, அங்குள்ள தேவமகளிரின் அழகிய தனங்களைத் தழுவி மனம் மகிழ்ந்தன.

குதிரைகளைச் செலுத்திவந்த வீரர்களின் கால்கள், தலைகள், உடல்கள் முதலியன நிலத்தில் விழுந்தன. அவர்கள் உயிர் மட்டும் விண்ணுலகு

Koviloor Digital Library

சென்று தேவமகளிரின் அழகிய முலைகளைத் தழுவி மனம் மகிழ்ந்தன. ''உகளும்'' என்ற சொல்லுக்குப் பிறழும் என்ற பொருளும் உண்டு. ''ஓங்கு பெரும் செந்நெல் ஊடு கயல் உகள'' என்பது திருப்பாவை-2.

156. மலையும் மறிகடலும், வனமும், வறு நிலனும்,
உலைவு இல் அமரர் உறை உலகும், உயிர்களொடு
தலையும், உடலும் இடைதழுவு தவழ் குருதி
அலையும் அரியது ஒரு திசையும் இலது அணுக. (9537)

(மறிதல்-மடங்குதல்; வனம்-காடு; வறுநிலன்-வறண்டபூமி/வெற்று நிலம்; உலைவு-அழிவு; அணுகுதல்-ஒதுங்குதல்; இலது-இல்லை)

மலைகளும், அலைகள் மடங்கிவிழும் கடலும், காடுகளும், வறண்ட பாலைவனப் பூமியும், என்றும் அழிதல் இல்லாத தேவர்கள் வாழ்கின்ற தேவருலகமும், அரக்கர்படைத் தலைவர்களின் உயிர்களோடு, அவர் களின் தலைகளும், தலையற்ற உடல்களும், இடையிடையே இணைத்துச் செல்லுகின்ற இரத்தவெள்ளம் எல்லாத் திசைகளிலும் பரந்து செல்வதால், தப்பி ஒதுங்குவதற்கு வேறு ஒரு திசையும் இல்லாது போயிற்று.

மலையும் மலைசார்ந்த இடமும், கடலும் கடல்சார்ந்த இடமும், காடும் காடு சார்ந்த இடமும், பாலைநிலமும் எனப் பண்டைத்தமிழர் வகுத்த நானிலத்தையும் குறித்தார் என்க. எனினும் மருதம் பற்றிப் பேசப்பட வில்லை என்பதும் கருதத்தக்கது. நீரும் நிழலும் அற்ற பூமி பாலைவனம் என்பது இங்கே ''வறுநிலன்'' என்ற புதிய பெயரால் குறிக்கப்பட்டதை உணர்க. எல்லாத் திசைகளும் அரக்கர்களின் அறுபட்ட உறுப்புக்களும் இரத்தவெள்ளமுமாகக் காணப்பட்டன என்பதாம்.

157. இனைய செரு நிகழும் அளவின், எதிர்பொருத
வினையமுடை முதல்வர் எவரும் உடன் விளிய,
அனைய படை நெளிய, அமரர் சொரி மலர்கள்
நனைய, விசையின் எழு துவலை மழை நலிய. (9538)

(செரு-போர்; அளவு-பொழுது; வினையம்-வஞ்சனைச் சூழ்ச்சி; முதல்வர்-சேனைத்தலைவர்; உடன்-ஒருசேர; விளிதல்-இறந்துபடுதல்; நெளிதல்-தளர்ந்து வருந்துதல்; விசை-வேகம்; துவலை-நீர்த்திவலைகள்/ மதுத்துளிகள்; நலிதல்-வருத்துதல்; இனைய-இப்படிப்பட்ட) (குளகப் பாடல்)

இத்தகைய போர் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, இராமபிரானை எதிர்த்துப் போர் செய்த, சூழ்ச்சியும் வஞ்சனையும் மிகுந்த அரக்கர்படைத் தலைவர்கள், எல்லோரும் ஒருசேர அழிந்துபோகவும், அதனால் திகைப் புற்ற எஞ்சிய படைவீரர்கள் தலைவரில்லாது தத்தளிக்கவும், அதனைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து, மலர்மாரி சொரியவும், அதனின்றும்

Koviloor Digital Library

மழைபோன்ற வேகத்தால் விழுந்த தேன்துளிகள் அவர்களை வருத்த மடையச் செய்தன - பாடல் தொடர்கிறது.

வென்றவர்களின் மகிழ்ச்சி தோற்றவர்களுக்கு அவலம்தானே!

158. இரியல் உறு படையை, நிருதர், இடைவிலகி,
எரிகள் சொரியும் நெடுவிழியர் "இழுதையர்கள்!
திரிக, திரிக!" என உரறு தெழி குரலர்,
கரிகள், அரிகள், பரி, கடிதின் எதிர் கடவ. (9539)

(இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; இடை-நடுவில்; விலகி-தடுத்து; எரி-நெருப்பு; இழுதை-அறிவின்மை; இழுதையர்-அறிவில்லாதவர்கள்; திரிதல்-திரும்புதல்; உரற்றுதல்-முழங்குதல்; தெழித்தல்-அதட்டுதல்; அரி-சிங்கம்; கடவுதல்-செலுத்துதல்; கடிதின்-விரைவாக; நிருதர்-அரக்கர்)

அவ்வாறு நிலைகுலைந்து ஓடும் அரக்கர்சேனையை, சில அரக்கர்கள் நடுவில் புகுந்து விலக்கி, நெருப்புக் கக்குகின்ற கண்களை உடையவராய் விழித்து நோக்கி, ''அறிவில்லாதவர்களே! மீண்டும் திரும்பி வாருங்கள்; திரும்பி வாருங்கள்'' என்று பலமுறை முழக்கமிட்டு அதட்டுகின்ற குரலையுடையவராய், யானைகள், சிங்கங்கள், குதிரைகள் முதலிய வற்றை விரைவாக இராமபிரானுக்கு எதிராகப் போர்க்களத்துள் செலுத்தினார்கள் - பாடல் தொடர்கிறது.

159. உலகு செவிபட, மழைகள் உதிர, உயர்,
அலகு இல் மலை குலைய, அமரர்தலை அதிர,
இலகு தொடு படைகள் இடியொடு உரும் அனைய,
விலகியது திமிலம் வளையும்வகை விளைய. (9540)

(மழைகள்-மேகங்கள்; உதிர்தல்-சிதறுதல்; அலகு-அளவு; அதிர்தல்-நடுங்குதல்; இலகு-ஒளி; தொடு-தொடுக்கப்படும்/எறியும்; இடி-பேரொலி; விலகுதல்-தடுத்தல்; திமிலம்-திமிரம்/இருள்; உரும்-மின்னலுமாம்; வளைதல்-சூழ்ந்துகொள்ளுதல்)

உலகம் செவிடாகிப் போகும்படியும், மேகங்கள் வானத்தினின்றும் பூமியில் சிதறிச் சிந்தும்படியும், உயர்ந்த, அளவற்ற மலைகள் நிலை குலையவும், தேவர்கள் தலைகள் நடுக்கமுறவும், ஒளிவீசுகின்றதும், தொடுக்கப்படுபவையுமான படைக்கலங்கள் இடிபோன்ற பேரொலி யோடு மின்னலும் விளைந்ததுபோல, இராமபிரானைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு, இருள் உண்டாகும்படி இராமபிரானைத் தடுத்து நின்றது.

Koviloor Digital Library

போர்க்களத்தை விட்டு ஓடிப்போன அரக்கர்படை மீண்டும் திரும்பி வந்து இராமபிரானைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டது. குறுக்கே தடுத்து நின்றது என்பதாம்.

160. "அழகிது, அழகிது" என, அழகன் உவகையொடு
பழகும் அதிதியரை எதிர்கொள் பரிசுபட,
விழைவின் எதிர அதிர் எரிகொள் விரிபகழி
மழைகள் முறை சொரிய, அமரர் மலர் சொரிய. (9541)

(அதிதியர்-விருந்தினர்; பரிசு-தன்மை; பட-பொருந்த; விழைவு-விருப்பம்; அதிர்தல்-முழங்குதல்; எரி-தீச்சுடர்; அழகிது-நன்று; அழகன்-இராமபிரான்; முறை-இடைவிடாது) (குளகப்பாடல்)

திருமேனி அழகனான இராமபிரான், அரக்கர்கள் திரும்பி வந்ததைக் கண்டு மகிழ்ந்து, புதிய விருந்தினர்களை வரவேற்றுப் பழகும் தன்மை போல, ''நன்றாயிருக்கிறது, நன்றாயிருக்கிறது'' என்று கூறி, விருப்ப முடன் பேரொலி எழுப்பிக்கொண்டு அவர்கள் எதிரே சென்று, நெருப்புப் போன்ற நுனியை உடைய அம்புகளை மழைபொழிவது போல இடைவிடாது பொழியவும், அதனைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து மலர்மழை பொழியவும் - பாடல் தொடர்கிறது.

போர்க்களத்திலிருந்து பின்னிட்டுப் போன அரக்கவீரர்கள் திரும்பிப் போர்புரியப் போர்க்களத்துள் வந்ததைக் கண்ட இராமபிரான் அவர்களைப் பாராட்டும் முகத்தான். ''அழகிது, அழகிது'' என்று கூறி வரவேற்றான் என்க.

161. தினகரனை அணவு கொடிகள் திசை அடைவ,
சினவு பொரு பரிகள் செறிவ அணுக, உயர்
அனகனொடும் அமரின் முடுகி எதிர, எழு
கனகவரை பொருவ, கதிர்கொள் மணி இரதம். (9542)

(கதிர்-ஒளி; மணி-இரத்தினம்; தினகரன்-கதிரவன்; அணவுதல்-தீண்டுதல்/தொடுதல்; அடைவ-பதிவன; சினவு-சினக்கும் தன்மை; செறிவ-நெருங்கி; அனகன்-தூயோன்/குற்றமற்றவன்/இராமபிரான்; முடுகுதல்-விரைதல்; கனகவரை-பொன்மலை; பொருவ-ஒத்துத் தோன்ற)

அரக்கர்படையில் இருந்த கொடிச்சீலைகள் கதிரவனையே சென்று தீண்டும்படியும், திசைகள் எல்லாம் சென்று சேரும் படியும் உயர்ந் திருந்தன; சினத்தோடு போர்செய்யும் குதிரைகள் நெருங்கி இராமபிரானை அணுகின; உயர்ந்த குணங்களுடைய, குற்றமற்றவனான தூயோனான இராமபிரானை, போரின்கண் பொன்மலையை ஒத்த ஒளிவீசும்

Koviloor Digital Library

இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தேர்ப்படைகள் இராமபிரானை எதிர்ப்ப தற்காக விரைந்து வந்தன.

''கனக வரை பொருவ'', கதிர்கொள் மணிகள் பதிக்கப்பெற்ற தேர்கள்; அவனை எதிர்த்து வந்த குதிரைகள் ''சினவுபொரு பரிகள்; தேர்களில் கட்டப்பட்டிருந்த கொடிச் சீலைகள் ''தினகரனை அணவு, திசை அடைவ சீலைகள்''

162. பாறு, படு சிறகு கழுகு, பகழிபட,
நீறு படும் இரத நிரையின் உடல் தழுவி,
வேறு படர் படர, இரவி சுடர் வலையம்
மாறுபட, உலகின் மலைகள் அளறுபட; (9543)

(நீறு-வெந்துபோதல்; நிரை-வரிசை; பாறு-பருந்துகள்; படு-பொருந்திய; படர்-வழி; படர்தல்-செல்லுதல்; இரவி-சூரியன்; சுடர் வலயம்-ஒளிவட்டம்; அளறு-சேறு; படுதல்-அழுந்துதல்; மாறுபடுதல்-நிலைகுலைதல்) (குளகப்பாடல்)

இராமபிரான் செலுத்திய அம்புகளால் தேர் வரிசைகளும் சாம்பலாகிப் போயின; பருந்துகளும், சிறகுகள் பொருந்திய கழுகுகளும் அரக்கர்களின் உடல்களைத் தழுவிக்கொண்டு, வேறுவழியாகப் பறந்து செல்லவும், சூரியனது ஒளிவட்டம் நிலைகுலைந்து போகவும், உலகிலுள்ள மலைகள் எல்லாம் சேறாகிப்போகவும் - பாடல் தொடர்கிறது.

இராமபிரான் அம்புகள் தைத்ததால், உலகிலுள்ள மலைகளெல்லாம் அழிந்து சேறாகிப்போயின; சூரியனது ஒளிவட்டம் திசைமாறிப்போனது; அரக்கர் தேர்களின் வரிசை சாம்பலாகிப்போயின; கழுகுகளும், பருந்து களும் உடல் சிதைந்துபோயின என்பதாம்.

163. அருகு கடல் திரிய, அலகுஇல் மலை குலைய,
உருகு சுடர்கள் இடை திரிய, உரனுடைய
இருகை ஒரு களிறு திரிய, விடு குயவர்
திரிகை என உலகு முழுதும் முறை திரிய. (9544)

(திரிதல்-இடம்பெயர்தல்/மாறுபடுதல்/கலங்குதல்; அலகு-அளவு; சுடர்கள்-சூரியசந்திரர்கள்; உரன்-உரம்/திண்மை/வலிமை; திரிதல்-சாரிகை திரிதல்/சுழல்தல்; திரிகை-சக்கரம்; குயவர்-குலாலர்/ மண்ணீட்டாளர்/வேட்கோவர்)

மிக்க வலிமையுடைய இரண்டு துதிக்கைகளையுடைய ஒப்பற்ற யானைபோன்றவனான இராமபிரான், குயவர்கள் மண்ணையிட்டுச் சுழற்றும் சக்கரம்போலச் சாரிகை திரிவதனால், அருகேயுள்ள கடல்க ளெல்லாம் கலங்கிப்போகவும், அளவற்ற மலைகளெல்லாம் நிலை

Koviloor Digital Library

குலைந்து போகவும், உருகுகின்ற தன்மையுடைய ஒளிமிக்க சூரிய சந்திரர் என்னும் இரண்டு சுடர்களும் வானத்தின் இடையே பாதை மாறுபட்டுப் போகவும், எல்லா உலகங்களும் தம்இயல்புநிலை மாறுபட்டுப்போயின.

இராமபிரான் போர்க்களத்தில் சாரிகை திரிந்ததனால், உலகங்கள் எல்லாமும், உலகில் உள்ள கடல்கள், மலைகள், சூரிய, சந்திரர்கள் ஆகிய எல்லாமும் தம் இயல்பான இயக்கத்தில் இருந்து மாறுபட்டன என்பதாம். ''இருகை ஒரு களிறு'' என்பது முன்பு பாயிரப்பாடலில் கூறிய ''தருகை நீண்ட தயரதனையும், இருகை வேழத்து இராமனையும்'' நினைவு படுத்துவதை உணர்க. குயவர்கள் சுழற்றுகின்ற சக்கரத்திற்கு, இராமபிரான் போர்க்களத்தில் சாரிகை திரிதல் ஒப்பு. குயவர் என்ற சொல்லுக்குக் குலாலர், மண்ணீட்டாளர், வேட்கோவர் என்பன வேறு அருமையான தமிழ்ச்சொற்கள்.

164. சிவனும், அயனும், எழு திகிரி அமரர் பதி
அவனும், அமரர் குலம் எவரும், முனிவரொடு
கவனம் உறு கரணம் இடுவர், கழுது இனமும்,
நமனும், வரிசிலையும், அறனும், நடன் நவில. (9545)

(கழுதுஇனம்-பேய்க்கூட்டம்; நமன்-இயமன்; வரி-கட்டப்பட்ட; நடன் நவில்தல்-கூத்தாடுதல்; அயன்-பிரமதேவன்; திகிரி-சக்கரப்படை; அமரர்பதி-தேவர்தலைவன்/தேவேந்திரன்/திருமால்; கவனம்-விரைவு; கரணம்-ஒருவகை ஆடல்/தலைகீழாகச் சுழலுதல்; இடுதல்-செய்தல்)

இராமபிரானால் அழித்தொழிக்கப்பட்ட அரக்கர் தலைவர்களின் பிணங்களைக் கண்டு பேய்க்கூட்டங்களும், இயமனும் இராம பிரானுடைய கட்டமைந்த வில்லும், அறக்கடவுளும், மகிழ்ச்சியால் நடனம்போன்ற ஆனந்தக் கூத்தாடின; சிவபெருமானும், பிரமதேவனும், எழுச்சிமிக்க சக்கரப்படையைக் கொண்ட தேவர்களுக்கெல்லாம் தலை வனாகிய அந்தத் திருமாலும், தேவர்கூட்டம் முழுவதும், முனிவர்களோடு சேர்ந்துகொண்டு மகிழ்ச்சியுடன் விரைவுமிக்க கரணங்கள் செய்ய லாயினர்.

''அமரர்பதி'' என்பது தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரனைக் குறிக்கும் என்றாலும், இங்கே ''எழு திகிரி அமரர் பதி அவன்'' என்றதனால் சக்கரப்படையையுடைய திருமாலைக் குறித்ததாகப் பொருள் கொள்ளப் பட்டது. மன ஒழுக்கம் உடையவரே முனிவர் எனப்படுவர். அவர்களை ''மனனசீலர்'' என்பர். ''கரணம்'' என்ற சொல்தலைகீழாகச்சுழலுதல் என்ற பொருளைத்தரும். இப்பொழுது குட்டிக்கரணம் என்று கூறுவதை ஒத்தது எனக்கொள்க. கரணம் என்பது தலையைக் கீழே நட்டு, உடலை உயர்த்தி, உருண்டு விழும் ஒரு விளையாட்டுச் செயல், மகிழ்ச்சி மிகுதியால் இதனைச் செய்வது மனித இயல்பு. தேவர்களும் இவ்வாறே செய்தனர்

Koviloor Digital Library

என்பது வியப்புக்குரியது; நடனம் செய்வதை நடமிடல் என்றும் நடனம் நவில்தல் என்றும் கூறுவது கவிவழக்கு. ''நட்டமே நவில்வாய்'' என்பது தேவாரம். ''கழுது'' பேய்; ''கழுதொடு காட்டிடை நாடகம் ஆடி'' என்பது திருவாசகம். ''சடைகள் தாழக்கரணம் இட்டு'' என்பது தேவாரம்.

165. தேவர், திரிபுவன நிலையர், செரு இதனை
ஏவர் அறிவுறுவர் இறுதி? முதல் அறிவின்
மூவர் தலைகள் பொதிர் எறிவர், "அற முதல்வ!
பூவை நிறவ!" என, வேதம் முறை புகழ. (9546)

(பூவை-காயாம்பூ; நிறவ-நிறத்தவனே; செரு-போர்ச்செயல்; திரி புவனம்-மூன்று உலகம்; நிலையர்-நிலைத்து வாழ்பவர்கள்; முதல்-முதற்காரணர்; மூவர்-மும்மூர்த்திகள்; பொதிர்எறிதல்-நடுக்கமடைதல்; ஏவர்-யாவர்)

தேவர்களும், மூன்று உலகங்களிலும் நிலையாக வாழ்பவர்களுட் இந்தப்போரின் போக்கினைப் பார்த்து, யார்தான் இதன் இறுதி முடிவை அறிய வல்லவர்கள்? மூலமுதல் காரணமானவரும், ஞானப்பிழம்பான வருமான மும்மூர்த்திகளும் கூட, இந்நிலை கண்டு, தம் தலைகள் நடுக்கம் உறுவர்; ''அறங்களுக்கெல்லாம் மூலமுதல்வனே! காயாம்பூ போன்ற நீலநிற வண்ணனே!'' என்று நான்கு வேதங்களும் முறையாகப் போற்றித் துதிக்கவும் - பாடல் தொடர்கிறது.

''எவர்'' என்பது ''ஏவர்'' என எதுகைநோக்கி நீண்டது; ''பொதிர் எறிதல்'' என்பது ஒரேசொல். நடுக்கமடைதல் என்பது பொருள்.

166. எய்யும் ஒரு பகழி, ஏழு கடலும் இடு
வெய்ய களிறு பரி ஆளோடு இரதம் விழ,
ஒய்ய ஒரு கதியின் ஓட, உணர் அமரர்
கைகள் என, அவுணர் கால்கள், கதி குலைவ. (9547)

(இடுதல்-செலுத்துதல்; வெய்ய-கோபம்கொண்ட; ஒய்-ஒலிக்குறிப்பு; கதி-வேகம்; குலைதல்-நடுங்குதல்)

இராமபிரான் செலுத்தும் ஒரேஒரு ஒப்பற்ற அம்பு, அரக்கர்களின் கொடிய யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படை என்ற நால்வகைப் படைகளையும் அழித்து ஒழித்து ஏழு கடல்களிலும் சென்று சேர்த்தது. அந்த விரைவையும் வேகத்தையும் கண்ட தேவர்களின் கைகள் நடுக்கம் உற்றதுபோலத் தேவர்களின் பகைவர்களாகிய அவுணர்களின் கால்களும் தம் வேகம் குறைந்து நடுங்கலாயின.

''ஒய்'' என்பது வேகத்தைக் குறிக்கும் ஒரு ஒலிக்குறிப்பு. அனுகரண ஓசை.

Koviloor Digital Library

167. அண்ணல் விடு பகழி, யானை, இரதம், அயல்
பண்ணு புரவி, படைவீரர், தொகு பகுதி
புண்ணின் இடு குறிகள் புள்ளின, விரைவின்
எண்ணுவன அணைய எல்லை இல நுழைவ. (9548)

(அண்ணல்-பெருமையிற் சிறந்தோன்; அயல்-அருகில்; பண்ணுதல்-அலங்கரித்தல்/புனைதல்; குறிகள்-அடையாளங்கள்/தழும்புகள்; விரவி-அணுகி)

பெருமையிற் சிறந்தோனான இராமபிரான் செலுத்திய அம்புகள் அருகில் நின்ற, யானைகள், தேர்கள், அலங்கரிக்கப்பட்ட பருமம் அமைந்த குதிரைகள், காலாட்படை வீரர்கள் ஆகியவர்கள் அணிவகுத்து நின்ற பகுதிகளில் விரைவாகச் சென்று நுழைந்தவை கணக்கில் அடங்காதவை. தழும்புகளை அடையாளமாகக் கொண்டு அவற்றைக் குறியீடுபோல எண்ணுவதுகூட இயலாதனவாயின.

இராமபிரான் செலுத்திய அம்பினால் நால்வகைப் படைகளிலும் தழும்புகள் போன்ற புண்கள் உண்டாக்கப்பட்டன என்பதும், அவை எவ்வளவு அம்புகள் செலுத்தப்பட்டன என்று கணக்கிடுவதற்கான குறிகளை இட்டனபோன்று தோற்றமளித்தன என்பதும் இப்பாடலின் திரண்ட கருத்து. அதிக அளவில் உள்ளதான பொருட்களை எண்ணும் போது நூற்றுக்கு ஒன்று என்று ஒரு குறியீடு வைத்துக் கொள்கிறோமல்லவா? அதுதான் இங்கே பேசப்படுகிறது. முன்பு ''உறை'' என்ற சொல் இந்தப் பொருளைத் தந்ததையும் இங்கே நினைவுகூர்க.

168. அம்புகளால் இராமபிரான் ஒரு மதில் அமைத்தல்

''சுருக்கம் உற்றது படை; சுருக்கத்தால் இனிக்
கரக்கம் உற்று ஒரு புறத்து'' என்னும் கண்ணினால்,
அரக்கருக்கு அன்று செலவு அரியதாம்வகை
சரக் கொடு நெடுமதில் சமைத்திட்டான் அரோ! (9549)

(சுருக்கம்-குறைவு; கரத்தல்-ஒளித்துக்கொள்ளுதல்; கண்-கருத்து; செலவு-தப்பிச்செல்லுதல்; சரம்கொடு-சரக்கொடு/அம்புகொண்டு; சமைத்தல்-அமைத்தல்; அன்று-அப்பொழுது)

இராமபிரான், ''இப்பொழுது அரக்கர்படையின் அளவு குறைந்து விட்டது. அதனால் ஒரு புறமாக ஒதுங்கிச் சென்று அவர்கள் தம்மை மறைத்துக்கொள்ள முயலுவார்கள்'' என்று கருதி, அவர்கள் தப்பித்துப் போக முடியாதபடி அவர்களைச் சுற்றி வளைத்து அப்பொழுதே தனது அம்புகளைக் கொண்டு ஒரு பெரிய நீண்ட மதில்சுவற்றை அமைத்து விட்டான்.

Koviloor Digital Library

இராமபிரான் சரக்கூடம் அமைப்பது இது மூன்றாவது முறை. முதலில் விசுவாமித்திரரின் யாகத்தை அழிக்கவந்த சுபாகு, மாரீசன் அதைக் கெடுக்காமலிருக்கும் வண்ணம் சரக்கூடம் அமைத்தான். அடுத்து சுக்கிரீவன் மயக்கமுற அவனை எடுத்துச்செல்ல முயன்ற கும்பகருணன் தப்பித்துச்செல்ல முடியாதபடி ஒரு சரக்கூடம் இலங்கையில் அமைத்தான். இப்பொழுது மூன்றாவது முறையாகச் சரக்கூடம் அமைக்கிறான் என்பதை நினைவிற் கொள்க.

169. மாலியை, மாலியவானை, மால்வரை
போல் உயர் கயிடனை, மதுவை, போன்று உளார்,
சாலிகை யாக்கையர், தணப்புஇல் வெஞ்சர
வேலியைக் கடந்திலர், உலகை வென்றுளார். (9550)

(சாலிகை-கவசம்; யாக்கை-உடம்பு; வேலி-மதில்; தணப்பு-ஓய்வு)

மாலியையும், மாலியவானையும், பெரிய மலைபோன்ற உயர்ந்த கைடபன், மது என்ற அரக்கர்களையும், இன்னும் அவர்போன்ற மிக்க வலிமை படைத்தவர்களையும் உலகங்கள் எல்லாவற்றையும் வென்று வெற்றிகொண்டவர்களும், கவசம் பொருந்திய உடலை உடையவர் களுமான இவ்வரக்கர்கள்கூட இராமபிரானால் அடைக்கப்பட்ட கொடிய சரக்கூடத்தைக் கடந்துபோக முடியவில்லை.

மாலி, மாலியவான், மது, கைடபர் என்பவர்களெல்லாம் இராவணன் காலத்துக்கு முற்பட்ட பெரும் அரக்கர்கள். அரக்கர்குலத் தலைவர்கள். இவர்களில் மது, கைடபர் என்ற இரு அரக்கர்களையும் திருமால் போரிட்டு வென்றார் என்பதை நாம் முன்பே கண்டு வந்திருக்கிறோம். உலகங் களையே வென்றுள்ள அரக்கர்களால் இராமபிரானால் அமைக்கப்பட்ட சரவேலியைக் கடக்க முடியவில்லை என்பது கருத்து.

170. மாண்டவர் மாண்டு அற, மற்றுளோர் எலாம்,
மீண்டனர், ஒருதிசை; ஏழு வேலையும்
மூண்டுஅற முருக்கிய ஊழிக்காலத்தில்
தூண்டுஉறு சுடர்சுட, சுருங்கித் தொக்க போல். (9551)

(மூண்டு-பொங்கி; முருங்குதல்-அழிவுறுதல்; சுடர்-அனற்கொழுந்து; தொக்க-ஒருங்கு திரண்டாற்போல; வேலை-கடல்)

இராமபிரான் அம்பினால் இறந்துபட்டவர்கள் இறந்துபட்டவர் களாகவே ஆக, எஞ்சி உயிருடன் இருப்பவர்கள் எல்லோரும், ஊழி யிறுதிக்காலத்தில், பொங்கி எழுந்து எல்லாவற்றையும் அழிக்கின்ற வடவைத்தீயின் அனற்கொழுந்துகள் சுட்டெரித்தலால் வற்றி வறண்டு சுருங்கிப்போகும் ஏழு கடல்களும் ஒரு சிறு இடத்தில் தொங்கிக்கொண்டு நிற்பதுபோல, எல்லோரும் ஒரு திசையில் வந்து ஒருங்கு திரண்டனர்.

Koviloor Digital Library

171. ''புரம் சுடு கடவுளும், புள்ளின் பாகனும்,
அரம் சுடு குலிசவேல் அமரர் வேந்தனும்,
உரம் சுடுகிற்கிலர்; ஒருவன் நாமுடை
வரம் சுடும்; வலிசுடும்; வாழும் நாள்சுடும்'' (9552)

(புரம்-முப்புரம்; புள்-பறவை/கருடன்; பாகன்-சாரதி; சுடுதல்-கூராக்குதல்; குலிசவேல்-வச்சிரப்படை; உரம்-வலிமை; சுடுதல்-அழித்தல்; வாழும்நாள்-ஆயுள்)

''முப்புரங்களையும் சுட்டெரித்தவனான சிவபெருமானும், கருடப் பறவையைத் தன் வாகனமாகக் கொண்டு செலுத்தும் திருமாலும், அரத்தினால் அராவப்பட்டுக் கூர்மையாக்கப்பட்ட வச்சிராயுதத்தை உடைய தேவர்தலைவனான தேவேந்திரனும் நமது வலிமையை அழிக்கும் ஆற்றல்பெற்றாரில்லை; ஆனால் இவன் மட்டும் தனியனாய் நின்று, நாம் அரிதின் முயன்று பெற்ற வரங்களை அழிக்கிறான்; நம் வலிமையை அழிக்கிறான்; நமது வாழ்நாளையும் அழிக்கிறான்; என்ன வியப்பு இது!'' என்று அரக்கர் தலைவர்கள் தமக்குள் பேசிக் கொள்கின்றனர்.

சிவபெருமான் முப்புரங்களைச் சுட்டெரித்தது காப்பியத்தில் பல இடங்களில் பயின்று வந்தமையை நினைவுகூர்க. ''சுடுதல்'' என்ற சொல் சுட்டெரித்தல், அழித்தல், கூராக்குதல் என்ற பொருள்களில் பயன் படுத்தப்பட்டுள்ளமை உணர்க. ''சுடுகிற்கிலர்'' என்பதில் உள்ள ''கில்'' என்பது ஆற்றல் உணர்த்தும் இடைச்சொல் எனக்கொள்க. ''வலிசுடும்'' என்பது உடல்வலிமை, மனவலிமை இரண்டையும் குறிக்கும் எனக் கொள்க.

172. ''ஆயிர வெள்ளம் உண்டு; ஒருவர், ஆழி சூழ்
மா இரு ஞாலத்தை மறிக்கும் வன்மையோர்;
மேயின் பெரும்படை இதனை, ஓர் விலால்
''ஏ'' எனும் மாத்திரத்து எய்து கொன்றனன்'' (9553)

(ஆழி-கடல்; இரு-பெரிய; ஞாலம்-பூமி; மறித்தல்-தடுத்து நிறுத்துதல்; மேயின-பொருந்திய; விலால்-வில்லால்; மாத்திரம்-மாத்திரை/ஒரு காலஅளவு)

''இவ்வரக்கர் படையில் உள்ள ஒவ்வொருவரும், கடலால் சூழப் பெற்ற இந்த மிகப்பெரிய பூமியைப் போரிட்டுத் தடுத்து நிறுத்தக்கூடிய வல்லமை படைத்தவர்கள். அவர்கள் ஆயிரம் வெள்ளம்பேர் இருக் கிறார்கள். அவ்வாறு வலிமை உடையவர்களைப் பொருந்தியிருக்கும் இந்தப் பெருஞ்சேனையை, இவன் ஒரேஒரு வில்லினால் ''ஏ'' என்று சொல்லப்படும் ஒரேஒரு மாத்திரைகால அளவிற்குள் அம்பினை எய்து

Koviloor Digital Library

கொன்று போட்டிருக்கிறானே? என்ன வியப்பு இது!'' என்று அரக்கர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.

''வில்லால்'' என்பது சந்தம் நோக்கி ''விலால்'' என இடைக்குறையாக நின்றது. ''ஏ'' எனும் மாத்திரை என்பது ஒரு சிறுகாலப் பொழுதைக் குறிக்கும் விரைவுக்குறிப்பு. இப்படையில் ஆயிரம் வெள்ளம் வீரர்கள் இருக்கிறார்கள் என்பதும், அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக இந்த மிகப்பெரிய உலகத்தையே வெற்றிகொள்ளும் வலிமைபடைத்த வர்கள் என்பதும் முன்னரே கூறப்பட்டிருப்பதையும் நினைவுகூர்க. முன்பு தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டபோது கூறிய பாடல் இங்கு ஒப்புநோக்கத்தகும். ''ஒருவரைக் கொல்ல ஆயிரம் இராமர் வந்து ஒருங்கே இருபதிற்று இரண்டு ஆண்டு நின்று அமர் செய்தால், என் ஆம்?'' என்று கேட்டதை நினைவுபடுத்திப் பார்த்தால் இராமபிரானது ஆற்றலைத் தேவர்கள் எடைபோட்ட விதமும், அரக்கர்கள் எடைபோடுகின்ற விதமும் தெள்ளெனத் தெளிவாகும்.

173. இடை, படும், படாதன இமைப்பிலோர் படை;
புடைபட, வலம்கொடு விலங்கிப் போகுமால்,
படைபடும் கோடி ஓர் பகழியால் பழிக்
கடைபடும் அரக்கர்தம் பிறவி கட்டமால். (9554)

(இமைப்பிலோர்-தேவர்கள்; இடைதல்-எதிர்த்தல்; படுதல்-இறந்து மடிதல்; விலங்கி-விலகி/ஒதுங்கி; கட்டம்-கஷ்டம்/துன்பம்; புடை-பக்கம்; இடை-நடுவழி; புடைத்தல்-தாக்குதல்)

''இமையா நாட்டமுடையோரான தேவர்களது பெரிய படைகூட போர்க்களத்தில் எம்முடன் போர்புரியும்போது அனைத்தும் அழிந்து படும்; அவ்வாறு அழியாது எஞ்சி நிற்கின்ற சில படைகளும்கூட எமது தாக்குதலுக்கு ஆற்றாது எம்மைக் கண்டால் எம்மை வலம்செய்து சற்றே ஒதுங்கிப்போகும். அவ்வாறிருக்கும்போது இந்த இராமபிரான் மட்டும் ஒரே அம்பினால் எம்முடைய கோடிக்கணக்கான வீரர்களைக் கொன்று அழிக்கிறானே! இத்தகைய பெரும் பழியைக் கொண்டுள்ள இந்த அரக்கர் பிறவியே மிகவும் துன்பத்திற்குரியதாகும்'' என்று தமக்குள் பேசிக் கொள்கிறார்கள் அரக்கர்கள்.

இதுவரையிலும் தோல்வியே கண்டிராத அரக்கர்படை இப்போது இராமபிரான் கைகளில் தோல்வியைத் தழுவியதால் இது அழிக்க முடியாத பழி என்றும், எனவே அரக்கர் பிறப்பு என்பது மிகவும் துன்பத்திற்கு உரியது என்றும் கருதுகிறார்கள் என்பதாம்.

Koviloor Digital Library

174. "பண்டு, உலகளித்தவனோடும், பண் அமை
குண்டையின் பாகனும், பிறரும் கூடினார்;
அண்டர்கள் விசும்பினின்று ஆர்க்கின்றாருழைக்
கண்டிலம்; இவன் நெடுமாயக் கள்வனால்" (9555)

(பண்-தவிசு/சேணம்; குண்டை-விடை/ரிஷபம்/எருது/காளை; பாகன்-சாரதி; அண்டர்கள்-தேவர்கள்; விசும்பு-வானம்/ஆகாயம்; உழை-பக்கம்/இடம்; அளித்தல்-உண்டாக்குதல்/படைத்தல்)

''முன்பு இவ்வுலகத்தைப் படைத்தளித்தவனும், அலங்கரிக்கப்பட்ட தவிசில் அமர்ந்து காளையைத் தன் வாகனமாகக் கொண்டு செலுத்தும் சிவபிரானும், மற்றும் இந்திரன் முதலாக உள்ளவர்களும், தேவர்களுடன் சேர்ந்து, ஆகாயத்திலிருந்து ஆரவாரம் செய்கின்றனர்; அவர்களிடையே மும்மூர்த்திகளுள் ஒருவனான திருமாலைக் காண முடியவில்லையே! எனவே இங்கே நின்று நம்முடன் எதிர்த்துப் போர்புரிந்து கொண்டிருக்கும் பெரிய வஞ்சனையும் சூழ்ச்சியும் மிக்க இவன்தான் திருமால்போலும்!'' என்று வியக்கின்றனர் அரக்கர்கள்.

''குண்டை'' என்ற சொல் நமக்குப்புதிது. எருது, காளை என்பது பொருள். தேவர்கள் வானத்தினின்றும் ஆரவாரிப்பது, அரக்கர்கள் எல்லோரும் இறந்துபட்டனர் என்ற மகிழ்ச்சி மிகுதியால் என்க.

175. "கொன்றனன் இனி ஒரு கோடி கோடி மேற்று;
அன்று எனின், பதுமம் அன்று; ஆயின் வெள்ளமா,
நின்றது; நின்று இனி நினைவது என்பிற?
ஒன்று என நினைக" என, வன்னி ஓதினான். (9556)

(மேற்று-மேற்பட்டது; ஓதுதல்-உரைத்தல்)

அரக்கர்கள் இவன் திருமாலே என்ற முடிவுக்கு வந்த பின்னர், ''இவன் கோடிகோடிக்கும் மேற்பட்டு இருந்த நம் அரக்கர்படையைக் கொன்று குவித்து விட்டான். கோடி கோடி இல்லையென்றாலும், பதுமம் என்ற எண்ணிக்கையாவது, அல்லது அதுவும் இல்லை என்றாலும் வெள்ளம் என்ற எண்ணிக்கையில் உள்ள நம் அரக்கர்களைக் கொன்றுவிட்டான். இப்போது நாம் பயனற்றவற்றை நிதானமாக யோசித்துக் கொண் டிருப்பதில் என்ன பயன்? எனவே இனிச் செய்யத்தகுவது ஒன்றே ஒன்று; ஒரே கருத்துடைய செயலையே செய்ய வேண்டும், அதைப்பற்றிச் சிந்தியுங்கள்'' என்றுகூற, வன்னி என்னும் படைத்தலைவன் பின் வருமாறு கூறத்தொடங்கினான்.

கோடிகோடி என்பதும், பதுமம் என்பதும், வெள்ளம் என்பதும் ஒன்றின் ஒன்று மேற்பட்ட பேரெண்ணிக்கையைக் குறிக்கும். கோடி கோடியாய் இருந்த அரக்கர்சேனை பதுமமாகக் குறைந்து, இப்போது வெள்ளம் என்ற

Koviloor Digital Library

அளவில் நிற்கிறது என்று அரக்கர்கள் கூறுகிறார்கள் என்பதாம். ''நின்று இனி நினைவது என் பிற?'' என்ற சொற்றொடருள் ஒரு மிக ஆழமான கருத்து மறைபொருளாகப் பொதிந்து கிடக்கிறது, மற்றவற்றையெல்லாம் பற்றி ஏன் எண்ணவேண்டும்? அந்தத் திருமாலைச் சரணாகதி அடைந்துவிடுவோம் என்பது உட்கருத்து. ''ஒன்று என நினைக'' என்பதும் போர்செய்வதைத் தவிர வேறு ஒரு செயல்தான் உள்ளது என்னும் இதே கருத்தை வலியுறுத்துவதாகக் கொள்ளவேண்டும். ''பிற'' என்பது போர் அல்லாத வேறொன்றைக் குறிக்கும். ''கோடியின் கோடியான குருக்கள் தம்சேனை'' என்பது வில்லிபாரதம்.

176. ''இராமபிரானை எதிர்த்துப் போரிடுதலே தக்கது'' என வன்னி கூறுதல்

''விழித்துமோ, இராவணன் முகத்து மீண்டு, யாம்
பழித்துமோ நம்மை, நாம் படுவது அஞ்சினால்?
அழித்தும் ஓர் பிறப்பு உறா நெறி சென்று அண்ம, யாம்
கழித்தும் இவ் ஆக்கையை, புகழைக் கண்ணுற. (9557)

(படுவது-இறந்துபோவது; அண்முதல்-அடைதல்; கண்ணுறல்-காணுதல்; ஆக்கை-யாக்கை/உடம்பு; கழித்தும்-கழித்து விடுவோம்; அழித்தும்-மீண்டும்)

''நாம் போரில் ஈடுபட்டு இறந்துபடுவதற்கு அஞ்சினால், உயிருடன் மீண்டுசென்று தலைவன் இராவணன் முகத்தில் விழிக்கமுடியுமோ? அல்லது தோல்வியை நினைத்து நம்மை நாமே பழித்துக்கொள்ள முடியுமோ? இரண்டுமே பழிதரும் செயல்கள். மீண்டும் பிறவாநெறியான துறக்கநெறி சென்று அடைய வேண்டுமென்றாலும், புகழைப் பெற வேண்டுமென்றாலும் இப்போது நாம் இந்த உடலைவிட்டு, போரில் இறந்துபடுதலே சாலச் சிறந்ததாகும்'' என்கிறான் வன்னி.

போரில் ஈடுபட்டு இறந்தால் மீண்டும் பிறவாநெறியாகிய வீடுபேறு கிடைக்கும், வீரசுவர்க்கம் அடையலாம். காரணம் இராமபிரானால் போரில் உயிர்துறக்கிறோம். போரில் உயிர் துறக்காது, மீண்டு இலங்கைக்கு உயிருடன் சென்றால் இராவணன் நம்மைப் பழிப்பான்; நம்மை நாமே பழித்துக்கொள்ள வேண்டிவரும். எனவே போரில் ஈடுபட்டு உயிர்துறப்பதே மிக்க நன்மையைத்தரும். அதுதான் நமக்கு நல்ல புகழையும்தரும் என்கிறான் வன்னி என்பதாம். உயிருடன் வாழ்ந்தால் பழி உண்டாகும்; போரில் கொல்லப்பட்டால் புகழ் உண்டாகும். எனவே இவ்வுடம்பை வீழ்த்திப் பிறவாநெறியாகிய வீரசுவர்க்கத்தை அடைந்து புகழினைப் பெறுவோம் என்கிறான் வன்னி என்பதாம். விழித்துமோ, பழித்துமோ என்ற இரு இடங்களிலும் வந்துள்ள ஓகாரம் வினா குறித்தது.

Koviloor Digital Library

''இன்றுளார் நாளை மாள்வார்; புகழுக்கும் இறுதி உண்டோ?'' என்ற இராவணன் கூற்று, இங்கு நினைக்கத்தகும்.

177. "இடுக்கு இனிப் பெயர்ந்து, உறை எண்ணுவேம் எனின்,
அடுத்த கூர் வாளியின் அரணம் நீங்கலோம்,
எடுத்து ஒரு முகத்தினால் எய்தி, யாம் இனிக்
கொடுத்தும் நம் உயிர்'' என, ஒருமை கூறினான். (9558)

(இடுக்கு-சங்கடமான நிலை/துயரநிலை/நெருக்கடியான நிலை; பெயர்த்தல்-ஓடிப்போதல்; அடுத்த-சூழ்ந்துள்ள; அரணம்-அரண்/பாதுகாப்பு/சரக்கூடம்; ஒருமுகம்-ஒரேநோக்கம்; கொடுத்தும்-கொடுப்போம்; ஒருமை-ஒருதலையாக/உறுதியாக; எடுத்தல்-மேற்செல்லுதல்; நீங்குதல்-வெளியேறுதல்)

''இத்தகைய நெருக்கடியான நேரத்தில் போர்க்களத்தை விட்டு நீங்கி வெளிச்சென்று தங்குவோம் என்று கருதுவோமேயானால், நமக்கு அருகாமையில் இருக்கும் கூர்மையான அம்புகளால் ஆன பாதுகாப்புக்குரிய சரக்கூடத்தினின்றும் வெளியேறிச்செல்ல இயலாது. எனவே எல்லோரும் ஒரே நோக்கத்தோடு போர்க்களம் சென்று, நம் உயிரைக் கொடுத்தே நன்றிக்கடனைத் தீர்க்கவேண்டும்'' என்று ஒருதலையாகவும், உறுதியாகவும் கூறினான் வன்னி.

முன்பு அரக்கர்கள்கூறிய யோசனையான இராமபிரானைச் சரணாகதி அடைவோம் என்பதற்கு மாறாக, வன்னி, இராமபிரானை எதிர்த்துப் போர்புரிந்து வீரமரணம் எய்துவதே நாம் இராவணனுக்குச் செலுத்தும் நன்றிக்கடன் என்று உறுதியாகக் கூறுகிறான் என்பதாம்.

178. இளக்க அரு நெடுவரை ஈர்க்கும் ஆறு எலாம்,
அளக்கரின் பாய்ந்தென, பதங்கம் ஆர் அழல்
விளக்கினில் வீழ்ந்தென, விதிகொடு உந்தலால்,
வளைத்து, இரைத்து, அடர்த்தனர், மலையின் மேனியார். (9559)

(இளக்குதல்-அசைத்தல்; ஈர்த்தல்-இழுத்தல்; அளக்கர்-கடல்; பதங்கம்-விட்டில்பூச்சி; ஆர்-நிறைந்த/அடர்ந்த; அழல்-நெருப்புச்சுடர்; விதி-ஊழ்வினை; உந்துதல்-தள்ளுதல்; இரைத்தல்-ஆரவாரித்தல்; அடர்த்தல்-நெருங்கி எதிர்த்தல்; மலையின்-மலைபோன்ற)

அசைத்தற்கே கடினமான பெரிய நீண்ட மலைகளையும் பற்றி இழுத்துச்செல்லும் வலிமைகொண்ட ஆறுகள் எல்லாம் கடைசியாகக் கடலில் சென்று விழுவதைப் போலவும், விட்டில் பூச்சிகள், நெருப்புச் சுடர் மிகுந்த விளக்கில்போய் அகப்பட்டுக் கொண்டு மடிவதுபோலவும், ஊழ்வினை உருத்துவந்து பிடர்பிடித்துத் தள்ளியதால் மலைபோன்ற அசைக்கமுடியாத உடலைக் கொண்ட அரக்கர்கள், இராமபிரானைச் சுற்றி

Koviloor Digital Library

வளைத்து, ஆரவாரம் செய்துகொண்டு, நெருங்கிச்சென்று எதிர்த்துப் போரிடத் தொடங்கினார்கள்.

வன்னி கூறியதற்கு உடன்பட்டு அரக்கர்கள் இராமபிரானை எதிர்த்துப் போரிடத் துணிந்தனர் என்பதாம். இராமபிரானுடன் நேருக்குநேர் சென்ற அரக்கர்களின் நிலையை இரண்டு உவமைகளால் கூறுகிறான் கவிஞன். விளக்கில் விழுந்து மடியும் விட்டில்பூச்சி போலவும், மலைகளுடன் சென்று கடலில் கலக்கும் ஆறுகள் போலவும் இறந்துபடப் போகிறார்கள் என்கிறான் கவிஞன். ''ஈர்த்தல்'' என்பது இழுத்தல் என்ற பொருளைத் தரும். ''இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து, என் உளம் உருக்கி'' என்பது திருவாசகம்.

179. மழு, எழுத்தண்டு, கோல், வலயம், நாஞ்சில், வாள்,
எழு, அயில், குந்தம், வேல், ஈட்டி, தோமரம்,
கழு, இகல் கப்பணம், முதல கைப்படை,
தொழுவினில் புலி அனான் உடலில் தூவினார். (9560)

(கோல்-அம்பு; இகல்-வன்மை; தொழு-மாட்டுத்தொழுவம்; தண்டு-கதை; நாஞ்சில்-கலப்பை; எழு-கணையம்; அயில்-கூர்மை; தூவுதல்-வாரியிறைத்தல்; கப்பணம்-நெருஞ்சிமுள்; மழு-கோடரி; குந்தம்-எறிகோல்)

அரக்கர்கள், மழுவாயுதம், தண்டாயுதம், அம்பு, வலயம், கலப்பை, வாட்படை, கணையம், கூர்மையான குந்தம் எனும் ஆயுதம், வேல், ஈட்டி, தோமரம், கழு, வலிய கப்பணம் என்னும் வீசப்படும் ஆயுதங்களை மாட்டுத் தொழுவத்தில் நிற்கும் புலியைப் போன்றவனான இராமபிரான் மேல் வாரி இறைத்தார்கள்.

ஒரே செய்யுளில் 13வகையான எறிபடைகளைக் குறித்த விதம் நோக்குக. மாட்டுத்தொழுவம் புகுந்த புலி என்பதில் புலி இராம பிரானுக்கும், மாடுகள் அரக்கர்களுக்கும் உவமை. இப்பொழுது இராமபிரான்கட்டிய சரக்கூடத்திற்குள்அகப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் அரக்கர்கள்தான். எனவே இங்கே சரக்கூடத்தை மாட்டுத்தொழுவத்திற்கு உவமைப்படுத்தினால் மாடுகள் அரக்கர்களாகவும், அதனுள்ளே அதனை அழிக்கப்புகுந்த புலியாக இராமபிரானையும் உவமைப்படுத்திக் கொள்ளலாம் என்றாலும் படைகளை வீசியெறிந்தவர்கள் அரக்கர்கள்தான் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். ''கப்பணம்'' என்பது இரும்பால் செய்யப்பட்ட நெருஞ்சிமுள் போன்ற ஒரு ஆயுதமாகும்.

180. காந்தருப்பம் எனும் கடவுள் மாப்படை,
வேந்தருக்கு அரசனும் வில்லின் ஊக்கினான்;
பாந்தளுக்கு அரசு என, பறவைக்கு ஏறு என,
போந்து உருத்தது, நெருப்பனைய போர்க்கணை. (9561)

Koviloor Digital Library

(ஊக்குதல்-எய்தல்; பாந்தள்-பாம்பு; ஏறு-தலைமைக் குணமுடையவன்; உருத்தல்-சீறுதல்; போந்து-சென்று)

கந்தர்ப்பம் என்று கூறப்படுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய பெருமைமிக்க படைக்கலனை, மன்னர்மன்னனான இராமபிரான், தன் வில்லில் தொடுத்துச் செலுத்தினான். அந்த நெருப்பைப்போன்று போர்செய்யும் ஆற்றல்மிகுந்த அம்பு, பாம்புகளுக்கு அரசனான ஆதிசேஷன் போலவும், பறவைகளுக்கு அரசனான கருடன் போலவும் சீறிச்சென்று அரக்கர்களிடம் அச்சத்தை விளைவித்துத் தாக்கியது.

வேந்தருக்குஅரசன்என்பது சக்கரவர்த்தி என்றும் ராஜாதிராஜன் என்றும் பொருள்படும். ''கந்தருப்பம்'' என்பது கந்தர்வாஸ்திரத்தைக் குறிக்கும். கந்தர்வர்களோடு தொடர்பு கொண்ட ஒரு ஆயுதம் என்க. ''அரசு'', என்பதும் ''ஏறு'' என்பதும் தலைவன் என்ற பொருளைத்தரும்.

181. கந்தர்ப்ப அஸ்திரத்தின் தோற்றம்

மூன்று கண் அமைந்தன; ஐம் முகத்தன;
ஆன்றமெய் தழலன; புனலும் ஆடின;
வான் தொட நிமிர்வன; வாளி மா மழை
தோன்றின, புரம்சுடும் ஒருவன் தோற்றத்த. (9562)

(ஆன்ற-நிறைந்த; தழல்-நெருப்பு; புனல்-கங்கைநீர்; ஆடுதல்-தோய்தல்; ஒருவன்-ஒப்பற்றவன்; தோற்றம்-காட்சி; கண்-முனை/நுனி; முகம்-முனை; புரம்-முப்புரம்)

அந்தக் கந்தர்ப்ப அஸ்திரம் என்பது மூன்று கண்களைக் கொண்டது; ஐந்து முகங்களைக் கொண்டது; நெருப்பால் ஆகிய நிறைந்த உருவத்தைக் கொண்டது; கங்கை நீரில் தோயப்பெற்றது; விண்ணைத் தொடுமளவு உயர்ந்தது; அந்த அம்புகளின் தொகுதி, முன்பு முப்புரங்களைச்சுட்டு எரித்த ஒப்பற்ற சிவபெருமானின் வடிவைப்போலக் காட்சியளித்தது.

இந்தக் கந்தர்ப்பம் என்னும் அஸ்திரம் பலவகையான, மிகுதியான அம்புத்தொகுதிகளைக் கொண்டது எனப் பெறப்படுகிறது. மூன்று கண்களும், ஐந்து முகங்களும், எரிபோல் மேனியும், ஆகாயகங்கை சூடியும், வானளாவ உயர்ந்தும் இருப்பது சிவபெருமானின் தோற்றம் என்பதை நாம் அறிவோம். இங்கே கவிஞன், கந்தர்ப்ப அஸ்திரத்திற்குச் சிவபெருமானின் தோற்றத்தை சிலேடைவகையால் பொருத்திக் காண்பிக்கிறான். முன்பாடலில் திருமாலின் ஆதிசேஷனுக்கும், கருடனுக்கும் பொருத்திக் காண்பித்த கவிஞன், இந்தப் பாடலில் சிவபெருமான் தோற்றத்திற்கும் பொருத்திக் காண்பிப்பதால் கவிஞனுடைய சமயச் சார்பின்மை புலனாகும்.

Koviloor Digital Library

இங்கே அஸ்திரத்திற்குக் கூறும்பொழுது, ''கண்'' என்பதும் ''முகம்'' என்பதும் முனை, நுனி, என்ற ஒரேபொருளைத்தரும். சிவபெருமானுக்குக் கூறும்பொழுது, சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று கண்களையும், அகோரம், ஈசானம், வாமனம், தத்புருடம், சத்தியோசாதம் என்ற ஐந்து முகங்களையும் குறிக்கும். ''முழுத்தழல் மேனி'', ''எரிபோல் மேனிப்பிரான்'' என்பது தேவாரம்.

182. மூலபலச்சேனை அழிந்தொழிதல்

அய் இரு கோடியர் அரக்கர் வேந்தர்கள்
மொய் வலி வீரர்கள், ஒழிய முற்றுற,
"எய்" எனும் மாத்திரத்து, அவிந்தது என்பரால்,
செய் தவத்து இராவணன் மூலச்சேனையே. (9563)

(ஐஇருகோடி-பத்துக்கோடி; மொய்-நெருங்கிய; முற்றுற- முழுவதும்; அவிதல்-அழிதல்; என்பர்-என்று கூறுவார்கள்; வேந்தர்கள்-படைத் தலைவர்கள்)

பத்துக்கோடி என்னும் அளவினராகிய அரக்கர்படைத் தலைவர்கள், மற்றும் மிக்க வலிமைபடைத்த அரக்கவீரர்கள், இராவணன் அரிதின் முயன்று செய்த தவத்தின் பயனால் அடையப்பெற்ற மூலபலச்சேனை, இவை எல்லாம் முற்றமுழுக்க அழிந்துபோகும் வண்ணம் ''ஏ'' என்று கூறும் ஒரு சிறு காலப் பொழுதிற்குள் அழிந்துபோயிற்று என்று பெரியோர் கூறுவார்கள்.

''ஏ'' என்பது ''எய்'' எனக் குறுகியது எதுகைநோக்கி என்க. இராவணன் செய்த கடுந்தவம் பற்றியும், அவன் பெற்ற வரங்கள் பற்றியும் உத்தரகாண்டம் மிக விரிவாகப் பேசுகிறது.

183. மாப் பெரும் தீவுகள் ஏழும், மாதிரம்
பாப்பு அரும் பாதளத்து உள்ளும், பல்வகைக்
காப்பு அரு மலைகளும், பிறவும் காப்பவர்,
யாப்புறு காதலர் இராவணற்கு அவர். (9564)

(மா-பெரிய; மாதிரம்-திசைகள்; பாப்பு-பாம்பு; யாப்பு-தொடர்ச்சி/ பிணிப்பு; காதலர்-பேரன்புடையவர்கள்) (குளகப்பாடல்)

மிகப்பெரிய ஏழு தீவுகளையும், எட்டுத் திசைகளையும், பாம்புகள் வசிக்கின்ற கிட்டுதற்கரிய பாதாள உலகத்தையும், பாதுகாத்தற்கரிய பல வகைப்பட்ட மலைகளையும், இன்னும் பிற இடங்களையும் பாதுகாப்ப வர்கள், இராவணனுக்கு ஏழு பிறப்புக்களிலும் தொடர்ந்து அன்பால் பிணிக்கப் பட்டவர்களாவார்கள் - பாடல் தொடர்கிறது.

Koviloor Digital Library

ஏழுதீவுகள், சாகம், குசை, இலவம், கிரௌஞ்சம், பவளம், கந்தமாதனம், மலயம், புட்கரம், இறலி முதலியன (சில பெயர்களில் மாற்றம் உண்டு) ''பாம்பு'' என்பது இரண்டாம் அடியில் ''பாப்பு'' என எதுகைநோக்கித் திரிந்து நின்றது. ''யாப்பு'' என்பது பிணைத்தலைக் குறிக்கும். இராவணனுக்கு உலகெங்கிலும் தவிர்க்கமுடியாத காதலர்கள் - நண்பர்கள் இருந்தார்கள் என்பது பெறப்படுகிறது. அதுவே ''யாப்புறு காதலர்'' எனப்பட்டது என்க.

184. மாத்தட மேருவை வளைந்த வான்சுடர்
கோத்து அகல் மார்பிடை அணியும் கொள்கையார்,
பூத் தவிசு உகந்தவன் புகன்ற பொய்அறு
நாத் தழும்பு ஏறிய வரத்தர், நண்ணினார். (9565)

(தட-பெரிய; வளைதல்-சூழ்தல்; வான்-சிறந்த; சுடர்-சூரிய சந்திரர்கள்; கொள்கை-தன்மை/இயல்பு; பூ-தாமரைமலர்; தவிசு-இருக்கை/இருப்பிடம்; நண்ணுதல்-சேர்தல்/அடைதல்)

மிகப்பெரிய மலையான மேருமலையையே எப்பொழுதும் சுற்றிவருகின்ற சிறந்த சுடர்களாகிய சூரியனையும், சந்திரனையும் ஒன்றாக இணைத்து மாலையாக்கித் தங்கள் அகன்ற மார்பில் அணிந்து மகிழும் இயல்புடைய அரக்கர்களும், தாமரைமலரையே தனக்குரிய இருப்பிட மாக உவந்து ஏற்றுக்கொண்டவனுமாகிய பிரமதேவன் கூறியருளிய பொய்ம்மை கலவாத மெய்ம்மையே நிறைந்த மந்திரங்களை நாள்தோறும் உச்சரித்து நாத் தழும்பு ஏறிப்போனவர்களும், அவனிடமிருந்து அளவற்ற வரங்களைப் பெற்றவர்களுமான அரக்கர்கள், இராவணனது கட்டளைக் கிணங்கப் போர்க்களத்தை வந்து அடைந்தார்கள்.

சூரியனும் சந்திரனும் நாள்தோறும் மேருமலையைச் சுற்றி வலம்வருகின்றன என்பது ஒரு புராணக்குறிப்பு.

185. "நம்முள் ஈண்டு ஒருவனை வெல்லும் நன்கு எனின்,
வெம்முனை, இராவணன்தனையும் வெல்லுமால்;
இம்மென உடன் எடுத்து எழுந்து சேறுமோ?
செம்மையில் தனித்தனி செய்துமோ செரு?" (9566)

(ஈண்டு-இங்கு; செம்மை-நேர்மை; செரு-போர்; செய்தும்-செய்வோம்)

மூலபலச்சேனையில் அல்லாத, இப்பொழுது இங்கு வந்து சேர்ந்துள்ள அரக்கர்கள் ''இப்பொழுது இங்கும் நம்மவருள் ஒருவனை இந்த இராமபிரான்போரிட்டு முற்றமுழுக்க வெற்றி பெற்றுவிட்டான் என்றால், கொடிய போர்க்களத்தில் இராவணனையும் எளிதாக வென்றுவிடுவான்; எனவே இப்பொழுது நாம் நொடிப்பொழுதில் கிளர்ந்தெழுந்து

Koviloor Digital Library

எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சென்று போர்புரிவோமா? அல்லது போர்நெறிப்படி தனித்தனியாகச் சென்று அவனுடன் நேருக்குநேர் நின்று போர்புரிவோமா?'' என்று தமக்குள் கேட்டுக்கொள்கிறார்கள்.

இதேபோல முன்பும், கும்பகருணன் தன்னை இராமஇலக்குவர் வென்றுவிட்டார்கள் என்றால் இராவணனையும் வென்றுவிடுவார்கள் என்று கூறியதையும் இங்கு ஒப்புநோக்குக. ''ஈண்டு'' என்பது இப்பொழுது, இங்கு என்று காலத்தையும், இடத்தையும் குறிக்கும் எனக் கொள்க. ''இம்மென'' என்பது விரைவுக்குறிப்பு. ஒருநொடிப் பொழுதில் என்பது பொருள். ''சேறுமோ'' என்பது செல்+தும் என்பதன் புணர்ச்சி. அரக்கர்கள் என்றாலும் போர்அறம் புரிந்தவர்கள்; கடைப்பிடிப்பவர்கள் என்பது புலனாகிறது. எனவேதான் யுத்த தர்மப்படி தனித்தனி சென்று நேருக்குநேர் நின்று போர்செய்வோமா என்று கேட்கிறார்கள் என்பதை உணர்க. ''நன்கு வெல்லுதல்'' என்பது முற்றமுழுக்க வெற்றி கொள்வதைக் குறிக்கும். அரக்கர்கள் தமக்குள் கேட்டுக் கொண்டனர் என்பதும், அரக்கர்கள்படைத்தலைவன் வன்னியைக் கேட்டனர் என்பதும் இரண்டும் பொருந்தும். ''செம்மை'' என்பது நடுவுநிலைமையைச்சுட்டிப் போர்அறத்தைக் குறிக்கும். இவர்கள் மூலபலத்தானையைச்சேர்ந்தவர்கள் அல்லர். இப்போது புதிதாகப் பல தீவுகளிலிருந்தும் பாதாளத்திலிருந்தும் வந்தவர்கள் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

186. "எல்லோம் எல்லோம் ஒன்றி வளைந்து, இந்நெடியோனை
வல்லே வல்ல போர்வலி முற்றி மலையோமேல்,
வெல்லோம், வெல்லோம்" என்றனன், வன்னி; மிடலோரும்,
"தொல்லோன் சொல்லே நன்று" என, அஃதே துணிவுற்றார். (9567)

(ஒன்றி-ஒன்றாகத் திரண்டு; மலைதல்-போர்செய்தல்; மிடல்-ஆற்றல்; தொல்லோன்-மிகப்பழமையானவன்; வல்லே-விரைவாக)

''எல்லோரும் எல்லோரும் ஒன்று திரண்டு இப்பெரியோனான இராம பிரானைச் சுற்றி வளைத்து விரைவாக நாம் கற்ற போர் வலிமையை யெல்லாம் முழுவதும் காட்டிப் போர் செய்யவில்லையென்றால் நாம் இவனை வெல்லமுடியாது, வெல்லமுடியாது'' என்று வன்னி கூறினான். அதனைக்கேட்ட, ஆற்றல்பெற்ற மற்ற அரக்கவீரர்களும் ''மிகப் பழமையான சேனாதிபதியாகிய வன்னி கூறுவதே நன்மை பயக்கும்'' என்று கருதி, அதற்கு உடன்பட்டு, அவ்வாறே செய்யத் துணிந்தார்கள்.

''எல்லோம் எல்லோம்'' என்ற அடுக்கும் ''வல்லோம் வல்லோம்'' என்ற அடுக்கும் போர்வீரர்களை ஊக்குவிப்பதற்காகத் திருப்பித்திருப்பிச் சொல்லப்படும் ஒரு யுத்தி எனக்கொள்க. ''நெடியோன்'' என்பது இங்கு சாதாரணப் பொருளையேதரும். ''தொல்லோன்'' என்ற சொல் மூத்தவன்

Koviloor Digital Library

என்ற பொருளிலும் போர்த்தொழிலில் நெடுங்காலம் பழகியவன் என்ற பொருளிலும் தளபதி வன்னியைக் குறிக்கும்.

187. அன்னார் தாமும், ஆர்கலி ஏழும் என ஆர்த்தார்;
''மின்ஆர் வானம் இற்று உறும்'' என்றே, விளி சங்கம்
கொன்னே ஊதி, தோள்புடை கொட்டிக்கொடு சார்ந்தார்.
''என் ஆம் வையம்? என்படும் வானம்? திசை ஏதாம்?'' (9568)

(அன்னார்-அத்தகைய அரக்கர்கள்; ஆர்கலி-கடல்; மின்-மின்னல்; ஆர்-பொருந்திய; இற்றுஉறும்-இடிந்துவிழும்; விளித்தல்-அழைத்தல்; கொன்-அச்சம்; புடை-இடம்; சார்தல்-எதிர்செல்லுதல்; வையம்-உலகம்; ஆம்-ஆகும்; ஏது-எத்தன்மையது)

அவ்வாறு செய்யத்துணிந்த அரக்கர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, இவ்வுலகிலுள்ள ஏழு கடல்களும் ஒருங்கே சேர்ந்து ஒலியெழுப்புவது போலப் பேராரவாரம் செய்தனர்; மின்னல் பொருந்திய வானம் இடிந்து விழுந்து விடுமோ என்று கூறும் வண்ணம், போருக்கு அழைக்கின்ற போர்ச்சங்கை எடுத்துக் கேட்பவர்கள் அச்சம்கொள்ளுமாறு ஊதிக் கொண்டு, தங்கள் தோள்களையெல்லாம் தட்டிக்கொண்டு, இராமபிரான் எதிர் சென்று சேர்ந்தனர்; இதனைக் கண்டவர்கள் ''ஐயோ! இனி இந்த உலகம் என்னஆகும்? வானுலகம் என்னபாடுபடும்? திசைகளுக்கெல்லாம் என்ன நேரும்?'' என்று தம் அச்சக்குறிப்பை வெளிப்படுத்தினார்கள்.

எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருப்பதால் ''ஆர்கலி'' என்பது கடலுக்குக்காரணக்குறி. ''ஆம்'' என்பது ''ஆகும்'' என்பதன் இடைக்குறை எனக்கொள்க. ''விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?'' என்பது திருப்பாவை-6.

188. ஆர்த்தார் அன்னார்; அன்ன கணத்தே, அவர் ஆற்றல்
தீர்த்தானும், தன் வெஞ்சிலை நாணைத் தெறிப்புற்றான்;
போர்த்தான் பொன்தோள்; முற்றும் அளந்தான் பிறழ்சங்கம்
ஆர்த்தால் ஒத்தது, அவ்வொலி, எல்லா உலகுக்கும். (9569)

(பொன்-அழகிய; பிறழ்தல்-விளங்குதல்; தீர்த்தல்-போக்குதல்)

அவ்வாறு பேராரவாரம் செய்த அந்த அரக்கர்களை இதுவரையிலும் அவர்களின் வலிமையெல்லாம் போக்கி வெற்றி கண்டவனான இராம பிரானும், தன்னுடைய கொடிய வில்லின் நாணைத் தெறிக்கலுற்றான். அப்பொழுது எழுந்த பேரொலி முன்பு திரிவிக்கிரமாவதாரத்தில் திருமால் தன் அழகிய திருவடிகளை எடுத்து, இம்மூவுலகங்களையும் முற்றமுழுக்க அளந்தபோது தன் கையிலிருந்த சங்குப்படை எழுப்பிய பேரொலிபோல் எல்லா உலகுக்கும் கேட்கும் பேரோசைபோல் இருந்தது.

Koviloor Digital Library

திருமால் திரிவிக்கிரம அவதாரத்தின்போது எழுப்பிய சங்கின் ஒலி எப்படி இவ்வுலகம் முழுமைக்கும் கேட்டதோ, அதுபோல, இப்போது இராமபிரான் எழுப்பிய வில்லின் நாண்ஒலி எல்லா உலகங்களுக்கும் கேட்டது என்பதாம். திருமாலின்சங்கொலிக்கு இராமபிரானின் நாணொலி ஒப்பு.

189. பல்லாயிர கோடியர்; பல்படை நூல்
வல்லார்; அவர் மெய்ம்மை வழங்க வலார்;
எல்லா உலகங்களும் ஏறிய போர்
வில்லாளர்; அரக்கரின் மேதகையார். (9570)

(மேதகை-மேலான தகுதி; வழங்குதல்-செலுத்துதல்; ஏறிய-பொருந்திய)

இப்பொழுது தீவுகளினின்றும் அழைத்து வரப் பட்டிருக்கின்றவர்கள் எண்ணிக்கையில் பல ஆயிர கோடிக்கணக்கானவர்கள். போர்முறை கூறும் பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள்; இவர்கள் போரில் உண்மையான நெறியில் நின்று வழுவாது படைக்கலன்களைச் செலுத்தும் இயல்பு உடையவர்கள். எல்லா உலகங்களிலும் சென்று போர்செய்த மேம்பட்ட வில்லாற்றல் உடையவர்கள்; அரக்கர்களிலேயே இவர்கள் மேன்மையான தகுதி படைத்தவர்கள்.

இப்பொழுது வந்திருக்கின்ற அரக்கவீரர்களின் எண்ணிக்கை, நூல் அறிவு, நன்னெறி, புகழ், வில்லாற்றல், தகுதி முதலியன பேசப்பட்டிருக் கிறது. ''பல்கலை நூல்'' என்பது போர்க்கலை, தனுர்வேதக்கலை எனப் பலவகைப்பட்ட நூல்களைக் குறிக்கும். ''ஏறுதல்'' என்பது புகழ் மேம்பட்டவர்கள் என்பதைக் குறிக்கும்.

190. வென்றார் உலகங்களை விண்ணவரோடு
ஒன்றா உயர் தானவர் யூகம் எலாம்;
கொன்றார் நிமிர் கூற்றுஎன, எவ்வுயிரும்
தின்றார்; எதிர்சென்று செறிந்தனரால். (9571)

(ஒன்றா-ஒருசேர; யூகம்-வியூகம்/சேனையின் அணிவகுப்பு; செறிதல்-நெருங்குதல்; தானவர்-அசுரர்/அரக்கரில் ஓர் இனத்தவர்)

இவ்வுலகங்களையெல்லாம் வெற்றி கொண்டவர்கள் இவ்வரக்க வீரர்கள்; வானுலகத்துத் தேவர்களோடு தங்களுக்குப் பங்காளிகளான அசுரர்களையும், அவர்களின் சேனை அணிவகுப்பையும் ஒருசேரக் கொன்றவர்கள்; ஓங்கி எழுகின்ற இயமனைப்போல, எல்லா உயிரினங்களையும் கொன்று தின்னும் வலிமையுடையவர்கள். இப்போது இராமபிரான் எதிர் சென்று நெருங்கி நிற்கிறார்கள்.

Koviloor Digital Library

''தின்றார்'' என்பது ''பருகுதல்'' என்பதைப்போல மரபு வழுவமைதியாகக் கொள்க.

191. வளைத்தார் மதயானையை; வன் தொழுவில்
தளைத்தார் என, வந்து, தனித்தனியே
உளைத்தார் உரும் ஏறு என; ஒன்றுஅல போர்
விளைத்தார்; இமையோர்கள் வெதும்பினரால். (9572)

(உரும்ஏறு-பேரிடி; விளைத்தல்-செய்தல்; இமையோர்கள்-தேவர்கள்; உளைத்தல்-முழங்குதல்; தொழு-தொழுவம்/யானைக்கூடம்; தளைத்தல்-பிணித்தல்; வளைத்தல்-சூழ்ந்துகொள்ளுதல்; வெதும்புதல்-புழுங்குதல்)

அவ்வாறு வந்த அரக்கவீரர்கள் மதச்செருக்குக் கொண்ட யானையை அதன் வலிய தொழுவத்தில் பிணிப்பதுபோல, இராமபிரானைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டவராய், ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பேரிடி போலப் பேராரவாரம் செய்துகொண்டு, ஒருதன்மைத்தல்லாமல் பலவகைப்பட்ட போர்முறைகளைக் கையாண்டார்கள். இதனைக் கண்ணுற்ற தேவர்கள் மனக்கலக்கம் கொண்டனர்.

இராமபிரானுக்கு மதம்கொண்ட யானை ஒப்பு.

192. விட்டீய வழங்கிய, வெம்படையின்
சுட்டீய நிமிர்ந்த சுடர்ச் சுடரும்,
கண் தீயும், ஒருங்கு கலந்து எழலால்,
உள் தீ உற வெந்தன, ஏழ் உலகும். (9573)

(விண்தீய-விட்டீய/ஆகாயம் தீயும்படி; வழங்கிய-செலுத்திய; சுட்டு+ஈய-சுட்டீய/சுடுதலைச் செய்ய; உறுதல்-பற்றுதல்; வெந்தன-வெதும்பின; சுடர்-ஒளி/நெருப்பு)

அந்த அரக்கவீரர்கள் ஆகாயமே எரிந்து விழும்படி, கொடிய படைக் கலங்களைச் செலுத்துவதால் எழுந்த ஒளிமிக்க நெருப்பு ஜ்வாலையும், அரக்கர்கள் சினத்தால் விழித்துப் பார்க்கும்போது எழுந்த சினத்தீயும் ஒன்று கலந்து ஏழு உலகங்களிலும் உள் புகுந்து, மேலோங்குதலால், அவ்வேழு உலகங்களும் வெந்து சாம்பலாய்ப் போயின.

193. தேர் ஆர்ப்புஒலி, வீரர் தெழிப்பு ஒலியும்,
தார் ஆர்ப்பு ஒலியும், கழல் தாக்கு ஒலியும்,
போர் ஆர் சிலை நாணி புடைப்பு ஒலியும்,
காரால் பொலியும் களிறு ஆர்ப்பு ஒலியும். (9574)

Koviloor Digital Library

(ஆர்ப்பு-ஆரவாரம்; தெழித்தல்-உரப்புதல்/அதட்டுதல்; தார்-கிண்கிணிமாலைகள்; தாக்குதல்-மோதிக்கொள்ளுதல்; புடைத்தல்-அடித்தல்/தெறித்தல்; கார்-கருமைநிறம்)

அந்தப் போர்க்களத்தில், தேர்கள் ஊர்ந்து செல்லும்போது எழுகின்ற ஆரவார ஓசையும், அரக்கவீரர்கள் அதட்டி எழுப்புகின்ற ஓசையும், கிண்கிணி மாலைகளின் சுகமான ஓசையும், வீரர்களுடைய வீரக்கழல்கள் ஒன்றோடொன்று உராய்ந்து மோதிக் கொள்வதனால் எழும் ஓசையும், போர்க்களத்தில் நிறைந்திருக்கின்ற வில்லில் எழுப்பப்படும் நாண் தெறித்தலால் உண்டாகும் குணத்வனியாகிய ஓசையும், கரியநிறம் வாய்ந்த, மேகம் போன்று அழகாகப் பொலிந்து விளங்கும் யானைகள் பிளிற்றுகின்ற ஓசையும், மிகுதியாகக் கலந்திருந்தன.

194. இராமபிரான் அவர்களை எதிர்த்துப் போர் செய்தல்

''எல்லாரும் இராவணனே அனையார்,
வெல்லா உலகு இல்லவர்; மெய்வலியார்;
தொல்லார் படை வந்து தொடர்ந்தது'' எனா,
நல்லானும் உருத்து, எதிர் நண்ணினனால். (9575)

(மெய்-உடல்; தொல்லார்-பழமையானவர்கள்; நல்லான்-நற்குண முடையோன்; உருத்தல்-வெகுள்தல்)

இப்பெரும் படையில் உள்ளவர்கள் அனைவருமே ஒவ்வொருவரும் இராவணனைப்போன்ற வலிமையும், தோற்றமும் உடையவர்கள்; இவர்கள் வெற்றியடையாத உலகங்களே இல்லை; இவர்கள் உண்மை யிலேயே உடல்வலி படைத்தவர்கள்; இத்தகைய பழமையானவர்கள் நிறைந்த பெரும்படை வந்து தன்னைத் தொடர்ந்து வருவதை எண்ணி, நற்குணங்கள் பொருந்தப் பெற்றவனான இராமபிரானும் சினம்கொண்டு, அவர்களை எதிர்த்துப் போரிடுவதற்காக அவர்களை நெருங்கினான்.

''வெல்லா உலகு இல்லவர்'' என்ற இரு எதிர்மறைச் சொற்களைத் தந்து, இவர் எல்லா உலகங்களையும் வென்றவர்கள் என்ற உடன்பாட்டுப் பொருளைப் பெறவைத்த கவிநயம் நோக்குக. அரக்கர்களை ''மெய் வலியார்'' என்றும் ''எல்லோரும் இராவணனே'' என்றும்கூறி, இராம பிரானை ''நல்லான்'' என்று வேறுபடுத்திக் கூறிய பாங்கு நோக்குக. ''தொல்லார்'' என்பது மிகப்பழமையானவர்கள் என்ற பொருளைத்தரும். முன்பும், ''பாவம் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்'' என்று கூறியதையும் ஒப்புநோக்குக.

Koviloor Digital Library

195. ஊழிக் கனல் போல்பவர், உந்தின போர்
ஆழிப் படை அம்பொடும் அற்று அகல,
பாழிக் கடைநாள் விடு பல் மழைபோல்,
வாழிச் சுடர் வாளி வழங்கினனால். (9576)

(கடைநாள்-ஊழியிறுதிக்காலம்; உந்துதல்-வீசுதல்/எறிதல்; ஆழி-கடல்; அறுதல்-துண்டிக்கப்படுதல்; பாழி-வன்மை; விடுதல்-பெய்தல்; வாழி-வாழ்தற்குரியது; சுடர்-ஒளி)

ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் வட அனல் போல் விழிக்கும் விழிகளையுடையவர்களான அரக்கவீரர்கள் செலுத்துகின்ற போர்க்குரிய கடல்போன்ற மிகுந்த படைக்கலங்களெல்லாம், அவர்கள் செலுத்திய அம்புகளுடனே துண்டிக்கப்பட்டுக் கீழே விழும்படி, வன்மைமிக்க ஊழி இறுதிக்காலத்தில் பெய்கின்ற பெருமழையைப்போல், என்றும் அழியாத, ஒளிமிக்க அம்புகளை இராமபிரான் அரக்கர்கள்மீது செலுத்தினான்.

ஊழிக்கனல் என்பது வடவைத்தீயைக் குறிக்கும். ஆழிப்படை என்பது நேர்பொருளாகச் சக்கராயுதத்தைக் குறிக்காது; அரக்கர்களிடம் ஏது சக்கராயுதம்? கடல்போன்ற மிகுதியான படைக்கலங்கள் என்ற பொருளையே தரும். ''வாழி'' என்பதை அசைச்சொல்லாகவும் கொள்ளலாம். என்றும் அழிதல் இல்லாது தொடர்ந்து வருகின்ற என்ற பொருளையும் கொள்ளலாம். எத்தன்மையாலும் குறைவுபடாது, பெருகிக்கொண்டே இருக்கும் தன்மையை ''வாழி'' எனக் கூறலாம். அரக்கர்களுக்கு ஊழிக்கனல், அழிக்கின்ற பேராற்றலால், உவமை. ''பல்மழை'' என்பதும் சற்று சிந்திக்கத்தக்கது. நீர்மழை, நெருப்புமழை, கல்மழை எனப் பலவகை மழையைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும்.

196. சூரோடு தொடர்ந்த சுடர்க்கணைதான்
தாரோடு அகலங்கள் தடிந்திடலும்,
தேரோடு மடிந்தனர், செங்கதிரோன்
ஊரோடு மறிந்தனன் ஒத்து, உரவோர். (9577)

(சூர்-கொடுந்தன்மை; தார்-மாலை; அகலம்-மார்பு; தடிதல்-அறுத்தல்/பிளத்தல்; உரவு-மனத்திண்மை; ஊர்-ஊர்கோள்; மடிதல்-இறந்துபடுதல்; செங்கதிரோன்-சூரியன்; மறிதல்-விழுதல்)

இராமபிரானால் செலுத்தப்பட்ட கொடுந்தன்மையோடு வலிமையும் பொருந்திய, ஒளிமிக்க அம்புகள், அரக்கர்படையில் உள்ளவர்கள் அணிந்திருக்கும் மலர்மாலையோடு, அவர்கள் மார்பையும் அறுத்து, ஊடுருவிச் சென்றதும், சிவந்த கதிர்களை உடைய சூரியன் தன்னைப் பற்றிய ஊர்கோளோடு சேர்ந்து கீழே வீழ்வதைப்போல, வலிமைமிக்க அரக்கர்கள் தாம் ஏறிவந்த தேர்களோடும் மடிந்து தரையில் விழுந்தனர்.

Koviloor Digital Library

''சூர்'' என்பது வலிமையைக் குறிக்கும். கொடுந் தன்மையைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அரக்கர்களின் தேர்ப்படைக்கு ஊர்கோளும், அதைச் செலுத்திவந்த வீரர்களுக்குச் சூரியனும் உவமைகள்; ''உரவு'' என்ற சொல்லுக்கு மனத்திண்மை என்பது சரியான பொருள், உடல் வலிமை எனவும் பொருள்கொள்ளலாம். இராமபிரானின் ஒளிமிக்க அம்புக்குச் சூரியனும், அரக்கர்களின் மார்பில் திகழும் மாலைக்கு ஊர்கோளும் உவமை.

197. கொல்லோடு சுடர்க் கணை கூற்றின் நிணப்
பல்லோடு தொடர்ந்தன பாய்தலினால்,
செல்லோடு எழு மா முகில், சிந்தினபோல்,
வில்லோடும் விழுந்த மிடல் கரமே. (9578)

(கொல்-கொல்லும்தொழில்; சுடர்-ஒளி; கரம்-கைகள்; மிடல்-வலிமை; செல்-இடி/மின்னல்; முகில்-மேகம்; நிணம்-கொழுப்பு)

கொல்லும் தன்மையுள்ள ஒளிமிக்க இராமபிரானது அம்புகளும், இயமனது கொழுப்புப் பொருந்திய பற்களும், ஒருசேர அரக்கர் உடம்பில் தாக்குவதனால், அவர்களுடைய வலிமைமிக்க கைகள், இடியுடன்கூடிய மின்னலோடு எழுகின்ற பெரிய மேகங்கள்தரையில் சிந்தி விழுவதுபோல, அவர்கள் கையில் பிடித்திருந்த வில்லோடு விழுந்தன.

''செல்'' என்ற சொல்லுக்கு இடி என்பதுதான் நேர்பொருள் என்றாலும், இங்கு இடியுடன் கூடிய மின்னலைக் குறித்தது எனக்கொள்க. அரக்கருடைய கரிய கைகளுக்குக் கரிய மேகமும், அவர்கள் கைகளில் கொண்டிருந்த ஒளிமிக்க வில்லுக்கு ஒளிமிகுந்த மின்னலும் உவமை.

198. செம்போடு உதிரத்திரை ஆழியின் வாய்,
வெம்பு ஓடு அரவக்குலம் மேல் நிமிரும்
கொம்போடும் விழுந்தன ஒத்த, குறைந்து,
அம்போடும் விழுந்த அடல் கரமே. (9579)

(செம்பு-செந்நிறம்; அடல்-வலிமை; வெம்புதல்-சீறுதல்; அரவக் குலம்-பாம்புக்கூட்டம்; கொம்பு-மரக்கிளைகள்; குறைதல்-அறுபடுதல்)

சிவந்த நிறம்கொண்ட செம்பினை ஒத்த இரத்த அலைகள் நிறைந்த கடலினிடத்து, இராமபிரான் செலுத்திய அம்பினால் அறுபட்டு விழுந்த அரக்கர்களின் வலிமை மிகுந்த கைகள், சீறிப்பாய்ந்து செல்லும் பாம்புக் கூட்டம், மேல் நிமிர்ந்து நிற்கின்ற மரக்கிளைகளோடும் கடலில் விழுந்ததைப் போன்று விழுந்தன.

''செம்பு'' என்பது சிவந்த நிறமுடைய இரத்தத்தைக் குறித்தது. இரத்தக் கடல் என்பதைக் கவிஞன் ''செம்போடு உதிரத்திரை ஆழி'' என்கிறான்

Koviloor Digital Library

என்க. மரக்கிளைகளோடு விழுந்த பாம்புக் கூட்டத்திற்கு அம்புகளோடு விழுந்த அரக்கர் கைகள் உவமை.

199. முன் ஓடு உதிரப்புனல், மூதுலகைப்
பின் ஓடி வளைந்த பெருங் கடல்வாய்,
மின்னோடும் விழுந்தன மேகம் என,
பொன் ஓடை நெடுங்கரி, புக்கனவால். (9580)

(முன்-முற்பட்டு; மூதுஉலகம்-பெரிய உலகம்/பழமையான உலகம்; ஓடை-நெற்றிப்பட்டம்; பின்ஓடுதல்-பின்வாங்குதல்)

அழகிய பொன்னால் செய்யப்பட்ட நெற்றிப்பட்டம் அணிந்த நீண்ட பெரிய யானைகள், முன்னால் ஓடுகின்ற இரத்தப் பெருக்கால் ஈர்க்கப்பட்டு, இப்பழமையான பெரிய உலகத்தின் பின்னால் ஓடி அதைச் சூழ்ந்து கொண்டிருக்கின்ற பெரிய கடலினிடத்து விழுந்தன; இது மின்னோடு கூடிய மேகம் விழுந்தது போன்று தோன்றிற்று.

கரிய யானைக்குக் கரிய மேகமும், ஒளிமிக்க நெற்றிப்பட்டத்திற்கு மின்னலும் உவமைகள்.

200. மறவெற்றி அரக்கர் வலக்கையொடும்
நறவக் குருதிக் கடல் வீழ் நகைவாள்
சுறவு ஒத்தன; மீது துடித்து எழலால்,
இறவு ஒத்தன, வாவும் இனப்பரியே. (9581)

(நறவு-தேன்; மறம்-வீரம்; நகை-ஒளி; சுறவு-சுறாமீன்கள்; வாவும்-தாவும்; இனம்-தொகுதி/கூட்டம்; இறவு-இறால்மீன்கள்)

வீரமும் வெற்றியும் பொருந்திய அரக்கர்களின் வலக்கையோடு, அதில் அவர்கள் பிடித்திருந்த ஒளிவீசுகின்ற வாட்படைகளும், தேன்போன்ற நிறமுடையதும், மணம்மிக்கதுமான இரத்தக்கடலில் விழுந்து மேலே துள்ளி எழுவன, கடலில் துள்ளி எழும் சுறாமீன்களைப் போன்றிருந்தன. அதேபோல தாவிச்செல்லுகின்ற குதிரைகள் துள்ளியது, கடலில் துள்ளி எழும் இறால்மீன்களை ஒத்திருந்தன.

ஒளிமிக்க வாட்படைக்கு சுறாமீன்களும், தாவுகின்ற குதிரைகளுக்குத் துள்ளும் இறால்மீன்களும் உவமை; வாட்படைக்குச் சுறாமீனை உவமை கூறுவது கவிமரபு; ''சுறாவினத்தன்ன வாளோர் மொய்ப்ப'' என்பது புறநானூறு-13. நகுதல் என்ற சொல்லுக்கு ஒளிவிடுதல் என்ற ஒரு பொருளும் உண்டு. அதனடியாகப் பிறந்த சொல் நகை. எனில் ஒளிவீசும் வாட்படை என்பது பொருள்.

Koviloor Digital Library

201. தாமச் சுடர்வாளி தடிந்து அகல,
பாமக் குருதி படிகின்ற படைச்
சேமப்படு கேடகம், மால்கடல் சேர்
ஆமைக் குலம் ஒத்தன அத்தனையால். (9582)

(தாமம்-வரிசை; சுடர்-ஒளி; தடிதல்-அறுக்கப்படுதல்; பாம்-பாவும்/பரவும்; சேமம்-பாதுகாப்பு; கேடகம்-கேடயம்/பரிசைகள்)

இராமபிரானுடைய மிக்க ஒளிவாய்ந்த அம்புகள் தாக்கியதால் அரக்கர்களின் அறுபட்ட கைகள், அகன்று சென்று இரத்தக்கடலில் தோய்ந்தன; அந்தப் பெரிய கடலில் எத்தனை ஆமைக்கூட்டம் இருக் கிறதோ. அந்த அளவு படைக்கலங்களையும், கேடயங்களையும் வீரர்கள் பாதுகாப்புக்காகச் சுமந்து நின்றிருந்தனர்.

வீரர்களின்வாட்படையைப் பற்றி முன்பாடலில் கூறிய கவிஞன்இங்கு வீரர்களின் கேடயம் குருதிக் கடலில் விழுந்தது பற்றிக் கூறுகிறான். கேடயத்திற்கு உருவத்தால் ஆமைகள் உவமை.

202. காம்போடு பதாகைகள் கார் உதிரப்
பாம்போடு கடல் படிவுற்றனவால்;
வாம்போர் நெடுவாடை மலைந்து அகல,
கூம்போடு உயர் பாய்கள் குறைந்தன போல். (9583)

(வாம்-வாவும்/தாவும்; மலைதல்-தாக்கப்படுதல்/அலைக்கப்படுதல்; பாய்கள்-மரக்கலம்; குறைதல்-சிதைந்து போதல்; காம்பு-பிடி/தண்டு; பதாகை-கொடிகள்; கார்-மேகம்/யானைகள்; பாம்-பரவும்/பாவும்; கடல்-உதிரக்கடல்; கூம்பு-பாய்மரம்; காம்பு-மூங்கிலுமாம்)

போர்செய்வதுபோல் வேகமாகத் தாவி வீசுகின்ற கொடிய வாடைக் காற்றால் அலைக்கழிக்கப்பட்டு, கூம்போடு, உயர்ந்த பாய்மரக் கப்பல்கள் சிதைந்து அழிவனபோல, காம்போடு கூடிய அரக்கர்களின் கொடிகளைத் தாங்கிய, கரிய மேகத்தைப் போன்ற யானைகள், பரவிஓடும் அலைகளையுடைய கடலின்மீது படிந்து ஆழ்ந்தன.

அரக்கர் படையிலுள்ள யானைப்படைகள் கடலில் விழுந்து அழுந்தினமைக்குக் கடலில் பலத்த காற்றால் அலைக்கப்பட்டு அமிழ்ந்த மரக்கலங்கள் உவமை. இங்கே ''கார்உதிரம்'' என்ற சொல் சற்று சிந்திக்கத் தக்கது. பொதுவாக உதிரம்-இரத்தம் சிவப்பு நிறமாக இருக்கும். அது காய்ந்த நிலையில் கருப்புநிறமாக மாறிவிடும் என்பது நாம் அறிந்ததே. செம்புனல் இப்போது கார் உதிரமாக மாறியிருப்பதாகக் கூறும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. வாடைக்காற்றின் வேகத்தைக் குறிக்கக் கவிஞன் ''வாம்போர் நெடுவாடை'' எனக் குறிப்பதும் சுவைக்கத்தக்க சொற்றொடர். ''கலம்'' என்பது மரக்கலம், கப்பல், ''கூம்பு'' என்பது

Koviloor Digital Library

மரக்கலத்தில் பாயினைக் கட்டும் மரம்; ''காம்பு'' என்பது கொடியின்பிடி அல்லது தண்டு; ''கார்'' என்பது கரியநிறம் என்ற பொருளில் கரிய நிறமுடைய யானையை ஆகுபெயராய் உணர்த்தியது. மரக்கலம் யானைக்கு உவமை. ''களிறும் கந்தும் போல நளிகடல் கூம்பும், கலனும் தோன்றும்'' என்பது ஒரு பழம்பாடல்.

203. மண்டப்படு சோரியின், வாரியின் வீழ்
கண்டத் தொகை கவ்விய காலோடு தோள்
முண்டத்திரி தண்டின் முரட்டு ஒருவன்
துண்டச் சுறவு ஒத்த, துடித்தனவால். (9584)

(மண்டுதல்-மிகுதியாகப் பெருகுதல்/நிறைதல்; சோரியின் வாரி-குருதிக்கடல்/இரத்தவெள்ளம்; கண்டம்-துண்டம்; கவ்வுதல்-பற்றுதல்; முண்டம்-முண்டகம்/தாமரைமலர்; சுறவு-சுறாமீன்கள்)

மிகுதியாகப் பெருகியுள்ள இரத்தக்கடலில் துண்டித்து வீழ்த்தப்பட்ட அரக்கர்களின் கால்களோடு தோள்களும் பற்றப்பட்டதனால், அவை தாமரைமலரின் தண்டுகளைப் போன்று முரட்டுத் தன்மை வாய்ந்த ஒரு வலிய துண்டமாக உள்ள சுறாமீன்களைப் போலத் துடித்தன.

இப்பாடலுக்குப் பல பாடவேறுபாடுகள், பல பதிப்புக்களில் காணப்படுகின்றன. எனவே தெளிவான பொருள் தர இயலவில்லை. எனினும் இராமபிரானால் துண்டிக்கப்பட்டு இரத்தக் கடலில் வீழ்ந்த அரக்கர்களின் தோள்களும் கைகளும், கடலில் உள்ள தாமரைத் தண்டில் அகப்பட்டுக்கொண்ட சுறாமீன்களைப் போன்று துடித்தன என்பது கருத்து என்று ஓரளவு சரியான விளக்கம் கூறலாம். ''முண்டத்திரி தண்டு'' என்பது தாமரைத்தண்டைக் குறிக்கும். ''முண்டகம்'' என்ற சொல்லுக்குத் தாமரை என்பது பொருள். அது இங்கே முண்டம் என விகாரப்பட்டு நின்றது. இராமபிரானின் அம்புகளால் பற்றப்பட்ட அரக்கர்களின் கால்களும், தோள்களும் துடிப்பது தாமரைத்தண்டில் அகப்பட்டுக்கொண்ட சுறா மீன்கள் துடிப்பதை ஒத்திருந்தன என்பது சற்று தெளிவான விளக்கமாகும்.

204. தெளிவுற்ற பளிங்கு உறு சில்லிகொள்தேர்
விளிவு உற்று உக, வேறுற வீழ்வனதாம்,
அளி முற்றிய சோரியின், வாரியின் ஆழ்
ஒளி முற்றிய திங்களை ஒத்துளவால். (9585)

(சில்லி-சக்கரம்; விளிவுறுதல்-அழிந்துபோதல்; அளி-தேன்/மது; சோரியின் வாரி-இரத்தக்கடல்; ஆழ்தல்-படிதல்; முற்றிய-நிரம்பிய/நிறைந்த; திங்கள்-சந்திரன்)

நன்கு தெளிவாகத் தெரிகின்ற பளிங்கினால் இயற்றி அமைக்கப்பட்ட சக்கரங்களைக் கொண்ட தேர்கள், இராமபிரான் செலுத்திய அம்புகளினால்

Koviloor Digital Library

அழிக்கப்பட்டு சிதைந்துபோய்ச் சக்கரங்கள் மட்டும் தனித்தனியாக, தேன்போன்ற இரத்தம் நிரம்பிய குருதிக்கடலில் அமிழ்ந்துபோய்க் கிடப்பது, ஒளிநிரம்பிய, பதினாறு கலைகளும் நிரம்பப்பெற்ற பூரண சந்திரனை ஒத்திருந்தது.

''பளிங்கு'' பொதுவாகத் தெளிவாகத் தெரியப்படுத்தும் எந்தப் பொருளுக்கும், எந்தச் செயலுக்கும் கூறப்படும் ஒரு உவமை. ''அளி'' என்ற சொல் தேன், மது என்று பல பொருள்களைக் குறிக்கும். இரத்தக் கடலுக்குத் தேனும், மதுவும் நிறத்தால் உவமை கூறப்பட்டது என்க. ஒளி முற்றிய திங்கள் என்பது நிறைமதியை பூரணச்சந்திரனைக் குறிக்கும். பளிங்கினாலான, உடைந்துபோன தேர்ச்சக்கரங்கள், சிவந்த இரத்தக் கடலில் தெரியும் ஒளிநிறைந்த பூரணசந்திரனுக்கு உவமை. தன்னைச் சார்ந்துள்ள பொருள்களின் பிம்பத்தைத் தெளிவாகக் காட்டும் தன்மையினால் பளிங்கை உவமை கூறுவது கவிமரபு.

205. நிலை கோடல் இல் வென்றி அரக்கரை நேர்
கொலை கோடலின், மன் குறிகோளுறுமேல்,
சிலை கோடியதோறும், சிரத்திரள், வன்
மலை கோடியின் மேலும் மறிந்திடுமால். (9586)

(கோடல்-கொள்ளுதல்; கோடுதல்-வளைதல்; திரள்-தொகுதி; மறிதல்-மடங்கி விழுதல்; குறிகோள்-குறிக்கோள்/இலக்கு; மன்-மன்னன்/இராமபிரான்)

நிலைபெற்றதாகிய வெற்றியை இதுகாறும் பெற்றிருக்காதவர்களாகிய அரக்கர்களை, நேருக்குநேர் நின்று போர் புரிந்து, கொலை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளையுடைய மன்னனான இராமபிரான், தனது வில்லைத் தொடுத்து வளைக்கும்போதெல்லாம், இவ்வரக்கர்களின் தலைத்தொகுதிகள் கோடிக்கணக்கிற்கு மேலும் அழிந்து வீழ்ந்து மலை போலக் காட்சியளிக்கும்.

அரக்கர்கள் மூவுலகங்களையும், இந்திரனையும், தேவர்களையும், எல்லோரையும் வென்று வெற்றிவாகை சூடினார்கள் என்றாலும், அது நிலையற்ற வெற்றியாகும் என்பது ''நிலைகோடல் இல் வென்றி'' என்று தெளிவாகக் கூறப்பட்டிருப்பதை நினைக. இராமபிரான் அரக்கர்களைப் போல மாயச்செயல்களில் ஈடுபட்டு அவர்களை வெற்றிபெறுவதை எண்ணாமல், நேருக்குநேர் நின்று போரிட்டு வெற்றிபெறுவதையே தனது குறிக்கோளாகக் கொண்டவன் என்பதை ''நேர் கொலை கோடலின், மன், குறிகோள் உறும்'' என்று தெளிவாகக் கூறியிருப்பதை உணர்க. இங்கே அரக்கர்களை நேருக்குநேர் நின்று கொலை புரியவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொள்ளுகின்ற இராமபிரான், முன்பு, வாலியை ஏன் நேருக்குநேர் நின்று போர்புரிந்து அழிக்காமல் மறைந்து நின்று

Koviloor Digital Library

கொன்றான்? எனில், ஒன்று வாலி அரக்கன் அல்லன்; அவன் வென்றி நிலைகோடல் இல் வென்றி அல்ல; எனக் காரணம் காட்டி விளக்குதலும் கூடும்.

206. திண் மார்பின் மிசைச் செறி சாலிகையின்
கண், வாளி கடைச்சிறை காண நுழைந்து,
எண் வாய் உற மொய்த்தன, இன் நறை உற்று
உண் வாய் வரி வண்டு இனம், ஒத்தனவால். (9587)

(சாலிகை-கவசம்; வாய்-இடம்; மொய்த்தல்-நெருங்கியிருத்தல்; நறை-தேன்; இன்-இனிய; வரி-கோடு/நிறம்; மிசை-மீது)

அரக்கர்களின் உறுதிபொருந்திய மார்பின்மீது நெருங்கிச் சேர்ந்திருக்கின்ற கவசங்களின்மீது, இராமபிரான் செலுத்திய அம்பின் கடைசிப் பகுதியான சிறகு நுழைந்து செல்வதற்கு இடமில்லாதபடி உடலெங்கும் அம்புகள்நெருங்கிக்காணப்படும்தோற்றம், இனியதேனடையில்சென்று தன் வாயை வைத்து உறிஞ்சும் கோடுகளையுடைய பல நல்ல நிறம் கொண்ட வண்டின் கூட்டத்தைப் போல் இருந்தது.

இராமபிரானின் அம்பின் கடைசிப்பகுதியாகிய சிறகுகளுக்குத் தேனருந்தும் வண்டினக் கூட்டம், நிறத்தாலும், வரிக்கோடுகளாலும் உவமை.

207. பாறு ஆடுகளத்து, ஒருவன், பகலின்
கூறாகிய நாலில் ஓர் கூறிடையே,
நூறு ஆயின யோசனை, நூழில்கள் அம்
மாறாது உழல் சாரிகை வந்தனனால். (9588)

(பாறு-பருந்து; ஆடுதல்-உலவுதல்/சஞ்சரித்தல்; களம்-போர்க்களம்; ஒருவன்-ஒப்பற்றவன்/இராமபிரான்; கூறு-பகுதி/பொழுது; நூழில்-கொன்று குவித்தல்; உழல்தல்-சுற்றுதல்; வந்தனன்-திரிந்தனன்)

பருந்துகள் வட்டமிட்டுச் சஞ்சரிக்கும் நூறுயோசனை பரப்பளவுள்ள போர்க்களத்தில், ஒப்பற்றவனானவனும், தனித்து நிற்பவனுமான இராமபிரான், பகற்பொழுதில் ஒருபகுதியாகிய நாலில் ஒரு பொழுதிற்குள், அரக்கர்கள் அனைவரையும் நெறிமுறை பிறழாது, இடசாரி வலசாரியாகத் திரிந்து கொன்றுகுவித்தான்.

பகற்பொழுது முப்பது நாழிகை என்பதும், இரவுப் பொழுது முப்பது நாழிகை என்பதும் ஒரு கணக்குக் குறிப்பு. எனில் இங்கே நாலில் ஒரு கூறு என்பது 7½ நாழிகைப் பொழுதைக் குறிக்கும். நூறுயோசனை பரப்பளவுள்ள போர்க்களத்தில் நின்றிருந்த அரக்கர்கள் அனைவரையும் இராமபிரான் தன்னந்தனியனாக நின்று 7½நாழிகைக்குள் கொன்றுகுவித்தான்

Koviloor Digital Library

என்பது கருத்து. பொதுவாகச் ''சாரி திரிதல்'' என்று கூறுவதே வழக்கம். இங்கே கவிஞன் ''சாரிகை வந்தனன்'' என்று கூறும் மாற்றம் கருதத்தக்கது. பருந்துகள் வட்டமிட்டுத் திரிகின்ற போர்க்களத்தில், இராமபிரான் வட்டமிட்டுச் சாரிகை திரிந்தான் என்னுமிடத்து, அழிக்கும் தொழிலில் பருந்துக்கு இராமபிரான் உவமை. முன்பு சிவபெருமானும் தேவர்களிடம் ''இன்று ஒரு கடும் பகலிலே குரக்கின் முதல் நாயகனை, ஆளுடைய கோன் உழுவை கொல்லும் இவரை'' என்று உறுதி கூறியதையும் இங்கு நினைவுகூர்க.

208. நின்றாருடன் நின்று, நிமிர்ந்து அயலே,
சென்றார் எதிர்சென்று, சிதைத்திடலால்,
"தன் தாதையை ஓர்வு உறு தன்மகன் நேர்
கொன்றான் அவனே இவன்" என்று கொள்வார். (9589)

(அயல்-அருகு/பக்கம்; ஓர்தல்-உணர்ந்துகொள்ளுதல்; நேர்-எதிரே/முன்னே; தாதை-தந்தை; நிமிர்ந்து-மேலோங்கி)

தன்னை எதிர்த்து நேருக்குநேர் நின்று போர்செய்யும் அரக்கர்களை நேருக்குநேர் நின்றும், தன்னைத் தவிர்த்து மேலெழுந்து சென்று அருகில் ஒதுங்கிச்சென்ற அரக்கர்களை அவர்கள் நிற்குமிடத்திற்கே சென்று இராமபிரான் போர்புரிதலால், அவன் நீக்கமற எங்கும் நிறைந்திருப்பதாக அரக்கர்கள் கருதினார்கள். தன்னைத் தான் நன்கு உணர்ந்த பிரகலாதன் கண் முன்னே அவனுடைய தந்தையாகிய இரண்யனைக் கொன்றொழித்தானே நரசிங்கப்பெருமான், அவன்தான் இவ்வுருக்கொண்டு வந்திருக்கிறான் போலும்!'' என்றும் அரக்கர்கள் கருதலானார்கள்.

''ஓர்வுறுதல்'' என்பது மெஞ்ஞானத்தை உணர்தல், தன்னையுணர்ந்து, தன் தலைவனையும் உணர்தல் என்ற பொருளைத்தரும்; திருமாலின் நரசிம்ம அவதாரம் பேசப்படுகிறது. முன்பே பிரகலாதனைக் கவிஞன் ''அறிஞரில் அறிஞன்'' எனக் கூறியதையும் இங்கு நினைவுகூர்க. மெய்ப்பொருளை இடைவிடாது சிந்தித்திருத்தலையும் ''ஓர்வுறுதல்'' என்ற சொல் குறிக்கும்.

209. "இங்கே உளன்; இங்கு உளன்; இங்கு உளன்," என்று
அங்கே உணர்கின்ற அலந்தலைவாய்,
வெங்கோப நெடும்படை, வெஞ்சரம் விட்டு,
எங்கேனும் வழங்குவர், ஏகுவரால். (9590)

(உணர்தல்-அறிதல்; அலந்தலை-கலங்கிய நிலை; ஏகுதல்-உயிர் அழியப்பெற்றுப் போதல்)

அரக்கர்கள் இராமபிரானைப் போர்க்களத்தில் எல்லா இடங்களிலும் காண்கின்ற தன்மையால் ஒவ்வொருவரும் அவன் இங்கே இருக்கிறான்,

Koviloor Digital Library

இங்கே இருக்கிறான், என்று கூறிக்கொண்டே, தான் என்ன செய்கிறோம் என்ற உணர்வில்லாது, கலங்கிய நிலை பெற்று, மிக்க சீற்றத்துடன், நீண்ட பெரிய படைக்கலன்களையும், கொடிய அம்புகளையும் அவனை நோக்கிச் செலுத்துவதாகக் கருதிக்கொண்டு, அவன் இல்லாத இடமாக ஏதேனும் ஒரு இடத்தை நோக்கி வீணாகச் செலுத்துவார்கள். அதனால் அங்கே நின்றிருக்கும் அரக்கர்களே இறந்துபட நேர்ந்தது. தவிரவும் அவன் எங்கே இருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ள முடியாது, போர்க்களத்தை விட்டு நீங்கியும் சென்றார்கள்.

''வெங்கோபம், நெடும்படை, வெஞ்சரம்'' என்ற சொல்லாட்சி நோக்குக. இவையனைத்தும் அரக்கர்களின் கொடிய கோபத்தை உணர்த்தும்.

210. ஒருவன் என உன்னும் உணர்ச்சி இலார்;
''இரவு அன்று இது; ஓர் பகல்'' என்பர்களால்,
''கரவு அன்று இது; இராமர் கணக்கிலரால்;
பரவை மணலின் பலர்'' என்பர்களால். (9591)

(உணர்ச்சி-உணர்வு; கரவு-வஞ்சகம்/மாயம்; பரவை-கடல்; உன்னுதல்-எண்ணுதல்)

இராமபிரான் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அம்பு செலுத்துவது போன்றிருந்ததால் அவ்வரக்கர்களுள் தெளிவு பெற்ற அறிவுடைய சிலர், ''அவன் ஒருவனேதான் என்றும், இப்பொழுது ''பகல்பொழுதுதான் நடக்கிறது, இரவு அல்ல'' என்றும் தமக்குள் கூறிக்கொள்ளுவார்கள்; அறிவுத் தெளிவற்ற இன்னும் சில அரக்கர்கள்'', அல்ல, அல்ல, இது மாயமோ வஞ்சகமோ அல்ல; உண்மையில் இராமன் பல இராமர்களாக நின்று,தான் போரிடுகிறான்; கடலின் மணலைக்காட்டிலும் பலர்போலத் தோற்றமளித்துப் போரிடுகிறான்'' என்றும் சொல்லிக் கொள்வார்கள்.

இராமபிரான் போர்க்களத்தில் மிக்க ஒளியுள்ள அம்புகளைச் செலுத்து வதால், இது இரவு அல்ல, இது பகல்தான் என்று தெளிவாக இருந்தார்கள். வரம்பின்றி எண்ணமுடியாத எல்லாவற்றுக்கும் கடல்மணலை உவமை கூறுவது கவிமரபு. ''வாழி! நன்னீர்ப்பஃறுளி மணலினும் பலவே'' என்பது புறநானூறு -9.

211. ஒருவன் ஒருவன் மலைபோல் உயர்வோன்,
ஒருவன் படைவெள்ளம் ஓர் ஆயிரமே;
ஒருவன் ஒருவன் உயிர் உண்டது அலால்,
ஒருவன் உயிர் உண்டதும் உள்ளதுவோ? (9592)

(ஒருவன்ஒருவன்-ஒவ்வொருவனும்; உயர்வு-உயர்ச்சி; ஒருவன்-ஒப்பற்றவன்/இராமபிரான்)

Koviloor Digital Library

இவ்வரக்கவீரருள் ஒவ்வொருவரும் மலைபோல் உயர்ந்த தோற்றத்தையும், வலிமையையும் உடையவர்கள்; இவர்களுடைய படையின் எண்ணிக்கை ஓர்ஆயிரம் வெள்ளமாகும்; இவர்கள் ஒருவருக் கொருவர் தாக்கிக்கொண்டு உயிர்துறந்தார்களேயன்றி, ஒப்பற்றவனாகிய இராமபிரானின் உயிர் பருகியதும் உண்டோ?

இந்தச் செய்யுளில் ஒருவன் என்ற சொல் நான்கு அடிகளிலும் பயின்று வருவதால் இது சொற்பொருட் பின்வருநிலையணியின் பாற்படும். முதல் மூன்று அடிகளிலும் ஒருவன் என்ற சொல் அரக்கர்களைக் குறித்து, நான்காம் அடியில் ஒப்பற்றவன் என்ற பொருளில் இராமபிரானைக் குறித்தது. ''ஒருவன் ஒருவன்'' என்பது ஒவ்வொருவன் என்ற பொருளைத் தரும். இராமபிரான் போர்க்களத்தில் சாரிகை சுற்றித் திரிந்ததால் பகைவர்கள் எய்திய படைக்கலங்கள் அவனைச் சென்று தாக்காது அரக்கர்களையே தாக்கியதால், அவர்களே ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு இறந்துபட்டனர் என்பதாம். மூன்றாமடியில் இருக்கும் ''ஒருவன் ஒருவன்'' என்ற சொற்றொடர் ஒருவனை மற்றொருவன் என்ற பொருளைத்தரும்.

212. தேர்மேல் உளர்; மாவொடு செந்தறுகண்
கார்மேல் உளர்; மா கடல்மேல் உளர்; இப்
பார்மேல் உளர்; உம்பர் பரந்து உளரால்;
போர்மேலும் இராமர் புகுந்து அடர்வார். (9593)

(மேலும்-மேற்கொள்ளுதல்; அடர்தல்-நெருக்கி அழித்தல்; மா-குதிரை; கார்-மேகம்; மா-பெரிய/கரிய; பார்-பூமி; உம்பர்-ஆகாயம்; தறுகண்-கொடுமையான கண்கள்)

போரில் ஈடுபட்டிருக்கும் இராமபிரான், அரக்கர்படையுள் புகுந்து நெருக்குதலைக் கண்டவர்கள், அவர் பகைவருடைய தேர்மேல் இருக் கிறார்; குதிரையோடும் இருக்கிறார்; சிவந்த அழிக்கும் இயல்புடைய, கொடுமையான, மேகம் போன்ற கரிய நிறமுடைய யானையின் மேலும் இருக்கின்றார்; பெரிய கரிய கடல்மீதும் இருக்கிறார்; இந்தப் பூமியின்மேல் இருக்கிறார், வானிலும் பரவியிருக்கிறார் என்று கருதும்படி சாரிகை திரிந்தான்.

இந்தச்செய்யுளில் மட்டும் இராமபிரானை, ''இராமர்'' என்று அர்விகுதி தந்து கவிஞன் பாடியுள்ளமையைக் கருதுக. பகைவர்களின் தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, கடல்போன்ற காலாட்படை என்று நால்வகைப் படைகளிலும் இருந்து அவன் போர்செய்வதாகக் கூறுகிறான் கவிஞன்.

Koviloor Digital Library

213. என்னும்படி, எங்கணும், எங்கணுமாய்த்
துன்னும்; சுழலும்; திரியும்; சுடரும்;
பின்னும் அருகும்; உடலும் பிரியான்;
மன்னன் மகன்! வீரர் மயங்கினரால். (9594)

(மன்னன்-சக்கரவர்த்தி; எங்கணும்-எல்லா இடத்தும்; அருகு-பக்கம்; துன்னுதல்-நெருங்குதல்; சுடர்தல்-ஒளியுடன் திகழ்தல்; சுழல்தல் சுற்றுதல்; மயங்குதல்-மருட்சி அடைதல்)

என்று அரக்கவீரர்கள் எல்லாம் திகைப்புற்று அஞ்சும்படி தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வனான இராமபிரான், போர்க்களத்தில் எல்லா இடங்களிலும் நெருங்கிச் செல்வான்; இடசாரி, வலசாரியாகச் சுற்றுவான்; இங்குமங்கும் அலைந்து திரிவான்; ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டு திகழ்வான்; அரக்கர்சேனைக்குப் பின்னாலும், அருகிலும் எதிரிலும் அவர்கள் உடலிலும் எந்த இடத்தை விட்டும் பிரியாதவனாக நின்று போர்செய்வான்; இதனைக் கண்ட அரக்கர்கள் மனக்கலக்கம் கொண்டு மருண்டனர்.

''எங்கணும் எங்கணும்'' என்ற அடுக்கு எல்லா இடங்களிலும் என்ற நிறைவுப்பொருளைத் தந்து நின்றது.

214. படு மதகரி, பரி சிந்தின; பனிவரை இரதம் அவிந்தன;
விடுபடை திசைகள் பிளந்தன; விரிகடல் அளறது எழுந்தன;
அடுபுலி அவுணர்தம் மங்கையர் அலர்விழி அருவிகள் சிந்தின;
கடுமணி நெடியவன் வெஞ்சிலை; "கணகண, கணகண" எனும்
தோறும். (9595)

(நெடியவன்-இராமபிரான்; படுதல்-பொருந்தியிருத்தல்; பனிவரை-இமயமலை; அளறு-சேறு; அடுதல்-கொல்லுதல்; அவுணர்-அரக்கர்கள்; அலர்-மலர்; அருவி-அழுகைக்கண்ணீர்; விரி-பரந்த)

ஓங்கி உலகளந்த உத்தமனான திருமாலின் அவதாரமான இராம பிரானின் கொடிய வில்லில் கட்டப்பட்டிருக்கின்ற அதிரும் மணிகள் கணகண என்னும் ஒலி எழுப்பியபோதெல்லாம், அரக்கர்படைகளில் உள்ள மதத்தைச் சொரிகின்ற யானைகளும், குதிரைகளும் சிதைந்து தரையில் வீழ்ந்தன; இமயமலை போன்ற உயரமுடைய தேர்கள் தரையில் விழுந்து அழுந்தின; இராமபிரான் செலுத்தும் படைக்கலன்களால் எட்டுத்திசைகளும் பிளவுபட்டுப் போயின. விரிந்து பரந்த கடல்களெல்லாம் சேறாகிப்போயின; கொல்லும் தன்மையுள்ள புலி போன்ற அரக்கர்களின் மனைவியரெல்லாம் தம் மலர்போன்ற கண்களிலிருந்து அருவிபோலத் துன்பக்கண்ணீரைச் சொரிந்தனர்.

Koviloor Digital Library

215. ஆனை ஆயிரம், தேர் பதினாயிரம், அடல்பரி ஒரு கோடி;
சேனை காவலர் ஆயிரம்பேர் படின், கவந்தம் ஒன்று எழுந்து ஆடும்;
கானம் ஆயிரம் கவந்தம் நின்று ஆடிடின், கவின்மணி கணில் என்னும்;
ஏனை அம்மணி, ஏழரை நாழிகை ஆடியது இனிது அன்றே! (9596)

(அடல்-வலிமை; படுதல்-இறந்துபடுதல்; கானம்-காடு; கவின்-அழகிய; கணில்-கணீர்; ஏனை-மேற்கூறப்பட்ட; கவந்தம்-தலையறுபட்ட உடற்குறை)

ஆயிரம் யானைகள், பதினாயிரம் தேர்கள், வலிமைவாய்ந்த ஒருகோடிக் குதிரைகள், ஆயிரம் காலாட்படை வீரர்கள் இவர்களெல்லாம் ஒருசேர அழிந்தனர் என்றால், தலையறுபட்ட முண்டமாகிய கவந்தம் என்ற ஒன்று போர்க்களத்தில் எழுந்து ஆடும்; இவ்வாறு ஆயிரம் கவந்தங்களின் தொகுதிகள், எழுந்து நின்று ஆடினால், இராமபிரான் கையில் வைத்திருக்கும் கோதண்டம் என்னும் அழகிய வில்லில் கட்டப்பட்டிருக்கும் மணி ''கணீர்'' என்று ஒருமுறை ஒலிக்கும்; அத்தகைய மணி, இந்தப் போரில் தொடர்ந்து ஏழரை நாழிகை அளவு இனிமையாக ஒலித்துக் கொண்டேயிருந்தது.

இராமபிரான் மூலபலச்சேனையையும், பலதீவுகளினின்றும், பாதாளத்தினின்றும் அழைத்துவரப்பட்ட அளவற்ற சேனைகளையும் ஏழரை நாழிகைகளில் அழித்தொழித்தான் என்பதாம். ''கணில்'' என்பது ஒலிக்குறிப்பு. ''அநேக ஆயிரம்பேர் படக் கவந்தம் ஒன்று ஆடும்; அக்க வந்தங்கள். அநேகம் ஆயிரம்ஆட, வெஞ்சிலை மணி அசைந்து, ஒரு குரல் ஆர்க்கும்; அநேக நாழிகை அருச்சுனன் சிலை மணி ஆர்த்தது; அக்களம் பட்ட அநேகம் ஆயிரம் விருதரை அளவறிந்து, ஆர்கொலோ உரைக்கற் பாலார்?'' என்பது வில்லிபாரதம். ''பேரொத்த ஆயிரம்பேர் மடிந்தால் பிறக்கும் கவந்தம்'' என்பது திருவரங்கமாலை.

216. ஊனேறு படைக்கை வீரர் எதிர்எதிர் ஊரும் தோறும்,
கூனேறு சிலையும் தானும் குதிக்கின்ற கடுப்பின் கொட்பால்,
வானேறினார்கள் தேரும், மலைகின்ற வயவர் தேரும்,
தான் ஏறிவந்த தேரே ஆக்கினான், தனி ஏறு அன்னான். (9597)

(தனி-ஒப்பற்ற; ஏறு-ஆண்சிங்கம்; ஊன்-மாமிசத்துண்டு; ஏறுதல்-படிதல்/பொருந்தி இருத்தல்; கூன்-வளைதல்; கடுப்பு-வேகம்; கொட்பு-சுழற்சி/தன்மை; வான்ஏறினார்-இறந்துபட்டவர்கள்; மலைதல்-போர் செய்தல்; வயவர்-அரக்கவீரர்கள்)

ஒப்பற்ற ஆண்சிங்கம் போன்றவனான இராமபிரான், மாமிசத் துண்டுகள் பொருந்திய படைக்கலன்களைக் கைக்கொண்டிருந்த அரக்க வீரர்கள் எதிர்எதிராக ஊர்ந்துவரும்பொழுதெல்லாம், வளைவு

Koviloor Digital Library

பொருந்திய வில்லும் தானும், அவற்றின்மேற் சென்று குதிக்கின்ற வேகத்தின் தன்மையால், முன்பு இறந்துபட்டு விண்ணுலகு சென்ற அரக்கர்களின் தேர்களையும், இப்போது அவனை எதிர்த்துப் போர் செய்கின்ற அரக்கவீரர்களின் தேர்களையும், தான் ஏறிவந்த தேர்போலவே ஆக்கிவிட்டான். தான் தேரில் ஏறிவரவில்லை. தரையில்தான் நின்றிருந் தான். எனவே பகைவர்களின் தேர்களையெல்லாம் தான் நின்றிருந்த தரையைப்போல் தரைமட்டமாக்கினான்.

அரக்கர்கள் எப்பொழுதும் போர்செய்து கொண்டே இருப்பதால் அவர்கள் படைக்கலன்களில் எப்பொழுதும் பகைவர்களின் இரத்தமோ, மாமிசத்துண்டோ படிந்திருக்கும். எனவே ''ஊனேறு படைக்கை வீரர்'' என்று அவர்களைக் குறிப்பிட்டார் என்க. ''கூனேறுதல்'' என்பது வளைந்திருக்கும் நிலையைக் குறித்தது; ''வானேறினார்கள்'' என்பது இறந்துபட்டவர்கள் என்பதன் மங்கலக் குறிப்பு எனக்கொள்க. தான் தேரில் ஏறிவாராது தரையில் நடந்தேவந்தான் என்பதால் பகைவர்களின் தேரைத் தரைமட்டமாக்கினான் என்பது ஒரு பொருள். பகைவர்களின் தேர்களை அழிப்பதற்காக அவர்கள் தேருக்கே தாவிச்சென்று அவர்களை அழித்து அவர்கள் தேரிலேயே நின்றிருந்ததால் அவர்கள் தேர்களைத் தன்னுடைய தேராக ஆக்கிக்கொண்டான் என்பது மற்றொரு பொருள்.

217. காய் இருஞ்சிலை ஒன்றேனும், கணைப்புட்டில் ஒன்றதேனும்,
தூய் எழு பகழிமாரி மழைத்துளித் தொகையின்மேல;
ஆயிரம் கைகள் செய்த செய்தன, அமலன் செங்கை;
ஆயிரம் கையும் கூடி, இரண்டு கை ஆனது அன்றே! (9598)

(காய்தல்-வெகுண்டு அழித்தல்; இரும்-பெரிய; தூய்-தூவுதல்; அமலன்-குற்றமற்றவன்/தூயோன்/இராமபிரான்; கணைப்புட்டில்-அம்பறாத்தூணி)

பகைவரைச் சினந்து அழிக்கின்ற தன்மைகொண்ட இராமபிரான் கையில் கொண்டிருப்பது ஒரேஒரு பெரிய வில்தான் என்றாலும், அவன் அம்பறாத்தூணி ஒன்றே ஒன்றுதான் என்றாலும், அவன் செலுத்துகின்ற அம்புகளின் தொகுதி மழைத்தாரைகளைப் போன்று எண்ணிக்கையில் அளவிற்கும் மேலானதாகும். குற்றமற்ற தூயவனான இராமபிரானின் சிவந்த இரண்டு கைகள் மட்டுமே, இறைவனின் ஆயிரம் கைகள் செய்கின்ற காரியங்களைச்செய்து முடித்தன; எனவே இறைவனது ஆயிரம் கைகளும்கூடி, இராமபிரானது இரண்டு கைகளாகவே செயல்பட்டன என்று கூறுவது பொருந்தும் அல்லவா!'' என்கிறான் கவிஞன்.

இச்செய்யுளைக் கவிக்கூற்றாகக் கொள்ளவேண்டும். அவன் கையிலிருந்த வில் ஒன்றுதான்; அம்பறாத்தூணியும் ஒன்றும்தான். ஆனால் ஒவ்வொன்றும் ஆயிரம் கரங்களையுடைய இறைவன் செய்ததைப்

Koviloor Digital Library

போன்று செயலாற்றின என்று, இராமபிரான் இறைவனின் அம்சம் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான் கவிஞன்.

218. பொய் ஒரு முகத்தனாகி, மனிதனாம் புணர்ப்பு இது அன்றால்;
மெய்யுற உணர்ந்தோம்; வெள்ளம் ஆயிரம் மிடைந்த சேனை
செய்யுறு வினையம் எல்லாம், ஒருமுகம் தெரிவது உண்டே?
ஐய் இருநூறும் அல்ல;அனந்தமாம் முகங்கள் அம்மா! (9599)

(புணர்ப்பு-தோற்றம்; மிடைந்த-செறிந்த; வினையம்-போர்த் தந்திரங்கள்; ஐஇருநூறு-ஆயிரம்; அனந்தம்-அளவற்றன)

''ஒரே ஒரு முகத்தைக் கொண்டவனை மனிதன் என்று கூறினால், இங்கு நிற்கின்ற இராமபிரானது தோற்றம் ஒரு முகத்தைக் கொண்ட மனிதன் அல்லன் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. ஆயிரம் வெள்ளம் என்று நெருங்கியிருக்கின்ற இந்தச்சேனையில் ஒவ்வொருவரும் செய்கின்ற சூழ்ச்சித் திறன்களையெல்லாம் அவ்வப்போது தெரிந்துகொண்டு, அதற்கு ஏற்றதும் மிக்கதுமான எதிர்ச்செயல்களையெல்லாம் ஒரே முகம் கொண்ட மனிதனால் எதிர்த்துச் செயலாற்றமுடியுமோ? இவனுக்கு ஆயிரம் முகங்கள் உண்டு என்று வேதங்களும் புராணங்களும், சொல்லு வதுகூடப் பொய்யாகத்தான் தோன்றுகிறது. அது உண்மையல்ல; இவனுடைய முகங்களுக்கு அளவேயில்லை இதை நாம் தெளிவாகத் தெரிந்துகொண்டோம்'' என்று கவிஞன் அரக்கர்களையும் உளப்படுத்திக் கூறுகிறான்.

''உண்டே'' என்பதில் உள்ள ஏகாரம் வினாப்பொருளில் இல்லை என்ற எதிர்மறைப்பொருளைத்தரும். புறத்தில் ஒரு முகத்தைக்கொண்டு விளங்குபவன் போலத் தோற்றமளித்தாலும், இவன் எத்தனை முகங்கள் கொண்டுள்ளான் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாது என்பது கவிஞனின்கருத்து. முன்பு ''மையோ, மரகதமோ'' என்றுகூறி இராமபிரான் முக ஒளியை விதந்து கூறிய கவிஞன், இங்கு அவன் முகத்தின் எண்ணிக்கைக்கு அளவே கிடையாது என்று ''அனந்தமா முகங்கள்'' என்று கூறுவதை நுனித்து உணர்க. ஆயிரம் முகங்களின் சோதியைக் கற்பனை செய்து பாருங்கள். அதனால்தான் மணிவாசகர் ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி'' என்று இறைவனைத் துதிக்கிறார் என்பதையும் ஒப்பிட்டு நோக்குக.

219. கண்ணுதல் பரமன்தானும், நான்முகக் கடவுள் தானும்,
"எண்ணுதும் தொடர எய்த கோல்" என, எண்ணலுற்றார்;
பண்ணையால் பகுக்கமாட்டார், தனித்தனி பார்க்கலுற்றார்;
"ஒண்ணுமோ கணிக்க?" என்பார்; உவகையின் உயர்ந்த தோளார். (9600)

Koviloor Digital Library

(கண்ணுதல்-சிவபெருமான்; கோல்-அம்புகள்; பண்ணை-தொகுதி; உயர்தல்-பூரித்தெழுதல்; ஒண்ணுமோ-இயலுமோ; கணித்தல்-எண்ணுதல்/அளவிடுதல்)

மூன்று கண்களையுடைய நெற்றிக்கண்ணனான சிவபெருமானும், நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், இராமபிரான் இடைவிடாது தொடர்ந்து செலுத்துகின்ற அம்புகளை எண்ணிக் கணக்கிடுவோம் என்று எண்ணத் தொடங்கினார்கள். அவற்றைத் தொகுதி தொகுதியாக எண்ணிப் பார்க்க முடியாமல், தனித்தனியாக எண்ணிப்பார்க்கலாமா என்று தொடங்கினார்கள்; என்றாலும் அவர்களால் தனித்தனியாகவோ, தொகுதி தொகுதியாகவோ எண்ணிப்பார்க்க முடியவில்லை. இது தங்களுக்கு ஆதரவான செயலாக இருக்கவே மிக்க மகிழ்வெய்தி, பூரிக்கப்பெற்ற தோள்களையுடையவர்களாகி ''இவற்றை எண்ணி அளவிடுவது என்பது நம்மால் முடிகின்ற காரியமா?'' என்று தளர்ந்து போனார்கள்.

''ஒண்ணுமோ'' என்பதில் உள்ள ஓகாரம் ஒண்ணாது, இயலாது என்று எதிர்மறைப் பொருளைத்தரும்.

220. "வெள்ளம் ஈர் ஐந்து நூறே; விடுகணை அவற்றின் மெய்யே
உள்ளவாறு உளவாம்" என்று, ஓர் உரை கணக்கு உரைத்துமேனும்,
"கொள்ளை ஓர் உருவை நூறு கொண்டன பலவால்; கொற்ற
வள்ளலே வழங்கினானோ?" என்றனர் மற்றை வானோர். (9601)

(உரை-சொல்லுதல்; கொள்ளை-கூட்டம்; உரு-உடம்பு; கொற்றம்-வெற்றி; வானோர்-தேவர்கள்; விடுதல்-ஏவுதல்)

இராமபிரானை எதிர்த்துவந்த அரக்கர்சேனையின் அளவோ ஆயிரம் வெள்ளமாகும். இராமபிரான் அச்சேனையின் உடல்களின்மீது செலுத்திய அம்புகளின் எண்ணிக்கையை அந்த உடல்களின் எண்ணிக்கையே என்று ஒரு பேச்சுக்காக அப்படிக் கணக்கிட்டுப் பார்ப்போம் என்றால், ஆயிரம் வெள்ளம் கணைகள்தானே அவன் செலுத்தியிருக்க வேண்டும்? ஆனால் இங்கு ஒரு உடம்பை நூறு துண்டங்களாக்கியனவே அவன் கணைகள்! அதனால் எத்தனை கணைகள் என்பதைக் கணக்கிடமுடியுமா? அல்லது இத்தனை கணைகளையும் அந்த வெற்றியும் வள்ளன்மையும் மிகுந்த இராமபிரான் ஒருவன்தான் செலுத்தினான் என்று கருதமுடியுமா?'' என்று வியந்தனர் இந்திரன் முதலான மற்ற தேவர்கள்.

''உரைகணக்கு'' என்ற சொல்லை வழக்குச் சொல்லாகக் கவிஞன் பயன்படுத்தியிருப்பதை நோக்குக. ''ஒரு பேச்சுக்காக எடுத்துக் கொண்டாலும்கூட'' என்று இன்று பேச்சுவழக்கில் கூறுகிறோம் அல்லவா? அதையே கவிஞன் இங்கே ''உரை கணக்கு'' என்று ஒரு புதுச்சொல்லால் தெரிவிப்பதை உணர்க. இராமபிரான் அம்புகளை மழையென வாரி இறைத்ததால் அவனை ''வள்ளல்'' என்கிறான் கவிஞன்

Koviloor Digital Library

என்பதை நோக்குக. வாரியிறைப்பவன் வள்ளல் எனப்படுகிறான். பொருளாக இருந்தாலும், அருளாக இருந்தாலும், அன்பாக இருந்தாலும், அம்பாக இருந்தாலும் வள்ளலே என்பதில் உள்ள சுவை நினைந்து மகிழ்க. முன்பாடலில் முக்கணானும், நான்முகனும் எண்ணிப்பார்த்தும் முடிய வில்லை என்றும் கூறிய கவிஞன், இப்பாடலில் அவர்கள் இருவரையும் தவிர, இந்திரன் முதலான தேவர்கள் வியந்து நின்றனர் என்கிறான்.

221. "குடைக்கெலாம், கொடிகட்கு எல்லாம், கொண்டன குவிந்த கொற்றப்
படைக்கெலாம், பகழிக்கு எல்லாம் யானை, தேர், பரி, மா, ஆதி
கடைக்கெலாம், துரந்த வாளி கணித்ததற்கு அளவை காட்டி,
அடைக்கலாம் அறிஞர் யாரே?" என்றனர் முனிவர் அப்பால். (9602)

(குவிந்த-ஒன்றுதிரண்ட; கொற்றம்-வெற்றித்திறன்; கடை-எல்லை; ஆதி-முதலாக; துரத்தல்-செலுத்துதல்; கணித்தல்-எண்ணுதல்; அடைத்தல்-முடித்தல்/அறுதியிடுதல்)

''இராமபிரான் செலுத்திய அம்புகளின் வேகத்தால் அறுத்தெறியப் பட்ட வெண்கொற்றக் குடைகளும், கொடிகளும், ஒருங்கே குவிக்கப் பட்டுக் கிடந்த வெற்றித்திறன் வாய்ந்த போர்க்கருவிகளும், அம்புகளும், யானை, தேர், குதிரை, பெரிய காலாட்படை முதலானவற்றுக்கெல்லாம், ஒரு கணக்கு எடுத்து, எண்ணிப்பார்த்து இதுதான் அவற்றின் அளவு என்று அறுதியிட்டுக் கூறும் வல்லமைபடைத்த அறிஞர்கள் யாராவது இருக்கிறார்களா?'' என்று தேவர்களுக்கும் அப்பால் நின்று கொண்டிருந்த முனிவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள்.

இராமபிரான் அறுத்தெறிந்த அரக்கர் படைக்கலன்களின் மிகுதியும், இராமபிரானின் வில்வன்மையும் சிறப்பிக்கப்பட்டது. ''யாரே'' என்பதில் உள்ள ஏகாரம் யாருமில்லை என்ற எதிர்மறைப் பொருளைத்தரும். ''முனிவர்'' என்பது மனனசீலர்களைக் குறிப்பது, ''ரிஷகள்'' என்பது வடசொல் ''இருடிகள்'' என்பது தூய தமிழ்ச்சொல்.

222. கண்டத்தும், கீழும், மேலும், கபாலத்தும் கடக்கல் உற்ற
கண்டப்போர் அரக்கர் தம்மைத் தொடர்ந்து, கோல் புணரும் தன்மை,
பிண்டத்தில் கரு ஆம் தன்பேர் உருக்களைப் பிரமன் தந்த
அண்டத்தை நிறையப் பெய்து குலுக்கியது அனைய ஆன. (9603)

(கடத்தல்-அப்பாற்செல்லுதல்; சண்டம்-வேகம்/கடுமை; கோல்-அம்பு; கண்டம்-குரல்வளை/கழுத்து; கபாலம்-தலை/மண்டையோடு; புணர்தல்-பொருந்துதல்; தருதல்-படைத்தல்; பேர்-மிக்க; பெய்தல்-இடுதல்; உரு-படைப்பு)

போர்க்களத்திலிருந்து அச்சம்கொண்டு வெளியேறிச் செல்லுகின்ற படைவீரர்களைத் தொடர்ந்து சென்று. அவர்கள் குரல்வளை, கழுத்து,

Koviloor Digital Library

அதன் மேற்பகுதி, கீழ்ப்பகுதி, மண்டையோடு, தலை, என்று எல்லா உறுப்புக்களிலும் சென்று சேர்ந்த இராமபிரானது அம்புகளின் தன்மை, பிரமதேவன் தான் படைக்கும் தொழிலைச் செய்யும்போது அந்தக் கடுங் கணை தனது பெரிய அண்டத்தில் நிரப்பிக் குலுக்குவது போன்றிருந்தது.

கம்பனின் அதீதக் கற்பனை. எனினும் கடைசி இரண்டு அடிகளின் பொருள் எளிதில் புரிந்துகொள்ள முடியாதவண்ணம் அமைந்து போகிறது. உரைநூல்கள்கூடத் தெளிவான பொருளைத் தரவில்லை. அண்டம் குலுங்கும்போது எல்லாப் பொருள்களும் மேலும் கீழுமாய் உருளுவது போன்று, போர்க்களத்தில் எல்லா இடங்களிலும் சுழன்று துன்பப்பட்டு அரக்கர்கள் அழிந்தனர் என ஒருவகையாகப் பொருள் கொள்ளலாம்.

223. கோடி ஐ இரண்டு தொக்க படைக்கல மள்ளர் கூவி,
ஓடி ஓர் பக்கமாக, உயிரிழந்து, உலத்தலோடும்,
"வீடி நின்று அழிவது என்னே! விண்ணவர் படைகள் வீசி
மூடுதும் இவனை" என்று, யாவரும் மூண்டு மொய்த்தார். (9604)

(ஐஇரண்டு-பத்து; தொக்க-திரண்டிருந்த; மள்ளர்-அரக்கவீரர்கள்; கூவுதல்-கதறுதல்; உலத்தல்-அழிதல்; வீடுதல்-அழிதல்/ஆற்றல் கெடுதல்; இழிவது-வருந்துவது; மூடுதல்-மறைத்தல்/அழித்தல்; மூள்தல் -முற்படுதல்; மொய்த்தல்-நெருங்குதல்/சூழ்ந்துகொள்ளுதல்)

பத்துக்கோடி என்னும் அளவினதாகக் கூறப்படும் படைக்கலங்களைக் கையில் ஏந்தி ஒன்று திரண்டு நின்ற அரக்க வீரர்கள், இராமபிரான் செலுத்திய அம்புகளுக்கு அஞ்சி அலறி அடித்துக்கொண்டு ஒருபக்கமாக ஓடி, ஒதுங்கி, உயிரிழந்து அழிந்துபோனதைக் கண்ட, எஞ்சியிருந்த அரக்கவீரர்கள், ''நாம் நம் படைக்கருவிகளை எறிந்து அவனால் அழிக்கப்பட்டு வருந்தி நிற்பது எதற்காக? நாம் வரத்தினால் தேவர்களிட மிருந்து பெற்ற தெய்வத்தன்மை வாய்ந்த அஸ்திரங்களை இராமன்மீது செலுத்தி அவனை மூடிக் கொன்றுவிடுவோம் வாருங்கள்'' என்று கூறிக்கொண்டே இராமபிரானை நெருங்கிச் சூழ்ந்துகொண்டார்கள்.

224. விண்டுவின் படையே ஆதி வெய்யவன் படை ஈறாக,
கொண்டு ஒருங்கு உடனே விட்டார்; குலுங்கியது அமரர் கூட்டம்;
அண்டமும் கீழ் மேலாக ஆகியது; அதனை அண்ணல்
கண்டு, ஒரு முறுவல் காட்டி, அவற்றினை அவற்றால் காத்தான். (9605)

(விண்டு-விஷ்ணு/திருமால்; வெய்யவன்-அக்னிதேவன்; ஒருங்கு-ஒருசேர; அண்ணல்-பெரியோன்/இராமபிரான்; காட்டுதல்-தோற்று வித்தல்; காத்தல்-தடுத்தல்; ஆதி-முதலாக; குலுங்குதல்-உடல் நடுங்குதல்; ஒரு-ஒப்பற்ற)

Koviloor Digital Library

திருமாலின் படைக்கலமாகிய நாராயண அஸ்திரம் முதல், வெப்பம் மிகுந்த அக்னிதேவனின் அக்னி அஸ்திரம்வரை எல்லாத் தெய்வப் படைக்கலன்களையும் தம் கைக்கொண்டு, விரைந்து, ஒருசேர இராமபிரான்மேல் செலுத்தினார்கள் அரக்கர்கள். அதனால் தேவர்கள் கூட்டமெல்லாம் உடல் நடுக்கமுற்றது; இவ் அண்டகோளமே தலைகீழாக நிலைகுலைந்தது; அதனைக் கண்ட பெருமைக்குரியவனான இராமபிரான், ஒப்பற்ற தன் முறுவலை வெளிப்படுத்தி, அவர்கள் எந்தப்படைக்கலன்களை எய்தார்களோ, அதே படைக்கலன்களைத் தானும் எய்து தடுத்துக்கொண்டான்.

முன்பு இலக்குவனுக்கு அறிவுறுத்திய வண்ணமே தானும் இப்போது அதே படைக்கலன்களைக் கொண்டு தன்னைக் காத்துக்கொண்டான் என்பதாம். விண்டு என்பது விஷ்ணு என்பதன் திரிபு.

225. தான் அவை தொடுத்தபோது, தடுப்ப அரிது, உலகம் தானே
பூ நனி வடவைத் தீயின் புக்கெனப் பொரிந்து போம்'' என்று,
ஆனது தெரிந்த வள்ளல், அளப்பருங் கோடி அம்பால்,
ஏனையர் தலைகள் எல்லாம், இடியுண்ட மலையின் இட்டான். (9606)

(பூ-பூமி/உலகம்; நனி-மிக்க; வடவைத்தீ-வடவாமுகாக்னி; பூ-மலர்; புகுதல்-விழுதல்; அளப்பரும்-அளவிட்டுரைப்பதற்கரிய; ஏனையர்-எஞ்சியுள்ளவர்கள்; மலையின்-மலையைப்போல; இடுதல்-வீழ்த்துதல்)

தான் அதே தெய்வீகத்தன்மை பொருந்திய படைக்கலன்களைப் பகைவர்க்கு எதிராகத் தொடுத்துச் செலுத்தினால் அதை அவர்களால் தடுத்து நிறுத்தமுடியாது என்பதையும், அவ்வாறு தான் செய்தால் இவ்வுலகம் முழுவதும் ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் மிக்க வெப்பமுடைய வட அனலில் ஒரு மலர் விழுந்து அழிந்து போவதைப் போல் உலக உயிரினங்கள் எல்லாம் அழிந்துபடும் என்பதையும் நன்கு உணர்ந்த வள்ளலாகிய இராமபிரான், அந்தப் படைகளைக் கொண்டு பகைவர்களைத் தாக்காமல், கோடிக்கணக்கான, அளவிடற்கரிய அம்புகளால் எஞ்சியிருந்த அரக்கர்களின் தலைகளை எல்லாம், இடியினால் தாக்கப்பட்ட மலை எப்படிச் சரிந்து விழுமோ, அவ்வாறு வீழ்த்தலானான்.

''ஏனையர்'' என்பது முன்பு போரில் இறந்துபட்டவர்கள்தவிர, எஞ்சிப் போர்க்களத்தில் நின்ற அரக்கர்கள் என்று பொருள்படும். இங்கே ''வள்ளல்'' என்பது அவனது கருணைக் குணத்தைச் சுட்டி நின்றது.

226. ஆயிர வெள்ளத்தோரும், அடுகளத்து அவிந்து வீழ்ந்தார்;
மாயிரு ஞாலத்தாள் தன் வன்பொறைப் பாரம் நீங்கி,
மீ உயர்ந்து எழுந்தாள் அன்றே, வீங்கு ஒலி வேலை நின்றும்,
போய் ஒருங்கு அண்டத்தோடும் கோடி யோசனைகள் பொங்கி. (9607)

Koviloor Digital Library

(அடுதல்-கொல்லுதல்; அடுகளம்-போர்க்களம்/கொலைக்களம்; அவிதல்-இறந்துபோதல்; மாஇரு-மிகப்பெரிய; ஞாலத்தாள்-நிலமாகிய பெண்/நிலமகள்; பாரம்-சுமை; வீங்குஒலி-பேரொலி; வேலை-கடல்; பொங்குதல்-கிளர்ந்தெழுதல்; மீ-மேலே)

இராமபிரான் செலுத்திய அந்தக் கோடிக்கணக்கான அம்புகளால், அரக்கர்படையிலிருந்த ஆயிரம் வெள்ளம் என்று கூறப்படும் அனைவரும் போர்க்களத்தில் இறந்து ஒழிந்தனர்; இப்போது மிகப்பெரிய பெருமை வாய்ந்த நிலமகளும், தனது உடற்பாரம் சற்று நீங்கப்பெற்று, பேரொலி எழுப்பும் கடலினின்றும் எழுந்து இவ்வண்ட கோளத்தோடு ஒன்று சேர்ந்து, கோடி யோசனை அளவு தூரம் பொங்கி மேல் எழுந்து தனது பாரத்தைத் தீர்த்துக்கொண்டாள்.

''வன்பொறை'' என்பது தீயபாவிகளாகிய அரக்கர்களைத் தாங்கி நின்றதைக் குறித்தது. ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்'' இங்கு ''மாயிரு ஞாலம்'' எனப்பட்டது என்க.

227. தேவர்கள் மகிழ்தல்

"நினைந்தன முடித்தேம்" என்னா, வானவர் துயரம் நீத்தார்;
"புனைந்தனென் வாகை" என்னா, இந்திரன் உவகை பூத்தான்;
வனைந்தன அல்லா வேதம் வாழ்வு பெற்று உயர்ந்த மாதோ!
அனந்தனும் தலைகள் ஏந்தி, அயாவுயிர்த்து, அவலம் தீர்ந்தான்.(9608)

(முடித்தல்-முடியப்பெறுதல்; புனைதல்-சூடுதல்; வாகை-வெற்றி மாலை; வனைதல்-இயற்றுதல்/செய்யப்படுதல்; அனந்தன்-ஆதி சேஷன்; ஏந்துதல்-உயர்த்துதல்; அயாவுயிர்த்தல்-நெட்டுயிர்த்தல்/நெட்டி முறித்தல்/முதுகை நெளித்துக் கொள்ளுதல்; அவலம்-வருத்தம்/துன்பம்)

இராமபிரானால் மூலபலப்படை முழுவதும் அழிக்கப்பெற்றது கண்ட தேவர்கள், ''நாம் நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றி விட்டோம்'' என்று தங்கள் துயரம் நீங்கப்பெற்றார்கள்; இந்திரன் தான் வெற்றிமாலை சூடியதாகப் பெருமகிழ்ச்சி அடைந்தான்; எவராலும் இயற்றப்படாததும், அனாதியானதுமான, எழுதாக்கிளவியான வேதங்கள், சீரிய வாழ்வு பெற்றுச் சிறந்து ஓங்கி நின்றன; உலகைத் தம் ஆயிரம் பணா முடிகளால் தாங்கி நிற்கும் ஆதிசேஷனும் பாரம் குறைந்தமையால் தம் தலைகளை நிமிர்த்தி, நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டு, தன் துயரம் நீங்கப் பெற்றான்.

எழுதாக்கிளவியாகிய வேதத்தை ''ஸ்மிருதி'' என்கிறது வடநூல்; ''வனைந்தன அல்லா வேதம்'' என்கிறான் கம்பன் என்பதை நினைக. ஆதிசேஷனுக்கு ஆயிரம் தலைகள் என்பதால் தலைகள் எனப் பன்மையில்

Koviloor Digital Library

கூறப்பட்டது. ''சகஸ்ரபணாபணி மண்டல மண்டிதே'' என்பது வேத வாக்கியம். ''வேதம் வாழ்வு பெற்று உயர்தல்'' என்பது, வேதநெறிக்கு இடையூறு இழைத்து வந்த அரக்கர்கள் ஒழிந்துபோனதால் அந்நெறியின் பாற்பட்டு ஒழுகும் நல்லோர்களால் மீண்டும் ஓதப்பெற்று நிலைபெறப் போவதால் அவை மேம்பட்டன என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

228. எல்லோரும் இராமபிரானை வாழ்த்தி வணங்குதல்

"தாய் படைத்துடைய செல்வம் ஈக" என, தம்பிக்கு ஈந்து,
வேய் படைத்துடைய கானம் விண்ணவர் தவத்தின் மேவி,
தோய் படைத் தொழிலால் யார்க்கும் துயர் துடைத்தானை நோக்கி,
வாய் படைத்துடையார் எல்லாம், வாழ்த்தினார், வணக்கம் செய்தார். (9609)

(படைத்துடைய-பெற்றுடைய; ஈக-ஈவாயாக; வேய்-மூங்கில்; மேவுதல்-அடைதல்; துடைத்தல்-போக்குதல்; தாய்-கைகேயி/சிற்றன்னை; தம்பி-பரதன்)

தன் சிற்றன்னை கைகேயி, ''நீ பெற்றுள்ள அரசச் செல்வத்தை எல்லாம் உன் தம்பி பரதனுக்குக் கொடுத்துவிடு'' என்று கட்டளையிட, அதை உடனேயே தன் அன்புத் தம்பி பரதனுக்குத் தந்துவிட்டு, மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்துள்ள கானகத்தை, தேவர்கள் செய்த தவப்பயனால் வந்து சேர்ந்தவனும், தான் ஈடுபட்டுள்ள போர்செய்யும் தொழிலால் தீய அரக்கர்களை அழித்து எல்லோருடைய துயரத்தையும் தீர்த்தருளிய வனுமான இராமபிரானை நோக்கி, வாய் என்ற உறுப்புப் படைத்தவர்கள் எல்லோரும், தேவர்களும், முனிவர்களும் மனமார வாழ்த்தி, தலைதாழ்த்தி வணங்கினார்கள்.

''பெற்ற தாதை ஈட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து, காட்டொரு கருமம் செய்தாய்'' என்பது சுக்கிரீவன் கூற்று; ''தாதை உதவிய தரணி'' என்பது குகன் கூற்று. ''வாழ்த்த வாயும், நினைக்கமட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும்'' என்பது இறைவனை வழிபடும் முறை, அதனை இங்கே தேவர்களும், முனிவர்களும் செய்தனர் என்பதாம். ''இறைவனை ஏத்தாதவாய், கூழுக்கும் ஏக்கற்றிருக்கும் வெறும் வாய்'' என்பது வள்ளலார் கருத்து.

229. தீ மொய்த்த அனைய செங்கண் அரக்கரை முழுதும் சிந்தி,
பூ மொய்த்த கரத்தர் ஆகி, விண்ணவர் போற்ற நின்றான்;
பேய் மொய்த்து, நரிகள் ஈண்டி, பெரும் பிணம் பிறங்கித் தோன்றும்,
ஈமத்துள் தமியன் நின்ற கறைமிடற்று இறைவன் ஒத்தான். (9610)

Koviloor Digital Library

(மொய்த்தல்-நெருங்குதல்/நிறைதல்/செறிதல்/சூழ்தல்; சிந்துதல்-கொன்று அழித்தல்; ஈண்டுதல்-நெருங்குதல்; ஈமம்-மயானம்/சுடுகாடு; தமியன்-தனியன்/ஒருவன்; கறை-நஞ்சு; மிடறு-கண்டம்/கழுத்து/குரல்வளை; இறைவன்-சிவபெருமான்; பிறங்குதல்-விளங்கித் தோன்றுதல்)

சினத்தினால் நெருப்புக் கொழுந்து விட்டெரிகின்ற சிவந்த கண்களையுடையவரான அரக்கர்களை வேரோடும் அழித்து ஒழித்ததனால், விண்ணுலகத்துத் தேவர்கள், இராமபிரானைப் போற்றித் துதிக்கக் கைகளில் மலர்களை நிறைத்து வைத்திருக்க பேய்களும், நரிகளும் செறிந்து நிறைந்து, வெறும் பிணக்குவியல்களாக விளங்கித் தோன்றும் அந்தப் போர்க்களத்தில் தனியனாக நின்றிருந்த இராமபிரான், ஊழியிறுதிக் காலத்தில் உலக உயிரினங்களையெல்லாம் அழித்துச் சுடுகாட்டில் தனித்து நின்று நடனமாடும், நஞ்சுண்ட கண்டனான சிவபெருமானை ஒத்துத் தோன்றினான்.

''மொய்த்த'' என்ற சொல் நிறைந்த, நெருங்கிய, சூழ்ந்த, செறிந்த என்ற பலபொருள்களைத் தரும். இங்கே காத்தல் கடவுளாகிய திருமாலின் அவதாரமான இராமபிரானை அழித்தல் கடவுளாகிய சிவபெருமானுக்கு ஒப்புக் கூறியமையை நுனித்து உணர்க. ''பேய்வாழ் காட்டகத்து ஆடும் பிரான் தனை'' என்பது திருவரங்க மாலை.

230. அண்டம் மாக்களமும், வீந்த அரக்கரே உயிரும் ஆக,
கொண்டது ஓர் உருவம் தன்னால், இறுதிநாள் வந்து கூட,
மண்டுநாள், மறித்தும் காட்ட, மன்னுயிர் அனைத்தும் வாரி,
உண்டவன் தானே ஆன தன் ஒரு மூர்த்தி ஒத்தான். (9611)

(களம்-போர்க்களம்; வீந்த-அழிக்கப்பட்ட; இறுதிநாள்-ஊழியிறுதிக் காலம்; மண்டுதல்-வந்துகூடுதல்/நெருங்குதல்; மறித்தும்-மீளவும்/மீண்டும்/பின்னும்; மன்-நிலைபெற்ற; மூர்த்தி-உருவம்/வடிவம்; காட்டுதல்-தோற்றுவித்தல்/உண்டாக்குதல்/சிருஷ்டித்தல்/படைத்தல்)

பெரிய போர்க்களமே இவ்வண்ட கோளமாகவும், அங்கு இராமபிரானால் அழித்தொழிக்கப்பட்ட அரக்கர்களே, உயிரினங்களாகவும், தான் கொண்ட ஓர் உருவத்தினால் தனித்து நின்ற இராமபிரான் ஊழியிறுதிக் காலம் வந்து கூடும்பொழுது, அதை மீண்டும் படைப்பதற்காகவே, இப்போது உலக உயிரினங்கள் அனைத்தையும் வாரி எடுத்து அழிக்கும் இயல்புடைய தன்னுடைய, மூலவடிவான திருமாலை ஒத்துத் தோன்றினான்.

முன்பாடலில் இராமபிரானைச் சிவபெருமானுக்கு உவமித்த கவிஞன், இந்தப் பாடலில் இராமபிரானை அவனுடைய ஆதிமூல மூர்த்தியாகிய திருமாலாகவே உருவகித்ததை நுனித்து உணர்க. போர்க்களத்தை

Koviloor Digital Library

அண்டகோளமாகவும், அரக்கர்களை உயிரினங்களாகவும், இராம பிரானது வடிவத்தை மூலப்பரம் பொருளாகவும் உருவகித்தார் என்க. இங்கே ஒன்று கருதப்பட வேண்டும், ஊழியிறுதிக்காலத்தில் சிவபெருமானோ, திருமாலோ உலக உயிரினங்கள் எல்லாவற்றையும் காப்பாற்றி மீண்டும் அவர்களைப் படைக்கும்பொருட்டே தன் வயிற்றினுள் அடக்கிக் கொள்கிறார்களே அன்றி, உலக உயிரினங்களை ஒருசேர அழிக்கவேண்டும் என்பது அவர்கள் நோக்கமல்ல. அதனால்தான் கவிஞன் இங்கே ''மன்னுயிர்-நிலைபெற்ற உயிர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறான் என்பதறிக. உடல்தான் அழியுமே அன்றி உயிர் என்றுமே அழியாதது என்பது உணரப்படவேண்டும். ''மறித்துக் காட்ட'' என்ற சொல் மீண்டும் படைக்க, தோற்றுவிக்க, உண்டாக்க என்ற சிறந்த ஆழ்ந்த பொருளைத்தரும். விழுங்குவது அழிப்பதற்கன்று, படைப்ப தற்கே என்பது கருத்து. போர்க்களம்-அண்டம்; அரக்கர்கள்-மன்னுயிர்கள்; இராமபிரான்-திருமால் என்பது உருவகம்.

231. இராமபிரான் போர்க்களம் விட்டு அகலுதல்

ஆகுலம் துறந்த தேவர் அள்ளினர் சொரிந்த வெள்ளச்
சேகு அறு மலரும் சாந்தும் செருத்தொழில் வருத்தம் தீர்க்க
மா கொலை செய்த வள்ளல், வாள் அமர்க்களத்தைக் கைவிட்டு,
ஏகினன், இளவலோடும் இராவணன் ஏற்ற கைம்மேல். (9612)

(ஆகுலம்-துன்பம்; துறத்தல்-நீங்குதல்; சேகு-குற்றம்; செரு-போர்; வருத்தம்-அயர்ச்சி/தளர்ச்சி; மா-பெருமை; கொலை-அழித்தல் தொழில்; வாள்-கொடிய; ஏற்றல்-எதிர்த்துப் போரிடுதல்; கை-பக்கம்/சேனை; இளவல்-இலக்குவன்; வெள்ளம்-மிகுதி)

இராமபிரான் அரக்கர்கள் எல்லோரையும் அழித்துவிட்டதனால் துன்பம் நீங்கப்பெற்ற தேவர்கள், போர்க்களத்தில் இராமபிரான் அடைந்த தளர்ச்சி நீங்கிப்போகுமாறு தம் கைகளில் நிறைய குற்றமற்ற மலர்களையும், சந்தனத்தையும் கொண்டு சொரிந்தனர்; அப்போது போர்க் களத்தில் பெரிய பெருமைக்குரிய கொலைத்தொழிலைச் செய்த கருணை மிக்கவனான மன்னவன் இராமபிரான், போர்க்களத்தை விட்டு நீங்கி, இப்போது இலக்குவன் இராவணனுடன் போர்செய்து கொண்டிருந்த சேனைகள் நிற்கும் பக்கமாகச் செல்லலானான்.

''மா கொலை செய்த வள்ளல்'' என்ற சொற்றொடர் ஆழ்ந்த பொருள் கொண்டது. கொலைபுரிதலை மாகொலை என்றும், அவ்வாறு செய்த வனை வள்ளல் என்றும் கவிஞன் கூறுவதை நுனித்து உணரவேண்டும். அரக்கர்களைக் கொன்றழிப்பது என்ற செயல் கொலையின் பாற்பட்ட தன்று; அது களைகளைக் களைந்தாற் போன்றதாகும்; ''கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல், பைங்கூழ் களை கட்டதனோடு நேர்''

Koviloor Digital Library

என்பது குறள்-550. தீயோரை அழிப்பது மன்னவர் கடமை என்க. இவ்வாறு மிகுதியாகக் கொலை செய்தவனை ''வள்ளல்'' என்கிறானே, எனில் இறைவனுடைய ஐந்து செயல்களில் ''அழித்தல்'' என்பதும் அதனுள் அடக்கம் என்பதால் அதனை அருட்செயலாகக் கருதவேண்டும் என்பதும் கருதத்தக்கது. துஷ்ட நிக்ரகத்தினாலேதான் சிஷ்ட பரிபாலனம் நிறைவேறும் என்றால் அது அருட்செயல் என்றே கொள்ளவேண்டும். அதுதான் அவதார நோக்கமும் ஆகும். களையெடுக்கப்படுவது, பயிர் தழைத்துச் செழிக்கவே என்பதனால் என்க.

232. இவ்வழி இயன்ற எல்லாம் இயம்பினாம்;
இரிந்து போன, தெவ்வழி ஆற்றல் வெற்றிச் சேனையின் செயலும்,
சென்ற வெவ்வழி அரக்கர் கோமான் செய்கையும், இளையவீரன்
எவ்வம் இல் ஆற்றல்போரும், முற்றும் நாம் இயம்பல் உற்றாம். (9613)

(இயன்றன-நிகழ்ந்தன; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; தெவ்-பகைவர்; வெவ்வழி-கொடிய முறைமை; கோமான்-தலைவன்/இராவணன்; எவ்வம்-குற்றம்; முற்றும்-முழுவதும்)

இவ்வாறு இராமபிரான் இங்கு மூலபலச் சேனையைத் தனி ஒருவனாகவே நின்று அழித்து ஒழித்த செய்தியையும் இங்கே நிகழ்ந்தன வற்றையும் இதுவரை கூறினோம். முன்பு அரக்கர் சேனையைக் கண்டு அஞ்சி நிலைகுலைந்து ஓடிப்போன வானரச்சேனைகள் மீண்டு வந்து, பகைவரை அழித்து ஒழித்த வெற்றி மிகுந்த ஆற்றல்பெற்ற அந்தச் சேனையின் செயலையும், அவர்களை எதிர்த்துச் சென்று போராடிய கொடுமைமிக்க அரக்கர் தலைவனாகிய இராவணனது செய்கையையும், அவனை எதிர்த்து இளையவீரனான இலக்குவன் குற்றம்அற்ற வலிமையுடன் செய்த போர்த்திறன் பற்றியும், முழுவதும் இப்போது சொல்லத் தொடங்குவோம்.

''தெவ்வுப் பகைமை'' என்பது நிகண்டு. ''தெவ்'' என்ற சொல்லுக்குப் பகைமை என்பது பொருள். இது ஒரு படல முடிவில், அப்படலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், அடுத்த படலத்தில தான் என்ன கூறப் போகிறோம் என்பதையும் குறிக்கும் கவிக்கூற்றாகும்.

மூலபல வதைப்படலம் நிறைவுற்றது.

Koviloor Digital Library

31. வேல் ஏற்ற படலம் [50 பாடல்கள்]

இராவணன் தன் தம்பி வீடணன்மீது கோபம்கொண்டு மயன் தந்த வேலைச் சீற்றத்துடன் வீசியெறிய, அதனைத் தன் மார்பில் இலக்குவன் ஏற்றுக்கொண்டு தம்மை வந்து அடைக்கலம் அடைந்த வீடணனை இராவணன் வேற்படையினின்றும் காப்பாற்றிய நிகழ்ச்சியைக் கூறும் பகுதி எனப் பொருள்விரிவு கொள்ளும். இது 50 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''வேலேற்று படலம்'' எனவும், ''வேலேற்றப் படலம்'' எனவும் குறிக்கப்பெற்றிருக்கின்றன. வான்மீகத்தினின்றும் கம்பன் வேறுபடும் நிகழ்வுகள் அவ்வப்பாடலின் விளக்கத்தில் தரப்பட்டிருக் கின்றன.

இப்படலத்துள், முன்பு அஞ்சி ஓடிய வானரப்படைகள் திரும்பவும் போர்க்களத்துக்கு வருதல்; இராவணன் தானே போர்க்களத்திற்குச் செல்லுதல்; இரண்டு படைகளும் போர்செய்தல்; இராவணன் சீற்றம் கொள்ளுதல்; இராவணனும் இலக்குவனும் தனித்துப் போரிடுதல்; இராவணன் இலக்குவனை விற்படையினால் கொல்ல இயலாது என்பதை யூகித்து உணர்ந்து, மோகனப்படையை ஏவுதல்; வீடணன் அறிவுறுத் தலின்படி, இலக்குவன் நாராயண அஸ்திரத்தைச் செலுத்துதல்; படைகள் அழிவதைக் கண்ட இராவணன் சீற்றம் இப்போது இலக்குவனிடமிருந்து மாறி வீடணன்மேல் செல்லுதல்; வீடணனும் சினம்கொண்டு அரக்கர்களின் தேர்ப்படை, சாரதி முதலியவற்றை அழித்தல்; அதுகண்ட இராவணன் வீடணன்மேல் தனக்கு மயன் அளித்த வேற்படையைச் செலுத்துதல்; வீடணன் இப்படை தன் உயிரை அழித்துவிடும் என்று இலக்குவனிடம் கூற, அவன் வீடணனை அஞ்சாது இருக்கும்படி கூறுதல்; அவ்வேலைத் தன் மார்பில் ஏற்றுக்கொள்ள முற்பட்டு வருதல்; அதனைக் கண்ட அனுமன், அங்கதன் முதலியோர் ஒவ்வொருவரும் முந்திவர, இறுதியில், தம்மைச் சரணடைந்தவர்களைக் காப்பது தன் கடமை என்று கருதிய இலக்குவன், தானே அதனைத் தன் மார்பில் ஏற்றுக்கொள்ளுதல்; இராவணன் அதனால் சலிப்புற்று வான் நோக்கிச் சென்று அரண் மனைக்குள் நுழைந்துகொள்ளுதல்; இலக்குவன் நிலைகண்டு வீடணன் அல்லற்பட்டு ஆற்றாது அரற்றுதல்; சாம்பவன் அவனைத் தேற்றி, அனுமனை அழைத்து மருத்துமலையை மீண்டும் கொணரச்செய்தல்; மருத்துமலைக் காற்றுப்பட்டதும், இலக்குவனும் மற்றவர்களும் உறங்கி விழித்ததுபோல உயிர்பெற்றெழுதல்; இலக்குவன் எழுந்ததும்

Koviloor Digital Library

அனுமனைத் தழுவிக்கொண்டு, வீடணனுக்கு ஒன்றும் ஆகவில்லையே? என்று வினவுதல்; வானரத்தலைவர்கள் இராமபிரானிடம் சென்று இங்கு நிகழ்ந்தன கூறுதல்; இராமபிரான் அனுமனை வாழ்த்தி, இலக்குவனைப் பாராட்டி, அவன் உயிர்பிழைத்தமை கண்டு நெஞ்சாரத் தழுவுதல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. வானரச்சேனை மீண்டும் திரும்பிவருதல்

''பெரும்படைத் தலைவர் யாரும் பெயர்ந்திலர்; பெயர்ந்து போய், நாம்
விரும்பினம் வாழ்க்கை என்றால், யார் இடை விலக்கற்பாலார்?
வரும் பழி துடைத்தும்; வானின் வைகுதும் யாமும்'' என்னா,
இருங்கடல் பெயர்ந்தது என்ன, தானையும் மீண்டது, இப்பால். (9614)

(யாரும்-எல்லோரும்; பெயர்தல்-நீங்குதல்; வாழ்க்கை-உயிர்வாழ்தல்; விலக்குதல்-தடுத்தல்; துடைத்தும்-துடைப்போம்/போக்குவோம்; வான்-துறக்கம்/வீரசுவர்க்கம்; வைகுதல்-இருந்து வாழ்தல்; இரும்-பெரிய; இப்பால்-இந்தப்பக்கம்; பழி-வசைமொழி)

''பெருமைமிக்கபடைத்தலைவர்கள்ஒருவரும்போர்க்களத்தினின்றும் நீங்கிச் செல்லவில்லை; அவ்வாறு இருக்கும்போது நாம் மட்டும், இங்கிருந்து நீங்கிப்போய் உயிர் பிழைத்து வாழ்வோம் என்று கருதினால் அதனை நடுவில் புகுந்து தடுப்பவர் யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை, என்றாலும் நாம் நமக்கு வர இருக்கிற வசைச்சொற்களைத் தவிர்த்துப் போக்குவோம். நாமும் போரில் ஈடுபட்டு, உயிர்துறந்து வீரசுவர்க்கம் அடைவோம்'' என்று உறுதியுடன் எண்ணிக்கொண்டு, முன்பு போர்க்களத்தை விட்டு நீங்கிச்சென்ற வானரசேனை அனைத்தும், ஒரு பெரிய கடலே பொங்கியெழுந்து வருவதைப்போல, மீண்டும் போர்க்களத்தை நோக்கி இப்பக்கம் வரலாயிற்று.

முன்பு மூலபல சேனையைக் கண்டு அஞ்சி வானரசேனை நிலைகுலைந்து ஓடிய செய்தி பேசப்பட்டதை இங்கே நினைவுகூர்க. இப்பொழுது இலக்குவன் போர்க்களத்திற்கு வந்துவிட்டதால் அவன் நம்மைக் காப்பான் என்ற உறுதியான எண்ணத்தால் வானரப்படை மீண்டும் போர்க்களத்திற்கு வந்தது என்க. இதேபோல ஒரு நிகழ்வு பாரதப்போரிலும் நிகழ்ந்திருக்கிறது கேளுங்கள். ''எட்டானைத் தம்ப முடன்செயத் தம்பம் நாட்டியே பேரிறைவன் மைந்தன், பட்டான் என்பது கேட்டுத் திருகினார், முதுகிட்டுப் பறந்த வீரர்'' என்பது வில்லிபாரதம். திருகினர்-திரும்பிவந்தனர்.

Koviloor Digital Library

2. இராவணன் போர்க்களம் புகுதல்

சில்லி ஆயிரம், சில் உளைப் பரியொடும் சேர்ந்த,
எல்லவன் கதிர் மண்டிலம் மாறு கொண்டு இமைக்கும்,
செல்லும் தேர்மிசைச் சென்றனன், தேவரைத் தொலைத்த
வில்லும், வெங்கணைப் புட்டிலும் கொற்றமும் விளங்க. (9615)

(சில்லி-உருளை/சக்கரம்; உளை-பிடரிமயிர்; எல்லவன்-சூரியன்; இமைத்தல்-ஒளிவீசுதல்; மாறுகொள்ளுதல்-ஒப்புமையாதல்; தொலைத்தல்-அழித்தல்; கொற்றம்-வெற்றித்திறன்)

ஆயிரம் சக்கரங்களையுடைய தேரில், கத்தரிக்கப்பட்ட, நீட்சியற்ற, அடர்த்தியற்ற, சிலவாகிய பிடரிமயிரினை உடைய ஆயிரம் குதிரைகள் பூட்டப்பெற்றதுமான தேரில், சூரியனின் ஒளிக்கதிரின் பரப்பைக் காட்டிலும் மிகுதியாக ஒளிவீசித் திகழும் தேரில், விரைந்து செல்லும் தேரில் ஏறி, தேவர்களை எல்லாம் அழித்தொழித்த விற்படையையும், கொடிய அம்புகள் நிறைந்த அம்பறாத் தூணியையும் கைக்கொண்டு, வெற்றித்திறன் வாய்ந்த இராவணன் போர்க்களத்துள் நுழைந்தான்.

ஆயிரம் சக்கரங்களையுடைய தேர், ஆயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட தேர், சூரியனின் ஒளியையும் விஞ்சும் ஒளிபடைத்த தேர், விரைந்து செல்லும் தேர் என்று தேரையும், தேவர்களை அழித்தொழித்த வில் என்றும், அம்பறாப்புட்டில் என்றும் அவன்வீரத்தையும் சிறப்பித்தவாறு, குதிரையின் பிடரிமயிர்க் கற்றையைத் ''தலையாட்டம்'' என்றும் கூறுவதுண்டு. இராவணன் ஏறிச்சென்ற தேர் பொன்மயமானதால் சூரியன் ஒளிக்கு ஒப்பாகவும், சூரியன் ஒளியை மிஞ்சியும் பொலிவுற்று விளங்கியது என்பதாம். இராவணனுடைய தேருக்குச் சூரியன் மட்டும் உவமையல்ல, சூரியமண்டலமே உவமை என்பது சிறப்பு.

3. நூறுகோடித் தேர், நொறில் பரி நூற்று இருகோடி,
ஆறுபோல் மதகரி ஐ-இருகோடி,
ஏறுகோள் உறு பதாதியும், இவற்று இரட்டி,
சீறுகோள் அரிஏறு அனானுடன் அன்று சென்ற. (9616)

(கோள்-வலிய; நொறில்-விரைவு; அரிஏறு-ஆண்சிங்கம்; பதாதி-காலாட்படை; அன்று-அப்பொழுது)

அவ்வாறு சீற்றம்கொண்டு, வலிய ஆண்சிங்கம் போன்று போர்க் களத்திற்குச் செல்லுகின்ற இராவணனுடன் அப்போது, நூறுகோடித் தேர்களும், விரைந்து பாயும் தன்மையுடைய இருநூறுகோடிக் குதிரைகளும், ஆறுபோல மதநீரைப் பெருக்குகின்ற பத்துக்கோடி பெரிய

Koviloor Digital Library

யானைகளும் இவற்றிக்கு இரண்டு மடங்கான அறுநூற்று இருபதுகோடிக் காலாட்படையும் சென்றன.

தேர் நூறுகோடி, குதிரை இருநூறுகோடி, யானை பத்துக்கோடி. எனவே முன்னூற்றுப் பத்துக்கோடி ஆகும்; இதன் இரண்டு மடங்கு அறுநூற்று இருபதுகோடி காலாட்படை என்பதே பொருந்தும். நால்வகைப் படைகளும் இராவணனுடன் போர்க்களத்துள் நுழைந்தன என்பதாம்.

4. போர் முழக்கம்

''மூன்று வைப்பினும், அப்புறத்து உலகினும், முனையின்
ஏன்று கோளுறும் வீரர்கள் வம்மின்!'' என்று இசைக்கும்
ஆன்ற பேரியும், அதிர்குரல் சங்கமும், அசனி
ஈன்ற காளமும், ஏழொடுஏழ் உலகினும் இசைப்ப. (9617)

(வைப்பு-உலகம்; முனை-போர்முனை; ஏன்று-எதிர்த்து; கோளுறுதல்-கொள்ளுதல்; வம்மின்-வாருங்கள்; இசைத்தல்-ஒலித்தல்; ஆன்ற-பெரிய/உயர்ந்த/சிறந்த; பேரி-முரசம்; சங்கம்-சங்குகள்; அசனி-இடி; ஈன்ற-தோற்றுவிக்கின்ற/உண்டாக்குகின்ற; காளம்-எக்காளம் என்னும் இசைக் கருவி/வாத்தியம்)

மேல், நடு, கீழ் என்ற மூன்று உலகங்களிலும், அதற்கு அப்பாலும் உள்ள பிரமதேவன் வசிக்குமிடமாகிய பிரமலோகத்திலும், ''போர்முனையில் சென்று பகைவரை எதிர்த்துப் போரிட்டு, அவர்களது உயிரைக் கொள்ளும் ஆற்றலுடைய வீரர்கள் அனைவரும் வாருங்கள்'' என்று அழைக்கும் தன்மைபோல, ஒலிக்கின்ற சிறந்த உயர்ந்த போர் முரசங்களும், கேட்டவர்கள் அதிர்ந்துபோகும் வண்ணம் ஒலியெழுப்பும் சங்குகளும், இடிஒலிபோலப் பேரொலியை உண்டாக்கும் எக்காளம் என்னும் போர் இசைக்கருவிகளின் ஒலியும், ஏழ் இரண்டு பதினான்கு உலகங்களிலும் சென்று ஒலிப்பதாயின.

போர்க்களத்திற்குப் போகும் முன்பு, போர் முரசறைந்து வீரர்களை அழைப்பதும், போர்க்களத்தில் போர் தொடங்குவதன் முன் போர்ச் சங்கொலி எழுப்புவதும், எக்காளம் போன்ற வாத்தியங்களை ஊதுவதும் பண்டைக்காலப் போர்முறையாகும்.

5. அனைய ஆகிய அரக்கர்க்கும் அரக்கனை, அவுணர்
வினைய வானவர் வெவ்வினைப் பயத்தினை, வீரர்
நினையும் நெஞ்சையும் சுடுவது ஓர் நெருப்பினை, நிமிர்ந்து
கனையும் எண்ணையும் கடப்பது ஓர் கடலினைக் கண்டார். (9618)

Koviloor Digital Library

(அனையன்-அத்தன்மையன்; வெவ்வினை-கொடிய தீவினை; கனைதல்-ஒலித்தல்; வினையம்-சூழ்ச்சி; பயம்-பயன்; எண்-எண்ணிக்கை; நிமிர்தல்-ஓங்குதல்)

அவ்வாறு நால்வகைப் படைகளோடு போர் ஆரவாரம் செய்து கொண்டு வருபவனாகிய அரக்கர்களுக்கெல்லாம் அரசனான பேரரக்கன் இராவணனை, அவுணர்களின் சூழ்ச்சித் திறன் படைத்தவனை, தேவர் களின் கொடிய தீவினைப் பயனால் அவர்களைத் துன்புறுத்துகிறவனை, தன்னை நினைக்கின்ற வீரர்களின் நெஞ்சத்தைக்கூடச் சுட்டுப் பொசுக்கு கின்ற நெருப்பைப் போன்றவனாகிய இராவணனையும், அவனுடன் வந்த பொங்கி எழுகின்ற, ஓசை எழுப்புகின்ற, எண்ணிக்கையில் அடங்காத, பெருஞ்சேனைக் கடலினையும் வானரவீரர்கள் கண்டனர்.

''அரக்கர்க்கும் அரக்கன்'' என்பது அரக்கர்கள் தன் இனத்தவர்தானே என்று அவர்கள்பால் கருணை காட்டாது அவர்களைத் துன்புறுத்துவதில் பெரிய அரக்கனாகிய இராவணனைக் குறித்தது. ''கனைதல்'' என்பது ஒலித்தல் என்ற பொருளைத்தரும். கடல் எப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கும், அதனாலேயே அதற்கு ''ஆர்கலி'' என்ற ஒரு காரணப்பெயரும் உண்டு. அதனையே இங்கு ''கனையும்கடப்பதோர்கடல்'' என்றார். அந்தக் கடலொலியையும் கடக்கின்ற - வெல்லுகின்ற பேரொலி உடைய அரக்கர்படை என்பது பொருள். அரக்கர் தம் பெருஞ்சேனை கடலாக உருவகிக்கப்பட்டது. ''எண்'' என்பது அளவு என்ற பொருளில் எண்ணிக் கையைக் குறித்தது. எண்ணையும் கடப்பது என்பது எண்ணிக்கையில் அடங்காதது, அளவற்றது என்ற பொருளைத்தரும். கடல் இராவணனுக்கு நிறத்தாலும், சேனைக்குப் பெருக்கத்தாலும் ஒப்பு. ''கனை கடலைக் குலவரையைக் கடந்து நின்ற பெரியானை'' என்பது தேவாரம்.

6. கண்டு, கைகளோடு அணிவகுத்து, உரும் உறழ் கற்கள்
கொண்டு, கூற்றமும் நடுக்குறத் தோள் புடை கொட்டி,
அண்ட கோடிகள் அடுக்கு அழிந்து உலைவுற, ஆர்த்தார்,
''மண்டு போரிடை மடிவதே நலம்'' என மதித்தார். (9619)

(மண்டுதல்-நெருங்குதல்; நலம்-நல்லது; உரும்-இடி; உறழ்-போன்று; கூற்றம்-இயமன்; புடைத்தல்-தட்டுதல்; உலைவுறுதல்-வருந்துதல்; கை-பக்கப்படையுமாம்; கல்-மலை; மதித்தல்-எண்ணுதல்)

அவ்வாறு நால்வகைப் பெருஞ்சேனையுடன் வந்த அரக்கர் தலைவன் இராவணனைக் கண்டு வானரவீரர்கள், ''இவனைக் கண்டு அஞ்சிப் பின்வாங்காது, இவனை நெருங்கிப் போர்புரிந்து, போரில் மடிந்து போதலே நன்மைபயக்கும்'' என்று கருதியவராய்த் தம் படைகளை அணிவகுத்து, இடியைப்போன்று தாக்கும் மலைகளைத் தம் கைகளில் ஏந்திக்கொண்டு, இயமனும் அஞ்சி நடுங்கும்படித் தம் தோள்களைத்

Koviloor Digital Library

தட்டிக்கொண்டு, இந்த அண்டகோளங்களின் அடுக்கு வரிசைகள் நிலைகுலைந்து அழிந்து வருந்துமாறு பேராரவாரம் செய்தார்கள்.

''கை'' என்ற சொல் சாதாரணப் பொருளில் குரங்குகளின் கூரிய நகம் மிகுந்த கைகளையும், பக்கம் என்ற பொருளில் பக்கப் படைகளையும் குறிக்கும். ''உறழ்'' என்பது உவம உருபு. ''போன்ற'' என்ற பொருளைத்தரும். ''கூற்றுஉடன்று மேல்வரினும், கூடி எதிர்நிற்கும் ஆற்றல் அதுவே படை'' என்பது குறள்-765.

7. இரண்டு சேனைகளும் போர்புரிதல்

அரக்கன் சேனையும், ஆர்உயிர் வழங்குவான் அமைந்த
குரக்கு வேலையும், ஒன்றோடு ஒன்று, எதிர்எதிர் கோத்து,
நெருக்கி நேர்ந்தன, நெருப்பு இடைப் பொடித்தன; நெருப்பின்
உருக்கு செம்பு என, அம்பரத்து ஓடினது உதிரம். (9620)

(வழங்குவான்-ஈயும்பொருட்டு; கோத்தல்-கைகலத்தல்; நேர்தல்-எதிர்நின்று போரிடுதல்; அம்பரம்-கடல்; உதிரம்-இரத்தப் பெருக்கு; பொடித்தல்-தோன்றுதல்; அருமை+உயிர்-ஆருயிர்)

அரக்கர் வேந்தனாகிய இராவணனது நாற்பெருஞ் சேனையும், தனது பெறற்கரிய உயிரையே போரில் ஈடுபட்டு, மடிதற்குத் தயாராய் நின்றிருந்த வானரச்சேனைக் கடலும், ஒன்றையொன்று நேருக்குநேர் நின்று எதிர்த்துக் கைகலந்து, போர்செய்யலாயின; எனவே இருபடைகளின் சினத்தாலும், அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் ஒன்றோடொன்று உரசிக் கொள்வதாலும் நெருப்புப்பொறிகள் தோன்றலாயின; அந்த நெருப்பில் உருக்கப்பட்ட செம்பினைப் போன்று, சிவந்தநிறம் பொருந்திய இரத்தப்பெருக்கு கடலில் போய்க் கலந்தது.

அருமை+உயிர் என்பது ஆர்உயிர் ஆனது. இழந்தால் பெறற்கரிய உயிர் என்பது பொருள். இரத்தப்பெருக்கு நிறத்தால் உருக்கிய செம்பிற்கு உவமை. ''அம்பரம்'' என்ற சொல் பொதுவாக ஆகாயத்தையே குறிக்கும் என்றாலும் இங்கே கடலைக் குறித்து நின்றது. ''செம்பொத்த குருதி'' ''உருக்கிய செம்பெனஉதிரக்கண், ''உலைக்குவட்டு உருகும் செம்பொத்து உதிரநீர்'' என்று முன்பும் கம்பன் இதே உவமையைப் பயன்படுத்தி யிருப்பதையும் இங்கு நினைவுகூர்க.

8. அற்ற வன்தலை அறுகுறை எழுந்து எழுந்து, அண்டத்து
ஒற்ற, வானகம் உதய மண்டிலம் என ஒளிர,
சுற்றும் மேகத்தைத் தொத்திய குருதிநீர் துளிப்ப,
முற்றும் வையகம் போர்க்களம் ஆம் என முயன்ற. (9621)

Koviloor Digital Library

(வன்-வலிய; அறுகுறை-உடல்குறை/முண்டம்/கவந்தம்; அண்டம்-விண்/வானம்; ஒற்றுதல்-பொருந்துதல்/படிதல்; வையகம்-மண்ணுலகம்; முற்றும்-முழுவதும்; தொத்துதல்-பற்றிக்கொள்ளுதல்; எழுந்து-துள்ளி)

படைகள் ஒன்றுக்கொன்று நேர்நின்று போரிடுவதனால் துண்டிக்கப் பட்ட உடற்குறைகளான வலிய தலையற்ற முண்டங்கள் துள்ளித்துள்ளி மேற்சென்று ஆகாயத்தில் பற்றிக்கொண்டது, வானமே சிவந்த உதயசூரிய மண்டலம்போல சிவந்து காணப்பட்டதால், மேகத்தைச் சுற்றிலும் தொத்திக் கொண்டிருக்கின்ற இரத்தத் துளிகள் மழையாகப் பொழியவே, பூமண்ட்லம் முழுவதும் போர்க்களம் போலக் காட்சியளித்தது.

''தலை அறுகுறை'' என்பது தலையற்ற முண்டமாகிய கவந்தத்தைக் குறிக்கும். அவை இரத்தக் கறையுடன் சென்று வானப்பரப்பை அடைவதால் சூரியமண்டலமே சிவந்து தோன்றிற்று. அந்த இரத்தத் துளிகள் மீண்டும் மழையாகப் பொழிந்து தரையில் வீழ்வதனால், பூலோகம் முழுவதும் இரத்தப்பெருக்கு நிறைந்த போர்க்களம் போலத் தோன்றிற்று என்பதாம். வானம் மழையைப் பொழிவதுபோல் இரத்தநீரைப் பொழிந்தது என்க. ''அற்றதலைபோக, அறாத்தலை நான்கினையும், பற்றித் திருகிப் பறியேனோ'' என்பது ஔவையாரின் ஒரு தனிப்பாடல்.

9. தூவி அம்பெடை அரியினம் மறிதர, சூழி
தூவி, அம்பு எடை சோர்ந்தன; சொரிஉடல் சுரிப்ப,
மே வியம் படை படப்படர் குருதியின் வீழ்ந்த,
மேவி அம் படைக் கடலிடை குடரொடு மிதந்த. (9622)

(மேவுதல்-சேர்தல்/அடைதல்; தூவி-சிறகு; அம்-அழகிய; பெடைஅரி-பெண்வண்டு; அரி-ஆண்வண்டு; மறிதரல்-விலக்குதல்; சூழி -முகபடாம்/நெற்றிப்பட்டம்; வீசி-எறிந்து; சுரித்தல்-சுழன்று அமிழ்ந்து போதல்; படர்தல்-வெளிப்படுதல்; எடை-எடுத்தல்; சோர்தல்-தளர்ந்து போதல்; வியம்-பெருமை)

சிறகுகள் உடைய பெண்வண்டு, ஆண்வண்டுகளோடு கூடி, யானைகளின் கன்னத்தில் சொரியும் மதநீரைப் பருகுவதற்காக அவற்றை நெருங்குகின்றன. யானைகள்தமது நெற்றிப்பட்டத்தை வீசி அவைகளைத் துரத்திவிடுகின்றன; அதனால் யானைகள் சோர்வடைந்து தளர்ந்து போகின்றன. இலக்குவன் தன் படையினை எடுக்கும்போதே யானைகள் அஞ்சி, அவற்றால் தாக்கப்பெற்று, இரத்தத்தைப் பெருக்கிக்கொண்டு குருதிக்கடலில் மிதந்து அமிழ்ந்து போயின.

பொருள்புரியாத மிகக்கடினமான பாடல். யமகம் என்னும் சொல்லணி பயின்றுவந்துள்ள பாடல். சொற்களைப் பிரித்தோ, சேர்த்தோ பார்த்தாலும் கூடப் பொருள்புரியாத பாடல். பொதுவாக யமகம் என்னும்

Koviloor Digital Library

சொல்லணியில் ஒரேசொல் பலவகையாகப் பிரிந்து பலபொருள்களைத் தரும். அந்த வகையிலும் இந்தப்பாடல் பொருந்தி வராததை உணர்க. எந்த உரையாசிரியரும் ஒன்றுபட்ட பொருளைத் தரவில்லை. அவரவர்கள் அவர்களுக்கு ஏற்றவாறு சொற்களைப் பிரித்தும், இணைத்தும் பொருள் கொண்டிருக்கின்றனர். ஒத்த கருத்துடைய உரையே இப்பாடலுக்கு இல்லை என்பதறிக. ''சூழி'' என்ற ஒரு சொல் கிடைப்பதால் இது யானையின் செயலை விளக்குவதாக நாமே அனுமானித்துக் கொண்டு பொருள் தரவேண்டியதிருக்கிறது. மிகுந்த இடர்ப்பாடு தந்த பாடல்.

10. கண் திறந்தன கணவர்தம் முகத்து அவர் முறுவல்
கண்டு, இறந்த அன மடந்தையர், உயிரொடும் கலந்தார்,
பண்டு இறந்தன பழம் புணர்வு அகம்புக, பன்னி,
பண் திறந்தன புலம்பு ஒலி, சிலம்புஒலி பனிப்ப. (9623)

(இறந்தன-நிகழ்ந்துபோன; பண்டு-முன்னாள்; புணர்வு-புணர்ச்சி/ கலவிநுணுக்கம்; பன்னுதல்-பலவாறு சொல்லுதல்; பண்-வாய்ப்பாட்டு; பனித்தல்-கலந்து ஒலித்தல்; முறுவல்-புன்சிரிப்பு; மடந்தையர்-பெண்டிர்)

போர்க்களத்தில் இலக்குவன் அம்பால் தாக்கப்பட்ட அரக்க வீரர்களின் கண்கள் திறந்தன திறந்தபடியே இருக்க, முகத்தில் உள்ள வாயில் புன்சிரிப்புச் சிரித்தபடியே இருக்க, இறந்து கிடக்கிறார்கள். கற்புடைய அரக்கர் பெண்டிர் அவர்களை அணுகி, அவர்கள் திறந்திருக்கும் விழி களையும், சிரித்திருக்கும் முகத்தையும் கண்டதும், தாம் முன்பு அவர்களுடன் கூடற்காலத்தில் அனுபவித்த கலவி நுணுக்கங்கள் எல்லாம் நினைக்குவர, அவற்றை வாய்விட்டுக் கூறி அதில் ஆழ்ந்து மகிழ்ச்சி யடைந்தவராய், வருத்தம் மேலிட அவர்களுடம்பைத் தழுவிக்கொண்டு அழத்தொடங்குகிறார்கள். அவர்கள் அவ்வாறு அழுகின்ற ஒலியே ஏழு நரம்புகளையுடைய இசைக்கருவி ஒலிக்கும் ஒலிபோலவும், கால்களில் அணிந்திருக்கும் சிலம்புகள் சிலம்புகின்ற ஒலிபோலவும் அமைந்திருக் கின்றன. தம் கணவரின் மரணத்தைத் தாங்கமாட்டாது அந்த நினை வுடனேயே அம்மடந்தையர் தாமும் இறந்து அவர்கள் கணவன்மார் உயிரோடு ஒன்றாகக் கலந்து சொர்க்கலோகம் சென்றனர் என்கிறான் கவிஞன்.

இறந்துபட்ட அரக்கர்களைக் கண்டதால் துக்கம் ஒருபுறம், அவர்களுடன் முன்பு கூடிக்கலந்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்ததால் மகிழ்ச்சி ஒருபுறம். வீரரான தம் கணவர் மடியும்போதும் புன்முறுவல் மாறாத முகத்துடன் போர்க்களத்தில் இறந்து கிடந்தனர் என்ற வீர உணர்வு ஒருபுறம். இவையெல்லாவற்றையும் மனத்துள் நினைத்து அழுகையும், மன நிறைவும்வர, அவர்கள் புலம்புவது, பண்பாடுதல்போல அமைந்தது என்பதாம். தம் கணவர் இல்லாது தாம் மட்டும் உயிர்வாழ விரும்பாத அவர்கள், தங்கள் உயிரையும் மாய்த்துக்கொண்டு கணவருடன்

Koviloor Digital Library

வீரசுவர்க்கம் எய்தினர் என்பதாம். இவ்வாறு அழுகையோடு பாடுவதை ''ஒப்பாரி'' என்பர்; பிலாக்கணம் பாடுதல் என்றும் கூறுவதுண்டு. ஒப்பாரியும் பண்ணிசையுடன் அமைந்திருக்கும் என்பதையும் உணர்க. இவ்வாறு கற்புடைப் பெண்டிர் வீரமரணமடைந்த தம் கணவருடன் உயிர்நீத்து வீரசுவர்க்கம் அடைதலை, ''தலையொடு முடிதல்'' என்கிறது புறத்திணை. ''வேல்கொண்டு எறிய, விழித்த கண் இமைத்தலும் வீரர்க்கும் ஒட்டாகும்'' என்பது ஒரு பழம்பாடல்.

11. ஏழும் ஏழும் என்று உரைக்கின்ற உலகங்கள் யாவும்,
ஊழி பேர்வதே ஒப்பது ஓர் உலைவுற, உடற்றும்
நூழில் வெஞ்சமம் நோக்கி, அவ்விராவணன் நுவன்றான்,
"தாழ்இல் என்படை தருக்கு அறும்" என்பது ஓர் தன்மை. (9624)

(உலைவு-அழிவு; உடற்றுதல்-போரிடுதல்; நூழில்-கொன்று குவித்தல்; தருக்கு-செருக்கு; அறுதல்-அழிதல்; நுவல்தல்-கூறுதல்)

கீழ் ஏழு உலகங்கள் என்றும், மேல் ஏழு உலகங்கள் என்றும் சொல்லப் படுகின்ற இந்தப் பதினான்கு உலகங்களில் உள்ளவை எல்லாமும், ஊழியிறுதிக்காலத்தே நிலைபெயர்ந்து போவதைப்போன்ற ஒரு அழிவு உண்டாகும்படி, போர்புரியும் வானரச்சேனை, அரக்கர்சேனையைக் கொன்று குவிப்பதையும், அப்போர்க்களத்தையும் கண்டு, அந்த இராவணன் ''இதுகாறும் ஒருபோதும் தாழ்ச்சி என்பதையே கண்டறியாத என்னுடைய பெருஞ்சேனை இப்பொழுது தனது செருக்கு நீங்கும்'' என்னும் ஓர் உண்மைத் தன்மையை எடுத்துக் கூறலானான்.

வானரசேனை அரக்கர்சேனையைக் கொன்று குவிக்கிறது. அதனைக் கண்ட இராவணன் தானும் செருக்கு நீங்கி, தன் படைகளும் இனிமேல் செருக்கு நீங்கும் என்ற உண்மையை உணரத் தொடங்கியிருக்கிறான் என்பதாம். ''நூழில்'' என்ற சொல் கொன்றுகுவித்தல் என்ற பொருளைத் தரும். இவ்வாறு போரில் பகைவர்களைக் கொன்று குவித்தலை ''நூழிலாட்டுதல்'' என்று புறத்திணை குறிக்கிறது. ''தாழ்இல்'' என்பது தன்நிறகரற்றது என்ற பொருளைத்தரும்.

12. "மரமும் கல்லுமே, வில்லொடு வாள், மழு, சூலம்,
அரமும், கல்லும், வேல் முதலிய அயில்படை அடக்கி,
சிரமும் கல்எனச் சிந்தலின், சிதைந்தது என்சேனை;
உரமும் கல்வியும் உடையவன் செரு நின்றது ஒருபால்" (9625)

(உரம்-வலிமை; செரு-போர்; பால்-பக்கம்; கல்லுதல்-சிதைத்தல்; அயில்-கூரிய/உறுதிவாய்ந்த; மழு-கோடரி)

''உடல்வலி உள்ளவலி, ஆகிய இரண்டும் முற்றும் பெற்றவனும், போர்க்கல்வியில் தேர்ந்தவனுமான அனுமன் ஒருபக்கத்தில் போர்செய்து

Koviloor Digital Library

கொண்டிருக்க, வானர வீரர்கள் மரங்களையும், கற்களையுமே கொண்டு, அரக்கர்களது வில், வாள், மழு, சூலம், அரம், வேல், கவண்கல் முதலிய கூர்மையான படைக்கலங்களையெல்லாம் அடக்கியதோடு மட்டு மல்லாமல், அரக்கர்களின் தலைகளையும், கற்களைப்போல உருண் டோடும்படி சிதைத்ததால் என்னுடைய அரக்கர்படை சிதைவுற்றுப் போயிற்று'' என்று புலம்புகிறான் இராவணன்.

மரங்களும் கற்களுமே வானரர்களின் படைக்கலங்கள். இவையே அரக்கர்களின் கூரிய, உறுதிவாய்ந்த எல்லாவகைப் படைக்கலன்களையும் அழித்தன. அத்தோடுமட்டுமல்ல, என்சேனை வீரர்களின் தலைகளை யெல்லாம் அறுத்தெறிந்தன. எனவே என் சேனை சிதைவுற்று நிலை குலைந்து போனது என்று நொந்து கூறுகிறான் இராவணன் என்பதாம். வானரச்சேனையின் ஆற்றலையும், அனுமனது கல்வியறிவையும், போர்வலிமையையும் இராவணன் பாராட்டிப்பேசும் இடங்களில் இதுவும் ஒன்று. அனுமன் என்ற இடத்தில் இலக்குவன் என்று கூறுவதும் உண்டு. மரத்தையும், கற்களையும் கொண்டு போர்செய்பவன் குரக்கினத்தனாகிய அனுமனேயன்றி இலக்குவன் அல்ல என்பது கருதத்தக்கது.

13. அழலும் கண் களிறு அணியொடும் துணிபடும்; ஆவி
சுழலும் பல்படைத் தொகுதியும்; அன்னதே சுடர்த்தேர்;
கழலும் சோரிநீர் ஆற்றொடும் கடலிடைக் கலக்கும்;
குழலும் நூலும்போல் அனுமனும் தானும் அக்குமரன். (9626)

(அழல்தல்-கனல்தல்; துணிபடுதல்-பிளவுபடுதல்; ஆவி-உயிர்; சுழல்தல்-நிலைதடுமாறுதல்; சுடர்-ஒளி; கழலுதல்-வெளிப்படுதல்; குமரன்-இலக்குவன்/இளையோன்)

நெசவுத்தொழிலில் நெய்தற்கு உதவுகின்ற குழலும், அதை இடைவிடாது, அது செல்கின்ற வழியிலேயே செல்லும் நூலும்போல அனுமனும், இளையோனாகிய இலக்குவனும் தொடர்ந்து சென்று போரிடுவதால், சினத்தால் நெருப்புப் பற்றி எரிவதுபோலும் கண்களைக் கொண்ட யானைகள், தாம் அணிந்திருக்கின்ற முகபடாம் என்ற அணிகலன்களோடு, தம் கூட்டம் முழுவதும் அழிந்து வீழும். பலவகைப்பட்ட காலாட்படைத் தொகுதியினரும் உயிர்சுழலப்பெறுவர்; ஒளிமிக்க தேர்ப்படைக்கும், தேரைச் செலுத்துகின்றவர்களுக்கும் அதே நிலைதான். இதனால் உண்டாகிப் பெருகிய இரத்தவெள்ளம் ஆறுபோன்று சென்று கடலினைக் கலக்கலாயிற்று.

''குழலும் நூலும்போல'' என்ற உவமை முன்பு பாலகாண்டம் திரு அவதாரப்படலத்தில், இராமபிரானும் இலக்குவனும் எவ்வாறு ஒருவரை விட்டு ஒருவர் பிரியாது இருந்தனர் என்பதை விளக்குவதற்காக

Koviloor Digital Library

''நெய்குழல் உறும் இழையென'' எனக் கவிஞனால் எடுத்தாளப் பட்டிருப்பதையும் இங்கு நினைவுகூர்க. பாவிடை ஆடுகின்ற நெய்குழலும், அதைத் தொடர்ந்து பின்செல்லும் நூலும் போலும் அனுமனும் இலக்குவனும் தொடர்ந்து சென்று போர்புரிந்தனர் என்பதாம்.

14. "வில்லும் கூற்றுவற்கு உண்டு" எனத் திரிகின்ற வீரன்
கொல்லும் கூற்று எனக் குறைக்கும், இந்நிறை பெரும் குழுவை;
ஒல்லும் கோள்அரி, உரும் அன்ன குரங்கினது உகிரும்,
பல்லும் கூர்க்கின்ற; கூர்க்கில அரக்கர்தம் படைகள். (9627)

(கூற்றுவன்-இயமன்; வீரன்-இலக்குவன்; குறைதல்-வலிகுன்றுதல்; குறைத்தல்-தேய்த்து அழித்தல்; அரி-சிங்கம்; உரும்-இடி; உகிர்-நகம்; கூர்க்கின்றன-கூர்மை மிக்கனவாகின்றன; ஒல்லுதல்-இயலுதல்)

''இயமன் இயல்பாகப் பெற்றிருக்கும் தண்டாயுதத்தைத் தவிரவும், வில்லையும் தன் கைகளில் ஏந்தியிருப்பான்போலும்'' என்று காண்பவர் கருதும் வண்ணம், வில்லைக் கொண்டு இயமன்போலச் சுற்றித்திரிகின்ற வீரனான இலக்குவன், கொல்லும் தன்மையுள்ள கூற்றுவனைப்போல, இந்த நிறைந்த பெருஞ்சேனைக் கூட்டத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துவிட்டான்; வலிமையுடைய ஆண்சிங்கம் போன்றவனும், பேரிடி போன்றவனுமான அனுமனது நகங்களும், பற்களும் மிக்க கூர்மை பெற்று அரக்கர்படைகளை அழிக்கலாயின; ஆனால் இயல்பிலேயே கூர்மைமிக்க ஆயுதங்களைக் கொண்ட அரக்கர்படைகளின் போர்க் கருவிகள் கூர்மை மழுங்கி, குரங்குக் கூட்டத்தை அழிக்க இயலாதன வாயின.

பொதுவாக இயமனுக்கு ஆயுதம் தண்டு என்றே கூறுவதுண்டு. இங்கு இலக்குவன் தண்டையன்றி வில்லைக் கைப்பற்றியிருப்பதனாலும், அவன் கொல்லும் தன்மையுள்ள கூற்றுவன்போல் சுற்றித்திரிவதனாலும், வில்லைக்கொண்ட இயமனுக்கு உவமை. வில் கைக்கொள்ளும் இயமன் இல்லாத்தால் இதனை இல்பொருள் உவமை எனக்கொள்க.

15. இராவணன் மிகுந்த சீற்றம் கொள்ளுதல்

"கண்டு நின்று, இறைப்பொழுது இனிக் காலத்தைக் கழிப்பின்,
உண்டு கைவிடும் கூற்றுவன், நிருதர் பேர் உயிரை;
மண்டு வெஞ்செரு நான் ஒருகணத்திடை மடித்தே
கொண்டு மீள்குவென் கொற்றம்'' என்று இராவணன் கொதித்தான்.
(9628)

Koviloor Digital Library

(இறை-சிறிதுபோது/கணப்பொழுது; பேர்-பெருமைமிக்க; கைவிடுதல்-சென்றுவிடுதல்; மண்டுதல்-நெருங்குதல்; கொற்றம்-வெற்றி; கொதித்தல்-வெதும்புதல்; மடித்தல்-கொல்லுதல்)

''இவ்வாறு அனுமனும் இலக்குவனும் போர்செய்வதையே வியந்து பார்த்துக்கொண்டு நின்று இன்னும் சிறிதுநேரம் கழிப்பேனாயின், இவ்வானரச்சேனை என்னுடைய பெருமைமிக்க அரக்கர்படையை முற்றமுழுக்க அழித்துவிட்டுப் போர்க்களத்தை விட்டு நீங்கிவிடும். எனவே இப்போது நொடிப்பொழுதிற்குள் இக்குரக்குச்சேனையை முழுவதும் கொன்று வெற்றியுடன் திரும்புவேன்'' என்று இராவணன் சீற்றம்கொண்டு மனம் வெதும்பினான்.

''உயிரை உண்ணுதல்'' என்பது மரபு வழுவமைதியாகும். ''கொதித்தல்'' என்பது இங்கு சீற்றம்கொண்டு வெகுண்டு நின்ற நிலையைக் குறிக்கும்.

16. அவன் தொடுக்கின்ற அம்பின் சிறப்பு

ஊதை போல்வன; உரும் உறழ் திறலன; உருவிப்
பூதரங்களைப் பிளப்பன; அண்டத்தைப் பொதுப்ப;
மாதிரங்களை அளப்பன; மாற்ற அருங் கூற்றின்
தூது போல்வன; சுடுகணை முறைமுறை துரந்தான். (9629)

(ஊதை-பெருங்காற்று; உரும்-இடி; பூதரம்-மலைகள்; பொதுத்தல்-துளைத்தல்; மாதிரம்-திசைகள்; உறழ்-போன்ற; முறைமுறை-வரிசை வரிசையாக)

அவ்வாறு கொதித்தெழுந்த இராவணன், பெருங்காற்றுப் போன்று விரைவையுடையனவும், பேரிடிபோன்று வலிமை வாய்ந்தனவும், நிலைத்து நிற்கின்ற மலைகளையே பிளந்து ஊடுருவிப் பாயும் வேகம் உடையனவும், அண்டகோளத்தையே துளைக்கும் ஆற்றல் வாய்ந்தனவும், திசைகளின் எல்லைவரை செல்லும் நீட்சியுடையனவும், கொல்லும் தன்மையில் மாற்றுதற்கரிதான இயமனின் தூதுவர்களைப் போன்றனவும் ஆன, சுட்டெரிக்கும் தன்மையுடைய பலவகைப்பட்ட அம்புகளை வரிசைவரிசையாகத் தொடர்ந்து செலுத்தினான்.

''பூதரம்'' என்பது மலையைக் குறிக்கும். பூமியைத் தாங்கி நிற்பதால் பூதரம் என்பது மலைக்குக் காரணப்பெயர். கோவர்த்தனகிரியைத் தாங்கிப் பிடித்து நின்றதனால் கண்ணனுக்குக் ''பூதரதாரி'' என்பது ஒரு பெயர். அதுபோலவே மேருமலையை வில்லாக வளைத்துத் தன் கைகளில் கொண்டதனால் சிவபெருமானுக்குப் ''பூதரவில்லான்'' என்பது சிறப்புப் பெயர். முறைமுறை என்ற அடுக்கு விரைவு பற்றிவந்தது. ''மாற்றருங்

Koviloor Digital Library

கூற்றம் சாற்றிய பெருமையும்'' என்பது தொல்காப்பியம். கூற்றுவன் உயிர் பறிக்க வருவதை யாராலும் மாற்றமுடியாது என்பது பொருள்.

17. ஆளி போன்று உளன் எதிர்ந்தபோது, அமர்க்களத்து அடைந்த
ஞாளி போன்று உள என்பது என்? நள் இருள் அடைந்த
காளி போன்றனன் இராவணன்; வெள்ளிடைக் கரந்த
பூளை போன்றது, அப்பொரு சினத்து அரிகள்தம் புணரி. (9630)

(ஆளி-யாளி/சிங்கம்; அரிகள்-குரங்குகள்; புணரி-கடல்; ஞாளி-நாய்; நள்-செறிந்த; காளி-காற்று; வெள்ளிடை-வெற்றிடம்; பூளை-ஒருவகைப் பூ; கரத்தல்-ஒளித்தல்)

பகைவர்களை எதிர்த்துப் போரிடுகின்றபோது இராவணன் சிங்கம் போன்று விளங்குகிறான். போர்க்களத்தில் வந்து சேர்ந்த குரங்குப் படைகளை நாய்கள் என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? நட்டநடு இரவில் வந்தடைந்த காற்றுப்போலவோ, அல்லது இருட்பிழம்பு போன்று கரிய நிறம் கொண்ட காளியைப்போலவோ உக்கிரமாக விளங்கும் இராவணன்முன் அந்த வானரப்படையாகிய கடல், வெற்றிடத்தில்போய் மறைகின்ற பூளைப்பூப் போன்று விளங்குகிறது.

வீரனான இராவணனைச் சிங்கத்திற்கும், கொடுமைக் குணங்கள் நிறைந்த அதே இராவணனைக் காளிதேவிக்கும் உவமித்தார். அது போலவே குரங்குப்படைகளை நாய்க்கும், பூளைப்பூவுக்கும் உவமித்தார் என்க. சிங்கத்தைக் கண்ட நாய்கள் நிலைகுலைந்து ஓடுவதுபோலவும், நள்ளிரவில் அடிக்கும் காற்றினால் இருந்த இடம் தெரியாமல் உதிர்ந்துபோகும் பூளைப் பூசிதறிப்போவதுபோலவும், வானரப்படைகள் அஞ்சிப் பின்வாங்கின என்பது கருத்து. நதிகள் எல்லாம் ஒன்றுகூடிப் புணர்வதற்கு இடமான கடல் புணரி எனப்பட்டது. காரணப்பெயர். காளி என்ற சொல்லுக்கு உக்கிரமான காளிதேவி என்றும், காற்று என்றும் பொருள்கொள்ளலாம். கருமை நிறமுடையது காளி எனப்படும். காற்றுக் கருமைநிறம் என்று புராணங்கள் பேசுகின்றன. ''காலி'' என்ற தெலுங்குச் சொல்லும் காற்றைக் குறிக்கும். ''கால்'' என்ற தமிழ்ச்சொல்லுக்கு ''காற்று'' என்ற பொருள் உண்டு என்பது நாம் அறிந்ததே. நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களுக்கும் நிறம் உண்டு என்கிறது திருவதிகை. அது காற்று கருமைநிறம் கொண்டது என்பதை ''வன்கால் கருமை'' எனப் பேசுகிறது என்பது ஒரு குறிப்பு. இதே பூளைப்பூவை முன்பும் கவிஞன் கையாண்டிருப்பது நாம் அறிந்ததே. ''காற்றிடைப் பூளை கரந்தென, அரந்தையுறக் கடலரக்கர் தம்சேனை'' என்பது பெரிய திருமொழி.

Koviloor Digital Library

18. இரியல் போகின்ற சேனையை இலக்குவன் விலக்கி,
"அரிகள்! அஞ்சன்மின்; அஞ்சன்மின்!" என்று அருள் வழங்கி,
திரியும் மாருதி தோள் எனும் தேர்மிசைச் சென்றான்,
எரியும் வெஞ்சினத்து இராவணன் எதிர்புகுந்து ஏற்றான். (9631)

(இரிதல்-நிலைகுலைதல்; விலக்குதல்-தடுத்தல்; அரிகள்-வானரர்கள்; அஞ்சன்மின்-அஞ்சாதீர்கள்; மிசை-மீது/மேலே; ஏற்றல்-எதிர்த்தல்; அருள்-கருணைமொழி)

இராவணன் வருவது கண்டு அஞ்சி நிலைகுலைந்து தோற்று ஓடிப் போன வானரச்சேனைகளை, இலக்குவன் தடுத்து நிறுத்தி, ''வானர வீரர்களே! அஞ்சாதீர்கள்! அஞ்சாதீர்கள்!'' என்று பலமுறை கருணை மொழிகூறி, ஆற்றுப்படுத்தி, அங்கே போர்க்களத்தில் இடசாரி வலசாரி திரியும் அனுமனின் தோள்கள் என்னும் தேரின்மீது ஏறிக்கொண்டு, கொதித்தெழுகின்ற சீற்றம் கொண்ட இராவணனின் எதிரில் சென்று, அவனை எதிர்த்துப் போரிடலானான்.

அஞ்சி ஓடுகின்ற வீரர்களைத் தடுத்து நிறுத்தி ஆறுதல்கூறிப் போர்க் களத்திற்கு அழைத்துவருவது ஒரு தலைமைப்பண்பு மிக்க படைத் தலைவனின் கடமையாகும். ''தோள்எனும்தேர்'' என்பது உருவகம். அனுமனின் தோள்களை இலக்குவனது வாகனமாக - தேராக - உருவகப்படுத்தினார் என்க.

19. ஏற்றுக்கோடலும், இராவணன் எரிமுகப் பகழி
நூற்றுக் கோடியின்மேல் செலச் சிலைகொடு நூக்க,
காற்றுக்கு ஓடிய பஞ்சு எனத் திசைதொறும் கரக்க,
வேற்றுக் கோல்கொடு விலக்கினன் இலக்குவன் விசையால். (9632)

(ஏற்றுக்கோடல்-எதிர்த்த அளவு; எரி-நெருப்பு; முகம்-முனை/நுனி; நூக்குதல்-எய்தல்/தள்ளுதல்; கரத்தல்-மறைதல்; வேற்றுக்கோல்-மாறுபட்ட அம்புகள்; விசை-வேகம்; விலக்குதல்-தவித்தல்)

அவ்வாறு இலக்குவன் அவனை எதிர்த்துப் போரிடத் தொடங்கியதும், இராவணன் நெருப்பைத் தம் நுனியில்கொண்ட அக்னி அஸ்திரம் போன்ற நூறுகோடிக்கும் அதிகமான அம்புகளை இலக்குவன்மேல் படும்படி தன் வில்லில் தொடுத்துச் செலுத்தவும், அவற்றை இலக்குவன், பெருங் காற்றுக்கு ஆற்றாது ஓடிச்செல்லும் பஞ்சுக்கூட்டத்தைப் போன்று எல்லாத் திசைகளிலும் சென்று மறையுமாறு, இராவணன் செலுத்திய அம்புகளுக்கு மாறான அம்புகளை மிக்க வேகத்தோடு செலுத்தித் தன்னைத் தற்காத்துக் கொண்டான்.

இராவணன் செலுத்திய அம்புகளை இலக்குவன் மிக வேகமாக, வேறு வகையான அம்புகள் கொண்டு தடுத்தான். எனவே இராவணன் செலுத்திய

Koviloor Digital Library

அம்புகள் காற்றுக்கு ஆற்றாது பறந்துபோகும் பஞ்சினைப்போலத் திசைகளெங்கும் சென்று ஒளித்துக்கொண்டன என்பதாம். ''காற்றுக்கு ஓடிய பஞ்சு'' என்பது அருமையானதொரு உவமை. முன்பு ''வெள்ளிடைக் கரந்த பூளை போன்றது'' என்று கூறியதையும் இங்கு ஒப்பிட்டு நோக்குக. எய்ய, செலுத்த, துரக்க என்று கூறாது, இங்கு ''நூக்க'' என்ற சொல்லைக் கவிஞன் பயன்படுத்தியிருப்பது, இராவணன் செலுத்திய அம்புகளின் மிகுதியையும், விரைவையும் குறிக்க எனக் கொள்க. ''எரிமுகப் பகழி'' என்பது நெருப்பைக் கக்கும் அம்பு என்று பொருள்படும். இலக்குவன் அம்பினைக் காற்றுக்கும், இராவணன் அம்பினைப் பஞ்சுக்கும் உவமித்த நயம் உணர்க.

20. விலக்கினான் தடந்தோளினும், மார்பினும், விசிகம்
உலக்க உய்த்தனன், இராவணன்; ஐந்தொடு ஐந்து உருவக்
கலக்கம் உற்றிலன் இளவலும், உள்ளத்தில் கனன்றான்,
அலக்கண் எய்துவித்தான், அடல் அரக்கனை அம்பால். (9633)

(விசிகம்-அம்புகள்; ஐந்தொடுஐந்து-பத்து; உலத்தல்-வலிமை குறைதல்; உய்த்தல்-செலுத்துதல்; கனல்தல்-வெகுள்தல்; அடல்-வலிமை; அரக்கன்-இராவணன்; அலக்கண்-துன்பம்; தட-பெரிய)

அவ்வாறு இராவணன் செலுத்திய அம்புகளை விலக்கியவனான இலக்குவனின் பெரிய தோள்களிலும், அகன்ற மார்பின்மீதும் இராவணன், பத்து அம்புகளை இலக்குவனின் வலிமை குறையுமாறு நன்கு பதியும்படி செலுத்தினான். பத்து அம்புகள் தன் உடம்பை ஊடுருவிப் பாய்ந்தபோதும் சற்றும் கலக்கமடையாதவனான இலக்குவன், உள்ளத்தில் மிகுந்த கோபம்கொண்டான். எனவே வலிமைமிக்க இராவணன்மீது தன் ஒரே அம்பினைச் செலுத்தி அவனுக்கு மிகுந்த துன்பத்தை உண்டாக்கினான்.

''எய்துவித்தான்'' என்ற பிறவினைச் சொல் எய்தான் என்ற தன்வினைப் பொருளைத் தந்து நின்றது.

21. காக்கல் ஆகலாக் கடுப்பினில் தொடுப்பன கணைகள்,
நூக்கினான்; கணை நுறுக்கினான் அரக்கனும், "நூழில்
ஆக்கும் வெஞ்சமத்து அரிது இவன்தனை வெல்வது அம்பால்,
நீக்கி, என் இனிச் செய்வது?" என்று, இராவணன் நினைந்தான். (9634)

(காக்கல்-காத்தல்/தடுத்தல்; கடுப்பு-விரைவு; நூக்குதல்-செலுத்துதல்; நுறுக்குதல்-நொறுங்கச் செய்தல்/பொடிப்பொடியாய் ஆக்குதல்; நூழில்-கொன்றுகுவித்தல்; நீக்கி-தவிர்த்து/விடுத்து; நினைத்தல்-சிந்தித்தல்; வெஞ்சமம்-கொடியபோர்)

இலக்குவன் இராவணனால் தடுத்துக்கொள்ள முடியாத அம்புகளை மிக்க விரைவாகத் தொடுத்துச் செலுத்தினான். ஆனால் அரக்கன்

Koviloor Digital Library

இராவணன் அவற்றைப் பொடிப்பொடியாகத் தூளாக்கினான் என்றாலும் ''பகைவர்களைக்கொன்றுகுவிக்கும்இந்தப்போரில்இவனைஅம்பினைக் கொண்டு மட்டும் வெல்வது என்பது மிக அரிதான செயலாகும் என்று தீர்மானித்து, இவனை இனிமேல் எப்படி வெல்லலாம்?'' என்று ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினான்.

இலக்குவன் வில்லாற்றலை இராவணன் வியந்து பாராட்டுவதை நோக்குக. இதுபோலப் பின்னும் பல இடங்களில் பாராட்ட இருக்கிறான்.

22. "கடவுள் மாப்படை தொடுக்கின், மற்று அவை முற்றும் கடக்க
விடவும் ஆற்றவும் வல்லனேல், யாரையும் வெல்லும்;
தடவும் ஆற்றலைக் கூற்றையும்; தமையனைப் போலச்
சுடவும் ஆற்றும் எவ்வுலகையும்; எவனுக்கும் தோலான்" (9635)

(கடவுள்-தெய்வீகம் பொருந்திய; முற்றும்-முழுவதையும்; கடத்தல்-வெல்லுதல்; ஆற்றுதல்-தாங்கிக்கொள்ளுதல்; ஆற்றல்-வலிமை; தடவுதல்-ஆராய்ந்து சோதித்தல்; தமையன்-அண்ணன்/இராமபிரான்; தோலான்-தோற்கமாட்டான்)

''தெய்வீகத்தன்மை வாய்ந்த பெரிய அஸ்திரங்களை இவன்மீது செலுத்தினால் அவை எல்லாவற்றையும் இவன் வென்றுவிடுவான். அவ்வாறு அவை தாக்கினாலும் அதைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல்பெற்றவன்; எல்லோரையும் கொன்று அழிக்கின்ற கூற்றுவனையும்கூட இவன் சோதித்துப்பார்க்கும் ஆற்றல் உடையவன். இவனது அண்ணன் இராமபிரானைப்போல், இவனும் எல்லா உலகங்களையும் சுட்டெரிக்கும் ஆற்றல் நிறைந்தவன். இவன் ஒருவருக்கும் தோற்காதவன், ஒருவரிடமும் தோல்விஅடையாதவன்'' என்று இராவணன் இலக்குவன் பேராற்றல் கண்டு வியந்து பாராட்டுகிறான்.

23. இராவணன் மோகப்படை செலுத்துதல்

"மோகம் ஒன்று உண்டு, முதலவன் வகுத்தது முன்னாள்;
ஆகம் அற்றது; கொற்றமும் சிவன்தனை அழிப்பது;
ஏகம் முற்றிய விஞ்சையை இவன்வயின் ஏவி,
காகம் உற்று உழல் களத்தினில் கிடத்துவென் கடிதின்" (9636)

(முதலவன்-பரம்பொருள்; வகுத்தது-இயற்றியது/தோற்றுவித்தது; ஆகம்-வடிவம்; கொற்றம்-வெற்றி; ஏகம்-தனித்தன்மை; விஞ்சை-விந்தை/மந்திரம்; வயின்-இடம்; உழல்தல்-திரிதல்; கடிதின்-விரைவில்; கிடத்துதல்-வீழ்த்துதல்; முன்னாள்-ஆதிகாலம்; மோகம்-மோகன அஸ்திரம்)

Koviloor Digital Library

''மோகன அஸ்திரம் என்று ஒப்பற்ற ஒரு படைக்கலம் உண்டு, அது ஆதிகாலத்தில் மூலப்பரம்பொருளால் தோற்றுவிக்கப்பட்டது. அது கண்ணுக்குப் புலப்படாத எந்த வடிவமும் அற்றது; அதனுடைய வெற்றித் திறனைக் கூறுவதென்றால், அது சிவபெருமானையும் தாக்கி அழிக்கக் கூடிய வல்லமைபெற்றது. தன்னிகர் இல்லாத அந்த அஸ்திரத்திற்கு உரிய மந்திரத்தை முற்றிலும் அபிமந்திரித்து, இவன்மீது செலுத்தி விரைவில் வீழ்த்திக் காட்டுகிறேன்'' என்கிறான் இராவணன்.

இது இராவணன் தன் மனத்திற்குள் கருதிக்கொண்டது. கண்ணுக்குப் புலப்படுகின்ற கணைகளைச் செலுத்தினால்தானே இலக்குவன் தடுத்து அழித்துவிடுகிறான்! கண்ணுக்குப் புலப்படாத, எந்த வடிவமும் அற்ற இந்த மோகனாஸ்திரத்தை இவன்மீது செலுத்தி இவனைக் கொன்று விடலாம் என்று கருதுகிறான் இராவணன் என்பதாம். இந்த அஸ்திரம் தெய்வீகத்தன்மை வாய்ந்தது. அதனை மூலப்பரம்பொருளே தோற்று வித்தான். அது உருவமற்றது, அது சிவபெருமானையும் தாக்கும் ஆற்றல் பெற்றது என்று மோகனாஸ்திரத்தின் சிறப்புக்கள் எடுத்துரைக்கப்பட்டன.

24. வீடணன் இலக்குவனை எச்சரித்தல்

என்பது உன்னி, அவ்விஞ்சையை மனத்திடை எண்ணி,
முன்பன்மேல் வரத் துரந்தனன்; அது கண்டு முடுகி,
அன்பின் வீடணன், ''ஆழியான் படையினின் அறுத்தி''
என்பது ஓதினன்; இலக்குவன் அது தொடுத்து எய்தான். (9637)

(உன்னி-எண்ணி; முன்பன்-வலியவன்/இலக்குவன்; முடுகுதல்-விரைந்து செல்லுதல்; ஆழியான்-சக்கரப்படையை உடையவன்/திருமால்; அறுத்தி-அறுப்பாயாக; ஓதுதல்-கூறுதல்/சொல்லுதல்)

மோகனாத்திரத்தைச் செலுத்துவது என்பதைத் தீர்மானித்த இராவணன், அந்த மந்திரத்தைத் தன் மனத்துள் கருதி, வலிமை மிக்கவனான இலக்குவன்மேல் சென்று பாயும்படி, செலுத்தினான். அதனைக்கண்ட அன்பிற் சிறந்தவனாகிய வீடணன், விரைந்து சென்று, இலக்குவனிடம், ''இராவணன் இப்போது மோகன அத்திரம் என்ற கண்ணுக்குப் புலப்படாத அத்திரத்தைச் செலுத்தியிருக்கிறான். அதனைச் சக்கரப்படையைஉடையதிருமாலின்அத்திரமானநாராயணஅத்திரத்தைக் கொண்டு அறுத்து எறிவாயாக'' என்று மெதுமாகக் கூறினான். இலக்கு வனும் அதனை ஏற்று, நாராயணாத்திரத்தை தொடுத்து இராவணன்மீது செலுத்தினான்.

இராவணன் மோகன அத்திரத்தை வில்லில் தொடுத்துச் செலுத்த வில்லை. காரணம் அது உருவமற்றது, அதை வில்லில் தொடுத்துச் செலுத்தமுடியாது. இந்த நுட்பம் இலக்குவனுக்குத் தெரியாது என்பதால்,

Koviloor Digital Library

போர்நுணுக்கங்களையும், இராவணனின் சூழ்ச்சிச்செயல்களையும் நன்கு தெரிந்தவனான வீடணன் அன்பின் மிகுதியால் இலக்குவனுக்கு அதன் தன்மையை எடுத்துக்கூறி, அதை விலக்கும் வழியையும் தெரிவித்தான் என்பதாம். அதனால்தான் இங்கே குறிப்பாக ''அன்பின் வீடணன் ஓதினான்'' என்றார் என்க. ஓதுதல் என்பது மெதுவாகக் கூறுதல் என்ற பொருளைத்தரும்.

25. வீடணன் சொல, விண்டுவின் படைக்கலம் விட்டான்,
மூடு வெஞ்சின மோகத்தை நீக்கலும், முனிந்தான்;
"மாடு நின்றவன் உபாயங்கள் மதித்திட, வந்த
கேடு நம் தமக்கு" என்பது மனம்கொண்டு, கிளர்ந்தான். (9638)

(விண்டு-விஷ்ணு/திருமால்; முனிதல்-வெகுள்தல்; மாடு-பக்கம்; கிளர்தல்-மூண்டெழுதல்)

வீடணன் அவ்வாறு இலக்குவனுக்குச் சொல்ல, அதன்படியே இலக்குவன் தன்னை எதிர்த்துவந்த இராவணனின் படைக்கலமாகிய கொடிய மோகன அத்திரத்தை, நாராயண அத்திரம் கொண்டு தடுத்து விட்டான். இதனைக் கண்ணுற்ற இராவணன் மிக்க சினம்கொண்டான்; ''இலக்குவன் அருகே நிற்கும் தன் தம்பி வீடணன்தான், தான் செய்யும் தந்திரங்களை எப்படி நீக்குவது என்பதை இலக்குவனுக்குச் சொல்லித் தருகிறான்; அதன்படி இலக்குவன் நாம் செலுத்திய மோகன அத்திரத்தை விலக்கிவிட்டான்; நம் தம்பியால்தான் நமக்குத் தீங்கு விளைகிறது'' என்பதை மனத்துள் எண்ணி, இப்போது வீடணன்மீது சினம்கொண்டு பொங்கி எழுந்தான்.

26. வீடணன்மேல் வேல் எறிதல்.

மயன் கொடுத்தது மகளொடு; வயங்கு அனல் வேள்வி,
அயன் படைத்துளது; ஆழியும் குலிசமும் அனையது;
உயர்ந்த கொற்றமும், ஊழியும் கடந்துளது; உருமின்
சயம்தனைப் பொரும் தம்பியை, உயிர்கொளச் சமைந்தான். (9639)

(வயங்குதல்-விளங்குதல்; அயன்-பிரமதேவன்; ஆழி-சக்கரப்படை; குலிசம்-வச்சிரப்படை; சயம்-ஜெயம்/வெற்றி; சமைதல்-இசைதல்/உடன்படுதல்/துணிதல்)

தன் திருமணத்தின்போது தன் மகள் மண்டோதரியோடு, தன் மாமனாகிய மயன் தனக்குத் திருமணப் பரிசாக அளித்ததும், கொழுந்துவிட்டு எரிகின்ற யாகத்தீயில் பிரமதேவனால் உண்டாக்கப் பட்டதும், திருமாலின் சக்கரப்படையையும், தேவேந்திரனின் வச்சிரப் படையையும் போன்றதும், எப்பொழுதும் உயர்ந்த வெற்றியையே

Koviloor Digital Library

தேடித்தருவதும், ஊழிக்காலத் தீயையும் கடக்கவல்லதும், இடிபோன்றது மான தன் வேற்படையை, வெற்றியையே எப்பொழுதும் பொருந்தி இருக்கின்ற தன்தம்பி வீடணனின்மேல் ஏவி, அவன் உயிரைப் பருகுவதற்கு மனத்துள் கருதிக் கொண்டான் இராவணன்.

தனது மாமன் மயன், தன் திருமணத்தின்போது, அவன் மகள் மண்டோதரியோடு இந்த வேற்படையையும் திருமணப் பரிசாக அளித்தான் என்றும், அதன் சிறப்புக்களையும் எடுத்துரைத்து, அத்தகைய ஆற்றல்பெற்ற அந்த வேற்படையைத் தன்தம்பி வீடணன்மேல் செலுத்தி அவன் உயிரைக் கவர்வதற்கு இராவணன் தீர்மானித்து விட்டான் என்பதாம். மண்டோதரி மயன் மகள்; இராவணனின் மனைவி - பட்டத்தரசி.

27. விட்ட போதினின் ஒருவனை வீட்டியே மீளும்;
பட்டபோது, அவன் நான்முகன் ஆயினும் படுக்கும்;
வட்டவேல் அது வலம்கொடு வாங்கினன், வணங்கி,
எட்ட நிற்கலாத் தம்பிமேல் வல்விசைத்து எறிந்தான். (9640)

(வீட்டுதல்-அழித்தல்; படுத்தல்-கொல்லுதல்; வட்டம்-திருத்தம்; நிற்கலா-நிற்காத; வல்விசை-மிக்கவேகம்; விடுதல்-தொடுத்தல்/எய்தல்; படுதல்-தாக்குதல்; நான்முகன்-பிரமதேவன்)

அவ்வாறு இராவணனால் செலுத்தப்பட்ட அந்த வேற்படை அவன் யார் மீது வீசி எறிகிறானோ, அவனை அழித்தே அது திரும்பிவரும். வெறுங்கையாக வராது. அந்த வேற்படை யார்மீது பட்டாலும், அல்லது தாக்கினாலும், அவன் அதனைப்படைத்த பிரமதேவனே என்றாலும், அவனை அழித்தேதீரும். அத்தகைய சிறப்புமிக்க தெய்வீகத்தன்மை பொருந்திய திருத்தமான வேற்படையை, வலம் கொண்டுவந்து வணங்கித் தன் கையில் எடுத்துக்கொண்டு, தனக்கு மிகச் சேய்மையில் இல்லாது இலக்குவன் அருகிலேயே நிற்கும் தன்தம்பி வீடணன்மீது மிகுந்த வேகத்துடன் வீசிஎறிந்தான்.

இதுபோல ஒரு அம்பை அபிமந்திரித்து ஏவினால், அது யார்மேல் ஏவப் பட்டதோ அவரை அழிக்காமல் திரும்பாது என்பது எல்லாத் தெய்வப் படைகட்கும் பொருந்துவதாகும். முன்பு காகாசுரன்மேல் இராமபிரான் ஏவிய புல்லாலாகிய கணை, அவன் கண்ணைப் பறித்தே நின்றது. பரசுராமனைக் குறித்துவைத்த கணை, அவன் தவப்பயன் அனைத்தையும் மீட்டே திரும்பியது என்பனவெல்லாம் இங்கே ஒப்புநோக்கத் தகுவனவாகும். ''நான்முகனாயினும் படுக்கும்'' என்பதில் உள்ள உம்மை உயர்வு சிறப்புக் கருதியது. காரணம் இந்தப் படையை வேள்வியில் உண்டாக்கியவனே இந்த நான்முகன்தான். அவன்மீது பட்டாலும் அவனை அழிக்கும் என்பதாம். இந்தப்பாடலும் இதனையடுத்த பாடலும்

Koviloor Digital Library

அந்தாதித்தொடையில் அமைந்த பாடல்கள். ''அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி'' என்க.

28. வீடணன் அஞ்சுதலும், இலக்குவன் ஆறுதல் கூறுதலும்.

எறிந்த காலையில், வீடணன் அதன் நிலை எல்லாம்
அறிந்த சிந்தையன், ''ஐய! ஈது என் உயிர் அழிக்கும்;
பிறிந்து செய்யல்ஆம் பொருள்இலை'' என்றலும் பெரியோன்,
''அறிந்து போக்குவல், அஞ்சல்நீ! என்று இடை அணைந்தான்.
(9641)

(காலை-போது/சமயம்; நிலை-தன்மை; பிறிந்து-வேறு/மாறுபட்டு; பெரியோன்-பெருமையுடையவன்/இலக்குவன்; இடை-இடம்; அணைதல்-சேர்தல்; பொருள்-உபாயம்/வழி)

அவ்வாறு இராவணன் அந்த வேற்படையை வீடணனை நோக்கி வீசி எறிந்தபோது, அந்த வேற்படையின் தன்மையையும், ஆற்றலையும் நன்கு உணர்ந்த சிந்தையனான வீடணன், இலக்குவனை நோக்கி, ''தலைவனே! இந்த வேற்படை என் உயிரை அழித்துவிடும். இதற்கு மாறுபட்டுச் செய்யும் உபாயம் வேறு ஒன்றும் இல்லை'' என்றான். அதனைக் கேட்ட பெருமைக்குரியவனான இலக்குவன் வீடணனை நோக்கி, ''இதனைப் போக்கும் வகையைத் தெளிவாக ஆராய்ந்து நான் தடுத்துப் போக்குகிறேன். நீ பயப்படாதே!'' என்று ஆறுதல்கூறி அவன் நிற்கும் இடத்திற்கு வந்து அவன் பக்கத்தில் நின்று கொண்டான்.

'பிரிந்து' என்பது எதுகைநோக்கிப் 'பிறிந்து' என நின்றது. இங்கே கவிஞன் இலக்குவனைப் 'பெரியோன்' என்று கூறுவதை நினைக. ''செயற்கரிய செய்வர் பெரியர்'' என்பது குறள்-26. தம்மை வந்து அடைக்கலமடைந்தவரைத் தன்னுயிரை ஈந்தாவது காப்பாற்றுவது செயற்கரிய செயல்; அதனைச் செய்யத்துணிந்த இலக்குவனைப் ''பெரியோன்'' என்கிறான் கவிஞன் என்பதை நுனித்து உணர்க.

29. எய்த வாளியும், ஏவின படைக்கலம் யாவும்,
செய்த மாதவத்து ஒருவனைச் சிறுதொழில் தீயோன்
வைத வைவினில் ஒழிந்தன; வீடணன் மாண்டான்,
உய்தல் இல்லை'' என்று உம்பரும் பெருமனம் உலைந்தார். (9642)

(வாளி-அம்பு; வைவு-சாபம்; உலைதல்-வருந்துதல்; தீயோன்-தீவினையாளன்/பாவி; உய்தல்-பிழைத்தல்)

இராவணன் ஏவிய வேற்படையை எதிர்த்து இலக்குவன் செலுத்திய அம்புகளும், ஏவிய பலவகைப்பட்ட படைக்கலன்கள் எல்லாமும், மிகுந்த தவத்தைச் செய்த ஒப்பற்ற தவசீலனை அற்பமான ஈனத்தொழில் புரியும்

Koviloor Digital Library

தீயவனாகிய ஒரு பாவி, சபித்துச் சொல்லும் வசைச்சொற்கள் பலிக்காதது போலப் பயனற்றுப்போய் வீழ்ந்தன; அதனைக்கண்ட தேவர்கள் பெரிதும் மனம்வருந்தி, ''வீடணன் இறந்துபடுவான்; அவன் பிழைப்பது என்பது இல்லை'' என்று கூறினார்கள்.

தவம் மிக்கவர்களை அற்பமான தீயவன் ஒருவன் பழித்துரைத்தால் அது எப்படிப் பயன்தராதோ, அதுபோல இராவணன் செலுத்திய தெய்வத் தன்மை பொருந்திய வேற்படையை இலக்குவன் செலுத்திய அம்புகளும், படைக்கலன்களும் மற்றும் பிற எல்லாமும் பயனற்றதாய்ச் செய்தன என்பதாம். ''சிறுதொழில் தீயோன்'' துஷ்டன் எனக்கொள்க. ''தவத்தின் முன்நில்லாதாம் பாவம்'' என்பது நீதிநூல். ''மாண்டான்'' என்பது தெளிவும் துணிவும் பற்றிவந்த காலவழு அமைதி எனக்கொள்க. ''வைதவைவு'' என்பது சபித்த சாபம் அல்லது ''திட்டிய திட்டு'' என்று வழக்குச் சொல்லைப் போன்றது எனக்கொள்க. முனிவர்கள் அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவை அவ்வப்பொழுதே அவ்வப்பயனைத் தரும். ஆனால் சிறுதொழில் தீயோன் வைதவைவு ஒரு பயனும் அளிக்காது என்பதாம். மாதவத்து ஒருவன் போன்றது இராவணன் செலுத்திய வேற்படை. சிறுதொழில் தீயோன் வைதவைவு போன்றவை இலக்குவன் எய்த வாளியும், ஏவின படைக்கலம் யாவும்.

30. இலக்குவன் வேற்படையை எதிர்கொள்ளுதல்

"தோற்பென் என்னினும், புகழ் நிற்கும்; தருமமும் தொடரும்,
ஆர்ப்பர் நல்லவர்; அடைக்கலம் புகுந்தவன் அழியப்
பார்ப்பது என்? நெடும்பழி வந்து தொடர்வதன் முன்னம்
ஏற்பென் என் தனி மார்பின்" என்று இலக்குவன் எதிர்ந்தான். (9643)

(தனி-ஒப்பற்ற; எதிர்த்தல்-எதிர்நிற்றல்; தோற்றல்-உயிர்விடுதல்)

''எம்மிடம் வந்து அடைக்கலம் புகுந்த வீடணன் உயிரைக் காப்பதே என் கடமை என்று கருதுகிறேன். அதனால் இராவணன் செலுத்துகின்ற வேற்படையால் என் உயிர் நீங்கப்பெற்றேன் என்றாலும், அடைக்கலம் அடைந்தவரைக் காக்கத் தன்னுயிரையே இலக்குவன் ஈந்தான் என்ற புகழ், காலம் உள்ளளவும் நிலைத்திருக்கும். அறக்கடவுளும் என்னைப் பின் தொடர்ந்துவரும்; அதனால் நல்ல சான்றோர்கள் மகிழ்ச்சி கொண்டு ஆரவாரித்துப் பாராட்டுவார்கள். நம்மை அடைக்கலம் அடைந்தவன் இறந்துபட, அதை நாம் பார்த்துக்கொண்டு வாளா இருக்கமுடியுமோ? காப்பாற்ற முயலவே இல்லை என்ற நீண்ட பெரும்பழி வந்து சேர்வதற்கு முன்பே, நான் என் ஒப்பற்ற மார்பில் அந்த வேற்படையை ஏற்பேன்'' என்று கூறிக்கொண்டே, இலக்குவன் அவ்வேற்படையை எதிர்கொண்டான்.

Koviloor Digital Library

''பாடுறு பசியை நோக்கித்தன் உயிர்கொடுத்த பைம்புள்'' என்று முன்பு நாம் கண்டுவந்ததை இங்கு நினைவுகூர்க. ''சாதல் வந்து அடுத்தகாலும், தனக்கொரு காதல் இன்றிப் பூதலம் இறக்கும் காலும் புகழ் உடம்பு இருக்கும்; அந்தக் கோதறு புகழின் யாக்கைக் கொடையினால் செல்வம்கூர வாழ்தலை உடையாரன்றே வானமும் வணங்கும் நீரார்'' என்பது விநாயகபுராணம். ''தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு'' என்பதும் இங்கு நினையத்தகும்.

31. வேற்படையை ஏற்க எல்லோரும் முந்துதல்

இலக்குவற்கு முன் வீடணன் புகும்; இருவரையும்
விலக்கி அங்கதன்மேற் செலும்; அவனையும் விலக்கி,
கலக்கும் வானரக் காவலன்; அனுமன் முன் கடுகும்;
அலக்கண் அன்னதை இன்னது என்று உரை செயல் ஆமோ?'' (9644)

(காவலன்-மன்னன்/சுக்கிரீவன்; கடுகுதல்-விரைந்து செல்லுதல்; அலக்கண்-துன்பம்; ஆமோ-ஆகுமோ/கூடுமோ; கலத்தல்-கூடுதல்; இன்னது-இத்தகையது)

''இராவணன் செலுத்திய வேற்படையை ஏற்றுக்கொள்ள இலக்குவன் போவதற்கு முன்பு வீடணன் புகுந்து நிற்பான்; அவர்கள் இருவரையும் விலக்கிவிட்டு அங்கதன் முற்பட்டுச் செல்வான்; அவனையும் அப்பால் போகச்செய்து வானரர் மன்னனாகிய சுக்கிரீவன் முன் சென்று கூடுவான்; இவர்களையெல்லாம் தள்ளிவிட்டு அனுமன் விரைந்து செல்லுவான்; அவர்கள் அங்கு பட்ட துன்பத்தை இத்தகையது என்று வார்த்தைகளால் சொல்லிவிட முடியுமோ?'' என்கிறான் கவிஞன்.

இராவணன் எய்த ஒரேஒரு வேற்படையை இலக்குவன், வீடணன், அங்கதன், சுக்கிரீவன், அனுமன் ஆகிய ஒவ்வொருவரும் தத்தம் மார்பில் ஏற்றுக்கொள்ளத் துடித்து விரைந்து செல்லுவது அனைவரும் வீடணன்பால் கொண்ட அன்பையும், இலக்குவன்பால் கொண்ட செய்நன்றியறிதலையும் வெளிப்படுத்துவதை உணர்க.

32. இலக்குவன் வில் ஏற்றல்

முன் நின்றார் எலாம் பின்உற, காலினும் முடுகி,
''நின்மின்; யான் இது விலக்குவென்'' என்று உரை நேரா,
மின்னும் வேலினை, விண்ணவர் கண் புடைத்து இரங்க,
பொன்னின் மாா்பிடை ஏற்றனன், முதுகிடைப் போக. (9645)

(கால்-காற்று; முடுகுதல்-விரைதல்; புடைத்தல்-அடித்துக் கொள்ளுதல்; விலக்குதல்-தடுத்து அழித்தல்; நேரா-நேர்ந்து/மொழிந்து; இரங்குதல்-வருந்துதல்)

Koviloor Digital Library

தனக்கு முன்னே முற்பட்டு வந்த வீடணன், அங்கதன், சுக்கிரீவன், அனுமன் ஆகியோரையெல்லாம் பின்னால் போகுமாறு செய்து, காற்றைக் காட்டிலும் மிக்க வேகமாக விரைந்து முன்சென்று ''நில்லுங்கள்; இந்த வேற்படை, வீடணன்மீது பாயா வண்ணம் நான் தடுத்து அழிக்கிறேன்'' என்றுகூறி, மின்னலைப்போல் ஒளிவீசி வருகின்ற அந்த வேற்படையை, தேவர்கள் எல்லாம் தம் கண்ணில் அடித்துக்கொண்டு வருந்தி நிற்கவும், தனது பொன்போன்ற அழகிய நிறமுடைய மார்பில், முதுகை ஊடுருவிச் செல்லும்வண்ணம், இலக்குவன் ஏற்றுக்கொண்டான்.

இவ்வாறு மார்பில் பாய்ந்து முதுகை ஊடுருவி ஒரு ஆயுதம் செல்வதால் ஏற்படுகின்ற காயத்தைத்தான் ''விழுப்புண்'' என்கிறோம். விழுப்புண் படுதலும், விழுப்புண் பட்டு இறத்தலும் வீரம்மிக்க செயல் என்று கருதப்படுகிறது. இராவணன் செலுத்திய வேற்படையால் இலக்குவன் இறக்க நேருமே என்று கருதி, தேவர்கள் தம் கண்களில் அடித்துக்கொண்டு வருந்தினார்கள் என்பதாம்.

33. வீடணன் இராவணனின் தேர்க்குதிரையை அழித்தல்

"எங்கு நீங்குதி நீ?" என, வீடணன் எழுந்தான்;
சிங்கஏறு அன்ன சீற்றத்தான், இராவணன் தேரில்
பொங்கு பாய்பரி சாரதியோடும் படப் புடைத்தான்;
சங்க வானவர் தலை எடுத்திட, நெடுந்தண்டால். (9646)

(சங்கம்-கூட்டம்; சாரதி-தேர்ப்பாகன்)

ஆண்சிங்கம் போன்ற வீடணன் சீற்றம்கொண்டு இராவணனை நோக்கி, ''எங்கே போகப் பார்க்கிறாய்? என்று கேட்டுக்கொண்டே, பொங்கி எழுந்து, இராவணனுடைய தேரில் பூட்டப்பட்டிருந்த பாயும் இயல்புடைய குதிரைகளை, அவற்றைச் செலுத்திவந்த தேர்ப் பாகர்களோடும் அழியும் வண்ணம் தனது நீண்ட பெரிய தண்டாயுதத்தால் அடித்து நொறுக்கினான். முன்பு குனிந்த தேவர்களின் தலைகள் இப்பொழுது நிமிரலாயின.

இராவணன் செலுத்திய வேற்படை இலக்குவனைத் தாக்கி இலக்குவன் விழுந்துபட்டதும் தான் கருதிவந்த செயல் நிறைவுற்றது என்று கருதிப் போர்க்களத்தை விட்டு நீங்கிப் போக முயன்றான். அது கண்ட வீடணன் அவனை ''எங்கே தப்பிப் போகிறாய்?'' என்று கேட்டு விட்டு, அவன் செலுத்திவந்த தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளையும், தேர்ப்பாகர்களையும் தனது நீண்ட தண்டாயுதத்தால் அழித்தான். தேவர்கள் மகிழ்ச்சியால் தலை நிமிர்ந்தார்கள். வீடணன் எப்பொழுதும் ஒரு தண்டாயுதத்தைக் கைக்கொண்டிருப்பான் என்ற கருத்தில் வான்மீகம்

Koviloor Digital Library

வீடணனைப் பற்றிக் கூறும் இடங்களிலெல்லாம் ''கதாபாணி'' என்றே குறிப்பிடுகிறது என்பது கருதத்தக்கது.

34. சேய் விசும்பினில் நிமிர்ந்து நின்று, இராவணன் சீறி,
பாய் கடுங்கணை பத்து அவன் உடல்புகப் பாய்ச்சி
ஆயிரம் சரம் அனுமன் தன் உடலினில் அழுத்தி,
போயினன், "செரு முடிந்தது" என்று, இலங்கை ஊர் புகுவான். (9647)

(விசும்பு-ஆகாயம்; செரு-போர்; புகுவான்-நுழையும் பொருட்டு; பாய்ச்சுதல்-ஊடுருவிச் செல்லுமாறு செய்தல்; சேய்மை-தூரம்)

தான் செலுத்திய வேற்படையினால் இலக்குவன் வீழ்ந்துபட்டதும், வீடணன் தன் தேர்க்குதிரைகளையும், தேர்ப்பாகனையும் கொன்றழித்து விட்டதனால், இராவணன் வேறுவழியின்றி மிக்க சீற்றம்கொண்டு, தூரத்திலிருக்கின்ற ஆகாயத்தில் போய் உயர்ந்து நின்றுகொண்டு, வீடணன் உடலில் நன்கு ஊடுருவிப் பாயுமாறு பத்துக் கொடிய அம்புகளையும் அனுமன்மீது ஆயிரக்கணக்கான அம்புகளை அவன் உடலில் நன்கு பதியும் வண்ணமும் செலுத்தி, ''இப்போது போர் முடிந்துவிட்டது'' என்று கூறிக்கொண்டு, தனது ஊரான இலங்கைக்குப் போவதற்காகப் புறப்பட்டுச் சென்றான்.

''ஆயிரம்'' என்பது இங்கு பல என்ற பொருளைத்தரும். இலக்குவன் வீழ்ந்துபட்டான். வீடணன்மீதும், அனுமன்மீதும் அம்புகளைப் பாய்ச்சி விட்டோம், எனவே இனிமேல் நம்முடன் போர்செய்வதற்கு யாரும் துணிந்து வரமாட்டார்கள் என்று கருதிக்கொண்டு ''போர்முடிந்தது'' என்று எண்ணி இலங்கை செல்ல எத்தனித்தான் என்பதாம்.

35. "தேடிச் சேர்ந்த என் பொருட்டினால், உலகுடைச் செல்வன்
வாடிப் போயினன்; நீ இனி வஞ்சனை மதியால்
ஓடிப் போகுவது எங்கு? அடா! உன்னொடும் உடனே
வீடிப் போவென்" என்று, அரக்கன்மேல் வீடணன் வெகுண்டான்.
(9648)

(வீடுதல்-இறந்துபடுதல்)

வீடணன் இராவணனை நோக்கி, ''நான் போய் அவர்களை அடைக்கலம் அடைந்ததால், என்னைக் காப்பாற்றும் பொருட்டு, இவ்வுலகங்களுக்கெல்லாம் தலைவனாகிய இலக்குவன், உன்னால் வேல் பாய்ச்சப்பட்டு வாடிப்போய்த் தரையில் கிடக்கிறான்; நீயோ உன்னுடைய வஞ்சகம் மிகுந்த புத்தியினால் போர்க்களத்தை விட்டுத் தப்பி ஓடப் பார்க்கிறாயே! எங்கேயடா போகிறாய்? உன்னோடு போர்செய்து உன்னைக் கொன்று, உன்னோடு நானும் உயிர்விடுவேன்'' என்று அந்த அரக்கனாகிய இராவணன்மேல் வீடணன் மிக்க சீற்றம் கொண்டான்.

Koviloor Digital Library

''தேடிச்சேர்தல்'' என்பது தானே தேடிச்சென்று இராம இலக்குவரிடம் அடைக்கலம் புகுந்ததைக் குறிக்கும். இலக்குவன் இறந்துபட்டான் என்று கூறுவதற்குக்கூட வீடணனுக்கு நா எழவில்லை; மனம் ஒப்பவில்லை; எனவே ''வாடிப்போயினான்'' என்கிறான். ''உலகுடைச் செல்வன்'' என்பது இவ்வுலகத்தை எல்லாம் தாங்கி நிற்கின்ற ஆதிசேஷனின் அவதாரமாகிய இலக்குவன் என்ற பொருளையும் தருதலை உணர்க. தனக்காக உயிர் துறந்த இலக்குவனைக் கொன்றழித்த இராவணனைத் தானே கொன்றழிப்பதே முறையாகும் என்று கருதி இவ்வாறு கூறினான் என்க. தனக்கு அடைக்கலம் தந்த இலக்குவன் இறந்துபட்டதனால் தானும் இறந்தழிவதே முறை என்றும் கருதினான் என்பதாம். இராவணன் போர்க்களம் விட்டு அகன்று போர் முடிந்துவிட்டது என்று கருதினான். ஆனால் வீடணனோ தங்களுக்குப் பயந்துதான் இராவணன் போர்க்களம் விட்டு அகன்று விண்ணில் சென்று தன்னை ஒளித்துக்கொண்டான் என்று கருதுகிறான் என்பதையும் உணர்க.

36. "வென்றி என் வயம் ஆனது; வீடணன் பசுவைக்
கொன்று இனிப் பயன்இல்லை" என்று இராவணன் கொண்டான்;
நின்றிலன்; ஒன்றும் நோக்கிலன்; முனிவு எலாம் நீத்தான்;
பொன் திணிந்தன மதிலுடை இலங்கை ஊர் புக்கான். (9649)

(முனிவு-கோபம்; கொள்ளுதல்-கருதுதல்)

''இராமஇலக்குவர் ஆகிய முக்கிய பகைவர் இருவருள் ஒருவனான இலக்குவனைக் கொன்று வீழ்த்திவிட்டேன். எனவே வெற்றி என் பக்கமானது; எனவே ''இந்தப் பசுப்போன்ற எளியவனான வீடணனை இப்போது கொல்லுவதில் ஒரு பயனும் விளையப்போவதில்லை'' என்று இராவணன் தன் மனத்துள் கருதிக்கொண்டு அங்கு சற்றும் நில்லாமல், வீடணனை ஒரு பொருட்டாகவே கருதாமல், அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் கோபம் நீங்கப்பெற்றவனாய், பொன்னால் திணித்துச் செய்யப்பட்ட மதில்களையுடைய இலங்கை நகருக்குள் நுழைந்தான்.

''வீடணப்பசு'' என்பது இகழ்ச்சிக்குறிப்பு. பசுவைக் கொல்லுதல் பாவம் என்பது அரக்கவேந்தனாகிய இராவணனுக்கும் தெரிந்திருக்கிறது. எனவே பசுவைப் போன்ற எளியவனான வீடணனைக் கொல்லுவதில் எந்தப் பயனும் இல்லை என்பதை இராவணன் நன்கு உணர்ந்தே போர்க்களத்தை விட்டு அகன்று சென்றான் என்பதாம். பகைவர் இருவர், அவருள் ஒருவரைக் கொன்று அழித்தாகிவிட்டது. எனவே வெற்றி தன் வசமானது என்று கருதிக்கொள்ளுகிறான் இராவணன். இலக்குவன் இறந்துபட்டதால் இராமபிரான் இனிப் போர்செய்ய அஞ்சுவான் என்றும் அந்தத்துக்கத்திலேயே அவன்வேறு ஏதேனும் முடிவு எடுக்கலாம் என்றும் இராவணன் கருதுகிறான் என்பதாம்.

Koviloor Digital Library

37. வானரச்சேனையும், வீடணனும் அரற்றுதல்

அரக்கன் ஏகினன்; வீடணன் வாய் திறந்து அரற்றி,
இரக்கம் தான் என இலக்குவன் இணையடித் தலத்தில்,
கரக்கல் ஆகலாக் காதலின் வீழ்ந்தனன், கலுழ்ந்தான்;
குரக்கு வெள்ளமும், தலைவரும் துயரிடைக் குளித்தார். (9650)

(இணை-இரண்டு; கரக்கல்-மறைத்தல்/ஒளித்தல்/அடக்குதல்; கலுழ்தல்-கண்ணீர் பெருக்குதல்; குளித்தல்-மூழ்குதல்/ஆழ்தல்)

அவ்வாறு அரக்கனாகிய இராவணன் இலங்கை நகருள் புகுந்தான். இலக்குவன் நிலை கண்டு ஆற்றாது, வீடணன் வாய்திறந்து அரற்றி, இரக்கம் என்பதே ஓர் உருக்கொண்டு வந்ததோ என்று கருதும்படி கண்ணீர் பெருக்கி, உள்ளுக்குள் அடக்கிவைக்க இயலாத பேரன்பினில் ஆழ்ந்து, இலக்குவனின் இரு திருவடிகளிலும் வீழ்ந்தான்; குரக்குச் சேனையும், படைத்தலைவர்களும் துயரக்கடலில் மூழ்கினர்.

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்; ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும்'' என்பது குறள்-71. சிலரால்தான் கண்ணீரை அடக்கமுடியும்; பெரும்பாலான மனிதநேயம் கொண்டவர்கள் மற்றவர் படும் துயரத்தைக் காண ஆற்றாது கண்ணீர் பெருக்குதல் இயல்பு. வீடணன் அரக்கர்குலத்தில் பிறந்தவன் என்றாலும் மனிதநேயம் மிக்கவன் என்பதைச் சுட்டிக்காட்டும் பாடல்களுள் இதுவும் ஒன்று. கவிஞனின் சொல்லாட்சியை நோக்குக. அவனுடைய அன்பு ''கரக்கல் ஆகலாக்காதல்'' என்கிறான். இராமபிரானிடம் அன்புகொண்ட குகனை முன்பு, ''தீராக்காதலன்'' என்று குறிப்பிட்டதையும் இங்கு நினைவுகூர்க. இதற்கு மாறாக விரைவினைக் குறிக்கும்போது முன்பு கவிஞன் ''காக்கல் ஆகலாக் கடுப்பு'' என்று கூறியதையும் ஒப்பிட்டு நோக்குக.

38. வீடணன் தானும் இறக்கத் துணிதல்

பொன் அரும்பு உறு தாரப்புயப் பொருப்பினான் பொன்ற,
என் இருந்து நான்? இறப்பென், இக்கணத்து; எனை ஆளும்
மன் இருந்து இனி வாழ்கிலன்; என்றனன் மறுக,
''நில் நில்'' என்றனன், சாம்பவன் உரை ஒன்று நிகழ்த்தும். (9651)

(பொன்-அழகிய; தார்-மாலை; பொருப்பு-மலை; பொன்றுதல்-இறந்துபோதல்; மன்-மன்னன்/இராமபிரான்; மறுகுதல்-மனம் கலங்குதல்)

''அழகிய அரும்புகளால் தொடுக்கப்பட்ட மாலையணிந்ததும், மலையைப்போன்று திண்ணியதுமாகிய தோள்களையுடைய இலக்குவன் இறந்துபட, நான்மட்டும் உயிருடன் இருந்து என்ன பயன்? இந்த

Koviloor Digital Library

நொடியிலேயே நான் இறந்துபடுவேன்; என்னை அடிமையாய் ஆட்கொண்டருளும் மன்னவனான இராமபிரான், இலக்குவன் இறந்துபட்ட பின்னும் உயிர்தரித்து இரான் என்று வீடணன் மனக்கலக்கம் உற்றுப் புலம்பினான். அதுகண்ட சாம்பவன் ''நில்நில்'' என்று அவனைத் தடுத்து, கீழ்க்கண்ட சொற்களைக் கூறத்தொடங்கினான்.

சாம்பவன் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவன். எனவே அவன் உணர்ச்சிவயப்படாமல், மாற்று வழி ஏதேனும் உண்டா என்று ஆராய்வதற்காக வீடணன் இறந்துபடாமல் தடுத்தான் என்க. ''மன் இருந்து வாழ்கிலன்'' என்று இப்போது கூறும் இதே வீடணன், முன்பு மருத்து மலைப்படலத்திலும் இதேபொருளைத்தருகின்ற, ''வள்ளலோதம்பி மாய வாழ்கிலன்'' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க.

39. சாம்பவன் உபாயம் கூறுதல்

''அனுமன் நிற்க, நாம் ஆர்உயிர்க்கு இரங்குவது அறிவோ?
நினையும் அத்துணை மாத்திரத்து, உலகு எலாம் நிமிர்வான்.
வினையின் நன்மருந்து அளிக்கின்றான்; உயிர்க்கின்றான், வீரன்;
தினையும் அல்லல் உற்று அழுங்கன்மின்'' என்று இடர் தீர்த்தான். (9652)

(நிமிர்தல்-பேருருக்கொள்ளுதல்; வினை-புண்ணியம்; அழுங்குதல்-வருந்துதல்; இடர்-துன்பம்; வீரன்-இலக்குவன்)

''நாம் நினைக்கும் ஒரு நொடிப்பொழுதிற்குள் உலகெலாம் சென்று வரும் ஆற்றலுடையவனும், பேருருக்கொள்ளும் வன்மையுடையவனுமான அனுமன் நம் பக்கத்தில் இருக்கும் போது, இலக்குவன் தன் அருமையான உயிர் துறந்து விட்டானே என்று வருந்திக்கொண்டு வாளா நிற்பது அறிவுடைமையாகுமா? அவன் பேருருக்கொண்டு நம் நல்வினைப்பயனால் நல்ல மருந்துகளைக் கொண்டு வந்து விரைவில் கொடுப்பான். அதனால் வீரனாகிய இலக்குவன் உடனே உயிர்த்தெழுவான். எனவே நீங்கள் சற்றும் துன்பப்பட்டு வருந்தாதீர்கள்'' என்று சாம்பவன்கூறி அவர்கள் துன்பத்தைத் தீர்த்துவைத்தான்.

அனுமனுடைய ஆற்றல் பேசப்படுகிறது. முன்பு பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்ட இலக்குவனை உயிர்ப்பித்து எழுப்பியதைப்போல, இப்போதும் அனுமன் விரைந்து சென்று மருத்துமலை கொணர்ந்து இலக்குவனை உயிர்ப்பிப்பான் என்றும், எனவே யாரும் தினையளவுகூட வருந்த வேண்டியதில்லை என்றும் சாம்பவன் கூறுகிறான் என்பதாம். ''அளிக்கின்றான்'' ''உயிர்க்கின்றான்'' என்பன துணிவும் தெளிவும் பற்றிவந்த காலவழுவமைதி எனக்கொள்க. ''தினையும்'' என்பது ஒரு சிறு அளவைக் குறிக்கும் உவமை. ''நினையும் அத்துணை மாத்திரம்'' என்பதும்

Koviloor Digital Library

சிறு காலஅளவைக் குறிப்பதாகும். ''உயிர்க்கின்றான் வீரன்'' என்ற சொற்றொடர்க்கு, இலக்குவன் குற்றுயிராய்ச் சுவாசம் விடுகின்றான் என்றும் பொருள் கூறுவதுண்டு. ''தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வார் பயன் தெரிவார்'' என்பது குறள்-104. ''தினைத்துணையாம் குற்றம் வரினும், பனைத் துணையாக் கொள்வர் பழி நாணுவார்'' என்பதும் குறள்-433.

40. அனுமன் மருத்துமலை கொணரச்செல்லுதல்

மருத்தின் காதலன் மார்பிடை அம்பு எலாம் வாங்கி,
"இருத்தியோ, கடிது ஏகலை?" இளவலை இங்ஙன்
வருத்தம் காணுமோ மன்னவன்?" என்னலும், அன்னான்
கருத்தை உன்னி, அம்மாருதி உலகு எலாம் கடந்தான். (9653)

(மருத்து-காற்று; காதலன்-புதல்வன்/அனுமன்; கடிது-விரைந்து; உன்னுதல்-உணர்தல்; இளவல்-இலக்குவன்; மன்னவன்-இராமபிரான்; வாங்குதல்-பெயர்தல்/நீக்குதல்)

காற்றரசனாகிய வாயுதேவனின் புதல்வனாகிய அனுமனின் மார்பில், இராவணனால் பதிக்கப்பெற்றிருந்த அம்புகள் எல்லாவற்றையும் பெயர்த் தெடுத்த சாம்பவன், அனுமனை நோக்கி, ''நீ இன்னும் மருந்து கொணர விரைந்து செல்லவில்லையா? இங்கேயே தாமதித்து நின்று கொண்டிருக் கிறாயே? இளவலாகிய இலக்குவனை இத்தகைய நிலையில் காண்பதற்கு நம் மன்னவனாகிய இராமபிரான் தாங்கிப் பொறுத்துக் கொள்வானா?'' என்று கூறியவுடன், சாம்பவனது எண்ணத்தை நன்கு உணர்ந்துகொண்ட அனுமன், பேருருக்கொண்டு உலகங்கள் எல்லாவற்றையும்கடந்து செல்லலானான்.

''இருத்தியோ'', ''காணுமோ'' என்ற இரு இடத்திலும் வந்துள்ள ஓகாரம் வினாப்பொருளில், இருக்கக்கூடாது, காணக்கூடாது என்ற எதிர்மறைப் பொருளைத்தரும்.

41. உய்த்து ஒரு திசைமேல் ஓடி, உலகெலாம் கடக்கப் பாய்ந்து,
மெய்த்தகு மருந்து தன்னை, வெற்பொடும் கொணர்ந்த வீரன்,
பொய்த்தல் இல் குறிகெடாமே, பொதுஅற நோக்கி, பொன்போல்
வைத்தது வாங்கிக்கொண்டு வருதலில், வருத்தம் உண்டோ?" (9654)

(பாய்தல்-தாவிச்செல்லுதல்; வெற்பு-மலை; குறி-அடையாளம்; பொதுஅற-சிறப்பாக; வருத்தம்-முயற்சி; உய்த்தல்-செலுத்துதல்; பொய்த்தல்-தவறுதல்)

சாம்பவன்கூறிய கருத்திலேயே தன்கவனத்தை ஒருமுகமாகச்செலுத்தி ஒப்பற்ற வடக்குத் திசைமேல் சென்று, உலகங்கள் எல்லாவற்றையும்

Koviloor Digital Library

தாவிக் கடந்துசென்று, உண்மையிலேயே இறந்தவர்களை, உயிர்ப்பிக்கும் தகுதிவாய்ந்த, மருத்து மூலிகைகளை முன்னர் மலையொடும் பெயர்த்துக் கொண்டுவந்த வீரனான அனுமன், தவறுதல் இல்லாத அடையாளங்களை மிக்க கவனத்துடன் சிறப்பாக நோக்கி, முன்பு பொன்போல் பாதுகாத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்த மலையை அப்படியே பெயர்த் தெடுத்துக் கொண்டு வருவதில் வீரனான அனுமனுக்கு ஏதாவது துன்பம் இருக்கமுடியுமோ? எளிதில் கொண்டுவரலாம் அல்லவா?'' என்று கேட்கிறான் கவிஞன்.

முன்பு அரிதின்முயன்று எடுத்துவந்து, பின்னர் தானே அடையாளம் சிதையாமல் பாதுகாப்பாகக் கொண்டுபோய் வைத்த ஒரு பொருளை இப்போது மீண்டும் சென்று எடுத்துவருதல் என்பது அனுமன் போன்ற ஆற்றல் படைத்தவர்க்கு சிரமமான காரியமா? இல்லையல்லவா? எளிதில் கொண்டுவரலாம்தானே! என்கிறான் கவிஞன். ''ஒருதிசை'' என்பது முன்பு சென்ற வடக்குத்திசையைக் குறிக்கும். ''மெய்த்தகு மருந்து'' என்பது, உண்மையிலேயே இறந்துபட்டவர்களை உயிர்பெற்றெழச்செய்யும் தகுதி வாய்ந்த சஞ்சீவி மருந்து எனப்படும். ''பொன்போல் வைத்தது'' என்பது செல்வத்தைப்போலப் பாதுகாப்பாக இருந்த இடத்திலேயே முன்பு வைத்துவிட்டு வந்ததைக் குறிக்கும். ''உண்டோ?'' என்பதில் உள்ள ஓகாரம் இல்லை என்ற எதிர்மறைப் பொருளைத்தரும்.

42. தந்தனன் மருந்து தன்னை; தாக்குதல் முன்னே யோகம்
வந்தது, மாண்டார்க்கு எல்லாம்; உயிர்தரும் வலத்தது என்றால்,
நொந்தவர் நோவுதீர்க்கச் சிறிது அன்றோ? நொடிதல் முன்னே,
இந்திரன் உலகம் ஆர்க்க, எழுந்தனன் இளைய வீரன். (9655)

(தாக்குதல்-தொடுதல்/படுதல்; வலத்தது-ஆற்றலுடையது; யோகம்-நினைவு; நொடிதல்-கை நொடிக்கும்பொழுது)

அனுமன் விரைந்து மருத்துமலையைக் கொணர்ந்தான். அம்மருத்து மலையின் வாசனை உடலில் தீண்டுவதற்கு முன்னே, இலக்குவனுக்கு உணர்வு வந்து நினைவு வந்தது. இறந்து பட்டவர்களுக்கே உயிரைத்தரும் ஆற்றல்மிக்கது அம்மருத்துமலை மூலிகைகள் என்றால், வேல்பட்ட தனால் நொந்துபோய் உணர்வு இழந்தவர்க்கு அந்நோயைத் தீர்ப்பது ஒரு பெரிய செயலோ? மிகச் சிறிய செயல் அல்லவா? அக்காற்றுப் பட்டவுடனே, ஒரு நொடிப்பொழுதிற்கு முன்பே, இந்திரனைத் தலைவனாகக் கொண்ட தேவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்ய, இளைய வீரனான இலக்குவன் உணர்வுபெற்று எழுந்து நின்றான்.

இப்பாடலால் இலக்குவன் இராவணன் வேற்படையால் மாண்டு போகவில்லையென்பதும், சற்றுத் தளர்ச்சியடைந்து மனக்கலக்கமுற்று உணர்வு நீங்கி மயங்கிக்கிடந்தான் என்பதும் பெறப்படுகிறது. ''யோகம்''

Koviloor Digital Library

என்ற சொல்லுக்கு வாசனை என்று பொருள் கொள்ளப்பட்டது. முன்பும் மருத்துமலை இலங்கை நகருக்குள் வாராது வெளியே ஆகாயத்தில் நின்றது. அதனின்றும் வெளிப்பட்ட காற்றிலேயே, பிரமாஸ்திரத்தால் கட்டுண்ட இலக்குவன் உயிர்பெற்றெழுந்தான் என்று கூறப்பட்டது. எனவே இப்பொழுதும் அதே பொருள் கொள்ளப்பட்டது. எல்லா இடங்களிலும் கவிஞன் தேவர்களைக் குறிப்பிடும்பொழுது தேவர்கள், புலவர்கள், இமையோர்என்றேகூறிவந்திருக்க, இங்கேமட்டும் ''இந்திரன் உலகம்'' என்று ஏன் கூறவேண்டும்? இந்திரனை வெற்றி கண்ட இந்திரசித்தனின் தந்தை இராவணன் செலுத்திய வேற்படையால் நோவுற்று மயங்கிவிழுந்த இலக்குவன் இப்பொழுது உணர்வுபெற்று எழுந்ததால் தமக்குப் பகைவனான இந்திரசித்தனுடன் மீண்டும் போர்செய்து இந்திரசித்தனை இலக்குவன் அழித்து ஒழித்துவிடுவான் என்ற நம்பிக்கையால் ''இந்திரன் உலகம்'' ஆர்ப்பரித்தது என்றான் என்பதாம்.

43. இலக்குவன் எழுந்து வீடணன் பற்றி வினவுதல்

எழுந்து நின்று, அனுமன் தன்னை இருகையால் தழுவி, "எந்தாய்!
விழுந்திலன் அன்றோ மற்று அவ்வீடணன்?" என்ன, விம்மித்
தொழும் துணையவனை நோக்கி, துணுக்கமும் துயரும் நீக்கி,
"கொழுந்தியும் மீண்டாள்; பட்டான் அரக்கன்", என்று உவகை
கொண்டான். (9656)

(விழுதல்-இறந்துபடுதல்; விம்முதல்-தேம்புதல்; துணையவன்-துணைவன்; துணுக்கம்-நடுக்கம்; படுதல்-இறந்துபடுதல்; கொழுந்தி-சீதாதேவி)

அவ்வாறு அனுமன் கொணர்ந்த மருத்துமலையால் உணர்வுபெற்று எழுந்துநின்ற இலக்குவன், தனக்கு இருமுறையும் உயிர்தந்து ஈன்ற அனுமனைத் தனது இருகைகளால் தழுவிக்கொண்டு அவனை நோக்கி ''என் தந்தை போன்றவனே! நம் வீடணன் இறந்துபடவில்லையே?'' என்று கேட்டான். தன் எதிரில் வந்து தன்னை வணங்கி நின்ற வீடணனைக் கண்டு, உள்ளம் வெதும்பி, உடல் நடுக்கமும், உள்ளத்துயரமும் நீங்கப் பெற்றவனாக, ''இனி நம் கொழுந்தியாகிய சீதாதேவியும் சிறையினின்றும் விடுதலை பெற்றவளாவாள்; அவ்வரக்கன் இராவணனும் இறந்து படுவான்'' என்றுகூறி உள்ளத்தில் மிக்க மகிழ்வெய்தினான்.

தன்னால் அடைக்கலம் தரப்பெற்ற வீடணன் அவன் அண்ணன் செலுத்திய வேற்படையால் இறந்துபடவில்லை, உயிருடன்தான் இருக்கிறான் என்பதை நேரில்கண்ட இலக்குவன் நடுக்கமும், துயரமும் நீங்கப்பெற்றான். வீடணன் உயிருடன் இருப்பதாலும், தானும் உயிர் பெற்று எழுந்துவிட்டதனாலும், இனிமேல் இராவணன் தம்மால்

Koviloor Digital Library

தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்படுவது உறுதி என்பதால், தன் அண்ணன் மனைவி-சீதாதேவி சிறையினின்றும் மீண்டு வந்துவிடுவாள் என்று உறுதிபட எண்ணி, மகிழ்வு கொண்டான் என்பதாம். ''மீண்டாள்'', ''பட்டான்'' என்பன துணிவு பற்றிவந்த காலவழுவமைதி எனக்கொள்க. இராவணன் இறந்துபடுதல் முதலிலும், சீதாதேவி விடுதலைபெறுதல் பின்னரும் கூறப்பட்டிருக்க வேண்டும். எனினும் இலக்குவன் தன் தமையன் மனைவியிடம் கொண்டிருந்த பெருமதிப்பாலும், தங்களுடைய முதல் நோக்கம் அதுவே என்பதாலும் முதலில் கொழுந்தி மீள்வதையும் பின்னர் அரக்கன் படுவதையும் கூறினான் என்க. துணுக்கம் காரணம்; துயர் காரியம். எனவே துணுக்கமும் துயரமும் ஒன்றாகவே கூறப்பட்டது. ''விரைவினும், மிகவினும், தெளிவினும், இயல்பினும், பிறழவும் பெறும் முக்காலமும் ஏற்புழி'' என்பது நன்னூல். ''மன்னின் தோன்றினோம் முன்னம்; மாண்டுளோம்; நின்னின் தோன்றினோம் நெறியில் தோன்றினாய்'' என்பது முன்னர் மருத்துமலைப் படலத்தில் இராமபிரான் கூற்று.

44. வானரப்படைத் தலைவர்கள் இராமபிரானிடம் செல்லுதல்.

"தருமம்" என்று அறிஞர் சொல்லும் தனிப்பொருள் தன்னை, இன்னே
கருமம் என்று அனுமன் ஆக்கிக்காட்டிய தன்மை கண்டால்,
அருமை என் இராமற்கு? அம்மா! அறம் வெல்லும் பாவம் தோற்கும்
இருமையும் நோக்கின்" என்னா, இராமன்பால் எழுந்து சென்றார்.
(9657)

(தனி-ஒப்பற்ற; இன்னே-இப்பொழுதே; கருமம்-செய்யத்தக்க செயல்; அருமை-அருஞ்செயல்; இருமை-இருமுறை/இம்மை, மறுமை)

''அறச்செயல்கள் என்று சான்றோர்கள் புகழ்ந்து கூறும் ஒப்பற்ற ஒருபொருள் என்ன என்பதை, இப்பொழுதே செய்யத்தக்க செயல் என்று அனுமன் நிரூபித்துக் காட்டியிருக்கின்ற இந்தத் தன்மையை நினைத்துப் பார்த்தால், இராமஇலக்குவர்க்கு செய்தற்கு இயலாத அருஞ்செயல் என்று ஏதேனும் இருக்கிறதா? இம்மை, மறுமை ஆகிய இருவகையிலும் எண்ணிப்பார்த்தாலும் தருமமே முடிவில் வெல்லும். பாவம் அழிந்து படும் என்பது தெளிவாகின்றது'' என்று கூறிக்கொண்டே வானரப்படைத் தலைவர்கள் இராமபிரான் இருக்குமிடம் சென்று சேர்ந்தனர்.

''ஆக்கிக்காட்டுதல்'' என்பது நிரூபித்துக் காட்டியதைக் குறிக்கும். ''அம்மா!'' என்பது வியப்புக்குறித்த இடைச்சொல். ''அறம் வெல்லும், பாவம் தோற்கும்'' என்பது காப்பியத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். இச்சொற்றொடரை முதன்முதல் இலங்காதேவியின் கூற்றாகக் கவிஞன் பேசியதை நினைவுகூர்க. ''இருமை'' என்பது இம்மை, மறுமையைத்தான் குறிக்கவேண்டும். எனினும் அனுமன் இரண்டுமுறை

Koviloor Digital Library

மருத்துமலையை எடுத்துவந்து இலக்குவனை உயிர்ப்பித்தான் அல்லவா? எனவே இருமை என்பதை இருமுறை அனுமன் செய்த பயணம் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்திவருதல் காண்க. இராமபிரான் இலக்குவன் நிலையைக் கண்டறிவதற்காகப் போர்க்களம் நோக்கி வந்து கொண்டிருக்கின்ற சமயத்தில் இவ்வானரத்தலைவர்கள் அங்கு சென்றுசேர்ந்தனர் என்க. ''அன்றறிவாம் என்னாது அறம் செய்க'' என்பது குறள்-356. அதுதான் இங்கே ''இன்னே கருமம்'' எனப்பட்டது என்க. தருமத்திற்கு என்றும் அழிவில்லை; பாவம் என்றேனும் அழிந்தே தீரும் என்பது கருத்து. அறக்கடவுள் வேறு, அனுமன் வேறு என்று இல்லாது, தருமம் என்ற ஒரு பொருளே தன்னை அனுமனாகக் காட்டிக்கொண்டது என்றும் கூறலாம். அறம் சார்ந்த இராமபிரான்படை வெற்றி அடை தலையும், பாவமே சார்ந்துள்ள இராவணன் படை தோற்றோடுவதையும் கண்டால் இது நிரூபணமாகிறது எனக்கொள்க.

45. இராமபிரான் ''என்ன நிகழ்ந்தது?'' என்று வினவுதல்

ஒன்றுஅல, பல என்று ஓங்கும் உயர் பிணத்து உம்பரோடும்
குன்றுகள் பலவும், சோரிக் குரைகடல் அனைத்தும் தாவிச்
சென்று அடைந்து, இராமன் தன்னைத் திருவடி வணக்கம் செய்தார்,
வென்றியின் தலைவர்; கண்ட இராமன், "என் விளைந்தது?"
என்றான். (9658)

(உம்பர்-வானம்; குரைத்தல்-ஒலித்தல்; வென்றி-வெற்றி; விளைந்தது -நிகழ்ந்தது)

ஒன்று என்று சொல்லுதற்கியலாத பலவகைப்பட்டு, மிகவும் ஓங்கி உயர்ந்துநின்ற பிணக்குவியல்கள் வானளாவ ஓங்கி மலைபோன்று தோற்றமளித்தன; அத்தகைய மிகுதியான பிணக்குன்றுகளையும், பலவகைப்பட்டு ஒலிக்கின்ற இரத்தக் கடல்களையும் கடந்துசென்று, இராமபிரானை அடைந்து, அவனது அழகிய திருவடிகளை வணங்கினர். அவர்களது முகக்குறிப்பிலேயே அவர்கள் ஏதோ வெற்றிச்செய்தியைக் கூற இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பால் உணர்ந்துகொண்ட இராம பிரான், அவர்களை நோக்கி, ''அங்கே என்ன நிகழ்ந்தது?'' என்று வினவினான்.

''ஒன்று அல பல'' என்பது அரக்கவீரர்களின் பிணங்கள் மட்டும் அல்லாது, குதிரைப்படைகள், யானைப்படைகள் முதலியவற்றின் பிணங் களும், அங்கே மலைபோல வானளாவ உயர்ந்து காணப்பட்டன என்பதைக் குறிக்கும். பல பிணங்களையும், பல இரத்தக் கடல்களையும் தாண்டி வந்து இராமபிரானை வணங்கினார்கள் என்பதாம்.

Koviloor Digital Library

46. உற்றது முழுதும் நோக்கி, ஒழிவுஅற, உணர்வு உள்ஊற,
சொற்றனன் சாம்பன்; வீரன் அனுமனைத் தொடரப் புல்லி,
"பெற்றனென் உன்னை; என்னை பெறாதன? பெரியோய்! என்றும்
அற்ற இடையூறு செல்லா, ஆயுளை ஆக" என்றான். (9659)

(நோக்குதல்-சிந்தித்தல்/மனத்தால் நோக்குதல்; தொடர-நெருங்க; புல்லுதல்-தழுவுதல்; ஈறு-முடிவு; ஊற-பதியுமாறு; ஒன்றும்-சிறிதும்; சொற்றனன்-சொல்லினான்/கூறினான்; இடையூறு-துன்பம்)

அவ்வாறு ''அங்கு என்ன நிகழ்ந்தது?'' என்று வினவிய இராம பிரானுக்கு சாம்பவன் அங்கு நிகழ்ந்தவற்றை எல்லாம் நன்கு சிந்தித்து, ஒன்றுகூட விட்டுவிடாது, இராமபிரான் உள்ளத்தில் நன்கு பதியும் வண்ணம் எடுத்துக் கூறினான். வீரனான இராமபிரானும் அனுமனை இடைவிடாது இறுகத் தழுவிக்கொண்டு, ''பெரியவனே! உன்னை என் துணைவனாகப் பெற்றிருக்கிறேன். எனவே எனக்கு என்னதான் நிறை வேறாது? அனைத்தும் நிறைவேறும்'' என்றுகூறி, மேலும் நீ எந்தவித இடையூறும் இல்லாது நீண்டகாலம் சிரஞ்சீவியாய் வாழ்வாயாக!'' என்று அன்புடன் ஆசீர்வதித்தான்.

''நோக்குதல்'' என்பது இங்கே நோக்கல்நோக்கம்-மனத்தால் சிந்திப்பதைக் குறிக்கும். ''ஒழிவற'' என்பது ஒன்றையும் விட்டு விடாமல் முழுவதையும் என்ற பொருளைத்தரும். அனுமன் செயற்கரிய செயல்கள் பலவற்றைச் செய்து இராமஇலக்குவர்க்கு மிகவும் உதவி இருப்பதால் அவனை அன்புடன் ''பெரியோய்!'' என்று அழைத்து, மார்பு இறுகத் தழுவிக் கொண்டான் என்பதாம். இதேபோல, முன்பு சீதாதேவியும் ''ஊழியோர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்ஏழும் வீவுற்ற ஞான்றும், இன்றென இருத்தி'' என்று மகிழ்ச்சியால் அனுமனுக்குச் சிரஞ்சீவித்தன்மை நல்கியதையும் இங்கு நினைவுகூர்தல் தகும். ''மறை நான்கும் ஓதி உணர்ந்தீர்; ஊழி கடந்தீர்'' என்பது சாம்பவன் வாழ்த்து.

47. இராமபிரானை இலக்குவன் சென்றடைதல்

புயல்பொழி அருவிக் கண்ணன், பொருமலன் பொங்குகின்றான்,
உயிர் புறத்து ஒழிய நின்ற உடல் அன்ன உருவத் தம்பி,
துயர் தமக்கு உதவி, மீளாத் துறக்கம் பெற்று, உயர்ந்த
தயரதற் கண்டால் ஒத்த தம்முனைத் தொழுது சார்ந்தான். (9660)

(புயல்-மேகம்; பொருமுதல்-விம்முதல்; உதவி-தருதல்/கொடுத்தல்; தம்முன்-தமையன்/இராமபிரான்; சார்தல்-வந்தடைதல்)

மேகம்போலக் கண்களினின்றும் கண்ணீரை அருவியாகக் கொட்டிக் கொண்டிருப்பவனும், அதுகாறும் பிரிந்திருந்தமையால் விம்மித் தேம்பு

Koviloor Digital Library

கின்றவனும், எனினும் இப்போது மீண்டும் கண்டு விட்டதனால் மகிழ்ச்சியால் மனம் கிளர்ந்திருப்பவனும், உயிர் புறத்தே அகன்றுபோக உடல்மட்டும் இங்கே நிற்கிறது என்று கூறும்படியாக நின்றிருக்கும் உருவத்தைக் கொண்ட தன்தம்பி இலக்குவன், முன்பு மீண்டு வரமுடியாத வீரசுவர்க்கம் சென்று புகழ்பெற்று உயர்ந்த தன் தந்தை தசரதனையே மீண்டும் தன் கண்களால் கண்டதுபோன்று தன் தமையனாகிய இராமபிரானைக் கண்டு அவனைத் தொழுது வணங்கினான்.

இங்கே இராமபிரான் இலக்குவனைத் தன் தந்தை தயரதன் போலக் கண்டான் என்ற பொருளும் இலக்குவன் தன் முன்னவன் இராமபிரானைத் தன் தந்தை தயரதன்போலக் கண்டான் என்றும் இரு பொருளும் பொருந்திவருதல் காண்க. எனினும் இராமபிரான் இலக்குவனைப் பல இடங்களில் ''எந்தாய்!'' என்று அழைத்து அவனைத் தயரதனாகக் கண்டான் என்பதே பொருந்தும். மேலும் இலக்குவன் தன் தந்தையை முன்பு எங்கும் போற்றியவன் அல்லன், மாறாகத் தூற்றியவன் என்பதும் நாம் காப்பியத்தில் பல இடங்களில் பயின்று வந்திருக்கிறோம். எனவே இங்கே இராமபிரான்தான் இலக்குவனைத் தன் தந்தை தயரதன்போல் கண்டான் என்று பொருள்கொள்வதே சாலப்பொருந்தும் என்க.

''அருவி'' என்பது இலக்குவன் இராமபிரானை மீண்டும் தன் கண்களால் கண்டதனால் விளைந்த ஆனந்தக் கண்ணீர் எனக்கொள்க. முன்பு சுந்தரகாண்டத்தில் ''பூண்ட மெய்உயிர்போகப் பொய்உயிர் போல நின்ற ஆண்தகை'' என்று கூறினாற்போல, இங்கே ''உயிர் புறத்து ஒழியநின்ற உடல் அன்ன உருவத்தம்பி'' என்றார் என்க. ''மீளாத் துறக்கம்'' என்பது முக்தியுலகு, பரமபதத்தைக் குறிக்கும். மேலும் இராமபிரானை நோக்கி ''நல் தாதையும் நீ; தனி நாயகன் நீ; வயிற்றிற் பெற்றாயும் நீயே; பிறர் இல்லை'' என்று தயரதனைத் தந்தையாக ஏற்றுக் கொள்ளாது மறுத்துரைத்தவனும் இதே இலக்குவன்தான் என்பதையும் இங்கு நினைவுகூர்தல் தகும். மேலும் தயரதன் இறந்தது கேட்டு இராமபிரானும், சீதாதேவியும் அழுது புலம்பிக்கொண்டு நிற்க, இலக்குவன் மட்டும் முகத்தில் எந்த இழப்புக் குறியீடும் காட்டாது மனங்கலங்காது நின்றிருந்ததையும் இங்கு எண்ணிப்பார்த்தல் தகும்.

48. இளவலை நோக்கி "ஐய! இரவி தன் குலத்துக்கு ஏற்ற
அளவினம்; அடைந்தோர்க்கு ஆகி, மன் உயிர் கொடுத்த வன்மைத்
துளவு இயல் தொங்கலாய்! நீ அன்னது துணிந்தாய் என்றால்,
அளவு இயல் அன்று; செய்தற்கு அடுப்பதே ஆகும் அன்றே?" (9661)

(துளவு-துளபம்/துளசி; தொங்கல்-மாலை; அடைந்தோர்-சரண் புகுந்தோர்; மன்-நிலைபெற்ற; இரவி-சூரியன்; அடுப்பதே-ஏற்றதே; அளவு-தன்மை; இளவல்-இலக்குவன்)

Koviloor Digital Library

இராமபிரான் இலக்குவனை நோக்கி, ''துளசி மாலையினை அணிந் துள்ளவனே! இலக்குவ! தலைவனே! நம்மைச் சரண் அடைந்தவர்களைப் பாதுகாப்பதற்காக நீ உன்னுடைய நிலைபெற்ற உயிரையும் துறக்கத் துணிந்த இந்தச் செயலானது நமது சூரிய குலத்துக்கே இயல்பான ஒன்றாகும். நீ அவ்வாறு செய்யத் துணிந்தாய் என்றால் அது ஒன்றும் மிகப்பெரிய அருஞ்செயல் அல்ல; உன் தகுதிக்கு மிகுதியான செயல் அன்று; அவ்வாறு செய்வதே நமக்குத் தகுதியுடையதாகும்'' என்கிறான் இராமபிரான்.

நம்மைச் சரண் அடைந்தவர்களை நம் உயிரைக் கொடுத்தேனும் காப்பாற்ற வேண்டும். அதுதான் நம் சூரியகுலத்திற்குரிய இயல்பு. எனவே நீ உன் உயிரைக் கொடுத்து வீடணனைக் காப்பாற்றினாய் என்றால் அது ஒன்றும் புகழ்ந்து பாராட்டத்தக்க பெரிய செயல் அன்று; அது நம் குலத்திற்கு ஏற்ற செயலாகும் என்கிறான் இராமபிரான். காப்பாற்றாது இருந்திருந்தால் அது பிழைபட்டதாயிருக்கும் என்பது மறைபொருள்.

49. இராமபிரான் இலக்குவனைப் பாராட்டுதல்

"புறவு ஒன்றின் பொருட்டின், யாக்கை புண்உற அரிந்த புத்தேள்
அறவனும், ஐய! நின்னை நிகர்க்கிலன்; அப்பால் நின்ற
பிறவினை உரைப்பது என்னே? பேர் அருளாளர் என்பார்
கறவையும் கன்றும் ஒப்பார் தமர்க்கு இடர் காண்கில்'' என்றான்.
(9662)

(புத்தேள்-தெய்வத்தன்மை; அறவன்-அறநெறியில் ஒழுகுபவன்/ தருமவான்; நிகர்த்தல்-ஒப்பாதல்; தமர்-தம்மைச் சார்ந்தவர்கள்; இடர்-துன்பம்; கறவை-கரக்கும் பசு; யாக்கை-உடம்பு; வினை-செயல்)

''தம்பி! இலக்குவ! ஒரு புறா தன்னை வந்து அடைக்கலம் அடைந்தது என்பதற்காக அதனைப் பகைவரிடமிருந்து காப்பாற்றும் பொருட்டு, தனது உடம்பு புண்ணாகிப் போனாலும்கூடத் தன் தசையை அறுத்துக் கொடுத்த தெய்வீகத்தன்மை பொருந்திய, அறச்சிந்தனையுடைய சிபிச்சக்கரவர்த்தி கூட, உனக்கு ஒப்பாக மாட்டார்; இதைத்தவிர வேறு எந்தச் செயலை உன் உயிர்த் தியாகத்திற்கு ஈடாகக்கூற முடியும்? கூறித்தான் என்னபயன்? பெரும்அருட்குணம்கொண்டபெரியோர்கள்என்பவர்கள்தம்மைச்சார்ந்த உற்றார், உறவினர்க்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் அதனைத் தாம் கண்டுவிட்டால் தன் உயிரையும் பொருட்படுத்தாது ஒரு தாய்ப்பசு தன் கன்றுக்குட்டியை எப்படி விரைந்து சென்று அரவணைத்துக் காப்பாற்றுமோ அதுபோலச் செயல்படுவர்'' என்று புகழ்கிறான் இராமபிரான்.

Koviloor Digital Library

இந்த சிபிச்சக்கரவர்த்தயின் வரலாறு காப்பியத்திலேயே பல இடங்களிலும் பேசப்பட்டிருக்கிறது. அத்துடன் மற்ற காப்பியங்களிலும் பேசப்பட்டிருக்கிறது. ''தன்னை வந்து அடைக்கலமாக அடைந்த புறாவின் வேண்டுகோளுக்கு இணங்கவே சிபிச்சக்கரவர்த்தி தன் உடலில் புண் உண்டாகும் வண்ணம், தன் தசையை அறுத்துத் தராசுத்தட்டில் வைத்து அப்புறாவைப் பகைவரிடமிருந்து காப்பாற்றினான். ஆனால் நீயோ பகைவர் கூட்டத்திலிருந்து வந்த ஒருவனைப் பகைவன் என்றும் பாராமல், அவன் தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்காமலேயே, தன்னை வந்து சரண் அடைந்தவர்களைக் காப்பாற்றுவது நம் கடமை என்று கருதி, நீயே சென்று உயிரை ஈந்தாயே இத்தகைய செயலுக்கு நம் சூரியகுல மரபில் வேறு எந்த அரசனும் உனக்கு இணையாகமாட்டார்'' என்று புகழ்ந்து பாராட்டுகிறான் இராமபிரான் என்பதாம். ''எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப் புள்ளுறு புன்கண் தீர்த்தோன்'' என்பது சிலப்பதிகாரம்.

50. சாலிகை முதல ஆன, போர்ப்பரம் தாங்கிற்று எல்லாம்,
நீல்நிற ஞாயிறு அன்ன நெடியவன் முறையின் நீக்கி,
கோல் சொரி தனுவும் கொற்ற அனுமன் கைக்கொடுத்து, கொண்டல்
மேல் நிறை குன்றம் ஒன்றில் மெய்ம் மெலிவு ஆற்றல் உற்றான். (9663)

(சாலிகை-கவசம்; பரம்-பாரம்/சுமை; ஞாயிறு-சூரியன்; கோல்-அம்புகள்; தனு-வில்; கொற்றம்-வெற்றி; கொண்டல்-மேகங்கள்; மெய்-உடம்பு; மெலிவு-தளர்ச்சி; மெலிவாற்றுதல்-இளைப்பாறுதல்)

இலக்குவன் அணிந்திருந்த போருக்கு உரியனவாகத் தாங்கியிருந்த கவசம் முதலிய சுமைகளையெல்லாம், நீலநிறம் பொருந்திய சூரியனைப்போன்று நீண்டு உயர்ந்த இராமபிரான், ஒவ்வொன்றாகக் களைந்து நீக்கி, அம்புகளைப் பொழிகின்ற வில்லையும், வெற்றி பொருந்திய அனுமனிடம் தந்துவிட்டு, மேகங்கள் தன்மேல், நிறைந்து படிந்திருக்கும் குன்று ஒன்றில், இலக்குவன் உடம்பின் தளர்ச்சியைப் போக்கிக்கொள்ள முற்படுமாறு செய்தான்.

முன்பு இராமபிரானைக் கருஞாயிறு என்றான் கவிஞன். ''வடதிசைச் சிகரி ஒன்றின் உதயம் அது ஒழியத் தோன்றும் ஒரு கரு ஞாயிறு ஒத்தான்'' என்பதும் யுத்தகாண்டப் பாடலேயாகும். இங்கே நீலநிற ஞாயிறு என்கிறான். ஞாயிறு நீலநிறம் பெற்றிருப்பதில்லை. ஏனவே இதனை இல்பொருள் உவமையாகக் கொள்ளலாம். இலக்குவன் தானே தன் தளர்ச்சியைப் போக்கிக்கொள்ளலாம். எனினும் இராமபிரான் தன் தம்பியின்மேல் கொண்ட பாசத்தால் தானே சிசுரூஷை செய்தான் என்பதாம்.

வேல்ஏற்ற படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

32. வானரர் களம்காண் படலம் [36 பாடல்கள்]

இராமபிரான் தனி ஒருவனாகவே, இராவணனின் மூலபல சேனையைக் கொன்று குவித்த தன்மையை வானரர்கள் வீடணனுடன் சேர்ந்து சென்று கண்டபோது நிகழ்ந்த நிகழ்வுகளை விரித்துரைக்கும் பகுதி எனப் பொருள் விரிவு கொள்ளும் படலம் இது. இது 36 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''வானரச்சேனை களங்காண் படலம்'' எனவும், ''வானரத்தலைவர்கள் களங்காட்சிப் படலம்'', எனவும் ''வானரர் களங்காட்சிப் படலம்'', எனவும் ''வானரவீரர்கள் களங்காண் படலம்'' எனவும் குறிக்கப்பெற்றிருக்கின்றன. இன்னும் சில சுவடிகளில் இந்தப் படலமும், பின்னால் வருகின்ற இராவணன் களங்காண் படலமும் சேர்க்கப்பட்டு, மொத்தமாகக் ''களங்காண் படலம்'' எனவும் காணப் படுகின்றது. வானரர்கள் போர்க்களத்தைக் கண்ட காட்சியே வான்மீகத்தில் பேசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது கம்பனின் கற்பனைக் கைவண்ணம்.

பொதுவாகத் தமிழ் இலக்கியங்களில் ''களம் பாடியது'' என்ற ஒரு பகுதி எல்லாக் காப்பியங்களிலும் காணப்படுவதொன்று. தமிழில் கலிங்கத்துப் பரணி என்ற ஒரு அரிய படைப்பு உண்டு. அதில் ''பரணி பாடுதல்'' என்பது ஒரு பகுதி. எனவே கம்பன் தன் காப்பியத்தில் இந்தப் பகுதியை இந்த இடத்தில் சேர்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதிச் சேர்த்திருக்க லாம்.

இப்படலத்துள் சுக்கிரீவன் இராமபிரானை அணுகி, ''இவ்வளவு பெரும் மூலபலச்சேனையைத் தனி ஒருவராக இருந்து, எவ்வாறு.கொன்று குவித்தீர்கள்?'' என்று வியந்து கேட்டல்; அதற்கு இராமபிரான், ''வீடணனோடு சென்று போர்க்களத்தைக் கண்டு வாருங்கள்'' என்று கூறுதல்; சுக்கிரீவன் முதலியோர் வீடணனுடன் போர்க்களம் செல்லுதல்; போர்க்களத்தில் இறந்துகிடக்கும் மூலபலத்தைச் சார்ந்த வீரர்களின் சிறப்பினை எல்லாம் வீடணன் பகுதிபகுதியாகப் பிரித்து, எல்லோர்க்கும் விளக்கிச் சொல்லுதல்; அவ்வளவு பிணக்குவியல்களையும் காண விரும்பாது சலிப்புற்ற வானர வீரர்கள், ''இத்தகைய செயற்கரிய செயலைச் செய்த இராமபிரானைச் சென்று போற்றுவோம் வாருங்கள்'' என அவர்களை அழைத்துக்கொண்டு இராமபிரானை மீண்டும் சென்றடைதல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்படுகின்றன.

Koviloor Digital Library

1. சுக்கிரீவன் இராமபிரானை வினவுதல்

ஆயபின் கவியின் வேந்தும், அளப்பரும் தானையோடும்
மேயினன் இராமன் பாதம் விதிமுறை வணங்கி; வீந்த
தீயவர் பெருமை நோக்கி, நடுக்கமும் திகைப்பும் உற்றார்,
ஓய்வுறு மனத்தார் ஒன்றும் உணர்ந்திலர், நாணம் உற்றார். (9664)

(கவியின்வேந்து-சுக்கிரீவன்; வீந்த-இறந்துபட்ட; பெருமை-படைப்பெருக்கம்; தீயவர்-அரக்கர்; விதி-முறைமை)

அவ்வாறு இராமபிரானும் இலக்குவனும் ஒரு குன்றின்மீதமர்ந்து மெய்ம்மெலிவு தீர்த்துக்கொண்ட பின்னர், குரங்குகளின் தலைவனான சுக்கிரீவன், தன்னுடைய அளப்பதற்கரிய பெருஞ்சேனையுடன் இராம பிரான் இருக்குமிடம் வந்தடைந்து, அவன் திருவடிகளில் முறைப்படி வணங்கி நின்றான், இராமபிரானால் அழித்தொழிக்கப்பட்டுப் போர்க் களத்தில் விழுந்து கிடந்த தீயவர்களான அரக்கர்களின் மூலபலச் சேனையின் சிறப்பையும், பெருக்கத்தையும் கண்டு நடுக்கமும், இவரெல் லோரையும் இராமபிரான் ஒருவனே வென்று, கொன்றழித்துவிட்டானே என்ற திகைப்பும் கொண்டு, மனத்தளர்ச்சியுற்று, ஏதும் பேசத்தோன்றாமல், வெட்கமடைந்து அப்படியே எல்லோரும் நின்று கொண்டிருந்தனர்.

முன்பு இதே வானரவீரர்கள், அரக்கர்களுடைய பெருஞ்சேனைத் தொகுதியைக் கண்டு அஞ்சிப் புறமுதுகிட்டு ஓடி ஒளிந்துகொண்டனர்; பின்பு இலக்குவனின் ஆறுதல் மொழியால் போர்க்களம் வந்து சேர்ந்தனர் என்பதை இங்கு நினைவிற் கொண்டுவந்தால், அவர்கள் ஏன் நடுக்கமுற்றனர், திகைப்பு உற்றனர், ஓய்வுறு மனத்தரானார், ஏன் ஒன்றும் உணர்ந்திலர், ஏன் நாணம் உற்றார் என்பது புரியவரும். அவர்கள் அஞ்சி ஓடிய பின்பு, இராமபிரான் ஒருவனே எல்லாச் சேனையையும் அழித்தொழித்து விட்டதால் திகைப்பு, நாம்தானே இராவணனையும் அவனது சேனையையும் வென்று, கொன்று விடுவோம் என்று முன்பு நட்புப் பூண்டபொழுது, இராமபிரானுக்கு உறுதி அளித்தோம். இப்போது நமது துணையேயில்லாமல், அவன் ஒருவனே போரிட்டு வென்று கொன்று குவித்திருக்கிறானே, என்பதால் ஓய்வுறு மனம். எனவே ஒன்றும் உணராதநிலை; எனவே நாணம். முதலில் நடுக்கம், பின்பு திகைப்பு, தளர்ந்த மனம், பின்னர் ஒன்றும் உணரமுடியாத செயலற்றநிலை; அதன் பின்னர்வெட்கம் என்று மெய்ப்பாடுகளைத் தொடர்ச்சியாக தந்திருக்கின்ற நயம் காண்க.

2. "மூண்டு எழு சேனை வெள்ளம் உலகு ஒரு மூன்றின் மேலும்
நீண்டு உள; அதனை ஐய! எங்ஙனம் நிமிர்ந்தது?" என்னத்
தூண் திரண்டனைய திண்தோள் சூரியன் சிறுவன் சொல்லக்
"காண்டி நீ அரக்கர் வேந்தன் தன்னொடும் களத்தை" என்றான். (9665)

Koviloor Digital Library

(வெள்ளம்-மிகுதி/பெருக்கம்; நிமிர்த்தல்-வெல்லுதல்; சிறுவன்-புதல்வன்; காண்டி-காண்பாயாக; மூண்டு-முனைந்து)

தூண்களைப் போன்று பருத்ததும், உறுதி வாய்ந்ததுமான தோள்களையுடைய சூரியனின் புதல்வனான சுக்கிரீவன், இராமபிரானை நோக்கி, ''ஐயனே! இங்கே போருக்கு முனைந்து எழுந்துவந்துள்ள அரக்கர் சேனையின் பெருக்கம் மூன்று உலகங்களையும் விட நீண்டு அகன்ற பரப்பைக் கொண்டு இருந்ததே? அத்தகைய அளப்பரும் சேனை அத்தனையையும் தாங்கள் ஒருவராகவே தனித்து நின்று எவ்வாறு வென்று அடக்கினீர்கள்?'' என்று கேட்க, அதற்கு இராமபிரான், ''அரக்கர் வேந்தனாகிய வீடணனுடன் சென்று போர்க்களத்தை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வாயாக!'' என்று கூறினான்.

முன்பே மூலபலச்சேனையின் பெருக்கம் பற்றி அதிகமாகப் பேசப் பட்டிருப்பதை இங்கே நினைவுகூர்க. ''நிமிர்ந்தது'' என்ற சொல் ''கடந்து வென்றது'' என்ற பொருளைத்தரும். தன்னுடைய பெருமையையும் போராற்றலையும் தானே நேர்படக் கூறிக்கொள்வது பணிவாகாது என்பதால், வீடணனுடன் சென்று நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளச் சொன்னான் என்பதாம். வீடணனுடன் செல்லச் சொல்லியது ஏனெனில் வீடணனுக்குத்தான் அந்தச் சேனையின் முழு விபரமும், சிறப்பும், ஆற்றலும் தெரியும் என்பதால் என்க. இங்கேயும் வீடணனை ''அரக்கர் வேந்தன்'' என்று குறிப்பிடுவதை நோக்குக.

3. தொழுதனர் தலைவரெல்லாம்; தோன்றிய காதல் தூண்ட,
"எழுக" என, விரைவின் சென்றார், இராவணற்கு இளவலோடும்;
கழுகொடு, பருந்தும், பாறும், பேய்களும், கணங்கள் மற்றும்,
குழுவிய களத்தைக் கண்ணின் நோக்கினர், துணுக்கம் கொண்டார்.
(9666)

(காதல்-ஆசை; கணம்-கூட்டம்; குழுவிய-குழுமியுள்ள/திரண்டிருந்த; துணுக்கம்-நடுக்கம்/அச்சம்; பாறு-பருந்தில் ஒருவகை)

இராமபிரானைக் காணவந்த படைத்தலைவர்கள் எல்லோரும் இராமபிரானைத் தொழுது, தாம் அப்போர்க்களத்தை உடனே சென்று காணவேண்டும் என்ற பெருவிருப்பத்தால் ''சரி செல்லலாம்'' என்றுகூறி, அரக்கர்வேந்தன் இராவணனின் தம்பியாகிய வீடணனோடும் விரைவாகச் சென்று, போர்க்களத்தை அடைந்து, அங்கே அரக்கர் பிணங்கள், அந்தப் பிணங்களைத் தின்னத் திரண்டிருக்கும் கழுகுகள், பாறு என்னும் பறவைகள், பேய்கள், காகங்கள், நாய்கள் முதலியவற்றின் கூட்டத்தைத் தம் கண்களால் பார்த்து, மனத்தில் மிகவும் திகைப்புக் கலந்த அச்சமும், நடுக்கமும் கொண்டனர்.

''பாறு'' என்பது பருந்தின் ஒருவகை எனக்கொள்க.

Koviloor Digital Library

4. ஏங்கினார்; நடுக்கம் உற்றார்; இரைத்து இரைத்து உள்ளம்ஏற,
வீங்கினார்; வெருவலுற்றார்; விம்மினார், உள்ளம் வெம்ப,
ஓங்கினார்; மெள்ள மெள்ள உயிர் நிலைத்து, உவகைஊற
ஆங்கு அவர் உற்ற தன்மை, யார் அறிந்து அறையகிற்பார்? (9667)

(ஏங்குதல்-அழுதல்; இரைத்தல்-பெருமூச்சு வாங்குதல்; வெருவுதல்-அஞ்சுதல்; விம்முதல்-தேம்புதல்; ஊறுதல்-சுரத்தல்; வெருவல்-பிதற்றலுமாம்)

''வீடணனோடு சென்று போர்க்களத்தின் அவலத்தைக் கண்ட வானரப்படைத் தலைவர்கள் எல்லோரும், அக்காட்சியைக் கண்டதும் அழலானார்கள்; உள்ளமும் உடலும் நடுங்கப் பெற்றார்கள்; மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, உடல் வீங்கப்பெற்றார்கள்; அச்சம் கொள்ளலானார்கள்; உள்ளம் வெதும்பித் தேம்பலானார்கள்; பின்னர் ஒருவகையாக மூச்சுக்காற்று ஒரே சீரான நிலைக்கு மெள்ள மெள்ள வந்ததும், இராமபிரான் போராற்றலை எண்ணி மகிழ்ச்சிமிகவே தலை நிமிர்ந்து நின்றனர்; அப்போது அங்கு அவர்கள் அடைந்த உள்ள, உடல் மெய்ப்பாடுகளைச் சரியாக அறிந்துகூறத் தக்க ஆற்றலை உடையவர்கள் யார் இருக்கிறார்கள்? ஒருவராலும் கூற இயலாது'' என்கிறான் கவிஞன்.

வருத்தமும், அச்சமும், அழுகையும், மகிழ்ச்சியும் ஒரே செய்யுளில் தானே கூறியபின்னர், அவர்கள் அடைந்த மெய்ப்பாட்டினை யாராலும் எடுத்துரைக்க முடியாது என்றும் கவிஞன் கூறும் நயம் நோக்குக. ''மெள்ள மெள்ள'' என்பதும், ''இரைத்து இரைத்து'' என்பதும் அடுக்குத் தொடர்கள். முதலில் இரைத்து இரைத்து என்றது மூச்சு விட்டு நின்றதை, பின்னர் மெள்ள மெள்ள என்றது அந்தப் பெருமூச்சு சிறிது சிறிதாக நன்னிலைக்கு வந்து சீரானதை. ஊறுதல் என்ற சொல்லுக்கே சிறிது சிறிதாகச் சுரத்தல் என்பது பொருள்.

5. வீடணன் மூலபலச் சேனை பற்றிக் கூறுதல்

ஆயிரம் பருவம் கண்டால், காட்சிக்கு ஓர் கரையிற்று அன்றால்;
மேயின துறைகள் தோறும் விம்மினார் நிற்பதல்லால்,
பாய் திரைப்பரவை ஏழும் காண்குறும் பதகர் என்ன,
''நீ இருந்து உரைத்தி'' என்றார்; வீடணன் நெறியின் சொல்வான். (9668)

(திரை-அலை; பரவை-கடல்கள்; பதகர்-பாவிகள்; மேயின-விரும்பிய; பருவம்-ஆண்டுகள்; இற்று-இயலாது; நெறி-முறை; பாய்தல்-தாவுதல்; இருந்து-நிதானமாக)

Koviloor Digital Library

''தாவும் இயல்புடைய அலைகளைக் கொண்ட ஏழு கடல்களையும், ஒரே சமயத்தில் காணவேண்டும் என்று விரும்பி அதைப் பார்க்க முயற்சிக்கும் பாவிகள் அதைப் பார்த்து அச்சத்தால் அழுதுகொண்டே நிற்பதைப்போல, நாங்கள் இந்தப் போர்க்களத்தை ஆயிரம் ஆண்டுகள் நின்று கொண்டே கண்டு கொண்டிருந்தாலும் அதற்கு ஒரு எல்லை காணமுடியாது போலிருக்கிறது. எனவே இவற்றின் சிறப்புக்களையும், பெருமைகளையும் நீயே எங்களுக்கு நிதானமாக, சுருக்கமாக எடுத்துரைப் பாயாக!'' என்று வானரப்படைத் தலைவர்கள் கேட்க, வீடணனும் முறையாக அவற்றைக் கூறத்தொடங்கினான்.

ஏழு கடல்களும் ஒன்று திரண்டு வரஇயலாது. அவ்வாறு வந்தாலும் அதை ஊனக்கண்ணால் பார்க்க இயலாது. எனவே அத்தகைய காட்சியைப் பார்க்க விரும்புகின்றவர்களைப் ''பதகர்'' பாவிகள் என்றான் என்க. அதுபோல இந்த மூலபலச் சேனையையும் ஆயிரம் ஆண்டுகள் நின்று பார்த்துக்கொண்டே இருந்தாலும் பார்த்து முடிக்கமுடியாது. அவ்வளவு பெருஞ்சேனை என்பதாம். இங்கே வானரர்கள் களம் காண்பதுபோல முன்பு இராமபிரானும் வானரசேனையின் பெருக்கத்தைக் கண்டான் அல்லவா? அங்கேயும் கம்பன் இதேபோலக் கூறியிருப்பதையும் நினைவிற் கொண்டுவருக.

6. "காகப் பந்தர்ச் செங்களம் எங்கும், செறிகால
ஓகத்து அம்பின் பொன்றினவேனும், உடல் ஒன்றி,
மேகச் சங்கம் தொக்கன, வீழும் வெளி இன்றி,
நாகக் குன்றின் நின்றன, காண்மின், நமரங்காள்!" (9669)

(நமரங்காள்-நம்மவர்களே; நமர்-நம்மவர்; ஓகம்-கூட்டம்; செறி-நெருங்கிய; பொன்றுதல்-இறந்துபடுதல்; வெளி-வெற்றிடம்; செங்களம்-சிவந்த போர்க்களம்; ஒன்றி-ஒட்டிக்கொண்டு; தொகல்-கூடுதல்; நாகம்-யானைகள்; சங்கம்-தொகுதி/கூட்டம்)

''நம்படையைச் சார்ந்தவர்களே! இராமபிரான் செலுத்திய அம்புக் கூட்டங்களினால் காகங்கள் எல்லாம் பிணங்கைளைத் தின்பதற்காகச் சுற்றித்திரிந்து, வானத்தில் பந்தல் இட்டால் போன்று தோன்றுவதையும், அரக்கர்களின் உடலினின்றும் பெருகிய இரத்த வெள்ளத்தால் சிவந்து தோன்றும் போர்க்களத்தில் தரையில் வீழ்வதற்கு வெற்றிடம் இல்லாமை யாலும், யானைகளின் கால்கள் இரத்தச் சேற்றில் புதையுண்டு போன தாலும், நிமிரவும் முடியாமல், தரையில் விழவும் முடியாமல் அசைவற்று, அவற்றின் உடல்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு, கரிய மேகக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து திரண்டு நிற்பதைப்போல், அந்த யானை களாகிய மலைகள், அசையாது நின்று கொண்டிருப்பதையும் பாருங்கள்'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

போர்க்களத்தில் பிணத்தைத் தின்பதற்காகப் பேய்கள், கழுகுகள், காக்கைகள், நாய்கள் முதலியன சுற்றித்திரிவது உண்டு. இங்கே காகங்கள் இடைவெளியே இல்லாமல் நெருக்கி நின்று கொண்டிருப்பதால் அவை போர்க்களத்திற்குப் பந்தல் இட்டாற்போன்று தோன்றியது என்பதை ''காகப்பந்தர்'' என்றார் என்க. பந்தர் என்பது பந்தல் என்பதன் ஈற்றுப்போலி. பிணங்களின் இரத்தப் பெருக்கால் சிவந்து தோன்றும் போர்க்களம் ''செங்களம்'' எனப்பட்டது.

''ஓகம்'' என்ற சொல் நமக்குப்புதிது. பெருங்கூட்டம் என்பது பொருள். ''நாகம்'' என்ற சொல் பல பொருள் குறித்தது. இங்கே யானை என்ற பொருள் தந்து நின்றது. ''நமர்'' என்பது நம்மவர் என்ற பொருளைத்தரும். நம்மவர்களே என்று அவர்களை அழைக்கும்போது ''நமரங்காள்'' என வந்தது. நண்பர்காள்! அன்பர்காள்! என்று அழைப்பதுபோல எனக்கொள்க. யானைகள் இறந்து நிற்கும் காட்சியை வீடணன் முதலில் காட்டுகிறான், யானைகள் இறந்தும்கூட அசையாது நின்ற காட்சிக்கு, ஒரே இடத்தில் நிலைத்து நிற்கும் மேகக்கூட்டம் உவமை. நாகக்குன்றம் என்பது உருவகம். யானையாகிய மலை என்பது பொருள்.

7. ''வென்றிச் செங்கண் வெம்மை அரக்கர் விசை ஊர்வ,
ஒன்றிற்கு ஒன்று உற்று அம்பு தலைப்பட்டு உயிர் நுங்க,
பொன்றி, சிங்கம் நாக அடுக்கல் பொலிகின்ற
குன்றில் துஞ்சும் தன்மை நிகர்க்கும் குறி காணீர்!'' (9670)

(வென்றி-வெற்றி; வெம்மை-கொடுமை; தலைப்படுதல்-பாய்தல்; நுங்குதல்-பருகுதல்; பொன்றி-இறந்து; நாகஅடுக்கல்-யானைகளாகிய குன்றங்கள்; ஊர்வ-ஊர்கின்ற நிலை; துஞ்சுதல்-உறங்குதல்/தூங்குதல்; காணீர்-காண்பீர்களாக; பொலிதல்-விளங்குதல்)

''எப்பொழுதும் வெற்றியையே கண்டு வந்தவரும், சிவந்த கண்களை யுடையவரும், கொடியவர்களுமான அரக்கர்கள்மீது, இராமபிரான் செலுத்துகின்ற அம்புகள் வேகத்துடன் பாய்ந்து, ஒன்றையொன்று முந்திக்கொண்டு வந்து, அரக்கர்களின் உயிரைப் பருகவும், அதனால் இறந்துபட்ட அந்த அரக்கவீரர்கள், யானைகளாகிய மலைச் சிகரங்களின் மீது பொலிவுற்று உறங்கிக் கொண்டிருக்கும் சிங்கங்கள் போன்று தோன்றும் காட்சியையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

முன் பாடலில், இறந்துபட்ட யானைகளுக்கு மலையை உவமைகூறிய கவிஞன், இந்தப் பாடலில் அசையாது நிற்கும் யானைகளின்மேல் அசையாது இறந்துகிடக்கும் யானை வீரர்களைக் காட்டுகிறான். ஒவ்வொருவரும் சிங்கம் போன்ற தோற்றம் உடையவர் என்பதும், அவர்கள் இறந்துபட்டதும் முகப்பொலிவோடு யானையின் மீது உறங்குவதுபோலும் தோற்றமளிக்கிறார்கள் என்பதும் புலப்படுத்தப்

Koviloor Digital Library

பட்டது. முன்பாடலில் ''நாகக்குன்றம்'' என்ற கவிஞன், இங்கே ''நாக அடுக்கல்'' என்கிறான். அடுக்கல் என்பது ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டது போன்ற தோற்றத்தைத் தருவது என்பதால் மலைக்குக் காரணப்பெயர்.

8. "அளியின் பொங்கும் அங்கணன் ஏவும் அயில் வாளிக்
களியில் பட்டார் வாள்முகம், மின்னும் கரையில்லாப்
புளினத் திட்டின் கண்அகல் வாரிக் கடல்பூத்த
நளினக் காடே ஒப்பன காண்மின், நமரங்காள்!" (9671)

(அளி-கருணை/அருள்; பொங்குதல்-ததும்புதல்; அங்கணன்-அழகிய கண்களையுடையவன்/இராமபிரான்; அயில்-கூரிய; படுதல்-இறந்து படுதல்; வாள்-ஒளி; புளினம்-மணல்மேடு; கண்அகன்-இடம்அகன்ற; வாரி-நீர்; நளினம்-தாமரை; நமரங்காள்-நம்மவர்களே)

''நம்மவர்களே! கருணை ததும்பி வழியும் அழகிய கண்களையுடைய இராமபிரான் செலுத்தும் கூரிய அம்புகளினால் தாக்கப்பட்டு, மிக்க செருக்குடன் வீழ்ந்துபட்டவர்களாகிய அரக்கர்களின் ஒளிபொருந்திய மின்னலைப் போன்ற முகங்கள், கரைகாணமுடியாத மணல்மேட்டினைக் கொண்ட இடம் அகன்ற நீரையுடைய கடலில் பூத்து நிற்கின்ற தாமரைக் காடு போலத் தோன்றுவதையும் காண்பீர்களாக!'' என்று இறந்துபட்ட அரக்கவீரர்களின் ஒளிபொருந்திய முகங்களைச் சுட்டிக் காட்டுகிறான் வீடணன்.

போரில் வீரமரணம் அடைந்தால் வீரசுவர்க்கம் புகுவர் என்பதே மகிழ்ச்சிக்குரிய செய்தி. அதனாலேயே முகம் மலரக்கூடும். இங்கே இராமபிரானின் கூரிய அம்பினால் தாக்கப்பட்டு மடிந்த வாய்ப்புக் கிடைத்ததில் அவ்வரக்க வீரர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. எனவே செருக்குக் கொண்ட அவர்கள் முகம் மின்னலைப்போல் ஒளிவீசிப் பொலிந்தது என்கிறான் கவிஞன். சிவந்த இரத்தக் கடலில் விழுந்துகிடந்த பொலிவுற்ற அரக்கர்களின் முகங்களுக்குக் கடல் நடுவில் பூத்துத் தோன்றுகின்ற தாமரைமலர்கள் நிறைந்த காடு ஒப்பு. வீரமரணம் எய்தியோர் முகம் மலர்ந்தே இருக்கும் என்பதைக் கலிங்கத்துப்பரணி கூறுகிறது கேளுங்கள். ''பருந்தினமும், கழுகினமும் தாமே உண்ணப் பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின்'' என்பது கலிங்கத்துப்பரணி-477. இங்கேயே பின்னால் இராமபிரான் கணையினால் இறந்துபட்ட இராவணனின் முகம் ''மும்மடங்கு பொலிந்ததம்மா!'' எனக் கவிஞன் கூறப்போவதையும் இங்கு நினைவுகொள்ளல் தகும்.

Koviloor Digital Library

9. "ஒழுகிப் பாயும் மும்மத வேழம் உயிரோடும்
எழுகிற்கில்லாச் செம்புனல் வெள்ளத்திடை இற்ற;
பழகிற்கில்லாப் பல்திரை தூங்கும் படர்வேலை
முழுகித் தோன்றும் மீன் அரசு ஒக்கும் முறை நோக்கீர்!" (9672)

(மும்மதம்-கன்னம்/கபோலம்/பீஜம்; இற்றல்-இறந்துபடுதல்; மீன்அரசு-மீன்களின் தலைவன்/மகரமீன்கள்/திமிங்கலங்கள்)

கன்னம், கபோலம், பீஜம், அல்லது கோசம் என்னும் மூன்று உறுப்புக்களினின்றும் மதநீரை மிகுதியாகப் பெருக்குகின்ற யானைகள் உயிரோடு இருந்தாலும்கூட, அவை சிவந்த இரத்தச் சேற்றில் அகப்பட்டுக் கொண்டு எழுந்திருக்க முடியாமல் முழுகி அங்கேயே கிடந்தன; அவை அலைகள் நிறைந்து பரந்திருக்கும் கடலில் முழுகி எழுந்து தோன்றும் கடலரசாகிய மகரமீன்களை ஒத்துத் தோன்றும் முறையினையும் காண்பீர்களாக'' என்று சுட்டிக்காட்டுகிறான் வீடணன்.

யானைகள் தமது கன்னம், கபோலம், பீஜம் ஆகிய உறுப்புக் களினின்றும் மதநீரைச் சொரியும் என்பது காப்பியத்தில் பல இடங்களிலும் பேசப்பட்டு வந்திருப்பதையும் உணர்க. முதலில் இராமபிரான் அம்பு தைத்தாலும் அவை உயிரோடுதான் இருந்தன. ஆனால் சிவந்த இரத்தக் கடலில் அகப்பட்டுக் கொண்டு எழுந்து வெளிவர முடியாததால் அங்கேயே முழுகிக் கிடந்தன. இந்தக் காட்சி, கடலில் முழுகியும் எழுந்தும் வாழ்ந்திருக்கின்ற மீன்களுக்கு அரசனாகிய மகரமீன்களைப் போலத் தோற்றமளித்தன என்பதாம். யானைகளுக்கு மகரமீன்கள் தோற்றத்தால் உவமை. இங்கே ''எழுகிற் கில்லா'' ''பழகிற் கில்லா'' என்ற சொற்களில் வந்துள்ள ''கில்'' என்பது ஆற்றல் உணர்த்தும் இடைச் சொல்லாகும்.

10. "பூ வாய் வாளிச்செல் எறிகாலைப் பரிபொன்ற,
கோ ஆர் விண்வாய் வெண்கொடி திண்பாயொடு கூட,
மா வாய் திண்தேர் மண்டுதலால், நீர் மறிவேலை
நாவாய் மானச் செல்வன, காண்மின்; நமரங்காள்!" (9673)

(பூ-கூர்மை; வாய்-நுனி; செல்-இடி; எறிதல்-தாக்குதல்; காலை-பொழுது; பரி-குதிரைகள்; பொன்றுதல்-இறந்துபடுதல்; கால்-காற்று; மா-அழகு; நாவாய்-பாய்மரக்கப்பல்; நமரங்காள்-நம்மவர்களே; கோ-சூரியகிரணம்; மண்டுதல்-நெருங்கியிருத்தல்; நீர்-இரத்தநீர்; பாய்-பாய்மரம்; மான-போன்ற)

''நம்மவர்களே! கூர்மையான நுனியையுடைய அம்புகள் இடிபோலத் தாக்கியபொழுது, அங்கு தேரிற் பூட்டப்பெற்றிருந்த குதிரைகள் இறந்து வீழ்ந்தன; சூரிய கிரணம் நிறைந்த ஆகாயத்தின் நுனியைத் தொட்டுத்

Koviloor Digital Library

தீண்டுகின்ற அளவிற்கு உயர்ந்துள்ள வெள்ளை நிறமுடைய கொடிகள், பாய் என்று கூறப்படுகின்ற திண்ணிய கூம்பொடு சேர்ந்து, பெரியவான உறுதிமிக்க தேரை நெருங்கி வருதலால், நீரில் மடங்கிப் படிகின்ற அலைகள் நிறைந்த கடலின் கண், மரக்கலங்கள் செல்வனபோலச் செல்வன வற்றையும் பார்ப்பீர்களாக!'' என்று சுட்டிக் காட்டுகிறான் வீடணன்.

இராமபிரான் செலுத்திய அம்புகளால் தாக்கப்பட்டு மடிந்துபோன குதிரைகள், இரத்த வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்ட காட்சி, நீர்நிறைந்த அலைகள் மடங்கி விழும் கடலில் பாய்மரத்தோடு கூடிய கப்பல் போன்று காணப்பட்டன என்பதாம். குதிரைக்குப் பாய்மரக்கப்பல் ஒப்பு. வானைத் தொடுகின்ற கொடிகள், குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் பறந்து கொண்டிருந்தன. இராமபிரான் கூரிய நுனியையுடைய அம்புகளை எய்ததும், குதிரைகள் இறந்து மடிந்தன; எனவே தேர்கள் நிலைகுலைந்து இரத்தவெள்ளத்தில் அகப்பட்டு ஈர்க்கப்பட்டுக், கடலில் சென்று கலந்தன. அந்தத் தோற்றம் கடலில் பாய்மரக்கப்பல்கள் செல்வன போன்றிருந்தது என்பதாம். ''வாளிச்செல்'' என்பது உருவகம். அம்பாகிய இடி என்பது பொருள்.

11. "கடக் கார் என்னப் பொங்கு கவந்தத்தொடு கைகள்
தொடக்கா நிற்கும் பேய், இலயத்தின் தொழில் பண்ணி,
மடக்கோ இல்லா வார் படிமக் கூத்து அமைவிப்பான்,
நடக் கால் காட்டும் கண்ணுளர் ஒக்கும்-நமரங்காள்!" (9674)

(கடம்-மதம்; கார்-மேகம்/யானை; கவந்தம்-தலையற்ற முண்டம்; தொடக்கா-தொடக்கி/சேர்த்து; இலயம்-லயம்/தாளம்/தாளஒத்து; பண்ணுதல்-செய்தல்; ஒவில்லா-ஒழியாத; வார்-நீண்ட; படிமக்கூத்து-அபிநயம்/பொம்மலாட்டம்/பாவைக்கூத்து; நடம்-நடனம்; கண்ணுளர்-கழைகூத்தர்/நட்டுவனார்)

''நம் படையைச் சார்ந்தவர்களே! மதம் பொழிகின்ற, கரிய நிறமுடைய யானைகள் பொங்கியெழுந்து ஆடுவதுபோன்று தலையற்ற முண்டங்களின் ஆடலுக்கு ஏற்பத் தம் கைகளையும் சேர்த்துக்கொண்டு நிற்கும் பேய்கள், அந்தத் தாளத்திற்கு ஏற்ற அபிநயம் என்ற தொழிலைச் செய்து கொண்டு, தன் உடல் உறுப்புக்களை மடக்கியும், நீட்டியும் ஆடுகின்ற தோற்றம், ஒரு கழைக்கூத்து ஆசிரியன் பொம்மலாட்டத்தைத் தன் சீடனுக்குக் கற்றுக் கொடுப்பதைப் போலவும், நடனமாடுகின்ற தனது கால்களைக் காட்டும் கூத்தாசிரியனை ஒத்திருப்பதையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

நடனக் கலையைத் தன் சீடனுக்குக் கற்றுக்கொடுக்க முற்படும் நடன ஆசிரியன், எப்படி உறுப்புக்களை நீட்டியும், மடக்கியும், தூக்கியும்

Koviloor Digital Library

அபிநயிக்க வேண்டும் என்பதைத் தானே முன்னால் செய்துகாட்டி அந்தச் சீடனை ஆடச்செய்வதுபோல கவந்தங்கள் கூத்து ஆடுகின்றன. பேய்கள் அதற்கேற்பக் கைகளினால் தாளம் போடுகின்றன; ''கவந்தம் ஆட, முன்பு தம் களிப்போடு ஆடும் பேயினம்; நிவந்த ஆடல் ஆட்டுவிக்கும் நித்தகாரர் போலுமே!'' என்பது கலிங்கத்துப்பரணி. நித்தகாரர் என்பது நடனத்தைப் பயிற்றுவிக்கும் நடன ஆசிரியரைக் குறிக்கும். ''கண்ணுள்'' என்ற சொல்லுக்குக் கூத்து என்பது பொருள். கண்ணுளர் என்பவர் கூத்தர் எனப் படுவர். ''படிமக்கூத்து'' என்பது இப்போது பொம்மலாட்டம் என்றும், பாவைக்கூத்து என்றும் வழங்கப்படுகின்றன. பருத்த, கரிய, அரக்கர் களுக்கு பருத்த, கரிய யானை உவமை; பேய்கள் ஆசிரியன்போல நடித்துக் காட்டுகின்றன. கவந்தங்கள் அதற்கேற்ப சீடன்போல் அபிநயம் செய்கின்றன என்பதாம்.

12. "மழுவின் கூர்வாய் வன் பல் இடுக்கின் வய வீரர்
குழுவின் கொண்டந் நாடி தொடக்கப் பொறி கூட்டித்
தழுவிக் கொள்ள, கள்ள மனப்பேய் அவை தம்மை
நழுவிச் செல்லும் இயல்பின காண்மின், நமரங்காள்!" (9675)

(மழு-கோடரி; வய-வெற்றி; நாடி-நரம்புகள்; பொறி-இயந்திரம்; தொடக்கு-பிணித்தல்/கட்டுதல்; இயல்பு-தன்மை)

''நம் படையைச்சார்ந்தவர்களே! கோடரியின்கூரிய நுனியைப்போன்ற வாயிலுள்ள வலிய பற்களின் இடுக்கில், வெற்றி பொருந்திய இறந்து பட்ட அரக்கவீரர்களின் கூட்டத்தின் உடல் உறுப்பாகிய நரம்புகள், பற்றி மாட்டிக்கொள்ள, வஞ்சனை எண்ணம் கொண்ட உள்ளம் பொருந்திய பேய்கள் அவற்றைத் தூரத் தள்ளிவிட்டு, நழுவிக்கொண்டு அப்பால் செல்லும் தன்மையையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

இறந்துபட்ட வீரர்களின் அறுபட்ட நரம்புகள், வீரர்களின் பற்களின் இடுக்கில் மாட்டிக் கொள்ளுகிறது. அங்கே வந்த பேய்களின் கால்களிலும் அந்நரம்புக் கூட்டம் மாட்டிக் கொள்ளுகிறது; இதையறிந்த பேய்கள், தாம் அங்கே சென்று மீண்டும் மாட்டிக்கொள்ளா வண்ணம் அவற்றைத் தள்ளிவிட்டு மெதுவாக அங்கிருந்து நழுவிச் செல்லுகிறது. அந்தக் காட்சியை வீடணன் வானரத்தலைவர்க்குக் காட்டுகிறான் என்பதாம்.

13. "பொன்னின் ஓடை மின்பிறழ் நெற்றிப் புகர் வேழம்,
பின்னும் முன்னும் மாறின வீழ்வின் பிணையுற்ற,
தன்னின் நேரா மெய் இருபாலும் தலைபெற்ற
என்னும் தன்மைக்கு ஏய்வன பல்வேறு இவை காணீர்!" (9676)

(ஓடை-நெற்றிப்பட்டம்/முகபடாம்; மின்-ஒளி; பிறழ்தல்- விளங்கு தல்; புகர்-செம்புள்ளிகள்; வேழம்-யானை; பிணைவுறுதல்-

Koviloor Digital Library

சேர்ந்திருத்தல்; மெய்-உடம்பு; இருபால்-இரண்டுபக்கம்; ஏய்வன-பொருத்தமாயிருத்தல்; நேரா-நேர்ந்து)

''பொன்னால் செய்து அமைக்கப்பட்ட யானையின் நெற்றிப்பட்டம் மின்னல்போல் ஒளிபெற்று விளங்கவும், முகத்தில் செம்புள்ளிகளையும் உடைய இரு யானைகள், இராமபிரானின் அம்பினால் தாக்கப்பட்டுக்கீழே தரையில் வீழ்ந்தன; அவ்வாறு வீழும்போது ஒரு யானையின் தலைப் பக்கம் மற்றொரு யானையின் பின்பக்கத்தோடு சேர்ந்திருப்பது, உடம்பின் இருபக்கத்திலும் இரண்டு தலைகளைக் கொண்ட ஏதோ அதிசயமான விலங்கு ஒன்று தரையில் படுத்திருப்பது போன்று தோற்றமளித்தது. அந்தத் தன்மையினையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

செம்புள்ளிகளை முகத்தில் கொண்டிருப்பது உயர்ந்த யானைக்குரிய இலக்கணமாகும். ''அடிக்கை கனத்து, மதம் பொழி ஆழியின் அளவும், புகரால் அழகெய்தி'' என்பது வில்லிபாரதம். இரண்டு உடலும் ஒன்று சேர்ந்து ஓர்உடல் போல் தோன்றியதால், இருபக்கத்தும் தலையுள்ள ஒரு விநோதமான விலங்கு போலக் காட்சியளித்தது என்பதாம்.

14. "நாமத் திண்போர் முற்றிய கோப நகை நாறும்
பாமத் தொல் நீர் அன்ன நிறத்தோர் பகுவாய்கள்,
தூமத்தோடும் வெங்கனல் இன்னும் சுடர்கின்ற
ஓமக்குண்டம் ஒப்பன பல்வேறு இவை காணீர்!" (9677)

(பாமம்-பரவுதல்; தொல்-பழமையான; நாமம்-அச்சம்; முற்றிய-முதிர்ந்த; நாறுதல்-தோன்றுதல்; பகுவாய்-பிளந்தவாய்; தூமம்-புகை; சுடர்தல்-எரிதல்)

''அச்சம் தரத்தக்கதும், திண்ணிய போரில் உண்டான கோபத்தால் எழுந்த சிரிப்புத்தோன்றிப் பரவுகின்றதும், தொன்மையானதும், கடல் நீரைப் போன்ற கரிய நிறமுடையவர்களான அரக்கர்களின் பிளவுபட்ட வாய்களினின்றும் புகையொடும் கூடிய கொடுமையான அனல் இறந்து பட்ட பிறகும்கூட இன்னும் எரிந்து கொண்டிருப்பது, ஓம குண்டத்தில் அனல் கொழுந்து விட்டு எரிவதை ஒத்திருப்பதையும் காண்பீர்களாக!'' என்று வீடணன் படைத்தலைவர்களுக்குச் சுட்டிக் காட்டுகிறான்.

சாதாரண நிலையிலேயே அரக்கர்கள் கரியநிறமும், பிளந்த வாயும், அவ்வாயினின்றும் வெளிப்படும் புகையும், அனல் கக்கும் கண்களும் உடையவர்கள். இங்கே இப்போது போர்க்களத்தில் இறந்துபட்ட பின்பும் அவர்கள் பிளந்த வாயினின்றும் புகையும் அனலும் வெளிப்படுகின்றன என்று அரக்கர்களின் கொடுமைத் தன்மையைப் புலப்படுத்தியவாறு. புகையுடன் கூடி, நெருப்புடன் எரிகின்ற ஓமகுண்டத்திற்கு, இறந்துபட்ட அரக்கர்களின் திறந்து கிடக்கும் வாய் உவமை. ''தாம்'' என்பது தாவும்

Koviloor Digital Library

என்பதன் இடைக்குறைபோல, ''பாம்'' என்பது பாவும் என்பதன் இடைக்குறை என்று கொண்டு பரவும் என்னும் பொருள் தரப்பட்டது.

15. "மின்னும் ஓடை ஆடல் வயப் போர் மிடல் வேழக்
கன்னம் மூலத்து உற்றன வெண் சாமரை காணீர்;
மன்னும் மாநீர்த் தாமரை மானும் வதனத்த
அன்னம் மெல்லத் துஞ்சுவ ஒக்கின்றவை காணீர்" (9678)

(ஓடை-நெற்றிப்பட்டம்/முகபடாம்; வயம்-வெற்றி; மிடல்-வலிமை; கன்னம்-செவி/கர்ணம்/காது; மன்னும்-நிலைபெற்ற; மா-மிக்க; துஞ்சுதல்-தூங்குதல்; மானும்-ஒக்கும்; வதனம்-முகம்; மூலம்-அடிப்புறம்)

''ஒளிவீசி விளங்குகின்ற நெற்றிப்பட்டத்தையுடைய, நிற்கும்போதும் ஆடிக்கொண்டே இருக்கும் இயல்புடைய, வெற்றி மிக்க போரில் ஈடுபட்டு மடிந்து கிடக்கும் யானைகளின்காதுகளின் அடிப்புறத்தினின்றும் வெளிப்பட்டு நிற்கின்ற வெள்ளிய சாமரைகளைக் காண்பீர்களாக! மேலும் நிலைபெற்றுள்ள மிக்க நீரில் பூத்திருக்கும் செந்தாமரை மலர்போன்ற முகத்தையுடைய வீரர்களின் முகங்களில் படிந்திருக்கும் அன்னப் பறவைகள் மெதுவாக அம்மலரில் மகிழ்ச்சியுடன் உறங்குவதை ஒத்திருக் கின்ற காட்சியையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

சாதாரணமாக நிற்கின்ற நிலையிலேயே இங்கும் அங்கும் அசைந்து கொண்டிருப்பது யானையின் இயல்பு. எனவே ''ஆடல் வேழம்'' என்றார் என்க. சாமரை என்பது விசிறியைக் குறிக்கும்; போர்க்களத்தில் சிவந்த இரத்தக் கடலில் கரிய யானைகள் வீழ்ந்து கிடக்கின்றன. அவற்றின் காதுகளின்மேல் வெண்சாமரைகள் வீழ்ந்து கிடக்கின்றன. அந்தத் தோற்றம் செந்தாமரை மலர்களின்மேல் வெண்மையான அன்னப் பறவைகள் உறங்குவதைப்போல் இருக்கிறது என்கிறான் வீடணன். இரத்தம் நிறைந்த போர்க்களம் குளத்திற்கும், அவற்றில் கிடக்கும் யானைகள் சிவப்பேறிப்போய் இருப்பதால் அவை செந்தாமரை மலருக்கும், அவற்றின் காதுகளின்மேல் வீழ்ந்து கிடக்கும் வெண் சாமரைகள் அன்னப்பறவைகளுக்கும் உவமை.

16. "ஒளிம் முற்றாது, உற்று உயர் வேழத்து ஒளிர் வெண்கோடு,
ஆளின் முற்றாச் செம்புனல் வெள்ளத்து அவை காணீர்;
கோளின் முற்றாச் செக்கருள் மேகக் குழுவின் கண்
நாளின் முற்றா வெண்பிறை போலும்; நமரங்காள்!" (9679)

(ஆள்-வீரர்கள்; முற்றுதல்-நிரம்புதல்; முற்றாத-நிரம்பப்பெறாத; செம்புனல்-இரத்தவெள்ளம்; கோடு-கொம்புகள்; கோள்-ஒளி; குழு-கூட்டம்; ஒளி-வரிசை; செக்கர்-செந்நிறம்)

Koviloor Digital Library

''நமது படையைச் சார்ந்தவர்களே! நிரம்பியில்லாத இரத்த வெள்ளத்துள், வரிசை முற்றுப்பெறாது தனித்தனியே உயர்ந்து விளங்கும் யானைகளின் வெண்மையான தந்தங்கள், ஒளி நிரம்பப்பெறாத சிவந்த வானத்தில் தோன்றும் மேகக்கூட்டத்தினிடையே காணப்படும் பதினாறு கலைகளும் நிரம்பப்பெறாத வெள்ளிய பிறைச்சந்திரனைப்போல விளங்குவதையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

யானைகளின் வெள்ளைக் கொம்பிற்கு முற்றாத வெள்ளிய இளம் பிறைச்சந்திரன் உவமை. ''முற்றா'' என்பது மூன்று அடிகளிலும் ஈறு குறைந்து வந்துள்ளது. ஒளி என்ற சொல் வரிசை, ஒழுங்கு, யானைக் கூட்டம் என்ற பொருளைத்தரும். அரக்கர்கள் விழுந்து கிடக்கும் இரத்த வெள்ளத்தில் யானைகளின் கொம்புகளின் வெண்மைநிறம் ஒளி விளங்கித் தெரியாது. எனவே ''ஆள் முற்றாச் செம்புனல் வெள்ளத்து'' என்றார் என்க. ''நாளின் முற்றா வெண்பிறை'' என்பது இரண்டாம் நாளிலிருந்து பதினைந்தாம் நாள்வரையுள்ள பிறைச்சந்திரன் எனலாம். கொம்பிற்குப் பிறையை உவமை கூறியதால் இதை மூன்றாம்நாள் பிறைச் சந்திரன் என்று கூறுவதே பொருந்தும் என்க. செக்கர்வானம் இரத்த வெள்ளத்திற்கும், மேகக்கூட்டத்திற்கு யானைகளின் கூட்டமும், வெண்பிறைக்கு யானைகளின் தந்தங்களும் உவமை.

17. "கொடியும், வில்லும், கோலொடு வேலும், குவிதேரும்
துடியின் பாதக் குன்றின் மிசைத் தோல் விசியின் கட்டு
ஒடியும் வெய்யோர் கண் எரி செல்ல, உடன் வெந்த
தடி உண்டு ஆடிக் கூளி தடிக்கின்றன காணீர்!" (9680)

(ஒடிவு-பின்வாங்குதல்; வெய்யோர்-அரக்கர்; எரி-நெருப்பு; கோல்-அம்புகள்; பாதம்-அடிப்பகுதி; குன்று-மலை/யானை; மிசை-மேல்; தோல்-யானை/அம்பாரி; விசித்தல்-இழுத்தல்; தடி-தசை; கூளி-பேய்கள்; தடித்தல்-பருத்தல்; குவி-குவிந்திருக்கின்ற/நிறைந்திருக்கின்ற; துடி-பறை/உடுக்கை)

''கொடிகள், விற்கள், அம்புகள், வேல் இவைகளெல்லாம் குவித்து வைக்கப்பட்டிருந்த தேர், உடுக்கை போன்ற பாதங்களையுடையதும், குன்று போன்ற தோற்றமுடையதுமான யானையின்மேல் வரிந்து கட்டப்பட்டிருக்கின்ற அம்பாரி, முதலியனவற்றின்மேலும் இராமன் செலுத்திய அம்பினால், பின்வாங்கி ஓடி இறந்துபட்ட கொடிய அரக்கர் களின் கண்களினின்றும் தோன்றிய சினத்தீ பாய்ந்து செல்ல, அதனுடன் வெந்துபோன தலைகளையெல்லாம் பேய்கள் சாப்பிட்டுவிட்டு மகிழ்ச்சி யினால் ஆட்டம் போட்டுக்கொண்டு, உடல் பருக்கப்பெற்றுத் திரிவதை யும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

''துடி'' என்பது பறை என்பது நமக்குத் தெரியும். இது குறிஞ்சி நிலத்து இசைக்கருவி. இங்கு அது யானையின் காலுக்கு உவமையாகக் கூறப் பட்டிருக்கிறது. ''துடி அடிக் கயம்தலை கலக்கிய'' என்பது கலித்தொகை. ''ஒடிதல்'' என்பது பின்வாங்கி ஓடுதலையும், உயிர் அழியப் பெறுதலை யும் குறிக்கும். ''கூளி'' என்ற சொல் பொதுவாகப் பேய்களையே குறிக்கும். அதனைக் காளியின் ஏவலான் என்கிறது உ.வே.சா பதிப்பு. பொதுவாக வேகாத பச்சைத் தசையையே உண்டு பழகியிருந்த பேய்கள், இப்போது வெந்த தசையை உண்டதனால் மகிழ்ச்சியால் கூத்தாடின; மகிழ்ச்சி மிகுதியாலும் சுவையான உணவாலும் உடல் பருக்கப்பெற்றன என்று கூறுகின்ற கவிஞனின் நுட்பம் காண்க. அரக்கர்களின் கொடிய சினத்தீயின் வேகம் புலப்படுத்தப்படுகிறது.

18. "சகரம் முந்நீர்ச் செம்புனல் வெள்ளம் தடுமாறா,
மகரம் தம்மின் வந்தன காணா, மனம் உட்கி,
"சிகரம் அன்ன யானை கொல்?" என்னச் சில நாணி,
நகரம் நோக்கிச் செல்வன காண்மின்-நமரங்காள்!" (9681)

(முந்நீர்-கடல்நீர்; செம்புனல்-இரத்தம்/குருதி; தடுமாறா-தடுமாறி; தடுமாறுதல்-கலத்தல்; காணா-கண்டு; சிகரம்-மலை; உட்குதல்-அஞ்சுதல்; நாணுதல்-வெட்கமடைதல்; நகரம்-இருப்பிடம்/கடல்; மகரம்-சுறாமீன்கள்)

''நம் படையைச் சார்ந்தவர்களே! சகர மன்னர்களால் தோண்டப்பெற்ற கடல்நீருடன், போர்க்களத்தில் உண்டான இரத்த வெள்ளமும் ஒன்று கலந்ததனால் கடலில் வாழும் மகரமீன்கள் இரத்தக் கடலுக்குள் வந்து அகப்பட்டுக் கொண்டதை எண்ணியும் இவை தம்மை விழுங்கிவிடுமோ என்று மனம் அஞ்சியும், மலைபோன்ற யானைகள் அந்த இரத்தக் கடலில் அமிழ்ந்து கிடக்க, இவை யாதாய் இருக்கும் என்று சந்தேகப்பட்டு, அவை வெட்கமடைந்து, தம்முடைய இருப்பிடமான கடலை நோக்கிச் செல்வனவற்றையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

சகரமன்னர்கள் தோண்ட உண்டாகியதால் ''சாகரம்'' என்பது கடலுக்குக் காரணப்பெயர். கடலில் வாழும் மகரமீன்கள் துதிக்கை யுடையன. யானைபோன்ற உருவமுடையன என்பதை முன்னரும் நாம் கண்டு வந்திருக்கிறோம். இராமபிரானால் செலுத்தப்பட்ட அம்புகளால் இறந்துபட்ட யானைகள் போர்க்களத்தில் இரத்த வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுக் கடலில் கலந்தன. தம்மைப் போலவே உருவம் கொண்டிருப்பதால், கடலில் வாழும் மகரமீன்கள் முதலில் மலைபோன்ற அவ்வுருவத்தைக் கண்டு அஞ்சி, பின் வெட்கமடைந்து, தனது இருப்பிட மாகிய கடலில்போய்ச் சேர்ந்தன என்பதாம். ''முந்நீர்'' என்பது ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் ஆகிய மூன்றும் கலப்பதனால் முந்நீர் என்பது கடலுக்குக் காரணப்பெயர் என்பதும் நாம் முன்பு கண்டுவந்ததே.

Koviloor Digital Library

19. "விண்ணில் பட்டார் வெற்பு உறழ் காயம் பல, மேன்மேல்,
மண்ணின் செல்வார் மேனியின் வீழ, மடிவுற்றார்,
எண்ணின் தீரா அன்னவை தீரும் மிடல் இல்லாக்
கண்ணில் தோன்றார், விம்மி உளைக்கும் படி காணீர்!" (9682)

(வெற்பு-மலை; உறழ்-போன்ற; எண்ணில்-எண்ண இயலாத/அள விடற்கரிய; மிடல்-வலிமை; விம்முதல்-தேம்பியழுதல்; உழத்தல்-உளைத்தல்/வருந்துதல்; படி-தன்மை/நிலை; படுதல்-இறந்துபடுதல்; காயம்-உடல்; மடிவுறுதல்-தளர்ந்து சோர்ந்துபோதல்)

தம்மைக்காத்துக் கொள்ளும் பொருட்டு, வானத்தில் சென்ற அரக்கர்கள் கூட இராமபிரானின் அம்புக்குத் தப்பமுடியாமல் இறந்து, தம் மலை போன்ற உடம்புகள் பல, மேலும் மேலும், தரையில், போர்க்களத்தில் நடந்து செல்லும் வீரர்களின் மேனியில் வந்து விழுந்ததால், அவர்களும் வலிமை குன்றி தளர்ந்து சோர்ந்து பிணங்களுக்கிடையில் அகப்பட்டுத் தரையில் விழுந்தார்கள். அத்தகையவர்களின் அளவு கணக்கிடற்கரியது, எண்ணித் தீராது. அவ்வுடம்புகளையெல்லாம் நீக்கிவிட்டு எழுந்து மேலேவரும் வலிமை அற்றவர்களான இவ்வீரர்கள், பிணக்குவியல்கள் மறைத்திருப்பதால் நம் கண்களுக்குத் தெரியாது போனார்கள்; ஆனால் அவர்கள் தேம்பித்தேம்பி அழுது வருந்துகின்ற நிலையை மனத்தால் எண்ணிப்பாருங்கள்'' என்கிறான் வீடணன்.

விண்ணில் சென்ற அரக்கரும் இறந்து, தரையில் செல்லும் வீரர்களின் மீது விழுந்ததால் அவர்களும் தளர்ந்துபோய்க் கீழே விழ, மீண்டும் எழுந்து வரும் வலிமையற்றவராய்த் தேம்பி அழுதுகொண்டே போர்க்களத்தில் கிடக்கும் காட்சியையும் பார்க்குமாறு கூறுகிறான் வீடணன். ''வெற்பு உறழ்காயம்'' என்பது அரக்கர்களின் உடல் உருவத்தைக் குறித்தது. ''மடிவுற்றார்'' என்பது இறந்துபோனார் என்ற பொருளை இங்கே தாராது. தளர்வுற்றுச் சோர்ந்து சாய்ந்தார்கள் என்ற பொருளைத்தரும். அவர்கள் தேம்பி அழுகின்ற சத்தம்தான் கேட்கிறதேயன்றி அவர்கள் உருவம் கண்ணுக்குத் தோன்றவில்லை என்பது ''கண்ணில் தோன்றார் விம்மி உளைக்கும் படி'' எனப்பட்டது. இங்கே ''காணீர்'' என்பது கண்ணால் காணுதலைக் குறிக்காது. மனத்தால் எண்ணிப்பாருங்கள்'' என்பதைக் குறிக்கும்.

20. "அச்சின் திண்தேர், ஆனையின், மாமேல், காலாளின்
மொய்ச்சுச் சென்றார் மொய் குருதித் தாரைகள் முட்ட,
உச்சிச் சென்றான் ஆயினும், வெய்யோன், உதயத்தின்
குச்சிச் சென்றான் ஒத்துளன் ஆகும் குறி காணீர்!" (9683)

Koviloor Digital Library

(மா-குதிரை; காலாள்-காலாட்படை; மொய்ச்சு-மொய்த்து/நெருங்கி; தாரை-துளிகள்; முட்டுதல்-பாய்தல்; வெய்யோன்-சூரியன்; குச்சி-உச்சி/ சிகரம்; குறி-குறிப்பு/நிலை)

''அச்சாணியையுடைய திண்ணிய தேரின்மேலும், யானைகளின் மேலும், குதிரைகளின்மேலும் செல்லுப்வர்களும், காலாட்படையினரும் நெருங்கிச் சென்று போரிடுவதனால் எழுந்த இரத்த ஒழுக்குகள், சூரியன் உச்சிக்காலப்போதில் வெண்மை நிறத்தோடு தோன்றுபவன் என்றாலும், இந்த இரத்தத் தாரைகள் அவன்மீது சென்று படவே, அவன் உதய காலத்தில் உதயகிரியின் உச்சியின்மீது தோன்றும் சிவந்த சூரியன் போலவே தோற்றமளிப்பதையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

உச்சிப்போதில் வானில் தோன்றும் சூரியன் வெண்மை நிறத்த வனாகவே காணப்படுவான். ஆனால் இப்போது அரக்கர்களின் நால் வகைப் படைகளும் இராமபிரானது அம்பினால் தாக்கப்பட்டதால் எழுந்த குருதித் தாரைகள் அவன்மீது பட்டதனால் அவன் வெண்மைநிறம் மாறி சிவப்பு நிறத்தவனாய், உதய காலத்தில் உதயகிரியில் தோன்றும் உதய சூரியனைப்போல் சிவந்து காணப்பட்டான் என்பதாம். ''மொய்ச்சு'' என்பது மொய்த்து என்பதன் இலக்கணப்போலி. ''குச்சி'' என்ற சொல் சிகரம், முகடு, உச்சி என்ற பொருளைத்தரும்.

21. "கால் தோய் மேனிக் கண்டகர் கண்டப்படு காலை,
"ஆறோ" என்ன விண்படர் செஞ் சோரியது ஆகி,
வேறாய் நின்ற வெண்மதி செங்கேழ் நிறம் விம்மி,
மாறு ஓர் வெய்யோன் மண்டிலம் ஒக்கின்றது காணீர்!" (9684)

(கால்-கருப்புநிறம்; கண்டகர்-கொடிய அரக்கர்கள்; கண்டப்படுதல்-துண்டிக்கப்படுதல்; படர்-பரவிச்சென்ற; விம்முதல்-மிகுதல்; கண்டகம்-முள்; கண்டகர்-முள்போன்று கொடியவர்)

''கருமையான நிறம் தோய்ந்த உடலைக் கொண்டவர்களும், முள் போன்று எல்லோர்க்கும் துன்பம் தருபவர்களுமாகிய அரக்கர்கள் உடல் இரண்டாகப் பிளவுபட்டுத் துணிக்கப்படும் போது பெருகிய இரத்த வெள்ளத்தைக் கண்டு, ''இது என்ன? ஒரு ஆறு பாய்கிறதோ!'' என்று கண்டோர் வியந்து கூறும்படி, ஆகாயத்தில் மிதந்து செல்லுகின்ற வெண்மைநிறமுடைய சந்திரன், இந்த இரத்தக் கறை படிந்ததும், மிகுந்த செந்நிறமாகிப்போய், அதற்கு மாறாகத் தோன்றிய வேறு ஒரு சிவந்த சூரிய மண்டலத்தை ஒத்துத் தோன்றுவதைக் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

''கேழ் நிறம்'' என்பது ஒரு பொருட்பன்மொழி. மீமிசைச்சொல். ''ஆறோ'' என்பது இரத்தத்தின் மிகுதியைப் புலப்படுத்தி நின்றது.

Koviloor Digital Library

22. "வான் நனைய, மண் நனைய, வளர்ந்து எழுந்த
கொழுங் குருதி மகர வேலை
தான் நனைவுற்று எழும் பறவைச் சிறை தெளித்து,
புது மழையின் துள்ளி தாங்கி,
மீன் அனைய நறும் போதும், விரை அரும்பும்,
சிறைவண்டும், நிறம் வேறு எய்தி,
கானகமும் கடிபொழிலும் முறி ஈன்ற
போன்று ஒளிர்வ காண்மின்! காண்மின்!" (9685)

(கொழுமை-செழுமை; சிறை-சிறகுகள்; துள்ளி-துளிகள்; மீன்-விண்மீன்/நட்சத்திரங்கள்; போது-மலர்கள்; விரை-மணமுள்ளதேன்; கடி-மணம்; முறி-செந்தளிர்கள்; ஒளிர்தல்-விளங்குதல்; பொழில்-சோலைகள்)

''அரக்கர்களின் உடலினின்றும் வெளிப்பட்டுத் தெறிக்கும் இரத்தப் பெருக்கால் வானம் நனைந்தது; மண்ணுலகு நனைந்தது; மிக்கு வளர்ந்த செழுமையான இரத்தத்தால் மகரமீன்களையுடைய கடலும் நனைந்தது; அந்தக் கடலில் பறவைகள் முழுகி நனைந்து எழுந்து தம் சிறகை விரிக்கும் போது தெறிக்கும் இரத்தத் துளிகள் புதுமழை பொழிவது போன்றிருந்தது. அந்தத் துளிகள் கானகத்திலும், மணம் மிக்க சோலைகளிலும் மலர்ந்துள்ள நட்சத்திரங்கள் போன்று வெண்மையான மணம்மிக்க மலர்களிடத்திலும், மணமுள்ள தேன் நிறைந்த அரும்புகளிடத்திலும் அதில் மகரந்தத்தைப் பருகுகின்ற கரிய சிறகுகளையுடைய வண்டுகளிடத்திலும் சென்று படிந்ததால் அவை தம் இயற்கையான நிறத்திலிருந்து மாறுபட்டுச் செந்நிறம் அடைந்தன. அது அம்மலர்கள் நிறைந்த கானகமும் கடிபொழிலும் செந்தளிர்களைத் தோற்றுவித்ததைப்போன்று விளங்கு கிறது. அவற்றையும் பாருங்கள் பாருங்கள்'' என்கிறான் வீடணன்.

இரத்தத் துளிகளால் வான், மண், கடல் முதலியன நனைந்தன; கடலில் மூழ்கி எழும் பறவைகள் தம் சிறகை விரித்துப் பரப்புவதால் தெறிக்கும் இரத்தத்துளிகள் காடுகளிலும் சோலைகளிலும் இருந்த வெண்மையான மலர்கள், அரும்புகள், கரிய சிறகுகளையுடைய வண்டுகள்மீது தெறித்த தனால் அவைகளும் செந்நிறமாக மாறிப்போயின. இது காட்டிலும், சோலையிலும் ஏதோ செந்தளிர்கள் நிறைந்து காணப்படுவதைப் போன்றிருந்தது என்பதாம். பொதுவாக மழை, தண்ணீரைப் பொழியும். இங்கே மழை இரத்தமாகப் பொழிந்ததால் ''புதுமழை'' என்றார் என்க. ''துள்ளி'' என்பது துளி என்பதன் நீட்டல் விகாரம். ''விரை'' என்ற சொல் பொதுவாக நறுமணத்தைக் குறிக்கும். இங்கே நறுமணமுள்ள தேனைக் குறித்து நின்றது எனக்கொள்க.

Koviloor Digital Library

23. "வரை பொருத மதயானைத் துணை மருப்பும்,
கிளர் முத்தும், மணியும், வாரி
திரை பொருது புறம் குவிப்பத் திறம் கொள் பணை
மரம் உருட்டி, சிறைப்புள் ஆர்ப்ப,
நுரை கொடியும், வெண்குடையும், சாமரையும்
எனச் சுமந்து, பிணத்தின் நோன்மைக்
கரை பொருது கடல் மடுக்கும் கடுங்குருதிப்
பேர் ஆறு காண்மின்! காண்மின்!" (9686)

(வரை-மலை; துணை-இரண்டு; மருப்பு-தந்தம்; கிளர்தல்-விளங்குதல்; திரை-அலைகள்; பொருதல்-மோதுதல்; பணை-கிளைகள்/பருத்த; சிறை-சிறகுகள்; புள்-பறவைகள்; நோன்மை-வலிமை; மடுத்தல்-கலத்தல்; கடுமை-வேகம்; புறம்-பக்கம்)

''அலைகள் மோதுகின்ற கடல், மலைகளைப் போன்று உயர்ந்த மதம் கொண்ட யானைகளின் இரண்டு தந்தங்களையும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் முத்துக்களையும், நவரத்தினங்களையும் வாரி எடுத்துக் கொண்டு, ஒரு பக்கமாகக் குவித்து வைக்கவும், கிளைகள் நிறைந்த பருத்த மரங்களை உருட்டிக்கொண்டு வரவும், அவற்றின் மேலுள்ள சிறகுகளை உடைய பறவைகள் ஆரவாரம் செய்யவும், கொடிகளையும் வெண் கொற்றக் குடைகளையும், வெண்சாமரைகளையும் கடல்நுரைபோலச் சுமந்துகொண்டு வரவும், பிணங்களின் வலிமையான கரைகளில் மோதி அவற்றை உடைத்துவிட்டுக் கடலில் சென்று கலக்கும் வேகம் மிகுந்த அந்த இரத்த வெள்ளம் நிறைந்த பெரிய ஆற்றினையும் பாருங்கள், பாருங்கள்!'' என்கிறான் வீடணன்.

வெண்மையான கொடிகளும், வெண்கொற்றக் குடையும், வெண் சாமரையும் வெண்மையான நுரைக்கு ஒப்பு. சாதாரணமாக மலை யினிடத்துத் தோன்றும் பேராறுகள், கடலில் கலக்கும் என்பது நாம் அறிந்ததே. இங்கே போர்க்களத்தில் புறப்பட்ட இரத்த ஆறு கடலில் கலந்ததாக உயர்வு நவிற்சி அணியில் கூறுகிறான் கவிஞன். ஆறு எவ்வாறு யானைத் தந்தங்களையும், முத்துக்களையும், மணிகளையும், பெரிய மரங்களையும் தன்னுடன் ஈர்த்துக்கொண்டு தனது கரையை உடைத்துக் கொண்டு வேகமாக வந்து கடலில் கலக்குமோ, அதுபோல இந்த இரத்த ஆறும் அரக்கர்களது கொடியையும், வெண்கொற்றக் குடையையும் வெண்சாமரைகளையும் வாரிக் கொண்டுவந்து, பிணங்களாலாகிய கரையை உடைத்துக்கொண்டு வேகமாகச் சென்று கடலில் கலக்கிறது என்பதாம். யானை மருப்பு, முத்து, மணி இவற்றிற்குக் கொடி, வெண் கொற்றக்குடை, சாமரை முதலியவை உவமை. ஆற்றின் அணைக் கரைக்குப் பிணங்களின் உடல்கள் உவமை.

Koviloor Digital Library

24. "கய்க்குன்றப் பெருங் கரைய, நிருதர் புயக்
கல் செறிந்த, கதலிக் கானம்
மொய்க்கின்ற பரித்திரைய, முரண் கரிக் கைக்
கோள் மாவ, முளரிக் கானின்
நெய்க்கின்ற வாள் முகத்த, விழும் குடரின்
பாசடைய, நிணமேல் சேற்ற
உய்க்கின்ற உதிர நிறக் களம் குளங்கள்,
உலப்பு இறந்த, உவையும் காண்மின்!" (9687)

(கய்-கை/துதிக்கை; குன்றம்-மலை; கல்-படிக்கற்கள்; செறிதல்-நெருங்கியிருத்தல்; கதலி-துகில்கொடி/வாழை; கானம்-கூட்டம்; மொய்த்தல்-நெருங்கியிருத்தல்; திரை-அலைகள்; முரண்-வலிய; மா-முதலை; கோள்-கொள்ளுதல்; முளரி-தாமரை; நெய்த்தல்-பளபளத்தல்; வான்-சிறந்த; நிணம்-கொழுப்பு; உய்த்தல்-சொரிதல்/பொழிதல்; உலப்பு-எண்ணிக்கை; இறத்தல்-முடியாதன; உவையும்-இவற்றையும்; பாசடை-பாசியின் இலை)

துதிக்கையையுடைய மலைபோன்ற யானைகள் குளத்தின் கரையாகவும், அரக்கர்களின் கல்போன்ற தோள்கள் குளத்தின் படிக்கற்களாகவும், துகிற்கொடிகள் குளத்தைச் சுற்றியுள்ள வாழைக் காடாகவும், நெருங்கியிருக்கின்ற குதிரைப்படைகள் குளத்தில் தோன்றும் அலைகளாகவும், வலிய யானையின்துதிக்கைகள், அக்குளத்தில் இருக்கும் முதலையாகவும், அரக்கர்களின் ஒளிமிகுந்த சிறந்த பளபளக்கும் முகங்கள் குளத்தில் தோன்றும் செந்தாமரை மலர்களாகவும், நழுவி விழும் அரக்கர்களின் குடல்கள் குளத்தின் பாசிபடர்ந்த இலைகளாகவும், அரக்கர்களின் கொழுப்பு குளத்தின் சேறாகவும், தம்மை அடைந்தோரை உள்ளுக்குள் இழுத்துக் கொள்ளுகின்ற சிவப்பு நிறம் வாய்ந்த இரத்தம் தோய்ந்திருக்கின்ற போர்க்களமே குளமாகவும் அமைந்திருக்கும் கணக்கற்ற இந்தக் காட்சிகளையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

ஒரு குளத்தின் உறுப்புக்களான கரை, படிக்கல், வாழைக்காடு, அலைகள், அதில் வாழும் முதலைகள், சுற்றியுள்ள தாமரைக்கானம், பாசி, சேறு, நீர் ஆகியவற்றை ஒரு இரத்தக்குளமாகிய போர்க்களத்திற்குப் பொருத்திக் காட்டியிருக்கிறான் கவிஞன். யானை-கரை; அரக்கர் தோள்கள்-கல்லணை அல்லது படிக்கற்கள்; குதிரைகள்-அலைகள்; யானையின் துதிக்கை-முதலை; அரக்கர்களின் முகங்கள்-தாமரைக்காடு; அவர்கள் குடல்கள்-பாசிலை; கொழுப்பு-சேறு; போர்க்களம்-இரத்தக் குளம்; உறுப்புக்கள் எல்லாவற்றையும் உருவகமாகவே கூறியிருப்பதால் இது முற்று உருவக அணியின்பாற்படும். ''கதலி'' என்ற சொல் வாழையை யும், துகில் கொடியையும் குறிக்கும். ''கதலிக்கானம்'' என்பது உருவகம்.

Koviloor Digital Library

குதிரைகளை அதன் தாவும் பண்பால் அலைகளாகக் கூறுவது கவிமரபு. யானையின் துதிக்கை முதலை போன்ற தோற்றமுடையது என்பதால், ''கரிக்கைக் கோள்மா'' என்றார் என்க. இதுவும் உருவகமே. அரக்க வீரர்கள் இறந்துபட்டபோதும் அவர்கள் முகங்கள் தாமரைமலர்போல் மலர்ந்து விளங்குகின்றன என்பதால் ''முளரிக்கானம்'' என்று உருவகித்தார். இராம பிரான் அம்பினால் இறந்துபட்டதாலும், போரில் இறந்துபட்டதாலும் வீரசுவர்க்கம் அடைவோம் என்பதனால் அவர்கள் முகங்கள் இறந்துபட்ட போதும் பொலிந்து விளங்கின என்பதாம். இராவணன் இறந்துபட்ட போதும் அவன் முகமே ''மும்மடங்கு பொலிந்ததம்மா!'' என்று கவிஞன் கூறப்போவதையும் இங்கு நினைவுகூரலாம். ''நெய்த்தல்'' என்ற சொல் நெய்ப்புத் தன்மையைக் குறித்து பளபளப்பு என்ற பொருளைத்தரும். ''மிடையுற்ற தேர்மொட்டு மொட்டொக்க, வெஞ்சோரி நீரொக்க, வீழ்தொங்கல் பாசடையொக்க, அடு செங்களம் பங்கயப்பொய்கை ஆமாறு காண்மின்களே!'' என்று கலிங்கத்துப்பரணியிலும் போர்க் களத்தை இவ்வாறே உருவகித்திருப்பதும் இங்கு ஒப்புநோக்கத் தகும். ''உவை'' என்பது அவை, இவை என்பதுபோல சேய்மைச் சுட்டுச்சொல் எனக்கொள்க.

25. "நெடும்படை வாள் நாஞ்சில் உழு நிணச் சேற்றின்,
உதிரநீர் நிறைந்த காப்பின்,
கடும் பகடு படி கிடந்த கடும் பரம்பின்,
இன மள்ளர் பரந்த கையில்,
படுங்கமல மலர் நாறும் முடி பரந்த
பெருங்கிடக்கைப் பரந்த பண்ணை,
தடம் பணையின் நறும் பழனம் தழுவியதே
எனப் பொலியும் தகையும் காண்மின்" (9688)

(நெடு-நீண்ட; நாஞ்சில்-கலப்பை; நிணம்-கொழுப்பு; காப்பு-தேக்கங்கள்; கடும்-விரைந்துசெல்லும்; கை-பக்கம்; முடி-மகுடம்; பண்ணை-கூட்டம்/வயல்கள்; தட-பெரிய; பணை-மருதப்பறை/முரசங்கள்; பழனம்-மருதநிலம்; பொலிதல்-விளங்குதல்; தகை-தன்மை; பகடு-யானை/எருமை; மள்ளர்-உழவர்/வீரர்; பரம்பு-பரம்படிக்கும் பலகை/பரவியுள்ளது; நாறுமுடி-நாற்றுக்கொத்து/மணம் பொருந்திய மகுடங்கள்; கிடக்கை-போர்க்களம்)

சற்றும் பொருள் புரிந்துகொள்ள முடியாத சிலேடை நயமும், உருவக அணியும் சேர்ந்த பாடல் இது. போர்க்களத்தை மருத நிலத்திற்கு ஒப்பிட்டுக் காட்டுகிறான் வீடணன். நீண்ட வாட்படையை உடையது போர்க்களம், நீண்ட கலப்பையை உடையது வயல்கள் நிறைந்த மருத நிலம்; போர்க் களத்தில் அரக்கவீரர்களின் மாமிசத்தை வாட்படையால் உழுதலுண்டு; மருத நிலத்தில் சேற்றை உழுதலுண்டு; போர்க்களத்தில் இரத்த வெள்ளம்

Koviloor Digital Library

தேக்கப்பட்டிருக்கும்; மருதநிலத்தில் நீர் நிறைந்து தேக்கப்பட்டிருக்கும்; விரைவுமிகுந்த யானைகள் போர்க்களத்தில் படிந்து கிடக்கும்; எருமைக் கடாக்கள் மருத நிலத்தில் தூங்கிக் கொண்டிருக்கும்; போர்க்களத்தில் வீரர்கள் எல்லாப் பக்கங்களிலும் சுற்றிச்சூழ்ந்து நிற்பார்கள். மருத நிலத்தில் உழவர்கள் வயலின் இருபக்கங்களிலும் நிற்பார்கள்; போர்க் களத்தில் வீரர்களின் மகுடங்களில் தாமரைமலர் மணம் பரப்பும்; மருத நிலத்தில் நாற்றுமுடி தாமரைமலர்போல மணம்பரப்பும்; போர்க்களத்தில் கூட்டமாக முரசங்கள்நிறைந்திருக்கும்; மருத நிலத்தில் வயல்களில் பெரிய மருதப்பறைகள் இருக்கும்; எனவே போர்க்களம் மருதநிலத்தைப் போலப் பொலிந்து விளங்குவதைக் காணுங்கள்'' என்கிறான் வீடணன்.

வாட்படை-கலப்பை; நிணம்-சேறு; உதிரநீர்-வெள்ளம்; யானை-எருமை; பரம்பு-பரவியிருப்பது; மள்ளர்-உழவர்/வீரர்; நாறும்முடி-நாற்றுமுடி/மணமுள்ள மகுடங்கள்; கிடக்கை-போர்க்களம்/மருதநிலம்; பண்ணை-வயல்/கூட்டம்; பணை-முரசம்/பறை; பழனம்-மருதநிலம் வயல்; ''வாள்நாஞ்சில்'' நிணச்சேறு; ''உதிரநீர்'' என்பன உருவகங்கள்; இருபொருள் கொண்ட ஒரு பொதுச்சொல்லால் அமைந்தது இப்பாடல். எனவே இதைச் சிலேடைப் பாடல் என்றும் கூறலாம். புலால் நாற்றம் மிகுந்த போர்க்களம், பூ நாறும் மருதநிலத்தை ஒத்திருந்தது என்று உருவகமாகக் கூறிய கவிஞனின் கவித்திறம் நோக்குக.

26. வெளில் தீர்த்த வரைபுரையும் மிடல் அரக்கர்
உடல் விழவும், வீரன் வில்லின்
ஒளிறு ஈர்த்த முழுநெடு நாண் உரும்ஏறு
பலபடவும், உலகம் கீண்டு,
நளில் தீர்த்த நாகபுரம் புக்கு, இழிந்த
பகழி வழி நதியின் ஓடி,
களிறு ஈர்த்துப் புக மண்டும் கடுங்குருதித்
தடஞ் சுழிகள் காண்மின்! காண்மின்! (9689)

(வெளில்-வெற்றிடம்; தீர்த்தல்-இல்லாததாக்குதல்; வரை-மலை; புரை-ஒத்த/போன்ற; மிடல்-வலிய; வீரன்-இராமபிரான்; ஈர்த்தல்-இழுத்தல்; உரும்ஏறு-பேரிடி; படுதல்-விழுதல்; கீண்டல்-கிழித்தல்; நள்இல்-செறிவில்லாத; நாகபுரம்-நாகலோகம்/பாதாளம்; இழிதல்-இறங்குதல்; மண்டுதல்-நெருங்குதல்; கடுமை-விரைவு; தட-பெரிய)

''வீரனாகிய இராமபிரான் ஒளிமிக்க வில்லை, தன் காதுவரை இழுத்து முழுமையான வலிமையுடன் நாண்ஒலி எழுப்பும்போது அதனால் வெற்றிடம் இல்லாத செறிந்த மலைகள் போன்ற வலிமையுள்ள அரக்க வீரர்களின் உடல்கள் தரையில் வீழ்கின்றன; அந்த நாண்ஒலி கேட்டுப் பேரிடிகள் பல விழுகின்றன; பின்னர் அந்த அம்பு இவ்வுலகத்தைக்

Koviloor Digital Library

கிழித்துக்கொண்டு செறிவில்லாத நாகலோகமாகிய பாதாளத்தில் புகுந்து, இறங்கிப் போகின்ற அம்பு வழியிலேயே இரத்த ஆறும் ஓடி, யானைகளையெல்லாம் இழுத்துக்கொண்டு பாதாள லோகத்தில் புகுவதற்காக நெருங்கும்போது, அங்கே ஏற்படுகின்ற பெரிய இரத்தச் சுழிகளையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

இராமபிரான் செலுத்தும் அம்பின் நாணொலியிலேயே அரக்கர்களும், பேரிடியும் விழுந்து விடுகின்றன. பின்னர் அந்த அம்பு உலகத்தை யெல்லாம் கிழித்துக்கொண்டு நாக லோகத்துக்குள் புகுகின்றது. அப்போது அந்த அம்பு அந்த இரத்த ஆறு செல்லும் வழியிலேயே செல்லும்போது ஏற்படுகின்ற நீர்க்குமிழிபோன்ற இரத்தச் சுழிகளையும் காணும்படி வானரத்தலைவர்களிடம் கூறுகிறான் வீடணன் என்பதாம். ''வெள்ளில்'' என்ற சொல்லுக்கு வெற்றிடம் என்பது பொருள். அது இங்கே ''வெளில்'' என எதுகைநோக்கி வந்தது. நள்இல் என்ற சொல் செறிவில்லாத உட்குடைவுடைய என்ற பொருளைத் தரும். நள்-செறிவு; நாகபுரம் நாகர்கள் உலகமாகிய பாதாளத்தைக் குறிக்கும்.

27. ''கய்த்தலமும், காத்திரமும், கருங் கழுத்தும்,
நெடும் புயமும், உரமும், கண்டித்து
எய்த்தில போய், திசைகள்தொறும் இரு நிலத்தைக்
கிழித்து இழிந்தது என்னின் அல்லால்,
மத்தகரி வயமாவின், வாள் நிருதர்
பெருங்கடலின், மற்று இவ்வாளி,
தய்த்து உளவாய் நின்றது என, ஒன்றேயும்
காண்பு அரிய தகையும் காண்மின்!'' (9690)

(கைத்தலம்-கைகள்/துதிக்கைகள்; காத்திரம்-முன்னங்கால்கள்; கருமை-பெருமை/பெரிய; உரம்-மார்பு; கண்டித்தல்-துண்டித்தல்; எய்த்தல்-இளைத்தல்; இரும்-பெரிய; மத்தம்-மதம்; தய்த்தல்-தைத்தல்; காண்பரிய-காண்பதற்கு அருமையான; தகை-தன்மை/சிறப்பு; வலம்-வெற்றி; மா-குதிரை)

''இராமபிரான் செலுத்திய அம்புகள், யானைகளின் துதிக்கைகளையும், முன்னங்கால்களையும், பெரியகரியகழுத்தையும், நீண்டதோள்களையும், மார்பினையும் துண்டித்து விட்டு அதன் பின்னும் சற்றும் சோர்வடையாமல், எல்லாத் திசைகளிலும் சென்று பெரிய பூமியையும் கிழித்துக் கொண்டு பாதாளத்தில் இறங்கிப் போயிற்று என்றுதான் கூறலாமே தவிர, அது சென்று மதம்கொண்ட யானையையோ, வெற்றிபொருந்திய குதிரையையோ, வாட்படைஏந்திய அரக்கவீரர்களின்பெருங்கடலையோ இந்த அம்பு தாக்கிப் பின்னும் அங்கேயே தங்கி இருந்தது என்று

Koviloor Digital Library

ஒன்றைக்கூடக் காணமுடியாது. அத்தகைய சிறப்பினையும் காண்பீர்களாக!'' என்கிறான் வீடணன்.

இராமபிரான் செலுத்திய அம்புகள் எல்லாம் இவற்றின் உடல்களில் ஊடுருவிச் சென்றதேயன்றி அவ்விடத்திலேயே தங்கிற்று என்று சொல்வதற்கில்லை என்று இராமபாணத்தின் சிறப்பு பேசப்படுகிறது.

28. குமுதம் நாறும் மதத்தன; கூற்றன;
சமுதரோடு மடிந்தன; சார்தரும்
திமிரமா அன்ன செய்கைய, இத்திறம்
அமிர்தின் வந்தன, ஐ இரு கோடியால். (9691)

(கூற்று-இயமன்; சமுதர்-பாகர்; திமிரமா-கரும்பன்றி; ஐஇருகோடி-பத்துக்கோடி; சார்தல்-அணைதல்; திமிரம்-இருள்/இருட்டு)

குமுதமலர் போன்று மணம் வீசும் மதத்தைப் பொழிகின்றனவும், கொலைத் தொழிலில் இயமனைப் போன்றனவுமான ஆண்யானைகள் தங்கள் பாகர்களோடு போர்க்களத்தில் மடிந்து கிடந்தன; கொடிய இருள்போன்ற கருநிறம் வாய்ந்த கரும்பன்றி போன்ற செய்கைகளை உடைய இத்தகைய திறமைவாய்ந்த யானைகள், முன்பு பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிழ்தத்துடன் தோன்றினவை பத்துக்கோடி என்னும் அளவினதாகும்.

முன்பு பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தபொழுது அமிழ்தமும், ஐராவதம் என்னும் யானையும் தோன்றின அல்லவா? அப்பொழுது தோன்றிய அந்த ஐராவதம் என்னும் யானையைப்போல் ஆற்றலும், மதநீரும், கொலைத் தொழில் செய்யும் இயமனைப்போன்ற தன்மையும், கரும் பன்றியைப்போல் செய்கையையுடையதுமான பத்துக்கோடி யானைகளும் தோன்றின. அவைகள்தாம் இப்போது போர்க்களத்தில் இராமபிரான் அம்புபட்டுத் தம் பாகர்களோடு மடிந்து கிடக்கின்றன என்பதாம். இந்த யானைகளின் மதத்தின் நறுமணமும், அவற்றின் தொழில்திறமும் அவற்றின் நிறமும், எண்ணிக்கையும் பேசப்பட்டன. ''இருளி'' என்பதும் ''கருமா'' என்பதும் பன்றிக்குரியவேறு பெயர்கள். அதனை இணைத்துத் ''திமிரமா'' என்று பன்றிக்கு ஒரு புதுப் பெயர் கொடுத்திருக்கிறான் கவிஞன் என்க. திமிரம் என்ற சொல்லுக்கு இருட்டு என்பது பொருள். ''சமுதர்'' என்பது தம்மோடு சமமாக ஒத்துப் பழகும் பாகர்களைக்குறித்தது. பூமியைப் பிரளய வெள்ளத்திலிருந்துதூக்கி நிறுத்தியது பன்றியாகிய வராகம் என்பதை நாம் அறிவோம். எனவே அத்தகைய பேராற்றல் படைத்த வராகத்தை ஒத்த யானைகள் என்பது விரிந்த பொருள்.

Koviloor Digital Library

29. ஏறு நான்முகன் வேள்வி எழுந்தன;
ஊறும் மாரியும், ஓங்கு அலை ஓதமும்,
மாறும் ஆயினும், மா மதமாய் வரும்
ஆறு மாறில, ஆறுஇரு கோடியால். (9692)

(ஊறுதல்-பெய்தல்/சுரத்தல்/பொழிதல்; ஓங்கு-உயர்ந்த; ஓதம்-கடல்; மாறும்-மாறுபடுதல்; மா-கரிய; ஆறுஇருகோடி-பன்னிரண்டுகோடி; ஏறு-பெருமை; நான்முகன்-பிரமதேவன்; எழுதல்-தோன்றுதல்)

மிகுதியாக ஊற்றெடுத்துப் பொழிகின்ற மழைநீரும், உயர்ந்த அலைகளையுடைய கடலிலிருக்கும் கடல்நீரும், வற்றி வறண்டு தம் நிலை மாறிப்போனாலும், வற்றாது பெரும் கரிய மதமழையைப் பெய்து தன் வழியினின்றும் மாறாது இங்கு மடிந்து கிடக்கும் பன்னிரண்டுகோடி யானைகளும், பெருமைசான்ற பிரமதேவன் முன்பு இயற்றிய வேள்வியினின்றும் தோன்றினவாகும்.

மழைநீரினும், கடல்நீரினும் மிக்கது யானைகளின் மதநீர்ப்பெருக்கு எனப்பட்டது. ''ஓதம்'' என்ற சொல்லுக்கு அலை என்பது பொருள். இங்கு ஆகுபெயராய் அலைகளையுடைய கடலைக்குறித்து நின்றது.

30. உயிர் வறந்தும், உதிரம் வறந்து, தம்
மயர் வறந்தும், மதம் மறவாதன,
புயலவன் திசைப்போர் மதயானையின்
இயல் பரம்பரை ஏழ் இரு கோடியால். (9693)

(வறழ்தல்-நீங்கிப்போதல்/வறண்டுபோதல்/மாறிப்போதல்; மயர்-மதமயக்கம்; மறத்தல்-நீங்காதிருத்தல்; புயல்-மேகம்; புயலவன்-மேகத்தை வாகனமாகக் கொண்ட இந்திரன்; பரம்பரை-மரபு)

இங்கு மடிந்து கிடக்கின்ற பதினான்குகோடி என்னும் அளவினதான யானைகள், தம் உயிர் நீங்கிப்போனாலும், தமது இரத்தம் வறண்டு போய் விட்டாலும், தமது மதமயக்கம் அற்றுப் போய்விட்டாலும்கூடத் தாம் பொழியும் மதநீரை மட்டும் மறவாது பொழிந்துகொண்டேயிருக்கும் தன்மையன. இவை மேகங்களுக்குத் தலைவனான இந்திரனது கீழ்த் திசையில் நிற்பதும், போர்செய்யும் இயல்புடையதும், மதம் பொருந்தியது மான, ஐராவதம் என்னும் யானையின் தன்மைகொண்ட மரபில் தோன்றினவாகும்.

இங்கே இறந்துகிடக்கின்ற பதினான்குகோடி யானைகளும் ஐராவதம் என்னும் இந்திரனது வெள்ளையானையின் மரபின் வந்தன. அவை இறந்து பட்டாலும் மதநீர் சொரிவதை மட்டும் மறக்காமல் சொரிந்துகொண்டு கிடப்பனவாகும் என்று அவற்றின் மதநீர்ச் சிறப்பு பேசப்படுகிறது. ''வறழ்தல்'' என்ற சொல் நீங்குதல், வறண்டுபோதல்; அற்றுப்போதல்

Koviloor Digital Library

என்ற பொருள்களைத்தரும் ஒரு சொல்லாகும். மேகங்களுக்குத் தலைவன் என்பதும், மேகங்களைத் தன் வாகனமாகக் கொண்டவன் என்பதும் புயலவன் என்பதும் இந்திரனைக் குறிக்கும்.

31. கொடாது நிற்றலின், கொற்ற நெடுந்திசை
எடாது நிற்பன, நாட்டம் இமைப்பு இல,
வடாது திக்கின் மதவரையின் வழிக்
கடாம் முகத்த, முளரிக் கணக்கவால். (9694)

(வடாதுதிக்கு-வடதிசை; வரை-மலை/யானை/சார்வபௌமம்; வழி-மரபு; கடாம்-மதநீர்; கொற்றம்-வெற்றி; எடுத்தல்-தாக்குதல்; முளரி-தாமரை/பதுமம்/பேரெண்; கொடுத்தல்-அருளுதல்)

பிரமதேவன் ''இவற்றைத் தாங்கிக் கொண்டு நில்லுங்கள்'' என்றுகூறி இவற்றிடம் கொடுக்காததனால், வெற்றி பொருந்திய நெடிய திசைகளைத் தாங்காது நிற்பனவும், தெய்வத்தன்மை வாய்ந்த தேவர்களைப்போல இமையாநாட்டமுடையனவும், வடக்குத் திசையின் கண் நிற்கும் சார்வபௌமம் என்னும் மதமயக்கம் மிக்க, மலைபோன்ற பெரிய யானையின் மரபில் வந்தனவும், மதநீர்பொழிகின்ற முகத்தை உடையனவு மாகிய இவ்யானைகள் பதுமம் என்னும் ஓர் பேரெண்ணைக் கொண்ட அளவுடையனவாகும்.

''பதுமம்'' என்பது கோடிகோடி என்ற எண்ணிக்கையைக் குறிக்கும். அஷ்டதிக்கு யானைகளும் அவை தாங்குகின்ற திசைகளும் கிழக்கு-ஐராவதம்; தென்கிழக்கு-புண்டரீகம்; தெற்கு-வாமனம்; தென்மேற்கு-குமுதம்; மேற்கு-அஞ்சனம்; வடமேற்கு-புட்பதந்தம்; வடக்கு-சார்வ பௌமம்; வடகிழக்கு-சுப்பிரதீபம்; என்பனவாம். வடக்கே உள்ளது-வடாது என்று மரூஉச் சொல்லாக வந்தது எனக்கொள்க.

32. "வானவர்க்கு இறைவன் திறை தந்தன,
ஆன வர்க்கம் ஓர் ஆயிர கோடியும்,
தானவர்க்கு இறைவன் திறை தந்தன,
ஏனை வர்க்கம் கணக்கில, இவ்எலாம்" (9695)

(இறைவன்-தலைவன்; வர்க்கம்-இனங்கள்; திறை-கப்பம்; ஏனம்-யானை)

''இவையெல்லாம் தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் இராவணனுக்கு கப்பப் பொருளாகத் தந்தவையாகும். இந்தக் கூட்டத்தின் எண்ணிக்கை ஓர்ஆயிர கோடி என்ற அளவினதாகும். இங்கே நிற்கின்ற மற்ற யானைக்கூட்டங்கள் எல்லாம் தானவர்க்குத் தலைவன், இராவணனுக்குத்தந்த கப்பப் பொருள்களாகும். இவற்றிற்கு ஒரு கணக்கே கிடையாது. அளவற்றனவாகும்'' என்று சுட்டிக் காட்டுகிறான் வீடணன்.

Koviloor Digital Library

தனு வழி வந்தவர் தானவர் எனப்பட்டனர்; ''ஏனம்'' என்ற சொல்லுக்கே யானை என்பது ஒரு பொருள். இது இன்றும் தெலுங்கில் இதே பொருளில் கையாளப்பட்டு வருகிறது. இதை திசைச்சொல்லாகக் கொள்ளலாம்.

33. "பாற்கடல் பண்டு அமிழ்தும் பயந்த நாள்,
ஆர்த்து எழுந்தன, ஆயிரம் ஆயிரம்
மால்கணப் பரி இங்கு இவை; மாறு இவை;
மேற்கின் வேலை வருணனை வென்றவால்!" (9696)

(பண்டு-முற்காலத்து; பயத்தல்-தோற்றுவித்தல்; மால்-பெரிய; கணம்-கூட்டம்; மேற்கின்வேலை-மேலைக்கடல்)

பண்டைக்காலத்தில் தேவர்களும் அசுரர்களும், பாற்கடலைக் கடைந்த போது அதனுடன் தோன்றிய அமிழ்தத்துடன் தோன்றியன இங்கு ஆர்ப்பரித்துக்கொண்டு நிற்கும் ஆயிரக்கணக்கான பெரிய கூட்டமான குதிரைகளாகும். அதோ அங்கே இதற்கு எதிராக நிற்பவை இராவணன் மேலைக்கடல் காவலனான வருணனை வென்று அடக்கியபோது வந்தனவாகும். அவை கணக்கில் அடங்காதவை.

திருப்பாற் கடலினின்றும் உச்சைச் சிரவம் என்ற ஒரு குதிரை தோன்றியது என்பதும் ஒரு புராணக்குறிப்பு. அஷ்டதிக்கு பாலகர்கள்: கிழக்கு-இந்திரன்; தென்கிழக்கு-அக்னி; தெற்கு-இயமன்; தென்மேற்கு-நிருதி; மேற்கு-வருணன்; வடமேற்கு-வாயு; வடக்கு-குபேரன்; வடகிழக்கு-ஈசானன்.

34. "இருநிதிக் கிழவன் இழந்து ஏகின,
அரிய அப்பரி ஆயிரம் ஆயிரம்;
விரி சினத்து இகல் விஞ்சையர் வேந்தனைப்
பொருது பற்றிய தாமரை போலுமால்!" (9697)

(இருநிதிக்கிழவன்-குபேரன்; இகல்-வலிமை; விஞ்சையர்-வித்யாதரர்; தாமரை-ஒருபேரெண்/பதுமம்/கோடிகோடி; இரு-பெரிய; கிழவன்-உரியவன்)

''பெரிய நவ நிதிகளுக்கெல்லாம் உரிமையுடையவனான குபேரன், இராவணனுடன் போரிட்டுத் தோற்றோடியபோது விட்டு விட்டுச் சென்றனவும், இராவணனால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டனவுமான இந்த அருமையான குதிரைகள் பல்லாயிரக்கணக்கினவாகும்; இராவணன், மிகுந்த கோபத்துடன் வலிமையான பகைவரான வித்தியாதர மன்னனுடன் போரிட்டு வென்றபோது கைப்பற்றிய குதிரைகள் இங்கு நிற்கின்றனவே. இவற்றின் எண்ணிக்கை கோடிகோடி என்ற அளவினதாக இருக்கும்போலும்!'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

வீடணன் வானரப்படைத் தலைவர்களுக்கு இரண்டு வேறுபட்ட குதிரைத் தொகுதிகளைச் சுட்டிக் காட்டுகிறான். ஒன்று பல்லாயிரக் கணக்கான குதிரைகள்; குபேரன் விட்டுச்சென்றவை. இரண்டு கோடி கோடி அளவினதான குதிரைகள்; இராவணன் வித்தியாதர மன்னனுடன் போரிட்டு வென்று கைப்பற்றியவை என்பதாம். குபேரன் வடக்குத் திக்கு பாலகன். இராவணனின்தமையன். ''பதுமம்'' என்றபேரெண்கோடிகோடி என்ற அளவினைக் குறிக்கும். பதுமம் என்ற பொருள்படத் தாமரை என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார் எனக்கொள்க. நவநிதிகளாவன சங்கநிதி, பதுமநிதி, மகாநிதி, மகாபதுமநிதி, கச்சபநிதி, கற்பநிதி, கந்தநிதி, நீலநிதி, முகுந்தநிதி என்பனவாம்.

35. என்று, "காணினும், காட்டினும், ஈது இறைக்
குன்று காணினும் கோள் இலது; ஆதலால்
நின்று காணுதும்; நேமியினானுழைச்
சென்று காண்டும்'' என்று ஏகினர், செவ்வியோர். (9698)

(செவ்வியோர்-நற்குணமுடையோர்; இறைக்குன்று-இமயமலை; கோள்-கொள்கை; நின்று-பொறுத்திருந்து/நிதானமாக; காண்டும்-பார்க்கலாம்; நேமியினான்-சக்கரப்படையையுடையவன்/இராமபிரான்; உழை-இடம்)

என்று இவ்வாறு காட்டிகொண்டே வந்த வீடணனிடம், நற்பண்புகள் வாய்க்கப்பெற்ற வானரப்படைத் தலைவர்கள் ''எப்பொழுதும் நாங்களாகவே பார்த்துக்கொண்டே வந்தாலும், அல்லது நீயாகவே காட்டிக்கொண்டு வந்தாலும், இந்த மூலபலச் சேனையைப் பார்த்து முடிக்கமுடியாது. மலைகளுக்கெல்லாம் அரசனாகிய இமயமலையை முற்ற முழுக்கப் பார்த்தாலும் பார்த்துவிடலாம். ஆனால் இதனைக் கண்டு நிறைவுகொள்ள முடியாது. எனவே இதனைச் சற்றுக் கழித்துப் பார்த்துக்கொள்ளலாம். இப்பொழுது சக்கரப்படையைக் கையில் ஏந்தியவனான திருமாலின் அவதாரமான இராமபிரானைச் சென்று காணலாம் வாருங்கள்!'' என்று கூறிக்கொண்டே செல்லலானார்கள்.

''இறைக்குன்று'' என்பது மலைகளுக்கெல்லாம் தலைவன் என்ற பொருளில் இமயமலையைக் குறித்தது. திருமால் கைக் கொண்டுள்ள ஐந்துவகை ஆயுதங்களாவன. சங்கு-பாஞ்சசன்னியம்; சக்கரம்-சுதர்சனம்; வாள்-நராந்தம்; கதை-கௌமோதகி; வில்-சார்ங்கம் என்பன.

Koviloor Digital Library

36. கவிக்கூற்று

ஆரியன், தொழுது ஆங்கு, அவன் பாங்கரும்,
போர் இயற்கை நினைந்து எழு பொம்மலார்,
பேர் உயிர்ப்போடு இருந்தனர்; பின்பு உறும்
காரியத்தின் நிலைமை கழறுவாம். (9699)

(ஆரியன்-மேலோன்/இராமபிரான்; பாங்கர்-பக்கம்; இயற்கை-இயல்பு; பொம்மல்-மகிழ்ச்சி; உயிர்ப்பு-பெருமூச்சு; கழறுதல்-கூறுதல்; காரியம்-செயல்)

இராமபிரானைக் காணச்சென்ற வானரப்படைத் தலைவர்கள் மேலோனான அவன் திருவடிகளைத் தொழுது அவன் அருகில் நின்று கொண்டு அவன் தனி ஒருவனாகவே நின்று போரிட்டு, மூலபலச் சேனையைக் கொன்றழித்த தன்மையை நினைந்து எழுகின்ற மகிழ்ச்சி யுடையவராய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்தனர். இப்போது இதன் பின்பு என்னென்ன செயல்கள் நிகழ இருக்கின்றன என்பது பற்றிக் கூறத்தொடங்குவோம்'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. ''பொம்மல்'' என்ற சொல் மகிழ்ச்சி என்ற பொருளைத்தரும். வருத்தம் என எதிர்மறைப் பொருள் கொள்வதும் உண்டு. இத்தகைய பெரும் போரில் தங்களால் இராமபிரானுக்கு ஏதும் உதவிசெய்ய முடியவில்லையே என்று கருதியதால் வருத்தமும், அதனால் பெருமூச்சும் விட்டனர் என்றும் பொருள் கூறுவதுண்டு.

வானரர் களம்காண் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

33. இராவணன் களம்காண் படலம் [25 பாடல்கள்]

''மூலபலச்சேனை முற்றிலும் அழிந்துவிட்டது'' என்று கூறிய தூதுவர்களின் சொல்லை நம்ப மறுத்துத் தானே ஒரு கோபுரத்தின்மீது ஏறி அங்கிருந்து போர்க்களத்தின் அவலக்காட்சியை இராவணன் பார்க்கின்ற பகுதியைப் பற்றிக் கூறும் படலம் என விரியும். இது 25 பாடல்களைக் கொண்டது. இந்த நிகழ்ச்சி வான்மீகத்தில் காணப்படவில்லை; முன்பு இலக்குவன் பிரமாஸ்திரத்தால் மாண்டபோது களியாட்டுப் படலத்தை வைத்தகம்பன், இப்பொழுதும் இலக்குவன் வேல் ஏற்று மடிந்துபோனான் என்பதைக் கொண்டாட வேண்டும் என்றும் இராவணன் அக்காட்சியைத் தானே நேரில் காணவேண்டும் என்று விரும்புவான் என்று கருதி இப்பகுதியைக் கம்பன் சேர்த்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. வான்மீகத்தில் இல்லாது, கம்பனால் படைக்கப்பட்ட படலம் இது.

இப்படலத்துள், இராவணன் இலக்குவனை வென்று அழிப்பதற்குத் தனக்குத் துணைபுரிந்த அரக்க வீரர்களுக்கு விருந்தளிக்க விரும்பி, விண்ணுலகத்தினரை அழைத்தல்; விண்ணுலகில் கிடைக்கின்ற அனைத்தும் இங்கே அரக்கர்களுக்குக் கிடைக்க வேண்டும் எனக் கட்டளையிடுதல்; தேவர்களும் அவன் கட்டளைக்குப் பணிந்து உணவு தயாரிக்க முனைதல்; அப்பொழுது தூதுவர்கள் ஓடிவந்து, மூலபலச்சேனை அனைத்தையும் இராமபிரான் ஒருவனே போரிட்டுக் கொன்றுகுவித்து விட்டான் என்று அவன் காதில் மட்டும் கூறுதல்; இராவணன் தூதுவர் கூற்றை ஒப்புக்கொள்ள மறுத்து ஐயுறுதல்; மாலியவான் தூதர்கள் பொய் கூறமாட்டர்கள், அந்தச்செய்தி உண்மையே என்றுகூறி, இனிமேலாவது ''நற்செயல்கள் செய்து உய்க'' என்று அறிவுரை கூறுதல்; இராவணன் அவனை இகழ்ந்து பேசுதல்; இலக்குவனைத் தான் கொன்றுவிட்டதால் இனி இராமபிரான் போருக்கு வரமாட்டான் என்று கூறுதல்; அப்போது தூதுவர்கள், ''அனுமன் கொணர்ந்த சஞ்சீவி மலையினால், இலக்குவனும், எல்லா வானரர்களும் உயிர்பெற்றுப் புத்துணர்ச்சியுடன் எழுந்து மகிழ்ந்து திரிகிறார்கள்'' எனக்கூறுதல்; இந்தச் செய்தியையும் நம்ப மறுத்த இராவணன், தான் தெளிவு பெறுவதற்காக ஒரு கோபுரத்தின்மீது ஏறிநின்று போர்க்களத்தின்

Koviloor Digital Library

அவலக்காட்சியைக் காணுதல்; வருத்தமும், சினமும் கொண்டு இராவணன் அரசவையை அடைதல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராவணன் வீரர்க்கு விருந்தளிக்க விரும்புதல்

பொருந்து பொன் பெருங் கோயிலுள், போர்த்தொழில்
வருந்தினர்க்கு, தம் அன்பினின் வந்தவர்க்கு,
அருந்துதற்கு அமைவு ஆயின ஆக்குவான்,
விருந்து அமைக்க மிகுகின்ற வேட்கையான். (9700)

(கோயில்-அரண்மனை; அமைவுஆயின-பொருத்தமான; வேட்கை-விருப்பம்; அருந்துதல்-உண்ணுதல்; ஆக்குதல்-பக்குவம் செய்தல்)

இராவணன் தன் பொருட்டு வந்து போர்த்தொழில் செய்து துன்புற்ற வர்களுக்கும், தன்மீது அன்புகொண்டு தனக்கு உதவியவர்க்கும், உண்ணுதற்குப் பொருத்தமான அறுசுவை உண்டி முதலியவற்றைத் தயாரித்து, தான் வசிக்கின்ற பொன்னாலாகிய பெரிய அரண்மனையில், விருந்து கொடுக்க வேண்டும் என்று மிகுந்த விருப்பமுடையவனானான்.

தான் இலக்குவனை வென்று கொன்றதற்காகவே இவ்விருந்து தர விழைந்தான் என்க. ''அன்பினில் வந்தவர்'' என்பது தாம் கொடுக்கப் போகும் பணம், பரிசு முதலியவைகளை எதிர்பாராது உண்மையாகவே அவன்மீது கொண்ட அன்பின் காரணமாகவே வந்தவர்களைக் குறிக்கும். வெற்றி தேடித்தந்தவர்களுக்கு விருந்து அளித்தல் வேந்தர்களின் கடமைகளுள் ஒன்றாகும்.

2. வானநாட்டை "வருக" என, வல் விரைந்து,
ஏனை நாட்டவரோடும் வந்து எய்தினார்;
"மான நாட்டு அந்தபோகம் அமைத்திர்; மற்று
ஊனம் நாட்டின், இழத்திர் உயிர்" என்றான். (9701)

(வானநாடு-விண்ணுலகு/தேவர்கள்; வல்-மிக; ஏனை-மற்றைய; மானம்-பெருமை; ஊனம்-குறைவு; நாட்டுதல்-செய்தல்/நேர்தல்; போகம்-மகிழ்வு; மற்று-மாறாக)

வானநாட்டவர்களாகிய தேவர்களை ''உடனே வருக'' என்று இராவணன் கட்டளையிடவும், அவர்கள் அவன்மீது கொண்ட அச்சத்தின் காரணமாக, தானவர் நாட்டவராகிய தானவரையும் உடன் அழைத்துக் கொண்டு மிக விரைவாக இலங்கை வந்து சேர்ந்தனர்; அவர்களை நோக்கி இராவணன் ''பெருமைபொருந்திய உயர்ந்த தேவலோகத்தில் நீங்கள் துய்க்கின்ற போகங்கள் அனைத்தையும் இங்கே அமையுங்கள்; மாறாக

Koviloor Digital Library

ஏதாவது குறைவு ஏற்பட்டால் நீங்கள் உயிர்இழக்க நேரிடும்'' என்று அச்சுறுத்தினான்.

''வான நாடு'' ''ஏனை நாடு'' என்பன ஆகுபெயராய் அங்குள்ள வானவர்களையும், தானவர்களையும் குறிக்கும். தமக்கு இடப்படாத கட்டளையான ஏனை நாட்டவரையும் உடனழைத்துக் கொண்டு வந்தது, வானவர் இராவணன்பால் கொண்ட அச்சத்தின் காரணமாக என்க. விண்ணவர் துய்க்கும் இன்பங்கள் எல்லாம் இலங்கையில் உள்ள அரக்கர்களும் துய்க்க வேண்டும் என்பது இராவணன் விருப்பம். இறுதிஅடியில் அச்சுறுத்திக் கட்டளையிடும் ஒலி தொனிப்பதை உணர்க. அன்பினால் காரியம் ஆற்றுவதைவிட அச்சுறுத்தலினாலும், கட்டளை யினாலுமே இராவணன் தன் காரியங்களைச் செய்து முடிப்பவன் என்பதற்கு இந்தப்பாடல் ஒரு சான்று. போகம் என்பது அறுசுவை உண்டி, மதுபானம் மற்றும் சில மகிழ்ச்சிதரும் இந்திர போகங்களைக் குறிக்கும்.

3. நறவும், ஊனும், நவையற நல்லன
பிறவும், ஆடையும், சாந்தமும், பெய்ம்மலர்த்
திறமும், நானப் புனலொடு சேக்கையும்,
புறமும் உள்ளும் நிறையப் புகுந்தவால். (9702)

(நறவு-கள்/மது; ஊன்-மாமிசம்; நவை-குற்றம்; சாந்தம்-சந்தனம்; பெய்தல்-சூடுதல்; நானம்-நறுமணம்; சேக்கை-படுக்கை; திறம்-வகை)

குற்றமேயில்லாத, மிகத் தூய்மையான பருகுவதற்குரிய கள் வகைகளும், உண்பதற்குரிய மாமிச வகைகளும், மற்றும் எல்லா உணவுப் பொருள்களும், அணிவதற்குரிய ஆடை வகைகளும், பூசுவதற்குரிய சந்தனவகைகளும், சூடுதற்குரிய மலர் வகைகளும், நீராடுதற்குரிய கத்தூரி கலந்த நறுமணமுள்ள நீரும், உறங்குவதற்குரிய மெல்லிய மலர்களாலான படுக்கை வகைகளும், அரண்மனைக்கு உள்ளும் புறமும் வந்து நிறையலாயின.

முன்பாடலில் ''ஊனம் நாட்டின் இழத்திர் உயிர்'' என்று அச்சுறுத்திய தால், இங்கே வானவர்கள் ''நவையற நல்லனவான, நறவு, ஊன், பிற, ஆடை, சாந்தம், மலர்த்திறம், நானப்புனல், சேக்கை'' முதலியவற்றைக் கொண்டுவந்து குவித்தனர் என்பதாம். உண்ணும் உணவினை நான்கு வகையாகப் பிரித்திருக்கின்றனர் சான்றோர்கள். அவை உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன என்பதாம். எனவே இங்கே ''பிறவும்'' என்ற சொல்லுக்குப் பிற உணவுப்பொருள்கள் என்று பொருள் கொள்ளப் பட்டது.

Koviloor Digital Library

4. நானம் நெய் நன்கு உரைத்து, நறும்புனல்
ஆன கோதுஅற ஆட்டி, அமுதொடும்,
பானம் ஊட்டி, சயனம் பரப்புவான்,
வான நாடியர் யாவரும் வந்தனர். (9703)

(நானம்-புனுகு/புழுகு/கஸ்தூரி; உரைத்தல்-தேய்த்தல்; கோது-குற்றம்/அழுக்கு; பானம்-பருகும்நீர்; ஊட்டுதல்-உண்பித்தல்; சயனம்-படுக்கை; வானநாடியர்-தேவமகளிர்; பரப்புவான்-விரிக்கும் பொருட்டு)

கத்தூரி கலந்த நறுமணமிக்க வாசனைத் திரவியங்களை நன்கு தேய்த்து, நறுமணமுள்ள பன்னீர் முதலியன கலக்கப்பெற்ற நீரில், அரக்கர்களின் உடலில் உள்ள அழுக்குகள் போகுமாறு நீராட்டி, அமிழ்தம் போன்ற உணவு வகைகளையும், மது போன்ற பருகுதற்குரிய பானங்களையும் அவர்களுக்குப் பரிந்து உண்பித்து, மெல்லிய மலர்களாலான படுக்கையை விரித்து அவர்களுக்குக் குற்றேவல் செய்வதற்காக, வானநாட்டு தேவமகளிர் எல்லோரும் வந்து சேர்ந்தனர்.

''ஊட்டுதல்'' என்பது அன்போடு உண்பித்தலைக் குறிக்கும். ''அறுசுவை உண்டி அமர்ந்து இல்லாள் ஊட்ட'' என்பது நாலடியார். இதேபோல முன்பும் தேவமகளிர் அரக்கர்களுக்கு நீராட்டினர் என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க. ''பூட்டுவார் முலைபொறாத பொய்யிடைநையப் பூநீர் ஆட்டுவார் அமரர் மாதர், ஆடுவார் அரக்கர்மாதர்'' என்பது சுந்தரகாண்டம், ஊர்தேடு படலம்.

5. பாடுவார்கள்; பயில்நடம் பாவகத்து
ஆடுவார்கள்; அமளியில் இன்புறக்
கூடுவார்கள்; முதலும் குறைவறத்
தேடினான் எனப் பண்ணையின் சேர்ந்ததால். (9704)

(நடம்-நடனம்; பாவகம்-பாவனை; அமளி-படுக்கை; பண்ணை-கூட்டம்)

இன்பம் துய்க்க வேண்டும் என்ற இராவணன் கட்டளையால், அங்கு இருந்த அரக்கர்கள் முயற்சி சிறிதும் இன்றி எளிதாகத் தேவமகளிர் பண்ணிசைத்துப் பாடுவனவற்றையும், அவர்கள் பயின்ற நடனத்தைப் பாவனையோடும், அபிநயத்தோடும், ஆடுவதையும், அவர்கள் படுக்கையில் மிக்க இன்பம் தந்து கூடுவதையும் கண்டு, தேவமகளிர் கூட்டத்துடன் அரக்கர்கள் ஒன்றிப்போயினர்.

தேவமகளிர் பாடினார்கள்; அபிநயத்தோடு ஆடினார்கள்; படுக்கையில் இன்பம் தந்து கூடினார்கள்; இவை எல்லாவற்றையும் அரக்கவீரர்கள் தாம் எந்தவிதச் சிரமமும் மேற்கொள்ளாமல் இராவணன் கட்டளையால் எளிதில் பெற்று இன்பம் துய்த்தனர் என்பதாம். ''முதலும் குறைவறத்

Koviloor Digital Library

தேடுதல்'' என்பது தாம் முதலீடாகச் செய்த பொருளையும், அதனால் கிடைக்கப்பெற்ற வருவாயையும் குறைவின்றி நிறைவாகப் பெற்றார்கள்; அப்பொருளால் தாம் விரும்பிய இன்பங்களை அனுபவித்தார்கள் என்ற விரிந்த பொருளையும், உலகியல்பையும் ஒருசேர விளக்குவனவாம். நடனத்திலோ, நாடகத்திலோ, அந்தப் பாத்திரமாகவே-கதை மாந்தராகவே ஒன்றிப்போதல் பாவகம் எனப்படும். ''முதல் இலார்க்கு ஊதியம் இல்லை'' என்பது குறள்-449. இதற்கே தத்துவரீதியாகப் பொருள் கொள்வோம் என்றால் இப்பிறப்பில் பொருளும் இன்பங்களும் ஏராளமாகப் பெற்று அனுபவிப்பதற்கு, ஒருவன் முற்பிறப்பில் செய்த புண்ணியமே முதலாகக் கொள்ளப்பட வேண்டும். ''முற்றொடர்பிற் செய்த முறைமையால் வந்த செல்வம்'' என்கிறார் பட்டினத்தார். மிகுந்த சிரமப்பட்டுத் தேடிப் பெறவேண்டிய இன்பத்தை அரக்கவீரர்கள் முயன்று தேடி வருந்தாமலேயே எளிதில் பெற்றனர் என்பதாம்.

6. அரைசர் ஆதி, அடியவர் அந்தமா,
வரைசெய் மேனி இராக்கதர் வந்துளார்,
விரைவின் இந்திரபோகம் விழைதர,
கரையிலாத பெருவளம் கண்ணினார். (9705)

(ஆதி-முதல்; அந்தம்-ஈறு; வரை-மலை; கண்ணுதல்-அனுபவித்தல்/கருதுதல்/துய்த்தல்; செய்-உவமஉருபு/போன்ற; கரை-அளவு; அடியவர்-ஏவலாளர்/அடிமைகள்)

இலங்கையில் உள்ள அரசர்கள் முதலாக ஏவலாளர்கள் ஈறாக, வந்து கூடியிருக்கும் மலைபோன்ற வலிமையுடைய அரக்கர்கள் அனைவரும் எளிதாகவும், விரைவாகவும் இந்திரலோகத்து இன்பங்கள் அனைத்தையும் அனுபவிக்க ஆசைமேற்கொண்டு, அளவற்ற மகிழ்ச்சி என்ற பெருஞ் செல்வத்தைக் கருத்தோடு துய்த்தனர்.

அரசர் என்பது ''அரைசர்'' என எதுகைநோக்கித் திரிந்தது. ''அடியவர்'' என்பது ஏவலாளர்களையும், இராவணனால் அடிமை கொள்ளப்பட்ட அடிமைகளையும் குறிக்கும். ''வரைசெய் மேனி'' என்ற இடத்து ''செய்'' என்பது உவம உருபாக, ''போன்ற'' என்ற பொருளைத்தரும். ''கண்ணுதல்'' என்பது கருதுதல் என்ற பொருளில் கருத்தோடு இன்பம் துய்த்தனர் என்ற பொருளைத்தரும். எதிர்பாராது வந்த பேரின்பத்தை அரக்கர்கள் குறைவில்லாமல் அனுபவித்தனர் என்பதாம்.

Koviloor Digital Library

7. தூதுவர்கள் மூலபலச்சேனை அழிந்துபட்டதைத் தெரிவித்தல்

இன்ன தன்மை அமைந்த இராக்கதர்
மன்னன் மாடு வந்து எய்தி வணங்கினார்,
அன்ன சேனை களம்பட்ட ஆறு எலாம்,
துன்னு தூதர் செவியிடைச் சொல்லுவார். (9706)

(மாடு-பக்கம்; துன்னுதல்-நெருங்குதல்; ஆறு-தன்மை)

இவ்வாறு அரக்கர்கள் எல்லோரும் இன்பம் துய்க்கும் வண்ணம் அமைத்துக்கொடுத்த அரக்கர் தலைவனாகிய இராவணன் அருகில் அவனுடைய தூதுவர்கள் நெருங்கிவந்து, வணங்கி, இராமபிரானால் மூலபலச்சேனை முற்றும் போர்க்களத்தில் அழிந்துபட்ட தன்மையெல்லாம் மிக ரகசியமாக இராவணனின் காதுகளில் கூறினர்.

''களப்படுதல்'' என்பது போர்க்களத்தில் அழிந்துபடுதலைக் குறிக்கும். ''கன்நின்றான் எந்தை, கணவன் களப்பட்டான்'' என்பது புறப்பொருள் வெண்பாமாலை. மகிழ்ச்சி நிறைந்திருக்கும் நேரத்தில் துயரச்செய்தியைக் கூறவேண்டியிருத்தலாலும், இச்செய்தி அரக்கர்களுக்குத் தெரிய வேண்டாததாலும், இராவணன் காதுகளில் மட்டும் கேட்கும்படி மெல்லக் கூறினார்கள் என்பதாம். அதுவே ''செவியிடைச் சொல்லுவார்'' எனப் பட்டது என்க.

8. நடுங்குகின்ற உடலினர்; நா உலர்ந்து
ஒடுங்குகின்ற உயிர்ப்பினர்; உள் அழிந்து
இடுங்குகின்ற விழியினர்; ஏங்கினார்;
பிடுங்குகின்ற உரையினர், பேசுவார். (9707)

(உலர்தல்-வறண்டுபோதல்; ஒடுங்குதல்-சோர்ந்துபோதல்; பிடுங்குதல்-வலிய வரவழைத்தல்; உள்-மனம்; பேசுதல்-கூறுதல்; உயிர்ப்பு-பெருமூச்சு; இடுங்குதல்-சுருங்கிப்போதல்)

இச்செய்தியைச் தூதுவர்கள் இராவணனுக்குச் சொல்லுவதற்கே உடம்பு நடுங்கியவராய், நாக்கெல்லாம் நீரின்றி வறண்டுபோய், மூச்சு நின்றுபோய், மனம் ஒரு வழிப்படாது, கண்கள் சுருங்கி இடுங்கிப்போய், ஏக்கமுற்று, வார்த்தைகள் வாயினின்றும் வெளிப்படாததால் அவற்றை அரிதின் முயன்று ஒவ்வொரு சொல்லாக வரவழைத்துச் சொன்னார்கள்.

உள்ளத்தில் இருந்துகொண்டு வாய்மூலம் வெளிப்படுத்திச் சொல்ல முடியாத வார்த்தைகளைப் ''பிடுங்குகின்ற உரை'' என்றார் என்க. வாயினின்றும் பிடுங்குதல் என்பது உலகவழக்குச் சொல் என்பது நினைக. சொற்கள் தாராளமாக வெளிப்படாமையால் பிடுங்கி வரவழைக்க

Koviloor Digital Library

நேர்ந்தது என்பதாம். தூதுவர்களின் நிலையைக் படம்பிடித்துக் காட்டுவது இந்தப்பாடல்.

9. "இன்று யார் விருந்து இங்கு உண்பார்? இகல் முகத்து இமையோர் தந்த,
வென்றியாய்! ஏவச்சென்ற ஆயிர வெள்ளச்சேனை
நின்றுளார் புறத்தது ஆக, இராமன்கை நிமிர்ந்த சாபம்
ஒன்றினால், இரண்டு மூன்று கடிகையின் உலந்தது" என்றார். (9708)

(இகல்-போர்; இகல்முகம்-போர்க்களம்; இமையோர்-தேவர்கள்; நிமிர்தல்-உயர்ந்து தோன்றுதல்; சாபம்-வில்; இரண்டுமூன்று-ஆறு; கடிகை-நாழிகை/பொழுது/24நிமிடம்; உலந்தது-அழிந்தது)

தூதுவர்கள் இராவணனை நோக்கி, ''தேவர்கள் வெற்றிதர, வெற்றியைக் கொண்ட மன்னவனே! நீ கட்டளையிட்டு அனுப்பிய ஆயிரம் வெள்ளம்சேனை போர்க்களத்திற்குச் சென்றதல்லவா? அவையனைத்தும், இராமபிரான் கைக்கொண்ட ஓங்கி உயர்ந்த ஒரே வில்லினால், ஆறு நாழிகைப் பொழுதிற்குள் அழிந்து ஒழிந்தன; இங்கே இப்போது உன்னுடன் இருப்பவர்கள்தான் உயிருடன் இருப்பவர்கள்; இந்தச் சூழ்நிலையில் நீ ஏற்பாடு செய்கின்ற இந்த விருந்தை உண்டு கேளிக்கைகளில் யார் ஈடுபடுவார்கள்?'' என்று வினவினார்கள்.

''இமையோர் தந்த வென்றி'' என்பது, இராவணன் அசுரர்களை வென்று தேவர்களுக்கு அவர்கள் அரசாட்சியை அவர்களிடமே கொடுத்து வெற்றிகொண்டதைக் குறிக்கும். சாபம் என்பது வில்லைக் குறிக்கும். ''இரண்டு மூன்று'' என்பது ஆறு நாழிகைப் பொழுதைக் குறிக்கும். ஒரு நாழிகை என்பது இருபத்து நான்கு நிமிடங்கள் கொண்ட ஒரு கால அளவு. இதேபோல் முன்பும் இராமபிரான் தனித்துக் கரன் முதலியவர்களோடு போரிட்டபோதும் இதே நாழிகைக் கணக்கைக் கவிஞன் குறித்ததையும் இங்கு நினைவுகூர்க. ''வில்லொன்றில் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில் என்றான்'' என்பது ஆரண்யகாண்டம் மாரீசன் வதைப்படலம். ''சாபமே சபித்தல், வில்லாம்'' என்பது நிகண்டு; பெருந்துன்பம் நேர்ந்திருக்கும் பொழுது விருந்து உண்டு கேளிக்கைகளில் யார் ஈடுபடுவார்கள்? என்று கேட்கின்றனர் தூதுவர்கள் என்பதாம்.

10. "வலிக்கடன் வானுளோரைக் கொண்டு, நீ வகுத்த போகம்
"கலிக்கடன் அளிப்பல்" என்று நிருதர்க்குக் கருதினாயேல்,
பலிக்கடன் அளிக்கற்பாலை அல்லது, உன் குலத்தின் பாலோர்
ஒலிக்கடல் உலகத்து இல்லை; ஊர்உளார் உளரே உள்ளார்" (9709)

(வகுத்தல்-உண்டாக்குதல்; போகம்-மகிழ்ச்சி/கேளிக்கை; வலி-வலிமை; கடன்-கடமை/கைம்மாறு; கலித்தல்-மகிழ்தல்; பலிக்கடன்-

Koviloor Digital Library

பிண்டம்/நீர்க்கடன்/நெருப்புக்கடன்; ஒலித்தல்-ஆரவாரம் செய்தல்/ஆர்கலி)

''உன்னுடைய வலிமையினால், வானுலகத்தில் உள்ள தேவர்களைக் கொண்டு நீ ஏற்பாடு செய்தாயே ஒரு விருந்தும் கேளிக்கையும், அதை நீ உன் குலத்துள்ள அரக்கர்க்குச் செய்யும் கைம்மாறு என்று கருதினால் அது உண்மையாகாது. காரணம் நீ அனுப்பிய அத்தனை வீரர்களும் மாண்டு அழிந்தனர்; உன் குலத்தில் ஒருவரும் இந்த ஆரவாரிக்கின்ற கடல் சூழ்ந்த உலகத்தில் இப்போது உயிருடன் இல்லை; இந்த இலங்கையூரில் யார் இருக்கிறார்களோ, அவர்கள் மட்டும்தான் உயிருடன் இருக்கிறார்கள். நீ உன் கடமையைச் செய்ய வேண்டுமென்றால் இறந்துபோனவர்களுக்குப் பிண்டம் கொடுத்தலாகிய நீர்க்கடனைத் தான் செய்ய வேண்டி இருக்குமே யன்றி, இந்த விருந்தும் கேளிக்கையும் இப்போது செய்யத்தக்கன அல்ல'' என்கிறார்கள் தூதுவர்கள்.

''பலிக்கடன்'' என்பது இறந்தோர்க்குச் செய்யும் ஈமச்சடங்குகளாகிய நீர்க்கடனையும் நெருப்புக்கடனையும் குறிக்கும். நீ கொடுக்க நினைத்த விருந்தில் பரிமாறப்படுவன எல்லாம் இப்போது பிண்டம் போடுவதற்கே பயன்படும் என்று வெறுத்துப்போய்க் கூறுகிறார்கள் தூதுவர்கள் என்பதாம். இதனைப் ''பிரபூத பலி'' என்கிறது வடமொழி. ஊரில் உள்ளவர்கள் யார்? பெண்டிர், பிணிஉடையோர், புதல்வர் பெறாதோர் ஆகியோர் ஆவர். காரணம் இவர்கள் போர்செய்வதற்குரியல்லர். எனவே ஊரிலேயே இருந்தார்கள் என்பதாம்.

11. இராவணன் திகைத்து நிற்றல்

ஈட்ட அரும் உவகை ஈட்டி இருந்தவன், இசைத்த மாற்றம்
கேட்டலும், வெகுளியோடு துணுக்கமும் இழவும் கிட்டி,
ஊட்டு அரக்கு அனைய செங்கண் நெருப்பு உக, உயிர்ப்பு வீங்க,
தீட்டிய படிவம் என்னத் தோன்றினன், திகைத்த நெஞ்சன். (9710)

(உவகை-மகிழ்ச்சி; ஈட்டுதல்-பெறுதல்; மாற்றம்-சொல்/வார்த்தைகள்; வெகுளி-கோபம்; துணுக்கம்-நடுக்கம்; இழிவு-இகழ்ச்சி/பழி; கிட்டுதல்-சேர்தல்; ஊட்டுதல்-அப்பிக்கொள்ளுதல்; உயிர்ப்பு-பெருமூச்சு; தீட்டுதல்-எழுதுதல்; படிவம்-சித்திரப்பதுமை/பாவை; இழவு-துன்பம்; இசைத்தல்-கூறுதல்)

''இலக்குவனை அழித்துவிட்டோம்'' என்று, பிறரால் பெறற்கு அரிதான பேருவகை கொண்டு விளங்கியிருந்த இராவணன், தூதுவர்கள் சொன்ன சொற்களைக் கேட்டவுடன், சினத்தோடு, நடுக்கமும், துன்பமும் ஒருங்கே எய்தப்பெற்று, முன்பே சிவந்திருந்த கண்கள் இப்போது செவ்வரக்குப் பூசப்பட்டதுபோல மேலும் சிவந்து நெருப்புப்பொறிகள் பறக்குமாறு விழித்து நோக்கி, பெருமூச்சு விட்டுக்கொண்டு திக்பிரமை

Koviloor Digital Library

பிடித்தவனாக சித்திரத்தில் எழுதிய பதுமைபோல் சிறிதும் அசைவற்றுச் செயலற்று நின்றான்.

இராவணன் இப்பொழுது இருக்கும் மெய்ப்பாட்டினைக் கவிஞன் கூறுவதைக் கேளுங்கள். முதலில் மகிழ்ச்சி, சாதாரண மகிழ்ச்சியல்ல பெருமகிழ்ச்சி; ஈட்ட அரும் உவகை; பின்னா் தன்னைச் சார்ந்தவர்கள் அனைவரையும் பகைவன் கொன்று போட்டுவிட்டானே என்பதால் கோபம்; இவ்வளவு பேரை இவ்வளவு எளிதில், இவ்வளவு குறுகிய காலத்தில் எப்படிக் கொன்றான் என்பதால் எழுந்த நடுக்கம்; நம்மைத் தனியே விட்டுவிட்டு எல்லோரும் அழிந்துபோயினரே; அவர்கள் குடும்பத்தார்க்கு என்ன பதில் கூறமுடியும் என்பதை எண்ணியதால் துன்பம்; சினத்தின் மிக்க வெளிப்பாடு சீற்றம்-கண்களில் நெருப்புப்பொறி பறக்கிறது; பெருமூச்சு விடுகிறான். திகைத்து நிற்கிறான்; சித்திரத்தில் எழுதிய பாவைபோலச் செயலற்று நிற்கிறான். இவ்வளவு மெய்ப்பாடுகளையும் ஏக காலத்தில் இராவணன் அடைந்ததாகக் கூறும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. பொதுவாகவே எல்லா அரக்கர்களின் கண்களும் சிவந்திருக்கும். இவன் போர்முனையில் நிற்பவன், வீரன்; வேந்தன். எனவே செங்கண், இப்போது இழவுச்செய்தி. எனவே ஊட்டு அரக்கு அனைய செங்கண்; அதில் நெருப்புப்பொறிகள் சிதறின என்ற நயம் நோக்குக.

12. தூதுவர்கள் பொய்யுரைக்கின்றனர் என ஐயுறுதல்

"என்னினும் வலிஃபரான இராக்கதர் யாண்டும் வீயார்;
உன்னினும், உலப்பிலாதார்; உவரியின் மணலின் நீள்வார்;
"பின் ஒரு பெயரும் இன்றிமாண்டனர்" என்று பேசும்,
இந்நிலை இதுவோ? பொய்ம்மை விளம்பினிர் போலும்!" என்றான்.
(9711)

(யாண்டும்-எக்காலத்தும்/எவ்விடத்தும்; வீதல்-இறந்துபடுதல்/ அழிதல்; உன்னுதல்-நினைத்தல்/கருதுதல்; உலத்தல்-ஒழிதல்/அள விடுதல்; உவரி-கடல்; நீள்தல்-மிகுதல்; ஒருபெயர்-ஒருவர்)

இராவணன் தூதுவர்களை நோக்கி, "என்னைக்காட்டிலும் மிகுந்த ஆற்றல்வாய்ந்த மூலபலச்சேனையைச் சேர்ந்த வீரர்கள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவராலும் அழிந்து போகமாட்டார்கள்; அவர்களே தம்மை அழித்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தால்கூட அழிக்கமுடியாது; அவர்கள் எண்ணிக்கையை அளவிட்டுக் கூறமுடியாது; கடலில் உள்ள மணலின் பெருக்கத்தைக் காட்டிலும் அதிகமானவர்கள்; அப்படிப் பட்டவர்களில் பேர்சொல்லுவதற்குக்கூட ஒருவர்கூட இல்லாது அனைவரும் மாண்டுபோயினர் என்று நீங்கள் கூறுகிறீர்களே? இதுதான்

Koviloor Digital Library

உண்மை நிலையா? இதுவா நிகழ்ந்தது? அல்லது நீங்கள் பொய் பேசுகிறீர்களா?'' என்று ஐயுற்றுக் கேட்கிறான் இராவணன்.

தன்னுடைய மூலபலச்சேனையின் அரக்கர் ஒவ்வொருவரும் தன்னை விட வலிமை மிக்கவர்கள் என்றும், அவர்களை யாராலும் அழிக்க முடியாது என்றும், அவர்களை எண்ணிக் கணக்கிடவே முடியாதென்றும், அத்தகையவர்களை ஒரேமனிதன் இவ்வளவு குறுகிய காலத்தில், ஒருவர்கூட உயிருடன் இல்லாது வேரோடு அழித்து ஒழித்தான் என்பதை இராவணனால் நம்பமுடியவில்லை. எனவே தூதுவர்களையே சந்தேகித்து நீங்கள் பொய் கூறுகிறீர்களா? என்று கேட்கிறான் என்பதாம். முன்பு கும்பகருணன் தன்னைக் கொன்றுவிட்டால் இராவணனைக் கொல்லுவது இராமபிரானுக்கு ஒருபெரிய காரியமில்லை என்று கூறியிருப்பதையும், இராவணனே தன்மகன் இந்திரசித்தன் தன்னைக் காட்டிலும் வலிமைமிக்கவன் என்று கூறியிருப்பதையும் இப்போது இராவணனே மூலபலச்சேனையின் ஒவ்வொரு வீரனும் தன்னைக் காட்டிலும் வலிமை படைத்தவர் என்று கூறியிருப்பதையும் நுனித்து உணர்க. மூலபலச்சேனை எண்ணிக்கையிலும் வலிமையிலும் மிக்கது எனப் புலப்படுத்தப்படுகிறது. ''உலப்பிலாதார்'' என்பது அளத்தற்கரியவர் என்னும் பொருளைத்தரும். ''உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து'' என்பது திருவாசகம்.

13. மாலியவான் ''தூதர்கள் பொய் சொல்ல மாட்டார்கள்'' என்று கூறுதல்

கேட்டு அயல் இருந்த மாலி, "ஈது ஒரு கிழமைத்து ஆமோ?
ஒட்டு உறு தூதர் பொய்யே உரைப்பரோ? உலகம் யாவும்
வீட்டுவது இமைப்பின் அன்றே, வீங்கு எரி? விரித்த எல்லாம்
மாட்டுவன் ஒருவன் அன்றே, இறுதியில் மனத்தால்?" என்றான்.
(9712)

(அயல்-பக்கம்; கிழமை-முறைமை; ஓட்டுதல்-அனுப்புதல்; எரி-ஊழிப்பெருந்தீ; வீட்டுவது-அழிப்பது; இறுதி-ஊழியிறுதிக்காலம்/ பிரளயகாலம்; மனம்-நினைப்பு; ஒருவன்-ஒப்பற்றவன்/உருத்திரன்/ சிவபெருமான்; ஆமோ-ஆகுமோ; மாட்டுதல்-மாளச்செய்தல்)

அவ்வாறு இராவணன் தூதுவர்களை ஐயுற்றுக் கேட்டவுடன், அவன் அருகிலிருந்த அவன் பாட்டன் மாலியவான் இராவணனை நோக்கி, ''நீ இவ்வாறு கேட்பது ஒரு அரசனுக்குரிய முறையாகுமா? நீ அனுப்பிய தூதுவர்கள்தானே இவர்கள்? இவர்கள் உன்னிடம் வந்து பொய் சொல்லுவார்களா? உலகங்கள் முழுவதையும், ஊழியிறுதிக்காலத்தில் ஒருநொடிப் பொழுதில் ஊழிப்பெருந்தீ அழித்து விடுமல்லவா? விரிந்து பரந்த அண்டகோளங்கள் எல்லாவற்றையும் யுகாந்தகால முடிவில் தன்

Koviloor Digital Library

மனத்தால் நினைத்த மாத்திரத்தில் சங்காரங் கடவுளாகிய ஒப்பற்றவனான உருத்திரனாகிய சிவபெருமான் அழித்துவிடுவான் அல்லவா? இது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்கிறான் மாலியவான்.

தூதுவர்கள் கூறியதை நம்பாமல் ஐயுற்றுக் கேட்ட இராவணனுக்கு அவன் பாட்டன் மாலியவான் ''தூதுவர்கள் ஒருபோதும் பொய்யுரைக்க மாட்டார்கள். அவர்கள் கூறுவது உண்மை. ஊழியிறுதிக்காலத்தில் ஊழிப் பெருந்தீயினால் இவ்வுலகம் முழுவதும் அழிந்து போவதும், சங்காரக் கடவுளான உருத்திரன் யுகாந்தகால இறுதியில் இவ்வண்ட கோளங்கள் எல்லாவற்றையும் தன் மனத்தால் நினைத்தமாத்திரத்தில் அழித் தொழிப்பான் என்பதும் எவ்வளவு உண்மையோ, அதுபோல இப்போது இராமபிரானாக வந்திருக்கும் இவன் இவ்வண்ட கோளத்தில் ஒரு மூலையில் இருக்கும் இவ்விலங்கை நகரில் இருக்கும் ஆயிரம்வெள்ளம் மூலபலப்படையை ஆறு நாழிகைப் பொழுதிற்குள் அழித்தொழித்தான் என்பதும், உண்மையே'' என்று எடுத்துக்காட்டுகளால் நிறுவுகிறான் என்பதாம்.

''ஒட்டு உறு தூதர்'' என்பது நம்மால் அனுப்பப்பட்டு, நம் படைக்கு என்ன நேர்கிறது என்பதை அறிந்துவர நம்மால் ஏவப்பட்ட தூதுவர்கள் என்ற விரிந்த பொருளைத்தரும். ஊழிப்பெருந்தீ இமைப்பொழுதில் உலகை அழிக்கும். சங்காரமூர்த்தி உருத்திரன் தான் மனத்தால் நினைத்த மாத்திரத்தில் அழிப்பான் என்றான் என்பதாம். ''கிழமைத்தாமோ?'' ''உரைப்பரோ?'' என்ற இரு இடங்களிலும் ஓகாரம் கிழமையன்று, உரைக்கமாட்டார்கள் என்ற எதிர்மறைப் பொருள்களைத்தரும். இங்கே முதலதனைத் ''சங்காரம்'' என்றும், இரண்டாவதை ''மகாசங்காரம்'' என்றும்கூறி ''சங்காரம் என்பது ஊழியிறுதியில் ஐம்பூதங்களுள்ஒன்றினால் உலகம் அழிவதையும், ''மகாசங்காரம்'' என்பது உருத்திரமூர்த்தியின் சங்கற்ப மாத்திரத்தால் எல்லா உலகங்களும் ஒருசேர அழிவதையும் உணர்த்தும்'' என்று அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு ஒரு அருமையான விளக்கம் தருகிறது.

14. "அளப்ப அரும் உலகம் யாவும் அமைத்துக் காத்து, அழிக்கின்றான்தன்
உளப்பெரும் தகைமை தன்னால் ஒருவன்" என்று உண்மை வேதம்
கிளப்பது கேட்டும் அன்றே?" அரவின்மேல் கிடந்து, மேல்நாள்
முளைத்த பேர் இராமன்" என்ற வீடணன் மொழி பொய்த்து ஆமோ?"
(9713)

(பெருந்தகைமை-பெருந்தன்மை/பெருமை; ஒருவன்-ஒப்பற்றவன்/ பரம்பொருள்; அமைத்தல்-படைத்தல்; கிளப்பது-சொல்லுவது; கேட்கும்-கேட்டிருக்கின்றோம்; அரவம்-பாம்பு/ஆதிசேஷன்; மேல்நாள்-பின்னர்; முளைத்தல்-தோன்றுதல்/அவதரித்தல்; பொய்த்து-பொய் யுடையது; ஆமோ-ஆகுமோ)

Koviloor Digital Library

''தன்னுடைய உள்ளத்தின் பெருந்தன்மையால் தான் நினைத்த மாத்திரத்திலேயே அளவிட்டுக் கூறமுடியாத இந்த உலகங்கள் அனைத்தையும், படைத்து, அவற்றைக் காத்து, இறுதியில் அழித்து ஒடுக்குகின்ற முத்தொழில்களையும் செய்யும் ஒப்பற்ற ஒருவன் பரம்பொருள் என்று, உண்மையே பேசும் வேதங்கள் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம் அல்லவா? அத்தகைய பரம்பொருள்தான் முன்நாள் ஆதிசேஷன் என்ற பாம்பணைமேல் அறிதுயில் கெண்டிருந்து இப்பொழுது இன்று அயோத்தியில் அவதரித்து வந்துள்ள பெருமைசான்ற இராமபிரான் ஆவான்'' என்று முன்பு உன் தம்பி வீடணன் கூறினான் அல்லவா? அந்த வார்த்தைகள் பொய்யாகிப் போய்விடுமா?'' என்று கேட்கிறான் மாலியவான்.

''உலகம் யாவும் அமைத்துக் காத்து அழிக்கின்றான்'' என்று இங்கு கூறப்படுவதுதான் முதலில் பாயிரத்தில் ''உலகம் யாவையும் தாம் உளவாக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டு'' என்று கூறப்பட்டது என்பதை இங்கு நினைவுகூர்க. ''வேதம் கிளப்பது'' என்பது வேதத்திற்கு ''எழுதாக்கிளவி'' என்ற ஒரு பொருள் பொதிந்த பெயரும் உண்டு என்பது நாம் அறிந்ததே. ''கேட்டும்'' என்று மாலியவான், இராவணனையும் உளப்படுத்தியே கூறுவதை நோக்குக. இராவணன் ''ஐயன் வேதம் ஆயிரம் வல்லான்'' என்பது சுந்தரகாண்டம். ''நீ அயன் முதற்குலம் இதற்கு ஒருவன் நின்றாய்; ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தாய்'' என்பது இராவணன் மந்திரப்படலத்தில் கும்பகருணன் கூற்று. ''ஆமோ?'' என்பதில் உள்ள ஓகாரம் ''ஆகாது'' என்ற எதிர்மறைப்பொருளைத் தரும்.

15. "ஒன்று இடின் அதனை உண்ணும் உலகத்தின் உயிர்க்கு ஒன்றாத
நின்றன எல்லாம் பெய்தால், உடன் நுங்கு நெருப்பும் காண்டும்;
குன்றொடு, மரனும், புல்லும், பல் உயிர்க் குழுவும், கொல்லும்
வன்திறல் காற்றும் காண்டும், வலிக்கு ஒரு வரம்பும் உண்டோ?" (9714)

(இடில்-இட்டால்; பெய்தல்-இடுதல்; உடன்-ஒருங்கே/ஒருசேர; நுங்குதல்-உண்ணுதல்; காண்டும்-காண்கின்றோம்; குழு-கூட்டம்; வரம்பு-அளவு; ஒன்றாத-ஒவ்வாத)

''இவ்வுலகத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தும், தான் உண்பதற் குரிய பொருள்களைத்தான் உண்ணும்; உண்பதற்குப் பொருந்தாத பொருள்களை உண்ணாது; ஆனால் உண்பதற்கு இயலாத, உலகில் இருக்கின்ற எந்தப் பொருளைப்போட்டாலும், அவற்றையெல்லாம் ஒரு சேர உண்கின்ற நெருப்பினை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். அது போல மலைகள், மரங்கள், புற்பூண்டுகள், பல உயிரினங்கள் இவற்றை யெல்லாம் தன் வலிய ஆற்றலால் கொன்று குவிக்கின்ற காற்றையும் நாம்

Koviloor Digital Library

கண்டு கொண்டிருக்கிறோம். எனவே வலிமைமிக்க ஆற்றல் என்பதற்கு ஒரு எல்லை உண்டோ?'' என்று கேட்கிறான் மாலியவான்.

மாலியவான் தான் சொல்லவந்த கருத்தை இரண்டு உவமைகளால் மட்டும்கூறி நிறுத்திவிடுகிறான். இதிலிருந்து அவன் இராவணனுக்கு என்ன கூற விழைகிறான் என்பதைக் கற்போரே ஊகித்துக் கொள்ளும்படி விட்டுவிடுகிறான் கவிஞன். இதுபோல ஒரு உவமையைக் கூறி அதிலிருந்து வெளிப்படுகின்ற கருத்தை அறிந்துகொள்ளச் செய்வதை இலக்கணம் ''பிறிது மொழிதல் அணி'' என்கிறது. ஒரு பொதுப் பொருளைக் கூறி, சிறப்புப் பொருளைப் பெறவைப்பது பிறிது மொழிதல் அணியாகும். அல்லது வேற்றுப்பொருள் வைப்பு அணியாகும். இதனால் பெறப்படுகின்ற சிறப்புப்பொருள் என்ன எனில், எனவே மனிதனாகிய இராமபிரானும் நெருப்புப் போலவும் காற்றுப் போலவும் வலிமை மிக்க உன்னுடைய மூலபலச் சேனையை வென்றிருக்கிறான் என்பது புலனாகிறது என்கிறான் மாலியவான். ''உண்டோ'' என்பதில் உள்ள ஓகாரம், இல்லை என்ற எதிர்மறைப் பொருளைத் தரும். நீர், நெருப்பு, காற்று ஆகிய மூன்றும் எதனையும் அழிக்கவல்ல இயல்பின என்பது கருத்து. ஊழியிறுதியில் உலகம் ஒடுங்கும்போது, நிலம் நீரிலும், நீர் நெருப்பிலும், நெருப்பு காற்றிலும் ஒடுங்கும் என்பது முறை. நெருப்பு, காற்று ஆகிய இரண்டின் வலிமையையும் எடுத்துக்காட்டி, இராமபிரான் வலிமைக்கும் வரம்பு இல்லை என்று நிறுவுகிறான் மாலியவான் என்பதாம்.

16. "பட்டதும் உண்டே உன்னை, இந்திரச் செல்வம்; பற்று
விட்டதும் மெய்ம்மை; ஐய! மீட்டு ஒரு வினையும் இல்லை;
கெட்டது உன்பொருட்டினாலே, நின்னுடைக் கேளிர் எல்லாம்;
சிட்டது செய்தி" என்றான்; அதற்கு அவன் சீற்றம் செய்தான். (9715)

(படுதல்-இறந்துபடுதல்; மெய்ம்மை-உண்மை; வினை-செயல்; கேளிர்-உறவினர்கள்; சிட்டது-சிறந்தது; செய்தி-செய்வாயாக; உண்டு-நிகழ்ந்தது; பட்டது-பொருந்தியது; கெட்டது-அழிந்துபோனது)

மாலியவான் இராவணனை நோக்கி ''தலைவனே! அரக்கர்சேனை முழுவதும் அழிந்துபோனதும் உண்மை; உன்னை விட்டு இந்திரச் செல்வம் நீங்கிப்போனதும் உண்மை; எனவே இனிமேல் செய்யக்கூடிய காரியம் வேறு ஒன்றும் இல்லை; உன்னுடைய உறவினர்கள் அனைவரும் உன் காரணமாகவே கெட்டழிந்து போனார்கள்; இனிமேலாவது மேலான உயர்ந்தோர்கள் செய்கின்ற சிறந்த காரியங்களைச் செய்வாயாக!'' என்று அறிவுரை கூறினான். அதனைக் கேட்ட இராவணன், அவன்மேல் வெகுண்டு சீற்றம் கொண்டான்.

Koviloor Digital Library

இப்போது அவனைவிட்டு இந்திரச்செல்வம் நீங்கிப்போனது என்பதால் முன்பு அவனிடம் இந்திரச்செல்வம் பொருந்தியிருந்தது என்பது புலனாகிறது. ''சிட்டது'' என்பது சிரேஷ்டமானது என்ற வடமொழிச் சொல்லில் சிறந்தது என்ற பொருளைத்தரும். சிறந்ததாவது பிறன்மனை நயவாமையாகிய பெருங்குணத்தைக் குறித்தது. ''ஏவவும் செய்கலான், தான்தேறான், அவ்வுயிர் போம் அளவும் ஓர்நோய்'' என்பது திருக்குறள்-*848*. இந்திரச்செல்வம் என்பது இந்திரனிடமிருந்த செல்வம் எல்லாம் என்று பொருள்படும்.

17. "இலக்குவன் தன்னை வேலால் எறிந்து, உயிர் கூற்றுக்கு ஈந்தேன்;
அலக்கணில் தலைவரெல்லாம் அழுந்தினர்; அதனைக் கண்டால்,
உலக்குமால் இராமன்; பின்னர் உயிர்ப்பொறை உகவான்; உற்ற
மலக்கம் உண்டாகின் ஆக; வாகை என் வயத்தது" என்றான். (9716)

(அலக்கண்-துன்பம்; பொறை-சுமை; உலத்தல்-இறந்துபோதல்; மலக்கம்-துன்பம்/மனக்கலக்கம்; வாகை-வெற்றி)

இராவணன் மாலியவானை நோக்கி, ''இலக்குவனை நானே என் வேற்படைகொண்டு வீசி எறிந்து, அவன் உயிரை இயமனுக்குக் கொடுத்து விட்டேன்; அதனால் வானரத்தலைவர்கள் எல்லோரும் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள்; இராமபிரானும் இதனைக் கேட்டபின்னர், இந்நிலையைக் கண்டால் அவனுடைய உயிர்ச் சுமையைத் தாங்கிக் கொண்டிருக்க விரும்பாமல் உடனே இறந்துபடுவான்; தூதுவர்கள் கூறியபடி மூலபலப்படை முழுவதும் அழிந்துபோயிற்று என்ற செய்தி எனக்கு மனக்கலக்கத்தை உண்டாக்கியது உண்மையாக இருந்தாலும் இருக்கட்டும். இறுதியில் வெற்றி என்பக்கம்தானே நிற்கிறது'' என்கிறான் இராவணன்.

இலக்குவன் குற்றுயிராய்க் கிடக்கிறான் என்று எண்ணியே இராவணன் பேசுகிறான். அனுமன் சஞ்சீவி மலைகொண்டு வந்து இலக்குவனும், வானரர்களும் உயிர்பெற்று எழுந்துவிட்டனர் என்பதை அறியாமலேயே, நினைவிற் கொள்ளாமலேயே பேசுகிறான் இராவணன். மலக்கம் என்ற சொல் மனக்கலக்கம் என்பதன் புதுவடிவம் போலும். கம்பன் இதே சொல்லை ''மலக்கம் உண்டு உழலும் தேவர்'' எனப் பின்னால் மீட்சிப் படலத்தில் பயன்படுத்தப்போகிறான் என்பதையும் நினைவிற்கொள்க.

Koviloor Digital Library

18. இப்பொழுது தூதுவர்கள் இலக்குவன் உயிர் பெற்றமையைக் கூறுதல்

ஆண்டு, அதுகண்டு நின்ற தூதுவர், ''ஐய! மெய்யே,
மீண்டது, அவ்அளவின் ஆவி, மாருதி மருந்து மெய்யில்
தீண்டவும்; தாழ்த்தது இல்லை; யாரும் அச்செங்கணானைப்
பூண்டனர் தழுவிப் புக்கார்; காணுதி, போதி'' என்றார். (9717)

(ஆண்டு-அங்கு; மெய்-உடம்பு; செங்கணான்-இலக்குவன்; பூணுதல்-சூழ்ந்துகொள்ளுதல்; காணுதி-காண்பாயாக; போதி-செல்வாயாக; தாழ்த்தல்-தாமதித்தல்)

அங்கு போர்க்களத்தில் அனுமன் கொண்டுவந்த சஞ்சீவி மூலிகையினால் உயிர்பெற்றெழுந்ததைக் கண்கூடாகக் கண்ட வேறு தூதுவர்கள் ஓடிவந்து, இராவணனை நோக்கி, ''தலைவனே! அனுமன் சஞ்சீவி மலையிலிருந்த மூலிகைகளைக் கொண்டுவந்த அளவில், அந்த வாசனைக் காற்று இலக்குவன் மேனியில் பட்டவுடனே கொஞ்சம்கூடத் தாமதிக்காமல், இலக்குவனுடைய உயிர் மீண்டுவந்தது; இது உண்மையேயாகும். அப்போது அந்தச் சிவந்த கண்களையுடைய இலக்குவனை வானரர்கள் எல்லோரும் சூழ்ந்து தழுவிக்கொண்டு, அவர்கள் இராமபிரான் இருக்குமிடம் சென்றிருக்கிறார்கள்; இவற்றையும் நீ பொய் என்று கருதுவாயானால் நீயே நேரில் சென்று பார்த்து வருவாயாக!'' என்றனர்.

இங்கே ஒன்று நோக்கவேண்டும். முன்பு வந்த தூதுவர்கள் இராவணனிடம் இந்தச்செய்தியைக் கூறவில்லை. எனவேதான் இராவணன் அவ்வாறு பேசநேர்ந்தது; எனவே இந்தச் செய்தியை அவனுக்குக் கூறியவர்கள், அந்தக் காட்சியை நேரில் கண்டுநின்ற வேறு தூதுவர்கள் எனக் கொள்ளவேண்டியதிருக்கிறது. இராவணன் தாங்கள் சொல்லுவதைப் பொய் என்று மறுக்கவும்கூடும் என்று கருதிய தூதுவர்கள் நீயே வேண்டுமானால் நேரில் சென்று பார்த்துக்கொள்வாயாக என்றனர் என்பதாம்.

19. இராவணன் போர்க்களத்தைக் காணுதல்

தேறிலன், ஆதலானே, மறுகுறு சிந்தை தேற,
ஏறினன், கனகத்து ஆரைக் கோபுரத்து உம்பர் எய்தி,
ஊறின சேனை வெள்ளம் உலந்த பேர் உண்மை எல்லாம்,
காறின உள்ளம்நோவ, கண்களால் தெரியக் கண்டான். (9718)

(தேறுதல்-தெளிதல்; மறுகுறுதல்-கலக்கமுறுதல்; சிந்தை-மனம்/உள்ளம்; கனகம்-பொன்; உம்பர்-உச்சி; காறுதல்-செருக்குக்கொள்ளுதல்;

Koviloor Digital Library

தெரிய-தெளிவாக; ஊறுதல்-பெருகுதல்; உலத்தல்-அழிதல்; நோவுதல்-வருந்துதல்)

தூதுவர்கள் கூறிய செய்தியை உள்ளம் கொள்ளாது தெளிவற்ற நினைவில் இருந்த இராவணன், தானே நேரில் சென்று பார்த்தால்தான் முழு உண்மையும் தெரியவரும் என்று கருதி, தனது உள்ளத்தில் எழுந்த கலக்கம் தெளியும் பொருட்டு, பொன்னால் இயன்ற கோபுரத்தின் உச்சிமீது ஏறி, மிகப்பெருகியிருந்த மூலபலச்சேனை ஆயிரம் வெள்ளமும் இறந்து கிடந்த பெரிய உண்மையை எல்லாம், முன்பு காயப்பட்டுக் கிடந்த தன் உள்ளம் மேலும்வருந்தும்படி, தன் கண்களால் தானே தெளிவாகக் கண்டான்.

தூதுவர்கள் கூறியதை இராவணன் இது உண்மையா, பொய்யா என்று தெளிவாகத் தெரிந்து கொள்ளவிரும்பித் தானே கோபுரத்தின் மேலேறி நின்று பார்த்தபோதுதான் போர்க்களத்தின் கொடுமை அவனுக்குப் புரிந்தது. அதுதான் ''மறுகுறு சிந்தைதேற'' எனப்பட்டது. முன்பே தன் புதல்வர்கள், தம்பி, உற்றார், உறவினர், படைவீரர்கள், அரக்கர்கள் எல்லோரும் மடிந்துபோன துயரம் அவன் உள்ளத்தை மிகவும் வருத்திக் கொண்டிருந்தது. இப்போது இக்காட்சியைக் கண்டதும் மிக்க துன்பம் எய்தினான் என்பதுதான் ''காறின உள்ளம் நோவ'' என்றார் என்க. முன்பு வாலி இராமநாமம் பொறித்த அம்பைக் ''கண்களால் தெரியக் கண்டான்; இப்போது இராவணன் இராமன் அம்பால் மடிந்த மூலபலச்சேனையின் ஆயிரம் வெள்ளத்தையும் ''கண்களால் தெரியக் கண்டான்'' என்பதையும் ஒப்புநோக்கிப் பாருங்கள். ''காறுதல்'' என்ற சொல்லுக்குச் செருக்குக் கொள்ளுதல் என்ற ஒரு பொருளும் உண்டு. முன்பு வீரச்செருக்குக்கொண்டு ''வாகை என் வயத்தது'' என்று கூறினான் அல்லவா? அந்தச் செருக்குக் கொண்ட உள்ளம், இப்போது போர்க்களக் காட்சியை நேரே கண்டதும், மேலும் துன்புற்று வருந்தியது என்ற பொருளும் பொருந்திவரும். இலக்குவன் உயிர்பெற்று எழுந்துவிட்டான் என்று கூறியதைக்கூட நம்பினான் இராவணன். ஆனால் அற்பமான தனி ஒரு மனிதன் தனது மூலபலச்சேனை ஆயிரம் வெள்ளத்தையும் எப்படிக் கொன்றழித்தான் என்பதைத்தான் நம்ப முடியாமல் தானே நேரில் பார்க்க விழைந்தான் எனக்கொள்க.

20. கொய்தலைப் பூசல் பட்டோர், குலத்தியர் குவளை தோற்று
நெய்தலை வென்ற வாள் கண் குமுதத்தின் நீர்மை காட்ட,
கய்தலை உற்ற பூசல் கடலொடு நிமிரும் காலை,
செய்தலை உற்ற ஓசைச் செயலதும் செவியின் கேட்டான். (9719)

(குலத்தியர்-அரக்கர்குல மகளிர்; பூசல்-துன்பம்; நீர்மை-தன்மை; கய்-கை; பூசல்-அழுகைஒலி; நிமிர்தல்-பொங்கியெழுதல்; செயல்-

Koviloor Digital Library

தன்மை; பட்டோர்-இறந்துபோன அரக்கர்கள்; பூசல்-போர்; நெய்தல்-கருநெய்தல்/நீலோற்பலம்; குவளை-கருங்குவளை)

போரில் ஈடுபட்ட அரக்கவீரர்களின் தலைகள் பகைவரால் அறுத்தெறியப்பட்டன. அந்த அறுத்தெறியப்பட்ட தம் கணவர்களின் தலைகளை, அவர்கள் மனைவியராகிய அரக்கர்குல மகளிர், கண்டனர். இயற்கையிலேயே கரியநிறம் கொண்ட, கருங்குவளை மலரையும், கருநெய்தல் மலரையும் நிறத்தால் வென்று மேம்பட்ட கரிய ஒளிமிக்க வாள்போன்ற கண்கள், இப்பொழுது இத் துக்கத்தினால் அழுது அரற்றியதால், செவ்வாம்பல் மலர்போலச் சிவந்து காணப்பட்டது. அவர்கள் தங்கள் கணவன்மார்களின் தலைகளை ஒரு கையில் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையினால் துக்கம் தாளாமல் தம் தலையில் அடித்துக்கொண்டு புலம்பிக்கொண்டு நிற்கிறார்கள். இவர்களது புலம்பலோசை, ஊழியிறுதிக்காலத்தில் கடல்களெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒலிக்கும் பேராரவாரத்தை விஞ்சி நின்றது. அந்தப் புலம்பலோசையையும் இராவணன் தன் இருபது செவிகளாலும் கேட்டான்.

முன்பு கோபுரத்தின் உச்சியின்மீது ஏறி மூலபலச்சேனைகளின் உடல்கள் அழிவுற்றுக் கிடந்ததைத் தன் இருபது கண்களாலும் தெரியக் கண்ட இராவணன், இப்போது அவர்கள் மனைவியர்கள் அவர்களின் தலைகளைத் தம் கையில் கொண்டு அழுது அரற்றும் ஓசையையும் தன் இருபது காதுகளாலும் தெரியக்கேட்டான் என்பதாம். கண்ணால் கண்டு, காதால் கேட்டதன்பின்தான் உண்மை என்று நம்புகிறான். கண்ணால் பார்ப்பதும் பொய், காதால் கேட்பதும் பொய் என்ற உலக வழக்கில் இருக்கும் சொல்லுக்குச் சரியான எடுத்துக்காட்டு இராவணன் எனக் கொள்ளலாம். ''கருங்கண் சிவப்ப, கனிவாய் விளர்ப்ப'' என்பது திருக்கோவையார்; ''கைதலை வைத்தல்'' என்பது துயரத்தின் ஒரு மெய்வெளிப்பாடு. ''கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி'' என்பது திருவாசகம். போரில் இறந்துபட்ட, அரக்கர்களின் அறுக்கப்பட்ட தலைகளனைத்தும் கையில் கொண்டு அவர்கள் மனைவியர் அழுது அரற்றுவது இயல்பு. இன்னும் ஒரு படிமேலே சென்று அந்தத் தலையைத் தம் மார்பிலும் முகத்திலும் அணைத்து அழுது உயிர்விடுதலும் உண்டு. இதனை ''முலையும், முகனும் சேர்த்திக் கொண்டோன் தலையொடு முடிந்த நிலை'' என்கிறது தொல்காப்பியம்.

21. எண்ணும் நீர் கடந்த யானைப் பெரும் பிணம் ஏந்தி, யாணர்
மண்ணின் நீர் அளவும் கல்லி, நெடுமலை பறித்து, மண்டும்
புண்ணின் நீர் ஆறும், பல்பேய்ப் புதுப்புனல் ஆடும் பொம்மல்,
கண்ணின் நீர் ஆறும், மாறாக் கருங்கடல் மடுப்பக் கண்டான். (9720)

(எண்-எண்ணிக்கை; நீர்-நீர்மை/தன்மை; யாணர்-புதிய; மண்ணின்நீர்-ஊற்றுநீர்; கல்லுதல்-தோண்டுதல்; பறித்தல்-புரட்டுதல்/பிடுங்குதல்;

Koviloor Digital Library

மண்டுதல்-விரைந்து செல்லுதல்; புண்ணின்நீர்-இரத்தநீர்/குருதிப்புனல்; பொம்மல்-மகிழ்ச்சி/களிப்பு/பொலிவு; கண்ணின்நீர்-கண்ணீர்; ஆறு-தன்மை/இயல்பு; மடுத்தல்-கலத்தல்)

எண்ணி அளவிடற்கரிய தன்மையைக் கடந்த மிகுதியான யானைகளின் பிணங்களை அடித்துக்கொண்டும், புதிய ஊற்றுநீரை மண்ணின் எல்லையையும் கடந்து தோண்டிக்கொண்டும், நீண்ட பெரிய மலைகளை வேரோடு சாய்த்துக்கொண்டும், விரைந்து செல்லும் அரக்கர்களின் புண்களினின்றும் பெருகிய இரத்த ஆற்றில், பலவகைப்பட்ட பேய்கள், புதிய நீரில் ஆடுவதுபோல மகிழ்ச்சிகொண்டன. இவ்வளவையும் அள்ளிக்கொண்டு செல்லும் அந்த இரத்தஆறு, கரிய கடலில் சென்று கலப்பதை, இராவணன் தன் கண்களில் நீர்பெருகக் கண்டு கொண்டு நின்றிருந்தான்.

இராவணன் வருத்தப்பட்டுக் கண்களினின்றும் கண்ணீர் பெருக்கும் சில அரிய இடங்களில் இதுவும் ஒன்று. ''மாறாக் கருங்கடல்'' என்பது ஆழ்ந்த சொற்றொடர். இவ்வளவு பெரிய சிவந்த இரத்த ஆறு அந்தக் கடலில் சென்று கலந்தாலும், அது தன் நிறத்தில் மாறாது கருங்கடலாகவே காட்சியளித்தது என்பது ஒன்று. கடலினின்றும் மேகங்கள் படிந்து நீரை முகந்து கொண்டு சென்றாலும் சற்றும் வற்றாது அதே நிலையில் மாறாமல் இருக்கும் கருங்கடல் என்பது மற்றொன்று. ''நீர்'' என்ற சொல் முதலடியில் தன்மை என்ற பொருளையும், இரண்டாம் அடியில் ''எல்லை'' என்ற பொருளையும், மூன்றாம் அடியில் குருதிப்புனல் என்ற பொருளையும், நான்காம் அடியில் கண்ணீர் என்ற பொருளையும் தருதல் காண்க.

22. குமிழி நீரோடும் சோரிக்கனலோடும், கொழிக்கும் கண்ணான்,
தமிழ்நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை வழக்கில் சாய்ந்தார்,
அமிழ் பெருங்குருதி வெள்ளம் ஆற்று வாய் முகத்தின் தேக்கி,
உமிழ்வதே ஒக்கும் வேலை ஓதம் வந்து உடற்றக் கண்டான். (9721)

(சோரி-இரத்தம்; தனி-ஒப்பற்ற; சாய்தல்-இறந்துபடுதல்; தேக்குதல்-நிறையப்பருகுதல்; வேலை-கடல்; ஓதம்-அலைகள்; உடற்றுதல்-மோதுதல்; ஆற்றுவாய்-முகத்துவாரம்/சங்கமுகம்; முகம்-வாய்; தமிழ்நெறி-அகப்பொருள்நெறி; கொழித்தல்-பெருகுதல்; உமிழ்தல்-துப்புதல்/வெளிப்படுத்துதல்)

மிகுந்த துன்பத்தினால் கண்களினின்றும் குமிழிகளோடு வெளிப்படும் கண்ணீரோடும், சினக் கனலோடும் சுட்டெரிக்கின்ற கண்களையுடையவனான இராவணன், தமிழ்ப்பொருள் இலக்கணத்தில் கூறப்பட்டுள்ள வாரிவழங்குதல் என்னும் வழக்கப்படி, இராமபிரான் தன் வில்லிருந்து செலுத்திய அம்பு ஒன்று பத்தாக, பத்து நூறாக, நூறு ஆயிரமாகப் பெருகிக்கொண்டே சென்று அரக்கர்களைத் தரையில் சாய்த்தது.

Koviloor Digital Library

அவ்வாறு சாய்ந்தவர்கள் அமிழ்ந்து கிடக்கின்றவர்களின் இரத்தவெள்ளம் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடி, கடலின் முகத்துவாரத்தில் சென்று கலந்தது. எனினும் அளவுக்குமேல் பருகியதை வெளியே துப்புதல்போல, அந்த இரத்தவெள்ளம் திரும்பி அலைகளோடு சேர்ந்துவந்து போர்க் களத்தில் மோதிய காட்சியையும் இராவணன் கண்டான்.

அரக்கர் உடலினின்றும் பெருகிய இரத்தவெள்ளம் ஆறுபோல் ஓடிக் கடலில் கலந்தது. ஆனால் கடல் அதனை ஏற்றுக்கொள்ளாது, அதிகமாகப் பருகிய நீரை வெளியே உமிழ்வதுபோலத் திருப்பிப் போர்க்களத்திலேயே வந்து சேரும்படி வெளித்தள்ளியது என்பது கருத்து. கொண்டு கூட்டிப் பொருள்கொள்ள வேண்டிய கடினமான பாடல்.

இங்கே ''தமிழ்நெறி விளக்கம் அன்ன'' என்று ஒரு புது உவமையைக் குறிக்கிறான் கவிஞன். தமிழ்நெறி என்பது அகப்பொருள் இலக்கணத்தைக் குறிக்கும். அகப்பொருளில் களவு, கற்பு என்னும் இரு பெரும் பகுதிகள் உண்டு. அவை ஒவ்வொன்றும் தொகுத்தும், பகுத்தும், வகைப்படுத்தியும் விரிவுகொள்ளும். அதுபோல இராமபிரான் செலுத்திய ஒரு அம்பு பத்தாக, நூறாக, ஆயிரமாகப் பெருகி விரிந்து சென்று அரக்கர்களைத் தைத்தது என்கிறான் கவிஞன். ''தமிழ்நெறி விளக்கம்'' என்றே ஓர் அகப்பொருள் நூல் உண்டு. களவு ஒழுக்கம் பதினேழு வகையாகவும் அதில் ஒருவகை மட்டும் மீண்டும் பதினைந்து வகையாகவும் பிரியும். அதுபோல இராமபிரான் அம்பு ஒன்று பலவாகப் பிரிந்து விரிந்து சென்றன என்பதாம்.

''ஆற்றுவாய்'' என்பது ஆறு கடலோடு கலக்கும் இடமாகிய முகத் துவாரம் என்க. இது சங்கமுகம் எனவும் வழங்கப்படும்; மூன்று ஆறுகள் கடலில் கலக்குமிடம் திரிவேணி சங்கமம் என்பதுபோல எனக்கொள்க;

23. விண்களிற் சென்ற வன்தோள் கணவரை, அலகை வெய்ய
புண்களில் கைகள் நீட்டி, புதுநிணம் கவர்வ நோக்கி,
மண்களில் தொடர்ந்து, வானில் பிடித்து, வள் உகிரின் மானக்
கண்களைச் சூன்று நீக்கும் அரக்கியர் குழாமும் கண்டான். (9722)

(வன்-வலிய; அலகை-பேய்கள்; வெய்ய-கொடிய; நிணம்-கொழுப்பு; மண்கள்-தரை/நிலம்; வள்-கூரிய; உகிர்-நகங்கள்; சூன்றல்-தோண்டுதல்/பிடுங்குதல்; குழாம்-கூட்டம்; மான-பெரிய)

இராமபிரான் செலுத்திய அம்பினால் இறந்துபட்டு விண்ணுலகு எய்திய, வலிய தோள்களையுடைய அரக்க வீரர்களின் மேனியில் பட்ட புண்களைத் தம் கைகளை நீட்டி, புதுக்கொழுப்பைப் பற்றியிழுக்க எண்ணுகின்ற கொடிய பேய்களை அவர்களின் மனைவியர் பார்த்து விட்டனர். அவருடன் உடன்கட்டை ஏறுதற்காக அவர்தம் கணவர் உடலைப் பாதுகாக்க எண்ணும்போது இந்தப் பேய்கள் இவ்வாறு செய்தன. ஆதலின், அவற்றைத் தொடர்ந்து தரையிலும் விண்ணிலும்

Koviloor Digital Library

சென்று போராடி, தங்களது கூரிய நகங்களைக் கொண்டு, அவற்றின் பெரிய கண்களைத் தோண்டி எடுக்கும் அரக்கியர் கூட்டத்தையும் இராவணன் கண்டான்.

போர்க்களத்தில் உயிர்துறந்து விண்ணுலகு எய்திய தம் கணவர்களுடன் தாமும் உயிர்நீக்கக் கருதி அவர்களின் உடலைப் பாதுகாக்க எண்ணியிருக்கும் அவர்கள் மனைவிமார்களின் எதிரே, கொடிய பேய்கள் தங்கள் கைகளை நீட்டி அவ்வரக்கர்களின் உடலைத் தின்பதற்கு முற்பட்டன. இதனைக்கண்ட அவ்வரக்கியர்கள் அவற்றை மண்ணிலும் விண்ணிலும் துரத்திச் சென்று அவற்றின் பெரிய கண்களைத் தமது கூரிய நகங்களால் தோண்டி எடுத்தார்கள். அந்த அவலக்காட்சியையும் இராவணன் கண்டான் என்பதாம்.

''மண்கள்'' என்று பன்மையில் கூறியது பலவகைப்பட்ட நிலங்களைக் குறித்தது என்க. விண்ணில் செல்லும் பேராற்றலும் பெற்றிருந்தனர் அரக்கியர் என்பதும் பேய்களின் கண்களைத் தோண்டும் வீரத்திறமும் வன்மையும் படைத்தவர் என்பதும் புலப்படுகிறது. ''உலகத்தார் உண்டு என்பது இல் என்பான், வையத்து அலகையா வைக்கப்படும்'' என்பது குறள்-850. விழுப்புண் பட்டவர்களின் புண்களைப் பேய்கள் கைநீட்டித் தொடுவதைத் ''தொட்டகாஞ்சி'' என்கிறது புறத்திணை.

24. இராவணன் கோபுரத்திவிருந்து இறங்கி, அரசவை அடைதல்

விண் பிளந்து ஒல்க ஆர்க்கும் வானரர் வீக்கம் கண்டான்;
மண் பிளந்து அழுந்த ஆடும் கவந்தத்தின் வருக்கம் கண்டான்;
கண் பிளந்து அகல நோக்கும் வானவர் களிப்பும் கண்டான்;
புண் பிளந்து அனைய நெஞ்சன், கோபுரத்து இழிந்து போந்தான்.
(9723)

(ஒல்குதல்-அசைதல்; வீக்கம்-மிகுதி கவந்தம்-உடற்குறை/முண்டங்கள்; வருக்கம்-தொகை; பிளத்தல்-திறத்தல்; இழிதல்-இறங்குதல்)

கோபுரத்தின் மேலேறிய இராவணன், விண்ணுலகமே பிளந்து போகும்படி அசைந்தாடி ஆரவாரிக்கும் குரங்குச் சேனையின் மிகுதியைப் பார்த்தான்; நிலமே பாதாளத்திற்குள் அழுந்திப் போகும்படியாகக் கூத்தாடுகின்ற தலையற்ற உடல்களாகிய அரக்கர்களின் கவந்தங்களின் தொகுதியைப் பார்த்தான்; இமையாநாட்டமுடைய தேவர்கள் கூடத் தங்கள் கண்களை அகல விரித்துப் போர்க்களத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைவதைப் பார்த்தான். இவை எதனையும் பார்க்கப் பொறுக்காதவனாகி, நெஞ்சத்தின் மிக்கதுன்பம், புண்போல் துன்புறுத்த தான் ஏறிநின்ற கோபுரத்தினின்றும் இறங்கிக் கீழே வந்தான்.

Koviloor Digital Library

தான் எதிர்பார்த்துச் சென்றதற்கு மாறாகத் துன்பம் நிறைந்த காட்சிகளையே காண நேர்ந்ததால் மனம் புண்பட்டுக் கீழே இறங்கி வந்தான் இராவணன் என்பதாம்.

25. நகை பிறக்கின்ற வாயன், நாக்கொடு கடைவாய் நக்கப்
புகை பிறக்கின்ற மூக்கன்; பொறி பிறக்கின்ற கண்ணன்;
மிகை பிறக்கின்ற நெஞ்சன்; வெஞ்சினத்தீ மேல் வீங்கி,
சிகை பிறக்கின்ற சொல்லன்; அரசியல் இருக்கை சேர்ந்தான். (9724)

(பிளத்தல்-தோன்றுதல்; மிகை-செருக்கு; சிகை-கொழுந்து; இருக்கை-இருப்பிடம்; அரசியல் இருக்கை-அரசவை/அத்தான மண்டபம்; கொடு-வளைந்த)

கோபுரத்திலிருந்து இறங்கிய இராவணன் வெகுளிமிக்குத் தோன்றுகின்ற சிரிப்பை உடைய வாயையுடையவனாய், நாக்கைக் கொண்டு வளைந்த கடைவாயை நக்கிக்கொண்டிருப்பவனாய், மூக்கினின்றும் புகை தோன்றுகின்றவனாய், நெருப்புப்பொறி பறக்கும் கண்களையுடையவனாய், செருக்கு மிக்குத் தோன்றுகின்ற நெஞ்சத்தினை உடையவனாய், கொடுமையான கோபத்தீ மேலும் பொங்கியெழுந்து கொழுந்து விட்டெரிகின்ற சொற்களையுடையவனாய், தன்னுடைய அரசியல் இருப்பிடமான அரசவையை அடைந்தான்.

சீற்றத்தின் மெய்வெளிப்பாடு விளக்கப்படுகிறது. அரசவையை அத்தான மண்டபம், ஆத்தான மண்டபம் அத்தாணி மண்டபம் என்றும் கூறுவதுண்டு.

இராவணன் களம்காண் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

34. இராவணன் தேர்ஏறு படலம் [35 பாடல்கள்]

இராமபிரானோடு போர்செய்வதற்காக, இராவணன் தேரில் ஏறிப் போர்க்களத்திற்குச் செல்லும் நிகழ்ச்சிகளை விவரிக்கும் பகுதி என்பதால் ''இராவணன் தேர்ஏறு படலம்'' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இது 35 பாடல்களைக் கொண்டது; சில சுவடிகளில் இராவணன் தேர் ஏறுகின்ற நிகழ்வுகளும், இராமபிரான் தேர் ஏறுகின்ற நிகழ்வுகளும் ஒரே படலமாக ''தேர் ஏறு படலம்'' எனவும் குறிக்கப்பெற்றிருக்கிறது. ஒரேஒரு சுவடி மட்டும் ''இருவர் தேரேறு படலம்'' எனக் குறிப்பிட்டிருக்கிறது. பெரும்பாலான அச்சுப்பிரதிகளும், சென்னைக் கம்பன்கழகச் செம்பதிப்பும் இவற்றைத் தனித்தனியாக இருபடலங்களாகவே பிரித்துக் காட்டியிருக்கின்றன. இராவணன் தேர் ஏறுதற்கு முன்பு சிவபெருமானை வழிபட்டான் என்பதும், தேருக்கு முறைப்படி அருச்சனை செய்தான் என்பதும் வான்மீகத்தில் விரிவாகப் பேசப்படவில்லை. கம்பன் குறிப்பாகப் பேசுகிறான் என்பதும் கருதத்தக்கது.

இப்படலத்துள், இராவணன் மகோதரனை அழைத்து எஞ்சிய படைவீரரை உடனே போருக்கு எழும்படி முரசறைந்து அறிவிக்கக் கூறுதல்; இராவணன் தானே போர்க்கோலம் பூணுதல்; சிவபெருமானை வழிபட்டுத் தேருக்கு முறைப்படி அருச்சனை செய்தல்; தானதர்மங்கள் செய்தல்; தேர் ஏறுதல்; ஒன்று சீதை வயிறலைத்து அழவேண்டும் அல்லது தன் மனைவி மண்டோதரி அவ்வாறு செய்தல் வேண்டும் என்று வஞ்சினங்கூறிப் புறப்படுதல்; போர்க்களத்தில் இராவணன் தோன்றியதும் உலகில் உற்ற மாற்றங்கள்; அவற்றைக் கண்டு சுக்கிரீவன் முதலியோர் அஞ்சி நடுங்குதல்; இராவணன் போர்க்களத்திற்குச் சேனையுடன் வந்துவிட்ட செய்தியை வீடணன் இராமபிரானுக்குத் தெரிவித்தல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராவணன் மகோதரனுக்குக் கட்டளையிடுதல்

பூதரம் அனைய மேனி, புகைநிறப் புருவச் செந்தீ,
மோதரன் என்னும் நாமத்து ஒருவனை முறையின் நோக்கி,
"ஏது உளது இறந்திலாதது இலங்கையுள் இருந்த சேனை
யாதையும் எழுக" என்று, ஆனைமணி முரசு எற்றுக!" என்றான்.

(9725)

Koviloor Digital Library

(பூதரம்-மலை; நாமம்-பெயர்; ஒருவன்-ஒப்பற்ற வீரன்; மணி-அழகிய; எற்றுதல்-சாற்றுதல்/பறையறிவித்தல்; ஏது-எவ்வளவு; யாதையும்- யாவற்றையும்/எல்லாவற்றையும்)

இராவ்ணன், மலைபோலும் பருத்த உடம்பை உடையவனும், சினத்தினால் புகைபோன்று கரியநிறம் கொண்ட புருவத்தையும், அதனால் நெருப்புப்போல் சிவந்த கண்களையும் உடையவனுமான மகோதரன் என்னும் ஒப்பற்ற வீரனுமாகிய தன் அமைச்சனை நேருக்குநேர் பார்த்து, ''இலங்கை நகருக்குள், இறந்துபோகாது உயிருடன் இருக்கும் வீரர்கள் அனைவரையும் போர்க்களத்திற்கு விரைந்து கிளம்புமாறு, ஆனையின்மேல் அழகிய போர்முரசத்தை ஏற்றிப் பறையறிவிக்கச் செய்வாயாக!'' என்று கட்டளையிட்டான்.

பூமியைத் தரித்துக் கொண்டிருப்பதால்-பூதரம் என்பது மலைக்குக் காரணப்பெயர். கண்கள் நெருப்புப்போல் சிவந்திருத்தலால் புருவங்கள் கரியநிறமடைந்தன என்ற நயம் நோக்குக. ''மோதரன்'' என்பது மகோதரன் என்ற சொல்லின் திரிபு. மகாஉதரன்-பெரிய வயிற்றையுடையவன் என்பது பொருள். இவன் அமைச்சர்களுள் ஒருவன்; படைத்தளபதியும்கூட; இவனைப்பற்றி முன்பும் பல இடங்களில் குறிக்கப் பட்டிருப்பதையும் நினைவுகூர்க. ''ஒருவன்'' என்பது ஒப்பற்ற வீரன் என்ற பொருளைத்தரும். ''முறையின் நோக்குதல்'' என்பது அவன் வகிக்கின்ற பதவிக்குத் தகுந்தாற்போல், அப்பதவிக்குரிய மரியாதையுடன் நோக்குதல் என்ற உட்பொருளைத்தரும். ''இறந்திலாதது யாதுளது'' என்பது போர்க்களத்திற்கு அனுப்பப்படாமல், இலங்கையிலேயே இருந்து கொண்டு நகர்க் காவல் செய்துவரும் படைகள் எனக்கொள்க.

2. எற்றின முரசினோடும், ஏழ்இரு நூறுகோடி
கொற்றவாள் நிருதர் சேனை குழீஇயது; கொடித்திண் தேரும்,
சுற்றுறு துளைக் கைம்மாவும், துரகமும், பிறவும் தொக்க
வற்றிய வேலை என்ன, இலங்கை ஊர் வறளிற்று ஆக. (9726)

(எற்றிய-சாற்றிய; ஏழ்இரு-பதினான்கு; கொற்றம்-வெற்றி; குழீஇயது-குழுமியது; மா-யானை; துரகம்-குதிரை; பிற-காலாட்படை; வறள்தல்-வற்றிப்போதல்; தொகுதல்-ஒருங்கே கூடுதல்/குழுமுதல்; வேலை-கடல்)

அவ்வாறு ஆனை அணிமுரசம் முழக்கப்பட்டவுடன், பதினான்கு நூறுகோடி என்னும் அளவினதான, வெற்றிபொருந்திய வாட்படையை உடைய அரக்கர்சேனை ஒருங்கே கூடியது. கொடிய கொடிகள் கட்டப் பட்ட திண்ணிய தேர்களும், சுற்றிக்கொள்ளும் தன்மையுள்ள துளைகளை யுடைய துதிக்கைகளையுடைய யானைகளும், குதிரைகளும், மற்றும்

Koviloor Digital Library

காலாட்படைகளும் ஒருங்கே வந்துசேர, வற்றிப்போன கடலைப்போல, இலங்கை மாநகரம் ஏதுமில்லாது வறுமையுற்றுக் காட்சியளித்தது.

''குழீஇயது'' என்பது சொல்லிசை அளபெடை. குழுமியது என்ற பொருளைத்தரும். இராவணன் கட்டளைப்படி நால்வகைப் படைகளும் சேர்ந்து பதினான்கு நூறுகோடி என்னும் அளவினதாகத் திரண்டன. எனவே இலங்கை மாநகரம் ஒன்றுமேயில்லாத, வறண்ட கடல்போல வறுமை யுற்றுத் தோற்றமளித்தது என்பதாம். பதினான்கு நூறுகோடி என்பதால் ஆயிரத்து நானூறுகோடி என்னும் அளவினதான அரக்கர்படை இலங்கை நகருக்குள் நகர்க்காவல் புரிந்து கொண்டிருந்தன என்பது பெறப்படுகிறது.

3. ஈசனை, இமையா முக்கண் ஒருவனை, இருமைக்கு ஏற்ற
பூசனை முறையின் செய்து, திருமறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி, மற்றும் வேட்டன வேட்டோர்க்கெல்லாம்
ஆசுஅற நல்கி, ஒல்காப் போர்த்தொழிற்கு அமைவதானான். (9727)

(ஈசன்-எல்லாச்செல்வங்களையும் உடையவன்/ஐஸ்வரியம் உடையவன்/சிவபெருமான்; ஒருவன்-தனிமுதல்வன்; இருமை-இம்மை மறுமை; பூசனை-வழிபாடு; மறை-வேதங்கள்; தானம்-கொடை; வீசுதல்-வரையாது வழங்குதல்; வேட்டல்-விரும்புதல்; ஆசு-குற்றம்; ஒல்குதல்-தளர்தல்; அமைதல்-பொருந்துதல்)

எல்லாச் செல்வங்களையும் உடையவனானவனும், சூரியன், சந்திரன், அக்னி என்னும் மூன்று இமையாநாட்டமுடையவனுமான சிவபெரு மானை, இம்மை மறுமைப் பயன்கள் எல்லாம் வந்து சேரும்படி வழிபாடு செய்து நிறைவேற்றி, சிறந்த வேதங்களில் கூறப்பட்டிருப்பதுபோல் தானதர்மங்களையும் அறச்செயல்களையும் செய்து, வேண்டுபவர் வேண்டிய வண்ணம் குற்றமில்லாது வரையாது வாரி வழங்கி, சிறிதும் தளர்ச்சியில்லாத போர்செய்வதற்குப் பொருந்தியவன் ஆனான் இராவணன்.

எல்லா ஐஸ்வரியங்களுக்கும் தலைவன் என்பதால் சிவபெருமானுக்கு ஈசன் என்பது இடுகுறிப்பெயர். ஒருவன் இருமை, முக்கண் என்று வரிசைப் படுத்திக் கூறிய நயம் நோக்குக. ''வீசுதல்'' என்பது வாரி வழங்குதலைக் குறிக்கும். முன்பும் திருஅவதாரப் படலத்தில், தசரதன், நான்கு குழந்தைகள் பிறந்த செய்தியைக் கேட்டு, எல்லோருக்கும் வாரி வழங்கினான் என்று கூறும்போது கவிஞன் இதே சொல்லைப் பயன்படுத்தி இருப்பதையும் இங்கு நினைவுகூர்க. ''தருகை நீண்ட தசரதன்'' என்றும் பாயிரத்தில் தசரதன் பேசப்பட்டிருப்பதையும் நினைவுகூர்க. போர்த் தொழிற்கு அமையும்போது இத்தகைய தானதர்மங்கள் செய்வது பேரரசற் குரிய முறை என்பதறிக. இருமை என்பது இக, பரம் எனப்படுகிறது.

Koviloor Digital Library

இம்மையில் வெற்றியையும், மறுமையில் பரம்பொருளையும் அடைதல் என்பது பொருள். இகம்-வெற்றி/புகழ்; பரம்-வீடுபேறு

4. இராவணன் போர்க்கோலம் பூணுதல். [14 பாடல்கள்]

அருவி அஞ்சனக் குன்றிடை ஆயிரம் அருக்கர்
உருவினோடும் வந்து உதித்தனராம் என ஒளிர,
கருவி நான்முகன் வேள்வியில் படைத்ததும், கட்டிச்
செருவில் இந்திரன் தந்த பொன் கவசமும், சேர்த்தான். (9728)

(அஞ்சனம்-மை/கரியநிறம்; அருக்கர்-சூரியர்கள்; உதித்தல்-தோன்றுதல்; ஒளிர்தல்-ஒளிவீசுதல்; கருவி-நிமித்தகாரணன்; நான்முகன்-பிரமன்; படைத்தல்-தோற்றுவித்தல்/உண்டாக்குதல்; செரு-போர்; சேர்த்தல்-அணிதல்/பூணுதல்)

அருவிகள் தோன்றுகின்ற, மை போன்ற கரியநிறமுடைய மலைகளின் இடையில், ஆயிரக்கணக்கான சூரியர்கள் தம் ஒளிமிக்க ஒளிக் கற்றைகளைக் கொண்ட உருவத்தோடு வந்து தோன்றினார்கள் என்று கூறும்படி ஒளிவீசுவதும், உலகப் படைப்பிற்கு நிமித்த காரணனான பிரம தேவன் வேள்வியில் உண்டாக்கியதும், முன்பு இந்திரசித்து, இந்திரனைப் போரில் வென்றபோது, தோற்றோடிய இந்திரன் தந்துவிட்டுப் போனதுமான பொன்னாலாகிய அழகிய கவசத்தைத் தன் உடம்பில் பூண்டு கொண்டான் இராவணன்.

இராவணன் ஒன்றன்மேல் ஒன்றாக இரண்டு கவசங்களை அணிந்து கொண்டான் என்பது தெரியவருகிறது. ஒன்று இவ்வுலகைப் படைத்த பிரமதேவன் தோற்றுவித்தது; மற்றொன்று இந்திரசித்திடம் தோற்றோடிய இந்திரன் தந்தது என்பது தெரியவருகிறது. அல்லது இந்திரன் முன்பு அணிந்திருந்த கவசம் அவனுக்குப் பிரமனால் தரப்பட்டது என்று கூறுவதும் பொருந்தும். பிரமதேவன் தோற்றுவித்த கவசத்தின் ஒளி, ''அருவி அஞ்சனக் குன்றிடை ஆயிரம் அருக்கர் உருவினோடும் வந்து உதித்தனராம் என ஒளிர்ந்தது'' என்பதாம். கரிய நிறத்தவனான இராவணன் மேனிக்கு அஞ்சனக் குன்று உவமை. அவன் அணிந்திருக்கின்ற வெள்ளை நிறமுடைய மாலைகளுக்கு வெள்ளிய நீரையுடைய அருவிகள் உவமை; அவன் அணிந்திருக்கின்ற பொற் கவசத்தின் ஒளிக்கு ஆயிரம் அருக்கர்களின் ஒளி உவமை.

5. வாள் வலம்பட, மந்தரம் சூழ்ந்த மாசுணத்தின்
தாள் வலந்து ஒளிர் தமனியக் கச்சொடும் சாத்தி;
கோள் வலந்தன குவிந்தனவாம் எனும் கொள்கை
மீள்வுஇல் கிம்புரி மணிக்கடி சூத்திரம் வீக்கி. (9729)

Koviloor Digital Library

(மாசுணம்-பெரும் பாம்பு/வாசுகி; தமனியம்-பொன்; வலம்படுதல்-வலப்புறம்/வலப்பக்கம்; சார்த்துதல்-சேர்த்தல்/கட்டுதல்; வலத்தல்-சுற்றுதல்; குவிதல்-குழுமுதல்; கிம்புரி-மகரம்/தொடையணி; மணி-இரத்தினம்; வீக்குதல்-கட்டுதல்; தாள்-கயிறு; வலத்தல்-பின்னுதல்; கோள்-கிரகங்கள்; கச்சை-ஒருவகை உடை; கடிசூத்திரம்-ஒருவகைப் போர்அணி/அரைஞாண்; கச்சு-அரைப்பட்டிகை/இடுப்பில் அணிவது; கொள்கை-இயல்பு) (குளகப்பாடல்)

வாட்படையை வலப்பக்கத்தில் பொருத்திக்கொண்டான்; பாற்கடல் கடையும்போது மந்தரமலையைச் சுற்றிக் கட்டப் பட்டிருந்த பெரிய பாம்பாகிய வாசுகி என்னும் கயிறு சுற்றப்பட்டதுபோல, பொன்னாலாகிய கச்சை உடுத்துக்கொண்டான்; கிரகங்கள் சுற்றி வந்து ஓரிடத்தில் சேர்ந்து நிற்கும் முறைபோல, மீட்சியில்லாத கிம்புரி என்னும் மகரமீன் வடிவு கொண்ட, இரத்தினங்களாலான கடிசூத்திரம் என்னும் அரைஞாணை இடுப்பில் கட்டிக்கொண்டான்.

உடைவாள், பொற்கச்சு, கடிசூத்திரம்-அரைஞாண் முதலியவற்றைத் தன் உடலில் பூண்டுகொண்டான் என்பதாம். கடிசூத்திரம் என்பது இடுப்பைச் சுற்றிக் கட்டப்படும் அரைப்பட்டிகை என்க. கிம்புரி என்பது தொடையில் அணியும் அணி என்றும் கூறுவதுண்டு. இது ''குறங்குசெறி'' எனவும் வழங்கப்பெறும், குறங்கு-தொடை; கிம்புரி என்பது ஒருவகைத் தோள் அணியுமாகும்.

6. மறை விரித்தன்ன மாடுறு மான மாக்கலுழன்
சிறை விரித்தன்ன கொய்சகம் மருங்குஉறச் சேர்த்தி;
முறை விரித்தன்ன முறுக்கிய கோசிக மருங்கில்
பிறை விரித்தன்ன வெள்எயிற்று அரவமும் பிணித்து. (9730)

(மறை-வேதங்கள்; மானம்-பெருமை; கலுழன்-கருடன்; சிறை-சிறகு; கொய்சகம்-கொய்யப்பட்ட ஆடை; மருங்கு-இடை; சேர்த்தல்-உடுத்துதல்; முறை-நூல்; முறுக்குதல்-நூற்கப்படுதல்; கோசிகம்-பட்டாடை; விரித்தல்-வெளிப்படுத்துதல்; எயிறு-பற்கள்; பிணித்தல்-கட்டுதல்)

வேதங்களை விரித்து வெளிப்படுத்தினாற்போன்றும் பெருமைமிக்க பெரிய கருடன் தன் சிறகுகளை விரித்தாற்போன்றும், தோன்றுகின்ற மடிப்புகள் கொய்யப்பட்ட ஆடையை இடையில் அமையுமாறு உடுத்திக் கொண்டான்; நூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி முறுக்கேற்றப்பட்ட வெண்பட்டாடையை இடுப்பிலும், பிறைச்சந்திரன் விரிந்து நிற்பது போன்ற வெண்மையான பற்களையுடைய பாம்பினை, அவ்வாடை அவிழாவண்ணம் இடையில் இறுக்கக் கட்டிக் கொண்டான்.

Koviloor Digital Library

வேதங்கள் சாகைகளாகப் பகுக்கப்பட்டிருப்பதுபோல், அவன் இடையில் கட்டியிருக்கும் வெண்பாட்டாடையும் கொய்யப்பட்ட மடிப்புகள் நிறைந்தன என்பது பெறப்படுகிறது. அந்த வெண்பட்டாடை அவிழ்ந்துவிடக் கூடாதே என்பதற்காக, வெண்மையான பற்களையுடைய பாம்பினை இடுப்பில் இறுக்கிக் கட்டிக்கொண்டான் என்பதை நோக்குக. ''கொய்சகம்'' என்ற சொல் மருவி ''கொசுவம்'' என்று இன்றும் தமிழகத்தில் பல பகுதிகளில் சேலையின் மடிப்பு என்ற பொருளில் பயன்படுத்துவதை இங்கு நினையலாம். கொய்சகம் என்பது ஓரம் கொய்து சுருக்கப்பட்ட மடிப்புகளை உடையது என்ற விரிந்த பொருளைத்தரும். பாம்பின் பற்கள் சற்று வளைந்து வெண்மையாக இருக்குமென்பதால் ''பிறைவிரித்தென்ன வெள்ளெயிற்று அரவமும்'' என்றார் என்க. கருடன்தான் பாம்பினைக் கவ்வும் என்பது நாம் அறிந்தது. இங்கே கம்பன், கருடன் சிறகுகள் போன்ற மடிப்புகள் கொண்ட வெண்பட்டாடையைப் பாம்பு என்னும் கயிறு கொண்டு இறுக்கிக் கட்டிக்கொண்டான் என்று கூறுவதில் உள்ள நகைச்சுவையை நுனித்து உணர்க.

7. மழைக் குலத்தொடு வான் உரும்ஏறு எலாம் வாரி
இழைத் தொடுத்தன அனைய வாள் உடை மணி ஆர்த்து;
முழைக் கிடந்த வல் அரிஇனம் முழங்குவ போல்வ,
தழைக்கும் மின்ஒளிப் பொன் மலர்ச் சதங்கையும் சாத்தி. (9731)

(மழை-மேகம்; உரும்ஏறு-பேரிடி; வாள்-ஒளி; மணி-மாணிக்கம்; முழை-குகை; வல்-வலிய; அரிஇனம்-சிங்கக் கூட்டங்கள்; இழைத்தல்-அமைத்தல்; தழைத்தல்-செழித்துத் தோன்றுதல்)

வானில் தோன்றும் மேகக்கூட்டங்களோடு, இடியிலிருந்து தோன்றும் மின்னல்கள் முதலானவற்றையெல்லாம் வாரி எடுத்து இழைத்து அமைத்தது போன்ற ஒளிமிக்கதும், மாணிக்கக்கற்கள் பதிக்கப் பெற்றது மான உடைகளை இடையில் கட்டிக்கொண்டான்; குகைகளில் உறங்கிக் கிடந்த வலிய சிங்கக்கூட்டங்களின் பேரொலி போன்று மிக்க ஒலி யெழுப்புவனவும், மின்னலைப் போன்று ஒளிபரப்புவனவுமான அழகிய பொன்னால் இயற்றப்பட்டதும், மலர்போன்று மென்மையானதுமான சதங்கைகளைத் தன் இரு பாதங்களிலும் கட்டிக்கொண்டான்.

அவன் இடையில் அணிந்திருந்த ஒளிமிக்க ஆடைகளுக்கு இடியுடன் கூடிய மின்னல் உவமை; அவன் கால்களில் அணிந்திருந்த சதங்கைகள் எழுப்பிய ஒலிக்குக் குகையில் உறையும் சிங்கங்களின் கர்ச்சனை உவமை. ''மலர்ச்சதங்கை'' என்ற சொல்லுக்கு மலர்வடிவாக அமைந்த சதங்கை என்ற பொருளும் பொருந்தும். ''உரும்ஏறு'' என்பது இங்கே ஆகுபெயராய் இடியுடன்கூடிய மின்னலைக் குறித்தது என்க.

Koviloor Digital Library

8. உரும் இடித்தபோது அரவுஉறு மறுக்கம், வான்உலகின்,
இரு நிலத்திடை, எவ்வுலகத்திடை, யாரும்
புரி தரப்படும் பொலங்கழல் இலங்குறப் பூட்டி;
சரியுடைச் சுடர் சாய் நலம் சார்வுறச் சாத்தி. (9732)

(அரவு-பாம்பு; மறுக்கம்-கலக்கம்; இரு-பெரிய; புரிதருதல்-அடைதல்; பொலன்-பொன்; கழல்-வீரகண்டை; இலங்குதல்-விளங்குதல் /பொலிதல்; நலம்-அழகு; சாத்துதல்-அணிதல்; படுதல்-உண்டாக்குதல்; பூட்டுதல்-கட்டிக்கொள்ளுதல்; சாய்-அழகு/நிறம்)

இடி இடிக்கும்போது பாம்பு அடைகின்ற கலக்கமும், போன்று போன்று விண்ணுலகத்தில் உள்ளவர்களும், பெரிய நிலவுலகத்தில் உள்ளவர்களும், எந்த உலகத்தில் உள்ளவராயினும், யாராயிருந்தாலும், கேட்கும்படி தன் கால்களில் பொன்னாலான அழகிய வீரக்கழல்களை நன்கு பொலிந்து விளங்கும்படி கட்டிக்கொண்டான்; சரிந்து விழுகின்ற ஒளிமிகுந்த ஆடைகளை மேலும் அழகுபொலியும் வண்ணம் அணிந்து கொண்டான்.

இராவணன் தன் கால்களில் கட்டியிருக்கும் வீரக்கழலின் ஓசைகேட்டு, இடியோசை கேட்ட நாகம்போல எல்லா உலகங்களும் நடுங்கும் என்பது கருத்து.

9. நால் அஞ்சு ஆகிய கரங்களில், நனந்தலை அனந்தன்
ஆலம் சார் மிடற்று அருங்கறை கிடந்தென, இலங்கும்
கோலம் சார் நெடுங்கோதையும் புட்டிலும் கட்டி;
தாலம் சாா்ந்த மாசுணம் எனக் கங்கணம் தழுவ. (9733)

(நால்அஞ்சு-இருபது; தாலம்-பனை; மாசுணம்-பெரியபாம்பு; தழுவுதல்-பொருந்தியிருத்தல்; அனந்தன்-ஆதிசேஷன்; ஆலம்-நஞ்சு; இலங்குதல்-விளங்குதல்; கோலம்-அழகு/வடிவு; கோதை-விரல்உறை/ முன்கைத் தோல்கட்டு; நனந்தலை-நடுவிடம்/அகன்றஇடம்; புட்டில்-விரல்உறை/விரல்சரடு; கறை-களங்கம்; கங்கணம்-வளையல்கள்/ வாகுவலயம்)

ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷனின் நஞ்சுபொருந்திய கழுத்தில்போக்குதற்கரிய களங்கம்படிந்துகிடப்பதைப்போலவும், பனை மரத்தைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருக்கும் நீண்ட நாக்கையுடைய பாம்பு போலவும், இராவணன் தனது இருபது கைகளிலும் அகன்ற கங்கணம் என்னும் முன்கை வளையல்களை இட்டுக்கொண்டான்; மேலும் அழகு பொருந்தி விளங்குகின்ற நீண்ட முன்கைக் கட்டினையும், விரல் உறையையும் கட்டிக்கொண்டான்.

Koviloor Digital Library

இராவணன் கையில் கட்டிக்கொள்ளும் கங்கணத்திற்குப் பனைமரத்தைச் சுற்றியிருக்கும் நீண்ட, நாக்கையுடைய பாம்பு உவமை. அவன் கைகளில் அணிந்திருக்கும் கரிய நிறமுடைய முன்கை உறைக்கும், விரல் உறைக்கும், ஆதிசேஷனின் விஷம்படிந்த கருப்புக் கழுத்து உவமை. அவனுடைய நீண்ட கைகளுக்கு உயர்ந்த பனைமரமும், நெளிந்து வளைந்த கங்கணத்திற்கு நெளிந்து வளைந்து செல்லும் பாம்பும் உவமைகள்.

10. கடல் கடைந்த மால்வரையினைச் சுற்றிய கயிற்றின்
அடல் கடந்த தோள் அலங்கு போர் வலயங்கள் இலங்க;
உடல் கடைந்த நாள் ஒளியவன் உதிர்த்த பொன் கதிரின்
சுடர் தயங்குற, குண்டலம் செவியிடைத் தூக்கி. (9734)

(மால்-பெரிய; வரை-மலை/மந்தரமலை; கயிறு-வாசுகி என்னும் பாம்பு; அடல்-வலிமை; கடத்தல்-மேம்படுதல்; அலங்குதல்-அசைதல்; இலங்குதல்-விளங்குதல்; ஒளியவன்-கதிரவன்/சூரியன்; சுடர்-ஒளி; தயங்குறுதல்-விளங்குதல்; தூக்குதல்-தொங்கவிடுதல்; உதிர்த்தல்-வெளிப்படுத்துதல்)

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தபோது பெரிய மந்தரமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கடை கயிறாகவும் கொண்டு கடைந்தார்கள்; அந்த மந்தரமலையையும்விட மேம்பட்டு விளங்கும் வலிமையுடைய இராவணனின் தோள்களில், ஒளிவீசி அசைகின்ற போர்வலயங்களை நன்கு பொலிவுறுமாறு கட்டிக் கொண்டான்; சூரியனின் உடலைத் தேவர்கள் சாணையிலிட்டுக் கடைந்த போது அவன் வெளிப்படுத்திய பொன்போன்ற ஒளிமிக்க கிரணங்கள் விளங்கும்படி ஒளிவீசுகின்ற தன் இருபது காதுகளிலும் காதணிகளைத் தொங்கவிட்டுக் கொண்டான்.

போர் வலயங்களைத் தோளிலும், குண்டலங்களைக் காதுகளிலும் அணிந்துகொண்டான் என்பதாம். இராவணன் தோள்களுக்கு மந்தர மலையும், வாகுவலயத்திற்கு வாசுகிப் பாம்பும் உவமைகள்; அவன் காது களில் அணிந்துகொண்ட குண்டலங்களுக்குச் சூரியன் உடலினின்றும் தோன்றிய ஒளிக்கற்றைகள் ஒப்பு.

''உடல் கடைந்த ஒளியவன்'' என்பது ஒரு புராணக்கதையை அடிப் படையாகக் கொண்ட சொற்றொடர். இதுவும் ஏறக்குறைய அகலிகை கதைபோலவே தோன்றுகிறது. ஒரு முனிவன், அவனுக்கு ஒரு மனைவி, மிகுந்த அழகுடையவள். முனிவர் அவளை விட்டுப் பிரியாது அவளுடனேயே எப்போதும் இருந்தார். வெளியில் பிரிந்துசெல்ல நேர்ந்தால் தன் மனைவியின் உயிரை ''ஆகர்ஷணம்'' செய்து தன்னுட னேயே எடுத்துச் சென்றுவிடுவார். அப்போது அவள் உயிரற்ற உடலுடன்

Koviloor Digital Library

கிடப்பாள். முனிவர் திரும்பி வந்ததும் அந்த உடலில் உயிரைப் பாய்ச்சுவார், அவள் எழுந்து இயல்பு வாழ்க்கை தொடருவாள். ஒருநாள் வழக்கம்போல இந்திரனும், சூரியனும், முனிவர் வெளிச்சென்றிருந்த சமயம் பார்த்து ஆசிரமத்திற்குள் புகுந்து அவளை அடைய விரும்பினர். இந்திரன் தன் மாயையால் அவள் உடம்பில் தானே உயிராகப் புகுந்திருந்தான்; சூரியன் அவளைக் கூடினான். திரும்பிவந்த முனிவர், தனக்குத் துரோகம் செய்த இரு தேவர்களையும் சபித்தார். சூரியன் ஒளிஇழந்து போனான். எனவே தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடிச் சூரியனை விசுவகருமனைக் கொண்டு சாணையில் வைத்துக் கடைந்தனர். அதனால் சூரியன் முன்பைவிட ஒளிமிகுந்து தோன்றலானான் என்பது ஒரு புராணக்கதை. இதைக் கதை என்று தள்ளிவிடவும் இயலாது. காரணம் இவ்வரலாறு கந்தபுராணத்திலும் பேசப்படுகிறது. ''தண்டுதல் இன்றியே தானும் நானுமாய் பண்டொரு வனிதையைப் பிரிவிற் கூடினோம்; அண்டரும் அறிகுவர்; அற்றை நாட்கினம் உண்டு கொல் கதிரினம் உதிக்கிலான் என்பான்'' என்பது கந்தபுராணம். இதற்கு மேலும் வலு சேர்க்கிறது புள்ளிருக்கு வேளூர்ப்புராணம். ''சூரிய சாணை வாயிற் கொடுத்திடப்பட்டு, வெய்யோன் சீரியஉடல் மெலிந்து, சிறப்பு ஒழிந்து, அதன்மேல் வந்து, வாரிசூழ் உலகம் ஏத்தும், வைத்தியநாதம் சார்ந்தே ஆர் இணை மலரணிந்த அண்ணலைப் பூசைசெய்தான்'' என்கிறது சூரிய தீர்த்தச் சருக்கம்.

உ.வே.சா.பதிப்பு ''துவஷ்டா, தன்மகள் சாயாதேவியின் பொருட்டு சூரியனைக் கடைந்தான்'' என்கிறது. திருவிளையாடற் புராணத்திலும் இச்செய்தி பேசப்படுவதாகவும் கூறுகிறது உ.வே.சா பதிப்பு.

இதேகதை இன்னும் கொஞ்சம் நாகரீகமாகப் பேசப்படுகிறது கேளுங்கள். துவட்டா என்பவனின் மகள் சஞ்சை; அவள் சூரியனை மணந்துகொண்டாள்; அவனுடைய வெப்ப ஒளியைத் தாங்கமுடியாமல் தன்உடல்நிழலை (சாயை) அங்கேவிட்டுவிட்டுத்தான்மட்டும்தன்தந்தை இடத்தை அடைந்தாள். துவட்டா, தன் மகளின் விருப்பத்திற்கிணங்க, சூரியனைச் சாணையில் இட்டு அரைத்து சூரியனுடைய வெப்பக்கதிர்களின் வெம்மைத் தன்மையைக் குறைத்தான் என்பது ஓர் புராணக்கதை.

11. உதயக் குன்றத்தோடு அத்தத்தின் உலாவுறு கதிரின்,
துதையும் குங்குமத் தோளொடு தோளிடைத் தொடர,
புதைஇருள் பகைக்குண்டலம் அணையவை பொலிய;
சிதைவுஇல் திங்களும் மீனும்போல், முத்தினம் திகழ. (9735)

(அத்தம்-அஸ்தமனம்; கதிர்-சூரியன்; துதைதல்-நெருங்கியிருத்தல்; புதைத்தல்-மறைத்தல்; சிதைவு-குறைபாடு; இனம்-கூட்டம்; இருள்பகை-ஒளி; மீன்-நட்சத்திரங்கள்)

Koviloor Digital Library

உதயகிரியில் தோன்றி அத்தமனகிரைவரை உலாவரும் சூரிய கிரணங்களைப் போன்று ஒளிவீசும் அடர்ந்த குங்குமக் குழம்பை இராவணன்தோள்களில் நெருக்கமாகப் பூசிக்கொண்டான். உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் மறைக்கும் இயல்புடைய இருட்டுக்குப் பகையான ஒளிக்கதிர்கள் பரவிவீசும் குண்டலங்களைத் தன் இருபது காதுகளிலும் பொலிவுற்று விளங்கும்படி அணிந்துகொண்டான். தேய்தலும், அழிதலும், குறைவுமில்லாத பூரண சந்திரனைப்போலவும், வானில் உள்ள நட்சத்திரங்களைப் போலவும் ஒளிவீசும் முத்து மாலைகளைத் தன் பத்துக் கழுத்துகளிலும் அணிந்துகொண்டான்.

குங்குமம் பூசப்பட்ட இருபது தோள்களும், உதயகிரியினின்றும் அத்தமனகிரிக்குச் சென்று உலாவரும் சூரியனைப்போல ஒளிவீசின; அவன் காதுகளில் அணிந்திருந்த குண்டலங்கள் இருளை விரட்டும் ஒளிபோலப் பிரகாசித்தன. அவன் கழுத்தில் அணிந்திருந்த முத்து வடங்கள், வானிலிருக்கும் தேய்தலில்லாத சந்திரன்போலவும், நட்சத்திரங்கள் போலவும் ஒளிவீசித் திகழ்ந்தன என்பதாம். ''சிதைவுஇல் திங்கள்'' என்பது தேய்தலும், அழிதலும் இல்லாத முழுச்சந்திரனைக் குறிக்கும். அப்படி ஒரு சந்திரன் இருப்பதில்லை. எனவே இதை இல்பொருள் உவமை எனக்கொள்ளலாம். ''ஒளி'' என்ற ஒரு சொல்லைக் கூறாமல் ''இருட்பகை'' என்று ஒளியைக் குறித்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. அவனுடைய தோள்களின் உயர்ச்சிக்கும், திண்மைக்கும் உதயகிரியும், அத்தகிரியும் உவமைகள். குண்டலங்களின் ஒளிக்குச் சூரியனின் ஒளிக்கதிர்கள் உவமை. முத்துமாலைகளுக்குச் சந்திரனின் ஒளியும், நட்சத்திரங்கள் ஒளியும் உவமைகள். குண்டலங்கள் ஒரு தோளிலிருந்து இருபது தோள்களிலும் அசைந்தாடும் தன்மைக்குச்சூரியன் உதயகிரியில் இருந்து அத்தமனகிரிக்குச் செல்லும் போக்கு உவமை எனக்கொள்க.

12. வேலைவாய் வந்து, வெய்யவர் அனைவரும் விடியும்
காலை உற்றனராம் எனக் கதிர்க்குலம் காலும்
மாலை பத்தின்மேல், மதியம் முன் நாளிடைப் பலவாய்
ஏல முற்றிய அனைய முத்தக் குடை இமைப்ப. (9736)

(வெய்யவர்-சூரியர்கள்; வேலை-கடல்; கதிர்க்குலம்-ஒளிக்கற்றை; காலுதல்-உமிழ்தல்; மாலை-வரிசை/ஒழுங்கு; மதியம்-சந்திரன்; அனைய-ஒத்த; முத்த-முத்து; இமைத்தல்-ஒளிவிட்டுப் பிரகாசித்தல்; ஏல-பொருந்த; முற்றுதல்-நிரம்புதல்)

பன்னிருவர் என்று கூறப்படுகின்ற கொடிய வெப்பக் கிரணங்களை யுடைய சூரியர்கள் அனைவரும் விடியற்காலைப் பொழுதிலேயே கரிய கடலினிடத்து வந்து ஒருங்கே சேர்ந்துவிட்டனர் என்று கூறும்படியாக ஒளிக்கற்றைகளை வெளிப்படுத்துகின்றதும், வரிசையாக ஒழுங்காக

Koviloor Digital Library

அமைந்துள்ளதுமான இராவணனது பத்துத் தலைகளின்மேலும் முன்நாளில் சந்திரன் வளர்ந்துவரும் கலைகளைப் பொருந்தினவாய் முதிர்ச்சியடைந்த பூரணசந்திரன் போன்று முத்துக்கள் பதிக்கப்பெற்ற வெண்கொற்றக் குடைகள் ஒளிவீசித் திகழ்ந்தன.

பன்னிரண்டு சூரியர்களும் ஏககாலத்தில் வந்து தங்கள் ஒளிக் கற்றைகளைப் பாய்ச்சினால் எப்படி ஒளிவிட்டுப் பிரகாசிக்குமோ, பதினாறு கலைகளும் தேயாது விளங்கும் பூரணசந்திரன் எப்படி ஒளி விட்டுத் திகழுமோ அவ்வாறு இராவணனின் பத்துத் தலைகளின்மேலும் பத்து வெண்கொற்றக்குடைகள் ஒளிவீசித் திகழ்ந்தன என்பதாம். இராவணனுடைய முடிகளின்மேல் திகழும் வெண்கொற்றக் குடைகளின் ஒளிச்சிறப்புப் பேசப்படுகிறது. வெண்கொற்றக் குடைகளைச் ''சந்திர வட்டக்குடைகள்'' என்றும் கூறுவதுண்டு. கரிய கடல்கரிய உடல்படைத்த இராவணனுக்கும்; ஒளிநிறைந்த சூரியக்கதிர்கள் அவன் அணிந் திருக்கின்ற பத்துக் கிரீடங்களுக்கும் உவமை.

13. பகுத்த பல்வளக் குன்றினில் முழை அன்ன பகுவாய்
வகுத்த வான்கடைக் கடைதொறும் வளைஎயிற்று ஈட்டம்,
மிகுத்த நீலவான் மேகம் சூழ் விசும்பிடை, தசும்பூடு
உகுத்த செக்கரின் பிறைக்குலம் முளைத்தன ஒக்க. (9737)

(முழை-குகை; பகுவாய்-பிளவுபட்டவாய்; வகுத்தல்-இரு கூறாக்குதல்; கடை-கடைவாய்; ஈட்டம்-கூட்டம்; விசும்பு-ஆகாயம்; தசும்பு-குடம்/கும்பம்/பாலிகைக்கும்பம்; செக்கர்-செவ்வானம்; முளைகள்-தானியமுளைகள்; வான்-பெரிய)

பலவகையான வளங்கள் நிறைந்தது எனப் பகுக்கப் பட்டிருக்கின்ற மலைகளில் அமைந்திருக்கும் குகைகள்போல இராவணனது பிளவுபட்ட வாய்களில்இருக்கின்ற வளைந்தகோரப்பற்களின்தொகுதி, மிக்கநீலநிறம் கொண்ட மேகங்கள் சூழ்ந்த ஆகாயத்தில் பாலிகைக் கும்பங்கள் சொரிகின்ற செவ்வானத்தில் மூன்றாம்நாள் பிறைச்சந்திரன் மெதுவாகத் தோன்றுவதைப்போல் தோற்றமளித்தது.

பொருள் புரிந்துகொள்ள முடியாத கடினமான பாடல். இராவண னுடைய கடைவாய்ப் பற்கள் மூன்றாம்நாள் பிறைச் சந்திரனைப்போல் வளைந்திருக்கின்றன என்பதுதான் திரண்ட கருத்து. இராவணனின் பெரிய தலைகள் பெரிய மலைகளுக்கும், அவனுடைய பிளவுபட்ட வாய்கள், குன்றுகளில் இருக்கும் குகைகளுக்கும், கடைவாய்ப் பற்க்ளின் தொகுதிக்கு மூன்றாம்நாள் பிறைச்சந்திரனும் உவமைகள்.

Koviloor Digital Library

14. ஒத்த தன்மையின் ஒளிர்வன, தரளத்தின் ஓதம்
தத்துகின்றன வீரபட்டத் தொகை தயங்க;
முத்த ஓடைய, முரண்திசை முழு மதயானை
பத்துநெற்றியும் சுற்றிய பேர்எழில் படைக்க. (9738)

(தரளம்-முத்து; ஓதம்-அலைகள்/ஒளிவீச்சு; தத்துதல்-தவழுதல்; தயங்குதல்-விளங்குதல்; முரண்-மாறுபட்ட; சுற்றுதல்-சூழ்ந்து கொண்டிருத்தல்; வீரபட்டம்-வீரர்களின் பட்டயம்; ஓடை-முகபடாம்/ நெற்றிப்பட்டம்)

ஒரே தன்மையில் ஒளிவீசுகின்றனவும், ஒரேமாதிரியாக முத்துக்கள் தவழுகின்றனவுமான வீரபட்டயத்தின் தொகுதியை இராவணன் தன் பத்துத் தலைகளிலும் கட்டிக்கொண்டான்; முரண்பட்ட பத்துத் திக்குகளிலும் நிற்கின்றனவும், மூன்று வகைப்பட்ட மதநீரைச் சொரிகின்றனவுமான யானைகள், தங்கள் முகத்தில் முத்துக்கள் நிறைந்த நெற்றிப் பட்டங்களைக் கட்டிக்கொண்டு திகழ்வதுபோல இராவணன் பேரழகோடு விளங்கினான்.

திக்கு யானைகள் முத்துக்கள் பதித்த நெற்றிப்பட்டங்களைக் கட்டிக் கொண்டு ஒளிவீசி அழகாக விளங்குவதுபோல, இராவணனும் தன் பத்து நெற்றிகளிலும் ஒரே அளவில் ஒளி வீசுவனவான முத்துக்கள் பதிக்கப் பெற்ற வீரபட்டயங்களை அணிந்துகொண்டு பொலிவுற்றுத் திகழ்ந்தான் என்பதாம். வீரர்கள் வெற்றிக்குறியாக நெற்றியில் அணியும் ஒருவகை பொன்னாலான தகடு, வீரபட்டிகை எனப்படும். இதுவே வீரபட்டம் எனவும் வழங்கப்படும்.

15. புலவி மங்கையர் பூஞ்சிலம்பு அரற்று அடி போக்கி,
தலைமை கண்ணினர்த் தாழ்கிலா மணிமுடித் தலங்கள்
உலகம் ஒன்றினை விளக்குறும் கதிரினை ஓட்டி,
அலகுஇல் எவ்வுலகத்தினும் வயங்கு இருள் அகற்ற. (9739)

(புலவி-ஊடல்/பிணக்கு; பூ-அழகு; அரற்றுதல்-ஒலித்தல்; அடி-பாதங்கள்; போக்குதல்-தவிர்த்தல்; கண்ணுதல்-கருதுதல்; கதிர்-கதிரவன் /சூரியன்; அலகுஇல்-அளவற்ற) (குளகப்பாடல்)

ஊடற்காலத்தே மகளிர் தம் அழகிய சிலம்புகள் ஒலிக்கின்ற பாதங்களைத் தவிர்த்து வேறு தலைமைப்பண்பைக் கருதுகின்ற எவர்க்கும் கூடத் தாழ்ந்து பணியாத இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற கிரீடங்களை அணிந்த இராவணனின் பத்துத் தலைகளும், இந்த ஒரேஒரு உலகத்தின் இருளை விரட்டி ஒளிவீசித் திகழும் சூரியன் தனக்கு ஈடாகாது என அளவற்ற எல்லா உலகங்களிலும் நிறைந்துள்ள இருளை விரட்டிவிட்டு,

Koviloor Digital Library

அதனின்றும் மேம்பட்டு பேரொளி படைத்து விளங்கவும் - பாடல் தொடர்கிறது.

உலகத்தில் உள்ள சூரியன் ஒரேஒரு உலகத்தில் உள்ள இருட்டினைத் தான் போக்குகிறது. ஆனால், இராவணன் கிரீடங்களில் பதிக்கப்பெற்ற இரத்தினங்கள் எண்ணற்ற உலகங்களின் இருளைப் போக்கும் வண்ணம் ஒளிவீசித் திகழ்கின்றன என்பதாம். மேலும் இராவணன், ஊடற் காலத்திலும்கூடப் பெண்டிர்க்குத் தலைவணங்காத இயல்பினன் என்பதும் எடுத்துரைக்கப்படுகிறது. ஊடற்காலத்தே கூட இராவணன் மகளிரைவணங்காத முடியுடையவன்என்பது முன்னரும்பேசப்பட்டதை நினைக. ''மாதர் வலிய நெடும் புலவியினும் வணங்காத மகுடநிரை'' என்பது இராவணன் கூற்று. ''மனைவி உயர்வும், கிழவோன் பணிவும் நினையுங்காலைப் புலவியுள் உரிய'' என்பது தொல்காப்பியம். ''என்வாளினைத் தொழுவதல்லால் வணங்குதல் ஊடல் நாளினும் உளதோ'' என்பது இரணியன் கூற்று. ''உலகம் ஒன்றினை விளக்கும் கதிர்'' என்பது ஒவ்வொரு உலகத்திற்கும் ஒவ்வொரு சூரியன் உண்டு என்பது ஒரு புராணக்கொள்கை. அதனை ஒட்டியது இந்தச் சொற்றொடர்.

16. நாகம், நானிலம், நான்முகன் நாடு என நயந்த
பாகம் மூன்றையும் வென்று கொண்டு, அமரர் முன்பு அணிந்த
வாகை மாலையும் மருங்குஉற, வரிவண்டொடு அளவி;
தோகை அன்னவர் விழிதொடர் தும்பையும் சூட்டி. (9740)

(நாகம்-நாகர்உலகம்; நானிலம்-நிலவுலகம்; நான்முகன்நாடு-பிரமலோகம்/சத்தியலோகம்; நயத்தல்-விரும்புதல்; பாகம்-பகுதிகள்; வாகைமாலை-வெற்றிமாலை; மருங்கு-அருகில்; அளவுதல்-பொருந்தி யிருத்தல்; தோகை-மயில்; அணிந்த-அணிவித்த)

நாகர்கள் வாழ்கின்ற பாதாள லோகம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என நான்கு பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருக்கும் இந்நிலவுலகம், நான்கு முகங்களையுடைய பிரமதேவன் வசிக்கும் சத்தியலோகம் என்று, உலகத்தில் விரும்பிக் கூறப்படுகின்ற மேல், நடு, கீழ் என்ற மூன்று பகுதிகளையும் தன் போராற்றலால் வெற்றிகொண்டு தன் வயமாக்கிய இராவணனின் வெற்றித்திறனைப் பாராட்டி, முற்காலத்தில் தேவர்கள் அவனுக்கு அணிவித்த வெற்றிமாலையையும், அதற்குப் பக்கத்தில், வரிகளோடு கூடிய வண்டுகளும், தோகையையுடைய மயிலைப் போன்ற சாயலையுடைய மகளிர்களின் கண்களும், தொடர்ந்து மொய்க்கின்ற தும்பைமாலையையும் சூட்டிக்கொண்டான்.

அணிந்த என்ற தன்வினைச் சொல் அணிவித்த என்ற பிறவினைச் சொல்லின் பொருளைத்தரும். ''வாகைமாலை'' என்பது வெற்றி பெற்ற

Koviloor Digital Library

பின் சூடிக்கொள்வது. தும்பைமாலை என்பது போர்செய்யப் புறப்படும்பொழுது அணிந்துகொள்வது.

17. அகழும் வேலையை, காலத்தை, அளக்கர் நுண்மணலை,
நிகழும் மீன்களை, விஞ்சையை நினைப்பது என்? நின்ற
இகழ்வுஇல் பூதங்கள் இறப்பினும், இறுதி செல்லாத
புகழ்என, சரம் தொலைவுஇலாத் தூணி பின் பூட்டி. (9741)

(அகழ்தல்-தோண்டுதல்; வேலை-கடல்; அளக்கர்-கடல்; நிகழ்தல்-நிலைபெற்று விளங்குதல்; விஞ்சை-வித்தை/கல்வி/மந்திரம்; நிற்றல்-நிலையாய் இருத்தல்; இறுதி-அழிவு; தூணி-அம்பறாப்புட்டில்; பூட்டுதல்-கட்டிக்கொள்ளுதல்)

சகரர்களால் தோண்டப்பெற்ற கடலின் அளவு, காலத்தின் அளவு, கடலில் உள்ள நுண்ணிய மணலின் அளவு, நிலைபெற்று வானத்தில் இருக்கும் விண்மீன்களின் அளவு, கடலில் உள்ள மீன்களின் அளவு, ஒருவன் கற்ற கல்வியின் அளவு - இவைகளை ஒரு அளவிட்டுக் கூறமுடியுமா? முடியாதல்லவா! அதுபோன்றே, என்றும் நிலைத்து நிற்பனவும், எதற்கும் தாழ்வில்லாதவையுமான ஐம்பெரும் பூதங்களும் அழிந்தொழிந்தாலும், அழிவு என்பதே இல்லாத புகழ் என்று கூறும்படியான அம்புகள் நிறைந்த குறைவில்லாத அம்பறாத் தூணியை யும் தன் முதுகுப்புறத்தில் கட்டிக்கொண்டான் இராவணன்.

பொதுவாக அளவிட்டு அறுதியாக உரைக்கமுடியாமைக்கு கடல், காலம், கடல்மணல், மீன்கள், நட்சத்திரங்கள், ஒருவன் கற்கும் கல்வி இவற்றை உவமையாகக் குறிப்பதுண்டு. ஆனால் இவையெல்லா வற்றையும் விஞ்சியதாகக் கவிஞன், இராவணன் தன் முதுகுப்புறத்தில் கட்டிக்கொண்ட தூணியில் உள்ள அம்புகளை அளவிட்டு உரைக்கவே முடியாது என்கிறான். பஞ்சபூதங்கள் அழிந்துபோனாலும், ஒருவன் பெற்ற புகழ் என்பது எவ்வாறு அழியாமல் நிலைத்துநிற்குமோ, அதுபோல அவன் முதுகில் கட்டியிருக்கும் அம்பறாத்தூணியில் உள்ள அம்புகளும் அழியாது நிறைந்துகொண்டே இருக்கும் என்பதாம். இதுவரையிலும் இராவணன் போர்க்கோலம் கொண்ட தன்மை பேசப்பட்டது.

18. தேரின்சிறப்பு. [7 பாடல்கள்]

"வருக தேர்!" என வந்தது; வையமும் வானும்
உரக தேயமும், ஒருங்கு உடன் இவரினும், உச்சிச்
சொருகு பூ அன்ன சுமையது; துரகம் இன்று எனினும்,
நிருதர் கோமகன் நினைந்துழிச் செல்வது ஓர் இனைப்பில். (9742)

Koviloor Digital Library

(உரகம்-பாம்பு/நாகம்; உரகதேயம்-நாகலோகம்; ஒருங்கு-ஒருசேர; இவர்தல்-ஊர்தல்/ஏறுதல்; துரகம்-குதிரை; இன்று-இல்லை)

போர்க்கோலம் பூண்ட இராவணன் ''வருகதேர்'' என்று கட்டளையிட்டான்; உடனே இந்த நிலவுலகத்தவரும், விண்ணுலகத்தவரும், பாதாளலோகத்தவரும் எல்லோரும் ஒருசேர ஏககாலத்தில் ஏறி அமர்ந்தாலும், சற்றும் சுமை என்று கருதாமல் உச்சந்தலையில் சூட்டிக் கொள்ளுகின்ற மலர்போல எளிமையானதும், அதனை இழுத்துச்செல்லக் குதிரைகள் இல்லாதுபோனாலும், அரக்கர்வேந்தனாகிய இராவணன் நினைக்கின்ற இடத்திற்கு, நினைத்த மாத்திரத்தில் சென்றுசேரும் இயல்புடையதுமான, ஒரு அற்புதமான தேர் வந்து அவன் எதிரில் நின்றது.

''வையம், வானம், உரகதேயம்'' என்பன ஆகுபெயராய் அவ்வவ்விடங்களிலுள்ள மக்கள், தேவர், நாகர்களைக் குறித்தன. ''உச்சிச்சொருகு பூ அன்ன சுமையது'' என்பது எளிமையானது. சுமையாகக் கருதாதது என்ற பொருளைத்தரும். ''அனிச்சப்பூக் கால் களையாள் பெய்தாள்'' என்ற குறள்-1115ம் இங்கு ஒப்புநோக்குதற்குரியது. மூன்று உலகத்தாரும் ஏறினாலும் எளிதாகத் தாங்கும் இயல்புடைய தேர் என்பதாம். இவ்வளவு சிறப்புக்கள் அமைந்துள்ள தேரில்தான் இராவணன் போருக்குப் புறப்பட்டுப் போகிறான் என்பதை இங்கு நினைவிற்கொள்ள வேண்டும். இந்தத் தேரை ஒரு மிகைப்பாடல் ''கண்ணுதற் பிரமன், பண்டு அவன் செய்யும் தவத்தினின் பரிந்து, இனிது அளிக்கக் கொண்ட வாகைத்தேர் அது'' என்கிறது. இதுவும் கருத்தில் கொள்ளத்தக்கதொன்று.

19. ஆயிரம் பரி அமுதொடு வந்தவும், அருக்கன்
பாய் வயப் பசுங்குதிரையின் வழியவும், படர்நீர்
வாய் மடுக்கும் மா வடவையின் வயிற்றின், வன் காற்றின்
நாயகற்கு வந்து உதித்தவும், பூண்டது நலத்தின். (9743)

(அமுது-அமிழ்தம்/தேவாமிர்தம்; அருக்கன்-சூரியன்; வய-வலிய; பசுமை-பச்சை; வழி-மரபு; படர்-படர்ந்த; மடுத்தல்-உட்கொள்ளுதல்; வடவை-வடவைத்தீ/வடஅனல்/வடமுகாக்னி; வன்-வலிய; நாயகன்-தலைவன்; உதித்தல்-பிறத்தல்/தோன்றுதல்; நலம்-அழகு; மா-குதிரை; காற்றின் நாயகன்-வாயுதேவன்)

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது அதனின்றும் தோன்றிய அமிழ்தத்துடன் தோன்றியவையும், சூரியன் செலுத்துகின்ற பாயும் தன்மையுடைய, வெற்றிபொருந்திய பச்சைக் குதிரைகளின் மரபில் தோன்றியவையும், பரந்த கடல் நீருக்குள் அமைந்திருக்கும் சிறந்த வடஅனலின் கருவில், வலிய காற்றின் வேந்தனான வாயுதேவனுக்குத் தோன்றியவையுமான ஆயிரம் குதிரைகள் பூட்டப்பட்டது அந்த அழகிய தேர்.

Koviloor Digital Library

தேரில்பூட்டப்பட்டிருக்கின்ற ஆயிரம் குதிரைகளின்பிறப்பும், சிறப்பும் பேசப்படுகிறது. பாற்கடலில் அமுதத்தொடு தோன்றிய குதிரை உச்சைச்சிரவம் என்பதும், அது வெள்ளை நிறத்தது என்பதும் அதை இந்திரன் தன் வாகனமாகக் கொண்டிருக்கிறான் என்பதும் ஒரு புராணக்குறிப்பு. சூரியன் உலகைச் சுற்றி ஏழு பச்சைக் குதிரைகள் பூட்டப்பெற்ற ஒற்றைச்சக்கரத் தேரில் உலாவருகிறான் என்பதும் மற்றொரு புராணக்குறிப்பு. கடலின் உள்ளே பெண் முகத்துடன் ஒரு குதிரை இருந்துகொண்டு, கடல்நீர் கரை கடவாமல் பாதுகாக்கிறது என்பதும், ஊழியிறுதிக்காலத்தில் அது கரைகடந்து உலகை அழிக்கும் என்பதும் மற்றொரு புராணக் குறிப்பு. இந்த மூன்று புராணக்குறிப்புக்களையும் கொண்டு இவற்றின் மூலமாக வந்த ஆயிரம் குதிரைகள் பூட்டப்பெற்ற அழகிய தேர் என்று தேரும் சிறப்பிக்கப்படுவதை நினைக. தீயின் வெம்மையும், காற்றின் விரைவும் கொண்ட குதிரைகள் ஆயிரம் பூட்டப்பட்ட தேர் என்பதாம்.

20. பாரில் செல்வது; விசும்பிடைப் படர்வது; பரந்த
நீரில் செல்வது; நெருப்பினும் செல்வது; நிமிர்ந்த
போரில் செல்வது; பொன்நெடு முகட்டிடை விரிஞ்சன்
ஊரில் செல்வது; எவ்வுலகத்தும் செல்வது ஓர் இமைப்பின். (9744)

(பார்-நிலம்; விசும்பு-வானம்; நிமிர்தல்-கிளர்ந்தெழுதல்; போர்-போர்க்களம்; விரிஞ்சன்-நான்முகன்/பிரமன்; இமைப்பு-இமைப்பொழுது; முகடு-உச்சி; படர்தல்-செல்லுதல்)

அந்தத்தேர் நிலத்தில் செல்வதுபோலவே வானிலும் செல்லும் ஆற்றல் வாய்ந்தது. வானில் செல்வதுபோலவே பரந்துபட்ட நீரிலும் செல்லும் வன்மைபடைத்தது. நீரில் செல்வது போலவே நெருப்பிலும் புகுந்து செல்லும் தன்மையது; நெருப்பில் செல்வதுபோலவே கிளர்ந்தெழுகின்ற போர்க்களத்திற்குள்ளும் தடையின்றிச் செல்லும் வலிமைகொண்டது. அழகிய நீண்ட அண்ட கோளத்திற்கு அப்பால் இருக்கும் பிரமதேவனின் ஊராகிய சத்தியலோகத்திற்கும், ஒருநொடிப் பொழுதிற்குள் எந்த உலகத்துக்கும், செல்லும் ஆற்றல் பெற்றது.

நீர், நிலம், நெருப்பு, ஆகாயம், என்ற எல்லா இடங்களிலும் காற்றுப் போல் ஒருநொடிக்குள் சென்றுவரும் தன்மைகொண்டது அந்தத்தேர் என்பதாம்.

21. எண் திசைப் பெருங் களிற்றிடை மணி என இசைக்கும்
கண்டை ஆயிரகோடியின் தொகையது; கதிரோன்
மண்டிலங்களை மேருவில் குவித்தென, வயங்கும்
அண்டம் விற்கும் நன் காசு இனம் குயிற்றியது, அடங்க (9745)

Koviloor Digital Library

(களிறு-யானை; இசைத்தல்-ஆரவாரித்தல்; கண்டை-மணி; வயங்குதல்-விளங்குதல்; விற்றல்-விலையாகக் கொள்ளுதல்; காசு-இரத்தினம்; அடங்க-முழுவதும்; குயிற்றுதல்-பதித்தல்/இழைத்தல்)

அந்தத்தேரில், எட்டுத்திக்குகளையும் காவல்புரியும் பெரிய திசை யானைகளின் கழுத்தில் கட்டப்பெற்றிருக்கும் மணிகள்போல ஒலி யெழுப்பும் பெரிய வகை மணிகள் ஆயிரகோடிக் கணக்கானவை உள்ளன. சூரியமண்டலங்கள் பல மேருமலையில் குவிந்தாற்போன்று ஒளிவிட்டுத் திகழ்வதும் அண்டங்களையே விலையாகக் கொள்ளத் தக்கதுமான நல்ல இரத்தினங்கள் முழுவதும் பதித்து இழைக்கப் பெற்றதுமானதாகும் அந்தத்தேர்.

அந்தத்தேரில் ஆயிரகோடிக் கணக்கான மணிகளும், சூரிய மண்டலத்தைப்போல ஒளிவீசும் நவரத்தினங்களும் பதிக்கப் பெற்றிருக்கின்றனஎன்பதாம். முதலில் கூறப்பட்ட மணி திசையானையின் கழுத்தில் தொங்கும் மணி; இரண்டாவது கூறப்பட்டிருக்கும் ''கண்டை'' என்பது இராவணன் தேரில் விளங்குகின்ற பெரிய அளவிலான மணி; மூன்றாவது கூறப் பட்டிருக்கும் காசு இரத்தினங்களைக் குறித்தது. மணி, கண்டை, காசு இவையெல்லாம் ஒரு பொருட்பன்மொழி எனக் கொள்க.

22. முனைவர் வானவர் முதலினர், அண்டத்து முதல்வர்
எனைவர் ஈந்தவும், இகலினில் இட்டவும், இயம்பா
வினையின் வெய்யன படைக்கலம் வேலை என்று இசைக்கும்
சுனையின் நுண்மணல் தொகையன சுமந்தது, தொக்க (9746)

(முனைவர்-முனிவர்; முதல்வர்-தலைவர்; எனைவர்-எத்தனைபேர்; அன்னவர்-அத்தனைபேர்; இகல்-போர்; வினை-தொழில்/ஊழ்வினை; வெய்யன-கொடுமைவாய்ந்தன; வேலை-கடல்; சுனை-நீர்நிலை; தொக்க-திரண்ட; அண்டம்-உலகம்) (குளகப்பாடல்)

முனிவர்கள், தேவர்கள் முதலியவர்களும் உலகில் முதன்மையானவர் என்று கூறப்படும் பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய முத்தேவர்களும், இன்னும் எத்தனைபேர் இருக்கிறார்களோ அத்தனை பேரும் மனமுவந்து அருளியதும், போரில் தோற்று, அஞ்சி திறையாகச் செலுத்தப்பட்டனவும், கடல் என்று கூறப்படும் நீர்நிலையில் உள்ள நுண்ணிய மணலின் அளவெல்லாம் திரண்டதுபோல சொல்லமுடியாத போர்த் தொழிலின் கொடுமையான ஆயுதங்களைச் சுமந்து கொண்டுள்ள அந்தத்தேரில் - பாடல் தொடர்கிறது.

இராவணன்தேரில் அளவற்ற படைக்கலங்கள் திரண்டிருந்தன; அவை, முனிவர்கள், தேவர்கள், மும்மூர்த்திகள், போரில் தோற்றவர்கள் முதலியவர்கள் அவனுக்குத் திறையாகக் கொடுத்தன ஆகும் என்பதாம். ''ஈந்தது'' என்பது மனமுவந்து அருளியதையும் ''இட்டது'' என்பது

Koviloor Digital Library

அச்சத்தால் பணிந்து தந்துவிட்டுப் போனதையும், கைப்பற்றியதையும் குறிக்கும் என்ற வேறுபாடு உணர்க.

23. கண்ணன் நேமியும், கண்ணுதல் கணிச்சியும், கமலத்து
அண்ணல் குண்டிகைக் கலசமும் அழியினும், அழியாத்
திண்மை சான்றது; தேவரும் உணர்வுஅரும் செய்கை
உண்மையாம் எனப் பெரியது, வெற்றியின் உறையுள். (9747)

(கண்ணன்-திருமால்; நேமி-சக்கரப்படை; கண்ணுதல்-நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான்; கணிச்சி-மழுப்படை/கோடாலி; கமலம்-தாமரைமலர்; அண்ணல்-பெரியோன்/பிரமதேவன்; சான்றது-வாய்ந்தது; செய்கை-தொழில் நுட்பம்; உண்மை-நிலைத்த மெய்ம்மை; உறையுள்-உறைவிடம்/இருப்பிடம்/நிலைக்களன்; குண்டிகைக்கலசம்-கமண்டலமாகிய நீர்ப்பாத்திரம்; திண்மை-வலிமை; பெரியது-பெருமையுடையது)

அந்தத்தேர் திருமாலின் சக்கரப்படையும், நெற்றிக் கண்களையுடைய சிவபெருமானின் மழுப்படையும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பெருமைக்குரியவனான பிரமதேவனின் கமண்டலமாகிய நீர்ப் பாத்திரமும், ஒருவேளை அழிந்துபோனாலும், இந்தத்தேர் என்றும் அழியாத வலிமையும் உறுதியும் வாய்க்கப்பெற்றது; தேவர்களாலும்கூட அறிந்துகொள்ள முடியாத தொழில்நுட்பம் உடையது; நிலைத்த மெய்ம்மை எனப்பெருமை உடையது; வெற்றியின் இருப்பிடமானது.

தேரின்பெருமை பேசப்படுகிறது. கவிஞன்காப்பியத்தில் திருமாலைப் பல இடங்களில் கண்ணன் என்றே கூறிப்போவதையும் காண்க. ''உண்மை'' என்பது உளவாகும்தன்மை என்ற பொருளைத்தரும். நிலைத்த மெய்ம்மை என்று இங்கு பொருள்கொள்ளப் பெற்றிருக்கிறது. நேமி, கணிச்சியுடன், குண்டிகைக் கலசமும் ஒரு ஆயுதமாகக் கொள்ளப் பட்டிருப்பதை நுனித்து உணர்க.

24. இராவணன் தேருக்கு வழிபாடு செய்தல்.

அனைய தேரினை அருச்சனை வரன்முறை ஆற்றி,
இனையர் என்பதோர் கணக்கிலா மறையவர் எவர்க்கும்
வினையின் நல்நிதி முதலிய அளப்பஅரும் வெறுக்கை
நினையின் நீண்டதோர் பெருங்கொடை அருங்கடன் நேர்ந்தான்.
(9748)

(அனைய-அத்தகைய; வரன்-நூல்முறை; எனையர்-எவ்வளவுபேர்; மறையவர்-வேதியர்; வினை-சடங்கு; வெறுக்கை-பொருள்/செல்வம்; கொடை-தானம்; கடன்-கடமை; நேர்தல்-நிறைவேற்றுதல்; ஆற்றுதல்-செய்தல்)

Koviloor Digital Library

அத்தகைய சிறப்பு வாய்ந்த தேருக்கு, நூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி வழிபாடுசெய்து, இவ்வளவு பேர்தான் என்று கணக்கிட்டுக் கூறமுடியாத அளவற்ற வேதவிற்பன்னர்கள் எல்லோருக்கும், செய்ய வேண்டிய முறைப்படி நல்ல நிதியங்கள் முதலான கணக்கற்ற செல்வங்களை, நினைத்தற்கும் அரிய பெரிய தானங்களைத் தன் கடமையாகக் கருதி, மனம் உவந்து எல்லோர்க்கும் கொடுத்தான்.

போருக்குப் புறப்படும்போதும் தேரில் ஏறும்போதும் இறைவனை வழிபட்டும், தேருக்குப் பூசனைசெய்தும், மறையவர்க்குச் செல்வத்தை வாரிவழங்கியும் செல்லுவது என்பது பண்டைய மரபு. ''மறையவர்'' என்பது இங்கே அரக்கர்களுக்குள்ளேயே இருக்கும் வேதவிற்பன்னர் களைக் குறித்தது எனக்கொள்க. ''நினையின் நிண்டதோர் பெருங் கொடை'' என்பது யாராலும் எண்ணிப்பார்க்கமுடியாத அளவுக்குச் செய்த தானதர்மங்களைக் குறிக்கும். முன்பும் பாயிரத்தில் ''தருகை நீண்ட தயரதன்'' என்று அயோத்திவேந்தன் தசரதன் சிறப்பிக்கப்பட்டதுபோல் இங்கே இராவணன் ''நினையின் நீண்டதோர் பெருங்கொடை நேர்ந்தான்'' எனச்சிறப்பிக்கப்பட்டான் என்க. முன்பு இராமபிரான் ஒரு வேதியனுக்குக் கொடைகொடுத்து ''ஆசையின் கரையின்மை'' பற்றி நகைத்ததைச் சீதாதேவி அசோகவனத்தில் நினைவுகூர்ந்தாளே, அந்தக் கொடையையும் இதனோடு ஒப்பிட்டு நோக்குக. ''மன்னுக வென்றியென்று, மணிவள்ளம் நிறையவாக்கி, இன்மதுப் பலியும் பூவும் சாந்தும் விளக்கும் ஏந்தி'' என்பது சீவகசிந்தாமணி.

25. இராவணன் தேரில் ஏறுதல்

ஏறினான் தொழுது; இந்திரன் முதலிய இமையோர்
தேறினார்களும் தியங்கினார்; மயங்கினார்; திகைத்தார்;
வேறு நாம் செயும் வினைஇலை; மெய்யின் ஐம்புலனும்
ஆறினார்களும் அஞ்சினார், உலகெலாம் அனுங்க. (9749)

(இமையோர்-தேவர்கள்; தியங்குதல்-அறிவுசோர்தல்/சஞ்சலப் படுதல்; மயங்குதல்-உணர்விழத்தல்; திகைத்தல்-மனம் துணுக்குறுதல்; ஆறுதல்-அடங்குதல்; அனுங்குதல்-வருந்துதல்; தேறுதல்-தெளிவுறுதல்)

அவ்வாறு தேருக்கு வழிபாடுசெய்து வணங்கி இராவணன் தேரில் ஏறினான்; அதுகண்ட இமையாநாட்டமுடைய இந்திரன் முதலிய தேவர்கள், முன்பு நன்கு தெளிவுபெற்றிருந்தவர்கள், இப்போது சற்று அறிவுசோர்ந்து சஞ்சலமடையலானார்கள்; உணர்விழந்தார்கள்; மனம் துணுக்குற்றார்கள்; ''இப்போது நாம் செய்யத்தக்க செயல் வேறு என்ன இருக்கிறது?'' ஒன்றும் இல்லை. என்று உடம்பின் ஐம்புலன்களை அடக்கி ஆட்சிசெய்பவர்களான முனிவர்களும், உலகங்களெல்லாம் வருந்தும்படி இனி என்ன துன்பம் நிகழுமோ என்று அச்சம் கொள்வாராயினர்.

Koviloor Digital Library

எல்லாம்வல்ல எம்பெருமான் திருமால்தான் இராவண வதத்திற்காக, இராமபிரானாக அவதாரம் செய்து இப்போது இங்கு வந்திருக்கிறான் என்பதைத் தெள்ளத்தெளிவாகத் தெரிந்திருந்த தேவர்கள்கூட இராவணன் தேர்ஏறிய முறை கண்டு மதிமயங்கினர் என்பதை ''தேறினார்களும் தியங்கினார்'' என்றார். இவ்வாறு தேரினைத் தொழுதல்பற்றி அருமையான ஒரு செய்தி கேளுங்கள். திருஞான சம்பந்தர் சிறு பிள்ளை. அவர் நடந்தே திருத்தலங்களைக் கடந்து செல்ல வேண்டியதாயிற்று. இறைவன் அவருக்கு அருள்செய்யத் திருவுள்ளம் கொண்டான். ஒரு முத்துப் பல்லக்கை அனுப்பினான்; அந்த முத்துப்பல்லக்கைத் திருஞான சம்பந்தர் வழிபடுகிறார் கேளுங்கள். ''சோதி முத்தின் சிவிகை சூழ் வந்து, பார்மீது தாழ்ந்து, வெண்ணீற்று ஒளி போற்றி, நின்று ஆதியாரருள் ஆதலின், அஞ்செழுத்து ஓதி ஏறினார் உய்ய உலகமெல்லாம்'' என்பது திருத்தொண்டர்புராணம்.

26. இராவணன் வஞ்சினம்

மன்றல் அம்குழல் சனகி தன் மலர்க் கையான் வயிறு
கொன்று, அலந்தலைக் கொடு, நெடுந்துயரிடைக் குளித்தல்;
அன்று இது என்றிடின், மயன்மகள் அத்தொழில் உறுதல்;
இன்று, இரண்டின் ஒன்று ஆக்குவென், தலைப்படின்'' என்றான்.
(9750)

(தலைப்படுதல்-போரில் எதிர்த்தல்; மன்றல்-நறுமணம்; அம்-அழகிய; குழல்-கூந்தல்; சனகி-சானகி/சீதாதேவி; கொல்லுதல்-அடித்துக் கொள்ளுதல்; அலம்-கலக்கம்/துன்பம்; தலைக்கொள்ளுதல்-மேற் கொள்ளுதல்; குளித்தல்-மூழ்குதல்; ஆக்குதல்-செய்தல்)

இராவணன், ''நான் போரில் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டால் பகைவனான இராமபிரானைக் கொல்லுவேன், அதனால் நறுமணம்மிக்க அழகிய கூந்தலையுடைய சனகன் மகளாகிய சீதாதேவி, தன் மலர்போன்ற கைகளைக் கொண்டு, தன் வயிற்றில் அடித்துக்கொண்டு, துன்பத்தை மேற்கொண்டு பெரிய துயரக்கடலில் மூழ்கிப்போகவேண்டும். அது நிகழாது என்றால், நான் போரில் இராமபிரானால் கொல்லப்பட்டு வீர மரணம் எய்துவேன். அதனால் என் மனைவியும், மயன்மகளுமான மண்டோதரி, அவளுடைய வயிற்றில் அடித்துக்கொண்டு, அழுகின்ற செயலைச்செய்யவேண்டும். இன்றைக்கு இந்த இரண்டில் ஏதாவது ஒன்று நிகழும்படி செய்வேன்'' என்று வஞ்சினம் கூறுகிறான் இராவணன்.

மிகக்கொடுமையான வஞ்சினம். புறத்திணையில் வீரர்கள் இருவர் எதிர்ப்பட்டுப் போர்புரிந்தால் யாரோ ஒருவர் மாண்டு போவதும், மற்றவர் உயிர் பிழைத்திருப்பதும் இயல்பு. இதற்கு முன்பு எந்த இலக்கியத்திலும் தன் மனைவி பற்றியோ, மாற்றான்மனைவி பற்றியோ இத்தகைய

Koviloor Digital Library

கொடுமையான வஞ்சினத்தை நாம் கண்டதில்லை. இது இராவணனின் பெருஞ்சீற்றத்தையும், ஆற்றாமையையும் குறிக்கக் கவிஞன் கையாண் டிருக்கின்ற ஒரு அற்புதமான கற்பனை. இந்த நேரத்திலும்கூட இராவணன் சீதாதேவியின் கூந்தலை ''மன்றல் அம் குழல்'' என்றும், அவள் கைகளை ''மலர்க்கை'' என்றும் வருணிப்பதை நுனித்து உணர்க. இவ்விரண்டில் ஏதாவதொன்றைச் செய்தே மீள்வேன் என்பதால், இவையின்றித் தோல்வியோடு திரும்பமாட்டேன் என்று கூறுவதாகவும் கொள்ள வேண்டும். இவ்வாறு வஞ்சினம் செய்து போருக்குப் புறப்படுவதை ''நெடுமொழி வஞ்சி'' என்கிறது புறத்திணை.

27. பலகளம் தலை மௌலியோடு இலங்கலின், பல்தோள்
அலகு அளந்து அறியா நெடும்படைகளோடு அலங்க,
விலகு அளம்தரு கடல் தரை விசும்பொடு வியப்ப,
உலகு அளந்தவன் வளர்ந்தனனாம் என, உயர்ந்தான். (9751)

(களம்-கழுத்து; மௌலி-முடி; இலங்குதல்-விளங்குதல்; தோள்-கைகள்; அலகு-அளவு; அலங்குதல்-ஒளிவிட்டுப் பிரகாசித்தல்/அசைதலுமாம்; விலகுதல்-வேறுபடுதல்; அளம்-உப்பளம்; விசும்பு-ஆகாயம்)

பத்துக் கழுத்துக்களின்மேலே பத்துத் தலைகளும், அந்தப் பத்துத் தலைகளின் மேலே பத்து மகுடங்களும் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கவும், இருபது கைகளிலும், அளவிட்டு அறியமுடியாத, நீண்ட பலவகைப்பட்ட படைக்கலன்கள் பொலிந்து அசைந்து விளங்க வும், வேறுபட்ட உப்பளங்களைக் கொண்ட கடல்சூழ்ந்த நிலவுலகத்தில் உள்ளவர்களும், வானுலகத்தில் உள்ளவர்களும் வியந்து நிற்கவும், முன்பு வாமனனாக வந்த திருமால், திரிவிக்கிரமனாக உயர்ந்து வளர்ந்து நின்றதுபோல், இராவணன் தேரின்மீது ஏறி உயர்ந்து நின்றான்.

''களம்'' என்பது கழுத்தையும், ''தோள்'' என்பது கைகளையும், ''அளம்'' என்பது உப்பளத்தையும் குறிக்கும். ''தரை'', ''விசும்பு'' என்பவை ஆகுபெயராய் நிலவுலகில் உள்ள மக்களையும், விண்ணுலகத்திலுள்ள தேவர்களையும் குறிக்கும். இராவணனின் இப்போதைய தோற்றத்திற்கு ஓங்கி உலகளந்த உத்தமனான திருமாலின் தோற்றம் உவமை.

28. விசும்பு விண்டு இருகூறுற, கல்குலம் வெடிப்ப,
பசும்புண் விண்டெனப் புவிபட, பகலவன் பசும்பொன்
தசும்பு நின்று இடைந்து இரிந்திட, மதி தகை அமிழ்தின்
அசும்பு சிந்தி நொந்து உலைவுற, தோள்புடைத்து ஆர்த்தான். (9752)

(விசும்பு-வானம்; விண்டு-பிளந்து; கல்-மலை; விள்ளல்-பிளத்தல்; பகலவன்-சூரியன்; தசும்பு-குடம்; இடைதல்-தடுமாறுதல்/தவறுதல்;

Koviloor Digital Library

இரிதல்-அலைந்து திரிதல்; தகை-அழகிய; அசும்பு-கசிவு/நீர்த்திவலை; உலைவுறுதல்-வருந்துதல்; புடைத்தல்-தட்டுதல்/அடித்தல்)

வானம் பிளந்து இருகூறாகிப் போகும்படியும், மலைக் கூட்டங்களெல்லாம் வெடித்துச் சிதறும்படியும், பசிய புண்களெல்லாம் வெளிப்பட்டுத் தரையில் விழவும், பகலைச் செய்கின்ற சூரியன் தனது பொன்போன்ற குடத்தினின்றும், வழிதடுமாறி அலைந்து திரிந்து போகவும், அழகிய சந்திரன் தன் அமிழ்தம் போன்ற கிரணங்களைச் சிந்தி, நொந்து வருந்தவும், இராவணன் தன் இருபது தோள்களையும் தட்டிக்கொண்டு ஆரவாரம் செய்தான்.

இராவணன் தேரேறித் தோள்கொட்டி ஆரவாரம் செய்தபோது வானம் இருகூறாகிப் போனது; மலைகளெல்லாம் வெடித்துச் சிதறின; நிலம் பிளவுபட்டுப் புண் பிளந்தது போலாயிற்று; சூரியன் தன் கதி தடுமாறி அலைந்து திரிந்தான்; சந்திரன் குளிர்ச்சிபொருந்திய அமிழ்தம் போன்ற கிரணங்களைச் சிந்தி, நொந்து வருந்தலானான் என்பதாம். சூரியன் ஒளியைத் தருவதால் ''எல்லோன்'' என்றும், சினத்தைச் செய்தலால் ''தினகரன்'' என்றும், பகலைச் செய்வதால்-பகற்பொழுதை உருவாக்கு வதால் ''பகலவன்'' என்றும், ஒளிக்கதிர்களை வீசுவதால் ''கதிரவன்'' என்றும் வழங்கப்படுகிறான்.

29. ''நணித்து வெஞ்சமம்'' என்பது ஓர் உவகையின் நலத்தால்,
திணித் தடங்கிரி வெடித்து உக, சிலையை நாண் தெறித்தான்;
மணிக் கொடுங்குழை வானவர், தானவர், மகளிர்,
துணுக்கம் எய்தினர்; மங்கல நாண்களைத் தொட்டார். (9753)

(நணித்தல்-அண்மையில் வருதல்/நெருங்குதல்; வெஞ்சமம்-கொடிய போர்; ஓர்-ஒப்பற்ற; நலம்-மிகுதி; உகுதல்-உதிர்ந்துபோதல்; சிலை-வில்; கொடு-வளைந்த; குழை-குண்டலங்கள்/காதணிகள்; தானவர்-அசுரர்; துணுக்கம்-நடுக்கம்/அச்சம்)

''கொடிய போர் நம்மை மிகவும் நெருங்கி வந்துவிட்டது என்பதனால் உண்டான பெருமகிழ்ச்சியினால், இராவணன் தன் வில்லைத் தட்டி யெழுப்பி நாண்ஒலி செய்தான்; அதனால் திண்ணிய பெரிய மலைகூட வெடித்துப் பொடிப்பொடியாய்ச் சிதறும்படியாயிற்று; இவ்வொலியைக் கேட்ட இரத்தினங்கள் பதிக்கப்பெற்றதும், அழகியதும், வளைந்ததுமான காதணியாகிய குண்டலங்களையணிந்துள்ள தேவமகளிரும், அசுர மகளிரும், தங்கள் கணவர்க்கு என்ன நேருமோ என்று அச்சத்தால் துணுக்குற்றுத் தங்கள் திருமாங்கல்யங்களைத் - தாலிகளைத் தொட்டுப் பார்த்துப் பற்றிக்கொண்டனர்.

திருமாங்கல்யத்தைத் தொட்டுப்பார்த்துக் கொண்டனர் என்பது தம்கணவர் நலம் கருதி இறைவனிடம் வேண்டிக்கொண்டனர் என்ற

Koviloor Digital Library

பொருளைத்தரும். ''நலம்'' என்பது நன்மை என்ற பொருளில் மிகுதியை உணர்த்திற்று.

30. சுரிக்கும் மண்டலம் தூங்கு நீர்ச் சுரிப்பு உற, வீங்க
இரைக்கும் பல்லுயிர் யாவையும் நடுக்கமுற்று இரிய,
"பரித்திலன் புவி, படர்சுடர் மணித்தலை பலவும்
விரித்து எழுந்தனன் அனந்தன்மீது" என்பது ஓர் மெய்யான். (9754)

(சுரித்தல்-சுற்றிக்கிடத்தல்; சுரிப்புறுதல்-சுழலுதல்/சுருளல்; நீர்-கடல்; வீங்குதல்-பொங்கி எழுதல்; இரைத்தல்-ஒலித்தல்/உயிர்த்தல்; இரிதல்-நிலைகுலைந்து ஓடுதல்; அனந்தன்-ஆதிசேஷன்; பரித்தல்-பாரித்தல்/பாதுகாத்தல்/தாங்குதல்/சுமத்தல்; புவி-பூமி; படர்தல்-வீசுதல்; மீது-மேலே; மெய்யான்-தோற்றம் உடையவன் மெய்-தோற்றப்பொலிவு; தூங்குதல்-அசைதல்)

அவ்வாறு இராவணன் ஆரவாரித்ததால் வளைந்து விளங்கும் சூரியசந்திர மண்டலங்கள் எல்லாம், மிக்க நீரையுடைய கடல்களெல்லாம் சுருங்கிப்போயின; எனவே மிகுதியான, பலவகைப்பட்ட உயிரினங்கள் எல்லாம் ஒலியெழுப்பிக்கொண்டு, நடுக்கமுற்று நிலைகுலைந்து ஓடலாயின; இப்போது பூமியைத் தன் ஆயிரம் தலைகளால் தாங்கிக் கொண்டிருக்கின்ற ஆதிசேஷன், அந்தப் பூமியைத் தாங்கமாட்டாமல், விரிந்த ஒளிமிக்க இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற அழகிய ஆயிரம் தலைகளையும் விரித்துக்கொண்டு பூமியின் அடியிலிருந்து மேலே எழுந்து விட்டானோ என்று காண்போர் வியக்கும்படி, ஒரு உயர்ந்த தோற்றப் பொலிவுடன் பத்துத் தலைகளையுடைய இராவணன் பொலிந்து தோன்றினான்.

பத்துத் தலைகளையுடைய இராவணன் பொலிந்து உயர்ந்து நின்ற தோற்றத்திற்கு, ஆயிரம் தலைகளைஉடைய ஆதிசேஷன் பூமியின்மேல் எழுந்து நிற்கின்ற தோற்றம் உவமை. ''தூங்குநீர்'' என்பது மிக்க நீரையுடைய கடல் என்றும், அசைந்தாடும் அலைகளையுடைய கடல் என்றும் இருபொருளையும் தரும். ''சுரித்தல்'' என்ற சொல் அருளுதல், சுழல்தல், வற்றுதல், சுருங்குதல், வளைதல் என்ற பலபொருள்களைத் தரும். ''தூங்கு கையான், ஓங்குநடையான்'' என்பது புறநானூறு-22. தேர் ஓடுதலின் அதிர்ச்சியால் கடல் வறண்டது; மண்டலம் பருத்தது; உயிரினங்கள் நிலைகுலைந்து ஓடின; ஆதிசேஷன் இதனைத் தாங்க மாட்டாமல் மேலெழுந்து தோன்றினான் என்பதாம்.

31. தோன்றினான் வந்து, சுரர்களோடு அசுரரே தொடங்கி,
மூன்று நாட்டினும் உள்ளவர் யாவரும் முடிய,
"ஊன்றினான் செரு" என்று உயிர் உமிழ்தர, உதிரம்
கான்று நாட்டங்கள் வடஅனற்கு இருமடி கனல. (9755)

Koviloor Digital Library

(சுரர்-தேவர்கள்; தொடங்கி-முதற்கொண்டு; முடிதல்-இறந்துபடுதல்; செரு-போர்; உமிழ்தரல்-கக்குதல்/வெளிப்படுதல்; நாட்டங்கள்-கண்கள்; இருமடி-இரண்டு மடங்கு; கான்று-கக்கி; கனல்தல்-அழல் வீசுதல்)

''அசுரர்முதற்கொண்டு தேவர்களோடு மேல், நடு, கீழ் என்னும் மூன்று உலகங்களிலுள்ள எல்லோரும் இறந்துபடும்படி, இராவணன் போரில் மிக்க தீவிரமாக முனைந்து இருக்கிறான்'' என்றுகூறி உயிரை வெளிப்படுத்தவும், இரத்தம் கொப்பளிக்கின்ற கண்கள் வடவைத்தீயினும் இருமடங்கு நெருப்புப்பொறி வீச, போர்க்களத்திற்குள் இராவணன் வந்து தோன்றினான்.

''ஊன்றுதல்'' என்பது பகைவரை எதிர்த்தும் தடுத்தும் மிக்க உக்கிரத்துடன் போர்புரிதலைக் குறிக்கும். இது ''எதிர் ஊன்றல் காஞ்சி'' எனப் புறத்திணையில் பேசப்படுகிறது.

32. சுக்கிரீவன் முதலியோர் திகைத்தல்

உலகில் தோன்றிய மறுக்கமும், இமைப்பிலர் உலைவும்
மலையும், வானமும், வையமும் மறுகுறு மறுக்கும்,
அலைகொள் வேலைகள் அஞ்சின சலிக்கின்ற அயர்வும்,
தலைவனே முதல் தண்டல்இலோர் எலாம் கண்டார். (9756)

(மறுக்கம்-கலக்கநிலை; இமைப்பிலர்-தேவர்கள்; உலைவு- வருத்தம்/நடுக்கம்/நிலைகேடு; வையம்-நிலம்/பூமி; மறுக்கு-சுழற்சி; அயர்வு-தளர்ச்சி; தலைவன்-சுக்கிரீவன்; தண்டல்-தடுத்தல்/மாறுபடுதல்; சலித்தல்-சஞ்சலமடைதல்)

உலகில் நிகழ்கின்ற கலக்கத்தையும், இமையாநாட்டமுடைய தேவர்கள் அனுபவிக்கின்ற நடுக்கத்தையும், மலைகளும், விண்ணும், மண்ணும் கலங்குகின்ற சுழற்சியையும், அலைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள கடல்கள் அஞ்சிச் சலித்து தளர்ச்சியுறுவதையும், யாராலும் தடுத்தற்கரிய வலிமை படைத்த குரக்கினத் தலைவனான சுக்கிரீவன் போன்ற எல்லோரும் நன்கு கண்டார்கள்.

இராவணன் போர்க்களத்தில் தோன்றியபோது உலகம் கலங்கியது; தேவர்கள் நடுங்கினர்; மலைகள், வானம், பூமி ஆகியவை நிலைதிரிந்தன; கடல்கள் தளர்ச்சியுற்றன; இவையெல்லாவற்றையும் சுக்கிரீவன் முதலான குரக்கின வீரர்கள் கண்டுகொண்டிருந்தனர் என்பதாம். இராவணன் வருகையால் மூன்று உலகங்களிலும் உண்டான மாறுபாடுகளும், நடுக்கமும் பேசப்படுகிறது.

Koviloor Digital Library

33. பீறிற்றாம் அண்டம்'' என்பது ஓர் ஆகுலம் பிறக்க,
வேறிட்டு ஒரு பெருங் கம்பலை பம்பிமேல் வீங்க,
''மாறிப் பல்பொருள் வகுக்குறும் காலத்து மறுக்கம்
ஏறிற்று, உற்றுளது என்னைகொலோ?'' என எழுந்தார். (9757)

(பீறுதல்-கிழிதல்/பிளத்தல்; ஆகுலம்-வாட்டம்/மனக்கலக்கம்; கம்பலை-பேரொலி; பம்புதல்-பெருகுதல்/செறிதல்; வீங்குதல்-ஓங்குதல்; காலம்-ஊழியிறுதிக்காலம்; மறுக்கம்-கலக்கம்; ஏறுதல்-உண்டாகுதல்; உற்றுளது-நிகழ்ந்தது; வேறு-மாறுபட்ட)

''இவ்வண்டகோளமே கிழிந்து பிளவுபட்டு போயிற்றோ, என்று ஒரு மனக்கலக்கம் உண்டாகவும், இயல்புக்கு மாறான ஒரு பேரொலி எழுந்து எங்கும் நிறைந்து ஓங்கவும், உலகில் உள்ள எல்லாப்பொருள்களும் தலைகீழாக மாறிப்போகும் ஊழிக்காலத்தில் உண்டாகும் ஒருவகையான குழப்பநிலை இப்போது நிகழ்கிறதே! இதற்கு என்ன காரணம்?'' என்று கூறிக்கொண்டு, வானரவீரர்கள் எல்லோரும் திடுக்கிட்டு எழுந்தார்கள்.

''மாறிப்பல்பொருள்வகுக்கும்காலம்''என்பதுஊழியிறுதிக்காலத்தில் எல்லா உயிரினங்களும் அழிந்துபோதலையும், அவற்றை மீண்டும், பரம்பொருள் வகுத்துப் படைத்தலையும் ஒருசேரக் குறிக்கும் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

34. கடல்கள் யாவையும், கல்மலைக் குலங்களும், காரும்,
திடல்கொள் மேருவும், விசும்பிடைச் செல்வன சிவண,
அடல்கொள் சேனையும், அரக்கனும், தேரும், வந்து ஆர்க்கும்
கடல்கொள் பேரொலிக் கம்பலை என்பதும் கண்டார். (9758)

(கல்-உறுதி/திண்மை; திடர்-மேடு; கார்-மேகம்; சிவண-ஒப்ப; அடல்-வலிமை; கம்பலை-பேராரவாரம்)

அவ்வாறு பேரொலியைக் கேட்டுத் துணுக்குற்ற சுக்கிரீவன் முதலியோர், கடல்கள் எல்லாமும், உறுதிவாய்ந்த கற்களாலான மலைக் கூட்டங்களும், மேகங்களும், மேடுகள் கொண்ட மேருமலையும், ஆகிய எல்லாம் ஒன்றுசேர்ந்து வானத்தின் வழியாகச் செல்லுவதை ஒப்ப, வலிமைமிகுந்த அரக்கர்சேனையும், அரக்கனாகிய இராவணனும், அவன் ஏறிவந்த தேரும் செய்யும் பேராரவாரம்தான், கடல்போல் பேரொலி எழுப்பும் அந்தப் பேராரவாரத்திற்குக் காரணம் என்பதைக் கண்டறிந் தார்கள்.

கடல்களுக்கு அரக்கர்சேனையும், கல்மலைக் குலங்களுக்கு அவர்கள் கைக்கொண்டிருக்கின்ற படைக்கலங்களும், திடல்கொள் மேருவுக்கு இராவணன் ஏறிவந்த தேரும் உவமை. இவைகள் எல்லாம் பேரொலி

Koviloor Digital Library

எழுப்பிக்கொண்டு வந்ததுதான் அவர்கள் துணுக்குற்றதற்குக் காரணம் என்பதைத் தெரிந்துகொண்டார்கள் என்பதாம்.

35. வீடணன் இராமபிரானுக்குக் கூறுதல்.

"எழுந்து வந்தனன் இராவணன்; இராக்கத் தானை
கொழுந்து முந்தி வந்துற்றது; கொற்றவ! குலுங்கிற்று
அழுந்துகின்றது நம் பலம்; அமரரும் அஞ்சி,
விழுந்து சிந்தினர்" என்றனன், வீடணன் விரைவான். (9759)

(கொற்றம்-வெற்றி; எழுந்து-புறப்பட்டு; கொழுந்து-முன்னணிப் படை; குலுங்குதல்-நடுக்கமுறுதல்; பலம்-சேனை; அழுந்துதல்-தாழ்தல்/ ஆழ்தல்)

வீடணன் விரைந்து சென்று இராமபிரானை அணுகி, "வெற்றி வேந்தனே! இராவணன் போர்செய்யக் கருதி சேனையுடன் புறப்பட்டு வந்துவிட்டான்; அவனுடைய அரக்கர் சேனையின் முன்னணிப்படை இங்கு முன்பே வந்து சேர்ந்துவிட்டது; அதனைக்கண்டு நம்படையும், படைவீரர்களும் நடுங்கிப் போகிறார்கள்; தேவர்கள்கூடப் பயம் கொண்டு கீழே விழுந்து சிதறிக் கிடக்கிறார்கள்" என்று அறிவுறுத்தினான்.

"எழுந்து" என்பது புறப்பட்டு என்ற பொருளைத்தரும். "கொழுந்து" என்பது முன்னணிப்படையைக் குறிக்கும். முன்பும் மிதிலை நகருக்குச் சென்ற தசரதனின் சேனையின் முன்னணிப்படை, தசரதன் தன் அரண்மனையிலிருந்து புறப்படுவதற்கு முன்பே மிதிலை வந்து சேர்ந்தது என்று கூறியிருப்பதையும் இங்கு நினைவுகூர்க. "படரும் சேனையின் கொழுந்துபோய்க் கொடிமதில் மிதிலை கூடிற்றே" என்பது பாலகாண்டம் எழுச்சிப்படலம். "பலம்" என்ற சொல் பொதுவாக ஆற்றல் என்ற பொருளைத் தருமென்றாலும், இங்கே சேனை என்ற பொருளையே தரும். "எம்பெரும் முதல்வ! நீ எழுதியால்" என்பது கந்தபுராணம்.

இராவணன் தேரேறு படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

35. இராமன் தேர்ஏறு படலம் [27 பாடல்கள்]

இராவணனுடன் போர்செய்யும் பொருட்டு, சிவபெருமானால் கட்டளையிடப்பட்டு, இந்திரனால் மாதலிமூலம் அனுப்பப்பட்ட இந்திரனது தேரில் இராமபிரான் ஏறுகின்ற நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதி எனப் பொருள் விரிவுகொள்ளும். இது 27பாடல்களைக் கொண்ட சிறிய பகுதி. சில சுவடிகளில் "இராமன் திருத்தேர் ஏறு படலம்'' எனவும், ''இராகவன் திருத்தேர் ஏறு படலம்'' எனவும், சிலசுவடிகளில் ''இராகவன் தேரேற்றுப் படலம்'' எனவும், ''இராகவன் தேரேறுபடலம்'' எனவும் குறிக்கப் பெற்றிருக்கின்றன. சில சுவடிகளில் முன்பு கூறப்பட்ட இராவணன் தேரேறுபடலமும், இப்பொழுது பேசப்படுகிற இராமன் தேரேறு படலமும் சேர்ந்து ஒரே படலமாக ''தேர் ஏறு படலம்'' எனவும் குறிக்கப்பெற்றிருக்கின்றன. இந்நிகழ்ச்சி வான்மீகத்தில் 103வது சர்க்கத்தில் விரிவாகப் பேசப்படுகிறது. கம்பனும் வான்மீகியும் வேறுபடும் இடங்கள் அவ்வப்பாடல்களின் விளக்கங்களில் கூறப்பட்டிருக்கிறது.

இப்படலத்துள், இராமபிரான் போர்க்கோலம் பூண்டு எழுந்து வருதல்; சிவபெருமான் அதுகண்டு, இந்திரனிடம், அவனது தெய்வத்தன்மை பொருந்திய தேரை இராமபிரானிடம் அனுப்புமாறு கட்டளையிடுதல்; இந்திரன் மகிழ்ந்து தன் தேர்ப்பாகன் மாதலியை அழைத்துத் தேரைக் கொணருமாறு பணித்தல்; மாதலி கொண்டு வந்த தேரின் சிறப்பு; தேரை மாதலி இராமபிரானிடம் கொண்டுவருதல்; இராமபிரான் இது அரக்கர்களின் மாயமாக இருக்குமோ என்று ஐயுறுதல்; தேரில் கட்டப்பட்டிருந்த குதிரைகளின் வேதமொழியாலும், இலக்குவன், அனுமன் முதலியோரின் உறுதிமொழியாலும், இராமபிரான் ஐயந்தெளிந்து தேரில் ஏறுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராமபிரான் போர்க்கோலம் பூண்டு போருக்கு எழுதல்

தொழும் கையொடு, வாய்குழறி, மெய்ம்முறை துளங்கி,
விழுந்து கவிசேனை இடு பூசல்மிக, விண்ணோர்
அழுந்துபடு பால்அமளி, "அஞ்சல்'' என, அந்நாள்
எழுந்தபடியே கடிது எழுந்தனன், இராமன். (9760)

Koviloor Digital Library

(குழறுதல்-வார்த்தை தடுமாறுதல்; துளங்குதல்-தளர்ந்துபோதல்; கவி-வானரம்/குரங்கு; பூசல்-ஆரவாரம்; படுதல்-அழுந்துதல்; எழுந்தபடி-முன்பு அறிதுயிலினின்றும் எழுந்ததைப்போல; கடிது-விரைந்து; அந்நாள்-முற்காலத்தில்; பால்அமளி-பாற்கடல் படுக்கை)

அவ்வாறு இராவணன் தேரேறிப் போர்க்களத்துள் வந்து தோன்றியதைக் கண்ட வானரசேனை மிக்க அச்சம்கொண்டு, இராமபிரானை நோக்கிக் கூப்பிய கைகளோடு, வார்த்தைகள் வாயினின்றும் வெளிவராது தடுமாறி, உடம்பு செயலிழந்து தளர்ச்சியடையத் தரையில் விழுந்து, அரற்றுகின்ற பெரும் ஆரவாரம் மிக்குக் கேட்கவே, இராமபிரான், முன்னொரு காலத்தில் தேவர்கள் தம்மிடம் வந்து, இராவணஅரக்கன் இழைக்கின்ற தீமைகளைக் கூறி முறையிட்டபோது திருமால் தான் பள்ளி கொண்டிருக்கின்ற திருப்பாற்கடலாகிய படுக்கையினின்றும் எழுந்து, ''அஞ்சாதீர்கள்'' என்று அவர்களுக்கு அபயம் அளித்த வண்ணமே, இப்பொழுதும் இந்த வானரசேனையைக் காக்கும் பொருட்டு விரைவாக எழுந்து வந்தான்.

''பால்அமளி'' என்ற பயன்பாட்டை நோக்குக. திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் தன்மையைக் குறித்தது எனக்கொள்க. ''வெள்ளிய கடலில் மேனாள், விண்ணவர் தொழுது வேண்டப் பள்ளி தீர்ந்தான்'' என்று முன்பு கூறியிருப்பதையும் இங்கு நினைவுகூர்க. காப்பியத்தில் முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சியையே உவமானமாகக் கூறுவது கம்பனின் தனித்தன்மை. இங்கே இராமபிரானைத் திருமாலாகவே கூறியிருப்பதையும் உணர்க.

2. கடக்களிறு எனத் தகைய கண்ணன், ஒரு காலன்
விடக்கயிறு எனப் பிறழும் வாள், வலன் விசித்தான்;
"மடக்கொடி துயர்க்கும், நெடுவானின் உறைவோர்தம்
இடர்க்கடலினுக்கும், முடிவு இன்று" என இசைத்தான். (9761)

(கடம்-மதம்; களிறு-ஆண்யானை; கண்ணன்-இராமபிரான்; காலன்-இயமன்; விடம்-நஞ்சு; கயிறு-பாசக்கயிறு; பிறழ்தல்-ஒத்து விளங்குதல்; வலன்-வலம்/வலப்பக்கம்; விசித்தல்-கட்டுதல்; மடம்-இளமை; இடர்-துன்பம்; இசைத்தல்-கூறுதல்; ஒரு-ஒப்பற்ற)

மதநீர் மிகுதியாகப் பெருக்குகிற ஆண்யானை போன்றவனாகிய அழகிய கண்களையுடைய இராமபிரான், ஒப்பற்ற இயமனுடைய நஞ்சு தோய்ந்த பாசக்கயிறு போன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தன் வாட்படையை, தனது இடுப்பின் வலப்பக்கத்தில் கட்டிக்கொண்டான்; பின்னர், ''இளமை பொருந்திய வஞ்சிக்கொடி போல்வாளாகிய சீதாதேவி படுகின்ற துன்பத்திற்கும், உயர்ந்த வானில் உறைகின்ற தேவர்களின்

Koviloor Digital Library

கடல்போன்ற துன்பத்திற்கும் இன்றே இறுதிநாளாகும்'' என்று சூளுரைத்தான்.

''கண்ணன்'' என்பது கருணைமிகுந்த கண்களையுடைய இராம பிரானைக் குறிக்கும். இச்சொல் இராமபிரானைக் குறித்துக் காப்பியத்தில் பல இடங்களிலும் பயின்று வந்திருப்பதை உணர்க. அவனுடைய வாட்படைக்கு, இயமனின் பாசக்கயிறு ஒப்பு. ''வலன்'' என்பது வலம் என்பதன் கடைப்போலி; வலப்பக்கத்தைக் குறிக்கும்; முன்பு இராவணன் தேர் ஏறியபோது கூறிய இரு வஞ்சினத்தின் அமங்கலம் நிறைந்த கொடுமைக்கும், இப்போது தேர்ஏறுகின்ற இராமபிரானின் மங்கலம் நிறைந்த வஞ்சினத்திற்கும் உரிய வேறுபாட்டினை உய்த்துணர்க. அதனால்தான் கவிஞன் முதல் அடியிலேயே இராமபிரானைக் கருணைநிறைந்த கண்களை உடையவன் என்ற பொருளில் ''கண்ணன்'' என்று அழைத்திருப்பானோ என்று எண்ணத்தோன்றுவதையும் உணர்க. ''இடர்க்கடல்'' என்பது உருவகம். துயரமாகிய கடல் என்பது பொருள். கடல்போன்ற பெரிய துன்பம் என்றால் உவமையாகும். ''கடக்களிறு எனத்தகைய கண்ணன்'' என்பது, முன்பு பாயிரத்தில் ''இருகை வேழத்து இராகவன்'' எனக் கூறியிருப்பதை நினைவுபடுத்துவதை உணர்க. ''கருணையம் கோயிலுள் இருந்த கண்ணன்'' என்பது வீடணன் அடைக்கலப்படலம்.

3. தன் அக வசத்து உலகு தங்க, ஒரு தன்னின்
பின்னக அசத்த பொருள் இல்லை; பெரியோனை,
மன்ன கவ சத்து உற வரிந்தது என என்கோ?
இன்ன கவசத்தையும் ஓர் ஈசன் எனலாமால். (9762)

(அகவசம்-உட்பரப்பு; கவசம்-பாதுகாப்பு; மன்-நிலைபெற்ற அகவசம்-மனத்திற்குள்; வரித்தல்-இறுகப்பிணித்தல்; இன்ன-இத்தகைய; ஓர்-ஒப்பற்ற; ஈசன்-பரம்பொருள்; பின்ன-வேறாக; பின்னம்-வேறுபட்டது)

தனது மனமாகிய உள்ளத்திலேயே உலகிலுள்ள அனைத்து உயிரினங் களும் தங்கியிருக்கின்றன என்றும், தன்னைத்தவிர, வேறுபட்டதான வேறு ஒரு பொருள் இல்லை என்று நூல்கள் கூறுகின்றன; அத்தகைய பெருமைக்குரியவனான இராமபிரானை, நிலையற்ற இந்தத் தன்மையை யுடைய ஒரு கவசம் பிணைத்துக் கட்டிக்கொண்டது என்று எவ்வாறு கூறுவது? இத்தகைய கவசத்தையும், அது அவனை உட்கொண் டிருப்பதால் ஒரு பரம்பொருள் என்று கூறலாமல்லவா?'' என்கிறான் கவிஞன்.

அவனைக் கட்டிப்போட்டிருப்பதால் அக்கவசத்தையும் ஒரு தெய்வம் என்று கூறலாமேதவிர அது இராமபிரானது பாதுகாப்புக்காகக் கட்டப்

Koviloor Digital Library

பட்டது என்று கூறுவது பொருந்தாது என்கிறான் கவிஞன். இராமபிரான் கவசத்தைத் தன் உடம்பில் கட்டிக்கொண்டான் என்று கூறுவதை, கவசம் இராமபிரானைக் கட்டிக்கொண்டது என்றுகூறி, அது அவனுடைய பாதுகாப்புக்காகக் கட்டப்படவில்லை; காரணம் அவனே இவ்வுலக உயிரினங்கள் அனைத்தையும் பாதுகாப்பவன். எனவே அவனைப் பாதுகாக்கும் இக்கவசத்தையும் இராமபிரானைப்போல் ஓர்கடவுள்என்றே கூறலாமல்லவா? என்று கேட்கிறான் கவிஞன் என்பதாம்.

4. புட்டிலொடு கோதைகள், புழுங்கி எரி கூற்றின்
அட்டில் எனலாய மலர் அங்கையின் அடக்கிக்
கட்டி, உலகின் பொருள் எனக் கரைஇல் வாளி
வட்டில் புறம் வைத்து, அயல் வயங்குற வரிந்தான். (9763)

(புழுங்குதல்-வெதும்புதல்; எரிதல்-கொதித்தல்; அட்டில்-அடுப்படி/ சமையல் அறை/மடைப்பள்ளி; அங்கை-அழகிய கைகள்; கோதை-விரல்உறை; புட்டில்-முன்கைத் தோல் உறை; கரைஇல்-அளவில்லாத; வட்டில்-புட்டில்/அம்பறாத்தூணி; அயல்-பக்கம்; வயங்குதல்-விளங்குதல்; புறம்-முதுகு; வரித்தல்-கட்டுதல்)

இயமனின் வெதும்பிக் கொதிக்கின்ற நெருப்புப்போன்ற அடுப்பு என்று சொல்லும்படி விளங்கும், மலர்போன்ற அழகிய கைகளில், விரலுறையோடு, முன்கைத் தோல் உறையையும் கட்டிக்கொண்டு, இவ்வுலகில் உள்ள பொருள்கள் எல்லாம், அதற்குள் அடங்கியிருப்பது போல, அளவற்ற அம்புகளை அடக்கிக் கொண்டு, அம்பறாத்தூணியை முதுகுப்பக்கமாக வைத்துக் கட்டிக்கொண்டு பொலிவுற்றுத் திகழ்ந்தான் இராமபிரான்.

இராமபிரான் தாமரைமலர் போன்ற தன் கைகளில் தோல் உறைகளையும், விரல்களில் விரல் உறைகளையும் பொருத்திக் கொண்டு, தன் முதுகில் அம்பறாத்தூணியையும் கட்டிக்கொண்டான் என்பது கருத்து. விரல் உறை ''விரல் சரடு'' எனவும் வழங்கப்படும்.

5. சிவபெருமான் தேவர்களுக்கு இட்ட கட்டளை

"மூண்ட செரு இன்று அளவில் முற்றும்; இனி வெற்றி
ஆண்தகையது; உண்மை; இனி அச்சம் அகல்வுற்றீர்;
பூண்ட மணி ஆழி வய மா நிமிர் பொலந்தேர்
ஈண்ட விடுவீர் அமரில்" என்று அரன் இசைத்தான். (9764)

(மூண்டது-தொடங்கியுள்ளது/முற்றியுள்ளது; ஆண்தகை-இராம பிரான்; உண்மை-சத்தியம்; ஆழி-சக்கரம்; மா-குதிரை; மணி-இரத்தினம்;

Koviloor Digital Library

பொலன்-அழகு/பொன்; ஈண்ட-பொருந்த; விடுதல்-அனுப்புதல்/செலுத்துதல்; அரன்-சிவபெருமான்; இசைத்தல்-கூறுதல்)

சிவபெருமான், தேவர்களை நோக்கி, ''இப்பொழுது தொடங்கியிருக்கின்ற இராம இராவணப்போர் இன்றுடன் நிறைவடைந்துவிடும்; எனவே இனிமேல் வெற்றி என்பது ஆண்மைப் பண்புடையவனாகிய இராமபிரானுக்கே உரியது; அதுதான் உண்மை; எனவே நீங்கள் இனி அச்சம் கொள்ளாதீர்கள்; இரத்தினங்கள் பதிக்கப்பெற்றதும், சங்கரங்களை உடையதும், வலிமை மிக்கதும், உயர்ந்த குதிரைகள் பூட்டப்பெற்றதும், அழகிய பொன்னலானதுமான உங்களுடைய தேரை, இராமபிரானுக்கு உதவியாகப் பொருந்தும்படி விரைவில் போர்க்களத்துக்கு அனுப்பி வைப்பீர்களாக!'' என்று பணித்தான்.

எங்கே போர்நடந்தாலும் அதை வானில் நின்று நோக்குவது தேவர்கள் வழக்கம்; அவ்வாறு அச்சத்துடன் இராம இராவணப்போர் தொடங்கியதைக் கண்டுகொண்டிருந்த தேவர்களை நோக்கி சிவபெருமான், இராமபிரானுக்கு உதவியாகத் தேவலோகத்தில் உள்ள தேரைப் போர்க்களத்துக்கு அனுப்பும்படி கட்டளையிடுகிறான் என்பதாம்.

இங்கே ''அரன்'' என்று சிவபெருமானைக் குறிப்பிட்டோம்; சில அச்சுப்பிரதிகள் ''அயன்'' இசைத்தான் என்று பிரமதேவன் கூறியதாகவும் கூறுகின்றன. இங்கே வான்மீகம் வேறுபடுகிறது; சிவபெருமான் தேவர்களுக்குக் கட்டளையிட்டதாக அங்கே பேசப்படவில்லை; இராவணன் தேரில்வரவும், இராமபிரான் வாகனம் ஏதுமின்றித் தரையில் நிற்கவும் கண்ட இந்திரன், தானே தீர்மானித்துத் தன் தேரோட்டி மாதலியை அழைத்து இராமபிரானுக்குத் துணைபுரியும்படி அனுப்பிவைத்தான் என்றும், தேருடன் வில், கவசம், பல பாணங்கள், ஆயுதங்கள் முதலானவற்றையும் அனுப்பிவைத்தான் என்றும் வான்மீகமும். அத்யாத்ம ராமாயணமும் பேசுகின்றன.

6. மாதலி தேர் கொணர்தல்

தேவர் அதுகேட்டு "இது செயற்கு உரியது" என்றார்;
ஏவல் புரி இந்திரனும், அத்தொழில் இசைந்தான்;
"மூவுலகும் முந்தும் ஓர் கணத்தின் மிசைமுற்றிக்
கோவில் புரிகேன்; பொருஇல் தேர் கொணர்தி!'' என்றான். (9765)

(இசைதல்-உடன்படுதல்; பொருஇல்-ஒப்பற்ற; முற்றுதல்-சூழ்தல்/வளைத்தல்)

சிவபெருமான் அவ்வாறு கூறியதைக் கேட்ட தேவர்கள்; ''இது செய்தற்கேற்ற நற்காரியம்'' என்றுகூறித் தம் தலைவர் இந்திரனிடம் கூறினார்கள்; மும்மூர்த்திகளுக்கும் தொண்டுபுரியும் இந்திரனும், அதுவே சரி என்று

Koviloor Digital Library

உடன்பட்டான்; மூவுலகத்தையும் ஒரு இமைப்பொழுதிற்குள் சுற்றிவரும் ஆற்றலுடைய இத்தேரை இராமபிரான் உறையும் கோவில்போல ஆக்குவேன் என்று பெருமிதத்தோடு எண்ணி, தன் தேர்ப்பாகன் மாதலியை அழைத்து, அந்த ஒப்பற்ற தேரை விரைவில் கொண்டுவருவாயாக!'' என்று கட்டளையிட்டான்.

கோ+இல்-கோயில் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம் கோயில். அரசன் தங்கியிருக்கும் இடம் அரண்மனை. மாதலி என்பவன் இந்திரனின் தேர்ச்சாரதி.

7. இந்திரன் தேரின் சிறப்பியல்புகள் [8 பாடல்கள்]

மாதலி கொணர்ந்தனன்; மகோததி வளாவும்
பூதலம் எழுந்து படர் தன்மைய பொலந்தேர்;
சீதமதி மண்டலமும் ஏனை உளவும், திண்
பாதம் என நின்றது, படர்ந்தது விசும்பில். (9766)

(மகோததி-பெரியகடல்; வளாவுதல்-சூழப்பெறுதல்; பூதலம்-நிலவுலகம்; பொலம்-பொன்; சீதம்-குளிர்ச்சி; மதி-சந்திரன்; உள-உள்ளன; பாதம்-அடிப்பரப்பு; விசும்பு-வான்)

பெரிய கடலைச் சூழ்ந்துள்ள இந்நிலவுலகமே எழுந்துவந்து பரவி நின்றதுபோன்ற தன்மையுடைய பொன்மயமானதொரு தேரை, இந்திரனின் சாரதியான மாதலி கொண்டுவந்து நிறுத்தினான்; அது குளிர்ச்சிபொருந்திய சந்திரமண்டலமும், மற்றுமுள்ள சூரியமண்டலம், கோள்கள் முதலானவும், திண்ணிய அடிப்பரப்பு என்று சொல்லும்படி, வானளாவ உயர்ந்து நின்றது.

இந்திரனின் தேரின் உயர்ச்சி பேசப்படுகிறது. அது நிலத்தில் நின்றால் சந்திரமண்டலம் அதன் அடியில் உள்ளது என்று கூறும்படியாக வானளாவ ஓங்கி உயர்ந்து நின்றது என்பதாம். மகா-உததி-மகோததி-பெரியகடல். உததி-கடல்; முன்பும் பய+உததி என்று பாற்கடலைப் ''பயோததி'' என்று குறிப்பிட்டதையும் நினைவுகூர்க. அத்தேரினது அகலம் பூதலம் எழுந்து படர்தன்மைய; அத்தேரினது அடிப்பரப்பின் உயர்ச்சி சீதமதி மண்டலமும் ஏனை உளவும் திண்பாதம் என நின்றது; அதன் உயர்ச்சி, விசும்பின் படர்ந்தது என்று அத்தேரின் அகலம், அடிப்பரப்பு, உயரம் முதலியன பேசப்பட்டன என்க.

8. குலக்கிரிகள் ஏழின் வலிகொண்டு உயர் கொடிஞ்சும்,
அலைக்கும் உயர் பாரின் வலி ஆழியின் அச்சும்,
கலக்கு அற வகுத்தது; கதத்து அரவம் எட்டின்,
வலக்கயிறு, கட்டியது; முட்டியது வானை. (9767)

Koviloor Digital Library

(வலி-வன்மை; கொடிஞ்சு-தேரின் ஒரு உறுப்பு; ஆழி-சகடை/சக்கரம்; கலக்குஅற-கட்டுக்குலையாதவாறு; கதம்-சீற்றம்; அரவம்-பாம்புகள்; வலம்-வலிமை; குலம்-சிறந்த)

ஏழு சிறந்த குலமலைகளின் வலிமையைக் கொண்டு கட்டப்பட்ட கொடிஞ்சு என்னும் உறுப்பும், அலைந்து திரிகின்ற உயர்ந்த நிலவுலகத்தின் வலிமையைக் கொண்டு அமைக்கப்பட்ட சக்கரங்களின் அச்சாணியும், கோத்து அமைக்கப்பட்ட அந்தத்தேர், மிக்க சீற்றம்கொள்ளும் இயல்புடைய எட்டுவகையான பாம்புகளின் வலிமையைக் கொண்டு கட்டப்பட்டதாகும்; அதன் உயர்ச்சியோ வானையே முட்டுகின்ற அளவுள்ளதாகும்.

''கொடிஞ்சு'' என்பது தேரின் ஒரு உறுப்பு; தேரில் நிற்பவர்கள் கீழே விழுந்துவிடாமல் பற்றிக்கொள்ளும் ஓர் உறுப்பு. இது கொடிஞ்சி எனவும் வழங்கப்பெறும். அது ஏழு குலமலைகளின் வலிமையைக் கொண்டு கட்டப்பட்டது; அலைகள் மோதுகின்ற கடலால் சூழப்பெற்ற உலகினைப்போன்ற வலிமைமிக்க சக்கரங்களையும், அச்சாணியையும் உடையது அந்தத்தேர். அது கட்டப்பட்ட கயிறு உலகில் உள்ள சிறந்த எட்டு நாகங்களின் வலிமையைக் கொண்டதாகும். அதன் உயர்ச்சி வானை முட்டுவதாகும்; என்று அந்தத்தேரின் உறுதியும், திண்மையும், உயர்ச்சியும் பேசப்படுகிறது.

குலக்கிரிகள் ஏழு; கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன. கந்தபுராணம் இவற்றுடன் கந்தமாதனத்தையும் சேர்த்து, எட்டுக் குலமலைகள் எனப்பேசும். ''சப்தகுல பர்வதம்'' ''அஷ்டகுல பர்வதம்'' என்பது வடமொழி. குல நாகங்கள் எட்டு. வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என்பனவாம். சாதாரணமாக உயர்ந்து விளங்கும் ஒரு பொருளுக்கு மேலும் சிறப்புச்சேர்க்க அதனைச் ''சாதி'' என்ற அடை மொழியால் கூறுவதுண்டு. ''லிங்கம்'' என்பது சாதாரணமான ஒரு வாசனைப்பொருள். ''சாதிலிங்கம்'' என்பது உயர்ந்த தன்மைமிக்க லிங்கம் என்று பொருள்தரும். சாதி என்பது குலம் எனத் தமிழாக்கப்பட்டது. சிறந்தவைகளுள் சிறந்தவையை அஷ்டகுல மலைகள் என்றும், அஷ்டகுல நாகங்கள் என்றும் கூறுகிறோம் என்பதறிக. சாதி என்பதும் குலம் என்பதும் நல்ல பொருள்களின் மேன்மையைக் குறிக்கும் எனக்கொள்க. கொடிஞ்சு, சக்கரம், அச்சு என்பன தேரின் உறுப்புக்கள். அவற்றின் வலிமைபற்றிப் புலப்படுத்தப்படுகிறது. கொடிஞ்சு என்பது தாமரைமொட்டு வடிவமாக உள்ள ஒரு உறுப்பு. ''கலக்கு அற வகுத்தது'' என்பது கட்டுக்குலையாதவாறு, உறுதியாக அமைக்கப்பெற்றது என்ற பொருளைத்தரும்.

Koviloor Digital Library

9. ஆண்டினொடு, நாள், இருது, திங்கள் இவைஎன்னா,
மீண்டனவும், மேலனவும் விட்டு, விரிதட்டில்
பூண்டுளது; தாரகை மணிப் பொருஇல் கோவை
நீண்ட புனை தாரினது; நின்றுளது குன்றின். (9768)

(இருது-பெரும்பொழுது/பருவம்; மீண்டன-சென்றன; பூணுதல்-அமைத்தல்; தாரகை-நட்சத்திரங்கள்; பொருஇல்-ஒப்பற்ற; புனைதல்-அலங்கரித்தல்; தார்-மாலை; குன்று-மலை)

அந்தத்தேரின் நடுவிடமாகிய தேர்த்தட்டில் இப்பொழுது நிகழும் வருடம், நாள், பருவம், மாதம் முதலிய காலக்குறிப்புக்கள் அமைக்கப் பெற்றிருக்கும். அவை கழிந்து போனவைகளையும், இனி வர இருப்பன வற்றையும்கூடக் குறிக்கும்; நட்சத்திரங்களைப்போல் ஒளிவீசும் அழகிய இரத்தினங்கள் கொண்டு இழைக்கப்பெற்று கோக்கப்பெற்ற, நீண்ட, அலங்கரிக்கப்பட்ட மாலைகளையுடையது; மலைபோல அசையாத் தன்மையும் உறுதியும் பெற்றது அந்தத்தேர். அது வந்து இந்திரன் முன்பு நின்றது.

மீண்டன, மேலன என்று இறந்த காலத்தையும், எதிர்காலத்தையும் கூறியதால் நிகழ்காலமும் இதனுடன் அடங்கும் என்பது ஒரு குறிப்பு. நிகழ்காலம் என்ற ஒன்றே இல்லை என்பது சமணர்களின் கருத்து. ஒன்று இறந்தகாலமாக இருக்கவேண்டும்; அல்லது வரப்போகும் எதிர்காலமாக இருக்கவேண்டும், நிகழ்காலம் என்ற ஒன்றே கிடையாது என்பது சமணர்களின் வாதம். இங்கேயும் மீண்டன, மேலன என்றுகூறி நிகழ்காலம் பற்றிக் கூறாததையும் கருத்திற்கொள்க. ''இருது'' என்பது இரண்டு மாதங்கள் கொண்ட பொழுதைக் குறிக்கும். அவை கார்காலம்-ஆவணி புரட்டாசி; குளிர்காலம்-ஐப்பசி, கார்த்திகை; முன்பனிக்காலம்-மார்கழி, தை; பின்பனிக்காலம்-மாசி, பங்குனி; இளவேனிற்காலம்-சித்திரை, வைகாசி; முதுவேனிற்காலம்-ஆனி, ஆடி என்பனவாம். தேர்த்தட்டில் இதுபோலக் காலப்பகுதிகளைக் குறித்து வைப்பது பழமையான வழக்கம் எனத் தெரியவருகிறது.

10. மாதிரம் அனைத்தையும் மணிச் சுவர்களாகக்
கோதுஅற வகுத்தது; மழைக் குழுவையெல்லாம்
மீதுஉறு பதாகை என வீசியது; மெய்ம்மைப்
பூதம் அவை ஐந்தின் வலியின் பொலிவது அம்மா! (9769)

(மாதிரம்-திசைகள்; மணி-அழகிய; கோது-குற்றம்; மழைக்குழு-மேகக்கூட்டம்; மீது-மேலே; பதாகை-கொடிகள்; வலி-வன்மை; பொலிதல்-விளங்குதல்)

Koviloor Digital Library

இராமபிரான் ஏறிவந்த இந்திரனின்தேர், எட்டுத்திக்குகள் எல்லாவற்றையும் அழகிய சுற்றுச்சுவர்களாகக் குற்றமற அமைக்கப்பட்டது; மேகக்கூட்டங்களெல்லாம் அத்தேரின்மேல் பட்டு ஒளிவீசிப் பறக்கும் கொடிகள்போல வீசுவது; என்றும் அழியாது நிலைத்திருக்கும் பஞ்சபூதங்கள் எல்லாவற்றின் வலிமையையும் ஒருசேரப் பெற்றுப் பொலிவுடன் விளங்குவதாகும்.

இராமபிரான் ஏறிவந்த இந்திரனின் தேரின் சிறப்புப் பேசப்படுகிறது. ''மழைக்குழு'' என்பது மேகத்தின் கூட்டம் எனப்படும். மேகங்கள் ஏழுவகைப்படும் என்பர். எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே. எனவே ''அம்மா'' என்ற சொல்லை அசைச்சொல்லாகக் கொள்ளாது வியப்புக்குறித்த இடைச்சொல்லாகக் கொள்ளவேண்டும்.

11. மரத்தொடு மருந்து உலகில் யாவும் உள வாரித்
தரத்தொடு தொடுத்த கொடி தங்கியது; சங்கக்
கரத்தொடு தொடுத்த கடல்மீது நிமிர் காலத்து,
உரத்தொடு கடுத்த கதழ் ஓதை அதன் ஓதை. (9770)

(வாரி-ஒருசேர; தரம்-தகுதி; கொடி-வரிசை; கரம்-அலை; தொடுத்தல்-பொங்கியெழுதல்; நிமிர்தல்-மிக்குத் தோன்றுதல்; காலம்-ஊழியிறுதிக் காலம்; உரம்-வன்மை; கதழ்-கடுமை/கட்டிய; ஓதை-ஓசை; சங்கம்-சங்கு/தொகுதி; கடுத்தல்-வேகம்/விரைவு)

அந்தத்தேர், தேர்செய்வதற்குத் தேவையான மரங்களுடன் ஆபத்துக் காலத்தில் புண்பட்ட வீரர்களுக்கு உதவுவதற்காக உலகில் உள்ள மருத்துவக்குணம் வாய்ந்த எல்லாச் செடி, கொடிகளையும் ஒருசேரத் தொடுத்து, தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டுத் தன்னகத்தே வைத்துக் கொண்டிருப்பதாகும். சங்குகளும் அலைகளும் நிறைந்த கடல், ஊழிக்காலத்தில் பொங்கியெழும்போது வலிமையுடனும், உக்கிரத்துடனும் ஒரு பேரொலி எழுப்பும் அல்லவா? அத்தகைய ஓசையுடன் ஓடும் இயல்பினது இந்தத்தேர்.

இராமன் ஏறிவந்த தேரில் மருத்துவக்குணம் வாய்ந்த செடிகொடிகளும் இருந்தன. அவன் வந்த தேரின் பேரொலிக்கு, ஊழிக்காலத்தில் பொங்கியெழும் கடலின் பேரொலி ஒப்பு. முன்பு இரண்டு நிகழ்வுகளிலும் பிரமாத்திரம் தாக்கியபோது மருத்துமலை கொணர்ந்து அனுமன் அனைவரையும் உயிர்பிழைக்கச் செய்தான் அல்லவா? எனவே இப்போது இராமபிரான் வருகின்ற தேரில் முன்னெச்சரிக்கையாக உலகில் உள்ள மருத்துவக்குணமுடைய செடிகொடிகளையெல்லாம் தரம்பிரித்துத் தம் தேரில் எடுத்துச்சென்றனர் என்பதாம்.

Koviloor Digital Library

12. பண்டு, அரி, தன்உந்தி அயன்வந்த பழ முந்தைப்
புண்டரீக மொட்டு அனைய மொட்டினது; பூதம்
உண்டவை வயிற்றிடை ஒடுக்கி உமிழ்கிற்போன்,
அண்டச மணிச்சயனம் ஒப்பது அகலத்தின். (9771)

(பண்டு-முற்காலம்; அரி-திருமால்; உந்தி-கொப்பூழ்; அயன்-பிரமன்; வருதல்-தோன்றுதல்/பிறத்தல்; முந்தை-தொன்மையான; புண்டரீகம்-தாமரைமலர்; சயனம்-படுக்கை; மொட்டு-அரும்பு; அண்டசம்-முட்டை/பாம்பு/ஆதிசேஷன்; மொட்டு-தேரின் ஒரு உறுப்பு; உமிழ்தல்-வெளிப்படுத்துதல்)

முன்பு, திருமால் தன் உந்தித்தாமரையிலிருந்து பிரமனைத் தோற்று வித்தான் அல்லவா? அந்தத் தாமரைமொட்டுப் போன்ற மொட்டு என்ற உறுப்பைப்பெற்றது அந்தத்தேர். அதன் அகலம், பஞ்சபூதங்களையும், உலகில் உள்ள உயிரினங்களோடு, ஊழியிறுதிக்காலத்தில் தன் வயிற்றில் ஒடுக்கிக்கொண்டு, பின் சிருஷ்டிகாலத்தில் அதனை உமிழ்ந்து வெளிப் படுத்தி உலகை மீண்டும் தோற்றுவிக்கின்றவனான திருமால் பள்ளி கொள்ளும் அழகிய படுக்கையாகிய ஆதிசேஷனின் ஆயிரம் தலைகளின் அகலத்தை ஒத்ததாகும்.

தேரின் மொட்டு என்ற உச்சிப்பகுதிக்குத் திருமாலின் உந்தித் தாமரையிலிருந்து தோன்றிய தாமரைமொட்டு ஒப்பு; அதன் அகலத்திற்கு ஆயிரம் தலைகொண்ட ஆதிசேஷன் ஒப்பு; பண்டு பழைய, முந்தை என்பனவெல்லாம் தொன்மையான என்ற ஒரே பொருளைத்தரும் ஒரு பொருட்பன்மொழி எனக்கொள்க. ''அண்டசம்'' என்பது அண்டசராசரங் களையெல்லாம், தன் வயிற்றுக்குள் அடக்கிய திருமால் என்ற காரணப் பொருளைத்தரும். ஆதிசேஷனது ஆயிரம் தலைகளும் எவ்வளவு அகலம் இருக்குமோ அவ்வளவு அகலம் உடையது அந்தத்தேர் என்று தேரின் சிறப்புப் பேசப்பட்டது.

13. வேதம் ஒருநாலும், நிறைவேள்விகளும், வெவ்வேறு
ஓதம் அவை ஏழும், மலைஏழும், உலகுஏழும்,
பூதம் அவை ஐந்தும், எரிமூன்றும், நனிபொய்தீர்
மாதவமும், ஆவுதியும், ஐம்புலனும், மற்றும். (9772)

(ஒரு-ஒப்பற்ற; நிறை-முறைப்படி அமைதல்; ஓதம்-கடல்கள்; எரி-சுடர்; நனி-மிக்க; ஆவுதி-ஆகுதி/அவிப்பொருள்/ஹவிஸ்) (குளகப் பாடல்)

அந்தத்தேர் இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும் ஒப்பற்ற நான்கு வேதங்கள்; அவற்றால் செய்துமுடிக்கப்படும் சிறந்த யாகங்கள், வெவ்வேறு வகையான தனித்தனியான உவர்நீர், நன்னீர், பால், தயிர்,

Koviloor Digital Library

நெய், கருப்பஞ்சாறு, தேன், என்று கூறப்படும் ஏழு கடல்கள்; இமயம், ஏமகூடம், கயிலை, நிடதம், நீலகிரி, மந்தரம், விந்தம் என்ற ஏழு குலமலைகள் பூலோகம், தேவலோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்னும் மேல் ஏழு உலகங்கள், நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்கள், காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷணாக்கினியம் என்ற மூன்று நெருப்புகள், குற்றமற்ற மிகவும் மெய்ம்மையான பெருந்தவம், யாகத்திலிடப் படுகின்ற அவிப்பொருள், ஊறு, ஒளி, ஓசை, சுவை, நாற்றம் முதலிய ஐம்புலன்கள், பிறவும் - பாடல் தொடர்கிறது.

வேள்விகளும் ஐந்துவகைப்படும் என்று கூறுவதுண்டு. அவை கடவுளைக் குறித்தது, பிரமனைக் குறித்தது, பூதங்களைக் குறித்தது, மனிதர்களையே குறித்தது. தென்புலத்தாரைக் குறித்தது என்று ஐந்து வகைப்படும். கீழ் ஏழு உலகங்கள் என்பன அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம் என்பனவாம். ஏழு மலைகளைப் பலர் பலவாறாகக் கூறுவது உண்டு. ''தக்ஷணாக்கினியம்'' என்ற வடசொல்லை ''தென்றிசையங்கி'' என்று தமிழ்ப்படுத்தியிருக்கிறது இன்னொரு உரைநூல்.

14. அருங் கரணம் ஐந்து, சுடர் ஐந்து, திசைநாலும்,
ஒருங்கு அரணம் மூன்றும், உழல்வாயு ஒரு பத்தும்,
பெரும் பகலும், நீள் இரவும் என்று இவைபிணிக்கும்
பொரும் பரிகளாகி, நனி பூண்டது பொலந்தேர். (9773)

(கரணம்-புறக்கருவிகள்/இந்திரியங்கள்; உழல்தல்-திரிதல்; பொருதல்-போரிடுதல்; பரி-குதிரைகள்; பொலன்-பொன்; பிணித்தல்-பூட்டுதல்/கட்டுதல்; நனி-மிகவும்)

அருமையான இந்திரியங்கள் - பஞ்சேந்திரியங்கள் புறக்கருவிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவும், ஐந்து என்று சொல்லப்படும், கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, மேலும் ஆகாயத்திலுள்ள கதிரவன் என்றுகூறப்படும் பஞ்சாக்னிகள் என்பனவும், நான்கு நேர்த்திசைகள் என்பனவும், ஒருங்கே கூடியுள்ள, பொன், வெள்ளி, இரும்பாலான மூன்று அரண்களாகிய திரிபுர மதில்கள் என்பனவும், சஞ்சரித்துக் கொண்டிருக் கின்ற பிராணன், சுபானன், வியானன், உதானன், அமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்ற பத்து வாயுக்கள் என்பனவும், பெரிய பகல்பொழுது நீண்ட இரவுப்பொழுது என்பனவும், ஆகிய இவையெல்லாம் சேர்ந்து குதிரைகளாக உருக்கொண்டு போருக்குத் தக்கனவாய், பொன்னாலாகிய அழகிய தேரில் பூட்டப்பட்டிருந்தன.

பஞ்சாக்னியை ''இராகம், கோபம், காமம், சடம், தீபனம் என்றும் கூறுவதுண்டு. மேலும் இவை நிறங்களைக் குறிப்பன என்று செம்மை,

Koviloor Digital Library

கருமை, பொன்மை, பசுமை, வெண்மை என்று கூறுவதும் உண்டு. அரணம் மூன்று என்பதை குணம் மூன்று என்று சாத்விகம், இராசதம், தாமசம் என்றும் கூறுவர். இவற்றிற்குரிய அதிதெய்வங்கள் தேரில் குதிரைகளாகப் பூட்டப் பட்டிருக்கின்றன என்பதாம்.

15. மாதலி தேர் கொணர்தல்

வந்ததனை வானவர் வணங்கி, ''வலியோய்! நீ
எந்தை தர வந்தனை; எமக்கு உதவுகிற்பாய்;
தந்தருள்வை வென்றி'' என நின்று, தகைமென் பூச்
சிந்தினர்கள்; மாதலி கடாவி நனி சென்றான். (9774)

(எந்தை-எம்தலைவன்/இந்திரன்; தருதல்-பணித்தல்; தகை-அழகு; நனி-விரைந்து; கடாவுதல்-செலுத்துதல்)

அவ்வாறு குதிரைகள் பூட்டப்பெற்று வந்த தேரினைத் தேவர்கள் வணங்கி, ''வல்லமையுடையவனே! நீ எங்கள் தலைவனாகிய இந்திரன் அனுப்ப, இங்கு வந்திருக்கிறாய்; எங்களுக்கும், இராமபிரானுக்கும் உதவுகின்ற ஆற்றல்பெற்றவன் நீ; எனவே இராமபிரானுக்கு இப்போரில் வெற்றியையே தந்தருள்வாயாக!'' என்று வேண்டிக்கொண்டு, அதன் அருகில் சென்று அழகிய மெல்லிய குளிர்ந்த மலர்களைச் சொரிந்தார்கள். மாதலி அத்தேரை மிகவும் வேகமாகச் செலுத்திக்கொண்டு சென்றான்.

தெய்வத்தன்மை வாய்ந்த தேர் ஆதலால் வானவர் வணங்கி, தகைமென்பூச் சிந்தினர்கள் என்பதாம். ''உதவுகிற்பாய்'' என்பதில் உள்ள ''கில்'' என்பது ஆற்றல் உணர்த்தும் இடைச்சொல்.

16. தேர் இராமபிரானை அடைதல்

''வினைப்பகை விசைக்கொடு விசும்பு உருவி, மான
மனத்தின் விசைபெற்றுளது வந்தது'' என, வானோடு
அனைத்து உலகமும் தொழ, அடைந்தது அமலன்பால்;
நினைப்பும் இடை பிற்பட, நிமிர்ந்தது நெடுந்தேர். (9775)

(பிற்படுதல்-பின்னடைதல்; வினை-பாசப்பிணிப்பு; விசை-வேகம்; விசும்பு-ஆகாயம்; மானம்-பெருமை; வான்-வானுலகத்தோர்; உலகம்-உலகத்தில் உள்ளோர்; அமலன்-தூயோன்/இராமபிரான்)

மனத்தில் நினைக்கும் எண்ணங்களெல்லாம் பிற்பட்டுப் போகும்படி, வேகத்துடன் அந்த உயர்ந்த, நீண்ட, தேர், வானுலகத்தோரும், நிலவுலகத் தோரும், எல்லா உலகத்திலுள்ளோரும் வணங்கித் தொழும்படி, ஆகாயத்தை ஊடுருவிக்கொண்டு, பெருமைசான்ற மனோவேகத்தைக் காட்டிலும் வேகமாக வந்தது.

Koviloor Digital Library

''இந்தப்பாடலின் முதலடியில் பாடவேறுபாடு இருக்கக்கூடும். பாடம் ஆராயத்தக்கது'' என்பது உ.வே.சா. அவர்களின் குறிப்பு. வேதங்களே குதிரைகளாகப் பூட்டப்பெற்று வருவதால் அத்தேர் நல்வினை, தீவினைக்குப் பகையாகிய மெஞ்ஞான உணர்வைப் பெற்றிருந்தது என்று மற்ற உரைகள் பேசுகின்றன. எனினும் பொருள் பொருந்துவதாக இல்லை என்பது கருதத்தக்கது. வினைக்குப் பகை மெஞ்ஞானம் என்பது விளக்கப்பட வேண்டுவது.

17. இராமபிரான் தேரைக் கண்டு வியந்துரைத்தல்

''அலரி தனி ஆழி புனைதேர் இது எனில், அன்றால்;
உலகின் முடிவில், பெரிய ஊழ் ஒளி இது அன்றால்;
நிலைகொள் நெடு மேருகிரி அன்று; நெடிது அம்மா!
தலைவர் ஒரு மூவர் தனி மானம் இதுதானோ?'' (9776)

(அலரி-சூரியன்; தனி-ஒன்று/ஒப்பற்ற; ஆழி-சக்கரம்; முடிவு-ஊழி யிறுதிக்காலம்; தனி-நிகரற்ற; மானம்-விமானம்; புனைதல்-அலங்கரித்தல்)

எதிர்பாராதபோது, தன்முன் வந்து நின்ற தேரைக் கண்ணுற்று, வியப்புடன், ''இந்தத்தேர், ஒற்றைச்சக்கரத்தையுடைய சூரியனின் தேர் என்றும் சொல்வதற்கில்லை. காரணம் இது பல சக்கரங்களைக் கொண்டுள்ளது; ஊழியிறுதிக்காலத்தில் உலகத்தில் தோன்றும் வடவைப் பெருந்தீ என்றும் சொல்வதற்கில்லை; காரணம் இப்போது ஊழி முடிவில்லை; அந்தத் தீயைக்காட்டிலும் ஒளி மிக்கதாய்ப் பொலிந்து விளங்குகிறது. அசைதல் இல்லாது நிலைபெற்று நிற்கும் மேருமலையோ என்றால் அதுவும் இல்லை. காரணம் இது நினைத்தஇடத்திற்கு நினைத்த நேரத்தில் போகும் ஆற்றல் பெற்றதாயிருக்கிறது. மேருமலையைவிடப் பெரிதாக, அகன்றதாக இருக்கிறது. இது இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் ஒப்பற்ற முத்தேவர்களாகிய பிரமன், திருமால், சிவபெருமான் ஆகியோரது தெய்வத்தன்மை பொருந்திய விமானமாகத் தான் இருக்கவேண்டும்'' என்று தன் மனத்திற்குள் வியந்து போற்றுகிறான் இராமபிரான்.

அந்தத்தேரின் பரப்பும், ஒளியும், சஞ்சரிக்கும் தன்மையும் கண்டு இராமபிரான்வியப்புற்றான்என்பதாம். ''அம்மா''என்பதுவியப்புக்குறித்த இடைச்சொல். ''மானம்'' என்பது விமானம் என்பதன் முதற்குறை. அலரி என்பது சூரியனுக்குக் காரணப்பெயர்.

Koviloor Digital Library

18. தேர்ப்பாகனை வினவுதல்

"என்னை இது நம்மை இடைஎய்தல்?" என எண்ணா,
மன்னவர்தம் மன்னன் மகன், மாதலியை "வந்தாய்,
பொன்னின் ஒளிர்தேர் இதுகொடு, ஆர்புகல?" என்றான்;
அன்னவனும் அன்னதனை ஆக உரைசெய்தான். (9777)

(மன்னர்மன்னன்-சக்கரவர்த்தி; இடை-இவ்விடம்; புகல்தல்-பணித்தல்; ஆக-முழுவதும்/பொருந்துமாறு; அன்னவன்-மாதலி; கொடு-கொண்டு)

மன்னர் மன்னனாகிய தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தனாகிய இராமபிரான், தன்முன் வந்துநின்ற தேரைக் கண்ணுற்று, ''என்னஇது! நம்முன் இந்தத்தேர் வந்து நிற்கிறதே?'' என்று மனத்துள் கருதி, அருகில் நின்றிருந்த தேர்ப்பாகனாகிய மாதலியை நோக்கி, ''யார் கட்டளைப்படி இந்தப் பொன்னாலாகிய ஒளிவீசுகின்ற தேரை இங்கு கொண்டுவந்தாய்?'' என்று வினவவும், அதற்கு அந்தத்தேர்ப்பாகனாகிய மாதலியும், தான் வந்த காரணத்தை அவனுக்குப் பொருத்தமான முறையில் சொல்லலானான்.

''ஆக'' என்ற சொல் முழுவதும், பொருந்துமாறு என்ற பொருளைத் தரும். அவ்வாறாக என்று கூறுவதைப்போல எனக்கொள்க.

19. மாதலி கூறுதல் [5 பாடல்கள்]

"முப்புரம் எரித்தவனும், நான்முகனும், முன்நாள்,
அப்பகல் இயற்றி உளது; ஆயிரம் அருக்கர்க்கு
ஒப்பு உடையது; ஊழி திரிகாறும் உலைவு இல்லா
இப் பொருஇல் தேர் வருவது இந்திரனது; எந்தாய்!" (9778)

(திரிதல்-பெயர்தல்/மாறுபடுதல்; உலைவு-அழிவு; முன்நாள்- பழங்காலம்; அப்பகல்-அந்தநாள்/படைப்புக்காலம்; அருக்கர்-சூரியர்கள்; பொருவு-ஒப்பு)

மாதலி இராமபிரானை நோக்கி, ''என் தந்தைபோன்றவனே! இந்தத்தேர், இவ்வுலகைப் படைக்கின்ற காலத்தில், முப்புரத்தை எரித்த சிவபெருமானாலும், நான்கு முகங்களையுடைய பிரமதேவனாலும் ஒன்றுகூடிப் படைக்கப்பட்ட பெருமையுடையது. இது ஒளியில் ஆயிரம் சூரியர்களுக்குச் சமமானது; ஊழியிறுதிக்காலத்தில் எல்லாப் பொருள்களும் மாறுபட்டு நிலை பெயர்ந்தாலும், அழிவில்லாத ஒப்பற்ற தேர் இது. இந்தத்தேர் தேவேந்திரனுக்கு உரிமையுடையது; அவனிட மிருந்து வருவது'' என்றான்.

Koviloor Digital Library

சிவபெருமான் முப்புரம் எரித்த வரலாறு காப்பியத்தில் பல இடங்களிலும் பேசப்பட்டு வருவது நாம் அறிந்ததே. எனினும் அந்த மூன்று அசுரர்களின் பெயரைமட்டும் மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்ளலாம். அவர்கள் வித்யுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்பவராவர். ''முன்நாள் அப்பகல்'' என்றது படைப்புக்காலம் என்ற பொருளைத்தரும்.

20. "அண்டம்இது போல்வன அளப்புஇல அடுக்கிக்
கொண்டு பெயரும்; குறுகும்; நீளும்; அவை கோளுற்று
உண்டவன் வயிற்றினையும் ஒக்கும், உவமிக்கின்;
புண்டரீக! நின் சரம் எனக் கடிது போமால்!" (9779)

(அண்டம்-உலகம்; பெயர்தல்-இயங்குதல்; கோளுறுதல்-உட்கொள்ளுதல்; புண்டரீகம்-தாமரைமலர்; கடிது-விரைந்து)

''தாமரைமலர் போன்ற பேரழகுடையவனே! இந்தத்தேர், இந்த உலகத்தைப்போல, இன்னும் அளவிடற்கரிய எத்தனை உலகங்களை வேண்டுமானாலும் ஒன்றன்மீது ஒன்றாக வைத்து அடுக்கிக்கொண்டு சுமந்துசெல்லும் வலிமைபெற்றது. அவற்றின் பரப்புக்கேற்ப நீளும் தன்மையும், குறுகும் தன்மையும் உடையது; இவ்வண்டங்களை உட்கொண்டு தன் வயிற்றில் அடக்கிக் கொண்டானே திருமால், அவனது வயிற்றினையும் ஒத்ததாகும். உவமை கூறவேண்டுமானால் உன்னுடைய இராமபாணம் இருக்கிறதே அதைப்போலவும் விரைந்து செல்லும் ஆற்றல் உடையது இந்தத்தேர்'' என்கிறான் தேர்ப்பாகன் மாதலி.

இராமபிரானது உடல் உறுப்புக்களான கண், கை, கால், வயிறு, முகம் போன்றவை செந்தாமரைமலரை ஒத்தன என்பது நாம் முன்பும் கண்டுவந்ததே. எனவே அவனைப் ''புண்டரீக!'' என்று அழைத்தான் எனக்கொள்க. ''கரதலம் தாமரை; கண்கள் செந்தாமரை; காமர் உந்திப்பரதலம் தாமரை; பாதமும் தாமரை; பண்ணடங்கப்பொருதலம் தாமரை; பொற்புஉயர் தாமரை; பொற்குடந்தை மரகதம் தாமரை; மார்பும் செந்தாமரை மாயனுக்கே'' என்பது குடந்தை அந்தாதி.

21. "கண்ணும், மனமும், கடியகாலும் இவை கண்டால்,
உண்ணும் விசையால்; உணர்வு பின்படர ஓடும்;
விண்ணும் நிலனும் என, விசேடம் இலது; அஃதே,
எண்ணும் நெடுநீரினும், நெருப்பிடையும், எந்தாய்!" (9780)

(கடிய-விரைவுடைய; காணுதல்-ஒப்பிடுதல்; உண்ணுதல்-தோற்பித்தல்/வெல்லுதல்; விசேடம்-வேறுபாடு; உணர்வு-உயிரின் அறிவு; கால்-காற்று)

Koviloor Digital Library

''எனது தந்தைபோன்றவனே! இந்தத்தேர், கண், மனம், வேகமான காற்று ஆகியவற்றை ஒப்பிடும்போது அவற்றையெல்லாம் தோற்பித்து மனோவேகத்தைவிட, வாயுவேகத்தைவிட வேகமாகச் செல்லும்; உணர்வு பின்பட்டு நிற்கும்படி, தான் முந்துற்று ஓடிச்செல்லும்; விண், மண், என்ற எந்த வேறுபாடும் இல்லாது எல்லா இடங்களிலும் தடையின்றிச் செல்லும் இயல்பினது. அதேபோல, எண்ணிப் புகுதற்கரிய நீண்ட ஆழ்ந்த கடலினும், நெருப்பினும்கூட எந்த வேறுபாடும், தடையும் இல்லாது ஓடும்'' என்றான்.

மனோவேகம், வாயுவேகம் என்பனவற்றையெல்லாம் வென்று முந்துற்று ஓடும். நீர், நெருப்பு, விண், மண் என்று எந்த பேதமுமில்லாமல் எல்லாவற்றிலும் புகுந்துசெல்லும் என்பதாம். உணர்வு எண்ணத்தைவிட அதிகவேகமானது என்பது பெறப்படுகிறது. ''உண்ணுதல்'' என்பது தோற்பித்து வெல்லுதலைக் குறிக்கும். ''சாப்பிட்டுவிடும்'' என்று வழக்கில் கூறுகிறோம் அல்லவா? அதுபோன்ற சொல்லாட்சி எனக்கொள்க.

22. "நீரும் உளவே அவைஓர் ஏழு? நிமிர்கிற்கும்
பாரும் உளவே அதின் இரட்டி? அவை பண்பின்
பேரும் ஒரு காலை; ஒரு காலும் இடை பேராத்
தேரும் உளதே, இது அலால்? உலகு செய்தோய்!" (9781)

(செய்தல்-படைத்தல்/இயக்குதல்; நீர்-கடல்கள்; இரட்டி-இரு மடங்கு; ஒருகாலை-ஒருகாலத்தில்; பண்பு-தன்மை; பேர்தல்-மாறுபட்டு அழிதல்)

''இவ்வுலகங்களைப் படைத்து இயக்குபவனே! இராமா! கடல்கள் என்று சொல்லப்படுவன ஏழு என்ற எண்ணிக்கையில் இருக்கின்றன அல்லவா? அதன் இருமடங்காகப் பதினான்கு உலகங்கள் என்று கூறப்படுவன அவற்றின்மேல் நிமிர்ந்து நிற்கின்றன அல்லவா? இந்த ஏழு கடல்களும், பதினான்கு உலகங்களும் அவற்றின் தன்மையில் ஒரு காலத்தில் மாறுபடும் அல்லது மாறுபட்டு அழியும். ஆனால் இந்தத்தேர் மட்டும் இடையில் அழியாத தன்மையுடையதாகும்; இந்தத்தேரைத் தவிர, வேறு எந்தத்தேரும் அழியாததன்மை உடையன அல்ல'' என்கிறான் மாதலி.

''நீர்'' என்பது நீர்நிறைந்த கடல்களைக் குறிக்கும். ''பார்'' என்பது உலகங்களைக் குறிக்கும்; உலகமும் கடல்களும் ஊழிக்காலத்தில் அழியும் தன்மையன. ஆனால் இந்தத்தேர் மட்டும் ஒருகாலும் அழியாத தன்மை கொண்டது என்கிறான் மாதலி என்பதாம். ''உலகு செய்தோய்!'' என்பது கடவுள் வணக்கத்தில் கூறியதுபோல ''உலகம் யாவையும் தாமுள ஆக்குபவனைக் குறிக்கும். ''உலகியற்றியான்'' என்பது குறள். ''உளதே'' என்பதில் உள்ள ஏகாரம் இல்லை என்ற எதிர்மறைப் பொருளைத்தரும்.

Koviloor Digital Library

23. "தேவரும், முனித்தலைவரும், சிவனும், மேல்நாள்
மூவுலகு அளித்த அவனும், முதல்வ! முன் நின்று,
ஏவினா்; சுராக்கு இறைவன் ஈந்துளஇது" என்றான்,
மாவின் மனம் ஒப்ப உணா் மாதலி, வலித்தான். (9782)

(முதல்வன்-தலைவன்/காரணன்; தலைவர்-சிறந்தவர்; மேல்நாள்-முற்காலத்தில்; சுரர்-தேவர்; இறைவன்-தலைவன்/இந்திரன்; மா-குதிரைகள்; ஒப்ப-ஒருங்கே; வலித்தல்-திட்பமுறக் கூறுதல்/உறுதிபடக் கூறுதல்)

''தலைவனே! தேவர்களும், முனிவர்களிலே சிறந்த முதன்மை யானவர்களும், சிவபெருமானும், முற்காலத்தில் இம்மூன்று உலகங் களையும் படைத்தருளியவனான நான்முகனும், முன்வந்து கட்டளை யிட்டதன்படி தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் உன் பொருட்டுத் தந்தருளியது இந்தத்தேர்'' என்று குதிரைகளின் மன உணர்வினை ஒருங்கே உணர்ந்து அறிபவனான தேர்ப்பாகனான மாதலி உறுதிபடக் கூறினான்.

இந்தத்தேர் சிவபெருமான், நான்முகன், தேவர்கள், சிறந்த முனிவர்கள் ஆகியோர் கட்டளையின்படி, இந்திரனால் அனுப்பப்பட்ட அவனுடைய தேர் என்று, குதிரைபற்றி பூரண அறிவுபெற்ற சாரதி மாதலி திட்பமுறக் கூறினான் என்பதாம். குதிரைகளின் மனப்போக்கினைத் துல்லியமாக உணர்ந்து தேர் செலுத்தவல்ல நுண்ணுணர்வுடையவன் தேர்ப்பாகன் மாதலி என்று அவன் சிறப்புத்தன்மை பேசப்படுகிறது. ''வலித்தல்'' என்பது உறுதிபடக் கூறுதலைக் குறிக்கும்.

24. இராமபிரான் ஐயுறுதல்

ஐயன் இது கேட்டு, "இகல் அரக்கா் அகல்மாயச்
செய்கை கொல்?" எனச் சிறிது சிந்தையில் நினைந்தான்;
மெய் அவன் உரைத்தது என வேண்டி, இடை பூண்ட,
மொய் உளை வயப்பரி மொழிந்த முது வேதம். (9783)

(ஐயன்-தலைவன்/இராமபிரான்; இகல்-பகைமை; அகல்-விரிந்த/பெரிய; சிந்தையில் நினைத்தல்-சிந்தித்தல்; மொய்-செறிவு/நெருக்கம்; உளை-பிடரிமயிர்; வயம்-வன்மை/வெற்றி; மெய்-உண்மை; முது-பழமையான)

தலைவனாகிய இராமபிரான், இவ்வாறு தேர்ப்பாகன் மாதலி கூறியவற்றைக் கேட்டு, ''ஒருவேளை இது பகைவர்களான அரக்கர்களின் தந்திரச் செயலாக இருக்குமோ?'' என்று மனத்தில் சிறிது சந்தேகம் கொண்டு சிந்தித்தான். ஆனால் அதற்குள் அந்தத்தேரில் பூட்டப்பட்டிருந்த நெருங்கிய பிடரிமயிரையுடைய வன்மைமிக்க குதிரைகள், தம்

Koviloor Digital Library

வேதவாக்கால், ''மாதலி கூறியது உண்மையே'' என்பதை இராம பிரானுக்குப் புலப்படுத்தின.

இதேபோல ஒரு சந்தேகம் சீதாதேவிக்கும் ஏற்பட்டதே நினைவுக்கு வருகிறதா? அனுமன் அசோகவனத்தில் மரக்கிளையிலிருந்து குதித்த போது, ''அரக்கனே ஆக; வேறுஓர் அமரனே ஆக, அன்றிக் குரக்கினத்து ஒருவனேதான் ஆகுக; கொடுமை ஆக; இரக்கமே ஆக இங்குவந்து, எம்பிரான் நாமம் சொல்லி உருக்கினன் உணர்வை; தந்தான் உயிர்; இதின் உதவி உண்டோ?'' என்று முதலில் ஐயுற்றுப் பின்தெளிந்தாள் அல்லவா? அதுபோல இங்கே இராமபிரானும் முன்னர் ஐயம்கொண்டு, பின்னர் குதிரைகள் வேதவாக்கால் தெளிவுற்றான் என்பதாம். தவிரவும் முன்பு இராமபிரானே அரக்கர்களின் தந்திரச் செயல்களுக்கு ஆட்பட்டிருக் கிறான். எனவே இப்பொழுது ஐயம் கொண்டான் என்பதாம்; குதிரைகள் எப்படிப் பேசின? குதிரைகள் தம் இயல்பால் கனைத்தன; அக்கனைத் தலின் பொருள், மாதலி கூறியவை மெய்யேயாகும் என இராமபிரான் ஊகித்து அறிந்து கொண்டான் எனக்கொள்க. பழமையான வேதங்கள் பயின்ற மொழிகளால் எடுத்துக்கூறின என்பதாம்.

25. "இல்லை இனி ஐயம் "என, எண்ணிய இராமன்,
நல்லவனை, "நீ உனது நாமம் நவில்க!" என்ன,
"வல் இதனை ஊர்வது ஒரு மாதலி எனப்போர்
சொல்லுவர் எனத் தொழுது, நெஞ்சினொடு சொன்னான். (9784)

(நாமம்-பெயர்; நவில்தல்-சொல்லுதல்; வல்-வன்மை; ஊர்வது-செலுத்துவது; நெஞ்சினொடு-நெஞ்சார/மனமார)

குதிரைகள்அவ்வாறுகூறக்கேட்டஇராமபிரான், ''இனிமேல்சந்தேகம் கொள்வதற்கு இடம் இல்லை'' என்று தெளிந்து, நற்பண்பு மிக்க அவனை நோக்கி, ''நீ, உனது பெயரைக் கூறுவாயாக!'' எனவும், அதற்கு அவன் ''இந்த வன்மைமிக்க தேரைச் செலுத்துகின்றஎன்னைமாதலிஎன்னும் பெயரால் அழைப்பார்கள்'' என்றுகூறி இராமபிரானை நெஞ்சாரத் தொழுது வணங்கினான்.

26. மாருதியை நோக்கி, இளவாள் அரியை நோக்கி,
"நீர் கருதுகின்றதை நிகழ்த்தும், என, நின்றான்;
ஆரியன் வணங்கி, அவர், "ஐயம்இலை ஐயா!
தேர் இது புரந்தரனது" என்றனர், தெளிந்தார். (9785)

(ஆரியன்-மேலோன்; வாள்-வலிய; அரி-சிங்கம்; நிகழ்த்துதல்-சொல்லுதல்; புரந்தரன்-இந்திரன்)

மேலோனான இராமபிரான் அனுமனையும் வலிய இளம் சிங்கம் போன்றவனாகிய இலக்குவனையும் நோக்கி, ''இதுபற்றி நீங்கள் என்ன

Koviloor Digital Library

கருதுகிறீர்கள்? அதனை எனக்குச் சொல்லுங்கள்'' எனக்கேட்டு அவர்கள் பதிலுக்காகக் காத்து நின்றான். அவர்கள் இருவரும் நன்கு தெளிவுற்று, இராமபிரானை வணங்கி, ''தலைவனே! இதில் ஏதும் சந்தேகம் இல்லை; இந்தத்தேர் இந்திரனுடையதுதான்'' என்று தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

முன்பு மாயமானைப் பின்பற்றிச் சென்றபோது, இலக்குவன் தடுத்தும் இராமபிரான் கேட்கவில்லை. காரணம் சீதாதேவி, ''நீரே பிடித்து நல்கலை போலும்'' எனச் சிணுங்கினாள்; ஆனால் அதே இராமபிரான் வீடணனைத் தன்பக்கம் சேர்த்துக் கொள்ளலாமா என்பதை அனைவரிடமும் கலந்து ஆலோசித்து இறுதியில் அனுமன் முடிவே சரியான முடிவு என்று தெளிந்து அவர்களைச் சமாதானப்படுத்தி வீடணனுக்கு அடைக்கலம் தருகிறான். காரணம் அங்கு சீதாதேவி இல்லை. அதுபோல இங்கேயும் அனுமனையும், இலக்குவனையும் ஆலோசனை கேட்கிறான். காரணம் சீதாதேவி இப்போது அவனுடன் இல்லை; எனவே வாலி கூறியதுபோல சனகன் பெற்ற அன்னத்தை, தேவியைப் பிரிந்த பின்னர் திகைத்தனை போலும் செய்கை'' சரியானது என்பது தெரியவருகிறது. எல்லா இடத்திலும் இராமபிரானைவிட இலக்குவனே தெளிவான முடிவுகளை எடுக்கிறான் என்பதும் புலப்படுகிறது.

27. இராமபிரான் தேரில் ஏறுதல்

விழுந்து புரள் தீவினை நிலத்தொடு வெதும்ப,
தொழும் தகைய நல்வினை களிப்பினொடு துள்ள,
அழுந்து துயரத்து அமரர் அந்தணர் கை முந்துற்று
எழுந்து தலைஏற, இனிது ஏறினன், இராமன். (9786)

(வெதும்புதல்-வருந்துதல்; அந்தணர்-முனிவர்கள்; முந்துறுதல்-முற்படுதல்; தீவினை-பாவங்கள்; நல்வினை-புண்ணியங்கள்)

பாவங்கள் நிலத்தில் விழுந்து புரண்டு வருந்திக்கிடக்கவும், புண்ணியங்கள் எல்லோரும் தொழும்வகையில் மகிழ்ச்சியோடு துள்ளிக் குதிக்கவும், இதுவரையிலும் துயரத்திலேயே அழுந்திக்கிடந்த தேவர்களும், முனிவர்களும், தங்கள் கைகள் முற்பட்டு எழுந்துசென்று தலைமேல் கூப்பவும், இராமபிரான் அந்தத்தேரில் இனிதாக ஏறி அமர்ந்தான்.

இராமபிரான் இராவணனை வதைப்பதற்காகத் தேரில் ஏறினான் ஆதலால் தீவினைகள் நிலத்தில் புரண்டு வெதும்பின; நல்வினைகள் மகிழ்ச்சியால் துள்ளின; தேவர்களும் முனிவர்களும் தங்கள் துயரம் தீரப்போகின்றது என்பதால் இராமபிரானைக் கைகூப்பி வணங்கினர் என்பதாம்.

இராமன் தேர்ஏறு படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

36. இராவணன் வதைப் படலம்
[248 பாடல்கள்]

இராமபிரான் இந்திரன் அனுப்பிய தேரிற் சென்று இராவணனை வதைத்துக் கொன்றது பற்றிக் கூறுவதால் இராவணன் வதைப்படலம் எனப் பெயரதாயிற்று. எல்லாச் சுவடிகளும், அச்சுப்பிரதிகளும் இதேபெயரைத்தான் குறிக்கின்றன. இந்தப் படலத்தின் இறுதிப்பகுதியை மட்டும் பிரித்து, அதற்கு ''மண்டோதரி புலம்புறு படலம்'' எனவும், ''மண்டோதரி சோகப்படலம்'' எனவும் பெயரிடப்பட்டிருக்கிறது. இது 248 பாடல்களைக் கொண்ட ஒரு பெரிய பகுதி. இங்கேயும் கம்பன், வான்மீகத்தினின்றும் சில இடங்களில் வேறுபடுகின்றான். அந்த மாற்றங்கள் அவ்வப் பாடல்களின் விளக்கத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

இப்படலத்துள், இந்திரன் அனுப்பிய தேரை மாதலி செலுத்திவர, இராமபிரான் அந்தத்தேரில் ஏறிப் போர்க்களம் செல்லுதல்; இராமபிரான் ஏறிவந்த தேர், தேவர்களால் அனுப்பப் பட்டிருக்கிறது என்பதை உணர்ந்த இராவணன் தேவர்கள்மீது சினம்கொள்ளுதல்; இராவணன் அதனைக் கண்டுதன்சாரதியிடம்இராமன்தேருக்குஎதிரேதன்தேரைச்செலுத்துமாறு கட்டளையிடுதல்; இராமபிரான் மாதலியிடம் தான் சொல்லுமாறு நிதானமாக தேரைச் செலுத்தவேண்டுதல்; அதற்கு மாதலி உடன்படுதல்; இராவணன் மகோதரனிடம் இலக்குவனுடன் போர்செய்யக் கூறுதல்; போகிறவழியில் இராமபிரான் தேர் எதிர்ப்பட்டதால் மகோதரன் இராமபிரானோடு போர்செய்ய முற்படுதல்; இராமபிரான் முதலில் மகோதரனின் தேரையும், அவனோடு வந்த படையினையும் அழித்து, இறுதியில் மகோதரனையும் அழித்தல்; இது கேள்விப்பட்ட இராவணன் வெகுண்டெழுந்து இராமபிரானை நோக்கிச் செல்லுதல்; இராமபிரானும் இராவணனும் எதிர்எதிரே தேரில் நின்ற தோற்றம்; இருவரும் போர்புரியத் தொடங்குதல்; இராவணன் சினம்கொண்டு அம்பு எய்தல்; இராமபிரான் அவற்றைத் தடுத்துக்கொள்ளுதல்; இருவரும் சமமாகவே போர்செய்தல்; இராமபிரான் தானே போர்செய்யாது, இராவணன் செலுத்துகின்ற படைக்கலங்களைத் தடுத்துத் தன்னைக் காத்துக் கொள்ளுதல்; முதலில் இராமபிரானின் தேரில் இருந்த இடிக்கொடியை இராவணன் அறுத்தல்; இராமபிரானின் தேரினைச் செலுத்திவந்த தேர்ப்பாகன் மாதலிமீதும், குதிரைகள்மீதும்அம்புகளைச்செலுத்துதல்;அதனைக்கண்டுஇராமபிரான்

Koviloor Digital Library

வருந்துதல்; இராவணன் தன் அம்புகளால் இராமபிரானை மறைத்துவிடுதல்; இப்பொழுது இராமபிரான் இராவணனுடைய வீணைக் கொடியை அறுத்தல்; இராவணன் தாமதப்படையைச் செலுத்துதல்; இராமபிரான் சிவன்படையைச் செலுத்தி அதனைத் தொலைத்தல்; இராவணன் ஆசுரப்படையைச் செலுத்த, இராமபிரான் அதனை அக்னிப்படைகொண்டு அறுத்தல்; இராவணன் கந்தருவக்கணை, மயன்படை, தண்டு, அம்பு முதலியவற்றைக் கொண்டு தாக்குதல்; இராவணன் மாயப்படையைச் செலுத்த, முன்பு இறந்துபட்ட அரக்கர்கள் அனைவரும் எழுந்து போரிடத்தொடங்குவதுபோல ஒரு மாயத்தோற்றம் உண்டாதல்; இராமபிரான் திகைத்து, மாதலியிடம் வினவுதல்; மாதலி இராவணன் மாயப்படையைச் செலுத்தியதால் ஏற்படுகின்ற மாயத்தோற்றம் இது; கலங்க வேண்டியதில்லை என்று தேறுதல் கூறுதல்; அந்த மாயக்கணையை இராமபிரான் ஞானக்கணையைத் தொடுத்து அழித்தல்; இராவணன் சூலப்படை கொண்டு தாக்க, இராமபிரான் செலுத்திய அம்புகள் அதனைத் தொலைக்க முடியாமல்போக, அது தன் எதிரே வரவும், திகைத்த இராமபிரான் தன் ஊங்கார ஒலியினாலேயே அதனை அழித்துச்சாய்த்தல்; இப்பொழுது இராவணன் தன்நிலை உணர்வு வரப்பெற்று, இவன் அற்பமான சாதாரண மனிதன் அல்லன் என்று உணரத் தொடங்குதல்.

''இராவணன் இவன் வேதமுதல்வனாய் இருப்பானோ?'' என்று ஐயுறுதல்; இராவணன் நிருதிப்படையைச் செலுத்த, இராமபிரான் அதனைக் கருடப்படைகொண்டு அழித்தல்; இராவணன் சற்றுத் தளர்தல்; இராமபிரான் வலிமையும், வீரமும் மிகுதல்; இராமபிரான் இராவணன் தலையை அறுத்தலும், அவை மீண்டும் முளைத்தல்; அவ்வாறே கைகளை அறுக்க அவைகளும் மீண்டும் முளைத்தல்; இராவணன் தளர்ச்சி நீங்கி எழுந்து மாதலியைத் தாக்குதல்; இராமபிரான் அம்பினால் இராவணன் தலையறுபட்டுத் தரையில் வீழ்தல்; இராமபிரான் அம்புகளால் அவன் மேனியை மூடுதல்; இராவணன் உணர்வு அழிந்ததை அறிந்த தேர்ச்சாரதி, தேரினை ஒருபக்கமாக ஒதுக்கிக்கொண்டு போய் நிறுத்துதல்; இதுகண்ட மாதலி இராமபிரானிடம் இதுதான் இராவணனைக் கொல்லுவதற்குச் சரியான தருணம் என்று கூறுதல்; இராமபிரான் அது போர் அறம் அன்று என்றுகூறி மறுத்தல்; சற்றுநேரம் கழித்து உணர்வு திரும்ப வரப்பெற்ற இராவணன், தேர் போர்க்களத்தின் ஓரத்தில் நிற்பதைக் கண்டு சாரதியைச் சினந்து பேசுதல்; சாரதி தன் செய்கை பற்றி விளக்குதல்; இராமபிரான் இப்போது இராவணன்கையிலிருந்த வில்லைத்துண்டித்தல்; இராமபிரான் பிரமாஸ்திரத்தைச் செலுத்துதல்; இராவணன் உயிரிழந்து தரையில் வீழ்தல்; இறந்தபிறகும் இராவணன் முகம்மட்டும் மும்மடங்கு பொலிந்து தோன்றுதல்; இராமபிரான் இராவணன் அருகில் சென்று அவன் முதுகில் தழும்புகள் இருப்பதைக்கண்டு சற்று இகழ்ச்சியாகப் பேசுதல்; வீடணன் வருந்தி, அது புறமுதுகிட்டதால் ஏற்பட்ட புண்கள் அல்லவென்றும்,

Koviloor Digital Library

திக்கயங்களின் தந்தங்கள் பதிந்ததால் உண்டான தழும்புகள் என்றும் விளக்கம் அளித்தல்; இராமபிரான் வீடணனை அழைத்து இராவணனுக்கு இறுதிக்கடன்களைச் செய்யுமாறு வேண்டுதல்; வீடணன், இராவணன் மேனியின்மேல் விழுந்து அரற்றுதல்; சாம்பவன் தேற்றுதல்; இராவணன் பட்டத்தரசி மண்டோதரி வந்து, இராவணன் மேனியின்மேல் விழுந்து புரண்டு அரற்றுதல்; உரிமைமகளிரும், அரக்கியரும் சூழ்ந்திருந்து அழுதல்; மண்டோதரி உயிர்பிரிதல்; வீடணன் எல்லோர்க்கும் உரிய ஈமக்கடன்களை நிறைவேற்றுதல்; பின் இராமபிரானைச் சென்றடைதல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராமபிரான் தேரில் செல்லுதல்

ஆழி அம் தடந்தேர், வீரன் ஏறலும், அலங்கல் சில்லி,
பூழியில் சுரித்த தன்மை நோக்கிய புலவர் போத,
ஊழி வெங்காற்றின் வெய்ய கலுழனை ஒன்றும் சொல்லார்,
வாழிய அனுமன் தோளை ஏத்தினார் மலர்கள் தூவி. (9787)

(ஆழி-சக்கரம்; அம்-அழகிய; தட-பெரிய; அலங்கல்-அசைதல்/பிரகாசித்தல்; சில்லி-சக்கரம்; பூழி-புழுதி; சுரித்தல்-சுழல்தல்/புதைதல்; புலவர்கள்-தேவர்கள்; கலுழன்-கருடன்; வாழிய-வாழ்தல்; ஏத்துதல்-வாழ்த்துதல்; வீரன்-இராமபிரான்; வெய்ய-கொடிய; போத-வந்து)

வீரனாகிய இராமபிரான் அந்த அழகிய சக்கரங்களையுடைய பெரிய தேரில் ஏறி அமர்ந்ததும், ஒளிவீசிப் பிரகாசிக்கும் தேரின் சக்கரங்கள் புழுதியில் புதைந்துபோகும் தன்மையைக் கண்ட தேவர்கள் எல்லோரும் அங்குவந்து, ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் சூறாவளிக்காற்றைக் காட்டிலும் வேகமுடைய கொடிய, இராமபிரானின் தெய்வத்தன்மை வாய்ந்த வாகனமான கருடனை ஒன்றும் போற்றித் துதிக்காதவர்களாக, சிரஞ்சீவியான மற்றொரு வாகனமான அனுமனின் தோளாற்றலை மலர்கள்தூவி வாழ்த்திப் போற்றினார்கள்.

இங்கே மூன்று வாகனங்கள் பற்றியும் பேசப்படுவதைக் காண்க. ஒன்று இப்போது இராமபிரான் ஏறியிருக்கிற இந்திரனதுதேர். அது இராமபிரான் ஏறியதும் அவன் பாரம் தாங்க மாட்டாமல் பூமியில் புதைந்துபோனது என்றால் இவனைத் தெய்வரூபத்தில் வாகனமாகத் தாங்கிக்கொண்டு எப்பொழுதும் உலாவருபவனும் ஊழியிறுதிக்காலத்தில் வீசும் சூறாவளிக்காற்றைக் காட்டிலும் கொடியவனுமான கருடாழ்வாரின் ஆற்றலைப்பற்றிப் பேசமுடியுமோ? எனவே அங்கு வந்த தேவர்கள் அதனைப் பற்றிப் புகழ்ச்சியாக ஒன்றும் பேசாதிருந்துவிட்டனர். மூன்றாவது வாகனமாகிய அனுமன் தோள்கள் மட்டும் இராமபிரானை இவ்வளவுநேரம் தாங்கிநின்று போர்க்களத்தில் இடசாரி வலசாரி திரிந்து சுற்றிச் சுழன்று போர்செய்து இவ்வளவு அரக்கர்கள் மடிவதற்கும்

Koviloor Digital Library

காரணமாய் இருந்ததே. எனவே அதனை மலர்தூவி அருச்சித்து ஆசிகூறி வாழ்த்திப் போற்றினார்கள் என்பதாம். இத்தகைய பாரமான உடலை இத்தகைய தெய்வத்தன்மை வாய்ந்த தேரே பொறுத்துக் கொள்ள முடியாமல் புதைந்துபோகிறது என்றால், அனுமனின் தோள்கள் இவனை ஏற்றி அமரவைத்துக் கொண்டு போர்க்களத்தில் சஞ்சரித்ததே? அப்படியானால் அதற்கு எவ்வளவு ஆற்றல் இருந்திருக்கவேண்டும் என்று கருதிய தேவர்கள், அனுமன் தோள்களை வாழ்க வாழ்க என வாழ்த்தினர் என்பதாம். திருமாலுக்கு ஊர்தியான கலுழனைப் பற்றி அவர்கள் ஒன்றும் புகழ்ந்து பேசாததற்குக்காரணம், கருடன், இராமபிரானின் இந்த நிலையில் அவனுக்கு ஊர்தியாய் நிற்கும் பேறு இல்லாது போனதால்தான் என்பதை நுனித்து உணரவேண்டும். இந்திரன் அனுப்பிய தேர் ''ஆழி, அம், தடந்தேர்தான்''; என்றாலும், அனுமனது தோள்களை விஞ்சிய ஆற்றல் பெற்றதாகாது என்று தேவர்கள் கருதினர் என்பதாம்.

2. தேர் செல்லுதல்

''எழுக தேர்; சுமக்க எல்லோம் வலியும்; புக்கு இன்றே பொன்றி
விழுக போர் அரக்கன்; வெல்க வேந்தற்கு வேந்தன்; விம்மி
அழுக பேர் அரக்கிமார்'' என்று ஆர்த்தனர் அமரர்; ஆழி
முழுகி மீது எழுந்தது என்னச் சென்றது, மூரித் திண்தேர். (9788)

(எழுதல்-புறப்படுதல்; சுமத்தல்-தாங்குதல்; எல்லோம்-எல்லோருடைய; பொன்றுதல்-இறந்துபடுதல்; பேர்-பெரிய; விம்முதல்-தேம்புதல்; அமரர்-தேவர்கள்; ஆழி-சக்கரம்; மீது-மேல்; மூரி-வலிய; திண்-உறுதிமிக்க)

தேவர்கள் ''அந்தத்தேர் விரைவாகப் புறப்படட்டும், எங்கள் எல்லோருடைய வலிமையையும் பெற்றுத் தாங்கி சுமந்து செல்லட்டும்; அது போர்க்களத்தில் புகுந்து, இன்றைக்கே போர்த்தொழிலில் வல்லவனான இராவணனை அழித்துவிடட்டும்; வேந்தர்க்கு வேந்தனாகிய இராமபிரான் வெற்றிபெறட்டும்; அரக்கர்கள் அழிந்துபடப்போவதால், அவர்களின் மனைவியர்களான மிகுந்த அரக்கிமார்கள் தேம்பி அழுது புலம்பட்டும்'' என்று ஆரவாரித்தார்கள். அப்பொழுது சக்கரங்களை யுடைய அந்த வலிய உறுதிமிக்க தேரும், கடலில் முழுகி மேலே எழுந்தது போலச் செல்லலானது.

அந்தத்தேர் கடலில் முழுகி எழுந்து மேலே சென்றாற் போன்று, புழுதியினின்றும்மேலேஎழுந்துபுறப்பட்டுச்சென்றதுஎன்பதாம். ''சுமக்க எல்லோம் வலியும்'' என்பது தங்களுடைய வலிமையைக்கூட அந்தத்தேர் பெற்றுக்கொள்ளட்டும்'' என்று பாவனையால் கூறியது என்று கொள்ள வேண்டும். இதுபோல முன்பு முடிசூடத் தேரில் வரும் இராமபிரானை நோக்கி அயோத்தி மக்கள் மகிழ்ச்சியால் ''மைந்த நீ கோடி எங்கள்

Koviloor Digital Library

வாழ்க்கை நாள் யாவும் என்பார்'' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்தல் தகும்.

3. இராவணன் சாரதிக்கு இட்ட கட்டளை

அன்னது கண்ணின் கண்ட அரக்கனும் ''அமரர் ஈந்தார்
மன்நெடுந்தேர்'' என்று உன்னி, வாய்மடித்து எயிறு தின்றான்;
பின், ''அது கிடக்க'' என்னா, தன்னுடைப் பெருந் திண்தேரை,
''மின்நகு வரிவில் செங்கை இராமன்மேல் விடுதி'' என்றான். (9789)

(அன்னது-அந்தத்தேர்; மன்-நிலைபெற்ற; நெடு-பெருமைசான்ற; தின்னுதல்-கடித்தல்; நகுதல்-வீசுதல்; வரி-கட்டமைந்த; மேல்-எதிரில்; உன்னுதல்-கருதுதல்; வாய்மடுத்தல்-உதடுகளைக் கடித்துக்கொள்ளுதல்)

அந்தத்தேரை நோக்கிய அரக்கனாகிய இராவணன், ''இந்த நிலை பெற்ற பெரிய பெருமைசான்ற தேர், தேவர் தலைவனான இந்திரனுக்கு உரியது; தேவர்கள்தான் இராமபிரானுக்கு இந்தத்தேரைக் கொடுத்திருக் கிறார்கள்'' என்று எண்ணி, தேவர்கள்மீது ஆறாச்சினம் கொண்டு, உதடுகளை மடித்துப் பற்களைக் கடிக்கத் தொடங்கினான்; என்றாலும் அது ஒரு புறம் இருக்கட்டும் என்று அலட்சியப்படுத்திவிட்டு இப்பொழுது, தன்னுடைய பெரிய வலிமைமிக்க தேரை, ''மின்னல்போல் ஒளி வீசுகின்றதும், கட்டமைந்ததுமான வில்லைத் தன் சிவந்த கைகளில் கொண்டிருக்கின்ற அந்த இராமபிரான் எதிரில் செலுத்துவாயாக!'' என்று இராவணன் தன் தேர்ச்சாரதிக்குக் கட்டளையிட்டான்.

முன்பு தனக்குக் கட்டுப்பட்டுக் கிடந்து, தனக்குக் குற்றேவல் செய்து கொண்டிருந்த தேவர்கள்தான், இப்பொழுது இந்தத்தேரைத் தனக்கு எதிராகச் செலுத்தும்படி இராமபிரானுக்குத் தந்து உதவியிருக்கிறார்கள் என்பதை எண்ணிய இராவணன், தேவர்கள்மீது சினம்கொண்டு தன் உதடுகளை மடித்துப் பற்களைக் கடித்தான் என்பதாம். இவ்வாறு நிகழும் என்பதை முன்பே கும்பகருணன் இராவணனுக்கு எச்சரித்தான் என்பது நம் நினைவுக்கு இப்பொழுது வரவேண்டும். ''தின்றிடுதல் செய்கிலம் எனில், செறுநரோடும் ஒன்றிடுவர் தேவர்'' என்பது இராவணன் மந்திரப் படலத்தில் கும்பகருணன் கூற்று. சரி அதைப்பற்றி நினைப்பதற்கு இது நேரமல்ல என்பதால் ''அதுகிடக்க'' என்றான் என்பதாம். ''மேல்'' என்பது எதிரில் என்ற பொருளைத்தரும். தேவர்களுக்கு நம்மீது இருந்த அச்சம் நீங்கிவிட்டது, இந்த இராமனை அழித்து ஒழித்தபிறகு, அவர்களை அழித்தல் பற்றி நினைப்போம் என்பதால் ''அது கிடக்க'' என்றான் என்பதாம். இதே தேரில் நின்றுதான் இந்திரன் என்னை எதிர்த்துப் போரிட்டான்; அவனையே நான் வென்றேனே; எனவே அதுபற்றி இப்பொழுது எண்ணவேண்டாம். இதுபற்றி நான் அஞ்சுவேனோ'' என்று கருதி ''அதுகிடக்க'' என்று அலட்சியப்படுத்தினான் என்பதாம்.

Koviloor Digital Library

4. இரிந்த வான் கவிகள் எல்லாம், ''இமையவர் இரதம் ஈந்தார்;
அரிந்தமன் வெல்லும் என்றற்கு ஐயுறவுஇல்'' என்று, அஞ்சார்
திரிந்தனர்; மரமும், கல்லும் சிந்தினர்; ''திசையொடு அண்டம்
பிரிந்தன கொல்?'' என்று எண்ணப் பிறந்தது, முழக்கின்பெற்றி. (9790)

(இரிந்த-நிலைகுலைந்து ஓடிய; வான்கவிகள்-சிறந்த குரங்குகள்; இமையவர்-தேவர்கள்; அரிந்தமன்-பகைவரை வெல்பவன்/இராமபிரான்; முழக்கு-ஆரவாரம்; பிரிதல்-பிளந்துபோதல்; பெற்றி-தன்மை; ஐயுறவு-சந்தேகம்; பிறத்தல்-தோன்றுதல்)

முன்பு நிலைகுலைந்து போர்க்களத்தைவிட்டு ஓடிப்போன குரங்குப் படைகள் எல்லாம் ''தேவர்கள் இராமபிரானுக்குத் தம் தேரை அளித்துள்ளார்கள்; எனவே பகைவரை அழித்தொழிக்கும் வல்லமைபெற்ற நம் இராமபிரான் வெற்றிபெறுவான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை'' என்று கருதி, பகைவருக்கு பயப்படாமல் போர்க்களத்துள் புகுந்து இங்கும் அங்கும் திரிந்து கொண்டு மரங்களையும், கற்களையும், அரக்கர்படைமேல் வீசி எறியலாயினர்; அவர்கள் மகிழ்ச்சியால் எழுப்பிய பேராரவாரம் இந்த எட்டுத் திசைகளோடு அண்டகோளமே பிளந்துபோகுமோ? என்று கருதும்படி மிக்கு ஒலித்தது.

''இமையவர்'' என்பது இமையாநாட்டமுடைய தேவர்களைக் குறித்தது.

5. வார்ப்பொலி முரசின் ஓதை, வாய்ப்புடை வயவர் ஓதை,
போர்த்தொழில் களத்து மற்றும் முற்றிய பொம்மல் ஓதை,
ஆர்த்தலின், யாரும் பார்வீழ்ந்து அடங்கினர், இருவர் ஆடல்
தேர்க்குரல் ஓதை பொங்க, செவிமுற்றும் செவிடு செய்த, (9791)

(வயவர்-வீரர்கள்; ஓதை-ஓசை; பொம்மல்-மகிழ்ச்சி/மிகுதியுமாம்; ஆடல்-இயக்கம்/போர்/அசைதல்; பார்-தரை; பொலிதல்-விளங்குதல்; புடைத்தல்-அடித்தல்; யாரும்-அனைவரும்)

இழுத்துக் கட்டப்பட்ட வாரினால் பொலிவுற்று விளங்கும் போர் முரசின் ஓசையும், வீரர்கள் தம் வாய்களினால் எழுப்பும் கொக்கரிப்பு ஓசையும், போர் நிகழ்கின்ற போர்க்களத்துள் இயல்பாகவே எழுகின்ற மகிழ்ச்சி நிறைவாலும், துக்கம் நிகழ்வதாலும் எழுகின்ற ஓசையும், இராமபிரான், இராவணன் இருவரும் ஏறிவரும் தேர்கள் அசைதலினால் உண்டாகும் ஓசையும், மிகுதியாக ஒலிக்க அதைக் கேட்டவர்கள் எல்லோரும் தம் செவிகள் செவிடாகிப்போய், ஐம்புலன்களும், ஐம்பொறிகளும் அடங்கி, ஒடுங்கிப்போய்த் தரையில் வீழ்ந்தனர்.

''போர்த்தொழில் களத்து மற்றும் முற்றிய பொம்மல் ஓதை'' என்பது நால்வகைப் படைகளும் ஆர்ப்பரிக்கும் ஓசை என்றும் பொருள்தரும்.

Koviloor Digital Library

''வாய்ப்புடை வயவர் ஓதை'' என்பது வீரர்கள் தங்கள் வாய்களில் அடித்துக்கொள்வதனால் எழும் பேரோசை என்றும் பொருள் கொள்ளுவதுண்டு.

6. இராமபிரான் மாதலிக்குக் கூறுதல்

மாதலி வதனம் நோக்கி, மன்னர்தம் மன்னர் மைந்தன்,
''காதலால் கருமம் ஒன்று கேட்டியால்; களித்த சிந்தை
ஏதலன் மிகுதியெல்லாம், இயற்றிய பின்றை, என்தன்
சோதனை நோக்கிச் செய்தி; துடிப்புஇலை'' என்னச் சொன்னான்.
(9792)

(மன்னர்மன்னன்-சக்கரவர்த்தி; வதனம்-முகம்; கருமம்-செய்யத் தக்கசெயல்; காதல்-அன்பு; ஏதலன்-பகைவன்; சோதனை-தூண்டுதல்/ குறிப்பு; துடிப்பு-விரைவு; களிப்பு-செருக்கு)

தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வனான இராமபிரான், தன் தேர்ச் சாரதியாகிய மாதலியின் முகத்தைப் பார்த்து, ''மாதலி! நான் அன்புடன் சொல்லும் செய்யத்தக்க ஒரு காரியத்தைக் கேட்பாயாக! ஆர்வம், களிப்பு, செருக்கு மிகுதியால் மனத்தில் மகிழ்ச்சி கொண்டுள்ளவனான பகைவன் இராவணன், தனக்குத் தெரிந்த முறையையெல்லாம் கையாண்டபிறகு என்முகக் குறிப்பை உணர்ந்து நீ தேரைச் செலுத்துவாயாக! இப்போது அவசரப் படவேண்டாம்'' என்று அறிவுறுத்தினான்.

பத்துத் திசைகளிலிருந்து வரும் தேரையெல்லாம் ஒரே சமயத்தில் எதிர்கொண்டு வெற்றிபெறும் ஆற்றல்பெற்றவன் தசரதச்சக்கரவர்த்தி. இப்பொழுது அவன் மைந்தன் இராமபிரான் இராவணன் செலுத்திவரும் தெய்வத்தன்மை வாய்ந்த தேரை எதிர்கொள்ளுகிறான். எனவே இங்கே ''மன்னர்தம் மன்னர் மைந்தன்'' என்று, இராமபிரானிடம் இயற்கை யாகவே அமைந்துள்ள போராற்றலைக் குறிக்கிறான் கவிஞன். தன்னினும் தாழ்ந்தாரிடமும் அன்புடனும் கனிவுடனும் பேசும் இயல்புடையவன் இராமபிரான் என்பதைக் குறிக்க, ''காதலால் கருமம் ஒன்று கேட்டியால்'' என்றார் என்க. களிப்பு என்ற சொல்லுக்குச் செருக்கு என்பது பொருள். இயல்பிலேயே இராவணன் மனச்செருக்குக் கொண்டவன்; அத்தோடு அவன் முதல்நாள் போரில் தோற்றுப்போய் இப்போது இராமபிரானை எப்படியும் வென்று அழிக்கவேண்டும் என்ற மன உறுதியுடனும் ஒரு உத்வேகத்துடனும் வருகிறான். அதனையே ''களித்த சிந்தை'' என்கிறான் கவிஞன். ''களித்தவர் சிந்தை செவ்விபெறாது முழுவதூஉம் கற்றனம் என்று களியற்க'' என்பது நீதிநெறி விளக்கம். இராவணன் வரும் வேகத்தைப் பார்த்து, இராமபிரானின் தேர்ச்சாரதி மாதலி பரபரப் படைகிறான். அதனை முகக்குறிப்பால் உணர்ந்த இராமபிரான் அந்தப் பரபரப்பை நிறுத்துவதற்காகத்தான். ''துடிப்பிலை'' என்கிறான். பகைவன்

Koviloor Digital Library

செய்ய வேண்டும் என்று கருதுவது அனைத்தையும் செய்ய விட்டுவிட்டுக் கடைசியில் அவனைச் சிக்கவைப்பது ஒரு போர்த்தந்திரம். அதனையே இங்கே ''ஏதலன் மிகுதியெல்லாம் இயற்றிய பின்றை'' என்றார் என்க. ''சோதனை'' என்ற சொல் ''முகக்குறிப்பு'' என்ற பொருளில் இங்கு கையாளப்பட்டுள்ளது. ''களிப்பு'' என்பது இப்போது ''மிதப்பு'' என்று கூறுகிறோம் அல்லவா? அந்தப் பொருளைத் தரும் சொல்லாகக் கொள்ளலாம். ''மிகுதியெல்லாம்'' என்பது தனது ஆற்றலுக்கு விஞ்சிய செயல்கள் என்ற பொருளைத்தரும். ''மிகுதி'' என்ற சொல்லுக்கே தீமை என்ற ஒரு பொருளும் உண்டு. ''மிகுதியான் மிக்கவை செய்தாரை'' என்பது குறள்-158. இங்கே தீமை என்ற பொருளையே பரிமேலழகர் உரைதருகிறது. இராமபிரான் மாதலியிடம் பேசிய பேச்சின் தன்மை தலைமைப் பண்புகளுள் ஒன்றாகும்.

7. மாதலி மறுமொழி

"வள்ளல்! நின் கருத்தும், மாவின் சிந்தையும், மற்றலார்தம்
உள்ளமும், மிகையும், உற்ற குற்றமும், உறுதி தானும்,
கள்ளம்இல் காலப்பாடும், கருமமும், கருதேன் ஆகில்,
தெள்ளிது என் விஞ்சை!" என்றான்; அமலனும் "செவ்விது"
என்றான். (9793)

(மா-குதிரைகள்; சிந்தை-உள்ளம்; மாற்றலார்-பகைவர்; குற்றம்-குறை; கள்ளம்-வஞ்சனை; காலப்பாடு-காலத்தின் தன்மை; கருமம்-செய்தற்குரிய செயல்; கருதுதல்-ஆராய்ந்து செய்தல்; விஞ்சை-கலை/வித்தை/தொழில்; தெள்ளிது-தெளிவானது; அமலன்-குற்றமற்றவன்/இராமபிரான்; செவ்விது-நல்லது/நன்மைபயப்பது)

தேர்ச்சாரதி மாதலி, இராமபிரானை நோக்கி, ''வள்ளல் தன்மை பொருந்தியவனே! உன்னுடைய உள்ளக்கருத்தையும், குதிரையின் போக்கையும், பகைவர்களுடைய உட்கருத்தையும், அவர்களிடமும் நம்மிடமும் உள்ள நன்மைபயக்கும் மிகுதியான குணங்களையும், தீமை பயக்கும் குற்றங்களையும், எடுத்துக் கொண்ட செயலில் உறுதிப் பாட்டையும், வஞ்சனை இல்லாத காலத்தின் தன்மையையும், அக்காலத்தைத் தவறவிடாது செய்யப்படவேண்டிய செயலையும், நன்கு ஆராய்ந்து தெளியாவிட்டால், நான் கற்ற கல்வியும், என் தேரோட்டும் கலையும் மிக நன்றாக இருக்கிறது?'' என்று இகழ்ச்சிபடக் கூறினான். குற்றமற்றவனான இராமபிரானும் ''நல்லது'' என்று உடன்பட்டான்.

ஒரு தேரோட்டிக்கு என்னென்ன குணங்கள் இருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குகிறான் கவிஞன். அரசன், அமைச்சன், தூதன் முதலியவர்களுக்கெல்லாம் வள்ளுவன் தகுதிகள் குறித்திருப்பதுபோல, இங்கு மாதலி ஒரு தேரோட்டிக்கு அமையவேண்டிய குணங்களை

Koviloor Digital Library

எடுத்துரைக்கிறான். தன்னை வழிநடத்தும் தலைவனின் மனப்பாங்கு, குதிரையின் போக்கு, பகைவர்களின் எண்ணம், அவர்கள் நிறை, குறை, நமது மிகை, குறை, உறுதிப்பாடு, காலக் கட்டுப்பாடு, செயலின் தன்மை, ஆகியவற்றை ஆராய்ந்து செயல்படுதல்; ஒரு தேரோட்டிக்கு உள்ள தகுதிகள் என்று கவிஞன் மாதலி கூற்றாகக் கூறுகிறான். ''தெள்ளிது'' என்பது பிற குறிப்பு; இகழ்ச்சிக்குறிப்பு; ''தெள்ளிது'' என்பது தெள்ளிதன்று என்ற எதிர்மறைப் பொருளைத்தரும். ''நன்று நம் கொற்றம்'' என்று முன்பு கும்பகருணன், இராவணன் மந்திராலோசனை சபையில் கூறினான் அல்லவா? அதுபோல எனக்கொள்க. தேரோட்டி கூறிய குறிப்பைக் குறிப்பால் உணர்ந்து ''நன்று'' என்றுகூறி உடன்பட்டான் இராமபிரான். எனவே அவனை ''அமலன்'' என்கிறான் கவிஞன் என்க. ''கள்ளம்இல் காலம்'' என்பது தனக்கு நன்மைபயக்கும் காலம் எது, பகைவர்க்குத் தீமைபயக்கும் காலம் எது என்னும் குறிப்பறிந்து தேரோட்டுதலைக் குறிக்கும். நமக்கு ஆகும் காலம், பகைவர்க்கு ஆகாதகாலமாக நிர்ணயிக்க வேண்டும் என்பது கருத்து.

8. மகோதரன் இராவணனை வேண்டுதல்

"தோன்றினன் இராமன் ஈதால்; புரந்தரன் துரகத்தோர் மேல்;
ஏன்று இருவருக்கும் வெம்போர் எய்தியது; இடையே, யான் ஓர்
சான்றென நிற்றல் குற்றம்; தகுதியால் விடை ஈண்டு" என்றான்,
வான்தொடர் குன்றம் அன்ன மகோதரன், இலங்கை மன்னை. (9794)

(வான்தொடர்-வானளாவிய; மன்-மன்னன்/இராவணன்; புரந்தரன்-இந்திரன்; துரகம்-குதிரைகள்; ஏன்று-எதிர்த்து; ஈண்டு-இங்கு/இப்போது; சான்று-சாட்சி)

வானத்தைத் தொடும் மலைபோன்று உயர்ந்த தோற்றமுடைய அமைச்சனான மகோதரன் இலங்கைவேந்தன் இராவணனை நோக்கி, ''தலைவனே! இதோ, இந்திரனுடைய குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் இராமபிரான் ஏறி வந்து கொண்டிருக்கிறான்; உங்கள் இருவருக்கும் போர் மூளப்போகிறது. இந்த நிலையில் உங்கள் இருவருக்கும் நடுவே நான் ஒரு சாட்சியாகப் போர்செய்யாது தனித்து நிற்றல் குற்றமாகும். எனவே எனக்கு இப்பொழுது, தனித்துச் சென்று போர்செய்ய உடனே அனுமதி தருவாயாக!'' என்றான்.

Koviloor Digital Library

9. இராவணன் மகோதரனுக்கு இட்ட பணி

''அம்புயம் அனைய கண்ணன் தன்னை, யான் அரியின் ஏறு
தும்பியைத் தொலைத்தது என்னத் தொலைக்குவென்; தொடர்ந்து நின்ற
தம்பியைத் தடுத்தியாயின், தந்தனை கொற்றம்'' என்றான்
வெம்புஇகல் அரக்கன்; ''அஃதே செய்வென்'' என்று அவனின்
மீண்டான். (9795)

(அம்புயம்-செந்தாமரைமலர்/அம்புஜம்; கண்ணன்-கண்ணோட்டமுடையவன்/இராமபிரான்; அரியின்ஏறு-ஆண்சிங்கம்; தும்பி-யானை; கொற்றம்-வெற்றி; இகல்-மாறுபாடு; அரக்கன்-மகோதரன்; தொலைத்தல்-அழித்தல்)

இராவணன் மகோதரனை நோக்கி, ''செந்தாமரைமலர் போன்று அழகிய சிவந்த கண்களையுடைய இராமபிரானை, நானே ஒரு ஆண் சிங்கம் ஒரு பெரிய யானையுடன் போரிட்டு அழிப்பதுபோல அழித்து விடுவேன்; அவனைத்தொடர்ந்து பின்பற்றி வருகிறானே அவன் தம்பி இலக்குவன், அவனுடன் நீ போரிட்டு அவன் இங்கு வாராது தடுத்து விடுவாய் என்றால், எனக்கு நீ வெற்றியையே தந்தவனாவாய்'' என்றான். மிக்க சினத்துடன் கூடிய அரக்கனாகிய மகோதரனும், ''நல்லது தாங்கள் கூறியபடியே செய்கிறேன்'' என்றுகூறி அவ்விடம் விட்டு அகன்று இலக்குவனுடன் போரிடுவதற்காகப் போர்க்களம் நோக்கிச் சென்றான்.

பகைவனான இராவணனே இராமபிரான் கண்ணழகை வியந்து ''அம்புயமனைய கண்ணன்'' என்று போற்றுவதை நோக்குக. ஆண்சிங்கம் ஒன்று ஒரு யானையை எளிதில் போரிட்டுக் கொன்று விடுவதுபோல, நான் இராமபிரானை எளிதில் போரிட்டு வென்றுவிடுவேன் ஏன்பதை ''யான் அரியின்ஏறு தும்பியைத் தொலைத்தது என்னத் தொலைக்குவென்'' என்கிறான் இராவணன். அதேசமயம் இலக்குவன் இராமபிரானுடன் சேர்ந்து தன்னுடன் போரிட்டால் தன்னால் வெற்றிபெற முடியாது என்பதை நன்கு உணர்ந்திருப்பதால்தான் இராவணன், இலக்குவன் இவ்விடத்திற்கு வந்துவிடாமல் போரிட்டுத் தடுத்து நிறுத்துமாறு மகோதரனைப் பணிக்கிறான் என்பதை நுனித்து உணரவேண்டும். இவ்வாறு மகோதரன் செய்வதற்கு இராவணன் அனுமதி தந்தான் என்பது ஒன்று. அவன் அவ்வாறு செய்தால் தனக்கு வெற்றியையும் தந்தவனாவான் என்பது மற்றொன்று. இராமபிரானின் மேனியழகில் ஈடுபட்டவர்கள் அயோத்திநகர மக்களும், மிதிலைநகர மக்களும் மட்டுமன்று. பகைவர் களாகிய சூர்ப்பணகை, மாரீசன், முதலியோரும் இறுதியில் வாலியும்கூட இராமபிரான் மேனியழகில் தம்மை மறந்து வியந்து போற்றியவர் களாவார்கள். ''தும்பி'' என்ற சொல் பலபொருள்குறிக்கும். இங்கே யானை - என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

10. வழியில் இராமபிரான் தேர் எதிர்ப்படுதல்

மீண்டவன் இளவல் நின்ற பாணியின், விலங்கா முன்னம்,
ஆண்தகை தெய்வத் திண்தேர் அணுகியது; அணுகும் காலை,
மூண்டு எழு வெகுளியோடும், மகோதரன் முனிந்து, "முட்டத்
தூண்டுதி தேரை" என்றான்; சாரதி தொழுது சொன்னான். (9796)

(பாணி-இடம்/பக்கம்; முனிதல்-வெறுத்தல்; தூண்டுதல்-செலுத்து தல்; மீண்டவன்-திரும்பியவன்/மகோதரன்; விலகுதல்-செல்லுதல்)

அவ்வாறு இராவணனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, இலக்குவனுடன் போரிட்டு அவனைத் தடுக்கவந்தவனாகிய மகோதரன், இலக்குவன் நிற்கின்ற இடத்திற்கு வந்து சேர்வதன்முன்பே, ஆண்மைக் குணமாகிய வீரம் நிறைந்த இராமபிரானின் தெய்வத்தன்மை பொருந்திய உறுதியான தேர் அவ்விடம் வந்து சேர்ந்தது; அவ்வாறு அது நெருங்கியதும், மிக்க சினம் பீறிட்டு எழ, மகோதரன் வெறுப்புடன் தன் தேர்ச்சாரதியை நோக்கி, "அந்த இராமபிரானுடைய தேருடன் நமது தேர் மோதும்படி தேரைச் செலுத்துவாயாக!" என்று கட்டளையிட்டான்; அதனைக்கேட்ட தேர்ப்பாகன் அவனை ஒருமுறை வணங்கிப் பின்வருமாறு கூறலானான்.

மீண்டவன் மகோதரன்; இளவல் இலக்குவன்; ஆண்தகை-இராமபிரான்.

11. தேர்ச்சாரதி அறிவுறுத்துதல்

"எண்ணரும் கோடி வெங்கண் இராவணரேயும், இன்று
நண்ணிய பொழுது மீண்டு நடப்பரோ, கிடப்பது அல்லால்?
அண்ணல்தன் தோற்றம் கண்டால், ஐய! நீ, கமலம் அன்ன
கண்ணனை ஒழிய, அப்பால் செல்வதே கருமம்" என்றான். (9797)

(அண்ணல்-பெருமைமிக்கவன்; வெங்கண்-கொடிய கண்கள்; நண்ணுதல்-கிட்டுதல்/நெருங்குதல்; நடப்பது-செல்லுவது; ஒழித்தல்-தவிர்த்தல்; கருமம்-செய்யத்தக்கசெயல்; கிடப்பது-மாண்டு கிடப்பது)

தேர்ப்பாகன் மகோதரனை நோக்கி, "பெருமை மிக்கவனான இந்த இராமபிரானது அழகிய தோற்றத்தைக் கண்டாலே, ஒரு இராவணர் அல்ல, எண்ணிக்கைக்குள் அடங்காத கோடிக்கணக்கான கொடிய கண்களையுடைய இராவணர்கள் ஒன்றுகூடி வந்து இன்று அவனுடன் நெருங்கிப் போரிட்டாலும் அவர்களனைவரும் போர்க்களத்தில் உயிர்துறந்து பிணமாகிக் கிடப்பார்களேயன்றி உயிருடன் நாட்டுக்குள் திரும்பிச் செல்ல முடியுமோ? எனவே நீ, அந்தத் தாமரைமலர் போலும் கண்களையுடைய

Koviloor Digital Library

இராமபிரானைத் தவிர்த்து, நீ போகவேண்டிய வழியில் செல்வதே இப்போது நீ செய்யத்தக்க செயலாகும்'' என்று அறிவுறுத்துகிறான்.

இந்தத் தேர்ப்பாகன் இதற்கு முன்பும் இராமபிரானை எதிர்த்துத் தேரோட்டியவனாக இருக்க வேண்டும். அவன் தன் கண்களால் பார்த்ததை இப்போது மகோதரனுக்கு அறிவுறுத்துகிறான் என்பதாம். தன் மன்னன் போல எத்தனைகோடி இராவணர்கள் வந்தாலும் இராமபிரானை வெல்ல முடியாது. அவன் அம்பினால் உயிரிழக்கநேரிடும் என்பதை இந்தத் தேர்ப்பாகன் நன்கு உணர்த்திருக்கிறான் என்பதாம்.

இராவணன் எப்படி இராமபிரானை ''அம்புயம் அன்ன கண்ணன்'' என்று குறிப்பிட்டானோ, அதேபோல் இவனது தேர்ப்பாகனும் இராவணனை ''கமலம் அன்ன கண்ணன்'' என்று குறிக்கும்படி செய்த கவிஞனின் நோக்கம் கருதுக. இராவணனும், மகோதரனும் பகைவரைப் பழிவாங்கும் உணர்ச்சியில் இருக்கிறார்கள். ஆனால் தேர்ச்சாரதி ஆணவம் அற்ற, சமநிலையில் இருக்கிறான். எனவே உண்மைநிலையை எடுத்துரைக்க முடிகிறது என்பது உட்பொருள். ஆணவம் அறிவை மறைக்கும்; மயக்கும்.

12. என்றலும், எயிற்றுப் பேழ்வாய் மடித்து, ''அடா! எடுத்து நின்னைத்
தின்றனென் எனினும், உண்டாம்பழி; என, சீற்றம் சிந்தும்
குன்று அன தோற்றத்தான் தன் கொடி நெடுந்தேரின் நேரே
சென்றது அவ்விராமன் திண்தேர்; விளைந்தது திமிலத் திண்போர். (9798)

(பேழ்வாய்-பிளந்தவாய்; திமிலம்-பேரொலி; திண்-வலிய; விளைதல்-உண்டாதல்)

என்று தேர்ப்பாகன் அறிவுறுத்தியதும் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத, மலைபோலும் தோற்றமுடைய மகோதரன் வளைந்த கோரப்பற்களையுடைய, பிளந்த வாயை சினத்தால் மடித்துக்கொண்டு, ''அடா! எனக்கே அறிவுரை சொல்லுகின்ற உன்னை அப்படியே வாரி எடுத்து வாயில் போட்டுத் தின்றுவிடுவேன்; ஆனால் அந்தச்செயல் எனக்குப் பழியை உண்டாக்கும் என்பதால் அதைத் தவிர்த்துவிட்டேன்'' என்று சீற்றம் கொண்டு நின்றபொழுது, அவனது கொடிகள் கட்டப்பெற்ற நீண்ட தேரின் எதிரே, இராமபிரானது வலிமையான தேர் இப்போது சென்று சேர்ந்தது. எனவே இருவருக்கும் பேரொலி மிக்க வலிய போர் உண்டானது.

13. பொன் தடந்தேரும், மாவும், பூட்கையும், புலவு உண் வாட்கைக்
கல் தடந் திண்தோள் ஆளும், நெருங்கிய கடல்கள் எல்லாம்,
வற்றின, இராமன் வாளி வடஅனல் பருக; வன்தாள்
ஒற்றை வன் தடந்தேரோடும் மகோதரன் ஒருவன் சென்றான். (9799)

Koviloor Digital Library

(மா-குதிரை; ~ புலவு-புலால்; கல்-மலை; ஆள்-காலாட்படை; வன்தாள்-வலிய சக்கரம்; புழை-துளை; புழை+கை-பூட்கை/யானை)

மகோதரன் உடன் வந்த பொன்னாலாகிய அகன்ற தேர்ப்படையும், குதிரைப்படையும், துளைகொண்ட துதிக்கைகளையுடைய யானைப் படையும், புலால் நாற்றம் வீசுகின்ற வாட்படையைக் கையில் ஏந்தி யுள்ளவரும், மலைபோன்று உறுதியான தோள்களையுடையவருமான காலாட்படை வீரர்களும், நெருங்கியிருந்த அந்தச் சேனைக்கடல்களை யெல்லாம், இராமபிரான் செலுத்திய அம்புகள், வடவாமுகாக்னிபோல் பருகி வற்றிக் குறைத்து அழியச்செய்தன; வலிய சக்கரங்களை உடையதும், இப்போது தனியாக நிற்கின்ற வலிய பெரிய தேரையும் கொண்டு, மகோதரன்மட்டும்தன்னந்தனியனாக இராமபிரானைநோக்கிச் சென்றான்.

''புழை'' என்ற சொல் துளையைக் குறிக்கும். துளையையுடைய துதிக்கையைக் கொண்டதால் ''பூட்கை'' என்பது யானைக்குக் காரணப் பெயர். ''புலவு உண் வாள்'' என்பது எப்போதும் பகைவரை அழித்துக் கொண்டேயிருப்பதால் புலால் நாற்றம் வீசும் வாட்படை என்ற பொருளைத்தரும். ''கடல்கள்'' என்பது உருவகம். நால்வகைப் படைகளையும் பெருக்கத்தால் கடலாக உருவகித்தார். அதற்கேற்றாற் போல, கடலின்அடியில்உள்ளவடவனலாக, இராமபிரானின்அம்புகளை உருவகித்தார். எனவே இப்பாடல் உருவக அணியின் பாற்படும். நால்வகைப் படைகளும் அழிந்துபட்டதால் அவன் தன்னந்தனியனாகத் தான் ஏறிவந்த தேரில் செல்லவேண்டியதாயிற்று என்பதாம்.

14. அசனிஏறு இருந்த கொற்றக் கொடியின்மேல், அரவத் தேர்மேல்,
குசையுறு பாகன் தன்மேல், கொற்றவன் குவவுத் தோள்மேல்,
விசையுறு பகழி மாரி வித்தினான்; விண்ணினோடும்
திசைகளும் கிழிய ஆர்த்தான்; தீர்த்தனும் முறுவல் செய்தான். (9800)

(அசனிஏறு-பேரிடி; கொற்றம்-வெற்றி; அரவம்-ஒலி; குசை-கடிவாளம்; கொற்றவன்-வெற்றிவீரன்/இராமபிரான்; குவவு-திரண்ட; விசை-வேகம்/விரைவு; வித்துதல்-செலுத்துதல்; தீர்த்தன்-தூயவன்/இராமபிரான்)

இந்திரனுக்குரிய தெய்வத்தன்மை பொருந்திய தேரின்மீது கட்டப் பெற்றிருந்த வெற்றிபொருந்திய இடிக் கொடியின்மீதும், ஒலிக்கின்ற தேரின்மீதும், அதைக் கடிவாளக் கயிறுகொண்டு செலுத்திவருகின்ற தேர்ப்பாகனாகிய மாதலிமீதும், வெற்றிவீரனாகிய இராமபிரானின் ஒளிமிக்கு விளங்கும் திரண்ட தோள்களின்மீதும், வேகம் பொருந்திய அம்புமழையை மகோதரன் தூவினான்; விண்ணுலகும், எட்டுத் திக்குகளும் கிழிபட்டுப்போகும் வண்ணம் பேராரவாரம் செய்தான்;

Koviloor Digital Library

இதனைக் கண்ட தூயவனான இராமபிரானும் இகழ்ச்சியாக ஒரு புன்முறுவல் செய்தான்.

இடியைத் தன் கொடியில் பதித்துக் கொண்டிருப்பவன் இந்திரன். சில பாண்டிய மன்னர்களும் இடியைக் கொடியாகக் கொண்டிருந்தனர் என்றும் ஒரு குறிப்பு உண்டு. ''கொடிக்கண் இடி உரும் ஏந்திய தென்னவன்'' என்பது பெருந்தொகை. தேரின்மீது கட்டப்பட்டிருந்த கொடி, தேர், அதைச் செலுத்திவருகிற பாகன், இராமபிரான் தோள்கள், இவற்றின் மீதெல்லாம் மகோதரன் அம்புகளை மழையெனப் பொழிந்தான் என்றாலும், அது எந்த அழிவையும் ஏற்படுத்தாதது கண்டும், எந்த அழிவும் இல்லாதுபோக மகோதரன் இத்தகைய ஆர்ப்பாட்டம் செய்வது கண்டும், இராமபிரான், இகழ்ச்சி தோன்ற அவனைப் பார்த்து முறுவலித்தான் என்பதாம். ''குசை'' என்பது கடிவாளம் என்றி பொருளைத்தரும். குதிரைகளுக்குக் கண்ணை மறைத்துக்கட்டப்படும் சேணமும் கடிவாளம் எனப்படும். இங்கே தேரைச் செலுத்திக் குதிரைகளுடன் பிணைத்துக்கட்டப்பட்ட கயிறு கடிவாளம் எனப்படுகிறது.

15. மகோதரன் இறந்துபடுதல்

வில் ஒன்றால், கவசம் ஒன்றால், விறலுடைக் கரம் ஓர் ஒன்றால்,
கல்ஒன்று தோளும் ஒன்றால், கழுத்து ஒன்றால், கடிதின் வாங்கி
செல்ஒன்று கணைகள் ஐயன் சிந்தினான்; செப்பி வந்த
சொல் ஒன்றாய்ச் செய்கை ஒன்றாய்த் துணிந்தனன் அரக்கன் துஞ்சி.
(9801)

(ஐயன்-தலைவன்/இராமபிரான்; செல்-இடி; அரக்கன்-மகோதரன்; விறல்-வெற்றி; கல்-மலை; ஒன்று-போன்ற; துஞ்சுதல்-இறந்துபடுதல்; கடிதின்-விரைவில்; துணிதல்-உடல் பிளவுபடுதல்)

தலைவனான இராமபிரான், தனது இடிபோன்றதும் விரைந்து செல்லுவதற்குரியதுமான அம்புகளை அரக்கன் மகோதரன் மீது செலுத்தினான்; ஓரம்பால் அவனுடைய வில்லையும், ஓரம்பால் அவனுடைய கவசத்தையும், மற்றோரம்பால் அவனுடைய வலிமைமிக்க கைகளையும், இன்னும் ஓர் அம்பால் அவனுடைய மலையை ஒத்த தோள்களையும், கழுத்தினையும், அறுத்தெறிந்தான். தான் இராவணனிடம் சொல்லிவந்த சொல் வேறாகவும், இப்பொழுது தான் செய்த செய்கை வேறாகவும் ஆகி, மகோதரன் உடல் துண்டிக்கப்பட்டு, இறந்து அழிந்தான்.

''சொல் ஒன்றாய்ச் செய்கையொன்றாய்'' என்பது இங்கே அருமையாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை நோக்க வேண்டும். இராவணன் அவனுக்கு இட்ட கட்டளை இலக்குவனோடு போரிட்டு அவனை இங்கு வரவிடாமல் தடுக்கவேண்டும் என்பது. அது சொல். ஆனால் இவன் செய்த

Koviloor Digital Library

செய்கைஎன்ன? இராமபிரானுடன்போரிடத்துவங்கினான். இவன்அங்கே என்ன கூறிவந்தான்? இலக்குவனை அழித்துவிடுவேன் என்று கூறி வந்தான்; ஆனால் நடந்தது என்ன? இலக்குவனுடன்இவன்போர்புரியவும் இல்லை; இலக்குவனால் கொல்லப்படவுமில்லை, இலக்குவனைக் கொல்லவுமில்லை. மாறாக அவன் தமையன் இராமபிரானால் கொல்லப் பட்டான். இவ்வளவு பொருள்பொதிந்த சொற்றொடர் இது. இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. மகோதரன் இராமபிரானோடு போரிட்ட தாகவே கூறவில்லை, மாறாக மகோதரன் சுக்கிரீவனால் கொல்லப் பட்டான் என்று கூறுகிறது.

16. மோதரன் முடிந்த வண்ணம், மூவகை உலகத்தோடும்
மாதிரம் எவையும் வென்ற வன்தொழில் அரக்கன் கண்டான்;
சேதனை உண்ணக் கண்டான், "செலவிடு, செலவிடு" என்றான்;
சூதனும் முடுகித் தூண்ட, சென்றது, துரகத் திண்தேர். (9802)

(வண்ணம்-தன்மை; மாதிரம்-திசைகள்; சேதன்-துண்டம்; செல விடுதல்-செல்லப்பணித்தல்; முடுகுதல்-விரைதல்; சூதன்-தேர்ப்பாகன்; துரகம்-குதிரைகள்; சேதனை-பிளவு; சேதித்தல்-துண்டமாக்குதல்)

மேல், நடு, கீழ் என்ற மூன்று உலகங்களோடு, எட்டுத் திக்குகளையும் வென்றவனான, போர்த்தொழிலில் வல்லவனான அரக்கன் இராவணன், மகோதரன் இறந்துகிடக்கின்ற தன்மையையும், அவன் உடலுறுப்புக்கள் சேதிக்கப்பட்டுக் கிடப்பதையும் பார்த்துத் தன் தேர்ச்சாரதியிடம் ''விரைந்து தேரை இராமபிரான் அருகில் செலுத்து'' என்று கட்டளை யிட்டான். தேர்ப்பாகனும் குதிரைகளைத் தூண்டிச் செலுத்த, குதிரைகள் பூட்டப்பெற்ற வலியதேர் விரைந்து சென்றது.

''மோதரன்'' என்பது மகோதரன் என்பதன் மரூஉ. சேதனை என்ற சொல் சேதித்தல் என்ற சொல்லின் அடியாகப் பிறந்த சொல் எனக்கொள்க. துண்டித்தல் என்ற பொருளைத்தரும். ''செலவிடு, செலவிடு'' என்ற அடுக்கு விரைவுபற்றி வந்தது.

17. "பனிப்படா நின்றது என்னப் பரக்கின்ற சேனை பாறித்
தனிப்படான் ஆகின், இன்னம் தாழ்கிலன்" என்னும் தன்மை
நுனிப்படா நின்ற வீரன், அவன் ஒன்றும் நோக்கா வண்ணம்,
குனிப்படா நின்ற வில்லால், ஒல்லையின் நூறிக் கொன்றான். (9803)

(படா-பட்டு/மூடி; பாறுதல்-சிதறிப்போதல்; தாழ்தல்-ஊக்கம் குறைதல்/அடங்குதல்; நுனி-தலை/உச்சி; குனித்தல்-வளைத்தல்; ஒல்லை-விரைவு; நுறுதல்-பொடிப்பொடியாக்குதல்; படுதல்-தோன்றுதல்; நுனித்தல்-சிந்தித்தல்)

Koviloor Digital Library

மூடுபனியைப்போலப் பரந்து விரிந்து நின்ற இராவணனுடைய சேனை முழுவதையும் சிதறிப்போகச் செய்து, அவனைத் தனிமைப் படுத்தும் வரைக்கும், இவன் தன் ஊக்கம் குறைந்து அடங்கமாட்டான் என்னும் தன்மையை நன்கு நுனித்து உணர்ந்துகொண்ட வீரனான இராமபிரான், அவனுக்குத் தெரியாத வண்ணம், தன்னுடைய வளைந்த வில்லை எடுத்து, நாண்தெறித்து விரைவாக அம்புகளைச் செலுத்திப் படை முழுவதையும் பொடிப்பொடியாக்கிக் கொன்றுகுவித்தான்.

இராவணனின் படைகளெல்லாவற்றையும் அழித்து அவனைத் தனிமைப்படுத்தினால்தான் தான் வெற்றிபெற முடியும் என்று நுனித்து உணர்ந்த இராமபிரான், முதலில் அவனுடைய சேனைகளை அழித்தான் என்பதாம். விரிந்து பரந்து நின்ற இராவணன் சேனைக்கு மூடுபனி உவமை. சூரிய வெளிச்சம் பட்டதும், பனித்துளிகள் மறைந்து போவதுபோல, இராமபிரான் அம்புபட்டதும் அரக்கர்சேனை மாய்ந்துபோனது என்புது மறைபொருள்.

18. இராவணனுக்கு ஏற்பட்ட தீய நிமித்தங்கள் [5பாடல்கள்]

அடல்வலி அரக்கற்கு அப்போழ்து, அண்டங்கள் அழுந்த, மண்டும்,
கடல்களும் வற்ற, வெற்றிக்கால் கிளர்ந்து உடற்றும் காலை,
வடவரை முதல ஆன மலைக்குலம் சலிப்ப மானச்
சுடர்மணி வலயம் சிந்தத் துடித்தன, இடத்த பொன்தோள். (9804)

(அடல்வலி-மிக்கவலிமை; அரக்கன்-இராவணன்; மண்டுதல்-பொங்கியெழுதல்; கால்-காற்று/ஊழிக்காற்று; உடற்றுதல்-வீசுதல்/வருத்துதல்; வடவரை-மேருமலை; குலம்-கூட்டம்; சலித்தல்-அசைதல்; மான-போல; காலை-பொழுது; இடத்த-இடப்பக்கமுள்ள; பொன்-அழகிய; சுடர்-ஒளி; மணி-இரத்தினம்; வலயம்-வாகுவலயம்/தோள் வளை)

அப்போது, மிக்க வலிமைபடைத்த அரக்கனான இராவணனுக்கு, இந்த அண்டகோளங்கள் எல்லாமும் மண்ணுக்குள் அழுந்தியது போலவும், பொங்கியெழுகின்ற இயல்புடைய கடல்கள் எல்லாம் வற்றிப்போனது போலவும், வெற்றியால் வென்று தீர்க்கின்ற ஊழிக் காலத்துக் காற்று சுழன்று அடித்துத் துன்புறுத்தும்போது, வடக்கே உள்ள மேருமலை முதலான மலைக்கூட்டங்கள் எல்லாம் அசைவன போலவும், ஒளிமிகுந்த இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற அவனுடைய வாகுவலயங்கள் எல்லாம் சிந்திச்சிதறிப்போவதுபோலவும், அவனுடைய இடப்பக்கத்தில் அமைந்துள்ள அழகிய பத்துத் தோள்களெல்லாம் துடித்தன.

''அடல்வலி'' என்பது ஒரு பொருட்பன்மொழி. எனினும் இங்கே மிக்க வலிமையுடைய என்று பொருள் கொண்டிருக்கிறோம். அவனுடைய

Koviloor Digital Library

இடது தோள்கள் துடித்தபோது நிகழ்ந்த மாற்றங்கள் கூறப்படுகின்றன. அண்டங்கள் அழுந்திப்போயின; மண்டும் கடல்கள் வற்றிப்போயின; ஊழிக்காற்று கிளர்ந்து துன்புறுத்தியது; அவனுடைய சூடாமணி வலயம் சிந்தின; ஆண்களுக்கு வலக்கண், வலதுதோள் துடித்தால் நல்லது என்றும், பெண்களுக்கு இடக்கண்ணும், இடப்புருவமும் துடித்தால் நல்லது என்றும் கூறுவர். இதுபற்றி சீதாதேவி அசோகவனத்தில் திரிசடையிடம் கூறியது நாம் கண்டு வந்ததே. இங்கே தீய நிமித்தங்கள் குறித்து, ''துடி நூல்'' என்ற ஒரு நூல் கூறுவதாக உ.வே.சா.பதிப்புக் கூறுகிறது. அது சுவையாக இருப்பதால் இங்கேயும் தரப்படுகிறது. ''இடத்தோள் துடிக்கப் பதி இழப்பான்; இடப்புருவம் துடிக்கப் பெரிய பொல்லாங்குப் பேச்சு உண்டாகும்; இடக்கீழிமை துடிக்கின் துணைவருடன் இடர் பெறுவர்; இடமுன்கை துடிக்கின் பயம்; இடப்புறங்கை துடிக்கின் பொல்லாங்கு; இடச்சிறுவிரல் துடிக்கின் நல்லுறவினர் சாவு; இடமுதுகு துடிக்கின் அயலூர்ப் பிரயாணம்; இடது விலாத் துடிக்கின் இருந்த வீட்டைவிட்டு வெளியேறுதல்; இடக்கணைக்கால் துடிப்பால் சாவு; இட உள்ளங்கால் துடிப்பால் பிணியும் நிகழும்'' என்பது துடிநூல்'' என்கிறது உ.வே.சா. பதிப்பு.

19. உதிரமாரி சொரிந்தது, உலகெலாம்;
அதிரவானம் இடித்தது; அருவரை
பிதிர வீழ்ந்தது அசனி; ஒளிபெறாக்
கதிரவன் தனை ஊரும் கலந்ததால். (9805)

(உதிரமாரி-குருதிப்புனல்/இரத்தமழை; அருவரை-பெரிய மலைகள்; பிதிர்தல்-உதிர்தல்; அசனி-இடி; ஊர்-ஊர்கோள்/பரிவேடம்/கிரகணம்; கலத்தல்-சுற்றுதல்; வானம்-மேகங்கள்)

உலகமெங்கும் இரத்தமழை பொழிந்தது; மேகங்கள் உலகமெலாம் அதிரும்படி இடியை உண்டாக்கின; இடியினால் பெரிய மலைகளெல்லாம் பொடிப்பொடியாய் உதிர்ந்து வீழ்ந்தன; ஒளியில்லாது மங்கிய சூரியனைப் பரிவேடம் சுற்றிச் சூழ்ந்தது.

இரத்தமழை பொழிவதும், மேகங்கள் இல்லாமல் வானில் இடி இடிப்பதும், இடியினால் மலைகள் சரிவதும், ஊர்கோளும் தீய நிமித்தங்கள்; ஊர்கோள் என்பது சூரியசந்திரனைச் சுற்றித் தோன்றும் வட்டங்களாகும்.

20. வாவும் வாசிகள் தூங்கின; வாங்கல்இல்
ஏவும் வெஞ்சிலை நாண் இடை இற்றன;
நாவும் வாயும் உலர்ந்தன; நாள்மலர்ப்
பூவின் மாலை புலால் வெறி பூத்ததால். (9806)

Koviloor Digital Library

(வாவும்-தாவும்; வாசி-குதிரைகள்; வாங்குதல்-வளைத்தல்; இடை-நடுவே; நாள்-அன்றலர்ந்த/புதிய; வெறி-நாற்றம்; பூத்தது-வீசியது; நாண்-கயிறு)

தாவிப் பாய்ந்து செல்லும் குதிரைகள் தேர்களில் பூட்டப் பட்டிருந்த படியே செயலிழந்து தூங்கி வழிந்தன; பின்வாங்குதல் இல்லாத விற்கள் செலுத்துவதற்காக வளைக்கப்படும்போதே அவற்றில் கட்டியிருந்த கயிறுகள் நடுவில் இற்று அறுந்துபோயின; அவனுடைய நாக்குகளும், வாய்களும் ஈரப்பசையின்றி வற்றி உலர்ந்துபோயின; அன்றலர்ந்த நறுமண மிக்க மலர்களால் கட்டப்பெற்ற மாலைகள் புலால் நாற்றம் வீசின.

இவையெல்லாம் தீய நிமித்தங்கள். பின்வரும் பெருந்துன்பத்தை முன்னறிவிப்பன.

21. எழுது வீணை கொடு ஏந்து பதாகைமேல்,
கழுகும் காகமும் மொய்த்தன; கண்கள் நீர்
ஒழுகுகின்றன, ஓடு இகல் ஆடல்மா;
தொழுவில் நின்றன போன்றன, சூழிமா. (9807)

(கொடு-கொண்டு; ஏந்துதல்-உயர்ந்து பறத்தல்; பதாகை-கொடி; இகல்-வலிமை; மா-குதிரை; சூழி-முகபடாம்/நெற்றிப்பட்டம்; மா-யானை; தொழு-தொழுவம்/கொட்டில்; அடல்-ஆடல்/ஓடுதல்)

வீணையின் சித்திரம் எழுதப்பெற்று உயர்ந்து பறக்கும் இராவணனின் கொடியின்மேல் கழுகுகளும், காகங்களும் மொய்த்துக் கொண்டிருந்தன; பாய்ந்து செல்லும் இயல்புடைய வலிமைமிக்க குதிரைகளின் கண்களினின்றும், எந்தக் காரணமும் இன்றிக் கண்ணீர் பெருகி வழிகின்றது; போர்த்தொழில் வல்ல, நெற்றிப்பட்டம் அணிந்த யானைகளோ, ஏதோ கொட்டிலில் அடைக்கப்பட்டன போன்று ஊக்கமின்றிச் செயலற்று நின்று கொண்டிருந்தன.

இராவணனின் கொடி வீணைக்கொடியாகும். ''மா'' என்ற சொல் பொதுவாக விலங்குகளைக் குறிக்கும். இங்கே முதலில் குதிரையையும், அடுத்து யானையையும் குறித்து நின்றன. ''தொழு'' என்ற சொல் தொழுவம் என்ற பொருளில் விலங்குகளை அடைத்து வைக்கும் கொட்டிலைக் குறிக்கும்; இதுவே கூடு, கொப்பம், குழி, பந்தி, கட்டுத்தறி என்ற பொருள்களையும் தரும். அடல் என்பது ''ஆடல்'' என்பதன் நீட்டல் விகாரமாகக் கொண்டு வலிமை மிக்க என்ற பொருளும் பொருந்தும்.

Koviloor Digital Library

22. இன்ன ஆகி இமையவர்க்கு இன்பம் செய்
துன்னிமித்தங்கள் தோன்றின; தோன்றவும்
அன்னது ஒன்றும் நினைந்திலன்; 'ஆற்றுமோ,
என்னை வெல்ல, மனித்தன்?'' என்று எண்ணுவான். (9808)

(இமையவர்-தேவர்கள்; மனித்தன்-மனிதன்; ஆற்றுதல்-இயலுதல்/முடிதல்; அறிதல்-உணர்தல்/பொருட்படுத்துதல்/மதித்தல்; நிமித்தம்-சகுனம்; தோன்றுதல்-புலப்படுதல்; நினைத்தல்-சிந்தித்தல்)

இவ்வாறாக, இராவணனுக்குப் பகைவர்களாகிய தேவர்களுக்கு இன்பம் தருகின்ற கெட்ட சகுனங்கள் பல தோன்றலாயின; அவ்வாறு தோன்றினாலும்கூட, அதனைச் சிறிதும் பொருட்படுத்தாத இராவணன், ''என்னை வெல்லுவதற்கு இந்த அற்பமான மனிதனால் முடியுமோ?'' என்று இறுமாப்புக் கொள்வானாயினான்.

இராவணனுக்குத் துன்பம் தருவனவெல்லாம் தேவர்களுக்கு இன்பம் தருவனவாகும். இவ்வாறு சில துன்னிமித்தங்கள் தோன்றினாலும் அதைப் பொருட்படுத்தாமல் வீரர்கள் போருக்குச் செல்வதுண்டு; சிலமுறைகள் அதில் வெற்றி பெறுவதும் உண்டு. இதனைப் ''பிள்ளைப்பெயர்ச்சி'' என்கிறது புறத்திணை. ''போர் தாங்கிப் புள் விலங்கியோனைத் தார் வேந்தன் தலையளித்தன்று'' என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

23. வீங்கு தேர் செலும் வேகத்து, வேலை நீர்
ஓங்கு நாளின் ஒதுங்கும் உலகுபோல்,
தாங்கல் ஆற்றகிலார், தடுமாறித் தாம்
நீங்கினார், இருபாலும் நெருங்கினார். (9809)

(வேலை-கடல்; ஓங்குதல்-பொங்குதல்; வீங்கு-அகன்ற/பெரிய; இருபால்-இருபக்கம்; நீங்குதல்-விலகுதல்; தடுமாறுதல்-நிலை குலைதல்; நாள்-ஊழிக்காலம்)

ஊழியிறுதிக்காலத்தில் பொங்கியெழும் கடல்நீரைக் கண்டு அஞ்சி ஒதுங்கி ஒளிந்துகொள்ளும் உலகத்து மக்களைப்போல இராவணனுடைய அகன்ற பெரியதேர் வரும் வேகத்தைக் கண்டு இருபக்கத்தும் நெருங்கியிருந்த வானரவீரர்கள், இப்போது அதனைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றலற்றவராய் நிலைகுலைந்து தேரின் இருபக்கத்தும் விலகி ஓடிப்போயினர்.

24. இராமபிரானும் இராவணனும் எதிர்எதிர் நிற்றல்

கருமமும் கடைக்கண் உறு ஞானமும்,
அருமை சேரும் அவிஞ்சையும் விஞ்சையும்,
பெருமைசால் கொடும் பாவமும் பேர்கலாத்
தருமமும் எனச்சென்று எதிர் தாக்கினார். (9810)

Koviloor Digital Library

(கடை-கடைசி/இறுதி; விஞ்சை-வித்தை/அறிவு/ஞானம்; அவிஞ்சை-அவித்தை/அறியாமை/அஞ்ஞானம்; பேர்தல்-நிலைதிரிதல்; தாக்குதல்-போர்செய்தல்; கருமம்-செய்யத்தக்க செயல்/நெறி; பெருமை-வலிமை/அளவிற்பெரிய)

யோகநெறிகளில் கடைசியாகக் கூறப்படுகின்ற ஞானமும், பெறுதற் கரிதான அறிவும், அதற்குமாறான அறியாமையும், வலிமைமிக்க கொடிய பாவமும் எதற்கும் அசைதல் இல்லாத, அழிவில்லாத அறத்தின் தன்மையும் போல, இராமபிரானும், இராவணனும், எதிர்எதிர் நின்று தாக்கிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

ஞானம், அறிவு, அறம் முதலானவை இராமபிரானுக்கும், தீவினை, அவிஞ்சை, கொடியபாவம், அதர்மம், முதலாயின இராவணனுக்கும் உவமைகள். அறிவோடு அறியாமையும், அறத்தோடு பாவமும் பொருதுதல்போல அறத்தின்நாயகன் இராமபிரானும், கொடிய பாவத்தின் நாயகனான இராவணனும் எதிர்எதிர் நின்று போர்புரியலானார்கள் என்பதாம். கருமம் என்பது இருவகைப்படும். காமியகருமம்- ஒன்றின் மேல் விருப்பப்பட்டுச்செய்யும் செயல்; நிஷ்காமிய கருமம்-எதன்மேலும் ஆசை கொள்ளாமல் தன் கடமையைச் செய்தல். காமியகருமம் தீவினை, நிஷ்காமிய கருமம்-நல்வினை எனக்கொள்க. ''பெருமைசால் பாவம்'' எனப் பொருள்கொள்ளக்கூடாது. இங்கே பெருமை உயர்வை உணர்த்தாது, அளவில்பெரிய, மிக்க பாவம் என்ற பொருளைக் கொள்ளவேண்டும்; அல்லது ''பெருமைசால் தருமம்'' என்று தருமத்திற்கு அடையாக்கிக் கொள்ளவேண்டும்; அறிவிற்கு முன் அறியாமையும், தருமத்திற்குமுன் பாவமும் அழிந்துபோவது போல. இராமபிரானுக்கு முன் இராவணன் அழிந்துபடுவான் என்பது குறிப்பு. நெறிகள் நால்வகைப்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம். எனவேதான் முதலடியில் ''கடைக்கண் உறு ஞானமும்'' என்றார் என்க.

25. சிரம் ஓர் ஆயிரம் தாங்கிய சேடனும்,
உரவு கொற்றத்து உவணத்து அரசனும்,
பொர உடன்றனர் போலப் பொருந்தினர்,
இரவும் நண்பகலும் என ஏற்றனர். (9811)

(உரவு-வலிமை; உவணம்-பறவை; உவணத்து அரசன்-கருடன்; பொர-பேர்ச்செய்ய; உடன்றனர்-எதிர்த்து நின்றனர்)

ஆயிரம் தலைகளைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேஷனும், வலிமையும் வெற்றியும் பொருந்திய பறவைகளின் அரசனான கருடனும், போர்செய்ய எதிர்த்து நின்றதைப்போலவும், கரிய இரவும், நல்ல பகல்பொழுதும் போலவும் இருவரும் தோன்றினர்.

Koviloor Digital Library

ஆயிரம் தலைகள்கொண்ட ஆதிசேஷனுக்குப் பத்துத்தலைகள் கொண்ட இராவணனும், இருட்டிலேயே செயல்புரியும் நிசாசரனான இராவணனுக்கு இரவும் உவமைகள்; அதுபோலப் பாம்புக்குப் பகையாகிய கருடனும், நண்பகலும் நன்கு ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மேனியைக்கொண்ட இராமபிரானுக்கு உவமைகள். ''இருள்இரிய, சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி அணிபணம் ஆயிரங்கள் ஆர்த்த அரவஅரசப் பெருஞ்சோதி அனந்தன்'' என்பது குலசேகராழ்வார் பாசுரம்.

26. வென்றி அம் திசையானை வெகுண்டன
ஒன்றையொன்று முனிந்தவும் ஒத்தனர்;
அன்றியும் நரசிங்கமும், ஆடகக்
குன்றம் அன்னவனும் பொரும் கொள்கையார். (9812)

(வென்றி-வெற்றி; அம்-அழகிய; வெகுள்தல்-சினம்கொள்ளுதல்; அன்னவன்-இரண்யன்; கொள்கை-தன்மை; பொருதல்-போரிடுதல்; பொருதல்-ஒத்திருத்தல்; ஆடகம்-நான்குவகைப் பொன்களில் ஒன்று)

வெற்றிபொருந்திய அழகிய திசையானைகள் ஒன்றுடன் ஒன்று சினம்கொண்டு மோதிக்கொண்டதுபோல ஒருவரையொருவர் எதிர்த்துப் போர்புரிந்தார்கள்; அதுமட்டுமன்றி, முன்பு நரசிங்கப்பெருமானும், பொன்மலை போன்ற இரணியனும் போர்புரிந்ததை ஒத்த தன்மையிலும் தோற்றமளித்தார்கள்.

''ஆடகம்'' என்பது நான்குவகைப் பொன்களில் ஒன்று. மற்றவை சாம்பூநதம், சாதரூபம், கிளிச்சிறை என்பனவாம். இரணியன் பொன் மயமான குன்றின் தோற்றத்தையுடையவன் என்பதை நாம் முன்பும் கண்டுவந்திருக்கிறோம். இரண்யம் என்ற வடசொல்லுக்குப் பொன் என்பது பொருள். இங்கே நரசிங்கத்தை இராமபிரானுக்கும், இரணியனை இராவணனுக்கும் உவமித்தார் எனக்கொள்க.

27. துவனி வில்லின் பொருட்டு ஒரு தொல்லைநாள்,
"எவன் அவ் ஈசன்" என்பார் பொர, ஏற்று, எதிர்
புவனம் மூன்றும் பொலங்கழலால் தொடும்
அவனும் அச்சிவனும் எனல் ஆயினர். (9813)

(தொல்லைநாள்-முற்காலம்; துவனி-த்வனி/நாண்ஒலி; ஈசன்-தலைமை சான்ற கடவுள்)

முற்காலத்தில் ஒருநாள் தேவர்கள் வந்து பிரமனிடம் விசுவகர்மா செய்த இரண்டு வில்லிலும் எது மிக்க வலிமையுடையது என்றும், திருமால், சிவபெருமான் இவ்விருவருள் யார் தலைமைசான்ற கடவுள் என்றும் அறிந்து கொள்வதற்காக, இரண்டு வில்லினின்றும் எழும் குணத்வனியின் காரணமாக, இவ்விருவருக்கும் இடையில் போர்

Koviloor Digital Library

நிகழ்ந்தது. அதனால் அவர்கள் ஒவ்வொரு வில்லைத் தன்பால் ஏற்றுப் போர்புரியலானார்கள். அவ்வாறு முன்பு தன் அழகிய திருவடிகளால் மூவுலகங்களையும் அளந்தவனான அந்தத் திருமாலையும், அந்தச் சிவபெருமானையும் இப்போது இராமபிரானும், இராவணனும் ஒத்திருந்தனர்.

இந்த வரலாறு முன்பு பாலகாண்டத்தில் பேசப்பட்டது. அதைப் பின்னணியாகக் கொண்டால்தான் இந்தப் பாடலின் பொருள் விளங்கும். எந்த வில் வலிமையுடையது என்பதுதான் கேள்வி; எந்தக்கடவுள் தலைமையானவன் என்பது கேள்வியல்ல; இந்தப்பாடலில் இரண்டாம் அடியில் நிறையப் பாடவேறுபாடுகள் கிடைக்கின்றன. நாம் சென்னைக் கம்பன் கழகப் பதிப்பின் பாடத்தையே எடுத்துப் பொருள் கொண்டிருக்கிறோம். எனினும் இது தகுந்த பாடமாகக் கொள்ளப்பட முடியாதுபோலத் தோன்றுகிறது. மற்ற அச்சுப்பிரதிகளும் சுவடிகளும் இரண்டாம் அடியை இவ்வாறு கொண்டிருக்கிறது. ''எவன்வில் வலித்து? என்று இமையோர் தொழ'' என்றே இருக்கிறது. அதுதான் சரியான பாடமாகவும் இருக்கமுடியும். இந்தச் சொற்பயன்பாட்டை அறிஞர்கள் ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்; எந்தவில் வலிமையுடையது என்று கேட்டார்களே தவிர, எந்தக்கடவுள் வலிமையுடையவன் என்று கேட்டார்கள் என்று பாடம் கொள்ளுவது கம்பனைத் தாழ்வுபடுத்துவது போலவும், கம்பனுக்கு இழிவுசேர்ப்பது போலவும், கம்பன் ஏதோ ஒரு சமயச் சார்புள்ளவன் போலவும் தோற்றமளிக்க வகைசெய்யும் இந்தப் பாடல் கண்டிப்பாக அறிஞர்கள் ஆய்வு செய்து அடுத்த பதிப்பிலேனும் இதனைச் செப்பனிடவேண்டும். இந்த அடி இடைச்செருகல் என்று கூறி நீக்கிவிடுவதற்குரிய வாய்ப்பும் இருக்கிறது.

இங்கே திருமாலுக்கு இராமபிரானும், சிவனுக்குச் சிவபக்தனாகிய இராவணனும் ஒப்பு. ''நன்றிது உணர்ந்த விண்ணோர் இரண்டிலும் வன்மை செய்யும் வென்றியது யாவதென்று விரிஞ்சனை வினவ'' என்று வில்லின் ஆற்றல் பற்றித்தான் பாலகாண்டம் பரசுராமப்படலமும் பேசுகிறதேயன்றி கடவுளர் பற்றிப் பேசப்படவில்லை. 1976ல் பதிக்கப்பட்ட சென்னைக்கம்பன்கழகச்செம்பதிப்புஎப்படிஇதற்குமுன்பு பதிப்பிக்கப்பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அடிகளையும், உ.வே.சா நூல்நிலையப் பதிப்பின் அடிகளையும் புறந்தள்ளி இந்த வரியை எடுத்துக்கொண்டது என்பது நிச்சயம் தமிழ்ப் பெருமக்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டியதும், திருத்திக் கொள்ளப்படவேண்டியதும் ஆகும்.

28. கண்ட சங்கரன் நான்முகன் கைத்தலம்
விண்டு அசங்க, தொல்அண்டம் வெடித்திட,
அண்ட சங்கத்து அமரர்தம் ஆர்ப்பு எலாம்
உண்ட சங்கம் இராவணன் ஊதினான். (9814)

Koviloor Digital Library

(சங்கரன்-சிவபெருமான்; நான்முகன்-பிரமன்; கைத்தலம்-கைகள்; அசங்குதல்-நடுங்குதல்; தொல்-பழமையான; சங்கம்-கூட்டம்; சங்கு-போர்ச்சங்கு; உண்ணுதல்-அழித்தல்; அண்டம்-அண்டகோளம்; விண்டு-நீங்கி/நிலைதிரிந்து)

இராமஇராவணன் போர் நிகழ்ச்சியை விண்ணில் நின்று கண்டு கொண்டிருந்த சிவபெருமானும், பிரமதேவனும், தங்கள் கைகள் சற்று நிலைதிரிந்து நடுக்கம் பெறலானார்கள்; அண்டங்களுக்கெல்லாம் மிகப் பழமையான அண்டகோளம் வெடித்துச் சிதறும்படியும், விண்ணுலகில் கூட்டமாக உள்ள தேவர்களின் பேராரவாரமெல்லாம் முன்பு திக் விஜய காலத்தில் அடங்கிப்போகும்படி செய்ததுமான போர்ச் சங்கினை எடுத்து இப்போது போர் தொடங்குவதற்கு அறிகுறியாக ஊதத் தொடங்கினான் இராவணன்.

29. சொன்ன சங்கினது ஓசை துளக்குற,
"என்ன சங்கு?" என்று இமையவர் ஏங்குற,
அன்ன சங்கைப் பொறாமையினால், அரி
தன்ன வெண் சங்கு, தானும் முழங்கிற்றால். (9815)

(பொறாமை-பொறுக்கமுடியாதுபோதல்; அரி-திருமால்/இராம பிரான்; துளக்குறுதல்-நடுங்குதல்)

அவ்வாறு இராவணனால் ஊதப்பெற்ற போர்ச்சங்கின் ஒலியைப் பொறுத்துக்கொள்ள முடியாததால், திருமால் தன் தெய்வத்தன்மையில் கைக்கொண்டுள்ளவெண்மையானபாஞ்சசன்னியம்என்னும்சங்குதானே முழக்கம் செய்வதாயிற்று; "இது என்ன புதிய சங்கின் ஓசை கேட்கிறதே?" என்று தேவர்கள் ஏங்கினார்கள்; முன்பு சொன்ன இராவணனின் சங்குகூட இந்தச் சங்கின் பேரொலி கேட்டு நடுக்கமுற்றது.

திருமாலிடம் இருக்கின்ற பாஞ்சசன்னியம் என்ற வெண்மையான வலம்புரிச்சங்கு சமயத்தில் ஒருவரும் இயக்குவாரின்றித் தானே இயங்கும் தன்மையது என்பது பெறப்படுகிறது. இந்தச் சங்கு தன் உருவத்தைக் காட்டாமல் ஓசையை மட்டும் காட்டியதால் தேவர்கள் இது என்ன சங்கு என்று ஐயுற ஏதுவாயிற்று.

30. ஐயன் ஐம்படை தாமும் அடித்தொழில்
செய்ய வந்து அயல் நின்றன; தேவரில்
மெய்யன் அன்னவை கண்டிலன்; வேதங்கள்
பொய்இல் தன்னைப் புலன் தெரியாமைபோல். (9816)

(ஐயன்-தலைவன்/திருமால்; தொழில்-தொண்டு; அயல்-அருகில்; புலன்-அறிவு)

Koviloor Digital Library

தலைவனான திருமாலின் ஐந்து படைக்கலன்கள் எல்லாமும் அவனுக்கு அடிமைத்தொண்டு செய்யும் பொருட்டு அவன் அருகிலேயே வந்து காத்துக்கொண்டு நின்றன; என்றாலும் வேதங்கள் எப்படிப் பொய்யில்லாத மெய்யான தன்னைத் தன் அறிவின் துணைக்கொண்டு அறிந்துகொள்ள முடியவில்லையோ, அதுபோல, தேவர்களின் உண்மைப் பொருளான இராமபிரானும் இப்போது மானிடவடிவம் கொண்டிருப்பதனால் அந்த ஐம்படைகளும் தன்னருகில் நிற்பதைக் கண்டு கொள்ளாதவனாகவே நின்று கொண்டிருந்தான்.

திருமாலின் ஐம்படைகளாவன. சுதர்சனம் என்னும் சக்கரம், பாஞ்சசன்யம் என்னும் சங்கு, சார்ங்கம் என்னும் வில், கௌமோதகி என்னும் கதை, நரந்தம் என்னும் வாள் என்பனவாம். இவை திருமாலின் தெய்வநிலையில் அவனுடைய ஐம்படைகள். அவன் அருகிலேயே அவை காத்துக்கொண்டு நிற்கின்றன. எனினும் மானிட வடிவில் நிற்கும் இராமபிரானுக்கு அவை தன்னருகில் நிற்பது தெரியவில்லை. எப்படியென்றால் உண்மையான வேதங்கள் எவ்வாறு தம் அறிவுகொண்டு தன்னுடைய உண்மைநிலையை உணர்ந்துகொள்ள முடியவில்லையோ, அதுபோல மானிட இராமபிரானால் தெய்வப் படைக்கலன்களைக் கண்டுகொள்ள முடியவில்லை என்பதாம். இராமபிரான் தான் ஏற்றுக்கொண்ட மானிடவேடத்திற்கு ஏற்ப நன்றாக நடிக்கிறான் என்பது கருத்து.

31. மாதலி சங்கு ஊதுதல்

ஆசையும், விசும்பும், அலை ஆழியும்,
தேசமும், மலையும், நெடுந்தேவரும்,
கூச, அண்டம் குலுங்க, குலம் கொள் தார்,
வாசவன் சங்கை, மாதலி வாய்வைத்தான். (9817)

(ஆசை-திசைகள்; விசும்பு-ஆகாயம்; தேசம்-நிலம்; கூசுதல்-நடுங்குதல்; குலம்-சிறப்பு; தார்-மாலை; வாசவன்-இந்திரன்; ஆழி-கடல்; நெடுமை-பெருமை)

எட்டுத் திக்குகளும், ஆகாயமும், அலைகள் நிறைந்த கடல்களும், மண்ணுலகும், மலைகளும் பெருமைபெற்று உயர்ந்த தேவர்களும் அஞ்சி நடுங்கவும், அண்டகோளங்கள் எல்லாம் அசைந்து நிலைதிரியவும், சிறப்புமிக்க கற்பக மலர்மாலையணிந்த இந்திரனது சங்கினை, அவன் தேர்ப்பாகனாகிய மாதலி எடுத்துத் தன் வாயில் வைத்து ஊதலானான்.

இராவணன் சங்கு ஒலித்ததும், பின்னர் திருமாலின் பாஞ்சசன்யம் என்னும் சங்கு தானே ஒலித்ததும், இந்திரனின் தேர்ப்பாகனாகிய மாதலி இந்திரனது சங்கை எடுத்து ஊதினான் என்பதாம். ''வாய்வைத்தல்'' என்பது

Koviloor Digital Library

தொழிற்பெயராய் ஊதினான் என்ற பொருளைத்தரும். ''தேசம்'' என்பது பூமிப்பரப்பு என்ற பொருளில் நாட்டினைக் குறிக்கும்.

32. துமில வாளி அரக்கன் துரப்பன
விமலன் மேனியின் வீழ்வதன் முன்னமே,
கமல வாள்முக நாடியர் கண்கணை
அமலன் மேனியில் தைத்த அனந்தமால். (9818)

(துமிலம்-ஆரவாரம்; விமலன்-தூயவன்; கமலம்-தாமரைமலர்; நாடியர்-நாட்டினர்; அனந்தம்-அளவற்றவை)

பேரொலிமிக்க அம்புகளை, அரக்கனான இராவணன், குற்றமற்றவனான இராமபிரான்மீது செலுத்தி, அவை வந்து அவனது திருமேனியில் தைப்பதற்கு முன்பே, தாமரைமலர்போன்ற ஒளிமிக்க முகங்களையுடைய வானத்தில் உறையும் தேவர்களின் கடைக்கண் பார்வையாகிய அம்புகள், குற்றமற்ற அந்த இராமபிரானின் திருமேனியில் வந்து பாய்ந்தவை அளவற்றவையாகும்.

''விமலன்'', ''அமலன்'' என்பன ஒரேபொருள் குறித்தனவாகும். ''கமல வாள் முக நாடியர் கண்'' என்பதனால் இது தேவமகளிரின் கண்கள் என்னும் அம்புகள் இராமபிரான் மேனியைத் தைத்தன என்று பொருள் கொள்ளுவது, இராமபிரானுக்கு இழுக்காகும் என்று கருதி உ.வே.சா பதிப்பு, இப்பாடலை மூலபாடத்தில் மிகைப்பாடலாகவே கொண்டுள்ளது. நாம் ஒளிமிக்க தாமரைமலர் போன்ற முகத்தையுடைய தேவர்களின் கடைக்கண் பார்வை என்று பொருள் கொண்டுள்ளோம். காரணம் தேவர்கள் தங்கள் காரியமான இராவணவதம் நிகழவேண்டும், அதற்குமுன்பே இராமபிரான்மேனியில்அரக்கனின்அம்புதைத்துவிடுமே என்ற கவலையில் ஆழ்ந்திருப்பதால் இத்தகைய பொருள் கொள்ளப் பட்டது. ''கமல வாள்முக நாடியர்கண்'' என்பதற்குப் பொதுவாக எல்லா உரைகளுமே தாமரைமலர்போலும் ஒளிமிக்க முகத்தையுடைய வானநாட்டு மகளிராகிய தேவமகளிர்களின் கண்கள் என்னும் அம்புகள் குற்றமற்ற தூய்மையானவனான இராமபிரான் மேனியில் தைத்தன என்றுதான் பொருள் உரைக்கின்றன என்பதும் கருதத்தக்கது. அவ்வாறே கொண்டாலும் அது இராமபிரானுக்கு இழுக்கைத் தாராது என்பதால்தான் கவிஞன், இரண்டு அடிகளிலும் ''அமலன்'' என்றும் ''விமலன்'' என்றும் குற்றமற்றவன், தூயோன் என்ற பொருள்களைத் தரும் சொற்களைக் கையாண்டிருக்கிறான் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

முன்பு பாலகாண்டம் கார்முகப்படலத்திலும் ''ஏயவன் வல்வில் இறுப்பதன்முன்னம், சேயிழை மங்கையர்சிந்தைதொறும் உய்யா ஆயிரம் வில்லை அனங்கன் இறுத்தான்'' என்று மிதிலை நிகழ்ச்சியை, அயோத்தியா காண்டத்தில் கைகேயி சூழ்வினைப் படலத்திலும்,

Koviloor Digital Library

''மண்ணெனும் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம், வள்ளல் பண்எனும் சொல்லினார்தம் தோள்எனும் பணைத்த வேயும், கண்எனும் காலவேலும், மிடை நெடுங்கானம் புக்கான்'' என்று அயோத்தியில் நிகழ்ந்த நிகழ்ச்சியையும் இங்கு ஒப்புநோக்குதல் தகும். அது இராமபிரான் மணம்செய்து கொள்ளச் செல்லும் இன்ப நிகழ்ச்சி. எனவே பெண்களின் கண்களாகிய கடலைக் கடந்தான் என்பது பொருந்தும். இது இராம இராவணன் போர் நிகழ்ச்சி. வானநாடியர் என்பது தேவலோகத்துப் பெண்களைக் குறிக்காது, வானநாட்டினரான தேவர்களையே குறிக்கும் என்பதுதான் பொருந்தும்.

33. இராம-இராவணப் போர் தொடங்குதல்

சென்ற தேர் ஓர் இரண்டினும் சேர்த்திய
குன்றி வெங்கண் குதிரை குதிப்பன,
ஒன்றையொன்று உற்று, எரிஉக நோக்கின;
தின்று தீர்வன போலும் சினத்தன. (9819)

(ஓர்-ஒப்பற்ற; சேர்த்திய-பூட்டியுள்ள; குன்றி-குன்றிமணி; எரி-நெருப்புப்பொறி; தீர்தல்-ஒழித்தல்; குதித்தல்-பாய்தல்)

போர்க்களத்துள் வந்துசேர்ந்த இராமபிரானின் ஒப்பற்ற தேரிலும், இராவணனுடைய தேரிலும் பூட்டப்பெற்றிருந்த குன்றிமணி போலும் சிவந்த கொடிய கண்களையுடைய குதிரைகள் ஒன்றையொன்று எதிர்த்துப் பாய்ந்து செல்வனவாயும், கண்களில் நெருப்புப்பொறி பறக்கும்படி பார்ப்பனவாயும், ஒன்றையொன்று கொன்று தின்று தீர்த்து விடுவன வாயும், சினத்துடன் எதிர்எதிர் நோக்கின.

தேரின் மேலிருந்த இராம இராவணர்க்கு எப்படிக் கண்கள் சிவந்து போய்க் குன்றிமணிபோலக் காட்சியளித்தனவோ அவ்வாறே அவர்களது தேர்களில் கட்டப்பெற்றிருந்த, குதிரைகளின் கண்களும் ''குன்றி வெங்கண்'' போலவும், நெருப்புப்போலவும் சிவந்திருந்தன என்று கூறும் நயம் நோக்குக.

34. கொடியின்மேல் உறை வீணையும், கொற்றமா
இடியின் ஏறும், முறையின் இடித்தன;
படியும் விண்ணும் பரவையும் பண்புஅற
முடியும் என்பதோர் மூரி முழக்கினால். (9820)

(கொற்றம்-வெற்றி; மா-பெரிய; படி-நிலம்/மண்ணுலகு; பரவை-கடல்; மூரி-வலிமை; இடித்தல்-முழங்குதல்/தாக்குதல்; உறைதல்-தங்கியிருத்தல்/பொறிக்கப்பட்டிருத்தல்; முடிதல்-அழிதல்)

Koviloor Digital Library

இராவணன் தேரில் கட்டப்பட்டிருந்த வீணைக்கொடியும், வெற்றி பொருந்திய பெரிய, இராமபிரான் ஏறிவந்த இந்திரன் தேரில் கட்டப் பெற்றிருந்த பேரிடியின் கொடியும், இந்த நிலவுலகும், விண்ணுலகும், கடல்களும் தங்கள் பண்பு மாறிப்போய், அழிந்து போய்விடுமோ என்று கருதும்படி பேரொலி எழுப்பிக் கொண்டு மாறிமாறி வலிமையாகத் தாக்கிக்கொண்டன.

இராவணன் வீணையில் வல்லவன் ஆதலின் அவன் வீணையைத் தன் கொடியில் எழுதியிருந்தான். இந்திரன் ஏழுவகைப்பட்ட மேகங்களுக்கும் தலைவன்; எனவே இடியேற்றைத் தன் கொடியில் எழுதிக்கொண்டான். எனினும் இராவணன் கொடியில் மானுடன் தலையின் உருவம் எழுதப்பெற்றிருந்ததாக முதல்நூல் கூறும். ஒருவர் தங்களுக்குப் பிடித்தமானவற்றையே தமது அடையாளச் சின்னமாகக் கொள்வது இயல்பு, மரபு; இராவணன் மானிடரை அறவே வெறுப்பவன். மானிடர் களை ஒரு பொருட்டாகவே மதிக்காதவன்; அவன் மானிடர் தலையின்மீது பற்றுக்கொண்டவன் என்று கூறிச் சமாதானம் செய்யவும் இயலாது. காரணம் அவன் மானிடர்களைப் பற்றி தமது வரத்தில் கேட்க மறந்து போனவன். எனவே வான்மீகியின் இந்தக் கூற்றின் அடிப்படைச் சிந்தனைகள் மேலும் ஆராய்வதற்கு உரியன.

35. ஏழு வேலையும் ஆர்ப்பு எடுத்து என்னலாம்,
வீழி வெங்கண் இராவணன் வில்ஒலி;
ஆழி நாதன் சிலையொலி, அண்டம் விண்டு,
ஊழி பேர்வுழி, மாமழை ஒத்ததால். (9821)

(வீழி-வீழப்பழம்; ஆழி-சக்கரப்படை; விண்டு-பிளந்து; விள்ளுதல்-பிளந்துபோதல்; மழை-மேகம்)

வீழிக்கனி போன்று சிவந்த, கொடிய கண்களையுடைய இராவணன் எழுப்பிய வில்லின் நாண்ஒலி ஏழு கடல்களும், ஒருசேர ஆரவாரித்தன போன்ற பேரொலியை எழுப்பியது; சக்கரப்படை ஏந்திய திருமாலின் அம்சமான தலைவன் இராமபிரான் எழுப்பிய வில் நாண் ஒலியோ, இவ்வண்டகோளமே பிளந்து போய்விடும்படியும், ஊழியிறுதிக்காலத்து ஒன்று சேர்ந்து இடிக்கும் பெருமழையைப் போன்றும் ஒலித்தது.

இராவணன் வில் நாண்ஒலிக்குக் கடல் ஒலியும், இராமபிரான் வில் நாண்ஒலிக்கு ஊழிக்காலத்து இடியும் உவமைகள். இங்கே மழை ஆகு பெயராய் மேகத்தைக் குறித்து, மேகத்தினின்றும் தோன்றும் இடியைக் குறித்தது. எனவே இது இருமடி ஆகுபெயர் எனக்கொள்க. ''வீழி'' என்பது விழுதிச் செடியைக் குறிக்கும். இதன் பழம் சிவப்பு நிறமாய் இருக்கும். பொதுவாகப் பெண்களின் சிவந்த கண்களுக்கும், இதழ்களுக்கும்

Koviloor Digital Library

இவ்வீழிப்பழத்தை உவமை கூறுவதுண்டு. இங்கே இராவணனின் சிவந்த கண்களுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

36. ஆங்கு நின்ற அனுமனை ஆதியாம்
வீங்கு வெஞ்சின வீரர் விழுந்தனர்;
ஏங்கி நின்றதலால், ஒன்று இழைத்திலர்;
வாங்கு சிந்தையர், செய்கை மறந்துளார். (9822)

(ஆதி-முதலாக; வீங்கு-மிக்க; ஏங்குதல்-வருந்துதல்; இழைத்தல்-செய்தல்; வாங்குதல்-தாழ்தல்/ஓய்தல்)

அந்த இரண்டு விற்களினின்றும் எழுந்த நாண்ஒலியைக் கேட்டு, அங்கு நின்றிருந்தவர்களாகிய அனுமன் முதலாகக் கொண்ட, மிக்க கொடிய சினம்கொண்ட வானரவீரர்கள் எல்லோரும், மிக்க வருத்தமுற்று நிற்பதல்லாமல், வேறு ஒன்றும் செய்தற்கியலாதாராய், ஓய்ந்துபோய், செயலற்றுத் திக்பிரமை பிடித்துத் தரையில் விழுந்தனர்.

அனுமன் போன்ற பெரும் வீரர்கள்கூட இந்நாண்ஒலி கேட்டுச் செயலற்று நின்றனர் என்பதால், அந்நாண் ஒலியின் அதிர்வு சிறப்பிக்கப் பட்டதென்க. வாங்குதல் என்ற சொல் தாழ்தல் என்ற பொருளைத்தரும். இங்கு ஓய்தல் என்ற பொருளைத் தந்து நின்றது.

37. "ஆவது என்னை கொலாம்?" என்று அறிகிலார்,
"ஏவர் வெல்வர்?" என்று எண்ணலர் ஏங்குவார்,
போவர்; மீள்வர்; பதைப்பர்; பொருமலால்
தேவரும் தங்கள் செய்கை மறந்தனர். (9823)

(ஆவது-நிகழப்போவது; எண்ணுதல்-கருதுதல்/சிந்தித்தல்; பொருமுதல்-விம்முதல்; பதைத்தல்-அஞ்சுதல்)

அந்நாண் ஒலி கேட்ட தேவர்களும்கூட "இனிமேல் என்ன நிகழும்?" என்று அறியமுடியாதவர்களாகவும், "இருவரில் யார் வெற்றி பெறுவார்?" என்று சிந்தித்து ஒரு முடிவுக்கு வரமுடியாமல் ஏங்குபவர்களாகவும், வானத்தில் அங்கும் இங்கும் போவதும், வருவதுமாகவும், நெஞ்சம் பதைபதைப்பவர்களாகவும், விம்மித்தாம் இத்தருணத்தில் என்ன செய்யவேண்டும் என்பதையும் மறந்து செயலற்று நின்றனர்.

முன்பாடலில் வானரவீரர்களும் அனுமனும் செயலற்று நின்றனர் என்று கூறிய கவிஞன், இந்தப்பாடலில் தேவர்களும் அவ்வாறே செயலற்று நின்றனர் என்கிறான் என்பதாம். "தேவரும்" என்ற இடத்தில் உள்ள உம்மை, இறந்தது தழுவிய எச்ச உம்மை; இராமபிரான் வெல்லுவது நிகழப்போவது என்று உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்த தேவர்களும் கூட, இந்நாண்ஒலி கேட்டதும் சற்று ஐயமுற்றுத் திகைத்து நின்றதனால் என்க.

Koviloor Digital Library

38. சேண அந்தரம் நோக்கலும் திண்சரம்,
பூண முந்தின, சிந்தின பூ மழை,
காண வந்த கடவுளர் கையெலாம்,
ஆணவம் துணை யார் உளர் ஆவரோ? (9824)

(சேண-உயர; பூணுதல்-அழகுசெய்தல்; அந்தரம்-வானம்; கடவுளர்-தேவர்கள்)

இராமபிரானின் உறுதிமிக்க அம்புகள் தூரத்திலுள்ள வானத்தை நோக்கிப் பாய்வதற்கு ஆயத்தமாய் இருப்பதைக் கண்ட தேவர்களின் கைகளெல்லாம் மகிழ்ச்சியால் மலர்மழையைப் பொழிந்தன; அது வானுலகத்தை அலங்கரித்தது போன்றிருந்தது. செருக்கு மிக்க இராவணனுக்குத் துணையாக யார்தான் இருப்பார்கள்?

இந்த இடத்திற்குப் பொருந்தாத பாடல். பொருளும் இயைந்து வரவில்லை, இது பெரும்பாலான சுவடிகளில் மிகைப்பாடலாகவே காணப்படுகிறது. உ.வே.சா பதிப்பு ''இப்பாடல் சில சுவடிகளில் இல்லாமையாலும், இஃது இந்த இடத்திற்கு ஒத்த பொருள் தொடர்பு இல்லாமையாலும் அதிகப் பாடலாகக் கொள்ளப் பெற்றுள்ளது'' என்ற அருமையானதொரு விளக்கம் தந்து இப்பாடலை மிகைப்பாடல் என்றே உறுதிசெய்கிறது. எனினும் கம்பன் கழகச் செம்பதிப்பு இப்பாடலை மூலபாடத்திலேயே கொண்டிருக்கிறது. மறுபதிப்பில் இப்பாடலை நீக்குவதே சரியாகும். கற்போருக்கு நலம் பயக்கும். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு இப்பாடலில் பத்துக்கும் மேற்பட்ட பாடவேறுபாடுகளைக் கொண்டு பொருள் வழங்கியிருக்கிறது. அந்தப் பொருளும் கற்போர் எளிதில் புரிந்துகொள்ள முடியாதபடி அமைந்திருக்கிறது.

39. நீண்ட மின்னொடு, வான்நெடு நீலவில்
பூண்டு, இரண்டு எதிர் நின்றன போன்றன,
ஆண்ட வில்லிதன் வில்லும், அரக்கன்தன்
தீண்ட வல்லர் இலாத சிலையுமே. (9825)

(வான்-மேகம்; ஆண்ட-என்னை ஆளுடைய; வில்லி-இராமபிரான்; தீண்டுதல்-தொடுத்தல்)

''என்னை அடிமையாகக் கொண்டவனும், வில்லாற்றல் படைத்தவனுமாகிய இராமபிரானின் வில்லும், அரக்கனாகிய இராவணனின், பிறரால் தொடுத்துத் தூக்குவதற்கும், தொடுத்து நாணேற்றுவதற்கும் இயலாத வில்லும், வானத்தில் நீலநிறம் பொருந்திய சிறந்த இரண்டு வானவில் மின்னலின் ஒளியோடு தோன்றி விளங்குவதைப்போல எதிர் எதிரே தோன்றி நின்றன.

Koviloor Digital Library

''நீண்ட மின்'' நீண்ட நாண் கயிற்றுக்கு உவமை; பொதுவாக வானவில் ஏழு நிறங்களைக் கொண்டிருக்கும் என்றாலும், நீலநிறமே மிகுதியாகத் தோன்றுவதால் ''நீலவில்'' என்றார் என்க. ''இரண்டு நீலவில் வானில் எதிர் நின்றன'' என்பதை இல்பொருள் உவமையாகக் கொள்க. காரணம் இரண்டு வானவிற்கள், ஏககாலத்தில் தோன்றுவது இல்லை. ''ஆண்ட வில்லி'' என்பது, என்னை ஆட்கொண்ட, என்னை அடிமையாகக் கொண்ட இராமபிரான் என்று கவிஞன் கூறுவதாகக் கொள்ளவேண்டும். இராவணனுடைய வில்லை ஒருவரும் தொடவேமுடியாது என்பதும், தொட்டு நாணேற்றி அம்பு தொடுக்கவும் முடியாது என்பதும், அவனுடைய வில்லின் சிறப்பைக் குறித்தன என்க.

40. அரக்கன் அன்று எடுத்து ஆர்க்கின்ற ஆர்ப்பும், போர்ப்
பொருப்பு மெய் வில்தெழிப்பும், உண்டே கொலாம்?
குரைக்கும் வேலையும், மேகக் குழாங்களும்,
இரைத்து இடிக்கின்ற, இன்றும் ஓர் ஈறு இல. (9826)

(குரைத்தல்-ஒலித்தல்; ஈறு-முடிவு; ஆர்ப்பு-ஆரவாரம்; தெழிப்பு-முழக்கம்; இரைத்தல்-ஒலித்தல்; பொருப்பு-மலை)

இன்றைக்கும் கடல்கள் ஒலித்துக்கொண்டும், மேகக் கூட்டங்கள் இடித்துக்கொண்டும் ஒரு முடிவே இல்லாமல் அவ்வாறு செய்து கொண்டிருக்கின்றனவே! இது எதனால் என்று நினைக்கிறீர்கள்? அன்று இராம இராவண யுத்தத்தின்போது, அந்த அரக்கனாகிய இராவணன் எடுத்தலோசையோடு ஆரவாரம் செய்துகொண்டு புறப்பட்டுப் போனானே அந்த ஓசையைத்தான் கடல் இன்றும் ஒலித்துக் கொண் டிருக்கிறது. அன்று அவன் மலைபோன்ற உருவத்தையுடைய வில்லை நாண் தெறித்து இடிபோல் ஒலி எழுப்பினானே, அதுதான் இன்றும் மேகக் கூட்டங்கள் இடிபோல் ஒலித்துக்கொண்டிருக்கின்றன என்கிறான் கவிஞன்.

இன்றைக்கும் ஒரு முடிவே இல்லாது ஒலியெழுப்பிக் கொண்டிருக் கின்ற கடலும், இடி இடித்துக் கொண்டிருக்கின்ற மேகக் கூட்டங்களும் இந்தத் திறமையை அன்று இராம இராவண யுத்தத்தில் இராவணன் எழுப்பிய பேரோசையிலிருந்துதான் பெற்றுக் கொண்டன என்று கவிஞன் தற்குறிப்பேற்றமாகக் கூறுகிறான் எனக்கொள்க. இராவணன் எழுப்பிய போர்ஆரவாரமும், அவன் வில்லின் நாண் எழுப்பிய பேரொலியும், கடல் ஒலியினும், மேகத்து இடியின் ஒலியினும் மேம்பட்டு இருந்தன என்பது கருத்து.

Koviloor Digital Library

41. மண்ணில் செல்வன செல், இனும் மாசுஅற
எண்ணின் சூல் மழை அல்ல; இராவணன்
கண்ணின் சிந்திய தீக் கடு வேகத்த
விண்ணில் செல்வன, மீண்டு இன்று வீழ்வன. (9827)

(மாசு-குற்றம்; எண்ணின்-ஆராய்ந்து பார்த்தால்; செல்லுதல்-வீழ்தல்; செல்-இடி; சூல்-கரு; மழை-மேகம்; கடுத்தல்-ஒத்திருத்தல்)

''விண்ணிலிருந்து இடியேறு மண்ணில் விழுகிறதே? இது கருக்கொண்ட மேகத்திலிருந்தா வருகிறது? இல்லை; நன்றாகக் குற்றமற ஆராய்ந்து பார்த்தால், முன்பு இராவணன் இராமபிரானுடன் போர்செய்யும் போது அவன்கண்களினின்றும் புறப்பட்டுச்சென்றனவே நெருப்புப்போற் கக்கப்பட்ட சினத்தீ, அதுதான் மிகுந்த வேகத்தோடு இப்போது விண்ணினின்றும் மண்ணில் விழுகின்றன'' என்கிறான் கவிஞன்.

கவிஞன் தன் குறிப்பை ஏற்றிச் சற்று உயர்வு நவிற்சியில் பேசுகிறான். இயற்கையாக மண்ணில் விழும் இடியை, இராவணன் கண்கள் கக்கிய நெருப்புக்கு உவமைகூறி அவைதான் இப்பொழுது மண்ணில் விழுகிறது என்கிறான் கவிஞன். மண்ணில் ஆழ்ந்து செல்லும் தன்மையுடையதால் இடிக்கு ''செல்'' என்பது காரணக்குறி.

42. மால் கலங்கல்இல் சிந்தையன் மாதிரம்
நால் கலங்க நகும்தொறும், நாவொடு
கால் கலங்குவர் தேவர்; கணமழைச்
சூல் கலங்கும்; இலங்கை துளங்குமால். (9828)

(மால்-திருமால்/இராமபிரான்; நால்-மாதிரம்/நான்கு திசைகள்; கலங்கா-கலங்கி; நகுதல்-சிரித்தல்; கணம்-கூட்டம்; மழை-மேகம்; சூல்-கரு; துளங்குதல்-நடுங்குதல்)

திருமாலின் அம்சமான இராமபிரானிடம்கூட சற்றும் கலங்காத மனமுடையவனான அரக்கன் இராவணன், நாற்பெரும் திசைகளும் கலங்கும்படி சிரிக்கும்போதெல்லாம், தேவர்கள் தங்கள் நாக்குகளோடு கால்களும் நடுங்கப்பெறுவர்; அஃதேபோல, மேகக்கூட்டங்கள் எல்லாம் தம் கருக் கலைக்கப் பெற்றுக் கலங்கி நிற்கும்; இலங்கை மாநகரமே நடுக்கமுற்று அசையும்.

இராவணனின் வெகுளிச் சிரிப்பால் நாற்றிசையும், தேவர்களும், மேகங்களின்கருக்களும், இலங்கைநகரமுமே அஞ்சி நடுங்கும் என்பதாம்.

Koviloor Digital Library

43. இக்கணத்தும் எறிப்ப தடித்து என
நெக்க மேகத்து உதிக்கும் நெருப்பு என,
பக்கம் வீசும் படைச்சுடர் பல்திசை
புக்குப்போக, பொடிப்பன போக்குஇல. (9829)

(பொடித்தல்-சிதறுதல்; நெக்க-நெகிழ்ச்சியுள்ள; போக்கு-அழிவு; அன-போன்ற; தடித்து-மின்னல்; இக்கணம்-இப்போது; எறிப்ப-வீச; படை-ஆயுதங்கள்)

இராவணனின் இரண்டு பக்கங்களிலிருந்தும் ஒளிவீசிப் பிரகாசிக்கும் படைக்கலன்களின் ஒளி, பல்வேறு திசைகளிலும் சென்று ஒளிவீச, அப்பொழுது தோன்றிய அந்தச் சுடரில் எஞ்சியிருந்த சிறு பொறிகளே வேறு வழியில்லாது நெகிழ்ச்சிமிக்க சிவந்த மேகத்தில் தோன்றுகின்ற நெருப்புப் போலவும், மின்னல்போலவும், இப்போதும்கூட ஒளி வீசுகின்றன.

44. இராவணன் சினந்து கூறுதல்

''கொற்ற அம்பிற்கொடு கொல்லுதல் கோள்இலாச்
சிற்றையாளனைத் தேவர்தம் தேரொடும்
பற்றி, வானில் சுழற்றி, படியின்மேல்,
எற்றுவேன்'' என்று உரைக்கும்; இரைக்குமால். (9830)

(சிற்றையாளன்-சிறிய மனிதன்/சிறுவன்; கோள்-வலிமை; கொற்றம்-வெற்றி; படி-பூமி; எற்றுதல்-மோதுதல்/தாக்குதல்; இரைத்தல்-ஆரவாரித்தல்)

''வெற்றியும் பெருமையும் மிக்க என்னுடைய வில்லைக் கொண்டு இந்த வலிமையில்லாத சிறுவனைக் கொல்லுதல் என்பது என் விற் படைக்கு இழுக்காகும். எனவே இவனைத் தேவர்களின் தேரினோடும், பற்றியெடுத்து ஆகாயத்தில் தூக்கிச் சுழற்றிப் பின் பூமியில் விழும்படி மோதித் தாக்குகிறேன் பாருங்கள்'' என்று கூறிக்கொண்டே உரக்க ஆரவாரிக்கலானான் இராவணன்.

''சிற்றையாளன்'' என்ற சொல் கம்பனின் புதிய சொல்லாட்சி. சிறுமை-ஆளன் என்பது சிறியஆள், சிறுவன் என்ற பொருளில் அற்பமான மனிதன் என்று இராமபிரானைக் குறிக்கும்.

45. "தடித்து வைத்தன்ன வெங்கணை தாக்கு அற,
வடித்து வைத்தது மானிடற்கே? வலி
ஒடித்து, தேரை உதிர்த்து, ஒரு வில்லொடும்
பிடித்துக் கொள்வென் சிறை" எனப் பேசுமால். (9831)

Koviloor Digital Library

(தடித்து-தடித்/மின்னல்; உதிர்த்தல்-பொடியாக்குதல்; ஒடித்தல்-தகர்த்தல்; தாக்கு-வலிமை; வடித்தல்-கூராக்கிவைத்தல்)

''மின்னல்போல் அமைந்துள்ள கொடிய அம்புகளைக் கூராக்கி வைத்திருப்பது இந்த அற்பமான மானிடர்களைத் தாக்குவதற்காகவா? இல்லையில்லை. நான் என் கைகளாலேயே இந்த மனிதனின் வலிமையைத் தகர்த்து, அவன் ஏறி வந்திருக்கும் தேவர்களின் தேரைப் பொடிப்பொடியாக்கி, அவன்கைக்கொண்டிருக்கும் ஒரேஒரு வில்லையும் அவனையும் சிறைப்பிடித்து விடுகிறேன்'' என்று பேசிக்கொண்டிருப்பான்.

''தடித்'' என்ற வடசொல்லின் திரிபு தடித்து. மின்னல், இடி, என்பது பொருள். ''ஒரு வில்'' என்ற இடத்தில் ''ஒரு'' என்ற சொல் எப்பொழுதும் போல ஒப்பற்ற என்ற பொருளைத் தாராது. இங்கே அவன் கைக்கொண்டிருக்கின்ற ஒரேஒரு வில் என்றபொருளையே தரும். இந்த அற்பமானமானிடனைக்கொல்ல இவ்வளவு பெருமைமிக்க என்னுடைய வில்லா வேண்டும்? தேவையில்லை. அது மும்மூர்த்திகள்மேலும் தேவர்கள்மேலும் செலுத்துவதற்கே உரியது என்று பொருள்படவும் ''வடித்து வைத்தது மானிடற்கே?'' என்றார் என்க. இங்கேயும் இராவணன் இராமபிரானைக் கொல்லக் கருதவில்லை என்பதையும் அவனைச் சிறைப்பிடிக்கவே கருதுகிறான் என்பதையும் நோக்குக.

46. இராவணன் அம்பு செலுத்துதல்

பதைக்கின்றது ஓர் மனமும், இடை படர்கின்றது ஓர் சினமும்,
விதைக்கின்றன பொறி பொங்கின விழியும், உடை வெய்யோன்,
குதைக்கின்றன நிமிர் வெஞ்சிலை குழைய, கொடுங் கடுங்கால்
உதைக்கின்றன சுடர் வெங்கணை, உரும்ஏறு, என எய்தான். (9832)

(விதைத்தல்-தூவுதல்; வெய்யோன்-கொடியவன்/இராவணன்; குழைதல்-வளைதல்; உதைத்தல்-தள்ளுதல்; உரும்ஏறு-பேரிடி; சுடர்-ஒளி; பதைத்தல்-நடுங்குதல்)

முதல்நாள் போரில் தோற்று வந்ததால் உண்டான நடுக்கமுற்ற மனமும், அதனிடையே எழுகின்ற சீற்றமும், பரவிப்படர்கின்ற நெருப்புப் பொறி பொங்கியெழும் கண்களும் உடையவனான கொடிய அரக்கனாகிய இராவணன், குதை என்னும் நுனியை உடைய உயர்ந்த கொடிய வில்லினை வளைத்து, விரைந்துசெல்லும் காற்றைப்போல் தள்ளிக்கொண்டு செல்லுகின்ற ஒளிமிக்க கொடிய அம்புகளை, பேரிடி போன்று செலுத்தினான்.

''குதை'' என்பது வில்லின் நுனிப்பகுதியைக் குறிக்கும். நாண் கட்டுதற்குரிய வில்லின் நுனி என்க.

Koviloor Digital Library

47. உரும் ஒப்பன, கனல் ஒப்பன, ஊற்றம் தரு கூற்றின்
மருமத்தினும் நுழைகிற்பன, மழை ஒப்பன, வானோர்,
நிருமித்தன, படைபற்று அற நிமிர்வுற்றன, அமிழ்தப்
பெருமத்தினை முறை சுற்றிய, பெரும்பாம்பினும், பெரிய. (9833)

(உரும்-இடி; கனல்-நெருப்பு; ஊற்றம்-வலிமை; மருமம்-மார்பு; நிருமித்தல்-உண்டாக்குதல்; நிமிர்தல்-உயர்ந்து தோன்றுதல்; மத்து-மந்தர மலை; பாம்பு-வாசுகி; நுழைதல்-ஊடுருவுதல்)

இராவணன் செலுத்திய அம்புகள், ஒலியில் இடியைப் போன்றன; சுடுவதில் நெருப்பைப் போன்றன; வலிமைமிக்க இயமனின் மார்பிலும் கூட ஊடுருவிப்போக வல்லன; பெருக்கத்தில் மழையைப் போன்றன; தேவர்கள் உண்டாக்கிய எல்லாப் படைக்கலன்களும் அறுபட்டுப் போகும்படி செல்லும் உயர்வுடையன; திருப்பாற்கடலில் அமிழ்தம் கடைந்து எடுப்பதற்காகப் பயன்பட்ட பெரிய மத்தாகிய மந்தரமலையை முறையாகச் சுற்றிக் கட்டப்பட்ட கடைகயிறாகிய பெரிய வாசுகி என்னும் பாம்பைக் காட்டிலும் நீட்சியில் பெரியனவாகும்.

இராவணனுடைய அம்பின் சிறப்புப் பேசப்படுகிறது. அந்த அம்புகள் இடி, நெருப்பு, இயமன் மார்பில் பாயும் ஆற்றல், மழை, வானோர் படைக்கலங்களையும் அழிக்கும் ஆற்றல் பெற்றன என்பதாம். அதனுடைய நீட்சியைக் கூறவந்த கவிஞன் அவ்வம்பினைப் பாற்கடலில் தேவர்களும், அசுரர்களும் அமிழ்தம் பெறவேண்டிக் கடைந்தபொழுது பயன்படுத்தப்பட்ட மத்தாகிய மந்தரமலையைச் சுற்றிக் கட்டப் பெற்றிருந்த பெரிய வாசுகிப் பாம்பைக் காட்டிலும் நீண்ட அம்புகள் எனக் கூறியதையும் எண்ணுக. மந்தரமலையை ''அமிழ்தப் பெருமத்து'' என்று குறிக்கின்ற சொல்லாட்சியை நோக்குக.

48. "துண்டப்பட நெடு மேருவைத் தொளைத்து, உள்உறை தொங்காது
அண்டத்தையும் பொதுத்து ஏகும்" என்று இமையோர்களும் அயிர்த்தார்;
கண்டத் தெறுகணைக் காற்றினை, கருணைக்கடல், கனகச்
சண்டச் சரமழை கொண்டு, அவை இடையே அறத் தடுத்தான். (9834)

(துண்டப்படுதல்-துண்டித்தல்/பிளத்தல்; தொங்குதல்-தங்குதல்; பொதுத்தல்-துளைத்தல்; அயிர்த்தல்-ஐயுறுதல்; தெறுதல்-அழித்தல்/ சுடுதல்; கனகம்-பொன்; சண்டம்-கொடியது/வலியது; அறுதல்-அற்றுப் போதல்; அற-அழிய)

''இராவணன் ஏவிய அம்புகள், நீண்ட பெரிய மேருமலையையும் பிளவுபடுத்தி ஊடுருவிச் சென்று அங்கே சற்றும் உறைந்து தங்காது, பின்னர் மேலும் சென்று இவ்வண்ட கோளத்தையே துளைத்துக்கொண்டு செல்லும் போலும்!'' என்று தேவர்களும் ஐயுற்றார்கள்; எனினும்

Koviloor Digital Library

அருட்கடலான இராமபிரான், அவ்வாறு எல்லாவற்றையும் அழிக்கும் படியாக இராவணன் செலுத்திய அம்புக்காற்றினை, தனது பொன் மயமானதும், வலிமைமிக்கதுமான அம்புமழை கொண்டு, நடுவிலேயே இற்றுப்போகும்படி தடுத்து நிறுத்தினான்.

''கணைக்காற்று'', ''சரமழை'', ''கருணைக்கடல்'' என்பன உருவகங்கள். காற்றினை மழைகொண்டு தடுத்தான் என்பதில் உள்ள நயம் சுவைக்கத்தக்கது.

49. உடையான் முயன்றுறு காரியம் உறு தீவினை உடற்ற,
இடையூறு உறச் சிதைந்தாங்கெனச் சரம் சிந்தின, விறலும்;
தொடை ஊறிய கணைமாரிகள் தொகை தீர்த்தன துரந்தான்;
கடைஊறு உறு கன மாமழை கால் வீழ்த்தென கடியான். (9835)

(உடற்றுதல்-துன்புறுத்துதல்; கடியான்-கொடியவன்/இராவணன்; தொகைதீர்த்தல்-அளவிடற்கு அரிய; துரத்தல்-செலுத்துதல்; உறு-மிக; விறல்-வலிமை; கடை-ஊழியிறுதிக்காலம்; உடையான்-தலைவன்; கால்வீழ்த்தல்-கீழே இறங்குதல்; தீவினை-பாவம்; இடையூறு-தடை)

ஒரு தலைவன் தான் முற்பட்டுச் செய்கின்ற ஒரு நல்ல செயலை, அவனது முன்வினைப் பயன் அவனுக்குத் தீங்கு விளைவித்து தடைசெய்து அதனை முடிக்கவிடாமற் சிதைத்து அழித்துவிடுவதைப்போல, கொடியவனான இராவணன் செலுத்திய அம்புகள் எல்லாம் இராமபிரானால் தடுக்கப்பட்டு இற்று வீழ்ந்தன; வலிமையுள்ள மேலும் பல அம்புமழையை மீண்டும் தொடுத்து, கணக்கற்றவையாகச் செலுத்தினான் இராவணன். அவை ஊழியிறுதிக் காலத்தில் பெய்கின்ற மிகுந்த மழை, கீழே இறங்கி வருதல்போலப் பொழிந்தன.

இராவணன் செலுத்திய அம்புகள் அவன் தீவினைப்பயனால் இராமபிரானால் தடுக்கப்பட்டு இற்று வீழ்ந்தன என்றாலும் அவன் சற்றும் தளராது மீண்டும் வலிமையுள்ளனவும், கணக்கிறந்தனவுமான அம்பு மழையை, ஊழிக்காலத்து மழைபோலப் பொழிந்தான் என்பதாம். ஒருவன் எடுத்த காரியம் நிறைவேறாமல் போனால், அதற்கு அவன் முற்பிறவியில் செய்த தீவினையே காரணம் என்பது முதல் இரண்டு அடிகளின் கருத்து. ''உறு'' என்பது மிகுதியுணர்த்தும் உரிச்சொல்.

50. விண் போர்த்தன; திசை போர்த்தன;
மலை போர்த்தன; இமையோர்
கண் போர்த்தன; கடல் போர்த்தன;
படி போர்த்தன; கலையோர்

Koviloor Digital Library

எண் போர்த்தன; எரி போர்த்தன;
இருள் போர்த்தன; "என்னே
திண் போர்த்தொழில்!" என்று ஆனையின்
உரி போர்த்தவன் திகைத்தான். (9836)

(போர்த்தல்-மூடுதல்/மறைத்தல்; படி-பூமி; கலையோர்-புலவர்கள்; எரி-நெருப்பு; உரி-தோல்; ஆனையின் உரிபோர்த்தவன்-சிவபெருமான்; திகைத்தல்-மயங்குதல்)

''இராவணன் செலுத்திய பேரளவான அம்புகள் நிறைந்து, விண்ணையும், எட்டுத்திசைகளையும், மலைகளையும், தேவர்களின் இமையாநாட்டங்களையும், கடல்களையும், பூமியையும், புலவர்களின் கற்பனை வளத்தையும், சிறந்த சிந்தனைகளையும், நெருப்புக் கோள மாகிய சூரிய மண்டலத்தையும், இருட்பிழம்பையும் மூடிவிட்டனவே! இவனுடைய போர்த்தொழிலின் உறுதி எப்படிப்பட்டது?'' என்று யானையின் தோலை ஆடையாய்ப் போர்த்திக் கொண்டிருப்பவனான சிவபெருமான் கண்டு திகைத்து நின்றான்'' என்கிறான் கவிஞன்.

''ஆனையின் உரிபோர்த்தவன்'' என்பது தாருகவனத்து முனிவர்கள் சிவபெருமானை அழிக்க எண்ணி, அபிச்சார வேள்வி செய்து அதனின்றும் பலவகைப்பட்ட கொல்லக்கூடிய மிருகங்களையும் ஆயுதங்களையும் ஏவினர். சிவபெருமான் தனக்குரிய வகையில் அவற்றைத் தடுத்துப் பயன்படுத்திக் கொண்டார். அதுபோல அவர்கள் ஏவிய ஒரு யானையைக் கொன்று அதன்தோலைத் தன் ஆடையாக உடம்பில் போர்த்திக் கொண்டார் என்பது ஒரு புராண வரலாறு. அது இங்கே பேசப்படுகிறது. இவ்வாறு யானை உருக்கொண்டு வந்தது கயாசுரன் என்ற ஒரு அசுரன் என்றும், சிவபெருமானின் இந்தத் திருக்கோலம் கஜாரி மூர்த்தி என்றும், இச்செயல் சிவபெருமானின் வீரட்டங்களுள் ஒன்று என்றும், இது நிகழ்ந்த இடம் இப்போது திருப்பழுவூர் என்று அழைக்கப்படுகிறது என்றும் நூல்கள் கூறுகின்றன.

51. அல்லா நெடும் பெரும் தேவரும், மறைவாணரும் அஞ்சி,
எல்லார்களும் கரம்கொண்டு, இருவிழி பொத்தினர், இருந்தார்;
செல் ஆயிரம் விழுங்கால், உகும் விலங்கு ஒத்தது சேனை;
வில்லாளனும் அது கண்டு, அவை விலக்கும் தொழில் வேட்டான்.
(9837)

(அல்லா-இல்லாத/தவிர; செல்-இடி; வேட்டடல்-விரும்புதல்; விலக்குதல்-தடுத்தல்)

முன்பாடலில் கூறிய சிவபெருமான் அல்லாத மற்ற பெரிய சிறந்த தேவர்கள், வேதவிற்பன்னர்கள், முனிவர்கள் ஆகிய எல்லோரும்

Koviloor Digital Library

அச்சம்கொண்டு, தம் இரு கைகளைக் கொண்டு இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு செயலற்று நின்றிருந்தனர்; ஆயிரக்கணக்கான இடிகள் ஒரு கூட்டத்தின்மேல் விழும்போது, மேய்கின்ற விலங்கினங்கள் எப்படிச் சிதறி ஓடி அழிந்துபோகுமோ அதுபோல வானரச்சேனைகள் முழுவதும் சிதறியோடின. அதனைக்கண்ட வில்வித்தையில் தேர்ந்தவனான இராம பிரானும் அவ்வம்புகளைத் தடுத்து நிறுத்த விரும்பி அதனை மேற் கொண்டான்.

''விலங்கு'' என்ற சொல்லுக்கு மலை என்பது பொருள். இடி விழுந்த மலைபோல நொறுங்கிப் போயிற்று சேனைகள் என்ற பொருளும் பொருந்தும்.

52. செந்தீவினை மறைவாணனுக்கு ஒருவன், சிறுவிலை நாள்,
முந்து ஈந்தது ஓர் உணவின் பயன் எனல் ஆயின, முதல்வன்
வந்து ஈந்தன வடிவெங்கணை; அனையான் வகுத்து அமைத்த
வெந் தீவினைப் பயன் ஒத்தன; அரக்கன் சொரி விசிகம். (9838)

(முதல்வன்-மூலப்பரம்பொருள்/திருமால்; வடி-கூரிய; சிறுவிலை நாள்-பஞ்சகாலம்; விசிகம்-அம்பு; ஈதல்-எய்தல்/தருதல்)

மூலப்பரம்பொருளாகிய திருமாலின் அவதாரமான இராமபிரான் போர்க்களத்துக்கு வந்து செலுத்திய கூரிய கொடிய அம்புகள், சிவந்த மூன்றுவகையான நெருப்பை வளர்த்து வேள்வி செய்யும் வேதவிற் பன்னர்களுக்கு, ஒருவன், பஞ்சகாலத்தில் உணவு அளித்த புண்ணியம் எவ்வாறு பெரிய பயனைத் தருமாறு வளருமோ, அதுபோல வளர்ந்து பெருகியது. ஆனால் கொடியவனான அரக்கன் இராவணன் செலுத்திய அம்புகள், அவன் முன்பு தானே தேடித் தொகுத்துக் கொண்ட கொடிய தீவினைகளின் பயனைப்போல அழிந்தொழித்தன.

மறைவாணர் இயற்றும் வேள்வியைச் ''செந் தீவினை'' என்று பிரித்தும், அரக்கன் வகுத்தமைத்ததை ''வெந் தீவினை'' என்று சேர்த்தும் பயின்றால் அதன் உள்ளுறை பொருளை நன்கு சுவைக்கலாம். ''சிறுவிலை நாள்'' என்பது ஒரு அருமையான சொற்றொடர்; பஞ்சகாலம் என்ற பொருளைத் தரும். பெருவிலை கொடுத்துச் சிறு பொருளை வாங்கும் பஞ்சகாலம் ஆகும், ''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது'' என்பது குறள்-102. ''தான் சிறிதாயினும், தக்கார் கைபட்டக் கால், வான் சிறிதாப் போர்த்துவிடும்'' என்பது நாலடியார்-88. ''விசும்பின் ஓங்கினான் உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே'' என்பது பாலகாண்டம் வேள்விப்படலம். ''அல்லவை தேய அறம் பெருகும்'' என்பது குறள்-96 என்ற ஒரு சிறந்த கருத்தை வலியுறுத்துவது இப்பாடல்.

Koviloor Digital Library

53. நூறாயிரம் வடி வெங்கணை நொடி ஒன்றினின் விடுவான்,
ஆறா விறல் மறவோன், அவை தனி நாயகன் அறுப்பான்;
கூறு ஆயின, கனல் சிந்துவ, குடிக்கப் புனல் குறுகி
சேறு ஆயின, பொடி ஆயின, திடர் ஆயின, கடலும். (9839)

(ஆறா-தணியாத; விறல்-வலிமை/வீரம்; மறவோன்-வீரன்/இராவணன்; தனி-ஒப்பற்ற; புனல்-கடல்; திடர்-மேடு/திட்டு)

தணியாத வலிமைமிக்க வீரனான இராவணன், நூறாயிரக் கணக்கான கூரிய கொடிய அம்புகளை இராமபிரான்மேல் செலுத்துவான்; அவற்றையெல்லாம் ஒப்பற்ற தலைவனாகிய இராமபிரான் ஒரு நொடிப்பொழுதில் அறுத்து எறிந்துவிடுவான்; அவ்வாறு அறுத்துக் கூறாக்கப்பட்ட அந்த அம்புகள் இன்னமும் நெருப்பைக் கக்கிக்கொண்டு நீர் பருகுவதற்காகக் கடலினிடத்தைச் சென்றடையும்; அவை கடல்நீரை முற்றிலும் பருகியதால் கடலின் இடம் சேறாகிப்போனது. பின்னும் பொடிப் பொடியாய் உதிர்ந்தும், மேடுகளாகவும் ஆயின.

''நூறாயிரம்'' என்பது லட்சக்கணக்கான அம்புகள் என்று அம்பின் மிகுதியைக் குறித்தது.

54. வில்லால் சரம் துரக்கின்றவற்கு, உடனே, மிடல் வெம்போர்
வல்லான் எழு, மழு, தோமரம், மணித்தண்டு, இருப்பு உலக்கை,
தொல் ஆர் மிடல்வளை, சக்கரம், சூலம், இவை தொடக்கத்து
எல்லாம் நெடுங்கரத்தால் எடுத்து எறிந்தான், செரு அறிந்தான். (9840)

(துரத்தல்-செலுத்துதல்; மிடல்-வலிமை; செரு-போர்; மணி-அழகிய; தொல்-பழமையான; ஆர்-அரிய/அருமையான; தொடக்கத்து-முதலான; வளை-சங்கு)

கொடிய போர் செய்வதில் வல்லமையுடையவனும், போர்செய்யும் நெறிமுறைகளை அறிந்தவனுமான அரக்கன் இராவணன், வில்லினால் அம்பினைத் தொடுக்கின்றவனாகிய இராமபிரானுக்கு எதிராக, உடனே எழு, மழு, தோமரம், அழகிய தண்டாயுதம், இருப்பு உலக்கை, மிகப் பழமை வாய்ந்ததும், வலிமையுள்ளதுமான சங்கு, சக்கரம், முத்தலைச் சூலம் எனக் கூறப்படுகின்ற எல்லாப் படைக்கலன்களையும் தனது நீண்ட, பெரிய, வலிய இருபது கைகளாலும் எடுத்து எறியலானான்.

''வெம்போர் வல்லான்'' என்பதும், ''செரு அறிந்தான்'' என்பதும், இராவணனுடைய போர்த்திறமையையும், போர்பற்றிய பேரறிவையும் சிறப்பிப்பதாகும். இராவணனுக்கு இருபது கைகள். அந்த இருபது கைகளினாலும் இருபது வகையான ஆயுதங்களையும் வீசி எறிந்தான் என்பதைக் கூறவந்த கவிஞன், அதன் மிகுதிபற்றி ஒன்பதுவகையான

Koviloor Digital Library

ஆயுதங்களின் பெயர்களைக்கூறி, ''இவை தொடக்கத்த'' என்று, இவை முதலிய ஏனைய ஆயுதங்களை வீசிஎறிந்தான் என்றார் என்க.

55. வேல் ஆயிரம், மழு ஆயிரம், எழு ஆயிரம், விசிகக்
கோல் ஆயிரம், பிற ஆயிரம், ஒரு கோல்படக் குறைவ,
கால் ஆயின, கனல் ஆயின, உரும் ஆயின, கதிய
சூல் ஆயின, மழை அன்னவன் தொடை பல்வகை தொடுக்க. (9841)

(சூல்-கரு; மழை-மேகம்; கால்-காற்று; கனல்-நெருப்பு; உரும்-இடி; கதி-போக்கு/விரைவு; தொடை-அம்புகள்; விசிகம்-அம்பு; கோல்-அம்பு; குறைதல்-அழிக்கப்படுதல்/அழிந்துபோதல்)

கருக்கொண்ட மேகம் போன்ற கருநீல வண்ணனான இராமபிரான், தனது பலவகையான அம்பினைத் தொடுக்கவும், அவை காற்றைப் போன்றுவேகமாகவும், நெருப்பைப்போன்றுவெப்பமாகவும், இடியைப் போன்று ஒலியெழுப்பிக்கொண்டும் வேகமாகச் சென்றன. அவற்றில் ஒரேஒரு அம்பு, இராவணனின், ஆயிரம் வேற்படைகளையும், ஆயிரம் மழுப்படைகளையும், ஆயிரம் எழு எனும் ஆயுதங்களையும், ஆயிரம் அம்புகளையும், மற்றுமுள்ள ஆயுதங்களையும் அழிக்கலானது.

இராமபிரானின் ஒரேஒரு அம்பு இராவணனின் ஆயிரக்கணக்கான பலவகைப்பட்ட படைக்கலன்களை அழித்தொழித்தது என்பதாம். தொடை, கோல், விசிகம் என்பன எல்லாம் அம்பு என்ற ஒரேபொருள் குறித்த பலசொற்கள் என்க.

56. ஒத்துச் செரு விளைக்கின்றது ஓர் அளவின்தலை, உடனே,
பத்துச் சிலை எடுத்தான், கணை தொடுத்தான், பல முகிலா
தொத்துப் படு நெடுந்தாரைகள் சொரிந்தால்எனத் துரந்தான்;
குத்துக் கொடு நெடுங்கோல் படு களிறாம் எனக் கொதித்தான். (9842)

(அளவு-சமயம்/காலம்; குத்துக்கோல்-அங்குசம்; துரத்தல்-செலுத்துதல்; தொத்து-கொத்து)

அவ்வாறு இருவரும் ஒருவர்க்கொருவர் சமமாக நின்று போர்செய்யும் பொழுது, இராவணன் இராமபிரான் அம்பினால் தாக்கப்பட்டதனால், நீண்ட குத்துக்கோலால் தாக்கப்பட்ட யானையைப்போன்று மிக்க சினம்கொண்டு, விரைந்து, தனது பத்துக் கைகளிலும் பத்து விற்களை எடுத்துக்கொண்டு, தானே பலவகைப்பட்ட மேகங்களைப்போல ஒன்றாகக்கூடி நின்றுகொண்டு அங்கு தொகுதியான மழைத்தாரைகள் பொழிவதைப்போல இராமபிரான்மேல் அம்புகளைத் தொடுத்தான்.

இதுவரை சமமாகப் போர்புரிந்து கொண்டிருந்தவர்களில் இராவணன் இப்போது இராமபிரானை அழிக்கவேண்டும் எண்ணத்தால் மழை

Koviloor Digital Library

போலப் பத்து அம்புகளைச் செலுத்தினான் என்பதாம். ''குத்துக்கோல்'' என்பது ''பரிக்கோல்'' என்றும் ''அங்குசம்'' என்றும் வழங்கப்பெறும்; குத்துக்கோலால் தாக்கப்படும் யானைக்கு, இராமபாணத்தால் தாக்கப் படும் இராவணன் ஒப்பு.

57. ஈசன் விடு சரமாரியும், எரி சிந்துறு தறுகண்
நீசன் விடு சரமாரியும், இடை எங்கணும் நெருங்க,
தேசம் முதல் ஐம்பூதமும் செருக்கண்டனர் செருக்கி,
கூசிம் மயிர் பொடிப்பு அற்றன; அனல் ஆயின கொடிய. (9843)

(ஈசன்-தேவன்/இராமபிரான்; எரி-நெருப்புப்பொறி; தறுகண்-அஞ்சாமை/கொடுமை; நீசன்-இழிந்தவன்/அற்பன்; தேசம்-பூமி/நிலம்; பொடித்தல்-தோன்றுதல்; கூசுதல்-அஞ்சுதல்)

எல்லா ஐஸ்வர்யங்களுக்கும் தலைவனான இராமபிரான் செலுத்தும் அம்பு மழைகளும், நெருப்பைச் சிந்துகின்ற கண்களையுடையவனும், அஞ்சாமையுடையவனும், கொடியவனுமான அற்ப அரக்கன் இராவணன் செலுத்துகின்ற அம்புமழைகளும், போர்க்களத்தில் எல்லா இடங்களிலும் நிறைந்து கிடக்கவும், அதனால் மகிழ்ச்சியுற்றிருந்த நிலம் முதலான ஐம்பூதங்களும் போரினைக் கண்டு மகிழ்ந்திருக்கவும், இப்போது கொடிய வெப்பம்கூடிய இவ்வம்புகள் எல்லா இடத்திலும் பரவி நிற்பதால் சற்று அஞ்சி உற்சாகம்குன்றி மயிர்க்கூச்செறிதல் இல்லாது செயலற்று நின்றன.

''ஈசன்'' என்ற சொல் பொதுவாகச் சிவபெருமானையே குறிக்கும். எல்லா ஐஸ்வர்யங்களுக்கும் தலைவன் என்பது பொருள். இந்தச் சொல்லுக்கே திருமால் என்ற ஒரு பொருளும் உண்டு; இங்கு இராமபிரானைக் குறித்து நின்றது. ''தேசம்'' என்பது இங்கு பூவுலகம் என்ற பொருளில் நிலத்தைக் குறித்தது.

58. மந்தரக்கிரி என, மருந்து மாருதி,
தந்த அப்பொருப்பு என, புரங்கள் தாம் என,
கந்தருப்பந் நகர் விசும்பில் கண்டென,
அந்தரத்து எழுந்தது அவ்வரக்கன் தேர் அரோ! (9844)

(விசும்பு-விண்; அந்தரம்-ஆகாயம்/விண்; பொருப்பு-மலை)

அந்த அரக்கனான இராவணனுடைய தேர், வானத்தில் நிற்கும் மந்தரமலையைப்போலவும், முன்பு அனுமன் கொண்டு வந்த மருத்துமலையாகிய சஞ்சீவிமலை வானத்தில் நிற்பதுபோலவும், முன்பு அசுரர்கள் மூன்று கோட்டைகளையும் வானத்தில் நிறுத்தியிருந்தன போலவும், கந்தர்வர்கள் வசிக்கும் கந்தர்வ நகரம் வானத்தில் தோன்றியது போலவும், இப்பொழுது வானத்தில் எழுந்து நின்றது.

Koviloor Digital Library

முன்பு பாற்கடலைக் கடைவதற்காகத் திருமாலின் கட்டளைப்படி கருடன் மந்தரமலையை வான்வழியே எடுத்து வரும்போது அது எப்படித் தோன்றியதோ அது போலவும், முன்பு அனுமன் சஞ்சீவிமலையைக் கொணர்ந்தபோது அது அரக்கன் ஊர்புக விரும்பாமையால் வானத்தி லேயே நின்றதல்லவா அது போலவும், முன்பு அசுரர்கள் பொன், வெள்ளி, இரும்பு, ஆகியவற்றாலான கோட்டைகளைக் கொண்டு வானத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தார்களே அதுபோலவும், கந்தர்வர்கள் வசிக்கின்ற நகரம் சற்று வானத்திலே தோன்றிமறையும் இயல்பினது; அதுபோலவும் இப்பொழுது இராவணன் ஏறிவந்த தேர், அந்தரத்தில் வானத்தின்மேல் எழுந்தது என்பதாம். பொதுவாக இந்தக் கந்தர்ப்ப நகர் தோன்றி மறைவது என்பது ஒரு தீ நிமித்தம் - உற்பாதம் என்றும் இது தோன்றி மறைந்தால் அந்நாட்டுக்கும், அவ்வரசனுக்கும் அழிவு ஏற்படும் என்பதும் ஒரு நூற்கொள்கை. இதனைப் ''பேய்த்தேர்'' என்றும் கூறுவர். அதைக்கவிஞன் இங்கே குறிப்பால் உணர்த்தினான் எனக்கொள்க. விண்ணில் எழுந்த இராவணனது தேருக்கு மந்தரமலை, சஞ்சீவிமலை, திரிபுரம், கந்தர்வநகரம் ஆகியவை தோற்றத்தால் உவமை. சிவபெருமான் அம் முப்புரங்களையும் அழித்தமையால் சிவபெருமானுக்கு ''திரிபுராந்தகன்'' என்பது காரணப்பெயர். இப்பாடல் பல்பொருள் உவமையணியின் பாற்படும்.

59. குரக்குச்சேனை அழிதல்

எழுந்து உயர் தேர்மிசை இலங்கை காவலன்
பொழிந்தன சரமழை, உருவிப் போதலால்,
ஒழிந்ததும் ஒழிகிலது என்ன, ஒல்லெனக்
கழிந்தது கவிக்குலம், இராமன் காணவே. (9845)

(மிசை-மீது/மேல்; சரம்-அம்பு; குலம்-கூட்டம்; ஒல்லென-விரைந்து; கழிதல்-இறந்து அழிதல்; ஒழிதல்-எஞ்சியிருத்தல்; காவலன்-வேந்தன்)

அவ்வாறு இலங்கை வேந்தனான இராவணன் தன் தேரை வானத்தின்மீது செலுத்திச்சென்று அம்புமழையைப் பொழிந்தபோது, அவை வானரச்சேனையின் உடலில்பட்டு ஊடுருவிச் சென்றதால், இராமன் தன் கண்களால் கண்டு கொண்டிருக்கும்போதே, முன்பு வானரச் சேனையில் அழிந்து ஒழிந்தது போக எஞ்சியிருந்த வானரக்கூட்டங்களும் விரைந்து அழிந்து போகலாயின.

''ஒல்லென'' என்பது விரைவுக்குறிப்பு. ''ஒழிந்தது'' என்பது எஞ்சி யிருந்த வானரக் கூட்டத்தைக் குறிக்கும். ''ஒழிகிலது'' என்பது இனி எஞ்சி நில்லாது, அழிந்துபடும் என்னும் பொருளையும் தரும்.

Koviloor Digital Library

60. இராமபிரான் சாரதிக்குக் கட்டளையிடுதல்

''முழவு இடு தோளொடு முடியும் பல்தலை
விழ விடுவேன் இனி; விசும்பு சேமமோ?
மழ விடை அனைய நம் படைஞர் மாண்டனர்,
எழ விடு தேரை'' என்று இராமன் கூறினான். (9846)

(இடுதல்-ஒப்பிடுதல்; சேமம்-பாதுகாப்பு; மழவிடை-இளமையான எருது/காளை; படைஞர்-படைவீரர்கள்; விடுதல்-செலுத்துதல்; முழவு-மத்தளம்)

இதனைக்கண்ட இராமபிரான், தேர்ப்பாகன் மாதலியை நோக்கி, ''இளமையான காளைகள் போன்று போர்த்திறம் மிக்க நம் படைவீரர்கள் மாண்டுபோயினர்; இனியும் காலம் தாழ்த்தலாகாது. அவனுடைய மத்தளம் போன்ற வலிய தோள்களையும், அவனது முடிகளையும், பத்துத் தலைகளையும் தரையில் உருண்டு ஓடுமாறு நான் அம்புகளைச் செலுத்தப் போகிறேன்; அவனுக்கு ஆகாயம் ஒரு பாதுகாப்புவழி ஆகிவிடுமா? எனவே நமது தேரையும் வானத்தில் எழுமாறு செலுத்துவாயாக!'' என்று கட்டளையிட்டான்.

''இடு'' என்ற சொல் உவமஉருபாக ''போன்ற'' என்ற பொருளைத் தந்து நின்றது.

61. ''அந்து செய்குவென்'' என அறிந்த மாதலி
உந்தினன் தேரெனும் ஊழிக்காற்றினை;
இந்து மண்டிலத்தின்மேல் இரவி மண்டிலம்
வந்தென, வந்தது அம்மானத் தேர் அரோ! (9847)

(அந்து-அவ்வாறே; உந்துதல்-செலுத்துதல்; மானம்-பெருமை; இரவி-சூரியன்; வருதல்-கடந்துபோதல்; இந்து-சந்திரன்)

இராமபிரான் கருத்தை உணர்ந்த தேர்ப்பாகன் மாதலி, இராமபிரானை நோக்கி, ''அவ்வாறே செய்வேன்'' என்றுகூறி, அந்தத் தேர் எனப்படும் ஊழிக்காற்றைச் செலுத்தினான். அந்தப் பெருமைமிக்க தேர், சந்திர மண்டலத்தின்மேல் சூரியமண்டலம் வந்து நின்றதுபோல, இராவணன் தேர்இருக்கும் இடத்திற்கு மேலே வந்து நின்றது.

''அந்து'' என்பது திசைச்சொல். இன்றும் ''அவ்வாறே'' என்ற பொருளில் கன்னடத்திலும், தெலுங்கிலும் வழங்கிவருவதைக் காணலாம். ''அந்து'' அவ்வாறே என்பது இராமபிரான் விருப்பப்படியே என்ற பொருளைத்தரும். ''தேரெனும் ஊழிக்காற்று'' என்பது உருவகம். தேரை ஊழிக்காற்றாக உருவகித்தார் என்க. இந்து மண்டிலத்தின்மேல் இரவி மண்டிலம் என்பது இல்பொருள்.

Koviloor Digital Library

62. இரிந்தன மழைக்குலம், இழுகித் திக்கெலாம்;
உரிந்தன உடுக்குலம், உதிர்ந்து சிந்தின;
நெரிந்தன நெடுவரைக் குடுமி; நேர்முறை
திரிந்தன சாரிகை தேரும், தேருமே. (9848)

(நேர்முறை-வஞ்சனையின்றி/மாயம்இன்றி/நேருக்குநேராக; மழைக்குலம்-மேகக்கூட்டங்கள்; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; இழுகுதல்-பரவுதல்/வீசுதல்; உடுக்குலம்-நட்சத்திரக்கூட்டங்கள்; குடுமி-சிகரம்/உச்சி; உரிதல்-சுழல்தல்/இடம்பெயர்தல்; நெரிதல்-நொறுங்கிப் போதல்)

இராமபிரான் தேரும், இராவணன் தேரும், வஞ்சனையான மாயச்செயல் ஏதுமின்றி நேருக்குநேர் வானில் இடசாரி வலசாரி வந்து சுற்றித் திரிந்தன; அந்த வேகத்தால் மேகக்கூட்டங்கள் எல்லாம் நிலை கெட்டு எட்டுத்திசைகளிலும் பரவி ஓடிச்சென்றன; விண்மீன்களாகிய நட்சத்திரக் கூட்டங்கள் எல்லாம் இடம் பெயர்ந்து பொடிப்பொடியாய் உதிர்ந்து சிந்தின; நீண்ட மலைகளின் உச்சியெல்லாம் நொறுங்கிப் போயின.

''சாரிகை திரிதல்'' என்பது வட்டமாய்ச் சுழன்று திரிதலைக் குறிக்கும். ''இழுகுதல்'' என்பது நமக்குப் புதுச்சொல். பரவுதல், வீசுதல் என்ற பொருளைத்தரும்.

63. வலம் வரும்; இடம் வரும்; மறுகி வானொடு
நிலம் வரும்; இடம் வலம் நிமிரும்; வேலையும்
அலம் வரும் குலவரை அனைத்தும், அண்டமும்
சலம் வரும் குயவன் திகிரித் தன்மைபோல். (9849)

(மறுகுதல்-சுழல்தல்; வேலை-கடல்; அலம்-அமைதி; திகிரி-சக்கரம்; சலம்வருதல்-சுழல்தல்; நிமிர்தல்-ஓங்குதல்/உயர்தல்)

அந்த இரு தேர்களும் வலமாக வரும்; பின்னர் இடப்பக்கமாக வரும்; கலக்கமுற்று வானிலிருந்து நிலத்திற்கு வரும்; இடமாகவும், வலமாகவும் ஓங்கி உயர்ந்து செல்லும்; அந்த வேகத்தால் கடலும், அமைதியாக நிற்கின்ற சிறந்த அஷ்டகுல மலைகள் எல்லாமும், இவ்வண்டகோளமும் குயவனுடைய சக்கரம் சுழலுவதைப்போல சுழலும்.

64. "எழும் புகழ் இராமன்தேர்; அரக்கன்தேர் இது" என்று,
உழுந்து உருள் பொழுதின் எவ்வுலகும் சேர்வன,
தழும்பிய தேவரும் தெரிவு தந்திலர்,
பிழம்பின திரிவன என்னும் பெற்றியார். (9850)

Koviloor Digital Library

(சேர்தல்-சுற்றித்திரிதல்; எழுதல்-வளர்தல்; தழும்புதல்-பழகுதல்; தெரிவு-தெளிவு; பிழம்பு-வடிவம்; பெற்றி-தன்மை)

உழுந்து உருண்டு போகின்ற சிறுபொழுதுக்குள்-நொடிப்பொழு திற்குள், எல்லா உலகங்களையும் சென்று சேர்வனவாகிய அந்தத் தேர்களை எப்பொழுதும் பார்த்துப் பழக்கப்பட்ட இமையாநாட்டம் உடைய தேவர்கள்கூட, இப்பொழுது இதுதான் புகழ்மிக்க இராமபிரானது தேர் என்றும், இதுதான் இராவணனின் தேர் என்றும் பகுத்து அறிந்து தெளிவுபெற இயலாதவராய், ஏதோ இரண்டு ஒளிவடிவம் சுற்றித் திரிகின்றன'' என்று கூறும் தன்மையில்தான் இருந்தனர்.

''எழும்புகழ்'' என்பது ஓங்கி உயர்ந்த புகழ் என்ற பொருளைத்தரும். ''உழுந்து உருள் பொழுது'' என்பது காலச் சிறுமையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு உவமை. நொடிப்பொழுது என்பது பொருள்; இப்பொழுது இங்கு இராமபிரான் ஏறிச்செல்வது இந்திரனின் தேர். எனவே அதனைத் தேவர்கள் நன்கு அறிவர். எனினும் தேர் செல்லும் வேகத்தால் அவர்களால்கூட, இராமபிரான் தேர் இதுதான் என்று தெளிந்துகூற இயலவில்லை என்பது, ''தழும்பிய தேவர்'' எனக் குறிக்கப்பட்டது என்க. ''பிழம்பு'' என்ற சொல் வடிவம், உருவம் என்ற பொருள்களைத்தரும். ''அன்பு பிழம்பாய்த் திரிவார்'' என்பது கண்ணப்பர் புராணம். ''உழுந்து உருள் பொழுதில் மீள்வென்; ஒரு கணமேனும் தாழேன்'' என்பது சீகாளத்திப்புராணம்.

65. உக்கிலா உடுக்களும், உருள்கள் தாக்கலின்,
நெக்கிலா மலைகளும், நெருப்புச் சிந்தலின்,
வக்கிலாத் திசைகளும், உதிரம் வாய்வழி
கக்கிலா உயிர்களும், இல்லை, காண்பன. (9851)

(உருள்கள்-சக்கரங்கள்; உகுதல்-சிந்துதல்; உடு-நட்சத்திரம்; நெகுதல்-நெகிழ்தல்/பிளத்தல்; வக்குதல்-வேகுதல்/வெந்துபோதல்; உதிரம்-இரத்தம்)

இருவரின் தேர்ச்சக்கரங்களும் சேர்ந்து தாக்குவதால், வானத்திலுள்ள விண்மீன்களெல்லாம் சிந்திச் சிதறி விழுந்தன; மலைகள் நெகிழ்ந்து பிளவுபட்டன; அவைகள் ஒன்றோடொன்று உராய்வதால் எழுந்த நெருப்புப் பொறிகளினால், திசைகளெல்லாம் வெந்துபோயின; உலகி லுள்ள உயிரினங்களெல்லாம் வாய்வழியாக இரத்தத்தைக் கக்கின. இவை தவிர வேறொன்றையும் காணமுடியவில்லை.

இராமஇராவணர் இருவரின் தேர்களின் சக்கரங்கள் தாக்குதலால் விண்மீன்களும், மலைகளும் சிதறிச் சிந்திப் பொடிப்பொடியாய் ஆயின; அவை ஒன்றோடொன்று உரசிக்கொள்வதால், எழுந்த நெருப்புப் பொறியினால் எட்டுத் திசைகளும் வெந்துபோயின; உயிரினங்கள்

Koviloor Digital Library

எல்லாம் வாய்வழியே இரத்தத்தைக் கக்கின என்பதாம். ''உக்கிலா, நெக்கிலா, வக்கிலா, கக்கிலா என்ற எதிர்மறைச் சொற்களோடு, ''இல்லை'' என்ற எதிர்மறைச் சொல்லையும் சேர்த்துச் சொன்னதால், இரு எதிர்மறைச் சொற்கள் ஒரு உடன்பாட்டுப் பொருளைத்தரும் என்பது நாம் அறிந்ததே. எனவே இவையனைத்தும் தம் நிலைதிரிந்தன என்பதாம். ''வக்குதல்'' என்ற சொல் வேதல், வாட்டுதல், வதக்குதல் என்ற பொருள்களைத்தரும். ''வன்பெரும் பன்றி தன்னை எரியினில் வக்கி'' என்பதும் ''கொழுப்பு அரிந்து வந்தன கொண்டு, எழுந்தழலில், வக்குவன வக்குவித்து'' என்பதும் கண்ணப்ப நாயனார் பற்றிய பெரியபுராணம். நட்சத்திரங்கள் உக்கன; மலைகள் நெக்கன; திசைகள் வக்கின; உயிர்கள் உதிரம் கக்கின என்ற இடங்களில் சொல்லாட்சி நோக்குக.

66. ''இந்திரன் உலகத்தார்'' என்பர்; ''ஏன்றவர்
சந்திரன் உலகத்தார்'' என்பர்; ''தாமரை
அந்தணன் உலகத்தார்'' என்பர்; ''அல்லரால்
மந்தர மலையினார்'' என்பர், வானவர். (9852)

(வானவர்-தேவர்கள்; அந்தணன்-பிரமன்)

அதனைக் கண்டுகொண்டிருந்த தேவர்கள், ''இராம இராவணர் இருவரும் இந்திரலோகத்தில் இருக்கிறார்கள்'' என்பார்கள்; அவ்வாறு கூறியவர்களே ''சந்திரலோகத்தில் இருக்கிறார்கள்'' என்பார்கள்; இன்னும் சிலர் ''அவர்கள் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனின் சத்திய லோகத்தில் இருக்கிறார்கள்'' என்பார்கள்; இன்னும் சிலர் ''அங்கெல்லாம் இல்லை; அவர்கள் மந்தரமலையின்மீது உள்ளனர்'' என்று கூறுவார்கள்.

இமையா நாட்டமுடைய தேவர்களாலேயே அவர்கள் வான்மீது ஏறிச் சென்று எங்கே இருக்கிறார்கள் என்பதைக் கணித்து அறியமுடியவில்லை என்று, அந்தத்தேர்களின் வேகத்தைச் சிறப்பித்தார் என்பதாம்.

67. ''பாற்கடல் நடுவணார்'' என்பர்; ''பல்வகை
மாக் கடலினுக்கும் அவ்வரம்பினார்'' என்பர்;
''மேல் கடலார்'' என்பர்; ''கிழக்கு உளார்'' என்பர்;
''ஆர்க்கடை உரும்'' என்பர்; அறியும் வானவர். (9853)

(மா-பெரிய)

எல்லாவற்றையும் அறியும் இயல்புடைய தேவர்கள், ''இப்பொழுது இராம இராவணனின் தேர்கள் பாற்கடலின் நடுவில் உள்ளன என்பார்கள்; சிலர் மேற்குக் கடலில் நிற்கின்றன என்பார்கள்; இன்னும் சிலர் கீழ்க் கடலில் நிற்கின்றன என்பார்கள்; தேர்ச்சக்கரத்தின் உறுப்புக்கள் இடி போன்று ஒலிக்கின்றன'' என்பார்கள்.

Koviloor Digital Library

''அறியும் வானவர்'' என்பது தாம் இருந்த இடத்தில் இருந்து கொண்டே சேய்மையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் இயல்பு படைத்த தேவர்கள் என்ற விரிந்த பொருளைத்தரும். ''ஆர்'' என்பது ஆரம் என்று சொல்லப்படுகின்ற இலைவடிவான சக்கரத்தின் உறுப்பு எனக்கொள்க.

68. "மீண்டனவோ" என்பர்; "விசும்பு விண்டு உகக்
கீண்டனவோ?" என்பர்; "கீழவோ?" என்பர்;
பூண்டன புரவியோ? புதிய காற்று!" என்பர்;
"மாண்டன உலகம்" என்று உரைக்கும் வாயினார். (9854)

(விசும்பு-விண்முகடு; உகுதல்-சிந்துதல்; கீண்டுதல்-கிழிந்துபோதல்; கீழ்-தரை/நிலம்; புரவி-குதிரைகள்)

அதனைக் கண்ணுற்ற தேவர்கள் ''இவ்வுலகங்களெல்லாம் அழிந் தொழிந்தன'' என்று கூறலானார்கள். ''வானிற் சென்ற தேர்கள் திரும்பி வந்துவிட்டனவோ? விண்ணுலகமே பிளந்து சிதறிக் கிழிந்து போய் விட்டதோ? அல்லது தேர்கள் நிலத்திற்கு வந்துவிட்டனவோ? இந்தத் தேர்களில் கட்டப்பெற்றிருப்பவை குதிரைகள்தானா? அல்லது யாரும் இதுவரை அறிந்திராத புதிய காற்றா?'' என்று வியந்து பேசும் வாயினை உடையவர்கள் ஆனார்கள்.

69. ஏழுடைக் கடலினும், தீவுஓர் ஏழினும்,
ஏழுடை மலையினும், உலகுஓர் ஏழினும்,
சூழுடை அண்டத்தின் சுவர்கள் எல்லையா,
ஊழியில் காற்றெனத் திரிந்த, ஓவில. (9855)

(சூழுடை-சுற்றியுள்ள; ஓவில-நீக்கமின்மை/ஒழியாமல்)

அந்தத்தேர்கள், ஏழு என்று சொல்லப்படுகின்ற கடல்கள், தீவுகள், மலைகள் உலகங்கள் இவையெல்லாவற்றையும் சுற்றியுள்ள இவ்வண்ட கோளத்தின் சுவர்களையே எல்லையாகக் கொண்டு சுழன்றடிக்கும் ஊழியிறுதிக்காலத்துக் காற்றுப்போல, ஒய்வேயில்லாமல் எங்கும் நீக்கமறச் சுற்றித் திரிந்தன.

ஏழு கடல்கள்; உவர்ப்புநீர், நன்னீர், தேன், பால், தயிர், கருப்பஞ்சாறு, நெய் முதலியன. ஏழுதீவுகள்; ஜம்பு, பிலட்சம், குசை, கிரௌஞ்சம், சாகம், சான்மலி, புஷ்கரம் முதலியன. ஏழு மலைகள்; கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி முதலியன. ஏழு உலகங்கள் மேல் ஏழு உலகங்கள், பூலோகம், புவர்லோகம், சொர்க்கலோகம், மகரலோகம், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம் முதலியன. கீழ் ஏழு உலகங்கள்; அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், ரசாதலம், பாதலம் முதலியன.

Koviloor Digital Library

70. உடைக்கடல் ஏழினும், உலகம் ஏழினும்,
இடைப்படு தீவினும், மலைஓர் ஏழினும்,
அடைக்கலப் பொருள் என அரக்கன் வீசிய
படைக்கலம், மழைபடு துளியின் பான்மைய. (9856)

(இடை-நடுவில்; மழை-மேகம்; துளி-மழைத்துளி; பான்மை-தன்மை)

இராவணன் தேவர்களிடமிருந்து அடைக்கலமாகப் பெற்ற படைக் கலங்களையெல்லாம், இராமபிரான்மீது வீசியெறிந்தான்; ஆனால் அவை யெல்லாம் மேகத்திலிருந்து விழுகின்ற மழைத்துளியைப்போல, பூமிக்கு ஆடையாக உள்ள ஏழு கடல்களின்மேலும், ஏழு உலகங்களின்மீதும், இவற்றிக்கு நடுவில் அமைந்திருக்கும் ஏழு தீவுகளின்மீதும், ஏழு மலைகளின் மீதும் பட்டுத் தெறித்தனவேயன்றி, இராமபிரான்மேல் ஒருசிறிதும் படவில்லை.

இதே ''அடைக்கலப் பொருள்'' என்ற சொற்றொடர்க்கு, இராவணன் ஏழு கடல்கள், ஏழு உலகங்கள், ஏழு தீவுகள், ஏழு மலைகள், இவற்றி லெல்லாம் தன் பாதுகாப்புக்காகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த படைக் கலன்கள் என்று கூறுவதும் பொருந்தும். ''தன்பால் அடைக்கலம் என்ன, ஈசன் அளித்தன தேர்மேல் ஆக்கி'' என்று இந்திரசித்து வதைப்படலத்தில் முன்பு கூறப்பட்டிருப்பதால் நாம் கொண்டுள்ள பொருளே சரியாகப் பொருந்தும் எனக்கொள்க.

71. ஒறுத்து உலகனைத்தையும் உழலும் ஓட்டிடை
இறுத்தில; இராவணன் எறிந்த, எய்தன
அறுத்ததும் தடுத்ததும் அன்றி, ஆரியன்
செறுத்து ஒரு தொழிலிடைச் செய்தது இல்லையால். (9857)

(ஒறுத்தல்-அழித்தல்; ஓட்டு-ஓட்டம்; இறுத்தல்-ஒடிதல்/முறிதல்; செறுத்தல்-சினத்தல்; உழலுதல்-திரிதல்; அறுத்தல்-இருகூறாகச் செய்தல்; ஆரியன்-மேலோன்/இராமபிரான்)

இராவணன் வீசியெறிந்த ஈட்டி முதலிய படைக்கலங்களும், செலுத்திய அம்பு முதலானவைகளும், இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் அழித்துத் திரிந்து ஓடுவனவாயினவே அன்றி எங்கும் தங்கவில்லை; இவற்றையெல்லாம் மேலோனான இராமபிரான் இருகூறாக அறுத்து ஒழித்தான்; அவை தன்மேல் படாமல் தடுத்துக்கொண்டான்; இவற்றை யன்றி அவனாகவே இராவணன்மீது சீற்றம்கொண்டு எந்தஒரு அம்பையும் எய்து போர்த்தொழில் செய்யவில்லை.

''இறுத்தல்'' என்ற சொல் படைக்கலன்களின் முனைகளை முறித்தல் என்ற பொருளைத்தரும். ''முனைகெட இறுத்த வெண்வேல் ஆடவன்'' என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

Koviloor Digital Library

72. விலங்கலும், வேலையும், மேலும், கீழரும்,
அலங்கு ஒளி திரிதரும் உலகு அனைத்தையும்,
கலங்குறத் திரிந்தது ஓர் ஊழிக்காலக் காற்று,
இலங்கையை எய்தின, இமைப்பின் வந்து அரோ! (9858)

(விலங்கல்-மலை; வேலை-கடல்; அலங்குதல்-அசைதல்/ விளங்குதல்; ஒளி-சூரியசந்திரர்; ஓர்-ஒப்பற்ற; இமைப்பு-நொடிப் பொழுது/கணம்)

மலைகள், கடல்கள், மேல்உலகம், கீழ்உலகம், முதலியவற்றி லெல்லாமும், இவ்வுலகு அனைத்திலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற சூரிய சந்திரர்களும் கலக்கமடையும்படி வீசுகின்ற ஒப்பற்ற ஊழிக்காலக் காற்றுப்போல, ஒரு நொடிப்பொழுதிற்குள், அந்த இரண்டு தேர்களும் இலங்கையை வந்து அடைந்தன.

இங்கே ''ஊழிக்காலக் காற்று'' என்பது தேரில் பூட்டப்பட்டிருக்கின்ற குதிரைகளைக் குறிக்கும். ''கீழர்'' என்பது கீழ் உலகத்தைக் குறிக்கும்.

73. உய்த்து உலகு அனைத்தினும் உழன்ற சாரிகை
மொய்த்தது, கடலிடை மணலின் மும்மையால்;
வித்தகர் கடவிய விசயத் தேர்ப் பரி,
எய்த்தில, வியர்த்தில, இரண்டு பாலவும். (9859)

(உய்த்தல்-செலுத்தப்படுதல்; வித்தகர்-திறமைமிக்கவர்/தேர்ப்பாகர்; கடவுதல்-செலுத்துதல்; விசயம்-விஜயம்/வெற்றி; பால-பக்கம்; எய்த்தல்-இளைத்தல்; மொய்த்தல்-நெருங்குதல்; மும்மை-மூன்று மடங்கு; உழல்தல்-அலைதல்)

அவ்வாறு இரண்டு பக்கத்துத் தேரில் கட்டியிருந்த குதிரைகள் எல்லாம், இவ்வுலகங்கள் எல்லாவற்றிலும் செலுத்தப்பட்டு சாரிகை திரிந்து நெருங்கின; அவற்றின் அளவைக் குறிப்பிடவேண்டுமென்றால் அவை கடலிடத்துள்ள மணலின் எண்ணிக்கையைப்போல் மூன்று மடங்கு அதிகமானதாகும். தேர் செலுத்தும் தொழிலில் வல்லவரான இரண்டு பாகர்களும் செலுத்திய, வெற்றியையே தரும் இயல்புடைய தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள், இவ்வளவிற்குப் பின்னும் சற்றும் இளைக்க வில்லை; வியர்வைகூடச் சிந்தவில்லை.

பொதுவாக அளவற்றது என்பதைக் கூறக் கடலின் மணலை உவமை கூறுவது கவிமரபு. இரண்டு தேர்ப்பாகர்களின் தேர் செலுத்தும் கல்வியும், குதிரைகளின் வலிமையும் சிறப்பிக்கப் பட்டதென்க. இதனைக் கூர்ம புராணம் கூறுகிறது கேளுங்கள். ''விண்ணவர் அளித்த தேர் இவர் இறையும், வெஞ்சினத்து அரக்கர்தம் கோவும், பண்ணின் நீள் வெற்பின், மாதிரம் எட்டின், வானவர் தானவர் உறையும் கண்ணகல் விசும்பில்

Koviloor Digital Library

திரிந்து, தாம் கற்ற கார்முக விஞ்சைகள் காட்டி, எண்ணில் எவ்வுலகும் வெருவொடும் தளர, ஏழுநாள் இராப்பகல் மலைந்தார்'' என்பது கூர்மபுராணம்.

74. இராவணன், இராமபிரானது தேர்க்கொடியை அறுத்தல்

இந்திரன் தேரின்மேல் உயர்ந்த, ஏந்து எழில்
உந்த அரும் பெருவலி உருமின் ஏற்றினை,
சந்திரன் அனையதோர் சரத்தினால், தரைச்
சிந்தினன் இராவணன், எரியும் சிந்தையான். (9860)

(ஏந்துஎழில்-மிக்க அழகு; உந்துதல்-தள்ளுதல்; உரும்-இடி; சரம்-அம்பு)

மனத்தில் சீற்றம்கொண்டிருந்தவனான இராவணன், இராமபிரான் ஏறிவந்த இந்திரனுக்குரிய தேரின்மீது ஓங்கி உயர்ந்து விளங்குவதும், மிக்க அழகுடையதும், தள்ளுதற்கு அரியதானதும், பெரும் வலிமை படைத்தது மான பேரிடிக்கொடியை, பிறைச்சந்திரன் போன்றதோர் அம்பினால், தரையில் விழும்படி செய்தான்.

இராமபிரான் ஏறிவந்த தேர், இந்திரனால் அனுப்பப்பட்டது. எனவே இந்திரன்தேர், இந்திரனின் கொடி இடிக்கொடி. எனவே உருமின்ஏறு; ''சந்திரன் அனையதோர் சரம்'' என்பது பிறைமுகக் கணையை, பிறைவாய் அம்பை, அர்த்த சந்திரபாணத்தைக் குறிக்கும்.

75. சாய்ந்த வல் உருமுபோய், அரவத் தாழ்கடல்
பாய்ந்த வெங்கனல் என, முழங்கிப் பாய்தலும்,
காய்ந்த பேர் இரும்பின் வன்கட்டி காலுறத்
தோய்ந்த நீராம் எனச் சுருங்கிற்று ஆழியே! (9861)

(வல்-வலிய; உருமு-இடி; அரவம்-ஒலி; தாழ்-ஆழ்ந்த; ஆழி-கடல்/கடல்நீர்; சுருங்குதல்-வற்றிப்போதல்; சாய்தல்-சிந்துதல்; காலுறுதல்-முழுமையும் பொருந்துதல்)

அவ்வாறு இந்திரனது இடிக்கொடியினின்றும் கீழே விழுந்த வலிய இடியானது, ஒலிமிக்க, ஆழ்ந்த கடலில்போய் கொடிய வடவைத்தீப் போன்று முழங்கிக்கொண்டு பாய்ந்த அளவில், பழுக்கக் காய்ச்சிய பெரிய இரும்பின் வலிமையான கட்டி ஒன்று, முழுவதும் பொருந்தித் தோய்ந்த நீரில் எப்படிச் சுருங்கிப் போகுமோ, அப்படி அந்தக் கடல்நீர் சுருங்கி வற்றிப்போயிற்று.

இடி சென்று கடலில் கொடிய நெருப்புப்போல பாய்ந்தது. பழுக்கக் காய்ச்சிய இரும்புக்கட்டி கடல்நீரில் சேர்ந்தால் கடல்நீர் எவ்வாறு வற்றிப்

Koviloor Digital Library

போகுமோ அவ்வாறு அந்த இடி சென்று சேர்ந்ததும் கடல்நீர் வற்றிப் போயிற்று என்பதாம். நன்கு பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பு நீரைப் பருகிவிடும்; அதனால் நீர்வற்றிப்போதல் இயல்பு; ''கருங்கைக்கொல்லன் செந்தீ மாட்டிய இரும்பு உண்நீரினும், மீட்டற்கு அரிது'' என்பது புறநானூறு-21. ''இரும்பு உண்ட நீர் மீள்கினும் என் உழையில் கரும்பு உண்டசொல் மீள்கிலள் காணுதி'' என்ற இராவணன் கூற்றும் இங்கு ஒப்புநோக்கத்தகும்.

76. எழுத்து எனச் சிதைவிலா இராமன் தேர்ப்பரிக்
குழுக்களைக் கூர்ங்கணைக் குப்பையாக்கி, நேர்
வழுத்த அரு மாதலி வயிர மார்பிடை
அழுத்தினன் கொடுஞ்சரம், ஆறொடு ஆறு அரோ! (9862)

(எழுத்து-வேதம்; குழு-கூட்டம்; குப்பை-குவியல்; நேர்-உவமை; வழுத்துதல்-சொல்லுதல்)

எழுதாக்கிளவியாகிய வேதம்போல எந்தப் படைக்கலங்களாலும் அழிக்க இயலாததான, இந்திரன் தந்ததும், இராமபிரான் ஏறிவந்ததும் ஆகிய தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைக் கூட்டங்களை, இராவணன் தன் கூரிய அம்புகளால் அழிக்க இயலாமல், அம்புத் தொகுதிகளைக் குதிரைக் கூட்டங்களின்மேல் பாய்ச்சி அம்புக் குவியல் ஆக்கினான்; உவமைகூறிப் போற்றமுடியாத தேர்ப்பாகன் மாதலியின் வயிரம்போன்று உறுதியான மார்பின் நடு இடத்தில் கொடிய பன்னிரண்டு அம்புகளை அவன் மார்பில் பதியும்படி அழுந்தச் செலுத்தினான்.

''எழுத்து'' என்பது அழிக்கமுடியாதது என்ற பொதுப்பொருளிலும், வேதம் என்ற சிறப்புப் பொருளிலும் கையாளப்பட்டிருப்பதை உணர்க. ''எழுத்து'' என்ற சொல்லுக்குப் ''பிரமன் எழுதிய தலை எழுத்து'' என்றும் பொருள் கூறுவதுண்டு. சான்றோர்களின் கவியையும் ''எழுத்து'' என்ற பொதுச்சொல்லால் குறிப்பதுண்டு. எழுத்து என்பதற்குப் பிரணவம், ''சப்த பிரமம்'' என்று பொருள் தருகிறது வடமொழி நூல்கள். அவனுடைய கூரிய அம்புகளால் குதிரைகளை அழிக்கமுடியவில்லை. எனவே அவன் செலுத்திய அம்புகள் எல்லாம் ஒரு குவியலாகக் குதிரைகளின்மீது படிந்து அவற்றை மூடிக்கொண்டன என்பதாம். ''நேர்வழுத்த அரு மாதலி'' என்று மாதலியின் பெருமையைச் சிறப்பித்தார் என்க. அம்புகளைச் செலுத்திக் குவியலாக்கினானே அன்றி அதனால் அந்தக் குதிரைகளுக்கு ஒரு தீங்கும் நேரவில்லை என்பதாம்; இந்தக் குதிரைகள் வேதத்துடன் தொடர்புடையன என்பதை முன்னரே கண்டு வந்திருக்கிறோம். ''பூண்ட மொய் உளை வயப்பரி மொழிந்த முதுவேதம்'' என்பது இராமன் தேர்ஏறு படலம்.

Koviloor Digital Library

77. நீல்நிற நிருதர்கோன் எய்த, நீதியின்
சால்புடை மாதலி மார்பில் தைத்தன,
கோலினும், இலக்குவன் கோலமார்பின் வீழ்
வேலினும், வெம்மையே விளைத்த, வீரற்கு. (9863)

(நிருதர்கோன்-அரக்கர்வேந்தன்/இராவணன்; சால்பு-மேன்மைக் குணம்; கோலம்-அழகு; வெம்மை-பெருந்துன்பம்; வீரன்-இராமபிரான்; நீதி-முறைமை; கோல்-அம்பு)

நீலநிறம் கொண்ட அரக்கவேந்தனாகிய இராவணன் செலுத்திய அம்புகள், நீதிமுறை தவறாத மேன்மைக்குணம் படைத்த மாதலியின் மார்பில் தைத்தன. அவை எல்லாம், முன்பு தன் இளவல் இலக்குவன் அழகிய மார்பில் பதிந்த வேற்படை எத்தகைய துன்பத்தைத் தந்தனவோ, அதைக்காட்டிலும் மிகுதியான துன்பத்தை வீரனாகிய இராமபிரானுக்கு விளைவித்தது.

முன்பு வேலேற்ற படலத்தில் இலக்குவன் மேனியில் இராவணன் செலுத்திய வேற்படை எத்தகைய துன்பத்தை இராமபிரானுக்கு விளைவித்ததோ, அதைக்காட்டிலும் மிகுந்த துன்பத்தை இப்பொழுது இராவணன் மாதலிமேல் செலுத்திய அம்புகள் விளைவித்தன என்பதாம்.

78. மண்டில வரிசிலை வான வில்லொடும்
துண்ட வெண்பிறை எனத்தோன்ற, தூவிய
உண்டை வெங் கடுங்கணை ஒருங்கு மூடலால்
கண்டிலர் இராமனை, இமைப்புஇல் கண்ணினார் (9864)

(வரி-கட்டமைந்த; தூவுதல்-செலுத்துதல்; உண்டை-கூட்டம்; துண்டம்-பிளவுபட்ட; மண்டிலம்-வட்டம்/வளைவு)

வட்டமாக வளைக்கப்பட்டதும், கட்டமைந்ததும், வானவில்லைப் போன்றதும், பிளவுபட்ட வெள்ளிய பிறைச்சந்திரனைக் போன்றதுபோல் தோற்றமளிப்பதுமான வெப்பம்மிக்க கொடிய பிறைமுகக் கணைகளைக் கூட்டம் கூட்டமாக இராவணன் இராமபிரான்மேல் செலுத்தவும், அவையெல்லாம் ஒன்றுசேர்ந்து இராமபிரானை முழுவதுமாக மூடிவிட்டமையால், இமையாநாட்டமுடைய தேவர்களாலும்கூட இராமபிரானைக் காணமுடியவில்லை.

79. "தோற்றனனே இனி" என்னும் தோற்றத்தால்,
ஆற்றல்சால் அமரரும் அச்சம் எய்தினார்;
வேற்றவர் ஆர்த்தனர்; மேலும் கீழரும்
காற்று இயக்கு அற்றது; கலங்கிற்று அண்டமே. (9865)

Koviloor Digital Library

(தோற்றம்-எண்ணம்/காட்சி; வேற்றவர்-பகைவர்கள்; இனி-இப்பொழுது)

இராமபிரான் அவ்வாறு அம்புகளால் மூடப்பட்டிருப்பதைக் கண்ட வலிமையும் திறமையும்மிக்க தேவர்களும்கூட, ''இராமபிரான் இப்போது தோற்றுப்போனானே?'' என்று கருதிச் சற்று கலக்கம் அடைந்தார்கள்; ஆனால் அதனைக்கண்ட பகைவர்களாகிய அரக்கர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர்; தேவர்களில் ஒருவனாகிய, எப்போதும் இயங்கும் தன்மையுள்ள காற்றும், மேலும் கீழும் அசையாது ஒரே நிலையில் செயலற்று நின்றது. இவ்வண்டகோளமே நிலை கலங்கியது.

''தோற்றம்'' என்பது காட்சியால் விளைந்த எண்ணம் என்க.

80. அங்கியும் தன் ஒளி அடங்கிற்று; ஆர்கலி
பொங்கில, திமிர்ந்தன; விசும்பில் போக்குஇல
வெங்கதிர், தண்கதிர், விலங்கி மீண்டன;
மங்குலின் நெடும்புனல் மழை வறந்ததால். (9866)

(அங்கி-அக்னி; ஆர்கலி-கடல்; திமிர்தல்-அசைவற்றிருத்தல்; வெங்கதிர்-சூரியமண்டலம்; தண்கதிர்-சந்திரமண்டலம்; விலங்குதல்-விலகுதல்/ஒதுங்குதல்; மங்குல்-மேகங்கள்; போக்கு-இயக்கம்)

அதுகண்ட அக்னியும் தனது இயல்பான ஒளி குன்றிப்போனது; கடல் அலைகள் பொங்கி எழாமல், அசைவற்று நின்றன; வான்வெளியில் செல்லும் இயக்கம் இல்லாது வெப்பக் கதிர்களையுடைய சூரியனும், குளிர்ச்சி மிக்க கிரணங்களையுடைய சந்திரனும் தம் வழியில் நின்று ஒதுங்கித் திரும்பின; மேகங்கள் தாம் கொண்டிருக்கும் பெரும் நீரை மழையாகப் பொழியாமல் வறண்டுபோய் நின்றன.

முன்பாடலில் காற்று, நிலம் பற்றிக்கூறிய கவிஞன், இப்பாடலில் நெருப்பு, நீர், ஆகாயம் முதலிய ஐம்பெரும் பூதங்களும், சூரியன் சந்திரன் போன்றவையும் செயலற்று ஒரே நிலையில் நின்றன என்றுகூறி, அண்டகோளமே செயலற்று நின்றது என்பதைப் புலப்படுத்துகிறான். ''திமிர்தல்'' என்ற சொல் நமக்குப் புதிது. அசைவற்று நிற்பது என்பது பொருள். மரத்துப்போதல் என்பது மற்றொரு பொருள். இறைவன் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா, ஆகிய எட்டு வடிவுடையவன் என்று கூறுவது ஒரு மரபு. எனவே இறைவனே தனது இயக்கத்தைக் கட்டுப்படுத்தி நின்றான் என்பது கருத்து.

81. திசைநிலைக் கடகரி செருக்குச் சிந்தின;
அசைவில வேலைகள் ஆர்க்க அஞ்சின;
விசைகொடு விசாகத்தை நெருக்கி, ஏறினன்
குசன்; நெடு மேருவும் குலுக்கம் உற்றதே. (9867)

Koviloor Digital Library

(கடம்-மதம்; விசை-வேகம்; குசன்-அங்காரகன்/புதன்; குலுக்கல்-நடுங்குதல்/சலித்தல்)

எட்டுத்திசைகளிலும் நிலைத்து நின்று உலகத்தைக் காத்துவரும் மதம்கொண்ட திசையானைகள் தமது மதச்செருக்கைத் துறந்தன; கடல்கள் அசைவற்றிருப்பதோடு, முழக்கம் செய்வதற்கும் அச்சம்கொண்டு முழங்காதிருந்தன; அங்காரகன் இப்போது மிக்க வேகத்துடன் விசாக நட்சத்திரத்தை நெருக்கலானான்; அசைதலில்லாத நீண்ட மேருமலையும் நடுக்கம் உற்றது.

இராமபிரானின் முன்னோர் விசாகநட்சத்திரத்தினர். அங்காரகன் விசாக நட்சத்திரத்தில் ஆட்சி செலுத்தினால் அது தீமைபயக்கும் என்பது சோதிட நூல்கொள்கை. கவிஞன் தன் சோதிடக்கல்வியின் ஒரு பகுதியையும் இங்கு விளக்குவது காண்க. அங்காரகன் பொதுவாகப் போர்க்கோன் எனப் படுவான். அவன் இட்சுவாகு வம்சத்தினரின் பிறப்பு நட்சத்திரமான விசாகத்தை நெருக்கினான் என்பது ஒரு தீநிமித்தம் ஆகும். ''செருக்கு'' என்பது மதத்தால் உண்டாகும் மயக்கம் ஆகும்; கவிஞன் சோதிடம் சம்பந்தமான செய்திகளை ஆங்காங்கே கூறிப்போவதையும் நோக்குக.

82. வானரத் தலைவனும், இளைய மைந்தனும்,
ஏனை “அத்தலைவனைக் காண்கிலேம்” எனக்
கானகக் கரி எனக் கலங்கினார்; கடல்
மீன் எனக் கலங்கினார் வீரர் வேறு உளார். (9868)

குரக்கரசனாகிய சுக்கிரீவனும், அவனுடைய இளைமை பொருந்திய புதல்வனுமான அங்கதனும் மற்றுமுள்ள கரடிக்கூட்டத் தலைவனான சாம்பவன் முதலியோரும், தம் தலைவனான இராமபிரானைக் காண முடியவில்லையே என்று, காட்டு யானைகள் தமது தலைமை யானையைக் காணாது கலங்குவதுபோல் கலக்கமுற்றார்கள்; மற்றுமுள்ள வானர வீரர்கள் எல்லோரும், முன்பு சேதுபந்தன சமயத்தில் மலைகள் கொட்டப் பட்டதால் கடலில் இருந்த மீன்கள் எப்படிக் கலக்கம் உற்றனவோ, அதுபோலக் கலங்கினார்கள்.

''இளைய மைந்தன்'' என்பது இங்கே அங்கதனைக் குறிக்கும். இலக்குவனைக் குறிக்காது என்பது கருதத்தக்கது. ''ஏனையோர்'' என்றதால் கரடிப்படைத் தலைவன் சாம்பவன் எனப் பொருள் கொள்ளப் பட்டது.

Koviloor Digital Library

83. இராமபிரான் இராவணனின் தேர்க்கொடியை வீழ்த்துதல்

எய்தன சரம் எலாம் இமைப்பின் முந்துறக்
கொய்தனன் அகற்றி, வெங்கோலின் கோவையால்,
நொய்து என அரக்கனை நெருங்க நொந்தன
செய்தனன் இராகவன்; அமரர் தேறினார். (9869)

(முந்துற-முன்னதாகவே; கொய்தல்-அறுத்தல்; கோல்-அம்பு; கோவை-வரிசை; நொய்து-எளிதாக/விரைவாக; தேறுதல்-தெளிவடைதல்)

இராவணன் செலுத்திய அம்புகளை எல்லாம், இராமபிரான் ஒரு நொடிப்பொழுதிற்குள்ளாக, அவை தாக்குவதற்கு முன்பே, அவற்றை விலக்கி அறுத்துத் தள்ளினான்; இராமபிரான் தனது கொடிய அம்புகளின் வரிசையால், விரைவாகவும், எளிதாகவும், அரக்கனான இராவணனை நெருங்கிச் சென்று அவன் உடலும் உள்ளமும் வருந்தும்படி செய்தான். இதனைக்கண்ட தேவர்கள் இப்பொழுது சற்று ஆறுதல் பெற்றுத் தெளிவடைந்தார்கள்.

84. தூணுடை நிரை புரை கரம் அவைதொறும் அக்
கோணுடை மலைநிகர் சிலை இடை குறைய,
சேணுடை நிகர் கணை சிதறினன், உணர்வொடு
ஊணுடை உயிர்தொறும் உறைவுறும் ஒருவன். (9870)

(நிரை-வரிசை; புரை-ஒப்ப/போன்ற; குறைதல்-ஒடிந்துபோதல்; ஊண்-நுகர்ச்சி; கோண்-கோணல்/வளைவு; உணர்வு-நல்லறிவு/உணர்ச்சி; சேண்-தூரம்/தொலைவு)

தூணைப்போன்று வரிசையாக அமைந்துள்ள பருத்த இராவணனின் இருபது கைகளிலும் அவன் கொண்டிருக்கும் வளைதலையுடைய, மலையைப் போன்ற விற்கள் நடுவில் அறுந்து போகும்படி, மிகுந்த தூரத்திற்குச் செல்லுவதும், தனக்குத்தானே நிகரானதும், ஒளிமிக்கதுமான அம்புகளை, நல்லறிவோடும், நுகர்ச்சியுடைய உயிர்கள் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற திருமாலின் திருஅவதாரமான ஒப்பற்றவனான இராமபிரான், இராவணன்மேல் செலுத்தினான்.

''உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாமும் கண்ணன் எம்பெருமான்'' என்பது நம்மாழ்வார் பாசுரம். ''நெக்கு நெக்கு நினையவர் நெஞ்சுளே, புக்கு நிற்கும் பொன்னார் கடைப்புண்ணியன்'' என்பது தேவாரம். ''ஊனுடை உயிர்தொறும் உறைவுறும் ஒருவன்'' என்பது பரம்பொருளின் அந்தர்யாமித்வத்தைக் குறித்தது. சர்வவியாபி; சர்வாந்தர்யாமி என்பது பொருள். எள்ளினுள் எண்ணெய்போல் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் என்பது கருத்து. இராவணனுடைய

Koviloor Digital Library

கைகளுக்குத் தூண்களும், அவன் கையில் பிடித்திருக்கும் விற்களுக்கு மேருமலையும் உவமை. சிவபெருமான் மேருமலையை வில்லாகக் கொண்டு திரிபுரங்களை எரித்த வரலாறும் இங்கு நினைவுகூரத்தகும்.

85. கயில் விரிவு அற வரு கவசமும் உருவிப்
பயில் விரி குருதிகள் பருகிட, வெயிலொடு
அயில் விரி சுடுகணை கடவினன், அறிவின்
துயில்வுழி உணர்தரு சுடர்ஒளி ஒருவன். (9871)

(உழி-பொழுது; சுடர்ஒளி-பேரொளிப்பிழம்பு; ஒருவன்-ஒப்பற்றவன் /திருமால்/இராமபிரான்; கயில்-மூட்டுவாய்/கொக்கிவாய்; பயில்தல்-பொருந்தியிருத்தல்; வெயில்-ஒளி; அயில்-கூர்மை; கடவுதல்-செலுத்துதல்; விரி-மிக்க)

யோகநித்திரையில் இருக்கும்பொழுதே, தனது முற்றுணரும் அறிவினால் நிகழ்வு அனைத்தையும் உணர்ந்துகொள்ளும் இயல்புடைய பேரொளிப்பிழம்பின்சோதிவடிவினனானபரம்பொருளாகியதிருமாலின் அவதாரமான, ஒப்பற்றவனான இராமபிரான், இராவணன் மார்பின்மீது, அவனுடைய கவசத்தின் மூட்டுவாய் அறுபடாமல் உள்ளே ஊடுருவிச் சென்று, உடலின் கண் மிகுதியாகவுள்ள இரத்தத்தைப் பருகும் வண்ணம், ஒளியுடன் கூர்மையும் கூடிய நெருப்புப்போல் சுடுகின்ற மிகுதியான அம்புகளை செலுத்தினான்.

''கயில்'' என்பது நமக்குப் புதியசொல். மூட்டுவாய் என்பது பொருள். ''அறிவின் துயில்வுழி உணர்தரு சுடர்ஒளி ஒருவன்'' என்பது பாம்பணையின் மேல் அறிதுயில் கொண்டிருக்கும் திருமாலின் அவதாரமான இராமபிரானைக் குறிக்கும். அவன் சோதி வடிவானவன்; பேரொளிப் பிழம்பின் தோற்றத்தான் என்பதாம். ''ஒரு வினையும் இல்லார்போல் உறங்குதியோ உறங்காதாய்!'' என்பது ஆரண்யகாண்டம். ''சுடர்ஒளி'' என்பது ஒரு பொருட்பன்மொழி எனினும் நாம் பேரொளிப் பிழம்பு எனப் பொருள்கொண்டுள்ளோம்.

86. திசைஉறு துகிலது, செறிமழை சிதறும்
விசைஉறு முகிழது; விரிதரு சிரனொடு
இசைஉறு கருவியின் இனிது உறு கொடியைத்
தசைஉறு கணைகொடு தரை உற விடலும். (9872)

(துகில்-கொடிச்சீலை; செறி-நெருங்கிய; மழை-மேகம்; விசை-வேகம்; முகிழ்-குமிழ்/அரும்பு; சிரன்-சிரம்/தலை; கருவி-வீணை; தசை-புலால்/மாமிசம்; விடுதல்-தள்ளுதல்; விரி-அகன்ற) (குளகப்பாடல்)

திக்குகளின் எல்லைவரை பறக்கும் உயர்ச்சியுடைய கொடிச் சீலைகளும், நெருங்கிய மேகங்களைச் சிதறி ஓடச்செய்யும் வேகம்கொண்ட

Koviloor Digital Library

அரும்புபோன்ற உறுப்பினைக் கொண்டதும், அகன்ற தலையோடு, இசை பொருந்திய கருவியாகிய வீணையை அழகாக அமையப் பெற்றிருப்பது மாகிய இராவணனின் வீணைக்கொடியை, இராமபிரான் தன்னுடைய, பகைவர்களின் மாமிசம் பொருந்திய நுனியை உடைய அம்புகளைக் கொண்டு தரையில் தள்ளிவிடவும் - பாடல்தொடர்கிறது.

இராவணனின் தேர்க்கொடியில் தலைமட்டும் எழுதப் பெற்றிருப்ப தாக வான்மீகம் கூறுகிறது. கம்பன் தலையோடு இசைக்கருவியாகிய வீணையும் எழுதப்பட்டிருந்தது என்கிறான். முன்பு சடாயு உயிர்நீத்த படலத்திலும் இராவணன் கொடி வீணைக்கொடி என்றே குறிப்பிடப் பட்டிருப்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

87. படைஉக இமையவர் பருவரல் கெட, வந்து
இடைஉறு திசைதிசை இழுகுற, இறைவன்
அடையுறு கொடிமிசை அணுகினன்; அளவுஇல்
கடையுக முடிவு எழு கடல்புரை கலுழன். (9873)

(கடையுகம்-ஊழியிறுதிக்காலம்; புரை-ஒத்த/போன்ற; கலுழன்-கருடன்; உகுதல்-சிதறுதல்; இமையவர்-தேவர்கள்; பருவரல்-துன்பம்; கெடுதல்-நீங்குதல்; இடை-இடம்; இழுகுறுதல்-சுருங்கிப்போதல்; இறைவன்-இராமபிரான்)

ஊழியிறுதிக்காலத்தில் பொங்கிஎழும் அளவற்ற பெரிய கடல்போன்ற பெருந்தோற்றத்தையுடையவனான கருடன், இராவணனின் படைக ளெல்லாம் நிலைகுலைந்து சிதறி ஓடவும், தேவர்களின் துன்பம் எல்லாம் நீங்கும்படியும், மண்ணுலகிற்கு வந்து, இடம்அகன்ற எல்லாத்திக்குகளும் தன் வரவால் சுருங்கிப்போகும் வண்ணம், பரம்பொருளான இராம பிரானின் தேரில் அமைக்கப்பட்டிருக்கும் கொடிமீது வந்து சார்ந்தான்.

இராமபிரான் ஏறிவந்ததேர் இந்திரனுடையது. இந்திரனுக்குரிய இடிக்கொடி தேரில் இருந்தது. அதனை முன்பு இராவணன் அறுத்தெறிந்தான். அதனைக்கண்ட திருமாலின் வாகனமாகிய கருடன் உடனேதானே முன்வந்து அந்தக் கொடியில் அமர்ந்துகொண்டான். அவன் வரும்போது அவன் சிறகின் வேகத்தால் அரக்கர்படைகள் நிலைகுலைந்து சிதறிப்போயின. தேவர்கள் துன்பம் நீங்கினர்; திசைகள் எல்லாம் சுருங்கிப்போயின; ''திசைதிசை'' என்ற அடுக்கு பன்மைப் பொருளில் வந்தது. எல்லாத் திசைகளிலும் என்பது பொருள். இராமபிரான் தெய்வ நிலையில் இருக்கும்போது அவனுடைய கொடி கருடக்கொடி என்பதையும் இங்கு நினைவுகூர்தல் தகும்.

Koviloor Digital Library

88. பண்ணவன் உயர்கொடி என ஒரு பரவைக்
கண் அகன் உலகினை வலம்வரு கலுழன்
நண்ணலும், இமையவர், "நமது உறு கருமம்
எண்ணலம்; முனிவினின் இவறினன்" எனவே. (9874)

(ஒரு-ஒப்பற்ற; பரவை-கடல்; கண்அகன்-இடம் அகன்ற; கலுழன்-கருடன்; பண்ணவன்-தேவன்/இராமபிரான்; நண்ணல்-சேர்தல்; இமையவர்-தேவர்கள்; கருமம்-காரியம்; முனிவு-கோபம்; இவறுதல்-குறைதல்)

ஒப்பற்ற கடல்சூழ்ந்துள்ள இடம் அகன்ற இவ்வுலகினை வலம்வரும் இயல்புடைய கருடன், இராமபிரானின் உயர்ந்த கொடியில் வந்து அமர்ந்ததும், தேவர்கள் "இனிமேல் நமக்கு நிகழவேண்டிய காரியங் களைப் பற்றி நாம் எண்ணிக் கவலைப்பட வேண்டியதில்லை; கருடன் வந்துவிட்ட மகிழ்ச்சியால், இராமபிரானின் கோபம் குறைந்து போயிருக்கும்" என்று கருதினார்கள்.

"நமது உறு கருமம்" என்பது இராவணனை வெற்றி கொள்வதைக் குறித்தது.

89. ஆயது ஓர் அமைதியின், அறிவினின் அறிவான்
நாயகன் ஒருவனை நலிகிலது உணர்வான்,
ஏயினன், இருள்உறு தாமதம் எனும் அத்
தீவினை தருபடை தெறுதொழில் மறவோன். (9875)

(ஆயது-அத்தகையது; அமைதி-சமயம்/தருணம்/சூழல்; தெறுதல்-அழித்தல்; மறவோன்-வீரன்; நாயகன்-தலைவன்/இராமபிரான்; ஒருவன்-ஒப்பற்றவன்; நலிதல்-கட்டுப்படுத்துதல்/வருத்துதல்/தாக்குதல்; படை-அம்பு)

அந்தச் சமயத்தில் பிறரை அழிப்பதையே தொழிலாகக் கொண்ட வீரம்மிக்க பாவியான இராவணன், சிறந்த ஞானத்தால் மட்டுமே உணர்ந்து கொள்ளத்தக்கவனும், உலக உயிரினங்களுக்கெல்லாம் தலைவனுமான ஒப்பற்ற இராமபிரானைத் தான் செலுத்திய அம்புகள் எந்தத்தீங்கும் செய்து அவனை வருந்தச் செய்யவில்லை என்பதை நன்கு உணர்ந்து, இப்போது இருட்டைப்பரப்பும்தாமதாஸ்திரம் என்றுகூறப்படும்தீயவினைகளையே விளைவிக்கும் அம்புகளை இராமபிரான்மீது செலுத்தினான்.

"அறிவினின் அறிவான்" என்பது ஞானம்மிக்க ஞானியர்களாலேயே உணரத்தக்கவன் என்ற பொருளைத்தரும். "தமஸ்" என்ற வட சொல்லுக்குத்தாமதம்/இருள் என்று பொருள். இங்கே "இருள்உறு படை" என்பது தாமத அத்திரத்தைக் குறித்தது எனக்கொள்க. இங்கே ஒரு அருமையான கருத்து; தாமதக்கணை என்பது தீவினைதரும்; அறிவை

Koviloor Digital Library

மயங்கச்செய்யும்; இராவணன் தாமதக் குணத்தவன், அவன் அறிவினின் அறிவனாக விளங்கும் இராமபிரான்மீது இருள்பரப்பும் தாமதக் கணையைச் செலுத்தினான் என்பது நகைப்புக்குரியது என்பது கருதத் தக்கது. இதே ''அறிவினுக்கு அறிவு'' என்ற சொற்றொடரை முன்பும் ஆரண்யகாண்டம் கடவுள் வாழ்த்துப் பகுதியில் பயன்படுத்தியிருப்ப தையும் எண்ணுதல் தகும். ''ஆதிநாதர், அவர் எம் அறிவினுக்கு அறிவு அரோ!'' என்பது பாடல்பகுதி. அறிவு ஒளிப்பொருள்; தாமதக்கணை இருளை விளைவிப்பது; இராவணன் தாமதக்குணத்தவன் ஒளியை இருள் மறைக்கமுடியாது. அதுபோல இராமபிரானை இராவணனால் தாமதக் கணைகொண்டு வெல்லமுடியாது என்பது இப்பாடலின் மறைபொருள்.

90. தீமுகம் உடையன சில; முகம் உதிரம்
தோய்முகம் உடையன; சுரர்முகம் உடைய;
பேய்முகம் உடையன; பிலமுகம் நுழையும்
வாய்முகம் வரிஅரவு அனையன வருவ. (9876)

(சுரர்-தேவர்கள்; பிலம்-குகை; அரவு-பாம்பு; வரி-கோடு; முகம்-நுனி/ வாய்)

இராவணன் ஏவிய அந்தத் தாமதாத்திரத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற அம்புகளில் சில, நெருப்பைத் தன் நுனியில் கொண்டனவாகவும், சிலவற்றின் முகத்தில் இரத்தம் தோய்ந்தும் இருந்தன. சிலவற்றின் முகம் தேவர்களின் முகத்தைப் போன்றிருந்தது; இன்னும் சில பேய்முகத்தை உடையனவாய் இருந்தன. வேறுசில, குகையில் நுழையும் கோடுகொண்ட பாம்பின் முகம் போன்று இருந்தன. அந்த அம்புகளெல்லாம் இராம பிரானை நோக்கி வரலாயின.

அம்புகளில் சில தீமுகம், உதிரம் தோய்முகம், சுரர்முகம், பேய்முகம், வரி அரவு வாய்முகம் உடையனவாய்த் தோற்றமளித்தன என்பதாம்.

91. ஒருதிசை முதல், கடை ஒரு திசை அளவும்,
இருதிசை எயிறு உற வருவன; பெரிய;
கருதிய கருதிய புரிவன; கனலும்
பருதியை மதியொடு பருகுவ பகழி. (9877)

(கருதுதல்-நினைத்தல்; பருதி-சூரியன்; திசை-பக்கமுமாம்)

அந்த அம்புகள், வாயின் ஒரு திசையின் தொடக்கத்திலிருந்து, அதற்கு மாறான எதிர்த்திசையின் முடிவுவரை அகன்ற, இரண்டு பக்கத்திசை அளவு உள்ள கோரப்பற்களை உடையன. அளவில் மிகப்பெரியன; அதனை எய்தவன் நினைத்தபடி நினைத்த இடத்திற்குச் சென்று. அவன் நினைத்ததைச் செய்து முடிக்கவல்லன; நெருப்புப்போல் கொதிக்கும்

Koviloor Digital Library

தன்மையுள்ள சூரியனை, சந்திரனோடு சேர்த்து உண்ணும் வல்லமை கொண்டன.

அந்த அம்புகளின் ஆற்றல் பேசப்படுகிறது.

92. இருள் ஒருதிசை; ஒருதிசை வெயில் விரியும்;
சுருள் ஒருதிசை; ஒருதிசை மழை தொடரும்;
உருள் ஒருதிசை; ஒருதிசை உரும் முரலும்;
மருள் ஒருதிசை; ஒருதிசை சிலைவருடம். (9878)

(சுருள்தல்-சுழன்றடித்தல்; உருள்-சக்கரம்; உரும்-இடி; முரல்தல்-ஒலித்தல்; மருள்-மருட்சி; வருடம்-வர்ஷம்/மழை; சிலைவருடம்-கல்மழை; விரிதல்-பரவுதல்; சுழல்-சுழல்காற்று)

அந்தத் தாமதக்கணைகளால் திசையின் ஒரு பக்கத்தில் இருள் நிறைந்து காணப்படும்; மற்றொரு திசையில் வெளிச்சம் பரவியிருக்கும்; ஒரு திசையில் சுழல்காற்று வீசும்; மற்றொரு திசையில் மழை தொடர்ந்து பெய்துகொண்டிருக்கும்; ஒரு பக்கத்தில் சக்கரமும் மற்றொரு பக்கத்தில் இடியும் ஒலித்துக்கொண்டிருக்கும். ஒருபக்கத்தில் மருட்சி மிகுந் திருக்கும்; மற்றொரு திசையில் கல்மழை பொழிந்து கொண்டிருக்கும்.

தாமதக்கணையால் எட்டுத் திசைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்களை வெவ்வேறு எதிர்மாறான செய்கைகளால் குறித்தார் என்க. ''உருள்'' என்ற சொல்லுக்குச் சக்கரம் என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. வட்டமான வானவில் என்று பொருள் கொண்டால் இன்னும் சிறக்கும்; ஒருதிசை என்ற சொல் எல்லா அடியிலும் ஒரேபொருள் குறித்து வந்திருப்பதால் இப்பாடல் சொற்பொருட் பின்வருநிலையணியின் பாற்படும். தாமதக்கணைகள் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பல விளைவு களைத் தோற்றுவிக்கும் என்பது புலப்படுத்தப்படுகிறது.

93. இனையன நிகழ்வுற, எழுவகை உலகும்
கனை இருள் கதுவிட, உயிர்இடை கதற,
வினையுறு தொழிலிடை விரவலும் விமலன்
நினைவுறு தகையினன், நெறியுறு முறையின். (9879)

(இனையன-இத்தன்மையன; கனை-நெருங்கிய/அடர்ந்த/செறிந்த; கதுவுதல்-கவிந்துகொள்ளுதல்; வினை-செயல்; விரவுதல்-தோன்றுதல்; விமலன்-குற்றமற்றவன்/இராமபிரான்; தகைமை-தன்மை; நெறி-நேர்மை; தொழில்-தன்மை) (குளகப்பாடல்)

இவ்வாறு தாமதக்கணைகள் தமக்குரிய செயல்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது, ஏழு உலகத்து மக்களும் அடர்ந்த இருளால் சூழப்பட, அவர்கள்எல்லோரும் வாய்விட்டுக் கதறியழவும், செயலிழந்து

Koviloor Digital Library

நிற்கவும், குற்றமற்றவனான இராமபிரான் மட்டும் தன் நினைவு மயங்காது, நேர்மையான முறையில் - பாடல் தொடர்கிறது.

தாமதக்கணையினால் அடர்ந்த இருள் பரவியது; உலக உயிரினங்கள் எல்லாம் இருட்டில் செய்வதறியாது திகைத்து வாய்விட்டு அலற, இராமபிரான்மட்டும்சற்றும்அறிவு மயங்காது, என்னசெய்யவேண்டுமோ அதை நேர்மையான முறையில் - செய்தான் என அடுத்த பாடலில் முடியும். இராமபிரான் தாமதக்கணையினால் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை என்பது கருத்து.

94. கண்ணுதல் ஒருவனது அடுபடை கருதிப்
பண்ணவன் விடுதலும், அது நனி பருக;
எண்ணுறு கனலினொடு உணர்வுஎன, இமையில்
துண்ணெனும் நிலையினின் எறிபடை தொலைய; (9880)

(கண்ணுதல்-சிவபெருமான்; அடுதல்-கொல்லுதல்; கருதுதல்-தியானித்தல்/நினைத்தல்; பண்ணவன்-தேவன்/இராமபிரான்; எண்-எண்ணம்; துண்ணுதல்-திடுக்கிடுதல்/நடுங்குதல்; இமையில்-நொடிப் பொழுதில்; தொலைதல்-அழிதல்; உணர்வு-நனவு) (குளகப்பாடல்)

நெற்றிக்கண்களையுடைய ஒப்பற்ற சிவபெருமானது கொல்லும் தன்மையுள்ள பாசுபதாஸ்திரத்தை நினைத்து, தியானித்து, இராமபிரான் இராவணன்மீது செலுத்தியதும், அது அந்தத் தாமதஅத்திரத்தை நன்கு பருகியது. பலவகைப்பட்ட எண்ணங்கள் நிறைந்திருந்த கனவு, உணர்வு திரும்பிய நிலையில் நனவில் ஒன்றும் புரியாது திகைத்திருப்பதுபோல, ஒரு நொடிப்பொழுதில் அவன் வீசிய தாமத அத்திரம் அழிந்துபோனது.

கனவினின்று மீண்டு நனவுக்கு வரும்போது, கனவில் நிகழ்ந்தவை ஒன்றும் நினைவுக்கு வாராது மறைந்து விடுவதுபோல, இராவணன் செலுத்திய தாமத அத்திரமான கனவு, இராமபிரான் செலுத்திய சிவபெருமானது பாசுபதாஸ்திரம் ஏவியவுடன் அழிந்துபோனது என்பதாம். சிவபெருமான் ஒளிநிறைந்த அறிவைத்தரும் கடவுள், ஞானவடிவினன். எனவே இருள்பரப்பும் தாமத அத்திரத்தை அழிக்க, சிவபெருமானின் பாசுபத அத்திரமே வல்லது என்று தீர்மானித்து அதனையே ஏவினன் என்க. கனவில் காணும் பொருள் நனவில் மறைந்து போவதுபோல தாமதாத்திரம் அழிந்துபோனது என்பதாம். தாமதக்கணை இருள்நிறைந்த கனவு போன்றது. பாசுபதாஸ்திரம் ஒளிமிக்க நனவு போன்றது.

95. விரிந்த தன்படை மெய்கண்ட பொய்என வீய,
எரிந்த கண்ணினன், எயிற்றிடை மடித்த வாயினன், தன்
தெரிந்த வெங்கணை, கங்க வெஞ்சிறை அன்ன, திறத்த
அரிந்தமன் திருமேனிமேல் அழுத்தி, நின்று ஆர்த்தான். (9881)

Koviloor Digital Library

(வீதல்-அழிதல்; கங்கம்-பருந்து; தெரிதல்-ஆராய்தல்; அரிந்தமன்-பகைவரை வெல்லுபவன்/இராமபிரான்/வெற்றிவீரன்)

ஒன்று பலவாகப் பிரிந்து விரிந்துசென்ற இராவணன் செலுத்திய தாமத அஸ்திரமானது, மெய்யைக் கண்ட பொய் விலகிஓடுமாறு போல வீழ்ந்து அழிந்தது. அதனைக் கண்ட இராவணன் தீப்பொறி பறக்கும் கண்களை யுடையவனாய், பற்களுக்குள் மடிக்கப்பெற்ற வாயினை உடையவனாய் மிகுந்த சினம்கொண்டு, பருந்தின் சிறகுகள் போன்று அகன்றதும், வலிமைமிக்கதும், கொடியவையுமான அம்புகளை நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுத்து, பகைவர்களை வெல்லும் திறன் மிகுந்த இராமபிரானின் அழகிய உடம்பின்மீது அழுந்திப்படியுமாறு செலுத்தி வெற்றிக் களிப்பினால் ஆரவாரித்து நின்றான்.

''மெய்கண்ட பொய் என வீய'' என்பது அருமையானதோர் உவமை. சத்தியத்திற்குமுன் பொய் நிலைத்து நிற்காது என்பது கருத்து; ''அறத்தின் முன் நில்லாதாம் பாவம்'' என்று முன்பு கூறியதும் இங்கு நினைவுகூரத்தகும். பருந்தின் சிறகுகளை அம்புகளுக்குச் சிறகுகளாகக் கட்டிச் செலுத்துவதும் உண்டு. விரைவு கருதி, அவ்வாறு செய்வர். விரைந்து செல்லுவதற்கு இச்சிறகுகள் பயன்படும் என்பதாம். ''எரிந்த கண்ணும் எயிற்றிடை மடித்தவாயும்'' சினத்தின் மெய்வெளிப்பாடு.

96. ஆர்த்து, வெஞ்சினத்து ஆசுரப் படைக்கலம், அமரர்
வார்த்தை உண்டது, இன் உயிர்களால் மறலி தன் வயிற்றைத்
தூர்த்தது, இந்திரன் துணுக்குறு தொழிலது, தொடுத்து,
தீர்த்தன்மேல் செலத் துரந்தனன், உலகு எலாம் தெரிய. (9882)

(வார்த்தை-புகழ்; மறலி-இயமன்; தூர்த்தல்-நிரப்புதல்; துணுக்குறுதல் -நடுங்குதல்; தொழில்-செயல்; தீர்த்தன்-தூயவன்/இராமபிரான்; துரத்தல்-செலுத்துதல்; தெரிதல்-காணுதல்/பார்த்தல்)

தேவர்களின் புகழையெல்லாம் வாரி உண்டதும், இனிய உயிர்களால் இயமனுடைய வயிற்றை நிரப்பியதும், இந்திரனே அஞ்சுதற்குரிய செய்கை உடையதுமான, அசுரர்களின் படைக்கலத்தை, மிக்க சீற்றத்துடன் நாண் ஏற்றித் தொடுத்து, இவ்வுலக மக்களெல்லாம் காணும் வண்ணம், தூயவனாகிய இராமபிரான்மேல் செல்லுமாறு இராவணன் ஆரவாரித்துக் கொண்டு செலுத்தினான்.

''ஆசுரப்படைக்கலம்'' என்பது அசுரக்கணையைக் குறித்தது.

97. "நுங்குகின்றது, இவ்வுலகை ஓர் நொடிவரை" என்ன,
எங்கும் நின்றுநின்று அலமரும் அமரர் கண்டு இரைப்ப,
மங்குல் வல் உருமேற்றின் மேல் எரி மடுத்தென்ன,
அங்கி தன் நெடும்படை தொடுத்து, இராகவன் அறுத்தான். (9883)

Koviloor Digital Library

(நுங்குதல்-விழுங்குதல்; அலமருதல்-மனம் சுழல்தல்; இரைத்தல்-ஆரவாரித்தல்; மங்குல்-மேகம்; உரும்ஏறு-பேரிடி; எரி-நெருப்பு; மடுத்தல்-வைத்தல்/இடுதல்; அங்கி-அக்னி/நெருப்பு)

''இராவணன் செலுத்திய அசுரக்கணை இந்த உலகத்தை ஒரு நொடிப்பொழுதிற்குள் விழுங்கிவிடப் போகிறது'' என்று எல்லா இடங்களிலும் நின்று மனம் கலங்கிக் கொண்டிருந்த தேவர்கள், இப்போது மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்யும்வண்ணம், இராமபிரான் மேகத்தில் உள்ள வலிய பேரிடி ஒன்றின்மேல் நெருப்பைப் பதித்து வைத்தாற் போன்று, நீண்ட அக்னி அஸ்திரத்தைச் செலுத்தி, அந்த அசுரக்கணையை அறுத்தெறிந்தான்.

''நின்று நின்று'' என்ற அடுக்கு துயரமிகுதியை உணர்த்தியது. அசுரக்கணைக்கு உரும்ஏறு உவமை.

98. கூற்றுக்கோடினும் கோடல, கடல்எலாம் குடிப்ப,
நீற்றுக் குப்பையின் மேருவை நூறுவ, நெடிய
காற்றுப் பின்செலச் செல்வன, உலகு எலாம் கடப்ப,
நூற்றுக்கோடி அம்பு எய்தனன், இராவணன் நொடியில். (9884)

(கூற்று-இயமன்; கோடுதல்-மாறுபடுதல்/வழுவுதல்/பிறழ்தல்/தவறுதல்; நீறு-புழுதி; குப்பை-குவியல்; நூறுதல்-பொடியாக்குதல்; கடத்தல்-வெல்லுதல்)

இயமன் தன் கொலைத்தொழிலில் தவறினாலும், ஒருபோதும் இலக்குத்தப்பாதனவும், கடல்நீரைஎல்லாம் வற்றிப்போகும்படி குடிக்கும் ஆற்றல் படைத்தனவும், மேருமலையையே சிறு புழுதித்திரள்போலப் பொடிப்பொடியாக்குவனவும், நீண்ட காற்றுக்கூட தனக்குப்பின்னே வரும்படி, முன்னே விரைந்து செல்லக்கூடியனவுமான கோடிக்கணக்கான அம்புகளை ஒரு நொடிப்பொழுதில், இராவணன் இராமபிரான்மீது ஏவினான்.

இராவணன் செலுத்திய அம்புகளின் தன்மை விளக்கப்பட்டது. ''நூற்றுக்கோடி'' என்பது அளவற்ற என்ற பொருளைத்தரும்.

99. "என்ன கைக் கடுப்போ?" என்பர் சிலர்; சிலர், "இவையும்
அன்ன மாயமே; அம்புஅல;" என்பர்; "அவ்வம்புக்கு
இன்னம் உண்டு கொல் இடம்" என்பர் சிலர்; "இகல்போர்
முன்னம் இத்தனை முயன்றிலனாம்" என்பர், முனைவர். (9885)

(கடுப்பு-விசை/வேகம்/விரைவு; இகல்-மாறுபாடு; முனைவர்-வீரர்/முனிவர்/தேவர்கள்)

Koviloor Digital Library

அதனைக்கண்ட முனிவர்களில் சிலர் ''இவன் கைவேகம் எவ்வளவு?'' என்று வியந்து கூறுவார்கள்; இன்னும் சிலர் இவை அம்புகள் அல்ல, முன்புபோல் ஏதோ மாயத்தால்தான் நடக்கிறது'' என்பார்கள்; இன்னும் சிலர் ''இந்த அம்புகளையும் வைத்துக் கொள்ள இவ்வுலகத்தில் இன்னும் இடம் இருக்கிறதோ?'' என்பார்கள்; வேறுசிலர் இராவணன் இதற்குமுன் எந்த மாறுபட்ட போரிலும் இவ்வளவு முயற்சிசெய்து போரிட்ட தில்லையே?'' என்று வியப்பார்கள்.

இவை இராவணன்செலுத்திய அம்பின்வேகத்தைக்கண்ட முனிவர்கள் வியந்து கூறியவையாம்.

100. மறைமுதல் தனிநாயகன், வானினை மறைத்த
சிறையுடைக் கொடுஞ்சரம் எலாம் இமைப்பு ஒன்றில் திரிய,
பொறை சிகைப் பெருந்தலை நின்றும் புங்கத்தின் அளவும்
பிறைமுகத் தடங்கடுங் கொடுஞ்சரம் கொண்டு பிளந்தான். (9886)

(மறை-வேதம்; தனிநாயகன்-ஒப்பற்றதலைவன்/இராமபிரான்; திரிதல்-நிலைகெடுதல்; பொறை-பாரம்; சிகை-உச்சி; புங்கம்-நுனி; தலை-அடிப்பாகம்)

வேதமுதல்வனும், வேதங்களால் சிறப்பாகப் போற்றப்படுபவனும், ஒப்பற்ற தலைவனுமான இராமபிரான், இராவணன் செலுத்திய, ஆகாயத்தை மறைக்கின்ற சிறகுகளையுடைய கொடிய அம்புகளை யெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் நிலைகுலையச் செய்து, தனது பெரிய, கொடுமையானபிறைமுகக் கணைகொண்டு, அதனுடைய பாரம் நிறைந்த உச்சியைக் கொண்ட பெரிய அடிப்பாகம் முதல்நுனிவரை நன்றாகப் பிளந்துபோகும்படி, ஏவி அழித்தொழித்தான்.

''மறைமுதல்தனிநாயகன்'' என்பது வேதமுதற்காரணனாகிய திருமாலின் அவதாரமான ஒப்பற்ற இராமபிரானைக் குறித்தது. சிகை என்பது அம்பின் தலைப்பாகம். புங்கம் என்பது அம்பின் நுனிப்பாகம் ஆகும். ''பிறைமுகத் தடங் கடுங்கொடுஞ்சரம்'' என்பது அர்த்த சந்திர பாணத்தைக் குறித்தது.

101. அயன் படைத்த பேரண்டத்தின் அருந்தவம் ஆற்றி,
பயன் படைத்தவர் யாரினும் படைத்தவன், "பல்போர்
வியன் படைக்கலம் தொடுப்பென் நான் இனி" என விரைந்தான்;
மயன் படைக்கலம் துரந்தனன், தயரதன் மகன்மேல். (9887)

(அயன்-பிரமன்; வியன்-பெருமை)

பிரமதேவனால் படைக்கப்பட்ட இவ்வண்ட கோளத்திலேயே, செய்தற்கரிய கடுந்தவத்தை நிறைவாகச் செய்து, அதனால் பயன்

Koviloor Digital Library

பெற்றவர்கள் அனைவருள்ளும் பெரும் பயன்பெற்றவனான இராவணன், ''நான் இப்போது, பல போர்களில் பயன்படுத்திய பெருமைக்குரிய படைக்கலத்தைச் செலுத்தப்போகிறேன்'' என்று கூறிக்கொண்டே தன் மனைவி மண்டோதரியின் தந்தையான மயன்தந்த படைக்கலத்தைத் தசரதனின் புதல்வனான இராமபிரான்மேல் விரைந்து, செலுத்தினான்.

முன்பு ''தீயவை யாவினும் சிறந்த தீயாள்'' என்று கைகேயியை இகழ்ந்து குறிப்பிட்டதற்கு மாறாக, இங்கு இராவணனை ''அருந்தவம் ஆற்றிப் பயன்படைத்தவர் யாரினும் படைத்தவன்'' என்று சிறப்பித்தார் என்க. இராவணன் வரமும், வாழ்நாளும், வாளும் பெறப்பட்ட அருந்துயரை உத்தரகாண்டம் இன்னும் விளக்கமாகப் பேசுகிறது. இந்தப் படைக்கலத்தை இராவணன் பல போர்களில் பயன்படுத்தி வெற்றிகொண்டிருப்பதால் இப்போது, ''பல்போர்வியன் படைக்கலம் தொடுப்பென் நான் இனி'' என்றான் என்க. மயன் மண்டோதரியின் தந்தை. தெய்வத்தச்சன். இலங்கையை நிர்மாணித்தவன்.

102. "விட்டனன் விடு படைக்கலம் வேரொடும் உலகைச்
சுட்டனன்" எனத் துணுக்கமுற்று அமரரும் சுருண்டார்;
"கெட்டனம்" என வானரத் தலைவரும் கிழிந்தார்;
சிட்டர்தம் தனித்தேவனும், அதன் நிலை தெரிந்தான். (9888)

(வேர்-அடி; துணுக்கம்-நடுக்கம்; கிழிதல்-மனம் உடைதல்; சிட்டர்-சிறந்தவர்கள்/உயர்ந்தவர்கள்; தனி-ஒப்பற்ற; தேவன்-இராமபிரான்; நிலை-தன்மை/இயல்பு; தெரிதல்-அறிந்துகொள்ளுதல்; கெடுதல்-அழிந்துபோதல்)

அவ்வாறு இராவணனால் ஏவப்பட்ட மயன்கணையைக் கண்ட தேவர்கள், ''இவன் செலுத்திய இந்தப் படைக்கலத்தால் இவ்வுலகத்தை வேரோடும் சுட்டுப் பொசுக்கிவிடுவான் போலும்!'' என்று அச்சமுற்றுச் சுருண்டு விழுந்தார்கள்; வானரத்தலைவர்களோ, ''நாம் இப்போது அழிந்துபடுவோம்'' என்று மனமுடைந்து திசைக்கொருவராகப் பிரிந்து சிதறிப்போனார்கள்; உயர்ந்தவர்கள் போற்றித் தொழுகின்ற ஒப்பற்ற கடவுள் தன்மைபெற்ற இராமபிரானும், இந்தப் படைக்கலத்தின் உண்மைத் தன்மையை நன்கு புரிந்துகொண்டான்.

''சிட்டர்'' என்ற சொல் சிரேஷ்டர் என்ற வடசொல்லின் திரிபு. உயர்ந்தவர்கள் என்பது பொருள். ''சிட்டர் செயல் செய்திலை'' என்பது கும்பகருணன் கூற்று. ''கிழிந்தார்'' என்பது நெஞ்சு பிளந்ததுபோலத் துன்பம் அடைந்தனர் என்ற பொருளைத்தரும்.

Koviloor Digital Library

103. "பாந்தள் பல்தலைப் பரப்பு அகன் புவியிடைப் பயிலும்
மாந்தர்க்கு இல்லையால் வாழ்வு" என வருகின்ற அதனைக்
காந்தர்ப்பம் எனும் கடுங்கொடுங் கணையினால் கடந்தான்,
ஏந்தல் பல்மணி எறுழ்வலித் திரள்புயத்து இராமன். (9889)

(பாந்தள்-பாம்பு/ஆதிசேஷன்; புவி-பூமி; பயில்தல்-பொருந்தியிருத்தல்; மாந்தர்-மக்கள்; எறுழ்வலி-மிக்கவலிமை; ஏந்தல்-உயர்ந்த; கடத்தல்-வெல்லுதல்/அழித்தல்)

''ஆதிசேஷன் என்னும் பாம்பு தனது ஆயிரம் என்று சொல்லப்படுகின்ற பரந்து விரிந்து அகன்ற தலையின்மீது தாங்கிக்கொண்டிருக்கும் இப் பூமியில் பொருந்தி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு இனிமேல் வாழ்வு இல்லை'' என்று கருதும்படி விரைந்து வருகின்ற மயன்கணையை, உயர்ந்த பலவகைப்பட்ட இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தோள்வளையணிந்த, மிக்க வலிமையுடைய திரண்ட தோள்களையுடைய இராமபிரான் கந்தருவக்கணை என்ற கடுமையான கொடிய அம்பினைச் செலுத்தி வென்று அழித்தான்.

ஆதிசேஷன் என்னும் பாம்பு தனது ஆயிரம் தலைமுடிகளால் இப்பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிறது என்பது புராண வரலாறு. ''சகஸ்ரபணாமனி மண்டல மண்டிதே'' என்பது வேதம். ''எறுழ்வலி'' என்பது ஒரு பொருட்பன்மொழி.

104. "பண்டு நான்முகன் படைத்தது, கனகன் இப்பாரைத்
தொண்டு கொண்டது; மது எனும் அவுணன் முன் தொட்டது,
உண்டு இங்கு என்வயின்; அது துரந்து உயிர் உண்பென்" என்னா,
தண்டு கொண்டு எறிந்தான், ஐந்தொடு ஐந்துடைத் தலையான். (9890)

(நான்முகன்-பிரமன்; பண்டு-முன்பு; கனகன்-இரணியன்; பார்-பூமி; தொண்டு-கருவி; தொட்டது-கொண்டிருந்தது; என்வயின்-என்னிடத்து; துரத்தல்-எறிதல்/வீசுதல்; ஐந்தொடு ஐந்து-பத்து; தண்டு-தண்டாயுதம்/கதாயுதம்)

''முன்பு பிரமதேவனால் படைக்கப்பட்டதும், இரணியாக்கன் இந்தப்பூமியைத் தன் அடிக்கீழ் கொண்டுவரக் காரணமாயிருந்ததும், மது என்னும் அசுரன் முன்பு கைக்கொண்டிருந்ததும், ஆகிய தண்டாயுதம் இப்போது என்கையில் இருக்கிறது. இதனைக் கொண்டு நான் பகைவனாகிய இராமபிரானது உயிரைக் குடிப்பேன்'' என்று பத்துத் தலைகளையுடைய இராவணன் கூறிக்கொண்டு அந்தத் தண்டாயுதத்தைக் கைகளில் ஏந்தி இராமபிரான்மேல் வீசி எறிந்தான்.

''கனகன்'' என்பது ஹிரண்யன் என்ற வடசொல்லின் தமிழாக்கம். ஹிரண்யம்-பொன்/கனகம். திருமாலின் வராக அவதாரம் பேசப்

Koviloor Digital Library

படுகிறது. இந்தத் தண்டாயுதத்தை மது என்னும் அசுரன் இராவணனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான் என்ற ஒரு குறிப்பும் கிடைக்கிறது.

105. தாருகன் பண்டு தேவரைத் தகர்த்தது, தனிமா
மேரு மந்தரம் புரைவது, வெயில் அன்ன ஒளியது;
ஓர் உகம்தனின் உலகம் நின்று உருட்டினும் உருளாச்
சீர் உகந்தது; நெரித்தது தானவர் சிரங்கள். (9891)

(பண்டு-முன்பு; தகர்த்தல்-தோற்கடித்தல்/முறியடித்தல்; தனி-ஒப்பற்ற; புரைதல்-ஒத்திருத்தல்; வெயில்-சூரியன்; சீர்-சிறப்பு; தானவர்-அசுரர்; நெரித்தல்-நசுக்குதல்)

முன்பு தாருகாசுரன் தேவர்களைத் தோற்கடிக்கப் பயன்படுத்தப் பட்டதும், ஒப்பற்ற பெரிய மேருமலை, மந்தரமலை போன்று வடிவத்தில் ஒத்திருப்பதும், சூரியனைப் போன்று மிக்க ஒளி படைத்ததும், ஒரு யுககாலம் முழுவதும் உலகத்துள்ளோர் அனைவரும் சேர்ந்து உருட்டினாலும் உருட்டமுடியாத சிறப்புப் பெற்றதும், அசுரர்களின் தலைகளைச் சிதைத்ததுவுமான தண்டாயுதம் - பாடல் தொடர்கிறது.

தாருகாசுரன்தான் முருகப்பெருமானுடன் போரிட்டுத் தொலைந்தவன். இவன் பற்றிய செய்திகள் கந்தபுராணத்தில் மிக விரிவாகப் பேசப் பட்டிருக்கிறது. இங்கு தண்டாயுதத்தின் சிறப்புப் பேசப்படுகிறது.

106. பசும்புனல் பெரும் பரவை பண்டு உண்டது; பனிப்புற்று
அசும்பு பாய்கின்றது; அருக்கனின் ஒளிர்கின்றது; அண்டம்
தசும்புபோல் உடைந்து ஒழியும் என்று அனைவரும் தளர,
விசும்பு பாழ்பட, வந்தது மந்தரம் வெருவ. (9892)

(பரவை-கடல்; பனி-குளிர்ச்சி; அசும்பு-நீர்க்கசிவு; அருக்கன்-சூரியன்; தசும்பு-குடம்; விசும்பு-ஆகாயம்; வெருவுதல்-அஞ்சுதல்; பசும்-பசிய)

பசிய, புதிய நீர்நிரம்பிய பெரிய கடலை முன்பு தானே பருகியதும், குளிர்ச்சிமிக்க நீர்க்கசிவு ஒழுகுகின்றதும், சூரியனைக் காட்டிலும் ஒளிமிக்கதுமாகிய அந்தத் தண்டாயுதம், இந்த அண்டகோளமே ஒரு பானைபோல் உடைந்து அழிந்து போய்விடுமோ என்று உலகத்தார் எல்லோரும் வருந்திச் சோர்வுறுமாறும், வானத்தில் உள்ள பொருள்களை யெல்லாம் அழித்து அதனைப் பாழ்படச் செய்யுமாறும், மந்தரமலையே அதன் வேகத்தைக் கண்டு அஞ்சுமாறும், இராமபிரான் எதிரே பாய்ந்து வந்தது.

கடலின் நீருக்கு நிறம் இல்லை. நீலநிறமாகவும், பச்சை நிறமாகவும், வெள்ளை நிறமாகவும் தோற்றம் தரும். எனினும் அதற்கென்று தனியானதோர் நிறம் கிடையாது என்பது விஞ்ஞானிகளின் கருத்தும்கூட.

Koviloor Digital Library

''நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும்'' என்பது குறள்-452. முன்பாடலில் சூரியனைப்போல் ஒளிமிக்கது என்று கூறிய கவிஞன், இந்தப் பாடலில் சூரியனைக்காட்டிலும் ஒளிமிக்கு விளங்குவது என்று கூறியிருப்பது காணத்தகும். இவ்விரண்டு பாடல்களிலும் இராவணன் செலுத்திய தண்டாயுதத்தின் பெருமை பேசப்படுகிறது.

107. கண்டு, "தாமரைக்கண்ணன் அக்கடவுள் மாக்கதையை
அண்டர் நாயகன் ஆயிரம் கண்ணினும் அடங்காப்
புண்டரீகத்தின் முகை அன்ன புகர் முகம் விட்டான்;
உண்டை நூறுடை நூறுபட்டுளது என உதிர்த்தான். (9893)

(கடவுள்-தெய்வத்தன்மை; கதை-தண்டாயுதம்; அண்டர் நாயகன்-தேவர் தலைவன்/இந்திரன்; புண்டரீகம்-தாமரை; முகை-அரும்பு; புகர்-அம்பு/ஒளி; நீறு-பொடி/துகள்; நூறுதல்-அழித்தல்)

செந்தாமரை மலர்போலும் அழகிய கண்களையுடைய இராமபிரான், அந்தத் தெய்வத்தன்மை பொருந்திய பெரிய தண்டாயுதம் தன்னை நோக்கி வருவதைப் பார்த்து தேவர்கள் தலைவனாகிய தேவேந்திரனின் ஆயிரம் கண்களுக்குக்கூட அடங்காத அழகினையுடைய தாமரைமலரின் மொட்டுப்போன்று ஒளிவீசும் முகத்தையுடைய ஒரு அம்பினைச்செலுத்தி, அது அழிந்து சுக்கு நூறாகப் பொடிப்பொடியாகப் போகும்படி உதிரச்செய்தான்.

108. "தேய நின்றவன், சிலைவலம் காட்டினான்; தீராப்
பேயை என்பல துரப்பது? இங்கு இவன் பிழையாமல்
ஆய தன் பெரும் படையொடும் அடுகளத்து அவிய
மாயையின் படை தொடுப்பென்" என்று இராவணன் மதித்தான். (9894)

(தேய்தல்-அழிதல்; வலம்-வலிமை; தீர்த்தல்-அழித்தொழித்தல்; துரப்பது-செலுத்துவது; பிழைத்தல்-தப்புதல்; அடுகளம்-போர்க்களம்; அவிதல்-அழிதல்; மதித்தல்-எண்ணுதல்; ஆய-அமைந்த)

''நம்மால் அழிதற்குரியவனான நம் பகைவன் இந்த இராமபிரான், நாம் செலுத்திய தண்டாயுதத்தைக் கண்டும் அஞ்சாது எதிர்நின்று, தன் போராண்மையை நமக்குக் காட்டிக் கொண்டு நிற்கின்றான். இவனை அடியோடு அழிக்கமுடியாத இந்தப் பேய் போன்ற படைக்கலங்களைத் தொடுத்து விடுவதால் என்ன பயன்? இப்பொழுது இவனும், இவனுக்கென அமைந்த பெரும்சேனைக் கூட்டமும் தப்பித்துப்போக முடியாதபடி இந்தப் போர்க்களத்தில் அவர்கள் எல்லோரும் அழிந்துபோகும் வண்ணம் மாயா அத்திரத்தைச் செலுத்தப்போகிறேன்'' என்று இராவணன் சிந்திக்கலானான்.

Koviloor Digital Library

109. பூசனைத் தொழில் புரிந்து, தான் முறைமையின் போற்றும்
ஈசனைத் தொழுது, இருடியும் சந்தமும் எண்ணி,
ஆசை பத்தினும், அந்தரப்பரப்பினும் அடங்கா
வீசினன் செல, வில்இடைத் தொடைகொடு விட்டான். (9895)

(ஈசன்-சிவபெருமான்; இருடி-முனிவன்/ரிஷி; சந்தம்-மந்திரம்; ஆசை-திசைகள்; அந்தரம்-வானம்)

இராவணன் அந்த மாயாஸ்திரத்திற்கு உரிய முறையில் பூசனைகள் செய்து அருச்சித்து, தான் எப்பொழுதும் வணங்குகின்ற வழிபடு கடவுளாகிய சிவபெருமானை வணங்கித் தொழுது, அவ்வத்திரத்திற்குரிய முனிவரையும், அதற்குரிய மந்திரங்களையும் முறையாக உச்சரித்து, அவ்வம்பு, பத்துத் திசைகளின் எல்லைக்குள்ளோ, ஆகாயப் பரப்புக் குள்ளோ அடங்கிப் போகாவண்ணம், எல்லா இடங்களிலும் செல்லுமாறு அம்பினைப் பூட்டி, நாணேற்றி, வில்லில் தொடுத்து இராமபிரான்மேல் செலுத்தினான்.

ஒரு படைக்கலத்தைச் செலுத்துமுன் செய்யவேண்டிய நியதிகள் இங்கும் இப்பொழுது விளக்கப்படுகின்றன. ''ரிஷி'' என்ற வடசொல் ''இருடி'' எனப்பட்டது என்க. பத்துத் திசைகளிலேயே ஆகாயமும் அடங்கும் என்றாலும், ''அந்தரப் பரப்பு'' என்பது இங்கே ஆகாயத்திற்கும் அப்பாற்பட்ட அண்ட வெளியினைக் குறிக்கும் எனக்கொள்க.

110. மாயம் பொத்திய வயப்படை விடுதலும், வரம்புஇல்
காயம் எத்தனைஉள, நெடுங்காயங்கள் கதுவ,
ஆயம் உற்று எழுந்தார்என, ஆர்த்தனர்; அமரில்
தூய கொற்றவர் சுடுசரத்தால், முன்பு துணிந்தார். (9896)

(வயம்-வெற்றி; அமர்-போர்; துணிதல்-துண்டிக்கப்படுதல்; வரம்பு-அளவு; காயம்-உடம்பு/புண்; கதுவுதல்-ஒட்டிக்கொள்ளுதல்; பொத்துதல்-நிறைந்திருத்தல்)

மாயமும் தந்திரமும் நிறைந்த வெற்றிபொருந்திய அந்த மாயக் கணையை இராவணன் இராமபிரான்மீது செலுத்திய அளவில், முன்பு தூய்மையான வெற்றிபொருந்திய அறப்போரில் சுடுகின்ற அம்புகளால் இராமஇலக்குவரால் உடல் துண்டிக்கப்பட்டு, உயிரிழந்து, போர்க் களத்தில் பிணமாகக் கிடந்த அரக்கர்கள் அனைவரும், எல்லையில்லாத உடம்புகள் எத்தனை உள்ளனவோ, அத்தனையும் முன்பு தம் உடல்களில் புண் ஒட்டிக் கொண்டிருந்ததைப் போலவே அதை ஒரு பொருட்டாகக் கருதாமல் இப்பொழுது உயிர்பெற்று எழுந்து நின்று ஆரவாரம் செய்வது போலத் தோன்றிற்று.

Koviloor Digital Library

மாய அஸ்திரம், முன்பு இறந்துபட்ட அரக்கர்கள் இப்பொழுது உயிர்பெற்று எழுந்துவந்து ஆர்ப்பரிப்பதுபோல ஒரு மாயத்தோற்றத்தைக் காட்டிற்று என்பதாம்.

111. இந்திரற்கு ஓர் பகைஞனும், அவற்கு இளையோரும்,
தந்திரப் பெரும் தலைவரும், தலைத் தலையோரும்,
மந்திரச் சுற்றத்தவர்களும், வரம்புஇலர் பிறரும்,
அந்தரத்தினை மறைத்தனர்; மழைஉக ஆர்ப்பார். (9897)

(தந்திரம்-சேனை; தலையோர்-தலைமையாக அமைந்தோர்; உகுதல்-சிதறுதல்; அந்தரம்-வானம்)

இந்திரனுக்குப் பகைவனான ஒப்பற்ற இந்திரசித்தும், அவன் தம்பியரான அதிகாயன், அக்ககுமாரன், கும்பன், நிகும்பன் முதலியோரும் பெரிய சேனைத்தலைவர்களும், மற்றும் பலவிதமாகத் தலைமை யேற்றிருப்பவர்களும், மகோதரன் முதலிய அமைச்சர் பெருமக்களும், எண்ணிறந்த அரக்கர்கள் பலரும், வானத்தையே மறைத்துக்கொண்டு, மேகம் சிதறிவிழும் வண்ணம் ஆரவாரம் செய்தார்கள்.

''அந்தரத்தினை மறைத்தல்'' என்பது விண் எலாம் நிரம்பி நிற்றலைக் குறிக்கும்.

112. குடப் பெரும் செவிக்குன்றமும், மற்றுள குழுவும்,
படைத்த மூல மாத் தானையும், முதலிய பட்ட
விடைத்து எழுந்தன, யானை, தேர். பரி, முதல் வெவ்வேறு
அடைத்த ஊர்திகள் அனைத்தும் வந்து, அவ்வழி அடைத்த. (9898)

(பட்ட-இறந்துபோன; குன்றம்-மலை; குழு-கூட்டம்; படைத்தல்-பெற்றிருத்தல்; விடைத்தல்-செருக்குக்கொள்ளுதல்; அடைதல்-நெருங்கி யிருத்தல்; ஊர்தி-வாகனங்கள்)

குடம்போன்ற பெரிய காதுகளும், மலைபோன்ற தோற்றமும் உடைய கும்பகருணனும், அவனுடன் வந்து முன்பு இறந்துபட்ட அரக்கவீரர் கூட்டங்களும், இராவணன் தனக்கெனப் பெற்றிருந்த மூலபலப் படைகளும், இப்பொழுது செருக்குக்கொண்டு எழுந்து நின்றன. யானை, தேர், குதிரை, ஆகிய பலவகைப்பட்ட வாகனங்கள் அனைத்தும் நெருங்கிவந்து அந்த இடத்தில் திரண்டு நின்றன.

''குடப் பெருஞ் செவிக் குன்றம்'' என்பது உருவகம். கும்பகருணனது பெயர்க்காரணம் பேசப்படுகிறது.

Koviloor Digital Library

113. ஆயிரம் பெருவெள்ளம் என்று அறிஞரே அறைந்த,
காய்சினப் பெருங் கடற்படை களப்பட்ட எல்லாம்,
ஈசனின் பெற்ற வரத்தினால் எய்திய என்ன,
தேசம் முற்றவும் செறிந்தன, திசைகளும் திகைப்ப. (9899)

(களம்-போர்க்களம்; பட்ட-இறந்துபோன; அறைதல்-அளவிட்டுக் கூறுதல்; காய்தல்-கொல்லுதல்; ஈசன்-சிவபெருமான்; எய்துதல்-மீண்டு வருதல்; தேசம்-உலகம்; செறிதல்-நெருங்கியிருத்தல்)

முன்பு போர்க்களத்தில் இறந்துபட்ட, ஆயிரம் வெள்ளம் என்று கற்றறிந்த அறிஞர்களால் அளவிட்டுக் கூறப்பட்ட, கொல்லும் சினத் தன்மையுடைய பெரிய கடல்போன்ற சேனைகள் அனைத்தும், இராவணன் சிவபெருமானிடமிருந்து பெற்ற வரத்தின் காரணமாக இப்போது உயிர்பெற்று மீண்டும் எழுந்தன என்று கருதும்படியும், எட்டுத் திசைகளில் உள்ளவர்களும் திகைக்கும்படியும், உலகம் முழுவதும் நெருங்கி நின்றனர்.

''ஆயிரம் பெரு வெள்ளம்'' என்று அரக்கர்சேனை எல்லா இடங்களிலும் கூறப்பட்டு வருவதை எண்ணுக. ''ஈசன்'' என்பது சிவபெருமானைக் குறிக்கும். ''ஈறிலாதவன் ஈசன் ஒருவனே'' என்பது சைவசித்தாந்தக் கொள்கை. ''தேசம்'' இங்கே உலகம் என்ற பொருளைத்தரும்.

114. சென்ற எங்கணும், தேவரும் முனிவரும் சிந்த,
"வென்றது எங்களைப்போலும்; யாம் விளிவதும் உளதே?
இன்று காட்டுதும்; எய்துமின்; எய்துமின்" என்னா,
கொன்ற கொற்றவர்தம் பெயர் குறித்து அறைகூவி. (9900)

(விளிவது-இறந்துபோவது; எய்துமின்-வாருங்கள்; கொற்றவர்-வெற்றிவீரர்; எங்கணும்-எல்லா இடங்களிலும்; அறைகூவுதல்-போருக்கு அழைத்தல்)

அந்த மாய அத்திரத்தால் அவ்வாறு உயிர்பெற்றெழுந்த சேனை வீரர்கள் தம்மைக் கொன்றழித்த வெற்றிவீரர்களின் பெயர்களைக் குறிப்பாகக் கூவிக்கொண்டு அவர்களை நோக்கி, ''நீங்கள் எங்களை வென்று கொன்றுபோட்டீர்களா? நாங்கள் இறப்பது என்பதும் உண்டோ? நீங்கள் வென்றதும், நாங்கள் இறந்ததும் பொய். இப்பொழுது எங்கள் வல்லமையைக் காட்டுகிறோம்; எங்களுடன் போர்புரிய வாருங்கள் வாருங்கள்'' என்று அறைகூவிக்கொண்டு தேவர்களும் முனிவர்களும் அஞ்சி ஓடும்படி எல்லா இடங்களிலும் சென்று நிறைந்தனர்.

''உளதோ'' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. இல்லை என்ற பொருளைத்தரும். ''எய்துமின் எய்துமின்'' என்ற அடுக்கு விரைவு பற்றி வந்தது.

Koviloor Digital Library

115. பார் இடந்து கொண்டு எழுந்தன பாம்பு எனும் படிய,
பாரிடம் துனைந்து எழுந்தன மலையன்ன படிய,
"பேர் இடம் கதுவ அரிது இனி விசும்பு" என, பிறந்த
பேர் இடங்கரின் கொடுங்குழை அணிந்தன பேய்கள். (9901)

(பார்-பூமி; இடத்தல்-பிளத்தல்; படி-தன்மை; கதுவுதல்-தங்குதல்; அரிது-போதாது; பிறத்தல்-தோன்றுதல்; துனைந்து-விரைந்து; இடங்கர்-முதலைகள்; கொடுங்குழை-வளைந்த காதணிகள்/குண்டலங்கள்; பாரிடம்-பூதம்)

அந்த மாய அத்திரத்தினால், பாதாளத்திலிருந்த வாசுகி என்ற பாம்புகள் பூமியைப் பிளந்துகொண்டு மேலே தோன்றின என்னும்படியும், இந்தப் பெரிய இடமான பூமியின் பரப்பு இவை தங்குவதற்கு போதாது; எனவே ஆகாயத்தில்தான் தங்கவேண்டும் என்று கருதும்படி மலைபோன்ற பேருருவத்தோடு, பூதங்களும், விரைந்து எழுந்தன; பெரிய நீர்க்கடலில் பெயர்ந்து திரியும் முதலைகளையே தங்கள் வளைந்த காதணிகளாக அணிந்துகொண்டு இருந்த பேய்களும் தோன்றலாயின.

பாதாளத்திலிருந்து பாம்புகளும், பூமியைப் பிளந்துகொண்டு எழுவது போலப் பூதங்களும், மலைபோன்ற தோற்றமுடைய பேய்களும் மேலெழுந்து வந்தன என்பதாம். பேய்கள் அணிந்திருக்கும் குண்டலங்கள் முதலைகளைப்போலத் தோற்றத்தில் பெரியனவாக இருந்தன என்பதாம்; பேய்கள் முதலைகளையே தங்கள் காதணிகளாக அணிந்து கொண்டிருந்தன என்பதும் பொருந்தும். ''பாரிடம்'' என்ற சொல் நமக்குப் புதிது. பூதங்கள் என்று பொருள்.

116. தாமசத்தினில் பிறந்தவர், அறம்தெறும் தகையர்,
தாம் அகத்தினில் செல்கிலாச் சதுமுகத்தவற்கும்,
தாமசத்தினைச் செய்பவர், பரிந்தனர் தளரத்
தாம சத்திரம் சித்திரம் பொருந்தினர் தயங்க. (9902)

(தாமசம்-இருள்/மாயம்; பிறந்தவர்-தோன்றியவர்கள்; தெறுதல்-அழித்தல்; தகைமை-தன்மை; தாமசம்-தாமதகுணம்; சதுமுகத்தவன்-பிரமன்/நான்முகன்; தாமம்-ஒளி; சத்திரம்-அஸ்திரம்/படைக்கலன்கள்; சித்திரம்-விசித்திரம்/அதிசயம்; தயங்குதல்-விளங்குதல்)

இருள்போன்ற மாய அத்திரத்தினால் தோன்றியவர்களும், அறத்தை அழிக்கும் இயல்பு உடையவர்களுமாகிய அரக்கர்கள், தாமதக் குணத்தையே அறியாது அந்த வழியில் செல்லாத நான்முகனாகிய பிரம தேவனுக்கும், அந்தத் தாமசக்குணத்தை உண்டு பண்ணுபவர்களாகிய, அரக்கர்கள் தளர்ந்துபோய் ஒளிவீசுகின்ற படைக்கலன்களை அதிசயமாகக் கையில் ஏந்திக்கொண்டு அங்கு வந்து அடைந்தனர்.

Koviloor Digital Library

தாமசம் என்ற சொல் முதலடியில் இருள், மாயை என்ற பொருளிலும், இரண்டாம் அடியிலும் மூன்றாம் அடியிலும் தாமதக்குணம் என்ற பொருளிலும், நான்காம் அடியில் தாமசத்திரம் எனப் பிரிந்து ஒளி பொருந்திய படைக்கலன்கள் என்ற பொருளிலும் கையாளப் பட்டிருப்பதைக் கருதுக. ஒரேசொல் நான்கு அடிகளிலும் பிரிந்து வெவ்வேறு பொருள்களைத் தருவதால் இப்பாடல் யமகம் என்னும் சொல்லணியின் பாற்பட்டது. அத்திரம் என்பது அஸ்திரம் என்ற வடசொல்லின்திரிபு. அதற்குமாறானசொல்சத்திரம்என்பது. அதுசஸ்திரம் என்ற வடசொல்லின் திரிபு; சித்திரம் என்பது விசித்திரம் என்பதன் முதற்குறை. அதிசயம் என்பது பொருள். சஸ்திரம் என்பது வேற்படை போன்று கைகளில் வைத்துக்கொண்டே செலுத்தும் படைக்கலன் களையும், அஸ்திரம் என்பது அம்புபோன்று கையினின்றும் செலுத்தும் படைக்கலன்களையும் குறிக்கும். தாமதக்குணத்தின் இயல்பு காமம், கொலை, கோபம், நெடுந்துயில், மறதி முதலியன விளைத்தல் என்கிறது ஒரு குறிப்பு.

117. தாம் அவிந்து மீது எழுந்தவர்க்கு இரட்டியின் தகையர்;
தாம இந்துவின் பிளவு எனத் தயங்கு வாள்எயிற்றர்,
தாம் அவிஞ்சையர், கடல்பெருந் தகையினர்; தரளத்
தாம விஞ்சையர் துவன்றினர், திசைதொறும் தருக்கி. (9903)

(அவிதல்-இறந்துபடுதல்; எழுந்தவர்-உயிர்பெற்றவர்கள்; தாமம்-ஒளி; இந்து-சந்திரன்; தயங்குதல்-விளங்குதல்; வான்-ஒளி; எயிறு-பற்கள்; தாம்-தாவும்; விஞ்சை-வித்தை; தகை-அளவு; தரளம்-முத்து; விஞ்சையர்-வித்தியாதரர்; தாமம்-மாலை; தருக்குதல்-செருக்குதல்; துவன்றனர்-நெருக்கினர்)

முன்பு போரில் இறந்துபட்டு, இப்போது மீண்டும் உயிர்பெற்று எழுந்தவர்களைப்போல இரண்டுமடங்கு தன்மைவாய்ந்த அரக்கர்கள், ஒளிமிக்க சந்திரன் பிளவுபட்டதைப் போன்று வளைந்த கோரப்பற்களை யுடையவரும், தாவித்திரிகின்றவரும் மாயவித்தையில் வல்லவரும், பெரியகடல்போன்றஅளவுடையவரும், முத்துமாலைஅணிந்திருக்கின்ற வித்தியாதரர்களும், எல்லாத்திசைகளிலும் செருக்குடன் நெருங்கி எழுந்து நிற்கலானார்கள்.

முன்பு இறந்துபட்ட அரக்கர்கள், அசுரர்கள், வித்யாதரர்கள் முதலியோர் இப்போது இம்மாய அத்திரத்தினால் மீண்டும் உயிர்பெற்று எழுந்த தோற்றம் பேசப்படுகிறது. முதலடியில் தாம் அவிந்து என்றும், இரண்டாம் அடியில் தாமஇந்து என்றும், மூன்றாம் அடியில் தாம் அவிஞ்சையர் என்றும், நான்காம் அடியில் தாம விஞ்சையர் என்றும் பிரித்துப் பொருள்கொள்ள வேண்டும். இப்பாடலும் யமகம் என்னும் சொல்லணியின் பாற்படும். இந்துவின் பிளவு-பிறைச்சந்திரன்; விஞ்சை

Koviloor Digital Library

என்பது வித்தை என்பதன் திரிபு. அவிஞ்சை என்பது அவித்தை என்பதன் திரிபு. அங்கு வந்து எழுந்து நின்ற அசுரர்களின் அளவு, முன்பு இறந்துபட்டு விழுந்த அரக்கர்களைப் போல் இரண்டு மடங்கு ஆகும் என்பதாம்.

118. தாம் மடங்கலும், முடங்கு உளை யாளியும், தகுவார்;
தாம் அடங்கலும் நெடுந்திசை உலகொடும் தகைவார்;
தா மடங்கலும் கடலும் ஒத்து ஆர்தரும் தகையார்;
தாம் மடங்கலும் கொடுஞ்சுடர்ப் படைகளும் தரித்தார். (9904)

(தாம்-தாவும்; மடங்கல்-சிங்கம்; முடங்குதல்-வளைந்திருத்தல்; உளை-பிடரிமயிர்; தகுவார்-போன்றவர்; அடங்கலும்-அனைவரும்; தகைதல்-அடைத்துக்கொள்ளுதல்; தாம்-தாமம்/ஒளி; மடங்கல்-நெருப்பு; ஆர்தருதல்-நிறைந்திருத்தல்; மடங்கல்-இடி; தரித்தல்-தாங்கி இருத்தல்; தா-வலிமை)

தாவும் தன்மையுள்ள சிங்கம்போன்றவரும், வளைந்த பிடரிமயிரை யுடைய யாளி என்னும் மிருகத்தைப்போன்றவரும் தாம் எல்லோரும் சேர்ந்து நீண்ட பெரிய திசைகளை உலகத்தோடும் தடுக்கவல்லவரும், வலிமைமிக்க ஊழிக்காலத்தீப் போன்றும், கடல்போன்றும், ஒளிமிக்க இடிபோன்றும் முழக்கம்செய்ய வல்லவருமான அரக்கர்கள் கொடிய ஒளிமிகுந்த படைக்கலன்களைக் கையில் ஏந்திக்கொண்டு நின்றனர்.

முதலடியில் தாம்+மடங்கல் என்று பிரித்து, தாவும் இயல்புடைய சிங்கம்என்றும், இரண்டாம்அடியில்தாம்+அடங்கல் என்று கொண்டு தாம் அனைவரும் என்றும், மூன்றாம் அடியில் தா+மடங்கல் என்று கொண்டு வலிமைமிக்க ஊழிக்கால நெருப்பு என்றும், நான்காம் அடியில் தாம்+மடங்கல் என்று பிரித்து ஒளிமிக்க இடி என்றும் பொருள் கொள்ள வேண்டும். மடங்கல் என்ற ஒரேசொல் மூன்று அடிகளிலும், சிங்கம், நெருப்பு, இடி என்ற வெவ்வேறு பொருள்களைத் தருவதால் இப்பாடல் யமகம் என்னும் சொல்லணியின் பாற்படும்.

119. இனைய தன்மையை நோக்கிய இந்திரை கொழுநன்,
“வினையம் மற்று இது மாயமோ? விதியது விளைவோ?
வனையும் வன்கழல் அரக்கர்தம் வரத்தினோ? மற்றோ?
நினைதியாம் எனின், பகர்” என, மாதலி நிகழ்த்தும். (9905)

(இனைய-இவ்வாறு/இத்தகைய; இந்திரை-திருமகள்; கொழுநன்-கணவன்; இந்திரைகொழுநன்-இராமபிரான்/திருமால்; வினையம்-செயல்; வன்-வலிய; வனைதல்-அணிதல்; மற்று-வேறு; நினைதல்-அறிந்திருத்தல்; நிகழ்த்துதல்-கூறுதல்)

இவ்வாறு நிகழ்ந்துகொண்டிருப்பதைக் கண்ட, திருமகள்கேள்வனான திருமாலின் அவதாரமான இராமபிரான், ''இந்தச் செயல் மாயத்தால்

Koviloor Digital Library

நிகழ்ந்ததோ? அல்லது விதியின் விளைவால் நிகழ்ந்ததோ? அல்லது வலிய வீரக்கழல் அணிந்த அரக்கர்கள் தாம் பெற்றிருக்கும் வரபலத்தினால் விளைந்ததோ? அல்லது வேறு ஏதாவது காரணத்தால் நிகழ்ந்ததோ? இதுபற்றி நீ ஏதும் அறிந்திருந்தால் எனக்குக் கூறுவாயாக'' என்று தேர்ப் பாகன் மாதலியைநோக்கிக் கேட்க, அதற்கு மாதலி கீழ்வருமாறு விடை கூறினான்.

''இந்திரை கொழுநன்'' என்பது திருமகளின் கணவன் என்று திருமாலைக் குறித்துத் திருமாலின் அவதாரமான இராமபிரானைக் குறிக்கும். இதுபோன்ற செயல்கள் மாயம், விதி, வரபலம் ஆகியவற்றின் உதவியின்றி நிகழ்ந்திருக்க முடியாது என்பதால் இவ்வாறு கேட்டான் என்பதாம்.

120. இராமபிரான் ஞானக்கணை விடுத்தல்

''இருப்புக் கம்மியற்கு இழை நுழை ஊசிஎன்று இயற்றி,
விருப்பின், ''கோடியால் விலைக்கு'' எனும் பதடியின், விட்டான்
கருப்புக் கார்மழை வண்ண! அக்கடுந்திசைக் களிற்றின்
மருப்புக் கல்லிய தோளவன் மீள்அரு மாயம். (9906)

(கார்-கரிய; மழை-மேகம்; வண்ணம்-நிறம்; மருப்பு-கொம்பு/தந்தம்; கல்லுதல்-அகழ்தல்/தோண்டுதல்; இழை-நூல்; இயற்றுதல்-செய்தல்; இருப்பு-இரும்புத்தொழில்; கம்மியர்-கொல்லன்; கோடி-கொள்வாயாக; பதடி-அறிவிலி; கருப்பு-கடும் பஞ்சகாலம்; விருப்பு-ஆசை)

மாதலி இராமபிரானை நோக்கி, ''பஞ்சகாலத்தில் பொழியும் மழை போன்ற கரிய நிறமுடையவனே! இராம! அந்தக்கொடிய பெரிய திசையானையின் தந்தங்களால் அகழப்பட்ட தோள்களையுடையவனான இராவணன், நூல்நுழைந்து செல்லுகின்ற ஒரு ஊசியைச் செய்து, அதை இரும்புத்தொழில் செய்கின்ற கருமானிடமே விருப்பத்துடன் கொண்டு சென்று, ''இதனை விலைக்குப் பெற்றுக்கொள்வாயாக!'' என்று கூறி விற்கின்ற ஒரு அறிவிலியைப்போல, மீளுதற்கு அரிதான மாயாத்திரத்தை உன்மீது செலுத்தியிருக்கிறான்'' என்றான்.

''கார்மழை வண்ண'' என்றாலே மேகம் போன்று அருள் சுரக்கும் வள்ளல் என்ற பொருளைத்தரும். ஆனால் ''கருப்புக்கார் மழை வண்ண'' என்பது மழையில்லாது மக்கள்தவிக்கின்ற பஞ்சகாலத்தில் பெய்யும் மழை எப்படி மக்களுக்குப் பெரும் உதவியைச் செய்யுமோ, அதுபோல வற்றாத கருணையுள்ளம் கொண்டவன் இராமபிரான் என்பது ''கருப்புக்கார் மழை வண்ண''என்ற உவமையால் புலப்படுத்தப்பட்டது எனக்கொள்க. ''பதடி'' என்பது ''பதர்'' என்ற சொல்லின் பொருளாகும். உள்ளீடாகிய அரிசி இல்லாத நெல் என்ற பொருளைத்தரும். ''மக்கட் பதடியெனல்'' என்பது

Koviloor Digital Library

குறள். மாயவனாகிய உன்மீது மாய அத்திரத்தை விடுவது கொல்லனிடமே ஊசிவிற்பதுபோன்றது என்கிறான் மாதலி என்பதாம்.

''கம்மியர்'' என்பது கொல்லரைக் குறிக்கும். ''ஆசுஇல் கம்மியர் மாசுஅறப் புனைந்த'' என்பது புறநானூறு-353. ''இழை'' என்பது நூலைக்குறிக்கும். ''இழை நக்கி நூல் நெருடும் ஏழை அறிவேனோ குழை நக்கும் பிஞ்ஞகன்தன் கூத்து'' என்பது ஓர் தனிப்பாடல்; ''இழை நுழை ஊசி'' என்பது நூல்கோக்கப்படும் ஊசி என்ற பொருளைத்தரும். ''கொல்லர் தெருவில் ஊசி விற்பது'' என்ற வழக்குச்சொல்லை அடியொற்றியது இப்பாடலின் கருத்து. ஊசி செய்வதையே தொழிலாகக் கொண்டுள்ள ஒரு கொல்லனிடத்தில் சென்று நாம் ஊசியை விற்க முயன்றால் அது எப்படி விலைபோகாதோ, அல்லது அது எப்படி ஒரு இழிவான செயலோ, அதைப்போல மாயம் நிறைந்த மாயவனாகிய உன்னிடத்திலேயே, இராவணன் செலுத்துகின்ற இம்மாயக் கணைக ளெல்லாம் பயனற்று அழியும் என்று மாதலி குறிப்பால் உணர்த்துகிறான் என்பதாம்.

121. "வீக்கு வாயிலில் வெள்ளயிற்று அரவின் வெவ்விடத்தை
மாய்க்குமா நெடுமந்திரம் தந்தது ஓர் வலியின்,
நோய்க்கும், நோய்தரு வினைக்கும், நின் பெரும்பெயர் நொடியின்,
நீக்குவாய்! நினை நினைக்குவார் பிறப்புஎன, நீங்கும். (9907)

(வீத்தல்-அழித்தல்; அயில்-கூரிய; அரவு-பாம்பு; தருதல்-உச்சரித்தல்/ ஓதுதல்; நொடி-சொல்/உச்சரிப்பு; நெடுமை-பெருமை; நோய்-பிணி/ பிறவிப்பிணி)

''பிறவி என்னும் பிணிக்கும், அதனால் விளைகின்ற நல்வினை தீவினை என்ற இருபெரும் வினைகளுக்கும் எதிராக, உன்னுடைய பெருமைசான்ற பெயரை உச்சரித்தால் ஒரு நொடிப்பொழுதில் அப்பிணியை நீக்குகின்ற அருள் பெற்றவனே! கொல்லும் இயல்புடைய கூரிய முனையையுடைய வெண்மையான பற்களில் கொடிய நஞ்சை வைத்திருக்கும் பாம்பை மாய்த்து விடுவதற்காக பெருமைமிக்க மந்திரத்தை உச்சரித்தால் அது எப்படி வலிமை குன்றிப்போகுமோ, அதுபோல உன்னை எப்பொழுதும் தியானிப்பவர்களின் பிறப்பினை நீ நீக்குவதுபோல் இம்மாய அத்திரமும் நீங்கிப்போய்விடும்'' என்கிறான் மாதலி.

இராமநாமத்தின் பெருமையை இராமபிரானுக்கே விளக்கிக் கூறுகிறான் தேரோட்டி மாதலி என்பது உணரத்தக்கது. ''கடிக்கும் வல் அரவும் கேட்கும் மந்திரம்'' என்பதும் சுந்தரகாண்டத்தில் கம்பன்கூற்றே. ''கதம் தவிர, மந்திரத்தினாற் பிணிப்பர் மாநாகம்'' என்பது நான்மணிக் கடிகை ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப'' என்பது தொல்காப்பியம். அதற்கு அவர் தரும் விளக்கம்

Koviloor Digital Library

தெரிந்துகொள்ள வேண்டியதொன்று. ''சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றல் உடையவர் ஆவார், ஆணையில் இளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லப்படும் சொற்றொடர் எல்லாம் மந்திரம் எனப்படும்'' என்பது அதன் விளக்கம். ''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும்'' என்பது குறள்-28. ''நோய்'' என்பது பிறவிப்பிணியைக் குறிக்கும். ''வினைப்போகமே உறுதேகம் கண்டாய்; வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்'' என்பது பட்டினத்தார் பாடல்; நல்வினையைப் பொன்விலங்கு என்றும், தீவினையை இரும்பு விலங்கு என்றும் கூறுவதுண்டு. உன்னை எப்பொழுதும் தியானித்துக் கொண்டிருப்பவர்களின் பிறவிப்பிணி ஒரு நொடியில் நீங்குவதுபோல, இந்த மாயாத்திரத்தின் வலிமையும் ஒருநொடியில் அகன்று போய்விடும் என்கிறான் மாதலி என்பதாம்.

122. "வரத்தின் ஆயினும், மாயையின் ஆயினும், வலியோர்
உரத்தின் ஆயினும், உண்மையின் ஆயினும், ஓடத்
துரத்தியால்" என, ஞான மாக்கடுங்கணை துரந்தான்;
சிரத்தின் நான்மறை இறைஞ்சவும் தொடரவும் சேயோன். (9908)

(உரம்-வலிமை; துரத்தி-செலுத்துவாயாக; இறைஞ்சுதல்-வணங்குதல்; சேயோன்-அப்பாற்பட்டு நிற்பவன்/இராமபிரான்; சிரசு-உபநிடதங்கள்)

நான்கு என்று கூறப்படும் வேதங்களாலும், அதன் தலைப்பகுதி என்று கருதக்கூடிய உபநிடதங்களாலும், வணங்கவும், அவற்றைப் பின்பற்றவும் இயலாதவாறு இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு நிற்கும் வல்லமை படைத்தவனான இராமபிரான், இராவணன் கடுந்தவம் இயற்றிப் பெற்ற வரங்களாலானாலும் சரி, அல்லது அரக்கர்களின் மாயச் செயல் களாலானாலும் சரி, வல்லமை பொருந்திய அவர்கள் உடல் வன்மையினா லானாலும் சரி, அல்லது உண்மையான சத்தியத்தாலானாலும் சரி, அந்த மாயக்கணையை எவ்வாறேனும் துரத்திச்சென்று அழித்தொழிப்பாயாக'' என்றுகூறி தன்னிடமிருந்த பெருமைமிக்கதும், விரைவுமிக்கதுமான ஞானக்கணையைத் தேர்ந்து எடுத்துச் செலுத்தினான்.

உபநிடதங்களை நான்கு வேதங்களின் சிரசுஎனக் கூறுவது மரபு. இராவணன் செலுத்தியது மாயக்கணை. தாமதக்கணை இருட்டைப் பரப்புவது; அதை அழிக்க ஒளிமிக்க அறிவுசார்ந்த, ஞானக்கணையைச் செலுத்துவதே தகும் என்று ஆராய்ந்து தெரிந்து செலுத்தினான் என்க. இராமபிரான் வேதங்களாலும், வேதங்களின் அங்கமாகிய உபநிடதங் களாலும் அறியமுடியாதவன், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவன் என்பதே, ''சிரத்தின் நான்மறை இறைஞ்சவும், தொடரவும் சேயோன்'' எனப்பட்டது என்க. அறியாமை என்னும் இருட்டைப் போக்கவல்லது

Koviloor Digital Library

ஞானம் என்னும் ஒளி என்பதால் மாயக்கணையைத் துரத்துதற்கு ஞானக்கணையை ஏவினான் என்பதாம். ''உண்மை'' என்ற சொல்லுக்குச் சத்தியம் என்று பொருள் கொண்டிருக்கிறோம். உண்மை என்ற சொல்லுக்கு ''விதி'' என்ற ஒரு பொருளும் உண்டு; எனவே ''விதியினால் நிகழ்ந்ததாயினும்'' என்றும் பொருள் கூறுவதுண்டு. ''நுண்ணிய நூல்பல கற்பினும், மற்றும் தன் உண்மை அறிவே மிகும்'' என்ற குறள்-373ல் பரிமேலழகர் ''உண்மை'' என்ற சொல்லுக்கு ''தன் ஊழானாகிய பேதைமை உணர்வே'' எனப் பொருள் கூறுவதும் கருதத்தக்கது.

123. துறத்தல் ஆற்று உறு ஞானமாக் கடுங்கணை தொடர,
அறத்து அலாது செல்லாது, நல் அறிவு வந்து அணுக,
பிறத்தல் ஆற்றுறும் பேதைமை பிணிப்புறத் தம்மை
மறத்தலால் தந்த மாயையின் மாய்ந்தது அம்மாயை. (9909)

(தருதல்-தோன்றுதல்; மாய்தல்-அழிதல்; மாயை-மாயத்தோற்றம்; துறத்தல்-துரத்தல்/செலுத்துதல்; நல்லறிவு-மெய்யுணர்வு; அறம்-துறவறம்)

அவ்வாறு இராமபிரானால் ஏவப்பட்ட பெரிய விரைவுமிகுந்த ஞானக்கணை, அந்த மாயா அத்திரத்தை வந்து நெருங்கிச் சேர்ந்ததால், பிறப்பின்காரணமாக ஏற்படும் அறியாமையில் கட்டுப்பட்டுக் கிடந்து, தம் உண்மைநிலையை மறந்துபோனதால், ஏற்பட்ட மாயை அழிவது போன்று, அம்மாயாத்திரமும், அது ஏற்படுத்திய விளைவுகளும் அழிந்து போயின.

பிறப்பிற்குக் காரணமான மாயை, மெய்யுணர்வால் நீங்குவது போல, இராமபிரான் செலுத்திய ஞானக்கணையினால், இராவணன் செலுத்திய மாயக்கணை அழிந்தது என்பதாம். ''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு'' என்பது குறள்-358. ''துரத்தல்'' என்பது எதுகைநோக்கித் ''துறத்தல்'' என்று நின்றது.

124. நீலம் கொண்டு ஆர்கண்டனும், நேமிப்படையோனும்,
மூலம் கொண்டார், கண்டகர் ஆவி முடிவிப்பான்,
காலம் கொண்டார்; கண்டன முன்னே கழிவிப்பான்,
சூலம் கொண்டான், அண்டரையெல்லாம் தொழில் கொண்டான். (9910)

(கண்டம்-கழுத்து; நேமி-சக்கரம்; மூலம்-வேர்; ஆர்தல்-நிறைந் திருத்தல்; கண்டகர்-கொடிய அரக்கர்; ஆவி-உயிர்; அண்டர்-தேவர்கள்; கழிவித்தல்-மாய்த்தல்)

நீலநிறம் பொருந்திய கழுத்தினையுடைய சிவபெருமானும், சுதர்சனம் என்னும் சக்கரப்படையைக் கொண்ட திருமாலும், உலகப் படைப்பிற்கே ஆதிமூலம் என்று கருதப்படும் பிரமதேவனும், மிகப் பழங்காலத்தி

Koviloor Digital Library

லிருந்தே வேரூன்றி வாழ்ந்துகொண்டிருக்கும் முள்போன்று கொடியவர்களான அரக்கர்களது உயிரைப் போக்குவதற்குத் தக்க தருணம் இதுதான் என்று கணக்கிட்டுக் கொண்டு இருக்கும்பொழுது, தேவர்களையெல்லாம் தன்கீழ் பணிசெய்யும் ஏவலாளராகக் கொண்டிருக்கும் இராவணன், தன் கண்முன்னே காண்பனவற்றையெல்லாம் அழிக்கும் பொருட்டுத் தன்னுடைய சூலாயுதத்தைக் கையில் ஏந்திக் கொண்டிருந்தான்.

125. கண்டா குலம் முற்று ஆயிரம் ஆர்க்கின்றது, கண்ணில்
கண்டு, ஆகுலம் உற்று உம்பர் அயிர்க்கின்றது, "வீரர்
கண் தா, குலம், முற்றும்" சுடும் என்று, அக்கழல் வெய்யோன்,
கண் தாகுதல்முன், செல்ல விசைத்துள்ளது கண்டான். (9911)

(கண்டா-கண்டாமணி; குலம்-கூட்டம்; ஆகுலம்-துன்பம்; அயிர்த்தல் -ஐயுறுதல்/தாக்குதல்; தா-வலிமை; குலம்-சிறப்பு; வெய்யோன்-கொடியவன்/இராவணன்; தாகுதல்-இமைத்தல்; விசைத்தல்-வேகமாக வீசுதல்; சுடுதல்-தீய்த்தல்/அழித்தல்; கண்டை-ஒரு ஒலிக்கருவி)

ஆயிரக்கணக்கான கண்டாமணிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து, ஆரவாரம் செய்கின்றபோது, தேவர்கள் இதனைக்கண்டு, துன்பம் அடைந்து, ''இது என்னசெய்யுமோ?'' என்று ஐயுறுகின்றதும், எதிரே நிற்கின்ற வீரர்களின் கண்கள், வலிமை, பெருமை, சிறப்பு இவையெல்லாவற்றையும் இந்தச் சூலாயுதம் சுட்டெரித்துவிடும்'' என்று அந்த அழகிய வீரக்கழலணிந்த கொடியவனான அரக்கன் இராவணன் தன் மனத்துள் எண்ணிக்கொண்டு, மற்றவர்கள் கண்கள் இமைத்துப் பார்ப்பதற்கு முன்பாக, அந்தச் சூலாயுதத்தை வேகமாகச் செல்லும்படி வீசியெறிவதை, இராமபிரான் தன் கண்களால் கண்டான்.

''கண்டை'' என்பது ஒருவகை இசைக்கருவி. மணி என்று கொள்ளலாம். அந்தச் சூலாயுதத்தில் ஆயிரக்கணக்கான மணிகள் கட்டப் பெற்றிருக்கின்றன. அவை பேரொலி எழுப்புகின்றன. அதனைக் கண்ட தேவர்கள் அஞ்சுகிறார்கள்; ஆனால் இராவணனோ இச்சூலாயுதம் பகைவர்கள் எல்லோரையும் சுட்டெரித்து விடும் என்று நம்பி, அதனை வேகமாகச் செலுத்துகிறான். அச்சூலாயுதம் தன்னை நோக்கிப் பாய்ந்து வருவதை இராமபிரான் தன் கண்களால் கண்டான் என்பதாம்.

''கண்டாகுலம்'' என்ற ஒரே சொல் ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு மாதிரியாகப் பிரிந்து, வெவ்வேறு பொருளைத் தருவதால் இப்பாடல் யமகம் என்னும் சொல்லணியின் பாற்படும். ''கண்டாகுலம்'' என்பது மணிகளின் கூட்டம் என்றும், ''கண்டு ஆகுலம்'' என்பது பார்த்துத் துன்பம் அடைந்த என்றும், கண் தா, குலம் என்பது கண்கள் வலிமை, சிறப்பு என்றும், ''கண்தாகுதல்'' என்பது கண் இமைப்பது என்றும் பொருள்தரும். தாக்குதல் என்பது தாகுதல் என்று எதுகை நோக்கி ஒற்றுக் குறைந்து நின்றது.

Koviloor Digital Library

அந்தச் சூலப்படை கண்டைபோல் ஒலிக்கும்; தேவர்களை நடுங்கச்செய்யும்; பகைவர்களின் வலிமையை முற்றிலும் அழிக்கும் என்று அதன் பெருமையும் சிறப்பும் பேசப்படுகிறது.

126. எரியா நிற்கும் பல்தலை மூன்றும், எரி அஞ்ச,
திரியா நிற்கும் தேவர்கள் ஓட, திரள்ஓட,
இரியா நிற்கும் எவ்வுலகும் தன் ஒளியே ஆய்,
விரியா நிற்கும், நிற்கிலது, ஆர்க்கும் விழிசெல்லா. (9912)

(தலை-இலைகள்/முனைகள்; எரி-நெருப்பு; எரியா-எரிந்து; திரியா-திரிந்து; திரள்-வானரக்கூட்டம்; இரியா-இரிந்து/நிலைகெட்டு ஓடி; விரியா-விரிந்து; ஆர்க்கும்-யாருக்கும்)

இராவணன் செலுத்திய முத்தலைச் சூலமானது மூன்றுவகையான நெருப்பே அஞ்சும் வண்ணம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டு சுழன்று நிற்கின்றது; அதனைக்கண்ட தேவர்கள் ஓரிடத்தில் நில்லாது அலைந்து திரிந்துகொண்டே இருக்கிறார்கள்; அவர்களைத் தொடர்ந்து வானரக் கூட்டங்களும் நிலைகெட்டு ஓடுகின்றன. நிலைகெட்டு ஓடாமல் நிலைத்து நிற்கின்ற இவ்வுலகங்கள் எல்லாவற்றிலும் அந்தச் சூலம் தன் ஒளி முழுவதும் பரப்பிக் கொண்டிருக்கிறது. அதனைப் பார்ப்பதற்கு எல்லோருடைய கண்களும் அதன்பால் செல்லாமல் நிற்காது. சென்றே தீரும்.

நான்கு அடிகளிலும் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களே கையாளப்பட்டிருக்கின்றன. எரியா, திரியா, இரியா, விரியா என்பன முறையே எரிந்து, திரிந்து, இரிந்து, விரிந்து நிற்கும் என்ற பொருளைத் தரும். கடைசி அடியில் ''செல்லா நிற்கிலது'' என்று இரண்டு எதிர்மறைச் சொற்களைப் பயன்படுத்தி ''சென்று நிற்கும்'' என்ற ஒரு உடன்பாட்டுப் பொருளைப் பெறவைத்த திறம் நோக்குக. ''மூன்று எரி'' என்பது இங்கே சூரியன், சந்திரன், அக்னியைக் குறிக்கும். இதுவே ஆகவனியம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினியம் என்று பொருள் தருதலும் உண்டு. அந்தச் சூலாயுதம் அனைவருடைய கண்களையும் கவரக்கூடியது என்பதாம்.

127. "செல்வாய்" என்னச்செல்ல விடுத்தான், "இது தீர்த்தற்கு
ஒல்வாய் நீயே! வேறு ஒருவர்க்கும் உடையாதால்;
வல்வாய் வெங்கண் சூலம் எனும் காலனை, வள்ளால்!
வெல்வாய்; வெல்வாய்!" என்றனர், வானோர் மெலிகின்றார். (9913)

(வானோர்-தேவர்கள்; காலன்-இயமன்; தீர்த்தல்-அழித்தல்; ஒல்குதல்-ஏற்கத் தகுதிபடைத்தல்/வல்லமையுடையதாதல்/இயலுதல்/முடிதல்; உடைதல்-தொலைதல்/அழிதல்; மெலிதல்-வாடிப்போதல்)

Koviloor Digital Library

அதனைக்கண்டு உடலும் உள்ளமும் வாடிப்போயிருக்கின்ற தேவர்கள், இராமபிரானை நோக்கி, ''வள்ளல்தன்மை படைத்தவனே! இராமா! இராவணன் ''செல்லுவாயாக'' என்று கட்டளையிட்டு, முத்தலைச் சூலத்தை உன்மீது ஏவியிருக்கிறான்; இதனை அழித்தற்கு உன் ஒருவனால்தான் முடியும். வேறு யாராலும் இதனை அழிக்கமுடியாது; வலிய நுனியையும், கொடிய கண்களையும் உடைய சூலாயுதம் என்னும் இயமனை, நீயே வென்றுகாட்ட வேண்டும்'' என்று வேண்டினர்.

''சூலம் எனும் காலன்'' என்பது உருவகம்; ''வெல்வாய், வெல்வாய்'' என்ற அடுக்கு விரைவும் தெளிவும் பற்றி வந்தது என்க. ''ஒல்லுதல்'' என்பது இயலுதல், முடிதல் என்ற பொருளைத்தரும். ''ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே'' என்பது குறள்-33.

128. இராமபிரான் சூலப்படையை உங்காரத்தால் அழித்தல்

துனையும் வேகத்தால் உரும்ஏறும் துண் என்ன,
வனையும் காலின் செல்வன, தன்னை மறவாதே
நினையும் ஞானக்கண் உடையார்மேல் நினையாதார்
வினையம் போலச் சிந்தின, வீரன் சரம் வெய்ய. (9914)

(துனைதல்-விரைந்துசெல்லுதல்; உரும்ஏறு-பேரிடி; துண்எனல்-திடுக்கிடுதல்; வனைதல்-இயங்குதல்; கால்-காற்று; வீரன்-இராமபிரான்; வெய்ய-கொடிய; வினையம்-செய்கை/காரியம்; சிந்துதல்-சிதறிப் போதல்)

வீரனான இராமபிரான் செலுத்திய கொடிய அம்புகள் விரைந்து செல்லும் வேகத்தால் பேரிடிகூடத் திடுக்கிட்டு நடுங்கியது. அது காற்றுப் போல இயங்கிச் சென்றது; இறைவனை மறவாமல் அனுதினமும் தியானிக்கும் ஞானக்கண் உடைய அடியவர்கள்மேல், இறைவனைப் பற்றியே ஒருபோதும் சிந்திக்காத கீழ்மக்கள் செய்யும் தீங்குகளும், சூழ்ச்சிச் செயல்களும் பயனற்றுப் போவதைப்போல, இராமபிரான் செலுத்திய கொடிய அம்புகள் இராவணனை ஒன்றும் செய்ய முடியாமல் சிதறிப் போயின.

இங்கே கூறப்பட்டிருக்கின்ற உவமையைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இராமபிரான் இராவணன்மேல் ஏவிய அம்புகள் எல்லாம் பயனற்றுச் சிதறிப்போயின. அவற்றால் இராவணனை ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதற்குக் கவிஞன் ஒரு உவமையைக் கூறுகிறான். இறைவனையே அனுதினமும் நினைத்துக் கொண்டிருக்கும் அடியவர்களின் மீது, இறைவனையே சற்றும் சிந்திக்காத பாவிகள் செய்யும் தீயசெயல்கள் ஒன்றும் செய்யமுடியாது பயனற்றுப் போவதைப் போலச் சிதறிப்போயின. இராமபிரானின் அம்புகள் இராவணனை

Koviloor Digital Library

ஒன்றும் செய்ய முடியவில்லை என்பது உவமையின் விளக்கம். இந்த விளக்கத்தினால் இராவணன் ஞானக்கண் பெற்றவன், அதனால்தான் இறைவனின் அவதாரமான இராமபிரானால்கூட ஒன்றும் செய்யமுடியவில்லை என்று பொருள் கொள்ளக்கூடாது. இது முற்றுவமை அல்ல. இது ஒப்பு உவமை அவ்வளவுதான். எப்படி இரண்யன் செய்த தீங்குகள் எல்லாம் பிரகலாதனை ஒன்றும் செய்யமுடியவில்லையோ, எப்படி பல்லவ மன்னன் செய்த தீங்குகள் எல்லாம் திருநாவுக்கரசரை ஒன்றும் செய்ய முடியவில்லையோ, அப்படி இராமபிரான் செலுத்திய அம்புகளால் இராவணனை ஒன்றும் செய்யமுடியவில்லை என்றுதான் பொருள் கொள்ள நேரும். இராவணனும் சிவபக்தன்தான், நல்ல அடியவன்தான், என்னும் சற்று ஆழமான பொருளை நினைந்து பார்க்கவேண்டும்.

129. எய்யும் எய்யும் தேவருடைத் திண்படை எல்லாம்;
பொய்யும் துய்யும் ஒத்து, அவை சிந்தும்; புவிதந்தான்
வய்யும் சாபம் ஒப்பு என வெப்பின் வலி கண்டான்;
அய்யன் நின்றான், செய்வகை ஒன்றும் அறிகில்லான். (9915)

(தருதல்-உண்டாக்குதல்/தோற்றுவித்தல்; துய்-பஞ்சு; அய்யன்-ஐயன்/இராமபிரான்; வலி-வன்மை)

உலகத்தையே தோற்றுவித்தவனான திருமாலின் அவதாரமான இராமபிரான், தேவர்களின் தெய்வத்தன்மை வாய்ந்ததும், உறுதிபடைத்ததுமான படைக்கலன்கள் எல்லாவற்றையும் இராவணன்மேல் இடைவிடாது செலுத்திக் கொண்டேயிருந்தான். எனினும் அவையெல்லாம் மெய்யின் முன் பொய்போலவும், நெருப்பின்முன் பஞ்சுபோலவும், பயனற்று எரிந்து சிதைந்து அழிந்துபோயின. தலைவனான இராமபிரான் முனிவர்கள் கொடுக்கும் சாபத்திற்கு ஒப்பானதும், வெம்மை மிக்கதுமான அந்தச் சூலாயுதத்தின் வலிமையை நன்கு உணர்ந்துகொண்டு ஒன்றும் செய்யமுடியாமல் மேலே என்ன செய்வது என்பதை அறியாது செயலற்று நின்றான்.

''எய்யும் எய்யும்'' என்ற அடுக்கு இடைவிடாது எய்தலைக் குறித்து நின்றது. எல்லாம் அறிந்த சர்வக்ஞனைக் கவிஞன் ''ஒன்றும் அறிகில்லான்'' என்றுகூறும் நயம் நோக்குக. அவன் எடுத்த மானிடப் பிறவிக்கு ஏற்ப அவன் செய்கைகள் கூறப்படுகின்றன எனக்கொள்ள வேண்டும். சூலாயுதத்தின் வலிமைக்கு, முனிவர்கள் வெகுண்டு கூறுகின்ற சாபத்தின் வலிமை ஒப்பு.

130. "மறந்தான் செய்கை; மற்று எதிர் செய்யும் வகை எல்லாம்
துறந்தான்" என்னா உம்பர் துணுக்கம் தொடர்வுற்றார்;
அறம்தான் அஞ்சிக் கால்குலைய, தான் அறியாதே,
பிறந்தான் நின்றான்; வந்தது சூலம் பிறர் அஞ்ச. (9916)

Koviloor Digital Library

(உம்பர்-தேவர்கள்; செய்கை-செய்யவேண்டிய செயல்; துணுக்கம்-நடுக்கம்; குலைதல்-நடுங்குதல்)

அதனைக் கண்ட தேவர்கள் ''இவன் என்ன ஒன்றும் செய்யாமல் நிற்கிறானே! பகைவனை எதிர்த்துச் செய்யவேண்டிய செயல்களையெல்லாம் மறந்துவிட்டானா? அந்தச் சூலாயுதத்திற்கு மாறாக எந்தப் படைக்கலன்களை எய்வது என்று தெரியாமல் நிற்கிறானே!'' என்று சற்று நடுங்கி, முன்போல் அச்சம்கொள்ளத் தொடங்கினர். அறக்கடவுளே சற்று கால் நடுக்கமுற்று நின்றது. தான் இப்பூமியில் பிறர் அறியாதவாறு பிறந்து அவதரித்தவனான இராமபிரான், தனது தெய்வத்தன்மையைச் சற்றும உணராமல் மனிதன்போலவே செயலற்று நின்றுகொண்டிருந்தான். சூழ்ந் திருப்பவர்கள் எல்லோரும் அஞ்சும்படி அந்தச் சூலாயுதம் இராமபிரானை நெருங்கி வந்தது. எனினும் இராமபிரான் அஞ்சாது நின்றான்.

நிலைகுலைந்துபோன அறத்தை நிலைநிறுத்த வந்தவன் இராமபிரான் என்பது ''அறம்தான் அஞ்சிக்கால்குலைய, தான் அறியாதே பிறந்தான்'' எனப்பட்டது எனக்கொள்க.

131. சங்காரத்தான் கண்டை ஒலிப்ப, தழல் சிந்த,
பொங்கு ஆர்த்தான் மார்பு எதிர் ஓடிப் புகலோடும்,
வெங்காரத்தான் முற்றும் முனிந்தான்; வெகுளிப் பேர்
உங்காரத்தால் உக்கது, பல்நூறு உதிர்ஆகி. (9917)

(சங்காரம்-சம்ஹாரம்/அழிவு; தழல்-நெருப்புப்பொறி; ஆரம்-மாலை; பொங்குதல்-சிறந்திருத்தல்; புகல்-புகுதல்; வெங்காரம்-கொடிய வெறுப்பு உணர்ச்சி; முனிதல்-சினத்தல்; உதிர்-துகள்; உங்காரம்-உம் என்னும் ஒலி; கண்டை-கண்டாமணி; உகுதல்-சிந்துதல்; காரம்-கோபம்)

அழிக்கும் தன்மையுடைய அந்தச் சூலாயுதத்தில் கட்டப்பெற்றிருந்த கண்டாமணிகள் எல்லாம் ஒலியெழுப்பவும், நெருப்புப்பொறி சிந்தவும், அவை சிறந்த மாலை அணிவதற்கு உரியவனான இராமபிரானின் மார்பிற்கு எதிரில் ஓடிப்போய் நுழையவும், கொடிய வெறுப்புணர்ச்சியும், கோபமும் கொண்டவனான இராமபிரான் மிகுந்த சீற்றத்துடன் தனது பெரிய ''உம்'' என்ற ஒலியால் அந்தச் சூலாயுதம் பலநூறு துகள்களாகிச் சிதறிப்போகுமாறு உங்கார ஒலியெழுப்பி அழித்தொழித்தான்.

''சங்காரம்'' என்பது சம்ஹாரம் என்ற வடசொல்லின் திரிபு. சிவபெருமான் அழித்தல் தொழிலுக்குரியவன் ஆதலால் அவனுக்குச் சங்காரன் என்பதும் ஒருபெயர். ''உங்காரம்'' என்பது ''உம்'' என்னும் அதட்டல் ஒலியைக் குறிக்கும். ''உங்காரத்தின் உரப்பும் ஓதையான்'' என்பது கந்த புராணம். தெய்வத்தன்மை வாய்ந்த பல படைக்கலன்கள் செலுத்தியும் அழிக்கமுடியாத சூலாயுதத்தை, இராமபிரானது உங்கார ஒலி அழித்தது என்பது கருதத்தக்கது.

Koviloor Digital Library

132. ஆர்ப்பார் ஆனார்; அச்சமும் அற்றார்; அலர்மாரி
தூர்ப்பார் ஆனார்; துள்ளல் புரிந்தார்; தொழுகின்றார்,
"தீர்ப்பாய் நீயே தீ என வேறாய் வரு தீமை
பேர்ப்பாய் போலாம்!" என்றனர் வானோர், உயிர்பெற்றார். (9918)

(அலர்மாரி-மலர்மழை; தூர்த்தல்-நிரப்புதல்; தீர்த்தல்-அழித்தல்; பேர்த்தல்-போக்குதல்)

தேவர்கள், இழந்த உயிரை மீண்டும் பெற்றவர்கள் போலாகி, அச்சம் நீங்கப்பெற்று ஆரவாரம்செய்துகொண்டு, மலர்மழை பொழிந்து கொண்டு, துள்ளிக் குதித்துக்கொண்டு இராமபிரானைத் தொழலானார்கள். பின்னர் ''இந்தச் சூலத்தைப் பொடிப்பொடியாக்கி அழித்த நீயே இதற்கு வேறாக இன்னும் நெருப்புப்போல் வர இருக்கின்ற கொடிய தீமைகளை எல்லாம் போக்கியருள்வாயாக!'' என்று வேண்டிக்கொண்டனர்.

இராமபிரான் உங்காரத்தால் இராவணன் சூலாயுதம் அழிந்தது கண்ட தேவர்கள் ஆர்த்தனர்; அச்சம் அற்றனர்; மலர்மாரி தூர்த்தனர்; துள்ளினர்; தொழுதனர்; வேண்டினர்; உயிர்பெற்றனர் என்று தேவர்களின் மகிழ்ச்சி மிகுதியை விளக்கினார் என்க.

133. இராவணன் தன்நிலை உணரத் தொடங்குதல்

"வென்றான்" என்றே உள்ளம் வியந்தான், "விடு சூலம்
பொன்றான் என்னின் போகலது" என்னும் பொருள் கொண்டான்,
ஒன்று ஆம் உங்காரத்திடை உக்கு, ஓடுதல் காணா
நின்றான்; அந்நாள் வீடணனர்சொல் நினைவுற்றான். (9919)

(விடு-செலுத்திய; பொன்றுதல்-இறந்துபடுதல்; பொருள்-கருத்து; உகுதல்-சிதைந்து அழிதல்; ஒன்றாம்-ஒப்பற்றதான; காணா-கண்டு)

தான் செலுத்திய சூலப்படை, இராமபிரானை அழிக்காது செல்லாது என்ற சொல்லிலும், நம்பிக்கையிலும் உறுதியாக இருந்த இராவணன், இராமபிரானின்தனித்தன்மை வாய்ந்த ''உம்'' என்ற உங்கார ஒலியிலேயே தன் சூலாயுதம் உதிர்ந்துபோய் எல்லாத் திக்குகளிலும் சிதறி ஓடுவதைக் கண்டு, ''இவன் நம்மை நிச்சயம் வென்றுவிடுவான்'' என்று மனத்துள் எண்ணி, முதல் முறையாக இராமபிரான் செயல்களைக்கண்டு வியக்கத் தொடங்கினான். கூடவே, முன்பு மந்திராலோசனை சபையில் தன் தம்பி வீடணன் கூறிய அறிவுரைகளையும் நினைத்துப் பார்க்கத் தொடங்கினான்.

''வென்றான்'' என்பது உறுதிபற்றி வந்த காலவழுவமைதி. ''உள்ளம் வியந்தான்'' என்பது ''வீரரை யாரே வியவாதார்!'' என்ற சொற்றொடரின் மற்றொரு வடிவம். இராமபிரானின் வீரச்செயலை இராவணன் முதன் முதலாக உணரத்தொடங்கும் நிகழ்ச்சி இது. அடுத்த பாடல் இதனை நன்கு

Koviloor Digital Library

விளக்கும். தன்னுடைய சூலப்படையின் தன்மையில் தான்கொண்ட பெரும் நம்பிக்கைதான் ''பொன்றான் என்னில் போகலது'' என்பது. ''காணா'' என்பது செயப்பாட்டு வினையெச்சம். கண்டு என்ற பொருளைத் தரும். ''அந்நாள்'' என்பது, முன்பு மந்திராலோசனை சபை நிகழ்வையும் அனுமன் வந்துபோன சமயத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளையும் குறிக்கும். ''வீடணனார்'' என்பது மரியாதைப் பன்மை. ''வியந்தான்'' என்பது மதித்தான் என்ற பொருளைத்தரும். பகைவனின் வீரத்தைப் பாராட்டி மதித்து வியத்தல் பெருவீரர்க்கு இயல்பாகும். இராவணன் பெருவீரன். எனவே வீரனான இராமபிரானை வியந்து புகழத்தொடங்கினான் என்க.

134. ''வேதமுதல் காரணனோ?'' என இராவணன் வியத்தல்

''சிவனோ? அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோதான் அவ் வேதமுதல் காரணன்?'' என்றான். (9920)

(மெய்வரம்-உண்மையான வரம்; அடுதல்-அழித்தல்/பயன்படாமல் செய்தல்; தவன்-சாதாரணத் தவசி; தரம்-தகுதி)

இராவணன் தனக்குத்தானே எண்ணிக்கொள்கிறான். ''நான் அரிதின் முயன்று பெற்ற உண்மையான வரங்கள் எல்லாம் பயனற்றுப் போகும் படிச் செய்கிறானே? இவன் யாராய் இருப்பான்? சிவன் என்றாலோ, நான்முகன் என்றாலோ, திருமால் என்று கூறப்படுபவன் என்றாலோ, இவர்களாக இருக்கமுடியாது. காரணம் இம்மும்மூர்த்திகளும் எனக்கு அடிமைப்பட்டு என்னால் வெல்லப்பட்டுத் தோற்றோடிப்போய் ஒளித்து கொண்டவர்கள். சரி சிறந்த தவம் செய்த முனிவன் என்றாலோ, சாதாரண ஒரு தவசியால் இத்தகைய அரும் பெரும் செயலைச் செய்துமுடிக்க முடியாது. எனவே இவன் மும்மூர்த்திகளுக்கும் மேலானவனும், வேதங்களால் போற்றித் துதிக்கப்படுபவனும், வேதங்களுக்கே மூலமுதற் காரணமானவனுமாக இருப்பானோ?'' என்று வியப்படையத் தொடங்குகிறான் இராவணன்.

''தவனோ என்னின் செய்துமுடிக்கும் தரன் அல்லன்'' என்பது இராவணன் எதிரில் நிற்கும் அற்பமான மனிதனான இராமபிரான் அவனை விட வயதில் சிறியவனாகத் தோன்றுகிறான். எனவே இவனுக்குப் பெருந்தவம் செய்யும் ஆற்றலும் தகுதியும் இருக்கமுடியாது என்று கருதுகிறான் என்பதாம். மேலும் இராவணன்தான் ஒருவன்தான் உலகத்திலேயே பெருந்தவம் செய்து, மும்மூர்த்திகளிடமிருந்து உண்மையான வரங்களைப் பெற்றிருப்பதாகக் கருதும் செருக்கு உடையவன். எனவே இவ்வாறு கூறினான் என்க. எனவே தொன்மையான வேதங்களுக் கெல்லாம் மூலகாரணமான ஆதிப்பரம்பொருளாக இருப்பவனோ? என்று

Koviloor Digital Library

ஐயம்கொண்டு வியந்து நின்றான் என்க. தான் பெற்ற வரங்களையே அழிக்கிறான் என்றால், அவன் தன்னைக்காட்டிலும் வரபலம் மிகுந்தவனாகத்தானே இருக்கவேண்டும்? என்றும் அப்படி ஒருவன் இருக்கமுடியாதே என்றும் மனத்தில் கருதிப் பார்க்கிறான். ''மெய்வரம்'' என்பது தவறாமல் பலிக்கும் உண்மையான வரம் என்ற பொருளைத்தரும். இறைவன் உலகிற்கு முதற்காரணன் என்பது விசிஷ்டாத்வைதம்.

135. ''யாரேனும்தான் ஆகுக! யான், என் தனி ஆண்மை
பேரேன்; நின்றே வெற்றி முடிப்பென்; புகழ்பெற்றேன்;
நேரே செல்லும் கொல்லும் எனில், தான் நிமிர் வெற்றி
வேரே நிற்கும்; மீள்கிலென்'' என்னா, விடலுற்றான். (9921)

(தனி-ஒப்பற்ற; பேர்தல்-விலகுதல்/நீங்குதல்; வேர்-அடிப்படை; நிமிர்-உயர்ந்த; ஆண்மை-வீரப்பான்மை; விடல்-அம்பு செலுத்துதல்)

''நான் கருதியவர்களுள் ஒருவரும் இல்லாது வேறு யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும்; நான் எனது ஒப்பற்ற வீரப்பான்மையினின்றும் நீங்கமாட்டேன்; எதிரியின் எதிர் நின்று தனித்துப் போரிட்டு வெற்றியை முடிப்பேன்; அதனால் எனக்குப் புகழ் வந்துசேரும்; பகைவனான இராமபிரான் மறைந்துநின்று கொல்லாமல் நேர்நின்று கொல்லுவான் என்றால், என்னுடைய உயர்ந்த வெற்றியின் வேர் நிலைத்து நிற்கும்; எவ்வாறாயினும் வெற்றிபெறாமல் இங்கிருந்து மீண்டு போக மாட்டேன்'' என்று கூறிக்கொண்டே அம்புகளைச் செலுத்திக் கொண்டேயிருந்தான் இராவணன்.

முன்பாடலில் சத்துவகுணம் பெற்று இராமபிரானை வியந்த இராவணன், உடனே இந்தப்பாடலில் தாமசகுணம் வரப்பெற்று, யாராய் வேண்டுமானாலும் இருக்கட்டும். நான் தனித்து நின்று போர்செய்து வெற்றிபெற்று மீள்வேன்; வெற்றிபெறாமல் மீண்டுவரமாட்டேன்; அவ்வாறு நான் வெற்றிபெற்று மீண்டுவந்தால் எனக்குப் புகழ் வந்து சேரும் என்று கருதுகிறான் இராவணன் என்பதாம். கந்தபுராணத்திலும், முருகப்பெருமானுடன் போரிடவந்த சூரபத்மன் முருகப்பெருமானின் போராற்றல்கண்டு வியந்து போற்றுகிறான், மறுநொடியில் செருக்குக் கொண்டு மீண்டும் போரிடத் தொடங்குகிறான் என்பதும் இங்கு ஒப்புநோக்கத் தகும். ''பொன்றிலன் என்றபோதும், வேதமுள்ளளவும் யானும் நின்றுளன் அன்றோ? மற்று அவ்விராமன் பேர் நிற்குமாயின்; பொன்றுதல் ஒருகாலத்தும் தவிருமோ? பொதுமைத்தன்றோ? இன்றுளார் நாளை மாள்வார்! புகழுக்கும் இறுதி உண்டோ?'' என்பது இதே இராவணன் இந்திரசித்துவதைப் படலத்தில் பேசிய தத்துவங்கள் என்பதையும் நினைவிற் கொண்டுவருக.

Koviloor Digital Library

136. இராவணன் நிருதிப்படை செலுத்துதல்

நிருதித் திக்கில் நின்றவன் வென்றிப்படை நெஞ்சில்
கருதி, தன்பால் வந்தது அவன் கைக்கொடு, காலன்
விருதைச் சிந்தும் வில்லின் வலித்து, செலவிட்டான்,
குருதிச் செங்கண் தீஉக, ஞாலம் குலைவு எய்த. (9922)

(நிருதித்திக்கு-தென்மேற்குத்திசை; விருது-வெற்றி; வலித்தல்-பூட்டுதல்/ஏற்றுதல்; குலைதல்-நடுங்குதல்; ஞாலம்-பூமி; கருதுதல்-தியானித்தல்/நினைத்தல்)

தென்மேற்குத் திசைக்காவலனான நிருதி என்பவனுடைய வெற்றியைத் தரும் படைக்கலத்தை இராவணன் தன் நெஞ்சில் தியானிக்க, அது அவன் கைக்குவந்தது; அதனை அவன் கைகளில் ஏந்திக்கொண்டு, இயமனுடைய வெற்றிபொருந்திய சிறப்புக்களையெல்லாம் அழிக்க வல்லதான அந்த அம்பை வில்லில் நாண்ஏற்றி, முன்பே இரத்தம்போல் சிவந்திருந்த கண்கள் இப்பொழுது சீற்றத்தால் நெருப்புப்பொறி சிந்தவும், உலகமெல்லாம் நிலைகுலைந்து நடுங்கவும், இராமபிரான்மேல் செல்லும்படி செலுத்தினான்.

நிருதியின் படைக்கலத்தை ''காலன் விருதைச் சிந்தும் வில்'' என்று சிறப்பித்தார் என்க.

137. வய்யம் துஞ்சும் வன்பிடர் நாகம் மனம் அஞ்ச,
பய்யும் கோடிப்பல் தலையோடும் அளவில்லா
மெய்யும் வாயும் பெற்றன, மேருக்கிரி சால
நொய்து என்று ஓதும் தன்மைய, ஆக நுழைகின்ற. (9923)

(வய்யம்-வையம்/உலகம்; துஞ்சுதல்-தங்குதல்; நாகம்-ஆதிசேஷன்; பய்யும்-பையும்; நொய்து-இலோசனது/எளிது; ஓதுதல்-சொல்லுதல்; கோடி-கோடு/வரிசை; சால-மிகவும்) (குளகப்பாடல்)

இந்தப்பூமி தங்குதற்கு இடமான வலிய பிடரியினை உடைய் ஆதிசேஷன் என்னும் பாம்பின் மனம் துணுக்குறவும், அதனுடைய படமும், வரிசையாக அமைந்துள்ள பல தலைகளும், அளவற்ற உடல் களும் வாய்களும் பெற்றனவும், மேருமலையே மிகவும் இலேசானது என்று கூறும்படியாகவும், இராவணன் செலுத்திய அந்த நிருதப்படை மிக எளிதாக நுழைகின்றது.

''வையம்'' என்பதும் ''பையும்'' என்பதும் எதுகைநோக்கி ''வய்யம்'' என்றும் ''பய்யும்'' என்றும் திரிந்தன. இவ்வுலகத்தை ஆயிரம் தலைகளை யுடைய ஆதிசேஷன் என்னும் பாம்பு தாங்கிக் கொண்டிருக்கிறது என்பது ஒரு புராணக்குறிப்பு. இப்பொழுது இராவணனால் செலுத்தப்பட்ட,

Koviloor Digital Library

நிருதப்படை ஆதிசேஷனைக் காட்டிலும் அதிகமான தலைகளும், படமும், உடம்புகளும், வாய்களும் பெற்றிருந்தன என்பதும், அது உருவத்தில் மேருமலையே மிக இலேசானது என்று சொல்லும்படி உறுதியாக இருந்தது என்றும் பேசப்படுகிறது. இராவணன் ஒரு ராட்சசப் படையை ஏவினான் என்றும் அதனின்றும் பல நாகங்கள் தோன்றின என்றும் வான்மீகம் பேசுகிறது. ''துஞ்சுதல்'' என்பது தங்குதல் என்ற பொருளைத்தரும். ''புலிதுஞ்சும் வியம் புலத்தற்றே'' என்பதும், ''அம்பு துஞ்சும் கடியரண்'' என்பதும் புறநானூறு-20. நிருதிப்படை பாம்பின் வடிவமானது என்பதும் கனத்தில் மேருமலையைக் காட்டிலும் உயர்ந்தது என்பதும் பெறப்படுகிறது.

138. வாய்வாய் தோறும், மாகடல்போலும் விடவாரி
போய் வார்கின்ற; பொங்கு அனல் கண்ணில் பொழிகின்ற;
மீவாய் எங்கும் வெள்ளிடை இன்றி மிடைகின்ற;
பேய்வாய் என்ன வெள்ளெயிறு எங்கும் பிறழ்கின்ற; (9924)

(விடவாரி-நஞ்சுவெள்ளம்; வார்தல்-பெருகுதல்/ஒழுகுதல்; பொங்குதல்-மிகுதல்; பொழிதல்-கக்குதல்; வெள்ளிடை-வெற்றிடம்; மிடைதல்-நெருங்குதல்; பிறழ்தல்-விளங்குதல்; மீவாய்-மேலிடம்)

அவ்வாறு இராவணனால் ஏவப்பட்ட நிருதிப்படையினின்றும் வெளிப்பட்ட ஒவ்வொரு பாம்பின் வாய்களினின்றும், பெரிய கடல்நீர் போன்று நச்சுப்பெருக்கு வழிகின்றது; அவற்றின் கண்களினின்றும் மிகுதியான நெருப்புப்பொறி தெறிக்கின்றது; மேலிடத்தில் எல்லாம் வெற்றிடமே இல்லை என்னும்படி நிறைந்து நெருங்கியிருக்கின்றன. பேயின் வாயினைப்போல் வெண்மையான கோரப்பற்கள் விளங்கித் திகழ்கின்றன.

அப்பாம்புகளின் வாயினின்றும் விடநீர் பொங்கி வழிகின்றது; கண்களின்றும் நெருப்புப்பொறி பறக்கின்றது; விண்ணிடம் எல்லாம் அளவற்ற பாம்புகள் நெருங்கி நிற்கின்றன; பேயின் வாயைப்போல வெள்ளிய பற்கள் காணப்படுகின்றன என்பதாம். ''பொங்கு அனல் கண்ணில் பொழிகின்றன'' என்பது முன்பு கூறிய திட்டிவிடத்தைப் போன்ற பாம்பு என்று கூறுவதும் பொருந்தும். விடவாரி வார்கின்றது; பொங்கு அனல் பொழிகின்றது; வெள்ளிடையின்றி மிடைகின்றது; வெள்ளெயிறு எங்கும் பிறழ்கின்றது என்று அடுக்கிக்கூறிய நயம் நோக்குக.

139. "கடித்தே தீரும்; கண்அகன் ஞாலம் கடலோடும்
குடித்தே தீரும்" என்று உயிர் எல்லாம் குலைகின்ற,
"முடித்தான் அன்றோ வெங்கண் அரக்கன்? முழுமுற்றும்
பொடித்தான் ஆகும், இப்பொழுது" என்னப் புகைகின்ற. (9925)

Koviloor Digital Library

(கண்அகன்-இடம் அகன்ற; ஞாலம்-உலகம்/பூமி; குலைதல்-நடுங்குதல்; முழு முற்றும்-முழுவதையும்; பொடித்தல்-பொடியாக்குதல்)

இராவணனால் செலுத்தப்பட்ட நிருதிக்கணையினின்றும் தோன்றிய பாம்புகள், ''இப்பொழுது இராமபிரானைக் கடித்தே தீரும்; இடம் அகன்ற இந்த உலகத்தைக் கடல்களோடு சேர்த்துக் குடித்தேதீரும்'' என்று உலக உயிரினங்கள் எல்லாம் நிலைகுலைந்தன; இந்தக் கொடிய கண்களை யுடைய அரக்கனான இராவணன், இந்த உலகம் முழுவதையும் வேரோடு அழித்துப் பொடிப்பொடியாக்குவான் என்று புகைந்துகொண்டு பாய்ந்து வந்தன.

இந்தப் பாம்புகள் இராமபிரானைக் கடிக்கும்படியாகவும், உலகத்தை யும் கடல்களையும் ஒருசேரக் குடிக்கும்படியாகவும், அவன்மீது சீறிப்பாய்ந்தன என்பதாம்.

140. அவ்வாறு உற்ற ஆடு அரவம் தன் அகல் வாயால்
கவ்வா நின்ற மால்வரை முற்றும் அவை கண்டான்,
''எவ்வாய் தொறும் எய்தின'' என்னா, எதிர் எய்தான்,
தவ்வா மெய்ம்மைக் காருடம் என்னும் படைதன்னால். (9926)

(அரவம்-நாகம்/பாம்பு; மால்-பெரிய; எவ்வாய்-எல்லா இடங் களிலும்; தவ்வா-தப்பாத/தவறாத; மெய்ம்மை-உண்மை; காருடம்-கருடன்; வாய்-இடம்; முற்றும்-முழுவதும்; கவ்வாநின்ற-கவ்விய)

அவ்வாறு படம் எடுத்துஆடும் இயல்புடைய நிருதிக்கணை பாம்பு வடிவெடுத்து, தனது அகன்ற வாயால் அந்தப்பெரிய இடங்களிலெல்லாம் கவ்விப் பற்றி நிற்பதை இராமபிரான் கண்ணுற்றான். ''இந்த நிருதிக் கணையினின்றும் புறப்பட்ட நாகங்கள் எல்லா இடங்களிலும் வந்து சேர்ந்துவிட்டனவே இதை முற்றிலும் அழிக்கவேண்டும்'' என்று எண்ணம் கொண்டு, இலக்கினின்றும் தப்பாததும், உண்மையானதுமான கருடக்கணை என்னும் அத்திரத்தை, அந்த நாகங்களுக்கு எதிராகச் செலுத்தினான்.

''ஆடு அரவம்'' என்பது இயல்பாகவே படம்எடுத்து ஆடும் பாம்பு களைக் குறித்தது. ''காருடம்'' என்பது கருடன் சம்பந்தப்பட்டது. கருட னுடைய வடிவுடையது. இங்கே கருடக்கணை எனக்கொள்ளப்பட்டது. பாம்புக்குப் பகை கருடன், எனவே அதனைத் தெரிந்தெடுத்துச் செலுத்தினான் என்பதாம். முன்பு இராவணனின் மாயா அத்திரத்தை எதிர்த்து ஞானக்கணையைச் செலுத்தியதுபோல இப்போது நிருதிக் கணையை எதிர்த்துக் கருடக்கணையைச் செலுத்தினான் என்பதாம். ''தவ்வா'' எனஎதிர்மறையாகவும், ''மெய்ம்மை'' என்று உடன்பாடாகவும் கூறிக் கருடாத்திரத்தைச் சிறப்பித்த நயம் உணர்க.

Koviloor Digital Library

141. எவண் எத்தன்மைத்து ஏகின, நாகத்து இனம் என்ன,
பவணத்து அன்ன வெஞ்சிறை வேகத்தொழில் பம்ப,
சுவணக் கோலத்துண்டம் நகம் தொல்சிறை வெல்போர்
உவணப் புள்ளே ஆயின, வானோர் உலகு எல்லாம். (9927)

(எவண்-எங்கு; எத்தன்மைத்து-எவ்வாறு; பவணம்-பவனம்/காற்று; பம்புதல்-நிரம்புதல்; சுவணம்-சுவர்ணம்/சொர்ணம்/பொன்; கோலம்-அழகு; துண்டம்-மூக்கு/அலகு; தொல்-பழமையான; உவணப்புள்-கருடப்பறவை; இனம்-தொகுதி)

இராவணன் செலுத்திய நிருதிப்படையினின்றும் வெளிப்பட்ட நாகக் கூட்டங்கள் எங்கே, எவ்வாறு சென்று பரவினவோ, அங்கே அவ்வாறே, காற்றைப்போன்று வேகமுடையதும், கொடிய சிறகுகளையுடையதும், போரில் வெற்றிபெற்று நிறைவதுமான பொன்மயமான அழகிய மூக்கு, நகம், பழமையான முதிர்ந்த சிறகு, முதலியன கொண்ட, வெற்றியையே பெறும் கருடப்பறவை மயமாகவே விண்ணுலகமெல்லாம் நிரம்பி விளங்கிற்று.

''பவனம்'' என்பது பவணம் என்று எதுகைநோக்கித் திரிந்தது. பவனம் என்பது காற்று என்ற பொருளைத்தரும். ''சுவர்ணம்'' என்ற வடசொல்லின் திரிபு சுவணம் என்பது. பொன் என்ற பொருளைத்தரும். சொர்ணம் என்பது வழக்குச்சொல். ''உவணம்'' என்பதும் சுபர்ணன் என்ற வடசொல்லின் திரிபேயாகும். இராவணன் செலுத்திய நிருதக்கணையினின்றும் புறப் பட்ட நாகக்கணைகள் எங்கெங்கே சென்றனவோ அங்கங்கேயெல்லாம் இப்போது இராமபிரான் செலுத்திய கருடக்கணையும் சென்று விண்ணுலகத்தில் நிறைந்து விளங்கின என்பதாம். ''பவணமே இராசி, பூமி, பகர்காற்று, மனையே, கோயில்'' என்பது நிகண்டு. கருடனின் சிறகுகளின் வேகத்திற்குக் காற்று உவமை.

142. அளக்க அரும் புள்ளினம் அடைய ஆர் அழல்
துளக்க அரும் வாய்தொறும் எரியத் தொட்டன,
"இளக்க அரும் இலங்கை தீ இடுதும் ஈண்டு" என,
விளக்கு இனம் எடுத்தன போன்ற, விண்எலாம். (9928)

(அடைய-முழுவதும்; துளக்குதல்-அசைத்தல்; ஆர்-அரிய/நிறைந்த; அழல்-நெருப்பு; ஈண்டு-இப்போது/விரைவாக; விண்-விண்ணுல கத்தார்; இளக்குதல்-நெகிழச்செய்தல்/நீர்த்துப்போகச் செய்தல்/வன்மை குறைத்தல்; இனம்-கூட்டம்/தொகுதி; விளக்கு-தீப்பந்தம்)

இராமபிரான் செலுத்திய கருடக்கணையினின்றும், எண்ணற்ற கருடப் பறவைகள் பிரிந்துசென்று, அவற்றின் அசைக்க இயலாத வாய்களி லெல்லாம், சினத்தால் அடர்ந்தநெருப்புப்பிழம்பு எரியத்தொடங்கின.

Koviloor Digital Library

அவை, ''நெகிழ்தற்கரிதான இந்த இலங்கை நகருக்கு இப்போதே விரைந்து தீயிடுவோம்'' என்று விண்ணுலகத்தவர் எல்லோரும் தத்தம் கைகளில் தீப்பந்தத் தொகுதிகளைக் கொண்டிருந்தது போன்று தோன்றியது.

கருடப்பறவைகளின் வாயில் ஒளிர்ந்த நெருப்புப்பொறிக்கு, விண்ணுலகத்தவர் கையில் ஏந்தியிருக்கும் தீப்பந்தங்கள் உவமை. ''விளக்கு'' என்பது இங்கே தீப்பந்தத்தை உணர்த்தியது. ''விண்'' என்பது இடவாகு பெயராய் விண்ணுலகத்துள்ளோரைக் குறிக்கும்.

143. குயின்றன சுடர்மணி, கனலின் குப்பையின்
பயின்றன, சுடர்தரப் பதும நாளங்கள்;
வயின்தொறும் கவர்ந்தென்னத் துண்ட வாள்களால்
அயின்றன, புள்ளினம் உகிரின் அள்ளின. (9929)

(குயின்றன-பதிந்திருந்தன; சுடர்-ஒளி; குப்பை-குவியல்; புள்ளினம்-பறவைக்கூட்டம்; பதுமம்-தாமரைமலர்; நாளம்-தண்டு; வயின்-இடம்; உகிர்-நகங்கள்; அள்ளுதல்-பற்றுதல்; அயின்றன-தின்றன/அருந்தின; மணி-மாணிக்கம்; பயில்தல்-பொருந்துதல்; துண்டம்-மூக்கு/அலகு)

அந்த நாகங்களின்மேல் பதித்து வைத்தாற்போன்று ஒளிவிடும் இரத்தினங்கள் நெருப்பின் குவியல்போலப் பொருந்தி அமைந்து ஒளி வீசித் திகழ்ந்தன. அந்தக் கருடப்பறவைகள், அப்பாம்புகளைத் தாமரை மலரை அதன் தண்டுகளோடு அள்ளி எடுப்பதைப்போல நகங்களால் எடுத்து, எல்லா இடங்களிலும் பற்றிக்கொண்டு, தமது அலகுகள் என்னும் வாட்படையினால் கொத்தித் தின்னலாயின.

நீண்ட பாம்புக்குத் தாமரைத்தண்டும், அவற்றின் மேல் விளங்கும் மாணிக்கங்களுக்குத் தாமரையும் உவமை; அவற்றைக் கருடப்பறவைகள் தம் நகங்களால் பற்றி எடுத்துத் தமது மூக்கு என்னும் அலகால் கொத்தித் தின்றன என்பதாம். ''துண்டவாள்'' என்பது உருவகம். அலகாகிய வாட்படை என்பது பொருள்.

144. ஆயிடை அரக்கனும், அழன்ற நெஞ்சினன்,
தீயிடைப் பொடிந்து எழும் உயிர்ப்பன், சீற்றத்தன்,
மா இரு ஞாலமும் விசும்பும் வைப்பு அறத்
தூயினன், சுடுசரம் உருமின் தோற்றத்த. (9930)

(ஆயிடை-அப்பொழுது; அழல்தல்-கொதித்தல்; பொடித்தல்-தோன்றுதல்; உயிர்ப்பு-பெருமூச்சு; மாஇருஞாலம்-மிகப்பெரிய மண்ணுலகம்; விசும்பு-விண்ணுலகம்; வைப்பு-இடம்/பூமி/வெற்றிடம்; உரும்-இடி; தூய்தல்-ஏவுதல்/வாரி இறைத்தல்)

Koviloor Digital Library

அந்தக் காட்சியைக் கண்ட அரக்கனாகிய இராவணன் கொதிக்கும் உள்ளம் உடையவனாய், மூச்சுக்காற்றில் தீப்பொறி பறக்கும்படி சீற்றம் கொண்டவனாய், இந்த மிகப்பெரிய பூமியும், விண்ணுலகும் சற்றும் வெற்றிடம் இன்றி, இடிபோன்ற உருவமுடன் சுடுகின்ற அம்புகளை வாரி இறைத்தான்.

''மாஇரு'' என்பது மீமிசைச்சொல்; ''வைப்பு'' என்ற சொல் பூமி என்ற நேர்பொருளைத்தரும். இங்கே வெற்றிடம் எனப் பொருள் கொள்ளப் பட்டது. அவனுடைய அம்புகளின் தோற்றம் பேரிடியைப் போன்றிருந்தது என்பது அவற்றின் விரைவும் ஒளியும், அழிக்கும் தன்மையும் பற்றிய தனால் என்க. தான் விடுத்த நிருதக்கணையினின்றும் தோன்றிய நாகங்களையெல்லாம், இராமபிரான் ஏவின கருடக்கணையினின்றும் தோன்றிய கருடப்பறவைகள் கொத்தித்தின்று அழித்தமையால், இராவணன் அழன்ற நெஞ்சினன் ஆனான். தீயிடைப் பொடித்து எழும் உயிர்ப்பன் ஆனான்; சீற்றத்தான் ஆனான்; ''மாஇரு ஞாலமும் விசும்பும், வைப்புஅற, உருமின் தோற்றத்த சுடுசரம் தூயினன் ஆனான் என்க.

145. அங்கு, அவ்வெங் கடுங்கணை அயிலின் வாய்தொறும்
வெங்கணை படப்பட, விசையின் வீழ்ந்தன;
புங்கமே தலைஎனப் புக்க போலுமால்;
துங்க வாள் அரக்கனது உரத்தில் தோற்றல! (9931)

(அயில்-கூர்மை; துங்கம்-வலிமை; உரம்-மார்பு; புங்கம்-அடிப்பகுதி/ குதை; புக்க-புகுந்தன)

அப்பொழுது இராவணன் ஏவிய அந்த வெம்மையும் விரைவும் மிக்க அம்புகளின் கூரிய முனைகள் எல்லாம், இராமபிரான் செலுத்திய அம்புகளால் எதிர்கொள்ளப்பட்டதனால் வேகத்துடன் வீழ்ந்தன; வலிமை யுடையவனும், உயர்ந்தவனுமான அந்தக் கொடிய அரக்கனான இராவணனது மார்பில் அவை பதிந்ததாக வெளியில் தோன்றவில்லை. காரணம், அந்த அம்புகளின் அடிப்பகுதியே வந்தவழியே திரும்பிச்சென்று இராவணன் மார்பில் பதிந்துவிட்டதுபோலும். எனவே அவை புறத்தில் தோன்றவில்லை.

இராவணன் செலுத்திய அம்புகளின் முனைகளையெல்லாம் இராம பிரானது அம்புகள் எதிர்த்துத் தாக்கியதால் அவை வந்தவழியே திரும்பிச் சென்று இராவணனது மார்பிலேயே தலைகீழாய்ப் பதிந்தன என்பதாம். ''புங்கம்'' என்பது அம்பின் அடிப்பகுதியாகிய குதையைக் குறித்தது. அம்பின் அடிப்பகுதியே கூரிய முனைப்பகுதியாகமாறி அவன் மார்பில் புகுந்தது என்பதாம். இராவணன் ஏவிய அம்புகள் அவனுடைய மார்பிலேயே நுழைந்தன என்பதாம்.

Koviloor Digital Library

146. இராவணன் தளர்தலும், இராமபிரான் வலி மிகுதலும்.

ஒக்க நின்று எதிர் அமர் உடற்றும் காலையில்,
முக்கணான் தடவரை எடுத்த மொய்ம்பற்கு,
நெக்கன விஞ்சைகள், நிலையின் தீர்ந்தன,
மிக்கன இராமற்கு வலியும் வீரமும். (9932)

(ஒக்க-ஒத்தநிலை/சரிசமமாக; அமர்-போர்; உடற்றுதல்-போரிடுதல்; தட-பெரிய; வரை-மலை/கயிலைமலை; மொய்ம்பு-வலிமை/ தோள்கள்; விஞ்சை-மாயவித்தைகள்; நெகுதல்-நெகிழ்தல்/தளர்தல்; தீர்தல்-மறந்துபோதல்)

இராவணனும் இராமபிரானும் சரிசமமான நிலையில் நின்று போர்செய்து கொண்டிருக்கும்போது, மூன்று கண்களையுடைய சிவ பெருமான் வீற்றிருக்கும் பெரிய கயிலாய மலையையே பெயர்த்தெடுத்த வலிமைமிக்க தோள்களையுடைய இராவணனுக்குத் தான் கற்றிருந்த மாயவித்தைகள் எல்லாம் ஒவ்வொன்றாக நினைவுதப்பி மறந்துபோய் இறுதியில் அவனைவிட்டு நெகிழ்ந்து போயின. எனினும் அவனை எதிர்த்து நின்ற இராமபிரானுக்கோ, வலிமையும் வீரமும், முன்னைவிட அதிகரிக்கலாயின.

தான் செலுத்திய மாயப்படை, நிருதப்படை, சூலப்படை முதலிய வற்றை இராமபிரான் தன்னுடைய ஞானப்படையாலும், கருடப்படை யாலும், உங்காரத்தாலும் அழித்தொழித்தமையால் இராவணன் சற்று தளர்ந்துபோனான். அவன் தளர்ந்து போனதால் அவன் நினைவாற்றலும் நெகிழ்ந்து தீர்ந்து போனது என்பதாம்.

147. இராமபிரான் இராவணன் தலையை அறுத்துத் தள்ளுதல்

வேதியர் வேதத்து மெய்யன், வெய்யவர்க்கு
ஆதியன், அணுகிய அற்றம் நோக்கினான்,
சாதியின் நிமிர்ந்ததோர் தலையைத் தள்ளினான்
பாதியின் மதிமுகப் பகழி ஒன்றினால். (9933)

(வேதியர்-வேதவிற்பன்னர்கள்; மெய்யன்-மெய்ப்பொருள்; வெய்யவர்-கொடியவர்/அரக்கர்; ஆதியன்-தலைவன்/முதல்வன்/ இராவணன்; அற்றம்-சமயம்; சாதி-தொகுதி; நிமிர்ந்தது-உயர்ந்துள்ளது; பாதியின் மதிமுகம்-அர்த்தசந்திரன்/பிறைமுகக்கணை)

வேதவிற்பன்னர்களால் போற்றித் துதிக்கப்பெறும் மெய்ப் பொருளாகிய திருமாலின் அவதாரமான இராமபிரான், கொடியவர்களான அரக்கர்களின் தலைவனான இராவணன் தன்னை நெருங்கிவந்த சமயம்பார்த்து, இதுதான் இவனது தலையைக் கொய்வதற்கு ஏற்ற தருணம்

Koviloor Digital Library

என்று கருதி, அவனது பத்துத் தலைகளின் தொகுதிகளில் உயர்ந்து விளங்கிய ஒருதலையை பிறைமுகக்கணை ஒன்றைச் செலுத்தி அறுத்துத் தரையில் தள்ளினான்.

வேதியர் வேதத்து மெய்யன் இராமபிரான்; வெய்யவர்க்கு ஆதியன் இராவணன். ''பாதியின் மதிமுகப் பகழி'' என்பது பிறைமுகக்கணை, அர்த்த சந்திரபாணத்தைக் குறித்தது.

148. மேருவின் கொடுமுடி, வீசுகால் எறி
போரிடை, ஒடிந்துபோய், புணரி புக்கென
ஆரியன் சரம்பட, அரக்கன் வந்தலை
நீரிடை விழுந்தது, நெருப்பொடு அன்றுபோய். (9934)

(கால்-காற்று/காற்றுக்கடவுள்; கொடுமுடி-சிகரம்; புணரி-கடல்; ஆரியன்-மேலோன்/இராமபிரான்; எறிதல்-தாக்குதல்; அன்று-அப்பொழுதே)

முன்பு ஆதிசேஷனுக்கும், வாயுபகவானுக்கும் நிகழ்ந்த போரில், வாயுபகவான் வீசிய பெருங்காற்றின் விளைவாக மேருமலையின் சிகரம் முறிந்துபோய்க் கடலில் விழுந்ததுபோல, இப்போது மேலோனான இராமபிரான் செலுத்திய அம்புகள் தாக்கியதால், அரக்கன் இராவணனது வலிய ஒரு தலை நெருப்போடு சேர்ந்துகொண்டு கடல்நீரில்போய் விழுந்தது.

முன்பு ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்கும் நிகழ்ந்த போரில் விளைந்த பெருங்காற்றினால் மேருமலையின் சிகரம் முறிந்துபோய் மூன்று துண்டுகளாகக் கடலில் சிதறிப்போய் விழுந்த இடம்தான் இப்போது இலங்கை எனப்படும் திரிகூடமலை என்பது நாம் பால காண்டத்தில் பயின்றுவந்த ஒரு புராணவரலாறு. அது இங்கே உவமையாகக் கையாளப்பட்டிருக்கிறது. வீசுகின்ற மென்மையான காற்றுக்கு இராமபிரானின் அம்பும், வலிய மேருமலையின் சிகரத்திற்கு இராவணனின்தலையும் ஒப்பு. மேருவின்சிகரம் கடலில் விழுந்ததுபோல இராவணனின் தலையும் கடலில் விழுந்தது என்பதாம்.

149. குதித்தனர், பாரிடை குன்று கூறுற,
மிதித்தனர்; வடகமும் தூசும் வீசினார்;
துதித்தனர்; பாடினர்; ஆடித்துள்ளினார்;
மதித்தனர் இராமனை; வானுளோர் எலாம். (9935)

(பார்-பூமி; குன்று-மலை/திரிகூடமலை; கூறுஉறுதல்-இரண்டாகப் பிளந்துபோதல்; வடகம்-மேலாடை; தூசு-ஆடை/உடை/அரையாடை/இடையாடை)

Koviloor Digital Library

அவ்வாறு இராவணனின் ஒருதலை, இராமபிரானால் அறுத்துக் கடலில் தள்ளப்பட்டதைக் கண்ட வானுலகத்துத் தேவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியால் பூமியில் குதித்து ஆடினார்கள்; திரிகூட மலையே இரண்டாகப் பிளந்துபோகும்படி மிதித்து ஆடினார்கள்; மகிழ்ச்சியால் என்ன செய்கின்றோம் என்று அறியாது மேலாடையையும், அரையாடையையும் வீசி மகிழ்ந்தார்கள்; இராமபிரானைப் போற்றினார்கள்; பாடினார்கள்; ஆடித்துள்ளினார்கள். அவன் பேராற்றலைக் கண்டு பாராட்டினார்கள்.

மகிழ்ச்சியினால் மேலாடைகளையும், அரையாடைகளையும் வீசிய செய்திகள் முன்பும் பேசப்பட்டிருக்கின்றன. கூரத்தாழ்வான் காரணமாக இராமனுசரே தூசுவீசி மகிழ்ந்ததாகவும் ஒரு வரலாறு உண்டு. பொதுவாகத் தேவர்கள் இமையாநாட்டம் உடையவர்கள் என்றும், கால் தரை தோயாதார் என்றும் சிறப்பித்துச் சொல்லப்படுவர். இப்போது மகிழ்ச்சி மிகுதியினால் தம்மை மறந்து பாரிடைக் குதித்தனர்; குன்று கூறுற மிதித்தனர்'' என்று கொள்ளவேண்டும்.

150. இறந்தது ஓர் உயிருடன் தருமத்து ஈட்டினால்
பிறந்துளதாம் எனப் பெயர்த்தும், ஓர்தலை
மறந்திலது எழுந்தது, மடித்த வாயது;
சிறந்தது தவம் அலால், செயல் உண்டாகுமோ? (9936)

(ஈடு-பெருமை; எழுதல்-மீண்டும் முளைத்தல்; பெயர்த்தும்-மீண்டும்)

''ஒருமுறை இறந்துபட்ட உயிர், அவன் செய்த தவத்தின் பெருமையாலும், பயனாலும் மீண்டும் ஒரு உடலுக்குள் புகுந்து புதிதாகப் பிறந்து வருதலைப்போல, அறுபட்ட இராவணனின் ஒருதலை, தன்முன்னைச் செயலைச் சற்றும் மறவாமல் சினத்தால் மடிக்கப்பட்ட வாயுடனே மீண்டும் முளைத்தது. இத்தகைய அரிய, அற்புதமான செயல், தவத்தின் பயன் அல்லது பிறவற்றால் உண்டாகுமோ?'' என்கிறான் கவிஞன்.

தவம் செய்தலின் சிறப்பும் பயனும் பேசப்படுகிறது. இறந்துபட்ட உயிர் மீண்டும் உடனே வேறொரு உடலில் புதிதாகப் பிறந்துவருவது என்பது அரிது. அவ்வாறு வந்தால் அது அதிசயம், அற்புதம். இது எதனால் விளையும்? அவன் செய்த நல்வினையின் பயனால் நிகழலாம். அதுபோல இராவணன் செய்த அருந்தவத்தின் பயனால், இராமபிரானால் அறுக்கப் பட்டுக் கடலில் தள்ளப்பட்ட தலை, மீண்டும் பண்டை நிலையிலேயே முளைத்தது என்றால் அது அற்புதம்தானே! என்கிறான் கவிஞன் என்பதாம்.

முன்பு இராமபிரான் கால் துகள் பட்டு உயிர்த்தெழுந்த அகலியையும், கவிஞன் ''முன்னை வண்ணத்தள்'' என்றும் ''பண்டை வண்ணத்தள்'' என்றும் குறிப்பிட்டதையும் இங்கு ஒப்புநோக்குக. போர் செய்யும்போது எப்படி மடித்தவாயுடன் அந்தத்தலை அறுக்கப்பட்டதோ, அதேபோல

Koviloor Digital Library

மடித்த வாயுடனேயே இப்போது இந்தப் புதிய தலை முளைத்தது என்பது நுனித்து உணரப்படவேண்டும். ஒரு பொதுக்கருத்தைக்கூறி சிறப்புக் கருத்தை விளக்கியிருப்பதால் இப்பாடல் வேற்றுப்பொருள் வைப்பணியின் பாற்பட்டதாகும். ''உண்டாகுமோ?'' என்பதில் உள்ள ஓகாரம் ஆகாது என்ற எதிர்மறைப் பொருளைத்தரும். ''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால், செய்தவம் ஈண்டு முயலப்படும்'' என்பது குறள்-265. ''அன்னகாலை அயன்தோன்றி அவனை நோக்கி, அருந்தவத்தின் நின்னை ஒப்பார் நீ அன்றி ஒருவர் இல்லை; நின் கரத்தால் முன்னம் அரிந்த தலையெல்லாம் முன்புபோல் முளைத்திடுக என்ன, அவை தாம் பண்டையினும் எழில் உண்டாக எழுந்தனவால்'' என்பது உத்தரகாண்டம் இராவணன் பிறப்புப்படலத்தில் பிரமதேவன் இராவணனுக்கு அளித்த வரம்.

151. கொய்தது, கொய்திலது" என்னும் கொள்கையின்
எய்தவந்து, அக்கணத்து எழுந்தது ஓர் சிரம்;
செய்த வெஞ்சினத்துடன் சிறக்கும் செல்வனை
வைதது, தெழித்தது மழையின் ஆர்ப்பது. (9937)

(கொள்கை-தன்மை; வைதல்-திட்டுதல்; மழை-மேகம்; தெழித்தல்-அதட்டுதல்; கொய்தல்-திருகுதல்)

இராமபிரான் தன் அம்பினால் திருகி எறிந்த தலை அது திருகப்படவே யில்லை; அறுக்கப்படவேயில்லை என்று காண்போர் கருதுமாறு அந்தக் கணத்திலேயே உடனே வந்து முளைத்தது. முன்பு போரிட்டபோது வெளிக்காட்டிய அந்தக் கோபக்குறியுடனே, இப்பொழுது அந்தப் பெருமைக்குரியவனான இராமபிரானைத் திட்டித் தீர்த்து, மேகத்தினின்றும் எழும் இடிபோல ஆரவாரம் செய்து அதட்டியது.

புதிதாக முளைத்தெழுந்த இராவணனின் ஒருதலை மட்டுமே, இராம பிரானைத் திட்டியது, அதட்டியது என்பது ஓர் நகைச்சுவை நிறைந்த கற்பனை. ''கொய்திலது என்னும் கொள்கையின் எய்தவந்து அக்கணத்து எழுந்ததோர் சிரம்'' என்பது தலைமுளைத்த விரைவைக் குறித்தது எனக் கொள்க.

152. இடந்தது கிரிக்குவடு என்ன, எங்கணும்
படர்ந்தது, குரைகடல் பருகும் பண்பது;
விடம் தரு விழியது; முடுகி வேலையில்
கிடந்ததும் ஆர்த்தது; மழையின் கேழ் அது. (9938)

(இடத்தல்-தள்ளுதல்; கிரிக்குவடு-மலைச்சிகரம்; படர்தல்-செல்லுதல்; குரைத்தல்-ஒலித்தல்; பண்பு-தன்மை; தருதல்-உண்டு

Koviloor Digital Library

பண்ணுதல்/கக்குதல்; கேழ்-நிறம்/ஒப்பு; முடுகுதல்-விரைதல்; விடம்-விஷம்/நஞ்சு)

இராமபிரானால் அறுத்துத் தள்ளப்பட்டுக் கடலில் கிடந்த தலை, அங்கேதான் கிடக்கிறது. இப்போது இங்கே முளைத்திருக்கும் தலை புதியது. அந்தக் கடலில் விரைவாகச் சென்று தள்ளப்பட்டதே அந்தத்தலை இப்போதும் நஞ்சைக் கக்கிக்கொண்டிருக்கும் விழிகளைப் பெற்ற தாகவும், மலைச்சிகரத்தைக் குத்தித் தள்ளியதுபோலவும், எல்லா இடங்களிலும் பரவி இருப்பதுபோலவும், ஒலிக்கின்ற கடலில் உள்ள நீரையெல்லாம் பருகும் தன்மையுடையதாகவும், மேகத்தின் நிறத்தை உடையதாகவும் இருந்து பேராரவாரம் செய்தது.

புதிதாக முளைத்த தலை வைதது; தெழித்தது; கடலில் கிடந்த தலையோ பேராரவாரம் செய்தது என்று வேறுபடுத்திக் காட்டுவதை உணர்க. ''கிடந்ததும்'' என்பதில் உள்ள உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை; காரணம் முன்பு புதிதாய் முளைத்த தலையின் செயல் பற்றியும் பேசப்பட்டது. இது கடலில் கிடந்த தலையின் செயல் பற்றிக் கூறுவதால் இது இறந்தது தழீஇய எச்ச உம்மை எனக்கொள்க.

153. ''விழுத்தினன் சிரம்'' எனும் வெகுளி மீக்கொள,
வழுத்தின, உயிர்களின் முதலின் வைத்த ஓர்
எழுத்தினன், தோள்களின் ஏழொடு ஏழுகோல்
அழுத்தினன், அசனிஏறு அயிர்க்கும் ஆர்ப்பினான். (9939)

(வெகுளி-சினம்; மீக்கொள்ளுதல்-ஏற்படுதல்; உயிர்களின் முதலின் வைத்ததோர் எழுத்து-அகரம்; கோல்-அம்புகள்; அசனிஏறு-பேரிடி; வழுத்துதல்-போற்றப்படுதல்)

பேரிடியே அச்சம் கொள்ளுமாறு பேராரவாரம் செய்து முழக்கிய இராவணன், தன் தலை ஒன்றினை இராமபிரான் கிள்ளி எடுத்து வீழ்த்திவிட்டானே என்று மேலெழுந்த சீற்றத்தால், உலகமெல்லாம் போற்றித் துதிக்கக்கூடியவனும், உயிர் எழுத்துக்களில் முதலில்வைத்து எண்ணப்படுவதும் ஒப்பற்ற எழுத்துமாகிய அகர வடிவினனுமான இராமபிரானின் தோள்களில் பதினான்கு அம்புகளை நன்கு பதியும்படி அழுத்தினான்.

உயிர் எழுத்து, மெய்எழுத்து என்று இருவகைப்பட்ட எழுத்துக்களில் உயிர் எழுத்து தானே தனித்து இயங்கும் மேன்மை பெற்றது. அதனினும் அதன் முதல் எழுத்தாகிய ''அகரம்'' மிகமிக இன்றியமையாதது. அவ்வெழுத்து இல்லாமல் மொழி இயங்காது; அதுபோல இராமபிரான் இல்லாமல் இவ்வுலகம் இயங்காது என்பது மறைபொருள். ''எழுத்துக் களுள் நான் அகரமாய் இருக்கிறேன்'' என்பது கண்ணபிரான் கூற்று.

Koviloor Digital Library

''அக்ஷராணாம் அகாரோஸ்மி'' என்பது பகவத்கீதை. ''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' என்பது குறள்.

154. இராமபிரான் இராவணனின் கையை அறுத்தல்

"தலை அறின் தருவது ஓர் தவமும் உண்டு" என,
நிலை உறு நேமியான் அறிந்து, நீசனைக்
கலை உறு திங்களின் வடிவு காட்டிய
சிலை உறு கையையும் தலத்தில் சேர்த்தினான். (9940)

(அறின்-அற்றால்/அழிந்துபோனால்; தருதல்-மீண்டும் முளைத்தல்; நேமி-சக்கரப்படை; திங்கள்-பிறைச்சந்திரன்; தலம்-தரை; சேர்த்தல்-வீழ்த்துதல்; நிலையுறுதல்-நிலைத்திருத்தல்/சாஸ்வதம்; நீசன்-இழிந்தவன்)

''இவனது ஒரு தலையை அறுத்தால், அது மீண்டும் முளைக்கும் என்ற ஒரு ஒப்பற்ற வரத்தை இவன் சிறந்த தவத்தினால் வாங்கிவந்திருக்கிறான் போலும்'' என்று நிலைபெற்ற சுதர்சனம் என்னும் சக்கரப்படையைக் கையில் ஏந்தியவனான இராமபிரான் நன்கு உணர்ந்து, அந்த இழிந்தவனாகிய இராவணனின் பிறைமதி வடிவுடைய வில்லை ஏந்திய கையை அறுத்துத் தரையில் வீழ்த்தினான்.

தலை அறுபட்டு வீழ்ந்தால், அது அந்த இடத்திலேயே மீண்டும் முளைத்துவிடுகின்றது. அத்தகைய ஒரு ஒப்பற்ற வரத்தை இவன்செய்த அருந்தவத்தினால் வாங்கிவந்து இருக்கிறான்போலும் என்று உண்மை நிலையை உணர்ந்துகொண்ட இராமபிரான், இனிமேல் இவன்தலைகளை அறுத்துத் தள்ளுவதில் பயனில்லை என்பதை நன்கு உணர்ந்துகொண்டு, அவனது கைகளை அறுக்கத்தலைப்பட்டான் என்பதாம். இராவணன் கை வளைந்து வில்லைப் பிடித்திருக்கும் தோற்றம் மூன்றாம்நாள் பிறைச் சந்திரனின் தோற்றத்தைப்போல் இருந்தது என்பதை ''கலையுறு திங்களின் வடிவு காட்டிய சிலை'' என்று உவமிக்கிறான் கவிஞன். இராவணன் கையிலுள்ள வளைந்த வில்லுக்கு, மூன்றாம்நாள் பிறைச்சந்திரன் உவமை. ''நிலையுறு நேமியான்'' என்று இராமபிரானைக் குறித்ததால் இராவணன் நிலைபேறற்றவன், அழியக்கூடியவன் என்ற மறைபொருளைத் தருவதையும் உணர்க.

155. கையும் மீண்டும் முளைத்தல்

கொற்ற வெஞ்சரம்பட, குறைந்து போன கை,
பற்றிய கிடந்தது சிலையைப் பாங்குற
மற்று ஓர்கை பிடித்தது போல வவ்வியது;
அற்ற கை, பிறந்த கை, யார்அது ஓர்குவார்? (9941)

Koviloor Digital Library

(கொற்றம்-வெற்றி; குறைதல்-அறுதல்/வெட்டுதல்; சிலை-வில்; வவ்வுதல்-பற்றிக்கொள்ளுதல்; ஓர்தல்-அறிதல்; பாங்கு-அழகு)

வெற்றிவீரனான இராமபிரானின் கொடிய அம்பு தாக்கியதால் அறுத்து எறியப்பட்ட இராவணனின் ஒரு கை, அந்த வில்லைப் பற்றிக் கொண்டிருப்பதுபோலவே தோற்றமளித்தது. அந்த வில்லை அழகிய முறையில் மற்றொரு கைதான் புதிதாக முளைத்துப் பற்றிக்கொண்டது என்பதை ஒருவரும் அறியக்கூடவில்லை. ஒரு கை அறுபட்டதும், மற்றொரு கை முளைத்ததும் ஏககாலத்தில் நிகழ்ந்தது. எனவே அதை உய்த்து உணரக்கூட ஒருவராலும் முடியவில்லை.

முன்பு ''எடுத்தது கண்டார், இற்றது கேட்டார்'' என்றதைப்போல இங்கே ஒரு கை அற்று வீழ்ந்ததையும், மற்றொரு கை முளைத்ததையும் யாரும் பார்க்க முடியவில்லை என்பதாம். ஒரு கை புதிதாகப் பற்றியிருந்த வில்லை, அது கீழே விழுமுன் மற்றொரு கை முளைத்து அதை அழகாகப் பற்றிக் கொண்டது என்பதாம். அவனுடைய இருபது கைகளிலும், எந்தக்கை விழுந்தது; எந்தக்கை வில்லைக் கீழே விழாமல் பற்றிக் கொண்டது என்பதை யாராலும் தெரிந்துகொள்ள முடியவில்லை என்பதாம். முன்பு இருந்த கையே அதைப் பற்றிக்கொண்டது என்றே அனைவரும் கருதினர் என்பது கருத்து.

156. இராவணன் மாதலியைத் தாக்குதல்

பொன் கையிற்று ஊர்தியான் வலியைப் போக்குவான்
முன் கையில் துறு மயிர் முள்ளின் துள்ளுற,
மின் கையில் கொண்டென வில்லை விட்டிலா,
வன் கையைத் தன் கையின் வலியின் வாங்கினான். (9942)

(ஊர்தியான்-தேர்ப்பாகன்/மாதலி; போக்குவான்-போக்கும் பொருட்டு; துறு-நெருங்கியுள்ள; முள்ளின்-முள்ளைப்போல; வலி-வலிமை; பொன்-அழகுமாம்; துள்ளுதல்-துடித்தல்)

அழகிய பொன்னாலான தேர்க்கயிற்றைப் பிடித்துக்கொண்டு தேரைச் செலுத்துகின்றவனாகிய தேர்ச்சாரதி மாதலியின் கையை ஒடித்து அவன் வலிமையைப் போக்கக் கருதிய இராவணன், தன் முன்னங்கைகளில் அடர்ந்திருந்த மயிர்க்கற்றை, முள்ளைப் போல உடல் மயிர்க்கூச்செறிந்து துடிக்க, மின்னலைத் தன் கையில் பிடித்திருப்பதைப்போல, வில்லைச் செலுத்தாமலேயே தனது ஒரு வலிய கையை மற்றொரு கையின் வலிமையால் மாதலிமேல் வீசினான்.

இராமபிரான் ஏறியிருந்த தேர் பொன்னுலகத்துத் தலைவனாகிய இந்திரனுடைய தேர். எனவே அதில் குதிரையுடன் இணைத்துக் கட்டப் பட்டிருந்த நாண்கயிறும்பொன்னாலானது என்பதைப் ''பொன்கையிற்று''

Koviloor Digital Library

என்றார் என்க. ''பொன்'' என்ற சொல்லுக்கு அழகு என்ற ஒரு பொருளும் உண்டு. அழகிய கயிறு என்பதும் பொருந்தும். குதிரைச் சேணத்தின்மீது வரிந்து கட்டப்பட்டிருக்கும் பொன்னாலாகிய அழகிய நாண் கயிறு எனக்கொள்க.

157. மாதலி நிலைகலங்குதல்

விளங்கு ஒளி வயிரவாள் அரக்கன் வீசிய
தளம் கிளர் தடக்கை தன் மார்பில் தாக்கலும்,
உளம் கிளர் பெருவலி உலைவுஇல் மாதலி,
துளங்கினன், வாய்வழி உதிரம் தூவுவான். (9943)

(தளம்-கனம்; உலைவு-கெடுதல்; தூவுதல்-கக்குதல்; துளங்குதல்-நிலை கலங்குதல்)

ஒளி விளங்குகின்ற உறுதியான வயிரவாட்படையை உடைய அரக்கனான இராவணன் வீசியெறிந்த அவனுடைய அறுபட்ட பருத்த பெரியகை, தேர்ச்சாரதி மாதலியின்மார்பில் பட்டுத்தாக்கியதும், பெருவலி படைத்தவனும், என்றும் அழிதல் இல்லாதவனுமாகிய மாதலியும் உள்ளம் கிளர்ச்சியடையப் பெற்றவனாய், சற்றுத் தளர்ந்து வாய்வழியாக இரத்தத்தைக் கக்கலானான்.

இராமபிரானால் அறுத்தெறியப்பட்ட தனது பருத்த கையை இராவணன் மாதலிமேல் வீசியெறிந்தான். அது தன்னைத் தாக்கியதும், என்றும் வலிமைகுறையாத மாதலி சற்றுத்தளர்ந்து வாயினின்றும் இரத்தம் கக்கலானான் என்பதாம்.

158. மா மரத்து ஆர்கையால், வருந்துவானை, ஓர்
தோமரத்தால் உயிர் தொலைப்பத் தூண்டினன்;
தாம் அரத்தால் பொராத் தகை கொள் வாட்படை
காமரத்தால், சிவன் கரத்து வாங்கினான். (9944)

(பொருதல்-அராவுதல்; தகை-பெருமை; காமரம்-ஒருவகைப் பண்/சீகாமரம்; ஆர்-அமைந்த; தோமரம்-இருப்புலக்கை; தொலைத்தல்-நீக்குதல்/கொல்லுதல்; தூண்டுதல்-செலுத்துதல்)

அரத்தால் அராவப்படாது, இயற்கையிலேயே கூரிய நுனியைக் கொண்ட பெருமைசான்ற வாட்படையையும் சீகாமரம் என்னும் பாடலைப்பாடிச் சிவபெருமானைக் குளிர்வித்து அவனிடமிருந்து வரங்களையும் பெற்றவனாகிய இராவணன், மரத்தைப்போன்ற அடர்ந்த தனது பெரிய கையால், தாக்கப்பட்டு வருந்தி நிற்கின்ற மாதலியை மேலும் ஒரு இருப்புலக்கை கொண்டு அவன் உயிரைப் பறிப்பதற்கு மீண்டும் செலுத்தினான்.

Koviloor Digital Library

அவனுடைய ஒவ்வொரு கையும், பெரிய மரம்போன்று பருத்திருந்தது என்பதாம். அவனது வலிய கையால் தாக்கப்பட்டு நிலைகலங்கி நின்ற மாதலியை, இருப்புலக்கை கொண்டு தாக்கி அவனைத் தொலைத்து விடலாம் என்று கருதி அதனைச் செலுத்தினான் என்பதாம். கயிலை மலையைப் பெயர்த்தெடுக்கும்போது, சிவபெருமானுக்குப் பிடித்தமான சாமகானத்தைச் சார்ந்த சீகாமரம் என்ற பண்ணில் பாடி சிவபெரு மானிடமிருந்து முக்கோடி வாழ்நாளும், யாராலும் வெல்லப்படாய் என்ற வரமும், இந்த சந்திரகாசம் என்னும் வாட்படையும் பெற்றான் என்பதாம். காமரப்பண் சா்மகானத்தைச் சார்ந்தது, ''தென்கையால் தேர் கடாவிச் சென்று எடுத்தான் மலையை, முன்கை மாநரம்பு வெட்டி முன்னிருக்கு இசைகள் பாட, அங்கை வாள் அருளினான் ஊர் அணி மறைக்காடுதானே'' என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

159. ''மாண்டது இன்றோடு மாதலி வாழ்வு'' என,
மூண்ட வெந்தழல் சிந்த முடுக்கலும்,
ஆண்ட வில்லி ஓர் ஐம்முக வெங்கணை
தூண்டினான்; துகளானது தோமரம். (9945)

(மாண்டது-தொலைந்தது/கழிந்தது; மூண்ட-பெருகிய; முடுகுதல்-விரைந்து வருதல்; ஆண்டது-அடிமைகொண்டது; வில்லி-வில்லாளன்/இராமபிரான்)

''மாதலியின் வாழ்க்கை இன்றோடு முடிந்து போய்விட்டது'' என்று எல்லோரும் கருதும் வண்ணம், பெருகிய வெப்பம்மிக்க கொடிய நெருப்புச் சிந்துமாறு அந்தத் தோமரத்தை இராவணன் விரைந்து செலுத்திய அளவில், எல்லோர்க்கும் இறைவனானவனும், ஆட்கொள் பவனும், சிறந்த வில்லாளியுமான இராமபிரான், ஐந்து முகங்களைக் கொண்ட கொடிய கணை ஒன்றை இராவணன் தொடுத்த தோமரத்தின்மீது செலுத்தினான். அது பொடிப்பொடியாய்ப் போனது.

ஐம்முகக்கணை என்பது பஞ்சமுகங்களைக் கொண்ட சிவபெருமானது பாசுபதாஸ்திரம் என்க. ''ஆண்ட வில்லி'' என்பது தம்மை ஆட்கொண்ட வில்லாளன் என்று கவிஞன் தன் அன்பை வெளிப்படுத்தியதாகக் கொள்ள வேண்டும். முன்பும் என்னுடைய ஆளுடைஐயன் என்று பலமுறை இராம பிரானைக் கவிஞன் சிறப்பித்திருப்பதையும் காணலாம். சிவபெரு மானுக்கு ஐம்முகன் என்ற பெயரும் உண்டு. அந்த ஐந்து முகங்கள்: அகோரம், வாமனம், தத்புருஷம், ஈசானம், சத்தியோசாதம் என்பனவாம்.

Koviloor Digital Library

160. இராவணன் தலைகள் அறுபட்டுக் நழே விழுதல்

ஒய்வு அகன்றது, ஒருதலை நூறுஉற,
போய் அகன்று புரள, பொருகணை
ஆயிரம் தொடுத்தான், அறிவின் தனி
நாயகன், கைக்கடுமை நடத்தியே. (9946)

(தனி-ஒப்பற்ற; உறுதல்-முளைத்தல்; அறிவு-ஞானம்; கடுமை-வேகம்/வலிமை)

ஞானத்தின் ஒப்பற்ற தலைவனாக விளங்கும் இராமபிரான் தன் கைவேகத்தைக் காட்டி, ஒய்வு ஒழிதல் இன்றி இடைவிடாது, ஒருதலை நூறு தலையாக முளைக்கும் அத்தலைகளெல்லாம் அவனிடமிருந்து விலகிப்போய்த் தரையில் கிடந்து புரளும்வண்ணம், போர்செய்யும் இயல்புடைய ஆயிரக்கணக்கான அம்புகளைத் தொடுத்துச் செலுத்தினான்.

இராமபிரான் ஆயிரக்கணக்கான அம்புகளை ஒய்வின்றிச் செலுத்தினான். இராவணன் தலைகளும் நூற்றுக்கணக்காக முளைத்துக் கொண்டே இருந்தன என்பது இப்பாடலின் கருத்து. உயிர்களின் அறிவு குறையறிவு; இறைவனின் அறிவே நிறையறிவு; ''வாலறிவன்'' என்பதை எண்ணுக. எனவே ''அறிவின் தனி நாயகன்'' என்றார் என்க.

161. நீர்த் தரங்கங்கள்தோறும், நிலம் தொறும்,
சீர்த்த மால்வரை தோறும், திசைதொறும்,
பார்த்த பார்த்த இடம்தொறும், பல்தலை
ஆர்த்து வீழ்ந்த, அசனிகள் வீழ்ந்தென. (9947)

(நீர்-கடல்; தரங்கம்-அலைகள்; சீர்த்த-சிறப்புள்ள; அசனி-இடி)

இராமபிரானால் அறுத்துத் தள்ளப்பட்ட இராவணனுடைய பல தலைகள், கடல் அலைகளிலும், நால்வகையான நிலங்களிலும், சிறப்பான பெரிய மலைகளிலும், எட்டுத் திக்குகளிலும், பார்க்கின்ற இடங்கள் எல்லாவற்றிலும் இடியைப் போன்று பேராரவாரம் செய்து கொண்டு வீழ்ந்தன.

ஒரு தலையே நூற்றுக்கணக்கான தலைகளாக முளைத்தெழுந்ததால், கண்ட கண்ட இடங்களிலும் ஒரே தலை மயமாகக் காணப்பட்டது என்பதாம்.

162. தகர்ந்து மால்வரை சாய்வுறத் தாக்கின;
மிகுந்த வான்மிசை மீனம் மலைந்தன;
புகுந்த மா மகரக்குலம் போக்கு அற
முகந்த வாயின், புணரியை முற்றுற. (9948)

Koviloor Digital Library

(தகர்த்தல்-பிளத்தல்; மீனம்-நட்சத்திரங்கள்; மலைதல்-போரிடுதல்/ தாக்குதல்; புணரி-கடல்; மிகுந்த-விரிந்த; மகரம்-சுறாமீன்; முகத்தல்-பருகுதல்/அடக்கிக்கொள்ளுதல்)

அவ்வாறு இராமபிரானால் அறுக்கப்பட்ட இராவணனின் தலைகள், பெரியபெரிய மலைகளெல்லாம் பிளந்து சாயும்படி தாக்கின; விரிந்த ஆகாயத்தின்மீது சென்ற தலைகள், அங்கே நிறைந்திருக்கின்ற நட்சத்திரங் களுடன்போரிட்டுத்தாக்கின; கடலிலும்புகுந்ததனால்அங்கேவசிக்கின்ற பெரிய சுறாமீன்கள் கூட்டம் எல்லாம் தப்பித்துப்போகப் போக்கிடம் கிடைக்காமல், கடலுக்குள்ளேயே அழுந்திக் கடல்நீர் முழுவதையும் தங்கள் வாய்களில் அடக்கிக்கொண்டன.

அறுபட்ட இராவணனின் தலைகள் மலைகளிலும், வானிலும், கடலிலும் போய்ச் சேர்ந்து அங்கே வாழ்வனவற்றையும் நிற்பன வற்றையும் தாக்கின என்று பேசப்படுகிறது.

163. பொழுது நீட்டிய புண்ணியம் போனபின்,
பழுது செல்லும் அன்றே, மற்றைப் பண்பு எலாம்?
தொழுது சூழ்வனமுன், இன்று தோன்றவே,
கழுது சூன்ற, இராவணன் கண் எலாம். (9949)

(பொழுது-காலம்; கழுது-பேய்கள்; சூன்றல்-தோண்டுதல்; சூலுதல்-அகழ்தல்)

தான் முன்செய்த நல்வினையின் பயனை மிக நீண்ட காலமாக அனுபவித்த ஒருவனின்புண்ணியம்தீர்ந்துபோனபின்அவனுடைய புகழ், பெருமை, செல்வம், செல்வாக்கு எல்லாம் பழுதுபட்டுப் போய்விடும் அல்லவா? அதுபோல முன்பு இராவணனைச் சுற்றி வலம்வந்து தொழுது வணங்கி நின்ற பேய்கள் எல்லாம், இப்பொழுது அறுந்து கிடந்த தலைகளில் உள்ள கண்களையெல்லாம் அவன் எதிரிலேயே அஞ்சாது அமர்ந்து தோண்டியெடுத்துத் தின்னலாயின.

ஒருவனுடைய நல்வினைப் பயனாகிய புண்ணியம் நீங்கியபின், அவனுடைய புகழ், பெருமையெல்லாம் பயனற்றுப் போய்விடும் என்ற பொதுப்பொருளைக்கூறி, இராவணனுடைய நல்வினைப் பயனால் விளைந்த புண்ணியம் தீர்ந்து போனபின் அவனுடைய புகழும் பெருமையும் மங்கிப்போவதுபோல, முன்பு அவனைச்சுற்றி வலம்வந்து தொழுது நின்ற பேய்கள், இப்பொழுது அவன் கண் எதிரே அவனுடைய கண்களைத் தோண்டித் தின்பன ஆயின என்ற சிறப்புப் பொருளைப் பெறவைத்ததால் இப்பாடல் வேற்றுப்பொருள் வைப்பு அணியின் பாற்படும்.

Koviloor Digital Library

164. வாளும், வேலும், உலக்கையும், வச்சிரக்
கோளும், தண்டும், மழு எனும் கூற்றமும்,
தோளின் பத்திகள் தோறும் சுமந்தன,
மீளி மொய்ம்பன் உரும்என வீசினான். (9950)

(மொய்ம்பு-தோள்வலிமை; பத்தி-வரிசைகள்; கோள்-வலிமை; உரும்-இடி; மீளி-வலிமை; தண்டு-கதாயுதம்; உலக்கை-முசலம்)

மிக்க வலிமையான தோள்களையுடையவனான இராவணன் தான் இதுகாறும் தனது இருபது என்னும்படி வரிசையாக அமைந்திருந்த தோள்களின்மீது பாரமாகச்சுமந்து கொண்டிருந்த வாட்படை, வேற்படை, உலக்கை, வலிய வச்சிராயுதம், தண்டாயுதம், இயமனைப்போலக் கொல்லும் தன்மைபடைத்த மழுவாயுதம், ஆகியவற்றை இடிபோல விழும்படி இராமபிரான்மீது இப்போது வீசி எறிந்தான்.

''மழு என்னும் கூற்றம்'' என்பது உருவகம். ''தோளின் பத்திகள்'' என்பது அவனது இரண்டு பக்கத்திலும் வரிசையாக அமைந்துள்ள இருபது தோள்களைக் குறிக்கும். இந்த ஆயுதங்கள் எல்லாம் இதுவரையிலும் பயன்படுத்தப்படாமல் அவன் கைகளிலேயே தங்கிக் கொண்டிருந்தமை யால் ''சுமந்தன'' என்றார் என்க. ''மீளி மொய்ம்பு'' ஒரு பொருட் பன்மொழி. மீமிசைச்சொல். நாம், ''மிக்க வலிமை'' என்று பொருள் கொண்டிருக்கிறோம்.

165. அனைய சிந்திட, ஆண்தகை வீரனும்,
"வினையம் என்இனி? யாது கொல் வெல்லுமா?
நினைவென்" என்ன, "நிசாசரன் மேனியைப்
புனைவென் வாளியினால்" எனப் பொங்கினான். (9951)

(அனைய-அத்தகைய; சிந்துதல்-எறிதல்/வீசுதல்; வினையம்-சூழ்ச்சி/செயல்; நினைதல்-சிந்தித்தல்; நிசாசரன்-இரவில் திரிபவர்/அரக்கர்; புனைதல்-நிரப்புதல்; பொங்குதல்-மிகுந்த சினம் கொள்ளுதல்/வெகுள்தல்)

அவ்வாறு இராவணன் எல்லாப் படைக்கலன்களையும் இராமபிரான் மீது வீசி எறியவும், ஆண்மைத்தன்மை நிறைந்த வீரனான இராமபிரானும், ''இனிமேல் நாம் செய்யத்தக்க செயல் யாது? இவனை வெல்லும் வகை எது? என்று ஆராய்ந்து பார்ப்பேன்'' என்று மனத்துள் கருதி, ''இரவில் சஞ்சரிக்கும் இயல்புடைய அரக்கனான இவன் மேனி முழுவதையும் என் அம்புகளால் நிரப்பி மூடுவேன்'' என்று மிக்க சினம் கொண்டு எழுந்தான்.

அம்புகளால் மூடுவேன் என்பது அம்புகளால் துளைத்தலைக் குறிக்கும்.

Koviloor Digital Library

166. மஞ்சு அரங்கிய மார்பினும், தோளினும்,
நஞ்சு அரங்கிய கண்ணினும், நாவினும்,
வஞ்சன் மேனியை, வார்கணை அட்டிய,
பஞ்சரம் எனலாம்படி, பண்ணினான். (9952)

(மஞ்சு-மேகம்; அரங்குதல்-தோற்கடிக்கச் செய்தல்/வருத்துதல்/பின்னடையச் செய்தல்; வார்-நீண்ட; அட்டுதல்-சேர்த்து வைத்தல்; பஞ்சரம்-பறவைக்கூடு/அம்பறாத்தூணி)

இராமபிரான் தீய எண்ணங்களே நிறைந்த பாவியாகிய மேகத்தையே தோற்கடிக்கக்கூடிய இராவணனின் கரிய நிறமுடைய மார்பிலும், தோள்களிலும், நஞ்சையும் தோற்கடிக்கக் கூடிய கண்களிலும், நாக்குகளிலும், அவன் உடம்பு முழுவதும், தனது நீண்ட அம்புகளால், பறவைக்கூடு போலவும், அம்பறாத்தூணி போலவும் மூடிவிட்டான்.

இராவணனின் மார்பு, தோள், மேனி முதலியன கரிய மேகத்தைவிடக் கரியநிறம் கொண்டன என்றும், அவனுடைய கண்களும், நாக்குகளும் கொடிய விஷத்தைக்கூட தோற்கடிக்கக் கூடியன என்றும் கூறியநயம் நோக்குக. இராமபிரான் தன் அம்புகளால் மூடப்பட்ட இராவணன் உடம்பை ஒரு பறவைக் கூட்டிற்கும், அம்பறாத்தூணிக்கும் உவமைகூறிய திறம் உணர்க. ''பஞ்சரம்'' என்பது பொதுவாகப் பறவைக்கூட்டைக் குறிக்கும். முன்பும் ''பஞ்சரக்கிளியைக் கதறு பாவையை'' என்று ஆரண்ய காண்டத்தில் குறித்ததையும் ஒப்புநோக்குக.

167. வாய் நிறைந்தன; கண்கள் நிறைந்தன;
மீ நிறங்களின் எங்கும் மிடைந்தன;
தோய்வுறும் கணை, செம்புனல் தோய்ந்தில,
போய் நிறைந்தன அண்டப்புறம் எலாம். (9953)

(மீ-மேலிடம்; நிறம்-மார்பு; மிடைதல்-நெருங்கியிருத்தல்; தோய்தல்-அழுந்திப்பதிதல்; செம்புனல்-இரத்தம்)

இராமபிரான் செலுத்திய அம்புகள் எல்லாம் இராவணனின் வாய்களிலெல்லாம் சென்று நிறைந்தன; அவனுடைய இருபது கண்களுக்குள்ளும் புகுந்து அவற்றை மறைத்தன; உடம்பின்மேலும், மார்பின்மேலும் எங்கும் நெருங்கிக் காணப்பட்டன; அவ்வாறு அழுந்திப் பதிகின்ற அம்புகள், அவன் உடலைத் துளைத்துச் சென்றனவே அன்றி அவன் இரத்தத்தில் கொஞ்சம்கூடப் படியவே இல்லை. உடலைத் துளைத்த பின்னர் இவ்வண்ட கோளத்தின் அப்புறத்தில் எல்லாம் சென்று நிறைந்தன.

அம்பின் விரைவு கூறப்படுகிறது. உடம்பைத் துளைத்த அம்பு அரக்கனின் இரத்தத்தில் தோயவில்லை என்பது அம்பின் விரைவைக் குறிப்பதுடன் அற்பமான அரக்கன் இராவணனின் இரத்தத்தில் தோய

Koviloor Digital Library

இராமபாணம் விரும்பவில்லை என்ற பொருளையும் தரும். ''மீ'' என்பது மேலே என்ற பொருளில் தலை முதலிய இடங்களைக் குறிக்கும் எனக் கொள்வதும் பொருந்தும்.

168. மயிரின் கால்தொறும் வார்கணை மாரி புக்கு,
உயிரும் தீர, உருவின ஓடலும்,
செயிரும் சீற்றமும் நிற்க, திறல் திரிந்து,
அயர்வு தோன்ற, துளங்கி அழுங்கினான். (9954)

(மாரி-மழை; தீர்தல்-நீங்குதல்; செயிர்-பகைமை; திறல்-வலிமை; அயர்வு-தளர்வு; துளங்குதல்-நிலைகலங்குதல்; அழுங்குதல்-வருந்துதல்; திரிதல்-மாறுபட்டுப்போதல்)

இராமபிரான் செலுத்திய நீண்ட அம்புமழை, இராவணனின் மயிர்க் கால்கள்தோறும் புகுந்து, அவன் உயிரும் நீங்கும்படி, ஊடுருவி ஓடிப் போயும்கூட, அவன் முன்பு கொண்ட பகைமையும், சீற்றமும் மட்டும் நிலைத்து நின்றன. எனினும் அவனுடைய வலிமை குறைந்து மாறுபட்டு, தளர்ச்சி உண்டாக, சற்று நிலைகலங்கி வருந்தினான்.

இராமபிரானின் அம்பு துளைத்தாலும் உடல் மட்டும்தான் தளர்ச்சி யுற்று நிலைகலங்கி வருந்தியதே தவிர, அவனுடைய பகைமை உணர்ச்சியும் சீற்றமும் சற்றும் குறையாது நிலைத்து நின்றன என்று கூறிய நயம் நோக்குக.

169. இராவணன் தேரில் உணர்விழந்து கிடத்தல்

வாரி நீர்நின்று எதிர் மகரம் படச்
சோரி சோர, உணர்வு துளங்கினான்;
தேரின்மேல் இருந்தான், பண்டு தேவர்தம்
ஊரின்மேலும் பவனி உலாவுவான். (9955)

(பண்டு-முன்பு; பவனி-வீதிவலம்/உலா; வாரி-கடல்; மகரம்-சுறா மீன்கள்; படுதல்-இறந்துபடுதல்; சோரி-இரத்தம்; சோர்தல்-ஒழுகுதல்/ வடிதல்; துளங்குதல்-கலங்குதல்; இருத்தல்-செயலற்றுக் கிடத்தல்; உணர்வு-அறிவு)

முன்பு, தம் பகைவர்களான தேவர்கள் ஊரிலும் வெற்றித் திருவீதி உலாவந்தவனான இராவணன், இப்போது தன் உடம்பினின்றும் இரத்தம் பீறிட்டு வடிய, அதனால் கடல்நீரில் எதிர்த்து வருகின்ற மகரமீன்கள் அந்த இரத்தத்தின் வெப்பமும், வேகமும் தாங்கமுடியாமல், இறந்துபட, தன் அறிவு சற்று கலங்கிப்போக, தேரின்மேல் செயலற்றுக் கிடந்தான்.

Koviloor Digital Library

மங்கல நாட்களில் அரசன் வீதியுலா வருவது பண்டைய மரபு. அவன் உடம்பினின்றும், பீறிட்டு அடித்த இரத்தத்தின் வேகமும் வெப்பமும் தாங்கமாட்டாமல் மகரமீன்கள் உயிர் துறந்தன என்பது எண்ணிப்பார்க்கத்தக்கது.

170. தேர்ச்சாரதி தேரைச் சற்று விலக்கி நிறுத்துதல்

ஆர்த்துக் கொண்டு எழுந்த உம்பர்கள் ஆடினார்;
வேர்த்துத் தீவினை வெம்பி விழுந்தது;
“போர்த்துப் பொய்த்தனன்” என்று பொலம்கொள் தேர்
பேர்த்துச் சாரதி போயினன், பின்றுவான். (9956)

(உம்பர்கள்-தேவர்கள்; துப்பு-ஆற்றல்; பொய்த்தல்-குறைதல்; பின்றுதல்-பின்வாங்குதல்; பொலன்-பொன்; பேர்த்தல்-திருப்புதல்)

இராவணன் தேரின்மேல் செயலற்று விழுந்ததைக்கண்ட தேவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம்செய்துகொண்டு எழுந்து கூத்தாடினார்கள். தீவினையும் தன் பங்குக்கு வியர்த்து, வெதும்பித் தரையில் வீழ்ந்தது. தேர்ச்சாரதியும் இராவணன் போரில் வலிமை குறைந்தான் என்றும் அவன் உடலெங்கும் அம்புகளால் மூடப்பட்டுச் சோர்ந்து போனான் என்றும் கருதி, அழகிய பொன்மயமான தேரை அங்கிருந்து சற்று பின்வாங்கி ஒதுங்கித் தள்ளி நிறுத்தினான்.

இராவணன் உயிரைக் காப்பாற்ற எண்ணியே தேர்ச்சாரதி தேரைத் திருப்பிக் கொண்டுபோய் நிறுத்தினான் எனக் கொள்ளவேண்டும்.

171. கை துறந்த படையினன், கண் அகல்
மெய் துறந்த உணர்வினன், வீழ்தலும்,
எய் திறம் தவிர்ந்தான், இமையோர்களை
உய் திறம் துணிந்தான், அறம் உன்னுவான். (9957)

(இமையோர்-தேவர்கள்; துறத்தல்-நழுவுதல்; கண்அகல்-இடம் அகன்ற; மெய்-உடம்பு; அறம்-போர் நெறிமுறை; உன்னுதல்-கருதுதல்; தவிர்தல்-விடுத்தல்; உய்திறம்-கடைத்தேறச் செய்யும் வழி)

தேவர்களை அரக்கர்களிடமிருந்து காப்பாற்றி அவர்கள் கடைத்தேறச் செய்யும் வழியில் துணிந்து நின்று செயலாற்றிய இராமபிரான், தன் கைகளினின்றும் படைக்கலங்கள் நழுவிப்போகவும், இடம் அகன்ற உடம்பினின்றும் உணர்வுகள் நீங்கிப்போகவும், மூர்ச்சித்து உணர்வும் செயலுமற்றுத் தேரில் இராவணன் வீழ்ந்து கிடந்ததைக் கண்ட பின், போர் அறநெறியை உணர்ந்து, அம்புகள் எய்வதை நிறுத்திவிட்டான்.

Koviloor Digital Library

இதுபோல முன்பும் முதல்நாள்போரில் தன்படைக்கலங்களை இழந்து தனித்து நின்ற இராவணனை ''இன்று போய்ப் போர்க்கு நாளை வா'' என்று இராமபிரான் போர் அறநெறி நோக்கிக் கூறியதையும் இங்கு ஒப்பு நோக்குக. ''மடிந்த உள்ளத் தோனையும், மகப்பெறாதோனையும், மயிர் குலைந்தோனையும், அடி பிறக்கிட்டோனையும், பெண் பெயரோனையும், படையிழந்தோனையும், ஒத்த படைஎடாதோனையும், பிறவும், இத்தன்மையுடையோரையும் கொல்லாது விடுதலும் கூறிப் பொருதலும் என்ப'' என்பது தழிஞ்சி என்ற புறப்பொருள் துறை.

172. மாதலி இராவணனைக் கொல்லும்படி கூறுதல்

"தேறினால் பின்னை யாதும் செய்தற்கு அரிது;
ஊறுதான் உற்றபோதே உயிர்தனை
நூறுவாய்" என, மாதலி நூக்கினான்;
ஏறு சேவகனும் இது இயம்பினான். (9958)

(ஊறு-தளர்வு/இடையூறு; நூறுதல்-கொல்லுதல்; நூக்குதல்-தூண்டுதல்; ஏறுதல்-மேல் ஓங்கி நிற்றல்; சேவகன்-வீரன்/இராமபிரான்; தேறுதல்-தெளிதல்; ஏறு-சிங்கஏறு)

தேர்ச்சாரதியாகிய மாதலி, இராமபிரானை நோக்கி, ''இப்பொழுது மூர்ச்சித்துக் கிடக்கின்ற இராவணன், உணர்வுபெற்றுத் தேறி எழுந்து விட்டான் என்றால், பிறகு அவனை ஒன்றும் செய்யமுடியாது; எனவே தளர்ச்சியுற்றிருக்கின்ற இப்போதே அவனைக் கொன்றுவிடுவாயாக!'' என்று இராமபிரானைத் தூண்டி ஊக்குவித்தான். எனினும் சிங்கஏறு போன்றவனும், அறநெறியில் மேலோங்கி நிற்பவனுமாகிய வீரன் இராமபிரான் பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

''அரிது'' இன்மை மேற்று.

173. "படை துறந்து, மயங்கிய பண்பினான்,
இடைபெறும் துயர் பார்த்து, இகல் நீதியின்
நடை துறந்து, உயிர்கோடலும் நன்மையோ?
கடை துறந்தது போர், என் கருத்து" என்றான். (9959)

(இடை-நடுவில்; இகல்நீதி-போர்அறம்; நடை-ஒழுக்கம்; கோடல்-கொள்ளுதல்/கவர்தல்; நன்மை-நல்லசெயல்; கருத்து-உள்ளம்/சிந்தனை; கடை-முற்றும்/கடைசிவரை)

இராமபிரான் மாதலியை நோக்கி, ''போர்க்கருவிகளை எல்லாம் கைவிட்டு, மூர்ச்சித்துக் கிடக்கின்ற தன்மையையும் நடுவில் அவன் அடைந்த தளர்ச்சியையும், நோக்கிய பின்னர், போர் அறத்தின் ஒழுக்க நெறிகளைக் கைவிட்டு, அவன் உயிரைக் கவர்வதும் பெருமைக்குரிய ஒரு

Koviloor Digital Library

நல்ல செயல் ஆகுமோ? ஆகாது. எனவே இப்போது என் மனம் போர்செய்வதை முற்றும் கைவிட்டுள்ளது'' என்று கூறினான்.

''நடை'' என்பது இங்கே ஒழுக்கம் என்ற பொருளைத்தரும். ''நடையில் நின்று உயர் நாயகன்'' அல்லவா இராமபிரான்? ''நன்மை'' என்பது பெருமைக்குரிய செயல் என்ற பொருளைத்தரும்.

174. கூவிரம் செறி பொன்கொடித் தேரொடும்
போவர் அஞ்சினர், அன்னதோர் போழ்தினின்,
ஏவர் அஞ்சலியாதவர்? எண்ணுடைத்
தேவர் அஞ்ச, இராவணன் தேறினான். (9960)

(கூவிரம்-கொடிஞ்சி; எண்-எண்ணம்; தேறுதல்-தெளிதல்; அஞ்சலித்தல்-வணங்குதல்; ஏவர்-யார்)

கூவிரம் என்றழைக்கப்படும் கொடிஞ்சி என்னும் ஓர் உறுப்பினை யுடையதும், பொன்னாலான, அழகிய கொடிகள் சுற்றப்பட்டதுமான தேரோடும் செல்லுகின்ற இராக்கதர்கள் எல்லோரும், அச்சம் கொண்டு செல்லும்பொழுது, அறக்கருணை கொண்ட இராமபிரானை வணக்கம் செய்யாதவர்கள் யார் இருக்கிறார்கள்? தளர்ச்சியுற்றுத் தேரில் கிடந்த இராவணன் சற்று தளர்ச்சி நீங்கி இப்பொழுது தெளிவுபெற்றான். இதனைக் கண்ட தேவர்கள் அஞ்சி நடுங்கலானார்கள்.

''கூவிரம்'' என்ற சொல் நமக்குப் புதிது. இது கொடிஞ்சி என்றும் வழங்கப்படும். இது தேரின் ஓர் உறுப்பு. தேர்ச்சாரதி அமர்ந்திருக்கும் தேர்த்தட்டில் எதிரில் பிடித்துக் கொள்ளும் வண்ணம் அமைந்த உறுப்பு. தாமரை மொட்டுப் போன்ற வடிவம் கொண்டது. கொடிஞ்சி என்ற சொல் முன்னரும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ''கூவிரம்'' என்ற சொல் இப்போதுதான் முதன்முதலாகப் பயன்படுத்தப்படுகிறது. ''நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்'' என்பது புறநானூறு-77. ''மணித்தேர்க் கொடிஞ்சி கையாற் பற்றி'' என்பது மணிமேகலை. இதனைத் தேரின் ''தலையலங்காரம்'' என்றும் கூறுவதுண்டு. பகைவர்களான அரக்கர்கள்கூடப் போற்றித்துதிக்கும் அருட்குணம் கொண்டவன் இராமபிரான் என்பதை ''ஏவர் அஞ்சலியாதவர்'' எனக்கூறினார் என்க.

175. உறக்கம் நீங்கி, உணர்ச்சியுற்றான் என,
மறக்கண் வஞ்சன், இராமனை வான் திசைச்
சிறக்கும் தேரொடும் கண்டிலன்; சீற்றத்தீப்
பிறக்க நோக்கினன், பின்னுற நோக்கினான். (9961)

(மறம்-கொடுமை; வான்-சிறந்த; உறக்கம்-மயக்கம்; உணர்ச்சி-நினைவு)

Koviloor Digital Library

கொடுமையான கண்களையுடையவனும், வஞ்சகனுமாகிய இராவணன், மயக்கம்நீங்கி நினைவு வரப்பெற்றவன்போல, தெளிவுற்று, சிறந்த உயர்ந்த திசைகளை எல்லாம் சுற்றிலும் நோக்கினான்; எனினும் இராமபிரானை அவனுடைய புகழ்பெற்ற தேரோடும் காணமுடியவில்லை; எனவே மிக்கக் கோபம்கொண்டு, கண்களில் நெருப்புப்பொறி பறக்கப் பின்புறம் நோக்கினான்.

இங்கே இரண்டுமுறை நோக்கினான் என்ற சொல்லைக் கவிஞன் பயன்படுத்தியிருப்பதை நோக்குக. முதலாவது நோக்கினான் என்பது ''நோக்கல் நோக்கம்'' இராமபிரானிடம் தோற்றுப்போய்விட்டாமோ என்ற வெட்கத்தால் கண்களில் தீப்பொறி பறக்க நோக்கினான் என்பது பொருள். அடுத்த ''நோக்கினான்'' என்பது பின்புறம் திரும்பித் தன் தேர்ப்பாகன்தன் தேரைப் பின்பக்கமாகக் கொண்டு வந்திருக்கிறான் என்று கண்களால் காணும் பார்வை நோக்கம். தன் தேர்ப்பாகனைப் பின்புறமாகப் பார்த்தான் என்றும் இராமபிரான் பின்புறம் நிற்கக் கண்டான் என்றும் இருவகைகளிலும் பொருள் கொள்ளலாம்.

176. இராவணன் தேர்ச்சாரதியைச் சினத்தல்

''தேர் திரித்தனை, தேவரும் காணவே;
வீர விற்கை இராமற்கு, வெண் நகை
பேர உய்த்தனையே! பிழைத்தாய்'' எனா,
சாரதிப் பெயரோனைச் சலிப்புறா. (9962)

(பிழைத்தல்-பிழைசெய்தல்; சலித்தல்-வெறுப்புறுதல்; திரித்தல்-திருப்புதல்) (குளகப்பாடல்)

இராவணன் தன் தேர்ச்சாரதியை நோக்கி, ''நம் பகைவர்களான தேவர்களும் காணும்படி தேரைப் பின்னோக்கித் திருப்பிச் செலுத்தியிருக்கிறாயே! வீரம் பொருந்தியவனும் வில்லினைக் கையிலேந்தியவனுமான இராமபிரான் ஏளனப் புன்னகை செய்யும்படி செய்துவிட்டாயே! நீ பெரும் பிழையைச் செய்துவிட்டாய்'' என்று சாரதி என்ற பெயர் கொண்டவனை வெறுத்து மிகச் சினந்து - பாடல் தொடர்கிறது.

''சாரதிப் பெயரோனை'' என்பது பெயரளவுக்குத்தான் அவன் தேர்ச்சாரதியே தவிர, தேர் செலுத்தும் வித்தையில் அவன் சாரதி அல்ல என்பதைக் குறிக்க எனக்கொள்க. பெயருக்கு ஏற்ற தொழில்வன்மை இல்லாதவன் என்பது கருத்து. ''சலிப்புறா'' என்பது சலிப்புற்று என்ற உடன்பாட்டுப் பொருளைத்தரும். தேவர்களின் இகழ்ச்சியையும், இராமபிரானது எள்ளல் சிரிப்பையும் ஒருசேரப்பெற்றுத் தந்துவிட்டாயே என்று சினந்தான் இராவணன் என்க.

Koviloor Digital Library

177. "தஞ்சம் நான் உனைத் தேற்ற, தரிக்கிலா
வஞ்ச! நீ பெருஞ்செல்வத்து வைகினை;
"அஞ்சினேன்" எனச் செய்தனை; ஆதலால்,
உஞ்சு போதிகொலாம்!" என்று உருத்து எழா. (9963)

(வைகுதல்-தங்குதல்; உஞ்சு-உய்ந்து/தப்பித்து; போதி-போவாயாக; உருத்தல்-கோபித்தல்; தஞ்சம்-துணை; தரித்தல்-பொறுத்துக் கொள்ளுதல்; எழா-எழுந்து; தேற்றல்-தெளிந்திருத்தல்)

இராவணன் மேலும் தேர்ப்பாகனை நோக்கி, ''பொறுக்க முடியாத அளவுக்கு வஞ்சக எண்ணம் கொண்டவனே! நீ என்னை வந்து தஞ்சம் என்று அடைந்தபொழுது, உன்னைத் தேற்றி என்னுடைய தேர்ப்பாகனாக உன்னை மேம்பட்ட நிலையில் வைத்திருந்தேன். அதனால் நீ பெருஞ் செல்வம் பெற்று வளமான வாழ்வு பெற்று வாழ்ந்து கொண்டிருங்கிறாய். எனினும் நீ அதற்குக் கைம்மாறாக, இப்பொழுது நமது பகைவர்களும் எள்ளி நகையாடும்படி, ''நான் பயந்துபோனேன் என்று கருதிக் கீழான செயல்போலத் தேரைத் திருப்பிக்கொண்டு வந்துவிட்டாயே! அத்தகைய செயலைச்செய்த நீ என்னைவிட்டுத் தப்பித்துச் சென்று உயிர்வாழ்ந்து விடுவாயோ?'' என்று கோபித்து எழுந்தான்.

''உனக்குப் பெருமை தந்த எனக்குச் சிறுமை தந்துவிட்டாயே'' என்று சினந்தான் என்பதாம். இங்கே ''கொல்'' என்ற சொல் வினாப்பொருளைத் தருவது காண்க.

178. தேர்ச்சாரதி தந்த விளக்கம்

வாள் கடைக்கணித்து ஓச்சலும், வந்து அவன்
தாள் கடைக்கு அணியாத் தலை தாழ்வுறா,
''மூள் கடைக் கடுந்தீயின், முனிவு ஒழி
கோள் கடைக்கணித்து'' என்று அவன் கூறுவான். (9964)

(கணித்தல்-பார்த்தல்; ஓச்சுதல்-ஓங்குதல்; தாள்-பாதங்கள்; தாழ்வுறா-தாழ்வுற்று/தாழ்த்தி; கோள்-கொள்கை/எண்ணம்; கடைக் கணித்தல்-அருளோடு ஆராய்தல்; கடை-ஊழியிறுதி; மூள்தல்-எழுதல்; முனிவு-சினம்; ஒழித்தல்-தவிர்த்தல்)

உடனே இராவணன் தன் வாட்படையைக் கடைக்கண்ணால் பார்த்து, அச்சாரதியை நோக்கித் தாக்குவதற்காக ஓங்கிய அளவில், அந்தத் தேர்ச்சாரதி அவனை நெருங்கிவந்து, அவனுடைய பாதங்களைப் பார்த்து, தன் தலையைத் தாழ்த்தி வணங்கி, ''தலைவனே! என்னுடைய கருத்தை அருளொடு நன்கு ஆராய்ந்து பார்த்து, தாங்கள் கொண்டிருக்கின்ற

Koviloor Digital Library

ஊழிக்காலக் கொடிய தீப்போன்ற கோபத்தை விட்டு ஒழிப்பீர்களாக!'' என்று வேண்டிக்கொண்டு, மேலும் கூறலானான்.

''கடைக்கணித்தல்'' என்பது கடைக்கண்ணால் நோக்குதல், அருளுதல் என்ற பொருளில் கையாளப்பட்டிருப்பதை அறிக.

179. "ஆண்தொழில் துணிவு ஓய்ந்தனை; ஆண்டு இறை
ஈண்ட நின்றிடின், ஐயனே! நின் உயிர்
மாண்டது இக்கணம் என்று, இடர் மாற்றுவான்
மீண்டது, இத்தொழில்; எம் வினை மெய்ம்மையால். (9965)

(ஆண்தொழில்-வீரப்போர்த்தொழில்; ஓய்தல்-குறைதல்; இறை-சிறிதுபோது; ஈண்டுதல்-நெருங்கிநிற்றல்; மாற்றுவான்-மாற்றும் பொருட்டு; வினை-கடமை; மெய்ம்மை-உண்மை; இடர்-துன்பம்)

தேர்ப்பாகன் இராவணனை நோக்கி, ''தலைவனே! ஆண்மைக்குரிய போர்புரியும் செயலினின்றும் தாங்கள் சற்றுத் தளர்ச்சியடைந்து மூர்ச்சை அடைந்தீர்கள்; அந்த இடத்தில் இன்னும் சிறிதுநேரம் நின்றிருந்தால் தங்கள் உயிர் மாண்டதுபோல் ஆகியிருக்கும் என்று நன்கு தீர்மானித்துத் தங்களுக்கு வந்த அந்தத் துன்பத்தைப் போக்குவதற்காகவே நான் இந்தத் தேரைத் திருப்பிக் கொண்டுவரும் செயலைச் செய்தேன். பொதுவாகத் தேர்ப்பாகர்களின் செயல், கடமை இதுவாகத்தான் இருக்கும். நான் உங்களுக்கு உண்மையான வனாகத்தான் எப்பொழுதும் செயல்படு வேன்'' என்று இன்னும் சில கூறலானானான்.

''ஆண்தொழில்'' என்பது போர்புரியும் வீரத்தொழிலைக் குறிக்கும். ''ஓய்தல்'' என்பது தளர்வுற்று மூர்ச்சையடைந்து தேர்த்தட்டில் வீழ்ந்து கிடந்தமையைக் குறிக்கும். ''மாண்டது'' என்பது தெளிவுபற்றி வந்த காலவழுவமைதியாகும். தான் தேரைத் திருப்பிக்கொண்டு வந்தது, வஞ்சகத்தால் அன்று என்பதை உறுதிப்படுத்தவே ''மெய்ம்மையால்'' என்றான் என்க.

180. "ஓய்வும், ஊற்றமும் நோக்கி, உயிர் பொறைச்
சாய்வு நீக்குதல் சாரதி தன்மைத்தால்;
மாய்வு நிச்சயம் வந்துழி; வாளினால்
காய்வு தக்கது அன்றால், கடை காண்டியால். (9966)

(ஊற்றம்-வலிமை; மாய்வு-இறப்பு; பொறை-பொறுத்தல்/தாங்கி யிருத்தல்; உயிர்ப்பொறை-உடம்பு; சாய்வு-வீழ்ச்சி; தன்மை-இயல்பு; காய்வு-கொலை; காய்தல்-கொல்லுதல்; கடை-முடிவு; காண்டல்-சிந்தித்துப் பார்த்தல்; ஓய்வு-வலிமை குறைதல்; தகுதி-நடுவுநிலைமை)

Koviloor Digital Library

''தன்தேரில் ஏறி அமர்ந்து போர்செய்யும் தன் தலைவனுடைய தளர்ச்சியையும், எழுச்சியையும் நன்கு ஆராய்ந்து பார்த்து, அவனுடைய உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற உடம்புக்கு, பகைவரால் ஏதேனும் ஊறு விளைவது நிச்சயம் என்ற முடிவுக்கு வந்தால், அந்த நிலையை நீக்குதல்தான் தேர்ப்பாகற்குரிய முதன்மையான கடமை. அதுதான் அவர்கள் இயல்புமாகும். எனவே இப்பொழுது நீ என்னிடம் சினந்து என்னைக் கொல்ல எண்ணுவது நடுவுநிலையின் பாற்பட்டதோ, உன் பெருமைக்கு உகந்ததோ அன்று; எனவே உன் முடிவை நன்கு ஆராய்ந்து சிந்திப்பாயாக! என்னுடைய செயலின் உண்மைத்தன்மையை நீ இறுதியில் புரிந்துகொள்வாய்'' என்று தேர்ச்சாரதி இராவணனிடம் கூறினான்.

''தன் தலைவனுக்குத் தீங்கு நேராமல் பாதுகாப்பதே தேர்ச்சாரதியின் கடமையாகும். அதனைத்தான் நான் செய்தேன். எனவே என்மீது சினம்கொண்டு கொல்லக் கருதாதே'' என்கிறான் தேர்ச்சாரதி என்க.

181. இராவணன் இராமபிரானைக் காணுதல்

என்று இறைஞ்சலும், எண்ணி இரங்கினான்,
''வென்றி அம் தடந்தேரினை மீட்க!'' என,
சென்று எதிர்ந்தது, தேரும்; அத்தேர்மிசை
நின்ற வஞ்சன், இராமனை நேர்வுறா. (9967)

(இறைஞ்சுதல்-வணங்குதல்; இரங்குதல்-இரக்கம் கொள்ளுதல்; மீட்டல்-திருப்புதல்; நேர்வுறா-நேர்வுற்று/எதிர்ந்து) (குளகப்பாடல்)

அவ்வாறு தேர்ப்பாகன் வணங்கியதும், அதனைக் கருத்தில் கொண்ட இராவணனும் தன் செயலுக்கு வருந்தி அவன்மீது இரக்கம் கொண்டு, ''சரி, நமது வெற்றிபொருந்திய அழகிய பெரிய தேரினைத் திருப்பிச் செலுத்து வாயாக!'' என்று கட்டளையிட, உடனே தேர், இராமபிரானை நோக்கிச் சென்றடைந்தது. அப்போது அந்தத்தேரின்மீது நின்றிருந்த வஞ்சகனாகிய இராவணனும், இராமபிரானை நேருக்குநேர் பார்க்க நேர்ந்தது.

''நேர்வுறா'' என்பது செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். நேர்வுற்று, கண்டு என்ற உடன்பாட்டுப் பொருளைத்தரும்.

182. கூற்றின் வெங்கணை கோடியின் கோடிகள்
தூற்றினான்; வலி மும்மடி தோற்றினான்;
வேற்று ஓர் வாள் அரக்கன் என, வெம்மையால்,
ஆற்றினான் செரு; கண்டவர் அஞ்சினார். (9968)

(கூற்று-இயமன்; கூற்றின்-கூற்றுவனைக் காட்டிலும்; தூற்றுதல்-வாரியிரைத்தல்; மும்மடி-மூன்றுமடங்கு; வாள்-கொடிய; செரு-போர்)

Koviloor Digital Library

இப்போது இராவணன் முன்னைக்காட்டிலும் மூன்று மடங்கு வலிமைபெற்றவன்போலத் தோற்றம் தந்து, கொல்லும் தன்மையுள்ள இயமனைக் காட்டிலும் கொடிய கோடிக்கணக்கான அம்புகளை இராமபிரான்மீது வாரி இறைத்தான். அதைக் கண்டவர்கள், அஞ்சி நடுங்கி, ''இவன் யாரோ'' வேறு ஓர் கொடிய அரக்கன்போலும், இவ்வளவு கொடுமையாகப் போர்செய்கிறானே'' என்று வியந்தனர்.

''கோடியின் கோடி'' என்பது கோடிக்கணக்கான - எண்ணற்ற என்ற பொருளைத்தரும். ''கோடியின்கோடியானகுருக்கள்தம்சேனைதன்னை'' என்பது வில்லிபாரதம்.

183. இராவணனின் விற்படையை இராமபிரான் அறுத்தெறிதல்

"எல் உண்டாகின் நெருப்பு உண்டு" எனும் இது ஓர்
சொல் உண்டாயதுபோல், இவன் தோளிடை
வில் உண்டாகின், வெலற்கு அரிதாம்" எனா,
செல் உண்டால் அன்னதோர் கணை சிந்தினான். (9969)

(எல்-ஒளி/புகை/இருள்; சொல்-வழக்கு; செல்-இடி; உண்டது-உட்கொண்டது)

''ஒளி இருக்கும் இடத்தில் நெருப்பு நிச்சயம் இருக்கும்'' என்று கூறப்படும் ஒரு வழக்குச்சொல் நிலவிவருவதுபோல், இவனுடைய கையில் அந்த விற்படை இருக்கும் வரையில், இவனை வெற்றிபெறுதல் என்பது இயலாததாகும்'' என்று கருதிய இராமபிரான், பேரிடியை உட்கொண்டாற்போன்ற ஒப்பற்ற ஓர் கொடிய அம்பினை அவன்மீது செலுத்தினான்.

''எல்'' என்ற சொல் பகல்/இரவு, ஒளி/ இருள் என்ற இரு மாறுபட்ட பொருள்களையும் தரும். இங்கே இந்தச்சொல் இருள் நிறமுள்ள புகை என்ற பொருளைத்தந்து நின்றது. புகை இருக்கும் இடத்தில் நெருப்பு இருக்கும் என்பதும், நெருப்பில்லாமல் புகையாது என்பதும் வழக்குச்சொற்கள். ''புகை உடைத்து என்னின் உண்டு பொங்கனல் அங்கு என்று உன்னும்'' என்பது கிட்கிந்தாகாண்டம். ''புகையுளவிடத்து நெருப்புடை'' என்பது மணிமேகலை. ஒளிக்கும் நெருப்புக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதுபோல, இவனது வில்லுக்கும் அவன் வலிமைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பது கருத்து.

184. நாரணன் படை நாயகன் உய்ப்புறா,
பார் அணங்கினைத் தாங்குறும் பல்வகை,
வாரணங்களை வென்றவன் வார்சிலை
ஆர் அணங்கை இருதுணி ஆக்கினான். (9970)

Koviloor Digital Library

(நாயகன்-தலைவன்/இராமபிரான்; உய்ப்புறுதல்-செலுத்துதல்; பார்அணங்கு-பூமிதேவி/பூதேவி/பூமாதேவி/நிலமகள்; வாரணம்-யானைகள்; வார்சிலை-நீண்டவில்; அணங்கு-அச்சுறுத்தும் தெய்வம்; துணி-துண்டம்; ஆர்-மிகுந்த)

தலைவனாகிய இராமபிரான் நாராயணாத்திரத்தைச் செலுத்தி, இந்தப் பூமிதேவியைத் தாங்கிக்கொண்டிருக்கும் பலவகையான எட்டுத்திசை யானைகளையும் வெற்றி கொண்டவனான இராவணனின் தெய்வீகத் தன்மைபொருந்தியதும், மிகுந்தஅச்சம்தருவதுமானநீண்டவிற்படையை இரண்டு துண்டங்களாகச் செய்தான்.

நாரணன்படை-நாராயணாஸ்திரம்; பார்அணங்குஎன்பதுநிலமகளைக் குறிக்கும். ''ஆர் அணங்கு'' என்பது உருவகம். அவனுடைய வில்லை ஆரணங்காக உருவகித்தார் என்க.

185. தேவர்கள் மகிழ்தல்

அயன் படைத்த வில், ஆயிரம் பேரினான்
வியன் படைக்கலத்தால் அற்று வீழ்தலும்,
உயர்ந்து உயர்ந்து குதித்தனர் உம்பரார்,
''பயன் படைத்தனம் பல் தவத்தால்'' என்றார். (9971)

(அயன்-பிரமன்; ஆயிரம்பேரினான்-திருமால்/இராமபிரான்; வியன்-பெருமை; உம்பரார்-தேவர்கள்; படைத்தல்-பெறுதல்)

பிரமதேவனால் உண்டாக்கப்பட்டதான அந்த இராவணனுடைய விற்படை; ஆயிரம் பெயர்களையுடைய திருமாலின் அவதாரமான இராமபிரான் செலுத்திய பெருமை மிக்க நாராயணாத்திரத்தால் அறுபட்டு வீழ்ந்தது கண்ட தேவர்கள் ''இது நாம் செய்த அரிய தவத்தின் பயனால் அடையப்பெற்ற வெற்றியாகும்'' என்றுகூறி மகிழ்ந்து உயர்ந்து குதித்துக் கொண்டாடினர்.

''ஆயிரம் பேரினான்'' என்பது சகஸ்ரநாமத்தன் என்று திருமாலைக் குறிக்கும். ''ஆயிரம் நாமத்து அண்ணல்'' என்று முன்பு கூறியுள்ளமை யையும் நினைக.

186. மாறி மாறி வரிசிலை வாங்கினான்;
நூறு நூறினொடு ஐ-இருநூறு அவை
வேறுவேறு திசையுற, வெங்கணை
நூறி நூறி, இராமன் நுறுக்கினான். (9972)

(நூறுதல்-அழித்தல்; நுறுக்குதல்-பொடிப்பொடியாக்குதல்; மாறிமாறி -ஒன்றன்பின் ஒன்றாக; வரி-கட்டமைந்த; வாங்குதல்-கைக்கொள்ளுதல்/ எடுத்தல்)

Koviloor Digital Library

இராவணன் தன்கையில் இருந்த விற்படை அறுபட்டவுடன் தன் கையில் கொண்ட கோடிக்கணக்கான நீண்ட கட்டமைந்த விற்களை யெல்லாம், ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து எல்லாத் திசைகளிலும் சென்று பொருந்துமாறு, தன் கொடிய அம்புகளால் எல்லாவற்றையும் அழித்துப் பொடிப்பொடியாக்கினான்.

நூறுநூறினொடு என்பது பத்தாயிரத்தையும், ஐயிறு நூறு என்பது மீண்டும் ஆயிரத்தையும், எனவே மொத்தமாக ஒருகோடி என்ற அளவுள்ள விற்கள் என்று கூறப்பட்டாலும், எண்ணிறந்த அளவற்ற, கோடிக் கணக்கான அம்புகள் என்றே கொள்ள வேண்டும்.

187. இருப்புலக்கை, வேல், தண்டு, கோல், ஈட்டி, வாள்,
நெருப்பு உலக்கவரும் நெடுங் கப்பணம்,
திருப் புலக்க உய்த்தான், திசையானையின்
மருப்பு உலக்க வழங்கிய மார்பினான். (9973)

(மருப்பு-கொம்புகள்; உலத்தல்-ஒடிந்துபோதல்; வழங்குதல்-எதிர்கொடுத்தல்; திரு-இலக்குமி; புலத்தல்-இடம்பெயர்தல்/நீங்குதல்; உலத்தல்-குறைதலுமாம்; உய்த்தல்-செலுத்துதல்; புலத்தல்-புலவி கொள்ளுதலுமாம்/பிணங்குதல்)

எட்டுத் திசைகளையும் காவல்காக்கும் திசையானைகளின் தந்தங்களும் முறிந்தழியும்படி எதிர்கொண்ட வலிய மார்பினையுடையவனான இராவணன், தன் கையிலிருந்த விற்படை அறுத்தெறியப்பட்டதும், இருப்பு உலக்கை, வேற்படை, தண்டாயுதம், குத்துக்கோல், ஈட்டி, வாட்படை, நெருப்பைச் சிந்திக்கொண்டு வருகின்ற நீண்ட கப்பணம் என்னும் நெருஞ்சிமுள் போன்ற ஆயுதம், முதலியவற்றை, திருமாலின் அவதாரமான இராமபிரானது மார்பில் உறையும் இலக்குமியே சற்று வெறுப்பும், பிணக்கும் கொண்டு அப்பால் நீங்கிப்போகும் வண்ணம், இராமபிரானின் மார்பில் செலுத்தினான்.

''திருப் புலக்க'' என்பது ஒரு அரிய சொல்லாட்சி. திருமாலின் மார்பில் எப்போதும் உறைந்திருக்கும் இலக்குமியே அவனிடம் பிணக்குக் கொண்டு அகன்று செல்லும் வண்ணம் என்ற ஆழ்ந்த பொருளைத்தரும் சொற்றொடர் இது. இராமபிரான் தன் விற்படைகளையெல்லாம் அழித் தொழித்ததனால் இத்தகைய மற்ற ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய தாயிற்று இராவணனுக்கு. இப்பாடலில் திரிபு என்னும் சொல்லணி பயின்றுவந்திருந்தலைக் காணலாம். ''உலக்க'' என்ற சொல் வெவ்வேறு வகையாகப் புணர்ந்து, வெவ்வேறு பொருள்களைத் தருதலால் இது திரிபுஅணியின் பாற்படும்.

Koviloor Digital Library

188. அவை அனைத்தும் அறுத்து, அகன் வேலையில்,
குவை அனைத்தும் எனக் குவித்தான், குறித்து,
"இவையனைத்தும் இவனைவெல்லா" எனா,
நவையனைத்தும் துறந்தவன் நாடினான். (9974)

(அகன்-விரிந்த; வேலை-கடல்; குவை-திட்டு; நவை-குற்றம்; நாடுதல்-ஆராய்தல்; குறித்தல்-நினைத்தல்; துறத்தல்-நீங்கப்பெறுதல்)

இராவணன் கைக்கொண்ட ஆயுதங்கள் அனைத்தையும் துண்டாக்கி, அகன்று விரிந்து பரந்த கடலில் ஒரு திட்டு என்று கருதுமாறு குவித்து விட்டான் குற்றங்களினின்றும் நீங்கியவனான இராமபிரான். பின்னர் த'் கையிலுள்ள எந்த ஆயுதமும் இவனை வெல்லுவதற்குப் பயன்படாது என்று தீர்மானித்து, வேறு எப்படி இவனை வெல்லலாம் என ஆராயத் தொடங்கினான்.

189. "கண்ணினுள் மணியூடு கழிந்தன,
எண்ணின் நுண் மணலின் பல வெங்கணை;
புண்ணினுள் நுழைந்து ஓடிய, புந்தியோர்
எண்ணின் நுண்ணிய, என் செயற்பாற்று" எனா. (9975)

(எண்ணின்-நினைத்துப்பார்த்தால்; செயற்பாற்று-செய்யத்தக்கது; என்-அறிவு) (குளகப்பாடல்)

''ஆராய்ந்து பார்த்தால் நாம் செலுத்திய, நுண்ணிய மணலைக் காட்டிலும் அளவற்ற கொடிய அம்புகள், அவன் உடலில் மட்டு மல்லாமல், அவன் கண்களில் உள்ள கருமணியின் உள்ளும் ஊடுருவிச் சென்றிருக்கின்றன; இன்னும் அவன் உடம்பில் முன்பே பட்டிருக்கின்ற புண்களின் உள்ளும் நுழைந்து சென்றிருக்கின்றன; அறிவுடையோர்களின் கூரிய அறிவைக் காட்டிலும் கூர்மையானதும் நுண்ணியதுமான படைக்கருவிகள் சென்று தாக்கி உள்ளன. இருந்தும் அவற்றால் அவனைக் கொல்ல முடியவில்லையே?'' இனிமேல் நாம் செய்யத்தக்க செயல் என்ன?'' என்று - பாடல் தொடர்கிறது.

அளவற்ற கொடிய அம்புகளை ''நுண் மணலின்பல'' என்றார் என்க. நுட்பமான கூர்மையுடையது என்பதற்கு ''புந்தியோர் எண்ணின் நுண்ணிய'' என்ற உவமையைக் கூறினார் என்க. அம்புகளின் அளவற்ற தன்மைக்கு நுண்ணிய மணலும், அவ்வம்புகளின் கூர்மைக்கு அறிவாளி களின் நுட்பமான புத்திக்கூர்மையும் உவமையாகக் கூறப்பட்டன.

190. நாரணன் திரு உந்தியில் நான்முகன்
பார வெம்படை வாங்கி, இப்பாதகன்
மாரின் எய்வென்" என்று எண்ணி வலித்தனன்,
ஆரியன், அவன் ஆவி அகற்றுவான். (9976)

Koviloor Digital Library

(ஆரியன்-மேலோன்/இராமபிரான்; ஆவி-உயிர்; அகற்றுதல்-போக்குதல்; வாங்குதல்-எடுத்தல்; மார்-மார்பு; வலித்தல்-துணிதல்; பாதகன்-கொடியவன்/பாவி/இராவணன்)

மேலோனான இராமபிரான், இராவணனுடைய உயிரைப் போக்கும் பொருட்டு, ''திருமாலின் உந்தித் தாமரையிலிருந்து தோன்றியவனான நான்கு முகங்களையுடைய பிரமதேவனின் பெருமைமிக்க கொடிய அஸ்திரமாகிய பிரமாஸ்திரத்தை எடுத்து, இந்தக் கொடியவனான இராவணனின் மார்பில் செலுத்துவேன்'' என்று கருதி துணிந்து தீர்மானித்தான்.

191. முந்தி வந்து, உலகு ஈன்ற முதற்பெயர்
அந்தணன் படை வாங்கி, அருச்சியா,
சுந்தரன் சிலை நாணில் தொடுப்புறா,
மந்தரம் புரை தோள் உற வாங்கினான். (9977)

(முந்தி-முன்னே; வருதல்-தோன்றுதல்; ஈன்ற-படைத்த; அருச்சியா-அருச்சித்து/வழிபாடு செய்து; சுந்தரன்-அழகன்/இராமபிரான்; தொடுப்புறா-தொடுத்து; புரை-போன்ற; வாங்குதல்-இழுத்தல்)

உயிரினங்கள் தோன்றுவதற்கு முற்பட்டுத் தோன்றி, இவ்வுலகத்தைப் படைத்தவனான முதல்வன் என்று புகழ்பெற்ற வேதவிற்பன்னனாகிய பிரமதேவனின் படைக்கலமாகிய பிரமாத்திரத்தை எடுத்து, அதற்குரிய வழிபாடுகளைச் செய்து, பேரழகனான இராமபிரான், தனது வில்லில் நாணேற்றித் தொடுத்து, தனது மந்தரமலை போன்ற தோள்வரை பொருந்து மாறு இழுத்தான்.

''உலகு ஈன்ற முதற்பெயர் அந்தணன்'' பிரமதேவன். அவனது படைக்கலம் பிரமாஸ்திரம். ''தொடங்கற்கண் தோன்றிய முதல்வன்'' என்பது கலித்தொகை.

192. புரம் சுடப் பண்டு அமைத்தது; பொன்பணை
மரம் துளைத்தது; வாலியை மாய்த்துளது;
அரம் சுடச் சுடர் நெஞ்சின் அரக்கர்கோன்
உரம் சுட, சுடரோன்மகன் உந்தினான். (9978)

(புரம்-முப்புரங்கள்; பண்டு-முன்பு; பொன்-அழகிய; பணை-பருத்த கிளைகள்; சுடுதல்-அராவுதல்; சுடர்-ஒளி; உரம்-மார்பு; சுடரோன் மகன்-சூரியன்தோன்றல்; உந்துதல்-செலுத்துதல்; சுடுதல்-தாக்குதல்)

முன்பு சிவபெருமான் முப்புரங்களை எரிப்பதற்கென அமைக்கப் பட்டதுவும், அழகிய பருத்த கிளைகளையுடைய மராமரங்களைத் துளைத்ததுவும், வானரத் தலைவனாகிய வாலியை மடியச் செய்ததுவு

Koviloor Digital Library

மான, அந்தப் பிரமாத்திரத்தைச் அரத்தால் அராவப்பட்டு ஒளிவீசும் நெஞ்சினையுடைய அரக்கர்க்கரசனாகிய இராவணனின் மார்பில் தாக்கும்படி, சூரியகுலத் தோன்றலான இராமபிரான் செலுத்தினான்.

193. காலும், வெங்கனலும், கடை காண்கிலா,
மாலும் கொண்ட வடிக்கணை, மாமுகம்
நாலும்கொண்டு நடந்தது, நான்முகன்
மூல மந்திரம் தன்னொடும் மூட்டலால். (9979)

(மால்-திருமால்/இராமபிரான்; கால்-காற்று; கடை-முடிவு; வடி-கூரிய; நான்முகன்-பிரமதேவன்; மூட்டுதல்-மந்திரித்துச் செலுத்துதல்/தொடுத்தல்)

திருமாலின் அவதாரமான இராமபிரான் கைக்கொண்டு செலுத்திய கூர்மையான அந்த நான்முகனது பிரமாஸ்திரம், பிரமதேவனுக்குரிய மூலமந்திரத்தை அபிமந்திரித்துச் செலுத்தியதால் காற்றுப்போன்ற வேகமும், கொடிய நெருப்புப்போன்ற கொடுமையும் கொண்டு, முடிவுகாணமுடியாத வண்ணம் பிரமதேவனைப்போலவே நான்குபெரிய முகங்களைக் கொண்டு இராவணனை நோக்கிச் சென்றது.

நான்முகனைப்போலவே பிரமாத்திரமும் நான்கு திசைகளிலும் சென்று இராவணனைத் தாக்கியது என்பதாம். மூலமந்திரம், பீஜாட்சரம் என வடமொழியில் வழங்கப்படுகிறது. ''நிறைமொழி மாந்தர்தம் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப'' என்பது தொல்காப்பியம். பீஜஅட்சரம் என்பதை ''வித்து எழுத்து'' என்கிறது அண்ணாமலைப் பல்கலைக்கழக உரைநூல். பீஜம்-வித்து; அட்சரம்-எழுத்து.

194. ஆழி மால்வரைக்கு அப்புறத்து அப்புறம்,
பாழி மா கடலும் வெளி பாய்ந்ததால்,
ஊழி ஞாயிறு மின்மினி ஒப்புற,
வாழி வெஞ்சுடர் பேர் இருள் வாரவே. (9980)

(ஊழி-ஊழியிறுதிக்காலம்; வாருதல்-அகற்றுதல்/போக்குதல்; ஆழிமால் வரை-சக்கரவாளகிரி; பாழி-வலிய; வெளி-ஒளி; பாய்தல்-பரவுதல்; ஞாயிறு-சூரியன்)

ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் சூரியன்கூட மின்மினியைப் போல வெளிச்சம் குறைந்து விளங்குகின்ற கொடிய பிரமாத்திரத்தின் ஒளி, அங்கு நிறைந்திருக்கின்ற பேர் இருள் பிழம்பைப் போக்கும் வண்ணம், சக்கர வாளகிரிக்கு அப்புறத்துள்ள பெரிய வலிய பெரும்புறக் கடலுக்குள்ளும் சென்று பாய்ந்தது.

Koviloor Digital Library

வாழி என்பதை இங்கே அசைச்சொல்லாகக் கொள்ள வேண்டும். பிரம்மாத்திரத்தின் ஒளிச்சிறப்புப் பேசப்படுகிறது. அதன் ஒளி, ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் சூரியர்களின் ஒளியையே ஒரு மின்மினிப்பூச்சியின் ஒளிபோல ஆக்கிவிடும் என்றும், சக்கரவாளகிரிக்கு அப்பால் உள்ள பெரும்பறக் கடலுக்கும் அப்பால் உள்ள பேரிருட்பிழம்பு இருக்கும் இடம்வரைக்கும் அந்த ஒளி சென்று பாய்ந்தது என்றும் பிரமாத்திரத்தின் ஒளிச்சிறப்புப் பேசப்படுகிறது என்க.

195. அக்கணத்தின், அயன்படை, ஆண்தகை
சக்கரப் படையொடும் தழீஇச் சென்று
புக்கது, அக்கொடியோன் உரம்; பூமியும்,
திக்கு அனைத்தும், விசும்பும், திரிந்தவே. (9981)

(அயன்-பிரமதேவன்; ஆண்தகை-இராமபிரான்; தழீஇ-தழுவி/ சேர்ந்து; திரிதல்-சுழலுதல்; உரம்-மார்பு)

அந்தச் சமயத்தில், பிரமாத்திரத்தோடு, வீரனாகிய இராமபிரானது சக்கரப்படையும் சேர்ந்துகொண்டு சென்று, அந்தக் கொடியவனான இராவணனின் மார்பில் நுழைந்தது. அப்பொழுது இந்த நிலவுலகும், விண்ணுலகும், எட்டுத் திசைகளும், தம் நிலைகலங்கிச் சுழலலாயின.

பிரமதேவனின் பிரமாத்திரத்தோடு, திருமாலின் சக்கரப்படையும் சேர்ந்து சென்று இராவணனின் மார்பில் தைத்தது என்பதாம். ''தழீஇ'' என்பது சொல்லிசை அளபெடை; இராவணனின் நெஞ்சைப் பிளக்கவும், உயிரைக் கவரவும், நான்முகனின் பிரமாஸ்திரத்தால் மட்டும் முடியாது என்பதும், அதனால் திருமாலின் சக்கரப்படையும் சேர்ந்து சென்றது என்பதும் கருதத்தக்கது. இராவணனைக் கொன்றதில் திருமாலின் சக்கரப்படைக்கும் பங்கிருந்தது என்பதை உணர்க.

196. இராவணன் உயிர் இழத்தல்

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
பெருந்தவமும், முதல்வன் முன்நாள்,
"எக்கோடி யாராலும் வெலப்படாய்"
எனக் கொடுத்த வரமும், ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புய வலியும் தின்று, மார்பில்
புக்கோடி உயிர் பருகிப் புறம் போயிற்று,
இராகவன்தன் புனித வாளி (9982)

(புனிதம்-தூய்மை; முதல்வன்-பிரமன்; கோடி-வரிசை; செரு-போர்; கடத்தல்-வெல்லுதல்; தின்னுதல்-அழித்தல்/உண்ணுதல்)

Koviloor Digital Library

இராமபிரான் செலுத்திய தூய்மையான பிரமாத்திரம், இராவணனுக்கு விதிக்கப்பட்ட மூன்றுகோடி ஆயுளையும், அவன் அரிதின் முயன்று செய்த பெருமைமிக்க தவத்தின் பயன்களையும், முன்பு ஆதி முதல்வனான பிரமதேவன் ''முப்பத்து முக்கோடித் தேவர்களில் எந்த வரிசையினராலும் நீ வெல்லப்படமாட்டாய்'' என்று தந்தருளிய வரத்தையும், மற்றும் எட்டுத் திசைகளோடு, எல்லா உலகங்களையும் போரில் வென்று உயர்ந்த இராவணனின் தோள் வலிமையையும், அழித்துவிட்டு அவன் மார்பில் நுழைந்து, உடலில் புகுந்து சுழன்று, உயிரைக் குடித்துவிட்டு அப்புறமாய் அகன்று போயிற்று.

முப்பத்து முக்கோடித் தேவர்கள் என்பது அஷ்டவசுக்கள் 8பேரையும், ஏகாதச உருத்திரர் பதினோரு பேரையும், ஆதித்தர் பன்னிரண்டு பேரையும், அசுவினி தேவர் இருவரையும், உள்ளடக்கியது எனக்கொள்க. ''முதல்வன்'' என்பது பிரமதேவனைக் குறிக்கும். இராவணன் இயற்றிய தவம் உண்மையிலேயே பெருந்தவம், கடுந்தவம். அதை உத்தரகாண்டம் கூறுகிறது கேளுங்கள். ''ஓராயிரம் ஆண்டு உபவசித்துக் கழிந்தால், ஓர்ஓர் தலையாகச் சீர் ஆர் சிரம் ஒன்பதும் தடிந்து, செந்தீயிடை ஆகுதி பண்ணி, பேரா உபவாசத்தினனாய், பின்பும் ஓராயிரத்து ஆண்டில் தார்ஆர் மற்றைத் தலை தடியல் உற்றான் பற்றித் தசக்கிரீவன்'' என்பது உத்தரகாண்டம் இராவணன் பிறப்புப் படலம்-26.

இராவணன் முதலில் சிவபெருமானிடமிருந்து பெற்றது மூன்றரைக் கோடி வாழ்நாள். எனினும் உத்தரகாண்டம் வரையெடுத்த படலம் இராவணன் அரைக்கோடி வாழ்நாள் மட்டும்தான் வரமாகச் சிவபெருமானிடமிருந்து பெற்றான் என்கிறது. பாடலைக் கேளுங்கள். ''முன்னம் மூன்றரைக் கோடியும் ஒழிய, நீ முதல்வ! ''இன்னும் ஓர் அரைக்கோடி நாள் ஈந்து அருள்'' என்ன, மன்னு மாசுணப் பாயலான் மாயம் ஈதென்னா, உன்னு மாமலை மகளுடன் உமாபதி நகைத்தே, ''அன்னவாறு அரைக்கோடியே அளித்தனம்'' என்று உத்தரகாண்டம் பேசுகிறது. இதே வரையெடுத்த படலம் பாடல்-15. ''முவ்வகை உலகும் ஆவி, மூன்றரைக்கோடி ஆண்டும், எவ்வகைப் படையும் வெல்லும் சந்திரவாளும் ஈந்தான்'' என்று முன்பு பேசியிருக்கிறது. எப்படியிருந்தாலும் பின்னால் வரப்போகிற பாடலில் கவிஞன் ''அரை கடையுற்று அமைவுற்ற முக்கோடி ஆயுவும்'' என உறுதி செய்யப்போவதால் இங்கே முக்கோடி வாழ்நாள் என்று கொள்ளுதலே பொருத்தமுடையதாகும். ''தின்று'' என்பது மரபு வழுவமைதி. ''உண்டற்குரிய வல்லாப் பொருளை உண்டன போலக் கூறலும் மரபே'' என்பது தொல்காப்பியம். இராமபிரான் செலுத்திய அம்பு புனிதமானது. எனவே புனிதமற்றவனான அரக்கன் இராவணன் உடலில் தங்காது வெளிப்போயிற்று என்பதாம்.

Koviloor Digital Library

197. அம்பு மீண்டு வந்து தூணியை அடைதல்

ஆர்க்கின்ற வானவரும், அந்தணரும்,
முனிவர்களும், ஆசி கூறித்
தூர்க்கின்ற மலர்மாரி தொடரப்போய்,
பாற்கடலில் தூய் நீர் ஆடித்
தேர்க்குன்ற இராவணன் தன் செழுங்குருதிப்
பெரும்பரவைத் திரைமேற் சென்று,
கார்க்குன்றம் அனையான் தன் கடுங்கணைப்
புட்டிலின் நடுவண் கரந்தது அம்மா! (9983)

(ஆர்த்தல்-ஆரவாரித்தல்; வானவர்-தேவர்கள்; ஆசி-வாழ்த்து; பரவை-கடல்; திரை-அலைகள்; கார்-கரிய; நடுவண்-நடுவில்; கரத்தல்-தங்குதல்/புகுதல்; தூர்த்தல்-நிரப்புதல்; புட்டில்-அம்பறாத்தூணி)

இராவணன் இறந்துபட்டதை அறிந்த தேவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரித்தனர்; தேவர்களும், வேத விற்பன்னர்களும், முனிவர்களும் இராமபிரானுக்கு வாழ்த்துக்கூறி மலர்மழையால் பூமியை நிரப்புகின்றனர். அதனைப் பின் தொடர்ந்துபோய், அவன் செலுத்திய பிரமாத்திரமானது, திருப்பாற் கடலில் தூய்மையான நீரில் மூழ்கித் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, பின்னர் மலைபோன்ற தேரையுடைய இராவணனின் செழுமைமிக்க இரத்தக்கடலின் அலைகள்மீது சென்று, பின்னர் கரிய மலைபோன்றவனான இராமபிரானின் வேகம் நிறைந்த அம்பறாத்தூணியின் நடுவில் புகுந்து தன்னை மறைத்துக் கொண்டது.

''தேர்க்குன்ற இராவணன்'' என்பது உருவகம். மலைபோன்ற தேரையுடைய இராவணன் என்பது பொருள். இங்கே ஒரு நுட்பமான செய்தி; இராவணன் உயிர் பருகிய அம்பு பாற்கடலில் தூய்மைப்படுத்திக் கொண்டது. ஆனால் திரும்பி வரும்போது ''தேர்க்குன்ற இராவணன் தன் செழுங்குருதிப் பெரும்பரவைத் திரைமேல் சென்று'' என்பதால் மீண்டும் அது இராவணனின் இரத்தம் நிறைந்த உடலின்மீது பட்டுத் திரும்பியது என்ற பொருளைத் தருகிறதே? பின்னர் அதை எப்படிப் புனிதவாளி என்று கொள்வது? இங்குதான் ஒன்று நோக்கவேண்டும். பாற்கடலில் தூய நீராடிய அம்பு, அத்தூய்மை கெடாதவாறு, இராவணனது உடம்பிலிருந்து பெருகிய இரத்தக் கடலின் அலைகள் தன்மேல் படாதவண்ணம், அவ்வலைகளின் மேலேயே சென்றது என்று நுட்பமான பொருள்கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

198. இராவணன் முகப்பொலிவு

கார்நின்ற மழைநின்றும், உரும் உதிர்வ
என, திணிதோள் காட்டின் நின்றும்,
தார் நின்ற மலைநின்றும், பணிக்குலமும்,
மணிக்குலமும் தகர்ந்து சிந்த,
போர் நின்ற விழிநின்றும் பொறிநின்று
புகையோடும் குருதி பொங்க,
தேர் நின்று நெடு நிலத்துச் சிரமும் கீழ்ப்
பட விழுந்தான், சிகரம் போல்வான். (9984)

(கார்-கரியநிறம்; நின்ற-பொருந்திய/நிலைபெற்ற; மழை-மேகம்; உரும்-இடிகள்; தார்-மாலை; மணிக்குலம்-ஆபரணத்தொகுதி; மணி-இரத்தினம்; தகர்தல்-உடைதல்; திணி-வலிய/திண்ணிய; காடு-தொகுதி; கீழ்ப்பட-குப்புற)

கரிய நிறம் பொருந்திய மேகத்தினின்றும் இடிகள் உதிர்ந்து விழுவது போல, இராவணனுடைய திண்ணிய இருபது தோள்களின் தொகுதியினின்றும், மாலை அணியப்பெற்று விளங்குகின்ற மலைபோன்ற மார்பினின்றும் ஆபரணங்களின் தொகுதியும், இரத்தினங்களின் தொகுதியும் உடைந்து தரையில் சிதறவும், எப்பொழுதும் போர்வெறி நிலையாக நிற்கும் அவனுடைய இருபது கண்களினின்றும் நெருப்புப் பொறி புகையோடும் வெளிப்படவும், அதனால் இரத்தம் பொங்கவும், தான் இருந்த தேரினின்றும் இவ்வகன்ற பூமியிடத்தில் தன் பிரதான தலையும் முகமும் நிலத்தில் படும்படித் தலைகுப்புற விழுந்தான், அரக்கர்கள் என்னும் மலைக்கூட்டத்திற்குச் சிகரம் எனத் திகழும் இராவணன்.

கரிய இராவணனின் தோள்களினின்றும், மார்புகளினின்றும் சிதறி விழுந்தஆபரணத்தொகுதிகளுக்கும், இரத்தினங்களின்தொகுதிகளுக்கும், கரிய மேகத்திலிருந்து உதிர்ந்து விழும் இடிகள் உவமை. ''போர்நின்ற விழி'' என்பது அவன் கண்கள் எப்போதும் வீரப்பார்வை கொண்டு விளங்குவதைக் குறிக்கும். ''சிறுவனை நோக்கியும், சிவப்பானவே'' என்பது புறநானூறு*-100.*

199. வெம் மடங்கல் வெகுண்டனைய, சினம் அடங்க,
மனம் அடங்க, வினையம் வீய,
தெவ் மடங்க, பொரு தடக்கைச் செயல் அடங்க,
மயல் அடங்க, ஆற்றல் தேய,

Koviloor Digital Library

தம் அடங்கு முனிவரையும் தலை அடங்கா
நிலை அடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன, அம்முறை துறந்தான்
உயிர் துறந்த முகங்கள் அம்மா! (9985)

(வெம்-கொடிய; மடங்கல்-சிங்கம்; வினையம்-வஞ்சக நினைவுகள்; வீதல்-அழிதல்; தெம்-தெவ்/பகைவர்; பொருதல்-போர்புரிதல்; மயல்-மையல்/மயக்கம்; முறை-அறநெறி; சாய்த்தல்-வருத்துதல்; நாளின். நாளைக் காட்டிலும்)

சினந்து நின்ற கொடிய சிங்கம் ஒன்று தன் கோபம் எல்லாம் அடங்கிப்போகவும், அலைபாய்ந்து திரிந்த தன் மன மாசுகள் எல்லாம் அடங்கிப்போகவும், சூழ்ச்சித் திறனெல்லாம் அழிந்துபோகவும், பகைவர்களை அடக்கிப் போரில் வெற்றி காணுகின்ற பெரிய இருபது கைகளும் செயலற்று விரிந்து கிடக்கவும், சீதாதேவிமேல் கொண்ட காம மயக்கம் முற்றிலும் அழிந்து போகவும், தனது தோள்வலிமை குறைந்து போகவும், ஐம்புலன்களையும் அடக்கியாளும் இயல்புடைய முனிவர்களையும் தலை தூக்காதபடி அடக்கிவைத்திருந்து மகிழ்ந்திருந்து அவர்களுக்குத் துன்பத்தையும் வருத்தத்தையும் தந்த அந்த நாட்களைக் காட்டிலும், இப்போது இறந்து தரையில் கிடக்கின்றவனும், அறநெறி முறைகளைக் கைவிட்டு தீய நெறிகளையே மனம் கொண்டு வாழ்ந்தவனுமாகிய இராவணனின் இருபது முகங்களும் முன்னைவிட மூன்று மடங்கு பொலிவுற்றுத் திகழ்ந்தன.

இராவணன் தன் வாழ்நாளில் எந்தெந்த வழிகளில் அடங்காது செயல்பட்டான் என்பதையும், இப்போது அவையெல்லாம் எவ்வாறு அடங்கிப்போயிற்று என்பதையும் மிக அழகாக விளக்கும் பாடல் இது. இராவணனின் சினம், மனம், வினையம், போர்த்தொழில், மையல், வலிமை, முனிவரைச் சாய்த்தது, அறநெறி, முதலியவற்றின் இப்போதையநிலையைஅழகாகப்படம்பிடித்துக்காட்டுகிறான்கவிஞன். புனிதம் மிக்க இராமபாணத்தால் ''ஆவிபோம் வேலைவாய்'' ஞானம் வந்தது வாலிக்கு. அதுபோல் இங்கே அதே இராமபாணம் இராவணனின் மனத்திலிருந்த மாசுகளையெல்லாம் அகற்றி அவனைப் புனிதமாக்கியது. அதனால் அவன்முகம் மூன்றுமடங்கு பொலிவுடன் திகழ்ந்தது என்பதாம். முனிவர்களை வருத்தி அவன் மகிழ்ந்திருந்தபோது விளங்கிய முகப் பொலிவு. புறப்பொலிவு, இப்போது மனமாசுகள் எல்லாம் அகன்ற நிலையில் அவன் முகம் காட்டுகின்ற பொலிவு அகப்பொலிவு; எனவே அது முன்னையப் பொலிவைக்காட்டிலும் மூன்றுமடங்கு அதிகமாகப் பொலிவுபெற்றுத் திகழ்ந்தது என்பதாம். முன்பு முனிவர்களை வருத்தியபோது தான் மகிழ்ச்சியடைந்தபோது அவன் முகம் மகிழ்ச்சி யால் பொலிவுபெற்றுத் திகழ்ந்தது. இப்போது அம்முனிவர்களின்

Koviloor Digital Library

தலைவனும், மும்மூர்த்திகளில் முதல்வனுமான திருமாலின் அவதாரமான இராமபிரானின் இராமபாணத்தால் தாக்கப்பட்டபோது, அவன்முகங்கள் முன்னைக்காட்டிலும் மும்மடங்கு பொலிந்து விளங்கின என்பதாம். நல்லதோர் வீரனால் இறப்பதை இராவணன் மகிழ்ச்சியுடன் எதிர்நோக்கி இருந்தான் என்பது முன்பே கூறப்பட்டது. ''நாசம் வந்துற்றபோதும் நல்லதோர் பகையைப் பெற்றேன்'' என்பது இராவணன் கூற்று.

200. "பூதலத்தது ஆக்குவாயாக, இனிப்
பொலந்தேரை" என்ற போதில்,
மாதலிப் பேரவன் கடவ, மண் தலத்தின்
அப்பொழுதே வருதலோடும்,
மீது அலைத்த பெரும் தாரை விசும்பு அளப்பக்
கிடந்தான்தன் மேனி முற்றும்
காதலித்த உரு ஆகி, அறம் வளர்க்கும்
கண்ணாளன் தெரியக் கண்டான். (9986)

(பொலன்-பொன்; பூதலம்-பூமி; கடவுதல்-செலுத்துதல்; மண்தலம்-பூமி; காதல்-விருப்பம்; விசும்பு-ஆகாயம்; அளத்தல்-எட்டுதல்/முட்டுதல்; முற்றும்-முழுவதையும்; தெரிய-உற்று; கண்ணாளன்-கருணையுடையவன்/இராமபிரான்)

யார் யார் எப்படி எப்படி விரும்புகிறார்களோ, அதற்கேற்றவாறு தோற்றம் தருகின்ற கருணையாளனும், தர்மத்தை நிலைநாட்ட அவதாரம் எடுத்து வந்திருப்பவனுமாகிய இராமபிரான், தனது தேர்ச்சாரதியை நோக்கி, ''நீ செலுத்திக்கொண்டு வருகின்ற இந்த அழகிய பொன்மயமான தேரைத் தரையில் இறங்கும்படி செய்வாயாக!'' என்று கட்டளையிட்டவுடன், மாதலி என்னும் பெயருடைய அந்தத் தேர்ப்பாகன், அதனைச் செலுத்தித் தரையில் அக்கணத்திலேயே இறங்கும்படி செய்தான். இராமபிரான் தன் தேரிலிருந்தபடியே கீழே விழுந்து கிடக்கின்ற இராவணனின் மேனி முழுவதிலும் இருந்து பீறிட்டு அலைமோதி வெளிவரும் இரத்தப் பெருக்கு ஆகாயம்வரை சென்று எட்டுகின்ற தன்மையை உற்று நோக்கினான்.

அறம்தலை நிறுத்த அவதாரம் எடுத்துவந்த இராமபிரான், தன்னைக் காண்பவர்விரும்பும் எல்லா இலக்கணங்களும் பொருந்தப்பெற்ற உருவம் உடையவனாவான் என்பதே ''காதலித்த உருவாகி'' எனப்பட்டது என்க. தேர்ச்சாரதி, தேர்ப்பாகன் என்பதோடு ''வலவன்'' என்ற சொல்லும் தேரைச் செலுத்துபவனுக்குக் கூறுவதுண்டு. ''விசும்பு அளத்தல்'' என்பது இராவணன் மேனியினின்றும் பீறிட்ட இரத்தப்பெருக்கு ஆகாயம் வரையிலும் எட்டிச்சென்றது என்ற பொருளைத்தரும்.

Koviloor Digital Library

201. "தேரினை நீ கொடு விசும்பில் செல்க" என,
மாதலியைச் செலுத்தி, பின்னர்,
பாரிடம் மீதினின் அணுகி, தம்பியொடும்,
படைத்தலைவர் பலரும் சுற்ற,
போரிடை மீண்டு ஒருவருக்கும் புறம் கொடாப்
போர்வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனம் உவப்ப, உரு முற்றும்
திருவாளன் தெரியக் கண்டான். (9987)

(கொடு-கொண்டு; பாரிடம்-பூமி; சுற்றுதல்-சூழ்ந்து வருதல்; சீர்-சிறப்பு; தெரிய-தெளிவாக; திருவாளன்-இலக்குமியின் மணாளன்/இராம பிரான்)

திருமகளின் கணவனாகிய திருமாலின் அவதாரமான இராமபிரான், தேர்ச்சாரதி மாதலியை நோக்கி, ''இனி நீ இந்தத் தேரை விண்ணுலகத் திற்குக் கொண்டு சென்றுவிடுவாயாக!'' என்று விடைகொடுத்து அனுப்பவும், மாதலியும் அவ்வாறே செய்யலானான். பின்னர், இராம பிரான் தரையில் இறங்கி, தனது தம்பி இலக்குவனும் படைத் தலைவர் களும் புடைசூழ இதுவரையிலும் செய்த போர் எதிலும் போர்க்களத்தில் பின்வாங்காது யாருக்கும் புறமுதுகு காட்டியறியாத போர் வீரனாகிய இராவணன் போர்புரிந்து விழுந்துகிடந்த சிறப்பினையே தன் மனம் மகிழ்வு கொள்ள, அவனது மேனி முழுவதையும் தெளிவாக நோக்கினான்.

முன்பாடலில் தேரிலிருந்தே இராவணன் மேனியைக் கண்ட இராமபிரான் இப்பொழுது தரையில் இறங்கி, நெருங்கி வந்து, தனது தம்பியும், படைத்தலைவர்களும் உடன்வர, அவன் மேனியைத் தெளிவாகப் பார்த்தான் என்பதாம். ''போரிடை மீண்டு ஒருவர்க்கும் புறங்கொடாப் போர்வீரன்'' என இராமபிரான் இராவணனது போர்த் திறத்தைப் புகழ்ந்து பாராட்டுவதை நோக்குக. வீரரை யார் வியவாதார்?

202. வானரங்கள் மகிழ்தல்

புலைமேலும் செலற்கு ஒத்துப் பொதுநின்ற
செல்வத்தின் புன்மைத் தன்மை
நிலைமேலும் இனி உண்டே? "நீர் மேலைக்
கோலம் எனும் நீர்மைத்து அன்றே!
தலைமேலும், தோள்மேலும் தடமுதுகின்
படர் புறத்தும் தாவி ஏறி,
மலைமேல் நின்று ஆடுவபோல், ஆடினவால்
வானரங்கள் வரம்பு இலாத. (9988)

Koviloor Digital Library

(புலை-புன்மை/கீழானது; புன்மை-அற்பமான/இழிந்த)

போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்ற இராவணனின் பத்துத் தலைகள்மேலும், இருபது தோள்கள்மீதும், பெரிய முதுகின் பரப்பு முழுவதும் தாவி ஏறி, அளவற்ற வானரங்கள், மலையின்மேல் நின்று ஆடுவனபோல, ஆடத்தொடங்கின. செல்வம் என்பது மேலோர், கீழோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று வேறுபாடு செய்யாது எல்லோருக்கும் பொதுவான தன்மை உடையது அல்லவா? செல்வம்நிலையாமை என்பது நீர்மேல் எழுதப்படுகின்ற கோலத்தைப் போன்று விரைவில் அழியும் தன்மை உடையதுதானே! எனவே இதற்குக் கீழான உவமை சொல்லுவதற்கும் இயலுமோ?'' என்கிறான் கவிஞன்.

இதுவரையிலும் இராவணனைக் கண்டு அவனை நெருங்குவதற்குத் தேவர்களும் அஞ்சி வாழ்ந்துவந்தனர். இப்போது அவன் இறந்து பட்டமையால் அற்பமான குரங்குகளும்கூட அவன் உடல்மீது ஏறிக் கூத்தாடுகின்றன என்று, செல்வத்தின் நிலையாமையை விளக்குகிறான் கவிஞன் என்க.

203. தோடு உழுத நறுந்தொடையல் தொகை உழுத,
கிளை வண்டின் சுழியத் தொங்கல்,
பாடு உழுத படர் வெரிநின் பணி உழுத
அணி நிகர்ப்ப, பணைக்கை யானைக்
கோடு உழுத நெடுந் தழும்பின் குவை தழுவி,
எழுமேகக் குழுவின் கோவைக்
காடு உழுத கொழும் பிறையின் கறை கழன்று,
கிடந்தன போல் கிடக்கக் கண்டான். (9989)

(தோடு-இதழ்கள்; உழுதல்-கிண்டுதல்/பொருந்துதல்/குத்துதல்; தொடையல்-மாலை; பாடு-பெருமை; வெரிந்-முதுகு; பணி-வேலைப் பாடு; பணை-பருத்த; கை-துதிக்கை; கோடு-கொம்புகள்; குவை-திரள்; கோவை-வரிசை; கறை-களங்கம்; கழல்தல்-நீங்குதல்; கிளை-இனம்; சுழியல்-முடிமாலை/தலைமாலை)

இதழ்கள் பொருந்திய, நறுமணம் மிக்க, மலர்மாலையின் தொகுதி யைக் கிண்டிக்கொண்டிருக்கும் வண்டுகளின் இனங்கள், அம்மாலையின் அடியில் சுழிந்து தொங்கவிடப்பட்டிருக்கும் தொங்கல், இவை இறந்து வீழ்ந்துகிடந்த பெருமைசான்ற இராவணனின் முதுகுப்பக்கத்தில் புரண்டு கிடந்தன. அவை பார்ப்பதற்கு அழகிய ஆபரணங்கள் அவன் முதுகை அலங்கரிப்பதுபோல் தோன்றின; பருத்த துதிக்கைகளையுடைய யானை களின் தந்தங்கள் குத்தியதால் உண்டான நீண்ட பெரிய தழும்புகளின் திரளைத் தழுவி, எழுகின்ற ஏழுவகையான மேகங்களின் வரிசைகள் என்னும் காட்டில் தோன்றும் செழுமையான பிறைச்சந்திரனில் உள்ள

Koviloor Digital Library

களங்கம் மட்டும் தனியாகக் கழன்று கிடந்ததுபோலக் கிடக்கின்ற இராவணனின் மேனி தரையில் கிடப்பதை இராமபிரான் பார்த்தான்.

பொருள் எளிதில் புரிந்துகொள்ள முடியாத பாடல். அவன் மார்பில் பதிந்திருக்கின்ற யானைகளின் தந்தங்களுக்கு வெண்மையான பிறைச் சந்திரனும், அந்தத் தந்தங்களை அடுத்துத் தோன்றும் தழும்புகளுக்கு, அந்தப் பிறைச்சந்திரனிலிருந்து பிரிந்து தனியாக இருக்கும் களங்கமும் உவமை. எனவே இராவணன் முதுகுப்புறம் மேகங்கள்போலத் தோன்றியது என்பது தற்குறிப்பேற்றம். ''உழுத'' என்ற சொல் எல்லா அடிகளிலும் பயின்று வந்து வெவ்வேறு பொருள்களைத் தருவதால் இப்பாடல் சொற்பொருட் பின்வருநிலையணியின் பாற்படும்.

204. புறப்புண் கண்ட இராமபிரான் நிலை

தளிர் இயல் பொருட்டின் வந்த சீற்றமும், தருக்கினோன் தன்
கிளர் இயல் உருவினோடும் கிழிப்புறக் கிளர்ந்து தோன்றும்,
வளர் இயல் வடுவின் செம்மைத் தன்மையும், மருவ நின்ற
முளரி அம் கண்ணன், மூரல் முறுவலன், மொழிவதானான். (9990)

(தருக்கு-செருக்கு/ஆணவம்; கிளர்தல்-ஓங்குதல்; உரு-வடிவம்; மருவுதல்-பொருந்தியிருத்தல்; முளரி-செந்தாமரை மலர்; முறுவல்-புன்சிரிப்பு; வடு-தழும்பு)

தளிர்போன்ற மென்மையான இயல்பு படைத்த தன் மனைவி சீதாதேவி அபகரிக்கப்பட்டதன் காரணத்தால் எழுந்த கோபமும், மிக்க ஆணவம் கொண்ட இராவணனின் உயர்ந்தோங்கிய வடிவினோடும், அவன் மேனியில் முதுகில் திக்குயானைகள் கிழித்ததால் விளங்கித் தோன்றுவதும், வளரும் இயல்புடையதுமான தழும்புகள் இருக்கக்கண்ட செந்தாமரை மலர்போலும் கண்களையுடைய இராமபிரான், தான் செலுத்திய அம்பு செம்மைத் தன்மையின்பால் செயல்படவில்லை என்பதை அறிந்து ஒரு எள்ளல் விளங்கும் புன்சிரிப்புச் சிரித்துக் கீழ்வருமாறு கூறலானான்.

ஒரு வீரனை அழித்தமையால் தான் செய்த வீரச்செயல் செம்மை யுடையது என்று இராமபிரான் கருதினாலும், இறந்துபட்டவனின் முதுகில் தழும்புகள் காணப்பட்டதால் தன் வீரச்செயல் செம்மைத் தன்மையுடையதன்று என்றும் கருதலானான். எனவேதான் கவிஞன் செம்மைத்தன்மை என்று பொருள்படும்படியும், செம்மைத்து அன்மையும் என்று பொருள்படும் படியும், சொல்லைக் கையாண்டிருக்கும் திறம் நோக்குக.

Koviloor Digital Library

205. "வென்றியான் உலகம் மூன்றும் மெய்ம்மையால் மேவினாலும்,
பொன்றினான் என்று தோளைப் பொது அறநோக்கும் பொற்பும்,
குன்றி ஆசுற்றது அன்றே; இவன் எதிர் குறித்த போரில்
பின்றியான் முதுகில் பட்ட பிழம்பு உள தழும்பின் அம்மா!" (9991)

(மேவுதல்-பெற்றிருத்தல்; பொன்றுதல்-இறந்துபடுதல்; பொதுஅற-சிறப்பாக; பொற்பு-வீர அழகு; பின்றியான்-புறமுதுகு காட்டியவன்; குன்றுதல்-குறைதல்; ஆசு-குற்றம்; பிழம்பு-திரட்சி)

"மேல், நடு, கீழ் என்னும் மூன்று உலகங்களையும் உண்மையிலேயே வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்தியவன் இராவணன் என்றாலும், என்னுடைய அம்பினால் இவன் இறந்துபட்டான் என்று என் தோள் ஆற்றல் பற்றி வெற்றி காரணமாகப் பொதுவாக நோக்காது, மிக்க சிறப்பாகக் குறிப்பாகக் கருதினாலும், இவன் என்னை எதிர்த்துச்செய்த போருக்கு முன்பே புறமுதுகு காட்டிவந்ததுபோல் அவன் முதுகில் தழும்பின் திரட்சி காணப்படுகிறதே! எனவே எனது வெற்றியின் வீரப்பாடு சற்று குறைந்து, குற்றமுள்ளதாகிப் பழிச்சொல்லுக்கும் இடமாகிப் போய்விட்டதே!" என்று வருந்துகிறான் இராமபிரான்.

யாராலும் வெல்லமுடியாத இராவணனை நான் வென்று வீழ்த்தினேன் என்ற புகழ் ஒரு பக்கம் இருந்தாலும், ஒரு போரில் புறமுதுகு காட்டியவனை வென்றேன் என்ற பழிச்சொல்லே என்னை வந்தடையும் என்று வருந்து கிறான் இராமபிரான் என்பதாம். போரில் புறங்காட்டி ஓடுதல் எப்படிப் பழிச்சொல்லுக்கு இலக்காகுமோ, அதுபோல் போரில் புறங்காட்டி ஓடியவனை வெல்லுதலும் சிறப்பாகாது, பழிச்சொல்லுக்கு இடமாகும் என்பதாம். தோளையும், வாளையும் குறிப்பால் நோக்குதல் வெற்றிக்குரிய அடையாளமாகும். புறப்புண் உடையவனைப் பிறர் எச்சிலாகக் கருதுவது பண்டைய மரபு. "ஏறுண்டவர் நிகராயினும், பிறர் எச்சில் என்று எறியான்" என்பது சீவகசிந்தாமணி.

206. "கார்த்த வீரியன் என்பானால் கட்டுண்டான்" என்னக் கற்கும்
வார்த்தை உண்டு; அதனைக்கேட்டு, நாணுறு மனத்தினேற்குப்
போர்த்தலை புறகிட்டு ஏற்ற புண்ணுடைத் தழும்பும் போலாம்
நேர்த்ததும் காணலுற்ற; ஈசனார் இருக்கை நிற்க! (9992)

(ஈசனார்-சிவபெருமான்; இருக்கை-இருப்பிடம்/கயிலாயமலை; நிற்க-இருக்கட்டும்; போர்த்தலை-போர்க்களம்; நேர்த்தல்-நேர்படுதல்; புறகிடுதல்-புறமுதுகு காட்டுதல்)

தரையில் தழும்புடன் வீழ்ந்து கிடக்கும் இராவணனை நோக்கி இராம பிரான் தனக்குள் கீழ்வருமாறு எண்ணிக் கொண்டான்; "இவ்விராவணன் முன்பு சிவபெருமானின் இருப்பிடமாகிய கயிலாயமலையினைப்

Koviloor Digital Library

பெயர்த்தெடுக்கும்போது, சிவபெருமானால் கை நசுக்கப்பட்டு அவமானம் அடைந்தது நாம் அறிந்ததே. அது ஒருபக்கம் இருக்கட்டும். தண்டனை தந்தது தெய்வம், ஆனால் இவன் மானுடனான கார்த்த வீர்யார்ச்சுனன் என்னும் மன்னனால் கட்டிச் சிறைப்பிடிக்கப்பட்டான் என்ற ஒரு செய்தியையும், நான் கேட்டதுண்டு; அதனைக்கேட்டு இவனுடனா போரிடப்போகிறோம் என்று நான் சற்று வெட்கப்பட்டது முண்டு; அப்படிப்பட்ட மனக்கருத்தை உடைய எனக்கு முன்பு இவன் போர்க்களத்தில் புறமுதுகிட்டு அதனால் ஏற்ற புண்களினால் உண்டான தழும்புகளையும் என் கண் எதிரே பார்க்க நேர்கிறதே! இதனால் என்னுடைய நாணம் மேலும் மிகுகின்றதே!'' எனக் கருத்துட்கொண்டான் இராமபிரான்.

பொதுவாக இப்போது இவனை வென்றதில் தனக்கு எந்தவிதப் பெருமையும் இல்லை; மாறாகப் பழியே வந்துசேரும் என்று இராமபிரான் கருதுகிறான் என்பதாம். கார்த்த வீர்யார்ச்சுனன் என்னும் மன்னன், ஆயிரம் தோள்களையுடையவன்; அவனுக்கு எதிராகப் போர்செய்ய முனைந்த இராவணனை கார்த்த வீர்யார்ச்சுனன் தன் ஆயிரம் தோள்களால் கட்டிச் சிறையில் அடைத்தான் என்பதும், இதனையறிந்த வீடணன் புலத்தியனிடம் அதனைத் தெரிவிக்க, புலத்தியன் நான்முகனின் உதவியோடு அவனைச் சிறையினின்றும் விடுவித்தான் என்பதும் ஒரு புராண வரலாறு. ''ஆயிரம் தடக்கையால் நின் ஐ நான்கு கரமும் பற்றி வாய்வழி குருதி சோரக் குத்தி வான் சிறையில் வைத்த தூயவன்'' என்பது சுந்தரகாண்டம், காட்சிப் படலத்தில் சீதாதேவியின் கூற்று. தெய்வத்தால் அவமானப்பட்டது இழுக்கன்று. எனினும் ஒரு மானிட மன்னனால் சிறைப்படுத்தப்பட்டதும், புறமுதுகு காட்டியதால் ஏற்பட்ட தழும்புகளும் இழுக்கேயாகும் என்கிறான் இராமபிரான் என்பதாம். கார்த்த வீர்யார்ச்சுனனால் கட்டப் பட்டமைக்கு அவன் உடம்பில் இப்போது ஏதும் அடையாளம் தெரியாததால், ''கட்டுண்டான் என்னக் கற்கும் வார்த்தை உண்டு'' என்றார் என்க.

207. இராமபிரான் வீடணனை நோக்கிப் பேசுதல்

"மாண்டு ஒழிந்து உலகில் நிற்கும் வயங்கு இசை முயங்க மாட்டாது,
ஊண் தொழில் உகந்து, தெவ்வர் முறுவல் என்புகழை உண்ண,
பூண் தொழில் உடைய மார்பா! போர்ப் புறங்கொடுத்தோர் போன்ற
ஆண் தொழிலோரின் பெற்ற வெற்றியும் அவத்தம்" என்றான். (9993)

(பூண்-அணிகலன்கள்; நிற்றல்-நிலைத்து இருத்தல்; வயங்குதல்-விளங்குதல்; இசை-புகழ்; முயங்குதல்-தழுவுதல்; ஊண்-உணவு; உகத்தல்-விரும்புதல்; தெவ்வர்-பகைவர்; முறுவல்-எள்ளல்சிரிப்பு; அவத்தம்-அபத்தம்/பொய்யானது/வீணானது)

Koviloor Digital Library

இராமபிரான் வீடணனை நோக்கி ''அணிகலன்களை அணிந்துள்ள மார்பை உடையவனே! வீடணா! சுவைமிக்க நல்ல உணவை விரும்பி உண்பதையே தொழிலாகக் கொண்ட இந்தப் பகைவர்களின் எள்ளல் சிரிப்பு என்புகழை அழித்துவிடும்போல் தோன்றுகிறது. போரில் புறமுதுகு காட்டியவன் போன்ற இந்த இராவணனோடு நான் போர்செய்து பெற்ற வெற்றியானது பொய்யானது; வீணானது; காரணம், இவன் இறந்துபட்டதனால் உலகில் நிலைத்து நிற்கும் என்னுடைய புகழும் இனி என்னைத் தழுவமாட்டாது, பழியையே கொண்டு வந்து சேர்க்கும்'' என்றான்.

சுத்த வீரனை வெல்வதுதான் ஒரு வீரனுக்குப் புகழைத்தரும்; புறங்காட்டி ஓடிய இவனைப்போன்றவனை வென்றது என்பது புகழுக்கு மாறாகப் பழியையே தரும் என்கிறான் இராமபிரான். உலகில் நிலைத்துநிற்க வல்லது புகழ் ஒன்றே என்பதாம். ''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பது ஒன்றுஇல்'' என்பது குறள்-233. ''அவத்தம்'' என்பது ''அபத்தம்'' என்ற வடசொல்லின் திரிபு. வீணானது என்ற பொருளைத்தரும். இப்போது தான் பெற்ற வெற்றி, வீரவெற்றி ஆகாது என்றும் இழிதகவுடையதே என்றும் கூறுகிறான் இராமபிரான். ''ஆண் தொழிலோர்'' என்பது இகழ்ச்சிக்குறிப்பு.

208. வீடணன் மறுமொழி. [6 பாடல்கள்]

அவ் உரைக்கு இறுதி நோக்கி, வீடணன், அருவிக் கண்ணன்,
வெவ் உயிர்ப்போடு நீண்ட விம்மலன், வெதும்பும் நெஞ்சன்,
''செவ்வியின் தொடர்ந்த அல்ல செப்பலை, செல்வ!'' என்னா,
எவ் உயிர்ப்பொறையும் நீங்க இரங்கி நின்று, இனைய சொன்னான்.
(9994)

(உயிர்ப்பு-பெருமூச்சு; நெஞ்சம்-மனம்; தொடர்தல்-பொருந்துதல்; செவ்வி-செம்மை; செப்பலை-கூறாதே; உயிர்ப்பொறை-உடம்பு; இனைய-இத்தகைய)

அவ்வாறு இராவணனுக்கு இழுக்கு உண்டாகுமாறு இராமபிரான் கூறிய வார்த்தைகளைக் கேட்ட வீடணன், கண்களினின்றும் அருவி போலக் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டவனாயும், வெப்பப் பெருமூச்சு விட்டுக்கொண்டு நெடிய விம்மலை உடையவனாயும், வாடுகின்ற மனத்தை உடையவனாயும், இராமபிரானை நோக்கி, ''எல்லாச் செல்வங் களையும் உடையவனே! இராம! நற்பண்புகளுக்கு ஒவ்வாத சொற்களைக் கூறாதே!'' என்று உயிரினைத் தாங்கிநிற்கும் எல்லோரும் இரக்கம் கொள்ளும் வண்ணம், கீழ்வருவனவற்றைக் கூறத்தொடங்கினான்.

''உயிர்ப்பொறை'' என்பது உயிரைத் தாங்கிநிற்கும் உடம்பினைக் குறிக்கும்.

Koviloor Digital Library

209. "ஆயிரம் தோளினானும், வாலியும், அரிதின்ஐய!
மேயின வென்றி, விண்ணோர் சாபத்தின் விளைந்த, மெய்ம்மை;
தாயினும் தொழத்தக்காள்மேல், தங்கிய காதல் தன்மை
நோயும், நின்முனிவும் அல்லால், வெல்வரோ நுவலற்பாலார்!" (9995)

(தங்குதல்-பொருந்தியிருத்தல்; முனிவு-செற்றம்/கோபம்; நுவல்தல்-சிறப்பித்துச் சொல்லுதல்; அரிதின்-அருமையான)

வீடணன் இராமபிரானை நோக்கி, ''தலைவனே! ஆயிரம் தோள்களைக் கொண்ட கார்த்தவீர்யார்ச்சுனனும், வாலியும், மிகச் சிரமப்பட்டுப் பெற்ற வெற்றிகள், இராவணனுக்குத் தேவர்கள் இட்ட சாபத்தினால் நிகழ்ந்தன. அதுதான் உண்மை; எனினும் தாயைக்காட்டிலும் மிக்க அன்புகொண்டு தொழுதற்கு உரியவளான சீதாதேவியின்மேல் அவன்கொண்ட பொருந்தாக் காமமாகிய காதல்நோயும், அதன் காரணமாக நீ அவன்மீது கொண்ட சீற்றமும்தான் அவன் தோற்றுப்போகக் காரணமாய் அமைந்தனவேயன்றி வேறு வீரர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர் யாராவது இவனை வெல்லமுடியுமோ?'' முடியாது'' என்கிறான் வீடணன்.

ஆயிரம் தோளினனான கார்த்தவீர்யார்ச்சுனன் மானிடன். இராவணன் வரம்வாங்கும்போது மானிடர்களால் தனக்கு அழிவு நேரக்கூடாது என்று வரம் வாங்கவில்லை; எனவே அவனால் இராவணனை வெல்லமுடிந்தது. வாலி வெற்றிபெற்றதற்குக் காரணம் நந்திதேவர், குரங்கினால்தான் உனக்கு அழிவு என்று இட்ட சாபம்; எனவேதான் இவர்கள் இருவராலும் இராவணனை வெல்லமுடிந்தது. இதைத்தவிர, அவன் தாயினும் மேலான சீதாதேவியின்மீது கொண்ட பொருந்தாக்காமமும் அதன் காரணமாக இராமபிரான் அவன்மேல் கொண்ட சீற்றமும்தான் இப்போது அவன் தோல்வியடைந்ததற்குக் காரணமாகும் என்று விளக்குகிறான் வீடணன். ''தாயினும் தொழத்தக்காள் சீதாதேவி'' என்பது இப்போது வீடணன் கூற்று. ''பேருலகின் மாதா அனையாளை மனக்கொடு'' என்பது சடாயுகூற்று; ''என்றும் தோன்றாத் தாயவள் உலகுக்கெல்லாம்'' என்பது மாலியவான் கூற்று. ''தாய் தெரிந்து உலகுகாத்த தவத்தி'' என்பது இராவணனின் ஒற்றர்கள் கூற்று; காதலை நோயாகக் கூறுவது கவிமரபு. ''மனிதர் முகத்துக்கு மாறான பிராணிகளால் அழிவுநேரும்'' என்பது இராவணனுக்கு நந்திதேவர் தந்த சாபம்.

210. "நாடு உளதனையும் ஓடி, நண்ணலார்க் காண்கிலாமல்,
பீடு உள குன்றம் போலும் பெருந்திசை எல்லை யானைக்
கோடு உளதனையும் புக்கு, கொடும்புறத்து அழுந்து புண்ணின்,
பாடு உளது அன்றி, தெவ்வர் படைக்கலம் பட்டு என் செய்யும்?" (9996)

Koviloor Digital Library

(நண்ணலார்-பகைவர்; பீடு-பெருமை; கோடு-கொம்புகள்; கொடு-வளைந்த; புறம்-முதுகு; பாடு-வடு/தழும்பு; தெவ்வர்-பகைவர்கள்)

''இந்த உலகத்திலுள்ள நாடுகள் எதுவரை நீண்டு கிடக்கிறதோ, அவ்வளவின் எல்லைவரையிலும் படை திரட்டிக்கொண்டு சென்று அனைவரையும் வென்று தன்கீழ் அடிமைப்படுத்திவிட்டபடியாலும், அவனை நெருங்கி வந்து போரிடக்கூடிய பகைவர்கள் யாரும் கிடைக்கப் பெறாமையாலும், பெருமைவாய்ந்த மலைபோன்ற பெரிய எட்டுத் திசைகளிலும் காவல்காத்து வரும் திசையானைகளுடன் போர்செய்தான். அவ்வாறு போரிடும்போது அவற்றின் தந்தங்கள் எவ்வளவு நீளம் இருந்தனவோ அவ்வளவு நீளமும் இவன்மார்பில் பாய்ந்து, வளைந்து முதுகின் பின்புறம் வழியாக வெளித்தோன்றியதால் ஏற்பட்ட புண்ணின் தழும்புகள்தான் இந்த வடுக்கள். வேறு பகைவர்கள் தம் படைக்கலன்களைச் செலுத்துவதால் இவனுடைய வயிரம்பாய்ந்த உடலை யார் என்ன செய்யமுடியும்?'' என்று வீடணன், இராவணனின் அளப்பரிய ஆற்றலையும், தழும்பு உண்டானதற்கான காரணத்தையும் விளக்கிக்கூறினான்.

திசையானைகளின் கொம்புகள், வலிய போர்க்கருவிகளைக் காட்டிலும் மிக்க வலிமைவாய்ந்தவை என்பது பெறப்படுகிறது. ''நண்ணலார் காண்கிலாமையால், பீடுஉள குன்றம்போலும் பெருந்திசை எல்லை யானைகளோடு போரிட நேர்ந்தது'' என்பது கருதத்தக்கது.

211. "அப் பணை அனைத்தும், மார்புக்கு அணி எனக்கிடந்த; வீரக்
கைப் பணை முழங்க, மேல்நாள், அமரிடைக் கிடைத்த காலன்
துப்பு அணை வயிரவாளி விசையினும், காலின் தோன்றல்
வெப்பு அணை குத்தினாலும், வெரிநிடைப் போய அன்றே?" (9997)

(பணை-கொம்புகள்/தந்தங்கள்; கைப்பணை-கைச்சங்குகள்; கிடைத்தல்-நெருங்குதல்; துப்பு-வலிமை; விசை-வேகம்; கால்-காற்று; தோன்றல்-புதல்வன்; காலின் தோன்றல்-காற்றின்புதல்வன்/அனுமன்; வெரிந்-முதுகு; போதல்-வெளிவருதல்; வெப்பு-வெம்மை)

''அவ்வாறு மார்பில் முறிந்துபோய் நின்ற அந்தத் தந்தங்களெல்லாம், இராவணனின் மார்புக்கு அணிகலன்கள்போலத் தோற்றமளித்துக் கொண்டு இருந்தன; வீரப்பாடுமிக்க கையால் ஊதும் சங்குகள் முழக்கமிட, முன்பு இயமன் போரில் இவனை எதிர்த்துவந்தபோது வலிமைமிக்க வயிரம் பாய்ந்த அம்பின் வேகத்தாலும், காற்றரசனின் புதல்வனான அனுமன் முதல்நாள் போரில் கொடுத்த வெம்மை மிகுந்த குத்தினாலும், மார்பிலிருந்த தந்தங்கள் முதுகுக்குப்போய்ச் சேர்ந்தன'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

இராவணனுடைய முதுகில் இப்போது காணப்படும் தழும்புகள் புறமுதுகு காட்டி ஓடிவந்ததால் ஏற்பட்டன அல்ல; அவை விழுப் புண்களே என்று உறுதிபடக் கூறுகிறான் வீடணன். முதல்நாள் போரில் அனுமன் இராவணனுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி குத்தியதும், அதனால் அவன் மார்பில் முறிந்துபோயிருந்த தந்தங்கள் முதுகின் வழியாக வந்தன என்பதும் நாம் முன்பு பயின்றுவந்தமையே.

212. "அவ்வடு அன்றி, இந்த அண்டத்தும் புறத்தும் ஆன்ற,
தெவ் அடு படைகள் அஞ்சாது இவன் வயின் செல்லின், தேவ!
வெவ்விடம் ஈசன் தன்னை விழுங்கினும், பறவை வேந்தை
அவ் விட நாகம் எல்லாம் அணுகினும், அணுகல் ஆற்றா" (9998)

(புறம்-விண்ணுலகமும், பாதாளமும்; ஆன்ற-நிறைந்த; தெவ்-பகைவர்; அடுதல்-கொல்லுதல்; வயின்-இடம்; பறவைவேந்து-கருடன்; அணுகல்-நெருங்குதல்; ஆற்றுதல்-இயலுதல்/முடிதல்)

''எனவே, தேவர்களுக்குத் தலைவனே! நீ இப்போது காண்கின்ற இந்தத் தழும்புகள் அந்த யானைகளின் தந்தங்கள் இவன் மார்புக்குள் புகுந்ததனால் உண்டானதே அன்றி, இந்த மண், விண், பாதலம் ஆகிய மூவுலகங்களிலுமுள்ள பகைவரைக் கொல்லும் ஆற்றல்பெற்ற படைக்கலன்கள் இவனை அழிப்பதற்காக அஞ்சாது நெருங்கிச் சென்றால், முன்பு பாற்கடலில் தோன்றிய கொடிய விடத்தை எடுத்து உண்டானே சிவபெருமான், அவனையே அந்தக்கொடிய நஞ்சு விழுங்கினாலும் விழுங்கும்; பறவைகட்கு அரசனான கருடன் இருக்கிறானே, அவனை அந்த விடம் பொருந்திய அஷ்டகுல நாகங்கள் எல்லாம் நெருங்கிவந்து துன்புறுத்தினாலும் துன்புறுத்தும்; ஆனால் இவனை வேறு எந்தப்படைக்கலங்களும் நெருங்கும் வல்லமை கொண்டனஅல்ல. எனவே இந்தத் தழும்புகள் திசையானைகளின் தந்தங்கள் முறிந்ததனால் ஏற்பட்டனவே ஆகும்'' என்று கூறுகிறான் வீடணன்.

விஷம் ஈசனை விழுங்குதலும், நாகங்கள் கருடனை அணுகுதலும் நிகழா நிகழ்ச்சிகள். எனவே இதனை இல்பொருள் உவமை எனக் கொள்ளலாம். ''பா அல் புளிப்பினும், பகல் இருளினும், நா அல் வேதநெறி திரியினும்'' என்பது புறநானூறு-2.

213. "வென்றியாய்! பிறிதும் உண்டே வேலைசூழ் ஞாலம், ஆண்டு ஓர்
பன்றியாய் எயிற்றுக் கொண்ட பரம்பரன் முதல பல்லோர்
"என்று யாம் இடுக்கண் தீர்வது?" என்கின்றார்; "இவன் இன்று உன்னால்
பொன்றினான்" என்றபோதும், புலப்படார், "பொய்கொல்!" என்பார்"
(9999)

Koviloor Digital Library

(வென்றி-வெற்றி; வேலை-கடல்; ஞாலம்-உலகம்; பன்றி-வராகம்; எயிறு-பல்; பரம்பரன்-திருமால்; இடுக்கண்-துன்பம்; பொன்றுதல்-இறந்துபடுதல்; புலப்படுதல்-வெளிப்படுதல்; பிறிது-வேறு; ஆண்டு-அக்காலத்தில்/முன்பு)

''வெற்றி வீரனே! கடலால் சூழப்பட்ட இவ்வுலகங்கள் அனைத்தையும், முற்காலத்தில் ஒப்பற்ற வராக வடிவமாய்ச் சென்று தன் கோரப்பற்களின் நுனியில் வைத்துக் காப்பாற்றிய பரம்பொருளான திருமால் முதலிய பல தேவர்கள், ''இந்த இராவணன் இயற்றுகின்ற துன்பங்களினின்றும் நாங்கள் எப்போது நீங்கி வருவோம்'' என்று கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இப்போது அதே இராவணன் உன்னால் கொல்லப்பட்டு இறந்துபோனான் என்று கூறினாலும் அதை நம்பாது ''இந்தச்செய்தி பொய்யாக இருக்கலாமோ!'' என்று ஐயம் கொள்வார்கள். தம்மை வெளிப்படுத்திக்கொள்ள மாட்டார்கள். எனவே நீ இப்போது இராவணனைக் கொன்று பெற்ற வெற்றியைக் காட்டிலும் வேறு ஓர் சிறந்த வெற்றி இருக்கமுடியுமோ?'' என்று கூறி முடிக்கிறான் வீடணன்.

214. இராவணனுக்கு இறுதிக்கடன் செய்யும்படி, வீடணனை இராமபிரான் வேண்டுதல்

''அன்னதோ?'' என்னா, வீரன் ஐயமும் நாணும் நீங்கி,
தன்ன தோள் இணையை நோக்கி, ''வீடணா! தக்கதன்றால்;
என்னதோ இறந்துளான் மேல் வயிர்த்தல்? நீ இவனுக்கு ஈண்டு
சொன்னதோர் விதியினாலே, கடன்செயத் துணிதி'' என்றான். (10000)

(அன்னதோ-அப்படியோ; இணை-இரண்டு; வயிர்த்தல்-பகைமை கொள்ளுதல்; என்னதோ-எதற்கு; ஈண்டு-இப்போதே; துணிதல்-மனம் கொள்ளுதல்; கடன்-இறுதிக்கடன்கள்/ஈமக்கடன்கள்)

அவ்வாறு வீடணன்கூறிய விளக்கத்தை உள்வாங்கிக் கொண்ட வீரனான இராமபிரான் ''அப்படியா!'' என்று முன்பு தான் கொண்டிருந்த சந்தேகமும், அதனால் விளைந்த வெட்கம் கலந்த வருத்தமும் நீங்கப்பெற்று, பின் வீரம் செறிந்த தனது இரண்டு தோள்களையும் தானே பாராட்டிக்கொள்ளும் வண்ணம் நன்கு பெருமையோடு பார்த்துப் பின்னர் வீடணனை நோக்கி, ''வீடணா! என்ன இது? ஒருவர் இறந்துபோனபின்பு அவர்களிடம் தொடர்ந்து பகைமைகொள்ளுதல் என்பது முறைமையன்று; எனவே நீ இராவணனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை எல்லாம் இப்போதே, நீதிநூல்களில் கூறியுள்ள முறைமை மாறாமல் செய்யத் தொடங்குவாயாக!'' என்றான்.

Koviloor Digital Library

''அன்னதோ! என்னதோ'' என்பன வியப்பு உடன்பாட்டுக் குறிப்புக்கள். தான் புறமுதுகிட்ட ஒருவனைக் கொன்று விட்டோமோ? என்று ஐயமும், அதனால் விளைந்த வெட்கமும் இப்பொழுது நீங்கப்பெற்றான். ஒரு நல்ல வீரனையே வென்றிருக்கிறோம் என்பதால்தான் தன் தோள்கள் இரண்டினையும் நோக்கித் தன்னைத்தானே பாராட்டிக் கொள்கிறான். வீடணன் இன்னும் தன் மனத்தில் அண்ணன்மேல் வெறுப்புக் கொண்டிருக்கிறான் என்பதை ஊகித்து உணர்ந்த இராமபிரான் வீடணனை அழைத்து, இறந்துபோனவர்மீது தொடர்ந்து பகைமை பாராட்டுதல் முறைமையன்று என்று கூறி, நூல்களில் கூறிய வண்ணம், நீர்க்கடன், நெருப்புக்கடன் முதலானவற்றைச் செய்து முடிக்கும்படி வேண்டுகிறான் என்பதாம். ''தன்தோள் என்பது தன்னதோள்'' என்று எதுகை நோக்கி மிகுந்தது. வீரர்கள் தோள் இணை நோக்குதல் மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் பெருமிதத்திற்கும் உரிய செயல்.

215. அவ்வகை அருளி, வள்ளல் அனைத்து உலகங்களோடும்,
எவ்வகை உள்ள தேவர் யாவரும் இரைத்துப் பொங்கிக்
கவ்வையின் தீர்ந்தார் வந்து வீழ்கின்றார் தம்மைக்காண,
செவ்வையின் அவர்முன் சென்றான்; வீடணன் இதனைச் செய்தான்.
(10001)

(இரைத்தல்-ஆரவாரித்தல்; கவ்வை-துன்பம்; செவ்வையின்-நேராக; வீழ்தல்-பணிதல்/தொழுதல்; பொங்குதல்-உள்ளம் பூரித்தல்)

அவ்வாறு வீடணனுக்கு அருள்செய்த வள்ளன்மை மிக்கவனான இராமபிரான், எல்லா உலகத்தில் இருக்கும் பலவகைப்பட்ட தேவர்கள் யாவரும், இராவணன் இறந்துபட்டான் என்பதனால் மிக்க மகிழ்ந்து ஆரவாரம் செய்துகொண்டு மனம் பூரித்து, நீண்ட துன்பத்தினின்றும் விடுபட்டவராகி வந்து பணிந்து தொழுகின்றவர்கள் எல்லோரையும் காண்பதற்காகத் தானே நேரில் அவர்கள் முன்சென்று காட்சி தந்தான். இப்போது வீடணன் ஈமக்கடன்களை ஆற்றுவதற்காகச் சென்றான்.

முப்பத்து முக்கோடித் தேவர்கள் பல இடங்களிலும் பலவகைகளிலும் பரவிக்கிடக்கிறார்கள். எனவே ''அனைத்து உலகங்களோடும், எவ்வகை உள்ள தேவர் யாவரும்'' என்றார் என்க. தேவர்கள், முனிவர்கள் முதலானவர்க்குத் தான் முன்பு தண்டகாரண்யத்தில் செய்து கொடுத்த உறுதிமொழியின்படி இராவணனை வென்று தன் கூற்றை நிறைவேற்றினான். எனவே அவனை ''வள்ளல்'' என்றார் என்க. இராவணன் கொல்லப்பட்டதால் தேவர்கள் இதுநாள்வரை கொண்டிருந்த துன்பம் நீங்கியதால், அதனைச் செய்துமுடித்த இராமபிரான் அடிதொழலானார்கள். அவர்கள் வந்து தம்மைக் காண்பதற்கு முன்பு தானே, அவர்களை நோக்கிச் சென்றான் என்று அவனுடைய எளி வந்த தன்மையை

Koviloor Digital Library

''கவ்வையின் தீர்ந்தார் வந்து வீழ்கின்றார் தம்மைக் காணச் செவ்வையின் அவர்முன் சென்றான்'' என்றார் என்க.

216. வீடணன் வீழ்ந்து அரற்றுதல்

''போழ்ந்தென அரக்கன் செய்த புன்தொழில் பொறையிற்றாமால்;
வாழ்ந்த நீ இவனுக்கு ஏற்ற வழிக்கடன் வகுத்தி'' என்ன,
தாழ்ந்ததோர் கருணை தன்னால், தலைமகன் அருள, தள்ளி,
வீழ்ந்தனன் அவன்மேல், வீழ்ந்த மலையின்மேல் மலை வீழ்ந்தென்ன.
(10002)

(போழ்தல்-பிளத்தல்; புன்-அற்பமான/கீழான; தலைமகன்-முதல்வன்; தாழ்தல்-வீழ்தல்; தள்ளி-தள்ளப்பட்டு)

''இந்த அரக்கனான இராவணன் சீதாதேவியை அபகரித்துக் கொண்டு வந்த செயல், மிகவும் கீழானது; நெஞ்சே பிளவுபட்டுப்பட்டதுபோன்றது, என்றாலும் அவன் இப்போது இறந்துபட்டதனால் அது பொறுத்துக் கொள்ளத்தக்கது. மன்னிக்கத்தக்கது; இவனுடன் இவ்வளவுகாலம் உடன் உறைந்து வாழ்ந்துவந்த நீ, இவனுக்குத் தகுந்த நீர்க்கடன், நெருப்புக்கடன் முதலானவற்றைக் குறைவின்றி, நூல்களில் கூறியவண்ணம் செய்து முடிப்பாயாக!'' என்று இயல்பிலேயே கருணைக்குணம் மிகுந்தவனான முதல்வன் இராமபிரான் அருளிக் கூறவும், வீடணன் மிக்கத் துயரத்தால் உந்தப்பட்டு, முன்பே வீழ்ந்து கிடந்த ஒரு மலையின்மேல், நின்று கொண்டிருந்த மற்றொரு மலை வீழ்ந்ததுபோல, இராவணனின் உடல்மீது விழுந்து அரற்றினான்.

இராவணன் உடலமைப்பைப்போலவே வீடணனின் உடலமைப்பும் விளங்கியதால் இருவருக்குமே மலையை ஒப்பிட்டார் என்க. முறையாக ஈமக்கடன்கள் செய்யவேண்டிய மூத்தமகன் இந்திரசித்துவும், மற்ற அதிகாயன், அக்ககுமரன் முதலியோரும் முன்னரே இறந்துபட்டதனால் எஞ்சியிருக்கின்ற தம்பியாகிய வீடணனே ஈமக்கடன்கள் நிறைவேற்ற வேண்டியவனானான் என்பது குறிக்கொளத்தக்கது. முன்பே இந்நிகழ்வை கும்பகருணன் கூறியிருப்பதை நினைவிற் கொண்டுவருக. ''ஐய நீ அயோத்தி வேந்தற்கு அடைக்கலமாகி அங்கே உய்கிலை என்னின், மற்று இவ்வரக்கராய் உள்ளோம் எல்லாம், எய்கணை மாரியாலே இறந்து பாழ்படுதும்; பட்டால், கையினால் எள்நீர் நல்கிக்கடன் கழிப்பரைக் காட்டாய்'' என்பது கும்பகருணன் கூற்று. இதே நிலை முன்பு வாலி இறந்து கிடந்தபோது சுக்கிரீவனுக்கும் ஏற்பட்டது என்பதையும் நினைவுகூர்க. அங்கே கவிஞன் சுக்கிரீவன் ''நேசத்தாரைகள் சொரிந்தான்'' என்று குறிப்பிட்டதையும் உணர்க.

Koviloor Digital Library

217. ஏவரும், உலகத்து எல்லா உயிர்களும், எரியின் நெஞ்சின்
தேவரும் முனிவர்தாமும், சிந்தையின் இரக்கம்சேர,
தா அரும் பொறையினான்தன் அறிவினால் தகைக்க நின்ற
ஆவலும் துயரும் தீர, அரற்றினான் பகுவாய் ஆர. (10003)

(உயிர்கள்-மக்கள்; கூர்தல்-மிகுதல்; தாஅரும்-குற்றமற்ற; தகைத்தல்-தடுத்தல்; பகுவாய்-பிளந்தவாய்; ஆவல்-பற்று)

இராவணன் செய்கையால் கொதிக்கின்ற நெஞ்சத்தையுடைய தேவர்களும், உலகத்தில் உள்ள எல்லா மக்களும் ஏனைய உயிரினங்களும், முனிவர்களும்கூட, வீடணன் நிலைகண்டு தம் உள்ளத்தில் இரக்கம் மேவ, நின்றிருந்தனர். குற்றமற்ற பொறுமை மிக்கவனான வீடணன், தன் உணர்வுகள் முன்வந்து தடுக்கவும், பற்றும் பாசமும் மிகவும், சற்று தடுமாறி நின்று துயரம் நீங்கும் வண்ணம், தனது பெரிய வாய் திறந்து, அழுது புலம்பி அரற்றித் தீர்த்தான்.

உயிர்கள் பிற உயிர்கள்மீது வைக்கும் ஆசை, பற்று துயருக்குக் காரணம். அந்தத் துயரம் ஆசையினால் விளைவது; எனினும் ஆசையையும், பற்றையும், துயரத்தையும் விவேகத்தினால் போக்கிக்கொள்ளலாம் என்பது உளவியலார் கருத்து. அதுவே இங்கே ''ஆவலும் துயரும் அறிவினால் தகையத்தக்க தீர'' எனப்பட்டது என்க. இன்னும் ஒன்று. வாய்விட்டு அரற்றுதலால் துயரம் சற்று குறையும் என்பதும் உலக வழக்கு. எனவே வீடணன், ''பகுவாய் ஆர அரற்றினான்'' என்றார் என்க. ஆவல் காரணம், துயரம் காரியம்.

218. வீடணன் புலம்புதல்

"உண்ணாதே உயிர் உண்ணாது ஒரு நஞ்சு;
சனகி எனும் பெரு நஞ்சு உன்னைக்
கண்ணாலே நோக்கவே, போக்கியதே
உயிர்; நீயும் களப்பட்டாயே!
எண்ணாதேன் எண்ணிய சொல் இன்று இனித்தான்
எண்ணுதியோ? எண்இல் ஆற்றல்
அண்ணாவோ! அண்ணாவோ! அசுரர்கள்தம்
பிரளயமே! அமரர் கூற்றே! (10004)

(ஒரு-ஒப்பற்ற; எண்ணுதல்-மதிக்கப்படுதல்; எண்இல்-அளவற்ற; பிரளயம்-ஊழியிறுதி/யுகாந்தகாலம்; எண்ணிய-ஆராய்ந்து உரைத்த)

வீடணன் இராவணன் மேனியின்மீது விழுந்து ''அளவற்ற ஆற்றல் படைத்த அண்ணனே! அசுரர்களுக்கெல்லாம் ஊழிக்காலம்போல அச்சம் தருபவனே! தேவர்களுக்கெல்லாம் இயமன்போன்றவனே! பொதுவாக

Koviloor Digital Library

ஒரு நஞ்சு என்பது அதை உண்பவர்களின் உயிர்களைத்தான் பருகும். அதை உண்ணாவிட்டால் உயிரைப் பருகாது. ஆனால் அதற்கு மாறாக இந்த சீதாதேவி என்னும் கொடிய நஞ்சு, உன் கண்களால் அவளைக் கண்ட போதே உன் உயிரைப் போக்கிவிட்டதே! வீராதிவீரனான நீயும், மற்ற சாமானியர்களைப்போலப் போர்க்களத்தில் இறந்து வீழ்ந்து கிடக்கின்றாயே! உன்னால் சிறிதளவும் மதிக்கப்படாத நான், ஆராய்ந்து அன்று கூறிய அறிவுரைகளையெல்லாம் இன்று இந்த இறுதிக்காலத்தில் இப்போதாவது எண்ணிப்பார்ப்பாயா?'' என்று புலம்பித் தீர்க்கிறான் வீடணன்.

''கண்ணாலே நோக்கவே போக்கியதே உயிர்'' என்பது ''திட்டிவிடம் அன்ன கற்பின் செல்வி'' என முன்பு வீடணனால் புகழ்ந்துரைக்கப்பட்ட சீதாதேவியைக் குறிக்கும். பாம்புகளில் ''திட்டி'' என்ற ஒருவகைப் பாம்பு உண்டு. அது பற்களால் கடிக்கவேண்டுமென்பதில்லை அது கண்களால் பார்த்தாலே போதும், பார்ப்பவர் உயிர் போய்விடும். அத்தகைய நஞ்சுபோன்று கற்புடையவள் சீதாதேவி என்பது பேசப்படுகிறது. ''அண்ணாவோ அண்ணாவோ'' எனும் அடுக்கு அவலம் பற்றி வந்தது. ''சனகி எனும் பெருநஞ்சு'' என்பது உருவகம். ''நீயும்'' என்பதில் உள்ள உம்மை உயர்வு சிறப்பு உம்மை. ''இன்று இனித்தான் எண்ணுதியோ?'' என்பது இகழ்ச்சிக்குறிப்பு.

219. "ஓர் ஆசை ஒருவன்மேல் உயிர் ஆசைக்
குலமகள்மேல் உடைய காதல்
தீர்; ஆசை, பழி" என்றேன்; எனை முனிந்த
முனிவு ஆறித் தேறினாயோ?
போர் ஆசைப்பட்டு எழுந்த குலம் முற்றும்
பொன்றவும், தான் பொங்கி நின்ற
பேராசை பெயர்ந்ததோ? பெயர்ந்து, ஆசைக்கரி
இரியப் புருவம் பேர்த்தாய்?" (10005)

(ஓர்-ஒப்பற்ற; ஒருவன்-இராமபிரான்; குலமகள்-சீதாதேவி; தீர்-விட்டு விடு; முனிவு-கோபம்; தேறுதல்-தெளிவடைதல்; ஆசைக்கரி-திசை யானைகள்; இரிதல்-பெயர்ந்து ஓடுதல்; பொன்றுதல்-இறந்துபடுதல்)

''திசையானைகள் அனைத்தும் நிலைபெயர்ந்து ஓடும்வண்ணம் சினத்தால் புருவத்தை நெரிக்கும் இயல்புடையவனே! ஒரே தன்மைத்தான ஆசையை ஒப்பற்றவனான இராமபிரான்மேல் உயிர்போலக் கொண் டிருந்த குலமகளான சீதாதேவியின்மேல் நீ கொண்டிருக்கும் பொருந்தாக் காமத்தை விட்டொழிப்பாயாக! பிறன்மனைமேல் கொண்ட அத்தகைய ஆசை, பழியைத்தான் கொண்டு சேர்க்கும்'' என்று கூறினேன்; அதனை நீ கேட்காது என்னைக் கோபித்தாயே? அந்தக்கோபம் தணிந்து இப்பொழு

Koviloor Digital Library

தாவது தெளிவு பெற்றிருக்கிறாயா? போரின்மேல் பெருவிருப்பம் கொண்டு உயர்ந்து வளர்ந்த நம் அரக்கர்குலம் முழுவதும் அழிந்துபட்ட பின்னராவது உன்னிடம் பொங்கி எழுந்த பேராசை இப்போதாவது நீங்கியதா?'' என்று புலம்புகிறான் வீடணன்.

''ஓர் ஆசை'' என்பது பலவகைப்பட்ட ஆசைகளில்லாது ஒரே தன்மைத்தான ஆசை என்று, சீதாதேவி இராமபிரான்மேல் கொண்ட தீராக் காதலைக் குறிக்கும். ''ஆசை பழி'' என்றது குறிப்புச்சொல். அத்தகைய ஆசை பழியையே விளைவிக்கும் என்பது விரிந்த பொருள். ''ஆசைக்கரி'' என்பது ஒரு அருமையான சொல்லாட்சி. திசையானைகள் என்பது பொருள். ''புருவம் பேர்த்தல்'' என்பது சினத்தின் மெய்வெளிப்பாடு. ஓர் ஆசைஒருவன் இராமபிரான்; உயிர் ஆசைக்குலமகள் சீதாதேவி; இருவரும் ஒருவரையொருவர் உயிருக்குயிராக நேசித்தனர் என்பது பொருள்.

220. "அன்று எரியில் விழு வேதவதி இவள்காண்;
உலகுக்கு ஓர் அன்னை" என்று
குன்றனைய நெடுந்தோளாய்! கூறினேன்;
அது மனத்துள் கொள்ளாதே போய்,
உன் தனது குலம் அடங்க, உருத்து, அமரில்
படக் கண்டும், உறவு ஆகாதே
பொன்றினையே! இராகவன் தன் புயவலியை
இன்று அறிந்து போயினாயோ?" (10006)

(அன்று-முன்பு; எரி-நெருப்பு; அடங்க-முழுவதும்; உருத்தல்-சினத்தல்; படுதல்-இறந்துபடுதல்; பொன்றுதல்-இறந்துபோதல்)

''மலைபோன்று நீண்டு பருத்த தோள்களையுடையவனே! முன்பு, நெருப்பில் வீழ்ந்து இறந்துபட்டாளே வேதவதி; அவள்தான் இப்போது சீதாதேவியாக உருப்பெற்று வந்திருக்கிறாள்; இவள்தான் இவ்வுலகங்கள் எல்லாவற்றுக்கும் ஒப்பற்ற அன்னையாவாள்'' என்று நான் உனக்குக் கூறினேன். ஆனால் நீயோ, அதனை மனத்துள் உள்வாங்கிக் கொள்ளாமல் போர்செய்யத் துணிந்து சென்றதால், உன்னுடைய அரக்கர்குலம் முழுவதும் போரில் இறந்துபட்டன; அதனைக் கண்டும்கூட, நீ இராம பிரானோடு நட்புக்கொள்ளாது இருந்ததனால் இப்பொழுது நீயும் இறந்துபட நேர்ந்தது. இராமபிரானின் தோளாற்றலை இப்போதாவது புரிந்துகொண்டு போனாயா? இல்லையா?'' என்று புலம்புகிறான் வீடணன்.

வேதவதி குசத்துவன் என்னும் முனிவனின் மகள். அவர் அவளைத் திருமாலுக்கே மணம்முடித்துக் கொடுக்கவேண்டும் என்று கருதினார். மற்றவர்கள் வந்து பெண் கேட்டபோதெல்லாம் மறுத்து வந்தார். சம்பு என்னும் மற்றொரு முனிவன் மிகுந்த சினம்கொண்டு, குசத்துவனைக்

Koviloor Digital Library

கொன்றுவிட்டான். அவன் மனைவியும் உடன் இறந்துவிட்டாள். தந்தை இறந்தபிறகும் சற்றும் தளராது வேதவதி திருமாலையே கணவனாக அடைய வேண்டும் என்று தவம் புரிந்து வந்தாள்; இராவணன் திக் விஜயகாலத்தில் இவளைக்கண்டு இவள் அழகில் மனம் பறிகொடுத்து இவளை அடைய முயற்சிசெய்தான். வேதவதி இணங்காமல் போகவே அவள் கையைப் பற்றினான். வேறொரு ஆடவன் கை தன்னைத் தீண்டியதும் அவள் வெகுண்டு, அவனை ஒன்றும் செய்ய இயலாமையால் சாபம் கொடுத்துத் தான் நெருப்பில் வீழ்ந்து மாண்டாள். அந்தச் சாபத்தைத்தான் இப்போது வீடணன் நினைவுபடுத்துகிறான். ''வாடா மலரோன் வரச் செருக்கால் மற்று எனை நீ, கூடாதன சொல்லிக் கூசாது தீண்டினையால், ஏடா! உனக்கும், இலங்கைக்கும், உன் கிளைக்கும், கேடாகத் தோன்றுவேன் என்றாள் கிளர் சினத்தாள்'' என்பது உத்தரகாண்டம் திக்விஜயப் படலம். அவளே சீதாதேவி என்பது ''வன்னியிடை மூழ்கிய மாதவத்தாள், மாச்சனகன் தன்னுடைய வேள்வித் தரணியிடை வந்து உதிப்ப, அன்னவளே, முன்நாள் அமிழ்தில் பிறந்தாள்'' என்பதும் உத்தரகாண்டம் திக்விஜயப்படலம்.

221. "மன்றல் மா மலரானும், வடி மழுவாள்
படையானும், வரங்கள் ஈந்த
ஒன்று அலாதன உடைய முடியோடும்
பொடியாகி உதிர்ந்து போன;
அன்றுதான் உணர்ந்திலையே ஆனாலும்,
அவன் நாட்டை அணுகா நின்ற,
இன்றுதான் உணர்ந்தனையே, இராமன்தான்
யாவருக்கும் இறைவன் ஆதல்? (10007)

(மன்றல்-மணம்; மா-சிறந்த; மலர்-தாமரைமலர்; வடி-கூரிய; அணுகா-அணுகி/அடைந்து)

''நறுமணம் மிக்க சிறந்த தாமரைமலரில் வீற்றிருப்பவனாகிய பிரம தேவனும், கூரிய மழுவாயுதத்தைத் தன் படைக்கலமாகக் கொண்டுள்ள சிவபெருமானும், உனக்கு அருள்கூர்ந்து தந்தருளியதும், நீ பெற்றுள்ளது மான வரங்கள் எல்லாம், உன்னுடைய ஒன்றில்லாத பத்துத் தலைகளோடும் பொடிப்பொடியாய் உதிர்ந்து போய்விட்டனவே!. சரி; நீ சீதாதேவியைக் கவர்ந்துவந்த அன்றோ, அல்லது நான் உனக்கு அறிவுரை கூறிய அன்றோ நீ இராமபிரானின் ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை என்றாலும், இப்போது நீ விண்ணுலகமாகிய வீரசுவர்க்கத்தை அடைகின்ற இந்த நாளிலாவது, இராமபிரான்தான் இவ்வுலகத்தில் உள்ளவர் அனைவருக்கும் இறைவன், பரம்பொருள் என்பதையாவது உணர்கிறாயா?'' என்று கேட்டுப் புலம்புகிறான் வீடணன்.

Koviloor Digital Library

பிரமதேவனும், சிவபெருமானும் இராவணனுக்குத் தந்தருளிய வரங்கள் இப்போது பயனற்றுப்போய்விட்டன என்பது பேசப்படுகிறது.

222. "வீர நாடு உற்றாயோ? விரிஞ்சனாம்
யாவர்க்கும் மேலாம் முன்பன்
பேரன் நாடு உற்றாயோ? பிறைசூடும்
பிஞ்ஞகன்தன் புரம் பெற்றாயோ?
ஆர், அணா! உன் உயிரை அஞ்சாதே
கொண்டு அகன்றார்? அது எலாம் நிற்க
மாரனார் வலியாட்டம் தவிர்ந்தாரோ?
குளிர்ந்தானோ மதியம் என்பான்?" (10008)

(அணா-அண்ணா; வீரநாடு-வீரசுவர்க்கம்; முன்பன்-வலிவுடையவன் /பிரமன்; பிஞ்ஞகன்-சிவபெருமான்; புரம்-உலகம்; மாரனார்-மன்மதன்; மதியம்-சந்திரன்; பேரன்-பெயரன்/பிதாமகன்/பாட்டன்; விரிஞ்சன்-பிரம தேவன்)

''அண்ணா! நீ வீரர்கள் எல்லோரும் சென்றடைகின்ற வீரசுவர்க்கத்தை அடைந்தாயா? அல்லது யாவர்க்கும் மேலான வலிமை படைத்தவனான உன்பாட்டன் பிரமதேவன் வாழும் நாடாகிய சத்தியலோகம் சென்று சேர்ந்தாயா? அல்லது பிறைச்சந்திரனைத் தன் தலையில் சூடியிருக்கும் சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலாய நாட்டை அடைந்தாயா? உன்னுடைய உயிரை உனக்கும் அஞ்சாமல் யார் அண்ணா பறித்துச் சென்றார்? சரி அவைகள் எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்; எல்லோரையும் தனக்குக் கட்டுப்படுத்தும் மன்மதனார் தனது வலிமைமிக்க ஆட்டத்தை இப்பொழுதாவது நிறுத்திக்கொண்டாரோ? உனக்கு எப்போதும் வெப்பக்காற்றையே தந்து உன்னை எரித்துக் கொண்டிருந்த சந்திரன் இப்போதாவது குளிர்ச்சி அடைந்து குளிர்காற்றை வீசுகிறானா?'' என்று புலம்புகிறான் வீடணன்.

பேரன் என்பது பிதாமகன் என்ற பொருளில் பாட்டனைக் குறிக்கும். இராவணன் தந்தை விச்சுரவசு; விச்சிரவசுவின் தந்தை புலஸ்தியன்; புலத்தியனின் தந்தை பிரமதேவன். எனவே பிரமதேவன் வசிக்கும் சத்தியலோகம் இராவணனுக்குப் பாட்டன் நாடு எனப்பட்டது. ''அணா'' என்பது அண்ணா என்பதன் இடைக்குறை. ''மாசிலாமறையோர் ஐயா மற்று உங்கள் பேரனார் தம் தேசுடை எழுத்தே ஆகில், தெளியப் பார்த்து அறிமின் என்றார்'' என்ற பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட வரலாற்றிலும் பேரனார் என்ற சொல் பாட்டன் என்ற பொருளிலேயே கையாளப்பட்டிருப்பதும் ஒப்புநோக்கத் தகும். ''மாரனார்'' என்பது இகழ்ச்சிக்குறிப்புக் காட்டும் மரியாதைப்பன்மை.

Koviloor Digital Library

223. "கொல்லாத மைத்துனனைக் கொன்றாய்" என்று
அது குறித்துக் கொடுமை சூழ்ந்து,
பல்லாலே இதழ் அதுக்கும் கொடும் பாவி,
நெடும் பாரப் பழி தீர்ந்தாளே!
நல்லாரும் தீயாரும் நரகத்தார்,
துறக்கத்தார், நம்பி! நம்மோடு
எல்லாரும் பகைஞரே; யார் முகத்தே
விழிக்கின்றாய்? எளியை ஆனாய்!" (10009)

(கொல்லாத-கொல்லத்தகாத; சூழ்ந்து-சூழ்ச்சி செய்து; இதழ்-உதடு; அதுக்குதல்-கடித்தல்; நெடுமை-நீண்டகாலம்; குறித்தல்-மனத்துட் கொள்ளுதல்; எளியை-இரங்கத்தக்கவன்)

''அண்ணா! கொல்லத்தகாத, அன்பு பாராட்டுதற்குரிய மைத்துனனைக் கொன்று விட்டாய் என்று, அதை மனத்துட்கொண்டு அதற்கு ஈடாகச் சூழ்ச்சி செய்து, பல்லாலே உதட்டைக் கடித்துக்கொண்டேயிருக்கும் கொடும்பாவியான உன் தங்கை சூர்ப்பணகை, தான் நீண்ட நாட்களாகப் பாரமாகக் கொண்டிருந்த வஞ்சத்தை இப்போது தீர்த்துக்கொண்டு விட்டாளோ? நல்லவர்களாகிய துறக்கவாசிகளும், தீயவர்களாகிய நரகவாசிகளும் எல்லோரும் இப்போது நமக்குப் பகைவர்களே. எனவே இப்போது நீ சுவர்க்கம் சென்றாலும், நரகம் சென்றாலும் யார்முகத்தில் சென்று விழிப்பாய்? ஒருவர் முகத்திலும் விழிக்க இயலாது. சுற்றமும் நட்பும் இன்றித் தனிமையாளனாய் ஆகிவிட்டாயே?'' என்று புலம்புகிறான் வீடணன்.

தங்கை சூர்ப்பணகையின் கணவன் வித்துருசிங்கன். முன்பு இராவணன் நிவாத கவச காலகேயருடன் போர்புரியும்போது சூர்ப்பணகையின் கணவனையும் தெரியாமல் கொன்றுவிட்டான் என்றும், அதனையே மனத்துள் கறுவிக்கொண்டு இராவணனை அழிக்கக் காலம் பார்த்துக் கொண்டிருந்தாள் சூர்ப்பணகை என்றும் உத்தரகாண்டம் பேசுகிறது. ''தன்னுடைய தங்கையாம் சலம் மிகுந்த சூர்ப்பணகை தன்னைக் கொண்ட மின்அனைய சுடர் இலைவேல் வித்துருசிங்கன்தனை வெங்களத்து வீழ்த்தான்'' என்பதும், ''முன்னமே தான் என்னை முறைமையாலே கொடுத்தும், பின்எனை.நூல் இழைப்பித்த இராவணனாம் என் தலைவன் தன்னை, மூவுலகுஆள்யான்கண்டு, தார்அவுணர் மன்னனே! உடல்சுமந்து வாழ்வேனோ, வாழ்வேனோ?'' என்பதும் உத்தரகாண்டம் திக்விஜயப்படலம்.

224. "போர்மகளை, கலைமகளை, புகழ்மகளை
தழுவிய கை பொறாமை கூர,
சீர்மகளை, திருமகளை தேவர்க்கும்,
தெரிவு அரிய தெய்வக் கற்பின்

Koviloor Digital Library

பேர்மகளை, தழுவுவான் உயிர்கொடுத்து
பழிகொண்ட பித்தா! பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ, திசையானைப்
பணைஇறுத்த பணைத்த மார்பால்?" (10010)

(போர்மகள்-வீரத்திருமகள்; பொறாமை-பொறுக்கமுடியாமை; கூர-மிக; சீர்-சிறப்பு; பேர்-புகழ்; தழுவுவான்-தழுவும்பொருட்டு; பணை-கொம்புகள்/தந்தங்கள்; பணைத்த-பருத்த; பார்மகள்-பூமிதேவி; தெரிவு அரிய-அறிதற்கு முடியாத)

''வீரத் திருமகளை, கலைகளுக்குரிய சரசுவதி தேவியை, கீர்த்திக்குரிய புகழ்மகளை எல்லாம் ஆரத் தழுவிய உன் கைகள், இப்பொழுது சிறப்புப் பொருந்திய, இலக்குமியாகிய, தேவர்களாலும் அறிந்துகொள்ள முடியாத தெய்வத்தன்மை வாய்ந்த புகழுக்குரிய திருமகளைத் தழுவ மிகவும் ஆசைப்பட்டு உன் உயிரைக்கொடுத்து என்றும் தீராப்பழியை ஏற்றுக் கொண்டாயே! பைத்தியக்காரனே! இப்பொழுதும்கூட திசையானைகளின் தந்தங்களை முறித்த உனது பருத்த மார்பால் பூமிதேவியையே தழுவிக் கொண்டாயோ?'' என்று புலம்புகிறான் வீடணன்.

''போர்மகள்'' என்பது வீரத்திருமகள் என்று கொற்றவையைக் குறிக்கும் என்க. கலைமகள், நாமகளாவாள். புகழ்மகள் என்பது புகழைப் பெண் தெய்வமாகக் கூறுதல் கவிமரபு. இவர்களையெல்லாம் தழுவிய இராவணனின் இருபது கைகளும் தெய்வத்தன்மை பொருந்திய கற்பிற் சிறந்த சீதாதேவியைத் தழுவத் துடிப்பதனால் பொறாமை கொண்டன என்பதாம். பொதுவாக எல்லோரும் தன் உயிரைக் கொடுத்து அளப்பரிய புகழைப் பெறுவார்கள். எடுத்துக்காட்டு சடாயு. ஆனால் இராவணனோ உயிரைக்கொடுத்துப் பழியைப் பெற்றிருக்கிறான். எனவே அவனை இகழ்ச்சிக்குறிப்பாக ''பித்தா'' என்று அழைக்கிறான் வீடணன் என்க. பெரிய பொருளைக் கொடுத்துச் சிறிய இழிந்த பொருளை வாங்குபவன் பைத்தியக்காரன் என்று உலக வழக்கிலும் அழைக்கப்படுதலை நினைவுகூர்க. ''இழிந்தபொருள்'' என்பது இங்கே பிறன்மனை நயத்தலைக் குறிக்கும்.

''புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்'' என்பது புறநானூறு. ''பார் மகளைத் தழுவுதல்'' என்பது தரையில் பிணமாகக் குப்புற விழுந்து கிடத்தலை மங்கலமாகக் குறிக்கும் சொல்லாட்சி எனக்கொள்க. சீவகசிந்தாமணி நாமகள் இலம்பகம், பூமகள் இலம்பகம், மண்மகள் இலம்பகம் என்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தலைப்புக் கொடுத் திருப்பதும் நோக்கத்தகும். போர்மகள், கலைமகள், புகழ்மகள் என்பன அவனது வெற்றித் திறத்தையும், அறிவுத்திறத்தையும், இவ்விரண்டினால் உண்டான பெரும் புகழையும் குறிக்கும் எனக்கொள்க.

Koviloor Digital Library

225. என்று ஏங்கி, அரற்றுவான்தனை எடுத்து,
சாம்பவனாம் எண்கின் வேந்தன்,
"குன்று ஓங்கு நெடுந்தோளாய்! விதி நிலையை
மதியாத கொள்கைத்து ஆகிச்
சென்று ஓங்கும் உணர்வினையோ? தேறாது
வருந்துதியோ?" என்ன, தேறி,
நின்றான், அப்புறத்து; அரக்கன் நிலைகேட்டாள்,
மயன் பயந்த நெடுங்கண் பாவை. (10011)

(ஏங்குதல்-இரங்குதல்; எண்கு-கரடி; ஓங்குதல்-வளர்தல்; தேறுதல்-தெளிதல்; பயத்தல்-ஈன்றெடுத்தல்/பெறுதல்; பாவை-சித்திரம்/ஓவியம்)

என்று மிக வருந்தி, வாய்விட்டு அரற்றிக் கதறுகிற வீடணனை, சாம்பவன் என்கின்ற கரடிகளின் தலைவன் தன் கைகளால் எடுத்து, ''மலைபோன்று உயர்ந்து, பருத்து, நீண்ட தோள்களையுடையவனே! விதியின் நிலையை அறியாத கோட்பாடு உடையவனாகிப்போய் மிகுந்த உணர்ச்சிவசப் படுகிறாயே! இதனைத் தெரிந்துகொள்ளாது வருந்த லாமோ? அது உனக்குத் தகுமோ?'' என்று தேற்றினான். வீடணனும் தேறி, அப்புறமாக நின்றான். இப்பொழுது இலங்கையில் உள்ள தெய்வத்தச்சனான மயன் பெற்றடுத்தவளும், நீண்ட கண்களையுடைய பாவைபோன்றவளும் இராவணனின் மனைவியுமான மண்டோதரி போர்க்களத்தில் இராவணன் இறந்துபட்ட செய்தியைக் கேள்வியுற்றாள்.

இராவணன் இறந்தது விதியின் செயல்; இதற்கு நீ இவ்வளவு வருந்த லாமோ? என்றுகூறி வீடணனைச் சாம்பவன் தேற்றினான் என்பதாம்.

226. மண்டோதரி போர்க்களம் வருதல்

அனந்தம் நூறாயிரம் அரக்கர் மங்கைமார்,
புனைந்த பூங்குழல் விரித்து அரற்றும் பூசலார்,
இனம் தொடர்ந்து உடன்வர, எய்தினாள் என்ப,
நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினாள். (10012)

(அனந்தம்-பல/அளவற்ற; நூறுஆயிரம்-லட்சம்; புனைதல்-அலங்கரித்தல்; குழல்-கூந்தல்; பூசல்-அழல்ஓசை; இனம்-கூட்டம்/தொகுதி)

அளவற்ற இலட்சக்கணக்கான அரக்கியர்கள் தங்கள் அலங்கரிக்கப் பட்ட மெல்லிய நறுமணமுள்ள கூந்தலை விரித்துப்போட்டுக்கொண்டு அரற்றும் ஆரவாரத்துடன், கும்பலாக ஒன்றுசேர்ந்து பின் தொடர்ந்துவர, இராவணனை நினைப்பதும், பின் மறப்பதும் இல்லாதவளான, எப்போதும் இராவணனையே நினைத்துக் கொண்டிருக்கும் திண்ணிய கற்புவாய்ந்த மண்டோதரி, இராவணன் இறந்துகிடக்கும் இடத்தை வந்தடைந்தாள்.

Koviloor Digital Library

''அனந்தம் நூறாயிரம்'' என்பது அளவற்ற என்ற பொருளைத்தரும். எப்போதும் அலங்கரிக்கப்பட்ட கூந்தலைக்கொண்ட அரக்கிமார், இப்போது இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும், தலைவிரி கோலமாகவும், அரற்றிக்கொண்டும், கூட்டம்கூட்டமாகவும் மண்டோதரியின் கூட வந்தனர் என்பதாம்.

227. இரக்கமும் தருமமும் துணைக்கொண்டு, இன்னுயிர்
புரக்கும் நன் குலத்து வந்து ஒருவன் பூண்டதுஓர்
பரக்கழியாம் எனப் பரந்து, நீண்டதால்
அரக்கியர் வாய் திறந்து அரற்றும் ஓதையே. (10013)

(ஓதை-ஓசை; புரத்தல்-காப்பாற்றுதல்; பரக்கழி-பெரும்பழி/நாணமற்ற செயல்; பூண்டது-மேற்கொண்டது; பரக்கு-அழிவு/பெரும்கேடு)

உயிர்கள்பால் இரக்கம், தருமம் என்னும் நற்குணங்களைத் துணையாகக்கொண்டு இனிய உயிர்களைப் பாதுகாக்கும் நல்ல சிறந்த உயர் குலத்தில் தோன்றிய ஒருவன், நாணமற்ற பெரும்பழி விளைவிக்கின்ற ஒரு செயலைச் செய்ய மேற்கொண்டால், அது எவ்வாறு விரைவிலேயே உலகமெங்கும் சென்று பரவிவிடுமோ அதுபோல, இந்த அரக்கியர் கூட்டம் அழுது அரற்றுகின்ற ஓசை அப்போர்க்களம் எங்கும் பரவி விரிந்தது.

நற்குலத்தில் பிறந்தவர்கள் பொதுவாகத் தீய செயலைச் செய்யமாட்டார்கள்; அவ்வாறு செய்துவிட்டால் அது உலகெங்கிலும் விரைவில் பரவிவிடும். அதுபோல அரக்கியர் அழுகை ஓசையால் இராவணன் செய்த நாணமற்றசெயலும், அவன் அதனால் இறந்துபட்ட செய்தியும் எல்லா இடங்களிலும் விரைவாகப் பரவியது என்பதாம். ''குடிப்பிறந்தார் கண் விளங்கும் குற்றம், விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து'' என்பது குறள்-957. அரக்கியர் அரற்றும் ஓசையும் மண்டோதரி புலம்பி அழும் ஓசையும் விரைவில் இலங்கை முழுவதும் பரவியது என்பதாம்.

228. நூபுரம் புலம்பிட, சிலம்பு நொந்து அழ,
கோபுரம்தொறும் புறம் குறுகினார் சிலர்;
"ஆ! புரந்தரன் பகை அற்றதாம்" எனா
மா புரம் தவிர, விண்வழிச் சென்றார் சிலர். (10014)

(நூபுரம்-கால் ஆபரணம்; குறுகுதல்-அடைதல்; புறம்-போர்க்களம்; புரந்தரன்-இந்திரன்; ஆ-ஐயோ; புரம்-மதில்வழி; புலம்புதல்-ஒலித்தல்; நோதல்-வருந்துதல்)

அரக்கமகளிர் தங்கள் கால்களில் அணிந்துள்ள நூபுரம் என்னும் அணி ஒலிக்கவும், சிலம்பு வருந்தி அழவும், நகரத்தின் எல்லாக் கோபுரங்களின் வழியாகவும் வெளிப்போந்தனர் மற்றும் சிலர் ''இராவணன் இறந்துபட்டதால் இந்திரனுடைய பகை அற்றுப்போய்விட்டதே! '' என்று கூறிக்

Koviloor Digital Library

கொண்டே பெரிய மதில்களைத் தவிர்த்து விண் வழியாகவும் செல்ல லுற்றார்கள்.

இராவணன் இறந்துபட்டதால் உயர்திணையாகிய அரக்கிமார்கள் மட்டும் அழவில்லை, அவர்கள் கால்களில் அணிந்திருந்த அஃறிணைப் பொருள்களான நூபுரமும் சிலம்பும்கூட வருந்திப் புலம்பின என்பதாம். ''ஆ'' என்பது இரக்கக் குறிப்பு. அந்தக் காலணிகளின் ஓசை அரக்கியர்களே புலம்பியது போலவும், நொந்து அழுததுபோலவும் இருந்தது என்பதாம். வாயிற் கோபுரங்களில் கூட்டம் அதிகமாய் இருப்பதால் பெரிய மதில் வழிகளைத் தவிர்த்து, நேரே ஆகாயமார்க்கமாய்ச் சிலர் சென்றார்கள் என்பதாம்.

229. அழைப்பு ஒலி முழக்குஉழ, அழகு மின்னிட,
குழைப்பொலி நல்அணிக் குலங்கள் வில்லிட,
உழைப் பொலி உண் கண் நீர்த்தாரை மீதுஉக,
மழைப் பெரும் குலம் என, வான் வந்தார் சிலர். (10015)

(முழக்கு-இடிமுழக்கம்; குழை-காதணி/குண்டலம்; குலம்-வகை; வில்-வானவில்; உழை-மான்; உண்கண்-மைதீட்டப்பெற்ற கண்கள்; நீர்த்தாரை-கண்ணீர்த்துளி; மழை-மேகம்; அழைப்பொலி-கூக்குரல்; பொலிதல்-திகழ்தல்)

அரக்கியர்கள் அரற்றிக் கூக்குரலிட்டுக்கொண்டு வருகின்ற ஒலி, மேகத்தின் இடிமுழக்கம் போலவும், அவர்களின் அழகு திகழும் மேனி, மின்னல்போல் ஒளி வீசவும், அவர்கள் அணிந்திருக்கின்ற குண்டலம் போன்ற அணிகலன்களின் தொகுதி, இந்திரவில்லைப்போல ஒளிவீசவும், மான்போன்ற மருட்சி மிகுந்ததும், மை தீட்டபெற்றதுமான அவர்களின் கண்களினின்றும் சிந்தும் கண்ணீர்த்துளி, மழைத்தாரை சிந்துவது போலவும் மேகக்கூட்டங்கள் சில என்று சொல்லும்படி அரக்கியர்கள் வான்வழியே வந்து சேர்ந்தார்கள்.

கருநிறமுடைய அரக்கியர்களுக்கு, கரிய நிறமுடைய மேகக் கூட்டத்தில் காணப்படும் இடி, மின்னல், வானவில், நீர்த்தாரை முதலியன ஒப்பாகக் கூறப்பட்டன. அரக்கமகளிர் மேகக்கூட்டங்களாக உருவகிக்கப் பட்டனர் என்க.

230. அரக்கியர் அழுது அரற்றுதல்

தலைமிசைத் தாங்கிய கரத்தர்; தாரைநீர்
முலைமிசைத் தூங்கிய முகத்தர்; மொய்த்து வந்து
அலைமிசைக் கடலின்வீழ் அன்னம்போல், அவன்
மலைமிசைத் தோள்கள்மேல் வீழ்ந்து மாழ்கினார். (10016)

Koviloor Digital Library

(தாங்குதல்-சுமத்தல்; மிசை-மீது; தூங்குதல்-இடைவிடாது விழுதல்; மொய்த்தல்-நெருங்குதல்; மலை-கயிலைமலை; மாழ்குதல்-அழுதல்/ அறிவுநிலை கலங்குதல்)

அங்குவந்த அரக்கியர்கள் தங்கள் தலைமீது சுமந்த கைகளை உடையவராயும், கண்ணீர் கண்களினின்றும் பெருகி, அவர்களின் முலைகளின்மேல் சோர்ந்து விழும்படி கவிழ்ந்த தலையை உடையவராயும், அவனை நெருங்கிவந்து, அலைகளைக் கொண்ட கடலில் விழுகின்ற அன்னப் பறவைபோல, அவன் மலையினும் விஞ்சிய உயர்ந்த தோள்களின்மீது வீழ்ந்து அறிவு கலங்கி அழுது அரற்றினர்.

கைகள் கூப்பிய வண்ணமும், கண்கள் கண்ணீர் சோர்ந்த வண்ணமும், அன்னப்பறவைகள் கடலின்மீது விழுந்ததைப் போலவும் அவன் உடலின் மீது விழுந்து அழுது அரற்றினர் என்பதாம். இருபது கரங்களோடு பரந்து விளங்கிய இராவணனின் உடம்பு கடல்போலக் காணப்பட்டது என்க. ''மலைமிசைத் தோள்'' என்பது கயிலை மலையைத் தாங்கிய அவன் தோள்களின் மீது என்ற பொருளையும் தரும். மாழ்குதல் என்பது பொதுவாக அறிவு மயங்குதலைக் குறித்தாலும், இங்கே அழுது வருந்தியதைக் குறிக்கும் எனக்கொள்க.

231. தழுவினர் தழுவினர் தலையும் தாள்களும்
எழுஉயர் புயங்களும், மார்பும் எங்கணும்
குழுவினர், முறைமுறை கூறுகூறு கொண்டு
அழுதனர், அயர்த்தனர், அரக்கிமார்களே. (10017)

(குழுவுதல்-கூடுதல்/திரள்தல்; எழு-தூண்/கணையமரம்; கூறு-பாகம்; அயர்த்தல்-அறிவு ஒடுங்குதல்; தாள்-கால்கள்)

அரக்கிமார்கள் ஒன்றுகூடித் திரண்டுவந்து இராவணனின் தலைகளையும், கால்களையும், கணையமரம் போன்று உயர்ந்த தோள்களையும், மார்பு முதலிய அங்கங்கள் எல்லாவற்றையும் பலமுறை பகிர்ந்து அணைத்துக்கொண்டு அழுது அரற்றி, அறிவு மயங்கி ஒடுங்கிச் சோர்ந்து போனார்கள்.

''தழுவினர்தழுவினர்'', ''முறைமுறை'', ''கூறுகூறு'' என்ற அடுக்குகள் பன்மைபற்றி வந்தன. அவன் உடலில் எல்லா இடங்களிலும் தழுவி அழுது அரற்றினர் என்பதாம்.

232. வருத்தம் ஏது எனின், அது புலவி; வைகலும்
பொருத்தமே வாழ்வுஎனப் பொழுது போக்குவார்,
ஒருத்தர்மேல் ஒருத்தர் வீழ்ந்து, உயிரின் புல்லினார்,
திருத்தமே அனையவன் சிகரத் தோள்கள்மேல். (10018)

Koviloor Digital Library

(வைகலும்-நாள்தோறும்; புலவி-பிணக்கு/ஊடல்; புல்லுதல்-தழுவுதல்; திருத்தம்-நாகரீகம்)

அங்குவந்து சேர்ந்த உரிமைமகளிர் இதுவரையிலும் அவர்கள் அனுபவித்த துன்பம் எதுவாக இருக்கும் என்று சிந்தித்துப் பார்ப்போமானால் அது அவர்கள் இராவணனிடம் கொண்ட ஊடலால் விளைந்த வருத்தமே அன்றி வேறு ஒன்றும் இல்லை. அவர்கள் நாள்தோறும் கூடல் இன்பத்தை நுகர்ந்து வாழ்வதே வாழ்க்கை என்று தம் பொழுதைப் போக்கிக்கொண்டு இருந்தவர்கள். இப்பொழுது இராவணன் இறந்துபட்டான் என்றவுடன் தமக்கு இனி அந்தக்கூடலின்பம் கிடைக்காதே என்று கருதி, மிக்க அழகாகத் தோன்றுகின்ற இராவணனின் மலைச் சிகரங்கள்போன்று உயர்ந்த தோள்களில் ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து, அவன் உயிரையே தழுவுவதுபோல தழுவிக் கொண்டார்கள்.

ஊடலால் துன்பமும், கூடலால் இன்பமும் விளையும் என்பது உலக நியதி. எனினும் இந்த உரிமைமகளிர் இதுகாறும் ஊடல் துன்பத்தைத் தவிர வேறு எந்தத்துன்பத்தையும் அனுபவித்து அறியாதவர்கள். எனவே இறப்பு என்னும் இந்தப் பெருந்துன்பத்தைத் தாங்கமாட்டாதவர்களாய் அவனை உயிரைத் தழுவுவதுபோல் தழுவிக்கொண்டனர் என்பதாம். அவனது இருபது தோள்களிலும் இத்தனை உரிமைமகளிர் தழுவ இயலாததால் ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து தழுவவேண்டியது ஆயிற்று. ''திருத்தம்'' என்பது ''இறைவன் படைப்பில் பலமுறை திருத்திச் செம்மைப்பட்ட வடிவினைப் பெற்றவன் என்ற பொருளையும் தரும். உரிமைமகளிர் இராவணன் தோள்களைப் பலர் முன்னிலையில் தழுவுதல் சரியோ, நாகரீகமான செயலோ எனின், ஒருவர் இறந்துபட்ட நிலையில் அவ்வாறு தழுவுதல் ''திருத்தமே'' ஆகும். எனவே இங்கே ''திருத்தம்'' என்ற சொல்லைக் கவிஞன் பயன்படுத்தியிருக்கிறான். இங்கே ''திருத்தம்'' என்ற சொல்லுக்கு ''நாகரீகம்'', உலக இயல்பு என்பது பொருள். அவ்வாறு தழுவுதல் தவறன்று என்பதாம்.

233. இயக்கியர், அரக்கியர், உரகர் ஏழையர்,
மயக்கம்இல் சித்தியர், விஞ்சை மங்கையர்
முயக்கு இயல் முறைகெட முயங்கினார்கள், தம்
துயக்கு இலா அன்பு மூண்டு, எவரும் சோரவே. (10019)

(உரகம்-நாகம்; உரகர்-நாகர்; ஏழையர்-பெண்டிர்; விஞ்சை-வித்தை; துயக்கு-மாறுபாடு/தளர்ச்சி; முயங்குதல்-தழுவுதல்)

இயக்க மகளிர், அரக்கியர்கள், நாகலோகத்து நாக கன்னிகைகள், மயக்கம் இல்லாத சித்தர்பெண்டிர், வித்யாதரமகளிர், ஆகிய எல்லோரும் அவன்பால் பேரன்பு கொண்ட எல்லோரும் சோர்ந்துபோகும் வண்ணம், அவனைத் தழுவினார்கள்.

Koviloor Digital Library

இயக்கியர் என்பவர் யக்ஷ குலத்துப்பெண்கள்; உரகர் ஏழையர் என்பது நாககன்னிகைகள். மயக்கம்இல் சித்தியர் என்பது யாருக்கும் எதற்கும் எளிதில்மயங்காதவலியஉள்ளம்படைத்தசித்தர்குலப்பெண்டிர்; ''முயக்கு இயல்'' முறை கெடுதல் என்பது பொதுவாக, இராவணன் தானும் ஒத்த முறையில் தழுவினால் இருபாலரும் ஒக்க இன்பம் அனுபவிப்பர், இப்போது இராணன் இறந்துகிடப்பதால் மகளிர் ஒருசாரார் மட்டும் அவனைத் தழுவுவதை ''முறைகெட முயங்குதல்'' என்கிறான் கவிஞன். மற்றொன்று வழக்கமாக நடக்கும் கலவிக்கால ஆலிங்கனம் போலன்றி இது மாறுபட்டதாக இருப்பதாலும் ''முயக்குஇயல் முறைகெட'' என்றார் என்க. இறந்துகிடப்பவனைத் தழுவுதல் ''முயக்கியல் முறைகெடக்'' காரணமாயிற்று என்க. இவர்கள் அனைவரும் பட்டத்தரசியர் அல்லர் என்பதும் உரிமை மகளிரே என்பதும் நினைவிற் கொள்ளத்தகும். இவர்களை ''இற்பரத்தையர்'' என்கிறது உ.வே.சா. பதிப்பு.

234. "அறம் தொலைவுற, மனத்து அடைத்த சீதையை
மறந்திலையோ இனும்? எமக்கு உன் வாய்மலர்
திறந்திலை; விழித்திலை; அருளும் செய்கிலை;
இறந்தனையோ!" என இரங்கி ஏங்கினார். (10020)

(தொலைவுறுதல்-அழிதல்; இனும்-இன்னும்; வாய்திறத்தல்-பேசுதல்)

''தருமநெறி அழிந்துபோகும் வண்ணம், நீ பொருந்தாக் காமம் கொண்டு, சீதாதேவியை உன்மனச் சிறையில் அடைத்து வைத்திருக் கிறாயே? அவளை இன்னும் நீ மறக்கவில்லைபோலும்! எனவேதான் எங்களிடமெல்லாம் உன்மலர் போன்ற வாயைத் திறந்து பேசமாட்டேன் என்கிறாய்; கண்விழித்து எங்களைப் பார்க்கமாட்டேன் என்கிறாய்; எங்களை அணைத்து, அருளும் செய்யமாட்டேன் என்கிறாயே! நீ என்ன உயிருடன்தான் இருக்கிறாயா? அல்லது இறந்துபோய்க் கிடக்கிறாயா?'' என்று மனம்வருந்தி ஏங்கிப் புலம்பினர் உரிமைமகளிர்.

''வாய்மலர்'' என்பது உருவகம். மலர்போன்ற வாய் என்பது பொருள். வாயை மலராக உருவகித்தார் என்க. தமக்கு வேண்டியவர்கள் இறந்து கிடந்தாலும் அவர் இன்னும் உயிரோடிருப்பதுபோல் அவர்களிடம் உரையாடுதல் பெண்கள் இயல்பு. அது இன்றும் வழக்கில் இருப்பதைக் காணலாம். அதுபோலவே உரிமைமகளிரும் அவன் இறந்தது தெரிந்தும் உரையாடுகிறார்கள் என்க.

Koviloor Digital Library

235. மண்டோதரி புலம்புதல் [9 பாடல்கள்]

தரங்க நீர் வேலையில் தடித்து வீழ்ந்தென,
உரம்கிளர் மதுகையான் உருவின் உற்றனள்,
மரங்களும் மலைகளும் உருக, வாய் திறந்து
இரங்கினள், மயன்மகள், இனைய பன்னினாள். (10021)

(உரு-உடம்பு; தரங்கம்-அலைகள்; வேலை-கடல்; தடித்து-மின்னல்; இரங்குதல்-அழுது புலம்புதல்; இனைய-இத்தகைய; பன்னுதல்-திரும்பத் திரும்பக்கூறுதல்; உரம்-மனம்/உள்ளம்; மதுகை-வலிமை)

தெய்வத்தச்சனான மயனது மகளும், இராவணனது பட்டத்தரசியுமான மண்டோதரி, அலைகள் நிறைந்த கடலில் ஒரு மின்னல் வீழ்ந்ததுபோல, உள்ளத்திண்மையும், உடல்வலிமையும் உடைய இராவணனின் உடலின்மீது வீழ்ந்தாள்; மரங்களும், மலைகளும்கூட உருகிப்போகும் வண்ணம், தன் வாய்திறந்து கீழ்வருமாறு புலம்பலானாள்.

இராவணனுக்கு ''தரங்க நீர் வேலை'' உவமை. அவனுடைய மன வலிமைக்கு அலைகளும், உடல்வலிமைக்குக் கடலும் உவமைகள். மண்டோதரியின் மேனி ஒளிக்கு மின்னல் உவமை. உருகும் இயல் பில்லாத ஓரறிவுள்ள உயிர்களான மரங்களும், அதுவுமற்ற மலைகளும் உருகின என்றால் மற்றவர் பற்றிக் கூற என்ன இருக்கிறது? என்பதாம். ''உரம்'' என்பது மனத்திண்மையையும், ''மதுகை'' என்பது உடல் வலிமையையும் குறித்தது எனக்கொள்க. ''நெஞ்சில் உரமுமின்றி'' என்பது மகாகவி பாரதியின் பாடல்.

236. "அன்னேயோ! அன்னேயோ! ஆ கொடியேற்கு
அடுத்வாறு! அரக்கர் வேந்தன்
பின்னேயோ, இறப்பது? முன் பிடித்திருந்த
கருத்து அதுவும் பிடித்திலேனோ?
முன்னேயோ விழுந்ததுவும், முடித்தலையோ?
படித்தலைய முகங்கள்தானோ?
என்னேயோ, என்னேயோ, இராவணனார்
முடிந்த பரிசு! இதுவோ பாவம்!" (10022)

(அடுத்தது-நேர்ந்திருப்பது; பிடித்திருத்தல்-கொண்டிருத்தல்; படி-தரை; தலை-இடம்; பரிசு-தன்மை; கருத்து-எண்ணம்)

''அம்மாவோ! அம்மாவோ! கொடியவளாகிய எனக்கு நேர்ந்த இந்தத் துயரம் மிக்கக்கொடியது. அரக்கர்க்கரசனாகிய இராவணற்குப் பின்பா நான் இறந்துபடவேண்டும்? நான் முன்பு உறுதியாகப் பற்றியிருந்த கொள்கை யிலிருந்தும் விலகிவிட்டேனா? என் முன்னால் விழுந்து கிடக்கும்

Koviloor Digital Library

இவைகள் எல்லாம் கிரீடமணிந்த என் கணவனாரின் தலைகள்தானா? இந்தத் தரையிடத்தில் விழுந்து கிடப்பவையனைத்தும் அவரது முகங்கள்தானா? என்னென்பேன்! என்னென்பேன்! என் கணவர் இராவணனார் இறுதியாக இறந்துபட்ட தன்மையை என்னென்பேன்?. அவர் செய்த தீவினையின் பயன்என்பேனா? நான் செய்த தீவினையின் பயன் என்பேனா?'' என்று அழுது அரற்றுகிறாள் மண்டோதரி.

''அன்னேயோ, அன்னேயோ'' என்ற அடுக்கும் ''என்னேயோ என்னேயோ'' என்ற அடுக்கும் அவலச்சுவை மிக்க இரக்கக்குறிப்பு உணர்த்துவன. ''ஆ'' என்ற சொல்லும் அதனையே குறித்தது. பொதுவாகப் பெண்கள் கணவனுக்கு முன்னர் இறந்துபடுவதையே விரும்புவர். ஒருகொள்கையாகக் கொண்டிருப்பார்கள். அல்லது அவனுடன் இறப்பதே தகும் என எண்ணுவர். இங்கே மண்டோதரி கணவனுக்குப்பின் இறக்கநேரிடுகிறதே என்று புலம்புகிறாள் என்பதாம்.

237. "வெள் எருக்கஞ் சடை முடியான், வெற்பு எடுத்த
திருமேனி மேலும் கீழும்,
எள் இருக்கும் இடம் இன்றி, உயிர் இருக்கும்
இடன் நாடி, இழைத்தவாறோ?
"கள் இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும்" எனக்கருதி, உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?" (10023)

(ஒருவன்-ஒருமனிதன்/இராமபிரான்; வாளி-அம்பு; வெற்பு-மலை; இடன்-இடம்; இழைத்தல்-துளைசெய்தல்; ஆறு-தன்மை; கள்-தேன்; சானகி-சீதாதேவி; கரத்தல்-மறைத்தல்; தடவுதல்-தேடுதல்)

''ஒப்பற்ற ஒரு மனிதனின் அம்பு வெண்மையான எருக்கம் பூவினாலான மலர்மாலையணிந்த சடைமுடியையுடையவனான சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையைப் பெயர்த்தெடுத்த அந்த இராவணனது அழகிய உடம்பின்மேலும், கீழும், உள்ளும், புறமும் எள் போடுவதற்குக்கூட இடம் இல்லாவகையில் மேனியெங்கும் துளைத்திருப்பதால், அந்த அம்பு இராவணனுடைய உடம்பில் உயிர் தங்கியிருக்கும் இடத்தைத் தேடிச்சென்று துருவியதா? அல்லது தேன் பிலிற்றும் மலர்களையணிந்த கூந்தலையுடைய சீதாதேவிபால் உண்டான காதலை இராவணன் தன் மனமாகிய சிறையில் எங்காவது ஒளித்து வைத்திருக்கிறானா, இதயத்தின் உள்ளே எங்கேயாவது பதுங்கி இருக்குமா என்று கருதி அவன் உடலினுள் புகுந்து தடவித் துருவிப் பார்க்கிறதோ?'' என்று புலம்புகிறாள் மண்டோதரி.

Koviloor Digital Library

வெள்ளெருக்கம் மலர் சிவபெருமான் உவந்து சூடிக்கொள்ளும் மலர்களுள் ஒன்று. இராவணன் சீதாதேவியை மனச்சிறையில் அடைத்த காதல் முன்பும் ஆரண்யகாண்டத்தில் பேசப்பட்டிருப்பதை இங்கு நினைவுகூர்க. ''மயிலுடைச் சாயலாளை, வஞ்சியாமுன்னம், நீண்ட எயிலுடை இலங்கைவேந்தன் இதயமாம் சிறையில் வைத்தான்'' என்பது ஆரண்யகாண்டம் மாரீசன்வதைப் படலம். இராவணனுடைய உடலில் எள்இடுதற்கும்இடமின்றி இராமபிரான்அம்புதுளைத்திருப்பதைக்கண்ட மண்டோதரி, இந்த அம்பு அவன் உயிரைப் பருகுவதற்காக உள்ளே புகுந்ததா? அல்லது இவன் சானகிமீது கொண்ட காதல் இன்னும் ஏதேனும் ஒளிந்து கொண்டிருக்கிறதா என்று பார்ப்பதற்காகப் புகுந்ததா? என்று ஐயம்கொண்டு அரற்றினாள் என்பதாம்.

238. "ஆரம் போர்திருமார்பை அகல் முழைகள்
எனத்திறந்து, இவ்வுலகுக்கு அப்பால்,
தூரம் போயின, ஒருவன் சிலைதுரந்த
சரங்களே; போரில் தோற்று,
வீரம் போய், உரம் குறைந்து, வரம் குறைந்து
வீழ்ந்தானே! வேறே! கெட்டேன்!
ஓர் அம்போ உயிர்பருகிற்று இராவணனை?
மானுடவன் ஊற்றம் ஈதோ?" (10024)

(ஒருவன்-ஒப்பற்றவன்/இராமபிரான்; துரத்தல்-செலுத்துதல்; ஆரம்-முத்துமாலைகள்; போர்-போர்த்த/மிகுதியாகஅணிந்த; திரு-அழகு; அகல்-அகன்ற; முழை-குகைகள்; திறத்தல்-பிளத்தல்; தூரம்-தொலைவு; உரம்-வலிமை; வேறே-வேறுபட்ட; ஊற்றம்-வலிமை; ஈதோ-இத்தகையதோ; தோற்றுதல்-காட்டுதல்/காணப்படுதல்)

''ஒப்பற்றவனான இராமபிரான் வில்லிலிருந்து புறப்பட்டுவந்த ஒரே அம்பு, முத்துமாலைகளை அணிந்த அழகிய இராவணனது மார்பை அகன்ற குகைகள்போலப் பிளந்துவிட்டு, இவ்வுலகுக்கெல்லாம் அப்பால் வெகுதொலைவு விரைந்துசென்று விட்டது. போர்க்களத்தில் காட்டு கின்ற ஆண்மையும் வீரமும்போய், மனவலிமை குறைந்து, தான்பெற்ற அளவற்ற வரங்களும் பயனற்றதாய்ப் போய் இவ்வாறு போர்க்களத்தில் வேறுபட்டு வீழ்ந்துகிடக்கிறானே? நான் என் செய்வேன்! இராமபிரான் செலுத்திய ஒரேஅம்புதான்என்கணவன்இராவணன்உயிரைப்பருகியதா? நம்பமுடியவில்லையே? ஒரு மானிடன் வலிமை இத்தகையதாக இருக்குமா? இல்லை. இவன் மானிடன் அல்லன் பரம்பொருளாகத்தான் இருக்கவேண்டும்'' என்று புலம்புகிறான் மண்டோதரி.

''போர்'' என்பது போர்த்த என்ற பொருளில் மிகுதியாக அணிந்த என்ற குறிப்பைத் தந்து நின்றது. ''கெட்டேன்'' என்பது அவலம் குறித்த குறிப்புச்சொல்.

Koviloor Digital Library

239. காந்தையருக்கு அணி அனைய சானகியார்
பேரழகும், அவர்தம் கற்பும்,
ஏந்து புயத்து இராவணனார் காதலும், அச்
சூர்ப்பணகை இழந்த மூக்கும்,
வேந்தர்பிரான் தயரதனார் பணியதனால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும், கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற்று அம்மா!" (10025)

(காந்தையர்-பெண்பாலர்; ஏந்து-உயர்ந்த; வேந்தர்பிரான்-சக்கர வர்த்தி/அரசர்க்கரசன்; பணி-ஏவல்/கட்டளை; பூண்டு-மேற்கொண்டு; போந்தது-வந்தது; கடைமுறை-முடிவு; புரந்தரனார்-இந்திரன்)

''பெண்பாலார்க்கெல்லாம் அணிகலனாய் விளங்குகின்ற சீதாதேவி யின் பெருமைக்கு உரிய பேரழகும், அவளுடைய திண்ணிய கற்பு நெறியும், உயர்ந்த தோள்களையுடைய இராவணனார் அவள்மீது கொண்ட பொருந்தாக் காமமும், அதனால் இலக்குவனால் சூர்ப்பணகை மூக்கறு பட்டதும், அரசர்க்கரசனான தயரதன் கட்டளையினால் கொடிய கானகத் திற்கு தவ ஒழுக்கம் மேற்கொண்டு இராமபிரான் வந்ததுவும், கடைசியில் இந்திரன் செய்த தவத்தின்பயனால் நிகழ்ந்து போய்விட்டதே!'' என்று வியந்து புலம்புகிறாள் மண்டோதரி.

காரண காரியங்களோடு தொடர்புபடுத்தி இராம காதையைச் சுருக்கமாகச் சொல்லுகிறது இந்தப் பாடல். இராவணன் இறப்பாகிய காரியத்திற்கு இவைகளெல்லாம் காரணங்களாகிவிட்டன என்கிறாள் என்பதாம். ''கடைமுறை'' என்பதற்கு இறுதியில் என்று பொருள் கொள்ளப்பட்டது இங்கு கூறப்பட்டிருக்கின்ற காரணங்களை கடை முறையாக - அதாவது இறுதியில் சொல்லிய காரணத்திலிருந்து மேலே ஒவ்வொரு காரணமாகப் போனால் அது இராமகாதையின் சுருக்கமாகும். முதலில் புரந்தரனார் பெருந்தவம்; பின்னர் வேந்தர்பிரான் தயரதனார் பணியதனால் இராமபிரான் வெங்கானில் விரதம் பூண்டு போந்தது; பின்னர் சூர்ப்பணகை மூக்கு இழந்தது; அதன் பின்னர் ''ஏந்துபுயத்து இராவணனார் காதல்''; அதற்கெல்லாம் மூலகாரணம் சானகியார் பேரழகும், அவர்தம் கற்பும் என்பது புலனாகும். ''காந்தையருக்கு அணி'' என்பது முன்பு ''தெரிவைமார்க்கு ஒரு கட்டளை எனச் செய் திருவே'' என்று கூறியதுடன் ஒப்புநோக்கலாம். ''யான் வனம் போந்தது என்னுடைய புண்ணியத்தால்'' என்ற இராமபிரானின் கூற்றும் இங்கு ஒப்புநோக்கத் தகும். சீதாதேவியின் பேரழகு அவன் காதலுக்குக் காரணமானது போலவே, அவளுடைய திண்ணிய கற்பு அவனுடைய சாதலுக்குக் காரணமாயிற்று என்று கூறும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. ''அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய தவமும்'' என்பதையும் இங்கு நினைவுகூர்க.

Koviloor Digital Library

240. தேவர்க்கும், திசைக்கரிக்கும், சிவனார்க்கும்
அயனார்க்கும், செங்கண் மாற்கும்
ஏவர்க்கும் வலியானுக்கு என்று உண்டாம்
இறுதி" என ஏமாப்புற்றேன்,
ஆவற்கண் நீ உழந்த அருந்தவத்தின்
பெருங்கடற்கும், வரம் என்று ஆன்ற,
காவற்கும், வலியான் ஒரு மானுடவன்
உளன் என்னக் கருதினேனோ?" (10026)

(அயனார்-பிரமதேவன்; மால்-திருமால்; ஏவர்-யார்/எத்தகையோர்; இறுதி-இறப்பு/அழிவு; ஏமாப்பு-இறுமாப்பு/பெருமிதம்; ஆவற்கண்-ஆவலோடு; உழத்தல்-வருந்துதல்; கருதுதல்-எண்ணுதல்; ஆன்ற-அமைந்த)

''தேவர்களுக்கும், எட்டுத்திசை யானைகளுக்கும், சிவபெருமான், பிரமதேவன், சிவந்த கண்களையுடைய திருமால் ஆகிய மும்மூர்த்தி கட்கும், இன்னும் மற்றுமுள்ள யாவரைவிடவும் வலிமை மிக்கவனான உனக்கு அழிவு என்ற ஒன்று உண்டா? கிடையாதே! என்று இறுமாப்புக் கொண்டிருந்தேன். ஆனால் நீ ஆவலோடு வருந்திச்செய்த அரிய தவம் என்னும் பெருங்கடலுக்கும் அதன் பயனாக நீ பெற்ற வரங்கள் உனக்குக் காவலாக இருப்பதுவும், அதனை அழிக்கும் வல்லமை படைத்த ஒரு மானுடனும், இருப்பான் என்று நான் எண்ணாமல் போனேனா!'' என்று உள்ளம் வெதும்பிப் போய்விட்டாள் மண்டோதரி.

''அருந்தவத்தின் பெருங்கடல்'' என்பது உருவகம். அவனது தவத்தைப் பெரிய கடலாக உருவகித்தார் என்க. அவனுடைய தவத்தின் பயனால் பெற்ற வரங்கள் அவனுக்கு எப்போதும் காவலாக இருக்கும் என்று அவனுடைய அழிவு பற்றியே நினைத்துப் பார்க்காமல் இருந்துவிட்டேன் என்று தன்னையே நொந்து கொள்ளுகிறாள் மண்டோதரி என்பதாம். ''நீ உழந்த அருந்தவம்'' என்பது ''புற்றுமாய், மரமாய்ப், புனல், காலே ''உண்டியாய்க் கொண்டு வருந்தித்'' தவம் செய்ததைக் குறிக்கும்.

241. "அரை கடை இட்டு அமைவுற்ற முக்கோடி
ஆயுவும், முன் அறிஞர்க்கேயும்
உரை கடையிட்டு அளப்பரிய பேராற்றல்,
தோள் ஆற்றற்கு உலப்போ இல்லை;
திரை கடையிட்டு அளப்பரிய வரம் என்னும்
பாற்கடலைச் சீதை என்னும்,
பிரை கடை இட்டு அழிப்பதனை அறிந்தேனோ?
தவப்பயனின் பெருமை பார்ப்பேன்?" (10027)

Koviloor Digital Library

(அரைகடையிட்ட முக்கோடி-மூன்றரைக்கோடி; ஆயு-ஆயுள்/வாழ்நாள்; உரை-சொல்/வாய்வார்த்தை; கடை-முடிவு; உலப்பு-அழிவு; கடையிடுதல்-முடிவிடுதல்/கடைசியாகக் கொள்ளுதல்; திரை-அலை)

கடைசியாக அரைக்கோடி என்று கணக்கிடப்பட்ட மூன்றரைக்கோடி வாழ்நாட்கும், பெருமைசான்ற அறிஞர்க்கெல்லாம் வாய்வார்த்தையால் அளவிட்டுக் கூறமுடியாத உன்னுடைய வலிமைமிக்க தோளாற்றலுக்கும் அழிவே இல்லை என்று கருதிப் பெருமிதம் கொண்டிருந்தேன். ஆனால் அலைகளால் நிரம்பப்பெற்ற அளவற்ற வரம் என்னும் பாற்கடலில், சீதாதேவியிடம் கொண்ட காதல் என்னும் சிறு மோர்த்துளி கலந்ததனால் பால் திரிந்துபோகும் என்பதை அறியாமல் போனேனே! உன்னுடைய தவத்தின் பயனையும், பெருமையையும் எண்ணிக்கொண்டு காலங் கடத்திவிட்டேனே!'' என்று தன்னையே நொந்துகொண்டு புலம்புகிறாள் மண்டோதரி.

''அரைகடையிட்டு அமைவுற்ற முக்கோடி'' என்பது மூன்றரைக்கோடி வாழ்நாளைக் குறிக்கும். அவனுக்கு மூன்றரைக்கோடி வாழ்நாள் உண்டு. அறிஞர்களாலும் அளந்து சொல்லுதற்கரிய தோளாற்றல் உண்டு, தவத்தால் பெற்ற வரங்கள் உண்டு. எனவே அவனுக்கு அழிவே இல்லை என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேனேயன்றி, சீதாதேவிமீது கொண்ட காதல் என்னும் ஒருதுளி பிரை மோர் கடலில் கலந்து கடலைத் திரித்துவிடும் என்று நினைக்காமலேயே விட்டுவிட்டேனே என்று புலம்புகிறாள் என்பதாம். வரத்தைப் பாற்கடலாக உருவகித்ததற்கு ஏற்ப, அவள்மீது கொண்ட காதலைப் பிரையாக உருவகித்தார் என்க.

242. "ஆர்அனார் உலகு இயற்கை அறிதக்கார்?
அவை ஏழும் ஏழும் அஞ்சும்
வீரனார் உடல் துறந்து, விண்புக்கார்;
கண்புக்க வேழ வில்லால்,
நாரநாள் மலர்க்கணையால், நாள் எல்லாம்
தோள் எல்லாம், நைய எய்யும்
மாரனார் தனி இலக்கை மனித்தனார்
அழித்தனரே வரத்தினாலே!" (10028)

(இயற்கை-இயல்பு; கண்-கணு; வேழம்-கரும்பு; மாரனார்-மன்மதன்; நைய-வருந்தும்படி; இலக்கு-குறி; மனித்தனார்-மனிதர்/இராமபிரான்; நாரம்-நார்; நாள்-அன்றலர்ந்த/புதிய)

''இந்த உலகத்தின் உண்மைநிலையை முழுதும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் யார் இருக்கிறார்கள்? இந்தக் கீழ் ஏழு, மேல் ஏழு ஆகிய பதினான்கு உலகத்தில் உள்ளவர்களும் அஞ்சி அடங்கிப்போகும் வீரத்தன்மை உள்ளவரான இராவணனார் இப்போது உடலைத் துறந்து

Koviloor Digital Library

விண்ணுலகம் சென்றுவிட்டாரே! கணுக்கள் பொருந்திய கரும்பு வில்லால் மன்மதனார் செலுத்துகின்ற அன்றலர்ந்த மலர்களைக்கொண்டு நாள் முழுவதும், இருபது தோள்களும் வருந்தும்படி மலரம்புகள் இராவணனை மட்டுமே தனியாகக் குறிபார்த்துத் தாக்கும். அந்த மலரம்புகள் மட்டுமே தாக்கப்படுகின்ற தோளையுடைய இராவணனை இன்று ஒரு மனிதன் தன் வரபலத்தினாலே அழித்துவிட்டானே!'' என்று வியந்து புலம்புகிறாள் மண்டோதரி.

பதினான்கு உலகமும் அஞ்சி நடுங்கும் வீரம்படைத்த இராவணன், மன்மதனின் மலரம்புகளுக்கு மட்டுமே இலக்காகும் இராவணன், இப்போது யாருக்கும் அஞ்சாத ஒரு தனி மனிதனாகிய இராமபிரானால், மலர்க்கணையின்றித் தன் அம்பின் பலத்தாலும் வரத்தின் பலத்தாலும் அழித்துவிட்டானே என்று புலம்புகிறாள் என்பதாம். எனவே இந்த உலகின் இயல்பை அறிதற்குத் தகுதியானவர் யாரும் இல்லை என்கிறாள் மண்டோதரி.

243. மண்டோதரி உயிர் நீங்குதல்

என்று அழைத்தனள், ஏங்கி எழுந்து, அவன்
பொன் தழைத்த பொருஅரு மார்பினைத்
தன் தழைக் கைகளால் தழுவி, தனி
நின்று அழைத்து உயிர்த்தாள், உயிர் நீங்கினாள். (10029)

(ஏங்குதல்-புலம்புதல்; தழைத்தல்-பொருந்தியிருத்தல்; பொருஅரு-ஒப்பற்ற; தழை-தளிர்; தனி-தனித்தன்மை; அழைத்தல்-உரத்த குரலால் கூவுதல்; உயிர்ப்பு-பெருமூச்சு; தழுவுதல்-அணைத்தல்)

என்று மண்டோதரி கூக்குரலிட்டு, ஏக்கமுற்றுப் பின் எழுந்து, அந்த இராவணனுடைய பொன்னாபரணங்கள் மிகுந்து விளங்குகின்ற அழகு ததும்புகின்ற ஒப்பற்ற மார்பினைத் தனது மெல்லிய தளிர்போன்ற கைகளால் தழுவி, தனியாக நின்று வாய்விட்டு அழைத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, தன் உயிர் நீங்கப்பெற்றாள்.

இவ்வாறே சிலப்பதிகாரத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவி கோப்பெருந்தேவியும் தன் கணவன் உயிர்நீத்ததும் தானும் அவன் மேனிமீது விழுந்து உயிர்நீத்தாள் என்பதும் நாம் அறிந்ததே. ''தன் உயிர் கொண்டு, அவன் உயிர் தேடினள் போல'' என்பது சிலப்பதிகாரம். இத்தகைய கற்புக்கரசியாகிய மண்டோதரி ''பஞ்ச கன்னிகைகளுள் ஒருத்தியாக இன்றும் கருதப்பட்டு வருவது நினையத்தகும்.

Koviloor Digital Library

244. வான மங்கையர், விஞ்சையர் மற்றும் அத்
தான மங்கையரும், தவப் பாலவர்,
ஆன மங்கையரும், அருங் கற்புடை
மான மங்கையர்தாமும் வழுத்தினார். (10030)

(மானம்-பெருமை; வழுத்துதல்-வாழ்த்துதல்)

இதனைக்கண்டு நின்றிருந்த தேவலோகத்துத் தேவமகளிரும், வித்யாதரப் பெண்களும், மேலும் தானவ மங்கையரும், பாதளலோகத்து நாக கன்னிகைகளும், தவத்தின்பால் சார்ந்துள்ள முனிவர்களின் பத்தினி களும், அரும் பெருங்கற்புடைய பெருமைசான்ற மானிடப்பெண்களும், கற்புக்கரசியாகிய மண்டோதரியைப் போற்றித் துதித்தனர்.

மண்டோதரி சப்த கன்னிகளுள் ஒருத்தியாக வைத்துப் போற்றப் படுபவள். சப்தகன்னிகைகள்-சீதாதேவி, தாரை, மண்டோதரி, அகலிகை, அருந்ததி, திரௌபதி, மற்றும் நளாயினி என்பவராவர்.

245. பின்னர், வீடணன், பேரெழில் தம்முனை
வன்னிகூவி, வரன்முறையால், மறை
சொன்ன ஈமவிதி முறையால், தொகுத்து,
இன்னல் நெஞ்சினோடு இந்தனத்து ஏற்றினான். (10031)

(வன்னி-நெருப்பு/அக்னி; இன்னல்-துன்பம்; தம்முன்-அண்ணன்; இந்தனம்-ஈமவிறகு; எழில்-ஆண்மையின் வனப்பு; ஈமம்-இடுகாடு; கூவுதல்-அழைத்தல்/உண்டாக்குதல்; ஈமவிதி-அந்திமச்சடங்கு)

அதற்குப்பிறகு வீடணன் நெருப்பை உண்டாக்கி, வேதத்தில் கூறியுள்ள விதிமுறைப்படி எல்லாவற்றையும் தொகுத்து, வீர எழுச்சிபெற்ற தன் முன்னவனான இராவணனை மிகுந்த துயர்கொண்ட நெஞ்சுடன், அந்த ஈமவிறகில் ஏற்றினான்.

இராமபிரான் முன்பு சடாயுவுக்கு ஈமக்கிரியைகள் செய்யும்போதும், இதே ''இந்தனம்'' என்ற சொல்லைக் கவிஞன் பயன்படுத்தியிருப்பதை நினைக.

246. கடன்கள் செய்து முடித்து, கணவனோடு
உடைந்துபோன மயன் மகளோடு, உடன்
அடங்க வெங்கனலுக்கு அவி ஆக்கினான்;
குடம்கொள் நீரினும் கண்சோர் குமிழியான். (10032)

(சோர்தல்-சொரிதல்/சிந்துதல்/பெருகுதல்; அவி-உணவு/அவிசு)

நீர்க்கடன் செய்வதற்காகக் குடத்தில் வைத்திருக்கும் தண்ணீரைக் காட்டிலும் அதிக அளவு கண்ணீரைச் சிந்துகின்ற கண்களையுடைய

Koviloor Digital Library

வனான வீடணன், ஈமக்கடன்களாகிய நீர்க்கடன், நெருப்புக்கடன், முதலானவற்றைச் செய்து முடித்து, கணவன் இராவணனோடு மனம் உடைந்து தன் உயிரையும் மாய்த்துக் கொண்டவளான மயன்மகளான மண்டோதரியுடன் அவ்விருவரையும் கொடிய நெருப்புக்கு உணவு ஆக்கினான்.

உயிரோடு உடன்கட்டை ஏறுதல் ஒன்று. அப்போதே உயிரை மாய்த்துக் கொண்டு உயிரற்ற உடலாக உடன்கட்டை ஏறுதல் மற்றொன்று. இதனைத் ''தலைக்கற்பு'' என்கிறது தமிழ் இலக்கணம். இதனையே சககமனம் என்கிறது வடநூல்கள். அவி என்பது ''ஹவிஸ்'' என்ற வடசொல்லின் திரிபு. நெருப்புக்கு உணவு என்பது பொருள். ''ஆகுதி'' எனவும் வழங்கப்பெறும். நெருப்புக்கு இரையாக்கினான் என்று அமங்கலமாகக் கூறாமல், அவியாக்கினான் என்று அதே பொருள்தரும் சொல்லைப் பயன்படுத்திய கவிஞனின் கவிநயம் நோக்குக.

247. வீடணன் மற்றவர்களுக்கும் ஈமக்கடன் செய்தல்

மற்றையோர்க்கும் வரன் முறையால் வகுத்து,
உற்ற தீக் கொடுத்து, உண்குறு நீர் உகுத்து
''எற்றையோர்க்கும் இவன் அலது இல்'' எனா
வெற்றிவீரன் குரை கழல் மேவினான். (10033)

(வீரன்-இராமபிரான்; குரைத்தல்-ஒலித்தல்; மேவுதல்-அணுகுதல்; எற்றையோர்-எவர்க்கும்)

போரில் இறந்துபட்ட மற்ற அரக்கவீரர்களுக்கும், விதிமுறைப்படி நீர்க்கடன், நெருப்புக்கடன் முதலானவற்றைச் செய்து, ''எவருக்கும் இவனையல்லால் ஈமக்கடன் ஆற்றுதற்கு வேறு ஒருவரும் இல்லை'' என்று கண்டோர் கருதும்படி செய்து முடித்துவிட்டு, வெற்றி வீரனான இராமபிரானது ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த திருவடிகளைச் சென்றடைந்தான் வீடணன்.

எள்ளும் தண்ணீரும் இறைத்தல் என்பது ''வாசோதகம், திலோதகம்'' என வடமொழியில் வழங்கப்படுகிறது. திலம்-எள்.

248. இராமபிரான் வீடணனைத் தேற்றுதல்

வந்து தாழ்ந்த துணைவனை, வள்ளலும்,
''சிந்தை வெந்துயர் தீருதி, தெள்ளியோய்!
முந்தை எய்தும் முறைமை இதுவாம்'' எனா,
அந்தம்இல் இடர்ப்பாரம் அகற்றினான். (10034)

Koviloor Digital Library

(தெள்ளியோய்-தெளிந்த அறிவுடையவனே; தீருதி-தீர்வாயாக; முந்தை-பண்டு; அந்தம்இல்-எல்லையற்ற; இடர்ப்பாரம்-துன்பச்சுமை)

தன்னை வந்தடைந்து தன் தாள்பணிந்த தன் தம்பி வீடணனை நோக்கி, வள்ளலாகிய இராமபிரான் ''தெளிந்த அறிவுடையவனே! உனது உள்ளத்தில் நிறைந்திருக்கும் கொடிய துன்பத்தைத் தீர்வாயாக! பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் இன்று நேற்றல்ல, தொன்மைக் காலந்தொட்டே நிகழ்ந்துவரும் முறைமையாகும்'' என்றுகூறி அவனுடைய எல்லையற்ற துன்பச்சுமையைப் போக்கி அருளினான்.

''துணைவன்'' என்பது தம்பியாகிய வீடணனைக் குறிக்கும். ''வள்ளல்'' என்பது இராமபிரானைக் குறிக்கும். ''தெள்ளியோய்'' என்பது தெளிந்த அறிவுடைய வீடணனைக் குறிக்கும். ''உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு'' என்பது குறள். வீடணன் தேறினான் என்று கூறாது இராமபிரான் அகற்றினான் என்று இராமன் செயலாகவே கூறியிருப்பதை உணர்க. ''பிறந்தவர் சாதலும், இறந்தவர் பிறத்தலும், உறங்கலும், விழித்தலும் போன்றது உண்மையின்'' என்பது மணிமேகலை.

இராவணன் வதைப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library



உரை ஆசிரியர் பழனியப்பன் சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூரில் பாரம்பரியம் மிக்க ப.அ.ப. குடும்பத்தில் பிறந்தவர். உயர்நிலைக் கல்வியையும், கல்லூரிக் கல்வியையும் மயிலாடுதுறையிலும், திருச்சிராப்பள்ளி, தேசீயக் கல்லூரியிலும் முடித்தவர். பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் அவர்களிடம் தமிழ் பயின்றவர். புலவர் திரு. கீரன் அவர்களுடன் மூன்றாண்டுகள் தொடர்ந்து அவர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கம்பராமாயணத்தைத் தன் விருப்ப இலக்கியமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர். கல்லூரிப் படிப்புக்குப் பின்னர் பரோடா வங்கியில் 33 ஆண்டுகள் பல பதவிகளிலும் இருந்து பணி நிறைவு செய்து ஓய்வு பெற்றவர். இப்பெரும் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்று பணியினின்றும் ஓய்வு பெறுவதற்கு முன்பே தீர்மானித்துத் திட்டமிட்டு இந்த செயற்கரிய காரியத்தைச் செய்து நிறைவேற்றியிருக்கிறார்.

ஆசிரியர் அகராதிகள், அபிதான சிந்தாமணி முதலிய நூல்களின் துணைகொண்டு அங்கேங்கே விளக்கங்கள் தந்துள்ளமை அவரது அயராத உழைப்பையும் ஆர்வத்தையும் காட்டுவதாக அமைந்துள்ளது. ஆர்வத்தால் தமிழ் படித்துக் கம்பரில் ஆழங்காற்பட்டு இராமகாதைக்கு ஆழமாக எழுதி-வரும் உரைகள் அன்னைத் தமிழுக்கு அழகிய அணிகலன்கள் ஆகும்.

முனைவர் தெ. ஞானசுந்தரம், கம்பன் இருக்கை
தமிழ் இயல் புலம். புதுச்சேரி பல்கலைக்கழகம், புதுச்சேரி

இந்த உரை விளக்கத்தின் வெளிச்சத்தில் பதங்கள் சரியாகத் தெரிகின்றன. பாட்டின் பொருள் சிந்தையில் படுகின்றது. கம்பநாடகம் கண்முன்னே விரிகின்றது. "வேறான குழுவையெல்லாம் மானுடம் வென்றதம்மா" என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடுவதுபோல் வேறுள உரையையெல்லாம் இவ்வுரை வென்றதம்மா எனத் துணிந்து நாம் போற்றலாம். இந்த உரைவிளக்கம் அனைத்தும் மலைமேல் ஒளி விளக்கமாகத் திகழ்ந்து, கம்பர் காவியக்கடலின் கலங்கரை விளக்கமாக எதிர்காலச் சந்ததியினருக்கு ஒளிரும் என்பது உறுதி.

திருப்புகழ்த் திலகம் அருள்உரை அருவி. மதிவண்ணன்